Koviloor Digital Library

தெய்வத்தின் குரல்

ஐந்தாம் பகுதி



Acc·No: 2057
R65

வானதி
பதிப்பகம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6

தெய்வத்தின் குரல்

2057

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருள்வாக்குகள்

ஐந்தாம் பகுதி

தொகுப்பாசிரியர் : ரா. கணபதி

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

1989 - 70/-

Koviloor Digital Library

முதற் பதிப்பு : மே, 1989
உரிமை பதிவு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 70-00

அச்சிட்டோர் :

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

Koviloor Digital Library

4-6

தெய்வத்தின் குரல்



Koviloor Digital Library

குருர் - நாம்நா மஹிம்நா ச
சங்கரோ யோ விராஜதே ।
ததீயாங்க்ரி - கலத் - ரேணு -
கணயாஸ்து நமோ மம ॥

பெயரிலும் சங்கரராக,
('சம்' எனும் பேரின்பத்தை விளைவிக்கும் 'கர்த்தா' என்பதான) மகிமையிலும் சங்கரராக,
எவர் பிரகாசிக்கின்றாரோ,
அவரது திருவடி சிந்தும் நுண்பொடிகளுக்கு
என் வந்தனங்கள் உரித்தாகட்டும்!

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் குறித்து
ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவர்கள்

Koviloor Digital Library



ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ சங்கரவிஜயேந்திர சரஸ்வதி
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

கடவுளின் பரம கருணையினால் நடமாடும் கடவுள் எனப் போற்றப்பெறும் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருள்வாக்குகளின் அமுதமான "தெய்வத்தின் குரல்" ஐந்தாம் பகுதி தமிழ் தெரிந்த அனைத்து மக்களுக்கும் இப்பொழுது கிடைத்துள்ளது.

இது யார் செய்த புண்ணியம்?

தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்கள் தம் முகவுரையில் என்னைப் புண்ணியசாலி எனக் குறிப்பிட்டிருக்கிறார். என் முன்னோர் செய்த புண்ணியமே எனக்கு வணக்கத்துக்குரிய ஆசாரியப் பெருமானின் தெய்வ வாக்குகளைப் பதிப்பிக்கும் பாக்கியத்தை நல்கியுள்ளதென்றுதான் என்னளவில் நம்புகிறேன். இதோடு ஆதி ஆசாரியப் பெருமானின் அருளும் கலந்து பெருகுவதை எண்ணுந்தோறும் உள்ளம் சிலிர்க்கிறது.

இந்திய அரசு சென்ற ஆண்டு சங்கர ஜயந்தியிலிருந்து இவ்வாண்டு சங்கர ஜயந்தி முடிய ஆதி ஆசாரியப் பெருமானுக்குரிய தேசீயத் திருவிழாவாக அறிவித்து நாடெங்கும் கொண்டாட்டங்கள் நடத்திவருகிறது. இதில் தொடக்கச் சங்கர ஜயந்தியன்றே அவரது வாழ்க்கைக் காவியமான திரு. ரா. கணபதியின் "ஜய ஜய சங்கர" புதுக்கிய பதிப்பை வெளியிடும் பேறு பெற்றேன். இப்போது நிறைவு சங்கர ஜயந்தியிலோ அவரது மறு அவதாரமான ஸ்ரீ

Koviloor Digital Library

காஞ்சி முனிவரின் அருள் மொழிகளாலேயே ஆன "ஸ்ரீ சங்கர சரிதையை" தெய்வத்தின் குரல் ஐந்தாம் பகுதியில் வெளியிடும் மாபெரும் பேறு வாய்த்திருப்பதை எண்ணிப் பூரிப்படைகிறேன். இதனையும் 'ஜய ஜய சங்கர' ஆசிரியரே தான் ஏராளமான உரைகளிலிருந்து அரும்பாடுபட்டுத் தொகுத்தளித்திருக்கிறார்.

ஸ்ரீ காஞ்சி முனிவர் அருளும் சங்கரர் வரலாற்றுக்குத் துணை நூல் தேவையில்லைதான். எனினும் இங்கு விரியும் வரலாற்றுடன் 'ஜய ஜய சங்கர'வையும் சேர்த்துப் படித்தால் நிறைவின் இன்பம் மேலும் பெருகும் எனக் கருதுகிறேன். அதுவும் முப்பதாண்டுகளுக்கு முன் திரு. ரா. கணபதியவர்களுக்குக் கிடைத்த ஸ்ரீ காஞ்சி முனிவரின் திருமொழிகளை முக்கியமான அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றது தான். பாத்திரங்களின் பலவித உணர்ச்சிகளையும், நிகழ்ச்சிகளின் பலவித ஓட்டங்களையும் காவிய நயத்தோடு விரித்துரைக்கும் அந்நூல் கதை இலக்கியத்தில் உள்ளத்தைத் தொடும் பக்தி நூலாகச் சிறப்புப் பெறுகிறது.

ஸ்ரீ காஞ்சி முனிவர் அருளும் வரலாறோ மிக எளிய முறையில் மிக உயரிய தத்துவார்த்தங்களையும், சாத்திர விதி நுணுக்கங்களையும், கலாச்சார உட்பொருட்களையும் கதையுடனேயே குழைத்துத் தந்து நம் அறிவைத் துலக்கும் ஆன்மீகப் பொக்கிஷமான வேத நூலாகவே சிறப்புறுகிறது. இப்படிக் கூறுவதால் இதில் உள்ளத்தைத் தொடும் கதையழகுகளோ, 'ஜய ஜய சங்கர'வில் அறிவுக்கு விருந்தான கருத்தழகுகளோ இல்லையென்று பொருளில்லை. முக்கியமாக ஒவ்வொரு நூலிலும் விளையும் பயனை எடுத்துக் காட்டுவது எனது கடமையாகிறது. இரண்டையும் இணைத்துப் படித்தால் இருவிதப் பயன்களும் முற்றிலும் கிடைக்கும்.

முன் நான்கு பகுதிகளிலும் ஆங்காங்கு ஆதி சங்கரரின் சரிதம், உபதேசம் ஆகியன குறித்து வந்திருப்பதையும் வாசகர்கள் புரட்டிப் பார்த்துக் கொண்டால் நலம்.

Koviloor Digital Library

குறிப்பாக, முதற்பகுதியில் "சம்பு சங்கரராஞர்" என்ற உரை, 2-3-4 பகுதிகளில் "குரு" என்ற பிரிவு, 1-2-4 பகுதிகளில் "அத்வைதம்" என்ற பிரிவு ஆகியவற்றை வாசகர் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

தெய்வத்தின் குரல் ஐந்தாம் பகுதி வர இவ்வளவு நாட்களா என வாசகர்கள் விஞவலாம். இப்பகுதிக்கென முதலில் திரு ரா. கணபதி நான்கு ஆசிரமங்கள் குறித்து விரிவாகச் செய்த தொகுப்பைப் பூர்த்தி செய்ய இயலாமலாயிற்று. அதன்பின் அவரது தந்தையாருடைய சங்கர கீதா பாஷ்ய ஆங்கில ஆக்கத்தின் பதிப்பில் பல மாதங்கள் ஈடுபட்டிருந்தார். பிறகே ஆதிசங்கரர் ஆட்கொண்டது போல இப்பகுதியை இப்போதுள்ள உருவில் மேற்கொண்டார். எவ்வளவோ விரைவுடன் செயற்பட்டபோதிலும் இதற்கான விஷயச் சேகரிப்புக்கும், நுணுக்கமாக அடிக்குறிப்புக்கள் யாவும் தயாரிப்பதற்கும் பல மாதங்கள் பிடித்தன. எனவேதான் இந்த நீண்ட இடைக்காலம்.

புத்தகத்தின் பொருளடக்கத்தைப் பார்த்தால் நீங்கள் வியப்படைவீர்கள். படித்தால் பரவசமடைவீர்கள். இவ்வளவு அருட் கனிகளையும், அரிய உரைகளையும் எங்கிருந்து சேகரித்துத் தொகுத்தளித்துள்ளார் தொகுப்பாசிரியர் ரா. கணபதி என்று ஆச்சரியப்படுவீர்கள். ஆசாரியப் பெருமானின் பரம கருணையினுல் அவரது பணி அற்புதமாக நிகழ்ந்திருக்கிறது.

தெய்வத்தின் குரல் ஐந்தாம் பகுதியை வெளியிடும் பாக்கியத்தை அருளிய ஸ்ரீ மகா திரிபுர சுந்தரி சமேத சந்திரமௌளீஸ்வரர் அருட் கடாட்சத்தையும் ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் கருணை கலந்த அன்பையும், அருளையும் போற்றி வணங்குகிறேன்.

அகில உலகமும் வணங்கும் அருள் நிறைந்த மகான் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் அருள்வாக்குகளான தெய்வத்தின் குரல், பகுதி பகுதி

Koviloor Digital Library

களாக வானதி பதிப்பகத்தில் வருவதற்கு அன்போடு அருளாசி வழங்கி வானதியின்பால் என்றும் அன்பை வர்ஷித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன்.

வணக்கத்துக்குரிய பாலப்பெரியவர் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் தெய்வத்தின் குரல் புத்தகத்தை எப்பொழுதும் பாராட்டிப் போற்றுவார்கள். போற்றுதலுக்குரிய அப் பெரியவர்களைப் போற்றி வணங்குகிறேன்.

ஞானச் சுரங்கமனைய இந்த தெய்வத்தின் குரல் உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கட்டும்.

நூல் அற்புதமாக, அழகாக உருவாகியதற்கு தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்களின் உண்மை உழைப்பும்,ஆசாரியப் பெருமானிடம் உள்ள ஆழ்ந்த பற்றும் தான் காரணம். அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னாலும் தகும்.

இந்நூலை அழகாக அச்சிட்டுத் தந்த மாருதி அச்சகத்தாருக்கு நன்றி.

உலகெலாம் தெய்வத்தின் குரல் ஒலிக்கட்டும்.

வணக்கம்

அன்புள்ள

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

Koviloor Digital Library

முகவுரை

பூஜ்யஸ்ரீ காஞ்சி ஸ்ரீசரணர்களின் பாவன சரணங்களில் எண்ணிலா வந்தனங்கள். பரம கருணையினால் மேலும் ஒரு பகுதி அவர்களது அமுதத் திருமொழிகளைத் தொகுத்தளிக்கும் பரம பாக்யத்தை அருளியுள்ளார்கள். இதற்கு ஆவி உள்ளளவும் உள்ளார்ந்த நன்றி நமஸ்காரங்கள். அவையடக்கத்திற்காகச் சொல்லவில்லை—மெய்யாலுமே சொல்கிறேன்: மிகப்பெரிய யோக்யதாம்சம் பெற்றவருக்கே வாய்க்கவேண்டிய புனிதப் பெரும் பணியை ஒரு பலவீனனுக்கு வழங்கியிருக்கிறார்கள். இப் பணி செய்ததில் எப்பேர்ப்பட்ட ஆத்ம லாபம்? லோகத்துக்கும் எப்படிப்பட்ட புருஷார்த்த லாபங்களை ஈட்டிக் கொடுத்து ஒருங்கே மகிழ்விப்பதாகவும் மேம்படுத்துவதாகவும் இருக்கிறது? இதற்கு வெள்ளமாக அநுக்ரஹம் புரிந்துவரும் வள்ளல் பெருமானுக்கு திசை நோக்கி அஞ்ஜலி.

இந்த பாகம் மிகப்பெரும் பகுதி ஸ்ரீ பகவத்பாத சங்கராசார்யர்கள் குறித்தது. இது ஐந்தாம் பகுதி. பகவத்பாதர்கள் ஐந்தாவதான பஞ்சமித் திதியில் அவதரித்தவர். பஞ்சமுக பஞ்சாக்ஷரனின் அவதாரர். அவனிடமிருந்தே பஞ்ச லிங்கம் பெற்றவர். ப்ரதானமாக ஐந்து ஸ்ரீமடங்கள் ஸ்தாபித்தவர். தாமேயான ஸ்ரீசரணர்களின் திருவாக்கினால் இங்கே தமக்கே அற்புதமான பஞ்சோபசார பூஜை செய்துகொண்டிருக்கிறார்! ஆம், அந்த வாக்கே

Koviloor Digital Library

களப சந்தனமாக, நாகலிங்க நன்மலராக, அகில் தூபமாக, நறுநெய்த் தீபமாக, அமுத நைவேத்யமாக உபசாரம் புரிந்துவிடுகிறது!

'தாமேயான ஸ்ரீசரணர்கள்' என்றேன். ஆனால் உள்ளே அங்கங்கே பார்ப்பீர்கள்—'அவரெங்கே, தாமெங்கே? அவரது திருநாமத்தைத் தாங்கத் தமக்குத் தகுதியுண்டா? அவர் ஆற்றிய தர்மோத்தரணம் எங்கே, தம் காலத்தில் ஏற்பட்டுவரும் தர்மச் சீரழிவு எங்கே?'—என்றெல்லாம் ஸ்ரீசரணர்கள் அடங்கி, அடங்கிச் சொல்வதை! இதற்கு அவர்கள் காரணம் சொல்லும்போது, அறிவு ரீதியில் அது ஸரியாய்த்தானே இருக்கிறது என்றுகூடத் தோன்றிவிடலாம்! ஆனால் அதையும் அமுக்கிக்கொண்டு இதயத்திலிருந்து ஸத்யத்தின் உணர்வு பீறி எழுகிறது. உலகு உருப்பட வேண்டுமே என்ற அளப்பிலாக் கருணையிலாகட்டும், அநுபூதி ஞானத்திலாகட்டும், கல்வி ஞானத்திலாகட்டும், பரமாசார சீலத்திலாகட்டும், தளராத தியாகப் பணியிலாகட்டும் இவற்றில் ஏதாவதொன்றில் ஸ்ரீசரணர்களைப் போல இக் கலி காலத்தில் நம்மிடை ஒருவர் இருந்தாலே அவரை நம் போன்ற ஜீவகோடியாக நம் இதயம் காணாது. இந்த ஐந்தும் முறுகி இறுகி மூர்த்தியாகிய அவர்களையோ தெய்வத்துள் வைப்பதன்றி அணுமாத்ரம் குறைத்து எண்ணவும் இதயம் அநுமதிக்காது.

அவர்கள் இப்பேர்ப்பட்ட அவதார ஆசார்யர்களாக இருந்தும் உலகம் தர்மத்தில் முன்னேறவில்லை என்றால், இது பராசக்தியின் இரு விதமான திருவிளையாடல்களில் அவள் நிகழ்காலத்தை உலக அளவிலான தர்ம ஸம்ஸ்தாபனத்திற்கு உரியதாகக் கருதாமல், தன்னுடைய மாயா லீலையின் விசித்ர சக்திக்கே எடுப்பான எடுத்துக் காட்டாக ஸங்கல்பித்திருப்பாள் போலும்! மஹா நிபுணரான மருத்துவர் மிக உயர்ந்த மருந்து கொடுத்தும் பலன் பெறாமலிருக்கும் நோயாளிகள் இல்லையா? ஸ்ரீசரணர்

Koviloor Digital Library

களைவிட ஒரு ஆத்மிக மருத்துவர் இருக்கவும் முடியாது! அவர்கள் தரும் உபதேசத்தைவிட ஒரு தர்ம மருந்து நினைக்கவும் இயலாது!

பகவத்பாதாளைப் போல நம் ஸ்ரீசரணர்கள் ஜகமெல்லாம் தர்மோத்தரணம் செய்ய இப்போது பராசக்தி ஸங்கல்பத்தில் காலமாக இல்லாமற் போனாலும், எத்தனை நூறு, ஆயிரம் ஜீவர்களை அவர்கள் உய்வித்திருக்கிறார்கள்? எத்தனை பதினாயிரம், லக்ஷம் ஜீவர்களை ஒவ்வோர் அளவுக்கு உயர்வித்திருக்கிறார்கள்? ஒரே அநாசார, அஞ்ஞான, ஸ்வயநலக் கலி கோலாஹலத்தின் இடையில் அதற்கு அதிசய மாற்றாக இப்படியும் ஓர் ஆசார பூரணமான, ஞான நிறைவான, பர நலனுக்கே ஏற்பட்ட அவதார மூர்த்தத்தை வைத்து லீலா விநோதம் பார்க்க அவள்—சேற்றிடை செந்தாமரையை மலர்த்திப் பார்க்கும் ரஸிகை—எண்ணியிருப்பாள் போலும்!

எத்தனையோ மாயை மயக்குகளைப் பராசக்தி பரப்பி வைத்திருந்தாலும், நல்லவேளையாக ஜன ஸமூஹம் முழுவதும் ஓர் உண்மையை உணரவிட்டிருக்கிறாள். ஸ்ரீசரணர்களின் உபதேசப்படி நடந்தாலும் நடக்காவிட்டாலும், ஜன ஸமூஹத்தில் அத்தனை பேரும் அவர்கள் அருளிலும் அறிவிலும் அகத் தூய்மையிலும் அலாதியான உயர்வு கண்டவர்கள் என்றுணர்ந்து அவர்களிடம் தனியானதொரு மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோம். 'தான்' தலைவிரித்தாடும் இன்றைய உலகில் இப்படி ஒருவர் முன் அனைவர் தலையும் தானாகத் தாழ்கிறதென்பதே போதும், அவரது தெய்வத்தன்மையைக் காட்ட!

ஆக, அவர்கள் விநயப் பண்பின் வடிவமாகவும், விச்வத்தின் பிழைகளையெல்லாம் தம் மீது சுமத்திக் கொள்ளும் அநு-தாபக் கருணையாலும் தம்மை எவ்வளவு குறைத்துச் சொன்னாலும் சொல்லிக் கொள்ளட்டும்— ஸ்ரீ பகவத்பாதர் அவரைத் தாமேயாகத்தான் உவந்திருக்கிறார்! (அனைத்துமே தாமானவர் என்ற வேதாந்தப்

Koviloor Digital Library

பொருளிலல்ல!) நாமும் அவரை ஸ்ரீ பகவத்பாத மூர்த்தியாகவேதான் வழிபட்டுக் கொண்டிருப்போம்! 'அவர் ஸாதித்த தார்மிக வெற்றி எங்கே? தம் நாளில் ஏற்பட்டு வரும் தார்மிக இழப்பு எங்கே?' என்று கேட்கிறார்களல்லவா? இதற்காகவே அவர்களை ஒரு படி கூடுதலாகப் போற்றியும் வழிபடுவோம்! ஏனென்றால், வெற்றிமேல் வெற்றியாகக் கண்ட பகவத்பாதர்கள் அயராமல் உபதேசப் பணி செய்ததைவிட, மாறான சூழ்நிலையிலும் எண்பத்து மூன்று நீண்ட ஆண்டுகளாகச் சற்றும் தளராமல் தாம் ஆதி சாஸ்திரங்களின் வழியே நின்று, உலகுக்கும் அதையே கருணைத் தேனில் குழைத்து ஊட்டப் பாடுபடுவதுதானே அதிசயமானது? தெய்விகப் பெருமையின் அவதாரமாக அன்று வந்தவரே இன்று தெய்விகப் பொறுமையின் அவதாரமாக வந்திருக்கிறார்!

★ மூன்றரை ஆண்டு இடைவெளிக்குப் பின் இப் பகுதி வருகிறது. வாசக நேயர்களைப் பொறுமை இழக்குமளவுக்குக் காக்க வைத்து வந்திருக்கிறது. காக்க வைத்ததும் என் பிழையில்லை. இப்போது அதற்கு ஈடு கட்டுவதாக சங்கர அமுதத்தை வழங்கியிருப்பதும் என் ஸாதிப்பல்ல. திருவருள்தான் நிறுத்தி வைத்தது, அப்புறம் இயக்கியும் வைத்தது. சற்றும் எதிர்பாரா விஷயமாக அதுவே பாரத அரசினர் கொண்டாடும் ராஷ்ட்ரிய சங்கர மஹோத்ஸவத்தின் பூர்த்தி கட்டமான சுக்ல வருஷ ஆசார்ய ஜயந்தியன்று இந்நூல் வெளியீட்டை அமைத்துக் கொடுத்திருக்கிறது! நம் திட்டங்களுக்கு மேற்பட்ட அந்தத் திட்டத்தின் செயற்பாடு அருமையிலும் அருமைதான்!

முழுதும் எழுதி முடித்து அச்சுக்குக் கொடுக்காமல், பகுதி பகுதிகளாகக் கொடுத்து அச்சான இந்நூலில் முதல் நூறு பக்கங்களுக்கு மேல் அச்சாகிவிட்டபோதுகூட ஸ்ரீ சங்கர சரிதம் சேர்ப்பதாக நமக்குத் திட்டமில்லை. ஆனால் அவரோ திட்டம் போட்டுப் புத்தகத் தொடக்கத்திலேயே (பக்கம் 6) ஆனைக்கா அகிலாண்ட ஜனனியின் முன்

Koviloor Digital Library

ஆனைமுகனைப் பிரதிஷ்டை செய்து நிர்விக்னமாக இதனுள் பிரவேசித்துவிட்டார்! தொடர்ந்து வரும் குரு குறித்த உரைகளில் ஊடே ஊடே புகுந்து உயிரூட்டியிருக்கிறார்—குரு என்ற மூர்த்தி பற்றி ஸ்ரீசரணர்கள் உயிர் கலந்து கூறுவதெல்லாம் அவரைச் சேர்வதுதான்! அப்புறம் வள்ளிசாக எண்ணூறு பக்கங்களுக்கு மேல் தாமே ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறார்! இதில் நேராக அவரைப் பற்றியதாக இல்லாத சமய - தத்வ - சாஸ்த்ர-புராண-சரித்திர-பண்பாட்டு விஷயங்களும் வரலாறுகளும் நூற்றுக் கணக்கான பக்கங்களில் விரிந்தாலும், "தொன்றுதொட்ட நம்முடைய மஹத்தான ஸமய நாகரிகத்திற்கே, ஆத்மிக மரபுக்கே ஒரு ப்ரதிநிதியாக வந்தவர் அவர். ஆகையினால் இந்தப் பெரிய கலாசாரத்தில் ஸம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் சேர்ந்துதான் அவருடைய சரித்ரம்" என்று ஸ்ரீசரணர்கள் கூறியிருப்பதை (பக்கம் 576-7) கருத்தில் கொண்டால் இதெல்லாமும் அவர் விஷயந்தான். முடிவாக மாருதிராயன் பற்றிய உரையிலும் அவரோடு ஜோடி சேரும் கார்ய பராக்ரமராக வந்து மங்களாரத்தி பெற்று விடுகிறார்! பராக்ரமராக மட்டுமின்றி, அஸல் ஆக்ரமிப்பாளராகவே, 322, 391 பக்க அடிக்குறிப்புக்கள் கூறும் "ஸ்ரீ ராமன்", "ஸ்வயம்வரத்தில் அத்வைதம்" ஆகிய உரைகள் இந்நூலில் வரமுடியாதவாறு செய்து அவற்றுக்கான இடத்தையும் தானே கவர்ந்திருக்கிறார்! எப்படி அந்தத் திட்டத்தின் அருமை!

★ விஷயம் உதவியவர்கள் ரொம்பப் பேர். அனைத்தும் அடங்கும் அத்வைத ஆசார்ய மூர்த்திக்குச் செய்யும் ப்ரணாமத்தில் அத்தனை பேருக்கும் என் க்ருதக்ஞதையை ஸமர்ப்பித்துக் கொள்கிறேன். நிரம்ப உபகரித்தவர்களைப் பெயர் குறிப்பிட்டு உங்கள் நன்றியையும் ஸமர்ப்பிக்கிறேன்.

முதலாவதாக ஸ்ரீசரணர்களேதாம்! யாவும் அவர்களது உரையே என்பதற்காக மட்டுமல்ல; தனிப்பட வழங்கிய கொடைக்காகவும்தான். குறிப்பாக இரண்டு — 1963ம்

Koviloor Digital Library

ஆண்டு கொத்தமங்கலத்தில் ஸ்ரீ மஹாசிவராத்ரியை அடுத்து ஒரு நண்பகல் பேச ஆரம்பித்தவர்கள் அந்தி சாயும் வரை, மணிக் கணக்காக, மணி மணியாக ஸ்ரீ பகவத்பாதர்களைப் பற்றியும் பல, நவரத்ன வர்ஷமாகப் பொழிந்து விட்டார்கள். 1965 ஐப்பசி ஏகாதசியன்று 'கல்கி' தீபாவளி மலர் ஸமர்ப்பிப்பதற்காகக் காட்டுப்பள்ளி சென்றிருந்த போது, "கதைப் பொஸ்தகம் கொண்டு வந்திருக்கே! நானும் பதிலுக்கு, ஏகாதசியோல்லியோ, புராணம் சொல்றேன்" என்று கும்பகோண க்ஷேத்ர மஹிமையில் தொடங்கி அப்படியே ஸ்ரீ பகவத்பாதர்களின் மஹிமைக்குச் சென்று புங்கானுபுங்கமாகப் பல கூறினார்கள். அத்தனை கூறிய தற்கும் ஆதார ச்ருதி ஒற்றுமைக்கே வந்த அத்வைத பரம புருஷனின் பெயரில் நாம் அனைவரும் அன்பில் ஒன்று சேர்வதுதான் என்று ஆழமாக உணர்வித்தார்கள்.

பலமுறைகள் அவர்கள் பகவத்பாதாள் குறித்துப் பேசக் கேட்டிருக்கிறேன். குறிப்பாக இரு முறைகள் இது சம்பந்தமாக தத்வ இயல் அறிஞர்களுக்காக அநேக விஷயங்கள் அலசி அலசிப் புட்டுப் புட்டுக் கூறியது இங்கே நமக்கு முத்துக் குவியல்களைச் சரித்திருக்கிறது. இதற்காக வெல்லாம் 'பல்லாண்டு என்னும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே!' என்பதுபோல நன்றி கடந்த நாயகருக்கு நன்றிப் பிரணாமம் செலுத்துகிறேன்.

★ ஏனையோரில் ஆஞ்ஜநேய ஸ்வாமிகள் எனப்பட்ட ஸ்ரீமத் அநந்தாநந்தேந்திர ஸரஸ்வதிக்கு எந்நாளும் என் நினைவஞ்ஜலி உரித்தாகிறது. அவர்கள் ஒவ்வொரு முறை நான் ஸ்ரீமட முகாமுக்குப் போகும்போதும், இடைக் காலத்தில் ஸ்ரீ பகவத்பாதாள் தொடர்பாக ஸ்ரீசரணாள் கூறியதையெல்லாமும், பூர்வத்தில் அவர்கள் கூறியதில் தமக்கு நினைவு வந்ததையெல்லாமும் பரம அக்கறையோடு சேர்த்து முடிச்சுக் கட்டி வைத்திருந்து நிதிக்கிழிகளாகக் கொடுத்தவர்கள். நான் எழுதிய 'ஜயஜய சங்கர' ஒரு 'ஸம்க்ஷேப (சுருக்கமான) சங்கர விஜயம்'தான் என்றும்

Koviloor Digital Library

அதை விஸ்தரித்து ஒரு 'ப்ருஹத் (விரிவான) சங்கர விஜய'மும் நான் எழுதவேண்டும் என்றும் அவர்களுக்கு அவா. அதற்காகவே இப்படி ஸ்ரீசரணுளின் திருமொழிகளைத் திரட்டித் திரட்டிக் கொடுத்தார்கள், சபரி கனிகளைத் திரட்டிவைத்துக் கொடுத்ததுபோல! அவர்கள் ஆசைப் பட்டது போன்ற பெரிய நூல் எழுதும் எண்ணம் எனக்கு அறவே இல்லாவிட்டாலும் அருட் கனிகளாகவும் அறிவு மலர்களாகவும் அவர் அளித்ததையெல்லாம் பெற்றுக் காத்து வைத்தது—ஆஹா, இன்று இப்படியொரு ப்ருஹச் சங்கர விஜயம் நம் காலத்து சங்கரமூர்த்தியின் பெயரிலேயே வெளியாவதற்கு அரிய உதவி புரிந்திருக்கிறது!

நினைவஞ்சலிக்குரிய இன்னொருவர் டாக்டர் என். ராமேசன். 'ஸ்ரீ சங்கராசார்யா' என்ற ஆங்கில நூல் எழுதியவர். மேலும் பல விவரங்களையும், "பெரியவா எனக்குக் கொடுத்த தங்கப் பாளத்தையெல்லாம் உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று மனஸாரக் கூறி வழங்கியவர். மற்ருெருவர், ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள். 1920-களிலிருந்தே ஸ்ரீசரணுளை ஆச்ரயித்து அவர் பெற்றிருந்த "பிக்ஷை"களை அடியேனுக்கு ஆர்வத்தோடு உபகரித்தவர். இந்நூலில் "ஸ்ரீ சங்கர சரித"த்தில் ஓரளவும், "குருமூர்த்தியும் த்ரிமூர்த்திகளும்" என்ற உரையில் கணிசமாகவும் ஸ்ரீசரணர்களிடமிருந்து அவர் பெற்ற 'உபயம்' நமக்கு விஷயதானமாயிருக்கிறது.

★ அடிக்கோடிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விஷயம் என்னவெனில், இப்படிப் பல ஆதாரங்களிலிருந்து ஏராளமான விவரம் பெற்றது நான் "ஜய ஜய சங்கர" எழுதி வெளியான பிறகே என்பதாகும்! "விவரம் பெற்றது" என்பதைவிட "வந்தது" என்று சொல்வதே பொருத்தமா யிருக்கும். ஆம், அதற்காகவென்று நான் நாடித் தேடிப் போய்ப் "பெருமல்" அவையாகவே "வந்தன"! என் முயற்சியில்லாமல், தொடர்ச்சியாக, வலிந்து வந்து ப்ரவாஹ மாகச் சேர்ந்துகொண்டு போயின! இவை யாவற்றையும்

Koviloor Digital Library

நான் குறித்து வைத்துக்கொள்ளுமாறும், அவசியமான மேல் விவரங்களைத் துருவித் தேடி இட்டு நிரப்பும்படியாகவும் "எதுவோ ஒன்று" செய்திருக்கிறது! அந்த "எதுவோ ஒன்று" இன்று இந்த நூல் உருவாவதற்காக என்றைக்கோ ஏற்பட்ட ''மேலிடத்து'' ஸங்கல்பம்தான் என்றே உணர்கிறேன். மஹாபுருஷர் ஒருவரது அரிய கருத்துக்களை அவரேயும், அவருக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட உத்தம ஜீவர்களும் இத்தனை அக்கறையுடன் வழங்கியதெல்லாம் இரண்டு காதோடு, காற்றோடு போவதற்காக இராமல், ஒரு ''மேலிட''த் திட்டத்தில் நடந்ததாகவே இருக்கவேண்டுமென்பதில் ஸந்தேஹமென்ன?

★ நன்றியஞ்சலிக்குரிய இன்னொருவர் இப்பகுதிக்கு மட்டுமின்றி, முன் பகுதிகளுக்கும் உதவி நல்கியிருப்பவர். அவர் பகவத்பாதர்களை அம்மையப்பனாகவும், நம் ஸ்ரீசரணர்களை பகவத்பாதர்களாகவுமே வழிபட்டவர் என்பதால்தான் போலும், சங்கர சரிதம் விரியும் இப் பகுதியில்தான் அவரைக் குறிப்பிட வேண்டுமென்று என் புத்தியில் உறைத்திருக்கிறது! என் பிதாவான ஸ்ரீ சி. வே. ராமசந்திரய்யர் தாம். அவர் சேகரித்து வைத்திருந்த புத்தகங்கள் 'பல்விதமாயின சாத்திரத்தின் மணம்' வீசுவன. முப்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸோமதேவ சர்மா அவற்றைப் பார்வையிட்டுவிட்டு என்னிடம், 'உனக்கு அப்பா வைத்திருக்கும் அருமையான சொத்து!' என்றார். அப்போது நான் அந்த அருமையை அவ்வளவாக உணர்ந்திருக்கவில்லை! பிற்பாடு நானே ஆத்மிக விஷயமாக எழுதுமாறு ஏற்பட்டபின் சொத்தின் அருமை கொஞ்சம் கொஞ்சமாகப் புரிய ஆரம்பித்தது. அப்புறம், பதிநான்காண்டுகளுக்கு முன் 'தெய்வத்தின் குரல்' அங்குரார்ப்பணம் செய்ததிலிருந்து என் குறிப்புக்களிலிருந்த அரைகுறை மேற்கோள்களைப் பூர்த்தி செய்து கொள்வதில் அப்பா சொத்தின் அருமை மேன்மேலும் தெரிந்தது. பகவத்பாதாள் விஷயமே முக்ய

Koviloor Digital Library

மாக வரும் நிகழ் பகுதியிலோ அருமை முழுமையாகப் புரிந்துவிட்டது!

★ இன்று நம்மோடிருப்பவர்களில் நல்லன்பர் நால்வரைக் குறிப்பிட்டு நன்றி சொல்லவேண்டும்.

1960லிருந்து 74 வரை நான் நினைத்தபோதெல்லாம் ஸ்ரீசரணுளிடம் செல்ல வசதி செய்து தந்தவர் (கல்கி) ஸ்ரீ ஸதாசிவம் அவர்கள்.

ஸ்ரீ சரணுளின் 1957-59 சென்னை உபந்யாஸங்களை 'டேப்' செய்தவர் ஸ்ரீ ஆர். அனந்த நாராயணன்.

அப்பா சொத்திலும் கிடைக்காத "Fill up the blanks-"ல் பல உடனுக்குடன் உதவியவர் வித்யாவாசஸ்பதி ப்ரஹ்மஸ்ரீ ராமதாஸய்யர் அவர்கள்.

மின் விசிறிக்குக் கீழே, இருந்த இடம்விட்டு அசையாமல் நான் சொகஸாக எழுதிக்கொண்டு போக, இவ்வளவு பெரிய நூல் உருவாவதில் ஏற்படக்கூடிய வெளி அலைச்சல்களை யெல்லாம் "அண்ணு"வுக்காக உள்மார மேற்கொண்டவர் சிரஞ்ஜீவி மோஹனராமன்.

★ 1932-ல் ஸ்ரீசரணுள் சென்னையில் ஆற்றிய உரைகளைப் பதிப்பித்த கலைமகள் பிரசுரத்தினர், அப்போதே அவர்கள் குறிப்பாக நிகழ்த்திய 'ஸ்ரீ சங்கர விஜய' உபந்யாஸங்களைப் பதிப்பித்த காமகோடி கோசஸ்தானத்தினர், பி. ஜி. பால் கம்பெனியார், 'காமகோடி' ஸஞ்சிகையினர் ஆகியோருக்கும் என் ஆழ்ந்த நன்றி உரித்தாகிறது.

★ "வானதி" திருநாவுக்கரசு அவர்கள் எல்லையில்லாத பூர்வ புண்யம் செய்தவர்; இப்போதும் செய்துகொண்டிருப்பவர். அதனுல்தான் நடமாடும் தெய்வத்தில் குரல் எழுத்தானபின் அதைப் பாரெங்கும் பரப்பும் பரமோத்தமப் பணிஅவருக்கே வாய்த்திருக்கிறது! குறிப்பாக இந்த ஒரு பகுதியை—கதாநாயகரும் சங்கரர், கதை சொல்பவரும் சங்கரராக அமைந்த இந்தப் பகுதியை—வெளியிடும் புண்யம்

Koviloor Digital Library

அவரையும் அவரது இல்லத்தையும் அலுவலகத்தையும் வாழ்வாங்கு வாழ்விக்கும். அவருடைய அன்புக்கும், அவரளித்த ஊக்கத்திற்கும், நூலுக்கு இவ்வளவு மிதமாக விலை வைத்துள்ள அவரது தார்மிக சிந்தைக்கும் என் மனமார்ந்த போற்றுதல்கள்.

எழுத எழுத அச்சிட்டுக்கொண்டுபோனதில் பல சிரமங்கள். திரும்பத் திரும்ப எத்தனையோ கூட்டல்கள், கழித்தல்கள். பண்பும், பணிவுமாக முடித்துக் கொடுத்த 'மாருதி' அச்சகச் செல்வன் ஹரிஹரனுக்கும் பணியாளர்களுக்கும் என் உளங்கனிந்த பாராட்டுக்கள்.

ஒன்றேயான அன்றைய-இன்றைய சங்கரர்களை மேலட்டையிலும், நிர்விக்னமாக இப் பணியை முடித்துத் தந்து நிர்த்தமிடும் ஐங்கரனைப் பின்னட்டையிலும் வன்னமுற வழங்கியுள்ள 'விநு'வுக்கு என் சுப சிந்தனைகள்.

வாசகர்களுக்கும் நெஞ்சார நன்றி சொல்லவேண்டும். எத்தனை ஈடுபாட்டுடன் முன் நான்கு பகுதிகளைப் படித்து, மேலும் எழுத ஊக்கி உத்ஸாஹமூட்டியிருக்கிறார்கள்? பல பகுதிகள் மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்களையும் கண்டு உவகை அடைந்திருக்கிறேன். நுணுக்கமாகக் கேள்வி கேட்டிருப்பவர்கள் பலர். உதாரணத்துக்கு ஒன்று (இப் பகுதியிலும் வெகுவாக ஸம்பந்தப்பட்ட விஷயமாதலால்) சொல்கிறேன்: ஸம்ஸ்க்ருத வார்த்தைகளை முடிந்தமட்டும் மூலரூபத்திலேயே புரிந்துகொள்ளும்படிதானே இப்பகுதிகளில் கொடுத்துவருகிறது? உதாரணமாக, 'உபன்னியாசம்' என்று பொதுவில் எழுதுவதை 'உபந்யாஸம்' என்றுதானே நாம் கொடுக்கிறோம்? இதைக் கருத்தில் கொண்டு ஒரு வாசகர், "'ஸந்யாஸம்' என்று இல்லாமல் ஏன் 'ஸந்நியாஸம்' என்றே நம் நூற்பகுதிகளில் காண்கிறது? அதன் மூலவடிவம் Sanyasam என்றில்லாமல் Sanniyasam என்றே உள்ளதா?" —என்று கேட்டு எழுதியிருந்தார்! ('ஸந்-ந்யாஸம்' என்பதுதான் மூல வடிவம். 'ஸந்யாஸ'மும் அல்ல; 'ஸந்நியாஸ'மும் அல்ல. அடுத்தடுத்து இரட்டை 'ந்'

Koviloor Digital Library

போடுவது தமிழ் மரபில் விசித்ரமாகப் பட்டதாலேயே 'ஸந்நியாஸம்' என்று போட்டுவருகிறோம்.)

★

"த்வதீயாபிர்-வாக்பிஸ்-தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம்—உனதேயான வாக்கினால் உனக்கென்று அமைந்த ஸ்தோத்ரம் இது" என்று பகவத்பாதாள் 'ஸௌந்தர்ய லஹரி'யை முடித்து பகவதி பாதத்தில் வைத்ததுபோல, "குருநாத! தங்களதேயான வாக்கால் தங்களுக்குச் செய்த ஆராதனை இத்தொகுப்பு" என்று ஸ்ரீசரணர்களின் ஸ்ரீகரமான சரணங்களில் இதை அர்ப்பணம் செய்கிறேன். அதேபோதில், "பயந்து நடுங்குகிறேனாயினும், பக்திதான் என்னை உந்தி இந்த வாக்குப் பூஜையை வரதனான உன் பாதத்தில் அர்ப்பிக்கச் செய்கிறது: சகிதம் அமந்தீக்ருத்ய மாம் பக்திராதாத் வரத சரணயோஸ் தே வாக்ய-புஷ்போபஹாரம்" என்று 'சிவமஹிம்ந ஸ்தோத்ர' கர்த்தர் சொன்னதையும் நினைவுகொள்கிறேன். அவர் சொல்லுமளவுக்கு அச்சத்தில் ஆடிப்போகாவிடினும், பய பக்தியுடனேயே, பிழை பொறுத்தருள ப்ரார்த்தித்தவாறே பொன்னார் திருவடிகளில் இதனை வைக்கிறேன்.

ஏன் பயம், என்ன பிழை?

இப் பகுதியில் விரியும் ஐந்து உரைகள் நூற்றுக்கு மேற்பட்ட பொது ப்ரஸங்கங்களிலும், உரையாடல்களிலும் ஸ்ரீசரணர்கள் கூறியவற்றிலிருந்து நெசவு செய்தது. இப் பணியில் ஒட்டவும், வெட்டவும், ஒரு சில இடங்களில் கூட்டவுங்கூட அவச்யம் ஏற்பட்டிருக்கிறது. என் குறிப்புக்கள், பிறர் தந்த தகவல்கள் ஆகியவற்றில் சில தவறுகள் இருந்திருக்கலாம். ஆகவே நூலில் குற்றம், குறைகள் ஏற்பட்டிருக்கவும் இடமுண்டு. இந்த மஹா பெரும் சொற்கோயில் நிர்மாணம் என் சிற்றறிவால் ஆனதாக இன்றி, ஸவித்ரு மண்டல மத்தியில், காயத்ரீ மண்டப மத்தியில் விளங்கும் நம் தாய் ஸ்ரீ காமாக்ஷி மஹா

Koviloor Digital Library

த்ரிபுரஸுந்தரி இந்த அற்ப அறிவில் ப்ரவேசித்து, ப்ரகாசித்து ஆக்குவித்ததாகவே இருக்கவேண்டும் என்ற அனவரத வேண்டுதலோடுதான் பணியாற்றினேன். அவள்போல் கைகொடுக்கும் தெய்வமில்லைதான்! எத்தனையோ விஷயங்களை ஒன்றிணைக்க வைத்ததோடு, அத்தனைக்கும் ஜீவ மூலம் அபேத தத்வ அவதாரனின் மெய்யடியார்களாக நாமெல்லாரும் மனோ பேதம் யாவும் நீங்கி வேத வழியில் செல்வதேயாகும் என்று புரிவித்து, அந்த அன்பு அஸ்திவாரத்தின் மீதே இவ்வாலயத்தை எழுப்ப அவள் அருள் துணை புரிந்திருந்திருக்கிறாள்! ஆயினும், பாருங்கள், ஸாதிப்பு - 'ego' தலை தூக்கக் கூடாதே என்ற கருணையினால் போலும், நிச்சிந்தையாக, ஆனந்தமாக எல்லாம் எழுதி முடித்து இன்று இம் முகவுரை எழுதும்போது ஓர் இழை அச்சத்துடனேயே மஹா புருஷரின் முன் மண்டியிட்டு மன்னிப்பு வேண்டும் சிறுமைப் பாக்கியத்தை அநுக்ரஹித்திருக்கிறாள்!

ஸாது வா (அ)ஸாது வா கர்ம யத்-யத்-ஆசரிதம் மயா |
தத் ஸர்வம் க்ருபயா தேவ க்ருஹாணாராதநம் மம ||

"இப் பணியில் நல்லதானாலும், அல்லதானாலும் என்னென்ன செய்திருப்பினும் அனைத்தையும் அடியேன் செய்யும் ஆராதனையாக க்ருபை கூர்ந்து ஏற்றருள வேண்டும், மஹாதேவனே!" என்று ஸ்ரீசரணர்களை வேண்டுகிறேன்.

★

அன்பு-அமைதி-ஆனந்தமாம் 'சம்'மை நம் யாவருக்கும் அன்றும் இன்றும் என்றும் உள்ள சம்கரர் அருள்வாராக!

சென்னை-600 017
1-5-1989

ரா. கணபதி

Koviloor Digital Library

செப்பம் செய்துகொள்ளச் சில

★ 129-ம் பக்கம் நான்காம் பாராவில் மூன்றும் வரியிலிருந்து அப் பாரா முடியப் பின்வருமாறு இருக்க வேண்டும்:

இங்கே மூன்றடுக்குகளாக ஸந்நிதிகளை அமைத்திருக்கிறது. இம்மாதிரி ஆலயம் நிர்மாணிப்பது ரொம்பவும் அபூர்வமே. பாண்டி நாட்டில் திருக்கோட்டியூரிலுள்ள பெருமாள் கோவில், மதுரையிலேயே கூடலழகர் கோவில், காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவிலைக் கட்டிய நந்திவர்மனின் பிள்ளையான தந்திவர்மன் காஞ்சிக்கு ஸமீபத்திலுள்ள உத்தரமேரூரில் கட்டிய ஸுந்தரவரதப் பெருமாள் கோவில் ஆகியவற்றில்தான் இந்த அமைப்பு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அங்கேயெல்லாம் 'அஷ்டாங்க விமானம்' என்பதற்கான ஆகம விதிப்படி பெருமாளின் நின்ற திருக் கோலத்தைக் கீழ் தளத்திலும், இருந்த (உட்கார்ந்த) திருக்கோலத்தை நடு தளத்திலும், கிடந்த (சயனித்த) திருக்கோலத்தை மேல் தளத்திலும் அமைத்திருக்கிறது. [இந்த வைகுண்டப் பெருமாள் கோவிலில் மாத்ரம் க்ரமத்தை மாற்றி, கீழ் தளத்தில் இருந்த திருக்கோலம், நடு தளத்தில் கிடந்த திருக்கோலம், மேல்தளத்தில் நின்ற திருக்கோலம் என்று இருக்கிறது!

★ பக்கம் 189-ல் பிரம்மாவுக்குக் கோயிலுள்ள இடங்களைக் குறிப்பிட்டிருப்பதில், "திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தில் உத்தமர் கோவிலில் த்ரிமூர்த்திகளுக்கும்

Koviloor Digital Library

ஸந்நிதி இருப்பதில் ப்ரம்மாவும் இருக்கிறார்" என்று சேர்த்து கொள்ளவும்.

★ பக்கங்கள் 215, 221, 222, 223, 224 ஆகியவற்றில் "ஈச்வர கோடி." என வருமிடங்களிலெல்லாம் "ப்ரம்ம கோடி." என்று திருத்திக்கொள்ளவும்.

★ பக்கம் 360 பத்தாம் வரியில் "தள்ளிவிட்டு" என்பதற்குப் பின், "மூன்று குணங்களின் ஏற்ற இறக்கங்கள் இல்லாமல் அவற்றை ஆடாமல் ஸமநிலைப்படுத்தி" என்று சேர்த்துக்கொள்ளவும்.

★ 529-ம் பக்க அடிக்குறிப்புக் கூறும் ஸ்ரீருத்ர பாஷ்ய காரர் நூலில் பிற்பாடு குறிப்பிடப்பெறும் காஞ்சி ஸ்ரீமடத்தின் 38-வது பீடாதிபதிகளான அபிநவ சங்கரர் அல்ல. இவர் அதே பெயர் கொண்ட வேறொருவர்.

★ பக்கம் 535, பாரா மூன்றில் கூறப்படும் "சிவ ரஹஸ்யம்" லக்ஷம் க்ரந்தம் கொண்டதல்ல. ஐம்பதாயிரத்திற்கு அதிகமான க்ரந்தம் கொண்டதே. 'நிர்ணய ஸிந்து' என்ற புகழ் பெற்ற தர்ம சாஸ்திர நூல் 'சிவரஹஸ்ய'த்தை ஒரு ப்ரமாண நூலாகத் தெரிவித்திருப்பதாக ஸ்ரீசரணர்கள் கூறியிருக்கிறார்கள்.

★ 541-ம் பக்க மத்தியில் குறிப்பிட்டுள்ள 'மார்க் கண்டேய ஸம்ஹிதை' நூறு 'கண்டங்கள்' என்ற பிரிவுகள் கொண்டது. ஒவ்வொரு கண்டத்திலும் 'பரிஸ்பந்தங்கள்' என்ற உட்பிரிவுகள் உள்ளன. அதன் 72-ம் கண்டத்திலுள்ள 7-8 பரிஸ்பந்தங்கள் ஸ்ரீ சங்கரரின் சரிதையைக் கூறுகின்றன.

★ 542-ம் பக்க நடுவிலுள்ள ச்லோக முடிவில் வரும் "ஸவிதாநநா" என்பது "ஸவிதா ந நா" என்ற மூன்று பதங்களாகப் பிரியவேண்டும். இது குறித்து ஸ்ரீசரணர்களின் விளக்கம்:-"ஆசார்யாள் தெய்வமான ஸவிதாவே; அதாவது ஸூர்யனே; ஸாதாரண மநுஷ்யரில்லை என்று ச்லோகம்

Koviloor Digital Library

சொல்கிறது. 'ந நா' என்றால் மநுஷ்யர் இல்லை. 'பித்ரு' என்பது 'பிதா' என்று வருகிறது. 'ஸவித்ரு' என்பது 'ஸவிதா'வாகிறது. 'நர' என்பதை 'ந்ரு' என்றும் சொல்வதுண்டு. 'நரஸிம்ஹ'த்தை 'ந்ருஸிம்ஹம்' என்றும் சொல்கிறோமல்லவா? 'பித்ரு-பிதா', 'ஸவித்ரு-ஸவிதா' மாதிரி 'ந்ரு-நா'. அதாவது 'நா' என்றாலே நாம் நரர், மநுஷ்யர் என்று சொல்வது. "ந நா" என்றால் 'மநுஷ்யரில்லை' என்று அர்த்தம்."

★ 641-ம் பக்க அடிக்குறிப்பில், "அவர் பிற்பாடு மற்ற மூன்று கன்னிகைகளை மணம் செய்துகொள்ளும்போது அவளை மணக்கிறார்" என்று சேர்த்துக்கொள்ளவும்.

★ 665-ம் பக்க அடிக்குறிப்பில் சேர்த்துக்கொள்க: "எப்போதும் 'ஜய கோவிந்த ஜய!' என்று ரஸித்துச் சொல்வது தவிர வேறு பேச்சின்றி மௌனமாகவே இருந்ததால் அவர் (ஜய) கோவிந்த முனி என்று சொல்லப்பட்டார்" என்று கூறும் 'ப்ராசீன சங்கர விஜய' ச்லோகம் டி. எஸ். நாராயண சாஸ்திரியின் "The Age of Sankara" (1971 ed.) 60-ம் பக்கத்தில் காண்கிறது.

★ 672-ம் பக்கம் மூன்றும் பாராவுக்கும் பின் சேர்த்துக் கொள்க: "நம்முடைய பகவத்பாதாளுக்கும் ராமாநுஜாசார்யாருக்கும் இன்னொரு பெரிய ஒற்றுமை, இரண்டு பேருடைய ஜயந்தியும் ஒரே நாளில் வருவது! நாம் (ஜன்ம திதியான)பஞ்சமியை வைத்து ஜயந்தி கொண்டாடுகிறோம். அவர்கள் (ராமாநுஜரின் ஜன்ம நக்ஷத்ரமான) திருவாதிரையை வைத்துக் கொண்டாடுகிறார்கள். அப்படியும் அநேகமாக இரண்டு பேர் ஜயந்தியும் ஒரே நாளில்தான் வருகிறதைப் பார்க்கிறோம்."

★ பக்கம் 705, கடைசி பாராவில் "மண்டன மிச்ரர் எழுதியதாக மீமாம்ஸைப் புஸ்தகம் எதுவும் கிடைக்கவில்லை"

Koviloor Digital Library

என்பதற்குப் பின் " 'மீமாம்ஸாநுக்ரமணிகா' முதலான புஸ்தகங்கள் எழுதிய மண்டனமிச்ரர் இவரில்லை என்றும், இதே பேருள்ள இன்னொருவர் என்றும் பண்டிதர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். அவர் அத்வைத புஸ்தகமாகவும் 'ப்ரஹ்ம ஸித்தி' என்று ஒன்று எழுதியிருக்கிறார். ஆசார்யாள் கொள்கைகளுக்கு அது கொஞ்சம் வித்யாஸமாகப் போகும். நம் கதையில் வருகிற மண்டனமிச்ரர் பிற்காலத்தில் ஆசார்ய சிஷ்யராகி ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டபின் எழுதிய அத்வைத புஸ்தகங்கள்தான் நமக்குக் கிடைத்திருக்கின்றனவே தவிர அவர் பூர்வத்தில் மீமாம்ஸா விஷயமாக எதுவும் எழுதியதாகத் தெரியவில்லை" என்று சேர்த்துக் கொள்ளவும்.

★ பக்கம் 815, மூன்றும் பாரா முடிவுக்குப் பின் "அலெக்ஸாண்டர் காலத்து க்ரீஸ் தேசக்காரர்கள் அப்போது Xandrames என்பவன் பாடலிபுத்ரத்தில் ராஜாவாயிருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். அது யார் என்று நிச்சயம் பண்ணமுடியா விட்டாலும் இங்கே 'Xandra' என்பது ('Sandra' இல்லை; 'Xandra') 'சந்த்ர' என்பதைத்தான் என்று ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள். மெகஸ்தனிஸோ 'Sandra' என்கிறார்!"—என்று சேர்த்துக்கொள்ளவும்.

★ 923-ம் பக்கம் இரண்டாவது பாராவுக்குப் பின், "புராண—இதிஹாஸங்களில் ஆசார்யாள் ஈச்வராவதாரமே என்று சொல்லியிருப்பதை முன்னமேயே சொன்னேன். அவற்றிலே குறிப்பாக "சிவ ரஹஸ்ய"மும் "மார்க்கண்டேய ஸம்ஹிதை"யும் கொஞ்சம் detailed-ஆகவே ஆசார்யாள் சரித்ரத்தைச் சொல்கின்றன. ஒருவிதத்தில் அவற்றை நமக்கு basic text என்கிறார்களே, அப்படிப்பட்ட ஆதார க்ரந்தங்களாக வைத்துக்கொள்ளலாம்" என்று சேர்த்துக் கொள்ளவும்.

Koviloor Digital Library

★ *1100*-ம் பக்கத்தில் பிள்ளையார் பற்றி இருப்பதில், "காஞ்சி ப்ருத்வீ க்ஷேத்ரம்; கணபதியே ப்ருத்வீ தத்வந்தான்" என்றும்; குமரக் கோட்டம் பற்றி இருப்பதில், "விசேஷம் என்னவென்றால், ஸோமாஸ்கந்த மூர்த்தத்தில் எப்படி குமாரஸ்வாமி ஈச்வரனுக்கும் அம்பாளுக்கும் மத்தியில் இருக்கிறாரோ அப்படியே இந்த குமரக்கோட்டமும் கச்சி ஏகம்பத்துக்கும் காமகோட்டத்துக்கும் மத்தியில் அமைந் திருக்கிறது" என்றும் சேர்த்துக்கொள்க.

★ *1101*-ம் பக்கம் அடிக்குறிப்பு *1*-ல் சேர்த்துக் கொள்க: 'சித்விலாஸீய சங்கர விஜயம்', *31*-ம் அத்யாயம், *15-24* ச்லோகங்களும் இவ்விஷயத்தைக் கூறுகின்றன.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	11	ஆகர்ஷிந்து	ஆகர்ஷித்து
14	18	குருமாப்	குருமார்
,,	20	மன்னுர்குடிர்	மன்னுர்குடிப்
21	26	பலனளித்தக்கதாக்க	பலனளிக்கத் தக்கதாக்க
33	28	பரமேச்வரனுடையே	பரமேச்வரனுடைய
35	2	அவளவாளுக்கு	அவாளவாளுக்கு
41	31	தெய்மானுலும்	தெய்வமானுலும்
42	11	தத்ஹேதுத்வே	தத்ஹேதோரேவ தத்ஹேதுத்வே
50	13	அநாயஸமாக	அநாயாஸமாக
51	25	சில உபாஸனேயை	சிவ உபாஸனேயை
53	21	செசன்னுர்	சொன்னுர்
54	23	வற்றை	அவற்றை
80	2	சிந்திதார்ந்தம்	சிந்திதார்த்தம்
94	11	அப்போது!	அப்போது
99	5	சொல்கிருர்கள்?	சொல்கிருர்கள்?' என்று தோன்றுகிறது.
122	26	திருவெக்கா	திருவெஃகா
139	9	புரணங்களில்	புராணங்களில்
149	21	ஸாமவேதியான	சுக்ல யஜுர்வேதியான

Koviloor Digital Library

159	24	விடுவாம்	விடுவோம்
169	26-7	தெய்வதென்றால்	செய்வதென்றால்
215	29	நோய்கொடிகளையும்	நோய்நொடிகளையும்
218	16	முடியாமலிருப்பதான்!	முடியாமலிருப்பது தான்!
223	15	முன்றுமவராக	மூன்றுமவராக
226	29	பரமாத்மாவுக்கு	பரமாத்மா
231	24-5	ப்ரியத்து	ப்ரியத்துடன்
256	5	திதோர்ஷோ:	திதீர்ஷோ:
265	7	அடித்துக்	அடித்துத்
273	20	த்ரிபுவந	த்ரிபுவநைக
292	அடிக் குறிப்பு	Iv	IV
,,	,,	vII	VII
318	19	இப்படித்	இப்படி
321	அடிக் குறிப்பு	vI	IV
322	,,	இங்கு குறிப்பிடப்படும் உரை இப்பகுதியில் சேர்க்கப்படவில்லை.	
323	17	நரநாரயணர்கள்	நர-நாராயணர்கள்
341	அடிக் குறிப்பு	ருஹதாரண்யகம்	ப்ருஹதாரண்யகம்
342	22	ஸாமன்ய	ஸாமான்ய
342	கடைசி வரி	ஆசிய	ஆகிய
343	15	என்ற	என்று
346	4	ஜஸைமூஹத்தில்	ஜனஸமூஹத்தில்
350	12	என்றுசொல்வதாலேயே	சொல்வதாலேயே
361	14	அப்சதனமான	அசேதனமான
364	15	ச்ரமம்	ச்ரம
372	13	மித்யைத்யையாக	மித்யையாக
376	25	மூர்திகளை	மூர்த்திகளை

Koviloor Digital Library

383	17	டித்துப்போட்டு	அடித்துப்போட்டு
406	15-16	ஸ்ருஷ்டியிலிருத்து	ஸ்ருஷ்டியிலிருந்து
420	21	ஆசர்யாள்	ஆசார்யாள்
447	கடைசி வரி	இருபது	இருபத்து
462	”	IIII	III
464	30	மூன்துருவ	மூன்ருவது
475	27	கஷ்டப்படுத்துக் கிறதுகளே	கஷ்டப்படுத்து கிறதுகளே
493	25	தெரிகிறது!——வருகிறது?	தெரிகிறது?—— வருகிறது!
496	2	ஓன்றுமே	ஒன்றுமே
504	அடிக் குறிப்பு	III-7	III.17
508	”	vI	VI
512	அடிக்குறிப்பு "அஜ்ஞாநந்தர்" ச்லோகம் குறித்ததாகும்.		
547	12	'கிவ'	'சிவ'
561	5	அப்யேகந்த	அப்யேகதந்த
564	6	சிவமே	சிவம்
”	11	ஏகோ-விசிஷ்ட	ஏகோ-(அ)வசிஷ்ட
580	7	ஸ்த்தியும்	ஸ்திதியும்
584	23	அப்போது	அப்படி
631	2	ஆரம்பித்து	ஆரம்பித்த
643	31	வைராகய	வைராக்ய
656	20	ஸந்யிநியாஸிகள்	ஸந்நியாஸிகள்
736	அடிக் குறிப்பு	வலிதாம்பிகை	லலிதாம்பிகை
765	கடைசி வரி	56	65
766	3	(அ)பிசகலே	(அ)பிசகலேர்
”	22	Che	Cha
774	22	ஹாம	மஹா

Koviloor Digital Library

779	6	(அ)வ்யாஹ்ருதவாந்	(அ)ப்யாஹ்ருதவாந்
807	16	பலிஷ்யோத்தர	பவிஷ்யோத்தர
814	24	ருந்தபடி	யிருந்தபடி
831	14	அவருயைடவை	அவருடையவை
834	19	நினைவுக்	நினைவு
842	அடிக்குறிப்பு, அதற்கு மூன்று வரிகள் முன்பு "ஆகுலீக்ரியதே" என்று முடியும் வாசகம் குறித்தது.		
861	28	ஜரதிப்ரஷ்டன்	ஜாதிப்ரஷ்டன்
863	3	கொடுப்பான்	கொடுப்பாள்
874	23	ஸுபயஸு	ஸுபயஸி
"	31	பெரிது கடல்	கடல் பெரிது
889	12	எதை	அந்த
891	26	த்ரிபுவந	த்ரிபுவநைக
893	19	"	"
900	15	"ஸ்வீகரித்தது" என்பதற்குப் பின் "கனகதாரை பெய்ய வைத்தது," என்று சேர்த்துக் கொள்க.	
923	இப்பக்க எண் 623 என உள்ளது.		
927	31	கர் அவள்	அவர்கள்
930	10	ப்ராசாரம்	ப்ரசாரம்
936	9	பெயரிருந்து	பெயரிருந்தது
951	2	ரூபத்தையும்	மூலத்தையும்
982	19	துளிகளுக்குவ்ளும்	துளிகளுக்குள்ளும்
986	18	ஸுஷுப்திஸு	ஸுஷுப்திஷு
987	22	"	"
990	9	நிர்வ்ருத	நிர்வ்ருதி
998	6	பிட்பற்றுவதுதான்	பின்பற்றுவதுதான்
1009	11	ஞானநிஷ்டைக்குக்கு	ஞானநிஷ்டைக்கு
1010	24	என்கிறேன்	என்கிறேன்: 'தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே'.

Koviloor Digital Library

1011 அடிக்குறிப்பில் "XVIII.60" என்பதற்குப் பின் "XVI.24" எனச் சேர்த்துக்கொள்க.

1013	11	இனேயடி	இணையடி
1038	9	அவனேப்	பையனேப்
1041	கடைசி வரி	அவர்களது மென்று	மென்று அவர்களது
1055	16	அவளுடைய	அவருடைய
1056	3	ல்டியதிகாட்	காட்டியதில்
1058	18	ஸதாதன	ஸநாதன
1073	24	Gmposition	imposition
1111	3	காமகோடு	காமகோடி
1119	கடைசி வரி	அந்தாதிக்	அந்தாதி
1120	2	பேர்ற்றி	போற்றி

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொருளடக்கம்

பொருள் பக்கம்

மங்களாரம்பம்

தேவரும் தொழும் தெய்வம் ... 3
காரிய நிறைவு கரிமுகனாலேயே ... 3
மலரும் மனமும் ... 4
ஆனைக்கா ஆனைமுகன் ... 6
வாகீசர் யார்? ... 8
தேவதையரின் இடையூறும் தீர்ப்பவர் ... 11
மன்னார்குடிப் பெரியவாள் ... 13
"ந்யாயேந்து சேகரம்" ... 16
பிள்ளையாரும் தர்க்க சாஸ்திரமும் ... 18
"பெரியவா"ளின் பிள்ளையார் ச்லோகம் ... 19
'தத்-ஹேது' நியாயம் ... 20
இதர தெய்வ உபாஸகரும் வழிபடுவது ... 23
"தொந்தம்" ... 24
பாத தாமரை ... 25
"பாத பூஜைக்கார"ரின் பெருமை ... 26
'ந்யாயம்' அறியாதவரும் அறிந்தவரும் பண்ணுபவை ... 28
எல்லாப் பலன்களும் அளிக்காதவராயினும் ... 32
பல தெய்வங்கள் ஏன்? ... 36
எல்லாப் பலனும் அளிக்காதவராயினும்தான்! ... 38
'வெரைட்டி' வழிபாடே மனித இயற்கை ... 42
இக-பர பலன்கள் ... 46
இரண்டு தாயார்க்காரர்! ... 48
ஆறு தாயார்க்காரர்! ... 50

Koviloor Digital Library

ஐயப்பனின் தாயாரைப் பற்றிய பிரச்னை! ... 51
விக்நேச்வரர் ரக்ஷிக்கட்டும்! ... 59
கண்டனத்திலும் கண்ணியம் ... 62
பிறையுடன் விளையாடிய பிள்ளையார் ... 63
சித்ர கவிதை ... 65
"மங்கள" ச்லோகம் ... 69
ஊடல்-கூடலின் தத்வார்த்தம் ... 70
விளையாட்டில் மறைந்த விரோதம் ... 71
"அந்த" ச்லோகத்திற்கு "இந்த" ச்லோகத்தின் அத்தாட்சி ... 78
களபம் ... 80
லேசாக்கி அருள்வாராக! ... 81

குரு

ஈசனும் ஆசானும் ... 87

பிற சொத்துக்களும், குரு தரும் சொத்தும் ... 87
தெய்வ பக்தியும் குரு பக்தியும் ... 89
அநுபவ ஞானம் ... 90
மூளையும் இதயமும் ... 94
ச்ருதி-யுக்தி-அநுபவம் ... 96
இரண்டு பக்திகளா? ... 98
பலனளிப்பவன் ஈச்வரனே! ... 100
இரண்டு க்ருபைகளா? ... 101
எல்லா வணக்கமும் போய்ச் சேருவது ஒருவனையே ... 102
ஒரே பக்திதான்; க்ருபையும் ஒன்றுதான்! ... 103
ச்லோகப் பொருளில் மாறுதல் ... 106
ஒருவரே போதுமெனில் அவர் ஈச்வரனா, குருவா? ... 107
மாறுபாட்டில் ருசியே மனித இயற்கை ... 108
அநன்ய பக்தி; ஆதர்சத்துக்கான யுக்தியே ... 111
அநன்ய பக்தி; நடைமுறை சிரமங்கள் ... 112

Koviloor Digital Library

'ஈசனே குரு' என்பதும், 'குருவே ஈசன்' என்பதும் ... 115
குருவையே ஈசனுகக் கொள்வதெப்படி? ... 115
குரு வழிபாட்டின் சிறப்பம்சங்கள் ... 117
யதோக்தகாரி: சொன்ன வண்ணம் செய்த பெருமாள் ... 120
காஞ்சியிலுள்ள "திவ்ய தேசங்கள்" ... 122
பல்லவரும் சைவ-வைணவமும்; வைகுண்டப் பெருமாள் கோயில் ... 123
பல்லவர் தோற்றுவாய் ... 125
திருவெஃகா பெருமாளின் பெருமை ... 130
கணிகண்ணன்: அருள் நெஞ்சும் அஞ்சாநெஞ்சும் ... 134
சொன்ன வண்ணம் செய்தது! ... 138
ஈச்வரனையும் வருவித்துத் தரும் குரு ... 148
ஸோமாசி மாற நாயனுர் ... 149
ஸ்வாமியிடம் ஸ்வாதீனம் கொண்ட ஸ்வாமிகள் ... 151
நம் அறிவை மீறிய மஹான்களின் போக்கு ... 152
தூதுபோன தூதுவனே! ... 156
பரமன் வைத்த பரீக்ஷை ... 162
குருவுக்குக் குறை இருந்தாலும்... ... 167
குருபக்தியின் அநுகூலங்கள் ... 168
மூன்று விதமான பாவங்கள் ... 179
குருபக்திக்கு ஈசன் செய்யும் அருள் ... 181
குரு-சிஷ்யர்: இருபெரும் தர்மங்களின் உருவகம் ... 183
எந்த பாவத்தினுலும் ஈசனருள் பெறலாம் ... 184
குருமுகமாக அறிவதன் சிறப்பு ... 185

குருமூர்த்தியும் த்ரிமூர்த்திகளும் ... 187

மும்மூர்த்தியரை மூலப்பொருளாக அல்லாமல்!... 187
பண்டிகை இல்லாத கடவுள் ... 188

Koviloor Digital Library

கோயிலில்லாத கடவுள்	...	189
பூஜை இல்லாத காரணம்	...	189
வைஷ்ணவ ஆலய மூர்த்திகள்	...	194
ஆகமத்தில் ப்ரம்மா	...	195
ப்ரம்மாவின் தொழில் கருணையானதே!	...	195
ருத்ரன்-சிவன் (சிவம், நடராஜா)- மஹேச்வரன்	...	197
வைஷ்ணவத்தில்	...	199
குரவே நம:	...	201
எதற்காக நமஸ்காரம்?	...	202
முத்தொழில் புரிபவர் என்பதற்காக வழிபாடில்லை	...	202
முழுமுதலாக விளங்கும் மூர்த்திகள்	...	214
ப்ரம்மாவுக்கு மட்டும் ஏன் விலக்கு?	...	215
ப்ரம்மாவை உள்ளடக்கி த்ரிமூர்த்தியர் ஏற்பட்ட காரணம்	...	226
ஸரஸ்வதிக்கு ஆலயம் இல்லாததேன்?	...	231
ஸாவித்ரி, காயத்ரி, நாரதர் விஷயம்	...	233
குரு பரம்பரையில் ப்ரம்மா	...	235
நமஸ்கரிப்பதற்குக் காரணமில்லை!	...	237
வித்யாஸமான முத்தொழில்கள்	...	238
நமஸ்காரத்திற்கு உரியவராக	...	245
பரப் பிரம்மமாக	...	249
கரை ஏறியவர், ஏற்றுவிப்பவர்	...	249
ஆசார்யாள் அளிக்கும் ஆசார்ய லக்ஷணம்	...	250
ப்ரம்மமாயினும் நமஸ்காரத்துக்குரியவரே!	...	257
நமஸ்காரமே செல்வம்: ஆசார்யாள் உணர்த்துவது	...	258
அம்பா, மாதா: அம்மன், தாயார்	...	260
நமஸ்காரம் அளிக்கும் பயன்கள்	...	262
ஒரு திருத்தம்: 'துரித உத்தரணம்'	...	264
மறுமைப் பயன் கோரி	...	269
"ஏவ" எதில் சேர வேண்டும்?	...	270

Koviloor Digital Library

மூவுலக குரு ... 273
குரு வந்தனை-நிந்தனை: அம்ருதம்-விஷம் ... 275
குருவின் 'முயற்சி' உத்தரணத்தைக் குறிப்பதே ... 277

ஸ்ரீ சங்கர சரிதம்

ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி ... 285
இருவித மக்களுக்கான இரு வழிகள் ... 289
கர்ம மார்க்கத்தின் இருவித பலன்கள் ... 294
காலப்போக்கில் கர்ம யோக நலிவு ... 301
இரு மார்க்கங்களின் உபதேசங்கள் ... 304
பக்தி ... 307
கீதை கூறும் யோகங்கள் ... 311
'நிரந்தர' யோகமான அத்வைதம் ... 313
கண்ணன் செய்த புனருத்தாரணம் ... 315
கண்ணனும் சங்கரரும் ... 320
பூர்வகால அவதாரங்கள் ... 322
கலியுகம்: தொடக்க காலத்திலும்
பிற்காலத்திலும் ... 325
கலியின் பேரபாயம்: மயக்கு வேஷம் ... 327
புது மத ஸ்தாபகர்கள் ... 329
பௌத்த சமண மதங்களும் ஹிந்து மதமும் ... 331
யாகத்தில் ஹிம்ஸை ... 335
'பிற மத கண்டனத்திற்காக அல்ல;
ஸ்வயமத கண்டனம் கூடாது என்றே! ... 337
கலி அதர்மத்திற்கே ஸங்கற்பிக்கப்பட்டதா? ... 344
சங்கர 'விஜயம்' ... 350
எழுபத்திரண்டு மதங்கள் ... 351
ஆசார்யாளின் ஆச்சரிய ஸாதனை ... 355
அனைத்தும் அடங்கிய வைதிகம்
ஆசார்யாள் மதமே ... 357
இதர மதங்களைப் பற்றி ... 358
கடவுட் கொள்கை ... 368

Koviloor Digital Library

பௌத்த-ஜைனமும் பொது ஜனங்களின் மனப் போக்கும் ... 373
அப்பட்டமான லோகாயதம் ... 378
வேதத்தை ஒப்பியும் வேதாந்தத்தை ஒப்பாத மதங்கள் ... 379
அக்கால வழிபாட்டு முறைகள் ... 381
முழுதும் வேத ஸம்மதமானதாலே வைதிகம் ... 386
புறச்சி மதங்கள் ... 392
அவதாரம் தோன்ற அவசியச் சூழ்நிலை ... 394
அவதார தத்வம் ... 395
அவதார ரஹஸ்ய சூசனை ... 401
ஏன் ஸங்கல்ப மாத்திரத்தால் கூடாது? ... 402
அவதாரத்தில் மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையும் ... 409
கலந்து பழகும் ஆசைக்காகவும் ... 412
அவதாரம் குறித்து ஐயம் கூடாது ... 417
முன்னெப்போதுமில்லா தர்மக் குலைவு ... 418
கீதாவாக்ய பரிபாலனம்: பிரச்னையும் தீர்வும் ... 419
ஏன் ஸந்நியாஸியாக அவதாரம்? ... 423
ப்ரம்மசர்ய ஆச்ரமத்திலும் ... 430
அந்தண குல அவதாரம் ... 434
விஷ்ணு அவதாரமும் சிவாவதாரமும்; சிவ-விஷ்ணு ஒற்றுமை வேற்றுமைகள் ... 435
ஞான சிவனே ஞானவதாரமாவது ... 453
சக்தி உள்ளடங்கிய தக்ஷிணாமூர்த்தியின் அவதாரம் ... 457
சாக்தர், சைவர், வைஷ்ணவர் மூன்றுமான ஆசார்யாள் ... 459
மங்கள்மயமான தெய்வ குரு ... 461
அவதாரத்திற்குப் பூர்வாங்கம் ... 463
செயலற்றவரின் கருணையுள்ளம் ... 465
மனமென்ற த்வைதம் மறைவதே அத்வைதம் ... 467
சூன்யமில்லை; ஸச்சிதானந்த பூர்ணமே! ... 470
ஜீவாத்ம-பரமாத்ம பேதமும் இல்லை ... 472

Koviloor Digital Library

மாயா ஸஹிதனுயினும் ஈசன் ஞானியே!	...	476
அவதார நோக்கம்: கர்மா-பக்தி வழியே ஞானம் அடைவித்தல்	...	477
கலப்படமற்ற நன்மை எதுவுமில்லை	...	482
உபகாரப் பணியிலும் அபகாரம்!	...	483
எதுவும் செய்யாமலிருப்பதற்கான அவதாரம்!	...	495
நடைமுறையில் நற்கர்மத்தின் பயன்	...	497
செயலற்றுப் போக வழியாகவே செயல்களும்!	...	499
நடைமுறை: காரியம் செய்வது; லக்ஷ்யம்: சும்மாயிருப்பது	...	500
கர்த்தாவின் அஹம்பாவம் நீங்கவே நல்லதிலும் கெடுதல்	...	502
ஸ்வயநலமாகாது	...	507
சும்மாயிருப்பதாலும் லோகோபகாரம்	...	510
காரியமின்மையைச் சொல்லவே ஓயாக்காரிய அவதாரம்	...	511
சம்-பு சம்-கரரானுர்!	...	512
ஈச்வராவதார ப்ரமாணங்கள்: வேத - இதிஹாஸ - புராணங்களில்	...	522
நேர் சிஷ்யர்கள் தரும் சான்று	...	544
அவரே அளிக்கும் சான்று!	...	562
பூர்வாசார்ய பரம்பரை	...	565
வஸிஷ்டரிலிருந்து வ்யாஸர் வரை	...	571
சுக ப்ரஹ்மம்	...	579
"பதஞ்ஜலி சரிதம்"	...	590
திருமாலின் இதயத்தில் சிவ நடனம்	...	592
அஜபா-ஹம்ஸ நடனம்	...	595
ஆதிசேஷன் அவதாரம்	...	597
திரிகரணத்திற்கும் திருத்தொண்டு	...	601
ஆயிரம் சிடருக்கு அதிசயப் பாடம்!	...	611
பிரம்மரக்ஷஸ்; ராக்ஷஸ ஜாதி	...	613
விபரீதம் விளைந்தது!	...	615
கௌடர்; திராவிடர்	...	616

Koviloor Digital Library

தப்பித்த சீடருக்குச் சாபமும் அநுக்ரஹமும்	...	617
கௌடரின் பிற்கால சரித்திரம்	...	622
ஞானியும் பக்தியும்	...	630
ஆசார்யாளின் போற்றுதல்	...	631
சந்திர சர்மாவின் சரித்திரம்	...	633
குரு பரம்பரையில் ஸந்நியாஸிகள்	...	645
(நிர்வாணம்)	...	647
ஸந்நியாஸ நாமம்; சங்கர நாம மஹிமை	...	664
ராமாநுஜர் ஒற்றுமை	...	668
கோவிந்தரின் சிறப்பு	...	673
அதிகார புருஷர் வரிசையே ஆசார்ய பரம்பரை	...	686
வேண்டுதலும் வரமும்	...	687
தேவர்களின் அவதாரம்	...	692
பௌத்த கண்டனத்தில் மீமாம்ஸகர்களின் உதவி	...	693
பௌத்தத்தின் மும்முனை ஆக்ஷேபணை	...	695
கடவுட் கொள்கையை நிலைநாட்டியது	...	696
ஆசார்யாளின் பாகுபாடு	...	702
கர்ம மார்க்கக்காரர்களின் அவதாரத்திற்குக் காரணம்	...	706
இந்திரன், ஸரஸ்வதி அவதாரங்கள்: அரசு ஸஹாயமின்றியே ஆசார்யாள் பணி	...	707
கேரள சரிதம்	...	710
ஆதித் தமிழகத்தின் அந்தணர்கள்; கேரளத்தில் தமிழ்	...	713
கும்பகோணப் பூர்வீகம்? காஞ்சிஸ்ரீமடமும் கும்பகோணமும்	...	725
ஆர்யாம்பா: காஞ்சி காமாக்ஷி ஆர்யன்: ஐயப்பன்	...	735
அவதார பூமிக்கான யோக்யதாம்சம்	...	737
பெற்றோரான புண்யசாலிகள்	...	739
திருச்சூரில் வேண்டுதல்; க்ஷேத்ரச் சிறப்பு	...	741
வரப் பிரதானம்	...	744

Koviloor Digital Library

ஜயந்திச் சிறப்புக்கள் ... 747
விமரிசையாக விழாக் கொண்டாடுக! ... 750
காஞ்சி மண்டலத்தின் விசேஷத் தொடர்பு ... 751
காமாக்ஷி ஆலயத்தில் சங்கர ஜயந்தி ... 754
மனத்தின் அர்ப்பணமும் மௌன மனனமும் ... 756
நாமகரணச் சிறப்பு ... 759
கடபயாதி ஸங்கியை ... 760
கடபயாதியில் ஸித்தி நாள் ... 765
அவதார நன்னாள் ... 768
'சம்'மைச் செய்வது; பிரத்யக்ஷச் சான்று ... 771
வஸந்தகால வைசாக மாதப் பொருத்தம் ... 772
ஸ்ரீசைலம்; "அர்ஜுன" க்ஷேத்ரங்கள் ... 774
ஸ்ரீ சங்கரரின் கால நிர்ணயம் ... 778
அவதார தின, ஸித்தி தின ச்லோகங்களில் கி.மு. 6-5 நூற்றாண்டுகள் ... 778
மாற்றுக் கருத்து (கி.பி. 788—820) ... 781
குமாரிலர் காட்டும் காளிதாஸனின் மேற்கோள் (மனஸ்ஸாக்ஷி ப்ரமாணம்) ... 784
ஆசார்ய பாஷ்யத்தில் பௌத்தக் கொள்கைகள் ... 787
ஆசார்ய ஸ்தோத்ரங்களில் கி.பி. குறிப்புக்கள் ... 788
பூர்ணவர்மனைப் பற்றிய குறிப்பு ... 792
மேல்நாட்டவரின் பரிஹாஸமும் உள்நோக்கமும் ... 796
கலியுகத்தில் நமது காலக் கணக்குகள் ... 805
நமது சரித்ர ஆதார நூல்கள் ... 807
மையக் கேள்வி: மெகஸ்தனிஸ் சொல்லும் ஸன்ட்ரகோட்டஸ் யார்? ... 809
காளிதாஸன் விஷயம் ... 818
கிறிஸ்து சகாப்த பௌத்த நூலாசிரியர்கள் விஷயம் ... 823
பூர்வகால புத்தர்களும் ஜினர்களும் ... 824
மஹாயான விஷயம் ... 828

Koviloor Digital Library

"த்ரவிட சிசு" விஷயம் ... 828
"ஸுத த்ரோஹி" விஷயம் ... 830
எது எந்த சங்கரர் செய்தது? ... 830
அநுக்ரஹமே லக்ஷ்யம், ஆராய்ச்சி அல்ல ... 831
பூர்ணவர்மன் விஷயம் ... 832
"அபிநவ சங்கரர்" ... 835
நவீன ஆராய்ச்சியாளரிடமே ஒரு மாற்றுக் கருத்து ... 841
கி. மு. முதல் நூற்றுண்டு என்னும் கருத்து ... 846
மேற்படி கருத்துக்கு மாற்றுக் கருத்து ... 848
த்வாரகா ஸ்ரீமடத்தின் சான்று ... 849
முக்கிய ஆதாரம்:
சங்கர மடங்களிடையே ஒரே கருத்து ... 850
ஹாலன்—பூர்ணவர்மன் ... 852
பௌத்த—ஜைன நூல்களின் அத்தாட்சி ... 855
அதிமேதைக் குழந்தை ... 858
பால்ய உபநயனச் சிறப்பு ... 859
அனைத்து சாஸ்திர அறிவும், அனைத்தும் அடங்கும் அத்வைதமும் ... 867
புரியாத ச்லோகம் புரிந்தது! ... 872
பொன்மழை பொழிவித்தது; லௌகிகத்திலேயே ஆத்மிகமும் ... 877
(முதல் துதியிலேயே பிற்கால உபதேசங்களின் வித்து) ... 890
மாறி ஓடிய ஆறு! ... 899
உலகப் பணி அழைத்தது! மனித தர்மமும், அவதார மர்மமும் ... 901
துறவியானுர்! ... 905
அன்னையைப் பிரிந்து ஆசானைத் தேடி... ... 913
அவருக்கு குரு எதற்கு? ... 917

Koviloor Digital Library

'சங்கர விஜய'ங்களும் ஆசார்யாள் குறித்த மற்ற நூல்களும் ... 920

கதாபேதங்கள் ... 923

மாதவீய சங்கர விஜயம் ... 930

வ்யாஸாசலீயம் ... 934

ஆனந்தகிரீயம் ... 935

(சிதம்பரமும் ஆசார்யாளும்) ... 941

குரு தர்சனம்—துறவறம்—ஸூத்ர பாஷ்யம் ... 950

காசி வாஸத்தில் வைதிக மதப் பிரசாரம் ... 953

ஆசார்யாளின் நூல்கள் ... 955

மூன்று மார்க்கங்களையும் ஸ்தாபித்தவர் ... 960

பத்மபாதரின் கதை; வேடனின் பெருமை ... 964

கொலையாளிக்கும் கருணை! ... 968

தாமரை தாங்கிய தாளர் ... 970

வ்யாஸருடன் வாதமும், ஆயுள் நீடிப்பும் ... 972

"ஞானியாயின் தீண்டாதானும் என் குருவே!" ... 976

ஞானியின் ஸமத்வம் வேறு; ஸமூஹ ஸமத்வம் வேறு ... 991

விச்வநாதர் விளையாடல்! ... 998

குமாரிலபட்டர் கதை; கர்மமும் ஞானமும் ... 999

மண்டனரின் பண்டித நகரம் ... 1015

மண்டனர்—ஸரஸவாணி தம்பதியை வென்றது ... 1018

ச்ருங்கேரிச் சிறப்பு ... 1029

ஸுரேச்வரரின் தனித்தன்மையும் சிறப்பும் ... 1030

பத்மபாதரின் 'பஞ்ச பாதிகை' ... 1034

மௌனஞானி ஹஸ்தாமலகர் ... 1036

தோடகர்: தாஸ்ய பக்தியின் திருவுருவம் ... 1040

இன்னும் இரு சிஷ்ய ரத்தினங்கள்: ஸர்வஜ்ஞாத்மரும் ப்ருத்வீதவரும் ... 1047

அதிசயம் சாதித்த அமோக திக்விஜயம்: ஆன்மிய ஐக்கியமும் தேசிய ஐக்கியமும் ... 1053

உக்ர தெய்வங்களை சாந்தமாக்கியது ... 1058

Koviloor Digital Library

தெய்வபேதம் நீக்கியது:
'பஞ்சாயதன' மூர்த்திகள் ... 1061
அனைத்து மட்டத்தினருக்கும் ஆசார்யரான
ஜகத்குரு ... 1065
அத்வைதம் உள்ளிட்ட மதங்களின்
ஸாராம்சம் ... 1067
ஸ்ரீ சங்கர மடங்கள் ... 1078
அன்னை மறைவு ... 1082
அகில பாரத க்ஷேத்ராடனம் ... 1084
சிவ-சக்தி தர்சனம்; சிவலிங்கங்களும்
சக்தி ஸ்துதியும் ... 1089
காஞ்சி மகிமை ... 1098
காஞ்சியில் ஆசார்யாள் ... 1101
சரிதம் கேட்ட பலன் ... 1116

மங்களாரத்தி

அஞ்ஜனைச் செல்வன்
அஜாட்யம் அருளட்டும்! ... 1123

Koviloor Digital Library

மங்களாரம்பம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

தேவரும் தொழும் தெய்வம்

காரிய நிறைவு கரிமுகனாலேயே

புது வருஷம் பிறக்கும்போது பஞ்சாங்கம் படிப்பது வழக்கம். அப்போது முதலில் ஒரு ச்லோகம் சொல்லப்படுகிறது :

வாகீசாத்யாஸ் - ஸுமநஸஸ் - ஸர்வார்த்தாநாம்
உபக்ரமே |
யம் நத்வா க்ருதக்ருத்யாஸ்யு : தம் நமாமி கஜாநநம் ||

'கஜானன' என்று முடித்ததால், ச்லோகம் பிள்ளையாரைப் பற்றியது என்று எல்லாருக்கும் புரிந்திருக்கும். அவரைப் பற்றி இங்கே என்ன சொல்லியிருக்கிறது? "ப்ரம்மாதி தேவர்களும்கூட எந்தக் கார்யத்தின் ஆரம்பத்திலும் எவரை நமஸ்கரித்தே எடுத்த கார்யத்தை முடித்தவர்களாகிறார்களோ அந்த கஜானனரை—யானை முகனரை—நானும் நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்று சொல்லியிருக்கிறது.

'அல்ப சக்தர்களாக உள்ள மநுஷ்யர்கள்தான் என்றில்லை, நிரம்ப சக்தி படைத்த தேவர்களும்கூடப் பிள்ளையாரை வணங்குகிறார்கள். எப்போதாவது, முக்யமான ஸமயங்களில், பிள்ளையார் சதுர்த்தி மாதிரியான தினங்களில்தான் வணங்குகிறார்கள் என்றில்லை. எப்போது பார்த்தாலும், எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் வணங்குகிறார்கள்' என்று ச்லோகம் தெரிவிக்கிறது.

அது மட்டுமில்லை. வணங்கியதன் பயனைப் பூர்ணமாகப் பெற்றுவிடுகிறார்களென்றும் தெரிவித்துவிடுகிறது,

Koviloor Digital Library

அவர்கள் நமஸ்காரம் பண்ணினுர்கள், இவர் அதை வெறுமனே வாங்கிக்கொண்டார் என்று முடிந்துபோக வில்லை. அவர்கள் எந்தக் கார்யத்தின் ஆரம்பத்தில் அவரை நமஸ்காரம் பண்ணினுர்களோ அந்தக் கார்யத் தைப் பலிதமாக்கி, நிறைவேற்றிக் கொடுத்துவிடுகிருர். அவர்களை எடுத்த கார்யத்தை வெற்றிகரமாக முடித்தவர் களாக, அதாவது ச்லோகத்தில் சொல்லியிருக்கிறபடி 'க்ருத க்ருத்யர்'களாக, ஆக்கிவிடுகிருர்.

தேவர்கள்கூடப் பிள்ளையாரை நமஸ்கரிக்கிருர்கள் என்பதற்கு ச்லோகத்தில் "வாகீசாத்யா: ஸுமநஸ:" என்று சொல்லியிருக்கிறது. "வாகீசன் முதலான தேவர்கள்" என்று அர்த்தம்.

'ஸுமநஸ்' என்றுல் தேவர்.

மலரும் மனமும்

'ஸு மநஸ்' 'என்றுல் நேர் அர்த்தம் 'நல்ல மனம்'. நல்ல மன விசேஷம்தான் தேவ சக்தி. துஷ்ட மனஸ்தான் அஸுர சக்தி. புஷ்பத்துக்கும் ஸுமநஸ் என்று பேர் உண்டு. ஒரு செடி அல்லது கொடியின் நல்ல மனம் மாதிரி இருப்பது அதன் புஷ்பம். நல்ல மனஸுக்கு அடையாளம் என்ன? அதில் அன்பு ஊறிக்கொண்டிருப்பதுதான். இம்மாதிரி ஒரு செடியிலோ கொடியிலோ மாதுர்யத்தின் ஸாரமான தேன் ஊறிக்கொண்டிருப்பது அதன் புஷ்பத்தில்தானே? அதன் பழத்தை விடவும் தித்திப்பு தேன்தான். கசப்பாகக் கசக்கும் காய், பழம் கொண்ட தாவரவகைகள் எத்தனையோ உண்டு. ஆனுல் அவற்றிலும் புஷ்பத்திலே ஊறுகிற தேன் கசப்பாக இருப்பதாக எங்குமே கிடையாது. ஒரு செடி அல்லது கொடியில் பார்க்கவும் ரொம்ப அழகானது, ஸ்பர்சத்துக்கும் ரொம்ப மென்மையானது, வாஸனையும் அதிகம் கொண்டது, எல்லாவற்றுக்கும் மேலாக அதனுடைய பரம மாதுர்ய ஸாரத்தைத் தருவது அதன் புஷ்பந்தான். இப்படிச்சொன்னதால் ஐம்புலன்களில் கண், சர்மம், மூக்கு,

Koviloor Digital Library

நாக்கு ஆகிய நான்குக்கும் ஒரு புஷ்பம் இன்பம் ஊட்டுவதாகத் தெரிகிறது. கண்ணுக்கு ரொம்பவும் அழகான ரூபம் பூவுக்கு இருக்கிறது. சர்மத்துக்கு ஸுகமாக அதன் மார்தவம் (ம்ருதுத்தன்மை). மூக்குக்கு நல்ல ஸுகந்தம். நாக்குக்கு ருசியான தேன். பாக்கி இருப்பது காது. அந்தக் காதுக்கு இன்பமான வண்டுகளின் ரீங்காரத்தையும் ஒரு புஷ்பம் தன் தேனைக்கொண்டு வரவழைத்துவிடுகிறது!

ஸுமநஸ் என்றால் அழகானது என்றும் அர்த்தம்.

இப்படி நல்ல மனம், அழகு, தேவர்கள், புஷ்பம் ஆகிய நாலுக்கும் 'ஸுமனஸ்' என்று பெயரிருப்பதை வைத்துச் சிலேடை செய்து பல ச்லோகங்கள் உண்டு. (ஸ்ரீ அனந்த ராம) தீக்ஷிதர் பிராபல்யப் படுத்திவரும் மஹிஷாஸுர மர்த்தினி ஸ்தோத்ரத்தில்கூட இப்படி 'ஸுமநஸ்—ஸுமநஸ்' என்று மூன்று நாலு தரம் அடுக்கிக்கொண்டு போயிருக்கிறது. 'நல்ல மனம் கொண்ட தேவர்கள் அர்ச்சனை பண்ணுகிற அழகான புஷ்பங்களின் நிரம்பவும் மநோஹரமான காந்தியுடன் கூடியவளே!' என்று ஸ்தோத்ரிக்கும்போது, 'நல்ல மனம்', 'தேவர்கள்', 'அழகு', 'புஷ்பம்', 'நிரம்பவும் மநோஹரமான' என்கிற ஒவ்வொன்றுக்கும் ஒரு 'ஸுமந'வைப் போட்டு அழகாக ச்லோகம் அமைந்திருக்கிறது.

தேவர்களாலும் பூஜிக்கப்படுபவர் பிள்ளையார் என்று சொல்லும்போதே நல்ல மனம்கொண்ட எவரானாலும் அவரை பூஜை பண்ணித்தான் பண்ணிவிடுகிறார்கள் என்றும் தெரிவித்துவிடுகிற மாதிரி "வாகீசாத்யா: ஸுமநஸ:" என்று, தேவர்களைக் குறிப்பாக இந்த ஸுமனஸ் என்ற பெயரால் சொல்லியிருக்கிறது.

நல்ல மனமுள்ளவரெல்லாம் ஒருத்தரைப் பூஜை பண்ணுகிறார்களென்றால், அப்படிப் பூஜிக்கப்படுபவரும் ரொம்ப நல்ல மனஸ் படைத்தவராகத்தானே இருக்கவேண்டும்?

Koviloor Digital Library

ஆனைக்கா ஆனைமுகன்

பிள்ளையாருடைய மனஸ் எத்தனை நல்லது என்பதற்கு ஒன்று சொல்லிவிட்டால் போதும். ஒருத்தரின் கிட்டேயே கோபம் நெருங்க முடியாது; மஹா கோபிஷ்டர்கூட அவருக்கு முன்னால் தானாகவே சாந்தமாகிவிடுவாரென்றால் அப்படிப்பட்டவர் வெகு நல்ல மனம், உயர்ந்த அன்புள்ளம் படைத்தவராகத்தானே இருக்க வேண்டும்? இப்படி ஒரு உதாஹரணம் பிள்ளையார் விஷயமாக இருக்கிறது. நம் எல்லோரிடமும், ஈ எறும்பிலிருந்து ஆரம்பித்து அத்தனை ஜீவராசிகளிடமும் பரம கிருபையோடு இருக்கக்கூடிய ஒருவர் யார்? ஸாக்ஷாத் அம்பாள் தான். இத்தனை ஜீவராசிகளுக்கும் தாயாக இருக்கப்பட்ட அகிலாண்ட ஜனனி அவள்தானே? அப்படிப்பட்ட அந்த அகிலாண்டேச்வரியே ஒரு ஸமயம் உக்ர ரூபம் கொண்டிருந்தாள். ஜம்புகேச்வரத்தில் (திருவானைக்காவில்) இருக்கப்பட்ட அகிலாண்டேச்வரி கலிகாலத்தில் ஜனங்கள் போகிற போக்கைப் பார்த்து இப்படி உக்ரக் கோலமாக ஆகிவிட்டாள். ஸகல சக்தியும் அவள்தானுகையால் அன்பில் பரம ஸௌம்யமான லலிதாம்பாளாக இருக்கப்பட்ட அவளே கோபம் வந்தால் அதன் உச்சியில் காளியாயிருப்பாள். இப்போது அப்படித்தான் ஆகியிருந்தாள்.

கலியைக் கட்டுப்படுத்தி வைப்பதற்காக அவதாரம் செய்திருந்த நம்முடைய ஆசார்யாள் அங்கே வந்தார். பரமேச்வராவதாரமானதால் அவரால் உக்ரகோலத்திலிருக்கிற அம்பாளிடமும் போகமுடியும். ஆனாலும் அவர் இந்த ஸந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பிள்ளையாரின் அன்பு மனப் பெருமையை உலகத்துக்குத் தெரிவிக்க நினைத்தார். அதனால் அம்பாளுக்கு நேர் எதிரே, கோவில் முடிந்து மதில் வந்துவிடுகிற அவ்வளவு தூரத்திலே, பெரிசாக ஒரு பிள்ளையாரை ப்ரதிஷ்டை பண்ணிவிட்டார்!

Koviloor Digital Library

அவ்வளவுதான்! செல்லப்பிள்ளை எதிரே இருக்கிறான் என்றதும் அம்பாளுடைய அத்தனை உக்ரமும் போன இடம் தெரியாமல் போய்விட்டது! அநேக விநாயக மூர்த்தங்களில் ஒன்றுக்கு 'செல்லப் பிள்ளையார்' என்றே பெயர்! அப்படிப்பட்ட பிள்ளையின் அன்பு மன விசேஷத்தால் அம்பாளுக்கும் கோபம் போய் வாத்ஸல்யம் பிறந்தது.

அப்போது அம்பாளை விட்டுப் போயிருந்த கோபம் மறுபடியும் ஒருபோதும் அவளிடம் திரும்பிவிடக் கூடாதென்று ஆசார்யாள் நினைத்தார். அதனால் அந்த உக்ர கலைகளை அப்படியே யந்த்ராகாரமான இரண்டு தாடங்கங்களில் ஆகர்ஷிந்து சமனம் செய்தார் (அடக்கினார்). அந்தத் தாடங்கங்களை அம்பாளின் காதுகளிலேயே அணிவித்தார்.

தாடங்கம் ஸௌமங்கல்யத்துக்கு (ஸுமங்கலித் தன்மைக்கு)ச் சின்னம். அமிருதத்தைச் சாப்பிட்டவர்களாயிருந்தபோதிலும் மற்ற தேவர்களெல்லாம் அழிவடைகிற மஹாப்ரளயத்திலுங்கூட, அவர்கள் அமிருதம் சாப்பிட்ட போது தான் ஒருத்தன் மட்டும் காலகூட விஷத்தைச் சாப்பிட்டானே, அந்தப் பரமேச்வரன் மட்டும் எப்படி அழியாமலிருக்கிறான் என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் ஒரு கேள்வி எழுப்பியிருக்கிறார்.* உடனே அதற்கு ரத்னச் சுருக்கமாகப் பதிலும் சொல்லிவிடுகிறார். "தவ ஜநநி தாடங்க மஹிமா: அம்மா! இது உன் தாடங்கத்தின் மகிமைதான்" என்கிறார்.

இப்படி அவளுடைய பாதிவ்ரத்ய (கற்பு நெறி)ப் பெருமைக்குரிய தாடங்கத்தில் உக்ரகலையை ஆகர்ஷித்ததோடு, அதற்கு முந்தியே அவளுடைய வாத்ஸல்யப் பெருமையைக் காட்டுவதாக ப்ரிய வத்ஸனான பிள்ளையாரை அவளுக்கு முன்னால் ப்ரதிஷ்டை பண்ணிவிட்டார்.

---

* ச்லோகம் 28

Koviloor Digital Library

ஜம்புகேச்வரம், திரு ஆனைக்கா என்ற இரண்டு பேர்களிலுமே பிள்ளையார் ஸம்பந்தமிருக்கிறது. ஜம்பு என்பது நாவல் மரம். அந்த க்ஷேத்ரத்தில் வெண்ணாவல் மரம்தான் ஸ்தல வ்ருக்ஷம். பிள்ளையாருக்கு ரொம்பப் பிடித்தது நாவல் பழம். 'கபித்த ஜம்பூபல ஸார பக்ஷிதம்' என்று ஸ்தோத்ரம் சொல்கிறோம். பிள்ளையாரின் பரம பக்தையான அவ்வையாருக்கு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி போட்ட சுட்ட பழமும் நாவல்தான்.

'திரு ஆனைக்கா' என்கிறபோதும் அதிலே 'ஆனை' வந்து உட்கார்ந்துகொண்டு கஜானன மூர்த்தியை ஞாபகப்படுத்துகிறது.

ஈச்வரனே ஆசார்ய ரூபத்தில் அவதாரம் செய்தபோது ஈச்வரிக்கு, அகிலாண்ட ஈச்வரிக்கு முன்னால் சிவ-சக்தி தம்பதியரின் ப்ரிய ஸுதனான பிள்ளையாரை ப்ரதிஷ்டை செய்தது விசேஷம்.

கருணாமூர்த்தியாக இருக்கப்பட்ட பராசக்திக்குமே கூடக் கோபம் ஏற்பட்டாலும், அது போய் அவள் குளிர்ந்த மனஸோடு லோகத்துக்கு அநுக்ரஹம் பண்ணும்படியாக மாற்றிவிடும் சக்தி பிள்ளையாருக்கு இருக்கிறது. 'சக்தி' என்றால் அவர் ஏதோ பெரிசாக மந்த்ரம் போட்டோ, அல்லது வேறே ஏதாவது பண்ணியோ அந்தப் பராசக்தியை மாற்றவேண்டுமென்றில்லை. இவர் அவள் கண்ணிலே பட்டுவிட்டால் அதுவே போதும். அன்பே வடிவமான விநாயக ரூபத்தைப் பார்த்தமாத்திரத்தில் அம்பாளின் கண் வாத்ஸல்ய வர்ஷம் பொழியத் தொடங்கிவிடும்.

அத்தனை நல்ல மனஸ் அவருக்கு! ஸுமனஸாகிய அவரை வாசோதி ஸுமனஸர்கள் நமஸ்கரித்தே ஸகல கார்ய ஸித்தி பெறுகிறார்கள்.

வாகீசர் யார்?

வாகீசர் என்பது யார்? திருநாவுக்கரசு ஸ்வாமிகளுக்கு அப்படிப் பேர் என்பது தெரிந்திருக்கலாம். மருள்நீக்கியார்

Koviloor Digital Library

என்பதே அவருக்கு இயற்பெயர். பிற்பாடு அவர் சமண மதத்தில் சேர்ந்து அதிலே ஒரு முக்ய புருஷரானபோது தர்மஸேனர் என்று பெயர் வைத்துக்கொண்டார். அதற்கும் பிற்பாடு அவர் மறுபடியும் நம்முடைய மதத்துக்கே திரும்பித் திருவதிகையில் தம்முடைய முதலாவது தேவாரத் திருப்பதிகம் பாடியவுடன் பரமேச்வரனின் வாக்கே அசரீரியாக எழுந்து அவருக்கு 'நாவுக்கரசு' என்ற பெயரைச் சூட்டியது. 'நாவுக்கு அரசு' என்பதற்கு ஸம்ஸ்க்ருதம் 'வாகீசர்'. வாக் - சொல், ஈசர் - அரசர். நாவுக்கு அரசர் என்பது சொல்லுக்கு அரசர் என்பதால் தானே? இதற்கும் அப்புறம் திருஞானஸம்பந்தர் அவரை 'அப்பரே!' என்று அழைத்ததால் அப்பர் என்றும் அவருக்கு ஒரு பெயர் ஏற்பட்டுவிட்டது.

ஆனால் இங்கே (பிள்ளையார் ச்லோகத்தில்) சொல்லும் வாகீசர் என்பது அப்பர் ஸ்வாமிகளல்ல. வாகீசர் முதலான தேவர்களைப் பற்றியல்லவா இங்கே சொல்லியிருக்கிறது. தேவஜாதியில் வாகீசர் என்பது யார்?

இரண்டு தேவர்களுக்கு அந்தப் பெயருண்டு. ஒருவர் ப்ருஹஸ்பதி. மற்றவர் ப்ரம்மா.

'ப்ருஹஸ்பதியோ?' என்று கேட்கிற அளவுக்கு விசேஷமான புத்தி ப்ரகாசம் பெற்ற தேவகுரு, வியாழன் என்று சொல்கிறோமே, அவர் ஸகல சாஸ்திரங்களிலும் மஹா கெட்டிக்காரரானதால் வாகீசர் எனப்படுபவர். பேச்சில்வல்ல வாகீசர் அவர். வாகீசர் என்றே அர்த்தம் கொடுப்பதான 'கீஷ்பதி' என்ற பெயரும் அவருக்கு உண்டு. ப்ருஹஸ்பதியை ப்ரஹ்மணஸ்பதி என்றும் வேதம் சொல்லும். அறிவும் வித்வத்தும் உருவமான அவருக்குப் பிள்ளையார் ஸம்பந்தம் விசேஷமாக உண்டு. 'வேதகால ப்ரஹ்மணஸ்பதிதான் புராணகால விக்நேச்வரர்' என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்வார்கள். விநாயகமூர்த்தியின் ஆவாஹனத்தில் ப்ரஸித்தமாக வழங்கும் வேத ரிக்கே ப்ரஹ்மணஸ்பதிக்கானதுதான்,

Koviloor Digital Library

தேவர்கள் விதிப்படி குருமுகமாகப் பிள்ளையார் வணக்கம் செய்கிறார்களென்று காட்டுவதற்காக 'வாகீ சாத்யா: ஸுமநஸ:' என்று சொல்லியிருக்கிறதென்று உள்ளர்த்தம் செய்துகொள்ளலாம். தேவகுருவே பிள்ளை யாருக்கு நமஸ்காரம் பண்ணிச் சீடர்களான தேவர்களுக் கெல்லாம் வழிகாட்டுகிறார் என்று தொனிக்கிறது.

வாக்தேவியான ஸரஸ்வதியின் பதியான ப்ரஹ்மாவுக் கும் வாகீசர் என்ற பெயருண்டு. 'வாக்' என்றாலே ஸரஸ்வதி. ஸரஸ்வதீ காந்தர் வாகீசர்.

பொதுவாக 'ப்ரஹ்மாதி தேவர்கள்' என்று சொல்வதே வழக்கமாதலால் இங்கே 'வாகீசாதி ஸுமனஸர்கள்' என்று வருவதைக் கொண்டு, வாகீசர் என்பது ப்ரம்மாவைக் குறிக்கும் என்றே வைத்துக்கொள்ளலாம். ப்ரம்மாவுக்கு உள்ள பல பெயர்களில் 'வாகீச' என்பதைச் சொல்லியிருப் பதால் பிள்ளையார் அறிவுக்கும் வித்வத்துக்கும் தெய்வம் என்று உணர்த்தப்படுகிறது. வாக்தேவியான ஸரஸ்வதியின் பதி அவர் என்றால், அவள்தானே அறிவுக்கும் வித்யைக்கும் அதிதேவதையாயிருப்பவள்?

ப்ரஹ்மா ஸ்ருஷ்டிகர்த்தா. ஸ்ருஷ்டி என்றவுடன் காலம் என்ற தத்வத்தைத்தான் முதலில் நினைக்கிறோம். காலத்தை அளப்பதற்குத்தான் வருஷம் என்ற அளவு கோலை வைத்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் வருஷப் பிறப்பில் பஞ்சாங்க படனம் பண்ணும்போது ப்ரம்மாவை முதலில் சொல்லி, அப்பேர்ப்பட்ட ப்ரம்மா முதலான தேவர் கள் நமஸ்காரம் பண்ணும் விக்நேச்வரருக்கு வந்தனம் செலுத்துவது பொருத்தமாக இருக்கிறது.

ப்ரம்மாவை வாகீசர் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருப்ப தால் வாக்கு ஸம்பந்தமாக, அதாவது வாக்கு குறிப்பிடும் அறிவு, வித்வத், வித்யை, இலக்கியம் முதலானவற்றில் மேற் கொள்ளும் எல்லா முயற்சியையும் நிர்விக்னமாக நிறை வேற்றித் தர விக்நேச்வர பூஜை அவசியம் என்று தெரிகிறது. தொன்றுதொட்டு இந்த நம்பிக்கைப்படிதான்

Koviloor Digital Library

ஒரு சுவடி எழுதத் தொடங்கும்போது, அது எந்த விஷயம் பற்றிய சுவடியாயிருந்தாலும் ஸரி, ஆரம்பத்தில் "ஸ்ரீ கணபதயே நம:" என்று போடும் வழக்கம் அநுஸரிக்கப்பட்டு வந்திருக்கிறது.*

கால தத்வத்தை ஸ்ருஷ்டிகர்த்தர் என்ற முறையில் ப்ரம்மா ஞாபகப்படுத்துவதால் அவரால் வழிபடப்பெறும் பிள்ளையாரை வருஷம் தொடங்கும் போது நமஸ்காரம் பண்ணவேண்டுமென்பது போலவே, அவர் (ப்ரம்மா) வாகீசர் என்ற ஸரஸ்வதிகாந்தனாயிருப்பதால், அவர் வழி படும் பிள்ளையாரை எந்தப் புஸ்தகத் தொடக்கத்திலும் நமஸ்கரிக்க வேண்டுமென்றாகிறது!

இதனால்தான் இந்த ('வாகீசாத்யா: ஸுமநஸ:' என்ற) ச்லோகத்தையே ஆதி காவ்யமான ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைப் பாராயணம் பண்ணும்போதும் மங்கள ச்லோகமாக முதலில் சொல்கிறோம். அதற்கப்புறம்தான் ஸரஸ்வதியைக் குறித்ததான "தோர்பிர்யுக்தா" ச்லோகம் சொல்வது.

தேவதையரின் இடையூறும் தீர்ப்பவர்

இதிஹாஸ காவ்யம் ஒன்று என்றால் அதன் ஆரம்பத்தில் வாக்தேவியாயும் வித்யாதிதேவதையாகவும் இருக்கப் பட்டவளை ஸ்தோத்ரிப்பதே பொருத்தம், அதுவே போதும் என்று தோன்றலாம். ஆனால் அவளுக்கும் முந்திப் பிள்ளையாரை ஸ்தோத்ரிக்க வேண்டியிருக்கிறது. ஏன் இப்படி?

அவளை நாம் ஸ்தோத்ரிப்பதற்கே ஏதாவது விக்னம் ஏற்பட்டுவிட்டால் என்ன பண்ணுவது? அதனால் முதலில் விக்னங்களைப் போக்கடிக்கும் விக்நேச்வரரை ஸ்தோத்ரிக்க வேண்டியதாகிறது.

---

* "தெய்வத்தின் குரல்" மூன்றும் பகுதியில் 'பிள்ளையார் சுழி' என்ற முதல் உரையில் 'எழுத்துப் பணியில் விநாயகர் தொடர்பு' என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

இதைவிடவும் முக்யமாக இன்னொரு காரணமும் உண்டு. நாம் ஸ்தோத்ரிக்க முடியாமல் நமக்குத்தான் விக்னம் ஏற்படுமென்றில்லை. நாம் ஸ்தோத்ரிக்கும் தேவதை நமக்கு அநுக்ரஹம் பண்ணமுடியாமல் அந்த தேவதைக்கும் ஏதாவது விக்னம் ஏற்படலாம். புராணங்களைப் பார்த்தால் தெரியும், ஸாக்ஷாத் பார்வதி பரமேச்வரர்கள், மஹாவிஷ்ணு, அவருடைய அவதாரங்கள், ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி முதலானவர்களுக்குக்கூடச் சில ஸந்தர்பங்களில் எடுத்த கார்யத்தை முடிக்கமுடியாமல் விக்னங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்போது அந்த தெய்வங்களும் விக்நேச்வரருடைய ஸஹாயத்தைக் கோரிப் பெற்று, அவருடைய அருளாலேயே விக்னத்திலிருந்து நிவாரணம் பெற்றிருக்கிறார்கள்.* ப்ரம்மாதி தேவர்களும் இவரை நமஸ்கரித்தே க்ருத க்ருத்யர்களாவார்களென்று தானே (ஆரம்பத்தில் சொன்ன) ச்லோகத்திலும் பார்த்தோம்? அதனாலேயே இவருடைய துணை அவர்களுக்கு இல்லாவிட்டால் அவர்களுடைய கார்யங்களும் நிறைவேறாமல் விக்னம் ஏற்படுமென்று தெரிகிறதல்லவா? ஆகையினால்தான் ஒரு காவ்ய ஸ்ருஷ்டியாயிருந்து அதன் ஆரம்பத்தில் ஸரஸ்வதியை ஸ்துதிப்பதானாலும், இதே மாதிரி, தனலாபத்துக்காக லக்ஷ்மியை ஸ்துதிப்பதானாலும், நோய் நொடி தீருவதற்காக ஸூர்ய நாராயணனை ஸ்துதிப்பதானாலும், இப்படியே எந்த லக்ஷ்யத்தை முன்னிட்டு எந்த ஸ்வாமியை ஸ்துதிப்பதானாலும், அந்த ஸ்வாமியின் கார்யத்துக்கும் விக்னம் ஏற்படாமல் ரக்ஷிக்கும் பிள்ளையாரைத்தான் முதலில் ஸ்துதிக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது.

ருத்ராபிஷேகமாக இருக்கட்டும், சண்டி ஹோமமாக இருக்கட்டும், வேங்கடரமண ஸ்வாமி ஸமாராதனையாக இருக்கட்டும், எந்தச் சடங்காகத்தான் இருக்கட்டும்,

* "தெய்வத்தின் குரல்" நான்காம் பகுதியில் 'பிற தெய்வங்களும் போற்றும் பிள்ளையார்' என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

பிள்ளையாருக்கு 'சுக்லாம்பரதரம்' குட்டிக்கொள்ளாமல் எதுவும் தொடங்குவதில்லை! பிரம்மாதி தேவதைகளில் யாரானாலும் தங்கள் காரிய நிறைவேற்றத்துக்காக அவர்களும் இவரை நமஸ்கரித்தாக வேண்டியிருக்கிறது என்பதாலேயே அவர்களிடம் நாம் ஒரு கார்யத்தை எதிர்பார்த்துப் போய் வழிபாடு நடத்தும் போது, அவர்களுக்கும் முந்தி இவரை வழிபடவேண்டுமென்று விதி ஏற்பட்டுவிடுகிறது.

மன்னார்குடிப் பெரியவாள்

கொஞ்சம் வேடிக்கை கலந்த மாதிரி இந்த விஷயத்தைப் பற்றி ஒரு பெரியவர் ச்லோகம் பண்ணியிருக்கிறார். 'பெரியவர்' என்றேன். அவரைப் 'பெரியவா(ள்)' என்றேதான், பெயரைச் சொல்லாமல், மரியாதையாகக் குறிப்பிடுவது வழக்கம். என் மாதிரி ஒரு மடாதிபதியாக இருப்பவரைப் 'பெரியவா' என்பதில் விசேஷமில்லை. ஸ்வயமான யோக்யாத இல்லாவிட்டாலுங்கூட, ஸ்தானத்தினாலேயே எங்களுக்குப் 'பெரியவர்' பட்டம் கிடைத்துவிடும். நான் சொல்கிற பெரியவர் மடாதிபதி இல்லை. அதற்கடுத்தபடியாக லோக கௌரவத்தைத் தன்னுடைய ஆச்ரமத்தினாலேயே ஸம்பாதித்துவிடுகிற (மடாதிபதியாக இல்லாத) ஸந்நியாஸிகூட இல்லை. க்ருஹஸ்தராகவே வாழ்க்கை நடத்தியவர். ஆனால் "குலபதி" என்று புகழக்கூடிய அளவுக்கு ஏராளமான சிஷ்யர்களுக்கு குருகுலம் நடத்திப் பல மஹாவித்வான்களை உருவாக்கிய மஹா மஹோபாத்யாயராக இருந்தவர். ஸந்நியாஸிகளுங்கூட வந்து பாடம் கேட்டுக்கொண்டு போகும்படியான அப்பேர்ப்பட்ட பாண்டித்யத்தொடு கூடியிருந்தவர். மஹா பண்டிதர் என்பது மட்டும் அவர் பெருமையல்ல. உசந்த குணவானாகவும் இருந்தார். சிவபக்தியில் சிறந்தவர். பரம ஆசார அநுஷ்டானத்தோடுகூட ரொம்பவும் சீலராக வாழ்ந்த பெருமையும் அவருக்கு உண்டு. ஞானம், சீலம் இரண்டிலும் பெரியவராக இருந்த அவரைத்தான் 'பெரியவாள்' என்றே

Koviloor Digital Library

லோகம் சொல்லிற்று. அடையாளம் தெரிவதற்காக, அவர் வாழ்ந்துவந்த ஊரின் பெயரைச் சேர்த்து "மன்னார்குடிப் பெரியவாள்" என்று சொல்வார்கள். உயர்ந்த அறிவு, சிறந்த ஒழுக்கம் இரண்டும் கூடிய அவர் 19-ம் நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு ஆரம்பம் வரை ஸுமார் தொண்ணூறு வயசு ஜீவ்யவந்தராக இருந்து 'ஞான-சில-வயோ வ்ருத்தர்' என்கிற புகழ்ச் சொல்லுக்கு முற்றிலும் உரியவராக இருந்தார். மஹானாகிய அப்பைய தீக்ஷிதரின் வம்சத்தில் வந்த அவருடைய சர்மன்* த்யாகராஜர் என்பது. அவர் யாகங்கள் செய்ததால் 'த்யாகராஜ மகி' என்று தம்முடைய நூல்களில் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பார். 'மகம்' என்றால் யாகம். சின்ன வயஸில் அவரை வீட்டிலே பெரியவர்கள் கூப்பிட்ட பேர் ராஜு. அதனால் ராஜு சாஸ்திரிகள் என்றும் சொல்வதுண்டு. ஆனால் பேச்சு வழக்கில் 'மன்னார்குடிப் பெரியவா'தான். ஊர் உலகமெல்லாம் பெரியவா என்று அழைத்தாலும் ரொம்பவும் அடக்கத் தோடு எளிமையாக இருந்தவரவர். அவருடைய குருமாப் களில் கோபாலாசாரியார் என்பவர் ஒருவர். பிற்காலத்திலே இந்த கோபாலாசாரியாரின் புத்திரர் மன்னார்குடிர் பெரியவாளிடம் படித்த மாணவர்களில் ஒருவரானார். இவர் பெரியவாளைவிட வயஸில் சிறியவர். அதோடு சிஷ்யர். அப்படியிருந்தும், குரு புத்ரனுக்கு மரியாதை காட்டவேண்டும் என்ற வழக்கை அநுஸரித்து இவர் வகுப்புக்கு வரும்போது இவருக்கு குருவான மன்னார்குடிப் பெரியவாளே எழுந்திருந்து நிற்பாராம்! பக்தி ச்ரத்தை, ஆசாரம், ஸத்குணங்கள், அபாரமான வித்வத் இத்தனையும் பெற்று, ஸந்நியாஸிகளுக்கும் பாடம் சொன்னவரானாலும் அவர் கடைசி மட்டும் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ள வில்லை. "நமக்கு ஏது அவ்வளவு யோக்யதை?" என்றே சொல்வாராம். அத்தனை அடக்க ஸம்பத்து!

---

* ஓர் அந்தணருக்கு சாஸ்திரோக்தமாக நாமகரணமிடப்படும் பெயர்.

Koviloor Digital Library

அவருக்கு மஹாமஹோபாத்யாய பட்டம் சூட்டிய திலேயே இப்படி (அவரது அடக்க குணத்தைக் காட்டுவதாக) ஒரு விஷயம் உண்டு. (1887-ல்) விக்டோரியா பட்டமேறிய கோல்டன் ஜூபிலி கொண்டாடியபோது, இந்தியாவின் பழைய வழக்கத்தை அநுஸரித்து இனிமேல் வெள்ளைக்கார ராஜாங்கமும் பண்டிதோத்தமர்களுக்கு 'மஹா மஹோ பாத்யாய' பட்டம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். அதன் பிரகாரம் முதல் வருஷமே வடக்கத்தி வித்வான் ஒருவருக்கும், தெற்கத்தி வித்வான் ஒருவருக்கும் டைட்டில் தருவது என்று தேர்ந்தெடுத்தபோது அவர்களில் ஒருவராக இருந்த தெற்கத்திக்காரர் நம்முடைய மன்னார்குடிப் பெரியவாள்தான். ஆனாலும் அவருக்கு இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டபோது, 'பூர்வ காலத்தில் மஹாபெரிய வித்வான்களுக்கே கொடுத்து வந்த இந்தப் பட்டம் எனக்கா? அவ்வளவு யோக்யதை இல்லவே இல்லை' என்று சொல்லிச் சும்மா இருந்துவிட்டாராம். பட்டம் வாங்கிக்கொள்ள அவர் டில்லி தர்பாருக்குப் போகவே யில்லை! விஷயத்தை மறந்துவிட்டுத் தம்பாட்டுக்குப் பாடம் சொல்வது, சிவ பூஜை பண்ணுவது என்று இருந்துகொண் டிருந்தார். ராஜாங்கத்தில் இவருக்காகக் காத்துக் காத்துக் பார்த்தார்கள். டில்லிக்குப் போகாவிட்டாலும் கிட்டத்தில் இருக்கிற தஞ்சாவூருக்காவது போய் கலெக்டரிடமிருந்து டைட்டிலை ராஜமரியாதையோடு பெறுவாரா என்று காத்துப் பார்த்தார்கள். விநய ஸம்பன்னரான இவருக்கா, அந்த எண்ணமேயில்லை! அப்புறம் கலெக்டர் அந்தப் பெரிய பட்டத்துக்கான ஸன்னதுகளை அவருடைய வீட்டுக்கே அனுப்பி வைத்தபோதுதான் மறுக்க முடியாமல் ஏற்றுக்கொண்டார்.

வித்யை இருந்தால் தலைக்கனமும் இருக்கத்தான் வேண்டும் என்றில்லாமல் நேர் வித்யாஸமாக இருந்தார். வித்யாரம்பத்திலேயே விநாயகரை வந்தனம் செய்வதாலும், எந்த சாஸ்த்ரமாயிருந்தாலும் அதற்கான புஸ்தகத்

Koviloor Digital Library

தொடக்கத்திலேயே பிள்ளையார் ஸ்துதிக்கப்படுவதாலும் உண்மையான வித்வானொருவன் எப்படியிருக்கவேண்டும் என்று காட்டிய அந்தப் பெரியவரைப் பற்றிச் சொல்வ தெல்லாமும் விக்நேச்வர ப்ரீதிதான். நாம் எடுத்துக் கொண்ட விஷயத்தை விட்டு எங்கோ போய்விட்டதாக ஆகாது.

"ந்யாயேந்து சேகரம்"

அந்தப் பெரியவர் பண்ணியிருக்கும் க்ரந்தங்களில் 'ந்யாயேந்து சேகரம்' என்பது ஒன்று. அது அத்வைத வேதாந்தம், தர்க்க சாஸ்த்ரம் ஆகிய இரண்டும் சேர்ந்த புஸ்தகம். தர்க்க சாஸ்த்ரம் என்று பொதுவாகச் சொல்வ தற்கு 'ந்யாய சாஸ்த்ரம்' என்றே பெயர். அதனால்தான் அந்த சாஸ்த்ரத்தை ஸம்பந்தப்படுத்தி எழுதப்பட்ட இந்த நூலுக்கு 'ந்யாயேந்து சேகரம்' என்று பேர்.

'ந்யாய பாஸ்கரம்' என்று ஒரு புஸ்தகம் இருக்கிறது. அது அனந்தார்யர் என்பவர் எழுதியது. அத்வைத வேதாந்த க்ரந்தங்கள் சிலவற்றில் மேற்கொள்ளப்பட்டிருக் கும் தர்க்க வாதங்கள் சரியானவையில்லை என்று கண்டனம் செய்து தர்க்க ரீதியாக எழுதப்பட்ட புஸ்தகமே 'ந்யாய பாஸ்கரம்'. அதில் சொல்லியிருக்கும் வாதங்கள்தான் சரியில்லை என்றும், அத்வைத க்ரந்தங்களின் வாதங்கள் சரியானவையே என்றும் நன்றாக அலசி மன்னார்குடிப் பெரியவர் எழுதிய மறுப்பு நூல்தான் 'ந்யாயேந்து சேகரம்'. ந்யாய சாஸ்திரத்தில் தம்முடைய புஸ்தகம் ஸூர்யன் மாதிரி ப்ரகாசிப்பது என்று பொருள்பட அனந்தார்யர் 'ந்யாய பாஸ்கரம்' என்று பெயர் வைத்தார். ஸூர்யன் அஸ்தமித்தபின் குளுகுளுவென்று நிலாவைக் கொடுத்துத் தாபசாந்தி செய்வது சந்திரன். சந்திரனுக்கு இந்து என்றும் பெயர். ந்யாய பாஸ்கரத்தின் வாதங்களை அஸ்தமிக்கப் பண்ணி ஸஹ்ருதயர்கள் மனஸுக்குச் சந்திரிகை மாதிரி ஜிலுஜிலுவென்றிருப்பது தம்முடைய மறுப்பு நூல் என்று காட்டும் விதத்தில் நம்முடைய பெரியவர் தம் புஸ்தகத்துக்

Koviloor Digital Library

குப் பெயர் வைக்க எண்ணினார். ஆகையால் இதற்கு அவர் 'ந்யாயேந்து' என்று பேர் வைத்திருந்தாலே போதும். ஆனால் அடக்க குணமுள்ள அவர் தாம் ஸ்வயமாக இப்படி ஒரு பெரிய நூல் எழுதியதாக நினைக்காமல் ஈச்வர ப்ரஸாதமாகவே எழுதியதாகத்தான் நினைத்தார். அதனால் தாம் வைக்கும் பேர் ஈச்வரனையும் ஞாபகப் படுத்துவதாக இருக்க வேண்டுமென்று நினைத்தார். சந்திரன், சிவன் இருவரையுமே ஞாபகப்படுத்துவதாக 'சந்திர சேகர' என்ற பெயர் இருக்கிறதல்லவா? இதையே 'இந்து சேகர' என்றும் சொல்வார்கள். அதனால்தான் "ந்யாய இந்து சேக்ரம்", "ந்யாயேந்து சேகரம்" என்று தம்முடைய புஸ்தகத்துக்குப் பெயர் வைத்துவிட்டார். தலையாக, உச்சியாக விளங்குவது 'சேகரம்'. அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்டி அந்த ஸம்பிரதாயப் புஸ்தகங்களில் கூறியுள்ள வாதங்கள் தர்க்க சாஸ்த்ர ரீதியாக ஸரியானவையே என்று அழுத்தமாக நிரூபிக்கும் தலைசிறந்த நூலாக 'ந்யாயேந்து சேகரம்' விளங்குகிறது.

கும்பகோணத்தில் நமது மடத்துப் பரம குரு ஸ்வாமிகள் அத்வைதப் பிரசாரத்துக்காக அத்வைத ஸபா என்று ஆரம்பித்துவைத்து*, அது நம்முடைய ஸித்தாந்தத்துக்காக நல்ல ஸேவை செய்துவருகிறது. அதில் வருஷா வருஷம் நடத்தும் பரீக்ஷைகளில் 'ந்யாயேந்து சேகரம்' குறித்தும் ஒரு பரீக்ஷை இருக்கிறது. இதில் சிறப்பாகத் தேறி முதல் பரிசு வாங்குவதுதான் ஸபையின் தலைசிறந்த ஸம்மானமாகக் கருதப்படுகிறது என்பதிலிருந்து நூலின் சிறப்பு புரியும். (அத்வைத ஸபாவின் ஆரம்ப வருஷங்களில் நம்முடைய சாஸ்த்ரிகள் அதில் முக்யமான அங்கம் வஹித்திருக்கிறார்.)

---

* ஸ்ரீசரணர்களுடைய குருவின் குருவான ஆறுவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் 1894-ல் அத்வைத ஸபையைத் தொடங்கினார்.

Koviloor Digital Library

பிள்ளையாரும் தர்க்க சாஸ்திரமும்

ஸரி, தர்க்க சாஸ்த்ரத்துக்கும் பிள்ளையாருக்கும் என்ன ஸம்பந்தம்?

தர்க்க சாஸ்த்ரத்தில் 'இதனால் இது இப்படி' என்று காரண - காரியங்களை அறிவு ரீதியில் இசைத்துக் காட்டி வகுத்துள்ள விதிகளுக்கு 'ந்யாயம்' என்று பெயர். அதனால் தான் அந்த சாஸ்த்ரத்துக்கே 'ந்யாயம்' என்று விசேஷப் பெயர் ஏற்பட்டிருக்கிறது. உவமைகளைக் கொண்டும் நமக்குப் புரியுமாறு பல 'ந்யாய'ங்களை வகுத்துத் தந்திருக் கிறது. ந்யாய சாஸ்த்ர நூல்களில் சொல்லியிருப்ப வற்றோடு ஆன்றோர் வசனத்திலும் பொது வழக்கிலும் பிறந்த இப்படிப்பட்ட அநேக ந்யாயங்களும் உள்ளன. உதாஹரணமாக : உத்தேசமில்லாமல் தற்செயலாக ஒன்றை அடுத்து இன்னொன்று நடக்கும்போது 'காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது' என்கிறோமல்லவா? இதற்குக் 'காக - தாளிய ந்யாயம்' என்று பெயர். 'தாளி' என்றால் பனை. 'தாலி'கூட அதிலிருந்து வந்ததுதான். ஸம்ஸ்க்ருதத்தில் 'ல'வுக்கும் 'ள'வுக்கும் பேதம் கிடையாது.

ஸ்திரீகளின் ஸௌமங்கல்யத்துக்கு முக்கியமான சின்னங்கள் காதுத் தோடும், கழுத்திலுள்ள மங்கள ஸூத்ரப் பதக்கமும்தான். ஆதியில் ரொம்பவும் எளிமை யாக நம் பெரியோர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொடுத் திருந்தபோது இந்தக் காதணி, கழுத்தணி இரண்டுமே பனையோலையால் ஆனதாகத்தான் இருந்தன. அதனால் தான் வைரத் தோடானால்கூட அதைப் பிற்காலத்திலும் வைர ஓலை என்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டது. 'ச்யாமளா நவரத்னமாலை'யில் அம்பாளையே 'தாளீ பலாச தாடங்காம்' என்று சொல்லியிருக்கிறது. அம்பிகையே பனை ஓலையைத்தான் தாடங்கமாகச் சுருட்டிப் போட்டுக் கொண் டிருக்கிறாளாம். கழுத்தின் மங்கள ஸூத்ரப் பதக்கமாகவும்

Koviloor Digital Library

அந்த ஓலை நறுக்கே இருந்திருப்பதால்தான் அதற்குத் தாலி என்று பேர் ஏற்பட்டிருக்கிறது.

பிள்ளையாரை விட்டு விஷயம் எங்கேயோ போய்விட்டது!

அத்வைத வேதாந்தம், ந்யாய ஸித்தாந்தம் ஆகியவற்றைப் பற்றிய 'ந்யாயேந்து சேகர'த்தில் பிள்ளையாரைப் பற்றி இருப்பதைச் சொல்லவந்தேன்.

'இன்ன அடிப்படையினால் இது இப்படி நிரூபிக்கப்படுகிறது' என்று காட்டுவனவாக ந்யாயங்கள் என்று பல உண்டு என்று சொன்னேனல்லவா? ஒரு புஸ்தகம் என்றிருந்தால் அதில் முதலில் 'மங்கள ச்லோகம்' என்று இருக்கும். 'பாயிரம்', 'கடவுள் வணக்கம்' என்றெல்லாம் சொல்வது இதைத்தான். சற்றுமுன் சொன்னாற்போல், இப்படிப்பட்ட மங்கள ச்லோகங்களில் எடுத்த எடுப்பில் உள்ளது பிள்ளையாரைப் பற்றியதாகத்தானிருக்கும். 'ந்யாய ஸம்பந்தமாக நாம் எழுதுகிற இந்தப் புஸ்தகத்தில் ஆரம்ப ச்லோகமாயிருக்க வேண்டிய பிள்ளையார் ஸ்துதியிலேயே ஏதாவதொரு ந்யாயத்துக்கு எடுத்துக்காட்டு கொடுத்து விட்டால் எவ்வளவு பொருத்தமாக இருக்கும்?' என்று ராஜு சாஸ்த்ரிகள் (மன்னார்குடி பெரியவர்கள்) நினைத்தார். மஹா பண்டிதரானதால் நினைத்தபடியே ச்லோகம் பண்ணி விட்டார். பிள்ளையாரை அதுதான் தர்க்க சாஸ்த்ரத்தோடு ஸம்பந்தப்படுத்திவிடுகிறது.

"பெரியவா"ளின் பிள்ளையார் ச்லோகம்

அப்யங்யாமரம் ஆரிரார்தயிஷதாம் யத் பாத பங்கேருஹ-
த்வந்த்வாராதநம் அந்தராயஹதயே கார்யம் த்வவச்யம் விது: |
தத்-ஹேதோரிதி நீதிவித்து பஜதே தேவம் யம் ஏகம் பரம்
ஸர்வார்த்த ப்ரதிபாதநைக சதுரோ த்வைமாதுரோ (அ)வ்யாத் ஸ ந: ||

இதுதான் 'ந்யாயேந்து சேகர'த்தின் மங்கள ச்லோகம்.

Koviloor Digital Library

இதற்கு என்ன அர்த்தமென்றால் : 'வேறே ஏதோ ஒரு தெய்வத்தை, அதாவது விக்நேச்வரர் அல்லாத இன்னொரு தெய்வத்தை, பூஜை பண்ண விரும்புகிறவர்கள்கூட தங்களுடைய பூஜையில் ஏற்படக்கூடிய விக்னம் நீங்குவதற்காக விக்நேச்வரருடைய இரண்டு பாத கமலங்களை அவசியம் பூஜிக்கத்தான் வேண்டுமென்று அறிந்திருக்கிறார்கள். பூஜை செய்கிறவன் 'தத்-ஹேது ந்யாயம்' தெரிந்தவனாயிருந்தாலோ (வேறே தெய்வத்தைப் பூஜை பண்ணவேண்டுமென்றே நினைக்காமல்) ஏகப்பரம்பொருளான விக்நேச்வரர் ஒருவரை மாத்திரம் பூஜிப்பதோடு முடித்துவிடுகிறான். இப்படி ஸகல கார்யத்தையும் தாமே பூர்த்தி செய்துதர வல்லவராக உள்ள அந்த விக்நேச்வரர் நம்மை ரக்ஷிக்கட்டும்' என்பதாகும்.

'தத்-ஹேது' நியாயம்

ந்யாயங்களில் ஒன்றான தத்-ஹேது ந்யாயத்துக்கு இங்கே எடுத்துக்காட்டுக் கொடுத்துவிடுகிறார். 'தத்-ஹேதோ : இதி நீதி' என்று (ச்லோகத்தில்) வருவதற்கு 'தத்ஹேது என்னும் நியாயம்' என்று அர்த்தம். நீதி, நியாயம் இரண்டும் ஒன்றுதான். பேச்சு வழக்கில்கூட நீதிபதி - ந்யாயாதிபதி, நீதிமன்றம் - ந்யாய ஸ்தலம் என்று இரண்டு விதமாகவும் சொல்கிறோமல்லவா?

இந்த தத்-ஹேது ந்யாயத்தைக் கொஞ்சம் புரிய வைக்கப் பார்க்கிறேன்.

'ஹேது' என்றால் காரணம். 'ஏது' என்று தமிழில் சொல்வார்கள். 'ஒய'ரைத் தொட்டால் ஆபத்துக்கு ஏதுவாகும் என்று சொல்கிற இடத்தில் 'ஏது' என்பது காரணம் என்றுதானே அர்த்தம் கொடுக்கிறது? ஹேதுவுக்கு 'ஆப்போஸிட்' அஹேது. அது பெயரெச்சமாக வரும்போது 'அஹைதுக' என்று ஆகும். பகவான் காரணமே இல்லாமல் காட்டுகிற கருணையை 'அஹைதுக க்ருபா' என்பார்கள். இதேமாதிரி ஒரு ஞானி காரணமேயில்லாமல் காட்டுகிற

Koviloor Digital Library

பக்தியை 'அஹைதுகீ பக்தி' என்று பாகவதத்தில் சொல்லி யிருக்கிறது. பக்தி மார்க்கத்திலேயே போகிற பக்தன் பகவானை அடையவேண்டும் என்ற காரணத்துக்காக பக்தி பண்ணுகிறன். ஞானியோ பகவானின் நிர்குண ஸ்வரூபத் தைத் தன்னிலேயே பெற்றுவிட்டவனுதலால், இனிமேல் தான் பகவானை அடையவேண்டுமென்றில்லை. ஆனலும் காரணமேயில்லாமல் பரம ஞானிகளும் தன்னியல்பாக உருகி உருகி பக்தி பண்ணியிருக்கிறர்கள். இதைத்தான் பாகவதம் "அஹைதுகீ பக்தி" என்கிறது.........

'தத்-ஹேது ந்யாய'த்தில் ஹேது என்றல் காரணம், அதாவது உபாயம். 'தத்' என்றல் 'அது'. எது? காரணத்தால், உபாயத்தால் அடையும் லக்ஷ்யம், அல்லது பலன். ஒரு பலனை ('தத்'தை) அடையப் பல உபாயங்கள் (ஹேது'க்கள்) இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனலும் இவை தாங்களே நேராகப் பலன் தர முடியாமல், நேர்ப் பலன் தருவதாக உள்ள இன்னெரு உபாயத்தின் ஸஹாயம் பெற்றே பலன் கொடுக்க முடியும் என்றும் வைத்துகொள்ளுங் கள். அப்போது, இந்த உபாயங்களில் ஒன்றை நாம் கைக் கொண்டால், முதலில் நேர் உபாயத்தை இதற்கு ஸஹாய மாக்கிக் கொள்ள வேண்டும். அதாவது, இது பலன் கொடுக் கக்கூடியதாக ஆவதற்கு உபாயமாக நேர் உபாயத்தை ப்ரயோஜனப்படுத்திக் கொள்ளணும். அப்புறம் இதைக் கொண்டு பலனைப் பெறவேண்டும். அதாவது, முக்ய லக்ஷ்யம் (தத்) என்று ஒன்று, அதை அடைய நாம் கைக்கொள்ளும் உபாயம் (ஹேது) என்று ஒன்று என்பவற்றேடு நிற்காமல், இந்த உபாயத்தைப் பலனளித்தக்கதாக்க வேண்டும் என்ற இன்னெரு லக்ஷ்யமும் ('தத்'தும்)—இந்த இன்னெரு லக்ஷ்யத்தை உபலக்ஷ்யம் என்று சொல்லலாம்; இப்படி யொரு உபலக்ஷ்யமும் —இந்த உபலக்ஷ்யத்தை நிறைவேற் றித் தருவதாக.இன்னெரு ஹேதுவும் (இந்த இரண்டாவது ஹேதுவை உபஹேது என்று சொல்லலாம்; இப்படியொரு உபஹேதுவும்) வேறு சேர்கின்றன. ஆனல் எதற்காக

Koviloor Digital Library

இப்படிச் சுற்றி வளைக்கணும்? உபலக்ஷ்யத்தை அடைவிக்கும் உபஹேதுவேதான் முக்ய லக்ஷ்யத்திற்கும் நேர் ஹேதுவாக இருக்கிறதென்று பார்த்தோமே? ஆகையால் அந்த நேர் ஹேதுவைக்கொண்டே 'டைரக்டா'க நம்முடைய முக்ய லக்ஷ்யத்தை அடைந்துவிட்டுப் போகவேண்டியதுதானே? வேறே ஒரு ஹேதுவைக் கொண்டுவருவானேன்? நேர் ஹேதுவைக்கொண்டு அந்த இன்னொரு ஹேது பலிக்கும் படிச் செய்வது என்ற இன்னொரு லக்ஷ்யத்தை ('தத்'தை) வேறே இழுத்துவிட்டுக் கொள்வானேன்?

இதைத்தான் 'தத்-ஹேது ந்யாயம்' என்று கேள்வி ரூபத்தில் சொல்வது. 'தத்-ஹேதோரேவ தத்-ஹேதுத்வே மத்யே கிம் தேந?' என்பதுதான் அந்தக் கேள்வி. இதில் இரண்டு 'தத்' வருகிறது. 'தேந' என்று முடிவதும் 'தத்'தின் மூன்றாவது வேற்றுமைதான். (அதற்கு) 'தத்'தினால் என்று அர்த்தம். இந்த வாக்யத்திற்கு என்ன அர்த்தமென்றால்: "'தத்'துக்கு ஹேதுவாயிருப்பதே 'தத்'துக்கு ஹேதுவாயிருக்கும்போது நடுவாந்தரத்தில் 'தத்'தினால் ஆவதென்ன?"

புரியவில்லையா? யோசித்துப் பார்த்தால் புரிந்துவிடும். முதல் 'தத்' என்பது உபலக்ஷ்யம். இரண்டாவது 'தத்' முக்யலக்ஷ்யம். மூன்றாவதாக 'தேந' என்பது குறிப்பிடும் 'தத்'தும் உபலக்ஷ்யம்தான். இப்படிப் புரிந்துகொண்டால் அந்த வாக்யத்தின் அர்த்தம், 'உபலக்ஷ்யத்துக்கு உபாயமாயிருப்பதே முக்ய லக்ஷ்யத்துக்கு உபாயமாக இருக்கும்போது நடுவில் உபலக்ஷ்யம் என்ற ஒன்றினால் ஆவதென்ன—உபலக்ஷ்யம் என்று ஒன்றை நடுவில் கொண்டுவருவானேன்?' என்பது.

த்ருஷ்டாந்தம் காட்டினால் தெளிவாகப் புரியும்: அரிசி மூட்டை வாங்கணும். அதுதான் லக்ஷ்யம்—தத். 'கிராமத்தில் பண்ணையாரிடம் மூட்டை இருக்கும், அவரிடம் போய் வாங்கலாம்' என்று நினைக்கிறோம். பண்ணையார் ஹேது. ஆனால் அவர் நம்மூர்ப் பலசரக்குக் கடைக்காரர் சிபாரிசு பண்ணினால்தான் மூட்டை போடுவார். இப்படிப்

Koviloor Digital Library

பலசரக்குக்காரர் மூலம்தான் நாம் பண்ணையாரைப் பிடிக்க வேண்டுமென்னும்போது, முன்னே ஹேதுவாகச் சொன்ன பண்ணையாரே பலசரக்குக்காரரைக் கொண்டு நாம் அடைய வேண்டிய (உப)லக்ஷ்யம் ('தத்') ஆகிறார். இதற்குப் பலசரக்குக்காரர் ஹேதுவாகிறார். (உபஹேது.) வேடிக்கை என்னவென்றால், பலசரக்குக்காரரிடமே அரிசியும் இருக்கிறது. வேறே யாருடைய சிபார்சும் இல்லாமல் அவரே நமக்கு அதை விற்கவும் விற்பார். அதாவது அவரே நம்முடைய முக்ய லக்ஷ்யத்திற்கு நேர் ஹேதுவாக இருக்கிறார். இப்படியிருக்கும்போது இவரிடமே அரிசி வாங்கி வியாபாரத்தை ஈஸியாக முடித்துவிட வேண்டியதுதானே? நடுவாந்தரத்தில் பண்ணையாரை இழுத்துவிட்டுக்கொண்டு, இந்தப் பலசரக்குக்காரர் மூலமே அவரை அரிசி விற்கும்படிப் பண்ணுவது என்ற கார்யத்தை (இன்னொரு லக்ஷ்யத்தை—'தத்'தை) வேறே உண்டாக்கிக்கொள்வானேன்?

இதோ இந்தக் குத்துவிளக்கில் இந்த (கிழக்கு) முகத்தை ஏற்றவேண்டுமானால் என்ன செய்யணும்? ஒரு வத்திக்குச்சியைக் கிழித்து இந்த (கிழக்கு முகத்) திரியை ஏற்றணும். அவ்வளவுதான் பண்ணவேண்டியது. யாராவது, 'முதலிலே அந்தப் பக்க (மேற்கு முகத்) திரியை ஏற்றுங்கள். அப்புறம் அந்தத் திரியினால் இந்தத் திரியை ஏற்றுங்கள்' என்றால்... [சிரிக்கிறார்கள்.] நேரே இந்தத் திரியையே ஏற்றலாமாயிருக்க, மத்தியிலே இன்னொரு திரி எதற்கு? 'தத்-ஹேதோரேவ தத்-ஹேதுத்வே மத்யே கிம் தேந?'

'ந்யாயேந்து சேகர' ச்லோகத்தில் இதைப் பிள்ளையாருக்கு எப்படிப் பொருத்தியிருக்கிறது?

இதர தெய்வ உபாஸகரும் வழிபடுவது

(ச்லோக) ஆரம்பத்தில் ஸாதாரண ஜனங்கள் பண்ணுவதைச் சொல்லியிருக்கிறது. படிப்பு வர ஸரஸ்வதி பூஜை, பணம் வரணுமென்று லக்ஷ்மி பூஜை, நேத்ரரோகம் ஸரியாவதற்காக ஸூர்ய நமஸ்காரம் என்றெல்லாம் செய்கிறோம்.

Koviloor Digital Library

அதாவது பல பயன்களைப் பெறுவதற்கு ஹேதுவாகப் பல தெய்வங்களுக்கு வழிபாடு செய்கிறோம். எந்த வழிபாடானாலும் அதற்கு விக்னம் ஏற்படாமலிருக்க ஆரம்பத்தில் மஞ்சள் பிள்ளையார் பிடித்துவைத்து மஹா கணபதிக்கு முதல் பூஜையைப் பண்ணிவிடுகிறோம். இதைத்தான் முதல் பாதியில் சொல்லியிருக்கிறது.

"அப்யந்யாமரம் ஆரிராதயிஷதாம்": இதர தேவதையை, பிள்ளையாருக்கு அன்னியமான ஒரு தெய்வத்தை, ஆராதிக்க விரும்புகிறவர்கள்கூட...

அமரர் என்றால் தேவர். மரணமில்லாதவர் அமரர்.

'அபி அந்ய அமரம்' என்பதாக ஆரம்பத்திலேயே உட்கார்ந்திருக்கும் 'அபி'க்குக் 'கூட' என்று அர்த்தம்.

யாரோ 'கூட' எதையோ செய்கிறார்கள் என்றால் அவர்கள் செய்கிற கார்யம் நமக்கு ஆச்சர்யம் தருவதாக இருக்கும். எடுத்தவுடன் 'அபி' போட்டுவிட்டால் ஆச்சர்யம் தருவதாகப் பின்னாடி ஸமாசாரம் வரப்போகிறது என்று ஏற்பட்டுவிடும். படிப்பவர்களுக்கு ஆர்வம் உண்டாக்குவதற்காக 'அபி' போட்டு ச்லோகத்தை ஆரம்பிப்பதுண்டு.

வேறு தேவதைகளை ஆராதிக்க விரும்புகிறவர்கள்கூட என்ன செய்கிறார்கள்? அந்த ஆராதனைக்கு ஏற்படக்கூடிய விக்னம் போவதற்காக யாரோ ஒருவருடைய இணையடிக் கமலங்களை ஆராதிப்பது கட்டாயம் செய்யவேண்டிய காரியமென்று அறிந்திருக்கிறார்கள். "யத் பாத பங்கேருஹ த்வந்த்வாராதனம் அந்த்ராய ஹதயே கார்யம் து அவச்யம் விது:" என்பதற்கு இதுதான் அர்த்தம்.

"தொந்தம்"

"பாத பங்கேருஹ த்வந்த்வம்:" - இணையடித் தாமரை. த்வந்த்வம் என்றால் இரட்டை. இரண்டு பேர் சேரும்போது உறவு ஏற்படுவதால் அதை 'தொந்தம்' என்று சொல்வது

Koviloor Digital Library

2057
R65

த்வந்த்வத்திலிருந்துதான். உறவை ஸொந்தம், பந்தம், தொந்தம் என்று மூன்று பேரில் சொல்கிறோம். 'ஸ்வ' என்றால் 'தான்'. தன்னைச் சேர்ந்தது ஸ்வந்தம், அதாவது சொந்தம். பந்தம் என்றால் கட்டு. அன்பினாலே நம்மோடு கட்டுண்டிருப்பதால் உறவுக்காரர்களை பந்தம் என்கிறோம். 'ஆள்கட்டு' என்றுகூடச் சொல்கிறோமல்லவா? இது நல்ல அர்த்தம். இன்னொரு அர்த்தமும் உண்டு. ஸம்ஸாரத்தைத் தானே ஜீவனுக்குப் பெரிய கட்டு என்கிறோம்? ஸம்ஸார பந்தம் என்கிறோம்? அந்த பந்தத்தில் கட்டிப்போடுவதில் முக்கியமாக இருப்பதாலும் உறவுக்காரர்களை பந்தம் என்கிறார்கள். 'பந்த'த்திலிருந்து வந்ததுதான் 'பந்து'. இவர்களுக்குள்ளே ஒருத்தனை ஸம்ஸாரத்தில் ரொம்பவும் கட்டிப் போடுவது பெண்டாட்டிதான் என்று நினைத்துத்தான் அவளையே ஸம்ஸாரம் என்று சொல்லும் வழக்கம் வந்திருக்கிறது! 'இந்த அம்மாள் இன்னாருடைய ஸம்ஸாரம்' என்கிறோம்! தொந்தம் என்றாலும் உறவுதான்.

இரண்டு பேர் உறவாகச் சேர்ந்திருப்பதை த்வந்த்வம் என்பது போலவே இரண்டு பேர் பகையாகிச் சண்டை போட்டுக்கொள்வதையும் 'த்வந்த்வ யுத்தம்' என்கிறோம்.

பாத தாமரை

"பாத பங்கேருஹ த்வந்த்வம்": தாமரை போன்ற பாத இரட்டை. 'பங்கேருஹம்' என்றாலும் 'பங்கஜம்' என்றாலும் ஒரே அர்த்தந்தான். பங்கம் என்றால் சேறு. சேற்றில் முளைப்பது பங்கஜம் அல்லது பங்கேருஹம். அழுக்கே யில்லாமல் பரம நிர்மலமாக, அழகாக உள்ள தாமரை அழுக்கான சேற்றில் பிறக்கிறது. எங்கே பிறந்தாலும் உயர் வாக, சிரேஷ்டமாக உருவாகலாம் என்று ஞாபகப்படுத்து வதற்காக அழகான தாமரைக்குச் 'சேற்றில் பிறந்தது' என்று பேர் வைத்திருக்கிறார்கள். நீரில், நீர்நிலையில் பிறப்ப தால் நீரஜம், அம்போருஹம், ஸரஸிஜம். குட்டையைக் குழப்பி உண்டான சேற்றில் உண்டாவதால் பங்கேருஹம்.

Koviloor Digital Library

குழம்பிக்கிடக்கிற நம் மனஸிலும் மலர்ந்திருப்பது பகவானின் பாத தாமரை.

''பாத பூஜைக்கார''ரின் பெருமை

அந்நிய தேவதைகளை ஆராதிக்க விரும்புகிறவர்கள்கூட இந்த யாரோ ஒருவருடைய பாத கமலங்களை நிச்சயம் ஆராதித்தாலே தங்களுடைய தேவதாராதனத்துக்கு இடையூறு இல்லாமல் பண்ணிக்கொள்ளலாமென்று அறிந்திருக்கிறார்கள்—என்று ச்லோகத்தில் சொல்லியிருப்பதற்கு, இப்படி அறிந்திருப்பதால் அதற்கேற்க இந்த யாரோ ஒருத்தருக்கு அவர்கள் பாதபூஜை பண்ணுகிறார்களென்றே அர்த்தம். 'அந்தராயம்' என்றால் விக்னம், இடையூறு. 'அந்தராய ஹதயே': விக்ன நிவாரணத்துக்காக. அதற்காக இந்த ஒருத்தரைப் பூஜை பண்ணியே தீரவேண்டுமென்று அவர்கள் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பண்ணினால் நல்லது என்று மட்டுமில்லை; பண்ணியே தீரணும், இது அவச்யம் செய்யவேண்டிய கார்யம் என்று தெரிந்துகொண்டிருக்கிறார்கள்: கார்யம் து அவச்யம் (த்வவசியம்' என்று ஸந்தியில் வரும்) விது:.

யார் இப்படி அவசியம் பூஜிக்கப்பட வேண்டியவரென்று இங்கே சொல்லிவிடவில்லை. 'அபி'(கூட) என்பதை முதலில் போட்டு அப்புறம் விஷயத்தைச் சொல்கிறது போல, முதலிலேயே ஒருத்தரை இன்னாரென்று சொல்லிவிடாமல் எவரோ ஒருத்தர் என்று சொல்லிப் பிற்பாடு ''அந்த அவர்'' என்று வெளிப்படுத்திச் சொல்வதும் ஸ்வாரஸ்யத்துக்காகக் கவிகள் கையாளுகிற ஒரு யுக்தி. அதை அநுஸரித்து இங்கே இன்னாருக்குப் பாதபூஜை பண்ணுவதாகச் சொல்லாமல், 'எவருக்குப் பாத பூஜை பண்ணுகிறார்களோ' என்று 'யத்' போட்டுச் சொல்லியிருக்கிறது. 'யத் பாத பங்கேருஹ......'.

எவரை நேராக ஆராதிக்க வேண்டுமென்று உத்தேசிக்காமல், வேறு தெய்வத்தை ஆராதிக்க விரும்புபவர்கள்'கூட' —என்று 'கூட'ப் போட்டுச் சொன்னதில் இந்த எவரோ

Koviloor Digital Library

ஒருவருடைய பெருமை தெரிகிறது. இவரை ஆராதிப்பது அவர்களுடைய முக்யமான நோக்கமில்லை. ஆனாலும் 'கூட' அவச்யம் இவரை ஆராதித்தாக வேண்டுமென்று கருதுகிறார்கள் என்றால், இவருக்கு அது ரொம்பப் பெருமைதானே? அந்த பாத பூஜைக்கார ஸ்வாமி யாராயிருந்தாலும் அவருக்கு இப்படிப்பட்ட பெரிய பெருமை இருக்கிறது.

இதர தேவதாராதனத்தில் இடையூறு வந்தால் அதைத் தீர்க்க அந்த தேவதைகளுக்குச் சக்தி இல்லை, இவரொருத்தருக்குத்தான் உள்ளது. இல்லாவிட்டால் இவருக்கு எதற்கு அந்நிய தேவதா உபாஸகர்களும் பூஜை செய்யவேண்டும்? எந்த தேவதைதான் அவர்களுக்கு இஷ்டமூர்த்தியாக இருக்கட்டும், அதனுடைய பாரம்யத்தை (பரத்வத்தை, அந்த தேவதையே எல்லாவற்றையும்விட உசந்தது என்ற அபிப்ராயத்தை) அவர்கள் எத்தனைதான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாலும், அந்த மூர்த்திக்கு அவர்கள் செய்கிற பூஜைக்கே ஒரு விக்னம் வருமானால் அதை நிவிருத்தி செய்வதற்கு அதற்குப் 'பவர்' இல்லை என்றும், இவருக்குத்தான் 'பவர்' இருக்கிறதென்றும் ஒப்புக்கொள்வதால்தான் அவச்யம் இவர் காலைப் பிடிக்கணுமென்று கருதுகிறார்கள்.

'எவருக்கு இப்படிப் பாதபூஜை பண்ணியாகணுமென்று கருதுகிறார்களோ' என்று (ச்லோகத்தின் இரண்டாவது வரியில்) சொன்னதையடுத்து, (மூன்றும் வரியில்) 'எவரை தத்ஹேது ந்யாயம் அறிந்தவர் இவரே ஏகப் பரம் பொருளான தெய்வம் என்று உபாஸிக்கிறாரோ' என்று சொல்லியிருக்கிறது.

இங்கேயும் இன்னார் என்று உடைத்து ஆஸாமியைச் சொல்லவில்லை. 'எவரை' ('யம்') என்றே குறிப்பிட்டிருக்கிறது. 'யம் ஏகம் பரம்', 'தேவம் யம் ஏகம் பரம்' என்று சொல்லியிருக்கிறது. இதில் குறிப்பாக எந்த ஒரு ஸ்வாமியின் பெயரும் இல்லை. இவர் தெய்வம் என்பதால் 'தேவம்'. அத்தனை தெய்வங்களுக்கும் மூலம் ஒன்றேயான ப்ரஹ்மம் தானே? அதைத்தான் 'ஏகம் பரம்' என்று சொல்லியிருக்

Koviloor Digital Library

கிறது. இந்த எவரோ ஒரு மூர்த்தியை அத்விதீயமான பரவஸ்துவாகச் சொல்லியிருப்பது ஸ்தோத்ரம் பண்ணிய பெரியவரின் அபிப்ராயமாகவே ச்லோக அமைப்பில் த்வனிக்கக் கூடுமானாலும் அது தத்ஹேது நியாயமறிந்து அது காரணமாக இவரை—இவரை மாத்திரமே—உபாஸிக்கிறவரின் அபிப்ராயமும் ஆகும் என்பது ஆலோசித்துப் பார்த்தால் புரியும்.

பெயரைச் சொல்லாமலே ச்லோகத்தில் கொண்டு போயிருந்தாலும் ஆஸாமி யார் என்று நமக்குத் தெரியாமலில்லை. வேறு ஒரு ஸ்வாமிக்கான பூஜையானாலும் அதில் விக்னம் ஏற்படாமலிருப்பதற்காகப் பூஜிக்கப்படும் ஸ்வாமி இவர் என்பதால் விக்நேச்வரரைத்தான் ச்லோகம் குறிப்பிடுகிறது என்று புரிகிறது. விக்ன நிவ்ருத்திக்கே ஏற்பட்ட அந்த மஹாசக்தரைத்தான் தமிழில் குழந்தை ஸ்வாமியாகப் 'பிள்ளையார்' என்கிறோம். குழந்தை என்பதால் பிள்ளை. அதே ஸமயம் ஸ்வாமியாயும் இருப்பதால் 'யார்' போட்டுப் 'பிள்ளையார்' என்கிறோம்.

இந்த வரியில்தான் தத்ஹேது ந்யாயத்தைப் பிள்ளையாரோடு பொருத்தியிருக்கிறது.

'ந்யாயம்' அறியாதவரும் அறிந்தவரும் பண்ணுபவை

எந்தப் பலனை விரும்பி, அதற்காக எந்த தெய்வத்தை உபாஸிக்கிறவனானாலும் சரி, அவன் இந்த உபாஸனைக்கே ஏதாவது உபத்ரவம் வந்து விடப்போகிறதே என்று கவலைப்படுகிறான். 'இப்படிப் படலாமா? இது அந்த தெய்வத்திடம் இவனுடைய விச்வாஸக் குறைவு மாதிரியல்லவா இருக்கிறது? இவன் ஆரம்பிப்பது ஒரு தெய்வ உபாஸனை. அப்படியிருக்க அந்த தெய்வம் இவன் அதற்குச் செய்யும் உபாஸனைக்கே உபத்ரவம், விக்னம் வரப் பார்த்துக்கொண்டிருக்குமா?' என்று கேட்கலாம். ஆனால் வாஸ்தவத்தில் இவன் கவலைப்படுவதற்கு நியாயமிருக்கவே செய்கிறது. சாஸ்த்ர புராணங்

Koviloor Digital Library

களில் சொல்லியிருப்பதைப் பார்த்துவிட்டுத்தான் இவன் இப்படிக் கவலைப்படுகிருன். இவனுடைய உபாஸனு மூர்த்தி, இன்னும் மற்ற தெய்வ மூர்த்திகள் ஆகிய எல்லாருங்கூட லோகாநுக்ரஹமாக பெரிய காரியங்களை ஆரம்பிக்கும்போது அவர்களுக்கே ஒவ்வொரு ஸந்தர்ப்பத்தில் விக்னம் ஏற்பட்டிருப்பதை இவன் புராணங்களில் பார்த்திருக்கிருன். அப்போது அவர்கள் பிள்ளையாரைப் பூஜை பண்ணித்தான் விக்ன நிவ்ருத்தி பெற்றிருக்கிருர்களென்றும் புராணங்களில் படித்திருக்கிருன். 'அப்படிப்பட்ட தெய்வங்களுக்கே விக்னம் வந்ததென்ருல் நாம் எம்மாத்திரம்?' என்று இவன் கவலைப் படுவது நியாயந்தானே? ஒன்று, தான் உபாஸனைக்கு வேண்டிய திரவியங்கள் ஸம்பாதிப்பதிலோ, அல்லது மனஸை அதில் நிறுத்தி உபாஸிப்பதிலோ இடையூறு ஏற்படலாம். வீட்டிலே, ஊரிலே ஏதாவது நடந்து விக்னம் விளைவிக்கலாம். இது தனக்கு ஏற்படும் விக்னம். இப்படியில்லாமல், தன்னுடைய உபாஸனைக்கு உரிய தெய்வத்துக்கே ஏதாவது விக்னம் ஏற்பட்டு அது தனக்கு அநுக்ரஹம் செய்யமுடியாதபடியும் ஆகலாம். புராணங்களில் இப்படித்தானே (தெய்வங்களுக்கே விக்னம் உண்டாவதைப்) பார்க்கிருேம்? ஆனபடியால், எந்த விதமான விக்னமாக இருந்தாலும் ஸரி, அது விலகுவதற்காக அந்தத் தெய்வங்களும் பூஜித்தவரை நாமும் முதலில் பூஜித்துவிடுவோம் என்று முடிவு பண்ணுகிருன்.

ஸாதாரண மநுஷ்யனுக இருந்தால் இப்படி முடிவு பண்ணிப் பிள்ளையாருக்கு ஆரம்ப பூஜை பண்ணிவிட்டு அப்புறம் தான் எந்த தெய்வத்தை உபாஸிக்க வேண்டுமென்று உத்தேசித்திருந்தானே அதைப் பூஜிப்பான்.

நம்முடைய ச்லோகத்தில் வரும் உபாஸகர் அப்படிப் பட்ட ஸாதாரண மநுஷ்யன் இல்லை. அவரை 'தத்ஹோதோரிதி நீதிவித்' என்று சொல்லியிருக்கிறது. அதாவது, அவர் தத்ஹேது என்கப்பட்ட ந்யாயத்தை அறிந்தவர். அந்த ந்யாயம் அறிந்தவரென்ருல் தர்க்க சாஸ்த்ரம் தெரிந்த

Koviloor Digital Library

புத்திமான் என்றே அர்த்தம். எனவே அவர் நன்ருக யோசனை பண்ணி முடிவெடுப்பார். பிள்ளையார் விஷயத்தில் அவர் அப்படி நினைத்து என்ன முடிவு பண்ணுவாரென்ருல்...

'ஸகல தேவதைகளும் பிள்ளையாரைப் பூஜிக்கின்றன; அப்போதுதான் அவற்ருல் நிர்விக்னமாக ஒரு கார்யத்தை முடிக்க முடியும்; பூஜிக்காத தேவதை எதுவாயிருந்தாலும் அதன் கார்யம் நடக்கமுடியாதபடி இவரால் விக்னம் செய்ய முடியும்—என்ருல் இவர் அவை எல்லாவற்றையும் விடச் சக்தி வாய்ந்தவராக இருக்கவேண்டும். அதனுல்தான் இவர் தயவை அவை யாவும் நாடியே ஆக வேண்டியிருக்கிறது. அவற்றின் தயவை இவர் நாடியதாக எங்கேயும்சொல்லியிருக்கவில்லை. அதனுல் இவர் ஸர்வ சக்தரென்று தெரிகிறது. ஆனபடியால் அவர்கள் அளிக்கக்கூடிய பலன்களையும் ஸர்வ சக்தரான இவரே அளிப்பதற்கு வல்லவராக இருக்க வேண்டும். கணேச மூர்த்தங்களில் அநேகம் சொல்லி, அது ஒவ்வொன்றுக்கும் வைத்திருக்கிற பெயர்களைப் பார்த்தாலே இது வாஸ்தவந்தானென்று தெரிகிறது. லக்ஷ்மி கணபதி, வித்யா கணபதி, விஜய கணபதி என்றெல்லாம் பெயரிருப்பதைப் பார்க்கும்போது லக்ஷ்மி மாதிரி இவரே ஸம்பத்து அநுக்ரஹிப்பார், ஸரஸ்வதி மாதிரி கல்வியை அநுக்ரஹிப்பார், அம்பாள்—துர்கை—மாதிரி வெற்றியை அநுக்ரஹிப்பார் என்றெல்லாம் தெரிகிறது. எந்த விதமான பலனையும் அவர் அநுக்ரஹிப்பாரென்றுகாட்டுவதாக,'ஸர்வஸித்திப்ரத கணபதி' என்றே ஒரு பெயரிலும் அவருக்கு மூர்த்தியிருக்கிறது! 'ஸித்தி விநாயகர்', 'வர ஸித்தி விநாயகர்' என்ற பெயரில் அவருக்குப் பல கோவில்கள் ஏற்பட்டிருப்பதற்கும் இதுதான் காரணம். மற்ற ஸ்வாமிகளுக்கு 'ஸித்தி' என்று இப்படிப் பெயரோடு சேர்ப்பதாகக் காணேம்!

'இப்படி இவர் இருப்பதால் இவர் ஸகல தேவதைகளுக்கும் மூலமான ஏகப் பரம்பொருளே என்று தெளிவாகிறது,'

Koviloor Digital Library

—இவ்வாறு 'ஏகம் பரம் தேவம்' என்று பிள்ளையாரைத் தர்க்க சாஸ்த்ர அறிவாளி தெரிந்துகொள்கிறார்.

அப்புறம் தத் - ஹேது ந்யாயத்தை இவருடைய வழிபாட்டில் 'அப்ளை' பண்ணிப் பார்க்கிறார்.

அவர் நினைக்கிறார் : 'ஒவ்வொரு பலனைத் தரும் ஒவ்வொரு தேவதையும் அரிசி வியாபாரி, பருப்பு வியாபாரி, மிளகாய் வியாபாரி மாதிரி. ஆனால் அவர்களில் எவரும் பிள்ளையாரின் சிபார்சில்லாமல் சரக்குப் போடமுடியாது. அதனால் முதலில் இவரைப் பிடித்து சிபார்சு வாங்கிவிட்டே அவர்களிடம் போய்ச் சரக்கு வாங்கவேண்டியதாகிறது. இவரோ எவர் சிபார்சும் இல்லாமல் தாமே அரிசி, பருப்பு, மிளகாய் முதலிய அத்தனையும் விற்கும் பலசரக்குக் கடைக்காரராக இருக்கிறார்! ('ஸர்வ ஸித்திப்ரதர்' என்பது இது தானே?) அப்படியானால், இவரொருவரைப் பிடித்தே நமக்கு எது வேண்டுமானாலும் வாங்கி விடலாமே! வேறு வ்யாபாரிகளிடம் (தேவதைகளிடம்) எதற்காகப் போக வேண்டும்?

'ஒரு உபாயத்தால் நேராக ஒரு பலனை அடையமுடியும் போது அந்த உபாயத்தை மட்டும் கொண்டே பலனைப் பெற்றுவிட வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு, வேறே ஏதோ உபாயத்தை எடுத்துக்கொண்டு, அது பலன் தருவதற்காக முதலில் சொன்ன உபாயத்தைப் பிடித்து, அப்புறம் இரண்டாவது உபாயத்தினால் பலனடைவது என்பது அசட்டுத்தனமாகச் சுற்றி வளைப்பதுதானே?

'இதர தேவதா உபாஸனை பலன் தரத் தக்கதாக வேண்டும் என்ற உத்தேசத்துக்கு ('தத்'துக்கு) ஹேதுவாக நாம் உபாஸிக்க வேண்டியிருக்கும் பிள்ளையார் தாமே அந்தப் பலனை (மூலமான 'தத்'தை)யும் தரமுடியும் என்னும் போது இவரை உபாஸிப்பது மாத்ரமே போதுமே! இதர தேவதோபாஸனை எதற்கு? தத்ஹேதோரேவ தத்ஹேதுத்வே மத்யே கிம் தேந?

Koviloor Digital Library

'எப்படியும் இவரைப் பூஜிக்காமலென்னவோ நாம் எந்த தெய்வ வழிபாடும் செய்யமுடியாது. முதலில் இவருக்கு 'சுக்லாம்பரதரம்' குட்டிக்கொண்டுதான் ஆக வேண்டும். இப்படியிருக்க, அப்புறம் மட்டும் இன்னொரு தேவதாராதனம் எதற்கு? விக்ன நிவாரண மூர்த்தியான இவர் வழிவிடாமல் மற்ற தேவதைகள் நமக்கு அநுக்ரஹிப்பதற்கில்லை என்கிறபோது, அதோடுகூட இவரே எந்த தேவதை செய்யக்கூடிய அருளையும் தாமே செய்வாரென்னும்போது, நாம் விரும்புகிற பலன் எதுவானாலும் சரி, அதைப் பெற இவரை மாத்ரம் வழிபட்டாலே போதும்.'

தத்ஹேது ந்யாயம் தெரிந்தவர் இப்படி நிச்சயித்து இவரே ஏகப் பரம்பொருள் என்று பூஜிப்பதோடு முடித்து விடுகிறார் : தத்ஹேதோரிதி நீதிவித்து பஜதே தேவம் யம் ஏகம் பரம். ஆரம்ப பூஜை மட்டும் இவருக்கு, அப்புறம் இன்னொருத்தருக்கு விஸ்தாரமான பூஜை என்றில்லாமல், "இவருக்கே முழுப் பூஜையும்" என்று முடித்துவிடுகிறார்!

எல்லாப் பலன்களும் அளிக்காதவராயினும்...

கொஞ்சம் வேறே தினுஸாகவும் சொல்லலாம். அதாவது, வெவ்வேறு பலன்களைத் தருவதற்கு வெவ்வேறு தெய்வங்கள் இருப்பது வாஸ்தவந்தான். விக்நேச்வரர் ஸர்வ சக்தரானாலுங்கூட எல்லாப் பலன்களையும் தாமே அளிப்பது என்று வைத்துக்கொள்ளாமல் விக்னத்தைப் போக்குவது என்ற ஒரு பலனை மட்டுமே தாம் அளிப்பவராக இருந்து கொண்டு, மற்ற தெய்வங்கள் அததற்கென்று விதித்திருக்கிற பலன்களைக் கொடுக்கும்படியாக விட்டுவிடுகிறாரென்றும் வைத்துக்கொள்ளலாம்.

ஏனென்றால், இவருக்குச் சொன்னது மற்ற தெய்வங்களில் சிலருக்கும் பொருந்துவதுதான். அதாவது, அந்த தெய்வம் ஒவ்வொன்றைக் குறித்த புராணத்திலும், ஆகம தந்த்ரங்களிலும் அந்த தெய்வத்தையே ஸர்வ சக்தி வாய்ந்த ஏகம், பரம் என்று சொல்லியிருக்கிறது. இது ஸத்யந்தான். இருக்கிற ஒரே பரமாத்மாதான் இப்படிப் பல தெய்வங்

Koviloor Digital Library

களாகியிருக்கிறது. அதுவேதான் நாமெல்லாராகவுங்கூட ஆகியிருக்கிறது. ஆனால் நமக்கு ஸர்வசக்தி வாய்ந்த அது தான் நாம் என்ற ஞானம் கொஞ்சங்கூட இல்லாதபடி நம்மை அதுவே மாயையால் மயக்கியிருக்கிறது. ஆனால் அது தெய்வங்களாகி இருக்கிறபோதோ அவற்றில் ப்ரதான தெய்வங்களுக்குத் தாங்கள் பரமாத்ம வஸ்துவே என்ற ஞானம் நன்றாக இருக்கும்.

எல்லா தெய்வங்களையும் இப்படிச் சொல்ல முடியாது. அவற்றில் பூர்ண பரமாத்ம சக்தியோடு இருப்பவை, அப்படி இல்லாமல் ஓரளவு சக்திமட்டும் உள்ளவை என்று இரண்டு பிரிவு உண்டு என்று அபிப்ராயமிருக்கிறது. அந்த வித்யாஸங் கள் இங்கேவேண்டாம். ஏனென்றால், பரிபூர்ண பிரம்ம சக்தி வாய்ந்த 'ரத்ன த்ரயம்' என்று அப்பைய தீக்ஷிதர் காரணம் காட்டி நிலைநாட்டியுள்ள சிவன், அம்பாள், மஹாவிஷ்ணு ஆகியவர்களுக்காக நாம் பூஜை பண்ணினாலுங்கூட ஆரம் பத்தில் விக்நேச்வர பூஜை பண்ணத்தானே செய்கிறோம்?

ஆக, பொதுவழக்கு என்னவென்றால் எந்த ஒரு தெய்வத்துக்கும் தான் பரமாத்ம வஸ்துவே என்று தெரிந் தாலும்கூட அது ஸர்வ சக்தியையும் காட்டாமல், அதாவது ஸகலவிதமான பலன்களையும் தானே வழங்காமல், தனக் கென்று குறிப்பாக விதிக்கப்பட்டுள்ள பலனை மாத்திரந்தான் தரும். ஏகமான பரமாத்மா இந்த மாதிரி பல தெய்வரூபங் களைக் கொண்டதே ஒவ்வொன்றும் ஒரு பலன் தரவேண்டும் என்பதற்குத்தானே? இந்த நம்முடைய ஸநாதன தர்மத்திலே ஜனங்கள் இப்படி ஒரு Pantheon (தெய்வங் களின் கூட்டம்) வைத்துக் கொண்டு விதவிதமான அலங்காரம், ஆராதனை பத்ததிகள், நைவேத்யங்கள் என்று பண்ண வேண்டுமென்று பரமேச்வரனுடையே 'ப்ளானி'ல் தானே ஏற்பட்டிருக்கிறது? லோக வியாபாரத்தில் தினுஸு தினுஸாகக் கூத்தடிக்கணுமென்று ஈச்வரனுக்கு இருக்கிற ஆசையிலேதான் இப்படிப் பல தேவதா ரூபங்களை எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு பலனுக்கு ஒவ்வொரு தெய்வமென்று

Koviloor Digital Library

அவன் நம் ரிஷிகளுக்குக் காட்டி, அவர்கள் மூலம் ஒவ்வொன்றுக்கும், மந்த்ரம், தந்த்ரம் என்று பிரித்து ஆராதனுக்ரமங்களைக் கொடுத்திருப்பது.

இப்படிக் கொடுத்திருப்பதில் விக்ன நிவாரணத்துக் கென்று விக்நேச்வரரை வைத்திருக்கிறுன். அதாவது அவனேதான் அப்படியும் ஒரு ரூபம் எடுத்துக்கொண்டிருக் கிறுன். ஆகையினுலே அவர் அவருக்குக் கொடுத்திருக்கிற அந்த போர்ட்ஃபோலியோ (இலாகா)ப்படி மாத்திரந்தான் அதிகாரம் வஹிப்பார்; வித்யை, ஸம்பத், விஜயம் முதலான வற்றை அவர் நேரே தாமாகவே தரமாட்டார்; அததற்கான தெய்வம் அந்தந்த பலனைக் கொடுத்துவிட்டுப் போகட்டும் என்றே விட்டுவிடுவார்—என்றும் வைத்துக் கொள்ளலாம். இப்போது தத்ஹேது ந்யாயம் 'அப்ளை' ஆகுமா?

ராஜாங்கத்தில் ஒரு 'மினிஸ்ட்ரி' அமைக்கிறபோது ஒருத்தர் ஃபைனுன்ஸ், ஒருத்தர் மராமத்து, ஒருத்தர் போலீஸ் என்றெல்லாம் பொறுப்புக் கொடுக்கிறுர்கள். எவருக்கும் எந்த இலாகாவும் வஹிக்கிற யோக்யதை இருக்க லாம். அல்லது ஜனநாயக ஸெட் - அப்பிலே எதிலுமே இல்லாவிட்டாலும், எதுவானுலும் தெரிந்த மாதிரி எடுத்துக்கொண்டு ஒரு மாதிரி ஒப்பேற்றிவிடலாம்! எப்படி யானுலும் அவருக்கு என்று ஒரு இலாகா இருக்கும்போது இன்னென்றில் ஒரு மந்த்ரி பிரவேசித்து உத்தரவு போட முடி யாது. ஒருத்தரே இன்றைக்கு ஒரு இலாகா மந்த்ரியாயிருந்து விட்டு நாளைக்கு வேறு இலாகாவுக்கு மாற்றப்படுகிறுர், அல்லது இன்றுவரை இரண்டு இலாகாக்களுக்கு மந்த்ரியா யிருந்துவிட்டு நாளைக்கு ஒன்று அவரிடமிருந்து எடுபட்டுப் போகிறது என்றுல், நாளையிலிருந்து எந்த இலாகாவில் மாத்திரந்தான் தனக்குப் பொறுப்போ அதிலேதானே அவர் அதிகாரம் வஹிக்க முடியும்? 'நேற்றைக்கு நான் அந்த போர்ட்ஃபோலியோ பார்த்தேனே, அதிலே இன்றைக்குச் சட்டம் போடுவேன்' என்று அவர் பண்ண முடியா தோல்வியோ?

Koviloor Digital Library

லோக நிர்வாஹம் நடத்துகிற தெய்வ ராஜாங்கத்திலும் இப்படியே தேவதைகள் அவளவாளுக்குப் பொறுப்புத் தந்துள்ள பலன்களைக் கொடுத்து அநுக்ரஹிப்பதுதான் பொது வழக்கு.

'பொது வழக்கு' என்று எப்போது சொல்கிறேனோ அப்போதே இதற்கு 'அபூர்வ விலக்கு'ம் உண்டு என்பது தொக்கி நிற்கும்.

ஒரு தெய்வம்—அது விக்நேச்வரராகவும் இருக்கலாம், வேறு எந்த தெய்வமாகவும் இருக்கலாம்—ஏதோ ஒரு தெய்வம், தனக்குள்ளேயும் ஸர்வசக்தரான பரமாத்மாவே இருக்கிறாரென்ற உசந்த ஸ்வாநுபூதியிலிருந்து கொண்டு அநுக்ரஹிக்கிறபோது, குறிப்பாக ஒருவித பலனைத்தான் என்றில்லாமல், பரமாத்மா போலவே ஸகலவிதமான பலன்களையும் கொடுத்துவிடுவதுண்டு. 'நீதான் என் ஒரே தெய்வம். உன்னையன்றி ஒருவரிடமும் போகமாட்டேன்' என்று ஒரு பக்தர் ஒரு தெய்வத்தையே இஷ்டமூர்த்தியாகக் கொண்டு சரணாகதி பண்ணிவிடுகிறபோது, அந்த தெய்வமும் பரமாத்ம பாவத்தில் உள்ளூரத் தன் வரைக்கும் இருப்பதோடு மட்டுமில்லாமல், காரியத்திலும் பரமாத்மாவாகவே ஸகல பலன்களையும் அநுக்ரஹிக்கும். அது பரமாத்ம ஸ்வாநுபூதி பெறாத குட்டி தேவதையாக, அல்லது மாநுஷமான ஸாதாரண மாதா, பிதா, குரு, பதி—இப்படி ஒருவராக இருந்தால்கூட, இவர்களிடம் ஒருத்தர் ஹ்ருதயத்தை அர்ப்பணம் செய்து சரணாகதி பண்ணிவிட்டால், ஸாக்ஷாத் பரமாத்மாவே அந்த சரணாகதனின் பக்தியை மெச்சி அந்தக் குட்டி தேவதை அல்லது மநுஷ்யர் மூலம் ஸகல பலன்களையும் அநுக்ரஹித்துவிடுவார். ஆனால் இப்படிப்பட்ட சரணாகதி, இஷ்டதெய்வம் என்று ஒன்றிடமே பற்று என்பதெல்லாம் அபூர்வமாகவே இருக்கப்பட்டவை.

Koviloor Digital Library

பல தெய்வங்கள் ஏன்?

ஜன ஸமூஹத்துக்குப் பொதுவாக அநுபவங்களை நாஞ விதமான ருசி பேதங்களில் நுகர்வதுதான் இயற்கை குணம். ஆஹாரம் பல சுவைகளில் இருக்கணும். ஒன்றே இருந்தால் திகட்டிப் போகிறது. கதை, நாடகம் என்றாலும் பல ரஸங்கள் இருக்கணும். பாட்டு என்றால் பல ராகங்களில், தாளங்களில் இருக்கணும்; விறுவிறுப்பாகவும் வேணும், விளம்பமாகவும் வேணும். உபாஸனை என்று வரும்போதும் இப்படி நாஞ தினுஸாக உள்ள வைசித்ரியம் (விசித்ரத் தன்மை) வேண்டும். முடிவிலே ஸமாதி யோகம், வேறே கலப்பேயில்லாமல் ஒரே ஒரு உணர்வாக, 'ஏகப் பேருணர் வாக' என்பார்கள், அப்படி மனஸின் ஆட்டமே இல்லாமல் ஆகவேண்டுமென்றாலும், அது எங்கேயோ எப்போதோ எவருக்கோதான் லபிக்கிற ஸ்திதி. அந்த ஸ்திதிக்குப் போவதற்கே, அலை பாய்கிற இந்த மனஸை வைத்துக் கொண்டுதான் உபாஸனையை ஆரம்பிக்கும்போது அலைஅலை யாகப் பாய்ந்தாலும், பாய்கிறதெல்லாம் நம்மை ஸம்ஸாரத்தில் முழுக்கடிக்கிற அலைகளாக இல்லாமல், ஏதோ ஒரு தினுஸில், ஏதோ ஒரு அளவில் ஈச்வர ஸ்மரணத் தில் நனைப்பதாக இருக்கட்டும் என்றுதான் வைசித்ரிய ருசி கொண்ட மனஸுக்குப் பிடித்த மாதிரியே ஏக பரமேச்வரன் பல திவ்ய ரூபங்கள் எடுத்துக்கொண்டு பல விதமான பலன் தருவது; பூஜா பத்ததியையும் பல விதமாகக் கொடுத்து, ஒன்றுக்கு (ஒரு தெய்வத்துக்கு) வில்வம், ஒன்றுக்குத் துளஸி, ஒன்றுக்கு வெல்லச் சீடை, ஒன்றுக்குக் கொழுக்கட்டை என்று வைத்திருப்பது எல்லாம். இதுதான் பெரும்பாலான ஜனங்களுக்கு. அதாவது 'வழக்கு' என்பது.

ஈச்வரனின் விளையாட்டில் இதற்கு 'விலக்கு'ம் கொஞ்சம் கொஞ்சம் உண்டு. சிலபேருக்கு இஷ்ட தெய்வம் என்று ஒன்று, அதனிடமே அத்யந்தமான பக்தி என்று ஏற்படு கிறது. விதவிதமாக தெய்வ பேதங்களைப் பூஜிக்க வேண்டு

Koviloor Digital Library

மென்று தோன்றாமல் இவர்களுக்கு இஷ்ட தெய்வத்திடமே முழு பக்தியுமாக இருக்கிறது. இன்னொன்றைப் பூஜிப்பதில்லை என்ற அநன்ய பக்தியோடு, ஏகாந்த பக்தியோடு ஒன்றை மட்டுமே பிடித்துக்கொண்டு ஆராதிக்கிறார்கள். இவர்கள் ஏகமான பரமாத்ம சைதன்யத்தின் பரிபூர்ண விலாஸமாகவும் தங்கள் இஷ்டதெய்வமே இருக்கிறது, அதுவே முழுமுதற் கடவுள் என்று கொண்டு எல்லாவிதமான பலன்களையும் அதனிடமே கோருகிறார்கள். அதை ஏதோ ஒரு குறிப்பிட்ட பலன் தருவதாக மட்டும் நிறுத்திவிடுவதில்லை இப்படி முருக பக்தர்கள், தேவி பக்தர்கள், விஷ்ணு பக்தர்கள், அந்த விஷ்ணுவிலும் ஏதோ ஒரு அவதாரமான ராமனை மட்டும் தான் பக்தி பண்ணுபவர்கள், க்ருஷ்ணனை மட்டும்தான் பக்தி பண்ணுகிறவர்கள் என்று ஒரே மூர்த்தியை பிடித்துக் கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள். பூர்ண ப்ரஹ்ம சக்தியான பரமாத்மாவும் அந்த ஒரு மூர்த்தியின் மூலமே இந்த பக்தர்களுக்கு ஸகல விதமான பலன்களையும் அநுக்ரஹிக்கிறது.

ஆனால் இப்படி சிவோபாஸனைதான், அம்பாள் உபாஸனைதான், ராமனோ க்ருஷ்ணனோ எவரோ ஒருத்தருக்குத்தான் மனஸைப் பூர்ணமாகக் கொடுத்து பக்தி பண்ணுவது என்று இருக்கிறவர்கள்கூடப் பிள்ளையாரை மட்டும் தள்ளிவிட முடிவதில்லை. 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொள்ளாமல் அவர்களும் இஷ்டதெய்வ உபாஸனை பண்ண முடிவதில்லை. இஷ்ட தெய்வத்தைத் தவிர ஏனைய தெய்வங்களில் எதுவும் வேண்டாமென்று மற்ற தெய்வங்களை விட்டு விட்டாலும் பிள்ளையாரை மாத்திரம் அப்படி விடமுடிவதில்லை.

இப்படிப்பட்ட அநன்ய பக்திக்காரர்கள் குறைச்சல் தான். பொதுவாக பலவேறு தெய்வங்களையும் அது அது தருகிற பலன்களுக்காக வழிபடுவதாகத்தான் காணப்படுகிறது. ஒரு கோவிலுக்குப் போனால் எத்தனை ஸந்நிதி? ஒவ்வொரு ஸந்நிதிக்கும்தான் போய் தர்சனம் பண்ணி

Koviloor Digital Library

வணங்குகிறோம். சிவன் கோவிலில் உள்ள ஸந்நிதிகள் பெருமாள் கோவிலில் இருக்காது; அதே மாதிரி அங்கே யிருக்கிற ஸந்நிதிகள் இங்கே இருக்காது. நாம் என்ன பண்ணு கிறோமென்றால் ஈச்வரன் கோவிலுக்குப்போய் தரிசனம் பண்ணினபிறகு பெருமாள் கோவிலுக்கும் போகிறோம். காஞ்சீபுரம் மாதிரிப் பல தெய்வங்களில் ஒவ்வொன்றையும் மூல மூர்த்தியாக வைத்துப் பல ஆலயங்கள் உள்ள ஊர் களில் நாம் காமாக்ஷி, ஏகாம்ரேச்வரர், வரதராஜா ஆகிய ஒவ்வொருவருடைய கோவில்களுக்கும், இன்னும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கான குமரக் கோட்டம்,— சித்ரகுப்தனுக்குக் கோவிலிருக்கிறதா? ஸரி, அதற்கும் போய்—இப்படி எல்லா தெய்வங்களையும்தான் தர்சிக்கிறோம் எந்தக் கோவிலுக்குப் போனாலும் அங்கே இந்த விக்நேச்வரர் மட்டும் இல்லாமலிருக்கமாட்டார் பெருமாள் கோவிலானாலும் விஷ்வக்ஸேனர் என்ற பெயரில் நாமத்தைப் போட்டுக்கொண்டு வந்து நிற்பார்! நம்முடைய நமஸ்காரத்தை வாங்கிக்கொண்டு விடுவார்!

எல்லாப் பலனும் அளிக்காதவராயினும்தான்!

சொல்ல வந்தது, விக்நேச்வரரை ஸகல பலதாதாவாக 'ஏகம் பரம் தேவம்' என்று கொள்ளாமல், தனித்தனிப் பலன்களைக் கொடுக்க ஏற்பட்ட பல தெய்வங்களில் ஒருத்தர் தான் இவரும் என்று வைத்து, அவரை அவருக்கென்று குறிப்பாக ஏற்பட்ட விக்ன நிவாரணத்தோடேயே நிறுத்தி விட்டால் 'தத்ஹேது ந்யாயம்' என்னவாகும் என்ற விசாரணைதான். இப்போதுங்கூட ஒரு விதத்தில் அந்த ந்யாயம் அவருக்கு 'அப்ளை' ஆகத்தான் செய்யும். இது விக்நேச்வரர் ஒருவருக்கே உரிய விசேஷமான பெருமை. அதாவது எல்லாப் பலன்களையும் இவரே நேராக அளிக்காத போதுகூட இவரைக் காரணமாகக் கொண்டே எந்தப் பலனையும் அடைந்துவிடலாம். இன்னொரு ஸ்வாமியைப் பூஜிக்கவேண்டுமென்பதில்லை.

அதெப்படி?

Koviloor Digital Library

இவர் தருகிற பலன் என்ன? விக்ன நிவாரணம். இடையூற்றின் நீக்கம். இவருடைய அருள் இல்லாவிட்டால் நாம் எந்த தெய்வத்துக்குச் செய்கிற பூஜையும் இடையூறில்லாமல் நடக்க முடியாது. இதைவிட முக்யமாகச் சொல்ல வேண்டியது, இவருடைய அருள் இல்லாவிட்டால் எந்த தெய்வமும் அது விரும்புகிறபடி நமக்குப் பலன் தரவும் முடியாது. அந்தத் தெய்வங்களின் அநுக்ரஹ கார்யத்துக்கே இடையூறு ஏற்படலாம். அதைப் போக்க விக்நேச்வரரால் தான் முடியும்.

லோகத்துக்கெல்லாம் அநுக்ரஹம் பண்ணவேண்டுமென்று ஈச்வரன் த்ரிபுர ஸம்ஹாரம் செய்யப் புறப்படுகிறார். ஆனால் அவர் காரியத்துக்கே விக்னம் உண்டாகிறது. ரதத்தின் அச்சு முறிகிறது. அப்புறம் அவர் பிள்ளையானாலும் விக்நேச்வரரைத் தாம் வழிபடாவிட்டால், தாம் உத்தேசித்த லோக அநுக்ரஹ கார்யம்கூட நடக்காது என்று புரிந்துகொண்டு இவரைப் பூஜிக்கிறார். இவர் ப்ரீதி அடைந்து இடையூறுகளை நீக்குகிறார். அப்புறந்தான் தகப்பனார்க்காரரால் த்ரிபுர ஸம்ஹாரம் செய்யமுடிகிறது. இப்படி ஒவ்வொரு தெய்வமும் இவரை வழிபட்டு விக்ன நிவாரணம் பெற்றே தங்களுடைய கார்யத்தைச் செய்ய முடிந்திருக்கிறது என்று கதைகள் இருக்கின்றன.

அதனால்தான் இவரொருத்தரை மாத்திரம் எந்த தெய்வத்தின் பூஜையிலும் முதலில் வணங்கியே ஆகவேண்டியிருக்கிறது. 'விக்ன நிவாரணம்' என்பதாக இவருக்குப் ப்ரத்யேகமாக ஏற்பட்டுள்ள போர்ட்ஃபோலியோவின் விசேஷச் சிறப்பு இது! மற்ற ஸ்வாமிகள் நமக்கு வேண்டிய பலனைத் தருவதற்கு இஷ்டப்பட்டாலும், அந்த இஷ்டம் நிர்விக்னமாகக் கார்ய ரூபத்தில் முடிவதற்கு அவையும் இவரைத்தான் 'டிபென்ட்' பண்ணவேண்டியிருக்கிறது!

ஆரோக்யத்துக்காக ஸூர்யனைப் பூஜிக்கிறோம், படிப்புக்கு ஸரஸ்வதியை, பணத்துக்கு லக்ஷ்மியை, என்று

Koviloor Digital Library

இப்படி ஒவ்வொரு பலனுக்காக ஒரு மூர்த்தியைப் பூஜை பண்ணுகிறோமென்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த மூர்த்திகளில் ஒன்றுக்கு மற்றதன் தயவு வேண்டாம். ஸூர்யனுக்கு லக்ஷ்மி, ஸரஸ்வதிகளின் தயவு வேண்டியதில்லை. அவர்களுக்கும் அதே மாதிரிதான். அவரவர் தாங்கள் தரவேண்டிய பலனைத் தந்துவிட்டுப் போவார்கள்.

ஆனால் அப்படித் தரமுடியாமல் விக்னம் ஏற்பட்டு விட்டால்? ஸூர்ய பகவானுக்குத் தன் ஆரோக்ய அநுக்ரஹ கார்யத்தைச் செய்ய ஸரஸ்வதி தரும் படிப்போ, லக்ஷ்மி தரும் பணமோ வேண்டியதில்லைதான். ஆனால் அந்தக் கார்யத்துக்கே இடையூறு ஏற்பட்டால் பரவாயில்லை என்று அவர் இருக்க முடியுமா?

எந்த தெய்வமானாலும் தாங்கள் கொடுக்க விரும்பும் பலனுக்கு விக்னம் வந்தால் வந்துவிட்டுப் போகட்டுமென்று இருக்க முடியாதல்லவா? அதனால்தான் விக்ன நிவாரண போர்ட்ஃபோலியோக்காரரான கணபதியின் தயவு மாத்திரம் எல்லா தெய்வங்களுக்கும் வேண்டியிருக்கிறது! இவர் தயவில்லாமல் அவர்கள் தங்கள் அநுக்ரஹ கார்யத்தைப் பண்ணமுடியாது!

லௌகிக பலனாக இல்லாமல் ஞானம் வேண்டும், நிஜமான பக்தி வேண்டும் என்றெல்லாம் ஈச்வரனை, அம்பாளை, விஷ்ணுவைப் பூஜை பண்ணும்போதுகூட அதற்கும் நம் பக்ஷத்திலோ, நமக்கு அநுக்ரஹிக்கவேண்டிய உபாஸ்ய மூர்த்தியின் பக்ஷத்திலோ விக்னம் ஏற்படாமலிருப்ப தற்கு கணபதியின் தயவு வேண்டித்தானிருக்கிறது.

ஆனபடியால் அவரை ஸகல பல தாதாவாக வைக்காமல், நாம் பலனுக்காக வேறொரு மூர்த்தியைப் பூஜித்தாலுங்கூட முதலில் இவர் தயவை நாடி ஆரம்ப பூஜை இவருக்குச் செய்து தானாகவேண்டியிருக்கிறது.

இங்கேதான் தத்-ஹேது நியாயமறிந்தவன் ஆலோசனை பண்ணிப் பார்க்கிறான்: 'சரி, விக்நேச்வரர் தாமே எல்லா

Koviloor Digital Library

விதப் பலன்களையும் தராமல் விக்ன நிவிருத்தி செய்பவராக மட்டுமே இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். இப்படி மட்டும் இவர் இருக்கும்போதுகூட எந்த தெய்வமானாலும் இவரைப் பூஜித்து இவருடைய தயவைப் பெற்றுத்தான் நம்முடைய கார்யத்தை நடத்திக் கொடுக்கவேண்டியிருக்கிறது. விக்னம் ஏற்படாமலிருப்பதற்காக எந்த தெய்வமானாலும் இவரிடம் வந்து நிற்கவேண்டித்தான் இருக்கிறது. அதாவது அந்த தெய்வங்கள் நம் கார்யத்தை இடையூறு இல்லாமல் நடத்தித் தருவதற்குக் காரணமாக, அதாவது ஹேதுவாக, இருப்பவர் இவர்தான். இப்படி மற்ற தெய்வங்களுக்குமேல் இவருக்கு ஒரு 'பவர்' இருப்பதால் அந்த தெய்வங்களைத் தம் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்ய இவருக்கு சக்தி இருக்கும். அதனால், எந்தப் பலனைத் தருகிற எந்த தேவதையானாலும் அதனிடம் அவர் 'இன்ன பக்தனுக்கு இன்ன அருளைப் பண்ணுங்கள்' என்று சிபார்சு பண்ணினால், அந்த தேவதை அந்த சிபார்சை உத்தரவு போலவே எடுத்துக்கொண்டு அதன்படிப் பண்ணி விடும். அந்த தேவதையின் போர்ட்ஃபோலியோவை இவர் தாமே எடுத்துக்கொண்டு அது தரும் பலனைத் தரவேண்டுமென்றில்லை பரமேச்வரனின் ராஜாங்கத்தில் யாருக்கு எந்த இலாகாவோ அது அப்படியே இருக்கலாம். ஆனால் எந்த தெய்வமானாலும் அதனிடம் இவர் 'இன்னாருக்கு நீ அருள் பண்ணு' என்று சொல்லிவிட்டால் அது பண்ணிவிடும். இல்லாவிட்டால் ஏதாவது காரியத்தில் அந்த தெய்வம் ஈடுபடும்போது விக்னம் ஏற்பட்டுக் கஷ்டப்படும்படி ஆகிவிடும்.

'இதனால் என்ன ஏற்படுகிறதென்றால், நமக்கு எந்தத் தெய்வத்தின் மூலம் எந்தப் பலன் கிட்டவேண்டுமானாலும் ஸரி, விக்நேச்வரரொருத்தரைப் பூஜை பண்ணிவிட்டாலே போதும், அவர் தம்முடைய இன்ஃப்ளுயென்ஸைக் கொண்டு எந்த தெய்மானாலும் அதனிடம் சொல்லி நமக்கு வேண்டிய அருளைப் பண்ணும்படி செய்துவிடுவார்,'

Koviloor Digital Library

தத்ஹேது ந்யாயமறிந்தவன் இப்படி யோசித்து, 'விக்நேச்வரரின் இன்ஃப்ளுயென்ஸை ஹேதுவாகக்கொண்டே எந்த தெய்வத்திடமிருந்தும் அது கொடுக்கக்கூடிய பலனை அடையமுடியும் என்னும்போது, இவருக்கு மாத்திரம் பூஜை பண்ணுவதோடு நிறுத்திக்கொண்டு விடலாமே! பலதாதா என்பதாக இன்னொரு தெய்வத்துக்கு வேறு ஏன் பூஜை செய்யணும்? இவராலேயே நாம் மற்ற தெய்வங்களிடம் காரியம் ஸாதித்துக்கொள்ள முடியுமென்னும் போது இவருக்குப் பூஜை பண்ணுவதோடுகூட அவர்களுக்கும் எதற்குப் பண்ணணும்? அவர்களைப் பூஜை பண்ணி நமக்கு ஆகவேண்டியது என்ன? தத்ஹேதுத்வே மத்யே கிம் தேன?' என்று நினைக்கிறான். ஆரம்ப பூஜை இவருக்கு, அப்புறம் முக்ய பூஜை இன்னொருத்தருக்கு என்று இல்லாமல் இவரையே முக்யமாய் வைத்து முழு பூஜையும் இவருக்கே பண்ணி விட்டுத் திருப்தியாகிவிடுகிறான் தனக்கு வேண்டிய எந்த விதமான பலனையும் விக்நேச்வர - த்வாரா (விக்நேச்வரரின் வழியாகப்) பெற்றுவிடுகிறான்.

தத்-ஹேதோரிதி நீதி வித்து பஜதே தேவம் யம் ஏகம் பரம்

"நீதிவித்-து" என்பதற்கு 'தத்ஹேது நீதி அறிந்தவனோ என்றால்' என்று அர்த்தம். மற்ற ஸாதாரண ஜனங்கள் பிள்ளையாருக்கு ஆரம்பத்தில் ஒரு குட்டி பூஜை, அப்புறம் இன்னொரு தெய்வத்துக்குப் பெரிசான முக்ய பூஜை என்று செய்தாலும், தத்ஹேது ந்யாயம் தெரிந்தவனோவென்றால் இவரைக் காரணமாகக் கொண்டே இதர தேவதா ப்ரஸாதங்களையும் பெற்றுவிட முடியுமென்பதால் இவருக்கே முழு பூஜையும் செய்து முடித்துவிடுகிறான் என்ற இவ்வளவு அர்த்தம் "தத்ஹேதோரிதி நீதிவித்-து பஜதே" என்பதில் அடங்கியிருக்கிறது.

'வெரைட்டி' வழிபாடே மனித இயற்கை

இப்படி நான் சொன்னதற்காக—நானாகச் சொல்ல வில்லை, அந்த மன்னார்குடிப் பெரியவர் சொன்னதை எடுத்துச்

Koviloor Digital Library

சொன்னதற்காக,—நீங்கள் பிள்ளையாரைத் தவிர எல்லா தெய்வங்களையும் மூட்டை கட்டிவைத்துவிட்டு அவரொருத்தரைத்தான் வழிபடவேண்டுமென்று அர்த்தமில்லை. சற்று முன்னே சொன்னாற்போல பகவானுக்கு தினுஸு தினுஸாக லீலை பண்ணியே இந்த த்வைத ப்ரபஞ்சக் கூத்தை நடத்த வேண்டுமென்று இருப்பதாலும், அவன் இந்தக் கூத்திலே பிசைந்து போட்டிருக்கிற மநுஷ்ய ஜீவனுக்கும் ஜெனரலாக எந்த ஒரு அநுபோகமானாலும் அதிலே தினுஸு தினுஸான வைசித்ரிய ருசிவேண்டியிருப்பதாலும்தான் இத்தனை தெய்வ ரூபங்களை அவன் தரித்துக் கொண்டிருப்பது. ஆசையால் அவாளவாளுடைய மனப்பான்மைப்படி ஒவ்வொருத்தரை ஒவ்வொரு ரூபம்தான் 'இஷ்ட தெய்வம்' என்னும்படியாக ஆகர்ஷிக்கும். அதே மாதிரி, சாஸ்த்ராதிகளிலும் ஸம்ப்ரதாயப்படியும் ஸம்பத்துக்கு லக்ஷ்மி, வித்யைக்கு ஸரஸ்வதி, ஆரோக்யத்துக்கு ஸூர்யன், இன்னும் இந்த இந்த க்ரஹ பீடை போக ராஹு - கேது, இன்ன நாளில் இன்னாருக்கு உத்ஸவம் என்று எப்படியெப்படி பூஜிக்கச் சொல்லியிருக்கிறதோ அப்படி அந்தந்த தெய்வத்துக்கு வழிபாடு நடத்தினால்தான் பலன் என்றே பொதுவாக ஜனங்களுக்கு நம்பிக்கையும், பிடிப்பும் இருக்கும். சனிப் பெயர்ச்சி என்றால் லக்ஷம் ஜனங்கள் திருநள்ளாற்றில் கூடுகிறார்கள், மகரவிளக்கு என்றால் சபரிமலையில் பத்துலக்ஷம் ஜனங்கள் கூடுகிறார்கள் என்றால் இதுதான் காரணம். அத்வைத ஸாதனையில் நன்றாக முன்னேறிப்போகிற அபூர்வமான சிலரைத் தவிர இந்த த்வைத ப்ரபஞ்சத்திலேயே பக்தி, ஏதோ கொஞ்சம் ஞானம் என்று போகிற எல்லாருக்கும் ஒண்ணே ஒண்ணு என்று பிடித்துக்கொள்வது கஷ்டம்தான். 'வெரைட்டி'தான் லோக வாழ்க்கைக்கே ஸாரமாயிருப்பது! இஷ்டதேவதை என்று ஏதோ ஒன்றை ஓரளவு கெட்டியாகப் பிடித்துக் கொண்டாலுங்கூட அப்போதும் அதற்கே தினுஸு தினுஸாக வேஷம் போட்டு அலங்காரம் பண்ணிப் பார்க்கத் தோன்றுகிறது! இன்றைக்கு உத்ஸவத்தில் கைலாஸ வாஹனம் என்று ராஜாதி ராஜனாக அலங்காரம் பண்ணிப்

Koviloor Digital Library

பார்க்கிறவனையே நாளைக்கு பிக்ஷாண்டி என்று எல்லா வற்றையும் வழித்துவிட்டு நிறுத்திப் பார்த்து ஸந்தோஷிக்கத் தோன்றுகிறது!

மனஸ் கவடு விட்டுக்கொண்டு நானாவித ருசி பேதங்களில் போனாலும், அதன் இயற்கையிலேயே அதை விட்டுப் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக வழிக்குக் கொண்டுவந்து ஒன்றிலேயே நிற்பதற்குப் பக்குவப் படுத்தத்தான் மதம் ஏற்பட்டிருக்கிறதேயொழிய, எடுத்த எடுப்பிலேயே மனஸை ஒன்றிலேயே அமுக்கிப் போடுவதற்கில்லை. இப்படி வற்புறுத்திப் பண்ணினால் மனஸின் இயற்கைப்படி அது ஈடு கொடுக்க முடியாமல் திணறி, திமிறிக் கஷ்டப்பட்டுக் கொண்டு முடிவிலே ஜடம் மாதிரியோ, இல்லாவிட்டால் எதிர்த்திசையில் வெறித்தனமாகவோதான் போகும். அதனால், நமது மதம் செய்கிற முதல் காரியம் நானாவிதமான லௌகிக ருசிகளிலேயே ஸந்தோஷிக்கிற மனஸை நானா விதமான தெய்விக ருசிகளைக் காட்டி ஸந்தோஷப்படுத்தி, அந்த மனஸின் அழுக்கை எடுத்துத் தெளிவு பண்ணுவது தான். இப்படி நன்றாக அழுக்குப் போய் தெளிந்த தெளிவாக ஆகிப் பக்குவப்பட்ட அப்புறம், முடிவில்தான், நானா தினுஸு என்கிற த்வைத அநுபவங்களை விட்டு ஒன்றே யான அத்வைதம் என்று கொண்டு போவது.

அதனால் பிள்ளையார், ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி, அம்பாள், சிவன், விஷ்ணு, ராமன், க்ருஷ்ணன், நவக்ரஹம், ஐயனார் என்று எல்லாவற்றையும் வைத்துக்கொண்டே விதவிதமாக அலங்காரம் பண்ணி, உபசாரம் பண்ணி, நைவேத்தியம் பண்ணி, ஒவ்வொன்றுக்கும் அததற்கான நியமங்களை அநுஷ்டானம் பண்ணி ருசி பேதத்திலேயே நிறைவு காண்கிற மனஸுக்கு ஸந்தோஷம் கொடுத்துக் கொடுத்து, தத் - த்வாராவே (இதன் மூலமே) அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மேலே உசத்திக்கொண்டு போவோம். லௌகிகத்திலேயே அழுந்திக் கிடக்கிற மனஸை எப்படியோ ஒரு அப்படி தெய்வ விஷயமாகக்

Koviloor Digital Library

கொஞ்சம் தொட்டுக்கொண்டு அதிலே ஒரு ஸந்தோஷம் அடையும்படிப் பண்ண இது (பல தெய்வ வழிபாடு) ஒத்தாசை பண்ணுகிறதா இல்லையா?

குழந்தைகளுக்கு ஒரே வர்ணத்திலுள்ள ஒரு பொருளைக் காட்டிலும் கலர் கலராகக் காட்டினால் ஒரே உத்ஸாஹம், குஷி பிறந்து சிரித்துக் கூத்தாடும். அத்யாத்ம ரீதியில் நாமும் அந்தக் குழந்தை மாதிரிதான். அதனால் அத்தனை 'ஹிண்டு பாந்திய'னையும் வெட்கப்படாமல் வைத்துக் கொண்டு, ஒரே மூர்த்திதான் என்னும்போது ஏற்படக்கூடிய சலிப்பு இல்லாமல், [சிரித்துக்கொண்டு] 'போர்' அடிக்காமல், ஏதோ தெரிந்த மட்டும் வழிபாடு பண்ணி, ஏதோ நமக்குக் கிடைக்கிற மட்டும் கொஞ்சம் பக்தி ருசியை அநுபவிப்போம். ஏக ரஸம் எல்லாம் அப்புறம்தான், இப்போது அவியல்தான்!

எடுத்துக் கொண்ட விஷயத்தின் உயர்வை விசேஷப் படுத்திக் காட்டுவதற்காகத்தான் தத்ஹேது ந்யாயப்படி விக்நேச்வர உபாஸனை ஒன்று மாத்திரமே போதும் என்று காட்டியிருக்கிறதே தவிர, இதனால் நடைமுறையில் அப்படியே எல்லாரும் பண்ணி விடவேண்டும், மற்ற ஸ்வாமியையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டு மென்று அர்த்தமில்லை. இந்த ச்லோகத்தைப் பண்ணினவரே எல்லா ஸ்வாமியையும் ஸ்தோத்ரம் பண்ணினவர்தான். விக்நேச்வர பூஜையே போதுமென்றில்லாமல் விசேஷமாக சிவாராதனம் பண்ணினவர்தான்.

ந்யாய ரீதியாக புத்தி மட்டத்தில் ஒன்றை நிலைநாட்டி விட்டால் போதுமா? மனஸ், மனஸ் என்று ஒன்று, அதுதானே புத்திக்கு மேலே நம்மைப் பிடித்துக்கொண்டு ஆட்டி வைக்கிறது? பக்தி என்று வந்துவிட்டால் அங்கே புத்தியையே கொண்டுவரக் கூடாது என்று கூடச் சொல்கிறார்களே!

ஆனபடியால் புத்தி லெவலில் ந்யாயம் சொல்வது அப்படியே இருக்கட்டும், நம்முடைய ஸ்டேஜில் நமக்கு அது நிறைவு தரவில்லை என்றால். ஸகல தேவதாராதனம், இஷ்ட

Koviloor Digital Library

தெய்வ ஆராதனம் என்று எதில் ஸந்துஷ்டியோ அதன்படி செய்வோம். இப்படியும் அப்படியுமாகக் கலந்து கலந்து வேண்டுமானாலும் செய்வோம்.

அதே ஸமயத்தில், புத்தி ரீதியில் ஆராய்ந்து பார்த்தால் இப்படி ஸர்வ தேவதோபாஸனா பலன்களையும் விக்நேச்வரர் ஒருத்தரின் மூலமே, அவரொருவரை மட்டும் வழிபடுவதனாலேயே, அடையமுடியும் என்பதான ஒரு பெரிய சிறப்பு அவருக்கு நிச்சயமாக இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்வோம். நாம் பல பேரை வழிபடுகிறபோது, முதலில் அவரிடம் வந்து குட்டிக் கொள்ளும்போது, புத்தி ரீதியில் நாம் தெரிந்துகொண்ட இந்த ந்யாயமே நம்முடைய ஹ்ருதயத்திலும் பளிச்சென்று நினைவுக்கு வந்து அவரிடம் நாம் செய்கிற பக்திக்கு ஒரு ஜீவனை ஊட்டிவிடும்.

இக - பர பலன்கள்

ஸகல தேவதோபாஸனா பலன்களையும் கொடுக்க வல்லவராகப் பிள்ளையார் இருக்கிறார் என்பதால்தான் ச்லோகத்தின் கடைசி வரியில் "ஸர்வார்த்த ப்ரதிபாதனைக சதுரோ த்வைமாதுரோ(அ)வ்யாத் ஸ ந:" என்று சொல்லியிருக்கிறது. ஏக பர தெய்வமாக இருந்துகொண்டு அதனால் பிள்ளையாரே ஸர்வசக்தியுடன் டைரக்டாக எந்தப் பலனை வேண்டுமானாலும் தரலாம்; அல்லது மற்ற தேவர்களுக்கும் விக்ன நிவ்ருத்தி அருளுகிற சக்தி பெற்றவர் என்பதாலேயே அவர்கள் மீது தமக்குள்ள செல்வாக்கைக் கொண்டு நாம் விரும்பும் பலனை அவர்கள் கொடுக்கும்படி அவர் சிபார்சு செய்யலாம். எப்படியானாலும் நமக்கு எல்லா விதமான பலன்களையும் அடைவிக்கப் பண்ணுவதில் அவர் வல்லவர் : ஸர்வார்த்த ப்ரதிபாதனைக சதுரர். 'ஸர்வார்த்தம்' என்றால் நாம் விரும்பும் எல்லாப் பொருள்களையும், பலன்களையும் என்று அர்த்தம். மநுஷ்ய வாழ்வின் லக்ஷ்யங்களாக நாலு சொல்வார்கள், 'சதுர்வித புருஷார்த்தம்' என்று. தர்மார்த்த (தர்ம - அர்த்த) - காம - மோக்ஷம் அல்லது

Koviloor Digital Library

அறம் - பொருள் - இன்பம் - வீடு என்பது இதுதான். இந்த நாலு புருஷார்த்தங்களையும் தர வல்லவர் பிள்ளையார் என்றும் ("ஸர்வார்த்த ப்ரதிபாதனைக சதுர :" என்பதற்கு) அர்த்தம் செய்துகொள்ளலாம். காமம், மோக்ஷம் என்பது தான் முறையே இஹம், பரம். இவ்விரண்டையும் தருகிறார் என்றால் அதில் அடங்காதது எதுவுமே இல்லை!

இஹத்துக்கு ஆதாரமாக இருக்கப்பட்ட காமம் நம்மை இதிலேயே புதைத்து பரத்தின் பக்கமே போக முடியாமல் தடுத்துவிட்டால் நாம் பிறவி எடுத்து என்ன புண்ணியம்? அதனால்தான் அதை முதலில் நெறிப்படுத்தித் தருவதற்காக தர்மத்தை முதல் புருஷார்த்தமாக வைத்திருக்கிறது.

காமம், அதாவது, ஆசை என்பது மனஸிலே இருக்கிற விஷயம். அதன் நிறைவேற்றத்துக்குப் பல வஸ்துக்கள் வேண்டும். இந்த வஸ்துக்களைப் பெற நமக்கு வசதி இருந்தால்தான் ஆசைகள் பூர்த்தியாகும். இந்த வசதியைத் தருவதுதான் இரண்டாவது புருஷார்த்தமான 'அர்த்தம்' என்கிற பொருட் செல்வம். இந்தப் பொருட் செல்வத்தை நம்முடைய சொந்த ஆசைகளுக்காக இல்லாமல் பரநலமாகச் செலவிடவும் இடமிருக்கிறது. இப்படிப் பண்ணும்போது இரண்டாவது புருஷார்த்தமான அர்த்தமே முதல் புருஷார்த்தமான தர்மத்தை நமக்குக் கொடுக்கிறது! அனர்த்த ஹேதுக்களான அர்த்த - காமங்களுக்கு முன்னால் முதலிலே தர்மத்தின் பிடிப்பு இருந்து, அதோடு இவற்றைச் சேர்த்து அநுபவித்தால் நாளாவட்டத்தில் பக்குவம் ஏற்பட்டு நாலாம் புருஷார்த்தமான மோக்ஷத்தின் வழியில் கொண்டுவிடும்.

"ப்ரதிபாதன - ஏக - சதுர": 'கொடுக்கவல்ல ஒரே ஒருவர்.' இஹ - பர நலன்கள், பலன்கள் எல்லாவற்றையும் கொடுப்பதில் சதுரர், திறமை மிக்கவர்.

Koviloor Digital Library

இரண்டு தாயார்க்காரர்!

த்வைமாதுர :

இந்த ச்லோகத்தில் விக்நேச்வரருக்குச் சொல்லியிருக்கிற பேர் இது (த்வைமாதுரன் என்பது) தான். அவருடைய வேறே பெயர் எதுவும் (ச்லோகத்தில்) இல்லை. கணபதி, கணேசர், விக்நேச்வரர், விநாயகர், கஜாநநர், லம்போதரர் என்றிப்படிப் பல பேர்கள் நம் காதில் அதிகம் பட்டிருக்கிற மாதிரி படாத பேர்: த்வைமாதுரர். அப்படியென்றால் "இரண்டு தாயார்களை உடையவர்" என்று அர்த்தம். 'த்வி மாதா' - இரண்டு தாயார்கள். 'த்வை மாதுரர்':- இரண்டு தாயார்களை உடையவர். 'இரண்டு பெண்டாட்டிக் காரன்' என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இவரோ நாம் கேள்விப்படாத விதமாக 'இரண்டு தாயார்க்காரர்'!

யார் அந்த இரண்டு தாயார்கள்? ஒன்று, அம்பாள். இது எல்லாருக்கும் தெரிந்தது. இன்னொன்று, கங்கை. ஈச்வரனின் தலையின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டிருக்கிற கங்கா தேவியையும் அவருக்குப் பத்னியாகவே சொல்வது வழக்கம்...

அம்பாளுடைய நேத்ரமே ச்ருங்காரம், பீபத்ஸம், கோபம், ஆச்சர்யம், பயம், ஹாஸ்யம் முதலான எல்லா நாடக ரஸங்களையும் ஒவ்வொரு ஸந்தர்பத்தில் காட்டுவதாக ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் ஒரு ச்லோகத்தில் வர்ணித்திருக்கிறார்*. அங்கே அம்பாளுடைய நேத்ரம் எப்போது கோபக் குறிப்பைக் காட்டுகிறது என்று சொல்லும் போது 'கங்கையைப் பார்க்கும்போது' என்றே சொல்லியிருக்கிறது: ஸ ரோஷா கங்காயாம். கங்கையை பார்த்தால் அம்பாளுக்கு சக்களத்திக் காய்ச்சல்! அதுதான் கோபம் கோபமாக வருகிறது!

---

*'சிவே ச்ருங்காரார்த்ரா' எனத் தொடங்கும் 51-வது ச்லோகம்.

Koviloor Digital Library

ஆனால் அன்புருவமான பிள்ளையாரோ, 'கங்கை யார்? நம்முடைய பிதாவின் பத்னி. அதனால், அவளையும் அம்பாளைப் போலவே எனக்கு இன்னொரு அம்மாவாக வைத்துக் கொள்ளுவேன். த்வைமாதுரன் என்றே பேர் பெறுவேன்' என்று ஒற்றுமைக்கு உருவமாக இருந்துகாட்டுகிறார்!

எல்லாருக்கும் தெரிந்த கதை சிவ நேத்ரத்திலிருந்து பிறந்த அக்னிப் பொறிகள் ஆறும் கங்கையிலே தங்கித்தான் அப்புறம் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியாயிற்று என்பது. பொறிகள் ஆறு; கங்கையும் ஆறு! கங்கையில் தங்கி உத்பவித்ததால் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி வெளிப்படை யாகவே கங்கையின் புத்திரர். பிதாவின் பத்தினி என்ற அளவில் உபசாரமாகப் பிள்ளையார் அவளுக்கு மாத்ரு ஸ்தானம் கொடுத்தது போலில்லாமல் வ்யக்தமாக அவளுடைய ஸம்பந்தம் பெற்றே ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி தோன்றினார். அதனால்தான் (கங்கா புத்ரர் என்று பொருள் பட) அவருக்கு காங்கேயர் என்றே பெயர்.

பிள்ளையாருக்கு கங்கையுடன் நேர் ஸம்பந்தமில்லாத போனாலும் அவளுக்குக் குழந்தையாகத் தம்மைக் கருதிக் கொண்டதுதான் விசேஷம்! எல்லாரையும் அணைத்துப் போகிற அவருடைய அன்புள்ளத்துக்கு அது அடையாளம். குமாரஸ்வாமி பரமேச்வரனின் நேத்ராக்னியிலிருந்து உண்டானாரென்றால், விக்நேச்வரர்தான் அம்பாள் தன் தேஹத்திலுள்ள சந்தனப் பூச்சு, வாஸனைப் பொடி, மஞ்சள், குங்குமம் இத்யாதிகளை அப்படியே தன் தலையோடு கால் வழிந்து எடுத்துத் தன்னுடைய திவ்ய ஹஸ்தத்தினாலேயே பிம்பமாகப் பிடித்து வைத்து உயிர் கொடுத்து உருவாக்கின மூர்த்தி. இப்படிப் பூர்ணமாக அம்பாள் ஸம்பந்தத்தில் உத்பவித்தும் அவர் கங்கையையும் அவளுக்கு ஸமமாக, இன்னொரு தாயாராகப் பார்ப்பது அவருடைய குணச் சிறப்பைக் காட்டுகிறது. ஸ்திரீகள் அத்தனை பேரையும் தாயாராகவே பார்த்த சுத்த ப்ரஹ்மசர்ய மூர்த்தியான அவர், அவர்களில் முக்யமாக ஒன்று அம்பாள், இன்னொன்று

Koviloor Digital Library

அவளுக்கு எதிரியான கங்கை என்று வைத்துக் கொண்டிருக்கிறார்! இப்படி அவர் இருவருக்குப் பிள்ளையான த்வைமாதுரராக இருப்பவர்.

நதிகளில் உருண்டு புரண்டு விளையாடி நீச்சலடிப்பதில் யானைகளுக்கு அலாதிப் பிரியம். குதிரை, மாடு, சிங்கம், புலி முதலானவற்றுக்கு இப்படிச் சொல்ல முடியாது. மஹிஷமானால், குட்டையைக் குழப்பிக்கொண்டு சேற்றில் ஸந்தோஷப்படும்! யானைக்குத்தான் நீர் விளையாட்டில் ரொம்பவும் இஷ்டம். அந்த ஒரு மிருகத்துக்குத்தானே தும்பிக்கை இருக்கிறது? அதிலே ஜலத்தை எடுத்து பீய்ச்சாங்குழல் அடிக்கிற மாதிரி வாரி வீசிக்கொண்டு அமர்க்களப்படுத்தும். தன்னுடைய அத்தனும் பெரிய தேஹத்தைக் கொண்டு அநாயஸமாக நீந்தி விளையாடும். காடுகளில் கூட்டங்கூட்டமாக நதிகளுக்குப் போய் அல்லோலகல்லோலப் படுத்துவது யானையின் வழக்கம். பாகவதத்தில் கஜேந்த்ர மோக்ஷக் கதையில் இப்படியொரு காட்சியை ரொம்பவும் இயற்கையாக வர்ணித்திருக்கும். யானைமுகராக இருப்பதால்தானோ என்னவோ விக்நேச்வரருக்கு கங்கா நதியிடம் புத்ர வாத்ஸல்யம்!

ஸாதாரணமாக யாராவது ஈவிரக்கம், அன்பு, அருள் இல்லாமலிருந்தால், 'நீயும் ஒரு அம்மாவின் வயிற்றில் பிறந்தவனா?' என்று கேட்கிற வழக்கம். அம்மாவைச் சொல்லிப் பிள்ளையைக் குறிப்பிட்டால் பிள்ளை அன்புள்ளம், அருளுள்ளம் உள்ளவன் என்று அர்த்தம். நம்முடைய பிள்ளையார் இரண்டு அம்மாக்காரர் என்றால் அவர் இரட்டிப்பு மடங்கு அன்பும் அருளும் நிறைந்தவர் என்று அர்த்தம்!

ஆறு தாயார்க்காரர்!

இவர் 'த்வைமாதுரர்' என்றால் தம்பியான குமாரஸ்வாமிக்கோ 'ஷாண்மாதுரர்' என்று பெயர். அதாவது

Koviloor Digital Library

அவருக்கு ஆறு தாயார்கள். இந்த ஆறில் அம்பாள், கங்கா தேவி இருவருமே சேர்த்தி இல்லை! க்ருத்திகா நக்ஷத்ர தேவிகளான—'கார்த்திகைப் பெண்டிர்' என்று சொல்கிற— ஆறு பேர்தான் ஸுப்ரஹ்மண்யருடைய ஷண்மாதாக்கள். அவர் உத்பவித்தவுடன் இவர்களே அவருக்கு ஸ்தன்ய பானம் பண்ணுவித்ததால் அவர்களைத் தாயார்களாகக் கொண்டார். க்ருத்திகா தேவதைகளின் புத்ரரானதால்தான் அவருக்குக் கார்த்திகேயர் என்று பெயர் வந்தது.

ஐயப்பனின் தாயாரைப் பற்றிய பிரச்னை!

விக்நேச்வரரின் மாதாக்கள், முருகனின் மாதாக்கள் ஆகியவர்களைப் பற்றிச் சொல்லும்போது வேடிக்கையாக ஒன்று நினைவுக்கு வருகிறது. இந்த இரண்டு பேரைப் போலவே பரமேச்வரனுக்கு மூன்றாவது குமாரராக ஒருத்தர் உண்டு. இப்போது நாளுக்கு நாள் ப்ரஸித்தி பெற்றுவரும் ஐயப்ப ஸ்வாமிதான் அவர். ஈச்வரனைப் பிதாவாகவும், மோஹினி ரூபத்தில் வந்த மஹாவிஷ்ணுவை மாதாவாகவும் கொண்டு உத்பவித்தவர் அவர். அவருடைய தாயார் உறவு விஷயமாகத்தான் வேடிக்கை. வேடிக்கை, வேடிக்கை என்று நான் சொன்னாலும் அவருக்கு ரொம்ப விசாரமளித்து வந்த ஒரு பிரச்னையாக அது இருந்தது.

கதை என்னவென்றால்—

பதினாறும் நூற்றாண்டில் அப்பைய தீக்ஷிதர் என்று மஹான் இருந்தார். மன்னார்குடிப் பெரியவாளின் குல கூடஸ்தராகச் சொன்ன அந்தப் பெரியவர்தான். அவர் அத்வைதியானபோதிலும் சில உபாஸனையை விசேஷமாக வளர்த்துக் கொடுத்தவர். அவர் காலத்தில் சிவாராதனத்தை மட்டம் தட்டியும் சிவாராதனம் செய்து வந்தவர்களை எதிர்த்தும் விஷ்ணு உபாஸனையானது "aggressive" என்று சொல்லக்கூடிய விதத்திலேயே பரப்பப் பட்டு வந்ததால்தான் அவர் எதிர் நடவடிக்கையாக

Koviloor Digital Library

சிவோத்கர்ஷத்தை (சிவபெருமானின் உயர்வை) ஸ்தாபித்து நிறையப் பிரசாரம் பண்ணும்படியாயிற்று. அவருக்கு ஸம காலத்தவராகிய தாதாசாரியார் என்பவர் விஜயநகர ராயவம்சத்தின் கடைசி ராஜாக்களிடம் நிரம்பச் செல்வாக்குப் பெற்றுத் தீவிரமாக வைஷ்ணவப் பிரசாரம், மத மாற்றம் பண்ணி வந்ததுதான் சைவத்தை விசேஷமாக நிலைநாட்டும்படி தீக்ஷிதரைத் தூண்டியது. மற்றபடி, எதிராளிகளுக்கு ஒரேயடியாக சிவத்வேஷம் இருந்த மாதிரி அவருக்கு விஷ்ணு த்வேஷம் என்பது லவலேசமும் இருக்க வில்லை. சற்றுமுன் 'ரத்ன த்ரயம்' என்று சொன்னபடி ஈச்வரன், அம்பாள் ஆகியவர்களோடு விஷ்ணுவையும் ஸாக்ஷாத் பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபமாக—ஏனைய தேவதை களுக்கெல்லாம் உச்சியிலுள்ள மும்மணிகளில் ஒருவராக— ச்ருதி, யுக்தி ப்ரமாணங்கள் காட்டி தீக்ஷிதரே ஸ்தாபித் திருக்கிறார்.

ஒரு ஸமயம் தீக்ஷிதர், தாதாசாரியார் ஆகிய இரண்டு பேருடனும் ராஜா ஒரு கோவிலுக்குப் போனார். அந்த ராஜா விஜயநகரத்து ராமராயராகவோ, வேலூர் சின்ன பொம்ம நாய்க்கராகவோ, தஞ்சாவூர் வீர நரஸிம்ஹ பூபாலராகவோ இருக்கலாம். ராஜா யார் என்பது கதைக்கு முக்யமில்லை. சைவம், வைஷ்ணவம் ஆகிய ஒவ்வொன்றிலும் தலைமை ஸ்தானத்தில் இருந்தவர்களான இந்த இரண்டு பேரை, இருவருமே நல்ல வித்வத் ச்ரேஷ்டர் களாக இருந்தவர்களை, ராஜா ஒரே ஸமயத்தில் தன்னோடு கோவிலுக்கு அழைத்துக்கொண்டு போனதுதான் முக்யம்.

கோவிலில் ஐயப்ப சாஸ்தாவின் பிம்பம் இருந்தது. அது ஒரு புது மாதிரியான பிம்பமாக இருந்தது. சாஸ்தா மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு ரொம்பவும் விசாரத் துடன் என்னவோ யோசிக்கிற பாவனையில் விக்ரஹம் அமைந்திருந்தது.

"இது ஏன் இப்படிப் புது மாதிரியாக இருக்கிறது?" என்று ராஜா கேட்டார்.

Koviloor Digital Library

கோவிலைச் சேர்ந்தவர்கள், "இது பஹு காலத்துக்கு முந்திச் செய்த விக்ரஹம். இந்த விக்ரஹம் அடித்த ஸ்தபதிக்கு ஐயப்ப சாஸ்தா ஏதோ ஒரு விஷயமாக இப்படி தீர்க்க சிந்தனையில் இருப்பதுபோல தர்சனம் கிடைத்ததாம். அது என்ன விஷயம் என்று அவர் (ஸ்தபதி) தெரிவிக்க வில்லை. ஆனால் தமக்கு தர்சனம் கிடைத்த பாவனையிலேயே இந்த மூர்த்தியைப் பண்ணி வைத்துவிட்டு, 'பிற்காலத்தில் ஸர்வஜ்ஞதை (அனைத்தறிவு) வாய்ந்த ஒரு பெரியவர் இங்கே வருவார். அவர் சாஸ்தாவின் விசாரம் எதைப் பற்றி என்ற ரஹஸ்யத்தை வெளிப்படுத்திவிடுவார். உடனே விக்ரஹம் மூக்கின்மேலிருந்து விரலை எடுத்துவிட்டு, எல்லாக் கோவில் களிலும் இருக்கிற மாதிரி ஆகிவிடும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாராம். அப்புறம் எத்தனையோ பெரியவர்கள் இங்கே வந்து (சாஸ்தாவின் தீவிர யோசனைக்கு) என்னென்னவோ காரணங்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் எதுவும் நிஜமான காரணமாக இல்லாததால் சாஸ்தா விரலை எடுக்காமலே இருக்கிறார்" என்று சொன்னார் கள்.

ராஜா உடனே தாதாசாரியாரைப் பார்த்தார்.

அவர் அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்துகொண்டு தாமும் ஒரு காரணம் கற்பித்து ச்லோகமாகச் சென்னார்.

விஷ்ணோ: ஸுதோஹம் விதிநா ஸமோஹம்
தங்யஸ் - ததோஹம் ஸுரஸேவிதோஹம் ।
ததாபி பூதேச ஸுதோஹம் ஏதைர்
பூதைர் - வ்ருதச் சிந்தயதீஹ சாஸ்தா ॥

'சாஸ்தாவுக்கு என்ன விசாரம் என்றால் இதுதான்' என்று தாதாசாரியார், சாஸ்தா சொல்கிற மாதிரியே ச்லோகத்தை ஆரம்பித்துப் பண்ணியிருக்கிறார். சாஸ்தா என்ன சொல்கிறாராம்? "நான் விஷ்ணுவுக்குப் பிள்ளை, ஆனபடியால் பிரம்மாவுக்கு ஸமதையானவன். இதனால் நான் தன்யனாக இருக்கிறேன். தேவர்கள் எல்லோராலும் வணங்கப்படுகிறேன். ஆனாலும்......"

Koviloor Digital Library

'ததாபி' என்று ச்லோகத்தில் வருவதற்கு 'ஆனாலும்' என்று அர்த்தம். தன்னுடைய உயர்வுகளையெல்லாம் பற்றி சாஸ்தா சொல்லிவிட்டு 'ஆனாலும்' போடுகிறாரென்பதால் இனிமேல் அவருடைய விசாரத்தின் காரணம் வரப் போகிறது என்று புரிகிறதல்லவா? இதிலேயே தாதாசாரியாருக்கு சிவ ஸம்பந்தமான விஷயங்களில் அபிப்ராயமில்லை என்பதும் தெரியவரும்!

'ஆனாலும்' போட்ட சாஸ்தா மேலே என்ன சொல்கிறார்?

"ஆனாலும் நான் சிவனுக்கும் பிள்ளை" - "ததாபி பூதேச ஸூதோஹம்". சிவனுக்கு எத்தனையோ பேர். நல்ல நல்ல பேராக சிவன், ஈச்வரன், சம்பு, பசுபதி, ஸாம்பன், நடராஜா, தக்ஷிணாமூர்த்தி என்று எத்தனையோ இருக்க, 'பூதேசன்' என்ற பேரே ச்லோகத்தில் கொடுத்திருக்கிறது! பூதக்கூட்டங்களின் தலைவன் என்று ஈச்வரனைச் சொல்லி, 'அப்படிப்பட்டவனின் பிள்ளையாகவும் நான் இருக்கிறேனே!' என்று ஐயப்ப ஸ்வாமி அங்கலாய்த்துக் கொள்கிறமாதிரி ச்லோக வாக்யம் போகிறது.

பூதங்களையும் அடக்கி அவற்றுக்குத் தலைவராக ஒருவர் இருக்கிறாரென்றால் உண்மையில் அதுவும் அவருடைய உயர்ந்த ப்ரபுத்வ சக்தியை, அதிகார சக்தியைக் காட்டி அவருக்குப் பெருமை தருவதுதான். பரமேச்வரன் ஸத்துக்களை பூதங்கள் ஹிம்ஸை செய்யாமல் வற்றை அடக்கி வைத்து லோக ரக்ஷணம் செய்கிறவர்தானேயன்றி அவற்றை இஷ்டப்படி செய்யுமாறு அவிழ்த்துவிடுகிறவரில்லை. நம்மைக் கெட்ட சக்திகள் தாக்காதபடி அவர் பிடித்து வைத்துக்கொண்டு அடக்கி அதிகாரம் செய்கிறாரென்பதைத்தான் அவர் பூதேசராக இருப்பது காட்டுகிறது.

பூதேசனாகிய பரமேச்வரனுக்கே மஹாதேவன் என்றும் பெயர். தேவர்களிலெல்லாம் பெரியவர் அவர். தன்னுடைய மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளையை, ஸுப்ரஹ்மண்ய

Koviloor Digital Library

ஸ்வாமியை, தேவ ஸேனைகளுக்கெல்லாம் அதிபதியாக நியமித்தார். பூதப்படைகளை இரண்டாகப் பிரித்து ஒரு கணத்தின் அதிபதியாக கணபதியை வைத்தார். "பூத கணாதி ஸேவிதம்" என்று அவரை ஸ்தோத்திரிக்கிறோம். பூத கணங்களிலேயே இன்னொரு பகுதிக்கு ஐயப்ப சாஸ்தாவை அதிபதியாக நியமித்தார். மலையாள தேசத்தில் ஐயப்பனை 'பூதநாதன்' என்றும் சொல்வார்கள்.

எளிதில் அடங்காத பூதப்படைகளை அடக்கி வைப்பது சாஸ்தாவுக்குப் பெருமை தருகிற விஷயந்தான். உக்ர குணமுடைய க்ஷுத்ர (சில்லுண்டி) தேவதைகள் ஊருக்குள் போய் உத்பாதம் விளைவிக்காதபடி அவற்றை அடக்கித் தம்மிடம் வைத்துக்கொண்டு க்ராம எல்லையில் காவல் தெய்வமாக உள்ள சாஸ்தா பெருமிதப்பட வேண்டிய லோகோபகாரம்தான் செய்கிறார். ஆனால் சிவ ஸம்பந்த மான விஷயங்களில் தாதாசாரியாருக்கு அபிப்ராயமில்லாத தால் இதுதான் சாஸ்தா தீர்க்கசிந்தனையில் மூக்கில் விரலை வைத்திருப்பதற்குக் காரணம் என்று ச்லோகம் பண்ணி முடித்துவிட்டார்: "மிகவும் உயர்வுக்குக் காரணமாக, நான் விஷ்ணு புத்ரனாயிருந்து, பிரம்மாவுக்கு ஸமானனாயிருந்தும், தேவ ஸமூஹத்தினரால் போற்றப் படுபவனாயிருந்தும்கூட பூதத் தலைவனின் ஸுதனாகவும் இருக்க நேர்ந்துவிட்டதால் எப்போதும் பூதகணங்களால் சூழப்பட்டவனாக இருக் கிறேனே!"—ஏதைர் பூதைர் வ்ருத: என்று ச்லோகத்தில் வருவதற்கு 'இந்த பூதங்களால் சூழப்பட்டிருக்கிறேன்' என்று அர்த்தம். 'இப்படி இருக்கும்படியாகி விட்டதே என்றுதான் சாஸ்தா மூக்கிலே விரலை வைத்துக்கொண்டு விசாரத்துடன் சிந்திக்கிறார்: சிந்தயதீஹ சாஸ்தா' என்று தாதாசாரியார் முடித்துவிட்டார்.

ஆனால் சாஸ்தா பிம்பம் அதைக்கேட்டு மூக்கின் மேல் வைத்திருந்த விரலை எடுத்துவிடவில்லை. ஏனென்றால், நாம் ஆலோசனை பண்ணிப் புரிந்துகொண்ட மாதிரி, பூதங்கள் சூழக் காவல் தெய்வமாக இருந்துகொண்டு ஒரு க்ராமத்தைக்

Koviloor Digital Library

காப்பாற்றிக் கொடுப்பது சாஸ்தாவின் பெருமைக்குத்தான் காரணமே தவிர விசார யோசனைக்குக் காரணமாகாது.

சாஸ்தா விக்ரஹம் தாதாசாரியார் சொன்ன காரணத்துக்கு விரலை எடுக்காமலிருந்தவுடன் ராஜா அப்பைய தீக்ஷிதரைப் பார்த்தார். அவருக்குக் காரணம் ஸ்புரித்தது. உடனே ச்லோக ரூபமாக அதைத் தெரிவித்தார். தாதாசாரியார் சொன்ன மாதிரியே இவரும் சாஸ்தாவின் வசனமாகவே ஆரம்பித்துச் சொன்னார் :

அம்பேதி கௌரீம் அஹம் ஆஹ்வயாமி
பத்ந்ய பிதுர் - மாதர ஏவ ஸர்வா : ।
கதம் நு லக்ஷ்மீம் இதி சிந்தயந்தம்
சாஸ்தாரம் ஈடே ஸகலார்த்த ஸித்த்யை ॥

சாஸ்தா விசாரப்பட்டுக் கொண்டு, 'இதென்னடா, இதற்கு வழிகாண முடியாமலிருக்கிறதே!' என்று மூக்கிலே விரலை வைத்து யோசித்துக் கொண்டு என்ன சொன்னதாக தீக்ஷிதர் சொல்கிறார்?

"கௌரியான சிவ பத்னியை நான் அம்மா என்று கூப்பிடுகிறேன், "அம்பேதி": "அம்பா இதி": அம்மா என்று. "ஆஹ்வயாமி": அழைக்கிறேன். விஷ்ணு போட்டுக்கொண்ட மோஹினி ரூபம்தான் வாஸ்தவத்தில் என்னைப் பெற்றெடுத்த தாயாரானாலும், தகப்பனாருக்கு எத்தனை பத்னிகள் இருந்தாலும் அத்தனை பேரும் மாத்ரு ஸ்தானம் என்பதால் என் தகப்பனாரான ஈச்வரனுக்குப் பத்னியான பராசக்தியையும் நான் தாயாராகக் கொள்ளுகிறேன்." விக்நேச்வரர் இப்படித்தானே கங்கையைத் தாயாராகக் கருதினார்?

"ஈச்வரனை அப்பாவாகவும், மஹாவிஷ்ணுவை அம்மாவாகவும் கொண்ட எனக்குப் பராசக்தி என்ன உறவுமுறை என்று யோசித்துக் குழம்பவேண்டிய அவசியமில்லை பத்ந்ய பிதுர் மாதர ஏவ ஸர்வா :—பிதாவின் பத்னிகள் எல்லாருமே தாயார்கள்தான். அதனால் பராசக்தியிடம் அம்மா என்று

Koviloor Digital Library

உறவு பாராட்டுகிறேன் : அம்பேதி கௌரீம் அஹம் ஆஹ்வயாமி.

"ஆனால் என்ன உறவுமுறை சொல்வது என்று புரியாமல் யோசித்துக் குழம்பும்படியாக இன்னொன்று இருக்கிறது. அது என்ன? யாருக்கு உறவுமுறை வகுத்துக் கூற முடியவில்லை?

"லக்ஷ்மீம்

"லக்ஷ்மிக்குத்தான்.

"லக்ஷ்மியை எப்படி அழைப்பேன்? கதம் நு லக்ஷ்மீம்?"

இதுதான் சாஸ்தாவின் விசாரம். மூக்கில் விரலை வைத்துக் கொண்டு, 'இதற்கு எப்படியடா 'ஆன்ஸர்' கண்டு பிடிப்பது?' என்று அவர் யோசிப்பது எதற்கென்றால், தாம் லக்ஷ்மியை என்ன உறவுமுறை சொல்லிக் கூப்பிடுவது என்பது புரியாததால்தான்,

நமக்கும் புரியத்தானே இல்லை?

ஏன்?

லக்ஷ்மி யார்? மஹாவிஷ்ணுவின் பத்னி. மஹாவிஷ்ணு யார்? அவர் சாஸ்தாவுக்கு என்ன ஆகணும்? அம்மா ஆகணும் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுதான் மோஹினியாகிப் பரமேச்வரனிடத்தில் இவரைப் பெற்றார். அதனால்தானே இவருக்கு ஹரிஹரபுத்ரன் என்று பேர்? ஸரி, அப்படியானால் லக்ஷ்மி இவருக்கு என்ன ஆகணும்?

அம்மாவின் பத்னி ஆகணும்.

வேடிக்கை என்றேனே அது இதுதான்! அப்பாவின் பத்னி, சித்தப்பாவின் பத்னி, மாமாவின் பத்னி, அண்ணாவின் பத்னி என்றெல்லாந்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்களை அம்மா, சித்தி, மாமி, மன்னி என்பது போல உறவு சொல்லிக் கூப்பிடுகிறோம். அமமாவின் பத்னி என்று எங்கேயாவது யாருக்காவது ஒரு உறவு கேள்விப்பட்டதுண்டா? இந்த சாஸ்தா ஒருத்தருக்குத்தான் இப்படி உலகத்திலேயே இல்லாத விசித்ரமாக அம்மாவுக்குப் பத்னி என்று

Koviloor Digital Library

லக்ஷ்மி இருக்கிறாள்! அவளை இவர் என்ன உறவு சொல்லிக் கூப்பிடுவார்?

"கதம் நு லக்ஷ்மீம்?"—லக்ஷ்மியை என்னவென்று கூப்பிடுவேன்? 'நு' போட்டால் ஸந்தேஹக் குறி.

"இதி சிந்தயந்தம் சாஸ்தாரம்"—என்றிப்படி விசாரப்பட்டுக் கொண்டிருக்கிற ஐயப்ப சாஸ்தாவை; "ஈடே"—போற்றி வழிபடுகிறேன்.

'ஸகலார்த்த ஸித்த்யை சாஸ்தாரம் ஈடே' என்று முன் பின்னாகச் சேர்த்து அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். 'எல்லாவிதமான புருஷார்த்தங்களும் ஸித்திப்பதற்காக சாஸ்தாவைப் போற்றி வழிபடுகிறேன்' என்று தீக்ஷிதர் முடித்தார்.

பிள்ளையார் ஸமாசாரத்தில் ஏகமாக ஐயப்பனை இழுத்துவிட்டுவிட்டோமே என்று பார்த்தால், 'எல்லாம் அதற்கும் இதற்கும் ரொம்ப ஸம்பந்தந்தான்' என்று ஸமாதானம் பண்ணுகிற மாதிரி, பிள்ளையார் ச்லோகத்தில் 'ஸர்வார்த்த ப்ரதிபாதன சதுர'ராக அவரைச் சொல்லியிருக்கிறதென்றால் இங்கே சாஸ்தாவை 'ஸகலார்த்த ஸித்தி' தருபவராகச் சொல்லி இரண்டையும் சேர்த்து முடிச்சுப் போட்டிருக்கிறது! சாஸ்தா ச்லோகத்தைப் பண்ணினவருடைய வம்சத்தில் வந்தவர்தான் பிள்ளையார் ச்லோகத்தைப் பண்ணினவர்!

தீக்ஷிதர் ச்லோகத்தில் தெய்வ பேதம், அது உசத்தி—இது தாழ்த்தி என்கிற அபிப்ராயங்கள் எதுவுமில்லை. அம்பாளையும் லக்ஷ்மியையும் ஒருபோலச் சொல்லியிருக்கிறார். அதோடு தீக்ஷிதர் ச்லோகத்தில் புத்தியை மட்டும் காட்டாமல், பக்தியையும் காட்டி 'ஸகலார்த்த ஸித்திக்காக சாஸ்தாவை வழிபடுகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். எதற்காக மூக்கில் விரலை வைத்துக்கொண்டிருக்கிறாரென்று 'அர்த்தம்' தெரியாதபோது, ஸகல 'அர்த்தமும்' ஸித்திப்பதற்காக அவரையே வேண்டிக்கொள்வதாகச் சொல்வது,

Koviloor Digital Library

அவர் க்ருபை இருந்தாலொழிய அவரைப் பற்றிய ரஹஸ்யத்தை நம் புத்தி சாதுர்யத்தால் மட்டும் கண்டுபிடித்துவிட முடியாது என்பதையும் பணிவோடு உணர்த்துகிறது.

இதெல்லாவற்றுக்கும் மேலாக, தீக்ஷிதர் காட்டியிருக்கிற காரணம்தானே நிஜமாகவே எந்த மேதாவியாலும் கண்டு பிடிக்க முடியாத புதிராக இருக்கிறது? அம்மாவுடைய பத்னி என்பது என்ன உறவு என்று எத்தனை யோசித்துப் பார்த்தாலும் பதில் கிடைக்குமா?

வாஸ்தவத்திலும், விடையில்லாத இந்தக் கேள்வி சாஸ்தாவுக்கு எழும்பித்தான் அவர் ஒரே விசாரமாக யோசித்துக்கொண்டு மூக்கிலே விரலுடன் ஸ்தபதிக்குக் காட்சி கொடுத்து ஸ்தபதி அப்படியே சிலை அடித்திருந்தார். ஆகையால் இப்போது தீக்ஷிதர் அந்த உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்துச் சொன்னாரோ இல்லையோ, பிம்பம் மூக்கின் மேலிருந்த விரலை எடுத்துவிட்டு, எல்லா ஆலய சாஸ்தா மூர்த்திகளும் இருக்கிறமாதிரி கையை வைத்துக் கொண்டுவிட்டது!

ஒரு விக்ரஹம் ச்லோகம் கேட்டு மூக்கிலிருந்து விரலை எடுத்தது என்றால், கூடியிருந்தவர்களெல்லாம், 'இப்படியும் ஒரு அதிசயமுண்டா?' என்று மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டிருப்பார்கள்!

த்வைமாதுரர் என்று பிள்ளையாரைச் சொல்லப்போக அவருடைய ஒரு ஸஹோதரர் ஷாண்மாதுரராயிருப்பது நினைவு வந்து, அப்படியே இன்னொரு ஸஹோதரரான சாஸ்தாவுக்கு மாதாவின் பத்னி என்று ஒரு உறவு இருந்ததில் கொண்டு விட்டுவிட்டது!

பரமேச்வரனின் மூத்த புத்திரரை நினைக்கும்போது மூன்று பிள்ளைகளையுமே ஸ்மரிக்க நேர்ந்தது விசேஷம்.

விக்நேச்வரர் ரக்ஷிக்கட்டும்!

ஸர்வார்த்த ப்ரதிபாதநைக சதுரோ த்வைமாதுரோ
அவ்யாத ஸ ந:

Koviloor Digital Library

என்று விக்நேச்வர ஸ்தோத்ரத்தின் மூலம் தத்ஹேது ந்யாயத்தை எடுத்துக்காட்டும் 'ந்யாயேந்து சேகர' ச்லோகம் முடிகிறது. 'த்வைமாதுரோ அவ்யாத் ஸ ந:' என்றால் 'இரண்டு தாயார்களை உடையவரான விக்நேச்வரர் நம்மை ரக்ஷிக்கட்டும்' என்று அர்த்தம்.

ச்லோகத்தின் முதல் மூன்று வரிகளில் அது விக்நேச்வரரைப் பற்றியது என்று பெயரைக் குறிப்பிட்டு வெளிப்படக் காட்டாமல், 'மற்ற தேவதைகளில் ஒன்றைப் பூஜிக்க விரும்புகிறவர்கள்கூட அந்தப் பூஜைக்கு ஏற்படக்கூடிய இடையூற்றை நீக்கிக் கொள்வதற்காக எவருடைய திருவடித் தாமரைகளைப் பூஜிக்கவேண்டியது அவச்யம் என்று கருதுகிறார்களோ, இப்படிப்பட்ட பக்தர்களில் தத்ஹேது ந்யாயமும் தெரிந்தவராக உள்ளவர்கள் மற்ற தேவதா பூஜையே வேண்டாம் என்று எவரொருத்தரையே பர தெய்வமாகப் பூஜிப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்களோ' என்று சொல்லிவிட்டு, 'எவர்' 'எவர்' என்று பெயரைச் சொல்லாமல் குறிப்பிட்ட அவரை நாலாம் வரியில் 'அவர் இவர்தான், த்வைமாதுரராக இருக்கப்பட்ட விக்நேச்வரர் தான்' என்று வெளிப்படப் பெயர் சொல்லி 'இப்படியாகப் பட்டவர் நம்மை ரக்ஷிக்கட்டும் : அவ்யாத் ஸ ந:' என்று முடித்திருக்கிறது. 'யத் பாத பங்கேருஹ': எவருடைய திருவடித் தாமரைகளை; 'தேவம் யம் ஏகம் பரம்' : எவரை ஏக பர தேவதையாக—என்று சொல்லி அப்புறம் 'த்வைமாதுரோ ஸ: ந: அவ்யாத்' : த்வைமாதுரரான அவர் நம்மை ரக்ஷிப்பாராக' என்று நன்றாக அடையாளம் புரியவைத்து முடித்திருக்கிறது.

அப்யந்யாமரமாரிராதயிஷதாம் யத்பாதபங்கேருஹ
த்வந்த்வாராதநமந்தராய ஹதயே கார்யம்
த்வவச்யம் விது: |

தத்தேதோரிதி நீதிவித்து பஜதே தேவம் யமேகம் பரம்
ஸர்வார்த்தப்ரதிபாதநைகசதுரோ த்வைமாதுரோ
(அ)வ்யாத்ஸ ந: ||

Koviloor Digital Library

கதை சொல்வார்கள். ஒருவன் யாசகத்துக்காக நவாபின் அரண்மனைக்குப் போனானும். "கொஞ்சம் காத்திரு. நவாப் நமாஸ் பண்ணப் போயிருக்கிறார்" என்று ஆட்கள் சொன்னார்களாம். "அப்படியா ஸமாசாரம்? நாம் வேண்டுமானதைக் கேட்டு வாங்கிக் கொள்ள நவாபிடம் வந்தால், அவரும் தமக்கு வேண்டுமானதற்காக அல்லாவிடம் பிரார்த்திக்கத்தான் வேண்டியிருக்கா? அப்படியானால் நம்மைப் போலவே யாசகராகவுள்ள இந்த நவாபிடம் கை நீட்டாமல் நாமும் நேராக அந்த அல்லா விடமே வேண்டிக்கொள்ளலாமே!" என்று சொல்லிவிட்டு யாசகன் போய்விட்டானும்.

ஏறக்குறைய இந்த மாதிரிதான், 'ஏனைய தேவர்களும் தங்கள் கார்யம் நிர்விக்னமாக நடக்க வேண்டுமென்பதற் காக விக்நேச்வரரை நமஸ்காரம் பண்ணுகிறார்களென்னும் போது, நாம் ஒவ்வொரு கார்யத்துக்காக இவர்களில் ஒவ்வொரு தேவதையை வேண்டுவதைவிட இந்த எல்லாக் கார்யங்களுக்காகவும் விக்நேச்வரர் ஒருத்தரையே வழிபட்டு விடலாம்' என்பது.

பிள்ளையாரை விஷயமாக எடுத்துக்கொண்டு அவருடைய பெருமையிலேயே மனஸைச் செலுத்தி நாமும் பெருமைப் படும்போது இப்படிச் சொன்னாலும், பொதுவாக நம் மனப் பான்மை ஒவ்வொரு விதமான பலனுக்கு அதற்கென்றே விசேஷமாக ஏற்பட்டுள்ள தேவதையைப் பிரார்த்திப்ப தாகத்தான் இருக்கும். அதில் தப்பில்லை. அந்தப்படியே பண்ணலாம். அதோடு, இஷ்ட தேவதை என்று ஒவ்வொருத் தருக்கும் தனியான பிடிப்பு இருப்பதாக ஒன்று இருக்கும். குலதேவதை என்று வம்சாவளியாக ஒன்று இருக்கும். இந்த தேவதைகளை அவசியம் பூஜிக்கத்தான் வேண்டும். ஆனாலும் எந்த தேவதையின் பூஜையானாலும் முதலில் 'சுக்லாம் பரதரம்' குட்டிக் கொள்ளாமல் முடியாது! எந்த ஸ்வாமி யிடம் எதற்காகப் போய் நிற்கவேண்டுமானாலும், அதற்கு முன்னாடி, அந்த ஸ்வாமியும் தான் க்ருதக்ருத்யராவதற்காக

Koviloor Digital Library

எந்த ஒரு ஸ்வாமியிடம்போய் நிற்க வேண்டியிருக்கிறதோ, அந்தப் பிள்ளையாரிடம் நாம் போய் நின்று பிரார்த்தித்து நமஸ்காரம் பண்ணித் தானாக வேண்டும்.

கண்டனத்திலும் கண்ணியம்

மன்னார்குடிப் பெரியவாள் நம்முடைய அத்வைத வித்யையைத் தர்க்க சாஸ்த்ர பூர்வமாக நிலைநாட்டப் புஸ்தகம் எழுதினபோது, ஆரம்பத்திலேயே ஒரு தர்க்க விதியை—தத்ஹேது ந்யாயத்தை—பக்தி ச்லோகத்தில் அழகாக நுழைய விட்டிருக்கிறார். தர்க்கம் மாதிரியான அறிவாராய்ச்சிகளும் தெய்வபக்திக்கு அடங்கியே போக வேண்டுமென்று காட்டுவதுபோல இருக்கிறது.

இந்த பக்தி விசேஷத்தால்தான் அவர் மஹாபுத்திமானாக இருந்தும் கொஞ்சங்கூட அஹங்காரமோ, கர்வமோ இல்லாமலிருந்தார். இதைப்பற்றி முன்னேயே சொன்னதில் குறிப்பாக ஒன்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். அதாவது, ரொம்ப அறிவாளியாக இருந்து, ஏதோ ஒரு நூலுக்கு மறுப்பு நூலாக வாதப்ரதிவாதங்களை வீசி ஒருத்தர் எழுதுகிறாரென்றாலோ, அல்லது, வித்வத்ஸதஸில் மற்ற வித்வான்களோடு வாதம் நடத்துகிறாரென்றாலோ, அப்போது எதிராளிகளைத் தாக்குத்தாக்கு என்று தாக்குவதிலும் தங்களுடைய புத்தி வன்மையைக் காட்டுவதே இயற்கை. குத்தலாக—பரிஹாஸமாகவும், "பிச்சு வாங்குவது" என்றபடி நேராகவே கண்டித்தும் எழுதுவதில் அநேக வித்வான்களுக்கு ருசிஏற்பட்டுவிடுகிறது. இந்த அம்சத்தில் இந்தப் பெரியவர் மாதிரி எவராவது அத்தனை ஸாத்விகமாகக் கண்டனம் தெரிவிக்கமுடியுமா என்றே இருக்கிறது. வாத ப்ரதிவாதங்கள் எதற்கு என்று அவர் எங்கேயோ ஒதுங்கியிருக்கவில்லை. ஸத்யமான தத்வங்களை நன்றாக ப்ரகடனம் பண்ணத்தான் வேண்டும் என்று, வித்வத் ஸதஸ்களில் கலந்துகொண்டு மாற்று அபிப்ராயக்காரர்களைத் தோற்றுப்போகப் பண்ணியவர் அவர்,

Koviloor Digital Library

கண்டன க்ரந்தங்களும் எழுதினவர். 'ந்யாயேந்து சேகர'மே அப்படியொன்றுதான். அப்பைய தீக்ஷிதரைப் போலவே அத்வைதம், சிவ பக்தி ஆகிய இரண்டையும் நிலைநாட்டி அவர் வாதம் செய்யவும், புஸ்தகங்கள் எழுதவும் வேண்டியிருந்தது. 'ந்யாயேந்து சேகரம்' அத்வைத விஷயமானது. 'துர்ஜநோக்தி நிராஸம்' என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அது சிவஸம்பந்தமானது. அவர் காலத்திலிருந்த இன்னொரு பெரிய பண்டிதர்*—அவரும் 'மஹாமஹோபாத்யாய' பட்டம் வாங்கினவர்—ஸ்மார்த்தராகப் பிறந்தபோதிலும் அத்வைதம், ஸந்நியாஸம், சிவபக்தி ஆகிய எல்லாவற்றையும் கண்டிப்பவராக இருந்தார். அவர் சிவாராதனையை ஒரே தூஷணையாக தூஷித்து எழுதினார். அப்போது பலர் நம்முடைய 'பெரியவா'ளிடம் விஜ்ஞாபித்துக்கொண்டதன் பேரிலேயே அவர் 'துர்ஜநோக்தி நிராஸம்' எழுதி, சைவத்துக்கு விரோதமான அபிப்ராயங்களைத் தகர்த்தெறிந்தார். அப்படியிருந்தும், அந்த எதிர்க் கட்சிக்காரப் பண்டிதர் ரொம்பவும் கடுமையாக சிவாராதனத்தைத் தாக்கிப் பலபேர் மனஸைப் புண்படுத்தியிருந்துங்கூட, இவரோ புத்திரீதியில் பாயிண்டுக்கு மேல் பாயிண்டாகக் கொடுத்துக்கொண்டே போய்தான் எதிர் வாதத்தை வென்றாரே தவிர தூஷணையாக த்வேஷமாக ஒரு வார்த்தைகூட எழுதவில்லை! புத்திமானாக இருந்தவர் கனிந்த பக்திமானாகவும் இருந்ததன் விசேஷம்! கண்டனத்திலும் கண்ணியம் தப்பாதவர் என்று பெரிய கீர்த்தி பெற்றார்.

பிறையுடன் விளையாடிய பிள்ளையார்

'ந்யாயேந்து சேகர'த்திலுள்ள மங்கள ச்லோகம் சொன்னேன். சொல்கிறபோது இந்து சேகர ஸம்பந்தமுள்ளதாகவே பிள்ளையாரின் விளையாட்டை வர்ணிக்கும் இன்னொரு ச்லோகம் ஞாபகம் வந்தது.

* திருவிசைநல்லூர் ராமஸுப்பா சாஸ்திரிகள்

Koviloor Digital Library

தத்வம், தர்க்கம் பார்த்ததற்கு மாற்றாக அந்த விளையாட்டையும் சொல்கிறேன்.

'இந்து சேகரம்' என்றால் சந்திரன் இடம் பெற்றுள்ள சிரஸ் என்று அர்த்தம். பரமேச்வரன்தான் இப்படி இந்து சேகரனாக இருக்கிறானென்பது எல்லாருக்கும் தெரிந்தது. ஞானப்பாலுண்ட குழந்தை முதல் பாட்டிலேயே "தூவெண் மதி சூடி" என்று சொல்லியிருப்பது இதனால்தான். ஈச்வரன் ஜடாபாரத்திலே சூட்டிக் கொண்டிருக்கிற சந்திர கலையுடனேயே விக்நேச்வரக் குழந்தை பண்ணிய விளையாட்டைப் பற்றி ஒரு ச்லோகம் சொல்கிறேன். லோகத்துக்கெல்லாம் ஸந்தோஷம் கொடுக்கிற விளையாட்டு. ஸர்வ லோகத்துக்கும் தாய் தந்தையராக இருக்கப்பட்ட அம்பாளும் ஈச்வரனும் ப்ரியத்திலே ஒன்று கூடினால் அதைப் போல லோகத்துக்கு ஸந்தோஷம் எதுவுண்டு? அப்படிப் பட்ட ஸந்தோஷத்தை பாலக்ரீடையால் (குழந்தை விளையாட்டால்) கணபதி உண்டாக்கியதாக ச்லோகம்.

காவ்ய மரபிலே சில உண்டு. நாயகனும் நாயகியும்—தமிழில் தலைவன், தலைவி என்பவர்கள்—எப்போதும் ப்ரியமாயிருந்து ஆனந்தமாகக் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள் என்றால் காவ்யத்தில் ரஸம் போத மாட்டேனென்கிறது. அவர்கள் நடுவிலே கொஞ்சம் பிரிந்து போனார்கள், அப்புறம் சேர்ந்தார்கள் என்றால் ரஸம் ஏற்படுகிறது. பிரிவதில் இரண்டு விதம். எவனோ ஒரு ராவணன் (நாயகியைத்) தூக்கிக் கொண்டு போகிறான், அல்லது ஒரு மாதவியிடம் மயங்கி (நாயகன்) பிரிந்து போகிறான் என்பது ஒரு விதம். இது மனஸுக்கு ரொம்பக் கஷ்டம் தருவதாக இருப்பது. இது சோகரஸம். பிரிந்திருக்கிறோமே என்ற சோகத்தில் நாயகனோ, நாயகியோ, இரண்டு பேருமேயோ தாபப்படுவதற்கு 'விப்ரலம்பம்' என்று பெயர். இப்படி ஒரே சோகமாக இல்லாமல் விநோதமான ரஸக்கலவையாகப் பொய்க் கோப ரஸம், அதிலேயே கொஞ்சம் ஹாஸ்யரஸம், அங்கங்கே ஓரொரு இழை சோகரஸம், உள்ளுக்குள்ளே

Koviloor Digital Library

பார்த்தால் அதிலேயே ச்ருங்கார ரஸம் என்றிப்படி எல்லாம் சேர்ந்து நாயக - நாயகிகள் தங்களுக்குள்ளேயே சண்டைபோட்டுக்கொண்டு பிரிந்தாற்போலிருப்பதுமுண்டு. 'ப்ரணய கலஹம்' என்று இதைச் சொல்வார்கள். தமிழில் ஊடல் என்பார்கள்.

பொய்க் கோபத்தில் இப்படிப் பிரிந்து போன பிற்பாடு இரண்டு பேருக்கும் சேரணும் என்று தாபம் உண்டாகிவிடும். ஆனால் தங்களைக் குறைத்துக்கொண்டு, மானத்தை, கோபத்தை விட்டு ஸமாதானமாகப் போவதற்கும் மனஸ் இடம் கொடுக்காது. எப்படியாவது, ஏதாவது ஸந்தர்பம் ஏற்பட்டு ஒன்றுசேரும்படியாக ஆகாதா, ஆகாதா என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஸாமர்த்யசாலியான கவியாக இருந்தால் ரொம்பவும் அழகாக அப்படிப்பட்ட ஸந்தர்பத்தை ஜோடித்து இரண்டு பேரையும் ஒன்றுசேர்த்து விடுவார். இதிலே ரஸிக ஜனங்களுக்கும் மிகுந்த திருப்தி உண்டாகும்.

இம்மாதிரிதான் பரமேச்வரனுக்கும் அம்பாளுக்குமே ஊடல் ஏற்பட்டிருந்த ஒரு ஸமயத்தில் சந்திர மௌளியான பிதாவின் தலையிலுள்ள பிறைச் சந்திரனோடு பிள்ளையார் லீலை பண்ணப்போக லோகத்தின் மாதா பிதாக்கள் கோபத்தை மறந்து ஒன்றுசேரும்படி ஆயிற்று என்று ச்லோகம் இருக்கிறது.

அந்த ச்லோகம் எந்தப் புஸ்தகத்திலிருக்கிறது என்பதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லணும்.

சித்ர கவிதை

மைஸூர் ராஜ்யத்தில் சாமராஜநகரில் ராம சாஸ்த்ரி என்று கவி இருந்தார். அவர் ராவணனுக்கும் ஸீதைக்கும் நடந்த ஸம்பாஷணை ரூபத்தில் ஒரு சின்ன காவ்யம் செய்திருக்கிறார். "ஸீதா - ராவண ஸம்வாதம்" என்று அதற்குப் பேர். பேரில் 'ஸீதா' என்று முதலில் சொல்லியிருந்தாலும் அவள் ஸம்பாஷிப்பது ரொம்பக் குறைவு. ராவணன்தான்

Koviloor Digital Library

நிறையப் பேசுவது. அதோடு ராவணன்தான் ஒவ்வொரு விஷயமாக எடுத்துக்கொண்டு முதலில் பேசுவான். அப்புறந் தான் ஸீதை அவன் சொன்னதை அப்படியே நிராகரித்து ரத்னச் சுருக்கமாக பதில் கொடுப்பாள். ஒவ்வொரு ச்லோகத்திலும் இப்படி முதல் மூன்று வரி ராவணனின் பேச்சாக, கூற்ருக இருக்கும். நாலாம் வரி மட்டுமே ஸீதை சொன்னதாக இருக்கும். ஆனாலும் தெய்விகமான பாத்ரங் களுக்கே அக்ரஸ்தானம் (முதலிடம்) தரவேண்டும் என்ற முறைப்படி அவள் பெயரை முதலில் வைத்து "ஸீதாராவண ஸம்வாதம்" என்று புஸ்தகத்துக்குத் தலைப்புக் கொடுத்திருக் கிறது. "ஸீதா ராவண ஸம்வாத ஜரீ" என்று ஒரு "ஜரீ" சேர்த்துச் சொல்வார்கள். 'ஜரீ' என்ருல் அருவி. ச்லோகங் கள் அருவிபோல—சொற்பொழிவு என்று சொல்கிருர்களே, அதுபோல—பெருகி வருவதால் காவ்யத்துக்கு 'ஜரீ' என்று அடைமொழி.

ப்ரதி ச்லோகத்திலும் முதல் மூன்று வரியில் ராவணன், ஒன்று, தன்னைப் பற்றி 'ஓஹோ' என்று உசத்தி ப்ரகடனம் பண்ணிக்கொள்வான்; அல்லது ராமரை மட்டந்தட்டி ஏதாவது சொல்வான்.

நாலாம் வரியில் ஸீதை அதை அப்படியே நிராகரணம் செய்துவிடுவாள் என்றேனே, அவள் சொல்கிற அந்த வாக்யத்தில்தான் இந்தக் காவ்யத்தின் தனிச் சிறப்பே இருக்கிறது. கவியின் ஸாமர்த்யம் அந்த ஈற்றடியில்தான் இருக்கிறது.

ராவணன் ஒன்று சொல்ல, ஸீதைபாட்டுக்கு அதை ஆக்ஷேபித்து வேறே என்னவோ தன் வசனமாகச் சொல்ல மாட்டாள். கவி இதை அந்த மாதிரி பண்ணவில்லை. பின்னே அவள் என்ன பண்ணுவாள், சொல்லுவாள்? ராவணனைப் பார்த்து, "நீ சொன்ன வார்த்தைகளி லிருந்தே ஒரு குறிப்பிட்ட எழுத்தை எடுத்துவிடு; அல்லது அவற்ருேடு ஒரு குறிப்பிட்ட எழுத்தைச் சேர்த்துவிடு; இல்லாவிட்டால் ஒரு எழுத்துக்குப் பதில் இன்னொன்றைப்

Koviloor Digital Library

போட்டுக்கொள், இப்படிப் பண்ணிப் பார்த்தாயானுல் அதுதான் என் பதில்'' என்று சொல்லுவாள். இம்மாதிரிப் பண்ணிப் பார்த்தால் ராவணன் சொன்னதன் அர்த்தம் அப்படியே மாறிப்போய்விடும்! அவன் தன்னை உசத்திச் சொல்லிக்கொண்டது, ஸீதை ஏற்படுத்திய ஒரே எழுத்து வித்யாஸத்தினுல், அப்படியே மாறிப்போய், அவன் எவ்வளவு நீசன் என்று காட்டுவதாக ஆகிவிடும்; அதே போல ராமரை அவன் மட்டந்தட்டிச் சொன்னதும் மாறி அவருடைய உயர்வைச் சொல்லும் புகழ்மொழியாகி விடும்.*

உதாரணம் காட்டினுல்தான் புரியும்; "எனக்கு ரொம்ப புத்தி ஜாஸ்தி" என்று ஒருத்தன் சொல்கிறுன். இன்னொருத்தன், "ஜா-வுக்குப் பதில் 'நா' போட்டுக்கோ!" என்று கிண்டல் பண்ணுகிறுன். என்ன ஆகும்? "புத்தி நாஸ்தி" என்ருகிவிடுமல்லவா? ஒரு எழுத்துக்குப் பதில் இன்னொன்றைப் போடுவதில் அர்த்தம் அடியோடு மாறிவிடுவதற்கு இது எடுத்துக்காட்டு.

'ராம' என்ற பெயரில் வரும் ரா-ம என்ற இரண்டு எழுத்துக்கள்தான் முறையே அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷரங் களுக்கு ஜீவனுன அக்ஷரங்கள் என்று காட்டுவதற்கு ஒன்று சொல்வார்கள். "அந்த இரண்டு மந்த்ரங்களிலிருந்து ரா-ம என்ற எழுத்துக்களை எடுத்துவிட்டுப் பாருங்கள். அர்த்தத் தின் ஜீவனே போயிருக்கும்'' என்பார்கள். "ஓம் நமோ நாராயணுய"விலிருந்து 'ரா'வை எடுத்துவிட்டால், "ஓம் நமோ நாயணுய" தானே? 'நாயணுய' என்ருல் 'மார்க்க மில்லாதவனுக்கு' என்று அர்த்தம். ("நாயநாய" என்பது தான் சரியான வார்த்தையானுலும் தமாஷில் கொஞ்சம்

---

* ஒரு ச்லோகத்திலுள்ள ராவண வசனத்திலிருந்து 'த' என்ற எழுத்தை அது வருகிற இடங்களிலெல்லாம் எடுத்துவிட்டால் பொருள் முற்றிலும் மாறிவிடுவதற்கு உதாஹரணம், "தெய்வத்தின் குரல்" மூன்றும் பகுதியில் "கவி சாதுர்யம்" என்ற உரையில் "ஓர் எழுத்தை எடுப்பதில் அர்த்த விநோதம்" என்ற பிரிவில் விரிவாக காண்க.

Koviloor Digital Library

வித்யாஸமாக—'நா'வுக்குப் பதில் 'ண'—வரலாம்.) அஷ்டாக்ஷரத்தில், 'நாராயணனுக்கு நமஸ்காரம்' என்றிருப்பதே விபரீதமாக மாறி, 'வழி தெரியாதவனுக்கு நமஸ்காரம்' என்றாகிவிடும்! பஞ்சாக்ஷரத்தில் 'ம'வை எடுத்துவிட்டால் ('நம: சிவாய' என்பது) 'நசிவாய' என்றாகிவிடும். 'சிவனுக்கு இல்லை' என்ற விபரீத அர்த்தம் ஏற்பட்டுவிடும்! இவை ஒரு எழுத்தை எடுப்பதால் அர்த்தம் மாறுவதற்கு த்ருஷ்டாந்தம்.

ரங்கஸ்வாமி என்று ஒருத்தன். 'ரங்கு' என்று கூப்பிடுவது. "உன் பேருக்கு முன்னாடி ஒரு 'கு' சேர்த்துக்கோ" என்றால்? [சிரிக்கிறார்.] ஒரு எழுத்தைச் சேர்ப்பதால் அர்த்த விபரீதம்!

ஒரு எழுத்தை எடுத்துவிடுவது, omit பண்ணுவது, ச்யாவிதாக்ஷரம் எனப்படும். ஒரு எழுத்தைச் சேர்ப்பது, add பண்ணுவது அதி-தத்தாக்ஷரம். ஒரு எழுத்துக்குப் பதில் இன்னொன்று என்று substitute செய்வது ப்ரதி-தத்தாக்ஷரம் எனப்படும்.

இப்படி ரத்னச் சுருக்கமாக ஒரு மாறுதலைச் சொல்லியே ஸீதை, ராவணனைத் தானே தன் முகத்தில் கரி தீற்றிக்கொள்ளச் செய்வதாக "ஸீதா ராவண ஸம்வாத"த்தில் ஒவ்வொரு ச்லோகமும் இருக்கிறது. நான் காட்டிய உதாஹரணங்களில் ஒரே ஒரு வார்த்தையில் தான் மாறுதல் பண்ணினேன். ஆனால் அந்தப் புஸ்தகத்திலோ ஒவ்வொரு ச்லோகத்திலும் ஒரு எழுத்து எத்தனை தடவை வந்தாலும் அத்தனையிலும் அதை மாற்றி வார்த்தை ஜாலம் செய்திருக்கிறது. கஷ்டமான கார்யம். பாஷையில் விசேஷ command இருந்தால்தான் அப்படிச் செய்ய முடியும். இப்படி அவர் 50 ச்லோகம் செய்திருக்கிறார்.

நூறு பண்ணவேண்டும் என்று ஆரம்பித்தார்; ச்ரமப்பட்டு 50 பண்ணி, அதற்குமேல் முடியவில்லை என்று விட்டுவிட்டார்; அப்புறம் அவருடைய சிஷ்யர் மேலும் 50 பண்ணி சதகமாகப் பூர்த்தி செய்தார்—என்று சொல்கிறார்கள்.

Koviloor Digital Library

எழுத்துக்களில் விளையாட்டுப் பண்ணி எழுதும் இப்படிப் பட்ட ச்லோகங்களை 'வர்ண சித்ரக்ருதி' என்பார்கள். புத்திக்கு நிறைய வேலை வைத்து விநோதமாக, சிக்கலாக, புதிராகப் பண்ணும் கவிதைகளுக்கு 'சித்ர கவி' என்று பெயர். சித்ரகவியிலேயே இரண்டு main division. வார்த்தை ஜாலமில்லாமல் அர்த்த ஜாலம் செய்து, ஆழ்ந்து யோசித்தாலே பொருள் புரியும்படி கவிதை செய்தால் அதற்கு 'அர்த்த சித்ரம்' என்று பெயர். இப்படியில்லாமல் சப்த ஜாலம் நிறைய இருக்கும்படி—பொருளணியாயின்றிச் சொல்லணியாகச்—செய்தால் அதற்கு 'சப்த சித்ரம்' என்று பெயர். பொருளணியில் ஸப் - டிவிஷன்தான் எழுத்தை மாற்றி விசித்ரம் செய்யும் 'வர்ண சித்ரம்'.

"மங்கள" ச்லோகம்

இந்தப் புஸ்தகத்தில்—"ஸீதா ராவண ஸம்வாத"த்தில் —கவி கணேச ஸ்துதி ஆரம்பத்தில் கூறியிருக்கிறார். அதில் தான் சந்த்ரமௌலி ஸம்பந்தமாக ஒரு கணேச லீலை வருகிறது. அது ப்ரணய கலஹத்தில் ஊடியிருந்த பார்வதீ பரமேச்வரரை ஒன்றுசேர்த்து வைத்து, நம் மனஸில் பரம மங்களமான ஒரு உணர்ச்சியை உண்டாக்குகிறது. 'மங்கள ச்லோகம்' என்பது நிஜமாகவே ரொம்பவும் மங்களமாயிருக்கிறது. ஆனால் இந்த ச்லோகம் சித்ரகவியாக இல்லை. ஸ்வாபாவிகமான (இயற்கையான) கவிதா ரஸத்தோடு அமைந்திருக்கிறது.

க்ரீடாருஷ்டாத்ரிஜாங்க்ரி ப்ரணத - சிவ - சிரச் -
சந்த்ரகண்டே கராக்ரம்
லீலாலோலம் ப்ரஸார்ய ஸ்புரதமலபிஸாசங்கயா
(ஆ)க்ரஷ்டுகாம :|
உத்யத் ஹ்ருத்ய ஸ்மிதாப்யாம் அஹமஹமிகயா
(ஆ)லிங்க்யமாந : சிவாப்யாம்
கச்சிந் - நச்சிந்திதார்த்தம் கலயது களபோ பால
லீலாபிராம :||

Koviloor Digital Library

குட்டியானையான கணபதி குழந்தை விளையாட்டில் களிக்கிறது: "களபோ பாலலீலா அபிராம:"

அந்த ஆனந்தக் குழந்தை நாம் விரும்பி நினைக்கிற பொருளையெல்லாம் நமக்கு அருளட்டும்: "ந: சிந்தித அர்த்தம் கலயது."

இது கடைசி வரி,

முதல் மூன்று வரிகளில் அது பண்ணும் விளையாட்டு· போக்கிரித்தனம் என்று சொல்வதா, நிஷ்கபடமாக விளையாடுகிறது என்று சொல்வதா, என்று புரியாத விளையாட்டு. எப்படியானாலும் ரஸித்து மகிழும்படியாக இருக்கிறது.

ஊடல் - கூடலின் தத்வார்த்தம்

'அத்ரி - ஜா' என்னும் 'மலைமகள்' இருக்கிறாளே, ஸாக்ஷாத் பார்வதி, அவளுக்கு பர்த்தாவிடத்தில் பொய்க் கோபம். 'க்ரீடா ருஷ்டா' என்று விளையாட்டுக் கோபக்காரியைச் சொல்லியிருக்கிறார் (கவி). இப்படி நாயகி ஊடல் செய்யும்போது நாயகன் அவள் காலிலேயே போய்விழுவதாகச் சொல்வது கவி மரபு. 'கீத கோவிந்த'த்தைப் பார்த்தால் க்ருஷ்ணன் ராதையின் காலில்போய் விழுந்தான் என்று இருக்கும். அருணகிரிநாதரில் (அவரது திருப்புகழில்) பார்த்தால் வள்ளிக்குறத்தியின் காலிலே போய் சிவசக்தி குமாரராக இருக்கப்பட்ட ஸுப்ரஹ்மண்யர் விழுந்தாரென்று இருக்கும்.

என்ன அர்த்தம்? ஜீவாத்மாதான் நாயகி. நாயகன், பரமாத்மா. ஜீவாத்மா எத்தனை பிணங்கிக்கொண்டு போனாலும் பரமாத்மா அதன் காலில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடியாவது தன்னுடன் சேரும்படிப் பண்ணும் என்பதே அர்த்தம். இரண்டு பேரையும் எப்பாடு பட்டாவது சேர்த்து வைக்கும் ஸகி என்று ஒருத்தி வருவாள். அவர்களிடையே தூது போவாள். ஜீவாத்ம - பரமாத்மாக்களைச் சேர்த்து வைக்கும் ஆசார்யர்தான் அந்த ஸகி. வெளியிலே பார்த்

Koviloor Digital Library

தால் ஏதோ காதல், விரஹம் என்று இருந்தாலும் உள்ளே இப்படிப் பாரமார்த்திகமாக இருக்கும்.

நம்முடைய ச்லோகத்தில் ஸகி செய்வதை ஒரு புது மாதிரியாக விளையாடிவிடுகிறார் இருவருக்கும் குழந்தையான விக்நேச்வரர்.

விளையாட்டில் மறைந்த விரோதம்

பார்வதி 'கடுகடு' என்று உட்கார்ந்திருக்கும்போது பரமசிவன் போய் அவள் காலில் விழுகிறார். "ப்ரணத சிவ"—ப்ரணாமம், நமஸ்காரம் பண்ணுகிறாராம் சிவபெருமான்!

ஜடாபாரத்தை அம்பாள் பாதத்தில் தடாலென்று அவர் சாய்க்கிறபோது அதிலுள்ள பிறைச் சந்திரன் 'குபுக்' கென்று நன்றாக வெளிப்பட்டு ப்ரகாசிக்கிறது.

இங்கிருந்துதான் சந்த்ரமௌளி ஸமாசாரம் ஆரம்பிக் கிறது.

ஈச்வரன் அம்பாள் பாதத்தில் நமஸ்கரிக்கும் கோலத் தில் சந்த்ர கண்டம் (பிறைச் சந்திரன்) நன்றாகத் தெரிகிறது.

யானைக்குட்டி என்ன பண்ணுமென்றால் குளத்திலே, ஓடையிலே புகுந்து அமர்க்களம் செய்யும்போது அதிலிருக் கும் தாமரைத் தண்டுகளை முறித்து, உள்ளேயிருக்கும் நூலை ஆசையோடு தின்னும். வாழைத் தண்டைவிடக்கூட இன்னம் நூல்மயமாக இருப்பது தாமரைத் தண்டு. யானை அந்தத் தண்டை முறித்து முறுக்குகிறபோது உள்ளேயிருக்கும் அத்தனை நூலிழையும் கத்தையாக ஒன்று சேர்ந்து முறுக்கிக் கொண்டு வெள்ளை வெளேரென்று வரும். அதை யானைக் குட்டி ஆசை ஆசையாகத் தின்னும்.

இப்போது வெள்ளை வெளேரென்று ரேகா ப்ரமாண மாகத் தெரிகிற சந்திரனைப் பார்த்ததும் பாலகணேச யானை இது அந்த மாதிரியான தாமரை நூல் கத்தைதான் என்று

Koviloor Digital Library

நினைத்துக்கொண்டது. 'இதென்ன, தாமரை நூல் கத்தையா?' என்று அதற்குக் கேள்வி வந்துவிட்டது. "ஸ்புரத் - அமல - பிஸ - ஆசங்கயா": ப்ரகாசிக்கின்ற - நிர்மலமான - தாமரைத்தண்டு (பிஸம் என்றால் தாமரை நூல்; தண்டு என்றும் சொல்லலாம்)—என்ற ஸந்தேஹத்தினால் ('ஆசங்கா' என்றால் கேள்வி, இது இப்படியிருக்குமோ என்னும் ஸந்தேஹம். ஸந்தேஹம் என்பதைவிட guess, ஊஹம் என்று சொல்லி விடலாம்.)

சந்த்ர கண்டத்தைப் பார்த்ததும் இது தாமரை நூல் கத்தை என்று பிள்ளையார் guess பண்ணினார்.

உடனே அதைப் பிடித்திழுக்க வேண்டுமென்று ஆசை ஏற்பட்டுவிட்டது: "ஆக்ரஷ்டுகாம:"

எதற்காக? தின்பதற்காகத்தான்.

நிஜமாகத்தான் இப்படி ஸந்தேஹம் வந்ததோ? விளையாட்டுக் குறும்பில், அப்பா அம்மாவைச் சேர்த்து வைக்கவேண்டுமென்றே அப்படி நடித்தாரோ? "பால லீலாபிராம:"—குழந்தை விளையாட்டில் குஷிப்படுகிறவர் என்று பின்னாடி (கவி) முடித்திருக்கிறாரே? இங்கேயும் ஒரு 'லீலா லோலம்' வேறு போட்டிருக்கிறார்!

பஜனைகளில் 'லீலா லோலா', 'ராஸலீலா லோலா' என்றெல்லாம் கேட்டிருப்பீர்கள். ஒன்றுக்கு ஆசைப்பட்டுக் கொண்டு ஆடுவதுதான் 'லோலம்'. விளையாட்டு ப்ரியனாக விஹாரம் செய்பவன் லீலா லோலன்.

இங்கே நம் ச்லோகத்தில் 'லீலாலோலம்' என்று சொல்லியிருப்பது முழுப் பிள்ளையாரையும் இல்லை. முழுப் பிள்ளையாரையும் இல்லை என்றால் என்ன அர்த்தமென்றால், இங்கே குறிப்பாக அவருடைய தும்பிக்கை நுனிதான் விளையாட்டில் ப்ரியத்தோடு அசைந்தாடிக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. பின்னால் அவரையே, அதாவது முழுப் பிள்ளையாரையும் லீலாபிராமன் என்றவர் இங்கேயும் 'லீலாலோலன்' என்று சொன்னால் புனருக்தி தோஷம்

Koviloor Digital Library

(கூறியது கூறல் என்ற குற்றம்) ஏற்பட்டுவிடும். அதனால் இங்கே அவருடைய ஒரு அங்கமாக மட்டுமுள்ள தும்பிக்கை நுனிக்கும் தனியாக ஒரு விளையாட்டு ஆசை இருப்பதாக, 'கராக்ரம் லீலாலோலம்' என்கிறார். 'கர அக்ரம்': யானையின் கையாகிய துதிக்கையின் நுனி. தும்பிக்கையை ஆட்டி ஆட்டிக்கொண்டு அதன் நுனியால் எதை உறிஞ்சலாம், எதைத் துழாவலாம், முறுக்கலாம், உடைக்கலாமென்று அவர் போவதைப் பார்த்தால், அந்தத் தும்பிக்கைக்கே தனியாக ஒரு உயிர் இருந்து, அதுதான் விளையாட்டில் ஆடி அசைகிறது என்று நினைக்கும்படி இருக்கிறது!

வெள்ளை வெளேரென்று சந்திரன் தாமரை'நூல் கத்தை மாதிரி இருக்கிறது. இரண்டும் குளிச்சியாக இருப்பவை. நிலாக் கிரணங்கள் தனித்தனித் தாமரை நூலிழைகள் மாதிரி இருக்கின்றன.

பராசக்தி குண்டலிநீயாக ஸூக்ஷ்ம ரூபத்தில் ஒரு தாமரை நூலிழைப் பரிமாணத்தில்தான் இருக்கிறாள். 'பிஸதந்து தநீயஸீ' என்று (லலிதா) ஸஹஸ்ரநாமத்தில் இருக்கிறது.

தாமரை நூல் கத்தை, அல்லது தண்டு போல இருக்கும் சந்திரப் பிறையைக் கண்டதும் அதை இழுக்கப் பிள்ளையார் ஆசைப்பட்டாரல்லவா? உடனே விளையாட்டு விநோதமாக ஆடிக்கொண்டிருக்கும் துதிக்கை நுனியை நீட்டி... "ப்ரஸார்ய" என்றால் நீட்டி...எட்டியிருப்பதை இருந்த இடத்திலிருந்தே தொட்டிழுத்துக்கொள்ள வாகாக நீட்டுமாறு பிள்ளையாருக்குத் தும்பிக்கை இருப்பதால் அதை நீட்டி, அம்மா பாதத்தில் விழுந்துள்ள அப்பாவின் சிரஸிலுள்ள சந்திர கலையை இழுக்க முயற்சி பண்ணினார்.

யானைக்குட்டி, ப்ரிய புத்ரன், குறும்பாக விளையாடிக் கொண்டு தன் தலையில் இருக்கும் சந்திரனைத் தும்பிக்கையால் பிடித்திழுக்கிறது என்றால் அந்தப் பரமேச்வரத்

Koviloor Digital Library

தகப்பனுருக்கு எத்தனை ஸந்தோஷமாக இருக்கும்? கல்பனையாக நினைத்துப் பார்த்தாலும் நமக்கே அந்தக் காட்சியில் ஆனந்தம் பொங்கிக் கொண்டு வரும்போது, நேராக தாமே அந்த விளையாட்டுக்கு ஆளானவருக்கு, அதுவும் ஸொந்தப் பிதாவாகவும் இருப்பவருக்கு அப்படியே பூரித்துக்கொண்டு தானே ஸந்தோஷம் ஏற்பட்டிருக்கும்? சந்த்ரமௌளீச்வரன் என்று தனக்குப் பெரிய பெயர் கொடுத்துள்ள அந்த சிரோபூஷணத்தைப் பிள்ளை அபஹரிக்கப் பார்ப்பதே மகுடாபிஷேகம் செய்விக்கிற மாதிரி அவருக்குப் பேரானந்தத்தைக் கொடுத்துவிட்டது!

இவருக்கே இப்படியென்றால் அம்மாவுக்கு எப்படியிருந்திருக்கும்? குழந்தையின் விளையாட்டில் அப்பாவைவிட அவள்தான் அதிக ஸந்தோஷம் அடைவாள். அதுவும் இப்போது அப்பாக்காரர் இவள் காலிலே தழைந்து விழுந்து கிடக்கிறார். இவளானால் 'உர்உர்' என்றிருக்கிறாள். இந்த ஸமயத்தில் அவருக்கு மிக அழகான சிரோபூஷணமாக இருந்துகொண்டு சந்த்ரமௌளி, இந்து சேகரர் என்றெல்லாம் அவருக்கு லோக ப்ரக்யாதியை உண்டாக்கும் பிறையைக் குழந்தை, ப்ரிய வத்ஸன், இழுத்தால், "வேணும், வேணும், இவருக்கு நன்னா வேணும்! பிள்ளை கையிலே சந்திரனைக் கொள்ளை கொடுத்துட்டு நிற்கட்டும்!" என்று தானே தாங்கமுடியாத ஆனந்தம் ஏற்படும்?

பிள்ளை சேஷ்டையின் ஸந்தோஷத்தில் இரண்டு பேருக்குமே தங்கள் சண்டை ஸமாசாரம் மறந்துபோய் விட்டது! தான் உர்ரென்று மூஞ்சியைத் தூக்கிவைத்துக் கொண்டு சண்டைக்கு முஸ்தீபாக இருக்கவேண்டும் என்பது அம்பாளுக்கும், தான் அவளுடைய காலைப் பிடித்துக் கொண்டு மன்றாடியாவது மறுபடிப்ரேமையை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்பது ஸ்வாமிக்கும் மறந்தே போய் விட்டது. குழந்தை விளையாட்டில் தங்கள் விரோதத்தை மறந்து சிரித்து விடுகிறார்கள். இருவரும் ஸந்தோஷப்பட்டுக் கொண்டு, ஹ்ருதயம் ரொம்பி சிரித்துக்கொண்டு..."ஹ்ருத்ய

Koviloor Digital Library

ஸ்மிதாப்யாம்'' என்பது ஹ்ருதய பூர்வமாக சிரிக்கிற பார்வதீ பரமேச்வரர்களைக் குறிப்பிடுவது...வாய் சிரிப்பது மட்டுமில்லை; இவள் போலியாய்க் கோபித்துக் கொண் டிருப்பது, அவர் போலியாய் இவளுக்கு அடிமை மாதிரி நமஸ்காரம் பண்ணுவது— போலில்லாமல், போலிச் சிரிப்பாய், பொய்ச் சிரிப்பாய் இல்லாமல் வாய்ச் சிரிப்பாய் மட்டுமில்லாமல், ஹ்ருதயமே மலர்ந்து, அந்த மலர்ச்சியில் வாயாலும் சிரிப்பவர்களாக அவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

தங்களுடைய ஊடல் மறந்து போய், இரண்டு பேருக்குமே குழந்தையை அப்படியே கட்டி அணைத்துக் கொள்ளவேண்டுமென்று ஆர்வம் பொத்துக்கொண்டு வருகிறது. "நான், நான்" என்று போட்டிபோட்டுக்கொண்டு இரண்டு பேரும் பால கணேசனை இறுக ஆலிங்கனம் செய்து கொள்கிறார்கள். "ஹ்ருத்ய ஸ்மிதாப்யாம் அஹமஹமிகயா ஆலிங்க்யமான: சிவாப்யாம்''—ஹ்ருதயம் ரொம்பிச் சிரித்துக்கொண்டு 'நான்தான் நான்தான்' என்று முண்டி யடித்துக்கொண்டு..."அஹம் அஹமிகா" என்றால் நான் நானென்று ஒருத்தரோடொருத்தர் போட்டு போடுவது, அப்படிக் 'குழந்தையை நான்தான் முதல்லே கட்டி யணைச்சுப்பேன்' என்று பார்வதீ பரமேச்வராள் போட்டி போட்டுக்கொண்டு ஆலிங்கனம் பண்ணிக் கொள்கிறார்கள்.

"சிவாப்யாம்'': அவர் சிவன். அவள் சிவா. அம்பாளுக்கு சிவா என்று பெயர். ஸர்வமங்களா என்று அர்த்தம். 'சிவாப்யாம்' என்றால், 'சிவன் சிவா ஆகிய இருவராலும்.' இருவராலும் விக்நேச்வரர் ஆலிங்கனம் செய்து கொள்ளப் படுகிறார்: "ஆலிங்க்யமான: சிவாப்யாம்". குழந்தையை அணைத்துக் கொள்வதில் பெற்றோர் அடையும் ஆனந்தத் தைக் குறளில் கூடச் சொல்லியிருக்கிறது —மெய்தீண்டல் என்று சொல்லியிருக்கிறது.* 'சாகுந்தல'த்தில் துஷ்யந்தன் சகுந்தலையைத் திரஸ்காரம் பண்ணிப் பல வருஷங்களுக்கு

---

* "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்''—குறள் 65

Koviloor Digital Library

அப்புறம் கச்யபரின் ஆச்ரமத்தில் தன்பிள்ளை பரதனைத் தன் பிள்ளையென்று தெரிந்து கொள்ளாமலே பார்க்கிறான். பார்த்த பாத்திரத்தில் அவனைக் கட்டியணைத்துக் கொள்ளணும்போல அவனுக்கு ஒரு தாபம் உண்டாகிறது. இந்த இடத்தில் காளிதாஸனும் துஷ்யந்தன் வாயிலாகக் குழந்தையை மடியோடு அணைத்து வைத்துக்கொண்டு கொஞ்சுவதன் ஆனந்தத்தைச் சொல்லியிருக்கிறார். அப்புறம் அவன் வாஸ்தவமாகவே குழந்தையை மெய்தீண்டியதும் புல்லரித்துப்போகிறான் என்று கதை போகிறது. இதே போல பவபூதியும் "உத்தர ராம சரித"த்தில் லவ குசர்களை ராமர் இன்னாரென்றே தெரிந்து கொள்ளாமல் ஆலிங்கனம் செய்து கொண்டபோது எப்பேர்ப்பட்ட ஆனந்தமடைந்தாரென்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் அன்பே உருவான ஸாக்ஷாத் விக்நேச்வர மூர்த்தியைக் குழந்தையென்று பார்வதி பரமேச்வரர்கள் கட்டியணைத்தது எத்தனை பேரானந்தமாயிருந்திருக்கும்?

போட்டி போட்டுக்கொண்டு இரண்டு பேரும் குழந்தையை ஆலிங்கனம் பண்ணிக்கொள்கிறார்கள். குழந்தையையா பண்ணிக்கொள்கிறார்கள்? அவர்களே பண்ணிக்கொண்டு விடுகிறார்கள்! குழந்தை நடுவிலே இருக்கிறது. அதை இரண்டு பக்கமும் இரண்டு பேருமாக ஏக காலத்தில் அணைத்துக்கொள்கிறார்களென்றால், அந்த அவஸரத்தில் தங்களை அறியாமல் தாங்களே பரஸ்பரம் ஒருத்தர் முதுகில் இன்னொருத்தர் கைபோட்டுக்கொண்டு தானே விடுவார்கள்?

இந்த மாதிரி, உத்தேசித்தோ உத்தேசிக்காமலோ, ஸ்வாமியுடைய திவ்ய ஸ்பரிசம் அம்பாளுக்கும், அம்பாளுடைய திவ்ய ஸ்பரிசம் ஸ்வாமிக்கும் ஒரு க்ஷணம் கிடைத்துவிட்டால்கூட, அப்புறம் அவர்களுக்குள் மனஸ்தாபம், ஒருத்தர் ஊர் ஊரென்று உட்கார்ந்திருப்பது, இன்னொருத்தர் தவித்துக்கொண்டு காலில் விழுவது

Koviloor Digital Library

ஆகியவை நீடிக்கமுடியுமா? ஊடல் ஒட்டம் பிடித்து அவர்கள் இரண்டு பேரும் - ஸர்வலோகங்களுக்கும் தாய் தந்தையராக இருக்கப்பட்ட இரண்டு பேரும் - பரம ப்ரேமையில் ஒன்றுசேர்ந்துவிட வேண்டியதுதானே?

அந்தத் தாய் தந்தையருக்கு நாம் எல்லோருமே குழந்தைகளென்றாலும் பிள்ளையார்தான் முதல் பிள்ளை, தலைச்சன், தலைப்பிள்ளை. இரண்டு பேரும் உள்ளம் குளிர்ந்து ஒன்று சேர்ந்து உலகம் முழுதற்கும் ஆசீர்வாதம் செய்யும் படியாக அந்தப் பிள்ளையார் அவர்களைச் சண்டை தீர்த்து வைத்து ஸமாதானமாகப் போகும்படிப் பண்ணிவிடுகிறார். பால லீலா சேஷ்டிதமாகத் தகப்பனாரின் சிரஸிலுள்ள சந்த்ர கலையைப் பிடித்திழுத்து, நம் எல்லோருக்கும் லோக மாதா பிதாக்கள் அருள் கூரும்படியாக அவர்களை ஒன்று சேர்த்து விடுகிறார்.

பார்வதீ பரமேச்வராள் இவரை அணைத்துக் கொள்ளப் போனதில் தாங்களே பரஸ்பரம் ஸ்பர்சித்துக்கொண்டு ஊடல் தீர்ந்ததை ச்லோகத்தில் உடைத்துச் சொல்லவில்லை. ஹ்ருதயமாரச் சிரித்துக்கொண்டு, போட்டிபோட்டுக் கொண்டு சிவ-பார்வதியரான இருவராலும் விநாயகர் ஆலிங்கனம் செய்து கொள்ளப்படுகிறாரென்று சொல்லி அப்படியே விட்டிருக்கிறது. ஆனால் "க்ரீடாருஷ்டா" என்று அம்பாளின் பொய்க் கோபத்தில் ஆரம்பித்து, சந்த்ர கண்ட சிரஸுக்காரர் அவள் காலில் விழுந்ததைச சொன்னதால், அந்தக் கதையைப் பூர்த்தி பண்ணமல் விட்டால் கவிக்கு தோஷம் ஏற்படும். விஷயமறிந்த கவி அப்படி விடவே மாட்டார். ரஸிகர்கள் பூர்த்தி செய்து கொள்ளும்படி ஸூசனை காட்டி, 'குறிப்பாலுணர்த்தி', விஷயத்தைவிடும் நயமான யுக்தியை இங்கே கையாண்டு ஊடியவர்கள் கூடியதாகக் கதையை முடித்து வைக்கிறார்.

பரம மங்களமாக இப்படிப் பெற்றோரைச் சேர்த்து வைத்த விநாயக மூர்த்தி நாம் விரும்பிய எந்தப் புருஷார்த்த

Koviloor Digital Library

மானுலும் அதை நமக்குச் சேர்த்து வைக்கட்டும்: ந: சிந்தி தார்த்தம் கலயது என்று கவி மங்களாசாஸனம் பண்ணு கிறூர்.

"அந்த" ச்லோகத்திற்கு "இந்த" ச்லோகத்தின் அத்தாட்சி

அம்பாள் தம்மோடு சேரவேண்டும் என்று ஸ்வாமி விரும்பினூர். அவளுக்கு நமஸ்காரம் பண்ணினூர். நமஸ்காரம் அவளுக்கு; ஆனுல் அவர் விருப்பத்தை நிறைவேற்றியதோ விக்நேச்வரர்! நான் "ந்யாயேந்து சேகர" ச்லோகம் சொல்லி, 'இந்து சேகர' ஸம்பந்தத்துக்காகவே "ஸீதா ராவண ஸம்வாத" ச்லோகம் சொல்லப் போக, இதிலேயும் அதில் பார்த்த விஷயத்துக்கு அத்தாட்சி வந்து விடுகிறது! இப்படித்தான் பல நல்ல, ரஸமான ஸமாசாரங்களை எடுத்துப்போட்டுக்கொண்டு கொஞ்சம் அலசினுல் எதிர்பார்க்காத புதையல்கள் அகப்படுகின்றன! இப்போது அகப்படும் புதையல், அந்த ச்லோகத்தின் தீர்மானத்திற்கு இந்த ச்லோகத்தில் கிடைக்கும் அத்தாட்சி அல்லது கன்ஃபர்மேஷன். எந்த தேவதையை நாம் ஆராதித்தாலும், அந்த தேவதையும் தன்னுடைய அநுக்ரஹ கார்யத்துக்கு இடையூறு ஏற்படாமலிருப்பதற்காக விக்நேச்வரரிடம்தான் போய்ப் பிரார்த்தித்துக்கொண்டு நிற்குமாதலால், நாம் நேராக அவரொருவரையே எந்த அபீஷ்டம் நிறைவேறு வதற்கும் ஆராதித்துவிட்டால் போதும் என்று அந்த ச்லோகத்தில் பார்த்தோம். இப்போது இங்கே, இந்த ச்லோகத்தில், கவி அந்த உத்தேசத்தில் இதை இயற்றாத போதிலும், என்ன பார்க்கிறோமென்றால்—அம்பாளோடு ஒற்றுமையாய்ப் போகவேண்டுமென்று ஈச்வரன் அவளை ஆராதிக்கிறூர். காலிலே விழுவதைவிட என்ன ஆராதனை வேண்டும்? இப்படி அவர் ஆராதனை பண்ணியும் அவள் ஒன்றும் பண்ணவில்லை. கோபமாகவே இருக்கிறுள். அவளுக்கும் உள்ளூர ஒற்றுமையாக வேண்டுமென்றுதான் ஆசை. ஆனுலும் பிகுவை விட்டுக் கொடுப்பதா என்று

Koviloor Digital Library

ஒன்றும் புரியாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிருள். கடைசியில் விக்நேச்வரர் அவர்களை விளையாட்டாக ஒன்று சேர்த்து விடுகிருர். அதாவது இவருக்கு ஆராதனை பண்ணுமல் அம்பாளைத்தான் ஈச்வரன் ஆராதித்தபோதும்கூட அவள் அந்த ஆராதனு பலனைத் தராமல் இவர்தான் தந்திருக்கிருர்! அதே மாதிரி, ஈச்வரனை ஆராதனை பண்ணுமல் அதற்கு நேர்மாருக அவள் கோபமாயிருந்தாலும் அவளுக்கு உள்ளூர ஆசை எப்படியாவது அவர் தன்னைச் சேர்த்துக்கொண்டு விடவேண்டுமென்பதுதான். ஈச்வரனிடம் சேரணும், ஈச்வரன் நம்மைச் சேர்த்துக் கொள்ளணும் என்று ஆசைப் படுவது ஆராதனையில்லாமல் வேறே என்ன? வெளியில் கோபம், அவமரியாதை என்று அவள் காட்டினுலும் உள்ளே ப்ரியம், ஆராதனைதான் நிறைந்திருக்கிறது. அப்போது ஈச்வரனும் தாமாக அவளுடைய ஆராதனு பலனைக் கொடுத்துச் சேர்த்துக் கொள்ளவில்லை. விக்நேச்வரர்தான் அவர்களைச் சேர்த்து வைத்து அவர்களுடைய மனுேபீஷ்டம் நிறைவேறுமாறு செய்து ஆராதனு பலனைக் கொடுத்திருக் கிருர். இதனுல் இவரே எந்தப் பலனும் தர வல்லவர், இவரொருத்தரை நாம் ஆராதித்தாலே போதும் என்று கன்ஃபர்ம் ஆகிவிடுகிறதல்லவா?

மநுஷ்யர்களான நாம் தேவர்களிடம் பெறக்கூடிய அபீஷ்ட பூர்த்திகளுக்காக விக்நேச்வரரைப் பிடித்துவிட்டால் போதும் என்று அந்த ச்லோகம் காட்டிட்டென்ருல், இந்த ச்லோகமோ இன்னம் மேலேபோய், தேவர்களுக்குள் உச்சியில் இருக்கப்பட்ட பரமேச்வர தம்பதியுமே தங்களுக் குள்ளே ஒரு விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதுகூட இவருடைய ஸஹாயத்தால் முடிகிறது என்று காட்டுகிறது. குழந்தை விளையாட்டாக அவர் அந்தப் பெரிய கார்யத்தைப் பண்ணிவிடுகிருர்! ஸஹாயம் பண்ணவேண்டும் என்று தாம் உத்தேசித்ததாகக்கூடக் காட்டிக்கொள்ளாமல், 'இவர் என்னமோ விளையாடினுர்! அப்பா அம்மா ஒன்று சேர்ந்து விட்டார்கள்' என்று நினைக்கும் விதத்தில் பண்ணிவிடுகிருர்!

Koviloor Digital Library

இவர் நாம் மனஸில் நினைக்கும் எல்லா அபீஷ்டங்களையும், ஸகல புருஷார்த்தங்களையும் ("சிந்திதார்த்தம்" என்பது இவற்றைத்தான்) நிச்சயமாக நிறைவேற்றித் தரும் அநுக்ரஹ மூர்த்தியாகத்தானே இருப்பார்? இப்படி அவர் அருளட்டும் என்று கவி முடிக்கிறார்.

"ஸர்வார்த்தங்களையும் தருவதில் பிள்ளையார் சதுரர்" என்று "ந்யாயேந்து சேகர" ச்லோகம் சொன்னதற்குக் கன்ஃபர்மேஷனாகவே இந்த ச்லோகம் "நம்முடைய சிந்திதார்த்தங்களைப் பிள்ளையார் நிறைவேற்றி வைக்கட்டும்" என்கிறது!

களபம்

பிள்ளையாருடைய பெயரில் எதுவுமே ச்லோகத்தில் இல்லை. 'களபம்' என்றுதான் வருகிறது. "கலயது கலபோ" என்று அழகான மோனையாக வருகிறது. (கலபம், களபம் என்று இருவிதமாகவும் ஸம்ஸ்க்ருதத்தில் வரும். ல-ள வித்யாஸம் அந்த பாஷையில் பார்ப்பதில்லை.) 'களபம்' என்றால் யானைக்குட்டி. 'குட்டி யானை' என்று சொன்னால் அதைவிடச் செல்லமாகயிருக்கிறது. வேடிக்கையாகவே பெரிய காரியங்களையும் ஸாதித்தது தெரியாமல் ஸாதித்துக் கொடுத்துவிட்டு, நாம் செல்லம் கொடுத்துக் கொஞ்சும் ஒரு விளையாட்டு ஜீவனாக இருக்க ப்ரியப்படுபவரை 'கணேசர்', 'விக்நேச்வரர்' என்ற மாதிரிப் பெரிய பெயர்களால் தெய்வமாகக் காட்டாமல், குட்டியானை என்று சொன்னாலே ஸந்தோஷப் படுவாரென்றுதான் 'களபம்' என்று போட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

அவ்வையார் "அகவ"லை

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு

என்று ஆரம்பிக்கிறாள். ஆனால் இங்கே 'களபம்' என்பது யானைக் குட்டியில்லை. யானைக்குட்டி ஸ்வாமியின் பாதத்தில் குங்குமப்பூ, பச்சைக் கர்ப்பூரம் முதலியவற்றோடு சேர்த்து

Koviloor Digital Library

அரைத்த சந்தனம் பூசியிருக்கிறது. கலவை என்றும் கலவைச் சந்தனம் என்றும் சொல்கிற அந்த கந்தோப சாரத்தைத்தான் களபம் என்றும் சொல்வது. இங்கே ("அகவ"லில்) அதுதான் அர்த்தம். பெரிய யோக மூர்த்தியாக, அத்வைத ஞான மூர்த்தியாகப் பிள்ளையாரை ஸ்துதித்து அவ்வை பண்ணியது இந்த அகவல். அதனால் இதிலே 'பால லீலாபிராமனுக' விளையாட்டு பண்ணும் குட்டியானையாக அவரைச் சொல்ல முடியவில்லை. ["அகவல்" அறிந்தவர்களிடம் சிறிது உரையாடி விட்டு] "அற்புதம் நின்ற கற்பகக் களிறு", "வித்தக விநாயக" என்று அவரை உயர்ந்த ஸ்தானம் கொடுத்துத்தான் அவ்வை கூப்பிடுகிருள். யோக சாஸ்த்ர ரஹஸ்யங்களைச் சொல்ல வந்த நூலில் அவரை அப்படிக் காட்டுவதுதான் ஔசித்யம் (உசிதமானது). ஆனாலும் குட்டியானையாக அவர் விளையாடிக்கொண்டிருப்பதையும் கொஞ்சம் கோடியாவது காட்டாமல் விடக்கூடாது என்று அவளுக்கு இருந்திருக்கும் போலிருக்கிறது! என்ன யோக சாஸ்த்ரம் எழுதினுலும் அவள் குழந்தைகளுக்கேயான பாட்டிக் கவியல்லவா? குழந்தைகளுக்கு மிகவும் ப்ரியமான யானைக்குட்டியை மறைமுகமாகவாவது சொல்லாமல் விடக்கூடாது என்றே, "புரிஞ்சுக்கிறவா புரிஞ்சுக்கட்டும்" என்று, எடுத்தவுடனேயே "சீதக் களப" என்று போட்டுவிட்டாள் என்று தோன்றுகிறது.

லேசாக்கி அருள்வாராக!

இடையூற்று நீக்கத்திற்காக ஸகல தேவர்களாலும் வணங்கப்படுபவர்; தேவர்களில் உச்சாணியிலிருக்கிறவர்கள் தங்களுக்குள்ளேயே வணங்கிக் கொண்டாலும் பிணங்கிக் கொண்டாலுங்கூட அவர்களுடைய காமனைகளையும் (விருப்பங்களையும்) தாமாக நிறைவேற்றி வைப்பவர்—இப்பேர்ப்பட்ட மஹிமைகள் கொண்ட விக்நேச்வரரை நாமும்

Koviloor Digital Library

பக்தியுடன் வணங்கி, விக்நேச்வர ப்ரஸாதத்தால் தடைகள் யாவும் விலகி ஆனந்தமாக இருப்போம்!

பெரிய தடை நம் மனஸேதான். ஏதாவது காமம், கவலே, —'இது அப்படியாகணும்', 'அது அப்படியாகணும்', 'அப்படி ஆகுமோ ஆகாதோ?', 'எப்படி ஆயிடுமோ?' என்று பல தினுஸான எண்ணங்களின் பாரத்தில் நெரிபடுவது—என்று நம் மனஸையே நம்முடைய வாழ்க்கைப் பிரயாணம் ஆனந்தப் பாதையில் போகமுடியாதபடி பெரிய தடையாக குறுக்கே போட்டுக்கொண்டிருக்கிறோம். விக்நேச்வரரை உபாஸித்து உபாஸித்து அவருடைய ப்ரஸாதத்தினுல் அவர் மாதிரியே நாமும் குழந்தைகளாகி ஒரு காமமில்லே, கவலே யில்லே, போனதையும் வருவதையும் குறித்த மனேபாரம் இல்லவே இல்லே என்ருகி,—அப்பப்போ ஒரு ஸந்தோஷமா? அதை குழந்தை மாதிரி நன்ருகச் சிரித்து அநுபவித்துக் கொண்டு—அதே மாதிரி, அப்பப்போ ஒரு துக்கம் வந்தாலும் அந்த நிமிஷம் மட்டும் அழுதுவிட்டு, ஆனுல் அப்புறம் நினைத்து நினைத்து அழாமல்—இப்படி சிரிப்பு, அழுகை இரண்டும் இருந்தாலும் சிரித்து விளேயாடுவதுதான் ஜாஸ்தி யாக ஒரு குழந்தை இருப்பதுபோலவே இருந்துவிட்டோ மானுல் நம்மைவிட பாக்யசாலியில்லே. முக்யமாக, 'சென்று போனது இப்படியாச்சே; வரப்போவது இப்படியிருக் கணுமே' என்று ஓயாமல் நம்மைப் பிய்த்துப் பிடுங்கும் சிந்தனேச் சுமை குழந்தைக்கு இல்லாததுதான் அதனுடைய ஆனந்தத்தின் ரஹஸ்யம். குழந்தை ஸ்வாமி கனமான யானே ரூபத்திலிருந்தாலும் இந்த விசாரச் சுமையில்லாமல் பரம லேசாக இருப்பவர். 'நெட்டிப் பிள்ளேயார்' என்று அவரை லேசாகப் பண்ணுகிறோமல்லவா? நம்மையும் அவர் அப்படிப் பண்ண ப்ரார்த்திப்போம்.

கவலே, குறை மட்டுந்தான் பாரம் என்றில்லே. தன்னேப்பற்றிய பெருமையும்கூடப் பெரிய பாரம்தான். இன்னும் சொல்லப்போனுல் இதுதான் பெரிய பாரம். கவலேப்படுவது துக்க பாரம். தான் என்ற பெருமை

Koviloor Digital Library

அஹங்கார பாரம். துக்கத்தைப் போக்கிக்கொண்டு அதன் பாரம் தீரணும் என்ற எண்ணமாவது இருக்கிறது. அஹங்காரமோ பாரம் என்றே தெரியாததால் இதுதான் பெரிய ஆபத்து. இது குறைத்துக்கொள்ள வேண்டியது என்பதையே நாம் உணராததால் பாரத்தைப் பெருக்கிக் கொண்டே போகிறோம். 'நாம் இப்படியிப்படிப் பண்ணினோமாக்கும், இதையிதை ஸாதித்தோமாக்கும்' என்று பெருமைப்படுவது அஹங்கார பாரம்தான். விசேஷமாக எதுவும் செய்யாவிட்டாலும்கூட, "நான் அதைப் பண்ணினேன், இதைப் பண்ணினேன்" என்று வார்த்தையிலாவது சொல்லிக்கொள்ளத் தோன்றுகிறது. யாராவது ஏதாவது ஸரியில்லாமல் பண்ணிவிட்டால், "நானுயிருந்தா என்ன பண்ணியிருப்பேன் தெரியுமா, ஸார்?" என்று கேட்கத் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் நாம் பண்ணியிருந்தால் இன்னும் மோசமாயிருக்கும்! இப்படிக் கர்த்தாவாகக் கொண்டாடிக்கொள்ளும் பெருமையினால் நாமே நம் கழுத்தில் கல்லைக் கட்டிக் கொள்கிறோமென்பதுதான் உண்மை. கர்த்ருத்வம் மாதிரி பாரம் எதுவும் கிடையாது என்று பாரமார்த்திகமாகக் கொஞ்சம் போனால்கூடத் தெரிந்துவிடும்.

தேவர்களெல்லோராலும் தொழப்பட்டு, அவர்களுடைய விக்னங்களையும் போக்கும் பெரிய கார்யத்தைச் செய்யும் பிள்ளையார் எப்படியிருக்கிறார்? கொஞ்சமாவது பெருமை கொண்டாடிக்கொள்கிறாரா? அவர் பாட்டுக்கு குழந்தையாகவே அப்பா சிரஸிலுள்ள பிறையைப் பிடித்திழுத்து விளையாடிக்கொண்டிருக்கிறார். அதைத் தாமரைத் தண்டு என்று நினைத்துக்கொள்ளும் அறியாக் குழந்தையாகத் தன்னைக் காட்டிக்கொண்டு விளையாடுகிறார். மனோபேதமாயிருந்த சிவ - சக்திகளையே தாம் ஒன்று சேர்த்து வைத்தும், 'எவ்வளவு பெரிய ஸாதனை செய்து விட்டேன்?' என்று மார் தட்டிக் கொள்ளாமல், தாம் செய்த ஸாதனை தமக்கே தெரியாத மாதிரி பால லீலையில் ஈடுபட்

Koviloor Digital Library

டிருக்கிறார். ரூபத்தில் யானையாயிருந்தாலும் உள்ளப்பாங்கில் அந்தத் தாமரை நூல் மாதிரி லேசாகவே அவர் இருப்பதால் தான் எக்காலமும் குழந்தையாகக் குதூஹலித்துக் கொண் டிருக்கிறார்.

அந்தக் குழந்தை ஸ்வாமி நம் எல்லோரையும் குழந்தை பக்தர்களாக்கி ஆனந்த லோகத்தில் எப்போதும் லேசாக மிதந்துகொண்டிருக்கச் செய்வாராக!

ஸர்வ அர்த்தங்களையும் அருளுவதில் அவர் சதுரர் என்று ஒரு பெரியவரும், நாம் சிந்திக்கும் அர்த்தங்களை அவர் அருளவேண்டும் என்று இன்னொரு பெரியவரும் ஸ்தோத்ரம் செய்திருப்பதைப் பார்த்தோம். அப்படிப் பட்ட அவர் நமக்கு முக்யமாக மனஸை லேசாக்கி சாந்தி யளித்து ரக்ஷிக்கட்டும்!

Koviloor Digital Library

குரு

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஈசனும் ஆசானும்

பிற சொத்துக்களும், குரு தரும் சொத்தும்

அப்பா வைத்துவிட்டுப் போகிற வீடு நாளானால் இடிந்து போகும். அதனால் அவ்வப்போது அதற்கு ரிப்பேர் பண்ணனும். வெள்ளையடிக்கணும். பெயின்ட் அடிக்கணும். அப்பா வைத்துவிட்டுப் போகிற நிலத்திலேயும் வருஷா வருஷம் முதல் போட்டு, விதை போட்டு உழைத்தே மாசூல் காணமுடியும். எத்தனை எருப் போட்டாலும் கொஞ்சம் கொஞ்சமாக பூஸாரம் போய்விடுகிற நிலங்களும் உண்டு. மழை பெய்யாமல் போவது, Dam திறக்காமலிருப்பது, பூச்சி, பொட்டு, ஒரேயடியாக மழை பெய்து அடித்துக் கொண்டு போகிறது, அழுகிப் போகிறது—இப்படிப் பல கஷ்டங்கள். எல்லாவற்றிற்கும் மேலே 'ஸீலிங்' (உச்சவரம்பு) சட்டம்! ரூபாயாக (ஸொத்து) வைத்துவிட்டுப் போனாலும் நாளுக்கு நாள் 'டிவால்யுவேஷன்' (நாணய மதிப்பு குறைந்து போவது)! பல தினுசு டாக்ஸ்! புதுசாக என்ன டாக்ஸ் வருமோ என்று ஓயாமல் பயம். திருட்டுப் போவது; எங்கே திருட்டுப் போய்விடுமோ என்று ஸதா பயம்.

இப்படியெல்லாம் எந்த விதமான ஸொத்தானாலும் அது சாச்வதமாயில்லாமல் க்ஷீணித்துப் போக இடமிருக்கிறது. இது ஒரு பக்கம் என்றால் இன்னொரு பக்கம் ஸொத்தைப் பெறுகிற வார்ஸின் மனசு கெட்டுப்போவது. ஸொத்தை எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளணும் என்பதற்காகப் பலவிதத்தில் தப்புகள் செய்வது; சட்டத்தை மீறிச் செய்வது; பிறத்தியாருக்கு நஷ்டம், கஷ்டம் உண்டாக்கியும் தங்களுக்கு லாபமாகப் பண்ணிக் கொள்ளப் பார்ப்பது; லஞ்சம் கொடுக்கிறது; பொய்க் கணக்கு காட்டி ஏமாற்றுகிறது; ஸீலிங்குக்காக 'பினாமி' என்று பிறத்தியார்

Koviloor Digital Library

உடைமை மாதிரி பொய்யாகப் பிரித்துக் காட்டுவது; இன்னும் பல தினுஸான தகிடுதத்தம் செய்வது—இப்படி யெல்லாம் தப்பு வழியிலே போய், ஸொத்து [சிறு முடிச்சு போலக் கையைக் காட்டி] இவ்வளவு என்றால், அதை முன்னிட்டு மூட்டை கட்டுகிற பாவம் [பெரிய அளவாகக் கையை விரித்துக் காட்டி] இத்தனும் பெரிசாகிறது!

பூர்வபுண்யத்திலேயோ, ஏதோ அத்ருஷ்டத்திலேயோ அப்பா ஸொத்து நன்றாகவே வளர்கிறது, தப்புப் பண்ணாமலே விருத்தியாகிறது என்றால்கூட, கடைசியில் ஒரு நாள் 'காதறுந்த ஊசியும் வாராது காண் கடை வழிக்கே' என்று அத்தனையையும் விட்டுவிட்டுப் போக வேண்டிய தாகவே ஆகிறது. அரண்மனை மாதிரி வீடாகட்டும், ஆயிரம் வேலி முப்போகம் விளைகிற நிலமாகட்டும், கோடி—பத்துக் கோடி என்று ரூபாயாகட்டும், எதுவானாலும் அதிலிருந்து துளிக்கூட நமக்குப் பிரயோஜனம் கிடைக்காத படி அத்தனையையும் விட்டுவிட்டு ஒரு நாள் புறப்படும்படி ஆகிறது.

ஆக அப்பா ஸொத்து சாச்வதமில்லை.

நாமே தேடிக் கொள்கிற ஸொத்துக்களுக்கும் இதே கதைதான்.

சாச்வதமான ஸொத்து, இழந்து போகாத, ரிப்பேர் பண்ணவேண்டாத ஸொத்து, டாக்ஸும் திருட்டும் தொடாத ஸொத்து, 'திருட்டுப் போயிடுமோ?' என்று பயப் படவும் வேண்டாத ஸொத்து, தப்பு வழிகளில் போய் நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டாத ஸொத்து அப்பா கொடுக்க முடியாது; நாமாகவும் தேடிக்கொள்ளமுடியாது.

குரு என்கிற ஒருத்தர்தான் சாச்வதமான அந்த ஸொத்தைத் தருகிறவர். இது நாம் போன பிற்பாடு நம் கூட வராத ஸொத்தில்லை—நம்மையே திரும்பி வரப் பண்ணாத ஸொத்து! எது சாச்வதமோ அந்தப் பரமாத்மா வுடன் நம்மைப்பிரிக்க முடியாமல் சேர்த்துவிடுகிற ஸொத்து.

Koviloor Digital Library

ஞானம் என்ற ஸொத்தை குரு அநுக்ரஹிக்கிறார். ஸொத்து க்ஷீணித்துக் கொண்டே போவது, நாம் ச்ரமப் பட்டு அதை விருத்திபண்ணப் பாடுபடுவது, இந்தப்பாட்டில் பாவ மூட்டையை இன்னும் பெரிசாக்கிக் கட்டிக்கொள்வது என்பதற்கெல்லாம் இடமே வைக்காமல் நாளுக்கு நாள் தானும் வளர்ந்து நம்மையும் வளர்ப்பது குரு தருகிற உபதேச ஸொத்து.

மற்ற ஸொத்து எதுவானாலும் அதனால் கிடைக்கும் எல்லா ஸுகங்களும் தாற்காலிகம்தான். 'நித்யானந்தம்' என்றே சொல்லப்படுவதான சாச்வத ஸுகத்தைத் தருவது குரு அநுக்ரஹிக்கிற ஞானமொன்றுதான்.

தெய்வ பக்தியும் குரு பக்தியும்

இப்படிப்பட்ட பெரிய உபகாரத்தைப் பண்ணுகிற குரு விடம் எவ்வளவு பக்தி பண்ணினால்தான் போதும்? அதனால் தான் ஸாக்ஷாத் ஈச்வரனிடத்தில் எவ்வளவு பக்தி வைக்க வேண்டுமோ அதே அளவுக்கு குருவிடமும் வைக்கணும் என்று சொல்லியிருப்பது:

யஸ்ய தேவே பராபக்திர்—யதா தேவே ததா குரௌ

'யதா தேவே'—ஈச்வரனிடத்தில் எப்படியோ; 'ததா குரௌ'—அப்படியே குருவிடமும்; 'பராபக்தி'— உயர்ந்த பக்தி (வைக்கவேண்டும்).

ச்லோகம் எப்படிச் சொல்லிக்கொண்டு போகிறதென் றென்றால், இம்மாதிரி ஈச்வரனிடம் பக்தி வைத்து, அதே அளவுக்கு குருவிடமும் பக்தியாக இருக்கிற மஹாத்மாவான சிஷ்யனுக்குத்தான் உபதேசிக்கப் படுகிற விஷயத்தின் உள்ளர்த்தம் முழுதும் வெளிப்படும் என்கிறது.* ஈச்வர

*ச்லோகத்தின் முழு வடிவம்:
யஸ்ய தேவே பராபக்திர் - யதா தேவே ததா குரௌ
தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:
இது ச்வேதாச்வதர உபநிஷத்து, குரு கீதை இரண்டிலும் காணப்படுகிறது.

Koviloor Digital Library

பக்திக்கு ஸமானமாக குருபக்தி உள்ள சிஷ்யனை "மஹாத்மா" என்று உயர்த்திச் சொல்லியிருப்பதால், இந்த பக்தி பாவமே அவனுக்கு ஆத்ம ஞானத்தைக் கொடுத்து மஹாத்மா என்னும்படியாக ஆக்கிவிடுகிறது என்று ஏற்படுகிறது. ச்லோகத்தில் "யஸ்ய"—"எவனுக்கு"— என்று ஆரம்பித்து, 'எவனுக்கு ஈச்வரனிடம் உத்தம பக்தி இருக்கிறதோ, அதோடுகூட அதே அளவுக்கு குருவிடமும் இருக்கிறதோ அந்த மஹாத்மாவுக்குத் தத்வார்த்தங்கள் எல்லாம் பிரகாசிக்கும்' என்று சொல்லியிருக்கிறது :

தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா : ப்ரகாசந்தே மஹாத்மந :

அநுபவ ஞானம்

"பிரகாசிக்கும்" என்றால் உள்ளர்த்தங்கள் மூளைக்குப் புரியும் என்று அர்த்தம் செய்துகொள்வதோடு முடித்து விடக்கூடாது. மூளைக்குப் புரியும்படியாக ரஹஸ்யார்த் தங்களை குருவே சொல்லிவிடுவார். பக்தியினால்தான் இந்த மூளைக் காரியத்தைப் பண்ணிக்கொள்ளவேண்டும் என்றில்லை. பின்னே என்ன அர்த்தம் என்றால், உபதேசத் தின் ஸாரமாக எந்த அநுபவம இருக்கிறதோ அது சிஷ்யனின் ஹ்ருதயத்தில் பிரகாசிக்கும். [சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுத் தொடர்கிறார்கள்.]

நன்றாக யோசித்துப் பார்த்தால், 'ரஹஸ்யார்த்தங்கள் நன்றாக ப்ரகாசிக்கும்' என்று சொல்வதன் தாத்பர்யம் என்னவாக இருக்கமுடியும்? மறைவாகவோ, சுருக்கமாக வோ, வ்யங்கியமாகவோ (உள்ளுறை பொருளாகவோ), ரொம்பவும் சிக்கலான கருத்திலோ நடையிலோ சொல்லி யிருக்கிற விஷயங்கள் பளிச்சென்று தெளிவாகிவிடும் என்பதுதான் தாத்பர்யமா? அப்படியும் வைத்துக் கொள்ள லாம். ஈச்வர க்ருபையில், குரு க்ருபையில் இஹ - பர நலம் எதுவுமே கிடைக்க முடியும் என்னும்போது, நம் மூளையும் நன்றாகச் சாணை தீட்டிய மாதிரி தீட்டப்பெற்று மேலே சொன்னதுபோல மறைபொருளை, சிக்கலான விஷயத்தை

Koviloor Digital Library

ஸ்பஷ்டமாகப் புரிந்துகொண்டு விடுகிற திறமையைப் பெறக் கூடும்தான். ஆனால் ஆலோசித்துப் பார்த்தால் இப்படி மூளையின் சாதிப்போடு விஷயத்தை முடித்து விட்டால் அது பிரயோஜனமில்லை என்று தெரியும். அத்யாத்ம உபதேசம் எதற்கு இருக்கிறது? மூளையின் திருப்திக்காகவா? இல்லையே! மூளையின் த்ருப்தி அஹங்காரத்தில் சேர்ப்பதல்லவா? அத்யாத்ம உபதேசமோ அஹங்காரம் அழிவதற்காக அல்லவா? ஆகையினால், மூளை ரீதியான ப்ரகாசத்தில் எதையோ தெளிவு செய்வதென்று வைத்துக் கொண்டால் கூட, இதுவும் ஆத்மாவிலே கொண்டுவிட உதவி செய்வதாயிருக்க வேண்டும் என்பதுதான் தாத்பர்யமாக இருக்கவேண்டும். அதாவது உபதேச லக்ஷ்யமான ஆத்மாநுபவங்கள் என்னென்னவோ அவையெல்லாம் மூளை லெவலில் புரிந்து கொண்டதாக மட்டும் முடிந்துபோகாமல் பிரத்யக்ஷமாக சிஷ்யனுக்கே நேராக அநுபவத்தில் வர வேண்டும். 'ஸ்வாநுபூதி' என்பது இப்படி ஒருத்தர் நேராக தானே ஒன்றை அநுபவிப்பதுதான். மூளைக்கும் ஆதாரமாக ஒரு ஜீவ சைதன்யம் இருக்கிறதல்லவா? ஜீவனின் உயிர் என்று சொல்வது அதைத்தான். அந்த உயிரின் அநுபவமாகவே விஷயம் ஆகும்போதுதான் ஸ்வாநுபூதி ஏற்படுகிறது. அப்புறம் ஜீவ சைதன்யம், ப்ரஹ்ம சைதன்யம் என்கிற பேதம் போய், விஷயம் - அதை அநுபவிப்பவன் என்ற பேதமும் போய்விட்ட நிலை. சாச்வதமான ஸத்யமாக ஆகிவிடுகிற நிலை. அத்வைதிகள் சொல்லும் மோக்ஷம் அதுதான்.

"ஸ்வாநுபூதி" என்பதை "அபரோக்ஷாநுபூதி" என்றும் சொல்வார்கள். அந்தப் பெயரிலேயே ஆசார்யாள் ஒரு க்ரந்தம் எழுதியிருக்கிறார்.

பரோக்ஷம், அபரோக்ஷம் என்று இரண்டு. பரோக்ஷம் என்பது நமக்குத் தெரியாமல் ஒளிந்து கொண்டிருப்பது, ரஹஸ்யமாயிருப்பது. அபரோக்ஷம் அதற்கு ஆப்போஸிட்: நமக்கு நன்றாகத் தெரிவது. கேள்வியறிவு பரோக்ஷம், அநுபவ

Koviloor Digital Library

அறிவு அபரோக்ஷம். அநுபவத்துக்கு வராதவரையில் ஒன்றைப் பற்றிய அறிவு அதன் பிரயோஜனமான ஆனந்தத்தை நமக்குக் காட்டாமல் ரஹஸ்யமாக வைத்துக் கொண்டு இருக்கிறது என்று அர்த்தம்.

குற்றாலம் அருவியைப் பற்றிப் பக்கம் பக்கமாகப் படிக்கிறோம். போய்விட்டு வந்தவர்கள் அதைப் பற்றி மணிக் கணக்காக வர்ணித்துக் கேட்கிறோம். ஆனாலும் இதனாலெல் லாம் அநுபவ ஆனந்தம் நமக்குக் கொஞ்சமாவது ஏற்படுகிறதா? நாமே போய், மணிக்கணக்கெல்லாம் வேண்டாம், நாலு நிமிஷம் அஞ்சு நிமிஷம் அதன் கீழே நின்றுவிட்டால் அப்போதுதானே நிஜமாக அதைத் தெரிந்துகொண்ட ஆனந்தம் ஏற்படுகிறது?

ஆத்மாவுக்கான ஸமாசாரங்களை டன் டன்னாகப் புஸ்தகத்தில் பார்த்தும் படித்தும் நெட்டுருப் போட்டும், quote பண்ணியும் ப்ரயோஜனமில்லை. குருவே உபதேசம் பண்ணியுங்கூட, அது காதுக்குள்ளே, காது வழியாக மூளைக் குள்ளே போனாலுங்கூட, ப்ரயோஜனமில்லை. அதுவரை அது பரோக்ஷம்தான். ஆத்மாவிலேயே அது அநுபவமாகப் பேசணும். அப்போதுதான் அபரோக்ஷம்.

இதிலே கொஞ்சம் வேடிக்கை. குரு உபதேசம் மூளை லெவலில் மட்டும் ஏறுகிறபோது நமக்கு ரஹஸ்யமாக இருக்கிற மாதிரி தோன்றவில்லை. மூளைக்கு நன்றாக விஷயம் தெரியத்தான் தெரிகிறது. ஆனாலும் அது உயிரின் அநுபவமாக இல்லாததால் அதை பரோக்ஷ ஞானம் என்றே வைக்கவேண்டும். எப்போது அது உயிருக்கு உள்ளேயே போய் அநுபவமாகிறதோ அப்போதுதான் அதற்கு அபரோக்ஷ அநுபூதி என்ற பெயர் கொடுத்திருக்கிறது. இதிலேதான், முரண் மாதிரி இருக்கும் வேடிக்கை! வெளிப்பட குரு வாக்கியம் நன்றாகத் தெரிந்து, மூளைக்கு அது எட்டும்போது, அதற்கு 'ஒளித்து வைத்தது', 'ரஹஸ்ய மானது' என்று அர்த்தம் கொடுக்கும் 'பரோக்ஷ'ப் பட்டம் ஒட்டிக்கொண்டிருக்கிறது! பரம ரஹஸ்யமாக இருக்கப்பட்ட

Koviloor Digital Library

உயிரின் உள்ளுக்குள்ளே அதுவே தோய்ந்து, உறைந்து போய், வெளிப்படத் தெரிகிற வாக்கு, மூளை எல்லாம் மறைந்து போனபோது தான் 'அபரோக்ஷம்' என்று, அதாவது நன்றாக, வெளிப்பட ப்ரகாசிப்பதாக, பட்டம் பெறுகிறது!

இது எப்படி ஸரி என்றால்,

பால் ருசியாக இருக்கிறது வஸ்து என்று நமக்குத் தெரியும். வெல்லமும் ருசியான வஸ்து என்று தெரியும். அதனால், பாலையும் வெல்லத்தையும் போட்டு நன்றாக ஸாரம் திரண்டு வரும்படி இறுகக் காய்ச்சினால் அந்தத் திரட்டுப் பால் பஹு ருசியாகத்தான் இருந்தாக வேண்டும் என்று தெரிகிறது. அதாவது, மூளைக்குத் தெரிகிறது. இப்படி மூளையால் நிச்சயப்படுத்தித் தெரிந்து கொண்டுவிட்டாலும் அதனால் திரட்டுப் பாலில் உண்டாகிற ருசியநுபவம் கிடைத்துவிடுகிறதா? திரட்டுப் பாலின் பலனான அந்த இன்பத்தை அடைய என்ன பண்ணவேண்டும்? தின்று பார்க்கவேண்டும். வெளியிலே தெரிகிற திரட்டுப்பாலை உள்ளே தள்ளுகிறபோதுதான் அதைப் பற்றிய ஸரியான, நிஜமான அநுபவம் உண்டாகிறது. இங்கே வெளிப்பட இருந்த வஸ்து மறைந்துபோய் உள்ளுக்குள் ளே ரஹஸ்யமாக ஆன பிறகுதானே அதனால் என்ன பயனோ, அது எந்த லக்ஷ்யத்தை உத்தேசித்து செய்யப்பட்டதோ அது பூர்த்தியா கிறது? உள்ளுக்குள்ளே போனபின் அதன் ரூபம் மறைந் தாலும், அதன் பயன் அப்போதுதானே வெளிப்படுகிறது?

அதாவது 'உள்' 'வெளி' என்பதில் இரண்டு விதம் இருப்பதாகத் தெரிகிறது. ரூபத்தினால் வெளிப்பட ஒன்று இருக்கிறபோது அதனுடைய ஸாரமான பயன் பிரகாசிக்கா மலிருக்கிறது. பிரகாசிக்காமலிருக்கிறது என்றால் ரஹஸ்ய மாக ஒளிந்து கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். அதாவது வேதாந்த பரிபாஷைப்படி அது 'பரோக்ஷ'மாகத் தானிருக்கிறது. உள்ளே போய் அதன் ரூபம் மறைந்து விடுகிறபோது அதன் ஸாரமான பிரயோஜனம் பிரகாசித்து 'அபரோக்ஷ'மாகிறது.

Koviloor Digital Library

ஒரு வஸ்து ஸ்தூலத்தில் தெரிந்துகொண்டிருந்தாலும் அதனால் கிடைக்கக் கூடிய ஸாரமான பிரயோஜனம் கிடைக்கவில்லை என்றால் அது இருந்தும் இல்லாத மாதிரிதான். அது ஸ்தூலமாகத் தெரியாவிட்டாலும் அதன் ப்ரயோஜனம் நன்றாக வெளிப்பட்டுத் தெரிகிறது என்றால் அப்போதுதான் அதற்குப் பொருள் உண்டு. வஸ்துவின் வெளி வேஷத்தைவிட அதன் உள் ஸாரம்தான் முக்யம் என்பதை ஒப்புக்கொண்டோமானால்—இதை யாரும் ஒப்புக்கொள்ளாமலிருக்க முடியாது—அந்த ஸாரம் வெளியாகாத நிலையே நிஜத்தில் பரோக்ஷம், ஸாரம் வெளியாகிப் பயன் தரும் போதே அபரோக்ஷம் என்று ஏற்பட்டுவிடும். அப்போது! மூளை லெவலில் உபதேசம் நிற்கிறபோதுகூட அதன் ஸார அநுபவ இன்பம் கிட்டாததால் அது பரோக்ஷம்தான், உபதேசமும் போய், மூளையும் போய், தன்னையே மறந்த ஸமாதி நிலையில் உபதேச ஸாரம் வெளிப்பட்டு உயிரில் உறைவதுதான் அபரோக்ஷம் என்று ஏற்பட்டுவிடும். அபரோக்ஷம், பரோக்ஷம் என்பவற்றை மாற்றி முரணாக வேடிக்கை பண்ணவில்லை; வாஸ்தவத்தைத்தான் உள்ளபடி சொல்லியிருக்கிறது என்று தெரியும்.

மூளையும் இதயமும்

மூளைக்குத் தெரிகிறது வேறே; அதற்கும் ஆதாரமான உயிருக்கு தெரிகிறது வேறே. கோட்டான் கண்ணுக்கு வஸ்துக்கள் ராத்திரியில்தான் தெரிகிறது. பகலில் அதற்கு எதுவும் தெரிவதில்லை. மநுஷக் கண்ணுக்குப் பகலில்தான் தெரிகிறது. ராத்ரியில் தெரிவதில்லை. மூளைக்கு அநுபவம் தெரிவதில்லை. அதற்குத் தர்க்கத்தையொட்டி விசாரிக்கிற அறிவு வாதம்தான் தெரியும். அநுபவம் தெரிகிற ஹ்ருதயத்துக்கு அறிவு வாதம் தெரிவதில்லை. ஜீவனின் ஸார ஸத்யமான உயிரைத்தான் ஹ்ருதயம் என்பது.

ஆனாலும் ஹ்ருதயம் லேசில் திறந்து கொள்வதில்லை. எதனாலோ மநுஷ்யர்களுக்கு மூளைப் பெருமையையே

Koviloor Digital Library

பெரிசாக வைத்திருக்கிறது. அதனுல், எதுவுமே முதலில் புத்தியில், மூளையில் உறைத்தாக வேண்டியிருக்கிறது. ஹ்ருதயமே அநுபவிக்கவேண்டிய ஆத்யாத்மிக விஷயங்களைக்கூட மூளை ஸரியாயிருக்குமா, இருக்காதா என்று எடைபோட்டுப் பார்க்க ஆரம்பிக்கிறது. ஸரியாயிருப்பதாக அது முடிவு பண்ணிஞல் அதற்கப்புறமே, 'இப்படி நாம் அறிவிஞல் முடிவு பண்ணினது போதாது. இதனுல் அந்த விஷயத்தின் லக்ஷ்யமான ப்ரயோஜனம் நமக்குக் கிடைத்து விடவில்லை. உதாரணமாக, ஆத்மா ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகத்தான் இருக்கவேண்டுமென்று இத்தனை வேதாந்த புஸ்தகங்களைப் படித்து, குரு உபதேசங்கள் கேட்டு புத்தியிஞல் புரிந்துகொண்டபோதிலும் நமக்கு ஸத்தும் தெரியலை, சித்தும் தெரியலை, ஆனந்தமும் தெரியலை. அசடு மாதிரி துக்கப்பட்டுக் கொண்டுதான் கிடக்கிறேம். அதனுல் புத்திக்குள் போனதோடு நிறுத்திக்கொள்ளாமல் அதை ஹ்ருதயத்துக்குள் இறக்கிக் கொள்ளவேண்டும்' என்று நினைக்கிறேம். மூளை தான் பண்ணவேண்டியதையெல்லாம் பண்ணியும் ஸாரமான ப்ரயோஜனத்தை அடைய முடியாமல் களைத்து விழுந்த அப்புறம்தான் ஹ்ருதயத்தைத் திறந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணம் பிறக்கிறது. இது மநுஷ்ய ஜீவனுக்குத் தன்னுடைய மூளை விசேஷத்திஞல் உண்டான விபரீதமான பலன்! அவ்வளவாக புத்தி போதாமலிருக்கிற எளிய ஜீவன்களைவிட புத்திமான்களுக்குத்தான் இதன் கஷ்டம் ஜாஸ்தியாக ஏற்படுகிறது. அவர்கள் (எளிய ஜீவர்கள்) புத்தியால் குடையாமல், ஏதோ ஒரு நம்பிக்கையின் பேரில் ஏற்றுக்கொண்டு விடுவார்கள். 'புத்திசாலி'களான நாம்தான் திண்டாடுகிறேம். ஏதோ சில ஸமயத்தில் நமக்கும் 'இதையெல்லாம் நம்முடைய மூளையால் எடைபோட்டுத் தீர்மானம் பண்ணிவிட முடியாது' என்று தோன்றுகிறது. எல்லாம் நம்முடைய மூளையின் ஜுரிஸ்டிக்ஷனுக்குள் (ஆணையெல்லைக்குள்) வந்துவிட முடியுமா என்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

ச்ருதி-யுக்தி-அநுபவம்

புத்தியினாலே நிரம்ப வாதங்கள் செய்து லோகம் பூராவும் இன்றைக்கும் ப்ரமிக்கும்படியாக ஸித்தாந்தம் நிர்மாணம் பண்ணின ஆசார்யாளும், 'ச்ருதி (வேதம்) சொல்கிற விஷயங்களை மூளையால் ஆராய்ச்சி பண்ணவே பண்ணாதே. நம் மூளைக்கு அதீதமானதை பரமாத்மாவே ரிஷிகளுக்கு ஸ்புரிக்கப்பண்ணி அவர்கள் லோகோபகாரமாக நமக்கு வேதங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ச்ருதி வாக்யத்தைக் கேள்வி கேட்காமல் அப்படியே ஒப்புக்கொள்ளு' என்றுதான் சொல்லியிருக்கிறார்.

ஆனால் அவரே புத்தியினால் எந்த அளவுக்கு ஸித்தாந்தத்தை நாட்ட முடியுமோ அந்த அளவுக்கு ஆழமாகப் போய் அலசி அலசிப் பார்த்து, ஆக்ஷேபணை, ஸமாதானம் எல்லாம் விஸ்தாரமாகச் சொல்லிப் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்.

வைதிகமான எல்லா ஸம்ப்ரதாயங்களைச் சேர்ந்த ஆசார்ய புருஷர்களும், (அதாவது) ராமாநுஜர், மத்வர் முதலிய யாரானாலும் ஸரி, இப்படி ச்ருதியை 'சப்த ப்ரமாணம்' என்பதாக அப்படியே கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டு, ஆனாலும் தங்கள் தங்கள் கொள்கைகளை புத்தி ரீதியிலும்தான் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி எழுதியிருக்கிறார்கள்.

ஒரு ஸித்தாந்தமென்றால் அது ச்ருதி, யுக்தி, அநுபவம் என்ற மூன்றுக்கும் பொருந்துவதாக, மூன்றுக்கும் ஏற்புடையதாக இருக்கவேண்டுமென்ற கருத்தையே எல்லா ஆசார்யர்களும் பின்பற்றியிருக்கிறார்கள். ச்ருதி சொல்கிற விஷயங்களை அப்படியே ஏற்கவேண்டும். அதற்கு விரோதமில்லாமலும், அதன் முடிவுகளுக்கே கொண்டு விடுவதாகவும், அல்லது அதில் குறிப்பு மட்டும் காட்டியிருப்பதை நன்றாக விளக்கியும், அதில் சொல்லாமல் விட்ட விஷயங்களை நன்றாக ஆராய்ச்சி பண்ணியும் புத்திவாதம்

Koviloor Digital Library

செய்வதுதான் 'யுக்தி'. முடிவிலே ச்ருதியும் யுக்தியும் அநுபவத்தில் கொண்டுவிட்டால்தான் ப்ரயோஜனம். அந்த அநுபவம் ஹ்ருதயம் என்பதான உயிருக்குள்ளேயே ஏற்படுவது.

ச்ருதி, யுக்திகளினால் விளக்கமுடியாத அநுபவங்கள் ஸித்தாந்தம் செய்கிற ஆசார்ய புருஷர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். இவற்றைக் காட்டியும் ஒரு ஆசார்யர் தாம் முடிவாகச் சொல்லவந்த பேரநுபவத்துக்குப் பக்கபலம் உண்டாக்கலாம். அந்த மஹான்களுக்குத்தான் என்றில்லை. நம்மைப் போன்றவர்களுக்குக்கூடச் சில அநுபவங்கள் ஏற்படுகின்றன. அவற்றுக்கு புத்தி யுக்தியால் காரணம் சொல்லமுடியாது. ஒரு தாயாரின் நிறைந்த அன்பு, ஒரு ஸுஸ்வரமான வீணாகானத்தைக் கேட்டு அப்படியே சொக்கிப் போவது, நல்லதாக இல்லாததாகவும் இதே மாதிரி பல விஷயங்களை அநுபவத்தில் தெரிந்து கொள்கிறோம். இதற்கெல்லாம் யுக்தி காட்டமுடியுமா? இப்படிப்பட்ட அநுபவங்களை எடுத்துக்காட்டி, "இப்படியிப்படி ப்ரத்யக்ஷ அநுபவம் இருக்கிறதோ, இல்லையோ? நீயே பார்த்திருக்கிறாயோ, இல்லையோ? இதே அடிப்படையில் நாங்கள் ஸித்தாந்தம் பண்ணுகிற இந்த ஸமாசாரங்களையும் ஏற்றுக்கொள்" என்று ஒரு ஆசார்யர் compare பண்ணி (ஒப்புவமை காட்டி), parallel (இணை) காட்டி விஷயத்தை ஸ்தாபிப்பது, ச்ருதி-யுக்தி-அநுபவம் என்ற மூன்றில் கடைசியான அநுபவம் என்பதன் கீழ்வரும்.

கடைசியில் மஹாநுபவமாக சிஷ்யனுக்கே கிடைக்கிற ஸித்திதான் ஸ்வாநுபூதி என்றும் அபரோக்ஷாநுபூதி என்றும் சொல்வது.

ஈச்வர பக்தி இருக்கிறவனுக்கே, அதோடுகூட அந்த ஈச்வர பக்திக்கு ஸமதையான குருபக்தியும் இருக்கிறவனுக்கே தத்வார்த்தமெல்லாம் பிரகாசிக்கும் என்று சொல்கிறபோது அந்த ப்ரகாசம் என்பது இந்த அநுபூதிதான். 'ப்ரகாசம்' என்பதை அப்படியே மொழி பெயர்த்த

Koviloor Digital Library

மாதிரிதான் அவர்களும் (மேல்நாட்டினரும்) Enlightenment என்றும் Illumination என்றும் சொல்கிறார்கள்!

ஆக, அது அநுபவ ப்ரகாசம்; வெறும் புத்தி ப்ரகாசமில்லை. (புத்தி என்பதை மூளை என்ற அர்த்தத்தில் சொல்கிறேன்.)

அநுபவம்தான் முக்யம். ஆனாலும் உபதேசம் மூளையோடு நிற்காமல் அநுபவமாகப் பழுக்கவேண்டுமானால் அதற்கு ஈச்வர பக்தியும், அதற்குக் கொஞ்சங்கூடக் குறைச்சலில்லாத குரு பக்தியும் இருந்தால்தான் முடியும். அதுதான் ஹ்ருதயம் என்கிற நிலத்தைக் கிளறிவிட்டு அநுபவம் ஊற்றெடுப்பதற்கு வழி பண்ணும். அல்லது, இன்னொரு விதமாகச் சொன்னால், ஹ்ருதயம் என்ற கதவைத் திறந்துவிட்டு ஞான ஜ்யோதிஸ் உள்ளுக்குள்ளே அடிப்பதற்கு வழி ஏற்படுத்தும்.

மூளையைச் சாணை தீட்டிக்கொண்டு யுக்தியினால் உள்ளர்த்தங்களை பிரகாசிக்கச் செய்து கொண்டாலும்கூட அந்தப் பிரகாசமும் ஆத்ம ஜ்யோதிஸின் அநுபவ ப்ரகாசத்துக்கு வழி திறந்துவிடுவதாகத்தான் இருக்கவேண்டும். மூளை அஹம்பாவக் கொழுப்புத் பிடித்துத் தன்னையே நிலை நாட்டிக்கொள்ளாமல், இப்படி வழி விட்டு, விலகிப் போவதற்கு பக்தி வேண்டும். ஈச்வர பக்தியும் அதற்கு ஸமானமான குருபக்தியும் வேண்டும் என்று அந்த ச்லோகம் சொல்கிறது.

இரண்டு பக்திகளா?

இன்னம் கொஞ்சம் ஆலோசனை பண்ணிக்கொண்டு போனால், 'இதென்ன இரண்டு பக்திகள்? ஈச்வர பக்தி என்று ஒன்று, குரு பக்தி என்று இன்னொன்று? அப்புறம் இரண்டும் ஸம எடையா என்று நிறுத்துப் பார்ப்பது? இப்படி வேண்டாம்! ஈச்வரன்தானே தன்னையே நமக்குக் காட்டிக் கொடுப்பதற்காக குருவாக வந்திருக்கிறான்? அப்படித்

Koviloor Digital Library

தானே ஸகல சாஸ்த்ரங்களும் சொல்லியிருக்கின்றன? அத்தனை பெரியவர்களும் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்? அவரவர்களும் தங்கள் இஷ்டமூர்த்தியே குரு ஸ்வரூபத்தில் வந்து தங்களை நல்ல வழியில் திருப்பிவிட்டு அநுக்ரஹித்ததாகத் தானே சொல்கிறார்கள்?

(விநாயகர்) அகவலில் அவ்வையார் விக்னேச்வரரே குருவாக வந்தார் என்கிறாள்*. அவள் அப்படிச் சொல்கிறாளென்றால் அநுபூதி (கந்தரநுபூதி)யில் அருணகிரி நாதர் 'குருவாய் வருவாய்' என்று முருகனை வேண்டிக் கொண்டு முடிக்கிறார். இங்கே அநுபூதி பெறாத நம் சார்பில் மனமுருகி வேண்டிக்கொண்டிருக்கிறார். அவருக்கு முருகன் ஏற்கனவே குருவாக வந்து அநுக்ரஹம் செய்து அவர் அநுபூதி பெற்று விட்டவர். இதை (நூலின்) உள்ளே சொல்லியிருக்கிறார். 'எல்லாக் கார்யத்தையும் விட்டு விட்டு மௌனமாக ஆத்மாவுக்குள்ளே முழுகிப் போய்விடு; சும்மா யிரு, சொல்லற' என்று ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி தன்னிடம் சொன்னார்; உடனே அப்படியே ஸகல வஸ்துவும் மறைந்து போய் ஏக வஸ்துவில் தான் நின்று விட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இப்படி ஒரு உபதேசத்தைப் பண்ணி, அந்த உபதேசம் உள்ளநுபவமாகவும் ஆகுமாறு முருகன் பண்ணினானென்பது அவன் குரு ஸ்வரூபமாக வந்து விட்டான் என்பதையே காட்டும். மாணிக்க வாசகரும் திருப்பெருந்துறையில்—ஆவுடையார் கோவில் என்கிறது அந்த ஸ்தலத்தைத்தான்; அங்கே—குருந்த மரத்தடியில் குரு ஸ்வரூபமாக வந்து பரமேச்வரன் தம்மை ஆட்கொண்டு விட்ட பரம கருணையைப் பல இடங்களில் உருகி, உருகிச் சொல்லியிருக்கிறார்.

அருபரத்தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமை

---

* குரு வடிவாகிக் குவலயந்தன்னில் திருவடி வைத்து....

Koviloor Digital Library

என்கிற மாதிரி, எப்பேர்ப்பட்ட உத்க்ருஷ்டமான ஏக புருஷன் இப்படி இந்த பூலோகத்திலே நம் கண்ணுக்குத் தெரிந்து, நாம் கலந்து பழகும்படியாக குரு என்று வந்து அருள் பண்ணியிருக்கிறான் என்பதை நிறையச் சொல்லியிருக்கிறார்.

காளிதாஸன் அம்பாளைக் குறித்துச் செய்துள்ள 'நவரத்மாலிகை'யில் அவள் குரு ரூபத்திலே வந்து உயர்ந்த ச்ரேயஸ்களைக் காட்டினாள் என்கிறான் :

தேசிக ரூபேண தர்சிதாப்யுதயாம்

ஆனதினாலே, ஈச்வரனேதான் குருவாக வந்திருக்கிறான் என்று வைத்துக் கொண்டுவிட்டால்—'வைத்துக்கொள்வது' என்றால் கல்பிதமாக இப்படி அபிப்ராயம் ஏற்படுத்திக் கொள்ளுகிற மாதிரி த்வனிக்கிறது. அதனாலே கொஞ்சம் மாற்றிச் சொல்கிறேன். ஈச்வரனே குருவாக வந்திருக்கிறானென்பதுதானே நிஜம்? இதைப் புரிந்து கொண்டுவிட்டால் —அப்புறம் ஈச்வரனிடமும் பக்தி, அதே அளவுக்கு குருவிடமும் பக்தி என்று இரண்டு பக்திகளைச் சொல்லவேண்டியதில்லை. குருவே ஈச்வரன் என்று அந்த ஒருவரிடமே பூர்ணமாக மனஸைக்கொடுத்து ஒரே பக்தியாகப் பண்ணவேண்டுமென்று ஆகிவிடும்

இப்படி குரு ரூபத்தில் வந்திருக்கிற ஈச்வரனிடத்தில், அல்லது ஈச்வரனின் மநுஷ்ய ரூபமான குருவினிடத்தில் உயர்ந்த பக்தியை, பராபக்தி என்கிற உத்தமான பக்தியைச் செலுத்திவிட்டாலே உபதேசத்தின் உட்பொருளெல்லாம் உள்ளநுபவமாகப் புரிந்து அநுபூதி—ஜனன மரண நிவ்ருத்தியான மோக்ஷபதம்—கிடைத்துவிடும்.

பலனளிப்பவன் ஈச்வரனே!

பக்தி செலுத்துவதால் முக்தி கிடைத்துவிடுமென்று சொன்னால் நாம் செலுத்தும் அந்த பக்தியே நேராக முக்தியைக் கொடுத்து விடுகிறது என்று அர்த்தமில்லை. நாம்

Koviloor Digital Library

செய்கிற எதுவுமே தானாக எந்தப் பலனையும் தருவதில்லை. பலன்களைத் தருகிற பலதாதாவாக ஈச்வரனே இருக்கிறான். அவன்தான் பாப புண்யம் பார்த்து எல்லாருக்கும் எல்லாப் பலனையும் கொடுக்கிறான். அவ்விதத்தில் நாம் பண்ணுகிற பக்திக்குப் பலனாக அவன் பரம க்ருபை செய்து, ஞானத்தைத் தந்து, அந்த ஞானத்துக்குப் பலனாக மோக்ஷாநுபூதியைக் கொடுக்கிறான். ஆக, பலன் தருவது நாம் பண்ணும் பக்தியே அல்ல; அதற்குப் பிரதியாக ஈச்வரன் செய்யும் கிருபைதான் பலனைத் தருவது.

பக்தி நிஜமானதாக இருந்தால் பக்தி பண்ணுகிறவன் அதற்கு ப்ரதியே எதிர்பார்க்க மாட்டான். ப்ரதி ப்ரயோஜனம் எதிர்பார்த்து விட்டால் அது வியாபாரம்தானேயொழிய பக்தி இல்லை என்றே பாகவதாதி நூல்களில் சொல்லியிருக்கிறது. இப்படி பக்தன் (பிரதி வேண்டாமல்) இருந்தாலும் இவனிடமிருந்து நிஜமான பக்தியைப் பெற்றுக் கொண்ட பகவானுக்கு மனசு கேட்குமா? அதனால் அவன் க்ருபை பண்ணத்தான் பண்ணுவான். ஞானத்தை அநுக்ரஹிக்கத்தான் செய்வான். பக்தனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தில் சேர்க்கத்தான் செய்வான்.

இரண்டு க்ருபைகளா?

குருவே ஈச்வரன், ஈச்வரனே குரு என்கிறபோது குரு க்ருபை என்ற ரூபத்தில் இந்த மஹா பெரிய பலனை அவன் கொடுத்து விடுகிறான் என்று அர்த்தமாகிறது. முதலில் குருவாக உபதேசம் பண்ணுகிறான். அது மூளை லெவலோடு நிற்காமல் அந்தராத்மாவுக்குள்ளே புகுந்து அநுபவமாக வேண்டுமானால் நாம் பரிபூர்ணமான பக்தியை அந்த குருவிடம் செலுத்த வேண்டும். இதற்கு ப்ரதியாக குரு பரம க்ருபை பண்ணுகிறபோது ப்ரத்யக்ஷமான அநுபூதி பிறக்கும்.

இரண்டு பேரிடம் பக்தியா என்கிற மாதிரியே இரண்டு பேருடைய க்ருபையா—ஈச்வர க்ருபை என்று ஒன்று, குரு

Koviloor Digital Library

க்ருபை என்று ஒன்று. இப்படி இரண்டு க்ருபைகளா—என்ற கேள்வி வந்தால் பதில் சொல்வது கஷ்டம்தான். ஒருத்தனுக்கு ஞான ப்ரகாசம் உண்டாக்குவதில் குரு, ஈச்வரன் என்ற இரண்டு பேரின் க்ருபைகளில் ஒவ்வொன்றுக்கும் எத்தனை பெர்ஸென்ட் என்று கணக்குப் பார்க்கவேண்டியதாகும்! [சிரிக்கிறார்.] ஞானப் பிரஸாத மென்பது இரண்டு க்ருபைகளுக்கிடையில் பங்குபோட்டு நடத்தக்கூடிய விஷயமில்லை என்றும், ஈச்வரன் என்ற ஒருத்தனுடைய ஒரே க்ருபைதான் குருவின் மூலமாக குருக்ருபை என்பதாக வருவதும் என்றும் ஆலோசித்துப் பார்த்தால் தெரியவரும்.

எல்லா வணக்கமும் போய்ச்சேருவது ஒருவனையே!

எல்லா தேவர்களுக்குச் செய்யும் நமஸ்காரமும் ஒரே ஈச்வரனைத்தான் போய்ச் சேருகிறது என்று சாஸ்த்ரம் சொல்கிறது :

ஸர்வ தேவ நமஸ்கார : கேசவம் ப்ரதிகச்சதி

ஒரே பரமாத்மாதான் பல ஸ்வாமிகளாக ஆகியிருக்கிறது. ஆஸாமிகள் அத்தனை பேராகவும்கூட அதுவேதான் ஆகியிருக்கிறது. ஆகையால் எந்த ஸ்வாமிக்குப் பண்ணும் நமஸ்காரமும்—'எந்த ஆஸாமிக்குப் பண்ணும் நமஸ்காரமும்' என்றும் சேர்த்துக்கொள்ளவேண்டும்—ஏக பரமாத்மாவைத்தான் சென்றடைகிறது.

'கேசவம்' என்று சொல்லியிருப்பதை க்ருஷ்ணர் என்ற அவதாரம் என்றோ அல்லது அநேக தெய்வங்களில் ஒன்றாக இருக்கப்பட்ட விஷ்ணு என்றோ அர்த்தம் பண்ணிக்கொள்ளக் கூடாது. க, அ, ஈச, வ என்ற நாலு வார்த்தைகளும் சேர்ந்து 'கேசவ' என்றாகியிருக்கிறது. க என்றால் ப்ரம்மா. அ என்றால் விஷ்ணு. வேத புராணாதிகளில் பல இடங்களில் ப்ரம்ம விஷ்ணுக்களுக்கு இப்படி (முறையே க என்றும், அ என்றும்) பெயர் சொல்லியிருக்கிறது. ஈச என்பது சிவன்

Koviloor Digital Library

என்பது எல்லோருக்கும் தெரிந்தது. க, அ, ஈச மூன்றும் சேர்ந்து 'கேச' என்றாகும். அதாவது ப்ரம்ம—விஷ்ணு—ருத்ரர்களான த்ரிமூர்த்திகளைக் 'கேச' என்பது குறிக்கும். 'வ' என்பது தன் வசத்தில் வைத்துக்கொண்டிருப்பதைக் குறிக்கும். த்ரிமூர்த்திகளை எவன் தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறானோ, அதாவது த்ரிமூர்த்திகளும் எவனுக்குள் அடக்கமோ அவனே கேசவன். ஆசார்யாள் இப்படித்தான் பாஷ்யம் பண்ணியிருக்கிறார்*. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார மூர்த்திகளான மூவரையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவன் என்றால் அவன் ஏக பரமாத்மாவாகத்தான் இருக்கவேண்டும். எந்த ஸாமிக்கும் ஆஸாமிக்கும் செய்கிற நமஸ்காரத்தை அந்த ஸாமிக்குள், ஆஸாமிக்குள் இருந்து கொண்டு அவன்தான் வாங்கிக்கொள்கிறான். ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி.

நமஸ்காரம் என்றால் என்ன? உடம்பினாலே தண்டால் போடுகிற மாதிரி காரியமா? இல்லை. இங்கே காரியம் இரண்டாம் பக்ஷம். பாவம்தான் முக்யம். பக்தி பாவத்தைப் பல விதமாகத் தெரிவிக்கத் தோன்றுகிறது. அப்போது பகவானுக்கு முன்னால் தான் ஒண்ணுமே இல்லை என்று மிக எளிமையோடு விழுந்து கிடப்பதைக் காட்டவே நமஸ்காரம் என்ற க்ரியை. ஆக, நமஸ்காரம் என்று க்ரியையைச் சொன்னாலும் அது பக்தி என்ற உணர்ச்சியைக் குறிப்பது தான். எவருக்குச் செய்கிற நமஸ்காரமும் ஒரே பரம் பொருளான கேசவனுக்குப் போய்ச் சேரும் என்று சொன்னால், எவரிடம் செலுத்தும் பக்தியும் பரமாத்மா என்ற ஒருவனுக்கே அர்ப்பணமாகும் என்றே அர்த்தம்.

ஒரே பக்திதான்; க்ருபையும் ஒன்றுதான்!

சற்று முன் நாம் பார்த்த விஷயம் இங்கே தெளிவாகி விடுகிறது. இரண்டு பக்திகளா, இரண்டு க்ருபைகளா என்று

---

* விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யம். 23-வது நாமம்.

Koviloor Digital Library

விசாரித்துப் பார்த்தோமல்லவா? அதற்கு இங்கே ஆன்ஸர் வந்து விடுகிறது. அத்தனை பேரிடம் செலுத்தும் பக்தியும் ஒருத்தனிடம்தான் போய்ச் சேருகிறது என்ற பிறகு, குரு பக்தி, ஈச்வர பக்தி என்று இரண்டைப் பிரித்துச் சொல்ல அவசியமேயில்லாமலாகிறது. குருவிடம் செலுத்தும் பக்தியும் ஈச்வரனிடம்தான் போய்ச் சேரப்போகிறது என்கிற போது பிரித்துப் பிரித்து இவருக்கு, அவனுக்கு என்று இரண்டு பக்தி பண்ணுவானேன்?

அப்புறம் க்ருபைக்கு வருவோம். 'குரு க்ருபை, ஈச்வர க்ருபை—ஒன்று, இரண்டா?' என்கிற விஷயம். அதற்கும் இங்கே ஆன்ஸர் கிடைத்துவிடுகிறது. எந்த ஸ்வாமி, அல்லது மஹாபுருஷர்கள், குரு போன்றவர்கள் க்ருபை செய்கிறார்களென்றாலும் எதை முன்னிட்டுச் செய்கிறார்கள்? பக்தியை முன்னிட்டே செய்கிறார்கள். நாம் பக்தியாக இருந்தால் அதற்கு ப்ரதியாகவே க்ருபை செய்கிறார்கள். நாம் செய்கிறது பக்தி. அதற்காக அவர்கள் செய்வது க்ருபை. பக்திக்கு அடையாளமாக நாம் நமஸ்காரம் பண்ணுகிறோம், அப்போது அவர்கள் அதற்குப் பதிலாக ஆசீர்வாதம் பண்ணுகிறார்களென்றால், அந்த ஆசீர்வாதமென்பது க்ருபைக்கு அடையாளமே.

ஸரி, எல்லா நமஸ்காரமும் ஒரு பரமாத்மாவுக்குத்தான் போகிறதென்றால், அதற்குப் பதிலாக நமஸ்கரிக்கப்படுபவர் எவர்களானாலும் அவர்கள் பண்ணுகிற ஆசீர்வாதமெல்லாமும் அந்த ஒருவனிடமிருந்தே வருகிறது என்றுதானே அர்த்தம்? நமஸ்காரத்தை இவர்கள்—இந்த ஸாமிகள், ஆஸாமிகள் எவரானாலும் இவர்கள்—வாங்கிக் கொள்ளவில்லை, இவர்களுக்கு அந்த 'ரைட்' இல்லை என்கிற போது ஆசீர்வாதம் மட்டும் இவர்கள் எப்படிப் பண்ண முடியும்? ஈச்வரனுக்குச் செய்யப்பட்ட நமஸ்காரத்துக்குப் பதிலாக இவர்கள் யார் ஆசீர்வாதம் பண்ண? அதனால் விஷயம் தெரிந்தவர்களாயிருந்தால், ஒரு மரியாதையை, ஸம்ப்ரதாயத்தை உத்தேசித்து ஆசீர்வசனம் சொன்னாலும்,

Koviloor Digital Library

தங்களுக்குச் செய்யப்பட்ட நமஸ்காரத்தை வாஸ்தவத்தில் அவனுக்கே அர்ப்பணம் பண்ணிவிட்டு, 'அப்பா! இந்தக் குழந்தையை நீ எப்படி ஆசீர்வாதம் பண்ண நினைக்கிறாயோ அப்படிப் பண்ணு' என்று தாங்களும் மனஸுக்குள் அவனிடம் ஒரு நமஸ்காரம் பண்ணிக் கேட்டுக்கொள்ளத்தான் செய்வார்கள். நமஸ்காரம் பண்ணுகிறவனுக்காகப் பண்ணப் படுபவரும் ஈச்வரனிடம் மனஸுருகி வேண்டிக்கொண்டு நமஸ்காரம் பண்ணும்போது, ஈச்வரன் அவரை முன்னிட்டு அவனுக்கு இன்னும் கொஞ்சம் சேர்த்து க்ருபை பண்ணுவான்.

'உங்களுக்குப் பண்ணுகிற நமஸ்காரங்களையெல்லாம் நானே வாங்கிக் கொள்வேன். பதிலுக்கு ஆசீர்வாதம் மட்டும் நீங்கள் பண்ணவேண்டும்' என்று ஈச்வரன் நிச்சயம் இருக்கமாட்டான். ஸகல ஆசீர்வாதமும் அவன் பண்ணுவதுதான்.

'ரொம்பப் பெரியவா, மஹான்-னு சொல்றவா, அவாளெல்லாம் ஆசீர்வாதம் பண்ணினாளே, அப்படியும் பலிக்காமப் போயிடுத்தே!' என்று சில பேர் நொந்து கொள்வதைக் கேட்கிறோம். (இப்படி நடப்பதற்கு) என்ன அர்த்தம்? ஒன்று, அந்தப் பெரியவர், 'இவர்களுக்கு ஏதோ தற்கால சாந்தியாக இருக்கட்டும். எப்படியும் கர்மா இவர்களைப் பழிவாங்கத்தான் போகிறதென்றாலும், அப்படிப் பழிவாங்கின அப்புறம் இவர்கள் அழுதுவிட்டுப் போகட்டும். இப்போதே பிடித்து அழவேண்டாம். அதனால் கொஞ்சம் ஆறுதலாகத்தான் சொல்லி வைப்போமே' என்று நல்லபடியாக ஆசீர்வாதம் பண்ணியிருக்கலாம். அல்லது, ஏதோ ஒரு மஹாமாயை, அதன் விளையாட்டில், அவரும்கூட ஈச்வர ஸங்கல்பத்தைத் தெரிந்து கொள்ளாமல், அல்லது 'அவனுடைய ஆசீர்வாதம்தான் தன் மூலம் பாயவேண்டும்; தான் நிமித்த மாத்ரந்தான் (கடவுளின் கருவியளவுதான்)' என்பதை மறந்து, தானே ஆசீர்வாதம் பண்ணியிருககலாம். ஈச்வரனுடைய ஆசீர்வாதம் ஒருத்த

Koviloor Digital Library

ரிடம் புகுந்து அவருடைய ஆசீர்வாதம் மாதிரி வந்தா லொழிய எவருடைய ஆசீர்வாதமும் அதுவாகவே பலித்து விடாது.

சிஷ்யன், பக்தன் போன்றவர்களின் மனஸில் ஒரு நல்ல விநயமான எண்ணமாகப் புகுந்து அவர்களை நமஸ்காரம் பண்ண வைக்கிறவனுங்கூட ஈச்வரன்தான்! அப்புறம் அவர்கள் யாருக்கு நமஸ்காரம் செய்தாலும் அதை வாங்கிக் கொள்கிறவனும் அவன்தான். அதற்கப்புறம் அவர்களுக்குள் புகுந்து ஆசீர்வாதம் செய்கிறவனும் அவனேதான்.

பலருடைய நமஸ்காரங்களுக்கும் பாத்ரராகிற எல்லாருடைய ஆசீர்வாதங்களையும் பண்ணுவிக்கிறவன் அவனொருத்தன்தான். அதாவது எல்லா பக்திகளுக்குமாக,—அறியாத நிலையில் குரு பக்தி, ஈச்வர பக்தி என்று நாம் பிரித்துப் பிரித்துப் பலபேரிடம் செலுத்துகிற எல்லா பக்திகளுக்கும் பதிலாக—அப்படிப் பல ரூபத்திலிருக்கிறவர்கள் செய்கிற க்ருபைகளும் அவன் ஒருத்தனே செய்வது தான்.

குருவுக்கு ஸொந்தமாக க்ருபா சக்தி என்று ஒன்று எப்படி உண்டாகமுடியும்? ஸகல சக்திகளும் அந்த ஈச்வரன் ஒருவனைச் சேர்ந்தவைதானே? அவனோடு சேர்ந்திருந்து அவனிடமிருந்துதானே குருவும் சக்தி பெறுகிறார்? குரு என்கிறவர் அந்த ஸ்தானத்துக்கு உயர்ந்ததும் ஈச்வர க்ருபையால்தான். குருவான அப்புறமும் ஈச்வரனுடைய க்ருபையை நம்பி, அதைத்தான் பற்றிக்கொண்டு அவரும் இருக்கிறார். ஆகவே, அவருடைய க்ருபா சக்தி என்று தனியாக ஒன்று இல்லை. அதுவும் ஈச்வர சக்திதான். திருவருள், குருவருள் என்று இரண்டு சொல்வதில் குருவருள் என்பதும் திருவருளே இவர் மூலமாக வருவதுதான்.

ச்லோகப் பொருளில் மாறுதல்

இப்படி ஆராய்ந்து பார்த்துக்கொண்டு போனால் முதலில் சொன்ன ச்லோகத்தைக் கொஞ்சம் மாற்றிக்

Koviloor Digital Library

சொல்லும்படி ஆகும். (ச்லோகத்தில்) என்ன பார்த்தோம்? 'எவனுக்கு ஈச்வர பக்தி இருக்கிறதோ, அதற்குக் குறைச்சலில்லாத குரு பக்தியும் இருக்கிறதோ அவனுக்கு ரஹஸ்யார்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்கும்—அதாவது ஞான ஸித்தி, மோக்ஷ ப்ராப்தி பர்யந்தம் எல்லாம் கிட்டிவிடும்' என்று பார்த்தோம். இப்போது விசாரணை பண்ணிப் பார்த்ததில், ஈச்வரனையே குருவாக, அல்லது குருவையே ஈச்வரனாகக்கொண்டு ஒருவரிடம் ஒரே பக்தியை—இன்னொருவருக்கு மிச்சம் மீதி வைக்காமல் 'அநன்யம்' என்பதாக ஒருவரிடமே முழு பக்தியையும்—வைத்துவிட்டால் போதும்; அதுவே ஞான ப்ரகாசத்தைத் தந்து மோக்ஷத்தில் சேர்த்துவிடும் என்று தெரிகிறது.

நடுவிலே இன்னொரு விஷயமும் பார்த்தோம். எதுவுமே தானாகப் பலன் தராமல், பலதாதாவான ஈச்வரன்தான் பலன் தருகிறான் என்பதற்கேற்ப நம்முடைய பக்தியும் அதுவே ஞானம், மோக்ஷம் முதலானவற்றைத் தருவதற்கில்லை; நம்முடைய பக்தியைப் பார்த்து மெச்சி ஈச்வரன் காட்டுகிற க்ருபையினால்தான் பலன் கிடைக்கிறது என்று பார்த்தோம். அப்புறம் பல பேரைக் குறித்ததாகப் பல பக்திகள் இல்லை, ஒரே ஈச்வரனுக்கு உரித்தாகும் ஒரே பக்திதான் இருக்கிறது; இது போலவே பக்திக்கு ப்ரதியாகப் பெறும் க்ருபையும் பல பேர் பண்ணுவதில்லை, ஒரே ஈச்வர க்ருபைதான் பல பேர் மூலமாக வருகிறது என்று பார்த்தோம்.

இப்படிப்பட்ட பல ரூபங்களுக்குள் குரு ரூபத்தில் ஈச்வரன் க்ருபை பண்ணும்போதுதான் என்றும் அழியாத அமரமான ஸொத்தை ஒருவனுக்கு அநுக்ரஹிக்கிறான், ஞானச் செல்வத்தை அளித்து அவனை நித்யானந்தத்தில் சேர்க்கிறான்.

ஒருவரே போதுமெனில் அவர் ஈச்வரனா, குருவா?

இப்போது ஒரே ரூபத்தில் முழு பக்தியையும் செலுத்திவிட்டாலேபோதும் என்கிறபோது, 'ஈச்வரன்தானே குரு?

Koviloor Digital Library

அதனுல் ஈச்வரனிடமே அநன்ய பக்தி பண்ணிவிடுவோம்' என்று இருக்கலாமா? அல்லது 'குரு என்பவர் ஸாக்ஷாத் ஈச்வரன் தானே? குருஸ் - ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம என்கிறுமே? அதனுல் குருவிடமே பூர்ண பக்தியும் செலுத்தி விடுவோம்' என்று இருக்கலாமா?

இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற topic குருவாக இருப்பதால் குருவே ஈச்வரன் என்று அவர் ஒருத்தரிடமே முழு பக்தி விச்வாஸமும் வைத்து சரணுகதி பண்ணிவிட வேண்டுமென்றுதான் சொல்லப் போகிறேன்.

மாறுபாட்டில் ருசியே மனித இயற்கை

மநுஷ்ய நேச்சர் (எனக்குத்) தெரியாமலில்லை. ஸாதாரண மநுஷ்யர்கள் என்றில்லை, பக்குவ ஸ்திதியில் ரொம்ப தூரம் முன்னேறியவர்களாக இருந்தால்கூட, மநுஷ ஸ்வபாவம் எப்படியிருக்கிறதென்ருல் : ஒன்றிலேயே எக்காலமும் முழு மனஸையும் கொடுப்பதென்ருல் முடிவதில்லை. எத்தனை நன்ருயிருந்தாலும் ஒன்றிடமே முழு ஈடுபாட்டை ஸதா காலமும் வைக்க முடிவதில்லை. இன்றைக்குச் சமையல்—ஸாம்பார், ரஸம், கறி—நன்ருகத்தானிருக்கிறது அத்ருப்திக்குக் கொஞ்சங்கூட இடமில்லை. ஆனுல் நித்யம் (தினந்தோறும்) இதே சமையல் என்ருல் பிடிக்கிறதா? கறி காய்களை, குழம்புத் தானை மாற்றத் தோன்றுகிறது! அப்புறம், 'இது எதுவுமே வேண்டாம், ஒரு நாள் சித்ரான்னங்களாகச் சாப்பிடலாம்' என்று தோன்றுகிறது. வித்வான் எத்தனை நன்ருகப் பாடினுலும் அதே பாட்டு, அதே ராகத்தை ஒவ்வொரு கச்சேரியிலும் பாடினுல் அலுத்துப் போகிறது. எதில் (எந்தத் துறையில்) போனுலும் இப்படித்தான் பல தினுஸாக, மாறுபாடாக வேண்டியிருக்கிறது. அவ்வப்போது ஒவ்வொன்றிடமும் முழு ஈடுபாடு இருந்தாலும்—இன்றைக்குத் தயிர்வடை என்ருல் சப்பு கொட்டிக்கொண்டு ஐந்து ஆறு என்று உள்ளே தள்ளினுலும், நாளைக்கு, நாளன்றைக்கு, நாலாம் நாள், அஞ்சாம் நாளும்

Koviloor Digital Library

அதுவேதான் என்றால், இன்றைக்குச் சப்புக் கொட்டினவர்களே அன்றைக்கு முகத்தைச் சுளிக்கிற மாதிரி—திரும்பத் திரும்ப அது ஒன்றேதான் என்று வரும்போது அதிலே ருசி, ஈடுபாடு குறைந்து விடுகிறது. இது தெரிந்துதான் நம்முடைய மதத்தில் இத்தனை ஸ்வாமி, விதவிதமான ரூபம், விதவிதமான அலங்காரம், விதவிதமான வாஹனம், அததற்கும் விதவிதமான பூஜா பத்ததி என்று வைத்திருக்கிறது.

கோயிலுக்குப் போகிறோம். பிள்ளையார் ஸந்நிதியில் நிற்கிறோம். அப்போதைக்கு ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸு குவிந்த மாதிரிதான் இருக்கிறது. அப்புறம் கையை, காலை சொறிந்து கொள்கிறோம். மனஸு பிய்த்துக்கொண்டு கிளம்பி விடுகிறது! அப்படியே எந்தக் குப்பைத் தொட்டிக்கு வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விட்டு விடுவதா? அப்படி விட்டு விடாமல், நல்லதிலேயே, தெய்வ ஸம்பந்தமாகவே அந்த மனஸை இழுத்தால்தானே தேவலை? எப்படி இழுப்பது? பாழும் மனஸுக்கு இந்த விக்நேச்வர மூர்த்தி, தொப்பையும் தொந்தியுமாக இத்தனை அழகாக உட்கார்ந்திருந்துங்கூட, அவரிடமே தொடர்ச்சியாக ஒட்டிக்கொண்டிருக்க முடியவில்லையே! 'பரவாயில்லையப்பா!' என்று இங்கேதான் நம் ஸமயாசார்ய புருஷர்கள் ஆறுதல் தர வருகிறார்கள். 'மனஸின் நேச்சர் அப்படித்தான் அப்பா! அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் திருத்தி நிலையாக ஒருமுகப் படுத்த முடியுமப்பா! அதற்கு எதிலும் 'சேஞ்ச்' வேண்டும். தெய்வ ஸம்பந்தமாகவுங்கூட அப்படி வேண்டும். அதையும்தான் நம்முடைய மதம் தருகிறதே! விக்நேச்வரரிடம் ஈடுபாடு குறைகிறதா, அழாதே! இதோ 'சேஞ்சா'க ஸுப்ரஹ்மண்யர் ஸந்நிதி, அப்புறம் இன்னம் பல 'சேஞ்ச்'கள்—அம்மன், ஸ்வாமி, தக்ஷிணாமூர்த்தி, துர்க்கை, நடராஜா, மநுஷ்ய ரூபத்தில் வந்த அறுபத்து மூவர் என்று எல்லாம் ஒன்று சேர்த்துத்தானே கோவில் என்று வைத்திருக்கிறோம்? ஒவ்வொன்றிடமும் ஒரு க்ஷணம், இரண்டு க்ஷணம் மனஸ்

Koviloor Digital Library

ஈடுபட்டுக் கும்பிட்டு விட்டுப்போயேன். மொத்தத்தில் ஒரு கணிசமான நாழி உன் மனசு தெய்வ ஸம்பந்தமாகவே ஈடுபட்டிருக்கும்' என்கிறார்கள்.

நம்முடைய மதத்தின் சிறப்புக்களிலெல்லாம் பெரிய சிறப்பாக ஒன்று தோன்றுகிறது: ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றேதான் என்று காட்டுகிற ஒரே மதம் ஹிந்து மதம்தான் என்று பலபேர், அறிவாளிகள், அந்நிய தேசத்தவர்கள்கூட, ரொம்பவும் சிறப்பித்துச் சொல்கிறார்கள். 'எந்த மதத்திலும் இல்லாத அத்வைத ரத்னம் இருக்கிற இந்த மதத்தில், எந்த மதத்திலும் இல்லாத அளவுக்கு இத்தனை த்வைதமான ஆசார அநுஷ்டானங்களும், சாமிப்பட்டாளமும் இருக்கிறதே! இவை ஒன்றுக்கொன்று ஒரே முரண்பாடாக இருக்கிறதே' என்று அவர்களில் ரொம்பப் பேர் வருத்தப்படுகிறார்கள். ஆனால் எனக்கோ என்ன தோன்றுகிறதென்றால், அத்வைதம் நம்முடைய பெரிய சிறப்புத்தான் என்றாலும், அதைவிடவும் சிறப்பாக எது தோன்றுகிறது என்றால், இப்படி ஒன்றேயான அத்வைதத்தைச் சொன்ன மதத்திலேயே வித்யாஸம் வித்யாஸமாக இத்தனை வர்ணாச்ரம வ்யவஸ்தைகளும், இத்தனை பட்டாளமாக தெய்வங்களும் வைத்திருப்பதுதான்! அத்வைதம், ஏக பரமாத்மா என்பது ஐடியல். இத்தனை ஸ்வாமி பட்டாளம், இத்தனை விதமான ஆசார வ்யவஸ்தைகள் என்பது ப்ராக்டிகல். ப்ராக்டிகலில் ஆரம்பித்து க்ரமேண (படிப்படியாக) முன்னேறினால்தான் ஐடியலுக்குப் போய்ச் சேர முடியும். இப்போதே ஐடியல் என்று யத்தனம் பண்ணினால் ஒன்று தோல்வியாக ஆகும், அல்லது, அதைவிடத் தப்பாக ஹிபாக்ரிஸியாக, போலி வேஷமாகத்தான் ஆகும். அத்வைதத்தைச் சொன்ன மதத்தில் இத்தனை த்வைதத்துக்கு இடம் கொடுப்பதா என்று கொஞ்சங்கூடத் தயங்காமல், ஜனங்களின் மனப்பான்மையை நன்றாகப் புரிந்துகொண்டு, அநுதாபத்துடன், பரம கருணையுடன் இத்தனை தர்மாசாரப் பிரிவினைகளையும், சாமிப் பட்டாளத்தையும் இடம் கொடுத்து வைத்துக்கொண்டிருப்பதுதான் சிறப்புக்களில் பெரிய சிறப்பு.

Koviloor Digital Library

அதனால்தான் அத்வைத ஆசார்யாளான நம்முடைய பகவத் பாதாளே வர்ணாச்ரம வ்யவஸ்தைகளையெல்லாம் மறுபடி நன்றாக ஒழுங்குபடுத்தி நிலைநாட்டினார். பஞ்சாயதனம் என்று ஐந்து தெய்வங்களை* வைத்துப் பூஜை பண்ணும்படியாக ஏற்பாடு செய்தார். அதோடு, 'ஸுப்ரஹ்மண்யரையும் பூஜை பண்ணு' என்கிற மாதிரி (ஸுப்ரஹ்மண்ய) புஜங்கம் பாடி வைத்திருக்கிறார். ஷண்மத ஸ்தாபனம் என்று பண்ணும் போது அதில் (ஸுப்ரஹ்மண்ய உபாஸனையான) கௌமாரம் என்பதையும் சேர்த்துக்கொண்டார். இன்னும், ராமன், க்ருஷ்ணன், நரஸிம்மமூர்த்தி, அம்பாள் என்று எடுத்துக் கொண்டால் அதிலேயே த்ரிபுரஸுந்தரி, பவானி, ப்ரமராம்பா, சாரதாம்பா என்று பல ரூபபேதங்கள், கங்காதி புண்ய நதிகள்—என்று ஒன்று பாக்கியில்லாமல் அத்தனை சாமிப்பட்டாளத்தின் மேலேயும் ஸ்தோத்ரங்களைப் பாடி வைத்திருக்கிறார்.

அநன்ய பக்தி : ஆதர்சத்துக்கான யுக்தியே

ஆனதினால், இப்போது நான் ஒரே மூர்த்தியிடம்—தெய்வ மூர்த்தியோ, குரு மூர்த்தியோ ஏதோ ஒன்றிடமே—பூர்ண பக்தியும் வைப்பதைப் பற்றி விசாரணை பண்ணி, குருவிடமே அப்படி வைத்துவிட்டால் போதும் என்று முடிக்கப் போவதால் நீங்கள் எல்லாரும் இப்போதே அப்படிப் பண்ண ஆரம்பித்துவிட வேண்டுமென்று அர்த்தமில்லை. [சிரித்துக் கொண்டே] எனக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, என்னுடைய சந்த்ரமௌளீச்வரரை விட்டு விட்டுப் போய் விட்டீர்களானால் என்ன பண்ணுவது? அவரில்லாமல் எனக்கு எப்படி பிக்ஷை, பிழைப்பு நடக்கும்? அவரில்லாமல் மடம் என்ன ஆகிறது? ஆசார்யாள்தானே இப்படி மடங்கள் வைத்து, அவற்றில் தன் பெயரை வைத்துக்கொண்டிருக்

---

* சிவன், சக்தி, திருமால், விநாயகர், சூர்யன் ஆகிய ஐந்து தெய்வங்கள். அடுத்துச் சொல்லப்படும் ஷண்மதங்களில் கௌமாரம் தவிர எஞ்சிய ஐந்து வழிபாட்டு முறைகள் இவ்வைந்து கடவுளர் குறித்தவையே.

Koviloor Digital Library

ரும் குருக்களே இத்தனை ஸ்வாமிகளையும் வைத்துகொண்டு ஒவ்வொன்றுக்கும் பூஜை செய்யவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறார்! இது என் பிழைப்பைப் பற்றிய விஷயம். உங்களை எடுத்துக்கொண்டாலும், விதவிதமான மூர்த்திகள் உங்களுக்கு வேண்டித்தானே இருக்கிறது? ஏதோ ஒரு ரூபம், அதிலேயே பூர்ணத்ருப்தி என்கிற எண்ணம் வரவில்லைதானே? பாட்டில் ராகமாலிகை மாதிரி ஸ்வாமியிலும் பலதைக் கோத்துக் கொடுத்தால்தானே ரஸமாயிருக்கிறது? ஆகையினால் நான் 'ஒன்றிடமே அநன்ய பக்தி' என்று ப்ரஸங்கம் பண்ணப் போவதெல்லாமும் ஐடியலை ஞாபகப் படுத்தத்தானே ஒழிய அதை இப்போதே அநுஸரிப்பதற்காக அல்ல! யுக்தி, அநுபவம் என்று இரண்டு சொன்னேனே, அதிலே யுக்தியாகவே இப்போது அநன்ய பக்தி பற்றிச் சொல்லப் போவது. அது இப்போதே உங்கள் அநுபவமாகி விடவேண்டுமென்று அர்த்தமில்லை.

அநன்ய பக்தி : நடைமுறை சிரமங்கள்

ரொம்பவும் உயர்ந்த நிலைக்குப் போய்விட்டால் அநன்ய பக்தி என்பது ஆத்மாவுக்கு அன்யமாய் எதுவுமே இல்லை என்று அதிலேயே ஆணி அடித்த மாதிரி நின்று விடுகிற ஞானமாகி விடுகிறது. அதற்கு அடுத்த நிலையில், மனஸே அடியோடு போகாத நிலையில், அந்த மனஸுக்கு ஆலம்பனமாக ஏதோ ஒன்றே ஒன்று மட்டும் தேவைப்பட்டு அதிலேயே அது பூர்ணமாக நீடித்துத் தோய்ந்திருக்கின்ற யோக்யதை கிடைத்திருக்கும். அப்போது வேண்டுமானால் ஒரு மூர்த்தியிடமே அநன்ய பக்தி பாராட்டலாம். மற்றபடி, பல மூர்த்திகளிடம், அவை ஒவ்வொன்றும் ஒரே பரமாத்மாவின் தோற்றமே என்ற உணர்வோடு, அவற்றுக்கிடையே ஏற்றத் தாழ்வுகள் இல்லை என்ற ஸமரஸ பாவத்தோடு பக்தி செலுத்தத் தோன்றுவதுதான் மநுஷ மன இயற்கை. அதிலே தப்புமில்லை.

ஒரே மூர்த்தியிடம் பக்தி, அது குரு மூர்த்தியே என்று சொன்னால் இன்னொரு தினுஸான கேள்விகூட எழும்பலாம்.

Koviloor Digital Library

ஒருவருக்கே ஒன்றுக்கு மேற்பட்ட குரு இருக்கலாம். வெவ்வேறு சாஸ்திரங்களை வெவ்வேறு குருவிடம் ஒருவர் படித்திருக்கலாம். வெவ்வேறு மந்த்ர தீக்ஷைகள் வெவ்வேறு குருவிடமிருந்து பெற்றிருக்கலாம். 'பெற்றிருக்கலாம்' என்ன? உங்களிலேயே தீக்ஷை ஆனவர்களில் பல பேருக்கு அப்படித்தான் இருக்கும். நீங்கள் இந்த விஷயமாக யோசித்துப் பார்க்காவிட்டாலும், சொல்கிறேன். உங்களுக்கு ப்ரம்மோபதேசம் பண்ணியது யார்? தகப்பனார் தானே? அதாவது அவர்தான் உங்களுக்கு காயத்ரீ தீக்ஷை தந்த குரு. பல பேருக்கு இந்த விஷயம் தோன்றுவதே இல்லை. மந்த்ர தீக்ஷை என்றால் ஏதோ பஞ்சாக்ஷரீ, அஷ்டாக்ஷரீ மாதிரி பண்ணிக்கொள்வதுதானென்று நினைக்கிறார்களே தவிர, தங்களுக்கு 'மந்த்ர ராஜம்' எனப்படுகிற காயத்ரீ தீக்ஷை ஆகியிருப்பதோ, அப்படி தீக்ஷை கொடுத்த குரு தன்னுடைய பிதா என்பதோ பலபேருக்கு ஞாபகமே இருப்பதில்லை! அதோடுகூட பஞ்சாக்ஷரீ, அஷ்டாக்ஷரீ போன்ற ஏதோ ஒரு மந்த்ரமும் உபதேசமான வர்கள் உங்களில் இருப்பீர்கள். பெரும்பாலும் இவற்றைத் தகப்பனாரிடமிருந்து இல்லாமல் வேறொருவரிடமிருந்துதான் வாங்கிக்கொண்டிருப்பீர்கள். இப்போது ஒன்றுக்கு மேற்பட்ட தீக்ஷா குரு ஆகிவிடுகிறதல்லவா? ரொம்பப் பெரியவர்களாக இருந்த சில பேருக்கே ஒன்றுக்கு மேற்பட்ட குருமார்கள் இருந்திருப்பதுண்டு. சாஸ்த்ரங்களை உபதேசித்த வித்யா குரு ஒருவராகவும், ஸந்நியாஸம் கொடுத்த ஆச்ரம குரு இன்னொருவராகவும் இருப்பார்கள். இரண்டு குருக்களையுமே ஸ்தோத்ரம் பண்ணி எழுதியுள்ள பெரியவர்கள் இருக்கிறார்கள்.

இன்னங்கூட ஒன்று. குரு பீடங்களாக மடாலயங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒரே ஸமயத்தில் இன்றைய மடாதிபதி, வருங்கால மடாதிபதியான இளவரசுப் பட்டம் என்று இரண்டு பேர் இருப்பதுண்டு. நாமே நிறைய இப்படி

Koviloor Digital Library

ஒரே மடத்தில் ஸீனியர் ஸ்வாமி, ஜூனியர் ஸ்வாமி என்று பார்க்கிறோம். இரண்டு பேருமே குரு ஸ்தானம்தான்.

இதெல்லாம் போக, ஜபம் த்யானம் என்று உட்காரும் போதே குரு பரம்பரை என்று ஆதியிலிருந்து அநேக குருக்களை த்யானம் பண்ணவேண்டுமென்று விதி இருக்கிறது.

ஆகையால் இப்படி குருவாகவே பலபேர் இருக்கிற போது ஒரே குருவிடம் அவரே ஈச்வரன் என்று முழு பக்தியையும் அநன்யமாகச் செலுத்துவது என்றால் அது நடைமுறைக்கு முடியாமல் ச்ரமமாகத்தானே ஆகும்? ஒரே பக்தியாவேசமாக 'இவர்தான் நமக்கு ஸகலமும்' என்று ஒருத்தரிடமே மனஸைக் கொடுத்துவிட்ட சில பேருக்குத்தான், 'இன்னொருவரை நினைப்பானேன்? அத்தனை குரு பரம்பரையும், அத்தனை சாமி பட்டாளமும் இவருக்குள் தான் அடக்கம்' என்ற த்ருட நம்பிக்கை உண்டாகி, மனஸும் அதன் ஸாமான்ய நேச்சர்படி 'சேஞ்ஜ்', 'சேஞ்ஜ்' என்று பறக்காமல், அந்த ஒரு குரு சரணத்திலேயே ஒட்டிக் கொண்டுகிடக்கும்.

மனஸே போய்விடுகிற ஞானத்துக்கு அடுத்தபடியாக அந்த மனஸ் நாலாதிசையில் ஓடாமல் ஒரே ரூபத்தோடு த்ருப்திப்பட்டு, அதுவே ஆலம்பனம் என்று இறுகப்பிடித்துக் கொண்டு லயித்துப் போகிற உசந்த நிலையை நினைத்துப் பார்த்துக்கொண்டோமானால், அப்படிப்பட்ட நிலையில்தான் மனஸானது சிதறாத பக்தியினால் பற்றிக்கொள்ள வேண்டிய ஒரே வஸ்து ஈச்வரன் என்ற குருவா, அல்லது குரு என்ற ஈச்வரனா என்ற கேள்வி எழும்பும்; அதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஈச்வரனே குரு என்று பக்தி பண்ணுவதை விட, குருவையே ஈச்வரன் என்று பக்தி பண்ணுவதை அங்கே அந்த இடத்தில்தான் ஏற்றதாக இப்போது உயர்த்திச் சொல்லப்போகிறேன்.

Koviloor Digital Library

'ஈசனே குரு' என்பதும், 'குருவே ஈசன்' என்பதும்

இந்த இரண்டுக்குமிடையில் என்ன வித்யாஸம், புரிகிற தோல்லியோ? 'ஈச்வரனையே குரு' என்றால், 'இந்த லோகத்தில் மநுஷ்ரூபத்தில் தெரிகிற எந்த குருவையும் நாம் தேடிப் போகவேண்டாம்; ஈச்வரனொருத்தனிடமே பக்தி பண்ணுவோம்; அவனே நல்வழி காட்டுகிற குருவாக நம்மை அழைத்துப்போகட்டும்' என்றிருப்பது. 'குருவையே ஈச்வரன்' என்றால், அதுதான் நான் விந்நியாஸப் படுத்தப் போகிற விஷயம்: 'ஈச்வரன் என்று கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒருத்தனை, அல்லது ஒரு சக்தியை, Power-ஐ நினைத்து பக்தி பண்ண வேண்டாம்; கண்ணுக்கு முன்னால் தெரிகிறாரே, குரு என்று—இவரே நமக்கு ஸகலமும், இவரே நமக்கு ஈச்வரன், கீச்வரன் எல்லாம்; இவரொருத்தரையே பக்தி பண்ணுவோம்' என்று இருப்பது.

குருவையே ஈசனாகக் கொள்வதெப்படி?

"அதெப்படி? அகிலாண்ட ப்ரபஞ்சங்களை ஆக்கிப் படைத்து ஆட்டுவிக்கிற ஈச்வரன் என்ற ஒருத்தனிடம் தனியாக பக்திவேண்டாம் என்று, மநுஷ்ய ரூபத்தில் நம் மாதிரி இருந்து கொண்டிருக்கிற குருவிடமே அநன்ய பக்தி செலுத்துவது என்றால் அதெப்படி?"

அகிலாண்ட ப்ரபஞ்சங்களை ஈச்வரன் ஆக்கட்டும், ஆட்டி வைக்கட்டும், அழிக்கட்டும். அதைப் பற்றி உனக்கென்ன வந்தது? அந்த மஹாபெரிய சக்தியில் உனக்கு வேண்டியது என்ன? துளிப்போற க்ருபை— உன் அழுக்கைப் போக்கடிப் பதற்காக; ஸம்ஸாரத்திலே மாட்டிக்கொண்டு முழிக்கிற உன்னை ரிலீஸ் பண்ணுகிறதற்காக. உனக்கு வேண்டியது உன் விமோசனம் தான். அகிலாண்ட வியவஹாரம் அவன் ஸமாசாரம். மாயையோ, லீலையோ, actual ஸ்ருஷ்டியோ எதுவானாலும் அது அவன் கார்யம். அவனுடைய மாயை அல்லது லீலை அல்லது ஸ்ருஷ்டியாக இருக்கிற அகிலாண்டங்

Koviloor Digital Library

களை அவன் என்ன பண்ணிக்கொள்கிறானோ பண்ணிக் கொண்டு போகட்டும். அதிலே நீ தலையிட்டு உனக்கும் ஒன்றும் ஆகவேண்டாம். அவனுக்கும் ஒன்றும் ஆக வேண்டாம். உனக்குத் தெரிவது, உன் அழுக்கும், நீ கட்டிலே மாட்டிக்கொண்டு கஷ்டப்படுகிறதும்தான். இது போயாகணும். இதைப் போக்குகிறது எதுவோ அது ஒன்று தான் உனக்கு வேண்டியது. போக்கடிக்கிற வஸ்துவை எவர் தருகிறாரோ அந்த ஒருத்தர்தான் உனக்கு வேண்டும். ஆகையினால் உன்னை காப்பாற்றி, விமோசனம் தருகிற அந்த வஸ்துவான ஞானத்தைத் தருபவராக குரு என்று இருக் கிறாரே, இவரொருத்தரே உனக்குப் போதும். உன்னைக் கடைத்தேற்றுபவர்தான் உனக்கு வேண்டுமேயொழிய, இதற்கதிகமாக அகிலாண்ட ப்ரபஞ்சங்களை ஆட்டி வைக்கிற மஹாசக்தன் என்பதற்காக ஒரு ஈச்வரன் வேண்டியதில்லை.

"ஆமாம், இந்த குரு எனக்கு ஞானம் தருகிறார் என்றால் அவருக்கு மட்டும் அந்த ஞானம் எங்கிருந்து வந்தது? அதை எனக்குத் தருகிற க்ருபை அவருக்கு இருக்கிறதென்றால் அதுவும் எங்கேயிருந்து வந்தது? எல்லாவற்றுக்கும் மூலம் ஈச்வரன்தானே?"

இருக்கட்டும்! நான்தான் சொன்னேனே, ஈச்வரன் ஸகலமும் நிரம்பிய ஸர்வசக்தி ஸமுத்ரமாகவே இருக்கட்டும். ஞான ஸமுத்ரமாக, க்ருபா ஸமுத்ரமாக எல்லாம் அவனே இருக்கட்டும். உன் அழுக்கை அலம்ப அத்தனை ஸமுத்ரமும் வேண்டாம்தானே? ஊற்றிலே, குழாயிலே கங்கை வருகிற தென்றால் அதைக் குடித்தாலே போதும்தானே? கங்கா ப்ரவாஹத்திலேயேதான் மொண்டாக வேண்டுமென்று இல்லையோல்லியோ? அந்த மாதிரி ஞானஸமுத்ரத்திலிருந்து, க்ருபா ஸமுத்ரத்திலிருந்து உனக்குப் போதுமான ஊற்றாக, குழாய் ஜலமாக குரு வந்திருக்கிறார். உனக்கு முடிந்த முடிவாக எந்த ரிலீஸ் வேண்டுமோ, எந்தப் பேரானந்தம் வேண்டுமோ அதைக் கொடுத்து தாஹம், தாபம் தணிவிப்பதற்கு அவரே போதும்.

Koviloor Digital Library

யாரோ ப்ரபு லக்ஷ ப்ராம்மண போஜனம் செய்யப் போகிறார். அதற்காக மலை மலையாக சாப்பாட்டு வகைகள் கொட்டிக் கிடக்கிறது. ஆனாலும் உனக்கு வேண்டியது ஒரு இலைச் சாப்பாடுதானே? உனக்கு ப்ரபுவைத் தெரியாது. ஆனால் அவருக்கு வேண்டப்பட்ட ஒருவரைத் தெரியும். இவரிடம் கேட்டுக்கொண்டால் இவரே காரியரில் போட்டு எடுத்துக்கொண்டு வந்து நீ இருக்கிற இடத்திலேயே கொடுத்துவிடுவார். அப்புறம் ப்ரபுவிடம் போய் நீ எதற்கு நிற்கவேண்டும்? சாப்பாடு அவருடையதாகவே இருக்கட்டும். அதற்காக, அவரைப் போய் நீ தொந்தரவு பண்ணவேண்டிய தில்லை. அவர் அதை எதிர்பார்க்கவும் இல்லை. 'உன்னிடம் வருகிறவர்கள் யாரானாலும் கொடுத்துவிட்டுப்போ' என்று அந்த வேண்டப்பட்ட நபருக்கு அவரே தாராளமாக உரிமை கொடுத்திருக்கிறார். அவரும் (அந்த நபரும்) ப்ரபுவின் சாப்பாட்டைத்தான் தாம் போடுகிறோமே தவிர, தாமாகவே போடுவதாக பாத்யதை கொண்டாடிக்கொள்வதில்லை. ஈச்வரன்தான் ஞானத்தை அநுக்ரஹிக்கும் சக்தியை குருவுக்குக் கொடுத்திருக்கிறான். அவரும் தாமே ஞானம் அளிப்பதாகக் கொஞ்சம்கூட உரிமை பாராட்டுவதில்லை. ஆனாலும் ஈச்வரனே இப்படி ப்ரியப்பட்டு மற்றவர்களுக்கு ஞானம் வழங்கும்படியான சக்தியை இவருக்கு, குரு என்கிற வருக்கு, வழங்கியிருக்கிறானென்றால், தங்களைக் கடைத் தேற்றுவதான பரம லக்ஷ்யத்தை நிறைவேற்றிவிடும் இந்த குருவையே சிஷ்யர்கள் ஸகலமுமாக நினைத்து அவரிடமே அநன்ய பக்தி செலுத்துவதும் அவனுக்கு உகப்பாகத்தானே இருக்கவேண்டும்?

* * *

குரு வழிபாட்டின் சிறப்பம்சங்கள்

ஈச்வரன் என்று தனியாக ஒருவனை வைத்துக்கொண்டு உபாஸிக்காமல் குருவையே அப்படி உபாஸிப்பதற்கு ஆதரவாகச் சில காரணங்கள் உண்டு.

Koviloor Digital Library

முக்யமாக, ஈச்வரன் நம் கண்ணுக்குத் தெரியவில்லை. அவனை மஹான்களின் வர்ணனைகளிலிருந்து பாவனையாகத் தான் மனஸில் கல்பித்துப் பார்க்க முடிகிறது. குருவோ கண்ணுக்குத் தெரிகிறார். அவரோடு நாம் கலந்து பழக முடிகிறது. நேருக்கு நேர் கேட்டுக்கொள்ள முடிகிறது. ஈச்வரனால் நமக்கு நடக்கவேண்டிய கர்ம நாசம், ஞான ப்ராப்தி எல்லாம் இவரே நடத்திக்கொடுக்கிறார்.

நாமே நேரே ஈச்வரனிடம் ப்ரார்த்தித்துக்கொண்டால் அவன் நமக்குச் செய்கிற அநுக்ரஹத்தைவிட ஜாஸ்தியாகவே நாம் அவனை ப்ரார்த்திக்காமல் குருவையே ப்ரார்த்திக்கும்போது, அந்த குருவின் மூலம் பெற்று விடலாம்! எப்படி என்கிறீர்களா? நாமே நேராக ஈச்வரனிடம் ப்ரார்த்திக்கிறோம் என்றால், நம்முடைய ப்ரார்த்தனா சக்தி எவ்வளவு? ரொம்பக் கொஞ்சந்தான். மனஸின் ஆழத்திலிருந்து தீவிரமாகப் பிரார்த்திக்கவே நமக்குத் தெரியாது. அதோடு நமக்கேதான் நாம் பிரார்த்தித்துக் கொள்கிறோம். நம்முடைய ஸொந்த நலனையேதான் ஈச்வரனிடம் வேண்டுகிறோம். இதற்கு அவன் செவி சாய்க்க மாட்டானென்றில்லை. ஆனாலும் நம்முடைய அல்ப ப்ரார்த்தனா பலத்தில் நமக்காகவே நாம் வேண்டிக் கொள்வதற்கு அவன் பெரிசாக எப்படி ஒரு பலன் தருவான்? ஆனால் நாம் குருவே எல்லாம் என்று இருந்து விட்டால், 'அவர் இந்தக் குழந்தைக்காக நாம்தான் ப்ரார்த்திச்சுக்கணும்' என்று ஈச்வரனிடம் நம் சார்பில் ப்ரார்த்தனை செய்வார். அவர் நம்மைப்போல ஈச்வரனை நேரில் தெரிந்துகொள்ளாதவரில்லை. அவருடைய ப்ரார்த்தனா சக்தி மிகவும் பலமானது. நமக்கு எட்டாக்கையனாக இருக்கும் ஈச்வரனுக்கு ஸமீபத்திலேயே இருப்பவர் அவர். தன்னுடைய வலுவாய்ந்த பிரார்த்தனா சக்தியோடு அவர் நமக்காக அவனிடம் வேண்டிக்கொண்டு, எடுத்துச் சொல்லி கேட்டுக் கொள்கிறபோது அவன் அதை நிச்சயம் கேட்கத்தானே கேட்பான்? நாம் எக்கேடு கெட்டுப் போனாலும் குருவுக்கு ஒரு

Koviloor Digital Library

நஷ்டமும் இல்லை. அப்படியிருந்தும் அவர் பரம கருணையோடு நமக்கு உபதேசம் பண்ணி, நம் அழுக்கைப் போக்கு வதற்காகப் பாடுபட்டு, ஸ்வய நலமே கொஞ்சங்கூடக் கலக்காமல் நம் பொருட்டாகவே ஈச்வரனிடம் வேண்டிக் கொள்கிறாரென்றால் அதற்கு வால்யூ ரொம்ப ஜாஸ்திதானே? நம்முடைய ஸாதனை, ப்ரார்த்தனை ஆகியவற்றுக்காக ஈச்வரன் ஏதோ கால் பங்கு, வீசம் பங்கு அநுக்ரஹம் பண்ணுவானென்றால், நமக்காக குரு ப்ரார்த்திக்கும்போது முழுப் பங்கும் பண்ணிவிடுவான். லௌகிகத்திலேயே பார்க்கிறோமோல்லியோ? கவர்னர், மந்த்ரி மாதிரி ஒருவரால் நமக்கு ஒரு கார்யம் நடக்குமென்றால் நாமே அவரிடம் போய் நிற்க முடியுமா? நமக்குப் பேட்டி கிடைக்குமா? அவரிடம் சாய்கால் உள்ளவராக இருக்கிற நமக்குத் தெரிந்த ஒருவரிடம் நாம் போய் முறையிட்டாலே போதுமானதாக இருக்கிறதல்லவா? இவருடைய சிபாரிசுக் காகவே கவர்னர் நம்மைப் பார்க்கக்கூடப் பார்க்காமல் நமக்கு வேண்டிய கார்யம் ஆவதற்கு உத்தரவு போட்டு விடுகிறாரல்லவா?

ஈச்வரனிடம் நாம் போகவேண்டாம். நாம் போய் நடத்திக்கொள்வதைவிட இன்னம் நூறு பங்கு நன்றாக நமக்கு அவனிடம் சொல்லி நடத்திக் கொடுப்பதற்காக இருக்கிற குருவிடம் போய் அவரிடமே முறையிட்டுவிட்டால் போதும்.

நாமாக நம் கர்மாவைக் கழித்துக்கொள்வது கஷ்டம் குருவுக்கு ஈச்வரன் கொடுத்திருக்கிற விசேஷ சக்தியால் அவர் நம் கர்மாவிலே எவ்வளவோ பங்கு கழிந்து போவ தற்கு ஸஹாயம் செய்வார். தம்முடைய தபோ சக்தியைக் கூட அதற்குச் செலவழிப்பார். பரம கருணாமூர்த்தியாகவும் த்யாகியாகவும் இருக்கப்பட்ட அவர் ஓரளவுக்குத் தாமே கூட நம் கர்மாவை வாங்கிக்கொண்டு அநுபவித்து, நமக்கு பாரத்தைக் குறைப்பார். இப்படி அவர் தம்மை வருத்திக் கொண்டுதான் நமக்கு ஈச்வரனிடமிருந்து உய்வு பெற்றுத்தர

Koviloor Digital Library

வேண்டுமென்றில்லை. அவர் அவனிடம் ரொம்ப நெருக்கமாக இருப்பவரானால் ஸ்வாதீனமாகவே அவன்கிட்டே, "இவனுக்காக இந்த அநுக்ரஹம் பண்ணு. பண்ணியே ஆகணும். [குரலை உயர்த்தி மிரட்டுவது போல:] என்ன, பண்றயா, இல்லையா?" என்பார். "ஆஹா, பண்றேன்" என்று ஈச்வரனும் அவர் சொன்னபடியே செய்து விடுவான்.

யதோக்தகாரி : சொன்ன வண்ணம் செய்த பெருமாள்

"சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்ற பெயரிலேயே காஞ்சீபுரத்தில் ஒரு கோவிலில் பகவான், மஹாவிஷ்ணு இருக்கிறார். "யதோக்தகாரி" என்று ஸம்ஸ்க்ருதத்தில் சொல்வார்கள். 'யதோக்த'—'யதா உக்த': 'சொன்னபடி', 'சொன்னவண்ணம்'; 'காரி'— செய்பவர்.

யார் சொன்னபடி பெருமாள் செய்தார்? குருவாக இருக்கப்பட்ட ஒருவர், தன் சிஷ்யன் ஊரைவிட்டுப் போகிறான், அப்போது பெருமாளும் அவன் பின்னே துரத்திக்கொண்டு ஓடவேண்டும்; அப்புறம் அவன் ஊருக்கே திரும்பி வருகிறான், அப்போதும் அவன் பின்னேயே துரத்திக் கொண்டு வந்துவிடவேண்டும் என்று 'ஆர்டர்' போட்டார்! பகவானுக்கே ஆர்டர் போட்டார்! அவர் சொன்னபடியெல்லாம் பகவானும் பண்ணினான். யதோக்தகாரி என்று பெயர் வாங்கினான்.

அந்த குரு யார்? சிஷ்யப்பிள்ளை யார்? ஏன் இப்படி (குரு) ஆர்டர் போட்டார்?

கொஞ்சம் கதை கேட்கலாம்.

ஆழ்வார்களில் திருமழிசையாழ்வார் என்பவர் ஒருவர். பூந்தமல்லிக்குக் கிட்டே இருக்கும் திருமழிசையில் பிறந்து வளர்ந்தவராதலால் ஊரை வைத்தே அவர் பேரைச் சொன்னார்கள். பெரியவர்களின் பேரைச் சொல்லப்படாது

Koviloor Digital Library

என்பதால் அந்த நாளில் இப்படியெல்லாம்தான் ஊரை வைத்து, அல்லது அவர்கள் செய்த காரியத்தை வைத்து, அல்லது அவர்களுடைய மஹிமையைக் குறிப்பிடுகிறமாதிரி இன்னொரு பெயரைச் சொல்வார்கள். பெரியாழ்வார்— பெரிய ஆழ்வார், நம்மாழ்வார்—நம்முடைய, அதாவது நமக்கு ரொம்ப ஸொந்தமான ஆழ்வார் என்பவையும் இப்படிப்பட்ட காரணப் பெயர்கள்தான். காரணப் பெயரே ப்ரஸித்தி பெற்று, அம்மா அப்பா வைத்த பெயர் மறந்து, மறைந்து போய்விடுவதுமுண்டு. திருமழிசையாழ்வாருக்கு பக்திஸாரர் என்று ஸம்ஸ்க்ருதப் பேர் சொல்கிறார்கள். அதுவும் காரணப் பெயராகவே இருக்குமோ என்னவோ? திருமழிசை என்பதில் மழிசை என்பது 'மஹீஸாரம்', அது மஹீஸார க்ஷேத்ரம் என்கிறார்கள். பூமிக்கே ஸாரமான ஊர் அது என்று அர்த்தம். மஹீஸாரத்தில் பிறந்து வளர்ந்தவர் பக்திஸாரர்!

அப்புறம் அவர் காஞ்சீபுரத்துக்கு வந்து வாஸம் பண்ணிக்கொண்டிருந்தார். அங்கேயிருக்கிற ஒரு பெருமாள் கோவிலில் பாசுரம் பாடிக்கொண்டும், உபதேசம் பண்ணிக் கொண்டும் அவ்வப்போது அப்படியே யோகஸமாதியில் போய்க்கொண்டும் இருந்தார்.

பொதுவாக அவரைப் பற்றி ஒன்று நினைக்க இடமுண்டு. அதாவது, 'முதலாழ்வார்கள் என்கிற மூன்று பேரும்— பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் என்ற அந்த மூன்று பேரும்—மஹாவிஷ்ணுவின் பரம பக்தர் களென்றாலுங்கூட ஸமரஸ மனப்பான்மையோடு சிவனை யும் உயர்வாகச் சொல்லிப் பாடினவர்கள்; திருமழிசை யாழ்வார்தான் வீரவைஷ்ணவமாகவே சொல்ல ஆரம்பித் தவர்' என்று சொல்வதற்கு இடமிருக்கிறது. பெரியவர் களைப் பற்றிக் குறைவாகச் சொல்லக்கூடாது. இதர தெய்வங்களைக் குறைத்துச் சொல்லியிருந்தாலும் அவர் பண்ணின திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி ஆகியவற்றில் விஷ்ணுவிடம் பரம பக்தியையும், யோக

Koviloor Digital Library

மார்க்கத்தின் உத்தம ஸ்திதிகளைப் பற்றியும் பார்க்கிறோம். இத்தனை நாழி ஒருவரிடமே அநன்ய பக்தி பண்ணுவது பற்றிச் சொன்னேனே, அப்படி விஷ்ணு பக்தர்களை ஒரே குறியாக அந்த ஒரு மூர்த்தியிடமே ஈடுபடுத்துகிற நோக்கத்தில்தான் அவர் இதர தெய்வங்களை மட்டம் தட்டினாலும் பரவாயில்லை என்று பண்ணியிருக்கிறாரென்று ஸமாதானம் செய்து கொள்ளலாம். அது இருக்கட்டும்.

பகவானுக்குப் பாசுரம் ஸேவிப்பது, பாகவதாளுக்கு உபதேசம் செய்வது, அப்படியே யோக நிஷ்டையில் போய் விடுவது என்று அவர் கோவிலிலேயே வாஸம் பண்ணிக் கொண்டிருந்தார். (அது) வரதராஜா கோவிலென்று நினைத்தால் அது தப்பு.

காஞ்சியிலுள்ள "திவ்ய தேசங்கள்"

காஞ்சீபுரத்துப் பெருமாள் கோவில் என்று சொன்னால் இப்போது பிரதானமாகவுள்ள வரதராஜாவைத்தான் நினைக்கத் தோன்றுகிறதென்றாலும், வாஸ்தவத்தில் அந்த நகர எல்லைக்குள்ளேயே ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்த "திவ்ய தேசங்க"ளாகப் பதினாலு விஷ்ணுவாலயங்கள் இருக்கின்றன1. சைவத்தில் "பாண்டிப் பதினான்கு" என்று தெற்கு ஜில்லாக்கள் அத்தனையிலுமாகப் "பாடல் பெற்ற ஸ்தல"ங்கள் பதினாலுதான் இருக்கின்றனவெனில்,2 வைஷ்ணவத்திலோ தொண்டை மண்டலத்தின் ராஜதானியான காஞ்சீபுரம் ஒன்றுக்குள்ளேயே பதினான்கு முக்யமான

---

1. திருக்கச்சி எனும் அத்தியூர் (இதுதான் வரதராஜராலயம்), அட்டபுயகரம், திருத்தண்கா (தூப்புல்). வேளுக்கை, பாடகம், திருநீரகம், நிலாத்திங்கள் துண்டம், ஊரகம், திருவெக்கா, திருக்காரகம், திருக்கார் வானம். திருக் கள்வனூர், திருப்பவள வண்ணம், பரமேச்சுர விண்ணகரம் ஆகியன.

2. மதுரை, திருப்புனவாயில், குற்றாலம், திரு ஆப்பனூர், திருவேடகம், திருநெல்வேலி, ராமேச்வரம், திருவாடானை, திருப்பரங்குன்றம். திருச்சுழியல், திருப்புத்தூர், திருக்கானப்பேர் (காளையார் கோயில்), திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை). திருப்பூவணம் ஆகியன,

Koviloor Digital Library

விஷ்ணு ஆலயங்கள் இருக்கின்றன! அவற்றில் ஸமீபகாலமாகச் சிற்பச் சிறப்பு, சரித்ர முக்யத்வம் ஆகியவற்ருல் வைகுண்டப் பெருமாள் கோயில் அறிவாளிகளுக்கிடையில் கொஞ்சம் ப்ரபலமாகி வருகிறது. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

பல்லவரும் சைவ-வைணவமும் : வைகுண்டப் பெருமாள் கோயில்

மோக்ஷம் என்பதை சைவர்கள் கைலாஸம் என்பார்கள். வைஷ்ணவர்கள் வைகுண்டம் என்பார்கள். காஞ்சீபுரத்தில் கைலாஸநாதர் கோயிலும் இருக்கிறது; வைகுண்டப் பெருமாள் கோயிலும் இருக்கிறது! இரண்டுமே சிற்ப விசேஷம் படைத்தவையாகவும் இருக்கின்றன. காஞ்சிபுரத்தை ராஜதானியாகக் கொண்டிருந்த பல்லவ ராஜாக்கள் நல்ல வைதிகப் பற்றுள்ளவர்கள். முறையான வைதிகம் என்ருல் அது சிவ பக்தி, விஷ்ணு பக்தி இரண்டிற்கும் ஒரே மாதிரி இடம் கொடுப்பதாகவே இருக்கும். பல்லவ ராஜாக்கள் தங்களை சிவ பக்தர்களான 'பரம மாஹேச்வரர்'களாகவும் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள், விஷ்ணு பக்தர்களான 'பரம பாகவதர்'களாகவும் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். அதோடு த்ரிமூர்த்திகளில் இன்னொருவரான ப்ரஹ்மாவையும் விடாமல் 'பரம ப்ரஹ்மண்யர்'கள் என்றுகூடத் தங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். அவர்கள் ஆரம்பகாலக் கோயில்களை எழுப்பியபோது ப்ரஹ்மாவுக்கும் இடம் கொடுத்தார்கள். ஆனால் அது நம்முடைய வழிபாட்டு மரபிலே சேராமல் மங்கி மறைந்து போய்விட்டது. 'ப்ரஹ்மண்யர்' என்பது ஸுப்ரஹ்மண்ய பக்தரைக் குறிப்பது என்றும் அபிப்ராயம் உண்டு. பல்லவர் கோயில் திருப்பணிகளில் பார்வதீ பரமேச்வரர்களுடன் பால ஸுப்ரஹ்மண்யரும் சேர்ந்திருப்பதான ஸோமாஸ்கந்த மூர்த்தம் சிலா (கல்) வடிவிலேயே லிங்கத்தின் பின்னால் மூலஸ்தானத்தில் பொறிக்கப்பட்டிருப்

Koviloor Digital Library

பதிலிருந்து அவர்களுடைய முருகபக்தி தெரிகிறது. ஆதிப் பல்லவ ராஜா ஒருத்தனின் பெயரே ஸ்கந்த சிஷ்யன் என்பதாகும். ஸிம்ஹ விஷ்ணு, நரஸிம்ஹன் என்று விஷ்ணுப் பெயர்கள்; பரமேச்வர வர்மா, நந்திவர்மா என்று சிவ ஸம்பந்தமான பெயர்கள்—இப்படி அந்த ராஜ வம்சத்தில் இரண்டு விதமாகவும் பார்க்கிறோம். சைவம் வைஷ்ணவம் இரண்டையும் ஸமமாக மதிக்கும் சுத்த வைதிகமாகப் பல்லவர்கள் இருந்துகொண்டிருந்தார்கள். நடுவாந்தரத்தில் மஹேந்த்ர வர்மா ஜைனனாகப் போனாலும், அப்புறம் அப்பர் ஸ்வாமிகளின் மஹிமையினால் வைதிகத்திற்கே திரும்பினான். சைவ—வைஷ்ணவ ஸமரஸம் கொண்டவர்களானாலும் இஷ்ட மூர்த்தி என்று வரும்போது பல்லவ ராஜாக்களில் சிலருக்கு அது சிவனாகவும், சிலருக்கு விஷ்ணுவாகவும் இருந்திருக்கிறது.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் கோச் செங்கட் சோழன், புகழ்ச்சோழன் என்ற சோழ ராஜாக்களும், நெடுமாறன் என்ற பாண்டியராஜாவும், சேரமான் பெருமாள் என்ற சேர ராஜாவும் இடம் கொண்டிருப்பது தெரிந்திருக்கலாம். நெடுமாறனின் பத்தினியான பாண்டியராணி மங்கையர்க்கரசியும் ஒரு நாயனார். ஐயடிகள் காடவர்கோன் என்றும் ஒரு ராஜா அறுபத்து மூவரில் ஒருவராக இருந்திருக்கிறார். பன்னிரு சைவத் திருமுறைகளில், பதினொன்றாவதான திருமுறையில் 'திருவெண்பா' என்பதைப் பாடியிருப்பவர் அவர்தான். கோவில் கோவிலாகப் போய் வெண்பாப் பாடிக்கொண்டிருந்த அந்த சைவ ராஜாவைப் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவரென்றே சேக்கிழார் (பெரிய புராணத்தில்) சொல்லியிருக்கிறார். அதாவது, சேர—சோழ—பாண்டிய ராஜாக்களில் நாயன்மார் இருந்ததுபோலவே பல்லவ ராஜாக்களிலும் ஒரு நாயனார் இருந்திருக்கிறார்.

ராஜஸிம்ஹன் என்ற இரண்டாவது நரஸிம்ஹன் பெரிய சிவ பக்தனாக இருந்தான். சைவாகமங்களில் அவன் நல்ல அப்யாஸம் பெற்றவன். 'சிவ பாத சேகரன்' என்று ராஜ

Koviloor Digital Library

ராஜ சோழனுக்குப் பட்டம் இருந்ததென்றால் அவனுக்கு முன்னூறு வருஷம் முந்தியே ராஜ ஸிம்ஹப் பல்லவனுக்கு 'சிவ சூடாமணி' என்ற பட்டம் இருந்திருக்கிறது. இவன் தான் முதல் முதலாகப் பாறைக் கல்களைக் கட்டிடமாக அடுக்கிக் கோயில் கட்டினவன். அவனுக்கு முன் காலத்தில் மலைகளையும், குன்றுகளையும், பெரிய ராக்ஷஸப் பாறைகளை யும் அப்படியே போட்டுக் குடைந்துதான் ஆதி பல்லவர்கள் கோயில் எழுப்பினார்களே யொழிய, கல்லின் மேல் கல் அடுக்கிக் கட்டிடமாகக் கட்டவில்லை. ராஜஸிம்ஹப் பல்லவன் கட்டின அந்தக் கோவில்தான் கைலாஸநாதர் ஆலயம். ஒரே சிற்ப மயமாகப் பொரித்துக் கொட்டிக் கட்டிய கோவில் அது. ஏகப்பட்ட சிற்பம் என்றாலும் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து வெகு நுணுக்கமாகப் பண்ணியிருக்கும். கலா ரஸிகர்கள் காஞ்சீபுரக் கோவில்களுக்குள்ளேயே, ஏன், தமிழ்நாட்டுக் கோவில்களுக்குள்ளேயே அதற்குத்தான் 'ஃபர்ஸ்ட் ப்ரைஸ்' கொடுக்கிறார்கள்! அதிலுள்ள சிற்பங்க ளெல்லாம் புராண ஸம்பந்தமானவை. பெரும்பாலும் சிவ லீலைகள் தானென்றாலும் மஹாவிஷ்ணுவைக் குறித்ததாக வும் சில இருக்கின்றன.

அதற்கடுத்தபடியாக நிறையச் சிற்பம் கொண்டதுதான் வைகுண்டப் பெருமாள் கோவில். அதற்குப் பழைய பெயர் —ஆழ்வார் பாசுரத்தில் வருகிற பெயர், "பரமேச்சுர விண்ணகரம்" என்பது. "விண்ணகரம்" என்றால் விண்ணாட்டு நகரம் இல்லை! 'விஷ்ணுக்ருஹம்' தான் 'விண்ணகரம்' ஆகி விட்டது. ஸிம்ஹ விஷ்ணுவின் பெயரை மஹாபலிபுரத்தில் 'சிம்ம விண்ண போத்ராதி ராஜன்' என்றே செதுக்கியிருப்ப திலிருந்து 'விஷ்ணுக்ருஹம்' தான் 'விண்ணகர'மாகியிருக்கிற தென்று புரிந்துகொள்ளலாம்.

பல்லவர் தோற்றுவாய்

'போத்ராதிராஜன்' என்னவென்றால்...

Koviloor Digital Library

பல்லவம் என்றால் துளிர். போதம் அல்லது போத்ரம் என்றாலும் துளிர் என்றே அர்த்தம். அச்வத்தாமாவிடம் ஒரு வனத்திலே தேவ ஸ்த்ரீ ஒருத்தி ஒரு பிள்ளையைப் பெற்றாள் என்றும், அதைத் துளிர்ப்படுக்கையிலே போட்டு விட்டு தேவலோகம் போய்விட்டாள் என்றும், அந்தப் பிள்ளைதான் துளிரில் வளர்ந்ததால் 'பல்லவன்' என்று பெயர் பெற்று ராஜாவாக ஆட்சிக்கு வந்தான் என்றும் கதை இருக்கிறது. தெலுங்கு தேசத்தில் அமராவதி என்ற இடத்திலுள்ள ஸிம்ஹவர்ம பல்லவனின் ஸம்ஸ்க்ருதக் கல்வெட்டில் இந்தக் கதையை விரிவாகச் சொல்லியிருக்கிறது. அரக்கோணத்திற்கு ஏழெட்டு மைலிலுள்ள வேலூர் பாளையம் என்கிற இடத்தில் அகப்பட்ட மூன்றாவது (விஜய) நந்திவர்மாவின் தாம்ர சாஸனத்திலும் இந்தக் கதையைக் குறிப்பிட்டிருக்கிறது. அச்வத்தாமா பாரத்வாஜ கோத்ரத்தைச் சேர்ந்த ப்ராம்மணர். அவருடைய பிதாவான த்ரோணாசார்யாருக்கு பாரத்வாஜர் என்றே ஒரு பெயர். பல்லவ ராஜாக்கள் தங்களை பாரத்வாஜ கோத்ரக்காரர்களாகவே சாஸனங்களில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

பல்லவ ராஜாக்களே சாஸனங்களில் இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டாலும், பழைய தமிழ் இலக்கியங்களிலிருந்து ஆராய்ச்சி பண்ணித் தமிழபிமானிகள் பல்லவர்களின் 'ஆரிஜின்' (தோற்றுவாய்) பற்றி வேறே ஒரு கதை சொல்கிறார்கள். நாகப்பட்டினத்துச் சோழ ராஜா ஒருத்தனுக்கு நாக கன்னிகையிடம் ஒரு பிள்ளை பிறந்தது; அவள் தொண்டைக் கொடியைச் சுற்றி அந்தக் குழந்தையை ஸமுத்ரத்தில் மிதக்க விட்டுவிட்டாள்; அதுதான் கரையேறித் தொண்டைமான் என்ற பல்லவ ராஜா ஆயிற்று என்று இந்தக் கதை. காஞ்சி மண்டலத்துக்கே தொண்டை மண்டலம் என்று பெயர். தொண்டைக் கொடியை ஸம்ஸ்க்ருதத்தில் 'துண்டீரம்' என்பார்கள். அதனால் ஸம்ஸ்க்ருத நூல்களில் துண்டீர மண்டலம், துண்டீர சக்ரவர்த்தி என்றெல்லாம் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்.

Koviloor Digital Library

குழந்தையை தேவ ஸ்த்ரீ படுக்கவிட்ட படுக்கை யானாலும் ஸரி, நாக ஸ்த்ரீ அதன் இடுப்பில் சுற்றிய கொடி யானாலும் ஸரி, இரண்டும் துளிர்களால் ஆனதுதான். துளிர்தான் பல்லவம். அதனால், எந்தக் கதைப்படி பார்த் தாலும் பல்லவர் என்ற பெயர் பொருத்தமானதாகிறது.

துளிருக்கேதான் இன்னொரு பேர் போதம், அல்லது, போத்ரம். தமிழிலும் சின்னஞ்சிறு கன்றாக உள்ள செடியைப் 'போத்து' என்றே சொல்கிறோம். 'பல்லவ மஹாராஜா' என்பதே இன்னொரு விதமான பத ப்ரயோகத்தில் 'போத்ர அதிராஜன்', 'போத்ராதி ராஜன்' என்றாயிற்று அதனால்தான் ஸிம்ஹ விஷ்ணுப் பல்லவச் சக்ரவர்த்தி என்பது 'சிம்ம விண்ண போத்ராதி ராஜன்' என்றாயிற்று.

'போத்ர ராஜன்' என்பதைத் தமிழில் 'போத்தராயன்' என்று சொல்லியிருக்கும். ஒரு வேலையும் செய்யாமல் கொழுத்துப் போனவர்களை 'போத்(த)ராசா' என்று திட்டுகிற வழக்கம் இருக்கிறதே, இந்த 'போத்(த)ராசா' கூட 'போத்ர ராஜா'விலிருந்து வந்ததுதான்!

வைகுண்டப் பெருமாள் கோவிலில் ஆரம்பித்தது, விஷ்ணுக்ருஹம், ஸிம்ஹ விஷ்ணு, போத்தராசா என்று எங்கெங்கேயோ போய்விட்டது! விஷ்ணு க்ருஹத்துக்குப் போவதற்குள் எங்கெல்லாமோ சுற்ற வைத்துவிட்டேன்!*

கைலாஸம், வைகுண்டம் என்ற இரண்டில் ராஜஸிம்ஹன் கைலாஸநாதர் கோவில் கட்டினமாதிரியே, அவனுக்குப் பின் இரண்டாவது பட்டமாக வந்த நந்திவர்மா

---

* உடனிருந்து ஸ்ரீ சரணர்களின் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர், நம் ஆலயங்களில் கர்ப்ப க்ருஹத்திற்குச் செல்வதற்குமுன் சுற்றிச் சுற்றிப் பல மூர்த்திகளைப் பார்த்து மகிழ்வதுபோலவே, ஸ்ரீ சரணர்களின் உரைகளில் மைய விஷயத்திற்குப் போவதற்குள் வேறு பல விஷயங்களையும் அறிந்து மகிழுமாறு உள்ளதென்று சொல்லி, எனவே விஷ்ணுக்ருஹத்துக்குள் போவதற்கு முன்பும் 'பரிவார' ஸமாசாரங்களாகப்' பல தெரிந்துகொள்வது பொருத்தமாகவே இருக்கிறது என்றார். அதை ஸ்ரீ சரணர்கள் வெகுவாக ரஸித்து, இதன் பின் உரையாடலில் கலந்து கொள்ளவந்த இன்னோர் அன்பரிடமும் திரும்பக் கூறினார்.

Koviloor Digital Library

வைகுண்டப் பெருமாள் கோவில் கட்டினுன். அதற்குப் 'பரமேச்வர விஷ்ணுக்ருஹம்' என்றே பழைய பெயர். விஷ்ணுவின் க்ருஹம், ஆனுல் பரமேச்வரனின் பேரில் இருக்கிறது என்கிறபோதே நான் இத்தனை நேரம் சொன்ன சைவ - வைஷ்ணவ ஒற்றுமை தெரிகிறது. ஆனுல் இங்கே 'பரமேச்வரன்' என்பது கோயில் கட்டிய நந்திவர்மாவின் இன்னொரு பெயரை வைத்துத்தான்! ராஜராஜன் கட்டியது ராஜராஜேச்சுரம், கங்கைகொண்ட சோழன் கட்டியது கங்கைகொண்ட சோழீச்சுரம் என்கிற மாதிரி பரமேச்வரப் பல்லவமல்லனுன நந்திவர்மா கட்டிய வைகுண்டப் பெருமாள் கோவில் அவன் பெயரிலேயே பரமேச்சுர விண்ணகரம் ஆயிற்று.

கைலாஸநாதர் கோவில் சிற்பங்கள் புராண ஸம்பந்தமானவையாகப் பிரஸித்தி பெற்றிருக்கின்றன. வைகுண்டப் பெருமாள் கோவில் சிற்பங்களோ சரித்ர ஸம்பந்தத்தினுல் முக்யத்வம் பெற்றிருக்கின்றன.

ராஜஸிம்ஹன் ரொம்பவும் பேர் புகழோடு ஆட்சி செய்துவிட்டு காலகதி அடைந்தபின் ராஜ்யத்தில் ஒரேயடியான குழப்பநிலை உண்டாயிற்று. சாளுக்ய ராஜாவான விக்ரமாதித்தன் காஞ்சீபுரத்தின்மீது படையெடுத்து வந்து அதைக் கைப்பற்றிக்கொண்டான். ராஜஸிம்ஹனுடைய பிள்ளையும் ஒரு பரமேச்வர வர்மாதான். அவன் ரொம்பவும் ஸ்வல்ப காலமே ஆட்சி பண்ணிவிட்டு, ஸந்ததி இல்லாமலே இறந்து போய்விட்டான். தலைப்பிள்ளைக்கு பட்டம் என்ற நம்முடைய Primogeniture வழக்கப்படிப் பல்லவ வம்சத்தில் ஸிம்ஹ வர்மாவுக்கு அப்புறம் ஸிம்ஹவிஷ்ணு வழியாக ராஜஸிம்ஹனின் பிள்ளைவரை போன நடுக்கிளை அதோடு முடிந்து போயிற்று. அப்புறம் அதன் பக்கக் கிளைகளில் ஒன்றில் வந்த கோத்ர தாயாதியான ஹிரண்யவர்மா என்பவனிடம் பல்லவ ராஜ்யத்தின் முக்யஸ்தர்கள் தூது போய்க் கேட்டுக்கொண்டு, அவனுடைய பிள்ளையான இன்னொரு பரமேச்வர வர்மாவுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம்

Koviloor Digital Library

பண்ணினார்கள். அவன்தான் நந்திவர்மப் பல்லவமல்லன் என்று பெயர் வைத்துக்கொண்டு அறுபது வருஷத்திற்குமேல் ஆட்சி நடத்தினான்.

அவனுடைய இன்னொரு பெயரில் அமைக்கப்பட்ட பரமேச்சுர விண்ணகரமாகிய வைகுண்டப் பெருமாள் கோவிலில் இதைப் பற்றிய கல்வெட்டு இருக்கிறது.

இப்படி எழுத்திலே வெட்டியிருப்பதைவிட முக்யமாக இந்தக் கோவிலுக்கு என்ன சரித்ர ப்ரஸித்தி என்றால், மஹாவிஷ்ணுவிலிருந்து ஆரம்பித்து ப்ரம்மா வழியாகப் பல்லவ ராஜாக்கள் அத்தனை பேரின் வம்சாவளிக் கதைகளையும்—இந்தக் கோவிலைக் கட்டினவர் வரையில்—சிற்ப வரிசைகளில் வடித்துக் காட்டியுள்ள ஒரு மண்டபம் அங்கே இருப்பதுதான்.

சரித்ர முக்யத்வம் மட்டும்தானென்றில்லாமல் மத ஸம்பந்தமான விசேஷமும் அந்தக் கோவிலுக்கு உண்டு. இங்கே மூன்று அடுக்குகளாக ஸந்நிதிகளை அமைத்து, பெருமாளின் நின்ற திருக்கோலத்தைக் கீழ் தளத்திலும், இருந்த (உட்கார்ந்த) திருக்கோலத்தை நடு தளத்திலும், கிடந்த (சயனித்த) திருக்கோலத்தை மேல்தளத்திலும் அமைத்திருக்கிறது. 'அஷ்டாங்க விமானம்' என்பதாகப் பொதுவாகச் சொல்லப்படுகிற ஆகம விதிகளின்படி இப்படிப் பல அடுக்குகளில் ஆலயம் நிர்மாணிப்பது ரொம்பவும் அபூர்வமே. பாண்டி நாட்டில் திருக்கோட்டியூரிலுள்ள பெருமாள் கோவில், மதுரையிலேயே கூடலழகர் கோவில், காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவில், இதைக்கட்டிய நந்திவர்மனின் பிள்ளையான தந்திவர்மன் காஞ்சிக்கு ஸமீபத்திலுள்ள உத்தரமேரூரில் கட்டிய ஸுந்தர வரதப்பெருமாள் கோவில் ஆகிய நாலில்தான் இந்த அமைப்பு இருப்பதாகத் தெரிகிறது.*

---

* ஸ்ரீ சரணர்களின் திருவுள்ளப்படி சென்னை பெஸன்ட் நகர் கடற்கரையில் மஹாலக்ஷ்மிக்கு எழுப்பப்பட்டுள்ள ஆலயமும் அஷ்டாங்க விமான அமைப்பிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

நந்திவர்மப் பல்லவமல்லன் திருமங்கையாழ்வாரின் காலத்தில் இருந்தவன் என்று தெரிகிறது. அவனைத் தம் முடைய பாசுரத்தில் குறிப்பிட்டு அவர் பாடியிருக்கிறார்.

இந்த ஆழ்வாரிலிருந்து குரு - சிஷ்ய ஸமாசாரமாக நாம் பார்த்த ஆழ்வாருக்குப் போகலாம். சிஷ்யனுக்காக ஸ்வாமியையே, 'இப்படிப் பண்ணு, அப்படிப் பண்ணு' என்று சொல்லித் தாம் சொன்னவண்ணம் செய்ய வைத்த அந்த ஆழ்வாருக்குப் போகலாம். திருமழிசையாழ்வார் என்று பெயர் சொன்னேன், ஞாபகமிருக்கிறதல்லவா?

அவர் காஞ்சீபுரத்திலே ஒரு பெருமாள் கோவிலில் வாஸம் பண்ணி வந்தாரென்று சொல்லி அது எந்தக் கோவில் என்று சொல்வதில்தான் இருந்தேன். காஞ்சி யிலுள்ள பதினாலு திவ்ய தேசங்களுக்குள் அவர் இருந்தது திருவெஃகா என்பதிலாகும்.

திருவெ:.கா பெருமாளின் பெருமை

திருவெஃகா மாதிரியே திருத்தண்கா என்றும் பதினாலில் இன்னொன்று இருக்கிறது. வெஃகா, தண்கா என்றால் (முறையே) வெம்மையான காடு என்றும் தண்மை யான காடு என்றும் அர்த்தம். ஆதியில் காடுகளில் ரிஷிகள் பூஜை பண்ணிக்கொண்டிருந்த இடங்கள்தான் அப்புறம் நாம் பார்க்கிற க்ஷேத்ரங்களாக ஆனதால் கா, காடு என்றே அவற்றில் பலவற்றின் பேர் இருக்கிறது—திருவானைக்கா, திருக்கோடிகா, திருவேற்காடு, திருமறைக்காடு (வேதாரண்யம்) இப்படி. தண்காவைத் தூப்புல் என்பார் கள். தூய புல்லான தர்ப்பை வளரும் இடம். வடகலை ஆசார்ய புருஷரான வேதாந்த தேசிகரின் ஜன்ம ஸ்தலம் அதுதான். தண்காவுக்கு இப்படிப் பெருமையென்றால், நம் முடைய கதைக்கார ஆழ்வார் ஸம்பந்தப்பட்ட வெஃகாவில் தான், அதன் புஷ்கரிணியில் (திருக்குளம் என்கிற பொய்கை யில்) ஆழ்வார்களில் முதல்வராக இருக்கப்பட்ட பொய்கை

Koviloor Digital Library

யாழ்வார் அவதாரம் செய்திருக்கிறர். அங்கேதான் யதோக்தகாரியாக பகவான் இருப்பது. யதோக்தகாரி என்ற பெயர் ஏற்படுவதற்கு முந்தியே அவர் அங்கே புஜங்க சயனப் பெருமாளாகப் படுத்துக் கொண்டிருந்திருக்கிறர். வரதராஜா ஆவிர்பவித்ததற்கு முந்தியே இருந்திருப்பவர் இவர். ஏனென்றல்...ப்ரஹ்மா ஒரு யாகம் பண்ணி, அதில் வரம் தர வந்தவர்தான் வரத ராஜா. அந்த யாகம் பண்ணும்போது ப்ரஹ்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் மனஸ் தாபம். அதனல் ப்ரஹ்மா ஸரஸ்வதியை ஒதுக்கிவிட்டு, ஸாவித்ரி காயத்ரி என்ற இரண்டு பேரையே யஜ்ஞ பத்னி களாக வைத்துக்கொண்டு யாகம் ஆரம்பித்தார். அப் போது ஸரஸ்வதி ஒரே கோபமாக வேகவதி என்ற நதி ரூபம் எடுத்துக்கொண்டு, வேகமாக வெள்ளம் அடித்துக் கொண்டு யாகசாலேயை நோக்கி வந்தாள். அந்த ஸமயத் திலே இந்த புஜங்க சயனப் பெருமாள்தான் நதி வருகிற வழியில் குறுக்கே போய்ப் படுத்துக்கொண்டு தடுத்தார். யஜ்ஞமும் பூர்த்தியாகி, ப்ரஹ்மாவுக்கு மாத்திரமில்லாமல் எல்லா ஜனங்களுக்கும் எல்லாக் காலத்திலும் வரம் கொடுப்பதற்காக வரதராஜா தோன்றிக் கோயில் கொண்டார். நம்முடைய கதையில் வரும் ஆழ்வாரான திருமழிசைக்காரர் காஞ்சீபுரத்தில் இந்த புஜங்கசயனர் ஆலயத்திலோ, அல்லது அதை ஒட்டினற்போலவோதான் வஸித்து வந்தார். அப்போதுதான் அவர் பெருமாளேத் தாம் சொன்னபடி செய்ய வைத்து யதோக்தகாரியாக்கியது.

வரதராஜா உள்படக் காஞ்சீபுரத்திலுள்ள பெருமாள் களில் பெரும்பாலும் எல்லாருமே 'நின்ற திருக்கோலம்' தான். 'இருந்த திருக்கோலம்' என்பதாக உட்கார்ந்த நிலே யில் ஓரிரண்டு பெருமாள் இருக்கலாம். திருவெஃகாக் காரரோ 'கிடந்ததிருக்கோலம்'. அதாவது ஸ்ரீ ரங்கநாதர், பத்மநாபஸ்வாமி,சார்ங்கபாணிப்பெருமாள் ஆகியவர்களேப் போலப் பள்ளி கொண்டிருப்பவர். இவரைப்பற்றி ஒன்று குறிப்பிட்டுப் பெருமையாகச் சொல்வார்கள்.

Koviloor Digital Library

என்னவென்ருல்,...எந்த க்ஷேத்ரத்திலுள்ள சயனக் கோலப் பெருமாளானுலும் ஸரி, அவருடைய சரீரம் மல்லாக்க (மல்லாந்து) படுத்திருந்தாலும், சிரஸையும் அந்தப்படியே வைத்து ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். முக மண்டலத்தை ஸந்நிதிப் பக்கம் கொஞ்சமாவது திருப்பி பக்த ஜனங்களைக் கடாக்ஷித்துக் கொண்டுதானிருப்பார். ஸ்ரீரங்கநாதர் தெற்குப் பார்த்த திருமுகமண்டலத்தோடு மேற்குப் பக்கம் சிரஸை வைத்துக்கொண்டு கிழக்கே பாதத்தை நீட்டிக் கொண்டிருப்பவர். நாம் அவருடைய ஸந்நிதிக்கு எதிரே நின்று பார்க்கும்போது நமக்கு இடதுகைப் பக்கம் அவருடைய சிரஸும், வலது கைப்பக்கம் பாதமுமாக இருப்பார், திருவனந்தபுரத்தில் பத்மநாப ஸ்வாமி கிழக்குப் பார்த்த திருமுகமண்டலத்தோடு இருக்கிருர். அவர் தெற்கே சிரஸும் வடக்கே பாதமுமாக சயனித்துக் கொண்டிருப்பதால் அவரையும் நாம் எதிரேயிருந்து பார்க்கும்போது நமக்கு இடதுகைப் பக்கம்தான் சிரஸ், வலதுகைப் பக்கம் பாதம் என்று இருக்கும். கும்பகோணத்தில் ஆராவமுதன் என்கிற சார்ங்கபாணியும் அப்படித்தான் இருக்கிருர். திருவெஃகாவில் மாத்திரம் எப்படியிருக்கிறதென்ருல், பெருமாள் தெற்கு - வடக்காக சிரஸ் - பாதங்களை வைத்து சயனித்திருந்தாலும் ஸந்நிதி மேற்குப் பார்த்தது. அதாவது அவருடைய திருமுகமண்டலம் மேற்குப் பார்க்கிறது. இதனுல் என்னவாகிறதென்ருல் நாம் அவருக்கு எதிரே நின்று தர்சிக்கும்போது நம்முடைய வலதுகைப் பக்கம் அவர் சிரஸும் இடதுகைப் பக்கம் பாதமும் இருக்கின்றன. மேலே சொன்ன மற்ற சயனமூர்த்திகளின் வலது பார்ச்வம் (right side) நமக்குக் கிட்டேயும், இடது பார்ச்வம் (left side) திருமேனிக்கு மறுபக்கம், நமக்குத் தள்ளி அந்தண்டையும் இருக்கும். ஸந்நிதிப் பக்கமாக நமக்குக் கிட்ட இருக்கும் வலது கையை நன்ருகத் தூக்கி அவர் அபயம் காட்டுவதாக அந்தப் பெருமாள்களின் சில்பம் அமைந்திருக்காது. சயன பீடத்தை ஒட்டினுற்போலவே அந்தக் கை தலைப்

Koviloor Digital Library

பக்கமாக மடிந்திருப்பதாகத்தான் மூர்த்தி பெரும்பாலும் அமைந்திருக்கும். அதாவது அந்தக் கையையே அவர் 'தலைக் கோசரம்' (தலைக்கு உயரமான தலையணை) மாதிரி வைத்துக் கொண்டிருக்கும் பாவனையில்தான் சில்பம் இருக்கும். உள்ளங் கையை விரித்து அவர் அபய முத்ரை காட்டினாலுங்கூட, முழங்கைக்குக் கீழே எடுப்பாகத் தூக்கி நன்றாக ஆசீர்வாதம் செய்கிறாற்போலில்லாமல், பீடத்தின் மட்டத்தோடேயே சேர்ந்தாற்போலதான் கை இருக்கும். கையைத் தூக்கினால் திருமேனியையே கொஞ்சம் மறைக்கிறாற்போலக் குறுக்கே நிற்கும்; கர்ப்பூரம் காட்டும்போது அதன் நிழல் திருமேனி மேல் விழும்—என்பது காரணமாயிருக்கலாம். அதோடுகூட, horizontal-ஆக—குறுக்கு வாட்டமாக—சயன மூர்த்தியைப் பெரிசாகச் சில்பத்தில் வடிக்கிறபோது முன்னங்கையைத் தூக்கினாற்போல் பண்ணுவதில் ச்ரமங்கள் உண்டு.

ஆனால், திருவெஃகாவில் ஸ்வாமி மற்ற சயன மூர்த்திகளைப்போல இல்லாமல், வித்யாஸமாக, தெற்கே சிரஸ்—வடக்கே பாதம், ஆனால் மேற்குப் பார்த்த திருமுக மண்டலம் என்று இருப்பதால் எல்லாம் மாறிப்போகின்றன! எதிரே ஸந்நிதியில் நின்று தர்சிக்கும்போது அவருடைய இடது பார்ச்வம் நமக்குக் கிட்டேயும் வலது பார்ச்வம் அந்தண்டையுமாக இருக்கின்றன. அதாவது அவரது இடது கை நமக்குக் கிட்டேயும், வலது கை—அபயமுத்ரை காட்டக் கூடிய வலதுகை—திருமேனிக்கு மறுபுறமுமாக இருக்கும். இங்கே, ஸ்வாமி வலது கையைத் தலைக்கோசரம் மாதிரி வைத்துக் கொண்டாரானால் முகத்தை அந்தக் கைப் பக்கமாகச் சாய்க்கநேர்ந்து, அவர் ஸந்நிதியைப் பார்க்கிறதற்குப் பதில் பின் சுவரைப் பார்ப்பதாகிவிடும்! அதனால் இங்கே பெருமாள் மூர்த்தி அப்படியில்லை. இடது பக்கமாக ஸந்நிதியை, ஸந்நிதியில் நிற்கிற நம்மைப் பார்க்கிறாற் போலவே அவர் முகத்தைச் சாய்த்தபடி சயனித்துக் கொண்டிருக்கிறார். இந்த விதமான அமைப்பில் (Posture-ல்) என்ன விசேஷமென்றால், நம் பார்வையில் அவருடைய

Koviloor Digital Library

திருமேனிக்கு மறுபுறம் இருக்கும் வலது கையை அவர் நன்ருகத் தூக்கி அபயம் ஸாதித்தாலும் அது நமக்கும் பிம்பத்துக்கும் குறுக்கே வந்து மறைக்காது. வலது கை திருமேனிக்கு மறுபக்கம் போய், பிம்பத்தின் அந்த மறுபக்கம் பின்சுவரை ஒட்டினாற்போலப் போய்விடுவதால், அந்தக் கையைத் தூக்கி வைத்து சில்பம் பண்ணுவதிலும் ச்ரமம் இல்லே. இந்தக் காரணங்களால், முன்னே சொன்ன சயன மூர்த்திகளுக்கெல்லாம் வித்யாஸமாக, விசேஷமுள்ள வித்யாஸமாக, இந்த யதோக்தகாரி நமக்கெல்லாம் நன்ருக வலதுகையை உயர்த்தி அபயம் ஸாதித்தபடி சயனித்துக் கொண்டிருக்கிருர்!

கணிகண்ணன் :

அருள் நெஞ்சும் அஞ்சாநெஞ்சும்

அவருக்கு (யதோக்தகாரி என்ற) அந்தப் பெயர் வருவதற்கு முற்பட்ட காலத்திலேயே திருமழிசையாழ்வார் அவரை இஷ்டமூர்த்தியாக உபாஸித்துக் கொண்டிருந்தார். அவருக்கு அத்யந்த சிஷ்யனுக ஒரு பையன். கணிகண்ணன் என்று பேர். அவன் பிறந்ததே ஆழ்வார் அநுக்ரஹத்தில்தான். அவனுடைய பெற்ருேருக்கு ரொம்ப காலமாக ஸந்ததியில்லே. அவர்கள் நித்தியம் ஆழ்வாருக்குப் பால் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். யோக நிஷ்டையிலேயே போய்க் கொண்டிருந்த ஆழ்வார் எப்போதாவதுதான் கண்ணேத் திறப்பார். எதுவும் ஆஹாரம் பண்ணுவதில்லே. இந்தப் பாலே மட்டுந்தான் கொஞ்சம் குடித்துவிட்டு பாக்கியை அவர்களுக்கே கொடுத்துவிடுவார். ப்ரஸாதமாக அவர்கள் அதைக் குடிப்பார்கள். அதன் பலனுகத்தான் அவர்களுக்குப் புத்திரன் பிறந்தான்.

கணிகண்ணன் என்ற அந்தப் பிள்ளே குழந்தைநாளிலிருந்தே ஆழ்வாரிடம் வந்து அந்தரங்க சிஷ்யனுகிவிட்டான்.

ஒரு நாள் அவன் கோவிலுக்குப் போகும்போது அங்கே ஒரு தொண்டு கிழவி, முதுகு நன்ருகக் கூனிப் போனவள்,

Koviloor Digital Library

எலும்பும் தோலுமாக ரொம்பவும் ச்ரமப்பட்டுக் கொண்டு பெருக்கி, மெழுகி, கோலம் போட்டுக் கைங்கர்யம் செய்வதைப் பார்த்தான். உடம்பு கொஞ்சங்கூட முடியா விட்டாலும், மூச்சு போகும் வரையில் பகவத் கைங்கர்யம் பண்ணுமலிருப்பதில்லை என்ற த்ருடமான பக்தியிலேயே அவள் தொண்டு புரிவது தெரிந்தது. கணிகண்ணனுக்கு அப்படியே மனஸ் உருகிவிட்டது. 'ஐயோ, இவளுக்கு நாம் உபகாரம் பண்ணவேண்டாமா? எப்படிப் பண்ணுவது? என்று மனஸார நினைத்தான்.

இந்த மாதிரிப் பெரிசாக ஒரு காருண்ய சிந்தனை வந்தால் அப்போது தன்னால் குருவுடைய அநுக்ரஹ சக்தி சிஷ்யனுக்குள்ளும் ஆவிர்பவித்துவிடும். ஈச்வரனிடமிருந்து குரு பெற்றிருக்கிற சக்தியை குருவிடமிருந்து சிஷ்யனும் பெற்றுவிடுவான். அந்த விதத்தில் ஆழ்வாரின் அநுக்ரஹ சக்தி அந்த நிமிஷத்தில் கணிகண்ணனுக்கே வந்துவிட்டது.

தன்னை மறந்த நிலையில் அந்தக் கிழவியிடம்போய் அன்போடு அவள் முதுகைத் தடவிக்கொடுத்தான்.

உடனே, அநுக்ரஹ சக்தியினால் அவளுடைய கூன்முதுகு நேராக நிமிர்ந்தது. அது மட்டுமில்லை. எலும்பும் தோலு மாக, விருத்த தசையிலிருந்த கிழவி அந்த க்ஷணத்திலேயே நல்ல ஆரோக்யமுள்ள யுவதியாக மாறிவிட்டாள்.

மதுராபுரியில்—வட மதுரை என்பதில்—க்ருஷ்ண பரமாத்மா குப்ஜை (கூனி)க்கு இதே போன்ற அநுக்ரஹம் தான் பண்ணினார். அது ஸப்த மோக்ஷபுரிகளில் ஒன்று. காஞ்சிதான் அந்த ஏழு மோக்ஷபுரிகளுக்குள் தக்ஷிண தேசத்தில் இருக்கப்பட்ட ஒரே ஒரு க்ஷேத்ரம். வடக்கே பகவான் பண்ணின அத்புதமான அருளை தெற்கே அவனுடைய அடியார்க்கடியானே பண்ணிவிட்டான். ஆழ்வார் பகவானுடைய அடியார், கணிகண்ணன் ஆழ்வாருக்கு அடியான்,

Koviloor Digital Library

'கூன் பாண்டியன்' என்றே சொல்லப்பட்டவனைத் திருஞானஸம்பந்தர் 'நின்ற சீர் நெடுமாறன்' என்பவனாக நிமிர்த்திய கதையும் நினைவு வருகிறது.

கணிகண்ணன் குமரியாக்கிய கிழவி யாரென்றால் கிழவியாவதற்கு முந்திக் காஞ்சீபுரத்து ராஜாவின் ஸபையில் தாஸியாக இருந்தவள். பிற்பாடு நிஜமாகவே 'தேவ தாஸி'யாகி ஸ்வாமியின் கைங்கர்யத்தில் ஈடுபட்டவள்.

'அடடா, இந்த பாகவதோத்தமருடைய அநுக்ரஹத்தால் இப்படி நல்ல பலம் வந்துவிட்டதே! இதை வைத்துக் கொண்டு பெருமாள் ஸேவையிலேயே ஸதா காலமும்இருந்து விடவேண்டும்' என்று யுவதியான பின்பும் அவள் தீர்மானம் பண்ணிக்கொண்டு, அப்படியே செய்ய ஆரம்பித்தாள்.

கிழவி குமரியானால் ஊர் உலகமெல்லாம் ஆச்சர்யப் படாதா? எங்கேயும் அதே பேச்சாகத்தானே இருக்கும்? காஞ்சீபுரத்தில் இருந்துகொண்டு ஆட்சி நடத்திய பல்லவ ராஜாவின் அரண்மனைக்குச் சேதி போயிற்று. ராஜாவும் அப்போது வ்ருத்தாப்ய தசையில் இருந்தான். தனக்கு ப்ரியமாக இருந்தவள் குமரியாகிவிட்டாள் என்றதும் அவனுக்குத் தகாத சபலம் ஏற்பட்டது.

கணிகண்ணனை வரவழைத்து, "என்னையும் இளமையாகப் பண்ணப்பா!" என்றான்.

கணிகண்ணன் பரிஹாஸமாகச் சிரித்தான். குருவே ஸகலமும், அவரே சரணம் என்று இருந்த அவனுக்கு ராஜா, ரோஜா யாராயிருந்தாலும் பொருட்டாகத் தெரியவில்லை. யாராயிருந்தாலும் தான் கொஞ்சங்கூட பயப்படாமல், பவ்யப்படாமல் தர்மப்படி நடக்கணும், அவர்களுக்கும் தர்மத்தைச் சொல்லணும் என்ற தீரம் அவனுக்கு இருந்தது.

ராஜாவைப் பார்த்து, "நானா அந்தக் கிழவியைக் குமரி ஆக்கினேன்? எனக்கு ஏது அந்த சக்தி? என்னுடைய குருநாதருடைய சக்திதான் எனக்குள் புகுந்து கொண்டு அப்படிப் பண்ணுவித்தது" என்றான்.

Koviloor Digital Library

"அப்படியானல் அந்த குருவையேதான் அழைத்துக் கொண்டு வாயேன்" என்று ராஜா சொன்னன்.

"அவரைப் பற்றி உனக்குத் தெரியாதா? நீ ராஜாவாயிருந்தும் உன்னைப் பார்க்க அவர் இத்தனை காலமாக வராததிலிருந்தே அவரைப் பற்றி நீ தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே! அவருக்கு பகவானைத் தவிர எவரிடமும் போய் என்னவும் ஆகவேண்டியதில்லை. பகவானையே நினைக்கிறவர்கள், பகவத் கைங்கர்யத்துக்கே ஆசைப்படுபவர்கள் ரொம்பவும் கஷ்டப்படும் போது அவர்கள் யாராஞலும் அவர்களிடம் அவருக்கு ஸ்வாபாவிகமாகக் கருணை உண்டாகி அநுக்ரஹம் செய்து கஷ்டத்தை நிவர்த்தி செய்துவிடுவார். அவர்கள் போய் அவரிடம் சொல்லவேண்டுமென்பதில்லை. அவரும் தாமே அவர்களிடம் போய் அநுக்ரஹம் பண்ண வேண்டுமென்பதுமில்லை. ஏதோ ஒரு கருவி மூலம் அநுக்ரஹம் பண்ணிவிடுவார். அந்தக் கிழவிக்கு அப்படித் தான் நடந்தது. அவள் தன்னுடைய ஸொந்த சரீர அநுபோகங்களுக்காக யௌவனம் பெறவேண்டுமென்று நினைக்கவில்லை. பகவானுக்கு சரீர கைங்கர்யம் நன்ருகச் செய்ய வேண்டுமென்பதொன்றே அவள் நினைவாயிருந்தது. அதனுலே என் குருவுக்கு தயை பொங்கிக்கொண்டு வந்தது. ப்ரக்ருதி (இயற்கை) நியதியையும் மாற்றினுல்கூடப் பரவாயில்லை என்று அவளை யுவதியாக்கினுர்.

"நீயோ சரீர போகங்களை அநுபவிக்கவேண்டும் என்ற ஆசையிலேயே யௌவனத்தைக் கேட்கிருய். இதற்கு அவர் ஒரு நாளும் ஒப்புக்கொண்டு அநுக்ரஹிக்க மாட்டார். யாராஞலும் ப்ரக்ருதி நியதிப்படி ஜரா மரணங்கள் நேரவேண்டியபோது நேரத்தான் செய்யும். நீ போனுல் வேறே எவனே ஒருத்தன் ராஜாவாக வந்து ராஜ்ய பரிபாலனம் பண்ணிவிட்டும் போகிருன். உனக்கு முந்தி எத்தனையோ பேர் ஆட்சி நடத்திவிட்டு அப்புறம் கிழடுதட்டி, 'போய்த்தானே' இருக்கிருர்கள்? ஒருவிதமான விசேஷ காரணமுமில்லாமல் உன்னை இளமையாக்குவதற்கு

Koviloor Digital Library

என் குருநாதர் ஸம்மதிக்கவே மாட்டார்" என்று கொஞ்சங் கூட ஒளிவு மறைவில்லாமல் கணிகண்ணன் துணிச்சலாகச் சொன்னான்—பல்லவ ராஜாகிட்டேயே.

ராஜஸ குணமே கொண்ட ராஜாவுக்குக் கோபம் வந்து விட்டது. "உன்னை இந்த ஊரை விட்டே ப்ரஷ்டம் பண்ணுகிறேன்" என்று ஆஜ்ஞை பண்ணினான்.

"நானே இப்படிப்பட்ட ராஜா இருக்கிற ஊரில் இருக்கிறதில்லை என்றுதானப்பா தீர்மானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன்!" என்று கணிகண்ணனும் சொல்லிவிட்டு நேரே கோவிலுக்கு, ஆழ்வாரிடம், வந்தான்.

அரண்மனையில் நடந்ததையெல்லாம் அவரிடம் சொல்லி விட்டு ஊரை விட்டுப் புறப்பட்டான்.

சொன்ன வண்ணம் செய்தது!

பக்தர், யோகி ஆனாலும் ஆழ்வாருக்கும் சுத்தமான ப்ரேமையினாலே இரண்டு பாசங்கள் மட்டும் இருந்தன போலிருக்கிறது! சிஷ்யன் கணிகண்ணனை விட்டுப் பிரிய முடியாத பாசம் அவருக்கு இருந்தது. அதேபோல அந்த ஆலய மூர்த்தியாக அர்ச்சாவதாரத்திலிருந்த* புஜங்க சயனப் பெருமாளிடமும் அவருக்கு அலாதியான பாச மிருந்தது.

அதனால் கணிகண்ணனின் பின்னோடேயே அவரும் புறப் பட்டுவிட்டார். அவன் அவரைக் கூப்பிடவில்லை. 'தான் எங்கேயாவது காடு, மலை என்று போய்விடலாம்; குருவையும் அங்கேயெல்லாம் இழுக்கடித்து ச்ரமப்படுத்த வேண்டாம்; இங்கேயே அவர் பாட்டுக்குப் பெருமாள் ஸந்நிதியில் இருந்து கொண்டிருக்கட்டும்; அவர் எங்கேயிருந்தாலும் நாம் எங்கேயிருந்தாலும் அவருடைய அருள் நம்மைக்

---

* அர்ச்சை என்றால் விக்ரஹம். ராம, க்ருஷ்ணாதியாக அவதரித்து ஸஞ்சாரம்செய்த இறைவனே ஸஞ்சரிக்காமல் ஓரிடத்தில் இருந்து கொண்டு அருள்வதற்காக அர்ச்சையாக அவதரிக்கிறான் என்பது ஆன்றோர் கருத்து.

Koviloor Digital Library

கட்டிக் காக்கும்; சரீர ரீதியில் எங்கேயிருந்தாலும் நம்முடைய ஹ்ருதயத்தில் அவர் எப்போதும் இருந்து கொண்டுதானிருப்பார்'—என்ற தெளிவோடு கணிகண்ணன் புறப்பட்டுவிட்டான்.

ஆனாலும் அவருக்கு அப்படி இருக்கமுடியவில்லை. ஸ்வயநலம் கலக்காத வாத்ஸல்யங்களில் இருக்கிற அழகு உலகத்துக்குத் தெரியவேண்டுமென்பதற்காக மிகவும் பெரியவர்கள்கூட பந்த பாசமிருக்கிறதுபோல இருப்பதுண்டு. அநேக கதை, புராணங்களில் இப்படிப் பார்க்கிறோம்.

கணிகண்ணனின் பின்னோடேயே புறப்பட்ட ஆழ்வார்' அந்த மாதிரியே பாசத்துடன் பெருமாளும் தன் பின்னோடி தொடர்ந்து வருவாரென்று நினைத்துக்கொண்டு ஆலயத்தில் இருக்கப்பட்ட தம்முடைய அபிமான மூர்த்தியைப் பார்த்தார்.

ஆனால் ஸ்வாமி லீலா விநோதனல்லவா? அதனால் அவன் பாட்டுக்கு நிம்மதியாக சேஷ பர்யங்கத்தில் படுத்துக் கொண்டே இருந்தான்.

அப்போதுதான் இந்தக் கதை ஆரம்பத்தில் நான் சொன்னாற்போல சிஷ்யனுக்காக குருவானவர் ஸ்வாதீனத் துடன் ஸ்வாமிக்கே ஆர்டர் போட்டார்.

தான் பரம பாகவதன், இந்த அர்ச்சையிடமே அபிமானம் வைத்தவன், ஆனபடியால் தன்னை பகவான் பின் தொடர்ந்து வரவேண்டும் என்று தற்பெருமையாக ஆழ்வார் ஆர்டர் போடவில்லை. பின்னே என்ன போட்டார்?

"கணிகண்ணன் போகின்றான்..."

தான் போவதைச் சொல்லிக்கொள்ளவில்லை. சிஷ்யன் போகிறானே, ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டானே, அதையே சொல்கிறார். "குழந்தை ஊரைவிட்டு, மனஸு வெறுத்துப் போகிறது. அதன்கூடவே நீ ஸதாகாலமும் இருந்து ரக்ஷிக்க வேண்டாமா?"

Koviloor Digital Library

ஆழ்வார் ஸதாவும் தன்னை ரக்ஷிக்கிறார், ரக்ஷிப்பாரென்ற உறுதி கணிகண்ணனுக்கு இருந்தாலும் அவர் தாம் ரக்ஷிப்ப தாக நினைக்கவில்லை. வெளியிலே தடபுடலாக பகவானுக்கு உத்தரவு போட்டாலும், உள்ளுக்குள்ளே ரக்ஷணமெல்லாம் அவனால்தான் நடக்கிறது, தாம் ஒன்றுமே இல்லை என்ற எளிமையோடுதான் இருந்திருக்கிறார்! அதனால்தான் கணி கண்ணன் போகிறபோது பேசாமல் படுத்துக்கொண்டிருக் கிற ஸ்வாமியிடம் இப்படிக் கேட்கிறார்.

''குழந்தையோடு நீயும் போகாமல் ஜம்மென்று பாம்பு மெத்தையில் படுத்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம், ஓய்? இப்படி நீள 'நெடுகப் படுத்துக்கிடக்காதீர்! இது கொஞ்சங்கூட நன்றாயில்லை'' (என்கிறார்).

"கணிகண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா!

''இப்படிப் படுத்துக்கொண்டு கிடக்காதே. நான் தைரிய மாக, துணிச்சலோடு உள்ளது உள்ளபடி சொல்கிறவன்; ஸத்யத்தின் சிவப்பேறிய நாக்கோடு உள்ளது உள்ளபடி பாடுகிற கவி."

"துணிவொன்றிச் செந்நாப் புலவோன் யான்''

என்று சொல்லிக்கொள்கிறார். ''நான் பயப்படாமல் வாய் சிவக்க ஸத்யத்தையே பாடுபவன்'' என்று சொல்வதிலேயே ''நீ பொறுப்பில்லாமல் படுத்துக் கொண்டிருந்தால் அதை உள்ளபடி உலகத்துக்குத் தமுகுப் போட்டு விடுவேன்!'' என்று எச்சரிக்கிற மாதிரி பாட்டு போகிறது.

"கணிகண்ணன் போகின்றான், காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா! துணிவொன்றிச்
செந்நாப் புலவோன் யான் செல்கின்றேன்...

"குழந்தை போகிறான். மனசு தாளாமல் நானும் போகிறேன். நீ மட்டும் ஸுகமாகப் படுத்துக்கொண்டிருந் தால் என்ன அர்த்தம்? [குரலை உயர்த்தி] கிளம்பு, வாரிச்

Koviloor Digital Library

சுருட்டிக்கொண்டு. பெரிசாக சேஷ பர்யங்கம் விரித்துக் கொண்டிருக்கிருயே, அதைச் சுருட்டிக்கொண்டு நீயும் எங்களோடு புறப்படு.

''நீயும் உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்!''
—அழுத்தமான ஆர்டராகவே போடுகிருர்!

"கணிகண்ணன் போகின்ருன், காமரு பூங்கச்சி
மணிவண்ணு! நீ கிடக்க வேண்டா!—துணிவொன்றிச்
செந்நாப் புலவோன்யான் செல்கின்றேன், நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்''.

பகவான் சயனித்துக் கொண்டிருக்கிறபோது ஆதிசேஷன் அவருக்குப் படுக்கை. அவரே எங்கேயாவது போகிருரென்ருல் அப்போது அவன் அவருக்கு ஆயிரம் தலையாலும் குடைபிடித்துக்கொண்டு போவான்.

சென்ருல் குடையாம்*.

க்ருஷ்ணுவதாரம் ஆனவுடன் வஸுதேவர் குழந்தையை மழை வெள்ளத்தில் தூக்கிக்கொண்டு போகும்போது ஆதிசேஷனேதான் குடை பிடித்தான்.

ஆர்டர் போடுகிறபோதும் ஸ்வாமியிடம் ஆழ்வாரின் கரிசனம் குறையவில்லை. 'பாம்பு மெத்தையிலிருந்து இறங்கி நீ வா' என்று மட்டும்சொல்லாமல், 'ஸ்வாமிக்கு வெயில் படாமல், மழைபடாமல் குடை வேண்டுமே' என்ற கரிசனத்தில் சேஷசயனத்தையும் சுருட்டிக் கூட எடுத்துக்கொண்டே புறப்படச் சொல்கிருர்!

ஆர்டர் போட்டாரோ இல்லையோ, பெருமாளும் அப்படியே பண்ணிவிட்டார்! அதற்குமேல் விளையாட்டுப் பார்த்து பக்தர் மனஸ் வருத்தப்படும்படி பண்ணக் கூடாதென்று, அவர் சொன்னபடியே வாரிச் சுருட்டிக் கொண்டு கணிகண்ணனேடும் ஆழ்வாரோடும் தானும் புறப்பட்டுவிட்டார்!

---

* பொய்கையாழ்வாரின் திருவந்தாதி, 53.

Koviloor Digital Library

'சொன்ன வண்ணம் செய்தது' இதோடு முடியவில்லே.

மூன்று பேரும் அப்படியே புறப்பட்டு நாலு, அஞ்சு மைல் போகிறதற்குள் நன்ருக இருட்டிவிட்டது. மநுஷ்யர்கள் மாதிரியே விளையாடணும் என்று பகவானுக்கு இருந்ததால், "ராத்ரி ஆயிடுத்து. அதனுல், இனிமேலே பிரயாணம் பண்ண வேண்டாம். இங்கேயே ராத் தங்கிவிட்டு கார்த்தாலே கிளம்பலாம்" என்று சொன்னுன். பகவான் தான் சொன்னுனே, ஆழ்வார்தான் சொன்னுரோ? அவனே இவர் சொன்னவண்ணம் செய்பவனுகத்தானே இருந்தான்?

ஆகக்கூடி, பாலாற்றங்கரையிலே குளுகுளு என்று காற்று வீசுகிற இடத்திலே மூன்று பேரும் ராப்பொழுதை சௌஸ்தமாகக் கழித்தார்கள்.

இதற்குள்ளே—கோவிலேவிட்டுப் பெருமாள் புறப்பட்ட அந்த நிமிஷத்திலிருந்தே—காஞ்சீபுரத்தில் என்ன ஆச்சு என்ருல், ஒரேயடியாக அலக்ஷ்மி (அமங்களம்) வந்து கப்பிக் கொண்டுவிட்டது. பகவான் ஊரைவிட்டுப் போய்விட்டா னென்ருல் அவனுடைய வக்ஷ ஸ்தலத்திலேயே வாஸம் பண்ணிக்கொண்டிருக்கும் லக்ஷ்மியும்தானே கூடப் போய் விடுவாள்? அதனுல் "நகரேஷு காஞ்சி" என்று ப்ரஸித்தி பெற்ற ராஜதானியிலே லக்ஷ்மீகரமே போய் மூதேவி வந்து மூடிக்கொண்டு விட்டது. ஒரே இருட்டு! ஒரு இடத்திலே யாவது தீபமே ஏற்றிக் கொள்ளவில்லே! தேவாலயங்களிலும் தீபமில்லாமல் பூஜையெல்லாம் நின்று போயிற்று. எல்லார் மனஸிலேயும் வேறே ஒரேயடியாக இருள் கப்பிக்கொண்டு விட்டது. இனம் தெரியாமல் ஒரே துக்கம், ஒரே திகில்.

எல்லாரும் போய் ராஜாவிடம் முறையிட்டார்கள்.

அவனுக்கும் ஒரே வியாகுலம், பய ப்ராந்தியாகத்தான் இருந்தது. பெருமாள் ஊரைவிட்டுப் போனதில்தான் இப்படி உத்பாதமாக ஆகிவிட்டது என்று புரிந்தது. "இதோ போய் அவர் காலில் விழுந்து ப்ரார்த்தித்துக்கொண்டு அவரை மறுபடி அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று புறப் பட்டான்.

Koviloor Digital Library

இருட்டிலே ராஜாவைக் காபந்து பண்ணி ஊரெல்லைக்கு அழைத்து வருவதற்குள் பொழுது விடிந்துவிட்டது.

பாலாற்றங்கரையில் பகவான் ஆழ்வாரோடும் கணிகண்ணனோடும் தங்கியிருந்த இடத்துக்கு ராஜா மறுநாள் காலம்பற வந்து சேர்ந்தான்.

அப்போதும் அவனுக்குக் கணிகண்ணனிடம் தான் தப்பாக நடந்துகொண்டு நகர ப்ரஷ்டம் பண்ணினதற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று தோன்றவில்லை. நேரே பெருமாளிடம்,—அவர் அர்ச்சையாக இருந்தாரோ, சல (நடமாடும்) மூர்த்தியாக இருந்தாரோ, ஏதோ ஒன்று; அவரிடமே போய்—நெடுஞ்சாண்கிடையாக நமஸ்காரம் பண்ணினான். "பெருமாள் இல்லாமல் ஆலயம் சூன்யமானது போலவே ஊர் முழுக்கவும் சூனியமானமாதிரி ஆகிவிட்டது. எல்லா ஜனங்கள் மனசும் சூன்யமாகிவிட்டது. என்ன அபசாரம் நடந்திருந்தாலும் க்ஷமித்து பகவான் மறுபடியும் காஞ்சிக்கு எழுந்தருளணும்" என்று வேண்டிக்கொண்டான்.

ஸ்வாமியோ, "நானாக ஸங்கல்பித்துக்கொண்டு அங்கே விட்டுப் புறப்படவில்லை. ஆழ்வார் சொன்னார். அவர் சொன்னபடி செய்யணுமென்றே கூட வந்துவிட்டேன். அவரே மறுபடி சொன்னாலன்றி நான் இங்கேயிருந்து திரும்புவதற்கில்லை!" என்று சொல்லிவிட்டார்.

அர்ச்சா மூர்த்தியாகவே அவர் இருந்திருந்தால் இப்படி அசரீரியாகத் தெரிவித்தாரென்று வைத்துக் கொள்ளலாம்.

வேறே வழியில்லாமல் ராஜா ஆழ்வார் காலில் விழுந்து வேண்டிக்கொண்டான்.

அவரானால், "பெருமாளை விட்டு என்னாலே இருக்க முடியாது. அதனாலே அவரை மாத்திரம் உன்னோடு போகச் சொல்லிவிட்டு நான் இங்கேயே இருப்பது என்பது நடக்காத கார்யம்" என்று மறுத்துச் சொல்லிவிட்டார்.

Koviloor Digital Library

"தாங்களும்தான் திரும்ப வாருங்கள். நான் அதற்குத் தான் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்று ராஜா வேண்டிக்கொண்டான்.

அதற்கு அவரும் பெருமாள் சொன்ன மாதிரியே பதில் சொன்னுர். "நாளுக உத்தேசம் பண்ணி இங்கே வந்திருந் தால் நானுகவே மறுபடி திரும்பலாம். ஆனுல் நானும் தானுகப் புறப்பட்டுவிடவில்லை. கணிகண்ணனுக்கு நீ ஆக்ஞை பண்ணினதாலும், நீ நடந்துகொண்ட விதத்தில் அவனுக்கே உன் ஊரில் இருக்கப் பிடிக்காததாலும் அவன் புறப்பட்டான். அவனை விட்டுப் பிரிந்திருக்க முடியாமலே நானும் பின்னுேடே கிளம்பினேன். ஆனதினுலே என் காலில் விழுகிறதற்குப் பதில் அவன் காலில் போய் விழு. பண்ணினது தப்பு என்று க்ஷமாபனம் பண்ணிக்கொண்டு திரும்பிவரணுமென்று அவனிடம் ப்ரார்த்தித்துக் கொள்ளு. அவன் ஸம்மதித்தால் நானும் திரும்புகிறேன், பெருமாளை யும் திரும்பச் சொல்கிறேன்" என்று முடிவாகச் சொல்லி விட்டார்.

அப்புறம் என்ன பண்ணிக்கொள்கிறது?
ராஜா போய் கணிகண்ணன் காலில் விழுந்தான்.

சிஷ்யனுக்காக குரு முதலில் த்ரிபுவன சக்ரவர்த்தியான பகவானையே வாரிச் சுருட்டிக்கொண்டு கோவிலை விட்டு விட்டு வரப் பண்ணினுர். இப்போது அந்தப் பையன் காலில் பல்லவ சக்ரவர்த்தி விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் படிச் செய்கிறுர்!

ராஜா வேண்டிக்கொண்டவுடனே, ஸ்வபாவத்தில் இளகின மனசு படைத்த கணிகண்ணன் காஞ்சீபுரத்துக்குத் திரும்பவும் புறப்பட்டான்.

அவன் பின்னுேடே ஆழ்வார், ஆழ்வார் பின்னுேடே அவர் சொன்னபடியெல்லாம் செய்கிற பெருமாள்—என்று எல்லோருக்குமாக ராஜதானிக்கு வந்து சேர்ந்தார்கள்.

Koviloor Digital Library

பெருமாள், ஆழ்வார், கணிகண்ணன் ஆகிய மூன்று பேரும் ஒரு ராத்ரி முழுவதும் பாலாற்றங்கரையில் தங்கிய அந்த இடத்திற்கு ஓரிரவிருக்கை (ஓர் இரவு இருக்கை) என்றே பெயர் ஏற்பட்டது. அந்தப் பெயர் சிதைந்து சிதைந்துதான் இப்போது ஓரிக்கை என்று வழங்குகிறது.

மூன்றுபேரும் காஞ்சீபுரத்திற்குத் திரும்பியதும் அலக்ஷ்மி யெல்லாம் நீங்கி நகரம் பழையபடி சோபை பெற்றது. ஜனங்களின் மனஸிலிருந்த பீதி துக்கம் எல்லாமும் போய் ஸந்துஷ்டி நிறைந்தது.

பகவான் கோவிலுக்குத் திரும்பின அப்புறமும் சுருட்டிப் பிடித்துக்கொண்டு வந்த சேஷ பர்யங்கத்தை விரித்துப் படுத்துக் கொள்ளாமலே நின்று கொண்டிருந்தான். "பாயைச் சுருட்டிக்கொண்டு புறப்படு" என்று உத்தரவு போட்டவர் "படு" என்று மாற்றி உத்தரவு போடும்வரையில் தானுக எப்படிப் படுப்பது என்றுதான் நின்றுகொண்டே யிருந்தான்! பக்தர்கள் வார்த்தைக்கு பகவான் அப்படிக் கட்டுப்படுகிறுன்! "பக்த பராதீனன்" என்று அவனைச் சொல்வது அதனுல்தான்.

இப்படி, பரம பத நாதனுக இருக்கப்பட்டவன் தன் வார்த்தைக்குக் காத்துக் கொண்டிருக்கிறுனென்று பார்த்த வுடன் ஆழ்வாருக்கு நெஞ்சு உருகிவிட்டது. முன்னே பாடின பாட்டின் வார்த்தைகளையே துளித்துளி மாற்றி, ஆனுல் அர்த்தம் அடியோடு மாறும்படியாக, பாடினுர்.

இப்போதும், "உன்னைவிட்டுப் பிரிந்திருக்க முடியாத நான்தான் திரும்பி வந்துவிட்டேனே! இன்னமும் ஏன் யோசிக்கிறுய்? உன் சேஷ பர்யங்கத்தை விரித்துக்கொண்டு படுத்துக்கொள்" என்று சொல்லாமல், "கணிகண்ணன்தான் திரும்பி வந்துவிட்டானே!" என்று சிஷ்யனைப் பெருமைப் படுத்தி, அவனிருக்கிற இடம் எதுவானுலும் அங்கே அவனை ரக்ஷிப்பதற்காக பகவானும் கூட இருக்கணும் என்று த்வனிக்கும்படியாக ஆரம்பித்தார்.

Koviloor Digital Library

"கணிகண்ணன் போக்கொழிந்தான்".

"போக்கு ஒழிந்தான்": இந்த ஊரைவிட்டு ப்ரயாணம் பண்ணுவதில்லை என்று இங்கேயே தங்கிவிட்டான்.

முன்னே "கணிகண்ணன் போகின்றான்" என்று ஆரம்பித்துப் பாடியவர் இப்போது அதையே கொஞ்சம் மாற்றி—அர்த்தத்திலே ரொம்ப மாறுபட்டாலும், வார்த்தையிலே ஸ்வல்பமாகவே மாற்றிப் பாடிக்கொண்டு போய், "நீயுமுன்றன் பைந்நாகப் பாய் விரித்துக்கொள்" என்று முடித்தார். முன்னே, 'சுருட்டிக் கொள்' என்று சொன்னதை மாற்றி 'விரித்துக்கொள்' என்று முடித்து விட்டார். அதே வெண்பா மீட்டர். பெரும்பாலான வார்த்தைகள் ஒன்றேதான். ஆனாலும் அப்போது "பாயைச் சுருட்டிண்டு கிளம்பு" என்றவர் இப்போது அதற்கு நேர் எதிராக "பாயை விரிச்சுண்டு படுத்துக்கோ" என்று பகவானிடம் சொன்னார்.

கணிகண்ணன் போக்கொழிந்தான், காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்கவேண்டும்!—துணிவொன்றிச்
செந்நாப் புலவோன் யான் செலவொழிந்தேன்,
நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் விரித்துக்கொள்.

முன்னே, "நீ கிடக்க வேண்டா"—"இப்படிப் படுத்துண்டு கிடக்காதே" என்றவர், இப்போது "நீ கிடக்கவேண்டும்" என்கிறார். "நன்னா உன் கிடந்த திருக்கோலத்திலேயே சயனம் பண்ணிக்கோப்பா!"

முன்னே, "யான் செல்கின்றேன்" என்றவர் இப்போது "யான் செலவொழிந்தேன்" என்கிறார். கணிகண்ணன் போக்கொழிந்ததால் இவரும் செலவொழிந்துவிட்டார். 'செலவு' என்றால் செல்வது. 'வரவு செலவு' என்று ரூபாயைச் சொல்லும்போது மட்டும் இந்த வார்த்தையைச் சொல்கிறோம். "ரொம்ப செலவாகிறது" என்றால் கையைவிட்டு ரொம்ப ரூபாய் சென்று விடுகிறது, போய்விடுகிறது என்று அர்த்தம்.

Koviloor Digital Library

"கணிகண்ணனும் போக்கொழிந்தாச்சு. நானும் செல வொழிந்தாச்சு. இனிமேலே இங்கேதான் இருக்கப் போகிறோம். இப்போது ஊருக்கு நேர்ந்த உத்பாதத்தைப் பார்த்துவிட்டதால் இனிமேலே ராஜாவோ, ஜனங்களோ யாரும் நாங்கள் இந்த ஊரை விட்டுப் போகிற மாதிரிச் செய்யமாட்டார்கள். அதனால் இங்கேயே இருந்துகொண் டிருப்போம். ஆகையினால் நீயும் இனிமேல் உன் சேஷ பர்யங்கத்தை விரித்துக்கொண்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளலாம். ஐயோ பாவம்! உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. பெருமாளாகப் பட்ட நீ இந்த சின்ன ஆள் என்ன சொல்லுவேனோ, பண்ணுவேனோ என்று சயனத்தைச் சுருட்டி வைத்துக்கொண்ட கையோடேயே இன்னமும் நின்று கொண்டிருக்கிறாய்? அதை விரித்துக் கொள்ளப்பா!

"பைந்நாகப் பாய் விரித்துக் கொள்!"

இப்படி அவர் வாய்ப்படச் சொன்ன அப்புறந்தான் ஸ்வாமி மறுபடி ஆதிசேஷனை மெத்தையாகப் போட்டுக் கொண்டு படுத்துக்கொண்டார்.

அவர்தான் காஞ்சீபுரத்தின் அநேக தேவாலயங்களில் ஒன்றில் இருக்கிற யதோக்தகாரி, சொன்ன வண்ணம் செய்த பெருமாள்.

காஞ்சீபுரத்தில் பச்சை வண்ணப் பெருமாள், பவள வண்ணப் பெருமாள் என்றெல்லாமும் பகவான் இருக்கிறார். இவரோ, சொன்ன வண்ணம் செய்த பெருமாள்!

எதற்குக் கதை சொன்னேனென்றால்: சிஷ்யன் அவனே பகவானிடம் போக வேண்டுமென்றில்லை; அவன் குருவினிடத்தில் பூர்ண பக்தி விச்வாஸம் வைத்துவிட்டால் அவர் பகவானையே அவன் கிட்டே போகப் பண்ணி விடுவார்; அவன் போகிற இடமெல்லாம் பின்னோடேயே பகவானும் போய் ரக்ஷிக்கும்படியாகப் பண்ணிவிடுவார். சிஷ்யனுக்காக குரு ஆர்டர் போட்டுவிட்டால் பகவானே

Koviloor Digital Library

"நில்" என்றால் நிற்பான், "ஓடு" என்றால் ஓடுவான், "படு" என்று அவராகச் சொன்னால்தான் படுப்பான்.

இதைத் தெரிந்து வைத்துக்கொண்டுதான் சில பேர் குருவே போதும், தனியாக ஒரு ஈச்வரன் வேண்டாம் என்றிருந்தது.

ஈச்வரனையும் வருவித்துத் தரும் குரு

அப்படியே, ஈச்வரன் வேணுமா? அதற்கும் அவனைத் தான் நேரில் உபாஸிக்கணுமென்றில்லை. அவனைப் பிடித்துக் கொண்டுவர நம்முடைய உபாஸனா சக்தி போதவே போதாது. அதனால் ஒரு குருவைப் பிடித்துக் கொண்டு விட்டால் போதும். நமக்காக அவர் ப்ரார்த்தித்தோ சண்டை போட்டோ அவனை இழுத்துக்கொண்டு வந்து விடுவார்.

இப்படி, தனக்குக் கிடைத்த ஈச்வர தர்சனம் தன்னுடைய சிஷ்யர்களுக்கு, அல்லது தன்னைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் கிடைக்கும்படியாகப் பல மஹான்கள் பண்ணியிருக்கிறார்கள்

ஸோமாசி மாற நாயனார் கதையில் இப்படித்தான் பார்க்கிறோம். அவர் தம்மால் நேராக ஈச்வரனை வருவித்துக் கொள்ள முடியாதென்று ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளிடம் போய் வேண்டிக்கொள்ள, ஸுந்தரமூர்த்தி அப்படியே வரவழைத்து விட்டாரென்று கதை. இவர்களை குரு சிஷ்யர்களென்று சொல்ல முடியாது. ஆனாலும் இதிலிருந்தே ஈச்வரனோடு நெருங்கியிருக்கிற குரு, அவனை சிஷ்யனுக்கும் நெருக்கமாகக் கொண்டு வந்து விட முடியுமென்று தெரிகிறது.

அந்தக் கதையைக் கொஞ்சம் பார்க்கலாம். ஆழ்வார் கதை கேட்டோம். நாயன்மார்களில் ஒருத்தர் கதை கேட்க வேண்டாமா? இது இரண்டு நாயன்மார்கள் ஸம்பந்தப்பட்ட கதை.

Koviloor Digital Library

ஸோமாசி மாற நாயனுர்

'ஸோமாசி' என்றுல் என்னவோ ஏதோ என்று சிரிக்க வேண்டாம். ஸோமயாகம் பண்ணிய 'ஸோமயாஜி' தான் 'ஸோமாசி' என்றுயிருக்கிறது!

நாயன்மார்களில் ஸமூஹத்தின் அத்தனே பிரிவைச் சேர்ந்தவர்களும் இருப்பார்கள். தீண்டாதாராகப் பண்ணேவேலே செய்து கொண்டிருந்த நந்தனுரிலிருந்து, வேடர் (கண்ணப்பர்), செம்படவர் (அதிபத்த நாயனுர்), வண்ணுன் வேலே பண்ணினவர் (திருக்குறிப்புத் தொண்ட நாயனுர்), குயவர் (திருநீலகண்டர்) என்றிப்படிப் போய் சேர, சோழ, பாண்டிய, பல்லவ ராஜாக்கள் வரையில் அத்தனே ஜாதிகளேயும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் பார்க்கிறேம். இவர்களில் ஞானஸம்பந்தர் உள்பட பன்னிரண்டு வைதிக ப்ராம்மணர்கள் இருக்கிறுர்கள். இவர்களில் ஒருத்தர் தான் ஸோமாசிமாறர்.

பேரளத்துக்குக் கொஞ்ச தூரத்தில் அம்பர், அம்பர் மாகாளம் என்று இரட்டை ஊர்கள் அடுத்தடுத்து இருக்கின்றன. அந்த அம்பரைச் சேர்ந்தவர்தான் ஸோமாசி மாறர். "அம்பரான் சோமாசி மாறனுக்கு" என்றே 'திருத்தொண்டத்தொகை'யில் ஸுந்தரமூர்த்தி அவரைச் சொல்லியிருக்கிறுர். ஸாமவேதியான அவர் ஸோமயாகம் செய்த இடம் என்று இன்றைக்கும் அம்பருக்கும் அம்பர் மாகாளத்துக்கும் நடுவிலுள்ள ஒரு மண்டபத்தைச் சொல்கிறுர்கள். வைகாசி மாஸ ஆயில்யத்தில் அந்த யாகத்தை ஞாபகப் படுத்தி உத்ஸவம் நடத்துகிறுர்கள். அதில் ஸ்வாரஸ்யமான அம்சங்கள் உண்டு. அது ஸம்பந்தமாகத்தான் கதை சொல்ல வந்தேன். நாமாக ஈச்வரனே வரவழைக்க முடியாத போது நமக்காக குருவை, அல்லது குருஸ்தானத்திலுள்ள ஒரு பெரியவரைக் கொண்டு அவனே வரவழைத்துக் கொண்டு விடலாம் என்கிற கதை.

பெரிய புராணத்தில் ஸோமாசி மாறரைப் பற்றிச் சொல்லும்போது அவர் யாக கர்மாவின் மூலமே

Koviloor Digital Library

பரமேச்வரனை ப்ரீதி செய்துவிடலாம் என்ற அபிப்ராயத்தை உடையவரென்றும், திருவாரூருக்குப்போய் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளை ஆச்ரயித்து அதன் மூலமே சிவஸாயுஜ்யம் அடைந்தாரென்றும் மாத்திரம் சொல்லி அதோடு விட்டிருக்கிறது. ஸ்தல புராணங்களிலிருந்து அவர் பண்ணின ஸோம யாகக் கதையை—ஸ்வாரஸ்யமான கதை என்றேனே, அதை—தெரிந்துகொள்கிறோம். அநேக ஸ்தல புராணங்களைப் போல இது ஜனங்களுக்குத் தெரியாததாக இல்லாமல் அந்தச் சீமைகளில் இன்றைக்கும் ப்ரபலமாக இருப்பதால், இதற்காகவே உத்ஸவம்கூட நடத்துவதால், authentic-ஆனது தான் (ஆதார பூர்வமானது தான்) என்று தெரிகிறது. இப்படிச் சொன்னதால், ஜனங்களுக்கு அதிகம் தெரியாத ஸ்தல புராணங்கள் authentic இல்லை என்று அர்த்தமில்லை.

'ஸோம யாகத்தினால் பரமசிவனை ப்ரீதி பண்ண வேண்டும். அதிலே நாம் கொடுக்கிற ஆஹுதிகள் அக்னி முகமாக அவனைச் சென்றடைகின்றன என்று வெறுமனே ஒரு நம்பிக்கையின் மூலம் தெரிந்துகொண்டால் போதாது. ஈச்வரனே ப்ரத்யக்ஷமாக யஜ்ஞத்துக்கு வந்து ஆஹுதியை வாங்கிக்கொள்ளவேண்டும்' என்று ஸோமாசிமாறருக்கு ரொம்பத் தாபமாக இருந்தது. அதே ஸமயத்தில், 'நமக்காவது, ஈச்வரனே நேரே வந்து தர்சனம் தந்து, ஆஹுதிகளை வாங்கிக் கொள்வதாவது? அவனை வரவழைக்கிற அத்தனை சக்தி, பக்தி நமக்கு எது?' என்றும் இருந்தது. ஆனாலும் ஆசை மட்டும் விடவில்லை. அதனால், 'ஈச்வரனின் பரம பக்தராக, அவனோடு நெருங்கியிருப்பவராக யாராவது இருந்தால் அந்தப் பெரியவரிடம் போய் வேண்டிக்கொண்டு நம்மால் முடியாததை அவரால் நடத்திக் கொள்ளலாமே! இப்படி நமக்காக ஈச்வரனை வரவழைத்துத் தரக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?' என்று தேடிக்கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

ஸ்வாமியிடம் ஸ்வாதீனம் கொண்ட ஸ்வாமிகள்

அப்போதுதான் அவர் திருவாரூரிலிருந்த ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகளைப் பற்றிக் கேள்விப்பட்டார். அவருக்கும் ஈச்வரனுக்கும் இருக்கப்பட்ட அத்யந்த உறவைப் பற்றிக் கேள்விப்படப் பட அவருக்கு ரொம்ப விசித்ரமாகவும் இருந்தது, அதிசயமாகவும் இருந்தது. அந்த ஸ்வாமிகள் (ஸுந்தரமூர்த்தி) ஊரிலுள்ள எல்லா ஸ்வாமிகள் மாதிரியும் இல்லாமல் ரொம்ப மாறுதலாக இருந்தார். ஸ்வாமிகள் என்றால் பொதுவாக ஒட்ட ஒட்டக் கிடந்துகொண்டு, ஒரு கோவணத்தைக் கட்டிக்கொண்டு, 'பெண்ணாவது, பொன்னாவது?' என்று இருப்பார்கள் என்றால்—இவரானால் ஷோக் ஆஸாமி மாதிரி இருப்பதாகத் தெரிந்தது! குங்குமப் பொட்டும் ஜவ்வாதுப் பொட்டுமாக ஏக அலங்காரமாயிருப்பாராம்! அதோடு, கேட்டாலே 'ஷாக்' அடிக்கிற மாதிரி, போகப்படாத வீட்டுக்குப் போகிறவராம்! இருந்தாலும் ஈச்வரன் அவருக்கு ரொம்பவும் அத்யந்தமாம். "பொன் வேணும், பெண் வேணும் "என்று அவனையே இவர் கேட்டால் அவனும் உடனுக்குடனே அப்படியே கொடுக்கிறானும்! போகப்படாத வீட்டுக்காரி இவர் கிட்டே கோபித்துக் கொண்டால், இவருக்காக ஈச்வரனும் அந்தப் போகப்படாத இடத்துக்கு நடையாக நடந்து தூது சொல்லி அவளுடைய கோபத்தைத் தீர்த்துவைத்து இவர் அங்கே மறுபடி போகும்படி ஸஹாயம் பண்ணுகிறானும்! ஸ்வாதீனத்திலே இவர் ஈச்வரனையே எடுத்தெறிந்துகூடப் பேசுகிறாராம். இவர் பொய் ஸத்யம் பண்ணிக் கண் அவிந்து போனால், அதற்காக ஈச்வரனைத் திட்டுவாராம். 'ஏனையா என் கண்ணைப் பறிச்சே! நீ நன்னா இருப்பியா? வாழ்ந்து போதீரே*!" என்பாராம். (...அதாவது 'நீ நன்றாக வாழ்வாய்' என்று சொல்லுகிற மாதிரி சொல்லும் போதே 'நீ வாழ்வாயா?' என்ற அபிப்ராயத்தைத் தெரிவிப்பது. 'எனக்கு இத்தனை கஷ்டம் கொடுத்தியோன்னோ, நீ நன்னாயிரப்பா!' என்றால்

---

* "மீளாவடிமை" பதிகத்தின் அடிகள் "வாழ்ந்து போதீரே!" என்றே முடியும்

Koviloor Digital Library

என்ன அர்த்தம்? இப்போதுங்கூட, 'நீ வாழ்ந்தே!' என்று சொல்லும்போது என்ன அர்த்ததில் சொல்கிறோம்?) இப்படி அந்த ஸ்வாமிகள் ஈச்வரனையே கடிந்து கொள்கிறாராம். ஈச்வரனும் உடனே கண்ணைக் கொடுக்கிறானும். இவருக்கு ஏதோ திருட்டுப் போனால், 'நீ இருந்து என்ன ப்ரயோஜனம்: எத்துக்கிருந்தீர்*?' என்று ஸ்வாமியை அதட்டுகிறாராம். உடனே ஸ்வாமி திருடர்களையே திரும்பிவந்து கொள்ளை யடித்ததையெல்லாம் கொட்டிவிட்டுப் போகப் பண்ணு கிறாராம். மிரட்டி உருட்டியுங்கூட ஸ்வாமியிடம் காரியம் ஸாதித்துக் கொள்வதால் அவருக்கு 'வன்றொண்டர்' என்றே பேராம்! தொண்டர்களென்றால் அடங்கியொடுங்கிக் கிடப்பார்களென்றால் இவரோ வன்மையாகக் கண்டித்துப் பேசி யஜமானனிடம் காரியம் வாங்கிக்கொள்ளும் வன்தொண்டராயிருக்கிறார்! இவர் விசித்ரமான தொண்டரா யிருக்கிறாரென்றால் ஸ்வாமியும் அதைவிட விசித்ரமாக இவர் சொல்கிறபடியெல்லாம் கேட்கிற இன்னொரு யதோக்தகாரி யாக இருக்கிறார்! (என்றெல்லாம் ஸோமாசி மாறர் நினைத்தார்.)

நம் அறிவை மீறிய மஹான்களின் போக்கு

மகான்களின் போக்கு, ஈச்வரனின் போக்கு நம்முடைய சின்ன புத்திக்குப் புரியாது. ஆகையால், நாம் இந்த புத்தியைக் கொண்டு முடிவு பண்ணி அபசாரத்துக்கு ஆளாகிவிடக்கூடாது. நம் புத்திக்கும் புரிகிற மாதிரி சிலவற்றுக்குக் கதை, புராணங்களில் பெரியவர்கள் காரணம் காட்டியிருக்கிறார்கள். அவற்றை நம்பி எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஸுந்தரமூர்த்தி பரவை, சங்கிலி ஆகியவர்களிடம் ப்ரேமையாயிருந்தாரென்பதால் சட்டென்று அவரைப் பற்றிக் கன்னாபின்னா என்று நினைத்துவிடக்கூடாது. அவர்கள்

* ''கொடுகு வெஞ்சிலை'' என்ற பதிகத்தின் ஒவ்வோர் அடியிலும் கேட்கும் கேள்வி.

Koviloor Digital Library

அன்ய ஜாதி, அதிலும் ஒருத்தி போகப்படாத தெருவை, வீட்டைச் சேர்ந்தவள், என்பதால் அவர்களையும் குறைவாக நினைத்துவிடக் கூடாது. பரவை நாச்சியார், சங்கிலி நாச்சியார் என்று அவர்களை நிரம்ப மரியாதை கொடுத்தே தொன்று தொட்டுச் சொல்லிவருவதிலிருந்து அவர்கள் எத்தனை உயர்ந்த சீலமும் பக்தியும் உள்ளவர்களாயிருந்திருக்க வேண்டுமென்று புரிந்துகொள்ளலாம் 'அவர்கள் யார்? ஸுந்தரமூர்த்தி யார்? சாஸ்த்ரோக்தமாக அவர் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போனபோது வ்ருத்த வேதியராக வந்து ஓலையைக் காட்டி அவரைத் தன் அடிமை என்று ரூபித்து அவர் க்ருஹஸ்தாச்ரமம் போகாமல் தடுத்த ஈச்வரனே அப்புறம் அவரை இந்தப் பெண்களிடம் சேர்த்து வைப்பானேன்? அதற்காகப் போகப்படாத இடத்துக்குத் தானே தூது போவானேன்?' என்பதற்கெல்லாம் 'பெரிய புராண'த்தின் ஆரம்பத்திலேயே பதிலிருக்கிறது.

ஸுந்தரமூர்த்தி பூலோகத்தில் பிறப்பதற்கு முன்பு கைலாஸத்தில் ஈச்வரனுக்கு நெருங்கிய பார்ஷதராக (கிங்கரராக) இருந்தவர். அப்போது பரவை நாச்சியாரும் சங்கிலி நாச்சியாரும் அம்பாளுக்கு ஸகிகளாக இருந்தனர். ஒரு நாள் அவர்கள் இரண்டு பேரையும் ஸுந்தரர்—அப்போது ஆலால ஸுந்தரர் என்று அவருக்குப் பெயர்—அவர்களை நந்தவனத்தில் பார்த்தார். பரஸ்பரம் அவர்களுக்குள் ப்ரேமை ஏற்பட்டுவிட்டது. கைலாஸத்தில் இந்த மாதிரி காதல், கீதல் என்று நடப்பது ரொம்பத் தப்பு என்றுதான் ஈச்வரன் அவர்களை பூலோகத்தில் பிறக்கும்படிச் சபித்து, அதிலேயே கருணையோடு அந்த ஜன்மாவில் அவர்கள் தங்கள் ஆசையையும் பூர்த்தி செய்துகொள்ளட்டும் என்று அநுக்ரஹம் பண்ணினான்.

இம்மாதிரி, நமக்கு விசித்ரமாக, ஒவ்வாததாகத் தோன்றுகிற பலவற்றுக்குக் காரணம் புராணங்களில் கொடுத்திருக்கிறது. நாம்தான் அவஸரப்பட்டு, ஒன்றையும் பார்க்காமல் 'க்ரிடிஸைஸ்' பண்ண ஆரம்பித்துவிடுகிறோம்.

Koviloor Digital Library

சிலவற்றுக் காரணம் சொல்லியிருப்பதிலிருந்தே, சொல்லாமல் விட்டவற்றுக்கும் ஏதாவது காரணம் இருக்க வேண்டுமென்று புரிந்து கொள்வதுதான் முறை.

பரவை, சங்கிலி விஷயமாக ஸுந்தரமூர்த்தியைப் பற்றிக் குறைத்து நினைப்பவர்கள் இன்னம் சில விஷயங்களையும் சேர்த்துப் பார்க்கவேண்டும். பத்னி என்று ஒரு கன்னிகைக்கு அவர் சாஸ்த்ரோக்தமாகத் தாலிகட்டி தாம்பத்தியம் ஆரம்பிக்கவிருந்த ஸமயத்தில்தான் ஈச்வரன் அவரை இழுத்தான். அவரும் உடனே அவனுக்கு "மீளா அடிமை" என்று சொல்லிக்கொண்டு குடும்ப வாழ்க்கையைத் துச்சமாகத் தள்ளிவிட்டு கோவில் கோவிலாகச் சுற்றப் புறப்பட்டுவிட்டார். அப்போது ஒரு ஊருக்கு அவர் போன போது அங்கேயிருந்த கோட்புலி நாயனார் என்ற பெரியவர் நல்ல குணவதிகளாகவும், ஸௌந்தர்யவதிகளாகவும் இருந்த தம்முடைய இரண்டு புத்ரிகளையும் ஸுந்தரமூர்த்திக்கு அர்ப்பணம் பண்ணி, "இவர்களை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். சிங்கடி, வனப்பகை என்ற அந்தப் பெண்களும் வந்து அவரை நமஸ்கரித்தார்கள். அப்போது ஸுந்தரர் பரம சுத்தமான மனஸோடு, "இவர்களை என் புத்ரிகளாக ஏற்றுக்கொள்கிறேன்" என்றே சொன்னார். இதற்கு அகச்சான்றாக அவ்வூரிலே பாடிய பதிகத்தில் தம்மை "சிங்கடியப்பன்" என்றே சொல்லிக்கொள்கிறார்*.

இன்னொரு angle-ல் (கோணத்தில்) சொல்கிறேன்: மஹான்களுடைய சரித்ரம், வாழ்க்கை வரலாறு என்பதில் வெளியிலே நடக்கிற ஸம்பவங்களைப் பார்க்கிறோம். அந்த ஸம்பவங்கள் அவர்கள் மனஸை எப்படித் தொட்டது,—தொட்டதா தொடாமலே இருந்ததா?—என்றும் பார்க்கிறோம். ஆனால் இதற்கெல்லாம் உள்ளே அவர்களுடைய ஹ்ருதய அந்தரங்கம் எப்படியிருந்தது என்று தெரிந்தால் தான் அவர்களுடைய உண்மையான பெருமை தெரியும்.

---

* திருநாட்டியத்தான் குடிப் பதிகமான" பூணாணாவதோர்"

Koviloor Digital Library

அது இந்த வெளிவாழ்க்கையில் தெரியாது. தெரிந்தாலும் கொஞ்சம் ஏதோ லேசாகத்தான் தெரியும். பின்னே அவர்களுடைய அந்தரங்கம், உயிர்நிலையான பண்பு, எதிலே தெரியுமென்றால் அவர்கள் தங்களுடைய அந்தராத்மாவிலிருந்து பொங்கி வருவதாக அருள் வேகத்தில் எழுதி வைத்திருக்கிறார்களே, அந்த நூல்களில்—பாடி வைத்திருக்கிறார்களே, அந்தப் பாட்டுக்களில்—தான் தெரியும்.

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுடைய வெளிவாழ்க்கை எப்படி வேணுமானால் இருக்கட்டும், அவருடைய உள் மனஸ், அந்தரங்கம் எப்படி இருந்தது என்றால் அதற்கு அவருடைய பாடல்களைத்தான் பார்க்கவேண்டும். இப்படியும் ஒரு உத்தமமான பக்தியா என்று நாம் குழைந்து போகிற மாதிரி அவர் தேவாரம் பாடியிருக்கிறார். எத்தனையோ நூற்றாண்டுகளாக, எத்தனையோ தலைமுறைகளை இப்படிக் குழைத்து வருகிறவர் பரம பக்த சிகாமணியாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று நாம் புரிந்துகொள்ளாவிட்டால் நம்மைவிட அசடு இல்லை என்றே அர்த்தம்.

"அன்னே! உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே"

"அத்தா! உனக்காளாய்..."

"...உனை நான் மறக்கினும் சொல்லு(ம்) நா
நமச்சிவாயவே"*

என்று இப்படி அநேகம், நம்முடைய கருங்கல் மனஸையும் நெகிழச் செய்கிற மாதிரி பாடி வைத்திருப்பவரைப் பற்றி அபசாரமாக நினைத்துவிடப்படாது.

ஈச்வரனையே ஏவினார், ஏசினார் என்றால் அதுவும் அவன் எவ்வளவு ஸௌலப்யன் என்று காட்டுவதற்குத்தான். அவனே, தன்னை வழிபடுவதிலுள்ள பல மார்க்கங்களில் இவரை ஸகா மார்க்கத்தில் ஸ்நேஹிதனாகப் பழக வைத்ததால்தான் அவனிடம் உரிமையோடு சண்டைகூடப்

---

* முறையே "பொன்னார் மேனியனே", "பித்தா பிறை சூடி", "மற்று பற்று" என்ற பதிகங்களில் வருபவை.

Koviloor Digital Library

போட்டார். 'தம்பிரான் தோழர்' என்றே அவருக்கு ஒரு பேர். ஸாக்ஷாத் ஈச்வரனிடம் இப்படி வன்தொண்டராக இருந்த அவரேதானே அவனுடைய அடியார்களான அறுபத்து மூவருக்கும் தம்மை "அடியேன், அடியேன்" என்று ஒரே அடக்கமாகத் தெரிவித்துக் கொண்டு, நமஸ்காரம் பண்ணித் 'திருத்தொண்டத் தொகை' பாடியிருக்கிறார்?

தூதுபோன தூதுவளை!

தாம் பண்ணப்போகிற யஜ்ஞத்துக்குப் பரமேச்வரனை யார் மூலம் வரவழைக்கலாம் என்று பார்த்துக்கொண்டிருந்த ஸோமாசிமாறர் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைப் பற்றித் தெரிந்து கொண்ட பிறகு அவரைப் பிடித்தே கார்யத்தை நடத்திக் கொள்ளலாமென்று தீர்மானம் பண்ணினார்.

ஆனால் அவரைப் பிடிப்பதும் அப்படி லேசான கார்யமாக இருந்துவிடவில்லை. ஏனென்றால் அவரைச் சுற்றி எப்போது பார்த்தாலும் சிவனடியார்களும், ஜனங்களுமாக ஜே, ஜே என்று கூட்டமாக இருக்கும். ராஜா மாதிரி ஒரு பெரிய தர்பார்—சிவ பக்தி தர்பார்—அவர் நடத்தி வந்தார்! ஆதி சைவரென்றும், சிவ ப்ராஹ்மணரென்றும் சொல்லும் அர்ச்சகர்கள் ஜாதியில் அவர் பிறந்திருந்தாலும், அவரை திருமுனைப்பாடி நாட்டின் சிற்றரசரே ஸ்வீகாரம் செய்து கொண்டு வளர்த்தார். அப்புறம் அவருக்கு மூவேந்தர்களுமே, அதிலும் சிறப்பாக சேர ராஜா, நெருங்கிய பக்தர்களாக இருந்தார்கள். மூவேந்தர்களும் புடைசூழக்கூட அவர் சில பாண்டி நாட்டு ஸ்தலங்களுக்குப் போயிருக்கிறார். ஆகையால் அவரும் ஒரு ராஜா மாதிரியே அலங்காராதிகளுடன் பரிவாரம் சூழ இருந்தார்.

'யாரோ ஒரு ஏழை ப்ராம்மணனான தான் அவரை எப்படி நெருங்குவது? அவர் கவனத்தை எப்படிக் கவர்வது?' என்று ஸோமாசி மாறர் யோசித்தார். 'தம்மால் என்ன பெரிய காணிக்கை, ஸம்பாவனை ஸமர்ப்பித்து

Koviloor Digital Library

அவருடைய கவனத்தைப் பெறமுடியும்?' என்று யோசனை பண்ணினார். சட்டென்று அவருக்கு ஒரு யுக்தி தோன்றிற்று.

அவர் அக்னிஹோத்ராதி கர்மாக்கள் எல்லாம் க்ரமப்படி செய்துவிட்டு மத்யான்னம் ஒரு மணிக்கு மேலே தான் போஜனம் பண்ணுவார். போஜனமென்றால் ஒன்றும் பஞ்ச பக்ஷ்ய பரமான்னமில்லை. "இவன் யார் பார்ப்பான்? பிடுங்கித் தின்கிறான்!" என்று எவரும் சொல்வதற்கு இடமில்லாமல், எத்தனை எளிமையாக ப்ராம்மணன் இருக்க வேண்டுமென்று சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறதோ அப்படி வாழ்க்கை நடத்தினவர் அவர். ஆனதினாலே யாருக்கும் எந்தத் தொந்தரவுமில்லாமல், தானம் தக்ஷிணை என்றுகூட யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல், அவர் பாட்டுக்குப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டே ஆற்றங் கரையோடு போய், கேட்பாரில்லாமல் ஒதுக்குப் புறத்தில் முளைத்திருக்கிற கீரை முதலானதுகளைப் பறித்துக்கொண்டு வந்து பத்னியிடம் கொடுத்தே பாகம் (சமையல்) பண்ணி வைக்கச் சொல்வார். ஊரானைப் பிடுங்கித் தின்கிறதில்லை; ஊருக்கு ஒதுக்குப் புறத்துக் கீரையத்தான் பிடுங்கித் தின்கிறது! அதனால் அவருக்கு இப்போது என்ன நினைவு வந்ததென்றால், 'நாம் ஸமர்ப்பணம் பண்ணுவதற்கு வேறே பெரிய காணிக்கை இல்லாவிட்டால் என்ன? நம் ஆற்றங் கரையிலே எங்கேயுமில்லாத விசேஷமாக ரொம்ப உசந்த ஜாதி தூதுவிளங்கீரை (தூதுவளை அல்லது தூதுளை என்கிற கீரை) யதேஷ்டமாக விளைகிறதே! அது தேஹாரோக் யத்தோடு ஞானத்தையும் வ்ருத்தி பண்ணக்கூடியது என்று சொல்கிறார்களே! ஆகையினாலே பச்சுப் பச்சென்று அதை நித்யமும் பறித்தெடுத்துக்கொண்டு போய் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளின் க்ருஹத்தில் சேர்ப்பித்து அவருடைய ஆஹாரத்தில் சேர்க்கும்படிப் பண்ணிவிட்டால், என்றைக் காவது ஒரு நாள் அவர், 'யார் நித்யமும் இப்படி கீரை கொண்டு வந்து தருகிறது?' என்று கேட்டுத் தெரிந்து கொண்டு பேட்டி கொடுக்க மாட்டாரா?' என்று எண்ணினார்.

Koviloor Digital Library

தூதுவிளங்கீரை மூலமாக ஸூக்ஷ்மமாக ஒரு தூது அனுப்பி ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகளின் கவனத்தைக் கவர யுக்தி பண்ணிவிட்டார்!

யுக்தியாக மட்டும் பண்ணவில்லை, பக்தியோடுந்தான் பண்ணினார். 'அவர் கீரையைக் கவனிக்காவிட்டால் கூடப் போகட்டும். அந்தப் புண்யாத்மா குக்ஷியில் நித்யமும் நம் முடைய நிவேதனம் போனாலே போதும். நாம் பாட்டுக்குக் quiet-ஆகக் கொடுத்துக் கொண்டேயிருப்போம். நடக் கிறது நடக்கட்டும்' என்று முடிவு பண்ணினார்.

அந்த ப்ரகாரமே தினமும் ச்ரமத்தைப் பார்க்காமல் திருவாரூருக்குப் போய் தூதுவளை கொடுக்க ஆரம்பித்தார்.

ஸுந்தரமூர்த்தி பரவை நாச்சியார் வீட்டில் வாஸம் பண்ணிக்கொண்டிருந்தார். அங்கே வருகிறவர்களும் போகிறவர்களுமாக திருவிழா மாதிரியே எப்பவும் இருக் கும். அந்த அமர்க்களத்தில் ஸோமாசி மாறர் ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் இருந்த பக்கமே போவதில்லை. அவர் பாட்டுக்கு ஓசைப் படாமல் சமையற்கட்டுக்குப் போய் பரிசாரகர்களிடம் கீரையைக் கொடுத்துவிட்டுப் போய் விடுவார். 'யாரோ ப்ராம்மணர், இத்தனை அக்கறையாக ஒரு நாளைப் போலக்கொண்டு வந்து தருகிறாரே' என்று பரவை நாச்சியார் பரிவாக நினைத்துக்கொண்டு அதை ஸுந்தரமூர்த்தியின் ஆஹாரத்தில் சேரும்படியாக ஏற்பாடு பண்ணிக்கொண்டிருந்தாள். ஆனாலும் அந்த ப்ராம்மணரை பற்றிப் பதியிடம் சொல்ல அவளுக்கு அவகாசம் கிடைக்க வில்லை.

பெரிய பங்க்தியாக சிவனடியார்களோடு சேர்ந்துதான் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் போஜனம் பண்ணுவார். ஒன்று, போஜனம் மௌனமாக சிவத்யானத்தோடேயே பண்ணுவார். இல்லாவிட்டால் ஈச்வர மஹிமைகளை அடியார்களோடு பரிமாறிக்கொண்டே, தமக்குப் பரிமாறப் படும் அன்னத்தை புஜிப்பார். போஜனம் ஆன பிற்பாடும் நாம கீர்த்தனம், த்யானம், ஆலய தர்சனம், இவரே புதிது

Koviloor Digital Library

புதிதாகத் தேவாரம் பாடுவது என்று நடந்து வந்ததால் கீரையைப் பற்றி அவர் தனி கவனத்தோடு விசாரிக்க இட மேற்படவில்லை.

நாள் ஓடிக்கொண்டேயிருந்தது. ஸோமாசி மாறரும் மனந்தளராமல், கால்வலி பார்க்காமல் தினமும் கீரைக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டே வந்தார்.

அப்புறம் என்ன ஆச்சு என்றால், அவர் வருகிற வழியில் ஆற்றில் பெரிசாக வெள்ளம் வந்து விட்டது. ஸோமாசி மாறரால் அதைத் தாண்டி வர முடியவில்லை. 'ஐயோ, இப்படி நம்முடைய அல்ப கைங்கர்யத்துக்கும் விக்னம் ஏற்பட்டுவிட்டதே!' என்று துக்கப்பட்டார். துக்கப்பட்டு என்ன பண்ணுவது? நாலு, ஐந்து நாளுக்கு வெள்ளம் வடியவேயில்லை. ஆறாத குறையோடு ஸோமாசி மாறர் வீட்டோடேயே கிடந்தார்.

ஆனால் ஈச்வரன் இப்படி விக்னம் மாதிரிக் காட்டியதி லேயேதான் அவருடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழி வைத்திருந்தான். இப்படி விளையாடுவதுதான் அவன் வழக்கம்!

அங்கே, திருவாரூரில், நாலஞ்சு நாள் சேர்ந்தாற் போல தூதுவளை போஜனத்தில் சேராததாலேயே ஸுந்தர மூர்த்தி குறிப்பாக அதைக் கவனித்துவிட்டார்!

அநேக ஸமாசாரங்கள் அவை நடக்கும்போது நம் கவனத்துக்கு விசேஷமாக வராது. ஆனால் நடக்காமல் நின்று போனால் சட்டென்று கவனித்து விடுவோம். நாம் இப்போது பேச்சிலேயே கவனமாக இருப்பதால் இங்கே காற்றோட்டமாயிருக்கிறது என்பதை ஒரு விஷயமாக மனஸில் வாங்கிக்கொள்ளாமலே இருக்கிறோம். அதுவே இந்தக் கதவு, ஜன்னல் சட்டென்று சாத்திக்கொண்டு, புழுங்க ஆரம்பித்தால் அப்போதுதான், 'ஓஹோ, இத்தனை நாழி காற்றோட்டமாக இருந்திருக்கிறது!' என்று தெரிந்து கொள்வோம்.

Koviloor Digital Library

அந்த மாதிரி, போஜனத்தில் தூதுவளை சேர்ந்துகொண்டிருக்கும் வரையில் வேறே சிவ ஸ்மரணம், சிவ கதை பேசுவது என்பதில் ஸுந்தரமூர்த்தி அதை மனஸில் வாங்கிக் கொள்ளாவிட்டாலும், இப்போது சேர்ந்தாற்போல் சில நாட்கள் அது நின்று போனதும் ஆஹாரத்தில் என்னவோ வித்யாஸம், குறை இருக்கிற மாதிரித் தெரிந்தது.

விசாரித்ததில் எவரோ ப்ராமணர் எங்கேயிருந்தோ தினந்தினம் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டிருந்த கீரை நின்று போயிருப்பதைப் பரவை நாச்சியார் சொன்னாள்.

"ஐயோ, பாவமே! இப்படியொருத்தர் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் மெனக்கிட்டு கைங்கர்யம் செய்துகொண்டிருந்தாரா? இப்படிப்பட்ட உத்தமமான ஜீவனைத் தெரிந்துகொள்ளாமல் போய்விட்டேனே! அவர் மறுபடியும் வந்தால் என்னிடம் அனுப்பு. அவரை அவச்யம் பார்க்கவேண்டும். நம்மால் ஏதாவது ப்ரதி செய்ய முடியுமானால் செய்யவேண்டும்" என்று ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் சொன்னார்.

இவரைப் பார்ப்போமா, பார்ப்போமா என்று அவர் தவித்துக்கொண்டிருந்த மாதிரியே அவரைப் பார்ப்போமா என்று இவர் தவிக்க ஆரம்பித்து விட்டார்! இதுதான் ஈச்வரன் செய்யும் விளையாட்டு!

வெள்ளம் வடிந்தது.

'அப்பாடா, மறுபடி கைங்கர்யம் ஆரம்பிக்கலாம்' என்று ஸோமாசி மாறர் ரொம்ப ஸந்தோஷமாகக் கூடுதலாகவே கீரை பறித்துக்கொண்டு வந்துசேர்ந்தார்.

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் அவரைப் பார்க்க ப்ரியப்படுகிறாரென்று தெரிந்ததும் ஸந்தோஷத்தின் உச்சிக்கே போய்விட்டார். "மஹா பெரியவர், ஈச்வரனோடு நேரே பேசிப் பழகுபவரின் ஸந்திப்புக் கிடைக்கிறதே!" என்று ஹ்ருதயம் பட், பட்டென்று அடித்துக்கொள்ள அவருக்கு முன்னடிபோய் விழுந்தார்.

Koviloor Digital Library

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்குக் கீரைக் கைங்கர்யக் காரரைப் பார்த்ததில் ரொம்பவும் ஸந்தோஷம் ஏற்பட்டது. "நீர் யார் ஸவாமி? கஷ்டம் பார்க்காமல் நித்யம் தூதுவளே கொண்டுவந்து கொடுத்துண்டு இருக்கேளே? என்னுலே உமக்கு ஏதாவது ஆகணுமா?" என்று கேட்டார்.

இந்த ஒன்றுக்காகத்தான் ஸோமாசிமாறர் காத்துக் கொண்டிருந்தாரென்ருலும், தம்முடைய பெரிய ஆசையை எல்லார் எதிரிலும் தெரிவிக்க வெட்கப்பட்டுக்கொண்டு, "ஆமாம், தங்களால் ஒரு உபகாரம் நடக்கணும். அதை ஏகாந்தத்தில் தெரிவிச்சுக்கணும்" என்ருர்.

இப்படி அவர் சொன்னவுடனேயே ரொம்பப் பெரிசாக எதற்கோ அவர் அடி போடுகிருரென்று ஸுந்தரமூர்த்திக்குப் புரிந்துவிட்டது. 'என்னதான் ஈச்வரன் தனக்கு எந்த அபீஷ்டமானுலும் பூர்த்தி பண்ணுகிறவனுக இருந்தாலும், அதற்காகத் தன்னிடம் எவர் வேண்டுமானுலும் எது வேண்டுமானுல் நடத்தித் தரும்படி கேட்டால் அவனிடம் சிபார்சு பண்ணுவதா?' என்று அவர் நினைத்து, "பிராம்மணு! என்னுலே எதையும் முடித்துத் தரமுடியு மென்று நினைக்காதீர். என்னுல் முடிந்ததைச் சொன்னுல் செய்கிறேன்" என்ருர்.

"தங்களால் முடியாததே இல்லை" என்று ஸோமாசி மாறர் பிடிவாதம் பிடித்து, ஏகாந்தத்தில் ஸுந்தரமூர்த்தி யிடம் விஷயத்தைச் சொன்னுர்.

"பரமேச்வரன் நேரிலே வந்து உம்மிடம் ஹவிஸ் வாங்கிக் கொள்வதென்பது ஸாமான்ய விஷயமில்லை. என்னுல் அதை முடித்துத் தரமுடியுமா என்று தெரியவில்லை. ஆனுலும் உம்ம கீரை இந்த உடம்பில் நிறையச் சேர்ந்து விட்டதால், என்னுல் முடிந்தது, சொல்லிப் பார்க்கிறேன். செய்கிறதும் செய்யாததும் ஸ்வாமி இஷ்டம். தப்பாக நினைச்சுக்கப்படாது" என்று ஸுந்தரர் முடித்துவிட்டார்.

Koviloor Digital Library

பரமன் வைத்த பரீக்ஷை

அப்புறம் கோவிலுக்குப் போய் த்யாகராஜாவிடம் விஷயத்தைச் சொன்னார். அவருக்கு அது (ஸ்வாமியிடம் பேசுவது) ஸஹஜமான ஸமாசாரம்!

த்யாகராஜா அதற்கு, "ஸுந்தரம்! நீ ஒன்று சொல்லி நான் செய்யாமலிருப்பதற்கில்லை. உனக்கு ஒருத்தன் கைங்கர்யம் பண்ணிவிட்டானென்றால் அவனுக்கு நான் கூடுதலாகவே செய்யக் கடமைப் பட்டிருக்கிறேன். அதனாலே, உனக்காக அவனிடமிருந்து ஹவிஸ் வாங்கிக் கொள்வதற்கு நானே நேரில் போகிறேன். ஆனாலும் ஒன்று; இந்த ப்ராஹ்மணன் ரொம்பப் பெரிசாக ஆசைப்படுகிறான். அதை நான் அப்படியே நிறைவேற்றித் தருகிறதென்றால் நியாயமாகாது. ஆகையால், இந்த ரூபத்திலேயே போவே னென்று சொல்ல முடியாது. எந்த ரூபத்தில் போனாலும் அவன் புரிந்துகொண்டு கொடுத்தால் 'ஆஹா' என்று வாங்கிக்கொள்கிறேன்" என்றார்.

"ஆனால் ஸரி" என்று சொல்லிவிட்டு ஸுந்தரர் ஸோமாசிமாறரிடம் வந்து, "ஸ்வாமி வருவதற்கு ஒப்புக் கொண்டுவிட்டார்" என்று மாத்திரம் சொல்லி, விட்டு விட்டார்.

"ஸ்வாமி வரேன்னு சொல்லிட்டாரா, சொல் லிட்டாரா?" என்று ஸோமாசி மாறருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை.

ஸந்தோஷமாக அம்பர் மாகாளத்துக்குத் திரும்பினார்.

எல்லோருடைய ஸஹாயத்தையும் கேட்டுப் பெற்றுப் பெரிதாக ஸோம யாகமும் பண்ணினார். மாசி மாஸம் ஆச்லேஷ (ஆயில்ய) நக்ஷத்ரம் கூடிய நல்ல நாளில் யஜ்ஞம் நடந்தது.

ஹவிஸ் கொடுக்க வேண்டிய ஸமயம். 'ஸ்வாமி வல்லியே, வல்லியே! வருவானா, வருவானா? வராமல்கூட

Koviloor Digital Library

இருப்பாரு?' என்று ஸோமாசிமாறருக்குக் கிடந்து அடித்துக் கொள்ளும்போது...

'ஐயய்ய, இதென்ன இப்படி நடக்கக் கூடாத அநாசாரமாக நடந்துவிட்டது!' என்று எல்லாரும் அருவருத்துக் கொண்டு மூக்கைப் பிடித்துக் கொள்கிற மாதிரி, ஒரே முடை நாற்றமும் அதுவுமாக, ஒரு பெரிய புலையர் கூட்டம் தம்பட்டம் அடித்துக்கொண்டு திபு திபுவென்று யாக சாலைக்குள் நுழைந்துவிட்டது. ஒரு சேரியே படையெடுத்துவிட்டாற்போல இருந்தது. அத்தனை பேருக்கும் பிரதானமாக ஒரு புலையன். நடுவிலே அவன். அவனைச் சுற்றித்தான் பாக்கிக் கூட்டம். அவன் கையில் நாலு நாய்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். பக்கத்தில் அவன் பெண்டாட்டி. அவள் தலையில், காத தூரத்துக்குக் காடி அடிக்கிற கள்ளுக்குடம்.

யஜ்ஞ ப்ராஹ்மணர்களுக்கு எப்படியிருக்கும்? "போச்சு, போச்சு. யாகமே பாழாப் போச்சு. பரிஹாரம், ப்ராயச் சித்தம் பண்ணிக்காட்டா நம்ப ப்ரஹ்மண்யமும் போயே போயிடும். இந்த அசட்டு மநுஷனுக்கு யாகம் நடத்தித்தர வந்ததற்கு நன்றாக அவஸ்தையை வாங்கிக் கட்டிக் கொண்டோம்" என்று அருவருத்துக் கொண்டு, ஆத்திரப் பட்டுக்கொண்டு எல்லாரும் அந்த இடத்தைவிட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள்.

ஸோமாசி மாறர் மட்டும் பரமானந்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அத்தனை நாளாக ஈச்வரனை வரவழைக்க வேண்டுமென்று அவருக்கு இருந்த ஆர்வம், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்கு அவர் ச்ரமம் பார்க்காமல் பண்ணின கைங்கர்ய பலன், அவரிடம் இவருக்கு இருந்த நம்பிக்கை, இவரிடம் அவருக்கு இருந்த அநுக்ரஹ சிந்தை எல்லாமாகச் சேர்ந்து ஸரியான ஸமயத்தில் அவருடைய கண்ணைத் திறந்து வைத்துவிட்டது. பரமேச்வரன் வைத்த பரீக்ஷையில் அவர் பாஸ் பண்ணிவிட்டார்.

Koviloor Digital Library

'நடுநாயகமாக நிற்கிறனே ஒரு புலையன், இவன் வேறே யாருமில்லை—ஸாக்ஷாத் பரமசிவன்தான்! கள்ளுக்குடமும் தலையுமாக அவன் பக்கத்தில் நிற்கிறவள் அம்பாளே! நாலு வேதங்களையும்தான் நாய்களாக்கிக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறன். சேரிப் பட்டாளம் முழுவதும் பூதகணங் கள்தான்' என்று அவருக்குத் தெரிந்துவிட்டது!

காசியில் ஆசார்யாளிடம்கூட இப்படியே ஈச்வரன் சண்டாளன் வேஷத்தில் வந்தான். அவர் முதலில் புரிந்து கொள்ளாத மாதிரி இருந்துவிட்டு, அப்புறம் அவனே வேதாந்தமாகக் கேள்வி கேட்ட பிறகு புரிந்துகொண்டா ரென்று கேட்டிருப்பீர்கள். ஸோமாசிமாறர் தாமாகவே புரிந்துகொண்டு விட்டதாக இந்தக் கதை.

"ருத்ர"த்தில் ஸகலத்தையும் சிவ ஸ்வரூபமாகச் சொல்லிக்கொண்டு வரும்போது திருடன், புலையன் ஆகிய வர்களாகவுங்கூட அவனே இருக்கிறனென்று இருக்கிறது. கீதையிலே* பகவான், "பூஸுரர்கள் என்று பூஜிக்கப்படும் உத்தமமான ப்ராஹ்மணன்; கோ பூஜை, கஜ பூஜை என்று வழிபாடு பெறும் பசு, யானை; இதற்கு மறுபக்கம் பரம நிக்ருஷ்டமாக (தாழ்வாக)க் கருதப்படும் நாய்; அந்த நாய் மாம்ஸத்தையும் சாப்பிடும் புலையன் என்றிப்படி ஸகல ப்ராணிகளிடமும் ஸமதர்சனம் உடையவன்தான் உண்மை யாகக் கற்றுணர்ந்த பண்டிதன்" என்று சொல்லியிருக்கிறர்.

ஸோமாசி மாற நாயனர் எத்தனையோ காத்திருந்து கஷ்டப்பட்டு, ஈச்வரன் வருவானென்று உடலை வருத்திக் கொண்டு யஜ்ஞம் செய்து கடைசியில் சேரிக்கூட்டம் வந்த போது, 'ஐயோ, அத்தனையும் வீணுப் போச்சே!' என்று அழுது, ஆத்திரப்பட வேண்டிய ஸமயத்தில் அமைதியாக, அன்புருவமாக இருந்துகொண்டு சேரித்தலைவனாக வந்தவன் அந்த ஈச்வரனே என்று தெரிந்துகொண்டு அவன் கையிலே ஹவிஸைக் கொடுத்தார்.

---

* ஐந்தாவது அத்யாயம், பதினெட்டாவது ச்லோகம்.

Koviloor Digital Library

மற்ற ப்ராம்மணர்களையும், "ஓடாதேள், ஓடாதேள்! ஸ்வாமியேதான் ஸபரிவாரம் இப்படி வேஷம் போட்டுண்டு வந்திருக்கான். நான் சொல்றதை நம்புங்கோ" என்று முறையிட்டுக் கூப்பிட்டார். ஆனால் அவர்கள் அவரை நிந்தித்துவிட்டுப் போய்விட்டார்கள்.

அதனால் ஸ்வாமி அவர்களையே தீண்டாதாராகும்படி சபித்து விட்டாரென்றும், அப்புறம் அவர்களுக்காக ஸோமாசிமாறர் வேண்டிக்கொண்டதன் மீது ஹவிஸ் தந்த அந்த நேரத்தில் மட்டும் தினமும் அவர்களை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று சாபத்தை இளக்கினாரென்றும் மேலே கதை சொல்வார்கள்.

யஜ்ஞத்தில் கலந்துகொள்ள யாருக்கு அதிகாரம் இருக்கிறது, யாருக்கு இல்லை என்று சாஸ்த்ரத்தில் எப்படிச் சொல்லியிருக்கிறதோ அதை அந்த ப்ராம்மணர்கள் பின் பற்றியதில் தப்பில்லைதான். ஆனால் இவர்களைவிட நல்ல சாஸ்த்ரஜ்ஞரான ஸோமாசிமாறர் படாத பாடுபட்டு இப்படி ஒரு யஜ்ஞம் பண்ணி, இப்போது இவர்களை இருக்கச் சொல்லி மன்றாடுகிறாரென்றால், அதற்கு ஏதோ காரண மிருக்க வேண்டுமென்று அவர்கள் கொஞ்சம் பொறுமை யாகத்தானே இருந்திருக்க வேண்டும்? அப்படிப் பண்ணி யிருந்தால் அவர்களுக்கும் ஈச்வர தர்சனம் கிடைத்திருக்கும். மாறாக அவரை இவர்கள் திட்டிவிட்டு வெளியேறிய தாலேயே ஈச்வர சாபத்திற்கு ஆளாகும்படியாயிற்று.

நமக்கு இது முக்யமில்லை. ஸோமாசி மாறர் ஹவிஸை எடுத்துக்கொண்டு வந்தவுடன் சேரித்தலைவன் ரிஷபா ரூடராக தர்சனம் தந்தான். அம்பாள், கணங்கள் ஆகியவர்களும் ஸ்வயரூபத்தில் காட்சி கொடுத்தனர்.

ஸோமாசிமாற நாயனாருக்கு ஜன்ம ஸாபல்யமாயிற்று. ஜன்ம நிவ்ருத்தியுமாயிற்று. சிவ லோகத்தை அடைந்தார்.

கதை எதற்குச் சொன்னேனென்றால், ஸ்வய பலத்தால், பக்தியால் ஈச்வர தர்சனம் பெறமுடியாது என்று அவருக்குத்

Koviloor Digital Library

தெரிந்தபோது, ஈச்வரனை நன்றாக அறிந்த பெரியவரின் மூலம் அதை அவர் பெற்றாரென்று காட்டுவதற்குத்தான்.

பச்சிலையைக் காட்டி ஒரு பசுவை வரவழைப்பதுபோல, ஒதுக்குப் புறத்தில் கிடந்த ஒரு கீரையை அவர் காட்டியதிலேயே ஈச்வரனுக்கு ஸ்நேஹிதர் ஸ்தானத்திலிருந்தவர் அவருக்குத் தாம் கடன்பட்டதாக நினைத்து அவனை வருவித்துக் கொடுத்துவிட்டார்.

(முதலில், 'ஈச்வரனைப் பிடிப்பதற்காக நாம் பிடிக்க வேண்டிய ஸுந்தரமூர்த்தியையே எப்படிப் பிடிப்பது?' என்று யோசித்து, ஸோமாசி மாறர் அர்ப்பணித்த கீரை தான் ஒரு விதத்தில் அவருக்காக ஸுந்தரரிடம் தூது போய் அவர்களைச் சேர்த்து வைத்திருக்கிறது. அதனால்தான் 'தூதுளங்கீரை' என்ற பெயரோ என்னவோ? ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திலும் இப்படியே ராமாநுஜருக்கு முன்னால் ஆசார்ய புருஷராயிருந்த ஆளவந்தார் என்பவர் ஆரம்ப நாட்களில் ராஜபோகத்துடன் வாழ்ந்துவந்த காலத்தில் மணக்கால் நம்பி என்பவர் தூதுளங்கீரை அனுப்பிவைத்தே அவருடைய கவனத்தைக் கவர்ந்ததாக இருக்கிறது. ஆனால் வித்யாஸமென்னவென்றால், அந்தக் கதையில் கீரை அனுப்பிவந்த மணக்கால் நம்பிதான் ஆளவந்தாருக்கு குரு ஸ்தானமாக ஆனவர். எப்படியானாலும் அந்தக் கீரைதான் இரண்டு பேருக்கு நடுவே தூது போகிற மாதிரிப் போய் அவர்களைச் சேர்த்து வைத்திருக்கிறது!)

ஈச்வரனே வேண்டியதில்லை, குரு போதும்; அல்லது ஈச்வரன் வேண்டுமானாலும் அவனையும் குரு மூலமே ஸம்பாதித்துக் கொள்ளலாம்—என்று காட்டுவதற்குத்தான் கதை, புராணம் சொல்கிறேன்.

குரு செய்யும் பரமோபகாரத்துக்காக நாம் அவருக்குச் செய்யவேண்டியது பக்தி ஒன்றே.

Koviloor Digital Library

நம்பிக்கை எல்லாவற்றுக்கும் மூலம். 'இவர் நிச்சயம் கடைத்தேற்றுவார்' என்ற உறுதியான நம்பிக்கை வேண்டும். பக்தி ச்ரத்தை என்பது அதைத்தான்.

குருவுக்குக் குறை இருந்தாலும்....

ஈச்வர பக்தி என்று தனியாக ஒன்று செய்யாமல் குரு பக்தி மட்டுமே பண்ணிக் கொண்டிருந்தால் போதும் என்று சொல்வதை ஆக்ஷேபித்து ஒன்று சொல்லலாம். 'ஒருத்தரிடம் பரிபூர்ண பக்தி, இவர் நமக்காக மோக்ஷ பர்யந்தம் எதுவும் அநுக்ரஹிப்பார் என்ற நம்பிக்கை எப்போது வரும்? அவரிடம் கொஞ்சங்கூட தோஷமே இல்லாமலிருக்க வேண்டும். அனந்த கல்யாண குணங்களும் நிரம்பியவராக அவர் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவரிடந்தான் நம் ஹ்ருதயத்தில் பூர்ணமான பக்தி உண்டாகும். அதே போல, அவர் ஸர்வசக்தராகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர் நமக்கு எதையும் அநுக்ரஹிக்க முடியும், மோக்ஷ பர்யந்தம் எதுவும் தரமுடியும் என்ற நம்பிக்கை உண்டாகும். ஈச்வரன் இப்படிப் பட்ட தோஷமே இல்லாத அனந்த கல்யாண குண நிலயன்; அதோடு ஸர்வசக்தனும்; இஹம் பரம் இரண்டிலும் அத்தனையும் அநுக்ரஹிக்க முடிந்தவன் என்பதில் ஸந்தேஹ மில்லை. யாருக்குமே இதில் கொஞ்சங்கூட ஸந்தேஹம் கிடையாது. ஆனால் இம்மாதிரி தோஷமென்பது கிஞ்சித்கூட இல்லாதவராகவும், நமக்காக எதையும் ஸாதித்துத் தரக்கூடிய ஸர்வசக்தி பொருந்தினவராகவும் இருக்கும் ஒரு குருவை நாம் பெறமுடியுமா? என்னதான் மஹான் என்றாலும் கோபம், கீபம் இப்படி ஏதோ ஒன்று, எதிலே யாவது அவருக்கும் ஆசை - த்வேஷம் என்றெல்லாம் கொஞ்சமாவது இருக்கிற மாதிரிதானே அவர்களும் தெரிகிறார்கள்? ஸர்வசக்தி என்று எடுத்துக்கொண்டாலோ, இவர் எதுவும் முடிகிற ஸர்வசக்தர் என்று காட்டுகிறபடி எந்த குருவாவது இருப்பதாகச் சொல்லமுடியுமா? அவர் களே போடுகிற ப்ளான்களில்கூட சிலது நிறைவேறாமல்

Koviloor Digital Library

போவதைப் பார்க்கிறோம். அவர்களும் தங்கள் கார்யங்கள் நடப்பதற்கு ஈச்வரனை ப்ரார்த்தித்துக்கொண்டு, அந்த சக்தியைத்தானே நம்பியிருக்கிறார்கள்?' என்று கேட்கலாம்.

இருக்கட்டும். அவர்களும் ஈச்வர சக்தியைத்தான் depend பண்ணிக்கொண்டிருப்பதாகவும், அவர்களிடமுங் கூட தோஷ லேசங்கள் இருப்பதாகவுமே இருக்கட்டும். ஆனால் எங்கும் நிறைந்துள்ள ஈச்வரன் அவர்களுக்குள்ளும் இருக்கிறான, இல்லையா? அவர்களையே தோஷ ரஹிதமான சுத்த வஸ்து, உத்தம குண ஸம்பன்னர், ஸர்வசக்திமந்தர் என்று நினைத்து நாம் பக்தி பண்ணினால், நிஜமாகவே அவர்களுக்குள் அப்படி தோஷ ரஹிதமாயும், சுத்தமாயும், கல்யாணகுண பூரிதமாயும், ஸர்வசக்தி மயமாகவும் இருக்கிற ஈச்வரன் அந்த பக்தியை ஏற்றுக்கொண்டு, நமக்கான அநுக்ரஹத்தைப் பண்ணாமல் போவானா என்ன? நாயிடத்திலும், நாயைத் தின்கிறனிடத்திலுங்கூட ஈச்வர பாவனை இருந்தால், வாஸ்தவமாகவே அவர்கள் மூலமாகவும் அவன் அருள் செய்வான் என்னும் போது, நம்மைவிட எவ்வளவோ மடங்கு சுத்தரான, நல்ல குணம், ஒழுக்கம், கல்வி முதலியவை நிரம்பியவரான, கருணையும் நம்மைக் காப்பாற்றும் எண்ணமும் உள்ளவரான,—நம்மை விட எவ்வளவோ மடங்கு அநுஷ்டான சக்தி, ஸாதனா பலம் ஆகியவையும், இவற்றால் பெற்ற அநுக்ரஹசக்தியும் உடையவரான—குருவின் மூலம் அவரையே மனஸார நம்பிக் கொண்டு கிடக்கிற நமக்கு அநுக்ரஹம் பண்ணாமல்கூட ஒரு ஈச்வரன் இருப்பானா என்ன?

குருபக்தியின் அநுகூலங்கள்

ஸரி; ஆனால், வாஸ்தவத்திலேயே தோஷமில்லாமல், கொஞ்சங்கூட குணஹீனமில்லாமல், பரிபூர்ண சக்தி மயமாக ஒரு ஈச்வரன் இருக்கும்போது, அவனையே நேராக பக்தி பண்ணாமல், இந்த அம்சங்களிலெல்லாம் நம்மைவிட எவ்வளவு உசந்தவரானாலும் அவனைப்போல முழுக்க

Koviloor Digital Library

perfect என்று சொல்ல முடியாத ஒருவரை perfect-தான் என்று நம் பாவனையால் பூர்த்தி பண்ணுவித்து பக்தி செலுத்துவானேன்—என்று கேட்டால்...,

ஈச்வர பக்தியைவிட குரு பக்தியில் இருக்கிற அட்வான் டேஜைச் சொல்கிறேன். முன்பே சொன்னேன். இன்னம் கொஞ்சம் சேர்த்துச் சொல்கிறேன். ஈச்வரன் கண்ணுக்குத் தெரியவில்லை. இவரோ தெரிகிறார். இவரோடு கலந்து பழகமுடிகிறது. நமக்கான நல்லது, பொல்லாததுகளை ஈச்வரன் வாய்விட்டுச் சொல்வதில்லை. இவர் கர்ம ச்ரத்தை யாக எடுத்துச் சொல்லி முட்டிக் கொள்கிறார். நாமும் இவரிடம் 'இப்படிச் செய்யலாமா, அப்படிச் செய்யலாமா?' என்று நன்றாக வழிகேட்டுப் பெறமுடிகிறது. ஈச்வரனிட மிருந்து அப்படிப் பெற்றுக்கொள்கிற அளவுக்கு நமக்குத் தீவிர பக்தி ச்ரத்தை இருக்கிறதா?

அப்புறம், ஈச்வரன் என்றால் எங்கேயோ எட்டாத நிலையிலிருப்பதாலேயே, ஒரு பக்கம், அவனோடு நாம் கலந்து பழக முடியாது என்பதோடு, இன்னொரு பக்கம், கண்ணுக்கு —வாக்கு, மனஸு எல்லாவற்றுக்குமேதான்—எட்டாத நிலையிலிருக்கிற அவன் நாம் செய்வதையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கிறான்; அதனால் தண்டிக்க வேண்டியதற்கு தண்டிப்பான், அநுக்ரஹிக்க வேண்டிய தற்கு அநுக்ரஹிப்பான் என்ற எண்ணமும் நமக்கு இல்லை. அவனுடைய பார்வையிலேயே இருக்கிறோமென்று தெரியாததால்தான் துணிந்து மனம் போனபடி எதுவும் பண்ணுகிறோம். தப்பு பண்ணினால் தண்டனை என்ற பயமில் லாமல் பண்ணுகிறோம். அப்படியே, நல்லது தெய்வதென் றால்—எந்த நல்லதானாலும் அதற்கு நாம் தேஹத்தாலோ த்ரவியத்தாலோ ஏதாவது விதத்தில் கொஞ்சமாவது ஸாக்ரிஃபைஸ் செய்யாமல் முடியாது; இப்படி ஸாக்ரி ஃபைஸ் பண்ணுவானேனென்று இருந்துவிடுகிறோம். 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்று பழமொழி இருக்கிறது. கொல்வது மட்டுமில்லை, நல்லது பண்ணுவதென்றாலும் அரசன் உடனே பொன் -

Koviloor Digital Library

பொருள், ராவ்பஹதூர் - திவான் பஹதூர் - ஸர் வரைக்கும் பட்டம் கொடுக்கிறதுபோல தெய்வம் உடனே கொடுப்பதாகத் தெரியவில்லை. நம் புண்ய-பாப கர்மங்களின் நல்ல-கெட்ட பலன்கள் எத்தனையோ ஜன்மாந்தரங்களில் கோத்து வாங்கிக்கொண்டு போகும்படியாகத்தான் ஈச்வர தர்பார் நடக்கிறது. இப்படி எப்பவோ பண்ணியதற்கு எப்பவோ பலன் என்பதால், நாம் இப்படிப் பண்ணியதற்குத்தான் இது பலன் என்றே நமக்குத் தெரியாமல் போய்த் தப்பு பண்ணுவதிலும் குளிர்விட்டுப் போகிறது; நல்லது பண்ணுவதற்கும் உத்ஸாஹமில்லாமல் போகிறது.

குரு எப்படி இருக்கிறார்? நாம் தப்புப் பண்ணினால் உடனேயே எடுத்துச் சொல்லிக் கண்டிக்கிறார். நமக்கு உறைக்கும்படிக் கரித்துக்கூடக் கொட்டுகிறார். நாம் ஒரு தப்புப் பண்ணக்கூடிய நிலைமை ஏற்படும்போது, "இது குருவின் காதுக்குப் போய்விட்டால் என்ன ஆவது?" என்ற பயம் ஏற்பட்டு நம்மைக் கட்டிப்போடும். அவர் ஆத்மசக்தி நிறைந்த குருவாயிருந்தால் நாம் எங்கே என்ன தப்புப் பண்ணினாலும் அவர் தாமாகவே தெரிந்துகொண்டு விடுவார். அவ்வளவு சக்தியில்லாவிட்டாலும், அல்லது சக்தி இருந்தும் அதை வெளியில் காட்டாதவராக இருந்தாலும்—மநுஷ்ய விளையாட்டு விளையாடுவதில் பல குருக்கள் இப்படி(த் தெரிந்தும் தெரியாத மாதிரி) இருப்பதுமுண்டு, இப்படி இருந்தாலும்—வேறே யாராவது சொல்லி நம் தப்பு அவருக்குத் தெரிந்துவிட்டால் அப்புறம் நம் கதி என்ன என்ற பயம் இருத்துகொண்டேயிருக்கும். அது நம்மைத் தப்பிலிருந்து தடுக்கும்.

இதேபோல நாம் ஒரு நல்லது பண்ணினாலும் குரு அதை உடனே தாமாகவேயோ, இன்னொருத்தர் சொல்லியோ தெரிந்துகொண்டு—அல்லது இது நாம் பண்ணிய நல்லதல்லவா? அதனால் நாமே எப்படியாவது அது அவர் காதில் விழுகிற மாதிரி செய்துவிடுவோம்! இப்படி ஏதோ ஒரு விதத்தில் அவர் தெரிந்துகொண்டு—நம்மை மெச்சி,

Koviloor Digital Library

விசேஷமாக ஆசீர்வாதம் அநுக்ரஹம் பண்ணி, மேலும் மேலும் உத்ஸாஹப்படுத்துவார். ஒரேயடியாக மெச்சினுல் நமக்கு மண்டைக் கனம் ஏற்படுமென்பதால், 'தப்புக்காக சிஷ்யனை வெளிப்படக் கண்டிக்கிறதுபோல, அவன் செய்யும் நல்லதற்காக வெளிப்பட ச்லாகிக்கக் கூடாது' என்று வைத்துக் கொண்டிருக்கும் குருகூட ஸூக்ஷ்மமாக, ஆனுலும் சிஷ்யனுடைய மனஸுக்கு நிச்சயமாகத் தெரிகிறவிதத்தில், ஏதோ ஒரு மாதிரி தம்முடைய ஸந்தோஷத்தைக் காட்டி, அதற்காக ஒரு அநுக்ரஹம் செய்யத்தான் செய்வார்.

நாம் கடைத்தேற வேண்டுமானுல் அதற்கு நம்முடைய பாப கர்மாக்களைக் குறைத்துக் கொண்டு, புண்ய கர்மாக்களைக் பெருக்கிக் கொண்டாலொழிய எப்படி ஸாத்யமாகும்? இதில் புண்ணிய கர்மாவைப் பெருக்கிக் கொள்வதற்கு 'இன்ஸென்டிவ்' (போனஸ் மாதிரி நம்மை உத்ஸாஹப் படுத்துவது), பாப கர்மாவைச் செய்தால் 'டிஸ்-இன்ஸென்டிவ்' இரண்டுமே நமக்கு உடனுக்குடன் குருவின் தீர்ப்பில் தெரிவதுபோல ஈச்வரனின் தீர்ப்பில் தெரிவதில்லை.

இதற்கும் மேலே, நம்முடைய பாப சித்தத்தைக்கூட குரு என்ற ஒருவர் இருக்கும்போது அவரே, நாமாக சுத்தி செய்து கொள்வதைவிடச் சிறப்பாக நமக்காக சுத்தி செய்துதருகிருர். பாபத்தில் கொஞ்சத்தைத் தாமே கூட வாங்கிக் கொண்டு தீர்த்து வைக்கிருர். நம்மைவிடக் கெட்டியாக நமக்காக ப்ரார்த்திக்கிருர். நமக்காக ஈச்வரனிடம் முறையிடுகிருர், வாதிக்கிருர், ஸ்வாதீனமாக உத்தரவு போடுகிருர், சண்டைகூடப் பிடிக்கிருர்— என்றெல்லாம் சொன்னேன்.

இதனுலெல்லாம்தான் ஈச்வரனைக் காட்டிலும் அபூர்ண மான குருவாக இருந்தாலுங்கூட அவரையே பூர்ண ஈச்வரன் என்று வழிபடச் சொல்லி "குரு வாத்" (Guru-vad) என்றே (வட இந்தியாவில்) உயரக் கொண்டு வைத்திருப்பது.

Koviloor Digital Library

இப்படி அன்பும், அசைக்க முடியாத நம்பிக்கையும் குருவிடமே வைத்து விட்டவர்களுக்குத் தெரியும், பகவத் ஸ்மரணையை விடவும் குரு ஸ்மரணையிலேயே அதிக சாந்தி என்று.

அதெப்படி (பகவத் ஸ்மரணையைவிட குரு ஸ்மரணையில் அதிக சாந்தி) இருக்க முடியுமென்றால்,

நம் பிரார்த்தனையை பகவான் கேட்கிறானா, நாம் பண்ணும் நல்லது கெட்டதுகளை அவன் பார்க்கிறானா என்றே நிச்சயமாகத் தெரியாதபோது, 'நமக்கு அவன் விமோசனம் அளிப்பான்' என்ற உறுதியில் உண்டாகிற சாந்தி, நிம்மதி எப்படி ஏற்படமுடியும்? 'அநுக்ரஹிப்பானா, அநுக்ரஹிப் பானா?' என்று வெதுக்கு, வெதுக்கென்று மனஸ் அடித்துக் கொள்வதாயிருக்குமே தவிர, 'நமக்கென்ன பயம்? அவன் பார்த்துக் கொள்கிறான்' என்ற த்ருட உறுதி, அதனாலே விச்ராந்தி, சாந்தி எப்படி ஏற்படும்? அப்பப்போ ஏற்பட் டாலும் ஸந்தேஹத்தில், அழுகையில், பயத்தில் அது அடித்துக் கொண்டு போய்விடுகிறது.

குரு சுச்ரூஷைக்கு என்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் பயம், ஸந்தேஹம், அழுகை இல்லாமல் அவர்கள் பாட்டுக்கு நிம்மதியாக, "அவர் பார்த்துக்கொள் கிறார்" என்று இருப்பார்கள்.

பகவத் ஸ்மரணை என்னும்போது, அந்த பகவான் ஸமஸ்த ப்ராணிகளுக்கும் ஆனவர். எண்ணி முடியாத அத்தனைகோடி ஜந்துக்களில் நம்மைக் குறிப்பாகக் கவனித்து அவர் செய்வாரா, செய்வாரா என்றிருக்கிறது. அவர் பட்டுக்கொள்ளாமல் எங்கேயோ இம்பெர்ஸனலாக உட்கார்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. குருவோ நமக்கென்றே ஏற்பட்டிருப்பவராகத் தெரிகிறார். நம்மைக் கடைத்தேற்றவே இவர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கி றார். உலகம் முழுதையும் கவனித்துக் கொள்கிற பெரிய ஆபீஸ் இவருக்கு இல்லாமல், தாம் நல்வழிப் படுத்தக் கூடிய வர்களையே தம்மிடம் சேர்த்துக் கொள்பவராக இருப்பதால்

Koviloor Digital Library

அப்படிச் சேர்ந்த நம்மிடம் 'பெர்ஸனல் அடென்ஷன்' காட்டுபவராக இருக்கிறார். இவர் நமக்கு ரொம்பப் பெர்ஸனல்! நம் கஷ்டங்களிலெல்லாம் கலந்து கொள்கிற வராக இருக்கிறார். நம்மை கவனிப்பாரோ மாட்டாரோ என்றில்லாமல், "நமக்குன்னே ஏற்பட்டவர்" என்று உறவு கொள்கிறோம்.

ஈச்வரன் பண்ணுவதெல்லாம் நம்முடைய ஞான மில்லாத பார்வையில் ஏதோ யந்த்ர கதியில் இயற்கை பண்ணுகிறாற்போலவே தெரிகிறது; அவன் கர்த்தா என்று தெரியவில்லை. நமக்கு ஞானம் வருகிற வரையில், அவன் அநுக்ரஹம் செய்கிறபோதுகூட, யத்ருச்சையாக (தற்செய லாக) நடந்திருக்குமோ, என்னவோ என்று ஸந்தேஹமாக இருக்கிறது. 'பெர்ஸனல் டச்' குரு செய்வதில்தான் பிரகாசித்துக் கொண்டு தெரிகிறது; அதனால் நமக்குத் தெம்பும், விச்ராந்தியும் தருகிறது.

அத்தனை தினுஸான பக்ஷணம் பணியாரங்களும் கொட்டிக் கிடக்கிறது, ஆனால் ஆள் யாருமில்லை, நாமே எடுத்துத் தின்கிறோம் என்றால் எப்படி இருக்கிறது? ஏதோ கொஞ்சம் கூழ்தான் என்றாலுங்கூட ஒரு தாயார்க்காரி, "அப்பா கொழந்தே, சாப்பிடு" என்று தன் கையால் கொடுக் கிறாள் என்னும்போது அது எப்படி இருக்கிறது? இந்த 'பெர்ஸனல் டச்' சுக்கு இருக்கிற ஆனந்தம், பஞ்ச பக்ஷ்ய ஆஹாரத்தில் கிடைக்குமா? அதையும் யாரோ பண்ணித் தான் இருக்கிறார்கள். நாம் சாப்பிட வேண்டுமென்றே கொட்டிவைத்தும் இருக்கிறார்கள். ஆனால் பண்ணினவர் தெரியாவிட்டால் பண்டத்தின் ரஸாநுபவம் ரொம்பக் குறைந்துவிடுகிறது. ஈச்வராநுக்ரஹத்துக்கும், குரு அநுக் ரஹத்துக்கும் இதுதான் வித்யாஸம்.

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைப் போல, இன்னம் பல மஹான்களைப் போல அவனுடைய அநுக்ரஹத்தை அவனே ஸாக்ஷாத்தாகச் செய்வதாகக் கண்டு கொண்டு பெறுகிற வரையில், எத்தனை அருள் கிடைத்தாலும் கொஞ்சம்

Koviloor Digital Library

ஸந்தேஹம், கேள்வி புறப்பட்டுக்கொண்டுதான் இருக்கும்.

இன்னொன்று வேறே! நல்லது கெட்டது எல்லாமே அவனிடமிருந்துதான் என்கிறார்கள். மாயையை ஏவி விட்டு இத்தனை கஷ்டங்களை உண்டாக்குவதும் அவனுடைய விளையாட்டுதான் என்கிறார்கள். பராசக்தி ஞானியைக்கூட பலவந்தமாகப் பிடித்திழுத்து மோஹத்திலே தள்ளுகிறதுண்டு என்று பயமுறுத்துகிறார்கள்[1]. ஈச்வர ஸங்கல்பம் நமக்குத் தெரியவே தெரியாது; புரியவே புரியாது என்று முடித்து விடுகிறார்கள். 'குடைராட்டினத்தில் பொம்மைகளை வைத்து இஷ்டப்படி சுற்றுகிற மாதிரி ஈச்வரன் ஸர்வ ப்ராணிகளையும் மாயையில் வைத்து ஆட்டுகிறான்' என்று பகவானே சொல்கிறான்[2]. ஆனதினாலே, அவனை ஸ்மரிக்கும் போது, 'நம்மகிட்ட எப்படி விளையாடுவானோ? கரைதான் சேர்ப்பானோ? இன்னும் நன்னாதான் அமுக்குவானோ?' என்றும் பயம் ஏற்பட இடமிருக்கிறது.

குரு இப்படியில்லை. ஈச்வரன் ஞானம் மாயை இரண்டுமாக இருக்கிறாற்போல அல்ல, குரு. ஞானத்துக்கு மாத்திரமே அவர் இருக்கிறார். மாயையைப் போக்கி ஞானத்தைத் தரவே ஏற்பட்டதுதான் அவருடைய ஆபீஸ். கெடுதலானதற்கும் ஆச்ரயமாயிருப்பவர், மாயையை ஏவி விட்டுக் கஷ்டங்களையும் கொடுத்து வேடிக்கை பார்ப்பவர்— என்று அவரைப் பற்றிச் சொல்லவே முடியாது. நமக்குக் கெடுதலானவற்றை நீக்கி, நம்முடைய கஷ்டங்களைப் போக்கி, மாயையிலிருந்து நம்மை இழுத்துப் போடவே வந்துள்ள அவரைப் பற்றி ஸந்தேஹம், பயம் தோன்ற இடமேயில்லை.

இதனாலெல்லாந்தான் பகவத்ஸ்மரணையைக் காட்டிலும் குரு ஸ்மரணை அதிக சாந்தி என்பது.

ஸ்மரித்து, த்யானித்துப் பார்த்தவர்களுக்குத் தெரியும். ஒருவரை ஸ்மரிப்பது, த்யானிப்பது என்றால் என்ன?

---

1. "துர்க்கா ஸப்தசதீ" : I. 55—6

2. கீதை : XVIII—61

Koviloor Digital Library

அவருடைய ரூபத்தை, கார்யத்தை, குணத்தை நினைத்துப் பார்த்துப் பார்த்து மனஸை அப்படியே அவரிடம் கரைந்து நிற்கும்படியாகச் செய்வது. கார்யமென்று எடுத்துக் கொண்டுதான் இத்தனை நாழி சொன்னேன். ஈச்வரனின் கார்யம் எதுவும், 'இது அவனுடையதுதான்' என்று நமக்குத் தீர்மானமாகத் தெரியாததாகவே இருக்கிறது. நமக்கும் அவனுக்கும் நேர் 'டச்' இல்லை. வேறு பக்தர்களுக்கு அவன் செய்த அநுக்ரஹ கார்யங்களையே நினைக்கும்படிதானிருக் கிறது. அது நம் மனஸை நிரப்பிவிட்டால் விசேஷம்தான். த்ரௌபதி மான ஸம்ரக்ஷணம், குசேலாநுக்ரஹம், கஜேந்த்ர மோக்ஷம்—இப்படி எத்தனையோ, எல்லா தெய்வங்களைப் பற்றிய புராணங்களிலும் இப்படி அநேக அநுக்ரஹங்கள், இன்னம் பலவிதமான லீலா கார்யங்கள்...ராஸ லீலை, ஈச்வரனுடைய ஆனந்த நடனம் என்றிப்படி; ஞானோபதேசம்: க்ருஷ்ண பரமாத்மா அர்ஜுனனுக்குப் பண்ணியது, தக்ஷிணாமூர்த்தி ஸநகாதிகளுக்குப் பண்ணியது—என்றிப்படி பலவிதமான கார்யங்கள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய அரைவேக்காட்டு நிலையில் அவற்றில் நம்மால் எவ்வளவு தூரம் முழுக முடிகிறது? வேறே யார் யாருக்கோ அவன் பண்ணியதில் நம்மால் எவ்வளவுக்கு மன நிறைவு பெற முடிகிறது? 'அவர் எங்கே, நம்ப எங்கே? அதெல்லாம் நமக்குக் கிடைக்குமா?' என்று குறைந்துகொண்டு வருத்தப் படுவதாகக்கூட ஆகலாம். ஆனால் குரு ஸ்மரணை என்று நினைத்துப் பார்த்தால் நமக்கே அவர் நேராக எத்தனை செய்திருக்கிறாரென்று—நாம் மட்டும் நன்றியறிவு மறக்காத வர்களாக இருந்தால்—அநேகம் அகப்படாமல் போகாது. நாம் யோக்யதை மீறி ஆசைப்படுவதில் அநேகம் அவர் பூர்த்தி செய்யாமலும் இருக்கலாம். ஆனால் நம் ஸ்திதி என்ன என்கிற நினைப்பு இருந்து, நன்றியறிவும் இருந்துவிட்டால் நமக்கு அவர் செய்து வருவதே அதிகப்படி என்று தெரியும். நாம் சீர்ப்பட வேண்டுமென்று எவ்வளவு முட்டிக் கொள்கிறார்? அது தவிர, எத்தனை வைராக்யம் சொன்னாலும் இந்த மநுஷ ரீதியில் ஒரு வாஞ்சை, வாத்ஸல்யம் என்று நம்

Koviloor Digital Library

நிலையில் ஆலம்பனம் வேண்டியிருக்கிறதே, இதையும்கூட எவ்வளவு நன்றாகப் பூர்த்தி செய்கிறார்? நம்முடைய யோக க்ஷேமங்களை எவ்வளவு அக்கறையாகக் கேட்டுக் கொள்கிறார்? நாம் மறந்து போயிருக்கும்போதுகூட, (அவரிடம்) போயிருந்தவர்களிடம் நம்மைப்பற்றி விசாரித்து ப்ரஸாதம் கொடுத்தனுப்பியிருக்கிறாரே! 'வெயில்லே போகாதேடா! பட்டினியாப் போகாதேடா!' என்று எத்தனை ப்ரியமாகச் சொன்னார்!—என்று இப்படி நம்மைப் பற்றியதாகவே குரு செய்திருக்கும் அநேக கார்யங்களைப்பற்றி ஸ்மரித்து ஆனந்த மாக நிறைந்திருக்க முடிகிறது.

ரூபம் என்று ஸ்மரிக்கும்போது, ஈச்வரனை தெய்வத்தின் ஒரு குறிப்பிட்ட மூர்த்தியாக த்யானம் செய்யும்போது, அந்த மூர்த்தி பற்றி ஏற்கெனவே கொடுத்திருக்கிற வர்ணனைப்படி பண்ணிப் பார்க்கிறோம். அப்படியே மனஸ் போய் அந்த ரூபத்திலே ஒட்டிக்கொண்டு நின்றுவிட்டால் உசத்திதான். நமக்கு அப்படி முடிகிறதா? புராணங்களிலும், மந்த்ர சாஸ்த்ரங்களிலும் வர்ணனை என்று கொடுத்திருப்பதில் பாதாதிகேசம், அல்லது கேசாதி பாதம் விஸ்தாரமாக அங்க அங்கமாக லக்ஷணங்களைச் சொல்லியிருக்கும். 'பாதாதி கேசம்' என்றால் காலிலிருந்து தலைவரையில். புருஷ ரூபத்தில் உள்ள தெய்வங்களை இப்படித்தான் வர்ணிப்பார் கள். பாதத்தில் ஆரம்பித்து வரிசையாக மேலே கணுக்கால், முழங்கால், இடுப்பு, மார்பு, கழுத்து, முகம், என்றுபோய் சிரஸின் வர்ணனையோடு முடிப்பார்கள். கேசாதி பாதம் என்ற முறையிலே ஸ்த்ரீ தெய்வங்களை வர்ணிப்பார்கள். இது சிரஸில் ஆரம்பித்து வரிசையாகக் கீழே நெற்றி, கண், மூக்கு வாய், கழுத்து, இடுப்பு என்று பாதம் வரையில் வர்ணிப்பது. இப்படி எந்த தெய்வமானாலும், இத்தனை கை...நாலு, எட்டு பதினெட்டு என்று கைகள்; ஒவ்வொரு கையிலும் இன்ன ஆயுதம்; இப்படியிப்படி அலங்காரம்: கங்கை, சந்த்ரன், பாம்பு, புலித்தோல்—பீதாம்பரம், வனமாலை, கௌஸ்துபம்; இன்ன வாஹனம்—ரிஷபம், ஸிம்ஹம், கருடன், மூஷிகம்,

Koviloor Digital Library

மயில் என்று எதுவோ ஒன்று, என்பதாக நீள நெடுக details (விவரங்கள்) சொல்லியிருக்கும். ஒவ்வொரு ரூபத்தைப் பற்றியும் இப்படிப் பெரிய லிஸ்ட் வைத்துக்கொண்டு நாம் த்யானிக்கும்போது, 'இன்னம் அந்த அம்சம் இருக்கே, இந்த அம்சம் இருக்கே!' என்று மனஸு அலை பாய்ந்தபடியும் ஆகலாம். சாஸ்த்ரங்களில் என்ன சொல்லியிருக்கிறதென்றால் —க்ருஷ்ண பரமாத்மாவும் உத்தவ ஸ்வாமியிடம் அப்படித் தான் சொல்லியிருக்கிறார்*—அங்க அங்கமாக முழு ரூபத்தை யும் கொஞ்சம் ரஸித்துவிட்டு அப்புறம் புன்சிரிப்போடு விளங்குகிற முக மண்டலத்திலேயே 'கான்ஸென்ட்ரேட்' பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் நாம் த்யானம் என்று உட்காரும் சித்தே (சிறிது) நாழியிலே அங்க அங்கமாக நின்று ரஸிக்கப் பொழுது இருக்குமா என்பதே ஸந்தேஹம். அப்புறம், மந்தஹாஸம் (புன்சிரிப்பு) அல்லது கருணா கடாக்ஷம் என்று ஒன்றிலேயே சித்தத்தை நிறுத்த முடியுமா என்பதும் அதைவிட ஸந்தேஹம். இத்தனை புஜங்கள், ஆயுதங்கள், அணிபணிகள், வாஹனம் என்றிருப் பதில் ஒன்றை நினைத்தால், 'இன்னொன்றை மறந்துட்டோமே!' என்று சித்தம் நாலா திசையில் ஓடலாம் கங்கையை நினைக்கும்போது, சந்த்ரன் போச்சே என்று! நெற்றிக் கண்ணை நினைத்தால், நீலகண்டம் போச்சே என்று! மானை நினைத்தால் மழு போகிறது! சங்கத்தை நினைத்தால் சக்ரம் மறைந்து போகிறது! கௌஸ்துபத்தை நினைத்தால் ஸ்ரீவத்ஸம் மறைந்து போகிறது! கமலக்கண்ணை நினைத்தால் சிரித்த வாய் மறைகிறது! இந்த மாதிரி ஆவதால், நின்று, நிலைத்து, நிறைவுண்டாகும்படி ரூப த்யானம் பண்ண முடியாமல் ஆகலாம். சாஸ்த்ர ப்ரகாரமான இத்தனை வர்ணனை நமக்குத் தெரியாமலிருந்தாலே தேவலை போலிருக் கிறதே என்று நினைக்கும்படிகூட ஆகலாம்.

ஆனால் குரு என்று எடுத்துக்கொண்டு ரூப த்யானம் செய்ய ஆரம்பித்தால் நேரே பழகின ஸமாசாரமானதால்

---

* ஸ்ரீமத் பாகவதம் XI.14—43

Koviloor Digital Library

பூர்ணமாக ஒரு ஆகாரத்தில் (வடிவத்தில்) மனஸ் அப்படியே நின்றுவிடுகிறது. அம்மா, அப்பா, ஸ்நேஹிதர், ஆபீஸர்—நேரிலே பார்த்துப் பழகுகிற யாரானாலும் அவர்களை நினைக்கும்போது, தனித்தனியாகக் கண், மூக்கு என்று நினைக்கிறோம்? ஆயுதம்—[சிரித்து] அம்மாவானால் கரண்டி, ஆபீஸரானால் ஃபௌண்டன் பேனா என்று இப்படியா சித்தத்தில் கொண்டுவந்து பார்க்கிறோம்? இப்படியெல்லாமில்லாமல் மொத்தமாக ஒரு 'ஐடியா'வாகத்தானே பார்க்கிறோம்?

இன்னம் சொல்லப்போனால், முழு ரூபத்தையும் ஒருமாதிரியாகப் பார்ப்பது மட்டுமில்லை, அவர்களுடைய கார்யம், அவர்களுடைய ஸ்வபாவம், மனப்பான்மை, நம்மிடத்தில் அவர்களுடைய பாவம், அவர்களிடத்தில் நம்முடைய பாவம் என்று எல்லாமாகக் கலந்து ஒரு total effect ஏற்படும் விதத்திலேயே நமக்கு நேரிலே தெரிந்தவர்களைப் பற்றிய சிந்தனை ஏற்படுகிறது. இப்படித்தான் குருவை ஸ்மரிக்கிறோம். ரூபத்தில் பல அம்சங்களென்று ஒன்றுக்கொன்று மனஸ் பாயாதது மட்டுமில்லை; ரூபம், கார்யம், குணம் என்ற பிரிவுகூட இல்லை! Total ஆக ஒரு பாவம், 'ரொம்ப பெர்ஸனல், ரொம்ப உறவு, நாம் கடைத்தேறுவதற்கென்றேயான கருணை' என்று சித்தம் ஒன்றிலேயே போய்—சிதறியோடாமல்—குரு த்யானத்தில் ஆனந்தமாக நின்றுவிடுகிறது. தெய்வ மூர்த்திகளின் ரூபத்தை கர்ணாந்த விச்ராந்த நேத்ரம் (காதளவோடிய கண்கள்), ஆஜாநுபாஹு என்றெல்லாம் வர்ணித்திருக்கிறது போல இல்லாமல் ஒரு குரு கண் நொள்ளையாக, கட்டை குட்டையாக, கரடுமுரடான சரீரமாக இருந்தால்கூட அந்த ரூபத்தை நினைத்தாலே ஒரு சாந்தி, ஒரு ஆனந்தம் ஏற்படுகிறது. அம்மா அழகாக இருக்கிறாளா, எம். ஏ. டிகிரி வாங்கியிருக்கிறாளா என்று பார்த்தா அவளிடம் ப்ரியமாயிருக்கிறோம்? அப்படி குருவிடமும் ஏற்படுகிறது. எத்தனை குரூபியாயிருந்தாலும் அம்மாவுக்குக்

Koviloor Digital Library

குழந்தையிடம் வாத்ஸல்யம் மாதிரி குருவுக்கு சிஷ்யனிடம் காருண்யம் பொங்குகிறது. அவள் உடம்புக்குப் பால் கொடுத்தால் இவர் ஞானப் பாலூட்டுகிறார். அவரை ஸுலபமாகச் சித்தத்தில் நிறுத்தி, ஸ்மரித்து, ஆனந்தப்பட முடிகிறது.

ஒன்றுதான்—பகவான், ஆசார்யன் வேறே வேறே இல்லை. ரொம்ப மேலே போய்விட்டால் சிஷ்யன்கூட வேறே இல்லை. ஆனால் அது இப்போது நாமிருக்கும் தசையில் வெறும் சவடால்தான். நன்றாகப் பக்குவப்பட்டவர்களுக்கே என்ன சொல்லியிருக்கிறதென்றால், "எல்லாவற்றிடமும் (அவை தன்னையின்றி வேறில்லை என்னும்) அத்வைத பாவனையை வைத்துக்கொள். ஆனாலும் இதற்கு ஒரு விலக்கு இருக்கிறது. குருவிடம் மட்டும், 'அவர் பெரியவர், நான் சின்னவன்' என்று த்வைதமாகவே பழகு. குருவோடு அத்வைதம் பாராட்டுவதென்று ஒருபோதும் வைத்துக் கொண்டுவிடாதே" என்றே உபதேசித்திருக்கிறது. அப்படியிருக்கும்போது நம் விஷயத்தைச் சொல்லவே வேண்டாம். நாம் குருவை வேறேயாகத்தான் பார்க்கமுடியும். அதில் தப்பில்லை. ஆனால் அவர் ஈச்வரனுக்கு வேறேயில்லை என்று பார்க்கப் பழகவேண்டும்.

ஈச்வரனும் குருவும் வேறு இல்லை. ஈச்வரனே தன்னைக் காட்டிக்கொடுக்கிற குரு ரூபத்தில் வருகிறான். இப்படி நம்பி ஒருவரை குருவாக வரித்துவிட்டால் பலன் நிச்சயம்.

மூன்று விதமான பாவங்கள்

ஈச்வரனிடத்தில் பக்தி, அதே போன்ற பக்தி குருவிடத்திலும் என்று இருந்துவிட்டால் உபதேச உள்ளர்த்தமெல்லாம் புரிந்து அநுபூதி கிடைத்துவிடும். அதுதான் முதலில் சொன்ன ச்லோகம்.

இதிலே சிஷ்யர்களின் மனப்பான்மைகளையொட்டி, பக்தி பாவத்தில் பங்கீடும் கொஞ்சம் வித்யாஸமாக வரும்.

Koviloor Digital Library

'ஈச்வரனிடத்தில் பக்தி செய்வதுதான் பரம தாத்பர்யம்; அதற்கு வழிகாட்டுபவர் என்ற முறையில் குருவிடமும் பக்தி விச்வாஸம் பாராட்டுவோம்' என்பதாக மனோபாவமுள்ளவர்களும் இருப்பார்கள். இங்கே, ஈச்வரன் என்ற நமக்குத் தெரியாத ஆஸாமியையே மனஸு பற்றிக் கொண்டிருக்க முக்யமாக ஆசைப்படும். அவனைத் தெரிய வைப்பதற்கு ஸஹாயம் செய்பவரென்றே குருவிடம் போவது. அந்த மெயின் லைனில் கொண்டு போய்ச் சேர்க்கிற ஸைட் - லைன் இவர் என்ற அளவில் இவரிடமும் ஒரு நன்றி, ஒரு பக்தி இருக்கும். இப்படிப்பட்ட மனோபாவத்தையும் குரு மதித்து இவனை ஏற்றுக்கொள்வார். ஒரு சின்ன கொடி படர ஆதாரமில்லாமல் ஆடிக்கொண்டிருக்கும் போது நாம் அதைப் பிடித்து ஒரு கொழுகொம்பில் சுற்றி விடுவதுபோல, அவர் இந்த மனோபாவக்காரனைக் கொண்டு போய் ஈச்வரன் என்ற கொழுகொம்பைப் பற்றிக் கொள்ளும்படி செய்துவிடுவார். அவனுக்குத் தெரியாமலிருந்த விஷயத்தைத் தெரிந்ததாகப் பிடித்துக்கொடுத்து விடுவார். ஈச்வரனும் இந்த ரீதியிலேயே அவனை அங்கீகரித்துக் கொள்வான்.

இன்னொரு பாவம், ஈச்வரனே குரு ஸ்வரூபமாக வந்திருக்கிறானென்பது. ஈச்வரன், குரு இரண்டு பேரும் ஸமம் என்று வைத்துக்கொண்டு (ஆரம்பத்தில் சொன்ன 'யஸ்ய தேவே பராபக்திர்—யதா தேவே ததா குரௌ' என்ற) ச்லோகத்தில் சொன்னபடி ஈச்வரனிடமும் பக்தி, குருவிடமும் அதற்குக் கொஞ்சங்கூட குறையாத பக்தி என்றிருப்பது.

பக்தியைப் பங்கு போடுவதா, அதேபோல அநுக்ரஹத்திலும் ஈச்வரன், குரு என்று இரண்டு பேர்கள் பங்கு போட்டுக்கொண்டு பண்ணுவார்களா என்று நான் பரிஹாஸம் பண்ணினாலும் அது 'யுக்தி'யில் சொன்னது தான். 'அநுபவ'த்தில் எப்படி இருக்குமென்றால் இம்மாதிரி மனோபாவக்காரனுக்கு சில சில ஸமயங்களில் ஈச்வரன் என்பதிலேயே சித்தம் போய் அப்படியே பக்தியில் நிற்கும்.

Koviloor Digital Library

சில சில ஸமயங்களில், 'அவனுடைய நராகாரமே இது' என்ற பாவத்துடன் குரு ஸ்வரூபத்திலேயே சித்தம் பக்தியில் நிரம்பிப் பதிந்திருக்கும். ஒரே ஈச்வரன் ஈச்வரனேயான ரூபம், குருவாக எடுத்துக்கொண்ட ரூபம் என்ற இரண்டின் மூலமும் அநுக்ரஹம் பண்ணுவான்.

மூன்றாவது பாவம், 'ஈச்வரனைப் பற்றிய கவலையே இல்லை. அவன் எப்படி வேண்டுமானால் இருந்து விட்டுப் போகட்டும். நமக்கு வேண்டியது குருதான். ஈச்வரன் அவர் மூலம் நல்வழி காட்டுகிறான், அல்லது அவராக ரூபம் எடுத்துக்கொண்டு வருகிறான் என்ற கதையெல்லாம்கூட வேண்டாம். நமக்கு குருவான இவரேதான் ஸகலமும். இவரேதான் நம்முடைய ஈச்வரன், கீச்வரன் எல்லாமும். அதனால் இவரை மாத்திரம் அநன்யமாக உபாஸிக்க வேண்டியது. இவரே கடைத்தேற்றிவிட்டுப் போகிறார்' என்று இருப்பது. முழு பக்தியும் குரு ஒருவருக்கே செலுத்துவது.

'கடைத்தேறுவது என்பதைக்கூட நினைப்பதில்லை. குருவிடம் பக்தியாயிருந்து சுச்ரூஷை பண்ணிக்கொண்டிருப்பதே ஆனந்தமாக இருக்கிறதோ இல்லியோ! அதற்காகவே அப்படிச் செய்வது. கடைத்தேற்றுகிறார், ஏற்றாமலிருக்கிறார், எப்படிச் செய்வாரோ செய்துவிட்டுப் போகட்டும். நமக்கு அதைப்பற்றி விசாரமில்லை. நாம் பக்தியோடு தாஸ்யம் செய்துகொண்டு அதிலேயே நிறைந்து கிடப்பது' என்று இருப்பது இன்னம் மேலே.

குரு பக்திக்கு ஈசன் செய்யும் அருள்

சிஷ்யன் எப்படி நினைத்தாலும், கடைத்தேறணுமென்று நினைத்தாலும் ஸரி, அதைப் பற்றித் தான் கவலைப்படுவதில்லை என்று வைத்துவிட்டாலும் ஸரி—இவனுக்கும் பரம ஞானம், கதி மோக்ஷம் கிடைத்தே தீரும். இவன் ஈச்வரனை நினைக்காவிட்டாலும், ஈச்வரன் இவன் பராபக்தியுடன்

Koviloor Digital Library

தாஸ்யம் செய்கிற குருவுக்குள் இருப்பதால், இவனுடைய பக்தியை வாங்கிக்கொண்டு—எல்லா நமஸ்காரமும் ஒரு கேசவனைத்தான் சென்றடைகிறது என்றபடி வாங்கிக் கொண்டு—இவனுக்குப் பரமானுக்ரஹம் பண்ணி விடுவான். அவனுக்குத் தன்னை ஈச்வரனென்று பெயர் கொடுத்து, ஸ்தானம் கொடுத்து பக்தி பண்ணினால்தான் அநுக்ரஹிப்பது என்ற எண்ணம் கிடையாது. எவராயிருந்தாலும், எவரிடமாயிருந்தாலும் கொஞ்சங்கூடத் தன்னலமே கருதாமல் பூர்ணமான ப்ரேமையை வைத்து, ஆத்மார்ப் பணம் பண்ணி ஸேவை செய்தால் அது தனக்கே செய்யும் பூஜை என்று ஏற்றுக்கொண்டு க்ருபை செய்துவிடுவான்.

அவனையேகூட த்ரிலோக நாதன் என்று தெரிந்துகொள் ளாமல், அதனால் கை கட்டி வாய் புதைத்துப் பூஜை பண்ணாமல், 'நம்மைச் சேர்ந்த, நம்மைப் போன்ற ஒரு ஆள்' என்றே நினைத்து, ஆனாலும் தன்னலம் கலக்காமல் பூர்ண ப்ரேமையோடு ஸ்வாதீனமாகக் கலந்து பழகினாலும் மோக்ஷ பர்யந்தம் அநுக்ரஹம் புரிந்து விடுவான். கோபிகா ஸ்த்ரீகள் வ்ருத்தாந்தத்தில் இப்படித்தான் பார்க்கிறோம். பக்தியின் உச்சஸ்தானம் எங்கே என்றால் அவர்களிடம்தான் என்று நாரதாதிகளும் சொல்லி நமஸ்காரம் பண்ணியிருக்கிறார்கள். க்ருஷ்ண பரமாத்மாவே அப்படித்தான் கொண்டாடியிருக் கிறான். அவர்களுக்கு அவன் பரமாத்மா என்ற ஸமாசாரமே தெரியாது. பரமாத்மா என்ற ஒன்றைப் பற்றியே அவர்கள் கேள்விப்பட்டதில்லை. ஜார சோரன்—ஸ்த்ரீகளின் ஹ்ருதயத்தை ப்ரேமையில் தவிக்க வைப்பவன்—திருடன், என்றுதான் அவனைத் தெரியும். ஆனாலும் அவனிடமே ப்ரேமை என்று ஸர்வஸங்க பரித்யாகம் பண்ணினார்கள். அந்த வார்த்தைகூட அவர்களுக்குத் தெரியாது! ஆனாலும் பண்ணினார்கள்! பகவான் அதையே மதித்து அவர்களை கோலோகம் என்கிற தன்னுடைய நித்யாநந்த விஹார பூமியிலே தன்னுடைய மஹிஷிகளாக்கிப் பெரிய உயர்வு கொடுத்தான்.

Koviloor Digital Library

இந்தவிதமாக, குருவையே ஸகலமுமாக நினைத்து பக்தி பண்ணிவந்தால், ஞானம், கதிமோக்ஷம் என்று ஒருவன் தவித்து வேண்டிக்கொள்ளாவிட்டாலும் ஈச்வரனே அவற்றை அநுக்ரஹம் செய்துவிடுவான். இவனுடைய கர்மாவையும் பார்த்து ஈச்வரன் செய்வது என்கிறபோது, சோதனைகள் வைக்கும்போது, 'டிலே' பண்ணிக்கொண்டே போகும் போது, குருவின் ஸஹாயம் இதையெல்லாம் ஸமாளிப்பதற்குப் பெரிய பக்கபலமாக இவனுக்கு உதவும். அதாவது குருவின் மனஸ் என்பது ஈச்வரனுக்கு வேறே மாதிரியாக கொஞ்சமோ நிறையவோ இருக்கிறதில்—அவனுடைய விளையாட்டிலே பரம அத்வைதாநுபூதிமான்களாக இருக்கப்பட்டவர்களுக்குக்கூடக் கருணை நிமித்தமாகவே கொஞ்சம் பேதமாகத் தங்களுடைய தனி மனஸு மாதிரி ஒன்று இருப்பதுண்டு. அநுபூதியிலே ரொம்ப மேலே போகாத குருக்களுக்கு இன்னம் ஜாஸ்தியாகவே த்வைத பாவம் இருக்கும். இப்படிக் கொஞ்சமாகவோ, நிறையவேயோ இருக்கிறதில்—குருவானவர்கள் சிஷ்யனின் கர்மாவுக்காக சோதனை, டிலே என்று ஈச்வரன் ரொம்பவும் செய்துவிடாமல், அவனுடைய behalf-ல் தாங்களும் ஈச்வரனிடம் பிரார்த்திப்பார்கள். தங்களுடைய தபோ சக்தியையும் அதற்காகக் கொடுப்பார்கள். தங்களிடமே கூட சிஷ்யனின் கர்மாவை transfer செய்து கொண்டும் உபகரிப்பார்கள். ஈச்வரனிடம் நேராகப் பேசிப் பழகக் கூடியவர்களானால் அவனிடம் சிஷ்யனுக்காக மன்றாடுவதிலிருந்து மிரட்டுவது வரை எல்லாம் செய்வார்கள். முன்னேயே கதைகள் சொன்னேன்.

குரு - சிஷ்யர் : இருபெரும் தர்மங்களின் உருவகம்

குருவே ஈச்வரன் என்று ஏக பக்தி செய்யாமல் ஈச்வரன், குரு என்று இரண்டு பேரையும் ஒருவன் பக்தி செய்யும் போதும் இப்படியெல்லாம் இவன் செய்யும் சுச்ரூஷை, ஸாதனை ஆகியவற்றோடு அவர் பல தினுஸில் இவனுடைய

Koviloor Digital Library

behalf-ல் செய்வதும் சேருமென்றாலும், 'அவரொருவரே ஈச்வரன் உள்பட ஸகலமும்' என்று அவன் இருக்கும்போதே அவருடைய ஸஹாயம் பூர்ணமாகக் கிடைக்கும். அவர் இப்படிச் செய்வது தன்னிடமே அவன் ஏகபக்தி செய்கிறானே என்பதில் தற்பெருமையால் அல்ல. எல்லா தர்மங்களுக்கும் மேலாக சரணாகத ரக்ஷணத்தைத்தானே சொல்லியிருக்கிறது? அந்த தர்மபரிபாலனார்த்தமே அவர், தன்னையே எல்லாமாக நினைத்து சரணாகதி பண்ணிவிட்ட சிஷ்யனின் உத்தாரணத் துக்காக தாமும் தம்மாலான எல்லாம் பண்ணுவார்.

இரண்டு பெரிய தர்மங்கள். ஒன்று சரணாகத ரக்ஷணம். இன்னொன்று செய்ந்நன்றி மறவாமை. முதலாவதின் 'பெர்ஸானிஃபிகேஷ'னாக—'உருவகமாக'—இருப்பது குரு வின் லக்ஷணம். இரண்டாவதின் 'பெர்ஸானிஃபிகேஷ'னாக இருப்பது சிஷ்யனின் லக்ஷணம்.

சரணாகத ரக்ஷணத்தின் உச்சிக்குப் போய் சிஷ்யனைக் காப்பாற்ற குரு கடமைப்பட்டிருப்பது, 'அவரே ஸகலமும், ஈச்வரன் உள்பட' என்று சிஷ்யன் நினைக்கும்போதுதான்.

அதனால் நான் சொன்ன மூன்று பாவங்களில் ஒன்றாக அநன்யமான குரு பக்தி செய்யும்போது இவனுடைய ஸாதனா பலம் ஒரு பங்கு என்றால் குரு இவனுக்காகச் செய் வது நூறு பங்கு, ஆயிரம் பங்காக இவனை பலப்படுத்தி ஒரே தூக்காகத் தூக்கிவிடும்.

எந்த பாவத்தினாலும் ஈசனருள் பெறலாம்

மனோபாவத்தில், பக்தி பாவத்தில் பல விதமாக ஜனங் களுக்கிடையிலே வைத்திருப்பதில் அவரவர்களுக்கு ஏற்ற விதத்தில் போய், அததற்கு ஈச்வரன் எப்படி அநுக்ரஹிக் கிறானோ அப்படிப் பெறவேண்டியது. அவனையே நேராக நம்பிப் போகிறவர்களையும் அவன் ஒரே தூக்காகத் தூக்கி அநுக்ரஹிக்கிறான். அவனையும் ஆசார்யனையும் ஸமமாக

Koviloor Digital Library

பக்தி செய்கிறவனுக்கும் அப்படிப்பட்ட பரமாநுக்ரஹம் பண்ணுகிறுன்—விளையாட்டாகத் தான் பாதி பண்ணுவது, குரு பாதி பண்ணுவது போலக் காட்டிப் பண்ணுகிறுன். ஆசார்யனொருவனே போதுமென்று பக்தி செய்கிறவனுக்கும் இத்தனை நாழி சொன்னதுபோல அவருடைய அந்தர்யாமி யாக இருந்து கொண்டும், அவர் இவனுடைய behalf-ல் செய்யும் அநேக கார்யங்களை மதித்து நிறைவேற்றிக் கொடுத்தும் பரமாநுக்ரஹத்தைப் பண்ணுகிறுன். இந்த மூன்ருவது பாவத்தை 'அநுபவ'மாக்கிக் கொள்வதற்கு 'யுக்தி' யாகவே இத்தனை நாழி விஸ்தாரம் பண்ணிச் சொன்னது. மற்ற இரண்டு வித அநுபவங்களுக்கும் இது போலவே யுக்தி உண்டு. இன்றைக்கு என்னவோ தோன்றிற்று, இப்படியும் ஒரு பாவம், ஸாதனமார்க்கம்— குருவிடமே அநன்ய பக்தி பண்ணுவது என்று இருப்பதை எடுத்துச் சொல்லலாமென்று.

ஈச்வரனிடம் போக வழிமட்டும் காட்டுபவரென்ருே, ஈச்வரன் மாதிரியே அவனுக்கு ஸமமாக இருப்பவரென்ருே, நமக்கு இவரைவிட்டு ஈச்வரன் கூட வேண்டியதில்லை யென்ருே எதுவோ ஒரு விதத்தில் ஒரு குருவிடம் பக்தி வைத்து நல்லதைத் தெரிந்து கொண்டு நல்ல வழியில் போவதற்கு அவரவர்களும் தன்னுலான முயற்சியைப் பண்ணவேண்டியது.

குருமுகமாக அறிவதன் சிறப்பு

நாமாகவே தெரிந்து கொள்வதைவிட, அதாவது புஸ்தகம் படித்தும் ஸ்வய அநுபவங்களாலும் மட்டும் தெரிந்து கொள்வதைவிட குருமுகமாகத் தெரிந்து கொள் வதில் என்ன சிறப்பு என்ருல், நாமாகத் தெரிந்துகொள்ளும் போது, 'இவ்வளவு படித்தோம், இப்பேர்ப்பட்ட விஷயங்களை நம்முடைய அநுபவத்தாலேயே தெரிந்து கொண்டோம்' என்ற அஹங்காரம் ஏற்பட இடமிருக்கிறது. புஸ்தகப் படிப்பும் வேண்டியதுதான். குருவே புஸ்தகத்தி

Koviloor Digital Library

லிருந்தும் உபதேசிக்கிறார். 'இது இது இன்னும் படி' என்றும் சொல்வார். அதே மாதிரி, அல்லது அதை விடவும், ஸ்வய அநுபவத்தாலும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். குரு உபதேசமெல்லாமும் ஸ்வாநுபூதியில் கொண்டு விடுவதற்குத்தானே? ஆனால் அப்படி ஒரு பெரியவரின் துணை, guidance இல்லாமல் நாமாகப் படிப்பு, அநுபவம் என்று போகும்போது, [தலையைத் தொட்டுக் காட்டி] கனத்துப் போகிற அபாயம் இருக்கிறது. குரு என்று ஒரு பெரியவரை வரித்து விட்டால் அவரிடம் அடங்கியிருப்பது, சுச்ரூஷை செய்வது என்று இருப்பதில் ஆத்மாவுக்கு மிகவும் ஹானிகரமான இந்த அஹங்காரம் அப்படியே நசிக்க வசதி ஏற்படுகிறது. வெறும் புத்திவ்ருத்தியாய் மட்டும் எல்லாம் முடிந்துபோய்விடாமல், அன்பு, தொண்டு ஆகியவற்றால் உள்ளம் பக்குவமாகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறதும், மூளை லெவலில் மட்டும் புரிகிறதுமான தத்வங்கள், ஒரு அநுபவியின் மூலம் அவருடைய நிறைந்த அநுக்ரஹ சிந்தையோடு உபதேசமாக வரும்போது ஜீவனுள்ள சக்தியாக நமக்குள் போய் நம்மையும் ஸத்ய அநுபவத்துக்கு அழைத்துக்கொண்டு போகிறது. அந்தப் பெரிய அநுபவம் தனக்கு ஏற்படுவதிலும் சிஷ்யன் அஹங்காரப்பட முடியாது. ஏனென்றால் அஹங்காரம் நாசமாகி ஆத்மா மாத்திரம் பிரகாசிப்பதுதான் அந்த அநுபவமே! அதற்கு குருவின் அநுக்ரஹம் ரொம்ப அவச்யம்.

எல்லோரும் முடிந்த அளவு குரு பக்தி செய்து ச்ரேயஸை அடைய வேண்டியது.

Koviloor Digital Library

குருமூர்த்தியும் த்ரிமூர்த்திகளும்

மும்மூர்த்தியரை மூலப்பொருளாக அல்லாமல்!

எல்லாருக்கும் தெரிந்த, அல்லது தெரிந்ததாக நான் நினைத்துக் கொண்டிருக்கிற, ச்லோகம்;

குருர் - ப்ரஹ்மா குருர் - விஷ்ணு: குருர் - தேவோ மஹேச்வர:।
குருஸ் - ஸாக்ஷாத் பரம்-ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம:॥*

'குருதான் மும்மூர்த்திகளும். பரம்பொருளும் அவர்தான். அப்படிப்பட்ட அவருக்கு நமஸ்காரம்' என்று. ச்லோகம் சொல்கிறது.

மும்மூர்த்திகளின் பெயரைத் தனித்தனியாக ப்ரம்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்று சொல்லிவிட்டு, அப்புறம் பரப்ரஹ்மத்தைச் சொல்லியிருப்பதால் இந்த ச்லோகப்படி ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்று மூன்று பேரில் எவருக்கும் பரப் பிரம்மம் என்றும், முழுமுதற் கடவுள் என்றும் சொல்லப்படும் ஸ்தானம் தரப்படவில்லை என்று தோன்றுகிறது. அவர்களை ஸ்ருஷ்டி—ஸ்திதி—ஸம்ஹாரகர்த்தாக்களாக மட்டுமே வைத்திருக்கிறதென்று தெரிகிறது. அதாவது படைப்பது, காப்பாற்றுவது, ஸம்ஹாரம் பண்ணுவது என்ற ஒவ்வொரு காரியத்தை மட்டுமே அவர்களில் ஒவ்வொருவரும் செய்வதாக

---

* இச் சுலோக விளக்கம் ''தெய்வத்தின் குரல்'': இரண்டாம் பகுதியில் ''குருபக்தி'' என்ற கட்டுரையிலும் காண்க.

Koviloor Digital Library

ஆகிறதே தவிர, ஸர்வ கார்ய காரணங்களுக்கும் ஆதி காரணமாகவும் ஆதார சக்தியாகவும் இருக்கப்பட்ட மூலப் பொருளாக, பரப்ரஹ்மமாக, முழுமுதற் கடவுளாக அவர்களைச் சொல்லவில்லை என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் மூன்று பேரையும் சொன்னவிட்டுத் தனியாக "குருஸ் - ஸாக்ஷாத் பரம் - ப்ரஹ்ம" என்று சொல்வானேன்?

பண்டிகை இல்லாத கடவுள்

ப்ரம்மாவை முழு முதற் கடவுளாக என்றைக்குமே லோகத்தில் உபாஸித்ததாகத் தெரியவில்லை. பஹுகாலமாக ஸ்ருஷ்டி கர்த்தா என்ற முறையில்கூட அவருக்கு உபாஸனை இல்லாமலே இருக்கிறது. இத்தனை பண்டிகைகள் இருக்கின்றன. பிள்ளையார் சதுர்த்தி, ஸ்கந்த ஷஷ்டி, ராமநவமி, கோகுலாஷ்டமி, வரலக்ஷ்மி வ்ரதம், ஸரஸ்வதி பூஜை, நவராத்ரி, சிவராத்ரி—இவை எல்லோருக்கும் நன்ருகத் தெரிந்தவை. இவை போக இன்னம் அநேகம். பஞ்சாங்கத்தைப் பார்த்தால் அநேகமாக தினமும் ஏதாவது ஒரு தெய்வத்துக்கான ஒரு பண்டிகையாக இருக்கும்; ஒரு நாளிலேயே இரண்டு மூன்று சேர்ந்துகூட வரும். இப்படி கணக்கு வழக்கில்லாமல் பண்டிகைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் ப்ரம்மாவுக்கென்று ஒன்றுகூட நாம் கொண்டாடுவதாக இல்லை.

உங்களகங்களில் ஸ்வாமி விக்ரஹங்கள், படங்கள் எவ்வளவு வைத்திருக்கிறீர்கள்? ஆனால் ப்ரஹ்மாவுக்கு உண்டா? மஹாவிஷ்ணு சயனித்துக் கொண்டிருக்கும் கோலத்தில் படம் இருந்தால் அதில் பகவானின் நாபி கமலத்தில் அவர் இருப்பார். திருக்கல்யாணப் படங்கள் இருந்தால் அதில் 'பண்ணி வைக்கிற சாஸ்த்ரி'களாக உட்கார்ந்து கொண்டிருப்பார். ஆனால் அவர் பாட்டுக்கு கூட்டத்தோடு கூட்டமாக என்னவோ இருப்பாரே தவிர அவரை நாம் பூஜார்ஹமான (பூஜை பெறத் தகுதி பெற்ற) ஒருவராக நினைத்து வழிபடுவதென்பதில்லை. கூட்டத்திலே ஒருவராக அவர் வந்து நிற்பதோடு ஸரி.

Koviloor Digital Library

கோயிலில்லாத கடவுள்

நம் தேசத்தில் இத்தனை ஆயிரம் கோயிலிருந்தும், ஒவ்வொரு கோயிலிலும் ஏகப்பட்ட ஸந்நிதிகள் இருந்தும், அநேக உத்ஸவாதிகள் நடத்தப்பட்டபோதிலும் ப்ரம்மாவுக்கு எதுவுமே காணோம்! அபூர்வமாக எங்கேயாவது புஷ்கர் மாதிரி ஒரு க்ஷேத்ரத்தில்தான் தேடித்தேடி அவருக்குக் கோயில் பார்க்க முடிகிறது. பிரம்மா கோயில் என்றாலே புஷ்கரைத்தான் இன்று நினைக்கிறார்கள். நம்முடைய கும்பகோணத்திலேயே ப்ரம்மாவுக்குத் தனிக் கோவில் இருப்பது ரொம்பப் பேருக்குத் தெரியவில்லை. காஞ்சீபுரத்திலும் கும்பகோணத்திலும் தடுக்கிவிழுந்த இடமெல்லாம் கோவில் என்பார்கள். காஞ்சீபுரத்தில் நாம் ஜன்மாவில் பண்ணுகிறதற்கெல்லாம் கணக்கு எழுதும் சித்ரகுப்தனுக்கு அபூர்வமாகக் கோவில் இருக்கிறதென்றால், கும்பகோணத்தில் ஜன்மாவைத் தரும் ப்ரம்மாவுக்கு அபூர்வமாகக் கோவிலிருக்கிறது! திருக்கண்டியூர் என்று திருவையாற்றுக்குக் கிட்டே இருக்கிறது. அது பரமசிவன் ப்ரஹ்மாவுக்கு ஆதியில் இருந்த ஐந்து தலைகளில் ஒன்றைச் சேதித்த க்ஷேத்ரம். அங்கே சிவனுக்கு ப்ரஹ்மசிரக்கண்டீசர் என்றே பேர். அங்கே ப்ரஹ்மாவுக்கும் ஸந்நிதி இருக்கிறது. கொங்கு நாட்டிலுள்ள த்ரிமூர்த்தி க்ஷேத்ரமான பாண்டிக் கொடுமுடியிலும் இருக்கிறது. சிதம்பரத்தில் ப்ரஹ்மாவையே சண்டேச்வரர் என்று சொல்லி, (கனக)ஸபையைச் சுற்றி வரும்போது அவருக்கு ஒரு சின்ன கோஷ்டம் காட்டுகிறார்கள். ஆனாலும் இதெல்லாம் ஸமுத்ரத்தில் ஒரு துளி மாதிரிதான். நம் தலையெழுத்தை எழுதுகிறவரின் தலையெழுத்து இப்படியிருக்கிறது!

பூஜை இல்லாத காரணம்

அவருக்குப் பூஜை இல்லாமலிருப்பதற்கு ஒரு காரணம் சொல்வார்கள்.

Koviloor Digital Library

பரமேச்வரன் ஜ்யோதிர்மயமான லிங்கோத்பவ மூர்த்தியாக ஆகாசத்துக்கும் பூமிக்குமாக நின்றார். அந்த ஜ்யோதிஸ் எங்கே ஆரம்பிக்கிறது, எங்கே முடிகிறது என்று தேடிக்கொண்டு ப்ரஹ்மாவும் விஷ்ணுவும் போனார்கள். 'நம் இரண்டு பேரில் யார் இதன் அடியையோ முடியையோ கண்டு பிடிக்கிறார்களோ அவரே பெரியவர்' என்று பந்தயம் கட்டிக்கொண்டு போனார்கள். இப்படிப் புறப்படுகிறபோதே ப்ரஹ்மாவுக்கு, 'அடிப்பாகத்தைப் போய் நாம் தேடுவதா?' என்று அஹந்தை உண்டாயிற்று. அதனால், 'நான் முடியைத் தேடுகிறேன்' என்று ஹம்ஸபக்ஷியின் ரூபத்தை எடுத்துக்கொண்டு உயரே தேடிக்கொண்டு போனார். மஹாவிஷ்ணு எளிமையாக அடியைத் தேடிக்கொண்டு வராஹ ரூபத்தில் போனார். இரண்டு பேரும், ஒருத்தர் மேலேயும் மற்றவர் கீழேயுமாக, எவ்வளவு தூரம் போய் ச்ரமப்பட்டும் முடியாவது அடியாவது தெரிகிற அடையாளத்தையே காணோம். இனிமேலே முடியாது என்று களைத்துப்போய்த் திரும்பி விட்டார்கள். ஆனால் திரும்பின பிறகு மஹாவிஷ்ணு தம்மால் அடியைப் பார்க்க முடியவில்லை என்று ஒப்புக்கொண்டார். ப்ரஹ்மாவோ முடியைப் பார்த்துவிட்டதாகப் பொய் சொன்னார்.

அப்போதுதான் ஜ்யோதி ஸ்வரூபத்திலிருந்து பரமசிவன் வெளிப்பட்டு, 'பொய் சொன்ன ப்ரம்மாவுக்கு இனிமேல் பூஜையே நடக்காமல் போகட்டும்' என்று சபித்து விட்டார்; அந்தப்படியே இப்போதும் நடந்துவருகிறது— என்று கதை சொல்கிறார்கள். நான் (கதையின்) அவுட்லைன் மட்டும்தான் சொன்னேன்.

நிஜத்தைச் சொன்ன விஷ்ணுவுக்குப் பரமசிவன் சக்ரம் தந்தார், தம்முடைய உடம்பிலேயே இடது பாகத்தைக் கொடுத்தார் என்றெல்லாம் சொல்வார்கள்.

பரமேச்வரனின் முடியைத் தேடித் தேடிப் போனவரின் கோயிலையும் இன்று நாம் தேடித் தேடிப் பார்க்கும்படி இருக்கிறது!

Koviloor Digital Library

ஆனால் இது சைவமான கதை. சைவர்கள் சொல்கிற கதை. வைஷ்ணவர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். வருத்தப்படுவார்கள். ஆக்ஷேபிப்பார்கள்.

ப்ரஹ்மா தப்புப் பண்ணியதாக இன்னம் சில கதைகளும் உண்டு. கண்டியூர் கதைகூட அப்படித்தான். இல்லா விட்டால் அவருக்கு ஆதியில் இருந்த ஐந்து தலைகளில் ஒன்றை ஈச்வரன் எதற்காகக் கொய்ய வேண்டும்? இதுவும் சைவமான கதைதான்.

விஷ்ணு கோயில்களிலேயும் ஏன் ப்ரம்மாவுக்கு ஸந்நிதி இல்லை? வைஷ்ணவர்கள் உள்பட ஸகல ஹிந்துக்களுந் தானே ப்ரம்மாவுக்கு வழிபாடில்லாமல் வைத்திருக்கிறார்கள்? சிவ ஸுதர்களான விக்நேச்வரருக்கும், ஸுப்ரஹ்மண்யருக்கும் ஜாம் ஜாமென்று பூஜை, உத்ஸவம் நடத்கிறது போல விஷ்ணுவின் ஸுதரான ப்ரஹ்மாவுக்கு ஏன் இல்லை?

ப்ரஹ்மாவுக்கு வழிபாடு இல்லாததற்கு வைஷ்ணவர்கள் ஏதாவது கதை, காரணம் சொல்கிறார்களா என்று தெரியவில்லை. இப்போது ஒன்றும் ஞாபகம் வரவில்லை.

ச்ருதியிலேயே (வேதத்திலேயே) உள்ள ப்ராஹ்மணங்கள் என்ற பிரிவுகளில் ப்ரஜாபதி தப்புப் பண்ணியதாகக் கதை இருக்கிறது. ப்ரஜாபதி என்பது ப்ரஹ்மாதான். ஸகல ஹிந்துக்களுக்கும் வேதம் ஆதாரமாக இருப்பதால் அந்த ப்ராஹ்மணக் கதை காரணமாகவே வைஷ்ணவர்கள் உள்பட எல்லாரும் அவரது வழிபாட்டை நிறுத்திவிட்டார்களென்று சொல்லாமென்று பார்த்தால், அதுவும் ஸரியாய் வரவில்லை. வேதகாலத்துக்கு அப்புறம் வெகுநாள்வரை ப்ரம்மாவுக்கு வழிபாடு நடந்துதான் வந்திருக்கிறது. கஷ்டம் என்றால் தேவர்கள் அவரிடம்தான் முதலில் ஓடியிருக்கிறார்கள். அஸுர, ராக்ஷஸரில் பலரும் அவரைக் குறித்துத் தபஸிருந்தே பெரிய வரங்கள் பெற்றிருக்கிறார்கள். முழுமுதல் தெய்வமாக அவர் வணங்கப்பட்டதாகத் தெரியாவிட்டாலும், முக்ய தேவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டிருக்கிறார். அப்புறம்தான் இது அப்படியே

Koviloor Digital Library

நின்று போய்விட்டதாகத் தெரிகிறது. வைஷ்ணவர்களும் ஏன் நிறுத்திவிட்டார்கள்?

நாம் பொழுது விடிந்தால் நூறு தப்புப் பண்ணிக் கொண்டிருக்கும்போது, ப்ரஹ்மா போன்றவர்கள் தப்புப் பண்ணிய கதைகளைச் சொல்லவே பிடிக்கவில்லை. "சாமியாம், இப்படித் தப்புப் பண்ணித்தாம்!" என்று நாஸ்திகர்கள் கேலி செய்வது இவற்றைக் காட்டித்தான். அதனால் சைவமாகப் பார்த்தது போதும், வைஷ்ணவமாக வேறு துருவ வேண்டாமென்று தோன்றுகிறது.

ஒன்று வேண்டுமானால் சொல்லலாம்.

(அது) என்ன?

விஷ்ணுவுக்கு ஒரு பிள்ளை ப்ரம்மா. இன்னொரு பிள்ளை உண்டு. அவன்தான் மன்மதன். இரண்டு பேரும் லக்ஷ்மியின் ஸம்பந்தமில்லாமலே பிறந்தவர்கள். ப்ரம்மா விஷ்ணுவின் நாபிகமலத்தில் உண்டானார். மன்மதனை அவர் மானஸிகமாக—ஒருபிள்ளை உண்டாகட்டும் என்று மனஸினால் நினைத்த மாத்திரத்திலேயே—ஸ்ருஷ்டித்துவிட்டார். அதனால் மனஸிஜன் என்று அவனுக்குப் பெயர். ப்ரஹ்மா கமலஜர். மூன்றாவது பிள்ளையாக மஹாவிஷ்ணு மோஹினி ரூபத்தில் சிவனிடம் பெற்ற சாஸ்தா இருக்கிறார். அவருக்குப் பூஜை இருக்கிறது. பெரிசாக வ்ருத்தியாகியும் வருகிறது. ப்ரஹ்மாவுக்குப் பூஜையில்லை. மன்மதனுக்கும் இல்லை.

இதற்கு ஒரு காரணம் தோன்றுகிறது. மன்மதன், ப்ரஹ்மா இருவருமே ஒரு ஜீவன் ஜன்மா எடுப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள்தானே? புத்ரோத்பத்திக்குக் காரணமான வேகத்தை மன்மதன் உண்டாக்குகிறான். அப்புறம் எந்த ஜீவன் எந்தப் பிண்டத்தில் புகுந்துகொள்ள வேண்டுமென்று பார்த்து ப்ரஹ்மா ஜன்மாவைக் கொடுக்கிறார்.

அத்தனை கஷ்டமும் நாம் ஜன்மா எடுத்ததால்தானே தெரிகிறது? ஸகல ஸமயாசாரங்களும், ஸாதனைகளும் ஜன்ம

Koviloor Digital Library

நிவ்ருத்தி, ஜன்ம நிவ்ருத்தி என்ற ஒன்றுக்காகத்தானே இருக்கிறது?

இதனுல்தான் ஜன்மா ஏற்படக் காரணமான ப்ரஹ்மா வுக்கு வழிபாடில்லாமலாகியிருக்கிறதென்று தோன்றுகிறது. மன்மதனுக்கும் இதே காரணம்தான். கூடுதலாக இன்னென்றும்: எல்லா வேகங்களிலேயும் மஹா பொல்லாத தாக, வெறிபிடித்ததாக இருப்பதை உண்டாக்கி ஜீவனை அலைக்கழிப்பவன் அவன்தானே? ஆனுல் அவனைப் பற்றி இப்போது கேள்வியில்லை. பேச்சுவாக்கில் அவன் விஷயம் வந்து விட்டது. குருவை மும்மூர்த்தியாகவும் சொல்லியிருக் கிறதென்று பார்த்ததில் முதல் மூர்த்தியான ப்ரஹ்மாவைப் பற்றித்தான் விசாரித்துக் கொண்டிருந்தோம்.

கஷ்டத்துக்கெல்லாம் காரணமான பிறவிக்கு அவர் காரணமாயிருக்கிருரே என்பதால்தான், 'இவருக்கென்ன வழிபாடு?' என்று கோபித்துக் கொண்டு நிறுத்திவிட் டோமோ என்னவோ என்று சொன்னேன்.

'பூர்வ காலங்களிலும் அவர்தானே ஸ்ருஷ்டிகர்த்தா? அப்போதெல்லாம் அவருக்கு நிரம்ப மரியாதை நடந்திருப்ப தாகச் சொன்னீர்களே!' என்று கேட்டால், அந்தப் பூர்வ காலங்களில் இத்தனை அதர்மமும், பாபமும், அதனுல் விளையும் கஷ்டங்களும்—இயற்கை உத்பாதங்கள் என்பவை கூட மனிதர்கள் செய்கிற பாபத்தின் விளைவாக ஏற்படுபவை தான், இவையும்—இல்லை. துஷ்ட சக்திகள் என்றைக்கும் இருக்கத்தான் செய்திருக்கின்றனவென்றுலும், பிற்காலத் தில் ஆனதுபோல அவை பூர்வத்தில் தலைவிரித்தாடவில்லை. அதனுலே இந்த லோகத்தில் ஜீவயாத்ரை நடத்துவது, ஜன்மா எடுப்பது என்பது இப்போது போல அப்போது அவ்வளவு நொந்து கொள்ளும்படியாக இருந்திருக்காது. தெய்வ ஸம்பந்தமாக அநேக விஷயங்கள் எங்கு பார்த்தாலும் நடப்பதாகவும், யாக யஜ்ஞாதிகள் நிரம்ப நடப்பதாகவும், அவதார புருஷர்களும் மஹான்களும் ரிஷிகளும் நிறைய இந்த பூலோகத்தில் ஸஞ்சரிப்பதாகவு

Koviloor Digital Library

மிருந்த அந்தக் காலத்தில் 'ஜன்மா ஏன் கொடுத்தார்?' என்று ப்ரம்மாவிடம் ரொம்பக் கோபப்படவேண்டி இருந்திருக்காது என்று ஸமாதானம் சொல்லலாம்.

வைஷ்ணவ ஆலய மூர்த்திகள்

வைஷ்ணவர்களின் கோயில்களை எடுத்துக்கொண்டால் அங்கே நவக்ரஹங்கள் கூடத்தான் கிடையாது. பெருமாள், பெருமாளோடு இணைபிரியாத தாயார், அவருடைய வாஹனம், அவருடைய அவதாரங்கள், அவரையே சேர்ந்த பார்ஷதர்கள், அவருடைய பக்தியிலேயே ஸதாவும் திளைத்துக் கொண்டிருக்கும் ஆழ்வார்கள், வைஷ்ணவ ஸித்தாந்ததுக்கே ஏற்பட்ட ஆசார்ய புருஷர்கள்— என்பதாக முழுக்க முழுக்க விஷ்ணு ஸம்பந்தமிருப்பவர் களுக்குத்தான் அவருடைய ஆலயங்களில் இடம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். நவக்ரஹங்களை இப்படிச் சொல்ல முடியாதல்லவா? வைஷ்ணவர்களைப் பற்றி 'மறந்தும் புறந்தொழார்' என்பார்கள். பெருமாள், அப்புறம் பெருமாளே ஸகலமும் என்று அவருக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள், ஸேவை செய்கிறவர்கள், வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரவர்த்தகர்கள் ஆகியவர்கள் தவிர, புறம்பாக உள்ள எவரையும் அவர்கள் தொழ மாட்டார்கள்.

ப்ரஹ்மா விஷ்ணுவின் ஸாக்ஷாத் புத்ரர்தான். தகப்பனாரை மிகவும் மதித்து அவருக்கு அடங்கியே இவர் இருந்ததாகத்தான் புராணங்களிலிருந்து தெரிகிறது. ஆனாலும் அவரிடமே உருகி உருகி பக்தி பண்ணிக்கொண்டு, தாஸ்யம் பண்ணிக்கொண்டு அவர் இருப்பதாகத் தெரிய வில்லை. ஸ்ருஷ்டி என்று தனக்குத் தனி ஆபீஸ் வைத்துக் கொண்டுதான் நடத்திவருகிறார். அதாவது, வைஷ்ணவர் கள் முழு முதற்கடவுளாகக் கருதும் நாராயணனே த்ரிமூர்த்திகளில் ஒருவரான பாலனகர்த்தாவாக ஒரு வேஷம் போட்டுக்கொள்ளும்போது, அந்த த்ரிமூர்த்திகளில்

Koviloor Digital Library

இன்னொருவராக, அதாவது அவருக்கு ஸம ஸ்தானத்தி லிருப்பவர் போல, இவர் ஸ்ருஷ்டி கர்த்தாவாக இருக்கிறார். பெருமாளின் அவதாரமாகவேயோ, அல்லது அடியா ராகவோ இருப்பவருக்குத்தான் வைஷ்ணவ ஆலயங்கள் இடம் தருமே தவிர, அவருக்கு ஸமதை மாதிரி ஒரு ஸ்தானத்திலுள்ள இன்னொருவருக்குத் தராது. அதனால் தான் விஷ்ணு ஆலயங்களிலும் ப்ரம்மா இல்லை போலிருக்கிறது!

ஆகமத்தில் ப்ரம்மா

ஆனாலும் த்ரிமூர்த்திகளில் ஒருவராக இருக்கிற அவருக்கு, நாலு வாயாலும் நாலு வேதங்களைச் சொல்லிக் கொண்டு அந்த மந்த்ர சக்தியாலேயே ஸ்ருஷ்டி செய்கிற வருக்கு, ஆலயத்தில் இடமில்லாமல் இருக்கக்கூடாது என்று ஆகம சாஸ்த்ரங்களில் ஒன்று செய்திருக்கிறார்கள். மூல ஸ்தான விமானத்தின் மேல், கர்ப்ப க்ருஹ வாசலுக்கு மூன்று பக்கத்திலும் த்ரிமூர்த்திகளில் ஒவ்வொருவரை வைப்பது என்று விதி செய்து, அதில் ப்ரஹ்மாவுக்கும் பிம்பம் வைக்கப் பண்ணியிருக்கிறார்கள். யாரும் அதிகம் கவனிக்காத இடத்தில், கவனித்தாலும் 'ஸ்வாமி' என்று கன்னத்தில் போட்டுக்கொள்ளாமல், பொம்மை பார்க்கிற மாதிரி நினைக்கிற இடத்தில் வைத்திருக்கிறார்கள்!

ப்ரம்மாவின் தொழில் கருணையானதே!

ஜன்மாவைக் கொடுக்கிறவர், மாற்றமுடியாததாகத் தலையில் எழுதிவிடுகிறவர்—அதற்குப் பேரே 'ப்ரம்ம லிபி' என்றுதானே சொல்கிறோம்?—என்பதற்காக ப்ரம்மாவைப் பூஜிக்க மாட்டோமென்றால் அது வாஸ்தவத்தில் ஸரியில்லை தான். எய்தவன் இருக்க அம்பை நொந்து கொள்கிற காரியம்தான். நொந்துகொள்ள வேண்டியது நம்மையேதான். ப்ரஹ்மாவை அல்ல. பூர்வத்தில் நாம் ஏகமாகப் பண்ணி, தீர்ந்துபோகாமலே பெரிசாகக் கர்மா மூட்டையைக் கட்டியிருக்கிறோம். நாமே கட்டிக்கொண்ட

Koviloor Digital Library

மூட்டைதான். அவர் (ப்ரம்மா) எதையோ பிடித்துப் போட்டுக் கட்டவில்லை. அத்தனை கர்மாவையும் ஒரு புருஷாயுஸில் அநுபவித்துத் தீர்க்கமுடிவதில்லை. தேஹ தர்மமென்று ஒன்றை ஈச்வரன் வைத்திருப்பதில் அது வ்யாதி, வக்கை என்று எதற்கோ ஆளாகி ஒரு நாள் ஜீர்ணித்து (அழிந்து) போகிறது. அதற்குள் கர்மா தீர்ந்திருக்கவில்லை. மூட்டையில் பாக்கியிருக்கும்போதே சரீரம் போய்விடுகிறது. இப்போது என்ன பண்ணுவது? சரீரத்தை விட்டுப்போன உயிருக்கு மோக்ஷம் கொடுத்து அதைப் பரமாத்ம தத்வத்தில் கரைப்பதற்கில்லை. இத்தனை கர்மா பாக்கி இருப்பவர்களுக்கு அந்த நித்யானந்த நிலையை எப்படி பகவான் தருவான்? பின்னே அந்த உயிர் என்ன ஆவது? ஆவியாக, பேயாக, பிசாசாக உலாவ விடலாமா என்றால் மநுஷ ரூபத்தில் பண்ணிய கர்மாவை ஆவி ரூபத்தில் தீர்த்துக் கொள்ளமுடியாது. ஆனால் அந்த ஆவிக்கும் க்ஷுத் - த்ருஷ்ணாதிகள் (பசி, தாஹம் முதலியன) உண்டு. ஆகையால் கர்மாவையும் தீர்க்காமல், பசி, தாஹம் என்று தவித்துக்கொண்டு அது பாட்டுக்குச் சிரகாலமும் (என்றென்றைக்கும்) திரிய வேண்டியதாகத் தானிருக்கும். இவை தீர யாரையாவது பிடித்து ஆட்டி, அவர்களை உறிஞ்சி ஆஹாரம் முதலானதைப் பெற்று பாப மூட்டையை ஜாஸ்தியாக்கிக் கொள்ளும். இப்படியெல்லாம் ஆகாமலிருப்பதற்குத்தான் இன்னொரு உடம்புக்குள் சேர்த்து இன்னொரு ஜன்மா தருவது என்று பரமாத்மா திட்டம் பண்ணி, இந்தக் கார்யத்தைச் செய்யும் அதிகாரியாக ப்ரஹ்மாவை வைத்திருக்கிறான். நல்லதைப் பண்ணி நாம் மூட்டையைக் கரைத்துக் கொள்வதற்காக அவன் கருணையுடன் மறுபடி மறுபடி சான்ஸ் கொடுக்கிறானென்பதே உண்மை நிலை. அப்படியிருக்க நாம் சான்ஸைத் தவறவிட்டு, மேலும் தப்புப் பண்ணிக்கொண்டே மூட்டையை இன்னும் பெரிசாக்கிக் கொண்டு, இன்னொரு ஜன்மா, அப்புறமும் பல ஜன்மாக்களென்று ஆக்குகிறோமென்றால் இதற்கு ப்ரஹ்மாவிடம் குறைப்பட்டுக்கொண்டு என்ன புண்யம்?

Koviloor Digital Library

ஆனாலும் நம்முடைய நிலையில், இப்படி இந்த ஸம்ஸாரத்தில் மொத்துப்பட்டுக் கொண்டு கிடக்கும்போது, ஜன்மாவைத் தரும் ஸ்ருஷ்டி கர்த்தாவைப் பூஜிக்கவேண்டும் என்ற பக்தி தோன்றத்தான் மாட்டேனென்கிறது.

ருத்ரன்—சிவன் (சிவம், நடராஜா)—மஹேச்வரன்

த்ரிமூர்த்திகள், அவர்களுக்கும் ஆதாரமான பரப்ரஹ்மம் என்று குருவைக் கொண்டாடும் விஷயமாகக் கொஞ்சம் அலசிப் பார்க்கலாமென்று ஆரம்பித்தேன். முதல் 'மூர்த்தியான ப்ரஹ்மா விஷயத்தின் அலசல் நீண்டு விட்டது.

த்ரிமூர்த்திகளை முதலில் சொல்லியிருக்கிறது: குருர்-ப்ரஹ்மா, குருர்-விஷ்ணு, குருர்-தேவோ மஹேச்வர :

ப்ரஹ்ம—விஷ்ணு—ருத்ரர் என்று சொல்வார்கள். ப்ரஹ்ம—விஷ்ணு—சிவன் என்பதில்லை. சிவபக்தர்கள் சிவன் மும்மூர்த்திகளில் ஸம்ஹார மூர்த்தியாக இருப்பவன் அல்ல என்பார்கள். சிவனுடைய அநேக ரூபங்களில் ஒன்றுதான் ருத்ரன் என்பார்கள். சிவன்தான் பரமாத்மா. ஸரியாகச் சொல்லவேண்டுமானால், ஆண்பாலில் சிவன் என்று சொல்லாமல் அஃறிணையாக சிவம் என்றே சொல்வார்கள். அந்த சிவம்தான் ஸகல க்ருத்யங்களுக்கும் காரணமான முழு முதற்கடவுள். ஸகல க்ருத்யமும் அடங்கிப்போன சாந்தமும் அதுதான். அதிலிருந்தே லோக வ்யவஹாரார்த்தம் ஸ்ருஷ்டி—ஸ்திதி—ஸம்ஹார க்ருத்யங்களைச் செய்யும் ப்ரஹ்ம—விஷ்ணு—ருத்ரர் தோன்றுவது. சைவத்தில்—சாக்தத்திலும்தான்—இந்த மூன்றோடு இன்னும் இரண்டு க்ருத்யங்கள், பஞ்ச க்ருத்யம் என்பதாக. திரோதானம் அல்லது திரோபவம் என்பது ஒன்று. அதுதான் மாயை. லோகத்தை எதிலிருந்து எப்படி உண்டாக்கினான்? அதுதான் புரியவே மாட்டேன் என்கிறது. ஏதோ ஒரு மாயா சக்தியால் இப்படி எல்லாவற்றையும் செப்பிடு வித்தை காட்டுகிறான். அதுதான் திரோதானம்,

Koviloor Digital Library

மும்மூர்த்திகளின் கார்யங்களுக்கும் அடிப்படையானது அதுதான். பஞ்சக்ருத்யத்தில் பாக்கியிருப்பது 'அநுக்ரஹம்'. எப்படியோ ஜீவனுக்குக் கர்மா என்ற ஒன்று ஏற்பட்டபின் அதை அநுபவித்தால்தானே தீர்க்கமுடியும்? அதற்கு (1) சரீரம், (2) அதன் புறக்கரணம் மட்டுமின்றி அகக் கரணம் (மனஸ், புத்தி முதலியவை), (3) இவற்றை வைத்துக்கொண்டு வினையை அறுவடை செய்கிற களமாக உள்ள இந்த ஜகத் என்பது, (4) அறுவடையை அநுபவிப்பது என்பவை தேவையாயிருக்கின்றன. (முறையே) தநு, கரணம், புவநம், போகம் என்று சொல்லும் இந்த நாலையும் பரமாத்மா கொடுப்பதுதான் 'அநுக்ரஹம்'. இது சின்ன அநுக்ரஹம். பெரிய அநுக்ரஹம், கடைசியில் இதெல்லா வற்றிலிருந்தும், அதாவது திரோதானத்தினுல் உண்டான மாயா லோக வாழ்க்கையிலிருந்தே, ஜீவனை விடுவித்து மோக்ஷ பதத்தைத் தருவதுதான். நடராஜாவின் குஞ்சித பதம் அந்தப் பதத்தைத்தான் தருகிறது. அதனுல்தான் தூக்கிய திருவடி என்று அதற்கு ஏற்றம்.

நடராஜாவின் நாட்டியத்திற்குப் பஞ்சக்ருத்ய பரமானந்தத் தாண்டவம் என்று பெயர். ஒரு கையில் அவர் பிடித்துக்கொண்டிருக்கிற டமருகத்தின் சப்தத்தினுல்தான் ஸ்ருஷ்டி உண்டாகிறது. அபயஹஸ்தத்தினுல் 'ஸ்திதி' என்ற பரிபாலனம் செய்கிருர். இன்னெரு கையிலிருக்கும் அக்னியால் ஸம்ஹாரம் பண்ணுகிருர். முஸலகனின் மேலே ஊன்றியிருக்கிற அவருடைய வலது பாதத்தால் திரோதான க்ருத்யத்தை நடத்துகிருர். முடிவாக, குஞ்சித பாதம் என்ற இடது திருவடியைத் தூக்கிக் காட்டி, "இதைப் பிடித்துக் கொண்டால் அதுதான் மோக்ஷாநுக்ரஹம்" என்று தெரிவிக்கிருர்.

நடராஜா சிவம் என்ற பரமாத்மாவாக, ஸகல கார்ய காரண மூலமாக இருப்பவர். அவரிடமிருந்து ஒவ்வொரு கார்யத்திற்கு ஒவ்வொரு மூர்த்தி வருகிருர். இப்படி வரும் போது ஸ்ருஷ்டி—ஸ்திதி—ஸம்ஹாரத்துக்கு ப்ரஹ்ம—

Koviloor Digital Library

விஷ்ணு—ருத்ரர்கள் இருப்பதுபோல திரோபவ, அநுக்ரஹ கர்த்தாக்களாகவும் இரண்டு மூர்த்திகள் இருக்கவேண்டு மல்லவா? திரோபவ கர்த்தாவுக்குத்தான் 'ஈச்வரன்' என்று பெயர். நடைமுறையிலும், இதர சாஸ்த்ரங்களிலும் 'ஈச்வரன்' என்பதற்கு என்ன அர்த்தம் கொடுத்தாலும், சைவ சாஸ்த்ரப்படி 'ஈச்வரன்' என்றால் திரோபவம் என்கிற மாயையைச் செய்யும் மூர்த்தி என்றே அர்த்தம். வெறுமே ஈச்வரன் என்று சொல்லாமல் 'மஹேச்வரன்' என்பார்கள். 'அநுக்ரஹ' கர்த்தாவுக்கு ஸதாசிவன் என்று பேர்.

சுருங்கச்சொன்னால், சைவ சாஸ்திரப்படி, சிவம் என்ற பரமாத்ம வஸ்து ப்ரஹ்ம—விஷ்ணு—ருத்ர—மஹேச்வர—ஸதாசிவர்களைக் கொண்டு ஸ்ருஷ்டி—ஸ்திதி—ஸம்ஹார—திரோதான—அநுக்ரஹங்கள் என்ற பஞ்ச க்ருத்யங்களைச் செய்கிறது. சாக்தத்தில் சிவத்துக்குப் பதில் சக்தியைப் "பஞ்சக்ருத்ய பராயணா" என்று சொல்லியிருக்கிறது.

ருத்ரன் ஸம்ஹார கர்த்தா. ("குருர் ப்ரஹ்மா") ச்லோகத்திலோ "மஹேச்வர :"என்று சொல்லியிருக்கிறது. "குருர் - தேவோ - மஹேச்வர :". ஆனாலும் இங்கே மஹேச்வரன் என்பதைத் திரோதானகர்த்தா என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளாமல் ஸம்ஹாரகர்த்தா என்று பண்ணிக் கொள்வதுதான் பொருத்தம். முதலில் ப்ரஹ்மா, விஷ்ணு என்று ஸ்ருஷ்டி, ஸ்திதி கர்த்தாக்களைச் சொன்னதால் அடுத்து ஸம்ஹார கர்த்தாவைச் சொல்வதுதானே பொருத்தம்? சைவ சாஸ்த்ரப்படி நுணுக்கமாகப் போகாமல் ஸாதாரணமாக சிவம், சிவன், ஈச்வரன், மஹேச்வரன், ருத்ரன் என்ற எல்லாவற்றையும் ஒருவனுக்கே பேராகச் சொல்வதுபோலவே இங்கேயும் சொல்லியிருக்கிறதென்று அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும்.

வைஷ்ணவத்தில்

வைஷ்ணவ ஸித்தாந்தப்படி பார்த்தால் விஷ்ணு என்பவர் த்ரிமூர்த்திகளில் ஒருவராக ஜகத் பரிபாலனம் பண்ணு

Koviloor Digital Library

வதோடு மட்டும் முடிந்துவிடவில்லை. அவர்தான் முழு முதற்கடவுள். பூர்ணசக்தியாக இருக்கப்பட்ட அவருடைய அம்சங்களாக, அவருக்கு அடங்கி நடப்பவர்களாகத்தான் எல்லா தேவர்களும்—முத்தொழில் செய்யும் தேவர்கள் கூடத்தான்—தங்கள் தங்கள் காரியங்களைச் செய்கிறார்கள். ஆனாலும் சைவர்கள் பஞ்சக்ருத்யம், ஐந்தொழில் என்று முத்தொழிலுக்கு மேலே இரண்டைச் சொல்லி ஒவ்வொன்றுக்கும் ஒரு தேவதையைச் சொல்வதுபோல வைஷ்ணவர்கள் சொல்லக்காணோம். ஸம்ஹார மூர்த்தியான ருத்ரனுக்கு வேறேயாக திரோதானத்துக்கு மஹேச்வரனென்றும், அநுக்ரஹத்துக்கு ஸதாசிவனென்றும் சைவர்கள் சொல்வதுபோல திரோதான, அநுக்ரஹ மூர்த்திகளாக இருவரை பரிபாலன மூர்த்தியான விஷ்ணுவுக்கு வேறேயாக பேர் கொடுத்து வைஷ்ணவர்கள் சொல்வதில்லை. பரம், வ்யூஹம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமி என்று அவர்களும் ஐந்தைச் சொல்லி அவற்றுக்கான அநேக விஷ்ணு மூர்த்திகளைச் சொன்னாலும் அது வேறுவிதமான 'க்ளாஸிஃபிகேஷ'னாக இருக்கிறது. கவனித்துப் பார்த்தால், பஞ்ச க்ருத்ய 'ஐடியா' அதில் அடங்கியிருக்கலாம். ஆனால் அதற்கு முக்யத்வம் கொடுத்து ஸ்பஷ்டமாகச் சொல்வதாகத் தெரியவில்லை. ருத்ரன் என்று பெயருள்ளவனுக்கு மேலே சிவன் என்கிறதுபோல விஷ்ணு என்று பெயருள்ள பரிபாலன கர்த்தாவுக்குமேலே தனிப்பெயரோடு ஒரு முழுமுதலை அவர்கள் சொல்லவில்லை. நாராயணன் என்ற பெயருக்கு வைஷ்ணவத்தில் உசந்த மதிப்பு உண்டு. அஷ்டாக்ஷரீ என்றும், த்வயம் என்றும் அவர்களுக்கு முக்கியமாக இருக்கப்பட்ட இரண்டு மந்த்ரங்களிலும் நாராயண நாமாதான் இருக்கிறது. ஆனாலுங்கூட 'நாராயணன்தான் முழு முதற்கடவுள்; விஷ்ணு அவனுக்கு அடங்கிய, அவனுடைய அம்சம்' என்று பிரித்திருக்கவில்லை. ஸமய ஸம்பிரதாயத்துக்கே விஷ்ணுவின் பெயரை வைத்து "வைஷ்ணவம்" என்றுதானே பெயர் இருக்கிறது? விஷ்ணு ஸஹஸ்ர நாமம்", "விஷ்ணு புராணம்" என்றெல்லாம் சொல்லும்போது விஷ்ணுவே

Koviloor Digital Library

தான் முழுமுதல் தெய்வமாக இருக்கிறார். [உடனுள்ள வைஷ்ணவரிடம் விசாரணை செய்துவிட்டு] 'விஷ்ணு' என்பது வேதத்தை அநுஸரித்து வந்த வைதிகமான பெயரென்றும், 'நாராயணன்' என்பது பாஞ்சராத்ரம் என்பதாக வைஷ்ணவர்களுக்கு முக்யமாக இருக்கிற தந்த்ரத்தை அநுஸரித்து வந்த தாந்த்ரிகமான பெயரென்றும் இவர் சொல்கிறார். [சிரித்துக்கொண்டே, அவஸரமாக :] நான் சொல்லலை, நான் சொல்லலை—இவர், வைஷ்ணவர், சொல்வதைத் தான் ஒப்பிக்கிறேன்!

குரவே நம :

(குருர் - ப்ரஹ்மா) ச்லோகத்துக்குப் போகலாம். அதில் முதலில் குருவை ப்ரஹ்மா என்றும், அப்புறம் விஷ்ணு என்றும் சொல்லி மூன்றாவதாக மஹேச்வரன் என்று சொல்லி முத்தொழில் புரியும் மூன்று மூர்த்திகளாகக் காட்டி விட்டு, முடிவாக அவரே முழு முதல் தெய்வமான 'ஸாக்ஷாத் பரப்ரஹ்மம்' என்று சொல்லியிருக்கிறது. ஐந்தொழில் என்பது சைவர்களும் சாக்தர்களும் மட்டுந்தான் சொல்வது. பொதுவாக உலகத்தில் சொல்கிறபடி (ச்லோகத்திலும்) முத்தொழிலைச் சொல்லி, அவற்றுக்குரிய மூர்த்திகளைச் சொல்லி அப்புறம் மூலப்பரம்பொருளைச் சொல்லி, குருதான் இந்த மூர்த்திகள் யாவரும்; அவருக்கு நமஸ்காரம்—"தஸ்மை ஸ்ரீ குரவே நம :" என்று முடித்திருக்கிறது. "குருமூர்த்தியாக உள்ள அவருக்கு—'தஸ்மை' என்றால் 'அவருக்கு'—நமஸ்காரம்".

அத்வைத சாஸ்த்ரங்கள் அத்தனையையும் பிழிந்து ஸாரமாகத் தருவதுபோல ஆசார்யாள் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் ஒன்று செய்திருக்கிறார். "தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்" என்று சொல்வார்கள். அஷ்டகம் என்றால் எட்டு ச்லோகம் கொண்ட ஸ்தோத்ரம். ஆனாலும் இதில் எட்டுக்குப் பிறகும் சில ச்லோகங்கள் இருக்கின்றன. (நூற் பயனைச் சொல்லும்) பலச்ருதியாக ஒரு ச்லோகம் மாத்திர

Koviloor Digital Library

மில்லாமல் மேலும் நாலைந்து ச்லோகங்கள் இருக்கின்றன. எல்லாமே ரொம்ப அர்த்த புஷ்டியும் அழகும் கொண்டவை. 'குருர் - ப்ரஹ்மா' ச்லோகத்தில் 'தஸ்மை ஸ்ரீ குரவே நம:' என்று முடித்திருப்பது போலவே, ஆசார்யாளும் அந்த ஸ்தோத்ரத்தில் (முதன் ஒன்பது ச்லோகங்களில்) ஒவ்வொரு ச்லோகத்தையும்

தஸ்மை ஸ்ரீ குரு மூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே

என்று முடித்திருக்கிறார்.

எதற்காக நமஸ்காரம்?

த்ரிமூர்த்திகளாகவும் அவர்களுக்கும் மூலப்பொருளான பரம்பொருளாகவும் குரு இருப்பதால் அவருக்கு நமஸ்காரம் பண்ணவேண்டுமென்றால், வேடிக்கையாக, "ஏன்? எதற்காக?" என்று கேட்கத்தோன்றுகிறது! வேடிக்கை என்றால் வெறும் தமாஷ் இல்லை. வம்பு மாதிரி, வாதம் மாதிரி "த்ரிமூர்த்தி, பரப்ரஹ்மம் ஆகியனவாக இருந்து விட்டுப் போகட்டும், அதற்காக ஏன் ஐயா நமஸ்காரம் பண்ணவேண்டும்?" என்று கேட்கத் தோன்றுகிறது. வேடிக்கை, வாதம் இரண்டும் கலந்து!

முத்தொழில் புரிபவர் என்பதற்காக வழிபாடில்லை

ச்லோகத்தில் ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்று மூன்று பேரை வரிசையாகச் சொல்லிவிட்டு, அப்புறப் பர ப்ரம்மம் என்பதால் அந்த மூன்று பேரை ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார மூர்த்திகளாகவே காட்டியிருக்கிறது என்பது வெளிப்படை. இத்தனை நாழி அதைப் பற்றித்தான் விசாரித்தோம்.

தேவர்களெல்லாம் எந்தக் கஷ்டமானாலும் ப்ரம்மா விடம்தான் முதலில் முறையிடுவார்கள், அஸுரர்களிலும் பல பேர் தபஸ் பண்ணி அவரிடமிருந்து வரம் பெற்றிருக் கிறார்கள்—என்னும்போது அவர்கள் அவரை ஸ்ருஷ்டி

Koviloor Digital Library

கர்த்தா என்று மட்டும் வைத்து அவரிடம் போய்ப் பிரார்த்திக்கவில்லை. தெய்வசக்தி என்று பொதுவாகச் சொல்கிறோமே, அந்த சக்தி நிரம்பிய ஒருவர் என்றுதான் அவரிடம் இவர்கள் போயிருக்கிறார்கள். தங்களுக்கு ஏதேதோ ஸௌக்யங்களை, போக போக்யங்களை அவர் கொடுக்கவேண்டும்; பிரார்த்திப்பது தேவர்களானால், அஸுரர்கள் அழிந்து போக அவர் அருள்புரியவேண்டும்; அல்லது பிரார்த்திப்பது அஸுரர்களானால், தேவர்களை அழிக்க அவர் பலம் தரவேண்டும் என்றுதான் அவரிடம் போயிருக்கிறார்கள். இதில் ஸௌக்யம் போகபோக்யம் கொடுப்பதென்பது பரிபாலனத்தைச் சேர்ந்தது. அது த்ரிமூர்த்திகளில் விஷ்ணுவின் கார்யம். அஸுரர்கள் அழிவது, அல்லது தேவர்கள் அழிவது என்றால் அதுவோ ருத்ரனின் கார்யம். இவற்றுக்காகத்தான் அவர்கள் ப்ரம்மாவிடம் போயிருக்கிறார்கள். ஸ்ருஷ்டி கர்த்தாவாக அவர் செய்யக்கூடிய எதையோ கேட்டுக்கொண்டுதான் அவர்கள் அவரிடம் போனார்களென்றில்லை.

தனக்கு சிரஞ்ஜீவித்வம் வேண்டுமென்று பல அஸுரர்கள் அவரிடம் ப்ரார்த்திக்க அவரோ, 'அப்படி அன்-கண்டிஷனலாக வரம் தர எனக்குச் சக்தியில்லையப்பா! மரணம் வராமலிருக்க ஏதாவது கண்டிஷன் வேணுமானால் போட்டுக் கேளு; தருகிறேன்' என்று சொல்வதாகப் பல புராணங்களில் பார்க்கிறோம். இதிலிருந்து அவர், 'வெறும் ஸ்ருஷ்டி கர்த்தா இல்லை, எதையும் செய்யவல்லவர்' என்ற நம்பிக்கையிலேயே வரம் கேட்பவர்கள் அவரிடம் போயிருக்கிறார்களென்றும், ஆனால் அவரோ தாம் ஸர்வசக்தி படைத்தவரல்ல என்றே தம்மைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறாரென்றும் ஆகிறது.

யாராவது சிலபேர் அவரிடம், 'இப்படியிப்படி அடுத்த ஜன்மா கொடுங்கள்' என்று வரம் கேட்டிருக்கலாம். அல்லது பிள்ளைவரம் கேட்டிருக்கலாம். இவர்கள் வேண்டுமானால் ஒருவேளை அவர் ஸ்ருஷ்டி கர்த்தா என்பதாக மட்டுமே

Koviloor Digital Library

அவரை இம்மாதிரி கேட்டிருக்கலாமோ என்னவோ? ஆனால் இதே வரத்தை இதர தெய்வங்களிடமும்—சிவன், விஷ்ணு, அம்பாள், ஸுப்ரம்மண்யர் போன்றவர்களிடமும்—பல பேர் கேட்டிருக்கிறார்கள். ஆகையால் பிறப்பு ஸம்பந்தமான வரமானால் படைப்புக்கே ஏற்பட்ட ப்ரம்மாவிடம்தான் போகவேண்டுமென்று பொதுக் கருத்து இல்லை என்றே ஏற்படுகிறது. இதையே இன்னொரு தினுஸில் திருப்பிப் பார்த்தால் படைப்புக் கடவுள் என்ற முறையில்தான் ப்ரம்மாவிடம் போய் ஒன்றை வேண்டிக்கொண்டார்களென்று இல்லை என்று தெரிகிறது.

இதேபோல விஷ்ணுவையும், சிவனையும் பலபேர் உபாஸித்து இஹ-பர ஸௌக்யங்களில் அத்தனையையும், பரம ஞானத்தையும், மோக்ஷத்தையும்கூடப் பெற்றிருக்கிறார்கள் என்னும் போது அவர்கள் அந்த இரண்டு பேரையும் பரிபாலன கர்த்தா, ஸம்ஹார கர்த்தா என்று மாத்திரம் வைத்து ஆராதிக்கவில்லையென்று தெரிகிறது. இவர்களை வேண்டிக்கொண்டு, தபஸ் முதலானது பண்ணியே பலர் புத்ரவரம் பெற்றிருக்கிறார்கள். 'ராஜா இருந்தான்; அவனுக்கு எல்லா ஸௌக்யங்களும் இருந்தன; ஆனால் பிள்ளை இல்லையே என்ற பெரிய குறை மட்டும் இருந்தது; இல்லாவிட்டால், யாரோ ஒரு ரிஷி இருந்தார்; அவருக்கு மனஸில் எவ்வளவோ சாந்தி இருந்தும் பித்ரு ருணம் (மூதாதையரின் கடன்) தீர்க்கப் பிள்ளையில்லையே என்பது விசாரமாயிருந்தது; அந்த ராஜா, அல்லது ரிஷி விஷ்ணுவை, அல்லது சிவனைக் குறித்துத் தபஸ் பண்ணினார்; விஷ்ணுவோ சிவனோ ப்ரஸன்னமாகிப் புத்ர வரம் கொடுத்தார்' என்று அநேகம் கதைகள் பார்க்கிறோம். இங்கேயெல்லாம் ப்ரஹ்மாவுக்குரிய ஸ்ருஷ்டியை இந்த இரண்டு பேர் செய்திருப்பதாக ஆகிறது. அதோடு, தேவர்கள் பிரார்த்தித்தார்கள், ரிஷிகள் பிரார்த்தித்தார்கள் என்று மஹாவிஷ்ணு அவதாரத்துக்கு மேல் அவதாரமாக எடுத்து ஹிரண்யன், ராவணன், கம்ஸன் என்று பல பேரை ஸம்ஹாரம் பண்ணியிருக்கிறார்.

Koviloor Digital Library

சிஷ்ட பரிபாலனம் என்று அவர் பண்ணுவதே பூர்வயுகங்களில் முக்யமாக துஷ்ட நிக்ரஹமாகத்தான் இருந்திருக்கிறது. சிவனைப் பார்த்தால் அவர் எத்தனையோ பக்தர்களுக்கு ஆயுராரோக்யம், ஐச்வர்யம் என்று வாரி வழங்கியிருக்கிறார். ஸ்தல புராணங்களைப் பார்த்தால் தெரியும். ராஜாக்கள் கட்டிய அநேக சிவாலயங்கள் இருக்கின்றன அல்லவா? ஒரு ராஜாவின் கொடூரமான நோயை ஈச்வரன் ஸௌஸ்தம் செய்தான், ஒரு ராஜா ராஜ்யத்தை இழந்து காட்டில் வஸித்தபோது அவன் இந்த லிங்கத்தைப் பூஜித்துத் தான் ஈச்வரன் அவனுக்கு ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்தான், அதற்காகவே அவர்கள் இந்த ஆலயத்திருப்பணி செய்தார்கள் என்று (ஸ்தல புராணங்களில்) இருக்கும்.

(இவற்றிலிருந்து) என்ன தெரிகிறதென்றால், ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரிடமிருந்து பல பேர் பலவிதமான வரங்கள் பெற்றிருக்கிறார்களென்றால் அவர்கள் அந்த மூவரையும் எல்லாம் செய்யக்கூடிய தெய்வ சக்தி நிரம்பியவர்கள் என்றுதான் பூஜித்திருக்கிறார்களேயொழிய, இவர் ஸ்ருஷ்டி மட்டும் செய்பவர், இவர் ஸ்திதிக்கு மட்டும் அதிகாரி, இவர் ஸம்ஹாரம் மட்டும் செய்பவர் என்று நினைத்து அவர்களை ஆராதிக்கவில்லை.

ஆனால் இந்த (குருர் - ப்ரஹ்மா) ச்லோகம் போகும் ரீதியிலிருந்தோ ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹார கர்த்தாக்களாக இவர்கள் இருப்பதற்காகவே, அல்லது அந்த அதிகாரத்தில் மாத்திரம் அவர்களை வைத்தே, அவர்களுடைய உருவமாயுள்ள குருவுக்குப் பூஜை செய்யவேண்டும், நமஸ்கரிக்க வேண்டும் என்று சொல்வதாகத் தெரிகிறது. 'இவர்தான் ப்ரஹ்மா, இவர்தான் விஷ்ணு, இவர்தான் மஹேச்வரன்' என்று சொல்லி, 'இவருக்கு நமஸ்காரம்—குரவே நம:'— என்று முடித்தால், 'அந்த மூன்று கார்யங்களைப் பண்ணுவதற்காகவே அவர்களுக்குச் செய்யவேண்டிய நமஸ்காரத்தை இவருக்குச் செய்' என்பதாகத்தானே அர்த்தம் கொடுக்கிறது? நமஸ்காரம் என்றால் உபாஸனை என்று அர்த்தம்.

Koviloor Digital Library

ஒருவரை பக்தியோடு உபாஸித்து ப்ரார்த்திப்பதற்கு நமஸ்காரத்தை அடையாளமாகச் சொல்லியிருக்கிறதென்று அர்த்தம்.

இங்கேதான், வேடிக்கையோ, வம்போ, வாதமோ, எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், வருகிறது.

ஸ்ருஷ்டிக்குத்தான் சாமி, ஸ்திதிக்குத்தான் சாமி, ஸம்ஹாரத்துக்குத்தான் சாமி என்று ஒருவரை வைத்துவிடும் போது அவரை பக்தி பண்ணி உபாஸிக்கவேண்டியதே இல்லை! நமக்கு ஸந்தோஷகரமான ஒன்றை ஒரு ஸ்வாமி செய்திருக்கிறார், செய்கிறார், அல்லது செய்வார் என்கிறபோது தான் அவரிடம் பக்தி உண்டாகி உபாஸிப்போம். ப்ரம்மா நம்மைப் படைத்தாரே என்று நாம் ஸந்தோஷமா பட முடியும்? அவரிடம் சண்டை வேண்டுமானால் பிடிக்கலாம் என்றுதான் தோன்றும். படைப்பதற்கு மேல் அவர் ஒன்றும் செய்யமுடியாது—அதாவது, ஸ்ருஷ்டிகர்த்தா என்றே அவரை வைக்கிறபோது. இனிமேல் நம்முடைய இந்த வாழ்க்கையில் அவர் செய்யக்கூடியது எதுவுமில்லை. இவரிடம் எதற்கு பக்தி வைக்கணும்? அதற்கு அடையாள மாக நமஸ்காரம் பண்ணணும்? ஆனதினால் 'குருதான் ப்ரஹ்மா, ஆகவே குரவே நம:' என்று முடிச்சுப் போட்டால் எடுபடாது. [சிரித்து] நாங்கள் நவீன கால ப்ரஜைகள். 'லாஜிக'லாக ஸரியாக வந்தால்தான் ஒப்புக் கொள்வோம்! ஆகையால் குரு ப்ரஹ்மாவாக இருப்பதற்காக அவருக்கு நமஸ்காரம் பண்ணமுடியாது!

'குருர் - விஷ்ணு:''—விஷ்ணு ஸமாசாரத்திற்கு அப்புறம் வருகிறேன்.

''குருர் - தேவோ மஹேச்வர:—தஸ்மை ஸ்ரீ குரவே நம:'' என்றால், இது ப்ரம்மா விஷயத்தை விடவும் ஒப்புக் கொள்ளவே முடியாது! ருத்ர மூர்த்தி சூலத்தைக் தூக்கிக் கொண்டுவந்து ஹதாஹதம் பண்ணுபவர். வேறே ஒன்றும்

Koviloor Digital Library

அவருக்குத் தெரியாது. அவருக்குத் தெரியுமோ தெரியாதோ, ச்லோகத்தில் அவரை ஸம்ஹார க்ருத்யத்துக்கு மட்டும் உரியவராகக் காட்டிக்கொடுக்கும்போது அப்படித்தான் வைத்திருக்கிறது. நம்மை ஸம்ஹாரம் செய்கிறவரிடம் பக்தியா உண்டாகும்? "ஸ்வாமி, என்னை ஸம்ஹாரம் பண்ணுங்கோ!" என்று வேண்டிக்கொள்ள யாராவது தயாராயிருப்பார்களா? ஜன்மா எடுத்து விட்டோமே என்று எத்தனைதான் வருத்தப்படுபவர்களாக இருந்தாலும், அதற்காக ப்ரம்மாவிடம் என்னதான் 'கர்ர் புர்ர்' என்று இருந்தாலும், அதே ஸமயத்தில் ஸம்ஹாரமாவதற்கு நாம் யாராவது ரெடியாக இருக்கிறோமா என்ன? நாம் பெரிய திட்டாக, வயிறெரிந்து சொல்வதே ஒருத்தர் சாகணும் என்று சபிப்பதுதான். இப்படிப்பட்ட சாபத்தைக் காரியமாகவே நடத்தி விடுகிறவனை அநுக்ரஹ மூர்த்தியாகக் கொண்டு எங்கேயாவது நமஸ்கரிக்க முடியுமா?

இன்னொன்றும் கவனிக்க வேண்டும். சிவன்—மஹேச்வரன், ருத்ரன், எதுவோ ஒரு பேர்; ஸம்ஹாரகர்த்தா என்பதுதான் பாயின்ட்—சிவன் ஸம்ஹாரம் செய்கிறார் என்னும்போது அவர் சாச்வதமாக ஜன்ம நிவ்ருத்தி கொடுக்கிறார் என்று அர்த்தமாகாது. முன்னேயே சொன்னேன்: ப்ரக்ருதி நியதியில் ஒரு சரீரம் ஜீர்ணமாகி மரணம் ஏற்பட்டாலும், கர்மாவைத் தீர்த்துக் கொள்வதற்காக இன்னொரு சரீரம் எடுத்துத்தான் ஆகணும். ருத்ரன் இந்த ஜன்மாவில் எடுத்த சரீரத்தைத்தான் நிவ்ருத்தி பண்ணுகிறானே தவிர, ஜன்மாவையே, கர்மாவையே நிவ்ருத்தி பண்ணிவிடவில்லை. நமக்குப் பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ, ஒரேயடியாக ஜன்ம நிவ்ருத்தி 'கம்பல்ஸரி'யாக கொடுக்கிறானென்றாலாவது, 'அப்பா! ஜனன - மரண சக்கரத்திலிருந்து தப்பணும் என்று என் அஞ்ஞானத்தில் எனக்காகத் தெரியாவிட்டாலும், நீ பிடிவாதமாக என்னை விடுவிக்கிறாயே!' என்று அவனை பக்தியோடு நமஸ்கரிக்கலாம். இது அப்படியும் இல்லை.

Koviloor Digital Library

ப்ரளயத்தின்போது அவன் நம்மை ஸம்ஹரித்துத் தன்னிடம் லயப்படுத்திக்கொண்டு, அடுத்த ஸ்ருஷ்டிவரை, அதாவது நீண்டகாலம், ஓய்வு தரத்தான் செய்கிறான். ஆனாலுங்கூட ப்ரளயத்தை நினைத்து பயப்படத்தான் நம்முடைய அஞ்ஞான நிலையில் தோன்றுகிறதே தவிர, அதற்காக வேண்டிக்கொண்டு அவனை நமஸ்காரம் பண்ணணு மென்று நிச்சயமாகத் தோன்றவில்லை.

நெஞ்சில் கை வைத்துக்கொண்டு சொன்னால், நாமிருக்கும் ஸ்திதியில் நம்மில் யாரும் சாவை விரும்பவில்லை. எனவே சாவைக் கொடுப்பவனாகவே ஒரு மூர்த்தி இருப்பதற்காக அவனை நாம் உபாஸிக்க வேண்டியதில்லை. ஆனபடியால், "குருர் - தேவோ மஹேச்வர: தஸ்மை ஸ்ரீ குரவே நம :" என்றால் [சிரித்து] அடியோடு தப்பு!

"குருர் - விஷ்ணு:" இங்கேதான் (இப்படிச் சொல்கிற போதுதான்) மேல் பார்வையில், பக்தியுடன் நமஸ்காரம் செய்யலாம் மாதிரித் தோன்றுகிறது. விஷ்ணுதான் நம்மைப் பரிபாலிப்பவர், காப்பாற்றுபவர் என்பதால் அவர் செய்கிற ரக்ஷணைக் கார்யம் ரொம்ப நல்லதாக, நம் மனஸுக்கு ரொம்பப் பிடித்ததாக இருக்கிறது. ஆகையால் அவரை உபாஸிக்க வேண்டியதுதான், குருவானவர் விஷ்ணுவாக இருப்பாரானால், "குருர் - விஷ்ணு: தஸ்மை ஸ்ரீ குரவே நம:" என்று அவருக்கு நிறைய நமஸ்காரம் பண்ணவேண்டியது தான் என்று தோன்றுகிறது. மேலோடு பார்க்கும்போது இப்படித் தோன்றுகிறது.

கொஞ்சம் ஆழ்ந்து பார்த்தால் அபிப்ராயம் மாறிப் போகிறது! விஷ்ணு பரிபாலனமூர்த்தி என்று பேர் வைத்துக் கொண்டிருப்பதிருக்கட்டும். நடைமுறையில், நம் வாழ்க்கையில், அப்படி ஆஹா என்று நாம் ஸந்தோஷப்படும்படி அவர் பரிபாலிப்பதாகத் தெரிகிறதோ? 'அவர் காப்பாற்றுகிறார், நமக்கென்ன குறை?' என்று யாருக்காவது அவர் செய்த தற்காகவும், செய்கிறதற்காகவும் நன்றியோடு நமஸ்காரம் செய்யவேண்டுமென்று தோன்றுகிறதோ? 'இவர்தானே

Koviloor Digital Library

பரிபாலன மூர்த்தி என்கிறார்கள்? அதனால் இனிமேலாவது இன்ன இன்ன ஸௌக்யங்களைக் கொடுக்கட்டும்' என்று இனிமேல் அவர் செய்யவேண்டியதற்காகத்தான் அவரை நமஸ்கரிப்போமேயொழிய இதுவரை செய்ததற்காகவோ, இப்போது செய்கிறதற்காகவோ மனம் நிறைந்து பண்ண மாட்டோம்! எல்லோருமே இப்படித்தான் இருக்கிறோம் என்று சொல்வதற்கில்லை—அப்படி நான் சொல்லியிருந்தால் ஸரியில்லை. ஆனால் மிகவும் பெரும்பாலானவர்கள் அப்படித் தான் இருக்கிறோம். 'எப்படியெல்லாம் நமக்கு அநுக்ரஹம் பண்ணியிருக்கிறான்?' என்று நிறைந்து இருக்கிறவர்கள் ரொம்பக் குறைச்சல். 'நம்மை இப்படி வெச்சிருக்கானே, அதைக் கொடுக்கலையே, இதைக் கொடுக்கலையே!' என்று மூக்கால் அழுகிறவர்கள்தான் மெஜாரிட்டி. 51%மெஜாரிட்டி இல்லை, 90—99% மெஜாரிட்டி! இப்போது நன்றாக வைத் திருக்கிறானென்று த்ருப்தியாயிருப்பவர்களில்கூட ரொம்பப் பேர் நாளைக்கும் அவனாக நன்றாக வைப்பான் என்று த்ருப்தி யாக இருந்துவிடமாட்டார்கள். எதிர்காலத் தேவைகள், குறைபாடுகள் எதையாவது வைத்துக்கொண்டுதான் இருப் பார்கள். இப்போது இங்கே மஹாவிஷ்ணு வந்து நின்று கொண்டு எல்லோரும் தங்களுக்கு என்னவாவது வேணு மானால் பெடிஷன் கொடுக்கலாம் என்று சொன்னால் நம்மில் ஒவ்வொருத்தரும் ஒரு பெரிய லிஸ்ட் வைத்திருப்போம்!

என்ன அர்த்தம்? பரிபாலன மூர்த்தி என்று பேர் வைத்துக்கொண்டிருந்தாலும் அவர் அந்தக் கார்யத்தை ஸரியாகப் பண்ணாததாகத்தான் நமக்கு உள்ளூர அபிப்ராயம் என்றே அர்த்தம்!

வாஸ்தவத்தில் அவர் பண்ணாமலில்லை. ப்ரம்மாவுக்குச் சொன்னதேதான் இவருக்கும். "நாம் கட்டிக்கொண்ட கர்ம மூட்டைக்காகத்தான் ப்ரஹ்மா நமக்கு ஜன்மா தருகிறாரே தவிர, அவராக நம்மைக் கஷ்டப் படுத்தவேண்டு மென்று அப்படிச் செய்யவில்லை. ஆனதினாலே, 'ஏனையா, ஜன்மா கொடுத்தீர்?' என்று அவரிடம் சண்டைக்குப்

Koviloor Digital Library

போவது விவேகமில்லை" என்று சொன்னேனல்லவா? அப்படியேதான் நமக்கு life-ல் இன்ன இன்னதான் மஹாவிஷ்ணு கொடுத்திருக்கிறார், இன்னதெல்லாம் கொடுக்கவில்லை, கொடுத்ததைவிட கொடுக்காததுதான் ரொம்ப ஜாஸ்தி—என்றால், இதற்குக் காரணம் நம் கர்மாவுக்கு இதுதான் நமக்கு ப்ராப்தி என்பதுதான். அவர் ஏதோ வேண்டுமென்றே கஷ்டப்படுத்துகிறார், கிராக்கி பண்ணுகிறாரென்று அர்த்தமேயில்லை. கர்மாவைப் பார்க்கிறார். அதை வைத்து இவ்வளவுதான் கொடுக்கணுமென்று கணக்குப் போட்டுக் கொடுக்கிறார்; அவரிஷ்டப்படி, மனம் போனபடி இல்லை. விவேகமுள்ளவர்கள் இப்படியே எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் நாம் அவிவேகிகள்தானே? விவேகம் வந்தவர்களாயிருந்தால் நமக்கு எதற்கு குரு? அது வருவதற்குத் தானே குரு என்று ஒருத்தர்கிட்டே போய் நிற்கிறோம்? இந்த நிலையில் விவேகிகளுக்கானதை நமக்குச் சொல்வதில் அர்த்தமில்லை. இப்படியிருக்கிறபோது, மஹாவிஷ்ணுவின் ரக்ஷிப்பு போதவில்லை, அவர் ஸரியாகப் பண்ணவில்லை என்று நமக்கு இருக்கிறபோது அவரை நமஸ்கரிப்பது, பக்தியோடு உபாஸிப்பது என்றால் எப்படி?

ஆனால், "சாக அடியுங்கோ, ஸ்வாமி!" என்று சிவனிடம் வேண்டிக்கொள்வதற்கு மனஸு வராது என்ற மாதிரியில்லாமல், "நன்னா ரக்ஷியுங்கோ, ஸ்வாமீ!" என்று விஷ்ணுவிடம் ப்ரார்த்தித்துக்கொள்ள இடமிருக்கிறதே—இதுவரை அவர் ரக்ஷித்து வருவது நமக்கு த்ருப்தியில்லை யென்றாலுங்கூட இனிமேலாவது நன்றாகச் செய்யும்படியாக அவரிடம் ப்ரார்த்தித்துக்கொள்ள இடமிருக்கிறதே—அதனால் (அவர் இனி பண்ண வேண்டியதற்காக) நமஸ்காரம் செய்யலாமே என்றால்......ரக்ஷணத்துக்குத்தான் அவர் இருக்கிறார், அந்த உத்யோகத்தை அவர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்கும்போது நாம்போய் அவரிடம் 'நன்னா ரக்ஷியுங்கோ!' என்றால், அவர் ட்யூட்டியை ஸரியாகச் செய்யாததாக நாம்

Koviloor Digital Library

குத்திக் காட்டுகிற மாதிரி ஆகாதோ? இப்படிக் கேட்டால் அவர் கோபித்துக்கொண்டு, "நீ சொல்லிக்கொடுத்துதான் நான் தெரிஞ்சுக்கணுமோ?" என்று, செய்வதையும் குறைத்துக் கொண்டுவிட்டால் என்ன ஆவது? இருந்தாலும், குத்திக்காட்டிக் குற்றம் சொல்கிறாற் போலில்லாமல் விநயமாக இம்மாதிரி விண்ணப்பம் பண்ணிக்கொள்ளலாமோ என்று பார்த்தால்......

ஸரி, நமஸ்காரம் செய்து அவரிடம் விண்ணப்பித்துக் கொள்கிறோம். அவர் என்ன சொல்வார்? யோசித்துப் பார்த்தால் அவர் என்ன சொல்வாரென்று ஊஹிக்க முடியும். "நானாக எதுவும் பண்ணுகிறதற்கில்லை. நாங்கள் மூன்று பேருமே எங்கள் இஷ்டப்படி எதுவும் பண்ணவில்லை. எங்களுக்கு அந்த அதிகாரம் கிடையாது. ஸர்வ சக்தனான ஒரு பரமாத்மா கொடுத்திருக்கும் வேலையை, எல்லை போட்டுக் கொடுத்திருக்கும் வேலையையே, நாங்கள் செய்கிறோம். உங்கள் கர்மாவைக் கொண்டே இன்ன மாதிரிப் பிறப்பைக் கொடுப்பது என்று பிரம்மா வைத்துக் கொண்டிருக்கிறார். இந்தப் பிறவியில், அதாவது பிறவி ஒவ்வொன்றிலும், உங்கள் கர்ம மூட்டையில் ஏதோ ஒரு அளவு நீங்கள் அநுபவிக்க வேண்டுமென்று பரமாத்மா நிர்ணயம் செய்திருக்கிறார். அந்த அளவு பார்த்தே உங்களுக்கு ஒவ்வொரு ஜன்மாவிலும் நான் ரக்ஷிப்புக் கொடுக்கிறேன். நிறைய ஸுக்ருதம் இருந்தால்—அது நீங்களே செய்ததுதான்—நிறைய ரக்ஷிப்புத் தருகிறேன். குறைவாக இருந்தால் குறைவாகத் தருகிறேன். நீங்கள் எத்தனை ரூபாய் வைத்திருக்கிறீர்களோ அதற்கான சரக்குத் தருகிறேன். கள்ள நோட்டு நீட்டினால் தண்டனை தருகிறேன். இப்படி பரமாத்மாவின் நிர்ணயப்படி ஒரு ஜன்மாவுக்கான அளவை நீங்கள் அநுபவித்தானவுடன் ருத்ரமூர்த்தி வியாதி, வக்கை என்று எதையோ அனுப்பி ஆயுளை முடித்துவிடுகிறார். ஆகக்கூடி, இனிமேலே உங்களுக்கு நல்ல ரக்ஷிப்புக் கிடைக்கணுமென்றால் அதற்கு விசை உங்கள் கிட்டேயேதான் இருக்கிறது.

Koviloor Digital Library

ஸத்கர்மா நிறையப் பண்ண ஆரம்பியுங்கள். அப்போது நல்ல ரக்ஷிப்பு கொடுக்கும்படியாக என்னைப் பரமாத்மா வைப்பார். ஆனால் அதுவுங்கூட நீங்கள் ஆசைப்படுகிற மாதிரி இன்றைக்கு ஸத்கர்மா செய்தால் நாளைக்கே அதன் ஸௌக்ய பலன் கிடைத்துவிடுமென்று நான் 'காரன்டி' பண்ணத் தயாரில்லை. என்றைக்கோ, எந்த ஜன்மத்திலோதான் பலன் என்று பரமாத்மா தீர்மானம் செய்துவிட்டால் நீங்கள் என்னிடம் சண்டைக்கு வந்து ப்ரயோஜனமில்லை'' என்று இப்படித்தான் மஹாவிஷ்ணு சொல்வார்.

இங்கே நன்றாக 'க்ளிய'ராகிவிட்டது, இவரையும் நமஸ்காரம் பண்ண வேண்டியதில்லை என்று. இவரை, அவரை, மூன்று பேரையுந்தான்! நடுவாந்தரத்திலே ஒன்று சொன்னாரோ இல்லையோ, 'உங்களுடைய ரூபாய் எவ்வளவோ அதற்கேற்ற சரக்குத்தான்' என்று. அதில் எல்லாம் முடிந்துபோய் விடுகிறது. ரூபாய்க்கு ஸரியாக சரக்கு தரும் வியாபாரியை யாராவது நமஸ்காரம் பண்ணு கிறோமா? [சிரிக்கிறார்.]

நாம் பண்ணுவதை வைத்து இப்படியிப்படிப் பலன் என்று முடிவெடுப்பவன் எவனோ ஒருத்தன். இந்த மூன்று பேரும் இல்லை. பரமாத்மா என்கிறவன். ஸர்வ சக்தனாக இருக்கிறவன். அவன் எடுத்த முடிவை இவர்களைக்கொண்டு அமல்படுத்துகிறான். இவர்கள் அவனிடமிருந்து பெற்ற ஸ்ருஷ்டி சக்தி, பரிபாலன சக்தி, ஸம்ஹார சக்தி ஆகியவற்றைக்கொண்டு தங்கள் ட்யூடியைச் செய்கிறார்கள். ட்யூடி செய்கிற ஆபீஸர்களிடம் நாம் போய் "இந்த ப்ரகாரம் பண்ணுங்கோ, அந்த ப்ரகாரம் பண்ணுங்கோ'' என்று கேட்டு என்ன ப்ரயோஜனம்? ஒரு பக்கம் இது நமக்குப் பயன் தராத வியர்த்தமான காரியமென்பதோடு, இன்னொரு பக்கம் ஆபீஸர்களிடம் போய்த் தப்பான சலுகை கேட்டு லஞ்சம் கொடுக்கிற மாதிரியும் ஆகிறது. ஏற்கெனவே பலதினுஸாக (கர்மா) பண்ணிவிட்டுப் பரமாத்மாவிடம் மாட்டிக் கொண்டு முழிப்பது போதாதென்று, "என் தீர்ப்பை மாற்றச்

Koviloor Digital Library

சொல்லி என் ப்ரிப்பந்திகளுக்கே லஞ்சம் கொடுக்கப் பார்க்கிறாயா?" என்று வேறே...[பயப்படுவது போல] வேண்டாண்டாப்பா. நமக்கு இந்த த்ரிமூர்த்தி நமஸ்காரம்! இவர்களுக்கு நமஸ்காரம் (பண்ணுவது) என்ற அபிப்ராயத்துக்கே ஒரு நமஸ்காரம்*! [சிரிக்கிறார்.]

ஆக ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ரர்களுக்கு, அவர்களாக ஏதோ செய்யக்கூடியவர்கள் என்னும்போதுதான், புராணாதிகளில் பல பேர் செய்திருப்பதுபோல நாமும் நமஸ்காரம் செய்து உபாஸிக்க இடமிருக்கிறதே தவிர, அவர்களுக்கு மேலே ஒரு பரமாத்மா ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்று திட்டவட்டமாக அதிகார எல்லை போட்டுக் கொடுத்து அவர்கள் அதன்படியே ஆபீஸ் பண்ணுகிறார்களென்று வைத்துப் பார்க்கும்போது இடமில்லை. இவர்களுக்கு நமஸ்காரமென்றால் அது மேலதிகாரியான பரமாத்மாவுக்கு அபசாரம் என்றாகி, அவன் அதற்காகவும் வேறு வைத்துத் தீட்டுவதாகத்தான் ஆகும்.

'இந்த மூன்று பேர் இப்படி மூன்று ஆபீஸ் பண்ணுவது மட்டுமில்லை, இதற்கான சக்தியைப் பரமாத்மாவிடமிருந்து பெற்றிருப்பது மட்டுமில்லை, இவர்களுக்குள்ளே உட்கார்ந்திருக்கும் பரமாத்மாவுடன் இவர்கள் அப்படியே ஒன்றிப்போய் அவனாகவே இருந்துகொண்டு ஸர்வசக்தனான அவனைப்போல எதையும் செய்யக்கூடியவர்கள்; கர்மாவை மன்னித்தும் மீறியும்கூடப் பரமாத்மா பண்ணுவதுபோல, அல்லது கர்மாப்படியே நடப்பதை நாம் அழாமல், மூஞ்சியைச் சுளிக்காமல் சாந்தமாக ஏற்றுக்கொள்ளும் பக்வத்தை அவன் தருவதுபோல இவர்களும் தந்துவிடுவார்கள்' என்று வைத்துக்கொள்ளும்போதுதான் இவர்களை நமஸ்கரித்து உபாஸிப்பதற்கு இடமிருக்கிறது.

---

* 'திக்குக்கு ஒரு நமஸ்காரம்' என்று ஒரு விஷயத்திற்கு முடிவாக முற்றுப்புள்ளி வைக்கும் அர்த்தத்தில் சொல்கிறார்.

Koviloor Digital Library

எந்த தெய்வத்தையுமே இப்படி முழுமுதற் தெய்வத்தின் ஒரு தோற்றமாகக்கொண்டு, ஆனாலும், 'குறிப்பாக இந்தத் தோற்றத்தில் இது இந்தக் காரியத்துக்கு அதிகாரம் வஹிக்கிறது. ஆனால் நாம் பூர்ணமாக மனஸை இதனிடம் கரைத்து வேண்டிக்கொண்டால் அதுவும் மனஸு கரைந்து, தான் பரமாத்மாவிலே கரைந்து, அந்தப் பரமாத்மாவினாலேயே நமக்கு நடக்கக் கூடிய எதையும் ஸாதித்துத் தந்துவிடும்' என்று உபாஸனை செய்வதுதான் முறை.

முழுமுதலாக விளங்கும் மூர்த்திகள்

இங்கே விஷ்ணு, ருத்ரர் ஆகிய இரண்டு பேருக்கும் ப்ரஹ்மாவுக்கும் ஒரு வித்யாஸம் சொல்வதுண்டு. விஷ்ணுவும் ருத்ரமூர்த்தியும் வெளிக்கார்யம் எப்படி வைத்துக் கொண்டிருந்தாலும்—ஒரு ஆய்ச்சியிடம் அடிவாங்கிக் கொண்டு, ஒரு பிட்டு வாணிச்சிக்குக் கூலிவேலை செய்துகொண்டு இருக்கிறபோதுகூட—உள்ளூரப் பரமாத்மாவோடு ஒன்று பட்டு ஸதாகாலமும் அந்த ஸர்வசக்தனாகவும், சக்தி விலாஸமெல்லாமும்கூட அடிபட்டுப் போன நிர்குண ப்ரஹ்ம வஸ்துவாகவும் தங்களைத் தெரிந்து கொண்டிருப்பவர்கள். அம்பாள், ஸாக்ஷாத் பராசக்தி, அவளும் இப்படித்தான். மஹாலக்ஷ்மி மஹாவிஷ்ணுவோடு கொஞ்சம்கூடப் பிரியாத பாவத்தில் கரைந்திருந்து தத்-த்வாரா (அதனடியாக) பரமாத்ம ஸ்வரூபத்தில் ஒன்று பட்டிருப்பவள். வைஷ்ணவர்கள் (அவளுடைய) ஸ்தானத்தை நன்றாக உயர்த்தி, அநுக்ரஹிக்குமாறு மஹாவிஷ்ணுவைத் தூண்டி விடும் சக்தியே அவள்தான் என்பார்கள். 'தாயார், தாயார்' என்று நம் மனஸை உருக்கும்படியாக இப்படி அபிப்ராயம் சொல்வார்கள். நம்முடைய ஆசார்யாளும் மஹாலக்ஷ்மியை ஸ்துதிக்கும்போது அவளையே கீர்தேவதை', அதாவது ஸரஸ்வதி என்றும், 'சசிசேகரவல்லபா' அதாவது சந்த்ரமௌளீச்வரனின் சக்தியான அம்பாள் என்றும் சொல்லியிருக்கிறார்.*

---

* 'கனகதாராஸ்தவம்'—10.

Koviloor Digital Library

பிள்ளையார், முருகன் ஆகியவர்களும் இப்படியேதான் (முறையே) விக்னஹர்த்தா, தேவஸேநாதிபதி என்று மட்டும் முடிந்து போகாமல் முழுமுதலாக நின்று கொண்டு அநுக்ரஹிக்கக் கூடியவர்கள். ஆஞ்ஜநேய மூர்த்தியும் ராம தாஸனாக இருந்து கொண்டே ஸர்வ சக்தராகப் பூஜிக்கப்படும் ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார். ப்ரஹ்மாவை இந்த லிஸ்டில் சேர்க்கவில்லை. ஏராளமான சாஸ்திரங்களை அலசிப் பார்த்து அப்பைய தீக்ஷிதர் அபிப்ராயம் பண்ணும்போது விஷ்ணுவை யும் சிவனையும் அம்பாளையும் 'ஈச்வரகோடி' என்ற பூர்ண ப்ரஹ்ம சக்தியாகச் சொல்லியிருப்பதுபோல் ப்ரஹ்மாவைச் சொல்லவில்லை. பேரிலே 'ப்ரஹ்மா' என்பது 'ப்ரஹ்மம்' என்கிறமாதிரி இருந்தாலும், ஸாரத்திலே அப்படிப் பூர்ண மாக இல்லை. சித்தே முந்திதானே பார்த்தோம், தனக்குச் சிரஞ்ஜீவித்வம் வேண்டும் என்று யாராவது வரம் கேட்டால் ப்ரஹ்மாவே, 'எனக்கு அப்படிக் கொடுக்க அதிகாரமில்லை, சக்தியில்லை' என்று சொல்லிவிடுவாரென்று?

ப்ரம்மாவுக்கு மட்டும் ஏன் விலக்கு?

ஒன்றைச் சொல்லப் புகுந்தால் இன்னொன்று அகப்படு கிறது! ப்ரம்மாவுக்குக் கோவில் இல்லாமலிருப்பதற்கு இப் போது இன்னொரு காரணம் கிடைக்கிறது.

ஒருத்தருக்குக் கோவிலெடுத்துக் கும்பிடவேண்டு மென்றால் ஒன்று, அவர் ஸகல சக்த பரமாத்மாவாக இருக்க வேண்டும். அல்லது அவர் அதிகாரம் பெற்றிருக்கும் விஷயம் நமக்கு வேண்டியதாக இருக்க வேண்டும். செல்வம் தருவது (லக்ஷ்மி), அறிவு தருவது [ஸரஸ்வதி), விக்னத்தை போக்கு வது (பிள்ளையார்), ஆரோக்யம் தருவது (தன்வந்தரி; ஸூரிய பகவானும்தான்), அல்லது நவக்ரஹங்கள் மாதிரி நமது ஜாதக பீடைகளைப் போக்குவது, ஐயனார் மாரியம்மன் மாதிரி துஷ்ட சக்திகளையும் நோய்கொடிகளையும் போக்கு வது—என்றிப்படி ஒருவர் அதிகாரம் பெற்றுள்ள விஷயம் நாம் வேண்டிப் பெறக்கூடிய ஒன்றை அருளுவதாக இருக்க

Koviloor Digital Library

வேண்டும். ஸ்ருஷ்டியதிகாரத்தில் இப்படியொன்றுமில்லை என்று முன்னேயே பார்த்தோம். இல்லாவிட்டால் (ஆலய வழிபாட்டுக்குரிய ஒரு மூர்த்தி) ஒரு பெரிய அடியாராகவோ, ஆசாரியராகவோவாவது இருக்கவேண்டும். ப்ரஹ்மா வானுல் இதில் எந்தக் கணக்கிலும் சேர்வதாகத் தெரிய வில்லையோல்லியோ?

அதனுல்தான் நவக்ரஹங்கள், ஆழ்வார்—நாயன்மார், மாரியம்மன்—இருளன்—வீரன் ஆகியவர்களுக்குக்கூடக் கோவில் இருந்தும் மும்மூர்த்தியரில் ஒருவரும், சதுர்முகங் கலால் சதுர்வேதங்களை ஸதா ஓதிக் கொண்டிருப்பவரு மான ஒரு பெரிய தெய்வத்திற்கு மட்டும் கோவில் இல்லை. பாவமாகத்தான் இருக்கிறது!

பரமாத்மாவாகவே தம்மை அவர் தெரிந்துகொள்ள வில்லை, அல்லது தெரிந்து கொண்டாலும் அப்படிக் காட்டிக் கொள்வதில்லை என்பதால் அவருக்குப் பூஜையில்லை; அதோடு ஒரு வீரன், இருளன் மாதிரியான க்ஷுத்ரதேவதை கொஞ்சங்கூடப் பரமாத்ம பாவமே இல்லாததாயிருந்தா லும், அதனுலும் நமக்கு அநுகூலமாக ஒரு கெட்டதை நிவ்ருத்தி செய்யமுடிகிறபோது, ஸ்ருஷ்டிகர்த்தா என்பவர் மட்டும் அப்படி எதுவும் செய்யமுடியாததால் அவருக்குப் பூஜை இல்லை என்று சொன்னுல் ஒரு கேள்வி கேட்கலாம். "எந்தவிதமான அநுக்ரஹ சக்தியுமில்லாத ஒரு மாதா, பிதா, பதி போன்றவர்களைப் பூஜித்தால் கூட, அவர்களுக்கு ஸ்வயமாக அருள் சக்தியோ ஞானமோ கொஞ்சமும் இல்லா விட்டாலும்கூட, அவர்களுக்குள்ளேயும் பரமாத்மா உட்கார்ந்திருப்பதால், பூஜிக்கிற நமக்கு அவர்கள் மூலமாக அந்தப் பரமாத்மாவே அநுக்ரஹித்துவிடும் என்று சொல்லி யிருக்கிறதல்லவா? நீங்களே கூடச் சொல்லியிருக்கிறீர்களே! 'நம்முடைய பக்தியும், சரணுகதியும்தான் முக்யம். அது யாரைக் குறித்து என்பது முக்யமில்லை. யாரைக் குறித்த தாணுலும் நம்முடைய பக்தி சுத்தமானதாக இருந்தால் ஸர்வாந்தர்யாமியான பரமாத்மா நமக்கு அநுக்ரஹம்

Koviloor Digital Library

பண்ணிவிடுவார்' என்று சொல்லியிருக்கிறீர்களே! அப்படியிருக்கும்போது, ஒரு க்ஷுத்ர தேவதையையோ, ஸாதாரண மநுஷப் பிறவிகளான ஒரு அப்பா—அம்மாவையோ கூட வழிபட்டுப் பரமாத்மாவின் அநுக்ரஹத்தைப் பெறமுடியும் என்னும்போது, ப்ரஹ்மா ஒருத்தரை மாத்திரம் இந்தக் கணக்கிலும் சேர்க்காமல் ஏன் ஒதுக்கி வைக்கணும்? அவர் என்ன பாவம் பண்ணினார்?'' என்று கேட்லாம்.

பாவமே பண்ணவில்லை. அவருக்கு ஒரு தனிஸ்தானம் கொடுத்து உசத்தித்தான் வைத்திருக்கிறது. ஸர்வ சக்த பரமாத்மா என்று வைக்காவிட்டாலும், அதற்கு அடுத்த படியில் அவருக்குத்தான் புராண, சாஸ்த்ரங்களில் இடம் கொடுத்திருக்கிறது. ஸூர்யன், சந்த்ரன் முதலான நவ க்ரஹங்களும் தேவராஜாவான இந்த்ரனும் கூட அவர் காலிலே நிறைய விழுந்திருப்பதாகப் பார்க்கிறோம். ஈச்வரகோடியைச் சேர்ந்த மூர்த்தியாக ப்ரஹ்மா இல்லாவிட்டாலும் அப்படிப்பட்ட மூர்த்திகளிடம் ஏனைய தேவதைகளைவிட நெருங்கிப் பழகுபவர். அதனால் ஏனைய தேவர்கள் ஸுலபத்தில் தாங்களாகப் பிடிக்க முடியாத சிவன், விஷ்ணு, அம்பாள் முதலியவர்களிடம் இவர் அவர்களை அழைத்துக்கொண்டு போய் 'ரெகமன்ட்' பண்ணுவார். அதனால்தான் அவர்கள் இவர் காலில் வந்து விழுவது. தகப்பனார், ஈச்வர கோடியைச் சேர்ந்தவர்—அப்படிப்பட்ட விஷ்ணுவே அஸல் மநுஷன் மாதிரி வேஷம் போடுவது என்று தீர்மானித்துக் கொண்டு ராமாவதாரம் பண்ணிய காலத்தில் (ராவணவதமாகி, ஸீதை அக்னி ப்ரவேசம் செய்யும் கட்டத்தில்), "நீ வெறும் மநுஷ்யனா? ஸாக்ஷாத் நாராயணனல்லவா நீ? இந்த ஸீதை மஹாலக்ஷ்மியல்லவா?'' என்று ஆகாசத்திலே வந்து ஞாபகப் படுத்தியது ப்ரஹ்மாதான். அவருக்கு எவ்வளவு சக்தி என்பதற்கு, இன்றைக்கும் ஒரு விஷயத்தைத் தலை தூக்க விடாமல் முடித்துப்போடும்போது "ப்ரஹ்மாஸ்திரம் போட்டாச்சு'' என்று சொல்வதே அத்தாட்சி.

Koviloor Digital Library

இப்படியிருந்தாலும் ஒரு 'பெக்யூலியர் பொஸிஷ'னில் (தமக்கே உரிய ஒரு விசித்ரமான நிலையில்) அவர் இருப்பதால் தான் அவருக்கு மட்டும் கோயில் இல்லாமல் வைக்கும்படி ஆகியிருப்பதாகத் தோன்றுகிறது.

அவர் ஏதோ பாவம் பண்ணினார், 'பெக்யூலியர் பொஸிஷ'னில் இருக்கிறார் என்று சொல்வதைவிட, நாம் தான் ஏதோ பாவம் பண்ணி, நம்முடைய மனஸின் ஸ்வபாவம் ஒரு 'பெக்யூலியர் பொஸிஷ'னில் இருப்பதால் நம்மால் அவரைக் கோவிலில் வைத்து வழிபட முடியவில்லை என்று சொல்லத் தோன்றுகிறது.

பரமாத்மா எவருக்குள்ளேயும் இருந்துகொண்டு, அந்த ஒருவரிடம் நாம் பக்தி பண்ணினால் அநுக்ரஹித்து விடுவாரென்றபடி ப்ரஹ்மாவுக்குள்ளேயும் இருந்துகொண்டு பண்ணத்தான் செய்வார். அதில் ஸந்தேஹமேயில்லை. ஆனால், கஷ்டம் என்னவென்றால் நம்மால் ப்ரஹ்மாவை பக்தி பண்ண முடியாமலிருப்பதான்! நாம் மட்டும் ப்ரஹ்மாவை வழிபட்டு விட்டோமோ, நிச்சயமாக அவர் மூலமும் ஸர்வாந்தர்யாமியான பரமாத்மாவினால் நமக்கு வேண்டியது அநுக்ரஹிக்கப்பட்டுவிடும். ஆனால் அப்படி வழிபடவிடாமல் நம் மனஸின் இயற்கை செய்கிறது. நம் மனஸினால் சிவன், விஷ்ணு, தேவி, முருகன் போன்றவர்களைப் பரமாத்மாவே என்று வழிபட முடிவதுபோல இவரைச் செய்ய முடியவில்லை. எதனாலோ இவரை அப்படி முழுமுதற் தெய்வமாக வழிபடும் நடைமுறை இல்லாமலே இருந்திருப்பதால் இவருக்குப் பரமாத்ம ஸ்தானம் கொடுத்துப் பார்ப்பதற்கு நம் மனஸினால் முடியவில்லை. ஆசார்யாள் ஷண்மதம் என்று ஸ்தாபித்த காலத்திலேயே அவற்றில் விஷ்ணுமதம், சிவமதம் ஆகியவற்றோடு ப்ரஹ்ம மதம் என்று ஸ்தாபிக்கக் காணோமே! (ஷண்மதங்களில் ஒன்றாக) ஸௌர்ய மதத்தைக் கூட அவர் ஸ்தாபித்திருந்தும் த்ரிமூர்த்திகளில் ஒருவரான இவர் பெயரில் ஒன்று ஸ்தாபிக்கத்தானே இல்லை? இப்படி

Koviloor Digital Library

நெடுங்காலமாக இருந்து வந்திருப்பதால் இப்போது நம்மாலும் இவரை முழுமுதலாக பாவிக்க முடியவில்லை.

ஒரு குறிப்பிட்ட அதிகாரம் மாத்திரம் கொண்ட தேவதையைக்கூட நாம் வழிபட ஆரம்பித்துவிட்டால், அப்புறம் அதனிடமே ப்ரியம் உண்டாகி, அதுவே நம் இஷ்ட தேவதையாகிவிட, அதன் பிற்பாடு அதுவே நம்மைப் பொறுத்தமட்டில் நமக்கு ஸகலவித அநுக்ரஹமும் செய்யு மென்ற அநன்ய பக்தி ஏற்பட்டு அதை முழுமுதலாகப் பூஜிக்க முடிகிறது. ஆனால் இவர் விஷயமாகவோ, முதலுக்கே மோசமாக, 'ஜன்மா தருவது' என்பதான இவரது அதிகாரமே நமக்கு இஷ்டமில்லாத விஷயமாகிவிடுவதால், இவரை வழிபடவேண்டுமென்ற எண்ணம் ஆரம்பத்திலேயே நமக்குத் தோன்றுவதில்லை.

யாராயிருந்தாலும் அவர்மூலம் பரமாத்மா அருள்வார் என்றாலும், நாம் பல காரணங்களுக்காக ப்ரியப்பட்டு வழிபடக் கூடியவர்களாக இன்னும் எத்தனையோ தேவதை கள் இருக்கும்போது, அப்படி நம் ப்ரியத்தை விசேஷமாக ஸம்பாதிக்க முடியாத ஒருவரிடம்—அவர் தாமே பரமாத்ம நிலையிலிருந்துகொண்டு அநுக்ரஹிப்பாரென்று நமக்குத் தோன்றாதபோதிலும், அவரிடம் நமக்காக இயற்கையில் ஒரு விசேஷ பக்தியும் சுரக்காமலிருந்தபோதிலும், அப்படிப்பட்ட ஒருவரிடம்—போய் இவர் மூலமும்தான் பரமாத்மா அநுக்ரஹிக்கட்டுமே என்று வழிபடுவதென்றால் அது ரொம்ப செயற்கையாகவும், வலிந்து மேற்கொண்ட ஜீவனில்லாத கார்யமாகவும்தான் இருக்கும். அதனால் அப்படிப் பண்ண நம்மில் எவருக்கும் தோன்றுவதில்லை.

ஏதாவது ஒரு காரணத்துக்காக முதலில் ஒருவரிடம் இஷ்டப்பட்டுப் போய்விட்டால் அப்புறம்தான் அவரிடம் பக்தியைப் பெருக்கிக்கொண்டு போகமுடிகிறது. முதலுக்கே மோசமென்றால் ஒன்றும் பண்ணிக்கொள்ளுவதற்கில்லை.

மனவின் ஸ்வபாவத்தில் இன்னொன்று : அப்பா, அம்மா குரு, இன்னும் யாரோ மஹான், இந்த நாளில் 'தலைவர்,

Koviloor Digital Library

'தலைவர்' எனப்படுகிறவர்—இப்படி ஒருத்தர் ப்ரத்யக்ஷமாகத் தெரிகிறபோது, நமக்கு அவரிடம் ஏற்படுகிற பிடிமானத்தினால் அவரையே பரமாத்மாவைப்போல பக்தி பண்ணி சரணாகதி செய்யத்தோன்றுகிறது. ப்ரத்யக்ஷமாகத் தெரியாத ஒரு தேவதையிடம், அது பரமாத்மாதான் என்று நமக்காகத் தோன்றாதபோது, இப்படி ஒரு குருவிடமோ, தலைவரிடமோ, பெற்றோர் போன்றவரிடமோ நாம் பரமாத்ம பாவத்தை ஏற்றிவைத்துப் பார்க்கிறமாதிரிப் பண்ணமுடிவதில்லை. 'ஏற்றி வைத்து' என்பதுகூட ஸரியில்லை. அப்படிச் சொன்னால் புத்தி பூர்வமாகச் செய்வதாகத் தோன்றுகிறது. ஆனால் இப்படி புத்தி வேலையாயில்லாமல், நமக்கு ஒரு தலைவரிடம் ரொம்பவும் ப்ரியம், அல்லது குருவிடம் மரியாதை, வேறே ஒருவரிடம் ஒரே 'அட்டாச்மென்ட்' என்றால், உடனே தன்னால் 'இவர்தான் நமக்கு ஸகலமும்; இவருக்கே நம் வாழ்க்கை அர்ப்பணம்' என்ற தீர்மானம் ஏற்பட்டுவிடுகிறது.

'எந்த மூர்த்தியின் மூலமும் பரமாத்மாவே அநுக்ரஹிக்க முடியும்' என்று புத்தி பூர்வமாக நமக்குத் தெரிந்தாலுங்கூட, மனஸுக்குப் பிடிமானமில்லாத ஒரு மூர்த்தியிடம் இப்படி ஒரு காரணத்தை ஏற்றிவைத்து பக்தி பண்ணுவதென்பது நம் மனஸின் ஸ்வபாவத்துக்கு ஒத்து வரவில்லை.

இப்போது, ஒரு கோவிலில் ப்ரம்மாவுக்கும் ஸந்நிதி இருப்பதாக வைத்துக்கொண்டு பார்ப்போம்.

(கோவிலில் ஸந்நிதிகள் கொண்டுள்ள) சிவலிங்கம், அம்பாள், பெருமாள், தாயார் ஆகியவர்கள். ஸர்வ சக்தர்கள் என்று தெரிகிறது. அதனால் மனஸார நமஸ்காரம் பண்ணமுடிகிறது.

நவக்ரஹங்கள், அடியார்கள் முதலானவர்கள்—அப்படியில்லை என்று தெரிகிறது. ஆனாலும் நமக்குப் பிடித்தமானதை அநுக்ரஹிக்கக்கூடிய சக்தி உள்ளவர்கள் என்றும் தெரிகிறது. ஆகையால் நமஸ்காரம் பண்ணுகிறோம்.

Koviloor Digital Library

ஸர்வ சக்தி பொருந்திய மூர்த்தி, அல்லது ஏதோ ஒரு விதமான சக்தி மட்டும் பொருந்திய மூர்த்தி என்று இரண்டு விதமாகத்தான் நம்மால்—அதாவது average பக்தர்களால்—ஒன்றிடம் பக்தி வைக்க முடிகிறது. ஸர்வ சக்தி இல்லாத மூர்த்தியின் மூலமும் ஸர்வ சக்தி வாய்ந்த பரமாத்மா அநுக்ரஹம் பண்ண முடியும் என்ற எண்ணத்தோடு இதை அதுவாகப் பார்ப்பது நமக்கு அவ்வளவாக முடிவதில்லை. சண்டிகேச்வரரையோ விஷ்வக்ஸேனரையோ 'மூலமான பரமாத்மா இவர்மூலம் அருள் செய்யட்டும்' என்று நினைத்து நம்மால் வேண்டிக்கொள்ள முடிகிறதா? ஸர்வ சக்தி, கிஞ்சித் (சிறிதளவு) சக்தி என்று தெளிவாக இரண்டு பிரித்துக் கொண்டு விடுகிறோம்.

இதற்கு வித்யாஸமாக ஒரே ஒரு இடத்தில் மட்டும் செய்கிறோம். ஆசார்ய புருஷர்களின் பிம்பங்களைப் பார்த்தால், 'நம்மைப் பொறுத்தமட்டில் நமக்கு ஈச்வர கோடியாகவே இருந்து அநுக்ரஹிக்கக் கூடியவர்கள்; பரமாத்மா பல ரூபங்களில் குறிப்பாக இப்படி நம்மிடம் ஸுலபத்தில் வருவான்' என்று தெரிகிறது. அவர்களை நமஸ்கரிக்கிறோம்.

அதாவது, ஈச்வரகோடி என்று தெளிவாக ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள், அப்படியில்லை என்று தெளிவாக ஒரு பிரிவினர், நம்மைப் பொறுத்தமட்டில் அப்படியிருக்கிறவர்கள் என்று ஒரு பிரிவினர்—இருப்பதாகப் பார்க்கிறோம். இப்படி மூன்று பிரிவுகள் செய்து நமஸ்கரிக்கிறோம்.

ப்ரஹ்மாவின் ஸந்நிதி இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் ஈச்வர கோடியில் இல்லை. அதோடு த்ரிமூர்த்திகளில் ஒருவரான ஸ்ருஷ்டி கர்த்தாவாக அவரை நினைப்பதே நம் மனஸில் வேரோடிப் போயிருக்கிறது. புராண காலங்களில் அவரை முதலில் பிடித்து அவர் மூலமாக ஈச்வர கோடிகளைப் பிடிக்கலாம் என்ற அபிப்ராயம் இருந்திருந்தாலும், அப்புறம் பஹுகாலமாக, லோகத்தில் கலிபாதை ஜாஸ்தியாகி அதனால் ஜன்மா என்பதே ரொம்ப வெறுத்துக்கொள்ளவேண்டி ஆனதினாலோ, அல்லது வேறே

Koviloor Digital Library

காரணத்தினாலோ ப்ரஹ்மாவிடம் பக்தி குறைந்து, எனவே அவரைக் கொண்டு ஈச்வர கோடியைப் பிடிப்பதென்பது மறைந்துபோயிருப்பது வாஸ்தவம். ஆகையால் அவரையே முழுமுதலாக நினைக்க முடியாததோடு, அவர் மூலம் முழுமுதலிடம் போகலாமென்ற அபிப்ராயமும் நமக்கு இல்லை. ஆசாரிய புருஷர்களைப் போல நம்மைப் பொறுத்த மட்டில் முழுமுதல் தெய்வமே இவராக இருந்து அநுக்ரஹிக்கும் என்று நினைக்கவும் தோன்றவில்லை; அதற்கு விசேஷமாக basis (அடிப்படை) இல்லை.

அப்புறம், கோவிலில் ஆழ்வார், நாயன்மார் போன்ற பக்தர்களைப் பார்க்கும்போது அவர்களுடைய பக்தியின் உயர்வுக்காக அவர்களை நமஸ்கரிக்கத் தோன்றுகிறது. ப்ரஹ்மாவானால் இப்படி பக்தர் என்று விசேஷமாகச் சிறப்பிக்கப்படும் அடியார் கோஷ்டியிலும் சேரவில்லை!

மற்ற கிஞ்சித்-சக்தி மூர்த்திகளை (ஸ்வல்ப சக்தி படைத்த தேவதைகளை) அவரவருக்குள்ள சக்திக்காக நமஸ்கரிப்பது போல இவருக்கும் பண்ணிவிட்டுப் போகலாமேயென்றால், இவருடைய சக்தி என்ன? ஸ்ருஷ்டி செய்வது. அதாவது நமக்கு ஜன்மாவைத் தந்து, "தலையெழுத்து, கர்மம்" என்று தலையில் அடித்துக்கொள்கிறோமே, அதை—பழைய ஸ்டாக்கிலிருந்து இந்த ஜன்மாவில் அநுபவிக்கவேண்டியது இவ்வளவு என்பதை—எழுதி விடுவது. அதோடு அவர் வேலை முடிந்தது. அதற்கப்புறம் அவர் நமக்குச் செய்வது, செய்யக்கூடியது எதுவுமேயில்லை. ஒவ்வொரு சாஸ்த்ரத்திலும், ஸயன்ஸிலும் "விதிகள்" என்று பலவற்றைச் சொல்கிறோம். அவை மாற்றமுடியாத நியதிகள் தானே? ரூல்கள்தானே? மாற்றமுடியாததாக நம் தலையில் "விதியை" எழுதும் ப்ரம்மாவுக்கே "விதி" என்று பேர் இருப்பதால் அவரும் ஸ்வதந்திரமாக நமக்கு எந்த அநுக்ரஹமும் செய்ய முடியாத ஒரு ரூல் மாதிரிதானிருப்பதாக தோன்றுகிறது. ஆகையினால் அவரிடம் பக்தி பொங்கிக்கொண்டு வரும்படி எதுவுமே நமக்கு இல்லை.

Koviloor Digital Library

கிஞ்சித் சக்தியுள்ளவரானாலும் நம்மைக் காட்டிலும் எவ்வளவோ பெரிய சக்தர்தானே, அதற்காக ஒரு நமஸ்காரம் பண்ணிவிடலாமே என்றால், இங்கேதான் அவர் மற்ற எல்லாருக்கும் (எல்லா தேவர்களுக்கும்) வித்யாஸமாக, 'பெக்யூலிய'ராக இருக்கிறார்.

அது என்ன?

இவரொருவர் மாத்திரம் ஈச்வர கோடியாக இல்லாமலே, அப்படியிருக்கும் சிவ - விஷ்ணுக்களுக்கு ஸமதை மாதிரியும் த்ரிமூர்த்திகளில் இருக்கிறார்! சிவம் என்கிற பேரில் ஸர்வ சக்தராக இருப்பவர் கிஞ்சித் சக்தரான ஸம்ஹார ருத்ர மூர்த்தியாகவும், அதே போல ஸர்வ சக்தி வாய்ந்த விஷ்ணு அந்தப் பேரிலேயே கிஞ்சித் சக்தரான பரிபாலன மூர்த்தியாகவும் இருக்கிறபோது, ஸர்வ சக்தராக நாம் தெரிந்துகொள்ளாத ப்ரஹ்மாவும் ஸ்ருஷ்டி கர்த்தாவாக அவர்களோடு மூன்றாமவராக, அவர்களோடு ஸமஸ்தானம் பெற்றவராகக் காணப்படுகிறார்.

ப்ரம்மாவை ஸ்ருஷ்டிப்பதற்கு அதிகமாக எந்த சக்தியும் பெற்றவராகவோ, நமக்காகப் பரமாத்மாவிடம் ரெகமன்ட் செய்யக் கூடியவராகவோ பார்க்கிற பார்வை நமக்கில்லை. பரமாத்மாவின் கட்டளைப்படி, நம் கர்மப்படி ஜன்மா தருபவர் என்பதோடு அவரை முடித்துவிடுகிறோம். அதே ஸமயத்தில் விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் விஷயத்தில் எப்படியிருக்கிறது? விஷ்ணு என்று நினைத்த மாத்திரத்தில் ஸாக்ஷாத் பரமாத்மா, ஸர்வசக்தி வாய்ந்தவரென்றுதான் தோன்றுகிறதேயொழிய, பரமாத்மாவின் அதிகாரிகளில் ஒருவராக நம்முடைய கர்மாப்படி ஜீவயாத்திரையில் கணக்குத் தீர்க்கும் பரிபாலகர் என்று சின்னதாகவா நினைக்கிறோம்? அப்படியே, சிவன் என்றால் பரம்பொருள், எல்லாம் வல்லவர். எல்லாமும் தரவ ல்லவரென்றுதான் தோன்றுகிறதேயொழிய சாவைத் தருபவரென்றா தோன்றுகிறது? இப்படித் தோன்றினால் அவருடைய கோவிலுக்குப் போகவே மாட்டோம்!

Koviloor Digital Library

த்ரிமூர்த்திகளில் பரிபாலனமும், ஸம்ஹாரமும் செய்பவர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் ஸகலமும் செய்யவல்லவர்கள் என்பதையே நினைப்பூட்டும் சிவன், விஷ்ணு என்பவர்களோடு, த்ரிமூர்த்திகளில் ஸ்ருஷ்டிப்பவராக மட்டுமே நம்மால் நினைக்க முடியும் ப்ரஹ்மாவைச் சேர்த்தால் நம்முடைய average மனநிலையில் குழறுபடியாகிறது. இவர் எங்கே அவர்களுக்கு நடுவிலே போய் ஸமதையாய் நின்றார் என்று தோன்றுகிறது. இப்போது தோன்றுகிறதோ இல்லையோ, ஸ்தூலமாக அவருக்கும் கோவிலில் முக்யமான இடம் கொடுத்திருந்தால் அவரைப் பார்க்கிறபோது ஆண்டவனாகவோ, அடியாராகவோ, ஆசார்யராகவோ எப்படியும் வைத்துப் பார்க்க முடியாத அவரைப் பற்றி இப்படி வேறு, 'ஈச்வர கோடிகளோடு இவர் எப்படி ஸமதை?' என்ற கேள்வியும் வரும்—வரலாம்—என்றுதான் அவருக்குக் கோவிலில்லாமல் வைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. இப்படியும் ஒரு காரணம் இருக்கலாமோ என்று தோன்றியதைச் சொன்னேன்.

நம்மால் முழு முதல் தெய்வமாக மதிக்கப்படும் சிவ-விஷ்ணுக்களுக்கு ஸமதை மாதிரி இவர் எப்படி இருக்கலாம் என்று கேள்வி வந்துவிட்டால், அப்புறம் நம்மைவிட அவர் எப்படியும் பெரிய சக்திமான்தானே என்ற அளவில் அவரிடம் மரியாதை பாராட்டுவதில்கூட ஒரு 'ரிஸர்வேஷன்' வந்துவிடும். இதற்கு இடமே கொடுக்கவேண்டாமென்றுதான் அவருக்குக் கோவிலில் இடமில்லை என்று வைத்திருப்பார்கள் போலிருக்கிறது என்று தோன்றியதைச் சொன்னேன்.

இதர தேவதைகள் அநேகரைவிட ப்ரஹ்மா குறைந்து போய்விடவில்லைதான். ஆனால் நாம் அவரிடம் நிறைந்த பக்தி செலுத்த முடியாதவர்களாக இருக்கிறோமே! கோவில் என்று ஒன்று அவருக்குக் கட்டி வைத்துவிட்டால் ஜனங்களுக்குப் போகத் தோன்றும். அதற்காகத்தானே கோவில் கட்டுவதே? ஆனால் போய் அவரை தர்சனம் செய்தால் அவரிடம்

Koviloor Digital Library

பொங்கிக்கொண்டு ப்ரேமை, பக்தி வருவதாக இருக்காது. (யாருக்காவது ப்ரஹ்மாவிடம் பக்தி என்று கேள்விப்படு கிறோமோ?) விசேஷமாக பக்தி வராவிட்டால் போகிறது; சித்ரகுப்தன் மாதிரியானவர்களிடம் மட்டும் பெரிசாக பக்தி வந்துவிடுகிறதா என்ன—என்றால் அங்கேயெல்லாம் கேள்வி யும் வருவதில்லையோல்லியோ? அதனால் நம்மைவிட நிச்சயம் பெரியவரென்று ஒரு நமஸ்காரம் செய்துவிட முடிகிறது. இவரிடம் மட்டும் கேள்வி, சிவ—விஷ்ணுக்களோடு இவருக்கு எப்படி ஸமஸ்தானம் என்று. அவர் அப்படி ஸம ஸ்தானம் கொண்டாடாமலே இருக்கலாம். அவரைக் குற்றம் சொல்லவேண்டாம். ஆனால் 'ப்ரம்மா—விஷ்ணு—சிவன் என்று த்ரிமூர்த்திகள்' என்று கேட்டுக் கேட்டு நமக்கு அப்படிப்பட்ட அபிப்ராயம் ஆழமாக ஏற்பட்டிருக்கிறதே! அதனால் கேள்வி புறப்படத்தான் செய்யும். கேள்வி வருகிற இடத்தில் பக்தி எப்படி இருக்கும்? விசேஷ பக்தி என்றில்லை, ஸாதாரணமான ஒரு மரியாதை உணர்ச்சிகூட எப்படி இருக்கும்? அப்போது பண்ணும் நமஸ்காரம் எப்படி genuine-ஆக இருக்கும்? பண்ணுகிற அநேக தகிடுதத்தங் களுக்குப் பரிஹாரம் தேடிக் கொள்வதற்குத்தான் கோவில். கோவிலுக்குப் போயே மனப்பூர்வமாயில்லாமல் ஒப்புக்கு நமஸ்காரம் செய்வதென்றால் அது ரொம்பவும் தோஷம் தானே? இப்படி வேண்டாம் என்றுதான் ப்ரஹ்மாவுக்குக் கோவிலில்லாமல் விட்டிருக்கலாம். அவருடைய குறை பாடில்லை, காரணம். நம் குறைபாடுதான் (காரணம்). அவருடைய சக்தி இப்படி என்று நம்மால் கணித்துக் கொள்ளமுடியாமல், நாம் பக்தி வைக்கக்கூடிய மூன்று பிரிவில் எதிலும் அவரை வைக்கமுடியாமல், 'கிஞ்சித் சக்தர் என்ற பிரிவில் வைக்கலாமே!' என்றால், 'பின்னே பூர்ண சக்தர்களோடு ஸமம் மாதிரி இருக்கிறாரே!' என்று கேள்வி கேட்டுக்கொண்டு நாம் இருப்பதால், பொய் நமஸ்காரம் பண்ணும் தோஷம் நமக்குச் சேர்ந்துவிட வேண்டாமென்ற கருணையிலேயே அவருக்குக் கோவில் இல்லாமல் வைத்திருக் கிறார்கள். இப்படியும் ஒரு காரணம் தோன்றுகிறது.

Koviloor Digital Library

ப்ரம்மாவை உள்ளடக்கி த்ரிமூர்த்தியர் ஏற்பட்ட காரணம்

பூர்ண சக்தர்களான சிவ - விஷ்ணுக்களுடன் ப்ரஹ்மாவும் சேர்ந்து த்ரிமூர்த்திகள் என்று இருப்பதற்குக் காரணமே வேறே. (அது) என்னவென்றால்......

பரப்ரஹ்மம் என்றும் பரமாத்மா என்றும் நாம் சொல்கிற ஏக வஸ்துவானது மாயையோடு கூடி லோகலீலை செய்வதற்கும், மாயையிலிருந்து ஜீவனை விடுவித்து ஞான மோக்ஷம் தருவதற்கும் தனித்தனி ரூபங்கள் எடுத்துக் கொள்வதென்று ஸங்கல்பம் பண்ணிற்று. ரூபமும் கார்யமுமில்லாமல் ஏக சைதன்யமாக இருக்கிற பரமாத்மா ரூபம் எடுத்துக்கொள்வது, கார்யம் செய்வது என்று வந்தால் உடனே பல தினுஸாக விநோதங்கள் பண்ணிப் பார்க்க ஆரம்பித்துவிடுவார். அதன்படி இப்போது மாயா ஜகத்துக்காகவும் ஞான மோக்ஷத்திற்காகவும் ரூபங்கள் எடுப்பது என்று உத்தேசம் பண்ணும்போதே இந்த ஒவ்வொன்றுக்கும் புருஷ ரூபமாகவும், ஸ்த்ரீ ரூபமாகவும் இரண்டிரண்டு ரூபங்கள் இருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார். அதன்படியே மஹாவிஷ்ணுவும் அம்பாளும் மாயலீலைக்கு தெய்வங்களாகத் தோன்றினார்கள். இருவர் கார்யமும் ஒன்றேதான். ரூபத்திலும் இரண்டு பேரும் நீலமேக ச்யாமளமானவர்கள். இப்படி ஒரே மாதிரி ரூபத்தோடும், குணத்தோடும் சேர்ந்து பிறந்ததால் அவர்கள் ஸஹோதர ஸஹோதரியாவார்கள். இதே போலப் பரமசிவனும் ஸரஸ்வதியும் மாயையிலிருந்து விடுவிக்கும் ஞானத்துக்கு தெய்வமாக, சேர்ந்து தோன்றிய ஸஹோதர ஸஹோதரி ஆவார்கள். இரண்டு பேரும் வெள்ளைவெளேரென்று இருப்பவர்கள்.

இப்படித் தோன்றிய பிறகு பரமாத்மாவுக்கு, 'இந்த மாதிரி ஒரேயடியாகப் பிரித்து மாயைக்கு ஒரு ஸஹோதர ஜோடி, ஞானத்திற்கு ஒரு ஸஹோதர ஜோடி என்று வைத்து

Koviloor Digital Library

விட்டால் ஒரு ஜோடிக்கு இன்னொரு ஜோடி முழுக்க பேதகம் என்ற மாதிரி ஆகிவிடும். அதோடு ஒன்று ஞானத்திற்கு மட்டும்தான், இன்னொன்று மாயைக்கு மட்டும்தான் என்றால் இரண்டுமே பூர்ண ப்ரஹ்ம சக்தி இல்லை என்றும் ஆகிவிடும். இப்படி ஆகாமல், இரண்டு ஜோடிக்குமே இந்தக் கார்யம் தான் முடியும் என்று குறுக்காமல் அவை பூர்ண சக்தியோடு இருக்கட்டும்; எந்த விதமான அநுக்ரஹத்தையும் பண்ணக் கூடியவையாக அவை இருக்கட்டும்; ஆனாலும் முக்யமாக ஒன்று மாயைக்கும் மற்றது ஞானத்திற்கும் தெய்வமாக இருக்கட்டும்' என்று நினைத்தார்.

பல தினுஸான வித்யாஸங்கள் காட்டி விளையாடுவதே அவர் வழக்கமல்லவா? அதன்படி இப்போதும் கொஞ்சம் பண்ணினாரென்று வைத்துக்கொள்ளலாம். அதாவது விஷ்ணு, அம்பாள், சிவன் ஆகிய மூன்று பேர் மட்டும் பூர்ண ப்ரஹ்ம சக்தியோடு ஸகலவித அநுக்ரஹங்களும் செய்யக் கூடியவர்களாக இருந்துகொண்டே முக்யமாக ஒவ்வொரு கார்யத்தைப் பண்ணுவதென்றும், ஸரஸ்வதி மோக்ஷத்துக்கான ஞானத்தை அளிப்பது மாத்திரமில்லாமல் எல்லாவித மான கலைகளுக்கும் சாஸ்த்ரங்களுக்கும் தெய்வமாக இருக்கட்டுமென்றும் வைத்தார்.

இன்னொன்றும் நினைத்தார். 'அண்ணா-தங்கை ஜோடிகள் என்று தனித்தனியாகப் பிரித்து வைத்து முடித்துவிடாமல், அந்த ஜோடிகளுக்கு ஒன்றோடொன்று உறவு ஏற்படுத்திவிட வேண்டும். இந்த தெய்வங்களையெல்லாம் ஒன்றுக்கொன்று உறவாக்கிவிட வேண்டும். அப்போதுதான் லோகத்தில் ஒரேயடியாக தெய்வ பேதம் பாராட்டாமல் ஸமரஸமாகப் பார்த்து எல்லாவற்றிடமும் பக்தி செலுத்தமுடியும்' என்றும் நினைத்தார்.

உறவு எப்படி ஏற்படுத்துவது? கல்யாண ஸம்பந்தத்தால் தானே? ஆனால் இப்படிப் பண்ணுவதற்கு ஒரு தடங்கல் இருந்தது. ஒரு அண்ணா—தங்கை ஜோடி இன்னொரு அண்ணா—தங்கை ஜோடியோடு கல்யாண ஸம்பந்தம் செய்து

Koviloor Digital Library

கொள்வதென்ருல் அப்போது பெண் கொடுத்துப் பெண் வாங்கியதாக ஆகிவிடும். இது ஸ்லாக்யமானதல்ல.

இந்தச் சிக்கலை சமாளிப்பதற்கு வழியாக இன்னெரு ஸஹோதர ஜோடித் தெய்வங்களை உண்டாக்க வேண்டி வந்தது. மூன்று ஸஹோதர ஜோடிகள் இருந்தால் அப்போது தம்பதியாக ஜோடி சேர்க்கும்போது பெண் கொடுத்துப் பெண் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது. 1—1, 2—2 என்று இரண்டே ஸஹோதர ஜோடிகளிருந்து, அவற்றுக்கிடையில் தம்பதி ஜோடி சேர்க்கணுமென்ருல் அப்போது 1—2, 2—1 என்று பரஸ்பரப் பரிவர்த்தனை பண்ணிக்கொள்வது தவிர வேறே வழியேயில்லை. ஆனுல் 1—1, 2—2, 3—3 என்று ஸஹோதர ஜோடிகளிருந்தால் அவற்றுக்கிடையில் 1—2, 2—3, 3—1 என்று தம்பதி ஜோடி சேர்த்துப் பரஸ்பரப் பரிவர்த்தனையைத் தவிர்த்து விடலாமல்லவா? அதாவது பெண் கொடுத்துப் பெண் வாங்கிக்கொள்வதைத் தவிர்த்துவிடலாமல்லவா?

இதை உத்தேசித்துத்தான் பரமாத்மா ப்ரஹ்மாவும் லக்ஷ்மியும் தோன்றும்படிப் பண்ணினதே. இவர்களும் ஒரு ஸஹோதர ஜோடி. இரண்டு பேரும் ஸ்வர்ண வர்ணம்; தாமரைப் பூவில் உட்கார்ந்திருப்பவர்கள்.

ப்ரஹ்மாவுக்கு லக்ஷ்மி அம்மா என்றுதான் கேள்விப் பட்டிருப்பீர்கள். நான் இப்போது புதுக்கதை சொல்கிறேன்! புதிசாக இருந்தாலும் ரொம்பவும் பழசான புராணக் கதைதான்.*

அப்புறம் இந்த மூன்று ஸஹோதர ஜோடிகளுக்குள் சிக்கலில்லாமல் விவாஹ ஸம்பந்தம் பண்ணிக்கொள்ள முடிந்தது. உங்களுக்கே தெரிந்த கதைதான்—ப்ரம்மா சிவ

---

* உதாரணமாக, 'தேவீ மாஹாத்மிய' பாராயணத்தின் இறுதிப் பகுதியில் வரும் 'ப்ராதாநிக ரஹஸ்யத்தில்' விஷ்ணு-அம்பிகை, சிவன்-ஸரஸ்வதி, பிரம்மா-லக்ஷ்மி ஆகியோர் ஸஹோதர ஜோடிகளாகத் தோன்றியதாகவே உள்ளது.

Koviloor Digital Library

ஸஹோதரியான ஸரஸ்வதியையும், விஷ்ணு ப்ரம்மாவின் ஸஹோதரியான லக்ஷ்மியையும், சிவன் விஷ்ணு ஸஹோதரியான அம்பாளையும் கலியாணம் பண்ணிக்கொண்டார்கள். இதிலே யாரும் பெண் கொடுத்துப் பெண் வாங்கவில்லையல்லவா?

சிக்கலைத் தீர்ப்பதற்காகவே ப்ரம்மாவும் லக்ஷ்மியும் தோன்றியது இருக்கட்டும். தெய்வம் என்று தோன்றிய பிறகு அவர்களுக்கும் ஒரு கார்யத்தைக் கொடுத்துத்தானே ஆகவேண்டும்?

ஆனால் மாயா சக்தியினால் ஜகத்தை நடத்துவது, ஞான சக்தியினால் மோக்ஷம் அநுக்ரஹிப்பது என்ற இரண்டிலேயே ஸகல கார்யங்களும் அடங்கிவிடுகின்றன. ஆகையினால் இந்த இரண்டுக்குள்ளேயேதான் கொஞ்சம் பங்குபோட்டு ப்ரஹ்மாவுக்கும் லக்ஷ்மிக்கும் கொடுக்கவேண்டும். ஞானத்தையோ பங்கே போடமுடியாது. ஆகையால் மாயா ஜகத் வியாபாரத்தில்தான் சில அம்சங்களை இந்த இரண்டு பேருக்குக் கொடுக்கவேண்டும்.

இப்படி ஏற்பட்டதில்தான் விஷ்ணு தம்முடைய கார்யத்திலேயே ஸ்ருஷ்டி என்பதைப் பிரித்தாற்போலக் காட்டி அதை ப்ரஹ்மாவின் கார்யமாகக் கொடுத்தார். தாம் நடத்துகிற லோக பரிபாலனத்தில் ஜீவர்களுக்குச் செல்வம் கொடுக்கும் கார்யத்தை லக்ஷ்மிக்குத் தந்தார்.

தினுஸு தினுஸாக வித்யாஸம் செய்து விளையாடுகிற வழக்கப்படி இங்கேயும் லக்ஷ்மிக்கு லோக மாதா என்ற பெரிய ஸ்தானம் இருக்கும்படியான அநுக்ரஹ சக்திகளைக் கொடுத்தார். தம்முடைய கார்யத்தில் ஸ்ருஷ்டியம்சத்தை மாத்திரம் தமக்கு அடங்கித்தான் ப்ரஹ்மா நிர்வாஹம் செய்கிறாரென்று லோகத்துக்குத் தெரியும்படியாக, அந்த ஸ்ருஷ்டி கர்த்தாவையும் ஸ்ருஷ்டிக்கும் பிதாவாகத் தாம் ஸ்தானம் வஹித்துத் தம்முடைய நாபி கமலத்திலிருந்தே அவரைத் தோன்றுமாறு பண்ணினார்.

Koviloor Digital Library

இப்போது புரிகிறதல்லவா, த்ரிமூர்த்திகள் என்ற ஏற்பாட்டில் பூர்ண ப்ரஹ்ம சக்தி பொருந்திய சிவ-விஷ்ணுக்களோடு நமக்கு அப்படித் தெரியாத ப்ரஹ்மாவும் எப்படி இடம் பெற்ருர் என்று? மூன்ருவது ஜோடி ஸஹோதரர்கள் இருக்கவேண்டும் என்ற 'நெஸஸிடி'க்காகவே அவர் தோன்றியது. இந்த உபகாரம் செய்ததற்காக மற்ற இரண்டு பேரும் அவருக்கு ஸமஸ்தானம் கொடுத்த மாதிரித் தங்களோடு வைத்துக்கொண்டு த்ரிமூர்த்திகள் என்று இருக்கிருர்கள்.

அதனுல்தான் அவருக்கு மற்ற தேவதைகளைவிட சிவ-விஷ்ணுக்களிடம் நெருக்கம் இருப்பது. அதோடுகூட அவருக்கு ஸகல வேத ஞானமும் இருக்கும்படியாகவும், அவர் ப்ரஹ்ம வித்யா குருக்களில் ஒருவராக இருக்கும்படியாகவும் பரமாத்மா சக்திகளைக் கொடுத்தார்.

இருந்தாலும் கடைசியில் அவருக்குக் கோவில் இல்லாமல் பண்ணி விளையாடிவிட்டார்!

'ப்ரஜாபதி, ஹிரண்யகர்ப்பன், ப்ரஹ்மா என்றிப்படி வேத, உபநிஷத, புராணங்களில் போற்றப்படும் பெரியவருக்குப் பூஜை நடப்பதென்ருல் அதற்குரிய கௌரவத்தோடு நடக்கவேண்டும். அதற்கில்லையென்ருல் ஒப்புக்குக் 'காமா சோமா' என்று நடப்பதைவிட நடக்காமலேயிருப்பது நல்லது. இதனுல் அவருக்கு ஒன்றும் நஷ்டமில்லை. தகப்பனுர்காரர் அவரை நாபி கமலத்தில் வைத்துக்கொண்டு தாங்கு தாங்கென்று தாங்குகிருர். வாயிலேயோ ஜகத்தையெல்லாம் வாழ்விக்கும் வேதம் இருக்கிறது. அதனுல், அவருக்காகவும் கோவில் வேண்டாம், இவர்கள் (ஜனங்கள்) மனோபாவத்தை உத்தேசித்தும் கோயில் வேண்டாம். இவர்களுடைய பி(ய்)க்கல்—பிடுங்கல் இல்லாமல் அந்த ஒரு ஸ்வாமியாவது நிம்மதியாக இருக்கட்டும்' என்றே (பிரம்மாவுக்கு ஆலயமில்லாமல்) செய்திருக்கிறது என்று வைத்துக்கொள்ளலாம்.

Koviloor Digital Library

ஸரஸ்வதிக்கு ஆலயம் இல்லாததேன்?

ஒரு விஷயத்தை ஆலோசிப்பதில் இன்னொன்று அகப் படுகிறது என்று சொன்னதற்கு இன்னொரு த்ருஷ்டாந்தம். சிவன்—அம்பாள், மஹாவிஷ்ணு—மஹாலக்ஷ்மி என்று ஸதிபதிகளாக அவர்களின் உயர்வைச் சொல்லிக்கொண்டு போகும்போது, சட்டென்று ப்ரஹ்ம பத்னியான ஸரஸ்வதி விஷயத்தை விட்டு விட்டோமே என்று நினைவு வந்தது. ப்ரஹ்மா விஷயத்துக்குக் குறுக்கே அதைக் கொண்டு வராமல், எடுத்துக்கொண்ட விஷயத்தை நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு அப்புறம் அதை எடுத்துக்கொள்ள நினைத்தேன்.

ஸரஸ்வதியைப் பற்றி எப்படி நினைக்கிறோம்? பூர்ண ப்ரம்ம சக்தி என்று நினைக்கிறோமோ இல்லையோ வித்யாதி தேவதை, கலைமடந்தை, அறிவுத் தெய்வமென்று அவளுக்கு ரொம்பவும் உன்னதமான ஸ்தானம் கொடுத்திருக்கிறோம். வெள்ளை வெளேரென்று வீணா புஸ்தகங்களோடு அவளை நினைத்தாலே சாந்தியாயிருக்கிறது. ஸரஸ்வதி பூஜை பண்ணு கிறோம். அவளைப் பற்றி ஸ்தோத்ரங்கள்—மஹான்கள் பண்ணியிருப்பது—கம்பர், ஒட்டக்கூத்தர், குமர குருபரர், பாரதியார் போன்றவர்கள் தமிழில் அழகாகப் பண்ணி யிருக்கிறார்கள், அவற்றை—ஓதுகிறோம். (முத்துஸ்வாமி) தீக்ஷிதர் முதலானவர்கள் அவள் மீது செய்திருக்கும் கீர்த் தனங்கள் பாடுகிறோம். குழந்தையாக ஸ்கூல்போக ஆரம்பிக் கும்போதே அவள்மேல் ச்லோகங்கள் சொல்லி ப்ரியத் துடன் பக்தி பண்ண ஆரம்பித்துவிடுகிறோம்.

இத்தனை இருந்தாலும், இவ்வளவு ஆயிரம் கோவில் இருந்தும் ஸரஸ்வதிக்கு மட்டும் ஒன்றையும் காணோம்! தமிழ் நாடு பூராவிலும் தஞ்சாவூர் ஜில்லாவில் கூத்தனூர் என்ற ஒரு இடத்தில்தான் ஸரஸ்வதி ஆலயம் இருக்கிறது. அது ஒட்டக்கூத்தர் கட்டிய கோவில். (ஒட்டக்) கூத்தனுடைய ஊர்தான் கூத்தனூர். காமகோட்டத்தில் (காஞ்சி காமாக்ஷி

Koviloor Digital Library

ஆலயத்தில்) ஸரஸ்வதிக்கு ஸந்நிதி உண்டு. ஆனால் அதுகூட ப்ரஹ்ம பத்னியான ஸரஸ்வதி இல்லை என்றும், ராஜ ராஜேச்வரிக்கு மந்த்ரிணியாக இருக்கும் ராஜச்யாமளையான மஹா ஸரஸ்வதி என்றும் ஒரு வித்யாஸம் சொல்வதுண்டு. ஸரஸ்வதிக்கு பிம்பம், ஸந்நிதியுள்ள மற்ற கோவில்களிலும் அவை முக்யமான இடம் பெறுமல் ஏதோ ஒரு மூலையில்தான் இருக்கின்றன. மொத்தத்தில், ப்ரஹ்மா மாதிரியே ஸரஸ்வதிக்கும் கோவில் முக்யத்வம் இல்லை. ஆனால் ப்ரஹ்மாவிடம் ஜனங்களுக்கு விசேஷ பக்தி, மரியாதை கள் இல்லாததுபோல, ஸரஸ்வதிக்கு இல்லாமலில்லை. அவளை எல்லோரும் நிரம்பப் போற்றி பக்தி செய்கிறோம். படிக்க ஆரம்பிக்கும்போதே கல்வித் தெய்வம் என்று அவளை ஸ்துதிக்கக் கற்றுக்கொடுத்து விடுவதால், அது பசுமரத்தாணி யாக மனஸில் பதிந்து என்றைக்கும் அவளிடம் பக்தி நீங்கா மலே இருக்கிறது. ந்யூஸ்பேப்பர் பாஷையில் சொன்னால், அவள் 'பாபுலர்' தெய்வம்; ப்ரஹ்மா 'அன்பாபுலர்' தெய்வம்! அன்பாபுலர் தெய்வத்துக்குக் கோவிலில்லை என்றால் அது ந்யாயம். நல்ல பாபுலாரிடி இருக்கிற தெய்வத்துக்கும் ஏன் அப்படியே இருக்கவேண்டும்?

இங்கேதான் நம்முடைய தேசாசாரம் வருகிறது. பாதிவ்ரத்யம் என்பது நம் தேசாசாரத்தில் ஊறிப்போன விஷயம். பதிவ்ரதைகள் புருஷனுக்கு இல்லாத எதையும் தாங்கள் அநுபவிக்க மாட்டார்கள். ஸரஸ்வதி ப்ரஹ்மாவின் நாக்கிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கும் பதிவ்ரதை. அதாவது ப்ரஹ்மாவின் நாக்குதான் அவள் குடியிருக்கும் கோவில்! அவள் எப்படிப் பதிக்குக் கோவிலில்லாதபோது தான்மட்டும் கோவிலில் குடிகொள்வாள்? அதனால்தான் அவளுக்கும் அவர் மாதிரியே கோவில் இல்லை.

அகத்திலே நாம் கூப்பிட்டால் அவள் வருவாள். தாயாரல்லவா? அதனால் நம் குடும்பத்து மநுஷியாக வருவாள். நமக்கு அறிவு புகட்ட வேண்டிய ட்யூட்டியும்

Koviloor Digital Library

அவளுக்கு இருப்பதால் தனிப்பட்ட முறையில் அகத்துக்கு வருவாள்.

ஆனால் ஊர் உலகத்துக்குப் பொதுவாக அவளைப் பெருமைப்படுத்திக் கோவில் கட்டுவது என்றால், அப்போது பதியை விட்டு விட்டுத் தான் மட்டும் மஹிமை கொண்டாடிக் கொள்ள அவள் ஸம்மதிக்க மாட்டாள்! அவளுடைய அந்த உத்தம ஸ்த்ரீ குணத்தை மதித்துத்தான் அவளுக்கு ஆலயமில்லாமல் வைத்திருக்கிறது. சக்திகளை வழிபடுவதற் கென்றே நவராத்ரி என்று வைத்துப் பூஜை பண்ணும்போது துர்கா—லக்ஷ்மிகளுடன் அவளும் வந்து ஸரஸ்வதி பூஜை பெறுவாள். அதோடு ஸரி. பதியை நீக்கி பொது ஸ்தலத்தில் கோவில் என்று வைத்து ஊர் கூடி நித்ய பூஜை, உத்ஸவாதி கள் பண்ணுவதற்கு அவள் ஒப்புக்கொள்ள மாட்டாள்.

ஸாவித்ரி, காயத்ரி, நாரதர் விஷயம்

ப்ரஹ்மாவுக்கு மூன்று பத்னிகள். ஸரஸ்வதி ஒருத்தி. காயத்ரி, ஸாவித்ரி என்று இன்னும் இரண்டு பேர். காயத்ரி மந்த்ரம் என்ற தலைசிறந்த மந்த்ரத்தின் வெளி ரூபமாக இருக்கப்பட்ட சந்தஸ் (மீட்டர்)தான் காயத்ரி. அதன் உள்ளுயிராக இருக்கிற ஜ்யோதி சக்திக்கே ஸாவித்ரி என்று பெயர். ஸகல வேதங்களுக்கும் ஸாரமாகவுள்ள மந்த்ரத் துடன் ஸம்பந்தப்பட்ட போதிலும் அந்த இரண்டு பேருக்கும் கோவில் இல்லை. காரணம் மேலே சொன்னதுதான். பதிக்கு இல்லாதது தங்களுக்கும் வேண்டியதில்லை என்று அவர்கள் வைத்துவிட்டதுதான் காரணம்.

இப்படிப் பார்த்துக்கொண்டு போகும்போது நாரதருக் குக் கோவிலில்லாததற்கும் காரணம் தெரிகிறது. விஷ்ணுவின் அடியார்கள், பாகவதோத்தமர்கள் என்று எடுத்தால் நாரதர் 'டாப்'பில் நிற்கும் ஒருவர். பக்தி ஸூத்ரமே அவர் பண்ணியதுதான். கலிக்கு ஸங்கீர்த்தனம் தான் (ப்ரத்யேக மோக்ஷ மார்க்கம்) என்னும்போது, ஸதா

Koviloor Digital Library

ஸர்வ காலமும் வீணகானத்தோடு பகவந் நாம கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருக்கும் அவருக்குத்தான் ஊருக்கு ஊர் கோவில் இருக்கணும். ஆனாலும் கோவிலே இல்லை என்றால் என்ன காரணம்? தகப்பனாரான ப்ரம்மாவுக்கும், மூன்று தாயார்களுக்கும் ஆலயம் இல்லாதபோது, பிள்ளை மட்டும் ஆலயத்தில் வஸிப்பாரா? மாதா பிதாக்களுக்கில்லாதது தமக்கும் வேண்டாம் என்ற ஸத்புத்ர தர்மத்தை அவர் பின் பற்றுகிறார்!

பொதுவாக இன்னொரு காரணம் தோன்றலாம்: தக்ஷ ப்ரஜாபதிக்கு அவரிடம் கோபம் வந்து, 'நீ நின்ன இடத்திலே நிக்காம சுத்திண்டேயிரு' என்று சபித்தான், அதனால்தான் அவர் 'த்ரிலோக ஸஞ்சாரி' என்னும்படியாக ஓடிக் கொண்டேயிருக்கிறார் என்று கதை உண்டு. சுற்றிக் கொண்டே இருப்பவரை—இருக்க வேண்டியவரை—ஆலயங் களில் ப்ரதிஷ்டை பண்ணி எப்படி உட்கார்த்தி வைப்பது?

குருவில் ஆரம்பித்து எங்கெங்கேயோ த்ரிலோக ஸஞ்சாரம் பண்ணிவிட்டு நாரதரில் வந்து நிற்பதும் பொருத் தந்தான்! அவர் தான் ஸங்கீர்த்தன குரு. த்யாகையர்வாளின் குரு. குருவாகவும் இருந்து கொண்டு, அதே சமயம், "கலி ஸந்தரணம்"—கலியைத் தாண்டுவது—என்று இந்த யுகத்துக்கு ஸ்பெஷலாக உள்ள மந்த்ரத்தை முதல் முதலாகப் பெற்றுக்கொண்ட சிஷ்யராகவும் அவர் இருக் கிறார். எல்லாரும், எக்காலமும், எங்கே வேண்டுமானாலும் சொல்லக்கூடிய அந்த மந்த்ரம்,

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண
ஹரே ஹரே ॥

என்பதுதான். தகப்பனாரான ப்ரம்மாவிடமிருந்தே நாரதர் இந்த மந்த்ரத்தில் உபதேசம் பெற்றிருக்கிறார்.

Koviloor Digital Library

குரு பரம்பரையில் ப்ரம்மா

இப்படிச் சொல்லும்போது, ஸ்ருஷ்டிகர்த்தாவாக இல்லாமல், ஆனால் குரு பரம்பரையில் ஒரு மூல புருஷராக ப்ரஹ்மா இருப்பது நினைவுக்கு வருகிறது. நாரதருக்கு நாம மந்த்ரம் உபதேசித்த பக்தி குருவாக இருக்கிற அவர் வேதாந்த (அதாவது ஞான மார்க்க) குருவாகவும் இருக்கிறார். குரு என்பதுதான் நாம் எடுத்துக்கொண்டுள்ள விஷயமாதலால் ப்ரஹ்மாவை குருவாகக் கொண்டு வருவதிலும் பொருத்தம் இருக்கிறது.

சங்கர பகவத் பாதாளைப் பின்பற்றுபவர்களான ஸ்மார்த்தர்களின் ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரையில் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் மூன்று பேருமே இருக்கிறார்கள். ஆதி முதல் குரு பேசாமலே, வாயுபதேசம் செய்யாமலே, ஞானத்தைக் கொடுத்துவிடும் தக்ஷிணாமூர்த்தி. சிவ பெருமானின் பரம ஞான வடிவமான அவர்தான் ஆதி குரு. அப்புறம் ப்ரஹ்மா - விஷ்ணு - சிவன் மூவரும் ஒன்றுசேர்ந்த ரூபமாக மூன்று தலையோடு விளங்கும் தத்தாத்ரேயர். (அந்த ரூபத்திலே அவர் ஞான குருவாயிருந்தாலும், தனியாக அந்த மூன்று பேரைச் சொன்னால் ஸ்ருஷ்டி—ஸ்திதி—ஸம்ஹாரங்களைத்தான் குறிக்கிறது. இவ்விஷயம் இருக்கட்டும்.) தத்தாத்ரேயருக்கு அப்புறம்தான் நன்றாக வாய்விட்டே, க்ரமமாகவே, குரு சிஷ்யாளென்று உபதேசம் செய்வது ஏற்பட்டது. முதலில் அப்பா - பிள்ளைகளே இப்படி குரு - சிஷ்யாளாக ஐந்தாறு தலைமுறை போய், அப்புறம் கல்யாணமே பண்ணிக்கொள்ளாத சுகாசார்யாளி லிருந்து ஸந்நியாஸ குரு - ஸந்நியாஸ சிஷ்யர் என்று அந்த ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரை போகிறது.* இதிலே முதலாவது குரு மஹாவிஷ்ணு. அப்புறம் அவர் பிள்ளையான ப்ரஹ்மா :

---

* "தெய்வத்தின் குரல்"—இரண்டாம் பகுதி—"நம்மை நாமாக்குகிறவர்" என்ற உரையில் "குரு பரம்பரை" என்ற உட்பிரிவில் விவரம் காண்க.

Koviloor Digital Library

நாராயணம் பத்மபுவம்

நாராயணன் முதலில். அடுத்து 'பத்மபுவரான—தாமரைப் பூமில் தோன்றியவரான—ப்ரஹ்மா. ப்ரஹ்மா சிஷ்யராகப் பிதாவிடமிருந்து ப்ரஹ்ம வித்யையை உபதேசம் வாங்கிக்கொண்டு, அப்புறம் தாமும் ப்ரஹ்ம வித்யா குருக்களில் ஒருவராகித் தம்முடைய புத்ரரான வஸிஷ்டருக்கு அதை உபதேசம் பண்ணினுர். நாரதர் ப்ரஹ்மாவுக்குப் பிள்ளை என்கிறுற்போல வஸிஷ்டரும் அவருடைய பிள்ளை தான். ப்ரஜாபதிகள் என்று பத்துப் பேர் ப்ரஹ்மாவின் புத்ரர்கள். வேதத்தில் ப்ரஜாபதி என்றுல் ப்ரஹ்மா என்றுலும் வழக்கில் அவருடைய பத்துப் புத்ரர்களுக்கே அது பெயராக ஆயிற்று. அந்தப்பத்து ரிஷிகளில் நாரதர் மாதிரியே வஸிஷ்ருடம் இன்னெருவர். அவருக்குப் பரமோபதேசமான அத்வைதத்தை ப்ரஹ்மா உபதேசம் பண்ணியிருக்கிறுர். ஸ்ரீ வைஷ்ணவர்களின் குரு பரம்பரையில் முதலில் மஹாவிஷ்ணு, அப்புறம் மஹாலக்ஷ்மி. பெரிய பெருமாள், பெரிய பிராட்டி என்று அவர்களைச் சொல்வார்கள். அப்புறம் ப்ரஹ்மா இல்லை. சிவ ஸுதனுன பிள்ளையார் சிவனுடைய பூதப்படைகளுக்கெல்லாம் தலைவரான கண—பதியாக இருக்கிறுரல்லவா? அப்படி விஷ்ணு கணங்களுக்கெல்லாம் பதியாக ஒருத்தர் இருக்கிறுர். அவர் ப்ரஹ்மா இல்லை. அவர் பெயர் விஷ்வக்ஸேனர். 'சேனை முதலியார்' என்று சொல்வார்கள். அவர்தான் மஹாலக்ஷ்மிக்கு அடுத்ததாக வரும் ஸ்ரீ வைஷ்ணவ குரு. அவருக்கப்புறம் பூலோகத்திலேயே இருந்த நம்மாழ்வாரிலிருந்து அவர்களுடைய மநுஷ்ய ரூப குருக்கள்.

ஸ்மார்த்த ஸம்பிரதாயத்தில் மஹாவிஷ்ணுவுக்கு அப்புறம் ப்ரம்மா.

ஆகையால், ப்ரஹ்மாவுக்குக் கோவில், பூஜை என்று எதுவுமில்லாவிட்டாலும், வேதாந்தம் அப்யாஸம் செய்கிற ஸ்மார்த்தர்கள் குரு த்யானத்தில் ஆரம்பிக்கும்போது

Koviloor Digital Library

"நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம்" என்று ச்லோகம் சொல்லி நமஸ்காரம் பண்ணும்போது (பத்மபுவரான) ப்ரஹ்மா நமஸ்காரம் வாங்கிக் கொண்டு விடுகிருர். இது கொஞ்சம் ஆறுதலாயிருக்கிறது.

இப்படியே வ்யாஸபூஜை என்பதாக ஆண்டுதோறும் ஸந்நியாஸிகள் குரு பரம்பரா பூஜை செய்யும்போது அதில் ஸரஸ்வதி, நாரதர் ஆகிய இரண்டு பேருக்கும் கூடப் பூஜை சொல்லியிருக்கிறது.

வேதாந்தம் படிப்பவர்கள், ஸந்நியாஸிகள் ஆகியவர்களுக்கு ப்ரஹ்மாவைப் பற்றி ஸென்டிமென்டலான ரிஸர்வேஷன்கள் இருக்காததலால் இங்கே அவர் ஸ்ருஷ்டி கர்த்தா என்பதற்காக இல்லாமல் குரு என்ற ஹோதாவில் நமஸ்காரம் பெற்றுவிடுகிருர். ஆனலும் ஜனஸமூஹத்தில் இது விதிவிலக்கு மாதிரித்தானேயொழிய விதியாக இருப்பதல்ல.

நமஸ்கரிப்பதற்குக் காரணமில்லே!

இதுவரையில் சொன்னதிலிருந்து என்ன ஏற்பட்டது என்ருல், 'குருதான் ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன். ஆனதினலே அவருக்கு நமஸ்காரம் பண்ணணும், தஸ்மை ஸ்ரீ குரவே நம:' என்ருல் அது தப்பு என்று ஆயிற்று! [சிரிக்கிருர்.] குருவுக்கு நமஸ்காரம் பண்ணு என்று சொல்லி அதற்கு வேறே என்ன காரணம் சொன்னலும் ஸரி; ஆனல் அவர் ப்ரஹ்ம - விஷ்ணு - மஹேச்வரர்களாக இருக்கிருரென்ருல், அந்த மூன்று பேருக்குமே இப்படி ஸ்ருஷ்டி - - ஸ்திதி - ஸம்ஹார மூர்த்திகளா இருக்கும் அவஸ்தையில் (நிலேயில்) நமஸ்காரம் பண்ணுவதற்கில்லேயாதலால், இவருக்கும் கிடையாது, [சிரித்து] கிடையவே கிடையாது!

குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம; தஸ்மை ஸ்ரீ குரவே நம:

'குருதான் பரப்பிரம்மம், அதனல் அவருக்கு நமஸ்காரம்' என்ருல் அது ஸரியா, அதுவாவது ஸரியா?

Koviloor Digital Library

ஆஹாம், அதுவும் ஸரியில்லை.

"ஏன் ஸரியில்லை?

பரப்ரஹ்மம் மனஸ், வாக்கு எல்லாம் கடந்தது. அதை நீ புரிந்து கொண்டு நமஸ்காரம் பண்ணவும் முடியாது. பண்ணினாலும் நிர்குணமாக, நிஷ்க்ரியமாக (குணங்கள், செயல்கள் ஏதுமற்றதாக) இருக்கிற அது உன் நமஸ்காரத்தை வாங்கிக்கொள்ளாது. ஒன்றுமே பண்ணாமல், பண்ணத்தெரியாமல் கிடக்கிற ஸ்திதியைத்தான் 'பரப்ரஹ்மம் ஜகந்நாதம்' என்கிறோம். அதனிடம் போய் நமஸ்காரம் பண்ணி என்ன ப்ரயோஜனம்? பரப்ரஹ்மத்தை நீ புரிந்துகொள்ளும்போது நீயே அதுவாகிவிடுவாயாகையால் அப்போதும் நமஸ்காரத்துக்கு இடமில்லை. நீ உனக்கேயா நமஸ்காரம் பண்ணிக்கொள்வது?

ஆரம்ப ச்லோகமாக சிஷ்யனுக்குச் சொல்லிக் கொடுக்கிற குரு வந்தனமே இப்படித் தப்பும் தாறுமாக இருக்கிறது! குட்டிக் கொள்ளும்போதே பிடரியில் குட்டிக் கொள்வதுபோல ஒரே கோளாறாக இருக்கிறது! [நெடுநேரம் சிரிக்கிறார்.]

வித்யாஸமான முத்தொழில்கள்

நிஜமான தாத்பர்யம் என்ன?

குருவானவர் ப்ரஹ்ம - விஷ்ணு - மஹேச்வரர்கள் செய்யும் ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரத்தையே தாமும் அச்சடித்தமாதிரி செய்யவில்லை. இந்த ஜன்மாவைக் கொடுப்பது, லோக வாழ்க்கையில் காப்பாற்றுவது, அப்புறம் அதை முடித்து வைப்பது என்ற கார்யங்களை அவர் பண்ணவில்லை. அவற்றைச் செய்யத்தான் அந்த மும்மூர்த்திகள் இருக்கிறார்களே!

அதனால் அவரை மும்மூர்த்திகளாகச் சொல்லும்போது அவர்கள் பண்ணும் முத்தொழிலைப் போலவே இவரும்

Koviloor Digital Library

என்னவோ செய்கிறுரென்றுதான் தாத்பர்யமே தவிர, அவற்றையே என்றல்ல.

இவர் மூன்று கார்யங்கள் செய்கிறுர். அவை த்ரிமூர்த்திகள் செய்யும் முத்தொழில் மாதிரியே இருக்கின்றன. அதனுல் இவரை அவர்களாகவே சொல்லியிருக்கிறது. உபமாலங்காரமாக, அதாவது, உவமையணியாக, சொல்லியிருக்கிறது.

'கண்ணே, மணியே!' என்று குழந்தையைச் சொன்னுல் அது நிஜமாகவே கண், மணி என்ரு அர்த்தம்? கண் என்பது எப்படி நமக்கு இன்றியமையாததாக இருக்கிறதோ, மிகவும் ப்ரியமான அங்கமாக இருக்கிறதோ, ஜாக்ரதையாக இமையால் மூடிக் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறதோ அப்படியே, நமக்குக் குழந்தை இன்றியமையாததாக, ப்ரியமாக, கவனமாக ஸவரக்ஷணை பண்ண வேண்டியதாயிருப்பதாலேயே கண் என்றும், அந்தக் கண்ணிலும் கருவான பாகமாக இருக்கப்பட்ட மணி என்றும் ('கண்ணே, கருமணியே!' என்றுகூடச் சொல்வதுண்டு) சீராட்டுவது. 'மணி' என்ருல் நமக்கு மிகவும் அலங்காரமாக உள்ள நவரத்ன மணி என்றும் வைத்துக்கொள்ளலாம். 'முத்தே, மாணிக்கமே!' என்றுகூட நவமணிகளின் பெயரிலும் சீராட்டிச் சொல்லுகிறேமே!

"மழபாடியுள் மாணிக்கமே!"

என்று பகவானையே கொஞ்சுகிறுர்கள்.

இதெல்லாம் உவமித்துச் சொல்வது. ஒரு வஸ்துவை எடுத்துக் கொள்கிறேம். அது உபமேயம். அதற்கு இன்னொன்றை ஒப்புக் காட்டுகிறேம். இது உபமானம். ஏதோ சில அம்சங்களில் அதுவும் இதுவும் ஒன்ருயிருக்கிறது. அதனுல் உபமேயத்துக்கு உபமானம் காட்டுகிறேம். சில அம்சங்களில்தான் ஒப்பே தவிர முழுக்க அல்ல. அப்போது (முழுக்க ஒப்பிருந்தால்) உபமான, உபமேயம் என்றுபிரித்துச் சொல்வதற்கேயில்லாமல் ஒன்ருக அல்லவா ஆகிவிடும்?

Koviloor Digital Library

ஒன்றைப் போல இன்றென்று இருப்பதுதான் உவமை. அசல் அதுவாகவே இருந்துவிட்டால் உபமாலங்காரம் பிறக்க முடியாது. சந்திரனைச் சந்திரனுக்கே உவமை காட்ட முடியுமா? உபமான - உபமேயங்கள் முற்றிலும் ஒன்றே இல்லை என்றாலும் அவற்றுக்குள் சில அம்சங்களில் ஒற்றுமை இருக்கும். இப்படிச் சொல்லும்போதே, சிலதில் இருக்காது என்றும் ஆகிவிடுகிறது. 'சந்த்ரவதனம்'-சந்த்ரனைப் போன்ற முகம்—என்னும்போது முகத்தில் 'சந்திரனைப் போன்ற காந்தி, பரிசுத்தம், குளுகுளுப்பு, மனஸைக் கவர்கிற வசீகரம் ஆகியவை இருப்பதாக அர்த்தம். இந்த அம்சங்களில்தான் ஒற்றுமை. மற்றதில் இல்லை. சந்திரனுக்கு மநுஷ முகத்திள்ளதுபோல கண், காது, மூக்கு இல்லை. முகம் ஆகாசத்தில் மிதப்பதில்லை; அது பதினைந்து நாளுக்கு ஒரு முறை தேய்வது, வளர்வது என்பதும் கிடையாது.

இம்மாதிரிதான் குருவை த்ரிமூர்த்திகளாகச் சொல்லும் போது ஏதோ சிலவற்றில் ஒற்றுமை, மற்றதில் வேற்றுமை என்று இருக்க வேண்டும்.

இன்னொரு ச்லோகம், நம் மத ஸம்ப்ரதாயங்கள் எல்லாவற்றுக்கும் மூல புருஷராகவுள்ள வ்யாஸாசார்யாளை பற்றியது, ஞாபகம் வருகிறது. அதிலே வ்யாஸருக்கும் த்ரிமூர்த்திகளுக்கும் ஒற்றுமை இல்லாத ஒவ்வொரு அம்சத்தைச் சொல்லியே வேடிக்கை செய்திருக்கிறது. "இவர் ப்ரஹ்மா என்றால் நாலு மூஞ்சி இல்லையே! அசதுர்வதநோ ப்ரஹ்மா! விஷ்ணு என்றால் இரண்டு கைதானே இருக்கு? நாலு இல்லையே! த்விபாஹுரபரோ ஹரி:! சிவன் என்றால் நெற்றிக்கண் எங்கே போச்சு? அபால லோசந: சம்பு:' என்று அந்த ச்லோகம்.

அசதுர்வதநோ ப்ரஹ்மா
த்விபாஹுரபரோ ஹரி:
அபால லோசந: சம்பு:
பகவாந் பாதராயண:

Koviloor Digital Library

பாதராயணர் என்பது வேத வ்யாஸரின் இன்னொரு பேர். 'பதரி' என்ற இலந்தை மரத்தடியை இருப்பிடமாக ('அயன'மாக)க் கொண்டு, அதாவது பதரி வ்ருக்ஷத்திற்கு அடியில் உட்கார்ந்துகொண்டு நெடுங்காலம் தபஸ் செய்தவராதலால் 'பாதராயணர்' என்று பெயர்.

ப்ரஹ்ம-விஷ்ணு-மஹேச்வரர்களாக குருவை உபமாலங்காரத்தில் சொல்லியிருக்கிறதென்றால் அவர்களுக்கும் குருவுக்கும் ஒற்றுமையும் இருக்க வேண்டும், வேற்றுமையும் இருக்க வேண்டும்.

முத்தொழில் செய்பவர்களென்பதால் அவர்களை நாம் நமஸ்காரம் பண்ணுவதற்கில்லை என்று பார்த்தோமல்லவா? அந்த அம்சத்தில் வேற்றுமை இருந்துவிட்டால் ஸரியாய்ப் போய்விடும். ச்லோகம் கோளாறில்லை, தாறுமாறாகச் சொல்லவில்லை என்றாகிவிடும்.

அப்படியிருக்கிறதா, பார்க்கலாம்.

மும்மூர்த்திகள் பேரை வரிசையாக (ச்லோகத்தில்) சொல்லியிருப்பதால் இவரும் முத்தொழில் போலவே செய்கிறாரென்று தெரிகிறது. அதையே செய்யவில்லை. அதுபோல (செய்கிறார்).

ஏதோ ஒருவிதத்தில் இவர் ஸ்ருஷ்டி - ஸ்திதி - ஸம்ஹாரம் செய்பவராக இருக்கிறார். எந்த விதத்தில்?

யோசித்துப் பார்த்தால் புரிகிறது:

இவர் நமக்கு ஞான லோகத்தில், அத்யாத்ம லோகத்தில் புதுப் பிறவி கொடுக்கிறார். நமக்கு அறிவுக் கண்ணைத் திறந்து வைத்து, நம்முடைய மனப்பான்மையை மாற்றி அது வேறொன்றாக ரூபம் கொள்ளும்படிச் செய்கிறார். மாற்றுவது, வேறு ரூபம் தருவது என்றால் ஸ்ருஷ்டிப்பது, புது ஜன்மா தருவது என்றுதான் அர்த்தம். குருவானவர் நமக்கு ஞானப் பிறவி தருவதால், நமக்குள் ஞானம் பிறக்கும்படிச் செய்வதால், ஸ்ருஷ்டிகர்த்தாவான ப்ரஹ்மாவாகிறார்!

Koviloor Digital Library

அப்புறம் ஸ்திதி – பரிபாலனம். எப்படிப் பரிபாலிக்கிறார்? ஞான வாழ்க்கையில் நாம் அத்யாத்ம ஸம்பத்துக்களைப் பெறும்படிச் செய்து பரிபாலிக்கிறார். தேஹ போஷணைக்காக மஹாவிஷ்ணு செல்வம், ஆரோக்யம் முதலானவற்றைக் கொடுத்து ரக்ஷிப்பதுபோல ஆத்மாவின் போஷணைக்காக உபதேசம், புஸ்தகங்கள், ஸாதனமார்க்கம் முதலானவற்றைக் கொடுத்து ரக்ஷிக்கிறார். தம்முடைய வாழ்க்கையையே நம் பொருட்டாக த்யாகம் செய்துவிட்டு—நிம்மதியாகத் தாம்பாட்டுக்கு ஸமாதி நிலையில் ஸுகித்துக்கொண்டிருக்காமல், நம்மிடம் முட்டிக்கொண்டு—நம்மைக் கரையேற்றத் தம்மாலானதெல்லாம் செய்கிறார். இஹ லோகத்திலுங்கூட நம்முடைய கஷ்டங்களைத் தீர்த்து வைத்துப் பரிபாலிக்கிறார். லௌகிகத்திலும்கூட நாம் எப்படியெப்படி இருந்தால் நல்லதோ, ஆத்மாபிவ்ருத்திக்கு உதவியாக இருக்குமோ அப்படி இருப்பதற்குச் சொல்லிக் கொடுக்கிறார். ஆனாலும் ஆத்யாத்மிகமான ஞானப் பரிபாலிப்பே அவர் முக்யமாகச் செய்வது. இதனால் பரிபாலன கர்த்தாவான விஷ்ணுவாக இருக்கிறார்.

ஸம்ஹாரம்?

இவர் பரம ஸாத்விகரல்லவா? எப்படி ஸம்ஹாரம் பண்ணுவார்? ருத்ரன், ருத்ரதாண்டவம், ரௌத்ராகாரம் என்றாலே பயமாக அல்லவா இருக்கிறது? இவரோ தயை, அருள் நிரம்பியவரல்லவா? ருத்ரனாக இவரை எப்படிச் சொல்வது? அந்தப் பேரைச் சொல்லி பயமுறுத்த வேண்டாமென்றுதானோ என்னவோ, (ச்லோகத்தில்) 'ருத்ர'னென்று சொல்லாமல் "குருர் தேவோ மஹேச்வர :" என்று சொல்லியிருந்தாலும் அதனால் குறிப்பிடும் கார்யம் ஸம்ஹாரமாகத் தான் இருக்க வேண்டும். ஸ்ருஷ்டி - ஸ்திதிகளுக்கான ப்ரஹ்ம - விஷ்ணுக்களைச் சொன்னதன் தொடர்ச்சியாக மஹேச்வரனைச் சொல்லியிருப்பதால் வேறுவிதத்தில் அர்த்தம் பண்ணிக்கொள்ள முடியாது.

Koviloor Digital Library

"உபமாலங்காரத்தில் ஒற்றுமை இல்லாத அம்சங்களும் இருக்கும் என்றீர்களே, அந்த ரீதியில் மஹேச்வரனுக்கும் குருவுக்கும் ஸம்ஹார கார்யத்தில் ஒற்றுமையில்லாமல், வேறு எதிலேயாவது இருக்குமோ என்னவோ?" என்று கேட்டீர்களானால்,...

அப்படி இருக்க முடியாது.

தொடர்ச்சியாக ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்று சொல்லிக்கொண்டு போகும்போது முதலிரண்டு பேர் செய்யும் ஸ்ருஷ்டி - ஸ்திதிகளை குரு இன்னொரு தினுஸில் பண்ணுவதாகக் காட்டுகிறபோது மூன்றாவதாக ஸம்ஹாரம் தான் வரவேண்டும். அதுதான் யுக்தம்.

அப்படியானால் ப்ரஹ்மாவாக இருந்து நமக்கு ஞானம் பிறக்கச் செய்து, அந்த ஞானத்தை விஷ்ணுவாக இருந்து வளர்த்துக் கொடுத்துவிட்டு, அப்புறம் [சிரித்துக்கொண்டே] அந்த ஞானத்தை ருத்ரனாக ஹதம் பண்ணிவிடுவாரா?

இல்லை. ஞானம் அடைய முடியாதபடி நம்மை அநேகக் கெட்ட சக்திகள் ஓயாமல் இழுக்கின்றனவே, இதுகளுடன்தான் பொறுமையாகப் போராடி ஹதம் பண்ணுகிறார். ஸம்ஹாரம் பண்ணுகிறார். பயிரை வளர்ப்பதைப்போலவே, அந்தப் பயிர் வளர்வதற்காகவே, களையை அகற்றவேண்டியது மிகவும் அவசியமல்லவா? அப்படித்தான் நமக்கு ஞானத்தை போதிப்பதைப்போல நம்முடைய கனத்த அஞ்ஞானத்தை அகற்றுவதும் முக்யம். ஞானபோதனையைவிட இதுதான் கடினமான கார்யம். சாண் ஏறினால் முழம் சறுக்குகிற வழுக்கு மரத்தில் நம்மை இஞ்ச், இஞ்சாக மேலே ஏற்றிக்கொண்டு போகிற ச்ரம ஸாத்யமான காரியம். கெட்டதுதான் நம்மை அப்படியே கவிந்து மூடிக்கொண்டிருக்கிறது. ஏதோ துளி நல்லது முணுக்கு முணுக்கு என்று தலைநீட்ட ஆரம்பித்தால் உடனே கெட்டது இன்னம் கனந்தகாரமாக வந்து அழுத்தி அதை அணைக்கப் பார்க்கிறது. இந்த அஞ்ஞான தமஸை,

Koviloor Digital Library

அறியாமை இருளைத்தான் குருவானவர் ருத்ரமூர்த்தியாக இருந்து ஸம்ஹாரம் செய்கிறார். 'குரு' என்ற வார்த்தையின் Definition (லக்ஷணை) ஒன்றே அப்படித்தான் சொல்கிறது. 'கு' என்றால் இருட்டு; 'ரு' என்பது அழிப்பதைக் குறிப்பது. இருட்டை அழிப்பவன் 'குரு'.

இப்படி குருவினால் ஞானத்தில் புனர்ஜன்மம், அதில் பரிபாலிப்பு, அதற்கு எதிராக, தடையாக இருப்பவற்றின் அழிவு ஆகிய மூன்று கார்யங்கள் நடக்கின்றன. அதாவது ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹாரம் நடக்கிறது. ஆகையால் குருமூர்த்தியே த்ரிமூர்த்தியாகிறார்!

வித்யாஸம் என்னவென்றால், ப்ரஹ்மா ஸ்ருஷ்டித்து, விஷ்ணு ரக்ஷிக்கும் அதே சரீரத்தைத்தான் ருத்ரன் ஸம்ஹாரம் செய்வது. ஆனால் இங்கேயோ குரு ஸ்ருஷ்டிப்பதும், ரக்ஷித்துக் கொடுப்பதும், ஞானத்தை. ஆனால் அழிப்பது ஞானத்தையல்ல. அரும்பாடு பட்டு அவரே படைத்துக் காத்ததை எங்கேயாவது அவரே அழிப்பாரா? த்ரிமூர்த்திகளில் ஆஸாமி வேறாகப் போனதால் வேறே ஒருத்தர் படைத்து, வேறே ஒருத்தர் காப்பாற்றியதை ருத்ர மூர்த்தி அழிக்கிறார். இங்கே மூன்றையும் செய்வது ஒரே ஆஸாமியல்லவா? அதனால் படைத்துக் காப்பது ஞானமாகவும், அழிப்பது அஞ்ஞானமாகவும் இருக்கிறது.

அவர் படைத்துக் காக்கிற ஞானம் நம் சரீரம் மாதிரி ஒருகாலத்தில் அழிவுபடுவதல்ல. அது அம்ருதமானது, அமரமானது. அதை யாராலும் அழிக்கமுடியாது.

இப்படியாக, உலக வாழ்வில் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்று மூன்று தெய்வங்கள் செய்வதையும் சேர்த்து வைத்து ஞான வாழ்வில் குரு ஒருவரே செய்கிறார். நினைத்துப் பார்த்தால் விசித்ரமாயிருக்கிறது! அழிவதும், சாச்வத ஸௌக்யத்தைத் தரவே முடியாததுமான லோக வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் பெரிசாக மூன்று தெய்வங்கள் வேண்டியிருக்கிறது! அழிவற்றதும், சாச்வத

Koviloor Digital Library

ஸுகமளிப்பதுமான ஞான வாழ்க்கையையோ மநுஷ்ய ரூபத்தில் தெரிகிற ஒரு குரு பண்ணிவிடுகிறார்! 'அவர்கள் (த்ரிமூர்த்திகள்) கோடாநுகோடி ஜீவன்களுக்குச் செய்ய வேண்டியிருக்கிறது, இவரோ (குருவோ) ஒரு ஸெலக்ட்-க்ரூப்புக்குத்தானே செய்கிறார்?' என்று ஸமாதானம் சொல்லலாம்.

ஆக, குரு எப்படி த்ரிமூர்த்திகளாயிருக்கிறாரென்று பார்த்தோம். த்ரிமூர்த்திகளும் சேர்ந்து ஒருத்தரான ஒரு ஸ்வாமி தத்தாத்ரேயர் என்று பார்த்தோமே, அவர் மாதிரி தான் எல்லா குருக்களுமே இருக்கிறார்கள்!

த்ரிமூர்த்திகள் சரீரத்தை ஸ்ருஷ்டித்து, பரிபாலித்து, ஸம்ஹரிப்பது போல சிஷ்யனுக்குள் ஞானத்தை ஸ்ருஷ்டித்து, பரிபாலித்து, அஞ்ஞானத்தை ஸம்ஹரிப்பதனால் உபமாலங்காரப்படி, ஒற்றுமை யம்சத்தைக்கொண்டு குருவை ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்று சொல்லியிருக்கிறது.

நமஸ்காரத்திற்கு உரியவராக

ஆனால் அந்த மூன்று பேரை அந்த மூன்று கார்யத்துக்காக நமஸ்காரம் பண்ணமுடியாமலிருக்க, இவருக்கு (குருவுக்கு) நமஸ்காரம்—தஸ்மை ஸ்ரீகுரவே நம: என்று சொல்லியிருக்கிறது. இங்கேதான் உபமாலங்காரம் என்றால் அதில் ஒற்றுமை அம்சத்தோடு வேற்றுமை அம்சமும் இருக்கத்தான் செய்யுமென்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அந்த மூன்று பேருக்கு ஏன் நமஸ்காரம் பண்ணமுடியவில்லை?

ஒருவரை நமஸ்காரம் பண்ணுவது எப்போது? ஒன்று, அவர்கள் இதுவரை பண்ணியது நமக்கு ஸந்துஷ்டி, த்ருப்தி அளித்தால் அதற்காக நன்றி பாராட்டி, அதன் அடையாளமாக நமஸ்கரிப்போம். அல்லது நாம் வேண்டிக்கொண்டு

Koviloor Digital Library

அதன்மேல் அவர் இனிமேல் நமக்கு ஸந்தோஷமான, பிடித்தமான ஒன்றைச் செய்வாரென்றால், நமஸ்கரித்துப் பிரார்த்தனை பண்ணிக்கொள்வோம்.

ப்ரஹ்மா நம்மை ஸ்ருஷ்டித்ததிலோ, விஷ்ணு நம்மைப் பரிபாலிக்கிற விதத்திலோ, மஹேச்வரன் நம்மை ஸம்ஹரிக்கப் போவதிலோ நமக்கு ஸந்தோஷமில்லை. நம்முடைய ஸ்ருஷ்டி, இதுவரை நடந்த 'பரிபாலிப்பு' எனப்படுவது ஆகிய சென்றகால, நிகழ்கால விஷயங்களுக்கு நம்மால் ப்ரஹ்ம விஷ்ணுக்களிடம் நன்றி பாராட்டி நமஸ்காரம் செய்யமுடியவில்லை. இனிமேலே அவர்கள் நமஸ்காரம் பெறும் விதத்தில் ஏதாவது செய்வார்களா என்றால்—வருங்காலத்தில், இந்த ஜன்மாவில் ப்ரஹ்மா நம்மைக் குறித்து எதுவும் செய்வதற்கில்லை. ஸ்ருஷ்டித்த தோடு அவர் கார்யம் முடிந்துவிட்டது. ஸரி, அடுத்த ஜன்மா நல்லதாகத் தரச் சொல்லி வேண்டிக்கொள்ளலாமா என்றால், அதிலும் அவருக்கு ஸொந்த அதிகாரம் எதுவுமில்லை. நம் கர்மாவைப் பொறுத்துப் பரமாத்மாவின் சட்டப்படி எப்படிப்பட்ட ஜன்மா வாய்க்கவேண்டுமோ அதைத்தான் அவர் தரமுடியும். ஆகையால் எதிர்காலத்தை உத்தேசித்தும் நாம் அவரை நமஸ்காரம் பண்ணுவதற்கில்லை. இதுவே தான் விஷ்ணுவுக்கும். நாம் கேட்டுக்கொள்வதற்காக அவர் இனிமேல் நல்ல ஸம்ரக்ஷணை கொடுக்கமுடியாது; கர்மாப்படி தான் பண்ணுவார்.

மஹேச்வரனுடைய தொழிலான ஸம்ஹாரம் இனிமேலே நடக்கவேண்டியதுதான்; இதுவரை அவர் செய்ததாக எதுவுமில்லை. முன் ஜன்மங்களில் ஸம்ஹாரம் பண்ணினாரே என்றால், அந்த ஜன்மங்களைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது. அதனால் அப்போது பண்ணின ஸம்ஹாரத்துக்காக இப்போது அவரை நாம் 'தாங்க்' பண்ணி நமஸ்கரிப்பதற்கில்லை. இனிமேலே இந்த ஜன்மாவில் அவர் ஸம்ஹரிக்கப் போகிறார் என்பதிலும் நாம் ஸந்தோஷப்பட்டு நமஸ்காரம் செய்வதற்கில்லை. அல்லது, "ஸம்ஹாரம்

Koviloor Digital Library

பண்ணுதேள், ஸ்வாமீ!'' என்று வேண்டுமானால் நமஸ்காரம் செய்து கேட்டுக்கொள்ளலாமா என்றால், அதற்கும் பலனிருக்காது. கர்மாவைப் பார்த்து அவர் ஆயுளை முடிக்கிறபடி முடித்துத்தான் வைப்பார்.

இப்படியாக இவர்கள் பண்ணியது, பண்ணுவது, பண்ணப்போவது ஆகிய எதிலும் நமக்குப் பிடித்தமானதைச் செய்யவில்லை என்பதால்தான் நமஸ்காரம் செய்யத் தோன்றவில்லை.

ஆனால், குரு பண்ணியது, பண்ணுவது, பண்ணப் போவது எப்படி இருக்கின்றன?

அஞ்ஞானிகளாக ஸம்ஸாரத்தில் மாட்டிக்கொண்டு திண்டாடிக் கொண்டிருந்த நமக்கும் கொஞ்சங்கொஞ்சமாவது ஆத்ம சாந்தி என்றால் என்னவென்று தெரிவதற்கு வழி திறந்துவிட்டாரே, அந்த வழியிலே நம் கையைப் பிடித்துக்கொண்டு அடி அடியாக நடத்தி வைக்கிறாரே— இப்படி அவர் செய்த, செய்கிற அநுக்ரஹத்திற்காக அவருக்கு நாம் எத்தனை நன்றி தெரிவித்தால்தான் போதாது? எத்தனை நமஸ்காரந்தான் பண்ணக்கூடாது?

இனிமேல் செய்யப்போகிறது?—அது இதுவரை செய்ததையெல்லாம்விட மஹா பெரிசு. இதுவரை ஏதோ ஒரு சின்ன இடுக்கு வழியாக வரும் ஒன்றிரண்டு ரச்மிதான் ஆத்ம ஸ்வாராஜ்யம் என்ற ஜ்யோதிலோகத்திலிருந்து நாம் அநுபவித்திருப்பது. இனிமேலே—அது எந்தக் காலத்தில் வேண்டுமானாலும் இருக்கட்டும்—முடிவாக என்றோ ஒரு காலத்தில் இவரால்தான் நாம் ஜ்யோதி லோகத்திலேயே ப்ரவேசித்து, இன்னும் அதற்கு மேலே, அந்த ஜ்யோதிஸ்ஸாகவே ஆகிவிடப் போகிறோம். அப்படி நம்மைப் பண்ணுவிக்கிற வரையில் அவர் ஓயமாட்டார். இந்த ஜன்மாவிலேயே நாம் அந்த லக்ஷ்யத்தை அடையாவிட்டாலும் பரவாயில்லை. நாம் எத்தனை ஜன்மா எடுத்தாலும் அவர் கூடவே வந்து நம்மை முடிவாக அதில் சேர்க்காமல் விடமாட்டார்,

Koviloor Digital Library

நிஜமான குரு என்றால் நிஜமான சிஷ்யனுக்கு இந்த நித்யானந்த ப்ராப்தியை உண்டாக்கும்வரையில் விடவே மாட்டார்—ஜன்ம ஜன்மாந்தரமானாலும் ஸரி.

நிஜமான குருவைப் பற்றித்தான் பேச்சு. அப்படியில்லாதவரைப்பற்றி எதற்கு நம் நேரத்தை வீணாக்கிக் கொண்டு, தொண்டைத் தண்ணியை வற்ற அடித்துக் கொண்டு ச்ரமப்படணும்?

ஆனபடியால், பண்ணின, பண்ணுகிற, பண்ணப்போகிற எல்லாவற்றாலும் நமக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவராக, நம்முடைய நன்றிக்கு மிகவும் பாத்திரராக இருக்கும் குருவுக்கு நாம் எத்தனை நமஸ்காரமும்—'அனந்த கோடி நமஸ்காரம்' என்று சொல்வதுண்டு, அப்படி—செய்யலாம் தான், செய்யவேண்டியதுதான்.

"குருர்—ப்ரஹ்மா குருர்—விஷ்ணு; குருர்—தேவோ மஹேச்வர:" என்று சொல்லி "தஸ்மை ஸ்ரீகுரவே நம:" என்று முடித்ததில் ஒன்றும் தப்பாக, பொருத்தமில்லாததாக இல்லை.

ப்ரஹ்ம—விஷ்ணு—ருத்ரர்கள் நம்முடைய கர்மாப்படி மட்டுமே பலன் தருகிறவர்கள்...(ஒன்றை மறந்துவிடப் படாது—இங்கே நாம் விஷ்ணுவையும், சிவனையும் பொதுவாக முழு முதற்தெய்வமாகப் பார்ப்பது போலப் பார்க்காமல், ஸ்திதி—ஸம்ஹார கர்த்தாக்களாக மாத்திரந் தான் பார்க்கிறோம். அப்போது நம் கர்மாப்படிப் பண்ணுவதற்கதிகமாக அவர்கள் எதுவும் செய்யமாட்டார்கள்.) குருவோ நாம் கர்மாவைக் கழிப்பதற்கு ஸஹாயம் செய்கிறார். கர்மா அது பாட்டுக்கு அதன் பலனைத் தந்து கொண்டிருந்தாலும் அது நம்மை பாதிக்காதபடி பக்தி, ஞானக் கவசம் போட்டு நமக்கு அடிபடாதபடிக் காப்பாற்றி விடுகிறார். கர்மாவின் வீர்யமே குறைவதற்கும் அவர் அநுக்ரஹிக்க முடியும். அவரே நம் கர்மாவை வாங்கிக் கொண்டுகூட நம்முடைய சுமையைக் குறைக்கமுடியும்,

Koviloor Digital Library

இப்படி வித்யாஸமிருக்கிறது—த்ரிமூர்த்திகள் கர்மாப் படி நடத்துவிக்கிறார்கள்; குருமூர்த்தி கர்மாவிலிருந்து கடத்துவிக்கிறார். ஆகையால் நம்முடைய நமஸ்காரங்களுக் கெல்லாம் உரியவராக இருக்கிறார். அதனால், "குருர்—ப்ரஹ்மா குருர்—விஷ்ணு: குருர்—தேவோ மஹேச்வர: தஸ்மை ஸ்ரீ குரவே நம:" என்பது ரொம்பவும் ஸரிதான்.

பரப் பிரம்மமாக

இன்னம் (ச்லோகத்தில்) ஒரு பாதம் அர்த்தம் சொல்லப் படாமலிருக்கிறது. அது என்ன?

குருஸ் - ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம

நிஜமான குருவைப் பற்றித்தான் பேச்சு என்றால் இதுவும் வாஸ்தவமாகத்தான் இருக்கவேண்டும். 'அவர் எப்படி ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன்?' என்று கேள்வி கேட்டு அதற்கு விஸ்தாரமாக பதில் சொல்லவேண்டியிருந்த மாதிரியில்லை இது: அவரே பரப்ரஹ்மம் என்பது.

நம்மை அவர் முடிவாக ஒரு லக்ஷ்யத்தில் சேர்க்கிறார், (அது) ஆத்ம ஸ்வாராஜ்யம், ஞான ஜ்யோதிஸ் என்றெல் லாம் சொன்னதற்கு அர்த்தம் அவர் நம்மையே பரப்ரஹ்ம மாக்குகிறார் என்பதுதான். அதாவது, 'பரப்ரஹ்மம் தானப்பா நீயாக வேஷம் போட்டுக்கொண்டிக்கிறது' என்று நமக்குப் புரியவைத்து, அந்த வேஷத்தைக் கலைத்து அதுவாகவே இருக்கும்படிப் பண்ணுகிறார். தாமே இப்படி ஆனவராயிருந்தாலொழிய நம்மை எப்படி இந்த மாதிரி ஆக்கமுடியும்? ஆகையினால்,

குருஸ் - ஸாக்ஷாத் பரம் - ப்ரஹ்ம

என்பதில் துளிக்கூட ஸந்தேஹமில்லை.

கரை ஏறியவர், ஏற்றுவிப்பவர்

ஸம்ஸார ஸாகரத்தைத் தாமும் தாண்டி பிறரை யும் தாண்டுவிக்கிறவர்தான் குரு என்பதே லக்ஷணம்

Koviloor Digital Library

(definition) தாமே ஸாகரத்தில் முழுகுகிறவரானால் இன்னொருத்தரை எப்படி அக்கரை சேர்க்கமுடியும்?

தான் கரையேறாமலே "அத்வைதா" என்று பெரிசாக லெக்சர் பண்ணிப் புஸ்தகம் போடுகிறவர் ப்ரொஃபஸர், டாக்டர் பட்டம் வாங்குகிறவரேயன்றி குரு இல்லை.

தான் கரை சேர்ந்துவிட்டு அப்படியே ஆத்மாராமராக ஒதுங்கியிருந்து விடுபவர்—அவரும், மஹான், ப்ரஹ்ம ஞானி என்று எந்தப் பெயர் வாங்கினாலும் குரு இல்லை. (இதனால் அவரைக் குறைவுபடுத்திச் சொல்வதாக அர்த்தம் இல்லை· யதார்த்தத்தைச் சொன்னேன்.)

தானும் கரை சேர்ந்து, பிறரையும் சேர்ப்பிக்கிற ப்ரஹ்ம ஞானிதான் குரு.

கரை சேர்வது, ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டுவது என்பது ப்ரஹ்ம ஞான ஸித்தி தவிர வேறெதுவுமில்லை.

ஆசார்யாள் குறிப்பாக இதைத்தான் குருவின் லக்ஷணமாகச் சொல்வார்: தானும் கரையேறி, பிறரையும் ஏற்றுவது.

ஆசார்யாள் அளிக்கும் ஆசார்ய லக்ஷணம்

"விவேக சூடாமணி"யில் ஆசார்யனைப் பற்றி வர்ணிக்கும்போது 'ஆசார்யாள்' என்றாலே இவர்தான் என்றாகிவிட்ட நம்முடைய பகவத் பாதாள்,

தீர்ணா: ஸ்வயம் பீம - பவார்ணவம் ஜநாந்
அஹேதுநா - (அ)ந்யாநபி தாரயந்த:

என்கிறார். (குரு) ஸ்வயமாக இந்த பயங்கரமான ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டியவராயிருக்கவேண்டும். 'பீம பவார்ணவம்' என்றால் பயங்கரமான ஸம்ஸார ஸாகரம். குருவாக இருப்பவர்கள் அதை, 'தீர்ணா:'—தாண்டியிருப்பவர்கள். இப்படி இருந்து கொண்டு, 'அந்யாந் அபி'—மற்றவர்களையும், 'தாரயந்த:'—தாண்டுவிப்பவர்களாக.,,

Koviloor Digital Library

தாண்டுவிப்பவர்களாக இருக்கிறுர்கள். 'இருக்கிறுர்கள்' என்று (ஆசார்யாள்) மொட்டையாகச் சொல்லி நிறுத்தி யிருக்கவில்லை. குருமார்கள் என்ன மாதிரி இதைச் செய்கிறுர்களென்பதை ச்லோகத்தின் முன் பாதியில் ரொம்பவும் அழகாகச் சொல்லியிருக்கிறுர். நான் சொன்னது பின் பாதி. முன் பாதி :

சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ
வஸந்தவல் - லோகஹிதம் சரந்த :

சொல்லழகோடு பொருளழகும் கூடிய வாக்கு. குருவுக்கு அநேக அடைமொழிகள் கொடுத்திருக்கிறுர். 'சாந்தா :'—பரம சாந்தர்கள்; 'மஹாந்த :'—மஹான் களாக இருப்பவர்கள்; 'ஸந்த :'—ஸாதுக்கள். அப்புறம் வருகிறதுதான் ரொம்பவும் அழகானது; ஆசாரியாளின் பக்குவமான கவியுள்ளத்தைக் காட்டுவது. 'வஸந்த வல்லோகஹிதம் சரந்த :'—'வஸந்த வத்' : வஸந்த காலத் தைப் போல; 'லோகஹிதம்' : உலக நலனை; 'சரந்த :' : ஆற்றுகிறவர்கள்.

வஸந்த காலம் வந்ததென்ருல் லோகமெல்லாம் பச்சுப் பச்சென்ருகி விடுகிறது. அதுவரைக்கும் பனியில் உலகம் நடுங்கிக்கொண்டிருந்தது. இலையுதிர் காலம் என்று மரத்தையெல்லாம் வழித்துவிட்டு, பார்த்தாலே என்னவோ மாதிரி இருந்தது. வஸந்த காலம் வந்ததோ இல்லையோ கிளு கிளு கிளு என்று எங்கே பார்த்தாலும் துளிர்விட்டு விடுகிறது. நடுக்கும் குளிர் போய், கொளுத்தும் வெய்யிலா கவுமில்லாமல் சீதோஷ்ணம் ஹிதமாக ஆகிறது. ஒரே மல்லிப் பூவும், மாம்பழமுமாக வாஸனை தூக்குகிறது.

ஆனுலும் வஸந்தம் என்று ஒன்று கண்ணுக்குத் தெரி கிறதோ? இல்லை. தன்னை அடையாளங்கூடக் காட்டிக் கொள்ளாமல், அப்படியொரு அஹங்கார லேசமே யில்லாமல், இத்தனை நல்லதைப் பண்ணி விடுகிறது!

Koviloor Digital Library

குருவும் இப்படித்தான். அஹங்கார லேசமும் இல்லாதவர். ஆனால் அடையாளம் காட்டிக்கொள்கிறாரே என்றால், அதுவும் நம்முடைய நிமித்தமாகத்தான். நமக்கு ஈச்வரனை அடையாளம் தெரியவில்லையே என்று தவித்துக் கொண்டிருக்கும்போது அவனே நம் பொருட்டுத் தன்னுடைய அடையாளமாக அனுப்பி வைப்பவர்தான் குரு என்பவராயிருக்க, அவர் அடையாளம் காட்டிக் கொள்கிறாரே என்று கேட்டால் அர்த்தமில்லை. ஆனால் 'நானுக்கும் பண்ணுகிறேன்' என்று பெருமைப்படுவதற்காக அவர் தம்மைத் தெரிவித்துக்கொள்ளவில்லை. நமக்கு அடையாளம் தேவை என்பதற்காகவே காட்டுகிறார். அவர் வாஸ்தவத்தில் அடையாளமில்லாத ப்ரஹ்மவஸ்து. 'நிர்லிங்கம்' என்பார்கள், அது. 'லிங்கம்' என்றால் அடையாளம்.

குருதான் இப்படிப் பண்ணுகிறாரென்று அடையாளம் தெரியாமலேயும் அநேக நல்லதுகள் நமக்கு அவை பாட்டுக்கு நடக்கிறாற்போலவே நடப்பதுண்டு. சட்டென்று ஒருநாள், 'இது எப்படி நடந்தது? இதனாலா? அதனாலா? அப்படித்தான் தோன்றிற்று. ஆனால் இது, அது எல்லாம் எப்படி இவ்வளவு சீராகச் சேர்ந்து நமக்கு ஸாதகமாகக் கார்யத்தை நடத்திக் கொடுத்தது? அதெல்லாமில்லை. குரு க்ருபைதான் ஸூக்ஷ்மமாக இப்படி எல்லாவற்றையும் சேர்த்து வைத்திருக்கிறது' என்று மனஸுக்குப் பளிச்சென்று தெரியும்.

வஸந்தத்துக்கும் குருவுக்கும் இவை எல்லாவற்றையும் விடச் சிறப்பான ஒற்றுமையை,—(ஆசார்யாளின்) ச்லோகத்தில் சொல்லியிருப்பதை—இதுவரை நான் சொல்லவில்லை. ஒரு சின்ன வார்த்தை, நாலு எழுத்தில், போட்டு அதை ஆசார்யாள் சொல்லியிருக்கிறார்.

'அஹேதுநா' என்பதுதான் அந்த வார்த்தை. "தீர்ணாஸ்வயம் பீம பவார்ணவம் ஜநாந் அஹேதுநா—(அ)ந்யாநபி தாரயந்த :" என்று போட்டிருக்கிறார்.

Koviloor Digital Library

'அஹேதுநா' என்றால், 'காரணமில்லாமல்'. காரணமே இல்லாமல் வஸந்த காலத்தைப்போல் குரு அருள் பண்ணிக்கொண்டு லோகத்தில் இருந்து வருகிறார். 'நிவஸந்தி'—இருக்கிறார்கள், வஸித்து வருகிறார்கள். ஆசார்ய புருஷர்கள் சாந்தர்களாக, மஹான்களாக, ஸாதுக்களாக, பயங்கரமான பவஸாகரத்தைத் தாண்டியவர்களாக, தாங்கள் தாண்டியதோடு பிறரையும் தாண்டுவிப்பவர்களாக, வஸந்த காலத்தைப் போல் ஒரு காரணமும் இல்லாமல் ('அஹேதுநா') உலக நலனைச் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்று ச்லோகம் சொல்கிறது.

இப்படி அவர்கள் அநுக்ரஹிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. எதற்காக அநுக்ரஹிக்கணும்? ராப் பகல் உபதேசம் பண்ணணும்? ஊர் ஜனங்களைக் கட்டிக்கொண்டு மாரடிக்கணும்? ஊர் ஊராகச் சுற்றணும்? நமக்கு இப்படி ஒரு அநுக்ரஹம் பெற என்ன யோக்யதை? இல்லாவிட்டால் நம்மகிட்டே ஏதாவது அவர் கடன்பட்டிருக்கிறாரா, அநுக்ரஹம் பண்ணியாகணுமென்று? இதெல்லாம் போக, அவருக்கு இதனாலே ஏதாவது லாபமுண்டா? லாபமில்லாததோடு இல்லை. ஆத்மாராமராக விச்ராந்தியாக உட்கார்ந்திருக்கக் கூடியவர் நம்முடைய உழப்பறிசல்களை அல்லவா இழுத்துப்போட்டுக் கொண்டிருக்கிறார்?

ஆக, நம்முடைய angle-லிலிருந்து பார்த்தாலும் ஸரி, அவருடைய angle-லிலிருந்து பார்த்தாலும் ஸரி, இப்படி குரு என்று ஒருவர் ஸதா ஸர்வதா அநுக்ரஹம் பண்ணிக்கொண்டிருப்பதற்குக் காரணமேயில்லை. "அஹேதுநா" தான் அவர் இப்படிச் செய்கிறார்.

நம்மை கடைத்தேற்றி அவருக்கு ஒன்றுமே ஆக வேண்டியதில்லை. நமக்கு அந்த யோக்யதை இல்லவேயில்லை. ஆனால் யோக்யதையையும் உண்டாக்கி அப்புறம் கடைத்தேற்றியும் தீர்வது என்று அவர் அசராமல் பாடுபடுகிறார்.

Koviloor Digital Library

'வஸந்தவத்' (வஸந்தத்தைப் போல) என்று போட்டதன் அழகு, பொருத்தம் இந்த 'அஹேதுநா'வில் தான் விளக்கம் பெறுகிறது.

பனியில் ஜனங்களெல்லாம் நடுங்கிக்கொண்டு, பயிர் பச்சை எல்லாம் கருகிக்கொண்டிருந்த ஸமயத்தில் லோகத்தையே தளிரும் இலையும் பூவும் பழமுமாக நானு வர்ணாலங்காரம் செய்து, பரம ஹிதமான சீதோஷ்ணத் தைக் கொடுத்துக்கொண்டு வஸந்தம், வஸந்தம் என்று ஒன்று வருகிறதே, அதற்கு என்ன காரணம் சொல்ல முடியும்? ஒரு காரணமும் தெரியவில்லை. "அஹேதுநா".

நம்மால் வஸந்தத்துக்கு ஏதாவது ப்ரதி ப்ரயோஜனம் உண்டோ? அப்படியே நாம் அதற்கு ஏதோ செய்ய முடியு மானாலும்கூட, அது தன்னை அடையாளமே காட்டிக்கொள்ளா மல்அல்லவா நல்லது பண்ணிக் கொண்டிருக்கிறது? ஆகை யால் அதை நாம் எப்படிப் பிடித்து நாம் செய்யக்கூடிய ப்ரதியைச் செய்வது?

குரு அடையாளம் காட்டிக்கொள்கிறார் என்று சொல்லி, அதற்குக் காரணம் பார்த்தோம். அதே மாதிரி இங்கேயும், 'வஸந்தத்துக்கு நாம் எதுவுமே (ப்ரதி) செய்யாத மாதிரி, செய்யமுடியாத மாதிரி குரு விஷயத்தில் இல்லையே! நம்மாலான சிறு சுச்ரூஷை, சின்னத் தொண்டு செய்யத் தானே செய்கிறோம்? த்ரவ்ய ரூபத்தில்கூடக் காணிக்கை கொடுக்கிறோமே? குரு சுச்ரூஷை, குரு தக்ஷிணை ரொம்பவும் முக்யமென்று சாஸ்த்ரத்திலும் நிறையச் சொல்லியிருக் கிறதே!' என்று கேட்கலாம். அவர் அடையாளம் காட்டிக் கொள்வதற்குச் சொன்ன காரணத்தைத்தான் இங்கேயும் மறுபடி சொல்லவேண்டியிருக்கிறது. அதாவது, நம் பொருட்டாகத்தான் அவர் சுச்ரூஷை, தக்ஷிணை ஆகிய வற்றை ஏற்றுக்கொள்வது. இதனாலே நமக்கு ஏற்படும் த்ருப்தி, நமக்குக் கிடைக்கும் புண்யபலன் ஆகியவற்றை உத்தேசித்துத்தான் அவர் இவற்றை ஏற்றுக்கொள்கிறாரே யன்றி, அவராக இவற்றை ப்ரதியாக எதிர்பார்த்தோ,

Koviloor Digital Library

இவற்றை நாம் செய்யவேண்டும் என்பதற்காகவோ நமக்கு உபதேசம் முதலிய அநுக்ரஹங்களைச் செய்யவில்லை.

காரணமின்றி வஸந்தம் லோகஹிதம் செய்வதுபோல குருவும் செய்கிறார்.

தன்னையறியாமல் ஒரு கருணை அவரிடம் சுரக்கிறது. ஈச்வரன் அப்படி அவரைச் சுரப்பிக்கச் செய்திருக்கிறான். அதனால் 'லோகம் நன்றாயிருக்கட்டும்' என்ற எண்ணம் அவருக்கு ஸதா காலமும் மனப்பூர்வமாக ஏற்பட்டு, ஹிதத்தைச் செய்து கொண்டிருக்கிறார். இதிலே முடிவாக அவர் செய்வது, 'பீம பவார்ணவம் ஜநாந்...தாரயந்த:' என்றபடி மக்களை பவக்கடலிலிருந்து கடத்துவிப்பது. அதை இவரால் எப்படிச் செய்யமுடிகிறதென்றால் இவர் தம்மளவில் அப்படிக் கடந்தவர், அதனால்தான். 'ஸ்வயம் தீர்ண:'— தாம் கடந்தவர். அந்த பலத்தினாலேயே 'அந்யான்'— பிறரை, 'தாரயந்த:'—கடத்துவிப்பவர்.

'உபதேச ஸாஹஸ்ரீ' என்பதாக ஆயிரம் உபதேச மொழிகள் கொண்ட ஒரு நூல் ஆசார்யாள் அநுக்ரஹித்திருக்கிறார்....ஆசார்யாள் என்றால் உடனே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் 'பஜ கோவிந்தம்' என்று நினைத்துக் கொள்வார்கள். அடுத்தபடியாக 'ஸௌந்தர்ய லஹரி' ப்ரஸித்தமாயிருக்கிறது. 'விவேக சூடாமணி' என்ற பேர் காதில் விழுந்தால் நூற்றிலே ஐம்பது பேர் ஆசார்யாளை நினைத்துக் கொள்ளலாம். (நூற்றில்) பத்து பேருக்குத்தான் 'உபதேச ஸாஹஸ்ரீ' பற்றித் தெரிந்திருக்கக்கூடும். அது உயர்ந்த தத்வங்களையும், அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவது எப்படி என்பதையும் சொல்கிற நூல். அதில் முன்பாகம் ப்ரோஸ், பின்பாகம் பொயட்ரி. இந்தப் புஸ்தகத்திலும் ஆரம்பத்திலேயே ஆசார்யாள் இதே கடைத்தேற்றும் விஷயத்தை குருவின் காரியமாகச் சொல்லியிருக்கிறார்:

வித்யாஸந்ததிச்ச ப்ராண்யநுக்ரஹாய பவதி நௌரிவ நதீம் திதீர்ஷோ:

Koviloor Digital Library

ஸம்ப்ரதாய வித்யையைப் பரம்பரை க்ரமத்தில் உபதேசிப்பதானது ஆற்றைக் கடக்க விரும்புகிறவனுக்குப் படகு உதவுகிற மாதிரி ஜீவ ஸமூஹத்துக்கு உதவுகிறது, அநுக்ரஹிக்கிறது என்று அர்த்தம்.

'நதீம் திதோர்ஷோ:'—நதியைக் கடக்க விரும்புபவனுக்கு: 'நௌரிவ'—படகு போல. 'நௌ' என்றாலும் 'நௌகா' என்றாலும் படகு என்று அர்த்தம். 'நௌ' தான் தமிழ் 'நாவாய்'. (கிறிஸ்துவ வேதத்திலே, ப்ரளயத்தில் பகவானருளால் நாவாயில் வைத்து ரக்ஷிக்கப்பட்டவனுக்கே நோவா (Noah) என்று பேர் சொல்லியிருக்கிறது! அதுவும் நம் வைவஸ்வத மநுவின் கதைதான்!)

ஸம்ஸாரப் பெருக்கில் படகு ஓட்டுபவர் குரு. 'கர்ண தாரன்' என்றால் படகுக்காரன். குருவுக்கும் அதே பெயர் சொல்வதுண்டு.

ஸம்ஸாரத்தைத் தானும் தாண்டி பிறரையும் தாண்டுவிக்கிறவர் என்பதையே வேறே விதமாகச் சொன்னால், தானும் ப்ரம்மமாக ஆகிப் பிறரையும் அப்படி ஆக்குகிறவர். அவர் ப்ரம்மமாயிருப்பதுதான் "குருஸ்-ஸாக்ஷாத் பரம்-ப்ரஹ்ம"

தாம் அப்படி ஆகாமல் வாய்வேதாந்தம் பேசுபவரில்லை. அவரும் நன்றாக விரிவாக வேதாந்தம் பேசத் தெரிந்தவர் தான். தன் ஸித்தாந்தத்துக்கு ஆதரவாக நன்றாக 'ஆர்க்யூ' செய்யும் 'பாஸிடிவ்' ஆன 'ஊஹ' சக்தி, மாற்று ஸித்தாந்தத்தை நிராகரிப்பதிலும் அப்படியே வன்மையாக எதிர்வாதம் செய்யும் 'அபோஹ' சக்தி—இவை இரண்டையும் சேர்த்து 'ஊஹாபோஹம்' என்று சொல்வார்கள். குரு இந்த இரு சக்திகளும் பெற்றவர். இதையும் ஆசார்யாள் சொல்லிவிட்டு,* இன்னம் அநேக லக்ஷணங்களையும் சொல்லி விட்டு, இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக அவரை "ப்ரஹ்மவித், ப்ரஹ்மணி ஸ்தித:" என்கிறார். 'ப்ரஹ்மவித்' என்றால்

---

* "உபதேச ஸாஹஸ்ரீ": முதல் அத்யாயம்-5

Koviloor Digital Library

ப்ரம்மத்தை அறிந்தவர். இப்படிச் சொன்னால்கூட அறிவு மட்டத்தில் மட்டும் intellectual-ஆக ப்ரொஃபஸர், டாக்டர் மாதிரித் தெரிந்து கொண்டதோடு ஸரியோ என்ற ஸந்தேஹம் வந்துவிடப் போகிறதே என்றுதான், உடனே 'ப்ரஹ்மணி ஸ்தித:' என்றும் போட்டிருக்கிறார். 'ப்ரஹ்மத்திலேயே நிலைத்து நிற்கிறவர்' என்று அர்த்தம். அதாவது ப்ரஹ்மமாகவே ஆனவர்.

ஆகையால் '"குருஸ் ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம" என்றால் அது ஸரிதான். தஸ்மை ஸ்ரீகுரவே நம: என்னும்போதுதான் மறுபடி கேள்வி வருகிறது.

ப்ரம்மமாயினும் நமஸ்காரத்துக்குரியவரே!

த்ரிமூர்த்திகள் த்ரிமூர்த்திகளாக மட்டும் தங்கள் தொழில்களைக் குறுக்கிக் கொண்டுள்ளபோது அவர்களுக்கு நமஸ்காரம் பண்ண நமக்குக் காரணமில்லையென்றால், ப்ரஹ்மமோ குறுகலே இல்லாமல் ஒரே விரிவாக, ஒரே பெரிசாக இருந்தாலும் அது எதற்கும்—மனஸ், வாக்கு ஆகிய எதற்குமே—எட்டாமலிருப்பதால் நாம் நமஸ்காரம் பண்ணினாலும் அது அதை எட்டாது. ப்ரஹ்மம் நிஷ்க்ரியமாக ஒன்றுமே செய்யாமலிருக்கும்போது நம்முடைய நமஸ்காரத்தை மட்டும் 'ரிஸீவ்' பண்ணிக்கொள்ளுமா என்ன? ஆகையால் அதை நமஸ்கரிப்பதில் அர்த்தமில்லையென்று பார்த்தோம். த்ரிமூர்த்திகளை நமஸ்கரிக்கும் தேவை நமக்கில்லை; ப்ரஹ்மத்துக்கு நம் நமஸ்காரம் தேவையில்லை!

அப்போது, குரு ப்ரஹ்மமென்றால் அவரை ஏன் நமஸ்காரம் பண்ணணும்?

ஸரி, குரு ஒரு விதத்தில் த்ரிமூர்த்திகளாக இருந்தாலும் அவருக்கு நாம் நமஸ்காரம் பண்ணவும் நிறைய நியாயமிருக்கிறதென்று பார்த்தோமல்லவா? அதேபோல இங்கேயும் இருக்குமா?

Koviloor Digital Library

ஆமாம். அப்படித்தான்.

எப்படியென்றால்—நிதர்சனமாகவேதான் தெரிகிறதே! குரு ப்ரஹ்மமானாலும் நமக்கு எட்டாமலா இருக்கிறார்? எந்தக் காரியமுமில்லை, எதையும் தெரிந்து கொள்வதில்லை, ஏற்றுக்கொள்ளுவதுமில்லை, தள்ளுவதுமில்லை என்றெல்லாம் நிஷ்க்ரியமாகவா அவர் இருக்கிறார்? எட்டாத அந்த நிஷ்க்ரியமேதானே நமக்கு எட்டியே ஆகவேண்டும் என்று இப்படி ரூபம் எடுத்துக்கொண்டு இந்த க்ரியாலோகத்தில் இத்தனை செய்கிறது?

அதனால் ப்ரஹ்மமாகவே இருக்கிற ப்ரஹ்மத்துக்கு நமஸ்காரம் வேண்டாம்தான் என்றாலும், குருவாக இருக்கிற ப்ரஹ்மத்துக்கு—ஸரியாகச் சொன்னால், அதே ப்ரஹ்மம் குருவாக வந்துள்ளபோது—அனந்த கோடி நமஸ்காரமும் பண்ணத்தான் வேண்டும். ப்ரஹ்மமாக இருப்பதோடு அப்படியே ஹாய்யாக இருந்துவிடாமல் குருவாகி இப்படி நம்முடைய இத்தனை கோணமாணலையும் நேராக்க வேண்டும் என்று வந்திருக்கும் கருணைக்கு நமஸ்காரம் பண்ணிக்கொண்டேயிருக்க வேண்டும்.

நமஸ்காரமே செல்வம்:
ஆசார்யாள் உணர்த்துவது

இந்த நமஸ்காரம்தான் நமக்கு மஹா பெரிய செல்வம். ஆசார்யாள் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்.

அவர் பால ப்ரம்மசாரியாக இருந்த காலத்தில் ஒரு ஏழை ப்ராம்மண ஸ்த்ரீக்கு இரங்கி லக்ஷ்மியிடம் ப்ரார்த்தித்துக் கொண்டு 'கனகதாரா ஸ்தவம்' பாடின கதை தெரிந்திருக்கலாம்.

அவர் ப்ரார்த்தித்துக்கொண்டவுடன் லக்ஷ்மி வந்து கனக வர்ஷமாகப் பொழிந்துவிட்டாள். அது ஏழை ப்ராம்மணக் குடும்பத்துக்காக. ஆசார்யாள் அதில் ஒரு குன்றிமணிகூட எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் லக்ஷ்மிக்கு

Koviloor Digital Library

த்ருப்தியாக இருக்குமா, அவர் கேட்டுக்கொண்டாரே என்று வேறே யாருக்கோ வாரி வழங்கிவிட்டு, இத்தனை அழகான ஸ்துதி பண்ணின அவதாரக் குழந்தைக்கு எதுவும் கொடுக்காமல் போவதற்கு? ஆசார்யாளுக்கும், 'வேறே யாருக்கோ தான் உன் அநுக்ரஹம் தேவைப்பட்டது; அதற்காக ப்ரார்த்தித்துக் கொண்டேன்; எனக்கு உன்னிடமிருந்து ஒன்றும் தேவையில்லை என்கிற மாதிரி இருந்துவிட்டால் அது மரியாதைக் குறைச்சல். அதனாலே நாம் சின்னவன் மாதிரி இருந்து மஹாலக்ஷ்மியிடம் நமக்காகவும் ஏதாவது கேட்டுக் கொள்ளவேண்டும்' என்று தோன்றிற்று. ஆனால் அவருக்கு எந்த ஆசையும், எந்தத் தேவையும் வாஸ்தவத்தில் இல்லாததால் என்ன கேட்பது என்று தெரியவில்லை. அவளையே நமஸ்காரம் பண்ணி அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமென்று நினைத்து நமஸ்கரித்தார். உடனேயே, "அவளிடம் வேறென்ன செல்வத்தைக் கேட்கவேண்டும்? இப்படி நாம் சின்னவராக நின்றுகொண்டு ஒருத்தரிடம் ப்ரியத்தோடு, அடக்கத்தோடு, நன்றியோடு நமஸ்காரம் செய்யும்போது மனஸுக்கு எவ்வளவு நிறைவாக இருக்கிறது? அதனால் இந்த நமஸ்காரமேதான் பெரிய செல்வம். 'இந்த நமஸ்காரச் செல்வத்தை எனக்குக் கொடு' என்றே ப்ரார்த்தித்துக் கேட்டு வாங்கிக்கொள்வோம்" என்று தோன்றிற்று. அதையே ச்லோகமாகப் பாடி விட்டார்.

ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய நந்தநாநி
ஸாம்ராஜ்ய தாந நிரதாநி ஸரோருஹாக்ஷி ।
த்வத் வந்தநாநி துரிதோத்தரணோத்யதாநி
மாமேவ மாதரநிசம் கலயந்து நாந்யே ॥

"நாந்யே"—முடிவாக, முடிந்த முடிபாக இந்த வார்த்தையைப் போட்டிருக்கிறார். "Final word" என்றால் அப்புறம் வேறே தீர்மானமில்லை என்று அர்த்தம்! 'நாந்யே' 'ந அந்யே' என்றால், 'வேறு எதுவும் இல்லை',—அதாவது 'வேறு எதுவும் வேண்டாம்.' "அம்மா, மஹாலக்ஷ்மி!

Koviloor Digital Library

உனக்குப் பண்ணும் நமஸ்காரமே செல்வநாயகியான நீ எனக்குக் கொடுக்கும் பெரிய செல்வம். அதைத் தவிர வேறே எதுவும் வேண்டாம்!"

'த்வத்—வந்தநாநி'—உனக்கான நமஸ்காரங்கள்; 'மாமேவ'—என்னை ('மாமேவ' ஸமாசாரத்திற்கு அப்புறம் வருகிறேன்); 'அநிசம்'—இடையருமல்; 'கலயந்து'—வந்தடையட்டும். 'ந அந்யே'—வேறே எதுவுமில்லை.

'எப்போது பார்த்தாலும் உன்னை வணங்கிக்கொண்டிருக்கும்படியான இந்த நமஸ்கார ஸ்ரீயைத் தவிர வேறு எதுவும் நான் உன்னிடம் ப்ரார்த்திக்கவில்லை.'

"செல்வத்துட் செல்வம் அருட்செல்வம்*" என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிருர். அருள் ஆண்டவன் செய்வது. ஆசார்யாள் சொல்லும் நமஸ்காரமோ நாம் செய்வது. நம்மைப் போன்றவர்கள் அவனுடைய அருட் செல்வத்தை வேண்டி நமஸ்காரம் செய்கிருேம். ஆசார்யாளோ நாம் நமஸ்கரித்து வேண்டி அதற்குப் பலனுக அப்புறம் அவன் அருளென்ற செல்வத்தைத் தரவேண்டுமென்று நினைக்கவில்லை. நாம் செய்கிற நமஸ்காரமே அவன் தரும் பெரிய செல்வம் என்று நினைத்து, இது தவிர "எதுவும் வேண்டேன்" என்கிருர்! "இது மட்டுமே என்னை அடையட்டும்": "த்வத்—வந்தநாநி...மாமேவ மாதரநிசம் கலயந்து."

'மாத:', 'அநிசம்' என்பவை சேர்ந்து 'மாதரநிசம்'. "மாதா!" என்று லக்ஷ்மியைக் கூப்பிட்டு, 'அநிசம்'—எப்போதும், இடையருமல்—நமஸ்கார லக்ஷ்மி தன்னிடம் தங்கியிருக்கட்டுமென்கிருர்.

அம்பா, மாதா: அம்மன், தாயார்

'மாதா', 'அம்பா' என்று இரண்டு வார்த்தைகள் எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஆனுல் குழந்தை வாயில்

* "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்"—குறள். 241

Koviloor Digital Library

'அம்பா' என்றுதான் சட்டென்று வரும். 'அம்மா', 'அம்பா' இரண்டும் ஒன்றுதான். 'மாதா' என்பது இலக்கண ரீதியான வார்த்தை. தமிழில் 'தாயார்' என்கிற மாதிரி. அம்பா, அம்மா என்கிறபோது ரொம்ப எளிமை. மாதா, தாயார் என்கிறபோது ஒரு ஸ்தானம் கொடுத்து உயர்த்தி வைத்தாற் போல இருக்கிறது. பரமேச்வர பத்னியாக இருக்கப்பட்ட தேவியைப் பற்றிச் சொல்லும்போது 'அம்மன்', 'அம்மன் ஸந்நிதி' என்கிறோம். 'அம்மன்' என்னும்போது 'அம்மா' என்பதை விடவும் குழந்தை பாஷையில் சொல்கிற மாதிரி யிருக்கிறது. அப்பா—அப்பன் மாதிரி அம்மா—அம்மன். ஸாதாரணமாக ஆண்பால் பெயர்கள்தான் 'ன்'னில் முடியும். குழந்தை பாஷைக்கு இலக்கணமில்லை. அதனால் 'அம்மா'வும் 'அம்மனு'கி விடுகிறது. பரமேச்வர பத்னியை அம்மன் என்கிறோம். பொது வழக்கிலேயே பரமேச்வர பத்னியை அம்பா, அம்பாள் என்று சொல்லுகிறோம். மஹா விஷ்ணுவின் பத்னியைப் பற்றிச் சொல்லும்போதோ 'தாயார்', 'தாயார் ஸந்நிதி' என்கிறோம்.

(ஸம்ஸ்க்ருத அகராதியான) 'அமர (கோச)'த்தில் பார்த்தாலும் இப்படியே இருக்கிறது. விஷ்ணு பத்னியைச் சொல்லும்போது, "இந்திரா, லோக மாதா" என்று குறிப்பிட்டுவிட்டு, சிவ பத்னியைச் சொல்கிறபோது, "அபர்ணா பார்வதீ துர்கா ம்ருடாநீ சண்டிகா அம்பிகா" என்று, 'அம்பா'ப் பேருக்கே அழகு பண்ணி 'அம்பிகா' என்று குறிப்பிட்டிருக்கிறது.

தனம் வேண்டுமென்றே லக்ஷ்மியிடம் போகிறோமாத லால், அவளை நிறைய தனம் படைத்த பெரிய சீமாட்டியாக பாவித்துத்தான் 'தாயார்' என்றும் 'மாதா' என்றும் மரியாதை செய்கிறோம் போலிருக்கிறது!

'மாத: அநிசம் கலயந்து நாந்யே' என்று மாதாவாக அவளைக் கூப்பிடுபவர், 'ஸரோருஹாக்ஷி' என்றும் ச்லோகத்

Koviloor Digital Library

தில் பெயர் கொடுத்திருக்கிறார். தாமரை போன்ற கண் படைத்தவள் என்று அர்த்தம். பகவானுக்கும் புண்டரீ காக்ஷன் என்று இதே அர்த்தத்தில் பெயரிருக்கிறது. ஸதிபதி கள் ஒற்றுமை.

நமஸ்காரம் அளிக்கும் பயன்கள்

'எனக்கு உன் நமஸ்காரமே போதும்' என்று சொல்லும் ஆசார்யாள், " 'அது தன்னாலேயே எனக்கு ஒரு நிறைவைத் தருகிறது; அதனால் அதுவே போதும்' என்று சொல்வதுகூட அவ்வளவு அடக்கமாக இல்லை. 'நான் ரொம்பப் பக்வியாக் கும் (பக்குவம் பெற்றுவிட்டவனுக்கும்)! மற்றவர்கள் தனம், தான்யம், ஆரோக்யம், ஸந்தானம் என்றிப்படிக் காம்யமாக எட்டுவித ஐச்வர்யங்களை அஷ்ட லக்ஷ்மியாயுள்ள உன்னிடம் ப்ரார்த்தித்து நமஸ்கரிக்கும்போது, நான் மாத்திரம் அதில் எதையும் பொருட்படுத்தாமல், நீ எதையோ கொடுத்து நான் கீழே நின்று வாங்கிக் கொள்கிறவனாக இல்லாமல், நானாகவே நமஸ்காரம் செய்து, நானாகவே அதில் நிறைந்து விடுகிறேனுக்கும் என்று சொல்கிற தோரணையில் இருக் கிறது"—என்று நினைத்திருப்பார் போலிருக்கிறது! அதனால் நமஸ்கார க்ரியையே ஒருவரை நிறைவித்து விடுவதாகச் சொல்லாமல் அது இன்னின்ன பிற பலன்களைத் தருகிறது, 'ஆனபடியால் இத்தனை பலனைத் தரும் நமஸ்காரமே எனக்குப் போதும்' என்கிறார். லக்ஷ்மிக்குச் செய்யும் நமஸ்காரம் இந்தப் பலன்களைத் தருகிறதென்று சொன்னால் லக்ஷ்மியே தருகிறாளென்றுதான் தாத்பர்யம். அதாவது அவள் கொடுத்தே இவர் வாங்கிக்கொள்கிறாரென்று அடக்கத்துடன் காட்டுகிறார். (அவை) என்னென்ன பலன்கள்?

"ஸம்பத்கராணி"—நிறைய ஸம்பத்தைக் கொடுக்கிறது.

"ஸகலேந்த்ரிய நந்தநாநி"—எல்லா இந்த்ரியங்களுக்கும் இனியவற்றை அளிக்கிறது. அதாவது ஸகல போக போக்யங்களையும் அளிக்கிறது.

Koviloor Digital Library

"ஸாம்ராஜ்ய தான நிரதாநி"—பக்தர்களுக்குப் பெரிய ஸாம்ராஜ்யத்தையே வழங்கவேண்டுமென்று உத்ஸாஹத்தோடு ஈடுபட்டிருக்கிறது. "ராஜராஜேச்வரீ, ராஜ்ய தாயிநீ", அப்புறம் "ராஜபீட நிவேசித நிஜாச்ரிதா" (மெய்யடியார்களை அரியணையிலே ஏற்றுவிப்பவள்) என்றெல்லாம் "லலிதா ஸஹஸ்ரநாம"த்திலும் வருகிறது.

மற்ற காரணங்களோடு, லௌகிகமான பலன்களைச் சொன்னால்தான் ஜனங்களுக்கு நமஸ்காரம் செய்யத் தோன்றுமென்று ஆசார்யாளுக்குப் பட்டதால் இப்படியெல்லாம் சொல்ல ஆரம்பித்தார். இப்படி (ச்லோகத்தின்) முதல் பாதியில் சொல்லி முடித்து, இவ்விதமான பலன்களைத் தரும் நமஸ்காரங்கள்—த்வத் வந்தநாநி: உனக்குரிய நமஸ்காரங்கள்—என்று சொன்னவுடன் அவருக்கு ஒரு யோசனை வந்துவிட்டது.

நிறைய ஸம்பத், ஸகலேந்த்ரிய ஸந்துஷ்டி, பெரிய ராஜ்யாதிகாரம் ஆகியவற்றை மட்டும் சொல்லி நிறுத்தி விட்டால், எல்லாம் இஹலோக அநுக்ரஹங்களாகவே அல்லவா ஆகிவிடுகிறது? "இவற்றைத் தருவதான நமஸ்காரங்கள் என்னை வந்தடையட்டும்" என்று ஆசார்யாளால், ஸொந்த வாழ்க்கையில் கொஞ்சங்கூட உலகப் பற்றில்லாத ஆசார்யாளால் எப்படி ப்ரார்த்திக்க முடியும்?—இதைப்பற்றி ஆலோசித்துப் பார்த்தார்.

மஹாமதியான ஆசார்யாளுக்கு ஆலோசனை, யோசனை, எல்லாம் க்ஷணமாத்ரம்தான். அல்லது அவ்வளவுகூட இல்லை. ச்லோகம் கவனம் பண்ணிக்கொண்டு போகிற போதே அடுத்த வார்த்தை போடுவதற்குள்ளே பதில் வந்துவிடும். நிறுத்தாமலே, தங்கு தடையில்லாமல் முழுக்கப் பூர்த்தி பண்ணிவிடுவார்.

இப்போது ஸம்பத்து முதலான பலன்களைச் சொல்லி இவற்றைத் தரும் நமஸ்காரங்கள்—'த்வத் வந்தநாநி' என்று பின்பாதியை ஆரம்பித்தவுடன், "என்னடாது! எல்லாம்

Koviloor Digital Library

லௌகிகமாகவே சொல்லிவிட்டோமே!" என்று நினைத்த ஆசார்யாள், உடனேயே குறையை நிவர்த்தி செய்வதாக, அடுத்தாற்போல் "துரிதோத்தரணோத்யதாநி" என்று மின்னல் வெட்டுகிற வேகத்தில் போட்டுவிட்டார்! "வந்தநாநி" என்ற வார்த்தைக்கு முன்னால் லௌகிகமான பலன்களாக இரண்டு மூன்று சொன்னவர், அந்த வார்த்தைக்குப் பின்னால் ஆத்மார்த்தமாக "துரிதோத்தரணோத்யதாநி" என்று ஒரு பலனைச் சேர்த்துவிட்டார். கவிதைகளில் வசன நடைபோல இல்லாமல் முன்னே பின்னே வார்த்தைகளை மாற்றிப் போடலாம். அப்படிப் போடுவதே ஒரு அழகு. அதிலும் ஸம்ஸ்க்ருத பாஷையிலோ வார்த்தைகளை பல தினுஸிலே கோத்து வாங்கி விளையாடும் ஸ்வாதந்திரியம் ஜாஸ்தி. ஆகையால் ச்லோகரூபத்திற்குக் கொஞ்சங்கூட பங்கம் ஏற்படாமலே,

த்வத் வந்தாநாநி துரிதோத்தரணோத்யதாநி

என்று போட்டுவிட்டார்.

"இன்ஸ்பிரேஷன்" என்று பொதுவாகச் சொல்லுவதன் உசந்த நிலையில், ஒரு திவ்ய ஆவேசத்தில்தான் ஆசார்யாள் போன்றவர்கள் கடகடவென்று கவிதையாகக் கொட்டியது. அதற்கு நடுவிலேயே கொஞ்சம் யோசனை, புத்தி பூர்வமான சிந்தனை செய்ததாக நம் பார்வையில்—அல்லது நம்முடைய ராஸிக்ய பாவனைக்குப் பிரீதி ஏற்படும் விதத்தில்—இப்படியெல்லாம் செய்வது.

ஒரு திருத்தம்: 'துரித உத்தரணம்'

புஸ்தகத்திலே—அச்சில் வந்திருக்கும் எடிஷன்களில் நான் பார்த்த பலவற்றிலே—தப்பாக இருக்கிறது. "துரிதாஹரணோத்யதாநி" என்று போட்டிருக்கிறது. ஸரியான பாடம், "துரிதோத்தரணோத்யதாநி" என்பதே. திருத்திக் கொள்ளவேண்டும்.

'துரிதம்' என்றால் பாபம்.

Koviloor Digital Library

இப்போது தப்பாக ஸங்கீதத்திலே 'துரித காலம்' என்று சொல்கிறுர்கள்! வேகமாகப் பாடுவதை அப்படிச் சொல்கிறுர்கள்! விளம்பமாகப் பாடினுல்தான் புண்யம், வேகமாகப் பாடினுல் பாபம் என்று அர்த்தமில்லை! 'த்ருதம்' (Drutam) என்றுல் 'வேகமாக' என்று அர்த்தம். அதைத்தான் 'துரிதம்' (Duritam) என்று 'பாப'மாக மாற்றிவிட்டாற்போலிருக்கிறது! ஒரே வேகமாக அடித்துக் தள்ளிக்கொண்டு பாடினுல் பாவம் எல்லாம் போய், 'ஐயோ பாவமே!' என்ற மாதிரிதான் ஆகிவிடும்! 'த்வரிதம்' (Tvaritam) என்றும் ஒரு வார்த்தை இருக்கிறது. அதற்கும் 'வேகமாக' என்றே அர்த்தம். அதுவும் இப்படித் திரிந்திருக்கலாம்.

துரிதம் என்றுல் பாபம். எந்தக் கர்மாவுக்கும் ஸங்கல்பம் செய்துகொள்ளும்போது "துரித-க்ஷய-த்வாரா பரமேச்வர ப்ரீத்யர்த்தம்" என்கிறோம். ஈச்வரனை ப்ரீதி செய்வதே நம்முடைய லக்ஷ்யம். நாம் பண்ணிய பாவம் ஈச்வரப்ரீதி கிடைக்கவொட்டாமல் தடுக்கிறது. பாபம் நசித்தாலே, துரிதம் க்ஷயமானுலே, அதன் வழியாக—(அதாவது) துரிதக்ஷயத்வாரா—ஈச்வர ப்ரீதியை ஸம்பாதிக்க முடியும்.

'துரிதாஹரணோத்யதாநி' என்பது 'துரித ஆஹரண உத்யதாநி' என்று பிரியும். ஹரணம், ஆஹரணம் என்ற இரண்டுக்கும் ஒரே அர்த்தம்தான். போக்குவது என்று இங்கே அர்த்தம். 'உத்யதாநி' என்றுல் 'முனைந்திருப்பவை.' 'துரிதாஹரணோத்யதாநி' என்றுல் 'பாபத்தைப் போக்குவதில் முனைந்திருப்பவை'. மஹாலக்ஷ்மிக்குச் செய்யும் நமஸ்காரங்கள் நம்முடைய பாபங்களைப் போக்கடிப்பதில் முனைந்து செயல்படுகின்றன என்று அர்த்தம். (இது) ஸரியாகத்தானே இருக்கிறது என்று தோன்றும்.

ஆனுல் ஹரணம், ஆஹரணம் இரண்டுக்கும் ஒரே அர்த்தம் இலக்கணப்படி இருந்தாலும், டிக்ஷனரியில் அப்படிப் போட்டிருந்தாலும், வழக்கில் 'ஹரணம்' என்றுலே 'போக்குவது' என்றும் 'ஆஹரணம்' என்றுல்

Koviloor Digital Library

'கொண்டு வந்து சேர்ப்பது' என்றும்தான் வைத்துக்கொண்டிருக்கிறோம். 'ஹரண'த்துக்கு வலிவூட்டுவதற்காக, மேலும் எதிரிடை அர்த்தம் தரும் 'அப' சேர்த்து 'அபஹரணம்' ('ஸீதாபஹரணம்') என்று சொல்வதும் வழக்கமாயிருக்கிறது. 'ஆஹரணம்' என்று முதலில் சேர்க்கிற 'ஆ' இப்படி எதிரிடையாக 'போக்குவது' என்ற அர்த்தம் கொடுக்காமல், இன்னும் வலுவாகச் 'சேர்த்துவைப்பது' என்றே பொருள் கொடுக்கும். ஆனாலும், 'ஆஹரணம்' என்றால் போக்குவது என்றும் அர்த்தமிருப்பதால் அப்படிப் போட்டிருக்கவே முடியாது என்று ஸாதிப்பதற்கில்லை.

பின்னே ஏன் தப்புப் பாடம், திருத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னேனென்றால் "துரிதோத்தரணோத்யதாநி" என்னும்போதுதான் இதைவிட சிறப்பான, பொருத்தமான பொருள் கிடைக்கிறது.

'துரித உத்தரண உத்யதாநி' என்பது (இதன்) பதப் பிரிவினை. 'ஆஹரண' என்பதற்குப் பதில் 'உத்தரண' (uddharana).

'உத்தரணம்' என்பது 'உத்தாரணம்' என்றும் நீளும். இதற்குக் குறிப்பாக என்ன அர்த்தமென்றால் பிடுங்கி எறிவது. 'பிடுங்குவது' என்றால், எதுவோ ஒன்று உள்ளே புதைந்து போயிருக்கிறது, அதைத்தான் பிடுங்கவேண்டியிருக்கிறது என்று உள்ளர்த்தம் கொடுக்கிறது. தரைமட்டத்தில் இருப்பதைப் 'பிடுங்க' வேண்டியதில்லை. அப்படியே எடுத்துப் போட்டால் போதும். புதைந்திருக்கும்போது, அதாவது ஆழ உள்ளே போய் மாட்டிக்கொண்டிருக்கும் போதுதான் பிடுங்குவதற்கு அவசியம் ஏற்படுகிறது. (க்ருஷ்ணர்) கோவர்த்தனோத்தரணம் பண்ணினார் என்கிறோம். அதன் முழு அர்த்தம் புரியாமலே, பூமி மட்டத்துக்கு ஸமனாயிருந்த மலையடிவாரத்தில் கையை விட்டுத் தூக்கிவிட்டாரென்று நினைத்து, இதையே அத்புதமாகக் கொண்டாடுகிறோம். அவரானால் இன்னம் பெரிய அத்புதமாக, பூமிக்குக் கீழேயும் ஆழமாகக் கையைவிட்டு

Koviloor Digital Library

மலையை ஆட்டிப் பிடுங்கி வெளியே தூக்கி "உத்தரண"மாகச் செய்திருக்கிறார்—அநாயாஸமாக ஒரு நாய்க் குடையைப் பிடுங்குகிற மாதிரி!

ஆலயத் திருப்பணியை 'ஜீர்ணோத்தாரணம்' என்கிறோம். அர்த்தம் தெரியாமலே சொல்கிறோம். 'ஜீர்ணம்' என்றால் கிலமானது, இடிந்து போனது என்று அர்த்தம். கோவில் முழுதுமோ, அல்லது அதில் பல இடங்களோ இடிந்துபோன போது என்ன செய்யவேண்டியிருக்கிறது? மேலெழ எதையோ வாரிக் கொட்டிவிட்டால் போதுமா? அல்லது ஒரே போடாகப்போட்டு உள்வரை நொறுக்கித் தள்ளி விட்டால் ஸரியாயிருக்குமா? இப்படியெல்லாமும் கொஞ்சம் செய்யவேண்டியிருக்கும். ஆனால் இதைவிடக் கஷ்டமாக ஒன்று நிறையப் பண்ணும்படியிருக்கும். மேலே இடிந்தும், அதோடு அடிவாரமும் கலகலத்துப் போயும் இருக்கும் பல இடங்களில்கூட உள்ளே கிண்டுகிண்டாகக் கற்கள் இருக்கும். இவற்றை அப்படியே வாரிக் கொட்டவும் முடியாது; நொறுக்கித் தள்ளவும் முடியாது. உள்ளேயிருந்து பிடித்து இழுத்து இழுத்தே அதாவது பிடுங்கியே வெளியேற்ற வேண்டியிருக்கும். கோபுரத்தில், ப்ராகாரத்தில் மரம், செடிகள் வேர்விட்டு முளைத்திருந்தால் இப்படி உள்ளே விட்டுக் குடைந்தே பிடுங்கிப் போடவேண்டும். உள்ளே ஆழமாகச் சொருகிக் கொண்டிக்கும் கல், மரம், செடி முதலியவற்றை இழுத்துப் பிடுங்கித் தள்ளுவதுதான் ஜீர்ணோத்தாரணம். முள்ளைப் பிடுங்கி எடுத்துப் போடுவதைக் 'கண்டகோத்தரணம்' என்று சொல்வார்கள்.

நாம் ஜீர்ணோத்தாரணம் என்பதை Renovation என்பதற்கு நேர் வார்த்தையாக நினைத்துக் கொண்டிருக் கிறோம். அதாவது புதிசு பண்ணுவது, 'புதுக்குவது' என்கிறார்களே அது, என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மையிலே பழசை இழுத்துப் பிடுங்கிப்போடுவது என்றே அர்த்தம்.

Koviloor Digital Library

கலியிலும் அவதார புருஷர்கள் ஜகத்தை உத்தாரணம் செய்ய வருகிறார்களென்றால் என்ன அர்த்தம்? "ஜகதோத் தாரணா!" என்று தாஸர் ஏன் பாடுகிறார்? அதர்மச் சேற்றில் அழுந்திப் போயிருக்கும் ஜகத்தை அவர்கள் அடியில் கை கொடுத்துப் பிடுங்கி வெளியே இழுத்துக்கொண்டு வருவதால்தான்.

வெளியே இழுத்ததை எறியத்தான் வேண்டுமென் றில்லை. அதை நல்லபடியும் பண்ணலாம். அப்படித்தான் இவர்கள் உலகத்தை அதர்மத்திலிருந்து இழுத்துக்கொண்டு வந்த பின் அதற்கு நல்லது பண்ணுவது. அதர்மத்திலிருந்து விடுபடுத்துவதே நல்லதுதான்! கோவர்த்தனகிரியை இழுத்தெடுத்த பின் பகவான் எறிந்துவிடாமல் குடையாக அல்லவா உபயோகப்படுத்தினார்? அதற்குத்தானே அதைப் பிடுங்கியதே?

பிடுங்கி இழுத்து வெளியில் கொண்டு வருவதே உத்தரணம். அதற்கப்புறம் அதை எறிந்துவிடலாம், அழித்து விடலாம், அல்லது நன்றாக உருப்படுத்தலாம், உபயோகம் செய்து கொள்ளலாம். அந்தந்த Context-ஐ (ஸந்தர்பத்தை) வைத்து இவற்றில் எது என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளவேண்டும்.

நம் மனஸுக்குள்ளே ஆழமாக முள் செடி மாதிரி வேரோடித் தைத்திருக்கும் பாபத்தை அப்படியே பிடுங்கி எடுத்துப் போடுவதுதான் "துரிதோத்தரணம்." உள்ளே தப்பான ஸாமான் சொருகிக் கொண்டிருந்தால் எப்படி சரீரத்துக்கு ஆபத்தோ, அப்படி நம்முடைய பாபங்கள் உள்ளே போய் சொருகிக்கொண்டிருப்பது உயிருக்குப் பெரிய ஆபத்து. அதை நன்றாகக் கல்லி எறிவது 'துரிதோத் தரணம்'.

ஆகையினால், 'போக்குவது' என்று லேசாக அர்த்தம் தருகிற வார்த்தையான 'ஆஹரணம்' என்றில்லாமல், ஜன்ம ஜன்மாந்தரமாக நாம் பண்ணின பாபம் பெரிய முள்ளு

Koviloor Digital Library

மர்மாக நமக்குள்ளே வேரோடியிருக்கிறதை பெரிய கடப்பாரை, அது, இதைப் போட்டு நெம்பிப் பிடுங்கி வெளியிலே இழுத்து அழித்துப் போடவேண்டுமென்று இத்தனை அர்த்தத்தை ரத்னச் சுருக்கமாகக் கொடுக்கும் 'உத்தரணம்' என்றிருப்பதுதான் பொருத்தம்.

நம்முடைய ஸகல பாபத்தையும் நிவ்ருத்தி செய்து வாழ்க்கைக்கு ஜீர்ணோத்தாரணம் செய்துவிட்டால் அப்புறம் ஒரே சுத்தந்தான்; அம்ருதத்தாலேயே கும்பாபிஷேகந்தான்! இதை நமஸ்காரமே ஸாதித்துக் கொடுத்து விடுகிறது என்று காட்டுகிறார். அதனால், "அந்த நமஸ்காரம் என்னை வந்தடையட்டும்" என்கிறார். "மாமேவ கலயந்து"—"என்னை வந்தடையட்டும்."

மறுமைப் பயன் கோரி

நமஸ்கார பலனாக முதலில் சொன்ன ஸம்பத்து, ஸகல இந்த்ரிய ஆனந்தங்கள், ஸாம்ராஜ்யாதிகாரம் என்ற மூன்றில் எதையுமே தாம் ஏற்க முடியாமலிருக்கும்போது, இவற்றைத் தர வல்லதான நமஸ்கார க்ரியை தமக்கு வேண்டுமென்றால் ஸரியாயில்லையே! அதனால்தான் தாமும் விரும்புவதற்குரிய பலனாக வேறே என்ன சேர்க்கலாமென்று யோசித்து—ரொம்ப யோசிக்கவில்லை; க்ஷணம் அல்லது அதற்கும் குறைச்சலாக யோசித்து—"துரிதோத்தரணம் செய்வதாகவும் நமஸ்கார க்ரியை இருக்கிறதே! ஆகையால் இந்தப் பலனை நாமும் வேண்டிக்கொள்வதாக (ச்லோகத்தை) மேற்கொண்டு கவனம் பண்ணி முடித்துவிடலாம்" என்று முடிவு பண்ணி அப்படியே செய்துவிட்டார். வாஸ்தவத்தில் துரித லேசமும் அண்ட முடியாத பவித்ர புருஷர் நம் ஆசார்யாள். ஆனாலும் நமக்காக, நமக்கு ப்ரார்த்திக்கக் கற்றுக்கொடுக்கிறபோது, நம் நிலையில் தம்மையும் நிறுத்திக்கொண்டு, தமக்கும் துரித நிவ்ருத்தி தேவையாயிருப்பது போலச் சொல்லி, அதை அளிக்க

Koviloor Digital Library

வல்லதான நமஸ்கார ஸ்ரீயை மஹாலக்ஷ்மியிடம் வேண்டிக் கொண்டு ச்லோகத்தைப் பூர்த்தி பண்ணிவிட்டார்.

ஸம்பத்து, ஸர்வேந்திரிய ஆனந்தம், ராஜ்யாதிகாரம் ஆகியவை இம்மையின்பங்களாகவே இருக்க, இந்த பாபோத் தரணம்தான் மறுமைக்கு உதவுவதாக இருப்பது. இது ஒன்றுதான் பாரமார்த்திக ப்ரயோஜனம் உடையது. இந்த 'டிஸ்டிங்க்ஷ'னைத் தெளிவு படுத்தும் விதத்தில் முதல் மூன்றை 'வந்தநாநி' என்பதற்கு முன்னடி போட்டு, அப்புறம், தனியாகப் பிரித்து, 'வந்தநாநி' என்பதற்குப் பின்னடி "துரிதோத்தரணோத்யதாநி" என்று போட்டு ச்லோகத்தை அமைத்திருக்கிறது.

"ஏவ" எதில் சேர வேண்டும்?

"மாமேவ கலயந்து"—"வந்தநாநி மாம் ஏவ கலயந்து" "நமஸ்காரக் கார்யம் என்னை வந்தடையட்டும்."

"மாம் கலயந்து" என்றாலே "என்னை வந்தடையட்டும்" என்று அர்த்தம் ஏற்பட்டுவிடும். "மாம் ஏவ கலயந்து" என்று "ஏவ" சேர்த்துச் சொன்னால், "என்னையே வந்தடையட்டும்," "என்னொருவனையே வந்தடையட்டும்," "என்னை மட்டுமே வந்தடையட்டும்" என்று அர்த்தமாகும். அதாவது நமஸ்காரம் வேறே யாரையும் போய்ச் சேராமல் ச்லோக கர்த்தாவுக்கு மட்டுமே கிடைக்கவேண்டுமென்று ஆகும். ஆசார்யாள் பிறருக்காகவே, 'பிறர்க்குரியாளர்' என்னும்படி யாகவே, வாழ்ந்தவர். மஹான்களாக, ஆசார்யர்களாக இருக்கிறவர்களைப் பற்றி, 'ஒரு ப்ரதிபலனும் எதிர்பாராமல் வஸந்தகாலம் மாதிரி லோகஹிதம் செய்பவர்கள்' என்று சொன்ன அவரே அப்படி இருந்தவர்தான். அப்படிப் பட்டவர் எங்கேயாவது நமஸ்கார க்ரியையானது வேறே எவருக்குமில்லாமல் தம் ஒருவருக்கே சேரணுமென்று mono-polise (ஏக போக்கியம்) பண்ணிக்கொள்ள நினைப்பாரா? ஆனாலும் போதுமான யோசனை இல்லாமல் இப்படிச் சில பேர் அர்த்தம் பண்ணிக்கொண்டிருப்பதோடு, அதுவும்

Koviloor Digital Library

போதாமல், கடைசியில் "கலயந்து நாங்யே" என்று இருப்பதையும் "(கலயந்து) நாந்யம" என்று பாடபேதம் பண்ணி தப்புக்கு மேலும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்கள்! "நாந்யே (ந அந்யே)" என்று நாம் வைத்துக்கொண்ட பாடப்படி, "எனக்கு வேண்டியதெல்லாம் நமஸ்கார க்ரியை தான். வேறே எதுவுமில்லை" என்று அர்த்தம். "நாந்யம் (ந அந்யம்)" என்றாலோ, "என்னையே நமஸ்கார க்ரியை சேரணும். வேறே எவரையுமில்லை "என்று ஆகிவிடும்! தனக்கு மட்டுமே என்று selfish-ஆகச் சொன்னதை இன்னும் வலியுறுத்தி, "ஆமாம், வேறே யாருக்குமில்லை" என்று சொன்னதாகி விடும்! ஆசார்யாள் எங்கேயாவது அப்படிச் சொல்லியிருப்பாரா?

'நாந்யே'வா, 'நாந்ய'மா, என்று சில பேர் யோசித்து, "இந்த வம்பே வேண்டாம். 'நாந்யே'யும் வேண்டாம், 'நாந்ய'மும் வேண்டாம். 'மாங்யே' என்று போட்டு முடித்து விடலாம்" என்று நினைத்து,

மாமேவ மாதரநிசம் கலயந்து மாங்யே

என்று வைத்துக்கொண்டு விடுகிறார்கள். 'மாந்யே!' என்பது லக்ஷ்மியைக் கூப்பிடும் ஸம்போதனம் (விளி வேற்றுமை). 'மதிப்புக்குகந்தவளே!' என்று அர்த்தம். 'லோக மாங்ய திலகர்' என்கிற மாதிரி 'மாந்யே'.

ஒரு கேள்வி கேட்கலாம். "இங்கே இப்படிச் சில பேர் 'மாந்யே' என்றும், நீங்கள் 'நாந்யே' என்றும் வைத்துக் கொண்டு சமாளித்தாலும், 'மாமேவ' என்பது அப்படியே தானே இருக்கிறது? 'எனக்கு மட்டுமே' என்றுதானே அதற்கு அர்த்தம்? இதற்கு என்ன, ஸ்வாமிகளே, ஸமாதானம் சொல்லப்போகிறீர்கள்?" என்று கேட்கலாம்.

சொல்கிறேன்.

எந்த பாஷையாயிருந்தாலும் ச்லோகம், செய்யுள், பொயட்ரி என்று இருக்கும்போது வார்த்தைகள் முன்னே பின்னே வரலாம். அதனால்தான் 'பொயட்ரி'யை 'ப்ரோஸ்

Koviloor Digital Library

ஆர்டர்' பண்ணுவது என்று இருக்கிறது. இப்படி முன்னே பின்னே வார்த்தைகளை மாற்றிப் போடுகிற ஸ்வாதந்த்ரியம் ஸம்ஸ்க்ருதத்தில் ரொம்ப ஜாஸ்தி. அந்த பாஷையில் ப்ரோஸிலேயே வார்த்தைகளை ஸஹஜமாக இடம் மாற்றிப் போடுவதுண்டு. பொயட்ரியிலோ கேட்கவே வேண்டாம். 'மீட்ட'ரை உத்தேசித்தும், ஒலி நயத்தை உத்தேசித்தும் வார்த்தைகளை எப்படியெல்லாமோ இடம் மாற்றிப் போடுவதுண்டு.

இந்த வகையில் 'ஏவ' என்பது 'மாம்' என்பதை ஒட்டியிருந்து, 'மாமேவ' என்று வந்தாலும், அர்த்தத்தில் அது 'மாம்' என்பதைத் தழுவி "என்னையே" என்று பொருள் கொடுப்பதாக வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. முந்தின வரியில் 'வந்தநாநி' என்று வருகிறதல்லவா? அதையே இந்த 'ஏவ' தழுவுகிறதென்று அர்த்தம் செய்து கொண்டுவிட்டால் எல்லாம் ஸரியாகிவிடும். அதாவது வார்த்தைகளை அடுக்கியுள்ள முறையில் 'மாம் ஏவ' என்று இருந்தாலும், அர்த்தத்தைப் பார்க்கும்போது இந்த 'ஏவ' என்பதை 'வந்தாநாநி' என்பதோடு ஒட்டிவைத்து 'வந்தநாநி ஏவ' என்று பொருள் கொள்ள வேண்டும். அப்போது, "அம்மா! நீ பலவிதமான ஸம்பத்துக்களைத் தருபவளானாலும் எனக்கு அவற்றில் வேறெதுவும் வேண்டாம் (நாந்யே); வந்தனங்கள் மாத்திரமே வேண்டும். நமஸ்காரஸ்ரீ மட்டுமே என்னை வந்தடைய வேண்டும்" என்று அர்த்தமாகிவிடும். "வந்தநாநி...மாம் ஏவ கலயந்து" என்று ச்லோகத்தில் இருந்தாலும் அதை "வந்தநாநி ஏவ மாம் கலயந்து" என்று வைத்துக்கொண்டு அர்த்தம் பண்ணிக்கணும். அப்போது, "வந்தன க்ரியை என்னை மாத்திரம் வந்தடையட்டும்" என்ற அபிப்ராயம் அப்படியே மாறி, "வந்தன க்ரியை மாத்திரம் என்னை வந்தடையட்டும்" என்றாகிவிடும்! மஹாலக்ஷ்மி, தாயார் வேறே எந்த அநுக்ரஹமும் செய்யவேண்டாம்; அவளை நமஸ்கரிக்கிற எண்ணமொன்றை மாத்திரம் அநுக்ரஹிக்க வேண்டும் என்றாகும்.

Koviloor Digital Library

"கலயந்து" என்றால் 'வந்தடையட்டும்' என்று சொன்னேன். இது ஒன்றுதான் அதற்கு அர்த்தமென்றில்லை. 'கல்' என்பது அதற்கு தாது. அதற்கு அநேக அர்த்தங்கள். இதன்படி "கலயந்து" என்பது "வந்து சேரட்டும்" என்று ஸாதாரணமாகச் சொல்வதிலிருந்து "ஆட்கொள்ளட்டும்" என்று பரவச பாவமாக உசத்திச் சொல்லும்வரை அர்த்தம் கொடுக்கும். வந்தனக்ரியை தம்மை அப்படியே கெட்டியாகப் பிடித்துக் கொள்ளட்டும் என்று சொல்லவே ஆசார்யாள் "(வந்தநாநி மாம்) கலயந்து" என்று பதப்ரயோகம் செய்திருக்கிறார்.

ஆசார்யாள் தமக்காக இன்றி நமக்காக வேண்டிக் கொள்வதுதான் இது. எப்படி வேண்டிக்கொள்ள வேண்டும் என்று நமக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் இது. "நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்ற மாதிரி, "வந்தனம் என்ற ப்ரக்ரியையை நான் விட்டாலும், அது என்னை விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்" என்று நமக்கு வழிகாட்டவே ஆசார்யாள் ப்ரார்த்தனை பண்ணிக் கொண்டிருக்கிறார்.

மூவுலக குரு

மஹாலக்ஷ்மியை "த்ரிபுவந குரோஸ் தருணி" என்று இந்த ஸ்தோத்ரத்தில் ஓரிடத்தில்* அவர் சொல்லியிருக்கிறார். "மூவுலக குருவின் ப்ரிய பத்னி" என்று அர்த்தம். குரு என்றால் ஆசார்யர், தகப்பனார் என்று இரண்டு அர்த்தம். இவளைத் தாயார், தாயார் என்கிறதற்கேற்ப மஹாவிஷ்ணுவைத் தகப்பனாராகக் கருதி 'குரு' என்று சொல்லியிருக்கலாம். த்ரிபுவனங்களுக்கும் இவர்கள் தாய்தந்தையர் என்ற அர்த்தத்தில் சொன்னதாகக் கொள்ளலாம். ஆனால் தாயார் ஸந்நிதி, அம்மன் ஸந்நிதி என்று லக்ஷ்மி, பார்வதி ஸந்நிதிகளைச் சொல்வதுபோலப் பெருமாள், ஈச்வரன் ஸந்நிதிகளைத் தகப்பனார் ஸந்நிதி, அப்பன் ஸந்நிதி என்று சொல்லும்

---

* 10-வது ச்லோகம்.

Koviloor Digital Library

வழக்கம் அதிகமில்லை. மலையாளத்தில் மட்டுந்தான் குருவாயூரப்பன், வைக்கத்தப்பன், ஐயப்பன் என்பது.

ஆகையால் லோக குரு, ஜகத்குரு என்பதுபோல 'த்ரிபுவந குரு' என்ற மஹா ஆசார்யனாக மஹாவிஷ்ணுவைக் கருதியே அவனுடைய பத்னியை 'த்ரிபுவந குரோஸ் தருணி' என்று சொன்னதாகக் கொள்வதும் ஸரியாயிருக்கும். பகவான், க்ருஷ்ணனாகவும் நம்முடைய பகவத் பாதர்களாகவும் அவதரித்த காலங்களில் நர சரீரத்தில் அவதாரம் செய்ததால் இந்த நரலோகத்துக்கே குருவாயிருந்து "லோக குரு" என்று பெயர் வாங்கினான். நாராயணனாக திவ்ய சரீரத்திலிருக்கும்போது நரர், ஸுரர், அஸுரர் ஆகிய எல்லோருக்கும் பலவேறு ஸந்தர்பங்களில் உபதேசம் செய்து த்ரிலோக குருவாக இருந்திருக்கிறார். அவருடைய பத்னி லக்ஷ்மி. அவளுக்கு ஸதா கால நமஸ்காரமென்றால், பதியை நீக்கிப் பண்ணமுடியாது. "தம்பதியா நில்லுங்கோ, நமஸ்காரம் பண்றேன்" என்று சொல்வதுதான் சாஸ்த்ர வழக்கு. அதனால் த்ரிலோக குருவுக்கும் எப்பவும் நம் நமஸ்காரம் இருக்கணும்.

த்ரிலோக அதிபதியான பரமேச்வரனாகவும் லோகமெல்லாம் அடிபட்டுப்போன நிலையிலுள்ள பரப்ரம்மமாகவும் நமக்கு இருப்பவர் நம்முடைய குருவேதான். த்ரிலோக குரு என்று வேறே எவரையோ தேடிப்போக வேண்டாம். இவர் ஒரு புது மாதிரியான த்ரிமூர்த்தியாகவும், ஒரு புது மாதிரியான பரப்ரஹ்மமாகவும் இருப்பதால் நமது பரம நன்றி நமஸ்காரங்களுக்கு உரியவராகவும் அவற்றால் எட்ட முடிபவராகவும் இருக்கிறார். ஆனபடியால்,

நமஸ்தே நமஸ்தே நமஸ்தே நமோஸ்து

என்று அநேக ஸ்தோத்ரங்களில் வருவதுபோல அவருக்கு வந்தனம் செய்து கொண்டிருப்போம்!

துரிதோத்தரணம் பண்ணுவதொன்றையே கார்யமாகக் கொண்டுள்ள அவருக்குரித்தான நமஸ்காரமே நமக்கு மிகப்

Koviloor Digital Library

பெரிய செல்வமாக நம்முடன், நம் உள்ளுக்குள், இருந்து ரக்ஷித்துக் கொண்டிருக்கட்டும்.

குரு வந்தனை-நிந்தனை : அம்ருதம்-விஷம்

கேள்வியும் பதிலுமாக அநேக விஷயங்களை "ப்ரச்னோத்தர ரத்ந மாலிகா" என்ற நூலில் ஆசார்யாள் உபதேசித்துக்கொண்டு வருகையில் "எது விஷம்?" என்று ஒரு கேள்வி. "கிம் விஷம்?"

அவதீரணு குருஷு

என்று அதற்கு பதில் கொடுத்திருக்கிறார். குருவிடத்தில் அவமரியாதை காட்டுவதுதான் விஷம் என்று அர்த்தம். "அவதீரணு" என்றால் அவமரியாதை.

இதையே திருப்பி வைத்தால் மரியாதை பண்ணுவது, அதாவது மனஸார நினைத்து நமஸ்காரம் பண்ணுவதுதான் நமக்கு அம்ருதம்.

['ப்ரச்நோத்தர ரத்நமாலிகா' ச்லோகங்களைச் சொல்லிப் பார்த்துக் கொண்டு] 'விஷம் என்ன?' என்ற மாதிரியே, 'அம்ருதம் என்ன?' என்றும் கொஞ்சம் தள்ளிக் கேள்வி வருகிறது. ஆனால், 'அம்ருதம் என்ன?' என்று பொதுவாகக் கேட்காமல் 'காதுக்கு அம்ருதம் என்ன?' என்று கேட்கிறார். 'கர்ணம்ருதம்' என்கிறோமே, அப்படி.

"பாதும் கர்ணஞ்ஜலிபி : கிம் அம்ருதம்?"

"கர்ணஞ்ஜலிபி:"—காது மடல்களால்; "பாதும்"—குடிப்பதற்கு; "கிம் அம்ருதம்"—எது அம்ருதம்?

காது மடல் குவிந்து ஒரு தொன்னை மாதிரிதானே இருக்கிறது? தொன்னையால் பாயஸம் சாப்பிடுவதுபோல் இந்தக் காது மடலில் எந்த அம்ருதத்தை ரொப்பிக்கொண்டு உள்ளே ஹ்ருதயத்துக்கு அனுப்பி வைக்கணும்?

இப்படிக் கேட்டுவிட்டு பதிலாக "ஸதுபதேச:" என்கிறார். குரு அளிக்கும் நல்ல உபதேசம்தான் அப்படிப் பட்ட அம்ருதம் என்கிறார்.

Koviloor Digital Library

எது அம்ருதம் என்று பொதுவாகக் கேட்காமல் காதுக்கு எது அம்ருதம் என்று குறிப்பிட்டுச் சொன்னதில் நமக்கு ஆதரவாக ஒரு விஷயம் கிடைக்கிறது. என்ன பார்த்தோம்? குரு நிந்தைதான் விஷம் என்று பார்த்தோம். அப்படியானால் அதன் ஆப்போஸிட்டான குரு வந்தனம்தான் விஷத்துக்கு ஆப்போஸிட்டான அம்ருதம் என்று முடிவு பண்ணினேம். ஆசார்யாளும் அப்படியேதான் முடிவு பண்ணி விட்டிருக்கிறார். "நிந்தனே விஷமென்றால் வந்தனைதான் அம்ருதம்; இது குழந்தைக்குக்கூடத் தெரிந்துவிடும்; ஆகையால் இவற்றில் ஒன்றை—விஷத்தை—சொன்னதே போதும். 'அம்ருதம் எது?' என்று இன்னொரு கேள்விபோட்டு பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்" என்று தீர்மானம் செய்திருக்கிறார். அப்புறம் குருவின் உபதேசத்தைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்து, எந்தக் கேள்வியை எழுப்பி, அதற்கு பதிலாக "ஸதுபதேசம்" என்று சொல்லலாமென்று யோசித்திருக்கிறார். அப்போதுதான் "காதுக்கு எது அம்ருதம்?" என்று கேள்வி போடுவோமென்று முடிவு செய்திருக்கிறார்.

கர்ணும்ருதம் (காதுக்கான அம்ருதம்) என்று சொல்லாமல் 'கர்ணஞ்ஜலியால் குடிக்கும் அம்ருதம்' என்று போட்டிருப்பதிலும் அர்த்தபுஷ்டி இருக்கிறது. கர்ணஞ்ஜலி என்றால் காது மடல். இங்கே அஞ்ஜலி என்றால் மடல். கூம்பியிருக்கும் புஷ்பம் விரிவதை 'மடலவிழ்வது' என்கிறேம். கன்னத்தோடு மடித்துவைத்தால் கூம்பினாற்போலிருப்பது காதுமடல். அதை அவிழ்த்து, இப்போது நமக்கிருக்கிறது போல விட்டுவிட்டால் மடல் மலர்ந்து சப்தங்களை வாங்கிக் கொள்கிறது. அதனால்தான் கர்ணஞ்ஜலி என்பது. அஞ்ஜலி என்று சொன்னல் பொது அர்த்தம் நமஸ்காரந்தானே? புஷ்பம் கூம்பிக் குவிந்த மாதிரி மனஸு குவிந்து பக்தி செய்யும்போது அதற்கு அடையாளமாகக் கைகுவித்து—"கைகூப்பி" என்றே வழக்கில் சொல்கிறபடி—நமஸ்காரம்

Koviloor Digital Library

செய்கிறோம். அப்போது கையின் 'ஷேப்' கூம்பின புஷ்பம் மாதிரியிருக்கிறது.

'அம்ருதம் என்றால் அது குரு வந்தனந்தான்; விஷம் குருநிந்தை என்றால் வேறு விதமாக இருக்கமுடியாது. அதனால்தான் 'காதுக்கு அம்ருதம்' என்று பாகுபடுத்திச் சொல்கிறார்' என்று பார்த்தோம். அதையும் இன்னம் நயமாகக்கொண்டு போய்க் கர்ண அஞ்ஜலிக்கு அம்ருதம் என்று சொல்லியிருப்பதில், 'அஞ்ஜலி' என்ற வார்த்தையையும் போட்டு நமஸ்காரம்தான் அம்ருதம் என்பதை நன்றாகவே உறுதிப்படுத்திவிட்டார் என்று தோன்றுகிறது. 'நமஸ்காரமாகிய அஞ்ஜலியே பொதுவாக உயிருக்கு அம்ருதம். கர்ணாஞ்ஜலிக்கு அம்ருதமாயிருப்பது குரு அருளுகின்ற ஸதுபதேசம்' என்று ஆசார்யாள் காட்டியிருப்பதாகத் தெரிந்துகொள்கிறோம்.

குருவின் 'முயற்சி' உத்தரணத்தைக் குறிப்பதே

ஒன்றிலிருந்து ஒன்று அபிப்ராயங்கள் கவடு விட்டுப் போய்க்கொண்டிருப்பதில், இப்போது 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா'வைக் கிளறிப் பார்த்ததில், இதுவரை நாம் பார்த்த துரிதோத்தரண ஸமாசாரமாகவும் இன்னொரு விஷயம் வந்திருக்கிறது. [சிரித்து] உள்ளேயிருந்து இன்னொரு விஷயத்தைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டுவந்து "உத்தரணம்" பண்ணியிருக்கிறது!

இதில் ('ப்ரச்நோத்தர ரத்ந மாலிகை'யில்) ஆரம்பம், 'எது ஏற்கத்தக்கது?' என்பதுதான். அதாவது எதை ஆதாரமாக எடுத்துக்கொண்டு அதன்மேல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்ற கேள்விதான்: கிம் உபாதேயம்?

பதில், "குருவசனம்."

அப்புறம், "குரு யார்?" என்று கேள்வி: கோ குரு:?

Koviloor Digital Library

பதில் கொஞ்சம் நீளமாகவே வருகிறது: "அதிகத-தத்த்வ:, சிஷ்யஹிதாயோத்யத: ஸததம்."

"அதிகத தத்த்வ:" என்றால் தத்வார்த்தங்களைக் கற்றுணர்ந்தவர், அவற்றில் அநுபவம் பெற்றவர் என்று அர்த்தம்.

அப்புறம்தான் நம் ஸமாசாரம்—துரிதோத்தரணம்—வருகிறது: "ஸததம்"—ஸதா காலமும்; "சிஷ்ய ஹிதாய"—சீடர்களின் நலனுக்காக; "உத்யத:"—முயன்று கொண்டிருப்பவர், முனைந்து வேலை செய்து கொண்டிருப்பவர். முன்பே சொன்ன விஷயந்தான்—குரு என்றால் தாம் கற்றறிந்து அநுபவித்தவராக இருப்பதோடு, மற்றவர்களுக்கும் அந்த அறிவையும் அநுபவத்தையும் ஊட்டி அவர்களுக்குப் பரம ஹிதத்தைச் செய்பவராக இருக்கவேண்டும். இந்தப் பணியிலேயே அவர் ஸததமும் முனைந்து முயற்சி பண்ணிக் கொண்டிருக்கவேண்டும். "உத்யத:" என்பதற்கு அதுதான் அர்த்தம்—கவனமாக, வலுவாக முயற்சி பண்ணுவது.

("கநகதாரா ஸ்தவ"த்தில்) 'துரிதோத்தரண'த்தைச் சொல்கிறபோதும், "உத்யத" என்ற இந்த வார்த்தையையே போட்டிருக்கிறார்: "துரிதோத்தரணோத்யதாநி", அதாவது, "துரித உத்தரண உத்யதாநி."

நமஸ்காரம் என்ற க்ரியை செய்யும் பல காரியங்களில், (துரிதம் என்கிற) பாபங்களை (உத்தரணம் என்பதாக) உள்ளேயிருந்து பிடுங்கி எடுப்பதில் முனைப்பாக முயற்சி பண்ணுவதே முடிவாக வருவது என்று காட்டியிருக்கிறார். இங்கே மட்டுந்தான் 'ச்ரமப்பட்டு முயலுவது' என்று பொருள்படும் "உத்யத" போட்டிருக்கிறார். மற்ற காரியங்களை நமஸ்காரம் ச்ரமப்பட்டு முயற்சி செய்து ஸாதிக்கவில்லை. ஸுலபமாக, அநாயாஸமாக ஸாதித்துவிடுகிறது. நமஸ்காரங்கள் ('வந்தநாநி') என்று பன்மையில் சொல்லும் ஆசார்யாள் முதலில் அவற்றை "ஸம்பத்கராணி" என்கிறார். "ஸம்பத்துக்களை உண்டாக்குபவை" என்று 'ஈஸி' வேலையாகச்

Koviloor Digital Library

சொல்லிவிடுகிருர். 'முயன்று' உண்டாக்குவதாகச் சொல்லவில்லை. இதேபோல, அடுத்தபடி, "ஸகலேந்த்ரிய நந்தநாநி"—"எல்லாப் புலன்களுக்கும் இன்பமாக, இன்பம் தருவனவாக, இருப்பவை" என்னும் போதும் 'பாடுபட்டு முயன்று' என்று சொல்லவில்லை. அதற்கப்புறம், "ஸாம்ராஜ்ய தாந நிரதாநி": பெரிய ராஜ்யத்தையே வழங்க வல்லனவாக இருப்பவை. "நிரத" என்ருல் ஸந்தோஷமாக ஒரு கார்யத்தில் ஈடுபட்டிருப்பது. ச்ரமப்பட்டு முயன்று செய்வதல்ல. 'அதற்கு' ஆப்போஸிட். பக்தனை ராஜாவாகவே தூக்கி வைப்பதுகூட நமஸ்காரத்தின் சக்தியில் ஸந்தோஷமாகச் செய்யும் அநாயாஸமான கார்யமாகவே இருக்கிறது.

இப்படி இஹலோக விஷயங்களை ஈஸியாக முடித்த பிறகுதான் கடைசியில் வருகிறது, பரலோகத்துக்கான துரிதோத்தரணம். இங்கே மட்டுந்தான் "உத்யதாநி" என்று போட்டிருக்கிருர். ஒருத்தனுக்குள்ளே ஜன்மாந்தரமாகப் போய்ச் சொருகிக்கொண்டிருக்கும் பாபத்தையெல்லாம் நெம்பி இழுத்துப் போடுவது என்பது நமஸ்கார க்ரியையின் மஹாசக்திக்கும் ஈஸியாக இருந்துவிடவில்லை என்று காட்டியிருக்கிருர்.

அதன் சக்தியைக் குறைத்து நினைப்பதற்காக இப்படி "உத்யதாநி" என்று போடவில்லை. நாம் எத்தனை பாபத்தை, துஷ்கர்மத்தைப் பண்ணி அவற்றின் வாஸனை நமக்குள் ஆழமாக வேரோட விட்டிருக்கிறோம் என்று புரிந்து கொள்வதற்காகவே இப்படிச் சொல்லியிருக்கிருர்.

இங்கே ('ப்ரச்நோத்தர ரத்நமாலிகா'வில்) சிஷ்யனின் ஹிதத்துக்காக பாடுபட்டு முயற்சி பண்ணுபவர் ("உத்யத:") குரு என்கிருர்.

'ஹிதம்' என்பது என்ன? சீடனின் நலம். அந்த 'நலம்' என்ன? அவனுடைய கர்மாவை நிவிருத்தி பண்ணுவதுதான். ஸம்ஸார நிவிருத்திக்கு இதைத் தவிர வேறு வழியே இல்லை.

Koviloor Digital Library

குருவை ஒரு சிடன் எந்த முடிவான லக்ஷ்யத்திற்காக அடைகிருனோ அந்த நித்யானந்தத்தை அவன் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டால்தான் பெறமுடியும். தன்னுடைய கர்மாவிலிருந்து அவன் விடுபட்டால்தான் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடமுடியும்.

கர்ம நிவ்ருத்தி என்பதுதான் பாப நிவ்ருத்தி, அதாவது துரிதோத்தரணம்.

நமஸ்கார சக்தியானது முனைந்து முயன்று துரிதோத்தரணம் செய்வதாகச் சொன்ன அதே ஆசார்யாள், சிஷ்ய ஹிதத்துக்கு ஸதாகாலமும் குரு முனைப்பாக முயன்றபடியிருக்கிருர் என்று சொல்லும்போது, இந்த குரு செய்வதும் துரிதோத்தரணம்தான் என்று ஆகிறது.

நாம் செய்யும் நமஸ்காரம் அவருக்குள்ளே உள்ள அநுக்ரஹ சக்தியைத் தூண்டி, அது நமக்குள்ளே போய்ச் சொருகிக் கொண்டுள்ள பாபங்களையெல்லாம் தோண்டியிழுத்து வெளியில் தள்ளும்படிச் செய்கிறது.

ஸம்பத், ஸாம்ராஜ்யாதிகளுக்காக லக்ஷ்மியிடம் போக வேண்டுமென்றும், பாப நிவாரணத்துக்கு குருவிடம் போக வேண்டுமென்றும் நடைமுறையில் ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஆசார்யாள் மஹாலக்ஷ்மியிடம் பிரார்த்தித்ததையே நாம் கொஞ்சம் மாற்றி குருவிடம் பிரார்த்திக்கக் கடமைப் பட்டிருக்கிறும். "எங்களுடைய துரிதங்களை உத்தரணம்செய்வதற்காக அயராமல்பாடுபடும் தங்களுக்குச் செய்யும் நமஸ்காரமே எங்களைவிட்டு என்றும் நீங்காத நிதியாக இருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தித்து, திரும்பத் திரும்ப நமஸ்காரம் பண்ணிக்கொண்டு, அவருடைய அநுக்ரஹமான கனகதாரையைப் பெற்று ஆனந்தமாக, பஞ்சு மாதிரி லேசாக, ஆகிவிடவேண்டும்.

ஆசார்யாள் "மாதா!" என்று கூப்பிட்டுச் சொன்னதையே, "குரோ!" என்று மாற்றிக்கொண்டு, "எங்களுக்கு வேறே எதுவும் வேண்டாம்! உங்களை நமஸ்காரம்

Koviloor Digital Library

பண்ணுவது என்பது மட்டும் எங்களுடைய ஸொந்த ஸொத்தாக ஆகிவிடவேண்டும். வேறே எந்த உடைமையும் வேண்டாம். வந்தன ப்ரக்ரியை எங்களை விடாமல் இருக்க வேண்டும். அவ்வளவுதான். சரீரத்தை கீழே கிடத்தி, ஹ்ருதயத்தைத் தங்கள் சரணாரவிந்தங்களில் அர்ப்பணித்து நாங்கள் செய்கிற இந்த நமஸ்காரத்தால் பெறுகிற அநுக்ரஹத்துக்கு மேலே ஸொத்து, உடைமை எதுவுமில்லை" என்று ப்ரார்த்தித்து, அப்படியே நிறைந்து இருந்துவிட வேண்டும்.

தஸ்மை ஸ்ரீ குரவே நம :

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஸ்ரீ சங்கர சரிதம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ப்ரவ்ருத்தி - நிவ்ருத்தி

இரண்டாயிரம், இரண்டாயிரத்து ஐநூறு வருஷங்களுக்கு முந்தி நம்முடைய தேசத்தின் நிலைமை ரொம்பவும் சீர்கெட்டுப் போயிருந்தது.

அநாதி காலமாக வேதோக்தமான வழி நம் தேசத்திலிருந்து வந்திருக்கிறது. ஸநாதன தர்மம் என்று அதற்குப் பேர். வேதத்தை அநுஸரித்து ஏற்பட்டதால் அதற்கு வைதிக மதம் என்றும் பேர் சொல்லலாம். அப்புறம் பஹு காலம் கழித்துதான் அந்நிய தேசத்தினர்கள் ஹிந்து மதம், ஹிந்து மதம் என்று அதற்குப் பேர் கொடுத்துச் சொல்லி நாமும் அவர்கள் வைத்த பெயரையே சொல்லிக்கொண்டிருக்கிறோம். இதற்குப் பேர் ஸநாதன தர்மமென்றோ, வைதிக மதமென்றோகூட நம்முடைய மதத்திற்கு ஆதாரமாக இருக்கப்பட்ட நூல்களில் எதிலும் சொல்லியிருக்கவில்லை. வேறே மதங்களில்லாமல் இது ஒரே மதம்தான் அநாதி காலமாக இருந்துவந்ததால் இதற்கு ஒரு பேர் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை.* அப்புறம் மேற்கு தேசங்களிலிருந்து வந்தவர்கள் நம்முடைய பாரத தேசத்தில் முதலில் ஸிந்து நதியைத்தான் கடக்க வேண்டி

---

* ''தெய்வத்தின் குரல்'' முதற் பகுதியில் ''பெயரில்லாத மதம்'' என்ற உரை பார்க்கவும்.

Koviloor Digital Library

யிருந்ததால், ஸிந்துவை Indus - ஆக்கி, அப்படியே அதைச் சேர்ந்து வரும் பாரத தேசத்துக்கும் India என்று பேர் கொடுத்து, அதன் ப்ராசீனமான மதத்தை Hinduism என்றும், அதைப் பின்பற்றும் நம் எல்லோரையும் Hindus என்றும் சொல்ல ஆரம்பித்து, இந்தப் பெயர்களே நிலைத்து விட்டன.

வேதங்கள் வகுத்துள்ள இந்த ஸநாதன தர்மத்தில் இரண்டு மார்க்கங்கள்—ப்ரவ்ருத்தி மார்க்கமென்றும், நிவ்ருத்தி மார்க்கமென்றும். லோக வாழ்க்கையை நன்றாக, தர்மமாக நடத்துவதற்கு ப்ரவ்ருத்தி மார்க்கம். லோக வாழ்க்கையை விட்டுவிட்டு, அதை முடித்து விட்டு பரமாத்மாவோடு ஐக்யமாகி ஜனன மரணத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு நிவ்ருத்தி மார்க்கம்.

தர்மமாக, அதாவது தனக்கும் நல்லதாகவும், ஜன ஸமூஹத்துக்கும் நல்லதாகவும் வேத விதிப்படி இல்லற வாழ்க்கை நடத்தி, வர்ணாச்ரம வியவஸ்தைகளை அநுஸரித்து கர்மாநுஷ்டானங்களைச் செய்வதுதான் ப்ரவ்ருத்தி மார்க்கம். இதிலே கர்மாநுஷ்டானம் எவ்வளவு நன்றாகச் செய்கிறோமோ, அந்த அளவுக்குப் புண்யம் கிடைத்து, புண்ய பலனாக ஸ்வர்கம் என்ற இன்ப லோகத்தில் வாஸம் கிடைக்கும். ஆனால் அந்த இன்பம் சாச்வதமல்ல. அந்த இன்பத்தை அநுபவிக்க அநுபவிக்க நம்முடைய புண்ய 'பாலன்ஸ்' குறைந்துகொண்டே வரும். முழுக்க அது தீர்ந்தவுடன் "புநரபி ஜனனம்" என்கிறபடி மறுபடி இந்த மண்ணுலகிலேயே பிறக்க வேண்டியதுதான். ஆனாலும் வேத தர்மப்படி (பூர்வ ஜன்மத்தில்) செய்ததால் இது நல்ல பிறவியாக, நல்ல வசதிகள் வாய்த்த பிறவியாக இருக்கும். இந்தப் பிறவியிலும் தர்மம் தப்பாமல் வாழ்க்கை நடத்தினால் மறுபடி ஸ்வர்க்க போகம். ஆனாலும், (முன்பு) சொன்னமாதிரி, இந்த போகம் சாச்வதமல்ல.

சாச்வதமல்ல என்பது ஒரு பக்கம். அதோடுகூட அநுபவிக்கும்போதேகூட இந்த இன்பம் பூர்ணமான

Koviloor Digital Library

நிறைவைத் தருவதாக இருக்காது. 'இனிமேலே எதுவும் வேண்டாம்! இந்த நிலே நிரந்தரமாக வாய்த்து விட்டதல்லவா? இதிலிருந்து கொஞ்சங்கூட விலகுவதற்கில்லே. இனியொரு குறை நமக்குக் கிடையாது' என்று எப்போது ஆக முடியுமோ அப்போதுதான் நிறைவான பூர்ணுனந்தம். பூலோகம், ஸ்வர்கம் ஆகிய இரண்டிலுமே எத்தனேதான் ஸந்தோஷமிருந்தாலும் அது இப்படிப்பட்ட நிறைந்த ஆனந்தத்தைத் தரமுடியாது. பல தினுஸான பயம், துக்கம், காமக்ரோதாதி இழுபறிகள் இல்லாமல் இந்த லோகங்களில் இருந்துவிட முடியாது. இந்த இன்பங்களைப் பெறுவதற்காக ஓயாத முயற்சியும் பண்ணிக்கொண்டே தானிருக்க வேண்டும். அதாவது போராடிக் கொண்டேதானிருக்க வேண்டும்.

அது மட்டுமில்லே. இந்த இன்பங்கள் நம்முடைய உள்ளாழத்தில் நாம் என்னவாக இருக்கிருமோ அதை த்ருப்தி பண்ணுமா? பண்ணவே பண்ணுது. ஏதோ கண்ணுக்கு, காதுக்கு, வாய்க்கு, இன்னம் ஸ்பர்சாதிகளுக்கும், மனஸுக்கும், அறிவுக்குங்கூட இன்ப அநுபவம் இருக்குமேயொழிய, இதற்கெல்லாமும் உள்ளே, நம்முடைய அந்தஃகரணத்துக்கும் உள்ளே இருக்கப்பட்ட ஆத்மாவுக்கு இவற்றிலே கொஞ்சமும் ஸுகாநுபவம் இருக்காது. இன்பங்களே அநுபவிக்கிற நமக்கே அப்பப்போ ஒரு தீர்க்கமான யோசனே வரும்போது, 'இது என்னது? நம்மிலே ஸாரபூதமாக உள்ளேயிருக்கிற ஏதோ ஒன்றுக்கு ஒரு நிறைவையும் பெருமல், வெளிமட்டத்தில் ஸௌக்யம், இன்பம் என்று அஸ்திரமான (நிலேயற்ற) எதையோ தேடிக் கொண்டு போய்ப் பைத்தியம் மாதிரி என்னென்னவோ பண்ணி த்ருப்திப்படப் பார்க்கிருேமே!' என்று தோன்றும்.

பூர்ணமான உன்நிறைவைத் தருவது நிவ்ருத்தி மார்க்கம்தான். கர்மாக்களே விட்டு, ஜன ஸமூஹத்தை விட்டு ஸந்நியாஸியாகி ஸதா காலமும் ஆத்ம சிந்தனே, த்யானம் என்று இருப்பவன்தான் ஆத்மா ப்ரஹ்மமே என்று அறிந்து

Koviloor Digital Library

அநுபவிப்பதான, நிறைந்த நிறைவான நிலையைப் பெறுவான். ஸமாதி என்றும் ஸாக்ஷாத்காரம் என்றும் சொல்லும் அந்த நிலையொன்றுதான் ஒரு முறை கிட்டினால் அப்படியே சாச்வதமாக இருப்பது. பேச்சு வழக்கில்கூட 'ப்ரம்மானந்தமாயிருந்தது!' என்று நமக்குத் தெரியும் இன்பத்தைச் சொல்கிறோம்! வாஸ்தவத்தில் அந்த "ப்ரம்மானந்தம்" நிவ்ருத்தி மார்க்கத்தில் ஸித்தி பெற்றவனுக்குத்தான் தெரியும்! அது, ப்ரம்மம் என்று ஒன்றை இன்னொருவன் அநுபவித்து ஆனந்திப்பது அல்ல. ப்ரம்மம் என்ற ஆனந்தம்தான் ப்ரம்மானந்தம். இவன் (நிவ்ருத்தி மார்க்கத்தில் ஸித்தி பெற்றவன்) தானே அந்த ப்ரம்மம் என்ற ஆனந்தமாக ஆகிவிடுகிறான். அங்கேதான் பயமே யில்லை, துக்கமில்லை, காமமும் க்ரோதமும் போட்டு இழுக்கிறதும் இல்லை. ஓயாத முயற்சியும் வேண்டியிருப்பதில்லை. ஸித்தியடைவதற்கு முன்னாடி ரொம்பப் பாடுபடத்தான் வேண்டும். போராட்டம் என்றேனே, அது பெரிசாக இருக்கத்தான் செய்யும். ஆனால் ஒரு தரம் அந்த லக்ஷ்யத்தை அடைந்துவிட்டால் போதும். அப்புறம் அதிலிருந்து நழுவுவது, விலகுவது என்பது கிடையாது.

"தில்லை வெளியிலே கலந்து விட்டாலவர்
திரும்பியும் வருவாரோ?"

என்று சொன்னது இதைத்தான். ஒரு தரத்துக்கு இரு தரமாக,

அநாவ்ருத்தி சப்தாத் அநாவ்ருத்தி சப்தாத்

என்று "ப்ரஹ்ம ஸூத்ரம்" முடிந்திருப்பதும் இதைத்தான் சொல்கிறது. ப்ரஹ்மஸூத்ரகாரர், "இது தாமே சொல்வதில்லை, ச்ருதியிலேயே (வேதத்திலேயே) இப்படி இருக்கிறது" என்றும் சொல்கிறார். 'சப்தாத்'—என்றால் சப்த ப்ரமாணம் என்பதான ச்ருதியிலிருந்து என்று அர்த்தம். ச்ருதி சிரஸான சாந்தோக்ய உபநிஷத்தில் இப்படியே இரண்டு தடவை சொல்லி முடித்திருக்கிறது.

Koviloor Digital Library

அதாவது, நிவ்ருத்தி மார்க்கத்திலுல்தான் நித்யமான பேரின்பம். ப்ரவ்ருத்தியில் பெறுவதெல்லாம் நச்வரமான (நிலையற்ற) சிற்றின்பம்தான்.

இருவித மக்களுக்கான இரு வழிகள்

ஆனாலும் லோகம், ப்ரஜைகள் என்று ஈச்வரன் நாடகம் ஆடுவதில், 'ஸந்நியாஸியாகப் போ; காட்டுக்குப் போய் மூக்கைப் பிடிச்சுக்கோ; அப்படியே 'ஆத்மா, ஆத்மா'ன்னு விசாரம் பண்ணி, அதிலேயே தோஞ்சு போ' என்றால் ரொம்பப் பேர் அதைக் கேட்கக் கூடியவர்களாக இல்லை. எல்லாவற்றுக்கும் காரணமான வஸ்துவைத் தெரிந்து கொண்டு—ப்ரஹ்மம், ப்ரஹ்மம் என்னும் அதுதான் தன்னுடைய ஆத்மா என்று தெரிந்துகொண்டு—அதிலேயே ஐக்யமாகிவிட வேண்டுமென்ற தாபம் பெருவாரியானவர்களுக்கு ஏற்படுவதேயில்லை. இந்தத் தாபத்திற்கு 'முமுக்ஷுத்வம்' என்று பெயர். 'விடுபட வேண்டும் என்று ஆசைப்படுவது' தான் முமுக்ஷுத்வம். அந்த ஆசையுள்ளவன்தான் முமுக்ஷு என்பவன். நிவ்ருத்தி மார்க்கம் என்று இத்தனை நாழி நான் சொன்னது ஞான மார்க்கம் என்று பொதுவில் சொல்லப் படுவதுதான். அதில் செல்ல யோக்யதை பெற்ற அதிகாரி முமுக்ஷுக்கள்தான். ஜனத்தொகையில் அவர்கள் ரொம்பவும் கொஞ்சமாகவே இருப்பார்கள்.

மற்றவர்கள் ஏதாவது கார்யம் செய்வதில்தான் எப்போதும் ஈடுபட்டிருப்பார்கள். வெளி உபகரணங்கள், மற்ற மநுஷ்யர்கள் ஆகியவை இல்லாமல் கார்யமில்லை. இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு எதையாவது பண்ணிக்கொண்டேயிருப்பதுதான் பெருவாரியான ஜனங்களின் ஸ்வபாவம். கர்மத்திலேயே பற்றுள்ள இவர்களை 'கர்ம ஸங்கிகள்' என்று பகவான் கீதையில்* சொல்லியிருக்கிறார். ஏனிப்படிக் கர்மா பண்ணிக் கொண்டிருக்கிறார்

* III.26

Koviloor Digital Library

களென்ருல், இவர்களுக்குப் பலவிதமான ஆசைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றிக் கொள்வதென்ருல், அதற்காக ஏதோ உழைத்து, பிழைத்து, பிறத்தியானை ஏமாற்றி, ஸீமாற்றி ஏதாவது கார்யம் பண்ணித்தானேயாக வேண்டியிருக்கிறது? நாம்பாட்டுக்குச் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால், நாம் ஆசைப்படும் வஸ்து அதுவே நம் கையில் வந்து விழுமா? வெளியிலிருந்து 'வரவேண்டும்' என்றில்லாமல், நம்மிடமே எப்போதும் ஸ்வயம் ஸித்தமாக இருக்கும் ஆத்மாவை அடையத்தான் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டுமே தவிர, பாக்கி எது வேண்டுமென்ருலும் கார்யம் பண்ணித்தாளுக வேண்டும்.

இப்படிச் சொல்வதினுலேயே ஒவ்வொரு கார்யமும் பண்ணும்போது ஆத்மாவை விட்டுவிட்டு மேலும் மேலும் வெளியில் போய்க் கொண்டிருப்பதாக ஏற்படுகிறது. 'ப்ர-வ்ருத்தி' என்ருலே அதுதான் அர்த்தம்; 'வெளியிலே போய்க்கொண்டேயிருப்பது' என்றே அர்த்தம்.

இதற்கு எதிர்ப்பதம் 'நி-வ்ருத்தி'. விட்டுவிட்டு வெளியிலே போவதற்கு எதிர் என்ன? இருந்த இடத்துக்கே திரும்ப வருவதுதானே? 'திரும்பி வருவது' தான் 'நிவ்ருத்தி' —ஆத்மாவுக்கே திரும்பி வந்துவிடுவது.

'ப்ரவ்ருத்தி' என்ருல் கார்யத்தில் ஈடுபட்டிருப்பது என்றும், 'நிவ்ருத்தி' என்ருல் கார்யத்துக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு இருப்பது என்றும் அர்த்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

பெருவாரியான ஜனங்கள் ஆத்மாவை விட்டு, கார்யத்தில் போகிறவர்களாகத்தானிருப்பார்கள் என்ருல் அவர்களையெல்லாம், 'அப்படிப் போகப்படாது; சும்மா உட்கார்ந்து கொண்டு ஆத்ம விசாரம் பண்ணு' என்று பலவந்தம் செய்ய முடியுமா என்ன? பண்ணினுலுந்தான், அவர்களுக்காக அந்த ஆசை—முமுக்ஷுத்வம் என்ற ஆசை—லோக ஆசைகள் எல்லாம் போய் ஸத்ய வஸ்துவை அடைய வேண்டுமென்று மட்டுமுள்ள ஆசை—இல்லாதபோது என்ன பலன் இருக்கும்?

Koviloor Digital Library

ஸரி, அதற்காக அவர்களை அப்படியே விட்டுவிடுவதா? அப்படிவிட்டால் அவனவனும் தன் துராசைகளுக்காகப் பிறத்தியானை ஏமாற்றுவது, வயிற்றில் அடிப்பது என்று அல்லவா லோகமே சீர்குலைந்து போய்விடும்? ஈச்வரனுக்கு லோகம் ரஸமுள்ள நாடகமாயில்லாமல் அலங்கோலக் கூத்தாக அல்லவா ஆகிவிடும்? பின்னே என்ன செய்யலாம்?

இதற்குத்தான் வேதமானது ப்ரவ்ருத்தியிலேயே போகக் கூடியவனுக்கு அவனுடைய போக்குக்கு ஏற்றதாக, ஆனால் அவன் இஷ்டப்படியெல்லாம் அதர்மமாகக் கார்யங்களைப் பண்ணவிடாமல், ப்ரவ்ருத்தி மார்க்கம் என்று தர்ம மயமாகக் கார்யங்களை வகுத்துத் தருகின்ற கர்ம மார்க்கத்தையும், கார்யத்தை விட்டுச் செயலற்ற ஆத்மாவில் ஒடுங்க விரும்புபவனுக்கு நிவ்ருத்தி மார்க்கம் என்னும் ஞான மார்க்கத்தையும் போட்டுக் கொடுத்தது.

வேதம் போட்டுக்கொடுத்தது என்றால் என்ன அர்த்தம்? வேத மந்த்ர ரூபமாக ஈச்வரனே ரிஷிகள்மூலம் போட்டுக் கொடுத்தான் என்றுதான் அர்த்தம்.

இந்த இரண்டு விதமான ப்ரஜைகளும் அவனிடமிருந்து தானே வந்திருக்கிறார்கள்? அவர்களுக்கு நல்ல மார்க்கம் போட்டுக் கொடுக்க வேண்டியது அவனுடைய கடமை தானே? கர்ம ஸங்கிகளாகவே அதிகம் பேர் இருக்கிறார் களென்றால் அதுவும் அவனே அவர்களை அப்படி இருக்கும் படிப் பண்ணிப் போட்டிருப்பதால்தான்!

யத: ப்ரவ்ருத்திர்-பூதாநாம் யேந ஸர்வமிதம் ததம்

என்று கீதையில் சொல்லுகிற இடத்தில்*, எவனால் இது அனைத்தும் வ்யாபிக்கப் பட்டிருக்கிறதோ அந்த ஈச்வரனிட மிருந்தேதான் ஜீவர்களுக்கு ப்ரவ்ருத்தி என்பது ஏற்பட்டிருக் கிறது என்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆசார்யாள் பாஷ்யத்தில் மேலும் ஸ்பஷ்டமாக்கி ஈச்வரன்

---

*XVIII—46

Koviloor Digital Library

ஒரு ஜீவனுக்குள்ளே அந்தர்யாமியாக உட்கார்ந்து கொண்டே அதை ப்ரவ்ருத்தியில் ஈடுபடுத்துகிறுன் என்று சொல்லியிருக்கிறுர்.

முதலில் 'கர்மயோகம்' முதலான அத்யாயங்களில் சொல்லும்போது பகவான், ஜனங்கள் கர்மஸங்கிகளாக (அதாவது ப்ரவ்ருத்தியிலேயே நாட்டமுடையவர்களாக) இருப்பதற்குக் காரணம் ப்ரக்ருதி, ப்ரக்ருதி என்றே சொல்லி வந்தார். ப்ரக்ருதி என்ருல் மாயைதான். ஸரி, மாயை என்ருல் அது மட்டும் தானே ஏதோ பண்ணுகிறதா என்ன? அந்த மாயையையும் உடையவனுக, அதற்கு யஜமானனுக ஈச்வரன்தான் இருக்கிறுன். "ப்ரகிருதி என்பது மாயை என்று தெரிந்துகொள். அந்த மாயைக்கு ஸொந்தக்காரன்—மாயையின் யஜமானன்—மஹேச்வரன் என்று தெரிந்து கொள்" என்று ஒரு உபநிஷத்து[1] சொல்கிறது. பகவானும் கீதையில் "மம மாயா துரத்யயா": "கடக்க இயலாததான என்னுடைய மாயை" என்றே சொல்லியிருக்கிறுர்[2]. ஆகையினுலே ஈச்வரனேதான் அவனுடைய மாய லீலே நடக்கணுமென்றே கர்ம ஸங்கிகளாக ப்ரவ்ருத்தியில் போகிறவர்களேயும் அப்படிப் பண்ணியிருக்கிறுனென்று தெரிகிறது. ஜீவர்கள் அத்தனே பேருமே நிவ்ருத்தியில் போனுல் என்ன ஆகும்? அவர்கள் ஞானத்திலுல் மாயையை உடைத்தெறிந்துவிட்டு ஈச்வரனுடைய நிர்குணமான ப்ரஹ்ம ஸ்வரூபத்திலேயே ஐக்யமாகிவிடுவார்கள். அப்புறம் ப்ரபஞ்ச லீலே என்று எப்படி அவன் விளேயாடிக் கூத்தடித்து ஸந்தோஷப்பட முடியும்? முதலில் ஸ்ருஷ்டியில் தோன்றிய ஸநகாதிகள் நிவ்ருத்தியில் போய்விட்டதால், அப்புறம் ப்ரஜாபதிகள் என்றே ஏகமாகப் பிள்ளே, குட்டிகளேப் பெற்று பூமியை ரொப்புவதற்காக மரீசி முதலான பத்துப்பேரை ப்ரஹ்மா ஸ்ருஷ்டித்தாரென்று பாகவதத்தில் பார்க்கிறேும். ஆகையினுல் திவ்ய ஸங்கல்பமே

1. ச்வேதாச்வதரோபநிஷத் IV.10
2. கீதை VII.14

Koviloor Digital Library

லோகம் பூராவும் ஞானியாகப்போய், லோகத்தையே விட்டு விட்டுப்போய், அவனுடைய ட்ராமா ஸ்டேஜைக் காலியாக, பாழாகப் பண்ணிவிடக் கூடாதென்றுதான் இருக்கிறதென்று தெரிகிறது.

ஆனாலும் அதற்காக ட்ராமாவில் நடிக்கிற எல்லாரையும் தறிகெட்டு அவரவர் இஷ்டத்துக்கு ஆக்ட் பண்ண விட்டு விடலாமா? இப்படிக் கூடாது என்றுதான், 'இந்த ஜனங்கள் ப்ரவ்ருத்தியில் போனாலும், நாம் வேடிக்கை பார்ப்பதற்காக அவர்களுக்குக் கொடுத்திருக்கிற கொஞ்சம் ஸ்வாதந்த்ரியத்தைக் கொண்டு ஒரே கோணா மாணாவாக ஒவ்வொருத்தரும் தன்னிஷ்டப்படியே பண்ணி, ஒட்டு மொத்தமான ஸமூஹவாழ்வு ஒழுங்கு கெட்டுப் போகும்படி ஆவதற்கு விட்டு விடக்கூடாது. இதுகள் தனி ப்ரஜைகளாகவும் ஒரேயடியாகத் தப்புப் பண்ணிப் பாபத்தில் மாட்டிக்கொள்ளவிடக் கூடாது. ட்ராமாவே இல்லாமல் எல்லாம் ப்ரம்மமாகவும் போகப்படாது; ட்ராமா ஒரே குழப்பமாகவும் போகப் படாது; ஒரேயடியாகத் தப்பு-தண்டா, அதற்காகப் பாபத்தில் மாட்டிக்கொண்டு பரிதவிப்பது என்றும் போகவிடப் படாது. கர்மாவினால் நித்யாநந்தந்தான் நிச்சயமாக இல்லையென்றாலும், அதைப் புண்ய கர்மாவாகப் பண்ணுவதால் அடையக்கூடிய தாற்காலிகமான போக போக்யாதி ஆனந்தங்கூட இல்லை என்று ஜனங்கள் ஆக்கிக்கொண்டு ஒரே கஷ்டத்தில் அழுந்திவிடுவதற்கு விடப்படாது. தனி வாழ்க்கை, ஸமூஹ வாழ்க்கை எதுவானாலும் அதில் ஒரு ஒழுங்கு, அன்பு, அழகு, பரஸ்பர ஸஹாயம் எல்லாம் இருக்கும்படியாக—இத்தனையையும் சேர்த்து ஒரே வார்த்தையில் சொல்வதானால், தர்மமாக இருக்கும்படியாக—இவர்களுக்கு வழியமைத்துக் கொடுக்கவேண்டும்' என்று ஈச்வரன் பரம க்ருபையோடு நினைத்தே ப்ரவ்ருத்தி மார்க்கம் என்பதை வேதங்கள் வழியாக வெளிப்படுத்தினார். அவரவரும் ஸமூஹத்தில் ஈச்வரன் தங்களைப் பிறப்பித்திருக்கிற நிலைக்கு ஏற்ப இப்படியிப்படி ஸத்கார்யங்களாகப்

Koviloor Digital Library

பண்ணிக்கொண்டு போய், இந்த லோகத்திலே தாங்களும் ச்ரேயஸை அடைந்து, லோகமும் தங்களால் க்ஷேமமடையும் படியாகச் செய்துகொண்டு, அதற்கும் மேலான ஸ்வர்காதி புண்ய லோகங்களிலும் ஸந்தோஷத்தைப் பெறட்டும் என்று வழிபோட்டுக் கொடுத்தார். வேதத்தில் இந்த பாகத்துக்குக் கர்ம காண்டம் என்று பெயர். யஜ்ஞ கர்மாநுஷ்டானமெல்லாம் இதில் அடங்குவதுதான்.

நிவ்ருத்தி மார்க்கமாக மோக்ஷ ஸித்திக்கு அதே வேதத்தில் முடிவு பாகங்களிலுள்ள உபநிஷத்துக்கள் மூலமாக வழி போட்டுக் கொடுத்தார். அதற்கு ஞான காண்டம் என்று பெயர். அதில் தத்வோபதேசம் நிரம்ப இருக்கும்.

மோக்ஷம் வேறு, ஸ்வர்கம் வேறு. மோக்ஷம்தான் ஸம்ஸாரத்திலிருந்து நிரந்தர விடுதலை பெறும் ஸ்தானம். பரமசாந்தமான ஸ்தானம். ஸ்வர்கம் என்பது புண்யத்தின் அளவைப் பொருத்து, அது செலவழியும் காலம் வரையில் மாத்திரம், பலவித இந்த்ரிய இன்பங்களை மாத்திரம் கொடுக்கும் லோகம்.

கர்ம மார்க்கத்தின் இருவித பலன்கள்

ஈச்வரன் வேதவாயிலாகப் போட்டுக் கொடுத்த கர்ம மார்க்கத்தில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால் :

அப்பப்போ நமக்கே ஒரு யோசனை, 'இது என்னமோ ஓயாமல் ஒழியாமல் பண்ணிக்கொண்டிருக்கிறோமே! ஆனால் இதனாலே நமக்கு உள்ளே என்னவோ ஒன்று நிறையாமல், எல்லாம் ஏதோ மேலெழுந்தவாரியாக அல்ப ஸுகம் அநுபவித்துத் தீர்ந்து போகிறாற்போலத்தானே இருக்கிறது?' என்று வருகிறதென்று சொன்னேன். இப்படி ஒரு எண்ணம் வந்தாலும் உடனே பழக்க வாஸனை அதை நல்ல விரக்தி - வைராக்யமாக வளர வொட்டாமல் அமுக்கிப் போட்டு விடுகிறது. 'பழைய குருடி' என்று சேற்றுக் குட்டையிலேயே

Koviloor Digital Library

விழுந்து குழப்பிக்கொண்டு, 'நன்றாயிருக்கு, நன்றாயிருக்கு' என்று ஸந்தோஷப் படுகிறோம். நம்மாலே எதுவுமே செய்து கொள்ளமுடியாததாக ஒரு சாவு, பெரிய நஷ்டம் என்று ஏதாவது வந்தால் அப்போது மட்டும்—கார்யமே செய்கிற நாம் இதில் செய்துகொள்ள ஒரு கார்யமும் இல்லை என்பதாலோ என்னவோ—கொஞ்சம் வைராக்யமாயிருக்கிற மாதிரி இருப்போம். பிரஸவ வைராக்யம், ச்மசான வைராக்யம் என்பார்கள். ஆனால் அதுவும் நீர் மேல் எழுத்து என்கிற மாதிரி அடித்துக்கொண்டு போய் விடுகிறது. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாகப் 'பட்டு'க்கொண்டு போனால், பட்டுப் பட்டுக் கொஞ்சத்திலே கொஞ்சம் பக்வம் வரும். அந்த நிலையிலும் நம்மாலே கர்மாவைவிட முடியாதுதான். ஆத்மா—ப்ரஹ்மம்—ஞானம் என்று ஏகாந்தத்தில் போய் உட்கார்ந்து கொண்டு த்யான விசாராதிகள் பண்ணும் யோக்யதை வந்திருக்காதுதான். ஆனாலும் என்றைக்காவது அந்த யோக்யதை வந்தால் தேவலையே என்ற எண்ணம் அடிவாரத்தில் உண்டாயிருக்கும் கார்யங்களில்தான் மனஸின் ப்ரவ்ருத்தி ('மனஸின் போக்கு' என்ற அர்த்தத்தில் சொல்கிறேன்) இருந்தாலும், அதை விட்டுவிட்டு ஞான விசாரம் பண்ண முடியாவிட்டாலும், 'கார்யம் விட்டால் தேவலை, ஞான விசாரத்திற்கான யோக்யதை வந்தால் தேவலை' என்று விருப்பம் உண்டாகும். இம்மாதிரியிருப்பவர்கள் கர்ம ஸங்கிகளில் அதிகம் பேர் இருக்கமாட்டார்கள். ஆனாலும் முமுக்ஷுக்களாக நிவ்ருத்தி என்றே தீவிரமாகப் போகிறவர்களைவிட நிறையப் பேருக்கு இந்த எண்ணமாவது அடிப்படையில் இருக்கும்.

ப்ரவ்ருத்தி மார்க்கத்தை உத்தேசித்து ஈச்வரனால் வேதத்தின் மூலம் கொடுக்கப்பட்ட அதே கர்ம காண்டத்தின் அநுஷ்டானம் இப்படிப் பட்டவர்களுக்கும் ஒரு பெரிய உபகாரத்தைச் செய்து, நிவ்ருத்தி மார்க்கத்திற்குப் பிற்பாடு ஒரு காலத்திலாவது போய்ச் சேருவதற்கு யோக்யதை உண்டாக்குகிற உபாயமாக அமைகிறது. பரமாத்மா அப்படி அமைத்திருக்கிறார்.

Koviloor Digital Library

என்ன செய்திருக்கிருரென்ருல், தர்மமான இந்த சாஸ்த்ரோக்த கர்மாக்களைச் செய்தால் அது இரண்டு விதமான பலன்களைக் கொடுக்கும்படியாகச் செய்திருக் கிருர். இரண்டு விதமான லக்ஷ்யங்களை உத்தேசித்துக் கர்மாக்களைச் செய்யும் இரண்டு வகையான ஜனங்களுக்கு அவரவர் லக்ஷ்யத்தையும் நிறைவேற்றித் தருவதாக இரண்டு வித பலனை அமைத்திருக்கிருர்.

ஒரு வகை, பூலோக - ஸ்வர்க்க லோக இன்பங்களுக்கு மேலே எதையும் நினைக்காதவர்கள். இவர்கள் தாங்கள் விரும்பும் இன்பங்களுக்காகத் தங்கள் மனஸுப்படியெல் லாம் செய்தால் லோகத்துக்கும் கஷ்டம் விளைவித்துத் தங்களுக்கும் பாவத்தைத் தேடிக்கொள்கிருர்களே, அதனுல் தங்களுக்கும் கஷ்டத்தை உண்டாக்கிக் கொள்கிருர்களே, தாங்கள் ஆசைப்படும் நச்வரமான இன்பங்களையும் அடையாமல் வீணுய்ப் போகிருர்களே என்றுதான் சாஸ்த்ரோக்தமாக கர்ம காண்டம், கர்ம மார்க்கம் என்று ஈச்வரன் போட்டுக் கொடுத்தது. "அப்பா! உன்னுலே ஏதாவது கார்யந்தான் ஸதாவும் பண்ணிக்கொண்டிருக்க முடியும். நான்தான் உன்னை அப்படிப் படைத்திருக்கிறேன். உனக்கு நான் கொஞ்சம் ஸ்வாதந்திரியமும் கொடுத்திருக்கி றேன். வேடிக்கை பார்க்கணுமென்றுதான் இப்படியெல்லாம் செய்திருக்கிறேன். ஆனுல் வேடிக்கையாக இல்லாமல் ஒரே வெறிக்கூத்தாக நான் பார்த்து, 'நம்ம ஸ்ருஷ்டி இப்படி யாச்சே!' என்று நினைக்கும்படிப் பண்ணிவிடாதே! நீ இஷ்டப் படிக் கார்யம் செய்து உனக்கும் கஷ்டம், ஊருக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம் என்று ஆக்கிவிடாதே! இப்படி ஆகாம லிருக்க வழிதான் கர்ம காண்டம். உனக்குப் பிடித்த பூலோக-ஸ்வர்க்கலோக ஸௌக்யங்களை நிஜமாகவே உனக்குக் கொடுப்பதாக அதில் கர்மாக்களைத் தந்திருக்கிறேன். கார்யம் பண்ணுவதிலேயேதான் உன் ஸ்வபாவம் இருப்ப தால் மனஸுப்படிப் பண்ணுவதை விட்டு, இப்படி (சாஸ்த்ரத்தில் கொடுத்துள்ள கர்மாக்களைப்) பண்ண

Koviloor Digital Library

ஆரம்பி. இந்த மாதிரி கர்மாநுஷ்டானம் செய்வதில் கஷ்டங்கள், ச்ரமங்கள், த்யாகங்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால், 'நம்மிஷ்டப்படி செய்தால் பின்னால் வருகிற கஷ்டங்கள் இதைவிட ரொம்பப் பெரிசாக அல்லவா இருக்கும்? அது, செய்கிற கொஞ்ச காலத்தில் ஸௌக்யமாயிருந்தாலும், செய்து முடித்தபின் நெடுங்காலம் ஏற்படும் விளைவுகள் பரம கஷ்டமாக இருக்கும். இது (வேத சாஸ்த்ர கர்மாநுஷ்டானம், ஸ்வதர்ம பரிபாலனத்தில் செய்கிற ஒவ்வொரு கார்யமும்) செய்கிற கொஞ்ச காலம் ச்ரமமாகப் பல நியமம், த்ரவியத் தியாகம் என்றிப்படியிருந்தாலும், பலனோ பஹுகாலம் ஸந்தோஷத்தைக் கொடுப்பதாக இருக்கிறதல்லவா? அதனால் நம்மைக் கொஞ்சம் ஸரிப்படுத்திக்கொண்டு ஈச்வராஜ்ஞைக்கு அடங்கி இப்படிப் பண்ணுவோம்' என்று ஒரு தீர்மானம் பண்ணிக்கொள்"— என்றே கர்ம மார்க்கத்தை வேதத்தின் வழியாக பகவான் விதித்திருக்கிறான். இது ஒரு வகையான ஜனங்களுக்கு. ஆத்மாநுபவம், ஈச்வராநுபவம் ஆகியவற்றைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல், ஸந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருந்தால் போதும் என்று நினைக்கும் ஜனங்களுக்கு.

இன்னொரு வகை சொன்னேன். ஆத்மா என்று விசாரம் செய்யவோ, ஈச்வரன் என்று அப்படி உருகிப்போகவோ முடியாத வகைதான். கார்யத்திலேயே போய்க்கொண்டிருப்பவர்கள்தான். ஆனாலும், 'செக்குமாடு மாதிரி இதென்ன சுற்றி சுற்றிக் கார்யம்? இதனாலே பெறுகிற இந்த ஸந்தோஷங்கள்தான் என்ன? உள்ளே ஒரு நிறைவைத் தரவில்லையே! அதைப் பெறவேண்டுமே!' என்கிற எண்ணம் உள்ள ஜனங்கள். இவர்களுக்கும் கர்ம காண்டத்தின் ஸ்வதர்மாநுஷ்டானங்களையேதான் ஈச்வரன் மார்க்கமாகக் கொடுத்திருக்கிறான். ஆனாலும் ஒரு வித்யாஸம். மேலே சொன்னபடி பூலோக-ஸ்வர்கலோக ஸந்தோஷங்களோடேயே த்ருப்திப் பெற்றுவிடுபவர்கள் இந்த ஸந்தோஷ ப்ராப்தி என்ற பலனை உத்தேசித்தே கர்ம மார்க்கத்தில்

Koviloor Digital Library

போகிறார்கள். ஈச்வரனே அந்த மார்க்கத்துக்கு இந்தப் பலன் உண்டு என்று வைத்திருக்கிறான். ஆனால், 'இந்தப் பலன் வேண்டாம். நச்வரமான இந்த ஆனந்தங்களில் எங்களுக்கு ஆசையில்லை. ஆனாலும் நிவ்ருத்தி மார்க்கத்தில் போவதற்கான சித்தப் பக்குவம் எங்களுக்கில்லை. ஏதாவது கார்யம் பண்ணிக்கொண்டிருப்பதிலேயேதான் எங்கள் ஸ்வபாவம் இருக்கிறது' என்பதாக இன்னொரு வகை சொன்னேனல்லவா, அவர்களுக்கும் அந்தச் சித்தப் பக்வத்தை சாஸ்த்ரோக்தமான கர்ம மார்க்கமே அளிக்கும் படியாக (ஈச்வரன்) வைத்திருக்கிறான். பலனை விரும்பிப் பண்ணினால் ஒரோரு ஸந்தோஷங்களைக் கொடுத்துவிட்டு அதோடேயே முடிந்து போய்விடும் கர்மாநுஷ்டானத்தையே, பலனை விரும்பாமல், 'இது ஈச்வராஜ்ஞை. வேதம் வழியாக அவன் போட்டுள்ள ஆஜ்ஞை, அதற்காகவே அடங்கி அதை அநுஷ்டிக்கிறோம். ஆனால் இதனால் ஏற்படும் ஸந்தோஷ பலன் எதுவும் வேண்டாம்' என்று நினைத்து ஒருவர் செய்து கொண்டுபோனால் அது அவருக்குக் சித்த சுத்தியைக் கொடுத்துவிடும். ஸ்வய லாபம், தன் ஸொந்த ஸந்தோஷம் என்ற பலனில் ஆசையில்லாமல், அதாவது நிஷ்காம்யமாக, 'லோகம் ஒழுங்காக இருப்பதற்காக பகவான் வகுத்துக் கொடுத்திருக்கிற வழி, கார்ய க்ரமம், இது (கர்ம மார்க்கம்) என்பதற்காக மட்டும் அதன்படிப் பண்ணுவோம்' என்று ஒருவன் கர்மாக்களைப் பண்ண ஆரம்பித்தால், —தன்னலம் கருதாமலும், ஆசையின் அழுக்குப் படாமலும் பகவான் கட்டளைக்கு அடங்கி, 'அவனுடைய ப்ரீதிக்கே இதைச் செய்கிறேன் : 'பரமேச்வர ப்ரீத்யர்த்தம்' என்று ஸ்வதர்மப்படி ஒருவருக்கு ஏற்பட்டிருக்கும் அத்தனை கர்மாக்களையும் விடாமல் இழுத்துப் போட்டுக்கொண்டு பண்ண ஆரம்பித்தால்—அவனுடைய சித்தத்திலுள்ள தோஷங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து மறைந்து போய்விடும். இப்படிப்பட்ட சித்த சுத்தி பெற்றபின் அவனால் கர்மாவை விடமுடியும். ஓயாமல் காரியம் என்று பறக்கும் ஸ்வபாவம் அடங்கிப்

Koviloor Digital Library

போகும். கொஞ்சங் கொஞ்சமாக த்யானம், விசாரம் என்று அதற்கப்புறம் நிவ்ருத்தி மார்க்கத்தில் போகமுடியும்.

கர்ம மார்க்கத்துக்கு இப்படி இரண்டு விதமான பலன். ஒன்று, கர்மாவினுல் நேராக ஏற்படும் பூலோக—ஸ்வர்க்க லோக ஸந்தோஷ பலன். இன்னென்று, இந்தப் பலன் வேண்டாமென்று ஈச்வரார்ப்பணம் பண்ணிவிட்டு, அவனுடைய ஆஜ்ஞை என்பதற்காக மாத்திரம் பண்ணிக் கொண்டுபோனுல் நாளடைவில் உண்டாகும் சித்த சுத்தி என்ற பலன். சித்த சுத்தி அதோடு முடிந்துபோவதில்லை. நிவ்ருத்தி மார்க்கமென்கிற ஞானயோகத்தில் ப்ரவேசிப்பதற்கான யோக்யதையை அதுவே உண்டாக்குகிறது.

இரண்டு விதமான பலன் என்று நான் சொன்னுலும், வாஸ்தவத்தில் கர்ம பலன் என்ருல் அது அந்தக் கர்மா நேராக பூலோக-ஸ்வர்க்க லோகங்களில் தரும் தாற்காலிக ஸந்தோஷங்கள்தான். இந்தப் பலன் வேண்டாமென்று நினைத்தபோதிலுங்கூட, கர்மா செய்யாமலிருக்க முடியவில்லையே என்பதாலும், விதிப்படி ஸ்வதர்மங்களைச் செய்வதால் நமக்கே ஒரு டிஸிப்ளின் உண்டாகிறது என்பதாலும், இதனுல் ஸமூஹத்தின் ஒழுங்கான வாழ்க்கைக்கும் உதவ முடிகிறது என்பதாலுமே ஒருவன் கர்மா பண்ணும்போது அவனுக்குச் சித்த சுத்தி ஏற்படுகிறதென்ருல் அந்தச் சித்த சுத்தி நேராக அந்தக் காரியங்களிலிருந்து பலனுக உண்டாகிவிடவில்லை.

காய்கறித் தோட்டம் போடுவதற்கு என்ன பலன்? கத்திரிக்காய் ஸாம்பார், வெண்டைக்காய் கறி இத்யாதி தானே? ஒருத்தருக்கு இந்த ஸாம்பாரும் கறியும் வேண்டியிருக்கவில்லை. ஆனுலும் அவருக்கு என்னவோ வேதனை—புத்ர சோகம், business-ல் loss மாதிரி என்னவோ ஒன்று. அது தெரியாமலிருக்க, வெட்டி, கொத்தி ஏதாவது கார்யம் பண்ணி மறக்கடிக்கலாமென்று காய்கறித் தோட்டம் போடுகிருர். அதற்காக, தோட்டம் போடுவதன் பலன் என்ன

Koviloor Digital Library

என்று கேட்டால், 'புத்ர சோக நிவ்ருத்தி' என்று சொல்லலாமா?

இப்படித்தான் ஒரு கர்மாவின் இஹாமுத்ர பலன்* வேண்டாமென்று கர்மா செய்கிறவன் பெறும் சித்த சுத்தியைக் கர்ம பலனாகச் சொல்வதில்லை. அது ஈச்வர ப்ரஸாதமாக அவன் பெறுவதே.

"நேர்ப் பலன் தனக்கு வேண்டாமென்றிருந்தும், நம்முடைய ஆஜ்ஞை என்பதாலும், ஸமூஹ ஒழுங்கை உத்தேசித்தும் நம்முடைய ப்ரீதிக்காகவே இவன் இவ்வளவு நன்றாகக் கர்மாநுஷ்டானம் செய்கிறானே! இந்த மனோபாவத்துக்காக இவனுடைய சித்தத்தின் அசுத்தங்களைப் போக்குவோம்" என்று ஈச்வரனே அநுக்ரஹிப்பதுதான் சித்த சுத்தி.

நேர்ப்பலன் என்பதைக்கூட கர்மாவே கொடுப்பதில்லைதான். ஜடமான கர்மா எப்படிப் பலன் தரமுடியும்? பலதாதாவான ஈச்வரன்தான் அதையும் கொடுக்கிறான். என்றாலும், அதிலேயே வித்யாஸம் பண்ணி, வெளி வஸ்துக்களாலேயே ஒருத்தனுக்கு ஏற்படும் பூலோக-ஸ்வர்க லோக பலன்களை மட்டும் கர்மாவின் நேர்ப் பலனாகவும், உள்ளே அந்தஃகரணத்தில் ஜீவனுக்கு உண்டாகும் சித்த சுத்தியைத் தன்னுடைய ப்ரஸாதமாகவும் காட்டுகிறான். ஆகையால் சித்த சுத்தியைக் கர்ம பலன் என்று சொல்லும் வழக்கமில்லை. கீதாதி சாஸ்த்ரங்களிலும் கர்ம பலம், கர்ம பல த்யாகம் என்றெல்லாம் சொல்லும்போது இந்த அர்த்தத்தில்தான் சொல்லியிருக்கிறது. சித்த சுத்தி (என்பது) கர்ம பலனில்லை, (அது) கர்ம பலனைத் தியாகம் செய்வதாலேயே கிடைப்பது.

ஞான மார்க்கத்தில் போகவும் யோக்யதை இல்லை, கர்மாவில் உண்டாகும் ஸந்தோஷங்களிலும் நிறைந்த நிறைவில்லை என்றிருக்கிறவர்களிடம் பகவான், "உன்னால் கார்யங்களை விடமுடியாததால், பண்ணிக்கொண்டே போ. ஆனால் பலனில் ஆசை வைக்காதே. பலத்யாகம் பண்ணி,

---

* இஹ-அமுத்ர பலன் : பூலோக, ஸ்வர்க்கலோக இன்பப் பயன்கள்.

Koviloor Digital Library

என் ப்ரீதிக்காகவே கர்மங்களை அநுஷ்டி. அதனால் கால க்ரமத்தில் சித்த சுத்தி உண்டாகும். அப்புறம் ஞான மார்க்கத்தில் பிரவேசிக்கலாம்'' என்கிறார். கர்ம மார்க்கம் என்பது இங்கே கர்ம யோகம் என்றே உயர்வு பெற்று விடுகிறது. ஞான மார்க்கம் எப்போதுமே ஞானயோகம் தான்.

யோகம் என்றால் சேர்ந்திருப்பது, சேர்ப்பது. பரம ஸத்யத்தில் ஒரு ஜீவனைச் சேர்ப்பதற்கு உதவும் வழிகளை அத்யாத்ம சாஸ்திரங்களில் யோகம், யோகம் என்று சொல்லியிருக்கும். நேராக இவற்றில் ஒவ்வொன்றுமே முடிவான ஸத்ய லக்ஷ்யத்தில்கொண்டு சேர்த்துவிட வேண்டு மென்பதில்லை. மெயின் ரோடில் கொண்டுபோய்ச் சேர்க்கிற சந்து மாதிரி இருந்துவிட்டால்கூடப் போதும், இதுவும் யோகம்தான். லக்ஷ்யத்தில் நேரே சேர்ப்பது ஞானயோகம். அந்த மெயின் ரோடுக்குக் கொண்டுவிடுவது கர்ம யோகம். அதற்குப் பல ஜன்மா பிடித்தாலும் பிடிக்கும். ஆனாலும் ஒரு நாள் கொண்டு விட்டுவிடும்.

காலப் போக்கில் கர்ம யோக நலிவு

ஸ்ருஷ்டி உண்டாகும்போதே, 'நம்முடைய ஸ்ருஷ்டியில் இத்தனைதானென்றில்லை, அத்தனை தினுஸான மனோபாவம் கொண்ட ஜீவர்களும் இருந்து, நமக்குப் பெரிய நாடக விநோதமாகப் பிரபஞ்சம் இருக்கணும். இதற்கு, ஜீவனுக்குக் கொஞ்சம் ஸ்வாதந்த்ரியமும் இருக்கணும். ஆனாலும் விநோதம் விபரீதமாகப் போகவிடப்படாது' என்று பகவான் நினைத்து ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி மார்க்கங்கள் என்ற இரண்டை வேத வாயிலாக வெளிப்படுத்தினான்.

ஆதி காலங்களில், பூர்வ யுகங்களில் ஜனங்கள் எவரெவர்களுக்கு எந்த மார்க்கமோ அதை எடுத்துக் கொண்டு ச்ரேயஸை அடைந்து வந்தார்கள். நிவ்ருத்தியில் சில பேர் போனார்கள். ப்ரவ்ருத்தியில் மற்றவர்கள் ஈடுபட் டார்கள். ஒரு முக்யமான விஷயமென்னவென்றால்: ஜீவ

Koviloor Digital Library

ஸ்வாதந்த்ரியத்தை ரொம்பவும் இஷ்டப்படி ஓடவிடாமல் பூர்வ யுகத்து ஜனங்கள் ஸகலருமே ஈச்வரனுக்குக் கட்டுப் பட்டு, ஈச்வர ப்ரீதிக்காகவே செய்யணும் என்ற எண்ண முடையவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்களுக்கு ஆசைகள் அளவுக்கு மீறிக் கவடு விட்டுக்கொண்டே போக வில்லை. இதனால் என்னவாயிற்று என்றால் ஏதோ ஒரு காலம் வரையில் போக்ய பலன்களுக்காகவே அவர்கள் கர்மங் களைப் பண்ணி வந்தாலும்கூட அப்புறம் அந்த ஸௌக்கியங் களில் பற்றுக் குறைந்து போய், ஆத்மாவைக் கடைத் தேற்றிக்கொள்ளவேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால் ஞான நிஷ்டைக்கான யோக்யதை தங்களுக்கு இல்லை என்று உணர்ந்திருந்தார்கள். ஆகையால் அதற்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதான பலத்யாகம் செய்து கர்ம மார்க்கத் தைக் கர்மயோகமாகவே அநுஷ்டித்து வந்தார்கள். ப்ரவ்ருத்தி தர்மம் அந்த ஆதிக் காலங்களில் கர்மயோக மாகவே உசந்த நிலையில் ப்ரகாசித்து வந்தது. இந்த யோகத்தில் முன்னேறி நல்ல சித்த சுத்தி உண்டான பிறகு ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு நிவ்ருத்தியில் போய் மோக்ஷ மடைந்து வந்தார்கள்.

தர்ம சாஸ்திரங்களில் பொதுவான வாழ்க்கை முறை யாகவே க்ருஹஸ்தாச்ரமத்திற்கு அப்புறம் வானப்ரஸ்த்யம், ஸந்நியாஸம் என்று நிவ்ருத்தியை விதித்திருப்பதால் அப்படியே எல்லாரும் அந்த நாளில் பண்ணி வந்திருக் கிறார்கள் என்று தெரிகிறது. ஒரு வயஸுக் கட்டம் வரையில் காம்யமாகக் கர்மாக்கள் பண்ணி போகங்களை அநுபவித் தாலும், அப்புறம் பற்றுக்களைக் குறைத்துக்கொண்டு நிஷ்காம்ய யோகமாக ஆரம்பித்திருக்கிறார்களென்று தெரி கிறது. ஸூர்யவம்ச ராஜாக்களைப் பற்றிக் காளிதாஸன் இப்படித்தான் 'ரகுவம்ச'த்தில் சொல்லியிருக்கிறார்—அவர் கள் யௌவனத்தில் விஷய ஸுகப் பற்றுள்ளவர்களாக இருந்தாலும் அந்திமத்தில் யோகிகளாகியே சரீரத்தை விட்டார்களாம்.*

* ரகுவம்சம் I. 8

Koviloor Digital Library

அந்த நாளிலுங்கூட இப்படிக் கர்மாவை யோகமாக்கிக் கொள்ளமுடியாத சில பேரும் இருந்திருக்கலாம். ஆனால் அவர்களும் கர்ம யோகிகள், ஞான யோகிகள் ஆகியவர்களைப் போற்றி நமஸ்கரித்துக்கொண்டு, 'நம்மால் அப்படி இருக்க முடியாவிட்டாலும் அதுதான் நித்ய ச்ரேயஸுக்கான வழி' என்றே தெரிந்துகொண்டிருந்தார்கள். தங்களுடைய (யோகமில்லாத) கர்ம மார்க்கம்தான் உசத்தி என்று ஸ்தாபிக்கப் பார்க்கவில்லை.

அப்புறம், போகப்போக, ஜனங்களுக்கு ஆசைகள் அதிகமாக ஆரம்பித்தன. அதனால் பலனை விரும்பியே, பலனுக்காகவே கர்மா செய்வது ஜாஸ்தியாயிற்று. பலத்யாகம் செய்து சித்த சுத்தி பெறுவது, அப்புறம் நிவ்ருத்திக்குப் போவது என்பது குறைந்துகொண்டே வந்தது. இப்படிக் கர்மா செய்தவர்கள், 'இதுதான் ஸரி. இதுதான் பரம புருஷார்த்த ஸாதனம். கர்மாவை விட்ட ஸந்நியாஸ மார்க்கம் ரொம்பத் தப்பு' என்று பெரிய ஸித்தாந்தமாகவே எழுதி வைத்துவிட்டார்கள். ஈச்வரன், ஆத்ம ஸாக்ஷாத்காரம் என்பதையெல்லாம் தள்ளிவிட்டு, 'வேதோக்த கர்மா தானாகவே பலன் தருகிறது. ஈச்வரனென்ற பலதாதாவுமில்லை. கார்யமில்லாத ஆத்மானந்த மோக்ஷமுமில்லை. வேதத்தில் சொன்ன கர்மாக்களை அதற்கான பலனுக்காகவே பண்ணி ஸ்வர்க்கத்துக்குப் போவோம். அப்படியே ஸ்வர்க்கத்துக்கு மேலே மோக்ஷம் என்று ஒன்று இருக்குமானாலும், ஒன்றும் செய்யாமல் ஞான விசாரம் என்று பண்ணிக்கொண்டிருந்தால் அது கிடைத்துவிடும் என்றால் எப்படி? நாம் கடைசி வரை பண்ணவேண்டியது கர்மாதான். அதனாலேயே அந்த மோக்ஷம் வருமானால் வரட்டும்' என்று ஸித்தாந்தம் பண்ணினார்கள்.

நிவ்ருத்தி, ஞானம், ஸாக்ஷாத்காரம் ஆகியவற்றை வேதங்களின் முடிவுப் பகுதிகளான உபநிஷத்துக்கள் சொல்கின்றன. அவற்றை வேதத்தின் உத்தர (பின்) பாகம் என்பார்கள். ஞான காண்டம் என்ற அதை அப்படியே

Koviloor Digital Library

தள்ளிவிட்டு, வேதத்தின் பூர்வ (முன்) பாகத்தில் சொல்லப் பட்டுள்ள கர்ம காண்டத்தை மாத்திரம் ஒப்புக்கொண்டு இப்படிச் செய்த ஸித்தாந்தத்திற்குப் 'பூர்வ மீமாம்ஸை' என்றும் 'கர்ம மீமாம்ஸை' என்றும் பெயர். 'மீமாம்ஸை' என்றால் 'நல்ல விஷயத்தைப் பற்றிய ஆராய்ச்சி'.

உத்தரபாகமான ஞான காண்டத்தை ஆதாரமாகக் கொண்டு உண்டான ஸித்தாந்தத்திற்கு 'உத்தர மீமாம்ஸை' என்று பெயர். ஆனாலும் அதை 'வேதாந்தம்' என்று குறிப் பிடுவதே வழக்கமாயிற்று. ஒவ்வொரு வேத சாகையின் அந்தத்திலும் (முடிவாக) வரும் உபநிஷதங்களைக் குறித்த சாஸ்திரமாதலால் 'வேதாந்தம்' என்ற பெயர் வந்தது. பூர்வ மீமாம்ஸையையே மீமாம்ஸை என்று சொல்வதாக வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இந்த விஷயம் இருக்கட்டும்.

இரு மார்க்கங்களின் உபதேசங்கள்

ஸ்ருஷ்டி காலத்திலிருந்து பகவான் வரிசையாக மஹாபுருஷர்களை ஆசார்யர்களாக அனுப்பி ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி என்பதான இரு தர்மங்களையும் உபதேசிக்கச் செய்துவந்தான். நிவ்ருத்திதான் முடிவான மோக்ஷ ஸித்தி யானதால் அதற்குத் தானே குருவாக தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் இருந்தான். அது பரமசிவ ஸ்வரூபம். அவர் தான் முக்யமாக நிவ்ருத்திக்கு (தெய்வம்). விஷ்ணுவும் ஹம்ஸாவதாரம், தத்தாத்ரேயர், ஹயக்ரீவர் என்ற ரூபங்களில் நிவ்ருத்தி தர்மத்தை உபதேசித்தார். ஆனாலும் இவற்றில் தசாவதாரம் மாதிரி அவ்வளவு சக்தி யைக் காட்டவில்லை. தக்ஷிணாமூர்த்தி, ஹம்ஸர், ஹயக்ரீவர் ஆகியோர் லோகத்தில் ஸஞ்சாரம் பண்ணி ஞானோபதேசம் செய்யவில்லை. ஸநகாதியர், ப்ரம்மா போன்றவர்கள் அவர் களைத் தேடிப்போய் உபதேசம் பெற்றனர். தக்ஷிணாமூர்த்தி வார்த்தையால் உபதேசிக்காமல், அநுபவமாகவே அநுக்ர ஹித்துவிடுவார். இப்போது நாம் தெய்வங்களை வேண்டிக் கொள்ளும்போது நம்முடைய வேண்டுதல்களில் பல நிறை

Koviloor Digital Library

வேறுகின்றன. ஆனால் அந்த தெய்வமே ப்ரத்யக்ஷமாகி அப்படிப் பண்ணுவதில்லை. ஸூக்ஷ்மமாகவே பண்ணுகின்றன அல்லவா? அப்படி தக்ஷிணாமூர்த்தி, ஹயக்ரீவர் ஆகியவர்களிடம் ஞானத்துக்காக வேண்டிக்கொண்டு அந்த அநுக்ரஹத்தை ஸூக்ஷ்மமாகப் பெற்றவர்கள், பெறுபவர்கள், உண்டு. சிவாலயமென்றால் அங்கே ஞானதாதாவாக அவர் தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் நிச்சயம் இருப்பாரென்று பாமர ஜனங்கள் உள்பட எல்லாரும் தெரிந்துகொண்டு, அவருக்கு முன்னால் ஒரு க்ஷணம் கண்ணை மூடிக்கொண்டு, ஞானம் (என்பது) என்னவென்று தெரியாவிட்டாலும் அவரிடம் வேண்டிக்கொள்ளுவார்கள். இந்த அளவுக்கு ஹயக்ரீவரைப் பற்றிச் சொல்லமுடியாது. இப்படிப் பரமசிவனையே நிவ்ருத்திக்கு முக்யமாக நினைப்பதாயிருக்கிறது. தத்தாத்ரேயரைப் போல் ஸஞ்சாரம் செய்தவர்கள்—ஸநகாதியரும்கூட விஷ்ணுவின் அம்சாவதாரங்கள்தான்; அவர்களும் ஸஞ்சாரம் செய்வார்கள்—இவர்களெல்லாம் லோகத்திலே பல பேருக்குப் பல ஸமயங்களில் நிவ்ருத்தியை உபதேசித்தார்கள். ஆனாலும் உபதேசமே தங்கள் கார்யம் என்று ஸித்தாந்தமாக வகுத்துக்கொண்டு எங்கே பார்த்தாலும் சிஷ்ய ஜனங்களுக்குச் சொல்லிக்கொண்டு போகவில்லை.

ப்ரவ்ருத்தி தர்மத்திற்குப் பரமாத்மா இவ்வளவு தூரம் தானே நேராகச் செய்யவேண்டியிருக்கவில்லை. கார்யத்தை விட்டு, மனஸை விட்டு, நிவ்ருத்தி என்று ஞானத்தில் போவதுதான் ஜனங்களுக்குக் கஷ்டமானதால் அதை உத்தேசித்தே அதிகமாக மஹான்களை அனுப்புவது, தானும் உபதேசிப்பது என்று செய்தார். மனஸையும் கார்யங்களையும் வைத்துக்கொண்டு செயல்படுவதுதான் மநுஷ ஸ்வபாவமானதால், இவற்றை ஈடுபடுத்தியே செய்கிற ப்ரவ்ருத்தி ஸாதனைக்கு அவரவரின் வித்யாப்யாஸ குரு ச்ரௌத, ஸ்மார்த்த சாஸ்த்ரங்களின்படி சொல்லிக்கொடுப்பதே போதுமானதாயிருந்தது.

Koviloor Digital Library

என்றாலும் இந்தக் கர்மானுஷ்டானங்களை நிஷ்காம்யமாகச் செய்தால் நிவ்ருத்தி மார்க்கத்திற்கு முன்னேறுவதற்கான சித்த சுத்தியை அளிக்கவல்ல யோகமாகவே அது ஆகும் என்ற ரஹஸ்யத்தை ஆதியில் பகவானேதான் விவஸ்வானுக்கு, அதாவது ஸூர்யனுக்கு, உபதேசிக்கும்படியிருந்தது. ஸூர்யன் நம்முடைய மன்வந்தரத்தின்[1] அதிபதியான வைவஸ்வத மநுவுக்குக் கர்ம யோகமாகிய ப்ரவ்ருத்தி தர்மத்தை (அதாவது நிவ்ருத்தி தர்மத்திற்கு வழிபோட்டுக் கொடுப்பதாக உள்ள ப்ரவ்ருத்தி தர்மத்தை) உபதேசம் செய்தார். வைவஸ்வதன் என்றால் விவஸ்வானின் பிள்ளை என்று அர்த்தம். வைவஸ்வத மநு தன்னுடைய பிள்ளையும் ஸூர்யகுலத்தில் முதல் ராஜாவுமான இக்ஷ்வாகுவுக்கு உபதேசம் செய்தார். இப்படியே ப்ரவ்ருத்தி தர்மம் கர்மயோகமாகப் பிள்ளை பிள்ளைவழி நெடுங்காலம் உபதேசிக்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

விவஸ்வானான ஸூர்யனுக்குத் தான் கர்ம யோகம் உபதேசம் பண்ணி, அது பிள்ளை பிள்ளை வழியாக அநேக ராஜரிஷிகளின் வழியாகப் போனதை கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார்[2]. கீதையில் கர்மம், ஞானம் ஆகிய

---

1. பிரம்மா விழிப்பு நிலையில் செயற்படும் அவரது ஒரு பகற்காலம் ஆயிரம் சதுர்யுகம் கொண்டது. ஸ்ருஷ்டியும் அப்போதே இயங்கும். அப்பகற்பொழுது முடிந்ததும் இதேபோல் ஆயிரம் சதுர்யுகம் கொண்டதான பிரம்மாவின் இரவு பிறக்கும். அப்போது அவர் உறங்குவார். ஸ்ருஷ்டியும் செயலற்று ஒடுங்கிவிடும். கல்ப ப்ரளயம் என்பது இதுவே. இரவு முடிந்து ப்ரம்மாவுக்கு மறுதினம் தொடங்கும்போது ஸ்ருஷ்டி மறுபடி தொடங்கப்படும். ஸ்ருஷ்டியானது இயக்கத்திலுள்ள ஆயிரம் சதுர் யுகங்களில் பதிநான்கு மநுக்கள் தோன்றி ஸ்ருஷ்டியின்மீது மேலாதிக்கம் செலுத்துவர். ஒரு மநுவின் இவ்வாட்சிக் காலத்திற்கே மன்வந்தரம் என்று பெயர். ஒவ்வொரு மநுவின் காலம் முடிந்த பின்னும் மன்வந்தர ப்ரளயம் என்பது ஏற்படும். அடுத்த மநு அடுத்த மன்வந்தரத்தின் முதற் பிரஜையாகத் தோன்றி மனித குலத்தைத் தோற்றுவிப்பார். தற்போதைய ச்வேதவராஹ கல்பத்தில் நாம் ஏழாவது மநுவான வைவஸ்வதரின் மன்வந்தரத்தில் இருக்கிறோம்.

2 நான்காம் அத்தியாயத் தொடக்கம்.

Koviloor Digital Library

இரண்டு யோகங்களும் உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு இதுவரை நான் சொல்லாத பக்தி யோகம் என்பதும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது

பக்தி

ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி என்பதாகக் கார்யம் செய்வது, செய்யாமலிருப்பது என்றே பாகுபடுத்திச் சொல்லிக் கொண்டு போனதால் கார்யமான கர்ம யோகம், கார்யங்களை விட்டு த்யான விசாரம் செய்து கொண்டு ஏகாந்தமாயிருக்கும் ஞான யோகம் என்ற இரண்டை மட்டும் சொல்லி, அதோடு விட்டுவிட்டது. பக்தி என்பது கார்யமாகவும் பூஜை முதலான சடங்குகளாக வரும். கார்யமில்லாத த்யானமாக, ஸவிகல்ப ஸமாதி என்று அப்படியே பகவானிடம் சொக்கிப்போய் இஹ ப்ரஜ்ஞையேயில்லாமல் உட்கார்ந்துவிடுகிற வரையிலும் போகும். 'அவனிடம் சொக்கிப்போயிருக்கிற உறவுகூடக் போதாது. இன்னம் நெருக்கமாக, கொஞ்சங்கூடப் பிரிவு இல்லாமல் அவனே ஆகிவிடவேண்டும்' என்று பக்தியானது உச்ச கட்டத்துக்குப் போகும்போது அதுவே ஞானமாகிவிடும்.

ஜன ஸமூஹத்தில் யோகம், வேதாந்தம், மீமாம்ஸை என்றெல்லாம் தத்வ ஆராய்ச்சியில் போகாதவர்கள்தான் நிறைய இருப்பார்கள். இவர்கள் உள்பட ஸகலமான பேருக்கும் அல்பமாகவோ ஸ்வல்பமாகவோ பக்திதான் ஏதோ ஒரு விதத்தில் ஸ்வாபாவிகமாக (தன்னியல்பாக) அமைந்தது. நாஸ்திகர்களைப் பற்றியும், ஈச்வரப் பிரஸ்தாவம் வேண்டியதில்லை என்று ஒதுக்கிய மீமாம்ஸகர்களைப் பற்றியும் இங்கே பேச்சில்லை. ஸாதாரணமாக யாராயிருந்தாலும், 'இந்த லோகம் இப்படித் தோன்றி நடந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக ஒரு மஹாசக்தி இருக்கவேண்டும். அதனிடம் நாம் அடங்கியிருக்கவேண்டும்' என்ற அளவுக்கு ஒரு பக்தியெண்ணம் தோன்றாமலிருக்காது.

Koviloor Digital Library

கர்ம ஸங்கிகளாகவே இருந்தாலுங்கூட, 'பலதாதாவாக ஒரு ஈச்வரன் இருக்கவேண்டிய அவசியமில்லை' என்ற மீமாம்ஸைக் கொள்கையைப் பொதுவாக ஜனங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். மஹாசக்தனை அவனைத்தான் தங்களுடைய எந்த விருப்பத்தையும் ஈடேற்றுபவனுகக் கருதி ப்ரார்த்திப்பார்கள். பணம், படிப்பு, ஆரோக்யம், ப்ரமோஷன் எதுவானுலும், இதற்கெல்லாம் தாங்களும் முயற்சி மேற்கொண்டு கார்யங்கள் பண்ணிக்கொண்டே யிருந்தாலும், அவனருள் இருந்தால்தான் நமக்கு வேண்டியது பலிக்கும் என்று, தங்களுக்குத் தெரிந்த அளவில் பக்தி செய்து கொண்டிருப்பார்கள். 'இது பக்தியே இல்லை, வ்யாபாரமதான்' என்று சொல்பவர்கள் சொன்னுலும், தங்களளவில் பக்தியாக இருப்பதாகத்தான் இந்த ஜனங்கள் நினைக்கிருர்கள். ஒரே கடவுள் பல தேவதைகள் மூலம் அருள் செய்கிருரென்பதைப் புரிந்து கொள்ளாமல் ஒவ்வொரு தேவதையையும் ஒவ்வொரு காமனைக்காக ஆராதிப்பதோடு நின்று விடுபவர்களை விஷயம் தெரிந்த வர்கள் பரிஹாஸம் செய்தாலும், இவர்களிடமும் எங்கேயோ ஒரு மூலையில் ஏக பரமாத்மாவிடம் ஒரு நிஜமான பகதியெண்ணம் இல்லாமலே போய்விடவில்லை.

அவரவருடைய குணங்களையொட்டியே காமனைகள் இருக்குமாதலால், அவைகளை நிறைவேற்றித் தரவும் வெவ்வேறு தெய்வ பேதங்களை உபாஸிப்பது, தங்களுடைய குணத்துக்கு ஏற்றபடியே உபாஸனு மார்க்கத்தை அமைத்துக கொள்வது என்று இருப்பதில், நல்லதற்கில்லாத அநேக விஷயங்களுமு வழிபாட்டில் சேர்ந்துவிடுகின்றன. கர்ம யோகம் எனபது மீமாம்ஸகர்களிடம் நலிவு பட்டுப் போனுற்போலவே பகதி யோகமும் கீழ் நிலைக்கு வந்து விடுமபடி ஆகிறது. கீதையில் பகவான் இதைப் பற்றியும் சொல்லியிருககிருர். பல தேவதைகளைக் காம்யமாக (விருப்பப் பூர்த்துக்காகவே) உபாஸித்து நச்வரமான பலன் களைப் பெறுவது, ஏகமான பரமாத்மாவை அவனுக்காகவே

Koviloor Digital Library

உபாஸித்து சாச்வதமான பலன் பெறுவது முதலான விஷயங்களை "ஞான விஜ்ஞான யோகம்" என்ற அத்யாயத்தில் சொல்லியிருக்கிறார். அப்புறம், முடிக்கிற தற்கு முந்தி "ச்ரத்தா த்ரய விபாக யோகம்" என்ற அத்யாயத்தில், 'ஸத்வ குணமுடையவர்கள் ஸத்வமான தேவதைகளையும், ரஜோ குணிகள் யக்ஷ - ராக்ஷஸர்களையும், தாமஸ குணமுடையவர்கள் பூத ப்ரேதங்களையும் பூஜிக்கிறார் கள்' என்றெல்லாம் சொல்கிறார். இதில் ஆபாஸமான வழிபாட்டு முறைகள், நரபலி முதலான க்ரூரமான வழிபாட்டு முறைகள் ஆகியனவும் வந்துவிடுகின்றன.

அவனாகவே ஆகிவிடுவது என்ற பரமஞான, அதாவது நிவ்ருத்தி மார்க்கத்தின் பராகாஷ்டா நிலையிலிருந்து, கார்யத்தில் மஹா நீசமாகக் கழுத்தைச் சீவிப்போட்டு பலி கொடுக்கும் ப்ரவ்ருத்தி வரையில் பக்தியானது பல மட்டங் களிலும் கலந்து வருகிறது என்று சொல்லவந்தேன்.

ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி என்று இரண்டுதானே ஒன்றுக் கொன்று எதிரிடையாக இருக்கமுடியும்? மூன்றாவதாக ஒன்று எங்கேயிருந்து வரும்? அதனால்தான் கர்மம், ஞானம் என்று மட்டும் சொல்லி, ஸகல ஜனங்களுக்கும் ஸ்வாபாவிக மாகத் தோன்றிக் கர்மத்தின் கீழ்நிலையிலிருந்து ஞானத்தின் உச்ச நிலைவரை எல்லாவற்றையும் தழுவிக்கொண்டு போகும் பக்தியைச் சொல்லாமல் விட்டது. உலகம் மாயை என்று அநுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்ட ஞானியும், 'மாயைக்கு அதீச்வரனாக இப்படியொரு பரமாத்மா இருந்து கொண்டு என்னவெல்லாம் விளையாடுகிறான்?' என்று பக்தியில் உருகிப்போகிறான். ஞானமே வேண்டாம் என்றே ஒதுக்கி விட்டு, ஸம்ஸார ப்ரவ்ருத்தியையும் அதே போல ஒதுக்கி விட்டு, அவனுடைய மஹிமைகளையே த்யானம் செய்து கொண்டு அவனை ஸாக்ஷாத்தாக வாத்ஸல்யம் முதலான பாவங்களில் அநுபவித்துக் கொண்டிருக்கும் பரம பக்தர்கள் இருக்கிறார்கள். ப்ரவ்ருத்தியில் இருந்துகொண்டே, அவன் தான் ஞான பிக்ஷை போட்டு நிவ்ருத்தியில் சேர்க்கவேண்டும்

Koviloor Digital Library

என்று வேண்டுபவர்கள் இருக்கிறார்கள். கர்ம யோகிகள் ஞான யோகத்திற்குப் போகும் யோக்யதையைப் பெறச் சித்த சுத்தியோடு, சித்த ஐகாக்ரியமும் (ஒருமுனைப்பாடும்) பெறவேண்டியிருக்கிறது இப்படிச் சித்தத்தை ஒன்றிலேயே நிறுத்த ஈச்வர சிந்தனைதான் உதவுகிறது என்பதால் அவர்களும் பக்தியுபாஸனை செய்கிறார்கள். அதோடு, பலதாதா அவனே என்று அவனுக்கே தங்கள் கார்யங்களின் பலனை அர்ப்பணம் செய்து, இந்த முறையில் பக்தி செலுத்துகிறார்கள். யோகிகளாக இல்லாமல் பலன்களை விரும்பியே ஓயாமல் கார்யம் செய்யும் நம் போன்றவர்களும், "தேங்காய் உடைக்கிறேன், அங்க ப்ரதக்ஷிணம் செய்கிறேன், ஸ்வாமீ! இதைப் பண்ணுங்கோ, அதைப் பண்ணுங்கோ" என்று, நாம் பக்தியென்று நினைத்துக்கொண்டிருக்கின்ற ஒன்றைப் பண்ணுகிறோம். இன்னும் க்ரூரமாகவும் பீபத்ஸமாகவும் (அருவருக்கத் தக்கதாகவும்), மத்யபானம் (கள் குடிப்பது), ஸ்த்ரீ போகம், கடா வெட்டுவது வரையில் பக்தி என்றே நினைத்துக்கொண்டு செய்பவர்களும் இருக்கிறார்கள்.

எதுவானாலும் கடைசியில் ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி என்ற ஏதோ ஒன்றில் அடங்கிவிடவேண்டியதுதான். அதனால்தான் அந்த இரண்டோடு விட்டது. ஆனாலும் ப்ரவ்ருத்தி தர்மத்துக்கு ஆதாரமாக வேதத்தின் கர்ம காண்டமென்றும், நிவ்ருத்தி தர்மத்துக்கு ஆதாரமாக அதன் ஞான காண்டமென்றும் சொல்வதோடு சிலர் பக்தி வழிபாட்டுக்கு ஆதாரமாக அந்த வேதத்திலேயே உபாஸனா காண்டம் என்றும் ஒன்றைச் சொல்வதுண்டு. கீதையில் தெளிவாகவே கர்மா, பக்தி, ஞானம் என்று மூன்று யோகங்களைச் சொல்லியிருக்கிறது. முதல் ஆறு அத்யாயம் கர்ம ஷட்கம், அடுத்த ஆறு அத்யாயம் பக்தி ஷட்கம், அதற்கப்புறம் முடிவாக வரும் ஆறு அத்யாயம் ஞான ஷட்கம் என்றுகூடச் சொல்வதுண்டு.

Koviloor Digital Library

கீதை கூறும் யோகங்கள்

இப்படி முக்யமாக மூன்று யோகங்களை பகவான் சொன்னதோடு, அவற்றின் பிரிவாகப் பதினெட்டு அத்யாயங்களிலும் வரும் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒவ்வொரு யோகம் என்றே பெயர் கொடுத்திருக்கிறார். ஸாங்க்ய யோகம், கர்மயோகம் என்பவைதான் (முறையே) நேராக நிவ்ருத்தி, ப்ரவ்ருத்தி மார்க்கங்களைக் குறிப்பிடுபவை. ஒரு அத்யாயத்திற்கு—பன்னிரண்டாம் அத்யாயத்திற்கு—பக்தியோகம் என்று பெயர். இவை தவிர த்யான யோகம், ராஜவித்யா - ராஜகுஹ்ய யோகம், விபூதி யோகம், புருஷோத்தம யோகம் என்றெல்லாம் மொத்தம் பதினெட்டு யோகங்கள் கீதையில் heading-ஆகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அர்ஜுன விஷாத யோகம் என்று முதல் அத்யாயத்திற்குப் பேர். அதாவது அர்ஜுனனின் மனக்குழப்பத்துக்குக்கூட 'யோகம்' என்று பெயர்! 'பகவான் தான் இப்படி பதினெட்டு அத்யாயத்திற்கும் தலைப்புப் போட்டாரா? அவர் பாட்டுக்கு அர்ஜுனனோடு ஸம்வாதம் பண்ணிக்கொண்டு (ஸம்பாஷித்துக் கொண்டு) தானே போனார்? நடுவில் அத்யாயத் தலைப்பு எங்கே வந்தது?' என்று கேட்டால் எனக்கு பதில் சொல்லத் தெரியாது. கீதை பகவான் சொன்னது என்று வழிவழியாக வந்திருக்கும் நம்பிக்கை நமக்குப் போதும். அதை பாரதத்தில் சேர்த்து எழுதிய வ்யாஸர் அத்யாயத் தலைப்புப் போட்டிருந்தால், அதுவும் பகவானே போட்ட மாதிரிதான். வ்யாஸரும் பகவானின் அவதாரம்தான்; அம்சாவதாரம்.

விஷாதத்தை, (அதாவது) மனக் குழப்பத்தை, ஏன் யோகமென்று சொன்னார்? அதனால் (அந்த மனக் குழப்பத்தால்) தானே அவனுக்கு ஆத்ம ஸம்பந்தமாக நினைக்கத் தோன்றிற்று? அதனால்தான்! அதுவரையிலும் அவன் எத்தனையோ பேருடன் கொஞ்சம்கூட மனக்குழப்பமே யில்லாமல் சண்டை போட்டு ஜயித்து "விஜயன்" என்றே

Koviloor Digital Library

பெயர் வாங்கியிருக்கிறுன். இப்போதுதான் இந்த குருக்ஷேத் ரத்தில் பாட்டனுரான பீஷ்மர், ஆசார்யரான த்ரோணர். பெரியப்பா பிள்ளைகளான கௌரவர்கள் முதலானவர்களைப் பார்க்கும்போது அவனுக்கு மனஸ் குழம்பி, 'இவாளை ஜயிச்சு ராஜ்யம் ஆண்டு என்ன ஆகணும்? இதைவிட, எல்லாத்தையும் விட்டுட்டு பிச்சை வாங்கிச் சாப்பிடறது மேல்' என்ற எண்ணங்கள் தோன்றியிருக்கின்றன. இது மனஸ் பக்குவப்பட்டு கனிந்து ஏற்பட்ட விரக்தி இல்லைதான். இதுவரை ஹிம்ஸையா, அஹிம்ஸையா என்று யோசிக்காமல் அந்நிய மநுஷ்யர்களுடன் பராக்ரமத்தோடு யுத்தம் செய்த வன், இன்று 'இவா நம்ம மநுஷாளாச்சே' என்ற அஞ்ஞான அட்டாச்மென்டினுலேயேதான், பாச பந்தத்தினுலேயே தான் ஒரு அசட்டு விரக்தியில் நினைத்திருக்கிறுன். தர்ம யுத்தம் செய்யவேண்டிய அவன் இப்படி அசடாகி விட்டானே என்றுதான் பகவான் அவனை வைகிறுர். ஆனுலும் இப்படி ஒரு குழப்பம் வந்ததால்தானே அவன் ராஜ்ய போகம் தவிர வேறென்றை, நிவ்ருத்தியை, நினைக்க முடிந்தது? ஸத்ய தத்வத்தை பகவான் அவனுக்கு உபதேசிப்பதும் இதனுல் தானே ஸாத்யமாயிற்று? அதுவரை, திருட்டுத்தனம் பண்ணிக்கூட ஸுபத்ரையை அவனுக்கு விவாஹம் பண்ணுவிப்பது முதலான கார்யங்களைத்தான் பகவான் அவனுக்குப் பண்ண முடிந்ததே தவிர, ஞானேபதேசம் என்று வாயைத் திறக்க முடிந்ததோ? அதனுல் எப்படியோ ஒரு விதத்தில் விஷாதமும் நல்லதில் கொண்டு சேர்த்ததால் அதற்கு 'விஷாத யோகம்' என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது!

பகவான் அர்ஜுனனுக்கு உபதேசம் பண்ணும் காலத்தில் சித்த சுத்தியை அடைந்து பரமாத்மாவோடு ஏகீபாவம் பெறுவதற்கு உபாயமாக, அநுகூலமாக உள்ள எல்லா வற்றையுமே 'யோகம்', 'யோகம்' என்று பெயர் கொடுத்துச் சொல்லிக்கொண்டு போனுர். 'சேர்க்கை' என்பதுதான் 'யோகம்' என்பதற்கு அர்த்தமென்றுல், எதுவெல்லாம் பரமாத்மாவிடம் சேர்க்க உதவுமோ அதுவெல்லாம்

Koviloor Digital Library

யோகந்தானே? "அவனுக்கு யோக காலம்; 'வாருகிருன்'!" என்ருல் என்ன அர்த்தம்? ஜாதகப்படி க்ரஹங்கள் நல்ல ஸ்தானங்களில் சேர்ந்து—சேர்க்கை பெற்று—இருப்பதாலேயே அவனுக்கு எல்லாம் நல்லதாக நடக்கின்றன என்று அர்த்தம். இப்படிப் பல விதமான சேர்க்கைகள்—யோகங்கள்—இருந்தாலும் எது பரம உத்தமமான யோகம்? பரமாத்மாவுடன் சேர்வதுதானே? அதுதான் வேதத்தின் பரம தாத்பர்யம்.

'நிரந்தர' யோகமான அத்வைதம்

அப்படிச் சேர்வதிலும் உத்தமநிலை நிரந்தரமாகப் பரமாத்மாவுடன் சேர்வதுதான் என்று உபநிஷத்துக்கள் சொல்கின்றன. 'நிரந்தரமாக' என்ருல் 'காலத்தில் சாச்வதமாயிருக்கிற' என்று நாம் அர்த்தம் பண்ணிக் கொள்கிருேம். அதுவும் தப்பில்லைதான். 'அந்தரம்' என்ருல் இடைவெளி. 'நிரந்தரம்' இடைவெளியில்லாதது. காலத்தில் இடைவிடாமலிருப்பது 'நிரந்தரம்' என்பது ஸரிதான். ஆனுல் 'காலம்' என்பது இங்கே நாம் அதிகப்படியாகச் சேர்த்துக்கொள்ளும் அபிப்ராயம். 'நிரந்தரம்' என்ருல் வெறுமனே 'இடைவெளியற்றது' என்றுதான் அர்த்தம். இடத்திலே இடைவெளியில்லாமல் நிறைந்திருப்பதும் 'நிரந்தரம்' தான். இப்படி 'காலத்தில்', 'இடத்தில்' என்றெல்லாம் நாம் 'ஸப்ளை' செய்து வருவித்துக் கொள்ளாவிட்டால், 'நிரந்தரம்' என்பதற்கு 'இடைவெளியில்லாதது' என்று மட்டும்தான் அர்த்தம். 'பரமாத்மாவோடு நிரந்தரமாகச் சேர்வது' என்ருல் அவனுக்கும் ஜீவாத்மாவுக்கும் இடைவெளியே இல்லாமல் ஒன்று சேர்ந்துவிடுவது என்றுதான் அர்த்தம். ஒன்று சேர்ந்துவிடுவது என்பது ஒன்ருகவே ஆகிவிடுவதுதான். ஒன்ருகவே ஆகிறவரைக்கும் கொஞ்சமாவது இடைவெளி இருந்துகொண்டுதானிருக்கும். கொஞ்சம் இடைவெளி இருந்தாலுங்கூட அவன் அங்கே, நாம் இங்கே என்று பிரிந்து பேதப்பட்டு இருக்கிருேமென்றுதான் அர்த்தம். இப்படி

Koviloor Digital Library

இருக்கும்வரையில், 'இந்த இடைவெளி இன்னும் ஜாஸ்தி ஆயிடுமோ, ஆயிடுமோ?' என்ற பயம் இருந்துகொண்டே தான் இருக்கும். ஆனபடியால் இடைவெளி அடியோடு இல்லாமல் அவனிடம் 'நிர்-அந்தர'மாக ஐக்யமாகி, அவனேயாகிவிட வேண்டும். ஜீவ-ப்ரஹ்ம அபேத யோகம் எனும் இதுதான் ச்ருதி சிரஸ் (வேதத்தின் முடியான உபநிஷத்) தருகின்ற பரம உத்தம யோகம். 'அந்தரம் இருந்தால், அதாவது துளி இடைவெளி, துளி பேதம் இருந்தால்கூட இந்தச் சேர்க்கை எப்பொழுது முடிந்து விடுமோ என்ற பயம் இருந்துகொண்டேதான் இருக்கும்' என்று தைத்திரீயோபநிஷத்தின் ப்ரஹ்மவல்லியில் சொல்லியிருக்கிறது. (ஆனந்தவல்லி என்றும் அந்தப் பகுதியைச் சொல்வதுண்டு.) முமுக்ஷுவானவன் எப்போது ப்ரஹ்மத்திலேயே நிலைகொள்கிறானோ அப்போதுதான் அபய ப்ரதிஷ்டை பெறுகிறான் என்றும் இதற்கு முந்தி சொல்லியிருக்கிறது.* அத்வைதம், அத்வைதம் என்பது ஜீவாத்மா இப்படி ப்ரஹ்மத்துடன் இரண்டறக் கலந்து அதுவே ஆகி விடுவதுதான்.

இந்த ஜீவ-ப்ரஹ்ம அபேதமாகிய உத்தம யோகத்தை சொல்வதற்காகவே பகவான் கீதையை உபதேசித்தார். ஆனால் க்ஷத்ரியனாக, கர்ம வீரனாக இருக்கப்பட்ட அவனுக்கு இதற்கான நிவ்ருத்தி மார்க்க உபதேசத்தை உடனடி உபாயமாகக் கொடுத்தால் அவனால் க்ரஹித்துக்கொண்டு பின்பற்ற முடியாது என்பதால் கர்ம யோகத்தை முக்யமாகச் சொல்லி, மற்ற அநேக யோகங்களையும் சொல்லிவிட்டு, முடிவிலே 'மோக்ஷ ஸந்ந்யாஸ யோகம்' என்பதாக நிவ்ருத்தியை நன்றாக விளக்கிச் சொன்னார். ஆனால் அர்ஜுனன் கர்மயோகம் அநுஷ்டித்துத்தான் ஞான நிஷ்டைக்கு வரவேண்டுமாதலால், கர்ம பல தாதாவான தன்னிடம் எல்லாக் கார்யங்களையும் அர்ப்பித்துவிட்டு சரணாகதி பண்ணினால் அவனைத் தாம் ஸகல பாபங்களி

* ஏழாவது மந்த்ரம்

Koviloor Digital Library

லிருந்து விடுவிப்பதாக அபய வாக்குச்சொல்லி முடித்தார். "துக்கப்படாதே! மா சுச:!" என்று பரம கருணையுடன் அவனைத் தடவிக் கொடுத்து ஆறுதல் சொல்லி முடித்தார்.

கண்ணன் செய்த புனருத்தாரணம்

ஸூர்யனுக்குத் தாம் உபதேசித்து, அப்புறம் இக்ஷ்வாகு பரம்பரையில் தொடர்ந்து உபதேசிக்கப்பட்டு வந்த யோகம் காலக்ரமத்தில் சைதில்யம் அடைந்துவிட்டது (சிதிலமாகி விட்டது) என்று பகவான் அர்ஜுனனிடம் சொல்லி, "அதை பக்தனும் ஸகாவுமான உனக்கு உபதேசித்துப் புத்துயிர் கொடுக்கவே நான் வந்திருக்கிறேன்" என்று, கீதோபதேசம் செய்தார். அர்ஜுனனைப் சாக்காக வைத்து லோகம் முழுவதற்கும் உபதேசம் செய்தார்.

இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவான்-அஹம்-
அவ்யயம் ।
விவஸ்வான் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே
(அ)ப்ரவீத் ॥
ஏவம் பரம்பரா ப்ராப்தம் இமம் ராஜர்ஷயோ விது: ।
ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ॥
ஸ ஏவாயம் மயா தே(அ)த்ய யோக: ப்ரோக்த:
புராதந: ।
பக்தோ (அ)ஸி மே ஸகா சேதி ரஹஸ்யம் ஹ்யேதத்-
உத்தமம் (IV 1-3)

["இந்த அழிவில்லாத யோகத்தை நான் ஸூர்யனுக்கு உபதேசித்தேன். ஸூர்யன் மநுவுக்கு உபதேசித்தான். மநு இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்தான்.

இவ்விதம் வம்ச பரம்பரையாக வந்த இதனை ராஜரிஷிகள் அறிந்திருந்தனர். எதிரிகளை தபிக்கச் செய்பவனே (அர்ஜுனா)! நெடுங்காலப் போக்கில் அந்த யோகம் இவ்வுலகில் நஷ்டமடைந்தது (நலிவுற்றது).

Koviloor Digital Library

நீ எனக்கு பக்தன்; தோழனுகவும் இருக்கிருய்! அப் புராதன யோகமே இன்று என்னுல் உனக்கு எடுத்துரைக்கப் பட்டது. இது உத்தமமான ரஹஸ்யம் அன்ருே!"]

பகவான் இங்கே சொல்லும் யோகம் கர்மயோகம். அதைத்தான் பஹுகாலமாக ராஜரிஷிகள் பரிபாலித்து வந்து, க்ருஷ்ணர் காலத்தில் அது சைதில்யமாயிருந்ததால் அவர் மறுபடி ராஜகுலத்தைச் சேர்ந்த அர்ஜுனனுக்கு அதை உபதேசித்துப் புனருத்தாரணம் செய்வதாகச் சொல் கிருர். கீதையின் immediate context-ஐப் பார்த்தால் இப்படித்தெரியும். ஆனுல் இதற்கு முதலத்யாய ஆரம்பத்தில் —இங்கே கர்ம யோகத்தைத் தாம் ஆதியில் ஸுர்யனுக்கு உபதேசித்ததாகச் சொன்னமாதிரியே—"ஞான யோகம், கர்மயோகம் என்ற இரண்டையும் நான் முறையே ஸாங்க்யர் கள் என்கிற ஸந்நியாஸிகளுக்கும், யோகிகள் என்கிற நிஷ்காம்ய கர்மமார்க்கிகளுக்கும் உபதேசித்திருக்கிறேன்" என்றும் சொல்லியிருக்கிருர்.

லோகே(அ)ஸ்மிந் த்வி-விதா நிஷ்டா புரா ப்ரோக்தா
மயா(அ)நக ।
ஞாநயோகேந ஸாங்க்யாநாம் கர்மயோகேந யோகிநாம் ॥
(III-3)

ஆகையால் ப்ரவ்ருத்திக்காரர்களுக்கான கர்ம யோகத்தை மட்டுமின்றி, நிவ்ருத்திக்காரர்களுக்கான ஞான யோகத்தையும் புனருத்தாரணம் செய்யத்தான் க்ருஷ்ணர் அவதாரம் எடுத்திருக்கிருரென்று தெளிவாகிறது. இவ் விரண்டு யோகங்களென்ருல் 'எல்லா யோகமும் அடங்க லாக' என்றே அர்த்தம்! எதுவானாலும் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி என்ற இரண்டிலொன்றின் கீழ் வந்துதானே ஆக வேண்டும்?

இக்ஷ்வாகுவிலிருந்து வழிவழி வந்ததாக அவர் சொன்ன அந்த ராஜர்ஷிகள்கூட ப்ரவ்ருத்தி தர்மத்தை கர்ம யோக மாக மெருகேற்றி உபதேசித்தபோது அது எதிலே கொண்டு

Koviloor Digital Library

சேர்த்ததோ அந்த நிவ்ருத்தி தர்மத்தை, அதாவது ஞான யோகத்தைப் பற்றியும் ஓரளவாவது உபதேசிக்காமல் மொட்டையாக நிறுத்தியிருக்கமுடியாது. அவர்கள் ஸமாசாரம் எப்படி வேண்டுமானுல் இருக்கட்டும். பகவான் (க்ருஷ்ணர்) நிச்சயம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி இரண்டையும் தான் புது ஜீவன் உண்டாக்கி உத்தரணம் பண்ணிஞர். கீதையில் அவர் ஸகல யோகங்களையும்தானே சொல்லிக் கொண்டு போயிருக்கிருர்? ஆனுலும் அவரது உபதேசம் ஆரம்பிப்பதும் ஞானிகளுக்கேயான ஸாங்க்ய யோகம், முடிவதும் மோக்ஷ ஸந்நியாஸ யோகம் என்பதிலிருந்து ஞானத்திஞல் அத்வைத ஸித்தி பெறும் நிவ்ருத்தி தர்மத்தைத்தான் அவர் பரம லக்ஷ்யமாக நிலைநாட்டு கிருரென்று தெரிகிறது. கீதை கர்ம யோகத்தைத்தான் சொல்கிறது என்று சில பேர் நினைக்கிற அளவுக்கு அநேக இடங்களில் அதை பகவான் ச்லாகித்து, அழுத்தம் கொடுத்துச் சொல்லியிருக்கிருரென்ருல் அதற்குக் காரணம் கீதோபதேசத்தை அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நேர் சிஷ்யனுன அர்ஜுனன் கர்ம யோகத்திற்கே அதிகாரியாக இருந்ததுதான்.

இப்படி, ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஆகிய இரண்டு மார்க்கங்களையும் சீர்ப்படுத்திக் கொடுத்து, முடிவாக ஞான மோக்ஷத்தை நிலைநாட்டி, ஸநாதனமான வைதிக தர்மத்தை ஸம்ஸ்தாபனம் செய்யவே க்ருஷ்ணுவதாரம் ஏற்பட்டது. கீதாபாஷ்ய உபோத்காதத்தில் (முகவுரையில்) ஆசார்யாள் இப்படித் தெளிவாக்கியிருக்கிருர்.

தாம் ஸூர்யனுக்கு உபதேசித்து, பிறகு ராஜரிஷிகள் வழியாகப் பலகாலம் விளங்கிவந்த கர்மயோகம் தம் நாளில் நஷ்டப்பட்டுப் போனதையே க்ருஷ்ண பரமாத்மா வ்யக்தமாகச் சொன்னபோதிலும், அவருடைய காலத்தில் எல்லா யோகங்களும், எல்லா மார்க்கங்களுமே பழுதாகித்தானிருந்தன என்றும் கீதையிலிருந்து தெரிகிறது. பிற்பாடு கலியில்

Koviloor Digital Library

ஒரேயடியாக சைதில்யம் அடைந்தாற்போல் ஆகாவிட்டா லும், இந்த யுகத்தைத் தொட்டுக்கொண்டு அவர் அவதாரம் செய்த த்வாபராந்தரத்திலும் பொதுப்படையாக ஓரளவு நலிவு எல்லா மார்க்கத்திலும் ஏற்பட்டதாகத் தெரிகிறது. கர்யா செய்யும் இந்த்ரியங்களை சும்மா வெளிக்கு மட்டும் அடக்கின மாதிரி இருந்துகொண்டு, உள்ளுக்குள்ளே இந்த்ரிய விஷயங்களான சிற்றின்பங்களையே நினைத்துக் கொண்டிருப்பவன் வெறும் மித்யாசாரன், அதாவது மோசக்காரன், 'ஹிபாக்ரிட்' என்று ஒரு இடத்திலே திட்டு கிருர்[1]. இது நிவ்ருத்தியில், அதாவது ஞான மார்க்கத்தில், போனமாதிரி இருந்துகொண்டே அந்த ஐடியலிலிருந்து நழுவிப்போன வாய் வேதாந்திகள் அந்த நாளிலும் இருந் திருப்பதைக் காட்டுகிறது. இதற்கு முந்தி, தம்முடைய உபதேசத்தை ஆரம்பிக்கும் இரண்டாவது அத்யாயத் திலேயே, மீமாம்ஸகர்களைத் திட்டியிருக்கிருர்[2]. வேதத்தின் ஸாரமான தத்வார்த்தத்தை எடுத்துக் கொள்ளாமல், ஏதோ இலக்கண ரீதியில் மட்டும் அந்த வாக்கியங்களை அலசி வாதம் செய்து அதிலேயே பூரித்துப்போகிற 'வேத வாதரதா:' என்கிருர். இப்படித் மீமாம்ஸகர்கள் அர்த்தம் பண்ணித்தான் வேதத்தின் ப்ரயோஜனமே அது கர்மாவில் மநுஷ்யனை ஏவுவதில்தான் இருக்கிறதே ஒழிய, ஞான விசாரமென்று கர்மாவை விட்டுவிட்டு ஸந்நியாஸியாகப் போகிறதில் இல்லை என்று நிர்ணயிப்பது. ஆசைப் பூர்த்திக் காகவே கர்மங்களைச் செய்யும் இவர்களை "காமாத்மா"க்கள் என்று வைகிருர். மோக்ஷமென்ற நித்யானந்தத்தை நாடாமல் தேவலோகம் என்ற கேளிக்கை உலகத்தையே நாடும் 'ஸ்வர்க்கபர'ர்கள்; தங்களுக்கு இந்த வழியில்தான் போகமும் ஐச்வர்யமும் கிடைப்பதால், வாஸ்தவத்தில் பிறவிச் சுழலிலேயே பிடித்துத் தள்ளுவதான இந்த

1 III. 6

2 II. 42.3

Koviloor Digital Library

விஸ்தாரமான சடங்குகளைப் பற்றிப் பிரமாதமாக, வசீகர மாக ப்ரஸங்கம் பண்ணுகிறவர்கள்—என்றெல்லாம் கண்டனம் செய்கிறார். புஷ்பாலங்காரம் செய்வதுபோல வார்த்தைகளை ஜோடித்தே ஜயிக்கிறார்கள் என்பதற்கு 'புஷ்பிதாம் வாசம்' என்கிறார். இங்கிலீஷிலும் Flowery language என்றுதான் சொல்கிறார்கள். இவர்களை அறிவில்லாத 'அவிபச்சிதர்'கள் என்கிறார். கிருஷ்ணருடைய காலத்தில் கர்மயோகமும் கெட்டுப் போயிருந்ததை இது காட்டுகிறது.'பிற்காலத்தில் நஷ்டப்பட்டுப் போன யோகம்' என்று பகவானே சொன்ன விஷயம்.

பக்தி மார்க்கத்திலும் தப்பான வழிகள் ஏற்பட்டதை முன்னேயே சொன்னேன். யக்ஷ ராக்ஷஸர், பூத ப்ரேதங்கள் வரை எல்லாவற்றையும் ரஜோ - தமோ குணக்காரர்கள் ராஜஸிகமாகவும் தாமஸிகமாகவும் வழிபட்டதைச் சொன்னேன்.

இப்படி எல்லா மார்க்கத்திலும் ஏற்பட்டிருந்த சீரழிவைப் போக்கிப் புனருத்தாரணம் செய்யவே க்ருஷ்ணா வதாரம் ஏற்பட்டது.

தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காகவே அவதாரம் என்று க்ருஷ்ணன் சொன்னது தெரிந்திருக்கும். தர்மம் என்பது ப்ரவ்ருத்தி தர்மம், நிவ்ருத்தி தர்மம் என்று இரண்டாக இருப்பதென்று ஆரம்பித்தேன். நிவ்ருத்திக்குப் பக்குவப் படுத்தும் நிஷ்காம்ய கர்ம யோகமாக ப்ரவ்ருத்தி மார்க்கம் அமையாதவரையில் அதற்கு 'தர்மம்' என்று பேர் கொடுக்கவே க்ருஷ்ண பரமாத்மா தயாராக இல்லை. எத்தனைதான் வேத கர்மானுஷ்டானம் செய்தாலும் ஸரி, கர்ம பலனுக்காகவே செய்தால் ப்ரயோஜனமேயில்லை; பலனைத் தியாகம் செய்து, நித்ய ஸெளக்கியத்திற்கான நிவ்ருத்தி மார்க்கத்தை மேற்கொள்ளும் சித்தப் பக்குவத் தைப் பெறுவதுதான் ப்ரயோஜனம் என்பதே அவர்

Koviloor Digital Library

அபிப்ராயம். வேதாந்தத்தில் இருப்பதைத்தான் அவர் தம்முடைய அபிப்ராயமாகவும் சொன்னார். ஆசார்யாளும் அதையேதான் நன்றாக மெருகேற்றி ப்ரகாசிக்க வைத்தார். ப்ரவ்ருத்தியைக் கர்ம யோகமாக்கினால்தான், கர்ம யோகத்தினால் சித்தி சுத்தி, சித்த சுத்தி பெற்றபின் கர்மாவில் பற்றுப் போய் ஞான விசாரத்தில் ஈடுபாடு ஏற்பட்டு நிவ்ருத்திக்குப் போவது என்று ஆகும். பலனுக்காகவே கர்மாவை ஆயுஸ் முழுக்கப் பண்ணிக்கொண்டிருப்பது என்ற மீமாம்ஸையை ஏற்றுக்கொண்டு விட்டால் அப்புறம் நிவ்ருத்தி மார்க்கம் ஏது? இவ்விதத்தில் க்ருஷ்ணர் நாளில் நிவ்ருத்தி தர்மத்திற்கு முக்யமாக ஹானி ஏற்பட்டு, அவர் இரண்டையும் ஸ்தாபிப்பதற்காக அவதரித்தார்.

கண்ணனும் சங்கரரும்

எடுத்துக்கொண்டிருக்கும் விஷயம் என்ன? பகவத் பாதாள்கதை கேட்க வந்தோம். எங்கே, யாருக்குப் பிள்ளையாகப் பிறந்தார் என்று ஆரம்பிக்காமல் என்னவோ, ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி என்று ஆரம்பித்து சங்கராவதாரத்திற்குப் பதில் க்ருஷ்ணாவதாரத்தில் அல்லவா கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது?' என்று தோன்றலாம்.

க்ருஷ்ணாவதார காலத்திலிருந்த சூழ்நிலை முற்றித்தான் சங்கராவதாரம் ஏற்படுவதற்கு அவசியம் ஏற்பட்டது. க்ருஷ்ணாவதாரத்தில் அவர் கொடுத்த வாக்குப்படிதான் இவருடைய அவதாரம் நிகழ வேண்டியதாயிற்று. க்ருஷ்ணரில்லாமல் ஆசார்யாள் இல்லை. "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்று லோகம் முழுக்கப் பரப்பியவர் அவர். அவருடைய பிறந்த ஊரில் குல தெய்வமாக இருந்த ஆலய மூர்த்தியே க்ருஷ்ணன்தானென்று சொல்வதுண்டு. இன்றைக்கு 'ஜகத்குரு' என்று சொன்னால் நம்முடைய ஆசார்யாள்தான் என்று ஆகியிருக்கிறதென்றால் இவருக்கு முந்தி அந்த விருதைப் பெற்றிருந்தவர் க்ருஷ்ண பரமாத்மா

Koviloor Digital Library

தான். "க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்று ஸ்தோத்ரம் இருக்கிறது. அந்த ஜகத்குரு உபதேசித்த கீதைக்கு இந்த ஜகத்குரு பாஷ்யம் பண்ணியிருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக தர்மம் ரொம்பவும் க்ஷீணித்து, அதர்மம் மேலோங்கி எழுந்த ஒரு ஸமயத்தில் நம்முடைய ஆசார்யாளின் அவதாரம் ஏற்பட்டு, இன்றைக்கும் நாம் அவருடைய சரித்திரத்தைக் கேட்டுக் கேட்டு மகிழ்கிறோமென்றால், இந்த மாதிரி சூழ்நிலையில் இப்படியொரு அவதாரம் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும் என்று முன்னாடியே வாக்குக் கொடுத்தவர் க்ருஷ்ண பரமாத்மாதான். எல்லாருக்கும் காதில் விழுந்திருக்கக் கூடும்—அவர் கொடுத்த வாக்கு :

தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே !

இதற்கு முந்தின ச்லோகமாக அவர் சொன்னது :

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் - பவதி பாரத|
அப்யுத்தானம் அதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம்யஹம்|| *

அதாவது, "எப்பொழுதெப்பொழுது தர்மத்திற்கு ஹானியும், அதர்மத்திற்கு எழுச்சியும் உண்டாகிறதோ அப்பொழுதெல்லாம் நான் என்னையே அவதாரமாகப் படைத்துக்கொண்டு வருவேன்" என்று ஸத்யம் பண்ணிக் கொடுத்தார். அதைக் காப்பாற்றத்தான் ஸ்ரீ சங்கராவ தாரம் பிற்பாடு ஏற்பட்டது. இதனாலெல்லாம் அந்த அவதாரத்தைச் சொல்லிவிட்டு இந்த அவதாரத்தைச் சொல்வதுதான் பொருத்தம்.

அவதாரக் கதை கேட்பது இருக்கட்டும். எதற்காக அவதாரம் என்று தெரிய வேண்டுமோ, இல்லையோ? அதற்காகத்தான் ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி, கர்மா-ஞானம்-பக்தி என்றெல்லாம் சொன்னது. அந்த வழிகள் எல்லாவற்றையும் செப்பனிட்டுக் கொடுத்து ஜீர்ணோத்தாரணம் செய்வதற்குத் தான் இரண்டு அவதாரங்களும் ஏற்பட்டது. க்ருஷ்ண பரமாத்மாவின் காலத்தை விடவும் இந்த வழிகளெல்லாம்

---

* கீதை VI-7

Koviloor Digital Library

சீர்கெட்டுப் போயிருந்த ஸமயத்தில் ஆசார்யாளின் அவதாரம் ஏற்பட்டு மஹத்தான புனருத்தாரணம் பண்ணிற்று.

பூர்வகால அவதாரங்கள்

க்ருஷ்ணாவதாரத்துக்கு முந்தியும் மத்ஸ்யத்திலிருந்து ராமர் வரை ஏழு அவதாரங்கள் ஏற்பட்டிருந்தன. எட்டாவது அவதாரமான பலராமரும் க்ருஷ்ணரின் ஸம காலத்தவரேயானதால் ராமரோடு நிறுத்திக்கொண்டேன். அந்த அவதாரங்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை உபதேசிப்பதற்காக ஏற்பட்டவையல்ல. ஏதோ கொஞ்சம் அவ்வப்போது உபதேசித்தால்கூட அது அந்த அவதாரங்களின் முக்ய நோக்கமில்லை. ஏனென்றால் அந்தக் காலங்களில் உபதேசத்துக்காக பகவானே அவதரிக்கவேண்டும் என்னும்படியான சூழ்நிலை இருக்கவில்லை. ஸூர்யன்-மநு-இக்ஷ்வாகு-அப்புறம் அவன் வம்சம் என்று கர்மயோகம் அது பாட்டுக்குத் தொடர்ச்சியாக நல்ல முறையில் போய்க் கொண்டிருந்தது என்று பகவான் சொன்னது போலவே ஞானயோகம், பக்தியோகம் ஆகியனவும் ஞான பரம்பரை, பக்தி பரம்பரை வழியாக குரு-சிஷ்யாளென்று சீராக அந்தக் காலங்களிலெல்லாம் தொடர்ந்து சென்று கொண்டிருந்தன. ஜனங்களெல்லாம் பொதுவாக நல்ல வழிகளிலேயே போய்க்கொண்டிருந்தார்கள்.

அப்போதெல்லாம் அவதாரங்கள் ஏன் ஏற்பட்டன வென்றால் அஸுரர், ராக்ஷஸர் என்ற இனங்கள் ஆதிக்கத்துக்கு வந்து கொடுமைப்படுத்திய ஸமயங்களில் அவர்களை அழிப்பதற்காகத்தான்*. இந்த ஸம்ஹார க்ருத்யம் ஆனபின் ஜனங்கள் நிர்பயமாக பழையபடி நல்ல வழியிலேயே போய்க்கொண்டிருப்பார்கள். ஸாக்ஷாத் ஈச்வரனே

* ராமபிரான் ஆதரிச புருஷராக அவதாரத்தில் விளங்கியதற்குக் காரணம் இப்பகுதியில் "ஸ்ரீராமன்" எனும் உரையில் "ஆதரிச புருஷர்" என்ற பிரிவில் காண்க.

Koviloor Digital Library

மெனக்கிட்டு உபதேசம் பண்ணுவதற்கென்று அவதரிக்க வேண்டுமென்றில்லாமல், மஹான்கள் மூலம் அது நடந்து கொண்டிருந்தது. ஜனங்கள் அவரவர் மனப்பான்மைக் கேற்ப எந்த யோகமோ அதில், ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி களில் ஒன்றில், போய்க்கொண்டிருந்தார்கள்.

ஞானத்தின் பெருமை தெரிவதற்காகவே அவ்வப்போது பகவானும் தத்தர், ஹம்ஸர் முதலான அவதாரங்களின் மூலம் உபதேசங்கள் செய்தாலும் இதற்காக ஈச்வர சக்தியை விசேஷமாகக் கைக்கொள்ள வேண்டியிருக்க வில்லை. ஏதோ ஒன்று ரொம்பவும் சிதிலமானால்தானே அதைத் தூக்கி நிறுத்திப் பழையபடி பலமாக நிறுத்து வதற்கு நிரம்பவும் சக்தியைச் செலவழிக்கவேண்டும்? இதனால்தான் அஸுர, ராக்ஷஸர்களின் ஸம்ஹாரத்துக்காக ஏற்பட்ட அவதாரங்களையே பகவானின் ஸாக்ஷாத் சக்தி வாய்ந்த தசாவதாரங்கள் என்று சிறப்பாகப் பாகுபடுத்தி விட்டு உபதேசகர்களாக அவன் எடுத்த ஸநகாதியர், நரநாரயணர்கள், கபிலர், தத்தர், வ்யாஸர் முதலானவர் களை அம்சாவதாரங்கள் என்று வைத்தார்கள். இருபத்து நாலு அவதாரம் என்று ஒரு கணக்கு. அதில் தசாவதாரங் களும், அதோடு இந்த ஞானோபதேச அவதாரங்களும், இன்னம் தன்வந்தரி, மோஹினி போன்றவர்களும் அடங்கு வார்கள்.

ராமாவதாரத்திற்கு அப்புறம் க்ருஷ்ணவதாரத்திற்கு முன் என்ன ஆயிற்று என்றால் அஸுர-ராக்ஷஸர்கள் தனி யாக அப்படியிருப்பதைவிட மநுஷ்ரூபத்திலுள்ள பல ராஜாக்களிலேயே அதிகம் ஆவேசித்தார்கள். கம்ஸன், ஜராஸந்தன், கௌரவர்கள் ஆகியவர்கள் மநுஷ்ய ஜாதியி லேயே பிறந்தவர்கள், ஆனாலும் அஸுர குணத்தோடு இருந்தார்கள். பரசுராமர்கூட மதோன்மத்தமாகப் போன மாநுஷமான ஒரு ராஜ குடும்பத்தை ஸம்ஹரிப்பதில்தான் ஆரம்பித்தார். ஆனால் அப்புறம் அப்படி (மதோன் மத்தமாக) இல்லாத ராஜாக்களையும் அவர் ஸம்ஹரித்துக்

Koviloor Digital Library

கொண்டே போய்க் கடைசியில் ராமரிடம் தோற்றுப் போனதாகக் கதை வேறே மாதிரி போய்விடுகிறது. க்ருஷ்ணர் காலத்தில்தான் அநேக ராஜாக்களின் ரூபத்தில் அஸுரர்கள் அக்ரமம் பண்ணிக்கொண்டிருந்தது. நரகாஸுரன், பகாஸுரன், பாணாஸுரன் மாதிரி அசல் அஸுரர் என்றேயும் சிலர் இருந்தார்கள். இம்மாதிரி ஏதோ சில அஸல் அஸுரர்கள், அவர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் மநுஷ ரூபத்தில் அரசர்களாக உள்ள அஸுரர்கள் ஆகியவர்களே க்ருஷ்ணாவதார காலத்தில் லோகத்துக்கு, தர்மமான மார்க்கங்களுக்கு ஹானி செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் இவர்கள் எல்லோரைக் காட்டிலும் அதிக அளவினரான பொதுஜனங்கள் பொதுவாக தர்மவழிகளை விட்டு அதிகமாக விலகிவிடவில்லை. (சற்றுமுன்) சொன்னது போல, காமாத்மாக்களாக வறட்டுக் கர்மாவே செய்பவர்கள், க்ரூரமான உபாஸனைகளைக் கடைப்பிடிக்கிறவர்கள், ஞானம் வராமலே வந்தமாதிரி ஹிபாக்ரிஸி செய்கிறவர்கள் ஆகியவர்களும் ஜன ஸமூஹத்தில் இருந்தாலும், அதைவிட அதிகமாகவே நல்ல வழிகளில் போகிறவர்கள்தான் இருந்தார்கள். இருந்தாலும் கெட்டதுகள் வியாதி பரவுகிற மாதிரி பரவிவிடப் போகிறதே என்று க்ருஷ்ண பரமாத்மா ஸமயத்தில் அர்ஜுனனை முன்னிலைப்படுத்தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி தர்மங்களை நன்றாகச் செப்பனிட்டு உபதேசித்தார்.

ஆனாலும் இதற்காக மட்டுமே அவர் அவதாரம் செய்தாரென்று சொல்ல முடியாது. அவர் இன்னம் அநேக உத்தேசங்களை வைத்துக்கொண்டே பூர்ணாவதாரம் என்னும்படியாக முழு ஈச்வர சக்தியோடு அவதாரம் செய்தார். ராஜாக்களின் வேஷத்திலிருந்த அஸுரர்களின் அதிக்ரமத்தால் பூமி கஷ்டப்பட்டது; பூமாதேவி ப்ரஹ்மாவிடம் போய் முறையிட்டாள்; அவர் அவளையும், தேவ ஸமூஹத்தையும் அழைத்துக்கொண்டு மஹாவிஷ்ணுவிடம் போய் முறையிட்டார்; மஹாவிஷ்ணு அதைக்கேட்டே க்ருஷ்ணாவதாரம் செய்தார்—என்று பாகவதத்தில் சொல்லியிருக்கிறது. அரச

Koviloor Digital Library

ரூப அஸுரர்களை அழித்து பூபாரம் தீர்ப்பது, நல்ல வழிகளை உபதேசம் செய்வது என்ற இரண்டோடு, இன்னம் தெய்வமாகவும் மநுஷனாகவும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்து காட்டித் தீர்த்துவிடுவது என்றே அந்த அவதாரத்தில் பூர்ண சக்தியோடு வந்தார். வெண்ணெய் திருடி இடைச்சிகளிடம் அடிபடுவதிலிருந்து, அவர்களோடேயே அப்புறம் ராஸக்ரீடை செய்வதிலிருந்து, கோவர்த்தனோத்தரணம், விச்வரூப தர்சனம் முதலான பெரிய காரியங்கள், தூது போவது தேரோட்டுவது முதலான சின்ன கார்யங்கள், பக்த வாத்ஸல்யம் என்றால் இப்படியும் உண்டா என்னும்படியாகப் பாண்டவர்கள், த்ரௌபதி, குசேலர் முதலானவர்களுக்கு அநுக்ரஹம் செய்வது என்று என்னென்னவோ, ஏகமாகப் பண்ணினார். அதில் ஒரு முக்யமான கார்யம்தான் உபதேசம். அதுவே முழுக் கார்யமுமில்லை. பூலோகத்தில் நரவேஷத்தில் ஆடினதில், ஆயுஸில் முக்கால்வாசி போன விட்டுத்தான் கீதோபதேசம் என்று ஞானாசார்யனாக வாயைத் திறந்தார்

அப்புறம் கடைசியில் நரலீலை முடித்துப் பரமபதத்திற்குத் திரும்புவதற்கு முன் உத்தவ ஸ்வாமி என்ற பரம பக்தருக்கு இன்னொரு உபதேசம் செய்தார். 'உத்தவ கீதை' என்று அதற்குப் பெயர். அர்ஜுனனுக்குப் பண்ணிய உபதேசத்துக்கு உபதேசம் செய்தவரை வைத்து 'பகவத் கீதை' என்று பேர் ஏற்பட்டது. அவதாரத்தில் கடைசிக் கார்யமாக பண்ணிய உபதேசத்துக்கோ அதைக் கேட்டுக் கொண்டவரை வைத்து 'உத்தவ கீதை' என்று பேர் ஏற்பட்டது.

கலியுகம் :
தொடக்க காலத்திலும் பிற்காலத்திலும்

க்ருஷ்ணர் பரமபதாரோஹணம் செய்வதற்குக் கொஞ்சம் முந்தியே கலியுகம் பிறந்து விட்டது. ஆனாலும் உடனேயே லோகம் முழுக்கக் கெட்டு விழுந்துவிடாமல்

Koviloor Digital Library

பகவான் செய்திருந்தவை கை கொடுத்து, முட்டுக் கொடுத்து, காப்பாற்றித் தூக்கிக் கொண்டிருந்தன. சக்தி குறைந்த கலிகால மநுஷ்யர்களின் அநுஷ்டானத்துக்கு இயலும் வகையில் அம்சாவதாரமான வேதவ்யாஸ பகவான் வேதங்களைப் பிரித்துக் கொடுத்தார். அதனாலேயே--அதன் கர்ம காண்ட, ஞான காண்ட, விதிகளாலேயே—ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி மார்க்கங்கள் அடிபட்டுப் போகாமல் காப்பாற்றிக் கொடுத்தார். அதோடு, உபநிஷத்துக்கள் எல்லாவற்றிலுமாகப் பரந்து விரிந்து சிதறிக் கிடக்கும் அத்யாத்ம தத்வங்களை ஸாரமாகத் திரட்டி 'ப்ரஹ்ம ஸூத்ரம்' என்று, ஒரு ஸூத்ரத்தில் (கயிற்றில்) மணிகளைக் கோத்துக் கொடுப்பது போல, உலகத்துக்குத் தந்து ஞான மார்க்கத்துக்கு, நிவ்ருத்தி தர்மத்துக்கு, விசேஷ உபகாரம் செய்தார். ஸர்வ ஜனங்களின் ஆத்மிக மேம்பாட்டுக்காக பதினெட்டுப் புராணங்களையும் அநுக்ரஹித்து பக்தி மார்க்கத்திற்கும் போஷாக்குத் தந்தார். இதனாலெல்லாம் கலி பிறந்தும் இரண்டாயிரம், இரண்டாயிரத்து ஐநூறு வருஷம் வரைக்கும் ஜனங்கள் பெரும்பாலும் நல்ல வழியிலேயே போய்க் கொண்டிருந்தார்கள்.

கலி பிறந்தது கி.மு. 3102-ல் என்று திட்டமாகக் கணக்கு இருக்கிறது. ப்ரதி தினமும் வைதிக கர்மாவில் செய்து கொள்ளும் ஸங்கல்பத்தில் பிரஹ்மாவின் ஆயுஸில் எத்தனாவது வருஷம் (வயஸு) என்பதிலிருந்து, அதிலே எந்த கல்பம், அந்தக் கல்பத்தில் எந்த மன்வந்தரம், அந்த மன்வந்தரத்தில் எந்த சதுர்யுக 'ஸைகிளி'ல் எந்த யுகத்தில் எத்தனாவது வருஷம், அந்த வருஷத்தில் எந்த அயனம், ரிது, மாஸம், பக்ஷம், திதி என்கிற வரைக்கும், ஆதியிலிருந்து up-to-date-ஆக அன்றைய தினத்தைச் சொல்லி வருவதால் கலியுகம் எப்போது ஆரம்பித்தது என்று ஸந்தேஹத்துக்கு இடமில்லாமல் தெரிகிறது. இதிலேதான் சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு மேல், அதாவது இன்றைக்கு சுமார்

Koviloor Digital Library

2500 வருஷத்துக்கு முந்தி வரை லோகம் ஓரளவு நல்ல வழியிலேயே ஓடிக் கொண்டிருந்தது*.

ஆனாலும் பகவான் விளையாட்டில் யுக தர்மம், கலி புருஷனுக்கு அதிகாரம் கொடுப்பது என்று ஏற்பட்டிருந்த தால் அப்புறம் அவனுடைய சேஷ்டை ஜாஸ்தியாகத் தொடங்கியது.

கலியின் பேரபாயம் : மயக்கு வேஷம்

இந்த யுகத்திலே முக்யமாக என்ன பெரிய அபாயம் என்றால், அபாயமான வஸ்து அப்படி கண்ணுக்குத் தெரியாமல் அதுவே ரொம்ப நல்லது மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு வந்து மயக்கி விடுவதுதான். அபாயத்தை அபாய மானது என்று தெரிந்து கொள்ள முடிந்தால்தானே அதிலிருந்து நம்மை ஜாக்ரதை செய்து கொள்ளலாம்? தீரர் களாக இருந்தால் அதோடு சண்டையும் போட்டு அதை அடக்கி வைக்கலாம்? பூர்வ யுகங்களில் அபாய ஹேதுவாக அஸுரர்கள் தோன்றியபோது, அவர்களுடைய க்ரூரமான ரூபம், வெளிப்படையாகவே அவர்கள் க்ரூரமாகச் செய்த கார்யங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரிந்தபோது அவர் கள் ஒதுங்கிப் போகப் பார்த்தார்கள். அப்படியும் இவர்கள் மேலே வந்து விழுந்து பிடுங்கினபோது 'நம்மால் இவர்களோடு சண்டை போட்டு முடியாது' என்று பகவானிடம் ப்ரார்த்தித்துக் கொண்டார்கள். பகவானும் அவதாரங்கள் எடுத்து அவர்களை ஸம்ஹரித்தார். முள்ளு குத்தினால் அதைப் பிடுங்கிப் போட்டவுடன் எல்லாம் ஸரியாய் விடுவது போல, அப்புறம் ஜனஸமூஹம் (தேவ ஸமூஹத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்) நல்லபடி யாகி, பழையபடி நல்ல வழியிலேயே போய்க்

---

* ஸ்ரீ சங்கரர் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தார் என்ற கருத்தில் இவ்வாறு அவரது அவதார காலத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். விவரம் "ஸ்ரீ சங்கரரின் கால நிர்ணயம்" என்ற பிரிவில் காண்க.

Koviloor Digital Library

கொண்டிருந்தது. க்ருஷ்ணுவதாரத்திலும் கம்ஸன், சிசுபாலன், ஜராஸந்தன், துர்யோதனன் முதலானவர்களை தர்மத்திற்கு அபாயம் உண்டாக்கும் துஷ்டர்கள் என்று இனம் பிரித்துக் கண்டு கொள்ள முடிந்தது.

இப்படிப் பூர்வயுகங்களில் ஒவ்வொரு துஷ்டக் கூட்டம் ஹிம்ஸை செய்வது, அதை பகவான் அவதாரம் பண்ணி ஸம்ஹாரம் செய்தவுடன் லோகம் நன்ருக ஆகிவிடுவது என்று இருந்தது. நல்ல வழியை உபதேசிக்கும் மஹான்கள் அப்போது நிறைய இருந்தார்கள். துஷ்டர்கள் அழிந்ததும் அவர்கள் நிர்பயமாகத் தங்கள் பணியை ஆரம்பித்து விடுவார்கள். நேராக பகவதவதாரமே ஜனங்களிடம் உபதேசம் பண்ணியோ, வாழ்ந்து காட்டியோ ப்ரவ்ருத்தி - நிவ்ருத்தி மார்க்கங்களை நிலைநாட்ட வேண்டுமென்ற அவசியம் இருக்கவில்லை. ஆனாலும் அவதாரம் ஏற்பட்டு துஷ்ட நிக்ரஹம் செய்யாமலிருந்தால் துஷ்டர்கள் இரண்டு மார்க்கங்களையும் ஒழித்துக்கட்டித்தான் இருப்பார்கள். இந்த ரீதியில் அவதாரங்கள் வேத தர்மத்தை ரக்ஷித்துக் கொடுத்தன.

அப்போதெல்லாம் கெட்டதே நல்லது மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு வந்து ஸர்வ ஜனங்களையும் மயக்கித் தன்னுடைய ஆதிக்கத்தில் கொண்டுவரவில்லை. கெட்டதுகள் வசீகரணமுள்ளதாகவும், ப்ரியமான மாதிரி நடிப்பதாகவும் இல்லாமல், கெட்டதாகவே ஸ்பஷ்டமாகத் தெரிந்து கொண்டு ஜனங்களை ஹிம்ஸித்தே தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவரப் பார்த்தன. அதனால் இது கெட்டது என்று ஜனங்கள் நன்ருகத் தெரிந்துகொண்டு அதற்கு அடிபணியக் கூடாது என்று இருக்க முடிந்தது.

கலியிலே தனியாக இப்படி அஸுரக் கூட்டம், ராக்ஷஸ ஜாதி என்று இல்லை. மநுஷ்ய ஜாதிக்கு வெளியிலே அப்படி யில்லை. அப்படியென்ருல்......புரிகிறதோல்லியோ? மநுஷ்யர் களின் மூளைகளுக்குள்ளேயேதான் அஸுரர்களும் ராக்ஷஸர்

Koviloor Digital Library

களும் புகுந்துகொண்டுவிட்டார்கள்! இந்த யுகத்தில் அதர்ம சக்தி வெளியிலே பௌதிகமாக இருந்துகொண்டு ஜனங்களைத் தாக்காமல் ஜனங்களுக்குள்ளேயே, அவர்களுடைய புத்திக்குள்ளேயே கெட்ட சித்த வ்ருத்திகளாகப் புகுந்துகொண்டு விட்டது!

புது மத ஸ்தாபகர்கள்

இதைத் தூண்டிவிட்டு தூபம் போட்டு ஜனங்களைத் தப்பிலேயே நன்றாகப் பிடித்துத் தள்ளுவதற்காகப் பல பேர் வந்தார்கள். அவர்களும் க்ரூரமான அஸுரர்களாகத் தெரிபவர்களில்லை. ஜனங்களின் ஹிதத்தையே நினைத்து அவர்களுக்கு ஸத்யத்தைச் சொல்லி அவர்களுடைய ஆத்மாவை ரக்ஷித்துக் கொடுக்கவேண்டுமென்றே வாழ்கிறவர்கள் என்று எல்லோரும் நம்பும்படியானவர்களாக அவர்கள் தோன்றினார்கள். அவர்களில் சில பேர் நல்ல படிப்பு, அறிவு, வாதத் திறமை, சொந்த வாழ்க்கையில் உயர்ந்த சீலம் எல்லாம் உள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். வாஸ்தவத்திலேயே அவர்களுடைய நோக்கம் நல்லதாகவும் இருந்திருக்கலாம். அவர்கள் சொன்னவற்றிலும் சில நல்ல அம்சங்கள் இல்லாமலில்லை. ஆனாலும் மொத்தமாகப் பார்த்தால் இவர்கள் ஒவ்வொருவர் சொன்னதும் ஜனங்களின் உண்மையான ஆத்மாபிவ்ருத்திக்காக ப்ரவ்ருத்தி—நிவ்ருத்தி தர்மங்களைப் பூர்ணமாக வகுத்துக் கொடுத்த வேத மார்க்கத்திற்கு விரோதமாகவே இருந்தது. மேலே பார்த்தால் நல்லது போலத் தெரிந்தாலும், உள்ளே போனால் இஹம், பரம் இரண்டிற்கும் ஸஹாயம் செய்யாதவையாகவே இருந்தது.

இப்படியிருந்தாலும், இப்படிச் சொன்னவர்களுக்குரிய மரியாதையைக் குறைத்துச் சொல்லப்படாது. அவர்களுடைய நல்ல நோக்கத்தில்கூட நாம் ஸந்தேஹப்பட வேண்டியதில்லை. அவர்களில் சில பேர் தம்மளவில் ஒரு உயர்ந்த அநுபவம் பெற்றவர்களாகவும் இருந்திருப்பார்கள். ஆனாலும் மற்றவர்களுக்கு இவற்றைச் சொன்னதில்,

Koviloor Digital Library

அவர்கள் (மற்றவர்கள்) இஹ-பர க்ஷேமங்கள் ஸகலத்துக்கும் ராஜ பாட்டையாக இருந்த வேத மார்க்கத்தை விட்டுவிட்டு சந்தில், பொந்தில், காட்டு வழியில் போகும்படியாகவே பண்ணிவிட்டார்கள். அக்காலத்தில் ஜனங்கள் அஞ்ஞானமாகிய அடர்ந்த காட்டுக்குள் விழுந்து கிடந்தார்கள்— "அஜ்ஞாநாந்தர்--கஹன—பதிதான்" —என்று சொல்லியிருக்கிறது.* "கஹனம்" என்றால் அடர்ந்த காடு.

இப்படி ஜனங்களை வேத தர்மத்தைத் விட்டுப் போகும்படியாகப் பண்ணும் பலர் அப்போது தோன்ற ஆரம்பித்தார்கள்.

அவர்கள் யாரென்றால், பல மதங்களை, ஸித்தாந்தங்களை ஸ்தாபித்தவர்கள்; அல்லது ஏற்கெனவே எங்கேயோ துளி முளைவிட்டு மண் மூடிப் போயிருந்த அபிப்ராயங்களை இப்போது நன்றாக உரம்போட்டுப் பெரிய ஸித்தாந்தமாகத் தளிர்த்து வளரப் பண்ணியவர்கள். யாராயிருந்தாலும், லோக க்ஷேமார்த்தமாக ஈச்வர ப்ரேரணையின் மேல் ரிஷிகளால் ஏற்படுத்தப்பட்ட ஸநாதன தர்மமான வேத மதத்தின் தாத்பர்யங்களுக்கு விரோதமாக ஸித்தாந்தம் பண்ணியவர்கள்.

மதங்களின் மூல புருஷர்களாகவும் ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களாகவும் வந்த இவர்களில் இரண்டு வகை உண்டு. ஒருவகை, வேதத்தை அடியோடு ஆக்ஷேபிக்கவில்லை. தங்கள் கொள்கை வேதத்தை மறுத்துச் செய்யப்பட்டதென்று சொல்லவில்லை. ஆனால் வாஸ்தவத்தில் அவர்களுடைய கொள்கை, வேதத்தில் ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி என்று பிரித்து, ஒன்றுக்கப்புறம் மற்றது என்று இணைத்துக் கொடுப்பது போலில்லாமல், ஏதாவது ஒன்றை மட்டும், அல்லது ஒன்றில் சில அம்சங்களை மட்டும் சொல்லி, அதுவே எல்லாம் என்று முடிப்பதாக இருந்தது. இரண்டாவது வகையினர் வேதத்தை அடியோடு, வெளிப்படையாக,

---

* இவ்வுரையில் பிற்பாடு இச் சுலோகம் முழுவதும் விளக்கப்படும்.

Koviloor Digital Library

ஆக்ஷேபித்துப் புது மதமாகவே பண்ணியவர்கள். பௌத்தம், ஜைனம், சார்வாகம் ஆகிய மதங்கள் இப்படிப் பட்டவையே. பௌத்தம், ஜைனம் என்று அந்த மதஸ்தாபகர் களான புத்தரையும் ஜினரையும் வைத்துப் பெயர் சொன்னதுபோலச் சார்வாகத்துக்கும் (அதன் ஸ்தாபகரை வைத்துப் பெயர்) சொல்வதானல் 'பார்ஹஸ்பதம்' என்று சொல்லவேண்டும். ப்ருஹஸ்பதி ஸ்தாபித்த மதமாகையால் (அது) பார்ஹஸ்பதம்.

பௌத்த சமண மதங்களும் ஹிந்து மதமும்

நான் இப்போது பௌத்த, ஜைன மதங்களை 'க்ரிடிஸைஸ்' பண்ணிச் சொல்கிறேனென்று உங்களுக்கு வருத்தமாயிருக்கலாம். ஏனென்றுல் நம்முடைய ஹிஸ்டரி புஸ்தகங்களில் புத்தரையும், ஜினரையும் (மஹா வீரரையும்) பற்றி உயர்வாகப் படித்திருப்பீர்கள். அந்த அளவுக்கு உயர்வாக நம்முடைய மத புருஷர்கள் யாரைப் பற்றியாவது பாட புஸ்தகத்தில் சொல்லியிருக்குமா என்பது ஸந்தேஹம். காந்தீயம், முன்னேற்றக் கொள்கைகள் என்றெல்லாம் தற்காலத்தில் சொல்லுவதில் அஹிம்ஸை, ஸகல ஜனங்களுக்கும் வர்ணாச்ரம பேதமில்லாமல் ஸமமாக எல்லா உரிமைகளும் கொடுப்பது ஆகியவற்றுக்கு பௌத்த, ஜைன மதங்கள் இடம் கொடுத்திருப்பதாலேயே அவற்றுக்கு உயர்வு கொடுக்கப்படுகிறது. யஜ்ஞத்தில் ஹிம்ஸை இருக்கிறது, ஜனங்களைப் பிறப்பினுல் பிரித்து வெவ்வேறு அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறது என்பதால் ஹிந்து மதத்திடம் ஒரு குறைவான அபிப்ராயம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் ஜன ஸமுதாயம் ஒழுங்காக வளர்வதற்குப் பல விதமான கார்யங்கள் நடக்கவேண்டியிருக்கிறது என்பதையும், ஜனங்கள் தேஹ ரீதியாகவும் மனே ரீதியாகவும் பலதரப் பட்டிருக்கிறுர்கள் என்பதையும் கவனித்துத் தான் அத்தனை பேருக்கும் ஒரே போன்ற தர்மங்களை

Koviloor Digital Library

வைக்கக்கூடாது, ஒரே போன்ற அநுஷ்டானங்களையும் பணிகளையும் கொடுக்கக் கூடாது என்று தீர்மானம் பண்ணி அவரவரும் இருக்கிற இடத்திலிருந்து மேலே போவதற்கு வசதியாக வர்ண விபாகம் ('ஜாதிப் பிரிவினை' என்று நடைமுறையில் சொல்லுவது) என்று நம் மதத்தில் பண்ணியிருப்பது. இது ஸமூஹ ஒழுங்கு. ஜன ஸமுதாயத்துக்குத் தேவையான அத்தனை பணிகளும் போட்டா போட்டியில்லாமல் தலைமுறை க்ரமமாகத் தட்டின்றி நடந்துவருவதற்கு ஏற்றபடி இந்த ஒழுங்கில் கார்யங்களைப் பிரித்துக் கொடுத்தார்கள். இதே மாதிரி ஒரு தனி மநுஷ்யனுக்கும் வாழ்க்கையில் ஒழுங்கான முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்றே அவன் ஒவ்வொரு ஸ்டேஜாகப் பக்வமாகிக்கொண்டு போவதற்கு வசதியாக ப்ரஹ்மசர்யம், கார்ஹஸ்த்யம் (இல்லறம்), வானப்ரஸ்தம், ஸந்நியாஸம் என்று ஆச்ரம விபாகம் செய்யப்பட்டது.

அஹிம்ஸை போன்ற உயர்ந்த தர்மங்களை ஸகலருக்கும் உடனடி அநுஷ்டானமாக வைத்தால் எவருமே அநுஷ்டிக்க முடியாமல்தான்போகும்; அதனால் ஜனங்களுக்கு ஐடியலாக ஒரு பிரிவை வைத்து அவர்களுக்கு மட்டும் அதைத் தீர்மான மாக வைத்தால் அவர்கள் அதை ரொம்ப உஷாராக, ஒரு பெருமிதத்துடன் காப்பாற்றி வருவார்கள்; 'இந்த ஐடியல்படி நாமும் செய்து பார்க்கணும்' என்று மற்றவர் களும் ஓரளவுக்காவது நிச்சயம் பின்பற்றுவார்கள்—என்று தான் தர்மங்களைப் பாகுபடுத்தியது. ப்ரத்யக்ஷத்தில் பார்த் தால் இன்றைக்கு பௌத்த தேசங்களில்தான் பிக்ஷுக்கள் கூட மாம்ஸ போஜனம் செய்கிறார்கள். அங்கேயெல்லாமும் ஸைன்யம், யுத்தம் என்று ராஜாங்க ரீதியிலும், கொலை, கொள்ளை என்று தனி மநுஷ்ய ரீதியிலும் நடந்துகொண்டு தானிருக்கின்றன. நம் தேசத்திலேயே அசோகனைத் தவிர பௌத்த, ஜைன ராஜாக்களாக இருந்தவர்கள் யாரும் சண்டையே போடுவதில்லை என்று இருந்துவிடவில்லை. ஆனாலும் தங்களுடைய மதக் கொள்கைக்கு இது ஸரியாக

Koviloor Digital Library

வரவில்லையே என்று அவர்கள் guilty-யாக feel பண்ணிக் கொண்டு, இரண்டுங்கெட்டானாக இருந்த ஸமயங்களில்தான் தேசத்திலே வலுவாய்ந்த பேரரசுகள் இல்லாமல்போய் அந்நிய தேசத்தார் படையெடுத்து வந்திருக்கிறார்கள். அப்புறம் அவர்களும் (பௌத்த, ஜைன அரசர்களும்) யுத்தம் செய்வது என்றுதான் ஆரம்பிக்கவேண்டி வந்தது. அதாவது, தங்களுடைய மதத்திற்கு விரோதமாகப் போக வேண்டி வந்தது. பாகுபாடு செய்யாமல் 'எல்லா தர்மமும் எல்லாருக்கும்' என்று வைத்த மதங்களில், இப்படிப் பாகுபடுத்திய நம் மதத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவாவது தர்மங்களை உறுதியாக நடத்திக்காட்டி, அதனாலேயே மற்றவர்களையும் ஓரளவு அவற்றில் போகச் செய்வது போலக்கூட இல்லாமல், அத்தனை பேரும் தர்மங்களை விடுவதில்தான் ஸமமாக இருக்கிறார்கள் என்று ஆகியிருப்பதோடு, அவர்கள் யாவரும் தங்களுடைய மத விதிகளைப் புறக்கணித்தார்கள் என்ற பெரிய தோஷத்திற்கு ஆளாகும்படியும் ஏற்பட்டிருக்கிறது.

வைதிக மதத்தில் அதிகாரி பேதம் என்பதாகப் பாகுபடுத்தி தர்மங்களையும் கார்யங்களையும் கொடுத்திருப்பதுதான் ஏதோ ஒரு ஜாதியாருக்கு மாத்திரமின்றி ஸகலருக்குமே நிரம்ப ஆத்ம ச்ரேயஸை அளித்திருக்கிறது என்பதற்கு ஒன்று சொன்னால் போதும்: இந்த ஒரு மதத்தில் தான் ஸகல ஜாதிகளிலும், ஒவ்வொரு ஜாதியிலுமே, மஹான்களும், ஞானிகளும் ஏகமாகத் தோன்றி, லோகம் பூராவிலுமே நம் நாட்டைத்தான் Land of saints (மஹான் களின் நாடு) என்று கொண்டாடும்படியாகப் பெருமை ஏற்பட்டிருக்கிறது. ஸமூஹ வாழ்வு நின்று நிலைத்த மஹோன்னதமான கலாசாரமாக நம் நாடு ஒன்றிலேயே எத்தனையோ ஆயிரம் வருஷங்களாக உறுதிப்பட்டிருப்பதும், நம் மதம் பாகுபடுத்திக் கொடுத்துள்ளபடி ஸமூஹத்தில் பல வர்க்கத்தினரும் தங்கள் தங்கள் கார்யங்களை செவ்வனே செய்துகொண்டு, மொத்த ஸமுதாயமும் கட்டுக்கோப்புடன் ஒழுங்காக முன்னேறும்படி செய்ததால்தான். பாபிலோனி

Koviloor Digital Library

யன் ஸிவிலிஸேஷன் (நாகரிகம்), ஈஜிப்ட் ஸிவிலிஸேஷன், க்ரீக் ஸிவிலிஸேஷன் என்று ஆதி காலத்தில் கொடிகட்டிப் பறந்த பெரிய ஸமுதாய மரபுகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயிருக்க, வெளியேயிருந்தும் உள்ளேயிருந்தும் எத்தனையோ தாக்குதல்களைப் பெற்றும் இந்த ஹிண்டு ஸிவிலிஸேஷன் மாத்திரம் 'சாவேனு பார்!' என்று ஜீவனோடேயே இருந்துகொண்டிருக்கிறதென்றால், இப்படி இதற்கு ஸ்பெஷலாகச் சக்தி ஊட்டுவதற்கு மற்ற ஸிவிலிஸேஷன்களில் இல்லாததாக என்ன இருக்கிறது?— இந்த விஷயத்தைக் கொஞ்சம் ஆர அமர நடுநிலையிலிருந்து கொண்டு ஆலோசித்துப் பார்த்தால், நம் ஸிவிலிஸேஷனில் மட்டுமே உள்ள வர்ணாச்ரம விபாகம்தான் காரணம் என்று தெரியும்.*

அதாவது இந்த ஏற்பாடுதான் ஒரு பக்கம், தனி மநுஷ்யர்களின் ஆத்மாபிவிருத்திக்கு போஷணை கொடுத்து இத்தனை மஹான்கள் தோன்றும்படிப் பண்ணியிருக்கிறது. ஐடியல் நிலைக்கு என்றே ஒரு பிரிவை மட்டும் வைத்தால் அதில் நிறைய மஹான்கள் தோன்றுவதும், அவர்களைப் பார்த்து மற்றப் பிரிவினரிலும் பலர் ப்ரயத்னம் பண்ணி அந்த மாதிரி ஆவதும் இயற்கைதானே? ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் கண்ட ஞானமும் பக்தியும் சாந்தமும் அன்பும் அந்தப் பிரிவுக்கு மாத்திரம் ஸொந்தமாக நின்றுவிடாமல் ஸமூஹம் பூராவும் 'ரேடியேட்'

---

* வர்ணாச்ரம தர்மங்களைப் பற்றிய விரிவான விளக்கம் ''தெய்வத்தின் குரல்'' முதற்பகுதியில் ''நம் மதத்தின் தனி அம்சங்கள்'' என்ற உரையின் இறுதிப் பாகத்திலிருந்து ''என் காரியம்'' என்ற உரை முடிய சுமார் நூறு பக்கங்களிலும், இரண்டாம் பகுதியில் ''ஜாதிமுறை'' என்ற உரையிலும் காண்க.

அனைவருக்கும் ஒரேவித தர்மங்களை விதிப்பதையும், பாகுபடுத்தி வெவ்வேறாக விதிப்பதையும் குறித்து மூன்றாம் பகுதியில் ''ஆசார விஷயங்கள்'' என்ற உரையில் ''ஆசாரமும் வர்ணாச்ரமங்களும்'' என்பதிலிருந்து ''விதிவிலக்கின்மையின் விளைவுகள்'' முடியவுள்ள உட்பிரிவுகளைப் பார்க்க.

Koviloor Digital Library

ஆவதால் எல்லாப் பிரிவுகளிலும் மஹான்கள் தோன்ற வழி கோலுகிறது. இன்னொரு பக்கம், வர்ணாச்ரம விபாகம்தான் இந்த தேசத்தின் பெரிய ஜன ஸமுதாயம் முழுவதையுமே ஜீவசக்தி குன்றாத பெரிய நாகரிக மரபாக வலுப்படுத்திக் காத்துக் கொடுத்திருக்கிறது.

யாகத்தில் ஹிம்ஸை

ஸாத்விகமான வாழ்முறைக்கென்று குறிப்பாக ஏற்பட்ட பிரிவினரிடமே ஹிம்ஸையம்சம் இருப்பதாகத் தோன்றும் யாக கர்மாவை வேதங்கள் கொடுத்திருக்கின்றன என்றால் அதில் ந்யாயமில்லாமலிருக்குமா? 'யஜ்ஞ பலியால் சில தேவ சக்திகள் ப்ரீதி அடைந்து லோகத்துக்கு நல்லது செய்கின்றன. பலியாகும் ப்ராணியும் ஸத்கதி அடைகிறது' என்று சாஸ்த்ரம் சொல்கிறது. (இதை) 'ப்ரூவ்' பண்ணிக் காட்ட வேண்டுமென்று சொன்னால், சொல்பவர்களிடம், "நீங்கள்தான் இப்படி இல்லை என்று 'ப்ரூவ்' பண்ணிக் காட்டுங்களேன்" என்று திருப்பிச் சொன்னால் என்ன பண்ணுவார்கள்? லோக க்ஷேமத்தையே உத்தேசித்து ஏற்பட்ட ஒரு சாஸ்த்ரத்தில், தத்வார்த்தங்களிலும் ஆத்மாநுபவத்திலும் உச்ச நிலைகளைச் சொல்வதாக உலகமே கொண்டாடும் ஒரு சாஸ்த்ரத்தில் வீணுக்கு இப்படி ஒரு ப்ராணியை அக்னியில் ஆஹுதி செய்யும்படிச் சொல்லியிருக்குமா?

யாகம் என்ற பெயரில் கூட்டங்கூட்டமாக ப்ராணிவதை பண்ணி ப்ராம்மணர்கள் தின்றிருந்தால் தப்புத்தான். ஆனாலும் வெறும் ஆடம்பரத்துக்காக பிம்பிஸாரன் மாதிரி எவனாவது ராஜா ப்ராம்மணர்களைக் கொண்டு இப்படிச் செய்திருக்கலாமே தவிர, வாஸ்தவத்தில் எந்த யஜ்ஞத்திலும் இத்தனை ப்ராணி பலிக்கு அவச்யமே கிடையாது. ஏராளமாக ப்ராணிவதை செய்து யாகம் செய்வது தப்பு என்பதற்கு பாகவத்தில் ஒரு உபாக்யானமே இருக்கிறது:

Koviloor Digital Library

ப்ராசீன பர்ஹிஸ் என்று ஒரு ராஜா. அவன் ஏகப்பட்ட பசு (ஆடு) வதை பண்ணி யாகங்கள் செய்தான்.

நாரதர் அவனைத் தடுத்து நல்லறிவு புகட்டுவதற்காக வந்தார். வந்தவர் என்ன பண்ணினாரென்றால் ஸ்வர்க்க லோகத்தில் நடக்கும் ஒரு காட்சியை அவனுக்குக் காட்டினார். அதிலே ஒரு பெரிய ஆட்டுக்கூட்டம். ஒவ்வொரு ஆட்டுக்கும் கெட்டியாக இரும்புக் கொம்பு நல்ல கூராக இருக்கிறது. அந்த ஆடுகள் ஸாதுவான ஆடுகளாக இல்லாமல் புலி, சிங்கம் மாதிரி உக்ரமாக, தங்களுடைய இரும்புக் கொம்புகளைத் தீட்டிக்கொண்டு எதையோ கிழித்துப் போடுவதற்கு ஆயத்தமாக இருக்கின்றன. "ஐயையோ! இதுகள் ஏன் இப்படி விபரீதமாகப் பண்ணுகின்றன? எதைக் குத்திக் கிழிப்பதற்காக இவ்வளவு முஸ்தீபாக இருக்கின்றன?" என்று ப்ராசீனபர்ஹிஸ் கேட்கிறான். அதற்கு நாரதர், "உனக்காகத் தாண்டா அப்பா இதுகள் காத்துக்கொண்டிருக்கின்றன! கணக்கு வழக்கில்லாமல் நீ யஜ்ஞபலி கொடுத்த ஆடுகள் தான் இதுகள். இவற்றுக்கு ஸ்வர்கப் பிராப்தி கிடைத்திருப்பது வாஸ்தவந்தான். ஆனாலும் நீ மிதமிஞ்சி ஜீவஹத்தி பண்ணினது பாபந்தான் என்பதால், நீ எப்போது அங்கே வருவாய், உன் குடலைக் கிழித்துப் போடலாம் என்றே காத்துக்கொண்டிருக்கின்றன" என்றார்—என்று (பாகவதக்) கதை.

ப்ராம்மணர்கள் தின்னுவதென்பது யஜ்ஞ ப்ரஸாதம் என்ற மரியாதைக்காக ஒரு குன்றிமணி அளவுதான். வயிறு புடைக்க அல்ல.*

அஹிம்ஸை, ஸமத்வக் கொள்கை என்பவற்றுக்காகத் தற்காலத்தில் பௌத்த-ஜைன மதங்களை ஹிந்து மதத்தை

* இவ்விஷயமாக "தெய்வத்தின் குரல்" இரண்டாம் பகுதியில் "வேதம்" என்ற உரையில் "ஜீவஹிம்ஸை செய்யலாமா?" என்ற உட்பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

விட உயர்வாக நினைத்துக் கொண்டாடுவதைப் பற்றிச் சொல்ல வந்தேன்.

பிறமத கண்டனத்திற்காக அல்ல; ஸ்வயமத கண்டனம் கூடாது என்றே!

அந்த மதங்களை நான் 'க்ரிடிஸைஸ்' பண்ணவரவே யில்லை. எந்த மதத்தையுமே சும்மாவுக்காக க்ரிடிஸைஸ் பண்ணவேண்டியதில்லை. ஒவ்வொரு மதத்திலும் பல காலமாக ஒவ்வொரு ஜனக்கூட்டம் இருந்து வந்திருக்கிறது என்றால், அந்த மதங்களில் அவர்கள் ஒரு நிறைவைக் கண்டுதானே அப்படி இருந்திருக்கவேண்டும்? எந்த மதமானாலும் ஸ்வய நலமாகப் போகப்படாது, ஆசைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும், அன்பாக இருக்கணும் ஸத்யமாக நடக்கணும் என்று சொல்லி, இந்த உடம்பு அநுபவிக்கும் உலக இன்பங்களுக்கு மேலாக ஒன்றைக் காட்டிக் கொடுக்கத்தானே செய்கின்றன? சீலமும், ப்ரேமையும், த்யாகமும், தங்கள் கொள்கைக்கும் அநுஷ்டானத்துக்கும் உரிய ஒரு ஸொந்த அநுபவமும் பெற்ற மஹான்களாக எல்லா மதங்களிலுந்தான் பலர் வந்திருக்கிறார்கள். தத்வ சோதனமும் தீர்க்கமாகப் பண்ணிக் கொண்டு போகும் அறிவாளிகளான ஃபிலாஸஃபர்களும் பௌத்தம், மீமாம்ஸை, ந்யாயம், ஸாங்க்யம் போன்ற மதங்களில் இருந்திருக்கிறார்கள். (பௌத்தரான) நாகார்ஜுனர் புஸ்தகங்களில் எனக்கே ஒரு ஈடுபாடு உண்டு.

ஆனால் எந்த மதமும் தப்பில்லை என்னும்போது நம்முடைய மதத்தை மட்டும் அப்படி (தப்பானது என்று) சொல்லலாமா என்பதுதான் கேள்வி. 'நம்முடையது' என்ற ஸ்வய அபிமானத்தில் fad-ஆக (அபிமான வெறியாகப்) போகாமல், நிஷ்பக்ஷபாதமாகப் பார்த்தாலே, இப்போது நான் காட்டின மாதிரி, எந்த மதத்தையும்விட இதில்தான் தலைமுறை தத்வமாக அதிக மஹான்கள், அதாவது இந்த மதாநுஷ்டானத்தால் ஸ்வாநுபூதி பெற்ற பெரியவர்கள்,

Koviloor Digital Library

தோன்றியிருக்கிறார்கள்; எந்த மதத்தை விடவும் வெகு நீண்ட காலமாக இது ஒன்றுதான் ஒப்பற்ற ஒரு நாகரிக ஸமுதாயத்தை ஜீவசக்தியுடன் காப்பாற்றி வந்திருக்கிறது என்று தெரிகிறது. எல்லாருக்கும் ஒரே ஏற்பாடாகப் பண்ணி வைக்காமல், பல தரப்பட்டவர்களுக்கும் அவரவருக் கேற்ற கார்யம், ஆசாரம் (அதாவது வாழ்க்கையொழுக்கம்), அவரவருக்குப் பிடித்த இஷ்ட மூர்த்தி என்று இடம் கொடுத் துள்ள நம்முடைய மதத்திலேதான் ஸகல லெவல்களிலும் அததற்கான உயர்ந்த அநுபவங்களைப் பெற்று, ஒரு லெவலி லிருந்து ஸௌக்யமாக அடுத்த லெவலுக்கு போய்க் கடைசி யில் பரமாத்மாவே ஜீவாத்மா என்று ஆகிவிடும் பரம ஸத்ய நிலை வரையில் ஜீவனுக்குச் சீராக வழியமைத்துக் கொடுத் திருக்கிறது என்பதை எப்படிச் சொல்லாமலிருப்பது? ஸாதாரணமான லௌகிக அநுபவங்களுக்கு மேலே எதையோ ஒன்றை எல்லா மதங்களும் அடைவிக்கின்றன என்று அவற்றைக் கொண்டாட வேண்டுமென்றால், அவை அடைவிக்கிறவற்றுக்கும் மேலே உத்தமோத்தமமான ஜீவ-ப்ரஹ்ம ஐக்யம் என்ற முடிவான நிறைவை நம் மதந்தான் அடைவிக்கிறது என்பதற்காக இதையும் அவற்றுக்கு மேலே கொண்டாடுவது ஸரிதானே? இப்படி இதன் தனி விசேஷங்கள் இருக்கிறபோது, இதன் பெரிய நிறைவான பரம தாத்பர்யத்தையோ, அதற்குப் போகிற வழியிலுள்ள இடை நிலையில் அவ்வப்போது ஒரு நிறைவைத் தரும் ஸம்ப்ரதாயங்களையோ புரிந்துகொள் ளாமல் மற்ற மதங்கள் இதைக் கண்டிக்கும்போது, 'எல்லா மதமும் உசத்திதான்; ஆனால் எல்லாவற்றிலும் உசந்த நம் மதம் மட்டும் அவை எல்லாவற்றின் கண்டனத்தையும் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கவேண்டியதுதான்' என்று சும்மாயிருக்கலாமா? ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்குமே வித்யாஸமில்லை என்று முடிக்கிற மதத்தில் இத்தனை வர்ணாச்ரம வித்யாஸமிருக்கிறதென்றால் அதற்கு என்ன காரணம் என்று நன்றாகஅலசி ஆராய்ந்து பார்க்காமல், 'வித்யாஸம் பண்ணும் மதம்' என்று மற்றவர்கள் கண்டிக்கும்

Koviloor Digital Library

போது நாம் உண்மையை அலசிப் புரிந்துகொண்டு அவர்களுக்கும் எடுத்துச் சொல்லாமல் சும்மா இருந்து விடுவதா?

புத்தர் பெரியவர், ஜினர் பெரியவர். ஆனால் அவர்களும் 'எதிலும் நல்லதிருக்கிறது. நாம் பாட்டுக்கு ஸமரஸமாக இருந்துவிட்டுப் போவோம். வைதிக மதத்தை நாம் ஏன் கண்டனம் செய்யவேண்டும்?' என்று இருந்துவிடவில்லையோல்லியோ? அப்படியானால், அவர்கள் இதை 'க்ரிடிஸைஸ்' செய்தது ஸரியில்லை என்று நமக்கு நன்றாகக் காரணம் தெரியும்போது நாமும் அவர்களுடைய 'க்ரிடிஸிஸ'த்தை 'க்ரிடிஸைஸ்' செய்து ஸத்யத்தை நிலைநாட்டுவதற்கு நம்மாலான முயற்சி பண்ணுவது ஸரிதானே?

ஸரியான ஆதி மத ஸித்தாந்தம் எதுவும் இல்லாமலிருக்கிற வெளி தேசங்களில், அந்த தேசத்து ஜனங்களின் பக்குவ ஸ்திதி, கலாசாரம் முதலியவற்றுக்கு ஏற்றனவாக ஒருவித உள் நிறைவைக் கொடுக்க உபகாரம் செய்வதாக பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலியன அங்கே இருக்கின்றன. அப்படியே இருக்கட்டும். அதை நாம் ஆக்ஷேபிக்கவே வேண்டாம். ஆனால் எல்லா நிலைகளில் உள்ளவர்களுக்கும் ஏற்றபடி வழிபோட்டுக்கொடுத்து, உச்சியான நிறைவு வரையில் அழைத்துக் கொண்டு போகும் ஒரு மதம் நமக்கு இருக்கிறபோது இங்கே அந்த மதங்கள் இடம் பிடிக்க வரும்போதும் நாம் ஒண்ணும் ஆக்ஷேபிக்கக்கூடாது என்றால் எப்படி?

ஆசார்யாள் கதை கேட்க உட்கார்ந்திருக்கிறோம். அவரைப் பெரியவர் என்று லோகம் பூரா கொண்டாடுகிறது. அவர் சொன்னவற்றில் அபிப்ராய பேதமுள்ளவர்கள்கூட அவர் மஹா புத்திமானென்றும், ஜனங்களுக்குத் தாம் செய்ய வேண்டிய ஒரு 'மிஷன்' இருக்கிறது என்ற 'டெடிகேஷ'னோடு ராப் பகல் பாடுபட்ட த்யாகி என்றும், இன்னும் இப்படிப் பல தினுஸாகவும் போற்றுகிறார்கள். அப்படிப் பட்டவர் முக்யமாகப் பண்ணியது என்ன? அவர் காலத்தில்

Koviloor Digital Library

இங்கே இருந்த மற்ற மதங்களையெல்லாம் கண்டனம் பண்ணி, வைதிகமான ஸநாதன தர்மத்தை மறுபடி ஜீவனோடு ப்ரகாசிக்கச் செய்ததுதானே? அதற்காகத்தானே அந்த அவதாரம் ஏற்பட்டதே? அப்படியிருக்கும்போது எந்த மதத்தையும் எதுவும் க்ரிடிஸைஸ் பண்ணாமல் ஆசார்யாளைப் பற்றி உபந்யாஸம் செய்வதென்றால் எப்படி?

ஸரியான காரணம் காட்டி க்ரிடிஸைஸ் செய்கிறதில் தப்பேயில்லை. விதண்டாவாதமாகப் பண்ணினால்தான் தப்பு. ந்யாயமான காரணங்கள், பாயின்ட்கள் தோன்றும்போது நாமும் மற்றவர்களை க்ரிடிஸைஸ் செய்ய வேண்டியதுதான். அதே மாதிரி அவர்களும் நம்மைச் செய்ய வேண்டியது தான்.

(கண்டனம் செய்வதில்) தப்பு இரண்டு விதத்தில்தான் இருக்கிறது. ஒன்று, ஸரியாகக் காரணம் காட்டாமல் விதண்டை பண்ணுவது. இன்னொன்று, நம் மனஸில் த்வேஷத்தோடு க்ரிடிஸைஸ் பண்ணப்போவது. மாற்று அபிப்ராயமுள்ளவர்களிடமும் த்வேஷம் என்பதேயில்லாமல் ப்ரேமையோடு, அபிப்ராயங்களை மட்டும் க்ரிடிஸைஸ் செய்ய வேண்டும். 'அவர்கள் புத்திக்கு அப்படித் தோன்றுகிறது. நமக்குத் தோன்றுவதை அவர்களுக்கு எடுத்துச் சொல்வோம். அவர்களுக்குத் தோன்றுவதையும் கேட்டுக் கொள்வோம். இரண்டு பேரும் இரண்டையும் அலசி ஆலோசித்துப் பார்ப்போம்' என்ற மனோபாவத்தோடு நடக்க வேண்டும். இந்த ப்ரேமையில்தான் ஸமரஸம் இருக்க வேண்டுமே தவிரக் கொள்கையில் இல்லை. கொள்கையில் அப்படி (ஸமரஸம்) என்று சும்மாயிருந்தால், மற்றவர்கள் நம் தலையில் ஏறி உட்கார்ந்து கொண்டு நம்மை ஏமாந்த சோணகிரிகளாக்குவதில் தான் முடியும். மனஸில் அன்போடு, நமக்கு ஸத்யமாகத் தெரியும் கொள்கைகளுக்காகப் போராட வேண்டுமென்பதே முறை.

ஸகல ஸித்தாந்தங்களும் உள்ளடங்கியதாக உள்ள வேத தர்மத்தை ஆக்ஷேபித்து, அல்லது அதில் ஒரு அம்சத்தை

Koviloor Digital Library

மட்டும் எடுத்துக்கொண்டு அதுவே பூர்ண தர்மம் என்று ஸாதித்து, அறிவும் ஒழுக்கமும் வாய்ந்த சிலரும் கலியிலே ஸித்தாந்தங்களைப் பரப்பினர்களென்பதை நம்முடைய சாஸ்த்ர - புராணங்களில் கலிபுருஷன் பண்ணின க்ருத்ரிம மாகத்தான் சொல்லியிருக்கிறது. இது நல்லதற்கில்லாததே நல்லதாக வேஷம் போட்டுக் கொண்டுவந்து ஜனங்களை மயக்கி, அவர்கள் வேத விருத்தமான (வேதத்துக்கு முரணான) அம்சங்களையும் அநுஷ்டானங்களையும் கொள்கை களையும் வாழ்முறைகளையும் பின்பற்றப் பண்ணியதுதான் என்று சொல்லியிருக்கிறது.

புத்தர், ஜினர் போன்றவர்களை, ஜனங்கள் நல்ல வழிக்குப் போகப்படாது என்று தடுப்பதற்காகவே மனஸறிந்து மாற்றுவழி போட்டுக் கொடுத்தவர்களென்று சொல்வது கஷ்டமாயிருந்தால் அப்படிச் சொல்ல வேண்டாம். அவர்களைப் பொருத்தமட்டில், அவர்களைப் போன்ற நிலைக்குப் போனவர்களைப் பொருத்தமட்டில், அவர்கள் சொன்னவற்றை நல்லதற்கில்லாதவை என்று சொல்ல வேண்டியதில்லை. ஒரே அஹிம்ஸை, அன்பு, ஒழுக்கம் என்று இருந்துகொண்டு அவர்களைப்போல, 'சரீரம் போனாலும் போகட்டும். லக்ஷ்ய ஸித்தி அடையாமல் எழுந் திருப்பதில்லை' என்று, புலனையடக்கி அப்படியே ஒரு தபஸில் உட்கார்ந்துவிடக் கூடியவர்களுக்கு வேதமும் வைதிகா நுஷ்டானங்களும் நிஜமாகவே தேவையில்லைதான். இப்படி அந்த வேதமே சொல்லியிருக்கிறது. 'ஞானியாய்ப் போன வனுக்கு அப்பா அப்பா இல்லை; அம்மா அம்மா இல்லை; லோகம் லோகமில்லை; தேவர்கள் தேவரில்லை; வேதமும் வேதமில்லை' என்று இப்படி ச்ருதி சிரஸாக இருக்கப்பட்ட ஒரு உபநிஷத்திலேயே இருக்கிறது.* ஆனால் இப்படிப்பட்ட உபநிஷத்துக்களிலேயே 'தத்வமஸி' என்கிற தலைசிறந்த ஞான லக்ஷ்யத்தைச் சொல்லுகிற சாந்தோக்யத்தில்,

---

* ப்ருஹதாரண்யகம் IV. 3.22.

Koviloor Digital Library

முடிக்கிற இடத்தில்[1] எவன் இம்மைக்குத் திரும்பி வராத ஸ்தானத்தை அடைகிறுன் என்று சொல்லும்போது, அவன் விதிப்படி வேத அத்யயன - அநுஷ்டானங்களைச் செய்து, குடும்ப வாழ்க்கை நடத்தி, இந்த்ரியங்களைச் சலனமில்லாமல் நிலை நிறுத்தி, வேத கர்மாக்களில் வருவதைத் தவிர மற்ற எல்லா இடத்திலும் அஹிம்ஸையைக் கடைப்பிடித்துத்தான் அந்த உத்தம ஸ்தானத்தை அடையத் தகுதி பெறுகிறுன் என்று சொல்லியிருக்கிறது. அதாவது ஒரு புத்தருக்கோ, ஜினருக்கோ, மற்ற ஞானிகளுக்கோ ஏற்பட்ட தர்மங்களை ஸகலருக்கும் நம் மதம் வைத்து விடவில்லை. அப்படி ஒருவன் முடிவிலே ஞானியாய்ப் போவதற்காகவே அவனுக்கு அடியிலிருந்து வெவ்வேறு தர்மங்களை ஸ்டேஜ், ஸ்டேஜாக மாற்றிக்கொடுத்துக்கொண்டு போவதில்தான் நம் தர்மத்தின் பெருமையே இருக்கிறது. இதிலே, இன்னும் பெருமை, அடி நிலையிலே இருக்கிறவனையும் அணைத்துப் போகவேண்டும், அவரவர்இருக்கும் இடத்திலிருந்து கையைப் பிடித்து அழைத்துப் போகவேண்டும் என்பதற்காக, ஞானியும்கூட அந்த அடி நிலைக்காரன் மாதிரியே செய்துகாட்ட வேண்டுமென்று நம் மதத்தில் சொல்லியிருக்கிறது. குறிப்பாக கீதையில் பகவான் இதை ரொம்பவும் வற்புறுத்தியிருக்கிறுர்[2]. நடைமுறைக்கு ஏற்றதாகவும், மனுேதத்வ ரீதியில் பொருத்தமுடையதாகவும் இப்படி நம் மதத்தில் ஞானியைக்கூட ஸாமன்ய ஜனங்களுக்கு வழிகாட்டியாகஅவர்களுடைய தர்மத்தைச் செய்து காட்ட வேண்டுமென்று சொல்லியிருக்க, இதற்கு நேர்மாறுக ஸாமான்ய ஜனங்களுக்கும் ஞானியின் தர்மத்தையே வைப்பது என்று ஒருத்தர் ஸித்தாந்தம் செய்தால், அவர் தனி வாழ்க்கையில் எத்தனை பெரியவராயிருந்தாலும் அந்த ஸித்தாந்தத்தால் மக்களின் ஆத்ம

1. VIII 15.1

2. ''தெய்வத்தின் குரல்'' மூன்றும் பகுதியில் ''ஆசாரம்'' என்ற உரையில் ''கீதையின் கட்டளை'', ''தலைவர் கடமை : கீதை உபதேசம்'', ''அறிந்தவனும், அறியாதாரும்'' ஆகிய பிரிவுகள் பார்க்க.

Koviloor Digital Library

க்ஷேமம் குழறுபடியாகப் போகிறதே என்பதை உத்தேசித்து அதை நிராகரணம் செய்யத்தானே (நிராகரிக்கத்தானே) வேண்டியிருக்கிறது?

இதற்காகத்தான் நம்முடைய ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் அவதாரமானதால், அவரும், அவருக்கு முன்னேயும் பின்னேயும் வந்த வேதாந்த ஸம்ப்ரதாயப் பெரியவர்களும் ஏனைய ஸித்தாந்தங்களில் எடுத்துக் காட்டியிருக்கும் தோஷங்களைச் சொல்லாமல் விட முடியவில்லை. முன்னேயே சொன்ன மாதிரி, தோஷம் தெரிகிற இடத்தில் அதைச் சொல்வதில் தப்பில்லை; சொல்லத்தான் வேண்டும். ஆனால் தோஷத்தைச் சொன்னாலும் த்வேஷம் இருக்கப்படாது என்பதுதான் முக்யம்.

அந்த மதங்களைக் கண்டிக்க வேண்டுமென்பதற்காக அல்ல; அந்த மதங்கள் நம் மதத்தைக் கண்டிப்பது ஸரியல்ல என்ற எடுத்துக் காட்டி, நம்முடைய தாய்மதத்தை உள்ளபடி புரியவைப்பதற்காகவே இதெல்லாம் சொல்லவேண்டியிருக்கிறது.

வேத தர்மத்திற்கு முரண்பாடான மத ஸ்தாபகர்கள், ஸித்தாந்த ப்ரவர்த்தகர்கள் என்று சில பேரை மட்டும் கலியுகத்தின் போக்குக்குக் காரணமாகச் சொல்லி விட்டுவிடுவதற்கில்லை. ஒரு முள்ளு மரம் முளைக்கிறதென்றால் அதற்கு விதை இருக்கணுமென்பதுபோலவே, அந்த விதை முளைத்து வளரத் தக்கதாக பூமியும் இருந்தால்தானே முடியும்? மதஸ்தாபகர்களும் ப்ரசாரகர்களும் என்னதான் ஸித்தாந்த விதைகளை ஊன்றினாலும் ஜன ஸமூஹத்தின் மனநிலை என்கிற பூமி அவற்றை பூஸாரமூட்டிப் போஷித்தால்தானே அவை அந்த ஸமூஹத்தில் தழைத்து வளரமுடியும்? இப்படி, வேத தர்மத்துக்கு விரோதமான போக்குகளிலேயே அப்போது ஜெனரலாக ஜனங்களுக்கு ருசி ஏற்பட்டு, அதனாலேயே அவைதிக மதங்களை நன்றாகப் பரவும்படிச் செய்வதாக ஆயிற்று. அஸுர, ராக்ஷஸர்கள் ஜனங்களின் புத்தியிலேயே ப்ரவேசித்ததாகச் சொன்னது இதைத்தான். கலிபுருஷன்

Koviloor Digital Library

ரொம்ப ஸாமர்த்யமாக இந்த மதங்களும் தார்மிகமான வழிகளைச் சொல்கிற மாதிரியும், அதை உபதேசிக்கிறவர்கள் பின்பற்றுகிறவர்கள் ஆகிய இரண்டு பேரும் தர்மமாகவே போகிற மாதிரியும் 'ஷோ' பண்ணியிருந்தான்.

கலி பிறந்தபின்னும் க்ருஷ்ண பரமாத்மா, வ்யாஸாசார்யாள் ஆகியவர்கள் கொடுத்திருந்த பலத்தினால் சுமார் இரண்டாயிரத்தைநூறு வருஷம் ரொம்பவும் சீரழிவு ஏற்படாமலே வைதிக தர்மாசரணை நடந்துவந்ததற்கப்புறம் இப்படி இடைக்காலத்தில் அசதி மறதியாக இருந்ததற்கும் சேர்த்து வைத்துக் கலி புருஷன் தன்னுடைய ஆதிக்யத்தை ஒரே முரட்டுத்தனமாகக் காட்ட ஆரம்பித்தான். ரொம்ப நேரம் தூங்கிப் போய்விட்டால், 'ஐயோ, இப்படித் தூங்கிப் போய்விட்டோமே, கார்யத்தைப் பண்ணியாகணுமே!' என்று ஒரே தடால் புடாலென்று ஆரம்பிக்கிற மாதிரிக் கை வரிசையைக் காட்ட ஆரம்பித்தான். இன்னொரு உதாரணம் சொல்லணுமானால், 'அடைத்து வைத்த ஸோடா பாட்டிலை உடைத்த மாதிரி' ஆயிற்று! அந்த வேகத்தில் எழுபத்திரண்டு மதங்கள் ஸநாதன தர்மத்திற்கு மாறாகத் தோன்றின என்று புஸ்தகங்களில் போட்டிருக்கிறது. ஒவ்வொன்றும் ரொம்ப உத்தண்டமாகக் கிளம்பிற்று என்றும் போட்டிருக்கிறது. அஸந்தர்ப்பமானவை எல்லாமே தடபுடலாகத்தான் கிளம்பும். வாஸ்தவத்திலேயே ஹிதமாகவும் ஸத்யமாகவும் இருப்பவை ஸாத்விகமாக, சாந்தமாகத்தான் தோன்றிச் செயலுக்கு வரும். அப்படியில்லாதவை அதம்பிக்கொண்டு அடாவடியாகத்தான் ஆரம்பிக்கும். கலி அதர்மயுகம் என்று நிரூபித்துக் காட்டுகிறமாதிரி அப்போது இப்படி 72 மதங்கள் தோன்றின என்று புஸ்தகங்களில் இருக்கிறது.

கலி அதர்மத்திற்கே ஸங்கற்பிக்கப்பட்டதா?

இங்கே ஒரு விஷயம் சொல்லவேண்டும். 'பிரபஞ்ச நாடகத்திலே ஒவ்வொரு சதுர்யுகத்திலும் க்ருதயுகத்தில் ரொம்பவும் தர்மமாக ஆரம்பித்து, த்ரேதா யுகத்திலும்

Koviloor Digital Library

த்வாபர யுகத்திலும் கொஞ்சம் கொஞ்சமாகச் சீர் கெட்டுக் கொண்டு வந்து, கலியிலே ஒரே அதர்மமாகப் போகவேண்டு மென்பதும் பகவத் ஸங்கல்பம்தானே? அதைக் குற்றம் சொல்வானேன்? கலி அதர்மத்துக்கான யுகம் என்று ஏற் பட்டுவிட்டபின் அதைச் சீர் திருத்துவது என்று புறப்படு வானேன்?' என்ற கேள்வி வரலாம்.

பகவத் ஸங்கல்பம் நமக்கு புரியாது. என்றாலும், அவன் சாஸ்த்ர வாயிலாகக் கலி அதர்ம யுகம் என்று நமக்குத் தெரிவிக்கும்போது, அப்படியே அதர்மத்தில் லோகம் நசித்துப் போவதற்காகத்தான் இந்த யுகம் அவனால் தீர் மானமாக ஸங்கல்பிக்கப்பட்டிருக்கிறதென்று அர்த்தம் செய்து கொண்டுவிடக் கூடாதென்றே தோன்றுகிறது. 'லோகம் அவனுக்கு நாடகம். அவன் கதை எழுதி, டைரக்ட் பண்ணுகிற நாடகம். ரஸ வைசித்ர்ய ருசிக்காக (காவிய ரஸங்களில் மாறுபாடு செய்து சுவை கூட்டுவதற்காக) நாடகாசிரியர் ரௌத்ரம், பீபத்ஸம், பயம் ஆகியவையுள்ள ஸீன்களையும் கல்பிப்பதுபோல அவனும் கலியில் செய்வ தாயிருக்கலாம்' என்று சொன்னாலுங்கூட, இதிலே ஒரு அளவுக்கு மேலே போக அவனுடைய கருணையுள்ளம் இடம் கொடுக்காது. ஒரே ரௌத்ரம், பீபத்ஸம், பயானகம் என்று ஆகிவிட்டால் அதில் 'ரஸம்' என்று சொல்லும்படி என்ன இருக்கும்? விரஸம்தான் இருக்கும். ஆகையினால் அவன் பூர்வ யுகத்து மநுஷ்யர்களைப் போல இந்த யுகத்தில் அவ் வளவு தார்மிகர்களாகவும், தெய்வ சக்தியுள்ள வர்களாகவும் ஜனங்களை ஸ்ருஷ்டிக்காவிட்டாலும், அதர்மத்தில் அவர்களுக்கு உள்ளூர ஒரு ருசியைக் கொடுத்தே ஸ்ருஷ்டித்திருந்தாலும், அதிலேயே அவர்கள் முழுகி அழிந்து விடும் கொலைக் கூத்தாக முடித்துவிடமாட்டான். சறுக்கா மாலை விளையாட்டுப் போலச் சறுக்கும் வரை சறுக்கட்டும் என்று பார்த்துக் கொண்டிருந்தாலும், விழுந்து எலும்பை முறித்துக் கொள்ள விடாமல் தாங்கிக் கொள்வதற்கு வருவான், மஹான்களையும் அனுப்பிவைப்பான். ஒரு பக்கம்

Koviloor Digital Library

யுகத்தின் 'நேச்ச'ரை முன்னிட்டு அதர்மங்கள் ஜாஸ்தியாய் போய்க்கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கம் தர்மத்தை ஞாபகமூட்டிக் கொண்டிருப்பதாகவும் அநேகத்தைக் கொடுத்து, தார்மிகர்களாகவும் ஜனஸமூஹத்தில் கொஞ்சம் பேராவது இருந்து கொண்டேயிருக்கும்படிப் பார்த்துக் கொள்வான். லஞ்சம், மோசடி, கொலை, இன்னும் அநேக தகாத கார்யங்களுக்கான க்ளப்புகள், சூதாட்டங்கள் என்று இப்போது ஒரு பக்கத்தில் பார்க்கிறோமென்றால் இன்னொரு பக்கம் ப்ரவசனம், பஜனை, கும்பாபிஷேகம் என்றும் நிறையப் பார்க்கிறோமல்லவா? கலி முடிகிறபோது கூட நல்ல வைதிகமான தர்ம வாழ்வு நடத்துபவர்கள் அடியோடு அஸ்தமித்து விடப்போவதில்லை. கல்யந்தத்தில் (கலியின் முடிவில்) தாம்ரபர்ணி தீரத்தில், அதாவது நம்முடைய திருநெல்வேலி ஜில்லாவில், விஷ்ணுயசஸ் என்ற ஸத் பிராம்மணருக்குப் புத்ரனாக கல்கி என்ற பெயரில் பகவான் அவதாரிப்பானென்று சொல்லியிருக்கிறது. அப்படியானால் அப்போதும் வைதிகாசாரங்களைப் பின்பற்றும் ஸத்பிராம்மணர்கள் கொஞ்சமாவது இருந்து கொண்டிருப்பார்களென்று தானே அர்த்தம்?

கலியின் கொடுமையைப் புராணம் முதலானவற்றில் ஜாஸ்திப் படுத்தித்தான் சொல்லியிருக்கிறது. எல்லாம் போயேபோய் விட்ட மாதிரிதான் வர்ணித்திருக்கும். நம் ஆசார்யாள் அவதாரத்திற்கு முந்திக்கூட வேத தர்மம் அடியோடு போய்விட்டது என்றே தேவர்கள் கைலாஸத்துக்குப் போய் பரமேச்வரனிடம் முறையிட்டுக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் அப்புறம் பார்த்தால் தலைமுறை தலைமுறையாக உயர்ந்த வைதிகாநுஷ்டானமுள்ள ஒரு மலையாள ப்ராம்மண குடும்பத்தில் ஆசார்யாள் அவதாரம் பண்ணினார், யதோக்தமாக எல்லா வைதிக வித்யைகளையும் குருகுலத்தில் அப்யாஸம் செய்தார் என்றெல்லாம் தெரிந்து கொள்கிறோம். நல்ல வைதிகாநுஷ்டானங்களால் ஸம்ஸ்காரம் பெற்றவர்கள்—பத்மபாதர் போன்றவர்கள்—

Koviloor Digital Library

அவரிடம் சிஷ்யர்களாக வந்து சேர்ந்ததாகப் பார்க்கிறோம். ஆனபடியால் வேத தர்மம்—'வேத' தர்மம் என்று சொல்வானேன்? நம்மைப் பொறுத்தமட்டில் தர்மம் என்றால் வேத தர்மம்தான், அப்படிப்பட்ட தர்மம்—எப்போதுமே முற்றிலும் அழிந்துபோய் விடவில்லை என்று தெரிகிறது.

"இது கலியாச்சே! ஜனங்களுக்கு ஆத்மபலம் ரொம்பக் குறைச்சலாச்சே! இதிலே ஜனங்கள் அக்னிஹோத்ர கர்மாநுஷ்டானத்தை நன்றாக நடத்திக் காட்ட முடியுமா? ஸந்நியாஸ ஆச்ரமத்தை நியமத்துக்கு பங்கம் வராமல் அநுஷ்டிக்கத்தான் முடியுமா?" என்று இந்த யுக ஆரம்பத்தில் தர்ம சாஸ்த்ரங்களை வகுத்துக் கொடுக்கும்போதே ஒரு கேள்வி வந்தது. அக்னி ஹோத்ரம் என்பது கர்ம காண்டத்தில், ப்ரவ்ருத்தி மார்க்கத்தில் வருவது. ஸந்நியாஸம் என்பது ஞான காண்டத்தில் நிவ்ருத்தி மார்க்கமாக வருவது. எனவே இந்த இரண்டும் போய்விட்டால் ஜனங்கள் உருப்பட வழியேயில்லை. அல்ப சக்தர்களான கலிகால மநுஷ்யர்களுக்கு இந்த அதோகதிதானா என்று கேள்வி வந்தது.

அதற்கு தர்ம சாஸ்த்ரக்காரரர்கள் என்ன பதில் சொன்னார்கள். அதாவது, தீர்ப்புக் கொடுத்தார்கள்?

"கலியுகம், க்ருதயுகம் என்று போட்டுக் குழப்பிக் கொள்ளவேண்டாம். எதுவரை வர்ண விபாகம் கொஞ்சமாவது இருக்கிறதோ, எதுவரை வேத அத்யயனம் கொஞ்சமாவது இருக்கிறதோ, அதுவரை அக்னிஹோத்ரமும் ஸந்நியாஸமும் இருக்கலாம்" என்று தீர்ப்புக் கொடுத்தார்கள். அதனால் கலியிலும் இவையெல்லாம் மங்கிப் போனாலும் முழுக்க அணைந்து விடாமல் முணுக்கு முணுக்கு என்று எரிந்து கொண்டுதானிருக்கும் என்று தெரிகிறதல்லவா? அணைந்துபோகிற நிலைக்கு வரும்போது ஒரு மஹா புருஷர் வந்து எண்ணெய்போட்டு, திரியைத் தூண்டிவிட்டு நன்றாகவே ஜ்வலிக்கச் செய்வார். க்ருதயுகமே வந்து விட்டதோ என்று நினைக்கிறமாதிரிகூடக் கொஞ்சகாலம்

Koviloor Digital Library

ரொம்ப நன்ருகப் போகும். அப்புறம் மறுபடி மங்கல், மறு படித் தூண்டிவிடுவது என்று போய்க் கொண்டிருக்கும்.

ஆசார்யாளின் அவதார காலம் உள்பட எப்போதும், இந்தக் கலியிலுங்கூட, நல்ல கர்மாநுஷ்டாதாக்கள் (வறட்டு மீமாம்ஸையாக இல்லாமல் கர்ம யோகமாகச் செய்கிறவர்கள்), நல்ல பக்தியுள்ளவர்கள், ஞானம் நிரம்பிய ஞானிகள் எல்லோரும் கொஞ்சமாவது இருந்து வந்திருக் கிருர்கள்; இனிமேலும் இருப்பார்கள். குருபரம்பரை என்று ஒன்று எல்லா மார்க்கத்திலும் அவிச்சின்னமாக (முறிவு படாமல்) இருந்தே வந்திருக்கிறது. குரு இல்லாமல் அத்யயனமுமில்லை, ஸந்நியாஸ தீக்ஷையுமில்லையாதலால், இவை எப்போதும் இருந்திருக்கின்றனவென்ருல் பரம்பரா க்ரமத்தில் இவற்றை அப்யஸித்து உபதேசித்து வந்த குருக் களும் அவிச்சின்னமாக இருந்திருப்பதாகவே ஆகிறது. குரு சிஷ்யப் பரம்பரை க்ரமத்தில் வருவதான "ஸம்ப்ரதாய வித்யை"க்குத்தான் 'வால்யூ' உண்டு என்று ஆசார்யாள் பாஷ்யங்களில் பல இடங்களில் சொல்லியிருப்பதால் அவர் நாள் வரைக்கும் அப்படித் தொடர்ந்து வந்து கொண்டிருந் ததாக ஏற்படுகிறது. அத்வைத வித்யையை அவர் இப்படிப் பரம்பரை க்ரமத்தில் கோவிந்த பகவத் பாதாளிடமிருந்து உபதேசம் பெற்றது மட்டுமின்றி, அவர் காலம் வரை வேறு பல அத்வைத ஆசார்யர்களும் இருந்திருக்கிருர்கள். காசக்ருத்ஸ்னர், த்ரவிடாசார்யார், ப்ரஹ்மநந்தி, பர்த்ரு ப்ரபஞ்சர், பர்த்ருஹரி, ப்ரஹ்மதத்தர், ஸௌந்தர பாண்ட்யர் என்பவர்கள் இப்படி ஆசார்யாளுக்கு முன்பே அத்வைதம் சொல்லியிருக்கிருர்கள். அதே மாதிரி அவர் நாளில் நல்ல வைதிக - ஆகம முறைகளின்படி பூஜைகள் நடந்த ஆலயங்களும் இல்லாமல் போய்விடவில்லை. அவர் மூன்று தடவை இந்த தேசம் முழுவதிலும் க்ஷேத்ராடனம் செய்ததில் பல ஆலயங்களில் உக்ரமான பத்ததியை ஸௌம்யமாக்கிஞரென்றும், அவைதிக தாந்த்ரீக பூஜையை முறைப்படி மாற்றிஞரென்றும் சொல்லியிருந்தாலும் எல்லா

Koviloor Digital Library

ஆலயங்களிலுமே அப்படிச் செய்தாரென்று சொல்லவில்லை! ஸரியான முறையில் வழிபாடு நடந்த ஆலயங்களும் இருந்திருக்கின்றன. அவருடைய பெற்றோர்களே திருச்சூர் ஆலயத்தில் பஜனம் இருந்துதான் அவர் அவதரிக்கும்படியாக வரம் பெற்றிருக்கிறார்கள்.

பின்னே ஏன், "போச்சு போச்சு! கலியில் எல்லாம் போச்சு! ஏதாவது கொஞ்சம் மிச்சமிருந்தாலும் அதுவும் கால க்ரமத்தில் போயே போயிடும். எல்லாம் மிருகப் பிராயமாயிடும்" என்று புராணங்கள் பயமுறுத்துகின்றன வென்றால், நாம் ஆலஸ்யமாக (மெத்தனமாக) இருந்துவிடக் கூடாது என்று எச்சரித்து உசுப்பிவிட்டு உஷார்ப் படுத்துவதற்குத்தான். ரொம்பவும் ஆபத்தாக வர்ணித்தால்தான் நாம் அசைந்து கொடுப்போம் என்பதால்தான்.

'கலிதான் அதர்ம யுகமென்றால் நாம் அதர்மமாகத் தான் இருந்துவிட்டுப் போவோமே!' என்று சொல்வது தப்பு. "திருடர்கள் ஆபத்து ஜாஸ்தி இருக்கிறது" என்று போலீஸ் தண்டோராப் போட்டால் என்ன செய்வோம்? திருடர்கள் வந்து எடுத்துக்கொண்டு போகட்டும் என்று நாமே உடைமைகளைத் தெருவில் போட்டுவிட்டா உட்கார்ந்து கொண்டிருப்போம்? 'காப்பாற்ற முடிகிறவரையில் காப்பாற்றிக் கொள்வோம்' என்று தானே ஜாக்ரதை செய்து கொள்வோம்? போலீஸ் தண்டோரா போட்டதன் நோக்கமும் இப்படி ஜாக்ரதை செய்து, முடிந்தமட்டும் ரக்ஷித்துக் கொடுப்பதற்குத்தானே? "கலி அதர்ம ஆட்சியை ஆரம்பித்துவிட்டான்" என்று சாஸ்த்ரங்கள் தண்டோராப் போடுவதற்கும் தாத்பர்யம், கூடிய மட்டும் தர்மத்தை ஜாக்ரதையாக ரக்ஷித்துக் கொள்வதற்குத்தானே ஒழிய, 'ஒன்றும் பண்ணிக்கொள்வதற்கில்லை' என்று, இருப்பதையும் விட்டுவிட்டு வீணாகப் போவதற்கல்ல.

இந்த யுகத்தில் வரும் அதர்ம ப்ரவாஹத்தை ஒருவன் எதிர்த்து நின்றால்தான் மற்ற யுகங்களில் செய்யும் தர்மாநுஷ்டான பலனைவிடக் கோடி மடங்கு பலன்

Koviloor Digital Library

பெறலாம். எதிர்ப்பு உண்டான ஸமயத்தில் தடுத்து நின்ருல் தான் பெருமை அதிகம்.

[லேசாகச் சிரித்தபடி] மற்ற யுகங்களில் ரொம்பப் பேர் ஈச்வரனிடம் போய்ச் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். அவருக்கு ஸாவகாசமாக ஒவ்வொருவரையும் விசாரித்து அநுக்ரஹம் செய்ய முடியாமலிருக்கும். கலியில், 'யார் வருவா? யார் வருவா?' என்று பார்த்துக்கொண்டிருப்பார். அதனுல் நாம் கொஞ்சம் யத்னம் பண்ணினுல்கூடக் கோடியாக நினைத்துக் கூப்பிட்டு வைத்துக்கொண்டு நன்ருக அநுக்ரஹம் பண்ணிவிடுவார்.

ஒரேயடியாக பயமுறுத்திப் "போச்சு, போச்சு" என்று என்று சொல்வதாலேயே சிலர், 'நம்முடைய தடுப்பு முயற்சி நிஷ்பிரயோஜனமாகத்தான் போகும்' என்று சோர்ந்து விழுந்துவிடப் போகிருர்களே என்று, இந்த யுகத்திற்கே உள்ள சில ப்ரத்யேக அநுகூலங்களையும் சாஸ்த்ரங்களில் சொல்லித் தெம்பூட்டியிருக்கிருர்கள். க்ருத யுகத்தில் மனோ நிக்ரஹம் என்ற சிரம ஸாத்யமான கார்யத்துடன் கூடியதான த்யானம் செய்தும், த்ரேதாயுகத்தில் சரீரத்தைக் கஷ்டப்படுத்திக்கொண்டு யாகங்கள் செய்தும், த்வாபர யுகத்தில் விஸ்தாரமாக அர்ச்சனை பூஜை என்று செய்துமே பெறக்கூடிய அநுக்ரஹ பலனை இந்தக் கலியில்தான் ஸுலபமாக பகவந்நாமத்தைச் சொல்லியே பெற்றுவிடலா மென்றும் சொல்லியிருக்கிருர்கள்—பயமுறுத்திய அதே சாஸ்திரங்களிலேயே ரொம்பவும் ஆறுதலாகச் சொல்லி யிருக்கிருர்கள். "கலியா அஸத்தான யுகம்? அதுதான் ஸத்தான யுகம். கலி: ஸாது:, கலி: ஸாது:" என்று வ்யாஸா சார்யாள் இரண்டு தரம் உறுதிப்படுத்திச் சொல்லியிருக் கிருர்!

சங்கர 'விஜயம்'

அதை ரொம்பவும் அஸாதுவாக இழுத்துவிட்டுக் கொண்டிருந்த காலத்தைப் பற்றிப் பார்த்துக் கொண்டிருந்

Koviloor Digital Library

தோம். 72 துர்மதங்கள் அப்போது ஜனங்களைக் கலக்கிக் கொண்டிருந்ததாகப் புஸ்தகங்களில் சொல்லியிருப்பதைச் சொன்னேன். எந்தப் புஸ்தகங்கள் என்றால் ஆசார்யாளின் சரித்ரத்தைச் சொல்வதான புஸ்தகங்கள். அவற்றுக்கு 'சங்கர விஜயம்' என்று பேர். 'விஜயம் செய்தார்' என்று ஒரு பெரிய மநுஷ்யர் ஒரு இடத்துக்கு 'விஸிட்' செய்தால் சொல்கிறோம். 'விஜயம்' என்றால் 'விசேஷம் வாய்ந்த ஜயம்', அதாவது, சிறப்பான வெற்றி. ராஜாக்கள் திசைதோறும் சென்று மற்ற ராஜாக்களை ஜயிப்பது 'திக்விஜயம்'. இப்படியே ஜனங்களுடைய ஹ்ருதயங்களை ஒருவர் ஒரு இடத்துக்குப் போய் அன்பினால் வெற்றி கொள்கிறார் என்ற அர்த்தத்திலேயே 'விஸிட்' செய்வதை விஜயம் என்பது. வாழ்நாள் முழுவதும் தங்களுக்குள் தப்பான எண்ணங்கள் என்ற எதிரிகள் தலையெடுக்க முடியாதபடி 'ஆத்ம ஜயம்' என்ற பெரிய வெற்றியை ஸாதித்துக் கொண்டு, அதோடு லோக ஜனங்கள்—பண்டித, பாமரர்கள் அனைவர்—மனசுகளையும் அன்பினாலும் அறிவினாலும் வென்ற நம் ஆசார்யாள் போன்ற மஹாத்மாககளின் சரித்ரம் 'விஜயம்' என்று பேர் பெறுகிறது. இப்படிப் பலபேர் பல சங்கர விஜயங்கள் செய்திருக்கிறார்கள்*. அவற்றில் சிலவற்றில் இந்த 72 மதப் பிரஸ்தாவம் வந்திருக்கிறது. ஆசார்யாளின் 'அஷ்டோத்தர (சத)'த்திலும் (அர்ச்சனைக்கான 108 நாமங்களிலும்)

த்வி-ஸப்ததி மதோச்சேத்ரே நம :

என்று வருகிறது. 'எழுபத்திரண்டு மதங்களை நிர்மூலம் செய்தவர்' என்று அர்த்தம்.

எழுபத்திரண்டு மதங்கள்

எத்தனை ஆராய்ச்சி செய்து பார்த்தும் அந்த எழுபத்திரண்டில் பலவற்றுக்குப் பெயர்கூடத் தெரியவில்லை!

---

* சங்கர விஜய நூல்கள் குறித்துச் சில மேல் விவரங்கள் இவ்வுரையில் பின்னால் வரும்.

Koviloor Digital Library

இப்படிச் சொன்னவுடனேயே, 'பார்த்தேளா? இந்த மாதிரிதான் ஆதாரம் காட்டமுடியாமலே கதை கட்டுவது நம் வழக்கம். இப்படிப் பண்ணித்தான் 'ஹிஸ்டரி' என்பதேயில்லாமல் எல்லாம் 'மித்' (myth)-ஆக எழுதிவைத்துக் கொண்டிருக்கிறோம்' என்று ஆக்ஷேபிக்க வேண்டாம்! எழுபத்திரண்டு மதத்திற்கும் பெயர் தெரியாவிட்டாலும், நாற்பது நாற்பத்தைந்தை நன்றாகக் கண்டுபிடிக்க முடிகிறது. இவற்றில் பலவற்றுக்கு ஆதாரப் புஸ்தகங்களும் ஏராளமாக உள்ளன. பல ஒரு காலத்தில் அநுஷ்டானத்தில் இருந்திருக்கின்றன என்பதற்கும் அழுத்தமாக 'எவிடென்ஸ்' இருக்கிறது. இவற்றில் மீமாம்ஸை, ந்யாயம், வைசேஷிகம் போன்ற சில நம்முடைய வேதாந்த மதத்திற்கே ஓரளவு வரை ஆதரவாக இருப்பதால் இன்றைக்கும் பாடசாலைகளில் சொல்லிக்கொடுத்துவருகிறோம். 'எழுபத்திரண்டு மதம்' என்ற பேச்சு ரொம்ப காலமாகத் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. ஆகவே, நமக்கு அதில் சுமார் பாதி, அல்லது அதற்கு மேலேயே தெரிவதால், தெரியாமற்போன பாக்கியும் ஒரு காலத்தில் இருந்திருக்கவேண்டும்; இதில் கட்டுக்கதை ஒன்றுமில்லை, என்று அநுமானிக்க முடிகிறது.

ஆசாரியாளின் ஸமகாலத்தியவை என்றே சொல்லக்கூடிய அவரது சரித்ர புஸ்தகங்களில் அநேக மதங்களின் பெயர்களைச் சொல்லி அவற்றையெல்லாம் அவர் நிராகரணம் செய்தார் (நிராகரித்தார்) என்று விவரித்திருக்கிறது. சிவ மதங்கள், விஷ்ணு மதங்கள் மாதிரி ப்ரஹ்மாவையே குறித்ததாக 'ஹைரண்யகர்ப்ப மதம்' என்றுகூட இருந்திருக்கிறது! இந்த்ர மதம், குபேர மதம், இன்னும் மன்மத மதம், யம மதம் என்றெல்லாங்கூட இவர்கள் ஒவ்வொருவரையும் முழு முதல் தெய்வமாக வைத்து மதங்கள் இருந்திருக்கின்றன. இப்படியே பித்ருக்களைக் குறித்து மதம், பூத வேதாளங்களைக் குறித்துக்கூட மதம், குணங்களே கடவுள் என்று வழிபடுவது, காலமே கடவுள் என்று வழிபடுவது—என்றெல்லாம் விசித்ரமாக அந்தப் புஸ்தகங்களில் பார்க்கிறோம்.

Koviloor Digital Library

அதிக விவரம் தெரியாத இவை தவிர, இன்னதுதான் ஸித்தாந்தம் என்று பூர்ணமாகத் தெரிந்த ஒரு இருபது, இருபத்தைந்து மதங்கள் இருந்திருக்கின்றன. என்னென்ன என்றால்: ஆசார்யாள் புது ஜீவனோடு ஸ்தாபித்த வேதாந்தம் தவிர ஷட்-தர்சனம் என்ற ஆறில் மீதியுள்ள ஸாங்க்யம், யோகம், ந்யாயம், வைசேஷிகம், மீமாம்ஸை என்ற ஐந்து; பாசுபதம், காலாமுகம், பாகவத-பாஞ்சராத்ரம் (இந்த இரண்டையும் ஒன்றுபடுத்தியே ஆசார்ய பாஷ்யங்களில் சொல்லியிருக்கும்) ஆகிய நாலு; தப்பான முறையில் அவைதிகமாகப் பின்பற்றப்பட்ட காணபத்யம், கௌமாரம், சைவம், சாக்தம், வைஷ்ணவம், ஸௌரம் என்ற ஆறு (இந்த ஆறையே வைதிகமான ஷண்மதங்களாக ஆசார்யாள் ஸ்தாபித்தார்); வேத ஸம்பந்தமே கூடாது என்று அடியோடு ஆக்ஷேபித்து எழும்பிய பௌத்தம், ஜைனம்; அப்பட்டமான நாஸ்திகமாக, ஆத்ம விஷயமாகவே போகாமல் முழு 'மெடீரியலிஸ'மாக இருந்த சார்வாகம் என்ற லோகாயத மதம் (பார்ஹஸ்பதம் என்று சொன்னேனே, அது)—என்று, ஒரு இருபது, இருபத்தைந்து மதங்கள் இருந்திருக்கின்றன. எல்லாவற்றையும் கூட்டினால் நாற்பது, நாற்பத்தைந்து தேறலாம். (எழுபத்திரண்டில்) பாக்கியுள்ள சுமார் முப்பதுக்குப் பேர்கூடத் தெரியவில்லை! பேர் தெரிந்தவற்றில் சிலவற்றுக்கு மூலப் புஸ்தகங்கள் கிடைக்கவில்லை. அதெல்லாம் எப்படியானாலும், அந்த எழுபத்திரண்டில் எதுவுமே இன்று நம் தேசத்தில் அநுஷ்டானத்தில் இல்லை!

பௌத்தம் வெளி தேசங்களில் பரவி உலகத்தின் பெரிய மதங்களில் ஒன்றாக இருந்தபோதிலும் அது பிறந்த நாடான இந்தியாவில் இல்லை. ஜைனம் கொஞ்சம் கொஞ்சம் இருந்தாலும் நிறைய ஹிந்துமத வழிபாட்டு அம்சங்களை எடுத்துக்கொண்ட மதமாகவே இருக்கிறது. 'ஜைன்' என்று பேர் போட்டுக்கொள்ளும் பல பேர் ஹிந்துக்களோடு கொள்வினை-கொடுப்பினை செய்துகொள்பவராக இருக்கிறார்கள். ஆசார்ய பாஷ்யங்களில் ஜைனம் விசேஷமாக அலசப்

Koviloor Digital Library

படவில்லை. இன்னும் சொன்னால் ஆச்சர்யமாயிருக்கும்—பௌத்தமத கண்டனம்கூட (ஆசார்ய பாஷ்யங்களில்) அதிகம் இராது. இந்த விஷயத்தைப் பிற்பாடு பார்க்கலாம்.

இப்போது நம் தேசத்தில் சைவமாகவும் வைஷ்ணவமாகவும் பல மதங்கள் இருக்கின்றனவென்றாலும், ஆசார்யாள் அவர் காலத்தில் கண்டனம் செய்த சைவ-வைஷ்ணவ மதங்கள் வேறே, தற்போது இருப்பவை வேறே. அவர் கண்டனம் செய்து, வழக்கற்றுப் போய்விட்ட மதங்களில் சில அம்சங்களை மாத்திரம் பிற்கால சைவ-வைஷ்ணவ மத ஸ்தாபகர்கள் எடுத்துக்கொண்டிருக்கலாம். ராமாநுஜாசார்யாரின் வைஷ்ணவத்தில் ஆசார்யாள் கண்டித்த பாஞ்சராத்ரக் கொள்கைகள் கலந்திருக்கின்றன. ஸித்தாந்த சைவம் (ஆசார்யாள் கண்டித்த) பாசுபதத்தை அங்கங்கே தழுவிக்கொண்டு போகலாம். எப்படியானாலும், இந்த மதங்களெல்லாம் ஆசார்யாள் அவர் காலத்தில் கண்டனம் செய்த அந்த மத ரூபங்களிலிருந்து மாறுபட்டு, அவருக்குப் பிற்காலத்தில் வந்த மத ஸ்தாபகர்கள் கொடுத்த புது ரூபங்களில்தான் இருந்து வருகின்றன.

ந்யாயம், மீமாம்ஸை போன்றவற்றுக்கு நிறையப் புஸ்தகம் இருந்து, இவற்றைப் படிப்பவர்களும் இன்றுவரை இருந்து வந்தாலும், 'ந்யாய மதஸ்தர்', 'மீமாம்ஸை மதஸ்தர்' என்றெல்லாம் அவற்றையே மதமாக எடுத்துக் கொண்டு அநுஸரிப்பதென்பது ஆசார்யாளுக்கு அப்புறம் இல்லை. இன்றைக்கு யோக மார்க்கங்கள் நிறையத் தோன்றிப் பல பேர் அவற்றின்படிப் பண்ணிப் பார்த்தாலும்கூடத் தங்களை ஹிந்துமதத்திலிருந்து பிரித்து 'யோக மதஸ்தர்' என்று சொல்லிக் கொள்ளவில்லை அல்லவா?

எழுபத்திரண்டில் பல, பேர்கூடத் தெரியாமல் ஓடி விட்டிருக்கின்றன என்றால், ஆசார்யாள்தான் ஓட்டியிருக்கிறார்! சிலவற்றைப் புஸ்தகங்களிலிருந்து தெரிந்துகொள்கிறோம். சில, தேசாந்தரங்களில் வழக்கத்தில் இருப்பதால் தெரிகிறது. இடிந்த சிலைகள், மண்டபங்களிலிருந்தும்,

Koviloor Digital Library

"ஓஹோ! முன்னே இன்ன மதம் இருந்திருக்கிறது" என்று கண்டுபிடிக்கிறோம். ஆசார்யாள் ஒருத்தர் மட்டும் வந்திருக் காவிட்டால் அவற்றைக் கண்டுபிடிக்க இத்தனை கஷ்டப் படவே வேண்டாம்! ஹிந்து மதத்தைத்தான் தேடிக் கண்டு பிடிக்க நேர்ந்திருக்கும்!

ஆசார்யாளின் ஆச்சரிய ஸாதனை

அதாவது அந்த எழுபத்திரண்டு மதங்களையும் இந்த தேசத்தில் வழக்கற்றுப் போகும்படியாக அந்த ஒரு மூர்த்தி செய்திருக்கிறார்! நினைத்து நினைத்து ஆச்சர்யப்படும்படியாக இப்படி ஒரு ஸாதனை செய்திருக்கிறார்! தம்முடைய ஆத்ம சக்தி, அறிவு சக்தி, வாத சக்தி ஆகியவற்றைக்கொண்டே ஒரு ஆண்டி இப்படிச் செய்திருக்கிறாரென்றால் அவர் அவதார புருஷராக இல்லாமல் வேறெப்படி இருக்க முடியும்? அதுவும் அவர் பூலோகத்தில் வாஸம் பண்ணியது முப்பத்திரண்டே வருஷங்கள்தான்!

இன்றைக்கு இந்த தேசத்திலுள்ள எல்லோருமே அவரைப் பின்பற்றும் அத்வைத ஸம்ப்ரதாயஸ்தர்கள் இல்லைதான். ராமானுஜாசார்யார், மத்வாசார்யார், ஸ்ரீக்ருஷ்ண சைதன்யர், வல்லபாசார்யார், ஸ்ரீகண்டா சார்யார், மெய்கண்டார் என்று பலர் ஏற்படுத்திய ஸம்ப்ரதாயங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். இருந்தாலுங்கூட, இந்த ஆசார்யர்கள் எல்லோரும் நம் முடைய ஆசார்யாளுக்குப் பிற்பாடு நூற்றாண்டுகளுக்கு அப்புறம்தான் இந்த மதங்களை ஸ்தாபித்தார்கள். இன்று அத்வைதம் தவிர இங்குள்ள மதங்களெல்லாம் ஆசார்யாளுக் குப் பிற்காலத்தில் உண்டானவையே. அதுவரை ஆசார் யாளின் மதமே தனக்கு முந்தி இருந்த அத்தனை மதங்களையும் இல்லாமல் செய்துவிட்டு, தான் மாத்திரமே கொடிகட்டிப் பறந்திருக்கிறது! பின்னால் வந்த எந்த மதமும் அதற்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்த முடியவில்லை. எத்தனை புது மதம் வந்தாலும் ஆசார்யாளைப் பின்பற்றும் ஸம்ப்ரதாயஸ்

Koviloor Digital Library

தர்களும்நிறைய இருந்துகொண்டேதான் வந்திருக்கின்றனர். ஆசார்யாளின் ஸித்தாந்தம் முன்னாலிருந்த எல்லா மதங்களை யும் இல்லாமல் செய்த மாதிரி பின்னால் வந்த எந்த ஸித்தாந் தமும் செய்யவில்லை. ராமாநுஜர் வந்ததனால் அத்வைதம் இல்லாமல் போய்விடவில்லை. அதற்கப்புறம் மத்வர் வந்த தனால் அத்வைதம், விசிஷ்டாத்வைதம் இரண்டும் இல்லை என்று ஆகவில்லை. இப்படியே ஒவ்வொரு புது மதமும் வந்த போதும் அதற்கும் மநுஷ்யர்கள் சேர்ந்தார்களென்றாலும், அதிலேயே எல்லாரும் சேர்ந்து மற்ற எந்த மதமுமே இல்லை என்று ஆகிவிடவில்லை. ஆசார்யாள் ஒருத்தர் காலத்தில்தான் அவருடைய மதத்தையே அத்தனை பேரும் ஏற்றுக்கொண் டிருந்தது. அவருக்குப் பிற்பாடும் சில நூற்றாண்டுகள்வரை அப்படித்தான் இருந்தது. அதனால்தான் அவருக்கு 'ஜகத்குரு' என்றும் 'ஜகதாசார்யாள்' என்றும் தனியான தொரு கௌரவம் ஏற்பட்டது. 'ஜகத்குரு' என்பது அவரொரு வருக்குத்தான் உபசாரத்திற்காக உயர்த்தி வைத்துக் கொடுத்த விருதாக இல்லாமல் வாஸ்தவமான உண்மை யைச் சொல்வதாக இருக்கிறது!

'ஜகத்' என்று சொன்னதால் தேசாந்தரங்களைப் பற்றி நினைக்க வேண்டியதில்லை. வைதிக அநுஷ்டானத்துக்குரிய கர்ம பூமியாகவுள்ள நம்முடைய தேசம்தான் ஜகத்துக்கே உயிர் மாதிரி, ஹ்ருதயம் மாதிரி இருப்பதால் இது முழு தற்கும் ஆசார்யாள் என்றால் ஜகதாசார்யாள்தான். பாரத தேசம் என்று நாம் சொல்வதையே பூர்வ காலத்தில் இன்னம் விசாலமாக பரத கண்டம் என்று சொல்லி அதில் 56 தேசங் கள்—அங்கம், வங்கம், கலிங்கம் என்றெல்லாம் 56; தற்கால மாகாணங்கள் (மாநிலங்கள்) மாதிரியானவை—இருப்ப தாகச் சொல்லி வந்தார்கள். அந்த ஐம்பத்தாறிலும் ஆசார்யாள் திக் விஜயம் செய்து எல்லா பரமதங்களையும் நிராகரணம் செய்து அத்வைத வேதாந்தத்தை நிலைநாட்டினா ரென்றால் அதுதான் ஜகத்குருத்வம்.

Koviloor Digital Library

அனைத்தும் அடங்கிய வைதிகம் ஆசார்யாள் மதமே

வேதத்தை ஒப்புக்கொள்வதாகச் சொன்னாலும், அப்படிச் சொல்லாவிட்டாலும் அன்றைக்கு இருந்த மதங்கள், அப்புறம் ராமாநுஜர், மத்வர் போன்றவர்கள் ஸ்தாபித்த மதங்கள், இன்றைக்கும் லோகம் பூராவிலும் இருக்கிற அந்நிய மதங்கள் ஆகிய எல்லாவற்றிலுமே நல்லதாக என்னென்ன அம்சம் இருக்கிறதோ அதெல்லாம் வேதத்தில் இருப்பதுதான். கால தேச வர்த்தமானங்களால் வெளி ஆசார அநுஷ்டானங்கள் வைதிகமாகத் தெரியாது போனாலும், தேசாந்தரங்களில் உள்ள மதங்கள் உட்பட எதுவானாலும் 'ஸ்பிரிட்'டை எடுத்துக்கொண்டால் அது வேதத்தில் ஆதாரமுள்ளதாகவே இருக்கும். இங்கே 'ஸ்பிரிட்' என்று சொல்லும்போது நான் மதங்களிலுள்ள தத்வங்களை மட்டும் சொல்லவில்லை. சடங்குகளையும்தான் சொல்கிறேன். இன்றைக்கு அந்நிய மதங்களில் உள்ள சடங்குகள் வைதிக வாஸனையே இல்லாத மாதிரி இருக்கிற போதும்கூட அந்தச் சடங்குகளின் ஜீவனாக இருக்கப்பட்ட, 'ஸ்பிரிட்' என்று சொன்ன, அம்சம் வேதத்தில் இல்லாமலிருக்காது. வைதிகம், அவைதிகம் என்று சொல்லப்படும் எல்லா மதங்களுமே தெரிந்தும் தெரியாமலும் இப்படி தத்வம், சடங்கு இரண்டிலும் ஒரொரு அம்சங்களை வேதத்திலிருந்து எடுத்துக்கொண்டுதான் உருவாயிருக்கின்றன. ஒரொரு அம்சங்களைத்தான்; பூர்ணமாக இல்லை.

வேதத்தைப் பார்த்தால் அதில் சிவ ஸம்பந்தமாகவும் பல உண்டு; விஷ்ணு ஸம்பந்தமாகவும் பல உண்டு. விசிஷ்டாத்வைதம், த்வைத மதம் முதலியவற்றில் சிவ ஸம்பந்தமானவற்றை விட்டுவிட்டு வைஷ்ணவமானதை மட்டுந்தான் எடுத்துக்கொண்டிருக்கிறது. சிவாத்வைதம், சைவ ஸித்தாந்தம் முதலியவற்றில் இதற்கு vice versa—வாக இருக்கும். ஆகக்கூடி வேதத்தில் இருப்பதில் ஏதோ ஒன்றை விட்டு, ஒன்றை மட்டும் க்ரஹித்துக் கொள்வதாகவே இருக்கும்,

Koviloor Digital Library

மீமாம்ஸகர்கள் கர்ம மார்க்கத்தை மட்டும் எடுத்துக் கொண்டு ஞானத்தைத் தள்ளினார்கள். பௌத்தம் யம நியம ஒழுக்கங்கள், நிஷ்ப்ரபஞ்ச தத்வம் இவற்றை மட்டும் வேத தர்மத்திலிருந்து எடுத்துக்கொண்டு, ஆனால் வேறே தினுஸாக 'டெவலப்' செய்துகொண்டு போயிற்று. இப்படி எந்த மதத்தைப் பார்த்தாலும் வேதத்தில் சிலதைக் கொள்ளுவது, சிலதைத் தள்ளுவது என்றே இருக்கிறது. ஸம்பூர்த்தியாக வேதம் முழுவதையும் அப்படியே எடுத்துக் கொண்டது ஆசார்யாளின் மதம்தான். ஸரியாய்ச் சொன்னால், அது ஆசார்யாள் மதமே இல்லை. ஒரிஜனல் வேத மதமேதான்! ஆசார்யாள் புனருத்தாரணம் பண்ணிய ஒரிஜனல் வேத மதம்! கர்மம், பக்தி, ஞானம், யோகம், தர்மம் என்ற ஒழுக்க நியமம், ஸப்ரபஞ்சம், நிஷ்ப்ரபஞ்சம், சிவன் - விஷ்ணு என்கிற மாதிரி பேதமில்லாமல் அத்தனை தெய்வங்களும் ஸம்மதமென்பது—என்று பூர்ணமாயிருப்பது ஆசார்யாள் கொடுத்துள்ள வழி ஒன்றுதான்.

இதர மதங்களைப் பற்றி

அவர் நிராகரணம் செய்த மற்ற அபூர்ண மதங்களைப் பற்றியும் கொஞ்சம் சொல்லவேண்டியதாகிறது.

கர்ம காண்டத்தை மட்டும் எடுத்துக்கொண்ட மீமாம் ஸகர்களைப் பற்றிச் சொன்னேன். லோகத்தை ஈச்வரன் என்பவன் ஸ்ருஷ்டித்ததாக அவர்கள் கருதவில்லை. கர்ம பலன்களையும் அவன்தான் தருகிறான் என்பதையும் ஒப்புக் கொள்ளவில்லை. ஸகுண ஈச்வரன், நிர்குண ப்ரஹ்மம் இரண்டும் அவர்களுக்கு இல்லை. ஈச்வரோபாஸனையுமில்லை; ஆத்ம த்யானமுமில்லை. ஸ்வர்கத்தையோ, அல்லது, அவர் களுக்கே என்ன என்றுசொல்லத் தெரியாத ஸ்வர்கத்துக்கு மேலான நித்யானந்த பதமாக இருக்கக்கூடிய மோக்ஷம் என்ற ஏதோ ஒன்றையோ பெறக் கர்மாநுஷ்டானமே போதும்; வேறே பக்தியோ ஞானமோ ஒன்றும் கூடாது என்றார்கள். தாங்கள் மட்டுமே ஸத்யமாக வேத தர்மத்தை

Koviloor Digital Library

அநுஸரிப்பவர்களென்றும், ஞானம் என்று சொல்லிக் கொண்டு கர்மாவை விட்டு ஸந்நியாஸியாகிறவர்கள் வேதத்துக்கு விரோதமாகப் போகிறவர்களென்றும் சொல்லி ஸந்நியாஸியைப் பார்த்தாலே பாபம் என்று நினைக்கும் அளவுக்குப் போனார்கள்.

ஆனாலும் ஆஸ்திக மதங்கள்—அதாவது வேத ஆதாரத்தை நம்பும் வைதிக மதங்கள்—என்று சொல்லப் படும் ஆறு தர்சனங்களில், வேதாந்தத்துக்கு ஸமதையாகத் தங்கள் அபிப்ராயத்துக்கும் அநுஷ்டானத்துக்கும் வேதத் திலேயே நேராக ஆதாரம் காட்டியவர்கள் இந்த மீமாம் ஸகர்கள்தான். அவர்கள் செய்த கர்மாநுஷ்டானங்கள் யாவும் வேதோக்தமானவைதான். வேத மந்த்ரங்களுக்கு விளக்கமாக அர்த்தம் பண்ணியவர்களும் அவர்கள்தான். ந்யாயம், வைசேஷிகம், ஸாங்க்யம், யோகம் ஆகியவை வேத ப்ராமாண்யத்தை ஆக்ஷேபிக்கவில்லை என்பதோடு முடிந்து போயிற்று. தங்களுடைய ஸித்தாந்தத்துக்கோ, ஆசரணை களுக்கோ அவை நேராக வேதத்தில் அதிகம் ஆதாரம் காட்ட முடிவதில்லை.

இப்படி மீமாம்ஸை வைதிக மதமாகவே இருந்த போதிலும் அபூர்ணமான, மூளியான, வைதிக மதமாக இருந்தது. ஸ்கூலிலிருந்து காலேஜுக்குப் போவதுபோல, முதலில் கர்ம காண்டம், அப்புறம் ஞானகாண்டம் என்று வேதம் வைத்திருப்பதைப் புரிந்துகொள்ளாமல் ஸ்கூலோ டேயே முடித்துவிட்டு அதுதான் எல்லா டிகிரிக்கும் மேலே என்று ஸ்தாபிக்கப் பார்த்தார்கள்!

ஸாங்க்ய மதத்தில் ப்ரக்ருதி முதல் பஞ்ச பூதம் ஈறாக இருபத்து நான்கு தத்வம் சொல்லியிருக்கும். ப்ரக்ருதி என்பது 'ப்ரதானம்' என்பதாகவும் அதில் சொல்லப் பட்டிருக்கிறது. இதுதான் லோகத்தில் எல்லாவற்றுக்கும், லோகத்திற்குமே மூலமாக இருப்பது. இயற்கைச் சக்தி என்று இந்த நாளில் சொல்வது போன்றது. மனஸ், இந்த்ரியம்

Koviloor Digital Library

எல்லாமும் இந்த ப்ரக்ருதியிடமிருந்துதான். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற தன்னுடைய அங்கங்களான முக்குணங்களை வெவ்வேறு விகிதாசாரத்தில் கலந்து நானுவித ப்ரபஞ்சத்தை அது உண்டாக்குகிறது. ஆனுல் அது ஜடம்தான். சேதன (உயிருள்ள) வஸ்து எதுவென்ருல் அது புருஷன் என்பது. ப்ரக்ருதியில் பட்டுக்கொள்ளாமல் அது தன்னிலேயே அடங்கியிருப்பது. அது காரியம் பண்ணுது. ஆனுல் அதன் ஸாந்நித்யத்தாலேயே ப்ரக்ருதி இத்தனை காரியமும் பண்ணு கிறது. ஒரு ஜீவனுனவன் இருபத்து நான்கு தத்வத்தையும் ஆராய்ந்து, தள்ளிவிட்டு, ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டு புருஷனுகத் தனித்து இருந்துவிட்டால் அந்தக் கைவல்ய நிலைதான் மோக்ஷம் என்று அந்த மதம் சொல்கிறது.

ஞானகாண்டமான உபநிஷத்தில் சொன்ன நிர்குணமான ஆத்மா மாதிரியே இதில் சொன்ன புருஷனும், மாயை மாதிரி ப்ரக்ருதியும் இருக்கின்றன. ஆனுலும் அந்த ஆத்மாவேதான் பரமாத்மா எனப்படும் ப்ரம்மம் என்றும், அத்தனை ஜீவாத்மாக்களும் இந்த ஒரே ப்ரம்மம் மாயையால் போட்டுக்கொண்ட வேஷங்கள்தான் என்றும் நம்முடைய வேதாந்தத்தில் (உபநிஷத்துக்களில்) சொன்னதற்கு மாருகப் பல 'புருஷர்'கள் இருப்பதாக ஸாங்க்யம் சொல் கிறது. ஒரே மாயை அல்லது ப்ரக்ருதிதான் ஸகல ஜீவ-ஜகத் துக்கும் காரணமாயிருக்கும்போது, ஞானமயமாக, சாந்த மயமாக உள்ள ஆத்மா அல்லது புருஷனும் ஒன்ருகத்தானே இருக்கவேண்டும்? பலவாக எப்படி இருக்கமுடியும்?

மீமாம்ஸை மாதிரிதான் ஸாங்க்யத்திலும் ஈச்வரன் கிடையாது. நிர்குணமாக உள்ள ப்ரஹ்மத்தையும் ஜீவ - ஜகத்துக்களையும் இணைப்பது மாயைக்கு ப்ரபுவாக இருக்கப் பட்ட ஸகுண ப்ரஹ்மம் என்னும் ஈச்வரன்தான். நிர்குண ப்ரம்மமே மாயையோடு கூடி ஸகுண ஈச்வரனுகி ஜீவ - ஜகத் வியாபாரத்தைச் செய்கிறது என்று வேதாந்தம் சொல்வதே பொருத்தமாக இருக்கிறது. 'புருஷன்' எதிலும் ஸம்பந்தப் படாமலிருக்கிறது என்று சொல்லிவிட்டு அப்புறம் அதன்

Koviloor Digital Library

ஸந்நிதி விசேஷத்தாலேயே ஜட ப்ரக்ருதி இத்தனையையும் செய்கிறது என்று சொல்வதில் ஸாரமில்லாமலிருக்கிறது.

நிஷ்காம்ய கர்மாவினால் சித்த சுத்தி பெற்று, பலதாதாவான ஈச்வரனை பக்தியுடன் உபாஸித்து சித்தத்தை ஒன்றிலேயே நிறுத்தப் பழகிய பிறகு, ஞான விசாரம் செய்தால்தான் ப்ரக்ருதிக் கட்டிலிருந்து விடுபட முடியுமே தவிர, கர்மாநுஷ்டானமுமில்லை, ஈச்வரனுமில்லை என்று வைத்துவிட்டு, அடைய வேண்டிய ஸத்யத்தைப் பற்றி விசாரம் செய்வதற்கு மாறாகத் தள்ள வேண்டிய இருபத்து நாலு தத்துவங்களை ஆராய்வதால் எப்படி விடுதலை கிடைக்கும்?

சேதனமான ப்ரஹ்மத்தையே உபநிஷத்துக்கள் ஜகத் காரணமாகச் சொல்லுகின்றன, ஆனால் ஸாங்க்யமோ அசேதனமான ப்ரதானத்தை (ப்ரக்ருதியை)த்தான் காரணமாகச் சொல்கிறது என்ற மூலமான வித்யாஸத்தைக் கொண்டே ஆசார்யாள் அது வைதிக ஸம்ப்ரதாயமாகாது என்று ஸ்தாபித்திருக்கிறார்.

புருஷன் என்ற தத்வத்துக்கு (ஆத்மாவுக்கு)க் கர்த்ருத்வம் இல்லை, அதாவது அதற்கு எந்தக் காரியமுமில்லை என்று வேதாந்தம் மாதிரியே ஸாங்க்யமும் சொன்னாலும், அதற்கு போக்த்ருத்வம் இருப்பதாகவும், புருஷனின் போகத்துக்காகத்தான் ப்ரக்ருதியானது ஸ்ருஷ்டி என்ற ஒன்றைச் செய்வதே என்றும் சொல்கிறது. இது வேதாந்தத்துக்கும் ஒத்து வரவில்லை; பகுத்தறிவுக்கும் ஒத்துவரவில்லை. 'போகத்தை அனுபவிப்பது' என்பதும் ஒரு கார்யம்தானே? கார்யமில்லாத புருஷ தத்வம் இந்தக் கார்யத்தை மட்டும் எப்படிச் செய்ய முடியும்? ஆத்மா —அதாவது புருஷன்—கர்த்தாவுமில்லை, போக்தாவுமில்லை என்பதுதான் அநுபவிகள் யாவரும் ஸமாதி (நிலை)யில் கண்டுள்ள உண்மையாயிருக்க அது கர்த்தா மட்டுந்தான் இல்லை, ஆனால் போக்தாவாகும் என்பது ப்ரத்யக்ஷத்திற்கு விரோதமாகும்.

Koviloor Digital Library

'யோகம்' என்பது சித்தத்தை அடக்கி ஸமாதி நிலையில் விடுபட்டிருப்பதற்கு வழி சொல்கிற மதம். அஷ்டாங்க— அதாவது எட்டு அங்கங்கள் கொண்ட—யோக ஸாதனையை அது சொல்கிறது. அது இன்றளவும் பலரால் அநுஷ்டிக்கப் பட்டுப் பலன் கொடுத்தும் வருகிறது. ஆனாலும், ஈச்வரன் என்ற ஒருவனை அது ஏற்கிறது என்ற ஒரு அம்சம் தவிர மற்றபடி ஸித்தாந்தத்தில் ஸாங்க்ய மத அபிப்ராயங்களையே தான் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனால் அதன் குறைபாடு களில் பல இதிலும் இருக்கின்றன. ஈச்வரனை அது ஒப்புக் கொள்வதும் அவன்தான் ஜீவ-ஜகத்துக்களின்வியாபாரத்தை நடத்தி, கர்ம பலனையும் தருகிறவன் என்ற முறையில் அல்ல. சித்த நிரோதம் (அடக்குதல்) செய்ய விரும்பும் ஸாதகன் சித்தத்தைப் பலவற்றில் சிதற விடாமல் ஏதோ ஒரு உயர்ந்த லக்ஷ்யத்தில் நிறுத்துவதற்குக் கொஞ்சங்கூட அழுக்கும், அழுகையும் இல்லாத ஈச்வரன் என்ற ஐடியல் பிரயோஜனப்படுகிறதென்றே அந்த மதத்தில் அவனை ஒப்புக்கொண்டிருக்கிறது.

ந்யாயம், வைசேஷிகம் என்பவை ஒரே புத்தி ஆராய்ச்சி கள்தான். ந்யாயமென்பது தர்க்க வாதம். ப்ரம்மம் ஒன்று தான் ஸத்யம், மாயையால் அது போட்டுக் கொண்டுள்ள இந்த ஜீவ வேஷத்தை நாம் ஞானத்தினால் கலைத்துவிட்டு அதுவே ஆகிவிட வேண்டுமென்று வேதாந்தம் சொல்கிற தென்றால், இந்த மதங்கள் ஜீவன், ஜகத்து எல்லாமே ஸத்யம்தான், வேஷமில்லை என்றும், ஏக பரமாத்மா என்றில் லாமல் அநேக ஆத்மாக்கள் இருப்பதாகவும் சொல்கின்றன. ந்யாயத்தையே அநுஸரித்துப் போகும் வைசேஷிகம் ஜீவ-ஜட ப்ரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் வித்யாஸப் பட்டிருப்ப தற்குக் காரணமாக அது அதற்கும் என்று உள்ள 'விசேஷ' குணங்களை ஆராய்கிறது. 'விசேஷ'த்தை ஆராய்வதாலேயே 'வைசேஷிகம்' என்று பெயர். இந்த ஸித்தாந்தத்தில் ஞானத்தினால் ஜீவபாவமும் ஜகத்தும் அடிபட்டுப் போவ தென்பது கிடையாது. ஜீவ-ஜகத்துக்கள் அழிக்கமுடியாத

Koviloor Digital Library

அணுக்களால் ஆனவை என்பது அதன் கொள்கை. அணுக்கள், பரமாணுக்கள் எப்படியெப்படி ஒன்று கூடி வஸ்துக்களை உண்டாக்குகின்றன என்பதை அது விஸ்தரிக்கும். இருபத்து நான்கு தத்வங்களை ஆராய்வதிலேயே ஜீவன் அவற்றிலிருந்து விடுபட்டு மோக்ஷம் சேர்வானென்று ஸாங்க்யம் சொல்கிற தென்றால், வைசேஷிகத்தில், ஒரு ஜீவன் அதன் அணுக் கொள்கை, 'பதார்த்தங்கள்' என்கிற ஒருவிதமான விஷயப் பாகுபாடு ஆகியவற்றை ஆராய்வதாலேயே தன்னுடைய சரீரம், அது அநுபவிக்கும் விஷயங்கள் ஆகியன ஜடமான வெறும் அணுக்களின் கூட்டம்தான் என்று பிரித்து வைத்து விட்டு சைதன்யமான ஆத்மாவைத் தெரிந்துகொண்டு ஸம்ஸார விடுதலை பெறுகிறான் என்கிறது. அங்கே (ஸாங்க்யத்தில்) கண்ட தோஷங்கள் இங்கேயும் பொருந்தும். புத்தி வாதம் நிறையப் பண்ணி வஸ்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதால் எப்படிக் கர்ம நாசமும், மனோநாசமும் உண்டாகும்? இவையில்லாமல் எப்படி ஸம்ஸார விடுதலை?

ஸாங்க்யம் அசேதனமான ப்ரதானத்தை ஜகத் காரணமாகச் சொல்வதுபோலவே ந்யாய—வைசேஷிகங்களும் அசேதனமான பரமாணுக்களை ஜகத் காரணமாகச் சொல்வதால், இந்த தர்சனமும் சேதனமான ப்ரஹ்மத்தை ஜகத் காரணமாகச் சொல்லும் உபநிஷத மதத்திற்கு, அதாவது வைதிக மதத்திற்கு முரணானது என்று ஆசார்யாள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இவை ஆஸ்திக (வைதிக) தர்சனங்கள்.

வேத ப்ரமாணத்தையே ஒப்புக் கொள்வதில்லை என்று, முழுக்க அவைதிகப் புது மதங்களாக ஏற்பட்டவை பௌத்தமும், ஜைனமும்.

அத்யயனம், வைதிக கர்மாநுஷ்டானங்கள், உபநிஷத்துக்கள், வர்ணாச்ரமங்கள் எதுவும் வேண்டாம் என்று இந்த இரண்டு மதங்களில் தள்ளி விட்டார்கள். ஈச்வரன், ஈச்வரோபாஸனை ஆகியவற்றையும் தள்ளி விட்டார்கள். நம்முடைய

Koviloor Digital Library

தர்ம சாஸ்த்ரங்களில் ஸகல ஜனங்களுக்குமான "ஸாதாரண தர்மங்கள்" என்று வைக்கப்பட்ட அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் (பிறர் ஸொத்தைக் கவராமை), ப்ரஹ்மசர்யம், அபரிக்ரஹம் (அவச்யத் தேவைக்கு மேல் கொஞ்சங்கூட உடைமைகளைச் சேர்த்துக்கொள்ளாமலிருப்பது) ஆகிய ஒழுக்கங்களை மட்டும் இவர்கள் சொல்லி, ஆனாலும் அவரவர் பக்வத்துக்கேற்ப இவற்றில் நீக்குப் போக்கு செய்யாமல் எல்லோருக்கும் ஒரே போலக் கடுமையாக வைத்து விட்டார்கள். ஜைனத்தில் கடுமையான நியமம், அவ்வளவு கடுமையாக இல்லாமலிருப்பது என்று பிரிவினை செய்து பிக்ஷுக்களுக்குக் கடுமையான 'மஹா வ்ரதம்' என்றும், மற்றவர்களுக்கு 'அணு வ்ரதம்' என்றும் வைத்திருந்தாலுங் கூட, வர்ணாச்ரம விபாகமில்லாத நிலையில் அந்த அணுவ்ரதமும் பொதுமக்களின் பொதுப்படையான அநுஷ்டானத்துக்கு ச்ரமம் ஸாத்யமாகத்தானிருந்தது. ச்ரமம் அதிகம் தந்தே கர்மாவைக் கழிக்கப் பண்ணணுமென்று அந்த மதம் கருதியதால்தான் அதற்கு ச்ரமணம் (சமணம்) என்றே பெயர்.

மத முடிவான ஸித்தாந்தம் (ஃபிலாஸஃபி) என்று பார்க்கிறபோது, புத்தர், 'எதுவும் நாம் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டாம். அவரவர் அநுபவித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும்' என்கிற மாதிரி கொஞ்சம் மட்டும் சொல்லி விட்டு விட்டதில், அந்தக் கொஞ்சத்தை எத்தனையோ தினுஸில் பிற்காலத்தில் விஸ்தாரம் செய்வது என்று ஆகி, வைபாஷிகம், ஸௌத்ராந்திகம், யோகாசாரம், மாத்யமிகம் என்று ஒன்றுக்கொன்று வித்யாஸமாகப் பல ஸம்ப்ரதாயங்கள் பௌத்தத்தில் ஏற்பட்டன. ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக அந்த ஒரு மதத்தின் பெயரிலேயே மஹாயானம், ஹீனயானம் என்று இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன. யோகாசாரமும், மாத்யமிகமும் மஹாயானத்தின் கீழ் வந்தன. ஸௌத்ராந்திகமும் வைபாஷிகமும் ஹீனயானத்தின் கீழ் வந்தன. இந்த ஒவ்வொரு ஃபிலாஸஃபியிலும் ஆழ்ந்து சிந்தனை பண்ணி

Koviloor Digital Library

அநுபவம் பெற்றவர்களும் தோன்றினார்களென்றாலும், மாறுபட்ட கொள்கைகளாக இப்படிப் பல ஏற்பட்டத்தில் அநுபவத்தைவிட வாதத்தில் முட்டிக்கொண்டு முடிந்து போவதற்கே அதிகம் இடம் கொடுத்துப் போயிற்று.

'அநுபவம்' என்று வரும்போதுஎன்ன ஆயிற்று என்றால், புத்தர் ஏதோ கொஞ்சம் சொல்லியும் சொல்லாமலும் விட்டுவிட்டாரென்றேனல்லவா? அது உபநிஷத்துக்களில் லோகம் மாயை என்று காட்டுகிற அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மாயைக்கு ஆதாரமாக ஒரு ஸத்யம் இருக்கிறது என்பதை எடுத்துக்கொள்ளாமல் விட்டு விட்டது. அதனால், நித்ய - சுத்த - புத்தமாகவும், ஸத் - சித் ஆனந்தமாகவும் இருக்கப்பட்ட ஸத்யமான ப்ரஹ்மம் அல்லது ஆத்மாவின் அநுபூதியைப் பெற்று பூர்ணவஸ்துவாக ஆவதுதான் ஜீவனின் லக்ஷ்யம், அதுதான் மோக்ஷம் என்று பௌத்த ஸித்தாந்தங்கள் சொல்லாமல், ஒரு ஆதாரமு மில்லாமல் என்னவோ ஓயாமல் மாறிக்கொண்டே இருக்கும் மாயா ப்ரவாஹத்திலிருந்து விடுபட்டு, ஒன்று மில்லாத ஒரு சூன்யத்தில் சேர்ந்துவிடுவதுதான் நிர்வாணம் என்னும் மோக்ஷம் என்று சொல்வதாயிற்று. ஸத்ய வஸ்து, சாச்வத வஸ்து எதுவும் இல்லை, எல்லாம் சூனியந்தான் என்ற நிச்சயத்தியின் பேரிலேயே த்யானம் செய்து பெறுகிற அநுபவம் எப்படி 'ப்ரஹ்மானந்தம்' என்றே பேச்சுவழக்கில் கூடச் சொல்லும் பேரின்ப நிலையாயிருக்கும்?

"லோகமும் இல்லை, ஜீவனும் இல்லை, ஈச்வரனும் ஆத்மாவும் இல்லை, ப்ரம்மமும் இல்லை; என்னவோ ஒரு ப்ரமைதான் ஏதேதோ நடப்பதாகத் தோன்றுவதெல்லாம். அப்போதைக்கப்போது தோன்றி மறைந்து போகிற ஸமாசாரங்களே தொடர்ச்சியாக நடந்து கொண்டு போவதால் நிஜமாகவே வாழ்க்கை ஓட்டம் என்று ஒன்று இருக்கிறமாதிரி ப்ரமை ஏற்படுகிறது. விளக்கை ஊதி அணைக்கிறமாதிரி இது எல்லாவற்றையும் ஊதி அணைப்பது தான் 'நிர்வாணம்' என்கிற மோக்ஷம்" என்று ஒரு சூன்யத்

Koviloor Digital Library

தில் கொண்டு விடுவதாகத்தான் பௌத்தம் மொத்தத்தில் முடிகிறது. ப்ரம்மம் என்ற பூர்ணத்தில் ஜீவாத்மா பரமாத்மாவில் ஐக்கியமாகும்போது லோகமும், ஜீவனும் பொய்யாகப் போவதை வேதாந்தமும் சொல்கிறது. அந்த ஐக்யம் ஏற்படாத நிலையில் தெரியும் த்வைதமான லோக வாழ்க்கை ப்ரம்மத்தினுலேயே அது மாயா சக்தியோடு கூடிய ஈச்வரனுயிருக்கும்போது ஏற்படுத்தப்பட்டது என்றும் சொல்கிறது. ஈச்வரன் திட்டம் போட்டுத்தான் ஜகத்தை நடத்துகிறுன்; அதனுல்தான் முடிவிலே ஸத்யமாயில்லாமல் போனுலும் இருக்கிற வரையில் இந்த ஜகத்தும் இத்தனை கார்ய—காரண விதிகளோடு ஒரு ஒழுங்கில் நடக்கிறது என் கிறது. ஈச்வரனையும், ஜகத்தின் ஓட்டத்திற்கு ஒரு தாற்காலிக ஸத்யத்வத்தையும்கூட பௌத்தம் ஒப்புக்கொள்ளாமல் எல்லாமே அது அதுவும் தோன்றித்தோன்றி மறைகிறது என்று சொல்லிக்கொண்டே, இன்னெரு பக்கம் கார்ய காரண விதியிலேயே அடங்கும் கர்மாக் கொள்கையும், மறு பிறப்புக்களும்கூட உண்டு என்று ஒப்புக்கொள்வது ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை.

ஸத்ய வஸ்துவாக ப்ரஹ்மம் என்று ஒன்று இருப்பதையும் அது மாயையோடு கூடி ஈச்வரனுகி ஜகத்தை நடந்துவதையும் ஜைனமதமும் சொல்லவில்லை. எதைப்பற்றியுமே, அது இருக்கிறதுஎன்ருே, இல்லையென்ருே தீர்மானம் பண்ண முடியாது என்று சொல்லி ஒரு முடிவுக்கும் வராமல் அது விட்டு விடுகிறது. இதற்கு "ஸ்யாத்வாதம்" என்று பெயர். அதாவது "இப்படியும் இருக்கலாம்" என்று அந்தரத்தில் விட்டுவிடுவது! "இப்படி இருக்கிறது" என்று ஒரு முடிவு பண்ணிச் சொல்வதல்ல. 'May be' என்று சொல்வது! 'May be' (இருக்கலாம்) என்ருலே 'May not be' (இல்லாமலும் இருக்கலாம்) என்பது தொக்கி நிற்கிறது. அதாவது வஸ்துவின் ஸத்யத்வம் பற்றித் தீர்மானமேயில்லாமலிருப்பதுதான் ஸ்யாத் வாதம். 'ஸப்தபங்கி' என்று ஏழு கிளையாக இந்த 'இருக்கலாம்; இல்லாமலிருக்கலாம்' என்ற வாதம் போகும்.

Koviloor Digital Library

கேட்டால் புதிர் மாதிரி விநோதமாயிருக்கும்! ஏழு என்ன வென்றால்: ஒன்று—"ஸ்யாத் அஸ்தி": "வஸ்து இருக்கலாம்". இரண்டு—"ஸ்யாத் நாஸ்தி":"வஸ்து இல்லாமலிருக்கலாம்". மூன்று—"ஸ்யாத் அஸ்தி நாஸ்தி" : "வஸ்து இருக்கவும் செய்யலாம், இல்லாமலும் போகலாம்". நாலு—"ஸ்யாத் அவ்யக்தவ்ய" : "வஸ்து எப்படிப்பட்டதென்று சொல்லவே முடியாமல் இருக்கலாம்". ஐந்து—"ஸ்யாத் அஸ்தி ச அவ் யக்தவ்ய :" : "வஸ்து இருந்துங்கூட, எப்படிப்பட்டதென்று நிர்ணயித்துச் சொல்லமுடியாததாயிருக்கலாம்". ஆறு—"ஸ்யாத் நாஸ்தி ச அவ்யக்தவ்ய:" —"வஸ்து இல்லாமலிருந்தும் மேலே சொன்னாற்போலவே, விளக்கிச் சொல்ல முடியாததாயிருக்கலாம்". ஏழு—"ஸ்யாத் அஸ்தி ச நாஸ்தி ச அவ்யக்தவ்ய:"—"வஸ்து இருப்பதாகவும் இல்லாத தாகவும் இருந்துகொண்டும் விளக்கிச்சொல்ல முடியாத தாயிருக்கலாம்". இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு போனால் என்ன நிச்சயத்துக்கு வரமுடியும்?

ஆத்மா ஞானமயமாக, சைதன்ய மயமாக இருக்கிற தென்று ஜைனத்தில் சொல்லியிருந்தாலும் வேறெந்த மதத் திலும் இல்லாத கொள்கையாக, அந்தந்த சரீரத்தின் அளவுக்கும் ஸரியாக ஆத்மா ஆகிறது, எறும்பின் சரீரத் திற்குள் எறும்பளவாகிறது, யானையின் சரீரத்திற்குள் யானை யளவாகிறது, எறும்பு யானையாகப் பிறவி எடுத்தால் அப்போது எறும்பளவு ஆத்மாவே யானையளவாக ஆகிறது என்றெல்லாம் சொல்கிறது! கர்மாக்கள் பரமாணுக்களாகி ஆத்மாவுக்குள்ளேபோய் அதைக் குறுக்கித் கட்டுப் போடுவ தாகவும், கட்டைப் போக்கி விட்டால் ஆத்மா விடுபட்டு, அந்த விடுபட்ட நிலையில் ஆகாசத்தின் உச்சிக்குப் பறந்து போய் ஸௌக்யமாக இருந்து கொண்டிருக்கும் என்றும் சொல்கிறது. கட்டைப் போக்குவதற்கு, அதாவது அந்த மதம் சொல்லும் கர்மப் பரமாணுக்கள் ஆத்மாவுக்குள்ளே போய் அதைக் குறுக்கிக் கெடுக்காமலிருப்பதற்கு, அதில் (ஜைனமதத்தில்) விதித்துள்ள கடுமையான வ்ரதங்களை அநுஷ்டிக்க வேண்டும் என்கிறது.

Koviloor Digital Library

அஹிம்ஸை, ஈகை முதலியவற்றை ஜைனமதம் ரொம்பவும் வலியுறுத்திச் சொல்லும். உலக வாழ்க்கையில் ரொம்பவும் வெறுப்பைக் காட்டும். இதெல்லாம் உத்தம மான கொள்கைகள்தான் என்ருலும் பெருவாரியாகவுள்ள ஜனங்களுக்குப் பின்பற்றுவது ச்ரமம். அதனுலேயே அவர்கள் மதத்தின் விதியை மீறுவதான தப்பைப் பண்ணும் படியாகும். நம்முடைய மதத்தில், குடும்ப வாழ்க்கைக்கும் 'க்ருஹஸ்த தர்மம்' என்று மதிப்புக்கொடுத்து, அர்த்த—காமங்களையும் புருஷார்த்தங்கள் என்று உசத்தி வைத்து, பெருவாரி ஜனங்கள் உத்ஸாஹத்தோடு லோக வாழ்க்கையை தர்மமாக நடத்த ஊக்கியிருப்பதுபோல் பண்ணுவிட்டால் அவர்களுக்கு நடைமுறை வாழ்க்கையில் பெறுகிற ஸந்தோஷம் என்பதே இருக்காது. ஆதர்ச வாழ்க்கை நடத்தவும் பக்குவம் போதாமல், போலியாக அப்படி வேஷம் போடுவது, நெறி பிறழ்வது என்று போய் ஸமூஹமே சீர்கெட்டுப்போகும். அல்லது, படிப்படியாகப் பக்வமாகி ஆசைகளை விட்டுப் பழுத்த பழமாகாமல், வெறுப்பிலே விடப் பார்த்துக் காயாக உள்ளபோதே வெம்பி விழுவதாக ஆகும். ஜைனம், பௌத்தம் இரண்டி லுமே இந்த ஆபத்து இருக்கிறது.

கடவுட்கொள்கை

வேடிக்கை என்னவென்ருல், வைதிக கர்மாநுஷ்டா னத்தை மட்டுமே சொன்ன (பூர்வ)மீமாம்ஸையும் ஈச்வரனைச் சொல்லவில்லை; வைதிக கர்மாநுஷ்டானத்தை அடியோடு ஆக்ஷேபித்த பௌத்த—ஜைன மதங்களும் ஈச்வரனைச் சொல்லவில்லை! இதைவிட வேடிக்கை: வைதிக கர்மா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும், 'கர்மக்கொள்கை' என்றும் Karma theory என்றும் ஒன்றைச் சொல்கிருேமல்லவா? 'ஒவ்வொரு செயலுக்கும் ப்ரதிச் செயல் உண்டு. ஒவ்வொரு வினைக்கும் விளைவு உண்டு. இதிலிருந்து யாரும் தப்பவே முடியாது. நாம் செய்யும் நல்ல கார்யம், கெட்ட கார்யம்

Koviloor Digital Library

ஒவ்வொன்றுக்கும் விளைவு உண்டு. இந்த விளைவுகளை அநுபவித்தேயாகவேண்டும். இதற்காகத்தான் ஒரு ஜீவனுக்கு ஒரு சரீரத்தில் மரணம் ஏற்பட்டாலும்கூட அது மறுபடி இன்னொரு சரீரத்தில் ஜன்மா எடுத்தும் அநுபவிக்க வேண்டி ஏற்பட்டு, இப்படியே ஸம்ஸார சக்ரம் என்பது சுற்றிக்கொண்டே போகிறது' என்பதுதான் 'கர்மா தியரி'. இப்படிக் கர்ம பல அநுபோகத்திற்காகப் பல ஜன்மாக்கள் எடுப்பதை கிறிஸ்துவ, இஸ்லாமிய மதங்கள் சொல்வதில்லை. ஆனாலும், தற்போதுள்ள அம்மதங்களில் இந்தக் கொள்கை இல்லாவிட்டாலும், அம் மதங்களின் மூலமான (ஒரிஜினல்) ரூபத்தில் இது இருக்கத்தான் செய்தது, அல்லது அந்த மதங்களுக்கு முந்தி அந்த தேசங்களிலிருந்த ஹீப்ரு மதங்களில் கர்மக் கொள்கை இருக்கவே செய்தது என்று சொல்கிறார்கள். இந்த விஷயம் நமக்கு ஸம்பந்த மில்லாதது. ஆசார்யாள் சரித்ரத்தில் கிறிஸ்துவ, இஸ்லாமிய மத ஸம்பந்தமாக எதுவுமில்லை. ஆனால், கர்மக் கொள்கையைப் பற்றி எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், ஆசார்யாளோடு நன்றாக ஸம்பந்தப்பட்ட—கண்டன ரூபமான ஸம்பந்தம் பெற்ற—மீமாம்ஸை, பௌத்தம், ஜைனம் மூன்றுமே கர்மா தியரியை ஒப்புக்கொண்டிருக் கின்றன.

மூன்றுமே கர்மா தியரியை ஒப்புக்கொண்டபோதிலும் கர்ம பல தாதாவாக இருக்கும் ஈச்வரனை ஒப்புக் கொள்ளாததுதான் ரொம்ப வேடிக்கை!

கர்மா என்பது அசேதனமான ஜட வஸ்து. அது எப்படி ஒழுங்காக 'ப்ளான்' போட்டுக்கொண்டு இதற்கு இன்ன பலன் என்று இத்தனை திட்டவட்டமாகவும், கண்டிப்பாகவும் ஏற்பாடு பண்ணமுடியும்? சைதன்ய சக்திமூலமாக இருக்கப் பட்ட ஒரு ஈச்வரன்தானே, 'இப்படிப் பண்ணினால் இப்படி விளைவு' என்று ஏற்படுத்திப் பலன் தரமுடியும்? ஆனாலும் ஒரு பக்கத்தில் வைதிக கர்மாக்களையே ஸகலமுமாக ஏற்றுக் கொண்ட மீமாம்ஸகர்களும் ஈச்வரனை மறுத்து, 'கர்மா

Koviloor Digital Library

தனக்குத்தானே பலன் தந்து கொள்கிறது' என்றார்கள். இன்னொரு பக்கத்தில் ஒரே அவைதிகமான பௌத்த ஜைனர்களும் கர்ம பலன் எப்படி, எவரால் விளைவிக்கப்படுகிறது என்றே சொல்லாமல், நிரீச்வர வாதம் பண்ணிக்கொண்டே, ஆனாலும் கர்ம பலன்படி ஜன்மாந்தரங்கள் உண்டு என்று அஸ்திவாரமில்லாமலே ஸித்தாந்தக் கட்டிடம் எழுப்பினார்கள்! பௌத்தத்தில் நிர்வாணம் என்ற சூன்ய நிலைதான் மோக்ஷம் என்று சொல்லி, லோக வியாபாரம் முழுக்க என்னவோ ஒரு மாய ஓட்டத்தில் பல ஸமாசாரங்கள் சேர்ந்து நடக்கிற மாதிரி தெரிவதே ஒழிய, ஒரே பொய்தான் என்று சொல்லியிருக்கிறது. இப்படி ஒரே பொய்யாக, ஏதேதோ சேருவதும் பிரிவதும் மாதிரி எல்லாம் இருக்கிற போது, எப்படி இவ்வளவு திட்டமாக ஒவ்வொரு கர்மாவுக்கும் தப்ப முடியாதபடி இன்ன பலன் என்று நிர்ணயித்து நடக்க முடியும்? 'என்னவோ எல்லாம் மாய ஓட்டம்' என்று தள்ள முடியாமல், ஒரு மஹா மதியானது ஸங்கல்பித்துத் தானே இப்படியெல்லாம் காரண கார்ய விளைவுகளை ஏற்படுத்துவதாக ஊஹிக்க முடிகிறது? அந்த மஹாமதிதான் ஈச்வரன் என்பது.

இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும். முக்யமான ஸமாசாரம். ஆசார்யாளும், 'லோக வ்யாபாரமெல்லாம் மாயை; ப்ரஹ்மம்தான் ஸத்யம்' என்றே சொல்லியிருப்பதை வைத்துக்கொண்டு சில பேர் இதுவும் பௌத்தத்தை அப்படியே 'காப்பி' அடித்ததுதான் என்று நினைத்துக்கொண்டு விடுகிறார்கள். இவர்கள் ஒரு முக்யமான பாகுபாட்டைப் புரிந்துகொள்ளவேண்டும். லோகம் மாயை என்று சொல்லும்போது ஆசார்யாள் அது ஏதோ தலை கால் இல்லாமல் பல ஸமாசாரங்கள் சேர்ந்த மாதிரி இருக்கிற ஓட்டம் என்று பௌத்தர்கள் மாதிரிச் சொல்லவே இல்லை. மாயையைத் தன் குணமாகக் கொண்ட ஒரு ஈச்வரன், அல்லது மாயா சக்தி படைத்த ஈச்வரன்தான் இந்த லோகம் என்ற தோற்றத்தை ப்ரஹ்மத்திலிருந்தே தோற்றுவித்து

Koviloor Digital Library

அதை நடத்தியும் வருகிறான், கர்ம பலன்களைத் தருகிறான் என்றே ஆசார்யாள் ஸ்தாபித்திருக்கிறார். இன்னொரு விதமாகச் சொல்வதானால், கார்யம், குணம் எதுவுமில்லாத ப்ரஹ்மத்தை நிர்குண ப்ரஹ்மம் என்று அவர் சொல்லி, அதுவே மாயா சக்தியோடு கூடிக் கார்யமும் குணமும் உள்ள ஈச்வரன் என்ற ஸகுண ப்ரஹ்மமாகி லோக வ்யாபாரத்தைச் செய்கிறது என்று கூறியிருக்கிறார். இதிலிருந்து தப்பி, ஸகுணத்திலிருந்து நிர்குணத்துக்குப் போய், அதோடு அபேதமாக ஐக்யமாகிவிடுவதுதான் அவருடைய அத்வைதத்தின் லக்ஷ்யம். அதற்கு ஸகுண ப்ரஹ்மமான, மாயை ஸஹிதனான ஈச்வரனின் அநுக்ரஹம் வேண்டுமென்றும், அத்வைத ஞான மார்க்கத்தில் போவதற்கு முதல்படியாக ஈச்வர பக்தி செய்ய வேண்டுமென்றும் ஸாதனா மார்க்கம் அமைத்துத் தந்திருக்கிறார்.

இன்னொரு பாகுபாடு: மாயை என்றால் அடியோடு பொய் என்று அர்த்தமில்லை. அடியோடு பொய்யாயிருப்பதை ஆசார்யாள் 'அத்யந்த அஸத்' என்று சொல்வார். பூர்ண ஸத்யமாயிருப்பது ப்ரஹ்மம், அதாவது நிர்குண ப்ரஹ்மம். இரண்டுக்கும் நடுவில் இருப்பது, 'ப்ராதிபாஸிக ஸத்யம்' என்பது. அதாவது நடைமுறை வ்யவஹாரத்தில் நிஜம் போலவே இருப்பது. ஆனாலும் ஞானம் வந்த நிலையில் நிஜமாக இல்லாமல் மறைந்து போய்விடுவது. மாயா லோகம் என்பது இப்படிப்பட்ட ப்ராதிபாஸிக ஸத்யம் என்ற தாற்காலிக நிஜத்தோற்றம் என்றே ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். அடியோடு பொய்யான அத்யந்த அஸத் என்று அல்ல. ஜகத் 'அஸத்யம்' அல்ல. அது 'மித்யை' என்னும் தற்கால ஸத்யம்.

இப்படி ஜகத்திற்கும் ஒருவிதமான (இடைநிலை) மெய்ம்மையைத் தரும்போதுதான், நல்லது கெட்டது என்று இனம் பிரித்து மாயியான ஈச்வரன் பலன் தருவதைச் சொல்லமுடிகிறது. அதனால், நல்லதே செய்துதான் அதன் வழியாக ஈச்வராநுக்ரஹத்தில் சித்தசுத்தி பெற்று நிவ்ருத்தி

Koviloor Digital Library

(ஞான) மார்க்கத்திற்குப் போகமுடியும் என்று சொல்ல முடிகிறது. நல்லது செய்வது என்றால் என்ன? ஒழுக்கமாயிருப்பது, தர்மப்படி நடப்பது. பௌத்தத்தில் 'சூன்யமாக ஒரு மோக்ஷம் இருக்கிறது, பாக்கி எல்லாமே ஒரே பொய்ம் மாய ஓட்டம்' என்று சொல்லிவிட்டு, ஆனால், அஹிம்ஸை ஸத்யம் முதலான ஒழுக்கங்களை வலியுறுத்தும்போது 'எல்லாம் பொய் என்கிறபோது ஹிம்ஸையானாலென்ன, அஹிம்ஸையானாலென்ன? ஸத்யமானாலென்ன, அஸத்யமானாலென்ன? தர்மம் எதற்கு? ஒழுக்கம் எதற்கு?' என்று எதிர்கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியாமலிருக்கிறது. ஆசார்யாள் ஸித்தாந்தத்திலோ, முழுப் பொய்யாயுமில்லாமல், முழு நிஜமாயுமில்லாமல் நடுவிலிருக்கிற மித்யையாக மாயா ஜகத்தைச் சொல்லி, இதை நிர்வஹிக்கும் ஈச்வரன் கர்மாப்படியே பலன் தருவதில் ஒரு ஜீவன் ஒழுங்காக, தர்மமாக ஒழுகினால்தான் அதற்கு சித்த சுத்தி தந்து ஞான மார்க்கத்துக்கு உயர்த்துவான் என்று பதில் சொல்ல முடிகிறது. இந்த தர்ம ஒழுக்கத்துக்கு உதவும் உபாயமாகவே மீமாம்ஸை சொல்லும் வைதிக கர்மாநுஷ்டானங்களையும் ஆசார்யாள் ஏற்றுக்கொண்டார்.

ஆசார்யாளுடைய மதத்தின் பெருமையே அதில் மீமாம்ஸையின் கர்மாநுஷ்டானம், பௌத்தத்தின் மாயைக் கொள்கை, ஜைனத்தின் அஹிம்ஸை முதலிய எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு நிலைகளில் இடம் கொடுத்து அங்கீகரித்திருப்பதுதான்!

மொத்தத்தில் நான் சொல்ல வந்தது, ஈச்வரனைச் சொல்லாத பௌத்தம், சமணம் ஆகிய இரண்டும் கர்மக் கொள்கையை மட்டும் ஒப்புக்கொண்டு, அதன் அங்கமாக தர்ம ஒழுக்கங்களை விதிப்பதானது அஸ்திவாரமில்லாமல் கட்டிடம் எழுப்புகிற மாதிரி இருக்கிறது என்று காட்டத்தான். 'எல்லாம் பொய் ஓட்டம்' என்று பௌத்தம் தள்ளுவதுபோலத் தள்ளினாலும் ஸரி, அல்லது, 'எதைப் பற்றியும் எதுவும் இப்படியென்றோ அப்படியென்றோ

Koviloor Digital Library

வரையறுத்துச் சொல்லமுடியாது' என்று ஜைனம் நிச்சயமில்லாமல் முடிப்பதுபோல முடித்தாலும் ஸரி, இரண்டிலும் இத்தனை திட்டவட்டமாக ஒவ்வொரு கர்மாவிற்கும் பலனைப் பிணைத்துக்கொடுத்து ஸம்ஸார சக்ரத்தைத் தொடர்ந்து உருட்டிக் கொண்டுபோகும் ஏற்பாட்டிற்குத் தக்க விளக்கம் கிடைக்கவில்லை. மாயாலோகத்தை நடத்துபவனுகவும் கர்ம பல தாதாவாகவும் உள்ள ஈச்வரன்தான் விளக்கமாக அமைவது.

பொதுவாகவே ஜன ஸமுதாயத்திற்கு ஈச்வரன் என்ற ஒருவன் இல்லாத மதம் ஒட்டுவதில்லை.

பௌத்த-ஜைனமும்
பொது ஜனங்களின் மனப்போக்கும்

பொதுஜனங்களுக்குத் தத்வ ஸித்தாந்தங்களைப் பற்றிக் கவலையில்லை. ஏதோ ஒரு பெரிய சக்திதான் இந்த லோகத்தைப் படைத்து நடத்திக்கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை, ஸ்வாமி என்ற அந்த சக்தியிடம் தங்களுடைய காமனைகளை (விருப்பங்களை)ப் பூர்த்திப் பண்ணித்தர வேண்டிக்கொள்வது—இதுதான் ஸாதாரண மக்களின் 'ரிலிஜன்'. அதோடுகூட, தங்களுடைய மதிப்பு மரியாதைகளைக் கவரும்படியான ஒரு பெரியவர் வந்து ஒரு வழியைச் சொன்னுல், 'இவர் சொன்னுல் அது ஸரியாய்த்தானிருக்கும்' என்ற நம்பிக்கையின் பேரில், தங்களை அந்தப் பெரியவரின் வழியைச் சேர்ந்தவர்களாகவே சொல்லிகொண்டு ஒரு நிறைவு பெறுவது பொதுமக்கள் ஸ்வபாவம். அவருடைய 'வழி' என்பது அவர் சொல்கிற மத ஸித்தாந்தம்தான். அது என்ன என்று ஜனங்களுக்கு விசேஷமாகத் தெரிந்தே இருக்காது. தெரிந்த அளவுக்குக்கூட அதை அநுஷ்டானம் பண்ணி ஸொந்த அநுபவமாக்கிக்கொள்ளவும் பாடுபட மாட்டார்கள், ஆனுலும், 'அது எதுவாக வேண்டுமானுலும் இருந்துவிட்டுப் போகட்டும். இவர்—இந்தப் பெரியவர்—

Koviloor Digital Library

சொல்கிறுரென்றுல் ஸரியானதாகத்தான் இருக்கும். ஆகையால், நாம் இவரைச் சேர்ந்தவர்கள் என்றே இருப்போம். இவர் சொல்வதில் ஏதோ கொஞ்சம் நம்மால் முடியுமானுல் செய்து பார்ப்போம்' என்று இருப்பார்கள். இது நம் ஆசார்யாளின் மதத்தில் உள்ளவர்களுக்கும்தான் பொருந்தும்.

பௌத்த-ஜைன மதங்களை இந்தக் கோணத்தில் பார்க்கலாம்.

அந்த மதங்களில் சொல்லியிருக்கும் அஹிம்ஸை, ஸத்யம், அபரிக்ரஹம் (பொருள் சேர்த்துக் கொள்ளாமை) முதலான நல்லொழுக்கங்களை எந்த மதம்தான் சொல்லவில்லை? மநு தர்ம சாஸ்த்ரத்தில் ஸகல ஜனங்களுக்குமான ஸாதாரண தர்மங்கள் என்று ஆரம்பித்திருப்பதே இவற்றில்தான். சாஸ்த்ரம் என்று ஒன்று சொல்லவேண்டும் என்றே இல்லை; ஒழுக்கமாக இருக்கவேண்டுமென்று யாருக்குத்தான் தெரியாது? ஆனுலும் அப்படி இருக்கவொட்டாமல் ஆசைகள் பிடித்து இழுக்கின்றன. இப்படிப் பிடித்திழுக்கும் போது தத்வ விசாரம் செய்து—வேதாந்தப்படியோ, பௌத்த - ஜைனம் முதலியவற்றின்படியோ, ஸாங்க்யாதி ஸித்தாந்தங்களின்படியோ, ஏதோ ஒருவிதத்தில் தத்வங்களை ஆராய்ந்து பார்த்து, அநுபவம் பெற்று—ஆசைகளை அடக்கிப்போடுவது என்றுல் அது நூற்றிலே ஆயிரத்திலே ஒன்றிரண்டு பேருக்குத்தான் ஸாத்யம். மற்றவர்கள் கருணாமூர்த்தியான ஒரு ஈச்வரனை சரணடைந்து அவனை வேண்டிக்கொண்டு அவனருளால் கெட்டதுபோய் நல்லது வரணுமென்றுல்தான் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள்.

பௌத்த ஜைன மதங்களில் ஈச்வரனே கிடையாது. ஜனங்களுக்கானுல், அந்த மதங்களில் அநுஷ்டான லெவலில் சொன்ன ஒழுக்கங்களிலும் பிடிப்பில்லை, அநுபவ லெவலில் சொன்ன ஃபிலாஸஃபியில் போவதற்கும் சக்தியில்லை.

Koviloor Digital Library

அவற்றை ஜனங்களின் மதமாகப் 'பாபுல'ராக்க என்ன பண்ணுவது? அந்த மதங்களானால் தாங்கள்தான் அத்தனை பொது ஜனங்களுக்கும் ஆனவை என்று சொல்லிக் கொண்டவையாக வேறு இருந்தன! 'சொல்லிக் கொண்டவை' என்றால் அவ்வளவு நன்றாக த்வனிக்கவில்லை. வாஸ்தவமாகவே புத்தரும் ஜினரும் mass religion-ஆக எல்லாருக்கும் எல்லா உரிமைகளையும் தர நினைத்தவர்கள் தான். வர்ண வ்யவஸ்தை உள்ள ஹிந்து மதம் சிலபேருக்கு மட்டும் பக்ஷபாதமாகப் பண்ணுவதாகச் சொல்லி, எல்லாருக்கும் ஸமமாகத் தங்கள் மதத்தில் அதிகாரம் கொடுத்தார்கள். ஆனாலும் mass religion-ஆக அவர்கள் கொடுக்க நினைத்ததில் mass appeal உள்ள தெய்வ வழிபாடு என்ற natural religion சேராவிட்டால் எப்படி நடக்கும்?

புத்தரும் ஜினரும் இருந்த காலத்தில் அந்த மதங்கள் ஜனங்களிடம் பரவின என்றால் அதற்குக் காரணமே வேறே. அதுவரை இருந்த (வேத) மதம் வித்யாஸம் பாராட்டு கிறதென்று சொல்லி, 'நாங்கள் ஸரியாய்ப் பண்ணி உங்கள் எல்லோருக்கும் ஸமமாக உயர்வு தருகிறோம்' என்று ஒரு புத்தரோ ஜினரோ புதுசாக ப்ரசாரம் பண்ணினால் அப்போது ஜனங்களுக்கு அதில் ஒரு கவர்ச்சி ஏற்படத்தானே செய்யும்? இவர்கள் சொன்ன கொள்கை என்ன, அது புரியுமா, அதைப் பின்பற்ற முடியுமா என்ற கேள்விகள் அப்போது எழும்பியிராது. அதோடு, அப்படிச் சொன்ன புத்தரும், ஜினரும் அந்தஸ்து வாய்ந்த குடியில் வந்தவர் களாகவும், ஸொந்த வாழ்க்கையில் நல்லொழுக்கம், ப்ரேமை, த்யாகம் நிரம்பியவர்களாகவும் இருந்ததால் அவர்களுடைய 'பெர்ஸனல் மாக்னடிஸம்' (காந்த சக்தி) ஜனங்களை ஆகர்ஷித்தது.

இது அந்த மதங்களுக்கு மட்டும் நான் சொல்வதில்லை. ஸகல மதங்களுக்குமே பொருந்துவதுதான். ஹிந்து மதத்தில் கூடத்தான்—பொது ஜனங்களைப் பொறுத்த மட்டில் அதன் பல்வேறு ஸித்தாந்தங்களைப் பற்றிக் கவலையில்லை; ஒரு

Koviloor Digital Library

ஸித்தாந்தத்தைச் சொல்ல விசேஷப் பெருமை வாய்ந்த ஒருத்தர் வந்தாரென்றால் அவர் பின்னே போய்விடுவது என்றுதான் எப்பவுமே பொது ஜனங்கள் செய்திருக்கிறார்கள். நம்முடைய ஆசார்யாள் விஷயமாகவே கூடவுந்தான், அவர் சொன்ன அத்வைதத்தைப் புரிந்து கொண்டுதான் ஜன ஸமூஹம் முழுதும் அவரைப் பின்பற்றிற்று என்று சொல்ல நான் தயாரே இல்லை. "இவர் பெரிய மஹான், நமக்கு நல்லதைத்தான் சொல்வார்" என்று அந்தத் தனி மநுஷ்யரின் குணங்களைக் கொண்டு அவரிடம் உண்டான ஈடுபாட்டினாலேயே, அதில் பிறந்த நம்பிக்கையின் மேலேதான் பொது ஜனங்களில் பல பேர் அவருடைய மதத்தைத் தழுவியிருப்பார்கள். இது இருக்கட்டும்.

புத்தரும் ஜினரும் போன பிறகு எப்படி ஜனங்களை அந்த மதங்களில் பிடிப்போடு இருக்கப் பண்ணுவது?

'வெறுமே ஒழுக்கம் ஒழுக்கம் என்றாலும் பிடிப்பில்லை' ஃபிலாஸஃபியும் எட்ட மாட்டேன் என்கிறது. பொது ஜனங்கள் மத ஸித்தாந்தம், ஸாதனா மார்க்கம் என்பவை பற்றி அலட்டிக் கொள்வதில்லை. உயிரோடு ஈச்வரன் என்று உள்ள ஒன்றிடம்தான் அவர்கள் ஏதோ ஒரு மாதிரிப் பிடிப்பு வைத்துக்கொள்ள முடியும்' என்று இருக்கும்போது, அவர்களுக்குப் பிடித்த மாதிரி கொடுத்துத் தானாக வேண்டுமென்ற கட்டாயம் பௌத்த - ஜைனர்களுக்கு ஏற்பட்டது. அதனால், தங்கள் ஃபிலாஸஃபி இடம் கொடுக்காத ஈச்வரனைச் சொல்லாவிட்டாலும், எப்படியோ ஒரு விதத்தில், வழிபாட்டுக்குரிய மூர்த்திகளைக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்தார்கள். என்ன செய்தார்களென்றால்...ஸ்வாமி (ஈச்வரன்) என்று சிலை வைக்கவில்லைதான். ஆனால் பௌத்த-ஜைன மதங்கள் சொன்ன கொள்கைப்படிப் போய்ப் பூர்ணத்வம் அடைந்ததாக அவர்கள் கருதிய மஹான்களை வழிபடச் சொல்லி, அந்தப் பெரியவர்களுக்குக் கோவில், மூர்த்தி, பூஜாக்ரமம் எல்லாம் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். இந்த வழிபாட்டுக்கு அந்த மத புருஷர்கள்

Koviloor Digital Library

சொன்ன காரணம், யோக சாஸ்த்ரத்தில் ஈச்வரனை ஒரு ஐடியலாகக் கொண்டுள்ளது போலத்தான். அதாவது, லக்ஷ்யத்தை அடைந்துவிட்ட தங்கள் மதப் பெரியவர்களை—புத்தர்கள், போதி ஸத்வர்கள், தீர்த்தங்கரர்கள் போன்றவர்களை—வழிபடுவதால் அவர்கள் அடைந்த நிலைகளை மக்களும் ஐடியலாக எடுத்துக்கொண்டு பின்பற்றப் பார்ப்பார்கள் என்பதுதான். ஆனால் அப்படி நடந்திருக்குமா என்பது ரொம்பவும் ஸந்தேஹம். பெரிய பெரிய விஹாரங்களும் மூர்த்திகளுமாக ஏற்படுத்தியவுடன் ஜனங்களை அவை கவர்ந்து வழிபாடு செய்ய வைத்திருக்கும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனாலும் ஜனங்கள், 'இவா மாதிரி நாம் புத்தராகணும், போதி ஸத்வராகணும், அர்ஹர் (அருகர்) ஆகணும்' என்று ஐடியலை நினைத்து, லக்ஷ்யம், கிக்ஷ்யம் என்று எதையோ நினைத்து, அலட்டிக் கொண்டிருக்க மாட்டார்கள். அதுவரை ஹிந்து மத தெய்வங்களிடம் வேண்டிக்கொண்டது போலவே, உலக வாழ்க்கையில் 'அது வேணும், இது வேணும், கஷ்டம் போகணும்' என்றும், ரொம்ப உசந்தால், 'ஞானம் வரணும், வைராக்யம் வரணும்' என்றும் இந்த (பௌத்த, ஜைன) மூர்த்திகளையும் வேண்டிக் கொள்வதோடுதான் நின்று போயிருப்பார்கள். 'அவர்களுடைய ஐடியலை நாமும் ப்ராக்டிகலில் செய்ய வேண்டும்' என்று ஆரம்பித்திருக்க மாட்டார்கள். பொது ஜன மனப்போக்கு இப்படித்தான்.

இப்படி வேண்டி வரம் பெறுவது என்றால் அப்போது கர்ம பல தாதாவான ஈச்வரன் இருந்து தானாக வேண்டும். கர்மாவுக்கு எவன் பலன் தருகிறானோ, அவன்தானே நாம் வேண்டுகிற பலனைத் தரவும் முடியும்?

அதாவது, அந்த இரண்டு மதங்களும் கர்ம பல தாதாவான ஈச்வரனாக இல்லாமல், லக்ஷ்யத்துக்குப் போக வழிகாட்டும் லக்ஷ்ய புருஷர்கள் என்ற முறையிலேயே பூஜா மூர்த்திகளை வைத்தாலும், ஜனங்கள் என்னவோ அவற்றை ஹிந்து மதத்திலுள்ள ஈச்வரனின் அநேக மூர்த்திகள்

Koviloor Digital Library

போலவே நினைத்து இஷ்ட காம்ய பலன்களுக்காகத்தான் வழிபட்டு வந்தார்கள்.

இது இப்படியே போனதில் அப்புறம் அந்த மதத் தலைவர்கள், ஹிந்து மதத்தில் ஒவ்வொரு பலனுக்கு ஒவ்வொரு தெய்வம் என்றிருக்கிற மாதிரியே தாங்களும் தெய்வங்களை ஏற்படுத்தும் வரையில் போக வேண்டியதாயிற்று. ஹிந்து மத தெய்வங்களுக்குப் பெயர் மாற்றியோ, அல்லது அதே பெயரிலேயோ தங்கள் மதங்களிலும் எடுத்துக்கொள்ளும் படிக்கூட ஏற்பட்டது.

உத்தேசம் வேறு, நடைமுறை வேறு என்று இருந்த போதிலும் உத்தேசப்படியே நடக்கிற மாதிரி காட்டிக் கொண்டு நடைமுறைக்கு வளைந்து கொடுத்துக்கொண்டு போவதென்றால் அது மதத்திற்குப் பெரிய குறைவல்லவா? அந்த மதத்தில் இருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்களுக்கும் இது குறைதானே? இப்படி அந்த 2500 வருஷத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தது.

அப்பட்டமான லோகாயதம்

இந்த மதங்களெல்லாம் போக அப்பட்டமான நாஸ்திகமும் சார்வாகம் என்ற பெயரில் இருந்தது.

இதுவரை சொன்ன எல்லா மதங்களிலும் ஸம்ஸாரம் ஒரு பந்தம் என்று வைத்து, அதிலிருந்து நிவ்ருத்தி பெறுவதற்கு வழிகள் சொல்லியிருக்கிறது. ஒவ்வொன்றிலும் உயர்ந்த தத்வங்கள் இல்லாமலில்லை. இவற்றுக்கெல்லாம் மாறாக, ஸம்ஸாரம் பந்தம் என்றும் அதிலிருந்து மோக்ஷம் பெறுவதே லக்ஷ்யம் என்றும் சொல்லாமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இருக்கும்படி சொன்ன மதம் தான் சார்வாகம். 'சாரு' என்றால் அழகானது, இனிமையானது. 'வாகம்' என்றால் வாக்கியம். கேட்க இனிமையாக உள்ள வாக்யமே சார்வாகம். "வ்ரதம் வேண்டாம்; உபவாஸம் வேண்டாம். தத்வங்களைச் சிந்தனை பண்ணி

Koviloor Digital Library

உழப்பிக்கொள்ள வேண்டாம்; நன்ருகத் தின்றுகொண்டு குடித்துக்கொண்டு போகங்களை அநுபவியுங்கள்" என்று சொன்னல் கேட்க நன்ருகத்தானே இருக்கிறது? அதனுல் சார்வாகம் என்று பெயர். "சாமியாவது, பூதமாவது, ஆத்மாவாவது? அதெல்லாம் ஒன்றுமில்லை. (அவை) கண்ணுக்குத் தெரிகிறதா என்ன? கண்ணுக்கு உடம்பு தெரிகிறது. லோகம் தெரிகிறது. இந்த உடம்புக்கு ஸௌக்யமாக இந்த லோகத்திலிருந்து என்னவெல்லாம் எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக்கொண்டு அநுபவியுங்கள். வேறே மதமும் வேண்டாம், மண்ணுங்கட்டியும் வேண்டாம்" என்பது அந்த மதம்.

தேவகுருவான ப்ருஹஸ்பதிதான் அஸுரர்கள் நல்ல வழிக்கு வந்துவிடாமல் செய்வதற்காகவே இப்படி ஒரு மதத்தை உருவாக்கி ப்ரசாரம் செய்தார் என்பார்கள். அதனுல் அதற்கு 'பார்ஹஸ்பதம்' என்றும் பேர்—முன்னேயே சொன்னேன். பரலோகத்தைப் பற்றிய பேச்சே இல்லாமல் இந்த லோகத்துடனேயே முடித்து விடுவதால் 'லோகாயதம்' என்று பொதுவாகச் சொல்வார்கள்! தமிழில் 'உலகாயதம்'. 'மெடீரியலிஸம்' என்கிருர்களே, அது.

அஸுரர்களை உத்தேசித்துப் பண்ணிய இந்த மதமும் ஜனங்களுக்குள்ளேயே ஆஸுர வ்ருத்திகள் நுழைந்துவிட்ட கலிகாலத்தில் நம் தேசத்தில் கொஞ்சம் இருந்து வந்தது.

வேதத்தை ஒப்பியும் வேதாந்தத்தை ஒப்பாத மதங்கள்

இப்படி (ஜைனம், பௌத்தம், சார்வாகம் ஆகியவற்றைப்போல்) வேதத்தை அடியோடு ஆக்ஷேபிக்காமல், 'வேத ப்ராமாண்யத்தை (வேதம் ஸத்ய ப்ரமாணமுடையது என்பதை) நாங்கள் ஒப்புக்கொள்கிருேம்' என்று சொல்லிக் கொண்டே, அதில் ஒவ்வொரு அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதுவே எல்லாம் என்று ஸித்தாந்தம் பண்ணி, மற்ற அம்சங்களைக் கண்டனம் செய்த மதங்களும் இருந்தன. முக்யமாக இந்த மதஸ்தர்கள் எல்லாரும் வேதங்களின் பரம

Koviloor Digital Library

தாத்பர்யமாக வேதாந்தத்தில் ஜீவ-ப்ரஹ்ம ஐக்யத்தைச் சொல்லி, அந்த ஐக்யத்தை ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் அநுபவிப்பதுதான் மோக்ஷம் என்றிருப்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆத்மாவைப் பற்றிக் கொஞ்சம்கூடப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்கான கார்யங்களில் ஆரம்பித்து, அடியிலிருந்து நுனிவரை integrated-ஆக, ஸம்யுக்தமாக, ஒன்று சேர்த்துத் தரும் ஸநாதன தர்மத்தின் கட்டுக்கோப்பை பங்கப்படுத்தி ஏற்பட்ட இந்த மதங்களும் அப்போது வெவ்வேறு அளவில் பரவியிருந்தன.

இவற்றில் விஷய ஆராய்ச்சி என்ற முறையில் சிறப்புப் பெற்றவை ஸாங்க்யம், யோகம், ந்யாயம், வைசேஷிகம், மீமாம்ஸை என்ற ஐந்து. யோகத்தில் ஸாங்க்யத்தின் விஷய ஆராய்ச்சியோடு ஸாதனா மார்க்கமும் சிறப்பாகச் சேர்ந் திருக்கிறது. ஆனாலும் எல்லாமே ஸநாதன தர்மத்தின் ஸார தத்வத்துக்குக் கிட்டே போகாதவைதான்.

இந்த ஐந்தில் க்ருஷ்ண பரமாத்மாவே திட்டியுள்ள மீமாம்ஸை இந்த ஸமயத்தில் மறுபடி ப்ரபலமாகி வந்தது. ஸாங்க்யம், யோகம், ந்யாயம், வைசேஷிகம் ஆகியவை அறிவாளிகளான சிலரால் மட்டும் பின்பற்றப்பட்டன. கர்மா நுஷ்டான மயமான மீமாம்ஸை மட்டும் ஓரளவு கணிசமான ப்ராம்மண ஸமூஹத்தினரின் அநுஷ்டானத்தில் இருந்து வந்தது. அக்னிஹோத்ரம், யஜ்ஞங்கள் முதலான கர்மாக் களைச் சொல்லும் அந்த சாஸ்த்ரத்தில் வேதங்களின் அர்த்தத்தை விசாரிப்பதில் நிறைய அறிவாராய்ச்சியும் சேர்ந்திருந்ததால் அதற்கு ப்ராம்மணர்களிடையே ஓரளவு நல்ல following இருந்ததாகத் தெரிகிறது.

ஆனாலும் அந்த ஜாதியிலேயே இன்னொரு பகுதி பௌத்த மதத்தைத் தழுவியிருந்ததும் தெரிகிறது. வேதாந்தம் ரொம்பவும் நலிவுற்று, ஆனாலும் நான் சொன்னாற்போல அடியோடு போய்விடாமல் மூச்சைக் கையில் பிடித்துக்கொண்டிருந்த காலமாக இருந்ததால்,

Koviloor Digital Library

கர்மாவில் மட்டும் நிறைவு காணமுடியாமல், Metaphysics என்கிறுர்களே, அப்படிப்பட்ட பௌதிக அதீதமான உண்மைகளில் ஈடுபட்டுப் பார்க்க விரும்பிய ப்ராம்மணர்கள் பௌத்தத்திலும் abstract meditation-கு (கலப்படமில்லாத ஸ்வச்சமான த்யானவிசாரத்திற்கு) இடமிருப்பதால் அதில் போனுர்கள். வைதிக கர்மாநுஷ்டானங்களுக்கு முக்யமான அதிகாரிகளாக ஆதிகாலத்திலிருந்து இருந்து வந்துள்ள ப்ராம்மணர்களில் பலபேர் அதைவிட்டு விட்டு பௌத்தத்துக்குப் போனதனுல்தான், 'சங்கர விஜய'ங்களில் கொஞ்சம் அதிசயோக்தியாகவே, அப்போது தேவர்கள் போய்ப் பரமேச்வரனிடம், "யாக" என்ற சப்தத்தைக் கேட்டாலே எல்லாரும் காதைப் பொத்திக்கொள்ளும் துர்த்தசை ஏற்பட்டுவிட்டதென்று முறையிட்டதாகச் சொல்லியிருக்கிறது.

அக்கால வழிபாட்டு முறைகள்

பொது ஜனங்களைப் பொறுத்தமட்டில் ஆலய பூஜைதான் மதம் என்று பார்த்தோமல்லவா? அது அந்தக் காலத்தில் எப்படி இருந்ததென்ருல்:

காபாலிகம், காளாமுகம், பைரவம் என்றெல்லாம் ஒரு பக்கம் க்ரூர உபாஸனைகள் புத்துயிர் பெற்றிருந்தன. சக்தி உபாஸனையில் வாமாசாரம் என்பதாக ஆபாஸமான அநுஷ்டானங்கள் தலைதூக்கின. வைஷ்ணவ தந்த்ரங்கள் சிலவற்றிலும் இப்படிப்பட்ட ஸமாசாரங்கள் சேர்ந்திருந்தன.

'(ஆபாஸமான) அநுஷ்டானம்' என்று நான் உசந்த பேர் கொடுத்துச் சொல்வதிலிருந்தே, இந்த யுகத்தில் எப்படிக் கெட்டதே நல்லது மாதிரி வேஷம் போட்டுக் கொள்கிறது என்று புரிந்துகொள்ளலாம்! பலி கொடுப்பது, கள்ளு நிவேதனம், ஸ்த்ரீ-புருஷ அநுபோகம் முதலானவற்றுக்குக்கூட உசந்த தத்வ 'லேபிள்' ஒட்டி, 'இது ஆத்ம ச்ரேயஸுக்கான மார்க்கம்' என்று ப்ரசாரம் பண்ணுவதாக ஏற்பட்டிருந்தது.

Koviloor Digital Library

மநுஷ்ய ஜாதி தோன்றின நாளாக, refinement (பக்குவமான பண்பாடு) உள்ளவர்கள், இல்லாதவர்கள் என்று இரண்டு வகையினரும் இருந்துதான் இருப்பார்கள். Refinement போதாதவர்கள் பலி, கள்ளு, கூத்தாட்டம் என்று வழிபாடும் பண்ணியிருப்பார்கள். 'இருப்பார்கள்' என்ன? 'இருந்தார்கள்' என்றே சொல்லும்படியாக எல்லா தேச ஆதிவாஸிகள் விஷயமாகவும் பார்க்கிறோம். இன்றைக்கும் (இப்படிப்பட்டவர்கள்) இருக்கிறார்கள். யாரானாலும், நமக்கும் லோகத்துக்கும் மூலமாக ஒரு சக்தி இருக்கவேண்டுமென்று தோன்றி, அதை வழிபட வேண்டுமென்று நினைக்கும்போது, அவரவருக்குப் பிடித்தமாதிரியே அதையும் ரூபம் கொடுத்துப் பார்ப்பது, அவரவருக்குப் பிடித்தபடியே அதற்கும் நைவேத்யம் செய்வது, மற்ற உபசாரங்கள் செய்வது என்று ஏற்படுகிறது. இதிலேதான் refinement இல்லாதவர்கள் ஒருவிதமாக வழிபாடு செய்வது. இதில் வேடிக்கை என்னவென்றால், மநுஷ்ய ஜாதியிலிருப்பது போலவே தேவ ஜாதிகளிலும் refinement போதாத தேவதைகள் இருக்கின்றன. ஈச்வரன் தன்னுடைய விளையாட்டில், இந்த மாதிரியான மநுஷ்யர்கள் இதே மாதிரியான தேவதைகளிடம் பக்திகொண்டு, இருவருக்கும் பிடித்தவிதத்தில்—ஆனால் refined ஆக இருப்பவர்கள் அருவருக்கிற விதத்தில்—வழிபாடு செய்ய வைக்கிறான். அந்த லெவலில் அம்மாதிரியான வழிபாட்டைத் தப்பென்று சொல்வதற்கில்லை. ஆனாலும் உக்ர தேவதை, க்ஷுத்ர தேவதை என்றெல்லாம் சொல்லும்போதுகூட அதை 'தேவதை' என்றுதான் சொல்கிறோமே தவிர அஸுர ஜன்மாவாகச் சொல்வதில்லை. அதனால் எத்தனை refinement குறைவாக வழிபாடு அமைந்தாலும் அஸுரத்தனம் என்று சொல்கிற அளவுக்கு அதில் ஹிம்ஸை, கேளிக்கை முதலியவை போகுமானால் அது தப்புத்தான்.

நான் சொன்ன அந்தக் காலத்தில் என்ன ஆயிற்றென்றால் refinement இல்லாத உபாஸனா முறைகளையும் refined

Koviloor Digital Library

மாதிரி வேஷம் போட்டுக் காட்டவேண்டுமென்று அவற்றை ஆத்ம ச்ரேயோ மார்க்கங்களாக வர்ணித்து சாஸ்த்ரங்கள் செய்யப்பட்டன. நாகரிகம் தெரியாதவர்கள் தங்களுக்குள் ஏதோ பண்ணிக்கொண்டு போவதாக நிற்காமல், அவற்றுக்கும் நாகரிக வேஷம் போட்டு, நாகரிகமான ஸமூஹத்தையும் அவற்றில் இழுப்பதற்கு ப்ரயத்னங்கள் செய்யப்பட்டன.

நமக்கு வெறுக்கத்தக்கவையாகவும், பயங்கரமாகவும், அருவருப்பாகவும் உள்ள சில ஸாதனைகளைச் சில தந்த்ர, யோக சாஸ்த்ரங்களிலும் சொல்லியிருக்கிறது. அவற்றைச் சிலர் அப்யாஸம் செய்து வாஸ்தவமாகவே ஒரு சக்தியையோ, ஸித்தியையோ பெற்றிருப்பதுகூட உண்டுதான். ஆத்ம ஸம்பந்தமான சில ப்ரயோஜனங்களைகூட அவர்கள் இப்படிப் பெற்றாலும் பெறலாம். ஆனாலும் இது கரணம் தப்பினால் மரணம் என்கிற மாதிரியான ஆபத்தான மார்க்கம். க்ரூரதேவதா உபாஸனையில் கொஞ்சம் தப்பினால்கூட அந்த தேவதையே டித்துப்போட்டு விடுவதைப் போல, இந்த விதமான யோக ஸாதனையிலும் கொஞ்சம் தப்பு வந்தால்கூட அடியோடு ஆத்மஹானிதான் ஏற்படும். இந்த்ரிய ஸுகத்தில் ஒரே வழுக்காகத் தடாலென்று இழுத்துவிடக் கூடிய அப்யாஸங்களைக் கொஞ்சங்கூட மனஸில் விகாரமே ஏற்படாமல் பண்ணி ஜயிப்பதென்பது ரொம்பவும் ச்ரம ஸாத்யமாகவே இருக்கும். கத்தி முனையில் நடப்பது மாதிரியான இத்தகைய ஸாதனைகள் அவச்யமேயில்லை.

கத்தி முனையில் நடப்பது என்றால் கௌரவமான ஸாதனையாகத் தோன்றுகிறது. நம்முடைய வேதாந்தமாகிய ப்ரஹ்ம வித்யா ஸாதனையையே உபநிஷதம் கத்தி முனையில் நடப்பதாகச் சொல்லியிருக்கிறது*. ஆகையினால் இப்படி கௌரவம் கொடுத்துச் சொல்லாமல் ராமக்ருஷ்ண பரம

---

* கடோபநிஷதம் : 3-14

Koviloor Digital Library

ஹம்ஸர் சொன்ன மாதிரி, "இந்த வழிகளாலும் ஒருவன் லக்ஷ்யத்தை அடையக்கூடலாமென்றாலும், அது முறைப்படி வாசல் வழியாக ஒரு வீட்டுக்குள் வராமல் தோட்டத்து வழியாக ஏறிக் குதித்து கக்கூஸ் வழியாக வருகிறதுபோல!" என்கலாம்! எவரோ சில பேருக்கு இந்த வழி அவசியப் பட்டால்கூட—கைகால் முறியாமல், அமேத்யத்தில் சறுக்கி விழாமல் முன்னேறுவதற்குரிய ச்ரம ஸாத்யமான ஸாதனையை அவர்கள் பின்பற்றிப் பயனடைய முடிந்தாலுங் கூட—பிறத்தியார் முயற்சி பண்ணிப்பார்த்து ஆத்மஹானி அடைவதற்கு ஹேதுவான இவற்றை அவர்கள் எல்லோருக்கும் பஹிரங்கப்படுத்தக் கூடாது. ஆனாலும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தக் காலத்தில், தாங்கள் மாத்திரம் ஒதுங்கி அநுஷ்டானம் பண்ணிக் கொண்டிருந்தால் தங்களுக்கு ப்ராபல்யம், அந்தஸ்து ஒன்றும் இருக்காது என்பதால் ஆபத்தான இந்த தந்த்ரங் களையும் எல்லாருக்கும் ப்ரசாரம் செய்வதற்குப் பலபேர் கிளம்பினார்கள்.

இதில் ரொம்ப விசித்ரம் என்னவென்றால்......ஸ்வாமி என்பவரைப் பற்றியே புத்தர் சொல்லாமல் போய் விட்டாலும் பொது ஜனங்களுக்கு தெய்வ வழிபாடு இல்லாமல் முடியாததால் பிற்பாடு அந்த மதத்தில் புத்தரையே ஸ்வாமி மாதிரி ஒரு தினுஸில் வைத்து, ஹிந்து மதத்தில் எந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்குப் பெரிய பெரிய விக்ரஹங்களை வழிபாட்டிற்காக ஏற்படுத்தினார்கள் என்று பார்த்தோமல்லவா? அதுவாவது போகிறது. பரம சாந்தமாக இருக்கும் அந்த விக்ரஹங்களைப் பார்த்தால் எவருக்காயிருந்தாலும் க்ஷணகாலமாவது மனஸ் குவிந்து ஒரு அமைதி உண்டாகாமலிருக்காது. ஆனால் இதோடு நிற்காமல் இன்னொரு பக்கம் என்னவாயிற்று என்றால், அந்த மதத்தில் அவ்வளவாகப் பக்வம், யோக்யதாம்சம் பார்க்காமல் கூட்டம் கூட்டமாக பிக்ஷு ஸங்கம் என்று சேர்த்தார்கள். ஸந்நியாஸிகள் ஏராளமாக இருந்தால்

Koviloor Digital Library

தானே ஒரு மதத்துக்கு 'ப்ரெஸ்டீஜ்' என்பதாலும் இருக்கலாம். விளைவாக அன்ன ஆயிற்றென்றால், அப்போதைக்கு ஒரு ஆகர்ஷணத்தில் பிக்ஷுவானவர்களில் பல பேருக்கு அதற்கான விவேக வைராக்யங்கள் போதாததால் பிறகு ஸந்நியாஸத்தின் கடுமையான நெறிக்கு ஈடு கொடுக்கமுடியவில்லை. தப்பான சலனங்கள் ஏற்பட்டன. அவற்றைத் தீர்த்துக்கொள்ளும் outlet - ஆகவே மதாநுஷ்டானம் என்ற கௌரவமான பேரில் ஆபாஸமான தந்த்ரங்களை உண்டாக்க ஆரம்பித்தார்கள். அதாவது விசித்ரமாக, எந்த மதத்தில் தான் வழிபாடு என்பதே அவச்யமில்லை என்று வைத்திருந்ததோ, அதிலேயே தகாத வழிகள் உள்பட எத்தனை உண்டோ அத்தனை தினுஸிலும் வழிபாடுகள் உண்டாயிற்று! அப்புறம், அப்போது எல்லாமே சறுக்கு வழியில் போய்க் கொண்டிருந்ததால், நம்முடைய மதம் அவர்களுக்குப் பிந்தியாகப் போவதா என்பது போல, ஹிந்து மதத்திலேயும் பலர் தோன்றி இப்படிப்பட்ட விபரீத உபாஸனைகளைப் புகுத்தினார்கள்.

பக்தி வழிபாடு என்று மட்டும் பார்க்கும்போது இப்படி க்ரூரமானது, ஆபாஸமானது என்று தப்புச் சொல்ல முடியாமல் (சைவமாகப்) பாசுபதத்தில் ஒரு பிரிவு, (வைஷ்ணவமாக) பாகவத - பாஞ்சராத்ர ஸம்ப்ரதாயம் ஆகியனவும் அப்போது ப்ரசாரத்தில் இருந்தன. வைதிக பாசுபதம், அவைதிக பாசுபதம் என்று இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு வைதிகத்தில்தான் ஸௌம்யமான வழிபாடு விதிக்கப்பட்டது. ஃபிலாஸஃபியில் உயர்வாகப் போகும் காச்மீரி சைவம் என்ற நல்ல மார்க்கமும்கூட ஏதோ ஒரு லேசான ஆரம்ப ஸ்திதியில் அக்காலத்திலேயே இருந்திருக்கக் கூடுமென்றும் அபிப்ராயமுண்டு. என்றாலும் இவை எல்லாமுங்கூட வேதங்களின் பூர்ணமான, முடிவான தாத்பர்யத்தை உள்ளபடி ப்ரதிபலிக்கவில்லை. 'அத்வைத ஞானத்துக்குப் பூர்வாங்க ஸாதனமாக சித்த ஐகாக்ரியம் (ஒருமுகப்பாடு) பெறுவதற்கே பக்தியுபாஸனை; முடிவிலே உபாஸகன், உபாஸிக்கப்படும் தெய்வம், உபாஸனை எல்லாமே ஒன்றாகப்

Koviloor Digital Library

போக வேண்டியதுதான்' என்ற பரம தாத்பர்யத்தை இவை யாவும் ஏதோ ஒரு அளவில் ஆக்ஷேபிப்பவையாகவே இருந்தன. காச்மீரி சைவம்கூட அத்வைதத்திற்குக் கிட்டே கிட்டேதான் போயிற்றே தவிர, ஸ்வச்சமான அத்வைதமாக முடியவில்லை. அதற்கு மாறுபட்டுத்தான் இருந்தது.

அநேகவிதமான பக்தி ஸம்ப்ரதாயங்கள் தங்களை வைதிகமானவையாகச் சொல்லிக் கொண்டாலும் வாஸ்தவத்தில் வைதிகத்தின் முடிவான அத்வைத லக்ஷ்யத்திற்கு மாறாகப் போகிறவையாகவும், ஆனாலும் அநாதியாக இங்கே ப்ரகாசித்து வந்திருக்கும் வேத மரபு என்ற பெயரைச் சொல்லிக்கொண்டு தங்களுக்குப் பெருமையும், செல்வாக்கும் தேடிக் கொள்வதாகவுமே இருந்தது.

முழுதும் வேத ஸம்மதமானாலே வைதிகம்

ஒன்றை வைதிக மதம் என்று சொல்ல வேண்டுமானால் அது வேதத்தில் சொல்லியுள்ள சிலவற்றை ஒப்புக்கொண்டு 'டெவலப்' பண்ணினதாக இருந்தால் மாத்திரம் போதாது. வேதத்தில் சொல்லியுள்ள எதையுமே அது ஆக்ஷேபிக்கக் கூடாது என்பது இதைவிட முக்யம். 'சிவனைப் பற்றி வேதத்தில் ஸூக்தங்கள் இருக்கின்றன; அதனால் அதை எடுத்துக் கொண்டு டெவலப் பண்ணிய பாசுபதம் முதலான சைவ மதங்கள் வைதிகமானவை' அல்லது, இதே மாதிரி, 'வேதத்தில் விஷ்ணு ஸூக்தங்கள் இருப்பதால் அதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள பாகவத பாஞ்சராத்ரம் முதலிய வைஷ்ணவ மதங்கள் வைதிகமானவை' என்றால் அது ஸரியான வாதம் இல்லை. வேதத்தில் சிவன், விஷ்ணு என்ற இரண்டையும் ஒரேபோல ஸ்துதித்திருக்கிறது. ஒவ்வொன்றையும் சொல்லுமிடத்தில் அதையே பரப்ரஹ்மமாகச் சொல்லியிருக்கிறது. அதனால், சிவனையே முழுமுதல் தெய்வமாகச் சொல்லும் சைவ மதங்களோ, அதேபோல விஷ்ணுவையே முழு முதலாகக் கொள்ளும் வைஷ்ணவ மதங்களோ ஏற்படுவதில் தவறாக, அதாவது அவைதிகமாக

Koviloor Digital Library

எதுவுமில்லைதான் ஆனாலும் இந்த மதங்கள் தங்களுக்கு இஷ்ட தெய்வமாயுள்ள சிவனையோ விஷ்ணுவையோ முழு முதல் தெய்வமாகப் போற்றுவதோடு நிற்காமல், சைவ மதங்கள், 'விஷ்ணு முழு முதல் தெய்வமில்லை. அவர் சிவனுக்குக் கீழானவர்தான்' என்றும், வைஷ்ணவ மதங்கள், 'விஷ்ணு மட்டுந்தான் முழு முதல் தெய்வம். சிவன் அவருக்குக் கீழ்ப்பட்டவர்தான்' என்றும் சொல்லுமானால் அப்போது அவை வேதத்துக்கு முரணாகத்தான் போகின்றன. ஆகையினால் அவை அவைதிகமானவையாகி விடுகின்றன. தனக்குப் பிடித்ததை மட்டும் பிடித்துக்கொள்வதோடு நின்று விட்டால் பரவாயில்லை. ஆனால் தனக்குப் பிடிக்காதது என்று ஒன்றை தாக்கப் போனால் அது வேதத்தின் ஒரு பகுதியையே தாக்கியதாகிவிடுகிறது. அதனால் அப்படிப் பட்ட மதம் வைதிகமானதாகாது.

இது ஓரளவு broad outlook-ல் (பரந்த பார்வையில்) சொல்வது. இன்னும் strict-ஆகச் (கண்டிப்பாகச்) சொல் பவர்கள், "வேதங்களில் எல்லா ஸ்வாமிகளுக்கும் உரிய யஜ்ஞங்களைச் சொல்லியிருக்கிறது. ஒரு யஜ்ஞத்திலேயே பல ஸ்வாமிகளுக்கு யஜ்ஞ பாகங்கள் கொடுக்கும்படியும் இருக்கிறது. அவை எல்லாவற்றையும் வித்யாஸமில்லாமல் பண்ணுகிறவன்தான் நிஜமான வைதிகன். 'ஒரு ஸ்வாமியைக் குறித்தவற்றை மட்டும் பண்ணுவேன்; இன்னொன்றை குறித் தவைகளைப் பண்ண மாட்டேன்' என்கிறவன் வைதிகன் ஆக மாட்டான். மனஸளவில் இஷ்ட மூர்த்தி என்று ஒன்றிடம் அத்யந்த பக்தியுடன் இருந்துவிட்டுப் போகட்டும். கார்யத்தில் யஜ்ஞம், பூஜை என்று வரும்போது ச்ருதி-ஸ்ம்ரு திகளில் எப்படியிருக்கிறதோ அப்படி தெய்வ பேதம் பாராட்டாமல் பண்ணினால்தான் வைதிகம் என்று அர்த்தம்" என்று சொல்வார்கள்.

"ச்ருதியை அநுஸரித்து ஸ்ம்ருதிகள் கொடுத்துள்ள நாற்பது ஸம்ஸ்காரங்களைத்தான் பின்பற்றவேண்டும். அவற்றில் இல்லாத ஏதோ ஒரு ஸம்ஸ்காரம் பண்ணினால்

Koviloor Digital Library

தான் தங்கள் மதத்தைச் சேர்ந்தவராக முடியும் என்று ஒரு மதம் சொல்லுமானால் அது வேத மதத்திற்கு வேறான இன்னொன்றுதான். உதாரணமாக, நாற்பது ஸம்ஸ்காரங் களில் சங்க-சக்ரங்களையோ, சூலம்-ரிஷபம் முதலானவை களையோ தப்த சின்ஹங்களாக முத்ரா தாரணம் செய்து கொள்வதென்பது (முத்திரைகளாகச் சூடு போட்டுக் கொள்வதென்பது) இல்லை. இந்த விதமான ஸம்ஸ்காரம் பண்ணிக்கொண்டால்தான், ஒருவன் விஷ்ணு பரமான, அல்லது சிவ பரமான ஒரு மதத்தைச் சேர்ந்தவனாவான் என்றால் அவனை வைதிகனென்பதற்கில்லை'' என்று strict-ஆக இருப்பவர்கள் சொல்வார்கள்.

அதோடுகூட, 'யாராயிருந்தாலும் வர்ணாச்ரம அநுஷ் டானம் இருந்தால்தான் வைதிகர் என்று அர்த்தம். 'எங்களுக்கு பக்திதான் முக்யம். வர்ணாச்ரம வ்யவஸ்தைகள் தேவையில்லை' என்றால் அவைதிகம்தான்' என்பார்கள்.]

பக்தி மதமாக இல்லாமல், தத்வ சோதன மதங்களாக உள்ளவற்றுக்கும் இப்படியேதான்: அதாவது, அவை வேத ஆதாரத்தில் சில தத்வங்களை ஆராய்ச்சி செய்கின்றன என்றால் மட்டும் போதாது. இந்தத் தத்வங்கள், யாருக்கு எந்த ஸ்டேஜில் வேதத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும கவனிக்கவேண்டும். அந்த நிலைக்கு வர இயலாதவர்கள் விஷயத்தில் வேதம் சொல்லியுள்ளவற்றைச் சகட்டுமேனியாக 'இதெல்லாம் அவச்யமில்லை' என்று தள்ளி விடக்கூடாது. மறுபக்கம், அந்த நிலைக்கு மேலே வேதத்தில் சொல்லியிருக்கக் கூடியவற்றையும் தள்ளிவிட்டு, 'தான் எடுத்துக்கொண்டுள்ளதோடேயே வேதத்தின் தாத்பர்யம் பூர்த்தியாகிவிட்டது' என்றும் சாதிக்கக்கூடாது. இந்தவித மான அபிப்ராயக்காரர்களும், 'நாங்கள் ஃபிலாஸஃபியாகத் தானே சொல்லிக்கொண்டு போகிறோம்? அதனால் எங்களுக் கும் ஸமூஹ நடைமுறை ஸமாசாரமான வர்ணாச்ரமத்துக்கும் ஸம்பந்தமில்லை' என்று கத்திரித்துக்கொண்டு போகக் கூடாது.

Koviloor Digital Library

இந்த அடிப்படைகளில்தான் எது வைதிக மதம், எது அவைதிக மதம் என்று மஹாபாரதத்திலேயே நிர்ணயம் செய்திருக்கிறது.

சரக்கூட்டில் படுத்துக்கொண்டிருந்த பீஷ்ம பிதாமஹர் தர்ம புத்ரருக்குப் பண்ணும் நீண்ட உபதேசம் மஹாபாரதத்தில் சாந்தி பர்வம், அநுசாஸன பர்வம் என்று இரண்டு பர்வங்களாக வருகிறது. அதில் பக்தி உபாஸனு மதங்களான பாஞ்சராத்ரம், பாசுபதம் ஆகிய இரண்டையும், தத்வ சாஸ்த்ரமாக இருக்கப்பட்ட ஸாங்க்யம், ஸாங்க்ய தத்வங்களின் அடிப்படையிலேயே மனோநிக்ரஹத்துக்கு க்ரியாரூபமாக ஸாதனம் சொல்லும் யோகம் ஆகிய இரண்டையும், அதாவது இந்த நாலு மதங்களையும் வேதத்திலிருந்து பிரித்து, வேறு வேறான தனி மதங்களாகத்தான் சொல்லியிருக்கிறது.

ஸாங்க்யம் யோக: பாஞ்சராத்ரம் வேதா : பாசுபதம் ததா என்று சொல்லியிருக்கிறது. அதாவது, 'ஸாங்க்யம், யோகம், பாஞ்சராத்ரம், வேதங்கள், பாசுபதம் என்ற ஐந்து மதங்கள்' என்று இருக்கிறது. ஐந்தில் ஒன்றாகவே வேதம் வருகிறதென்றால் மற்ற நாலும் வேத மதத்தைச் சேர்ந்தவையில்லை என்றுதானே அர்த்தம்? பாரதத்திலேயே இன்னோரிடத்தில், யோகம் என்பதை அந்த மதத்தின் மூல புருஷரான பதஞ்ஜலியின் பெயரை வைத்து 'பாதஞ்ஜலம்' என்று சொல்லி, இந்த ஐந்தையும் "நானா மதாநி"— வெவ்வேறு மதங்கள்—என்றே ஸ்பஷ்டமாகக் குறிப்பிட்டிருக்கிறது.

'சிவ மஹிம்ந ஸ்தோத்ரம்' என்று ஈச்வர மஹிமைகளைக் கூறுவதாக ஒன்று உண்டு. புஷ்பதந்தர் பண்ணியது. அது ரொம்பவும் பழமை வாய்ந்த ஸ்தோத்ரம். வட தேசத்தில் ரொம்பவும் ப்ரஸித்தமாக இருப்பது. அதிலேயும் இப்படியே வேதம், ஸாங்க்யம், யோகம், பாசுபதம், வைஷ்ணவம் ஆகியன வெவ்வேறு மதங்கள் என்றே சொல்லியிருக்கிறது:

Koviloor Digital Library

த்ரயீ ஸாங்க்யம் யோக: பசுபதிமதம் வைஷ்ணவம் இதி ப்ரபிந்நே ப்ரஸ்தாநே *

'த்ரயீ' என்றால் வேதம். அது ஒரு மதம். 'ஸாங்க்யம்' இன்னொரு மதம். 'யோகம்'—அதுவும் தனியாக ஒரு மதம். 'பசுபதி மதம்' என்பது சிவபெருமானைக் குறித்த பாசுபதம், அதுவும் ஒரு தனி மதம். கடைசியாக இன்னொன்று 'வைஷ்ணவம்'. இவற்றை 'ப்ரபின்ன'மான 'ப்ரஸ்தான'ங்களென்று சொல்லியிருக்கிறது— "ஒன்றுக்கொன்று மாறுபட்ட மார்க்கங்கள்" என்று அர்த்தம்.

பாரதத்திலும் சிவ மஹிம்ந ஸ்தோத்ரத்திலும் இப்படிச் சொல்லியிருப்பதற்கு 'வால்யூ' அதிகம். பாரதக் கதை விஷ்ணு அவதாரமான க்ருஷ்ண பரமாத்மாவின் கதையுடனேயே ஒட்டிப் போவது. 'ஹரிவம்சம்' என்பதாக உள்ள பாரதத்தின் 'ஸப்ளிமெண்ட்' (அநுபந்தம்) ஸ்ரீக்ருஷ்ண சரித்ரத்தையே விரிவாகச் சொல்வது. அப்படியிருந்தும் வேதத்தின் ஸாமரஸ்ய பாவத்துக்கு (ஸமரஸ மனப்பான்மைக்கு) விரோதமாக, மற்ற தெய்வங்களைக் குறைத்தும், ச்ருதி-ஸ்ம்ருதி ஆசரணைகளுக்கு மாறாகவும் விஷ்ணுவைக் குறித்ததாகவே பாஞ்சராத்ரம் என்ற தந்த்ரம் அநுஷ்டிக்கப்பட்டபோது அதை பாரதம் வேதத்துக்குப் புறச் சமயமாகவே சொல்லியிருக்கிறது. இப்படியேதான், சிவ மஹிமைகளையே சொல்லவந்த ஸ்துதியாயிருந்தாலும் சிவ மஹிம்ன ஸ்தோத்ரத்தில் பசுபதி மதத்தை வேதத்துக்கு புறச் சமயமாகச் சொல்லியிருப்பதும்.

மஹாகவிகளின் வாக்குக்கும் ஒரு ஸத்ய ப்ரமாணமுண்டாகையால், அப்படியும் ஒன்று இந்த விஷயமாகச் சொல்கிறேன்:

பண்டித ஸமூஹத்தின் கௌரவத்தை நிரம்பப்பெற்றவர் ஸ்ரீஹர்ஷ கவி. பாண்டித்யம் இல்லாதவர்களால் அவருடைய

* சிவ மஹிம்ந ஸ்தோத்ரம் - 7

Koviloor Digital Library

புஸ்தகங்களைப் புரிந்துகொள்ள முடியாது. அவர் நள சரித்ரத்தை "நைஷதம்" என்று பெயர் கொடுத்து எழுதியிருக்கிறார்*. அதிலே தமயந்தி ஸ்வயம்வர கட்டம். நளன் ஸ்வயம்வர மண்டபத்திற்கு வந்திருக்கிறான். அவனுக்கும் தமயந்திக்கும் பரஸ்பர ப்ரேமை. அதனால் அவள் அவனுக்குத்தான் மாலை போடுவாள். இந்த இடத்தில்தான் காவ்யச் சுவையைக் கூட்டிவைப்பதாக, இந்த நாள் மர்மக் கதைகள் மாதிரிப் புதிராக ஒன்று "நைஷத"த்தில் நடக்கிறது. அதாவது, ஒரு நளனுக்குப் பதில் ஐந்து நளர்கள் அடுத்தடுத்து உட்கார்ந்திருக்கிறார்கள்! அதில் ஒருத்தன்தான் நிஜ நளன். பாக்கி நாலு பேரும் தத்ரூபம் அவனைப்போலவே வேஷம் தரித்துக்கொண்டு வந்துள்ள அக்னி, யமன், வருணன், இந்திரன் ஆகிய நாலு தேவர்கள். அந்த ஐந்து பேரில் யார் நிஜ நளன் என்று தமயந்தி திகைத்துப் போகிறாள். இதைச் சொல்லவரும் போதுதான் கவி (ஸ்ரீஹர்ஷர்) நாம் பார்த்துக்கொண்டிருந்த விஷயத்தைக் கொண்டு வருகிறார்—உவமையாகக் கொண்டு வருகிறார். "உண்மையான வேதமதமான அத்வைதம், அதைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டுள்ள ஸாங்க்யம், யோகம், பாசுபதம், பாஞ்சாத்ரம் என்ற நாலு மதங்கள், ஆகிய ஐந்தும் சேர்ந்துள்ளபோது எது நிஜம், எது பொய் என்று ப்ரமிப்பு ஏற்படுவதுபோல, நிஜ நளனோடு நளவேஷம் போட்டுக்கொண்டிருந்த நாலு தேவர்களைப் பார்த்தபோது 'இந்த ஐந்து பேரில் யார் உண்மை நளன்?' என்று தமயந்தி ப்ரமிப்படைந்தாள்" என்கிறார் : ...பஞ்சம கோடி மாத்ரே... மதாநாம் அத்வைத தத்வ இவ ஸத்யதரேபி லோக : (நைஷதம் :XIII. 36.)

இப்படியாக அந்தக் காலத்தில், நம் தேசத்தில் அநாதி காலமாக வேத வாக்குதான் ஈச்வர வாக்கான ஸத்யமான

---

* ஸ்ரீ ஹர்ஷர் பற்றியும் நைஷதம் பற்றியும் மேலும் சில விஷயங்கள் "பண்பாடு" எனும் பிரிவில் "ஸ்வயம்வரத்தில் அத்வைதம்" என்ற உரையில் காண்க.

Koviloor Digital Library

மதம் என்று பண்டித - பாமரரில் பெருவாரியானவருக்கு நம்பிக்கை இருந்ததால், வாஸ்தவத்தில் அவைதிகமான கொள்கைகளையும் க்ரியா கலாபங்களையும் கொண்டிருந்த பல மதங்களும் தங்களை வைதிகமானவையாகவே வர்ணித்துக்கொண்டு ஜனங்களைக் கவர்வதாக இருந்தது. இவற்றில் சில ஃபிலாஸஃபியாக அறிவாளிகளைக் கவர்ந்தன; சில தெய்வ உபாஸனைகளாகப் பொது ஜனங்களைக் கவர்ந்தன.

எல்லா உபாஸனு மார்க்கங்களுமே இப்படி இருக்கவில்லை. வாஸ்தவமாகவே வைதிகமாக ஒவ்வொரு ஸ்வாமிக்கும் ஏற்பட்ட உபாஸனைகளும் இருந்தன. ஆனுல் ரொம்பவும் மங்கிப்போயிருந்தன. அவைதிகமாயிருந்துகொண்டு வைதிக வேஷம்போடும் தந்த்ரங்களே அதிகமாக ப்ரசாரத்தில் இருந்தன.

இன்னென்றைக்கூடச் சொல்லவேண்டும். அதாவது, "வேதம் என்ன பெரிய 'அதாரிடி'? வேதத்தைவிட ஆகமம் (அதாவது உபாஸனு மார்க்கங்களான தந்த்ரங்கள்)தான் 'அதாரிடி'. இதுதான் பரமாத்மாவே உபதேசித்து ஸ்தாபித்தது" என்று சொல்லிக்கொண்ட அநேக தந்த்ரங்களும் ப்ரசாரத்திலிருந்தன.

வேத மதத்துக்குத் தனிப்பெருமை அது பகவானே ஏற்படுத்தினது என்பதால்தானே? 'எங்கள் தந்த்ரம்தான் பகவான் ஏற்படுத்தியது' என்று சில பேர் சொல்லி, அதற்கும் கதை புராணம் எழுதிக் காட்டினபோது—அதோடு, வேதத்தின் அதிகார பேதங்களையும் தளர்த்திவிட்டு, ஜனங்களின் உணர்ச்சிகளுக்கு ருசியூட்டும் சடங்குகளையும் உண்டாக்கிய போது, பல பேர் 'இதைத்தான் பின்பற்றுவோமே!' என்று இவர்கள் பின்னே போனுர்கள்.

புரட்சி மதங்கள்

எங்கேயும் எப்போதும் ஜன ஸமூஹத்தில் ஒரு மூலையில் சில பேருக்காவது, 'பழசையெல்லாம் உடைத்துப் போட்டு

Koviloor Digital Library

விட்டு எல்லாம் புதிசாகப் பண்ணிப் பார்த்தால் என்ன?' என்ற எண்ணம்—'புரட்சி மனப்பான்மை' என்று தற்காலத்தில் கொண்டாடிச் சொல்கிறார்களே, அந்தப் போக்கு—இல்லாமலிருக்காது. ஆனாலும் வஜ்ரம் பாய்ந்த tradition-ஐ (மரபைச்) சட்டென்று உடைத்துக்கொண்டு கிளம்புவதற்குப் பூர்வ காலங்களில் ரொம்பவும் தயங்கியிருப்பார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் யாராவது ஒருத்தர், இரண்டு பேர் துணிச்சலாகப் பிய்த்துக்கொண்டு கிளம்பிவிட்டால், அப்புறம், ஒரு ஏரிக்கரையில் சின்னதாக ஒன்று இரண்டு ஓட்டை விட்டாலும் அதுவே அரித்து அரித்துப் பெரிசாக உடைப்பெடுத்துக் கொள்வது போல, அந்த ஒன்று-இரண்டு புரட்சிக்காரர்களை அநுஸரித்துக்கொண்டு பல பேர் புறப்படுவார்கள்.

இப்படித்தான் அப்போது, 'வேதம் என்ன? எங்கள் சாஸ்த்ரம்தான் பகவான் ஏற்படுத்தியது' என்று சிலபேர் புறப்பட்டபோது, இன்னம் சிலர், 'வேதம் என்ன? பகவானும் தான் என்ன? வேதமும் வேண்டாம், பகவானும் வேண்டாம். வேதம், பகவான் இரண்டையும் தள்ளிவிட்ட எங்கள் சாஸ்த்ரம்தான் ஸரியானது' என்று முழுப் புரட்சியாகவே புது மதங்கள் ஸ்தாபித்தார்கள்.

இப்படித் தோன்றிய பௌத்தம், ஜைனம், சார்வாகம் ஆகிய மூன்றைச் சொன்னேன். இவற்றில் சார்வாகத்திற்கு அதிகம் ஆள் சேரவில்லை. என்ன இருந்தாலும், 'ஸ்வாமியே கிடையாது, உடம்பின் ஸுகத்துக்கு மேலே எதுவும் கிடையாது, மதாசரணை எதுவுமே வேண்டியதில்லை' என்றால் அதைப் பெரும்பாலான ஜனங்களால் துணிந்து ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால் இந்த அப்பட்ட லோகாயதத்துக்குப் பெரிசாக ஆதரவு கிடைக்கவில்லை. கொஞ்சமே கிடைத்தது. பௌத்த-ஜைன மதங்களுக்குத்தான் நிறைய ஆதரவு இருந்தது. ராஜ குடும்பத்தில் பிறந்தும் துறவிகளாகப் போய்ப் பிரசாரம் செய்த புத்தருக்கும் ஜினருக்கும் இருந்த ஆகர்ஷணம், அப்புறமும் அந்த மதங்களில் வரிசை

Koviloor Digital Library

யாகப் பல அறிவாளிகள் தோன்றி நூல்களைக் கொடுத்தது, எல்லாவற்றுக்கும் மேலாக ராஜாக்களின் பேராதரவு அந்த மதங்களுக்கு இருந்தது—எல்லாம் சேர்ந்து அவற்றுக்கு நல்ல வளர்ச்சியைக் கொடுத்தது. ஸம்ஸ்க்ருதத்தைவிட்டு, ஸாதாரண ஜனங்களுடைய பேச்சு மொழியான ப்ராக்ருத பாஷையில் மதப் புஸ்தகங்களை பௌத்தர் கொடுத்ததும், சமணர்கள் எல்லா ஜனங்களுக்கும் பள்ளிக்கூடம் வைத்துத் தாய்மொழியில் போதனை கொடுத்ததும் அவற்றின் பாபுலாரிடிக்கு ஒரு காரணமாயிற்று. அந்த மத உபதேசங்கள் என்ன என்று ஜனங்கள் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. அவற்றை நடத்திக் காட்டவும் விசேஷமாகப் பாடுபடவில்லை. இருந்தாலும் தங்களுக்கும் பொதுவாக மத சாஸ்த்ரம் இருக்கிறது, பள்ளிகள் இருக்கின்றன என்ற பெருமைக்காக அந்த மதங்களில் சேர்ந்தார்கள். அவர்கள் விட்டுப் போகாமல் மேலும் மேலும் சேர வசதியாகப் பிற்காலத்தில் அந்த மதங்களில் மூர்த்தி வழிபாடும் வைக்கப்பட்டு விட்டதைச் சொன்னேன். பொது ஜனங்களுக்கு இது இருந்துவிட்டால் போதும்.

இவ்விரண்டில் ஜைனம் ஆசார்யாள் நாளில் அவ்வளவு ஓங்கி இருக்கவில்லையென்று தெரிகிறது. ஏனென்றால் முன்னேயே சொன்னாற்போல், அவருடைய புஸ்தகங்களில் ஜைன மத கண்டனம் ரொம்பவும் கொஞ்சமாகவே இருக்கிறது. பௌத்தம் பற்றி அங்கங்கே கண்டனம் இருந்தாலும் அதுவுங்கூடக் குறைச்சல்தான். மீமாம்ஸா கண்டனம்தான் அதிகம். காரணம் பிற்பாடு பார்க்கலாம்.

அவதாரம் தோன்ற அவசியச் சூழ்நிலை

மொத்தத்தில்—இத்தனை நாழி நீட்டி முழக்கிச் சொன்னதற்கெல்லாம் ஸாரமாக—அப்போது தேச நிலைமை எப்படியிருந்ததென்றால், பூர்ணமான வைதிக மதம் மிகவும் க்ஷீணித்துப் போயிருந்தது; வைதிகம் என்று சொல்லிக் கொண்டே அப்படியில்லாத மதங்களும், வைதிகத்தைவிடத்

Koviloor Digital Library

தாங்கள்தான் நிஜமாகப் பரமாத்மாவின் ஆஜ்ஞையை அநுஸரித்து உண்டானவை என்று சொல்லிக்கொண்ட தாந்த்ரிக மதங்களும், வேதம்-பரமாத்மா என்ற இரண்டையுமே அடியோடு தள்ளிவிட்ட அவைதிக மதங்களுமாக மொத்தம் எழுபத்திரண்டு தடபுடலாகக் கிளம்பியிருந்தன.

மநுஷ்யராகப் பிறந்த எவரும் ஸரிசெய்ய முடியாத துர்பாக்யமான நிலைமை நம்முடைய புராதனமான மத நாகரிகத்திற்கு ஏற்பட்டுவிட்டது. இதிலேயே பெரிய பாக்யமாக ஈச்வரனேதான் அவதாரம் செய்தாகணும் என்றும் ஏற்பட்டுவிட்டது!

இங்கேதான் க்ருஷ்ண பரமாத்மா வருகிறார். அவரைத் தானே முதலில் நிறையக் குறிப்பிட்டேன்? அதற்குக் காரணமான link—பகவத்பாதாளின் அவதாரத்தில் க்ருஷ்ணரின் தொடர்பு—என்ன என்பதற்கு வருகிறோம்.

அவதார தத்வம்

ஆதியில் தாம் ஸூர்யனுக்கு உபதேசித்த ஸநாதன தர்மம், முதலில் பல காலம் பிள்ளை, பிள்ளை வழியாகப் போய் நன்றாக அநுஷ்டானத்திலிருந்துவிட்டு அப்புறம் பிற்காலத்தில் நலிவடைந்து விட்டதென்றும், அதைத்தான் தாம் இப்போது அர்ஜுனனுக்கு மறுபடி எடுத்துக்கூறுவதாகவும் க்ருஷ்ணர் சொன்னார். இதைச் சொல்லும் கீதை ச்லோகங்களும் பார்த்தோம். அவர் நரவேஷம் போட்டுக் கொண்டு மயக்கிய மயக்கத்தில், தாம் பகவதவதாரம் என்பதையே அர்ஜுனனுக்கு மறக்கடித்திருந்தார்! அதனால் அவர் இப்படிச் சொன்னவுடன் அவன், "இதென்ன க்ருஷ்ணா! நீ இப்போது பிறந்தவன். ஸூர்யன் என்றைக்கோ பிறந்தவன். (ஸூர்யன் அர்ஜுனன் காலத்திலும் இருந்தவனானாலும், தாம் அவனுக்கு உபதேசித்த பிறகே அந்த உபதேசத்தை அவன் எத்தனையோ யுகங்களுக்கு முன்னிருந்த இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்தானென்று பகவான் சொன்ன

Koviloor Digital Library

தால் அர்ஜுனன் இப்படிச் சொல்கிறான்.) அப்படியிருக்க அவனுக்கு நீ உபதேசித்தாகச் சொன்னால் என்ன அர்த்தம்!" என்று கேட்டான்.

அபரம் பவதோ ஜந்ம, பரம் ஜந்ம விவஸ்வத : I
கதம் ஏதத் விஜாநீயாம் த்வம் ஆதௌ ப்ரோக்தவாந்
இதி II (கீதை IV. 4)

இப்படி அவன் கேட்டதற்கு பகவான், "இதற்கு முந்தி எனக்கு எத்தனையோ ஜன்மங்கள் ஆகிவிட்டன. எனக்கு மட்டுமில்லை. உனக்கும்தான். அந்தப் பூர்வ ஜன்ம ஸமாசார மெல்லாம் எனக்குத் தெரியும். உனக்குத் தெரியாது" என்றார்.

பஹூநி மே வ்யதீதாநி, ஜந்மாநி தவ சார்ஜுன I
தாந்யஹம் வேத ஸர்வாணி, ந த்வம் வேத்த பரந்தப II
(கீதை IV. 5)

இப்படிச் சொன்னதோடு அவர் நிறுத்திக்கொள்ள வில்லை. நிறுத்தியிருந்தால்கூட, அவரை மநுஷ்யர் மாதிரியே நினைத்துக் கொண்டிருந்த அர்ஜுனன் ஒன்றும் எதிர்க்கேள்வி போட்டிருக்க மாட்டான். "மநுஷ்யனாகிய தனக்கு அநேக முன்ஜன்மங்களிருந்திருப்பது போலவே இந்த க்ருஷ்ணனுக்கும் இருந்திருக்கிறது. ஆனால் எப்படியோ இவன் அந்த ஜன்மாந்தரங்களையும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறான்" என்றுதான் நினைத்து, அதோடு விட்டிருப்பான். அப்படியே கேள்வி கேட்டிருந்தால்கூட, "உனக்கு ஏன், எப்படிப் பூர்வ ஜன்மங்கள் உண்டாச்சு?" என்று கேட்காமல், "உனக்கு எப்படிப் பூர்வ ஜன்ம ஸமாசாரமெல்லாம் ஞாபகமிருக்கு?" என்றுதான் கேட்டிருப்பான். நமக்கோ அது ஒரு விஷயமே இல்லை. தான் மநுஷ்யர் என்று அவர் நம்மை ஏமாற்ற முடியாது! அதனால் ஸர்வஜ்ஞரான அந்த பகவானுக்கு எப்படி ஞாபகமிருந்தது என்ற கேள்வி நமக்கு எழும்பாது. ஆனால் நமக்கு வேறே ஒரு பெரிய கேள்வி எழும்பும். "அர்ஜுனன் மநுஷ்யனானதால் கர்மாப்படி அவனுக்கு

Koviloor Digital Library

அநேக பூர்வ ஜன்மங்கள் இருந்து, இப்போது அவன் அர்ஜுனனாகப் பிறந்திருக்கிறான். இவரோ பகவான். இவருக்கு ஏது கர்மா? அதனாலே இவருக்கு ஏது பூர்வ ஜன்மாக்கள்? இவர் ஏன், எதற்காக, எப்படிப் பல ஜன்மாக்கள் எடுக்கிறார்? இப்போது நர லீலைக்காகப் பிறந்திருக்கிறமாதிரியே முன்னாலேயும் பிறந்திருப்பாரோ?" என்றே கேள்வி எழும்பும். நாம் இப்படிக் கேட்போம் என்று அவருக்குத் தெரியும். அர்ஜுனனுக்குத் தாம் உபதேசிப்பதையெல்லாம் வ்யாஸாசார்யாள் பாரதத்தில் எழுதி வைத்து, நாம் படிக்கப் போகிறோமென்று அவருக்குத் தெரியாதா? அதற்காகத்தானே அவர் உபதேசித்ததே? அதனால், அர்ஜுனன் ஒன்றும் கேள்வி கேட்காவிட்டாலும், நாம் கேட்போமே என்று எதிர்பார்த்து இதற்கு பதில் சொல்ல ஆரம்பித்தார்:

அஜோ(அ)பி ஸந்-நவ்யயாத்மா பூதாநாம் ஈச்வரோ (அ)பி ஸந் ।
ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாம்-யாத்ம மாயயா ॥
(IV. 6)

"நான் கர்மாவில் மாட்டிக் கொண்டு அதற்காக ஜன்மா எடுக்க வேண்டியதில்லைதான். நான் பிறப்பற்ற வஸ்து: அஜன். ப்ரகிருதி சேஷ்டிதத்தினாலும் மனஸின் விகாரத்தினாலும் பல தினுஸான மாறுபாடுகளை அடையும் ஜீவனல்ல. நான் மாறாத ஆத்ம வஸ்து: அவ்யயாத்மா. நான் ஸகல பூதங்களுக்கும் ஈச்வரன் :- பூதாநாம் ஈச்வர:. இப்படியெல்லாம் இருந்தும்—'அபி ஸந்' என்றால் 'இப்படியெல்லாம் இருந்தும்'—ப்ரபஞ்சத் தோற்றத்தின் ஆதார காரணமான ப்ரக்ருதியை என்னுடைய மாயையால் வசப்படுத்திக் கொண்டு ஸம்பவிக்கிறேன், அதாவது ஜன்மா எடுக்கிறேன்: "ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா".

ப்ரபஞ்சத்தை மாயையினால் தோற்றுவிப்பது போலவே தம்மையும் ஜன்மா எடுப்பவராகத் தோற்றுவித்துக் கொள்

Koviloor Digital Library

கிருர். ஜீவ-ஜட ப்ரபஞ்சம் அத்தனையும்கூட அவரே எடுத்துக்கொண்ட தோற்றங்கள்தான். அவரைத் தவிர எதுவுமில்லை. ஆனால் ஜீவ-ஜகத்துக்களை ப்ரக்ருதி என்பது வசப்படுத்தி ஆளும்படியாக விளையாடுகிருர். அதனுல், இவற்றுக்குத் தாங்கள் அவரே என்று தெரியவில்லை. ஜீவன் ப்ரக்ருதியின் ஸத்வ-ரஜோ-தமோ குணங்களில் சிக்கிக் கொண்டு பல விதமாகக் கர்மா செய்து, அவற்றை அநுபவிக்கவே ஜன்மா ஜன்மாவாக எடுத்துக்கொண்டு போகிருன். அவரோ இப்படி ப்ரக்ருதிக்கு வசமாகாமல், ப்ருக்ருதியைத் தாம் வசப்படுத்திக் கொண்டு ஆள்பவராக இருந்து கொண்டே, ஆனாலும் நம் மாதிரி ஜன்மா எடுக்கிருர். அதுதான் அவதாரம் என்பது.

ஏன், எப்படி அவர் ஜன்மாக்கள் எடுக்கிருரென்ற கேள்விகளில் எப்படி என்பதற்கு இங்கே பதில் சொல்லி யாயிற்று. அப்புறம்தான் ஏன் இப்படி அவரும் ஜன்மா எடுக்கிருர் என்பதற்குக் காரணம் சொல்கிருர். அதுதான் ஆசார்ய சரித்ரத்துக்கு 'லிங்க்'. ஸுப்ரஸித்தமாகவுள்ள இரண்டு ச்லோகங்களில் சொல்கிருர்.

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்-பவதி பாரத ।
அப்யுத்தாநம் அதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ||
பரித்ராணய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே ||
(IV. 7-8)

ஏற்கெனவே தாம் எடுத்த ஜன்மங்களைப் பற்றித் தமக்கு எல்லாம் தெரியும், அர்ஜுனனுக்குத் தெரியாது என்றுதான் ஆரம்பித்தார். அதாவது பூர்வ ஜன்மங்களைப் பற்றியே சொன்னுர். அப்புறம் பொதுவாகத் தாம் ஜன்மா எடுப்பது எப்படி என்று சொல்லி, பூர்வத்தில் மட்டுமில்லாமல் எக் காலத்திலுமே தாம் ஜன்மா எடுத்தது, எடுக்கப்போகிறது எல்லாம் ஏன், எதற்காக என்று சொல்கிருர்.

என்ன சொல்கிருர்?

Koviloor Digital Library

எப்போதெப்போது தர்மத்துக்கு ஹானி ஏற்பட்டாலும் : "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்-பவதி";

தர்மத்துக்கு ஹானி ஏற்பட்டால் என்ன ஆகும்? அதர்மத்துக்கு அபிவிருத்தி உண்டாகும். அதைச் சொல்கிறார்: "அப்யுத்தாநம் அதர்மஸ்ய."

இப்படி தர்மம் க்ஷீணித்து, அதர்மம் மேலோங்கும் போது, எப்போதெல்லாம் இப்படி ஏற்படுறதோ, அப்போது—"ததா": "அப்போது";

அப்போது, என்னையே பிறப்பித்துக் கொள்கிறேன்: "ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்."

தர்மம் க்ஷீணித்தபோது என்ன ஆகும்? ஸத்துக்களான ஜனங்கள் ரக்ஷணையில்லாமல் தவிப்பார்கள். துஷ்டர்களிடம் ஸாதுக்கள் சிக்கிக்கொண்டு கஷ்டப்படுவார்கள். இந்த ஸத்துக்களை ரக்ஷிக்க வேண்டும், அந்த துஷ்டர்களை சிக்ஷிக்க வேண்டும் என்று பரமாத்மா நினைப்பார்: "பரித்ராணாய ஸாதூநாம், விநாசாய ச துஷ்க்ருதாம்." ஸாதுக்களை நன்றாகக் கட்டிக் காப்பாற்ற வேண்டும், துஷ்டர்களை அழித்து ஸம்ஹாரம் பண்ணவேண்டும் என்று பகவான் நினைப்பார்.

"இது ஏதோ அப்போதைக்குப் பண்ணின கார்யமாக முடிந்துபோய் விடக்கூடாது. அப்புறமும் கொஞ்சம் நீண்ட காலத்திற்கு லோகத்தில் தர்மம் நன்றாக ஸ்தாபிதமாயிருந்து, ஸாதுக்கள் நிம்மதியாக வாழும்படியாகவும், துஷ்டர்கள் தலை ஓங்காதபடியும் செய்யவேண்டும். சைதில்யம் அடைந்த தர்மம் லோகத்தில் எந்நாளும் நலியாமல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்படிப் பண்ணுவதற்கில்லைதான். எதிரெதிர் சக்திகள்—pair of opposites என்பவை—போராடிக் கொண்டு மாறி மாறி மேலுக்கும் கீழுக்கும் போவதில்தான் லோக நாடகமே இருக்கிறது. ஆனாலும் ஸ்ருஷ்டியின் விசித்ரப் போக்கில் இது ஸம பலப் போராட்டமாக இல்லாமல் ஆஸுரமான (அஸுரத்தன

Koviloor Digital Library

மான) அதர்மத்திற்கே ஜாஸ்தி ஆளுகை கொடுத்து விடுவதால் நாடக ரஸம் போய் விரஸமாகி விடுகிறது. இந்த மாதிரி ரொம்பவும் முற்றிப்போகும்போதுதான் அவதாரம் எடுத்து சீர் படுத்துவது. இப்படி சிஷ்ட ரக்ஷணமும் துஷ்ட சிக்ஷணமும் செய்து தர்மத்தின ஆளுகையை ஏற்படுத்திவிட்டு நாம் திரும்பிய பிறகும் ரொம்ப சீக்ரமே அஸுரர்கள் தலைதூக்கி சிஷ்டர்களைத் தலை சாய வைக்கத்தான் பார்ப்பார்கள். அதாவது அதர்ம சக்திக்கு ரொம்ப சீக்ரமே 'அப்யுத்தானம்' (எழுச்சி) உண்டாகப் பார்க்கும். நமக்கு நாமே பிறப்பைக் கொடுத்துக்கொண்டு மெனக்கிட்டு அங்கே போய்ப் பண்ணினது இவ்வளவு சுருக்க (விரைவில்) வீணாகி விடாமல் செய்யனும். எந்நாளுக்குமாக தர்மத்தைப் பெர்மனென்ட் பண்ணுவதற்கில்லையானாலும், ரொம்பவும் டெம்பரரியாகப் பிசுபிசுத்து விடாமல், கொஞ்சம் நீண்ட காலத்துக்கு ஆழமாக நிலைநாட்டவேண்டும். அதாவது, தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணவேண்டும். மேலெழ வெறும் 'ஸ்தாபனம்' இல்லை, ஆழமாக 'ஸம்-ஸ்தாபனம்' பண்ண வேண்டும்'' என்று நினைப்பார். ''தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய'': தர்மத்தை நன்கு நிலை நாட்டுவதற்காக.

என்னதான் 'நன்கு' நிலைநாட்டினாலும், சாச்வதமாக ஸ்தாபிப்பதற்கில்லையல்லவா? அதனால் ஒரு காலகட்டம் ஆன பிற்பாடு மறுபடியும் அதர்மம் கையோங்கும்தானே?

''ஓங்கிவிட்டுப் போகட்டும். எப்போதெப்போது இப்படி ஏற்பட்டாலும் அப்போது பிறக்கிறேன் என்றுதான் சொன்னேனே! மறுபடியும் சொல்கிறேன்; ஸம்பவாமி யுகே யுகே: இப்படிப்பட்ட ஒவ்வொரு ஸந்தர்பத்திலும் அவதாரம் எடுக்கிறேன்.''

'யுகே யுகே' என்றால் 'ஒவ்வொரு யுகத்திலும்' என்று 'லிடர'லாக அர்த்தம் பண்ணிக் கொண்டு ஒரு யுகத்தில் ஒரு அவதாரம்தான் செய்வார் என்று நினைத்துவிடக்கூடாது. 'இனி எத்தனை யுகங்கள் ஸ்ருஷ்டி நடந்தாலும், அலுக்காமல் சலிக்காமல் தர்ம ஸம்ஸ்தானத்திற்காக மறுபடி மறுபடி

Koviloor Digital Library

அவதரிப்பேன்' என்று பகவான் சொல்வதாகவே அர்த்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். முதலில் யுக அளவைச் சொல்லாமல், "யதா யதா" (எப்போதெப்போது) என்று தானே சொன்னார்? அதை அடுத்த ச்லோகத்திலேயே மாற்றி 'யுகத்துக்கு ஒரு தடவை' என்று பண்ணுவாரா?

எப்போதெல்லாம் தர்மம் மிகவும் சீர்கேடுற்று, அதர்மம் வலுத்தாலும் தாம் ஸத்துக்களைக் காப்பாற்றி அஸத்துக்களை அழிப்பதற்காக அவதாரம் என்ற பெயரில் ஜன்மா எடுப்பதாக பகவான் சொன்னார்.

'பரித்ராணாய ஸாதூநாம்'—"ஸத்துக்களைக் காப்பாற்றுவதற்காக"—என்று சொன்னதாலேயே, எத்தனைதான் அதர்மம் கையோங்கினாலும் அப்போதும் தர்மம் அடியோடு போய்விடாமல் தர்மத்தை அநுஷ்டிக்கும் ஸத்துக்கள் கொஞ்சமாவது இருந்து கொண்டிருப்பார்கள் என்று ஆகிறது.

ப்ரக்ருதியின் ஆதிக்கத்தில் மாட்டிக்கொண்ட மநுஷ்யர்கள் மாதிரி கர்மாவுக்காக ஜன்மா தமக்கு இல்லை; லோக ரக்ஷணத்துக்காகவே தாமாக ப்ரக்ருதியை வசப்படுத்திக் கொண்டு ஜன்மா எடுக்கிறேன் என்று சொன்னார்.

அவதார ரஹஸ்ய ஸூசனை

"ப்ரக்ருதியை வசப்படுத்திக்கொண்டு"—"ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய" என்று எதற்காகச் சொன்னார்? இன்னோரிடத்தில் இதே கீதையில் சொல்லும்போதும்* இதே அர்த்தத்தில் "ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டப்ய" என்கிறார். இங்கே "அதிஷ்டாய" என்று சொன்னதையே அங்கே "அவஷ்டப்ய" என்கிறார். இரண்டிற்கும் "வசப்படுத்திக் கொண்டு" என்றுதான் அர்த்தம். ஆசார்யாள் அப்படித்தான் (இரண்டு இடத்திலும் "வசீக்ருத்ய" என்றே) பாஷ்யம் பண்ணியிருக்கிறார். இங்கே தாம் ஜன்மாக்கள் எடுப்பதைச்

---

* IX 8

Koviloor Digital Library

சொன்னவர், அங்கே தாம் மற்றவர்களுக்கு மறுபடி மறுபடி ஜன்மாக்கள் தருவதைப் பற்றிச் சொல்கிறார். (அங்கே,) கல்ப ப்ரளயத்தில் ஒடுங்கிப் போன எல்லா உயிர்களையும் ப்ரளய கால முடிவில் தாம் ப்ரக்ருதியை வசப்படுத்திக் கொண்டு மறுபடி வெளியிலே விட்டு மீண்டும் மீண்டும் பிறப்பிப்பதைச் சொல்கிறார் :

ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டப்ய விஸ்ருஜாமி புந: புந : ।
பூத-க்ராமம் இமம் க்ருத்ஸ்நம் அவசம் ப்ரக்ருதேர்-
வசாத் ॥

"நான் தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக அவதார ஜன்மாக்கள் எடுக்கிறேன்" என்று இந்த இடத்தில் சொல்லி அதோடு விட்டிருக்கலாம். அந்த இடத்திலும் "கல்ப ப்ரளயத்தில் ஒடுங்கிய உயிர்கள் கர்மாக்களை அநுபவிப்பதற்காக, மறுபடியும் ஜன்மாக்கள் எடுக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லி, விட்டிருக்கலாம். இரண்டு இடத்திலும். "நான் ப்ரக்ருதியை வசப்படுத்திக்கொண்டு இப்படிச் செய்கிறேன்" என்று ஏன் சொல்லவேண்டும்?

இங்கேதான் அவதார ரஹஸ்யம் வெளியாகிறது. அவதாரத்தைப் பற்றிய ஸூக்ஷ்மமான உண்மை என்ன என்பது தெரிகிறது. அதைத் தெரியவைப்பதற்காகவே இப்படி (ஒரு சொற்றொடர்) போட்டிருக்கிறார்.

ஏன் ஸங்கல்ப மாத்திரத்தால் கூடாது?

அது என்ன என்று பார்ப்பதற்குப் பூர்வாங்கமாக ஒரு பெரிய கேள்வி: 'ஸரி, லோகத்தில் தர்மம் குறைகிறது. பரமாத்மா பரம கருணையோடு, 'இது இப்படி வீணாகப் போகவேண்டாம். மறுபடி தர்மமாக வாழட்டும்' என்று நினைக்கிறார். அப்படி அவர் ஸங்கல்பம் பண்ணிவிட்டாலே போதாதோ? தானாக பகவத் ஸங்கல்பம் நிறைவேறிவிட்டுப் போகிறது! அதை விட்டுவிட்டு ஜன்மா இல்லாத அவர் எதற்காக ஜன்மா எடுத்து, நாம - ரூபமில்லாதவர் அதுகளை

Koviloor Digital Library

வாரிப்போட்டுக்கொண்டு வந்து, 'அவதாரம்' என்று ஒன்றைப் பண்ணி, நம் மாதிரியே ரொம்ப யத்னங்கள் பண்ணி, சண்டை கிண்டை எல்லாம் போட்டு ஸம்ஹாரங்கள் பண்ணி, அதில் தாமும்கூட அடி, உதை வாங்கிக் கொண்டு அவஸ்தைப்படவேண்டும்? அவதாரத்தில் அவரும் நமக்கிருக்கிற எல்லாக் கஷ்டங்களும்தான் படுகிறார்! வெளியிலிருந்து வருகிற கஷ்டம் மட்டுமில்லை. ஸச்சிதாநந்த ஸ்வரூபம் எனப்படும் அவருமே (அவதாரங்களில்) நம் மாதிரி கோபப்படுகிறார், அழுகிறார், ச்ருங்காரம் பண்ணுகிறார். இதெல்லாம் எதற்காக? தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணட்டும். ஆனால் அதை அவருடைய உச்ச ஸ்தானத்திலிருந்து கொண்டே, வைகுண்டமோ கைலாஸமோ எதிலோ ஒன்றில் இருந்து கொண்டே, ஸங்கல்ப மாத்திரத்தில் பண்ணிவிட வேண்டியதுதானே? அவதாரம் என்று ஏன் ஜன்மா எடுக்கவேண்டும்?' என்று கேள்வி வருகிறது.

ஸங்கல்பத்தினாலேயே ஸ்வாமி என்னவும் செய்யமுடியும் என்பது வாஸ்தவந்தான். ஆனால் நன்றாக ஆலோசித்துப் பார்த்தால், இப்படி அவர் ஸங்கல்ப மாத்திரத்தில் எதுவும் செய்வதென்றால், முடிவாக என்ன பண்ண வேண்டிவரும் தெரியுமா? 'ஸ்ருஷ்டியே வேண்டாம்' என்று ஒரேயடியாக 'க்ளோஸ்' பண்ணத்தான் ஸங்கல்பிக்க வேண்டிவரும்! [சிரித்து] 'ஸ்ருஷ்டி இல்லாமல் போகக் கடவது' என்று ஒரே ஸங்கல்பமாகப் பண்ணிவிட்டு அவர் பாட்டுக்கு நிம்மதியாக இருந்துவிட வேண்டியே வரும்!

நிம்மதியாயிருந்துவிடக் கூடாதென்றுதானே அவரே ப்ரியப்பட்டு ஸ்ருஷ்டியை உண்டாக்கியிருக்கிறார்? ஆதியில் அவர் மட்டுந்தானே ஸச்சிதாநந்த ப்ரஹ்மமாக இருந்தார்? அந்த நிம்மதி போதவில்லை என்றுதானே, 'விளையாடணும், கூத்தடிக்கணும்' என்று மாயையை வாரிப்போட்டுக் கொண்டு ஸ்ருஷ்டியை உண்டாக்கி, அசடு அசடுகளாக நம் இத்தனை பேரையும் பண்ணிப் போட்டிருக்கிறார்? (கல்ப) ப்ரளயத்தில் அத்தனை ஜீவர்களும் ஒடுங்கினாலும், அவரும்

Koviloor Digital Library

போனால் போகிறதென்று ஆயிரம் சதுர்யுக காலம் அந்த லயம் (ஒடுக்கம்) அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று சும்மாயிருந்தாலும், அப்புறம் ஒடுங்கினதையெல்லாம் மறுபடி புனர் ஸ்ருஷ்டி என்று பிடித்திழுத்துக்கொண்டு வந்து, ஜனன - மரணக் குடை ராட்டினத்தில் சுற்றுச் சுற்று என்று சுற்றத்தானே ஆரம்பித்துவிடுகிறார்? அவர் மனஸ், அவர் சித்தம் நமக்குத் தெரியவே தெரியாது. எத்தனை யோசித்தாலும் புரியவே புரியாது. தான்பாட்டுக்கு 'ஏகமேவாத்விதீயம்' (இரண்டற்ற ஒன்று) என்று இருந்துகொண்டிருக்காமல் ஸ்ருஷ்டி என்று எதற்காகப் பண்ணணும் என்று நமக்குத் தோன்றினாலும், எதற்காகவோ பண்ணித்தானே இருக்கிறார்? என்ன பண்ணுகிறது? 'அதெல்லாம் ஸ்ருஷ்டி என்றே ஒன்று இல்லை; எல்லாம் கல்பனைதான், மாயைதான்' என்று பரம வேதாந்தம் சொன்னாலும் அந்தக் கல்பனையோ, மாயையோ, அது மட்டும் ஏன் உண்டாகணும்? அதனாலே தான் ஒரே வார்த்தையில் "என்னவோ லீலை" என்று சொல்லி முடித்து விடுகிறது!

ஸ்வாமியின் 'நேச்சர்' தமக்குத் தெரியாது, புரியாது. அதனால், 'நிம்மதியைக் கெடுத்துண்டு இதென்ன ஸ்ருஷ்டின்னு பண்ணிண்டு?' என்று நாம் நினைத்தாலும், அவர் என்னவோ நிம்மதியாக, ப்ரசாந்த நிலையில் ஆத்மாராமனாக இருந்து கொண்டேதான் எத்தனை கூத்து உண்டோ அத்தனையும் அடித்துக் கொண்டிருக்கிறார்! கூத்தடிப்பதனால் நிம்மதி போகவில்லையாதலால் கூத்தை முடிக்கவே மாட்டார்! ஸ்ருஷ்டியை 'க்ளோஸ்' பண்ணவே மாட்டார்? அவர்தானே வேண்டுமென்று ["வேணும்னு" என்று சுவைத்துக் கூறுகிறார்கள்] இனாகுரேட்' பண்ணி, ஜாம் ஜாமென்று நடத்திக் கொண்டிருக்கிறார்? அதனால், தன்னுடைய திட்டத்தில் ப்ரளயமென்று ஸ்ருஷ்டியை ஒடுக்கிக்கொள்ளவே ஏற்பட்ட காலம் தவிர வேறெப்போதும், எந்தக் காரணத்திற்காகவும் அதை 'க்ளோஸ்' பண்ணமாட்டார்.

Koviloor Digital Library

அதிருக்கட்டும். அவதாரம் எடுக்காமல் ஸங்கல்ப மாத்திரத்திலேயே ஏன் அவர் தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணக் கூடாது என்று கேட்டால் அப்படிப் பண்ணுவதற்குப் பதில் அவர் ஸ்ருஷ்டியையே க்ளோஸ் செய்துவிடலாமென்று சொன்னால் என்ன அர்த்தம்?

என்ன அர்த்தமென்றால்...

தர்மம் அதர்மத்தை அழித்து விடும்படியான ஒரு நிலை வரும்போது ஸ்வாமி, 'தர்ம ஸம்ஸ்தாபனம் நடக்கட்டும்' என்று ஸங்கல்பம் பண்ணுவதாக வைத்துக் கொள்வோம். இந்த தர்ம ஸம்ஸ்தாபனம் சாச்வதமாக நிலைத்து இருக்கட்டுமென்று அவர் ஸங்கல்பிக்க முடியுமா? முடியாது. ஏனென்றால் இப்படி லோகம் பூரா ஒரே தர்ம மயமாகி அப்படியே இருந்து கொண்டிருந்தால் எந்த ரஸ பேதங்களுக்காக அவர் இப்படி விசித்ர விசித்ரமாக ஜீவ ஸ்ருஷ்டியை உண்டாக்கியிருக்கிறாரோ அதுவே இல்லாமல் போய்விடும்! லீலை, விளையாட்டு என்றால் எதிரெதிர்க் கட்சிகள் tug-of-war இழுத்துக்கொண்டு, எதிரெதிராக இரண்டு கட்சிகள் பந்தை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் உதைத்துக் கொண்டு, விழுந்து வாரிக்கொண்டு, வெற்றி - தோல்வி, ஏமாற்றம் - எதிர்பார்க்காத அதிருஷ்டம், கோபம் - ஸந்தோஷம், அழுகை-குஷி என்று பலவித உணர்ச்சிகளில் மாட்டிக்கொண்டால்தானே விறுவிறுப்பாயிருக்கும்? 'லீலா நாடகம்' என்றால் நாடகத்தில் நவரஸமும் இருக்கணுமோ இல்லியோ? ஸர்வ ஜனங்களும் தர்மானுஷ்டானம் பண்ணிக் கொண்டு சாந்தர்களாகி அப்படியே சாச்வதமாயிருந்து விட்டால் அதில் லீலா விசித்ரம் ஏது? நாடகரஸம் ஏது? ஸ்வாமிக்கு ஒரேடியாக போர்தான் அடிக்கும்! இதற்குப் பேரே 'மிச்ர லோகம்' என்பது. அதாவது, நல்லது பொல்லாதது கலந்தாங்கட்டியாக இருக்கும்படியாகவே அவர் உத்தேசித்திருக்கிற லோகம் இது. ஒரே பொல்லாததாக அஸுர லோகம், ஒரே ஸந்தோஷமாக தேவலோக - கந்தர்வ லோகங்கள், ஒரே சாந்தியாக தபோலோகம்.

Koviloor Digital Library

ஸத்ய லோகம் இத்யாதி என்று அவர் ஸ்ருஷ்டியில் பண்ணி, அதிலெல்லாம் தாம் அலுத்துச் சலித்துப் போகாமலிருப்ப தற்காகத்தான், நம் லோகத்தை மிச்ர லோகமாகப் பண்ணி, ஜீவர்களுக்குப் பல தினுஸாகவும் கர்மா செய்ய ஓரளவு ஸ்வாதந்திரியத்தைக் கொடுத்து விளையாட்டுப் பார்ப்பது. அதனால் இந்த ஜீவ ஸ்வாதந்தர்யத்தின் ஸ்வாரஸ்யமே அடியோடு போய் எல்லாரும் எக்காலமும் தர்மிஷ்டர்களாக ஆகிவிட்டால் இந்த லோகமே பகவான் பார்வையில் 'மெகானிகலா'கப் போய் விடும்! மிச்ரலோகமாக இருக்க வேண்டியது அப்படியில்லாமல் அமிச்ரமான (கலப்பில்லாத) தர்மலோகமாகிவிட்டால் அதை க்ளோஸ் பண்ணிவிட வேண்டியதுதானே?

தர்மப்படியே எல்லாரும் பண்ணினால் புதுக் கர்மாவே சேராது. பழைய கர்மா தீர்கிற மட்டுமே மாயா லோக ஸம்ஸாரத்தில் இருந்துவிட்டு அப்புறம் இந்த ஸ்ருஷ்டியி லிருந்து விடுபட்டுவிடுவார்கள். இப்படி அத்தனை பேரும் மோக்ஷத்திற்குப் போய்விட்டால் ஸ்ருஷ்டி க்ளோஸாகிவிட வேண்டியதுதானே? இப்படி ஜனங்களாகப் பண்ணுவதைவிட அவர்களையும் பண்ணி போட்ட ஸ்ருஷ்டிகர்த்தாவே பண்ணி விட நினைப்பதுதானே இயற்கை? [சிரித்தவாறு] 'நாம் மெனக்கிட்டுப் பண்ணின ஸ்ருஷ்டியை இவா என்ன இல்லாமப் பண்றது? நாமே அப்படிப் பண்ணிடுவோம்' என்றுதானே அவருக்குத் தோன்றும்?

ஸ்ருஷ்டி லீலை அவருக்கு வேண்டியிருப்பதால், சாச்வத மாக தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ண வேண்டுமென்று நினைக்க மாட்டார். இதனால்தான் லோகம் சாச்வதமாக தர்மத்திலேயே போய்க்கொண்டிருக்கவேண்டும் என்று ஸங்கல்பிப்பதற்குப் பதில் அவர் ஸ்ருஷ்டியையே க்ளோஸ் பண்ணிவிட நினைப்பார் என்று சொன்னது.

"ஸரி, அப்படியானால் 'சாச்வதமாக தர்ம ஸ்தாபனம் ஏற்படட்டும்' என்று (பரமாத்மா) ஸங்கல்பிக்க வேண்டாம்,

Koviloor Digital Library

ரொம்பவும் மோசமான நிலை ஏற்படும்போது, அப்போதைக்கு மாத்திரம் ஏற்படட்டும்' என்று ஸங்கல்பிக்கலாமே! (இப்படி வெறுமனே ஸங்கல்பிப்பதை விட்டு) அவதாரம் என்று அவரே பிறப்பானேன்?''

இப்படி ஸங்கல்பித்தால் மறுபடி மறுபடி அதர்மம் மேலோங்கி, மறுபடி மறுபடி அவர் (தர்ம ஸ்தாபனத்தை) ஸங்கல்பிக்க வேண்டியதாகத்தானே ஆகும்? 'அவர் ஏன் அவதாரம் எடுக்கணும்? ஸங்கல்பத்தினாலேயே செய்யட்டுமே' என்று சொல்வது, 'அவர் ஏன் ச்ரமப்படணும்?' என்ற எண்ணத்தில்தான். அவதாரமெடுக்காமல் ஸங்கல்பிப்பது என்றாலும், நாம் அவருக்கு வேண்டும் என்று நினைக்கிற நிம்மதியோடு அவர் இருந்துவிட முடியாது. டெம்பரரி ஸங்கல்பமாகவே செய்வதால், லோகத்தின் நிலைமையை ஓயாமல் இன்ஸ்பெக்ட் செய்துகொண்டு, மறுபடி மறுபடி ஸங்கல்பம் செய்யும் ச்ரமத்தை அவர் பட்டுத்தான் ஆகவேண்டும். நாம் நினைக்கிற நிம்மதி வேண்டாமல்தான் அவர் ஸ்ருஷ்டி என்று வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு அத்தனை பேருக்கும் ஆஹாரம் போடுவது, அத்தனை பேர் கர்மாவுக்கும் கணக்கு எடுப்பது, கூலி தருவது என்று கார்யங்களை வலிய வரவழைத்துக் கொண்டிருக்கிறார். நாம் அவர் வேலையை எவ்வளவு குறைத்துத் தரலாமென்று நினைத்தாலும், திரும்பத் திரும்ப ஸங்கல்பம் செய்கிற கார்யத்தை அவர் போக்கிக்கொள்ள முடியாது என்றே தெரிகிறது. அப்படியிருக்கும்போது என்னமோ வெற்று யோசனையாக 'ஸங்கல்பம்' என்று பண்ணுவதைவிட—அவர்தான் லீலா ப்ரியராக இருக்கிறாரே, அதனால்—அவதாரம் என்று வேஷம் போட்டுக்கொண்டு வந்து லீலைகள் பண்ணித்தான் தர்ம ஸ்தாபனம் பண்ணுவோமே என்று நினைக்கிறார்.

எல்லாமே அவர் ஸங்கல்பந்தான். ஆனால் கார்ய ரூபத்தில் ஒவ்வொரு கருவி பண்ணினதாகக் காட்டுகிறார். ஓரோரு ஸந்தர்ப்பத்தில் அதர்மம் ஓங்குகிறதென்றால் அதுவும் அவர் ஸங்கல்பந்தான். ஆனால், 'அவர் பரமாத்மாவாகவே

Koviloor Digital Library

எங்கேயோ உட்கார்ந்துகொண்டு ஸங்கல்பம் செய்தார்; உடனே லோகம் அதர்மமாகிவிட்டது' என்று எங்கேயாவது படித்திருக்கிறோமோ? அஸுரர், ராக்ஷஸர், துஷ்ட ராஜாக்கள், தப்பான கொள்கைகளை மதமாக ப்ரசாரம் செய்பவர்கள், இன்னம் பல பேர், திருடர்கள், கொலைகாரர்கள், ஃபோர்ஜரிக்காரர்கள் என்பவர்கள் கார்ய ரூபத்தில் அநேகம் பண்ணுவதால்தான் அதர்மம் தலையெடுக்கிறது. கலியில் ஜனங்களின் மனஸ் கெட்டதுகளில் போகிறது என்றால் அதுவும் கையால், காலால் செய்யும் கார்யமாயில்லாவிட்டாலும் மனஸினால் செய்யும் கார்யந்தான்! மனஸ் கெட்டதை நினைத்த பிறகு, அந்தக் கெட்டதை அநுபவிப்பதற்காகக் கையும் காலும் வெளிக் கார்யமாகவே கெட்டதைச் செய்ய ஆரம்பிக்கிறது. இப்படிக் கருவி, கார்யங்களாலேயே லோகத்தில் எல்லாம் நடக்கிறபோது, (கெட்டது மட்டுமில்லை, நல்லதுந்தான்—எல்லாமே கருவி, கார்யங்களால்தான் நடத்துகிறானே தவிர, ஸகலமும் அவன் ஸங்கல்பமென்றாலும், ஸங்கல்ப மாத்ரத்தால் நடந்ததாகக் காட்டுவதேயில்லை;—இப்படி நடந்துவரும்போது,) அதாவது அவன் நடத்தி வருகிறபோது, அதர்மத்தின் பெரிய எழுச்சியும் இப்படியே நடக்கும்போது, தர்மத்தின் மறுமலர்ச்சி மட்டும் ஸங்கல்ப மாத்ரத்தாலேயே நடக்கவேண்டும் என்றால் எப்படி? அதற்கும் லோகத்தில் கருவி, கார்யங்களைக் காட்டாவிட்டால் அவனுடைய 'ஸ்போர்ட்'டில் ரொம்ப விறுவிறுப்பான ஒரு அம்சம் இல்லாமல் செய்கிற மாதிரி தான்!

அதனால், தர்மம் குறையும்போது அதை அபிவ்ருத்தி செய்வதற்காகத் தன் தூதர்கள் மாதிரியான மஹான்களைக் கருவியாக அனுப்புவான். அதுவும் பலிக்காது என்கிற கட்டத்தில் தானே தன் கருவியாகி அவதாரம் எடுப்பான்!

Koviloor Digital Library

அவதாரத்தில் மனிதத்தன்மையும் தெய்வத்தன்மையும்

தர்மோத்தரணம் செய்ய வேண்டுமென்ற லக்ஷ்யத்துக்காக இப்படி அவன் அவதாரம் எடுப்பதில் அநேக ஸாரமான விஷயங்களை உள்ளே சேர்த்துப் பிசைந்து வைத்திருக்கிறான். தர்மத்தை உபதேசம் செய்வதோடு, வாழ்ந்தும் காட்ட வேண்டும். வாழ்க்கையில் ஊறாத தர்மம் எத்தனை அழகாக உபதேசிக்கப்பட்டாலும் பயன் தராது. ஆதர்ச புருஷர்களாக ஸொந்த வாழ்க்கையில் நடத்தி வழிகாட்டுபவர்கள் இருந்தால்தான், 'அடாடா! இவர்கள் இப்படியிப்படிப் பண்ணி எத்தனை சுத்தர்களாக, சாந்தர்களாக இருக்கிறார்கள்! தாங்களும் ஆனந்தமாக இருந்து கொண்டு, லோகத்துக்கும் ஆனந்தமூட்டுகிறார்கள்! நாமும் இந்தப்படி பண்ணிப் பார்க்கவேண்டும்' என்ற எண்ணம் ஜனங்களுக்கு உண்டாகும். இம் மாதிரி ஆதர்ச வாழ்க்கை நடத்தி வழி காட்டுவதற்கும் அவனே அவதாரமாக வரவேண்டியிருக்கிறது.

ஆனாலும், 'ஆதர்சம்' என்பதற்காக நடைமுறையில் ஜனங்களுக்கு இருக்கிற அத்தனை போக்குகளும் தனக்கு அடியோடு இல்லை என்று அவதார புருஷன் ஒரே உச்சாணியாக இருந்துவிடலாமா? நம்முடைய உணர்ச்சி மோதல்கள் எதுவும் அவனுக்கு இல்லை, நம்முடைய ஆசைகள் எதுவும் அவனுக்கில்லை என்று எப்போதும் அதீத லெவலிலேயே அவன் இருந்து கொண்டிருக்கலாமா? கூடாது. அப்படி இருந்துவிட்டால் அவன் வழிகாட்டியாக, 'மாடல்'லாக, இருக்கவே மாட்டான். அதீத லெவலிலேயே இருப்பவன் எப்படி மற்ற லெவல்களில் இருப்பவர்களுக்கு லக்ஷ்ய புருஷனாக ஆக முடியும்? ஸாண்டோ யானையை மார் மேலே ஏற்றி நிறுத்திக் கொள்கிறானென்றால் நாம் கை தட்டி ஸந்தோஷப்படுவோம், ப்ரமிப்போமே ஒழிய அந்த மாதிரி நாம் பண்ணிப் பார்க்க நினைப்போமா? "அவனுக்கு அது

Koviloor Digital Library

முடிகிறது. நம்மால் முடியுமா?" என்றுதானே சொல்வோம்? அப்படித்தான், அவதார புருஷனொருவன் நம்முடைய பூலோக வாஸனைகளே இல்லாமல் உச்ச மட்டத்தில் பரம தார்மிகமாக எல்லாம் செய்துகொண்டிருந்தானென்றால், 'இவன் நம்முடைய மநுஷ்ய ஜாதியைச் சேர்ந்தவனேயில்லை. நமக்கு இருக்கிற மனஸின் இழுபறிப் போராட்டங்கள், ஆசாபாசங்கள் எதுவும் இவனுக்கு இல்லை' என்று அவனுக்கு நமஸ்காரம் வேண்டுமானால் நிறையச் செய்வோமே தவிர அவன் வழியிலேயே நாமும் சென்று பார்க்கலாம் என்ற உத்ஸாஹத்தைப் பெற மாட்டோம்.

ஆகையால் அவனும் நம் மாதிரி இருப்பதுபோலவே' தன்னை மநுஷ்யத்வத்தில் ஒரளவு கட்டுப்படுத்திக் கொண்டாற்போல நடித்து நடித்தே, ஆனாலும் தப்புக்கும் ரைட்டுக்கும் ஒரு போராட்டம் வரும்போது தப்பில் போகாமல் ரைட்டிலேயே போய், 'தர்மம்தான் செய்ய வேண்டியது, அதுதான் நிலைத்த இன்பத்தையும் சாந்தியையும் தருவது' என்று நமக்குக் காட்டிக்கொடுப்பான். நம் மாதிரியே பல அம்சங்களில் இருந்தும், நாம் ஃபெயில் ஆகிற இடத்திலெல்லாம் அவன் பாஸ் பண்ணிக் காட்டுவான். அப்படியிருந்தால்தான் நமக்கு, 'நாமும் இவன் மாதிரி நடக்கமுடியும்—தர்மமாக வாழ முடியும். சாஸ்த்ரம் போட்டுக்கொடுத்திருக்கும் பாடத்தில் பாஸ் பண்ணமுடியும்' என்ற உத்ஸாஹம் உண்டாகும்.

முழுக்க ஸாமானிய ஆளாகவே இருந்துவிட்டால் அவன் என்ன செய்கிறான், தர்மத்தில் போகிறானா இல்லையா என்பதையெல்லாமே நாம் கவனிக்க மாட்டோம். இப்போதுங்கூடப் பெயர் தெரியாமலே பல பேர் நல்லவர்களாக, தர்மத்திலேயே செல்கிறவர்களாக அங்கங்கே இருந்து கொண்டிருக்கலாம். ஆனால் இது எப்படி உலகத்துக்குத் தூண்டுகோலாக உதவ முடியும்? 'ஸத்யமாகவே இருப்பது, மனஸ் ஸாக்ஷிப்படியே செய்வது' என்று ஸமீப காலத்தில் காந்தி ஒருவர்தானா முயற்சி பண்ணியிருப்பார்?

Koviloor Digital Library

இன்னம் பலபேர் இருந்திருப்பார்கள். ஆனாலும் தேசம் பூராவுக்குமான ஒரு லெவலில் அவர் கார்யங்கள் செய்பவராக இருந்ததாலேயே 'காந்தீயம்' என்று மற்றவர்களுக்கும் ஒரு வழி ஏற்பட்டு, அவருடைய காலத்தில் நிஜமாகவே பல பேர் அந்த வழியில் போகவும் பாடுபட்டார்கள். ஆகையினால், தன்னுடைய காலத்தோடு முடியாமல், வரப்போகிற காலத்திலும் தன்னுடைய 'இன்ஃப்ளுயென்ஸ்' இருக்கும்படியாக ஸ்வாமி அவதாரம் செய்யும்போது மானுஷமாக ஒரு பக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் மநுஷ்யர்களையெல்லாம் தன்னிடம் ஆகர்ஷிக்கும்படியாக ஓரளவு திவ்யாம்சங்களையும், தெய்வ சக்திகளையும் கைக்கொள்ளுவான். அஸாத்யமான ஒரு கார்யத்தைப் பண்ணுவான். பாலனாக இருந்துகொண்டே தாடகை, ஸுபாஹு போன்ற ராக்ஷஸர்களை வதம் செய்வான். அல்லது நம்மால் முடியாத ஒரு பெரிய த்யாகத்தைச் செய்து—பட்டாபிஷேகம் நிச்சயம் பண்ணின நாளிலேயே, "காட்டுக்குப் போ!" என்றால் "ஆஹா!" என்று சிரித்த முகமாகப் புறப்பட்டுப்போய்—மநுஷ்யர்களை ஆகர்ஷிப்பான். ஆனால், 'இவன் தெய்வாம்சம்; இவன் செய்வது நமக்கு மாடலாகாது' என்று நாம் ஒரேயடியாகத் தள்ளி நின்றுவிடாமல், இவனே நம் மாதிரி மூக்கைச் சிந்திப் போட்டுக்கொண்டு, 'மரமே, கண்டாயா? மட்டையே, கண்டாயா?' என்று திண்டாடியும் காட்டுவான். தெய்வமாகவும் மானுஷமாகவும் மாறி மாறி இருந்து காட்டி மொத்தத்தில் தர்மவழியில் நாம் செல்ல ஊக்கம் தருவான்.

தெய்வ சக்திக்கு மநுஷ சக்தி குறைவானதுதான். தேவர்களைவிட மனிதர்கள் சக்தியில் குறைந்தவர்கள் தான். ஆனாலும் மநுஷ்யர்கள் தங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிற அளவுக்கு அல்ப சக்தர்களில்லை. இந்த்ரிய நிக்ரஹம் செய்து சுத்தமாக வாழ்க்கை நடத்தினால் மநுஷ்யர்களும் எவ்வளவோ சக்தியுடன் கார்யங்கள் செய்யலாம். யோகேச்வரர்களாகப் போனால் தேவர்களைப் போலவும், அவர்களை

Koviloor Digital Library

விடவும்கூட சக்தியை ஸம்பாதித்துக் கொள்ளலாம். தங்களைப்பற்றி ரொம்பக் குறைவாக நினைத்துக்கொண்டிருக்கும் மநுஷ்யர்களுக்கு, 'தாங்களும் இத்தனை சக்தர்களாக, இப்படியிப்படிப் பெரிய கார்யங்களைப் பண்ணமுடியும்' என்ற நம்பிக்கையையும் உத்ஸாஹத்தையும் ஊட்டுவதற்காகவும் பகவான் பகவானாகவே இருந்துகொண்டு தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணாமல் மநுஷ்யனாக வந்து பண்ணுகிறான்.

கலந்து பழகும் ஆசைக்காகவும்

'வழி காட்டுவதற்காகத்தான் அவன் மநுஷன் மாதிரி விளையாடுகிறான். தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காக ஸங்கல்பம் மட்டும் பண்ணுவது ஒத்து வரவில்லை என்று நான் அவதாரம் பண்ணுகிறேன்' என்று இத்தனை நாழி காரணம் சொன்னதெல்லாம்கூடப் போதவில்லை. தர்மம், அதில் ஜனங்களுக்கு வழி காட்டுவது எல்லாம் இருக்கட்டும் இதெல்லாம் எப்படியிருந்தாலும் அவனுக்கே ஒரு ஆசை, தான் படைத்த குழந்தைகளோடு கலந்து பழகி வாழவேண்டுமென்று! அவன்தானே ஸர்வ பூதங்களுக்கும் மாதா பிதாக்கள்? குழந்தைகள் எப்படியிருந்தாலும் அவற்றோடு சேர்ந்து இருக்கணுமென்று மாதா பிதாக்களுக்கு இல்லாமல் போகுமா? அப்படித்தான் அவனுக்கும், ஆசை! அவன் ஆசைப்பட்டாலும், அவன் அரூபமான பரமாத்மாவாக இருந்தால், நாம் அவனை கிரஹிக்க முடியுமா? க்ரஹிக்க முடியாதவனோடு எப்படி உறவு கொண்டாட? அல்லது திவ்ய ரூபம் எடுத்துக்கொண்டு சதுர்புஜனாக வந்தாலும் நாம் அவனிடம் போய்க் கலந்து பழகுவோமா? கன்னத்தில் போட்டுக்கொண்டு வரம் கேட்போம். இன்னம் கொஞ்சம் ஜாஸ்தியாகப்போனால், தர்சன மாத்திரத்திலேயே மூர்ச்சைபோட்டு விழுந்து விடுவோம். அதற்காகத்தான் நம் போன்ற மநுஷ்யனாகவே அவதாரங்களில் வந்து நம்மை இழைந்து பழக வைக்கிறது. ஒரு வேடனா, குரங்கா, இடைச்சியா—இவர்கள்கூட 'நமக்கு இவன் பரம ஸொந்தம்' என்று பாந்தவ்யம் பாராட்டும்படி

Koviloor Digital Library

யாக அவதாரம் செய்வது. தன் ஆசை தீர, அவர்களுடைய ஆசை தீரவும்தான், எல்லோரும் ஸஹஜமாக ஒட்டிப் பழக வேண்டுமானால் அவர்கள் மாதிரியே ஆடினால்தான் முடியும் என்றுதான் பரமாத்மா அவதாரங்களில் ஆசாபாசம், கோபம், அழுகை எல்லாம் காட்டுவது. ஆனால் மொத்தத்தில் கணக்குப் பார்த்தால் இதற்கெல்லாம் மிகவும் அதிகமாக உத்தமமான ப்ரேமை, ஞானம், சீலம், ஸத்யம் எல்லாவற்றையும் அவதாரபுருஷன் நடத்திக்காட்டி தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணியிருப்பான்.

தன்னுடைய ஆசையை அவதாரத்தினால் நிறைவேற்றிக் கொண்டால்மட்டும் போதாது; ஜனங்களுக்கும் அதனால் நல்லதற்கு வழி ஏற்படும்படி உதவ வேண்டும் என்று நினைத்து, இந்த இரண்டையும் சேர்த்து முடிச்சு போடுவதற்கு ஸந்தர்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். தர்மம் ரொம்பவும் சீர்கெடுகிறபோது, 'ஸந்தர்பம் வந்து விட்டது' என்று அவதாரம் செய்கிறான்.

இதில் அவன் மாநுஷமாக இருப்பதைப் பார்த்து நமக்கு ஸந்தேஹம் வந்துவிடப் போகிறதே என்றுதான், "எத்தனை தான் மநுஷன் மாதிரி நான் இருந்தாலும், மனித உணர்ச்சிகளைக்காட்டுகிறது போலவும் மனிதர்களுடைய உலக இன்பங்களை அநுபவிக்கிறது போலவும் இருந்தாலும், மனிதர்கள் மாயை வசப்பட்டு இப்படி இருப்பது மாதிரி நான் இல்லை. மாயையை நானாக்கும் வசப்படுத்திக்கொண்டு— ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய...அவஷ்டப்ய (ப்ரக்ருதி என்றால் மாயைதான்) இப்படிச் செய்கிறேன். பரமாத்மாவாக, பரப்ரஹ்மமாக நான் உள்ள நிலையில் மாயை என்கிட்டேயே வரமுடியாது. ஆனாலும் லீலைக்காக நான் ஈச்வரனாக உள்ளபோது மாயையை வைத்துக்கொண்டுதான் ஸ்ருஷ்டி பண்ணமுடிகிறது. அதனால் அப்போது மாயையை நான் இழுத்து என்னிடம் வைத்துக்கொண்டு, அதாவது என் வசப் படுத்திக்கொண்டு, முன்னே ப்ரளயத்தில் லயித்துப் போயிருந்த பூத க்ராமத்தை (உயிர்க்குலத்தை) மறுபடி

Koviloor Digital Library

பிறவிகள் எடுக்கச் செய்கிறேன். லோக லீலையில் தர்மம் ரொம்பவும் க்ஷீணித்துப் போகும்போதும் மாயையைப் பிடித்திழுத்து வசப்படுத்திக் கொண்டு, என்னிடமே அதற்குரிய முக்குணங்கள் வந்து விட்டாற் போலவும், அதனால் நானும் மாநுஷமான ஒரு ஜீவனாகிவிட்டாற் போலவும் வேஷம் போட்டுக்கொண்டு அவதாரமாகப் பிறப்பெடுக்கிறேன்'' என்று சொன்னார். கொஞ்சத்தை மட்டும் சொல்லி மீதியை நாம் புரிந்து கொள்ளவிட்டு கீதோபதேசம் செய்தார்.

பூதக்ராமத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "அவசம் ப்ரக்ருதேர் வசாத்'' என்று, அதாவது, மாயையின் வசப்பட்டு ஸ்வாதீனமே இல்லாமல் ஜீவ ஸமூஹம் இருக்கிறதாகச் சொல்லி, அதற்கு Contrast—ஆகத் தன்னுடைய அவதார ஜன்மாவைக் குறிப்பிடும்போது "ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய'', அதாவது, மாயையைத் தாம் வசப்படுத்திக்கொண்டு இப்படிச் செய்வதாகச் சொன்னதிலேயே இத்தனை விஷயத்தையும் கெட்டித்து அடக்கிவிட்டார். அவதாரம் மாநுஷமாகத் தோன்றுவதால் மாயைக்கு உட்பட்டது என்று நாம் கொஞ்சங்கூட நினைத்துவிடக்கூடாது என்று, 'அதுதான் எனக்கு வசம்; உங்களைப்போல் நான் அதற்கு வசமில்லை' என்றார். ("ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய'', "ப்ரக்ருதிம் ஸ்வாம் அவஷ்டப்ய'' என்ற) இரண்டு இடத்திலும் "ஸ்வாம்'', "ஸ்வாம்'' என்று போட்டு, "மாயை என்னுடையது; நான் உங்களைப்போல் மாயையின் உடைமையில்லை'' என்று காட்டினார். "ஸ்வாம்'' என்றால் "என்னுடைய''. "ஸ்வாமி'' என்றால் உடைமையாளர் என்று அர்த்தம். அவருடைய உடைமை மாயை, அதை அவர் என்ன வேண்டுமானாலும் பண்ணலாம். "வா'' என்று சொல்லி வசப்படுத்தி வைத்துக்கொண்டு விளையாடவும் விளையாடலாம்; "போ'' என்று தூக்கிப்போட்டுவிட்டு ஆத்மாராமராகவும் உட்கார்ந்திருக்கலாம்.

Koviloor Digital Library

நம் மாதிரி அவதார புருஷனுக்கும் கோபம், துக்கம், பயம் முதலானவை வர அவன் 'அலவ்' பண்ணுவான். இதைப்பற்றி ஒன்று தோன்றுகிறது : அவன் ஆத்மாவிலேயே அச்சடித்தமாதிரி உள்ளூர இருப்பதாலேயே இப்படி 'வெளியிலே மனஸுக்குப் பல தினுசு உணர்ச்சிகள்தான் ஏற்பட்டு விட்டுப் போகட்டுமே; அதனுல் நம் உள் ஸ்திதி பாதிக்கப் படுகிறதா என்ன?' என்றே அவற்றை 'அலவ்' பண்ணுகிறுன் என்று தோன்றுகிறது.

ஸாதாரணமாக ஒரு ஆத்ம ஞானி என்ருல் அவர் 'சரீரம் எப்படிப்பட்ட நிலையில் வேண்டுமானுலும் இருந்து விட்டுப் போகட்டும்! குளிரில்தான் விரைக்கட்டும், நெருப்பில்தான் பொசுங்கட்டும்! அது ஒன்றும் ஆத்மாவை பாதிக்க வில்லையே!' என்று அவர்பாட்டுக்கு இருப்பாரென்று தெரிகிறது. ஆனுல், 'மனஸும் ஆத்மாவுக்கு வேருனதுதானே? அது எப்படி வேண்டுமானுல் இருந்துவிட்டுப் போகட்டும். ஆசை, அழுகை, கோபம் எது வேண்டுமானுலும் பட்டுவிட்டுப் போகட்டும்' என்று அவர் இருப்பதாகச் சொல்வதில்லை. ஏனென்ருல் அவரும் ப்ரக்ருதி மாயைக்கு உட்பட்ட ஜீவனுகத் தோன்றியவர்தான். அந்த மாயை கொடுத்திருக்கிற மனஸ்தான் இவரை ஒரு தனி ஜீவனுக ஆக்கி வைத்தது. ஆகையால் அந்த மனஸை அடக்கிப் போட்டுவிட்டே அவர் தனியான ஜீவாத்மாவாக இல்லாமல் பரமாத்ம நிலையை அடைந்து ஞானியாயிருப்பது. அப்படியிருக்கும்போது அவர் எப்படி மனஸை மறுபடி கூப்பிட்டு வைத்துக்கொள்ள முடியும்? (மனஸுக்கே உரியதான) ஆசை, கோபம், அழுகை முதலானதுகளை 'அலவ்' பண்ண முடியும்? பகவான்தான் மாயைக்கு அதீச்வரன். அவன்தான் ப்ரக்ருதிக்கு வசப்படாமலே, தானுக, தன்னிஷ்டப்படி, ஸங்கல்பப்படி ஜீவன் மாதிரி அவதரித்தவன். அவன் பரமாத்மாவாக இருக்கிற ஞான நிலையிலிருந்து விலகுவதென்பது ஒரு போதும் நடக்க முடியாத விஷயம். 'ஞானியின் சித்ததையும் பராசக்தியான மஹாமாயை கவர்ந்து மோஹத்தில் ஆட்படுத்த

Koviloor Digital Library

முடியும்' என்று இருக்கிற மாதிரி* பகவானைப் பற்றி ஒரு காலத்திலும் சொல்லமுடியாது. ஏனென்றால் அவனுடையது, அவனை depend பண்ணிக்கொண்டே உயிர்வாழ்வதுதான் அந்தப் பராசக்தி, மாயை எல்லாமுமே! அதனால் அவன் ஒருத்தனே பகவானாக உள்ள நிலையிலோ, அவதாரமாக வருகிற நிலையிலோ மாயாமனஸைத் தன்னிச்சையாக 'வா' என்றும் கூப்பிட்டுவைத்துக்கொள்ளலாம், 'போ' என்றும் பிடித்துத் தள்ளலாம்.

மநுஷ்யாள் மாதிரி இருந்து அவர்களோடு கலந்து பழகி அவர்களுக்கு வழிகாட்டி உத்ஸாஹப்படுத்த வேண்டுமென்று அவன் அவதாரமாக வருகிறபோது வேஷம் நன்றாகப் பொருத்துவதற்காகவே கொஞ்சங்கூடத் தயங்காமல், பயப்படாமல் மனஸின் நாநாவிதமான உணர்ச்சிகளையும் 'அலவ்' பண்ணுகிறான். அதனால் ஒரு அவதார புருஷனுக்கும் கோபம் வரும், பயம் வரும், அழுகை வரும், ச்ருங்காரம் வரும். ஒரு ஞானி சரீரம் எப்படி வேண்டுமானால் ஆடிவிட்டுப் போகட்டுமே என்று இருக்கிற மாதிரியே அவதார புருஷன் மனஸூம்தான் எப்படிவேண்டுமானால் ஆடி விட்டுப் போகட்டுமே என்று விட்டுவிடுவதால்தான் இப்படியெல்லாம் நடப்பது! அப்போதைக்கு மேல்மனஸிலேதான் அவதாரத்துக்கு இந்த உணர்ச்சிகளால் பாதிப்பு இருக்கிற மாதிரியே இருக்குமே தவிர, நம் மாதிரி அந்த உணர்ச்சிகளே அவனை அடித்துக்கொண்டு போய்விடுவதென்பது ஒருபோதுமில்லை. எத்தனை ஆசை, கோபம், அழுகை இருந்தாலும் அது அவனுடைய பரமாத்ம நிலையை பாதிக்க முடியாது; லோகத்தில் அவன் முடிவாகப் பண்ணவேண்டிய தர்மஸம்ஸ்தாபனத்தைப் பண்ணி முடிப்பதற்கும் குந்தகம் ஏற்படுத்த முடியாது. கொஞ்சம் ஃபெயிலாகிறதுபோல அவன் சாய்ந்தாலும் அப்புறம் நிமிர்ந்து நின்று பாஸ் பண்ணிவிடுவான். சாய்ந்தும் நிமிர்ந்தும் ஆடுவது அவனுக்கு விளையாட்டு!

---

* 'துர்கா ஸப்தசதி' வாக்யத்தை நினைவுகூர்வது.

Koviloor Digital Library

அவதாரம் குறித்து ஐயம் கூடாது

இந்த விளையாட்டிலே அவதார புருஷன் மாயையின் ஆதீனத்தில்தான் இருக்கிறானோ என்று தோன்றுமளவுக்கும் போய்விடுவதுண்டு! அப்படி ஸந்தேஹப்படக் கூடாதென்று தான், "ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய: மாயையை நான் வசப்படுத்தி அடக்கி வைத்துக்கொண்டு" என்று பகவான் கருணையோடு 'க்ளியர்' பண்ணியிருக்கிறார்.

ஆசார்யாள் சரித்ரத்திலேயே யாருக்காவது, எங்கேயாவது, 'ஏன் இப்படிப் பண்ணினார்? காலடியில் ஒரு நதியை திசை மாற்றிக் கிட்டே ஓடப்பண்ணி, அப்புறம் நர்மதை ப்ரவாஹத்தை அடக்கி, இன்னும் ஸர்வஜ்ஞர் என்னும்படி ஸகல ஞானத்துடனும் கூடி தெய்விக சக்தராக இருந்த அவர் ஏன் இப்படி மநுஷர் மாதிரிப். பண்ணினார்? காசியில் விச்வநாதர் பஞ்சமனைப் போல் வந்தபோது ஏன் விஷயம் தெரிந்துகொள்ளாமல் அவனை தூரப் போகச் சொன்னார்? அப்புறம் அவனிடம் தாம் உபதேசம் வாங்கிக் கொண்டு நமஸ்காரம் பண்ணினார்?" என்கிற மாதிரி கேள்வி எழுந்தால் அப்போது கீதா வாக்யத்தை நினைத்துத் தெளிவு பெறவேண்டும்.

அவதாரத்திடம் மாயைக் கலப்பு இருக்கிறமாதிரிதான். ஆனால் மாயை யஜமான ஸ்தானத்திலிருந்து கொண்டு நம்மை ஆட்டிவைப்பதுபோல் அவதாரத்தை ஆட்டிவைக்க முடியாது. அவதாரம் யஜமானாக இருந்து, மாயை அந்த யஜமானுக்கு உடைமையாக, அடிமையாக இருக்கிறது. ஆனாலும் கெடுபிடி யஜமானாக இல்லாமல் விளையாட்டு விநோத யஜமானாக அவன் இருப்பதால் மாயைக்குத் தன் மேல் ஆதீனம் இருப்பதுபோலத் தோன்றுமளவுக்கு அதை ஆடவிடுகிறான்! ஆனால் சட்டென்று அதைப் "போ" என்று தள்ளியும் விடுவான். "மரமே, கண்டாயா? மட்டையே, கண்டாயா?" என்று விரஹ தாபத்தில் அழுதவனே அப்புறம் —எத்தனையோ ச்ரமப்பட்டு, ஸமுத்ரத்துக்கே அணை கட்டி

Koviloor Digital Library

பெரிசாக யுத்தம் பண்ணி ஜயசாலியாக ஆன அப்புறம்—எத்தனையோ ஆவலுடன் அந்தப் பத்னி வரும்போது, கொஞ்சங்கூட ஆசாபாசமே இல்லாமல், "கடமைக்காக உன்னை மீட்டேனே தவிர எனக்கு ஒன்றும் 'அட்டாச்மென்ட்' இல்லை. நீ எங்கேயாவது போய்க்கொள்" என்பான்! இந்த நிமிஷம் ஒரு அஸுரனைக் கொல்லும் திவ்ய சக்தி, அடுத்த நிமிஷம் ஒரு இடைச்சியிடம் அடி வாங்கிக்கொள்ளும் அபல மான மநுஷத்தன்மை என்று அவதாரம் இந்தக் கோடிக்கு அந்தக் கோடி போகமுடியும் என்று புரிந்துகொண்டால் ஸந்தேஹம் வராது. ஒரு அவதாரத்தைப்பற்றி, 'அது ஏன் இப்படி? இது ஏன் இப்படி? ஒரே மாறுபாடாயிருக்கிறதே!' என்று கேள்வி கேட்கமாட்டோம்.

முன்னெப்போதுமில்லா தர்மக் குலைவு

அவதாரத்தைப் பற்றி க்ருஷ்ண பரமாத்மா சொன்னது தான் ஸ்ரீ சங்கராவதாரத்தை ஏற்படுத்திவிட்டது. தர்மம் நலிந்து, அதர்மம் பெருகும்போதெல்லாம் அவதரித்து தர்ம ஸம்ஸ்தாபனம் செய்கிறேன் என்று சொல்லிவிட்டா ரல்லவா? அந்த வாக்கைப் பரிபாலனம் பண்ணிக்காட்ட வேண்டிய சூழ்நிலை அவர் பரமபத ஆரோஹணம் செய்து இரண்டாயிரம் - இரண்டாயிரத்தைநூறு வருஷங்களுக்கு அப்புறம் ஏற்பட்டது. அந்தக் காலத்து தேச ஸ்திதியை நிறையச் சொல்லியாயிற்று.

சுருக்கமாகச் சொல்வதென்றால் க்ருஷ்ணாவதார காலத்தில் ப்ரவ்ருத்தி - நிவ்ருத்தி தர்மங்களுக்கு ஹானி ஏற்பட்டிருந்தது போலவே...இல்லை, அதைவிடப் பலமடங்கு தீவிரமாக, இப்போது ஏற்பட்டிருந்தது.

க்ருஷ்ணர் காலத்தில் ப்ரவ்ருத்தி மார்க்கம் யோகமாக அநுஷ்டிக்கப்படாமல் வெறும் கர்மாநுஷ்டானமாக ஸ்வர்காதி பலன்களுக்காகவே பின்பற்றபட்டதென்றால், இப்போது அதோடுகூடவே, அதைவிட மோசமாக இன்னொன்றும் நடந்தது. வெறும் கர்மாநுஷ்டான

Koviloor Digital Library

மாகவாவது அவர்கள் வேதத்தில் சொல்லியுள்ள காரியங்களைப் பின்பற்றினார்கள் அல்லவா? இப்போதோ அந்த வேதோக்த கர்மாக்களை அடியோடேயே புறக்கணிப்பவர்களும் நிறைய ஏற்பட்டுவிட்டார்கள். நிவ்ருத்தியிலும் இப்போது ஞானம் மாதிரியே ஒரு லக்ஷ்யத்தைக்காட்டி, ஆனால் சூன்யத்திலோ, அல்லது எதுவும் முடிவு செய்வதற்கில்லை என்ற த்ரிசங்கு ஸித்தாந்தத்திலோ கொண்டுபோய்த் தள்ளுவதாக மதங்கள் ஏற்பட்ட மாதிரி முன் எப்போதும் இருந்ததில்லை.

ஆக, ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி தர்மங்களை ரக்ஷித்து ஸம்ஸ்தாபனம் செய்ய நிச்சயமாக பகவானின் அவதாரம் ஸம்பவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

கீதா வாக்ய பரிபாலனம் : பிரச்னையும் தீர்வும்

கீதா வாக்யத்தில் ஒரு சின்ன இடறல் இந்தப் புதுச் சூழ்நிலையில் ஏற்பட்டது. அவதாரம் பண்ணி தர்மத்தை நிலைநாட்ட வேண்டியதுதான். அதில் ஸந்தேஹம் இல்லை, இடறல் இல்லை. பின்னே எதில் என்றால்,

பரித்ராணாய ஸாதூநாம், விநாசாய ச துஷ்க்ருதாம்

என்றாரே, அதில்தான் (இடறல்). "ஸத்துக்களுடைய ரக்ஷணைக்காகவும், அஸத்துக்களுடைய அழிவுக்காகவும், அவதாரம் எடுக்கிறேன்" என்று கீதையில் சொன்னார். சங்கராவதார ஸமயத்தில், முதலில் சொன்ன ஸாது ரக்ஷணையைப் பற்றி ச்ரமமிருக்கவில்லை. மற்ற பூர்வ அவதாரங்களின்போது இருந்த அளவு (ச்ரமம்) கூட (இப்போது) இருக்கவில்லை. ஏனென்றால், முன்னெல்லாம் பொதுவாக ஜனங்கள் எல்லாருமே ஸத்துக்களாகத்தான் இருந்தார்கள். எனவே அத்தனை பேரை 'பரித்ராணம்' என்பதாகக் கட்டி காப்பது என்றால் ச்ரமமான கார்யமாகத்தான் இருந்திருக்கும். எதையும் ஸாதிக்க வல்லவனான ஈச்வரனின் அவதார

Koviloor Digital Library

மானதால் அவனால் இதைச் செய்யமுடிந்தது. இப்போது கலியிலே அவதரிக்கும்படியான இந்த ஸந்தர்பம் வந்த போது ஸத்துக்கள் பூர்வயுகங்களைவிட ரொம்பக் குறை வாகவே இருந்தார்கள். அதனால் இப்போது ஏற்பட வேண்டிய அவதாரத்திற்கு ஸாதுரக்ஷணை—"பரித்ராணாய ஸாதூநாம்" என்ற பாதி—முன்னளவுகூட ச்ரமமில்லாமல் ஸுலப ஸாத்யமான காரியமாகவே இருந்தது.

ஆனால் இன்னொரு பாதி, "விநாசாய ச துஷ்க்ருதாம்" என்று தப்புப் பண்ணுபவர்களை அழிப்பதைச் சொன்னாரே, அதிலேதான் பரமாத்மாவுக்கே க்ருஷ்ணாவதாரத்தில் சொன்ன வாக்குப்படிப் பண்ணுவதென்பது 'ப்ராப்ள'மாகி விட்டது! அந்த அவதாரத்திலேயும் அதற்கு முன்னேயும் தப்புப் பண்ணுபவர்கள் அஸுரர்கள், ராக்ஷஸர்கள், சில துஷ்ட ராஜாக்கள், அவர்களைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பாகச் சில கோஷ்டிகளாக இருந்தனர். பொதுவான ஜன ஸமூஹத்திலிருந்து பிரித்து அவர்களை 'ஐஸொலேட்' பண்ண முடிந்தது. அப்படிப் பண்ணி அந்தப் பூர்வ அவதாரங்கள் தப்புப் பண்ணியவர்களை ஸம்ஹாரம் செய்தன. "விநாசாய ச துஷ்க்ருதாம்" என்று சொன்னபடிச் செய்ய முடிந்தது.

ஆனால் இப்போது ஆசார்யாள் காலத்தில் எப்படி யிருந்தது? அஸுரர், ராக்ஷஸர் என்று எவரும் வெளிப்படத் தெரியவில்லை. கம்ஸன், ஜராஸந்தன், காலநேமி போல அஸுரர் மாதிரியே நன்றாகத் தெரிந்தவர்களும் இப்போது இல்லை. துர்யோதனன் பரிவாரம் போல மநுஷர் மாதிரியே நன்றாக இருந்துகொண்டு, ஆனால் அஸுரத்தனமாக இருந்த வர்கள் க்ருஷ்ணர் காலத்தைவிட ரொம்ப நிறையப் பரவி விட்டார்கள். அதோடுகூட, துர்யோதனப் பட்டாளம் வெளிப்படவே கொடூரமாக நடந்து கொண்டதுபோல இல்லாமல், வெளியிலே பார்த்தால் நல்லது மாதிரி இருந்து கொண்டே, நல்லதைச் சொல்லிக்கொண்டும், செய்து

Koviloor Digital Library

கொண்டும் இருக்கிற மாதிரி தோன்றிக்கொண்டே, ஏராள மான பேர் அதர்மமாகப் பண்ணுவதென்பதும் இந்த யுகத் துக்கே ஸ்பெஷலாகச் சேர்ந்தது! மொத்தத்தில், 'துஷ்க்ருத்' கள் என்று கீதையில் சொல்லியிருக்கும் 'கெட்டது செய்கிற வர்'களை ஜனஸமூஹத்திலிருந்து பிரித்து நாசம் செய்து விட்டு ஸாதுவான ஜன ஸமூஹத்தை ரக்ஷிப்பது என்பதற்கு இந்த யுகத்தில் இடமில்லாமல் அபூர்வமான சில ஸத்துக்களைத் தவிர ஜனஸமூஹம் முழுவதுமே அதர்ம ப்ரவாஹத்தில் முழுகித் தப்புப் பண்ணிக் கொண்டிருந்தது. இந்த நிலையில் "விநாசாய ச துஷ்க்ருதாம்" என்று செய்வதானால் அத்தனை பேரையும் ஹதம் பண்ணி விடுவது என்றுதான் ஆகும்! இப்படியொரு "யுனிவர்ஸல் ஹாலோகாஸ்ட்" (ஸர்வ ஜீவ ஸர்வ நாசம்) செய்வதா தர்ம ஸம்ஸ்தாபனம்? பின்னாடி எப்போதோ வரவேண்டிய ப்ரளயத்தை உண்டு பண்ணு வதா அவதார லக்ஷ்யம்? மநுஷர்களோடு ஈச்வரனும் அன்பிலே பழகுவது, அப்படியே தர்மத்துக்கு வழிகாட்டி அழைத்துப் போவது என்று எதுவுமில்லாமல் ஸர்வ நாசம் செய்வதென்றால் அப்போது தர்மமும் ஸம்ஸ்தாபன மாகாமல் நசித்துப் போக வேண்டியதுதான். இப்படி ஒரு அவதாரம் பண்ணவே முடியாது. அவதார 'பர்ப' ஸுக்கே அது விரோதம்.

இதைத்தான் பரமாத்மாவுக்கு 'ப்ராப்ளம்' என்று சொன்னது. அஸுரன் என்று வெளியில் யாருமில்லாமல் ஸர்வ ஜனங்களுக்குள்ளேயும் புகுந்து கொண்டிருக்கும் போது எப்படி ஸம்ஹரிப்பது? விச்வாமித்ரருக்கு யாகம் செய்யணுமென்று தர்மமான எண்ணம் இருந்தது. அஸுரர் என்று வெளியிலே இருந்த சிலர் இடைஞ்சல் பண்ணினார் கள். ராமர் போய் அவர்களை வதைத்து—துஷ்க்ருத்களை விநாசம் செய்து—யஜ்ஞ ரக்ஷணமும் ஸாது பரித்ராணமும் பண்ணினார். கலியில் விச்வாமித்ரர் இருந்தால் அவருடைய மூளைக்குள்ளேயே அஸுரன் போய், முதலுக்கே அவருக்கு யாகம் செய்யத் தோன்றியிருக்காது! இப்படி தர்ம கார்யங் கள் அருபமான துஷ்ட சக்திகளால் நின்று போய்விடுகிற

Koviloor Digital Library

ஸமயத்தில் ஒரு அவதாரத்தைக் கொண்டு துஷ்ட சிக்ஷணம், சிஷ்ட ரக்ஷணம், தர்மோத்தரணம் ஆகியவற்றைச் செய்வ தென்றால் எப்படி?

நம்மாலானால் இதற்கு ஸொல்யூஷன் கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். பரமாத்மாவானதால் ஸுலப மாகக் கண்டுபிடித்துவிட்டார்! "கலிகால அவதாரங் களில் துஷ்ட ஜனங்களை ஸம்ஹரிப்பதில்லை. ஜனங்களுக் குள்ளே புகுந்துகொண்டிருக்கும் துஷ்டத்தனத்தையே ஸம்ஹரிக்கவேண்டும். இப்படிப் பண்ணி ஜனங்களை நல்லவர்களாக்கிவிடவேண்டும். 'விநாசாய ச துஷ்க்ருதாம்' — 'கெட்டகார்யம் செய்பவர்களுடைய அழிவின் பொருட்டு' — என்பதற்கு ஒரு அமென்ட்மென்ட் போட்டுவிட்டால் போதும். 'துஷ்க்ருதாம்' (கெட்டகார்யம் செய்பவர் களுடைய) என்பதை 'துஷ்க்ருத்யானாம்' (கெட்டகார்யங் களுடைய) என்று 'அமென்ட்' செய்துவிட்டால் போதும்" என்று (பரமாத்மா) ஸொல்யூஷன் கண்டுபிடித்துவிட்டார்!

லோகம் பூரா நடக்கும் கோடி கோடி தப்புக் கார்யங்களை எப்படி அழிப்பது, அது மட்டும் முடியுமா என்றால்: அந்தக் கார்யங்களை அழிக்க வேண்டாம். அவை விளைவுதான். இந்த விளைவுக்குக் காரணமுண்டு. வித்து உண்டு. வித்தை ஊன்றினால்தானே விளைச்சல் வரும்? காரியத்துக்கு வித்து எண்ணம். கெட்ட எண்ணம் முதலில் தோன்றி, அதன் நிறைவேற்றத்திற்காகவே அப்புறம் கெட்ட கார்யம் தோன்றுகிறது. ஆனபடியால் ஜனங்களுடைய கெட்ட எண்ணம் போகும்படியாக, அதாவது அவர்களுடைய அறிவு திருந்தும்படியாகப் பண்ணிவிட்டால் போதும். அவதார நோக்கமான தர்ம ஸம்ஸ்தாபனம் நடந்துவிடும்.

'அறிவு திருந்தும்படி எப்படிப் பண்ணுவது? வேறே எப்படி? எல்லாருக்கும் தெரிந்ததுதான்: நல்லதை நல்ல படியாக எடுத்துச் சொல்வதால்தான். ஞானோபதேசத்தி னால்தான். வாயுபதேசம் மட்டும் போதாது. வாழ்க்கை உதாரணத்தோடு அது கலந்து வந்தால்தான் பலன் தரும்.

Koviloor Digital Library

அதனால் ஞானியாக அவதாரம் செய்யணும். ஞானி என்றால் ஸந்நியாஸியாக அவதாரம் செய்யணும்' என்றிப்படி பகவான் தீர்மானம் பண்ணிவிட்டார்.

ஏன் ஸந்நியாஸியாக அவதாரம்?

ஸந்நியாஸிதான் ஞானியாக இருக்கமுடியுமென்பதில்லை. "ஒரு சண்டாளன்கூட ஞானியாயிருக்கிற பக்ஷத்தில் அவனே என் குரு" என்று நம்முடைய ஆசார்யாளே ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். அந்தக் கதை அப்புறம் கேட்போம். ஆனாலும் இந்த மாதிரி எங்கே வேண்டுமானாலும் ஞானி தோன்றுவதென்பது அபூர்வமாக நடப்பதுதான். அதில் நாம் பயிற்சி கொடுத்துப் பண்ணும்படியாக ஒன்றுமில்லை. உபதேச குரு என்றால் அவர் ஒரு 'ஸிஸ்டம்'ப்படி பயிற்சி கொடுத்தே சிஷ்யர்களை ஞானமடையச் செய்யணும். ஆகையால் இவரும் அப்படி 'ஸிஸ்டம்'த்தில், அதாவது ஸம்ப்ரதாய பூர்வமாக, அதாவது சாஸ்த்ரோக்தமான முறையில் போய் ஞானியானவராக இருந்தால்தான் பொருத்தமாயிருக்கும். அபூர்வமாக ஞானிகள் எந்தச் சூழ்நிலையில் வேண்டுமானாலும் தோன்றலாமென்றாலும், பொதுவாக அந்த பரிபக்வத்தைப் பெற சாஸ்த்ரங்கள் கூறியுள்ள விதி என்னவென்றால், உசந்த முறையில் ப்ரஹ்மசர்யமோ, க்ருஹஸ்தாச்ரமமோ வகித்த பிற்பாடு ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு, உபநிஷத்துக்களில் ஜீவ-ப்ரஹ்ம ஐக்யத்தைப் பற்றிச் சொல்லும் மஹாவாக்யங்களை அநுஸந்தானம் பண்ணிப் பண்ணியே (தீர்க்கமாக த்யானம் செய்தே) ஞானம் அடையவேண்டும் என்பதுதான். அம்மாதிரி அவதாரத்தில் நடத்திக் காட்டுவதுதான் யுக்தம் என்று ஸ்வாமி நினைத்தார். எல்லாம் அசாஸ்த்ரீயமாகப் போய்க் கொண்டிருந்த காலத்தில் சாஸ்த்ரம், அதன் கட்டு ஆகியவற்றில் ஜனங்களுக்கு மதிப்பும் பிடிப்பும் ஏற்படுத்தித் தருவது தான்அவதார நோக்கம். அப்படியிருக்கும்போது, ஒரு சாஸ்த்ரமுமில்லாமல் எங்கே வேண்டுமானாலும் ஞானி

Koviloor Digital Library

தோன்றலாம் என்ற விதத்தில் அவதாரமே இருந்துவிட்டால் நோக்கத்திற்கே அது எதிராகத்தானே ஆகிவிடும்? ஒரு மநுஷ்ய ஜீவன் அடையக்கூடிய மிகவும் உச்ச நிலையான ஞானத்திற்கே சாஸ்த்ரம் வேண்டியதில்லையென்றால், அப்புறம் ஒரு உபதேசமும் வேண்டாம், அதைச் செய்யும் அவதாரமும் வேண்டாம் என்றாகிவிடும்! அல்லது அப்போது பரவியிருந்த அசாஸ்த்ரிய, அவைதிக மதங்கள் மாதிரி இன்னொன்றை உபதேசிக்கத்தான் அவதாரம் என்றாகிவிடும். ஆனால் அவதார லக்ஷ்யமே என்ன? வேத சாஸ்த்ரத்தை நிலை நாட்டுவதுதான். தர்ம ஸம்ஸ்தாபனம், தர்ம ஸம்ஸ்தாபனம் என்று சொன்னதெல்லாம் வேத ஸம்ஸ்தாபனத்தைத்தான். அதிலும் இந்தஅவதாரம் முடிந்த முடிவாக வேதம் சொன்ன அத்வைதத்தையே தன்னுடைய சிகரமான பணியாக நிலை நாட்டி, நிவ்ருத்தி மார்க்க ஸந்நியாஸிக்கே அதில் அதிகாரம் என்று தெளிவாக வழி வகுத்துத் தரவேண்டுமென்று ஸ்வாமி ஸங்கல்பித்திருந்தார். அதனால் அவதார மூர்த்தியும் விதிவத்தாக ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு ஞானம் பெற்றதாகவே காட்டவேண்டுமென்றாயிற்று.

பௌத்த, ஜைன மதஸ்தர்களுங்கூட ஞானத்துக்கே தங்களை 'டெடிகேட்' செய்து கொள்பவர்கள் பிக்ஷுக்களாக வேண்டுமென்றுதானே வைத்திருந்தார்கள்?

ஸந்நியாஸியான குருவாக அவதாரம் செய்வதென்று முடிவாயிற்று.

ஸந்நியாஸியாயில்லாத க்ருஷ்ணரும் ஞானோபதேசம் செய்தாரென்றாலும் அது அவர் செய்த அநேக கார்யங்களில் ஒன்றுதான். அந்தக் காலத்தில் அந்தமட்டும் செய்ததே போதுமாயிருந்தது. ஜீவிதத்தின் பின் பாகத்தில் மாத்திரம் கொஞ்சம் உபதேசம் செய்தே அவர் 'ஜகத்குரு' பட்டத்தைத் தட்டிக்கொண்டு போய்விட்டார்! த்வாரகையில் ராஜ்ய பாரம் வஹிப்பது, பதினாறாயிரம் பத்னிகளோடு குடும்பம் நடத்துவது, பாண்டவர்களைப் போய்ப் போய்ப் பார்த்துக் கொள்ளுவது, தூது போவது, தேரோட்டுவது, பக்தானுக்

Koviloor Digital Library

ரஹம் பண்ணுவது, நரகாஸுராதிகளை வதம் பண்ணுவது— என்று, அவர் பண்ணாத கார்யமில்லை. அதில் ஒன்றாக உபதேசமும் செய்தார். 'இப்போது அப்படி முடியாது. ஆயுஸ் முழுக்க ஸந்நியாஸ குருவாக இருந்துகொண்டு உபதேசம் ஒன்றையே செய்தால்தான் முடியும்' என்று ஸ்வாமி தீர்மானித்தார்.

க்ருஹஸ்தனுக்கு சாஸ்த்ரங்களில் ஏகப்பட்ட கர்மாநுஷ்டானங்களைக் கொடுத்திருக்கிறது. அவனுக்கு எத்தனையோ குடும்பப் பொறுப்புக்கள். அதிதி ஸத்காரம் (விருந்தோம்பல்), இன்னும் அநேக விதமான ஸமூஹத் தொண்டுகள் எல்லாம் அவன்தான் செய்யவேண்டும். இதெல்லாம் போகத்தான் உபதேசிப்பது என்றால் அன்றைய (ஆசார்யாள் காலத்திய) அபாயமான சூழ்நிலையில் போதவே போதாது. ஆகையினால் இந்தப் பொறுப்புக்களும், இத்தனை கர்மாநுஷ்டானங்களும் இல்லாத ஸந்நியாஸிதான், 'உபதேசமே கர்மா; அதுவே தன் பொறுப்பு' என்று 'டெடிகேட்' செய்துகொண்டு ஞான ப்ரசாரத்திற்காக உழைத்துக் காட்டவேண்டும் என்று ஏற்பட்டது.

இந்த அவதாரத்திலே பாரத தேசம் முழுக்க ஸஞ்சாரம் செய்து, நாடு பூரா பரவியிருந்த தப்பான மதங்களை வாதங்களினால் நிராகரணம் பண்ணி, ஸத்யமான வேதாந்த மதத்தை ஸ்தாபிக்க வேண்டியிருந்தது. அதாவது அவதாரமாக வருகிறவர் ஸதா காலமும் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும் என்ற அவச்யம் ஏற்பட்டிருந்தது. குடும்பப் பொறுப்புள்ள க்ருஹஸ்தன் எப்படி இந்த மாதிரி எப்பவும் ஊர் சுற்றிக்கொண்டே இருக்கமுடியும்? மாறாக, ஸந்நியாஸிக்குத்தான் 'எப்பவும் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டே இருக்கணும்; ஒரே இடத்தில் அதிக நாள் இருந்தால் 'லோகல் அட்டாச்மென்ட்'கள் உண்டாகி விடுமாதலால் இடம் மாறிக்கொண்டே இருக்கணும்' என்று சாஸ்த்ரமே விதி செய்திருக்கிறது. இதுவும் இப்போது ஸந்நி

Koviloor Digital Library

யாஸ அவதாரம் ஏற்படுவதற்கு ஒரு முக்ய காரணமாயிற்று. நாலு ஆச்ரமங்களில் ஸந்நியாஸாச்ரமம்தான் ஸஞ்சாரத்திற்கு யோக்யமான ஆச்ரமம். பிரம்மசாரியாகப்பட்டவன் 'அந்தேவாஸி' என்பதாக குருவோடு கூடவே சேர்ந்து வஸிக்க வேண்டியவன். குருகுலவாஸமே விதிக்கப்பட்ட அவன் ஸஞ்சார வாழ்க்கை நடத்தமுடியாது. க்ருஹஸ்தன் மற்ற ஆச்ரமிகளை ஆதரிப்பதும், தன்னுடைய குடும்ப பரணம் செய்வதுமான கடமையை ஸ்வக்ருஹத்திலேயே இருந்து கொண்டுதான் செய்யமுடியும். அவனும் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டே இருக்க முடியாது. வானப்ரஸ்தனும் காட்டில் ஒரே இடத்தில் இருந்துகொண்டுதான் வ்ரத நியம தபோநுஷ்டானங்களைப் பண்ணவேண்டும் என்று சாஸ்த்ரம். ஸந்நியாஸி மட்டுந்தான் சாஸ்த்ர விதிப்படியே ஒரே இடத்தில் ஜாஸ்தி நாள் தங்காமல் ஸஞ்சரித்துக்கொண்டே இருக்கவேண்டியவன். ஆகையினால் அப்படிப்பட்ட ஒரு அவதாரத்தினால்தானே தேசம் பூராவுக்கும் உபதேசம் தருவதான கார்யம் நடக்க முடியும்?

க்ருஷ்ணர் க்ருஹஸ்தராக இருந்துகொண்டு ஞானோபதேசம் செய்தாரென்றாலும் ஊர் ஊராகப் போய் தேசத்தின் ஸகல வித்வத் ஸமூஹத்துக்குமா உபதேசித்தார்? ஒரு அர்ஜுனனுக்கும் ஒரு உத்தவருக்கும் மட்டுமே ஒவ்வொரு ஸமயத்தில் மாத்திரம் உபதேசம் பண்ணினார். தாமே ஸ்வாமி என்று உபதேசத்திற்கு நடுவிலேயே அர்ஜுனனுக்கு விச்வரூபம் காட்டி நிச்சயப்படுத்தினார். உத்தவருக்குத் தனக்காகவே தெரியும், இவர் ஸ்வாமி என்று. ஸ்வாமி என்ற பிறகு க்ருஹஸ்தாச்ரமியா, அதுவா, இதுவா என்றெல்லாம் பார்க்காமல் அந்த இரண்டு பேரும் உபதேசத்தை பக்தியோடு ஏற்றுக்கொண்டார்கள். அப்புறம் அவர் பரமபதம் போய், லோகமெல்லாம் அவர் ஸ்வாமிதான் என்று புரிந்துகொண்ட பிறகு, பரீக்ஷித்து, ஜனமேஜயன் ஆகியவர்களின் காலத்தில் அந்த உபதேசங்கள் வ்யாஸாசார்யாளின் பாகவத, பாரதங்களின் மூலம் லோகத்துக்கு ப்ரசார

Koviloor Digital Library

மாயின*. ஸாக்ஷாத் பகவதவதாரத்தின் உபதேசம் என்பதால் எந்த ஆச்ரமத்திலிருந்துகொண்டு அவர் உபதேசித்தார் என்று கேள்வி கேட்டுக் கொண்டிருக்காமல் எல்லோரும் உபதேசங்களை ஏற்றுக்கொண்டார்கள். அவதாரமாக லோகத்தில் வாழும்போது, அவதார லக்ஷணப்படி எல்லாருக்கும் எல்லாக் காலத்திலும் தம்மை தெய்வமாகத் தெரிவித்துக் கொள்ளாமல், மாநுஷமாகவே நிறைய வேஷம் போட்டு விட்டு, அப்புறம் ஒரு தலைமுறை, இரண்டு தலைமுறைக்குப் பிற்பாடு லோகம் தம்மை தெய்வமாகத் தெரிந்துகொண்ட பிறகே தம்முடைய ஞானோபதேசம் எல்லாருக்கும் ப்ரகாசிக்கும்படியாக க்ருஷ்ண பரமாத்மா செய்தார்.

இப்போதோ வீடு பற்றி எரிகிறபோது உடனே ஜலத்தைக் கொட்டி அணைக்க வேண்டுமென்பது போன்ற நிலையாக இருந்தது. ஒரு காலத்தில் அவதாரமாகி உபதேசம் செய்வது, ஆனாலும் அந்த உபதேசம் அப்போதே ப்ரசாரமாகாமல், லோகத்தைக் காக்க வைத்து அவதாரத்தை அவதாரமென்று அது புரிந்துகொண்ட அப்புறமே ப்ரசாரமாகச் செய்வது என்று காலஹரணம் செய்ய முடியாத சூழ் நிலையாயிருந்தது. அதர்ம, அஞ்ஞான நெருப்புப் பிடித்துக் கொண்டிருந்த லோகத்தில் அப்போதேதான் ஞானோபதேசத்தை வர்ஷித்து அணைக்கவேண்டும் என்றிருந்தது. ஆனால் அவதார காலத்திலேயே ஆச்ரமத்தைப் பார்க்காமல் ஈச்வராவதாரமென்று எல்லாருக்கும் எப்போதும் தெரியும்படி இருப்பதென்றாலோ, ஒரு அவதாரமென்றால் அது மாநுஷமாகவும் இருந்துதானாக வேண்டும் என்று நாம் பல காரணங்களைக் கொண்டு தெரிந்துகொண்டோமே,

---

* பஞ்ச பாண்டவர்களை அடுத்துப் பட்டமேற்ற பரீக்ஷித்தின் இறுதிக் காலத்தில் வியாஸரின் புதல்வரான சுகர் அவனுக்கு உபதேசித்த பாகவதத்தில் 'உத்தவ கீதை' இடம் பெறுகிறது. பரீக்ஷித்தை அடுத்துப் பட்டமேற்ற ஜனமேஜயனின் ஸர்ப்ப யாகசாலையில் வியாஸரின் சீடரான வைசம்பாயனர் உபந்நியஸித்த மஹாபாரதத்தில் அர்ஜுனனுக்கு உபதேசமான 'பகவத் கீதை' இடம் பெறுகிறது.

Koviloor Digital Library

அந்தப்படி பண்ணமுடியாமலாகி, அவதாரத்தின் லக்ஷணங்கள் லக்ஷ்யங்கள் இரண்டிற்குமே பாதகம் ஏற்படும். ஆனபடியால் ஸந்நியாஸாச்ரமத்தில்தான் அவதாரம் இருக்க வேண்டுமென்றும், அவதார புருஷர் லோகத்தில் உள்ள போதே எல்லாருக்கும் ப்ரகாசமாக உபதேசம் செய்துவிட வேண்டுமென்றும் ஆயிற்று.

குறிப்பாக, இந்த்ரியக் கட்டுப்பாடு போதாத இந்தக் கலிகாலத்தில் க்ருஹஸ்தன் ஞானோபதேசம் செய்தால் ஸந்தேஹத்திற்கும் பரிஹாஸத்திற்கும் இடமாகும். ஜனங்களெல்லாம் பலவிதத்தில் ஹிபாக்ரிஸி பண்ணிக்கொண்டிருக்கும்போது, 'பார்த்தால் க்ருஹஸ்தாச்ரமம், பண்ணுவதோ ஞானோபதேசம்' என்று, தங்களைப் போலவே அந்த ஆஸாமியும் ஒன்று என்று, ஜனங்கள் பரிஹாஸமாக நினைப்பார்கள். இந்த்ரியக் கட்டுப்பாடு இந்த யுகத்தில்போதவே போதாது, சபலத்தின் இழுப்பு இப்போது ஜாஸ்தி என்பதால்தான் ஐம்பது வயஸுக்கு மேற்பட்டு பத்னியோடுகூட இருந்துகொண்டே, ஆனாலும் தாம்பத்ய போகம் இல்லாமல், தபோவ்ரதங்கள் செய்வதான வானப்ரஸ்தம் கலியில் வேண்டியதில்லை என்று சாஸ்த்ராபிப்ராயம் இருக்கிறது. நன்றாகப் பதமாகிறமட்டும் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே இருந்துவிட்டு நேரே ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளும்படியாக இந்த யுகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

முக்யமாக இந்த அவதாரம், நிவ்ருத்தி மார்க்கத்தில் ஞானம் பெற்றே மோக்ஷமடையமுடியும் என்ற உபநிஷத அபிப்ராயத்தை முடிவாகச் சொல்லவந்தது. எனவே அது ஸந்நியாஸியாயில்லாமல் வேறெப்படியும் இருக்கமுடியாதென்று ஆகிவிட்டது. ப்ரவ்ருத்தியிலிருப்பவர் நிவ்ருத்தியை அந்தரங்க ஸாதனமாகச் சொல்வது பெரிய முரண்பாடல்லவா?

இப்படிப் பல காரணங்களால், கலி பிறந்து ஸுமார் 2500 வருஷத்துக்கப்புறம், ஈச்வரன் குருவாக

Koviloor Digital Library

அவதாரம் பண்ண வேண்டுமென்றும், அப்படி ஞானவதாரமாக வருபவர் ஸந்நியாஸியாகவே இருக்கவேண்டும், ஆயுஸ் முழுக்க அப்படியிருந்து உபதேசம் பண்ணவேண்டும் என்றும் முடிவாயிற்று. பகல் வேளையில் எப்போதோ ஒரு ஸமயம் மானம் (வானம்) மூடிக்கொண்டு இருட்டிப்போவது போல க்ருஷ்ணர் காலத்தில் ஏற்பட்டதால் அப்போதைக்கு அவர் ஒரு தீபத்தை ஏற்றி வைத்தால் போதுமானதாயிருந்தது. இப்போது ஒரே ராக்காலமாகவே ஆகிவிட்டதால் அவதார புருஷர் ஆயுஸ்காலம் பூராவும் நிறைய விளக்குப் போட்டாகவேண்டும் என்றாயிற்று. மனோ விகாரங்களும், விகல்பமான எண்ணங்களும் ஜனங்களுக்கு ஜாஸ்தியாகிவிட்டதால் அவதாரம் தாம்பத்ய வாழ்க்கையே இல்லாமல் இருக்கவேண்டுமென்றும் ஆயிற்று.

ஆசார்யாள் பூர்ணமாக மநுஷாயுஸ் பூலோகத்தில் இருக்கவில்லை, முப்பத்திரண்டே வயஸுதான் இருந்தாரென்று தெரிந்திருக்கும். அதாவது இத்தனை கலிப்ரவாஹத்தையும் அடக்குவதற்கு அத்தனை ஸ்வல்ப காலமே போதும்படியாக அப்பேர்ப்பட்ட ஞான சக்தியோடும் க்ரியா சக்தியோடும் அவதாரம் ஏற்பட முடிந்தது என்று தெரிகிறது. முப்பத்திரண்டு வருஷமென்ன, சொடக்குப்போடும் நாழியிலேகூட ஈச்வர சக்தியால் ஸாதிக்க முடியாததாக எதுவாவது உண்டா? ஆனால் நரலீலைக்காக அவதாரம் என்று ஆடிக் காட்டுவதில் இப்படி 32 வருஷமென்று ஸங்கல்பம் செய்யப்பட்டது. அதை ரொம்பவுமே லீலா விநோதமாகப் பண்ணினார். எப்படியென்றால், முதலில் தம்முடைய ஸ்வய ஸங்கல்பப்படி எட்டே வயஸு இருக்கிறமாதிரியும், அப்புறம் முதலை வாயிலிருந்து தப்புகிறபோது எட்டைப் பதினாறுக்கிக் கொண்டாற்போலவும், பதினாறு முடிந்தபோது வ்யாஸர், ப்ரம்மா ஆகியவர்களுடைய விருப்பப்படி இன்னும் ஒரு பதினாறு கூட்டிக்கொண்ட மாதிரியும் விளையாட்டுப் பண்ணினார். ஆனால் முதலிலேயே பரமேச்வரன் ப்ளான் போட்டதுதான்,—தாம் முப்பத்திரண்டு வருஷம் ஸந்நியாஸ

Koviloor Digital Library

குருவாயிருந்தே அத்வைத க்ரந்தங்களை எழுதி அவற்றை தேசம் பூரா ஸஞ்சாரம் பண்ணிப் பிரசாரம் செய்ய வேண்டுமென்பது.

ஸரி. ஆனால் 32 வருஷம் என்பது புருஷாயுஸ் இல்லை. புருஷாயுஸ் (என்பது) நூறு வருஷம். இந்த அவதாரம் அப்படிப் பூர்ணாயுஸ் கொண்டதாகவோ, அல்லது எண்பது தொண்ணூறு வயஸ் ஜீவிப்பதாகவோ இருந்து, அதில் முதலில் மற்ற ஆச்ரமங்களை வஹித்துவிட்டுக் கடைசி 32 வருஷம் மட்டும் ஸந்நியாஸியாயிருக்க முடியுமல்லவா? ‘அப்படியெல்லாம்கூட க்ருஹஸ்தாச்ரமக் கலப்பு இருக்கவே கூடாது. அவதார கார்யத்தைப் பண்ணுவதற்கு 32 வருஷம் போதுமா? அப்படியானால் அந்த 32 வருஷமும் ஸந்நியாஸி யாயிருந்துவிடவேண்டும். ஜீவிதம் பூராவும் ஞானோபதேசமே கார்யமாயிருந்துடணும். இந்தக் கலியுகத்தில் அவதாரமாக வரும்போது க்ருஹஸ்தாச்ரம வாடையே காட்டப்படாது’ என்று பரமேச்வர ஸங்கல்பமாயிற்று.

ப்ரம்மசர்ய ஆச்ரமத்திலும்

[சில நிமிஷங்கள் யோசனையில் இருந்தபின் :] இந்த அவதாரத்தில் ஆயுஸ் முழுக்க உபதேசம், ஸந்நியாஸம் என்றால் முழுக்கவே இல்லை. முதலில் கொஞ்சம் வருஷம் ப்ரஹ்மசர்யம், குருகுலவாஸத்தில் பூர்த்தியாக வித்யாப் யாஸம்; அப்புறந்தான் ஸந்நியாஸமும், உபதேசம் பண்ணு வதும்.

அவதார கார்யத்திற்கு 32 வருஷம் தேவைப்பட்ட தென்று நான் சொன்னது ஸரியில்லை. அதைவிடவும் ஒரு எட்டு வருஷம் குறைச்சலாகவே போதுமென்றிருந்தது.

திடீரென்று ஒரு குழந்தை உபதேசம் செய்கிறதென்றால்’ இது ஏதோ தெய்விகமான அத்புதம் என்று ஆகிவிடும். தெய்விகமும், மநுஷத்தன்மையும் கலந்திருப்பதான அவதார லக்ஷணத்துக்கு இது பங்கம் உண்டாக்கிவிடும்.

Koviloor Digital Library

ஒரு தெய்வக் குழந்தையை ஜனங்கள் எப்படித் தங்களுக்கான 'மாடல்'ஆக நினைத்துப் பின்பற்ற முடியும்? அதன் உபதேசம் தங்களுக்கும் அநுஷ்டான ஸாத்யம் என்று எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? ஒரேயடியாய் உச்சஸ்தானத்தில் அமர்த்தப்பட்ட அவதாரத்துக்கும் அப்போது ஜனங்களோடு கலந்து பழகும் ஆசை நிறைவேறாது. உபதேச குருவாக வருகிறபோதே ஒரு உச்சஸ்தானம், ஒதுக்கம் எல்லாம் வரத்தான் செய்யும். ரொம்பவும் நியமமாயிருந்துகொண்டு ஞான வைராக்யங்களை உபதேசித்துக்கொண்டிருப்பவர் மற்ற அவதாரங்களைப்போல ஜனங்களோடு அத்தனை 'இன்டிமஸி' யுடன் உறவு கொண்டாட முடியாதுதான். ஏதோ கொஞ்சத்தில் கொஞ்சம் முடிவதும் அவர் அற்புத லேபிள் ஒட்டிக்கொண்டே பிறந்தாரானால் அடியோடு போய்விடும்!

அதனால், "க்ருஹஸ்தாச்ரமத்தின் மூலம் மநுஷ்யனுக்கு 'மாடல்'ஆக எத்தனையோ பாடங்களைக் காட்டத்தான் நமக்கு அடியோடு முடியாதென்றாலும், ப்ரஹ்மசாரியாக இருந்தாவது அதில் 'மாடல்'ஆக இருந்து காட்டுவோம்" என்று பரமாத்மா நினைத்தார்.

ப்ரம்மசர்ய ஆச்ரமம் வஹிப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. என்னவென்றால், வேத வழியை நிலை நாட்டுவதே அவதார நோக்கமாயிருக்க, வேதத்தின் கர்ம ஸம்பந்தம் என்பதே இல்லாத ஸந்நியாஸியாகவே அவதாரம் ஆயுஸ் முழுக்க இருந்துவிட்டால் எப்படி? ஸந்நியாஸிக்கும் (உபநிஷத்துக்களின்) மஹாவாக்யங்களால் வேத ஸம்பந்தம் இருக்கிறதென்றாலும், பெரும்பாலான ஜனங்கள் பண்ணக்கூடியது அவன் பண்ணும் மஹாவாக்ய விசாரம் அல்லவே! அவர்களுக்கானது வைதிக கர்மாக்கள் தானே? அதாவது, ப்ரவ்ருத்தி மார்க்கம்தான். அதுவோ க்ருஷ்ணர் காலத்தையும்விட இப்போது கெட்டுப் போயிருந்தது. வர்ண விபாகம் வேண்டாம் என்ற மதங்கள் இப்போதுதான் பரவி, வைதிக கர்மாநுஷ்டானத்திற்கு பெரிய ஹானி உண்டாக்கி வந்தன. இந்த ஸமயத்தில்

Koviloor Digital Library

தோன்றும் ஒரு அவதாரம் நிவ்ருத்திக்கான சித்த பரிபக்வம் பெற்ற கொஞ்சம் பேருக்கு மட்டும் அத்வைதத்தைச் சொல்லி விட்டுப் போய்விட்டால் எப்படி ஸரியாயிருக்கும்? லோகத்தில் பொதுலாக எப்படி தர்ம ஸம்ஸ்தாபனம் ஏற்படும்? முடிந்த முடிவாக ஞான லக்ஷ்யத்தைக் காட்டி நிவ்ருத்தியை நிலை நாட்டுவதே இந்த அவதாரத்தின் தலையான உத்தேச மானாலும், ஆரம்பமும், மத்தியும் இல்லாமல் முடிவுக்கு எப்படிப் போவது? லோகம் பூராவுக்கும் தர்ம ஸம்ஸ்தாபனம் என்னும்போது ப்ரவ்ருத்தி தர்மத்தில், அதாவது வேதோக்தமான கர்மாநுஷ்டானத்தில் பெரும்பாலான ஜனங்களை ஊக்கி உத்ஸாஹப்படுத்தாமல் ஒரு அவதாரம் முடிந்து போவதற்கில்லை. வியவஸ்தைகள் கெட்டுப்போய் ஜனங்களெல்லாம் ரொம்பவும் அசாஸ்த்ரீயமாகக் கார்யங்களைச் செய்துகொண்டிருக்கும்போது அவர்களுக்கு சாஸ்த்ரோக்தமான கர்மாக்களில் ஈடுபாடு ஏற்படுத்தித் தரவேண்டியது அவதாரத்தின் முக்யமான கடமையாக ஆகியிருந்தது. ஆகையால் பெருவாரியான ஜனங்களை உத்தேசித்து வைதிக கர்மாநுஷ்டானம், ஆச்ரம வ்யவஸ்தைகள் ஆகியவற்றையும் (இந்த அவதாரத்தில்) வலியுறுத்திச் சொல்லத்தான் வேண்டும் என்று ஸ்வாமி நினைத்தார்.

சொன்னால் மட்டும் போதாதே! சொன்னதை ஸொந்த வாழ்க்கையில் எக்ஸாம்பிளாக நடத்திக் காட்டினால்தானே சொல்லுக்குச் சக்தி ஏற்படும்? ஆனால் வைதிக கர்மாநுஷ்டானமில்லாத ஸந்நியாஸி எப்படி அதற்கு எக்ஸாம்பிளாக வாழ்ந்து காட்ட முடியும்?

இதை ஸமாளிக்கவுந்தான், ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தில் முதலில் இருந்துவிட்டு அப்புறம் ஸந்நியாஸியாவது என்று தீர்மானம் பண்ணினார். க்ருஹஸ்தன் மாதிரி அத்தனை யாகயஜ்ஞாதி கர்மாக்கள் ப்ரம்மசாரிக்கு இல்லாவிட்டாலும் இவனுக்கும் அநேக வைதிக அநுஷ்டானங்கள் உண்டு. ஆதலால், 'வழிகாட்டியாக ப்ரம்மசர்யாச்ரமத்திலிருந்து கொண்டு செய்ய முடிந்ததையெல்லாம் செய்யலாம்

Koviloor Digital Library

-வேதாத்யயனம் பண்ணலாம்;ஸமிதாதானம் பண்ணலாம்; பிக்ஷை எடுத்து வரலாம்; இந்த ஆச்ரமத்திற்குரிய நான்கு வ்ரதங்களை அநுஷ்டிக்கலாம்; இதெல்லாம் வறட்டு வறட்டு என்று வெறும் கார்யமாகப் போய்விடாமல் ஹ்ருதயம் கலந்து ப்ரியமாக, பணிவாக குரு சுச்ரூஷை பண்ணலாம்— 'பெர்ஃபெக்டா'க இப்படி நடத்திக் காட்டிவிட்டு அப்புறம் ஸந்நியாஸத்திற்குப் போகலாம். அசாஸ்த்ரீயமாக பல பிக்ஷுக்கள் இந்த நாளில் தோன்றியிருக்கிற மாதிரி இல்லாமல், 'இந்தக் குழந்தை ஸந்நியாஸி யார் தெரியுமா வாம்? நியமமாக குருகுலவாஸம் பண்ணிவிட்டு, அப்புறம் சாஸ்த்ரோக்தமாக, குருமுகமாக (ஸந்நியாஸ) தீக்ஷை வாங்கிக்கொண்ட குழந்தையாம்' என்று லோகம் பேசும்படியாக நடத்திக் காட்டவேண்டும். க்ருஹஸ்தனுயிருந்து தார-புத்ராதிகள், அதிதிகள் ஆகியவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்துகாட்ட முடியாவிட்டாலும், ப்ரஹ்மசாரியாயிருந்து ஆசார்ய ஸேவை, தாயாருக்குச் செய்ய வேண்டிய தொண்டு ஆகியவற்றை சுத்தமாக நடத்திக் காட்ட வேண்டும். வேத சாஸ்த்ரங்களில் லோகத்துக்கு மறுபடி பிடிப்பு ஏற்படுத்தித் தரவேண்டிய அவதாரம், ஒரு சாஸ்த்ரமும் தேவையில்லாத அதிவர்ணாச்ரம ஞானியாகப் பிறந்து விடாமல், ப்ரஹ்மசாரியாகவாவது இருந்து சாஸ்த்ரோக்தமான கர்மாக்களைச் செய்து அப்புறமும் சாஸ்த்ரோக்தமாக ஸந்நியாஸ தீக்ஷை பெற்று, அந்த ஆச்ரமத்துக்கான நியமங்களைப் பின்பற்றிக் காட்டுவதுதான் முறை" என்று பரமாத்மா நினைத்தார்.

நல்ல வேளையாக ஒருத்தனுக்கு நான்கு ஆச்ரமங்களும் 'கம்பல்ஸரி' தான் என்று வைக்காமல் நல்ல பக்வம் அடைந்தவனுனல் ப்ரம்மசாரி க்ருஹஸ்தாச்ரமம் ஏற்காமல் அந்த ஆச்ரமத்திலேயே ஆயுஸ் முழுதும் இருக்கலாம்— 'நைஷ்டிக' ப்ரஹ்மசாரி என்று இருக்கலாம்—என்றும், இன்னும்கூட மனஸ் பக்வப்பட்டு விவேக வைராக்யம் நிரம்பியிருந்

Koviloor Digital Library

தால் ப்ரஹ்மசர்யத்திலிருந்தே ஸந்நியாஸாச்ரமத்திற்குப் போகலாமென்றும் சாஸ்த்ரங்களில் இருக்கிறது. போதாயனர், கௌதமர், வஸிஷ்டர், உசனஸ், அங்கிரஸ், யமன், காத்யாயனர், வ்யாஸர் ஆகியவர்கள் கொடுத்துள்ள ஸ்ம்ருதிகளில் (தர்ம சாஸ்த்ரங்களில்) இப்படி இருக்கிறது. ஜாபால ச்ருதியும் யோக்யதாம்சமுள்ள ப்ரஹ்மசாரி நேரே ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளலாம் என்கிறது. "ஆகையினுல் இந்த அவதாரத்தில் அப்படித்தான் பண்ண வேண்டும். குழந்தையாகவும் ப்ரஹ்மசாரியாகவும் முதலில் ஒரு எட்டு வருஷம் இருந்துவிட்டு அப்புறம் ஸந்நியாஸியாகி அவதார கார்யத்தை முடிக்கலாம். க்ருஹஸ்தாச்ரமம் என்ருல் இந்த யுகத்து ஜனங்களுக்கு விகல்பமான எண்ணங்கள் தோன்றுவதுபோல ப்ரஹ்மசர்யாச்ரமத்தைப் பற்றி இல்லாததால் இந்த மாதிரிப் பண்ணலாம்" என்று தீர்மானித்தார்.

அந்தண குல அவதாரம்

இன்னென்றும் நினைத்தார்.

க்ருஷ்ணர் அநேக விதமான கார்யங்கள் செய்ததில் துஷ்ட சிக்ஷணமும் நிறையச் செய்தார். ராமரும் மநுஷ்யர்களுக்கு எக்ஸாம்பிளாகவே வாழ்க்கை நடத்தியதோடுகூட நிறைய துஷ்ட சிக்ஷணமும் பண்ணினுர். மத்ஸ்யத்திலிருந்து மற்ற அவதாரங்களெல்லாம் முக்யமாகப் பண்ணியதும் துஷ்ட சிக்ஷணம்தான். தன் ராஜ்யத்தில் துஷ்டர்களின் ஆட்சி ஏற்படாமல் ஒரு ராஜா சத்ரு ஸம்ஹாரம் செய்கிற மாதிரியே, த்ரிலோக ராஜாவாக இருக்கும் பரிபாலன மூர்த்தியான விஷ்ணு இந்த அவதாரங்களில் செய்திருக்கிருர். அதாவது க்ஷத்ரிய கார்யத்தைச் செய்திருக்கிருர். இதை வெளிப்படத் தெரிவிப்பதுபோலக் கடைசியான ராம-பலராம-க்ருஷ்ணுவதாரங்கள் மூன்றிலும் க்ஷத்ரியராகவே அவதாரம் செய்தார்.

இப்போது கலியிலே துஷ்ட சிக்ஷணமே முடியாது, உபதேசந்தான் செய்வது என்பதாக அவதாரம் ஏற்பட

Koviloor Digital Library

விருந்தபோது, அதற்குப் பொருத்தமாக ஸாத்விக குணத்தோடு, ஆசார்யனாக இருந்துகொண்டு உபதேசிப்ப தற்கே ஏற்பட்ட ப்ராம்மண ஜாதியில் அவதரிப்பதுதான் யுக்தமாயிருக்குமென்று திவ்ய ஸங்கல்பமாயிற்று.

க்ருஷ்ணர் கொடுத்த வாக்குறுதிப்படிதான் ஆசார்யாள் அவதரித்தது என்றாலும் அந்த அவதாரத்துக்கும் இதற்கும் வித்யாஸமாகப் பல பார்த்ததில் இதுவும் ஒன்று: அதிலே க்ஷத்ரிய தர்மத்தை முக்யமாகப் பண்ணிக் காட்டியது- இதிலே ப்ராஹ்மண தர்மம் ஒன்றை மட்டுமே பண்ணி காட்டியது.

ஜனங்களில் அத்தனை லெவல்களில் இருக்கிறவர்களையும் அவரவருக்குப் பிடித்தமாதிரி செய்து காட்டி ஆகர்ஷித்தவர் க்ருஷ்ண பரமாத்மா. ஒரு திருடனாகட்டும், ஒரு காமுக னாகட்டும், ஒன்றும் தெரியாத இடைப் பசங்களாகட்டும்— அவர்கள் ஒவ்வொருத்தருங்கூட, 'அட, இவன் நம்மைச் சேர்ந்தவண்டா!' என்று நினைத்து வந்து ஒட்டிக்கொள்ளும் படியாக நவநீத சௌர்யம் (வெண்ணெய் திருடல்), ராஸக்ரீடை, மாடு மேய்ப்பது எல்லாமும் பண்ணினார். ஞானாசார்ய ஸந்நியாஸியாக எடுக்கும் அவதாரத்தில் அந்த மாதிரியெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்கமுடியுமா? இந்த வித்யாஸங்களோடு அதிலே க்ஷத்ரிய தர்மம், இதிலே ப்ராஹ்மண தர்மம் என்று அநுஸரித்துக் காட்டியதும் சேர்கிறது.

ஒரே தர்ம ஸம்ஸ்தாபனமே உத்தேசமானாலும் ஸந்தர்ப்ப சூழ்நிலையைப் பொருத்து அவதாரத்துக்கு அவதாரம் எப்படி ஒரேயடியாக வித்யாஸமாயிருக்கிறது என்பதற்காகச் சொல்ல வந்தேன்.

விஷ்ணு அவதாரமும் சிவாவதாரமும்; சிவ-விஷ்ணு ஒற்றுமை வேற்றுமைகள்

க்ருஷ்ணாவதாரத்தைத் திரும்பத்திரும்பக் குறிப்பிட்டு, அவர் சொன்ன கீதையையும் திரும்பத்திரும்ப quote பண்ணி,

Koviloor Digital Library

அதோடு ஆசார்யாள், ஆசார்யாள் என்று முடிச்சுப் போட்டால் ஒரு கேள்வி வரலாம்: "ஆசார்யாள் பரமசிவ அவதாரமென்றுதான் கேள்விப்பட்டிருக்கிறோம். க்ருஷ்ணர் மஹாவிஷ்ணுவின் அவதாரம். அப்படியிருக்க, அவர் அந்த மாதிரி பண்ணினார், இவர் இந்த மாதிரி பண்ணினார். ஆனாலும் அவர் கீதையில் சொன்ன வாக்குபடிதான் இவர் அவதரித்ததே; காலச் சூழ்நிலை மாறுபட்டதால் அவதார வாழ்க்கைமுறை மாறுபட்டாலும் கீதையில் சொன்ன அதே தர்ம ஸம்ஸ்தாபன நோக்கத்தைத்தான் பூர்த்தி பண்ணினார்" என்றால் எப்படி?"

அப்பா! சிவன், விஷ்ணு என்று முழுக்கவும் பேதப்பட்டு இரண்டு பேர் இல்லை. ஒரே பரமாத்மா போட்டுக் கொண்டுள்ள இரண்டு ரூபபேதங்கள்தான் அவர்கள்.

"ப்ரச்நோத்தர ரத்னமாலிகா"வை முடிக்கிற இடத்தில் ஆசார்யாள் ஒரு கேள்வி கேட்கிறார்:

"கச்ச பகவான்?" "பகவான் என்பது யார்?"

"மஹேச: சங்கரநாராயணாத்மைக:" என்று பதில் கொடுக்கிறார்.

வேதாந்தத்தில் ஈச்வரன் என்றும், ஈசன் என்றும் சொன்னால் சிவன் என்று அர்த்தமில்லை. ஜகத் வியவஹாரத்தையெல்லாம் நடத்திக் கொண்டிருக்கும் மஹா சக்தியான ஸகுண ப்ரம்மத்தைத்தான் 'ஈசவரன்' என்று அங்கே சொல்வது. "மஹேச:" என்னும்போது மஹிமை வாய்ந்த ஈசனான அந்த ஸகுண ப்ரஹ்மம்தான் பகவான் என்று ஆசார்யாள் பதில் கொடுத்துவிடுகிறார். உடனே அடுத்த கேள்விக்குப் போய்விடவில்லை. "முக்யமாக நம் மதத்தில் சைவர், வைஷ்ணவர் என்று இரண்டு பிரிவு இருப்பதால், 'மஹேசன்' என்றால் அதோடு விடமாட்டார் கள். பகவான் 'யார்?' என்று கேட்ட மாதிரியே, 'மஹேசன் என்றால் யார்? சிவனா, விஷ்ணுவா?' என்று கேட்பார்கள்"

Koviloor Digital Library

என்று ஆசார்யாள் நினைத்து, அதற்கும் பதிலைச் சேர்த்துச் சொல்லிவிட்டார் :

"மஹேச:, சங்கர-நாராயணாத்மைக:" "சங்கர-நாராயண -ஆத்மா-ஏக :".

"சங்கரன், நாராயணன் இருவருக்கும் ஆத்மாவாக இருக்கப்பட்ட ஏக வஸ்து", அல்லது, "சங்கரன், நாராயணன் இருவராகவும் உள்ள ஆத்மா என்ற ஏக வஸ்து,"—அதுதான் பகவான், அதுதான் மஹேசன்.

இருக்கிற அத்தனையும் ஒரே ஆத்மா அல்லது ப்ரம்மம்தான். அதுவே சிவன், அதுவே விஷ்ணு.

"அதுவே எல்லாமாய், எல்லாருமாய், நாமாகவுங்கூட இருக்கும்போது, இந்த இரண்டு பேரைக் குறிப்பாக ஏன் அப்படிச் சொன்னார்?"

அதுதான் நம் எல்லோருமாகவும்கூட இருப்பது என்பது வாஸ்தவந்தானப்பா! ஆனால் நம்மில் ஒருத்தருக்கொருத்தர் நாமேதான் மற்றவரும் என்று தெரிகிறதா? தெரிந்தால் இத்தனை போட்டி, அஸூயை, த்வேஷம் இருக்குமோ? நாம் ஆத்மாதான் என்பதாவது நமக்குத் தெரிகிறதா? ஈச்வரனும் (சிவனும்) மஹாவிஷ்ணுவும் இப்படியில்லை. அவர்களுக்குத் தாங்கள் ஆத்மாவான ப்ரஹ்மம்தான் என்று நன்றாகத் தெரியும். அதோடு ஈச்வரனுக்குத் தானே மஹாவிஷ்ணு என்று தெரியும். மஹா விஷ்ணுவுக்கும் தானே ஈச்வரன், அதாவது சிவன் என்று தெரியும்.

லோக நாடக தர்பாரில் ஒரே பரமாத்மா பல ரூபங்களை எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றும் ஒரு இலாகாவை நிர்வஹித்து விளையாடும்போது, மாயா ப்ரபஞ்சத்தை நடத்தி வைத்து ப்ரவ்ருத்தி தர்மத்தைப் பரிபாலிக்கும் சக்ரவர்த்தியாக மஹாவிஷ்ணுவும், ப்ரபஞ்சத்திலிருந்து விடுவித்து மோக்ஷத்தை அருளும் நிவ்ருத்தி தர்ம மூர்த்தியாகப் பரமசிவனும் பொதுவில் இருப்பார்கள். சிவன் மோக்ஷம் தருவதில் இரண்டு வகை. ஒன்று—தகுதி பார்க்

Koviloor Digital Library

காமல் ஸகலருக்கும் ஸம்ஸார விடுதலை தருவது. ப்ரளயத்தில் அப்படித்தான் எல்லா ஜீவர்களுக்கும் ரெஸ்ட். ஆனால் இது சாச்வதமில்லை. மறு ஸ்ருஷ்டியில் அவர்கள் திரும்பவும் ஸம்ஸாரத்தில் பிறக்கத்தான் வேண்டும். இன்னொரு வகை தான் சாச்வத மோக்ஷம்: தகுதி பெற்றவர்களுக்கு மாத்திரம் ஞானத்தை அளித்து ஸம்ஸாரத்திலிருந்து விடுவிப்பது. இதுதான் என்றைக்கும் சாச்வதமாயிருக்கிற மோக்ஷம். பரமசிவன் இந்த இரண்டுவித மோக்ஷங்களையும் இரண்டு விதமான அவஸரங்களில் (கோலங்களில்) அருளுகிறார். தகுதியில்லாதவர்களுக்கு ஒரு ப்ரளயத்திற்கும் மறு ஸ்ருஷ்டிக்கும் இடையிலுள்ள அவ்வளவு நீண்ட காலம் ஸம்ஸார நீக்கம் தருவதுகூட கர்ம நியதிக்கும் நீதிக்கும் பொருந்தாத 'ஓவர்' - கருணைதான் என்பதால், அதைக் கொஞ்சம் ஈடுகட்டுவதற்காக அப்போது ஜீவர்களை பயமுறுத்துகிற மாதிரி ருத்ரன் என்ற பெயரில் ஸம்ஹார மூர்த்தியாகி ப்ரளயம் என்று கோரமாகக் காட்டுகிறார். தகுதியுள்ளவர்களுக்குப் பரம சாந்தமாக ஞானநுக்ரஹம் செய்து நித்ய மோக்ஷத்தில் சேர்க்கும்போது தக்ஷிணாமூர்த்தியாக சாந்தமான ஸௌம்ய ரூபத்தில் இருக்கிறார்.

பொதுவிலே இப்படி மஹாவிஷ்ணு - மாயா லோக நிர்வாஹம், பரமேச்வரன் - ஞான மோக்ஷ ப்ரதானம் என்று தோன்றும்படியிருந்தாலும், பரமாத்மாவின் லீலையே "unity in diversity" (வேற்றுமையில் ஒற்றுமை) என்பதில் தானே இருக்கிறது? அதனால் இரண்டும் ஒரே பரமாத்மா என்று காட்டும்படியாக அவ்வப்போது இந்த இரண்டு பேர்களும் தங்கள் இலாகாக்களைக் கொஞ்சம் பரஸ்பரப் பரிவர்த்தனையும் பண்ணிக்கொள்வார்கள்! தங்களுடைய ஐக்ய பாவத்தை (ஒற்றுமையை) இப்படி விளையாடிக் காட்டுவார்கள்.

எல்லா அவதாரங்களிலுமே மஹாவிஷ்ணு துஷ்ட ஸம்ஹாரம் பண்ணினார், அவர் கையால் ஸம்ஹாரமானவர்கள் மோக்ஷத்திற்கே போனார்கள் என்னும்போது அவர்

Koviloor Digital Library

பரமேச்வரனின் ருத்ர கார்யத்தைத்தானே பண்ணியிருக்கிறார்?

வேதம் சிவபரமாக ஸூக்தங்களையும் யஜ்ஞங்களையும் கொடுத்திருக்கிறது; விஷ்ணு பரமாகவும் அதே மாதிரி கொடுத்திருக்கிறது. இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி அடைமொழிகளைத்தான் கொடுத்து, பேதமேயில்லை என்று காட்டுகிறது. ஸ்ம்ருதிகளிலும் அப்படித்தான். புராணங்களைப் பார்க்கும்போதுதான் சைவமான புராணங்கள், வைஷ்ணவமான புராணங்கள் என்று இருப்பதில், பேதப்படுத்தி, 'இதுதான் ஒசத்தி; இல்லை, இன்னொன்றுதான் ஒசத்தி' என்று காட்டுவதாகத் தோன்றும். ஆனாலும் ஆதார சாஸ்த்ரங்கள் என்று 'அதாரிடி' பார்த்தோமானால் முதலில் ச்ருதி (வேதம்), அப்புறம் ஸ்ம்ருதி, அப்புறந்தான் புராணம் என்று வரும். அது மட்டுமில்லாமல் புராணங்களையேகூட ஆழ்ந்து பார்த்தால் ஒவ்வொன்றிலும் சில இடத்திலாவது, 'பேதமே கிடையாது, இரண்டும் ஒன்றுதான்' என்ற அபிப்ராயம் தத்வோபதேசமாக மட்டுமின்றி, நன்றாக மனஸில் தைக்கிற மாதிரி கதா ரூபமாகவேகூட விளக்கப்பட்டிருக்கும். அவரவர் மனஸுக்கு ஏற்றபடி இஷ்ட தெய்வமாக வரித்த மூர்த்தி ஒன்றிடமே சித்தம் சிதறாமல் ஒருமுகப்பட வேண்டுமென்றே ஒசத்தி—தாழ்த்தி சொல்லியிருப்பதெல்லாம் என்று புரியும்.

ஆகையால் சிவ - விஷ்ணுக்களை ஒரேயடியாக பேதப்படுத்தி நினைப்பது ரொம்பத் தப்பு. பூர்ண வைதிகமாக ஆசார்யாள் மறுபடி ஸ்தாபித்த ஸ்மார்த்த ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு சிவ - விஷ்ணு பேதம் இருக்கவே கூடாது என்றுதான் அவர் வைத்திருக்கிறார். ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் காட்டுகிற அபேதத்தையே அவர்கள் பின்பற்ற வேண்டுமென்று வைத்திருக்கிறார்.

க்ருஷ்ணராக வந்தபோது அப்படித்தான், தாம் வேறில்லை, ஈச்வரன் வேறில்லை என்று அவர் ப்ரூவ் பண்ணிக்

Koviloor Digital Library

காட்டினர். மஹாவிஷ்ணுவின் அவதாரமானலும், பரமேச்வரனுக்குரியதாகக் கருதப்படும் ஸம்ஹாரம், ஞானேபதேசம் இரண்டையும் நன்றாகச் செய்து காட்டினர். எல்லா அவதாரங்களிலுமே ஸம்ஹார மூர்த்தியாக இருந்திருக்கிறரென்றாலும், இங்கே அந்த 'ஆஸ்பெக்ட்'டை நன்றாகவே 'அன்டர்-லைன்' பண்ணிக் காட்டினர். அர்ஜுனனுக்கு விச்வரூப தர்சனம் கொடுக்கும்போது,

"திவ்யம் ததாமி தே சக்ஷு:, பச்ய மே யோகம்-ஐச்வரம்"*

—"உனக்கு தெய்விகமான பார்வை கொடுக்கிறேன். அதைக்கொண்டு, ஈச்வரனுக்குரியதான யோக சக்தியை என்னிடத்தில் பார்" என்கிறர்.

இங்கே 'ஈச்வரன்' என்னும்போது வேதாந்தம் சொல்லும் ஸகுண ப்ரம்மத்தைச் சொன்னரா? அல்லது, வ்யவஹாரத்தில் பரமசிவனையே 'ஈச்வரன்' என்று சொல்லும் அர்த்தத்தில் சொன்னரா?

வெகு காலமாக உலக வழக்கம் பரமசிவனையே ஈச்வரன் என்று சொல்வதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. (அகராதியான) 'அமர கோச'த்திலேயே சிவனுடைய பெயர்களைச் சொல்லும்போதுதான், "ஈச்வர: சர்வ ஈசாந:" என்று இருக்கிறது. காளிதாஸனுடைய வாக்கு உத்தமமான வியவஹாரம். அவர் 'ரகுவம்ச'த்தில்,

"ஹரிர்-யதைக: புருஷோத்தம ஸ்ம்ருத:
மஹேச்வரஸ்-த்ர்யம்பக ஏவ நாபர:" (III. 49)

—"எப்படி விஷ்ணு ஒருத்தரே புருஷோத்தமன் என்றும் த்ரிநேத்ரரான சிவன் ஒருத்தரே மஹேச்வரன் என்றும் கருதப்படுகிறர்களோ, அப்படி..." என்று ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொண்டு போகிறர். பரமசிவனைப் புருஷோத்தமன் என்று சொல்லும் வழக்கமே கிடையாது.

---

* கீதை XI - 8.

Koviloor Digital Library

'புருஷ உத்தமன்' தான் 'பெரும் ஆள்'— 'பெருமாள்' என்று ஆனது. பெருமாள் கோவில் என்றால் விஷ்ணு ஆலயம் தானே? சிவனுடையதில்லையே? அப்படியே, ஈச்வரன் கோவில் என்றால்...'

இப்படி 'அமரகோசம்', மஹாகவியின் வாக்கு, லோக வ்யவஹாரம் மூன்றிலும் ஈச்வர சப்தத்தால் குறிக்கப்படும் சிவனை க்ருஷ்ண பரமாத்மா சொன்னாரா, அல்லது வேதாந்த பரிபாஷைப்படி ஸகுண ப்ரம்மத்தைச் சொன்னாரா என்று கேட்டால், இந்த இடத்திலே சிவனைச் சொன்னதாகத்தான் அடுத்தாற்போல் நடப்பதிலிருந்து தெரிகிறது.

அடுத்தாற்போல் என்ன நடக்கிறது? பகவான் விச்வ ரூபம் காட்டுகிறார். ஆனால் மாயா மோஹனனாக ஜகத் பரிபாலனம் பண்ணி விளையாடும் மஹாவிஷ்ணுவாகவா அந்த விச்வரூபத்தில் அவர் (தம்மைக்) காட்டினார்? இல்லை. ப்ரளய கால ருத்ரனாகத்தான் காட்டினார்! அவரே,

"காலோ (அ)ஸ்மி லோக-க்ஷய-க்ருத் ப்ரவ்ருத்த :
(XI. 32)

—"உலகை அழிக்கும் மஹாபலம் கொண்ட காலனாக இருக்கிறேன்" என்கிறார்! கால காலனான பரமசிவனுக்கே மஹா காலன் என்று பெயர். உஜ்ஜயினியில் அந்தப் பெயரில்தான் ஜ்யோதிர்லிங்கமாயிருக்கிறார்.

பரம லாவண்ய மூர்த்தியாக வேணுகானம் பண்ணுபவனை இந்த உக்ரரூபத்தில் பார்க்கவே அர்ஜுனனுக்குக் குலை நடுங்குகிறது! ஸம்ஹார மூர்த்தியாக, ஆகாசத்துக்கும் பூமிக்குமாக விச்வரூப தர்சனம் தந்தால்? அர்ஜுனன் "ஐயோ, அப்பா!" என்று அலறிப் புடைத்துக் கொண்டு, "இந்த உன்னுடைய உக்ரரூபத்தைப் பார்த்து த்ரிலோகமும் நடுங்குகிறது. ததா (அ)ஹம்: நானும் அப்படியே! அக்னிஜ்வாலை வீசும் உன் கண்ணைப்பார்த்தால், காப்ராவில் என் தைர்யம் போன இடம் தெரியவில்லை! உன் கோரைப்பல்லையும், ப்ரளயாக்னி வீசும் வாயையும்

Koviloor Digital Library

பார்த்தால் எனக்கு திக்குத் திசையே புரியவில்லை! இங்கே (போர்க்களத்தில்) கூடியிருக்கிற அத்தனை ராஜாக்களும், கௌரவ ஸமூஹமும், பீஷ்ம த்ரோணாதிகளும், கர்ணனும், நம்படைகள் உள்பட எல்லாரும் நீ பயங்கரமாகத் திறந்து கொண்டிருக்கும் வாய்க்குள் போய் அரைபட்டு, உன் பல்லுக்கு நடுவில் சூரணமாக ஈஷிக்கொண்டிருக்கிறார்களே!" என்றிப்படி விலவிலத்துப்போய் பெரிய ஸம்ஹாரமூர்த்தியாகத்தான் அந்த விச்வரூபத்தை வர்ணிக்கிறான்.

பூமாதேவி துஷ்ட அரசர்களின் பாபத்தைத் தாங்க முடியாமல் முறையிட்டதன் பேரில்தான் க்ருஷ்ணவதாரமானது பூபாரம் தீர்ப்பதான ஸம்ஹார உத்தேசத்துடன் ஏற்பட்டது. 'விநாசாய ச துஷ்க்ருதாம்' என்று ருத்ரனின் ஸம்ஹார க்ருத்யம் மற்ற அவதாரங்களிலும் நடந்தது தானென்றாலும், க்ருஷ்ணவதாரத்திலேயே அது ஒரு நீண்ட ஆயுஸுக்காலத்தில் ஆரம்பத்திலிருந்து ஏறக்குறைய கடைசிவரை நெடுக நடந்தது.

மத்ஸ்ய, வராஹ, நரஸிம்ஹ அவதாரங்களில் சட்டென்று ஒரு ஸந்தர்பத்தில் ஆவிர்பாவம், ஒரு அஸுரனை அல்லது அஸுரக் கூட்டத்தை வதம் செய்வது என்பதோடு ஸரி. கூர்மம் அமிருதம் கடைந்தகாலத்தில் மத்தாக இருந்த மந்தர மலையைத் தாங்கியதோடு ஸரி. வாமனாவதாரம் ப்ரம்மசாரியாக சில வருஷங்கள் லோகத்திலிருந்து, மஹாபலிக்கு ஸம்ஹாரம் என்று சொல்ல முடியாத பரமாநுக்ரஹமாகப்பண்ணியே அவனிடமிருந்து பூலோக, ஸ்வர்கலோகங்களை மீட்டது. பரசுராமர் ரொம்பவும் நீண்டகாலம், 21 தலைமுறை துஷ்டராஜாக்களை ஸம்ஹாரம் செய்தாலும் தனியாட்களைத்தான் கொன்றாரே தவிர ஸேனை ஸேனையாக வதம் செய்யவில்லை. ராமர் முதலில் பால்யத்தில் ஸுபாஹு மாரீசரோடு ஒரு சின்ன ராக்ஷஸ கோஷ்டி, அப்புறம் பல வருஷத்திற்கு அப்புறம் தண்டகாரண்யத்தில் விராதன், பிறகு 14,000 கர, தூஷணாதி ராக்ஷஸர்கள், அதற்கப்புறம் மிகப் பெரிய ராவண ஸைன்யம் என்று நாலைந்து

Koviloor Digital Library

ஸந்தர்ப்பங்களில்தான் ஸம்ஹாரம் செய்தார். நடுவில் கபந்தன், வாலி மாதிரியான தனி ஆஸாமிகளின் வதமும் நடந்தது. பிற்பாடு லவணாஸுரவதம் சத்ருக்னனால் நடந்தது. க்ருஷ்ணர்தான் பிறந்தவுடன் பூதனையில் ஆரம்பித்து, அப்புறம் சகடாஸுரன், த்ருணாவர்த்தன், பகாஸுரன் என்று கம்ஸன் வரையில் போய் ஒரு பட்டாளத்தை பால்யத்திலேயே ஸம்ஹரித்து விட்டு, அப்புறம் எழுபது எண்பது வருஷம் ஒன்று மாற்றி இன்னொன்று என்று—ஜராஸந்தனின் பெரிய ஸேனையைத் திரும்பத் திரும்ப அழித்து, காலயவனன் போன்றவர்களையும் மறைமுகமாகக் கொன்று, அப்புறம் ருக்மிணி விவாஹத்தில் மச்சினன்மார்களுடனேயே சண்டை (கொல்லவில்லை), நரகாஸுரனுடன் யுத்தம், பாண்டவர்களைக் கருவியாகக்கொண்டு மிகப் பெரிய மஹாபாரத யுத்தம், தாத்தாவான பிறகுகூட பேரன் அநிருத்தனை ஜெயிலில் வைத்த பாணாஸுரனுடன் யுத்தம் என்று விடாமல் பண்ணி ருத்ர பாவத்தை நன்றாகக் காட்டினார். அவரே ஸ்பஷ்டமாக,

காலோஸ்மி லோக க்ஷயக்ருத் ப்ரவ்ருத்த: |
லோகாந் ஸமாஹர்த்தும் இஹ ப்ரவ்ருத்த: ||

"நான் லோகத்தை அழிக்கும் பலவானான காலனாக இருக்கிறேன். லோகங்களை ஸம்ஹரிக்கவே இங்கே வந்திருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

இது மிகைப்படுத்திச் சொன்னதுதான். வாஸ்தவத்தில் அவர் லோகம் முழுதையும் ஸம்ஹாரம் செய்து விடவில்லை. அவதாரத்தை முடித்தபோது லக்ஷோபலக்ஷம் கௌரவ—பாண்டவர்கள் செத்துப்போய், யது வம்சமும் அழிந்து போயிருந்தாலும் அப்போதும் நிறைய ப்ரஜைகள் பாக்கியிருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் மேல்தான் பரீக்ஷித்து ஆட்சி செலுத்தினான். ஏன் மிகையாகச் சொன்னாரென்றால், ...இவரே தேரை ஓட்டிக்கொண்டு வந்து அர்ஜுனனை யுத்த பூமியில் நிறுத்தியிருக்கும்போது அவன், 'யுத்தமா,

Koviloor Digital Library

பண்ணுவதா?' என்று முரண்டு பண்ணுகிறான். 'டேய், நீ இல்லாவிட்டாலும் நானே தீர்த்துக் கட்டி விடுவேண்டா! அதுதான் என் ஸங்கல்பம். உனக்கு வெற்றி வீரன் என்று யசஸ் சேர்க்கணுமென்றே போனால் போகிறதென்று உன்னை எனக்குக் கருவியாக 'சூஸ்' பண்ணினேன்' என்று பகவான் அவனுக்குச் சொல்ல வருகிறார். அது அவனுக்கு நன்றாக மனஸில் தைக்கணுமானால் இப்படி மிகைப்படுத்தித்தான் சொல்லணும்......ஒரு ஸத்கார்யம், ஆயிரம் ரூபாய் வேண்டியிருக்கிறது, நாமே போட்டுப் பண்ணிவிடலாம். ஆனாலும் நாலுபேருக்குப் புண்யம் வரட்டுமே என்று நினைத்து ஒருத்தனிடம் போய்க் கேட்கிறோம். அவன் மூக்கால் அழுகிறான். அப்போது, "அடேய், உன் ஸஹாயமில்லாமல் நானே லக்ஷரூபாய் போட்டுப் பண்ணிவிட முடியும்டா" என்று, —நமக்கு வேண்டியது ஆயிரம்தான், நம்மால் முடிந்ததும் அவ்வளவுதான் என்றாலும்கூட— அதை ஒரே தூக்காக லக்ஷம் என்று தூக்கித்தானே சொல்வோம்? அப்படித்தான், துஷ்ட ஜன ஸம்ஹாரத்திற்கு மட்டுமே வந்த பகவான் ஸர்வ லோகத்தையுமே ஸம்ஹரிக்க வந்ததாகச் சொன்னார்! அப்படிச் சொல்லும்போதே இப்படி ஸர்வலோக ஸம்ஹாரம் செய்வது ப்ரளய கால ருத்ரனே ஆனதால், தானும் அவனும் ஒன்றுதான் என்று தெரிவித்துவிட்டார்!

ஒரு பரமாத்மாதான்—சிவன், விஷ்ணு என்று இரண்டு ரூபத்தில். இரண்டு பேருக்கும் தாங்கள் பரமாத்மா என்று தெரியும். அதோடு ஈச்வரனுக்குத் தானே விஷ்ணுவென்றும், விஷ்ணுவுக்குத் தானே ஈச்வரனென்றும் தெரியும். கீதையில் அப்படித்தான், 'யோகம் ஐச்வரம்' என்று ஈச்வரனுக்குரிய தான யோகத்தைத் தாம் காட்டுவதாகச்சொல்லி ஸம்ஹார க்ருத்யத்தைக் காட்டினார்.

ஆனால், லோக வ்யவஹாரம் என்பதைப் பல தேவதைகள் அவரவருக்கென்று ஒரு பொறுப்புடன் நடத்துவது போலவே விளையாட வேண்டும், ராஜாங்க அதிகாரிகள் இன்னார் இன்ன இலாகா என்று கார்யம் செய்வதுபோல

Koviloor Digital Library

தேவதைகளுக்கு ஒழுங்காக வகுத்துக் கொடுத்து விளையாட்டை நடத்தவேண்டும் என்பதுதான் ஏக பரமாத்மா பல ரூபம் போட்டுக்கொண்டதற்குக் காரணம். இதில் மஹாவிஷ்ணு, ஈச்வரன் என்று இரண்டு ரூபம் எடுத்துக் கொண்டு ஒன்றில் சக்ரவர்த்தியாயிருந்து லோக நிர்வாஹம் செய்வது. இன்னொன்றில் யோகியாயிருந்து லோகத்தி லிருந்து ஜீவர்களை விடுவிப்பது என்று விளையாட்டுப் பண்ணு கிறார். இது நிரந்தர விடுதலை.

முன்னேயே சொன்னாற்போல, விடுவிப்பதில் இரண்டு தினுஸு. நிரந்தரமாக விடுவிப்பது ஒன்று. அது ஞானத் தினாலேயே நடப்பது. அதைச் செய்வதற்காக ஞான ஸ்வரூப மான தக்ஷிணாமூர்த்தி யோகியாயிருக்கிறார். இன்னொன்று, தாற்காலிகமாக விடுவிப்பது. ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெற லாயக்கே இல்லாதவர்களுக்கும், 'ஐயோ, பாவம்!' என்று தாற்காலிகமாக ஓய்வு தருவது. அதுதான் ப்ரளயம். 'ப்ரளயம்' என்ற வார்த்தையைக் கேட்டால் பயங்கரமாக இருந்தாலும் அதற்கு நிஜ அர்த்தம், 'நன்றாகப் பரமாத்மா வின் அமைதியில் லயித்துப் போவது' என்பதே. ப்ர-லயம்: 'ப்ர', நன்றாக; 'லயம்', லயிப்பது. 'ஸம்ஹாரம்' என்று கோர க்ருத்யமாகத் தெரிவதற்கும் அர்த்தம், ஸ்ருஷ்டியில் வெளிவந்ததை ஆதியிலிருந்த அமைதி நிலைக்கே பழையபடி இழுத்துச் சேர்த்துவைப்பது என்பதுதான். ஆனால் இது நிரந்தரமான முக்தியில்லை. முக்தியில் பரமாத்மாவுடன் ஜீவாத்மா மறுபடி பிரிக்கமுடியாமல் ஒன்றாகப் போய்விடும். லயிப்பது என்றாலோ லயம் கலைந்தபிறகு அடுத்த ஸ்ருஷ்டி யில் ஸம்ஸாரத்துக்கு வரவேண்டியதுதான் என்று அர்த்தம். ஆனாலும் அத்தனை காலமாவது, லாயக்கே இல்லாத ஜீவனுக் கும் ஈச்வரன் ருத்ரனாக இருந்து வாழ்க்கையின் ஓயாத சஞ்சலங்களிலிருந்து ஓய்வு தருகிறான். சித்த சுத்தியோடு கர்மாக்களைக் கழித்துக்கொண்டு ஞான மார்க்கத்தில் செல் பவர்களுக்கு தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் குருவாக வந்து பரம சாந்தனாகவும் பரம ஹிதமாகவும் ஸம்ஸார விடுதலை தரும்

Koviloor Digital Library

போதோ அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற வெகுமதியாக நிரந்தர முக்தியாகவே தருகிறான். தகுதியில்லாதவர்களுக்கும் தாற்காலிக முக்தி தரும்போது அப்படி சாந்தமாக, ஹிதமாகப் பண்ணலாமா? அப்போது 'எப்படி வேண்டுமானால் இருந்துவிட்டுப் போகலாம்' என்று ஜனங்களுக்குக் குளிர்விட்டுப் போய்விடுமல்லவா? அதனால்தான் சாந்த ஸ்வரூபியாகப்போய் ப்ரளயத்தை உண்டுபண்ணாமல் ருத்ரனாக பயங்கர ஊழித்தாண்டவம் செய்து கார்யத்தை முடிக்கிறான். பயமுறுத்தி, கஷ்டப்படுத்தி, ஆனாலும் பெரிய சாந்த நிலையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். இது இருக்கட்டும்.

இவரிவருக்கு இன்ன கார்யம் என்று தேவதைகளுக்கிடையே பரமாத்மா வைத்திருக்கிறான் என்றேன். ஒருத்தர் டிபார்ட்மென்டில் இன்னொருத்தர் தலையிட்டால் ஒழுங்கு போய்விடும். ஆனாலும் எல்லாதேவதைகளும் முடிவில் ஒன்று தான் என்ற அபேத பாவமும் உலகத்திலிருக்கவேண்டும். இல்லாவிட்டால், ''என்னுது, உன்னுது'' என்று (தெய்வ பேதம் செய்து) கட்சி கட்டிக்கொண்டு ஒரே சண்டையாகத் தான் ஜனங்கள் நிற்பார்கள். அதனால் பரமாத்மாவின் ஏற்பாட்டில் எப்படியிருக்கிறதென்றால், ஈச்வரன் (சிவன்), விஷ்ணு, அம்பாள் போன்ற முக்ய தேவதைகள் தங்களுக்குள் அபேதத்தைக் காட்டுவதாக எந்தப் பொறுப்பையும் ஏற்று, எந்த டிபார்ட்மென்டையும் நடத்தலாம் என்றிருக்கிறது. சின்ன தேவதைகள் இப்படிச் செய்யமுடியாது. முக்ய தேவதைகளும் ஒரொரு ஸமயத்தில் ஓரளவுக்குத்தான் இலாகாக்களை மாற்றிக்கொண்டு பண்ணுவது. ஒரேயடியாக மாற்றிக் கொள்வதில்லை.

க்ருஷ்ணருக்கு முற்பட்ட அவதாரங்களில், சட்டென்று கொஞ்ச நாழிக்கு மட்டும் ஒரு ஆவிர்பாவம் பண்ணியோ, அல்லது சில வருஷமோ பல வருஷமோ பூலோகத்தில் மநுஷ்ன் மாதிரி வாஸம் பண்ணியோ தப்புக் கூட்டங்களை அழித்து, வேத தர்மத்தை விளங்கும்படிச் செய்வது

Koviloor Digital Library

என்றிருந்தது. அதாவது ஒரு ராஜா சத்ருக்களை வதம் பண்ணி தர்ம மார்க்கத்தில் ராஜ்யபாரம் செய்வதுபோல அவை இருந்தன. இதனால் லோக பரிபாலனத்தில் ராஜா வாக உள்ள மஹாவிஷ்ணுவே அவதாரங்கள் எடுத்து க்ஷத்ரிய தர்மப்படி யுத்தம் செய்வது, பரிபாலிப்பது என்று பண்ணினார். யுத்தத்தில் ஈச்வரனின் ஸம்ஹார அம்சத்தை எடுத்துக்கொண்டார். க்ருஷ்ணாவதாரத்தில், நாம் பார்த்த படி, ஈச்வர ஸ்வபாவத்தை ஸம்ஹார விஷயத்தில் வெளிப்படையாகவே சொல்லி எடுத்துக்கொண்டார்.

அதோடு ஈச்வரனின் இன்னொரு கார்யமான ஞானோபதேசத்தையும் அந்த அவதாரத்தின் கடைசி பாகத்தில் செய்தார்.

அதற்கு முற்பட்ட அவதாரங்களில்* ஞானோபதேசம் இல்லை. அதைச் செய்ய அக்காலங்களிலிருந்த ஞானிகளும் மஹான்களுமே போதுமாக இருந்தது. இவர்கள்கூடத் தாங்களே ஜனங்களைத் தேடிப்போய் மல்லுக் கொடுத்து உபதேசிக்க அதிகத் தேவையில்லை; அவதாரத்தினால் துஷ்ட ஸம்ஹாரம் ஆன பிற்பாடு, ஜனங்கள் தாங்களாகவே பழையபடி தர்ம வழிகளில் போவதாகவும், மஹான்களைத் தாங்களே அதிகமாகத் தேடிப்போய் உபதேசம் வாங்கிக்கொள்வதாகவும் இருந்துவந்தது.

க்ருஷ்ணாவதார காலத்தில் அஸுரர்கள் மநுஷ்ரூபமான அரசர்களுக்குள் நன்றாகக் குடிகொண்டபோது, பொது ஜனங்களின் அறிவிலும் கொஞ்சம் புகுந்தனர். கலி மாதிரி ஒரேயடியாக இல்லை. கொஞ்சம்தான். ஆனாலும் கொஞ்சமாவது இப்படி ஏற்படத்தான் செய்தது. அதனால்தான் அர்ஜுனன் மாதிரியான ஒரு உத்தம புருஷன்கூட, முக்யமான ஒரு ஸந்தர்பத்தில் தர்மாதர்ம விவேகம்

---

* உலகில் பிரஸித்தமாயுள்ள தசாவதாரங்களைக் கருத்தில் கொண்டு கூறியது; இருபது நான்கு அவதாரங்களை அல்ல.

Koviloor Digital Library

கலகலத்துப்போய், ஸ்வதர்மத்தை மறந்து, 'நான் யுத்தம் பண்ணமாட்டேன்' என்று சொல்லித் தனக்கு ஸாதகமாகத் தப்பான கொள்கைகளுக்கு உயர்ந்த ஃபிலாஸஃபி மாதிரி ரூபம் கொடுத்துச் சொன்னது. இதனாலேயே, அவதாரமாக வந்தவர் ஞானோபதேசமும் பண்ணவேண்டி வந்தது.

ஆனாலும்—பரிபாலனத்தைக் கடமையாகக் கொண்ட ஒரு சக்ரவர்த்தி அதன்பொருட்டே துஷ்ட சிக்ஷணம் பண்ண வேண்டும் என்றிருப்பதால், மஹாவிஷ்ணுவான சக்ரவர்த்தி ஈச்வரனின் ஸம்ஹார க்ருத்யத்தை மேற்கொள்வதுபோல ஞானோபதேசத்தையும் மேற்கொள்வதற்கு நியாயம் சொல்ல முடியாது. சக்ரவர்த்திக்கு ஞானோபதேசப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை...

அடியோடு கொடுக்கவில்லை என்று நினைத்துவிடக் கூடாது. ஜனங்களை 'விநயம்' உள்ளவர்களாக, அதாவது பண்பாளர்கள் என்னும்படியாக ஆக்கவேண்டியதும் ராஜா வின் ஒரு கடமைதான். ஜனங்களுக்கு ஆபத்து ஏற்படாமல் காப்பதான "ரக்ஷணம்", அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு வசதிகள் செய்து கொடுப்பதான "பரணம்" என்ற இரண் டிற்கும் முந்தியே ராஜாவின் முதல் கடமையாக அவர் களுக்கு 'விநய ஆதானம்' செய்யவேண்டும்—அதாவது அவர்களுக்கு நற்பண்புகளை ஊட்டவேண்டும்—என்று காளிதாஸன் சொல்லியிருக்கிறார்*. இதில் ஞானோபதேசமும் கொஞ்சம் வந்துவிடும்தான். ஆனாலுங்கூட ராஜாவே இந்த 'விநயாதான'த்தை, அதிலும் குறிப்பாக ஞானோப தேசத்தைச் செய்ய வேண்டுமென்று இல்லை. ஸத்துக்களை, நல்ல ஆசார்யர்களை, ரிஷிகளை, ஞானிகளை ராஜாவானவன் நன்றாக ஆதரித்து பஹுமானித்து வைத்துக்கொண்டு, அவர்கள் மூலமே ஜனங்களின் ஆத்ம ச்ரேயஸுக்கான விஷயங்களை வளர்த்துக் கொடுக்கவேண்டுமென்றுதான் சாஸ்த்ரங்கள் காட்டுகின்றன.

---

* ரகுவம்சம் 1. 24

Koviloor Digital Library

அத்யாவச்யத்தில் சக்ரவர்த்திகளும் உபதேசிக்கலாம். என்றாலும் அதைத் தன்னுடைய முக்யமான நோக்கமாக அவர்கள் வைத்துக்கொள்ள முடியாது. புராணங்களில் அநேக ராஜாக்கள் ஒவ்வொரு ஸந்தர்ப்பத்தில் உபதேசம் செய்வதைப் பார்க்கிறோம். துஷ்டர்கள்கூட உபதேசிப்பார்கள். "அஸுர வேதாந்தம்" என்றே அதைச் சொல்வது! ஆனாலும் க்ஷத்ரிய தர்மம்,ராஜாவின் கடமை என்னவென்றால் லோகத்தில் தர்ம பரிபாலனமே தவிர, லோகத்தை விட்டுப் போகும் ஞானத்தில் உபதேசம் அல்ல. அது ப்ராம்மண தர்மமாக வைக்கப்பட்ட கார்யம். யோகிகளுக்கும் ஞானிகளுக்குமே அதில் முக்யமாக அதிகாரம்.

க்ஷத்ரிய தர்மத்தை மேற்கொண்டே லோகத்தில் தர்ம ஸம்ஸ்தாபனம் நடக்கவேண்டியிருந்த காலத்தில் பரமாத்மா அதை லோக பரிபாலக சக்ரவர்த்தியாக இருக்கப்பட்ட மஹாவிஷ்ணுவின் அவதாரங்களாலேயே நடத்திவைத்தார். ராமர் க்ஷத்ரியராகப் பிறந்தார். அதே ஸமயம் பரம ஸாத்விகராக இருந்தார். பரசுராமர் ப்ராம்மணராகப் பிறந்தாலும் ஸாத்விகமாக இல்லாமல் க்ஷாத்ரமான (க்ஷத்ரியருக்குரிய)ரஜஸுடனே இருந்தார்.இருவரும் அதர்ம சக்திகளை ஒவ்வொரு விதத்தில் அழித்து, உலகில் தர்மம் நிற்கும்படிச் செய்தார்கள். வாமனர் ப்ராம்மணரானாலும், தானம், யாசகம் என்று மறைமுகமாக விளையாடி, அஸுரனின் தலையில் காலை வைத்து அழுத்துவதாகக் காட்டியே அவனுக்குப் பரமானுக்ரஹம் பண்ணி ஒரே விசித்ரமாக முடித்து விட்டதால் அவரைப்பற்றி ஒன்றுமே சொல்ல முடியாமலிருக்கிறது! மஹாபலியும் மற்ற அஸுரர்கள் மாதிரியில்லாமல் அநேக உயர்ந்த குணங்களைப் பெற்றிருந்ததால் இந்தக் கதையே ஒரு மாறுதலாயிருக்கிறது. ஆனாலும் யோசித்துப் பார்த்தால், அவனுக்கு அஸுரர்களுக்கு உரியதான கீழ் லோகத்தில் மட்டுமே ஆதிக்யம் என்று அவன் தலையில் பகவான் கால் வைத்து அழுத்தி அனுப்பிவிட்டதால், இங்கேயும் லோக வியவஸ்தைகளை அமல் செய்யும் க்ஷத்ரிய ராஜ

Koviloor Digital Library

தர்மத்தைத்தான் அவர் மற்ற அவதாரங்களில் செய்தாற் போலவே செய்திருக்கிறாரென்று தெரிகிறது.

மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹம் என்று 'ம்' போட்டு—வாமனர், பரசுராமர், ராமர் என்பதுபோலில்லாமல், 'ம்' போட்டு—சொல்வதிலிருந்தே அந்த அவதாரங்களுக்கு ஜாதி சொல்லமுடியாதென்று தெரிகிறது! என்றாலும் க்ஷத்ரிய தர்மத்தைத்தான் அவையும் அவலம்பித்திருக்கின்றன. அதர்ம சக்தியான அஸுரரை அடக்கி அதன் வழியாகவே தர்ம பரிபாலனம் நடக்கத்தான் அந்த அவதாரங்களும் ஏற்பட்டன. (அஸுரர்களுக்கு எதிரான தேவர்கள் அம்ருதம் பெற்று பலசாலிகளாகவும், மரணமில்லாதவர்களாகவும் ஆவதற்கு ஸஹாயம் செய்ய ஏற்பட்டதுதான் கூர்மாவதாரம்.) பலராமாவதாரம் க்ருஷ்ணாவதாரத்துடனேயே ஒட்டிக்கொண்டு போய்விடுகிறது. தம்பிக்கு வித்யாஸமாக அண்ணா போவதுகூட முடிவில் தம்பிக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகவே இருக்கும். அல்லது, நல்லது என்பது உள்பட எதுவானாலும் இந்த த்வைத ப்ரபஞ்சத்தில் 'ரிலேடிவ்'தான் என்றிருப்பதில், தம்பி ஒரு கோணத்தின் ந்யாயத்தைக் காட்டினாரென்றால் அண்ணா இன்னொன்றின் ந்யாயத்தைக் காட்டினார் என்று சொல்லலாம். அவரும் (பலராமரும்) மொத்தத்தில் துஷ்ட சிக்ஷணத்தின் மூலம் சிஷ்டரக்ஷணம் என்ற க்ஷத்ரிய தர்மத்தைத்தான் நடத்தினார்.

க்ருஷ்ணர்தான் அதோடுகூட ப்ராஹ்மண தர்மமான ஞானோபதேசத்தையும் செய்தார். ஜீவிதத்தின் கடைசி பாகத்தில் அதற்கு அவச்யமேற்பட்டதால் செய்தார்.

அப்புறம், இப்போது, கலியில் துஷ்ட சிக்ஷணம் செய்வதற்கேயில்லை என்பதாக அஸுர சக்திகள் ஸர்வஜன வியாபகமாகியிருந்தன. ஆனபடியால் இப்போது அவதார கார்யம் பரம ஸாத்விகமான உபதேசம்தான்; அது ஆயுள் காலம்பூரா நடக்கவேண்டும் என்றாகியிருந்தது. ஆனபடியால் ப்ராம்மண தர்மத்தை மேற்கொண்ட ஞானியாகவே இப்போது அவதாரம் ஏற்படவேண்டியிருந்தது.

Koviloor Digital Library

இந்த அவதாரமும் மஹாவிஷ்ணுவின் அவதாரமாக இருக்கலாமா? சிவனுடைய ஸம்ஹாரத்தை அவர் மேற்கொண்டது க்ஷத்ரிய தர்மத்துக்கு முற்றிலும் உகந்ததே என்று பார்த்தோம். அந்த மாதிரி ஞானோபதேசத்தை மேற்கொண்டு பூர்ணமான ஞானவதாரமும் அவரே எடுப்பதைச் சொல்லமுடியுமா? மஹாவிஷ்ணுவும் பரிபூர்ண ஞான ஸ்வரூபிதான். அதில் கொஞ்சங்கூட ஸந்தேஹமில்லை. அவர் ஞானவதாரம் பண்ணினால் ஈச்வரனும், "ஏனையா, என் டிபார்ட்மென்டில் குறுக்கிடுகிறீர்?" என்று சண்டைக்கு வரப்போவதில்லை. ஸந்தோஷமாகப் பார்த்துக்கொண்டே, தாமும் ஸஹாயம் செய்ய வருவார். ஒருத்தர் ரிஷிபத்னிகளை மயக்க பிக்ஷாண்டியாகப் போனால், அவருக்கு ஸஹாயமாக அவரோடு கூடவே மற்றவர் ரிஷிகளை மயக்குவதற்கு மோஹினியாகப் போனதுபோலவே, மயக்கத்தைத் தீர்த்து ஞானம் தருவதிலும் இவருக்கு ஸஹாயமாக வர ஈச்வரன் தயாராகத்தான் இருப்பார். (அந்தக் கதையில் மயக்கியதும் ஞானம் தருவதில்தான் முடிந்தது.) ஈச்வரனுக்கும், விஷ்ணுவுக்கும் அவ்வளவு ஒற்றுமை.

ஆனாலும் விஷ்ணுவுக்கேதான் ஈச்வரனுடைய ஸம்ஹார க்ருத்யத்தைத் தாம் மேற்கொள்ளுகிற அளவுக்கு அவருடைய ஞானோபதேசத்தையும் தாமே மேற்கொள்ளுவதா என்று! ஞானோபதேசப் பெருமை, 'க்ரெடிட்' ஈச்வரனுக்கே இருக்க வேண்டுமென்று! அவச்யம் நேரிட்டபோது அவரும் சிவ ஸாம்யத்தைக் காட்டுகிறமாதிரி ஞானியாக தத்தர், ரிஷபர், நர-நாராயணர், வ்யாஸர் முதலியவர்களாக வந்து உபதேசித்த போதிலும் இவர்களை தசாவதாரம்போல அவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக, ஜகத் ப்ரஸித்தமாகக் காட்டாமல் அடக்கியே காட்டினார். 'ஞானநந்தமயம்' என்னும்படி, ஹயக்ரீவர் என்ற ரூபம் எடுத்துக்கொண்டபோதும் அவருடைய பெருமை ஸாதனா மார்க்கத்தில் போகிறவர்களுக்கு மட்டுமே தெரியும்படி வைத்துக்கொண்டார்.

Koviloor Digital Library

அதோடு அவரைப் பத்னி ஸமேதராக 'லக்ஷ்மி ஹயக்ரீவர்' என்றே சொல்கிறதாக வழக்கமிருக்கிறது.

பொதுவாகவே லோக வழக்கில்கூட 'சிவஞானம்', 'சிவயோகம்' என்று சொல்வதுபோல 'விஷ்ணு ஞானம்', 'விஷ்ணுயோகம்' என்றில்லாமல், 'விஷ்ணு மாயை' என்றே சொல்லும்படியாக, தம்மை 'மாயாவி' என்றும் 'லீலாவிநோதன்' என்றும் சொல்லும்படியாகவே (மஹாவிஷ்ணு) வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஆகையால் இப்போது தர்மத்துக்குப் பெரிய ஹானியும் அதர்மத்துக்குப் பெரிய எழுச்சியும் ஏற்பட்டிருந்தபோது கீதா வாக்யப்படி அவதாரம் எடுத்துத்தான் ஆகணும் என்றும், ஆனால் அது க்ஷத்ர தர்மப்படியில்லாமல், துஷ்ட சிக்ஷணமேயில்லாத, ஸாத்விகமான ஞானோபதேசத்திற்கே ஏற்பட வேண்டும் என்றும் ஆனபோது, அது சிவாவதார மாகத்தான் இருக்க வேண்டுமென்று (மஹாவிஷ்ணு) நினைத்தார்.

பரமசிவனோடு ஒன்றாகவே இருப்பது, வேறே மாதிரியும் இருப்பது என்று இரண்டு விதமாக அவர் பண்ணுவார். ஒன்றாக இருப்பது, ஸத்யமான ஞான நிலையில். வேறு மாதிரி இருப்பது, வ்யவஹாரத்தில் ஸத்யம் மாதிரித் தெரியும் லோக லீலையில்.

விச்வரூப தர்சனத்தின்போது, "பச்ய மே யோகம் ஐச்வரம்" என்று ஈச்வரனின் தன்மையைத் தம்முடைய தாகவே ஒன்றுபடுத்திச் சொன்னவர், கடைசி அத்யாயத்தில் அவன் தமக்கு வேறுபட்டுள்ள மாதிரி,

"ஈச்வர: ஸர்வ பூதாநாம் ஹ்ருத்-தேசே (அ)ர்ஜுந திஷ்டதி |
ப்ராமயந் ஸர்வ பூதாநி யந்த்ராரூடாநி மாயயா ||
தமேவ சரணம் கச்ச"

என்கிறார்: "எல்லாவற்றின் ஹ்ருதயத்திலும் ஈச்வரன் என்று ஒருத்தன் இருக்கிறான். மாயாசக்தியால் எல்லா

Koviloor Digital Library

வற்றையும் குடைராட்டின பொம்மைகளைப்போல ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறான். "தமேவ", "தம் ஏவ"— அவனையே சரண் அடை!" என்கிறார்.

ஒரு இடத்தில் மே என்று தன்னோடு ஒன்றுபடுத்திச் சொன்னவர், இன்னொரிடத்தில் தம்—'அவனை'—என்று பிரித்துச் சொல்கிறார்!

அப்படியானால் பிரித்தே வைத்துவிடலாமா என்றால் அதற்கும் விடமாட்டேன் என்கிறார்! இங்கே 'ஸர்வ பூத ஹ்ருதயத்திலும் ஈச்வரன் இருக்கிறான்' என்றவரே முன்னாடி விபூதி யோகத்தில், 'ஸர்வ பூதாசயத்திலும் நான் ஆத்மாவாயிருக்கிறேன்' என்றும் சொல்லியிருக்கிறார்.

அஹம் ஆத்மா குடாகேச ஸர்வபூதாசய ஸ்தித:

'ஆசயம்' என்றாலும் 'ஹ்ருதயம்' என்றாலும் ஒன்றேதான்.

ஹ்ருதயவாஸியாக ஈச்வரனைச் சொல்லும் இடத்திலும், மாயையினால் ஆட்டிப் படைப்பதான தம்முடைய கார்யத்தை அவன் செய்வதாகவே சொல்கிறார்!

இங்கே, 'ஈச்வரனிடமே சரணாகதி பண்ணு' என்றவர் நாலே ச்லோகம் தள்ளி உபதேசத்தைப் பூர்த்தி செய்யும் போது 'என்னொருத்தனிடமே சரணாகதி பண்ணு'—மாம் ஏகம் சரணம் வ்ரஜ—என்கிறார்! 'இப்படி மாத்தி மாத்திச் சொல்றயே!' என்றால், "நான் ஒண்ணும் மாத்தலை. 'மாம் ஏகம்'னா இருக்கறதே நான் ஒண்ணுதான்னு அர்த்தம். அப்புறம் இந்த ஒண்ணுக்கு வேறேயா ஏது ஈச்வரன்? நான், அவர் இரண்டு பேரும் ஏகமான ஒரு பரமாத்மாதான். விளையாட்டு ருசிக்காகத்தான் கொஞ்சம் மாத்தினாப்பலேயும் சொல்றது" என்பார்!

ஞான சிவனே ஞானவதாரமாவது

இப்படி இரண்டு ரூபமாகப் பார்க்கும்போது ஈச்வரன் தான் முக்யமாக ஞானம் தருகிறவன். 'இது இதற்கு

Koviloor Digital Library

இன்னின்ன ஸ்வாமியிடம் போ' என்று சொல்லும்போது, ஆரோக்யத்திற்கு ஸூர்யன் மாதிரி, ஞானத்திற்கு ஈச்வர னிடந்தான் போகச் சொல்லியிருக்கிறது:

ஆரோக்யம் பாஸ்கராத்-இச்சேத் ஞாந-தாதா மஹேச்வர:

ஞானந்தான் சாச்வதமான மோக்ஷத்தைத் தருவது. முடிவிலே "என்னை சரணடை" என்றபோது, "உன்னை எல்லாப்பாவத்திலிருந்தும் விடுவிக்கிறேன்" என்று சொல்லி, விட்டுவிட்டார். ஆனால் அதற்கு முன் "ஈச்வரனை சரணடை" என்றவர், "அவனுடைய அநுக்ரஹத்தினலே பரம சாந்த மான சாச்வத ஸ்தானத்தை அடைவாய்" என்கிருர். அந்த ஸ்தானம்தான் ஞானத்தினுல் பெறும் மோக்ஷம்.

தத் ப்ரஸாதாத் பராம் சாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி
சாச்வதம்

விச்வரூப யோக தர்சனத்தின்போது ஈச்வரன் ருத்ரனுகச் செய்யும் ஸம்ஹாரத்தைத் தம்முடையதாகவே காட்டியவர், முடிக்கிற அத்யாயத்தில் அவன் தக்ஷிணுமூர்த்தியாக இருந்து செய்யும் ஞான மோக்ஷ ப்ரதானத்தைச் சொல்லி, இது 'அவனுக்கே ஆன கார்யம்' என்று கொஞ்சம் வித்யாஸப் படுத்தினுற்போலக் காட்டினுர்.

இப்போது, 72 துர்மதங்கள் கிளப்பியபோது இப்படிக் கொஞ்சம் பிரிந்தாற்போல ஞானத்துக்கு என்றே இருக்கும் ஈச்வராவதாரமாகவே ஸம்பவிக்கட்டுமென்று நினைத்தார். ஆனுல் இவர் 'ஸம்பவாமி யுகே யுகே' என்று சொன்னதற் காக அவர் அவதாரம் செய்து அவஸ்தையெல்லாம் படுவா ரென்ருல் இரண்டும் ஒன்றுதான் என்றும் ஆகிறது!

ஞானத்துக்காக அவதாரமென்ருல் கிரீட குண்டலமும், கௌஸ்துபமும், பீதாம்பரமுமாக தர்பார் நடத்தும் தாம் போவதைவிட, ஒரே சடையும் முடியுமாக ச்மசானத்தில் வஸ்திரத்தையெல்லாம் அவிழ்த்துப் போட்டுவிட்டோ, அல்லது ஆல மரத்தின் கீழேயோ, கண்ணை மூடிக்கொண்டு

Koviloor Digital Library

உட்கார்ந்திருப்பவர் போவதுதான் பொருத்தம் என்று நினைத்தார். 'நாம்தான் இவ்வளவு அவதாரம் எடுத்தாச்சே! அவர் மட்டும் ஏன் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும்? 'சிவனேன்னு உட்கார்ந்திருக்கிறது' என்று பேர் வாங்கவேண்டும்? இந்தத் தடவை அவர் போகட்டும். நாம் ஒன்றுமே செய்யவில்லை என்றில்லாமல் அவருடைய கார்யத்தில் கொஞ்சம் ஸஹாயம் செய்வதற்காக அம்ச ரூபத்தில் அவருக்கு ஒரு சிஷ்யராக வேண்டுமானால் போகலாம்' என்று நினைத்தார்.

ஆசார்யாளுடைய நான்கு முக்ய சிஷ்யர்களில் ஒருவரான பத்மபாதாசார்யாளை மஹாவிஷ்ணுவின் அம்சம் என்று 'சங்கர விஜய'ங்களில் சொல்லியிருக்கிறது.

பரமசிவனுக்கு ஈசானன், ஈச்வரன், ஸதாசிவன் என்றெல்லாம் பேர். ச்ருதியிலேயே "ஸகல வித்யைகளுக்கும் தெய்வம் ஈசானன், ஸர்வ பூதங்களுக்கும் அவனே ஈச்வரன்" என்றெல்லாம் சொல்லி, "அவன் எனக்கு மங்கள சிவமாக இருக்கட்டும்" என்று ப்ரார்த்திக்கொண்டு, அப்படிப்பட்ட ஸதாசிவனை ஓம்காரமான ஆத்ம ஸ்வரூபமாக அத்வைத பாவனையில் அநுஸந்திப்பதோடு முடித்திருக்கிறது*. "ஈச்வர: ஸர்வ பூதாநாம்" என்று இங்கு உள்ள ச்ருதி வாக்யத்தையேதான் பகவானும் கீதையில் அப்படியே 'ரிபீட்' பண்ணியிருக்கிறார். ஸர்வ வித்யைகளுக்கும் அவனே அதிபதி என்றும் இங்கே வருவதால் அவன்தானே உபதேச குருவாக அவதரிக்க வேண்டியவன்?

தந்த்ர சாஸ்த்ரங்களையும், மந்த்ர சாஸ்த்ரங்களையும், இன்னும் அநேக திவ்ய உபாக்யானங்களையும் பார்த்தால் கூடப் பரமேச்வரன்தான் அந்த தந்த்ரத்தையோ, மந்த்ரத்தையோ, உபாக்யானத்தையோ அம்பாளை முன்னிலைப் படுத்தி உபதேசித்தவன் என்று இருக்கும்.

---

* மஹா நாராயணோபநிஷத்—21

Koviloor Digital Library

இந்த வித்யைகளுக்கெல்லாம் மேலே இருப்பது அத்வைத வித்யை. அந்த வித்யை வெறும் புஸ்தகமோ, மந்த்ரமோ இல்லை. அதுவே அநுபவம். தன்னில் தானாக இருக்கிற ஒரே ஸத்ய அநுபவம். அப்பேர்ப்பட்ட அத்வைத வித்யையும் அந்த சிவன்தான் என்றே குறிப்பாகச் சொல்லியிருக்கிறது. "அஹம் ப்ரஹ்மாஸ்மி" ('நானே பிரம்மம்') என்கிற மாதிரியே "சிவோஹம்" ('நானே சிவன்') என்று த்யானம் செய்கிற வழக்கமிருக்கிறது. மாண்டூக்ய (உபநிஷ)த்திலும், "சிவம் அத்வைதம்" என்றே இருக்கிறது. அதனால் அத்வைத வேதாந்தத்துக்கான ஆசார்ய புருஷர் பரம சிவனின் அவதாரமாயிருப்பதே பொருத்தமென்று தெரிகிறது.

குரு ஸகல அறிவும் நிரம்பியவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஸர்வஜ்ஞனாகப் பரமசிவனையே நிகண்டுவிலும் ("அமரகோச" அகராதியிலும்) சொல்லியிருக்கிறது: "க்ருசாநுரேதா ஸர்வஜ்ஞோ தூர்ஜடிர்-நீல லோஹித:".

மற்ற புஸ்தகங்களில் (பரமசிவனை ஞானாசார்யனாகச்) சொல்லியிருப்பது இருக்கட்டும். அவதார ஆசார்யாள் என்ன சொல்லியிருக்கிறார்? அவர் சொல்வதற்குத் தனியான மதிப்புண்டல்லவா? குரு யார், ஞானம் தருவது யார் என்று அவர் எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா?

சொல்லியிருக்கிறார். "ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா"வில் இந்தக் கேள்விகளையும் போட்டு பதில் சொல்லியிருக்கிறார்.

"கோ ஹி ஜகத்குரு: உக்த?"—"ஜகத்குரு என்று சொல்லப்படுவது யார்?" என்றே அதில் ஒரு கேள்வி. வெறும் குரு இல்லை; ஜகத்குரு! ஜகத்குரு என்றாலே இப்போது ஆசார்யாளைத்தான் நினைத்துக் கொள்கிறோம். அவருக்கு முந்தி அந்தப் பட்டம் வாங்கினவர் க்ருஷ்ண பரமாத்மா. "க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்" என்றே எட்டு அடியும் முடிவதாக அவர் மேலே ஒரு அஷ்டகம் இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் இங்கே ஆசார்யாள் "கோ ஹி

Koviloor Digital Library

ஜகத்குரு-ருக்த:" என்று கேட்டுவிட்டு என்ன பதில் கொடுக்" கிறார்?

"சம்பு:"

'சம்பு' என்று சொல்லப்படும் சிவன்தான் என்கிறார். அந்த சம்-புதான் இந்த சம்-கரர் ஆனார்!* அவரே இப்படிச் சொல் கிறார்!

சிவன்தான் குரு என்பதை மேலும் உறுதிப்படுத்தும் விதத்தில் அடுத்த கேள்வியும் பதிலும் கொடுத்திருக்கிறார்.

"ஞாநம் குத :?"-ஞானம் எவரிடமிருந்து (கிடைக்கும்)?

"சிவாதேவ"-"சிவாத் ஏவ"-சிவனிடமிருந்துதான்.

ஞானாசார்ய அவதாரம் பரம சிவனுடையதாகத்தான் இருக்கவேண்டுமென்று தெளிவாகி விட்டதல்லவா?

மொத்தத்தில் விஷயம் என்னவென்றால், பரமாத்மாவின் ஸங்கல்பப்படி இதுவரை அதன் ஒரு ரூபமான மஹாவிஷ்ணு விடமிருந்து அவதாரங்கள் ஏற்பட்டாற்போல இப்போது இன்னொரு ரூபமான பரமேச்வரனிடமிருந்து ஒரு அவதாரம் நிகழ வேண்டுமென்று நிச்சயமாயிற்று.

சக்தி உள்ளடங்கிய தக்ஷிணாமூர்த்தியின் அவதாரம்

'இன்னொரு ரூபமான பரமேச்வரன்' என்றேன். ஆனால் அந்தப் பரமேச்வரனுக்கே பல ரூபமிருக்கிறதே, கல்யாணஸுந்தரமூர்த்தி, ஸோமாஸ்கந்தமூர்த்தி, நடராஜ மூர்த்தி, பைரவ மூர்த்தி என்றெல்லாம்! இவற்றில் எதிலிருந்து அவதாரத்தைப் பிறப்பிப்பது? ஸந்நியாஸி குருவாக அவதாரம் ஏற்படணுமென்று சொல்லியாயிற்று. ஆகையால் பத்னியோடிருக்கிற இந்த அவஸரங்களிலிருந்து

* சம்பு, சம் - கரர் என்ற பதங்களின் விளக்கம் பிற்பாடு விரியும்.

Koviloor Digital Library

அவதாரம் உண்டாவதற்கில்லை. ஏனென்றால் பதி பூலோகத்துக்குப் போகிறபோது அம்பாளும்தானே கூடக் கிளம்புவாள்?...பைரவருக்கும் பைரவி என்று பத்னி உண்டு. அதுவுமில்லாமல் அவர் பயங்கரமான மூர்த்தி. பைரவம் என்றாலே பயங்கரம்தான். பயங்கரமாக, இருக்கிறவர் பரம சாந்த நிலையை உபதேசிக்க வருவதென்றால் அஸந்தர்ப்பமல்லவா? ப்ரசாந்த நிலையிலுள்ள ஒரு அவஸரத்திலிருந்து இந்த அவதாரம் ஏற்படுவதுதானே பொருத்தம்?

இதனாலெல்லாம், பத்னி ஸமேதனாயில்லாமல், ஏகாங்கியாக, அடங்கிய சாந்த ஸமுத்ரமாக, நிஷ்க்ரிய நிஷ்டா மூர்த்தியாக, ஆதி குரு என்றே பெயர் பெற்று விளங்கும் தக்ஷிணாமூர்த்தியிடமிருந்தே இந்த அவதாரம் உண்டாக வேண்டுமென்று திவ்ய ஸங்கல்பமாயிற்று.

ஒன்று சொல்லாமல் விடக்கூடாது. பத்னி ஸமேதனாகத் தெரியாவிட்டாலும் பரமேச்வரன் அம்பாளின் ஸம்பந்தம் இல்லாமலிருப்பது என்பது ஒருபோதும் கிடையாது. தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்திலுங்கூடத்தான்! அதேபோல அம்பாளும் பாலா த்ரிபுரஸுந்தரி, கன்யாகுமாரி, துர்காதேவி என்றெல்லாம் ஈச்வரனோடு சேர்ந்தில்லாமல் தனியாகக் காணப்படும் ஸமயங்களிலும், நம் காட்சிக்குத்தான் அவன் தெரியவில்லையே தவிர, அவன் அவளிடமிருந்து பிரிந்திருக்கிறான் என்று ஒருபோதும் இல்லை. சிவ-சக்திகளை ஒருபோதும் பிரிக்கவே முடியாது. நிர்குண-ஸகுண ப்ரம்மங்களைத்தான் (முறையே) சிவன்-சக்தி என்பது. இரண்டும் சேர்ந்துதான் பரப்ரம்மம். லோகத்தில் பல தினுஸாக விளையாடி, காட்சி கொடுத்து, பல விதமான பாடங்களைக் கொடுக்கவேண்டும், பல விதமான தத்வங்களை உணர்த்த வேண்டும்—பல விதமான ரஸங்களைத் தரும் கதை புராணங்களாக நடித்தே இப்படிச் செய்யவேண்டும்—என்றுதான் அவர்கள் சில அவஸரங்களில் தம்பதியாகவும், சில அவஸரங்களில் ஒண்டியாக, ஏகாங்கியாகவும் இருப்பது.

Koviloor Digital Library

பரமஞானமான தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தில் பரமேச்வரன் நிஷ்க்ரியமாக உட்கார்ந்திருக்கும்போதும் அவருக்குள்ளே ஸகல க்ரியா சக்தியுமான ஸாக்ஷாத் அம்பிகையை அவர் நம் கண்ணுக்குக் காட்டாமல் வைத்துக் கொண்டுதானிருப்பவர். இல்லாவிட்டால் அந்த நிஷ்க்ரிய மூர்த்தி அவதாரம் என்ற க்ரியையையே பண்ணியிருக்க முடியாது! அவதரித்தபின் ஆஸேது ஹிமாசலம் மூன்றுதரம் இந்தப் பெரிய தேசத்தைச் சுற்றி வருவது, கட்டுக் கட்டாகப் புஸ்தகம் எழுதுவது, ஊர் ஊராகப் போய் வாதம் செய்வது, பேர் பேராக அநுக்ரஹம் செய்வது என்றெல்லாமும் செய்திருக்க முடியாது.

அவதாரத்துக்குப் பெயரே என்ன?

சங்கரர்.

'கரர்' என்றாலே 'செய்கிறவர்', 'காரியம் பண்ணுகிறவர்' என்றுதான் அர்த்தம். 'சம்' என்றால் உயர்ந்த மங்களமான ஸுகம். லோகத்திற்கெல்லாம் பரம மங்களத்தை விடாமல் செய்கிறவர் 'சங்கரர்'.

செயலில்லாத தக்ஷிணாமூர்த்தி இப்படி வந்தார் என்றால் எப்படி? க்ரியா சக்தி—இச்சா சக்தி, ஞானசக்தி ஆகியனவுந் தான்—எல்லா சக்திகளுக்கும் மூலமான பராசக்தி அவருக்குள்ளேயே ஸூக்ஷ்மமாக அடங்கியிருந்ததால்தான்!

சாக்தர், சைவர், வைஷ்ணவர் மூன்றுமான ஆசார்யாள்

ஆசார்யாளைப் பற்றிச் சொல்வதுண்டு:

அந்த: சாக்தோ, பஹி: சைவ:, வ்யாவஹாரே து வைஷ்ணவ: என்று. உள்ளுக்குள்ளே சக்தி—அம்பிகையான பராசக்தி. வெளியிலே ரூபத்தைப் பார்த்தால் வெள்ளை வெளேரென்று, விபூதியும், ருத்ராக்ஷமுமாகப் 'பரமசிவனே வந்திருக்கிறானே?' என்று நினைக்கும்படியாக. லோக வ்யவஹாரம் ஓயாமல் ஓடி ஆடிப் பண்ணிக்கொண்டிருப்

Koviloor Digital Library

பதிலோ விஷ்ணுவாகவே இருக்கிறார். வாயாலே ஆசீர்வாதம் பண்ணுவதும் "நாராயண, நாராயண" என்றுதான்! ஸ்ரீமுகம் கொடுப்பதெல்லாம் "க்ரியதே நாராயண ஸ்ம்ருதி:" என்று விஷ்ணு ஸ்மரணையோடுதான்! சிவாவதாரம்! செய்வதெல்லாம் நாராயணன் பேரில்! இப்படி சிவ-விஷ்ணு அத்வைதம்!

விஷ்ணுவை வ்யவஹார சக்தி, க்ரியா சக்தி என்றெல்லாம் சொன்னால் என்ன அர்த்தம்? அவர் அம்பாளே என்றுதான் அர்த்தம்!

புருஷ ரூபத்தில் அவதாரமாதலால் அம்பாளின் புருஷ ரூபமான நாராயணனின் பெயரிலேயே எல்லாக் கார்யமும் செய்தார். வெளியிலே காட்டாமல் உள்ளுக்குள்ளே அம்பாள் ஸ்வரூபம். அதாவது ஹ்ருதயத்திலே தாயாராகப் பரம கருணை! அதுதான் அந்த: சாக்த:.

சக்தி, சக்தி என்றால் அந்தக் கருணைதான். அது இல்லாமல் சிவம் இல்லை. சிவம் தானிருப்பதாகத் தெரிந்து கொள்ளவே ஒரு சக்தி இருக்கத்தானே வேண்டும்? சிவம் தன்னையே கருணையாக வெளிப்படுத்திக் கொள்வதும் சக்திதான்.

அவளுடைய 'விமர்ச'மில்லாமல் இவருடைய 'ப்ரகாசம்' லோகத்துக்கு ஏற்படவே முடியாது என்று தத்வ ரீதியில் சொல்வார்கள்.

ஆனாலும் ஸீதா-ராமர்கள், ராதா-க்ருஷ்ணர்கள் மாதிரி ஸ்திரீ புருஷ ஜோடியாக அவதாரம் எடுக்க முடியாமல், ஸந்நியாஸாவதாரமாக அமையவேண்டும் என்று காலத்தின் ஸந்தர்ப நிர்பந்தம் இருந்ததால், அவளை வெளியிலே காட்டாமல் உள்ளே வைத்துக்கொண்டுள்ள யோகேச்வர அவஸரத்திலிருந்து அவதாரம் நிகழ்த்துவதென்று ஸங்கல்பமாயிற்று. மஹாவிஷ்ணு எப்போதும் லக்ஷ்மியை வெளிப்பட வைத்துக்கொண்டேதான் இருப்பார். அப்படியில்லாமல் அவர் ஏகாங்கியாக நர-நாராயணர்கள்

Koviloor Digital Library

மாதிரி இருந்தாரென்றால் அப்போது அவர் பூர்ண விஷ்ணுவாகத் தெரியமாட்டார்; அம்சாவதாரமென்னும்படிதான் இருப்பார். இப்போதோ கலி கோலாஹலத்தை அடக்குவதற்குப் பூர்ணமான பகவத் சக்தி அவதரிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் லக்ஷ்மீ ஸமேதரான விஷ்ணு தம்பதி ஸமேதமாக பூர்ணாவதாரம் செய்ய முடியாமல், இப்போது அவதரிக்க வேண்டியவர் ஸந்நியாஸியாகத்தான் இருந்தாக வேண்டுமென்றும் இருந்தது. இப்படிப் பார்க்கிற போதும் பரிபூர்ண சிவமாகவே இருப்பவராக தக்ஷிணாமூர்த்தி என்று ஒரு ஏகாங்கி இருப்பது ரொம்பவும் ஸௌகர்யமாகி விட்டது! பார்வதி ஸமேதராக இருக்கப்பட்ட பரமேச்வரனின் அம்சமாக மட்டும் இல்லாமல் அவருடைய ஸ்வச்சமான பூர்ண ஸ்வரூபமாகவே இருக்கிறவர்தான் தக்ஷிணாமூர்த்தி. ஆகையால் இப்போது அவரிடமிருந்து அவதாரத்தை உத்பவிக்கச் செய்வதே ஸகல விதத்திலும் பொருத்தமுடையதாக இருந்தது.

இப்படியெல்லாம் எல்லாப் பொருத்தங்களும் இருக்கும்படியாகப் பரமாத்மாவின் ஸங்கல்பம் அமைந்தே பரம சுபமான ஸ்ரீ சங்கராவதாரம் ஏற்பட்டது.

மங்கள மயமான தெய்வகுரு

லோகத்தின் பெரிய பாக்யம், குரு ஸ்வரூபமாக அவதாரம் ஏற்படுவதென்று ஸங்கல்பமாயிற்று. சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவன்தான் (பரமாத்மாதான்) குரு. உபநிஷத் பாட க்ரமத்தில் முதலில் அப்படித்தான் அவனை குரு ஸ்வரூபமாகச் சொல்லி நமஸ்காரம், சரணாகதி செய்வது. ஸகல உபதேசங்களுக்கும் உறைவிடமாயிருப்பது வேதம். அந்த வேதத்தை லோகத்துக்குத் தந்தது ப்ரம்மா. வேத மந்த்ரங்களைக் கொண்டே ஸ்ருஷ்டி பண்ணி, நாலு வாய்களாலும் நாலு வேதத்தைச் சொல்லிக்கொண்டு ப்ரம்ம வித்யையைத் தருபவர் அவர். ஆனால் அவரையும் படைத்து

Koviloor Digital Library

அவருக்கும் இந்த வேதத்தைப் பூர்வத்திலே தந்தவன் பரமாத்மா. அவனேதான் நம் புத்திக்குள்ளும் ப்ரம்மஞான ப்ரகாசத்தை உண்டாக்குபவன். 'மோக்ஷ நாட்டமுள்ள நான் அவனை சரணடைகிறேன்' என்று (உபநிஷத் பாராயணம்) ஆரம்பிப்பது வழக்கம்:

யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாச்ச ப்ரஹிணோதி தஸ்மை |
த(க்)ம் ஹ தேவம் ஆத்ம புத்தி ப்ரகாசம்
முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே ||

இது 'ச்வேதாச்வதர உபநிஷத்'தில் வருவது[1]. பரமாத்ம குருவைப் பரமசிவ ஸ்வரூபமாகக் காட்டுவதற்கும் இந்த உபநிஷத்திலேயே ச்ருதி ப்ரமாணம் இருக்கிறது. வித்யா மூலமான வேதத்தை ஸதா ஓதிக் கொண்டிருக்கும் ப்ரம்மா (இவரை ஹிரண்யகர்பன் என்று உபநிஷத் சொல்லும்) பிறந்ததையும் மஹர்ஷியான ருத்ரன் பார்த்துக்கொண்டிருந் தார் என்று அந்த உபநிஷத்தில் ஒரு இடத்திலும், அவரே தான் அந்த ப்ரம்மாவைப் படைத்தவர் என்று இன்னோரிடத் திலும் சொல்லியிருக்கிறது[2]. 'மஹர்ஷி' என்றதால் உபதேசம் பண்ணும் ஆசார்யன் என்று ஆகி விடுகிறது. 'நமக்கு அவர் சுபமான புத்தியை அநுக்ரஹிக்கட்டும்' என்று இரண்டு இடத்திலும் பிரார்த்திக்கப்படுகிறது. சுபமான புத்தி—நல்லறிவு—ஆசார்யன்தானே அநுக்ரஹிப்பது? 'சுபம்' என்றாலும் 'சிவம்' என்றாலும் ஒரே அர்த்தந்தான். மங்கள மானது, கல்யாணமானது என்று அர்த்தம். ப்ரம்மம் பரம கல்யாண ஸ்வரூபமானது, ஸ்மரிக்கிறவர்களுக்கு வரம் அருளுவது, மங்களம் என்றே அறியப்படுவது என்று (உபநிஷத் பாராயண) மங்கள பாட ச்லோகம் இருக்கிறது:

---

1. VI. 18
2. iii. 4; IV 12

Koviloor Digital Library

அதிகல்யாண ரூபத்வாத்
நித்ய கல்யாண ஸம்ச்ரயாத் ।
ஸ்மர்த்ரூணும் வரதத்வாச்ச
ப்ரஹ்ம தந்-மங்கலம் விது: ||

அந்த சுபம், கல்யாணம், மங்களம் எல்லாமாக இருக்கப் பட்டவர் வரம் அருள்வது என்றால் என்ன வரம்? ஞானத் துக்கேயான உபநிஷத் பாட க்ரமத்தில் இந்த வரத்தைச் சொல்வதால், இது ஞானத்தைத் தவிர வேறென்னவா யிருக்க முடியும்? கொடுக்கிற ஆஸாமி சிவம். அவர் தரும் வரமான ஞானமும் சிவம்—சுபம், கல்யாணம், மங்களம். இந்தப் பரம மங்கள ஸ்வரூபமே நம்முடைய ஆசார்யாள். சிவம், கல்யாணம், சுபம் எல்லாம் அவரே. ஆதி சிவமே ஆசார்ய சிவமாக இப்படி அவதாரம் செய்தது.

"அவதாரமாகி விட்டதா? அப்படியென்றால் அப்பா, அம்மா யார்? எந்த ஊரில் அவதாரம்? ஒன்றும் சொல்ல வில்லையே!"

கொஞ்சம் பொறுத்துக்கணும். பரமாத்ம ஸங்கல்பம் ஆகிவிட்டாலே கார்யம் ஆன மாதிரிதான் என்ற அபிப்ராயத்திலேயே அவதாரம் ஆன மாதிரி சொல்லி விட்டது! ஸங்கல்பம் செய்தபோதிலும் உடனே ஈச்வரன் தானாகவே எங்கேயோ ஒரு ஊரில், யாரோ ஒரு அப்பா அம்மாவுக்குப் பிறந்துவிடவில்லை.

அவதாரத்திற்குப் பூர்வாங்கம்

ஊரில் திருட்டுப் புரட்டு இருக்கப்படாது என்ற ஸங்கல் பத்தில்தான் போலீஸ் ஸ்டேஷன் வைப்பது. ஆனாலும் நம்மகத்தில் திருட்டுப் போகும்போது நாம் 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்தால்தானே போலீஸில் கேஸ் எடுக்கிறார்கள்? அப்படி ஈச்வரனும் அவதாரம் பண்ணுவதற்குமுன் இரண்டு 'பெடிஷன்' எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்—

Koviloor Digital Library

ஒரு பத்ததி வேண்டும் என்பதற்காக; தமக்கு மரியாதை வேண்டுமென்பதற்காக இல்லை! லோகத்திலுள்ளவர்களுக்கு மரியாதைப் பத்ததி தெரியவேண்டுமென்பதற்காக இப்படி உட்கார்ந்திருந்தார்.

ஒரு பெடிஷன் தேவர்கள் கொடுக்கவேண்டியது. அவர்களைத்தான் லோக நிர்வாஹத்துக்கு 'இன்-சார்ஜ்' கொடுத்து இவர் அதிகாரிகளாகப் போட்டிருப்பது. அதனால் லோகத்தில் ஒரு பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, தர்மம் திருட்டுப் போகிறது என்றால் அவர்கள் வந்து விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஸ்வாமி கேஸ் எடுப்பார்.

இன்னொரு பெடிஷன் வரப்போகிற அப்பா-அம்மா கொடுக்க வேண்டியது. பிறப்பேயில்லாத பரமேச்வரன் தாமாகப் போய் எவரோ ஒருத்தருக்குப் பிள்ளையாகப் பிறக்கலாமா? நிரம்ப யோக்யதாம்சமுள்ள தம்பதி யாராவது மனஸ் உருகிப் பிள்ளை வரம் கேட்டுப் பிரார்த்திக்க வேண்டும். அதுதான் பெடிஷன். அதை வாங்கிக்கொண்டு அங்கே போய்ப் பிறந்து விடுவார்.

எல்லா அவதாரத்திலும் இப்படித்தான்—இரண்டு பெடிஷன்கள். ராமாவதார, க்ருஷ்ணாவதாரக் கதையாவது தெரியுமோல்லியோ? தேவர்கள் போய் பகவானிடம் முறையிட்ட பிறகுதானே அந்த அவதாரங்கள் நடந்தன? அதோடு தசரதன் பெரிசாக புத்ர காமேஷ்டி பண்ணித்தான் பகவான் அவனைத் தகப்பனாராக வரித்து அவதாரம் செய்தது. க்ருஷ்ணர் விஷயத்தில்—அநேக யுகங்கள், மன்வந்தரங்களுக்கு முன் ஒரு தம்பதி (ஸுதபஸ் என்ற ப்ரஜாபதியும், அவரது பத்னியான ப்ருச்னியும்) நீண்ட காலம் தபஸ் இருந்து, பகவானே தங்களுக்கு அந்த ஜன்மத்தில் மட்டுமின்றி மூன்று தடவை புத்ரனாகப் பிறக்கவேண்டுமென்று வரம் வாங்கிக்கொண்டார்கள். அதில் மூன்றாவதான் க்ருஷ்ணாவதாரம். அந்த தம்பதி அப்போது தேவகி-

Koviloor Digital Library

வஸுதேவர்களாகப் பிறந்திருந்தார்கள். இதற்கு முன் அவர்கள் அதிதியாகவும் சுச்யபராகவும் இருந்தபோது, பகவான் கொடுத்த வரப்படி அவர்களுக்கு இரண்டாம் தடவை பிறந்ததுதான் வாமனுவதாரம்.

இப்படியெல்லாம் மஹாவிஷ்ணு பத்ததி பார்த்து, பிகு பண்ணிக்கொண்டு அவதாரம் பண்ணியுள்ளபோது ஈச்வரன் மட்டும் சும்மா பூலோகத்துக்கு வந்து விடுவாரா?

உள்ளுக்குள்ளே அவருக்கு பிகுவும் இல்லை, ஒன்றும் இல்லை. கருணையில் மனஸ் கிடந்து அடித்துக்கொண்டு தானிருந்தது!

செயலற்றவரின் கருணையுள்ளம்

தக்ஷிணுமூர்த்தியாக ஆல மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்தான். அசைவதே கிடையாது, கண் பார்க்கிறதில்லை, வாய் பேசுகிறதில்லை என்று இருப்பவர் தான். ஆனாலும் அப்படிப்பட்டவருக்கு இப்போது கருணை யில் மனஸ் உருகிக்கொண்டிருந்தது. மனஸும் இல்லாம லிருப்பவர்தான். மனஸ் என்பது போய், ஆத்மா மட்டுமாக இருப்பதுதான் அத்வைதம். தக்ஷிணுமூர்த்தி என்றால் அத்வைத ஸ்வரூபம் என்று அர்த்தம். ஆனாலும் கருணு நிமித்தமாகவே மனஸைப் பண்ணிப் போட்டுக்கொண்டு, 'ஐயோ, குழந்தைகள் இப்படிக் கெட்டுப் போகிறதுகளே!' என்று உருகிக்கொண்டிருந்தார். [சிரித்து] அத்வைதத் துக்கு தக்ஷிணுமூர்த்தி என்று ரூபம் மட்டும் எப்படி வரலாமாம்? அதுவும் நம்மிடம் கருணையால்தானே? அப்போ மனஸும்தான் வரட்டுமே!

'படி தாண்டாப் பத்தினி' என்று சொல்வார்கள், இந்த நாளில் அப்படிச் சொன்னால் புரியுமோ புரியாதோ? கோஷா என்று சொன்னால் புரியுமோ என்னவோ? வீட்டைவிட்டு அடி எடுத்து வைக்கமாட்டார்கள். குரல்கூட வெளியில்

Koviloor Digital Library

கேட்காமல் இருப்பார்கள். ஆனாலும் குழந்தை தெருவிலே ஓடிப்போய் ஜலதாரையின் ஒட்டில் நின்றுகொண்டு ஸந்தோஷமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது; அதற்குள்ளேயே குதிக்கலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறது என்றால் அவளுடைய கோஷாக் கட்டுப்பாடு நிற்குமா? பரபரத்துக்கொண்டு, சத்தம் போட்டுக்கொண்டு குழந்தையிடம் ஓடித்தானே வருவாள்? அப்படிதான் தக்ஷிணாமூர்த்தியும் இருந்தார்.

அவருடைய ஸ்வபாவம் சும்மாயிருப்பது. 'சும்மா யிருப்பதே ஸுகம்', 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்று சொல்கிற, 'பெரிய சும்மா நிலை'யிலிருப்பது.

துளிக்கூட சும்மா இருக்கமுடியாமல் ஜனங்கள் படாத பாடுபட்டுக்கொண்டு, பிறத்தியாரையும் படுத்திக் கொண்டிருப்பதை அவர் பார்க்கப் பார்க்க, அவர்களுக்கும் ஒன்றும் பண்ணாமல் சும்மாயிருப்பதைச் சொல்ல வேண்டுமென்று கருணை பொங்கிக்கொண்டு வந்தது.

ஒரு மதமா, ஸித்தாந்தமா, அநுஷ்டானமா என்றில்லாமல்தான் ஸாதாரணமாக ஜனங்கள் தங்களையும் ஹிம்ஸைப் படுத்திக்கொண்டு பிறத்தியாரையும் ஹிம்ஸைப் படுத்துவது வழக்கம். ஆனால் இப்போது ஏகப்பட்ட மதங்கள், ஸித்தாந்தங்கள், அநுஷ்டானங்கள் என்று ஏற்பட்டே ஒன்றோடொன்று மோதிக்கொண்டு ஒரே ஹிம்ஸை மயமாக இருந்தது! சரீர ஹிம்ஸையில்லை; புத்திக்கு ஹிம்ஸை!

சும்மாயிருக்க முடியாமல் உடம்பாலே கார்யம் பண்ணித் தான் வீணாகப் போகவேண்டுமென்றில்லை, மனஸினாலே—அதாவது சிந்தனா சக்தியாலே—எத்தனை க்ருத்ரிமாகக் கார்யம் பண்ணமுடியுமோ அத்தனையும் பண்ணி தினுஸு தினுஸான மதங்கள் என்று உண்டாக்கிப் பரப்பினால், சரீர ஹிம்ஸையை விடவும் ஜாஸ்தி ஹானி ஏற்படுத்தலாமென்று இந்தக் காலநிலையில் தெரிந்தது. அதனால்,

Koviloor Digital Library

கார்யத்தை நிறுத்துவது மட்டுமல்லாமல் சிந்தையையும் அடக்கிச் சும்மா இருப்பதையே இந்த அவதாரத்தில் முக்ய மாகவும் சொல்லணுமென்று பரம கருணையால் அவர் (தக்ஷிணாமூர்த்தி) நினைத்தார். சுருக்கமாகச் சொன்னால், இந்த அவதாரம் ஜனங்களைச் சும்மாயிருக்கப் பண்ணுவதற்காகவே ஆகும்.

மனமென்ற த்வைதம் மறைவதே அத்வைதம்

அப்படிச் சிந்தனை என்பதே, அதாவது மனஸ் என்பதே இல்லாமல் சும்மாயிருப்பதற்குத்தான் அத்வைதம், அத்வைதம் என்று பேர். த்வைதமாக, அதாவது இரண்டாவதாக ஒரு விஷயம் இருப்பதாக எப்படித் தெரிகிறது? மனஸு இருப்பதால்தான் தெரிகிறது. தூக்கத்தில் இன்னொன்று தெரிகிறதா? இல்லை. மனஸ் கொஞ்சம் அப்போது அடங்கிக் கிடப்பதால்தான் இரண்டாவது ஆஸாமி யாரும் தெரியவில்லை. அதனால் நிம்மதியாக, விச்ராந்தியாக இருக்கிறது. இரண்டாவது ஆஸாமி தெரிந்துவிட்டால் போதும், சாந்தி போச்சு! ஒன்று, அந்த ஆஸாமியிடம் ப்ரியம் என்று மனஸ் அடித்துக்கொண்டு எதையாவது செய்யத் தோன்றுகிறது. ஆலோசித்துப் பார்த்தால் அதுவும் உண்மையில் அந்த ஆஸாமியிடம் ப்ரியமில்லை; நம்மிடமேதான் ப்ரியம்; நமக்கு ப்ரியத்தை அந்த ஆஸாமி கொடுக்கக்கூடுமென்பதாலேயே அவனிடம் ப்ரியம்; அவனிடம் ப்ரியமாயிருப்பது நமக்கு ஒரு ஸந்தோஷத்தைத் தருகிறது என்பதற்காகவே ப்ரியம் என்று தெரிகிறது. ஆனால் இரண்டாவது ஆஸாமியிடம் ப்ரியம் என்பது எப்போதாவதுதான். நம்மைச் சேர்ந்தவர்கள், அல்லது இனிமேல் நமக்கு ஸ்வாதீனமாகக் கூடியவர்கள் என்பவர்களிடம்தான் ப்ரியம். பொதுவாக இரண்டாவது ஆஸாமியிடம் அஸூயை, போட்டி இப்படித்தான் உண்டாகிறது. ப்ரியத்திலே படுகிற சஞ்சலங்கள், செய்கிற கார்யங்கள் ஆகியவற்றில் ஏதோ ஒரு ஸந்தோஷ நிழலாவது அடிக்கிறதென்றால், போட்டியிலும் அஸூயையிலும் படுவதெல்

Koviloor Digital Library

லாமோ ஒரே கோபமும், த்வேஷமும், அழுகையுமாகி எதிராளியைத் தாக்குவதைவிட நம்மையே அதிகம் தாக்குகின்றன. நம்மை நாமே வதைத்துக் கொள்கிறோம்.

இரண்டாவது ஸமாசாரம் (நமக்கு வேறாக இன்னொன்று) இருப்பதன் வினைதான் இவ்வளவு கஷ்டங்களும்.

இரண்டாவது இல்லாமல் பண்ணிவிட்டால், நமக்கு வேறேயாக எதுவுமே இல்லையென்று ஆக்கிவிட்டால், எதிடம் ப்ரியமோ, த்வேஷமோ வரும்?

அப்படியென்றால் நம்மைத் தவிர எதுவுமே இல்லை என்று லோகம் முழுதையும் ஹதம் பண்ணுவதா? அப்படிப் பண்ண யாருக்கு சக்தி இருக்க முடியும்? அப்படியே இருந்து பண்ணி விட்டாலும் லோகத்திலே ஜீவர்களை வேணுமானால் ஹதம் செய்யலாமே தவிர லோகத்தை—ஜடமாக உலகமென்று இருப்பதை—எப்படி அழிக்க முடியும்? அதையும் அழித்து விட்டால் நாம் எங்கே இருப்பது?

த்வைதமான ஜீவ ஸமூஹத்தால் மட்டுந்தான் அசாந்தி என்றில்லை. ஜட ப்ரக்ருதியும் நமக்கு வேறேயாக இருந்து கொண்டு பலவித உணர்ச்சிகளை ஏற்படுத்திக்கொண்டு அந்த மோதல்களில் நம்மை அவஸ்தைக் படுத்திக் கொண்டுதானிக்கும். ஒரு மாம்பழத்தைப் பார்த்தால் தின்னனும் என்று ஆசை, ஒரு முள்ளுச் செடியைப் பார்த்தால் குத்திக்கொண்டு விடப்போகிறோமே என்று கவலை—இன்னம் பெரிசாக இடி, மின்னல், பூகம்பம் என்று பயம், 'குளிருகிறதே! கொளுத்துக் கிறதே!' என்று ஹிம்ஸைப்படுவது—இப்படியெல்லாம் இருந்துகொண்டே தானிருக்கும். இதுகளை எப்படி இல்லாமல் பண்ணிக் கொள்வது?

அப்படியே (ஜட) உலகத்தையும் எப்படியோ ஒரு விதத்தில் இல்லாமல் பண்ணிவிட்டு, நமக்கு வேறேயாக யாருமே இல்லை, எதுவுமே இல்லை என்று நாம் மட்டும் உட்கார முடிந்தாலும் அப்போதும் நமக்கே பசி, தாஹம்

Koviloor Digital Library

முதலானது வந்து அவஸ்தை கொடுக்கத்தானே செய்யும்? எதையாவது நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதில் காம நினைப்பு, க்ரோத நினைப்பு, பய நினைப்பு, துக்க நினைப்பு இதெல்லாம் வரத்தானே செய்யும்? தனக்குள்ளிருந்தே தானே ஒவ்வொரு ஜீவராசிக்கும் காமம் வருகிறது? வேறே யாரும் எதுவும் இல்லாமல் தனியாயிருந்தாலும் ஒருத்தனுக்கு அப்படி வந்து உபத்ரவப்படுத்தினால் என்ன செய்வது? 'முட்டாள் மாதிரி இப்படி நெனச்சோமே?' என்று நம்மிடமே நாம் கோபப்பட்டுக்கொள்வது, நம்மைப் பற்றியே அவமானப்பட்டுக் கொள்வது, இதெல்லாமும் நாம் மட்டும் ஏகாங்கியாக இருந்தாலும் ஏற்படத்தானே செய்யும்?

அப்படியானால் இன்னொன்று இல்லாமல்—அதாவது, அத்வைதமாக—செய்து கொள்வது என்றால் என்ன, எப்படி?

[பதிலாக, குரலைக் கனிவுடன் மாற்றிக்கொண்டு தொடர்கிறார்:] அப்பா! 'இன்னொன்று இல்லாமல்' என்றால், 'நமக்கு இரண்டாவதாக ஒரு வஸ்து இல்லாமல்' என்றால், அந்த இன்னொரு வஸ்து என்பது ஜீவ, ஜட லோகத்தில் உள்ள எதையும் குறிப்பதில்லை. 'பின்னே என்ன?' என்றால் நம்முடைய மனஸேதானப்பா! ஜீவலோகம் ஜடலோகம் ஆகிய எல்லாவற்றிலிருந்தும் நீ பெறுகிற கஷ்டம், ஸுகம், பயம், அழுகை, சிரிப்பு ஆகிய எல்லாம் உனக்கு மனஸ் என்று ஒன்று உள்ளவரைக்கும் தானப்பா! உனக்கு மயக்கம் கொடுத்து மனஸ் வேலையே செய்யாமல் பண்ணி ஆபரேஷன் பண்ணினார்களே, கத்தியைப் போட்டு உன்னை அப்போது அறுத்தார்களே—ஆனாலும் கொஞ்சமாவது பயம், வலி, அழுகை இருந்ததா? தினமும் நீ தூங்குகிறாயே. மனஸின் வேலையில்லாமல் நீ இருக்கிற அப்போதும் உனக்கு வேறேயாக லக்ஷம் கோடி இரண்டாவது வஸ்துக்கள் ஜீவ, ஜட லோகங்களில் இருந்துகொண்டுதானே இருந்தன? ஆனாலும் நீ கொஞ்சமாவது அவற்றால் பாதிக்கப்பட்டாயா? உன் உடம்புக்கே வலி, உன் உடம்புக்கே பசி என்கிறதுகூட மனஸு

Koviloor Digital Library

வேலை செய்யும்போதுதானே தெரிகிறது? துக்கம் ஸுகம் எல்லாமே மனஸ் இருக்கிறபோதுதானே?

அதனாலே, அப்பா, இரண்டாவது ஆஸாமி என்பது உன் மனஸேதான். தூக்கத்திலேயும் மயக்கத்திலேயும் உன் மனஸ் இல்லாமல் போயிருந்தாலும் உயிரோடுதானே நீ இருந்தாய்? அந்த உயிரைத்தான் ஆத்மா என்பது. அதுதான் நிஜமான நீ. அதற்கு இரண்டாவது ஆஸாமியாக மனஸ் என்று ஒன்றை மாயை கொண்டுவந்து விட்டிருக்கிறது. ஞானத்தினாலே அந்த இரண்டாவது ஆஸாமியை இல்லாமல் பண்ணிவிடு. அப்போது உனக்கு வேறேயாக, இரண்டாவதாக எதுவுமில்லை. அத்வைதம் என்ற அநுபவம் ஸித்திக்கும். இரண்டாவது இல்லாதபோது கார்யமில்லை, பேச்சில்லை, சுற்றுவதில்லை, அலைச்சலே இல்லை. அதாவது உபத்ரவத்தை உண்டாக்கும் எதுவுமில்லை. மனஸில்லாததால் எண்ணமே இல்லாமல் போய் விடுகிறதென்றதற்கப்புறம், மற்றதைப் பற்றிச் சொல்வானேன்? 'மனமாயை' போன அப்புறம் நாலா திசையிலும் போட்டு இழுக்கிற லோகாநுபவமே போய்விடும். அதாவது உன்னைப் பொறுத்தமட்டில் லோகமே போய்விடும். ஸம்ஸாரம் என்பதே போய்விடும். நீ தனியாக உட்கார்ந்திருந்தால்கூட உனக்குள்ளே காம, க்ரோதாதி எண்ணம் எதுவும் தோன்றாமல்—இதெல்லாமும் மனஸ் என்கிறதை வைத்து, அதிலிருந்து தோன்றுபவை தானே? மனஸே இல்லாததால் இவையும் தோன்றாமல்—அப்படியே சாந்த நிலையில் சாச்வதமாயிருக்கலாம். நல்லது, கெட்டது என்று பல பேர்களை வைத்துக்கொண்டு உன் சாந்தியைக் குலைக்க வருவதான இரண்டாவது ஸமாசாரம் எதுவுமில்லாமல் நீ பாட்டுக்கு ஸௌக்யமாயிருக்கலாம்.

சூன்யமில்லை; ஸச்சிதானந்த பூர்ணமே!

'ஒண்ணுமே இல்லேன்னா சூன்யமா? கடைசியிலே சூன்யமாவாப் போறது?' என்று யோசிக்காதே. சூன்யமே இல்லை. அப்போதும் ஆத்மாதான் இருக்கிறதே! நீ நிஜமான

Koviloor Digital Library

நீயாக இருக்கிறுயே, இது எப்படி சூன்யமாகும்? மனஸ் போன (அழிந்த) பிறகே அடையக்கூடிய அந்த நிலை எப்படி இருக்குமென்று மனஸுக்குப் புரியவைக்கவே முடியாது. இருந்தாலும் அத்வைதப் புஸ்தகங்கள் கொஞ்சத்தில் கொஞ்சம் புரியவைக்கப் பார்க்கின்றன. என்ன சொல்கின்றனவென்ருல்: தூக்கத்திலும் மயக்கத்திலுங்கூட நீ ஆத்மாவாக இருந்துகொண்டிருந்தாலும், உனக்கு 'ஸத்' என்ற அந்த இருப்பு நிலை தெரியவில்லை, இல்லையா? ஞான மார்க்கத்தில் ஸாதனை பண்ணி நீ நிஜமான ஆத்மாவாயிருக்கும் ஸமாதியிலோ ஸத்தாக இருப்பதைப் பூர்ணமாகத் தெரிந்துகொண்டு, அநுபவித்துக்கொண்டு அப்படி இருப்பாய். பாக்கியுள்ள ஸகலமும் இருக்கிறதாகத் தெரிந்தாலும் என்றைக்கோ ஒரு நாள் இல்லாமல் போகப் போகிறவைதான். இந்த ஆத்மா மட்டுமே, தாற்காலிகமான அந்த எல்லா வ்யவஹார ஸத்யங்களுக்குங்கூட ஆதாரமாக, சாச்வதமாக உள்ள ஒரே ஸத். அப்படிப்பட்ட ஸத்யமே நாமென்ற பூர்ண ப்ரஜ்ஞையோடு இருப்பாய். இப்படிச் சொன்னதாலேயே அப்போது நீ ஞானத்தோடு, அதாவது 'சித்' ப்ரகாசத்தோடு இருக்கிருயென்று தெரிகிறது. சித்தோடு கூடி, சித்தினுல் ஸத்தை நீ அறிகிருய் என்று இதற்கு அர்த்தம் பண்ணிக்கொண்டால் ஒரே தப்பாகிவிடும்! அத்வைதம் போய் த்வைதம் வந்துவிடும். ஏனென்ருல் அப்போது 'ஸத்'தென்ற உன் ஸ்திதி ஒன்று, அதற்கு வேருக இருந்துகொண்டு அதை அறிகிற 'சித்'தென்று இன்னொன்று என்று இரண்டு ஸமாசாரம் வந்துவிடும். உபத்ரவ ஹேதுவான இரண்டாவது ஸமாசாரமில்லாமல் பண்ணிக்கொண்ட நிலைதான் இது (ஸமாதி) என்று சொல்லிவிட்டு இப்படி (ஸத், சித் என்று இரண்டு இருப்பதாகச்) சொன்னுல் தப்புத்தானே? ஆகையால், அப்போது அந்த ஸத்தும் சித்தும் கூட ஒன்ருகவே ஆனவைதான். நீ சித்தோடு கூடி ஸத்தை அறியவில்லை. சித்தாகவே இருக்கிருய். ஸத்தும் சித்துமாகிய 'ஸத்சித்'தாக இருக்கிருய், ஸச்-சித்தாக இருப்பதோடு, மனஸினுலே வருவித்துக் கொண்ட அத்தனை வித ஸம்ஸாரக்

Koviloor Digital Library

கட்டும் அறுபட்டுப்போன அந்த பரம ஸ்வதந்திரமான நிலை ஆனந்தமாக—பேரானந்தமாக—இருக்கும். சூனியமாய்ப் போவதில்லை; ஆனந்த மயமாக இருப்பதாயிருக்கும். வெளியிலிருந்து வராமல், ஆகையால் வெளி பாதிப்புகளுக்கு ஆளாகாமல், தன்னிலிருந்தே, தான் தானாக இருப்பதிலேயே ஏற்படும் சாச்வத ஆனந்தம்! வெளியிலிருந்து மனஸினால் பெற்ற ஆனந்தம் எல்லாமும் இந்த ஆனந்த ஸாகரத்தின் ஒரோரு திவலைதான். 'ஸச்சித்'துக்கு வெளியிலிருந்து வருகிற ஆனந்தமாயிருந்தாலும், சற்று முன் சொன்னபடி, த்வைதம் வந்துவிடுமாதலால், ஸத்-சித்-ஆனந்தம் எல்லாமே ஒன்றுதான். நீ இப்படி ஸச்-சித்-ஆனந்தமாக இருக்கும் பரிபூர்ண நிலைதான் பந்தத்திலிருந்து விடுபட்ட மோக்ஷ நிலை. சூன்யம் இல்லவேயில்லை.

ஜீவாத்ம-பரமாத்ம பேதமும் இல்லை

அங்கே இரண்டாவது வஸ்து இல்லை என்னும்போது முக்யமாக ஒன்றைச் சொல்லவேண்டும். 'பூலோகம், ஸ்வர்க்க லோகம் முதலியவற்றைவிட உசந்ததாக, ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பதாக, ஸ்வாமி இருக்கும் மோக்ஷலோகம் என்று ஒன்று இருக்கிறது. வைகுண்டம், கைலாஸம் என்பதெல்லாம் அதுதான். அங்கே அவர் தன்கிட்டே ஒரு ஜீவனைக் கொண்டுபோய் சாச்வதமாக வைத்துக் கொள்வதுதான் மோக்ஷம்' என்றே பல ஸித்தாந்தங்கள் சொல்கின்றன. அதாவது மோக்ஷத்திலேயும் ஸ்வாமி, நாம் என்று இரண்டு உண்டு; ஸ்வாமிக்கு வேறேயாக நாம் இருக்கிறோம், நமக்கு வேறேயாக ஸ்வாமி இருக்கிறார்—என்பது அவற்றின் முடிவு. பக்தியாக, 'தியாலாஜிக'லாக "ஸ்வாமி" என்று சொல்வதைத் தத்வ சாஸ்த்ரமாக, 'ஃபிலாஸஃபி'யாகச் சொல்லும்போது "பரமாத்மா" என்று சொல்லி, "மோக்ஷம் உள்பட எப்போதுமே பரமாத்மாவும் ஜீவாத்மாவும் (ஜீவாத்மாதான் நாம்) வேறுதான். இவை இரண்டு ஆஸாமிகள்தான்—

Koviloor Digital Library

த்வைதம்தான்" என்பார்கள். ஸகல ஜீவ-ஜகத்துக்களுக்கும் காரண வஸ்துவான 'ப்ரம்மம்' என்பதுதான் இந்தப் பரமாத்மா. அத்தனையையும் ஆட்டிப்படைத்து ஆள்வதால் 'ஈச்வரன்' என்பதும் அதைத்தான்.

ஆனால் அத்வைதப்படி: ஜீவனுக்கு மாயையினால் ஏற்பட்ட மனஸ் என்பது உள்ளபோதுதான் எல்லாவிதமான உலக அநுபவமும் உணர்ச்சிச் சஞ்சலங்களும் உண்டாகிறது என்றும், அவன் மனஸைக் கழட்டிப் போட்டுவிட்டு மாயைக்கு அந்தண்டை போய்விட்டால் ஒரே சாச்வத சாந்தியாய்ப் போய்விடுகிறானென்றும் பார்த்தோமல்லவா? இதே மாதிரி, இவனுக்கு அநுபவத்தைக் கொடுக்கிற உலகம், இவனுடைய மனஸ், மற்ற எல்லாருடைய மனஸுகள்— ஆகிய இவை அத்தனையையும்கூட ப்ரம்மம் மாயையால்தான் உண்டாக்கியிருக்கிறது. ஜீவனுக்கு மனஸு மாதிரிதான் ப்ரம்மத்துக்கு மாயை- மனஸு நம்முடைய நிஜமான நான் இல்லை என்கிற மாதிரியே ப்ரஹ்மத்துக்கும் மாயையோடு கூடியிருக்கும் நிலை ஸ்வ - ஸ்வரூபமில்லை. ப்ரஹ்மம் ஈச்வரனாக இருந்துகொண்டு, தான் ஆட்டிப்படைக்கிற பரமாத்மா என்றும் மற்றவர்கள் ஆட்டிப்படைக்கப்படுகிற ஜீவாத்மா என்றும் பண்ணுகிறதெல்லாம் தன் நிஜ ஸ்வரூபத்திலிருந்து கொண்டு பண்ணுவதல்ல. மனஸைக் கழட்டி போட்டு விட்டால் நாம் சாந்திமயமாக, ஒரு கார்யமுமில்லாத ஆத்மா வாக இருக்கிற மாதிரியே ப்ரஹ்மமும் மாயையைக் கழட்டிப் போட்டுவிட்டுத் தானாக இருக்கிற நிலையில் உள்ளது. 'இது மாதிரி அது' என்பதைவிட, 'அது மாதிரி இது' என்பதுதான் ஸரி. ஏனென்றால் அது மாயையைக் கைக்கொண்ட பிறகு தான் ஜீவனுடைய தோற்றம், இவனுடைய மனஸ் எல்லாம் உண்டாயிருக்கின்றன. இன்னம் இப்படி ஆலோசித்துப் பார்த்துக்கொண்டே போனால் 'அது மாதிரி இது'. 'இது மாதிரி அது' என்று 'மாதிரி' போடுவதெல்லாமே தப்புதான். 'மாதிரி', 'கீதிரி' எதுவும் இல்லை. அதுவேதான் இது· ப்ரஹ்மமேதான் ஜீவன். மாயையில்லாத நிஜ நிலையில் ப்ரஹ்மமும் பரம சாந்தி, மனஸில்லாத நிஜ நிலையில் ஜீவனும்

Koviloor Digital Library

பரம சாந்தி என்றால் இரண்டும் ஒன்றேதானே? ப்ரஹ்மம் மாயையைப் போட்டுக்கொண்டு ஜகத்தைச் செய்து, அந்த ஜகத்திலே மனஸைப் போட்டுக்கொண்டிருப்பவனான ஜீவன் என்று ஒருவனைச் செய்திருக்கிறது என்றால் ப்ரஹ்மமே ஜகத்தாகவும், ஜீவனாகவும் தோன்றுகிறது என்றே அர்த்தம். ஜீவாத்மா என்கிறவனிடமிருந்து மனஸை எடுத்துப் போட்டுவிட்டால் ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறான். ஜீவாத்மா, பரமாத்மா என்று இரண்டு ஆத்மா இல்லை. ஒரே ஆத்மாதான். அதற்கே ப்ரஹ்மமென்று பேர்.

ஸ்வாமி என்று ஒருவர் வைகுண்ட, கைலாஸாதி லோகங்களில் நம்மைக் கொண்டுபோய் வைத்துக் கொள்ளும் போது அது எத்தனை உசத்தியாகத்தான் இருக்கட்டும், அவர் அங்கே கொடுக்கிற ஆனந்தம் எத்தனை பெரிசாகத்தான் இருக்கட்டும். எப்படியிருந்தாலும் அவரும் ஸரி, நாமும் ஸரி நிஜ ஸ்திதியில் இல்லை; ஸ்வ ஸ்வரூபத்தில் இல்லை. இரண்டு பேருமே சாந்த ஸமுத்ரமாக அப்படியே அடக்கியிருக்கிற நிச்சலன நிலையில் இல்லை. பக்தி என்று நாம் ஒரு கார்யம் பண்ணுகிறோம். அநுக்ரஹம் என்று அவரும் ஒரு கார்யம் பண்ணுகிறார். பக்தி பண்ண மனஸ் என்று ஒன்று இல்லாமல் முடியாது. அது விகாரங்களே இல்லாத மனஸாகத்தான் இருக்கட்டும், இருந்தாலும் அப்படியொன்று இருந்துதானாக வேண்டும். அது இருக்கிறதென்றால் நம்முடைய நிஜ ஸ்வரூபமான ஆத்மாவை விட்டுவிட்டு இதனிடமே நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டுவிடுகிறோம் — identify செய்து கொள்கிறோம்—என்றுதான் அர்த்தம். இப்படி நாமே நிஜமான நாமாக இல்லாதபோது செய்யும் ஒன்று எத்தனை தான் உசத்தியாயிருந்தாலும் அது ஸத்ய ஸத்யமில்லை என்ற குறை இருக்கத்தானே செய்கிறது? அதனால் பரமாத்மா நமக்குப் பரமாநுக்ரஹம் பண்ண நினைக்கும்போது, 'இவனுக்கு நம்மை வேறாயாக வைத்துச் செய்கிற பக்திக் கார்யம்கூட வேண்டாம்; நமக்கும் இவனை வேறாயாக வைத்துச் செய்கிற அநுக்ரஹ கார்யம்கூட வேண்டாம்;

Koviloor Digital Library

ஏனென்ருல் இவன் நமக்கு வேறேயாக இருக்கிறபோது வாஸ்வதத்தில் தனக்கே வேறேயான மனஸுடன் தான் ஐக்கியப்பட்டு, தாஞன ஆத்மாவை விட்டுவிடுகிருன். அப்படி வேண்டாம். நாமும் அநுக்ரஹம் என்ற கார்யம் பண்ணுவ தற்காக மாயையை வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதுவும் வேண்டாம். ஆனபடியால், நாம் இவனுடைய மனஸை அடியோடு போக்கி, இவனே நமக்குள்ளேயே ஆத்மாவாய், ப்ரஹ்மமாய் வைத்துக்கொண்டு விடுவோம்' என்று அத்வைத மோக்ஷம்தான் அநுக்ரஹிப்பார். ஸ்வாமி என்றும் பக்தன் என்றும் வேருக இல்லை; ஜீவாத்ம-பரமாத் மாக்களும் வேறே இல்லை என்று பண்ணிவிடுவார். த்வைதமாக இரண்டாவது இல்லை என்கின்ற வேதாந்த ஸித்தாந்தத்தில் 'அத்வைதம்' என்று சொல்வது, இப்படி பக்தனும் பகவானும்—அதாவது ஜீவாத்மாவும் பரமாத் மாவும்—இரண்டு வேறு வஸ்துக்களில்லை என்பதைத்தான். ஜீவ-ப்ரஹ்ம அபேதம்தான் அத்வைதம்.

அதுவே மோக்ஷம். மோக்ஷ லோகம் என்று ஒன்றில்லை. மோக்ஷ அநுபவம்தான்.

அங்கே கார்யமே கிடையாது. கார்யம் செய்ய மனஸ் வேண்டும். மனஸ் வந்தால் ஆத்மாவாக இருக்கும் நிஜமான நிலை போய்விடும்.

இந்த மோக்ஷ அநுபவத்திற்கே ரூபமாக இருக்கும் தக்ஷிணமூர்த்தி நம் கதை ஆரம்பிக்கும் ஸமயத்தில், 'நாம் கார்யமில்லாமல் இப்படி நிர்விசாரமாக உட்கார்ந்திருக் கிறேம். ஜனங்களானல் கார்யத்திலும் ஒரே தப்பான கார்யமாக பண்ணிக்கொண்டு கஷ்டப்படுகிறதுகளே, பிறரையும் கஷ்டப்படுத்துக்கிறதுகளே' என்று பரம கருணையோடு நினைத்தார்.

"'கருணையோடு நினைத்தார்' என்ருல் அவரும் மனஸினலே கார்யம் பண்ணினர் என்றுதானே அர்த்தம்?

Koviloor Digital Library

அப்புறம், அவரை ஆத்மாவாகவே மோக்ஷானந்தத்தில் முழுகி நிஷ்க்ரியமாக இருக்கிறவர் என்றால் என்ன அர்த்தம்?"

மாயா ஸஹிதனுயினும் ஈசன் ஞானியே!

அவர் ஸமாசாரம் வேறே. அவர் நம் மாதிரி இல்லை, அவர் ஒரே ஸமயத்தில் மாயையோடேயும் சேர்ந்திருப்பார். தனித்து ஆத்மாவாகவும் இருப்பார். அவருடைய ஆதிக்கத்திலுள்ள மாயை நமக்குத்தான் நம்முடைய ஆத்மா தெரியாத விதத்தில் மனஸ் என்ற தடுப்பைப் போட முடியுமேயொழிய அவருக்கே போட முடியாது. அதனால் அவர் எவ்வளவு மாயக்கூத்து அடித்துக்கொண்டு ஈச்வரனாக, அவருடைய நிஜ நிலையில்லாத மாதிரி இருந்தாலும் அப்போதும் பூரண ஞானத்துடன் தான் ப்ரஹ்மமே என்ற அநுபவத்திலேயே உள்ளூர இருந்துகொண்டுதானிருப்பார். ஒரு யோகி ஸித்துகள் பண்ணி என்னென்னவோ மாயக் காட்சிகள் காட்டுகிறபோது, ஏன், ஒரு ஸாதாரண செப்பிடு வித்தைக்காரன்கூட 'மாஜிக்' செய்யும்போது, மற்றவர்கள் தான் அவற்றை நிஜமென்று நினைத்து மயங்குவார்களே தவிர, மாயைக்கு (மாயை என்றால் 'மாஜிக்' என்று அர்த்தம். அப்படிப்பட்ட மாயைக்குக்) காரணமான அந்த யோகியும் 'மாஜிக்-ஷோ'க்காரனும் அப்படி மயங்குவார்களா? இப்படித்தான் ஈச்வரன்— தக்ஷிணாமூர்த்தியாக இருக்கப்பட்டவன்—லோக லீலை செய்வதும். ஆசார்யாளே சொல்லியிருக்கிறார்:

மாயாவீவ விஜ்ரும்பயத்யபி மஹா யோகீவ
யஃஸ்வேச்சயா
தஸ்மை ஸ்ரீ குருமூர்த்தயே நம இதம்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தயே ||

அதெப்படி மாயா ஸஹிதனாக இருந்துகொண்டே மாயா ரஹிதனான ஞானியாயும் ஈச்வரன் இருப்பாரென்றால்,

Koviloor Digital Library

இதற்கு ஒரே பதில், 'அவர் ஈச்வரனல்லவோ? அதனால் அவர் எப்படியும் இருக்கமுடியும். அதிலே இப்படி இருக்கிறார்' என்பதுதான்! நம்மாலெல்லாம் செய்ய முடியாததைச் செய்பவர்தானே ஈச்வரன்? நம்மால் ஏதோ ஒரு மாதிரி இருக்க முடியாவிட்டால், அது அவருக்கும் முடியாது என்று நாம் நினைப்பது எப்படி ஸரியாகும்? நம்மை அவர் இப்படி யிப்படிப் பண்ணிப் போட்டிருக்கிறார். அதற்காக அவரும் இப்படியே இருக்கவேண்டும் என்று ஆகுமா? ஞானியையும் அவர்தான் பண்ணியிருக்கிறார்; அஞ்ஞானியையும் அவரே தான் பண்ணியிருக்கிறார். அப்போது அவர் ஏன் இரண்டு பேர் மாதிரியும் ஒரே ஸமயத்தில் இருக்கக் கூடாது?

நிர்குணமான அவரேதான் தனக்குள்ளே ஸகுணமான பராசக்தியை அடக்கிக் கொண்டிருக்கிறாரென்று பார்த்தோமல்லவா? அதிலேயே எல்லாவற்றுக்கும் பதில் சொல்லியாகிவிட்டது! முரண்பாடுகள் போலத் தெரியும் ஸகலமும் அங்கே ஸமன்வயப்பட்டுப் போய்விடுகின்றன.

அதனால், அவர் கருணையில் நினைக்கும்போதும் தன்னிலே பெயராமலேதான் இருந்தார். தன்னுடைய 'மாஜிக் ஷோ' இவ்வளவு கோணமாணவாக போய்க் கொண்டிருக்கிறதே என்று இரக்கம் கொண்டு அதை ஸரி செய்யணுமென்று நினைத்தார்.

அவதார நோக்கம்:
கர்மா-பக்தி வழியே ஞானம் அடைவித்தல்

எதையாவது பண்ணி ஹிம்ஸையில் மாட்டிக்கொண்டிருக்கும் ஜனங்களிடம் போய் எதையும் பண்ணாமலிருக்கிற அத்வைதத்தைச் சொல்லவேண்டுமென்று ஸங்கல்பம் செய்து கொண்டார்.

'அவ்வளவு சட்டென்று எல்லாரும் ஒன்றும் பண்ணாமலிக்கும் வழிக்கு வரத்தான் மாட்டார்கள். கார்யம் பண்ணுவதுதான் கஷ்டம், கார்யம் பண்ணாமல் அக்கடாவென்று

Koviloor Digital Library

உட்கார்ந்துகொண்டிருப்பது ஸுலபம் என்று வெளிப் பார்வைக்குத் தோன்றுகிறது. ஆனாலும் நடைமுறையில் தூக்கம் என்று கொஞ்ச நாழி அடித்துப் போடுகிறதுபோக, மற்றபடி கார்யமில்லாமல் உட்கார்ந்திருப்பதுதான் மஹா கஷ்டமாயிருக்கும்! மனஸ் சும்மா இருக்கவிடாது. ஒன்று மாற்றி ஒன்று எதையாவது பண்ணிக் கொண்டிருக்கும்படி அது ஏவிக்கொண்டே இருக்கும்.

"ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்"*

—"ஒருபோதும், ஒரு க்ஷணங்கூட எவனும் ஒரு கார்யமும் செய்யாதவனாக இருப்பதேயில்லை!" என்று பகவான் ஜனங்களுடைய 'பல்ஸை' நன்றாகப் பிடித்துப் பார்த்துத்தான் சொன்னார்.

'கையால், காலால் கார்யம் செய்யாமல் சும்மா இருப்பதே கஷ்டம் என்றால், அத்வைதத்தில் ஒன்றும் பண்ணாமலிருக்கவேண்டும் என்னும்போதோ, இதைவிட கஷ்டமாக—'கஷ்டமாக' என்று சொன்னால் போதாது; 'ஸாத்யமே இல்லாதது' என்று தோன்றுவதாக—மனஸினாலேயும் எதையும் நினைக்கவே கூடாது என்று இருக்கிறது. இப்படிச் சொல்லியிருப்பதை யார் கேட்பார்கள்?

'கேட்பார்களோ, கேட்க மாட்டார்களோ நாம் ஓயாமல் சொல்லிக்கொண்டே லோகம் பூரா போய்க் கொண்டேயிருக்க வேண்டியதுதான். இப்படி 'விட மாட்டேன்' என்று அஹோ ராத்ரம் அதுவே கார்யமாக சொல்லிக் கொண்டேயிருந்தால் தானே ஆயிரத்தில் ஒருத்தராவது கேட்கத்தான் செய்வார்கள். பிற்காலங்களில் வரப்போகிறவர்களுக்காகவும் எழுதி வைத்துவிட்டால், தலைமுறைக்குத் தலைமுறை இப்படி ஆயிரத்தில் ஒருத்தர் அந்தப்படி கேட்டுப் பண்ணாமல் போகமாட்டார்கள். இப்படி ஆயிரத்தில் ஒருத்தர்—அதுகூட ஜாஸ்தியாயிருக்கலாம்;

* கீதை III. 5

Koviloor Digital Library

லக்ஷத்தில், பத்து லக்ஷத்தில் ஒருத்தர்—ஒன்றும் பண்ணுமல் சும்மா இருந்துகொண்டு பந்த மோசனம் (ஸம்ஸாரத்தி லிருந்து விடுதலை) பெற்றுவிட்டால்கூடப் போதும். இத்தனை கோடாநு கோடி ஜீவராசிகளைக் கொண்ட ஸ்ருஷ்டி வீணுக வில்லை, பழமாகப் பழுத்துவிட்டது என்று ஆகிவிடும்.

'பாக்கிப் பேர் கர்மாவில், பக்தியில்தான் போகமுடியும். பக்திகூடக் கனிந்த பக்தியாக—லோகத்தில் ஸகலத்திடமும் வைராக்யம், ஈச்வரன் ஒருவனிடம் மட்டும் பரம ப்ரேமை என்றிருக்கும் கனிந்த பக்தியாக—ரொம்பப் பேரிடம் இருக்க முடியாது. அதனுல் பரவாயில்லை. இப்போது ஒரே அவைதிக மாகப் போயிருக்கிற மாதிரி இல்லாமல், ஜனங்கள் வேத சாஸ்த்ரப்படி முடிந்த மட்டும் கர்மா பண்ணி, ஒரு பூஜை, ஒரு கோவிலுக்குப் போவது, ஒரு க்ஷேத்ராடனம் என்று செய்ய ஆரம்பத்தாலும்கூடப் போதும்.

'இதற்கெல்லாமும் நாம்தான் பூலோகத்தில் பிறந்து ஒரு ஊர் விடாமல் சுற்றிச் செய்யவேண்டியதை எல்லாம் செய்யவேண்டும். வர்ணுச்ரம விபாகப்படி கர்மா நடக்கப் பண்ணவேண்டும். வைதிகமாக உபாஸனு மார்க்கங்களை சுத்தம் செய்துகொடுக்கவேண்டும். க்ஷேத்ரங்களில் நல்ல ஸாந்நித்யமும் ஜனுகர்ஷணமும் இருக்கும்படியாக யந்த்ர ப்ரதிஷ்டைகள் செய்யவேண்டும்.

"ஆனுலும் இதெல்லாம் பண்ணுவதோடு—இதற்கெல் லாம் மேலாக—இத்தனை பண்ணிக்கொண்டிருந்தாலும், ஒன்றும் பண்ணுமலிருப்பதுதான் முடிவான லக்ஷ்யம் என்றும் ஓயாமல் ஞாபகப்படுத்தி, 'என்றைக்கோ ஒரு நாளிலாவது நாமும் அந்த வழியில்—ஞான மார்க்கத்தில்—போய்ச் சேரத் தான் வேண்டும்' என்று ஜனங்கள் விரும்பும்படியாகத் தூண்டிக்கொண்டே இருக்கவேண்டும். அது ரொம்பப் பேருக்கு ச்ரமஸாத்யமாயிருந்து அவர்கள் அதில்போகாமலே வேண்டுமானுலும் இருக்கட்டும். 'போகாமலே வேண்டு மானுலும்' என்ன? அதற்கான பக்வம் அடையாதமட்டும் 'போகப்படாது' என்பதுதான் நம்முடைய (அதாவது,

Koviloor Digital Library

ஈச்வரனுடைய) கட்டளையே! முடியாத கார்யத்தில் யத்தனம்பண்ணித் தோற்றுப்போக வேண்டாம், தோற்றது தெரியக்கூடாது என்று ஜயித்தமாதிரி, 'ஹிபாக்ரிஸி' பண்ண வேண்டாம் என்றுதானே, எவருக்கும் முடியக்கூடியதாக 'ப்ரவ்ருத்தி மார்க்கம்' என்று ஒன்றைப் பிரித்துவைத்து, 'இதிலேயே போங்கள். போய் இதில் ஸித்தியடைந்து சித்த சுத்தி பெற்ற பிற்பாடுதான் நிவ்ருத்தி மார்க்கம்' என்று ஆக்ஞை செய்திருக்கிறோம்?

"ஆனால், இப்போது, உடனேயேதான் போகப்படாதே தவிர, சித்தத்தைப் பரிசுத்தி செய்துகொண்டு, அதன் பிறகு, எத்தனையோ வருஷங்கள், ஜன்மங்களுக்கு அப்புறமாவது அதில் (நிவ்ருத்தியில்) போனால்தானே கதிமோக்ஷம்? ஸம்ஸாரச் சுழலிலிருந்து தப்பி சாச்வத ஸௌக்யத்தைப் பெற அதைவிட்டால் வேறே வழி இல்லையே! ஆனபடியால், எதுதான் முடிவான லக்ஷ்யமோ, எதுதான் பரம ஸத்யமோ, எதுதான் நித்யானந்தமோ, எதை உபநிஷத்துக்களில் கோஷித்ததால்தான் வேதங்களுக்கே பெருமையோ அது என்னவென்று இப்போதிலிருந்தே எல்லோரும் காதால் கேட்டுத்தெரிந்து கொள்ளவாவது வேண்டுமோ வேண்டாமோ? அதற்காகத்தான் (தற்போது எடுக்கப் போகிற அவதாரத்தில்) கர்மா என்றும், உபாஸனை என்றும் எத்தனை தான் பண்ணச் சொன்னாலும் அதைவிட அதிகமாக ஞானத்தை—கர்மா, பக்தி முதலான எதுவுமே பண்ணாமலிருக்கிற, ஒண்ணுமே பண்ணாமலிருக்கிற பரம நிலையை—சொல்லிக்கொண்டே போகவேண்டும். அப்போதுதான் (அதைப் பின்பற்றுவதற்கு) அந்த ஆயிரத்தில், லக்ஷத்தில் ஒருவனாவது:தோன்றுவான்.

"அத்தனை கர்மாக்களையும் நன்றாக, விடாமல் பண்ணு: கர்ம ஸ்வநுஷ்டீயதாம்* என்று ஆரம்பித்தாலும் அதைக்

---

* இதுவும், தொடர்ந்து இப் பாராவில் வரும் எல்லா மேற்கோள்களும் ஸ்ரீ சங்கரரின் 'ஸோபாந பஞ்சக'த்தில் வருவனவாகும்.

Koviloor Digital Library

கொஞ்சம் கொஞ்சமாக ஈச்வரோபாஸனையாக்கிக் கொள்: தேநேசஸ்ய விதீயதாம் அபசிதி:. காம்யமாகப் பண்ணுவ திலிருந்து நிஷ்காம்யமாகப் பண்ணும் யோகத்துக்குப் போ: காம்யே மதிஸ் - த்யஜ்யதாம். இப்படி முன்னேறிக்கொண்டே போய் ஸத்ஸங்கத்திலேயே இருக்க ஆரம்பி: ஸங்க: ஸத்ஸு விதீயதாம். அசட்டு பக்தி, 'அது வேணும், இது வேணும்' என்று கேட்கும் பக்தியிலிருந்து முன்னேறி பகவானிடம் நிஜமான பக்தியை உறுதியாக வளர்த்துக்கொள்: பகவதோ பக்திர் த்ருடாதீயதாம் என்றெல்லாம் ஜனங்களுக்குச் சொல்லிக்கொண்டே போனாலும் முடிவான லக்ஷ்யத்தை மறக்கவிடக் கூடாது, அதைச் சொல்லாமல் விடக்கூடாது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்றைக்காவது ஒரு நாளாவது உனக்கு சித்த பரீபாகம் (பரிபக்குவம்) ஏற்படும். அப்போது நிவ்ருத்தி மார்க்க குருவிடம்போய், விடாமல் பாத ஸேவை செய்து உபதேசம்—ப்ரணவோபதேசம், உபநிஷத்தின் ஜீவ-ப்ரஹ்ம அபேத மஹாவாக்ய உபதேசம்—வாங்கிக் கொள்' என்றும் சொல்லவேண்டும்.

ஸத்வித்வான் உபஸ்ருப்யதாம் ப்ரதிதினம் தத்பாதுகா ஸேவ்யதாம்
ப்ரஹ்மைகாக்ஷரம் - அர்த்யதாம் ச்ருதிசிரோ வாக்யம் ஸமாகர்ண்யதாம்

'ப்ரஹ்மாஸ்மீதி விபாவ்யதாம்: 'நானே ப்ரஹ்மம்' என்ற பாவனையை ஏற்படுத்திக்கொண்டு அப்புறம் பாவனை அநுபவ மாகவே நன்றாக முற்றி நீயே பரப்ரஹ்மமாகவே நிற்க வேண்டும்; பரப்ரஹ்மாத்மநா ஸ்தீயதாம் என்று நம் உபதேசத்தை முடிக்கவேண்டும். அங்கே ஒன்றும் பண்ண வேண்டாம். ஒன்றின் உறவும் வேண்டாம். எல்லாக் கார்யத் திற்கும் முழுக்குப் போட்டுவிட்டு ஏகாந்தத்தில் ஸௌக்ய மாக இருக்கவேண்டியது; மனஸைக் கழட்டிப் போட்டுவிட்டு ஆத்மாவையே அநுபவித்துக்கொண்டு சும்மாக் கிடக்க வேண்டியது—ஏகாந்தே ஸுகமாஸ்யதாம்...பூர்ணாத்மா ஸுஸமீக்ஷ்யதாம்.

Koviloor Digital Library

'ஏதாவது பண்ணிக்கொண்டே யிருக்கும் இயல்புடையவர்களான கர்ம ஸங்கிகளை முதலில் தப்புப் பண்ணாமல் நல்லது பண்ணும்படியாகக் கர்மாநுஷ்டானம், ஈச்வரபூஜை என்று ஈடுபடுத்த வேண்டியதுதான். ஆனாலும் நல்லது, நல்லது என்று நினைத்துக்கொண்டிருக்கிற இந்த எல்லாவற்றிலுங்கூடக் கெடுதலாக ஏதாவது கலந்து கலந்து வந்து கொண்டேதானிருக்கும். கார்யம் என்றால் முழுக்க நல்லதாக இருக்கவே முடியாது. எதற்காவது ஹிம்ஸை, யாருக்காவது கஷ்டம், எதுவாவது நஷ்டம் என்று ஏற்படுத்தாமல் ஒரு கார்யமும் இல்லை. எந்த ஸத்கார்யமானாலும்கூட இப்படித்தான். எத்தனைதான் நல்லதை நினைத்துப் பரோபகாரம், பரமோபகாரம் பண்ணுவதாகப் பெருமைப் பட்டுக்கொண்டு செய்வதிலும் நல்லதற்கில்லாத அம்சங்களும் கொஞ்சமாவது கலந்து கலந்துதான் வரும்'......

கலப்படமற்ற நன்மை எதுவுமில்லை

[தக்ஷிணாமூர்த்தியின் சிந்தனையாக இதுவரை பேசி வந்தவர்கள், ஒரு சிறிய இடைவெளி கொடுத்துத் தம்முடைய கூற்றாக ஆரம்பிக்கிறார்கள்.]

கார்யமென்று ஏற்பட்டால், அதிலே உசத்தியான கார்யம் எது? கர்மத்தைக் கழித்துக் கொள்வதற்காகவே ஸ்வய நலம் கருதாமல், பரநலம் மட்டுமே கருதிச் செய்கிற கார்யம்தான்; இதுதான் கர்மாவையே போக்கிக்கொள்ள உதவுகிற கர்மயோகம் என்று சொல்கிறார்கள். ஆனால் கலப்படமில்லாமல் இப்படிப் பரநலம் மட்டும் எந்தக் கார்யத்தினாலாவது பண்ணமுடியுமா என்று பார்த்தால் அப்படி எதுவுமே தெரியவில்லை! எந்தக் கார்யமானாலும் அதில் நல்லதோடு கெடுதலும்—பரநலத்தோடு ஹிம்ஸையும்—இருப்பதாகவே தெரிகிறது.

'லோக க்ஷேமத்திற்காக யுத்தம் பண்ணு' என்று கர்மயோகத்தை உபதேசம் செய்து அர்ஜுனனின் பிடரியைப்

Koviloor Digital Library

பிடித்து பகவான் தள்ளி, அந்தப்படியே அவனும் பண்ணினனே? அதனால் கலப்படமேயில்லாமல்,—unmixed, unalloyed என்கிறார்களே, அப்படிப்பட்ட—ஸர்வ க்ஷேமமா வந்தது? எத்தனை மஹாவீரர்கள், அபிமன்யு மாதிரி யுவாக்கள், நல்லதெல்லாம் தெரிந்த பீஷ்மாசார்யார் மாதிரியான பெரியவர்கள் சாகும்படியாயிற்று? ரத்த வெள்ளம், கை கால்கள் மீன் மாதிரி (அதில்) மிதந்துகொண்டு, அறுபட்ட சிகை பாசிமாதிரி படர்ந்துகொண்டு—என்று யுத்தவர்ணனையைப் படிக்கும்போதே ரத்தம் சில்லிட்டுப் போகிறது! இதுவா லோகக்ஷேமம் என்று தோன்றுகிறது! யுத்தம் முடிந்ததும் பெரிய லோக க்ஷேமம் ஏற்பட்டுவிட்டதென்று எவரும் பூரித்துப்போய் ஸந்தோஷம் கொண்டாடினதாகத் தெரியவில்லை. 'புருஷனை, புத்ரனை, பந்துமித்ராளை இழந்து ஸ்த்ரீகளும் அவாளும் இவாளும் கலங்கிக்கொண்டு கதறிக்கொண்டு தர்ப்பணம் பண்ணப் போனார்கள்; வெற்றிபெற்று ராஜாவான தர்மபுத்ரரானால் எல்லாரையும்விடப் பெரிசாக அழுதுகொண்டு, 'இத்தனை நாசத்திற்கும் நான் காரணமாயிருந்தேனே! (கர்ணனை நினைத்து) ப்ராத்ருஹத்தி செய்துவிட்டேனே!' என்று நொந்துகொண்டார்; த்ரௌபதியோ அத்தனை பிள்ளைகளையும் பறிகொடுத்துவிட்டு வயிற்றில் அடித்துக்கொண்டாள் என்றுதான் பார்க்கிறோம்.

உபகாரப் பணியிலும் அபகாரம்!

யுத்த கார்யந்தானென்றில்லை. ரொம்பவும் ஸாத்விகமாக ஒரு நல்லது செய்யப் போனால்கூட ஒருத்தருக்கு உபகாரமென்று செய்வது வேறு யாராவது ஒருத்தருக்கு ஏதாவது அபகாரம் செய்துவிடுகிறது.

நான் ஒன்று நினைத்துக் கொள்வதுண்டு:—மில் துணி பஹிஷ்காரம் பண்ணிக் கதரை அபிவிருத்தி பண்ண வேண்டுமென்று காந்தி தீவ்ரமாக இருந்த காலம். சீமையிலிருந்துதான் அப்போது மில் துணி வரும். ஆகையினால் மில்துணி பஹிஷ்காரம் என்பதில், 'ஒரு கல்லில் இரண்டு

Koviloor Digital Library

மாங்காய்' என்கிறமாதிரி இரண்டு லக்ஷ்யங்கள் பூர்த்தி ஆயின: ஸ்வதேசியத்தை ஆதரித்து விதேசியத்தை பஹிஷ்கரிப்பது என்பது ஒன்று; Man-power-ஐ (மனித சக்தியை) ஆதரித்து மெஷின் பவரை எதிர்ப்பது என்பது இன்னொன்று.

இந்தக் கொள்கைகளில் எனக்கும் அபிமானம் உண்டு. அப்போது* ராமேச்வர யாத்ரை போயிருந்தோம். இந்த நல்ல ஸமயத்தில் மடத்துச் சிப்பந்திகளையெல்லாம் ஆலைத் துணியை விட்டுவிட்டுக் கதர் உடுத்தும் பழக்கத்தை மேற்கொள்ளச் செய்யவேண்டும் என்று தோன்றிற்று. அக் காலத்திலே அங்கங்கே மில்துணிகளைச் சொக்கப்பானை மாதிரி கொளுத்தி ஸ்வதேசி அபிமானிகள் விழா நடத்துவது வழக்கம். எனக்கென்னவோ, அசேதனமான துணிதான் என்றாலும் அதைக்கூட நெருப்பில் போட்டுக் கொளுத்துவது என்றால் ஹிம்ஸைமாதிரி தோன்றிற்று. இப்படியில்லாமல், ஸாத்விகமாக, குளிர்ச்சியாக, 'ஜலஸமாதி' என்று சொல்கிறார்களே, அப்படி ஆலையில் உற்பத்தியான வஸ்திரங்களை ஸமுத்ரத்தில் போட்டுவிட்டு, (மடத்துச் சிப்பந்திகள்) எல்லாரையும் கதர் கட்டிக்கொள்ளும்படிப் பண்ணலாமென்று நினைத்தேன். அப்படியே தநுஷ்கோடியில் எல்லாரும் ஸ்நானம் செய்தவுடன், மில் துணி உடுத்திக்கொண்டிருந்தவர்கள் அதை ஸமுத்ரத்திலே போட்டுவிட்டுக் கதர் கட்டிக் கொள்ள ஆரம்பித்தார்கள். மதுரையிலிருந்து இதற்காக நிறையக் கதர் வஸ்த்ரங்கள் தருவித்திருந்தோம். தலா இரண்டு ஜோடி கதர் சோமனும் (வேஷ்டியும்) மேல்வேஷ்டியும் கொடுத்தது.

கைத்தொழிலை ஆதரிப்பது, manual labour (உடலுழைப்பு) என்றால் மட்டமாக நினைக்காமல் யாராயிருந்தாலும் ராட்டினத்தைச் சுற்றி நூற்பது, அதனாலேயே வீண்பேச்சு முதலியவற்றில் போகாமல் ஒரு டிஸிப்ளினில்

---

* 1922-ல்

Koviloor Digital Library

வருவது, நம் தேசத்துக்கு என்று என்ன உண்டோ அதோடு த்ருப்தியாயிருந்து, விதேசச் சரக்குகளில் மோஹத்தை விட்டு நம்முடைய பண்பாட்டைக் காப்பாற்றுவது, நம் நாட்டுப் பணம் அநியாயமாக வெளி தேசத்துக்குப் போகாமல் தடுப்பது, பல ஏழைகளுக்கு ஜீவனோபாயம் கிடைக்கப் பண்ணுவது—என்று இத்தனை அம்சங்கள் மில் துணியை பஹிஷ்கரித்துக் கதரை ஆதரிப்பதில் இருக்கிற தல்லவா? அதனால் இது ரொம்ப நல்ல திட்டமாகத்தானே தெரிகிறது?

ஆனால் இப்படிப் பண்ணினால் தங்கள் வியாபாரமே போய்விடும், தாங்கள் தலையில் துணியைப் போட்டுக் கொள்ளும்படியாகிவிடும்—[சிரித்து] தாங்கள் உற்பத்தி செய்யும் துணியை விற்று லாபம் பண்ணாமல், தாங்களே தலையில் துணியை'' போட்டுக்கொள்ளும்படியாகிவிடும்!—என்று லங்காஷயர், மாஞ்செஸ்டர் மில்காரர்களெல்லாம் கூ கூ என்று கூப்பாடு போட்டார்கள். முதலில், 'அதற்காக அப்பாவி இண்டியன்தான் அகப்பட்டானா, தலையிலே கை வைக்க?' என்றுதான் தோன்றிற்று. அப்புறம் யோசித்துப் பார்த்ததில், 'வெள்ளைக்காரர்கள் வஞ்சகமாக வ்யாபார ஸாமர்த்யங்கள் செய்து அமிதலாபம் பண்ணுவதும், வ்யாபாரம் என்று ஆரம்பித்துத் தங்களுடைய வாழ்க்கை முறை, ஆட்சி ஆகியவற்றையும் பிற தேசங்களில் விஸ்தரித்து அவற்றின் வயிற்றிலடித்துத் தங்களைப்போஷாக்குப்பண்ணிக் கொள்வதும் மஹா தப்புத்தான். என்றாலும், அவர்கள் தேசத்தில் கருப்பு நிலக்கரியையும் வெளுப்புச் சாக்குக் கட்டியையும் விட்டால் வேறே விளைபொருள் கிடையாதே! ஆனதால் அவர்கள் ஆலைத் தொழில் பண்ணி ஏற்றுமதி செய்து பிற தேசங்களிடமிருந்துதானே தங்களுடைய எல்லா வாழ்க்கைத் தேவைகளுக்குமானதை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும்? இதில் ஒரு 'அயிட்ட'மாக வெளி தேசத்துப் பருத்தியை அவர்கள் தருவித்து நூலாய் நூற்றுத் துணியாகப் பண்ணி ஏற்றுமதி செய்வதையும் அடியோடு

Koviloor Digital Library

தப்பு என்று சொல்லமுடியாது போலிருக்கே! அவர்கள் ஆசைப்படுகிற மாதிரி, 'இதில் தாங்களே ஏகபோக்கியம் பெற்று அமிதலாபம் எடுக்கவேண்டும்; அந்தந்த தேசத்து நெசவாளிகள் நாசமாகப் போனாலும் போகட்டும், தாங்கள் தான் வ்ருத்தியாக வேண்டும்' என்பது ந்யாயமே இல்லை யென்றாலும், ஏதோ ஒரு அளவு, ஒரு quota அவர்களுக்கும் விட்டுக்கொடுத்து அவர்கள் மில்களை நடத்தவிட்டால்தானே அந்த ஜனங்களும் வாழமுடியும் போலிருக்கிறது?' என்று தோன்றிற்று.

இங்க்லாண்ட் மாதிரியேதான் இன்னும் சில தேசங்களும். ஏற்றுமதி பண்ணினால்தான் அவற்றைச் சேர்ந்த ஜனஸமூஹங்களுக்கு ஜீவனோபாயம் கிடைக்கும். அதைக் கொண்டுதான் அவர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களை இறக்குமதி செய்துகொள்ள முடியும். ஆனபடியால் இந்தியா, சைனா மாதிரி பெரிய தேசங்களில் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும் ஸ்வதேசியமாகவே பண்ணிச் சமாளித்துக்கொண்டுவிடுவது, self-sufficiency (தன்னிறைவு) பெற்று ரொம்பவும் அத்யாவச்யமான இறக்குமதியோடு நிறுத்திக்கொண்டு விடுவது என்று வைத்துவிட்டால் ஏற்றுமதியையே நம்பி உயிர் வாழ்கிற தேசத்து ஜனங்கள், பாவம், என்ன பண்ணுவார்கள்? லங்காஷயர்க்காரன் கூ கூ என்று கத்துவதில் அடாவிடி இருக்கத்தான் செய்கிறதென்றாலுங்கூட, நாமும் ஸ்வதேசியக் கொள்கையில் ரொம்பக் கடுமையாக இருந்தால் அதனால் 'ஜெனுவி'னாகவே சிலபேர் கஷ்டத்துக்கு ஆளாகும்படிதானே ஆகும் போலிருக்கிறது?' என்று தோன்ற ஆரம்பித்தது.

அதற்கப்புறம், என்னைப் பொறுத்தமட்டில் மில் துணி வேண்டாம் என்று வைத்தது வைத்ததுதான் என்று ஆக்கிக் கொண்டுவிட்டாலும் மற்றவர்கள் விஷயமாக எதுவும் 'கம்பெல்' பண்ணவேண்டாமென்று விட்டுவிட்டேன்.

Koviloor Digital Library

எதற்குச் சொல்லவந்தேன் என்றால், நம் தேச ஜனங்களின் தொழில் கெட்டுப்போகப்படாது, நம் பணம் அந்யாயமாக வெளியூருக்குப் போய் அவன் கொழுக்கப் படாது—நம்மை இளைக்கப்பண்ணி அவன் கொழுக்கப் படாது—என்பதற்காக ஒரு நல்ல ஏற்பாடு செய்தால், அதனாலுங்கூட 'ஜெனுவி'னாகவே எவனாவது பாதிக்கப் படுகிறான்!

வெளி தேசக்காரன்தான் என்றில்லை, கதர் கதர் என்று அதையே ஆதரிப்பதென்றால் உள்ளூரிலேயே கைத்தறிக் காரன், மில்காரன் தன் தொழில் போச்சு என்று அழுகிறான், ஆக்ஷேபம் பண்ணுகிறான்.

கைத்தொழிலுக்கு நல்லது செய்யப் போனால் ஆலைத் தொழிலுக்குக் கெடுதல் ஏற்படுகிறது. ஆலைத்தொழிலுக்கு நல்லது செய்யப்போய் அதில் வேலை செய்கிற ஆயிரம் பேருக்கு நல்லது ஏற்படுத்தும்போதோ பத்தாயிரம், இருப தாயிரம் கைத்தொழில்காரர்களின் வயிற்றிலடிக்க வேண்டி வருகிறது!

இத்தனை லிஜிஸ்லேஷன்கள் (சட்டங்கள்) கொண்டுவரப் பட்டிருக்கின்றனவே, இவை அத்தனையும் யாருக்கோ நல்லது செய்யும் உத்தேசத்தில் கொண்டுவந்ததுதானே? ஆனால் எந்த லெஜிஸ்லேஷனாவது எதிர்ப்பு இல்லாமல் பாஸாகி இருக்கிறதோ? வாக்-அவுட், டெமான்ஸ்ட்ரேஷன், ஹர்த்தால் என்று போகிற அளவுக்கல்லவா எதற்கும் ஆப்போஸிஷன் வருகிறது?

என்ன அர்த்தம்?

எந்த நல்ல திட்டம் கொண்டுவந்தாலும் அதுவும் யாருக்கோ கெடுதல் செய்கிறது என்றுதான் அர்த்தம்!

அத்தனை அரசியல் கட்சிகளும் நல்லது செய்யத்தான் ஏற்பட்டிருப்பதாக அர்த்தம். அரசியல் கட்சிகளை மட்டும் சொல்வானேன்? அத்தனை மத ஸம்ப்ரதாயங்களும் நல்லதற் காகவேதான் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால்

Koviloor Digital Library

கட்சிக்குக் கட்சி, மதத்துக்கு மதம் சண்டையான சண்டை என்றால், யார் சொல்வது நல்லது, யார் சொல்வது கெட்டது? ஸமூஹ விஷயத்தில் (லௌகிகமாக) இதுதான் நல்லது என்று ஒரு வழியை மட்டும் வைக்கமுடியாததால் தான் இத்தனை கட்சிகள் தோன்றியிருக்கின்றன. அப்படியே ஆத்மார்த்தமாகவும் இதுதான் நல்லது என்று ஸர்வ ஜன ஸம்மதமாக ஒன்றைக் காட்ட முடியாததால்தான் இத்தனை மதங்கள் தோன்றியிருக்கின்றன. எந்தக் கட்சியானாலும், மதமானாலும் அதனால் யாருக்கோ லோக ரீதியான வாழ்க்கையிலோ, மனோரீதியான அநுபவத்திலோ கஷ்டம் ஏற்படுவதால்தான் எதிர்ப்பு, சண்டை, குஸ்தி ஏற்படுகிறது!

ஸநாதனிக்கு நல்லது பண்ணினால் சீர்திருத்தவாதி லபோ லபோ என்கிறான். சீர்திருத்தவாதிக்கு ஸாதகமாகப் பண்ணினால் ஸநாதனி சபிக்கிறான்; இவன் சபிப்பது மட்டு மில்லை,—'ரிஷிகள் எல்லாம் சபிப்பார்கள். தெய்வ சாபமே வந்துவிடும்!' என்கிறான்!

ஒரு பாஷையை அபிவ்ருத்தி செய்தால் இன்னொரு பாஷை க்ஷீணிக்கிறது!

பண்ணையாளுக்கு நல்லது பண்ணினால் நிலச் சொந்தக் காரனுக்குக் கெடுதலாகிறது.

முன்னேறிய வர்க்கம், பின்னேறிய வர்க்கம் என்று பிரிவு செய்திருப்பதில் ஒன்றுக்கு நல்லது பண்ணுவதில் இன்னொன்று படும் அவஸ்தைகள் எல்லாருக்கும் தெரிந்தது தான்.

'இது நல்லது' என்று ஒரு கட்சி, 'அப்படியில்லை' என்று இன்னொரு கட்சி என்பதாகப் பிரிந்து நிற்பதற்கிட மில்லாமல், ஸர்வ ஜனங்களும் ஏக மனதாக, 'இது நல்லது தான்; இந்த ஸத்கார்யத்தினால் யாருக்கும எந்தக் கெடுதலும் வராது' என்று நினைத்துப் பண்ணுகிறவற்றில் கூட ஒரு அஞ்சு, பத்து பெர்ஸென்டாவது கெடுதி வந்து சேராமலிருப்பதில்லை.

Koviloor Digital Library

கோவில் கட்டுவதைவிட நல்ல கார்யம் லோகத்தில் இல்லை. அதிலேகூட பெரிய பெரிய பாறுங்கல்லுகளைக் கொண்டுவந்து இறக்குவது, அவற்றை தூக்கி நிறுத்தி கோபுரம் கட்டுவது என்கிறபோது மாடுகளுக்கும், ஆள்களுக்கும் முழி பிதுங்கி, முதுகு ஒடிகிற மாதிரி ச்ரமம் ஏற்படுகிறது. ரதோத்ஸவத்தில் தேர்க்காலில் அரைபட்டு எவனோ ஒருத்தன் உயிரைவிடுகிறான்.

கோவில் கட்டுவதுகூட, ஸர்வஜன ஸம்மதமான நல்லது என்று இக் காலத்தில் சொல்லமுடியாது. 'எதற்குக் கட்டணும்? இருப்பதையும் இடிக்கணும்' என்று அதற்கும் எதிர்க்கட்சி இருக்கலாம்! ஆஸ்பத்திரியும் ஸ்கூலும் வைப்பதுதான் இப்போது ஸர்வ ஜன ஸம்மதம். வாஸ்தவமாகவே ஜனங்களின் சரீர உபாதைகளைப் போக்குவதும், அவர்களுக்குக் கல்வியறிவு தருவதும் உத்தமமான பணிகள்தான். சாஸ்த்ர, புராணங்களிலும் இவற்றை நிறையச் சொல்லியிருக்கிறது. ஆனாலும் இவைகூட முழுக்க, unmixed-ஆக நல்லது மட்டுந்தான் செய்பவையா என்று யோசித்துப் பார்த்தால், இல்லை என்றே தெரியும். துஷ்டத்தனமான மனப்போக்குள்ள ஒருத்தன் நோயாளியாக இருப்பதாலேயே தான்பாட்டுக்கு முடங்கிக் கிடப்பான். நல்லது செய்வதாக நினைத்து அவனுக்கு வைத்யம் பார்த்து த்ருடசாலியாக ஆக்கபோக, அவன் கன்னக்கோலையோ, கத்தியையோ தூக்கிக்கொண்டுபோய் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிடுவான். எதுவும் தெரியாமல் ஸாதுவாகத் தன்பாட்டுக்கு ஏதோ ஒரு மூட்டை தூக்கிப் போட்டுவிட்டுக் கஞ்சி காய்ச்சிக் குடித்துக்கொண்டிருப்பவனுக்கு அறிவு ப்ரகாசம் உண்டாக்குவதாக நினைத்து கல்வி தரப்போக, அவன் இல்லாத குயுக்தி எல்லாம் செய்யக் கற்றுக்கொண்டு, ஃபோர்ஜரிப் பத்திரம் எழுத ஆரம்பிக்கலாம்!

நல்லதையெல்லாம் தள்ளிவிட்டுக் கெடுதலை மட்டும் பார்த்துப் பெரிசு படுத்துவதற்காகச் சொல்லவில்லை.

Koviloor Digital Library

எதிலும் கெடுதல்தான் ஜாஸ்தி என்றும் சொல்லவரவில்லை. அஞ்சு பெர்ஸென்ட், பத்து பெர்ஸென்ட் என்று (கெடுதலைக் குறைவாகத்) தானே முதலிலேயே சொன்னேன்? இன்னம் குறைவாக ஒரு பெர்ஸென்ட், அரை பெர்ஸென்ட் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுவோம். ஆனாலும் கார்யம் என்று வந்தால் நூறு பெர்ஸென்டும் நல்லதாகவே இருக்கமுடியாது என்பதுதான் உண்மை என்று நிரூபணம் ஆகிறதா இல்லையா?

'ஐயோ, நாம் அப்படி நினைத்துப் பண்ணினோம்; இப்படி விபரீதமாக முடித்துவிட்டதே!' என்று எத்தனை ஸந்தர்பத்தில் நினைத்திருக்கிறோம்? நல்லதென்று நினைத்துப் பண்ணுவது கெட்டதில் முடிகிறதைத்தானே இது காட்டுகிறது?

ஸ்வராஜ்யம் வாங்கிக் கொடுத்த காந்தியைப் போல நமக்கு நல்லது பண்ணினவரே இல்லை என்று விழாக்கள் கொண்டாடித் தலைவர்களெல்லாரும் புகழாரம் சூட்டுகிறார்கள். ஆனாலும் அவரோ ஸ்வராஜ்யம் வந்து ஐந்தாறு மாஸங்களுக்குள் அஸாஸினேட் ஆவதற்கு (கொலை செய்யப்படுவதற்கு) முந்தியே, தேசம் இரண்டாகப் பிரிந்ததில் லக்ஷக்கணக்கில் ஜனங்கள் கொன்றுகொண்டு ரணகளரியானதைப் பார்த்து மனஸ் தாங்காமல் 'இதற்காகத்தானா ஸ்வயராஜ்யம் வந்தது?' என்று புலம்பும்படியாயிற்று! ஸ்வதந்த்ர இந்தியாவில் அந்த ஐந்தாறு மாஸம் ஜீவிப்பதற்குள்ளேயே அவர் மனஸுக்கு ஏற்காத அநேக விஷயங்கள் நடந்து அவர் பட்டினிகூடக் கிடக்கவேண்டியதாயிற்று.

நல்லது பண்ணப் போய் எப்படி பயங்கரமாகக் கெட்டது புறப்பட்டுவிடுகிறது என்பதை நன்றாக தெரிவிப்பதாக 'கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது!' என்று பழமொழியே இருக்கிறது.

இன்னொரு பழமொழி: ஒரு ப்ரச்னையைத் தீர்க்கப் பரிஹாரமாக நினைத்து என்னவோ ஒன்று பண்ணுகிறோம்.

Koviloor Digital Library

அப்போதைக்கு மூலமான ப்ரச்னை தீர்ந்த மாதிரியிருக்கிறது. ஆனால், போகப் போக, நாம் பண்ணின பரிஹாரத்தி லிருந்தே எதிர்பார்க்காத கஷ்டங்கள் உண்டாகின்றன! வியாதி தீரச் சாப்பிடும் மருந்தே அப்புறம் அதைவிடப் பெரிய வியாதியை ஏற்படுத்துவதையும் பார்க்கிறோம். "Remedy worse than disease" என்கிறார்கள்!

இதையெல்லாம் பார்த்துவிட்டு, 'சும்மாக் கிடப்பது தான் ச்லாக்யம், நல்லது பண்ணுகிறேன் என்று ஆரம்பிக்கப் போனால் நல்லதற்கில்லாததெல்லாம் கிளம்பிவிடுகிறது' என்பதைத் தெரிவிப்பதாக 'சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்றே பழமொழி இருக்கிறது!

ஊர் ஸமாசாரமெல்லாம் சொன்னேன். ஸொந்த ஸமாசாரமாக இரண்டு சொல்கிறேன்:

ஒரு ஊரில் (ஸ்ரீமடத்தின் ஆதரவில்) அன்னதானம் செய்தது. ரொம்பப் பேர், ஏழைகள், வயிறாரச் சாப்பிட்டு விட்டு, மனஸ் குளிர்ந்து வாழ்த்திக்கொண்டு போனார்கள். (சமையல் வகைகள்) எல்லாம் நிறையப் பண்ணியிருந்தும், மூட்டை அரிசி வடித்திருந்தும், கொஞ்சங்கூட பாக்கியில் லாமல் எல்லாம் ஜனங்கள் வயிற்றுக்குப் போச்சே என்று ரொம்ப த்ருப்தியாக இருந்தது. த்ருப்தி என்றால் என்ன? 'நாமாக்கும் பண்ணிவிட்டோம்' என்ற 'ஈகோ' தான்!

பாத்ரம், பண்டம் எல்லாம் தேய்த்து, அடுத்த ஊருக்குக் கிளம்பத் தயாராக இருந்த ஸமயம். அப்போது ஒரு பத்துப் பதினைந்து ஏழை ஜனங்கள்—ஸ்த்ரீகள், குழந்தைகள் உள்பட—லொங்கு லொங்கு என்று ஓடிவந்து, "சோறு, சோறு" என்று கேட்க ஆரம்பித்ததுகள். எட்டு, பத்து மைல் தாண்டி எங்கேயோ இருக்கிறவர்கள். அன்னதான ஸமாசாரம் அவர்கள் காதுக்கு லேட்டாகத்தான் போயிருக் கிறது. உடனே, பாவம், வெய்யிலில் அத்தனை தூரம் ஓடி வந்திருக்கிறதுகள்! இங்கேயானால் பருக்கை சாதம் இல்லை! அண்டா, குண்டான் எல்லாம் வண்டியிலே ஏற்றிக் கொண்

Koviloor Digital Library

டிருக்கிறது! அப்போது அவர்களுக்கு உண்டான ஏமாற்றத்தைச் சொல்லிமுடியாது.

ஆயிரம் பேருக்குப் போட்டு ஏதோ நாம் ப்ரமாத உபகாரம் பண்ணிவிட்டோமாக்கும் என்று த்ருப்திப்பட்டது அத்தனையும் இந்தப் பத்துப் பதினைந்து பேருக்குப் பண்ணிய அபகாரத்தில் ஓடியே போய்விட்டாற்போலிருந்தது!

ஏதோ பழம், கிழம் கொடுத்து, சில்லறை கொடுத்து, அவர்களை ஸமாதானம் பண்ணி அனுப்பிவைத்தது. அவர்கள் ஸமாதானமானார்களோ இல்லையோ, இங்கே [தம்மையே குறிப்பிட்டு] ஸமாதானமாகவில்லை! 'பாவம்! வயிறார நல்ல சாப்பாடு கிடைக்குமென்று இந்தப் படைபதைக்கிற வெய்யிலில் இத்தனை தூரம் ஓடிவந்து குஞ்சும் குழந்தையும் பெண்களுமாக இப்படி ஏமாந்து போச்சுகளே!' என்று தானிருந்தது! 'ஆயிரம் பேர் சாப்பிட்டுவிட்டும் போனார்களே என்றால், நேற்றுவரைக்கும் அவர்களுக்கு நாமா போட்டோம்? நாளைக்கு நாமா போடப்போகிறோம்? அதே மாதிரி இன்றைக்கும் அவர்கள் எப்படியோ வயிற்றைக் கழுவிக் கொண்டிருப்பார்கள். ஆனால், 'போடுகிறோம்' என்று நாம் அக்ஷதை போட்டுக்கொண்டு கிளம்பினதால் தானே இந்தப் பத்துப் பதினைந்து பேர் வழக்கமாகத் தாங்கள் இருக்கிற இடத்தில் காய்ச்சிக் குடிப்பதை, அல்லது பிச்சை எடுத்துத் தின்னுவதை விட்டுவிட்டுப் பசியும் பட்டினியுமாய் வெய்யிலில் இத்தனை தூரம் ஓடிவந்து ஏமாந்து போகும்படி நேர்ந்திருப்பது? ஆக, கூட்டல் கழித்தல் பார்த்தால், உபகாரம் பெரிசா, அபகாரம் பெரிசா?' என்று தோன்றிற்று.

தானத்திலெல்லாம் உசந்ததாகச் சொல்லப்படும் அன்னதானத்தில்கூட இப்படி நல்லதோடு கஷ்டமும் கலந்து வருகிறது!

எதற்குச் சொல்கிறேனென்றால் : நாம் ஒருத்தனுக்கு உபகாரம் பண்ணுவதே நேராக இன்னொருத்தனுக்கு

Koviloor Digital Library

அபகாரமாக ஆகாதபோதுகூட, எப்படியோ சுற்றி வளைத்துக்கொண்டு போய் யாருக்கோ கஷ்டம் கொடுத்து, அதோடு, 'உபகாரம் செய்கிறேன்' என்று அக்ஷதை போட்டுக்கொண்டு கிளம்பின நாமும் மனஸ் வருத்தப்படும் படியாகலாம் என்று காட்டுவதற்குத்தான்!

அதாவது, எந்த உபகாரமானாலும் அத்தனை ஜனங் களுக்கும் செய்ய எவருக்கும் ஸாத்யமில்லை. எவராவது நம்முடைய உபகாரத்தை எதிர்பார்த்து ஏமாந்து மனமொடிந்து போகும்படியாகவும்தான் ஆகிறது. கோடீச்வரனானால்கூட ஸத்கார்யங்களுக்கு அவன் கொடுக்க ஆரம்பிக்கும்போது புற்றீசல் மாதிரி (நன்கொடை) கேட்டுக் கொண்டு பலபேர் வருகிறபோது, ஏதோ ஒரு இடத்தில் அவன் 'இல்லை, போ' என்று கையை விரிக்கும்படியாகிறது. இவன் (புதிதாக வருபவன்) கேட்கிற cause உசந்ததாகத் தான் இருக்கிறது. இவனுக்கு முன்னாடி யாரோ மோசக் காரர்கள்கூட ஏமாற்றி வாங்கிப் போயிருக்கிறார்கள். ஆனாலும் இவனுக்குக் கொடுப்பதற்கில்லாமல் ஏமாற்றத் தோடு அனுப்பிவைக்க நேருகிறது.

ஆஸ்பத்திரி, ஸ்கூல் என்று வைக்கும்போதும், 'Bed இல்லை'; 'ஸீட் இல்லை' என்று சொல்லி, ரொம்பவும் நோயாளியாக உள்ள ஒருவனை, நல்ல புத்திசாலியான குழந்தை ஒன்றை ஏமாற்றி, மனஸை வருத்தித் திருப்பி யனுப்பும்படியாகவும் ஏற்படுகிறது.

ஒரு உயிரைக் காப்பாற்றுவது எத்தனை உத்தமமான கார்யமாகத் தெரிகிறது! அதிலேகூடக் கெடுதல் வருகிறது?

ஸொந்த ஸமாசாரத்தில் இன்னொன்று சொல்கிறேன்:

ஒரு ஊரிலே நாங்கள் முகாம் போட்டிருந்த ஜாகை ரொம்பப் பழைய நாள் கட்டிடமாக இருந்தது. ஓட்டுக் கட்டிடம். நடுவிலே முற்றம். கட்டிடக் கூரையின் உத்தரம் அநேகமாக உளுத்துப்போயிருந்தது. அதிலே, 'விர்ர்' 'விர்ர்' என்று சத்தத்துடன் பறக்கிற பெரிய வண்டுகள் துளை

Koviloor Digital Library

போட்டுக்கொண்டு வாஸம் பண்ணிக்கொண்டிருந்தன. அவை அப்பப்போ முற்றத்திலே வந்து விழுந்து புரளும். இப்படி ஒரு வண்டு குப்புற விழுந்தபின் அதனால் மறுபடி நேராக நிமிர்ந்து புரள முடியவில்லை. எப்படியாவது புரண்டு பறந்து போய்விடணுமென்று அது காலை உதைத்துக் கொண்டு ரொம்ப ப்ரயத்தனம் பண்ணியும், முடியவில்லை. அப்போது—அந்த முற்றத்திலே சாரி சாரியாகக் கட்டெறும்புகள் போய்க்கொண்டிருந்தன. அதுகள் இந்த வண்டு இப்படி வயிறு மேலேயும் முதுகு கீழேயுமாக ஒன்றும் பண்ணிக்கொள்ள முடியாமல் காலை உதைத்துக்கொண்டு கிடப்பதைப் பார்த்ததும், இதுதான் ஸமயம் என்று அதனிடம் வந்து மொய்த்துக்கொண்டு 'வெடுக்கு' 'வெடுக்கு' என்று அதன் கால்களைப் பிய்ப்பதற்காகக் கடிக்க ஆரம்பித்தன. வண்டு ஸஹிக்கமுடியாமல் அவஸ்தைப் படுவது தெரிந்தது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

வண்டைப் புரட்டி நேரே போட்டால் அது பறந்து போகுமே, ஒரு உயிர் பிழைத்துப் போகுமே என்று நினைத்தேன்.

அப்படியே வண்டைப் புரட்டிப் போட்டது.

ஆனால் என்ன நடந்ததென்றால், அது தன் உயிர் தப்பினால் போதுமென்று உத்தரத்துத் துளைக்குப் பறந்து போய்விடவில்லை.

என்ன பண்ணிற்று என்றால், பழி தீர்த்துக்கொள்கிற மாதிரி அந்த எறும்புகளையெல்லாம் பிடித்து 'லபக்' 'லபக்' என்று தின்ன ஆரம்பித்துவிட்டது!

ஒரு உயிருக்கு உபகாரம் பண்ணப் போன லக்ஷணம் இத்தனை உயிர்களுக்கு அபகாரமாக முடிந்தது! 'நாம் ஏதோ ஒரு ப்ராணியைக் காப்பாற்றி நல்லது பண்ணி விட்டோமாக்கும்' என்ற 'ஈகோ'வுக்கு ஒரு அடி போட்ட மாதிரி, பல ப்ராணி வதைக்குக் காரணமாகும்படியாயிற்று.

Koviloor Digital Library

ஸாதுவான ஒரு மானைப் புலியிடமிருந்து காப்பாற்றி ணுல்கூட, அந்தப் புலிக்கு சாகபக்ஷணம் (மரக்கறி போஜனம்) செய்யமுடியாதபடி ஈச்வரனே வைத்திருப்ப தால், மானுக்குச் செய்யும் உபகாரம் புலியைப் பட்டினி போட்டுக் கஷ்டப்படுத்துவதாக ஆகிறது! அதுவும் ஒரு உயிர்தானே? அது வேண்டுமென்று தன்னைத் தானே துஷ்ட ப்ராணியாகப் படைத்துக் கொண்டிருக்கிறது? இது ஒரு பக்கம்.

இன்னொரு பக்கம், மஹா துஷ்டனாக, லோக கண்டகனாக இருக்கிற ஒரு ராவணனை பகவானே அவதாரம் பண்ணிக் கொல்கிறுனென்றால்கூட அப்போது பரம ஸாத்வியாக, உத்தமியாக இருக்கப்பட்ட ஒரு மண்டோதரியின் மாங்கல் யத்தைப் பறித்து அவளைக் கதறக் கதற அடிப்பதாக இருக் கிறது.

எதுவும் செய்யாமலிருப்பதற்கான அவதாரம்!

எந்த அவதாரத்தில் பார்த்தாலும் இப்படி எதுவாவது இல்லாமலிருக்காது. "நல்லது செய்கிறேன்; தர்ம ஸம் ஸ்தாபனம் என்ற நல்லதைச் செய்கிறேன்" என்றுதானே அது வரை எல்லா அவதாரங்களும் ஏற்பட்டன? அப்படி வந்த தால், 'செய்கிறது' என்னும்போது நல்லதோடு கொஞ்சமா வது கெட்டதும் வந்துதான் தீரும் என்பதால், அவதாரமே யாருக்காவது கஷ்டமும் கொடுப்பதாக ஆகியிருக்கிறது. ஸத்வ ஸ்வரூபமாகிய ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி சத்ருவின் பத்னி யைத்தான் கதற அடிக்கும்படி இருந்ததென்றில்லை; புத்ர காமேஷ்டி பண்ணி அவரைப் பெற்றெடுத்து அவரிடம் அலாதி வாஞ்சை வைத்திருந்த தகப்பனாரே அவர் நிமித்த மாகத்தான் மனஸு துடித்து ஜீவனை விடும்படி இருந்தது.

அதனால், நல்லது செய்கிறதற்கு இத்தனை அவதாரங் கள் வந்தபிறகு, இப்போது 'கொஞ்சங் கூடக் கஷ்டத்தின் கலப்பு, கெடுதலின் கலப்பு இல்லாம

Koviloor Digital Library

லிருக்க வேண்டுமானுல் அதற்கு நல்லது செய்வதுகூட ப்ரயோஜனப்படாது; ஒன்றுமே செய்யாமலிருப்பதுதான் பரம ப்ரயோஜனம்; அதில்தான் ஒருத்தருக்கும் ஒரு அபகாரமும் வராமலிருக்கும்' என்று காட்டுவதற்காக ஒரு அவதாரம் வந்தால்தான் ஸரியாயிருக்கும்' என்று பரமாத்மா நினைத்தார்! எதுவும் செய்யாமலிருப்பதைச் சொல்லவந்த அந்த அவதாரம்தான் நம்முடைய பகவத் பாதாள்......

ஆசார்யாள் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு போன போது அவருடைய தாயார் மஹத்தான துக்கத்திற்கு ஆளாகும்படிதான் இருந்தது. தபஸிருந்து—'பஜனம்' என் பதாக வ்ரத உபவாஸங்களிருந்து—தம்மை ஏக புத்ரனுகப் பெற்றெடுத்து, தம்மைத் தவிர யாருமில்லாத விதந்துவாயு மிருந்த அம்மாவை அழ அழ வைத்துவிட்டுத்தான் ஆசார்யாள் (ஸந்நியாஸியாகப்) புறப்படும்படியிருந்தது. அப்புறம் அவர் மண்டனமிச்ரர் என்ற பெரிய மீமாம்ஸகரை வாதத்தில் வென்று அவரைத் தம் சிஷ்யராக்கிக்கொண்டு ஸந்நியாஸாச்ரமம் கொடுத்து அழைத்துக்கொண்டு போன போது அவருடைய பத்னியான ஸரஸவாணிக்கு ரொம்பவும் க்லேசத்தை உண்டாக்கும்படி இருந்தது. இப்படி இந்த அவதாரத்திலும் சில பேருக்குச் சில கஷ்டம் ஏற்படுத்தும்படி தானே இருந்தது என்ருல், [சிரித்தவாறு] இந்த அவதாரத் திலும் ஒன்றும் செய்யாமலிருப்பதை உலகுக்கு உபதேசம் செய்யவேண்டும் என்றுதானே புறப்பட்டார்? இந்த உபதேசந்தான் லோகத்துக்கு நல்லது என்று நினைத்து, அந்த நல்லதைச் செய்யத்தானே வாழ்நாள் பூரா ஸகலமும் பண்ணினுர்? நல்லது, செய்வது என்று வந்துவிட்டாலே கஷ்டமும் வந்துதான் ஆகணும் என்பதால் இந்த அவதாரத் திலும் அப்படிக் கொஞ்சம் வந்துவிட்டது! 'ஒன்றும் செய்யா மலிருப்பதுதான் பரமோபகாரம்; நல்லது பண்ணுவதுகூட யாருக்காவது கொஞ்சமாவது அபகாரம் செய்யத்தான் செய்யும்—என்பதற்கு எடுத்துக்காட்டுப் பார்க்க வேறே

Koviloor Digital Library

எங்கேயோ போகவேண்டாம்! இந்த அவதாரத்திலேயே எடுத்துக்காட்டு பார்க்கலாம். நல்லதும் பண்ணவேண்டாம் என்ற விஷயத்தை லோகத்துக்குச் சொல்வதான நல்ல கார்யத்தைச் செய்த இந்த அவதாரத்தினுலேயும் சில பேருக்குக் கஷ்டம் ஸம்பவித்திருப்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்கிற மாதிரி நடத்திக் காட்டினுர்!

ஆக, ஒன்றும் செய்யாமலிருப்பதன் பெருமையை,—சும்மாயிருக்கிற உபகாரத்தை—நிலைநாட்டுவதற்கே இந்த அவதாரம் ஏற்பட வேண்டியிருந்தது. 'நாங்கள் நல்லதைச் சொல்கிறோம்', 'இல்லை, நாங்கள்தான் நல்லதைச் சொல்கிறோம்' என்று தலைக்குத் தலை சொல்லிக்கொண்டு பலபேர் புறப்பட்டு ஏகப்பட்ட மதமும் ஸித்தாந்தமுமாகப் பரப்பிக் கொண்டு, குழப்பிக்கொண்டிருந்த ஸமயத்திலே, 'ஒரு நல்லதும் சொல்லாமல், செய்யாமல் சும்மா இருப்பதுதான் எல்லாவற்றையும்விடப் பெரிய நல்லது; அதுதான் பெரிய பரநலம்; அதே ஸமயத்தில் ஸ்வய மோக்ஷமும்' என்று காட்டுவதற்காக இந்த அவதாரம் ஏற்படவேண்டியிருந்தது!

நல்லது பண்ணவேண்டும் என்று நாம் தீர்மானம் பண்ணிவிட்டோமென்றுல் அப்படியே ஸாதித்துக் காட்டிவிட முடியுமா என்ன? பலதாதாவாக ஒரு ஈச்வரன் இருக்கும் போது அவன் மனஸ் வைத்தாலொழிய நாம் நினைக்கிறபடி ஒருத்தனுக்கு நல்லது போய்ச்சேருமா, என்ன? அவன் கர்மா எப்படியிருக்குமோ? கஷ்டம்தான் படணுமென்று அவன் தலையில் எழுதியிருந்தால்—அதாவது, அப்படி அவன் பூர்வத்தில் பாவம் பண்ணியிருந்தானுனல்—நாம் நல்லது செய்வதாக என்னதான் தலைகீழாக நின்றுலும் முடியுமா?

நடைமுறையில் நற்கர்மத்தின் பயன்

இதையே திருப்பிவைத்தும் கேட்கலாம்: "கர்மாப்படி,—ஜன்மாந்தரக் கடன் என்றுகூடச் சொல்வதுண்டே, அப்படி—நாம் ஒருத்தனுக்கு ஒரு உபகாரம் பண்ணியே

Koviloor Digital Library

அதனால் அவனுடைய கஷ்டம் நிவ்ருத்தியாகவேண்டும் என்றும் ஏன் இருக்கக்கூடாது? இந்த லோகத்தில் நம் ஒவ்வொருவருக்கும் பிறத்தியாரால் எத்தனையோ உபகாரம் தேவையாகத்தான் இருக்கிறது. யாருடைய ஒத்தாசையும் இல்லாமல் எவனொருத்தனும் வாழ்க்கை நடத்திவிட முடியாது என்றே பார்க்கிறோம். பல பேர் செய்துகொள்ளும் பரஸ்பர உதவியால்தான் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் நடந்துகொண்டு போகிறது. சிலது ஃபெயில் ஆகிறது என்றாலும் பலது ஸரியாக நிறைவேறவும் செய்வதால்தான் லோக வாழ்க்கை நடந்துகொண்டிருக்கிறது. அதனால், ஒரே 'பெஸ்ஸிமிஸ'மாக (நல்லதே நடக்காது என்ற அழுமூஞ்சி ஸித்தாந்தமாக), அதோடு கொஞ்சங்கூட அன்போ, தயையோ இல்லாமல், 'யார் வேணா என்ன வேணா கஷ்டப்பட்டுட்டுப் போகட்டும்! நமக்கென்ன ஆச்சு'ன்னு சும்மாயிரு' என்றால், எப்படி?'' என்று கேட்கலாம்.

இதுவும் நியாயந்தான். அதோடுகூட, நாம் உள்ள நடைமுறை உலகத்தில், நடைமுறையில் நமக்குள்ள மன நிலையில், நாம் கெட்ட கார்யங்களில் போகாமலிருப்பதற்கு வழி ஏதாவது நல்ல கார்யங்களில் ஈடுபட்டுக்கொண்டே யிருப்பதுதான். எந்த நல்ல கார்யத்திலும் கெட்டது வரலாமானாலும், சாஸ்த்ரப்படியும், பெரியவர்கள் வழி காட்டியுள்ளபடியும், நம்முடைய மனஸ்ஸாக்ஷிக்குக் கொஞ்சம்கூட உறுத்தாதபடியும், 'மொத்தத்தில் நல்லது' என்று தெரிகிற கார்யங்களில்—கார்யத்தில் கெடுதல் ஏதாவது சேர்ந்தாலும்கூட, நம்முடைய உத்தேசம் கெட்டதே யில்லாமல் நல்லதாக இருக்கிற கார்யங்களில்—ஈடுபட்டு ஈடுபட்டுத்தான் பழைய கெட்ட கர்மா பாக்கிகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப் பணிகள் செய்வதில் வாஸ்தவமாகவே நாம் பிறத்தியாருக்கும், பிறத்தியார் நமக்கும் அநேக நல்லது பண்ணவும் முடியுந் தான். ஒத்துக்கொள்கிறேன். [சிரித்தபடி] ஒத்துக்கொள்

Koviloor Digital Library

வதோடு, இத்தனை நாழி சொன்னமாதிரி, சும்மாயிருந்துவிட மாட்டேன்! உங்களையும் சும்மாயிருக்க விடமாட்டேன்! 'இதைப் பண்ணுங்கோ, அதைப் பண்ணுங்கோ!' என்று ஓயாமல் உங்களுக்கு ஏதாவது கார்யத்தைக் கொடுத்து உபத்ரவம் பண்ணிக்கொண்டேதான் இருப்பேன்! 'ஒரு நல்லதும் பண்ணவேண்டியதில்லை; சும்மாயிருக்கிறதுதான் பெரிய உபகாரம்' என்று நான் விஸ்தாரம் பண்ணிக் கொண்டு போனதைப் பார்த்துவிட்டு யாராவது, 'அப்பாடா! இனிமேலே இவர் வேத ரக்ஷணம், பிடி அரிசி, ஆத்திக்கீரை*, கும்பாபிஷேகம், குளம் வெட்டுவது என்று எதையாவது சொல்லி ஹிம்ஸை பண்ணமாட்டார்' என்று நினைத்திருந்தால் நன்றாக ஏமாந்துதான் போவீர்கள்! இனி மேலேயும் இப்படிச் சொல்லி, இன்னும் புதிசு புதிசாக ஏதாவது சேர்த்துச் சொல்லி, உபத்ரவம் பண்ணிக்கொண்டு தானிருப்பேன்!

ஒன்றும் செய்யாமல், சொல்லாமல் இருக்கிற உபகாரத்தைச் சொல்லவே அவதாரம் பண்ணினவரும், 'சாஸ்த்ரப் படி பண்ணு, பரோபகாரம் பண்ணு; பக்தி பண்ணு; பஞ்சாயதன பூஜை பண்ணு; ச்ரவண - மனன - நிதித்யாஸனம் பண்ணு' என்றும் அநேகம் 'பண்ணு'களைச் சொல்லிக் கொண்டேயிருந்தவர்தான்.

செயலற்றுப் போக வழியாகவே செயல்களும்!

ஆனாலும்—இதுதான் முக்யமான, ஸாரமான விஷயம்—ஆனாலும் இத்தனை அவர் பண்ணச்சொன்னதும் ஒன்றுமே பண்ணாமலிருக்கும் நிலைக்கு ஏற்றுவதற்காகத்தான்! கார்யம் பண்ணுவது—எத்தனை தர்ம கார்யமானாலும், ஸத்கார்ய மாயிருந்தாலும், அதைப் பண்ணுவது—அதுவே லக்ஷ்யம் என்பதற்காக அல்ல. ஒன்றுமே பண்ணாமலிருக்கும் லக்ஷ்யத்தில் சேர்க்கத்தான் கர்மயோகம் என்ற அத்தனை தர்ம கார்யமும், பக்தி யோகத்தில் வரும் அத்தனை உபாஸனைகளும், ஞான

---

* பசுக்களுக்கென்று அகத்தி பயிரிடும் திட்டத்தை ஸ்ரீ சரணர்கள் வலியுறுத்துவது வழக்கம்.

Koviloor Digital Library

யோகத்திலேயே வரும் ச்ரவண-மனன-நிதித்யாஸன கார்யங்களுங்கூட! அதற்கான பக்குவம் வருகிற வரைக்கும் யாராலும் சும்மாயிருக்க முடியவில்லையே என்பதனால்தான் அவரும் ஸரி, அவருக்கு முன்னால் கீதை, மற்ற ஸ்ம்ருதிகள் ஆகியவையும் ஸரி, எல்லாவற்றுக்கும் முந்தைய ச்ருதியுமே ஸரி, 'மனம் போனபடி பண்ணித் தன்னையும் கெடுத்துக்கொண்டு, ஊரையும் கெடுக்காதே! மனஸின் கோணலை நிமிர்த்தும்படியாக, அதன் அழுக்கை அலம்பி எடுக்கும்படியாக இப்படியிப்படி கர்மாநுஷ்டானம், தர்மாநுஷ்டானம் என்று நிறையக் கார்யம் செய்' என்று வழி சொல்லிக்கொடுத்தது.

மனஸை ஆத்மாவிலே கரைப்பதற்குப் பூர்வாங்கமாக சுத்தப்படுத்தவேண்டும். அதற்கு உபாயமாகக் கர்மாநுஷ்டானம் தவிர எதுவும் ஸாமான்ய ஜனங்களுக்கு இல்லை. ஆகையால் செயலில்லாத ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குப் போகவே ஸத் கர்மாக்களில் ஆரம்பிப்பது தவிர வேறு வழியில்லை. இதுதான் வேத சாஸ்த்ரம், கீதா சாஸ்த்ரம், ஆசார்யாளின் அத்வைத சாஸ்த்ரம் ஆகிய எல்லா சாஸ்த்ரங்களும் நைஷ்கர்ம்ய ஸ்திதியையே (செயலற்ற நிலையையே) லக்ஷ்யமாகக் கொண்டுள்ளபோதிலும் கர்ம யோகத்தை வெகுவாக வலியுறுத்தியிருப்பதற்குக் காரணம். கார்யமில்லாமல் நடைமுறை லோகமில்லை, நடைமுறையில் ஜீவர்களுக்குச் சேர்ந்துள்ள கர்மா கழியவும் அதுதான் வழி என்பதே நம்முடைய ஸகல சாஸ்த்ரங்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை.

நடைமுறை: காரியம் செய்வது; லக்ஷ்யம்: சும்மாயிருப்பது

ஆக, ஸ்வாமி—தக்ஷிணாமூர்த்தி—என்ன நினைத்தார் என்றால், 'ஜனங்களால் ஒன்றும் பண்ணாமலிருக்க முடியவில்லையே; அப்படியிருக்க அவர்களுக்குத் தெரியவில்லையே! அதனால்—அதற்காக மட்டுமே—அவர்களுக்கு நிறைய வைதிக சாஸ்த்ரோக்தமான கார்யங்களை நாம் கொடுக்க

Koviloor Digital Library

வேண்டும். என்ருலும், ஒன்றும் பண்ணுமல் சும்மா இருக்கும் ஸ்திதியைத்தான் லக்ஷ்யமாக எப்போது பார்த்தாலும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும்' என்று உத்தேசம் பண்ணிஞர்.

நடைமுறை லோகம் கார்யத்திஞல்தான் நடக்கிறது என்பதைத்தான் அதற்கு (கார்யம் செய்வதற்கு) ஜஸ்டிஃபிகேஷஞகச் சொல்வது. ஆஞலும் நடை, முறை என்பதெல்லாமே இல்லாமலிருப்பதுதானே பரம ஸத்யமான லக்ஷ்ய நிலே? மோக்ஷமென்கிற நிலே? ஆத்மா ப்ரஹ்மமேதான் என்று தெரிந்துகொள்ளும் பரம லக்ஷ்யமான நிலே? அந்த அசலமான ஸ்திதியில் 'நடை' ஏது? 'முறை' என்பதும் ஒன்றுக்குமேல் வஸ்துக்கள் உள்ளபோது அவற்றை ஒரு ஆர்டரில் ஒழுங்கு பண்ணுவதுதான். இருப்பதே ஒன்றுதான், வேறே வஸ்துவே இல்லே என்னும்போது, 'முறை' எங்கேயிருந்து வரும்? 'நடை - முறை' என்பது அடிபட்டுப்போன ஸ்தானம்தான் நிஜமான நிலே. அங்கே இரண்டாவது ஆஸாமி, கருவி, கரணம் எதுவுமில்லாததால் கார்யமே கிடையாது.

நடைமுறை லோகம் மாயையும் மனஸும் இருக்கும் வரைதானே? இது அத்தனேயும் அஞ்ஞானம்; மனஸைப் போக்கிக்கொண்டு மாயையிலிருந்து விடுபடுவதுதான் ஞானம் என்னும்போது, 'நடைமுறை லோகம் கார்யத்திஞல்தானே நடக்கிறது? கார்யத்தை விடு என்ருல் எப்படி?' என்று கேட்பதே அஸந்தர்பந்தானே? நடைமுறையில் கார்யத்தை விடச்சொல்வதும் அஸந்தர்பம். லக்ஷ்யத்தில் கார்யத்தை விடாமலிருக்கச் சொல்வதும் அஸந்தர்பம். 'கர்மயோகம்' என்று பெரிசாக ப்ரஸங்கம் பண்ணின பகவானும் இது நடைமுறையை உத்தேசித்தே ஏற்பட்ட ஆரம்பநிலேதான் என்று சொல்லி, முடிகிற லக்ஷ்யத்திலே ஆரோஹணித்தவனேப் பற்றி, "அவனுக்குக் கார்யமே கிடையாது; தஸ்ய கார்யம் ந வித்யதே"* என்று ஒரே தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

---

* கீதை iii. 17

Koviloor Digital Library

ஆகவே, எவ்வளவுதான் கார்யத்தை விதித்தாலும் அதெல்லாம் லக்ஷ்யம் இப்போது அஸாத்யமாயிருப்பதால் அதை ஸாத்யமாக்கிக் கொள்வதற்காகச் செய்யும் பூர்வாங்க முயற்சிதான், அதாவது 'பஹிரங்க ஸாதனம்' என்று சொல்வதுதானே தவிர, 'அந்தரங்க ஸாதன'மாக இருப்பது கார்யம் நின்றுபோன ஞானம்தான், 'சும்மா-நிலை'தான். இப்படி, கார்யத்தை விதிக்கும்போதே சும்மா யிருப்பதையும் சேர்த்துச் சேர்த்து சொல்வதற்காக அவதாரம் எடுக்கவேண்டுமென்று ஸ்வாமி நினைத்தார்.

கர்த்தாவின் அஹம்பாவம் நீங்கவே நல்லதிலும் கெடுதல்

'நாம்தான் கார்யம் பண்ணி ஸாதிக்கிறோம்; அதனால் லோகத்தையே புரட்டி நல்லதாக்கி விடலாம்' என்ற எண்ணம் கார்ய லோகத்தில் ஏற்படத்தானே செய்கிறது? அது ஒரு 'ஈகோ' (அஹங்கார எண்ணம்) தானே? அது முற்றிவிடாமல் ஒரு போடு போடவேண்டுமென்பதற்குத் தான் இந்த லோகத்தையெல்லாம் பண்ணியிருக்கும் பராசக்தி, எந்த நல்லதானாலும் அதிலேயும் கெடுதலாக ஏதாவது அம்சம் வந்து சேரும்படியாக வைத்திருக்கிறது போலிருக்கிறது. இப்படி இல்லாவிட்டால் "நாம் எவ்வள வெல்லாம் நல்லதாக சாதித்துவிட்டோம்!" என்ற 'ஈகோ' கர்த்தா என்கிறவனுக்கு ஏற்படத்தான் செய்யும். அந்த ஸ்திதியில் எத்தனைதான் ஃபிலாஸஃபி சொன்னாலும்,— 'நல்லது, நல்லது என்கிற எல்லாமும் 'ரிலேடிவ்'தான். ஏனென்றால் நல்லது கெட்டது என்பவை நடக்கிற த்வைத ப்ரபஞ்சமே ரிலேடிவ்தானே?' என்று எத்தனை ஃபிலாஸஃபி சொல்லி, அது ஸரிதான் என்று மூளைக்குப் பட்டிருந்தாலுங் கூட, சும்மாயிருக்க முடியாது. வெற்றிகண்ட ஜோர், நாமாக்கும் ஸாதித்தோம் என்ற பெருமை, சும்மா இருக்க விடாது. அதற்காகத்தான் தோல்வியையும் எடுத்துக்

Koviloor Digital Library

காட்டுவது—உபகாரம், உபகாரம் என்று பண்ணுவதிலும் அபகாரம் சேரத்தான் செய்கிறது என்று காட்டுவது.

(எதிலும் உள்ள கெடுதலை விஸ்தாரம் செய்து சொல்வது) பெஸ்ஸிமிஸமும் இல்லை; அன்போ தயையோ இல்லாமல், ஒருத்தருக்கும் ஒரு நல்லதும் பண்ணவேண்டாம் என்று சொல்வதுமில்லை. கார்யங்களை (ப் பண்ணும்படி) சொல்லும்போதே, அதிலுள்ள கோளாறுகளையும் சொல்லி, மார் தட்டிக் கொள்வதற்கில்லாமல் எந்த நல்ல கார்யத்திலும் கொஞ்சம் கரியைப் பூசுவதாக ஏதாவது இருக்கத்தான் செய்யும் என்று ஞாபகப்படுத்திக் கொண்டேயிருந்தால்தான், கார்யத்தையெல்லாம் தூக்கிப் போட்டுவிட்டு அடைகிற முடிவான நிலையில் போய்ச் சேருவதற்குச் சித்தம் கொஞ்சத்தில் கொஞ்சமாவது ஆசைப்படும். இல்லாவிட்டால் எத்தனை ஃபிலாஸஃபி கேட்டாலும், கார்யம் கார்யம் என்று அதிகப்ரஸங்கித்தனம் பண்ணிக்கொண்டு, இந்த த்வைத ப்ரபஞ்சத்திலேயே சுற்றிச் சுற்றி வருவதாகத்தான் ஆகும். தோல்விகளையும் ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தால்தான், எப்போதாவது ஒரு நாள் மனஸ் காரியமில்லாமல் நிற்பதற்குக் கொஞ்சம் பக்குவப்படும்போதுகூட, அதை ஸேவை, கீவை என்று அதிகப்ரஸங்கித்தனம் பண்ணி மறுபடி த்வைதத்திற்கே இழுத்துக்கொண்டு வராமல், 'நாம் யார் ஸேவைகூட செய்ய? ஸேவை என்று போகிறோம். அது என்னவாக முடியுமோ? எவனோ ஒரு ஈச்வரன் இன்னாருக்கு இன்னபடி என்று லோகத்தை நடத்திக்கொண்டு போகிறான். நம் ஸேவை தேவையானால் அவனே எப்படியோ ஸந்தர்பங்களை அதற்கேற்றபடித் தட்டிக் கொட்டி ரூபம் பண்ணி நம்மை ஸேவை செய்ய வைத்துவிட்டுப் போகிறான், தஸ்ய கார்யம் ந வித்யதே என்று சொன்ன பகவான், 'அப்படிப்பட்ட ஞானி கார்யம் செய்தாலும், செய்யாவிட்டாலும் அவனுக்கு அவற்றால் ஒரு பலனும் இல்லை' என்று சொல்லிவிட்டு, உடனேயே ஆனாலும், 'லோக ஸங்க்ரஹத்துக்காக (உலக க்ஷேமம் உண்டாவதற்காக) ஜனகர்

Koviloor Digital Library

போன்ற ஞானிகளும் கார்யம் பண்ணியிருக்கிறார்கள்' என்று சொல்கிறபடி,* நம்மையும் அவனே கார்யம் பண்ணவைத்தால் பண்ணிவிட்டுப் போகிறது. அங்கே நாம் கார்யம் பண்ணுவதாகத் தெரிந்துகொள்ளாமல், உள்ளே சும்மாயிருந்துகொண்டே, வெளியிலே அவன் ஆட்டிவைக்கிறபடி பண்ணிக்கொண்டிருப்போம். ஆகையால் 'நாமாக்கும் பண்ணுகிறோம்' என்ற ஈகோ—கர்த்தா (அ)ஹங்காரம் என்பது—வராமலே பண்ணிக்கொண்டிருப்போம். மற்றபடி நாமாக ஒன்றும் ப்ளான் போட்டு லோக ஸங்க்ரஹம் உள்பட எதற்கும் கார்யம் செய்ய வேண்டியதில்லை. அவனுடைய ப்ளான்படிதான் நடக்கும் என்கிறபோது, அவன் 'இன்ஸ்பயர்' பண்ணாமல் நாம் என்ன முந்திரிக்கொட்டை மாதிரி லோக ஸங்க்ரஹம்தான் பண்ண முடியும்? நாமாக எத்தனை நல்ல ப்ளான் போட்டாலும், அது வெளிப்பார்வைக்கு ஸேவை, த்யாகம் என்றெல்லாம் எத்தனை உசத்தியாகத் தெரிந்தாலும் அதில் 'ஈகோ' இல்லாமல் போகாது. 'ஈகோ' போகாமலோ மோக்ஷம் என்பது ஒரு நாளுமில்லை' என்று விவேகமாயிருப்போம்.

'என் ஸ்வய மோக்ஷம் எப்படிப் போனாலும் போகட்டும். எனக்கு மோக்ஷமே கிடைக்காமல் போனால்கூடப்போகட்டும். உலகத்துக்கு நல்லதாகத் தொண்டு செய்துகொண்டேயிருந்தேனானால் அதுவே போதும்' என்று சொல்வதெல்லாங்கூட, நன்றாக ஆலோசித்துப் பார்த்தால், ஒரு தினுஸான 'ஈகோ'தான். மற்ற ஜனங்களுக்கு நீ நல்லது பண்ணி ஸம்ரக்ஷிப்பது இருக்கட்டும். உனக்கு ஈச்வரன் மனஸ் என்று ஒன்றைக் கொடுத்து அது உன்னை ஜீவாத்ம பாவத்தில் குறுக்கிக் கட்டிப்போடும்படியாக ஒரு பக்கம் மாயையில் வேடிக்கை பண்ணும்போதே, இன்னொரு பக்கம் அதிலிருந்து நீ விடுபட்டு அவனாகவே அவனுடைய நிர்குண ஸ்வரூபத்தில் ஒன்றுபடுவதற்கும் ஸாதனா மார்க்கம் கொடுத்திருக்கிறானோ இல்லையோ? அப்படியிருக்கும்போது, 'நான் விடுபட

* கீதை III-7–20.

Koviloor Digital Library

மாட்டேன். ஜெயிலிலேயேதான் இருந்துகொண்டு ஜெயிலிலிருக்கிற மற்றவர்களுக்கு நல்லது பண்ணுவேன்' என்றால்—அந்த ஜெயில் ஸூப்ரண்டு ஈச்வரன்தானே? அவனுக்கு அடங்கித்தானே நீ மற்ற கைதிகளுக்கு எந்த நல்லதும் பண்ண முடியும்? எப்படியானாலும் நீ பண்ணும் நல்லதும் இந்த ஜெயிலுக்குள்ளேயேதானே? இதிலிருந்து எவரையும் விடுவிப்பது நிச்சயமாக உன் கையில் இல்லை. அது அவன் கையில்தானிருக்கிறது. அதற்கு அவரவரே முயற்சி செய்தால்தான் அவன் பூட்டைத் திறந்துவிடுவான். நீ செய்யும் நல்லது, உபகாரம் எல்லாம் ஸம்ஸார பந்தம் என்ற விலங்கைப் போட்டுக்கொண்டிருக்கும் இந்த மாயாலோக ஜெயிலுக்குள் தான். இதற்குள்ளே பெறக்கூடிய சிறிய ஆனந்தங்களில் சிலவற்றை மற்றவர்களுக்கு உண்டாக்கியே தீருவேன் என்று வீம்புப் பிடித்துக்கொண்டு, நீயே ஜெயிலிலிருந்து விடுபட்டு சாச்வதமான பேரானந்தத்தை அடைய ஹேதுவான (காரியமற்ற) ஞான மார்க்கத்தில் போகக்கூடிய யோக்யதையை ஈச்வரன் தருகிறபோதுகூட, கர்மாவில்தான் போய்க்கொண்டிருப்பேனென்று பிடிவாதம் பிடித்தால் அது அஹம்பாவமாயுமிருக்கிறது, அசட்டுத்தனமாகவுமிருக்கிறது.

அவனுடைய அநுக்ரஹமிருந்தாலொழிய கார்யத்தை விட்டுவிட்டு ஞானத்தில் பிரவேசித்து மோக்ஷமடைவதற்கான யோக்யதை ஏற்படவே ஏற்படாது. எனவே இந்த யோக்யதை வேண்டாமென்று சொன்னால் ஈச்வராநுக்ரஹமே வேண்டாமென்று தள்ளுவதாகத்தான் அர்த்தம். தன் ஸொந்த விஷயத்தில் இப்படி ஈச்வரன் செய்கிற முடிவான பரமாநுக்ரஹம் வேண்டாமென்று சொல்லிவிட்டு, நம்மைவிட அவனுக்கு ஜாஸ்திப் பொறுப்பிருக்கிற அவனுடைய ஸ்ருஷ்டியான மற்றவர்களுக்குத்தான் தாற்காலிக நல்லதுகளைப் பண்ணுவேன் என்று புறப்பட்டால் இதற்கும் அவன் அநுக்ரஹம் இருந்தால்தானே முடியும்?. ஈச்வராநுக்ரஹம் இல்லாமல் ஸேவை, ஜீவை எதுதான், ஏவர்தான் செய்ய முடியும்? அவனே, 'இவன் ஸேவை

Koviloor Digital Library

பண்ணியது போதும்; இனிமேலே இவனுடைய ஸேவை இல்லாமலே நாம் லோக ரக்ஷணத்தில் வேறு கருவிகளைக் கொண்டு பண்ணிக்கொள்வோம்' என்று இவனை ஞான நிஷ்டா யோக்யதையைப் பெறும் வாசலுக்கு அழைத்துக் கொண்டுபோகும்போது, அந்தப் பரமாநுக்ரஹம் வேண்டிய தில்லை என்று புறக்கணிக்கிறவன், அப்புறம் தான் செய்ய நினைக்கிற ஸேவை நிறைவேறுவதற்கு அவனுடைய அநுக்ரஹத்தை எப்படிப் பெறமுடியும்? அதாவது, இவன் தன்னுடைய மோக்ஷத்தையும் தானாகவே வேண்டுமென்று பறிகொடுத்துவிட்டு, தான் பண்ணும் ஸேவையும் நிறை வேறாமல் இரண்டுங்கெட்டானாக வீணாய்ப்போகும்படி யாகவே ஆகும்.

ஸ்வார்த்தமாக (தன்னலம் பயப்பதாக)த் தனக்கு எதுவும் வேண்டாமாக்கும், பரார்த்தமாக (பரநலம் பயப்ப தாகவே) வாழவேண்டும் என்று என்னதான் ஒருவன் ஆசைப் பட்டாலும், ஈச்வரன் என்னவோ இவன் பரார்த்தமென்று நினைத்துப் பண்ணும் ஸேவையெல்லாம்கூட இவனுக்கு ஸ்வார்த்தமாகச் சித்த சுத்தி, ஞானநிஷ்டா யோக்யதா ஸித்தி ஆகியவற்றை உண்டாக்கும்படிதான் வைத்திருக் கிறான்! இவன் பரோபகாரம் என்று நினைத்துப் பண்ணுவது பிறருக்கு உபகாரமாக இல்லாமலே முடிந்தாலும் முடியக் கூடும். ஆனால் இப்படி ஒரு கர்மயோகம் பண்ணுவதால் இவனுக்குச் சித்த சுத்தி ஏற்பட்டே தீரும். 'என் ஸ்ருஷ்டியை நான் கவனித்துக்கொள்கிறேன். உன்னை அதில் நடுவே கொஞ்சம் கருவியாக வைத்துக்கொள்கிறேனென்றால் அது உன்னை சுத்தப்படுத்தத்தானே தவிர, உன் மூலமாகத்தான் எனக்கு மற்றவர்களைப் பற்றிய கார்யம் நடக்கவேண்டும் என்பதால் அல்ல. ஆனபடியால், 'ஸ்வய மோக்ஷம் வேண்டாம்; பரநல கார்யம்தான் பண்ணுவேன்' என்றெல் லாம், உனக்கு அது 'ஈகோ'வாகத் தெரியாவிட்டாலும், ஏதோ ஒரு அசட்டு 'ஈகோ'வில் சொல்லிக்கொண்டு, இரண்டு மில்லாமல் பண்ணிக்கொள்ளாதே!' என்றுதான் பகவான் சொல்வார்.

Koviloor Digital Library

மற்றவர்களைப் பற்றி ஈச்வரனுக்கு இல்லாதது உனக்கென்ன? நேரே உனக்கென்று அவன் கொடுத்திருக்கும் மனஸை ஸரி பண்ணிக் கொள்ள மாட்டேன், அதை அவனிலேயே கரைத்துப் பூர்ணமாக்கமாட்டேன் என்று அலக்ஷ்யம் பண்ணிவிட்டு, மற்றவர்களுக்கு ஏதோ செய்கிறேன் என்று புறப்படுவது அதிகப்ரஸங்கித்தனமாகத் தானே இருக்கிறது? கார்யமில்லாமல் ஆத்ம விசாரம் செய்யப் பக்குவம் போதாமல், மனஸ் நாலாதிசையும் பாய்ந்து கொண்டிருக்கும் வரையில் ஸத்கார்யங்கள் பண்ண வேண்டியதுதான். அப்புறம் இந்தக் கர்மயோக பலனாக ஒரு காலத்தில் சித்தம் பக்வப்பட்டு ஆத்மவிசாரத்தில் அமைதியாக உட்கார்கிற யோக்யதை ஸித்திக்க ஆரம்பிக்கும். அப்போதும், 'கர்மாதான் பண்ணி லோகத்துக்கு நல்லது செய்வேனாக்கும்' என்று புறப்பட்டால் அது அதிகப்ரஸங்கித்தனந்தான்.

ஸ்வயநலமாகாது

தன்னை மட்டும் கடைத்தேற்றிக் கொள்வது ஸ்வய நலமில்லையா என்று கேட்டால். இல்லவே இல்லை. ஸ்வயம் என்பது எது? நீ ஒரு ஜீவன் என்று வைத்துக்கொண்டு அதற்காகப் பொன்னும் பொருளும், இன்னும் பதவி, பட்டம் முதலானதுகளும் சேர்த்துக்கொள்வதே குறியாயிருப்பதுதான் ஸ்வயநலம். இது கூடவே கூடாதுதான். இதிலெல்லாம் பிறருக்கு த்யாகமாக விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால் நீ ஆத்மாவாக மட்டும் இருந்து கொண்டு சும்மாயிருக்கிறாய் என்கிறபோதோ ஸ்வயம், பரம் என்று சொல்லிக் கொள்ள எதுவுமே இல்லை! நான், நான் என்கிற ஜீவ பாவம் தானே ஸ்வயம் என்பது? அந்த ஸ்வயமே போய்விடும் இடத்தில் ஸ்வய நலம் எங்கேயிருந்து வரும்? ஸத்யமாகவும் நித்யமாகவும் உள்ள ஒன்றே ஒன்றான நிலையில் ஸ்வயம் என்பது செத்தேபோய்விடுவதாக இருக்க, அதை 'ஸ்வய நலன் பேணுவது' என்றால் சிரிப்புத்தான் வருகிறது!

Koviloor Digital Library

சும்மாயிருக்கமுடியாதவரையில் கார்யம் பண்ண வேண்டியதுதான். ஆத்மாவாக அப்படியே சும்மாயிருந்து கொண்டிருக்க நம்மால் முடியவில்லை என்றால் ஏன்? நிறையத் தப்புக் கார்யம் பண்ணித்தான் (ஆத்மாவைத் தெரிந்து கொள்ளமுடியாதபடி) திரை போட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால் இப்போது திரையைக் கிழிப்பதான கார்யம்—நல்ல கார்யம், சாஸ்த்ரோக்தமான கார்யம்—பண்ணித்தானாக வேண்டும். சாஸ்த்ரோக்தமான கர்மாநுஷ்டானங்கள், அவரவரால் முடிந்தமட்டும் பரோபகாரம், ஜீவ காருண்யப் பணிகள் எல்லாம் பண்ணிப் பண்ணித்தான் திரை கிழிபடவேண்டும். ஆனால் திரை பாட்டுக்கு இருந்து கொண்டேயிருக்கட்டும்; நான் பாட்டுக்கு இருட்டிலேயே நல்லது பண்ணிக் கொண்டேயிருப்பேன் என்றால் அது புத்திசாலித்தனமும் இல்லை; ஈச்வரனுக்கு ப்ரீதியும் ஆகாது. "உத்தரேத் ஆத்மநா ஆத்மாநம்* : உன் ஆத்மாவை உசத்திக் கொள்ள, கடைத்தேற்றிக் கொள்ள நீயே பண்ண முடிந்த முயற்சியெல்லாம் பண்ணு! ந ஆத்மாநம் அவஸாதயேத் : உன்னை நீயே தாழ்த்திக் கொள்ளாதே! ஞானத்துக்கு உயராமல் கர்மாவிலேயேதான் இருப்பேன் என்று பிடிவாதம் பிடிக்காதே! உன்னைக் கடைத்தேற்றிக் கொள்ள நீ எப்போது பாடு படுகிறாயோ அப்போதுதான் நீ உனக்கே உற்ற உறவுக்காரனாக இருக்கிறாய் : ஆத்மா ஏவ ஹி ஆத்மநோ பந்து :! அப்படிப் பாடுபட மாட்டேன் என்றுபிடிவாதம் பிடித்தால், ஆத்ம ஏவ ரிபு ஆத்மந :—உனக்கு நீயே பரம சத்ருவாக ஆகிவிடுகிறாய்!" என்பதுதான் பகவான் வாக்கு. அதனால், என் ஆத்மா என்ன வேண்டுமானாலும் ஆகட்டும், நான் ஊருக்குத்தான் நல்லது பண்ணுவேன்' என்று சொல்லிக் கொண்டு, நல்லதாகத்தான் நடக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாத ப்ரயாஸைகளில்—முடிவு அவன் கையிலேயே இருக்கும் ப்ரயாஸைகளில்—அப்படியே நல்லதாக நடந்தாலும் இந்த மாயா லோகத்தைத்தான் சேர்ந்த

* கீதை VI.5

Koviloor Digital Library

விஷயங்களில்—போய்க்கொண்டேயிருப்பது அவனுக்கு ப்ரீதியாயிருக்காது. உனக்கும் அது முடிவான நல்லதாக ஆகாது.

பின்னே சில மஹான்கள்கூட இப்படி (தன்னுடைய மோக்ஷ இன்பத்தையும் துறந்து, உலகப்பணியே செய்ய விரும்புவதாக) சொல்லியிருக்கிறார்களே என்றால், அது ஸ்வய நலமே பேணிக் கர்மாவை ஜாஸ்தியாக்கிக் கொள்ளும் நமக்கு ஆரம்ப நிலைகளில் பரோபகாரம், தொண்டு முதலியவற்றில் ஈடுபாட்டை உண்டாக்கிக் கொடுப்பதற்குத் தூண்டுகோலாகத்தான். அவர்கள் மோக்ஷானந்தத்தையே 'ஸாக்ரிஃபைஸ்' பண்ணத் தயாராக இருக்கிறார்களென்றால்தான், நாமும் இந்த லோகத்தின் அல்ப ஆனந்தங்களுக்காகவே பிறர் நலனைக் கெடுத்தும் ஸ்வய நலமாகப் பண்ணுபவைகளை 'ஸாக்ரிஃபஸ்' செய்து பார்க்கலாம் என்ற நல்லறிவு தோன்றும்.

ஸ்வய மோக்ஷத்தையும் ஸாக்ரிஃபைஸ் பண்ணுமளவுக்குப் பரோபகாரத்தை உயர்த்திச் சொன்ன மஹான்கள் சிலர் இருக்கிறார்களென்றால், எதிர்வெட்டாக எத்தனையோ பரோபகாரம், பொதுநலப்பணி என்று செய்த பெரியவர்களில் சிலர் அப்புறம், 'இதெல்லாம் என்ன மாயை?' என்று தூக்கிப் போட்டுவிட்டு ஏகாந்தத்திலே உட்கார்ந்து விட்டார்கள் என்றும் பார்க்கிறோம்.

ஆக, நம்முடைய நிலையில் திரைக்கு இந்தண்டை இருட்டிலேயே கார்யங்கள் பண்ணிக்கொண்டு போக வேண்டியதுதான் என்றாலும், திரை கிழிந்து விலகுவதற்காகத்தான் செய்வதெல்லாம் என்ற ப்ரக்ஞை மறந்துபோகக் கூடாது. அது கொஞ்சம் கொஞ்சம் கிழிந்து, விலகி ஞான ப்ரகாசம் வர ஆரம்பிக்கும்போது, 'கார்யம் முடிந்து, பேசாமல் அந்த வெளிச்சத்தில் அப்படியே ஆனந்தமாக உட்கார்ந்திருக்க வேண்டியதே முறை' என்றுதான் இருக்கணுமே தவிர, 'நான்தான் உபகாரம் பண்ணுகிறேனுக்கும்! அதை விடாமல் பண்ணிக் கொண்டேதான்

Koviloor Digital Library

இருப்பேன்' என்று மறுபடி 'ஈகோ'த்திரையை இழுத்து விட்டுக்கொண்டு இருட்டிலேயே முழுகிப்போகக்கூடாது.

கொஞ்சம் அந்த ஞான ரச்மிகள் இந்தப் பக்கம் வர ஆரம்பிக்கும்போது கார்ய ஆசையைக் கட்டுப்படுத்திக் கொள்ள ஆரம்பிக்கவேண்டும். "இத்தனும் பெரிய லோகத்தில், கோடாநுகோடி ப்ராணிகளும் கர்மாப்படி தான் அநுபவிக்கவேண்டுமென்று இருக்கும்போது, நாம் செய்யக்கூடிய ஸேவை எல்லாம் அல்பத்திலும் அல்பம்தான். இது இல்லாமல் ஒன்றும் நடக்காது என்று அஹம்பாவப் பட்டுக் கொண்டு, நமக்கு அவன் அளிக்கக்கூடிய பரம ச்ரேயஸுக்குத் திரை போட்டுக் கொள்ளாமலிருப்போம். ப்ளான் போட்டுக்கொண்டு நாமாக ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்து கொண்டிருப்போம். அது அது எந்த எந்த வழியில் போகிறதோ அந்த அந்த வழியில் போகட்டும். நடக்கிறது நடக்கட்டும். அதுதான் ஈச்வர ஸங்கல்பம் என்று விட்டு விட்டு இருப்போம்' என்பதாக விலகிப்போகும் மனோபாவத்தை அப்போது வளர்த்துக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் தள்ளிவிட்டு ஆத்மாவையே பிடித்துக் கொள்ளும் த்யான, விசாரதிகளைத் தீவிரமாக அநுஷ்டிக்க முயலவேண்டும்.

சும்மாயிருப்பதாலும் லோகோபகாரம்

சும்மாயிருந்து கொண்டிருக்கிற ஞானியால் லோகத்துக்கு உபகாரமில்லை என்று சொல்வதுகூடத் தப்புத்தான். அப்படிச் சில பேர் இருப்பதால்தான் மற்றவர்களுக்கும் அந்த ஞானிகளுடைய சாந்தியையும் ஆனந்தத்தையும் பார்த்துத் தாங்களும் க்ஷணகாலமாவது மனஸடங்கி இருக்கிற உயர்ந்த அநுபவம் கிடைக்கிறது. நேரே ஒரு ஞானியைப் பார்க்கும் போதுதான் அவனுடைய ஸந்நிதி விசேஷத்தால் நமக்கும் இப்படியொரு விச்ராந்தி கிடைக்கிறது என்றில்லை. சுகப்ரஹ்மம், ஜடபரதர், ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ராள் போன்ற "சும்மாயிருந்தவர்களை"ப் பற்றிப் படிக்கும்போதும்

Koviloor Digital Library

கேட்கும்போதும்கூடத் தன்னால் நம்முடைய சஞ்சல மனஸையும் ஒரு பெரிய சாந்தி வந்து கொஞ்சம் கவ்விக் கொள்கிறது. சாப்பாடு போடுவது, மருந்து போடுவது, பணம் காசு கொடுப்பது முதலிய எல்லாவற்றையும்விட இதை சாந்த உபகாரம்தான் பெரிய உபகாரம்.

அது மாத்திரமில்லாமல் இப்படிப்பட்ட ஞானிகளின் மூலமாகவே ஈச்வரன் தன்னுடைய அநுக்ரஹத்தை வெளிப் படுத்தி, லோக விஷயமாகவே ஜனங்களுக்கு உள்ள ச்ரமங்களைக்கூடத் தீர்த்தும் பரமோபகாரம் நடக்கச் செய்கிறான். ஆனாலும் அவன் (ஞானி) என்னவோ, தான் உபகரிப்பதாக நினைக்காமல் 'சும்மா நிலை'யிலேயேதான் ஊறிப்போய்க் கிடப்பான்.

காரியமின்மையைச் சொல்லவே ஓயாக்காரிய அவதாரம்

இந்த நிலைக்கு வழி திறந்துவிடுவதற்காகவே அவதாரம் பண்ணவேண்டுமென்று ஸ்வாமி (தக்ஷிணாமூர்த்தி) நினைத்தார். "ஒன்றும் செய்யாமலிருப்பதை ஜனங்களுக்கு நன்றாக ஞாபகப்படுத்தி நிலை நாட்டுவதற்காக, இதுவரை ஒன்றும் செய்யாமல் சும்மாயிருந்து கொண்டிருக்கும் நாம் அவதாரம் செய்து, சுற்றிச் சுற்றி ஸஞ்சாரம் செய்து, ஊர் ஊராக உபதேசம் செய்து, ஸபை ஸபையாக வாதம் செய்து, கட்டுக் கட்டாகப் புஸ்தகங்கள் எழுதி அத்வைத ஸித்தாந்த ஸ்தாபனம் செய்யவேண்டும். எத்தனைக்கெத்தனை பேச்சே இல்லை என்றிருந்துவிட்டோமோ அத்தனைக்கத்தனை பேசி, அலைந்து திரிந்து, பேசாமல், அசையாமல் இருப்பதான லக்ஷ்யத்தை ப்ரசாரம் செய்யவேண்டும். [விடாமல் சிரித்தவாறு] கார்யமே பண்ணாமலிருந்து கொண்டிருக்கும் நாம், ஓயாமல் கார்யம் பண்ணிக்கொண்டிருக்கிற ஜனங்களிடம் போய், கார்யமே பண்ணாமலிருக்கும் நிலையைப் பற்றித் தெரிவிப்பதற்காக ஓயாமல் கார்யம்

Koviloor Digital Library

பண்ணவேண்டும்" என்றிப்படி ஸ்வாமி தீர்மானித்துக் கொண்டார்!

சம்-பு சம்-கரரானார்!

அஜ்ஞாநாந்தர்-கஹந-பதிதாந் ஆத்மவித்யோபதேசை:
த்ராதும் லோகாந் பவ-தவ-சிகா-தாப பாபச்யமாநாந் |
முக்த்வா மௌநம் வடவிடபிநோ-மூலதோ நிஷ்பதந்தீ
சம்போர்-மூர்த்தி: சரதி புவநே சங்கராசார்ய ரூபா ||

ஆசார்யாளை நேரே பார்த்து அதிலே ஆனந்தம் பொங்கிச் சொன்ன வாக்காக (இந்த)ச்லோகம் இருக்கிறது. 'சரதி புவநே'—'உலகத்திலே நடமாடிக் கொண்டிருக்கிறார்'—என்று நிகழ்காலமாக நேரே பார்த்தது பார்த்தபடிச் சொல்லியிருக்கிறது!

நடமாடுவது யார்? 'சம்போர் மூர்த்தி:'—சம்புவின் மூர்த்தி; சம்பு என்கிற சிவனுடைய மூர்த்தி. பரமேச்வரனின் முக்யமான பெயர்களில் சம்பு என்பது ஒன்று. "சம்போ மஹாதேவா!" என்றே சொல்வது வழக்கம். சிவ பக்தர்களை சைவர் என்பது போலவே சாம்பவர், பரம சாம்பவர் என்றும் சொல்வதுண்டு, 'சம்பு' என்ற பதத்தினடியாக உண்டானதே 'சாம்பவ' என்பது. சம்புபத்னியான அம்பாளை 'சாம்பவி' என்று சொல்வார்கள். பலவிதமான தீக்ஷைகளில் 'சாம்பவி தீக்ஷை' விசேஷமானது.

ஸரி, 'சம்பு' என்றால் என்ன? பரமசிவனுக்கு ஏன் அப்படிப் பெயர் ஏற்பட்டது?

'சம்' என்றால் நித்ய ஸுகம். 'இன்பம்' என்பது பொதுவாகச் சொல்கிற அர்த்தம். ருத்ர, சமகங்களில் 'சம்', 'மயஸ்' என்று இரண்டுவிதமாக இன்பங்களைச் சொல்லியிருக்கும். ஈச்வரனுக்கு 'சம்பு' என்பதோடு 'மயோபு' என்றும் 'ருத்ர'த்தில் ஒரு பெயர் சொல்லியிருக்கிறது. சம்,

---

* 'மாதவீய சங்கர விஜயம்' IV 60

Koviloor Digital Library

மயஸ் என்ற இரண்டும் இன்பம் என்ற அர்த்தம் கொடுப்ப தால் (ருத்ர, சமக) பாஷ்யகாரர்கள், (இவற்றில்) ஒன்று லௌகிக ஸுகம் என்றும், மற்றது மோக்ஷ ஸுகம் என்றும் அர்த்தம் பண்ணியிருக்கிறார்கள். 'சம்' ஒன்றை மட்டும் சொல்கிறபோது அதுவேதான் மோக்ஷ ஸுகமாயுள்ள நித்ய ஸுகமாகும்.

'சம்'முக்கு 'பூ'வாக இருப்பது 'சம்பு'.

பூ என்றால் உற்பத்தியாகிற இடம். நாமெல்லாரும் உற்பத்தியாகிற இடமாக இந்த மண்ணுலகம் இருப்பதால் இதற்கு பூலோகம் என்று பெயர். நித்யானந்தமாகிற 'சம்' உற்பத்தியாகும் இடமே 'சம்-பு'. பரமேச்வரன் அத்வைத ப்ரஹ்மமாக தக்ஷிணாமூர்த்தி ரூபத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது மோக்ஷானந்த உற்பத்தி ஸ்தான மாக இருப்பதால் அவருக்கு சம்பு என்று பெயர்.

அதைத்தான் (தக்ஷிணாமூர்த்திக் கோலத்தைத்தான்) 'வடவிடபிநோ மூலதோ' என்பதும், அதற்கு முந்தி வரும் 'மௌனம்' என்பதும் குறிப்பிடுகிறது. 'வடவிடபி' என்றால் வடவ்ருக்ஷம், (அதாவது) ஆலமரம். ஆலமரத்தின் அடியில், வேரில்தான் தக்ஷிணாமூர்த்தி உட்கார்ந்து கொண்டிருப்பார். அவர் 'வட விடபி மூல ஸ்திதர்'. மூலம் என்றால் வேர். அவர் மௌனமாக இருப்பவர். ஏன் அப்படி? பேசுவது என்றால் பேச்சைக் கேட்க இன்னொருத்தர் இருக்கணும். தனியாக உள்ளபோது பேச்சுக்கு இடமில்லை. அவர் தன்னைத் தவிர வேறே எதுவும், எவரும் இல்லை என்று தெரிந்துகொண்டிருப் பதான ப்ரஹ்ம ஞானத்தின் ஸ்வரூபமாக இருக்கிறவர். அதனால் மௌனியாக இருக்கிறார். பேசுவதற்கு விஷயம் வேண்டும். விஷயத்தை நினைக்க மனஸ் வேண்டும். இவரோ மனஸ் என்ற மாயா பதார்த்தம் அழிந்துபோய்விட்ட ஸத்ய நிலையில் இருப்பவர். மனஸ், நினைப்பு எதுவுமில்லாதபோது வார்த்தை எப்படி எழும்ப முடியும்? அப்போது மௌன மாகத்தானே இருக்கவேண்டும்? ஆத்மானந்தம் என்ற நித்ய

Koviloor Digital Library

ஸுகமான 'சம்'மின் உற்பத்தி ஸ்தானமாக, அதாவது 'சம்பு'வாக, ஒரே மௌனமாக உட்கார்ந்துகொண்டிருப்பது அவருடைய ஸ்வபாவம்.

நதிகளுக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானம் என்று ஒன்று உண்டு. அந்த இடம் மலைகளின் உச்சியில் ஒரு சின்ன மடு மாதிரி இருக்கும். அதில் ஜலம் தேங்கியிருக்கும். கங்கோத்ரிக்குக் கொஞ்சம் வடக்கே இப்படித்தான் இருக்கிறது. அதிலிருந்து பசுவின் வாய் மாதிரியான 'கோமுகி' என்ற பாறை அமைப்புக்கள் வழியே கங்கை நதியாக விழுகிறது. காவேரியின் உற்பத்தி ஸ்தானம் கொடகு தேசத்தில் ஸஹ்யாத்ரி என்கிற மலைத்தொடரில் ப்ரம்மகிரி என்ற மலையில் தலைக்காவேரி என்றே சொல்லும் இடத்தில் ஒரு சின்ன மடு மாதிரிதான் இருக்கிறது.

அந்தந்த உற்பத்தி ஸ்தானங்களில் ஜலம் அதுபாட்டுக்குச் சின்ன மடுவாகத் தேங்கியிருந்துவிட்டால் அதனால் லோகத்திற்கு என்ன ப்ரயோஜனம்? ரொம்பவும் கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு, மலை, காடு எல்லாம் தாண்டிப்போய் அந்த உற்பத்தி ஸ்தானத்தை அடையக்கூடிய வெகு சிலரைத் தவிர மற்ற எல்லாருக்கும் ஒரு ப்ரயோஜனமும் கிடைக்காது. 'வாணுளைக் கொடுத்து வாண தீர்த்தம்' என்பார்கள்—தாம்ரபர்ணியின் உற்பத்தி ஸ்தானமான பாண தீர்த்தத்தை அடைவது எத்தனை கஷ்டம் என்பதை இப்படிச் சொல்வார்கள். அலை அடிக்காமல், சத்தம் போடாமல், இருந்த இடத்திலேயே தேங்கியுள்ள மடு அந்த உற்பத்தி ஸ்தானத்தைவிட்டுப் புறப்பட்டு அலை அடித்து சத்தம் போட்டுக்கொண்டு நதியாகப் பாய்ந்தால்தான் லோகத்திற்கு ப்ரயோஜனம்.

தக்ஷிணாமூர்த்தி, சம்புவாக, இருந்த இடத்திலேயே சத்தமில்லாமல் மௌனமாக ஒரு மடு மாதிரி, ஊற்றின் உற்பத்தி ஸ்தானம் மாதிரி இருப்பது வழக்கம். ரொம்பக் கஷ்டப்பட்டே ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானத்திற்குச் சில பேர் மட்டும் போய் அந்தத் தீர்த்தத்

Koviloor Digital Library

திஞல்ப்ரயோஜனம் அடைகிறதுபோல, கஷ்டமான ஸாதனை களெல்லாம் பண்ணி முடித்த பெரியவர்களான ஸநகாதி மஹரிஷிகள் போன்றவர்கள் மட்டுமே அவரிடம்போய் ஆத்மார்த்தமான ப்ரயோஜனம் அடையமுடிந்தது. அப்படிப்பட்ட மஹரிஷிகளிடமிருந்தும் மற்றும் அநேக மஹான்களிடமிருந்தும் லோகம் ப்ரயோஜனம் அடைந்து வந்தது. நேராக லோக ஜனங்களால் அத்தனை ஸாதனை செய்து தக்ஷிணுமூர்த்தியிடம் போகமுடியாது.

இப்போது (அதாவது சுமார் 2500 வருஷத்திற்கு முன்) லோக ஜனங்கள் மஹர்ஷிகளின் உபதேசங்களைத் தள்ளி விட்டுத் தப்பான உபதேசங்களையே எடுத்துக்கொண்டிருந் தார்கள். சரியான வழியைவிட்டு அடர்ந்த காட்டுக்குள்ளே போய் அகப்பட்டுக்கொண்ட மாதிரி ஆகிவிட்டார்கள். அதைத்தான் அஜ்ஞாநாந்தர்-கஹந-பதிதாந் என்று ச்லோக ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறது. "அஞ்ஞானம் என்கிற அடர்ந்த காட்டின் நடுவில் மாட்டிக்கொண்ட ஜனங்களை" என்று அர்த்தம்.

காட்டு மத்தியில் மாட்டிக்கொண்டாலே கஷ்டம். அதோடு அந்தக் காடு தீப்பற்றிக்கொண்டு வேறு எரிய ஆரம்பித்துவிட்டால் இன்னும் எத்தனை பெரிய கஷ்டமாகும்? அஞ்ஞானம் என்ற காட்டு மத்தியில் போனுல் மோக்ஷத்தின் வழிக்கு ரொம்பவும் தள்ளிப்போய் விட்டதாகும். மோக்ஷ வழிக்கு நேர்மாருனது அது. அப்படியென்ருல் என்ன அர்த்தம்? பந்த-மோக்ஷம் என்பவற்றை எதிரெதிர் விஷயங் களாகச் சொல்கிறோம். பந்தம் என்ருல் தளை. விலங்கு போட்டுக் கட்டி வைத்திருக்கிற ஜனன மரணச் சுழலான ஸம்ஸார பந்தத்தை அது குறிக்கிறது. மோக்ஷம் என்ருல் தளை போய்விட்ட கட்டற்ற ஸ்வதந்த்ர நிலை. தானே பரமாத்மா என்ற அத்வைதாநுபவத்தைத் தரும் ஞானம் தான் அப்படிப்பட்ட மோக்ஷத்தைத் தரும் ராஜபாட்டை. அஞ்ஞானம் என்பது காட்டு மத்தி. அதில் ஸம்ஸாரம் என்ற காட்டுத் தீ பிடித்துக்கொண்டு, ஜனங்கள் அதன் ஜ்வாலையில்

Koviloor Digital Library

வெந்து வறுபட்டுக்கொண்டிருந்தார்கள். பவ-தவ-சிகா-தாப-பாபச்யமாநாந் என்று இதைத்தான் சொல்லியிருக்கிறது. "பவ-தவ-சிகா" என்றால் "ஸம்ஸாரமாகிய காட்டுத் தீ".

நதியின் ஆரம்ப ஸ்தானமான ஊற்று மாதிரி சம்புவான தக்ஷிணாமூர்த்தி கைலாஸ லோகத்தில் வட வ்ருக்ஷத்தடியில், இருந்த இடத்தைவிட்டு அசையாமல் உட்கார்ந்துகொண்டிருப்பதாகச் சொன்னேன். அது என்ன ஊற்று? 'சம்' என்று வேதம் சொல்லும் 'நித்ய ஸுக' மாகிற தீர்த்தம் ஊறுகிற ஊற்று. 'நித்ய ஸுகம்' என்னவென்றால் ஞானமயமான அத்வைத மோக்ஷம்தான். அது தவிர பாக்கி எல்லா இன்பங்களும் அநித்ய ஸுகங்களே! அந்த "சம்"மின் உற்பத்தி ஸ்தானமான "பூ"வாக இருப்பவர்தான் "சம்பு". சம்பு என்றால் ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கும் ஞானமாகிய நித்ய ஸுக தீர்த்தத்தின் உற்பத்தி ஸ்தானமாகிய ஊற்று.

இப்போது இரண்டையும் இணைத்துப் பார்க்கலாம்: இங்கே ஜனங்களானால் அஞ்ஞானக் காட்டில் ஸம்ஸாராக்னியின் தாபத்தில் வெந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தக்ஷிணாமூர்த்தியோ ஞான தீர்த்தமாகிய மோக்ஷ ஸுகத்தின் ஊற்றாக ஜில்லென்று இருக்கிறார். இந்த நெருப்பை அணைக்க வேண்டுமானால் அந்தத் தீர்த்தத்தைக் கொண்டு தானே பண்ணமுடியும்?

ஆனால் அந்த "சம்பு ஊற்று" ஏதோ உச்சி ஸ்தானத்தில் ஸனகர் போன்றவர்களால் மட்டுமே அடையக்கூடியதாக அல்லவா இருக்கிறது? அதை எப்படி இந்த உலக மட்டத்திற்கு, அஞ்ஞான ஜீவஸமூஹத்தின் மட்டத்திற்குக் கொண்டுவருவது?

பகீரதன் ஆகாசத்திலிருந்து கங்கையை பூமிக்குக் கொண்டுவந்த மாதிரி இந்த சம்புவை யாரும் கொண்டுவர முடியாது. கங்கையின் சக்தியையும் தாங்கிக்கொண்டு, அளவாகக் கட்டுப்படுத்தி பூமிக்கு அனுப்பிய அவரையே இறக்கிக் கொண்டுவர யாருக்கு சக்தி உண்டு? வெளி மநுஷ்

Koviloor Digital Library

யர்கள் யாருக்கும் அந்த சக்தி கிடையாது. ஏனென்றால் அவர் தமக்கு வெளியாக, வேறாக எதுவுமே இல்லாத அத்வைத ஸமாதியிலேயே இருந்து கொண்டிருப்பவர். அந்த ஸமாதியிலிருந்து அவரை யாரும் அசைக்க முடியாது.

அப்படியானால் இங்கே அஞ்ஞானக் காட்டில் ஸம்ஸாரத் தீ பற்றி எரியும்போது ஞான மோக்ஷ ஊற்றாக அவர் இருந்துங்கூட அந்தத் தீர்த்தத்தால் இந்த அக்னியை அணைப்பதற்கில்லாமல் இதில் ஜனங்கள் வெந்து மடிய வேண்டியது தானா?

இல்லை. ஏனென்றால் வெளியிலிருந்துதான் அவரை யாரும் எதுவும் பண்ணமுடியாதே தவிர அவருக்குள்ளேயே சுரந்து கொண்டிருக்கும் கருணை அவரை எழுப்பி இறக்கிக் கொண்டுவரமுடியும். அந்தக் கருணையைத்தான் சிவாபின்னமான (சிவனிடமிருந்து பிரிக்கவொண்ணாததான) சக்தி என்றும், அம்பாள் என்றும் சொல்வது. லோக நாடகத்தில் ஒரு அளவு வரை ஜனங்கள் அஞ்ஞானத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும்போதும் அவர்பாட்டுக்குப் பேசாமலே உட்கார்ந்தது உட்கார்ந்தபடி இருந்தாலும், அப்புறம் காடு பற்றிக்கொண்டு ஜனங்கள் ஸம்ஸார தாபத்தில் வேக ஆரம்பித்து விடுகிறார்களென்றால், அப்போது அவருடைய கருணை அவரைச் சும்மா உட்கார்ந்திருக்க விடாது.

அப்படித்தான் இப்போது ஆயிற்று.

அஞ்ஞானக் காட்டு மத்தியில் ஸம்ஸாரத் தீயில் வெந்து கொண்டிருக்கும் ஜனங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று சம்புவுக்குத் தோன்றிவிட்டது. த்ராதும் லோகாந்: "லோகத்திலுள்ள ஜனங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று"

இப்படித் தோன்றினவுடனே அவர் மௌனமாகத் தாம் பாட்டுக்கு ஏகாந்தமாக உட்கார்ந்து கொண்டிருக்கும் வழக்கத்தை விட்டுவிட்டார். "முக்த்வா மௌநம்": மௌனத்தை விட்டுவிட்டு.

Koviloor Digital Library

ஆலமரத்தடியில் ஒரு சின்ன ஊற்ருக இருந்தவர், உடனே அப்படி அங்கே மட்டும் தேங்கியிருப்பதை விட்டு, அங்கேயிருந்து, எப்படி ஒரு நதியின் உற்பத்தி ஸ்தானத்திலிருந்து ஊற்று பெருகி ஆருகி மலை, காடு, கிராமம், நகரம் எல்லாவற்றின் வழியாகவும் விஸ்தாரமாகப் பாய ஆரம்பிக்கிறதோ அப்படி ஒரு ஞானகங்கையாக ஜனங்கள் இருக்கிற இடத்தைத் தேடிக்கொண்டு தேசம் பூராவும் ஓடுபவராக ஆனுர்—முக்த்வா மௌநம் வடவிடபிநோ மூலதோ நிஷ்பதந்தீ.

ஒரு கார்யமுமில்லாத ஊற்றின் உற்பத்தி ஸ்தானமான சம்-புவாக இருந்தவர் அந்த நித்யஸுகத்தை லோக ஜனங்களுக்கெல்லாம் கொடுக்கிற கார்யத்தைச் செய்யும் சம்-கரர் ஆகிவிட்டார்! மௌனமாக இருந்தவர் ஏகப்பட்ட வாதம் செய்பவராகவும், உபதேசம் செய்பவராகவும் ஆகிவிட்டார். வடவ்ருக்ஷத்தில் அடியில் அடித்த சிலையாக உட்கார்ந்து கொண்டேயிருந்தவர் பாரத வர்ஷத்தின் நாலு பக்கமும் இந்தக் கோடிக்கு அந்தக் கோடி மூன்று தரம் சுற்றி வருபவராக ஆகிவிட்டார்.

சுருக்கமாகச் சொன்னுல், அசலமான சம்பு என்ற தக்ஷிணுமூர்த்தி ஸ்தாவும் ஸஞ்சரிக்கிற சங்காராசார்ய மூர்த்தியாகி விட்டார்.

சம்போர்-மூர்த்தி : சரதி புவநே சங்கராசார்ய ரூபா.

சம்புவின் மூலஸ்தான மூர்த்தியாக, இருந்த இடத்தை விட்டு அசையாத தக்ஷிணுமூர்த்திக்கு உத்ஸவ மூர்த்தியாக லோகம் பூராவும் சுற்ற சங்கராசார்ய மூர்த்தியின் அவதாரம் ஏற்பட்டுவிட்டது!

"சம்போர் - மூர்த்தி:"—சம்புவின் அசல மூர்த்தி; "சங்கராசார்ய ரூபா"—சங்கராசார்யராக ரூபம் எடுத்துக் கொண்டு; "புவநே"—லோகத்தில்; "சரதி"—ஸஞ்சாரம் பண்ணுகிறது.

Koviloor Digital Library

லோகம் பூராவுக்கும் ஹ்ருதய ஸ்தானமாக உள்ள நம்முடைய தேசம் முழுவதும் அவர் ஸஞ்சாரம் செய்ததே புவனம் முழுவதும் சஞ்சரித்த மாதிரிதான்.

"சரதி" - நடமாடிக் கொண்டிருக்கிறார். நிகழ்காலத்தில் சொல்லியிருக்கிறது. என்றைக்கோ ஆசார்யாள் நடமாடிவிட்டுப் போய்விட்டதாகச் சொல்லாமல் இப்போதும் நமக்கு மத்தியில் ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருப்பதாகச் "சரதி" என்று நிகழ்காலத்தில் போட்டிருக்கிறது.

இந்த ச்லோகம் 'மாதவீய சங்கர விஜயம்' என்பதில் ஆசார்யாளின் சரித்ரத்தைச் சொல்லிக்கொண்டு போகும் போது அங்கங்கே அவரை ஸ்துதித்து வர்ணிக்கும் ச்லோகங்களில் ஒன்றாக வருவது*. அதனால் நிகழ்காலத்தில் இருக்கிறது. ச்லோகத்தின் அழகினாலும் அர்த்த புஷ்டியினாலும் இது மாத்திரம் தனி ச்லோகமாகவே ஆசார்யாளின் ப்ரார்த்தனா ஸ்துதியாக ப்ரஸித்தியடைந்திருக்கிறது. இப்படிச் சொல்லும்போது இன்றைக்கும் ஆசார்யாள் நமக்கு மத்தியில் நடமாடிக் கொண்டிருப்பது போல "சரதி" என்று சொல்வது நமக்கெல்லாம் அலாதியான ஆஹ்லாதம் (உவகை) தருகிறது.

ராமன், க்ருஷ்ணன், நம் ஆசார்யாள் போன்ற அவதார புருஷர்களின் சரீரம் இந்த லோகத்தைவிட்டுப் போனதோடு அவர்களுடைய அநுக்ரஹ சக்தியும் போய்விடவில்லை. அவர்களுடைய சரீரம் என்பது என்ன? லோகாநுக்ரஹ சிந்தையில் பரமாத்மாவே எடுத்துக் கொண்ட ரூபம்தான். அந்த அநுக்ரஹ சிந்தை லோகமுள்ள வரையும் பரமாத்மாவை விட்டு நீங்காமல் அமரமாக இருப்பது. ஆகையால் அதன் மூர்த்தியாக வந்தவர்களும் அமரமாக லோக ரக்ஷணம் பண்ணிக்கொண்டே இருப்பவர்கள்தான். ராம-க்ருஷ்ணாதிகளும், ஆசார்யாள்

---

* 'மாதவீய சங்கர விஜயம்' IV 60.

Koviloor Digital Library

போன்றவர்களும் சரீரத்தை விட்ட பின்பும் எத்தனையோ ஆயிரம் வருஷமாக எத்தனையோ பேருக்கு பக்தாநுக்ரஹம் செய்துகொண்டுதானே இருக்கிறார்கள்? அது எப்படி? அநுக்ரஹ ரூபமாக—அருளுருவமாக—அவர்கள் என்றென்றைக்கும் இருந்துகொண்டேயிருப்பதால்தான்! பக்தர்களின் பக்தி பாவம் ஓங்குகிறபோது அநுக்ரஹ ரூபம் என்பது ஸ்தூல ரூபமாகவே ஆகி இப்போதும்கூட அந்தப் புண்ய மூர்த்திகளின் தர்சனமும் கிடைக்கிறது. இன்றைக்கும் நம்முடைய ஆசார்யாள் ஸூக்ஷ்மமான அநுக்ரஹ சக்தியாக நமக்கு மத்தியில் ஸஞ்சரித்துக் கொண்டுதான் இருக்கிறார்—"சரதி புவநே சங்கராசார்ய ரூபா".

மறுபடி சொல்கிறேன், சம்பு மூர்த்தி சங்கர மூர்த்தியாக அவதாரம் பண்ணிய விஷயம்: 'சம்' என்பது நித்ய ஸுகம்; அத்வைத ஸ்திதி என்கிற ஆத்மானந்தம். 'பூ' என்றால் உற்பத்தியாகிற இடம். பரமேச்வரன் நித்ய ஸுகம் உற்பத்தியாகும் ஊற்றாக இருக்கும்போது "சம்பு" எனப்படுகிறார். அப்போது அத்வைதானந்த ஸ்வரூபமாகக் காரியமில்லாமல் இருப்பார்—தக்ஷிணாமூர்த்தியாக அசையாமல் உட்கார்ந்து கொண்டிருப்பார். உச்சமான ஸ்தானத்தில் அந்த நித்யானந்த ஊற்று இருக்கிறது. அந்த உச்சத்துக்குப் போக முடிந்த ரொம்பக் கொஞ்சம் பேர்தான் அதன் ஞான தீர்த்தத்தை எடுத்துப் பயன்படுத்திக் கொண்டு தாங்களும் ஞானிகளாகி நித்யானந்தத்தைப் பெறமுடியும். ஊற்று இருந்த இடத்திலேயே இருக்கிறது. இந்த ஒரு சில தீவிர ஸாதகர்களே அதைத் தேடிக்கொண்டு அதனிடம் போய் ப்ரயோஜனம் அடைகிறார்கள். மற்ற எல்லாரும் அஞ்ஞானக் காட்டு மத்தியில் ஸம்ஸாரத் தீயில் வெந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீயை அணைப்பதற்கான ஞானனந்த தீர்த்தத்தைத் தரும் ஒரு ஊற்று—சம்பு என்கிற ஊற்று—இருப்பதே அவர்களில் ரொம்பப் பேருக்குத் தெரியாது. தெரிந்தவர்களுக்கும் மலையுச்சிக்கு ஏறுவது போன்ற தீவிரமான ஸாதனை பண்ணி ஊற்றை அடைவதற்குச் சக்தி

Koviloor Digital Library

போதாது. இப்படியிருக்கிறதே என்று பரமேச்வரன் பரிதாபப்பட்டு, 'அவர்கள் நம்மிடம் வரமுடியவில்லையென்று விட்டுவிட வேண்டாம். நாமே அவர்களிடம் போய்க் காட்டுத் தீயை அணைத்து அவர்களைக் காப்பாற்றுவோம். இருந்த இடத்திலேயே இருக்கும் ஊற்று, ஒரு நாழிகூட நின்ற இடத்தில் நிற்காமல் ஓடிக்கொண்டிருக்கும் நதியாக லோகத்தில் பாயட்டும். ஸர்வ ஜனங்களின் ஸம்ஸாராக்னி தாபத்தையும் தணிக்கட்டும். ஜனங்களுக்கு நித்யானந்தத்தைச்செய்யட்டும்' என்று தீர்மானித்தார். அப்படி ஆனந்தத்தைச் செய்தவர்தான் சம்-கரர். 'சம்புவாக இருந்தால் இந்த யுகத்திற்குப் போதாது. இருந்த இடத்தில் இருப்பதை ப்ரயோஜனம் பண்ணிக்கொள்ள ஜனங்களுக்குத் தெரியவில்லை. ஆனபடியால், 'சம்'மாக இருந்துகொண்டு மட்டும் இல்லாமல், 'சம்'மின் உற்பத்தி ஸ்தானமாக மாத்திரம் இருக்காமல், 'சம்'மை ஸகல ஜனங்களுக்கும் செய்யும் சம்கர (சங்கர) நதியாக லோகத்திலே ஓடுவோம்' என்று முடிவு பண்ணினர். இப்படி, உட்கார்ந்த மூர்த்தி சுற்றும் மூர்த்தியானதுதான் சம்பு சங்கரரானது.

"சம் பாவயதி, உத்பாதயதி, இதி சம்பு :" என்பதாக சம்பு என்ற வார்த்தைக்கு 'டெஃபனிஷன்' (இலக்கணம்) சொல்வார்கள். அதாவது, 'சம்'மை எவர் உற்பத்தி செய்கிருரோ அவர் சம்பு" என்று அர்த்தம். உற்பத்தி - production செய்வதோடு ஸரி. அதை விநியோகம் - distribution செய்கிறவரில்லை. அநேக ஆலைகளில் உற்பத்தி மட்டும் செய்கிருர்கள். தாங்களே நேராக அந்தப் பண்டத்தை விற்பனை செய்து எல்லா இடத்திலும் விநியோகமாகப் பண்ணுவதில்லை. சில ஏஜென்டுகள் மாத்திரம் உற்பத்தி சாலையிலிருந்து வாங்கி அப்புறம் வெளியில் எல்லாருக்கும் விற்பனை செய்கிருர்கள். ஏஜென்ட் வாங்க வராவிட்டால் உற்பத்தியான சரக்கு ஆலையிலேயேதான் கிடக்கும். யாருக்கும் ப்ரயோஜனமில்லாமல் தேங்கிக் கிடக்கும். ஆகையால் 'சம்'மின் உற்பத்தியாளராக மாத்திரமிருந்து உபயோக

Koviloor Digital Library

மில்லே. பின்னே என்னவாக வேண்டும்? 'சம்'மைக் கொண்டு போய் எல்லார் கையிலும் சேர்க்கிற விநியோகஸ்தராக வேண்டும். 'சம்' இவரிடம் மட்டும் தேங்கிக் கிடக்காமல் எல்லோருக்கும் கிடைக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்கிறவர்தான் சங்கரர். "சம் கரோதி இதி சங்கர :".

ஸுகத்தின் உற்பத்தி ஸ்தானம் சம்பு என்றால் நாம் போய் அதை அடைய வேண்டும். 'சம் கரோதி' (ஸுகத்தைச் செய்கிற வஸ்துவாயிருக்கிறார்) என்கிற பொழுது அது ஸ்வஸ்தானத்தை விட்டுப் புறப்பட்டுப் பல இடங்களுக்கும் வந்து நமக்கெல்லாம் ஸுக ப்ராப்தியை அருள்கிறது என்று ஏற்படுகிறது. ஊற்றுக்கு நாம் போய் ஜலம் கொண்டு வரணும். நதியோ, அதுவே ஊர் ஊராகத் தேடி வந்து நமக்கு ஜலம் தருகிறது. [சிரித்து] இன்னம், இப்போதெல்லாம் நதி ஊர் ஊராக மட்டுமின்றி வீடு வீடாகவே நகர ஸபைக் குழாய் வழியாக வந்து விடுகிறது! எங்கேயோ எட்டாக் கையில் கங்கோத்திரி தாண்டி இருக்கும் ஊற்று கங்கா நதியாகிக் கல்கத்தாவில் ஒவ்வொரு வீட்டுக் குழாயிலும் கொட்டுகிறது.

இப்படி, எட்டாக்கையில் (நினைப்பு, வாக்கு எதுவுமே அவரை எட்ட முடியாது; அப்படிப்பட்ட நிலையில்) இருந்து கொண்டிருந்த தக்ஷிணாமூர்த்தி, ஸகல ஜனங்களையும் தேடித் தேடி வந்து, அவர்கள் ஒதுங்கிப் போனால்கூடத் தான் எட்டிப் பிடித்து அவர்களுக்குப் பரம ஞானத்தை அநுக்ரஹிப்பதற்காகப் பரம காருண்யத்தோடு எடுத்த அவதாரம் தான் நம்முடைய பகவத்பாதர்கள்.

ஈச்வராவதார ப்ரமாணங்கள் :
வேத - இதிஹாஸ - புராணங்களில்

சம்புவான பரமேச்வரன்தான் சங்கரராக அவதரித்தாரென்று சங்கர விஜயப் புஸ்தகங்களில் இருக்கிறதென்றால் ஒரு கேள்வி வரலாம். 'சங்கர விஜயம் எழுதியவர்கள்

Koviloor Digital Library

சங்கராசார்யாருடைய பக்தர்களாகத்தான் இருப்பார்கள். அவருடைய ஸித்தாந்தத்தைத் தழுவியவர்களாகவும், அவரையே குருவாகக் கொண்டவர்களாகவுந்தான் இருப் பார்கள். இந்த மாதிரி நம்முடைய அன்புக்கும் பக்திக்கும் உரிய குரு என்று உள்ள ஒருவரை ரொம்பவும் தூக்கி வைத்து, மஹா புருஷர் என்று பொதுவாகச் சொல்வதற்கும் மேலே 'ஸாக்ஷாத் அவதாரம்' என்று கொண்டாடத் தோன்றுவது இயற்கை. அபிமானத்தின் பேரில் இப்படி ஸ்தோத்ரம் பண்ணுவது யதார்த்தமாக இருக்கவேண்டிய அவச்யமில்லை. ஆகையினால் ஆசார்யாள் ஈச்வராவதாரம் என்பதற்கு சங்கர விஜய புஸ்தகங்களைத் தவிர வேறே ஏதாவது எவிடென்ஸ் (சான்று) இருந்தால் சொல்லுங்கள். அதாவது அவருடைய மதத்தைத்தான் சேர்ந்தவர்கள் எழுதியதென்று சொல்வதற்கில்லாமல், பொதுப்படையாக உள்ள உத்தமமான வேறு நூல்களில் ஆதாரமிருந்தால் சொல்லுங்கள். ப்ரமாணமாக ஒப்புக்கொள்கிறோம்' என்று சொல்லலாம்.

அப்படியும் அநேகம் இருக்கவே செய்கின்றன. எல்லா வற்றுக்கும் மேற்பட்ட ச்ருதி ப்ரமாணமேகூட இருக்கிறது. 'வேத வாக்கோ' என்று கேட்கிறோமே, அப்படிப்பட்ட வேத வாக்கே இருக்கிறது, ஆசார்யாள் அவதார புருஷர்தான் என்பதற்கு. உடைத்துச் சொல்லாமல், கொஞ்சம் கூடமாக (மறைமுகமாக)ச் சொல்லியிருக்கிறது. அப்படிச் சொல்லி யிருப்பதை நாம் ஸ்பஷ்டமாக்கிக் கொண்டாலே, உடைத் துச் சொல்லியிருப்பதை விடவுங்கூட ரஸமாக இருக்கிறது!

சம்பு, சங்கர என்று இரண்டு வார்த்தைகளைச் சொல்லி, முதலில் !சம்புவாக இருந்தவர்தான் அப்புறம் சங்கரராக வந்தார் என்று சொன்னேனல்லவா? இதே இரண்டு பேர் களை இதே க்ரமத்தில் முதலில் சம்பு, அப்புறம் சங்கர என்று சொல்லி, அதற்கும் அப்புறம் பஞ்சாக்ஷரத்தை வேதத்தில் ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறது அது யஜுர் வேதத்தில். அதைச் சொல்வதற்கு முன்னால் வேதங்களில் முதலாவதாக

Koviloor Digital Library

இருக்கப்பட்ட ரிக் வேதத்திலிருந்து ஒன்று (ஒரு சான்று) காட்டுகிறேன்.

உலகிலேயே ஆதி க்ரந்தம் என்று சொல்லப்படும் ரிக் வேத ஸமாசாரத்தைச் சொல்வதற்குக் கி.பி. 17-18 நூற்றுண்டுகளில் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது!

பதினேழாம் நூற்றுண்டின் கடைசியிலிருந்து பதினெட்டாம் நூற்றுண்டுக் கடைசி வரை 96 வயஸு ஒரு பெரியவர் இருந்தார். பாஸ்கரராயர் என்று பெயர்.*

குருமுகமாக அவர் பெற்றிருந்த தீக்ஷா நாமம் பாஸுரா நந்தநாதர் என்பது. பாஸ்கர நாமம் ஸூர்யனைக் குறிப்பது. 'பாஸுர' என்பதும் ப்ரகாசத்தைக் குறிப்பதுதான். இந்தப் பேர்களுக்கு ஏற்ற மாதிரி அவர் அறிவொளி மிக்கவராக, வித்வத் ஸூர்யன் என்று சொல்லும்படியாக இருந்தார். குறிப்பாக அவர் மந்த்ர சாஸ்திரத்திற்கு ப்ரமாண பூதராக இருந்தார். மந்த்ர சாஸ்த்ரத்தில் இப்போது நமக்குக் கிடைத்துள்ள அநேக விஷயங்கள் அவர் மூலம் ப்ரகாச மானவைதான். அவர் அம்பாளுடைய பரம பக்தர். ஸ்ரீ வித்யா பூஜா பத்ததிகளைப் பற்றி முக்யமான நூல்கள் எழுதியுள்ள அவர் லலிதா ஸஹஸ்ர நாமத்திற்குச் செய்துள்ள பாஷ்யம் ஸ்ரீ வித்யா உபாஸகர்களின் விசேஷ மான கௌரவத்தைப் பெற்ற 'அதாரிடி'யாக விளங்கு கிறது.

அந்தப் பெரியவர் ஆசார்யாளைக் குறித்தும் ச்லோகங் கள் செய்திருக்கிறுர். அவற்றில் ஒன்றிலிருந்துதான் நம்முடைய ஆசார்யாள் பரமசிவனின் அவதாரம் என்று ரிக்வேதத்திலேயே ஸூசனையாகச் சொல்லியிருப்பது தெரிய வருகிறது. அந்த ச்லோகத்தைச் சொல்கிறேன்:

---

* பாஸ்கரராயரைப் பற்றிய ஸ்ரீசரணர்களின் விரிவான உரை இனி வரவிருக்கும் நம் நூற் பகுதிகளில் ஒன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

ஸ்ரீராமம் ப்ரதி புஷ்கராபித-மஹாயக்ஷேண வேதத்ரய-
வ்யாக்யாநாவஸரே விசிஷ்ய கதிதம் ஸ்ரீவிஷ்ணு
தர்மோத்தரே |

ஏதாம் தேநும்-உபஹ்வயாமி ஸுதுகாம்-இத்ய்ருக்-கதம் சங்கரா-
சார்யம் சிஷ்ய-சதுஷ்டயேந ஸஹிதம் வந்தே
குரூணாம் குரும் ||

"வந்தே குரூணாம் குரும் சங்கராசார்யம்" என்று நம் ஆசார்யாளை குருவுக்கெல்லாம் குருவாகச் சொல்லி நமஸ்காரம் தெரிவித்திருக்கிறது.

"ஸ்ரீராமம்" என்று ஆரம்பித்திருப்பதால் ராமரோடு ஆசார்யாளை ஸம்பந்தப்படுத்தியிருக்கிறது என்று புரியும். எப்படி ஸம்பந்தம்?

ராமர் கதை முழுதும் ராமாயணத்தில் சொல்லியிருப்பதோடு முடிந்துவிடவில்லை. அதில் சொல்லாததைச் சொல்லும் இதர புஸ்தகங்கள் இருக்கின்றன. அவற்றில் 'யோகவாஸிஷ்டம்' அல்லது 'ஞான வாஸிஷ்டம்' என்பது ஒன்று. இன்னொன்று 'விஷ்ணு தர்மோத்தரம்'. ச்லோகத்தில் (இரண்டாம் வரி முடிவில்) இந்தப் புஸ்தகத்தைத்தான் குறிப்பிட்டிருக்கிறது. ராமர் மநுஷ்யர் மாதிரியே நடந்து காட்டியதில் ப்ரவ்ருத்தி-நிவ்ருத்தி மார்க்கங்கள் இரண்டைப் பற்றியும் இரண்டு பேரிடமிருந்து உபதேசம் வாங்கிக் கொண்டார். வஸிஷ்டரிடமிருந்து நிவ்ருத்தியின் பராகாஷ்டையாக (உச்ச எல்லையாக) அத்வைதமான ஞானோபதேசம் பெற்றுக்கொண்டார். அதுதான் ஞான வாஸிஷ்டம். வேதாந்தம் படிப்பவர்களுக்கெல்லாம் தெரிந்த புஸ்தகம். கர்ம (ப்ரவ்ருத்தி) மார்க்கத்தில் ராமர் பெற்ற உபதேசத்தைச் சொல்கிற நூல் இந்த அளவுக்கு ப்ரஸித்தி அடையவில்லை. அதுதான் விஷ்ணு தர்மோத்தரம். விஷ்ணு புராணத்திற்குப் பரிசிஷ்டமாக (பிற்சேர்க்கையாக) அந்தப் புஸ்தகத்தைச் சொல்வார்கள். அதை ராமருக்கு

Koviloor Digital Library

உபதேசம் பண்ணினது யாரென்றால் புஷ்கரன் என்ற யக்ஷன். "புஷ்கர-அபித-மஹாயக்ஷேண" என்று இதை (ச்லோகத்தில்) சொல்லியிருக்கிறது. 'மஹா' யக்ஷன் என்று அடைமொழி கொடுத்துச் சொல்லியிருப்பதால் அவனுடைய பெருமை தெரிகிறது. அவதாரமாகிய ராமரே தன்னிடம் உபதேசம் வாங்கிக்கொள்ளத்தக்க ஸ்தானத்திலிருந்தவன் என்றால் பெருமையுள்ளவனாகத்தானே இருக்கவேண்டும்? தேவ ஜாதிகளில் கின்னரர், கிம்புருஷர், கந்தர்வர் என்றெல்லாம் இருப்பதுபோல யக்ஷர் என்பதும் ஒன்று. யக்ஷர்களுக்கு ராஜா குபேரன். அந்த ஜாதியைச் சேர்ந்த புஷ்கரன் என்பவன்தான் ராமருக்கு ரிக்-யஜுஸ் - ஸாம வேதங்களின் கர்ம காண்டத்தை உபதேசம் பண்ணினவன்.

அதில் ரிக் வேத மந்த்ரங்களுக்கு அர்த்தம் சொல்லும் போதே ஒரு இடத்தில் ஆசார்யாளைப் பற்றிய ப்ரஸ்தாபம் வருகிறது.

"தேநும்-உபஹ்வயாமி ஸுதுகாம்"

என்று ச்லோகத்தில் வருவது ரிக் வேத மந்த்ரம் ஒன்றையே குறிப்பிடுகிறது.* இது கன்றுக்குப் பாலூட்டும் பசு போல ஈச்வரன் லோக ரக்ஷணம் பண்ணுவதைச் சொல்லும் ரிக் (வேத மந்திரம்). 'விஷ்ணு தர்மோத்தர'த்தில் ராமருக்குப் புஷ்கரன் இந்த மந்த்ரத்துக்கு அர்த்தம் சொல்லும்போது, பூலோகத்தில் அத்வைத தத்வம் மறந்துபோகும் ஒரு காலம் வரும்போது பரமசிவன் கன்றுக்குப் பால் கொடுத்து ரக்ஷிக்கப் பசு வருவதுபோல லோகத்திற்கு ஞானப்பாலூட்டி அநுக்ரஹம் பண்ண சங்கராசார்ய ஸ்வாமிகளாக அவதரிக்க போகிறாரென்று இங்கே சூசனை செய்திருக்கிறது என்று சொல்கிறான்.

ஆசார்யாள் மட்டும் அவதரித்ததைச் சொல்லி இங்கே நிறுத்தி விடவில்லை. நான்கு சிஷ்யர்கள் புடை சூழ அவர்

---

* ரிக்வேதம் : முதல் மண்டலம், 164-வது ஸூக்தம், 26-வது மந்த்ரம்.

Koviloor Digital Library

அவதரிக்கப் போவதாகவே சொல்லியிருக்கிறது. "...அவதீர்ணம் புவி சங்கரார்யம் சிஷ்யைச்-சதுர்பிஸ்-ஸஹிதம்" என்று பாஸ்கராசார்யார் எடுத்துச் சொல்கிறார்.

பாஸ்கராசாரியார் போன்ற ஒரு பெரியவர் ஸ்வயமாக ஒரு விஷயம் சொன்னாலே அதற்கு நிரம்ப மதிப்பு உண்டு. விஷ்ணு தர்மோத்தரம் போன்ற ஒரு புராண க்ரந்தத்தில் வருகிற விஷயத்திற்கும் ஸ்வயமாகவே மதிப்புண்டு. வேதத்திலே ஒன்று சொல்லியிருக்கிறதென்றாலோ கேட்கவே வேண்டாம்! அதுவே போதும்! இங்கேயோ வேதத்தில் நம்முடைய பகவத்பாதாளைச் சொல்லியிருக்கிறதென்று புராணத்தில் 'மஹா'யக்ஷன் எனப்படும் புஷ்கரன் சொல்வதை மஹானாகிய பாஸ்கராசார்யார் நமக்குச் சொல்கிறாரென்பது விஷயத்திற்கு மும்மடங்குச் சிறப்புத் தருவதாக ஆகிறது.

யஜுர்வேத ரெஃபரன்ஸுக்கு வருகிறேன்.

நாலு வேதங்கள் என்று சொன்னாலும் நடைமுறையில் ஸகல கர்மாநுஷ்டானங்களுக்கும் ரிக்-யஜுஸ்-ஸாமம் என்ற மூன்றுதான் முக்யமாக இருக்கின்றன. யக்ஞங்களில் உபயோகப்படும் வேதங்கள் இந்த மூன்றே. அதனால் நாலு என்று சொல்லாமல் மூன்று என்று பொருள் கொடுப்பதான 'த்ரயீ' என்றே வேதங்களைக் குறிப்பிடும் வழக்கம் இருக்கிறது. மேலே பார்த்த (பாஸ்கரராயரின்) ச்லோகத்தில்கூட "வேத-த்ரய வ்யாக்யாந" என்றே வருகிறதல்லவா? இப்படி வேதங்கள் மூன்று என்கிறபோது, 1, 2, 3 என்பதில் 2 மத்தியில் உள்ளதுபோல, ரிக், யஜுஸ், ஸாமம் என்பதில் யஜுர் வேதம்தான் மத்தியில் இருக்கிறது. மத்தியிலுள்ள விஷயத்திற்கு அதிக மதிப்பு, கௌரவம். 'நடு நாயகம்' என்று சொல்வது அதனால்தான். கோவிலில் நடு மத்தியில் தான் மூலமூர்த்தியின் கர்ப்ப க்ருஹம் இருக்கும். இப்படி யஜுர்வேதம் த்ரயீயின் நடுநாயகமாக இருக்கிறது.

Koviloor Digital Library

அந்த யஜுர்வேதத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு எது மத்தி? யஜுர்வேதம் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. 1, 2, 3, 4, 5, 6, 7 என்பதில் 4 தானே மத்தியில் இருக்கிறது? அதனால் நான்காம் காண்டம்தான் (யஜுர்வேதத்தின்) மத்ய ஸ்தானம். அந்த நான்காம் காண்டத்தின் நடுவிலிருப்பது அதிலுள்ள ப்ரபாடகங்களில் ('ஸெக்ஷன்'களில்) ஐந்தாவதாக உள்ள 'ஸ்ரீருத்ரம்'. அதை 'ஸ்ரீருத்ர ப்ரச்னம்' என்றும் 'சத ருத்ரீயம்' என்றும் சொல் வார்கள். பரமசிவனின் ஸ்துதியாக இருப்பது அது.

ஸரி, அந்த ருத்ரத்தில் எது நடுமையத்திலிருக்கிறதென்று பார்த்தால், அதுதானே ஸகல வேதங்களுக்குமே மத்ய ஸ்தானமாக இருக்கும்? வேதங்கள் என்கிற பிரம்மாண்ட மான கோவிலுக்கு நடுநாயகமாக உள்ள மஹாலிங்க மூல மூர்த்தி அந்த வாக்கியம்தானே? அது என்ன? வேதத்தின் உயிர் மையமாக இருக்கப்பட்ட அது என்ன என்றால்—

அதுதான், ஸ்ரீருத்ரத்தின் எட்டாவது அநுவாகத்தில் ('ஸப்-ஸெக்ஷ'னில்) நடுவிலே வரும் சிவ பஞ்சாக்ஷர மஹா மந்த்ரம்.

அந்த மஹா மந்த்ரத்துக்கு அழைத்துக்கொண்டு போவதாக அதற்கு முந்தி வருகிற இரண்டு பெயர்கள்தான் 'சம்பு' என்பதும், 'சங்கர' என்பதும்!*

முதலில் 'சம்பு' என்று சொல்லி, அப்புறம் 'சங்கர' என்று சொல்லி, அதற்கப்புறம் 'சிவ' 'நாமாவை நமஸ்கார பூர்வமாகப் பஞ்சாக்ஷரமாக்கிச் சொல்லியிருக்கிறது. இப்படி சம்பு, சங்கர, பஞ்சாக்ஷரம் என்ற ஆர்டரில் சொல்லி யிருப்பது நாம் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயத்திற்கு ரொம்பவும் ஆதரவாக இருக்கிறது. எப்படியென்றால், பஞ்சாக்ஷரத்தை ஆசார்யமுகமாக உபதேசம் வாங்கிக் கொண்டுதான் சொல்லவேண்டும். 'ஆசார்யாள்' என்றாலே

---

* நம: சம்பவே ச மயோபவே ச நம: சங்கராய ச மயஸ்கராய ச நம: சிவாய ச....(ஸ்ரீருத்ரம், 8, 1)

Koviloor Digital Library

இவர்தான் என்னும்படியிருந்த ஜகதாசார்யாள் நம்முடைய சங்கர பகவத்பாதர்கள்தான். இவர் இப்படி அவதாரமாக வருவதற்கு முன்னுல் எப்படியிருந்தார்? சம்புவாக இருந்தா ரென்று பார்த்தோம். சம்புவாகப் பேசாமலிருந்த ரூபம், அப்புறம் அவர் சங்கர குருவாக எடுத்துக்கொண்ட பேசும் ரூபம், அதற்கப்புறம் குரு முகமாகப் பெறவேண்டிய பஞ்சாக்ஷர ரூபம் என்று வரிசை க்ரமமாகக் காட்டிக் கொடுப்பதுபோலவே "ச ம் ப வே வ ..., சங்கராய...," அதற்கப்புறம் பஞ்சாக்ஷரம் என்று ஸ்ரீருத்ரம் சொல்லிக் கொண்டு போகிறது. சம்புவின் அவதாரம்தான் சங்கரர் என்பதற்கு இங்கேயும் ச்ருதி ப்ராமாண்யம் கிடைக்கிறது.

இது எனக்குத் தோன்றியது. ஸ்ரீருத்ரத்துக்கு பாஷ்யம் செய்தவர்களில் ஒருவருக்கு* இந்த (ருத்ர) ஸூக்தத்திலேயே இன்னேரிடத்தில் ஆசார்யாளை பரம சிவாவதாரமாகச் சொல்லியிருப்பதாகத் தோன்றி அதற்குப் புஷ்டியான காரணம் காட்டி உறுதிப்படுத்தியிருக்கிருர். அது என்னவென்ருல்......

லோகத்திலுள்ள ஸகல தினுஸான ஜனங்கள், ப்ராணிகள், சேதன அசேதன வஸ்துக்கள் எல்லாமே ருத்ர ஸ்வரூபம்தான் என்று விவரிப்பதாக இந்த ஸூக்தத்தின் இரண்டாம் அநுவாகத்திலிருந்து எட்டு அநுவாகங்களில் மந்த்ரங்கள் இருக்கின்றன. இதில் ஸரியாக முன்னூறு மந்திரங்கள் இருப்பதால் இதையே "ருத்ர த்ரிசதி" என்று நாமாவளியாக்கி முன்னூறு அர்ச்சனை பண்ணுகிறேம். தச்சர்கள், குயவர்கள், கம்மாளர்கள், வேடர்கள், குறவர்கள், திருடர்கள் எல்லோரும்கூட ருத்ரனுகிய பரமசிவன் தான் என்று அதில் வருகிறது. திருடர்களின் தலைவனுன பக்காத் திருடன்கூட அவன்தான் என்று வருகிறது! "தஸ்கராணும் பதி" என்று இப்படி அதில் வருவதைத்தான்

---

* அபிநவ சங்கரர்.

Koviloor Digital Library

ஞான ஸம்பந்தரும் "உள்ளம் கவர் கள்வன்" என்று சொன்னது. வ்ருக்ஷமா, புல்லா, வெள்ளமா, அலையா, மழையா, காற்ரு—அதெல்லாம்கூட சிவ ஸ்வரூபம்தான்; ஒரு மாடாகட்டும், நாய்தானுகட்டும், அல்லது அந்த நாய் மாம்ஸத்தைத் தின்னும் சண்டாளனேயாகட்டும்—இது வெல்லாமும் அவன்தான் என்றிப்படி ஸகல சராசர (சராசர என்ருல் 'சர, அசர'. 'சர' என்பது அசையும் வஸ்துக்கள். 'அசர' என்பது அசையாத வஸ்துக்கள். அதாவது ஜீவ ப்ரபஞ்சம், ஜட ப்ரபஞ்சம் முழுதும் சேர்ந்தது 'சராசரம்'. இப்படிப்பட்ட ஸகல சராசர) வஸ்துக்களிலும் ஏக பரமாத்ம ஸ்வரூபத்தைத் தெரிவிப்பது ஸ்ரீருத்ர ப்ரச்னம்.

இப்படி லோகத்திலுள்ள பல வஸ்துக்களாக இல்லாமல் பரமேச்வரனுக நாம் தெரிந்துகொண்டுள்ள ரூபத்தில் அவனொருத்தனுக்கு மட்டுமே இருக்கும் நாமாக்களும் நடு நடுவே வருகின்றன. இவற்றை 'அஸாதாராண நாமா'க்கள் என்பார்கள். நாம் ஸாதாரணம் என்ருல் ஆர்டினரி என்றும், அஸாதாரணம் என்ருல் ரொம்ப விசேஷமாக, அபூர்வமாக இருப்பது என்றும் அர்த்தம் பண்ணிக்கொள் கிறோம். வாஸ்தவத்தில் ஸாதாரணம் என்ருல் பொது: common; அஸாதாரணம் என்ருல் தனிப்பட்டது : specific. பரமசிவனை லோக வஸ்துக்களாகச் சொல்லும்போது பெரும்பாலும் பஹுவசனத்திலும் (பன்மையிலும்) பரமசிவ மூர்த்திக்கே உரிய அஸாதாரணப் பெயரைச் சொல்லும் போது ஏகவசனத்திலும் (ஒருமையிலும்) இருக்கும். 'உட்கார்ந்து கொண்டிருப்பர்களாக, சயனித்துக் கொண் டிருப்பவர்களாக, தூங்குகிறவர்களாக, நிற்கிறவர்களாக, ஓடுகிறவர்களாக—இப்படியெல்லாம் உள்ளவனுக்கு நமஸ்காரம்' என்று சொல்லும்போது பஹுவசனத்திலேயே இருக்கிறது. இப்படிக் கடகடவென்று நிறையச் சொல்லிக் கொண்டே போன பிறகு, சிவனுக்கே உரிய பெயர்களை, 'பவனுக்கு, ருத்ரனுக்கு, சர்வனுக்கு, பசுபதிக்கு, நீலகண்டனுக்கு, சிதிகண்டனுக்கு (அதாவது அந்த நீலமே

Koviloor Digital Library

விபூதியால் வெளுத்துக்காண்கிற கழுத்துக்காரனுக்கு)' என்று ஏகவசனத்தில் கொடுத்துக்கொண்டு போயிருக்கிறது. சிதிகண்டனுக்கு என்று சொன்னதை அடுத்து 'கபர்திக்கு', 'வ்யுப்தகேசனுக்கு' என்று இரண்டு நாமாக்களைக் கூறி நமஸ்காரம் தெரிவித்துவிட்டு, 'ஸஹஸ்ராக்ஷனுக்கு' (அதாவது, எண்ணிமுடியாத நேத்ரங்கள் கொண்டவனுக்கு), 'சததன்வனுக்கு' (அதாவது, எண்ணி முடியாத ஆயுதங்களை உடையவனுக்கு), 'கிரிசனுக்கு' என்றெல்லாம் மேலே நமஸ்காரம் தெரிவித்துக்கொண்டு போகிறது. கிரிசன், கிரீசன் என்ற இரண்டும் பரமேச்வரனுக்கே உரிய அஸாதாரண நாமாக்கள். கிரீசன் என்றால் கைலாஸாதிபதி. கிரிசன் என்றால் கைலாஸவாஸன். இப்படி பரமேச்வரனுக்கே உரிய அஸாதாரணமான நாமாக்களைச் சொல்லிக்கொண்டு போகும்போதே நடுவில் 'கபர்தி', 'வ்யுப்தகேசன்' என்ற இரண்டு பேர்களையும் சொல்லியிருப்பதால் அவையும் அவனொருத்தனுக்கே உரியவை என்றாகிறது.

ஸரி, கபர்தி என்றால் என்ன? வ்யுப்தகேசன் என்றால் என்ன?

கபர்தி என்றால் ஜடாதாரி, சடைமுடியோன்.

வ்யுப்தகேசன் என்றால் வபனம் (க்ஷௌரம்; 'க்ஷவரம்' என்று சொல்வது) செய்யப்பட்ட கேசத்தை உடையவன். அதாவது [சிரித்து] மொட்டைத் தலைக்காரன்!

ஈச்வரனுக்கு அடுத்தடுத்து நேரெதிரான தன்மைகளை உடைய பெயர்களை ஸ்ரீருத்ரத்தில் அங்கங்கே கொடுத்துக் கொண்டு போயிருக்கிறது. ஜ்யேஷ்டன் (மூத்தவன்) அவன் தான், கனிஷ்டன் (இளையவன்) அவன்தான்; பூர்வஜன் (ஆதியில் தோன்றியவன்) அவன்தான், அபரஜன் (அந்தத்தில் தோன்றுபவன்) அவன்தான்—என்றெல்லாம் அடுத்தடுத்து எதிரான குணங்களைச் சொல்லியிருக்கும் அவ்விதத்தில்தான் இங்கே ஜடாதாரியும் அவனே, முண்டனும் அவனே (சிகையை மழித்திருப்பவனும் அவனே) என்று சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

கபர்தி (ஜடாதாரி) என்பதைப் பற்றிக் குறிப்பாக ஒரு விசேஷம் உண்டு.

'கபர்தம்' என்றால் ஜடாமுடி. ஆனால் எல்லாருடைய ஜடாமுடியும் அல்ல. பரமசிவன் ஒருத்தருடைய ஜடாமுடிக்கே 'கபர்தம்' என்று பெயர். மஹாவிஷ்ணு, ப்ரஹ்மா, இந்த்ரன் முதலான ஸகல தேவர்களும் ராஜாக்கள் மாதிரியான சிகாலங்காரத்தோடு ஸ்வர்ண கிரீடம் தரித்துக்கொண்டிருக்க, யோகியான சிவன் ஒருத்தர்தானே ஜடாஜூடராக இருப்பது? "பனித்த சடையும், பவளம் போல் மேனியும்" என்றெல்லாம் அந்த ஜடையைத்தானே கொண்டாடுகிறோம்? கங்கை, சந்த்ரன், நாகம், கபாலம், ஊமத்தம் பூ, கொன்றைப் பூ முதலானவைகளை தரித்துக் கொண்டு விசேஷச் சிறப்புடன் விளங்கும் அப்படிப்பட்ட பரமேச்வரனின் ஜடாமுகுடத்திற்குத்தான் 'கபர்தம்' என்று தனிப் பெயர் கொடுத்திருக்கிறது. அதனால் கபர்தி என்பதும் பரமசிவனொருத்தனையே நேராகக் குறிக்கும் அஸாதாரண நாமா என்பது மேலும் உறுதிப்படுகிறது.

அதனால் அடுத்தாற்போல் வருகிற வ்யுப்தகேசன் என்ற பெயரும் நேராகப் பரமசிவ மூர்த்தியையே குறிப்பதாகத் தான் இருக்கவேண்டும். லோகத்திலுள்ள எல்லாத் தச்சர்கள், குயவர்கள், செம்படவர்கள், புலையர்கள், திருடர்கள் முதலியவர்களாகக்கூட ஈச்வரனே இருப்பதைச் சொல்லும் நாமாக்களில் ஒன்றாக இல்லாமல் லோகாதீதனாக, லோகாதீசனாக அவன் ஈச்வரன் என்ற ஒரே ஒருத்தனாக இருக்கிற நிலையில் அவனுக்கு மட்டுமே ஏற்பட்ட நாமாக்களுக்கு நடுவிலேயே வ்யுப்தகேசன் என்பது காணப்படுகிறது. 'ஜடாமுடியுடையவர்களாக இருப்பவனுக்கு', 'மொட்டைத் தலையர்களாக இருப்பவனுக்கு' என்று சொல்லாமல் ஒரே ஒரு கபர்தியாகவும், ஒரே ஒரு வ்யுப்தகேசனாகவுமே ஈச்வரனைச் சொல்லியிருக்கிறது. 'கபர்தி' என்பது அவனுக்கேயான அஸாதாரணப் பேர் என்றும் தெரிந்து கொண்டோம். அப்படியானால், வ்யுப்தகேசன் என்பதும்

Koviloor Digital Library

அப்படித்தானே இருக்கவேண்டும்? இது நாம் கவனிக்க வேண்டிய முக்யமான விஷயம்.

'தச்சர்களாக உள்ளவனுக்கு', 'குயவர்களாக உள்ள வனுக்கு' என்று பஹுவசனத்தில் சொல்லி, இப்படி லோகத்திலுள்ள ஜீவர்களுக்குள்ளேயும் அந்தர்யாமியாகவும், ஆத்ம ஸ்வரூபியாகவும் பரமேச்வரன் இருப்பதைக் காட்டாமல், அவன் அவனாகவே இருக்கும்போது அவனொருத்தனுக்கு மாத்திரமே ஏற்பட்ட பெயர்களை ஏக வசனத்தில், 'பவனுக்கு, ருத்ரனுக்கு, சர்வனுக்கு, பசுபதிக்கு, நீலகண்டனுக்கு, சிதிகண்டனுக்கு, கபர்திக்கு, ஸஹஸ்ராக்ஷனுக்கு, சததன்வாவுக்கு' என்று அடுக்கிக்கொண்டு போகிற போது 'கபர்தி' என்பதை அடுத்து 'வ்யுப்தகேசன்' என்று சொன்னால் அது பரமசிவனுக்கு மாத்திரமே உரித்தான ஒரு முண்டிதமான ஸந்நியாஸ ரூபத்தைத்தான் குறிப்பிடுகிறது என்று ஸந்தேஹத்திற்கு இடமில்லாமல் தெரிகிறதல்லவா? நம்முடைய ஆசார்யாளைத் தவிர இப்படி கேசத்தை வபனம் பண்ணிக்கொண்டவராகக் காட்டுவதற்கு எந்த மூர்த்தி ஈச்வரனுக்கு இருக்கிறது? நடராஜாவாகட்டும், தக்ஷிணா மூர்த்தியாகட்டும், காமாரி த்ரிபுராரி என்றெல்லாம் சிவ பெருமானுக்கு இருக்கப்பட்ட அநேக மூர்த்தங்களாகட்டும், எல்லாமே ஜடாதாரியாகத்தானே இருக்கிறது? நடராஜா என்றால் "விரித்த செஞ்சடை", தக்ஷிணாமூர்த்தி என்றால் சாந்தமாகத் "தாழ்சடை", பைரவாதி ரூபங்களில் அக்னி ஜ்வாலையாக வீசுகிற ஜடை என்றிப்படித்தானே பார்க்கிறோம்? இப்படியுள்ளபோது வ்யுப்தகேசன் என்ற தனிப்பட்ட ஒரு வியக்தியாக சிகையைக் களைந்த ஒரு மூர்த்தியைப் பரமசிவனுக்கு வேதம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிறதென்றால், அது எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சங்கராவதாரத்தை ஞானத்ருஷ்டியில் சொன்னதுதான். இப்படி அந்த பாஷ்யகாரர் (ஸ்ரீருத்ர பாஷ்யம் இயற்றிய அபிநவசங்கரர்) தெளிவுபடுத்தியிருக்கிறார்.

Koviloor Digital Library

'குறிப்பாக ஒரு முண்டித கேசரை ஸ்ரீருத்ரத்தில் சிவ ஸ்வரூபமாகச் சொல்லியிருக்கிறதென்றால், அது ஆசார்யாள் தான் என்று தாம் சொல்லிவிட்டால் போதுமா? வேறே ஆதாரம் காட்டினால்தானே ஸரியாயிருக்கும்' என்று அந்த பாஷ்யகாரர் புராணங்களைத் தேடிப்பார்த்தார். புராண - இதிஹாஸங்களைக் கொண்டே வேதத்திற்கு அர்த்தம் காண வேண்டுமென்பதுதான் பெரியோர் கண்டமுறை.

இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ருஹ்மயேத்|
பிபேத் - யல்பச்ருதாத் - வேதோ மாம் - அயம்
ப்ரதரிஷ்யதி ||

முதல் வரிக்கு அர்த்தம், இதிஹாஸ—புராணங்கள் வேதத்துக்கு உபப்ருஹ்மணம் எனப்படும் விரிவானவிளக்கம் என்பது. இப்படி இதிஹாஸ, புராணங்களையும் வேதத்தோடு கற்றறிந்தவன் நிறைந்த வித்வத்துடன் கூடிய 'பஹுச்ருதன்'. இதிஹாஸ—புராண ஞானமில்லாமல் வேதத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு அர்த்தம் செய்கிறவன் சிற்றறிவே படைத்த 'அல்பச்ருதன்'. இவனைக் கண்டாலே வேதம் நடுங்குகிறதாம்! "பிபேதி அல்ப ச்ருதாத் வேத :"— அல்ப ச்ருதனிடம் வேதம் பயப்படுகிறது. பிபேதி என்றால் பயப்படுகிறது. எதனால் பயப்படுகிறது? "மாம் அயம் ப்ரதரிஷ்யதி" என்று பயப்படுகிறது—அதாவது 'இவன் என்னைத் தன்னிஷ்டப்படி கண்ட இடத்துக்கு இழுப்பான். மனம் போனபடி மந்த்ரங்களுக்கு அர்த்தம் சொல்லி வஞ்சனை பண்ணுவான்' என்றே பயப்படுகிறதாம்! வேதத்தில் வெளிப்படையாகத் தெரியாத விஷயங்களுக்குப் புராண—இதிஹாஸங்களின் துணை கொண்டுதான் அர்த்தம் காண வேண்டுமேயன்றி தன்னிஷ்டப்படிப் பண்ணக்கூடாது. இதனால் அந்த பாஷ்யகாரர் புராணங்களைப் பார்த்து சிவமூர்த்தியான வ்யுப்தகேசன் யார் என்று ஆராய்கிறபோது 'வாயு புராண'த்தில் பளிச்சென்று இன்னார்தான் என்று கண்டு பிடித்து விட்டார். அந்தப் புராணத்தில்,

Koviloor Digital Library

சதுர்பி : ஸஹ சிஷ்யைஸ்து சங்கரோ (அ)வதரிஷ்யதி என்று இருப்பதைப் பார்த்தார். 'நான்கு சிஷ்யர்களோடு கூடியவராக சங்கரபகவத்பாதர் அவதரிக்கப் போகிறுர்' என்ற இந்த வாக்கியத்தைப் பார்த்ததும் அவருக்கு ஸ்ரீ ருத்ரம் சொல்லும் வ்யுப்தகேசன் ஆசார்யாள்தான் என்று நிஸ்ஸந்தேஹமாகப் புரிந்து விட்டது, 'சிவரஹஸ்ய' இதிஹாஸத்திலும் இப்படியே சான்று கண்டுபிடித்து உறுதிப் படுத்திக் கொண்டார்—'வ்யுப்தகேசன் என்பது சங்கராவ தாரம்தான்' என்று பாஷ்யத்தில் எழுதி விட்டார்.

சங்கர பகவத்பாதர்கள் அவதார புருஷர் என்பதற்கு ச்ருதி ப்ரமாணம் பார்த்தாகி விட்டது. இதிஹாஸ, புராண ப்ரமாணங்கள் கொஞ்சம் பார்க்கலாம். ச்ருதியிலிருப்ப வற்றை விஷ்ணு புராணத்தின் பரிசிஷ்டமான விஷ்ணு தர் மோத்தரமும் வாயுபுராணமும் 'கன்ஃபர்ம்' பண்ணியிருப் பதையும் நடுவில் பார்த்தோம். இன்னும் சில பார்க்கலாம்.

"சிவரஹஸ்யம்" என்று ஒரு இதிஹாஸம் என்றேனே, அதைப் பார்ப்போம். புராணங்களை விடவும் ப்ராமாண்யம் ('அதாரிடி') உடையவையாகக் கருதப்படும் தெய்விகக் கதைகளுக்கு 'இதிஹாஸம்' என்று பெயர். ராமாயணம், பாரதம் இரண்டும் இதிஹாஸங்களே. அப்படி சிவ ஸம்பந்தமாக உள்ள இதிஹாஸம் 'சிவ ரஹஸ்யம்.' பாரதம் மாதிரியே லக்ஷம் க்ரந்தங்கள் (ச்லோகங்கள்) கொண்ட பெரிய புஸ்தகம். ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி ஜைகீஷவ்யர் என்ற ரிஷிக்கு அதை உபதேசித்தார். ஜைகீஷவ்யர் ஸூத மஹா பௌராணிகருக்கு உபதேசிக்க, ஸூதர் மூலமாக அது நைமிசாரண்ய முனிவர்களுக்கு உபந் நியஸிக்கப்பட்டு லோகத்திற்கு ப்ரசாரமாயிற்று. அதனுல் ஜைகீஷவ்யர் செய்ததாகவே அதைச் சொல்வது வழக்கம். ஸுப்ரஹ்மண்யரும் தாமாக இதை (ஜைகீஷவ்யருக்கு) உபதேசித்தாகச் சொல்லிக்கொள்ளவில்லை. பூர்வத்தில் தம் முடைய பிதாவான பரமேச்வரர் அம்பாளுக்குச் சொன்ன

Koviloor Digital Library

இதிஹாஸத்தையே இப்போது தாம் சொல்வதாகத்தான் சொன்னார்.

ராமாயணத்தில் ஏழு காண்டம் என்றும், பாரதத்தில் பதினெட்டு பர்வம் என்றும் பிரித்திருப்பதுபோல், சிவ ரஹஸ்யத்தைப் பன்னிரண்டு அம்சங்களாகப் பிரித்திருக்கிறது. அவை முழுக்க ஈச்வர ஸம்பந்தமான விஷயங்களையே சொல்லும். அவற்றில் ஒன்பதாவது அம்சத்தில் சிவ பக்தர்களுடைய சரித்ரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய அறுபத்து மூன்று நாயன்மார்கள் சரித்ரங்கள் கூட இவற்றில் வந்து விடுகின்றன. மாயவரத்திற்குப் பத்து மைலிலுள்ள கஞ்சனூர் என்ற ஊரில் வைஷ்ணவராகப் பிறந்து அப்புறம் பல திவ்ய அற்புதங்கள் நடந்து பரம சைவராக ஆகி ஹரதத்த சிவாசார்யார் என்றே பெயர் பெற்ற ஒரு பெரியவர் உண்டு. அவருடைய கதைகூட இதில் (சிவரஹஸ்யத்தின் ஒன்பதாவது அம்சத்தில்) வந்து விடுகிறது. இம் மாதிரி இன்னொரு விருத்தாந்தமாகவே அங்கு நம் பகவத்பாதாளின் சரித்ரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் நடக்கப்போகிற இந்த சரித்ரங்களை ஞான த்ருஷ்டியில் பார்த்துச் சொல்லும் முறையில் விவரித்திருக்கிறது.

சிவ ரஹஸ்யம் சிவபக்தியை விசேஷித்துச் சொல்வதற்காக ஏற்பட்ட நூல். நம்முடைய ஆசார்யாளுக்கு முக்யமாக இருக்கிற அத்வைதஞானமார்க்கம் அந்தப் புஸ்தகத்துக்கு முக்யமான விஷயமில்லை, ஆனாலும் ஆசார்யாள் ஞானாவதாரம் போலவே பக்தாவதாரமாகவும் இருந்தவர். அதிலும் அவருக்கே ப்ரத்யேகமான ப்ரக்யாதி கூறும்படியாக ஈச்வரன், விஷ்ணு, அம்பாள், ஸுப்ரஹ்மண்யர் என்றிப்படி ஒவ்வொரு தெய்வத்துக்கும் பரம பக்தர் என்று சொல்லும்படியான ஸகல - தேவதா - பக்தாவதாரமாக இருந்தவர். அவரே தெய்வமாயிருந்த போதிலும், ஞானஸ்வரூபமான பரப்ரஹ்மாகவே இருந்தபோதிலும், ஜனங்களுக்கெல்லாம் ஞானத்துக்குப் பூர்வாங்கமாக பக்தி ஊட்டவேண்டுமென்ற அவதார

Koviloor Digital Library

லக்ஷ்யத்திற்காகத் தாமும் பக்தராக நடித்துக் காட்டினூர். க்ஷேத்ரம் க்ஷேத்ரமாக யாத்ரை பண்ணுவது, ஸ்தோத்ரம் பண்ணுவது, பூஜை முதலான அநுஷ்டானங்கள் பண்ணுவ தென்று காட்டி பக்தராக நடித்தார்.

இதில் அம்பாள் பக்தராக 'ஸௌந்தர்ய லஹரி' முதலானதுகள் பண்ணியும், ஸ்ரீ சக்ர பூஜை, அநேக ஆலயங் களில் ஸ்ரீ யந்த்ர ப்ரதிஷ்டை செய்தும் இருக்கிறூர். "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்று தேசம் பூரா பஜனே பண்ணிக் கொண்டு போயும், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ் யாதிகள் எழுதியும் விஷ்ணு பக்தராக விளங்கியிருக்கிறூர். இப்படி ஒவ்வொரு தெய்வத்தின் பக்தராகவும் தம்மைக் காட்டிக் கொண்டதில் உத்தமமான சிவ பக்தராகவும் அநேகம் செய்திருக்கிறூர். அவருடைய மடங்களில் முக்ய மூர்த்தியாக சந்த்ரமௌளீச்வரனேத்தான் வைத்திருக் கிறூர். அவர் விபூதி, ருத்ராக்ஷதாரியாக இருந்திருக்கிறூர். 'சிவாநந்தலஹரி' முதலான சைவமான ஸ்தோத்ரங்களும் அநுக்ரஹித்திருக்கிறூர். இப்படி சிவ பக்தி வளர்வதற்கு அவர் உபகாரம் செய்திருக்கிறூர் என்ற ரீதியிலேயே அவருடைய சரித்ரத்திற்கும் சிவரஹஸ்யத்தில் இடம் கொடுத்திருக்கிறது.

காலடியில் பிறந்ததிலிருந்து காஞ்சியில் முக்தி அடைகிற வரை ஆசார்ய சரித்ரத்தைச் சொல்லும் அந்த சைவமான நூல் ஆசார்யாளின் வாழ்க்கையில் முக்யமான ஸம்பவமாகச் சொல்வது, கைலாஸத்திற்கு ஆசார்யாள் சரீரத்தோடேயே போய்ப் பரமேச்வரனே தர்சனம் செய்ததையும், பரமேச்வரன் அவருக்கு பஞ்சலிங்கங்கள் என்னும் ஐந்து ஸ்படிக லிங்கங்களே அநுக்ரஹித்து, "மூன்று காலத்திலும் இந்த லிங்கங்களுக்கு பில்வத்தால் அர்ச்சனே பண்ணு" என்று ஆஜ்ஞாபித்ததையும்தான். ஆசார்யாள் அத்வைத பரமாக பாஷ்ய நூல்கள் செய்து, அவற்றை தேசம் முழுதிலும் உள்ள வித்வத் ஸமூஹங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக ப்ரசாரம் பண்ணி அத்வைத ப்ரதிஷ்டாபனுசார்யாள் என்று

Koviloor Digital Library

பெயர்பெற்றதே அவருடைய ஜீவிதத்தில் சிகரமான கார்ய மாலுைம், அது சிவரஹஸ்யத்திற்கு முக்யமில்லை. ஆசார்யாளால் ஐந்து இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு ஆராதிக்கப்படும் பஞ்ச லிங்கங்களை அவர் ஈச்வரனிட மிருந்தே பெற்றுக் கொண்டதற்குத்தான் இதில் முக்யத்வம் கொடுத்திருக்கிறது.

சிவரஹஸ்யத்தின் கொள்கை சிவ பக்தியை ஸாதன மாகக்கொண்டு சிவ ஸாயுஜ்யம் பெறுவதே மோக்ஷம் என்பது. ஆசார்யாளோ பகதியை—எந்த ஒரு தெய்வ மாலுைம் அதனிடம் பக்தி வைப்பதை—ஞானத்திற்குப் பூர்வாங்கமாகச் சொல்லி, அப்புறம் ஞான விசாரம் என்ற ஸாதனத்திலுைல் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுவதுதான் மோக்ஷம் என்று சொன்னவர். சிவ பக்தி, சிவஸாயுஜ்யம் ஆகியவற்றுக்கே முழு முக்யத்வம் தந்த அறுபத்து மூவர், ஹரதத்தர் போன்றவர்களின் கணக்கில் ஆசார்யாளைச் சேர்ப்பதற்கில்லை. ஆகையால் சிவோத்கர்ஷத்தையே (சிவனின் உயர்வையே) ஸ்தாபிப்பதற்காக ஏற்பட்ட சிவரஹஸ்யத்தில், சிவ பக்தர்களாகவே முற்றிலும் இருந்த மற்றவர்களைப் போற்றிச் சொல்லியுள்ள அளவுக்கு சிவ பக்தராகவும் இருந்தவர் என்ற ரீதியிலேயே இடம் பெற்ற ஆசார்யாளைப்பற்றிச் சொல்லாமலிருந்திருந்தால் அது எதிர் பார்க்கக் கூடியதே. ஆலுல் அப்படியில்லாமல் அந்தப் புஸ்தகத்தில் அவரை ஈச்வராவதாரமாகவே சொல்லியிருக் கிறது! இது ஒரு சிறப்பு வாய்ந்த ப்ரமாணமாகும்.

ஒன்பதாவது அம்சம் பதிலுைருவது அத்யாயம் முழுக்க அதில் ஆசார்ய சரித்ரம் சொல்லியிருக்கிறது. அதில் பரமேச்வரன் அம்பாளிடம், "சங்கரர் என்ற பெயருடன் என் அம்சத்தில் தோன்றியவராக ஒரு ப்ராம்மணோத்தமர் மலையாள தேசத்தில் சசலம் என்னும் காலடியில் ஒரு உத்தம மான ப்ராம்மண ஸ்த்ரீக்குப் பிறக்கப் போகிறுர்" என்று சொல்வதாக ஆரம்பித்திருக்கிறது:

Koviloor Digital Library

கேரளே சசலக்ராமே விப்ரபத்ந்யாம் மதம்சஜ |
பவிஷ்யதி மஹாதேவி சங்கராக்யோ த்விஜோத்தம:||

'மதம்சஜ:'—'மத் அம்ச ஜ:'—என்னுடைய அம்சத்தில் பிறந்தவர்; என் அம்சமாகப் பிறந்தவர்—இப்படிப் பரம சிவன் அம்பாளை "மஹாதேவி" என்று கூப்பிட்டுச் சொல்கிறார்.

கூர்ம புராணத்திலும் ஈச்வரனே ஆசார்யாளாக அவதரித்ததைச் சொல்லியிருக்கிறது:

கரிஷ்யத்-யவதாரம் ஸ்வம் சங்கரோ நீலலோஹித: |
ச்ரௌத-ஸ்மார்த்த-ப்ரதிஷ்டார்த்தம் பூதாநாம் ஹித-
காம்யயா ||

என்பதாகப் பரம கருணையினால் ஈச்வரன் ஜனங்களுக்கு ஹிதம் செய்யவே ஆசார்யாளாக வந்ததைச் சொல்லியிருக்கிறது. ஈச்வரன் செய்ய ஆசைப்பட்டது லோகஹிதம் (உலக நலன்): "பூதாநாம் ஹிதம்". இப்படி ஹிதம் செய்ய விரும்பிய அவனே நீலலோஹிதன்! நீலம் என்றால் நீலவர்ணம்தான். லோஹிதம் என்றால் சிவப்பு. சிவனைச் சிவப்பு நிறம் என்றும் சுத்த ஸ்படிக நிறம் என்றும் இரண்டு விதமாகச் சொல்வதுண்டு. ஸாதாரணமாக, வடதேசத்தில், ஸம்ஸ்க்ருத நூல்களில் சுத்த வெளுப்பு, ஸ்படிக வர்ணம் என்றும், தெற்கே தமிழ் நூல்களில் 'பவளம் போல் மேனி', 'செம்மேனி அம்மான்' என்றும் சொல்லியிருக்கும். ஆனாலும் வேதத்திலேயே—'ஸ்ருத்ர'த்திலேயே—தாம்ர வர்ணமாய், அருண வர்ணமாய், 'விலோஹிதன்' என்றே சொல்லும்படி நல்ல லோஹித வர்ணமாய் பரமசிவன் இருப்பதையும் சொல்லியிருக்கிறது. அந்தச் சிவப்பு சிவனே இடது பாகத்தில் நீலமான அம்பாளை வைத்துக்கொண்டு அர்த்தநாரீச்வரனாகவோ, அல்லது மஹாவிஷ்ணுவை வைத்துக்கொண்டு ஹரிஹர மூர்த்தியாகவோ இருக்கும்போது 'நீலலோஹிதன்' எனப்படுவார். ஸந்த்யாவந்தன உபஸ்தான திக்-வந்தனத்

Koviloor Digital Library

தில் மேற்குப் பார்த்துச் சொல்லும் ஹரிஹர மந்த்ரத்தில் இதையே 'க்ருஷ்ண-பிங்களம்' என்று சொல்லியிருக்கிறது. 'க்ருஷ்ண' என்பது ச்யாமளமான விஷ்ணு; 'பிங்கள' என்பது சிவந்த பரமசிவன். கூர்ம புராணத்தில் சக்தி ஸஹிதரான பரமேச்வரன் தாமே சங்கரசார்யராக அவதரிக்கப் போவதைத்தான்,

"கரிஷ்யத்-யவதாரம் ஸ்வம் சங்கரோ நீலலோஹித :"

என்று சொல்லியிருக்கிறது. ஜனங்களுக்குப் பரம ஹிதம் செய்ய விரும்பிய ஈச்வரன் 'ச்ரௌதம்' என்னும் வேத வழக்கு களையும், 'ஸ்மார்த்தம்' என்னும் தர்ம சாஸ்த்ர அநுஷ்டா னங்களையும் மறுபடியும் நன்கு நிலைநாட்டுவதற்காகவே இந்த அவதாரம் எடுத்தான் என்பதை, ச்ரௌத - ஸ்மார்த்த -ப்ரதிஷ்டார்த்தம் பூதாநாம் ஹித காம்யயா என்று சொல்லியிருக்கிறது.

லிங்க புராணத்திலும் இப்படியே, "வேத வித்யைகளும், வேத கர்மாக்களும் கலியுகத்தில் ரொம்பவும் நிந்தனைக்கு ஆளாகும் ஸமயத்தில் நீலலோஹிதன் என்கிற ருத்ரனாகிய மஹாதேவன் சங்கரராக வந்து தர்மங்களையெல்லாம் ப்ரகாசப்படுத்தி, கலிதோஷத்தை முறியடித்து வெற்றி கொண்டு அப்புறம் தம்முடைய பரம பதத்திற்குத் திரும்பப் போகிறார்" என்று சொல்லியிருக்கிறது:

நிந்தந்தி வேதவித்யாம்ச்ச த்விஜா: கர்மாணி வை கலௌ |
கலௌ ருத்ரோ மஹாதேவ : சங்கரோ நீலலோஹித :||
ப்ரகாசதே ப்ரதிஷ்டார்த்தம் தர்மச்ச விக்ருதாக்ருதி : |
ஏதம் விப்ராநிஷேவந்தே ஏநகேநாபி சங்கரம் ||
கலிதோஷாந் விநிர்ஜித்ய ப்ரயாந்தி பரமம் பதம் ||

'பவிஷ்யோத்தர புராணம்' என்பதாக வருங்காலத்தைச் சொல்லும் புராணம், "கலி பிறந்து இரண்டாவது ஆயிரம் முடியும்போது லோகாநுக்ரஹம் செய்யவேண்டும் என்ற

Koviloor Digital Library

ஆசையினுல் நாலு சிஷ்யர்களோடு சங்கரர் அவதரிக்கப் போகிறுர்'' என்று சொல்கிறது:

> கல்யாதெள த்விஸஹஸ்ராந்தே லோகாநுக்ரஹ-
> காம்யயா |
> சதுர்பி: ஸஹ சிஷ்யைஸ்து சங்கரோ (அ)வதரிஷ்யதி ||

இதிலே இரண்டாவது வரி அப்படியே வாயு புராணத்திலும் இருப்பதைத்தான் ஸ்ரீருத்ர பாஷ்யகாரர் மேற்கோள் காட்டிஞரென்று பார்த்தோம். 'பூதாநாம் ஹித காம்யயா' என்று கூர்ம புராணம் சொல்வதையே இங்கு 'லோகாநுக்ரஹ காம்யயா' என்று சொல்லியிருக்கிறது.

ப்ரஹ்மாண்ட புராணம் என்று ஒரு புராணம். லலிதா ஸஹஸ்ரநாமம், லலிதாம்பிகையின் கதை முழுதையும் கூறுவதான லலிதோபாக்யானம் ஆகியன அதன் உத்தர பாகத்தில்தான் வருகின்றன. அந்தப் புராணத்தின் ஒரு பிரிவு மார்க்கண்டேய ஸம்ஹிதை என்பது. அதில் மூன்ருவது பரிஸ்கந்தத்தில் (அத்யாயத்தில்) ஆசார்யாளின் அவதார விசேஷம் சொல்லப்பட்டிருக்கிறது.

லோகாநுக்ரஹத்திலேயே சிந்தையாய் இருந்ததால் ஈச்வரன் இப்படி அவதாரம் பண்ணிஞன். அவனுக்காகவே அந்த எண்ணம் இருந்தபோதிலும், ப்ரம்மாதி தேவர்கள் பெடிஷன் கொடுத்தபின் அவதாரம் எடுத்தான். நாஸ்திக மான சார்வாகாதி மதங்களை அழிப்பதற்காகக் காலடியிலிருந்த சிவகுரு என்ற ப்ராம்மணேத்தமரின் பத்னிக்கு சங்கரர் என்ற பெயரையுடைய பிள்ளையாகப் பிறந்தான் என்று அதில் சொல்லியிருக்கிறது.

> லோகாநுக்ரஹ-தத்பர : பரசிவ: ஸம்ப்ரார்த்திதோ
> ப்ரஹ்மணு |
> சார்வாகாதி மத ப்ரபேத நிபுணும் புத்திம் ஸதாதாரயந்||
> காலட்யாக்ய புரோத்தமே சிவகுருர் - வித்யாதி நாதச்ச ய :|
> தத்-பத்ந்யாம் சிவதாரகாம்ச முதித : ஸ்ரீ சங்கராக்யாம்
> வஹந்||

Koviloor Digital Library

ஸெளர புராணம் என்று ஸூர்யனையே பரமாத்மா வாகச் சொல்லும் ஒரு புராணம் இருக்கிறது. ஸூர்யனுக்கு ஸவிதா என்று ஒரு பெயர். 'ஸாவித்ரீ' என்பது இந்த 'ஸவிதா'வின் தொடர்பாக ஏற்பட்ட பெயர்தான். தாயாக உயிரை உண்டாக்கிப் போஷிப்பதால் ஸவிதா என்று பெயர். 'ப்ரஸவம்' என்று ஒரு உயிர் பிறப்பதைச் சொல்கிறோமல்லவா? ஸவ-ஸவிதா. காயத்ரீ மஹாமந்த்ரத்தில் ஸவிதா என்ற பெயரே குறிப்பிடப்படுகிறது. அந்த ஸவிதாதான் சங்கரராகப் பிறந்து வ்யாஸாசார்யாளின் ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஸரியான அர்த்தத்தை விளக்கிச் சொல்லி, வேதத்தின் பரமதாத்பர்யத்தையே தர்க்க ரீதியில் ஸ்தாபித்தவர் என்று ஸெளர புராணத்தில் சொல்லியிருக்கிறது.

வ்யாகுர்வந் வ்யாஸ ஸூத்ரார்த்தம் ச்ருதேரர்த்தம்
யதோசிவாந் |
ச்ருதேர்-ந்யாய்ய : ஸ ஏவார்த்த : சங்கர : ஸவிதாநநா||

சிவாவதாரம் என்று மற்ற புராணங்கள் சொல்லும் போதும் அந்த சிவனைப் பரமாத்மாவாகக் கருதியே அப்படிச் சொல்லியிருக்கிறது. இங்கே ஸூர்யனைப் பரமாத்மாவாகக் கருதும் புராணத்தில் ஸூர்ய மூர்த்திதான் அவ்வாறு அவதரித்தது என்று சொன்னால் இதுவும் அதே அபிப்ராயத்தைத்தான் கொடுக்கிறது.

ஆசார்யாளை ஸூர்ய மூர்த்தியாகச் சொல்வதிலும் ஒரு தனிப் பொருத்தம் இருக்கிறது. அஞ்ஞானத்தைத் தமஸாகவும் (இருட்டாகவும்) ஞானம் தருபவரைத் தமஸைப் போக்கி ப்ரகாசத்தைக் கொடுக்கும் ஸூர்யனாகவும் சொல்வது வழக்கத்தில் உள்ளதுதான். "ஞான பாஸ்கரன்" என்று மஹாமதியாக இருக்கப்பட்டவர்களைச் சொல்வதுண்டு. குறிப்பாக நமக்கு இவ்விஷயத்தில் என்ன குதூஹலம் அளிக்கிறதென்றால் ஆசார்யாளின் நேர் சிஷ்யர்களாக இருந்த இரண்டு பேர்—மஹா பெரியவர்கள்—அவரை இப்படி ஸூர்யனாகச் சொல்லியிருப்பதுதான்.

Koviloor Digital Library

ஆசார்யாளைப் பற்றிய ஸ்தோத்ரங்களில் முதல் ஸ்தானம் பெற்றிடுப்பது "தோடகாஷ்டகம்."[1] நேர் சிஷ்யரான தோடகர் அவரை ஸ்துதித்துப் பண்ணிய அஷ்டகம். அதில், ஆசார்யாளின் ஸந்நிதானத்தில் நேரே நின்று கொண்டு, அவரைப் பார்த்து, ஒரேயடியாக ஆனந்த பாஷ்பம் சொரிந்துகொண்டு,

"அஹிமாம்சு-ரிவாத்ர விபாஸி!"

என்கிறார். "ஸூர்யனாக இங்கே ஜ்வலித்துக் கொண்டிருக்கிறீர்கள்!" என்று அர்த்தம். ஹிமம் என்றால் பனி. ஹிமாம்சு என்றால் பனியைத் தன் கிரணங்களால் பெருகவிடும் சந்திரன். முதலில் 'அ' சேர்த்து அஹிமாம்சு என்றால் பனியை வற்ற அடித்துவிடுகிற ஸூர்யன். அப்படிப்பட்ட ஸூர்யனாக ஆசார்யாள் இருக்கிறாராம்!

அவருடைய நான்கு ப்ரதானமான சிஷ்யர்களில் இன்னொருவர் ஸுரேச்வராசார்யாள். அவர் ஆசார்யாளின் ப்ருஹதாரண்யகோபநிஷத் பாஷ்யத்திற்கு வார்த்திகம் (விரிவுரை) செய்திருக்கிறார். அதில், உதயகிரியிலிருந்து அஸ்தமனமாகிற மலை வாசல் வரையில் ஆசார்யாளான ஞான ஸூர்யன் தம்முடைய கீர்த்திக் கிரணங்களாக உள்ள சிஷ்யர்களால் வ்யாபித்துக்கொண்டு லோகத்தின் அஞ்ஞான அந்தகாரம் முழுவதையும் போக்கடிக்கிறார்[2] என்று சொல்லியிருக்கிறது.

இப்படியாக, சங்கர விஜயங்களில் மட்டுமில்லாமல் ரிக் வேத ரிக், ஸ்ரீருத்ரம், சிவ ரஹஸ்யம், மார்க்கண்டேய ஸம்ஹிதை, விஷ்ணு தர்மோத்தரம், வாயு புராணம், கூர்ம புராணம், லிங்க புராணம், பவிஷ்யோத்தர புராணம்,

---

1. தோடகாஷ்டகம் பிறந்த கதை பின்னால் விரியும்.

2. ஆசைலாத்-உதயாத்-ததா (அ)ஸ்தகிரிதோ பாஸ்வத்-யசோரச்மிபி : வ்யாப்தம் விச்வம்-அந்தகாரம்-அபவத்-யஸ்ய ஸ்ம சிஷ்யைரிதம்,

Koviloor Digital Library

ஸௌர புராணம் ஆகியவற்றிலும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் மநுஷ்யரில்லை, அவதார மூர்த்தி என்று சொல்லி யிருக்கிறது.

நேர் சிஷ்யர்கள் தரும் சான்று

ஆசார்யாளைப் போற்றுவதற்கென்றே ஏற்படாமல் பொதுப்படையாக இருக்கப்பட்ட புராண இதிஹாஸ க்ரந்தங்களில் அவரை அவதார புருஷராகச் சொல்லியிருப் பதற்கு ஒரு விதமான முக்யத்வம் உண்டென்றால், அவரை நேரில் பார்த்து, நெருங்கிப் பழகி, அவரோடு கூடவே இருந்த சிஷ்யர்களான மஹான்கள் தங்களுடைய குருவைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்களென்பதற்கும் ஒரு தனியான மதிப்பு உண்டு. யாரையுமே வெளியுலகம் ஏதோ கொஞ்சம் தெரிந்துகொள்வதோடு சரி. லோகத்திற்குத் தெரியும்படியாக ஒருத்தர் எப்படித் தன்னைக் காட்டிக் கொள்கிறாரோ அதை வைத்துத்தான் வெளியுலகம் அவரை எடைபோட முடியும். யாராயிருந்தாலும் லோகத்தின் பார்வையில் தங்களை நல்லவர் மாதிரியும், அறிவாளி மாதிரி யும்தான் காட்டிக்கொள்வார்கள். ஆனால் வாஸ்தவத்தில் அவர்கள் அப்படி இருக்கிறார்களா, இல்லாவிட்டால் 'ஷோ' பண்ணுகிறார்களா என்பது (அவர்களுக்குக்) கூடவே இருந்து நன்றாகப் பழகிக்கொண்டிருப்பவர்களுக்குத்தான். தெரியும். தத்வ சாஸ்திரப் புஸ்தகங்களை ஒருத்தர் பரமவேதாந்தமாக நல்ல முறையில் எழுதிவிடலாம். அப்படியே, படிப்பவர்கள் 'ஆஹா' என்னும்படியாக ஸ்தோத்ரங்களும், பக்தி நூல் களும் எழுதிவிடலாம். அதைப் பார்த்து அவர் மஹாஞானி யாக இருக்கவேண்டும், பக்த சிகாமணியாக இருக்க வேண்டும் என்று வெளி மநுஷ்யர்கள் நினைத்துவிடுவார்கள். ஆனால், கூடவே இருப்பவர்களுக்குத்தான் தெரியும், வாஸ்தவத்திலேயே அவர் எழுதியபடியும், உபதேசிக்கிறபடி யும்தான் வாழ்க்கையில் இருக்கிறாரா இல்லையா என்பது. அநேகமாக வெளிலோகம் நினைக்கிற அளவுக்கு ஒருவர்

Koviloor Digital Library

(பெரியவராக) இல்லை என்றே நன்றாகப் பழகுபவர்கள் நினைப்பதாக இருக்கலாம். வேடிக்கையாக இங்கிலீஷில், பெரிய 'ஹீரோ'வாக உள்ள எவனும் தன் கூடவே இருக்கும் சேவகனைத் தவிர மற்றவர்களுக்குத்தான் அப்படி இருக்கிறான் என்று சொல்கிறார்கள்.[1]

ஆசார்யாளைப் போன்ற நம்முடைய மத புருஷர்கள் வெளி வாழ்க்கை ஒரு தினுசு, உள்வாழ்க்கை ஒரு தினுசு என்று இல்லாதவர்கள் என்பது ஸர்வ நிச்சயமான விஷயம்தான். ஸ்வாநுபூதி இல்லாமல் வெறும் அறிவையும், கவி சாதுர்யத்தையும் மாத்திரம் கொண்டு அவர்கள் புஸ்தகம் மட்டும் பெரிசாக எழுதிவிடவில்லை என்பது நமக்குத் தீர்மானமான விஷயம்தான். ஆனாலும்கூட அவர்கள் கூடவே வஸித்து அத்யந்தமாக இருந்தவர்கள் அவர்களைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்வதில் நமக்கு ஒரு குதூஹலம் இருக்கவே செய்கிறது. அதிலும் ஆசார்யாளின் ப்ரதான சிஷ்யர்களாகக் கூடவே வஸித்த ஸுரேச்வராசார்யாள், பத்மபாதாசார்யாள், ஹஸ்தாமலகாசார்யாள், தோடகாசார்யாள் ஆகிய நாலு பேரும் மஹா பெரியவர்களாக, ஞான ஸித்தி பெற்ற மஹாத்மாக்களாக இருந்திருப்பதால், "தினந் தினமும் ஆசார்யாளைப் பார்த்துப் பழகிக்கொண்டிருந்த இவர்கள் அவரைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள்? குறிப்பாக, (அவரை) ஈச்வராவதாரம் என்று சொல்லியிருக்கிறார்களா?" என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் நமக்கு இருக்கிறது.

இந்த நாலு சிஷ்யர்களில் ஹஸ்தாமலகாசார்யாள் பண்ணியதாக ஒரே ஒரு சின்ன ஸ்தோத்ரம்தான் "ஹஸ்தாமலக ஸ்தோத்ரம்" என்று இருக்கிறது[2]. அது பரம அத்வைதமாக, ஒரே வேதாந்த தத்வ மயமாக இருப்பது. 'மநுஷ்யர், தேவர், யக்ஷர், அந்த ஜாதி-இந்த ஜாதி

---

1. "No man is a hero to his valet."
2. அது இயற்றப்பட்ட ஸந்தர்ப்பம் குறித்துப் பிற்பாடு பார்க்கலாம்.

Koviloor Digital Library

என்றெல்லாம் எதுவுமில்லை. இருப்பது ஒரே ஆத்ம ஸ்வரூபம்தான், ப்ரஹ்ம ஸ்வரூபம்தான்' என்று அது சொல்லிக்கொண்டு போகிறது. அந்த நிலையில் ஆசார்ய ஸ்வரூபம் என்று ஒன்று, அவதார ஸ்வரூபம் என்று ஒன்று ஆகியவை மட்டும் இருக்கமுடியுமா என்ன? அதனால் ஹஸ்தாமலகாசார்யாளின் வாக்கில் ஆசார்ய ப்ரசம்ஸை யாக (புகழ்த்துதியாக) எதுவும் இல்லை. எனவே அவர் ஈச்வராவதாரம் என்று காட்டும்படியாகவும் எதுவுமில்லை.

ஆனால் மற்ற மூன்று பேரும் ஆசார்யாளைப் பரம பக்தியோடு பரமேச்வரனாகவே ஸ்தோத்திரித்துச் சொல்லித் தான் இருக்கிறார்கள். (ஆசார்யர்களைப் போற்றி) அவர்கள் அநேகம் சொல்லியிருக்கிறார்கள். அது எல்லாவற்றையும் இப்போது நான் சொல்லப்போவதில்லை. அவர் பரமசிவ அவதாரந்தான் என்பதற்கு அவர்கள் அத்தாட்சி கொடுத்திருப்பதை மட்டுமே சொல்லப்போகிறேன். (ஞான ஸூர்யனாக அவரை ஸுரேச்வராசார்யாளும், தோடகா சார்யாளும் சொன்னதை எடுத்துக்காட்டியாயிற்று.)

தோடகாசார்யாள் தம்முடைய அஷ்டகத்தில் ஒவ்வொரு அடியையும் "பவ சங்கர தேசிக மே சரணம்" என்று முடித்திருக்கிறார்.

சங்கரர் என்பது ஆசார்யாளுக்குப் புதுசாக இட்டுக் கட்டி வைத்த பெயரில்லை. பூர்வ காலங்களிலிருந்தே பரமசிவனுக்கு இருந்து வந்துள்ள அநேக நாமாக்களில் ஒன்றுதான் அது. 'இப்போது கண்ணுக்கு முன்னால் தெரிகிறாரே, இந்த சங்கரர், இவர் அந்த சிவனாகிய சங்கரர் தான்' என்று ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கிற வகையில்தான் 'பவ சங்கர தேசிக மே சரணம்' என்று போட்டிருக்கிறார். 'பவன்' என்பது பரமசிவனின் ப்ரஸித்தி வாய்ந்த அஷ்ட நாமாக்களில் (எட்டுப் பெயர்களில்) முதலாவதாகும். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மஹா(தேவ)ன் என்ற எட்டுப் பெயர்களும் சிவனுக்கு மிகவும் உகப்பான நாமாக்கள். 'அந்த பவனாகிய சிவன்தான்

Koviloor Digital Library

சங்கர தேசிகராகிய சங்கராசார்ய ஸ்வாமிகள். அவர்தான் எனக்கு அடைக்கலம்' என்பதுதான் 'பவ சங்கர தேசிக மே சரணம்' என்பதற்கு அர்த்தம்.

'பவ' என்பதை க்ரியாபதமாக (வினைச் சொல்லாக) வைத்துக் கொண்டால் 'ஆகுக!', 'இருக்குமாக!', 'இருப்பாயாக!' என்று அர்த்தம். 'தீர்க்காயுஷ்மான் பவ!', 'தீர்க்க ஸுமங்கலி பவ!' என்று சொல்லும்போது இதுதான் அர்த்தம்.

ஆகையால் 'பவ' என்பதற்கு அப்படியுங்கூட அர்த்தம் பண்ணலாம்.

ஆனால் (தோடகாஷ்டகத்தில்) நாலாவது ச்லோகத்தில் ஐயம் திரிபுக்கு இடமில்லாமல் 'பவ' என்பதை 'சிவ' என்ற அர்த்தத்திலேயே ஆசார்யாளுக்குச் சூட்டுகிறார்.

"பவ ஏவ பவாந்!"

'பவாந்' என்றால் 'தாங்கள்'. ஆசார்யாளை நேரே பார்த்து அப்படிக் கூப்பிட்டு, "தாங்கள் ஸாக்ஷாத் சிவபெருமானே! 'பவ ஏவ'—பவனாகிய சிவனேதான்!" என்கிறார்.

பவ ஏவ பவாந்-இதி மே நிதராம் ஸமஜாயத சேதஸி கௌதுகிதா

'கௌதுகம்' என்றால் ஸந்தோஷப் பூரிப்பு. 'நிதராம்' என்றால் 'முழுக்க', 'பரிபூர்ணமாக ரொம்பி' என்று அர்த்தம். 'சேதஸி'—சித்தத்திலே. என்ன சொல்கிறாரென்றால், தாம் ஆசார்யாளை ஏதோ மநுஷ்ய ரூபத்திலிருக்கிற அநேக குருக்களில் ஒருவராக நினைக்காமல் ஸாக்ஷாத் பரமேச்வரனே என்று தெரிந்துகொண்டுவிட்டதில் தம்முடைய சித்தம் அப்படியே பரமானந்தத்தில் பூர்ணமாகத் திளைத்துக் கொண்டிருக்கிறது என்கிறார்.

அப்புறம் மூன்று ச்லோகம் தள்ளி மறுபடியும்

"குருபுங்கவ புங்கவகேதந!"

என்கிறார். புங்கவம் என்றால் ரிஷபம். எதிலுமே உத்க்ருஷ்டமாக (மிகவும் உயர்வு பொருந்தியதாக) இருப்பதை

Koviloor Digital Library

'ரிஷபம்' என்று சொல்வார்கள். 'புருஷர்ஷப'-'புருஷ ரிஷப' என்றால் புருஷ ச்ரேஷ்டன் என்று அர்த்தம். 'தேவரிஷப என்றால் தேவ ச்ரேஷ்டன். தமிழிலும் இதே வழக்கு இருக்கிறது. 'ஏறு' என்றால் ரிஷபம். நர ச்ரேஷ்டன், தேவ ச்ரேஷ்டன் என்பதைத் தமிழிலும் மனிதரேறு தேவரேறு என்று சொல்லிக் கேட்கிறோம். புங்கவம் என்பதும் ரிஷபமே. ஆகையால் 'குரு புங்கவ!' என்று ஆசார்யாளைக் கூப்பிடுவதற்கு, 'ஆசார்ய ச்ரேஷ்டரே!' என்று அர்த்தம்.

அப்புறம் 'புங்கவ கேதந' என்கிற இடத்தில்தான் அவதாரத்துக்கு அத்தாட்சி வருகிறது, புங்கவ கேதனன் என்றால் ரிஷபத்தைக் கொடியாக உடையவன். இப்படி ரிஷபக் கொடியோனாக இருப்பது யார்? வேறே யார்? பரமேச்வரன்தானே?

தோடகாசார்யாள் புத்தி ப்ரகாசமே இல்லாதமாதிரி பரம எளிமையாக அடங்கியிருந்து கொண்டு நிறைந்த பக்தியுடன் ஆசார்யாளுக்கு சரீர ஸேவை செய்துவந்தவர். அப்படிப்பட்டவர் உணர்ச்சிப் பெருக்கில் தம்முடைய குருவையே பகவதவதாரமாகக் கொண்டாடுவது இயற்கை தான். ஸுரேச்வராசார்யாள் அவர் மாதிரி இல்லை. அவர் மஹா பண்டிதராக ப்ரகாசித்தவர். பூர்வத்தில் நிறைய யாக, யஜ்ஞாதிகள் செய்த கர்ம மீமாம்ஸகராக இருந்து கொண்டு அந்த மதத்தை ஆதரித்துக் காரஸாரமாக வாதங்கள் பண்ணியவர். ஆசார்யாளின் ஞான மார்க்கத்தைக் கட்டோடு ஆக்ஷேபித்தவர். முதல் முதலில் அவர் ஆசார்யாளைக் கண்டபோது* ஆசார்யாளுடைய ஞான காந்தியோ, காருண்ய மாதுர்யமோ அவரைக் கொஞ்சங் கூடத் தொடவில்லை. ரொம்பவும் அவமரியாதையாக, சண்டை பிடிப்பதாகத்தான் (அவர் ஆசார்யர்களிடம்) பேச ஆரம்பித்தார் என்று சங்கர விஜயங்களில் இருக்கிறது.

---

* இச் சம்பவ விவரங்கள் பிற்பாடு காண்போம்.

Koviloor Digital Library

அப்புறம் அவரே ஆசார்யாளிடம் (வாதத்தில்) தோற்றுப் போய், ஆசார்யாளின் ஸித்தாந்தமே ஸித்தாந்தம் என்று ஏற்றுக்கொண்டு, ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு அவருடைய சிஷ்யராக ஆனார். முன்னே ஒரே கர்மா நுஷ்டானம், அதற்காக வாதச் சண்டைபோடுவது என்று இருந்ததற்கு நேர்மாறாக இப்போது ஒரே ஞானம், வேதாந்தம் என்று தத்வார்த்தமாகவே போனார். கார்யமே இல்லாமலிருக்கிறதுதான் முடிவான லக்ஷ்யம் என்பதை விளக்கி 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்று புஸ்தகம் எழுதினார். ஆக, பூர்வத்தில் தீவ்ரமான கர்ம மீமாம்ஸகராக இருந்தபோதும் ஸரி, அப்புறம் ஆசார்யாளின் சிஷ்யராகி அடியோடு மாறிய பிறகும் ஸரி, அவர் உணர்ச்சி வசப்படுவது என்று இல்லாமலிருந்தவர். முதலில் ஒரே கார்யமும், அறிவுச் சண்டையுமாக இருந்தார். அப்புறம் மனஸின் உணர்ச்சிகளே இல்லாத ஞானம், சாந்தம் என்பதில் ஈடுபட்டுவிட்டார். தத்வ ரீதியில் விஷயங்களை எடுத்துச் சொல்லி நிலைநாட்டுவதில்தான் இப்படியானவர்களுக்கு கவனம் இருக்கும். குருவை அவதாரமாக ஸ்துதித்து, 'ஸமஜாயத சேதஸி கௌதுகிதா' என்று தோடகாசார்யாள் சொன்னாற்போல் சித்தம் ஸந்தோஷத்தில் பூரித்து நிறைவதாக இவர்கள் சொல்லுவதற்கில்லை. இப்படி யெல்லாமிருந்தும் அவர் (ஸுரேச்வரர்) ஆசார்யாளைத் தமோந்தகாரத்தை விரட்டும் ஞான ஸூர்யனாகக் கொண்டாடிச் சொன்னாரென்று பார்த்தோம். அது ப்ருஹதாரண்யக வார்த்திகத்தில். தைத்திரீயோபநிஷத்திற்கு ஆசார்யாள் செய்துள்ள பாஷ்யத்திற்கும் ஸுரேச்வராசார்யாள் வார்த்திகம் எழுதியிருக்கிறார். அதிலே ஆசார்யாள் பரமசிவ அவதாரம் என்றே த்வனிக்கும் படியாக ஒரு வாக்யம் சொல்லியிருக்கிறார் :

முமுக்ஷு - ஸார்த்தவாஹஸ்ய பவ-நாம-ப்ருதோ யதே:

'முமுக்ஷுக்களின் கோஷ்டிக்கெல்லாம் தலைவர், பவனுடைய பெயரைத்தாங்கும் யதி (ஸந்நியாஸி)' என்று

Koviloor Digital Library

அர்த்தம். முமுக்ஷு என்றால் மோக்ஷ காங்க்ஷிகள், அதாவது மோக்ஷம் அடையவேண்டும் என்று விரும்பி அதற்காக முயற்சி செய்பவர்கள். ஸார்த்தவாஹன் என்றால் பொது வாக ஒரு பெரிய வியாபாரிகளின் கோஷ்டிக்குத் தலைவன் என்று அர்த்தம். படகுகளில் திரை கடல் ஓடி, அல்லது பாலைவனத்தில் ஒட்டகங்களின் மேல் ஏறிக்கொண்டு— இப்படியெல்லாம் வியாபாரிகள் caravan என்று போகும் போது ஏற்கெனவே அந்த வழிகளெல்லாம் நன்றாக அற்றுப் படி பண்ணிக்கொண்டு, இப்போது மற்றவர்களுக்கு ஜாக்ர தையாக வழிகாட்டி அழைத்துப் போகும் லீடராக ஒரு பெரிய வ்யாபாரி இருப்பானல்லவா? அவன்தான் ஸார்த்த வாஹன். இம் மாதிரி ஸம்ஸாரக் கடலில், அல்லது ஸம்ஸாரப் பாலைவனத்தில் வழிகாட்டியாக முமுக்ஷுக்களை அழைத்துக்கொண்டு போகிற ஆத்மிக ஸார்த்தவாஹராக ஆசார்யாளைச் சொல்லியிருக்கிறார். இந்த வ்யாபாரியிட முள்ள சரக்கு, அவருடைய செல்வம் என்னவென்றால் ஞானம்தான்! இதைச் சொல்லும்போது பத்மபாதாசார் யார் அவரை (அவருடைய ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்துக்குச் செய்துள்ள 'பஞ்சபாதிகா' என்ற வ்யாக்யானத்தில்) 'பாஷ்யவித்தக குரு', அதாவது தாம் எழுதிய பாஷ்யங் களையே தம்முடைய செல்வமாகக் கொண்ட குரு என்று சொல்லியிருப்பது நினைவு வருகிறது. ஸந்நியாஸியின் லக்ஷணப்படி பொருட் செல்வம் அவரிடம் இல்லா விட்டாலும் ஞானச் செல்வத்தில் பெரிய வியாபாரித் தலைவராயிருந்திருக்கிறார்!

அதிருக்கட்டும். அவதார ஸமாசாரமல்லவா பார்த்துக் கொண்டிருந்தோம்? அதற்கு ஆதரவாக (ஸுரேச்வரர்) 'பவ - நாம - ப்ருத்' என்கிறார். 'பவன் என்கிற, அதாவது சிவன் என்கிற நாமத்தை தரித்துக்கொண்டிருப்பவர்' என்கிறார். இப்படி எதற்காகச் சொல்லவேண்டும்? சிவா வதாரம்தான் இவர் என்று hint பண்ணுவது தவிர இதற்குக் காரணமில்லை!

Koviloor Digital Library

இப்போது பத்மபாதாசார்யாளை விட்ட இடத்தில் எடுத்துக்கொள்வோம். ஸூத்ர பாஷ்யத்திற்கு வ்யாக்யானம் செய்திருப்பதில் அவருடைய ஞானமும் வித்வத்தும் தெரிகிறதென்றால் ஆசார்ய சரித்ரத்தைப் பார்க்கும்போது அவருடைய உசந்த பக்தியுள்ளம் பல கட்டங்களில் தெரியும் தோடகாசார்யர் ஞான பாண்டித்யத்தை அடக்கி வைத்துக்கொண்டு பக்தராக மட்டும் தெரிந்தார். பக்தி உணர்ச்சியை அப்படியே கொட்டினார். ஹஸ்தாமலகரோ கிட்டத்தட்ட தக்ஷிணாமூர்த்தி மாதிரியே ஞானப் புஸ்தகம், ஞானவாதம் என்றுகூடப் பண்ணாமல் ஒரேயடியாக ஞானத்தில் தோய்ந்து போனவர். உணர்ச்சி என்பதே அங்கே கிட்டே வராது. ஸுரேச்வராசார்யாள் வேறே தினுஸில் உணர்ச்சி வசப்படாமலிருந்தார் என்று பார்த்தோம். பத்மபாதாசார்யார்தான் ஞானியாக இருந்ததோடு emotional, intellectual என்று சொல்கிற இரண்டாகவும் இருந்துகொண்டு பக்தராகவும் இருந்தார், தத்வார்த்தங்களை விவரித்துச் சொல்லும் வித்வானாகவும் இருந்தார்.

அவர் பஞ்சபாதிகாவில் ஆசார்யாளை ரொம்பவும் ரஸமான விதத்தில் சிவாவதாரமாக ஸ்தோத்ரித்திருக்கிறார். பரமேச்வரனுக்கு ஆப்போஸிட் குணங்கள் மாதிரியே ஆசார்யாளுக்கு இருப்பதாக வேடிக்கையாக வார்த்தை விளையாட்டுப் பண்ணி, 'ஒரிஜினல் சிவன் அப்படி; அவதார சிவன் இப்படி' என்று சொல்லியிருக்கிறார்! இப்போது நாம் ஆசார்யாளை 'ஆதி சங்கரர்' என்கிறோம். அவருக்குப் பிற்பாடு அவர் ஏற்படுத்திய அநேக ஆசார்ய பீடங்களில் வரிசையாக வந்துள்ள அத்தனை ஸ்வாமிகளுக்கும் 'சங்கராசார்யார்' என்றே பேர் இருப்பதால், இவர்களுக்கெல்லாம் மூல புருஷராக இருந்தவரை 'ஆதி' சங்கரர் என்று சொல்வதாக வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஆசார்யாளின் காலத்திலேயே இருந்தவர்கள் அவரை 'ஆதி' சங்கரர் என்று சொல்லியிருக்க முடியாது. அவருக்கு

Koviloor Digital Library

ஸமகாலத்தவர்களாக இருந்துகொண்டே அவரை அவதார புருஷர்தான் என்று தெரிந்துகொண்டவர்கள் கைலாஸ நாதனான சங்கரனையே ஆதி சங்கரன் என்றும், அவர்களுக்கு மத்தியில் நடமாடிக்கொண்டிருந்த ஆசார்யாளை அவதார சங்கரர், அல்லது அபிநவ (புதிய) சங்கரர் என்றும்தான் சொல்லி வந்திருப்பார்கள். இந்த ரீதியில் பத்மபாதாசார்யாள் அவரை ''அபூர்வ சங்கரர்'' என்று சொல்கிறார். பூர்வ காலத்திலிருந்து சங்கர நாமம் தாங்கியிருப்பது கைலாஸநாதனான பரமேச்வரன். அவனே புதிதாக நிகழ் காலத்தில் வந்துள்ளபோது அபூர்வ சங்கரராகி விடுகிறான்!

இப்படி 'அபூர்வ சங்கரர்' என்று பேர் கொடுத்ததில் ஒரு சிலேடையும் பண்ணியிருக்கிறது. அந்த ச்லோகம் முழுக்க ஏகப்பட்ட சிலேடைகள். அதில் இதுவும் ஒன்று. ''அபூர்வ'' என்றால் அதிசயமான, விசித்ரமான என்றும் அர்த்தம் இருக்கிறது. ''ரொம்ப அபூர்வமாயிருந்தது'' என்று நாம் ஒன்றைச் சொல்லும்போது இந்த அர்த்தத்தில்தான் சொல்கிறோம். கைலாஸ சங்கரருக்கு நேர்மாறாக அநேக விஷயங்கள் அவதார சங்கரரிடம் இருப்பதாக ச்லோகத்தில் அடுக்கிக்கொண்டேபோய், கடைசியில் 'அபூர்வ சங்கரர்' என்று முடித்திருப்பதால், 'இப்படி ஒரு அதிசயமான, விசித்ரமான பரமசிவனாக இவர் இருக்கிறார் பார்த்தீர்களா?' என்று காட்டுகிற மாதிரி இருக்கிறது.

ச்லோகம் முழுதையும் சொல்கிறேன்:

நமாம்-யபோகி-பரிவார-ஸம்பதம்
நிரஸ்த-பூதிம் அநுமார்த்த-விக்ரஹம் |
அநுக்ரம்-உன்ம்ருதித கால-லாஞ்சநம்
விநா-விநாயகம்-அபூர்வ சங்கரம் ||

மூல சங்கரனுக்கும், அவதார சங்கரருக்கும் ஒரே வித்யாஸமாகச் சொல்லியிருக்கிறது!

அவதார சங்கரர் எப்படியிருக்கிறார்? ஸந்நியாஸிகளான சிஷ்ய கணத்தினால் சூழப்பட்டவராக இருக்கிறார்.

Koviloor Digital Library

''ஸர்வஜ்ஞரும், ப்ரஹ்ம-ஸம்ஸ்தம்-முநிகண-ஸஹிதம்'' என்று அவரை ஸுரேச்வராசார்யாள் 'நைஷ்கர்ம்ய ஸித்தி' என்ற புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார். ஆறாயிரம் சிஷ்யர்கள் புடைசூழ அவர் ஸஞ்சாரம் செய்ததாக 'சங்கர விஜய'ங்களில் இருக்கிறது. துறவியான அவருடைய பெரிய ஸொத்து இந்தத் துறவிக் கூட்டமே. உடைமைகளையெல்லாம் த்யாகம் செய்த ஆசார்யாளின் பெரிய உடைமை, அவருடைய ஞானமும், அவர் செய்த பாஷ்யங்களும், ஸந்நியாஸ சிஷ்யக் கூட்டமும்தான். இதைத்தான், ''அபோகி பரிவார ஸம்பதம்'' என்று இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிறது. போகி என்றால் ஸுக போகங்களை அநுபவிக்கும் க்ருஹஸ்தன். அப்படியில்லாத துறவி 'அபோகி'. அபோகிகளையே தமக்குப் பரிவாரமாகிய ஸம்பத்தாகக் கொண்டவரை, 'அபோகி பரிவார ஸம்பதம்' என்று சொல்லியிருக்கிறது.

''நமாமி''—''நமஸ்கரிக்கிறேன்''—என்று ச்லோகத்தை குரு வந்தனத்தோடு ஆரம்பித்திருக்கிறது. 'நமாம்யபோகி' என்பது 'நமாமி அபோகி' என்று பிரியும்.

அவதார சங்கரர் இப்படியிருக்கிறார்: 'அபோகி பரிவார ஸம்பத்'ராக. இந்த மாதிரி பத ப்ரயோகம் செய்யும்போது அவர் மூலமான கைலாஸ சங்கரருக்கு நேர் வித்யாஸமாக இருக்கிறார் என்று ச்லோக கர்த்தா வேடிக்கையாகக் காட்டி விடுகிறார்! எப்படி?

ஒரு வார்த்தைக்கு நேர் வித்யாஸமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் அந்த வார்த்தைக்கு முதலில் ''அ'' போட்டுவிட்டால் போதும்—ஸத்யம் - அஸத்யம்; தர்மம் - அதர்மம், இப்படி. ''அபோகி பரிவார ஸம்பதம்'' என்பதில் 'அ'வை எடுத்துவிட்டு ''போகி பரிவார ஸம்பதம்'' என்றால் அதுதான் கைலாஸ சங்கரர்! இதற்கு என்ன அர்த்தம், பார்க்கலாம்.

கைலாஸ சங்கரர் எப்படி இருக்கிறார்? உடம்பு முழுக்கப் பாம்புகளை வாரிப் போட்டுக்கொண்டு இருக்கிறார். அவருக்கு

Koviloor Digital Library

பாம்புகள்தான் முக்யமான ஆபரணம், அலங்காரம் எல்லாம். கழுத்திலேயும் ஹாரம் மாதிரிப் பாம்பைத்தான் போட்டுக்கொண்டிருப்பார். இவர் மஹாவிஷ்ணு மாதிரி நவரத்னுபரணங்கள் போட்டுக் கொள்ளாதவர். ஆனாலும் நாக ரத்னம் என்பதாகப் பாம்பின் படத்தில் ரத்னம் இருப்பதுண்டல்லவா? அதனால், இவர் ஹாரங்களாகப் போட்டுக்கொண்டுள்ள பாம்புகளின் படத்திலுள்ள ரத்னங்கள் இவருடைய ஸ்படிகம் போன்ற தேஹத்தில் செக்கச் செவேலென்று டால் அடிக்கும்! இப்படி ஆசார்யாளே ஒரு இடத்தில் வர்ணித்திருக்கிறார்*:

...ருக்ஷ-சக்ஷு-ச்ருதிகண-பண-ரத்னௌக-பா-
(அ) பீக்ஷ்ண சோபம்
......ஸ்படிக-மணிசிலா-மண்டலாபம்*

'சக்ஷு' என்றால் கண். 'ச்ருதி' என்றால் காது. 'சக்ஷு-ச்ருதி' என்றால் கண்ணையே காதாக உடைய 'கட்செவி' யாகிய பாம்பு.

கைலாஸ சங்கரர் பாம்புக் கூட்டத்தையே ஆபரணமாக அணிந்திருக்கிறார். பாம்புக்கு இருக்கும் பல பேர்களில் "போகி" என்பது ஒன்று. "போகம்" என்பதற்குள்ள அநேக அர்த்தங்களில் ஒன்று 'பாம்பின் படம்' என்பது. அந்தப் படத்தை உடைய பாம்பு "போகி". "போகி பரிவாரம்" என்றால் 'பாம்புக் கூட்டம்'. பாம்புகளால் நன்றாக நெருக்கிச் சூழப்பட்டிருப்பதைக் குறிப்பதாகவும் சொல்லலாம். 'பரிவார' என்பதற்கு இப்படியும் அர்த்தம் செய்யலாம். தம்மைச் சூழ்ந்து தழுவிக்கொண்டுள்ள பாம்புகளையே செல்வமாக, ஆபரணமாக, ஹாரமாகக் கொண்டுள்ள கைலாஸ சங்கரர் "போகி பரிவார ஸம்பதர்" ஆகிவிடுகிறார்! 'ஸம்பத்' என்றால் செல்வம் என்பதோடு அலங்காரம் குறிப்பாக, ஹாரம் என்றும் அர்த்தம் உண்டு. இந்த எல்லா அர்த்தப்படியும் அவர் (கைலாஸ சங்கரர்) போகி பரிவார

---

* சிவ கேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்ரம்—18.

Koviloor Digital Library

ஸம்பத்துக்காரராக இருக்கிறார். இவர் (அவதார சங்கரர்) அதற்கு நேரெதிர் மாதிரி முதலில் ஒரு "அ" சேர்த்துக் கொண்டு அபோகி பரிவார ஸம்பத்துக்காரராக இருக்கிறார்!

இவருக்கு இன்னும் என்ன லக்ஷணங்கள் இருக்கின்றன? சிஷ்யக் கூட்டத்தையே செல்வமாகக் கொண்ட இவர் லௌகிகச் செல்வங்களையெல்லாம் துச்சமாகத் தூக்கி எறிந்தவர். இவர் "நிரஸ்த பூதி." "பூதி" என்றால் செல்வம். "நிரஸ்த" என்பது வேண்டாமென்று தூக்கி எறிவதைக் குறிக்கும்.

இப்படியிருப்பதிலும் இவர் கைலாஸ சங்கரருக்கு நேர் வித்யாஸமாயிருக்கிறார்! இவர் பூதியை வேண்டாமென்று தள்ளுகிறாரென்றால் அவரோ பூதியை வேணும் வேணும் என்று வாரிப் பூசிக்கொள்கிறார்! "பூதி" என்றால் இந்த இடத்தில் விபூதி என்று அர்த்தம். 'பூதி' என்று சொன்னாலே போதும். 'வி' சேர்ப்பது விசேஷணத்தைக் குறிப்பதற்குத் தான்.

பூதி அல்லது விபூதி என்பதற்குத் திருநீறு என்றும் அர்த்தம்; அஷ்ட மா ஸித்தி என்னும் எட்டுக்கும்கூட விபூதி கள் என்றுதான் பெயர். இந்த இரண்டு அர்த்தத்திலுமே கைலாஸ சங்கரர் விபூதி மயராக இருக்கிறார்.

காடுடைய சுடலைப் பொடி பூசி

என்று முதல் தேவாரப் பாட்டிலேயே சொல்லியிருப்பது போல அவர் ஸர்வாங்கமும் விபூதி பூஷணராக இருப்பதில் ப்ரியர். அதோடு அஷ்ட ஸித்திகள் என்கிற அற்புத சக்தி களுக்கு உறைவிடமாகவும் பரமசிவனையே சொல்வது வழக்கம். அஷ்ட ஸித்தி, அஷ்ட விபூதி என்பதுபோல அந்த எட்டும் அஷ்ட 'ஐச்வர்யங்கள்' என்றும் சொல்லப் படும். 'ஐச்வர்யம்' என்பதற்கு அர்த்தமே 'ஈச்வரனுக்கு உரியது' என்பதுதான். ஞான ஸ்வரூபமான தக்ஷிணா மூர்த்தியை ஆசார்யாள் ஸ்துதித்து முடிக்கிறபோதுகூட அவரது உபாஸனா பலனாக இந்த விபூதிகளுக்கெல்லாம்

Koviloor Digital Library

மேலான 'மஹா விபூதி'யான ஸர்வாத்ம பாவம் (அத்வைத ஞானம்) உண்டாவதோடுகூட எட்டாகப் பரிணமித்துள்ள இந்த ஐச்வர்ய விபூதிகளும் ஸித்திக்கும் என்று சொல்லி யிருக்கிறார் : ஸித்யேத் - தத்புநர் - அஷ்டதா பரிணதம் ஸைச்வர்யம் (ச ஐச்வர்யம்) அவ்யாஹதம்.

ஆகக்கூடி, திருநீற்று பூதியானாலும் ஸரி, ஸித்திகளான பூதியானாலும் ஸரி இரண்டும் கைலாஸ சங்கரரோடு பிரிக்க முடியாமல் சேர்திருப்பவை. ஆனால் அவதார சங்கரரோ பூதியைத் தூக்கி எறிந்த 'நிரஸ்த: பூதி'யாயிருக் கிறார்! இங்கே 'பூதி' என்பது பொருட்செல்வத்தைக் குறிப்ப தென்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஸந்நியாஸ லக்ஷணங்களில் முக்யமான ஒன்று பொருள் பற்றில்லாமை. இன்னொன்று சுத்த ப்ரஹ்மசர்யம். ஸ்த்ரீ விஷயமாக லவலேசங்கூடப் பற்றில்லாமல் நெருப்பு மாதிரி இருப்பது. ஆசார்யாள் அப்படி இருந்தவர்தான். அவர் பக்கத்திலேயே ஸ்த்ரீ வாஸனைகூட வரமுடியாது.

ஆனால் கைலாஸ சங்கரர் எப்படி? அர்த்த நாரீச்வரர் என்னும்படியாகத் தம்முடைய தேஹத்திலேயே பேர் பாதி யில் பத்தினியை வைத்துக் கொண்டிருப்பவர்! "உமார்த்த விக்ரஹ"ராக, உமாதேவியை அர்த்த சரீரமாக உடையவர். ஆசார்ய அவதாரமோ அவள் ஸம்பந்தமே இருக்கப்படா தென்றுதான் ஸந்நியாஸியாக ஏற்பட்டது என்று பார்த்தோம்.

'சங்கர நாமம் கொண்டவராக இருக்கிறாரே! சங்கரா வதாரம் என்றும் சொல்கிறார்களே! அதனால் அம்பாளை சரீரார்த்தமாகக்கொண்டவராக தர்சனம் கொடுப்பாரோ?' என்று அவரைப் பற்றி முழுக்கத் தெரிந்து கொள்ளாத யாராவது வந்து பார்த்தால் ஏமாந்துதான் போவார்கள்! அவர் 'உமார்த்த விக்ரஹ'ராக இருக்கமாட்டார். இதையே வேறு தினுஸில் சொன்னால் 'அநுமார்த்த விக்ரஹ'ராக இருப்பார். 'அ' மாதிரியே முதலில் 'அன்' சேர்த்தாலும்

Koviloor Digital Library

நேரெதிர் அர்த்தம் கொடுக்கும். உயிரெழுத்துக்களுக்கு முன்னால் எதிர்ப்பதத்தைக் காட்ட 'அன்' சேர்க்கவேண்டும். அந்தம் - அனந்தம்; அர்த்தம் - அனர்த்தம். உமார்த்தம் - அநுமார்த்தம்.

நமாம்யபோகி - பரிவார - ஸம்பதம் நிரஸ்தபூதி - மநுமார்த்த
விக்ரஹம்

—இது ச்லோகத்தின் முதல் பாதி. அப்புறம், இன்னும் என்னென்ன வித்யாஸம்?

"அநுக்ரம்" : உக்ரத்துக்கு எதிர்ப்பதம் அநுக்ரம். 'உமார்த்தம் - அநுமார்த்தம்' மாதிரி 'உக்ரம் - அநுக்ரம்'. கொஞ்சங்கூட உக்ரபாவமே இல்லாமல் ஸௌம்ய மூர்த்தியாக, "கருணாலயம்" எனப்படுபவராக* இருப்பவர் நம்முடைய பகவத்பாதர்கள். அநுக்ர மூர்த்தி, அநுக்ரஹ மூர்த்தி! கைலாஸ சங்கரரோ உக்ர ரூபி! பவன் முதலான அவரது அஷ்ட நாமாக்களிலேயே 'உக்ரன்' என்று அவருக்கு ஒரு பெயர் வருகிறது! ப்ரளய காலாக்னி ருத்ரன், ஸம்ஹார ருத்ரன் என்றெல்லாம் சொல்லும்போதே பயமாயிருக்கிறது! இப்படி பயங்கரமாக இருப்பதால் 'பீமன்' என்றும் அவருக்கு அஷ்ட நாமாக்களில் இன்னொரு பெயர் இருக்கிறது. ஆக, இதுவும் ஒரு வித்யாஸம் : இவர் அநுக்ரர், அவர் உக்ரர்.

அநுக்ரம்- உ ன்ம்ருதித கால - லாஞ்சநம்

அதென்ன 'உன்ம்ருதித கால லாஞ்சநம்'? 'கால லாஞ்சனம்' என்றால் கறுப்பான அடையாளம். 'காலம்' - கறுப்பு. 'லாஞ்சனம்' - அடையாளம். 'உன்ம்ருதித' என்றால் 'நசுக்கி அழிக்கப்பட்ட'. அவதார சங்கரர் 'கறுப்பு அடையாளத்தை நசுக்கி அழித்து விட்டவர்' என்று அர்த்தம். இப்படி எதற்காகச் சொல்லவேண்டும்? கைலாஸ

---

* ஸ்ரீ ஆசார்யாளைக் குறித்த பிரஸித்தமான ச்லோகம் :
ச்ருதி - ஸ்ம்ருதி - புராணாநாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத் பாத சங்கரம் லோகசங்கரம்

Koviloor Digital Library

சங்கரருக்கு இவர் அடியோடு வித்யாஸமாயிருக்கிறார் என்பதற்கு இன்னொரு சான்று காட்டுவதற்குத்தான்! கைலாஸ சங்கரருக்கு விசேஷமாக உள்ள அடையாளமே அவர் கழுத்தில் உள்ள கால லாஞ்சனம்தான். 'கால' கூடம் என்றே சொல்லப்படும் விஷத்தைப் பானம் பண்ணியதால் கழுத்தில் ஏற்பட்ட அந்தக் கால லாஞ்சனத்தோடு அவர் இருப்பதால்தான் 'நீலகண்டன்' என்று பெயர். அவருடைய அவதாரம்தான் இவர் என்கிறார்களே என்று இவரிடம் வந்து பார்த்தால் இவர் நீலகண்டராக இருக்கவில்லை! கால லாஞ்சனத்தைக் காணோம்! அதை அழித்துவிட்டு 'உன்ம்ருதித கால லாஞ்சன'ராக இருக்கிறார்.

கறுப்பு என்பது தோஷத்தைக் குறிப்பது, களங்கத்தைக் குறிப்பது. கைலாஸ சங்கரரின் சுத்த ஸ்படிக தேஹத்தில் அந்தக் களங்கம் இருக்கிறது. அவதார சங்கரரிடம் அது இல்லை. களங்கமே இல்லாதவர். இப்படிச் சொல்லும்போது தேஹத்திலுள்ள களங்கத்தை மாத்திரம் சொல்வதாக இல்லை. குணம், நடத்தை எதிலுமே களங்கத்தின் சுவடுகூட இல்லாமல் அழித்துப் போட்டு உன்ம்ருதித கால லாஞ்சன ராக இருக்கிறாரென்று அர்த்தம் கொடுக்கிறது.

வேடிக்கையாக ஒன்று தோன்றுகிறது. 'கால லாஞ்சனம்' என்பதை அப்படியே இங்கிலீஷில் சொன்னால் 'Black mark'. ஒருத்தருக்கு இருக்கும் ஒரு தோஷத்தை 'Black mark' என்கிறோம். அது அடியோடு இல்லாத தோஷ ரஹிதராக ஆசார்யாள் இருந்ததால் 'உன்ம்ருதித கால லாஞ்சனம்' என்பது ரொம்ப ஸரிதான் என்று தோன்று கிறது.

கொஞ்சம் நீட்டி இன்னொரு அர்த்தங்கூடச் சொல்ல லாம். காலனை உதைத்தபோது காலில் ஏற்பட்ட தழும்பு என்ற அடையாளத்தினால் கைலாஸ சங்கரர் கால லாஞ்சனரானார் என்றும், நம்முடைய ஆசார்ய சங்கரர் அதை உன்மர்த்தனம் பண்ணிவிட்டவர் (அடியோடு அழித்துவிட்டவர்) என்றும் வைத்துக்கொள்ளலாம்.

Koviloor Digital Library

காளிய மர்த்தனம் என்று கால ஸர்ப்பத்தை க்ருஷ்ண பரமாத்மா மிதித்துத் துவைத்தமாதிரி ஆசார்யாள் பரமேச்வரரூபத்தில் இருத்த கால லாஞ்சனத்தை மர்த்தனம் பண்ணியிருக்கிறுர்.

கடைசி வித்யாஸம்: "விநா விநாயகம்". அப்படி யென்றுல் விநாயகரோடு இல்லாதவர், விநாயகரைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளாதவர் என்று அர்த்தம். 'எதற்காக ஆசார்யாளை இப்படிச் சொல்லணும்?' என்று புரியாமலிருக்கலாம்! 'கைலாஸ சங்கரருக்கு வித்யாஸ மாகவே இவரைக்காட்ட வேண்டும் என்பதற்காக வேறே என்னென்னவோ சொல்லிக்கொண்டு போனதெல்லாம் ஸரிதான். அவர் போகி பரிவாரர். சிலர் அபோகி பரிவாரர். அவர் உமார்த்த விக்ரஹர். இவர் அநுமார்த்த விக்ரஹர். இப்படியெல்லாம் பல சொன்னது ஸரிதான். அவர் ஜ்யேஷ்ட புத்ரரான விநாயகரோடேயே ஸதா காலமும் சேர்ந்து இருப்பவர். விநாயக மூர்த்தி தகப்பனுரிடம் குறும்புகள் பண்ணிக்கொண்டிருப்பார் என்று கவிகள் சொல்லிக் கேட்டிருக்கிறோம். சக்தி பஞ்சாக்ஷரி த்யானத்திலேயே ஈச்வரனை அம்பாளோடு மாத்திரமில்லாமல்,—ஸோமாஸ் கந்த ரூபத்தில் அவர் அம்பாள், ஸ்கந்தன் ஆகிய இருவரோடு சேர்ந்திருப்பதுபோல மாத்திரமும் இல்லாமல் —அந்த இரண்டு பேரோடு பிள்ளையாரையும் சேர்த்து முழுக் குடும்பமாக ஸ்மரிக்கும்படிதான் இருக்கிறது*. இவர்—அவதார சங்கரர்—விநாயகரை விட்டுவிட்டவர், அதாவது ஒதுக்கிவிட்டவர் என்று எதற்காகச் சொல்லவேண்டும்? ஷண்மதங்களில் ஒன்றுகப் பிள்ளையார் மதத்தையும் அவர் ஸ்தாபித்துத்தானே இருக்கிறுர்? அவர் பண்ணியிருக்கும் 'கணேச பஞ்சரத்ன'த்தைச் சொன்னுலே பிள்ளையார் நர்த்தன கணபதியாக நாட்டியமாடிக்கொண்டு வருகிற மாதிரி இருக்கிறதே! (அப்படியிருக்க) 'விநா விநாயகம்'

---

* 'கஜவதந குஹாச்லிஷ்ட பார்ச்வம் மஹேசம்': ஆனைமுகன் குஹன் ஆகியவரால் இரு மருங்கும் தழுவப்பட்ட மஹேச்வரனை (வணங்குகிறேன்)

Koviloor Digital Library

என்று ஏன் சொல்லவேண்டும்? வித்யாஸம் காட்டிக் கொண்டே போகணும் என்பதற்காக எதையாவது சொல்லி விடுவதா என்ன?' என்று தோன்றலாம்.

இங்கே, 'விநாயக' என்ற வார்த்தையைப் போடும் போது (பத்மபாதர்) ஒரு சிலேடை பண்ணியிருக்கிறார். 'போகி', 'பூதி' என்ற வார்த்தைகளைப் போடும்போது பரமசிவனைக் குறிக்குமிடத்தில் ஒரு அர்த்தமும் ஆசாரியாளைக் குறிக்குமிடத்தில் இன்னொரு அர்த்தமும் கொடுக்கும்படியாகப் போட்டிருந்ததைப் பார்த்தோமல்லவா? அப்படித்தான் இங்கேயும். விநாயக சப்தம் ஈச்வரனோடு ஸம்பந்தப்படும்போது பிள்ளையார் என்று பொருள் கொடுக்கிறது. ஆசார்யாளோடு ஸம்பந்தப் படுத்தும்போது விநாயகர் என்பதற்கு புத்தர் என்று அர்த்தம்.

ரொம்பப் பேருக்குத் தெரிந்திருக்காத விஷயம்: புத்தருக்கும் விநாயகர் என்று பேர் உண்டு.

விநாயகர் என்றால் விசேஷம் பொருந்திய நாயகர் (தலைவர்), தமக்கு மேலே இன்னொரு தலைவர் இல்லாதவர் என்று இரண்டு அர்த்தம். பூதகணாதிபதியாக இருக்கப்பட்ட பிள்ளையாரை நாம் அப்படிச் சொல்கிறோம். பௌத்தர்கள் 'தங்களுடைய மதத் தலைவரான புத்தருக்கு அதே பெயரைக் கொடுத்திருக்கிறார்கள்.*

'அமர கோச' நிகண்டுவில் அதை எழுதிய ஜைனனான அமரஸிம்ஹன் புத்தரின் பெயர்களையும் ஜினரின் பெயர்களையும் கலந்து சொல்லிக்கொண்டு போகும்போது 'புத்தர்', 'ததாகதர்' முதலான பெயர்களுக்கு நடுவில் 'விநாயக' என்ற பெயரும் வருகிறது:

---

* ஆப்தேயின் ஸம்ஸ்க்ருத - ஆங்கில அகராதிப்படி 'விநாயகர்' என்பது புத்தர் ஒருவரை மட்டுமின்றி பௌத்தர்கள் தெய்வமாகப் போற்றும் அவர்களது எல்லா குருமாருக்குமே பெயர் என்று தெரிகிறது. "A Buddhist deified teacher."

Koviloor Digital Library

ஷடபிஜ்ஞோ தசபலோ, (அ)த்வயவாதீ, விநாயக:

அப்புறம் அந்த அகராதியில் விக்நேச்வரரின் பெயர்களைக் கொடுக்கும்போதும்

விநாயகோ விக்நராஜ, த்வைமாதுர, கணாதிபா :
அப்யேகந்த, ஹேரம்ப, லம்போதர, கஜாநநா :

என்று விநாயக நாமாவிலேயே ஆரம்பித்திருக்கிறது.

கைலாஸ சங்கரர் 'பிள்ளையார்-விநாயக'ரைக் கூடவே வைத்துக்கொண்டு சீராட்டுகிறவர். காலடி சங்கரரோ 'புத்த-விநாயக'ரின் மதத்தை நிர்மூலமாக்கியவர். அதனால் இந்த விநாயகரோடு அவர் சேர்ந்து இருக்கவே மாட்டார்! இதைத்தான் 'விநா விநாயகம்' என்று சொன்னது.

இப்படி, ஸகலாஸ சங்கரர் இருப்பதற்கு ஒரே மாறுதலாக இவர் அபூர்வ சங்கரராக இருக்கிறார். 'பாம்புக் கூட்டங்களின் அலங்காரம் கிடையாது', 'விபூதி கிடையாது', 'அம்பாளுக்கு பாகம் கிடையாது', 'உக்ர பாவம் கிடையாது', 'நீலகண்டம் கிடையாது', 'பிள்ளையார் ஸங்கமும் கிடையாது' என்றெல்லாம் அர்த்தம் கொடுக்கும்படியாக பதப்ரயோகம் பண்ணி, இப்படி "அபூர்வ சங்கர"ராக ஆசார்யாள் இருக்கிறார் என்று ச்லோகம் சொல்கிறது!

இப்படிச் சொல்லும்போதே இவர் சங்கரர்தான், அதாவது பரமசிவன்தான்; ஆனால் அந்தப் பரமசிவனே தம்முடைய வழக்கமான தன்மைகளுக்கு வித்யாஸமாக அபூர்வ ரூபம் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறார் என்றும் சிவாவதாரத்தை ஸ்தாபிக்கிறது. இவர் பரமசிவனின் அவதாரமாகக்கொண்டு தானே மூல பரமசிவனோடு இவரை ஒப்பிட்டு ஒவ்வொன்றாக வித்யாஸம் காட்டுவது? இப்படி மஹாவிஷ்ணுவோடோ, வேறு ஸ்வாமியோடோ ஆசார்யாளை ஒப்பிட்டுப் பார்க்கவில்லையல்லவா?

இப்படியாக ஆசார்யாளின் சிஷ்ய ரத்னங்களாக இருக்கப்பட்ட தோடகாசார்யாள், ஸுரேச்வராசார்யாள்,

Koviloor Digital Library

பத்மபாதாசார்யாள் ஆகிய மூன்று பேரும் அவர் ஈச்வராவதாரம்தான் என்பதற்கு 'எவிடென்ஸ்' கொடுத்திருக்கிறார்கள்.

அவரே அளிக்கும் சான்று!

மற்றவர்கள் சொல்வதெல்லாம் இருக்கட்டும். அதெல்லாவற்றையும்விட ஆசார்யாளே எங்கேயாவது தாம் ஈச்வராவதாரம் என்று சொல்லியிருந்தால் அதற்கு ரொம்ப ரொம்ப 'வால்யூ' அல்லவா?

ஆசார்யாள் அடக்கமே உருவமாக இருந்தவர். ஆகையால் எத்தனையோ க்ரந்தங்கள் செய்திருந்தும் தம்மைப் பற்றி ஒன்றுமே சொல்லிக்கொள்ளாதவர். மற்றவர்கள் சொல்லியே அவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியிருப்பதால்தான் அவர் பிறந்த காலம், அவர் ஏற்படுத்திய ஸ்தாபனங்கள், அவர் எழுதிய புஸ்தகங்கள், போன ஊர்கள், ஸந்தித்த மனிதர்கள் ஆகியவற்றைப் பற்றிப் பலவாறான அபிப்ராயங்கள் உண்டாகியிருப்பது. தாம் ப்ரம்மஞானம் பெற்ற ஜீவன்முக்தர் என்பதைக்கூட அவர் ரொம்பவும் லேசாக, ஒரு ஸூசனையாக மாத்ரமே ஸூத்ரபாஷ்யக் கடைசியில் கோடி காட்டியதோடு விட்டிருப்பவர்*. அதனால் அவர் வெளிப்படையாக, "நான்

---

* ஆசார்யர்களின் ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம் IV-1-15. இவ்விடத்தில் ப்ரம்மஞானம் ஸித்தித்த பிறகும் ஒருவர் உடலோடு உயிர் வாழமுடியுமா என்னும் விஷயம் விவாதத்தால் தீர்க்கக்கூடிய உண்மையல்ல என்று சொல்லி, 'உடல் தரித்துள்ளபோதே ஒருவர் தாம் ப்ரம்மஞானம் பெற்றிருப்பதை உள்ளத்தில் நிச்சயமாக உணர்கிறாரெனில் அதை ஆக்ஷேபிக்கப் பிறரொருவருக்கு எப்படி ஸாத்தியமாகும்?' என்று வினவுகிறார். ஞானஸித்தியே முக்தி, அதைப் பெற்ற பின்பும் உடலில் உயிர் வாழ்பவனே ஜீவன்முக்தன் என்பதற்கு ஆசார்யாளும் விவாதம் மூலமே பல காரணம் காட்டி, முடிவில் இப்படிச் சொல்வது தமது சொந்த உதாரணத்தையே அவர் குறிப்பாலுணர்த்துகிறாரென்று ஐயமறத் தெரிவிக்கிறது.

Koviloor Digital Library

அவதாரம்'' என்று சொல்லிக்கொள்வாரென்று எதிர் பார்ப்பதற்கேயில்லை. ஆனாலும் மறைமுகமாக அப்படி அவர் தெரிவிப்பதாக ஒன்று இருக்கிறது.

தங்களை அடக்கி வைத்துக்கொண்டிருந்த ஆசார்யாள், ராமர் போன்ற அவதாரங்கள்தானென்றில்லை, நன்றாக பகவத் சக்தியைக் காட்டிய க்ருஷ்ணர் போன்றவர்களும் நரலீலை ருசிக்கவேண்டுமென்பதற்காக அவதாரத்வத்தைச் சில சமயம் முழுக்க ஒளித்து வைப்பதாகவும், சில ஸமயம் மறைமுகமாகத் தெரிவிப்பதாகவும், சில ஸமயத்தில் மட்டுமே வெளிப்பட ப்ரகடனம் பண்ணுவதாகவும் பார்க்கிறோம்.

(தான்) அவதாரந்தான் என்று காட்ட வேண்டியதாக சில ஸந்தர்பம் நேரிடும். அப்போதும்கூட அவதார விளையாட்டின் ருசி போகப்படாது என்பதால் உடைத்துச் சொல்லாமல் ஜாடை மாடையாகத் தெரிவித்து, குறிப்பாலுணர்த்தி விட்டு விடுவதுண்டு. இப்படியொன்று ஆசார்யாள் சரித்ரத்தில் நடந்தது.

அவருடைய குருவான கோவிந்த பகவத்பாதரிடம் வ்யாஸாசார்யாள், "ஈச்வரனே அவதாரம் பண்ணப்போகிறான். லோக வழக்கை ஒட்டியும், லோகத்திற்கு வழிகாட்ட வேண்டியதை முன்னிட்டும் அந்த அவதார புருஷன் உன்னிடம்தான் சிஷ்யனாவதற்கு வருவான். அவனுக்கு உபதேசம் பண்ணு'' என்று சொல்லி அனுப்பி வைத்திருந்தார். அதன்படியே அப்புறம் பாலசங்கரர் அவரிடம் போனார். 'இதுதான் ஈச்வராவதாரமா?' என்று நிச்சயப் படுத்திக்கொள்ள நினைத்து அவர் "நீ யார்?'' என்று இவரைக் கேட்டார்.

அப்போது, அவரிடம் உண்மையைச் சொல்லித்தானாக வேண்டுமென்பதால் 'நீ, நான், அவன், அது எல்லாம் ப்ரம்மம் தானே? இதைத் தெரிந்துகொண்டு ப்ரஹ்ம ஸ்வரூபமாக இருப்பவனே தாம்' என்று ஆசார்யாள் பதில் சொன்னார். பத்து ச்லோகங்களாக அந்த பதிலைச் சொன்னார்

Koviloor Digital Library

"தசச்லோகி" என்று அதற்குப் பேர். அதில் ஒவ்வொரு அடியையும் முடிக்கும்போதுதான் 'தாம் சிவனே' என்றும் தெரிவித்துக்கொண்டார். கைலாஸத்தில் ஜடாதரனாக, கங்காதரனாக ஒரு ரூபத்தில் உள்ள சிவன் என்று உடைத்துச் சொன்னால், அது அழகில்லை, கௌரவமில்லை. ஆனால் ப்ரம்மத்தையே சிவமே என்று 'சாந்தம்-சிவம்-அத்வைதம்' என்று உபநிஷத்தில் சொல்லியிருக்கிறதே; 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதையே 'சிவோஹம்' என்று சொல்லும் வழக்கமிருக்கிறதே—அந்த விதத்தில் சொல்லிவிடுவோமென்று நினைத்தார். ஒவ்வொரு அடியையும்,

"தத்-ஏகோ-விசிஷ்ட; சிவ: கேவலோ (அ)ஹம்"

என்று முடித்தார்!

குறிப்புணர்ந்து கோவிந்த பகவத்பாதாளும், '(இது) வ்யாஸா சொன்ன ஆஸாமிதான்' என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, அவதார விளையாட்டு கலகலத்துப் போகாமல் தாம் குரு, அவர் சிஷ்யர் என்கிற பாவங்களை வருவித்துக் கொண்டு உபதேசம் பண்ணினாரென்று கதை போகிறது.

நாம் கதையை விட்ட இடத்துக்குப் போகலாம்.

பரமேச்வரன் தக்ஷிணாமூர்த்தியாக இருந்துகொண்டு தர்ம ஸம்ஸ்தாபனம், அத்வைத ஸ்தாபனம் செய்வதற்காக அவதாரம் பண்ணுவதென்று ஸங்கல்பம் செய்துகொண்டு, ஆனாலும் பத்ததியை அநுஸரித்து, தேவர்கள் வந்து ப்ரார்த்தித்துக் கொள்ளட்டும் என்று ஆலமரத்தின் கீழேயே மௌனமாகக் காத்துக் கொண்டிருந்தார்.

முன்னேயே சொன்னேன், இரண்டு ப்ரார்த்தனைகள் செய்யப்பட்ட பின்னரே அவதாரம் நிகழ்வதாக ஒரு பத்ததி என்று. ஒன்று, தேவர்கள் ஸ்வாமியை அவரிருக்கும் திவ்ய லோகத்திலிருந்து பூலோகத்துக்குப் புறப்பாடு செய்வதற்காகச் செய்யும் ப்ரார்த்தனை; இன்னொன்று, பூலோகத்தில் அவரை அவதார புத்ரனாக வரவேற்பதற்காகத் தகுந்த

Koviloor Digital Library

யோக்யதாம்சங்களுள்ள ஒரு ஸதிபதி பண்ணுகிற ப்ரார்த்தனை என்று சொன்னேன்.

நம் ஊரிலே வெள்ளம், பஞ்சம், இப்படி ஏதோ ஒரு உத்பாதம். தலைநகரில் உள்ள ராஜாங்கத் தலைவருக்குத் தன்னாலேயே இதற்கான நிவாரணம் தர வேண்டுமென்ற கடமையும், கவலையும் இருக்கும். ஆனாலும் நம்மூர் கவர்னரோ, மந்த்ரியோ 'ரிபோர்ட்' கொடுத்த அப்புறம் தான் அவர் 'ஆக்ஷன்' எடுப்பது என்று பத்ததி இருக்கிற தோல்லியோ? இப்படித்தான் பூலோகத்தில் ஏற்படும் அதர்ம உத்பாதம் பற்றி தேவர்கள் 'ரிபோர்ட்' கொடுத்த அப்புறமே ஸ்வாமி ஸரி செய்வதற்காக அவதரிப்பது.

லோக நிர்வாஹத்தில் முக்யமான அதிகாரியாக ஸ்வாமி நியமித்திருக்கிற ப்ரஹ்மா, மற்ற அதிகாரிகளான தேவர்களை அழைத்துக்கொண்டு 'ரிபோர்ட்' கொடுப்ப தற்காக தக்ஷிணாமூர்த்தி உட்கார்ந்து கொண்டிருந்த ஆலமரத்தடிக்கு வந்து சேர்ந்தார்.

பூர்வாசார்ய பரம்பரை

அவருடைய ப்ரார்த்தனைப்படி ஸ்வாமி ஆசார்யாளாக அவதரித்த கதையைச் சொல்வதற்கு முன்னால் அவருக்கு முன்னாலிருந்த ஆசார்ய பரம்பரையைப் பற்றியும், முக்யமாக நம்முடைய ஆசார்யாளுக்கு ஆசார்யராக இருந்த கோவிந்த பகவத்பாதாள், அவருக்கு ஆசார்யராக இருந்த கௌட பாதாள் ஆகியவர்களுடைய கதைகளையும் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்.

லோக வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு ஆதி மூதாதையான ரிஷியின் பெயரில் கோத்ரம் என்று சொல்கிறோம். அந்த ரிஷிக்குப் பிள்ளை, பேரன் என்று சில பரம்பரைகள் ரிஷிகளாகவே இருந்திருப்பார்கள். அநேக மாக எல்லா கோத்ரங்களிலும் இப்படி குல மூல புருஷர் களாக மூன்று ரிஷிகளின் பெயரை 'த்ரயார்ஷேயம்' என்ப

Koviloor Digital Library

தாகச் சொல்வார்கள். ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் பார்கவரில் ஆரம்பித்து ஐந்து ரிஷித் தலைமுறை இருந்திருப்பதால் 'பஞ்சார்ஷேய'மாகச் சொல்லிக் கொள்கிறார்கள். 'ஏகார்ஷேயம்' என்பதாக ஒரே ஒரு ரிஷியைச் சொல்லும் ஒன்றிரண்டு கோத்ரங்களும் இருக்கின்றன. நமஸ்காரம் பண்ணி நாம் இன்னார் என்று 'அபிவாதனம்' சொல்லும் போது, நம் வம்சத்தின் மூல புருஷர்களான இந்த மூன்று, (ஐந்து, அல்லது ஒரு) ரிஷியின் பெயரை 'ப்ரவரம்' என்பதாகச் சொல்லி, 'இன்ன கோத்ரக்காரன், இன்ன ஸூத்ரக்காரன், இன்ன வேத சாகையைச் சேர்ந்தவன், இன்ன சர்மாக்காரன் (பெயரை உடையவன்)' என்று சொல்கிறோம். ஸந்நியாஸிகள் குடும்பத்தை விட்டு விட்டவர்களாதலால் அவர்களுக்கு இப்படி ப்ரவரம் சொல்வது கிடையாது. ஒரு ஸந்நியாஸியை நமஸ்கரிக்கும்போது மற்றவர்களும் ப்ரவரம் சொல்லி அபிவாதனம் பண்ணக் கூடாது.

ஆதி முதல்வர்களான ரிஷிகள் பேரைச் சொல்லி இப்படி ஒரு ப்ரவரம். இன்னொரு ப்ரவரம், கல்யாணத்தின் போது வதூ-வரர்களுக்கு (கல்யாணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும்) சொல்வார்கள். இது அந்த வம்சத்தில் முடிவாக வரும் மூன்று பேரின் பெயர்களையும் சேர்த்துச் சொல்வது. முதலில் மூல ரிஷிகளின் பெயர்களைச் சொல்லி விட்டு, அப்படிப்பட்ட கோத்ரத்தில் வந்த இன்னாருடைய கொள்ளுப்பேரன், இன்னாருடைய பேரன், இன்னாருடைய பிள்ளை என்று வரனுக்கும், இதே மாதிரி இன்னின்னாருடைய கொள்ளுப்பேத்தி, பேத்தி, பெண் என்று வதூவுக்கும் சொல்லி முடிப்பது இந்த ப்ரவரம்.

ச்ராத்தம், அமாவாஸ்யை முதலானவற்றில் கடைசி மூன்று மூதாதைகளான தகப்பனார், பாட்டனார், கொள்ளுப் பாட்டனார் ஆகியவர்களுக்கே தர்ப்பணாதிகள் கொடுப்பது.

நம்முடைய ஆசார்யாள் பால்யத்தில் ப்ரஹ்மசாரியாக இருந்துவிட்டு அப்புறம் ஸந்நியாஸியாகி விட்டார். ப்ரஹ்ம சாரியாக இருந்தபோது அவருக்கு கோத்ர ப்ரவரம் உண்டு.

Koviloor Digital Library

அது ஆத்ரேய கோத்ரம் என்று சொல்லப்படுகிறது. அவருடைய தகப்பனார் பெயர் சிவகுரு. பாட்டனார் பெயர் வித்யாதிராஜர். கொள்ளுப் பாட்டனார் பெயர் சொல்லியிருப்பதாக நினைவில்லை.

ஆனால் தம்முடைய 32 வயஸு ஜீவிதத்தில் முக்கால் பங்கு ஸந்நியாஸியாகவே இருந்த ஆசார்யாள் விஷயத்தில் கோத்ரம், பித்ருக்களின் பெயர் ஆகியவற்றுக்கு முக்யத்வம் இல்லை. அவர் விஷயத்தில் 'ப்ரவரம்' மாதிரி இன்னொன்று தான் முக்யமாகத் தெரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. அதுதான் பூர்வாசார்ய பரம்பரை. வம்ச பரம்பரை இல்லை —அப்பா, தாத்தா, கொள்ளுத் தாத்தா என்று போய் மூல ரிஷிகளில் முடிப்பதில்லை; ஆசார்ய பரம்பரை; குரு பரம்பரை. குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு, பராபர குரு என்பதாகச் சொல்லிக்கொண்டு ஆதிகுரு வரை போகும் "ப்ரவரம்"! இதுதான் ஆசார்யாள் சரித்ரத்தில் முக்யம். இதைக் கொஞ்சம் பார்க்கலாம்*.

ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தியானாலும் அவர் வெளிப்பட உபதேசிக்காததால், வெளிப்பட உபதேசிக்கும் மஹாவிஷ்ணுவிலிருந்து ஆரம்பித்து ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரையைச் சொல்லி ச்லோகம் இருக்கிறது.

தக்ஷிணாமூர்த்தியாகிய பரமசிவனில் ஆரம்பித்து ஆனால் மஹாவிஷ்ணுவை விட்டு விட்டு, "வந்தே குரு பரம்பராம்" என்றும் ஒரு ச்லோகமுண்டு. ஆனால் அதில் ஆரம்ப குரு பரமசிவன், அப்புறம் நடுமையமான குரு ஆசார்யாள், அதற்கப்புறம் நம்முடைய நேர் குரு என்று மூன்று பேரை மாத்ரம் சொல்லி இப்படி ஆரம்பம், நடு, முடிவு என்று

---

* குரு பரம்பரை குறித்து இதே பகுதியில் ''குரு மூர்த்தியும் த்ரிமூர்த்திகளும்'' என்ற உரையில் 'குரு பரம்பரையில் ப்ரம்மா' என்ற பிரிவும், ''தெய்வத்தின் குரல்',—இரண்டாம் பகுதியில் ''நம்மை நாமாக்குகிறவர்'' என்ற உரையில் 'குரு பரம்பரை' என்ற பிரிவும் காண்க.

Koviloor Digital Library

போகும் பரம்பரையில் வருகிற அத்தனை குருக்களுக்கும் வந்தனம் என்று சுருக்கி விட்டிருக்கிறது :

ஸதாசிவ-ஸமாரம்பாம் சங்கராசார்ய-மத்யமாம் |
அஸ்மத்-ஆசார்ய-பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம் ||

இன்னும் விரிவாக ஆசார்யாளுடைய நேர் சிஷ்யர்கள் வரை எல்லார் பேரையும் சொல்லும் ச்லோகம்தான் நான் சொல்ல வந்தது. அதில் பேசாத பரமசிவனைச் சொல்லாமல் மஹாவிஷ்ணு, ப்ரம்மா என்று ஆரம்பித்திருக்கிறது.

மஹாவிஷ்ணுதான் ப்ரஹ்மாவுக்கு வேதத்தைக் கொடுத்து, அந்த மந்த்ரங்களைக் கொண்டு ஸ்ருஷ்டி செய்யப் பண்ணினர் என்பது புராணங்களிலுள்ள கதை. இந்த வேதத்திலேயேதான் முடிவுப் பகுதியாக, 'ச்ருதிசிரஸ்' என்பதாக உள்ள உபநிஷத்துக்களில், ஸ்ருஷ்டியிலிருந்து தப்பித்துக் கொண்டு மோக்ஷம் அடைவதற்கான ப்ரஹ்ம வித்யையும்—அதாவது அத்வைத வேதாந்தமும்—இருக்கிறது. ஆகையினல் மஹாவிஷ்ணு இந்த வித்யைக்கு முதல் குருவாகவும், ப்ரஹ்மா அவரிடமிருந்து அதை பெற்றுக் கொண்ட இரண்டாவது குருவாகவும் ஆகிறர்கள். மஹாவிஷ்ணு வேதத்தை உபதேசித்த பிறகுதான் ப்ரம்மா ஸ்ருஷ்டியே செய்தாரென்பதால் அவர் (மஹாவிஷ்ணு) தானே முதல் குருவாக இருக்கவேண்டும்?

மஹாவிஷ்ணு, ப்ரம்மா, வஸிஷ்டர், சக்தி என்ற மஹர்ஷி, பராசரர், வ்யாஸாசார்யாள், சுகாசார்யாள் என்று பிள்ளை-பிள்ளை வழியே இந்த குரு பரம்பரை போய், கல்யாணமே செய்து கொள்ளாத சுகாசார்யாளுக்கு அப்புறம் கௌட பாதாசார்யார், கோவிந்த பகவத் பாதாள் ஆகிய ஸந்நியாஸிகள் வழியாக நம்முடைய சங்கர பகவத் பாதாளில் முடிகிறது....முடியவில்லை! பகவத்பாதாளுக்கு அப்புறம் அவருடைய நான்கு ப்ரதான சிஷ்யர்கள், அதற்கப்புறம் அவர்கள் வழியாக இன்று வந்துள்ள

Koviloor Digital Library

நம்முடைய நேர் குரு வரை புண்ய பரம்பரையைக் குறிப்பிட்டு நமஸ்காரம் தெரிவித்திருக்கிறது :

நாராயணம், பத்மபுவம், வஸிஷ்டம்
சக்திம் ச, தத்புத்ர பராசரம் ச,|
வ்யாஸம், சுகம், கௌடபதம் மஹாந்தம்,
கோவிந்த யோகீந்த்ரம், அதாஸ்ய சிஷ்யம் ||
ஸ்ரீசங்கராசார்யம், அதாஸ்ய பத்ம -
பாதம் ச, ஹஸ்தாமலகம் ச சிஷ்யம் |
தம் தோடகம், வார்த்திககாரம், அந்யாந்
அஸ்மத் குரூந் ஸந்ததம் ஆநதோஸ்மி||

ஸாதாரண ப்ரவரங்களில் முதல் மூன்று ரிஷிகளைச் சொல்லி அப்புறம் அநேகம் பேரை, எத்தனையோ ஆயிரம் வருஷங்களில் இருந்த மூதாதைகளை விட்டுவிட்டுக் கடைசி மூன்று பேரான கொள்ளுத் தாத்தா, தாத்தா, அப்பா பேர்களைச் சொல்வதாயிருக்கிறது. ஆனால் இந்த (ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரையின்) ''ப்ரவர''த்திலோ ஆதியிலிருந்து யாரையுமே விட்டுப் போகாமல் சொல்லி ஆசார்யாளுடைய நேர் சிஷ்யர்கள் வரை கொண்டுவந்து விட்டிருக்கிறது. அதற்கப்புறம்தான் நம்முடைய நேர் குருவரை நடுவிலிருப்பவர்களைச் சொல்லாமல் gap. ஆசார்யாளின் கதையை வைத்து, அவருடைய பூர்வாசார்ய பரம்பரை என்று பார்க்கும்போது gap-ஏ இல்லை!

மஹாவிஷ்ணு, ப்ரம்மா, வஸிஷ்டர், சக்தி, பராசரர், வ்யாஸர், சுகர், கௌடபாதர், கோவிந்த பகவத்பாதர் என்று அவிச்சின்னமாக (இடை முறிவு இல்லாமல்) ஒன்பதே பூர்வாசார்யர்கள்தான் நம் ஆசார்யாளுக்கு முன்னால் இருந்திருக்கிறார்கள்.

இப்படிச் சொன்னால் ஒரு கேள்வி வரும்: ஸ்ருஷ்டிக்கு முன்பே மஹாவிஷ்ணு ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தார், அப்புறம் அநேக யுகங்களுக்கு அப்புறம், அதாவது லக்ஷக்

Koviloor Digital Library

கணக்கான வருஷங்களுக்கு அப்புறம் கலியுகத்தில் 2500 வருஷத்திற்குப் பிறகு ஆசார்யாள் உபதேசம் பெற்றார் என்று சொல்லிவிட்டு, இத்தனை லக்ஷம் வருஷத்தில் ஒன்பதே தலைமுறைதான் ஆசார்ய பரம்பரை இருந்தது என்றால் எப்படி என்று கேட்கலாம்.

வஸிஷ்டர், பராசரர், வ்யாஸர் முதலானவர்கள் நம் மாதிரி அல்ப ஆயுஸ்காரர்கள் இல்லை. ரொம்பவும் ஆதியில் ரிக்வேத ரிஷிகளிலேயே ஒருத்தராக இருந்த வஸிஷ்டர் ஸூர்ய குலத்தின் அத்தனை ராஜாக்களுக்கும் குலகுருவாக இருந்திருப்பவர். ஆகையால் இப்பேர்ப்பட்ட தீர்க்க ஜீவிகளைப்பற்றிக் கேள்வி கேட்பது ஸரியில்லை. சுகாசார்யாள் வரையில் குரு பரம்பரை புராண புருஷர்களைக் கொண்டதாக இருக்கிறது. அவர்கள் யுக யுகாந்தரம் ஜீவிப்பவர்களாகவும், என்றைக்குமே அழிவில்லாத சிரஞ்ஜீவிகளாகவுங்கூட இருந்திருப்பவர்கள். அப்புறம் வந்த கௌட பாதர், கோவிந்த பகவத் பாதர் ஆகியோரும் யோகேச்வரர்களாதலால் நூற்றுக்கணக்கான வருஷங்கள் ஜீவித்திருக்கக் கூடியவர்கள்.

புராண புருஷர்கள், mythical personalities என்று சொல்வதற்கில்லாமல் நம் ஆசார்யாளுக்கு முந்தி சரித்ர புருஷர்களாக, historical personalities என்னும்படியாக இருந்தவர்கள் கௌடபாதரும், கோவிந்த பகவத்பாதரும் தான். இவர்கள்தான் முறையே ஆசார்யாளுடைய பரம குருவும், குருவும் ஆவார்கள். ஆகையால் முதலில் இவர்களுடைய கதைகளைப் பார்க்கலாம். இந்தக் கதைகளிலும் ஆதிசேஷன், பதஞ்ஜலி என்றெல்லாம் புராண புருஷர்களின் ஸம்பந்தம் வந்துவிடுவதால் பௌராணிகமான விருத்தாந்தங்களுக்கே உரிய அதிசயங்கள், அற்புதங்கள் எல்லாமும் சேர்ந்து ஸ்வாரஸ்யமாயிருக்கும்.

குரு என்பவர்தான் நமக்கு ஸாக்ஷாத்தாக உபதேசிப்பவர். அந்த குருவின் குரு பரமகுரு. பரமகுருவின் குரு பரமேஷ்டி குரு. பரமேஷ்டி குருவின் குரு பராபர குரு.

Koviloor Digital Library

அதற்கு முற்பட்டவர்களை பூர்வாசார்யர்கள் என்று ஒரு மொத்தமாகச் சொல்லிவிடுவது.

ஆசார்யாளின் குரு கோவிந்த பகவத்பாதர். பரமகுரு கௌடபாதர். பரமேஷ்டி குரு சுகாசார்யாள். பராபர குரு வ்யாஸாசார்யாள். பராபர குருவுக்கு முற்பட்டுப் பராசரர், சக்தி, வஸிஷ்டர். அதற்கும் முன்னால் ப்ரஹ்மா, மஹாவிஷ்ணு.

வஸிஷ்டரிலிருந்து வ்யாஸர் வரை

வஸிஷ்டர் ப்ரஹ்மாவின் பத்து மானஸ புத்ரர்களில் ஒருவர். ஏராளமான வேத ஸூக்தங்களுக்கு அவர் ரிஷி. ஸப்தரிஷிகளில் ஒருவராயிருக்கும் பெருமையும் அவருக்கு உண்டு. இன்னொரு பெருமை பதிவ்ரதைகளில் முதல் ஸ்தானம் கொடுத்துப் பூஜிக்கப்படும் அருந்ததியின் பதி அவரே என்பது. எல்லாவற்றிலும் பெருமை, அவருடைய பரம குருவான நாராயண மூர்த்தியே ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியாக அவதாரம் செய்தபோது இவர் அவருக்கு குருவாகி உபதேசம் பண்ணியிருக்கிறார்! அப்போது விஸ்தாரமாக அவர் (அத்வைத) வேதாந்தம் உபதேசித்ததுதான் 'ஞான வாஸிஷ்டம்' என்ற புஸ்தகம். அது வால்மீகி ராமாயணத்தைவிடவும் பெரிய புஸ்தகம். ஏராளமான கதைகள், உபகதைகள் எல்லாம் சொல்லி, ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம், லோகம் மாயை, ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றுதான் என்று அதில் நிரூபித்திருக்கும். வேதாந்திகள் ரொம்பவும் கொண்டாடும் நூல் அது.

தமிழில் தனியாக ஒரு அத்வைத ஸம்ப்ரதாயம் உண்டு. அதில் ஞானவாஸிஷ்டத்தின் மொழிபெயர்ப்புக்கு மிகவும் முக்யமான இடமுண்டு. "வாசிட்டம்" என்று சொல்வார்கள்.

வஸிஷ்டருடைய நூறு புத்ரர்களில் ஒருத்தர்தான் குரு பரம்பரையில் அடுத்தவராக வரும் சக்தி. அவரைப்பற்றிப் புராணங்களில் பல கதைகள் இருக்கின்றன. இவை ஒன்றுக்கொன்று சற்று வித்யாஸமாயும் இருக்கின்றன.

Koviloor Digital Library

ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ராள் என்று ஜீவன்முக்தரான மஹான் இருந்தாரென்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் "(ஜகத்) குரு ரத்ந மாலா (ஸ்தவம்)" என்பதாக ப்ரஹ்ம வித்யா குருபரம்பரையைப் பற்றி தக்ஷிணாமூர்த்தியிலிருந்தும் மஹாவிஷ்ணுவிலிருந்தும் ஆரம்பித்து நம்முடைய (காஞ்சி) மடத்தின் 57-வது பீடாதிபதியாயிருந்த தம்முடைய குரு வரையில் ஸ்தோத்திரித்து 87 ச்லோகங்கள் கொண்ட க்ரந்தம் செய்திருக்கிறுர். அதற்கு ஆத்மபோதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்பவர் 'ஸுஷமா' என்ற வ்யாக்யானம் செய்திருக்கிறுர். "குரு ரத்ன மாலா"வில் சக்தி மஹரிஷியைப்பற்றி, 'தன்னுடைய ஸாந்நித்ய மாத்திரத்தால் பஹுமித்ரஸஹன் என்ற ராஜனின் பாபத்தைப் போக்கிய உத்தமமான ப்ரபாவத்தை உடையவர். மஹா மந்த்ர யந்த்ர சக்தி பொருந்தியவர். உண்மையான விரக்தியுடையவர்' என்று சொல்லியிருக்கிறது*. இதற்கு 'ஸுஷமா'வில் கொடுத்துள்ள வ்யாக்யானத்தைப் பார்த்தாலே நமக்குப் போதுமானது—சக்தியின் பெருமை என்ன, அவரை எப்படி ப்ரஹ்மவித்யா குருக்களில் ஒருவராகச் சேர்த்திருக்கிறது என்று தெரிவதற்கு.

அந்த வ்யாக்யானப்படி, (பஹு) மித்ரஸஹன் ஸூர்யகுல ராஜாக்களில் ஒருவன்.. வஸிஷ்டர்தான் அவனுக்குக் குலகுரு. அவனை நேராக எதிர்க்க சக்தியில்லாத ஒரு ராக்ஷஸன், வஞ்சகம் பண்ணி, வஸிஷ்டரின் சாபம் அவனுக்கு ஏற்படும்படிச் செய்து அதனுல் அவனை அழிக்க வேண்டுமென்று நினைக்கிறுன். சமையல்காரன் மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு வந்து மித்ரஸஹனுடைய பாகசாலையில் வேலைக்கு அமர்கிறுன். ஒருநாள்

---

* பஹுமித்ரஸஹ-க்ஷிதீச-பாபாபஹ
ஸாந்நித்யம்-அரோத்ய-ஸத்-ப்ரதாபம் |
மஹதஞ்சித-மந்த்ர-யந்த்ர-சக்திம்
மநஸா சக்திம்-உபைமி ஸத்விரக்தம் ||

(ச்லோ. 6)

Koviloor Digital Library

மித்ரஸஹன் வஸிஷ்டரைக் கொண்டு பித்ரு ச்ராத்தம் பண்ணுகிருன். அப்போது வேஷதாரியான ராக்ஷஸ சமையல்காரன் நர மாம்ஸத்தையே சுத்த அன்னம் மாதிரி சமைத்து வைத்து, விஷயம் தெரியாத மித்ரஸஹன் அதை வஸிஷ்டருக்குப் பரிமாறும்படி செய்கிருன். ஆனுல் வஸிஷ்டருக்கு அன்னத்தைப் பார்த்த மாத்திரத்தில் விஷயம் தெரிந்து விடுகிறது.

பகவான் லீலையில் வஸிஷ்டாதி மஹர்ஷிகளுக்கும்கூட ஞான த்ருஷ்டியில் சிலது தெரிந்தாலும், சிலது தெரியாமலும் போய்விடும்! இப்போது அப்படித்தான் தமக்குப் பரிமாறப்பட்டுள்ள வஸ்து அன்னமல்ல, நர மாம்ஸம் என்று வஸிஷ்டருக்குத் தெரிந்தாலும், இந்தக் காரியத்துக்கு ராஜா பொறுப்பாளியில்லை என்று தெரியவில்லை. சட்டென்று கோபம் வந்து, "இப்படி எனக்கு மஹத்தான அபசாரம் பண்ணப் பார்த்த நீயே நர மாம்ஸ பக்ஷிணியான ராக்ஷஸனுகப் போ!" என்று மித்ரஸஹனுக்கு சாபம் கொடுத்து விடுகிருர்!

அவன் நிரபராதியல்லவா? அதனுல் சாபம் வாங்கிக் கொண்டவுடன் அவனுக்கும் மஹாகோபம் உண்டாகிறது! குருவென்றும் பார்க்காமல் வஸிஷ்டருக்கு எதிர்சாபம் தரப்போகிருன். சாபம் பலிப்பதற்காக அவர் மேலே அபிமந்திரித்த தீர்த்தத்தைத் தெளிக்க வேண்டுமென்று தன் கையிலே ஜலத்தை எடுத்துக்கொண்டு சபிக்கிருன். அதை அவன் வஸிஷ்டருக்கு மேல் தெளிப்பதற்குள் மந்திரி குறுக்கிட்டு, குருவாக உள்ள ஒருவரை சபிக்கிற சிஷ்யனுக்கு எந்நாளும் விமோசனமில்லை என்றும், அவன் குடும்பமே நசித்துவிடும் என்றும் எடுத்துச் சொல்லித் தடுக்கிருன்.

ராஜாவுக்கு நல்லறிவு வருகிறது. தீர்த்தத்தை குருவின் மேல் தெளிப்பதில்லை என்று முடிவு பண்ணுகிருன். ஆனுலும் கையில் இருக்கிற ஜலத்தை என்ன பண்ணுவது? எங்கேயாவது விட்டுத்தானே ஆகவேண்டும்? அப்படி விட்டாலோ

Koviloor Digital Library

விட்ட இடம் மந்த்ர வீர்யத்தால் எரிந்து போய்விடும். அந்த இடத்தில் ஏதாவது ஜீவ ஜந்து போனால் அதுவும் கருகி விடும். அதனால், 'என்ன செய்யலாம்?' என்று யோசித்து, முடிவில் ரொம்பவும் தியாகமாகவும், ப்ராயச்சித்தமாகவும், 'நம்முடைய காலே கருகிப் போகட்டும்' என்று, தன்னுடைய பாதத்திலேயே அந்த ஜலத்தை விட்டுக்கொண்டு விடுகிறான். அவனுடைய கால் கருகிக் கன்னங் கரேலென்றாகி விட்டது. அதனால் அவனுக்குக் 'கல்மாஷபாதன்' என்றே பேர் ஏற்பட்டது.

அதோடு, வஸிஷ்டரின் சாபமும் பலித்துத்தானேயாக வேண்டும்? அதனால் அவன் நரமாம்ஸ பக்ஷிணியாக மாறி விட்டான்.

இதுவரை எல்லாப் புராணங்களிலும் ஒரே போன்ற கதைதான். அப்புறம்தான் பலவிதமான மாறுதல்கள். குரு பரம்பரையைப் பற்றியே உள்ள நூலான 'ஸுஷமா'க் கதையை நாம் எடுத்துக்கொள்ளலாம். 'ஸுஷமா' எழுதிய பெரியவர் புஷ்டியான புராண ஆதாரம் ஏதோ இருந்து தானே அந்தக் கதையைச் சொல்லியிருக்கவேண்டும்? அதனால் அதையே நாமும் ப்ராமாண்யம் ('அதாரிடி') உள்ளதாக எடுத்துக்கொள்ளலாம்.

நரமாம்ஸ பக்ஷிணியாக ஆனவுடன் ராஜா வஸிஷ்டருடைய புத்ரர்களைப் பிடித்துத் தின்ன வேண்டுமென்று பாய்கிறான். அப்போதுதான் குரு பரம்பரையில் இடம் பெறும் சக்தி எதிர்ப்படுகிறார். அவரை தர்சித்தவுடன் அவருடைய ஸாந்நித்ய விசேஷத்தாலேயே ராஜாவுடைய சாபம், பாபம் எல்லாம் மறைந்து விடுகின்றன. 'இப்பேர்ப்பட்ட மஹாத்மாவாக இருக்கிறாரே!' என்று அவரிடம் நிரம்ப மரியாதை, பக்தி வைத்து உபதேசம் தருமாறு ப்ரார்த்தித்துக் கொள்கிறான். அவரும் அவனுக்கு ஸகல தத்வமுமான ப்ரஹ்மவித்யையை உபதேசித்து, சாபத்திலிருந்து விடுவித்தது மட்டுமின்றி ஸம்ஸாரத்திலிருந்தே விடுவித்து மோக்ஷத்தில் சேர்ப்பிக்கிறார்.

Koviloor Digital Library

நம்முடைய குரு பரம்பரையில் வஸிஷ்ட புத்ரரான சக்தி என்ற ரிஷி இடம் பெற்றிருப்பதற்கு இப்படிக் காரணம் தெரிகிறது.

அவருடைய புத்ரர் பராசரர். அவர் தாயாரின் கர்ப்பத்திலிருந்தபோதே வேதங்களைச் சொன்னவர்! அவர் லோகத்திற்கு இரண்டு பெரிய ஸொத்துக்களைத் தந்தவர். ஒன்று, வேதவ்யாஸ பகவான். மற்றது, 'விஷ்ணு புராணம்.' ஸத்யவதியை மாதாவாகவும், தம்மைப் பிதாவுமாகக் கொண்டு அவர் வ்யாஸாசார்யாளை அவதரிப்பித்தார். தாமே மாதா - பிதா இரண்டுமாக இருந்து 'விஷ்ணு புராண'த்தைப் பிறப்பித்தார்!

ஸ்ரீமத் பாகவதத்திற்கே மூல நூல்போல இருப்பது விஷ்ணு புராணம். நம்முடைய ஆசார்யாள் புராணங்களுக்குள்ளேயே விஷ்ணு புராணத்திலிருந்துதான் அதிக மேற்கோள் காட்டுவது வழக்கம். பராசரர் அவருடைய பூர்வாசார்யர் அல்லவா?

பக்தி நூலாகவே விஷ்ணு புராணம் தெரிந்தாலும், பாலில் சர்க்கரையைக் கரைத்திருக்கிறதுபோல, அந்த பக்தியிலேயே ஞானத்தை, அத்வைத வேதாந்தத்தைக் கரைத்திருக்கும். (விஷ்ணு) புராணம் முழுக்க அங்கங்கே இப்படி அநேக த்ருஷ்டாந்தங்கள் காட்டலாம்*.

பக்தி வழியாக ஞானத்துக்கு வழி காட்டியதோடு பராசரருடைய பணி முடிந்து விடவில்லை. கர்மாநுஷ்டானம், வாழ்க்கை முறைகள், ஸமூஹ நெறிகள், தனி மநுஷ்ய நியமங்கள் ஆகியவற்றைச் சொல்லும் தர்ம சாஸ்த்ரங்களில் ஒன்றான 'பராசர ஸ்ம்ருதி' என்பதையும் அவர் கொடுத்திருக்கிறார்.

---

* காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கரபக்தஜனஸபாவினால் வெளியிடப்பட்ட "அத்வைதாக்ஷரமாலிகா" எனும் நூலில் "விஷ்ணு புராணே அத்வைத பாவா:" என்ற கட்டுரையில் இவ்வித எடுத்துக்காட்டுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

பராசரருக்கு அடுத்தவர் வ்யாஸாசார்யாள். அத்வைத மதத்தை அழுத்தந்திருத்தமாக ஸ்தாபிக்கும் ஆசார்யாளின் சிகரமான நூல்—'Magnum Opus' என்கிறுர்களே, அப்படிப் பட்ட நூல்—எது என்று கேட்டால், விஷயம் தெரிந்தவர்கள் "ஸூத்ரபாஷ்யம்" என்றுதான் சொல்லுவார்கள். வ்யாஸா சார்யாள் அநுக்ரஹித்துள்ள "ப்ரஹ்ம ஸூத்ர"த்திற்கு ஆசார்யாள் எழுதியுள்ள விரிவுரைதான் "ஸூத்ர பாஷ்யம்" என்பது. இதிலிருந்தே வ்யாஸாசார்யாளுக்கு அத்வைத வித்யா குரு பரம்பரையிலுள்ள முக்யமான ஸ்தானத்தைப் புரிந்துகொள்ளலாம். வெவ்வேறுன பல உபநிஷத்துக்களில் விரவிக் கிடக்கிற எல்லாக் கருத்துக்களையும் ஒரே இடத்தில், வகை தொகை பண்ணி, ரத்னச் சுருக்கமான ஸூத்ர ரூபத்தில் கொடுத்து, அவற்றின் பரம தாத்பர்யம் அத்வைதம் என்று காட்டிக்கொடுக்கும் ஆதார க்ரந்தமாக 'ப்ரஹ்ம ஸூத்ரம்' இருக்கிறது. இதை அநுக்ரஹித்துப் பரமோபகாரம் பண்ணியதோடு வேதங்களையே நாலாக வகுத்துத் தந்தவர் வ்யாஸர்தான். பதினெட்டுப் புராணங் களையும் அவரே கொடுத்து பக்தி த்வாரா ஞானத்தை, த்வைதத்தின் வழியாக அத்வைதத்தை, எல்லோருக்கும் உபதேசித்தவர்.

அவருடைய பெருமையைச் சொல்ல ஆரம்பத்தால் ஆசார்யாள் கதையை விட்டுவிட்டு 'வ்யாஸ மஹாத் மிய'மே சொல்லிக்கொண்டு போகும்படி ஆகும்! இப்போதே ஆசார்யாள் சரித்ரம் என்று ஆரம்பித்துவிட்டு அவருடைய அவதார கட்டத்திற்குக்கூட வராமல் என்னென்னவோ விஷயங்களாகப் பார்த்துக்கொண்டு போகிறுேமே என்று இருக்கலாம். "என்னென்னவோ" விஷயமில்லை! இதெல்லாம் சேர்ந்துதான் ஆசார்யாள் சரித்ரம். அவர் அவதாரம் பண்ணி, முப்பத்திரண்டு வருஷ ஆயுஸ்காலத்தில் செய்து காட்டிய அநேக கார்யங்களும் அப்போது கடந்த ஸம்பவங் களும் மாத்திரம் அவருடைய சரித்திரத்தைச் சொல்லிவிட வில்லை. தொன்றுதொட்ட நம்முடைய மஹத்தான ஸமய

Koviloor Digital Library

நாகரிகத்திற்கே, ஆத்மிக மரபுக்கே ஒரு ப்ரதிநிதியாக வந்தவர் அவர். ஆகையினால் இந்தப் பெரிய கலாசாரத்தில் ஸம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும் சேர்ந்துதான் அவருடைய சரித்ரம். இதெல்லாம் "என்னென்னவோ" ஸம்பந்தமில்லாத ஸமாசாரமில்லை. இதெல்லாம் தெரிந்து கொள்ளாமலே ஆசார்ய சரித்ரம் கேட்டு விட்டோமென்றால் அது ஏதோ இடுக்கு வழியாக ஒரு பெரிய மலைத் தொடரில் கொஞ்சம் பாகத்தைப் பார்க்கிற மாதிரிதான்!

ஆனாலுங்கூட அவருடைய 32 வருஷ ஜீவித சரித்திரத்திலேயே சொல்லவேண்டியதாக ரொம்ப விஷயங்கள் இருப்பதால் பீடிகையைக் குறைத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

அதனால், வ்யாஸாசார்யாளைப் பற்றி வளர்த்தாமல் அடுத்தவரான சுகாசார்யாளைப்பற்றிக் கொஞ்சம் பார்த்து விட்டு, கௌடபாதர், கோவிந்த பகவத்பாதர் ஆகியவர்களின் கதைகளுக்குப் போகலாம்.

இந்த இரண்டு பேரும் ஆசார்யாளுக்கு நேர் குருவும், பரம குருவுமாக இருந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு முக்யத்வம் ஜாஸ்தி. அவர்கள் ஆசார்யாளோடேயே பிரிக்க முடியாமல் சேர்ந்திருக்கிற மாதிரி! அதோடுகூட, சுகர் வரையிலானவர்களைப் பற்றி அநேக புராணங்களில் பல கதைகள் கூறப்பட்டுள்ளன. இந்த இரண்டு பேர்தான் சரித்ர காலத்தில் ஓரளவு வந்தவர்களாதலால் இவர்களுக்குப் புராண ப்ரஸித்தியில்லை. ஆகையினால் இவர்களுடைய சரித்ரம் ரொம்பப் பேருக்குச் கொஞ்சம்கூட தெரிந்திருப்பதற்கில்லை. இதனாலும் இவர்களுடைய கதையைக் கொஞ்சம் விஸ்தாரம் பண்ணிச் சொல்ல நியாயமிருக்கிறது.

இதெல்லாவற்றுக்கும் மேலாக மஹாவிஷ்ணுவில் ஆரம்பித்து சுகர் வரையிலுள்ள அந்த ஏழெட்டுப் பேரும் ஆசார்யாளின் மதத்தைச் சேர்ந்த அத்வைதிகளுக்கு

Koviloor Digital Library

மாத்ரம்தான் பூஜிதமானவர்களென்றில்லை. த்வைதிகள், விசிஷ்டாத்வைதிகள் முதலியவர்களுக்கும் அவர்கள் பூஜிதர்கள்தான். இன்னும் சொல்லப்போனால் நமக்கு (அத்வைதிகளுக்கு) மஹாவிஷ்ணு மூல குரு என்பதோடு பல முக்ய தெய்வங்களில் ஒருத்தர் என்றிருக்க, வைஷ்ணவர்களுக்கும் மாத்வர்களுக்கும் அவர்தான் முழுமுதல் தெய்வமே!

பராசரரிடம் ராமாநுஜருக்கு விசேஷமான ஈடுபாடு உண்டு. அவர் தம்முடைய குருவின் மூன்று முக்யமான ஆக்ஞைகளில் ஒன்றாகக் கருதியதே, பராசரரிடமும் வ்யாஸரிடமும் பக்தி பண்ணிக்கொண்டு அவர்கள் பெயர்கள் என்றும் நிலைத்திருக்கும்படிப் பண்ணுவதாகும். அவருக்கு ரொம்பவும் நெருக்கமாக இருந்த கூரத்தாழ்வாரின் புத்திரருக்குப் பராசர பட்டர் என்றே பெயர் வைத்தார்.

வ்யாஸாசார்யாளை த்ரிமதஸ்தர்களுமே தங்கள் மூல புருஷராகச் சொல்லிக்கொள்கிறார்கள். ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ராமாநுஜ பாஷ்யம், மத்வரின் பாஷ்யம் ஆகியனவும் தான் இருக்கின்றன. மாத்வர்கள் வ்யாஸராயர் என்று பெயர்கூட வைத்துக்கொள்கிறார்கள். வ்யாஸராய மடம் என்றே அவர்களுடைய மடமொன்று உண்டு.

சுகப்ரஹ்மமும் எல்லா ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவானவர்தான். [சிரித்து] ப்ரஹ்மம்! எல்லாருக்கும் பொதுவாயில்லாமல் எப்படியிருக்கும்?

கௌட பாதரும், கோவிந்த பகவத் பாதரும்தான் முழுக்க அத்வைதிகளாகவே இருந்து, அத்வைத ஸம்ப்ரதாயஸ்தர்களின் குரு பரம்பரையில் மாத்திரமே இருப்பவர்கள். மற்ற ஸம்ப்ரதாயஸ்தர்கள் அவர்களுடைய ஸித்தாந்தத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்களைக் கொண்டாடவும் மாட்டார்கள். நமக்கென்றே ஏற்பட்டவர்கள் என்பதாலும் அந்த இரண்டு பேருடைய சரித்ரங்களைத் தெரிந்துகொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

சுக ப்ரஹ்மம்

அதற்கு முன்னாடி சுகரைப் பற்றியும் சிறிதாவது தெரிந்துகொள்ள வேண்டும். அவரைப்போல அத்வைதாநு பூதிக்கு இன்னொரு மூர்த்தி கிடையாது. அவரைக் கிஞ்சித் ஸ்மரிப்பதே பெரிய சாந்தி. ஜீவ்ய காலத்திலேயே அஞ்ஞானத்தை அடியோடு அழித்து ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தில் இருந்துகொண்டிருக்கிற ஜீவன் முக்தர்களில் ஒருத்தர் மாத்ரமில்லை, அவர். இந்த ஜீவன்முக்தர்களிலும் பெரும்பாலோர் பிறக்கும்போது பூர்வ ஸம்ஸ்கார லேசமாவது இருந்து, அதனால் கொஞ்சமாவது அஞ்ஞானத்தினால் மூடப்பட்டவர்களாக இருந்து, அப்புறம் தங்கள் ஜீவ்ய காலத்தில் ஸாதனா பலத்தினாலும் அநுக்ரஹ பலத்தினாலும் அந்த அஞ்ஞான மூட்டம் நீங்கப்பெற்று ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றவர்களாகத்தான் இருப்பார்கள். ஆனால் சுகரோ பூர்வ ஸம்ஸ்காரம், அதை இந்த ஜன்மாவில் கழித்துக் கொண்டு அதற்கப்புறம் ஞானம் பெறுவது என்றில்லாமல், பிறக்கிறபோதே ஜீவன் முக்தராக இருந்தவர்!

சுகர் பிறக்கும்பொழுதே ஆத்ம ஞானியாகப் பிறந்தவர். யத்னமே கிடையாது! அநுஷ்டானம் எதுவும் பண்ணாமலே அநுபூதிமானாக இருந்தவர். கர்ம சேஷம்தான் பிறப்புக்குக் காரணமானாலும் இவரோ கர்ம சேஷமே இல்லாமல் பிறந்தவர்.

கர்மாவை அநுபவிக்கத்தானே பிறப்பு? சாஸ்த்ரோக்த கர்மா முதலானது பண்ணித்தானே கர்ம சேஷத்தினால் ஏற்பட்ட சித்த கலுஷத்தை (அழுக்கை)ப் போக்கிக் கொண்டு அப்புறம் ஞானம் பெறமுடியும்? அப்படியிருக்க இவர் எப்படிப் பிறக்கும்போதே ஜீவன் முக்தரான ஞானியாக இருக்க முடிந்தது? இதற்கு நாம் சொல்லக்கூடிய ஒரே காரணம், அஞ்ஞானம் என்பதே தொடாத ஒரு ஜீவனை லோகத்திற்குக் காட்ட வேண்டுமென்றே ஈச்வரன் இப்படி ஒரு ஜீவனைப் பிறப்பித்திருக்க வேண்டும் என்பதுதான்! வேறே ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. ஒரே அஞ்ஞான

Koviloor Digital Library

பிண்டங்களாக இந்த ஜீவ லோகத்தைப் பண்ணியுள்ள அவனுக்கு அப்படியே மாறுதலாக ஒன்றிரண்டாவது பார்க்க வேண்டுமென்று இருக்காதா? அப்படிப்பட்டவர்களைக் காட்டி அஞ்ஞான பிண்டங்களுக்கும் ஏதோ கொஞ்சமாவது 'இப்படியும் ஒரு பிறவி பிறப்பிலிருந்து சஞ்சலமேயில்லாத நிறைந்த நிறைவான பரிபூர்ண ஸ்திதியிலிருக்கிறது; இப்படி ஒரு ஸ்த்தியும் இருக்கிறது' என்று புரியவைக்க வேண்டுமென்றே சுகர் மாதிரியும் ஒன்றிரண்டு ஸ்ருஷ்டித்திருக்கலாம்.

ஒன்றிரண்டுதான்! சுகர் ஒன்று. இரண்டாவது வாமதேவர் என்பவர். அல்லது அவர் (வாமதேவர்) ஒன்று, இவர் (சுகர்) இரண்டு என்று கால க்ரமத்தையொட்டிச் சொல்லலாம். ஏனென்றால் வாமதேவர்தான் சுகருக்கு முந்தி இருந்தவர். அவரைப் பற்றி ஐதரேய உபநிஷத்திலேயே சொல்லியிருக்கிறது. கர்ப்பவாஸம் செய்யும் காலத்திலேயே அவர், "ஸமஸ்த தேவதைகளுடைய கோடிக்கணக்கான ஜன்மங்களையும் தெரிந்துகொண்டு விட்டேன். இதற்கு முன் எப்படி இருந்தேன் தெரியுமா? இரும்புக் கோட்டைகளைப் போலக் கணக்கில்லாத ஜன்மாக்கள் என்னைக் கட்டியிருந்தன. இப்பொழுது எனக்குச் சிறகு முளைத்துவிட்டது; ஒரு பெரிய பருந்துக்கு, கருடனுக்கு முளைத்ததுபோல் முளைத்துவிட்டது. அதனால் கட்டுக்களை மீறிப் பறந்து வந்துவிட்டேன்" என்று சொன்னதாக இருக்கிறது.* இப்படிச் சொல்வதிலிருந்து அவருக்குக்கூடப் பூர்வ ஜன்மங்களின் பந்தம் இருந்து அப்புறமே ப்ரக்ருத (நிகழ்கால) ஜன்மாவின் கர்ப்ப காலத்தில்தான் ஒரு flash மாதிரி ப்ரஹ்மஞானம் ஸித்தித்ததாகத் தெரிகிறது!

பிறப்பிலிருந்தே—கர்ப்பமாகத் தோன்றிய நாளிலிருந்தே—முக்தர்களாக இருந்தவர் சுகர், அவரைப் போலவே வாமதேவர் என்று சொல்லவந்தேன்.

---

* ஐதரேயோபநிஷத் ii. 5

Koviloor Digital Library

ஸமீப நூற்றுண்டுகளில் 'ஜீவன்முக்தர்' என்று சொன்ன மாத்ரத்தில் நினைக்கும்படியாக இருந்தவர் 'ப்ரம்மேந்த்ராள்' என்கிற ஸதாசிவ ப்ரம்மம். அவர் சுகப்ரம்மத்தை ஸ்துதித்து 'குரு ரத்ன மாலிகா'வில் ஒரு ச்லோகம் சொல்லியிருக்கிறார்:

ஜநநீ-ஜடராதிவ ச்யவந் யோ
ஜகதோ நாத்ரவத்-ஆத்மவித்-விபத்ப்ய: |
அநஹந்தம்-அஹம் தம்-ஆத்மவந்தம்
பகவந்தம் சுகம்-ஆச்ரயே ப்ரசாந்தம் ||

லளிதமான அடுக்குச் சொல்லாக "அநஹந்தமஹம் தமாத்மவந்தம் பகவந்தம் சுகமாச்ரயே ப்ரசாந்தம்" என்று இருக்கிறது! 'அஹந்தையில்லாதவரும், ஆத்மாவை அறிந்தவரும், உத்தமமான சாந்த நிலையிலிருப்பவரும், பகவத் ஸ்வரூபமுமான அந்த சுகரை நான் ஆச்ரயிக்கிறேன்' என்று அர்த்தம். இது பின்பாதி.

முன்பாதிக்கு என்ன அர்த்தமென்றால்: தாயாரின் வயிற்றிலிருந்து நழுவும்போதே தம்முடைய ஆத்மஞான விசேஷத்தினால் இந்த ஜகத்திலுள்ள எந்த உபத்ரவத்தைப் பார்த்தும் மனஸின் கட்டு விட்டுப் போகாதவர் என்று அர்த்தம்.

"ஜநநீ ஜடராத்"—'பஜகோவிந்த'த்தில் 'ஜநநீ ஜடரே சயநம்' என்றே ஆசார்யாள் சொன்னதன் நினைவில் சொன்னதுபோல இருக்கிறது!

பாகவதத்தில் சுகரைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள ஒரு ச்லோகத்தைச் சொல்லிவிட்டால் அவருடைய மஹிமை முழுதையும் சொன்னதாகிவிடும்:

யம் ப்ரவ்ரஜந்தம்-அநுபேதம்-அபேதக்ருத்யம்
த்வைபாயநோ விரஹகாதர ஆஜுஹாவ |
புத்ரேதி தந்மயதயா தரவோ (அ)பிநேது:
தம் ஸர்வ-பூத-ஹ்ருதயம் முநிம்-ஆநதோஸ்மி ||

(அவதாரிகை I- 2-2)

Koviloor Digital Library

'யம்'-'எவரை' என்று ஆரம்பித்து, 'தம்' -'அவரை', 'ஆநதோஸ்மி'-'நமஸ்காரம் பண்ணுகிறேன்' என்று முடித்திருக்கிறது. 'எவரை', 'அவரை' என்று சொல்லியிருப்பது சுகாசார்யாளைத்தான். ஆனால் ச்லோகத்தில் தேடிப் பார்த்தால் அந்தப் பெயரையே காணோம்! 'ஸர்வ பூத ஹ்ருதயம் முனிம்' என்றே குறிப்பிட்டிருக்கிறது. ஸர்வ பூதங்களுக்கும் ஆதாரமான பரப்ரம்ம ஸ்வரூபமாக இருக்கும் ஒருவர்தானே ஸர்வ பூத ஹ்ருதயத்திலும் வஸிக்கக்கூடிய முனிவராக இருக்க முடியும்? சுகர் ஒருத்தரைத்தானே அப்படி முக்யமாக நினைப்பதாயிருக்கிறது? ப்ரஹ்மஞானிகள் பலபேர் இருந்தாலும் சுக ப்ரஹ்மம் என்று அவரொருத்தரைத்தானே சிறப்பித்துச் சொல்கிறோம்? ஸர்வ பூத ஹ்ருதயராக இருக்கப் பட்டவரை, ஒரே ஒரு சரீரத்தில் மட்டும் உள்ள ஜீவனுக வைத்து நாமகரணம் செய்த 'சுகர்' என்ற பெயரால் குறிப்பிடுவது அகண்டத்தை ரொம்பவும் குறுக்கிக் கண்டமாக்கினாற்போலத்தான் என்பதாலேயே பெயர் குறிப்பிடவில்லையென்று தோன்றுகிறது. நாம-ரூபம் கடந்தவர் என்று காட்டுவதாக நாமத்தைச் சொல்லாமல் விட்டிருக்கிறது.

ஆனாலும் அடையாளம் காட்டாமலும் விடவில்லை. (ச்லோகத்தில்) 'த்வைபாயனம்' என்று ஒரு வார்த்தை இருக்கிறது. 'புத்ரேதி' என்று இன்னொரு வார்த்தை இருக்கிறது. த்வைபாயனர் என்பது வ்யாஸர். தீவில் (த்வீபத்தில்) பிறந்ததால் அப்படிப் பெயர். அவரால் 'புத்ரா' என்று ('புத்ரேதி') கூப்பிடப்பட்டவர் அந்த ஸர்வ பூத ஹ்ருதயர் என்று அடையாளம் காட்டியிருக்கிறது. வ்யாஸ புத்ரர் என்றால் சுகர்தான் என்று புரிந்துகொண்டுவிடுகிறோம்.

'யம்' என்றதற்கப்புறம் 'ப்ரவ்ரஜந்தம்' என்று இருக்கிறது. அப்படியென்றால் இருந்த இடத்திலில்லாமல் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டே இருப்பவர்—வீடு, வாசல் என்பதாக, ஸ்வக்ருஹம் என்று ஒன்று இல்லாமல் அதைவிட்டு ஓடுபவர் என்று அர்த்தம். அதனால்தான் ஸந்நியாஸத்தில்

Koviloor Digital Library

உசந்த வகையை 'ப்ரவ்ரஜ்யை' என்றும், அப்படிப்பட்ட ஸந்நியாஸியைப் 'பரிவ்ராஜகர்' என்றும் சொல்வது. இப்படி சுகர் வீட்டை, வாசலை விட்டு ஓடுகிறார் என்று ச்லோகம் சொல்கிறது. அப்புறம் அவருக்கு 'அநுபேதம்', 'அபேத க்ருதயம்' என்று இரண்டு அடைமொழி கொடுத்திருக்கிறது. 'அநுபேதம்' என்றால் உபநயனம் ஆகாதவர். 'அபேத க்ருத்யம்' என்றால் சாஸ்த்ரோக்த கர்மா மற்ற கார்யங்கள் ஆகிய எல்லாவற்றிலிருந்து விடுபட்டவர். பூணூல் போடுவதற்கு முந்தியே ஸகல கர்மாநுஷ்டானத்தையும் கடந்த ஞானியாகிவிட்டவர்.

மற்றவர்கள் யாரையாவது பற்றி இப்படிச் சொல்லியிருந்தால் ரொம்பவும் உயர்வாக நினைப்போம். ஆனால் சுகர் விஷயத்திலோ இப்படிச் சொல்வது சித்தே முந்தி (சிறிது முன்பு) நாம் அவரை தெரிந்துகொண்ட உயர்ந்த நிலையிலிருந்து இறக்கி விட்டதாகவே தோன்றுகிறது! 'குரு ரத்னமாலிகா'வில் என்ன பார்த்தோம்? தாயார் கர்ப்பத்திலிருந்து நழுவும்போதே, அதாவது குழந்தையின் சரீரம் பூமியில் படுவதற்கு முன்பே அது பூலோக இன்ப துன்பங்கள் எதனாலும் கலக்கப்படாத ஞானத்தைப் பெற்றிருந்தது என்று பார்த்தோம். அப்படியிருந்த குழந்தை சில வருஷங்கள் வளர்ந்தபிறகுதான் 'அநுபேதம்' —பூணூல் போடப்படாத பாலன்—என்று குறிப்பிடப்படும். பச்சைக் குழந்தைக்கும்கூடப் பூணூல் போடாததால் 'அநுபேதம்'தான் ஆனாலும் குறிப்பிட்டு அப்படிச் சொன்னால், 'கிட்டத்தட்ட பூணூல் போடுகிற வயஸு; ஆனாலும் போடவில்லை' என்றே அர்த்தம் கொடுக்கும். 'இன்னும் ரிடையர் ஆகாதவர்' என்று ஒருத்தரைப் பற்றிச் சொல்கிறோம். அப்போது அவர் கிட்டத்தட்ட ரிடையர் ஆகிற வயஸுக்காரரர் என்றுதானே எடுத்துக்கொள்கிறோம்? ஸமீபத்தில்தான் ஸர்வீஸில் சேர்ந்தவர், முப்பது நாற்பது வயஸானவர் ஆகியோரும் ரிடையராகாதவர்கள்தான் என்றாலும் அப்படிச் சொல்வதில்லையல்லவா? 'உபநயன

Koviloor Digital Library

ஸம்ஸ்காரமாகாதவர்' என்றால் கிட்டத்தட்ட அந்த வயஸுக் கட்டத்திலிருப்பவர் என்றே அர்த்தம். அந்த நாளில் கர்ப்பத்தைக் கூட்டி எட்டு வயஸிலேயே ப்ராம்மணப் பிள்ளைகளுக்குப் பூணூல் போட்டிருப்பார்கள். ரொம்பவும் மேதா விலாஸம் தெரிகிற குழந்தையாயிருந்தால் ஐந்து வயஸிலேயேகூடப் போட்டுவிடலாம் என்று சாஸ்த்ரம். வ்யாஸாசார்யாள் அப்படித்தான் போட உத்தேசித்திருப் பாரென்றால்கூட அநுபேதர் எனப்படும் சுகருக்கு கிட்டத் தட்ட ஐந்து வயஸிருக்கவேண்டும். பிறக்கும் பொழுதே ஞானியாயிருந்தவரை, ஐந்து வருஷம் தள்ளியே ஞானி என்று குறிப்பிட்டால் அது அவரை இறக்கிச் சொல்வது போலத்தானே?

அப்படியில்லை என்று காட்டத்தான் 'அநுபேதம்' என்று சொல்வதற்கு முன்னாடியே 'ப்ரவ்ரஜந்தம்' என்று சொல்லி யிருக்கிறது. வ்யாஸாசார்யாளின் ஆச்ரமத்தையும், அது இருந்த அரண்யத்தையும் விட்டுவிட்டு சுகர் ஓடியதை 'ப்ரவ்ரஜந்தம்' என்ற வார்த்தை தெரிவிக்கிறது. பின்னால் வருவதிலிருந்து அவருக்கு ஸரியாக ஓட முடியாமல் வ்யாஸாசார்யாள், "புத்ரா, புத்ரா!" என்று கதறிக் கொண்டு பின் தங்கிப் போனதாகவும் தெரிகிறது. ஒரு குழந்தை இந்த அளவுக்குக் கைகால் வளர்ந்து ஓடும் சக்தி பெறுவதற்கு நாலைந்து வயஸாவது ஆகவேண்டாமா? கர்ப்பத்திலிருந்து விழும்போது அப்போது ஓடமுடியுமா? அதனால்தான், பிறந்ததிலிருந்தே பரிவ்ராஜகராக ஓடுகிற எண்ணம் கொண்ட ஞானியாகத்தான் சுகர் இருந்தாரென் றாலும், அந்த எண்ணத்தைக் கார்யமாக்கி அவர் புறப்பட்ட ஸமயத்தைக் குறிப்பிடும்போது அவரை 'உபநயனமாகாத வர்' என்று சொல்லியிருக்கிறது.

எல்லாம் மாயை, இதையே இன்னொரு தினுஸில் சொன்னால், எல்லாம் ப்ரம்மம் என்று தெரிந்துகொண்டுள்ள ஞானி எந்த இடத்தையும் விட்டு எங்கேயும் போக வேண்டாம்தான். ஆனாலும் ஒரே இடத்தில் இருந்தால்

Koviloor Digital Library

அங்கே வஸிப்பவர்கள் அந்த இடத்துக்கே அவர் சேர்ந்தவர், அந்த இடம் அவருக்குச் சேர்ந்தது, அவர் தங்களைச் சேர்ந்தவர், தாங்கள் அவரைச் சேர்ந்தவர்கள் என்று தப்பான அட்டாச்மென்ட்களைக் கல்பித்துக்கொள் வார்கள். அப்படிக் கூடாது என்றுதான் ஞானி பரிவ்ராஜக ஞத் திரிவது.

கால், கை முளைக்கும்வரை சுகர் பொறுத்துப் பார்த் தார். அப்புறம், புறப்பட்டுவிட்டார். தகப்பனாரான வ்யாஸாசார்யாள் மஹா பெரியவர்தான் என்றாலும் இன்னும் பிள்ளையைப்போல ப்ராஹ்மீ ஸ்திதியிலேயே ஆணியறைந்த மாதிரி நிற்கவில்லை. புத்ர வாத்ஸல்யம் என்ற மாயை அவரைத் தொட்டுக் கொண்டுதான் இருந்தது. இதை வளரவிடப்படாது என்று புத்ரர் நினைத்தார். 'உபநயனம் பண்ணுவதற்கு அநுமதித்து விட்டோமோ, அப்புறம் (ப்ரஹ்மசர்ய) ஆச்ரம தர்மப்படி நடக்கத்தான் வேண்டிவரும். கர்மாவில் பற்றேயில்லாத நாம் அத்யயனம், ஸமிதாதானம், பிக்ஷாசர்யம் எல்லாம் பண்ணியாக வேண்டிவரும். இப்படி நம்முடைய ஸஹவாஸத்தை நீடிக்கவிட்டால் தகப்பனாரின் பாசமும் ஜாஸ்தியாகிக்கொண்டேதான் வரும். நம்மை எதுவும் கட்டமுடியாவிட்டாலும், அவர் கட்டில் நன்றாக அகப்பட்டுக் கொள்வார். அதனால் இப்போது வீட்டைவிட்டு ஓடிவிட வேண்டும். தகப்பனார் ரொம்பவும் துக்கப்படத்தான் செய்வார். ஆனால் இன்னம் தள்ளிப் போட்டுக்கொண்டு போகப் போக (அவருக்கு) பந்தமும் வலுவாகி, (நம்மைப் பிரிகிற) துக்கமும் ஜாஸ்தியாகிக் கொண்டுதானே போகும்? அதனால் இப்போதே ஓடிப்போயிடணும்' என்று ஓட ஆரம் பித்தார்: "யம் ப்ரவ்ரஜந்தமநுபேதமபேதக்ருத்யம்".

நாம் ஒரு இடத்திற்குப் போகிறோமென்றால், அங்கே நமக்கு ஏதாவது கார்யம் இருக்கவேண்டும். அந்தக் கார்யம் முடிந்துவிட்டால் அங்கேயிருந்து புறப்பட்டு விடுவோம். உபந்யாஸம் கேட்பதற்காக இங்கே வந்திருக்

Koviloor Digital Library

கிறீர்கள். நான் பேசி முடித்தபின் உட்கார்ந்திருப்பீர்களா? புறப்பட்டு விடுவீர்கள். ஒரு ப்ரஹ்ம ஞானியைப் புத்ரனாகப் பெற்று லாலனம் (சீராட்டல்) செய்யவேண்டுமென்ற பாக்யம் வ்யாஸருக்கு இருந்தது. சுகரை அப்படிப் பெற்று நிறைய லாலனம் பண்ணியாயிற்று. இனிமேலேயும் அவர் அங்கேயே இருந்தால் பாக்யம் போய், பாச பந்தம் தான் உண்டாகும். அதனால் வந்த கார்யம் ஆகிவிட்டதென்று வ்யாஸாச்ரமத்தை விட்டு சுகர் புறப்பட்டுவிட்டார். எல்லா இடங்களிலுமுள்ள ஜனங்கள், ஸத்துக்கள், ஸாதகர்கள் அவரை தர்சனம் பண்ணிப் பயனடைய வேண்டுமென்று திவ்ய ஸங்கல்பமிருந்தது. அதனால், கால் போன போக்கில் ஸஞ்சாரம் பண்ணக் கிளம்பினார். 'லோகத்துக்கு தர்சனம் கொடுக்கிற கார்யம் தனக்கிருக்கிறது' என்று நினைத்துக் கர்த்தாவாக அவர் புறப்படவில்லை! ஒரு எண்ணமுமில்லாமல் தான் புறப்பட்டார். ஆனால் அதிலேயே திவ்ய ஸங்கல்பத்தின் நிறைவேற்றமும் அமைந்தது.

பிள்ளை ஓடுவதைப் பார்த்து வ்யாஸாசார்யாள் அவரைத் தடுத்துப் பிடித்து அழைத்து வருவதற்காகப் பின்னாலேயே ஓடினார். அவருக்கு ஈடுகொடுத்து இவரால் ஓட முடியவில்லை. அவர் எங்கேயோ போய் விட்டார்! இவர் "புத்ரா, புத்ரா!" என்று கதறிக்கொண்டு பின்னால் போகிறார். "த்வைபாயனோ விரஹகாதர ஆஜுஹாவ— புத்ரேதி" : த்வைபாயனராகிய வ்யாஸர் பிரிவாற்றாமையால் தவிதவித்துக்கொண்டு 'புத்ரா' என்று கூப்பிட்டுக் கொண்டே போனார்.

அப்போது என்ன ஆயிற்று? ஒரு அதிசயம் நடந்தது.

தரவோ (அ) பிநேது :

'அபிநேத்ரு' என்றால் நடித்துக் காட்டுபவர், நடிகர், actor என்கிறார்களே, அது. ஒரு நடிகன் என்ன பண்ணுகிறான்? கதையில் வருகிற யாரோ ஒரு பாத்ரத்திற்கு ப்ரதிநிதியாக இருந்து, அவன் பண்ணவேண்டியதையெல்லாம் தான் பண்ணுகிறான். என்றைக்கோ ராமர் இருந்துவிட்டுப் போய்

Koviloor Digital Library

விட்டார். இப்போது அவர்பாட்டுக்கு ஸ்வஸ்தமாகப் பரம பதத்தில் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால் எங்கே பார்த்தாலும், இந்தியாவில் மட்டுமில்லாமல் ஸயாம் (தாய்லாந்து), ஜாவா முதலிய தேசங்களிலும்கூட ராமாயண ட்ராமா, ஸினிமா எல்லாம் நடந்தபடி இருக்கின்றன. யார் யாரோ 'அபிநேத்ரு'க்களாக ராமர் வேஷம் போட்டுக் கொள்கிறார்கள். நிஜ ராமர் இப்போது ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் உச்சியில் உட்கார்ந்துகொண்டிருந்தாலும் இந்த 'ஆக்டர்'களெல்லாம் அவருக்குப் பதில், அவருடைய ப்ரதிநிதியாக, வனவாஸம் பண்ணுகிறார்கள், ஸீதையைப் பறி கொடுக்கிறார்கள், ராவண ஸம்ஹாரம் பண்ணுகிறார்கள். ட்ராமாவிலே தசரதரோ, விச்வாமித்ரரோ, அல்லது ராவணனோ "ராமா" என்று கூப்பிடுகிறபோதெல்லாம் நிஜ ராமர் ஏன் என்றுகேட்பதில்லை. இந்த அபிநேத்ருதான் பதில் கொடுக்கிறான்.

அந்த மாதிரி, வ்யாஸர் 'புத்ரா, புத்ரா!' என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடியபோது சுகர் ஒன்றும் பதில் கொடுக்கவில்லை. ஆனால் அவருக்கு ப்ரதிநிதிகளாகக் காட்டிலிருந்த மரங்களெல்லாம் 'ஏன், ஏன்?' என்று கேட்டன! "தரவோ அபிநேது:" தருக்கள் அபிநேதாவின் கார்யத்தைப் பண்ணின. அதாவது சுகருடைய behalf-ல் (சார்பில்) மரங்கள் respond பண்ணின (பதில் கொடுத்தன)!

அவரைக் கூப்பிட்டால் இவை ஏன் பதில் கொடுக்க வேண்டுமென்றால், அவர் யார்? ஸர்வ பூத ஹ்ருதயரானவர். 'எல்லாம் தாம்' என்று ஆன ப்ரஹ்மஞானி. ஆகையால் சேதனா சேதனங்களான ஸகலத்தினுள்ளேயும் அவர் நிறைந்திருந்தார். அதனால், அவை எல்லாமே அவர் மயமாகி ("தன்மயதயா"), 'ஏன் ஏன்?' என்று பதில் குரல் கொடுத்தன. மரங்கள் மட்டுமில்லை; ம்ருகங்கள், பக்ஷிகள், மலை, நதி எல்லாமேதான் பதில் கொடுத்தன. ஆனாலும் பொதுவாக உணர்ச்சியே இல்லாமல் ஜடமாயிருப்பதை 'மரம் மாதிரி' என்றுதானே சொல்கிறோம்? உணர்ச்சி போய்

Koviloor Digital Library

விட்டால் 'மரத்துப் போயிடுத்து' என்றுதானே சொல்கிறோம்? அதனால் மரங்களே சுகருக்காக பதில் குரல் கொடுத்தனவென்றால் அத்தனை ஜீவ ஜட ப்ரபஞ்சமும் அவருக்கு ப்ரதிநிதியாக ப்ரதிவசனம் பேசின என்று அழுத்தமாகக் காட்டியதாகும் என்றே "தரவோ அபிநேது : என்று (பாகவத புராணத்தை ப்ரவசனம் செய்த) ஸூத பௌராணிகர் போட்டிருக்கிறார்.

ச்லோகம் இவ்வளவு சொன்னதோடு நின்றுவிடுகிறது. வ்ருக்ஷங்கள், ம்ருகங்கள் முதலியன சுகருக்காக, சுகராக, பதில் கொடுத்த பிறகு வ்யாஸருக்கு என்ன ஆயிற்று என்று அதில் இல்லை.

ஆனால் நாம் ஊஹித்துவிடலாம்.

சுகர் என்று ஒரு சரீரத்தில் இருக்கிறமாதிரி இருந்தவர் பட்டுக்கொள்ளாமல், பட்ட கட்டைபோல ஞானியாக அவர்பாட்டுக்குப் பதில் சொல்லாமல் போய்விட்டார். எத்தனை ஞானியானாலும் அவருடைய ஹ்ருதயத்தில் ஈச்வரன் ப்ரேமையைச் சுரக்காமல் விடமாட்டான்! அதனால், ஸர்வபூத ஹ்ருதயரான அவர் தம்முடைய மற்ற சரீரங்களைப்போன்ற மரம், மட்டை ஆகியவற்றின் மூலம், அழுகின்ற அப்பாவுக்கு ஆறுதலாக பதில் கொடுக்கப் பண்ணிவிட்டான். இப்படி, அந்த ஒரு வ்யக்தி விரக்தியுடன் பேசாமல் ஓடிக்கொண்டுள்ளபோது பாக்கி அத்தனை வஸ்துக்களும் ப்ரேமையுடன் பதில் சொன்னதிலேயே வ்யாஸருக்கும் ஆறுதல் ஏற்பட்டது மட்டுமில்லாமல், ஆத்ம ஞானமும் ஆழமாக வேரூன்றி இருக்கவேண்டும். ஒரு ரூபத்தில் மாத்ரம் பிள்ளை இருக்கிறதென்றால் அதைப் போக விடப்படாது என்று பிடித்து வைத்துக்கொள்ளத் தோன்றும். அத்தனை ரூபத்திலும் இருக்கிறது என்றால்? அது எப்படிப் பிரிந்து போகும்? இவர் எங்கேயிருந்தாலும் அங்கேயும்தானே பிள்ளை இருப்பதாகும்? அதனால், அதற்காக அழவேண்டியதே இல்லைதானே? வ்யாஸரும் ஸாமான்யப் பட்டவரில்லையே! ஆகையால் பிரிய முடியாத

Koviloor Digital Library

தாக, எங்கும் நிறைந்திருப்பதாக ஒன்றைத் தெரிந்து கொள்ளும்போது அதை ஒரு ஊஹமாகவோ, புத்தி வாதமாகவோ மட்டும் தெரிந்துகொள்ளாமல் அநுபவித்தே அறிந்திருப்பார். பிள்ளையாக அறிந்தவரை எல்லாமாகி, எங்கும் நிறைந்த தத்வமான ப்ரஹ்மமாகவே அறிந்திருப் பார். எல்லாமாகி, எங்கேயும் நிறைந்திருப்பதென்றால் அப்போது (வ்யாஸராகிய) தாமுமாகி, தமக்குள்ளேயும் அதுதான் நிறைந்திருக்கிறதென்று கண்டு கொண்டிருப்பார். அதாவது ஆத்ம ஞானத்தில் ஆழமாக வேரூன்றி இருப்பார்.

கொஞ்சங்கூட அன்போ அநுதாபமோ இல்லாதமாதிரி ஒரு ரூபத்திலிருந்துகொண்டு தகப்பனாரைப் பிரிந்து சென்று கதறக் கதற அடிக்கும்போதே, ஸகல ரூபங்களிலும் இருந்து கொண்டு அவருடைய பாச பந்தத்தைப் போக்கி, அவருடைய ஞானம் ஸ்திரமாக வலுப்படுவதற்குப் பெரிய உபகாரத்தை சுகர் செய்திருக்கிறார்!

அப்படிப்பட்டவரிடம் உபதேசம் பெற்ற சிஷ்யர் கௌடபாதர்.

அவருடைய கதையைப் பார்க்கலாம்.

அவருடைய கதைக்கு முன் அவருடைய குருவின் கதை யைக் கொஞ்சம் சொல்லவேண்டும். அதோடு ஒட்டுப் போட்டுக் கொண்டுதான் இவர் கதை வரும்.

குரு என்றால் ஸந்நியாஸ குரு அல்ல. இவருக்கு ஸந்நியாஸம் தந்த குரு சுகர். அவர் கதைதான் சொல்லி யாயிற்றே! சொல்லவேண்டியது அவருடைய (கௌட பாதருடைய) வித்யா குருவைப் பற்றி. லோகத்தில் ப்ரஹ்ம வித்யை ப்ரசாரமாகக் காரணமாக இருந்த கௌடபாதர் மூலம்தான் வ்யாகரண சாஸ்த்ரமும் நமக்குக் கிடைத்திருக் கிறது. அந்த சாஸ்த்ரத்தை அவருக்கு உபதேசித்த வித்யா குருவைப் பற்றியே இப்போது சொல்லப் போவது.

பதஞ்ஜலி என்ற அந்த குருவின் கதையையும், அவரிட மிருந்து இவர் உபதேசம் பெற்ற கதையையும், இன்னும் பல

Koviloor Digital Library

கதைகளையும் சொல்லிக் கடைசியில் இவருடைய சிஷ்யரிடம் நம் ஆசார்யாள் சிஷ்யராகி ப்ரஹ்ம வித்யா உபதேசம் வாங்கிக்கொண்டது உள்பட எல்லா விருத்தாந்தங்களையும் "பதஞ்ஜலி சரிதம்" என்ற காவ்யம் சொல்கிறது. அந்தக் கதைகள் கொஞ்சம் சொல்கிறேன்*.

"பதஞ்ஜலி சரிதம்"

பதினேழாம் நூற்றுண்டுக் கடைசியில் தஞ்சாவூர் ராஜா ஷாஹஜி, வித்வான்களுக்கென்றே தன்னுடைய ராஜ்யத்தில் ஒரு ஊர் இருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு, திருவிச நல்லூரில் அநேக பண்டிதர்களையும், கவிகளையும் குடியேற்றி யதேஷ்டமாக மான்யங்கள் கொடுத்தான். அப்படி மொத்தம் 46 பேருக்கு அந்த க்ராமம் ஸர்வ மான்யமாகத் தரப்பட்டு வித்யா ராஜதானியாக இருந்தது. அவர்களில் ராமபத்ர தீக்ஷிதர் என்பவர் ஒருவர், கவி. பெரியவர். நல்ல ரஸிகர். ஸாதாரணமாக இலக்கணப் புலமையும் இலக்கியத் திறமையும் ஒன்றுசேரொன்று சேராது என்பார்கள். ஆனால் இவரோ இரண்டிலும் தேர்ந்தவராயிருந்தார். வ்யாகரணத்தில் (இலக்கணத்தில்) பெற்றிருந்த தேர்ச்சியால் "ப்ரத்யக்ர பதஞ்ஜலி" என்று பெயர் பெற்றிருந்தார்.

பதஞ்ஜலிதான் வ்யாகரண மஹாபாஷ்யம் எழுதியவர். அவர் கதையும் கௌடபாதர் கதையும் ஒன்றுசேரொன்று பின்னிப் பிணைந்தது. "பதஞ்ஜலி சரிதம்" என்பது ராமபத்ர தீக்ஷிதர் எழுதியதுதான். 'பதஞ்ஜலி சரிதம்' எழுதியவருக்கே 'நிகழ்காலப் பதஞ்ஜலி' என்று பொருள்படும் 'ப்ரத்யக்ர பதஞ்ஜலி' என்ற பட்டம் இருந்தது.

கவி என்ற முறையில் ச்ருங்கார நாடகாதிகள் அவர் எழுதியிருந்தாலும் உயர்ந்த பக்தியுள்ளம் படைத்தவரா

---

* ஸ்ரீ சரணர்கள் முற்றிலும் 'பதஞ்ஜலி சரிதத்'தையே பின்பற்றுமல் வேறு புராணக் கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள் ஆகியவற்றையும் அநுஸரித்து உபந்யஸித்திருப்பதாகக் காண்கிறோம்.

Koviloor Digital Library

யிருந்தார். குறிப்பாக ராமசந்த்ர மூர்த்தியிடம் அவருக்குப் பரம பக்தி. "ஜானகி பரிணயம்" என்று அவர் எழுதியிருக்கும் நாடகம் ப்ரஸித்தி வாய்ந்தது. "ராம ஸ்தவ கர்ண ரஸாயனம்", "ராம சித்ர ஸ்தவம்" என்றெல்லாமும் அநேக ஸ்தோத்ரங்கள் எந்த ராமாயணத்திலும் இல்லாத நூதன கல்பனைகளோடு எழுதியிருக்கிறார். தக்ஷிணத்தில் விசேஷமாக நாடக க்ரந்தம் எழுதுபவர்கள் கிடையாது என்று வடக்கத்தி வித்வான்கள் சொல்லிவந்த அபக்யாதியைத் துடைக்கவே 'ஜானகி பரிணயம்' எழுதி நம்முடைய தென்தேசத்தின் பெருமையை நிலைநாட்டினாரென்று சொல்லப்படுகிறது.

நமக்கு விஷயம் அவருடைய "பதஞ்ஜலி சரிதம்". எட்டு ஸர்கங்கள் கொண்ட புஸ்தகம் அது.

ராமர் என்று சொன்னவுடன் அவருடன் இணைபிரியாத பக்த சிரோமணியான ஆஞ்ஜநேய ஸ்வாமியை நினைப்பது போல நடராஜா என்றவுடன் இரண்டு பேர் நினைவு வரும். நடராஜாவின் பிம்பமானாலும், சித்ரமானாலும் எதிலும் அவருக்கு இரண்டு பக்கங்களில் இந்த இரண்டு பேரும் இருப்பார்கள். கேட்பதற்கு பயமாக "பாம்பும் புலியும் இரு பக்கமும்" என்று இவர்களைத்தான் பாட்டுக்களில் சொல்லியிருக்கிறது! படங்களில் பார்த்தாலும் ஒருத்தருக்கு இடுப்புக்குக் கீழே பாதி உடம்பு பாம்பாக இருக்கும். இன்னொருத்தருக்குப் புலியாக இருக்கும். ஆனால் அந்த இருவரும் யாருக்கும் எந்த ஹிம்ஸையும் பண்ணாமல் ஸ்வாமியின் நர்த்தனத்திலேயே ஸதாகாலமும் நேத்ரத்தையும் ஹ்ருதயத்தையும் அர்ப்பணம் பண்ணிப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். புலிக்கால்காரர் 'வ்யாக்ரபாதர்' என்பவர். அந்தப் பேருக்கே அப்படித்தான் அர்த்தம். பாம்புக் கால்காரர்தான் நம்முடைய உபகதையின் நாயகரான பதஞ்ஜலி.

சிதம்பர மஹிமையையும், ஸ்ரீமந் நடராஜமூர்த்தியின் மஹிமையையும் விளக்குவதாக அந்தத் திருவிசநல்லூர்

Koviloor Digital Library

பண்டித கவிகளில் இன்னொருத்தரான வேங்கடக்ருஷ்ண தீக்ஷிதர் என்பவர் "நடேச விஜயம்" என்று காவ்யம் எழுதியிருக்கிறார். அதிலும் பதஞ்ஜலியைப்பற்றி ஓரளவு வருகிறது. பதஞ்ஜலியையே மையமான பாத்ரமாக வைத்து ராமபத்ர தீக்ஷிதர் எழுதியுள்ள 'பதஞ்ஜலி சரித'மும் 'நடேச விஜய'மும் அநேக detail-களில் (விவரங்களில்) ஒத்துப் போகின்றன.

பதஞ்ஜலி ஆதிசேஷனின் அவதாரமென்று அந்தப் புஸ்தகங்களில் இருக்கிறது.

ஆதிசேஷன் மஹாவிஷ்ணுவைச் சேர்ந்தவர். திருப்பாற் கடலில் பகவானுக்குப் படுக்கையாக இருப்பவர். அந்தப் பரம வைஷ்ணவர் எப்படிப் பரம சைவராகி நடராஜாவின் இணைபிரியாத பக்தரானார்? திருப்பாற்கடலிலிருந்தவர் ஏன் சிதம்பரத்துக்கு வந்து சேர்ந்தார்?

அதற்குக் காரணம் நடேசவிஜயத்தில் சுருக்கமாகவும் பதஞ்ஜலி சரிதத்தில் விரிவாகவும் வருகிறது.

மஹாவிஷ்ணுவேதான் ஆதிசேஷனை அப்படி அனுப்பி வைத்தது என்று வருகிறது.

அப்படியானால் மஹாவிஷ்ணுவுக்கும் நடராஜாவுக்கும் என்ன ஸம்பந்தம்?

திருமாலின் இதயத்தில் சிவ நடனம்

ஸம்பந்தமிருப்பது நிச்சயம் என்று சிதம்பரம் கோவிலைப் பார்த்தாலே தெரிகிறது. அங்கு நடராஜாவின் தர்சன மண்டபத்துக்குப் பக்கவாட்டிலேயே பெரிசாகப் பெருமாள் ஸந்நிதி இருக்கிறது. கோவிந்தராஜா என்ற பேரில் அவர் ஆதிசேஷ பர்யங்கத்தில் படுத்துக் கொண்டிருக்கிறார். ஒரே இடத்தில் நின்றபடி சிவ-விஷ்ணுக்கள் இருவரையும் தர்சித்துக்கொண்டு இரட்டிப்பு ஸந்தோஷத்துடன் அப்பைய தீக்ஷிதர் "மாரமணம், உமாரமணம்" என்று

Koviloor Digital Library

ஸ்தோத்ரித்திருக்கிறார்.* 'மாரமண' என்றால் லக்ஷ்மீபதி. 'உமாரமண' என்றால் உமாபதி என்று புரியும்.

ஆக இரண்டு பேருக்கும் ஸம்பந்தமிருப்பது தெரிகிறது.

என்ன ஸம்பந்தம்?

ரொம்பவும் நெருங்கின ஸம்பந்தம். ஹ்ருதய பூர்வமாக என்றால் அஸலே ஹ்ருதய பூர்வமான ஸம்பந்தம் அந்த இரண்டு பேருக்கும்தான் இருக்கிறது!

எப்படியென்றால், நடராஜா மஹாவிஷ்ணுவின் ஹ்ருதய கமலத்திலேயே நாட்டியம் செய்கிறார்!

இந்த நாளில் ஆராய்ச்சி என்று செய்பவர்கள், 'திருவாரூர் த்யாகராஜா கோவிலில் நிறைய விஷ்ணு ஸம்பந்தமான சின்னங்கள் இருக்கின்றன. அதோடு, 'ராஜா' என்று வருகிற பேர்கள் பெரும்பாலும் விஷ்ணுவின் பேர்களாகத்தானிருக்கின்றன—ரங்கராஜா, வரதராஜா, கோவிந்தராஜா, இப்படி. ஆகையால் அது முதலில் பெருமாள் கோவிலாகத்தான் இருந்திருக்கவேண்டும். அப்புறம் சைவர்களுக்கு ரொம்பவும் ஆதிக்யம் ஏற்பட்ட காலத்தில்தான் அதை சிவன் கோவிலாக மாற்றியிருக்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். இதையே மாற்றி நாச்சியார் கோவிலிலுள்ள பெருமாள் கோவில் விஷயத்தில், அது முதலில் சிவன் கோவிலாக இருந்து, அப்புறம் வைஷ்ணவர்களுக்கு ஆதிக்யம் ஏற்பட்ட காலத்தில் விஷ்ணுவாலயமாக மாற்றப் பட்டிருக்கவேண்டும் என்கிறார்கள். இந்த ஆராய்ச்சி எல்லாம் ஸரியில்லை. அந்தந்த ஸ்தல புராணக் கதையையோ, பொதுவான ஸமய சாஸ்த்ர தத்வங்களையோ விளக்கிக் கோவில்கள் எழுப்பியிருப்பதைப் புரிந்துகொள்ளாததாலேயே இப்படி முடிவு சொல்கிறார்கள். வாஸ்தவத்தில் அவை ஆதியிலிருந்து இப்போதுள்ளபடிதான் இருந்திருக்கின்றன. நாச்சியார் கோவில் விஷயம் இப்போது நமக்கு ஸம்பந்தப்பட்டதல்ல.

---

* ''ஹரிஹர அபேத ஸ்துதி''

Koviloor Digital Library

திருவாரூரை எடுத்துக்கொண்டால். அந்தக் கோவில் விஷ்ணுவின் ஸ்வரூபமாகவே கட்டப்பட்டிருப்பது. அந்த ஸ்வரூபத்திலே ஹ்ருதய ஸ்தானம் எங்கே இருக்குமோ அங்கேதான் த்யாகராஜ மூர்த்தி ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

நடராஜா போலவே த்யாகராஜாவும் நடனமூர்த்தி தான். ஆனால் அது நமக்குத் தெரியாமல் அவருடைய பிம்பத்தில் முகம் தவிர பாக்கி எல்லா பாகமும் மூடி வைத்திருக்கிறது.

ஆனால் நடராஜாவின் நடனத்திற்கும் த்யாகராஜாவின் நடனத்திற்கும் வித்யாஸமுண்டு. நடராஜா அவராகவே இடது காலைத்தூக்கி ஆனந்த நடனம் செய்கிறார். த்யாகராஜா தாமாக டான்ஸ் பண்ணவில்லை. விஷ்ணு மூர்த்தியின் ஹ்ருதயத்தில் இருப்பவரல்லவா அவர்? அதனால் மஹாவிஷ்ணு ச்வாஸிக்கும்போது அவருடைய வக்ஷஸ்தலம் ஏறியிறங்குவதற்கேற்ப த்யாகராஜா அசைவதில் தானாக ஒரு நடனம் அமைந்துவிடுகிறது.

மஹாவிஷ்ணுவின் ஹ்ருதய கமலத்தில் சிவன் நடனமாடுகிறார் என்பதைக் குறிப்பதாக ச்ருதியிலேயே 'நாராயணோபநிஷத்'தில் மந்த்ரங்கள் இருக்கின்றன. முதலில் நாராயணனே விராட் ஸ்வரூபம், விச்வத்திலுள்ள அத்தனை சிரஸுகளும், அத்தனை கண்களும் அவருடையதுதான் என்று ஆரம்பித்து அந்த விராட்டின் ஜீவரூபத்தில் தலைகீழான பத்ம கோசம் (தாமரை மொக்கு) மாதிரி ஹ்ருதயம் இருப்பதைச் சொல்லி, அதன் மேல் பாகத்தில் உள்ள தஹராகாசம் என்பதில் பரமாத்ம ஸ்வரூபம் விளங்குவதாக வர்ணித்திருக்கிறது. வெளியிலே நாம் பார்க்கும் விசாலமான ஆகாசம் 'பேரம்பலம்' என்பது. அதுவே உள்ளே சின்ன ஆகாசமாக இருப்பதைத்தான் 'தஹராகாசம்' என்றும் 'சிற்றம்பலம்' என்றும் சொல்வது. 'ஞான ஆகாச'மான 'சித் அம்பரம்', ஆகாச க்ஷேத்ரம், சிற்றம்பலம் என்கிற சித்ஸபை, தாண்டவ மூர்த்தியான நடராஜசிவன் என்றிப்

Koviloor Digital Library

படி எல்லாம் சிதம்பரத்தில் ஒன்றுக்கொன்று ஸம்பந்த முடைய ஆத்ம தத்வங்களாக இருக்கின்றன.

அஜபா-ஹம்ஸ நடனம்

தாண்டவம் என்று பொதுவாகச் சொல்லப்படும் சிவ நடனத்திலேயே பல விதங்கள் உண்டு. சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம், திருவாலங்காட்டில் ஊர்த்வ தாண்டவம், இப்படி. இது தவிர சோளஸீமையிலேயே ஏழு த்யாகராஜாக்கள் ஏழுவிதமான தாண்டவங்களைச் செய்கிறார்கள். ஸப்தவிடங்க க்ஷேத்ரம் என்று அந்த ஏழு க்ஷேத்ரங் களுக்குப் பேர். அவற்றில் ப்ரதானமானது திருவாரூர். அங்கேயுள்ளவர்தான் ஏழுபேரிலும் மூல த்யாகராஜா. அவர் ஆடும் நடனத்திற்கு ஹம்ஸ நடனம் என்று பெயர். அஜபா நடனம் என்றும் அதற்கு இன்னொரு பெயர்.

ஜபமாக இல்லாதது 'அஜபா'. மற்ற எல்லா மந்த்ரங் களையும் நாம் புத்தி பூர்வமாக அக்ஷரங்களைக் கொண்டு ஜபிக்கிறோம். அந்த மந்த்ர சப்தங்களின் அதிர்வினால் நாடியில் ஏற்படும் சலனங்களிலிருந்து அபூர்வமான தர்சனம், சக்தி, ஸித்தி, மனத்தெளிவு ஆகியன உண்டாகின்றன. இவை பூர்ணமாக ஏற்படுவதற்கு அந்த மந்த்ரங்களை ப்ராணயாம பூர்வமாக, அதாவது தீர்க்கமாக மூச்சை இழுத்து, அடக்கி, வெளியிடுவதோடு சேர்த்துப் பண்ணவேண்டும். இப்படி மந்த்ரம் என்று நாம் உத்தேசித்து புத்தி பூர்வமாக அக்ஷரங் களைக் கொண்டு பண்ணுவதென்றும், மூச்சையும் அவ்வாறே நாமாக உத்தேசித்து அளவாக ஒழுங்குபடுத்தி விடுவ தென்றும் இல்லாமல், சித்தத்தை சாந்தமாக வைத்துக் கொண்டு, ச்வாஸமானது தானாக எப்படி அமைகிறது என்று, விலகியிருந்து, கவனித்துக்கொண்டிருந்தால் உள் - வெளி மூச்சுக்கள் ரொம்ப ரொம்ப தீர்க்கமாகிக்கொண்டே போகும்; மூச்சு அடங்கியிருக்கிற காலமும் ஜாஸ்தியாய்க் கொண்டே போகும். ஆரம்பத்தில் ஏதோ நமக்குத் தெரிந்த மட்டும் சித்தத்தைக் கொஞ்சம் சாந்தப்படுத்திக்கொண்டு பண்ணினாலும் போகப் போகத் தானாக நிஜமான பரம

Koviloor Digital Library

சாந்தம் உண்டாகும். ப்ராணுயாமம் என்று அடக்கி, கிடக்கிச் செய்யும்போது இருக்கிற 'ஸ்ட்ரெயின்' கொஞ்சங் கூட இல்லாமல் அநாயாஸமாக இப்படி ஏற்பட்டுப் பரம சாந்தமாக மூச்சும், எண்ணமும் புறப்படுகிற ஆத்மஸ்தானத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும். இதிலே ஒரு மந்த்ர ஜபமுமில்லையல்லவா? அதனுல் 'அஜபா' என்று பெயர்.

ஔபசாரிகமாக (உபசாரமாக) இதையும் ஒரு ஜபம் என்று சொல்வதுண்டு. அதுதான் "ஹம்ஸ" மந்த்ர ஜபம் என்பது. மூச்சு உச்வாஸ நிச்வாஸமாக (உள்ளுக்கு இழுப்பதும் வெளியில் விடுவதும்) உள்ளபோது "ஹ்ம்", "ஸ்" என்ற ஒலிகளைப் போலவே சப்த சலனம் அமையும். அதனுல்தான் "ஹம்ஸ" மந்த்ரம் என்பது. அதோடு "அஹம் ஸ:" என்பதற்கு "நான் அவன்", அதாவது, "ஜீவாத்மாவான நானே ஈச்வரன், அதாவது பரமாத்மா" என்று அர்த்தம். 'நானே அவன்' என்று மாத்திரம் நிறுத்திவிட்டால் ஜீவாத்மா தான் ஈச்வரன் என்று குறுக்கிவிட்டதாக விபரீத அர்த்தமும் செய்து கொள்ளலாமல்லவா? அதனுல், "(பரமாத்மாவான) அவனே நான்" என்றும் சேர்த்துச் சொன்னுல்தான் முழுசாகச் சொன்னதாகும். "அவனே நான்" என்பது "ஸ: அஹம்". ஸந்தியில் இது "ஸோஹம்" என்றுகும். "ஹம்ஸ:" என்பதோடு "ஸோஹம்" என்பதையும் சேர்த்துச் சொல்வதுதான் ஹம்ஸ மந்த்ரம். நாம் புத்தி பூர்வமாக உத்தேசித்து மற்ற மந்த்ரங்களைப் போல இந்த ஹம்ஸ மந்த்ரத்தையும் சொல்லிக்கொண்டே போனுல்கூட, அதாவது ஜபித்துக் கொண்டே போனுல்கூட, அந்த சப்த சலனங்கள்தான் இயற்கையாகவும் சாந்த ஸமாதிக்கு அழைத்துப்போகும் ப்ராண ஸஞ்சாரத்திற்கு உரியதாக இருப்பதால், அந்த natural state-ல் சேர இதுவும் induce பண்ணும் (செயற்கையாகத் தூண்டிவிடும்). ஜீவாத்மா பரமாத்மாவுடன் அபேதமாயிருக்கும் சாந்த நிலைக்கு இந்த ஸாதனை அழைத்துப் போகும்போது ஒரு கட்டத்தில் ஜபம் நின்று "அஜபா"வாகும்; ச்வாஸம் தன்னுல் ஹம்ஸ மந்த்ரம்

Koviloor Digital Library

என்று ஔபசாரிகமாகச் சொல்வதுடன் நடக்க ஆரம்பிக்கும். 'ஸோஹம்' என்பதிலுள்ள 'ஸ'வும் 'ஹ'வும் தேய்ந்து தேய்ந்து ஒடுங்கிப் போய் 'ஓம்' என்ற ப்ரணவம் மட்டும் நிற்கும். அது அப்படியே போய் துரீயம் என்பதான உத்தம ஸ்திதியில், ஆத்மாவில் ஐக்யப்படுத்திவிடும்.

"யோக" நித்ரை என்று மஹாவிஷ்ணு குண்டலினிப் பாம்பை வெளியில் ஆதிசேஷ பர்யங்கமாகக் காட்டிக் கொண்டு தூங்குவதுபோல த்யானிக்கும்போது இந்த அஜபா ஸாதனைதான் பண்ணிப் பரமாத்மாவான பரமேச்வர ஸ்வரூபத்தில் ஐக்யப்பட்டிருக்கிறார். அப்போது அவரது ப்ராண ஸஞ்சாரத்துக்கேற்றபடி பரமேச்வரன் ஆடுவது தான் த்யாகராஜாவின் அஜபா நடனம், அல்லது ஹம்ஸ நடனம்.

இதை ஒரு பிம்பமாக விஷ்ணுவின் ஹ்ருதயத்தின் மேலே ஈச்வரன் நாட்டியம் பண்ணுவதுபோலக் காட்டினால், ஜனங்களில் பெரும்பாலோராகவுள்ள விஷயம் தெரியாதவர்கள் தப்பாக நினைக்கும்படியாகும். முயலகனின் மீது நடராஜா ஆடுவது, பரமசிவனின் மார்மேலேயே காளி ஆடுவது ஆகியவை எப்படி சத்ரு ஸம்ஹாரமாகத் தெரிகின்றனவோ அப்படியே இதையும் நினைத்துவிடக்கூடும்! பேதமேயில்லை என்று ஒன்றாகப் போய்விடுகிற பரம மித்ரர்களான சிவ-விஷ்ணுக்களைப் பரம சத்ருக்களாக நினைப்பதாகிவிடும்!

இதனால்தான் திருவாரூர் பிம்பத்தில் எல்லாவற்றையும் நன்றாக மூடி, த்யாகராஜாவின் முகத்தை மாத்திரம் காட்டுவது.

ஆதிசேஷன் அவதாரம்

ஒரு நாள் ஸாயங்காலம் விஷ்ணு இப்படி த்யானம் பண்ணி சிவ தாண்டவத்தைப் பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தார். ஹ்ருதய கமலத்தில் ப்ரஸன்னமாயிருக்கும் நடன மூர்த்தியின் ஸ்வரூபத்தைப் பார்த்ததில் அவருக்கு ஸந்தோஷம் தாங்கமுடியாமல் பூரிப்பு ஏற்பட்டது.

Koviloor Digital Library

அந்த கனத்தை ஆதிசேஷனால் தாங்கமுடியவில்லை.

அவர் விஷ்ணுவிடம், "என்ன, இப்படி ஒரே பாரமாகி விட்டீர்களே! என்னால் தாங்கமுடியவில்லையே! என்ன காரணம்?" என்று கேட்டார்.

அதற்கு விஷ்ணு, "என் ஹ்ருதயத்தில் பரமேச்வரன் ந்ருத்தனம் பண்ணினார். அதுதான் பாரத்திற்குக் காரணம்" என்று பதில் சொன்னார்.

ஸந்தோஷத்தினாலேயே பாரம் என்கிறபோது அது அத்வைதம். ஈச்வரன் இவர் ஹ்ருதயத்தில் தோன்றியதால் பாரம் என்றால் இவர் ப்ளஸ் அவர் என்று இரண்டு பேர் சேர்ந்ததால் பாரம் என்பதாக த்வைதமாக அர்த்தம் கொடுக்கிறது. அத்வைதமாகப் பண்ணிக் காட்டியதைத் திருவாரூரில் முக்காலே மூணு வீசம் மூடிவைக்கும்படியாகி விட்டதல்லவா? அதனால், பொது ஜனங்களுக்கு அவர்களுக்குப் புரிவதான த்வைதமாகக் காட்டித்தான் அப்படியே அத்வைதத்திற்கு அழைத்துக்கொண்டு போகவேண்டும். ஆதிசேஷனின் மூலம் இதைப் பண்ணவேண்டும்' என்று பகவான் நினைத்தார். அதனால்தான் இப்படிச் சொன்னார். இப்படிச் சொன்னால் ஆதிசேஷன் என்ன கேட்பார் என்று அவருக்குத் தெரியும்.

அவர் நினைத்ததுபோலவே ஆதிசேஷன், "அப்படிப்பட்ட ஈச்வர தாண்டவத்தை நான் பார்க்க வேண்டுமே!" என்றார்.

அதற்குத்தான் பகவான் காத்துக்கொண்டிருந்தார். மூடி மறைத்துக்கொள்ளாமல் நன்றாகத் தாண்டவமாடுவதாக வெளியில் தெரிகிற நடராஜ மூர்த்தியிடம் பதஞ்ஜலியை அனுப்பி, அவருடைய பக்தி விசேஷத்தினால் சிதம்பர க்ஷேத்ரத்திற்கு மேலும் கீர்த்தி ஏற்படச் செய்து, எல்லா ஜனங்களும் வந்து கண்ணார தர்சனம் பண்ணி, தர்சனத்தினாலே முக்தி பெறச்செய்ய வேண்டுமென்பதுதான் அவருடைய ஆசை.

Koviloor Digital Library

திருவாரூரில் பிறந்தால் முக்தி: "ஜநநாத் கமலாலயே". பிறப்பது நம்மிஷ்டம் இல்லை! சிதம்பரத்தில் தர்சன மாத்திரத்தால் முக்தி: "தர்சநாத் அப்ர ஸதஸி". எங்கே பிறந்தவராலும் அங்கேபோய் தர்சனம் பண்ணி மோக்ஷத்திற்குப் போய்விடலாம். த்வைதமான தர்சனத்திலேயே அத்வைதமான மோக்ஷம்! பதஞ்ஜலியின் மூலம் சிதம்பர மஹிமையை ப்ரகாசிக்கச் செய்து ஸர்வ ஜனங்களுக்கும் மோக்ஷோபாயம் காட்ட பகவத் ஸங்கல்பம் ஏற்பட்டது.

மஹாவிஷ்ணு பதஞ்ஜலியிடம், "சிவ தாண்டவம்தானே பார்க்கணும்? பாரத வர்ஷத்தில் தக்ஷிண தேசத்தில் தில்லை வனத்தில் சிதம்பர க்ஷேத்ரம் இருக்கிறது. அங்கே சிவன் நடராஜாவாக ஆனந்தமாக ஆடிக்கொண்டிருக்கிறார். போய் தர்சனம் பண்ணிக்கொள்" என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

இவருடையவும் ஜனங்களுடையவும் ஆத்ம க்ஷேமத்திற்காக மட்டும் அனுப்பி வைக்காமல் அறிவு விஷயமாகவும் பூலோகமே உபகாரம் பெறும்படியாக இன்னொரு பெரிய கார்யத்தையும் கொடுத்தார். "நடராஜாவின் டமருக நாதத்தைக் கொண்டு பாணினி வ்யாகரண ஸூத்ரம் செய்திருக்கிறார். அதைப் புரிந்துகொள்ள மஹா மேதாவிகளைத் தவிர மற்ற எவராலும் முடியாமலிருக்கிறது. ஆகையால் தேவ பாஷையான ஸம்ஸ்க்ருதத்தின் அந்த வ்யாகரண ஸூத்ரங்களை நன்றாகப் புரியவைத்து பெரிய பாஷ்ய புஸ்தகம் எழுது" என்றும் ஆஜ்ஞாபித்தார்.

தூங்குகிற மஹாவிஷ்ணுவுக்குப் பாம்பு படுக்கை. அவர் உட்கார்ந்தால் அந்தப் பாம்பே ஸிம்ஹாஸனமாகிவிடும். நடந்து போனாரானால் குடை பிடிக்கும். ஆனால் மஹாவிஷ்ணு நாட்யம் ஆடுவதில்லை. சிவன்தான் ஆடுகிறவர். ஆடுகிறவருக்குப் பாம்பு எந்த விதத்தில் பணி செய்ய முடியும்? ஆபரணமாக அவர் உடம்பிலேயே நெளிந்துகொண்டு அலங்காரப் பணி செய்கிறது! ஈச்வரன் மேலே பல பாம்பு

Koviloor Digital Library

கள் நெளிகிறபோது, அவருடைய பாதத்தில் சிலம்பாகச் சுற்றிக்கொள்ள ஆதிசேஷன் போனுர்.

ஆதிசேஷப் பாம்பு பதஞ்ஜலி மஹர்ஷியாக அவதாரம் செய்து நடராஜாவிடம் போய்ச் சேர்ந்தது. அதனுல் மஹா விஷ்ணுவுக்கு சேஷபர்யங்கம் இல்லாமல் போய்விட்ட தென்று அர்த்தம் பண்ணிக்கொள்ளக் கூடாது. ஆதிசேஷன் அங்கேயும் இருந்துகொண்டே தம்முடைய அம்ச கலைகளினுல் பூமியில் ஒரு அவதார ரூபம் எடுத்தார்.

அத்ரி மஹர்ஷியின் புத்ரராகப் பதஞ்ஜலி அவதரித் தார். அதனுல் ஆத்ரேயர் என்று அவருக்கு ஒரு பெயர். (ஆசார்யாளும் ஆத்ரேய கோத்ரம்தான் என்று பார்த் தோம்.)

கோணிகா புத்ரர் என்றும் அவருக்கு ஒரு பெயர். சில புராணங்களை அநுஸரித்துப் 'பதஞ்ஜலி சரித'த்தில் அவர் கோணிகா என்ற தபஸ்வினிக்குப் புத்ரராகப் பிறந்த கதை யைச் சொல்லி, அதிலிருந்தே 'பதஞ்ஜலி' என்ற பெயர் ஏற்பட்டதற்குக் காரணம் சொல்லியிருக்கிறது.

கோணிகா அஞ்ஜலி முத்ரையுடன் கூடிய கையில் அர்க்ய ஜலத்தை வைத்துக்கொண்டு ஸூர்ய பகவானிடம் தனக்கு மஹாத்மாவான புத்ரனை அருளுமாறு வேண்டிக் கொண்டிருந்தாள். அப்போது ஆகாசத்திலிருந்து ஆதி சேஷன் அந்த அஞ்ஜலி ஹஸ்தத்தில் விழுந்து அவதாரம் எடுத்தார். 'பத்' என்றுல் 'விழுவது'. அஞ்ஜலி ஹஸ்தத்தில் விழுந்ததால் அவருக்குப் 'பதஞ்ஜலி' என்று மாதா பெயர் வைத்தாள்—இப்படி ('பதஞ்ஜலி விஜய'த்தில்) பெயருக்குக் காரணம் சொல்லியிருக்கிறது.

சரகர் என்றும் அவருக்கு ஒரு பெயர்.

அவர் ஆசைப்பட்டு ஜன்மா எடுத்தது நடராஜ தாண்டவம் பார்ப்பதற்காக. அந்த ஆசை பரிபூர்ணமாக நிறைவேறிற்று. சிதம்பரத்தில் வாஸம் செய்துகொண்டு,

Koviloor Digital Library

நடராஜாவை ஸதா கால தர்சனம் பண்ணி, அவருடைய முக்யமான இரண்டு பக்தர்களில் ஒருத்தராகிவிட்டார்.

இவருடைய ஆசை நிறைவேறுமாறு இவரை அனுப்பி வைத்த விஷ்ணுவுக்கு இவர் மூலமாக லோகோபகார மான அறிவுப் பணியும் நடக்கவேண்டும் என்பதல்லவா ஆசை? அந்த ஆசையும் நன்ருக நிறைவேறியது—பதஞ்ஜலி தேவ பாஷைக்கு வ்யாகரண மஹாபாஷ்யம் எழுதினுர். அவருக்கு அது மிகவும் ப்ரஸித்தியைக் கொடுத்தது.

திரிகரணத்திற்கும் திருத்தொண்டு

அவருடைய லோகோபகாரத் தொண்டு அதோடு முடிந்துவிடவில்லை. மனே-வாக்-காயம் என்று மூன்று சொல்கிருேமல்லவா? மூன்றுக்குமே பரமோபகாரம் பண்ணுவதான மூன்று ஆதார சாஸ்த்ரங்களை இயற்றிக் கொடுத்த ஒருவர் உண்டென்ருல் அது பதஞ்ஜலிதான்! இது அவருடைய தனிப் பெருமை! இப்படி த்ரிகரண சுத்திக்கும் அவர் பெரிய உதவி செய்திருப்பதைச் சொல்லி, அவருக்கு நமஸ்காரம் தெரிவிக்கும் ச்லோகம் இருக்கிறது :

யோகேந சித்தஸ்ய, பதேந வாசாம்,
மலம் சரீரஸ்ய ச வைத்யகேந |
யோ (அ)பாகரோத் தம் ப்ரவரம் முநீநாம்
பதஞ்ஜலிம் ப்ராஞ்ஜலி - ராநதோஸ்மி ||

'மும்மலம் அறுப்பது' என்று சைவர்கள் ஒரு அர்த்தத்தில் சொல்கிருர்கள். பதஞ்ஜலியும் இன்னெரு அர்த்தத்தில் 'மும்மலம் அறுப்ப'தற்கே மூன்று துறைகளில் புஸ்தகங்கள் எழுதியிருக்கிருர்.

மலம் என்ருல் அழுக்கு. அது மனஸ், வாக்கு, காயம் மூன்றுக்கும் ஏற்படக்கூடியது. அழுக்கு இருப்பது இந்த மூன்றுக்கும் ரோகம். அது போனல்தான் ஆரோக்யம்.

Koviloor Digital Library

டாக்டர் கேட்கிற முதல் கேள்வி மல விஸர்ஜனமாயிற்ரு என்பதுதானே?

மனஸுக்கு ஏற்படுகிற மலம் தப்பான சிந்தனைகள். அது போனால்தான் ஈச்வரானுபவம் கிடைக்கும்.

சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி

என்று மாணிக்கவாசகர் சொல்கிறுர்.

தப்பான சிந்தனை மட்டுமே மலம், நல்ல சிந்தனை என்பது அமலமான ஸத்வஸ்து என்று ஆரம்ப நிலைகளில் இருக்கும். அப்புறம், 'தப்பானது, நல்லது என்ற பேதமில்லாமல் சிந்தனை என்றும், சித்தம் என்றும், மனஸ் என்றும் ஒன்று இருப்பதே மலம்தான். மாயையால் ஆத்மாவுக்கு ஏற்பட்ட அழுக்குதான் மனஸ். அதனுல் எதையுமே சிந்திக்காதபடி மனஸை அழித்துப் போட்டால்தான் ஆத்மானுபவம் ஏற்படும்' என்று தெரியும். 'சித்த மலம்' என்று மாணிக்க வாசகர் சொல்லும்போது இப்படித்தான், சித்தத்துக்கு ஏற்படும் தப்புச் சிந்தனையான மலத்தைச் சொல்லாமல், சித்தத்தையே ஆத்மாவுக்கு ஏற்பட்ட மலமாகச் சொல்லி யிருக்கிறுர். அந்த மலம் ஈச்வரானுக்ரஹத்தில் அகன்று சிவமாவதுதான் ஆத்ம ஸ்வரூபமாக நிற்பது.

சித்த மலம் போக நன்ருக அலும்புவதற்கு ஏற்பட்டதே யோகம். "யோகேந சித்தஸ்ய" என்று ஆரம்பித்திருப்பது இதைத்தான்.

யோக ஸாதனைக்கு ஆதார நூலாக உள்ள 'யோக ஸூத்ர'த்தை எழுதியதே பதஞ்ஜலிதான். அதனுல் 'பாதஞ்ஜல யோக ஸூத்ரம்' அல்லது வெறுமனே 'பாதஞ்ஜலம்' என்று மட்டுமே அது சொல்லப்படுகிறது.

மனஸை அடக்கிப் பரமாத்மாவோடு சேர்க்கை ஏற்படுத்தித் தருவதாலேயே அதற்கு யோகம் என்று பெயர்.

இன்றைக்கும் மேல்நாட்டினர் உள்படப் பலர் சாஞ்சல்ய மயமான ஸம்ஸார வாழ்க்கையிலிருந்து சாந்தியைத் தேடிக்

Koviloor Digital Library

கொண்டுபோய், "Yoga" தான் இதற்கு ஸரியான வழி என்று பின்பற்றுவதைப் பார்க்கிறோம். அதற்கான கார்ய க்ரமத்தை ரொம்பவும் நுணுக்கமாக, scientific-ஆகப் பதஞ்ஜலியின் ஸூத்ரத்தில் விளக்கியிருக்கிறது என்று கொண்டாடவும் கேட்கிறோம்.

பலவிதமான யோகங்கள் இருந்தாலும் பதஞ்ஜலி ஏற்படுத்தியதற்கே "ராஜ யோகம்" என்று பட்டம் கொடுத்திருக்கிறது.

இது அவர் பண்ணிய தலையான பணி. ஜீவாத்மாவைப் பரமாத்மாவோடு சேர்த்து வைக்கிற பணி. த்ரிகரணங்களில் இது மனஸ் என்பதற்குப் பண்ணியது: "யோகேன சித்தஸ்ய".

அடுத்தது வாக்(கு).

அதற்காகத்தான் வ்யாகரண மஹாபாஷ்யம். முன்னேயே சொன்ன விஷயம்.

"பதேந வாசாம்" என்று சொல்லியிருப்பது இதைத் தான்.

'சித்த மலத்தை யோக ஸூத்ரத்தாலும் (யோகேந சித்தஸ்ய), வாக்கின் மலத்தை மஹாபாஷ்யத்தாலும் (பதேந வாசாம்) போக்கினர் (அபாகரோத்)' என்று சொல்லியிருக்கிறது.

'யோகேந' என்று (யோகத்தைச்) சொன்னதுபோல 'வ்யாகரணேந' என்று (வ்யாகரணத்தைச்) சொல்லவில்லையே—என்று தோன்றலாம், 'பதேந' என்று சொல்லியிருக்கிறதோல்லியோ? 'பதம்' என்றாலே வ்யாகரணம், இலக்கண சாஸ்த்ரம் என்று அர்த்தம். 'பதாநுசாஸனம்' என்றும் நீட்டியும் சொல்வார்கள். பதம் என்றாலே போதும். "பதம் வ்யாகரணம் ப்ரோக்தம்" : இலக்கண நூல் 'பதம்' என்று கூறப்படுகிறது. இலக்கணம் எதற்கு? பாஷையை ஒழுங்குபடுத்தி விதிகளைத் தருவதற்குத்தான். பாஷை என்பது சொற்களைத்தானே தாய்ச் சரக்காகக் கொண்டது? சொல்தானே பதம்? அதனால் பதம் என்றாலே இலக்கணந் தான்.

Koviloor Digital Library

ஸம்ஸ்க்ருதப் புஸ்தகங்கள், சாஸனங்கள் முதலானவற்றில பெரியவர்களாக இருப்பவர்களைக் குறிப்பிடும்போது அவர்களுடைய குடும்பப் பெரியவர்கள், வம்சம், ஆசார்யர், அவர்கள் இருந்த இடம் ஆகியவற்றின் பேரையும் (எல்லாவற்றையுமோ, சிலவற்றையோ) சொல்லி, அந்தப் பெரியவரைக் குறிப்பிடும்போது, "இதி ஸ்ரீமத் பத-வாக்ய-ப்ரமாண-பாராவார-பாரீண" என்று நீளமாக ஒரு அடைமொழி கொடுத்திருக்கும். நிஜமாக ஒருவர் வித்வத்தில் பெரியவராக இருந்தால் அவர் இந்த அடைமொழிக்குத் தகுதி பெற்றிருக்க வேண்டும்; பெற்றும் இருப்பார்.

'பத-வாக்ய-ப்ரமாண' என்பதில் 'பதம்' என்றால் வ்யாகரணம்தான். 'வாக்யம்' என்றால் மீமாம்ஸை, அதாவது பூர்வ மீமாம்ஸை. மீமாம்ஸா சாஸ்திரம் வேத வாக்யங்களை எடுத்துக்கொண்டு அலசி அலசி அர்த்தம் விசாரிப்பதால் 'வாக்யம்' என்று அதற்கே பேர். 'ப்ரமாணம்' என்பது ந்யாயம், அதாவது தர்க்க சாஸ்திரம். இதனால் இது இப்படி என்று ப்ரமாணங்களைக் காட்டிக் காட்டியே அது விதிகளை வகுப்பதால் 'ப்ரமாண சாஸ்த்ரம்' என்று பேர் பெறுகிறது—"பத-வாக்ய-ப்ரமாண..."

"பாராவார-பாரீண": 'பாராவாரம்' என்றால் ஸமுத்ரம். 'பாரீண' என்றால் கரை கடந்தவர்.

சேர்த்துப் பார்த்தால் "பத வாக்ய ப்ரமாண பாராவார பாரீண" என்பதற்கு, 'வ்யாகரணம், மீமாம்ஸை, தர்க்கம் என்ற கடல்களின் கரை கடந்த புத்திமான்' என்று அர்த்தம்.

சதுச்-சாஸ்த்ரங்கள் என்று தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம் ஆகிய நான்கைச் சொல்வார்கள். அதில் முதல் மூன்றைத்தான் கொஞ்சம் வரிசை மாற்றி 'பத-வாக்ய-ப்ரமாணம்' என்று, ஒரு வித்வத் ச்ரேஷ்டருக்கு அவச்யம் பாண்டித்யம் இருக்கவேண்டிய மூன்று சாஸ்த்ரங்களாகச் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

'பதேந வாசாம் (மலம் அபாகரோத்)': 'பதத்தினால் பதஞ்ஜலி வாக்கின் மலத்தை அகற்றினார்' என்கிற இடத்தில் பதம் என்பது அவர் எழுதிய வ்யாகரண புஸ்தகத்தைக் குறிக்கிறது என்பதற்காகச் சொன்னேன்.

ஸம்ஸ்க்ருத பாஷா விசேஷங்களை ரொம்பவும் நுணுக்கமாகப் புரியவைத்து அவர் இலக்கண நூல் செய்திருப்பதற்கு விசேஷமான சிறப்பு உண்டு. ஸம்ஸ்க்ருதம் தேவ பாஷை என்றால் தேவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்கிற பாஷை என்று அர்த்தம். இங்க்லாண்டில் இருக்கும் இங்கிலீஷ்காரர்கள் பேசுவதை இங்கிலீஷ் என்கிறோம். ப்ரான்ஸில், ஜெர்மனியில், ஜப்பானில், இங்கே பெங்காலில், மஹாராஷ்ட்ராவில், மலையாளத்தில் உள்ள ப்ரெஞ்சுக்காரர்கள், ஜெர்மானியர்கள், ஜப்பானியர்கள், பெங்காலிகள், மராட்டியர்கள், மலையாளத்தார்கள் பேசுகிற பாஷைகளை அந்தந்த தேசம், அந்தந்த ஜனக்கூட்டம் ஆகியவற்றின் பெயரை வைத்தே ப்ரெஞ்ச், ஜெர்மன், ஜப்பானீஸ், பெங்காலி, மராட்டி, மலையாளம் என்றெல்லாம் சொல்கிறோம். ஹிந்தியில் வ்ரஜ பாஷா, மைதிலீ என்றெல்லாம் பிரிவுகள் இருக்கின்றனவென்றால் அவையும் வ்ரஜம், மிதிலா என்ற இடங்களை வைத்து ஏற்பட்ட பேர்கள்தான். அம்மாதிரி தேவ பாஷை என்றால் தேவலோகத்தில் தேவர்கள் பேசுவது என்று அர்த்தம். இங்கிலீஷ்காரன் நம்மை ஆண்டால் அவனோடு பேசுவதற்காக நாம் இங்கிலீஷ் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறதல்லவா? அப்படியே லோகம் முழுவதையும் ஸூக்ஷ்மமாக இன்ன துறைக்கு இன்னார் என்று ஆள்வது தேவர்களேயாகையால் அவர்களுடைய பாஷையையும் நாம் ஸரியாக, முறையாகத் தெரிந்துகொள்ளத்தானே வேண்டும்? கர்மாநுஷ்டானங்களில் வரும் மந்த்ரங்களையும், ச்லோகம் முதலானவற்றையும் நாம் ஸரியாகத் தெரிந்து கொண்டு சொல்வது தேவர்களோடேயே நாம் பேசுவது தான்! இதற்கு வ்யாகரண ஞானம் அத்யாவச்யம் அல்லவா?

Koviloor Digital Library

ஞானம் மொழி கடந்தது. பக்தியை, அதாவது அன்பை, எந்த மொழியிலும் வெளிப்படுத்தலாம். ஆனால் நாம் சாஸ்திர கர்மாவும் நிறையச் செய்தேயாக வேண்டிய நிலையில்தானே இருக்கிறோம்? அதனால் சாஸ்திரங்கள் அமைந்துள்ள ஸம்ஸ்க்ருதத்தை ஸரிவரத் தெரிந்து கொள்ளத்தானே வேண்டும்?

தவிரவும், பழுதேயில்லாத அக்ஷரங்களைக் கொண்ட ஸம்ஸ்க்ருதத்தை வ்யாகரண விதியறிந்து உச்சரிப்பதே ஒரு மந்த்ரயோகமாகி நமக்கு நாடி சுத்தியையும், அதன் வழியாகச் சித்த சுத்தியையும் தரும்.

இவற்றோடு, நவீன ஸயன்ஸுக்கு ஆங்கில ஞானம் அவச்யம் என்பதுபோலவே ஆத்ம சாஸ்த்ரங்களை அறியவும், பாரத கலாசாரத்தின் ஸகல அம்சங்களையுமே அறியவும் ஸம்ஸ்க்ருத ஞானம் அவச்யமாகிறது. இதனாலெல்லாந்தான் 'மஹாபாஷ்ய'த்திற்கு உயர்வு.

மனோ வாக்குகள் ஆச்சு. காயம் பாக்கி இருக்கிறது. சரீரத்திற்கு ஏற்படும் மலத்தை அகற்ற அவர் என்ன செய்திருக்கிறார்?

மலம் சரீரஸ்ய ச வைத்யகேந

சரீரத்துக்கு அழுக்கு வியாதிகள்தான். வ்யாதியில்லாமல் ஆரோக்யமாக இருந்துகொண்டிருப்பதுதான் த்ரிகரண சுத்தியில் சரீர சுத்தியாகும். இதற்காகப் பதஞ்ஜலி அநுக்ரஹித்ததுதான் வைத்ய சாஸ்த்ரம். "மலம் சரீரஸ்ய ச வைத்யகேந".

ஆயுர்வேதத்தின் ஆதார சாஸ்த்ர புஸ்தகம் அவர் எழுதியதுதான். "சரகம்" என்று அதற்குப் பேர். அவருக்குச் சரகர் என்று பெயர் உண்டானதலால் அவர் எழுதியது 'சரகம்'. ஆத்ரேயர் என்று அவருக்கு இன்னொரு பேர் இருப்பதை வைத்து, அதை "ஆத்ரேய ஸம்ஹிதை" என்றும் சொல்வதுண்டு.

Koviloor Digital Library

சரீர ஸம்பந்தமான அவருடைய வைத்ய நூலுக்குப் "பதஞ்ஜலி" என்ற பெயரை வைத்து 'டைட்டில்' இல்லை. மனஸு ஸம்பந்தமாகவும், வாக்கு ஸம்பந்தமாகவும் அவர் எழுதிய மற்ற இரண்டு நூல்களில் "பதஞ்ஜலி" என்ற பெயரில் மட்டும்தான் அவரைக் குறிப்பிட்டிருக்கிறது.

த்ரிகரண சுத்திக்கும் உசந்த சாஸ்த்ரங்களைக் கொடுத்துள்ள அவர் காய சுத்திக்குக் கொடுத்திருக்கும் வைத்ய சாஸ்த்ரத்திலேயே த்ரி-தாது சுத்தி என்பதாகப் பித்தம், வாதம், கபம் என்ற மலங்கள் நீங்க வழி சொல்லியிருக்கிறார்!

தப்பாக நினைக்காமல் சித்தத்தைத் திருத்தி, அப்புறம் நிறுத்தியே விடுவதற்கு யோக ஸூத்ரம்; தப்பாகப் பேசாமல் திருத்துவதற்கு மஹா பாஷ்யம்; தப்பாகக் கார்யம் செய்யாமல் திருத்துவதற்கு சரகம் என்றிப்படி மூன்று உத்தம நூல்களைக் கொடுத்திருக்கிறார். (உடம்பு ஸரியில்லாவிட்டால் கண் தெரியாமல், காது கேட்காமல், நடக்க முடியாமல், கார்யம் செய்ய முடியாமலாகிச் செய்வதெல்லாம் தாறுமாறாகத்தானே போகிறது? இதைத் திருத்தி நல்லபடி ஆக்கத்தான் வைத்ய சாஸ்த்ரம்.)

இந்த மூன்று நூல்களில் மஹாபாஷ்யத்துக்கு முதநூலான பாணினி ஸூத்ரங்களுக்கு 'அஷ்டாத்யாயி' என்று பெயர்—எட்டு அத்யாயமிருப்பதால். பதஞ்ஜலியே முதநூலாகச் செய்த யோக ஸூத்ரங்கள் 'அஷ்டாங்க யோகம்' என்பதைக் குறித்தது—அந்த ஸாதனையில் எட்டு அங்கங்கள் இருப்பதால். வைத்ய சாஸ்த்ரமாகவும் 'அஷ்டாங்க ஹ்ருதயம்' என்று ஒன்று உண்டு. ஆனால் அது இவருடைய சரக ஸம்ஹிதையல்ல. (வாக்படர் என்பவர் எழுதிய தனி நூல்.)

த்ரிகரணத்தாலும் தப்பு செய்யாமல் திருத்தித் தந்த பரமோபகாரி பதஞ்ஜலி மஹர்ஷி. அவை ஒவ்வொன்றின் அசுத்தியையும் நிவ்ருத்தி செய்தவர். "அபாகரோத்" என்பதற்கு 'நிவ்ருத்தி செய்தார்' என்று அர்த்தம்.

Koviloor Digital Library

அப்படிப்பட்டவரை "முநீநாம் ப்ரவரம்" என்று சொல்லி யிருக்கிறது. முனிச்ரேஷ்டரை 'முனிவரர்' என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள். அந்த முனிவரர்களிலும் முன்னால் நிற்பவராதலால் இவர் முனி ப்ரவரர்! ஆசார்ய பரம்பரை யின் ப்ரவரம் சொல்வதாக ஆரம்பித்ததேன்; அதிலே ப்ரவரராக இவர் வந்து நிற்கிறார்!

"இப்படியாகப்பட்ட பதஞ்ஜலிக்கு விசேஷமாக அஞ்ஜலி தெரிவித்து வணங்கி நிற்கிறேன்" என்று ச்லோகம் முடிகிறது.

பதஞ்ஜலிம் ப்ராஞ்ஜலிர்-ஆநதோஸ்மி

இந்த மூன்று நூல்களைப் பற்றி இன்னும் ஒரு விசேஷம் சொல்கிறேன்: எந்த சாஸ்த்ரமானாலும் அதற்கு மூன்று விதமான நூல்கள் உண்டு—ஸூத்ரம், பாஷ்யம், வார்த்திகம் என்று மூன்று. ஸூத்ரம்தான் basic text-ஆதாரமான அடிப்படை நூல். சாஸ்த்ரக் கோட்பாடுகளை மிகச்சுருக்கமாக அதில் கொடுத்திருக்கும். அதைப் புரியும்படியாக விளக்கி எழுதுவதே பாஷ்யம். பாஷ்யத்திலும் கடினமாக உள்ள இடங்களை இளக்கிக் கொடுத்து, கொஞ்சம் சொல்லி விட்டதையும், சொல்லாமலே விட்டதையும் விளக்கி விஸ்தாரம் செய்வதே வார்த்திகம். சில சாஸ்த்ரங்களில் இந்த மூன்றில் ஸூத்ரத்திற்கு அதிக ப்ரக்யாதி இருக்கும்; அதையே 'அதாரிடி'யாக வைத்துக்கொள்வார்கள். சிலதில் பாஷ்யத்திற்கு, சிலதில் வார்த்திகத்திற்கு என்று க்யாதியும் 'அதாரிடி'யும் இருக்கும். மூன்றுக்குமே ஸம ப்ரக்யாதி, மூன்றில் இரண்டிற்கு ஸம ப்ரக்யாதி என்றெல்லாமும் இருப்பதுண்டு.

பதஞ்ஜலி செய்த மூன்று நூல்களில் யோகத்துக்குச் செய்தது 'ஸூத்ரம்'; வ்யாகரணத்துக்குச் செய்தது 'பாஷ்யம்'; வைத்யத்துக்குச் செய்தது 'வார்த்திகம்.'*

---

* 'வ்யாகரண மஹாபாஷ்யம்.......

ஸூத்ராணி யோக சாஸ்த்ரே வைத்யகசாஸ்த்ரே ச வார்த்திகாநி நத : க்ருத்வா பதஞ்ஜலி முநி :....(பதஞ்ஜலி சரிதம் V. 24-25)

Koviloor Digital Library

இவற்றின் தனிச் சிறப்பு என்னவென்றால், ஸூத்ரமோ, பாஷ்யமோ, வார்த்திகமோ எதுவானாலும் அந்தந்த சாஸ்த்ரத்திலும் அதுதான் அதாரிடி, அதற்குத்தான் ஜாஸ்தி ப்ரக்யாதி என்றிருப்பதேயாகும்! யோக சாஸ்த்ரத்தில் பாதஞ்ஜல ஸூத்ரம்தான் முதலிடம் பெறுகிறது. அந்த ஸூத்ரத்திற்கு வ்யாஸர் எழுதியுள்ள பாஷ்யத்திற்கோ, வ்யாஸ பாஷ்யத்திற்கு வாசஸ்பதி மிச்ரர், விஞ்ஞானபிக்ஷு ஆகியவர்கள் எழுதியுள்ள வார்த்திகத்திற்கோ அவ்வளவு ப்ராபல்யமில்லை. வ்யாகரணத்தை எடுத்துக் கொண்டால் பாணினியின் ஸூத்ரம் எத்தனை 'லாஜிக'லாகவும், ஒன்றும் விட்டுப் போகாமலும் தேவபாஷா மர்மங்களுக்கு ரூல்கள் பண்ணி விளக்கியிருக்கிறது என்று எல்லாரும் அதிசயப் பட்டாலும் அதைப் புரிந்துகொள்ள மண்டையை உடைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அதை ம்ருதுவாக்கி இளக்கி, விளக்கிக் கொடுக்கும் பதஞ்ஜலியின் பாஷ்யத்திற்கே அதிக ப்ரக்யாதி இருக்கிறது. அதுவே 'அதாரிடி' என்று காட்டு கிறதுபோல, வேறே எந்த சாஸ்திரத்திலும் உள்ள பாஷ்ய நூல்களுக்கு இல்லாத அடைமொழியாக இது ஒன்றுக்கே 'மஹா' போட்டு 'மஹா பாஷ்யம்' என்று சொல்லப்படு கிறது! வைத்ய சாஸ்த்ரத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் அதிக க்யாதி, அதிக ப்ரசாரம், அதாரிடி பெற்றிருப்பது வார்த்திக க்ரந்தமான "சரகம்"தான்! ஆதிவைத்ய நூல் களில் இன்னொன்றாக இருப்பது ஸுச்ருதர் என்பவர் செய்தது. ரணசிகித்ஸையைக் குறிப்பாக விளக்கும் அந்த நூலில் சொல்லியுள்ள ஸர்ஜரி முறைகள், ஸர்ஜிகல் கருவிகள் ஆகியவற்றைப் பற்றி 'அறிஞருலகம்' எனப்பட்ட சிலபேர் கொண்டாடிப் பேசினாலும், நடைமுறையில் பார்த்தால் ரணசிகித்ஸையில் இந்த முறை எடுபட்டுப் போய் இங்கிலீஷ் முறைதான் பின்பற்றப்பட்டுவருகிறது. சரகத்தில் உள்ளபடி உள்ளுக்கு மருந்து சாப்பிடுவதுதான் ஆயுர்வேதம் என்றே பெயர் பெற்று நடைமுறையில் இருக்கிறது.

Koviloor Digital Library

நடனம் என்றால் அதற்கு பரத சாஸ்த்ரம், அரசியல் என்றால் அர்த்த சாஸ்த்ரம் என்பதுபோல வைத்யம் என்றால் சரகம், வ்யாகரணம் என்றால் மஹா பாஷ்யம், யோகம் என்றால் பாதஞ்ஜல ஸூத்ரம் என்று அவருடைய புஸ்தகங்களே ப்ரதான க்ரந்தங்களாகப் புகழ்பெற்றிருக்கின்றன. ஒரு விதத்தில் மூன்றுமே வைத்ய புஸ்தகங்கள்தான்! வாக்கு மலம் போக வைத்யம் பண்ணுவது மஹாபாஷ்யம். மனோ மலம் போக வைத்யம் பண்ணுவது யோக ஸூத்ரம்.

ஆத்மாவுக்கான சாஸ்திரம் என்று பார்த்தால் யோக ஸூத்ரத்துக்கு முக்யத்வம் இருந்தாலும் அறிவுக்கான, அறிவாளிகளுக்கான வித்யை என்று எடுத்தால் இவற்றில் ஸம்ஸ்க்ருத பாஷையை முறையாகக் கற்பிக்கும் மஹா பாஷ்யத்துக்குத்தான் முக்யத்வம். அதுதான் ரொம்பப் பெரிய புஸ்தகமும். ஆத்ம சாஸ்திரங்களைப் படித்துப் புரிந்து கொள்ளவும் இலக்கணம் அவச்யம்தானே?

யோகத்துக்கு எதிர் ஸித்தாந்தங்களுண்டு. அத்வைதமே கொஞ்சம் அப்படித்தான் என்றேன். மஹாபாஷ்யமோ ஸகலருக்கும் ஸம்மதமானது.

ஆகையினால் சிதம்பரத்தில் ஏராளமான சிஷ்யர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு மஹாபாஷ்ய பாடம் சொல்லித் தருவது என்றே பதஞ்ஜலி ஆரம்பித்தார். நடராஜாவின் உடுக்குச் சப்தத்திலிருந்தே பாணினி சப்தங்களை க்ரஹித்து வ்யாகரண ஸூத்ரங்களைச் செய்தார். அதற்கு வ்யாக்யானம்தானே மஹாபாஷ்யம்? அதனால் அது சிதம்பரம் கோயிலிலேயே போதிக்கப்படுவது ரொம்பவும் பொருத்தமாகிவிட்டது.

பாணினியின் ஸூத்ரத்தையும், பதஞ்ஜலியின் பாஷ்யத்தையும் நடராஜ மூர்த்தியின் கையோடும், காலோடும்

Koviloor Digital Library

ஸம்பந்தப்படுத்தி வேடிக்கையாக ஒரு ச்லோகம் இருக்கிறது*.

கைக்குப் பேர் பாணி. நடராஜாவின் பாணியிலுள்ள உடுக்குச் சப்தத்திலிருந்துதானே பாணினியின் ஸூத்ரம் பிறந்தது? அதை அந்த ச்லோகத்தில் நடராஜாவின் கையிலிருந்து எழும்பும் சப்தம் வ்யாகரணத்திற்கு ஆதார நூலைத் தந்ததாகச் சொல்லியிருக்கிறது.

கால் ஸமாசாரம் என்ன? நடராஜாவின் பாதத்துக்கும் பதஞ்ஜலியின் பாஷ்யத்துக்கும் என்ன ஸம்பந்தம்?

நடராஜாவின் காலடியில் நின்று தர்சனம் செய்வதோடு பதஞ்ஜலிக்கு த்ருப்தி உண்டாகவிடவில்லை. அதனால், நர்த்தனம் செய்கிற அந்தப் பாதத்திலேயே பாம்பு ரூபத்தில் பாதஸரமாகச் சுற்றிக்கொண்டு ஸந்தோஷப்படுவார். பாதஸரப் பதஞ்ஜலியின் வாயில் எப்பொழுதும் மஹா பாஷ்யம் இருக்கும்.

இதையே ச்லோகத்தில், நடராஜாவின் கையிலிருந்து எழும்பும் சப்தத்தில் வ்யாகரண ஸூத்ரம் இருப்பதுபோல காலிலிருந்து (காற்சிலம்பிலிருந்து) எழும் சப்தத்தில் அந்த ஸூத்ரத்தின் பெரிய பாஷ்யம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறது!

பிற்காலத்திலும்கூட சிவன் கோவில்களிலேயே வ்யாகரணம் போதிப்பதற்கென்று 'வ்யாகரணதான மண்டபம்' என்று ஒரு இடம் ஏற்பட்டது.

ஆயிரம் சீடருக்கு அதிசயப் பாடம்!

சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் பதஞ்ஜலி பாடம் நடத்தினார். அவரோ ஆயிரம் நா படைத்த ஆதிசேஷன்!

---

* யஜ்ஞ நாராயண தீக்ஷிதரின் 'ஸாஹித்ய ரத்னாகரம்''-XI. 124

''தெய்வத்தின் குரல்'' இரண்டாம் பகுதியில் 'வியாகரணம் : வேதத்தின் வாய்' என்ற உரையில் 'வியாகரணமும் சிவபெருமானும்' என்ற பிரிவின் கடைசிப் பகுதி பார்க்க.

Koviloor Digital Library

ரொம்பவும் விஸ்தாரமான விஷயமென்றால், 'ஆயிரம் நா படைத்த ஆதிசேஷன்தான் சொல்லணும்' என்றே வசன மிருக்கிறது. மஹாபாஷ்யம் அவ்வளவு விஸ்தாரமானது. ஸாதாரணமாகப் பதஞ்ஜலி மநுஷ்யருபத்தில் ஒரு ரிஷியாகத் தெரிந்து கொண்டிருந்தவர்தான். ஒரு முகம், ஒரு நாக்கு என்று இருந்தவர்தான். இப்போது என்ன ஆயிற்றென்றால் அவர் நிஜமாகவே ஆயிரம் நா படைத்த ஆதிசேஷ ருபத்தையே எடுத்துக் கொள்ளும்படியாயிற்று.

ஏனென்றால், அவரிடம் பாடம் கேட்க ஆயிரம் சிஷ்யர்கள் சேர்ந்துவிட்டார்கள்.

வித்யையை, அதிலும் பாஷா சாஸ்த்ரத்தை, அறிவதில் இந்த தேசத்தில் ஆதிகாலத்திலிருந்து இருந்துவந்துள்ள அக்கறை அதிசயமானது. தேசத்தின் ஒரு மூலைக்கு மறு மூலை போய்க்கூட வித்யாப்யாஸம் செய்தார்கள். அப்படி இப்போதும் இந்தப் பெரிய உபகண்டத்தின் நாலா திசையிலிருந்தும் சிதம்பரத்துக்கு வித்யார்த்திகள் வந்து விட்டார்கள்.

அவர்களில் ஒவ்வொருவருக்கும் 'இன்டிவிஜுவல் அடென்ஷன்' கொடுத்து (தனிப்பட்ட கவனம் செலுத்தி) பாடம் சொல்லவேண்டும், முடிந்த மட்டும் சீக்ரமாக இதைச் செய்து முடிக்கவேண்டும் என்று பதஞ்ஜலி நினைத்தார். எந்த சிஷ்யன் எந்தக் கேள்வி கேட்டாலும் தாமஸமில்லாமல் உடனே பதில் சொல்லவேண்டுமென்று நினைத்தார். இப்படி ஒவ்வொருவருக்கும் பாடம் சொல்லி, ஒவ்வொருவரிடமும் தனியாக ஸந்தேஹங்கள் கேட்டு நிவர்த்தி செய்வதென்றால் ஒரு முகத்தோடு, ஒரு வாயோடு இருந்தால் போதாது என்று எண்ணினார். அதனாலேயே ஆயிரம் சிரஸுள்ள ஆதிசேஷ ஸ்வருபத்தையே பாடம் சொல்லும் காலத்தில் எடுத்துக்கொள்வது என்று தீர்மானித்தார்.

ஆனால் ஆதிசேஷ ஸாந்நித்யத்தை மநுஷர்களால் தாங்கமுடியாது. அதனுடைய த்ருஷ்டி பட்டால் போதும்,

Koviloor Digital Library

அல்லது மூச்சுக் காற்றுப் பட்டால் போதும், எந்த மநுஷ்ய ராஞலும் பஸ்மமாய்ப் போய்விடவேண்டியதுதான். ஆதிசேஷன் பார்ப்பது மட்டுமில்லே, ஆதிசேஷனேப் பார்த்தாலுங்கூட, பார்க்கிற மநுஷர் பஸ்மாவாகிவிட வேண்டியதுதான்! அவ்வளவு உக்ரம்!

அதஞல் என்ன உத்தேசித்தாரென்ருல்,......தம்மைச் சுற்றி ஒரு திரையைப் போட்டுக்கொண்டு அதற்குள் ஆதிசேஷ ரூபத்தில் இருப்பதென்றும், சிஷ்யர்களேத் திரைக்கு வெளியில் தம்மைச் சுற்றி, ஒவ்வொரு முகத்துக்கும் நேரே ஒரு சிஷ்யன் இருக்கும் விதத்தில் உட்காரவைத்துக் கொள்வதென்றும் தீர்மானித்துக்கொண்டார்.

இப்படி குரு கண்ணில் படாமல் மறைவாக இருப்பதால் சிஷ்யர்களில் யாராவது இஷ்டப்படி வெளியிலே சுற்றப் போய்விட்டால் என்ன பண்ணுவது? அப்படி ஆகாமல் பயமுறுத்தி மிரட்டித் தடுக்கவேண்டுமென்று நினேத்து, 'உத்தரவில்லாமல் யாராவது வெளியே போஞல் அவர்கள் ப்ரம்ம ரக்ஷஸாகிவிடுவார்கள்' என்று சாபமாக ஆஜ்ஞை செய்தார்.

பிரம்மரக்ஷஸ்; ராக்ஷஸ ஜாதி

ப்ரம்ம ராக்ஷஸம் என்கிருேமே, அதுதான் ப்ரம்மரக்ஷஸ்.

அது பிசாசைப் போன்ற ஒருவிதப் பிறவி. தேவதைகளில் அநேக விதம் இருப்பதுபோலப் பிசாசுகளிலும் உண்டு. மநுஷர்கள், பக்ஷிகள், ம்ருகங்கள் எல்லாவற்றிலும்தானே விதம் விதமாகப் பார்க்கிருேம்?

வேடிக்கை என்னவென்ருல் ராக்ஷஸ ஜாதியிலேயே பலவிதம் இருந்தாலும் அந்த ராக்ஷஸ ஜாதி என்பதே பலவிதமான தேவ ஜாதிகளில் ஒன்றுதான்! தேவர்கள் என்று பொதுவாக நாம் சொல்பவர்களோடு ராக்ஷஸர்கள் சண்டை போட்டதாகவே புராணங்களில் பார்ப்பதால் அவர்கள் வேறே ஜாதி, இவர்கள் வேறே ஜாதி என்று

Koviloor Digital Library

தோன்றினாலும், வாஸ்தவத்தில் ராக்ஷஸர்களும் தேவ ஜாதிகள் பலவற்றுக்குள்ளேயே தாழ்ந்து தாழ்ந்துபோய் க்ரூரமாக இருக்கும் ஒரு பிரிவுதான்! அஸுரர்கள் என்பவர்தான் தேவ ஜாதிக்கு முற்றிலும் வேறானவர்கள். ஸுரர் என்ற தேவருக்கு நேரெதிர் அஸுரர்தான். பேச்சு வழக்கிலுங்கூட 'தேவாஸுர' என்கிறோமே தவிர 'தேவ ராக்ஷஸ' என்று சொல்வதில்லையல்லவா? 'அமர'த்தில் ஆதித்யர்களில் ஆரம்பித்து தேவ ஜாதிகளைச் சொல்லிக் கொண்டு போகும்போது "வித்யாதர-அப்ஸரஸோ-யக்ஷ-ரக்ஷோ-கந்தர்வ-கிந்நரா" என்று ராக்ஷஸர்களையும் உள்ளடக்கிச் சொல்லியிருக்கிறது. இவர்களெல்லாம் தேவ ஜாதிகள் "தேவ யோநய:" என்று முடித்துவிட்டு அப்புறம் அஸுர ஜாதிகளை "அஸுரா-தைத்ய-தைதேய-தநுஜ" என்று அடுக்கியிருக்கிறது.

இந்த ராக்ஷஸ ஜாதிக்குள் அப்புறம் பல பிரிவுகள், உபஜாதிகள்—மநுஷ்ய ஜாதியிலேயே நாலு ஜாதி, அப்புறம் அதில் ஒவ்வொரு ஜாதியிலும் ஸப்-ஸெக்டுகள் என்று இருக்கிறது போல. அப்படி ராக்ஷஸ ஜாதியைச் சேர்ந்த ஒன்றுதான் ப்ரம்ம ரக்ஷஸ். பிசாசு மாதிரியான ஆவி வகைகளைச் சேர்ந்தது அது. (ஆச்சர்யமாயிருக்கலாம்: பிசாசுகூட தேவ ஜாதியில் வருவதுதான்! "பிசாசோ குஹ்யக: ஸித்தோ பூதோ (அ)மீ தேவயோநய:" என்று 'அமர'த்தில் முடித்திருக்கிறது) வேதாத்யயனம் நன்றாகப் பண்ணியும், துன்மார்க்கத்தில் போய் மற்ற ப்ராம்மணர்களுடைய ஸொத்து, ஸ்த்ரீ முதலானவற்றை அபஹரித்து அல்பாயுஸில் செத்துப்போனவர்கள் அந்த வேத ஞாபகத்தோடேயே பிசாசு மாதிரி இருப்பதுதான் ப்ரம்மரக்ஷஸ். அதற்கு ஆஹாரம் தினந்தோறும் வேதம் தெரிந்த ஒரு ப்ராம்மணனைச் சாப்பிடுவதுதான்! மாறு வேஷத்தில் போய், அத்யயனம் செய்தவர்களிடம் நயமாகப் பேசி நீள இழுக்கடித்துக்கொண்டு தனியிடத்துக்குப் போய் வேத சாஸ்த்ர ஸம்பந்தமாகவே அநேகம் கேள்விகள் கேட்கும். அவர்கள்

Koviloor Digital Library

பதில் தெரியாமல் முழிக்கும்போது அடித்து பக்ஷித்துவிடும். 'ப்ரம்ம ராக்ஷஸம் அடிச்சுப் போட்டுடுத்து' என்று க்ராமாந்தரங்களில் சொல்வதுண்டு.

விபரீதம் விளைந்தது!

தாம் திரைபோட்டுக்கொண்டு க்ளாஸ் எடுக்கும்போது உத்தரவில்லாமல் வெளியே போகிறவர்கள் அப்படி (ப்ரம்ம ரக்ஷஸாக) ஆகிவிடுவார்கள் என்று ஆஜ்ஞை பண்ணிவிட்டுப் பதஞ்ஜலி அநேக காலம் பாடம் நடத்திக்கொண்டிருந்தார்.

திரையை யாரும் எக்காரணத்தைக்கொண்டும் தூக்கிப் பார்க்கக் கூடாதென்றும் உத்தரவு போட்டிருந்தார். அக்னி ஜ்வாலையைத் தாங்க முடியாது என்பதால்.

இப்படி, ரொம்ப நாள் பாடம் நடந்தது. அப்புறம், கதை வளர வேண்டாமா? அதனால் ஒரு சிஷ்யனுக்கு, 'எப்படி இவர் ஒரு ஆஸாமியாக இருந்துகொண்டே ஆயிரம் பேருக்கும் சொல்லிக்கொடுக்கிறார்? திரை போட்டுக் கொண்டு என்னவோ ஸித்து, கித்து பண்ணிச் செய்கிறாற் போல இருக்கிறது. அது என்ன என்றுதான் பார்த்து விடுவோமே!' என்று கட்டுப்படுத்த முடியாத ஆர்வம் உண்டாயிற்று.

எச்சரிக்கையை மீறித் திரையைத் தூக்கிப் பார்த்தான். ஆதிசேஷ ஸ்வரூபத்துடன் ஆயிரம் சிரஸோடு இருந்தவரின் ஜ்வாலாமயமான திருஷ்டியும் விஷ ச்வாஸமும் பட்டு, அத்தனை சிஷ்யர்களும் பஸ்மமாகிவிட்டார்கள்!

குரு வசனத்தைக் கேட்காமல் மீறினால் மஹத்தான அனர்த்தம்தான் உண்டாகும் என்பதற்கு நிருபணமாக இப்படி ஆயிற்று: "குருவசந - வ்யதிலங்கநம் ஹ்யநர்த்த:" என்று 'பதஞ்ஜலி சரித'த்தில் இந்த இடத்தில் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

இப்படி வ்யாகரண பாடம் ஒரே விபரீதத்தில் முடிந்தது.

முழு விபரீதமாகப் போகாமல் அதில் ஒரு சின்ன விலக்கு ஏற்பட்டது. என்னவென்றால் ஆயிரம் சிஷ்யர்களும் பஸ்மமாகாமல் ஒருத்தர் மாத்ரம் தப்பினார். பாக்கி 999 பேர்தான் எரிந்து போனது. 'ஆயிரத்தில் ஒண்ணு' என்று சொல்லும் வழக்கம் அதிலிருந்துதான் வந்ததோ என்னவோ?

அந்த ஒருத்தர் எப்படித் தப்பினாரென்றால், அவர் கொஞ்சம் மந்த புத்திக்காரர். பாடம் அவருக்கு அவ்வளவாகப் புரிவதில்லை. இத்தனை நாள் எப்படியோ கட்டுப் பாடாக உட்கார்ந்துகொண்டிருந்து விட்டார். புத்தி ஸூக்ஷ்மம் இல்லாதவர்தானென்றாலும் அவர் ஆயிரம் மைலுக்கு அந்தண்டை இருக்கும் வங்காளத்திலிருந்தாக்கும் படிக்க வந்தவர். கௌட தேசம் என்று அதைச் சொல்வார்கள்.

கௌடர்; திராவிடர்

இந்தியாவில் விந்த்ய மலைக்கு வடக்கேயுள்ள பாதி பாகம் முழுவதையுமே கௌடதேசம் என்றும், தெற்கே யுள்ள பாதி முழுதையுமே த்ராவிட தேசம் என்றும்தான் பிரிவினை செய்திருக்கிறது. அப்புறம் அந்த கௌட தேசத்தில் பஞ்ச கௌடம் என்பதாக ஐந்து பிரிவு. த்ராவிட தேசத்தில் பஞ்ச த்ராவிடர் என்பதாக ஐந்து பிரிவு என்று செய்திருக் கிறது. பஞ்ச கௌடர்கள் யார் யாரென்றால், வடகோடியில் ஸாரஸ்வதர்கள் என்னும் காச்மீரிகள், அப்புறம் பஞ்சாப், U.P.-க்களிலுள்ள கான்ய குப்ஜர்கள், நேபாளத்திலும் பிஹாரிலுமுள்ள மைதிலர்கள், உத்கலர்கள் என்ற ஒரிஸாக் காரர்கள்—இந்த நாலும் போக 'கௌடர்' என்ற மூலப் பெயருடனேயே வங்காளத்திலுள்ள வங்காளிகள் ஆகியோர். பஞ்ச த்ராவிடர் யார் யாரென்றால் வடக்கே குஜராத்திலுள்ள கூர்ஜரரில் ஆரம்பித்து, மஹாராஷ்டிரர்,

Koviloor Digital Library

ஆந்திரர், கர்நாடகர் ஆகிய நாலு பேரும் கடைசியாக, த்ராவிடர் என்ற மூலப் பெயருடனேயே உள்ள தமிழ் மக்களும் ஆவார்கள். (மலையாள பாஷை ஸுமார் ஆயிரம் வருஷத்துக்கு முன்தான் தமிழையும் ஸம்ஸ்க்ருதத்தையும் கலந்து ஏற்பட்டதால் மலையாளிகள் இதில் தனியாகச் சொல்லப்படவில்லை.) இதிலே ஒரு ஒற்றுமை, 'கௌடர்' என்றே ப்ரதானமாக நின்றுவிட்ட வங்காளிகளும், 'த்ராவிடர்' என்றே ப்ரதானமாக நின்றுவிட்ட தமிழர்களும்தான் மற்றவர்களுக்கு முந்தி இங்கிலீஷ் படிப்புப் படித்து வெள்ளைக்காரர்களிடம் குமாஸ்தாக்களாகப் போனவர்கள்!

தப்பித்த சீடருக்குச் சாபமும் அநுக்ரஹமும்

தப்பித்த சிஷ்யர் கௌடர். இத்தனை நாளாகப் பல்லைக் கடித்துக்கொண்டு க்ளாஸில் இருந்துவந்த அவருக்கு இன்றைக்கு ஜலமோசனம் பண்ணணும்போல இருந்தது. அதை சாக்காக வைத்துக்கொண்டு எழுந்திருந்துபோய் விட்டார்.

அப்புறம், அவர் கொஞ்சம் சுற்றிவிட்டுத் திரும்பிய போது பார்த்தால் 999 ஸஹ மாணவர்களும் இருந்த இடம் தெரியவில்லை. குருவானல், 'இத்தனை காலம் இத்தனை ச்ரமப் பட்டுப் பாடம் நடத்தியதெல்லாம் நிஷ்ப்ரயோஜனமாச்சே! சீக்ரம் முடித்துவிட்டு நடராஜாவிடமே இருந்துகொண்டிருக்கணும் என்று நினைத்துப் பண்ணினது ஒரே விபரீதமாக ஆச்சே! பாவம், எங்கேயெங்கேயிருந்தோ வந்த குழந்தைகளின் கதி இப்படி ஆனதே!' என்று துக்காக்ராந்தராக உட்கார்ந்திருந்தார்.

'சொல்லாமல் வெளியே போனேமே!' என்று பயந்து நடுங்கிக்கொண்டு கௌட தேச சிஷ்யர் பதஞ்ஜலியிடம் போனர்.

Koviloor Digital Library

பதஞ்ஜலிக்காஞல் 'அப்பா! ஒருத்தனுவது தப்பினுனே?' என்று இவரைப் பார்த்ததும் கொஞ்சம் ஆறுதலே ஆயிற்று. துக்கம்போய்க் கொஞ்சம் ஸந்தோஷம் ஏற்பட்டது. அதனுல் இன்முகத்துடனேயே கௌடரை வரவேற்ருர்.

ஆயிரம் சிஷ்யாளேக்கொண்டு வ்யாகரண சாஸ்த்ரத்தை ப்ரமாதமாக ப்ரசாரம் செய்யவேண்டுமென்று போட்ட பெரிய ப்ளான் ஃபெயிலாகிவிட்டதல்லவா? அதனுல் அப்படி யெல்லாம் ஆகாசக் கோட்டை கட்டவேண்டாம், மிஞ்சின இந்த ஒருத்தருக்குச் சொல்லிக்கொடுத்து, இவர் மூலமே ப்ரசாரமாகிறவரை ஆகிவிட்டுப் போகட்டும் என்று முடித்து விடலாமென்று பதஞ்ஜலி நிஃனத்தார்.

'மிஞ்சினவன் நல்ல புத்திசாலியாயில்லாமல் மந்தனுக இருக்கிருனே! இவனுக்கு எத்தனேக் காலம் சொல்லிக் கொடுப்பது? ஏற்கெனவே இத்தனே காலம் வீணுன பிறகு இன்னமும் எத்தனே நாள் எடுத்துக் கொள்வது?' என்று யோசித்தார். ஒரு வழி தோன்றிற்று. 'புத்தி சக்தியால் பண்ணி லேசில் பாடம் முடிக்க முடியாது. அநுக்ரஹ சக்தி யால்தான் ஸுலபமாக ஸாதிக்க வேண்டும். ஒரு தகப்பஞர்காரர் ஆயுஸ் முழுக்கச் சேர்த்த பொன்னே, பொருளே அப்படியே ஒரு மூட்டையாகக்கட்டி க்ஷணத்தில் பிள்ளேயிடம் கொடுப்பதுபோல நம்முடைய வ்யாகரண ஞானம் முழுதும் க்ஷணத்தில் இந்தப் பையனின் புத்தியில் ப்ரகாசிக்கும்படியாக அநுக்ரஹித்துவிட வேண்டும்' என்று தீர்மானித்தார்.

தெய்வ புருஷர்கள் அநுக்ரஹ சக்தியால் எதுவும் செய்வார்கள். எந்த ஊரிலோ பாடுவதை மின்ஸார அலேயாக்கி அந்த அலேயை மறுபடி பாட்டாக்கி க்ஷண காலத்தில் இங்கே நாம் ரேடியோவில் கேட்கிருேமல்லவா? இதைவிட இன்னும் அதிசயமான transmission எல்லாம் மஹான்கள் பண்ணுவார்கள். தங்களுடைய ஞானத்தை, தபோபலத்தை எல்லாங்கூட அப்படியே சிஷ்யருக்கு

Koviloor Digital Library

transmit பண்ணிவிட அவர்களால் முடியும். ஸமீப காலத்தில் ராமக்ருஷ்ண பரமஹம்ஸா அப்படித்தான் விவேகாநந்தருக்குப் பண்ணினார் என்கிறார்கள்.

மநுஷ்யர்களுக்குத் தங்களுடைய மநுஷ்ய சக்தியைக் கொண்டே தர்மமாக வாழமுடியும், திவ்யாநுபவங்களும் ப்ரஹ்மஞானமுங்கூடப் பெறமுடியும் என்று உத்ஸாஹப் படுத்துவது அவதாரங்களின் கடமைகளில் ஒன்றாகிறது. அதனால் திவ்ய சக்தியை முடிந்தமட்டும் குறைத்துக் கொண்டு மநுஷ்ய சக்தியாலேயேதான் அவர்களும் கார்யங்களைச் செய்வார்கள். அவச்யம் நேரும்போது மாத்ரமே திவ்ய சக்தியையும் காட்டிச் செய்வார்கள். அப்படித்தான், முடிந்த மட்டும் மநுஷ்யர் மாதிரியே செய்து கொண்டிருந்த பதஞ்ஜலி ஆயிரம் பேரில் ஒவ்வொருத்தருக்கும் கவனம் கொடுத்துப் பாடம் சொல்ல நினைத்தபோது ஆதிசேஷரூபம் எடுத்துக் கொண்டார். 'இவர்களுக்கு பூர்ண வித்வத் ஸித்திக்கக் கடவது' என்று க்ஷண மாத்ரத்தில் பாடத்தை முடித்துவிடாமல் அப்போதும் மநுஷ்ய ரீதியில்தான் கேள்வி கேட்டு பதில் சொல்லி நடத்தினார். இப்போதுதான் அதற்கும் மேல் படிக்குப் போய் மேலும் திவ்ய சக்தியைக் காட்ட அவசியம் நேர்ந்ததால் அப்படிச் செய்யலாமென்று நினைத்தார்.

பதஞ்ஜலி கௌடரைப் பார்த்து, "எனக்குத் தெரிந்ததெல்லாம் உனக்குத் தெரியட்டும்" என்று பூர்ணாநுக்ரஹம் செய்தார்.

உடனேயே மந்த புத்திக்காரருக்கு வ்யாகரணத்தில் பரிபூர்ண ஞானமுண்டாகிவிட்டது! மஹாபாஷ்யம் மனப் பாடமாகி விட்டது!

ஆனால் ஒரே ஸந்தோஷமாகப் பட்டுவிட முடியாமல் ஒரு கஷ்டமும் கூடவே ஏற்பட்டது.

உத்தரவில்லாமல் வெளியே போகிறவர் ப்ரம்ம ரக்ஷஸாகிவிடுவார் என்று சாப ரூபத்தில் பதஞ்ஜலி ஆஜ்ஞை

Koviloor Digital Library

செய்திருந்தாரல்லவா? தெய்விக புருஷர்களின் சொல் பலிக்காமல் போகவே போகாது. அவர்களுமேகூட இப்படி யொன்று சொன்ன பிறகு அதை வாபஸ் வாங்கிக்கொள்ள முடியாது. அதற்குப் பரிகாரமாக, அதை நிவ்ருத்தி செய்வதாக சாப விமோசனம் என்று ஒரு நிபந்தனை விதித்துத்தான் அந்தக் கண்டிஷனுக்கு உட்பட்டே தாங்கள் சொன்னதை மாற்ற முடியும்.

அந்த ரீதியில்தான் இப்போது நடந்தாக வேண்டுமென்று பதஞ்ஜலிக்குத் தெரிந்தது. கௌடர் ப்ரம்ம ரக்ஷஸாகத்தான் வேண்டும், ஆனால் அது தீர்வதற்கு விமோசனம் சொல்வோம் என்று நினைத்தார்.

என்ன விமோசனமென்றால், ப்ரம்ம ரக்ஷஸ் வேத அத்யயனம் செய்தவர்களைத்தானே கேள்வி கேட்டு, பதில் சொல்லாவிட்டால் அடித்துத் தின்னும்? அப்படி இந்த கௌடர் ப்ரம்ம ரக்ஷஸான பிறகு கேள்வி கேட்கும்போது வ்யாகரண ஸம்பந்தமாக ஒன்று கேட்க வேண்டும். அதற்கு ஒருத்தர் பதில் சொல்லிவிட்டால் அவரே மஹாபாஷ்ய உபதேசம் பூர்த்தியாகப் பெறுவதற்கு யோக்யதை வாய்ந்தவர். அவருக்கு அப்போது இவர் அநுக்ரஹ சக்தியால் கற்றுக்கொண்ட மஹாபாஷ்யம் முழுவதையும் மநுஷ்ய ரீதியில் கற்றுக் கொடுக்கவேண்டும். இப்படி மஹாபாஷ்யம் வருங்காலத்தில் ப்ரசாரமாகும்படியாகத் தகுந்த வாரிஸிடம் (வாரிசிடம்) இவர் அதை ஒப்படைத்தாரோ இல்லையோ, இவருக்கு ப்ரம்ம ராக்ஷஸ ரூபம் போய்ப் பழையபடி ஆகிவிடுவார்.

இப்படி பதஞ்ஜலி தீர்மானம் பண்ணி, இவர் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றும் சொல்லிக்கொடுத்தார்.

இலக்கண ஸம்பந்தமான அதைக் கொஞ்சம் புரிய வைக்கப்பார்க்கிறேன் : ஸம்ஸ்க்ருதத்தில் 'ப்ரத்யயம்' என்று ஒன்று உண்டு. ஒரு சொல்லோடு அதன் முடிவில் 'விகுதி' என்று ஒன்றைச் சேர்க்கிறோமே, அந்த விகுதி என்னும் suffix.

Koviloor Digital Library

குத்தான் 'ப்ரத்யயம்' என்று பேர். ('விகுதி' என்பதும் ஸம்ஸ்க்ருத 'விக்ருதி' என்பதிலிருந்து வந்ததுதான்.) இந்த ப்ரத்யயத்திலேயே பல தினுஸு உண்டு—'தத்திதம்,' 'க்ருத்', 'ஸுப்,' 'திங்' என்றெல்லாம். நம் கதையில் விஷயமாவது 'நிஷ்டா' என்ற ப்ரத்யயம். மூலச்சொல்லான பகுதி ('ப்ரக்ருதி') என்பது ஒரு வினைச்சொல்லின் தாதுவாக இருக்க வேண்டும். அதோடு நிஷ்டா ப்ரத்யயத்தைச் சேர்த்தால் அந்த வினைச்சொல் செயப்படு பொருளாகி விடும். உதாஹரணமாக 'புஜ்'என்பது ஒரு க்ரியா பத (வினைச் சொல்லின்) தாது. சாப்பிடுவதை அது குறிக்கும். 'புஜித்தான்', 'போஜனம்' என்பதெல்லாம் 'புஜ்'ஜின் அடியாக வந்தவை தான். இந்த 'புஜ்' தாதுவோடு நிஷ்டா ப்ரத்யயம் சேர்த்தால் 'புக்தம்' என்றாகும். 'புக்தம்' என்றால் 'சாப்பிடப் பட்டது'. இதே மாதிரிதான் 'ரக்தம்' (சிவப்பாக்கப்பட்டது), 'ஸிக்தம்' (நனைக்கப்பட்டது) ஆகிய வார்த்தைகளும் உண்டாவது. இதிலிருந்து நிஷ்டா ப்ரத்யயம் சேர்த்தால் மூலச்சொல்லின் முடிவு 'க்த' என்று மாறும் என்று தெரிகிறதல்லவா? ஆனால் இதற்கு ஒரு விலக்கு உண்டு. அங்கே 'க்த' என்று ஆகாமல் 'க்வ' என்றாகும். 'பச்' (சமையல் பண்ணு) என்பதுதான் விதிவிலக்கான அந்த தாது. அதுமட்டும் நிஷ்டா ப்ரத்யயம் சேர்த்தால் 'பக்தம்' என்று ஆகாமல் 'பக்வம்' என்றாகும். 'சமைக்கப்பட்டது' என்று அர்த்தம். 'பக்குவம்' என்று தமிழில் நாம் சொல்வது அதுதான். கெட்டியாக, ஜீர்ணிக்க முடியாமலிருக்கிற அரிசி, கறிகாய் முதலியவை 'பக்வ'மாகும்போது ம்ருதுவாவதுபோல ஒருவர் மனஸின் வறட்டுத் தனம் போய் நல்ல கனிவாக ஆகும்போதுதான் 'பக்குவமானவர்' என்பது.

'பச்' தாதுவோடு சேரும்போது மட்டும் நிஷ்டா ப்ரத்யயம் 'க்த' என்றாகாமல் 'க்வ' என்றாவதைத் தெரிவிப்பதாகப் பாணினியின் வ்யாகரண ஸூத்ரங்களில் ஒரு தனி ஸூத்ரமே இருக்கிறது : "பசோ வ :" என்பதாக. 'க்த'வில் வரும் 'த'வுக்குப் பதில் இங்கே மட்டும் 'வ'.

Koviloor Digital Library

இந்த விதிவிலக்கு விஷயம் ரொம்பப் பேருக்குத் தெரியாது.

அதனால் பதஞ்ஜலி, கௌடர் ப்ரம்ம ரக்ஷஸான பின் இதைப் பற்றியே கேள்வி கேட்கவேண்டும் என்று நினைத்து, அதன் வழியாகவே சாப விமோசனத்தை அமைத்தார்.

கௌடரிடம், "நீ சொல்லிக்கொள்ளாமல் வெளியேறியதால் ப்ரம்ம ரக்ஷஸாகப் போகத்தான் வேண்டும். ஆனாலும் அதற்கு நிவ்ருத்தி சொல்கிறேன். உன்னிடம் அகப்படுபவரிடம், "'பச்' தாதுவுக்கு நிஷ்டாவில் ரூபம் என்ன?" என்று கேள். அது தெரிந்து, மற்ற வார்த்தைகளைப் போலப் 'பக்தம்' என்று சொல்லாமல் 'பக்வம்' என்று ஒருவர் சொல்வாரேயானால் அவருக்கு மஹா பாஷ்யம் முழுதையும் கற்றுக் கொடு. பாத்ரமறிந்து வித்யையைக் கொடுத்த புண்ய விசேஷத்தால் சாபத்திற்கு விமோசனம் ஏற்பட்டுவிடும். ரக்ஷஸ் ரூபம் போய் நிஜ ரூபம் பெற்றுவிடுவாய். ஸரியாகப் பதில் சொல்பவர் வருகிறவரையில் உன்னிடம் மாட்டிக் கொண்டு தப்பாகப் பதில் சொல்கிறவர்களையே ப்ரம்ம ராக்ஷஸ ரூபத்தில் உனக்கு ஆஹாரமாக்கிக் கொள்" என்று சொன்னார்.

கௌடரின் பிற்கால சரித்திரம்

கௌடர் ப்ரம்ம ரக்ஷஸாக மாறினார். அப்படியே காற்றில் பறந்து போக ஆரம்பித்தார்.

கௌடர், கௌடர் என்று அவர் பிறந்த தேசத்தை வைத்துத்தான் பெயர் சொல்லத் தெரிகிறதேயொழிய அவருடைய நிஜப் பெயர் தெரியவில்லை!

'அரியக்குடி', 'செம்மங்குடி' என்று ஸங்கீத வித்வான்களில் இருப்பது போல ஆசார்ய புருஷர்களில் 'கௌடர்'!

ஒரு காரணம் தோன்றுகிறது: அவ்வளவாக புத்தி ப்ரகாசமில்லாததால் இவரைக் குறிப்பிட்டுப் பேர் சொல்லிப் பேச எதுவுமிருந்திருக்காது போலிருக்கிறது.

Koviloor Digital Library

நூறேடு நூற்றியொண்ணு என்று இருந்திருக்கிறர். 'பாவம், இந்த லக்ஷணத்தில் தூர தேசமான கௌட தேசத்திலிருந்து வந்திருக்கிறரே!' என்பதை நினைத்து கௌடர் என்றே குறிப்பிட்டிருப்பார்கள் போலிருக்கிறது. அதுவே நிலைத்து விட்டது.

ப்ரம்ம ரக்ஷஸாகிய கௌடர் காற்றில் பறந்து நர்மதை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒரு அரசமரம் இருந்தது. பழமை வாய்ந்த அரசமரம். அந்த மரத்தில் உட்கார்ந்துகொண்டார்.

அந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்தாரென்றால், அது பஞ்ச கௌட தேசங்களுக்கும் பஞ்ச த்ராவிட தேசங்களுக்கும் மத்தியில் இருந்தது. ஆகையால் உத்தர தேசத்திலிருந்து தக்ஷிண தேசத்திற்குப் போகிறவர்களிலும் ஸரி, தக்ஷிணத்திலிருந்து வட தேசம் போகிறவர்களிலும் ஸரி, ரொம்பப் பேர் அந்த வழியாகத்தான் போவார்கள். சாஸ்த்ராப்யாஸம் செய்பவர்களும் பலபேர் வித்யையை நாடி இப்படி அந்த மார்க்கமாகத்தான் தினமும் போய்க் கொண்டிருந்தார்கள். ஆகையால், ப்ரம்ம ரக்ஷஸாக இருக்கும் வரையில் தனக்கு ஆஹாரமாவதற்கு ஏற்ற அத்யயனக்காரர்களும், அவர்களில் தன்னுடைய ப்ரம்ம ராக்ஷஸ ரூபத்தை நீங்கச் செய்யக்கூடிய உயர்ந்த படிப்பாளியும் இங்கேதான் கிடைப்பார்கள் என்பதால்தான் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்.

அங்கே வ்ருக்ஷத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டு வழிப் போக்கர்களைக் கூப்பிட்டுக் கேள்வி கேட்பார். குரு சொல்லிக் கொடுத்த கேள்விதான்—'பச்' தாதுவுடன் நிஷ்டா ப்ரத்யயம் சேர்ந்தால் என்ன என்ற கேள்வி.

ரொம்ப நாள் அந்த வழிப்போக்கர்களில் எவருக்கும் இவருடைய கேள்விக்கு ஸரியாக பதில் சொல்லத் தெரிய வில்லை. இவர் அவர்களை அடித்துப்போட்டு ஆஹாரம் பண்ணிவந்தார்.

Koviloor Digital Library

ஒரே மாதிரி ஸ்பெல்லிங் உள்ள வார்த்தைகளெல்லாம் ஒரே மாதிரி உச்சரிப்பு (ப்ரொனௌன்ஸியேஷன்) இல்லாமல் மாறுபடுவதை இங்கிலீஷில் நிறையப் பார்க்கிறோம். B-u-t என்பது 'பட்' என்றும் c-u-t என்பது 'கட்' என்றும் ஆகிறாற்போல் p-u-t என்பது 'பட்' என்று ஆகாமல் 'புட்' என்று ஆகிறது. ஒரு குழந்தையிடம் நாம் அடுத்தடுத்து 'b-u-t-க்கு என்ன உச்சரிப்பு?' 'c-u-t-க்கு என்ன உச்சரிப்பு?' என்று கேட்டுவிட்டு 'p-u-t-க்கு என்ன?' என்று தொடர்ந்தால் பட், கட் என்று சொல்லிவந்த அந்த வேகத்திலே அது 'பட்' என்றே சொல்லும். ரொம்பவும் பரிசயமில்லாத விஷயமானால், குழந்தைதான் என்றில்லை, பெரியவர்களுக்கும்கூட இப்படிக் குளறிப் போய்விடும்.

நல்ல அறிவாளியாகத் தேர்ந்தெடுத்தே மஹாபாஷ்ய உபதேசம் செய்யவேண்டுமென்று ப்ரம்மரக்ஷஸுக்கு இருந்ததால், (நிஷ்டா ப்ரத்யய விஷயமாக) அவ்வளவு சிறந்த அறிவாளியாக இல்லாதவர்கள் குளறிப் போகும்படியாகக் கேள்வி கேட்பார். என்ன பண்ணுவாரென்றால், 'புஜ்'ஜின் நிஷ்டா ரூபம், 'ஸிச்'சின் நிஷ்டா ரூபம் முதலானவை என்ன என்று கேட்டு பதில் சொல்கிறவர் 'புக்தம்', 'ஸிக்தம்' என்றெல்லாம் சொல்லி வரும்போதே சட்டென்று 'பச்'சின் நிஷ்டா ரூபத்தைக் கேட்பார். ஸாதாரணமாகவே ரொம்பப் பேருக்கு அதற்குள்ள விதிவிலக்கு தெரியாது. தெரிந்தவருங்கூட இவர் இப்படி அதே மாதிரியான மற்ற வார்த்தைகளைப் பற்றி கேட்ட வேகத்திலேயே இதையும் கேட்கும்போது அவஸரத்தில் குளறிப் போய் 'பக்தம்' என்று சொல்லிவிடுவார்கள்.

ப்ரம்மரக்ஷஸ் சிரித்து, "பக்தமா? இல்லை; பக்வம். நீயும் நம் போஜனத்துக்குப் பக்(கு)வம்தான்" என்று சொல்லி தப்புப் பதில் சொன்னவனை ஆஹாரம் செய்துவிடும்.

இப்படியே ரொம்ப காலம் போயிற்று. அநேக வருஷங்களாகி விட்டன.

Koviloor Digital Library

அப்புறம் ஒரு நாள் ஸர்வ லக்ஷணமாக ப்ரஹ்ம தேஜ ஸோடுகூட ஒரு பிள்ளையாண்டான் அந்த வழியே போனான்.

அவன் காஷ்மீரத்தைச் சேர்ந்தவன்*. தேசத்தின் அந்தக் கோடியிலிருந்தவன் காதுக்கும் 2000 மைல் தாண்டிச் சிதம்பரத்தில் பதஞ்ஜலி மஹாபாஷ்ய பாடம் சொல்லும் ஸமாசாரம் எட்டியிருந்தது. தானும் கற்றுக்கொள்ள வேண்டுமென்றே இந்த மார்க்கமாகப் போய்க் கொண்டிருந் தான்.

அவனைப் பார்த்ததும் கௌட ப்ரம்மரக்ஷஸுக்கு ரொம்ப ஸந்தோஷமாயிற்று! "எத்தனை காந்தியான ரூபம்! இன்றைக்கு நமக்கு முதல் தர விருந்து!" என்ற ஸந்தோஷம்!

வழக்கம்போல் ஒரு ப்ராம்மண வேஷம் எடுத்துக் கொண்டு போய் அந்தப் பிள்ளையின் முன்னால் நின்றார். வழக்கமான கேள்வியையும் கேட்டார்—நிஷ்டா ப்ரத்யயம் சேர்த்து அநேக தாதுக்களின் ரூபத்தைக் கேட்டுவிட்டு, அந்த ஸ்பீடிலேயே 'பச்'சின் நிஷ்டா ரூபத்தையும் கேட்டார்.

ஆனால் வழக்கத்திற்கு வித்யாஸமாக அந்தப் பிள்ளை 'பக்தம்' என்று உளறாமல், குளறாமல் "பக்வம்" என்ற ஸரியான பதிலைச் சொன்னான்!

அப்படி அவன் சொன்னதால், 'இவனை ஆஹாரம் பண்ணமுடியாதே!' என்று கௌட ப்ரம்ம ரக்ஷஸ் வருத்தப் பட்டதா என்றால், படவில்லை! ஏனென்றால் இப்போது, "இவன்தான் தக்க பாத்ரம்" என்று அவனிடம் மஹா பாஷ்யத்தை ஒப்புக் கொடுத்துவிட்டு ப்ரம்ம ராக்ஷஸ ஸ்திதி யிலிருந்து விமோசனம் பெற்றுவிடலாமே என்பதில் மஹத்தான ஸந்தோஷமே உண்டாயிற்று!

"நீ யார்? எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

---

* உஜ்ஜயினி என்றும் சொல்வதுண்டு.

Koviloor Digital Library

"என் பேர் சந்த்ர சர்மா*. சிதம்பரத்தில் பதஞ்ஜலி வ்யாகரண பாஷ்ய பாடம் நடத்துகிறாராம். அதைக் கேட்பதற்காகப் போய்க்கொண்டிருக்கிறேன்" என்று அந்தப் பிள்ளை சொன்னான்.

"சிதம்பரத்து ஸமாசாரமெல்லாம் மலையேறிவிட்டது! ஆனால் மஹாபாஷ்யம் மட்டும் இங்கே என்னிடமே இருக்கிறது! அவ்வளவு தூரம் போய் நீ தெரிந்து கொள்ள வேண்டியில்லாமல் இங்கேயே நான் கற்றுக்கொடுக்கிறேன். இந்தப் பெரிய நிதியைப் பெற யோக்யதையுள்ளவன் வருவானா வருவானா என்றுதான் வருஷக் கணக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன். இன்றைக்குத்தான் ஸரியான சிஷ்யனாக நீ வந்து சேர்ந்தாய். பதஞ்ஜலி மஹர்ஷி என்னொருத்தனுக்கு மட்டும் தந்த நிதியை நான் உன்னொருத்தனுக்கு மட்டும் கொடுக்கிறேன். உன்னாலும் உனக்கப்புறமும் அது பல பேரிடம் பரவட்டும். உட்கார். உபதேசம் பண்ணுகிறேன்" என்று கௌடர் சொன்னார்.

'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது' என்பது போலப் போகிற வழியிலேயே மஹா பாஷ்ய உபதேசம் கிடைப்பதில் சந்த்ர சர்மா என்று பெயர் சொல்லிக்கொண்ட அந்த யுவா ரொம்ப ஸந்தோஷமடைந்தார்.

ஆனாலும் ப்ரம்ம ரக்ஷஸை குருவாகக் கட்டிக்கொண்டு அழுவதென்பது ஸுலபமாக இருக்கவில்லை! ராக்ஷஸ குரு கஷ்டமாக அநேகக் கண்டிஷன்கள் போட்டார்!

ப்ரம்ம ராக்ஷஸ ரூபம் எடுக்க வேண்டுமென்று கௌடருக்கு சாபம் இருந்ததால் அதனுடைய விசித்ரமான க்ரூர ஸ்வபாவப்படிதான் அவர் இருக்க வேண்டியதாயிற்று.

"நான் அந்த அரச மரத்தில் உட்கார்ந்து கொண்டுதான் பாடம் சொல்வேன். இப்போதே ஆரம்பித்துவிடுவேன்.

---

* சந்த்ரகுப்த சர்மா என்று பதஞ்ஜலி சரித்திரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

எனக்கு எப்போது இஷ்டமோ அப்போதுதான் முடிப்பேன். விடாமல் சொல்லிக்கொண்டே போவேன். நீயும் மரத்தில் என்னோடு உட்கார்ந்து கொண்டுதான் கேட்டுக்கணும், அல்லது எழுதிக்கணும்! எத்தனை நாளானாலும், ராப் பகல் பார்க்காமல் நான் சொல்லிக்கொண்டேபோனாலும், அத்தனை நாளும் நீ மரத்தைவிட்டு இறங்காமல் எழுதிக் கொண்டு போகணும்! நடுவில் இறங்கப் படாது, தூங்கப் படாது, சாப்பிடப் படாது!" என்றிப்படிக் கண்டிப்பாகக் கண்டிஷன் போட்டார்.

சந்த்ர சர்மா ஒப்புக்கொள்கிறது தவிர வேறே ஒன்றும் பண்ணிக்கொள்வதற்கில்லை. அவருக்கோ மஹாபாஷ்யம் கற்றுக்கொண்டேயாக வேண்டும் என்று அவா. கற்றுக் கொடுக்கவோ இந்த ப்ரம்மரக்ஷஸ் தவிர எவருமில்லை என்றால் என்ன பண்ணுவது?

வித்யையிலுள்ள ஆர்வத்தால் கண்டிஷனுக்கெல்லாம் கட்டுப்பட்டார்.

அரச மரத்தின்மேலே விசித்ரமாக குரு-சிஷ்யாளின் க்ளாஸ் ஆரம்பித்தது!

குருவானால் கிடுகிடுவென்று பாடம் டிக்டேட் பண்ண ஆரம்பித்துவிட்டார். எழுதிக்கொள்ள சிஷ்யருக்குப் பேனாவா, இங்க் பாட்டிலா—இல்லை, அந்தக் கால ஏடா, எழுத்தாணியா—எதுவுமே இல்லை. எங்கேயாவதுபோய் வாங்கிவரலாமென்பதற்குமில்லாமல், மரத்தைவிட்டு இறங்கக் கூடாதென்று கண்டிஷன்!

சந்த்ர சர்மா தயங்கவில்லை—தன்னுடைய தொடையைக் கீறிக்கொண்டார். ரத்தம் வந்தது. அதுதான் இங்க்! அரசிலைக் காம்பை ஒடித்துப் பேனாவாக்கிக் கொண்டார்! பேப்பர் என்னவென்றால் அந்த அரசிலைகளேதான்!

ரக்ஷஸ் சொல்லிக்கொண்டே போக அவர் காம்பை ரத்தத்தில் தோய்த்துத் தோய்த்து இலைகளில் எழுதிக் கொண்டே போனார்.

Koviloor Digital Library

ராவும் பகலுமாக குரு நிறுத்தாமல் இப்படி ஒன்பது நாள் டிக்டேட் செய்ய, ஆடாமல் அசராமல், ஆஹார-நித்ரைகளும் இல்லாமல் சிஷ்யர் தொடர்ச்சியாக இலைகளில் எழுதிக்கொண்டார். வித்யையைப் பெறுவதற்காக இத்தனை த்யாகம், தபஸ்!

ஒருவாறாக வ்யாகரண பாஷ்யம் முழுவதும் சொல்லித் தீர்த்தாயிற்று.

சந்த்ர சர்மா அரசிலைகளை மூட்டை கட்டினார். அதிலிருந்து கிடைத்திருப்பதுதான் இன்றைக்கு நம்மிடம் வந்துள்ள 'மஹாபாஷ்யம்'. பாடம் சொல்லித் தீர்த்ததுடன் கௌடருக்கும் ப்ரம்ம ராக்ஷஸ ரூபம் தீர்ந்தது.

முன்னே நம் குரு பரம்பரைக் கதையில் மித்ரஸஹன் ராக்ஷஸரூபம் பெற்றபோது சக்தி மஹர்ஷியின் அநுக்ரஹத்தால் அந்த ரூபம் நீங்கி அவருடைய சிஷ்யனானதாகப் பார்த்தோம். இப்போது சந்த்ர சர்மாவால் குருவுக்கு ராக்ஷஸ ரூபம் நீங்கிற்று!

தம் குரு கொடுத்த பெரிய கார்யத்தை முடித்தாகி விட்டதென்றதும் கௌடருக்கு மனஸ் ஆத்யாத்மிகமாகத் திரும்பிற்று. 'இனி விவேக வைராக்கியங்கள் பெற வேண்டும். ஞானம் பெறவேண்டும். ஆத்ம த்யானம் பண்ண வேண்டும். அதற்கு ஒரு உத்தம குருவை அடைந்து உபதேசம் பெறவேண்டும்' என்று எண்ணினார்.

பரம உத்தமமான குரு, ஜீவன் முக்தராகவே இருப்பவர், யார் என்று விசாரித்தார். சுகாசார்யாள் அப்படி இருப்பதாகத் தெரிந்துகொண்டார். ஜன்மா எடுக்கும்போதே ஆத்ம ஞானியாயிருந்த அவரையே ஆசார்யராக வரித்து, அவரிடம் உபதேசம் வாங்கிக்கொள்ள முடிவு செய்தார்.

அப்போது சுகர் பதரிகாச்ரமத்தில் இருப்பதாகத் தெரிந்தது. உடனே கௌடர் நர்மதா தீரத்திலிருந்து

---

* 'பதஞ்ஜலி சரித'த்தில் (பு. 32) இரண்டு மாதங்கள் எனக் காண்கிறது.

Koviloor Digital Library

ஹிமாசலத்தில் சுகரிருந்த இடத்துக்குப்போய் அவரிடம் சரணுகதி செய்தார்.

சுகர் அவருக்கு ஸந்நியாஸம் கொடுத்து ஞானேபதேசம் செய்தார்.

உபதேசம் பண்ணியவர் பிறவி ப்ரஹ்ம ஞானி. வாங்கிக் கொண்டவரும் ஸத்பாத்ரம். ஆகையால் கௌடரும் ப்ரஹ்ம ஞானம் பெற்ருர்.

அப்படியே ஆத்ம நிஷ்டையில் ஆழ்ந்துபோய் பதரிகாச்ரமத்திலேயே தங்கிவிட்டார். பிற்காலத்தில் இதே சந்த்ர சர்மாவுக்கு ஸந்நியாஸாச்ரமம் கொடுத்து ப்ரஹ்ம வித்யை உபதேசித்தார். அதனுல் 'கௌடபாதாசார்யாள்' என்பதாக ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரையில் இடம் பெற்ருர்.

ஆசார்ய பரம்பரையில் புராண பாத்ரங்களான தெய்வ புருஷர்களாகவும் ரிஷிகளாகவும் இருந்தவர்களின் வரிசை சுகரோடு முடிந்து, நம் போன்ற மனிதர்கள் மாதிரியே பூலோகத்தில் நடமாடி வாழ்க்கை நடத்திய 'மானவ ஸம்ப்ரதாய' ஆசார்ய வரிசை கௌடபாதாசார்யாளி லிருந்துதான் ஆரம்பித்தது.

முழுக்க முழுக்க அத்வைதமாக எழுதப்பட்ட முதல் புஸ்தகம் கௌடபாதர் எழுதியதுதான் என்று இப்போது ஃபிலாஸஃபி ப்ரொஃபஸர்களாக உள்ள சிலர் சொல்கிருர்கள். அந்தப் புஸ்தகம் ''மாண்டூக்யோபநிஷத் காரிகா'' என்பது.

ஆத்ம தத்வத்தை விசாரித்துக் கொண்டுபோய் அது சாந்தம்-சிவம்-அத்வைதம்-துரீயம் (விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்றும் கடந்த ஆத்ம ஸ்தானமே துரீயம்) என்று முடிவதாகச் சொல்கிற உபநிஷத்து இந்த மாண்டூக்யம்தான். அதற்குக் ''காரிகை'' என்பதான வ்யாக்யான வகையில் எழுதப்பட்டதே ''மாண்டூக்யோபநிஷத் காரிகா''.

''யாப்பருங்கலக்காரிகை'' என்று தமிழில் கேள்விப் பட்டிருக்கலாம். செய்யுள் வகைகளைப்பற்றிச் சொல்வதாக

Koviloor Digital Library

"யாப்பருங்கலம்" என்று ஒரு நூல் உண்டு. அதன் விளக்கமாக எழுதியதே "யாப்பருங்கலக்காரிகை".

மாயையினுல் உண்டாவதே த்வைதம். அதற்குக் கொஞ்சங்கூட இடம் தராமல் அடித்துப் போட்டுப் பரம அத்வைதமாக எழுதப்பட்ட நூல் 'மாண்டூக்ய காரிகை'. அதன் முதல் பிரிவுக்கு 'ஆகம ப்ரகரணம்' என்று பெயர் கொடுத்திருப்பதால் முழுப் புஸ்தகத்தையுமே 'ஆகம சாஸ்த்ரம்' என்றும் சொல்வதுண்டு. ஸாதாரணமாக ஆகம சாஸ்த்ரம் என்ருல் ஒரு தெய்வத்தின் வழிபாட்டு முறை. அத்வைத வேதாந்தத்தில் 'ஆகம சாஸ்த்ரம்' என்ருல் அது கௌடபாத காரிகைதான்.

இதில் மாயைக்கு இடமே கொடுக்காத கௌடபாதரே மாயா ஸ்வரூணியாகவும் ப்ரஹ்ம வித்யா ஸ்வரூபிணியாகவும் ஒரே ஸமயத்தில் இருக்கும் அம்பாளிடம் பரம பக்தி பண்ணி ஸ்ரீ வித்யா தந்த்ரத்தைச் சேர்ந்த "ஸுபகோதயம்" முதலான க்ரந்தங்களை உபகரித்தாரென்றும் சொல்லப்படுகிறது.

ஞானியும் பக்தியும்

கர்மா, பக்திகளில் பக்வப்பட்டு நிவ்ருத்தி மார்க்கத்தில் ப்ரவேசித்த பிறகு ஆத்ம ஞானம் ஸித்திக்கும்வரை லோகத்தை—அதாவது த்வைத லீலையை—மாயை என்று அப்படியே தள்ளவேண்டியதுதான். இந்த லோகத்தை நடத்தும் ஈச்வரனை உபாஸிப்பதற்கும் அப்போது இடமில்லை. ஆனுல் ஞானம் வந்த பிறகு மாயை ஒருத்தரை மயக்கி ஸம்ஸாரத்தில் தள்ளமுடியாது. அதனுல் தைர்யமாக மாயாலோக விளையாட்டுப் பார்க்கலாம். அந்த விளையாட்டைப் பண்ணும் ஈச்வரனையும் பலவிதமாக பக்தி பண்ணி அநுபவித்து மகிழலாம். ஆத்மா என்று ஞானி அநுபவிப்பதும் ஈச்வரனுடைய நிர்குண ஸ்வரூபம்தான். அதோடுகூட அவனுடைய ஸகுண லீலையையும் ஞானி அநுபவித்து ஆனந்தப்பட்டு அவனை ஸ்துதிக்கவும் முடியும்,

Koviloor Digital Library

இது ஞானியுடைய ஸொந்த விஷயம். அதோடு, ஞானி மாயாலோகத்தைப் பார்க்க ஆரம்பித்து பிறகு அதிலுள்ள ஜனங்களிடம் தன்னியல்பாக அவனுக்கு ஒரு கருணை பிறக்கும். அப்போது அவர்களை நல்லவழியில் அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்பதற்காகவும் பக்தியிலேயே ஈடுபடக்கூடியவர்களான அவர்களை உத்தேசித்து அவனும் பக்தனாக நடந்துகொண்டு பக்தி ஸ்துதிகள், பூஜா க்ரமங்கள் ஆகியவை செய்வதும் உண்டு.

ஞான ஸ்வரூபியான சுகர்தான் பாகவத உபதேசம் பண்ணியவர். அத்வைத ஸ்தாபனாசார்யார் எனப்படும் ஆசார்யாளோ ஸ்தோத்ரம் பண்ணாத தெய்வமே இல்லை! ஷண்மத ஸ்தாபனமே வேறே பண்ணியிருக்கிறார்! கௌட பாதாளைப் பற்றியும் அந்த மாதிரி சொல்வதில் நடக்கக் கூடாததாக எதுவுமில்லை.

மேற்கு ஸமுத்ரக்கரையில் கொங்கண தேசத்தில், கோவாவிலுள்ள ஷிரோதா என்ற இடத்தில் 'கௌட பாதாசார்ய மடம்' என்றே ஒன்று இருக்கிறது. கௌட ஸாரஸ்வதர்கள் என்பவர்கள் அதை ஆச்ரயித்தவர்கள். இதிலே தேசிய ஒற்றுமை! எப்படியென்றால், கொங்கணம் இருப்பது பஞ்ச த்ராவிடத்தைச் சேர்ந்த கர்நாடக பார்டர். கௌடர், ஸாரஸ்வதர் என்பவர்கள் பஞ்ச கௌடர்களைச் சேர்ந்தவர்கள்! நம் குருபரம்பரையில் ஆசார்யாள் த்ராவிடர்; கோவிந்தபகவத்பாதர் காஷ்மீரியானால் ஸாரஸ்வதர்; கௌடபாதர் கௌடரே!

ஆசார்யாளின் போற்றுதல்

கௌடபாதரின் 'மாண்டூக்ய காரிகா'வுக்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார். அதை முடிக்கும் போது, 'அம்ருதம் சாப்பிட்டதால் அமரர் என்றே பேர் பெற்ற தேவ ஜாதிக்கும் கிடைக்கவொண்ணாத ஞானாம்ருதத்தை ஸம்ஸார ஸாகரத்தில் உழலும் மநுஷ்ய ஜாதிக்குப் பரம கருணையால் கொடுத்தவர்' என்று கௌட பாதரை

Koviloor Digital Library

ஸ்தோத்ரம் செய்கிறார். தம்முடைய (குருவின் குருவாகிய) பரம குருவான அவர் பூஜ்யர்களுக்குள்ளேயும் மஹாபூஜ்யர் என்று கொண்டாடி, "அவருடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கிறேன்" என்று சொல்கிறார் :

"பூஜ்யாபிபூஜ்யம் பரமகுரும் - அமும் பாதபாதைர் - நதோஸ்மி".

ஜனங்கள் ஸம்ஸார ஸாகரத்தில் ஜனன - மரண முதலையின் பிடிப்பில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள். அப்போது—ஆசார்யாள் வாக்குப்படி—கௌட பாதர் கருணாவசமாகி என்ன பண்ணுகிறார்? வேதம் என்று இன்னொரு ஸாகரம் இருக்கிறது. அது க்ஷீர ஸாகரம். அதில் தம்முடைய ஞானம் என்ற மந்தர மலையைப் போட்டுக் கடைந்து அத்வைதாம்ருதம் எடுக்கிறார். அதை ஜனங்களுக்குக் கொடுத்து ஜனன மரண நிவ்ருத்தி அளிக்கிறார்! இப்படி ஆசார்யாள் கௌடபாதரை ஸ்துதித்திருக்கிறார்.*

'பாத(da)-பாத(ta)' என்றால் 'காலில் விழுந்து'. அத்தனை மரியாதையாக ஆசார்யாள் தம்முடைய பரம குருவுக்கு நமஸ்காரம் செய்கிறார்.

இவர் யார் பாதத்தில் விழுகிறாரோ அவர் கௌட பாதர்! மஹான்களின் பேரோடு 'பாத' என்று சேர்த்துச் சொல்வது வழக்கம். 'அடிகள்' என்பதும் அதே அர்த்தம் தான். பகவானின் பாதத்தில் நம்மைச் சேர்ப்பிப்பதற்காக நாம் யாருடைய பாதத்தில் விழவேண்டுமோ அவர்களையே 'பாதர்' என்பது.

இங்கே, கௌடபாதரின் பாதத்தில் விழுகிறவரோ பகவத்பாதர்! (அதாவது) நாம் முடிவாகப் பிடிக்கவேண்டிய ஈச்வர சரணாரவிந்தத்தின் ஸ்வரூபமாகவே இருப்பவர்.

---

* ப்ரஜ்ஞா-வைசாக-வேத-க்ஷுபித-ஜலநிதேர்-வேத-நாம்நோ-(அ)ந்தரஸ்தம்
பூதாந்-யாலோக்ய மக்நாந்-அவிரத-ஜநந-க்ராஹ-கோரே ஸமுத்ரே |
காருண்யாதுத்ததாராம்ருதம்-இதம்-அமரைர்-துர்லபம் பூதஹேதோ:
யஸ்தம் பூஜ்யாபி பூஜ்யம் பரமகுருமமும் பாதபாதைர்-நதோஸ்மி ||

Koviloor Digital Library

ஆசார்யாளுக்கும் அவருடைய நேர் குருவுக்கும் மட்டும் தான் 'பகவத்பாத' சேர்த்து, ஸ்ரீ சங்கர பகவத்பாதர், ஸ்ரீ கோவிந்த பகவத்பாதர் என்று சொல்வது. மற்றவர்களுக்கு (பகவத் சேர்க்காமல்) 'பாத' மட்டுந்தான் சேர்த்துச் சொல்வது.

புஸ்தகங்களின் முடிவில்—ஒவ்வொரு அத்யாய முடிவிலுமே—'இன்னுருடைய சிஷ்யரான இன்னுரால் பண்ணப்பட்ட இன்ன புஸ்தகத்தில் இன்ன அத்யாயம், அல்லது புஸ்தக ஸமாப்தி' என்று போடுவது வழக்கம். அதற்குப் 'புஷ்பிகை' என்று பெயர். Colophon என்பது. ஆசார்யாளின் புஸ்தகங்களில் அப்படிப் போடும்போது அவரை 'பகவத்பாதர்' என்று சொல்லாமல் 'பகவான்' என்றே 'சங்கர பகவத:' என்றும், அவருடைய குருவைத் தான் பகவத்பாதர்—பகவத் பூஜ்ய பாதர்—என்றும் குறிப்பிடுவதாக நெடுங்கால வழக்கம் இருந்துவருகிறது—"இதி ஸ்ரீ கோவிந்த பகவத் பூஜ்யபாத சிஷ்யஸ்ய ஸ்ரீ சங்கர பகவத: க்ருதௌ" என்று.

கௌடபாதர் கதையை அவர் பதரிகாச்ரமத்தில் ஆத்ம நிஷ்டையில் உட்கார்ந்து விட்டாரென்று முடித்தோம்.

இங்கே நர்மதா தீரத்திலிருந்த சந்த்ர சர்மா என்ன ஆனுர்? அவர் எப்போது கோவிந்த பகவத் பாதரானுர்?

சந்திரசர்மாவின் சரித்திரம்

மஹாபாஷ்ய உபதேசமான பின் அவர் என்ன ஆனுர் என்று சொல்வதற்கு முன்னுல் அவர் பிறப்பதற்கு முன்னுல் யாராக இருந்தார் என்று சொல்லவேண்டும்.

முன் ஜன்மாவில் இந்த சந்த்ர சர்மாவேதான் பதஞ்ஜலி யாக இருந்தவர்!

சாபம், அநுக்ரஹம் என்று எதிரெதிரான இரண்டும் கொடுக்கும் சக்தி மஹான்களுக்கு உண்டு. பதஞ்ஜலி

Koviloor Digital Library

இரண்டையும் கௌட சிஷ்யருக்குப் பண்ணினாரல்லவா? ப்ரஹ்ம ரக்ஷஸாகப் போகும்படி அவருக்கு சாபமும் கொடுத்து, வ்யாகரண உபதேச அநுக்ரஹமும் பண்ணினாரல்லவா? அதற்கப்புறம் சாப நிவ்ருத்திக்காக அவர் சொன்னபடி அந்த சாஸ்த்ரத்தை ப்ரஹ்மரக்ஷஸிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய தகுதி வாய்ந்த எவருமே ரொம்ப வருஷங்கள் வரவில்லை என்றும் சொன்னேனல்லவா? அதைப் பார்த்துப் பதஞ்ஜலி மஹர்ஷிக்குக் கவலை பிடித்துக் கொண்டது. 'என்னடா இது? பகவான் உத்தரவின் பேரில் நாம் மஹா பாஷ்யப் புஸ்தகம் பண்ணியும் லோகம் அதனால் ப்ரயோஜனம் அடையாமல் வருஷக் கணக்காகப் போய்க் கொண்டிருக்கிறதே!' என்று விசாரப்பட்டார். சாஸ்த்ரமும் ப்ரசாரமாகணும்; சிஷ்யனுக்கும் சாப மோசனம் ஏற்படணும்; ஆனால் இரண்டையும் செய்யக்கூடியவனாக எவனுமே அகப்படமாட்டான் போலிருக்கிறதே!—என்று நினைத்துக் கடைசியில் பதஞ்ஜலியேதான் சந்த்ர சர்மாவாக அவதரித்தார்! பதஞ்ஜலியாக இருந்தபோது யார் சிஷ்யராயிருந்தாரோ அவரிடமே சிஷ்யராகி தாம் பண்ணின மஹாபாஷ்யத்தையே கற்றுக்கொண்டு, அரசிலைகளில் எழுதிக்கொண்டார்.

இவரே பண்ணினதுதானே, அதை எழுதி வைத்துக் கொள்வானேன் என்றால், அவதாரமானால்கூட அவதரிப்பதற்குப் பூர்வ காலத்தில் நடந்ததெல்லாம் அப்படியே ஞாபகமிருக்குமென்று சொல்லமுடியாது. மநுஷ உடம்பில் வந்ததால் அதன் குறைபாடுகள் கொஞ்சமாவது இருக்கிறாற் போலத்தான் அவதாரங்களும் காட்டும். அதனால்தான் பதஞ்ஜலி அவதாரமே பதஞ்ஜலியிடம் பாடம் கேட்கச் சிதம்பரம் போனது! வழியிலேயே பாடத்தை எழுதி மூட்டை கட்டிக்கொண்டார்.

ப்ரஹ்மரக்ஷஸ் கௌடரூபம் பெற்று ஞானாசார்யனைத் தேடிக்கொண்டு புறப்பட்டபின் சந்த்ர சர்மாவும் மரத்திலிருந்து இறங்கினார். இலை மூட்டையைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். அநேக நாட்களாகச் சாப்பாடும்

Koviloor Digital Library

தூக்கமும் இல்லாமலிருந்ததற்கெல்லாம் சேர்த்து வைத்து ரொம்பக் களைப்பாக ஆயிற்று. மூட்டையை போட்டுவிட்டு அப்படியே பூமியில் சாய்ந்து நன்றாகத் தூங்கிப் போய் விட்டார்.

அந்தப் பக்கமாக ஒரு ஆடு வந்தது. அது இலை மூட்டையை மேய ஆரம்பித்தது.

எத்தனையோ விக்னங்கள், கஷ்டங்களுக்குப் பிறகு மஹாபாஷ்யம் ஒருவாறு ரத்தத்தில் தோய்த்து எழுதி வைக்கப்பட்டும் அது பூர்ணமாக லோகத்திற்குக் கிடைக்க வில்லை! ப்ரபஞ்ச லீலையில் இப்படியெல்லாம்தான் பகவான் அப்பப்போ காட்டுவது! நல்லது என்பதும் நிறைவாக நடக்காமல் மூளியாகி விடுகிறது! எத்தனை சொன்னாலும் ப்ரபஞ்சமே அபூர்ணம்தான், இதை விட்டால்தான் பூர்ணம் என்று காட்டுவதுபோல ப்ரபஞ்சத்தில் உசந்த விஷயங்கள் என்று நினைப்பவைகளும் வீணாய்ப்போவதைப் பார்க்கிறோம்.

ஆடு இலை மூட்டையில் ஒரு பாகத்தைத் தின்றுவிட்டது.

அது போன பாக்கிதான் இப்பொழுது லோகத்துக்குக் கிடைத்திருக்கிறது. இல்லாத பாகத்துக்கு 'அஜ பக்ஷித பாஷ்யம்' என்றே பெயர்! (அஜ-ஆட்டினால்; பக்ஷித-சாப்பிடப்பட்ட.)

சந்த்ர சர்மா எழுந்திருந்தார். எத்தனையோ ச்ரமப்பட்டு எழுதினதில் ஒரு பாகம் பறிபோயிருந்ததைப் பார்த்தார். என்ன பண்ணுவது? மிஞ்சியதையாவது ரக்ஷித்துக் கொடுக்கவேண்டுமென்று நினைத்தார். களைப்பைப் பொருட்படுத்தாமல் மூட்டையைத் தூக்கிக்கொண்டு புறப் பட்டார்.

உஜ்ஜயினிக்கு வந்தார்.

களைப்புத் தாங்கமுடியவில்லை. ஒரு வைச்யனுடைய வீடு வந்தது. அங்கே மூட்டையை ஜாக்ரதையாக வைத்து விட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டார். அடித்துப் போட்டதுபோல நன்றாகத் தூங்கிப் போய்விட்டார்.

Koviloor Digital Library

அவர்பாட்டுக்கு நாள் கணக்கில் தூங்கிக்கொண்டிருந்தார்.

அந்த வைச்யனுக்கு ஒரு புத்ரி இருந்தாள். அவள் அவரைப் பார்த்தாள். ப்ரியம் ஏற்பட்டது. எழுப்பிப் பார்த்தாள். அவர் எழுந்திருக்கவே இல்லை. 'மஹா தேஜஸ்வியாக இருக்கிறார். ஆனால் இப்படி ப்ரக்ஞையே இல்லாதவராக, அன்ன ஆஹாரமின்றித் தூங்குகிறாரே! இவருடைய ப்ராணனை ரக்ஷிக்கவேண்டும்' என்று நினைத்தாள்.

அவளுக்கு வைத்தியம் தெரியும். அதனால், என்ன பண்ணினாளென்றால், தயிரும் சாதமுமாக நன்றாகப் பிசைந்து கொண்டுவந்தாள். அதை சந்த்ர சர்மாவின் வயிற்றில் பூசி நன்றாகத் தேய்த்தாள்.

ரோமகூபத்தின் (மயிர்க்கால்களின்) வழியாக அன்ன ஸாரம் சரீரத்துக்குள் இறங்கிற்று.

இப்படி ஒரு சிகித்ஸை நம்முடைய வைத்ய சாஸ்த்ரத்தில் இருக்கிறது. தற்காலத்தில் ஊசி வழியாகக் குத்தி இஞ்ஜெக்ட் செய்கிறார்கள். இப்படிச் செய்வதில் குத்துவதான ஹிம்ஸை இருக்கிறது. சரீரத்தில் புதிசாக த்வாரம் செய்வதாகவும் இருக்கிறது. நம்முடைய வைத்ய முறையிலோ இயற்கையாகவுள்ள ரோமகூபத்தின் வழியாகவே ஸத்தை உள்ளே இறக்க வழி சொல்லியிருக்கிறது. இப்பொழுதும் மலையாளத்தில் நவரக்கிழி என்று செய்கிற சிகித்ஸை இதைப் போன்றதுதான்.

வைச்யப்பெண் இப்படி விடாமல் சில நாட்கள் செய்து வந்ததில் சந்த்ர சர்மாவுக்குத் தெம்பும், விழிப்பும் ஏற்பட்டன.

விழித்துக்கொண்டவர் முதலில் இலை மூட்டை ஜாக்ரதையாக இருக்கிறதா என்றுதான் பார்த்தார். ஜாக்ரதையாகவே இருந்தார். [சிரித்து] இவரும் ஜாக்ரத் ஸ்திதி (விழிப்பு நிலை) பெற்றிருந்தார்; மஹாபாஷ்ய மூட்டையும் ஜாக்ரதையாக இருந்தது!

Koviloor Digital Library

அதை எடுத்துக்கொண்டு சந்த்ர சர்மா கிளம்பினார்.

வீட்டுக்காரனான வைச்யன் அவரைத் தடுத்து நிறுத்தினான். "என்ன ஓய், கிளம்பிவிட்டீர்? என் புத்ரியாக்கும் குற்றுயிராகக் கிடந்த உம்மை எத்தனையோ ச்ரமப்பட்டுக் காப்பாற்றி உயிர் கொடுத்திருக்கிறாள். உம்மை விவாஹம் செய்துகொள்ளவேண்டும் என்ற ஆசையில்தான் அவள் சிகித்ஸை செய்து ப்ராண ரக்ஷணை பண்ணியது. நீரானால் கிளம்புகிறீரே!" என்றான்.

வைச்யப் பெண்ணை ப்ராம்மணர் கல்யாணம் பண்ணிக் கொள்ளவாவது என்று நினைக்கலாம். நாம் ரொம்பக் காலத்திற்கு முன்னால் இருக்கிறோம் என்பதை மறந்து போகக் கூடாது. நம் நம்பிக்கைப்படி நமக்குக் கிடைத்திருக்கிற ஆதாரங்களின்படி ஆசார்யாள் அவதாரம் செய்தே 2500 வருஷமாகிறது. அவருடைய குருவான கோவிந்த பகவத் பாதர் பூர்வாச்ரமத்தில் சந்த்ர சர்மாவாக இருந்த காலத்தை இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். பிற்பாடு அவர் கோவிந்த நாமத்துடன் ஸந்நியாஸியாகி எத்தனை வருஷத்துக்கப்புறம் ஆசார்யாள் அவரிடம் உபதேசம் பெற வந்தாரோ? யோக ஸித்தர்களான கௌட பாதர், கோவிந்த பகவத் பாதர் முதலானவர்கள் நூற்றுக்கணக்கான வருஷங்கள்கூட ஆத்ம நிஷ்டர்களாக இருந்திருக்கலாம். நாம் பார்த்த கதைகளின்படி அவர் களுடைய பூர்வாச்ரம காலத்தில் 72 துர்மதங்கள் பரவி யிருந்ததாகத் தெரியவில்லை. மூலமான ஸநாதன தர்மமே அநுஷ்டானத்திலிருந்து வந்ததாகத்தான் தெரிகிறது. அதனால் அவர்கள் த்வாபர-கலியுக ஸந்தியில் அவதரித்த சுகாசார்யாளை அடுத்துச் சில வருஷங்களில், அதாவது கலி ஆரம்பகாலத்திலேயே பிறந்தவர்களாகவும் இருக்கலாம். அதாவது, கலி புருஷன் வாலைச் சுருட்டி வைத்துக்கொண் டிருந்த காலத்திலேயே அவர்களுடைய பூர்வாச்ரம வாழ்க்கை நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம்.

Koviloor Digital Library

5000—1000 வருஷங்களுக்கு முற்பட்ட அப்போது ப்ரஹ்ம தேஜஸை நன்ருகக் கட்டிக் காப்பாற்றிய சக்தர்களாகப் பல ப்ராம்மணர்கள் இருந்திருப்பார்கள்......

ஒன்று சொல்வதுண்டு : நெருப்பு பெரிசாயிருந்து ஜலம் கொஞ்சமாயிருந்தால் நெருப்பு ஜலத்தை வற்றடித்துவிட்டு, தான் நன்ருக ஜ்வலித்துக் கொண்டிருக்கும். மாருக ஜலம் நிறையவும் நெருப்பு சின்னதாகவுமிருந்துவிட்டால் ஜலம் நெருப்பை அணைத்துவிடும். ப்ரஹ்ம தேஜோக்னி நிரம்ப இருந்தால் அப்போது ப்ராம்மணரளவுக்கு சாஸ்த்ரங்களில் ஆசார பரிசுத்தி நிர்ணயிக்கப்படாத இதர ஜாதியாரோடு சில அத்யாவச்யங்களில் ப்ராம்மணர்கள் விவாஹமும், வம்சோத்பத்தியும் செய்துகொண்டாலுங்கூட இவர்களுடைய ஆசார அக்னியின் வீர்யத்தில் மற்றவர்களின் ஆசாரக் குறைவு அடிபட்டுப்போய் அவர்களும் பரிசுத்தி பெறுவார்கள். இப்படித்தான் பூர்வ காலங்களில் இருந்தது. நல்ல இந்த்ரியக் கட்டுப்பாட்டுடன் ப்ரஹ்ம வர்சஸ் நிரம்பியவனுக ஒரு ப்ராம்மணன் இருக்கவேண்டும்; அவனுக்கு ஸொந்தத்தில் தன-தார-புத்ராதி ஆசைகள் இருக்கப்படாது; அப்படி ஒருவன் இருந்தால் பிற ஜாதிகளிலும் நல்ல உத்தமமான ஜீவர்கள் தோன்றி அந்தக் குலங்கள் மேன்மை அடையவேண்டுமென்று அவனிடம் அந்த ஜாதிக்காரர்களும் ப்ரார்த்தனை செய்துகொண்டு தங்களுடைய கன்னிகைகளை அர்ப்பணம் செய்வார்கள். அவனும் அந்தப்படி பண்ணிவிட்டு, புத்ரோத்பத்தி ஆனவுடனே, அல்லது புத்ரனுக்கு உரிய வயஸு வந்தவுடன் வித்யோபதேசம் கொடுத்துவிட்டோ, அப்புறம் கொஞ்சங்கூடப் பற்றில்லாமல் புறப்பட்டுவிடுவான். பூர்வ யுகங்களில் இருந்துவந்த இந்த வழக்கம், ப்ரஹ்மவர்சஸ் குறைந்து கொண்டே போகும் கலியில் நிஷேதம்தான் (அநுஷ்டிக்கத் தக்கதல்ல என்று விலக்கப்பட்டதுதான்). ஆயினும் யுகத்தின் ஆரம்பமான ஆயிரம், ஆயிரத்தைநூறு வருஷம் கலியின் தலைவிரிகோல ஆட்டம் தொடங்காதபோது இது ஓரளவு அநுமதிக்கப்பட்டிருக்கவேண்டும்.

Koviloor Digital Library

இது பிற்காலத்துக்கு, தற்காலத்துக்கு நிச்சயமாக் நிஷேதம்தான். ஆசார்யாள் தம்முடைய காலத்தவர்களையே "அல்ப வீர்யத்வாத்," "ஹீநவீர்யேஷு வா வார்த்தமா நிகேஷு மநுஷ்யேஷு" என்றெல்லாம் ப்ரம்ம தேஜோ வீர்யம் குறைந்து போனவர்களாகத்தான் சொல்லியிருக் கிறார்*. அந்தத் தேஜஸை அவர் மறுபடியும் ஜ்வலிக்கச் செய்தாரென்றாலும், அப்புறம் மறுபடியும் மங்கி மங்கிப் போய், இப்போது உள்ளவர்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! அதனால் இப்போது வர்ண ஸாங்கர்யம் (ஜாதிக் கலப்பு) செய்வது கொஞ்ச நஞ்சம் இருக்கும் ப்ரம்ம தேஜஸையும் மற்றவர்களின் குறைவான ஆசாரத் தால், ஜலத்தைக் கொட்டி நெருப்பை அணைப்பதுபோல, போக்கடிப்பதாகத்தான் ஆகும்.

சந்த்ர சர்மாவின் காலத்தில், ஒருவருடைய ஸொந்த இச்சைக்காக இல்லாமல், சில அத்யாவச்யங்களை முன்னிட்டு ப்ராம்மணர்கள் இதர கன்னிகைகளை அங்கீகரிக்கும் வழக்கம் இருந்திருக்க வேண்டும்.

அதனால்தான் அந்த வைச்யன் அவரிடம் அப்படிச் சொன்னது. அவருக்கா, அந்த மாதிரி விஷயத்தில் மனஸ் போகவேயில்லை. அரும்பாடுபட்டுத் தாம் ஸம்பாதித்த மஹாபாஷ்யத்தை ஸத்-சிஷ்யர்களுக்குக் கொடுத்து ப்ரசாரம் பண்ணவேண்டுமென்பதிலேயே அவருடைய எண்ண மிருந்தது. 'அத்தனை கஷ்டமெல்லாம் பட்டது பந்தத்தில் மாட்டிக் கொள்ளத்தானா?' என்று நினைத்து, "உம் பெண்ணைக் கல்யாணம், கார்த்திகை பண்ணிக் கொள்ளும் உத்தேசம் நமக்கில்லை" என்று சொல்லிப் புறப்படுவதிலேயே மும்மரமாக இருந்தார்.

இப்படி அவர் சபலமில்லாமல் கட்டுப்பாட்டுடன் இருந்த தாலேயே இவ்வளவு உசந்த ஜீவனை அடைந்துதான் தீர்வது என்று அந்தப் பெண்ணுக்கும் அவளுடைய தகப்பனுக்கும் பிடிவாதம் ஏற்பட்டது!

---

* ப்ருஹதாரண்யக பாஷ்யம் I. 4.10

Koviloor Digital Library

"உமது ப்ராமணன் இவள் போட்ட பிச்சை! நன்றி வேண்டாமா? உம்மை டிமான்ட் பண்ண எங்களுக்கு ரைட் இருக்கிறது. வாரும் ராஜ ஸபைக்கு! ராஜாக்ஞைப்படி வழக்கைத் தீர்த்துக் கொள்வோம்" என்று வைச்யன் விடாப் பிடியாய்ச் சொல்லிவிட்டான்.

அப்படியே தீர்ப்புக்காக ராஜாவிடம் போனார்கள்.

நல்ல லக்ஷணமாக, ஆசார காந்தியுடனும், வித்யா சோபையுடனும் இருந்த சந்த்ர சர்மாவை ராஜா பார்த்தான். பார்த்தானோ இல்லையோ, வைச்யன் கேஸை எடுப்பதற்கு முந்தியே அவனுக்கு வேறே யோசனை தோன்றி விட்டது! 'மஹா தேஜஸ்வியாக இருக்கிறாரே. நாம் நம்முடைய குமாரிக்கு எங்கெங்கேயோ வரன் தேடிக் கொண்டிருக்கிறோமே! அதெல்லாம் எதற்கு? இந்த ப்ராம்மண யுவனுக்கே கன்யாதானம் பண்ணிவிடுவோம். அதற்கு தர்ம சாஸ்திரம் இடம் கொடுக்கிறதா என்று மந்திரியைத் தருவித்துக் கேட்போம்' என்று நினைத்தான். "யார் அங்கே? மந்திரியை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்றான்.

அப்படியே மந்த்ரி வந்தான். மந்த்ரிகள் ப்ராம்மணர்களாகத்தான் இருப்பார்கள். இந்த ப்ராம்மண மந்த்ரி வந்தவுடன் சந்த்ர சர்மாவைப் பார்த்தான். அவருடைய அழகில் அவனும் வசீகரமானான். வேடிக்கை என்னவென்றால் அவனுக்கும் விவாஹ வயஸில் பெண் இருந்தாள். 'ஓஹோ! ராஜாவே நம் விஷயம் தெரிந்துகொண்டு நமக்கு மாப்பிள்ளையாகத்தான் இந்தப் பையனைத் தேர்ந்தெடுத்து விட்டு நம்மை கூப்பிட்டனுப்பியிருக்கிறார் போலிருக்கிறது! நம் நல்ல காலம்!' என்று நினைத்தான்.

ராஜா தன்னுடைய பெண் விஷயமாக தர்ம சாஸ்த்ரக் கருத்தைக் கேட்டான்.

ப்ரஹ்ம தேஜஸில் நல்ல வீர்யவத்தான ப்ராம்மணர்கள் விஷயத்தில் அப்படிச் செய்ய சாஸ்த்ரத்தின் அநுமதி இருப்

Koviloor Digital Library

பதைச் சொன்ன மந்த்ரி, நான்கு வர்ணங்களைச் சேர்ந்த கன்னிகைகளையும் ஒரே முஹூர்த்தத்தில் ஒரு ப்ராம்மண வரனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்க இடமிருப்பதாகச் சொன்னான். தன்னுடைய பெண்ணையும் அப்படிக் கன்யாதானம் செய்துகொடுக்க ஆசைப்படுவதாக விஞ்ஞாபித்துக் கொண்டான்.

'பாதிக் கார்யம் முடிந்தது; க்ஷத்ரியப் பெண், ப்ராமணப் பெண் ஆகிய இரண்டு பேர் கிடைத்துவிட்டார்கள்' என்று ராஜா ஸந்தோஷமாக ஒப்புக்கொண்டான்.

எதிர்பார்க்காமல் இப்படி ஒரு புதிய காரணமும் கிடைத்த ஸந்தோஷத்தோடு வைச்யன் தன்னுடைய வழக்கையும் ராஜாவின் முன் வைத்தான். முக்கால் கார்யமும் இவ்வளவு 'ஈஸி'யாக முடிகிறதே என்று நினைத்த ராஜா அவனுக்கு அநுகூலமாகத் தீர்ப்பு பண்ணினான்.

இந்த மாதிரி ஒன்றையொட்டி ஒன்றாகத் திருப்பம் ஏற்பட்டதைப் பார்த்த சந்திரசர்மா, 'இப்படித்தான் ஈச்வர ஸங்கல்பமென்று தெரிகிறது. அதனால் நாம் ஒன்றும் முரண்டு பண்ண வேண்டாம். நடக்கிறபடி நடக்கட்டும்' என்று விவேகமாக விட்டுவிட்டார். மாமனார்களாவதற்கு மூன்று பேரும் போட்ட ஜாயின்ட்-மனுவுக்குத் தலையாட்டி விட்டார்! மனு ராஜாக்ஞையாகவுமல்லவா வந்துவிட்டது?

முக்கால் கார்யத்தை முழுசாகப் பூர்த்தி செய்ய நாலாவது வர்ணத்தைச் சேர்ந்த ஒரு நல்ல குணமுள்ள பெண்ணும் வந்து சேர்ந்தாள்*. தபஸ்விகளாக இருப்பவர்களுக்கு வெண்ணெய் கொண்டுபோய் ஸமர்ப்பணம் பண்ணுவதையே தொழிலாகக் கொண்டிருந்த ஒரு பெண் அவள். அவளுடைய கைங்கர்யத்தில் அவர்கள் ஸந்தோஷப்பட்டு, ஸத்பிராமணராகிய சந்த்ர சர்மாவை அடையாளம்

---

* 'பதஞ்ஜலி சரித'த்தில் ப்ரம்மரக்ஷஸிடம் சந்திர சர்மா பாடம் முடித்ததை அடுத்தே நான்காம் வர்ணப் பெண் அவரிடம் தன்னை அர்ப்பணம் செய்து கொள்கிறாள்.

Koviloor Digital Library

சொல்லி, அவளுடைய புண்ய விசேஷத்தால் அவரையே பதியாக அடைவாள் என்று ஆசீர்வாதம் செய்திருந்தார்கள். அதன்படி அவள் வந்து தன்னை அங்கீகரிக்கும்படி அவரிடம் ப்ரார்த்தித்துக் கொண்டாள்.

ராஜாக்ஞைக்கு மேலே ஈச்வராக்ஞையே இதுவெல்லாம் என்ற 'ஸ்பிரிட்'டில் சந்த்ர சர்மா ஒப்புக் கொண்டார்.

கல்யாணமே வேண்டாமென்றவர் ஒன்றுக்கு நாலாகப் பண்ணிக்கொண்டார்.

க்ருஹஸ்தாச்ரம தர்மத்தைப் பரிபாலிக்க வேண்டும், தனக்குப் பத்னிகளானவர்களின் குலங்களும் ஸத்பிரஜைகளால் சோபிக்க வேண்டும் என்று, ஒவ்வொருத்தியிடமும் ஒரு புத்ரனை ஜனிக்கச் செய்தார்.

அந்தப் பிள்ளைகளெல்லாம் நல்ல புத்திமான்களாக இருந்தனர். சந்த்ர சர்மா அவர்களுக்குத் தாம் கற்ற மஹா பாஷ்யத்தை நன்றாகக் கற்றுக் கொடுத்தார். அப்புறம், 'இவர்கள் மூலம் இனி அது ப்ரசாரமாகிவிடும். நம் கார்யம் ஆகிவிட்டது. இன்னும் குடும்பவாழ்வு வேண்டாம். ஆத்மாவைக் கடைத்தேற்றிக்கொள்ள வழி தேடுவோம்' என்று வீடு வாசலைவிட்டுக் கிளம்பிவிட்டார்.

தர்மாநுஷ்டானத்தைப் பரம்பரையாகக் காப்பாற்றிக் கொடுக்க ஒரு பிள்ளையே போதும். முதலில் பிறக்கும் புத்ரன் தான் அப்படிப்பட்ட 'தர்மஜன்'. அப்புறம் பிறப்பவர்கள் 'காமஜர்'கள் தான்—ஒருவனுடைய ஸொந்த இச்சைப் பூர்த்திக்காக உண்டானவர்கள் தான். அதனால்தான் ஜ்யேஷ்ட புத்ரனுக்கே கர்மாதிகாரம் கொடுத்திருப்பது. நம்பூதிரி ப்ராம்மணர்களில் ஜ்யேஷ்ட புத்ரனுக்குத் தான் ஸொத்துரிமை. ஏனென்றால் பிதுரார்ஜித ஸொத்தும் தர்மாநுஷ்டானத்திற்காகத்தான் ஏற்பட்டது. மற்ற பிள்ளைகளை சரீர ஸம்ரக்ஷணை பண்ணி வளர்த்து, அப்புறம் அவரவரே ஸ்வயமாக ஸம்பாதித்துத் தன் காலில்

Koviloor Digital Library

நிற்கும்படியாக விட்டு விடுவார்கள். ராஜ்யாதிகாரம் மூத்த பிள்ளைக்கு மட்டுந்தானே கொடுக்கப்படுகிறது? பல பிள்ளைகளுக்குப் பிரித்துத் தரப்படுவதில்லையே! அப்படி.

ஒவ்வொரு பத்னியிடமும் ஒவ்வொரு புத்ரன் உண்டான பிறகு சந்த்ர சர்மா இந்த்ரிய நிக்ரஹத்தோடு இருந்து விட்டார். அவருடைய மேதா விலாஸத்தின் காரணமாகப் பிள்ளைகளும் குழந்தையாயிருக்கும்போதே நல்ல புத்திசாலித் தனத்தைக் காட்டியதால், தம் ஒருவரிடமே இருந்த பெரிய நிதியான மஹா பாஷ்யத்தை ப்ரசாரம் செய்ய வேண்டிய கடமையும் தமக்கிருப்பதை நினைத்து, 'அதை இந்தப் பிள்ளைகளுக்குக் கற்பித்து விடவேண்டும். அப்புறம் அவர்கள் அதைப் பரப்புவதாக இருக்கட்டும்' என்று தீர்மானித்தார். அதற்காக மேலும் சில வருஷங்கள் பல்லைக் கடித்துக்கொண்டு க்ருஹத்தில் இருந்துவிட்டு, பாடம் முடிந்ததும் ஸந்நியாஸியாவதற்குப் புறப்பட்டுவிட்டார்.*

---

* பதஞ்ஜலி சரிதத்தில் சொல்லியுள்ளபடி சந்திர சர்மாவுக்கு ப்ராம்மண பத்னியிடம் பிறந்த பிள்ளைதான் வரருசி என்ற பேரறிவாளர். இவரே வியாகரணத்தில் பாணினிக்கும் பதஞ்ஜலிக்கும் அடுத்தபடியாகப் போற்றப்படும் காத்யாயனர் என்றும் கூறுவர். விக்ரமாதித்தனின் வித்வத்ஸபையை அலங்கரித்த 'நவரத்தின'ங்களில் ஒரு ரத்தினம் இவர் இவரை ஆதரித்த அந்த விக்ரமாதித்ய மஹாராஜனேதான் சந்திர சர்மாவுக்கு க்ஷத்ரிய மனைவியிடம் பிறந்த பிள்ளை என்கிறது 'பதஞ்ஜலி சரிதம்.' அதன்படி வைசிய மனைவிக்கு பிறந்தவர் பட்டி; நான்காம் வர்ணத்தவளுக்குப் பிறந்தவர் பர்த்ருஹரி. பட்டி விக்ரமாதித்யனின் மதிமந்திரியாக விளங்கியவர். அதோடுகூட ராமாயணக் கதையின் மூலம் வியாகரண விதிகளை விளககுவதான 'பட்டி காவ்யம்' என்ற சாதுரியமிக்க நூலை எழுதியிருக்கிறார். பட்டி காவ்யமும் பர்த்ருஹரி எழுதியதுதானென்றும், அது விக்ரமாதித்யனுக்கு ஏழு நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வலபி மன்னன் தாரஸேனனின் காலத்தில் எழுதப்பட்டதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். நான்கு புதல்வர்களிலும் முதலிடம் பெற்றுள்ளவர் பர்த்ருஹரியே. அவர் முறையே கவியாகவும், அறநெறியாளராகவும், ஆன்ம சிந்தனையாளராகவும் இருந்து இயற்றிய ச்ருங்கார சதகம், நீதி சதகம், வைராக்ய சதகம் ஆகிய நூல்கள்அந்தந்தத் துறையில் இணையற்றவையாக விளங்குகின்றன. இவரும் வியாகரணத்துககுத் தொண்டாற்றியுள்ளார்—'வாக்யபதீயம்' என்ற நூலை அளித்த. அவர் அத்வைதக் கருத்துக்களுக்கும் நெருக்கமாகச் சென்றவர். (தொடர்ச்சி அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

வீட்டை விட்டுப் புறப்பட்ட சந்த்ர சர்மா யாரிடம் ஞானோபதேசம் வாங்கிக் கொண்டு ஸந்நியாஸியாக வேண்டுமென்று நினைத்தாரென்றால், ஆதிகாலத்தில் தமக்கு மஹாபாஷ்யம் உபதேசித்த கௌடரிடமிருந்தேதான்! வித்யா குருவையே ஸந்நியாஸ குருவாகவும் கொள்ள எண்ணினார். கௌடர் பதரிகாச்ரமத்திற்குப் போய் ப்ரம்ம நிஷ்டரான சுகரிடம் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு தாமும் ப்ரம்ம நிஷ்டையில் போய்க் கொண்டிருக்கிறாரென்று தெரிந்து அங்கே போனார். முன்னே அவர் இவரைக் கேள்வி கேட்டது 'நிஷ்டை' என்ற ப்ரத்யயம் பற்றி! இப்போது இவர் அவரிடம் அநுபவ பாடமாகப் பெற விரும்பியது ப்ரஹ்ம 'நிஷ்டை'!

ஞானியாக ஹிமோத்கிரியில் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருந்த கௌடருக்குப் பூர்வ கால சிஷ்யரைப் பார்த்ததும் ஸந்தோஷமாயிற்று. மனஸார அநுக்ரஹம் பண்ணி ஸந்நியாஸாச்ரமம் கொடுத்தார்.

அதிலிருந்து சந்த்ர சர்மாவுக்கு அந்தப் பேர் போய், 'கோவிந்த பகவத் பாதர்' என்று பெயர் ஏற்பட்டது.

(தொடர்ச்சி)

நம்முடைய சாஸ்திரக்ஞர்களின் கணக்குப்படியே விக்ரமாதித்ய சகாப்தம் என்பது கி. மு 57-ல் தான் ஆரம்பித்திருக்கிறது. ஆசார்யாளின் அவதாரமோ கி. மு 509-ல் என்ற கருத்தைத்தான் ஸ்ரீசரணர்கள் ஆமோதித்துப் பேசுவது. எனவே எட்டு வயது சங்கரர் விக்ரமாதித்யனின் தந்தையாகப் பூர்வாச்ரமத்தில் இருந்த கோவிந்த பகவத் பாதரிடம் துறவு தீக்ஷை பெற்றாரென்பது நம்முடைய காலக் கணக்குக்கு ஒத்து வரவில்லை. இதனால், பதஞ்ஜலி சரிதத்தில் சந்திர சர்மாவின் நான்கு புத்ரர்கள் யாரார் என்று கூறியிருப்பது வினாவுக்குரித்தாகிறது. இது காரணமாகவே ஸ்ரீ சரணர்கள் அதிலுள்ளபடி அவர்கள் பெயரைக் கூறாமல் விட்டிருக்கக்கூடுமென்று ஊகிக்கலாம்.

ஆயினும் 'பதஞ்ஜலி சரித'த்தை ஸ்ரீ சரணர்கள் பல முறை குறிப்பிட்டிருப்பதாலும், அதில் சொல்லும் நால்வரை உடன்பிறந்தவர்களாகக் கூறும் வழக்கு இந்தியா முழுதிலுமே பரவலாக இருப்பதாலும் இவ்விவரத்தைக் கொடுத்திருக்கிறோம்

Koviloor Digital Library

க்ருஷ்ணர்தான் ஜகத்குரு. அவருடைய நாமாக்களில் கோவிந்தன் என்பது விசேஷமானது.*

ஜகத்குருவான க்ருஷ்ணரின் பேராகவுமிருக்கிறது, தம்முடைய நேர்குருவின் பேராகவுமிருக்கிறது என்பதால் ஆசார்யாளுக்கு கோவிந்த நாமாவில் ஒரு அலாதியான பற்றுதல் உண்டு. "பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம், பஜ கோவிந்தம்" என்றே ஒன்றுக்கு மூன்று தடவையாக லோகமெல்லாம் கோஷிக்கும்படியாகப் பாடி வைத்து விட்டார்!

குரு பரம்பரையில் ஸந்நியாஸிகள்

நாராயணனிலிருந்து ஆரம்பித்து சுகாசார்யாள் வரையில் நம்முடைய குரு பரம்பரையில் எவரும் நாம் நினைக்கிறபடி ஸந்நியாஸியாக இருக்கவில்லை. அவர்களில் எவரும் தலையை முண்டனம் பண்ணிக்கொண்டு, காஷாயம் கட்டிக்கொண்டு, பூணூலை அறுத்துப் போட்டவர்களில்லை. பேசாத ஆதி குரு தக்ஷிணாமூர்த்தியுங்கூடத்தான்! அவர், நாராயணன், ப்ரம்மா ஆகியவர்கள் தெய்வங்களாகவே இருந்தவர்கள். தெய்வங்கள் மனிதர்கள் மாதிரி நான்கு ஆச்ரமம் வஹிப்பதில்லை. வஸிஷ்டர், சக்தி, பராசரர், வ்யாஸர் ஆகிய நாலு பேரும் ரிஷிகள் என்னும்படியாகவே இருந்தவர்கள். ரிஷிகளையும் விஷயம் தெரிந்தவர்கள் மநுஷ்ய ஜாதியுடன் சேர்க்காமல், தேவ ஜாதி போல இன்னொரு தனி இனமாகத்தான் சொல்வார்கள். ஆகாசத்தில் ஈச்வரனின் ச்வாஸம் மந்த்ரங்களின் ரூபத்தில் இருப்பதைத் தங்களுடைய அதீந்த்ரிய சக்தியால் கண்டு, க்ரஹித்து, லோகத்திற்கு அந்த மந்த்ரங்களை வெளியிட்டுப் பரமோபகாரம்

---

* கோவிந்த நாம விசேஷம் குறித்து "தெய்வத்தின் குரல்"—நான்காம் பகுதியில், "வண்டு ஸ்தோத்ரம்" என்ற உரையில் தொடர்ச்சியாக வரும் 'கோவிந்த-ஹர நாமச் சிறப்பு', 'குறைவொன்றுமில்லாத கோவிந்தா!', 'குரு-தெய்வ-கோவிந்த', 'மூன்றில் ஒன்று' ஆகிய உட்பிரிவுகள் பார்க்கவும்.

Koviloor Digital Library

செய்தவர்களே ரிஷிகள். அதனால் ரிஷி என்பதற்கு இலக்கணம் 'மந்த்ர-த்ரஷ்டா' (மந்த்ரத்தைக் கண்டு கொள்ளக் கூடியவர்) என்று சொல்லியிருக்கிறது. இப்போப் பட்ட சக்தியைப் பெற்ற ஒருவர் மநுஷ்ய ஜாதியின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஸ்திதிக்குப் போய்விடுகிறார். ஞான த்ருஷ்டி முதலான அநேக தெய்விக சக்திகள் வாய்க்கப்பட்ட அந்த ரிஷிகளைத் தனி வர்க்கமாகத்தான் சொல்லியிருக்கிறது. தெய்விகம், மாநுஷம், ஆஸுரம் (என்பதாக முறையே தெய்வத்தைக் குறித்தது, மனிதரைக் குறித்தது, அஸுரரைக் குறித்தது) என்று மூன்று 'க்ளாஸ்'களைச் சொன்னதோடு நிறுத்தாமல், 'தெய்விக'த்துக்கு அடுத்தாற்போலவும், 'மாநுஷ'த்துக்கு முந்தியதாகவும் 'ஆர்ஷம்' என்றும் ஒரு தனி 'க்ளாஸ்' சொல்லியிருக்கிறது. 'ஆர்ஷம்' என்றால் ரிஷிகளைக் குறித்தது என்று அர்த்தம்.

இப்படி மனித ஜாதிக்கு மேலே போன ரிஷிகளாகவே வஸிஷ்டரிலிருந்து வ்யாஸர் வரை இருந்தார்கள். அவர்களில் யாரும் பூணூலை அறுத்துப் போட்டு விட்டு, தலையைமொட்டையடித்துக் கொண்டு, காவி கட்டிக்கொண்டிருந்த ஸந்நியாஸிகளாக இல்லை.

ஆனாலும் இவர்கள் எல்லாரும் ப்ரம்ம ஞான ஸித்தி பெற்றவர்கள். அதாவது மனிதராகப் பிறந்தவர்கள் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு அடைகிற லக்ஷ்யம் எதுவோ அதை அடைந்தவர்கள்.

(தக்ஷிணாமூர்த்தி, நாராயணன், ப்ரம்மா ஆகிய தெய்வங்களின் ப்ரஹ்ம ஞானத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதேயில்லை.)

அப்புறம் சுகர். அவர் எப்படியிருந்தார்? அப்படி, இப்படி, எப்படி என்று எதுவுமே சொல்லமுடியாத அத்வைத நிலையிலேயே கர்ப்பத்தில் தோன்றிய நாளாக இருந்தவரவர். அவரும் தலையை மொட்டை அடித்துக் கொண்டதாகச் சொல்லியிருக்கவில்லை. காஷாயமும் கட்டிக்

Koviloor Digital Library

கொள்ளவில்லை. எந்த வஸ்த்ரமுமே கட்டிக் கொள்ளவில்லை. ஸ்த்ரீ-புருஷ பேதங்களே அடியோடு தெரியாதவராக இருந்ததால் குழந்தைபோல வஸ்த்ரமே இல்லாமல் அவர் பாட்டுக்கு ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருந்தார். 'அவதூதர்', 'திகம்பரர்' என்று சொல்கிறபடி இருந்தார்.

அவதூதர் என்றால் ஸகலத்தையும் விட்டுவிட்டவர். 'திகம்பரர்' என்பதில் 'திக்', 'அம்பரம்' என்று இரண்டு வார்த்தைகள் இருக்கின்றன. 'திக்' என்றால் திசை. (தமிழில் திக்கு என்கிறோம்.) 'அம்பரம்' என்றால் வஸ்த்ரம். 'பீதாம்பரம்' என்கிறோம். 'பீத'மான, மஞ்சள் கலரான அம்பரம்—மஞ்சள் வஸ்திரம்தான் பீதாம்பரம். திகம்பரமென்றால்? திசைகளே வஸ்திரம்! அப்படியென்றால்...எட்டு திசையும் நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கின்றன. வஸ்திரம் போட்டுக் கொண்டுள்ளபோது முதல் சுற்றாக நம்மை வஸ்திரம் சூழ்ந்துகொண்டுவிடுகிறது. அப்புறம்தான் திக்கும் சூழ்வது. வஸ்திரத்தை அவிழ்த்துவிட்டால் திக்குகளே நேராக நம்மைச் சூழ்ந்துவிடுகின்றன. அதைத்தான் 'திகம்பரம்' என்பது. அப்படியிருப்பவர் திகம்பரர். நிர்வாணமாயிருப்பவர் என்று சொல்கிறோம். [சிரித்து] ப்ரம்ம நிர்வாணம் என்னும் ஸத்ய ஸத்யமான நிலையிலேயே ஸதாவும் இருந்த சுகர் வஸ்திரமில்லாமலும் நிர்வாணமாயிருந்தார்!

(நிர்வாணம்)

(ஜைன மதத்தையும் பௌத்த மதத்தையும் ஒன்று மாதிரியே இணைத்துப் பேசுவது வழக்கம். ஜைனர்களில் வஸ்த்ரமில்லாமலிருக்கும் பிரிவினரே ஜாஸ்தி. 'ச்ரமணர்' எனப்படும் அவர்களைத் தமிழில் சமணர் என்றும் அமணர் என்றும் சொல்வார்கள். அதனாலேயே நிர்வஸ்திரமாயிருப்பது 'அ(ம்)மணம்' எனப்படுகிறது. அமணர்களுடைய லக்ஷ்யத்தை பௌத்தர்களின் நிர்வாணத்தோடு ஒன்று

Koviloor Digital Library

படுத்தியே, அம்மணமாயிருப்பதை நிர்வாணம் என்றும் சொல்வதாயிற்றோ என்னவோ?

நிர்வாணம் என்பதற்கு நேர் அர்த்தம், 'தீபத்தை ஊதி அணைப்பது'. ஒரே சூடாக தஹித்துக்கொண்டு, ப்ரகாசித்துக் கொண்டிருந்த சுடர் அடியோடு இல்லாமலே போய்விடுவது தான் நிர்வாணம். இப்படி அக்னியை க்ஷணத்தில் அடியோடு இல்லாமல் பண்ணிவிடுகிற மாதிரி வேறே எதையும் பண்ண முடியாது. ஜலத்தைக் காய்ச்சி, கீய்ச்சிப் பொங்க வைத்துத் தான் வற்றடித்து இல்லாமல் பண்ணணும். இப்படியே மற்ற பூதங்களையும். அப்போதுங்கூட அவையெல்லாம் அணுக்களினால் ஆனதால், நாம் அழிந்துவிட்டதாக நினைத்த பிறகும், நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் வேறே ரூபத்தில் இருந்துகொண்டுதானிருக்கும். Matter-ஐ destroy பண்ணவே முடியாது என்று சொல்கிறார்கள். அக்னி அணுக்களாலானது அல்ல. (அக்னி எரிவதற்குத்தான் ஆக்ஸிஜன் வேண்டுமே தவிர, அக்னியே ஆக்ஸிஜன் அணுக்கள்தான் என்று நினைத்துவிடக் கூடாது.) அணுக்க ளால் உண்டாகாததால் அக்னியைத்தான் அடியோடு ரூபமே இல்லாமல் பண்ணி அழிக்க முடிகிறது. அம்மாதிரி அணைந்து போவதுதான் நிர்வாணம். பூதங்களிலேயே ரொம்ப வீர்யத்துடன் இருப்பது அக்னி. அக்னியின் சின்னப் பொறி மேலே பட்டால்கூடத் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அந்த சின்னப் பொறியே பெரிய ஜ்வாலையாகி ஊரையெல்லாம் கொளுத்திவிட முடியும். காற்று, ஜலம் முதலான எந்த பூதத்துக்கும் இத்தனை வீர்யம் இல்லை. ஆனாலும் இப்படி யிருக்கும் அக்னியைத்தான் அடியோடு ரூபமில்லாமல் அழிக்க முடிகிறது! காற்றை அழிக்க முடியுமா?

ஜீவாத்ம பாவம் என்று ஒன்று கண், காது, மூக்கு முதலான அநேக அவயவங்களைக் கொண்ட சரீரத்தின் நூறு லக்ஷம் அநுபவங்களைப் பெற்றுக்கொண்டு ரொம்பவும் ஸ்ட்ராங்காக இருக்கிறது. மனஸு, சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற நாலைக் கொண்ட அந்தஃகரணம்

Koviloor Digital Library

என்பதால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகத் தான் ஒரு ஜீவன் என்ற பாவம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நாலையும் கொஞ்சங்கூட அடக்கிக் கட்டுப்படுத்த முடியவில்லை. அந்தஃகரணத்தின் ஆசைகளை சரீர அவயங்களின் மூலம் அநுபவித்துக் கொண்டே போவதாக இருக்கிறது. 'சரீரமே நான்' என்று நினைப்பதான ஜீவாத்ம பாவம் ஆணிவேர் விட்டுக்கொண்டு ஆழமாக ஏற்பட்டு விடுகிறது. ரொம்ப வீர்யத்துடன், அக்னியைப்போல, வறுத்தெடுப்பதாக அது இருக்கிறது. அப்படிப்பட்ட அதை அடியோடு அழித்துவிடுவதும் அக்னியை அணைப்பது போலத்தான் என்பதாலேயே இதற்கும் 'நிர்வாணம்' என்று பேர் கொடுத்தார்கள். கொஞ்சங் கொஞ்சமாக ஸாதனை மார்க்கத்தில் முன்னேறித்தான் அந்த நிலையை அடைய முடியுமானாலும் கடைசிப் படியில் ஈச்வரானுக்ரஹம் என்பது ஒரு புயல் காற்று அடித்து தீபத்தை க்ஷணத்தில் அணைப்பது போலத்தான் ஒரே வீச்சில் ஜீவாத்ம பாவத்தை அழிக்கும். அதனால் 'நிர்வாணம்' என்று பெயர் கொடுப்பது ரொம்பவும் பொருத்தமாகிறது.

'நிர்வாணம்' என்று புத்தர்தான் முதலில் சொன்னாரென்று ஒரு தப்பபிப்ராயம் இருக்கிறது. அவருக்கு முந்தியே 'விமோக்ஷ'த்தை (ஆத்மாவின் முடிவான விடுதலை நிலையை) நம் சாஸ்த்ரங்களில் அப்படி ('நிர்வாணம்' என்று) சொல்லியிருக்கிறது. கீதையில் பகவான், ஸ்தித ப்ரஜ்ஞனை (ஞான நிலையிலேயே ஊன்றியவனை) வர்ணித்து முடிக்கிறபோது "ப்ரஹ்ம-நிர்வாணம்-ருச்சதி" (ப்ரம்ம நிர்வாணத்தை அடைகிறான்) என்றே சொல்லியிருக்கிறார்*. அப்புறம், 'தனக்குள்ளேயே அடங்கி ஸுகித்துக் களித்துக்கொண்டு உள்ளொளியிலேயே முழுகிப்போன யோகி உயிர் வாழும் போதே ப்ரம்மமாயிருந்து ப்ரம்ம நிர்வாணம் அடைகிறான்' என்று 'ஸந்நியாஸ யோகம்' என்ற அத்யாயத்தில் சொல்கிறார்:

---

*, II. 72

Koviloor Digital Library

யோ (அ)ந்த: ஸுகோ (அ)ந்தராராம-ஸ்ததாந்தர்-
ஜ்யோதிரேவ ய: |
ஸ யோகீ ப்ரஹ்ம-நிர்வாணம் ப்ரஹ்மபூதோ
(அ)திகச்சதி ||*

வித்யாஸம் என்னவென்றால் புத்தர் 'நிர்வாணம்' என்று மட்டும் சொல்லியிருக்க பகவான் 'ப்ரஹ்ம நிர்வாணம்' என்கிறார். முக்யமான வித்யாஸம். புத்தர் 'நிர்வாணம்' என்று மாத்திரம் சொல்வதால் ஜீவாத்ம பாவம் அடிபட்டு, அழிவுபட்டு, ஒரே சூன்யமாய் விடுவதை மட்டுமே குறிப்பிடுகிறார். இப்படி ஜீவாத்மா அழிந்துபோய் ஒரே சூன்யமாகிவிடாமல், ஜீவாத்ம பாவம் அழிந்தாலும் பரமாத்மாவான ப்ரம்மமாகவே ஆகிவிடுகிறான் என்ற பரிபூர்ண நிலையைக் குறிக்கத்தான் பகவான் 'ப்ரஹ்ம நிர்வாணம்', 'ப்ரஹ்ம நிர்வாணம்' என்று ஒவ்வொரு தடவையும் சொல்கிறார்.)

சுகர் ஸந்நியாஸி என்பவனுக்கு ஏற்பட்ட காவி வஸ்த்ரமும் போட்டுக்கொள்ளாமல் திகம்பரராக இருந்தவர் என்று சொல்லிக்கொண்டிருந்தேன்.

விசேஷம் என்னவென்றால், அவர் தம்மளவில் ஸ்த்ரீ-புருஷ பேதம் தெரியாத பரிசுத்த நிலையில் நிர்வஸ்திரமாயிருந்தது மட்டுமில்லை. இந்த பேத உணர்ச்சி நிறையவுள்ள இதர ஜனங்களுங்கூட அவருடைய ஸாந்நித்ய விசேஷத்தினால் தாங்களும் அந்த தோஷம் இல்லாதவர்களாகி விடுவார்கள்.

ஒரு கதை உண்டு. அவர் பூணூல் போடுவதற்கு முந்தியே பரிவ்ராட்டாக ஓடினார், பின்னாலேயே வ்யாஸர், "புத்ரா, புத்ரா!" என்று ஓடினார்—என்று சொன்னேனல்லவா? பால்யத்திலேயே அப்படி அவர் (சுகர்) ஓடி

*. V. 24. இதற்கடுத்த 25-வது, 26-வது ச்லோகங்களிலும் 'ப்ரம்ம நிர்வாணம்' என்ற சொற்றொடர் வருகிறது.

Koviloor Digital Library

யிருக்கக்கூடும் என்று நான் சொன்னாலும், இந்தக் கதைப்படி அவர் நல்ல யௌவன ப்ராயம் வந்த பின்தான் அப்படிப் போனது..........வ்யாஸர் தனக்கு ஒரு ஸத்புத்ரன் வாய்க்க வேண்டுமென்ற தாபத்தோடு, பிரார்த்தனையோடு யாகாக்னிக்காக அரணிக் கட்டையைக் கடைந்து கொண்டிருந்தார்; அந்த அக்னியிலேயே சுகர் ஜ்யோதி ஸ்வரூபமாக உத்பவித்தார்; உத்பவிக்கும்போதே யுவாவாக இருந்தார்—என்றும் அபிப்ராயமுண்டு. ஆக, கட்டிளம் காளை உருவத்தில் அவர் பாட்டுக்கு வஸ்த்ரமில்லாமல் போய்க் கொண்டிருந்தார்.

வழியில் ஒரு இடத்தில் ஸ்த்ரீகள் ஸ்நானம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் சுகர் நிர்வஸ்திரமாக வருகிறார். அவர்களும் அந்த மாதிரியே இருக்கிறார்கள். ஆனால் அவர் அப்படி இருப்பதும் ஸரி, தாங்கள் அப்படி இருப்பதும் ஸரி, இரண்டுமே அந்தப் பெண்டுகளுக்கு கொஞ்சங்கூட விகல்பமாகத் தெரியவில்லையாம்! லஜ்ஜையே உண்டாகவில்லையாம்!

சுகர் மேலே போய்விட்டார்.

ஒரு நிமிஷம் கழித்து வ்யாஸாசார்யாளும் அந்த வழியிலேயே ஓடி வந்தார். இவர் நல்ல வ்ருத்தர். மரவுரி, மான்தோல் எல்லாம் போட்டுக்கொண்டு உடம்பை நன்றாக மூடிக் கொண்டிருப்பவர்.

இவரைப் பார்த்தவுடன் அந்த ஸ்த்ரீகளுக்கு ரொம்பவும் வெட்கமேற்பட்டு, துணிகளை வாரிப் போட்டுக் கொண்டார்களாம்!

"அதென்ன? என் குமாரன், காளைப் பருவத்துக்காரன் போனபோது நீங்கள் பாட்டுக்கு ஸ்நானம் பண்ணிக்கொண்டிருந்தீர்கள்! நான், கிழவன், வருகிறபோது வெட்கம் தாங்கமுடியாமல் அவதிப்படுகிறீர்கள்?" என்று வ்யாஸர் கேட்டாராம்,

Koviloor Digital Library

"வயஸு என்னவாயிருந்தாலென்ன? அவருடைய நிர்மலம்தான் எங்களையும் தொட்டுடுத்து. அவர் ஸந்நிதியிலே எங்களுக்கும் பேத உணர்ச்சி தெரியலே" என்று அவர்கள் பதில் சொன்னார்களாம்!

சுகர் மாதிரியானவர்களுக்கு வ்யவஸ்தை விதிகள் ரூல்கள் எதுவுமில்லை.

நாலு ஆச்ரமங்களில் முடிவானது ஸந்நியாஸம். அதனால் அதற்கும் ரூல்கள் உண்டு; இப்படித்தான் பண்ணணும், இப்படிப் பண்ணப்படாது என்று அநேகம் உண்டு. ஒரு ரூலுக்கும் உட்படாத ப்ரம்ம ஸ்வரூபமாகவே இருந்தவர் சுகர். அதனால் ஸந்நியாஸாச்ரமத்திற்கும் மேலே போய் விட்டவர். இப்படி நாலு ஆச்ரமங்களுக்கு மேலே போய் விட்டவர்களுக்கு ஜாதி ஆசாரங்களாகிய ரூல்களும் கிடையாதாதலால், ஆச்ரமங்கள், வர்ணங்கள் ஆகியவற்றைக் கடந்துவிட்ட அவர்களை 'அதிவர்ணாச்ரமிகள்' என்று சொல்வார்கள். அத்யாச்ரமிகள் என்றும் சொல்வதுண்டு. ஆச்ரமத்தைக் கடந்தவர் என்றாலே வர்ணத்தையும் கடந்தவராகத்தான் இருக்க வேண்டும். அதனால் இப்படி (அதிவர்ணாச்ரமி என்பதற்குப் பதில் அத்யாச்ரமி என்று) சொன்னாலே போதும்.

குரு பரம்பரையில் தக்ஷிணாமூர்த்திக்கு அடுத்ததாக மஹாவிஷ்ணுவுக்கு முன்பாக, தத்தாத்ரேயரைச் சொல்லும் வழக்கம் உண்டு. அமூர்த்தியான பரப்ரஹ்மமாக இருக்கப்பட்ட தக்ஷிணாமூர்த்தி, அப்புறம் த்ரிமூர்த்தி ஸ்வரூபமான தத்த(ாத்ரேய)ர், அதற்கப்புறம் த்ரிமூர்த்திகளில் வரும் மஹாவிஷ்ணு, ப்ரம்மா என்று குரு பரம்பரை போகிறது. த்ரிமூர்த்திகளில் விட்டுப்போன சிவனும் தக்ஷிணாமூர்த்தியில் வந்துவிடுகிறார். அப்புறம் இந்தப் பரம்பரைக்கு நடுநாயகமாக, ஒரு ஹாரத்தின் நடுவிலுள்ள ரத்னப் பதக்கம் மாதிரியாக உள்ள ஸ்ரீ சங்கர பகவத் பாதாளும் சிவன் தான்...

Koviloor Digital Library

(நான்) சொல்லவந்தது, சுகரைப்போல அதிவர்ணு ச்ரமியாக குரு பரம்பரையில் வருகிற இன்னொருவர் தத்தர் என்பது. மும்மூர்த்தியும் சேர்ந்தவர் என்றாலும் அவர் தக்ஷிணாமூர்த்தி, மஹாவிஷ்ணு, ப்ரம்மா ஆகியவர்கள் தெய்வங்களாகவே இருப்பது போல இல்லாமல் பூலோகத்தில் அவதூத ஸந்நியாஸியாகத் திரிந்து கொண்டிருந்தவர். 'ஸந்நியாஸி' என்றால் அஸல் ஸந்நியாஸாச்ரமி அல்ல, அந்த மாதிரி, உடைமைகளையெல்லாம் உதறிவிட்டு ஸதாவும் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தவர். வாஸ்தவத்தில் அவரும் ஸந்நியாஸிக்குரியமுண்டனம், காஷாயம் இல்லாமல் அதிவர்ணாச்ரமியாக ஜடையுடன், திகம்பரராக இருந்தவர் தான்.

உள்ளுக்குள்ளே ஸதாவும் ப்ரம்மாநுபவத்திலேயே இருக்கும் அதிவர்ணாச்ரமி வெளியில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். உடைமைகளை ஆண்டு கொண்டு ராஜாவாகக்கூட இருக்கலாம், ஒரே இடத்தில் ஜன்மா பூரா வஸிக்கலாம், எதுவும் பண்ணலாம். ஆனாலும் தத்தரும் சுகரும் அப்படி இல்லாமல் ஸந்நியாஸிகளைப் போல எல்லா உடைமைகளையும் விட்டவர்கள்; ஒரே இடத்திலில்லாமல் ஸஞ்சாரம் செய்து கொண்டேயிருந்தவர்கள். "யம் ப்ரவ்ரஜந்தம்" என்று ச்லோகத்தில் ஆரம்பித்தபடி ஸந்நியாஸிகளுக்கே உரிய பரிவ்ராஜக வ்ருத்தியை (ஓரிடத்தில் தங்காமல் இடம் பெயர்ந்து கொண்டே இருப்பதான வாழ்க்கை முறையை) சுகர் மேற்கொண்டிருந்தார். தத்தாத்ரேயரும் அப்படித்தான்.

ஞானசார்யர்களாக நமஸ்கரிக்கத் தக்கவர்களில் ஸநகர், ஸநந்தனர், ஸநாதனர், ஸநத்குமாரர் என்று ஸஹோதரர்களாக நாலு பேர். அந்த நாலு பேரையும் ஒன்று சேர்த்து பகவானின் (விஷ்ணுவின்) 24 அவதாரங்களில் ஒன்றான குமாராவதாரம் என்பார்கள். 'குமாரர்' என்று சொன்னதற்கு ஒரு காரணம் நாலுபேரில் கடைசியானவரின் பேர் ஸநத்'குமாரர்' என்றிருப்பது. இன்னொரு காரணம்

Koviloor Digital Library

இந்த நால்வர்தான் ஸுப்ரஜைகளாக ப்ரஹ்மாவுக்கு முதல் முதலில் தோன்றிய புத்ரர்கள்—அதாவது ப்ரம்ம 'குமாரர்' கள்—என்பது. எண்ணிய மாத்ரத்தில் மானஸ புத்ரர்களாக இவர்களை ப்ரம்மா ஸ்ருஷ்டித்துவிட்டார். (குமார அவதாரம் என்று சொல்வதற்கு) மூன்றுவது காரணம் இவர்கள் அன்று போல் என்றும் குமாரர்களாகவே இருப்பது. தக்ஷிணாமூர்த்தியும் சுகரும் என்றும் யுவாவாக இருப்பவர்கள். மார்க்கண்டேயரையும் 'என்றும் பதினாறு' என்கிறோம். ஸநகாதி நால்வரோ யௌவனம் என்கிறவரைகூடப் போகாமல் என்றும் அஞ்சு வயஸு பாலர்களாகவே, குமாரர்களாகவே இருப்பவர்கள். மஹாஞானிகளாக, சுகர் மாதிரியே ஸ்த்ரீ புருஷ பேதம் தெரியாதவர்களாக, பிறந்தவுடனேயே நிவ்ருத்தி மார்க்கத்திற்குப் போய் ப்ரஹ்ம ஞானிகளாகிவிட்டவர்கள். மற்றவர்களுக்கும் ஞானம் அருளியவர்கள். இவர்களும் சாஸ்த்ரோக்தமாகச் சொல்லப் படும் ஸந்நியாஸாச்ரமம் வஹித்தவர்களல்ல. மொட்டைத் தலையும், காஷாயமும் இல்லாதவர்கள். சுகரையும், தத்தரையும் போலத்தான் இவர்களும் நிர்வஸ்த்ரமாக ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டே யிருப்பார்கள். குழந்தை களாக இருப்பதால் அதில் பாமரர்களுக்கும்கூட விகல்பம் தெரியாது. இவர்களையும் அதிவர்ணாச்ரமிகளில்தான் சேர்க்க வேண்டும்......

மொத்தத்தில் விஷயமென்னவென்றால் குரு பரம்பரை யில் சுகர் வரையில், சுகர் உள்பட எவருமே ஸ்ம்ருதிகளில் சொல்லியிருக்கும்படியான ரூல்களுககு உட்பட்ட ஸந்நியாஸ ஆச்ரமம் வஹித்தவர்கள் அல்லர். ஆனாலும் ப்ரஹ்மஞான ஸ்வரூபங்களாக இருந்ததால் ப்ரம்ம வித்யைக்கு ஆசார்ய புருஷர்களாக இருந்தார்கள்.

கலியில் க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து கொண்டு ஞானோப தேசம் செய்வது ஸரி வராது என்று பார்த்தோம். அப்படியே தான் அதிவர்ணாச்ரமமும். அதிவர்ணாச்ரமிக்கு இருக்க வேண்டிய ஸ்திரமான ப்ரம்மாநுபவத்தைப் பற்றிக்

Koviloor Digital Library

கொஞ்சங்கூடக் கவலைப்படாமல், அவனுக்கு ஆசாரங்கள் எதுவும் வேண்டியதில்லை என்றிருப்பதை மட்டும் எடுத்துக் கொண்டு, மனம் போனபடிச் செய்கிற வேஷதாரிகள் தங்களை அதிவர்ணாச்ரமிகளாகச் சொல்லிக்கொண்டு புறப்படக்கூடிய யுகம் இது. தற்காலத்தில் மனஸுக்கு வேதனை தருவதாக இப்படி அங்கங்கே கேள்விப்படுகிறோம். அதனால் அதிவர்ணாச்ரமி என்றால் அவநம்பிக்கை, அவமரியாதை, பரிஹாஸம் எல்லாமும் தோன்ற இடம் கொடுத்திருக்கிறது. எனவே கலியில் அதிவர்ணாச்ரமிகள் குரு பரம்பரையில் வருவதற்கில்லை என்றுதான் சுகா சார்யாளுக்கு அப்புறம் விதிவத்தாக ஸந்நியாஸாச்ரமம் வாங்கிக்கொண்டவர்களின் பரம்பரை கௌடபாதரிலிருந்து தொடங்கியது.

இப்படிச் சொன்னதால் 'ரூல்'படியான ஸந்நியாஸா ச்ரமம் என்பதே கௌடபாதரிலிருந்துதான் ஆரம்பித்த தாக்கும் என்று நினைத்துவிடக்கூடாது. அது கௌடபாதருக்கு முன்பே ஆதியிலிருந்து இருந்ததுதான். நான்கு ஆச்ரமங்கள் என்பது ஆதியான வேத காலத்திலிருந்தே இருப்பது. வேதத்தில் ஸம்ஹிதை - ப்ராஹ்மணம் - ஆரண்யகம் - உபநிஷத் என்று நாலு இருப்பதே வரிசை க்ரமமாக ப்ரஹ்ம சாரியின் அத்யயனம்—க்ருஹஸ்தனின் யஜ்ஞாநுஷ்டானம்— அரண்யத்தில் போய் இருந்துகொண்டு தத்வவிசாரத்தோடு வானப்ரஸ்தன் செய்யும் கர்மாநுஷ்டானம்—கர்மாவை விட்டுவிட்டு ஸந்நியாசி செய்கிற சுத்தமான தத்வ விசாரம் என்ற நாலைக் காட்டுவதுதான். (இப்படி வேத முறையை நன்றாகப் புரிந்துகொண்டு சொல்லியிருப்பது யாரென்றால் பால் டாய்ஸன் (Paul Deussen) என்கிற ஜெர்மனிக்காரர்! அவருக்கு நம் ஆசார்யாளின் ஸித்தாந்தத்தில் எல்லையில்லாத ஈடுபாடு!) ப்ருஹதாரண்ய உபநிஷத்தில் யாஜ்ஞவல்கியர் பத்னிகளை விட்டுவிட்டு ஸந்நியாஸியாகப் புறப்பட்டதைப் பார்க்கிறோம். 'நாரத பரிவ்ராஜக உபநிஷத்' என்பது போல, ஸந்நியாஸத்திலே எத்தனை வகை உண்டு என்று

Koviloor Digital Library

விவரித்துச் சொல்வதற்காகவே பத்துப் பதினைந்து உபநிஷத்துக்கள் இருக்கின்றன— 'அவதூதோபநிஷத்', 'ஸந்நியாஸோபநிஷத்' என்றெல்லாம் இருக்கின்றன. முதல் மநுஷ்யனைப் பிறப்பித்தவர் மநு. அவரே எப்படி வாழ்க்கை நடத்தவேண்டுமென்று அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக மநு ஸ்ம்ருதி என்றும் மநு தர்ம சாஸ்த்ரம் என்றும் சொல்லப்படும் நூலைப் பண்ணினார். அதிலும் அப்புறம் வந்த மற்ற ஸ்ம்ருதிகளிலும் நான்கு ஆச்ரமங்களைச் சொல்லித் துரீயாச்ரமமாக (நான்காவது ஆச்ரமமாக) ஸந்நியாஸத்தை விதித்திருக்கிறது. துரீயாச்ரமத்திலிருந்து தான் துரீய பதம் (விழிப்பு, கனவு, உறக்கம் மூன்றும் கடந்த நான்காவதான ஸமாதி நிலை) பெறவேண்டுமென்று ஸ்ம்ருதிகள் (தர்ம சாஸ்த்ரங்கள்) விதித்திருக்கின்றன. பல தர்ம சாஸ்த்ரங்களைப் பார்த்து, அவற்றில் சொல்லியுள்ள விஷயங்களைத் தொகுத்துக் கொடுப்பதாக 'நிபந்தன க்ரந்தங்கள்' என்று இருக்கின்றன. அவற்றில் ஸந்நியாஸ தர்மங்களை விரிவாகச் சொல்வதாக விச்வேச்வர ஸ்ம்ருதி என்பது இருக்கிறது. விச்வேச்வர ஸம்ஹிதை என்றும் சொல்வது. ஆனபடியால் ஜீவ ஸ்ருஷ்டி ஏற்பட்ட நாளாகவே விதிவத்தான ஸந்நியாஸிகள் உண்டு. அத்வைத ஸம்ப்ரதாயத்தையே முற்றிலும் தழுவியவர்களாகவோ, ஓரளவு தழுவியவர்களாகவோ ஸந்நியாஸியாகவும் அத்யாச்ரமியாகவும் இருந்த பூர்விகர்கள் சிலரைப் பற்றி ஆசார்யாளே பாஷ்யத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனாலும் ஆசார்யாளின் குரு பரம்பரையில் (அவருக்கப்புறம் அவருடைய சிஷ்ய பரம்பரையில் வந்துள்ள நம் எல்லோருக்குமே அதுதான் குரு பரம்பரையாகிவிட்டது; அதில்) அவருடைய பரம குருவான கௌடபாதரும் குருவான கோவிந்த பகவத்பாதரும்தான் விதிவத்தாக ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு சாஸ்த்ர ப்ரகாரம் அந்த ஆச்ரமத்தின் ஆசரணைகளை நடத்தியவர்கள்.

Koviloor Digital Library

ஸநகாதியர், தத்தர், சுகர் முதலியவர்கள் ஸந்நியாஸத்திற்கும் மேலே போன மஹா பெரியவர்களாதலால், ஸந்நியாஸ தீக்ஷை கொடுக்கும் அதிகாரம் அவர்களுக்கும் உண்டு. அப்படித்தான் சுகரிடமிருந்து கௌடர் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டது......

குடீசகர், பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் என்று நாலு வகையாகக் கூறப்படும் ஸந்நியாஸிகளில் அத்வைத ஸந்நியாஸிகள் நாலாவதான உத்தமப் பிரிவைச் சேர்ந்தவர்கள். அதாவது 'பரம ஹம்ஸர்கள்'. ஓரிடத்திலேயும் ஸ்திரவாஸம் செய்யாமல் ஸஞ்சரித்துக்கொண்டே இருப்பதால் அவர்களைப் 'பரமஹம்ஸ பரிவ்ராஜகர்கள்' என்று சொல்வது வழக்கம்.

ஆசார்யாளைக் கூட அப்படித்தான் சொல்வது. அவருடைய மடங்களில் வருகிற ஸ்வாமிகளையும்தான். 'மடம்' என்ற ஸ்தாபனத்திலிருந்துகொண்டு லோகத்திற்கு தர்மங்களை எடுத்துச் சொல்லும் குருக்களாக இருப்பதால், குரு பீடம் என்பதிலிருந்துகொண்டு 'ஆபீஸ்' பண்ணும் ஸந்நியாஸிகளாக இருப்பதால்—அதாவது லோகப் பொறுப்பு என்பதே இல்லாத ஸந்நியாஸியாயில்லாமல் லோகத்தில் தர்மம் வளர்வதற்குப் பாடுபடும் பொறுப்பைப் பெற்றிருப்பதால்—இங்கே பரமஹம்ஸ பரிவ்ராஜகர்களுக்கான விதிமுறைகளில் சில மாறுதல்கள் பண்ணியிருக்கிறது. ஸந்நியாஸ உபநிஷத்துக்களிலும், ஸம்ருதிகளிலும், மற்ற பழைய புஸ்தகங்களிலும் சொல்லியிருப்பதற்குக் கொஞ்சம் வித்யாஸமாக நாம் ஆசார்யாளிடம் பார்க்கிறோம், அவருடைய மடங்களைச் சேர்ந்த ஸ்வாமிகளிடம் பார்க்கிறோமென்றால் அதற்குக் காரணம், இவர்கள் ஒரு பொறுப்பும் இல்லை என்று விட்டவர்களாக இல்லாமல், லோகத்தில் தர்மாபிவிருத்திக்குப் பொறுப்புப் பெற்றவர்களாக இருப்பதுதான்.

இந்த விஷயம் இருக்கட்டும். நான் சொல்ல வந்தது பரம ஹம்ஸ ஸந்நியாஸிகளையும் அத்யாச்ரமிகளையும்

Koviloor Digital Library

பற்றியது. ஸந்நியாஸத்தையும் கடந்தவரே அத்யாச்ரமீ என்றாலும், பழைய சாஸ்த்ரங்கள் சிலதில் பரம ஹம்ஸர்களையே நாம் அத்யாச்ரமி என்று சொல்கிறவரைப் போலத்தான் வர்ணித்திருக்கிறது. அவற்றில் பரமஹம்ஸ ஸந்நியாஸிகளையே வஸ்த்ரம், தண்ட-கமண்டலம் ஆகிய வற்றையும் விட்டுவிட்டவராகச் சொல்லி, சுகர், தத்தர் முதலியவர்களையும் இந்த கோஷ்டியிலேயே சேர்த்திருக் கிறது.

பரமஹம்ஸ ஸந்நியாஸிக்கு அப்புறம் துரீயாதீதர், அவதூதர் என்று இரண்டு பிரிவுகளைச் சொல்லி இவர்களை அத்யாச்ரமிகள் என்று குறிப்பாக வேறுபடுத்திக் காட்டும் வழக்கம் வந்தபிறகும்கூட அத்யாச்ரமிகளைப் 'பரமஹம்ஸ பரிவ்ராஜகர்கள்' என்று சொல்வது நீடித்து வந்திருக்கிறது. ஆசார்யாளே 'சாந்தோக்ய பாஷ்ய'த்தில் ஒரு இடத்தில்* "பரமஹம்ஸ பரிவ்ராஜகை: அத்யாச்ரமிபி:" என்று சொல்லி யிருக்கிறார். ("பரமஹம்ஸ பரிவ்ராஜகர்களான அத்யாச்ரமி களால்" என்று அர்த்தம்.)

அதாவது, யதி தர்மங்கள் என்னும் ரூல்கள் உள்ள நாலாவது ஆச்ரமியே ஸந்நியாஸி, இந்த ரூல்களும் நழுவிப் போய் நாலாவது ஆச்ரமத்திற்கும் மேலே போனவனே அத்யாச்ரமி என்று வித்யாஸம் பார்க்காமல் இரண்டு பேரை யும் ஒன்றாகக் குறிப்பிடும் வழக்கம் வெகு காலமாக இருந்து வந்திருக்கிறது. ஸம்ஸார ஆசையையும் இஹ லக்ஷ்யத்தை யும விட்டுவிட்டு ஒருத்தன் கிளம்பிவிட்டானென்ற பிறகு, அப்படிக கிளம்பின எல்லாரையும் ஒன்றாகவே சொல்லி விடலாமென்று ஏற்பட்டிருக்கிறது.

விவிதிஷா ஸந்நியாஸம், வித்வத் ஸந்நியாஸம் என்று இரண்டை சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. யதி தர்ம ரூல்களுக்குக் கட்டுப்பட்டுத் துரீயாச்ரமம் என்று ஆரம்பிப்பவனே, அந்த ஆச்ரயத்தில் முன்னேறி முன்னேறி

---

* VIII-12-1 பாஷ்யம் முடியுமிடம்.

Koviloor Digital Library

ரூலேயும்விட்டு அத்யாச்ரமியாக ஆவதை இந்தப் பாகுபாடு தெளிவு செய்து காட்டுகிறது. 'விவிதிஷா' என்ருல் ஒன்றை அறிய ஆசைப்படுவது, மனஸாரத் தாபப்படுவது. ஸமாதி நிலே, ஆத்ம ஸாக்ஷாத்காரம், ப்ரஹ்மானந்தம் என்றெல்லாம் சொல்லப்படுவது என்னவென்று அறிய ஒருவர் ஆசைப் படுகிருர், தாபப்படுகிருர். இப்படியொரு 'விவிதிஷா' அவருக்கு இருக்கிறது. குடும்ப வாழ்க்கையில் உள்ளமட்டும் மேலே சொன்ன லக்ஷ்யத்துக்கே டெடிகேட் பண்ணிக் கொண்டு ப்ரயாஸைப்பட முடியாது என்று அவர் feel பண்ணுகிருர். அதனுல் க்ரமமாக சாஸ்த்ரங்களில் சொல்லியுள்ளபடி ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு தண்ட, கமண்டல காஷாய தாரணம், மற்ற யதி தர்ம ரூல்கள் ஆகிய எல்லாவற்றையும் பின்பற்றுகிருர். இதுதான் விவிதிஷா ஸந்நியாஸம்.

இப்படி ஸந்நியாஸியாகி ஆத்ம சாஸ்த்ரங்களேப் படித்து விசாரம் பண்ணிக்கொண்டு முன்னேறும்போது ஸமாதி நிலே பற்றிச் சொல்லியிருப்பதெல்லாம் நிஜமானவைதான் என்ற நிச்சயம் அவருக்கு ஏற்படுகிறது. கொஞ்சம் கொஞ்சம் அந்த அநுபவம் வந்து தொட்டுவிட்டுப் போகிறது. தொடும், ஆனுல், போயும் விடும்! கரையோரத்தில் ஸமுத்ர அலே கொஞ்சம் காலேத் தொட்டுவிட்டுப் போய்விடுகிற மாதிரி தான்! ஸமுத்ரத்தில் அப்படியே முழுகி நனேயவில்லே!

கேள்வியறிவில் பிறந்த ஆசையானது இப்படிக் கொஞ்ச மாவது அநுபவ அறிவாகவே ஆகும்போது விவிதிஷா போய் 'வித்வத்' உண்டாகிறது.

ருசி கண்டுவிட்டதால் அப்படியே அந்த ரஸத்திலேயே முழுக்க முழுகிப் போகவேண்டுமென்று அவருக்குத் தோன்று கிறது. அச்சமயத்தில் யதி தர்ம ரூல்படிப் பார்த்துப் பார்த்துப் பண்ணிக்கொண்டிருப்பதுகூட நிதித்யாஸனம் என்பதான தீவிர ஆத்ம விசாரத்துக்கு இடைஞ்சல் பண்ணுவதாக நினேக்கிருர். அதனுல் தண்ட, கமண்டல,

Koviloor Digital Library

காஷாயாதிகளையும், மற்ற யதி தர்ம ரூல்களையும் விட்டுவிடுகிறார். அதுதான் 'வித்வத் ஸந்நியாஸம்' என்பது.

ஸாக்ஷாத்காரம் என்னவென்று அறியாத நிலையில் அறிய ஆசைப்பட்டு மேற்கொள்வது விவிதிஷா ஸந்நியாஸம். அதன் 'டேஸ்ட்'டைக் கொஞ்சம் அறிய ஆரம்பித்தபின் பூர்ணமாக அறிந்து அதையே சாச்வதமாக்கிக் கொள்வதற்காக 'ரூல்களைக்கொண்ட ஸந்நியாஸ'த்தையும் விட்டுவிட்டு அத்யாச்ரமத்திற்குப் போவது வித்வத் ஸந்நியாஸம்.

"ஸந்நியாஸத்துக்கு ஸந்நியாஸம்" என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. பக்குவமாகாத ஒருத்தன் ஏதோ கொஞ்சம் விரக்தி மாதிரித் தோன்றியதில் வீட்டை விட்டுப் புறப்படுகிறான். 'விட்டு விடுவது'தான் ஸந்நியாஸம். அப்படி ஸந்நியாஸியாகிறான். அப்புறம் விரக்தி போன இடம் தெரியவில்லை! பழைய ஆசைகளெல்லாம் திரும்புகின்றன. "போதும் ஸந்நியாஸம்" என்று ஸந்நியாஸத்தை விட்டுவிட்டு அகத்துக்கே திரும்பிவிடுகிறான். இதுதான் "ஸந்நியாஸத்துக்கு ஸந்நியாஸம்!"

அமாவாஸைத் தர்ப்பணம் பண்ணுவதை ஒருத்தன் நிறுத்திவிட்டால் "தர்ப்பணத்துக்குத் தர்ப்பணம் பண்ணிவிட்டான்" என்று சொல்வதுண்டு! அப்படி, ஸந்நியாஸத்துக்கு ஸந்நியாஸம்!

ஆனால் ஒரு அத்யாச்ரமி ஸந்நியாஸ தர்மத்தை விடும்போது அவர் ஸம்ஸாரத்துக்குத் திரும்புவதற்காக அப்படிப் பண்ணவில்லை. யதி தர்மத்தை விடுவது அவருக்கு முக்யமில்லை; நோக்கமில்லை. ஸமாதி நிலையில் சேர்ந்திருப்பதுதான் அவருடைய நோக்கம் ஸந்நியாஸ ஆசரணையை அவர் விடுவது அதன் லக்ஷ்யமான அநுபவத்தில் சேர்வதற்கே. ஸந்நியாஸத்திலிருந்து கீழே வராமல், அதற்கு மேலே போவதற்காக விடுகிறார். அதனால்தான் 'அதி' - ஆச்ரமி என்பது.

Koviloor Digital Library

இப்படிச் சொன்னதால் அநுபூதி வாய்க்க ஆரம்பிக்கும் நிலையில் எல்லா ஸந்நியாஸிகளுமே துரீயாச்ரமத்திலிருந்து அத்யாச்ரமத்துக்குப் போகத்தான் செய்வார்கள், அப்படித் தான் செய்யணும் என்று இல்லை. க்ருஹஸ்தாச்ரமியாகவே இருந்து கொண்டும்கூட ஜனகர் ஜீவன் முக்தராக இருந்திருக் கிறார். ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள் ப்ரஹ்மசர்ய ஆச்ர மியாக இருந்துகொண்டே அத்வைதாநுபூதிமானாக இருந் திருக்கிறார். இப்படி இந்த (இரண்டு) ஆச்ரமங்களில் ரொம்ப அபூர்வமாகச் சிலர் இருந்திருக்கிறார்களென்றால், விதிவத் தான, ரூல்களைக்கொண்டதான ஸந்நியாஸாச்ரமத்தில் இருந்துகொண்டோ, ஏராளமான மஹான்கள் ஜீவன் முக்தர்களாக இருந்திருக்கிறார்கள். 'டாண்' என்று ஒரே flash-ல் ஒரு ஸந்நியாஸிக்கு ஸாக்ஷாத்காரம் சாச்வதமாகக் கூடும்போது, அதற்கப்புறம் அதை எதுவும் கலைக்க முடியா தென்பதால், மூச்சு விடுகிறமாதிரி involuntaryயாகவே (அநிச்சையாகவே) ஆச்ரம விதிகளை அவரால் விடாமல் அநுஸரித்து வர முடியும். இப்படிப் பலபேர் உண்டு. ஒரே வீச்சில் இல்லாமல், ஸமாதி கூடுவதும் கலைவதுமாக இருந்து, போகப் போக ஸ்திரப்பட்டவர்களிலேயும்கூடப் பலர் ரூல் களை விடாமல் அவற்றின்படியே பண்ணிக்கொண்டு போனவர்கள்தான். இதெல்லாம் பேச்சினால் புரியவைக்கும் விஷயமில்லை. அவரவர் அநுபவத்தையும், ஈச்வரன் அவர் களைக்கொண்டு லோகத்துக்கு என்ன மாதிரி உதாரணம் காட்ட நினைக்கிறான் என்பதையும் பொருத்தே ஒரு மஹான் அத்யாச்ரமியாகவோ, தேஹம் விழுகிறவரை விதிவத்தான ஸந்நியாஸாச்ரமியாகவோ இருப்பது அமையும்.

எந்த விதி - நிஷேதமும் தேவைப்படாதவனாகவும் ஸகல விதி - நிஷேதங்களையும் முறித்துப் போட்டு உயரே போன வனாகவும் பரிபூர்ண ஸ்வதந்த்ரனாக உள்ள ஒரு ஞானியை லோகத்துக்குக் காட்ட வேண்டுமென்று ஈச்வரன் நினைக்கும் போது ஒருவரை அதிவர்ணாச்ரமியாக்கிக் காட்டுகிறான். சாஸ்த்ரக் கட்டுப்பாடு ரொம்பவும் அவச்யம் என்று ஜனங்

Koviloor Digital Library

களுக்குப் புரியவைக்க நினைக்கும்போது அவனே ஒரு ப்ரஹ்ம ஞானியை சாஸ்த்ர விதிகளின்படியே நடந்து காட்டும் ஸந்நியாஸியாக இருந்துகாட்டப் பண்ணுகிறான்.

தத்தாத்ரேயரையும் சுகரையும்போன்ற அத்யாச்ரமி களான குருமார்கள் ப்ரஹ்மவித்யா பரம்பரையில் தோன்றியிருந்தாலும், கட்டுப்பாடுகள் ஒரேயடியாகக் குலைந்து கிடக்கும் இந்த யுகத்தில், எந்தக் கட்டுப்பாடு மில்லாதவரான அத்யாச்ரமியிடமிருந்து ஜனங்கள் கட்டுப்பாடு இல்லாமலிருப்பதைத்தான் எடுத்துக்கொள் வார்கள், அவருடைய உள்ளநுபவத்தை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதால்தான் கௌடரிலிருந்து ஆச்ரமக் கட்டுப்பாடுள்ளதான ஸந்நியாஸத்தைத் தழுவியவர் களாகவே நம்முடைய குரு பரம்பரை அமைந்தது.

லோகத்திற்கு வழிகாட்ட வந்த ஆசார்யாள் சாஸ்த் ரோக்தக் கட்டுப்பாடுகளுள்ள ஸந்நியாஸாச்ரமியாகத்தான் இருக்கவேண்டும்; அதுமட்டும் போதாது; அவரும், வழிகாட்டியாக மட்டும் இல்லாமல் வழியைப் பின்பற்றுபவ ராக, தாமும் (அத்யாச்ரமியிடமிருந்து இல்லாமல்) ஸந்நியாஸி ஒருவரிடமிருந்தே தீக்ஷை பெற வேண்டும்; இந்த சாஸ்த்ர மரியாதையை வலியுறுத்துவதற்காக, அவருடைய குருவுங்கூட இப்படியே ஸந்நியாஸியிடமிருந்து ஆச்ரமம் பெற்றவராகவே இருக்கவேண்டும்—என்கிற ரீதியில்தான் கௌடபாதரிலிருந்து விதி-நிஷேதங்களோடு கூடிய நான்காவது ஆச்ரமிகளாக குரு பரம்பரை அமைந் திருக்கிறது.

ஒரு விஷயம் சொல்லப்போனால் ஒன்பது விஷயம் அகப் படுகிறது! புதையலாக அகப்படுவதால் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே போவோம்:

அத்யாச்ரமிகளைப் பரமஹம்ஸ பரிவ்ராஜகர் என்று ஆசார்யாள் சொல்வது எங்கேயென்றால்: இந்த்ரனைப் பல வருஷங்கள் திரும்பத் திரும்ப சோதித்துப் பார்த்துவிட்டு

Koviloor Digital Library

அப்புறம் ப்ரஜாபதி அவனுக்கு ஆத்ம தத்வத்தை உபதேசித்ததாக சாந்தோக்யோபநிஷத்தில் இருக்கிறது. உபதேச ஆரம்பத்தில் ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போதுதான் இந்த விஷயம் சொல்லியிருக்கிறார். "எல்லா ஆசை அரிப்புக்களையும் துறந்தவர்களாகவும், வேறு நாட்டமில்லாமல் ஆத்ம ஞானம் ஒன்றுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களாகவும், வேதாந்த விஞ்ஞானங்களிலேயே பூர்ணமாக ஈடுபட்டவர்களாகவும், ப்ரஜாபதி நான்கு ப்ரகரணங்களாக இந்த கூறியுள்ள ஸம்ப்ரதாயத்தை அநுஸரிப்பவர்களாகவும் உள்ள பரமபூஜ்யர்களான பரம ஹம்ஸ பரிவ்ராஜகர்களாகிய அத்யாச்ரமிகளாலேயே இந்த ஆத்ம வித்யை அறியக்கூடியது. தற்காலத்திலும்கூட இப்படிப்பட்டவர்களே இந்த வித்யையை சிஷ்யர்களுக்கு உபதேசிக்கிறார்கள். இந்த யோக்யதாம்சங்கள் இல்லாத வேறு யாரும் உபதேசிப்பதில்லை" என்கிறார்.*

உபநிஷத்தில் நாலு ப்ரகரணங்களாக வரும் ப்ராஜாபத்ய வித்யையை உபதேசிக்கும் ஞானிகள் ஆசார்யாள் காலத்திலும் இருந்திருக்கிறார்களென்று இங்கே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. அதாவது, அவருடைய அவதாரத்திற்கு முன்பு வேத தர்மம் அடியோடு அணைந்துவிடாமல் முணுக்கு முணுக்கு என்றாவது ப்ரகாசித்துக் கொண்டுதானிருந்திருக்கிறதென்று நிதர்சனமாகிறது. ஆத்மாநுபவம் இல்லாமலே போலி பண்ணிக்கொண்டிருப்பவர்களும், ஞானவழி என்று சொல்லிக்கொண்டே நம்முடைய ஆத்ம சாஸ்த்ரங்களுக்கு வித்யாஸமாக ப்ரசாரம் செய்துகொண்டிருந்த பௌத்தர் முதலானோரும் அப்போது நிறைய இருந்தாலும் கொஞ்ச

---

* தஸ்மாதிதம் த்யக்த-ஸர்வ-பாஹ்யைஷணை: அநந்ய-சரணை: பரமஹம்ஸ-பரிவ்ராஜகை: அத்யாச்ரமிபி: வேதாந்த-விஜ்ஞான - பரைரேவ வேதநீயம் பூஜ்யதமை: ப்ராஜாபத்யம் சேமம் ஸம்ப்ரதாய-மநுஸரத்பி: உபநிபத்தம் ப்ரகரண சதுஷ்டயேந | ததா அநுசாஸதி அத்யாபி த ஏவ நாந்யே | ("சாந்தோக்ய பாஷ்யம்": VIII. 12. 1. முடிவுப்பகுதி)

Koviloor Digital Library

மாவது வைதிகமான ஸத்குருக்களும் ஸம்ப்ரதாய பரம்பரையில் வந்தவர்களாக இருந்துதானிருக்கிறார்கள்.

இப்படியிருந்தவர்களில் அத்யாச்ரமிகளும் இருந்திருக்கிறார்கள், துரீயாச்ரமிகளும் இருந்திருக்கிறார்கள். ஆசார்யாள் குருமுகமாக துரீயாச்ரமம் பெற்றுக்கொள்ள நிச்சயித்தபோது, லோகத்தில் சாஸ்த்ர மரியாதை இருக்கப் பண்ணவேண்டுமென்று நினைத்து, சாஸ்த்ர விதிகளையும் விட்டுவிட்ட அத்யாச்ரமிகளிடம் போகாமல், சாஸ்த்ரோக்தமாக நடக்கும் துரீயாச்ரமியான கோவிந்த பகவத் பாதரிடமே போய் தீக்ஷை வாங்கிக்கொண்டிருக்கிறார்.

இதேமாதிரி கோவிந்த பகவத் பாதரும், கௌட பாதரும் தம்தம் குருக்களிடமிருந்து ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டவர்கள். சுகர் ஸந்நியாஸி இல்லை. அவர் 'அநுபேத'ராகப் பூணூல் இல்லாமலிருந்தாரென்றால், அது பூணூலை அறுத்துப் போட்டுவிட்டு ஸந்நியாஸியானதால் அல்ல. பூணூல் போடுவதற்கு முன்பே அவர் அத்யாச்ரமியாகப் புறப்பட்டுவிட்டதால்தான்!

கௌட பாதர், கோவிந்த பகவத் பாதர் இருவருமே ஸந்நியாஸிகளாயிருந்தாலும் பின்னவர்தான் ஸந்நியாஸ நாமம் என்று புதிதாக ஒரு பெயர் பெற்றவராயிருக்கிறார்.

ஸந்நியாஸ நாமம்; சங்கர நாம மஹிமை

ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டவுடன் பூர்வாச்ரமப் பேர் போய்ப் புதுப்பேர் வருகிறது. ஆதி குருவிலிருந்து சுகர் வரை எவரும் 'டெக்னிக'லாக ஸந்நியாஸி அல்லவாதலால் அவர்களுக்கு இப்படிப் பேர் மாறவில்லை.

கௌட பாதருக்கோ ஸந்நியாஸ நாமா, பூர்வாச்ரம நாமா ஆகிய இரண்டும் தெரியவில்லை! அவர் பிறந்த தேசத்தை வைத்து அவருக்கு ஏற்பட்ட 'கௌடர்' என்ற பெயரொன்றுதான் தெரிகிறது.

Koviloor Digital Library

கோவிந்த பகவத் பாதருக்குத்தான் பூர்வாச்ரமப் பேர் சந்த்ர சர்மா, ஸந்நியாஸ நாமம் கோவிந்தர் என்பதாக இரண்டும் தெரிகிறது.*

ஆசார்யாள் விஷயத்தில் அலாதியாயிருக்கிறது. அவருக்கு அப்பா-அம்மா வைத்த பேரே சங்கரர் என்பது தான். அதுவே ஸந்நியாஸியான பிற்பாடும் நீடித்திருக்கிறது! குருவானவர் தீக்ஷை கொடுக்கும்போது ஸந்நியாஸ நாமம் கொடுப்பார். இவருடைய குரு—கோவிந்த பகவத்பாதர்—'நம் சிஷ்யரோ கைலாஸ சங்கரராக இருக்கிறார். லோகத்துக்கெல்லாம் நித்ய மங்களமான 'சம்'மைச் செய்யும் 'லோக சம்கர'ராக இருக்க வேண்டுமென்றே இந்த அவதாரம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், நாமகரண ஸம்ஸ்காரத்தில் பிதா வைத்த சங்கர நாமத்தை மாற்ற வேண்டாம்' என்று நினைத்திருப்பார் போலிருக்கிறது. அவதார காலத்தை வைத்து—அவதாரம் ஏற்பட்ட மாஸம், பக்ஷம், திதி ஆகிய மூன்றை வைத்து—ஆசார்யாளுடைய பிதா அவருக்குப் பெயர் வைக்கப் போக, அதுவே 'சங்கர' என்று பொருத்தமாக அமைந்துவிட்டது. அதைப் பற்றி அப்புறம் சொல்கிறேன். அந்தப் பெயரே அவர் ஸந்நியாஸியான பிற்பாடும் தொடர்ந்து இருந்துவிட்டது.

அவர் சரீரத்திலிருந்த 32 வருஷம் மட்டுமில்லாமல், அவர் ஏற்படுத்திய மடங்களிலுள்ள சாமியார்களுக்கெல்லாமும் அந்தப் பெயரே தொடர்ந்து வந்திருக்கிறது! ஆசார்ய ஸம்பிரதாயம் ஒன்றில்தான் இப்படி இருக்கிறது! இன்றைக்கு ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார், சைதன்யர்—இன்னம் புத்தர், க்றிஸ்து, நபி—என்றெல்லாம் பேர் வைத்துக்கொண்டு எங்கேயாவது, யாராவது சாமியார்

---

* ஓர் உரையில் ஸ்ரீசரணர்கள் ஸ்ரீ கோவிந்த பகவத் பாதர் உள்பட ஆசார்யாளின் காலம் வரையில் எல்லா ஸந்நியாஸிகளுக்கும் பூர்வாச்ரமப் பெயரே தொடர்ந்து இருந்ததாகவும், ஆசார்யாளின் சிஷ்யர்களில் தொடங்கித்தான் ஸந்நியாஸத்துக்குப் பின் புதுப்பெயரிடும் வழக்கம் ஏற்பட்டதாகவும் கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

இருக்கிறுர்களா? ஆனுல் 'சங்கராசார்யாரி' என்று பேர் வைத்துக்கொண்டு மாத்ரம் நாங்கள் பல பேர் இருக்கிறோம்!

அந்த நாமாவுக்கு அப்படியொரு மஹிமை இருக்கிறது!

'அவர் பெயரை வைத்துக்கொள்ள நமக்கு என்ன யோக்யதை? அவருடைய பாதத்தின் ஒரு தூசியாக இருக்க லாயக்கு உண்டா? எதற்காக இப்படி எங்கேயுமில்லாத வழக்கமாகத் தம்முடைய கீழ்ப் பரம்பரை முழுவதற்கும் தம் பெயரையே வைத்து விட்டார்?' என்று தோன்றிக் கொண்டிருந்தது.

ஸந்நியாஸநாமா என்றும் ஒன்று எங்களுக்கு இருக்கிறது. 'அது மட்டும் போதாதா? ஏன் 'சங்கராசார்யார்' என்றும் அதோடு சேர்த்து வைத்துக்கொள்ளப் பண்ணிவிட்டார்? 'அத்வைதம் என்பதால் தனக்கும் கீழ்ப் பரம்பரைக்கும் வித்யாஸமேயில்லை என்று இப்படி வைத்து விட்டார்' என்று சொன்னுல் அதுவும் ஸரியாய் வரவில்லை. (ஏனென்றுல்) அத்வைதம் கார்யம் இல்லாத நிலை. கார்யம் செய்வதற்குத் தான் மடாதிபதி ஆபீஸ். லோகத்தில் தர்மமும் ஞானமும் இருப்பதற்கான கார்யம் பண்ணனும் என்பதற்குத்தான் இப்படி மடமென்றும், மடாதிபதியென்றும் அவர் ஏற்படுத்தியது. சம்-கரரே நல்ல கார்யம் பண்ணுவர்தான்! அதனுல் அதில் நிஷ்க்ரியமான அத்வைதம் எப்படி வரும்? அப்படிக் கார்யம் பண்ணுவதைப் பார்க்கும்போது அவர் நிஜமாகவே 'சங்கரர் என்றுல் சங்கரர்தான்' என்னும்படியாக அத்தனை நல்லதும் பண்ணிஞர்! 72 துர்மதங்களை நிராகரணம் செய்து ஸநாதன வேத தர்மத்தை நிலை நாட்டிஞர். அவர் செய்தது யானையளவு என்றுல் நம்மால் ஒரு கொசு அளவுக்குக்கூட ஒன்றும் பண்ண முடியவில்லை. பின்னே ஏன் அவர், அவருடைய பெயரையே வைத்தார்?' என்று அந்தப் பேரை வைத்துக்கொள்வது guilty-யாக, அபசாரமாகத் தோன்றிக் கொண்டிருந்தது.

Koviloor Digital Library

அப்புறம் கொஞ்சம் தெளிவு பண்ணிக்கொண்டேன். 'அவருடைய நாமாவுக்கே ஒரு மஹிமை, ஒரு சக்தி உண்டல்லவா? இந்த யுகத்துக்கே நாமாவைத்தானே தலையான உபாயமாக சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது? நாம மாஹாத்ம்யத்தை விசேஷமாக வளர்த்துக் கொடுத்த போதேந்த்ராள்* என்ன சொல்லியிருக்கிறார்? 'சிவன்-விஷ்ணு என்றெல்லாம் ரூபம் எடுத்துக்கொண்டதும் லோக ரக்ஷணத்துக்குப் போதாது என்றே பரமாத்மா, சிவன் - விஷ்ணு முதலான நாமங்களையும் தரித்துக்கொண்டு, அந்த நாமங்களிலேயே நன்றாக விழிப்புணர்ச்சியுடன் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறான்'—

'அபர்யாப்தம் ரூபம் ஜகதவந ஏதத்-புநரிதி
ப்ரபுர்-ஜாகர்தி ஸ்ரீ ஹரி-கிரிச நாமாத்மகதயா'

—என்று சொல்லியிருக்கிறாரல்லவா? அப்படி சங்கர நாமாவிலேயே ஆசார்யாளின் சக்தி குடிகொண்டிருக்கிறது. அவருடைய அவதார சரீரம் மறைந்து போய்விட்டாலும், அவர் சங்கர நாமத்துக்குள்ளே ஜீவ சக்தியோடு விழிப்பாக இருந்துகொண்டு ரக்ஷிப்புத் தருகிறார்...ஒவ்வொரு தேவதைக்கு ஒவ்வொரு நாம மந்த்ரம் இருப்பதுபோல ஆசார்யாளுக்கு "ஜய ஜய சங்கர" என்பது.... தம்முடைய கீழ் பரம்பரைக்குத் தம் பேரைக் கொடுத்தாவது அதன் மூலம் சக்தி கொடுக்கலாம் என்றேதான் ஆசார்யாள் இம்மாதிரி வைத்திருப்பார்' என்று தோன்றிற்று.

'அந்த நாமாவைத் தாங்க நமக்கு யோக்யதை உண்டா?' என்று நினைக்க வேண்டாம்; உப்புக்குச் சப்பாணிக்குங்கூட யோக்யதை கொஞ்மாவது உண்டாக்கத்தான் அந்த நாமாவை அவர் கொடுத்திருப்பதே!' என்று ஒருமாதிரி ஸமாதானம் பண்ணிக்கொண்டேன்.

---

* ஸ்ரீ காமகோடி பீடத்தின் 59-வது ஆசார்யர்களான ஸ்ரீ பகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

Koviloor Digital Library

'நாம் லோக யாத்ரையை முடித்த 'பிற்பாடும், ஸ்ருஷ்டியின் இயற்கைப்படி ஏற்ற இறக்கங்கள் இருந்துகொண்டேதான் இருக்குமாதலால் தர்மாதர்மப் போராட்டம் நடந்து கொண்டேதானிருக்கும். அதற்காக நாம் எப்போது பார்த்தாலும் அவதாரம் செய்துகொண்டிருக்க முடியாது. லோக லீலையில் இந்தப் போராட்டத்திற்கும் இடம் கொடுக்கத்தான் வேண்டும். அது ரொம்பவும் முற்றி விடும்போதுதான் அவதாரம் செய்யவேண்டும். மற்ற ஸமயத்திலும்கூட தர்மத்தின் கட்சி ரொம்ப பலஹீனப்பட்டுவிடாதபடி நம்முடைய கீழ்ப் பரம்பரையை ஆசார்ய பீடங்களில் வைத்து ஓரளவு ரக்ஷித்துக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு பலம் கொடுப்பதற்காக நம்முடைய பெயரையே அவர்களுக்கெல்லாமும் கொடுக்க வேண்டும்'—என்றுதான் ஆசார்யாள் இப்படிப் புது தினுஸில் பண்ணியிருக்கவேண்டும்.

"நாமதாரணம் என்றால் பெயரைத் தாங்குவது—அப்படித் தாங்க நமக்கேது சக்தி?" என்று கேள்வி கேட்டால் "சக்தி கொடுத்துத் தாங்குவதற்கேதான் நாமத்தைக் கொடுத்திருக்கிறது!" என்று பதில் வருகிறது! 'இத்தனை பலஹீனத்தில் இவ்வளவு வீர்யமான மருந்தை எப்படித் தாங்கிக்கொள்வது?' என்று கேட்டால், 'பலஹீனத்தைப் போக்கவேதானப்பா இந்த மருந்து!' என்கிற மாதிரி!

சங்கர நாமத்தின் சக்தியை எப்படி ஆசார்யாளே ஸங்கேதமாகத் தெரிவித்திருக்கிறாரென்று சொல்லவந்தேன். தனி மஹிமை வாய்ந்த நாமாவாக அது இருப்பதால்தான் ஆசார்யாளின் குருவும் அதை மாற்றி வேறொரு தீக்ஷாநாமம் கொடுக்கவில்லை.

ராமாநுஜர் ஒற்றுமை

ஆசார்யாளுக்கு ஓரளவு ஒற்றுமையாகவே ராமாநுஜருக்கும் இருக்கிறது. ஸாதாரணமாக நம்முடைய ஆசார்யாளின் வழிக்கு வித்யாஸமாகவே ராமாநுஜாசார்யார் எதிலும் பண்ணுவார். பார்க்கப்போனால் அத்வைதத்

Koviloor Digital Library

துக்கு அவருடைய விசிஷ்டாத்வைதத்தைவிட த்வைதம் தான் நேரெதிரானது. ஆனாலும், வழிமுறைகளில் மத்வாசார்யாரைவிட ராமாநுஜர்தான் ஒரே வித்யாஸமாகப் பண்ணியது. ப்ரஹ்மசர்யத்திலிருந்தே ஸந்நியாஸத்துக்குப் போவது, சிகையை எடுத்துவிடுவது, யஜ்ஞோபவீதத்தை (பூணூலை) நீக்கிவிடுவது என்றெல்லாம் ஆசார்யாள் போலவேதான் மத்வரும் தம்முடைய ஸம்ப்ரதாயத்தில் வைத்தார். ஆனால் ராமாநுஜரின் வழியிலோ ஸந்நியாஸிகளுக்கு சிகையும் யஜ்ஞோபவீதமும் உண்டு; க்ருஹஸ்தாச்ரமிகள் ஸந்நியாஸி ஆகிறார்கள். நமக்கு (சங்கர மரபுத் துறவிகளுக்கு) ஏக தண்டம் என்றால் அவர்கள் த்ரிதண்டி ஸந்நியாஸிகள் என்பதாக மூன்று தண்டங்களை ஒன்றாகக் கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாரமஹம்ஸ்யத்திற்கு (பரம ஹம்ஸ ஸந்நியாஸ நிலைக்கு) சொன்ன விதிகளின்படி நம் ஸம்ப்ரதாயத்தில்தானிருக்கிறது என்று நாம் அநேக சாஸ்த்ரங்களைக் காட்டினால், அவர்கள் தாங்களும் பரமஹம்ஸர்கள்தான், தாங்கள் அப்படி இருப்பதற்கும் சாஸ்த்ர ஆதாரம் இருக்கிறது என்கிறார்கள். ஆக, ஆசார்யாள் வழிக்கு எல்லாம் வித்யாஸமாக அவர்கள் செய்கிறார்கள்.

ஆசார்யாள், மத்வர் இரண்டு பேரும் மடங்கள் ஸ்தாபித்தார்கள். ராமாநுஜர் ஸ்தாபிக்கவில்லை. எழுபத்து நாலு ஸிம்ஹாஸனாதிபதிகள் என்று வைஷ்ணவர்களிடையில் இருப்பது ஸந்நியாஸிகளின் தலைமையில் மட ஸ்தாபனம் பண்ணியது போலல்ல; அது க்ருஹஸ்த பரம்பரைகளின் வழியே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை வளர்ப்பதற்கான ஏற்பாடு.

ஆசார்ய ஸம்ப்ரதாய ஸந்நியாஸிகள் 'தசநாமிகள்' என்ற பத்துவிதமான ஸந்நியாஸ வகைகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். மத்வாசார்யாரும் தசநாமிகளில் "தீர்த்தர்" என்ற பிரிவில் ஆச்ரமம் வாங்கிக் கொண்டவர்தான் (துறவு தீக்ஷை பெற்றவர்தான்).

Koviloor Digital Library

ஆனந்த தீர்த்தர் என்பதே அவருடைய ஸந்நியாஸப் பேர். க்ருஷ்ண சைதன்யரும் அப்படித்தான். கேசவ பாரதி, ஈச்வரபுரி என்பவர்களிடம் அவர் தீக்ஷை வாங்கிக் கொண்டதாகச் சொல்கிறார்கள். பாரதி, புரி என்ற இரண்டும் தசநாமிகளில் வருவதுதான். ராமக்ருஷ்ண பரமஹம்ஸா கூட ஒரு 'புரி' ஸந்நியாஸி*யிடமிருந்துதான் ஆச்ரமம் வாங்கிக் கொண்டவர்.

ஆனால் ராமாநுஜர் மட்டும் இந்த தசநாமிப் பிரிவின்கீழ் ஸந்நியாஸியாகவில்லை. ஆரம்ப காலத்தில் அவர் ஆத்ம சாஸ்த்ரம் படிக்க யாதவ ப்ரகாசர் என்ற அத்வைதியிடமே போனார், ஆனால் குருவின் ஸித்தாந்தத்தை அவரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் அது அவர் ஆச்ரமம் வாங்கிக்கொள்வதற்கு முற்காலத்தில்தான். (அத்வைதப் புஸ்தகங்களைப் பார்த்தால் யாதவ ப்ரகாசர் என்று எவரைப் பற்றியும் தெரியவில்லை.)

ஆசார்யாள் வர்ணாச்ரம தர்மங்களை வலியுறுத்தி நிலை நாட்டினார். ராமாநுஜாசார்யார் அவற்றை அவ்வப்போது இளக்கிக் கொடுத்ததாக ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரைக் கதைகளில் நிறையப் பார்க்கிறோம். ராமாநுஜ பாஷ்யங்களைப் பார்க்கும்போது அவரும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டானத்தைத்தான் வலுவாக ஆதரித்தாரென்று தெரிகிறது. ஆனாலும் அவருடைய ஸம்ப்ரதாயஸ்தர்கள் இப்படிப் பல கதைகள் சொல்கிறதையும் கொஞ்சம் கவனிக்கத்தான் வேண்டியிருக்கிறது. மத்வாசார்யார் நம்முடைய ஆசார்யாளைப் போலவே தீவ்ரமாக வர்ணாச்ரமங்களை விதித்தவர்.

'ஆசார்யாளின் வழிக்கெல்லாம் முழுக்க வித்யாஸமாக ராமாநுஜர் பண்ணியது ஏன்? மத்வர் ஏன்

* தோதாபுரி.

Koviloor Digital Library

அவ்வளவு வித்யாஸமாகப் போகவில்லை?' என்று கேட்டால் ஒரு காரணம் தோன்றுகிறது. ஆசார்யாளுக்கு அடுத்தாற் போல் வந்தவர் ராமாநுஜர்தான். அவருக்கு அப்புறந்தான் மத்வாசார்யார் வந்தார். ஒவ்வொருவரும் தமக்கு முந்தி வந்தவருக்கு மாறாக ஸித்தாந்தம் பண்ணினார்கள். ஸித்தாந்தத்தில் மட்டும் வித்யாஸம் என்று இல்லாமல் மற்ற நடைமுறைகளிலும் வித்யாஸமாகப் போனால்தான் புதுசாக வந்தவர்களை லோகத்திற்கு ஸ்வச்சமாகத் தனிப்படுத்திக் காட்டமுடியும். புதுசாக ஒரு கட்சி ஆரம் பித்தால் புதுக் கொள்கை மட்டுமில்லாமல் கட்சிக்குப் புதுசாக ஒரு கொடி, ஸிம்பல், ட்ரெஸ் என்று ஏற்படுத்து கிறார்களல்லவா? அப்படி. அதனால் சங்கரரை அடுத்து வந்த ராமாநுஜர் சங்கரர் பின்பற்றிய நடைமுறைக்கெல்லாம் வித்யாஸமாகப் பண்ணினார் போலிருக்கிறது. இப்படியே ராமாநுஜரை அடுத்து வந்த மத்வர் ராமாநுஜருக்கு வித்யாஸமாகப் பண்ண நினைத்திருக்கலாம். அப்படிப் பண்ணும்போது, இரண்டு நெகடிவ் சேர்ந்தால் பாஸிடிவ் ஆகிவிடும் என்பதுபோல, மத்வர் மாற்றிப் பண்ணியது சங்கரரின் வழிக்கே திரும்பிவிட்டது என்று வைத்துக் கொள்ளலாம்.

சங்கர-ராமாநுஜர்கள் பெயர் விஷயமாக ஒரு ஒற்றுமையைச் சொல்ல ஆரம்பித்து, வேற்றுமைகளைச் சொல்லிக்கொண்டு போய்விட்டேன்! (அந்த) ஒற்றுமை என்ன? ராமாநுஜருடைய பூர்வாச்ரமப் பேர் லக்ஷ்மணர் என்பது. இளையாழ்வார் என்று தமிழில் சொல்வார்கள். ராமருக்கு இளையவர் லக்ஷ்மணர். ராமரின் உடன் பிறந்தவர். 'அநுஜன்' என்றால் 'உடன் பிறந்தவன்'. ஆகவே ராமாநுஜர் என்றாலும் லக்ஷ்மணர் என்றாலும் ஒன்றுதான். சங்கரரைப் போலப் பூர்வாச்ரமப் பேர் அப்படியே துரீயாச்ரமத்தில் தொடராவிட்டாலும் அந்தப் பேரின் அர்த்தத்திலேயே ராமாநுஜர் என்ற ஸந்நியாஸ நாமமும் இருக்கிறது! அது தான் ஒற்றுமை.

Koviloor Digital Library

லக்ஷ்மணர் பூர்வத்தில் யார்? ஆதிசேஷனாக இருந்தவர். ராமானுஜசார்யாரை ஆதிசேஷ அவதாரமென்று சொல்கிறார்கள்.

நாம் ஆசார்யாளை சிவாவதாரம் என்கிறோம். வைஷ்ணவர்கள் தங்களுடைய ஆசார்யரை விஷ்ணு அவதாரம் என்று சொல்லவில்லை. சேஷாவதாரம் என்கிறார்கள். மாத்வர்களும் மத்வரை விஷ்ணு அவதாரமாகச் சொல்வதில்லை. வாயுவின் அவதாரம் என்று சொல்கிறார்கள். திரும்பத் திரும்ப அவதாரங்கள் பண்ணுவதே விஷ்ணுவின் தொழிலாகத்தான் இருந்தும் இப்படி இருக்கிறது.

சங்கர-ராமானுஜர்களுக்கு இன்னொரு ஒற்றுமை, இரண்டு பேருக்குக்கும் ஒரு உறவு தோன்றுகிறது! ஆசார்யாளின் குருவான கோவிந்த பகவத்பாதர் பதஞ்ஜலியின் அவதாரமென்றால், அந்தப் பதஞ்ஜலியோ ஆதிசேஷாவதாரம்! அதே ஆதிசேஷனின் அவதாரமாகத்தான் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ராமானுஜரைச் சொல்கிறார்கள்!

ராமானுஜர் என்பது அவருடைய பூர்வாச்ரமப் பேருக்கே synonym என்று சொல்லவந்தேன்.

மத்வரின் பூர்வாச்ரமப் பேர் வாஸுதேவன். அப்புறம் ஆனந்த தீர்த்தரானார். பூர்ண ப்ரஜ்ஞர் என்றும் ஸந்நியாஸியானபின் அவருக்கு ஒரு பேருண்டு. லோகத்துக்கு ப்ரஸித்தமான பேரோ மத்வர் என்பது. வாஸுதேவன் என்ற பெயருக்கும் அவருடைய ஸந்நியாஸப் பெயர்களுக்கும் ஸம்பந்தமில்லை. கௌராங்கர் என்று பூர்வாச்ரமப் பெயர் பெற்றிருந்தவர் அப்புறம் க்ருஷ்ண சைதன்யரானார். அந்த இரண்டு பெயர்களுக்கும் ஸம்பந்தமில்லை. [சிரித்து] கௌராங்கருக்கு க்ருஷ்ணர் நேரெதிர்! கௌராங்கர் என்றால் வெள்ளை வெளேரென்று இருப்பவர்; க்ருஷ்ணர் என்றால் கறுப்பர், கருப்பண்ணசாமி!

Koviloor Digital Library

இதிலேதான் சங்கரருக்கு ஓரளவு ஒற்றுமையாக, ராமாநுஜருக்குப் பூர்வாச்ரம-துரீயாச்ரமப் பெயர்களின் அர்த்தங்கள் ஒன்றாகவே இருக்கின்றன.

ஆசார்யாள் ஒருவருக்கே இரண்டும் வார்த்தையிலும் ஒன்றாகவே இருப்பது.

ஆக, நம் குரு பரம்பரையில் ஆசார்யாள்வரை வந்தவர்களில் கோவிந்த பகவத்பாதர் ஒருவருக்குத்தான் திட்டவட்டமாக வித்யாஸம் பண்ணி, பூர்வாச்ரமத்தில் ஒரு பேர், ஸந்நியாஸம் வாங்கிக்கொண்ட பிறகு இன்னொரு பேர் என்று இருந்திருக்கிறது. ஆசார்யாளுக்கு அப்புறம் அவருடைய நேர் சிஷ்யர்களிலிருந்து ஆரம்பித்து ஸந்நியாஸிகளுக்கு நிச்சயமாக வேறே பேர்தான் என்றே வைக்கப்பட்டு வந்திருக்கிறது.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE: ...-456846

கோவிந்தரின் சிறப்பு

ஸந்நியாஸியான கோவிந்த பகவத்பாதாள் பரிவ்ராஜகராக ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டிருப்பதும் அவ்வப்போது அப்படியே நிஷ்டையில் போய் ஒரே இடத்தில் தம்மை மறந்து உட்கார்ந்துகொண்டிருப்பதுமாக இருந்தார்.

அவர் என்ன புஸ்தகங்கள் செய்தாரென்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஆசார்யாள் செய்ததாக வழங்கிவரும் 'யோக தாராவளி'யும் 'அத்வைதாநுபூதி'யும் கோவிந்த பகவத்பாதர் இயற்றியவை என்று ஒரு அபிப்ராயமிருக்கிறது. இப்படியொரு அபிப்ராயமிருப்பதால், ஆசார்யாளே அவற்றைச் செய்திருந்தாலும் அதற்கு முக்யமாக கோவிந்த பகவத்பாதரிடமிருந்தே இன்ஸ்பிரேஷன் கிடைத்திருக்க வேண்டுமென்று சொல்லலாம். 'யோக தாராவளி'யில் அஷ்டாங்க யோகம் முதலான யோக சாஸ்த்ர நுட்பங்களைச் சொல்லி அந்த வழியில் போய் அத்வைதாநுபூதியான ஸமாதியில் தோய்ந்து அப்படியே பட்ட கட்டை மாதிரி பூர்ண ஸ்திதியில் ப்ரகாசித்துக்கொண்டிருப்பதைச் சொல்லியிருக்கிறது. யோக ஸூத்ரம் செய்த பதஞ்ஜலிதான்

Koviloor Digital Library

கோவிந்த பகவத்பாதர் என்பது இங்கே நினைவுக்கு வருகிறது. "அத்வைதானுபூதி" முழு ஞானம். யோகம் என்று ஒரு ஸாதனை, அதைப் பண்ணுவது என்று ஒரு கார்யம் ஆகியவைகூட இல்லாமல், ஸ்வயம்ஸித்தமாக எப்பவுமே தன்னில் தானாக இருக்கும் ஆத்மாவை அப்படியே அநுபவித்துக் கொண்டிருப்பதை "அத்வைதானுபூதி"யில் பரம ஞான மார்க்க முறையில் சொல்லியிருக்கிறது. இந்த இரண்டு ப்ரகரணங்களுக்கும் கோவிந்த பகவத்பாதரின் ஸம்பந்தம் உண்டென்றாலே அவர் உத்தமமான யோகீச்வரராகவும், அநுபவ ஞானியாகவும் இருந்திருக்கிறாரென்று புரிந்துகொள்ளலாம்.

கல்வியறிவும், அநுபூதியும் பெற்றவர்களில் சிலபேர் நன்றாக எழுதிவைப்பார்கள். சிலபேருக்கு எழுத வராது. ஆனாலும் தங்களுடைய அநுபவ சக்தியால் அதே அநுபவத்தைப் பெறக்கூடிய உத்தம சிஷ்யர்களை உண்டாக்கி, அவர்கள் மூலம் ஸித்தாந்தத்தை ப்ரசாரப்படுத்துவதில் இவர்களுக்கு விசேஷத் திறமை இருக்கலாம்.

கோவிந்த பகவத்பாதாளை இந்த கோஷ்டியில் சொல்லலாம். அவர் முதலில் மஹாபாஷ்யத்தைக் கரைத்துக் குடித்தார். அந்த சாஸ்த்ரத்தை ப்ரசாரம் பண்ண அவரை விட்டால் வேறு யாருமில்லையென்றே கௌடர் உபதேசம் செய்ததாகப் பார்த்தோம். அவருக்கப்புறம் மஹாபாஷ்யம் லோகத்தில் நன்றாக ப்ரசாரமாகியிருப்பதும், அநேக வ்யாகரண புஸ்தகங்கள் தோன்றியிருப்பதும் ப்ரத்யக்ஷத்தில் தெரிகிறது. ஆனால் அவரே வ்யாகரண புஸ்தகம் எதுவும் எழுதிவைத்து விட்டுப் போயிருக்கவில்லை. அப்படியிருந்தும் அந்த சாஸ்த்ரம் ப்ரசாரமாகும்படிப் பண்ணியிருக்கிறாரென்றால், அப்போது அவர் நல்ல சிஷ்யர்களை உண்டுபண்ணி அவர்கள் வழியாகவே இப்படி நடக்கச் செய்ததாகத்தானே இருக்கவேண்டும்?

Koviloor Digital Library

ஸங்கீதத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். சில வித்வான்களுக்கு 'தியரி', ஆராய்ச்சி என்றெல்லாம் விசேஷமாகத் தெரிந்திருப்பதில்லை; ஆனால் ஸங்கீத சாஸ்த்ர ஆராய்ச்சிக்காரர்களைவிட இவர்களே அநேக சிஷ்யர்களை நல்ல வித்வான்களாக ரூபம் பண்ணியிருக்கிறார்கள்—என்று. இது எல்லாத் துறைக்கும் பொருந்துவதுதான். அறிவுச் சக்திக்கு மேல் ஸ்வாநுபூதிச் சக்தி என்பதையே இது காட்டுகிறது. ஒரு மநுஷ ஜீவனிடம் எப்படிப் பழகித் தட்டிக் கொட்டி அதை ரூபம் பண்ணுவது என்பதிலுள்ள திறமையையும் காட்டுகிறது.

கற்றுக் கொடுப்பது, ஸத்சிஷ்யர்களை உருவாக்குவது என்பது ஒரு தனியான கலை. அறிவு, அநுபவம், எழுத்து ஸாமர்த்யம் முதலியவற்றைப் பெற்ற பல பேருக்குக்கூட இப்படி உயிரோடுள்ள ஒரு ஜீவனை சிஷ்யனாக்கிக்கொண்டு அவனை அறிவாளியாகவும் அநுபவியாகவும் ரூபமாக்குவதற்கு முடியாமலிருக்கும்.

உசந்த சிஷ்யர்களை ரூபம் பண்ணும் திறமை கோவிந்த பகவத்பாதருக்கு விசேஷமாயிருந்திருக்கிறது.

அதனால்தான் அவருடைய மஹா பெரிய சிறப்பாக நம் ஆசார்யாளே அவரைத்தான் குருவாக வரித்து அவரிடமே சிஷ்யராகி உபதேசம் பெறவேண்டுமென்று இருந்திருக்கிறது.

ஆசார்யாளை அவர் 'ரூபம் பண்ண' வேண்டியிருந்திருக்காதுதான். குரு என்று ஒருத்தர் பாடுபட்டும், அநுக்ரஹ சக்தியைச் செலவழித்துந்தானா புதுசாக அவரை அறிவாளியாகவோ, அநுபூதிமானாகவோ ஆக்க வேண்டும்? ஆனாலுங்கூடப் பரமேச்வரனே அவதாரம் பண்ணி மநுஷ்யர் மாதிரி ஒருத்தரை குரு என்று பணிந்து உபதேசம் வாங்கிக் கொள்ளும்போது அது இவர்தானென்று தேர்ந்தெடுத்தாரென்றால் அப்படிப்பட்டவர் மஹா அநுபவி, அறிவாளி,

Koviloor Digital Library

சிஷ்யர்களை உருவாக்குவதில் அலாதித் திறமை பெற்றவர் என்று லோகத்துக்குக் காட்டுவதாகவே அர்த்தம்.

ஜகத்குரு என்று ஜகத்தே கொண்டாடும் ஆசார்யாள் சிஷ்ய பாவத்தோடு இருந்துகொண்டு குரு பரம்பரையை விநயமாக ஸ்தோத்ரிப்பது வழக்கம். குரு மஹிமையைத் தெரிவிப்பதற்கே 'குர்வஷ்டகம்' என்று ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். அவர் (இயற்றியுள்ள ஞான நூல்களில் முன்னமேயுள்ள நூல்களின் பாஷ்யமாக இன்றி) ஸொந்தமாகச் செய்துள்ள 'ப்ரகரண க்ரந்த'ங்களில் சூடாமணியாக இருப்பது "விவேக சூடாமணி". அதன் ஆரம்பத்தில் 'மங்களாசரணம்' என்பதாக கோவிந்த பகவத் பாதாளை ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். அதிலிருந்து அவருடைய (கோவிந்தருடைய) பெருமையைத் தெரிந்துகொள்ளலாம்.

ச்லோகத்தைச் சொல்கிறேன்:

ஸர்வ-வேதாந்த-ஸித்தாந்த-கோசரம் தம்-அகோசரம் |
கோவிந்தம் பரமாநந்தம் ஸத்குரும் ப்ரணதோஸ்ம்யஹம் ||

'ஸத்குரும் கோவிந்தம் அஹம் ப்ரணதோஸ்மி'— ஸத்குருவான கோவிந்தரை நான் நமஸ்காரம் செய்கிறேன்.

'ஸத்குரும்' என்பதற்குப் பதில் 'மத்குரும்' என்று பாடமுண்டு. 'மத்குரு' என்றால் 'என்னுடைய குரு'. ஆசார்யாள் தம்முடைய குரு என்று ஸொந்தம் பாராட்டி இப்படிச் சொல்வதாக வைத்துக்கொள்வதே 'ஸத்குரும்' என்பதைவிட அழகாக இருக்கிறது.

அந்த குரு எப்படிப்பட்டவர்?

'பரமானந்தம்'—லோக ஆனந்தங்கள் எல்லாம் கீழானவை. உசந்த ஆனந்தம் ப்ரம்மானந்தம்தான். அது தான் பரமானந்தம். அதன் உருவமாகவே இவர் இருக்கிறார்.

இன்னம் என்னவாக இருக்கிறார்?

Koviloor Digital Library

என்னவென்று, இன்னவென்று அவரை வரையறைப் படுத்தி வர்ணிக்க முடியாது. அவர் நம்மால் எட்டிப் பிடிக்க முடியாதவர்—'அகோசரம்'.

வாஸ்தவத்தில் இப்படி எட்டவொண்ணாதவராக இருந்தாலும் கருணையால் நமக்கு எட்டக்கூடியவராகவும் ஆகிறார். எப்படி? வேதாந்தம், ஸித்தாந்தம் என்றெல்லாம் ஆத்ம சாஸ்த்ரங்களையும், ஸாதனா மார்க்கங்களையும் கொடுத்து அவற்றின் மூலம் தம்மை எட்டிப் பிடிக்கும்படிச் செய்திருக்கிறார். அதைச் சொல்லித்தான் ஆரம்பித்திருக்கிறது: 'ஸர்வ வேதாந்த ஸித்தாந்த கோசரம்'.

ஒரு மநுஷ்ய குருவை ஸ்துதிப்பதாக இல்லாமல் பரமாத்மாவையே ஸ்துதிப்பதாக ச்லோக வாசகம் இருக்கிறது.

ஸரியான பாவம் இருந்தால் 'மநுஷ்ய' குரு என்றே ஒன்று கிடையாது! பரமாத்மாதான் அந்த ரூபத்தில் வந்திருக்கிறான் என்பதுதான் சாஸ்த்ரம். ஆனால் நடைமுறையில் அதில் ஸந்தேஹம் வரலாம். 'நாம் ஏற்றி வைத்துப் பரமாத்மாவாக பாவிப்பது இருக்கட்டும். அவருக்கு அந்தப் பரமாத்மாநுபவம் நிஜமாக இருக்கிறதா?' என்று ஸந்தேஹம் வரலாம். ஆனால் ஆசார்யாளைப் போன்ற ஒருவர் இப்படிச் சொல்லியிருக்கிறாரென்றால் அப்போது அந்த குரு நிஜமாகவே அப்படி இருந்துதானிருக்க வேண்டும்......

கோவிந்த பகவத்பாதர் பதரிகாச்ரமத்தில் இருக்கும் போது வ்யாஸாசார்யாளின் தர்சனம் அவருக்குக் கிடைத்தது.

அவதாரமாக வரப்போகிறவருக்கு கோவிந்த பகவத்பாதர்தான் குருவாயிருக்க வேண்டுமென்ற திவ்ய ஸங்கல்பத்தை அவருக்குத் தெரிவிக்க இது ஸமயமாயிற்று. வருங்காலத்துக்கெல்லாம் ப்ரஹ்ம வித்யை போவதற்கு அங்குரார்ப்பணமான பெரிய விஷயத்தைப் பற்றிய

Koviloor Digital Library

அறிவிப்பு அல்லவா? அதனால் சுகாசார்யாள், கௌடபாதாசார்யாள் ஆகியவர்களும் அங்கே கூடியிருந்தார்கள்.

வ்யாஸர் கோவிந்த பகவத்பாதருக்கு ஈச்வர நிர்மிதமாக ஏற்பட்டிருந்த பெரிய கார்யத்தைக் கொடுத்தார்.

"நம்முடைய (ப்ரஹ்ம) ஸூத்ரத்துக்கு ஸரியாக அர்த்தம் பண்ணி அத்வைத வேதாந்தத்தை லோகத்தில் ஸ்தாபிப்பதற்காகப் பரமேச்வரனே அவதாரம் பண்ணப் போகிறான். ஸந்நியாஸியாயிருந்து துர்மதங்களைக் கண்டித்து வைதிக தர்மத்தை நிலைநாட்டப் போகிறான். லோக ஸம்ப்ரதாயத்தையொட்டி அந்த அவதார புருஷருக்கு ஒருத்தர் ஆச்ரமம் கொடுத்து உபதேசம் பண்ணவேண்டும். இந்தப் பெரிய கார்யம் உனக்குத்தான் ஸங்கல்பிக்கப் பட்டிருக்கிறது.

"தக்ஷிணத்தின் கோடியில் கேரள தேசத்தில் அவதாரம் ஏற்படப் போகிறது. அவதாரக்காரர் பால்யத்திலேயே உபதேசம் வேண்டி அங்கிருந்து புறப்பட்டு வருவார். நாமானால் இங்கே வட கோடியில் ஹிமாசலத்தில் இருக்கிறோம். இத்தனை தூரம் அவர் நடந்து வரும்படி விடக் கூடாது. (காரணம்:) அவதாரம் என்பது ஒன்று; குழந்தை என்பது இன்னொன்று; அதோடுகூட சிஷ்யன் குருவைத் தேடிப் போகிற மாதிரியே குருவும் ஸச்சிஷ்யனைத் தேடிப் போகவேண்டும். அதனால் பாதிதூரம் அவர் வருவதாகவும் பாதி தூரம் நீ போவதாகவும் இருக்கட்டும். இங்கேயிருந்து தேச மத்திக்குப் போ.

"நர்மதா தீரம் உனக்கு ஏற்கெனவே பழக்கப்பட்ட இடம்தானே? அங்கேபோய், நீ மஹாபாஷ்ய உபதேசம் பெற்றுக்கொண்ட அரச மரத்தடியிலேயே காத்துக் கொண்டிரு. அங்கேயுள்ள குஹையில் ஆத்மாநுஸந்தானம் பண்ணிக்கொண்டு உட்கார்ந்திரு. உரிய காலத்தில் அவர் வந்து சேரும்போது ஆச்ரமம் கொடுத்து உபதேசம் பண்ணு" என்று வ்யாஸர் சொன்னார்.

Koviloor Digital Library

'ரவுன்ட் டேபிள் கான்ஃபரன்ஸ்' என்று உலகத் தலைவர்கள் கூடி ரிஸொல்யூஷன் பாஸ் பண்ணுகிற மாதிரி (தீர்மானம் நிறைவேற்றுவது போல்) வ்யாஸர், சுகர், கௌடபாதர், கோவிந்த பகவத்பாதர் ஆகிய நாலு பெரிய மஹான்கள் கூடிய மஹாநாட்டில் இப்படி ரிஸொல்யூஷன் பாஸ் ஆயிற்று!

கோவிந்த பகவத்பாதர் நர்மதை நதிக்கரைக்குப் போய்ச் சேர்ந்தார். பூர்வாச்ரமத்தில் எந்த மரத்துக்கு மேலே சிஷ்யராக இருந்துகொண்டு வ்யாகரண உபதேசம் கேட்டாரோ, அதே மரத்தின் அடியில் ஒரு குகையில், தாம் ப்ரஹ்ம வித்யோபதேசம் செய்வதற்கான சிஷ்யரை எதிர்பார்த்து உட்கார்ந்துகொண்டு, அப்படியே நிஷ்டையில் ஆழ்ந்துவிட்டார்.

மஹாவிஷ்ணு ஹ்ருதய கமலத்தில் நடராஜ தர்சனம் கண்டதில் உண்டான அவரது சரீர கனத்தை ஆதிசேஷனால் தாங்கமுடியவில்லை என்பதில் ஆரம்பித்து, சிதம்பரத்தில் நடந்த பாடம், கௌடபாதர் - கோவிந்த பகவத்பாதர் சரித்ரங்கள் ஆகிய எல்லாம் 'பதஞ்ஜலி சரித'த்தில் விரிவாகச் சொல்லியிருக்கிறது. அந்த இரண்டு பேரையும் பரம குருவாகவும் குருவாகவும் பெற்ற ஆசார்யாளின் சரித்ரம் கடைசியான அதன் எட்டாம் ஸர்க்கத்தில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவருடைய சரித்ரம்தான் விஸ்தாரமாக 'சங்கர விஜயம்' என்றே உள்ள புஸ்தகங்களில் சொல்லியிருக்கிறதே என்பதால், பூர்வாசார்யர்கள் சரித்ரத்தை மட்டும் விரித்தும், இதைச் சுருக்கியும் (ராமபத்ர தீக்ஷிதர்) எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது.

ராமபத்ர தீக்ஷிதரே வையாகரணியாக (வ்யாகரணத்தில் தேர்ச்சி பெற்றவராக) இருந்ததால் மஹாபாஷ்யம் செய்யப்பட்டு ப்ரசாரமானதை ஒரு காவ்யமாக எழுத வேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கமாயிருந்தது. மஹாபாஷ்ய கர்த்தாவின் பெயரில்தானே புஸ்தகமே

Koviloor Digital Library

'பதஞ்ஜலி சரிதம்' எனப்படுகிறது? எனவே அதில் 'சங்கர விஜய'த்தை விஸ்தாரமாகச் சேர்க்க இடமில்லை. ஆனாலும் புண்ய சரித்ரத்தைச் சொல்லாமல் விடப்படாது என்று, சுருக்கமாக இருந்தாலும் தம்முடைய ஆசார்ய பக்தியைக் கொட்டி எழுதிவிட்டார்.

காலடியில் ஆற்றில் பாலசங்கரரின் காலை முதலை பிடித்ததில் இந்தக் கதையை ஆரம்பித்திருக்கிறது. "அத்ராந்தரே ஸரிதி நக்ர க்ருஹீத பாத:" என்று ஆரம்பம். 'ஸரிதி' - ஆற்றில், 'நக்ர'-முதலை(யால்); 'க்ருஹீத பாத: - பிடிக்கப்பட்ட பாதம்...

அப்புறம் ஆசார்யாள் குருவைத் தேடிப்போய் உபதேசம் பெற்றது, காசிக்குப் போனது, பாஷ்யம் பண்ணியது, திக்விஜயம் பண்ணியது முதலியவற்றைச் சொல்லி ஸம்க்ஷேபமாக (சுருக்கமாக) ஒரு கடைசி ச்லோகத்துடன் முடித்திருக்கிறது :

> கோவிந்த தேசிகம் உபாஸ்ய சிராய பக்த்யா
> தஸ்மிந் ஸ்திதே நிஜ மஹிம்நி விதேஹ முக்த்யா |
> அத்வைத பாஷ்யம் உபகல்ப்ய திசோ விஜித்ய
> காஞ்சீபுரே ஸ்திதிம் அவாப ஸ சங்கரார்ய: ||

'சங்காராசார்ய' என்பதை 'சங்கரார்ய' என்று சொல்லி முடித்திருக்கிறது. மீட்டரை உத்தேசித்து இப்படி ('ஆசார்ய' என்பதை 'ஆர்ய' என்று) சொல்லியிருப்பதும் நல்ல அர்த்தம் கொடுக்கிறது. 'ஆர்யர்' என்றால் உயர்ந்தவர், உத்தமமானவர். அதுதான் 'ஐயர்' என்றானது. சங்கரர் என்ற உயர்ந்த புருஷர் 'சங்கரார்யர்'. அவர் கோவிந்த குருவை வெகுகாலம் பக்தியுடன் உபாஸித்து வந்தார், அதாவது குரு சுச்ரூஷை செய்துவந்தார்: "கோவிந்த தேசிகம் உபாஸ்ய சிராய பக்த்யா". ஆசார்யாள் பல வருஷங்கள் கோவிந்த பகவத்பாதருடன் இருந்ததாகச் சொல்வதற்கில்லை. எட்டு வயஸில் ஸந்நியாஸியான அவர் பதினாறு வயஸுக்குள் காசிக்குப் போய்த் தம்முடைய

Koviloor Digital Library

பாஷ்யங்கள் எல்லாவற்றையும் எழுதிவிட்டார். ஆகையால் நர்மதைக் கரையில் அவர் குருவுடன் அதிக வருஷங்கள் இருந்திருக்க முடியாது. ஆனாலும் அவர் செய்த இடைவிடாத சுச்ரூஷையே பல வருஷம் பணிவிடை செய்வதற்கு ஸமமாக இருந்ததால் 'ப்ராய' என்று போட்டிருக்கிறது.

லோகத்துக்கு வழிகாட்டியாக ஆசார்யாள் சிஷ்யராகி கோவிந்த தேசிகரிடம் உபதேசம் பெற்றுக்கொண்டார். தொடர்ந்தும் லோகத்துக்கு வழிகாட்டியாக குரு சுச்ரூஷை பண்ணினார்.

'வந்தக் கார்யம் ஆச்சு! வ்யாஸாசார்யாள் பொறுப்புக் கொடுத்த பெரிய கார்யத்தை நல்லபடி முடித்தாயிற்று. இனிமேல் சரீர த்யாகம் பண்ணிப் பரமாத்மாவோடேயே கலந்துவிட வேண்டியதுதான்' என்று கோவிந்த பகவத் பாதர் நினைத்தார். ப்ரஹ்ம ஞானம் பெற்றபின் சரீரத்திலிருக்கும்போதே முக்தராகத்தான் இருந்தார். அதற்கு ஜீவன் முக்தி என்று பெயர். அப்புறம் சரீரமும் போய்விடும். அதற்கு விதேஹ முக்தி என்று பெயர். ஜீவிக்கும்போதே ப்ரம்மாநுபவமான மோக்ஷத்திலிருப்பது ஜீவன் முக்தி. ஜீவனம் முடிந்து தேஹம் போனபின் ஏற்படுவது விதேஹ முக்தி.

அப்படி அவர் லோகவாழ்க்கையை முடித்து, சரீரத்தை விட்டு விதேஹ முக்தியடைந்தார். தன்னுடைய நிஜ ஸ்வரூபமான ப்ரஹ்மம் என்பதன் மஹிமையில் நிலைத்து விட்டார்! "தஸ்மின் ஸ்திதே நிஜ மஹிம்னி விதேஹ முக்த்யா."

இப்படி அவர் நிர்யாணமடைந்த பிறகே ஆசார்யாள் குருவாகப் பணி ஆரம்பித்தாற்போல மேலே ச்லோகத்தில் இருக்கிறது. ஆனால் இன்னொரு விதமான வ்ருத்தாந்தமும் இருக்கிறது. அதன்படி, ஆசார்யாள் ஜகதாசார்யாளாக திக்விஜயம் செய்து, கைலாஸம் போய் ஈச்வரனிடமிருந்து பஞ்ச லிங்கங்களைப் பெற்று, பதரி, கேதாரம் முதலிய

Koviloor Digital Library

இடங்கள் வழியாகத் திரும்பும்போது கௌடபாதரையும் கோவிந்த பகவத்பாதரையும் தர்சனம் பண்ணி, 'தக்ஷிணு மூர்த்தி அஷ்டகம்' சொல்லி அடிக்கு அடி நமஸ்காரம் செய்தார் என்று தெரிகிறது.

'பதஞ்ஜலி சரித'ப்படி கோவிந்தரின் விதேஹ முக்திக்கு அப்புறம்தான் ஆசார்யாள் நிஜமாகவே ஆசார்யராகப் பணி ஆரம்பித்தது. "தஸ்மின் ஸ்திதே நிஜ மஹிம்னி விதேஹ முக்த்யா"—'கோவிந்தர் விதேஹ முக்தியடைந்து நிஜ (ஆத்ம) மஹிமையில் நிலைத்தபின்'—பின் ஆசார்யாள் என்ன செய்தாரென்று பின்பாதி ச்லோகத்தில் 'கன்டென்ஸ்' பண்ணிச் சொல்லிக் கதையை முடித்திருக்கிறது.

என்ன செய்தாறென்றால், அத்வைதபரமான பாஷ்யங்களையெல்லாம் அழகாக இயற்றினுர். "அத்வைத பாஷ்யம் உபகல்ப்ய."

அந்த ஸித்தாந்தத்தை வெற்றிகரமாகப் பரப்புவதற்காக தேசம் பூராவும் ஸஞ்சாரம் செய்தார். திக்விஜயம் செய்தார்: "திசோ விஜித்ய"— திசைகளை ஜயித்தார். அதாவது நாலு திசையிலும் இருந்த மாற்று ஸித்தாந்தக்காரர்களை வாதத்தால் ஜயித்தார். ஸர்வ ஜனங்களின் ஹ்ருதயத்தையும் அன்பினுல் ஜயித்தார்.

இப்படி ஜயித்து—'விஜித்ய'—முடிவாக "காஞ்சீபுரே ஸ்திதிம் அவாப": காஞ்சியில் ஸ்திரவாஸம் வைத்துக் கொண்டுவிட்டார்.

'ஸ்திதி' என்றுல் முடிந்துபோவது என்றும் அர்த்தம் உண்டு—கடைசி காலத்தில் ஆசார்யாள் காஞ்சியில் வஸித்து விட்டு அங்கேயே அவதார வாழ்க்கையின் முடிவை அடைந்தார் என்று அர்த்தம்.

'குருரத்னமாலா'விலுள்ள கோவிந்த பகவத்பாத ஸ்துதியில் அவருடைய பூர்வாவதாரங்கள் அவ்வளவையும் அடுக்கிக்கொண்டு போயிருக்கிறது;

Koviloor Digital Library

ஹரிதல்ப - ஹராங்க்ரிநூபுர - க்ஷமாதர -
ஸௌமித்ரி - பலாத்ரிபுத்ர லக்ஷ்மா|
ஜயதாத் - உபரேவம் - ஆத்ததாமா
ஜய கோவிந்த முநி : ஸ சந்த்ரநாமா||

'சந்த்ரநாமா'—அதுதான் பூர்வாச்ரமப் பேர். 'ஜய கோவிந்தமுநி'—அது உத்தராச்ரம (பிற்கால ஆச்ரம)ப் பேர். 'ஜய' என்பது இங்கே பேரோடேயே சேர்ந்திருப்பது. 'ஜயராமன்' என்பது போல 'ஜய கோவிந்தர்' என்பதையே அவருடைய பெயராகச் சொல்லியிருக்கிறது. 'இப்படி ஏன் சொல்லணும்? "வெல்க, வெல்க" என்று போற்றி கூறும் அர்த்தத்தில் 'ஜய' என்பதைத் தனி வினைச் சொல்லாகப் பிரித்து, "கோவிந்த முனியே, வெல்க!" என்று ஏன் சொல்லக்கூடாது?' என்றால், ச்லோகத்தின் பின்பாதி ஆரம்பத்திலேயே ஒரு "போற்றி" சொல்லியாகிவிட்டது. "ஜயதாத்" என்று பின்பாதி ஆரம்பிப்பதற்கு "வெல்க" என்றுதான் அர்த்தம். ஆகையால் மறுபடி 'ஜய கோவிந்த முனி' என்று வரும்போது அதையே அவருடைய முழுப் பெயராக எடுத்துக்கொள்வதுதான் ஸரியானது. ஜய ராமன், ஜயலக்ஷ்மி,—வடக்கே ஜெய்கிஷன் (ஜயக்ருஷ்ணன்), ஜெய் ஷங்கர் (ஜய சங்கரன்) என்றெல்லாம் கூடப் பேர் வைத்துக் கொள்கிறார்கள்—இவை மாதிரி ஜயகோவிந்தர் என்றே பேரைச் சொல்லியிருக்கிறது.

ஒருவர் உயிரோடிருக்கும்போது அவருக்கு ஜய கோஷம் செய்தால் அவர் கார்யமெல்லாம் வெற்றிகரமாகட்டும் என்று அர்த்தம். "ஜேய், ஜேய்" என்று இப்படிப் பல பேருக்கு கோஷம் போடுகிறோம். மறைந்து போனவர்களுக்கு 'ஜேய்' போட்டால் என்ன அர்த்தம்? யசஃகாயம் (புகழுடம்பு) என்று சொல்வதில் அந்த ஆத்மா இருந்து கொண்டு ஆசீர்வாத கார்யத்தை வெற்றியோடு பண்ணிக் கொண்டிருக்கட்டும், உயிரோடிருந்தபோது பண்ணியவற்றுக்கே ஸூக்ஷ்மமாக இப்போதும் சக்தியைக் கொடுத்து

Koviloor Digital Library

அந்த லக்ஷ்யங்களில் தொடர்ந்து வெற்றி காணட்டும் என்று அர்த்தம்.

வெற்றியைக் குறிப்பது மட்டுமின்றி ஜய சப்தமே மிகவும் மங்களமானது. 'கடபயாதி ஸங்க்யை' என்பதன்படி* ஜ-ய என்ற எழுத்துக்கள் 18 என்ற எண்ணிக்கையைக் குறிக்கும். 18 விசேஷமான மங்கள சக்தி வாய்ந்த எண்.

இதனாலெல்லாம்தான் 'ஜய' என்று ஒருத்தர் பேரோடேயே சேர்ப்பது.

மநுஷக் குழந்தை மாதிரி இருந்த ஆசார்யாளை ஸந்நியாஸியாக்கி, நிஜமான ஆசார்யாளாக ஆக்கியவரின் பேருக்கு 'ஜய' சேர்க்காவிட்டால் யாருக்குத்தான் சேர்ப்பது? [சிரித்து] சிஷ்யர் 'ஜய ஜய சங்கர'ராக இருந்தால் குரு 'ஜய கோவிந்த'ராகவாவது இருக்க வேண்டாமா?

ஜய கோவிந்த முநி: ஸ சந்த்ரநாமா

'ஜய கோவிந்தமுனி'யாக ஆவதற்கு முன் அவர் 'சந்த்ர நாமா'க்காரராக இருந்தார். அதுவும் இதே பிறவியில்தான்.

அதற்கு முந்தி?

ஆதிசேஷனாயிருந்தார். இதைத்தான் 'ஹரிதல்ப', 'ஹராங்க்ரிநூபுர', க்ஷ்மாதர' என்று அவர் செய்யும் மூன்று விதக் கார்யங்களால் தெரிவித்திருக்கிறது. ஆதிசேஷன் விஷ்ணுவுக்குப் படுக்கையல்லவா? அதுதான் 'ஹரி தல்பம்'. அவரே சிவன் நர்த்தனம் பண்ணும்போது அவருடைய பாதத்தில் சிலம்பாகச் சுற்றிக்கொண்டிருக்கிறார் என்றேனல்லவா? அதுதான் 'ஹராங்க்ரி நூபுரம்'. அவர் செய்யும் இன்னொரு பெரிய கார்யம் இந்த பூமி முழுதையும் தம்முடைய ஆயிரம் சிரஸினால் தாங்கிக் கொண்டிருப்பது. 'க்ஷ்மா-தர' என்று இதைத்தான் சொல்லியிருக்

---

* பிற்பாடு 'கடபயாதி ஸங்கியை' என்றே வரும் பிரிவில் விளக்கம் காண்க.

Koviloor Digital Library

கிறது. பூமாதேவி எல்லாவற்றையும் பொறுமையுடன் தாங்கிக் கொள்கிறுளென்றல் அவளையும் ஆதிசேஷன் தாங்கிக் கொண்டிருக்கிருர். 'க்ஷ்மா' என்றல் பூமி. அதிலிருந்துதான் க்ஷமா (பொறுமை) என்பது வந்தது. 'பொறுமைக்கு பூமாதேவி'. தன்னை வெட்டுகிறவர்களையும் தாங்குகிறது பூமி. க்ஷ்மாவையும் தாங்குவதால் ஆதிசேஷன் 'க்ஷ்மாதரர்'.

இந்த ஆதிசேஷ ஸ்வரூபம்தான் கோவிந்த பகவத் பாதாளின் ஆதி ரூபம். ஆதி ரூபத்திற்கும் இந்த (கோவிந்த) ரூபத்திற்கும் நடுவே இன்னும் சில அவதார ரூபங்களும் அவருக்கு உண்டு. என்னென்ன?

ஸௌமித்ரி, பலாத்ரிபுத்ர - ஸௌமித்ரி, பல, அத்ரி புத்ர. ஸௌமித்ரி என்றல் ஸுமித்ரா புத்ரனை லக்ஷ்மணர். விஷ்ணு ராமராக வந்தபோது ஆதிசேஷன் லக்ஷ்மணராகக் கூட வந்தார்.

அரச மரத்தின் மேலே நாள் கணக்காக ஆஹார மில்லாமல், தூக்கமில்லாமல் சந்த்ர சர்மா பாடம் கற்றுக் கொண்டாரே, அது எப்படி முடிந்தது என்பதற்கு இங்கே ஆன்ஸர் கிடைக்கிறது. லக்ஷ்மணராக இருந்தபோது இதை விட பஹுகாலம்—பதிநாலு வருஷம்—வனவாஸத்தின் போது அவர் ஆஹாரமும் நித்ரையும் இல்லாமல்தானே அண்ணுவுக்குப் பணிவிடை பண்ணிக்கொண்டு, காவல் காத்துக்கொண்டு இருந்திருக்கிருர்? அந்த எக்ஸ்பீரியன்ஸ் தான் இப்பவும் கைகொடுத்திருக்கிறது! இப்போது இப்படிப் பண்ணவே, அப்போது 'ட்ரெய்னிங்' நடந்திருக்கிறது!

ஸௌமித்ரியாக வந்தவரே அப்புறம் பலராமராக க்ருஷ்ணவதாரத்தில் வந்தார். தம்பியாக இருந்தவர் அண்ணுவாக வந்து அண்ணுவின் பெயரையும் வைத்துக் கொண்டார், பலராமர் என்று. பல பத்ரர் என்றும் சொல் வதுண்டு. இங்கே "ஸௌமித்ரி பலாத்ரிபுத்ர" என்னுமிடத் தில் 'பல' என்பது பலராமரைத்தான். அவரும் சேஷா வதாரம்.

Koviloor Digital Library

அப்புறம் 'அத்ரி புத்ரர்'. அதுதான் ஆத்ரேயர் என்னும் பதஞ்ஜலி.

ஹரியின் படுக்கையாக, ஹரனின் பாதஸரமாக, பூமியை தரிப்பவராக, லக்ஷ்மணராக, பலராமராக, பதஞ்ஜலியாக வந்தவர்தான் சந்த்ர சர்மாவாகப் பிறந்து கோவிந்த முனியானவர். இப்போது அவர் நர்மதா தீரவாஸியாக ஆனார். அதைத்தான் "உபரேவம் ஆத்ததாமா" என்று சொல்லியிருக்கிறது. 'தாமா' என்றால் இருப்பிடம். ரேவா என்பது நர்மதைக்கு இன்னொரு பெயர். 'உபரேவம்' என்றால் 'ரேவாவுக்குப் பக்கத்தில்', அதாவது, நர்மதா தீரத்தில்'. நர்மதா தீரத்தில் வாஸ ஸ்தானத்தை உடையவர்தான் 'உபரேவமாத்த தாமா'. இத்தகைய பல ரூபங்களைக் கொண்டவர் விஜயம் பண்ணட்டும்—"ஜயதாத்"—அவருடைய பேரும் கீர்த்தியும் எப்போதும் வெற்றிகரமாக விளங்கிக் கொண்டிருக்கட்டும்! இப்படி ச்லோகம் சொல்கிறது.

அதிகார புருஷர் வரிசையே ஆசார்ய பரம்பரை

பூர்வாசார்யர்களின் கதைகளைத் தெரிந்துகொண்ட பிறகே ஆசார்யாள் கதையைத் தெரிந்துகொள்வது முறை என்பதால் தெரிந்துகொண்டோம்.

நம்முடைய அறிவாகிய ஆத்ம ஜ்யோதிஸைப் பூர்ணமாக ப்ரகாசிக்கச் செய்து, நம்மை துக்கமில்லாமல் ஆக்குவதற்கான ஸாதனங்களைக் கொடுக்க நமக்கு ஆசார்யர் அவச்யம் வேண்டும். இப்படி ஒரு காலத்தில் வருகிற ஆசார்யர் பிற்காலத்தில் இந்தக் கார்யத்தைத் தொடருவதற்காக இன்னொருவருக்கு அதிகாரம் கொடுக்கிறார். தம் அறிவையும் அநுபவத்தையும் அவருக்குள்ளே செலுத்துவதால் இப்படிப்பட்ட அதிகாரத்தை அளிக்கிறார். இப்படியே வரிசையாக அதே ஞானக் கரண்ட் தொடர்ச்சியாக அதிகாரம் பெற்றவர்களின் வழியாக குரு பரம்பரை என்பதாகப் பாய்வதால்தான் லோகத்துக்கு எல்லாக் காலதி

Koviloor Digital Library

திலும் விடாமல் ஞான வெளிச்சம் கிடைக்கிறது. எலெக்ட்ரிஸிடியை 'சார்ஜ்' ஆவது என்கிறோம். ஒருத்தர் இன்னொருத்தருக்கு அதிகாரம் கொடுப்பதையும் 'சார்ஜ்' கொடுப்பதென்றே சொல்கிறோம்! ஒரு குரு தம் சிஷ்யருக்குள் ஞான எலெக்ட்ரிஸிடியைச் சார்ஜ் பண்ணி அப்புறம் 'என் மாதிரி நீ இனிமேல் குருவாயிரு' என்று பதவியை ஒப்படைத்தும் அவருக்கு சார்ஜ் கொடுக்கிறார்! அதிகார பூர்வமாக சார்ஜ் வாங்கிக்கொண்டவர்தானே ஆபீஸ் பண்ணமுடியும்? குருவின் ஆபீஸும் அப்படித்தான். யார் வேண்டுமானாலும் குரு என்று உட்கார்ந்துவிட முடியாது. வரிசை க்ரமத்தில் இப்படி அதிகாரம் பெற்றவர்களைத்தான் குரு பரம்பரை என்பது. அவர்களே ஞான ப்ரகாசத்தைத் தொடர்ந்து லோகத்துக்குக் கொடுத்துக் கொண்டிருப்பவர்கள். இந்தப் பரமோபகாரத்தைப் பண்ணுபவர்கள் என்பதால்தான் ஆசார்ய பரம்பரையைப் பற்றி ஆசார்யாள் கதையில் தெரிந்துகொள்ள வேண்டியது அவச்யம் என்று கேட்டோம்.

இனிமேல் அவருடைய அவதாரக் கதைக்குப் போகலாம்.

வேண்டுதலும் வரமும்

தக்ஷிணாமூர்த்தி ஆலமரத்தடியில் கருணாகுலமாக உட்கார்ந்து கொண்டிருந்தார். 'ஜனங்களால் இங்கே வர முடியவில்லை. வரவேண்டும் என்று தோன்றக்கூடவில்லை. ஆனாலும் குழந்தைகள். நாமேதான் போய் நல்லதைச் சொல்லவேண்டும். ஆனால் தேவர்கள் மநுஷ்யர்களைப்போல அப்படி விஷயம் தெரியாதவர்கள் அல்ல. அவர்களுக்காக இவர்கள் வந்து சொல்லத்தான் வேண்டும். அதுதான் க்ரமம். ஜனங்களின் கர்மாநுஷ்டானம் குறைந்து போனதால் இவர்களுக்குத்தான் ஆஹுதி முதலானதுகள் நஷ்டப்படுகின்றன. அதனால் தேவர்கள் வந்து சொல்லவேண்டியது தான்; அப்புறந்தான் அவதரிக்க வேண்டும்' என்று காத்துக் கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

தேவர்களும் தப்புப் பண்ணுவார்கள். அதற்காக அவர்கள் கஷ்டப்படவேண்டிய காலம் வரும். ரொம்பவும் கஷ்டம் ஜாஸ்தியாகும்போது அவர்களுக்கு அடக்க ஒடுக்கம் ஏற்பட்டு ஈச்வரனிடம் ப்ரார்த்தித்துக்கொள்வார்கள். ஈச்வரனும் அவதாரம் பண்ணியோ வேறு விதத்திலோ கஷ்ட நிவாரணம் அளிப்பார்.

இப்போதும் அப்படி ஏற்பட்டது. தேவர்கள் கைலாஸத்திற்குப் போய் வட வ்ருக்ஷ மூலத்தில் உட்கார்ந்துகொண்டிருந்த சம்பு மூர்த்தியிடம் ப்ரார்த்தனை பண்ணிக் கொண்டார்கள்.

லோகம் பூராவிலும் மத ஸம்ப்ரதாயமும் தத்வ சாஸ்த்ரமும் ரொம்பவும் குழறுபடியாகிவிட்டதைப் பார்த்து நாரதருக்குத்தான் முதலில் மனஸ் ரொம்பவும் ஸங்கடப் பட்டது; அவர் தம்முடைய பிதாவான ப்ரம்மாவிடம் போய்க் குறை தெரிவித்துக் கொண்டார்; அப்புறம் ப்ரம்மா ஸகல தேவர்களையும் அழைத்துக்கொண்டு கைலாஸத்திற்குப் போனார் என்று ஒரு 'சங்கர விஜய'த்தில் இருக்கிறது.*

லோகத்தில் 'ச்ருத்யாசாரம்' நசித்துப்போய் 'மித்யா சாரம்' வ்ருத்தியாகிவிட்டது என்று தேவர்களெல்லாம் பரமேச்வரனிடம் முறையிட்டுக்கொண்டார்கள் என்று அதில் இருக்கிறது:

ச்ருத்யாசாரம் பரித்யஜ்ய மித்யாசாரம் ஸமாச்ரிதா:

ச்ருத்யாசாரம் என்றால் வேத வழி, மித்யாசாரம் என்றால் பொய்யொழுக்கங்கள், அதாவது ஒழுக்கம் மாதிரி இருந்தாலும் வாஸ்தவத்தில் ஒழுங்கைக் கெடுக்கும் வழக்கங்கள்.

"ஒரு பக்கத்திலேயானால் பௌத்தர் முதலிய அவைதிக மதஸ்தர்கள் வேத நிந்தனை பண்ணி, கர்மாநுஷ்டானங்களை

---

* ஸ்ரீ அனந்தானந்த கிரி இயற்றிய 'ஆனந்தகிரீயம்' எனப்படும் சங்கர விஜயத்தில் இரண்டாவது ப்ரகரணம்.

Koviloor Digital Library

யெல்லாம் கண்டனம் செய்தும், வர்ணாச்ரம ஒழுங்குகளைக் குலைத்தும் வருகிறார்கள். யஜ்ஞ பூமியாயிருந்த பாரத வர்ஷத்து ஜனங்கள் 'யாகம்' என்ற வார்த்தையைக் கேட்டாலே காதைப் பொத்திக்கொள்கிற மாதிரியாகப் பண்ணியிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்திலோ சைவர், வைஷ்ணவரைப் போல வைதிக தெய்வங்களை உபாஸிப்ப வர்களும் வைதிகமான உபாஸனையை விட்டுவிட்டு லிங்க முத்ரை, சக்ர முத்ரை என்றெல்லாம் சூடு போட்டுக்கொள் கிறார்கள். இன்னும் மிஞ்சிப்போய் காபாலிகர்கள் முதலான வர்கள் தங்கள் தலையையே பலி கொடுக்குமளவுக்கு க்ரூரமான வழிகளைப் பின்பற்றுகின்றனர். ஆகையினால்,

"தத்-பவாந்-லோக ரக்ஷார்த்தம் உத்ஸத்ய நிகிலாந் கலாந் ।
வர்த்ம ஸ்தாபயது ச்ரௌதம் ஜகத் யேந ஸுகம் வ்ரஜேத் ॥"

அதாவது,

"தாங்கள்தான் தப்பு வழிக்காரர்களான அத்தனை பேரையும் நிர்மூலம் செய்து லோக ரக்ஷணம் செய்ய வேண்டும். வேத வழியை மறுபடி ஸ்தாபனம் பண்ண வேண்டும். ஜகத் உண்மையான ஸுகத்தைப் பெறவேண்டு மானால் அதற்கு ச்ருதிதானே மார்க்கம்? அதைத் தாங்கள் நிலைநாட்ட வேண்டும்" என்று ப்ரார்த்தித்துக் கொண்டார் கள்.

"மாதவீய சங்கர விஜயம்" என்பதில் இப்படிச் சொல்லித்* தொடர்ந்து பரமேச்வரன் அவர்களுக்குப் பரமாநுக்ரஹம் பண்ணியதையும் சொல்லியிருக்கிறது. தாமாகவே அவர் லோகரக்ஷார்த்தம் அவதாரம் பண்ண எண்ணி, இவர்கள் பெடிஷன் கொடுக்க வருவார்களா, வருவார்களா என்றுதானே தவித்துக் கொண்டிருந்தார்?

---

* I. 39. தொடர்ந்து வரும் ஈசனின் வரப்ரதானம் : I. 40—43.

Koviloor Digital Library

அதனால் உடனே, "உங்களுடைய மனோரதத்தை அப்படியே பூர்த்தி பண்ணுகிறேன். நானே மநுஷ்ய ஜன்மாவை மேற்கொண்டு துஷ்டாசாரங்களை அழித்து, தர்ம ஸம்ஸ்தாபனம் செய்கிறேன். முக்யமாக ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு பாஷ்யம் பண்ணி அதன் மூலம் வேதத்தின் பரம தாத்பர்யத்தை நிச்சயப்படுத்தி தர்ம ஸம்ஸ்தாபனத்தைப் பண்ணப் போகிறேன்.

"எல்லாம் ஒரே ப்ரம்மம்தான் என்ற ஸத்யம் மறந்து போய், ஜீவர்களை ப்ரம்மத்திலிருந்து பேதப்படுத்துவதுதான் அத்தனை அனர்த்தத்துக்கும் அஞ்ஞானத்துக்கும் மூலமாயிருப்பது. மாயையின் மோஹன சக்தியாலேயே ஜீவர்கள் ஆக்ரமிக்கப்பட்டு இந்த பேதம் என்கிற—த்வைதம் என்கிற—இருட்டிலே முழுகியிருக்கிறார்கள். நான் சங்கரர் என்ற பெயரோடு யதீந்திரராக பூலோகத்தில் அவதாரம் செய்து ஆத்ம ஞானம் என்ற ஸூர்ய ப்ரகாசத்தால் அந்த இருட்டை அகற்றுவேன்.

"நாலு சிஷ்யர்களோடுகூடி இந்தக் காரியத்தை நிறைவேற்றுவேன். இதுவரை அவதாரங்கள் செய்த மஹா விஷ்ணுவுக்கு அவருடைய சதுர்புஜங்கள் எப்படி அங்கமோ, அதுபோல எனக்கு இந்த நான்கு சிஷ்யர்களும்"

—என்று சம்புமூர்த்தி கடகடவென்று ஒரே வரமாக வர்ஷித்துவிட்டார்.

"இத்யுக்த்வோபர தாந் தேவாந் உவாச கிரிஜாப்ரிய:"

"தேவர்கள் தாங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி முடித்ததும் கிரிஜா ப்ரியர் அவர்களிடம் பேசலானார்" என்று இந்த வரப்ரதானத்தை ஆரம்பித்திருக்கிறது. "கிரிஜா ப்ரிய:"—அதாவது 'அம்பாளின் காந்தனாக இருப்பவர்'—என்று ஸ்வாமியைக் குறிப்பிட்டதால், 'அவளுடைய கருணை, அல்லது அவளாகிய கருணை தூண்டியே அவர் வரம் தந்தது. பார்த்தால் ஏகாங்கியான தக்ஷிணாமூர்த்தியாயிருந்தாலும்,

Koviloor Digital Library

அப்போதும் அம்பாள் அவருக்குள் இருந்துகொண் தானிருந்தாள். இரண்டு பேரும் சேர்ந்தே ஆசார்யாளாக அவதாரம் பண்ணியது' என்று இத்தனை உள்ளர்த்தங்களை யும் வைத்துச் சொன்னதாக ஏற்படுகிறது!

ஸ்வாமி சொன்னது :

''மனோரதம் பூரயிஷ்யே மாநுஷம்-அவலம்ப்ய வ: |
துஷ்டாசார விநாசாய தர்ம-ஸம்ஸ்தாபநாய ச ||
பாஷ்யம் குர்வந் ப்ரஹ்மஸூத்ர-தாத்பர்யார்த்த-விநிர்ணயம் |
மோஹன-ப்ரக்ருதி-த்வைத-த்வாந்தம்-அத்யாத்ம-பாநுபி: ||
சதுர்பி: ஸஹித: சிஷ்யை: சதுரைர்-ஹரிவத்-புஜை: |
யதீந்த்ர: சங்கரோ நாம்நா பவிஷ்யாமி மஹீதலே ||''

தேவர்கள் வருவதற்கு முந்தியே அவதார detail எல்லாம் ஸ்வாமியே ஜாடா plan பண்ணிவிட்டாரென்று தெரிகிறது! 'சங்கரர்' என்று பெயர் வைத்துக்கொள்வதுகூட ஸ்வாமியே பண்ணிவிட்ட ஸங்கல்பம்தான். அந்த நாம மஹிமையை ஜாஸ்தியாக்க இதுவும் ஒன்று! இது ஸந்நியாஸாவதாரமாக இருக்கவேண்டுமென்றும் அவரே தீர்மானித்துவிட்டதை ''யதீந்த்ர'' என்பது காட்டுகிறது. 'யதீந்த்ரர்' என்றால் 'யதிச்ரேஷ்டர்'. யதி என்றால் ஸந்நியாஸி.

'யம', 'யத' என்று ஒரே தாதுவின் அடியாகப் பிறந்த இரண்டு வார்த்தைகள் உண்டு. இரண்டும் அடக்கி வைப்பதையே குறிப்பதாகும். கொட்டம் அடிக்கிற ஜீவனை அடக்கிப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் தண்டிப்ப தாலேயே 'யமன்' என்று பேர் ஏற்பட்டிருக்கிறது. ஜீவன் கொட்டமடிப்பதற்குக் காரணம் இந்த்ரியங்களும், மனஸும். இவற்றை அடக்கியவன்தான் ஸந்நியாஸி. அதனால் அவனும் யமன்தான்! ஆனாலும் வெளியில் இன்னொரு ஆஸாமியாக இருந்துகொண்டு தாற்காலிகமாக மட்டும் கொடூரமான முறையில் அடக்கி வைப்பவனை 'யமன்' என்று சொல்வதால், தன்னைத்தானே ஸாத்விகமான

Koviloor Digital Library

முறையில் ஞானுநுபவத்தால் நிரந்தரமாக அடக்கிக் கொண்டிருப்பவனையும் அப்படிச் சொல்லக்கூடாது என்று, முதலில் 'ஸம்' போட்டு 'நைஸ்' பண்ணி 'ஸம்யமி' என்றே ஸந்நியாஸிகளைச் சொல்வது வழக்கம். அல்லது, இதே இந்த்ரிய நிக்ரஹ, மனோ நிக்ரஹங்களைத் தெரிவிக்கும் 'யதி' என்ற வார்த்தையால் குறிப்பிடுவது.

யதிகளில் ச்ரேஷ்டரான யதீந்த்ரராக சங்கராவதாரம் பண்ணுவதென்று தீர்மானித்தபோதே ஈச்வரன் அந்த அவதாரத்தினுடைய தலைசிறந்த பணியாக, Magnum Opus-ஆக ஸூத்ர பாஷ்யம் எழுதுவதென்றுகூட முடிவுபண்ணியிருக்கிறுன்! "பாஷ்யம் குர்வன் ப்ரஹ்ம ஸூத்ர" என்று இதைத்தான் தெரிவித்தது.

தேவர்களின் அவதாரம்

கருணுமூர்த்தியான ஈச்வரன், துர்பலர்களாகக் கஷ்டப்பட்டுக்கொண்டு தன்னிடம் முறையிட்டுக்கொண்ட தேவர்களுக்கும் அவதார காலத்தில் அவதாரத்திற்கு ஸஹாயம் செய்யும் பாக்யத்தைக் கொடுக்க நினைத்தான். அதாவது வாஸ்தவத்தில் துர்பலர்களாகிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவர்களுடைய பலத்தைப் பெற்றே தான் அவதார கார்யத்தை ஸாதித்த மாதிரி விளையாடி, அவர்களை உசத்தி வைத்து உத்ஸாஹப்படுத்த நினைத்தான்.

த்ரிபுர ஸம்ஹார காலத்தில் ஸகல தேவர்களும் ஸ்வாமிக்கு ஸஹாயம் செய்ய எண்ணி ஒவ்வொரு உபகரணமாக வந்தார்கள். கடைசியில் அந்த உபகரணம் எதையுமே அவர் ப்ரயோஜனப்படுத்திக்கொள்ளாமல், சும்மா ஒரு சிரிப்புச் சிரித்தார். அந்தச் சிரிப்பே நெருப்பாகி த்ரிபுராஸுரர்களை பஸ்மமாக்கி விட்டது.

அப்போது அப்படி விளையாடியவர் இப்போது இப்படி விளையாட நினைத்தார்!

Koviloor Digital Library

ஆசார்யாளின் அவதார நாடகத்தில் தேவர்களுக்கும் ஈச்வரன் இம்மாதிரி வேஷங்களைக் கொடுத்தாரென்று சில 'சங்கரவிஜய'ங்களில் இருக்கிறது.

ராமர் முதலான விஷ்ணு அவதாரங்களிலும் இப்படி (தேவர்களும் உடன் அவதரித்ததாக) இருக்கிறது.

முக்யமாக, "நாலு சிஷ்யர்களோடுகூட அவதரிப்பேன்" என்று சொன்னாரல்லவா? அவர்களில் பத்மபாதர் மஹா விஷ்ணுவின் அம்சமாக அவதரித்தவர். ஹஸ்தாமலகர் வாயு. தோடகர் அக்னி. ஸுரேச்வராசார்யாள் ப்ரஹ்மா.

ப்ரம்மாவோடுகூட ஸரஸ்வதியும் அவதாரம் பண்ணினாள். (ஏன் என்ற விஷயத்துக்கு அப்புறம் வருகிறேன்.) இந்த அவதாரத்தில் அவளுக்கு ஸரஸவாணி என்று பெயர்.

ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் அம்சமாகக் குமாரில பட்டர் என்பவர் அவதரித்தார். இந்த அவதாரங்களில் இவர்தான் எல்லாருக்கும் முந்தி பூலோகத்துக்கு வந்தவர். 'என்றும் இளையவர்' எல்லாருக்கும் மூத்தவராக வந்தார்!

இந்த்ரன் ஸுதன்வா என்ற ராஜாவாகப் பிறந்தான்.

குமாரிலர், ஸுரேச்வரர் ஆகிய இரண்டு பேருக்கும் ஸ்ரீ சங்கராவதாரத்தில் இருந்த 'பார்ட்' பற்றிக் கொஞ்சம் சொல்லிவிடவேண்டும். குமாரிலரோடு ஸம்பந்தப்பட்டவன் ஸுதன்வா. ஸுரேச்வரரோடு ஸம்பந்தப்பட்டவள் ஸரஸவாணி. அதனால் அவர்கள் பங்கைப் பற்றியும் இதிலேயே ஓரளவு தெரிந்துவிடும்.

பௌத்த கண்டனத்தில் மீமாம்ஸகர்களின் உதவி

பத்மபாதர், ஹஸ்தாமலகர், தோடகர் ஆகிய மூன்று சிஷ்யர்களுக்கும் ஸுரேச்வராசார்யாளுக்கும் வித்யாஸங்கள் உண்டு. மற்ற மூன்று பேரும் ப்ரஹ்மசர்யத்திலிருந்து நேராக ஸந்நியாஸியானவர்கள்—ஆசார்யாள் மாதிரியே.

Koviloor Digital Library

ஸுரேச்வரர் மட்டும் க்ருஹஸ்தாச்ரமும் வஹித்து அப்புறம் ஸந்நியாஸியானவர். மற்றவர்களைப் போல இல்லாமல் இவர் ஆசார்யாளைவிட வயஸில் மூத்தவர். இன்னொரு வித்யாஸம், இவர் ஆரம்பத்தில் அத்வைத ஞான மார்க்கத்தை பலமாகக் கண்டித்த மீமாம்ஸகராக இருந்துவிட்டு, அப்புறமே ஆசார்யாளிடம் (வாதச்) சண்டை போட்டுத் தோற்றுப்போய் அவருடைய ஸித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டு ஸந்நியாஸியானவர். க்ருஹஸ்தராயிருந்தபோது அவருக்கு மண்டனமிச்ரர் என்று பேர். ஸுரேச்வரர் என்பது ஸந்நியாஸ நாமா. இவர் ப்ரம்மாவின் அவதாரம்.

வைதிக கர்மாநுஷ்டானங்களில் முக்யமாயிருப்பது யஜ்ஞம். அப்படிப்பட்ட யஜ்ஞத்தைச் செய்பவர்கள் நான்கு விதமான ரித்விக்குகள். அந்த நாலு பேரில் மேற்பார்வை செய்யும் ஸுபர்வைஸருக்கு ப்ரம்மா என்றே பெயர். அதனால்தானோ என்னவோ ப்ரம்மாவின் அம்சமாகப் பிறந்தவர் பெரிய கர்ம மீமாம்ஸகராக இருந்தார்!

இதேபோல் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் அம்சமும் இன்னொரு மீமாம்ஸகராகவே அவதரித்தது. குமாரஸ்வாமியிலிருந்து தோன்றிய அவருக்குக் குமாரிலர் என்றே பெயர். ப்ராம்மணராதலால் குமாரில 'பட்டர்'. 'பட்டர்' என்றாலே அவர்தான் என்றாகி, அவருடைய ஸித்தாந்தத்துக்கு 'பாட்ட (Bhaatta) மதம்' என்றே பேர் ஏற்பட்டது. யஜ்ஞத்தில் ப்ரதானமாயிருப்பது அக்னி. அக்னிதான் ஸுப்ரஹ்மண்யர். அதனால் அவருடைய அம்சாவதாரமும் கர்ம மீமாம்ஸையை ப்ரசாரம் செய்வதாக ஏற்பட்டது போலிருக்கிறது! இவரும் முதலிலெல்லாம் அத்வைத வேதாந்தத்தை ஆக்ஷேபித்து வந்தவர்தான். கடைசியில் ஆசார்யாளின் ஞான மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார். ஆனாலும் சிஷ்யராகி ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ளவில்லை. ஏன் என்று அப்புறம் கதை சொல்கிறேன். இப்போதே சொல்லிவிட்டால் ஸ்வாரஸ்யம் போய்விடும்!

Koviloor Digital Library

ஆசார்யாள் ஞானமார்க்கம், இந்த இரண்டு பேரும் கர்ம மார்க்கம், அதனால் இவர்கள் அவரை ஆக்ஷேபித்தார்கள் என்றால், "இது என்ன? தேவர்களாயிருந்தும் இவர்கள் ஸஹாயத்துக்காக அவதரித்தார்களா? சண்டை போட அவதரித்தார்களா?" என்று கேட்கலாம்.

சண்டை போட்டது வாஸ்தவம். அதே ஸமயத்தில் அதைவிட ஸஹாயமும் செய்திருக்கிறார்கள்! மற்ற சிஷ்யர்களைவிடக்கூட இவர்கள் செய்த ஸஹாயம்தான் ஜாஸ்தி என்றே சொல்லலாம். வேடிக்கை என்னவென்றால், எந்தக் கர்ம மீமாம்ஸையினால்தான் இவர்கள் ஆசார்ய ஸித்தாந்தத்திற்கு விரோதிகளாயிருந்தார்களோ அதனாலேயேதான் பெரிய உபகாரிகளாகவுமிருந்தார்கள்! எப்படியென்றால்......

பௌத்த மதத்தைக் கண்டனம் பண்ணி அகற்றுவதற்கு ஆசார்யாள் எவ்வளவு கார்யம் செய்யத் தேவைப்பட்டிருக்குமோ அதில் பாதியை இந்த இரண்டு பேருமே மீமாம்ஸையினால் பண்ணித்தான் அவருடைய கார்யத்தைக் குறைத்துப் பெரிய ஸஹாயம் செய்துவிட்டார்கள்!

பௌத்தத்தின் மும்முனை ஆக்ஷேபணை

பௌத்தம் வைதிக தர்மத்தின் கர்மாநுஷ்டானம், பக்தியுபாஸனை, ஞான ஸித்தாந்தம் ஆகிய மூன்றையுமே ஆக்ஷேபிப்பது.

ஆனாலும் இவற்றில் பௌத்தர்களின் ஸித்தாந்தம் ஞான ரீதியில் ஒரளவுக்கேனும் அத்வைதத்தோடு ஒத்துப் போவதே. மாயைக் கொள்கை அவர்களுக்கும் உண்டு. மனஸை அப்படியே அழித்துப்போட்டு விடுவதுதான் அவர்களுடைய நிர்வாண லக்ஷ்யமும். ஆனால் மனஸ் அழிந்தபின் ப்ரகாசிக்கும் ப்ரஹ்ம பூர்ணத்தைச் சொல்லாமல் சூன்யமாக அவர்கள் முடித்துவிடுவது பெரிய வித்யாஸம். இன்னும் சில வித்யாஸங்களும் உண்டு. அதெல்லாம் சொல்லிப் புரிய வைப்பதென்றால் கஷ்டமான பாடம் நடத்துகிறமாதிரி ஆகி

Koviloor Digital Library

விடும். மொத்தத்தில் ஞான ஸித்தாந்தத்தில் நம் வேதாந்தத்துக்கு பௌத்தம் அடியோடு மாறுபட்டதல்ல.

பக்தி என்று எடுத்தால், ஸ்வாமி என்பதையே ஒப்புக்கொள்ளாததால் பௌத்தம் வைதிக தர்மத்திற்கு அடியோடு வித்யாஸமாயிருக்கிறது. கர்மா என்று பார்க்கும்போதும் யஜ்ஞாதிகள் கூடவே கூடாது, இன்னின்னருக்கு இன்ன அநுஷ்டானம் என்று ஒழுங்குபடுத்தியுள்ள வர்ண தர்மமும் கூடாது என்றதால் அது வேத மதத்துக்கு அடியோடு ஆப்போஸிட்டாக இருக்கிறது.

கடவுட் கொள்கையை நிலை நாட்டியது

இவற்றில் பக்தி என்பது முன்னேயே சொன்னற்போல் இயல்பாக ஸர்வ ஜனங்களுக்கும் இருப்பது. உலகம் என்று இப்படியொன்று இருந்து இவ்வளவு காரண - கார்ய விதிகளோடு எல்லாம் நடக்கிறதென்ருல் இதை ஸ்ருஷ்டித்து நடத்தும் மஹாசக்தனுக ஒரு ஸ்வாமி இருக்கத்தான் வேண்டுமென்று எவருக்குமே தோன்றுவதுதான் இயற்கை. தோன்ருமலிருப்பதுதான் ஆச்சர்யம்! ஸ்வாமி இல்லை என்று சொல்லத்தான் சிக்கலான புத்தி வாதம் செய்யத் தெரிந்திருக்கவேண்டும்! அப்படி பௌத்தர்கள் செய்தார்கள். இந்த வாதத்துக்காக இல்லாமல் வேறு ஸமாசாரங்களுக்காகத்தான் அவர்களை ஜனங்கள் பின்பற்றினர்கள். பௌத்தத்தைப் பின்பற்றும்போதும் ஜனங்களுடைய மனஸை விட்டு பக்தியும் ஈச்வர நம்பிக்கையும் போகவில்லை. அதனல் வேறு வழியில்லாமல் அப்புறம் பௌத்தர்களும் பக்தி வழிபாட்டுக்கு ஒரு தினுஸில் இடம் கொடுக்க வேண்டியதாகிவிட்டது. இந்த விஷயங்களை முன்னலேயே சொன்னேன்.

இப்படியிருந்த நிலையில் ஸரியான, வேத வழிப்படியான பக்தியை நிலைநாட்டுவதற்கு ஆசார்யாள் வாதம் எதுவும் அதிகம் பண்ணவேண்டியிருக்கலில்லை. 'புத்தி ஸமாசாரம் நிறையக் கலக்கும் ஞான விஷயமாக வாதம் நிறையப் பண்ணி எதிர்க்கட்சியை நிராகரணம் பண்ணுவதுபோல்,

Koviloor Digital Library

இயற்கையாக ஹ்ருதயத்தில் ஊறுகிற பக்தி விஷயமாக வாதம் ஒன்றும் பண்ணவேண்டாம். ஜனங்கள் பக்தியை நன்ருகத் திறந்துவிட்டு ஈச்வரனிடத்தில் செலுத்துவதற்கு வழியாக நிறைய ஸ்தோத்ரங்களைப் பண்ணிக்கொடுத்தும், ஆலயங்களை மந்த்ர சக்தியினுல் ஸாந்நித்யமுள்ளவையாக்கியும், வழிபாட்டு முறைகளை சுத்தப்படுத்தித் தந்தும் விட்டாலே போதும். ஜனங்கள் இப்போது பௌத்தப்படி பண்ணிக்கொண்டிருக்கும் இரண்டாங்கெட்டான் உபாஸனையை (காபாலிகம், வாமாசாரம் என்றெல்லாம் பண்ணும் க்ரூரமான, ஆபாஸமான உபாஸனைகளையும்தான்) விட்டு விட்டு வைதிக உபாஸனைக்கு வந்துவிடுவார்கள். அறிவாளிகளாக வாதம் செய்கிற பௌத்தர்களைப் பற்றி நாம் அதிகம் கவலைப்பட வேண்டாம். பதில் வாதம் பண்ணுவதால் ஹ்ருதயத்திலிருந்து ஊற வேண்டிய பக்தியை ஊறப் பண்ண முடியுமா என்ன?' என்கிற ரீதியில் ஆசார்யாள் செய்துவிட்டுப் போய்விட்டார்.

அதனுல் லோகத்திற்கு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் ஒரு ஈச்வரன் உண்டு என்பதைக் காரணங்கள் காட்டி அழுத்தமாகச் சொன்னதற்கதிகமாக இவ் விஷயத்தில் வாதம் என்று அதிகம் செய்யவில்லை.

இப்போது இரண்டு · வார்த்தை சொன்னேனே, உபாதான காரணம்—நிமித்த காரணம் என்று, இந்த இரண்டையும் கொஞ்சம் 'எக்ஸ்ப்ளெய்ன்' பண்ணுமல் மேலே போவதற்கில்லை. அத்வைதத்துக்கும் மற்ற வைதிக-அவைதிக ஸித்தாந்தங்களுக்கும் உள்ள சில வித்யாஸங்களை முன்னே சொன்னபோதே இதையும் சொல்லியிருக்க வேண்டும்......

ஒரு வஸ்து உண்டாக்கப்பட்டிருக்கிறதென்ருல் அது ஏதோ ஒரு மூலப் பொருளைக்கொண்டுதான் உண்டாக்கப் பட்டிருக்கவேண்டும். ஒரு நகை இருக்கிறதென்ருல் தங்கம், வெள்ளி மாதிரி ஒரு லோஹத்தைக் கொண்டுதான் அதைப்

Koviloor Digital Library

பண்ணியிருக்கணும். வீடு இருக்கிறதென்றால் அதற்குச் செங்கல் வேண்டும். நகைக்குத் தங்கம் உபாதான காரணம். வீட்டுக்குச் செங்கல் உபாதான காரணம்.

தங்கம் எப்படி நகையாச்சு? செங்கல் எப்படி வீடாச்சு? தட்டானால் தங்கம் நகையாயிற்று. கொத்தனால் செங்கல் வீடாயிற்று. தட்டானும் கொத்தனும் நிமித்த காரணம்.

பானை உதாரணத்தைத்தான் பழைய புஸ்தகங்களில் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கும். பானைக்கு உபாதான காரணம் களிமண்; நிமித்த காரணம் குயவன்.

ஆதாரமான பொருளாகிய உபாதான காரணத்தைக் கொண்டு யார் அல்லது எது ஒரு வஸ்துவை உண்டாக்குகிறதோ அது நிமித்த காரணம்.

ஜகத் என்று ஒன்று இருப்பதற்கு ஈச்வரனே உபாதானம், நிமித்தம் என்ற இரண்டு காரணங்களும் என்பது அத்வைதத்தின் கொள்கை. ஜகத்தை மித்யை என்று அது சொல்லும். அதாவது நிரந்தர ஸத்யமாயில்லாமல் ஸத்யம் மாதிரித் தோற்றம் மட்டும் அளிப்பது; ஞானம் வந்தால் போய் விடுவது என்று சொல்கிறது. ஆனால் நடைமுறையில் இருப்பதுபோல 'வ்யாவஹாரிக ஸத்ய'மாக ஜகத் இருக்கிற போது அதைப் பண்ண ஒரு ஆதார 'மெடீரிய'லும், பண்ணுவிக்கிற ஒரு கர்த்தாவும் இருக்கத்தானே வேண்டும்? அந்த இரண்டுமே ஈச்வரன்தான் என்று அத்வைதம் சொல்கிறது. வேறு மெடீரியலைக் கொண்டு அவன் ஜகத்தைப் பண்ணினானென்றால் அந்த மெடீரியல் எங்கேயிருந்து வந்தது, அது எப்படி உண்டாயிற்று என்று கேள்வி வரும். அதனால் உபாதான மெடீரியலும் அவன்தான், அதை ஜகத்தாக நிர்மாணம் பண்ணிய நிமித்த காரணமாகிய கர்த்தாவும் அவன்தான் என்றே இருக்கவேண்டும். தன்னையே, தன்னுடைய மாயா சக்தியாலேயே, அவன் ஜகத் என்பதாகத் தோற்றம் காட்டும்படிப் பண்ணுகிறான் என்றால் உபாதான - நிமித்த காரணங்கள் இரண்டும் அவன்தானே?

Koviloor Digital Library

ஜகத் அவனுடைய மாயக் கனு. நாம் கனுக் காண்கிறோம் அப்போது அந்த ஸ்வப்ன லோகத்திலிருக்கிற அவ்வளவு வஸ்துக்களுக்கும் மெடீரியல் (உபாதானம்) நம்மிடமிருந்தே தோன்றியதுதானே? ஸ்வப்ன லோகத்தை நிர்மாணம் செய்த நிமித்த காரணமும் நாம்தானே?

ஸ்வாமியே இல்லை என்று சொல்லும் ஸித்தாந்தங்கள், அணுக்கள் என்ற உபாதான காரணத்தைக் கொண்டு ஜகத்தைச் செய்யும் நிமித்த காரணம் மட்டுமே ஸ்வாமி என்று சொல்லும் ஸித்தாந்தங்கள்—என்றெல்லாம் பல இருந்தபோது இரண்டு காரணமும் அவன்தான் என்று அத்வைதம் சொல்லிற்று.

ஈச்வரன் ஜகத்தின் கர்த்தா இல்லை என்று ஸாங்க்யம் சொல்லும். ஈச்வர தத்வத்தை ஞான ஸ்வரூபமாகத்தானே சொல்லியிருக்கிறது? அப்படிப்பட்ட சைதன்ய மூலத்தி லிருந்து ஜடமான லோகம் ஸம்பவிக்க முடியாது என்று ஸாங்கியர்கள் வாதிப்பார்கள். ஆசார்யாள் என்ன சொன்னு ரென்ருல்: சைதன்ய மூலம் வாஸ்தவமாகவே இப்படி ஜட லோகம் என்று ஒன்றைப் பண்ணவில்லை, அதாவது ஜட ப்ரபஞ்சம் நித்ய ஸத்யமான ஒன்று இல்லை, மாயையினுல் ஏற்பட்ட தோற்றம்தான். பௌதிகமாக ஜடம் என்று நினைப்பதும் மாயா கல்பனையான எண்ணம்தான்; அதாவது இப்போது ஸயன்ஸில் சொல்கிறபடி matter-ம் ஒருவித energy தான்; கல்பனு சிந்தனையான ஒரு தோற்றம்தான்; நம்முடைய அறிவில் கல்பனை எழும்புகிறதுபோலவே எல்லா அறிவுக்கும் காரணமான, சைதன்ய மூலமான ஈச்வரனிடம் லோக கல்பனை ஏற்பட்டதில் சைதன்யம் - ஜடம் என்று முரணுக எதுவுமில்லை என்று காட்டினுர். கல்பனு லோக கர்த்தாவாக ஒரு ஈச்வரன் உண்டு என்ருர்.

'கர்த்தா' என்பது ப்ரஹ்மஸூத்ர வார்த்தை. அதை எடுத்துக்கொண்டே கிறிஸ்துவர்களும் 'கர்த்தர்' என்பது,

Koviloor Digital Library

மாயம், கல்பனை என்று எதுவானாலும் அப்படி (மாயக் கற்பனை) பண்ண ஒன்று இருக்கத்தானே வேணும்? அப்படிப்பட்ட கர்த்தா ஈச்வரன் என்று ஆசார்யாள் சொல்லி ஸாங்க்யர்களைக் கண்டித்தார்.

பல தாதா ஈச்வரனே என்று விளக்கிக்காட்டி மீமாம்ஸகர்களைக் கண்டனம் செய்தார். 'கார்யங்கள்—அதாவது கர்மாநுஷ்டானம்—தானே பலன் கொடுப்பது, பலனைத் தர ஒரு ஈச்வரன் வேண்டியதில்லை' என்று மீமாம் ஸகர்கள் வாதம் செய்ததை ஆக்ஷேபித்துப் பேரறிவான ஈச்வரன்தான் இன்ன கார்யத்துக்கு இன்ன விளைவு என்று நிர்ணயம் பண்ணி, ஒன்றோடொன்று பின்னிப் பிணைந் திருப்பதான கோடாநுகோடி கார்யங்களால் இப்படியொரு ப்ரபஞ்ச ஒழுங்கு ஏற்பட்டிருக்கும்படிப் பண்ணுகிறான் என்று ஆசார்யாள் எதிர்வாதம் செய்தார்.

இதற்கு அதிகமாக ஸ்வாமி ஸம்பந்தமாக ஆசார்யாள் வாதத்தில் போகாமல் பக்தி வளர என்னவெல்லாம் பண்ண வேண்டுமோ அதைக் கார்யத்தில் செய்து கொடுத்தே பௌத்த மதத்திற்கு ஜன ஸமூஹத்தில் following இல்லாமல் ஆக்கிவிட்டார். வழிபாட்டு முறைகளை க்ரூரமான அம்சங்களும், அறுவறுப்பான அம்சங்களும் இல்லாமல், ஜனங்களின் மனஸைக் கவரும்படியாக ப்ரேமை நிறைந்த தாகவும், வைதிக மந்திர பூர்வமானதாகவும் ஆக்கிக் கொடுத்தார். ஆலயங்களுக்கெல்லாம் போய் ஸாந்நித்யம் நன்றாக ப்ரகாசிக்கும்படியாகத் தூண்டிக்கொடுத்தார். பல ஆலயங்களில் யந்த்ரங்களை ஸ்தாபித்து நல்ல திவ்ய சக்திகள் பரவும்படிப் பண்ணினார். குழந்தையிலிருந்து ஆரம்பித்து மஹா பண்டிதர்வரை எல்லாரும் மனமுருகி ப்ரார்த்தித்துக் கொள்வதற்கான ஸ்தோத்ரங்களை ஏராள மாகச் செய்துகொடுத்தார்.

"தந்த்ரங்கள்" என்பதாக உருவாகிக் கொண்டுபோன வழிபாட்டு சாஸ்த்ரங்கள் பல இருக்கின்றன. அறுபத்து நாலு

Koviloor Digital Library

தந்த்ரம் என்று ஒரு கணக்கு. 'ஸௌந்தர்யலஹரி'யில் (இதை) 'சதுஷ் ஷஷ்ட்யா தந்த்ரை:' என்று சொல்லியிருக்கிறது*. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒரு தந்த்ரம் உண்டு. ஆகமம் என்றும் சொல்வதுண்டு. இவை வேத அடிப்படைக்கும் கொள்கைகளுக்கும் வித்யாஸமாகப் போய் தாங்களே Independent-ஆன ஆதார சாஸ்த்ரங்கள் மாதிரி ஆகுமானால் அப்போது இவற்றை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று ஆசார்யாள் நிலைநாட்டினார். வேதத்தை அநுஸரித்துப் போகும் தந்த்ரங்களையே எடுத்துக்கொள்ளலாமென்று சொல்லி, ஜனங்கள் க்ரூரமான, பீபத்ஸமான வழிபாட்டு அம்சங்களை விடும்படிப் பண்ணினார். சமனம் பண்ணினார். தந்த்ரங்களில் கௌல மார்க்கம், மிச்ர மார்க்கம், ஸமய மார்க்கம் என்று உள்ள மூன்றில் கௌலம் (வேதத்தைச் சாராமல்) 'இன்டிபென்டென்டா'யிருப்பது. மிச்ரம் வேத வழிகளையும் அங்கங்கே கலந்து கொள்ளும். ஸமய மார்க்கம் தான் வேதத்தையே அநுஸரித்தது. ஆசார்யாள் அதைத் தான் ஸ்தாபித்தார். அதனால்தான் மதம் என்பதற்கே ஸமயம் (சமயம்) என்று பேர் சொல்கிறோம்.

அப்புறம், அதாவது ஆசார்யாளுக்குப் பிற்காலத்தில் வந்த ந்யாய சாஸ்த்ரக்காரரான உதயனாசார்யார் என்பவர் புத்திவாதமாக, அதாவது தர்க்க ரீதியாகவே ஸ்வாமி உண்டு என்பதற்கு எவ்வளவு சொல்லமுடியுமோ அவ்வளவும் சொல்லி பௌத்த மதக் கருத்து இந்த அம்சத்தில் ஸரியேயில்லை என்று நிலைநாட்டினார். "ந்யாய குஸுமாஞ்ஜலி" என்ற அவருடைய புஸ்தகத்தின் மூலம் பௌத்தர்களின் நிரீச்வரவாதத்தை அவர் தர்க்கரீதியில் தகர்த்தார்.

உதயனாசார்யார் ஆசார்யாளின் அவதாரம் முடிந்து கொஞ்ச காலத்துக்குள் வந்து அவர் பாக்கிவைத்து விட்டுப் போயிருந்ததைப் பூர்த்தி பண்ணியவர்.

---

* 31-வது ச்லோகம்

Koviloor Digital Library

இது பக்தியுபாஸனையில்.

ஆசார்யாளின் பாகுபாடு

கர்மாநுஷ்டான விஷயமாகவோ ஆசார்யாள் செய் திருக்கவேண்டிய பௌத்த மத கண்டனத்தில் பெரிய பாகத்தைப் பூர்வ மீமாம்ஸகரான குமாரில பட்டர் பண்ணிவிட்டார்! ஆசார்யாளுக்குக் கர்மா என்பது முதல் படிதான். அது சித்தத்தைப் பரிசுத்தி செய்வதற்கு மாத்ரமே. அப்படிப் பரிசுத்தியான பிறகு ஞான விசாரம் பண்ணி, ஞானத்தினுல்தான் மோக்ஷமடைய முடியும் என்பது ஆசார்யாள் கட்சி. அதனுல் முதல் படியிலேயே அடியெடுத்து வைக்கவொட்டாமல் புத்தமதம் தடுக்கிறதே என்ற அளவுக்குத்தான் அவர் சண்டைபோடுவது. குமாரில பட்டருக்கோ கர்மாநுஷ்டானம் முதல்படி மட்டுமல்ல. அதுதான் முழு மார்க்கமுமே! ஞானம் என்பது வேண்டவே வேண்டாம், கர்மாவினுலேயே மோக்ஷம் என்பது அவர் கட்சி. அதனுல் அவருக்குத்தான் புத்தமதத்திடம் முழு அபிப்ராயபேதம் கர்மா விஷயமாக இருந்தது. பௌத்தம் வைதிக கர்மாவை ஆக்ஷேபிப்பதை அவர் தீவிரமாகவும் தீர்க்கமாகவும் அலசிக் கண்டனம் செய்தார். ஜைமினியின் மீமாம்ஸா ஸூத்ரங் களுக்கு சபர ஸ்வாமி என்பவர் செய்துள்ள பாஷ்யங்களுக்கு குமாரில பட்டர் எழுதியுள்ள வார்த்திகங்களில் இந்தக் கண்டனம் நிறைய வருகிறது.

ஸ்வாமி வேண்டியதில்லை என்ற பௌத்தக் கொள்கையை உதயனரும், கர்மா வேண்டியதில்லை என்ற அவர்களுடைய கொள்கையைக் குமாரிலரும் நன்ருகத் தாக்கித் தகர்த்தது போக பாக்கிதான் ஆசார்யாள் செய்யவேண்டியிருந்தது.

உதயனர் ஆசார்யாளுக்குக் கொஞ்ச காலம் பிற்பட்டு வந்தவர். குமாரிலர் ஆசார்யாளுக்கு ஸுமார் ஐம்பது வருஷம் முந்திப் பிறந்திருக்கலாம். அவருடைய கடைசிக் காலத்தில் யுவாவாக இருந்த ஆசார்யாள் அவரை ஸந்தித் திருக்கிருர். அந்தக் கதையெல்லாம் பின்னுல் சொல்கிறேன்.

Koviloor Digital Library

அதாவது குமாரில பட்டர் ஆசார்யாளின் senior contemporary.

ஈச்வரன் ஆசார்யாளாக அவதரிப்பதற்கு ஸுமார் ஐம்பது வருஷம் முந்தியே ஈச்வர குமாரனான குமாரஸ்வாமி குமாரில பட்டராக அவதரித்து அப்பாவின் கார்யத்தில் கணிசமான பங்கைத் தாமே செய்து முடித்து விட்டார்!

ஆனாலும், ரொம்ப விசித்ரமாகத் தோன்றும்—பௌத்த கண்டனத்தில் ஆசார்யாளின் கார்யத்தை வெகுவாகக் குறைத்து உபகாரம் பண்ணிய மீமாம்ஸகர்கள், நையாயிகர்கள் (ந்யாய மதஸ்தர்கள்) ஆகியவர்களைத்தான் ஆசார்யாள் நிரம்பக் கண்டித்தது! ந்யாய மதமும் பல ஆத்மாக்களைச் சொல்லுவதால் ஒரே ஆத்மாவாக நிறைந்து விடும் அத்வைத மோக்ஷத்தைச் சொல்லவில்லை. அதனால் அதைக் கண்டிக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் இந்தக் கண்டனம் அவ்வளவு அதிகமில்லை. ஆசார்யாள் அதிகம் கண்டித்தது மீமாம்ஸையைத்தான். அதற்கடுத்தபடி அவர் நிறையக் கண்டித்தது ஸாங்க்ய மதத்தை. ப்ரம்மம்-மாயை என்று வேதாந்தம் சொல்கிற மாதிரியே அது புருஷன்-ப்ரக்ருதி என்று சொல்கிறமாதிரித் தோன்றும். ஆனாலும் அது வேதாந்த தாத்பர்யத்திற்கு விரோதமாகப் போவதே. அதே ஸமயத்தில் அதன் வேறு சில கொள்கைகள் வேதாந்தத்திற்கும் ஸம்மதமானவை. இப்படி இருப்பதாலேயே அது எப்படி அத்வைதத்துக்கு வித்யாஸப்படுகிறதென்றும், அந்த வித்யாஸங்களிலுள்ள குறைபாடுகள் என்னவென்றும் நன்றாக இனம் பிரித்துக் காட்டி விளக்க வேண்டியிருந்தது. அதனால் ஸாங்க்யத்தையும் மீமாம்ஸைக்கு அடுத்தபடி ஆசார்யாள் நிறையக் கண்டனம் செய்தார். ஆனாலும் ஸாங்க்யம் அறிவாளிகளில் சில பேரோடு மட்டும் முடிந்துபோகும் ஒரு தத்வ சாஸ்த்ரம்தான். அது நமக்கு இங்கே விஷயமில்லை. ஜனங்களின் நித்யப்படி நடைமுறை வாழ்க்கையிலேயே கலந்து வருவதான கர்மாநுஷ்டானங்களைக் கொண்ட மீமாம்ஸைதான் ஸமூஹத்தை பாதிப்பது.

Koviloor Digital Library

அதனால் அவதாரத்தின் கார்யங்களில் அதுதான் முக்ய மானது. ஒரு ஸ்டேஜ்வரை கர்மாநுஷ்டானம் இருந்தே ஆக வேண்டும். அது இல்லாவிட்டால் ஜீவனையும், ஸமூஹத்தை யும் ஒழுங்குமுறையில் கொண்டுவரவே முடியாது. ஆனால் கடைசி ஸ்டேஜ் வரையிலும் அதுவேதான் என்றும் பண்ணி விடக் கூடாது. ஒரு ஸ்டேஜ் ஆன பின் அதுபோயே ஆக வேண்டும். அப்போதுதான் ஸத்ய ஸத்யமான ஆத்மாவில் சேரமுடியும். அதனால் ரொம்பவும் நுட்பமாக அலசி ஆராய்ந்து பார்த்து, எதுவரை எந்த அளவில் கர்மாநுஷ்டா னங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கவும் வேண்டும்; அதையே லக்ஷ்யமாக்கிவிடுவதில் என்னென்ன தப்புக்கள் என்பதையும் ஸவிஸ்தாரமாக எடுத்துச் சொல்லித் தள்ளவும் வேண்டும். நன்றாக இப்படிப் பாகுபாடு பண்ண வேண்டும். மீமாம்ஸையில் கார்யமாக அநேகம் இருப்பதை எடுத்துக்கொள்ளும்போதே ஸித்தாந்தமாக அதில் இருப்ப தில் உள்ள ஏராளமான குறைபாடுகளையும் புரிய வைத்துத் தள்ளும்படிச் செய்யவேண்டும். இப்படிச் செய்தவரே நம் ஆசார்யாள். கர்மாநுஷ்டானம்தான் ஸாதாரண ஜனங்களுக்கு முடிந்தது, ஸாதகர்களுக்கும் அதுதான் ஆரம்பப் படி என்பதால் ஆசார்யாள் ச்ரௌத-ஸ்மார்த்த கர்மாக்களை ஆதரித்து ஊக்கி வளர்த்தாலும், ஞானத்தை மீமாம்ஸை அடியோடு தள்ளிவிட்டுக் கர்மாவே எல்லாமும் என்று பிடித்துக்கொண்டிருந்ததால் ஞானத்தையே மோக்ஷ மார்க்கமாகக் கொண்ட ஆசார்யாள் அதையே அதிகம் கண்டனமும் செய்ய வேண்டியிருந்தது.

காலில் அடி, நடக்க முடியவில்லை என்றால் மருந்து போட்டுக் கட்டிக்கொண்டால்தான் விந்தி விந்தியாவது நடக்க முடியும். அப்படித்தான் ஜன்மாந்தர கர்மாவால் அடிபட்டு நாம் மோக்ஷ மார்க்கத்தில் நடக்க முடியாதபோது கர்மாநுஷ்டானத்தால் மருந்துக் கட்டுப்போட்டுக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அந்த வழியில் போக ஆரம்பிப்பது. அதற்காக, 'கால் நன்றாக ஸரியாகிக் கட்டைப் பிரித்துப்

Koviloor Digital Library

போட்டு வேகமாக நடப்பதென்பதே கூடாது; எப்பவும் கட்டுப்போட்டுக்கொண்டேதான் விந்தி விந்திப் போக வேண்டும்' என்றால்? கட்டிக் கட்டி வைப்பதிலேயே கட்டுப் புண் வந்து புரையோடி அடியோடு நடக்க முடியாமல்தான் போகும். 'கட்டுப் போனபின் ஞான மார்க்கத்தினால்தானே லக்ஷ்யமான மோக்ஷத்திற்கு ஸுகமாக, வேகமாகப் போய்ச் சேரமுடியும்? இவர்கள் (மீமாம்ஸகர்கள்) இப்படி இடைஞ்சலாகப் பண்ணுகிறார்களே!' என்பதால் ஆசார்யாள் அவர்களை நன்றாகக் கண்டனம் செய்ய வேண்டியிருந்தது.

பழம் தரவில்லையென்று குமாரஸ்வாமி அப்பாவைப் படுத்தி உருட்டி ஸந்நியாஸியாகப் போனாரல்லவா? அப்பாக்காரர் அவருக்குக் கீழ்ப்படிந்து போகும்படி ஆயிற்றல்லவா? பதிலுக்கு இப்போது அவர் ஸந்நியாஸமே கூடாது என்று வாதம் பண்ணும் மீமாம்ஸகரானபோது அப்பா அவரை நன்றாகக் கண்டனம் பண்ணி ஜயித்துக் காட்டிவிட்டார்! அவர் (குமாரஸ்வாமி) இன்னொரு ஸமயத்தில் ப்ரம்மாவை ஜெயிலில் போட்டு, அதன் தொடர்ச்சியாக அப்பாக்காரர் தன்னிடம் தலைவணங்கி உபதேசம் வாங்கிக்கொள்ளவும் பண்ணினார். இப்போது அப்பா அந்தப் ப்ரம்மாவையே அவருக்கு (குமாரில பட்டருக்கு)ப் பக்க பலமாக மண்டனமிச்ரர் என்று அனுப்பினார். குமாரில பட்டருக்குக் கடைசிக் காலத்தில் தாமே ஞானோபதேசம் பண்ணினார்.

மண்டன மிச்ரர் எழுதியதாக மீமாம்ஸைப் புஸ்தகம் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் கார்ய ரூபத்தில் அவர் நிறைய யஜ்ஞாதி அநுஷ்டானங்கள் செய்தும், மாற்று ஸித்தாந்திகளுடன் வாதச் சண்டைகள் போட்டும் அந்த மார்க்கத்தை நன்றாக வ்ருத்தி செய்து கொடுத்திருக்கிறார். ஆசார்யாள் அவரையும் ஜயித்து, அதோடு நிற்காமல் அவருக்கு ஸந்நியாஸம் கொடுத்துத் தம்முடைய ப்ரதான சிஷ்யர்களில் ஒருவராகவே ஆக்கிக்கொண்டார்.

Koviloor Digital Library

கர்ம மார்க்கக்காரர்களின் அவதாரத்திற்குக் காரணம்

தாம் அவதாரம் பண்ணுவதற்கு முந்தியே குமார ஸ்வாமியையும், ப்ரம்மாவையும் கர்ம மீமாம்ஸகர்களாக அவதரிக்கும்படிப் பரமேச்வரன் அனுப்பி வைத்ததற்கு ஒரு ந்யாயம் சொல்லலாம். இப்போது அவரிடம் வந்து முறையிடுவது தேவர்கள். அவர்களுக்கு ஜனங்களின் கர்மாநுஷ்டானத்தால்தான் லாபம்—தேவர்கள் ஆஹுதி பெறுவது வைதிக கர்மாவில்தான். ஞான மார்க்கத்தில் போகிறவனுக்கு தேவர்களால் ஆகவேண்டியது எதுவுமில்லை. அவன் அவர்களை உபாஸித்து ஆஹுதி கொடுப்பது கிடையாது. அதனால் தேவர்களுக்கு ஞானியைப் பிடிக்காது, கர்மாக்காரன்தான் அவர்களுக்கு ப்ரியமானவன் என்றுகூடச் சொல்வதுண்டு! 'தேவானும் ப்ரியன்' என்றாலே அஞ்ஞானி என்று அர்த்தம் ஏற்பட்டிருக்கிறதென்றால் பார்த்துக் கொள்ளலாம்!

இப்போது அவர்கள் வந்து முறையிடுகிறபோது, 'அவர்களுக்கு உபகாரம் செய்வதான கர்மாநுஷ்டானம் அடியோடு அடிபட்டுப் போன ஞானத்தையே சொல்வதற்குத் தாம் அவதாரம் பண்ணினால் அவர்களுக்கு எங்கேயாவது ஆறுதலாக இருக்குமா? யஜ்ஞபாகம் இல்லாமல் இவர்கள் வந்து தவித்துக்கொண்டு ப்ரார்த்திக்கும்போது, நாம் அத்வைத (ஞான)த்தைச் சொல்ல அவதரிக்கிறேனென்றால் அது கருணையாகுமா, [சிரித்து] manners ஆகுமா?' என்று ஸ்வாமி நினைத்திருப்பார் போலிருக்கிறது! 'நடுவிலே ரொம்ப காலம் யஜ்ஞாதிகள் குறைந்துபோனதற்கு ஈடு செய்வதாக இப்போது ஒரு நாற்பது, ஐம்பது வருஷம் இவர்களுக்கு நிறைய யஜ்ஞபாகம் கிடைக்கட்டும். அதற்காக ப்ரம்மாவும், ஸுப்ரஹ்மண்யரும் போய்க் கர்ம மீமாம்ஸையை நன்றாக விருத்தி பண்ணட்டும். அதிலேயே நம் கார்யத்துக்கும் ஸாதகமாகக் கணிசமான அளவுக்கு பௌத்த நிராகரணமும் ஏற்படட்டும். அப்புறம் நாம் போகலாம்.

Koviloor Digital Library

'பௌத்தர்களும் ஏதோ ஒரு வழியில் ஞானம் மாதிரியே சொல்கிறவர்களானதால் நாமும் ஞானம் என்றே ஆரம்பித்தால் எது வைதிகம், எது அவைதிகம் என்று வித்யாஸம் புரியாமல் ஜனங்கள் குழம்பிப் போவார்கள். அதனுல் முதலில் இவர்கள் போய்க் கர்மாநுஷ்டானத்தால் பலமான வைதிக அஸ்திவாரம் போட்டுவிடட்டும். அப்புறம் நாம் போய், 'இந்த அநுஷ்டானங்களிலேயே ஆரம்பியுங்கள். அதனுல் பக்வமான பின் ஞானத்தில் போங்கள்!' என்று வைதிகமான ஞான மார்க்கத்தை எடுத்துச் சொன்னுல் லோகம் குழப்பமில்லாமல் புரிந்துகொண்டு முன்னேற முடியும்' என்று நினைத்தே ஸ்வாமி அந்த இரண்டு பேரை முதலில் அனுப்பினுரென்று வைத்துக்கொள்ளலாம்.

அதன்படி முதலில் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியும், ப்ரம்மாவும் தங்கள் அம்சங்களால் குமாரில பட்டராகவும், மண்டன மிச்ரராகவும் பிறந்து பௌத்தத்தை நன்ருகக் கண்டித்து, கர்ம மார்க்கத்தை வளர்த்தார்கள்.

இந்திரன், ஸரஸ்வதி அவதாரங்கள் : அரசு ஸஹாயமின்றியே ஆசர்யாள் பணி

குமாரில பட்டருக்கு ஸஹாயம் செய்வதற்கே இந்த்ரன் ஸுதன்வா என்ற பெயரில் ஒரு ராஜாவாக பூலோகத்தில் பிறந்தானென்று சில புஸ்தகங்களில் இருக்கிறது. யஜ்ஞ கர்மாநுஷ்டானம் தேவர்களின் ப்ரீதிக்கானது என்ருல், தேவராஜனை இந்த்ரன் அதைப் புத்துயிருட்டுபவருக்கு ஸஹாயம் செய்யப்போவது இயற்கைதானே?

இன்னெரு விஷயமும் சொல்லிவிட வேண்டும். குமாரில பட்டர் ஏதோ ஓரளவுக்கு ராஜ ஸஹாயத்தினுல் பௌத்தர்களை ஜயித்திருப்பாராயிருந்தாலும், நம்முடைய ஆசார்யாள் அரச பலம் என்பதே கொஞ்சங்கூட இல்லாமல், தம்முடைய அறிவு பலத்தாலும், அநுபவ பலத்தாலும் மட்டுமேதான் வேதாந்தத்துக்கு ஜயம் பெற்றுக் கொடுத்தார். பௌத்த-

Koviloor Digital Library

ஜைன மதங்கள் பெரும்பாலும் ராஜபலத்தில் பரவினவை தான். அப்புறம் மறுபடி வைதிகத்துக்குத் திருப்பும்போதும் அப்பர், ஞான ஸம்பந்தர் ஆகியோர் அப்போதிருந்த பல்லவ, பாண்டிய ராஜாக்களை முதலில் மாற்றியதிலேயே ராஜ்யம் பூராவும் மாறிற்று என்று பார்க்கிறோம். ஆசார்யாள் சரித்ரத்தில் அப்படி எதுவுமில்லை. அவர் நாளில் பெரிய பெரிய ராஜாக்களே இல்லை. அக் காலத்தில் சக்ரவர்த்தியாக எவனும் இருந்து வர்ணாச்ரம தர்மங்களைப் பரிபாலனம் பண்ணாததாலேயே ஸமூஹ ஒழுங்கு முறைகள் கெட்டுப்போயிருந்ததற்கு ஸூத்ர பாஷ்யத்திலேயே 'ரெஃபரன்ஸ்' இருக்கிறது.[1]

மற்ற தேவர்கள் ஈச்வராவதாரத்துக்கு ஸஹாயம் பண்ணவும் ஸேவை பண்ணவும் மநுஷ லோகத்துக்கு வரும் போது தேவராஜா வராமலிருக்கலாமா? அதற்காக அவனுக்கும் ஒரு சின்ன 'பார்ட்' கொடுத்தாற்போலிருக்கிறது! ஆசார்யாளுக்குப் பெரிய ஸஹாயம் பண்ணிய குமாரில பட்டருக்கு அவன் கொஞ்சம் ஸஹாயம் பண்ணினான்.[2]

பிறருடைய பெரிய ஸஹாயம் கிடைத்தே கார்யம் முடிக்க முடிகிறது என்றால் அது அவதாரத்துக்குக் குறைவு தானே? அதனால்தான் போலிருக்கிறது, ஆசார்யாளுக்கு பௌத்த நிராகரணத்தில் ரொம்ப ஸஹாயம் செய்த குமாரில பட்டரும் மண்டனமிச்ரருமே வேதாந்தத்தையும் ஒரே கண்டனமாகப் பண்ணி, இதற்கு எதிர்க் கண்டனம் ஆசார்யாள் ஒருத்தரே எவர் ஸஹாயமுமில்லாமல் முழுக்கப் பண்ணி அவர்களை ஜயித்து அவதாரத்தின் பெரிய சக்தியைக் காட்டும்படி ஏற்பட்டிருக்கிறது!

---

1. I. 3. 33

2. க்ரகசன் என்ற காபாலிகன் பெரிய கோஷ்டி சேர்த்துக்கொண்டு ஆசார்யாளைப் பரிவாரத்தோடு அழிப்பதற்கு வந்தான்; அபபோது எதிர்த்தாக்குதல் நடத்த மன்னன் ஸுதன்வன் வந்தான்; ஆயினும் ஆசார்யாள் ஒரு ஹுங்காரம் செய்தே அக் காபாலிகர்களை விரட்டிவிட்டார் என்று ஒரு நிகழ்ச்சி மாதவீய சங்கரவிஜயத்தில் காண்கிறது.

Koviloor Digital Library

இந்த இரண்டு பேரிலுங்கூட ஆசார்யாள் குமாரில பட்டரிடம் அதிகம் வாதப்போர் செய்யவேண்டியிருக்க வில்லே. அவருடைய தேஹ வியோக ஸமயத்தில்தான் ஆசார்யாள் அவரை ஸந்தித்ததே. மண்டன மிச்ரருடன் தான் 21 நாள் விடாமல் வாதப் போர் நடத்தி ஜயித்தார்.

குமாரில பட்டர் பெரிய க்ரந்த கர்த்தாவாகவும், மண்டன மிச்ரர் பெரிய அநுஷ்டான கர்த்தாவாகவும் இருந் தார்கள். கர்மாநுஷ்டானம் நிறையப் பண்ணவேண்டு மென்ருல் க்ருஹஸ்தராகத்தான் இருக்கவேண்டும். அப்போது பத்னி இருந்துதானே ஆகணும்? அதனுல்தான் ப்ரம்மா மண்டன மிச்ரராக வந்தபோது ஸரஸ்வதியும் ஸரஸவாணி என்ற பெயரில் அவதரித்து அவருக்குப் பத்னி யாளுள்.

இன்னெரு காரணமும் உண்டு. அறிவுக் கடலாக, ஸர்வஜ்ஞராக ஆசார்யாள் இருந்து காட்டவேண்டி யிருந்தது. அவரைப் பரீக்ஷித்துப் பார்த்து அவர் ஸர்வஜ்ஞர் என்று தீர்ப்புக் கொடுக்க ஒருத்தர் இருக்கவேண்டுமல்லவா? யார் அப்படி இருக்கமுடியும்? அறிவுத் தெய்வமான, வித்யாதிதேவதையான ஸரஸ்வதிதானே? அதனுலும் அவள் அவதரிக்க வேண்டியிருந்தது.

குமாரில—மண்டனர்கள் பிறந்து பெருமளவு பௌத்த நிராகரணம் செய்த பின்னரே ஆசார்யாள் அவதரித்தது.

அதாவது தேவர்கள் வந்து ப்ரார்த்தித்துக்கொண்ட பிறகும் ஸுமார் ஐம்பது வருஷம் தள்ளியே ஸ்வாமி அவதரித்திருக்க வேண்டும். நன்ருகப் பசித்துச் சாதம் போட்டால்தான் முழு ஸத்தும் உடம்பில் ஒட்டும் என்கிற மாதிரி நன்ருகக் காக்க வைத்து அவதாரம் பண்ணிஞர் போலிருக்கிறது!

தேவர்கள் கொடுக்க வேண்டிய 'பெடிஷன்' வந்தாகி விட்டது! யோக்யதாம்சமுள்ள ஒரு தம்பதி அவதார

Koviloor Digital Library

புத்ரனைப் பெறுவதற்குக் கொடுக்க வேண்டிய பெடிஷனும் அப்புறம் வந்தது.

'அவதார புத்ரனுக்கு அப்பா அம்மாவான அந்தப் புண்யசாலிகள் யார்? பரம புண்யமான அவதாரம் எப்படி ஏற்பட்டது? எந்தப் புண்ய காலத்தில், எந்த தேசத்தில் எந்த ஊரில் நடந்தது?'—பார்ப்போம்.

கேரள சரிதம்

பாரத தேசத்தில் அப்போது பரவியிருந்த அவைதிகச் சூழ்நிலையிலுங்கூட வைதிக அநுஷ்டானங்களைக் கூடிய மட்டும் விடாமலிருந்த பிரதேசத்திலேயே, ஸத்துக்களாக வுள்ள ஒரு ப்ராம்மண தம்பதிக்குத்தான் பிள்ளையாகப் பிறப்பதென்று ஸ்வாமி ஸங்கல்பித்திருந்தார். அது மலையாள தேசம் என்றும், அதில் காலடி என்பதே அவதார ஸ்தலம் என்றும் அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும்.

அந்த உத்தம தம்பதியின் பேர் சிவகுரு, ஆர்யாம்பாள் என்பதும் சில பேருக்குத் தெரிந்திருக்கலாம்.

நீளமாக நீண்டுகொண்டு போகும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மறுபுறம், மேற்கு ஸமுத்ரத்துக்கும் மலைத் தொடர்களுக்கும் இடையில் இருப்பது மலையாள தேசம். கேரளம் என்பது அதன் ஸம்ஸ்க்ருதப் பெயர். ஒரு பக்கம் மலையும் மறுபக்கம் ஆழமும் (ஆழி என்றால் ஸமுத்ரம் தானே?) இருப்பதால் மலையாழ(ள)ம். கேரம் என்றால் தென்னை. ஒரே தென்னஞ்சோலை மயமாக அந்த ப்ரதேசம் இருப்பதால் கேரளம்.

மலைத்தொடருக்கும் ஸமுத்ரத்துக்கும் இடையில் குறுகலாக இப்படி அது உண்டானதற்கு ஒரு கதை உண்டு.

பரசுராமர் 21 தலைமுறை க்ஷத்ரிய ராஜாக்களை ஸம்ஹாரம் செய்து அவர்களுடைய ராஜ்யங்களை எடுத்துக் கொண்டாரென்று தெரிந்திருக்கலாம். லோகம் முழுக்க அவர் கைக்கு வந்துவிட்டது. அதே ஸமயம் அவருக்கு

Koviloor Digital Library

விரக்தியும் பச்சாதாபமும் ஏற்பட்டது. 'ப்ராம்மண ஜன்மா எடுத்தும் ஸாத்விகமாக ஊருக்கு நல்லது பண்ணுமல் பழி, கொலே என்று நிரம்பப் பண்ணிவிட்டோமே! நடந்தது நடந்துவிட்டது என்றிருக்கலாமாஞலும் இப்போது இந்தப் பெரிய ராஜ்யத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? ஏற்கெனவே செய்ததற்காக ப்ராயச்சித்தம், தபஸ் பண்ணுவதைவிட்டு ராஜாவாகி ராஜ்யபாரம் வேறு வஹிப்பதா? அது கொஞ்சங்கூட ஸரியில்லே' என்று நினேத்தார். அதஞல் தம் கைக்கு வந்துவிட்ட லோகம் முழுவதையும் கச்யப மஹரிஷிக்கு தானம் செய்துவிட்டார். அவருக்கு ஏன் தானம் செய்யணுமென்ருல் அவரிடமிருந்துதான் எல்லா உயிரினங்களும் பிறந்தன. மநுவின் வம்சமாக வந்த நாம் மநுஷ்யர். அந்த மநுவின் பிதா விவஸ்வான். விவஸ்வானுக்குப் பிதா கச்யபர்தான். அதஞல் அவரே மனிதகுலத்தைத் தோற்றுவித்தவர். அது மட்டுமில்லே. தேவர், தைத்யர், தானவர், ராக்ஷஸர், நாகர் ஆகிய எல்லோருக்குமே அவர்தான் பிதா. ப்ரஜாபதிகள் என்று பல பேர் இருந்தாலும் ஜீவ ஸ்ருஷ்டி பெருகுவதற்கு விசேஷ உபகாரம் செய்த அவரைத்தான் கச்யப ப்ரஜாபதி என்று குறிப்பிட்டுச் சொல்வது. அதஞல், 'இந்த ஜீவ குலத்தையெல்லாம் அவரே கட்டி மேய்க்கட்டும்; அல்லது என்ன பண்ணுவாரோ பண்ணிக்கொள்ளட்டும்' என்று அவருக்குப் பரசுராமர் பூமியை தத்தம் செய்து விட்டார்.

உங்களுக்கு ஒரு வீடு இருக்கிறது, அதை நீங்கள் ஒருவருக்கு தானம் செய்து விடுகிறீர்கள்—என்ருல், அப்புறமும் அந்த வீட்டில் நீங்கள் இருந்துகொண்டிருக்கமுடியுமா? அந்த மாதிரிதான் இப்போது பரசுராமர் நினேத்தார். 'தானம் என்று இவருக்கு பூமியைக் கொடுத்த பிறகும் நாம் இங்கே வாஸம் செய்வது ஸரியில்லே. தேசத்தை விட்டு வெளியேறிப்போய், புதுசாக வாஸ யோக்யமாக ஒரு இடம் உண்டாக்கிக்கொண்டு அங்கே தபஸ் இருப்போம்' என்று நினேத்தார். அவரால் நடக்கவேண்டியிருந்த கார்யத்தை

Koviloor Digital Library

ஞான த்ருஷ்டியில் அறிந்த கச்யபரும் அந்த ரோஷக்காரருக்கு ரோஷமூட்டி அவர் நினைத்தபடியே செய்ய வைப்போமென்று நினைத்து, "தத்தம் பண்ணிவிட்ட ஸொத்தில் பாத்தியதை கொண்டாடாதே. இந்த நிலப்பரப்பின் எல்லையைத் தாண்டிப் போய்ச் சேரு" என்று விரட்டினார்.

பரசுராமர் புறப்பட்டார். நிலப்பரப்புக்கு எல்லையாயிருந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் ஏறி ஸஹ்யம் என்ற பர்வத உச்சிக்குப் போனார். அக்காலத்தில் அந்த மலையை ஒட்டினாற்போலவே மறுபக்கம் மேற்கு ஸமுத்ரம் இருந்தது. அதாவது, மலைக்கு அந்தண்டை மலையாளதேசம் இல்லை. ஜலம்தான் இருந்தது. ஸமுத்ரராஜாவிடம் அவர்,"இதுவரை பூலோகத்திலுள்ள நிலப் பரப்பில் இனிமேல் நான் வஸிப்பதற்கில்லாமலாகிவிட்டது. தேவலோகத்துக்குப் போகவும் முடியாமல் ஸப்த சிரஞ்ஜீவிகளில் ஒருவனான நான் இந்த பூலோகத்திலேயே இருந்துகொண்டு லோக க்ஷேமத்திற்காகத் தபஸ் செய்துகொண்டிருக்கும்படி ஈச்வராக்ஞை இருக்கிறது. அதனால் இப்போது நீதான் ஒரு உபகாரம் செய்யணும். என்னவென்றால் இந்த மலைக்கு அந்தப் பக்கம் நீ கொஞ்சம் விலகிப்போய், நான் வஸிப்பதற்குக் கொஞ்சம் நிலப் பரப்பு ஏற்படுத்தித் தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ராமர் அணை கட்டுவதற்காக அலையை அடக்கிக் கொண்டவர் ஸமுத்ர ராஜா. பரசுராமருக்கும் உபகாரம் செய்ய நினைத்தார். 'இவரோ மஹா கோபக்கார ப்ராம்மணர். அதனால் நாம் எவ்வளவு தூரம் விலகிப் போனாலே இவருக்கு த்ருப்தி உண்டாகுமோ அதற்குக் குறைவாகச் செய்தோமானால் சண்டைக்கு வருவார்' என்றும் நினைத்தார். பரசுராமரிடம், 'தங்கள் கையில் தாங்கள் தபஸிருந்து பரமேச்வரனிடமிருந்து பெற்ற பரசு (கோடரி) இருக்கிறதல்லவா? அதை ஸமுத்ரத்தில் வீசி எறியுங்கள். எவ்வளவு தூரத்துக்கு ஜலம் எழுப்பித் தெறிக்கிறதோ

Koviloor Digital Library

அவ்வளவு தூரமும் நான் பின்வாங்கிக்கொண்டு தங்களுக்கான பூமி வெளிப்படும்படி செய்கிறேன்" என்று சொன்னார்.

அப்படியே மஹாசக்தரான பரசுராமர் மலையுச்சியிலிருந்து ஸமுத்ரத்தின்மேல் பரசுவை வீச அது ஸமுத்ரத்தில் விழுந்து பல மைல் தூரத்துக்கு வடக்குத் தெற்காகவும், அதைவிடக் குறைவாகக் கிழக்கு மேற்காகவும் ஜலம் எழும்பித் தெறித்தது. அந்தப் பரப்பளவு முழுவதிலுமிருந்து ஸமுத்ரம் பின்னுக்குப் போய்விட்டது. பூமி வெளி வந்தது.

அதுதான் மலையாள தேசம்.

பரசுராம க்ஷேத்ரம் என்றே அதற்குப் பெயர் இருக்கிறது. இன்றைக்கும் அங்கேதான் பரசுராமன் என்று பெயர் வைத்துக்கொள்பவர்கள் இருக்கிறார்கள்.

முதலில் அங்கே செம்படவர்கள்தான் வந்து குடியேறினார்கள். அங்கங்கே தீவுகளில் அவ்யவஸ்திதமான (ஒழுங்கு முறை செய்யப்படாத) பாஷைகளைப் பேசிக்கொண்டு வாழ்ந்துவந்த செம்படவர்கள் இங்கே வந்து சேர்ந்தார்கள்.

பரசுராமர் அதை நல்ல வைதிகமான புண்யபூமியாக்க வேண்டுமென்று நினைத்தார். இத்தனும் பெரிய நிலப்பரப்பு ஏற்பட்டுள்ளபோது தாம் ஒருத்தர் தபஸ் பண்ணிக் கொண்டிருந்தால் மாத்ரம் போதாது, ஏராளமாக ஸத்பிராமணர்களைக் குடியேற்றி வைதிகாநுஷ்டானங்கள் வளரும்படிச் செய்யணும் என்று நினைத்தார்.

ஆதித் தமிழகத்தின் அந்தணர்கள்; கேரளத்தில் தமிழ்

சோழ தேசத்திலிருந்து சோழியர்கள் எனப்படும் ப்ராம்மணர்களை அழைத்துவந்து அங்கே அமர்த்தினார். இந்தச் சோழியர்கள் ஆதிகாலத்திலிருந்தே தமிழ் நாட்டைச் சேர்ந்த, தமிழ் மக்களாகவே இருந்த, ப்ராம்மணர்கள். த்ராவிட ப்ராம்மணர்கள். த்ராவிடரும் ப்ராம்மணரும் சத்ரு ஜாதிகள் இல்லை! த்ராவிட ஜாதி

Koviloor Digital Library

என்றும் ஒன்று இல்லை. த்ராவிட தேசம்தான் உண்டு. அதில் வஸித்துவரும் ப்ராம்மணர் உள்பட எல்லாரும் த்ராவிடர்கள்தான். த்ராவிட தேசத்திலிருந்து வடதேசத்துக்குப் போய் ஸெட்டில் ஆன ப்ராம்மணர்களுக்கே இன்றைக்கும் வடக்கே 'த்ராவிட்' என்ற பெயர் இருக்கிறது! இப்படி ஆதியிலிருந்தே தமிழ் ஜனங்களாக இருந்தவர்கள்தான் சோழிய ப்ராம்மணர்கள். அப்புறம் வடக்கிலிருந்தும் பல ப்ராம்மணர்கள் இங்கு வந்தார்கள். 'வடமர்' என்று அவர்களுக்கே பேர். (கைபர் கணவாய் வழியாக என்றைக்குமே எவருமே வரவில்லை! பாரத தேசத்துக்குள்குள்ளேயேதான் ராஜ்யத்துக்கு ராஜ்யம் இடம் மாறுவது.) 'வடமர்' என்று ப்ராம்மணரில் ஒரு பிரிவை மட்டும் சொல்வதாலேயே மற்றவர்கள் என்றைக்குமே 'தென்னவர்'களாக இருந்தவர்கள்தான் என்று ஆகிறதல்லவா?

பாரத தேசம் முழுதும் ஆதியிலிருந்து ஒரே இனம்தான். ஆர்ய த்ராவிட இன பேதம் வெள்ளைக்காரன் divide and rule-ல் (பிரித்து ஆள்வதில்) கதை கட்டிவிட்டது. அந்தக் கதையை நிஜம் என்றும், நிஜமான நம்முடைய சாஸ்த்ர, புராணங்களில் இருப்பதைக் கட்டுக் கதை என்றும் எண்ணி வருகிறோம்! இது இருக்கட்டும்.

தமிழ்நாட்டு ப்ராம்மணர்கள் ஸுகஜீவிகள். வடக்கே போகப் போகக் குளிர், வெய்யில் இரண்டும் ஜாஸ்தி. மேற்கே கர்நாடகத்துக்குப் போனால்கூட ஒரே மலைத் தொடராயிருப்பதால் சீதோஷ்ணம் கடுமைதான். தமிழ்நாடு மாதிரி மித சீதோஷ்ணம் அங்கேயெல்லாம் இல்லை. அதனால் மற்ற சீமை ஜனங்கள் கஷ்டங்களுக்கு அதிகம் பயப்பட மாட்டார்கள், 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொள்வார்கள். தமிழ்நாட்டு ப்ராம்மணர்கள் அப்படியில்லை.

நான் சொல்வது பழங்கால ஸமாசாரம். தற்போது தமிழ்நாட்டில் ப்ராம்மணனைத் தீண்டாதானாகப் பண்ணி ஒதுக்கியிருப்பதிலும், இவனுக்கும் ப்ராம்மண தர்மத்திற்கு அடியோடு வித்யாஸமாக ஒரே பணப் பேராசை பிடித்துப்

Koviloor Digital Library

போயிருப்பதிலும் எந்த ஸஹாராவானாலும், ஐஸ்லாண்டானாலும் போய் 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கொண்டுவிடுகிறான்!

அந்தப் பூர்வ காலத்தில் ஸுகஜீவிகளாகக் காவேரி தீரத்திலிருந்த சோழியர்கள் மலையாளத்துக்குப் போனார்களா? அங்கே ஓயா மழையும், சகதியும், குறுக்கே குறுக்கே கழியுமாக (ஓடையுமாக) இருந்தது அவர்களுக்கு ஒத்துக் கொள்ளவில்லை. கோபக்காரர் என்று பேர் வாங்கின பரசுராமரிடம் சொல்லவும் பயம். அதனால் ரஹஸ்யமாகத் திரும்பி ஓடிவந்துவிடலாமென்று நினைத்தார்கள்.

இவர்கள் இப்படி நினைப்பார்களென்று அவருக்கும் தெரியும். அதனால் என்ன நினைத்தாரென்றால், 'இவர்களுடைய ஆசாரங்களில் எதையாவது ஒன்றை மாற்றி விடுவோம். அப்படிச் செய்துவிட்டால் இவர்கள் தாய்ச் சீமைக்குத் திரும்பிபோனால் அங்கே இருப்பவர்களுடன் கலந்து வாழமுடியாமல் போய்விடும். வேறு வழியில்லாமல் இங்கேயே இருந்துவிடுவார்கள்' என்று நினைத்தார். ஆகையால் அவர்கள் குடுமியைப் பின்பக்கம் முடிந்து கொள்ளாமல் தலை உச்சியில் சேர்த்து 'ஊர்த்வசிகா' என்பதாக முடிந்துகொள்ளும்படிப் பண்ணினார். இன்றைக்கும் நம்பூதிரிகள் அந்த வழக்கத்தைத்தான் பின்பற்றுகிறார்கள்.

ஆனால், 'இந்த ஒரு வித்யாஸம் மட்டும் சோழ தேச ஜனஸமூஹம் தங்களை ஒதுக்கிவிடும்படிப் பண்ணிவிடாது. முக்யமான அநுஷ்டானங்களில் வித்யாஸமில்லாதபோது சிகை எப்படியிருக்கிறதென்பதைக் கொண்டு மாத்ரம் யாரும் நம்மைத் தள்ளிவிடமாட்டார்கள்' என்று அந்த ப்ராம்மணர்கள் நினைத்தார்கள். அதனால் அவர்களில் ரொம்பப் பேர் ஊர்த்வ சிகையுடனேயே சோழ தேசத்துக்குத் திரும்பிவிட்டார்கள். அவர்கள் நினைத்ததுபோலவே ஜனஸமூஹமும் அவர்களை ப்ரியமாக வரவேற்று வைத்துக் கொண்டது. அந்த ப்ராம்மணர்களின் பரம்பரைக்கு

Koviloor Digital Library

உச்சிக்குடுமியே தங்கிவிட்டது. 'சோழியன் சிண்டு சும்மா ஆடாது' என்று அப்புறம் அதை வைத்துப் பழமொழிகூட வந்துவிட்டது!

'இதென்னடா, இப்படியாகிவிட்டதே!' என்று பரசுராமர் பார்த்தார். இனிமேல் தமிழ்நாட்டு ப்ராம்மணர்களிடம் போகவேண்டாமென்று, தெலுங்கு நாட்டிலும் கன்னட நாட்டிலும் உள்ள கல்வி - கேள்விகளில் வல்லவர்களான ப்ராமணர்களை அழைத்துக்கொண்டுபோய் மலையாளத்தில் அமர்த்தினார். தமிழ்நாட்டு ஸுகஜீவிகளைப் போல அவர்கள் அட்ஜஸ்ட் செய்துகொள்ள முடியாமல் திரும்ப ஓடிவிடமாட்டார்களென்று அவருக்கு நம்பிக்கை இருந்தாலும் முன்ஜாக்ரதையாக இன்னொன்றும் செய்தார். 'ப்ராம்மணனுக்கு 108 ஆசாரங்கள் இருக்கின்றன. முன்பு அதில் ஒன்றை மட்டும் மாற்றியதால்தான் நம்முடைய திட்டம் தோற்றுப் போயிற்று. இப்போது 108-ல் பேர் பாதிக்கும் மேலே, 64 ஆசாரங்களை இந்த ஆந்திர-கர்நாடக ப்ராம்மணர்கள் விஷயத்தில் மாற்றிவிடுவோம். அப்போது இவர்கள் நிச்சசமாக ஊருக்குத் திரும்பிப்போய்க் கலந்து வாழமுடியாது' என்று தீர்மானம் செய்து அப்படியே மாற்றிக்கொடுத்துவிட்டார்.

அவர் ஆசைப்பட்டபடியே அந்த ப்ராம்மணர்கள் அங்கேயே வம்சாவளியாகத் தங்கி அத்யயனம், கர்மாநுஷ்டானம் எல்லாம் சிறப்பாகச் செய்யலானார்கள்.

அவர்களைத்தான் நம்பூதிரிகள் என்று சொல்வது.

மலையாள தேசத்தின் தோற்றுவாயைப் பற்றிக் கூறுவதாகக் 'கேரளோத்பத்தி' என்று புஸ்தகம் இருக்கிறது. சில புராணங்களிலும் இந்த ஸமாசாரம் வருகிறது. அவற்றிலிருந்துதான் கதை சொன்னேன்.

நம்பூதிரிகளில் சோழியர்கள் கொஞ்சம் பேரே மிச்சமிருந்தார்கள். பாக்கியெல்லாம் தெலுங்கு ப்ராம்மணர்களும், கன்னட ப்ராம்மணர்களுந்தான். தெலுங்கில்

Koviloor Digital Library

'இல்லு' என்றால் வீடு. கன்னடத்தில் 'மன' என்றால் வீடு. தமிழில் இல்லம், மனை என்று இரண்டு வார்த்தைகளும் இருக்கின்றன. நம்பூதிரிமார்களில் சிலர் தங்களைக் குறிப்பிட்ட ஒரு 'மனு'வைச் சேர்ந்தவர்களாகவும், சிலர் தாங்கள் குறிப்பிட்டதொரு 'இல்ல'த்தைச் சேர்ந்தவர் களென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆசார்யாளின் குடும்பத்திற்கு 'கைப்பள்ளி மனு' என்று பேர் என்கிறார்கள்.

'இல்லம்' சொல்லிக்கொள்ளும் நம்பூதிரிகள் ஆந்திர தேசத்திலிருந்து வந்தவர்களென்றும், 'மனு' சொல்லிக் கொள்பவர்கள் கர்நாடகத்திலிருந்து வந்தவர்களென்றும் பொதுவாகக் கொள்ளலாமென்றும், ஆதித் தமிழ்ச் சோழியர்களின் வழிவந்தவர்களிலும் கொஞ்சம் பேராவது நம்பூதிரிமார்களில் இருந்து, இந்த இரண்டில் ஏதோ ஒரு பிரிவில் வந்திருப்பார்களென்று நினைக்க இடமிருக்கிறது. ஆசார்யாளின் 'மனு'வும் அப்படித் தமிழ் தேசத்திலிருந்து போனதாகவே இருக்கக்கூடும் என்று நான் பண்ணியுள்ள 'ரிஸர்ச்' அப்புறம் சொல்கிறேன்.

ஒரு கேள்வி வரலாம்: 'கன்னட-தெலுங்கு ப்ராம்மணர் களே நம்பூதிரிகளில் பெரும்பாலார்; அது தவிர ஏதோ அரபிக்கடல் தீவுகளில் ஆதிவாஸிகளின் பாஷைகளைப் பேசி வந்த செம்படவர்கள்தான் மலையாளத்தில் குடியேறியவர் கள்—என்றால் அங்கே உள்ள மலையாள பாஷை எப்படிப் பாதித் தமிழ், பாதி ஸம்ஸ்க்ருதம் கலந்ததாக இருக்கிறது?' என்று கேட்கலாம்.

மலையாள பாஷை ஆயிரம், ஆயிரத்திருநூறு வருஷம் முந்தித் தோன்றியதுதான்; அதற்கு முன்னால் அங்கே தமிழேதான் இருந்தது என்று தெரிந்தவர்களும் 'அதெப்படி, தமிழே அங்கேயிருந்திருக்க முடியும்?' என்று கேட்கலாம்.

சொல்கிறேன்: ப்ராம்மணர்களையும் செம்படவர்களை யும் மட்டும் கொண்டதாக எங்கேயாவது ஒரு ஜன ஸமூஹம் ஜீவிக்கமுடியுமா? தேசத்தைக் கட்டி ஆண்டு பாதுகாக்க ராஜா-ஸைன்யம்; வியவஸாயம், மற்றும் பலவிதமான

Koviloor Digital Library

உடலுழைப்புச் செய்பவர்கள்; வியாபாரம் நடத்துபவர்கள் —ஆகியவர்களில்லாமல் எப்படி ஸமுதாய வாழ்வு ஏற்பட முடியும்? இந்தக் கார்யங்களைச் செய்ய மலையாளத்துக்குப் போய்ச் சேர்ந்தவர்கள் யாரென்றால் தமிழ் ஜனங்கள்தான்.

மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு அந்தப் பக்கம் மலையாள தேசமென்றால் இந்தப் பக்கம் பெரும்பாலும் தமிழ்நாடுதானே? அதோடு அந்தக் காலத்திலேயே தமிழர்கள் உன்னதமான நாகரிகம் பெற்றவர்களாகவும், வீர ஸாஹஸமுள்ளவர்களாகவும், வாணிபம் முதலியவற்றில் திறமை மிக்கவர்களாகவும் இருந்தார்கள். நான் தமிழ் நாட்டு ஸுகஜீவிகள் என்று சொன்னது [சிரித்து] 'பருப்புத் தின்னிப் பார்ப்பானை'த்தான்! மற்றவர்கள் கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளக்கூடிய நல்ல உழைப்பாளிகளாகவும், த்ருடசாலிகளாகவும் இருந்தவர்களே! அதனால் பிராமணரல்லாதாரில் தமிழர்கள்தான் மலையாள நாட்டில் குடியேறியவர்கள். பொருளாதார ரீதியில் நல்ல விலை போவதாகவும், ஏற்றுமதிகள் செய்து நன்றாகக் கொழிக்க வைப்பதாகவும் உள்ள மிளகு, ஏலக்காய், தேக்கு, கொப்பரை முதலியவை யதேஷ்டமாகக் கிடைக்கும் தேசம் மலையாளம். 'அந்நிய பதார்த்தம்' சாப்பிடக்கூடியவர்களுக்கு நீண்ட ஸமுத்ரக் கரையிலும், தடுக்கிவிழுந்தால் வரும் கழிகளிலும் ஸம்ருத்தியாக 'ஜல புஷ்பம்' (மத்ஸ்யம்) கிடைக்கும். இப்படியிருந்தால் உழைப்பாளிகளாகவும், ஸாஹஸ குணமுள்ளவர்களாகவும் உள்ள ஜனங்கள் வந்து குடியேறுவார்கள்தானே? அப்படித்தான் ஏற்பட்டது. நிறையத் தமிழ் மக்கள் கேரளத்தில் குடியேறினார்கள்.

இப்படி எல்லா ஜாதியாரும் குடியேறியபின், மலையாளத்தின் இயற்கை வளத்தினால் ஸுபிக்ஷமான வாழ்க்கை ஏற்பட்டு, அது நாகரிக ஸமுதாயமாக உருவாக ஆரம்பித்தது. வைதிக வழிகளைப் பின்பற்றிய தமிழ் மன்னர்களான சேரர்கள் அந்த ப்ரதேசத்தில் ஆட்சி நடத்தி நன்றாக நாகரிக அபிவ்ருத்தி ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

Koviloor Digital Library

பெரும்பாலான மக்கள் தமிழர்களாயிருந்ததால் தமிழே அங்கேயும் பாஷையாயிற்று. ஆந்த்ர-கர்நாடக நம்பூதிரி களும் பொதுஜனத் தொடர்பினால் தமிழே கற்றுக்கொண்டு பேச ஆரம்பித்துவிட்டார்கள்.

சரித்ரகாலம் என்று சொல்லப்படுவதற்கு முற்பட்டே இதெல்லாம் நடந்திருக்கவேண்டும். அப்போதே பொருளா தார காரணத்திற்காக மற்ற ஜாதியினர் அங்கே போனார் களென்றால் ப்ராம்மணர்களும் தெய்வ ஸம்பந்தமான காரணங்களுக்காகக் கொஞ்சம் கொஞ்சம் போயிருக்கலாம். அதென்ன தெய்வ ஸம்பந்தம் என்றால், அந்த தேசத்திலும் அநேக திவ்ய லீலைகள் நடந்து, அப்படி நடந்த இடங்கள் பெரிய க்ஷேத்ரங்களாக ஆயின. பரசுராமரே இப்படிப் பல க்ஷேத்ரங்களைத் தோற்றுவித்தார். பழைய பூப்பிரதேசம் வேண்டாமென்று தமக்காகப் பரசுராமர் ஸ்ருஷ்டித்துக் கொண்ட இந்தப் புதிய பூப்பிரதேசத்தில் தாமே குடியேற்றியவர்களைத் தவிர வேறு யாரும் பழைய தேசத்தி லிருந்து வரவேண்டாமென்று அவர் தடை செய்திருந்தார். ஆனாலும் கால க்ரமத்தில் அந்தத் தடை எடுபட்டுப்போய், அதாவது, பிற்பாடு பரசுராமர் எல்லோர் கண்ணுக்கும் தென்படாமல் ஏகாந்தமாகப் போய்விட்ட பின், க்ஷேத்ராடனத்துக்காகவும் Mainland-லிருந்து சில ப்ராம்ம ணர்கள் அங்கே போய் அப்படியே 'ஸெட்டில்' ஆகவும் செய் திருக்கலாம்.

சரித்ர காலத்தின் ஆரம்ப கட்டமாக வெள்ளைக்காரர் கள் சொல்வது அசோகருடைய காலத்தை. அந்த அசோகரின் சாஸனங்களிலேயே அவர் யுத்த திக்விஜயமாக இல்லாமல் தர்ம திக்விஜயமாகத் தம்முடைய கொள்கை களைப் பரப்பிய ப்ரதேசங்களில் கேரளமும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. நாகரிக ஸமுதாய வாழ்க்கை அப்போதே அங்கே நிச்சயமாக இருந்ததற்கு இது அத்தாட்சி.

அது தமிழ்ச் சேர ராஜ்யமாகவும், அதன் பாஷை தமிழாகவுமே இருந்தது. சிலப்பதிகாரம் பாடினவரே அந்த

Koviloor Digital Library

தேசத்தவர்தான்! தெய்வத் தமிழ் என்றே சொல்லும் படியான நல்ல தமிழில் திருமுறையும், ப்ரபந்தமும் பாடிய சேரமான் பெருமாள் நாயனரும், குலசேகரப் பெருமாளும் மலையாள ராஜாக்கள்தான்.

ஆகவே நம்முடைய ஆசார்யாளும் தமிழ்தான் பேசியிருப்பார். அப்போது ப்ராம்மணர்களில் படிப்பாளிகள் (எல்லா ப்ராம்மண புருஷர்களுமே அப்படித்தானிருந்திருப்பார்கள். படிக்காத, அத்யயனம் செய்யாத ப்ராம்மணன் இருந்திருக்கவே மாட்டான். அவர்கள்) தங்களுக்குள் ஸம்ஸ்க்ருதத்தில் பேசிக்கொள்வதாகவும் மற்றவர்களிடம் தமிழில் பேசுவதாகவும் இருந்திருக்கும்.

ஆசார்யாள் அவதாரம் செய்து ஸநாதன தர்மப் புனருத்தாரணம் பண்ணினலும், அப்புறம் போகப் போக மறுபடி சீரழிவு ஏற்படத்தான் செய்தது. அந்தப் போக்கில் பரசுராமர் மாற்றிக் கொடுத்த ஆசாரங்களில் சிலதை ஸாதகமாக்கிக்கொண்டு நம்பூதிரிகளில் தலைப் பிள்ளைகளாக இருப்பவர்களைத் தவிர மற்றவர்கள் இதர ஜாதியினரோடு கலந்து வாழுவதற்கு வழி உண்டாக்கிக் கொண்டார்கள். அப்படி உறவு ஏற்பட்டபோது நம்பூதிரிகள் ஸ்பெஷலைஸ் செய்திருந்த ஸம்ஸ்க்ருதத்துக்கும் மற்றவர்களின் தமிழுக்கும் உறவு கெட்டிப்பட்டது. அந்த உறவிலேயே மலையாளம் என்பது தனி பாஷையாகப் பிறந்திருக்கலாம்.

பிராம்மணர் இதரரோடு உறவு ஏற்படுத்திக்கொண்டதில் அசாஸ்த்ரீயமாகப் பல நேர்ந்தாலும், எப்போதும் நல்லதும் கெட்டதும் கலந்தே வருவதில் இதிலும் சில நல்லது ஏற்பட்டது. ப்ராம்மண ஸம்பந்தத்தால் அங்கே ஸகல ஜாதியாருமே நல்ல படிப்பறிவும், குறிப்பாக ஸம்ஸ்க்ருத அபிமானமும் பெற்றவர்களானர்கள். எல்லாருமே சுசி ருசியாக ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் உடுத்திக்கொள்வது, ஆசாரத்தோடு ஆலய தர்சனம் செய்வது ஆகிய நல்ல வழக்கங்களும் ஏற்பட்டன.

Koviloor Digital Library

(ப்ராம்மணரல்லாதார் படிப்பறிவில்லாதவர், சுத்தமில்லாதவர் என்று மட்டம் தட்டுவதாக அர்த்தமில்லை. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள தொழில்களை முன்னிட்டு—குறிப்பாக, பாட்டாளி மக்களாக இருப்பவர்கள்—ரொம்பவும் சுத்தம் பார்க்கமுடியாமலாகி, அதுவே பழகிப் போய் விடுகிறது. அவர்கள் பல வருஷங்கள் படிக்கவும் முடிவதில்லை. ஸமூஹ வாழ்க்கைக்கு அவர்கள் தங்கள் பணிகளால் நிரம்ப உபகாரம் பண்ணுவதால் அவர்களுக்கு சாஸ்திரங்களிலும் சௌச விதிகளை (சுத்த ஆசார விதிகளை) இளக்கியே கொடுத்திருக்கிறது. கட்டாய வித்யாப்யாஸமும் விதிக்கவில்லை. இப்படியிருந்தும் மலையாளத்தில் இந்த அம்சங்களில் அவர்கள் நன்முக முன்னேறியிருக்கிருர்களென்ருல் அதற்கு ப்ராம்மண இன்ஃப்ளுயென்ஸ் காரணமாயிருந்திருக்கலாம் என்றுதான் சொன்னது.)

என்னதான் Mainland-ஒடு தொடர்பு கொண்டிருந்தாலும் இன்றுபோல் போக்குவரவு ஸாதனங்களில்லாத அந்தக் காலத்தில் பெரிய மலைத் தொடருக்கு மறுபக்கம் இருந்த மலையாள தேசம் ஒரளவு தனித்தேதான் இருந்தது. ஆசார்யாள் காலத்தில் இப்படித் தனித்திருந்ததால்தான் அங்கே Mainland ல் ஏற்பட்டிருந்த குழறுபடிகளின் பாதிப்பு அதிகமில்லாமல் அது கூடியவரை வைதிகமாக இருந்து, அவதாரமும் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது. பிறகு மலையாள பாஷை ஏற்பட்ட அப்புறமும்—ஸமீப நூற்ருண்டுகள் வரைகூட—அப்படித்தான் (மலையாள நாடு ஒதுங்கித்தான்) இருந்தது. அதனுல் தங்களுக்கென்று ஒரு பாஷை ஏற்பட ஆரம்பித்ததும் அதில் ஒரு pride-உடன் (பெருமிதத்துடன்) ஸகல ஜனங்களும் அதையே தாய்மொழியாக ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

மலையாளக் கதை இத்தனை சொன்னதால் இன்னம் கொஞ்சமும் சொல்லிவிடுகிறேன்.

மலையாளபாஷை பிறந்த பிற்பாடு தமிழ்நாட்டு ப்ராம்மணர்கள் சில காரணங்களுக்காக அங்கே குடியேறினுர்கள்.

Koviloor Digital Library

ரொம்ப உள்ளே ச்ரமப்பட்டுகொண்டு போகாமல், அந்த எல்லைக்குள் போய்க் கொஞ்சம் தூரத்திலேயே 'ஸெட்டில்' ஆனார்கள். இரண்டு வழிகள் அங்கே போவதற்கு. இரண்டு வழியாகவும் போனார்கள். ஒன்றில் கோயம்புத்தூர் வழியாகப் போய்ப் பாலக்காட்டில் குடியேறினார்கள். இன்னொன்றில் தென்காசி, செங்கோட்டை தாண்டித் திருவனந்தபுரப் பக்கங்களுக்குப் போய்த் தங்கினார்கள். இவர்கள் நம்பூதிரிகள் இல்லை. ஆதியில் குடியேற்றப்பட்ட நம்பூதிரி வம்சத்தினர் நடுவில் தமிழ் பேசியிருந்தாலும் பிறகு மலையாள பாஷைக்காரராகி விட்டார்கள். இப்போது நான் சொன்னவர்கள் மலையாளம் உண்டான பிறகே அங்கே குடியேறி, இன்றைக்கும் தமிழையே தாய் பாஷையாகக் கொண்டிருப்பவர்கள். சூழ்நிலையின் இன்ஃப்ளுயென்ஸால் அவர்களுடைய தமிழ் கொஞ்சம் வித்யாஸமாயிருக்கும். உச்சரிப்பில் மலையாள ப்ராஸம் கலந்திருக்கும்......

Mainland-குப் போக்குவரவுத் தொடர்பில்லாமல் அந்த தேசம் தனி மரபோடு உருவாயிற்று என்னும்போது ஒன்றை மறந்துவிடக் கூடாது. 'தனி மரபு' என்றதால் பாரத ஸமய கலாசாரத்துக்கு வித்யாஸமானது என்று நினைத்துவிடக் கூடாது. 'வேத நெறி' என்ற ஒரே நதியின் ஓட்டத்தில் சைவம், வைஷ்ணவம், சாக்தம் என்று பல துறைகள் இருப்பதுபோல*, பாரத கலாசாரம் என்ற பொதுவான கங்கையில் ஒரு கட்டமாக இருப்பதுதான் மலையாள மரபு, இன்னும் தமிழ் மரபு, வங்காள மரபு, காஷ்மீரி மரபு எல்லாமே. பாரத கலாசாரத்தை வேராகக் கொண்டுதான் வேறு வேறு கிளைகளாக இவை—மலையாள மரபும்தான்—உருவாகியுள்ளன. Mainland-ல் இருந்த ப்ராம்மணர்களைத் தானே ஆதிக் குடிகளாக அங்கே பரசுராமர் அமர்த்தினார்? பாரத தேசத்தின் வேதம், புராணம், கோவில், குளம் ஆகிய

---

* "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க" என்ற சேக்கிழார் வாக்கை நினைவு கூர்ந்து பேசுகிறார்களென்பது தெளிவு.

Koviloor Digital Library

வற்றைத்தானே அங்கேயும் நாட்டினர்? அப்புறம் போனவர்களும் இங்கேயுள்ள தமிழ் ஜனங்கள்தானே? அதனால் பாரத கலாசாரத்தில்தான் அது ஒட்டிக் கொண்டிருந்தது. இன்னும் சொல்லப்போனால், பாக்கி பாரத தேசம் பூராவும் ஸநாதன ஸமயக் கலாசாரத்தைப் பறி கொடுத்துக் கொண்டு, புதிய வழிகளில் இழுபட்டபோதுங்கூட மலையாள தேசம்தான் மலைக்கு மறுபக்கம் அந்தக் கலாசாரத்தைக் காபந்தாகக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. அதனாலேயே ஆசார்யாள் அவதாரமும் அங்கேயே நிகழ்ந்தது.

பிற்காலத்தில் இதற்கு நேரெதிராக நடந்ததையும் சொல்லணும். மலையாளத்துக்குக் கிழக்கே மலைத் தொடரானதால் உள்நாட்டு மாறுதல்களும் புரட்சிகளும் அதை அவ்வளவாக பாதிக்கவில்லையென்றால், அதற்கு மேற்கே என்ன இருக்கிறது? ஸமுத்ரம். அதனால் என்னவாயிற்றென்றால் மேற்கு நாடுகளிலிருந்து இதர மதஸ்தர்கள் ஸமுத்ர மார்க்கமாக வர ஆரம்பித்த காலத்திலிருந்து அவர்கள் நம் தேசத்தில் அடியெடுத்து வைத்தது மலையாளக் கரையில்தான். ஏற்றுமதி வியாபாரத்தில் கொழிக்கும்படியாக அங்கே ஏலக்காய், மிளகு, தேக்கு, சந்தனக் கட்டை எல்லாம் அபரிமிதமாகக் கிடைத்ததால் அவர்கள் அங்கேயே தங்கிவிடுவதும் வழக்கமாயிற்று. யூதர்களிலிருந்து கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள் எல்லோருக்கும் மலையாளம் தாய் வீடாயிற்று. அவர்களுடைய மதங்களும் அதோடுகூட அங்கேயே அதிகமாக ப்ரசாரமாயிற்று. உள்நாட்டு அவைதிக மதங்களின் பாதிப்புக்கு அதிகம் ஆளாகாத ப்ரதேசமே இப்படி வெளிநாட்டு மதங்களுக்கு நிறைய இடம் கொடுப்பதாக ஆயிற்று!

வேடிக்கையாக இன்னொரு விஷயமும் சொல்கிறேன். வெளிநாட்டு மதங்களை மலையாள நாட்டினர் ஏற்றுக் கொண்டாலும், ஹிந்து மதம் என்று வரும்போது அங்கே நம்முடைய ஆசார்யாளுக்குப் பிறகு அவருடைய

Koviloor Digital Library

ஸம்ப்ரதாயம் தவிர மற்ற எதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களில் வைஷ்ணவ மதத்தையோ மத்வ மதத்தையோ பின்பற்றுபவர்கள் கிடையாது. பத்மநாப ஸ்வாமி கோவிலானாலும் ஸரி, குருவாயூரப்பன் கோவிலானாலும் ஸரி அங்கேயெல்லாமும் ஸ்ரீ வைஷ்ணவ பட்டர்கள் பூஜை பண்ணுவதில்லை என்று பார்க்கிறோமல்லவா? ஆசார்யாள் தங்கள் தேசத்தைத் தேடி வந்து அவதாரம் பண்ணினாரென்ற பக்தியபிமானம்!...

ஸமீப காலத்தில் போக்குவரத்து ஸாதனங்கள், இங்கிலீஷ் படிப்பு, ஸயன்ஸ் எல்லாம் வ்ருத்தியாக ஆரம்பித்தபின் ஒதுங்கியிருந்த மலையாள ஜனங்கள் ஒரேயடியாக வெளியே வந்து தேசம் பூராவும் பரவ ஆரம்பித்து விட்டார்கள். அங்கே ஜன ஸங்கியையும் பெருகிக்கொண்டே போனது ஒரு முக்ய காரணம். இப்போது வர வர, நம்முடைய தேசம் பூராவில் மட்டுமில்லாமல் அந்நிய தேசங்களுக்கும் அவர்களே ஏராளமாகப் போகிறார்கள். கௌரவம் பார்க்காத உழைப்பு மனப்பான்மையும் தொழில் ஸாமர்த்யமும் இருப்பதால் எடுபிடி வேலை, டீக் கடை இவற்றுக்கும் வருகிறார்கள். படிப்பும் அறிவும் இருப்பதால் பெரிய பெரிய பதவிகளுக்கும் வருகிறார்கள். ஸர்வஜ்ஞரான ஆசார்யாள் அவதரித்த ப்ரதேசத்தைச் சேர்ந்த அவர்களே அப்போதிலிருந்து இப்போதும் 'லிடரஸி'யில் (படிப்பறிவில்) முதல் ஸ்தானம் வஹித்துவருகிறார்கள்.

புது யுகத்தில், ஒரு பக்கம் பழமையான அத்யயனாதிகளை இன்னமும் காப்பாற்றுபவர்கள் அங்கேயே இருந்தாலும், அங்கேதான் இன்னொரு பக்கம் ரொம்பப் புரட்சிகரமான மாறுதல்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆலய ப்ரவேசத்திலிருந்து கம்யூனிஸ்ட் ராஜ்யம் வரை அநேகம் அங்கேதான் அங்குரார்ப்பணமாயிருக்கிறது.

Koviloor Digital Library

கும்பகோணப் பூர்விகம்?
காஞ்சி ஸ்ரீமடமும் கும்பகோணமும்

ஆசார்யாள் பிறந்த ஊர் காலடியானாலும், ஸ்வாமி தாமே அவராகப் பிறக்கப் போவதாக அவருடைய பிதாவான சிவகுருவுக்கு வரம் தந்தது திருச்சூரில்.

திருச்சூர், சிவகுரு என்பவற்றைப் பற்றி என் ஆராய்ச்சி யைச் சொல்கிறேன். ஆசார்யாள் கதையைவிட மலையாளத் தின் கதைக்கே அது அதிக ஸம்பந்தமுடையதாகையால் இங்கேயே சொல்லிவிடுகிறேன்.

ஒரு நாட்டினர் வேறொரு நாட்டுக்குக் குடி பெயரும் போது தங்களுடைய பழைய நாட்டில் தாங்கள் வாழ்ந்து வந்த ஊர்களின் பெயர்களையே புதிய நாட்டின் ஊர்களுக் கும் வைப்பது ஸஹஜமாயிருக்கிறது. தாய்நாட்டைவிட்டு வந்து விட்டாலுங்கூட மாத்ரு பூமியபிமானம் இப்படிப் பண்ணத் தூண்டுகிறது. இங்கிலீஷ்காரர்கள் அமெரிக்காவில் குடியேறியபின், இம்மாதிரிதான் தங்கள் தாய்நாட்டு ஊர்ப் பெயர்களுக்கே 'ந்யூ, 'ந்யூ' என்று சேர்த்து அமெரிக்காவில் புதிய ஊர்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். 'ந்யூ இங்க் லாண்ட்' என்றே அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணங்கள் ஆறுக்கும் சேர்த்துப் பெயர் உண்டு. இங்க்லாண்டில் யார்க், ஹாம்ப்ஷயர், ஜெர்ஸி என்றெல்லாம் இடங்கள் இருப்பது போலவே அமெரிக்காவில் ந்யூ யார்க், ந்யூ ஹாம்ப்ஷயர், ந்யூ ஜெர்ஸி என்றெல்லாம் பெயர் வைத்தார்கள். இப்படியே கிழக்கே ஆஸ்ட்ரேலியாவிலும் தங்கள் தாய்நாட்டுப் பேர் களை வைத்தார்கள். ந்யூ ஸௌத் வேல்ஸ் என்றே அங்கே ஒரு மாகாணத்துக்குப் பேர்.

இதேபோலத் தமிழ்நாட்டிலிருந்து பல பேர் மலையாளத்துக்குப் போய் 'ஸெட்டில்' ஆனபோது தமிழ் நாட்டு ஊர்ப் பெயர்களை அங்கே வைத்தார்கள். ஆல்வாய், (ஆலவாய்), பழூர் (பழுவூர்), கண்ணனூர், மாத்தூர், மேச்சேரி என்றெல்லாம் மலையாளத்து ஊர்ப் பெயர்கள்

Koviloor Digital Library

இருப்பது அப்படியே]தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களை அங்கே வைத்ததுதான்....

ஆசார்யாள் சரிதத்திலிருந்து பல நூற்றாண்டுகள் தாண்டி வருவோம் :

காஞ்சீபுரத்தில் இருந்துவந்த நம் மடம் பதினெட்டாம் நூற்றாண்டு மத்தியில் அங்கேயிருந்து புறப்படவேண்டி வந்து. முடிவாகக் கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டது. அந்தக் காலத்தில் Carnatic Wars என்று சொல்லப்படும் யுத்தங்களில் காஞ்சிப் பிரதேசத்தில் ஓயாத சண்டையும் முற்றுகையுமாக இருந்தது. ஆர்க்காட்டு நவாப், ஈஸ்ட் இண்டியா கம்பெனி, ப்ரெஞ்சுக்காரர்கள், ஹைதர் அலி என்று எல்லாரும் ஒருத்தருக்கொருத்தர் குஸ்தி போட்டுக் கொண்டிருந்ததில் காஞ்சீபுரத்தில் கோவில்களையே கோட்டையாக உபயோகித்துக்கொண்டு ஆயுதங்கள் வீசுவது, ஊருக்குள் புகுந்து சூறையாடுவது என்றெல்லாம் விபரீதமாக நடந்து வந்தன. அதனால்தான் அப்போது நம் மடத்திலிருந்த ஸ்வாமிகள்* மடத்தை இடம் மாற்றியது.

ராமேச்வரம் வரை யாத்ரை போய்விட்டு அப்புறம் உடையார்பாளையம் என்ற ஸம்ஸ்தானத்திற்குப் போய்த் தங்கினார்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள உடையார்பாளையம் அப்போது தஞ்சாவூர் மஹாராஷ்ட்ர ராஜ்யத்திற்கு உட்பட்ட ஒரு ஜமீன்தாரி மாதிரி இருந்தது. அந்த ஸம்ஸ்தானாதிபதிகள் நம்முடைய மடத்தை ஆச்ரயித்து வந்தவர்கள். அதனால் அப்போதிருந்த ராஜா—அல்லது ஜமீன்தார்—அப்போதிருந்த ஸ்வாமிகளை அங்கே வந்து தங்கும்படி ப்ரார்த்தித்துக்கொண்டதன்பேரில் ஸ்வாமிகளும் அப்படியே பண்ணினார். அது நன்றாகக் காடுகள் சூழ்ந்து தற்காப்பாக

---

* 62-வது பீடாதிபதிகளான ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் (IV).

Koviloor Digital Library

இருந்த இடம். அதனால் வெளிச் சண்டை சச்சரவுகள் அதிகம் பாதிக்காத இடம்.

அந்நிய மதஸ்தர்கள் வந்து இங்கே பரஸ்பரம் குஸ்திப் போட்டுக்கொண்டிருந்த ஸமயத்தில் மடம் பாதுகாப்புக்காக வேற்றிடம் போனதற்குக் குறிப்பாக ஒரு காரணம் உண்டு. அதுதான் ஸ்வர்ண காமாக்ஷி என்பதாகச் சொக்கத் தங்கத்திலேயே ஆன அம்பாளின் விக்ரஹம். காமகோஷ்டம் (காமகோட்டம்) என்னும் காஞ்சி காமாக்ஷி கோவிலில் ஒரு ஸந்நிதியில் அந்த ஸ்வர்ண விக்ரஹம் இருந்து வந்தது. அந்தக் கோவில் நம் மடத்தின் நிர்வாஹத்தில் இருப்பது. ஆகையால் குஸ்தி பிடித்துக்கொண்டிருக்கிற அந்நிய மதஸ்தர்கள் சந்தடிச் சாக்கில் ஸ்வர்ண விக்ரஹத்தை அபஹரித்து விடாமல் பாதுகாப்புப் பண்ணவேண்டிய பொறுப்பு மடத்துக்கு இருந்தது. இப்போது காப்பான இடமாக இருந்த உடையார் பாளைய ராஜா அழைப்பு அனுப்பியவுடன் மடம் அங்கே போய்த் தங்கியதோடு ஸ்வர்ண காமாக்ஷியும் கோவில் ஸ்தானிகர்களால் ஜாக்ரதையாக அங்கே கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டாள். அன்றிலிருந்து காமகோஷ்டத்தில் அந்த ஸந்நிதி காலியாகவே இருந்து வருகிறது.*

ஸ்வர்ண காமாக்ஷி மட்டுமில்லாமல், இதே மாதிரியான கலவர காலங்களில் சிதம்பரம் நடராஜா, திருவாரூர் த்யாகராஜா, காஞ்சி வரதராஜா (உத்ஸவர்), ஸ்ரீரங்கம் ரங்கராஜா (உத்ஸவர்) ஆகியவர்களும் தங்கள் இடத்தை விட்டு ஸஞ்சாரம் பண்ணும்படியாக ஏற்பட்டிருக்கிறது. ராஜாக்கள்! அதிலும் ஸ்வாமியே ராஜாவானவர்கள்! ஆனால் திக் விஜயம், ராஜ பவனி என்றில்லாமல், இந்த மாதிரி சண்டைக்கு பயந்துகொண்டு ஏன் போகும்படி இருந்ததென்றால், நடு நடுவே நம் மதஸ்தர்கள் ஸமயாபிமானம் குன்றிச் சோர்ந்து போயிருந்தபோது அதற்குத் தண்டனை

* ஸ்ரீசரணர்கள் அச் சந்நிதியில் 1944-ல் அம்பிகையின் பாதுகா ப்ரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

யாகவும், மறுபடியும் அவர்களை எழுப்பித் தூண்டி விடுவதற்காகவும்தான்! ஸ்வாமிக்கு சக்தி இல்லாமல் போய்விடவில்லை! நாம் ஆலஸ்யமாய் சக்தி இழந்து இருந்ததற்கு அநுபவிக்க வேண்டுமென்றே இப்படி விளையாடினார். அதோடு அந்த மஹா க்ஷேத்ர மூர்த்திகளுடைய ஸாந்நித்யம் வேறு க்ஷேத்ரங்களிலும் ஏற்படவேண்டும் என்றும் நினைத்திருக்கலாம்.

ஸ்வர்ண காமாக்ஷிக்கு மாத்ரமின்றி, ஊரைவிட்டு ஊர் போன நடராஜா, த்யாகராஜா, ரங்கராஜா, வரதராஜா ஆகிய எல்லோருக்குமே 'டெம்பரரி' வாஸ ஸ்தானமாக இருந்தது உடையார்பாளையம்தான். பாதுகாப்பான இடமாக இருந்ததோடு, நல்ல ஆஸ்திக்ய புத்தி வாய்ந்த ஜமீன்தார்களின் ஆட்சியிலிருந்ததால் இந்தப் பெரிய புண்யத்தைத் தட்டிக்கொண்டது.

'ஸ்வாமி' என்பதற்கு நேர் தமிழ் உடைமைக்காரர், அல்லது உடையார் என்பதுதான். உடையார் பாளையம் தன் பெயருக்கேற்ப அநேக உடையார்களைத் தன்னிடம் உடையதாகப் பெற்றது!

அப்புறம் ஸமாதான காலம் வந்தபோது அந்தந்த மூர்த்தி அதனதன் ஊருக்குத் திரும்பிப் போயிற்று. காமாக்ஷி மட்டும் தஞ்சாவூருக்குப் போய் அங்கேயே ஸ்திரவாஸம் கொண்டுவிட்டாள். ஏனென்று அப்புறம் சொல்கிறேன்.

உடையார்பாளையத்தில் சிவன் கோவிலும் பெருமாள் கோவிலும் இருக்கின்றன. அங்கேயுள்ள சிவன் கோவிலில் இன்றைக்கும் 'ஸபாபதி மண்டபம்', 'த்யாகராஜ மண்டபம்', 'காமாக்ஷி மண்டபம்' என்று அந்த மூன்று மூர்த்திகளும் தாற்காலிக வாஸம் செய்த ஸந்நிதிகள் இருக்கின்றன. அதேபோல அங்கேயுள்ள பெருமாள் கோவிலில் ரங்கராஜ, வரதராஜ விக்ரஹங்கள் இருந்ததற்கும் சான்று இருக்கிறது. இந்த விஷயம் இருக்கட்டும்.

Koviloor Digital Library

தஞ்சாவூரிலிருந்துகொண்டு அப்போது ஆட்சி செலுத்திவந்த ப்ரதாபஸிம்ஹ மஹாராஜா, தன்னுடைய ராஜ்யத்தில் சேர்ந்ததான உடையார் பாளையத்தில் இருந்து வரும் ஸ்வாமிகளும் மடமும் ராஜதானியான தஞ்சாவூருக்கே வந்துவிட்டால் நன்றாயிருக்குமே என்று நினைத்தார். அப்படியே ஸ்வாமிகளுக்கு ப்ரார்த்தனை செய்துகொண்டு அழைப்பு அனுப்பினார். ஸ்வாமிகளும் தஞ்சாவூருக்குப் போய்க் கொஞ்சகாலம் தங்கினார். ஸ்வர்ண காமாக்ஷியும் கூடப் போனாள்.

அப்புறம் அவருக்கு, 'ஸப்த நதி*களில் த்ராவிட தேசத்தில் இருக்கும் ஒன்றே ஒன்றான காவேரி இந்தத் தஞ்சாவூர் மண்டலத்திலேயே ஓடும்போதிலும் நம்முடைய மடத்தை அதன் தீரத்தில் அமைத்துக்கொள்ளாமல் தஞ்சாவூரில் ஏன் அமைத்துக் கொள்ளணும்?' என்று தோன்றிற்று. அதனால் காவேரிக் கரையிலுள்ள கும்பகோணத்துக்கு வாஸத்தை மாற்றிக் கொள்ள நினைத்தார். ராஜாவும் ஸம்மதித்து மஹாராஷ்ட்ர ப்ராம்மணரான மந்த்ரி டபீர் பந்த் என்பவரிடம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யச்சொல்லி உத்தரவிட்டார். அதன்படி டபீர் பந்த் கும்பகோணத்தில் அமைத்துக்கொடுத்த மடமே அதற்கப்புறம் காஞ்சி பீடத்தின் 'ஹெட் ஆஃபீஸா'கி விட்டது! மடத்தைச் சுற்றி டபீர் பந்த் தம் பெயரிலேயே அக்ரஹாரம் ஏற்படுத்திக்கொடுத்து வித்வான்களான ஸத் ப்ராம்மணர்கள் சூழ்ந்திருக்கும்படியாக உபகாரம் செய்தார்,

ஆசை ஆசையாகக் கூப்பிட்டு வைத்து உபசாரம் பண்ணிய ராஜாவுக்கும் தஞ்சாவூர் ஜனங்களுக்கும் ஸந்தோஷமாக இருக்கட்டுமென்று ஸ்வாமிகள் ஒன்று பண்ணினார். என்னவென்றால் ஸ்வர்ண காமாக்ஷி தஞ்சாவூரி

---

* கங்கை, யமுனை, ஸரஸ்வதி, ஸிந்து, நர்மதை, கோதாவரி, காவேரி என்ற ஏழு ஆறுகள்.

Koviloor Digital Library

லேயே நித்ய ப்ரதிஷ்டையாயிருக்கட்டுமென்று ராஜாவிடம் சொன்னார். ஸ்ரீமடம் மாத்திரமே கும்பகோணத்திற்கு இடம் மாற்றிறு. ராஜா ஸந்தோஷமாக மேல வீதியில் கோவில் கட்டி அம்பாளுக்கு அதை நித்யவாஸமாக்கினார். "பங்காரு காமாக்ஷி" என்று இப்போதும் தஞ்சாவூரில் விளங்கி வருபவள் இப்படியாகக் காஞ்சீபுரத்திலிருந்து உடையார்பாளையம் வழியாக அங்கே வந்து சேர்ந்த ஸ்வர்ண காமாக்ஷிதான். 'பங்காரு' என்றால் தெலுங்கில் ஸ்வர்ணம் என்று அர்த்தம். ச்யாமா சாஸ்த்ரிகள் ஒரே தெலுங்குப் பாட்டுக்களாகப் பாடியது இவள் மேல்தான். அவள் பேரிலும் 'பங்காரு' என்ற தெலுங்கு வார்த்தையே சேர்ந்துவிட்டது!

அவள் ஸமாசாரம், காஞ்சி மடம் கும்பகோணத்திற்கு வந்து சேர்ந்த ஸமாசாரம் எல்லாம் இருக்கட்டும். திருச்சூரைப் பற்றி அல்லவா பார்த்துக்கொண்டிருந்தோம்? அதற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்?......

காவேரி தீரத்துக்கு மடத்தை மாற்றவேண்டி வந்த போது அப்போதிருந்த ஸ்வாமிகள் குறிப்பாக கும்பகோணத்தை ஏன் தேர்ந்தெடுத்தாரென்று நான் யோசித்துப் பார்த்தேன். தஞ்சாவூருக்கு இன்னம் ரொம்பக் கிட்டேயே 'பஞ்சநதம்' என்பதாக நாலு கிளை நதிகளோடு காவேரி ப்ரமாதமாக ஓடிக்கொண்டிருக்கிறாள். அதுதான் திருவையாறு: திரு ஐ ஆறு-ஐந்து ஆறுகள்; அதுதான் 'பஞ்ச நதம்'. பூலோக கைலாஸம் என்று சொல்லப்படும் மஹா க்ஷேத்ரம் அது. இன்னம் அநேக மஹாக்ஷேத்ரங்களும் காவேரிக் கரையில் இருக்கின்றன. காவேரி துலா ஸ்நான விசேஷத்திற்கென்றே ஏற்பட்டதாக மாயவரம் இருக்கிறது. இப்படிப் பல இருக்கும்போது கும்பகோணத்தை ஸ்பெஷலாக ஸெலக்ட் பண்ணுவானேனென்று யோசித்துப் பார்த்தேன். அப்போது கும்பகோண மஹாக்ஷேத்ரத்தின் மாஹாத்மியங்கள் ஒன்றுக்குமேல் ஒன்றாக அலைமோதித்

Koviloor Digital Library

கொண்டு நினைவு வந்தன*. முக்யமாக, இப்படி யோசித்துக் கொண்டே போகும்போது, 'அட! நம்முடைய ஆசார்யாளின் அவதாரத்திலேயே கும்பகோண ஸம்பந்தம் இருக்கிறது போலிருக்கிறதே! ஆதிநாளில் அவருடைய பூர்விகர்களுக்கே கும்பகோண ஸம்பந்தமுண்டு என்று தோன்றுகிறதே!' என்று ஆச்சர்யப்படும்படியாகச் சில link-கள் (இணைப்புத் துண்டுகள்) அகப்பட்டன. அதைத்தான் சொல்ல வந்தேன்.

திருச்சூர் என்பதை நம்பூதிரிகள் 'சிவபுரம்' என்று சொல்கிறார்கள். தமிழில் சொன்னால்—தமிழ்தானே மலையாளத்திலும் ஆதிபாஷை? அதனால் அப்படிச் சொன்னால் —'சிவப்பேரூர்'. புண்யக்ஷேத்ரங்களுக்கு ஆரம்பத்தில் 'திரு' சேரும். மெட்ராஸிலேயே அல்லிக்கேணி என்பதைத் திருவல்லிக்கேணி என்றும், ஒற்றியூரைத் திருவொற்றியூர் என்றும் சொல்கிறோமல்லவா? அப்படி சிவப்பேரூருக்குத் 'திரு' போட்டுச் சொன்னால் 'திருச்சிவப்பேரூர்'. 'திருச்சிவப் பேரூர்' என்பது மருவித்தான் 'திருச்சூர்' என்றாகியிருக்கிறது!

திருச்சூருக்கு சிவபுரம் என்று பேர் சொன்னேனல்லவா? சிவபுரம் என்று தமிழ் நாட்டிலும் ஊர் இருக்கிறது. பாடல் பெற்ற ஸ்தலம். அப்பர், ஸம்பந்தர் இருவருடைய தேவாரங்களும் அவ்வூர் ஸ்வாமிக்கு இருக்கிறது. அது கும்பகோணத்துக்கு மூன்று மைலில் தென்கிழக்கே இருப்பது.

கும்பகோணம் விஷயமாகச் சொன்னதற்கு இங்கேதான் காரணம் வருகிறது.

ஒரு மஹாக்ஷேத்ரமிருந்தால் அதன் ஸாந்நித்யம் அதைச் சுற்றி ஐந்து க்ரோச 'ரேடிய'ஸுக்குப் பரவியிருக்கும். ஒரு க்ரோசம் என்பது ஸுமார் இரண்டு, இரண்டே கால் மைல். அதாவது ஒரு மஹாக்ஷேத்ரத்தின் தெய்விக சக்தி, அதைச் சுற்றிப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரத்துக்குட்பட்ட வட்டம் முழுவதும் பரவயிருக்கும். பஞ்ச க்ரோச எல்லை

---

* கும்பகோணத்தின் சிறப்புக்கள் குறித்த ஸ்ரீசரணர்களின் விரிவான உரை நம் நூற் பகுதிகளிலொன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

என்று அதைச் சொல்வார்கள். சிவபுரம் அப்படிக் கும்பகோணத்தின் பஞ்ச க்ரோச எல்லைக்குள் இருப்பது.

பெரிய நகரங்களை அவற்றை யொட்டியிருக்கும் சின்ன ஊர்களோடு சேர்த்து இன்னம் பெரிய நகரமாக Greater Bombay, Greater Madras என்றெல்லாம் சொல்கிற வழக்கமிருக்கிறதல்லவா? பஞ்ச க்ரோச எல்லையை அப்படி வைத்துக்கொண்டால் சிவபுரம் Greater Kumbhakona-த்துக்குள் வந்துவிடும்!

தமிழ்தேசத்தில் கும்பகோணப் பஞ்சக்ரோச எல்லைக்குள் ஒரு சிவபுரம் இருக்கிறது. மலையாளத்தில் காலடிக்கு அருகே ஒரு சிவபுரம் (திருச்சூர்) இருக்கிறது. தமிழ்தேசத்திலிருந்து மலையாளத்துக்குப் போய்க் குடியேறிவர்கள் தங்களுடைய பூர்விக ஊர்களின் பெயர்களையே அங்கே வைத்தார்கள் என்பதற்கும் நிறையச் சான்று இருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது,'இரண்டும் இரண்டும் நாலு' என்கிற மாதிரி என்ன ஊஹிக்கமுடிகிறது? கும்பகோணச் சிவபுரவாஸிகள் தான் ஆதியில் மலையாளத்துக்குப்போய் அங்கே தாங்கள் 'ஸெட்டில்' ஆன ஊருக்கும் அந்தப் பெயரையே ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் வைத்து, அந்த ஸம்ஸ்க்ருதப் பெயர் அதே ரூபத்திலேயும், தமிழ்ப் பெயர் 'திருச்சூர்' என்று மருவியும் இருக்கவேண்டுமென்று தோன்றுகிறதல்லவா?

அந்தத் திருச்சூரில் போய் பஜனம் இருந்துதான் ஆசார்யாளின் தாய் தந்தையர் ஈச்வரனிடமிருந்து வரம் பெற்று, ஈச்வரனையே அவதார புத்ரராகப் பெற்றது!

கும்பகோணத்துக்கு ஆசார்ய ஸம்பந்தம் இதோடு முடிந்துவிடவில்லை. இன்னமும் 'கிட்ட உறவு' சொல்கிறேன்

ஆசார்யாளுடைய தகப்பனாரின் பெயர் சிவகுரு என்பது. ரொம்பவும் பொருத்தமான பெயர். 'குரு' என்றால் நேர் அர்த்தம் 'பெரியவர்' என்பது. அதனால் உபதேசம் செய்பவரை மட்டும் குரு என்று சொல்லாமல் தகப்பனாரையும் குரு என்று சொல்வதே வழக்கம். ஆகவே சிவ

Koviloor Digital Library

அவதாரத்துக்குத் தகப்பனாராக இருந்தவருக்கு சிவகுரு என்ற பெயர் ரொம்பவும் பொருத்தந்தானே?

ஆசார்யாளுடைய அம்மாவின் பெயரும் இப்படியே தான்! ஆர்யாம்பா என்பது அந்த அம்மாளின் பெயர். எல்லாவற்றிலும் ச்ரேஷ்டராக இருந்ததால் நம் ஆசார்யாள் 'ஆர்யர்'. அவருக்கு 'அம்பா' என்றால் 'அம்மா'. அப்படியிருந்தவள் ஆர்யாம்பா.

சிவகுரு ஸமாசாரத்துக்கு வருகிறேன். இந்தப் பெயர் நாம் ரொம்பக் கேள்விப்படுவதேயில்லை. தென்னாட்டில் இல்லாத அநேகப் பெயர்கள் வடநாட்டில் வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் வடநாட்டிலும்கூட 'சிவகுரு'ப் பேர்க்காரர்கள் இல்லை. இந்தியாவில் எங்குமே அந்தப் பெயர் வைக்கப்படுவதாகக் காணோம். ரொம்பப் பேர், 'சிவனாகிய ஆதிகுரு, அல்லது சிவனுக்கும் உபதேசம் செய்த குமாரஸ்வாமி—இவர்கள்தான் சிவகுரு. மநுஷ்யர்களில் சிவகுரு என்றால் அது ஆசார்யாளின் அப்பா ஒருத்தர்தான்' என்று கூட நினைத்துக்கொண்டிருப்பார்கள். அந்த அளவுக்கு அபூர்வமாகத்தான் 'சிவகுரு' என்று பேர் இருக்கிறது. ஆனாலும் தமிழ் நாட்டில் ஒரு ஊரைச் சுற்றி மட்டும் இந்தப் பெயர் சற்று அதிகம் அடிபடுகிறது. சிவகுருநாதன் செட்டியார், சிவகுருநாத உடையார், சிவகுரு பிள்ளைவாள்—என்றெல்லாம் அங்கே காதில் படுகிறது. அது எந்த ஊர் என்றால்—அதே கும்பகோணம்தான்! கும்பகோண வட்டாரத்தில் மாத்ரமே சிவகுருப் பேர் கொண்டவர்கள் இருக்கிறார்கள். ஏன் அப்படி?

ஏனப்படியென்றால் கும்பகோணத்துக்குக் கிட்டே பஞ்சக்ரோச எல்லைக்குள் உள்ள அந்த சிவபுரத்தில் கோவில் கொண்டுள்ள ஈச்வரனுக்கு சிவகுருநாதஸ்வாமி என்பதே பெயர்! முருகன் சிவனுக்கு குருவாகி உபதேசித்த ஸ்வாமி மலையும் கும்பகோணத்துப் பஞ்ச க்ரோசத்துக்குள்ளேதான் வந்துவிடுகிறது! அங்கே பிள்ளைக்கு அந்த 'டைட்டிலை'க் கொடுத்துவிட்டோமே என்று இங்கே அப்பாவே 'சிவகுரு'ப்

Koviloor Digital Library

பேர் வைத்துக்கொண்டிருக்கிறார்! இவர் சிவனாகிய குரு; ஸ்வாமிநாத ஸ்வாமி சிவனுக்கு குருவாகிய அவருடைய பிள்ளை; மலையாள ப்ராம்மணரான சிவகுருவோ சிவ அவதாரத்தைப் பிள்ளையாகக் கொண்ட அப்பா-சிவகுரு! ஒரே பெயரில் மூன்று தினுஸு!

மலையாள ப்ராம்மணருக்குக் கும்பகோணச் சிவபுரத்து ஸ்வாமியின் பேர் இருக்கிறது; அவர் பிள்ளை வரம்வேண்டித் தவமிருந்தது மலையாளச் சிவபுரமான திருச்சூர்—என்பதிலிருந்து என்ன நிச்சயப்படுகிறது?

ஆதியில் கும்பகோணச் சிவபுரத்திலிருந்து பரசுராமர் அழைத்துக்கொண்டு போன சோழிய ப்ராம்மணர்கள் மலையாளத்தில் குடியேறின ஊர்தான் திருச்சூர் என்றும் அப்படிப்போன குடும்பம் ஒன்றின் வம்சத்தில் வந்தவர் தான் சிவகுரு என்றும் தீர்மானிக்கத் தோன்றுகிறதல்லவா?

திருச்சூரைச் சுற்றி அந்த வம்சாவளி பரவியபோது சிவகுருவின் தகப்பனாரான வித்யாதிராஜரோ அவருக்கும் முந்தி ஒருவரோ காலடியில் 'ஸெட்டி'லாகி இருக்க வேண்டும். ஆனாலும் தங்கள் ஆதி ஊரான சிவபுரம், பிறகு மலையாளத்தில் ஸொந்த ஊராக ஆன திருச்சூர் ஆகிய இரண்டையும் அக்குடியினர் மறக்காமலே இருந்திருக்க வேண்டும். அதனால்தான் வித்யாதிராஜர் புத்ரனுக்கு சிவபுரத்து ஸ்வாமியின் பெயரான சிவகுரு என்பதை வைத்திருக்கிறார். அப்புறம் அந்த சிவகுரு புத்ரனுக்காகத் தபஸ்—பஜனம்—இருக்கவேண்டுமென்று நினைத்தபோது திருச்சூருக்கே போயிருக்கிறார்.

ஆக ஆசார்யாளின் ஆதி பூர்விக மூதாதைகளே கும்பகோணம் வட்டாரத்துக்காரர்கள்தான் என்று ஊஹிக்க முடிகிறது.

இதைவிட அந்த ஊருக்கு (கும்பகோணத்திற்கு) என்ன பெருமை இருக்க முடியும்? அங்கே ஸ்ருஷ்டிக்கான அம்ருத கும்பம் வந்து தங்கினதைவிட, ஸ்ருஷ்டியிலிருந்து விடுபட்டு

Koviloor Digital Library

அமரமான மோக்ஷத்தை அடைவிக்கும் அத்வைத அம்ருத கும்பத்தை லோகமுள்ளளவும் ஜீவர்களுக்கு வற்ருமல் சுரக்கும்படியாக ஸ்தாபித்து வைத்துவிட்ட ஆசார்யாள் அந்த க்ஷேத்ரவாஸிகளின் வம்சத்தைத்தான் தேர்ந்தெடுத்து அவதாரம் பண்ணிஞரென்பதுதான் அதன் மஹா பெருமை.

காஞ்சீபுரத்தில் இருந்த ஆசார்யாளின் ஸ்ரீமடத்துக்கு இன்னொரு 'ஸெகண்ட் காபிடல்' அமைக்க நேர்ந்தபோது கும்பகோணமே அந்த ப்ரைஸைத் தட்டிக்கொண்டு போன தற்கு இதுவும் ஒரு முக்யமான காரணம் என்று தோன்றிற்று. ஆசார்யாளோடு அலாதியான ஆதி ஸம்பந்தம் அந்த ஊருக்கு இருப்பதான காரணம்—ராமருக்கு ஸூர்ய வம்சம் என்பதுபோல ஆசார்யாளுக்குச் சொல்வதாஞல் அந்த வம்சப் பூர்விகர்களுக்கு எது ஜன்மக்ஷேத்ரமோ அது கும்பகோண வட்டம் என்பது.

ஆசார்யாளுடைய ஜீவித முடிவுடன் முடிபோட்டுக் கொண்ட ஊர் காஞ்சி; அவருடைய ஜீவித ஆரம்பத்துடன் முடிபோட்டுக் கொண்ட ஊர் கும்பகோணம்! எப்படி யென்ருல், ஆசார்யாள் ஸித்தியடைந்த க்ஷேத்ரம் காஞ்சி. அவர் அவதார ஜன்மா எடுப்பதற்காக எந்த ஊரில் தபஸிருந்து வரம் பெறப்பட்டதோ அந்த ஊரின் மூலமான ஊரை அங்கமாகக்கொண்டது கும்பகோணம். அவரைப் பிறப்பிக்க நிமித்த மாத்ரமாக இருந்தவர் யாரோ அவருடைய பெயரைக் கொடுத்ததும் கும்பகோணம் வட்டாரம்தான். ஆசார்யாளின் ஆதி மூதாதைகளின் ஜன்ம ஸ்தலமாக இருந்திருக்கக் கூடியது அந்த வட்டம்தான்.

ஆர்யாம்பா : காஞ்சி காமாக்ஷி
ஆர்யன் : ஐயப்பன்

அப்பா பெயர் கும்பகோண ஸம்பந்தமுள்ளதென்ருல் அம்மா பெயர் காஞ்சி ஸம்பந்தமுள்ளதென்று ஒரு விதத்தில்

Koviloor Digital Library

சொல்லலாம். 'சிவகுரு' மாதிரி 'ஆர்யாம்பா'வும் அபூர்வ மான பேர்தான்.

மலையாளத்தில் ஆரியங்காவு சபரிமலை வழியிலிருக்கிறது. ஆர்யனுடைய காடு என்று அர்த்தம். ஆர்யன் என்பது சபரிமலை சாஸ்தாவைத்தான். 'ஆர்யன்' தான் தமிழில் 'ஐயன்' ஆயிற்று. அதை மரியாதையாகப் பன்மையில் சொன்னால் 'ஐயர்' அல்லது 'ஐயனார்'. ஐயனார், ஐயனாரப்பன் என்பதே தமிழ்நாட்டில் சாஸ்தாவின் பெயர். மலையாளத்தில் 'ஐயப்பன்' என்பதும் அதே வார்த்தைதான். த்ராவிடர்களின் க்ராம தேவதை என்று இக்கால ஆராய்ச்சிக்காரர்களால் சொல்லப்படுபவர்தான் 'ஆர்ய'ராகவும், 'ஐய'ராகவும் இருக்கிறார்! இந்த இன பேத ஆராய்ச்சியெல்லாம் எவ்வளவு தப்பான அடிப்படையில் உண்டானது என்பதற்கு இது மாதிரிப் பல சான்றுகள் இருக்கின்றன. அது இருக்கட்டும்.

ஆர்யா என்பது அம்பாளின்—பரமேச்வர பத்னியாக இருக்கப்பட்ட பராசக்தியின்—பெயர். ''உமா காத்யாயநீ கௌரீ'' என்று ஆரம்பித்து அமரத்தில் அம்பாள் நாமங்களைச் சொல்லிக்கொண்டு போகும்போது ''ஆர்யா தாக்ஷாயணீ சைவ கிரிஜா'' என்று வருகிறது. குறிப்பாக த்ரிபுரஸுந்தரி என்கிற ரூபத்தில் தநுர்—பாண—பாச—அங்குசங்களுடன் செக்கச் செவேலென்று உள்ள அம்பாளையே 'ஆர்யா' என்று சொல்வதாகத் தெரிகிறது. அந்த ரூப லக்ஷணங்களோடேயே இருப்பவள்தான் காஞ்சி காமாக்ஷி. ''காமாக்ஷி மஹா த்ரிபுரஸுந்தரி'' என்றே அவளைச் சொல்வது. லலிதாம்பிகை என்பதும் இந்த ரூபத்தைத்தான்.

காஞ்சி காமகோஷ்ட பூஜா பத்ததியை அநுக்ரஹித்தவர் துர்வாஸர். அவர் அவளைப் பற்றி இருநூறு ச்லோகமுள்ள ஒரு ஸ்துதி செய்திருக்கிறார். அதற்கு 'ஆர்யா த்விசதி' என்றே பேர்*. (த்வி - சதி என்றால் இரு-நூறு.) காமாக்ஷி

* லலிதாம்பிகை குறித்த துதிகளில் நன்மணியாக விளங்குவது என்பொருள்பட இதனை 'லலிதா ஸ்தவ ரத்னம்' என்றும் சொல்வர்.

Koviloor Digital Library

யைக் குறித்த மிகவும் உத்தமமான இன்னொரு ஸ்துதி உண்டு. அது 'பஞ்சசதி', அதாவது 500 ச்லோகம் கொண்டது, மூகர் என்பவர் செய்தது. அதனால் 'மூக பஞ்சசதி' எனப் படுவது. அதிலும் முதல் நூறு ச்லோகங்களுக்கு 'ஆர்யா சதகம்' என்றே தலைப்புக் கொடுத்திருக்கிறது.

ஆகையால் காஞ்சி காமாக்ஷிக்கு விசேஷமாக உள்ள பெயரே ஆசார்யாளின் தாயாருக்கு வைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அம்பாளே அம்மாவாக வந்து ஆர்யாம்பா என்று பெயர் வைத்துக்கொண்ட மாதிரி த்வனிக்கிறது!

சிவனுக்கு குரு (அப்பா) சிவகுரு என்பதுபோல ஆர்யரான ஆசார்யாளுக்கு அம்பா (அம்மா) ஆர்யாம்பா என்றும் பொருத்தம் பார்த்தோம்.

இரண்டு பெரிய வம்சங்களில் வந்த தம்பதி.

அவதார பூமிக்கான யோக்யதாம்சம்

அந்த வம்சங்களில் வந்த நம்பூதிரிகள் மலையாள தேசத்தில் வைதிக அநுஷ்டானங்களைப் புஷ்களமாக (நிறைவாக)ப் பண்ணிக்கொண்டு ஸதாசார ஸம்பன்னர்களாக வாழ்ந்து வந்தார்கள். அந்த வம்சத்துக்காரர்கள் மட்டுமில்லை; நம்பூதிரி ஸமூஹம் முழுதுமே அப்படி இருந்து வந்தது. மலைக்கு மறுபக்கம் நடக்கும் வ்யவஹாரங்களில் சிக்கிக்கொண்டு குழப்பம் அடையாமல் அவர்கள் ஒதுக்குப் புறமாக இருந்த தங்கள் தேசத்தில் நிச்சிந்தையாகப் பழைய வழிகளிலேயே போய்க்கொண்டிருந்தார்கள்.

அப்போதென்ன, 'சாஸ்த்ரமும் வேண்டாம், ஸம்ப்ரதாயமும் வேண்டாம்' என்று விட்டுவிட்டு, எல்லாம் கிரிசை கெட்டுக்கிடக்கிற தற்காலத்திலுங்கூட* எங்கே

---

* இப்பகுதி 1959 மார்ச்சில் ஸ்ரீசரணர்கள் ஆற்றிய ஓர் உரையைச் சேர்ந்தது.

Koviloor Digital Library

யாவது கொஞ்சம் விதிவத்தாக அத்யயனம் நடந்து வைதிகஸ்ரீ இருந்துகொண்டிருக்கிறதென்றால் அது மலையாள தேசந்தான் என்றுதானே பார்க்கிறோம்? அங்கேதான் தற்போதும் அநேக நம்பூதிரி க்ருஹங்களில் கர்ப்பத்தைக் கூட்டி எட்டு வயஸில் பசங்களுக்கு உபநயனம் செய்து, அப்புறம் அஞ்சு ஆறு வருஷமாவது அவரவருக்கான (வேத) சாகையில் அத்யயனம் பண்ணுவதற்கு விடுகிறார்கள். இந்த (அத்யயன) காலத்தில் சாஸ்த்ரத்தில் சொல்லியுள்ளபடி ப்ரஹ்மசாரிப் பசங்கள் ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு, தண்டம் வைத்துக்கொண்டு, மான்தோலில் படுத்துக்கொண்டு நியமமாக இருக்கிறார்கள். முதல் மந்த்ரியாயுள்ள கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சங்கரன் நம்பூதிரிபாடு கூட இப்படி சாஸ்த்ரோக்தமாக அத்யயனம் பண்ணியவர்தான்! [சிரித்து] கம்யூனிஸம் மாத்ரமென்ன? அதுவும் 'அபேதவாதம்' என்னும் ஸோஷலிஸத்தின் கெடுபிடி ரூபந்தான். 'அத்வைதம்' என்றாலும் 'அபேதம்' என்றாலும் ஒன்றுதான்! இவர் பேரும் ஆசார்யாள் பேராகவே இருக்கிறது! அதிலுங்கூட அத்வைதம்!

பிற்பாடு இங்கிலீஷ் படிப்புக்குப் போகிறவர்களும்கூட ஆரம்பத்தில் சில வருஷங்கள் அத்யயனம் பண்ணாமலிருப்ப தில்லை என்று ஸமீப காலம்வரை நம்பூதிரிமார்களிடை யில்தான் நடந்து வந்திருக்கிறது.

இந்த இருபதாம் நூற்றாண்டின் புது நாகரிகக் கூத்தாட்டத்திலும்கூட இப்படி மலையாளத்தில் ஓரளவு வேதாத்யயனம் இருக்கிறதென்றால் இரண்டாயிரத்தைநூறு வருஷங்களுக்கு முந்தி எப்படி இருந்திருக்கும்?

அதனால்தான் அவதார பூமியாகப் பரமேச்வரன் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது. சாஸ்த்ர வழியை லோகத் துக்குக் காட்டுவதற்காக அவர் அத்யயனம், குருகுலவாஸம் செய்யணுமென்றால் அவை உள்ள இடத்தில் பிறந்து வளர்ந்தால்தானே முடியும்?

Koviloor Digital Library

பெற்றோரான புண்யசாலிகள்

மலையாளத்தில் மலபார் என்று சொல்லப்பட்ட பகுதியில் ஆல்வாய் ரயில்வே ஸ்டேஷனுக்குக் கிட்டே இருப்பது காலடி க்ராமம். திருச்சூருக்குத் தென் கிழக்கில் முப்பது மைல்.

அங்கே ஓடுகிற நதிக்கும் ஆல்வாய் என்றே பெயர். பெரியாறு என்பதும் அதுதான். ஸம்ஸ்க்ருதத்தில் பூர்ணா நதி என்றும் சூர்ணா நதி என்பதும் இரண்டு விதமாகச் சொல்வார்கள்.

அந்த க்ராமத்தில் நல்ல ஆசாரம், படிப்பு, செல்வ வசதி எல்லாம் வாய்ந்த ப்ராம்மணக் குடும்பத்தில் பிறந்தவர் சிவகுரு. வித்யாதிராஜா என்பவருடைய ஏக புத்ரர் அவர். பேருக்கு ஏற்ற மாதிரி வித்யாதிராஜர் எல்லா சாஸ்த்ரங்களும் அறிந்தவராயிருந்தார். சிவாவதாரத்தின் அப்பாப் பேர் 'சிவகுரு' என்று பொருத்தமாக அமைந்ததுபோலவே, 'ஸர்வஜ்ஞ' பீடம் ஏறப்போகிறவரின் தாத்தாப் பேர் 'வித்யாதிராஜர்' என்று இருக்கிறது! வித்யை, அநுஷ்டானம் ஆகியவற்றோடு ஸொத்து ஸ்வதந்திரங்களும் நிறையப் பெற்றிருந்த குடும்பம் அது.

பொதுவாகவே மலையாளத்தில் எவருக்கும் ஸுபிக்ஷத்திற்குக் குறைச்சலில்லை. அங்கே ஒவ்வொரு வீடும் ஒரு பெரிய தோப்பு. 'காவு' என்று சொல்வார்கள். சபரிமலை யாத்திரையினால் இப்போது 'ஆரியங்காவு' என்ற பேர் அடிக்கடி காதில் படுகிறது. இப்படி அநேகக் காவுகள். திருவானைக்கா, திருக்கோடிகா என்றெல்லாம் தமிழில் 'கா' என்று முடிப்பதுதான் மலையாளக் காவு. இப்படி ஒவ்வொரு வீடும் பெரிய பெரிய மரங்கள் கொண்ட காவுக்குள்ளேயே இருக்கும். அதன் எல்லையை 'அத்ருதி' என்பார்கள். ஒரு அத்ருதிக்குள்ளேயே அந்த வீட்டுக்கான ஸகல வஸ்துக்களும் விளைந்துவிடும். வெளியே போகவே வேண்டாம். ஒரு வேடிக்கை என்னவென்றால் மூலாதார

Koviloor Digital Library

மான, staple food என்கிற, அரிசி வீட்டுத் தோப்பில் விளைவித்துக்கொள்வதில்லை. ஆனாலும் வீட்டிலே விளைகிற மிளகை 'எக்ஸ்சேஞ்ஜ்' (பண்டமாற்று) பண்ணியே அரிசி ஸுலபமாகப் பெற்றுவிடலாம். மற்றபடி அத்ருதிக் குள்ளேயே வாழை, தென்னை, பலா முதலான மரங்கள், பூசணி, காராகருணை, மரத்தின் மேலேயே படரவிட்ட மிளகுக் கொடி, எல்லாம் இருக்கும். நாள்படக் கெட்டுப் போகாமல் நேந்திரங்காயையும் கருணைக் கிழங்கையும் வறுத்து, பூசணி வடாம் பண்ணி உரி கட்டிப்போட்டு வைத்து விட்டார்களென்றால், மூன்று நாலு மாஸம் விடாமல் மழை பெய்தாலும் சாப்பாட்டு வஸ்துக்களுக்காக வெளியில் போகவேண்டியதில்லை. ஸௌக்யமாக ஆத்தோடு 'மானேஜ்' செய்துகொண்டு விடுவார்கள்.

அலையாமல் திரியாமல் இப்படி வீட்டிலேயே இருந்து கொண்டிருக்கலாம் என்றால் நன்றாக அத்யயன, அநுஷ்டா னங்கள் செய்து வரலாம்தானே?

இந்த மாதிரி எல்லாவித ஸௌகர்யமும் பெற்று, ஆர்யாம்பா என்ற உத்தம ஸ்த்ரீயைக் கலியாணம் பண்ணிக் கொண்டு சிவகுரு என்ற ஸத்பிராமணர் இருந்துவந்தார். இவர் 'கைப்பள்ளி மனை'வைச் சேர்ந்தவரென்றும், அந்த அம்மாள் 'மேல்பாழூர் மனை' என்பதைச் சேர்ந்தவ ளென்றும் அந்தப் பக்கங்களில் சொல்கிறார்கள். எர்ணாகுளத் திலிருந்து கொல்லம் போகிற வழியில் மேல் பாழூர் மனை என்று இப்போதும் இருக்கிறது.

அந்த தம்பதி இரண்டு பேரும் ஈச்வர பக்தி நிரம்ப உடையவர்கள். நல்ல சீலத்தோடும், ஆசாரத்தோடும் வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு எல்லா மிருந்தும் பெரிய குறையாகப் புத்ர பாக்யம் மட்டும் இல்லாமலிருந்தது. இப்படியிருந்தால்தானே அவர்கள் அவதாரம ஏற்படுவதற்குத் தேவையான இரண்டாவது பெடிஷனைக் கொடுக்கமுடியும்? அதைத் தொடர்ந்து அவதாரமும் ஏற்படமுடியும்?

Koviloor Digital Library

திருச்சூரில் வேண்டுதல்; க்ஷேத்ரச் சிறப்பு

ஸத்புத்ரன் பிறக்கவேண்டுமென்பதற்காக அந்த இரண்டு பேரும் திருச்சூருக்குப் போய் ஸ்வாமிக்கு ப்ரார்த்தனை செய்துகொண்டு பஜனம் இருக்கலானார்கள்.

திருச்சூர் வ்ருஷாசலம் என்று பேர்பெற்ற மஹா சிவ க்ஷேத்ரம். வ்ருஷம் என்றால் நந்திகேச்வரர். ரிஷபம் என்பதும் வ்ருஷம் என்பதும் ஒன்றேதான். வ்ருஷபாரூடரான ஸ்வாமி நந்தி ஒரு மலை ரூபத்திலிருக்கும் இங்கு மலைக்கு மேலே வீற்றுக் கொண்டிருக்கிறார். நந்தி பெரிய ரிஷப ரூபத்திலும் அந்தக் கோவிலில் இருக்கிறார். மலையாளத்திலுள்ள சிவாலயங்களில் மிகவும் முக்யமானதும் பெரியதும் திருச்சூர் ஆலயம்தான். ஊருக்கே நடுநாயகமாக அது அமைந்திருக்கிறது. பெரிய மைதானத்துக்கு மத்தியில் பிரம்மாண்டமான மதில்களோடு உள்ள கோவில். பிற்பாடு மைதானமாகிவிட்டாலும் ஆதியில் இந்த இடமும் ஒரு "காவு"வாகத்தான் இருந்திருக்கிறது. ஒரே தேக்கு மரமாக அங்கே இருந்திருக்கிறது. இப்போதும் அந்த இடத்திற்கு 'தேக்கிங்காடு' என்று பெயர் ஒட்டிக்கொண்டிருக்கிறது! ரிஷபமலை என்பதும் மலையென்று சருகலாக ஏறிப்போகிறமாதிரித் தெரியாது. மண்ணை வெட்டிக் கொட்டி ஸமமாகச் செய்தாற்போல அங்கே வ்ருத்தாகாரமாக (வட்டவடிவமாக) பூமி அமைந்திருக்கும்.

வடக்குன்னாதர் என்று ஜனங்கள் சொல்கிற வ்ருஷாசலேச்வரர், 'ஸ்ரீ கோவில்' என்று மலையாளத்தில் சொல்லப்படும் ப்ரதானமான ஸந்நிதியில் இருப்பார். அந்த தேசத்தில் சதுரமாக ஸந்நிதி அமைத்து ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்குக் கூரைகளாக ஓடு வேய்ந்து கோயில் கட்டுவது ஸஹஜமாயிருந்தாலும் இந்த ஸந்நிதி வட்டமாகக் கட்டப்பட்டு, குடை போன்ற ஒரே தளக் கூரையுடன் இருக்கிறது. இந்தக் கோவிலிலேயே சங்கரநாராயணருக்கும் ராமருக்கும் ஸ்ரீகோயில்கள் இருக்கின்றன. இவற்றில்

Koviloor Digital Library

சங்கரநாராயணர் ஸந்நிதியும் வ்ருத்தாகாரமானது (வட்டமானது). ஆனால் அது இரண்டு தளம் கொண்டது. ராமர் ஸந்நிதியோ இரட்டைத் தளத்துடன் சதுரமாக இருக்கிறது. சிவன் கோவிலில் இப்படி விஷ்ணு ஸம்பந்தமான ஸந்நிதிகள் இருப்பது கேரளத்தில் ஸஹஜமே. இது ஆசார்யாள் நிலை நாட்டிய தர்சனத்வைதத்துக்கு—ஸமய ஸமரஸத்துக்கு—ஏற்றதாக இருக்கிறது. நாராயண ஸ்மரணத்துடனேயே கார்யங்களைச் செய்துவந்த சங்கரரின் அவதாரத்திற்காக வேண்டிக்கொண்ட கோவிலில் சங்கரநாராயணர் இருப்பதும் பொருத்தந்தானே? ஸ்வாமி ஸந்நிதிக்குப் பின்பக்கம் அம்பாள் ஸந்நிதி. 'பார்வதி' என்றே பெயர். அது தாரு மூர்த்தி (மரத்தாலான திருவுருவம்.)

மத ஸம்பந்தமான நாட்டிய நாடகங்கள் நடத்துவதற்கென்றே மலையாளக் கோவில்களில் 'கூத்தம்பலம்' என்ற மண்டபங்கள் உண்டு. திருச்சூர் கூத்தம்பலம்தான் அவற்றில் ரொம்பவும் புகழ் படைத்தது. மரவேலைப்பாடு மிக்கதாக அது இருக்கிறது.

திருச்சூர் என்றவுடன் 'திருச்சூர் பூரம்' என்பதாக ஏகப்பட்ட யானைகளில் அனேக தெய்வ மூர்த்தங்கள் எதிரும் புதிருமாக அணிவகுத்து நிற்கும் உத்ஸவம் நினைவுக்கு வரலாம். ஆனால் அதற்கும் திருச்சூர் வ்ருஷாசலேச்வரருக்கும் ஸம்பந்தமில்லை என்றால் ஆச்சர்யமாயிருக்கும். இந்தக் கோயிலுக்குப் பக்கத்திலேயேதான் தேக்கிங்காட்டில் அந்த உத்ஸவம் நடந்தாலும் இந்த ஸ்வாமி அதில் கலந்துகொள்வதில்லை. அண்டைப்புறக் கோவில்களிலிருந்து வரும் அம்பாள்கள்தான் பூர விழாவில் கலந்துகொள்வது. இந்தக் கோவிலுக்கு கிழக்கே பார்மேகாவு பகவதி கோவில் இருக்கிறது. வடக்கே திருவம்பாடி க்ருஷ்ணன் கோவிலிலும் ஒரு பகவதி இருக்கிறாள். இந்த இரண்டு பகவதிகள் ஆளுக்கொரு யானை கோஷ்டியுடன் பவனி வந்து நடப்பதுதான் பூர உத்ஸவம். அந்த யானைகள் வ்ருஷாசலேச்வரர் ப்ராகாரத்

Koviloor Digital Library

துக்குள் நுழைந்து ப்ரதக்ஷிணம் பண்ணிக்கொண்டுதான் வெளியிலுள்ள உத்ஸவ பூமிக்கு வரும். ஸ்வாமி உத்ஸவ மூர்த்தியாகப் போய் அதில் கலந்துகொள்வதில்லை. சிவராத்ரி உத்ஸவம்தான் அவருக்கு உண்டு. ரொம்ப விமரிசையாக நடக்கும். அப்போதுங்கூட உத்ஸவ மூர்த்தி வெளியே வீதி உலா போவதென்பது கிடையாது.

இதைச் சொல்லும்போது இன்னொன்று நினைவு வருகிறது. ஸ்வாமிக்குப் பூஜை பண்ணும் அர்ச்சகர்களும் அவர்களுடைய முறைக்காலம் ('டெர்ம்') முடியும் வரையில் கோவிலைவிட்டு வெளியில் போகமுடியாது. ஒவ்வொரு அர்ச்சகருக்கும் ஒவ்வொரு டெர்ம் வரும். அந்தக் காலம் பூராவும் பூர்ண ப்ரஹ்மசர்ய நியமத்துடன் கோவிலுக்குள்ளேயேதான் ஈச்வர ஸ்மரணத்துடன் வஸித்துவருவார். முறை இன்னொருத்தர் கைக்கு மாறின பின்தான் அவர் வெளியிலே வருவது, வீட்டுக்குப் போவது. இம்மாதிரி ஆசார நியமம்தான் மலையாளத்துக் கோவில்களில் ஸாந்நித்யத்தை நன்றாகக் காற்பாற்றி வருகிறது.

திருச்சூர் கோவிலில் ஒரு விசேஷம் அங்கே மஹாலிங்கத்துக்கு எப்பொழுதும் சுத்தமான பசு நெய்யால் அபிஷேகம் பண்ணிக்கொண்டேயிருப்பது. இப்படி ஆயிரம் பதினாயிரம் வருஷமாகப் பண்ணிப் பண்ணி லிங்கமே தெரியாமல் ஒரே நெய்ப் பாறையாகத்தான் கர்ப்பக்ருஹத்துக்குள் தெரியும். நல்ல வெயில் காலத்திலும், கிட்டத்திலேயே நிறைய தீபங்கள் எரிந்துகொண்டிருக்கும்போதிலும் நெய் உருகுவதில்லை! ஹிமாலயத்தில் சுற்றிலும் பனிப்பாறைகளுக்கு நடுவில் வாஸம் செய்யும் ஸ்வாமி இங்கே நெய்ப்பாறையில் அப்படியே புதைந்து வாஸம் பண்ணுமென்று தீர்மானம் செய்துகொண்டிருப்பார் போலிருக்கிறது! பனி மலைக்குப் பதில் நெய் மலை. இன்னொரு ஆச்சர்யம், இத்தனை நெய் குன்றாகக் குவிந்திருந்தும் ஒரு ஈ, ஒரு எறும்பு அங்கே பார்க்க முடியாது!

Koviloor Digital Library

மலையாள தேசத்தில் ஆயுர்வேத சிகித்ஸை நிறைய நடக்கிறதல்லவா? அதில் பலவித ரோகங்களுக்கு 'புராதன க்ருதம்' என்பதான பழம் நெய்யை மருந்துச் சரக்காகச் சொல்லியிருக்கிறது. திருச்சூர் கோவிலில் ஆயிரம் வருஷத்துக்கு முற்பட்ட நெய்கூடக் கிடைப்பதால் மலையாள வைத்யர்கள் அங்கே போய்த்தான் புராதன க்ருதம் வாங்கிக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்ட க்ஷேத்ரத்திற்குத்தான் போய் சிவகுரு, ஆர்யாம்பாள் என்ற தம்பதி பஜனம் இருந்தார்கள். பஜனே, பஜிப்பது என்று சொல்வதெல்லாம் பக்தி பண்ணுவது என்பதையே குறிக்கும் வார்த்தைகள். 'பஜ்' என்ற தாது விலிருந்துதான் பஜனே, பக்தி என்ற இரண்டு வார்த்தைகளும் வந்திருக்கின்றன. பஜனம் என்றால் ஸேவை செய்வது. குறிப்பாக 'பஜனமிருப்பது' என்று சொன்னால், குறிப்பிட்ட ஒரு உத்தேசத்தை வேண்டி ஒரு புண்ய க்ஷேத்ரத்திற்குப் போய் ஒரு மண்டலம், இரண்டு மண்டலம் அங்கே இருந்து கொண்டு ஜபம் - பாராயணம் செய்வது, ப்ரம்மசர்யம் முதலிய நியமங்களோடு தினமும் புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸ்வாமி தர்சனம் பண்ணுவது, அநுமதிக்கப் பட்ட ஆலயங்களில் ஸந்நிதியிலேயே நித்திரை பண்ணுவது என்று அர்த்தம். உத்தேசப் பூர்த்தி பற்றி ஸ்வப்னத்திலே ஸ்வாமி ஆஜ்ஞை கிடைக்கும். நம்பிக்கையிருந்தால் ஸங்கேதமாகவாவது கிடைக்கும்.

இவர்கள் வ்ருஷாசலத்தில் புத்ரனை உத்தேசித்து பஜனமிருந்தார்கள். பக்தி ச்ரத்தையுடன் வேண்டியபடி இருந்தார்கள்.

வரப் பிரதானம்

ஸ்வாமி ஒரு ராத்ரி சிவகுருவின் ஸ்வப்னத்தில் தோன்றினார். "புத்ர வரம் தருகிறேன்!" என்று சொல்லி விட்டு, அவருடைய மனஸ் பக்குவத்தைப் பரீக்ஷை பார்ப்பதற்காக வரத்தில் இவருக்கும் choice தருவதாகக்

Koviloor Digital Library

கண்டிஷன் போட்டுக் கொடுத்தார். "உனக்கு நூறு பிள்ளை வேண்டுமா? ஒரே பிள்ளை வேண்டுமா? நூறு பிள்ளைகளானால் அவர்கள் தீர்க்காயுஸுடன் இருப்பார்கள். ஒரே பிள்ளையானால் அல்ப காலத்தில் ஆயுஸ் முடிந்துபோகும். இன்னொன்று: அந்த நூறு பிள்ளைகள் புத்தியில்லாத மண்டுக்களாக இருப்பார்கள். ஒரே பிள்ளையாயிருந்தாலோ மஹா புத்திமானாக, ஸர்வஜ்ஞனாகவே, இருப்பான். எப்படி வேண்டும்?" என்று கேட்டார்.

தீர்க்காயுஷ்மான்களாக நூறு பிள்ளைகளா, அல்பாயுஸ்காரரான ஒரு பிள்ளையா என்று மாத்திரம் கேட்டிருந்தால் எதைச் 'சூஸ்' பண்ணுவதென்ற குழப்பமே இருக்காது. ஒரே பிள்ளை, அதற்கும் அல்பாயுஸ் என்றிருந்தால் யார்தான் 'சூஸ்' பண்ணுவார்கள்? ஸ்வாமியோ அதோடு முடிக்காமல், நூறானால் முட்டாள்கள், ஒன்றானாலோ மஹாமேதை என்றும் கண்டிஷன் போட்டுப் பரீக்ஷை வைத்துவிட்டார்!

சிவகுரு உடனே, "என் பத்னியின் விருப்பத்தையும் தெரிந்துகொண்டு, கலந்தாலோசித்துச் சொல்கிறேன்" என்றார்.

இதிலிருந்து அந்தக் காலத்தில் ஸ்த்ரீகளுக்குப் புருஷர்கள் கொடுத்திருந்த ஸ்தானத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அந்த அம்மாளை எழுப்பி அவர் விஷயத்தைச்சொன்னார். அவள், "எனக்கும் அப்படியே ஸ்வப்னம் வந்தது. நீங்கள் எழுந்த பிறகு கேட்டுச் சொல்வதாகச் சொல்லிவிட்டேன்" என்றாள்.

இரண்டு பேரும் கலந்தாலோசித்தார்கள். ஸ்வாமியே ப்ரஸன்னமாகி, வரம் கொடுத்து, தங்கள் அபிப்ராயப்படியே செய்வதாகச் சொன்னாரென்பதில் இரண்டு பேருக்கும் ரொம்ப அடக்கம் உண்டாகி விட்டது. 'அவர் மனஸ் எப்படியோ அப்படிப் பண்ணட்டும் என்றில்லாமல் பிள்ளை வேணும் என்று கேட்டதே தப்போ என்னவோ? அது போதாதென்று இப்போது எப்படிப்பட்ட பிள்ளை என்று

Koviloor Digital Library

வேறு நாம் முடிவு பண்ணி அந்தப்படி அவர் செய்யணு மென்றால் இன்னும் தப்பாக அல்லவா தோன்றுகிறது?' என்று நினைத்தார்கள்.

''இப்படியெல்லாம் கேட்டு எங்களை சோதனை பண்ணக் கூடாது. ஸ்வாமிக்கு எப்படி அபிப்ராயமோ அப்படியே செய்யணும்'' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்கள்.

அவதரிக்க வேண்டுமென்று ஸ்வாமி திவ்ய ஸங்கல்பம் செய்துவிட்டபின் இவர்களுடைய choice என்று ஒன்று எப்படி அதற்கு மாறாக ஏற்பட முடியும்? ஆனாலும் எல்லாம் மாநுஷமாக நடக்கிறாற்போலவே நடத்திக்காட்ட வேண்டும் என்று ஸ்வாமி நாடகமாடுவதில் இப்படி விளையாடினார். ஸதிபதி ஒற்றுமை எப்படி, பக்தி உள்ளத்தின் தன்மை எப்படி என்றெல்லாமும் உலகத்துக்குத் தெரிவிக்க இப்படி வரப்ரஸாதத்திலேயே 'கண்டிஷன்', 'சாய்ஸ்' என்று வைத்து விளையாடினார்.

அவர் இஷ்டப்படி என்று இவர்கள் விட்டவுடன் ஸந்தோஷமடைந்து, ''ஒரே புத்ரனை அநுக்ரஹிக்கிறேன். நானே அப்படி அவதாரம் செய்கிறேன். ஆனால் எட்டு வயஸுதான் இருப்பேன்'' என்று சொல்லி ஸ்வாமி மறைந்து விட்டார்.

தராசில் ஒரு தட்டில் நூறு பிள்ளை, மறு தட்டில் ஒரு பிள்ளை என்றால் நூறுக்குத்தான் எடை ஜாஸ்தி. ஆனால் அது பௌதிகத்தில்தான். அதைவிட புத்தியின் எடைக்குத்தான் முக்யம். அப்படிப் பார்த்தால் நூறு பிள்ளைகளும் புத்தி பலத்தில் நூறு ஸைபர்தான். ஸைபரில் ஒன்றானால் என்ன, நூறானால் என்ன? ஒரு பிள்ளையோ ஸர்வஜ்ஞன் என்பதால் புத்தியில் 'இன்ஃபினிடி'! எடை போடவே முடியாத அத்தனை புத்தி பலம்! இப்படி ஸைபர் ஒரு தட்டு, இன்ஃபினிடி (அனந்தம்) எதிர்த்தட்டு என்றால் கொஞ்சங் கூட ஸரியாயில்லையே என்றுதான், வயஸில் எடை கட்டும் போது, 100 பிள்ளை × 100 வருஷம் என்பதற்கு எதிராக ஒரே பிள்ளை × எட்டே வயஸு என்றும் ஸ்வாமி வைத்தார்!

Koviloor Digital Library

புத்ர ப்ராப்தி, அதிலும் ஸ்வாமியே அப்படி வரப் போகிறார்—என்பதில் அந்த தம்பதி ஸந்தோஷப்பட்டுக் கொண்டு, ஆயுஸ் விஷயமாக விசாரப்படாமல், 'அப்புறம் எப்படிச் செய்கிறாரோ, செய்யட்டும்' என்று தேற்றிக் கொண்டார்கள். பஜனத்தைப் பூர்த்தி பண்ணிக் காலடிக்குத் திரும்பினார்கள்.

பஜனத்தை சுபமாக முடிக்க ஸமாராதனை பண்ணுவது வழக்கம். அப்படிப் பண்ணினார்கள். ப்ராம்மண சேஷத்தை ஆர்யாம்பாள் புஜிக்கும்போது ஐச்வரமான தேஜஸ் அவளுடைய வயிற்றில் புகுந்தது.

அது கர்ப்பமாக ஆகி ஆசார்யாளின் அவதாரம் ஏற்பட்டது.

ஜயந்திச் சிறப்புக்கள்

பரம புண்யமான அந்த அவதார காலம் ஒரு நந்தன வருஷத்தில் வைசாக சுத்த பஞ்சமியில் அபிஜித் முஹூர்த் தத்தில் ஏற்பட்டது. வைசாக சுத்த பஞ்சமி என்றால் வைகாசி மாஸத்து வளர்பிறைப் பஞ்சமி. அதாவது சித்திரை மாஸ அமாவாஸ்யை ஆனவுடன் வரும் பஞ்சமி. அபிஜித் முஹூர்த்தம் என்பது ஸூர்யன் நடு உச்சியிலிருக்கும் மத்யான வேளை. ஜயப்ரதமான (வெற்றி வழங்கவல்ல) முஹூர்த்தம். அன்றைக்குத் திருவாதிரை நக்ஷத்ரம்—பரம சிவனை அதி தேவதையாகக்கொண்ட நக்ஷத்ரம். ராமசந்த்ர மூர்த்தியைப்போலவே ஐந்து க்ரஹங்கள் உச்சமாக இருக்கும் அபூர்வமான காலத்தில் ஆசார்யாள் அவதாரம் பண்ணினார். (ராமர் மாதிரியே ஆசார்யாளும் புனர்வஸு நக்ஷத்ரம் என்றும் அபிப்ராயமிருக்கிறது. வைசாக சுத்த பஞ்சமி திருவாதிரை அல்லது புனர்வஸு என்ற இரண்டி லொரு நக்ஷத்ரத்தில்தான் வருவதைப் பார்க்கிறோம்.)

ஸ்ரீ சங்கர ஜயந்திப் புண்ய காலத்துக்கு ஸமமாக எதுவு மில்லை. இப்படி நான் சொன்னால், "ப்ரக்ருத விஷயம் (தற்போது எடுத்துக்கொண்டுள்ள விஷயம்) ஆசார்ய சரித்ர

Koviloor Digital Library

மானதால் அதை விசேஷமாக ஸ்தோத்ரிக்கத்தான் வேண்டும் என்பதற்காக ஒரேயடியாய் உசத்தி வைத்துச் சொல்கிருரா? இல்லாவிட்டால் நாமெல்லாம் ஆசார்யாளின் ஸம்ப்ரதாயத்தில்தானே வந்தவர்கள் என்பதால் சொல்கிருரா? அல்லது அவருடைய மடத்தில் அவருடைய பெயரை வைத்துக்கொண்டுதானே இவர் ஸ்வாமிகளாக ஊர் கூட்டிக் கொண்டிருக்கிருர் என்பதனுல் சொல்கிருரா?" என்று தோன்றலாம். அதாவது (ஸ்வய) அபிமானத்தால் தூக்கி வைக்கிறேனே என்று தோன்றலாம்.

இப்படிப்பட்ட காரணங்களுக்காக அந்த ஜயந்திக்கு நான் உயர்வு கல்பித்துச் சொல்லவில்லை. கல்பனையே இல்லை! மிகையோ, ஸ்தோத்ரமோ இல்லை! வாஸ்தவத்திலேயே அதற்கென்று இருக்கும் உயர்வினுல்தான், 'எல்லாப் புண்ய காலங்களிலும் நம்முடைய ஆசார்யாளின் ஜயந்திதான் பரம புண்ய காலம்' என்று சொல்கிறேன். புண்ய காலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. சிவராத்ரி, கோகுலாஷ்டமி, ஸ்ரீ ராம நவமி, நரஸிம்ஹ ஜயந்தி, ஸரஸ்வதி பூஜை, விஜய தசமி, விநாயக சதுர்த்தி, ஸ்கந்த ஷஷ்டி, இன்னம் உத்தராயண புண்ய காலம், தக்ஷிணுயன புண்யகாலம் என்றெல்லாம் எத்தனையோ இருக்கின்றன. எல்லாமே உத்க்ருஷ்டமானவை (உயர்வு பொருந்தியவை)தான். என்ருலும் ஸ்ரீ சங்கர ஜயந்திதான் ஸர்வோத்க்ருஷ்டமானது (எல்லாவற்றையும்விட உயர்வுபொருந்தியது) என்பது வாஸ்தவம்.

எப்படி?

மற்ற புண்ய காலங்கள் சொன்னேனே, வேதங்களாலேயும் புராணங்களாலேயும் அநேக சாஸ்த்ரங்களாலேயும் ஸித்தமான அந்தந் புண்ய காலங்களெல்லாம் தொன்று தொட்டு யுகங்களாக அநுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பவை. இந்தப் புண்ய காலம் (ஸ்ரீ சங்கர ஜயந்தி) அவற்றுக்கெல்லாம் ரொம்பவும் பிற்பாடுதான் உண்டானது. ஆனுலும் இதுவே ஸர்வோத்க்ருஷ்டமானது என்ருல் எப்படி?

Koviloor Digital Library

ஸரி, இந்தப் புண்யகாலம் எதற்காக உண்டாயிற்று?

வேதங்களேயும் புராணங்களேயும் சாஸ்த்ரங்களேயும் புனருத்தாரணம் பண்ணுவதற்காகத்தான்.

இந்தப் புண்யகாலம் (ஸ்ரீ சங்கராவதாரம்) ஏற்படாமலிருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?

பௌத்தம் முதலான மதங்களும், ஈச்வர பக்தியைச் சொல்லாத ஸாங்க்யம், மீமாம்ஸை போன்ற மதங்களும் தான் ஒரேயடியாகப் பரவியிருக்கும். அப்படிப் பரவியிருந்தால் அப்புறம் சிவராத்ரியும், ஸ்ரீராம நவமியும், மற்ற புண்ய காலங்களும் யார் கொண்டாடியிருப்பார்கள்? அத்தனே புண்ய காலங்களேயும் அவைதிகம் அடித்துக் கொண்டு போயிருக்கும். ஏறக்குறைய அப்படிப்பட்ட கட்டத்தில் மற்ற எல்லாப் புண்ய காலங்களும் தத்தளித்துக் கொண்டிருந்தபோதுதான் இந்த ஒரு புண்ய காலம் ஏற்பட்டது! ஏற்பட்டு வேத வழியை மறுபடி நன்ருக நிலேநாட்டி அந்தப் புண்ய காலங்கள் அத்தனேக்கும் புத்துயிர் கொடுத்து அவற்றை நிலே நிறுத்திற்று! இன்றைக்கும் சிவராத்ரி, ஸ்ரீராம நவமி, கோகுலாஷ்டமி இத்யாதியை நாம் புண்ய காலங்களாகக் கொண்டாடுகிருேமென்ருல் அதற்கு ஆசார்ய ஜயந்தி என்ற புண்ய காலம் ஏற்பட்டதுதான் காரணம். இந்த ஒரு ஜயந்தி இல்லேயென்ருல் எந்த ஜயந்தியுமே இல்லாமல் போயிருந்திருக்கும்! ஜயந்திகளேயெல்லாம் ரக்ஷித்துக் கொடுத்த ஜயந்தியாக இருப்பது ஸ்ரீ சங்கர ஜயந்தியே என்பதால்தான் அதைப் புண்ய காலங்கள் அத்தனேயிலும் விசேஷமானது என்றது!

ஜய சப்தம் ஆசார்யாளோடு விசேஷமாகச் சேர்ந்து "ஜய ஜய சங்கர" என்று உலகமெல்லாம் முழங்குகிறதென்று சொன்னேன். அதில் இந்த ஜயந்தி விசேஷத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

விமரிசையாக விழாக் கொண்டாடுக!

எல்லா ஜனங்களும் இந்த விசேஷத்தைப் புரிந்து கொண்டு ஆசார்ய ஜயந்தியை மஹோத்ஸவமாகக் கொண்டாடவேண்டுமென்று எனக்கு ஆசை. அவர் பெயரைச் சொல்லிக்கொண்டு பிழைப்பதனுலோ என்னவோ, அத்தனை ஜயந்திகளைவிடவும் விசேஷமாக, அவை எல்லாவற்றையும் தக்கி நிற்கச் செய்த இந்த ஜயந்தியைக் கொண்டாட வேண்டுமென்று எனக்கு இருக்கிறது! ஆசார்ய ஜயந்தி இல்லாவிட்டால் க்ருஷ்ண ஜயந்தி ஏது? ந்ருஸிம்ஹ ஜயந்தி, ராமநவமி எல்லாம் ஏது? ராமாயணம் இருந்திருக்குமா? கீதை இருந்திருக்குமா?

எனக்குப் பேராசை—அது நிறைவேறுமோ, இல்லையோ, சொல்லிவைக்கிறேன்: சங்கர ஜயந்தி என்று எங்கே நடந்தாலும் அங்கே ஜனங்கள் படையெடுத்துப் போய்ப் பிரஸாத விநியோகத்தை அஸாத்யமாக்கிவிடவேண்டு மென்று பேராசை! இதை நான் சொல்லிக்கொண்டே போனுல் என்றைக்காவது நிறைவேருதா?

எதற்காகக் கொண்டாடணுமென்ருல், கொண்டாட்டத் தால் அவருக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. நமக்கேதான் ச்ரேயஸ். அவரை ஸ்மரிக்கிற புண்யம் ஏற்பட்டுச் சித்தமலம் போகும். நன்றியுணர்ச்சி என்பது மநுஷ்யனுகப் பிறந்தவ னுக்கு அவச்யமோ இல்லையோ? 'நன்றி மறவாமை' என்பதைத்தானே பெரியவர்களெல்லாம் மநுஷ லக்ஷணத் தின் உச்சியில் சொல்கிருர்கள்? ஆகையால், நமக்கு இடைக் காலத்தில் அடைபட்டுப்போன மோக்ஷமார்க்கத்தை மறுபடியும் திறந்துவிட்டு, ஸநாதன தர்மத்தைப் புத்துயி ரூட்டிக் கொடுத்து, சிவராத்ரி என்றும் ஸ்ரீஜயந்தி என்றும் ராமநவமி என்றும் பண்டிகைகள் கொண்டாடும் ஆனந்தத் தைக் கொடுத்தவரிடம் நன்றிக்கு அடையாளமாக அவருடைய ஜயந்தியைப் பண்டிகைகளிலெல்லாம் பெரிய பண்டிகையாகக் கொண்டாடவேண்டியது நியாயந்தானே?

Koviloor Digital Library

தற்போது இந்த ஜயந்தியின் மஹத்வம் போதிய அளவு ஜனங்களுக்கு உணர்த்தப்பட்டிருக்கவில்லை. அதனால் தனியாக எங்கேயாவது யாராவது கொண்டாடினால் பத்துப் பேர்கூடச் சேர்வதில்லை. மடத்தில் கொண்டாடினால் கூட்டம் சேர்கிறது. மக்கள்மேல் குற்றமில்லை. முக்யத்வத்தை எடுத்துச் சொல்லி உணர்த்தாதது எங்கள் தப்புத்தான்,

ஆழ்வார்களுக்கும், ராமாநுஜர், தேசிகர், மணவாள மாமுனிகள் முதலானவர்களுக்கும் பெருமாள் கோவில்களில் பிம்பம் இருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மதாபிமானமும் நிறைய இருப்பதால் அந்தப் பெரியவர்களுடைய அவதார தினங்களில் ஆலய பிம்பங்களுக்கு விசேஷ பூஜை, புறப்பாடு, சாத்துப்படி என்று விமர்சையாகப் பண்ணுகிறார்கள். அப்பர், ஸுந்தரர் முதலான 63 நாயன்மார்களுக்கும், உமாபதி சிவம் முதலிய சைவ சமயாசார்யர்களுக்கும் இதே போல ஈச்வரன் கோவிலில் பிம்பங்களிருப்பதால் அவர்களுக்கும் விழா நடந்துவிடுகிறது. வைஷ்ணவ ஸம்ப்ரதாயமாகவோ, சைவ ஸம்ப்ரதாயமாகவோ இல்லாமல், எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் மூலமாகவும், அவை யாவற்றையும் ஒப்புக் கொள்வதாகவும் உள்ள ஸ்மார்த்த ஸம்ப்ரதாயக் காரராக நம் ஆசார்யாள் இருப்பதால்...இரண்டு கோவில்களிலேயும் அவருக்கு பிம்பமில்லை! வைதிக பூஜை உள்ளதாகவோ, அவரால் யந்த்ர ப்ரதிஷ்டை போன்ற ஏதோ ஒன்று செய்யப்பட்டு அவருடைய விசேஷ ஸம்பந்தம் உள்ளதாகவோ இருக்கிற ஒரு சில கோவில்களில் மாத்ரந்தான் ஆசார்ய பிம்பமிருக்கிறது.

காஞ்சி மண்டலத்தின் விசேஷத் தொடர்பு

இதற்கு விலக்காக உள்ள ஒரே ஒரு இடம் காஞ்சீபுரம் தான். அந்த ஊர் மட்டுமில்லை; காஞ்சி மண்டலம் முழுதிலுமே ஆசார்யாளுக்கு பிம்பங்கள் இருக்கின்றன. காமாக்ஷி கோவிலில் தனி ஸந்நிதியுடன் பெரிய மூர்த்தி

Koviloor Digital Library

இருப்பதோடு ஏகாம்ரேச்வரர், வைகுண்டப் பெருமாள், வரதராஜா ஆகிய கோவில்களில்கூட ஆசார்ய பிம்பங்கள் இருக்கின்றன. இதில் இன்னும் விசேஷமாக வரதராஜா கோவிலில் தாயார் ஸந்நிதிக்குப் போகும் வழியிலுள்ள மண்டபத்திலுள்ள தூணில் வ்யாஸரும் அவருக்கு சிஷ்யராக ஆசார்யாளும் இருப்பதில் வ்யாஸர் ஒற்றை விரலைத் தூக்கிக் காட்டி 'அத்வைதம்தான் ஸத்யம்' என்று அடையாளம் தெரிவிக்கிறார்! பெரிய கோவில்களில் மாத்ர மில்லாமல் சிவாஸ்தானம், செவிலிமேடு என்னும் சிவலிங்க மேடு, புண்யகோடி ஆலயம், ஐராவதேச்வரர் கோவில் (இங்கேயும் வ்யாஸ சிஷ்யராக ரொம்பவும் யுவாவாக ஆசார்யாள் இருக்கிறார்) என்று பல இடங்களில் ஆசார்யாளின் பிம்பம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

காமாக்ஷியை ஸௌம்ய மூர்த்தியாக்கி ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டை, காமகோடி பீட ப்ரதிஷ்டை ஆகியன ஆசார்யாள் செய்தாரென்று இங்கே அவரை அம்பாளுடன் ரொம்பவும் ஸம்பந்தப்படுத்திச் சொல்லியிருப்பதற்கு ஏற்றாற்போல, இவற்றில் சில சில்பங்களில் தபஸ் காமாக்ஷி என்னென்ன ஆஸனங்களோடும் முத்ரைகளோடும் வழக்க மாக பொறிக்கப்படுவதுண்டோ அதே ஆஸனங்களோடும் முத்ரைகளோடும் ஆசார்யாளையும் பொறித்திருக்கிறது.

ஸாதாரணமாக ஆசார்யாளை அவருடைய நாலு ப்ரதான சிஷ்யர்களான பத்மபாதர் முதலானவர்களுடன் சேர்த்து நினைப்பதே வழக்கமாயிருந்தாலும் அவருடைய காஞ்சி வாஸத்தைச் சொல்லும் புஸ்தகங்களில் அந்த நாலு பேருக்கு வேறேயான ஆறு சிஷ்யாளைச் சொல்லி அவர்கள் அவர் ஸ்தாபித்த ஷண்மதங்களில் ஒவ்வொன்றையும் தேசத் தில்நன்றாக ஸ்திரப்படுத்திவிட்டு, அவர் காஞ்சீபுரத்தில் தமது சரித்ரத்தின் கடைசி பாகத்தில் தம்முடைய மடத்திலிருந்த போது அவரிடம் வந்து தெரிவித்துக்கொண்டார்கள் என்று இருக்கிறது. அதற்கேற்க அவருடைய காமாக்ஷி ஆலய விக்ரஹத்தின் பீடத்தில் வழக்கமான நாலுக்குப் பதில் ஆறு

Koviloor Digital Library

சிஷ்யர்களின் உருவங்களிருக்கின்றன. ஸ்ரீமடத்துப் பூஜா க்ருஹத்திலும் அவருக்கு இரண்டு பக்கத்திலும் பக்கத்துக்கு மூன்று பேர்களாக மொத்தம் ஆறு சிஷ்யர்களின் உருவங் களைப் பார்க்கிறோம்.

காஞ்சியில் மாத்ரமின்றி மெட்ருஸ் வரை பூந்தமல்லி, பாப்பான் சத்திரம், மாங்காடு, திருவொற்றியூர் என்று பல இடங்களில் ஆசார்ய பிம்பங்களைப் பார்க்கிறோம்.

பொதுவாகக் கோவிலில் இடமே பெருதவர் இங்கே மட்டும் இப்படி நிறையக் காணப்படுவது காஞ்சியில் அவர் முடிவாக வாஸம் பண்ணி ஸித்தியடைந்ததால் இங்கே அவருடைய நினைவு ஆழமாக நிலைத்துவிட்டதாலேயே எனலாம்.

ஆனாலும் பொது உண்மை கோவில்களில் ஆசார்யாள் பிம்பமில்லை என்பதே! அதனால்தான் ஊருக்கு ஊர், கோவிலுக்குக் கோவில் அவருக்கு ஜயந்தி உத்ஸவம் என்று இல்லாமல் ஆகிவிட்டிருக்கிறது! எவரால்தான் இந்த தேசத்தில் ஆலய வழிபாடே புத்துயிர் பெற்றதோ அவருக்கு மூர்த்தியுமில்லை, விழாவுமில்லை. ஆனாலும் அவருடைய ஆத்மசக்தி மஹிமையால் தேசம் பூராவிலும் 'ஆசார்யாள்' என்றாலே சங்கராசார்யாள்தான் என்று ஜனங்கள் கொண்டாடுகிறார்கள். அந்தக் கொண்டாட் டத்தை உரிய அளவுக்கு வ்ருத்தி பண்ணித்தரவேண்டியது எங்களுடைய—மடத்தினுடைய—கடமையாயிருக்கிறது.*

ஆலய மூர்த்தியில்லாத ஆசார்யாளுக்கு ஸ்தூல மூர்த்தியாக இருப்பது அவர் ஸ்தாபித்த மடங்கள்தான். ராமாநுஜர் உள்பட நான் சொன்ன அந்த வைஷ்ணவ—சைவப் பெரியவர் எவருக்கும் அவரே ஸ்தாபித்ததாக மடம் கிடையாது. ஆலய மூர்த்திதான் இருக்கிறது.

---

* ஸ்ரீசரணர்களின் திருவுளப்படி பதரிநாதத்திலிருந்து கன்யாகுமாரி வரை ஸ்ரீ காஞ்சி மடத்தின் ஆதரவில் அநேக இடங்களில் ஆசார்யர்களின் பிம்பமோ பாதுகையோ பிரதிஷ்டையாகி மக்களை அவரது புனித நினைவில் ஈர்த்து வருவதைக் குறிப்பிடவேண்டும்.

Koviloor Digital Library

அதனுல் மடம்தான் ஆசார்ய ஜயந்தியை அதற்குரிய கௌரவத்தோடு கொண்டாடி ஜனங்களுக்கு பக்தி யெழுச்சியை ஊட்டவேண்டும்.

காமாக்ஷி ஆலயத்தில் சங்கர ஜயந்தி

மடத்தோடேயே ஸம்பந்தப்பட்டது காஞ்சி காமாக்ஷி ஆலயம். ஆசார்யாளுடைய சரித்ர ஸம்பந்தமும் விசேஷமாக உள்ள ஆலயம் அது. அதனுல் அங்கே ஆசார்யாளுக்கு பிம்பம் இருக்கிறது. உயரமாகத் தனி ஸந்நிதி, சிலா விக்ரஹம், உத்ஸவ விக்ரஹம் எல்லாம் இருக்கின்றன. சிலா விக்ரஹம் பெரிய மூர்த்தியாக இருக்கிறது. அவ்வளவு பெரிசாக எந்த ஆசார்ய புருஷருக்குமே விக்ரஹம் இருப்ப தாகத் தெரியவில்லை. புருஷாக்ருதி என்னும்படி, அதிலும் இந்த நோஞ்சான் காலத்துப் புருஷாக்ருதியாக இல்லாமல் ஆசார்யாள் இருந்த அந்தப் பூர்வகாலத்தின் த்ருடகாத்ர மான கம்பீர புருஷாக்ருதியில் அந்த விக்ரஹம் இருக்கிறது. அங்கே மாத்ரம் சங்கர ஜயந்தி உத்ஸவமும் நல்லமுறையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜயந்தி உத்ஸவங்களைக் கொண்டாடுவதில் இரண்டு வகை உண்டு. கர்ப்போத்ஸவம் என்பது ஒன்று. ஜன்மோத்ஸவம் என்பது இன்னென்று. ஜயந்திக்கு முன்னுல் உத்ஸவம் ஆரம்பித்து ஜயந்தியன்று பத்தாம் நாள் உத்ஸவம் பூர்த்தியாகும்படிக் கொண்டாடுவது கர்ப்போத்ஸவம். பத்து மாஸ கர்ப்பத்துக்குப் பதிலாகப் பத்து நாள் உத்ஸவம். ஜயந்தியன்றே ஆரம்பித்து அப்புறம் பத்துநாள் உத்ஸவம் நடத்திப் புண்யாஹவாசன தினத்தில் முடிக்கிற மாதிரிப் பூர்த்தி செய்வது ஜன்மோத்ஸவம் எனப்படும்.

ஆசார்ய ஜயந்தியை கர்ப்போத்ஸவமாகப் பண்ணும் இடங்களில் சுக்ல பஞ்சமியான ஜயந்திக்குப் பத்து நாள் முந்தி என்றுல், 'க்ருஷ்ண பக்ஷத்தில் ஆரம்பிக்க வேண்டி யிருக்கிறதே, தேய்பிறை அவ்வளவு ச்லாக்யமில்லையே'

Koviloor Digital Library

என்று நாலைந்து நாள் தள்ளி அமாவாஸ்யையன்று ஆரம்பித்துப் பஞ்சமியோடு முடிக்கிறார்கள்.

காஞ்சி காமாக்ஷி கோவிலில் ஜன்மோத்ஸவமாகக் கொண்டாடுகிறார்கள். ஜயந்தியன்று ஆரம்பித்துப் பூர்ணிமையன்று பூர்த்தி செய்கிறார்கள். அந்த உத்ஸவம் தேவஸ்தானத் திட்டத்திலேயே நடத்தப்பட்டு வருவது. வேறெங்கேயும் இப்படி தேவஸ்தானக் கட்டளையாக ஆசார்யாளுக்கு உத்ஸவமில்லை; தனிப்பட்ட உபயதார்கள் செய்யும் உத்ஸவம்தான் நடக்கிறது.

மற்ற ஆசார்ய புருஷர்களுக்கும் அடியார்களுக்கும் அநேக ஆலயங்களில் நடக்கிறதுபோல நம் ஆசார்யாளுக்கு நடக்காத குறைக்குக் கொஞ்சம் ஈடு செய்வதாகக் காஞ்சீபுரத்தில் மாத்ரம் விமர்சையோடு உத்ஸவம் நடக்கிறது. ப்ரதி தினமும் பகவத்பாதாளின் உத்ஸவ விக்ரஹத்தைப் புறப்பாடு செய்து அம்பாள் ஸந்நிதியான காயத்ரி மண்டபத்துக்கு வெளிப்பக்கம் பீடம்போட்டு எழுந்தருளப் பண்ணி அவர் பண்ணிய ஸ்தோத்ரங்களுக்குள் மிகவும் உயர்ந்ததான 'ஸௌந்தர்ய லஹரி'யிலிருந்து தினம் பத்து ச்லோகம் வீதம் அர்ச்சகர்கள் அர்ப்பணம் பண்ணுகிறார்கள். ஒவ்வொரு ச்லோகத்துக்கும் ஒரு தீபாராதனை செய்கிறார்கள். பத்து நாளில் இப்படி ஸௌந்தர்ய லஹரியின் நூறு ச்லோகங்களும் ஓதப்பட்டு அம்பாளுக்கு அர்ப்பணமாகப் பாராயணம் செய்யப்படுகின்றன. கடைசி நாளில் ஒரு வித்யாஸம்: வெளி ப்ராகாரத்தில் சுக்ரவார மண்டபம் என்று இருக்கிறது. விடாயாற்றி உத்ஸவம் முதலானவற்றில் அம்பாளை அங்கேதான் எழுந்தருளச் செய்து தீபாராதனை நடத்துவார்கள். ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவத்தின் பத்தாவது தினத்தில் இந்த மண்டபத்திலேயே உத்ஸவ காமாக்ஷி, உத்ஸவ ஆசார்யாள் இரண்டு பேரையும் எழுந்தருளப் பண்ணிக் கடைசிப் பத்து ச்லோகம் சொல்லிப் பூர்த்தி செய்கிறார்கள். ஆசார்யாளுக்கு அம்பாள் ப்ரஸாத

Koviloor Digital Library

மாகப் பரிவட்டம் கட்டி மரியாதைகள் செய்து உத்ஸவத்தை முடிக்கிறார்கள்.

இதுபோல ஊர் உலகம் பூராவும் அவருக்கு நடக்க வேண்டும்.

மனத்தின் அர்ப்பணமும் மௌன மனனமும்

அது நடக்கிறபோது நடக்கட்டும். இப்போதைக்கு என்ன பண்ணணுமென்றால் ஆசார்ய ஜயந்தியன்று நம் மனசை ஆசார்யாளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும். த்ரவ்யத்தால், தேஹத்தால் உத்ஸவம் பண்ணுவதற்கு முந்தி மனஸினால் பண்ண வேண்டும். த்ரவ்யத்தையும், தேஹத்தையும் அர்ப்பித்துப் பெரிசாக உத்ஸவம் பண்ணும் போதுங்கூட மனசைப் பூர்ணமாக அவருக்குக் கொடுத்து சரணாகதி பண்ணுவதே பெரிய பூஜை. இப்படிச் சொல்வதால் வெளி உத்ஸவம் வேண்டாமென்று அர்த்தமில்லை. முழு மனஸோடுகூட வெளி உத்ஸவமும் செய்யணும்.

இப்போது* கொஞ்ச நாழி மனசை ஆசார்யாளுக்கென்றே கொடுப்போம். அவதார மஹிமை, அது, இது என்று நிறையப் பேசியும், பேசியதைக் கேட்டும் ஸந்தோஷப் படுவதைவிட, முடிந்தமட்டும் மனசை ஆசார்யாளிடம் அர்ப்பணம் பண்ணுவோம். அதுதான் பெரிய ஸந்தோஷம். மனஸில் அவரைக் கொண்டுவந்து நிறுத்திக்கொண்டு கொஞ்சம் பார்த்தோமானால் அதுவே பெரிய ஸந்தோஷம். நம்முடைய தாபமெல்லாம் சமனமாகிற பெரிய சாந்தி அது தான்.

பகவத் ஸ்மரணத்தைவிட பகவத்பாத ஸ்மரணம் அதிக சாந்தி! நல்லது, கெட்டது எல்லாவற்றுக்கும் காரணமாயிருந்துகொண்டு, கெட்டதற்காக நம்மை தண்டிக்கவும்

---

* இப்பகுதி 1960 ஆசார்ய ஜயந்தியன்று திருச்சியில் ஆற்றப்பட்ட உரையில் வருவதாகும்.

Koviloor Digital Library

செய்யும் பகவானைவிட, நல்லதே செய்துகொண்டு, நாம் எத்தனை கெட்டுக் குட்டிச் சுவராயிருந்தாலும் நம்மை உத்தரிப்பதற்கென்றே வந்த பகவத்பாதாளை ஸ்மரிப்பதே நமக்குப் பெரிய சாந்தி.

'எப்படி மனஸை அர்ப்பிப்பது, அதாவது அது கண்ட கண்டதுகளை நினைக்காமல் அவரையே எப்படி மனஸில் கொண்டுவந்து நிறுத்திக்கொள்வது?' என்றால், ஸுலபமாக வழி சொல்லித்தருகிறேன். "ஹரஹர சங்கர, ஜய ஜய சங்கர" என்று மனஸுக்குள்ளேயே சொல்லிக் கொள்வதுதான் வழி. அதன் வழியாக அவர் மனஸுக்குள் வந்துவிடுவார். "வையகம் துயர் தீர" ஞானஸம்பந்தர் காட்டிகொடுத்த வழி ஹர நாம உச்சாரணந்தானே?

ஆழ்க தீயதெல்லாம்! அரன் நாமமே
சூழ்க, வையகமுந் துயர் தீர்கவே!

அதனால் "ஹரஹர" என்று சங்கர நாமாவோடு சேர்த்துச் சொல்வோம். அவர் திக்விஜய சங்கரராக இருந்ததால் "ஜய ஜய" என்றும் சேர்த்துச் சொல்வோம். வேறே உபந்நியாஸம் வேண்டாம். புத்தி ஸாமர்த்தியங்கள் வேண்டாம்.

'எதற்கு வ்ருதாவாக (வீணாக) சாதுர்ய வாதங்கள் பண்ணிக் கண்டக்ஷோபம் (தொண்டைக்கு உபத்ரவம்) விளைவித்துக் கொள்கிறாய்! நீ புத்திசாலி இல்லையா? பேசாமல் சம்புவின் பாத பத்மங்களை நினைத்துக்கொண்டு பரமானந்தத்தை அநுபவி" என்று அந்த சம்புவின் பாதமாக வந்த பகவத்பாதாளே சொல்லியிருக்கிறார் :

வ்ருதா கண்டக்ஷோபம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பதாம்போஜம் சம்போர் பஜ பரம ஸௌக்யம் வ்ரஜ ஸுதீ :*

---

* "சிவாநந்தலஹரி" ஆறுவது ச்லோகப் பின் பாதி.

Koviloor Digital Library

"ஸூரீ :"—'நல்ல புத்தியுள்ளவனே, சமர்த்துக் குழந்தையே!' என்று கூப்பிட்டு இப்படி உபதேசம் பண்ணியிருக்கிறார். அதனால் இந்தப் புண்ய காலத்தில் வேறே உபந்நியாஸம் ஒன்றும் வேண்டாம். அதிலும் ஏதாவது மாற்று அபிப்ராயம் வரத்தான் வருகிறது. அதனால் வேண்டாம்! கொஞ்ச நாழி "ஹர ஹர சங்கர, ஜய ஜய சங்கர" என்று மனஸுக்குள் சொல்லிக்கொண்டிருப்போம். மனஸுக்குள்; வெளியில் சப்தம் வரவேண்டாம்! யோகம், த்யானம், ஸமாதி என்று முடியாவிட்டாலும் இந்த ஜபம் போதும். இதற்கே ஆசார்யாள் வந்து அநுக்ரஹம் பண்ணி விடுவார்.

ஆசார்யாள் உத்ஸவமும் இந்த மடத்துக் கைங்கர்யமும் நீங்களெல்லாம் திரவியத்தாலும் தேஹத்தாலும் செய்யணுமென்று அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். 'வருஷத்தில் ஒரு வாரம் லீவு போட்டுவிட்டு வந்தாவது மட கைங்கர்யம் பண்ணுங்கள்; வாரத்தில் week-end ஒருநாள் மடத்துக்குக் கொடுங்கள்' என்றெல்லாம் சொல்லியிருக்கிறேன். அதெல்லாவற்றையும்விட இன்றைக்கு இப்போது அஞ்சு நிமிஷம் "ஹரஹர சங்கர ஜய ஜய சங்கர" என்று மனஸை நிறுத்தி மனஸுக்குள் சொல்லிவிட்டீர்களானால் அதுதான் மஹா உத்ஸவம், மஹா பெரிய மடத்துக் கைங்கர்யம். நீங்கள் நன்றாயிருக்க, உங்களால் மடம் நன்றாயிருக்க, உங்களை மடம் நன்றாகவைக்க—எல்லாவற்றுக்கும் இந்த ஜபத்தைவிட எதுவும் வேண்டாம்! பதார்த்தத்தால், கைங்கர்யத்தால் செய்வதைவிட மனஸால் செய்வது பெரிசு.

வாய்விட்டுச் சொல்லாமல் எல்லாரும் ஒரு அஞ்சு நிமிஷம், "ஹரஹர சங்கர ஜயஜய சங்கர" என்று ஜபித்துக் கொண்டிருங்கள்—நான், "அரோஹரா" என்று சொல்கிற வரை!

[இவ்விதம் கூறிச் சில நிமிஷங்கள் எல்லோரையும் மானஸிகமாக ஜபிக்கச் செய்கிறார்கள். அதன்பின் மும்முறை "அரோஹரா" சொல்லி அவர்களையும் சொல்ல வைத்து,

Koviloor Digital Library

"கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்" என்று தாம் கூறி, "கோவிந்தா கோவிந்தா" என்று ஸபையோர் கோஷிக்க, அன்றைய உபந்நியாஸத்தை முடிக்கிறார்கள்.]

நாமகரணச் சிறப்பு

அவதாரமாகி விட்டது.

பெற்றவர்கள், ஊரில் இருந்தவர்கள் எல்லாருக்கும் ஸந்தோஷமாயிற்று.

லோகம் பூராவுமே அப்போது அநேக சுப சகுனங்கள் தோன்றியதாகவும், வைதிக விருத்தமாகப் பாஷண்ட மதங்களைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு மட்டும் ஒரே துர்நிமித்தங்களாகத் தோன்றின என்றும் "சங்கர விஜய"ங்களில் இருக்கிறது.

(பிறந்தவுடன் செய்யும் ஸம்ஸ்காரமான) ஜாதகர்மா சிவகுரு செய்தார்.

பதினோராவது நாள் புண்யாஹவாசனம் பண்ணி நாமகரணம் செய்ய எண்ணினார்கள்.

சங்கரர் என்று பிதா பேர் வைத்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

எதனால் அந்தப் பேர் வைத்தார்?

ஈச்வரனுக்கு வேண்டிக்கொண்டு ஈச்வரனின் வரப்படி தானே பிள்ளை பிறந்திருந்தது? அதனால் ஈச்வர நாமாக்களில் ஒன்றான சங்கர நாமாவை வைத்தார்.

ஈச்வரனுக்கு எத்தனையோ நாமா இல்லையா? இதைத் தேர்ந்தெடுத்து வைப்பானேன்?

பெரியோர்களாக இருப்பவர்கள் (புத்தி பூர்வமாகத்) தெரிந்து ஒன்று பண்ணாதபோதிலுங்கூட அதில் அநேக உள்ளர்த்தங்கள் இருக்கும். அந்த மாதிரி, சும்மாயிருக்கும் சம்புதான் கார்யம் செய்யும் சம்கரராக, "சங்கரம் லோக

Koviloor Digital Library

சம்-கரம்" என்னும்படியாக லோகத்துக்கெல்லாம் நல்லதைச் செய்பவராக வந்திருக்கும்போது அவருக்கு அந்தப் பெயர் தான் வைக்கணுமென்று ஏதோ ஒரு உள்ளுணர்ச்சியில் அவருடைய பிதாவுக்குத் தோன்றியிருக்கலாம்.

ஒரு வஸ்துவுக்கு ஒரு பெயர் ஏற்படுவதில் 'ரூடி' என்றும் 'யோகம்' என்றும் இரண்டு விதம் உண்டு. ஏதோ ஒரு பெயர் சொன்னால்தானே புரியும்? அதனால் அப்படி ஏற்படும் பேர் 'ரூடி'. அப்படியில்லாமல் அந்த வஸ்துவின் குணம் அல்லது அது செய்யக்கூடிய கார்யத்தை வைத்து அதற்குப் பேர் வைப்பது 'யோகம்' அல்லது 'யௌகிகம்.' இதில் அந்த வார்த்தையை தாது பிரித்து அர்த்தம் சொல்ல முடியும்.

ஒருவருக்கு ஏதாவது ஒரு பெயர் வைத்துத்தானாக வேண்டுமென்பதால் ஏதோ ஒன்றை வைப்பதை 'ரூடி' என்றும், அவருடைய குண - கர்மங்களைக் குறிக்கும் விதத்தில் வைப்பதை 'யௌகிகம்' என்றும் ஒரு தினுஸில் சொல்லலா மானால் அப்போது ஆசார்யாளுக்கு சங்கர நாமம் ரூடி, யௌகிகம் இரண்டுமாகி விடுகிறது. அப்பா பாட்டுக்குப் பேர் வைத்தார்; அதுவே அவருடைய லக்ஷணையாகவும் இருந்துவிட்டது!

'அப்பா பாட்டுக்கு வைத்தார்' என்றது அவ்வளவு ஸரி யில்லை. அவரும் ஒரு காரணத்திற்காகத்தான் அப்படி வைத்தார். நல்லதைச் செய்கிறவர் சம்-கரர் என்கிற காரணத்திற்காக அல்ல. வேறே ஒரு காரணத்திற்காக, அவதாரம் இன்ன மாஸம், இன்ன பக்ஷம், இன்ன திதி என்று ஸங்கேதமாகக் காட்டுவதற்காகப் பேரில் இன்ன அக்ஷரங் கள் இருக்கவேண்டும் என்று தேர்ந்தெடுத்து வைத்தார். சேர்த்துப் பார்த்தால் அதுவே 'சங்கர' என்றாகி ஆசார்யாளின் 'யௌகிக'ப் பேருமாகி விட்டது!

கடபயாதி ஸங்கியை

அது என்ன காரணம் என்று தெரிவதற்குக் க, ங, ச, ஞ முதலான அக்ஷரங்களைக் கொண்டு எண்ணிக்கைகளை

Koviloor Digital Library

(நம்பர்களை) நிர்ணயிக்கும் 'கடபயாதி ஸங்கியை' என்பதை பற்றிச் சொல்லவேண்டும்.

பழைய நாளில் ப்ரிண்டிங் ப்ரெஸ் என்பது இல்லை. அப்போது எல்லாவற்றையும் புஸ்தகமாகப்போட்டு, வேண்டியபோது பிரித்துப் பார்த்துக்கொள்ளலாம் என்று இருக்க முடியாது. அதனால் எல்லாவற்றையும் புத்திக் குள்ளேயே மனப்பாடம் பண்ணி ஏற்றிக்கொண்டு, ஒவ்வொருவருமே 'வாக்கிங் லைப்ரரி'களாக இருந்தார்கள். இப்படி மனப்பாடம் பண்ணுவதற்கு விஷயங்கள் செய்யுள் ரூபத்தில் இருந்தால்தான் ஸுலபம். அதனால்தான் நம் முடைய பழைய சாஸ்த்ரங்கள் எல்லாம் ச்லோகங்களாகவே இருப்பது. பக்தி சாஸ்த்ரம், ஞான சாஸ்த்ரம், தர்ம சாஸ்த்ரம், புராணம், இதிஹாஸம் எதுவானாலும் பொயட்ரி தான். ப்ரோஸே கிடையாது. மற்ற கலைகள், ஸயன்ஸுகள், கணித சாஸ்த்ரம், பரத சாஸ்த்ரம், ரஸ சாஸ்த்ரம், வாஸ்து சாஸ்த்ரம், காம சாஸ்த்ரம் எதுவாகத்தானிருக்கட்டும்— எல்லாம் ச்லோகங்கள்தான். அகராதிகூட ச்லோகங் களாகவே இருக்கிறது!

கணக்கு ஸமாசாரங்களை எப்படி ச்லோகமாகப் பண்ணு வது என்று இந்தக் காலத்தில் தோன்றலாம். ஆனால் அந்தக் காலத்தில் அதையும் பண்ணியிருந்தார்கள். கணக்கு என்றால் நடு நடுவே எண்ணிக்கைகள் நிறைய வரத்தானே செய்யும்? அவற்றை ச்லோகத்தில் எப்படிக் காட்டுவது? இதற்காகத் தான் கடபயாதி ஸங்க்யை என்பதாக ஒவ்வொரு எண்ணுக் கும் எழுத்துக்களின் மூலம் ஸங்கேதம் கொடுத்தார்கள். அந்த அக்ஷரங்களைச் சேர்த்து ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டால், வெளியில் பார்த்தால் அது வார்த்தையா யிருக்கும், உள்ளுக்குள்ளே அது பல digit-களை (ஸ்தானங் களை)க் கொண்ட ஒரு நம்பராயிருக்கும்!

க, ட, ப, ய என்ற எழுத்துக்களிலிருந்து ஆரம்பித்து இப்படி எண்ணிக்கை ஸங்கேதம் கொடுத்திருப்பதால் அதற்குக் 'கடபயாதி ஸங்க்யை' என்று பேர்.

Koviloor Digital Library

"காதி நவ; டாதி நவ; பாதி பஞ்ச; யாத்யஷ்ட" என்று என்று அதற்கு விதி வகுத்திருக்கிறார்கள்.

'காதி நவ' என்றால் 'க'விலிருந்து ஆரம்பித்து ஒன்பது எழுத்துக்கள். ஸம்ஸ்க்ருதத்தில் ka, kha, ga, gha என்று 'க' வர்க்கத்திலேயே நாலு. அப்புறம் 'ங'. அதற்கப்புறம் 'ச'— அதிலேயும் cha, chha, ja, jha என்று நாலு. இப்போது 'க'வரிசை நாலு, 'ங', 'ச'வரிசை நாலு ஆகியவற்றைக் கூட்டினால் ஒன்பதாகிறது: "காதி நவ". க முதற்கொண்டு ஒன்று, இரண்டு என்று அந்த ஒன்பது எழுத்துக்களுக்கும் நம்பர் கொடுக்கணும். ka-ஒன்று; kha-இரண்டு; ga-மூன்று; gha-நான்கு; ங-ஐந்து; cha-ஆறு; chha-ஏழு; ja-எட்டு; jha-ஒன்பது. Ka முதற்கொண்டு jha வரையில் 'காதி நவ' என்பதான ஒன்று முதற்கொண்டு ஒன்பது வரை.

அடுத்தது 'டாதி நவ'. அதாவது 'ட' முதற்கொண்டு ஒன்பது எழுத்து. ta-ஒன்று; tha (ட்ட)-இரண்டு; da-மூன்று; dha (ட்ஹ)-நான்கு; ண-ஐந்து: tha (த)-ஆறு; thha (த்த)-ஏழு; dha (த)-எட்டு; dhha (த்ஹ)-ஒன்பது.

'பாதி பஞ்ச' என்றால் 'ப' முதற்கொண்டு ஐந்து எழுத்து: pa, pha, ba, bha, ma என்பவை. முறையே இவை 1, 2, 3, 4, 5 என்பவற்றைக் குறிக்கும்.

'யாத்யஷ்ட' என்பது 'யாதி அஷ்ட'. 'ய'விலிருந்து எட்டு எழுத்து என்று அர்த்தம். ய-ர-ல-வ-ச (cha இல்லை; 'சங்கர'வில் வரும் 'ச')-ஷ-ஸ-ஹ என்ற எட்டு எழுத்துக்கள். ய-ஒன்று; ர-இரண்டு......ஹ-எட்டு.

இப்போது இம்மாதிரி எழுத்துக்களைக் கொண்ட வார்த்தைகளால் எண்ணிக்கைகளை எப்படிக் குறிப்பது, புரிந்துகொள்வது என்பதற்கு உதாஹரணம் சொல்கிறேன்.

'ஜய' என்ற வார்த்தையை எடுத்துக்கொள்வோம். ஜய சப்தம் எப்போதுமே மங்களமானது, ஆசார்யாளோடு அது விசேஷமாகப் பொருந்துவது என்பதோடு, அது ('ஜய'

Koviloor Digital Library

என்பது) ஒரு எண்ணிக்கையாகக் கடபயாதி ஸங்க்யையில் சொல்லப்படுவதால் அதை எடுத்துக்காட்டாகப் பார்ப்போம்.

.'ஜய' என்பதில் 'ஜ' என்பது 'காதி நவ', 'டாதி நவ' முதலானவற்றில் எங்கே வருகிறது, அதற்கு என்ன வால்யூ (அதாவது எண்ணிக்கை) என்று பார்த்தால், அது முதலாவதான 'காதி நவ'விலேயே, ka - kha-ga-gha-ங-cha-chha-ja என்பதாக, எட்டாவதாக வந்து விடுகிறது. அதாவது அது 8 என்ற எண்ணைக் குறிக்கிறது.

'ய' என்பது 'யாத்யஷ்ட' என்பதில் முதல் எழுத்து; அதாவது 1 என்ற எண்ணைக் குறிப்பதாக இருக்கிறது.

ஆகையால் ஜ-ய என்றால் 8-1 என்று வருகிறது.

ஆனால் இந்த ஸங்க்யையில் இன்னொரு ரூல் இருக்கிறது. அதன்படி எண்களைத் தலைகீழாக மாற்றிச் சொல்லவேண்டும். "அங்கானாம் வாமதோ கதி:" என்பது அந்த ரூல். 'அங்க' (anka) என்றால் எண்ணிக்கை. 'வாம' என்றால் எதிர்ப் பக்கம், 'reverse-ஆக' என்று அர்த்தம். அதாவது கடபயாதிப்படி வரும் பல ஸ்தான எண்ணிக்கையை தலை கீழாக மாற்றிச் சொல்லவேண்டும். 123 என்று வந்தால் அதை 321 என்று திருப்பிப்போட வேண்டும்......

பகவத்கீதையில் த்யானத்திற்காக ஆஸனம் போட்டுக் கொண்டு ஜபம் பண்ணுவதைச் சொல்லும்போது "சைலாஜிந-குசோத்தரம்" என்று பகவான் சொல்கிறார்.* 'சைலம்', 'சேலம்' என்றால் துணி. 'சேலை' என்று அதிலிருந்து தான் வந்தது. 'அஜினம்' என்றால் தோல், அதாவது மான்தோல் அல்லது புலித்தோல். 'குசம்' என்றால் தர்ப்பை. 'சைலாஜினகுசம்' என்று அதே ஆர்டரில் வைத்துக் கொண்டால் ஆஸனமாக முதலில் பூமியில் துணியையும், அதற்குமேலே தோலையும், எல்லாவற்றுக்கும் மேலே

* VI. 11

Koviloor Digital Library

தர்ப்பையையும்போட்டுக்கொண்டு உட்காரவேண்டுமென்று ஏற்படும். இப்படி உட்கார்ந்தால் என்ன ஆகும்? தர்ப்பை குத்தி அறுக்கும். அடியிலிருக்கிற தோல்வேறே உறுத்தும். அப்புறம் த்யானத்திலா மனஸு நிற்கும்? அதனுல் இங்கே ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது, ஆர்டரைத் தலைகீழாக மாற்றி, முதலில் பூமிமேல் தர்ப்பையைப் பரத்தி, அப்புறம் அதற்குமேல் மான்தோலோ புலித்தோலோ போட்டு, கடைசியாக ஒரு வஸ்த்ரத்தை எல்லாவற்றுக்கும் மேலே விரித்துக்கொண்டு உட்காரவேண்டும் என்று 'ரிவர்ஸ்' பண்ணிக் கொடுத்திருக்கிருர். இங்கே தலைகீழாக அர்த்தம் செய்யவேண்டியிருப்பது போலத்தான் அந்த ஸங்க்யையில் எண்களை மாற்றிப் போடவேண்டும்.

அப்படிப் பண்ணும்போது 81 என்று ('ஜய'வுக்கு எண்ணிக்கை) சொன்னது 18 என்ருகும். "ஜய" என்ருல் பதினெட்டு.

18 ஜயப்ரதமான எண்ணிக்கை. அதனுல் அந்த உதாஹரணம் காட்டினேன்.........

மேளகர்த்தா ராகங்கள் என்று கேள்விப்பட்டிருக்கலாம். ஸம்பூர்ணமாக ஸப்த ஸ்வரங்களையும் ஆரோஹண அவரோஹணங்களில் கொண்ட 72 ராகங்களுக்கு அப்படிப் பேர். அடுத்தடுத்த ராகங்களுக்கிடையில் ஒரே ஒரு ஸ்வரம் வித்யாஸப்படும் விதத்தில் அந்த 72 ராகங்களையும் வரிசைப் படுத்தியிருக்கிறது. வேங்கடமகி என்ற பெரியவர் அப்படி வரிசைப்படுத்தினுர். அவர் யாரென்ருல் தஞ்சாவூர் நாயக் ராஜ்யம் ஏற்பட மூல புருஷராயிருந்தவரும், அநேக தர்மங்களையும் மஹாதானங்களையும் செய்தவரும், அத்வைத வித்யாசார்யர்களில் ஒருவருமான கோவிந்த தீக்ஷிதர் என்பவரின் புத்ரர்.

மேளகர்த்தா ராகங்கள் 72-ல் எந்த ராகம் எத்தனுவது என்று கண்டுபிடிக்க வசதியாக அந்த ராகங்களின் பெயர் ஆரம்பத்தில் கடபயாதி ஸங்க்யைப்படிதான் இரண்டு எழுத்துக்கள் இருக்கும். இப்படி ஸரியாய் வரவேண்டு

Koviloor Digital Library

மென்றே சங்கராபரணம், கல்யாணி என்பது போலுள்ள பெயர்களை 'தீர' சங்கராபரணம், 'மேச' கல்யாணி என்றெல்லாம் முதலில் இரண்டு எழுத்துச் சேர்த்துச் சொல்லியிருக்கும். 'தீ-ர' என்பது சங்கராபரணம் எத்தனுவது மேளமோ அந்த நம்பரைக் குறிப்பிடும். 'மே-ச' என்பது கல்யாணியின் மேள நம்பரைக் குறிப்பிடும்*....

கடபயாதியில் ஸித்தி நாள்

ஆசார்யாள் அவதார தினத்தில் இந்த ஸங்கியையின் ஸம்பந்தத்தைச் சொல்வதற்குமுன் அவர் ஸித்தியடைந்த புண்யதினம் பற்றி 'கடபயாதி' சொல்கிறேன் :

ஆசார்யாள் உள்பட இந்த (காஞ்சி) மடத்தில் ஸ்வாமிகளாக இருந்தவர்களுடைய ஸித்தி தினங்களை வரிசையாகத் தெரிவிப்பதாக "புண்யச்லோக மஞ்ஜரி" என்று ஒரு புஸ்தகம் இருக்கிறது. அதில் 55வது பீடாதிபதிகள்வரை ஒவ்வொருவருடைய பேர், ஊர், ஸித்தி அடைந்த இடம், ஸித்தியான காலம் முதலியவை ச்லோகங்களாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கப்புறம், ஐந்தாறு ஸ்வாமிகளுக்கு அப்புறம் வந்த ஒரு பெரியவர் அதற்குப் 'பரிசிஷ்டம்' என்பதான 'ஸப்ளிமென்ட்' (பிற்சேர்க்கை) ஒன்று எழுதி 56-லிருந்து 60 முடியவான ஐந்து ஸ்வாமிகளைப் பற்றியும் இதே போலப் புண்ய ச்லோகங்களைக் கொடுத்திருக்கிறார்.

(மூல நூலான 'புண்ய ச்லோக மஞ்ஜரி'யில்) ஆசார்யாளின் ஸித்தி தினத்தைச் சொல்லும் புண்ய ச்லோகம் :

---

* "தீ (dhhee) ர" என்பதில் "தீ" என்பது "த" (dhha)-வின் அடியாக வருவது. Dhha என்பது 'டாதி நவ'வில் 9-ஐக் குறிக்கும். 'ர' என்பது 'யாத்யஷ்ட'ப்படி 2. எனவே தீ-ர என்பது 9-2. தலைகீழாக்கினல் 29. சங்கராபரணம் 29-வது மேளம்.

'மேச' என்பதில் 'மே' என்பது 'ம'வில் பிறப்பது. 'ம' என்பது 'பாதிபஞ்ச'வில் 5. 'ச' (cha) என்பது 'காதி நவ'வில் 6. மே-ச என்பது 5-6. முன்பின்னாக மாற்ற 56 அதுவே கல்யாணியின் மேள எண்.

Koviloor Digital Library

மஹேசாம்சாத் ஜாத : மதுரம் உபதிஷ்டாத்வய நய :
மஹா-மோஹ-த்வாந்த ப்ரசமந ரவி: ஷண்மதகுரு : |
பலே ஸ்வஸ்மிந் ஸ்வாயுஷி சரசராப்தே(அ)பிசகலே
விலில்யே ரக்தாக்ஷிண்-யதிவ்ருஷ ஸிதைகாதசி-பரே ||

(இதில்) முதல் பாதி ஆசார்ய மஹிமையைச் சொல்வது. ஈச்வராம்சமாக பிறந்தது, அத்வைதத்தைத் தம் பாஷ்யத்தால் மதுரமாக்கி உபதேசித்து, ஷண்மத ஸ்தாபனம் செய்து, அஞ்ஞான இருட்டைப் போக்கி ஞான ஸூர்யனாக ப்ரகாசித்தது ஆகியற்றைச் சொல்லியிருக்கிறது.

பின்பாதியில்தான் நம் ஸங்கியை ஸமாசாரம் வருகிறது.

ரக்தாக்ஷி வருஷத்தில் வ்ருஷ மாஸமாகிய வைகாசியில் சுக்லபக்ஷ ஏகாதசியில் ஸித்தியடைந்தாரென்று கடைசி வரியில் plain - ஆகவே சொல்லியிருக்கிறது. ரக்தாக்ஷி என்றால் அறுபது வருஷத்திற்கொரு தடவை வருமே, எந்த ரக்தாக்ஷி—என்பதைக் கலியுகத்தில் இத்தனாவது வருஷமாக இருந்த ரக்தாக்ஷி என்று மூன்றாவது வரியில் தெளிவுபடுத்தியிருக்கிறது; ஸித்தியானபோது அவருடைய வயஸு என்ன என்றும் சொல்லியிருக்கிறது. இந்த இரண்டு எண்ணிக்கைகளையும்தான் கடபயாதி ஸங்க்யையில் வார்த்தைகளாகக் கொடுத்திருக்கிறது.

'சரசராப்தே' (saracharaabde) என்பதில் 'ச (sa)-ர-ச (che)-ர' என்ற வார்த்தைதான் கலியில் எத்தனாம் வருஷம் என்ற எண்ணிக்கையைச் சொல்வது. 'ச(sa)ர' என்றால் அம்பு. 'ச(cha)ர' என்றால் போவது. இப்படி ஏதோ வார்த்தைமாதிரி இருந்தாலும் உண்மையில் அது கடபயாதியில் ஒரு நம்பரைத் தெரிவிப்பதே. 'காதிநவ' ஸூத்ரத்தின் படிக் கொஞ்சம் கணக்குப்போட்டுப் பார்க்கலாம்.

'ச' (sa) என்பது 'யாத்யஷ்ட'வில் ய-ர-ல-வ-ச என்று ஐந்தாவதாக வருகிறது. அதாவது அது 5. 'ர' என்பது ய-ர என்று இரண்டாவதாக வருகிறது. அது 2. 'ச' (cha)

Koviloor Digital Library

'காதிநவ'வில் ka-kha-ga-gha-ங-cha என்று வந்து 6 என்ற நம்பரைக் கொடுக்கிறது. கடைசி 'ர'வும் 2 தான். சேர்த்துப் பார்த்தால் ('சரசர' என்பது) 5262 என்றுகிறது. அதைத் தலைகீழாக்கணும் அல்லவா? அப்போது 2625 என்று கிடைக்கிறது. அதாவது கலி பிறந்து 2625 வருஷமாக வந்த ரக்தாக்ஷியில் வைகாசி சுத்த ஏகாதசியில் ஆசார்யாள் அவதாரத்தை முடித்தார் என்றுகிறது.

ஒரு காலத்தைத் குறிப்பிட எழுத்துக்களையே எண்களாக்கி 'சரசர' என்பதுபோன்ற வார்த்தைகளாகச் சொல்வதுபோலவே மேல் நாட்டிலும் உண்டு என்று தெரிகிறது. அதை chronogram என்கிறுர்கள். 'ரோமன் ந்யூமரல்' கள் என்று சொல்லப்படும் இலக்கங்களில் I என்பது, 'ஒன்று' ஆகவும் 'ஐ' என்ற எழுத்தாகவும் இருக்கிறது; V என்பது 5 என்ற இலக்கமாகவும், 'வி' என்ற எழுத்தாகவும் இருக்கிறது; X என்பது 10 என்ற இலக்கமாகவும் 'எக்ஸ்' என்ற எழுத்தாகவும் இருக்கிறது. இன்னும் இப்படிப் பல இருக்கின்றன. இப்படியுள்ள எழுத்துக்களை வைத்தே வார்த்தைகளை அமைத்து எண்ணிக்கையைக் குறிப்பிடும் chronogram-களை உண்டாக்குகிறுர்களென்று தெரிகிறது.

தமிழிலேகூட 'க' என்றுல் 1, 'உ' என்றுல் 2, 'ரு' என்றுல் 5 என்று இருக்கிறது. 'அவலக்ஷணமே!' என்பதை அவ்வை இந்த ஸங்கேதத்தில்தான், 'எட்டேகால் லக்ஷணமே' என்றுள். அ-8; வ-¼.

ஆசார்யாள் ஸித்தியானது கலியுகத்தின் 2625-வது வருஷம் என்று பார்த்தோம். கலி கி.மு. 3102-ல் பிறந்தது. கலியில் 2625-வது வருஷம் என்றுல் கி.மு. 477 ஆகும்.

அப்போது அவருக்கு என்ன வயஸு என்பதை "பலே ஸ்வஸ்மின் ஸ்வாயுஷி" என்று சொல்லியிருக்கிறது. 'பலே' என்பதில் வரும் 'பல' என்பதில் ஒரு சிலேடை இருக்கிறது. 'ப-ல' என்ற இரண்டு எழுத்துக்கள் இரண்டு எண்களைக்

Koviloor Digital Library

குறிப்பதாகக் கொள்ளும்போது, 'தன்னுடைய ஆயுளில் அந்த எண்ணிக்கை கொண்ட வயஸில்' என்று அர்த்தம். 'விலில்யே' : லயமடைந்தார், அந்த வயதில் தமது நிஜஸ்வரூபமான ப்ரஹ்மத்தில் லயித்துவிட்டார் என்று அர்த்தம் கொடுக்கும்.

'பல' என்பதற்கு இன்னொரு அர்த்தம் 'பழம்' என்பது. ஒரு விதை போட்டால் அதிலிருந்து முளைவிட்டு, செடியாகி, மரமாகி, கடைசியில் முடிவான பலனாக எது வருகிறதோ அதுதான் பலம் என்னும் பழம். அப்படி, தம்முடைய ஆத்மாவாகவே உள்ள முடிவான பலனில் லயித்துவிட்டார் என்பது இன்னொரு அர்த்தம். "பலே ஸ்வஸ்மின்": தன்னிலேயே பலன், தான் தானாயிருப்பதிலேயே நிறைவு! யஜ்ஞம், தானம், தபஸ், பக்தி, ஞானம், இன்னம் என்னவெல்லாம் உண்டோ அத்தனைக்கும் பலமான தம்முடைய பரமேச்வர ஸ்வரூபத்திலேயே லயமடைந்துவிட்டார் என்று அர்த்தம்.

'பல' (phala) என்பது எண்ணிக்கையாக இருக்கும் போது என்னவென்று பார்க்கலாம். 'ப' (pha) என்பது 'பாதி பஞ்ச' என்றதில் pa-pha என்று 2-ம் நம்பரைக் குறிக்கிறது. 'ல' என்பது 'யாத்யஷ்ட'லில் ய-ர-ல என்பதாக 3-ம் நம்பராயிருக்கிறது. இரண்டையும் சேர்த்தால் 23. இதை மாற்றிப் போட்டால் 32.

தம்முடைய முப்பத்திரண்டாவது வயஸில் ஜீவ யாத்ரையை முடித்து லயமாகி விட்டாரென்று தெரிந்து கொள்கிறோம்.

அவதார நன்னாள்

ஸித்தி தினத்திலிருந்து அவதார தினத்துக்குத் திரும்பலாம். கி.மு 477-ல் ஸித்தி. அப்போது 32 வயஸு என்றால் அவதாரம் கி.மு. 477 ப்ளஸ் 32-ல். அதாவது கி.மு. 509-ல் ஆசார்யாளின் அவதாரம்.

Koviloor Digital Library

ஸித்தி ரக்தாக்ஷி வருஷம் என்றும், அவதாரம் நந்தன வருஷம் என்றும் புஸ்தகங்களில் இருக்கிறபடியே கி.மு. 477 ஒரு ரக்தாக்ஷியாகவும், கி.மு. 509 ஒரு நந்தனவாகவும் இருக்கின்றன. தற்போது நடக்கிற 60 வருஷ ஸைகிளில் இந்த (ரக்தாக்ஷி, நந்தன) வருஷங்கள் வருவது கிறிஸ்து சகாப்தப்படி எந்தெந்த வருஷம் என்று பார்த்து அறுபது அறுபதாகப் பின்னால் தள்ளிக் கணக்குப் போட்டுப் பார்த்தீர்களானால் தெரியும்.

ஒருவர் பிறக்கும் மாஸம், பக்ஷம், திதி ஆகியவற்றைக் கடபயாதி ஸங்க்யையில் குறிப்பிட்டே அவருக்கு நாமகரணம் செய்வதாக மலையாளத்தில் ஒரு வழக்கமுண்டு.

அங்கே ராஜாக்களுக்கு அவர்களுடைய ஜன்ம நக்ஷத்ரத்தையே பேராகச் சொல்வதுண்டு என்று தெரிந்திருக்கலாம். இப்போது (1960-ல்) இருக்கும் மஹாராஜா சித்திரைத் திருநாள். அதாவது அவர் சித்ரா நக்ஷத்ரத்தில் பிறந்தவர். இவருக்கு முந்தி இருந்தவர் மூலம் திருநாள். அதற்கும் முந்தி விசாகம் திருநாள் இருந்தார். ஸ்வாதித் திருநாள் பெயர் செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யரால் எல்லாருக்கும் தெரிந்தது. அவர் ஸ்வாதி நக்ஷத்ரத்தில் பிறந்தவர். திருவனந்தபுரம் மஹாராஜாவாக இருந்ததோடு ஸாஹித்ய கர்த்தாவாகவும் இருந்தார். இதெல்லாம் நக்ஷத்ரத்தை மாத்ரம் அப்படியே குறிப்பிட்டு வைத்த பெயர். இப்போது நான் சொன்னது ஸங்கேதமாக மாஸம்-பக்ஷம்-திதிகளை வைத்து நாமகரணம் செய்வது.

ஆசார்யாளுக்கு இந்த முறையில் பேர் வைக்க அப்பா, இன்னும் ஊர்ப் பெரியவர்கள் எல்லோரும் நினைத்தார்கள். அவர் பிறந்தது வைகாசி, அதாவது, இரண்டாவது மாஸம். அது சுக்லபக்ஷம். இரண்டு பக்ஷங்களில் சுக்லபக்ஷம் ஒன்று, க்ருஷ்ணபக்ஷம் இரண்டு. ஆசார்யாள் ஜனனம் ஒன்றாவது பக்ஷம். அன்றைக்குத் திதி பஞ்சமி. அதாவது, ஐந்து. ஆகவே, 2-1-5. அதையே தலைகீழாக்கி 5-1-2 என்பவற்றைக் கடபயாதி முறையில் குறிப்பிடும் அக்ஷரங்களைச் சேர்த்து

Koviloor Digital Library

அவருக்குப் பெயராக வைத்துவிட வேண்டும் என்று நினைத்தார்கள். அது 'சரசா' என்று (2625-ஐ) சொன்ன மாதிரி தெளிவாக அர்த்தம் தராத எழுத்துத் தொகையாக இருக்கப்படாது; "பல" என்று (32-ஐயும், பலனையும் ஒருங்கே குறிப்பதாகச்) சொன்னதுபோல் அர்த்தமுள்ள வார்த்தையாகவும், அதாவது வாஸ்தவத்திலேயே மநுஷர்களுக்கு வைக்கும் தெய்வப் பெயராகவும் இருக்கவேண்டும்—என்றும் நினைத்தார்கள்.

அப்படி ஸெலக்ட் பண்ணியதுதான் "சங்கர" என்பது.

2-ம் மாஸம், 1-ம் பக்ஷம், 5-ம் திதி என்பதைத் திருப்பி 5-1-2 என்பதற்கான எழுத்துக்களைக் கொண்டுதானே இந்தப் பெயரை வைத்ததாகச் சொன்னேன்? அதெப்படி என்று பார்க்கலாம். 'சங்கர' என்பதில் மெய்யெழுத்தான 'ங்'கை நீக்கிவிடவேண்டும். இந்த ஸங்க்யையில் எப்போதும் மெய்யெழுத்துக்கு வால்யூ கிடையாது. அதைத் தள்ளிவிட வேண்டும். அப்படிச் செய்தால் ச-க-ர என்று மூன்று எழுத்துகள் நிற்கின்றன. 'ச' என்பது 'யாத்யஷ்ட' பிரகாரம் ய-ர-ல-வ-ச என்று 5-ஐக் குறிப்பிடுகிறது. அதுவே பஞ்சமித் திதி. 'க' என்பது 'காதிநவ'வில் முதலாவது எழுத்து. அதனால் அது 1—ஒன்றுவது பக்ஷமான சுக்லபக்ஷத்தைக் காட்டுவது. 'ர' என்பது 'யாத்யஷ்ட' ப்ரகாரம் ய-ர என்பதாக 2. அதுதான் இரண்டாவது மாஸமான வைகாசி.

பரமேச்வரன் இப்படியொரு ஸமயத்தில் போய்ப் பிறந்தாலே, தான் லோக சங்கரனாக விளங்கப் போவதற்குப் பொருத்தமாகப் பேர் வைப்பார்கள் என்று திட்டம் போட்டே அவதார தினத்தை அமைத்துக் கொண்டிருக்கிறான்!

சங்கர ஜயந்தி எல்லா ஜயந்திகளிலும் விசேஷம்தான் என்று 'ப்ருவ்' பண்ணுவதுபோல, ஜயந்தியே "சங்கர" என்று அமைந்திருக்கிறது!

Koviloor Digital Library

சங்கர ஜயந்தி; ஜயந்தியே 'சங்கர'!

'சம்'மைச் செய்வது; ப்ரத்யக்ஷச் சான்று

பரமசிவாவதாரமானதால் சிவநாமாவான 'சங்கர'. வைசாக-சுக்ல-பஞ்சமி அவதார தினம் என்று காட்ட 'சங்கர'. 'சம்' என்ற உசந்த சாந்தத்தை உண்டாக்குவதால் 'சங்கர'. ப்ரேமையினால் விளையும் உசந்த சாந்தம்.

மூன்றாவதாகச் சொன்னது எத்தனை நிஜமென்பதற்கு இப்போது நாம் கூடியிருக்கும் இந்தக் கூட்டமே ப்ரத்யக்ஷமான ஸாக்ஷி. அத்தனை பேருக்கும் எத்தனை சாந்தியாயிருக்கிறது? ப்ரேமை நிரம்பியிருக்கிறது? அவர் நேரில் இல்லை. மறைந்து போய் 2500 வருஷமாகப்போகிறது. ஆனாலும் நினைக்கும்போதே, நினைக்கும்போதெல்லாம், பரம சாந்தியைத் தரும் பரம புருஷனாக இருக்கிறார்! இதே மாதிரி ஸினிமாவிலும் கூட்டம் சேர்கிறது. ஆனால் சாந்தி உண்டா? ப்ரேமை உண்டா? இல்லை. காமத்தில் கிளறிவிட்டு அசாந்தி உண்டுபண்ணுவதாகவே இருக்கும். அரசியல் கூட்டம் என்றாலும் நிறைய ஜனங்கள் சேர்கிறார்கள். ப்ரேமை உண்டா? சாந்தி உண்டா? இல்லை. எந்தக் கட்சியையாவது, கொள்கையையாவது திட்டி க்ரோதத்தைக் கிளறிவிடுவதாகவே இருக்கும். ஹர்த்தால், டெமான்ஸ்ட்ரேஷன் என்று ஊரின் சாந்தியையும் குலைப்பதற்குத் தூண்டுவதாகவே இருக்கும். இங்கே இத்தனை உத்ஸவப் பரபரப்பிலும் மனஸுக்குள் பரம சாந்தியாயிருக்கிறது. "சம் கரோதீதி சம்கர:"—இன்பத்தில் பெரிய இன்பமான 'சம்' என்னும் சாந்தியை உண்டுபண்ணுவதால் சங்கரர் என்ற பேர்—என்பதற்கு proof-ஆக இந்தக் கூட்டமே இருக்கிறது! இதைவிட பாக்யம் என்ன இருக்கிறது? பணத்திலும் பதவியிலும் இது இல்லை. அவை ஏற ஏற, இருக்கிற சாந்தியும் போய்விடும்! ஆசார்யாளை நினைத்தால் க்ஷணமானாலும் சட்டென்று ஒரு சாந்தி! நினைக்கணுமே! அதற்காகத்தான் உத்ஸவம் பண்ணுங்கள், எல்லாவற்றையும் விடப் பெரிய உத்ஸவமாகப் பண்ணுங்கள் என்கிறேன்.

Koviloor Digital Library

வஸந்தகால வைசாக மாதப் பொருத்தம்

ஆசார்யாள் அவதரித்தது வஸந்த காலம். மஹாத்மாக்கள் வஸந்த காலம் மாதிரி ப்ரதிப்ரயோஜனமே எதிர்பார்க்காமல் லோகத்துக்கு ஹிதம் செய்கிறார்கள் என்று சொன்னவர் அவர்*. அவரும் அப்படிப்பட்டவர் தான். அவர் அவதாரம் பண்ணியது வஸந்த ரிதுவாக இருக்கிறது!

அவர் பிறந்த மாஸம் வைசாகம்—நாம் வைகாசி என்பது. வைசாகம் என்றால் சாகை (கிளை) இல்லாதது. மரம் செடி என்றால் கிளை உண்டு. கொடிதான் கிளையில்லாதது.

வைசாகத்திற்கு மாதவ மாஸம் என்றும் ஒரு பெயர் உண்டு. சைத்ர மாஸம் 'மது'; வைசாகம் 'மாதவம்'. மாதவி என்பது மல்லிகையின் பெயர். கிளையில்லாமல் மல்லிகைக் கொடியும் 'வைசாக'மாக இருப்பதால், அந்த மாஸத்தின் இரண்டு பேரும் மல்லிகை ஸம்பந்தமுள்ளதாயிருக்கிறது. அது மாத்ரமில்லை. 'வஸந்தம்' என்பதன் அடியாகப் பிறப்பது 'வாஸந்தி' என்ற வார்த்தை. வாஸந்தி என்றும் மல்லிகைக்கே இன்னொரு பெயர்கூட இருக்கிறது.

இப்படி ஒரே மல்லிகை ஸம்பந்தத்தோடு ஆசார்யாளின் அவதார காலம் இருப்பது ரொம்பவும் பொருத்தந்தான். வெள்ளை வெளேரென்று சுத்த ஸத்வ ரூபமாக மல்லிகை இருக்கிறது. வெயில் காலத்தில் குளிர்ச்சி தருவதாகப் புஷ்பிக்கிறது. ஆசார்யாள் ஸம்ஸார வெயிலில் குளிர்ச்சி தருகிற ஒரு பெரிய மல்லிகையாக, சுத்த ஸத்வ அவதாரமாக வந்தவர்.

ஞான மல்லிகையாக வந்து லோகத்துக்கெல்லாம் ப்ரேமை என்கிற 'சம்'மின் ஸுகந்தத்தைச் செய்த சம்கரரின்

---

* இப் பகுதியில் "குருமூர்த்தியும் த்ரிமூர்த்திகளும்" என்ற உரையில் "ஆசார்யாள் அளிக்கும் ஆசார்ய லக்ஷணம்" என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

ஜயந்தியே வஸந்த மாதவ ஜயந்தியாயிருக்கிறது. அது நம் மனஸை எல்லாம் சுத்த வெளுப்பாக்கட்டும்! அன்பின் மணத்தினுல் நம் மனஸை நிரப்பட்டும்! அன்பான சிவத்திலேயே ஊறிப்போய் சாந்தமான சிவஞானத்தை நாம் அடையும்படி அநுக்ரஹிக்கட்டும்!

ஞான வெளுப்பில் லயம் அடையவைக்கும் ப்ரேமையின் ஸுகந்தம்! ஸுகந்தத்தை உள்ளே தீர்க்கமாக இழுப்பது அப்படியே ப்ராணுயாமமாகி லயத்தை உண்டாக்குவது தானே?

மல்லிகை ஸம்பந்தம் மேலும் சொல்கிறேன் : மடத்தில் ஸ்ரீமுகம் கொடுக்கும்போது முதலில் ஆசார்யாளைப் பற்றி வர்ணிக்கிற வாசகம் நீளமாக வரும். அதன் நடுவில் "அதுலித ஸுதாரஸ மாதுர்ய கமலாஸன-காமிநீ தம்மில்ல ஸம்புல்ல மல்லிகா மாலிகா நிஷ்யந்த மகரந்த ஜரீ ஸௌவஸ்திக வாக் விஜ்ரும்பணுநந்த துந்திலித மநீஷி மண்டலாநாம்" என்று வருகிறது. என்ன அர்த்தமென்றால் : கமலாஸனரான ப்ரஹ்மாவின் காமினியாக ஸரஸ்வதி தேவி இருக்கிறளே, அவளுடைய 'தம்மில்லம்' என்னும் கூந்தல் அலங்காரத்தில் மல்லிகை ஸரங்களை அணிந்திருக்கிறள். அவற்றிலிருந்து பொழியும் தேன் பெருக்கும் நிகராகாது என்னும்படியாக அப்படிப்பட்ட அம்ருத ரஸம் போன்ற அருமையான வாக்கை ஆசார்யாள் ஆனந்தமாக மலர்த்திக் கொண்டு வித்வத் ஸமூஹத்தையெல்லாம் பூரிக்கும்படிச் செய்கிறராம்!

ஆசார்யாளுடைய ஸர்வஜ்ஞத்வம் லோகத்திற்குத் தெரிவதற்காக ஸரஸ்வதியே அவரிடம் வாக்குவாதம் பண்ணித் தோற்றுப் போய்க் காட்டினுள். அவளை சாரதா பீடம் என்று ச்ருங்கேரியில் ஸ்தாபித்து அதில் ஸாந்நித்யத்துடன் இருக்கும்படியாக ஆசார்யாள் அமர்த்தினுர். பத்து விதமான ஸந்நியாஸப் பிரிவுகளில் அவளுடைய பெயரிலேயே பாரதி, ஸரஸ்வதி என்று இரண்டை வைத்தார். ச்ருங்கேரியில் பாரதி ஸந்நியாஸிகள். இங்கே (காஞ்சி மடத்

Koviloor Digital Library

தில்) ஸரஸ்வதி ஸந்நியாஸிகள். ஸரஸ்வதி ஸந்நியாஸிகளி லேயே இரண்டு ஸம்ப்ரதாயங்கள்—ஆனந்த ஸரஸ்வதி யென்றும், இந்த்ர ஸரஸ்வதியென்றும். இந்த மடம் இந்த்ர ஸரஸ்வதி ஸம்ப்ரதாயம். ச்ருங்கேரியில் பீடத்திற்குப் பேர் சாரதா பீடம். இங்கே நம் மடத்திற்குப் பேர் சாரதா மடம். ஸரஸ்வதி வெள்ளை வெளேரென்று மல்லிகை மாதிரி இருப்பவள். அவள் சூட்டிக்கொண்டுள்ள மல்லிகையின் மாதுர்யத்தையும் மிஞ்சுவதாக இருக்கிறதாம் ஆசார்யாள் வாக்கு! மல்லிகை மாஸத்தில் பிறந்தவரின் வாக்விசேஷம்!

ஸ்ரீசைலம்; "அர்ஜுன" க்ஷேத்ரங்கள்

அவருக்கு மூலமான பரமசிவனுக்கும் மல்லிகை ஸம்பந்தம் அதிகம் உண்டு. அவனே வெள்ளை வெளே ரென்று மல்லிகைபோல இருப்பவன்தான். மல்லிகார்ஜுனன் என்றே பெயர் வைத்துக்கொண்டிருக்கிறுன். அந்தப் பெயரில் அவன் இருக்கிற க்ஷேத்ரம் ஸ்ரீசைலம். அந்த ஸ்ரீசைலத்திடம் ஆசார்யாளுக்குத் தனியானதொரு அபிமானம். 'சிவாநந்த லஹரி'யில் அவர் ஸ்ரீசைலத்தை விசேஷமாகக் குறிப்பிட்டு ஸ்துதித்திருக்கிறுர். நூறு ச்லோ கங்கள்கொண்ட அந்த ஸ்துதியில் நடுமையமாக உள்ள 50, 51-வது ச்லோகங்களில் ஸ்ரீசைல மல்லிகார்ஜுனரைச் சொல்லியிருக்கிறுர். பக்தி ஸ்தோத்ரமாகச் செய்த 'சிவா நந்தல ஹரி'யில் ஹாம சிவ க்ஷேத்ரமான ஸ்ரீசைலத்தைச் சொல்லியிருப்பது ஓரளவு எதிர்பார்க்கக்கூடியதே. இதை விட விசேஷம்—ஒரே யோகமாக, ஞானமாக அவர் பண்ணி யுள்ள 'யோக தாராவளி' என்ற ப்ரகரணத்தில்கூட, ஸ்ரீ சைலத்தைக் குறிப்பிட்டிருப்பதுதான். "எப்போது என் உடம்பைச் சுற்றிக்கொண்டு கொடிகள் படர்ந்துகொண்டும், காதிலேயே பக்ஷிகள் கூடு கட்டிக்கொண்டும் இருக்கும்படி தன்னை மறந்து ஸமாதியில் முழுகி உட்கார்ந்துகொண்டிருப் பேன்?" என்று அதிலே கேட்கும்போது, "இந்த மாதிரி ஸ்ரீசைல மலையுச்சிக் குஹையில் எப்போது உட்கார்ந்திருப்

Koviloor Digital Library

பேன்?" என்றே கேட்கிறார்! "ஸ்ரீ சைல ச்ருங்க குஹரேஷு" என்கிறார்*.

மல்லிகையாக ஈச்வரனே இருக்கிறான்—ஸ்ரீசைலத்தில். அந்த மல்லிகைக் கொடி அர்ஜுன மரத்தைச் சுற்றிக் கொண்டு படர்ந்திருக்கிறது. அதுதான் மல்லிகார்ஜுனம். அர்ஜுனம் என்பது மருத மரம். அதை ஸ்தல வ்ருக்ஷமாகக் கொண்ட மூன்று க்ஷேத்ரங்கள் இருக்கின்றன. வடக்கில் ஆந்த்ர தேசத்தில் இருப்பதுதான் ஸ்ரீசைலம். அது மல்லிகார்ஜுனம். பாதாள கங்கை என்கிற க்ருஷ்ணா தீரத்தை ஒட்டியிருப்பது அது. மத்தியில் இருப்பது திருவிடை மருதூர். மத்யார்ஜுனம், இடை மருதூர் என்றே பெயர் பெற்றது. காவேரிக் கரையில் சோழ மண்டலத்திலிருப்பது. தெற்கே இருப்பது திருப்புடைமருதூர் என்னும் புடார் ஜுனம். தென்பாண்டி நாட்டில், தாம்ரபர்ணிக் கரையில் அது இருக்கிறது.

மரத்தில் கொடி படர்கிறது என்றால் என்ன தாத்பர்யம்? 'ஸ்தாணு' என்று பட்ட கட்டையாக அசையாமலிருக்கிற சிவத்தை ஆச்ரயித்தே சக்தியான அம்பிகை படர்ந்து ஸ்ருஷ்டியை உண்டாக்குகிறாள் என்று தாத்பர்யம். நம்மிலே புத்தி சக்தி என்ற மேதாவாக இருப்பவள் அவள் தான். அந்த புத்தி சக்தி சுத்த ஆத்ம தத்வமான சிவத்தைச் சுற்றிப் படரவேண்டும். அதுதான் மல்லிகைக் கொடி அர்ஜுன வ்ருக்ஷத்தைச் சுற்றிப் படர்வது. அர்ஜுனம் என்றால் வெளுப்பு. பரம நிர்மலமாயிருக்கும் சிவ தத்வம் அப்படியிருக்கிறது.

---

* ச்லோகத்தின் முழு வடிவம் :

ஸித்திம் ததாவித மனோவிலயாம் ஸமாதௌ
ஸ்ரீசைல ச்ருங்க குஹரேஷு கதோபலப்ஸ்யே।
காத்ரம் யதா மம லதா : பரிவேஷ்டயந்தி
கர்ணே யதா விரசயந்தி ககாச்ச நீடாந்॥

(யோகதாராவலீ—28)

Koviloor Digital Library

அர்ஜுனமரம்—சிவம், மல்லிகைக் கொடி—அம்பாள் என்பது ஒரு விதத்தில். மல்லிகைக் கொடியில் புஷ்பித்த மல்லிகைப் புஷ்பமே சிவம், அந்தப் புஷ்பத்தை மொய்த்து மொய்த்து, அதன் தேனைக் குடித்து அதிலேயே மயங்கி லயித்துக் கிடக்கிற வண்டு அம்பாள் என்று இன்னொரு விதத்தில் சொல்வது. வண்டுக்குப் பேர் ப்ரமரம். ஸ்ரீ சைலத்தில் அம்பாளுக்கு ப்ரமராம்பா என்றே பேர். மல்லிகார்ஜுனரை, ஈச்வர மல்லிகையை மொய்த்துக்கொண்டிருக்கும் ப்ரமர அம்பா!

இதைப் பற்றி நீளமான ச்லேஷாலங்காரமாக (சிலேடை அணியாக) ஆசார்யாள் சிவாநந்த லஹரியில் சொல்லியிருக்கிறார்* :

ஸந்த்யாரம்ப-விஜ்ரும்பிதம் ச்ருதி-சிரஸ்தாநாந்தராதிஷ்டிதம்
ஸப்ரேம-ப்ரமராபிராம-மஸக்ருத் ஸத்வாஸநா சோபிதம் ||
போகீந்த்ராபரணம் ஸமஸ்த ஸுமந : பூஜ்யம்
குணாவிஷ்க்ருதம்
ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுந மஹாலிங்கம்
சிவாலிங்கிதம் ||

ஒவ்வொரு phrase-கும் (சொற்றொடருக்கும்) இரண்டு அர்த்தம் வைத்துப் பண்ணியிருக்கிறார். ஒன்று மல்லிகையைக் குறிக்கும், மற்றது ஈச்வரனைக் குறிக்கும்.

"ஸந்த்யாரம்ப விஜ்ரும்பிதம்" : மல்லிகையைக் குறிக்கும்போது, ஸந்தி வேளை ஆரம்பிக்கும்போது மலர்வது என்று அர்த்தம். ஈச்வரனைக் குறிக்கும்போது, ஸந்தி ஆரம்பத்தில் நாட்யம் பண்ணுவதால் தம்மை நன்றாக வெளிப்படுத்திக்கொள்பவர் என்று அர்த்தம்.

"ச்ருதி-சிரஸ்தாநாந்தராதிஷ்டிதம்"—மல்லிகையானால், 'காதிலும் தலையிலும் சூட்டிக்கொள்ளப்படுவது'. ஈச்வரனு

* 50-வது ச்லோகம்

Koviloor Digital Library

னால், 'ச்ருதியான வேதத்தின் சிரஸான உபநிஷத்தில் உறைபவர்'.

"ஸப்ரேம ப்ரமராபிராமம்"—மல்லிகையானால், 'ஆசையோடு வரும் வண்டினால் அழகுறுவது'. ஈச்வரனானால். 'ப்ரேமை கொண்ட ப்ரமராம்பிகையினால் சோபிக்கிறவர்'.

"அஸக்ருத் ஸத்வாஸநா சோபிதம்"—மல்லிகையானால், 'எப்போதும் ஸுகந்தத்தோடு விளங்குவது'. ஈச்வரனானால், 'எப்போதும் ஸாதுக்களின் புண்ய வாஸனையில் சோபை பெற்றவர்'. ஸாதுக்களின் பக்தி 'ஸெண்ட்' போடுவது போல் ஸ்வாமிக்கு வாஸனையாக இருக்கிறது!

"போகீந்த்ராபரணம்" — மல்லிகையானால், 'நன்றாக போகங்களை அநுபவிப்பவர்கள் அலங்காரமாகச் சூட்டிக் கொள்வது'. (அல்லது) மல்லிகை வாஸனைக்காக பாம்புகள் வந்து அதைச் சூழ்ந்துகொள்வதாகவும் சொல்லலாம். ஈச்வரனாக வைத்து அர்த்தம் பண்ணும்போது, 'சிறந்த பாம்புகளை ஆபரணமாக உடையவர்'. 'போகி' என்றால் பாம்பு என்றும் அர்த்தம்.

"ஸமஸ்த ஸுமந: பூஜ்யம்" — மல்லிகையானால், 'எல்லாப் புஷ்பங்களுக்குள்ளும் உயர்வானதாகப் போற்றப் படுவது'. ஈச்வரனானால், 'ஸகல தேவர்களாலும் பூஜிக்கப்படு பவர்'. 'ஸுமன' ஸுக்கு ஒரு அர்த்தம் 'புஷ்பம்', இன்னொரு அர்த்தம் 'தேவர்'.

"குணாவிஷ்க்ருதம்"—மல்லிகையானால் 'கயிற்றால், நாரினால், நன்றாக எடுத்துக் காட்டப்படுவது.' 'குணம்' என்றால் கயிறு. உதிரி உதிரியாயிருக்கும் புஷ்பத்தை நாரால் தொடுத்தால்தானே அது ஒன்று சேர்ந்து அழகாக விளங்குகிறது? அதனால் "குணாவிஷ்க்ருதம்". ஈச்வரனாக வைத்துச் சொல்லும்போது, உத்தம குணங்களால் சிறப்புற்று விளங்குபவர் என்று அர்த்தம்.

Koviloor Digital Library

'இப்படிப்பட்டவராக, சிவா என்னும் அம்பாளால் ஆலிங்கனம் செய்யப்பட்டு விளங்குகிற ஸ்ரீசைல மல்லிகார் ஜுனரை வணங்குகிறேன்' என்று முடிக்கிறார்:

ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுன மஹாலிங்கம்
சிவாலிங்கிதம்

மல்லிகைப் புஷ்பம், மாம்பழம் இரண்டும் வஸந்த வைசாகத்தில் விசேஷமாக உண்டாவது. ஆசார்யாள் சுத்த ஸத்வ மல்லிகையாகவும், அத்வைத ரஸ பரிதமான ஞான மாம்பழமாகவும் இருந்தவர். 'ஞானப் பழம்' என்கிறார்களே அதுவாக!

ஸ்ரீ சங்கரரின் கால நிர்ணயம்

அவதார தின, ஸித்தி தின ச்லோகங்களில் கி.மு 6-5 நூற்றாண்டுகள்: ஆசார்யாள் அவதாரம் கி.மு 509-ல் என்று சொன்னேன். "பலே ஸ்வஸ்மிந் ஸ்வாயுஷ்யமபி சரசராப்தே (அ)பி கலேர்—விலில்யே" என்ற ('புண்ய ச்லோக மஞ்ஜரி') ச்லோகத்தைக் காட்டி, 'கலியில் 2625-ம் வருஷம், தம்முடைய முப்பத்திரண்டாம் வயதில் ஆசார்யாள் ஸித்தி யானதாக இதற்கு அர்த்தம். கலி கி.மு 3102-ல் பிறந்ததால் கலியில் 2625 என்றால் கி.மு 477. அப்போது 32 வயஸு என்றால் அவதாரம் கி.மு 509 என்றாகிறது' என்றேன்.

ஸித்தியான வருஷத்தைக்கொண்டு அதோடு 32 கூட்டித்தான் அவதார காலத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றில்லை. அவதார தினத்தையே நேராகச் சொல்வதாக இன்னொரு ச்லோகம் இருக்கிறது. ஸித்தி ச்லோகத்தை quote பண்ணும் ('ஸுஷமா' என்கின்ற) புஸ்தகத்திலேயே இதையும் quote பண்ணியிருக்கிறது. தற்போது முழுசாகக் கிடைக்காததும், ஆனாலும் ரொம்பப் பழமை வாய்ந்ததாகக் கருதப்படுவதுமான "ப்ராசீன சங்கர விஜய"த்திலுள்ள ச்லோகம் இது என்று தெரிகிறது.

Koviloor Digital Library

திஷ்யே ப்ரயாத்யநல-சேவதி-பாண-நேத்ரே
யோ நந்தநே திநமணுமவுதகத்வபாஜி|

ராதே(அ)திதேருடுநி நிர்கதம்-அஸ்த்ர-லக்நே
('அஸ்க்ர லக்நம்' ஸரிதானு என்பதற்கு அப்புறம் வருகிறேன்.)
(அ)வ்யாஹரூதவாந்-சிவகுருஸ்-ஸ ச சங்கரேதி||

கடைசிப் பாதத்தில், 'இன்ன தினத்தில் பிறந்த குழந்தைக்கு சிவகுரு சங்கரன் என்று பேர் வைத்தார்' என்ற விஷயம் சொல்லியிருக்கிறது. அதற்கு முந்திய பாதத்தில் 'ராதே' என்றால் 'வைசாக மாஸத்தில்' என்று அர்த்தம். 'அதிதேருடு', அதாவது, 'அதிதே : உடு' என்றால் அதிதி என்ற தேவதையின் நக்ஷத்ரமான புனர்வஸு. வால்மீகியும் ராமாவதாரம் புனர்வஸுவில் நிகழ்ந்ததை 'நக்ஷத்ரே அதிதி தைவத்யே' என்றே சொல்லியிருக்கிறார். அஸ்த்ர-லக்னம் என்றால் தநுர் லக்னம். 'இது ஸரியான பாடமில்லை; 'அங்க லக்னம்' என்பதே ஸரி' என்று சொல்வதுண்டு. ஏனென்றால் வைசாக மாஸத்தில் தநுர் லக்னம் ராத்ரி வேளையில்தான் வரும். ஆசார்யாளோ நடு மத்யானம் பிறந்தவர். அப்போது மேஷம்-ரிஷபம்-மிதுனம்-கடகம் என்று நாலாவதாக வரும் கடக லக்னமாகவே இருக்கும். அதுதான் அங்க-லக்னம் என்கிறார்கள்.

அங்கம் என்பது நான்கைக் குறிக்கும்.

'கடபயாதி' ஒருவிதமான ஸங்கேத எண்ணிக்கை என்றால், இன்னொரு விதமான ஸங்கேதக் கணக்கும் உண்டு. அதாவது ஒவ்வொரு எண்ணிலும் சிறப்பாக என்ன வஸ்து இருக்கிறதோ அதையே அந்த எண்ணுக்குப் பதில் சொல்லி விடுவது. கண்கள் இரட்டைத்தானே? அதனால் 'நேத்ரம்', 'நயனம்' என்று சொல்லிவிட்டால் 2 என்று அர்த்தம். 'முத்தீ' என்று சங்ககாலத் தமிழிலேயே சொல்லப்படும் மூன்று விதமான அக்னிகளை ப்ராம்மணன் உபாஸிக்க

Koviloor Digital Library

வேண்டும். ஆகையால் அக்னியின் பெயரைச் சொன்னால் 3. ஆறு ருதுக்கள் இருப்பதால் 'ருது' என்றால் 6. ஸப்த ரிஷிகள் இருப்பதால் 'ரிஷி' என்றால் 7. இம்மாதிரி சதுர் வேதங்கள் இருப்பதால் 'வேதம்' என்றால் 4. ரதம்-கஜம்-துரகம்-பதாதி என்று ஸைன்யத்தின் நாலு அங்கங்கள் இருப்பதால் அங்கம் என்றாலும் 4. 'அங்க லக்னம்' நாலாவதான கடகம்.

ச்லோகத்தின் இரண்டாம் பாதத்தில், நந்தன வருஷத்தில், தினமணியான ஸூர்யன் உதங்-முகம் எனப்படும் வடக்காக உத்தராயணத்தில் உள்ளபோது அவதாரம் என்ற விஷயம் சொல்லியிருக்கிறது.

முதல் பாதத்தில் கலியில் இத்தனும் வருஷம் என்பது வருகிறது. 'திஷ்யே' என்று ஆரம்பிப்பதற்குக் 'கலியுகத்தில்' என்று அர்த்தம். 'திஷ்யம்' என்பதற்குக் கலி என்று ஒரு அர்த்தம்.

"திஷ்யே ப்ரயாதி அநல-சேவதி-பாண நேத்ரே"— 'திஷ்யே ப்ரயாதி' என்றால் 'கலியுகம் முன்னேறிக்கொண்டு போகும்போது'.

'அநல-சேவதி-பாண-நேத்ர' என்பதுதான் சற்றுமுன் நான் சொன்ன ஸங்கேதக் கணக்குப்படி எத்தனும் வருஷம் என்று தெரிவிப்பது. 'அநல' என்றால் அக்னி. 'அக்னி' என்றால் 3 என்று தெரிந்து கொண்டீர்களல்லவா? 'சேவதி' என்றால் நிதி. நவநிதிகள் உண்டாதலால் சேவதி என்பது 9. பாணம் என்றால் 5. பஞ்ச பாணம் என்று மன்மதன் ஐந்து பாணம் தானே வைத்திருக்கிறான்? 'நேத்ர' என்பது 2 என்று சொன்னேன். அதனால் 'அநல-சேவதி-பாண-நேத்ர' என்பது 3-9-5-2 : 3952. கடபயாதி ஸங்கியையில் 'அங்கானாம் வாமதோ கதி :' என்றாற்போலவே இங்கேயும் தலைகீழாகத் திருப்பிப் போடணும். அப்படிப் போட்டால் 2593. கலியில் 2593-ம் வருஷம். கலி பிறந்தது கி.மு. 3102. அப்படியானால் கலி 2593 என்பது 3102 மைனஸ் 2593, அதாவது கி.மு 509.

Koviloor Digital Library

மாற்றுக் கருத்து (கி.பி 788-820) : ஆனால் இது ஒன்று தான் ஆசார்யாள் காலத்தைப்பற்றிய முடிவு என்றில்லாமல் இன்னும் பலவிதமான அபிப்ராயங்கள் இருந்து வருகின்றன. 'ஓரியன்டலிஸ்ட்'கள் என்பதாகக் கீழ்த்திசை நாட்டு விஷயங்களை ஆராய்ச்சி பண்ணும் மேல்நாட்டுக்காரர்கள் ஆசார்யாள் கி.பி 788-ல் பிறந்து, 32 வருஷம் ஜீவித்து, கி.பி 820-ல் ஸித்தியானாரென்று முடிவு செய்திருக்கிறார்கள். அந்த அபிப்ராயம்தான் ஸரியென்றே நம்மவர்களிலும் படிப்பாளிகளாகவுள்ளவர்களில் பெரும்பாலார் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சரித்ர புஸ்தகங்களிலெல்லாம் Sankara's Age என்றால் 788-820 A.D என்றே போட்டு, அப்படித்தான் எல்லாரும் படித்து நம்பி வருகிறார்கள்.

கி.மு. 509-477 என்று நான் சொன்னதற்கும் கி.பி. 788-820 என்று சொல்வதற்கும் நடுவே சுமார் 1300 வருஷ இடைவெளி இருக்கிறது.

நம்முடைய தேசத்திலேயே ஆசார்யாளின் அவதார காலத்தைக் குறிப்பதாக இன்னொரு ச்லோகம் வழங்கி வந்திருக்கிறது. அதன்படி கி.பி 788 என்றே ஆகும். வெள்ளைக்காரர்களும் இதைத்தான் அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு, அதற்கு மேலே தங்களுடைய ரிஸர்ச் முடிவுகளாகவும் அநேகம் சொல்லி, கி.பி 788-820தான் என்று தீர்மானமாக முடித்திருக்கிறார்கள்.

இந்த ச்லோகத்தில் "நிதிநாகேபவஹ்ந்யப்தே" என்று கலியில் எத்தனாம் வருஷமென்பதைச் சொல்லியிருக்கிறது*. "நிதி-நாக-இப-வஹ்நி-அப்தே." நவநிதிகளாதலால், நிதி—9. நாக: வாஸுகி, தக்ஷன் முதலாக அஷ்ட நாகங்கள். நாகம் என்றால் யானை என்றும் அர்த்தமுண்டு. அஷ்ட திக் கஜங்கள் என்பதாக அதுவும் எட்டுதான். அதனால் இங்கே 'நாக' என்பது 8. 'இப' என்றாலும் யானை

---

* நிதிநாகபவஹ்ந்யப்தே விபவே மாஸி மாதவே ।
சுக்ல திதௌ தசம்யாந்து சங்கரார்யோதய: ஸ்ம்ருத: ॥

Koviloor Digital Library

தான். ஆகையால் அதுவும் 8. 'வஹ்நி' என்றால் அக்னி. அது 3. ஆகையால் இந்த சொற்றொடர் 9883 என்ற எண்ணிக்கையைத் தருகிறது. தலைகீழாக்க 3889. கலியில் 3889 என்றால் கிறிஸ்து சகாப்தப்படி 3889 மைனஸ் 3102. அதாவது கி. பி. 787.

ஆசார்யாள் அவதாரம் கி. பி. 788 என்று நம்பிக்கை இருப்பதைச் சொன்னேன். இந்த ச்லோகத்தை வைத்துத் தான் அந்த நம்பிக்கை.

788 என்றேன். 787 என்று ஒரு வருஷம் ஏன் குறைச்சலாக வருகிறதென்றால்...

இங்கிலீஷ் வருஷம் ஜனவரியிலும், இந்திய வருஷம் சாந்த்ரமானமானால் மார்ச் மத்தியிலிருந்து ஏப்ரல் மத்திக்குள்ளும், ஸௌரமானமானால் ஏப்ரல் மத்தியையொட்டியுமே பிறப்பவை. அதாவது எந்த 'மான'மானாலும் ஒரு இந்திய வருஷத்திலேயே இரண்டு இங்கிலீஷ் வருஷங்களின் பகுதிகள் வந்துவிடும். நம்முடைய தநுர்மாஸம் வரையில் ஒரு இங்கிலீஷ் வருஷம், அப்புறம் பங்குனி முடிய இன்னொரு இங்கிலீஷ் வருஷம் என்று இருக்கிறது. அதனால் ஒவ்வொரு இந்திய வருஷத்துக்கும் '...' to '...' என்று அடுத்தடுத்த இரண்டு இங்கிலீஷ் வருஷங்களைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நடக்கும் நம்முடைய சுபக்ருத் வருஷத்தை 1962 to 1963 என்கிறோம்*. இம்மாதிரி கலி 3889 என்பதும் இங்கிலீஷ் வருஷம் கி. பி. 787 to 788-ஆக இருந்திருக்க வேண்டும்.

788 என்று நம் தேசத்திலுள்ள ச்லோகப்படி எடுத்துக்கொண்டு, அப்புறம் ஓரியண்டலிஸ்டுகளும், அவர்கள் சொல்வதையே வேதவாக்காக எடுத்துக்கொள்ளும் நம்மவர்களும் அதற்கு ஆதரவாக வேறு காரணங்கள் காட்டுகிறார்கள்.

---

* இப்பகுதி 1963 சிவராத்ரியை அடுத்து ஒரு சம்பாஷணையில் கூறியது.

Koviloor Digital Library

'இன்னின்னாருடைய பேர்கள் அல்லது இன்னின்னாருடைய கொள்கைகள் பற்றி ஆசார்யாளின் புஸ்தகங்களில் வருகிறது. அதனால் அவர்களுக்குப் பிற்பாடுதான் ஆசார்யாள் வந்திருக்கவேண்டும். அவர்களுடைய காலத்தைப் பார்க்கும்போது ஆசார்யாள் காலம் கி. மு. 509 - 477 - ஆக இருக்கவே முடியாது' என்று அந்த ஆராய்ச்சிக்காரர்கள் சொல்கிறார்கள். இவற்றில் புத்தர் காலம் சாஸ்த்ரஜ்ஞர்கள் (ஆசார்யாளின் அவதாரமாகச்) சொல்லும் கி. மு. 509-க்கு ரொம்பக் கிட்டே வந்து விடுகிறது. ரொம்பக் கிட்டே என்ன? ஸமகாலமே ஆகி விடுகிறது. 'புத்தர் காலம் ஏறக்குறைய கி. மு. 560 லிருந்து 480 வரை. அவர் எண்பது வயஸு இருந்தவர்' என்று இந்த ஆராய்ச்சிக்காரர்கள் முடிவு பண்ணி அப்படித்தான் ஹிஸ்டரிப் புஸ்தகங்களிலெல்லாம் ஏறியிருக்கிறது. அதாவது புத்தரின் ஐம்பதாவது வயஸில் ஆசார்யாள் பிறந்து ஏறக்குறைய அவர் நிர்யாணமான ஸமயத்திலேயே தாமும் நிர்யாணமாயிருக்கவேண்டும்! புத்தருக்குப் பிறகுதான், அதாவது, சாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்கிறபடியான சங்கரரின் காலத்துக்குப் பிறகுதான் புத்த மதம் அநேக ராஜாங்கங்களின் ஆதரவில் ப்ரசாரமாகி, இருநூறு முன்னூறு வருஷத்துக்கப்புறம் அசோக சக்கரவர்த்தியால் நாலா திசையிலும் பரப்பப்பட்டது. இப்படியிருக்கும்போது சங்கரர் காலத்திலேயே பௌத்தம் தலை சாய்ந்தது என்றால் எப்படி ஸரியாகும்?—என்று ஆக்ஷேபிக்கிறார்கள். பௌத்தமதம் நெடுங்காலம் பரவிய பிறகே குமாரில பட்டர் பிறந்து அதை நிறையக் கண்டனம் பண்ணி, அதற்கும் அப்புறம்தான் ஆசார்யாள் பாக்கியும் அதைக் கண்டித்தது என்று சாஸ்த்ரஜ்ஞர்களே ஏராளமான ஆதாரங்களைக் கொண்டு ஒப்புக்கொள்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்டும் இப்படி புத்தருக்குக் காண்டெம்பரரியாக அவர்கள் ஆசார்யாளைச் சொல்வது ஒவ்வாமலிருக்கிறது என்கிறார்கள்.

Koviloor Digital Library

குமாரிலபட்டரின் கடைசிக் காலத்தில் ஆசார்யாள் அவரை ஸந்தித்திருக்கிறார். அதைக் கதை என்று விட்டு விட்டாலும் மீமாம்ஸையில் 'பாட்ட மதம்' எனும் குமாரில பட்டரின் கொள்கைகளை ஆசார்யாள் நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டு பாஷ்யங்களில் கண்டித்திருக்கிறார். அதனால் இவர் அவருக்குக் 'காண்டெம்பரரி' அல்லது பிற் காலத்தவர். அந்தக் குமாரிலபட்டர் காளிதாஸனிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறார்.

குமாரிலர் காட்டும் காளிதாஸனின் மேற்கோள் (மனஸ்ஸாக்ஷி ப்ரமாணம்): தர்மத்தை நிச்சயிப்பதற்கு எதெது ப்ரமாணம் என்று அவர் (குமாரிலர்) ஜைமினியின் மீமாம்ஸா ஸூத்ரத்திற்கு விளக்கமாக எழுதியுள்ள "தந்த்ர வார்த்திகத்"தில் அலசிப் பார்த்திருக்கிறார். மநு ஸ்ம்ருதியிலேயே இந்த விஷயம் விசாரித்து அபிப்ராயம் சொல்லப்பட்டிருக்கிறது. மநு,

"வேதோ (அ)கிலோ தர்ம மூலம் ஸ்ம்ருதி சீலே ச
தத்விதாம் ।
ஆசாரச்சைவ ஸாதூநாம் ஆத்மநஸ்துஷ்டிரேவ ச"

என்று தர்ம ப்ரமாணங்களை ஒன்றுக்குப் பின் ஒன்றாக, முதலில் வேதம், அப்புறம் தர்ம சாஸ்த்ரம். அப்புறம் ஸத்துக்களின் நடவடிக்கை, கடைசியாக நம் மனஸுக்கே, 'ஸரியாய்த்தாண்டாப்பா பண்ணியிருக்கோம்' என்று த்ருப்தி உண்டாக்கும் ஸொந்த அபிப்ராயம் என்று வரிசைப் படுத்திக் கொடுத்திருக்கிறார். ரூபத்தை அறிய நம்முடைய கண் ப்ரமாணமாயிருக்கிறது. சப்தத்தை அறியக் காது ப்ரமாணம். தர்மத்தை அறிய? அது நம் இந்த்ரியத்துக்கு அகப்படுமா? அகப்படாது. அதனால் ச்ருதிதான் ப்ரமாணம். தர்மாதர்மங்களை அறிய வேதத்தைப் பார்த்து அந்தப்படிதான் பண்ணணும். ஸரி, வேதத்தில் நாம் தேடுகிற தர்ம விஷயம் அகப்படவில்லையென்றால்? அப்போது அடுத்த அதாரிடியான ஸ்ம்ருதியை பார். ச்ருதி, ஸ்ம்ருதி

Koviloor Digital Library

இரண்டிலும் முடிவு தெரியாவிட்டால்? இம்மாதிரி விஷயத்தில் ஸதாசார ஸம்பன்னர்கள் என்ன சொல்கிறார்கள், செய்கிறார்கள் என்பதைப் பார்த்து அதுவே ப்ரமாணம் என்று எடுத்துக்கொள். அவர்களும் இந்த விஷயத்தில் ப்ரவேசிக்கவில்லை, எதுவும் சொல்லவில்லை, செய்யவில்லை என்றால் என்ன செய்ய? ஸரி, உன் மனஸை நடுநிலையாய், நிஷ்பக்ஷபாதமாய் வைத்துக்கொண்டு அதற்கு என்ன தோன்றுகிறது என்று பார். ஸொந்த த்வேஷாபிமானங்கள் கலக்காமல் சுத்தமாக ஒரு அபிப்ராயத்துக்கு வா. உனக்குக் கொஞ்சங்கூட உறுத்தலில்லாமல் அது த்ருப்தி தரணும். அப்போது, 'வேறே வழியில்லாததால் இதோ என் அந்தஃகரண சுத்தமாக இப்படித் தோன்றுவதே ஸரி என்று அநுஸரிக்கிறேன்' என்று அப்படிப் பண்ணிவிட்டுப் போ. அதாவது உன்னுடைய அந்தஃகரணமே வேறொரு ப்ரமாணமுமில்லாதபோது ப்ரமாணம் என்று, பண்ணிவிட்டுப்போ!— இப்படி மநு சொல்கிறார்.

இந்த ரீதியில் கடைசியாய் வரும் மனஸ் ஸாக்ஷியின் ப்ராமாண்யத்தைக் குமாரில பட்டர் விசாரிக்கும்போது தான் காளிதாஸனை அதற்கு ஸாதகமாக quote செய்திருக்கிறார்.

சாகுந்தல நாடகத்தில் துஷ்யந்தன் வாயிலாக இதைப் பற்றிக் காளிதாஸர் சொல்லியிருக்கிறார். க்ஷத்ரியனான துஷ்யந்தனுக்கு ரிஷி குமாரியாகக் கண்வரின் ஆச்ரமத்தில் வளரும் சகுந்தலையைப் பார்த்தவுடன் ப்ரேமை உண்டாகிறது. 'ப்ராம்மண கன்னிகையிடம் க்ஷத்ரியனுக்கு ப்ரேமை ஏற்படுவது தப்பல்லவா?' என்று நினைக்கிறான். அப்போதுதான், 'ஸத்துக்களின் மனஸு (அந்தஃகரணம்) ஏதோவொன்றில் ப்ரவேசித்துவிட்டால், ஏதோவொன்றிடம் ப்ரியம் வைத்துவிட்டால், அது தர்ம விரோதமாயிருக்க முடியாது. நம்முடைய மனஸில் இப்படியொரு ப்ரேமை எழும்பிற்றென்றால் அது தர்மப்படியானதாகவே இருக்க வேண்டும்' என்று நினைத்துத் தன் ப்ரேமையில் தப்பி

Koviloor Digital Library

ருக்காது என்று தீர்மானிக்கிறுன். வாஸ்தவத்திலும் சகுந்தலை விச்வாமித்ரர் ப்ராம்மண ரிஷியாக ஆவதற்குமுன் ராஜரிஷியாகத் தபஸ் செய்துகொண்டிருந்த காலத்தில் அவருக்கும் மேனகைக்கும் பிறந்தவள்தான். அதனுல் க்ஷத்ரிய துஷ்யந்தன் அவளிடம் ப்ரியம் கொண்டதில் சாஸ்த்ர விரோதமாக எதுவுமில்லை.

இந்த இடத்தில் துஷ்யந்தன், "ஸதாம் ஹி ஸந்தேஹ பதேஷு வஸ்துஷு ப்ரமாணம்-அந்த:கரண-ப்ரவ்ருத்தய:" என்கிறுன்[1]. "இப்படியா, அப்படியா என்று ஸந்தேஹமாயிருக்கும் விஷயங்களில் ஸத்துக்களின் அந்த:கரணம் எப்படிப் போகிறதோ அதுவே ப்ரமாணம்" என்கிறுன்.

மனஸ்ஸாக்ஷியும் கடைசி பக்ஷத்தில் ஒரு ப்ரமாணமாகிறது என்பதற்குக் குமாரிலபட்டர் காளிதாஸனின் இந்த வாக்யத்தை ப்ரமாணமாகக் காட்டுகிறுர். அதனுல் அவர் காளிதாஸனுக்கு அப்புறம் வந்தவர் என்பது நிச்சயமாகிறது. ஆகவே ஆசார்யாளும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்ராயப் படி, காளிதாஸன் கி.மு. ஆரும் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவர் தான். அவர், விக்ரமாதித்யனின் காலத்தவர் என்றுல் அந்த விக்ரமாதித்யன் இருந்தது கி.மு. முதல் நூற்றுண்டில். விக்ரம (விக்ரமாதித்ய சகாப்தம்) ஆரம்பிப்பது கி.மு. 57-ல். இதற்கு ரொம்பத் தள்ளி கி.பி. நாலாம் நூற்றுண்டுக் காரனுன சந்த்ரகுப்த விக்ரமாதித்யனின் காலத்தில்தான் காளிதாஸர் இருந்தார் என்றும், அல்லது இன்னும் பின்னுல்தார் இருந்தார் என்றுங்கூடச் சொல்ல ஆதாரங்களிருக்கின்றன. 'திங்நாக' என்று காளிதாஸன் 'மேகஸந்தேச'த்தில் திக்-கஜங்களைச் சொல்வதில்[2] பௌத்தத்தின் ஒரு பிரிவான 'வைபாஷிகம்' என்பதை உருவாக்கிய திங்நாகரையும் சிலேடையாகப் பரிஹாஸம் பண்ணியிருக்

---

1. "சாகுந்தலம்"—I. 1. ச்லோகம் 19.
2. "மேகஸந்தேசம்"—14

Koviloor Digital Library

கிருரென்று அபிப்ராயமிருக்கிறது. அந்த திங்நாகரோ கி.பி. ஆரும் நூற்ருண்டுக்காரர். ஆகையால் அதுவரை காளிதாஸனின் காலத்துக்குக் கீழ்வரம்பு கட்ட இடமிருக்கிறது. ஆனபடியால் ஆசார்யாளின் காலம் கி.மு. ஆரும்-ஐந்தாம் நூற்ருண்டு என்ற சாஸ்த்ரஜ்ஞர் அபிப்ராயம் ஸரியில்லை என்கிருர்கள்.

ஆசார்ய பாஷ்யத்தில் பௌத்தக் கொள்கைகள் : திங்நாகருடைய வைபாஸிகக் கொள்கைகளை ஆசார்யாள் பாஷ்யங்களில் கண்டனம் பண்ணியிருக்கிருர். அந்தக் கொள்கைகளிலேயே சிலதை எடுத்துக்கொண்டு, சிலதை மாற்றி ஸௌத்ராந்திகம் என்று ஒரு பௌத்தப் பிரிவுண்டு. யோகாசாரம் என்றும் விஞ்ஞானவாதம் என்றும் மூன்ருவதாக இன்னொரு பிரிவு உண்டு. கி.பி. நாலாவது நூற்ருண்டுக்காரர்களாகக் கருதப்படும் அஸங்கரும் வஸுபந்துவும் உருவாக்கியது. இதையும் ஆசார்யாள் கண்டித்திருக்கிருர். மாத்யமிகம் அல்லது சூன்யவாதம் என்பதாக ஒரு நாலாவது பிரிவும் உண்டு. முக்யமாக அதை வளர்த்துக் கொடுத்தவர் நாகார்ஜுனர். அவரை கி.பி. இரண்டாம் நூற்ருண்டுக்காரராத் தீர்மானித்திருக்கிருர்கள். இந்த ஸித்தாந்தத்தையும் ஆசார்யாள் கண்டித்திருக்கிருர்.

'நாகார்ஜுனர், அஸங்கர், திங்நாகர் ஆகியவர்கள் முறையே கி. பி. இரண்டாம், நாலாம், ஆரும் நூற்ருண்டுகளில் வந்தவர்களாக இருக்க இவர்களுடைய கொள்கைகளை க்ரிடிஸைஸ் செய்த சங்கரர் எப்படி கி.மு.வாக இருக்க முடியும்?' என்று கேட்கிருர்கள்.

கனிஷ்கரின் காலத்தில் பௌத்தம் மஹாயானம், ஹீனயானம் என்று இரண்டாகப் பிளந்தது. ஆசார்யாளின் நேர் சிஷ்யரான பத்மபாதர் (ஆசார்யாளின் ஸூத்ர பாஷ்யத்திற்குத் தாம் எழுதிய விளக்கமாகிய) 'பஞ்ச பாதிகா'வில் மஹாயானத்தைப் பேர் குறிப்பிட்டுக் கண்டனம் செய்திருக்கிருர். கனிஷ்கரை அதிக பக்ஷமாகப் பின்னேகொண்டு போனாலும் கி.மு. முதல் நூற்ருண்டுக்குப் பூர்வ காலத்தில்

Koviloor Digital Library

தங்களால் சேர்க்க முடியவில்லை என்று இன்னொரு காரணம் சொல்கிறார்கள்.

ஆசார்ய ஸ்தோத்ரங்களில் கி.பி. குறிப்புக்கள் : ஞான நூல்களான பாஷ்ய க்ரந்தங்களில் இப்படியெல்லாம் Internal evidence (உட்சான்று) காட்டுவதுபோலவே பக்தி நூல்களான ஸ்தோத்ரங்களிலும் ஒன்றிரண்டு காட்டுகிறார்கள். பொதுவாக, 'ஞான மார்க்க ஆசார்யாள் பக்தி ஸ்தோத்ரமே பண்ணியிருக்க மாட்டார். வேறே யார் யாரோ பண்ணியதையெல்லாம் அவர் பேரில் ஏற்றிச் சொல்கிறார்கள்' என்றுதான் இந்த ஆராய்ச்சியாளர்கள் சொல்வது வழக்கம். ஆனாலும் (ஆசார்யாளின் காலம் குறித்த) சாஸ்த்ரஜ்ஞர்களின் மெஜாரிடி அபிப்ராயத்தைத் தகர்க்க வேண்டுமென்னும்போது, தங்களுக்கு ஸாதகமாக வருகிற பக்தி ஸ்தோத்ரங்களையும் அவருடையதாக ஒப்புக்கொண்டு பேசுகிறார்கள்!

"ஸௌந்தர்ய லஹரீ"யில் அம்பாளின் க்ஷீர மஹிமையைச் சொல்லும்போது,* "வெள்ளை வெளேரென்ற ஸரஸ்வதியே உன்னுடைய க்ஷீர ரூபத்தில் பெருகுகிறாளென்று நினைக்கிறேன். உன் ஹ்ருதயத்திலிருந்து வரும் அநுக்ரஹ அம்ருத ப்ரவாஹமாகவும், ஸாரஸ்வதமான வாக்-அம்ருத ப்ரவாஹமாகவும் இருப்பது உன் க்ஷீரம். அதனால்தான் பரம தயையோடு நீ அதை ஒரு 'த்ரவிட சிசு'வுக்கு—த்ராவிட தேசக் குழந்தைக்கு—கொடுக்க, அது கவிகளுக்கெல்லாம் கவியாக ஆனது" என்கிறார் ஆசார்யாள். ஞானஸம்பந்தருக்குத்தானே அம்பாள் பாலூட்டி அவர் மஹா பக்த கவியானது? அவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தவரென்பதற்கு அழுத்தமான சான்றுகள் இருக்கின்றன. ஏழாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் ஆண்ட பல்லவ ராஜாவான மஹேந்த்ர வர்மா அப்பர் ஸ்வாமிகளால் சமண மதத்திலிருந்து வைதிக மதத்துக்கு மாற்றப்பட்டவன். அப்பரும்

---

* ச்லோகம் 75

Koviloor Digital Library

ஸம்பந்தரும் பல ஸ்தலங்களுக்கு சேர்ந்து சேர்ந்து போய்ப் பதிகம் பாடியிருப்பதால் ஸம்பந்தரும் அதே காலம்தான். அவரே பாண்டியராஜா ஒருவனை சமணத்திலிருந்து வைதிகத்திற்கு மாற்றியிருக்கிறார். நின்றசீர் நெடுமாறன் என்ற அவன் தான் மாறவர்மன் அரிகேசரி என்பதாகக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சி நடத்தியவன். ஆகையால் ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளும் அந்த நூற்றாண்டுதான். அவரைப் பற்றி 'அல்யூஷன்' சொல்லும் ஆசார்யாள் அதற்கும் பிற்பட்ட காலத்தவராகத்தானே இருந்திருக்க வேண்டும்? —என்கிறார்கள்.

மஹேந்த்ர வர்மாவுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவன் நரஸிம்ஹ வர்மா. அவனிடம் ஸேநாதிபதியாயிருந்த மாமாத்திர ப்ராம்மணரான பரஞ்ஜோதிதான் அப்புறம் சிவனடியாராக ஆகிச் சிறுத்தொண்டர் என்ற நாயனாரானது. அவரைச் சோதிப்பதற்காக ஈச்வரனே வடதேசத்து பைரவ உபாஸகர் ரூபத்தில் வந்து பிள்ளைக் கறி படைக்கச் சொன்னார். "உன்னுடைய பிள்ளையைக் கறி பண்ணிப் போடு" என்று அவர் சொல்லவில்லை. "ஒரு வீட்டுக்கு ஒரு பிள்ளையாக உள்ள ஒரு நர பசுவைப் பாகம் பண்ணிப் போட்டால் அதைத்தான் நாம் சாப்பிடுவது. ஆறு மாஸத்துக்கொரு தரம்தான் நமக்குச் சாப்பாடு. அது இந்தப் பிள்ளைக் கறிதான். இன்றைக்கு நாம் சாப்பிடும் தினம்" என்று சொன்னார். 'உக்ர வழியிலானாலும் சிவோபாஸகராக இருக்கப்பட்ட ஒருவர் எங்கேயோ வடதேசத்திலிருந்து ஆறு மாஸம் சாப்பிடாமலிருந்துவிட்டு இன்று நம் அகத்துக்கு வந்து இப்படிக் கேட்கிறார். நமக்கும் ஏக புத்ரனே இருக்கிறான். அதனால் நாம் வேறே யாரோ பிள்ளையைப் பிடித்து வரப்போவானேன்?' என்று சிறுத்தொண்டர் நினைத்தார். நினைத்த அப்புறம் கொஞ்சங்கூடத் தயங்கவில்லை. அவருடைய பத்னி—பிள்ளையைப் பெற்ற தாய்—அவளும் தயங்கவில்லை. பைரவர் சொல்லியிருந்தபடியே, சீராளன் என்ற அவர்களுடைய ஏக புத்ரனை ஐந்து வயஸுப்

Koviloor Digital Library

பிள்ளையை அந்த அம்மாள் பிடித்துக்கொள்ளச் சிறுத்தொண்டர் அரிந்து, அப்புறம் பாகம் பண்ணி அதிதிக்குப் படைத்தார்கள். ஆனால் அது தங்கள் பிள்ளையென்று சொல்லவில்லை.

பைரவர், "நாம் தனியாகச் சாப்பிடுவதில்லை, அதனால், கூட உட்கார்ந்து சாப்பிடுவதற்கு உம் புத்ரனைக் கூப்பிடும்" என்றார்.

ஸ்வாமியை நினைத்துக்கொண்டார் சிறுத் தொண்டர். 'உன் உபாஸகர் இலையில் உட்கார்ந்து விட்டார். கூடச் சாப்பிடப் பிள்ளையைக் கூப்பிடச் சொல்கிறார். அவர் சொன்னபடி செய்யவேண்டியது என் கடமை. கூப்பிடுகிறேன். அவர்கோபித்துக்கொண்டு எழுந்திருந்துபோகாமல் சாப்பிட்டுப் பசியாறிப் போகப்பண்ணுவது உன் பொறுப்பு' என்று ப்ரார்த்தித்துவிட்டு, "சீராளா! வா!" என்று கூப்பிட்டார்.

உடனே நிஜமாகவே அந்தப் பிள்ளை ஓடி வந்தான்!

எல்லாம் ஸ்வாமி ஆடிய நாடகம், புத்ர வாத்ஸல்யத்திற்கும் மேலே சிவனடியாரின் ஸேவையையே உயிராக மதித்த பெரும் தொண்டர் இந்த சிறுத் தொண்டர் என்று காட்டவே ஸ்வாமி ஆடிய நாடகம், என்று தெரிந்தது.

'புஜங்க ப்ரயாதம்' என்பதாக அடிக்கு 12 அக்ஷரங்கள் கொண்டதாக உள்ள வ்ருத்தத்தில் (விருத்தத்தில்) ஆசார்யாள் செய்துள்ள அநேக ஸ்தோத்ரங்களில் "சிவ புஜங்கம்" ஒன்று[1]. அதில் ஒரு ச்லோகத்தில்[2], "உன்னை எப்படி ப்ரீதி கொள்ளச் செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. எனக்கோ பிறத்தியாருக்கு த்ரோஹம் செய்வதற்கு முடியவில்லை. நீயானால் கட்டின பெண்டாட்டிக்கும், பெற்ற பிள்ளைக்கும், பெற்றெடுத்த தகப்பனாருக்கும் த்ரோஹம்

1. மற்றவை கணேச புஜங்கம், ஸுப்ரஹ்மண்ய புஜங்கம். தேவீ புஜங்கம், பவானீ புஜங்கம், சாரதா புஜங்கம், விஷ்ணு புஜங்கம், ராம புஜங்கம்.

2. பதின்மூன்றாவது ச்லோகம்.

Koviloor Digital Library

செய்தவர்களுக்குத்தான் ப்ரஸன்னமாகி அநுக்ரஹம் பண்ணி யிருக்கிறாய்!" என்று நிந்தா ஸ்துதியாக வருகிறது. காந்தா த்ரோஹி, ஸுத த்ரோஹி, பித்ரு த்ரோஹி என்று இதில் மூன்று நாயன்மார்களைக் குறிப்பிட்டிருக்கிறது.

காந்தா த்ரோஹி என்பவர் இயற்பகை நாயனார்— ஈச்வரனே அடியார் வேஷத்தில் வந்து 'உன் பெண்டாட்டி யைக் கொடு' என்றபோது அப்படியே தத்தம் பண்ணியவர். 'இல்லையே என்னாத இயற் பகைக்கும் அடியேன்' என்று ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் 'திருத்தொண்டத் தொகை' யில் சொல்கிறார். அப்புறம் அந்தக் கதையும் சிறுத் தொண்டர் - சீராளன் கதை மாதிரியே ஸ்வாமி விளையாடின சோதனை நாடகமாகி ஸந்தோஷமாகவே முடிகிறது. இயற் பகை நாயனார் காவிரிப் பூம்பட்டினத்திலிருந்த வைச்யர் என்பது தவிர அவருடைய காலம் முதலியவை நமக்குத் தெரியவில்லை.

அடுத்தாற்போல் சொன்ன ஸுத த்ரோஹிதான் பிள்ளைக் கறி பண்ணிப்போட்ட சிறுத்தொண்டர். கி.பி ஏழாம் நூற்றாண்டு மத்தியில் நரஸிம்ஹ வர்மா வாதாபி மேல் படையெடுத்துச் சாளுக்ய ராஜாவைத் தோற்கடித்த போது இவர் ஸேநாதிபதியாக இருந்திருக்கிறார். அப்புறம் இவர் பெரிய சிவபக்தர் என்று நரஸிம்ஹ வர்மாவுக்குத் தெரிந்து, இவரைப் போய்ச் சண்டையில் ஏவிக் கொண்டிருக் கிறோமே என்று வருத்தப்பட்டு, இவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மரியாதையுடன் 'ரிடையர்' பண்ணி நிறைய ஸம்பாவனை கொடுத்து அவருடைய ஊரான திருச் செங்காட்டங்குடிக்கு அனுப்பி வைத்தான். அதற்கப்புறம் தான் அவருக்குப் பிள்ளை பிறந்து, கதையெல்லாம் நடந்தது.

ஆகையால் சிறுத்தொண்டரின் காலமான ஏழாம் நூற்றாண்டின் பின்பாதிக்கு முன்னால் ஆசார்யாளின் அவதாரம் ஏற்பட்டிருப்பதற்கில்லை என்கிறார்கள்.

Koviloor Digital Library

பித்ரு த்ரோஹி என்றது, சண்டிகேச்வரரை. அவர் பண்ணி வந்த சிவபூஜையில் பாலைக் குடம் குடமாக அபிஷேகம் செய்கிறாரே என்று அவருடைய பிதா ஆத்திரப் பட்டார். ஆத்திரத்தில் பால் குடத்தைக் காலால் உதைக்க வந்தார். உடனே அவருடைய காலையே சண்டிகேச்வரர் வெட்டினார். பரமசிவன் ப்ரத்யக்ஷமாகி, "இனிமேல் நானே உன் பிதா!" என்றார். அதுவரை விசார சர்மா என்ற பெயரில் இருந்து வந்த அந்த ப்ராமண இளைஞருக்குச் சண்டிகேச்வரர் என்பதாக அப்போதுதான் பேர் கொடுத்து, சிவனடியார்களுக்கெல்லாம் தலைவராக்கி, தம் முடிமேலி ருந்த கொன்றை மாலையை எடுத்து ஸ்வாமியே அவருக்குச் சூட்டினார் என்று கதை. பஞ்சமூர்த்திகளில்[1] ஒருவராகவே சிவகுடும்பத்தில் இடம் பெற்றுவிட்டவர் சண்டிகேச்வரர். அவருடைய கதை எத்தனையோ யுகங்களுக்கு முற்பட்டது. அதனால் ஆசாரியாள் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்பதற்கு இந்த 'ரெஃபரென்ஸ்' ஆக்ஷேபமாகாது.

ஆக்ஷேபம் அவர் சிறுத்தொண்டரைக் குறிப்பிட்டிருப் பதற்குத்தான்.

இரண்டு ராஜாக்களை வைத்து இன்னும் இரண்டு ஆக்ஷேபம் சொல்கிறார்கள்.

பூர்ணவர்மனைப் பற்றிய குறிப்பு: ஸூத்ர பாஷ்யத்தில் ஓரிடத்தில்[2] ஸத்துக்கும் அஸத்துக்கும் (இருக்கிற வஸ்து வுக்கும் இல்லாத வஸ்துவுக்கும்) ஸம்பந்தம் காட்டுவது அஸம் பாவிதம் என்று ஆசார்யாள் சொல்லிக்கொண்டுபோகும் போது, "பூர்ணவர்மனுக்குப் பட்டாபிஷேகம் ஆவதற்கு முன்னால் ஒரு மலடியின் பிள்ளை ராஜாவாக இருந்தான்" என்று (வாஸ்தவமாக உள்ள பூர்ணவர்மனை ஒருகாலும் இருக்க முடியாத மலடி மகனோடு ஸம்பந்தப்படுத்திச்)

---

1. பஞ்ச மூர்த்திகள்: சிவபெருமான், அம்பிகை, விநாயகர், முருகன், சண்டிகேச்வரர்.

2. II.1.18

Koviloor Digital Library

சொல்வது எத்தனை அஸம்பாவிதம் என்று உவமை காட்டியிருக்கிறார். அவர் குறிப்பிடும் ராஜாவான பூர்ணவர்மன் யார்? அவனுடைய காலத்தைக் கண்டு பிடித்துவிட்டால் அவனுக்கு ஸமகாலத்தவராகவோ பின் காலத்தவராகவோ இருந்திருக்கக்கூடிய ஆசார்யாளின் காலத்தைக் கண்டுபிடித்து விடலாம், என்று ஆராய்ச்சி பண்ணியிருக்கிறார்கள்.

பூர்ணவர்மன் என்று பேருள்ள இரண்டு ராஜாக்களை இவர்கள் கண்டுபிடித்திருக்கிறாரகள்.

Far East-ல் (தூரக் கிழக்கு நாடுகளில்) பாரத கலாசாரம் வெகு நாட்களுக்கு முந்தியே பரவியிருந்ததென்று தெரிந்திருக்கலாம். அவற்றில் 'யாவகம்' எனப்படும் ஜாவா வில் கி.பி. நாலாம் நூற்றாண்டில் ஒரு பூர்ணவர்மன் ஆட்சி செய்திருக்கிறான். அங்கே அவனுடைய பாதத்தை ஒரு பெரிய பாறாங்கல்லில் விஷ்ணு பாதம் மாதிரிச் செதுக்கி யிருக்கிறது. அதிலேயே அவனுடைய சிலா சாஸனமும் பொறித்திருக்கிறது. விஷ்ணுவுக்கு ஸமானமானவன் என்று அவனை வர்ணித்திருக்கிறது.

'ஆனால் ஜாவா தேசத்துப் பூர்ணவர்மனை ஆசார்யாள் எதற்கு உதாஹரணம் காட்டியிருக்கப் போகிறார்? அவரு டைய ஸூத்ர பாஷ்யத்தைப் படிக்கக்கூடிய நம் தேசத்து வித்வத் ஸமூஹத்துக்குத் தெரிந்த ஸ்வதேச ராஜா எவனை யாவதுதான் அவர் குறிப்பிட்டிருக்கணும்' என்று சொல்லி ரிஸர்ச்காரர்கள் இந்தப் பூர்ணவர்மனைத் தள்ளிவிடுகிறார் கள்.

அவர்கள் கண்டு பிடித்துள்ள இன்னொரு பூர்ண வர்மன்தான் நம் தேசத்தவன். மகத தேசத்தின் மேற்குப் பகுதியில் ஆட்சி செலுத்தியவன். கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முன்பாதியில் இந்தியாவில் 16 வருஷம் சுற்று ப்ரயாணம் செய்த ஹுவான் த்ஸாங் அந்த ஸமயத்தில் பூர்ணவர்மன் மகத நாட்டரசனாக இருந்த தாகக் குறிப்பிட்டிருக்கிறார். 'அதனால் ஆசார்யாள் refer

Koviloor Digital Library

பண்ணுவது இவனுகவே இருக்கவேண்டும். அவர் பாஷ்யம் எழுதியது காசியில். மேற்கு மகதம் அதன் கிட்டே வந்து விடுகிறது. காசியோடு ரொம்பவும் ஸம்பந்தப்பட்டது கயை. அங்கே (கயையில்) பௌத்த விரோதியான சசாங்கன் என்ற ராஜா வெட்டிவிட்ட போதி வ்ருக்ஷத்தைப் பூர்ண வர்மன் மறுபடி நட்டு, போஷித்து, துளிக்கப் பண்ணிய தாகத் தெரிகிறது. அதனுல் பாஷ்யத்தில் அவனேயே சொல்லியிருக்கிருரென்று வைத்துக்கொள்ளலாம்' என்கிருர் கள். அதாவது ஆசார்யாள் கி. பி. ஏழாம் நூற்ருண்டுக்கு அப்புறம்தான் வந்தவர் என்பதற்கு இதுவும் எவிடென்ஸ் என்கிருர்கள்.

இரண்டு ராஜாக்களில் இன்னெருத்தன் யாரென்ருல்....

'Far East ராஜாவைப்பற்றி நம்மூரில் ஆசார்யாள் பாஷ்யம் எழுதி ப்ரசாரம் பண்ணும்போது குறிப்பிடுவதற் கில்லை என்ருலும், அந்த தூர தேசத்தில் நம்முடைய வைதிக மதமும் பௌத்த மதமும் பரவியதால் அங்கே நம்முடைய தெய்வங்களுக்குக் கோவில், பௌத்த விஹாரங்கள் முதவியன இருக்கின்றன; அகஸ்த்யர், புத்தர், போதிஸத்வர் முதலியவர்களுக்கு விக்ரஹங்கள், அவர்களைப் பற்றி சாஸனக் குறிப்புகள் ஆகியவையும் இருக்கின்றன. இப்படி இண்டியன் இன்ஃப்ளுயென்ஸைக் காட்டுவதாக அங்கே ஆசார்யாளைப் பற்றியும் குறிப்புக் கிடைக்கக் கூடியது ஸாத்யமே. ஆசார்யாள் அந்த தேச ஸமாசாரத்தை பாஷ்ய புஸ்தகத்தில் குறிப்பிடுவதற்கில்லை என்பது மாதிரி அந்த தேசத்தினர் ஆசார்யாளைக் குறிப்பிடமாட்டார்கள் என்று சொல்லமுடியாது' என்ற அடிப்படையில் இந்த இன்னெரு ராஜாவைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக் கிருர்கள்.

காம்போஜம் என்று சொல்லப்படும் கம்போடியாவில், ச்லோகரூபமான ஒரு ஸம்ஸ்க்ருத சாஸனம் அகப்பட்டிருக் கிறது. அது இந்த்ரவர்மன் என்ற காம்போஜ ராஜாவின்

Koviloor Digital Library

சாஸனம். அதில் அவனுடைய குருவின் பெயர் சிவஸோமன் என்று சொல்லி, அந்த சிவஸோமன் "பகவான் சங்கர"ரிடமிருந்து சாஸ்த்ரங்களைக் கற்றுக்கொண்டாரென்று சொல்லியிருக்கிறது : யேநாதீதாநி சாஸ்த்ராணி பகவத்-சங்கராஹ்வயாத் | அதற்கப்புறம் அந்த 'பகவத் சங்கர'ரின் தனிப்பெருமையை ரொம்பவும் கொண்டாடி ச்லோகத்தை முடித்திருக்கிறது. அதாவது அவருடைய பாதமாகிற தாமரையை மிச்சம் மீதியில்லாமல் அத்தனை வித்வத் ச்ரேஷ்டர்களின் சிரஸாகிற வண்டு வரிசைகளும் மொய்த்துக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறது. அறிஞருலகம் முழுவதும் அவருடைய பாதத்தில் தலைவைத்து வணங்குவதாக அர்த்தம் : நிச்சேஷ-ஸூரி மூர்த்தாலி-மாலாலீடாங்க்ரி-பங்கஜாத்.

இந்த பகவான் சங்கரர் ஆசார்யாளாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். அந்தப் பெயரில் இப்படி வித்வத் ஸமூஹம் முழுவதாலும் வணங்கப்பட்டவராகக் கம்போடியாவில் எவருமில்லை; இந்தியாவிலும் ஸ்ரீ சங்கர பகவத்பாதரைத் தவிர எவருமில்லை என்று எடுத்துக் காட்டுகிறார்கள். "சங்கர பகவத:" என்று அவருடைய புஸ்தக Colophonகளிலும் இருக்கிறதென்றேனல்லவா? அதற்கு இது ('பகவத் சங்கர' என்பது) அப்படியே ஒத்துப்போவதைக் காட்டுகிறார்கள்.

இந்த்ரவர்மனின் காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பின்பாதி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது*. அவனுடைய குரு சிவஸோமன் அவனைவிட முப்பது, நாற்பது வருஷம் பெரியவராயிருக்கலாம். அவர் ஆசார்யாளின் நேர் சிஷ்யராயிருந்து அவரிடமிருந்து எல்லா சாஸ்த்ரமும் அப்யாஸம் செய்திருக்கிறாரென்றால் ஆசார்யாள் காலம் கி. பி. 788-820 என்ற கருத்து ரொம்பவும் ஸரியானதே என்று தோன்றுகிறது—என்கிறார்கள்.

---

* கி. பி. 878-87 அவனது ஆட்சிக்காலம் என்பது வரையறை.

Koviloor Digital Library

மேல்நாட்டவரின் பரிஹாஸமும் உள்நோக்கமும்: இப்படிக் காரணங்கள் காட்டிக் கால நிர்ணயம் பண்ணி நம்முடைய கணக்கைப் பரிஹாஸம் பண்ணுகிறார்கள்.

Old is gold என்று பழசையே கொண்டாடுவது நமக்கு வழக்கம். பூர்விகமாகப் போகப்போக ஒன்றுக்கு உயர்வு ஜாஸ்தி, தெய்விகம் ஜாஸ்தி, அதாரிடி ஜாஸ்தி என்று நமக்கு ஸுபர்ஸ்டிஷன் (மூடநம்பிக்கை.) அதனால் மநுஷ்ய ஜீவ உற்பத்தியே ஏற்பட்டிருக்க முடியாத எத்தனையோ லக்ஷம், கோடி வருஷத்துக்கு முந்தியே மநு இருந்தார், மாந்தாதா இருந்தார் என்று கதை பண்ணுகிறோம். க்ருதயுகம் கிட்டத்தட்ட 18 லக்ஷம் வருஷம் (17,28,000), த்ரேதாயுகம் அதில் முக்கால் (12,96,000 வருஷம்), த்வாபரம் பாதி (8,64,000) வருஷம், கலிகால் (4,32,000 வருஷம்) என்றெல்லாம் சொல்லி க்ருத யுகத்திலிருந்து ராஜவம்சங்கள் சொல்வதாக லிஸ்ட் கொடுத்து, அந்தக் காலத்தில் பல நூறு, பல ஆயிரம் வருஷம் ஜீவித்து ஆட்சி நடத்தியவர்களும் உண்டு என்று ஒரே புரளியாகப் பண்ணிவருகிறோம். இப்படி ஏதோ 43 லக்ஷம் வருஷம் முந்தி க்ருதயுகம் ஆரம்பித்ததோடு மட்டும் நிறுத்தாமல், இதற்கும் முன்னாடி எத்தனையோ சதுர்யுக ஸைகிள்கள், மன்வதந்ரம், கல்பம் என்றெல்லாம் லக்ஷத்திலிருந்து கோடிக்கணக்கான வருஷங்களுக்குத் தாண்டிப் புளுகு மூட்டைகளாகக் கட்டிவைத்திருக்கிறோம். அந்த ரீதியில் வருவதுதான் நாம் traditional ஆகச் சொல்லிவருகிற ஆசார்யாள் காலம்—என்று இவ்வாறாக (கி. மு. 509-477 என்ற) நம்முடைய அபிப்ராயத்தைத் தப்பு என்று சொல்லிப் பரிஹாஸம் செய்கிறார்கள்.

த்ரேதாயுக, க்ருதயுக விஷயங்கள் இங்கே ஸம்பந்தமில்லை. கலியில் கிட்டத்தட்ட 2600 வருஷமானபோதே ஆசார்யாள் அவதாரம் என்று நாம் சொல்வதால் பூர்வ யுக, மன்வந்தரச் சண்டைக்குப் போகவேண்டாம். இப்படிச் சொன்னதால் நமக்கு அந்த விஷயமாகப் பாயிண்ட் இல்லை என்று அர்த்தமில்லை.

Koviloor Digital Library

அவர்களுடைய (மேல் நாட்டினருடைய) ஸிவிலிஸேஷன் (நாகரீக வாழ்வு) தோன்றியது சில ஆயிரம் வருஷம் முந்திதான். அதிலும் அது முன்னேறியது 2000 வருஷத்திற்கு முன்வந்த கிறிஸ்துவுக்கு அப்புறந்தான். இன்று நவநாகரிகம் என்பதன் உச்சியிலிருக்கிற இங்கிலீஷ்காரர்கள், ஜெர்மனிக்காரர்கள் முதலியவர்களெல்லாம் 1500 வருஷம் முந்திக்கூட pirate என்று கப்பல்களைத் தாக்கி அழிக்கும் கூட்டம் முதலியனவாக இருந்து அப்புறம்தான் இங்க்லாண்ட், ஜெர்மனி ஆகிய இடங்களில் 'ஸெட்டில்' ஆகி ஸமுதாய வாழ்க்கை என்று ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பாஷைகள் ரூபமானதும் அதற்கப்புறம்தான்.

அவர்களை மட்டம் தட்டுவதற்காகச் சொல்லவில்லை. [சிரித்து] யாரையும் மட்டம் தட்டிப் பேசுவதுதான் எல்லாவற்றையும் விட மட்டம்! தற்பெருமை அடித்துக்கொள்வதும் மட்டம்தான், அஹங்காரம்தான். ஆனால் நம்மை அவர்கள் தாக்கிக் கேலி பண்ணும்போது ஏன் அப்படிப் பண்ணுகிறார்களென்று பார்க்க வேண்டியதாகத்தானே இருக்கிறது? அந்த ரீதியில்தான் சொல்வது. 1500 வருஷத்துக்குள் இலக்கியம், அரசாட்சி, வியாபாரம், ஸயன்ஸ், ஹைஜீன் என்று எல்லாவற்றிலும் அவர்கள் எப்படி அதிசயமான அபிவ்ருத்தி கண்டிருக்கிறார்கள் என்பதைப் புகழ்ந்து பாராட்டவும்தான் வேண்டும். எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் அவர்கள் எப்படி விடாமுயற்சியுடன் அடிவரையில் போய் ஆராய்கிறார்கள் என்பதையும் போற்றிச் சொல்லவேண்டும். நஷ்டப்பட்டுப்போன நம்முடைய அநேக சாஸ்த்ரங்களை, எங்கெங்கேயோ ஏட்டுச் சுவடிகளில் அரிபட்டுப்போய்க் கொண்டிருக்கும் போது தேடித் தேடிக் கண்டுபிடித்துப் பெரிசு பெரிசாக Index, Concordance என்றெல்லாம் அவர்கள்தான் புஸ்தகம் போட்டு ரக்ஷித்துக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு நாம் அவர்களிடம் எவ்வளவோ நன்றிக்கடன் பட்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

உழைப்பு, 'பங்க்சுவாலிடி' போன்ற பல விஷயங்களில் நாம் அவர்களிடம் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது.

ஆனாலும் அவர்களுடைய கண்ணோட்டத்திலுள்ள சில தப்பான போக்குகளையும் சொல்லாமலிருக்க முடியவில்லை— குறிப்பாக நம்மை அவர்கள் தாக்க வரும்போது. Offensive-ல் போகாமல் (நாம் அவர்கள் மேல் முதல் தாக்குதலில் இறங்காமல்) defensive-ல் (நம்மை அவர்கள் தாக்கும் போது நம் தற்காப்புக்கான எதிரடியாக)தான் சொல்வது.

அவர்கள் (ஓரியன்டலிஸ்டுகள்) சொல்வதில் மூலாதாரக் கோளாறு மனோதத்வ ரீதியிலானது. அதோடு ஒரு உள்நோக்கமும் உண்டு.

என்னதான் 'ஸயன்டிஃபிக் ரிஸர்ச்', அது, இது என்று அப்படியே நடுநிலை தப்பாமல் சொல்வதாகச் சொல்லிக் கொண்டாலும் மநுஷர்களாகப் பிறந்தவர்களை 'ஸைகலாஜிகல்' அபிமானங்கள் விடுவதே இல்லை. நம்மூரிலேயே ப்ரத்யக்ஷமாய் பார்க்கிறோம்: 'மூட நம்பிக்கைகளைக் குழி தோண்டிப் புதைக்கவேதான் நாங்கள் வந்திருக்கிறோமாக்கும்' என்று சொல்லிக்கொண்டு பகுத்தறிவு வாதிகள் என்றே ஒரு கட்சியாகப் புறப்பட்டிருப்பவர்களைப் பார்க்கிறோம். சாஸ்த்ர, புராணங்களை இவர்கள் பகுத்தறிவினால் ஆராய்ந்தே ஏகமாகக் கண்டனமும் கேலியும் செய்கிறார்கள். ஆனால் வெள்ளைக்காரன் வார்த்தையை நம்பிக் கொண்டு தங்களுடைய தனி இனம் என்று இவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிற இனம் என்றும், தாய் பாஷை என்றும் வந்துவிட்டால் இவர்களுடைய பகுத்தறிவு போன இடம் தெரிவதில்லை! ஜாதியிலே உசத்தி சொல்கிறவர்களென்று சில பேரைத் திட்டிக்கொண்டே, 'எங்கள் இனத்தைப் போல உசத்தி எதுவுமே கிடையாது' என்றும் இவர்கள் சொல்வது எப்படிப் பகுத்தறிவு என்று புரியவில்லை! தங்கள் பாஷையை விடவோ அதற்கு ஸமதையாகவோ

Koviloor Digital Library

எதுவுமே எங்கேயுமே கிடையாது, தங்களுடைய பண்பாட்டைவிடப் புராதனமாகவோ, அதற்குக் கிட்டே வரக்கூடிய லாயக்கோ உள்ளதாக எதுவுமே கிடையாது என்று ஒரே பிடிவாதமாகச் சாதிக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது சாஸ்த்ரஜ்ஞர்களைவிட இவர்களுக்குத்தான் ஜாஸ்தி ஸுபர்ஸ்டிஷன் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. எந்த பாஷையில், எந்தப் பண்பாட்டில் உயர்வாக எது இருந்தாலும், 'அதெல்லாம் எங்களிடம் இரவல் வாங்கியது தான்' என்கிறார்கள். வாஸ்தவத்தில் கொடுக்கல் - வாங்கல் பரிவர்த்தனையில் கொஞ்சங்கூட குறுகிய நோக்கமோ, தயக்கமோ இல்லாமல் நல்லதுகளை எல்லாம் அன்போடு வரவேற்றுத் தனதாக்கிக் கொண்டிருப்பதில் முதலாவதாக நிற்பது தமிழ் பாஷையும் பண்பாடும்தான். ஆனாலும் 'நாங்கள் பகுத்தறிவாளர்கள்' என்று சொல்லிக் கொண்டே, நடுநிலைமையில் பார்க்காமல், தாங்கள் கொடுக்கல் மட்டுமே செய்தவர்கள், வாங்கலே கிடையாது என்கிறார்கள்! 'தன் இனம்' என்று ஒன்றை நினைத்துவிட்டால் அதில் இப்படி அறிவுவாதங்களை மீறிய அபிமானம் ஏற்பட்டு விடுகிறது!

'ஸயன்டிஃபிக் ரிஸர்ச்' என்று புறப்பட்ட ஓரியன்டலிஸ்ட்களையும் இந்த அபிமானம் விடவில்லைதான்! இன்றைக்குத் தாங்கள் மேல் கையாக ஓங்கியும், இந்தியா கீழ்க் கையாகத் தங்களிடம் தாழ்ந்தும் இருந்தாலும்*, ஆதியில் தங்களுக்கு நாகரிகம் என்றால் என்னவென்றே தெரியாத காலத்தில் இந்தியா மஹத்தான கலாசாரத்துடன் விளங்கியிருக்கிறது என்பதை அவர்களால் ஏற்று ஜீர்ணித்துக் கொள்ளமுடிவதில்லை!

அவர்கள் தற்காலத்தில் பார்த்த ஹிந்து ஸமுதாயத்தில் பல குறைகள் இருப்பதாக நினைத்தார்கள். அவர்களுடைய நவீன-ஸயன்ஸ் அறிவு இங்கே இல்லை; அவர்கள் சொல்லிக் கொடுத்துத்தான் இவர்கள் தெரிந்துகொள்ள வேண்டி

---

* இந்தியா சுதந்திரம் பெறுமுன் கூறியது.

Koviloor Digital Library

யிருந்தது. அவர்களைப்போல ஸுகாதாரமாயில்லாமல் ஏராளமான ஜனங்கள் ஒரே அசுசியான சூழ்நிலையில் வ்யாதியும் வக்கையுமாகச் சிறு வயசிலேயே செத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களிடமுள்ள ஸமத்வம் இங்கே இல்லாமல், ஜாதி, கிளை ஜாதி என்று ஒரேயடியாகப் பிரித்துப் பிரித்து வைத்து, ஜாதியே இல்லாத பஞ்சமர் என்று வேறு ஒரு பெரிய கூட்டத்தை ஒதுக்கி வைத்திருந்ததும் அவர்களுக்குப் புரியவில்லை. நம்மில் கல்வியறிவு, ஸுகாதாரம் முதலியவற்றில் முன்னேறியுள்ள ஜாதிக்காரர்களும் அவர்களுடைய ஸயன்ஸுக்கு ஒத்து வராத சாஸ்த்ரக் கொள்கைகளையும், கார்யங்களையும் பின்பற்றி வருவதும் அவர்களுக்கு ஏற்கவில்லை.

இதையெல்லாம் பார்த்து இந்த தேசமே ரொம்ப backward (பின் தங்கியது) என்று சொல்லி, "உங்களுக்கெல்லாம் அறிவுச் சுடர் கொளுத்துகிறோம். எங்கள் மாதிரி உங்களையும் முன்னேற்றுகிறோம்" என்று ஆரம்பித்தார்கள்.

நவீன ஸயன்ஸ் கிறு கிறுவென்று அவர்களுடைய நாடுகளில் தோன்றி அபிவ்ருத்தி அடைந்த காலத்தில் நம் தேசம் துருக்கர் ஆட்சியில் இருந்து, கொஞ்சங்கூட முன்னேறாமல், நம்முடைய பழைய ஸயன்ஸுகளையும் மறந்துவிட்டது. இப்போது அவர்களுடைய ஸயன்ஸ் ஸாதனை நம்மவர்களுக்கு ப்ரமிப்பு உண்டாக்கிற்று. அதைப் பார்த்து. அவர்கள் காலடியில் விழுந்து அவர்கள் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தோம்.

தங்கள் காலடியில் வந்து விழுந்து தங்களையே வழிகாட்டிகளாக எடுத்துக்கொள்ளும் இதே ஹிந்துக்கள்தான் மிகப் புராதனமான காலத்திலிருந்து சில நூற்றாண்டுகளுக்கு முந்தி வரை ஸகல துறைகளிலும் முன்னேறி லோகத்துக்கே வழிகாட்டியாயிருந்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள அவர்களுடைய ஸ்வயாபிமானம் விடவில்லை!

Koviloor Digital Library

அது மட்டுமில்லை. உள்நோக்கம் என்றேனே, அதற்கு வருகிறேன். உறைக்குள் கத்தியை மறைத்து வைத்திருப்பது போல அவர்கள் ரஹஸ்யமாகப் போட்டு வந்த இன்னொரு திட்டத்துக்கு நம்முடைய புராதன கலாசாரத்தை ஒப்புக் கொள்வது இடைஞ்சலாயிருந்தது. அரசியல் ரீதியில் நம்மைத் தங்களுடைய ஆட்சிக்குள் கொண்டு வருவது மாத்திரம் அவர்களுடைய லக்ஷ்யமாயிருக்கவில்லை. நம் ஸமுதாயம் முழுவதையும் தங்களுடைய மதத்துக்குத் திருப்பிவிட வேண்டுமென்பதே அவர்களுடைய ரஹஸ்ய உத்தேசம். மறைந்து போயிருந்த நம்முடைய சாஸ்திரங்கள் வெளிவர நமக்கே உபகாரம் செய்தவர்கள் என்று அவர்களில் பலரைச் சொல்கிறோமல்லவா? அவர்களிலேயே சிலருடைய ஜீவ்ய சரித்ரம், அவர்கள் நடத்திய கடிதப் போக்குவரத்து முதலியவற்றைப் பார்த்தால் நமக்குத் தூக்கிவாரிப் போடும்! ஹிந்துக்களோடு விச்வாஸமாகப் போகிற மாதிரிப் போயே அவர்களை வளைத்துப் பிடித்து அவர்களுடைய ஸ்வ மதாபிமானம் போகும்படிச் செய்து அவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுத்துவிட வேண்டும் என்று அவர்கள் ப்ளான் போட்டிருந்தது இவற்றைப் பார்க்கும்போது தெரியும். வெளியிலே மிஷனரிகள் பஹிரங்கமாகச் செய்தது குறைச்சல். உள்ளூரக் குழிபறித்ததுதான் ஜாஸ்தி. வெளியிலே 'அவரவருக்கும் மத ஸ்வதந்த்ரம் உண்டு. ஹிந்து சாஸ்த்ர விஷயங்களில் தலையிட மாட்டோம்' என்று விக்டோரியா ப்ரகடனத்திலிருந்து ஆரம்பித்துச் சொல்லி வந்தார்கள். ஆறாயிரம் மைலுக்கு அப்புறத்திலிருந்து கொண்டு கோடிக் கணக்கான ஜனங்களை ஆளும் போது ஜாக்ரதையாகத்தானே இருக்க வேண்டும்? அதனால் வெளியில் நேர்மை மாதிரிப் பண்ணிக் கொண்டே உள்ளூர ஹிந்துக்களைத் தங்கள் மதத்திற்கு இழுக்க எல்லா ஸாமர்த்யமும் பண்ணினார்கள். 'நம் மதத்திற்கு வராவிட்டால்கூடப் பரவாயில்லை. ஸொந்த மதத்தை இவர்கள் விட்டுவிடும்படிப் பண்ணிவிட்டால்

Koviloor Digital Library

போதும்' என்ற ரீதியில் கார்யங்கள் செய்யலானார்கள். அதாவது ஹிந்துக்களுக்கு ஹிந்து மதத்தில் கௌரவ புத்தி போகும்படிப் பண்ணுவதற்குப் பல விதத்திலும் முயற்சி செய்தார்கள்.

பூர்வத்தில் எல்லாத் துறையிலும் இந்தியாவே முன்னேறியிருந்தது என்றேன். அது வாஸ்தவம். அதிலும் இந்தியா மிகவும் விசேஷமாக முன்னேறியிருந்தது ஆத்ம ஸம்பந்தமான ஸமய சாஸ்த்ரத்திலும் அநுஷ்டானங்களிலுமேயாகும். வாழ்க்கையின் ஸகல அம்சங்களிலும், கலாசாரத்தின் அத்தனை இழைகளிலும் ஸமயமே ஊறியிருக்கும்படியாக இங்கே ஏற்பட்டிருந்தது. எதை எடுத்தாலும் அது ஆத்மாபிவ்ருத்திக்குக் கொண்டு விடுவதாகவே ரிஷிகளாலும், அப்புறம் வந்த பெரியவர்களாலும் அமைக்கப்பட்டிருந்தது. இப்படி மதவுணர்ச்சியையே மையமாகக்கொண்டு, மற்ற எல்லாப் பூர்விக ஸிவிலிலேஷன்களும் அழிந்தபின்னும் தான் மட்டும் அழியாமல் ஹிந்து நாகரிகம் இருந்து வந்திருக்கும்போது இங்கே போய்ப் புதிய மதம் ஒன்றைப் புகுத்துவது என்றால் அதற்கு எவ்வளவோ தந்திரமும் தகிடுதத்தமும் பண்ணத்தானே வேண்டியிருக்கும்?

அதில் ஒன்றுதான்—(இன்னம் எத்தனையோ இருக்கின்றன. முக்யமாக ஆர்யன் - த்ராவிடன் என்று ஒரு தாய் வயிற்றுக் குழந்தையாக இருந்தவர்களை பேதம் பண்ணியது. ஆனால் அதிலெல்லாம் இப்போது ப்ரவேசிக்கவேண்டாம். நமக்கு அவச்யமான அம்சத்தை மட்டும் பார்க்கலாம்.)—ஹிஸ்டரி, ரிஸர்ச் என்று சொல்லிக்கொண்டே நம்முடைய மிகப் பழைய காலத்தை முடிந்தமட்டும் கிறிஸ்து சகாப்தத்துக்கு எவ்வளவு கிட்டே கொண்டு வரமுடியுமோ அப்படிக் கொண்டுவந்து விடுவது! 'நம்முடையது ரொம்பவும் தொன்மையானது' என்பதில் ஒரு பெரிய ஸைகலாஜிகல் நிறைவு இருக்கிறதென்று சொன்னேனல்லவா? 'ஹிந்துக்களுக்கு அந்த நிறைவு இல்லாமல் பண்ணிவிட வேண்டும்'

Koviloor Digital Library

என்று நினைத்தார்கள். நினைப்பைக் கார்யமாகச் செய்து கொள்ள அவர்களுக்குக் கிடைத்த ஒரு முக்யமான உபாயம் பௌத்த மதம்.

பௌத்தம் தற்காலத்தில் கிறிஸ்துவ மதத்துக்கு அடுத்த பெரிய மதமாகக் கிழக்காசிய நாடுகளில் ஜப்பான் வரை பரவியிருப்பதையும், ஆனால் அதன் பிறந்த வீடான இந்தியாவில் அதற்கு இடமில்லாலிருப்பதையும் பார்த்தார்கள். அதே ஸமயத்தில் புத்தரின் அன்புள்ளம், த்யாகம் முதலியவற்றால் ஹிந்துக்களுக்கு அவரிடம் ஒரு ரெஸ்பெக்ட் இருப்பதையும் அவரை தசாவதாரத்தில் ஒன்றாகவே சேர்த்திருப்பதையும் கவனித்தார்கள். நம்முடைய ஹிந்து மதாபிமானத்தைக் குலைப்பதற்கு இதை நன்றாக ப்ரயோஜனம் செய்துகொள்ளலாமென்று ப்ளான் போட்டார்கள். நம் ஜன ஸமூஹத்துக்குப் பரிசயமில்லாத கிறிஸ்துவைக் காட்டுவதற்கு முந்தி, பரிசயமுள்ள புத்தரைக் காட்டியே நம் சாஸ்திராபிமானத்தை நலியப் பண்ண ஆரம்பிக்கலாமென்று நினைத்தார்கள். 'எப்படியும் பௌத்த மதத்தில் இவர்களை மதமாற்றம் செய்வதற்கு அந்த மதத்தில் விசேஷமாக ஸ்தாபனம் எதுவும் இல்லை. ஆகையால் புத்தரை நாம் விசேஷித்துச் சொல்வதால் அந்த மதத்திற்கு யாரும் போய்விட மாட்டார்கள். இது நமக்கு ஸௌகர்யமாயிற்று. இவர்கள் அவதாரமாகச் சொல்பவரே வைதிக கர்மாக்கள், வர்ண தர்மம் முதலியவற்றை ஆக்ஷேபித்திருப்பதை எடுத்துக் காட்டியே ஹிந்து மதவுணர்ச்சியை நலிவிக்கலாம். கிறிஸ்து சகாப்தத்துக்கு அப்புறம்தான் இந்தியாவில் பெரிய நாகரிகம் உண்டாயிற்று என்று காட்டாமல் அதற்குக் கொஞ்சம் முந்தி புத்தரின் இன்ஃப்ளுயென்ஸால், அவரை யொட்டித்தான் இண்டியன் ஹிஸ்டரியே ரூபமாக ஆரம்பித்ததென்று காட்டலாம். பாரத கலாசாரத்துக்கே முக்யமாக இருக்கப்பட்ட முதல் பெரியவர் அவர்தான் என்று காட்டலாம். "ராமன், க்ருஷ்ணன் எல்லாம் கதாபாத்ரங்கள் தான்; அவர்கள் சரித்ர பூர்வமாக இருந்ததாகச் சொல்வ

Koviloor Digital Library

தற்கில்லை; புத்தர்தான் சரித்ராதாரப்படியே இருந்தவர்' என்று காட்டலாம். 'அத்வைதமா, மாயா டாக்ட்ரினு (மாயைக் கொள்கையா)—அவை பௌத்தத்திலிருந்துதான் வந்தன; சயனக் கோலத்தில் விஷ்ணு மூர்த்தியா, அது புத்தரின் மஹா பரிநிர்வாண சில்பத்திலிருந்துதான் வந்தது' என்றிப்படி எதை எடுத்தாலும் பௌத்தத்திலிருந்துதான் ஹிந்து மதத்திலுள்ள உசந்த அம்சங்களெல்லாம் வந்திருக்கின்றன என்று காட்டிவிடுவோம்.

'எல்லாவற்றுக்கும் அடிப்படையிலேயே Dravidian Culture (த்ராவிடக் கலாச்சாரம்) என்று பேதமாக ஒன்றைப் பிரித்துச் சொல்லி அதிலிருந்தே வைதிக மதம் அநேக அம்சங்களை இரவல் வாங்கினதாகக் காட்டலாம்; மிஞ்சியதில் பல பௌத்தத்திலிருந்து கடன் வாங்கினதாகக் காட்டலாம்—ரொம்ப நைஸாக, எந்த ப்ரெஜுடிஸும் இல்லாமல் உள்ளது உள்ளபடி ஆராய்கிறாற்போலவே இப்படியெல்லாம் காட்டலாம். அப்படிப் பண்ணி இந்தியர்களுடைய ஹிந்து மதாபிமானத்தை உளுத்துப்போகப் பண்ணலாம். அப்புறம் நம் மிஷனரி இருக்கவே இருக்கிறது, நம்முடைய மதத்தில் இவர்களைத் தள்ளிக்கொள்ள' என்று நினைத்தார்கள்.

இந்தவிதமான எண்ணங்களோடுதான் அவர்கள் ஹிஸ்டரி எழுதியது. 'அநாதி என்று ஹிந்துக்கள் கொண்டாடும் வேதமே புத்தருக்கு ஆயிரம், ஆயிரத்தைநூறு வருஷத்துக்கு முந்தி ஏற்பட்டதுதான். அந்த வேதம்தான் ஹிந்து நாகரிகத்தின் அஸ்திவாரம் என்பதும் தப்பு. அதற்கும் சில நூற்றாண்டு முன்னால் வேறே ஹாரப்பா நாகரிகமென்று ஒன்று இருந்தது. அது த்ராவிட நாகரிகமாக இருந்தாலும் இருந்திருக்கலாம். அந்த ஜனங்களை அடக்கி ஒடுக்கி விரட்டிவிட்டு, ஆனாலும் அவர்களுடைய நாகரிகத்திலிருந்தே பல விஷயங்களை எடுத்துக்கொண்டுதான் வேத நாகரிகம் என்று ஏற்படுத்தினார்கள்' என்று ஹிஸ்டரியை ஆரம்பித்து மேலே படிப்படியாய் இதே

Koviloor Digital Library

மாதிரியான 'கைங்கர்யங்கள்' பண்ணிக் கொண்டுபோயிருக்கிறார்கள்!

நம்முடைய பிள்ளைகளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே இந்த சரித்ர பாடத்தைச் சொல்லிக்கொடுப்பதால் அதுவே ஸத்தியம் என்று மனஸில் பதிந்துவிடுகிறது. பெரியவர்களான பின்னும் அந்த நம்பிக்கை போவதில்லை. நம் சாஸ்த்ரங்கள் யாவும் அறிவுக்குப் பொருந்தாதவை, ஸூபர்ஸ்டிஷன் என்ற எண்ணம் நன்றாகப் பரப்பப்பட்டு எல்லார் மூளையையும் ஆக்ரமித்துக் கொண்டிருப்பதால் அவற்றில் கொடுத்திருக்கும் சரித்ர விஷயங்களில் நமக்கே நம்பிக்கையில்லை. நம்முடைய புராணங்களில் விவரமாக வம்சாவளிகள் கொடுத்து, ஒவ்வொருவரும் இவ்வளவு வருஷம் என்றும் சொல்லியிருப்பது அத்தனையும் கல்பனைதான் என்று தள்ளியே விடுகிறார்கள். அவற்றை நம்பிக்கொண்டிருக்கும் சாஸ்திரஜ்ஞர்களும் ஒன்று, வறட்டு மூடநம்பிக்கைக்காரர்கள் அல்லது அசட்டு முத்தண்ணாக்கள் என்றே வர்ணிக்கப்பட்டு, அந்த வர்ணனை இளம் தலைமுறையினரின் மனஸில் வேரூன்றி இருப்பதால் இவர்கள் என்ன எடுத்துச் சொன்னாலும் காதிலேயே போட்டுக்கொள்ளாமல் 'எங்கள் ப்ரொஃபஸர்கள், டாக்டர்கள் சொல்கிறதுதான் அதாரிடி' என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதுவும் ஒரு ஸூபர்ஸ்டிஷன்தான்! 'எதைக் கொண்டு புராணத்தைத் தப்பென்று ரிஸர்ச்காரர்கள். சொல்கிறார்கள்? அவர்கள் எது எதைக்கொண்டு இப்படி இப்படி என்று கால நிர்ணயம் செய்திருக்கிறார்கள்? இதற்கு வேறேயாகச் சொல்ல ஆதாரமேயில்லையா?' என்றெல்லாம் யோசித்துப் பார்ப்பதில்லை. நவீனப் படிப்பாளிகள் எதைச் சொன்னாலும் அப்படியே அங்கீகரிப்பது, பூர்வகால அபிப்ராயத்தை அப்படியே திரஸ்கரிப்பது என்று இருக்கிறார்கள்.

கலியுகத்தில் நமது காலக் கணக்குகள்: முன்னேயே சொன்னாற்போல பூர்வ யுகங்களின் ஸமாசாரத்தை விட்டுவிடுவோம். கலியுகத்தில் வந்த ராஜ வம்சங்களைப்

Koviloor Digital Library

பற்றி முழு விவரமும் புராணங்களில் கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு ராஜாவையும் பேர் சொல்லி இத்தனை வருஷம் ஜீவித்தான் என்றும் வரிசையாகச் சொல்லியிருக்கிறது. இதில் நம்பமுடியாததாக எதுவும் இல்லை.

விஸ்தாரமான இந்த தேசத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த காலங்களிலே எழுதப்பட்டதால் ஒவ்வொரு ப்ரதேசத்தில் எழுதியவர்கள் இன்னொரு ப்ரதேசத்தைப்பற்றிச் சொல்லும்போது சில தவறுகள் நேர்ந்திருக்கும். அதனால் புஸ்தகங்களுக்கிடையில் ஒன்றுக்கொன்று முரணாகவும் தகவல்கள் இருக்கும்தான். ஆனாலும் எல்லாவற்றையும் எடுத்துப் போட்டுக்கொண்டு deep-ஆக comparative study பண்ணினால் நிச்சயம் ஏகோபித்த முடிவுகளுக்கு வரமுடியும். அப்படிப் பண்ணப் பொறுமையில்லை. அடிப்படையில் உண்மை என்ற நம்பிக்கையே போய்விட்டபின் என்ன பண்ணுவது?

தினமும் 'ஸங்கல்பம்' என்று எந்த வைதிக கார்யத்திலும் செய்துவருகிறோம். என்றைக்கு இந்தப் பழக்கம் ஆரம்பித்தது என்றே சொல்ல முடியாதபடி அத்தனை பூர்வ காலத்திலிருந்து இந்தப் பரந்த தேசத்தின் அத்தனை இடங்களிலும் அன்றன்றும் இப்படி 'ஸங்கல்பம்' சொல்லி வருகிறோம், அதிலே ப்ரம்மாவின் வயஸிலிருந்து ஆரம்பித்து, கலியுகத்துக்கு வந்து, நடப்பு வருஷம்-மாஸம்-திதிவரை ஒவ்வொரு நாளாகக் கூட்டிச் சொல்லி வந்திருக்கிறோம். இதிலே இந்த வருஷத்தை* கலியுகப்படி 5064 என்றே காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை வித்யாஸமில்லாமல் சொல்கிறோம். நம்பமாட்டேன் என்றால் எப்படி?

ஆசார்யாள் கால விஷயமாக சிவரஹஸ்ய இதிஹாஸத்தில் "ஸஹஸ்ர த்வியாத்-பரம்" என்று சொல்லியிருக்கிறது. அப்படியென்றால் 'கலியில் இரண்டாயிரம் வருஷத்துக்கு அப்புறம்' என்று அர்த்தம். 'அப்புறம்' கரெக்டாக எந்த

---

* 1963

Koviloor Digital Library

வருஷமென்று சொல்லவில்லை! நாமெல்லாம் போட்டு மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டுமென்றே இப்படிச் சொல்லி விட்டுவிட்டாற் போலிருக்கிறது! எப்படியும் கலியில் மூவாயிரம் வருஷத்துக்கு முந்தித்தான் அவதாரம் என்று இதிலிருந்து ஆகிறது.

பவிஷ்யோத்தர புராணத்தில் "கல்யாதௌ த்விஸஹஸ்ராந்தே" என்று இருக்கிறது. 'கலியில் இரண்டாவது ஆயிரத்தின் முடிவுப் பகுதியில்' என்று அர்த்தம்.

வேறு பல புராணங்கள், (சங்கர) மடங்களைச் சேர்ந்த புஸ்தகங்கள்—குருபரம்பரைகள்—சாஸனங்கள் முதலானதுகள், இதர ஆதாரங்கள், கர்ண பரம்பரையாக வந்துள்ள நம்பிக்கை ஆகியவற்றிலிருந்து நாங்கள் ஆசார்யாளின் காலம் கலியில் 2593லிருந்து 2625வரை என்று கருதி வருகிறோம். கலியின் இரண்டாவது ஆயிரம் வருஷங்களில் அறுநூறு வருஷத்துக்கு முன்னும் பின்னுமாக இது இருப்பதால் இதை "முடிவுப் பகுதியில்" என்று பவிஷ்யோத்தர புராணம் சொல்லியிருக்கலாம். கலி 259"—2625 என்பது கி.மு. 509—477 ஆகிறது...

நமது சரித்ர ஆதார நூல்கள் : ஜெனரலாகக் கொஞ்சம் சொல்கிறேன். நம் ராஜ வம்சங்களின் காலங்களைப் புராணங்களில் கொடுத்திருக்கிறது. அது தவிர ஸுமார் ஆயிரம் வருஷம் முந்தி கல்ஹணர் என்ற கவி காஷ்மீர ராஜ வம்சத்தைப்பற்றி ஆதியோடந்தம் விசாரித்து, கர்ண பரம்பரையாக வந்த தகவலையெல்லாமும் சேர்த்து "ராஜ தரங்கிணி" என்று புஸ்தகம் எழுதியிருக்கிறார். ('கர்ண பரம்பரை' என்றவுடனேயே 'கதை' என்று தூக்கிப் போட்டு விடக்கூடாது. ஆதாரமில்லாமல் இப்படி வழிவழி வந்திருக்குமா என்று ஆராய்ந்து பார்த்து, மற்ற ஆதாரங்களோடு ஸரி பார்த்தால் அதில் ஏற்கத்தக்கதாக நிறைய இருக்கும்.) ஒரு ராஜா என்றால் பிற ராஜாக்களோடு யுத்தம் செய்வது, விவாஹ ஸம்பந்தம் வைத்துக் கொள்வது என்றெல்லாம் வரத்தானே வரும்? அதனால்

Koviloor Digital Library

காஷ்மீர வம்சாவளியை சொல்லிக்கொண்டு போகும் 'தரங்கிணி' அந்தந்தக் காலங்களில் இந்தியாவில் இருந்து வந்த இதர ராஜாக்களையும் பற்றித் தெரிவித்து விடுகிறது. அநேக இடங்களில் இதில் இருப்பதும் புராணங்களில் சொல்லியிருப்பதும் ஒத்துப்போய்விடுகின்றன.

நேபாளத்தில் ஆதியிலிருந்து ஆட்சி நடத்தியவர்களைப் பற்றி வரிசைவாரியாகக் காலம் சொல்லி ராஜ வம்சாவளி என்று இருக்கிறது. 'Chronicle of Nepal' என்று இங்கிலீஷில் சொல்கிறார்கள். பண்டிட் பகவான் லால் இந்த்ராஜி என்பவர் ஒரு புத்த பிக்ஷுவிடமிருந்து இந்த வம்சாவளியைப் பெற்று ப்ரகாசப்படுத்தியிருக்கிறார். மஹாபாரத காலத்திலிருந்து அதில் ராஜாக்களின் பெயர்களும் காலங்களும் கொடுத்திருக்கிறது. அதிலிருந்தும் நம் சரித்ர புருஷர்களின் காலத்தைப்பற்றி அறிய முடிகிறது. புராணம் முதலான மற்ற source-களிலிருந்து நாம் பெறும் தகவல்களில் பல இதோடு ஆச்சர்யமாக ஒத்துப் போகிறது.

லங்கையில் 'மஹாவம்சம்' என்று ஒரு புஸ்தகம். குறைந்தபக்ஷம் 1500 வருஷத்துக்கு முற்பட்டது. அந்த தேசத்தில் பௌத்த மதத்தின் வரலாறு என்ன என்று அது தெரிவிக்கிறது. ஹிந்துப் புஸ்தகங்களைவிட பௌத்தப் புஸ்தகங்களுக்கு ஸத்யத்வம் ஜாஸ்தி என்று காட்டுவது ரிஸர்ச்காரர்களின் வழக்கம். அதனால் அவர்களும் மஹா வம்சத்தைப் பெரும்பாலும் நம்பலாமென்கிறார்கள்.

ராஜாவின் ஆதரவு அல்லது அநாதரவிலேயே மத வளர்ச்சி அல்லது நலிவு ஏற்பட்டிருப்பதால் 'மஹா வம்சம்' ராஜ வம்சங்களைப் பற்றியும் தெரிவித்துவிடுகிறது. ஆதியில் இந்தியாவினாலேயே லங்கையின் ஸமய கலாசாரம், அரசியல் வாழ்வு எல்லாம் ஏற்பட்டு, அப்புறமும் சண்டை—ஸ்நேஹிதம் என்று இரண்டு விதத்திலும் இந்த இரண்டு நாடுகளும் ஸம்பந்தப்பட்டிருந்திருப்பதால் இதிலேயும் நம்முடைய தேசத்தவர்களைப் பற்றிய கால விவரங்கள் வருகின்றன.

Koviloor Digital Library

புராணங்கள், வடக்கே ஒரு கோடியில் காஷ்மீரத்தின் ராஜ தரங்கிணி, இன்னொரு கோடியில் நேபாளி வம்சாவளி, தென்கோடியில் லங்கையின் மஹாவம்சம் என்று எல்லா வற்றையும் வைத்துக்கொண்டு அவை எங்கே ஒத்துப் போகின்றன என்று பார்த்து, அப்படிப்பட்டவற்றையாவது நாமும் ஒப்புக்கொள்வது என்று வந்தால் நன்றாயிருக்கும். இப்படிப் பல இருக்கவே செய்கின்றன.

நாம் சொல்வது History-யே இல்லை, வெறும் story-தான் என்று சொல்பவர்களும் நிஜமான History-ஐத்தான் சொல்லியிருப்பார்கள் என்று அப்படியே நம்பாமல் இதை யும் அதையும் சேர்த்து அலசிப் பார்க்கலாம்.

மையக் கேள்வி: மெகஸ்தனிஸ் சொல்லும் 'ஸன்ட்ர கோட்டஸ்' யார்? :—வேண்டுமென்று, மனஸறிந்து வெள்ளைக்காரர்கள் நம்முடைய சரித்ர காலங்களை ரொம்பவும் பிற்காலத்துக்கு இழுத்துவிட்டு நமக்குப் புராதனப் பெருமை இல்லாமல் பண்ணியிருப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். அவர்களையும் ஒரேயடியாகக் குறைசொல்வது ஸரியில்லைதான். அவர்களில் எல்லாருமே பக்ஷபாதிகள் தான் என்று நினைப்பதும் ந்யாயமில்லை. அதனால், அவர் களுக்கும் தெரியாமலே, உள்நோக்கமில்லாமலே, அவர்கள் ஸரியில்லாத ஒரு ஆதாரத்தை ஸரியென்று நிஜமாக நம்பி அந்த அஸ்திவாரத்தின் மேல் காலக் கணக்குகளை நிர்ணயித் திருக்கிறார்களோ என்று தோன்றும் ஒரு விஷயத்தையும் சொல்கிறேன்.

புராதன இந்திய சரித்ரத்தில் ஸர்வ நிச்சயமாக உறுதிப் படுத்தக்கூடிய தேதி என்று ஒன்றை அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஒன்றை அடிப்படையாக வைத்துத்தான் அதற்கு முன் பின்னாகப் பழைய கால நிகழ்ச்சிகளை நிர்ணயித்திருக்கிறார்கள். ஒரு மாதிரி அதுதான் பழைய சரித்ரத்திற்கே key-யாக இருக்கிறது.

அது என்ன?

Koviloor Digital Library

அலெக்ஸாண்டருக்கு அடுத்தாற்போல் க்ரீஸில் (கிரேக்க நாட்டில்) ஆட்சிக்கு வந்த அவனுடைய ஸேனாதிபதி ஸெல்யூகஸ் நிகேடார் என்பவன் இந்தியாவின்மேல் படையெடுத்தான். ஆனால், பாடலிபுத்ரத்திலிருந்து ஆட்சி பண்ணிக்கொண்டிருந்த மகதச் சக்ரவர்த்தி ஒருவனிடம் தோற்றுப்போனான். இரண்டு பேரும் ஸமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். விவாஹ ஸம்பந்தம் கூடப் பண்ணிக்கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. அப்புறம் அவன் பாடலிபுத்ர ராஜஸபைக்குத் தன்னுடைய அம்பாஸிடராக (அரசாங்க தூதராக) மெகஸ்தனிஸ் என்பவரை அனுப்பி வைத்தான். அந்த மெகஸ்தனிஸ் இந்தியாவில் தான் கண்டதையும் கேட்டதையும் எழுதி வைத்திருக்கிறார். அதுதான் வெள்ளைக்காரர்களுக்கு நம் தேச சரித்ரம் பற்றிக்கிடைத்த முதல் authentic document-ஆக (பூர்ண நம்பிக்கைக்குரிய சாஸனமாக) இருக்கிறது.

அலெக்ஸாண்டர், ஸெல்யூகஸ் நிகேடார், மெகஸ்தனிஸ் முதலியவர்களின் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு என்று அவர்களுக்கு ஸர்வ நிச்சயமாகத் தெரியும். அதனால் மெகஸ்தனிஸ் குறிப்பிடும் பாடலிபுத்ர ராஜாவும் அந்தக் காலம்தான் என்று தீர்மானமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த ராஜா யார்?

Sandracottus என்று மெகஸ்தனிஸ் குறிப்பிட்டிருப்பவன்தான்.

இந்த ஸன்ட்ரகோட்டஸ் மௌர்ய வம்சத்தை ஸ்தாபித்துச் சக்ரவர்த்தியாக இருந்த சந்த்ரகுப்தன் என்று வைத்துக்கொண்டே வெள்ளைக்காரர்கள் நம்முடைய பழைய சரித்ர காலங்களை நிர்ணயித்திருக்கிறார்கள். தங்களுக்குத் தீர்மானமாகத் தெரிந்த ஸெல்யூகஸ் நிகேடாரின் ஸமகாலத்தவனான சந்த்ரகுப்த மௌர்யன் கி.மு. நான்காம் நூற்றாண்டின் முன் பாதியில் இருந்தவன் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

அதைக்கொண்டே அவனுக்கு முன்னால் அரசாண்ட நந்த வம்சம், அதற்கு முந்தி ஆண்ட சிசுநாக வம்சம் என்றிப் படியும், அவனுக்குப் பின்னால் மௌர்ய வம்சத்தில் வந்த அவனுடைய பிள்ளையான பிந்து ஸாரன், பேரனான அசோகர் முதலானவர்கள், மௌர்யர் வம்சத்துக்கு அப்புறம் வந்த சுங்க வம்சம் முதலானவற்றுக்கும் காலம் நிர்ணயித்திருக்கிறார்கள்.

இது ஸரிதானா என்பதே கேள்வி. பெரிய கேள்வி!

'ஸன்ட்ர கோட்டஸ்' என்று, அதாவது 'சந்த்ர குப்தன்' என்று மட்டும் தான் மெகஸ்தனில் சொல்லியிருப்பது; சந்த்ரகுப்த மௌர்யன் என்று அல்ல. அவன் என்ன வம்சம் என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. அவனுக்கு முன்னால் நந்த வம்சம் ஆட்சியில் இருந்ததென்றோ, அவனுக்குப் பிள்ளை பிந்துஸாரன் என்றோ எதுவும் சொல்லவில்லை. பாடலிபுத்ரத்தை 'போலிபோத்ரா' (Polibothra) என்று சொல்லி, அங்கே இருந்துகொண்டு இவன் ஆட்சி செய்த தாகவும் அப்போது அவனுடைய ராஜ்யம் எத்தனை உன்னத ஸ்திதியில் இருந்தது என்பதையும்தான் விவரித்திருக்கிறார்.

அதனால்தான் கேள்வி வருகிறது. மெகஸ்தனிஸ் சொல்லும் ஸன்ட்ரகோட்டஸ் ஏன் மௌர்ய வம்ச சந்த்ரகுப்தனாக இல்லாமல் குப்த வம்சத்து சந்த்ரகுப்தனாக இருக்கக்கூடாது என்பதுதான் கேள்வி. குப்த வம்சமும் இதே பாடலிபுத்ரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்திருக் கிறது. அதிலே இரண்டு சந்த்ரகுப்தர்கள். இரண்டாமவன் தான் சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் என்று புகழ் பெற்றவன். மெகஸ்தனிஸ் ஏன் இந்த குப்த சந்த்ரகுப்தர்களில் ஒருத்தரு டைய ஆட்சியின்போது இருந்திருக்கக் கூடாது?

புராணங்கள், ராஜதரங்கிணி, நேபாளி வம்சாவளி ஆகியவற்றிலிருந்து மகத தேசத்தை ஆண்ட வம்சங்களின் காலத்தை கணித்துப் பார்த்தால் மெகஸ்தனிஸின் காலமான கி. மு. நாலாம் நூற்றாண்டில் சந்த்ரகுப்த மௌர்யன்

Koviloor Digital Library

இருந்தானென்பது ஸரியாக வரவில்லை. இவற்றிலிருந்து நாம் பெறுகிற விவரப்படி மௌர்ய சந்த்ரகுப்தனுடைய காலம் கிட்டத்தட்ட கி. மு 1500-ஆக இருக்கிறது[1]. இப்போது ஓரியன்டலிஸ்டுகள் அவன் ஆட்சிக்கு வந்ததாகச் சொல்லும் கி. மு-300க்கும் இதற்கும் 1200 வருஷ வித்யாஸம்! ஆசார்யாள் விஷயமாக நாம் சொல்வதற்கும் அவர்கள் சொல்வதற்கும் 1300 வருஷ வித்யாஸம்!

விஷ்ணு புராணத்தில் ஒரு இடத்தில் கலி ஆரம்பத்தில் ஆட்சிக்கு வந்த பரீக்ஷித்துக்கு 1500 வருஷத்துக்கப்புறம் நந்தன் (சந்த்ரகுப்த மௌர்யனுக்கு முன் மகதாதிபதியா யிருந்த மஹாபத்மநந்தன்) பட்டத்துக்கு வந்தானென்று இருக்கிறது[2]. அதாவது நந்தன் கி. மு 1600-ல் ஆட்சிக்கு வந்திருக்கிறான். அடுத்தவன் சந்த்ரகுப்தன் என்றால் முன்னே சொன்னதற்குக் கிட்டத்தில்தானே, 3500 வருஷத்துக்கு முற்பட்ட ஸம்பவங்களை கணிக்கும் போது?

இப்படி வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து தெரிய வருவதால் மெகஸ்தனிஸ் சொல்வது மௌர்ய சந்த்ரகுப்தனைத்தான் என்று முடிந்த முடிவாகத் தீர்மானம் பண்ணுவதற்கில்லை என்றே தோன்றுகிறது.

---

1. நமது பூர்விக நூல்களின்படிக் கலியுகத் தொடக்கத்திலிருந்து மகதத்தை ஆண்ட வம்சங்களின் காலம் பற்றி அறிஞர்கள் தரும் விவரம்:

பார்ஹத்ரத வம்சம்	— 22 அரசர்	— கி. மு. 3102-2096 (கலியின் முதல் 1006 ஆண்டுகள்)
ப்ரத்யோத வம்சம்	— 5 அரசர்	— கி. மு. 2096 - 1958
சிசுநாக வம்சம்	— 10 அரசர்	— கி. மு. 1958 - 1598
நந்த வம்சம்	— 2 அரசர்	— கி மு. 1598 - 1498
மௌர்ய வம்சம்	— 12 அரசர்	— கி.மு. 1498-1182

மௌர்யர்களில் முதல்வனான சந்த்ரகுப்தன் கி. மு. 1498-ல் பட்டத்துக்கு வந்ததையே ஸ்ரீ சரணர்கள் 'கிட்டத்தட்ட கி மு. 1500' என்று கூறியுள்ளார்கள்.

2. யாவத் பரீக்ஷிதோ ஜந்ம யாவந்-நந்தாபிஷேசநம் ।
ஏதத் வர்ஷ ஸஹஸ்ரம் து ஜ்ஞேயம் பஞ்ச-சதோத்தரம் ॥
(விஷ்ணு புராணம் IV. 24. 104)

Koviloor Digital Library

அந்த ஸன்ட்ரகோட்டஸ் குப்த வம்சத்தின் இரண்டு சந்த்ரகுப்தர்களில் ஒருத்தனுக இருக்க இடமுண்டு என்றும் தோன்றுகிறது.

ரிஸர்ச்காரர்களின் முடிவுப்படி சந்த்ரகுப்த மௌர்யன் கி. மு. நாலாம் நூற்றுண்டின் ஆரம்ப காலம்; குப்த வம்ச சந்த்ரகுப்தர்களில் முதல்வன் கி. பி நாலாம் நூற்றுண்டின் முற்பகுதி; இரண்டாமவன் அதே நூற்றுண்டின் பிற்பகுதி யிலிருந்து கி. பி ஐந்தாம் நூற்றுண்டின் முற்பகுதி வரை இருந்தவன்.

அதாவது அதற்கும் இதற்கும் எழுநூறு எண்ணூறு வருஷ இடைவெளி இருக்கிறது.

இந்த எண்ணூறு வருஷ இடைவெளியிலும் இதே போல அநுமானங்களில் பலருடைய காலம் முன்பின்னுகப் போகக் கூடுமாதலால் எண்ணூறு என்பது ஆயிரமாகக்கூட, அதற்கும் அதிகமாகவும்கூட, ஆகலாம்.

ஆக, குப்த வம்ச சந்த்ரகுப்தனே மெகஸ்தனிஸின் காலத்தவன் என்றுல் அதற்கு முற்பட்ட நம்முடைய சரித்ர நிகழ்ச்சிகளெல்லாமே சுமார் ஆயிரம் வருஷம் முந்திப் போய் விடும். நம்மவர் சும்மாவுக்காகப் பழம் பெருமை கொண்டாடிக் கொள்ளவில்லை, வாஸ்தவத்திலேயே வெகு புராதனமான காலத்திலிருந்தே நம் .தேசத்தில் நாகரிக ஸமுதாய வாழ்க்கை இருந்துதானிருக்கிறது என்று prove ஆகிவிடும்.

வெள்ளேக்காரர்களிடம் நாம் சண்டைக்குப் போக வேண்டாம். ஸர் வில்லியம் ஜோன்ஸ், வில்ஸன் முதலான வர்கள் மெதஸ்தனிஸ் யாரோ ஒரு சந்த்ரகுப்தனைப் பற்றிச் சொல்லியிருக்கிறுரென்று கண்டுபிடித்துச் சொல்லியிருப்பது நாம் ஸரியாக ஆராய்ச்சி பண்ணிப் பார்க்க நிரம்ப உபகாரம் பண்ணும் ஒரு தகவலாகும். அதனுல் அவர்களுக்கு நன்றி தான் தெரிவிக்கணும். மேற்கொண்டு அவர்கள் சொல்

Koviloor Digital Library

வதைக் காரணம் கேட்காமல் நம்பி விடும் அசடுகளாக நாம் இருப்பதுதான் தப்பு. அவர்களை வையவேண்டாம். 'நம் தேச ஸமாசாரம் பிறத்தியார் சொல்கிறார்களே! ஸரியாகத் தான், ஸரியான நோக்கங்களோடுதான் சொல்கிறார்களா?' என்று நாம்தானே ஆலோசிக்க வேண்டும்?

'குப்த வம்சத்து சந்திரகுப்த விக்ரமாதித்யன் காலத்தில் ஃபா - ஹியன் என்ற சீன யாத்ரிகர் வந்து எழுதி வைத்திருக்கிறாரே, அதனால் அவன் கி.பி 4-5 நூற்றாண்டுக் காரனாகத்தானே இருக்கணும்? அவனை எப்படிக் கி.மு வுக்கு கொண்டுபோவது?' என்று கேட்கலாம். வேடிக்கை என்னவென்றால்: அந்தக் கி.பி. 'பீரிய'டில் அவர் (ஃபா - ஹியன்) இங்கே வந்து முழுசாக ஆறு வருஷம் பௌத்த ஸ்தலங்களுக்கு யாத்திரை பண்ணிக்கொண்டு, அந்த மத நூல்களைச் சேகரித்துக்கொண்டு, அப்படியே ப்ரயாண விவரங்களை எழுதி வைத்திருப்பது வாஸ்தவந்தான். ஆனால் அவர் அப்போது இங்கே இருந்த எந்த ராஜாவைப் பற்றியும் எதுவுமே சொல்லவில்லை! சந்த்ரகுப்தன் என்ற பெயரோ, வேறெந்த ராஜாப் பெயரோ அவருடைய நோட்ஸில் காணப்படவில்லை! பௌத்த விஷயங்களில்தான் அவருக்கு 'இன்டரஸ்ட்.' அதைப் பற்றியே முக்யமாகச் சொல்லும் போது இங்கேயிருந்த ஸமூஹ வாழ்க்கை பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால் அவர் வந்த 'பீரிய'டை வைத்துத் தான் அப்போது தாங்கள் ஏற்கனவே காலநிர்ணயம் பண்ணிருந்தபடி குப்தவம்ச சந்த்ரகுப்தன் இருந்ததாக ஹிஸ்டரிக்காரர்கள் சொல்லுகிறார்களே தவிர, மெகஸ்தனில் ஒரு ராஜாவின் பெயராகச் சொன்னதைக் கொண்டே அந்த ராஜாவுக்குக் கால நிர்ணயம் பண்ணிய மாதிரி இங்கே இல்லை. ஃபா - ஹியன் வந்தபோது குப்தவம்ச சந்தரகுப்தன் தான் இருந்தான் என்று அடித்துச்சொல்வதற்கு ஆதாரமில்லை.

இந்த விஷயத்தில் நான் முழுசாக ஆராய்ச்சிப் பண்ணி விடவில்லை. 'ஹிஸ்டரி' விஷயமாக அப்படிப் பண்ண

Koviloor Digital Library

க்வாலிஃபிகேஷனும் இல்லை. அதனால் ஹிஸ்டரி ஸ்காலர்களாக இருப்பவர்கள் இதை நன்றாக அலசி ஆராய்ந்து பார்க்கவேண்டும். பெஜவாடாவைச் சேர்ந்த கோடா வேங்கடாசலம் என்பவர் இதில் சற்று ஆழமாகப் பார்த்து ஸன்ட்ரகோட்டஸ் குப்த ராஜாதான், மௌர்யன் இல்லை என்று முடிவு செய்திருக்கிறார். (பிற்பாடு அவர் ஒரு அத்வைத மடத்தில் ஸந்நியாஸியாக ஆனவர்.) மைலாப்பூர் ஆயுர்வேத காலேஜைச் சேர்ந்த கே.ஜி. நடேச சாஸ்த்ரி என்பவரும் ஆராய்ந்து பார்த்து இதே முடிவுக்கு வந்திருக்கிறார்.

இன்னும் சில பேரும் ஸன்ட்ரகோட்டஸ் விஷயமாக இல்லாவிட்டாலும், வேறு புராணங்கள், ராஜதரங்கிணி, நேபாளி வம்சாவளி போன்றவற்றை ஆராய்ந்து, இப்போது சரித்ர புஸ்தகங்களில் சொல்லியிருப்பதற்கு அநேக நூற்றாண்டு, ஆயிரமாண்டுக்கு முன்னேயே நம்முடைய ஆதி கால ஸம்பவங்கள் நடந்தன என்று விவரம் தருகிறார்கள்.

குப்தர்களில் முதல் சந்த்ரகுப்தனுக்குப் பிள்ளையாகவும் இரண்டாம் சந்த்ரகுப்தனுக்குத் தகப்பனாராகவும் இருந்த ஸமுத்ரகுப்தன் தான் ஸன்ட்ரகோட்டஸாக இருக்குமோ என்று எனக்கு (அநுமானம்)! 'சந்த்ரகுப்தன்' என்பதில் முதல் எழுத்து ச (cha). மெகஸ்தனிஸ் சொல்லும் 'ஸன்ட்ர கோட்ட'ஸில் முதல் எழுத்து ஸ (sa). ஸமுத்ர குப்தன் என்பதுதான் 'ஸ'வில் ஆரம்பிக்கிறது. க்ரீக் முதலிய மேல் நாட்டு பாஷைகளில் ச-ஸ வித்யாஸம் நன்றாகத் தெரிகிற ஒன்று. ஒரு பெயரில் முதல் எழுத்தாக வருவதையே மெகஸ்தனிஸ் தப்பாகக் கேட்டுக் கொண்டிருப்பாரா?

மெகஸ்தனிஸ் நம்முடைய புஸ்தகங்களைப் பார்க்காமல், ஜனங்களின் பேச்சில் வார்த்தைகளைக் கேட்டுத்தான் எழுதியவர். வார்த்தையில் நடுவில் வரும் உயிர் மெய் யெழுத்துக்களைப் பேசிக்கொண்டு போகும் அவஸரத்தில் மெய்யெழுத்துக்களாகவே குறுக்கி விடுவது. ஸஹஜம். அதிலும் நம் பெயர்களை வெள்ளைக்காரர்கள் சொல்லும்

Koviloor Digital Library

போது கேட்கவே வேண்டாம்—திருவல்லிக்கேணி 'ட்ரிப்ளிகேன்' என்று வரும்போது 'வல்லி' என்பது 'ப்ளி'யாகவும் 'கேணி' என்பது 'கேன்' என்றும் ஆகி விடுகிறதல்லவா? இப்படி, 'ஸமுத்ர' என்பது நம்முடைய ஜனங்களின் பேச்சு மொழியிலேயே 'ஸம்த்ர' மாதிரிதான் ஒலித்திருக்கும். 'ம்த்' என்பதைவிட 'ந்த்' என்று வருவதே நம்முடைய பாஷைகளின் இயல்பு. ஸம்ஸ்க்ருதத்தில் 'மந்த', 'நந்த', 'ஸுந்தர' போன்ற வார்த்தை அதிகம். நம்முடைய 'ந்த்' வெள்ளைக்காரர்களிடம் 'ன்ட்' ஆகிவிடும். And, hand sand என்பதுபோல 'ன்ட்' வரும் வார்த்தைகள் மேல்நாட்டு பாஷைகளில் நிறையவுண்டு. அப்படித்தான் 'ஸமுத்ர' என்பது நம் ஜனங்களில் பேச்சிலேயே ஸம்த்ர-ஸந்த்ர என்றாகி மெகஸ்தனிஸ் காதில் 'ஸன்ட்ர' என்று விழுந்து, அப்படியே அவர் 'ஸன்ட்ர கோட்டஸ்' என்று எழுதி யிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது!

மொத்தத்தில் இப்படி ஆயிரம் வருஷம் போல எல்லாம் முன்னே போனால் அப்போது ஆசார்யாள் அவதாரம் கி. பி எட்டாம் நூற்றாண்டில் என்பது மட்டும் எப்படி ஸரியா யிருக்கும்? அதுவும் ஆயிரம் வருஷம் முன்னே போய்விடும். புத்தர் காலமும் அவர்கள் (மேல் நாட்டினர்) சொல்லும் கி. மு ஆறும்-ஐந்தாம் நூற்றாண்டுக்கு ஆயிரம் வருஷம் முற்பட்டுப்போய்விடும். ஆதாவது ஆசார்யாள் கி,மு. 6-5 நூற்றாண்டிலிருந்தாலுங்கூட புத்தரின் ஸமகாலத்தவரில்லை என்றும், புத்த மதம் நன்றாக வேர் பிடித்துப் பல நூற்றாண்டுகள் தேசத்தில் இருந்த பிறகுதான் அவர் அவதரித்து அதை நிராகரணம் பண்ணினார் என்றும் ஏற்பட்டுவிடும்.

முன்னே நாம் பார்த்த புராணக் காலக் கணக்குப்படி மௌரிய வம்சம் கி.மு 1500-ல் ஆரம்பித்ததல்லவா? அதற்கு ஸுமார் முன்னூறு வருஷம் முன்னாடி பிம்பிஸாரன் இருந்ததாக மத்ஸ்ய புராணத்திலிருந்து தெரிகிறது. பிம்பிஸாரன் அவன் பிள்ளை அஜாதசத்ரு, அப்புறம்

Koviloor Digital Library

ஆட்சிக்கு வந்த மூன்று நாலு ராஜாக்கள், அதற்கப்புறம் மஹா பத்ம நந்தன், அவனை அடுத்து மௌர்ய வம்சம் என்று அதில் ஒவ்வொருக்கும் ஆட்சிக்காலம் இவ்வளவென்று கொடுத்திருப்பதில் பிம்பிஸாரன் சந்த்ரகுப்த மௌர்யனுக்கு முன்னூறு வருஷம் முற்பட்டவன் என்று ஏற்படுகிறது. அதாவது அவன் கி.மு 1800-1700க்குள் இருந்தவன். புத்தர் அவன் காலத்தவராகையால் அவரும் அப்போதிருந்தவரே. நம்முடைய தேசத்தைக் சேர்ந்த மற்ற source-களிலிருந்தும் இதை கோடா வேங்கடாசலம் போன்றவர்கள் confirm செய்திருக்கிறார்கள். ஆகையால் புத்தருக்கு பஹுகாலம் கழித்தே கி.மு 509-ல் ஆசார்யாள் அவதாரம் என்று ஆகும்.

இது ஒரு பக்கம் இருக்கட்டும். (அதாவது குப்த சந்த்ர குப்தர்களில் ஒருத்தனோ, அவர்களுக்கு நடுவில் வந்த ஸமுத்ர குப்தனோதான் கி.மு. நாலாம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸுக்கு ஸமகாலத்தவனாக இருந்தது என்ற விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும்.) ஆசார்யாள் காலம் கி.பி 788-820 என்னும் கட்சிப்படி, அவர் அந்தக் கட்சிக்காரர்களின் அபிப்ராயப் படி மேலே சொன்ன குப்த ராஜாக்களின் காலமான கி.பி. நாலாம்-ஐந்தாம் நூற்றாண்டுகளுக்கு 350-400 வருஷம் பின்னால் வந்தவர். இந்த இடைக்காலத்திற்குள் குப்த ஸாம்ராஜ்யம் எடுபட்டுப்போய் இன்னம் அநேகம் நடந்து ஹர்ஷவர்தனனின் ஆட்சியும் முடிந்து நூறு வருஷத்திற்கு மேல் ஆகிவிட்டது. ஹர்ஷனைப் பற்றி, மஹாகவியான பாணர் பெரிசாகவே 'ஹர்ஷ சரித்ரம்' என்று காவ்யம் பண்ணி வைத்திருப்பதால் அவன் கி.பி ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து நாற்பது வருஷத்திற்கு மேல் ஆட்சி நடத்தியவன் என்று தெரிகிறது. நம்மூர்க்காரரான பாணர் சொல்வதைக்கொண்டு கால நிர்ணயம் பண்ணப் பிடிக்கா விட்டாலும், ஹர்ஷனின் காலத்தில் இங்கே வந்து பதினாறு வருஷம் புத்த ஸ்தலங்களுக்கெல்லாம் யாத்ரை பண்ணிய ஹுவான்-த்ஸாங் என்ற சீனாக்காரர் எழுதிவைத்திருக்கும்

Koviloor Digital Library

குறிப்புக்கள் இருக்கவே இருக்கின்றன! அதனால் ஹர்ஷன் காலம் அதுதான் (கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதி தான்) என்று ஊர்ஜிதமாகிறது. அதற்கப்புறம் நடந்த ஸமாசாரங்களை ஆயிரம் வருஷம் முந்திக்கொண்டுபோக நியாயமில்லை என்று சொல்லலாம். 'குப்தர் காலம் வரை வேண்டுமானால் ஆயிரம் வருஷம் முந்திக்கொண்டு போங்கள். எங்கள் கணக்குப்படி அதன்போதே, அதாவது கி.பி. நாலாம் நூற்றாண்டிலேயே ஃபா-ஹியன் என்று சீன யாத்ரிகர் வந்து குறிப்புக்கள் எழுதி வைத்திருக்கிறார். ஆனாலும் அவர் பௌத்த மத விஷயத்திலேயேதான் கவனம் செலுத்தி யிருக்கிறார். அவர் காலத்தில் இருந்த பெரிய பெரிய ராஜாக்களின் பெயரைக்கூடச் சொல்லாமல், 'தேசமும் அமைதியாயிருக்கிறது; ஜனங்களும் ரொம்ப அமைதியா யிருக்கிறார்கள். பெரிய குற்றங்களே நடப்பதில்லை. பயமில் லாமல் ஒரு கோடிக்கு மறு கோடி ஸஞ்சாரம் பண்ண முடிகிறது. பௌத்த மதம், ஹிந்துமதம் இரண்டுமே அநுஷ் டானத்தில் இருக்கின்றன' என்று ஜெனரலாகத்தான் கொஞ்சம் சொல்லி முடித்திருக்கிறார். ஆகையால் குப்த ராஜவம்ச கால நிர்ணயத்தில் அவரை ஸம்பந்தப்படுத் தாமல் வேண்டுமானாலும் விட்டுவிடுகிறோம். ஆனால் அப்புறம் ஹர்ஷர், ஹுவான்-த்ஸாங் காலங்கள் நாங்கள் சொல்கிறதுபோல கி.பி. ஏழாம் நூற்றாண்டுதான் என்பது ஸர்வ நிச்சயமான fact. அதை முற்காலத்துக்குக் கொண்டு போவதற்கேயில்லை. இதற்கும் 150 வருஷத்துக்கப்புறம் நாங்கள் ஆசார்யாள் காலத்தைச் சொல்வதால் அதில் கை வைப்பதற்கே இடமில்லை' என்று சொல்லலாம். ஆனபடி யால் அவர்கள் 788-820 என்று ஆசார்யாளின் கால நிர்ணயம் செய்திருப்பதற்கு அநேக காரணங்கள் காட்டு வதாகச் சொன்னேனே, அவற்றையேதான் ஒவ்வொன்றாய் எடுத்துக்கொண்டு ஸரியா தப்பா என்று பார்க்க வேண்டியிருக்கிறது.

காளிதாஸன் விஷயம்: அவர்கள் சொல்கிற ஒரு பாயின்ட் காளிதாஸனை ஆசார்யாளின் கால மூத்தவரான

Koviloor Digital Library

குமாரிலபட்டர் மேற்கோள் காட்டியிருக்கிறுரென்பது. காளிதாஸன் கி.மு. ஆறும் நூற்றுண்டு இல்லை என்கிறுர்கள். ரொம்ப முந்தி அவருடைய காலத்தைக்கொண்டு போனுல் கூட புஷ்யமித்ர சுங்கனின் பிள்ளையான அக்னிமித்ரனின் ஸமகாலத்தவராகத்தான் அவர் இருந்திருக்க முடியும்; ஏனென்றுல் அவருடைய "மாளவிகாக்னிமித்ர"த்தில் கதாநாயகனே இந்த அக்னிமித்ரன்தான் என்கிறுர்கள். 'புஷ்யமித்ரன் காலம் கி.மு.இரண்டாம் நூற்றுண்டுதான். அதனுல் காளிதாஸனே கி. மு. ஆறும் நூற்றுண்டுக்குக் கொண்டுபோக இடமில்லை' என்கிறுர்கள்.

ஆனுல் அவர்கள் சொல்லும் இந்த கி.மு. இரண்டாம் நூற்றுண்டுக் கணக்கும் மெகஸ்தனிஸை மையமாக வைத்து மௌர்ய காலத்தை நிர்ணயம் பண்ணி, மௌர்யர்களில் கடைசியாயிருந்த ராஜாவின் ஸேநாதிபதியாயிருந்த புஷ்ய மித்ரனே அப்புறம் அதிகாரத்தைக் கைப்பற்றினுன் என்பதில்தான் அநுமானிக்கப்பட்டிருக்கிறது. மௌர்ய-கால 'பேஸி'ஸே (அடிப்படையே) தப்பாயிருக்கக்கூடும் என்றுதான் பார்த்தோமே! அதையொட்டி அவர்கள் தங்களுடைய கி. பி. நாலாம் நூற்றுண்டு நிர்ணயம் வரையில் நமக்கு விட்டுக்கொடுக்க ந்யாயமிருக்கிறது என்றும் பார்த்தோமே! இதுவும் (கி.மு. இரண்டாம் நூற்றுண்டு) அந்த காலகட்டத்துக்குள்ளேயே வந்துவிடுவதால், "இப்படித்தான்" என்று அவர்கள் அடித்துச் சொல்வதற்கில்லை.

நம் புராணுதிகளின் கணக்குப்படி கி. மு. 1500-ல் ஆரம்பித்த மௌர்ய வம்சம் அப்புறம் முன்னூறு வருஷத்துக்கு மேல் அரசாண்ட பிறகு சுங்க வம்ச ஆட்சியைப் புஷ்யமித்ரன் ஏற்படுத்தியிருக்கிறுன். எனவே அது கி. மு. 1200-ஐ ஒட்டியிருக்கும். காளிதாஸன் அவனுடைய 'காண்டெம்பரரி' என்றுல் அவர் காலமும் அவ்வளவு முற்பட்டுப் போய்விடும். ஆசார்யாள் கி. மு. ஆறும

Koviloor Digital Library

நூற்றுண்டு என்ற நம் நம்பிக்கைப்படியே காளிதாஸன் அதற்கும் ஆறு நூற்றுண்டு முந்தியவர் என்றுகிவிடும்.

ஆனுல் சுங்கர்களைப்பற்றி அவர் எழுதியிருப்பதால் அவரே அந்தக் காலத்தவர்தான் என்று சொல்லலாமா? இன்றைக்குங்கூட யாராவது புது ராமாயண காவியம் எழுதலாம். அதனுல் இவர் ராமருடைய ஸமகாலத்தவர் என்பதா? சுங்கர் காலமே காளிதாஸன் காலத்துக்கு upper limit என்றுதான் சொல்ல முடியும்; அதற்கு முந்தி அவர் காலம் இருக்கமுடியாது என்றே அர்த்தம். பிந்தி இருக்கலாம். அதைப்பற்றி ஏதாவது தெரிகிறதா?

'காளிதாஸன் விக்ரமாதித்யனின் காலம், அவர் அவனுடைய ஸபையிலிருந்த நவரத்னங்களில் ஒருத்தர்' என்று நம் தேசத்திலேயே வெகு காலமாக நம்பிக்கை இருக்கிறது. விக்ரம சகாப்தம் கி. மு. 57-ல் ஆரம்பித்த தாகவே சாஸ்திரஜ்ஞர்களும் சொல்கிறுர்கள். இப்படியிருக்க அவரை எப்படி கி. மு. ஆறும் நூற்றுண்டுக்குக் கொண்டு போவது?' என்று கேட்கலாம்.

கி. மு. 57-லிருந்த விக்ரமாதித்யனுக்கு வேறுக இன்னெரு விக்ரமாதித்யன் கலியுகத்தின் 2500-வது வருஷத்தையொட்டி, அதாவது, கி. மு. ஆறும் நூற்றுண் டின் ஆரம்பத்தில் இருந்தானென்றும், இவனைத்தான் 'ராஜ தரங்கிணி'யில் சொல்லியிருக்கிறதென்றும் ஒரு அபிப்ராய மிருக்கிறது. காளிதாஸன் அவனுடைய காலத்தவர்தான் என்றும் சொல்கிறுர்கள். நம் நம்பிக்கைப்படி ஆசார்யாள் அந்த நூற்றுண்டு முடியும் ஸமயத்தில் (509-ல்) அவதரித் திருக்கிறுர். குமாரிலபட்டர் அந்த நூற்றுண்டு மத்தியில் பிறந்திருப்பார்.

நம் தேச நம்பிக்கையே இருந்தாலும் ஸரி, சாஸ்த்ரஜ்ஞர் களின் அபிப்ராயமிருந்தாலும் ஸரி, விக்ரமாதித்தன் என்பவனைப் பற்றி ஒன்றும் நிச்சயப்படுத்திச் சொல்லத் தெரியவில்லை என்றுதான் நடுநிலையிலிருந்துகொண்டு

Koviloor Digital Library

பார்த்தால் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். அவனைப் பற்றிச் செல்லும் 'ப்ருஹத்கதை,' 'காதா ஸப்தசதி' முதலியவை நாவல்கள் மாதிரியான கதைகளாகவே இருப்பவை. புராணங்கள், ராஜதரங்கிணி முதலியவற்றின் ப்ராமாண்யம் (மெய்ம்மை யுறுதி) இவற்றுக்கில்லை. வீர ஸாஹஸங்கள் செய்த ஒருவனுடைய ஆச்சர்யங்கள் நிறைந்த கதைகள் எந்த தேசத்து ஜனங்களுக்கும் வேண்டியிருக்கிற ஒன்று. அப்படி விக்ரமாதித்யன், மதனகாமராஜன் போன்றவர் களுடைய கதைகள் மிகுந்த ப்ரஸித்தி பெற்றுவிட்டன. இவர்களை சரித்ர புருஷர்களாக வைத்துக் கால நிர்ணயம் செய்யப் புறப்பட்டால் குழப்பமாகத்தானிருக் கிறது. ஒரு ஸமயத்தில் ஜனங்களை ரொம்பவும் வசீகரம் செய்யும் ஒருவன் தோன்றினால் அவன்மீது நிறையக் கதைகளை ஏற்றிவிடுவது வழக்கம். அப்படித்தான் உஜ்ஜயினி யிலிருந்து ஆட்சி செய்த ஒரு விக்ரமாதித்யன், தாரா நகரத் திலிருந்து ஆட்சி செய்த போஜன் முதலியவர்களைப் பற்றி நடந்திருக்கிறது. போஜனின் காலத்தவனே காளிதாஸன் என்றும் நம் தேச நம்பிக்கையே இருக்கிறது. இப்படி நம் ஊரிலேயே இரண்டு வித நம்பிக்கை இருக்கும்போது ஒன்று தப்பாகத்தானே இருக்கவேண்டும்? நம் ஊர் நம்பிக்கை என்பதாலேயே நிஜம்தான் என்று சாதிக்கமுடியாதல்லவா? இதையெல்லாம் பார்த்துத்தான் சிலர் இரண்டு காளிதாஸர் கள்இருந்ததாக அபிப்ராயம் சொல்கிறார்கள். விக்ரமாதித்ய ஸபையிலிருந்த நவரத்னங்கள் தன்வந்தரி, க்ஷபணகர், அமரஸிம்ஹன், சங்கு, வேதாளபட்டர், கடகர்ப்பரர், காளிதாஸர், வராஹமிஹிரர், வரருசி ஆகிய ஒன்பது பேர் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் எல்லாரும் ஸம காலத்தவர்கள் இல்லை என்று வேறு source-களிலிருந்து தெரிகிறது. இப்படியிருக்கும்போது எந்த விக்ரமாதித்யனை வைத்து எந்தக் காளிதாஸருக்கு எப்படிக் காலம் கணிப்பது? வல்லாளர் என்பவரின் "போஜ ப்ரபந்த"த் திலோ காளிதாஸரை போஜ ஸபையின் நவரத்னங்களில் ஒருவராகச் சொல்லியிருப்பதோடு, அவர்கூட இருந்த

Koviloor Digital Library

மற்ற ரத்னங்களில் பவபூதி, பாணர், தண்டி, ஸ்ரீஹர்ஷர் முதலிய எல்லாப் பெரிய கவிகளையும் சேர்த்திருக்கிறது! வேறு ஆதாரங்களிலிருந்து இவர்கள் நிச்சயமாக ஸமகாலத்தவரல்ல என்று தெரிகிறது!

சரித்ர புருஷனான சந்த்ரகுப்த விக்ரமாதித்யன் காலத்தில் காளிதாஸன் இருந்திருக்கலாம் என்பதுபோலச் சொல்லும் பல அபிப்ராயங்களும் 'அநுமானம்' என்று சொல்லக்கூடியவையாகத்தான் இருக்கின்றன; 'ப்ரமாணம்' என்றல்ல.

புஷ்யமித்ர சுங்கனுக்கு முன்காலத்தில் காளிதாஸன் இருந்திருக்க முடியாது என்று upper limit சொன்னாற்போல கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு அவர் காலம் இருக்க முடியாது என்று lower limit கட்டுவதற்கதிகமாக எதுவும் சொல்லத் தெரியவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முன்பாதியில் ஹர்ஷரின் ஆஸ்தான கவியாயிருந்த பாணர் "ஹர்ஷ சரித்ர" ஆரம்பத்தில் காளிதாஸனைப் பேர் சொல்லிப் புகழ்ந்திருக்கிறார். அதே காலத்தியதாக உள்ள ஒரு ராஜ சாஸனத்திலேயே காளிதாஸனின் பெயர் ஒரு ச்லோகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது இரண்டாம் புலிகேசியின் சாஸனம். ஐஹோளே என்ற சில்ப முக்யத்வம் வாய்ந்த ஊரைச் சேர்ந்த சாஸனம். சக வருஷம் 556, அதாவது கி.பி. 634 என்று திருத்தமாகத் தேதி குறிப்பிட்டுள்ள சாஸனம். இதில் "ரவி-கீர்த்தி...பாரவி கீர்த்தி" என்று வார்த்தை விளையாட்டுச் செய்திருக்கிறது. கவிதையால் ஆச்ரயிக்கப்பட்ட காளிதாஸர் போலவும் பாரவி போலவும் கீர்த்தியுடன் ரவி கீர்த்தி என்பவர் விளங்குவதாக அந்த சாஸன ச்லோகம் தெரிவிக்கிறது:

ஸ விஜயதாம் ரவிகீர்த்தி :
கவிதாச்ரித காளிதாஸ பாரவி கீர்த்தி :

ஆகையால் காளிதாஸன் கி. பி. 634க்கு முன்னாடி என்று மட்டுமே தெரிகிறது. எவ்வளவு முன்னாடி? தெரியவில்லை!

Koviloor Digital Library

நிச்சயமாகத் தெரியாத ஒன்றை வைத்து இன்னொன்றை எப்படி நிச்சயப்படுத்துவது? காளிதாஸர் காலத்தைக் கொண்டு குமாரிலபட்டர், ஆசார்யாள் ஆகியோருடைய காலத்தை கணிக்கப் பார்ப்பது இப்படித்தான்!

கோலாப்பூரில் அப்பா சாஸ்த்ரி என்று வித்யா வாசஸ்பதி பட்டம் வாங்கிய ஒருவர் இருந்தார். அவர் கி.மு. ஆறும் நூற்றாண்டிலேயே ஆரம்பத்தில் காளிதாஸர், மத்தியில் குமாரிலபட்டர், முடிகிற ஸமயத்தில் சங்கரர் என்று மூன்று பேரும் இருந்தார்கள் என்று அநேகப் புஸ்தகங்களைப் பார்த்து முடிவு பண்ணியிருக்கிறார். நம்முடைய புராணம், சமய இலக்கியம் ஆகியவற்றை மட்டுமின்றி ஜைனப் புஸ்தகங்களையும் பார்த்திருக்கிறார். மதம் என்று வரும்போது இரண்டுக்கும் ஒரே சண்டையாயிருந்தும்கூட, கால நிர்ணயங்களில் அவை எப்படி வித்யாஸமேயில்லாமல் ஒத்துப்போகின்றன என்பதை நாம் கவனிக்கும்போது, இப்படி opposite source-களிலிருந்து கிடைக்கிற ஒன்றேயான அபிப்ராயத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறோம்.

கிறிஸ்து சகாப்த பௌத்த நூலாசிரியர்கள் விஷயம்: அடுத்த பாயிண்டுக்கு வருவோம். திங்நாகருடைய வைபாஷிகம், அஸங்கரின் ஸௌத்ராந்திகம், நாகார்ஜுனரின் சூன்யவாதம் ஆகியவற்றை ஆசார்யாள் கண்டனம் பண்ணியிருப்பதால், கி.பி. இரண்டிலிருந்து ஆறும் நூற்றாண்டுக்குள் வந்த இந்த பௌத்த ஸித்தாந்திகளுக்குப் பிற்பட்ட காலத்தவர்தான் ஆசார்யாள் என்ற ஆர்க்யுமென்டைப் பார்ப்போம்:

மேற்படி ஸித்தாந்தங்களை ஆசார்யாள் கண்டித்திருப்பது வாஸ்தவந்தான். ஆனால் அவற்றைச் சொன்ன திங்நாகர், அஸங்கர், நாகார்ஜுனர் முதலிய ஸித்தாந்திகளில் எவர் பெயரையுமே ஆசார்யாள் குறிப்பிடவில்லை. இந்த ஸித்தாந்தங்களும் ஸரி, இன்னும் நம் தேசத்திலுள்ள அநேக

Koviloor Digital Library

ஸித்தாந்தங்களும் ஸரி, இப்போது அவை யாரார் பெயரில் ப்ரஸித்தமடைந்திருக்கின்றனவோ அவர்களாலேயேதான் தோற்றுவிக்கப்படவில்லை. அவர்களுக்கும் முந்தி எத்தனையோ காலமாக அந்த ஸித்தாந்தங்கள் இருந்திருக்கின்றன. ஆனால் நன்றாக ரூபம் பண்ணி, codify பண்ணி இல்லாமல் ஒரு மாதிரி vague-ஆக இருந்திருக்கும். அப்புறம் அவற்றை இப்போது நாம் தெரிந்துகொண்டுள்ள அந்த ப்ரஸித்தமான ஸித்தாந்திகளே நன்றாக ரூபம் பண்ணி, ஒரு கோட்பாடாக, சாஸ்த்ரமாக ஆக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அத்வைதமும் ஆசார்யாளுமே இப்படித்தானே? அநாதி காலமாக இருந்துவந்த அத்வைதத்தைத்தானே ஆசார்யாள் ஒரு கட்டுக்கோப்பான சாஸ்த்ரமாக்கிக் கொடுத்தார்? அவரே அதைத் தோற்றுவிக்கவில்லையே!

பூர்வகால புத்தர்களும், ஜினர்களும்: இப்போது ஆசார்யாள் கி.மு. ஆறும் நூற்றாண்டு என்றால் புத்தரும் ஆசார்யாளும் ஸமகாலத்தவராகி விடுவார்களே என்ற ஆக்ஷேபணைக்குப் பதிலாக இன்னொரு காரணமும் கிடைக்கிறது. (அது என்னவென்றால்) புத்த மதத்தைக்கூட கௌதம புத்தர் என்பவர்தான் தோற்றுவித்தாரென்றால் அது தப்புத்தான் என்று அந்த மதஸ்தர்களே சொல்கிறார்கள். "சுத்தோதனரின் பிள்ளையாகிய கௌதம புத்தர் 24-வது புத்தர்தான். அவருக்கு முந்தி 23 புத்தர்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் எங்கள் மதமும், நீங்கள் வேதத்தைச் சொல்லிக்கொள்கிற மாதிரி, அநாதிதான்"— என்று பௌத்தர்கள் சொல்வார்கள். இதற்கு ஆதரவாக நம்முடைய ராமாயணத்திலும் சான்று இருக்கிறது.

பரதன் காட்டுக்குப் போய் ராமரைத் திருப்பி அழைத்துக்கொண்டுவர முயற்சி செய்கிறானல்லவா? அவனோடு போனவர்களில் ஜாபாலி மஹர்ஷியும் ஒருத்தர். அவர் எதையாவது சொல்லி ராமரைப் பித்ரு வாக்ய பரிபாலனத்தை விடும்படிப் பண்ணி, அயோத்திக்குத்

Koviloor Digital Library

திரும்பும்படிப் பண்ணணும் என்பதற்காக—(அல்லது) ராமருடைய வைதிக அபிமானத்தை லோகத்துக்கு வெளிப் படுத்தணும் என்பதற்காக—ஒரே அவைதிகமாகவும் நாஸ்திக மாகவும் ஆர்க்யூ பண்ணுகிறார். ராமருக்கு மஹா கோபம் வருகிறது. அப்போது அவர் ஜாபாலியின் அவைதிக வாதத்தைக் கண்டிக்கும்போது அதை புத்தரின் கொள்கை என்றும், அப்பட்டமான நாஸ்திகமாகிய சார்வாகம் மாதிரிதான் அதுவும் ஒன்று என்றும் சொல்லி, 'இப்படிப் பட்ட கொள்கைக்காரர்களின் மூஞ்சியிலேயே முழிக்கப் படாது; திருடனை தண்டிப்பதுபோல இவர்களையும் தண்டிக்க வேண்டும்' என்கிறார்*. இங்கே புத்தர் என்ற பெயரோடு, புத்தருக்கு அந்த மதத்தில் வழங்குகிற இன்னொரு பெயரான 'ததாகதர்' என்பதையும் ராமர் சொல்கிறார். இதனால் அப்போதே பௌத்தம் இருந்திருப்பது தெரிகிறது. ஆனால் கௌதம புத்தர் சொன்ன நல்லொழுக்கங்கள், புலனடக்கம், உசந்த த்யானம் ஆகிய எதுவுமில்லாமல் 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற கொள்கை போலிருந்திருக் கிறதென்றும், அதுதான் மாறி மாறிச் சார்வாகத்திற்கு ரொம்பவும் மாறுபட்ட ரூபத்தில் கௌதம புத்தரால் ப்ரசாரம் செய்யப்பட்டிருக்கிறதென்றும் தெரிகிறது.

ஜைனர்களும் தங்களுடைய கொள்கை ரொம்பப் புராதனமானது, தங்களுடைய இருபத்துநாலு தீர்த்தங்கரர் களில் கடைசியானவர்தான் இப்போது நாம் அந்த மத ஸ்தாபகராகச் சொல்லும் ஜினர் (மஹாவீரர்) என்கிறார்கள். புராணங்களிலேயே ஒரு அவதார புருஷராகச் சொல்லப் பட்ட ரிஷபர்தான் அவர்களுடைய முதல் தீர்த்தங்கரர். இதை ஒப்புக்கொள்ள யோசிக்கும் ஓரியண்டலிஸ்ட்கள்கூட மஹாவீரருக்கு முந்தியவராக, 23-வது தீர்த்தங்கரராகச் சொல்லப்படும் பார்ச்வநாதர் கி. மு. ஒன்பதாம் நூற்றாண்டி லேயே இருந்திருக்கக்கூடும் என்கிறார்கள்.

---

* வால்மீகி ராமாயணம், அயோத்யா காண்டம், 109-வது ஸர்கம் 34-வது ச்லோகம்,

Koviloor Digital Library

'ப்ரஹ்மஸூத்ரத்தில் பௌத்த கண்டனம் வருகிறதே! க்ருஷ்ண பரமாத்மா கீதையில் அந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தை 'ப்ரஹ்மஸூத்ர பதைச்சைவ ஹேதுமத்பிர் விநிச்சிதை:''* என்கிறாரே! அதனால் ப்ரஹ்ம ஸூத்ரம், கீதை எல்லாமே புத்தருக்குப் பிற்பாடுதான்' என்று வாதம் செய்கிறவர்கள் இந்த விஷயங்களைக் கவனிக்கவேண்டும். அவர்கள் சொல்லும் கௌதம புத்தருக்கு முந்தியும் அநேக புத்தர்கள் இருந்திருக்கிறார்கள்; அவர்கள் சொன்ன பௌத்த மதமும் இருந்திருக்கிறது. ஆகையால் ப்ரஹ்ம ஸூத்ரம் பண்ணிய வ்யாஸரும், கீதை உபதேசித்த க்ருஷ்ணரும் கௌதம புத்தருக்குப் பிற்பட்டவர்கள் என்று கொண்டுவிடவேண்டிய அவச்யமே யில்லை.

இதில் கீதை விஷயமாக இன்னொரு ஸமாசாரம். ஆசார்யாள் (கீதா) பாஷ்யத்தில் "ப்ரஹ்மஸூத்ர" என்ற வார்த்தையை அந்தப் பெயர் கொண்டதும், அவரே ப்ரஸித்தமான பாஷ்யம் எழுதியதுமான புஸ்தகம் என்றே அர்த்தம் பண்ணவில்லை! "ப்ரஹ்மண: ஸூசகாநி வாசகாநி—ப்ரஹ்மஸூத்ராணி" என்று, அதாவது "ப்ரஹ்மத்தை ஸூசனை செய்யும் வாசகங்களாக உள்ளவை" என்றே அர்த்தம் பண்ணியிருக்கிறார். இதிலிருந்து கீதோபதேசத்துக்குப் பிறகே வ்யாஸர் கலி ஆரம்பத்தில் சதுர் வேத விபாகம் பண்ணிக் கொடுத்தபோதோ அதற்கும் அப்புறமோதான் ப்ரஹ்மஸூத்ரம் இயற்றினாரென்று ஊஹிக்கலாம். இதை உறுதிப்படுத்துவதாக, ஸ்ம்ருதியாகிய கீதையின் கருத்துக்களையே சில இடங்களில் ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் சொல்லி, "ஸ்மர்யதே": "ஸ்ம்ருதியில் இப்படிச் சொல்லியிருக்கிறது" என்றும் தெளிவாக, கீதை அதற்கு முற்பட்ட நூல் என்று, தெரியவைத்திருக்கிறது.

சொல்ல வந்த விஷயம்: அநேக ஸித்தாந்தங்கள் இப்போதுள்ள புஸ்தகங்களைக்கொண்டு அவற்றுக்கு நாம்

---

* XIII. 4
* உதாரணம்: ப்ரம்ம ஸூத்ரத்தின் II. 3. 45; IV. 2. 21.

Koviloor Digital Library

நிர்ணயம் செய்கிற காலத்திற்கு ரொம்ப முந்தியே ஏதோ ஒரு ரூபத்தில் இருந்து வந்திருக்கின்றன. இப்படி ஸௌத்ராந்திகம், வைபாஸிகம், சூன்யவாதம் ஆகிய பௌத்த ஸித்தாந்தங்களும் ஆசாரியாளின் காலத்திலேயே இருந்து அவற்றை அவர் கண்டித்திருக்கலாம். அவருக்கு அப்புறமே அஸங்கர், திங்நாகர், நாகார்ஜுனர் முதலியவர்கள் அவற்றுக்குப் புத்துயிர் தந்து விஸ்தாரம் செய்திருக்கலாம்.

இன்னொரு முக்யமான பாயின்டும் கவனிக்கவேண்டும்: இந்த மூன்று பேரைக் கிறிஸ்துவ சகாப்தத்தில் இன்னின்ன நூற்றுண்டு என்று அவர்கள் சொல்லியிருப்பதும் காளிதாஸன் ஸமாசாரம் மாதிரி நிச்சயமில்லாத அநுமானங்கள்தான்.

"மேகஸந்தேச காவ்ய"த்தில் காளிதாஸனே அஷ்ட திக் கஜங்களை ஒதுக்கிவிட்டு அந்த மேகம் மேலே போக வேண்டும் என்று சொல்லுமிடத்தில், 'திக்-கஜம்' என்பதை 'திங்-நாக' என்று சொல்லியிருப்பதைக்* காட்டி, பௌத்தரான திங்நாகரை ஒதுக்க வேண்டுமென்பதைத்தான் சிலேடையாகக் கூறியிருக்கிறுரென்று ஒரு அபிப்ராயமிருக்கிறது! அப்படியானுல் நமக்குக் காலம் தெரியாத, ஆனுல் ஆசார்யாளுக்கு முந்தியவரான காளிதாஸரின் ஸமகாலத்தவராகவாவது திங்நாகர் இருந்திருக்க வேண்டும்.

நேபாள ராஜ வம்சாவளியின்படி நாகார்ஜுனரின் காலம் கி. மு. பதின்மூன்றும் நூற்றுண்டின் ஆரம்பத்துக்கே போய் விடுவதாகவும் தெரிகிறது.

இப்படியெல்லாம், 'இதுதான்' என்று நிச்சயமாகச் சொல்ல முடியாதவர்களின் காலத்தைக்கொண்டு ஆசார்யாள் காலத்தை கணிக்கப் பார்ப்பது கண் தெரியாதவனுக்கு வழிகாட்டியாக இன்னொரு கண் தெரியாதவனை அனுப்பி வைப்பது போலத்தானிருக்கிறது!

---

* ச்லோகம் 14

Koviloor Digital Library

மஹாயான விஷயம்: 'மஹாயானத்தைப் பத்மபாதர் குறிப்பிட்டிருக்கிருரே; கிறிஸ்து சகாப்த ஆரம்பத்தில் இருந்திருக்கக் கூடிய கனிஷ்கரின் காலத்தில்தானே பௌத்தம் மஹாயானம், ஹீனயானம் என்று உடைந்தது?' என்று ஒரு பாயின்ட் பார்த்தோம். இப்படி முழுக்க வேறு வேருக இரண்டு பிரிவுகள் உறுதிப்பட்டது கனிஷ்கர் காலத்தில் தானென்ருலும், புத்தர் மஹா பரிநிர்வாணம் அடைந்ததை அடுத்து ராஜக்ருஹத்தில் நடந்த முதலாவது பௌத்த மஹாநாட்டிலேயே இரண்டு விதமான அபிப்ராயக்காரர்கள் மோதிக்கொண்டார்களென்றும், அப்புறம் ஸ்தவிரவாதம் ('தேராவாதம்' என்று பாலிப் பெயரில் வழங்குவது) என்றும் மஹாஸங்கிகம் என்றும் இந்த இரண்டு பிரிவுகளும் விரிந்து கொண்டே போய்த்தான் முடிவில் (முறையே) ஹீனயான, மஹாயானங்களாக ஆயின என்றும் அவர்களுடைய மதப் புஸ்தகங்களிலிருந்து தெரிகிறது. முதலிலிருந்தே பல காலம் ஹீனயானம், மஹாயானம் என்ற இந்தப் பெயர்களும் ஓரளவு வழங்கியிருக்கலாம். அப்படியானல் பத்மபாதர் அந்தப் பெயர் குறிப்பிட்டதில் chronological error (காலக் கணிப்பில் தவறுதல்) இல்லைதானே? மெகஸ்தனிஸ் ஸமாசாரத்தை நினைவு வைத்துக்கொண்டு ஹிஸ்டரி முழுதையும் முற்காலத்துக்குத் தள்ளிஞலோ இந்தக் கேள்வியெல்லாமே அடிபட்டு விடும்!

''த்ரவிட சிசு'' விஷயம்: 'த்ரவிட சிசு' ஸமாசாரத்தைப் பார்ப்போம். ஆசார்யாளே த்ரவிட சிசுதான்—தமிழ்க் குழந்தைதான்—என்று சொன்னேனல்லவா? அவரேதான் குழந்தையாயிருந்த போது அம்பாளின் க்ஷீரத்தைப் பானம் பண்ணி அற்புதமான கவிதாவிலாஸம் பெற்ருரென்று மலையாள தேசத்தில் சொல்கிருர்கள்.

காலடிக்கு ரொம்பக் கிட்டேயே மாணிக்க மங்கலம் என்று க்ராமம் இருக்கிறது. அங்கே அம்பாளுக்குக் காத்யாயனி என்ற பெயரில் கோவிலிருக்கிறது. ஆசார்யாளின் அப்பா தினமும் அங்கே போய்ப் பூஜை

Koviloor Digital Library

பண்ணுவாராம். பால் நைவேத்யம் பண்ணிப் புத்ரருக்கு கொண்டு வந்து கொடுப்பாராம்; "அம்பாள் ப்ரஸாதம்" என்று சொல்லிக் கொடுப்பாராம். குழந்தையாயிருந்த ஆசார்யாள், அப்பா கொண்டு போகும் பாலை அம்பாளே பானம் பண்ணிவிட்டு கொஞ்சம் நமக்காகப் பாக்கி வைத்து அனுப்புகிருள் என்று நினைத்துக் கொண்டிருந்தாராம். ஒரு ஸமயம் அப்பா வெளியூர் போக நேர்ந்ததால் ஆசார்யாளே அங்கே போய்ப் பூஜை பண்ணி, "அம்மா, சாப்பிடு!" என்று சொல்லிப் பால் நைவேத்யம் செய் தாராம். ஒரு பெரிய அநுக்ரஹ லீலை செய்யவேண்டுமென்று உத்தேசித்திருந்த அம்பாள் பாக்கி வைக்காமல் அந்தப் பால் முழுவதையும் ஸூக்ஷ்மமாக ஸ்வீகரித்துக்கொண்டு விட்டாளாம்! அப்புறம் குழந்தை சேஷ ப்ரஸாதம் வைக்கக் காணுமே என்று வருத்தப்பட்டவுடன் தன் க்ஷீரத்தையே அநுக்ரஹித்தாளாம்.

இப்படி அங்கே ஐதிஹ்யம் இருக்கிறது.

'ஸௌந்தர்ய லஹரி'யின் ப்ரஸித்த பாஷ்யங்களான 'லக்ஷ்மீதரா', 'ஸௌபாக்ய வர்தநீ', 'அருணுமோதிநீ' ஆகிய புஸ்தகங்களிலும் 'த்ரவிட சிசு' என்பதற்கு இப்படித் தான் வ்யாக்யானம் செய்திருக்கிறது. 'லக்ஷ்மீதரா'வில் 'த்ரவிட சிசு' என்பதற்கு 'த்ராவிட ஜாதியில் அவதாரம் பண்ணிய குழந்தையான இந்த ஸ்தோத்ர கர்த்தா' என்று மட்டும் சொல்லி, விட்டிருக்கிறது*. மற்ற இரண்டு பாஷ்யங் களிலும் விரிவாகவே (மேலே சொன்ன) கதையைக் கொடுத் திருக்கிறது.

ஆனபடியால், 'ஞானஸம்பந்தருக்கு அப்புறம்தான்; அதாவது ஏழாம் நூற்றுண்டுக்கு அப்புறம்தான் ஆசார்யாள்' என்று சொல்வதற்கில்லை.

---

* "த்ரவிள - ஜாதி - ஸமுத்பவ: பால: ஏதத் ஸ்தோத்ர கர்த்தா"

Koviloor Digital Library

"ஸ்வ த்ரோஹி" விஷயம் : "ஸ்வ த்ரோஹி" என்று ஏழாம் நூற்றாண்டுப் பிள்ளைக்கறிக்காரரைச் சொன்னதற்கு என்ன ஆன்ஸர்?

ஆசார்யாள் பக்தி ஸ்தோத்ரமே பண்ணியிருக்க முடியாது என்று சொல்வது கொஞ்சங்கூட ஸரியில்லைதான். ஆனாலும் ஆசார்யாள் பேரில் இப்போது வழங்கும் எல்லா ஸ்தோத்ரங்களுமே அவர் பண்ணியதாகத்தான் இருக்குமா என்றும் கொஞ்சம் யோசிக்கும்படியாக இருக்கிறது. 'ஸௌந்தர்ய லஹரி', 'சிவாநந்த லஹரி', 'பஜகோவிந்தம்', 'ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்', 'கநகதாராஸ்தவம்' போன்றதெல்லாம் அவர்தான் பண்ணியிருப்பார். ஆனாலும் ஒரு சில ஸ்தோத்ரங்களைப் பார்க்கும்போது வேறே விதமாக நினைக்கும்படி அகச்சான்று கிடைக்கிறது. (உதாரணமாக:) "தேவி அபராத க்ஷமாபந ஸ்தோத்ரம்" என்று ஆசார்யாள் இயற்றியதாக ஒன்று இருக்கிறது. அதில்தான் "கெட்ட பிள்ளை பிறப்பதுண்டு; ஆனால் கெட்ட அம்மா என்று ஒருத்தி ஒரு நாளும் இருப்பதில்லை—

குபுத்ரோ ஜாயேத க்வசிதபி குமாதா ந பவதி

—என்று வருவது. அதிலே ஸ்பஷ்டமாக, "எண்பத்தைந்து வயஸுக்கு மேலே ஆகிவிட்ட எனக்கு நீ க்ருபை பண்ணவிட்டால் நான் யாரிடம் அடைக்கலம் புகுவேனம்மா?" என்று வருகிறது*. முப்பத்திரண்டே வயஸு இருந்த ஆசார்யாள் இப்படிச் சொல்லியிருக்க முடியுமா?

எது எந்த சங்கரர் செய்தது?:— ஆசார்யாள் ஸ்தாபித்த மடங்களிலெல்லாம் சங்கராசாரியார், சங்கராசாரியார் என்றே எத்தனையோ ஸ்வாமிகள் வந்தாயிற்று. இவர்களில் தங்கள் ஸந்நியாஸ நாமாவிலேயும் 'சங்கரர்' என்று இருப்பவர்களாகவே 'க்ருபா சங்கரர்', 'உஜ்-ஜ்வல சங்கரர்', 'மூக சங்கரர்', 'அபிநவ சங்கரர்' என்றெல்லாம் இருந்திருக்கிறார்கள். ச்ருங்கேரியில் 'வித்யா சங்கரர்' என்று விசேஷ

* "மயா: பஞ்சாசீதேரதிகமபநீதேது வயஸி.."

Koviloor Digital Library

மரியாதையோடு ஒரு ஸ்வாமிகளைச் சொல்கிறார்கள். இவர்களிலும் ஸ்தோத்ரங்கள் செய்தவர்கள் இருந்திருக்கலாம். அப்படிப்பட்ட ஸ்தோத்ரங்கள் ஆதி சங்கரர் செய்ததாகவே நாளாவட்டத்தில் நம்பிக்கை ஏற்பட்டிருக்கக்கூடியது ஸஹஜமே! "ஸூத த்ரோஹி"யைச் சொல்லும் "சிவ புஜங்க" ஸ்தோத்ரமும் அப்படி ஒன்றாக இருக்கக்கூடும். ஆகையால் இந்த ஒரு ரெஃபரன்ஸைக் கொண்டு மட்டும் கால நிர்ணயம் செய்வது ஸரியாகாது.

அநுக்ரஹமே லக்ஷ்யம், ஆராய்ச்சி அல்ல! : ஆசார்ய பீடத்திலேயே வந்தவர்கள் இயற்றிக்கொடுத்து, எத்தனையோ காலமாக ஆசார்யாள் செய்ததாகவே நினைத்துப் பாராயணம் பண்ணப்பட்டுப் பலனும் தந்து வந்திருக்கிக்கிற உத்தமமான ஸ்தோத்ரங்களையும்—அதே போல ப்ரகரணங்களையும்-அவருடையவை என்றே வைத்துக் கொள்வதும் ந்யாயம்தான்! அவருடைய இன்ஸ்பிரேஷனில், அவரே உள்ளே புகுந்து பண்ணியவைதான் இவை! அதனால் பொதுவாக இப்படியுள்ள நம்பிக்கைகளைக் குலைக்கவேண்டியதில்லை. ரொம்பவும் ஆராய்ச்சி என்று இறங்கினால் பக்தி போய்விடுவதில்தான் முடியும்! ஆனாலும் சிலர் சில தினுஸாக ஆராய்ச்சி பண்ணி அதுதான் ஸத்யம் என்று ஸ்தாபிக்கப் பார்க்கும்போது வேறே அபிப்ராயங்களும் உண்டு, அவற்றுக்கும் ஆதாரமுண்டு என்று காட்டாமலிருக்கக் கூடாது என்றும் தோன்றுகிறது. அப்படித்தான் இன்றைக்கு என்னவோ கால நிர்ணயம் என்று பார்க்க ஆரம்பித்துச் சொல்லும்போது ஆசார்யாள் பேரிலிருக்கிற நூல்களைப் பற்றிச் சொல்ல நேர்ந்தது. ஆராய்ச்சிப் பூர்வமாக ஆதி ஆசார்யாள் செய்தது வேறே, பிற்கால ஆசார்யாள் செய்தது வேறே என்று வேறுபடுத்தி வைத்துக் கொண்டாலும், அநுபவ பூர்வமாக அவையெல்லாம் ஒரே குரு ப்ரஸாதத்தில் உண்டானவைதான்! அதனால் அவர்—இவர் என்று ஒன்றும் பேதப்படுத்தாமல் பாராயணம் பண்ணிப் பலன் அடைவோம் என்ற பாவம் இருப்பதுதான் நல்லது.

Koviloor Digital Library

காலம் எதுவானுல் என்ன? நமக்கு முக்யம் அநுக்ரஹம். ரொம்பப் பூர்வகாலத்தில் வந்திருந்தால்தான் அநுக்ரஹ மூர்த்தியாயிருக்க முடியும் என்றில்லை. எத்தனை பூர்வ கால மானுலும் அப்போதும் ஆசார்யாளுக்கு ஸமகாலத்தவர் களாகவே இருந்தவர்கள்தானே இப்போது நமக்கெல்லாம் கிடைப்பதைவிட ஜாஸ்தி அவருடைய அநுக்ரஹத்தைப் பெற்றிருக்கிறுர்கள்? ஸமீபகாலத்தையும் தற்காலத்தையுமே சேர்ந்த மஹான்களிடமிருந்தும் நம்மால் அநுக்ரஹம் பெற முடியவில்லையா?

அதனுல் கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டு என்ன, இன்னும் அப்புறம் ஆசார்யாள் வந்திருந்தாலும்கூட அதனுல் நாம் பெறுகிற அநுக்ரஹத்திற்கு எந்து ஹானியுமில்லை! (நாம்) கதை கேட்பது அந்த அநுக்ரஹத்திற்குப் பாத்திரராவதற் குத்தான். அந்த முக்ய லக்ஷ்யம் மறந்து போகப்படாது.

அதற்காக யார் வேண்டுமானுலும் எதை வேண்டு மானுலும் சொல்லி நிலை நாட்டிவிட விடக்கூடாதுதான். இதற்காக நாம் செய்ய வேண்டியதையும் கொஞ்சம் கவனித்துதான் ஆகவேண்டும். இப்படிப் பண்ணும்போது இரண்டு மூன்று ஸமாசாரங்கள் முக்யம்: ஒன்று, அவர்கள் பிடிவாதமாகச் சொல்கிறுர்களே என்று நாமும் பிடிவாத மாக இருக்கக்கூடாது. நம் அபிப்ராயத்துக்கு மாறுன ஒன்றுக்கு ப்ரமாணமிருக்கிறது என்றுல் அதைத் திறந்த மனஸோடு அங்கீகரிக்கவேண்டும். இரண்டாவது, மாற்று அபிப்ராயக்காரர்களிடம் கோபமே கூடாது. ஆசார்யாளைக் குறித்த எந்த விஷயமும் பேதங்களைப் போக்குவதாகத் தான் இருக்கவேண்டுமே தவிர கோபத்திலும் வெறுப்பிலும் கொண்டுவிடுவதாக இருக்கக்கூடாது. மூன்றுவது, அநுக்ரஹம்தான் நமக்கு முக்யம் என்ற நினைப்பு மறந்து போகாமலிருப்பது...

பூர்ண வர்மன் விஷயம்: வெள்ளைக்காரர்கள் கால நிர்ணயம் பண்ணியிருப்பதற்குச் சொல்லும் அடுத்த

Koviloor Digital Library

பாயின்டைப் பார்க்கலாம். ஸூத்ர பாஷ்யத்தில் ஆசார்யாள் பூர்ணவர்மன் என்று ஒரு ராஜாவின் பெயரைச் சொல்லி, "அவனுக்கு முன்னால் ஒரு வந்த்யா புத்ரன் (மலடி மகன்) ஆண்டான் என்று சொல்வது எவ்வளவு அஸம்பாவிதம்" என்று சொல்வதைக் கொண்டு, 'மகதத்தில் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சி நடத்தியவன் ஒரு பூர்ண வர்மன்; அவனைத்தான் அவர் குறிப்பிடுகிறார்' என்று காட்டுவதாகச் சொன்னேன்.

ஆனால் நிஜமாகவே இருந்த ராஜாவைத்தான் அவர் சொல்லியிருக்கவேண்டும் என்று அடித்துச் சொல்ல முடியுமா? முடியாது. ஜெனரலாக மநுஷ்யர்களைக் குறிப்பிடும்போது, 'யாரோ ராமன் - கிருஷ்ணன் அல்லது சேஷன்-சுப்பன்' என்று நாம் பேச்சிலே சொல்கிறோம். Tom, Dick and Harry என்று இங்கிலீஷில் சொல்கிறார்கள். இந்தப் பெயர்கள் வாஸ்தவத்தில் உள்ள எவரையும் குறிப்பிடுவன அல்ல. உதாரணத்திற்கு ஏதோ பெயர் காட்டணும்; இந்தப் பேர்களைக் காட்டுகிறோம்! ஆசார்யாளே இப்படி பாஷ்யங்களில் தேவ தத்தன், யஜ்ஞ தத்தன் என்றெல்லாம் பெயர்கள் சொல்லியிருக்கிறார். அவர்கள் யார் என்று இது மட்டும் யாரும் ஆராய்ச்சி பண்ணிப் பார்க்கவில்லை! பொதுப் பேர்கள் என்றுதான் ஸரியாகப் புரிந்துகொண்டு, அதோடுவிட்டிருக்கிறார்கள். அப்படியே (பூர்ணவர்மனைச் சொல்லும்) இந்த இடத்திலும் இருக்கலாம். ஸத்தை அஸத்தோடு (உள்ளதை இல்லாததோடு) ஸம்பந்தப்படுத்த முடியாது, அப்படிச் செய்வது அஸம்பாவிதம் என்று காட்ட வருகிறார். அப்போது பூர்ணவர்மன் என்ற பெயரில் பொதுவாக ஒரு ராஜாவைக் குறிப்பிட்டு, அந்த யாரோ ஒரு ராஜாவுக்கு முன்னால் என்றைக்குமே இருக்கமுடியாத—அ-ஸத்தான—ஒரு மலடி மகன் இருந்தான் என்றால் பொருந்துமா என்று கேட்கிறார். ஆகையால் இவனுக்கு 'ஸத்'தைக் குறிப்பதான பேர் வைத்தால் ரொம்பப் பொருத்தமாயிருக்குமல்லவா? அ-ஸத் என்பது சூன்யம். ஸத் அதற்கு

Koviloor Digital Library

நேரெதிர் என்றால் சூன்யத்துக்கு நேரெதிர் பூர்ணம்தானே? அதனால் 'பூர்ணவர்மன்' என்று போட்டிருப்பார் என்று சொல்லலாம்.

பூர்ணவர்மன் என்கிற மகதராஜா தீவிரமான பௌத்த னென்று ஹுவான் த்ஸாங் சொல்வதிலிருந்து தெரிகிறது. புத்த கயையில் போதி வ்ருக்ஷத்தை மறுபடி துளிர்க்கப் பண்ணியவன் என்று சொன்னேனல்லவா? வேதாந்தத்தை நிலை நாட்டிய ஆசார்யாள் ஒரு பௌத்த ராஜாவை ஸூத்ர பாஷ்யத்தில் குறிப்பிட வேண்டிய அவச்யமில்லை. பௌத்த நூல் எதிலாவது அவன் பெயர் சொல்லியிருக்கிறதென்றால் அர்த்தமுண்டு. அப்படியாவது அவன் நிகழ்காலத்திலிருந்த ஒரு பெரிய சக்ரவர்த்தியாயிருந்தாலும் குறிப்பிட்டிருக்க லாம். அதுவுமில்லை. அவனோ கி.பி 650-ஐ ஒட்டி இருந்தவன். அதுவும் ஒரு சிற்றரசனாகவே இருந்தவன். ஆசார்யாளின் காலம் என்று அவர்கள் சொல்வதோ கி.பி 800ஐ ஒட்டி. அதாவது அவனுக்கு 150 வருஷத்திற்கு அப்புறம். ஸூத்ர பாஷ்யம் படிக்கிறவர்கள் 150 வருஷம் முந்தி இருந்த ஒரு பௌத்தச் சிற்றரசனையா நினைவு வைத்துக்கொண்டிருப்பார் கள்? ஆசார்யாள் அவனை எதற்குக் குறிப்பாக நினைவுக் வைத்துக்கொண்டு குறிப்பிடணும்? [சிரித்து] சூன்யவாதி யான பௌத்த ராஜாவுக்குப் பூர்ணவர்மன் என்று பேர் இருப்பதை வைத்து ஹாஸ்யம் வேண்டுமானால் பண்ணியிருக் கலாம்! ஆனால் இங்கே ஆசார்யாள் ஜாடைமாடையாகக் கூட அப்படியொன்றும் பண்ணாமல் factual-ஆகத்தான் சொல்லிக்கொண்டு போகிறார்.

ஒன்றும் யோசனை செய்யாமல் 'ரிஸர்ச்' என்று எதை யாவது சொல்லிவிட்டால் கேட்பவர்களும் யோசனை செய் யாமல் 'ஆமாம்' போட்டுவிடுவதாக இருக்கிறது.

அதனால்தான் அவர்களும் தீர்க்காலோசனை பண்ணாமல் எதையும் கேட்கலாமென்று சில ஆர்க்யுமென்ட்கள் எழுப்பி யிருக்கிறார்கள். இப்படியொன்று: 'ஹுவான்-த்ஸாங்

Koviloor Digital Library

சங்கரர் என்ற பெயரையே சொல்லவில்லையே! இவர் எப்படி அவருக்கு முந்தி இருந்திருப்பார்?' என்பது. ஹுவான்-த்ஸாங்குக்கு பௌத்த மதத்தில்தான் அபிமானம். அவர் உபநிஷத்துக்கள், ப்ரஹ்ம ஸூத்ரம், கீதை என்ற நம்முடைய ப்ரஸ்தான த்ரயங்களைக்கூடத்தான் குறிப்பிடவில்லை. ஆனால் இந்த ரிஸர்ச்காரர்களே அவையெல்லாம் அவருக்கு எத்தனையோ ஸெஞ்சுரி முற்பட்டவைதானென்று ஒப்புக் கொண்டிருக்கிறார்களா, இல்லையா?

"அபிநவ சங்கரர்":— அவர்களுடைய ஆர்க்யுமென்டில் இன்னும் இரண்டு பாக்கி இருக்கின்றன. கம்போடியக் கல்வெட்டில் ஒரு 'பகவத் சங்கர'ரின் காலில் அறிஞருலகம் முழுதும் தாமரையை வண்டுகள் மொய்ப்பதுபோலத் தங்களுடைய சிரஸுகளைத் தாழ்த்தியிருப்பதாகச் சொல்லி யிருக்கிறதே, அது நம்முடைய ஆதி சங்கர பகவத்பாதாளைத் தவிர யாராயிருக்க முடியும்? "கல்வெட்டிலிருந்து அந்தக் காலம், 'கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முடிவு பாகத்தி லிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப பாகம் வரை ஆசார்யாளின் காலம்' என்பதற்கும் ஒத்துப்போகிறதே! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்பது ஒரு ஆர்க்யுமென்ட். இன்னொன்று, நம் ஊரிலேயே வழங்கும் ஸங்கேதக் கணக்கு ச்லோகம்—கலியில் 3889-ம் வருஷமான கி.பி. 788-ஐச் சொல்லும் "நிதிநாகேபவஹ்ந்யப்தே" ச்லோகம்.

இந்த இரண்டும் ஒன்றையே, ஒருவரையே குறித்ததாகத் தெரிவதால் இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதிலாகச் சொல்லி விடலாம்.

ஆசார்ய பீடங்களில் ஆதி பகவத்பாதாளுக்கு அப்புறமும் மஹாபெரியவர்களாக லோக ப்ரஸித்தியுட னிருந்த சில ஸ்வாமிகள் வந்திருக்கிறார்கள். இப்போது ஆசார்யாளின் க்ரந்தங்களாக, ஸ்தோத்ரங்களாக வழங்கி வருகிறவற்றில் சில இப்படிப்பட்டவர்களால் செய்யப்பட் டிருக்கலாம் என்றேன் அல்லவா? நமக்கு நல்ல சரித்ர ஆதாரங்களுடன் தெரிபவராக வித்யாரண்ய ஸ்வாமிகள்

Koviloor Digital Library

இருக்கிறார். பதிநாலாம் நூற்றாண்டில் அவதாரம் பண்ணிய அவர்தான் விஜயநகர ஸாம்ராஜ்யம் ஏற்படுவதற்கே காரணமாயிருந்தவர். அவர் அவதாரம் செய்திருக்காவிட்டால் தக்ஷிணதேசம் முழுவதையும் துருஷ்க மதம் கபளீகரம் பண்ணியிருக்கும். துருஷ்கர்களை அடக்கி ஹிந்து ஸாம்ராஜ்யம் ஏற்பட வழி வகுத்தார். ஹிந்து மதத்திலேயே அப்போது கர்நாடகம், அதையொட்டிய ஆந்த்ர ஸீமைப் பகுதிகள் ஆகியவற்றில் மத்வ மதமும் வீரசைவமும் அத்வைதத்தைக் கபளீகரம் பண்ணாமலும் அவர்தான் ரக்ஷித்துக் கொடுத்தார். ச்ருங்கேரி மடத்துக்கு ஒரு புது சோபையை உண்டாக்கித் தந்து இன்னும் அநேக மடங்களையும் அந்தப் பிரதேசத்தில் ஸ்தாபித்து நம் ஆசார்யாளின் ஸம்ப்ரதாயம் தழைத்தோங்கும்படிச் செய்தார். 'பஞ்சதசீ' 'ஜீவன் முக்தி விவேகம்', 'வையாஸிக ந்யாயமாலை' முதலான அநுபவ க்ரந்தங்களான உசந்த அத்வைத நூல்களை உபகரித்த அவரேதான் பூர்வாச்ரம ஸஹோதரருடன்கூட நாலு வேதங்களுக்கும் பாஷ்யம் ஏற்படவும் காரணமாயிருந்தவர். ஸாயண பாஷ்யம் என்று அதற்குப் பேர். அவரை ஆசார்யாளுக்குள்ளது போலவே ஸ்தோத்ரங்களும் பிருதாவளிகளும் சொல்லி அந்த மடங்களில் கொண்டாடுகிறார்கள்.

இம்மாதிரி இங்கே "அபிநவ சங்கரர்" என்றே ப்ரஸித்தி பெற்ற ஒருவர் இருந்திருந்திருக்கிறார்*. 'அபிநவ' என்றால் 'மறு அவதாரம்' என்று அர்த்தம். ஆதி ஆசார்யாளே இவராக மறுபடி வந்திருக்கிறார் என்று அவரை உலகம் கொண்டாடியிருக்கிறது. அதனால்தான் "தீர சங்கரேந்த்ர ஸரஸ்வதி" என்ற அவருடைய பெயர் மறைந்துபோய் "அபிநவ சங்கரர்" என்றே வழங்கலாயிற்று. 'சங்கரேந்த்ர விலாஸம்' என்பதும் 'ஸத்குரு ஸந்தான பரிமளம்' என்பதும் அவருடைய சரித்ரத்தைச் சொல்லும் இரண்டு புஸ்தகங்கள்.

---

* ஸ்ரீ காஞ்சி மடத்தின் முப்பத்தெட்டாவது பீடாதிபதிகளாக விளங்கியவர்

Koviloor Digital Library

ஆசார்யாளுக்கு அப்புறம் சில நூற்றுண்டுகள் வைதிக மதம் மட்டும் கொடி கட்டிப் பறந்தாலும் அப்புறம் மறுபடி பௌத்தம் முதலிய மதங்களும், காபாலிகம் முதலான வாமசார மதங்களும் கிளம்பின. முன் மாதிரி இவை ஜன ஸமூஹத்தில் பெரிய செல்வாக்குப் பெறமுடியாதபடி ஆசார்யாள் போட்டுக் கொடுத்த அஸ்திவாரமே உறுதியாயிருந்தது. ஆனுலும் ராஜாக்களிலும், தத்வ வாதத்தில் ப்ரியமுள்ளவர்களிலும் சிலர் பௌத்தத்துக்கு ஆதரவு தந்ததால் அது கணிசமான following பெற்ற மாதிரித் தெரிந்தது. நாகரிகம் போதாதவர்களும், 'ரஹஸ்ய அநுஷ்டானம்' என்று பெத்தப் பெயர் கொடுக்கும் சில பேரும் வாமாசார மதங்களில் போனுர்கள். ஆசார்யாளுக்கு 1300 வருஷத்துக்கப்புறம் அபிநவ சங்கரர் தோன்றி ஆசார்யாளைப் போலவே தேசம் பூராவும் ஸஞ்சாரம் பண்ணி, அந்த மற்ற மதங்களை நிராகரணம் செய்து ஸர்வஜ்ஞ பீடமும் ஏறியிருப்பதாக அவருடைய சரித்ரங்களிலிருந்து தெரிகிறது. அவர் அந்நிய தேசங்களுக்கும் போய் தர்மோத்தரணம் செய்தாரென்றும் சொல்லியிருக்கிறது. சைனக்காரர்கள், துருஷ்கர்கள், பாஹ்லீகர்கள் (Balkh என்று ஆப்கானிஸ்தானில் உள்ள இடம்) முதலியவர்கள்கூட அவரைத் தங்கள் ஆசார்யராகப் பூஜித்தார்கள்—சீன-துருஷ்க-பாஹ்லிகாத்யைஸ்-ஸ்வபராசார்யதயா ஸ்துதம் என்று "குரு ரத்ந மாலா" சொல்கிறது. (ச்லோகம்—66)

இவரையும் ஆதிசங்கர பகவத் பாதரையும் ஒன்றுகவே நினைத்துத்தான் சில சங்கரவிஜய புஸ்தகங்களிலேயே மாறுபாடான விஷயங்களைச் சொல்லியிருக்கக்கூடும்.

ஆதி ஆசார்யாளின் அவதார காலத்தைச் சொல்வதாக நினைக்கப்படும் "நிதிநாக" ச்லோகமும் வாஸ்தவத்தில் இந்த அபிநவ சங்கரரின் அவதாரத்தைச் சொல்வதுதான் என்று பண்டிதர்கள் அபிப்ராயப்படுகிறுர்கள்...

Koviloor Digital Library

"ஸுஷமா" வ்யாக்யானத்தில்[1] சங்கரேந்த்ர விலாஸத்தி லிருந்து இவருடைய அவதார காலத்தை quote செய் திருக்கிறது. அதுவும் ஸங்கேத ஸங்கியையில்தான் இருக் கிறது.

"சேவதி-த்விப-திசா-(அ)நல வர்ஷே திஷ்ய" என்பது இங்கே கொடுத்துள்ள காலக் கணக்கு[2]. 'சேவதி' என்றால் நிதி. 'நவநிதிகள்' என்பதால் அது 9-ஐக் குறிக்கும். 'த்விபம்'-யானை. 'அஷ்ட கஜங்கள்' என்பதால் அது 8. 'திசா' என்றால் திசைதான். திசைகளும் 8 தானே? 'அநல'-அக்னி. அது 3. அதனால் இந்த எண் 9883 என்றாகும். திருப்பிப் போட்டால் 3889. 'திஷ்ய' என்பது கலி. கலியில் 3889-ம் வருஷம். கி. பி 787-788.

இப்போது ஹிஸ்டரி புஸ்தகங்களில் சொல்லும் கி. பி 788 அபிநவ சங்கரரின் அவதார வருஷமே என்று ஏற்படு கிறது! இதே வருஷத்தைத்தான் "நிதிநாக" ச்லோகத்திலும் சொல்லியிருக்கிறது! அது ஆதி ஆசார்யாளின் அவதார காலமாக்கும் என்று நம்மிலேயே பலபேர் பல காலமாக நினைத்து வந்திருக்கிறார்கள்!

இதை அடிப்படையாகக்கொண்டே ஓரியன்டலிஸ்ட் கள் தங்களுடைய theory-ஐ build பண்ணியிருக்கிறார்கள்.

பக்கபலமான இன்னொரு பாயிண்டும் இருக்கிறது. "நிதி நாக" ச்லோகம், அபிநவ சங்கர சரித்ர ச்லோகம் இரண்டிலும் கல்யப்தம் (கலியில் இத்தனாம் வருஷம் என்று) சொல்லியிருப்பதோடு ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸரத்தில் (ப்ரபவ முதலான அறுபது வருஷங்களில்) இன்ன வருஷம், மாஸம், திதி என்றும் சொல்லியிருக்கிறது. அதுவும் முழுக்க

---

1. 61-வது ச்லோகம்.
2. முழு ச்லோகம் வருமாறு :
ஹாயனே(அ)த விபவே வ்ருஷமாஸே சுக்லபக்ஷ தசமீ தின மத்யே ।
சேவதி த்விப திசாநல வர்ஷே திஷ்ய ஏநமுதஸோஷ்ட விசிஷ்டா ॥

Koviloor Digital Library

ஒன்ருகவே இருக்கிறது! விபவ வருஷம், வைசாக மாஸம், சுக்ல பக்ஷ தசமி என்றே இரண்டிலும் இருக்கிறது!

ஆதி ஆசார்யாள் ஜனனம் நந்தன வருஷம் என்று மற்ற ஆதாரங்களிலிருந்து தெரிகிறது. இங்கேயோ விபவ வருஷம் என்று இருக்கிறது. நாம் சொல்கிற கி. மு. 509 ஒரு நந்தன வருஷமாகவும், அவர்கள் சொல்லும் கி. பி. 788 ஒரு விபவ வருஷமாகவுமே இருக்கின்றனவென்றும் கணக்குப் போட்டுச் சொல்கிருர்கள்.

அதைவிட இன்னென்று: தெய்விக புருஷர்கள் எந்த ப்ரபவாதி வருஷத்தில் பிறந்தார்கள் என்று பெரும்பாலும் தெரியவில்லை. ராமர் எந்த வருஷம்? க்ருஷ்ணர் எந்த வருஷம்? பண்டிதர்கள் வேணுமானல் மண்டையை உடைத்துக்கொண்டு கண்டு பிடிக்கலாமே தவிர லோகத்தில் ஜயந்தி என்று கொண்டாடும்போது வருஷத்தை யாரும் நினைப்பதில்லை. மாஸம், பக்ஷம், திதி ஆகியவற்றை வைத்தே ஒவ்வொரு வருஷமும் ஜயந்தி கொண்டாட வேண்டியிருப்பதால் இவைதான் முக்யமாகத் தெரிகின்றன. ராமர் சைத்ர மாஸ சுக்ல பக்ஷ நவமி, க்ருஷ்ணர் ச்ராவண மாஸ க்ருஷ்ண பக்ஷ அஷ்டமி—என்றிப்படி. அதிலும் திதிக்குத்தான் ரொம்ப முக்யம், ரொம்ப ப்ரஸித்தி-ராம நவமி, கோகுலாஷ்டமி, விநாயக சதுர்த்தி, ஸ்கந்த ஷஷ்டி என்பதாக ஜயந்தியின் பேரிலேயே திதிதான் இருக்கிறது.

ஆசார்யாள் விஷயமாக, இன்றைக்கும் தேசம் பூராவிலும் அவருடைய ஜயந்தி வைசாக மாஸத்தில் சுக்ல பக்ஷ பஞ்சமியில்தான் கொண்டாடப்படுகிறது. இந்த இரண்டு ச்லோகத்திலுமோ பஞ்சமியைச் சொல்லாமல் தசமியைச் சொல்லியிருக்கிறது. அதனுல் அந்த தசமியை அவதார தினமாகக் கொண்டவரும் பஞ்சமியை அவதார தினமாகக் கொண்டவரும் வெவ்வேருன இரண்டு பேர் என்று வைத்துக்கொள்ள இடமேற்படுகிறது.

Koviloor Digital Library

நடைமுறையில் திதிதான் ஒரு ஜயந்திக்கு முக்யமாயிருந்து, ப்ரபவாதி வருஷத்தையோ, கலியில் எந்த வருஷம் என்றோ எவரும் நினைத்துப் பார்க்காமலிருக்க, இங்கேயோ திதியை விட்டு விட்டு கலியில் இன்ன வருஷம் என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு 788-தான் என்று நிர்ணயம் பண்ணியிருப்பது கொஞ்சம் ஆச்சர்யமாயிருக்கிறது! திதி tally-யாவது அவச்யம்.

இந்தக் காரணங்களைக்கொண்டு கி. பி 788 என்று ஓரியண்டலிஸ்ட்கள் நிர்ணயித்திருப்பது அபிநவ சங்கரரை ஆதி சங்கரராக நினைத்ததால்தான் என்று கி. மு 509 என்று நம்புகிறவர்கள் அபிப்ராயப்படுகிறார்கள்.

பாதுகாஸித்தி பெற்று அந்நிய தேசங்களிலும் திக்விஜயம் செய்த அபிநவ சங்கரரையே கம்போடியாக் கல்வெட்டில் இந்த்ரவர்மன் தன்னுடைய குருவான சிவஸோமரின் குரு என்று சொல்கிறானென்றும் கருதுகிறார்கள்.

ஆசார்யாளின் ப்ரதான சிஷ்யர்களாக இருந்த நாலு பேரோடு ப்ருத்வீதவர், சித்ஸுகர், சித்விலாஸர், ஞான கந்தர், விஷ்ணுகுப்தர், அனந்தானந்தர், உதங்கர் (இவரே தான் தோடகர் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு), ஷண்மதங்களைப்ரசாரம் பண்ணிய ஆறுபேர் என்றெல்லாமும் அநேகம் சிஷ்யர்களின் பேர்கள் 'சங்கரவிஜய'ங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. சிவஸோமன் என்ற பெயர் எங்கேயும் காணோம். அந்நிய தேச ராஜாவின் குருவாயிருந்த ஒருத்தரின் பெயர் இப்படி விட்டுப்போயிருக்குமா?

ஆராய்ச்சி என்று போகாமல் அநுக்ரஹம் என்று போகும்போது 'ஆதி' என்றும் 'அபிநவம்' என்றும் வித்யாஸப்படுத்தவே கூடாதுதான். 'ஆதி'யினுடைய புது அவதாரமே இவர் என்பதால்தானே 'அபிநவ' என்பது? அதனால் இவருக்கு உண்டான ப்ரக்யாதி எல்லாம் அவரைச்

Koviloor Digital Library

சேர்ந்ததாகவே சொல்லிவிடலாம்*. ஈச்வராவதாரமாக முதலில் வந்த ஆதி ஆசார்யாளிடமே அனன்ய பக்தியாகப் பண்ணும்போது அவருக்கும் அபராவதாரமான (அவரே எடுத்த பிற்கால அவதாரமான) இன்னொருவரை அஸலே அவராக வைத்துவிடலாம். எல்லா ஸ்துதியும் அந்த ஆதி புருஷருக்கே என்று வைத்துப் பார்க்கும்போது சிவஸோமன் அவருடைய சிஷ்யரே என்றால் நேர் சிஷ்யரென்று அர்த்தம் பண்ணாமல் சிஷ்ய பரம்பரையில் வந்தவர் என்று வைத்து விடலாம். இப்போது நாம்கூட, 'நாங்கள் ஆசார்யாள் சிஷ்யர்கள்' என்று சொல்லிக்கொள்ளவில்லையா? அது மாதிரி நமக்கு 1200 முன்னாலிருந்த கம்போடிய ராஜகுருவை ஏன் சொல்லக் கூடாது? இதெல்லாம் பக்தி பாவத்தில். இப்போது நாம் பக்தியை மூட்டை கட்டி வைத்துவிட்டு கால நிர்ணயம் என்றல்லவா ஆராய்ச்சிச் சர்ச்சையில் இறங்கியிருக்கிறோம்? அதனால் அவர்—இவர் என்று வித்யாஸப்படுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறது!

நவீன ஆராய்ச்சியாளரிடமே ஒரு மாற்றுக் கருத்து: கி.பி. 788 என்பது ஸரியாயிருக்காது என்று நவீன கால ரிஸர்ச்காரரர்களிலேயே சில பேர் சொல்லி அதற்கு ஒரு காரணம் காட்டுகிறார்கள்:

ஸூத்ர பாஷ்யத்தில் இரண்டு இடங்களில் ஆசார்யாள் சில ஊர்களின் பெயர்களை உதாரணமாகக் குறிப்பிடும்போது பாடலிபுத்ரத்தைச் சொல்லியிருக்கிறார்.

குப்தர்கள் செல்வாக்கிழந்து, அப்புறம் தானேச்வரம், கன்னௌசி ஆகிய தலைநகரங்களிலிருந்துகொண்டு ஆட்சி செய்த ப்ரபாகர வர்தனர், ஹர்ஷ வர்தனர் ஆகியவர்களின் நாளிலேயே பாடலிபுத்ரம் பெருமை இழந்துவிட்டது.

---

* இந்த ரீதியில்தான் போலும், ஆதி ஆசார்யாளைப் பற்றி ஸ்ரீசரணர்கள் குறிப்பிட்டுள்ள ஸந்தர்ப்பங்கள் பலவற்றில் கம்போடியக் கல்வெட்டு ச்லோகத்தை அவருக்கான துதிபோலவே மொழிந்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

ஹர்ஷனின் காலம் 600-650 (சுமாராக). அப்போது இங்கே வந்த ஹுவான் - த்ஸாங் பாடலிபுத்ரம் ஒரே Ruins-ஆக (இடிபாடுகளாக) இருப்பதாக எழுதியிருக்கிறார். அப்புறம் கி.பி. 750-வாக்கில் வெள்ளம் வேறு வந்து அந்த ஊரை நன்றாக அழித்து விட்டிருக்கிறது. நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடுதான் மறுபடி அது ஒரு மாதிரி எழும்பி, அப்புறம் பெரிசாகி, இப்போது 'பாட்னா'வாக இருக்கிறது. ஆசார்யாள் காலம் என்னும் 788-820-ல் அந்த ஊரே இல்லை. தம்முடைய காலத்துக்கு 150-200 வருஷத்துக்கு முன்னா லிருந்தே பெருமைக் குன்றிப்போய், நாற்பது-ஐம்பது வருஷம் முந்திதான் வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விட்ட ஒரு ஊரையா, அது தற்காலத்திலும் இருந்த மாதிரி உதாரணம் காட்டியிருப்பார்?—என்று கேட்கிறார்கள்.

இதைவிட இன்னொரு முக்யமான பெரிய காரணமும் காட்டுகிறார்கள். எத்தனையோ நூற்றாண்டுகளாக இந்த தேசம் முழுதிலும் ஆசார்யாளின் பெரிய ஸாதனையாகச் சொல்வது அவர் பௌத்த மதத்தை நிராகரணம் செய்ததைத்தான். அவருக்குக் கொஞ்சம் முந்தி குமாரில பட்டரும் கொஞ்சம் பிந்தி உதயனரும் நிறைய பௌத்த கண்டனம் பண்ணினார்களென்றாலும் ஆசார்யாளும் அந்தப் பணியை சக்திகரமாகச் செய்துதானிருக்கிறார். பாஷ்ய புஸ்தகங்களில் அதிகம் எழுதாவிட்டாலும் ஊர் ஊராக வாதம் செய்யப்போனபோதும், ஊர் ஊராக நம்முடைய ஆலய வழிபாட்டுக்குப் புத்துயிர் கொடுத்தபோதும் அவர் பௌத்தத்தை வன்மையாக எதிர்த்தே அகற்றி இருக்கிறார். அவர் காலத்தில் பௌத்தம் ஜன ஸமூஹத்தைக் கலக்கும் அளவுக்கு வீர்யத்துடனிருந்ததை அவரே ஸூத்ர பாஷ்யத்தில் தெரிவித்திருக்கிறார்: வைநாசிகை: ஸர்வோ லோக ஆகுலீக்ரியதே-என்று. வைநாசிகர்கள் என்பது பௌத்தர்களுக்கேதான் இன்னொரு பேர். அவர்கள் ஸர்வ லோகத்தையும் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று

---

* II. 2. 26

Koviloor Digital Library

சொல்கிறார். இதனால் அவருடைய காலத்தில் பௌத்தம் இங்கே ஒரு active force-ஆக இருந்தது என்று நிச்சய மாகிறது.

இதைக் கொண்டுதான் நவீன ஆராய்ச்சிக்காரர் களிலேயே ஒரு சிலர் கி.பி. 788 என்பது ஸரியில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால் அதற்கு முந்தியே இந்தியாவில் பௌத்தம் நன்றாகப் படுத்துப் போய்விட்டது. ஹர்ஷரின் காலத்தில்—788க்கு 150 வருஷம் முன்—வந்த ஹுவான்-த்ஸாங்கே பௌத்தம் க்ஷீணித்துப் போயிருப்பதைத் தெரிவித்திருக்கிறார். ஹர்ஷர் கொஞ்சம் புத்துயிரூட்டிப் பார்த்தார். ஆனால் அது ஜனஸமூஹம் முழுதையும் கவரவில்லை; பிக்ஷுக்கள், ஸமயவாதிகளை மட்டுமே கவர்ந்தது—சற்று முன்பே (இவ்விஷயம்) சொன்னேன். ஆசார்யாள் அவதாரம் கி.பி. எட்டாம் நூற்றாண்டு முடிவு என்றால், அப்போது வங்காளத்திலிருந்து வட இந்தியாவின் கணிசமான பகுதி அடங்கலாக ஆண்டு வந்த பால வம்ச ராஜாக்கள் பௌத்த மத அபிமான முள்ளவர்கள்தான். ஆனாலும் அவர்களும் தங்களளவில் அபிமானித்தார்களே ஒழிய, 'லோகமெல்லாம் கலக்கப்படுகிறது' என்று சொல்லும்படி இல்லை என்று நவீன ஹிஸ்டரிக்காரர்களே சொல்கிறார்கள். பௌத்தத்தில் அப்போது ரஹஸ்யமான தாந்த்ரிக உபாஸனைகளே ஜாஸ்தியாகிக் கொண்டு வந்து, அது இங்கே வேர் பிடிக்க முடியாமல் திபேத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

[சிரித்து] 'சங்கர மடத்து சாமியார் என்னவோ ஸ்வபக்ஷமாக (தன் கட்சிக்கு ஆதரவாக)ப் பேசுகிறார்' என்று நினைக்காமல் ஹிஸ்டரியில் ஸ்டான்டர்ட் புஸ்தகம் எதுவானாலும் எடுத்துப் பார்த்தால் தெரியும், ஆசார்யாளின் காலம் என்று அந்தப் புஸ்தகங்களில் சொல்லப்படும் காலத்துக்கு முந்தியே இந்தியாவில் பௌத்த மதம் "லோகத்தை கலக்குகிறது" எனத் தக்க force-ஆக (சக்தி வாய்ந்த அமைப்பாக) இல்லாமற்போய்விட்டதென்று.

Koviloor Digital Library

நாலந்தா ஸர்வகலாசாலை போன்ற இடங்களிலும் சில பௌத்த மடாலயங்களிலும் மட்டுமே பிக்ஷுக்களிடமும், சில படிப்பாளிகளிடையிலும்தான் அந்த மதம் இருந்து வந்தது. முஸ்லீம் படையெடுப்புவரைகூட அப்படித் தொடர்ந்து இருந்துவந்தது. ஜனஸமூஹத்தைப் போட்டுக் கலக்குவதாகவோ, ஆசார்யாள் போன்ற ஒருவர் அதை நிராகரணம் பண்ணியதுதான் அவருடைய மஹா பெரிய வெற்றிச் சாதனை என்று கொண்டாடும் அளவுக்கோ அது நிச்சயமாக அந்தக் காலத்தில் சக்தியோடில்லை. ஆகையால் ஆசார்யாள் பௌத்தத்தோடு பெரிசாக யுத்தம் பண்ணினாரென்றால் அது shadow fight (நிழலுடன் சண்டை செய்வது) மாதிரிதானாகும்!

இந்தக் காரணம் சொல்லியே நவீன ஆராய்ச்சிக்காரர்களிலும் சில பேர் கி. பி. 788-820 என்பதை ஆக்ஷேபிக்கிறார்கள். அவர்களுடைய ஹிஸ்டரிப்படி, கி. பி. நாலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குப்த ஸாம்ராஜ்யம் தோன்றியபோதே நம் தேசத்தில் ஹிந்து மதம் பெரிய மறு மலர்ச்சி கண்டு பௌத்தம் க்ஷீணதசை அடைந்திருந்தது. 'இதற்கு ஆசார்யாளே காரணமாயிருந்திருக்கலாம். அதனால் அவரை கி. பி. 800-லிருந்து ஐநூறு வருஷம் முற்காலத்திற்குக் கொண்டுபோக இடமிருப்பதாகத் தோன்றுகிறது' என்று இவர்கள் சொல்கிறார்கள்.

"நாம் சொல்கிறபடி ஆசார்யாள் 2500 வருஷம் முந்தி என்றால், அவருக்குப் பிற்பாடும், 'குப்தா ஏஜு'க்குப் பிறகுங்கூட அநேக பீரியட்களில் பௌத்தம் இந்த தேசத்தில் இருந்துதானே இருக்கிறது? எத்தனையோ விஹாரங்களும் சைத்யங்களும் கிறிஸ்து சகாப்தத்திலும் சில நூற்றாண்டுகள் வரையில் தோன்றியதாக அழுத்தமான சான்றுகள் இருக்கின்றனவே? அவர் பௌத்தத்தை அப்படியே 2500 வருஷம் முந்தியே வெளியேற்றிவிட்டாரென்றால் எப்படி?"

Koviloor Digital Library

அப்போது அவர் அனுப்பியது வாஸ்தவம்தான். அவருடைய காலத்தில் 72 மாற்று மதங்களையும் அவர் இல்லாமல் பண்ணி ஜகதாசார்யாளாக விளங்கியது வாஸ்தவந்தான்.

ஆனாலும் இந்த தேசத்தில் எப்போதும் ரிலிஜன், ஃபிலாஸஃபி ஆகியவற்றில் ஸ்வதந்த்ரமாகச் சிந்தனை பண்ணுவதற்கும், அநுஷ்டானம் பண்ணுவதற்கும் தாராளமாக இடம் கொடுத்தே வந்திருக்கிறது. அதனால் ஆசார்யாளுக்கு அப்புறமும் அவ்வப்போது பௌத்தம், ஜைனம் முதலியவற்றில் சிந்தனையைச் செலுத்திப் புஸ்தகம் எழுதியவர்கள் தோன்றியிருக்கிறார்கள். அந்த மதங்கள் மறுபடி தலைகாட்டியிருக்கின்றன. பல ராஜாக்கள் அந்த மதங்களைத் தழுவியிருக்கிறார்கள். பெரிய பெரிய விஹாரங்களும் பள்ளிகளும் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். ஆனாலுங்கூடப் பொது ஜனங்கள் எல்லாருடைய மதமாக பௌத்தமோ சமணமோ பிற்காலங்களில் இல்லவே இல்லை. அந்த மதங்களைச் சேர்ந்த பிக்ஷுக்கள், அபிமானித்த ராஜாக்கள், 'யதா ராஜா ததா ப்ரஜா' என்று பயந்துகொண்டு ராஜாக்களைப் போலவே பண்ணியே கொஞ்சம் ப்ரஜைகள், நிஜமான கன்விக்ஷனிலேயே அந்த மதங்களை ஏற்றுக்கொண்ட இன்னும் கொஞ்சம் பேர்—என்றெல்லாம் கூட்டிப் பார்த்தாலும்கூட மொத்த ஸமுதாயத்தில் ஒரு சின்னப் பங்குதான் ஆசார்யாளுக்குப் பிற்காலங்களில் அம்மதங்களை அநுஸரித்தது. இது நான் இட்டுக் கட்டிச் சொல்வதில்லை. முன்ஷி போன்றவர்கள் இப்போது ஹிஸ்டாரிகலாக ரிஸர்ச் செய்தே இப்படிச் சொல்வதுடன் வெள்ளைக்காரர்களிலேயே சில சரித்ராசிரியர்கள் ஸமீப காலமாக இதை ஒப்புக்கொண்டு எழுதி வருகிறார்கள்.*

---

* ''தெய்வத்தின் குரல்'' நான்காம் பகுதி, 'குரு' என்ற உரையில் 'பௌத்தம்—சமணம்: தேசிய ரீதியில் என்றுமே ஊன்றவில்லை' என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

ஆக, 2500 வருஷத்துக்கு உட்பட்ட பௌத்த சின்னங்கள் நம் தேசத்தில் இருந்திருப்பதால் ஆசார்யாளும் அதற்குள்தான் வந்திருக்க வேண்டுமென்பதில்லை. அவர் நாளில் அவர் நிராகரணம் பண்ணி, அப்புறம் சில நூற்றாண்டுகள் வைதிக ஹிந்து மதம் மாத்திரமே இங்கே இருந்துவிட்டு, அதற்கும் அப்புறம் அவ்வப்போது தலைதூக்கிய பௌத்தத்துக்கு அடையாளங்கள்தான் நாம் பார்ப்பது. பிற்காலங்களிலும் நம்முடைய மதபுருஷர்கள் பலர் பெரியவர்களாகத் தோன்றி அவைதிக மதங்களைக் களைந்திருக்கிறார்கள். க்ருஷ்ணர் தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணியும் அப்புறம் மறுபடி அதர்மம் ஓங்கியபோது ஆசார்யாள் அவதரித்து ஸரிப்பண்ணவேண்டி வரவில்லையா? அப்படியே ஆசார்யாளுக்குச் சில நூற்றாண்டுகள் பிற்காலத்திலிருந்தும் ஏற்பட்டது. முடிவாக ஒரு மாதிரி கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பௌத்தம் நன்றாக க்ஷீணித்து, பிக்ஷு ஸங்கம், ஸர்வ கலாசாலைகள் ஆகியவற்றில் மட்டும் இருந்து வரும்படி ஆயிற்று. இதற்கும் நூற்றாண்டு தள்ளியே ஆசார்யாள் அவதாரம் செய்ததாக வெள்ளைக்காரர்கள் சொல்லி அவர்தான் ப்ரமாதமாக பௌத்தத்துடன் மோதி ஜயித்தாரென்றால் அது ஒன்றுக்கொன்று ஒவ்வவில்லை என்பதுதான் பாயின்ட்.

கி. பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டில் ஏதோ கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த பௌத்தத்தையும் களைந்து, அதோடு ஹிந்து மதம் என்று சொல்லிக்கொண்டே மறுபடிக் கிளைத்திருந்த பல அவைதிக வழிகளையும் அகற்றியவர்தான் அபிநவ சங்கரர்; அதோடு தூரக் கிழக்கு நாடுகள் முதலியவற்றிலும் நம் மதம் பரவச் செய்தவர் என்று தெரிந்துகொள்ள முடிகிறது.

கி. மு. முதல் நூற்றாண்டு என்னும் கருத்து: 'ஆசார்யாள் காலம் கி. பி. 788-820 இல்லை; கி. மு. 509-477-ம் இல்லை. கி. மு. 44-12தான்' என்றும் ஒரு அபிப்ராயமிருக்கிறது. கன்னட தேசத்தில் இந்த அபிப்ராயம்

Koviloor Digital Library

இருந்து வந்திருக்கிறது. அதாவது நாம் சொல்வதைவிட 460-470 வருஷத்துக்குப் பிற்பாடு அவர்கள் ஆசார்யாளின் காலத்தைச் சொல்கிறுர்கள்.

இந்த 460-470 வருஷ வித்யாஸத்திற்கு டி. எஸ். நாராயண சாஸ்த்ரி* போன்றவர்கள் ஒரு காரணம் காட்டுகிறுர்கள். அதாவது: ஜைனர்களும் பௌத்தர்களும் யுதிஷ்டிர சகம் என்று ஒன்றைப் பின்பற்றுகிறுர்கள். இது கலியுகம் ஆரம்பித்து 468 வருஷத்துக்குப் பிறகு ஆரம்பிப்பது. யுதிஷ்டிரர் என்பது பாண்டவர்களில் மூத்தவரான தர்மபுத்ரர்தான். க்ருஷ்ணர் பரமபத ஆரோஹணம் செய்ததைக் கேள்விப்பட்டு உடனே அவரும் 'மஹாப்ரஸ்தானம்' என்பதாக ஜீவயாத்ரையை முடித்து ஸ்வர்க்கத்துக்குப் புறப்பட்டுவிட்டார். க்ருஷ்ணரின் பரமபத ஆரோஹணத்திலிருந்துதான் கலி பிறந்தது. அப்போது யுதிஷ்டிரர் 36 வருஷம் ஆட்சி நடத்தியிருந்தார். ஆகையால் நாம், அதாவது ஹிந்துக்கள், கலிக்கு 36 வருஷம் முன்ஞல் (கி. மு. 3138-ல்) யுதிஷ்டிர சகாப்தம் ஆரம்பிப்பதாகக் கொண்டிருக்கிறேம். ஆனுல் ஜைன, பௌத்தர்கள் கலி ஆரம்பித்தபின் 468 வருஷத்திற்கு அப்புறமே தங்களுடைய யுதிஷ்டிர சகாப்தத்தை ஆரம்பிக்கிறுர்கள். 'யூனிஃபார்மா'க அவர்களுடைய புஸ்தகங்களில் அப்படித்தான் இருக்கிறது.

ஜைனமதம் ஆதியிலிருந்தே கன்னடதேசத்தில் வேர் பிடித்திருக்கிறது. மௌர்ய சந்த்ரகுப்தனே கடைசி நாளில் ஜைன பிக்ஷுவாகி ச்ரவண பௌகொளாவுக்கு வந்துதான் ப்ராயோபவேசம் பண்ணி (உண்ணு நோன்பிருந்து) உயிரை விட்டானென்று சொல்வதுண்டு. அதனுல் அங்கே ஜைனர்கள் பின்பற்றும் யுதிஷ்டிர சகம் பிறரிடமும் வழக்குக்கு வந்தது என்றும், அதனுல் கலியில் 2500 வருஷம் என்று ஆசார்யாள் காலத்தைச் சொல்லிருப்பதை ஜைன யுதிஷ்டிர சக 2600 என்று அவர்கள் நினைத்துக்கொண்டு 460-470

---

* "The Age of Sankara" என்ற நூலில்.

Koviloor Digital Library

வருஷம் தள்ளிக்கொண்டுவந்து விட்டிருக்கலாம் என்றும் அவர் (நாராயண சாஸ்த்ரி) சொல்கிறார்.

'கி.மு. ஆறும் நூற்றாண்டு என்ற அத்தனை முன்னேயும் போகவேண்டாம், கி. பி. எட்டாம் நூற்றாண்டு என்று அத்தனை பின்னுக்கும் தள்ளவேண்டாம்; [சிரித்து] 'காம்ப்ரமைஸ்'ஸாக இந்த கி. மு. முதல் நூற்றாண்டை வைத்துக்கொண்டு விடலாமே' என்றும் சிலர் சொல்கிறார்கள். இதற்கு அவர்கள் சொல்லும் ஒரு காரணம்: நம்முடைய மடத்தின் ஆரம்ப காலத்து ஏழெட்டு ஸ்வாமிகள் 80-90-100 வருஷங்களுக்கு பீடத்திலிருந்ததாக நம்முடைய குரு பரம்பரையில் இருக்கிறது. 'புண்ய ச்லோக மஞ்ஜரி'யில் அப்படித்தான் தேதிகள் கொடுத்திருக்கிறது. 'இது ரொம்ப ஜாஸ்தியாய்த் தெரிகிறது. ப்ராசீனத்வம் (தொன்மை) கொடுக்க வேண்டுமென்றே, வாஸ்தவத்தில் 20-30-40 வருஷம் பட்டத்திலிருக்கக்கூடியவர்களுக்கு ஒரு அறுபது வருஷ ஸைகிள் கூட்டிச் சொன்னதாகத் தோன்றுகிறது. நிஜமாக அவர்கள் ஸித்தியான ப்ரபவாதி வருஷப் பெயர், மாஸம், பக்ஷம், திதி ஆகியவற்றை மாற்றாமலே புண்ய ச்லோகங்களில் வைத்துக்கொண்டு, அவர்களுடைய பதவிக் காலத்தை ஸரியாக அறுபது, அறுபது வருஷம் சேர்த்துச் சொல்லியிருக்கலாம். தலா அறுபது வருஷமாக அந்த ஏழெட்டுப் பேருக்குக் குறைத்து விட்டோமானால் ஸரியாகிவிடும். அப்போது ஆசார்யாள் அவதாரம் கி. மு. 44 என்பதும் ஸரியாக வந்துவிடும்' என்று சொல்கிறார்கள்.

மேற்படி கருத்துக்கு மாற்றுக் கருத்து: இதை அப்படியே ஏற்றுக்கொண்டுவிடுவதற்கில்லை. ரொம்பவும் பால்யத்திலேயே பட்டத்துக்கு வந்து, அந்த ஆதி காலத்தில் நல்ல யோக நியமங்களோடு வாழ்ந்தவர்கள் புருஷாயுஸ் என்கிற 120 வருஷம் ஜீவித்திருந்தால்கூட அதில் ஆச்சர்யப் படுவதற்கு எதுவுமில்லை. அதனால் 80-90-100 வருஷம் என்பது மிகைப்படுத்தினதாக இருக்க வேண்டியதில்லை.

Koviloor Digital Library

நிஜமாகவே இருக்கும். நானே "போவேறு பார்!" என்று 55 வருஷமாக ஸ்வாமிகளாக உட்கார்ந்திருக்கவில்லையா?* ஆனபடியால் அந்தப் பூர்வாசார்யார்களின் பீடாதிபத்ய காலத்தில் கத்திரிக்கோல் போடத் தேவையில்லை!

த்வாரகா ஸ்ரீமடத்தின் சான்று: இந்த (காஞ்சி) மடத்து குரு பரம்பரை இருக்கட்டும். த்வாரகையில் ஆசார்யாள் ஸ்தாபித்த மடம் இருக்கிறதல்லவா? அதன் குரு பரம்பரையிலும் இப்படியே கிட்டத்தட்ட ஆதி ஆசாரியாள் காலத்தைச் சொல்லியிருக்கிறது. அங்கே இருந்த ஸ்வாமிகளில் முதலில் சிலருக்கு யுதிஷ்டிர சகாப்தப்படி வருஷங்கள் சொல்லியிருக்கிறது. (கி. மு. 3138-ல் ஆரம்பிக்கும் 'நம்முடைய' யுதிஷ்டிர சகம்; ஜைன பௌத்தர்களுடையதல்ல.) இப்படி ஆரம்பத்தில் சில பட்டங்களுக்குச் சொன்ன பிறகு மற்றவர்களுக்கு (கி. மு. 57-ல் தொடங்கிய) விக்ரம சகப்படி வருஷம் தந்திருக்கிறது. அந்த லிஸ்டின்படி ஆசார்யாள் ஸித்தியானதாகச் சொல்லியிருக்கும் காலம் கிட்டத்தட்ட நாம் சொல்வதாகவே இருக்கிறது. அதே கி.மு. ஐந்தாம் நூற்றுண்டுதான். ஆனால் சில வருஷங்கள் முந்தியிருக்கிறது. 2500 வருஷ ஸமாசாரத்தில் சில வருஷம் முந்தி-பிந்தி என்பது பெரிய விஷயமேயில்லை. அதுவும் தவிர போன நூற்றுண்டில் அங்கே பீடாதிபதிகளாக இருந்த ஒருவரே 'விமர்சா' என்ற புஸ்தகத்தில் நாம் சொல்கிற கி.மு. 509-ஐயே அங்கீகரித்தும் எழுதியிருக்கிறார்.

இங்கே (காஞ்சி ஸ்ரீமடத்தில்) இதுவரை 68 ஸ்வாமிகள் இருந்திருக்கிறோமென்றால் அங்கே (த்வாரகை ஸ்ரீமடத்தில்) தற்போது (1963) இருப்பவர் 79-வது ஸ்வாமிகள் என்று வரிசையாக குரு பரம்பரை வைத்திருக்கிறார்கள். முதல் ஸ்வாமிகளிலிருந்து ஒவ்வொருவரும் இத்தனை வருஷத்

---

* 1963-ல் கூறியது. தற்போது (1989) நம் பாக்யவசமாக ஸ்ரீசரணர்களது பீடாதிபத்யத்தின் 83-வது ஆண்டில் இருக்கிறோம். தொடக்க கால ஆசார்யர்களும் இதேபோல நெடுங்காலம் பட்டம் வகித்திருக்கலாமல்லவா?

Koviloor Digital Library

திலிருந்து இத்தனும் வருஷம்வரை பட்டத்தில் இருந்திருக்கிறார்களென்றும், நம் மடத்தைப் போலவே, கணக்கு வைத்திருக்கிறார்கள். இங்கே ஆரம்பத்தில் ஏழு ஸ்வாமிகள் அறுபது வருஷத்துக்கு அதிகமாகப் பட்டத்திலிருந்து கிறிஸ்து சகாப்த ஆரம்பத்துக்கு வருகிறோமென்றால், அங்கே அதற்குள் பதினேரு ஸ்வாமிகள் வந்துவிடுகிறார்கள்! அவர்களில் இரண்டு பேர்தான் அறுபது வருஷத்துக்குமேல் பட்டத்திலிருந்திருக்கிறார்கள்!

இப்படியிருக்கும்போது, 'அறுபது அறுபது வருஷம் வெட்டிவிடலாம்' என்றால் எப்படி ஸரியாகும்?

முக்ய ஆதாரம்: சங்கர மடங்களிடையே ஒரே கருத்து: ஆசார்யாளின் காலம் கி.மு. 500-ஐ ஒட்டியது என்பதற்கு ஒரு முக்யமான ஆதாரம் இந்த (காஞ்சி) மடம், த்வாரகை மடம், புரி மடம் ஆகிய ஆசார்யாளின் மூன்று ஸ்தாபனங்களிலும் அந்தப் 'பீரிய'டையே சொல்வதுதான்.

அறிஞர் என்று வெள்ளைக்காரர்களிடமும் பெயர் வாங்கிய ஸர். ஸுப்ரஹ்மண்ய ஐயர் ரொம்ப வருஷம் முந்தி "தியாஸஃபிஸ்ட்" பத்திரிகையில் த்வாரகா மட ரிகார்டுகளை முக்யமாகக் காட்டியே, ஆசார்யாள் கி.மு. 6—5 நூற்றாண்டுதான் என்று எழுதியிருந்தார். அன்னி பெஸன்ட் உள்பட தியாஸாஃபிகல் ஸொஸைடியினர் எல்லாரும் அந்தக் காலத்தையே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். த்வாரகா மடத்துக்காரர்கள் தங்களுக்கு ஆதரவாக, இந்த்ரனின் அம்சம் என்று சொன்னேனே, அந்த ஸுதன்வா என்ற ராஜா நம்முடைய ஆசார்யாளுக்கு 'அட்ரஸ்' பண்ணியதாக ஒரு தாம்ர பத்ர சாஸனம் (செப்பேடு)கூடத் தங்களிடம் இருப்பதாகச் சொல்லி அதன் வாசகத்தை முன்னே சொன்ன "விமர்சா" புஸ்தகத்தில் 'பப்ளிஷ்' பண்ணியிருந்தார்கள்*.

---

* 'விமர்சா' வெளியானது 1872-ல். மேலும், புரி மடத்தின் "க்ரந்தமாலா"வில் நான்காவது வெளியீடான "யதி தண்டைச்வர்ய விதானம்" என்ற நூலிலும் ஸ்ரீ சங்கராவதாரம் கி.மு. 509-ல் என்றே கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

புரி ஜகந்நாதத்தில் ஆசார்யாள் ஸ்தாபித்த கோவர்தன மடத்தினரும் அவர் காலம் கி.மு. 6—5 நூற்றுண்டு என்றே சொல்கிறுர்கள். அவர்கள் இன்று வரை* 140-க்கு மேல் வரிசையாகத் தங்கள் மடத்து ஸ்வாமிகளின் லிஸ்ட் வைத்திருக்கிறுர்கள்.

அங்கே ஏன் காஞ்சியிலும் த்வாரகையிலும் இருப்பதைப் போலக் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு ஸ்வாமிகளைச் சொல்லியிருக்கிறது என்று கேள்வி வரும். காரணம் இது தான்: மற்ற மடங்களில் பால ப்ரஹ்மசாரிகளே பீடாதிபத்யம் பெற்றுவிடுவதாக இருக்க, புரி மடத்தில் மத்யம வயஸுக்கு மேற்பட்டவர்கள்தான் ஸ்வாமிகளா கிறுர்கள். அதனுல் அவர்கள் பட்டத்தில் இருக்கும் 'பீரியட்' மற்ற மடங்களில் இருப்பதைவிட சராசரியில் ரொம்பவும் குறைவாக இருக்கிறது. இதனுலேயே அங்கே குரு பரம்பரை எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

பதரிநாதத்தில் ஆசார்யாள் ஸ்தாபித்த மடத்திற்கு ஜ்யோதிர் மடம் என்று பேர். அந்த மடத்தினர் ''மடாநுசாஸனம்'' என்பதாக (1946-ல்) ஒரு ப்ரசுரம் வெளியிட்டிருக்கிறுர்கள். அதிலும் ஆசார்யாள் அவதாரம் கி.மு. 509 என்றே கண்டிருக்கிறது.

தக்ஷிணத்தில் ஒன்று (காஞ்சி), கிழக்கு ஸமுத்ர எல்லை யில் ஒன்று (புரி ஜகந்நாதம்), மேற்கு ஸமுத்ர எல்லையில் ஒன்று (த்வாரகை), வடக்கே ஹிமாசல எல்லையில் ஒன்று (பதரிநாதம்) என்று ஒன்றுக்கொன்று ஸுமார் ஆயிரம் மைல் தள்ளியுள்ள நான்கு சங்கர மடங்களிலும் அவர்களது மூல புருஷரின் காலம் கிறிஸ்து சகாப்தத்திற்கு ஐந்நூறு வருஷம் முன்னுல் என்று ஏகோபித்துச் சொல்லி இருப்பதைக் கவனிக்க வேண்டும். 'நம்முடைய ஆசார்ய பீடங்கள் ஒருமுகமாகச் சொல்வது நம்பகமில்லாதது. ஓரியண்டலிஸ்ட்

---

* 1963.

Koviloor Digital Library

களின் ரிஸர்ச்தான் ஸத்ய ப்ரமாணமானது என்று சொல்லலாமா?' என்று அவரவரும் ஆலோசித்துப் பார்க்க வேண்டியது.

கி.மு. 44 என்று கர்நாடக தேசத்திலுள்ள அபிப்ராயம் கூட கி.பி. 788-ஐவிட கி.மு. 509க்குத்தான் கிட்டத்தில் இருப்பது. அப்படியிருக்கும்போது அதற்கும் (கி.மு. 44க்கும்) எண்ணூறு வருஷம் தள்ளி வெள்ளைக்காரர்கள் நிர்ணயம் பண்ணியதுதான் ஸரி என்று ஒரே தீர்மானமாக முடிவு கட்டி விடலாமா?

இந்த மடங்களில் ஒன்றிலேயே உட்கார்ந்து கொண்டிருக்கும் நான் இதற்கு மேலே சொல்வது அழகாகாது. இவ்வளவு சொன்னதுகூட ஜாஸ்தியோ என்றால், மடம்—நீங்கள்-மடத்துச் சிஷ்யர்கள், எல்லாம் ஒரே குடும்பம்தான் என்ற பாத்யதையால் சொன்னேன்!

ஹாலன் - பூர்ணவர்மன் : பல ஆதாரங்களின் சான்றுகள் : கர்ண பரம்பரையாக வந்த நம்பிக்கை, மடங்களின் ஆதாரம் என்பவை தவிர இன்னும் சிலதும் (ஆசார்யாள் காலம் கி.மு. 6—5 நூற்றாண்டே என்பதற்கு ஆதரவாக இருப்பதைச்) சொல்கிறேன்.

புராணங்களை ஒன்று சேர்த்துப் பார்ப்பதில் நமக்குத் தெரியும் 'ஜீனியாலஜி'ப்படி (ராஜ வம்சங்களின்படி) கி.மு. 1500லிருந்து கி.மு. 1200 வரை (ஸுமாராகத்தான் சொல்கிறேன்) மௌர்யர்கள் ஆண்டபின் கி.மு. 900 வரை சுங்கர்களும், அப்புறம் சுமார் நூறு வருஷம் காண்வர்களும் ஆட்சி நடத்தி முடித்து, கி.மு. எட்டாம் நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்து ஐநூறு வருஷங்கள் "ஆந்த்ரர்"கள் என்று சொல்லப்படும் சாதவாஹனர்கள் ஆண்டிருக்கிறார்கள். 'டெக்கானி'ல் (தக்காணத்தில்)தான் சாதவாஹனர் ஆட்சி ஏற்பட்டாலும் அது வடக்கேயும் பரவியிருந்ததால் அவர்களையே விசேஷித்து மகதாதிபதிகளாகவும் சொல்லியிருக்கிறது. ஆசார்யாள் காலம் கி.மு. ஆறும்-ஐந்தாம்

Koviloor Digital Library

நூற்றுண்டு என்றால், அப்போது இந்த ஆந்த்ர வம்சத்தின் ஆட்சியே நடந்திருக்கவேண்டும்.

"குரு ரத்னமாலா"விலிருந்து இப்படியே கன்ஃபர்ம் ஆகிறது. காசியில் விச்வநாதர் தீண்டாதானாக வந்தபின் ஆசார்யாள் குமாரிலபட்டரைப் பார்க்க ப்ரயாகைக்குப் புறப்பட்டதைப் சொல்லுமிடத்தில், "ஹால ராஜனால் ஆதரிக்கப்பட்டவராக இருந்தபோதிலும் அவர் காசியை விட்டுப் புறப்பட்டார்" என்று வருகிறது*. ஹாலன் என்று சாதவாஹன (ஆந்த்ர) ராஜா இருந்ததைப் புராணப் பண்டிதர்கள், ஓரியன்டலிஸ்ட்கள் இருவருமே ஒப்புக்கொள் கிறார்கள். ஓரியன்டலிஸ்ட்களே அவனை கி.பி. முதல் நூற்றுண்டுக்காரனாகச் சொல்லியிருப்பது கவனிக்க வேண்டிய விஷயம். அவனுக்குக் காசி வரை ஆதிக்யம் இருந்திக்கக்கூடியதே என்றும் தெரிகிறது. தம் காலத்தில் ஸார்வபௌமன் இல்லை என்று ஆசார்யாள் சொல்லியுள்ள படி இந்த ஹாலனும் தேசம் பூராவும் பரவிய ராஜ்யத்தை ஆளாவிட்டாலும், கோதாவரி—கங்கை நதிகளுக்கு இடைப் பட்ட பெரிய பகுதியை ஆண்டிருக்கக்கூடும். அதனால் காசி அவன் ராஜ்யத்தில் இருந்திருப்பது ஸாத்யமே. ராஜா என்பதைவிடக் கவி என்று அவனுக்கு ப்ரஸித்தி உண்டு. ப்ராக்ருத பாஷையில் யதார்த்த வாழ்க்கையை இயற்கை யாக வர்ணித்து இக்கால 'ஸமூஹக் கதைகள்' என்பவற்றைப் போல ஏழு சதகம் கொண்ட புஸ்தகம் எழுதியிருக்கிறான்.

கி.மு. எட்டாம் நூற்றுண்டிலிருந்து ஐநூறு வருஷம் ஆண்ட ஒரு வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதைவிடத் திட்டமாக நம்முடைய புராணாதிகளிலிருந்து இவனுடைய காலத்தைச் சொல்லமுடியுமா என்றால், முடியும். அப்படி யொரு ஆராய்ச்சி செய்து (கே. ஜீ.) நடேச சாஸ்த்ரி "ஜிஜ்ஞாஸா" ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறார். கலியுக ஆரம்பத்திலிருந்து மகதத்தை ஆண்டவர்களில் ஹாலன்

* ச்லோகம் 21.

Koviloor Digital Library

74-வது ராஜா என்று அவருடைய ஆராய்ச்சியிலிருந்து தெரிகிறது. ப்ருஹத்ரதனின் வழியாக ஏற்பட்ட பார்ஹத்ரத வம்சத்தில் ஆரம்பித்துக் கலியில் மகதத்தை ஆண்ட வம்சங்கள் ஒவ்வொன்றிலும் வந்த ராஜாக்கள், அவர்களுடைய ஆட்சிக் காலங்கள் ஆகியவற்றைப் புராணம் முதலியவற்றிலிருந்து நிர்ணயிக்கும்போது, 74-வது ராஜவாக ஆந்த்ர வம்சத்து ராஜா ஒருவன் இருந்தானென்பது ஸரியாகவே இருக்கிறது என்கிறார்கள். ஆசார்யாளின் காலமான கலி வருஷம் 2600 வாக்கில் இவன் இருந்திருப்பதாகச் சொல்வதும் பொருத்தமாக இருக்கிறது*. எப்படியென்றால், சராசரியில் ஒரு ராஜா 35 வருஷ அளவுக்குப் பட்டத்திலிருந்தால் 74×35 என்பது 2600-க்கு ஸரியாகத் தானிருக்கும். சராசரி 35 வருஷமென்பது யதார்த்தமானதே என்று சொல்கிறார்கள். அதனால் ஆசார்யாள் இவன் காலத்திலிருந்தாரென்பது நன்றாக ஒப்புக்கொள்ளும்படி இருக்கிறது.

இவ்வளவுக்கும் மேல், எதிர்பார்க்காததாக இன்னொரு 'டிஸ்கவரி'யும் செய்திருக்கிறார்கள். என்னவென்றால் 'வாயு புராண'த்தில் "தத: ஸம்வத்ஸரம் பூர்ணோ ஹாலோ ராஜா பவிஷ்யதி" என்று வருகிறதாம். "அப்புறம் பூர்ணன் என்கிற ஹாலன் ராஜா ஆவான்" என்று அர்த்தம். அதாவது ஹாலனுக்கே பூர்ணன் என்று ஒரு பேர் இருந்திருப்பதாகத் தெரிகிறது. ப்ராம்மணர்கள் 'சர்மன்' போட்டுக்கொள்வது போல, ஸகல க்ஷத்ரியர்களும் தங்கள் பேரோடு 'வர்மன்' என்று சேர்த்துக் கொள்வார்கள். தக்ஷிணத்திலேயே

* கலியுகத்தில் முதலில் பார்ஹத்ரத வம்சத்தில் 22 மன்னர்கள். 23-லிருந்து 27 அடங்க ஐவர் ப்ரத்யோத வம்சம். 28-லிருந்து 37 அடங்கப் பதின்மர் சிசுநாக வம்சம். 38-39 ஆகிய இருவர் நந்த வம்சம். 40-லிருந்து 51 அடங்கப் பன்னிருவர் மௌர்யர்கள். 52-லிருந்து 61 அடங்கப் பதின்மர் சுங்கர்கள். 62 லிருந்து 65 அடங்க நால்வர் காண்வ வம்சம். 66-லிருந்து 97 அடங்க முப்பத்திருவர் ஆந்திரர் எனப்படும் சாதவாஹனர். 74-வது மன்னன் ஆந்த்ர வம்சமென்றே ஆகிறது.

Koviloor Digital Library

பல்லவர்களில் மஹேந்த்ரவர்மன், பாண்டியர்களில் ஜடா வர்மன் என்றெல்லாம் பார்க்கிறேமல்லவா? அப்படி 'பூர்ணன்' என்ற பேருக்கு 'வர்மன்' சேர்த்தால்? பூர்ண வர்மன்.

'பூர்ணவர்மனுக்கு முன்னல் மலடிமகன் ஆண்டான்' என்று ஆசார்யாள் ஸூத்ர பாஷ்யத்தில் சொல்லியிருப்பதை வைத்து, "அவன் யார்? அவனு, இவனு?" என்று நவீனவழி ஆராய்ச்சிக்காரர்கள் தோண்டித் துருவியதாகப் பார்த்தோ மல்லவா? "அந்த எவனுமே இல்லே. நம்முடைய பழைய புஸ்தகங்களில் சொல்லியிருக்கும் ஆந்த்ர ராஜஞன ஹாலன் தான் அந்தப் பூர்ணவர்மன். எங்கள் கணக்குப்படி இவனும் கி.மு. 500; ஆசார்யாளும் அதே 'பீரியட்'. ஒன்றுகொன்று கச்சிதமாக ஒத்துப் போகிறது" என்று ஒரு 'டிஸ்கவரி' நம்முடைய வழி வழி வந்த அபிப்ராயங்களே அநுஸரிப்பவர் கள் செய்திருக்கிறுர்கள்.

பௌத்த—ஜைன நூல்களின் அத்தாட்சி : ஹிந்து மதப் புஸ்தகங்களில் சொல்லியிருப்பதை ஊர்ஜிதப்படுத்துவதாக பௌத்த - ஜைனர்களின் பழைய புஸ்தகங்களிலும் இருந்து விட்டால் அதற்கு 'வால்யூ' அதிகம்; நிச்சயமாக அந்த ஸமாசாரம் நிலே நாட்டப்பட்டுவிடுகிறது என்றே சொல்ல லாம்.

ஆசார்யாள் கி.மு 509-477 என்பதற்கு அந்த இரண்டு மதஸ்தர்களின் நூல்களிலும் ஆதாரமிருக்கிறதாகக் காட்டி யிருக்கிறுர்கள்.

'நேபாள ராஜவம்சாவளி' என்பது பௌத்தர்களிட மிருந்து கிடைத்திருப்பது. அதில் ஆசார்யாள் நேபாளத் துக்கு வந்ததாகவும் அப்போது வ்ருஷதேவ வர்மா என்பவன் ராஜாவாயிருந்ததாகவும் சொல்லியிருக்கிறது. இந்த வ்ருஷ தேவ வர்மாவின் காலத்தை ஸரியாகக் கலி 2600 (அதாவது கி.மு ஐந்தாம் நூற்றுண்டு) என்றே அதில் கொடுத்திருக் கிறது.

Koviloor Digital Library

ஜைனப் புஸ்தகத்துக்கு வருகிறேன். மஹாவீரரின் சரித்ரத்தைப் பற்றி "ஜின விஜயம்" என்று புஸ்தகம் இருக்கிறது. காளிதாஸன் கால விஷயத்தின்போது குறிப்பிட்ட கோலாப்பூர் சாஸ்த்ரி அந்தப் புஸ்தகத்தை ஆராய்ந்து பார்த்தே பல தேதிகளை நிர்ணயம் பண்ணியிருக்கிறார். அதில் குமாரில பட்டர், ஸுதன்வா, ஆசார்யாள் முதலியவர்களைச் சொல்லியிருக்கிறது. ஜைனப் புஸ்தகமானதால் திட்டியே சொல்லியிருக்கிறது! நிச்சயமாக அவர்களைப் புராதன கால புருஷர்களாகக் காட்ட வேண்டுமென்ற உத்தேசம் அந்தப் புஸ்தகக்காரருக்கு இருந்திருக்காது. ஆனாலும் அவர் காட்டுகிற தேதிகள் நாம் சொல்லும் கி. மு பீரியடாகவே இருக்கிறதென்றால் அது நிஜம்தான் என்று 'ப்ரூவ்' ஆவதாகக் கொள்ளலாமல்லவா?

குமாரில பட்டர் பிறந்த நாளை 'ஜின விஜய'த்தில் "ரிஷி-வாரஸ்-ததா-பூர்ணே மர்த்யாக்ஷெள வாம-மேளநாத்" என்று ஸங்கேத ஸங்கியையில் சொல்லியிருக்கிறது. 'ஸப்தரிஷி'கள் என்பதால் 'ரிஷி' என்பது 7. 'வார'மும் ஏழு நாட்களைக் குறிப்பதால் 7. 'பூர்ணம்' என்பது முழு வட்டமாக உள்ள 'ஸைபர்.' 'மர்த்யாக்ஷெள' என்றால் மநுஷர்களுக்கு உள்ள கண்களின் எண்ணிக்கையான 2. (தேவர்களுக்கு முக்கண், பன்னிரண்டு கண், ஆயிரம் கண் என்பது வரைகூடப் போவதால் 'மநுஷக்கண் : மர்த்ய-அக்ஷம்' என்று 2-ஐச் சொல்வது.) நான் சொன்ன நம்பர்களைச் சேர்த்துப் பார்த்தால் 7702. 'வாமமேளனம்' என்பது 'திருப்பிப் போடுவது'. அப்படிப் போட்டால் 2077. ஜைனர்கள் ஒரு யுதிஷ்டிர சகத்தைப் பின்பற்றுவதாகவும், அது கலி 468-ல் ஆரம்பிப்பதாகவும் சொன்னேனல்லவா? இது ஜைனப் புஸ்தகம்தானே? அதனால் அந்த சகாப்தத்தின் 2077-ம் வருஷம்தான் குமாரில பட்டர் ஜனனமாக இங்கே சொல்லியிருப்பது. அதாவது கலியின் 2545. இது கி. மு 557 ஆகிறது. ஆசார்யாள் கி. மு 509 என்கிறோம். அப்படியானால் குமாரில பட்டர் அவரைவிட 48 வயஸு பெரியவர்

Koviloor Digital Library

என்றுகிறது. ஆசார்யாள் யௌவனத்தில் குமாரிலரை ஸந்தித்தபோது அவர் வ்ருத்தராக இருந்தாரென்பதற்கு இது பொருத்தமாக இருக்கிறது. ஆசார்யாள் தம்முடைய பதினைந்தாம் வயஸில் அவரை ஸந்தித்தார் என்றுங்கூட அந்தப் புஸ்தகத்திலேயே இருக்கிறது! பதினாறு முடிந்தவுடன் ஸந்தித்ததை ஒரு வருஷம்தான் குறைத்துச் சொல்லியிருக்கிறது.

பச்சாத் பஞ்சதசே வர்ஷே சங்கரஸ்யாகதே ஸதி ।
பட்டாசார்ய-குமாரஸ்ய தர்சநம் க்ருதவான் சிவ : ॥

ஆசார்யாளைத் திட்டும் புஸ்தகத்திலும் "சிவ:" என்று அவருடைய அவதாரத்வத்தைச் சொல்லியிருப்பது விசேஷம்!

ஆசார்யாளின் ஸித்தி தினத்தையும் அதில் சொல்லியிருக்கிறது :

ரிஷிர்-பாணஸ்-ததா-பூமிர்-மர்த்யாக்ஷௌ வாம-மேளநாத் ।
ஏகத்வேந லபேதாங்கஸ்-தாம்ராக்ஷஸ்-தத்ர வத்ஸர : ॥

ரிஷி-7; பாணம்-(பஞ்சபாணம் என்பதால்) 5; பூமி-(ஒரு பூமி தானே உண்டு? அதனால்) 1; மர்த்யாக்ஷம் (மநுஷ்கண்) 2. அதாவது 7512. மாற்றிப் போட்டால் 2157. ஜைன யுதிஷ்டிர சகம் 2157. அதாவது கல்யப்தம் 2625. இதுதான் நாமும் சொல்லும் ஸித்தி காலம்! கி. மு கணக்கில் 477.

ப்ரபவாதி வருஷங்களில் அதைத் "தாம்ராக்ஷம்" என்று குறிப்பிட்டிருக்கிறது. தாமிரம் ரக்த வர்ணமானது. அதனால் இது "ரக்தாக்ஷி" வருஷமென்றுகிறது. நாமும் அப்படித்தான் சொல்கிறோம்! 'நந்தன'வில் பிறந்தவர் 32 வயஸில் விதேஹ முக்தி என்றால் அது 'ரக்தாக்ஷி'யாய்த்தான் இருக்க வேண்டும்.

இப்படி, எல்லாம் ஒன்றுக்கொன்று ஸரியாகப் பொருந்தியிருக்கிறது.

ஆக, ஆசார்யாள் கி. மு 509-ல் அவதரித்து 477-ல் ப்ரஹ்மீபாவம் அடைந்தாரென்று அவருடைய மடங்களில்

Koviloor Digital Library

சொல்வதற்கு ஹிந்து-ஜைன-பௌத்த புஸ்தகங்கள் பலவற்றின் ப்ரமாணம் இருக்கிறது. கர்ண பரம்பரையாகவும் தலைமுறை தலைமுறையாக இப்படி நம்பிக்கை தொடர்ந்து வந்திருக்கிறது. கி. பி 788-820 என்றோ, வேறே விதமாகவோ சொல்கிற எந்தக் காலக் கணக்குக்கும் இத்தனை ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை.*

அதிமேதைக் குழந்தை

ஆசார்யாள் குழந்தையாக வளர்ந்தார்.

குழந்தையாயிருந்தபோதே மஹாமேதையாக இருந்தார். மூன்றாவது வயஸு வரையில் அவர் தேச பாஷைகளைக் கற்றுக்கொண்டார், ஐந்தாவது வயஸு வரையில் ஸம்ஸ்க்ருத பாஷையை அப்யாஸம் செய்து தேர்ச்சி பெற்றாரென்று சொல்லியிருக்கிறது. மூன்றாவது வயஸு வரையில், ஐந்தாவது வயஸு வரையில் என்றால், அந்த வயஸுகள் முடிவதற்குள்ளேயே அந்த பாஷைகளை நன்றாகக் கற்றுக் கொண்டுவிட்டார். தேச பாஷைகள் என்பதில் முக்யமாகத் தமிழ்தான் இருந்திருக்கவேண்டும். மூன்று வயஸில்தான் ஞான ஸம்பந்தர் தமிழ் மறை என்கிற தேவாரம் பாட ஆரம்பித்தது.

இதெல்லாம் கட்டுக்கதை என்று சொல்லிவிடலாமா என்றால், கதையைவிட ஆச்சர்யமாக இப்போதும் அங்கங்கே கேள்விப் படுகிறோமே! சின்னக் குழந்தைகள் பத்து ஸ்தானம் பதினைந்து ஸ்தானம் இருக்கிற பெருக்கல் கணக்குகளை

---

* பம்பாயிலுள்ள வேதவ்யாஸ இதிஹாஸ ஸம்சோதன மந்திரத்தினர் ஓர் அறிஞர் குழுவினைக் கொண்டு "Study of Indian History and Culture" என்பதாக இந்திய சரித்திரத்தையும் கலாசாரத்தையும் ஆராய்ந்து பதினெட்டுப் பகுதிகள் கொண்ட நூல் வெளியிட்டு வருகின்றனர். அவர்களது கால நிர்ணயப்படி புத்தரின் காலம் கி. மு 1885-1805. சந்த்ரகுப்த மௌர்யனின் ஆட்சி தொடங்கியது கி. மு 1534. ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதரின் காலம் இங்கே கூறப்பட்டுள்ள கி மு 509-477 தான்.

Koviloor Digital Library

நிமிஷத்தில் போட்டுவிடுகிறதுகள்! ஸ்லேட்-கீட், பலப்பம், பென்ஸில் இல்லாமல் போட்டுவிடுகிறதுகள்! ஸ்கூல்களில் இந்தக் குழந்தைகளை வரவழைத்து டெமான்ஸ்ட்ரேஷன் காட்டுகிறார்கள். ஜன்மாந்தர வாஸனை என்று சொல்கிறோம். அதைத் தவிர என்ன காரணம் சொல்வது? ஜன்மாந்தரங்களையே வேறே சில குழந்தைகள் சொல்கிறதுகள்! முந்தின ஜன்மாவில் இன்ன ஊர், இன்னார் பந்துக்கள் என்று சொல்கிறதுகள். அழைத்துக் கொண்டு போய்க் காட்டினால் அப்படியே இருக்கிறது! Para-psychology என்று சொல்லி இதைப்பற்றி இப்போது ஸயன்ஸ் முறையிலேயே ஆராய்ச்சி பண்ணுகிறார்கள்.

அவைதிகமான ஜைன-பௌத்த மதங்களில்கூட ஜன்மாந்தர நம்பிக்கையுண்டு. புத்தரே 'ஜாதகக் கதை'கள் என்பதாக தம்முடைய அநேகப் பூர்வ ஜன்ம வரலாறுகளைச் சொல்லியிருக்கிறார்.

ஆசார்யாளுக்கும் ஸம்பந்தருக்கும் ஜன்மாந்தரம் சொல்வது அஸம்பாவிதம். ஆனால், மநுஷர்களாகப் பூர்வ ஜன்மத்தில் அடைந்த புத்தி வளர்ச்சியே அடுத்த ஜன்மத்தில் ஒரு குழந்தையை 'ப்ராடிஜி' என்று ப்ரமிக்கும்படியான மேதையாக்க முடிகிறதென்றால், ஸர்வஜ்ஞனான ஈச்வரனின் அநுக்ரஹத்திலிருந்தே தோன்றிய அவதாரக் குழந்தைகளுக்கு ஏன் அதிசயமான மேதாவிலாஸமிருக்கமுடியாது?

பால்ய உபநயனச் சிறப்பு

ஐந்து வயஸிலேயே ஆசார்யாளுக்கு உபநயனம் செய்துவிட்டார்கள்.

ஸம்பந்தர் கதையைப் பார்க்கும்போது அவருக்கும் மூன்று வயஸில் அவர் பதிகம் பாட ஆரம்பித்து, அப்புறம் சில க்ஷேத்ரங்களுக்கு யாத்ரை பண்ணிவிட்டு வந்தவுடனேயே உபநயனம் செய்துவிட்டதாகப் பெரிய புராணத்திலிருந்து தெரிகிறது. "உபநயனப் பருவம் எய்த" என்று

Koviloor Digital Library

சொல்லியிருப்பதால் 'மினிமம்' எந்த வயஸில் பூணூல் போடலாமோ அப்போதே போட்டுவிட்டார்கள் என்று த்வனிக்கிறது. 'நித்ய உபநயனம்' என்பதற்கு மினிமம் எட்டு வயஸு; 'காம்ய உபநயனம்' என்பதற்கு அஞ்சே வயஸு...

'நித்யம்,' 'காம்யம்' என்று இரண்டு. 'நித்ய கர்மா' என்பதற்கு உள்ளூர ஏற்படுகிற ஆத்ம சக்திதான் பலன். வேறு அதனால் எந்த இஷ்ட லாபமும் அடையமுடியாது... உண்மையே சொல்வதால் லாபம் உண்டா? பொய் சொன்னால்தான் கொழுத்த லாபம் ஸம்பாதிக்க முடியு மென்றுதான் பார்க்கிறோம்! ஆனபோதிலும் உண்மை தானே நாம் சொல்லவேண்டியது என்று விதி இருக்கிறது? ஏன் அப்படி இருக்கிறது? பொய் சொல்வதால் பாபம் உண்டாவதால்தான்; அதாவது ஆத்மா அசுத்தியடைவ தால்தான். நித்ய கர்மாவும் இப்படித்தான். செய்யா விட்டால் பாபம். செய்தால், நமக்குத் தெரியாமலே ஆத்மா சுத்தி ஆவது தவிர, தெரியும்படியாக தன லாபம், புத்ர லாபம் என்று எதுவும் காட்ட முடியாது. காம்ய கர்மா என்பது நம்முடைய ஏதோ ஒரு இஷ்ட லாபத்தை உத்தேசித்தே பண்ணுவது. பிள்ளை பிறப்பதற்காக தசரதர் புத்ர காமேஷ்டி பண்ணியது காம்ய கர்மா. ப்ரமோஷன் கிடைக்க வேண்டுமென்று நவக்ரஹத்தைச் சுற்றுவது காம்ய கர்மா. இவற்றைப் பண்ணித்தான் ஆகவேண்டுமென்றில்லை. நித்ய கர்மா பண்ணியே ஆகணும். பண்ணாவிட்டால் பாபம்.

'நித்ய உபநயனம்' எட்டு வயஸுக்குப் பண்ண வேண்டும். கர்ப்பத்தைக் கூட்டி எட்டு வயஸு. அதாவது, பிறந்து ஏழு வயஸும் இரண்டு மாஸமும் ஆனவுடன். இது 'மினிமம்'. 'மாக்ஸிம'மும் இதுவேதான் என்று சொல்லும் படியாகவே சாஸ்த்ராபிப்ராயம் இருக்கிறது. ஆனாலும், தவிர்க்க முடியாமல் ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் என்ன பண்ணுவது என்று நினைத்து, போனால் போகிற

Koviloor Digital Library

தென்று இன்னொரு எட்டு வருஷம் கொடுத்துப் பதினாறு வயசுவரை (பூணூல்) போடலாமென்று சொல்லியிருக்கிறது*. அதற்கு மேல் போகவே படாது. போகவிட்டால் பாபம். 'நித்யம்' என்பதைப் பண்ணாவிட்டால் பாபம் என்று பார்த்தோமல்லவா? அப்படி, பதினாறு வயஸுக்குக்கூட ஒரு தகப்பனார்க்காரன் பிள்ளைக்குப் பூணூல் போடாவிட்டால் பாபம். ஒரு காரணமும், நியாயமும் இல்லாமல் தற்போது பெரும்பாலான தகப்பனார்க்காரர்கள் இந்தப் பாபத்தைத்தான் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்!

'பாயின்ட்' என்னவென்றால் ஒரு ப்ராம்மணப் பையனுக்குள் காமம் ப்ரவேசிப்பதற்கு முந்தி காயத்ரி ப்ரவேசித்து அவன் தினமும் ஸஹஸ்ராவ்ருத்தி (ஆயிரம் ஆவிருத்தி) அளவுக்கு ஜபித்து மந்த்ர ஸித்தி அடைந்தால்தான் அவன் தனக்கும் சித்த பரிசுத்தி பெறமுடியும்; லோகத்துக்கும் க்ஷேமகரமான 'வைப்ரேஷன்'களை 'ரேடியேட்' செய்யமுடியும் (ஆன்மிய அதிர்வலைகளைப் பரப்பமுடியும்). இப்படித் தன் புத்ரனுக்கு ஏற்படக்கூடிய ஆத்மக்ஷேமம், அவனால் வெளியில் ஏற்படக்கூடிய லோக க்ஷேமம் இரண்டும் ஏற்படவொட்டாமல் ஒரு பிதா பண்ணுவது பாவமா, இல்லையா?

எட்டு வயஸுதான் 'முக்ய' காலம் என்பது. 'முக்யம்' என்றால் கரெக்டாக விதிப்படி இருப்பது. போனால் போகிறதென்று, ஸெகண்டரியாக விட்டுக்கொடுத்து சாஸ்த்ரங்களிலேயே சொல்லியிருப்பது 'கௌணம்'. எட்டுக்கு மேல் பதினாறு வரை உபநயனத்திற்கு கௌண காலமாகும். அதுவும் தாண்டிவிட்டால் ஒருவன் 'வ்ராத்ய'னாகிவிடுவான் என்று மநு ஸ்ம்ருதி முதலானவற்றிலிருக்கிறது. வ்ராத்யன் என்றால் ஜாதிப்ரஷ்டன்.

---

* இது பிராமணருக்கான விதி. க்ஷத்ரியருக்கான காலகட்டம் 11-22; வைசியருக்கு 12-24.

Koviloor Digital Library

கவர்மெண்ட் ஸர்வீஸுக்கு இருபத்தைந்து வயஸு ஏஜ் லிமிட் என்றால் பொய் ஸர்ட்டிஃபிகேட், அது, இது கொடுத்தாவது முயற்சி பண்ணத் தோன்றுகிறதோ இல்லையோ? சாஸ்த்ரத்தில் ஏஜ் லிமிட் சொல்லும்போது மட்டும் இஷ்டப்படிப் பண்ணலாம் என்றால் என்ன அர்த்தம்?

யாராவது ஒருத்தர் இரண்டு பேருக்காவது 'உறைக்காதா', சுரணை பிறக்காதா என்றுதான் ஓயாமல் சொல்லிப் பார்க்கிறேன்.

இக்காலத்தில் இப்படி இந்த விஷயத்தில் ஒரே அலக்ஷ்ய மாயிருக்கிறோமென்றால், பூர்வ காலத்திலோ ரொம்ப புத்தி தீக்ஷ்ண்யமுள்ள குழந்தைகளைப் பெற்றவர்கள் அது நாலு, அஞ்சு வயஸிலிருந்தே சொல்லிக்கொடுப்பதையெல்லாம் நன்றாகப் பிடித்துக்கொள்வதைப் பார்க்கிறபோது, "எட்ட்ட்டு வயஸு வரையிலா பூணூல் போடாமல் வைத்திருப்பது?" என்று நினைத்திருக்கிறார்கள்! இதை உத்தேசித்தே 'காம்ய' உபநயனம் என்றும் ஒன்றை சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறது. அதற்கு மினிமம் ஐந்து வயஸு என்று குறைத்துக் கொடுத்திருக்கிறது.

பொதுவாக, ஸ்வதர்மக் கடமையாக சாஸ்த்ரங்கள் விதித்துள்ள 'நித்ய' கர்மாவைவிட, நம்முடைய ஸொந்த இஷ்டத்திற்காகச் செய்யும் 'காம்ய' கர்மா மட்டந்தான் என்பார்கள். ஆனாலும் உபநயன விஷயத்தில் மட்டும் 'காம்யம்' என்னும்போது அந்தக் காமனை எதை உத்தேசித்து? "ப்ரஹ்ம வர்சஸகாமஸ்ய பஞ்சமே" என்று ஸ்ம்ருதிகளில் சொல்லியிருக்கும்படி, குமாரன் ப்ரஹ்ம தேஜஸை ஸம்பாதித்துக்கொண்டு தன்னையும் சுத்தி செய்து கொண்டு, ஊருக்கும் சுத்தி ஏற்படும்படிச் செய்யவேண்டு மென்பதுதானே உத்தேசம்? இதை எப்படி மற்ற லௌகிக மான ஸொந்த ஆசைகளோடு சேர்க்கமுடியும்?

Koviloor Digital Library

இயற்கையாக புத்தி தீக்ஷ்ண்யம் உள்ள குழந்தையா யிருந்தால் காயத்ரீ தேவதை உள்ளே போய் அது மழுங்காதபடி வ்ருத்தி பண்ணிக்கொடுப்பாள். அதோடு, புத்தி சக்தி அதர்மமாகப் போகாமல் தார்மிகமாகவும், ஆத்ம ச்ரேயஸ்கரமாகவுமே போகும்படியும் செய்வாள். மந்தமான, average-ஆன (நடுத்தரமான) குழந்தைகளா ஞலும் காயத்ரி மந்த்ர ஆவ்ருத்தியே அநுகளின் புத்தியை யும் கூர் பண்ணி, ப்ரகாசமுடையதாக்கி, நல்ல வழிகளி லேயே போகும்படிப் பண்ணும். இப்படி எந்த லெவலில் இருப்பவருக்கும் உபகாரம் பண்ணுவதாக அந்த மந்த்ரம் இருக்கிறது.

ஆசார்யாள், ஸம்பந்தர் ஆகியவர்கள் தெய்வ சக்தி வாய்ந்த அவதாரங்கள். ஆனாலும் அப்படி வெளியில் காட்டிக்கொண்டிருக்கவில்லை—ஸதா காலமும் காட்டிக் கொண்டிருக்கவில்லை. அவச்யங்களில் மட்டும் கொஞ்சம் காட்டினார்கள். 'லீலா மாநுஷ வேஷம்' என்று லோகத்தில் நாடகம் நடிக்கும்போது அப்படித்தான் ஒளித்து ஒளித்துக் காட்டுவது! அவர்கள் வழிகாட்ட வந்தது ஸாமான்ய மநுஷ்ய ஜீவர்களுக்கு. அதனால் மநுஷ்ய சக்தியையே ஸரி யாக, முறையாக ப்ரயோஜனம் செய்துகொண்டால் என்ன வெல்லாம் ஸாதிக்க முடியும் என்று ஜனங்களுக்குக் காட்டி அவர்களுக்கும் அப்படிச் செய்ய உத்ஸாஹம் தரும் வகையி லேயே தங்களுடைய வாழ்க்கையை மாநுஷமாக அமைத் துக்கொண்டார்கள்.

அதோடுகூட ஸ்வாமி ஜனங்கள் தன்னோடு கலந்து பழக வேண்டுமென்றும் ஆசைப்பட்டே அவதாரம் பண்ணுவது. ஒரே தெய்வ சக்தி மயமாயிருந்தால் மற்றவர்கள் கலந்து பழக வருவார்களா? தூரத்தில் நின்று கொண்டுதான் கன்னத்தில் போட்டுக்கொள்வார்கள். ஆசார்யாள் பரம சிவனாகவே தெரிந்துகொண்டிருந்தால் அப்பா அம்மா எப்படி அவரை வாத்ஸல்யம் காட்டி வளர்த்திருக்க முடியும்?

Koviloor Digital Library

எல்லா அவதாரங்களிலும் இப்படித்தான் நிறைய மநுஷ்ய ரீதி போலவே பண்ணுவது, அத்யாவச்யத்திற்கு மட்டும் தெய்வ சக்தியைக் காட்டுவது, அதையும் தங்களுடன் வாழ்கிறவர்களின் நினைவிலிருந்து மறைந்து போகும்படிப் பண்ணுவது, என்று.

ஆனாலும் லோகம் பாழாய்ப் போய்க் கொண்டிருந்த போது மநுஷ ரீதியில் நிதானமாக அதை ஸரிப் பண்ண ஆசார்யாள், ஸம்பந்தர் ஆகியவர்களுடைய அருள் மனஸு அவர்களை விடவில்லை. தேசம் பூராவையும் முப்பத்திரண்டே வருஷத்தில் புனருத்தாரணம் பண்ணிவிட வேண்டுமென்று ஆசார்யாள் பறந்தார்; தமிழ்நாட்டை மட்டும் உத்தரிக்கப் பதினாறு வருஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று ஸம்பந்தர் பறந்தார். அதனால்தான் மநுஷ்யக் குழந்தைகளுக்கு ஸாதாரணமாக இல்லாத மேதையைக் காட்டிக் குழந்தைப் பிராயத்திலேயே அவர்கள் ஸம்பூர்த்தியாக வித்யாப்யாஸம் செய்தது.

ஸொந்த சக்தியால் செய்ததாக இல்லாமல் அருள் சக்தியால் செய்ததாக இருக்கட்டும் என்று ஸம்பந்தர் அம்பாளின் க்ஷீரத்தைப் பானம் பண்ணிய மஹிமையாலேயே ஞானியாக, பாண்டித்யமுள்ளவராக ஆனார். ஆசார்யாளைப் பற்றியும் இப்படிக் கதை இருப்பதாக முன்னேயே சொன்னேன். அல்லது, 'ப்ராடிஜி' என்று மநுஷக் குழந்தைகளிலேயே எங்கேயாவது அபூர்வமாக இருக்கிறது போலத்தான் அவரும் தெரிந்தார்; அதாவது தெய்வாவதாரந்தான் என்று பெற்றவர்களும் மற்றவர்களும் தெரிந்துகொண்டு தூர நின்று பக்தி பண்ணாமல், அதி புத்திசாலியான மநுஷக் குழந்தை என்றே சீராட்டி ப்ரியம் காட்டும்படியாக இருந்தார்.

தேச பாஷை, ஸம்ஸ்க்ருதம் ஆகியவற்றின் மொழி இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றை அஞ்சு வயஸுக்குள் கரைத்துக் குடித்துவிட்ட ஆசார்யாள் அந்த வயஸில் உபநயனமானவுடன் குருகுலத்துக்குப் போய் வாஸம்

Koviloor Digital Library

பண்ணி எட்டு வயஸுக்குள் அத்யயனம் முடித்து மற்ற எல்லா சாஸ்த்ரங்களையும் படித்துக் கரை கண்டுவிட்டார்.

ஐந்து வயதில் உபநயனம், எட்டு வயஸுக்குள் சாஸ்த்ரங்கள் எல்லாம் 'மாஸ்டர்' பண்ணியாயிற்று, அந்த வயஸிலேயே ஸந்நியாஸமும் வாங்கிக்கொண்டாயிற்று, பன்னிரண்டு வயஸில் அத்தனை பாஷ்யமும் எழுதியாச்சு— என்றிப்படி ஆச்சர்யமாக ஆசார்யாள் செய்திருக்கிறார்.

இன்னும் முந்திக்கூட வித்யாப்யாஸம் முடித்திருப்பார்! ஆனால் பூணூல் போடாமல் வேதாத்யயனம் பண்ண முடியாது; வேதத்தின் ஸாங்க - உபாங்கங்கள் என்னும் சாஸ்த்ரங்களையும் படிக்க முடியாது; காம்யோபநயனம் என்றால்கூட ஐந்து வயஸுக்கு முன்னால் போட முடியாது— என்பதால்தான் சாஸ்த்ரோக்தமாகவே எல்லாம் நடத்திக் காட்ட நினைத்த ஆசார்யாள் ஐந்துக்குள் தேச பாஷை, தேவ பாஷை ஆகியவற்றின் 'க்ராமர்', காவ்யம் ஆகிய வற்றை மட்டும் படித்து, சாஸ்த்ரங்களை ஐந்துக்கப்புறம் என்று 'போஸ்ட் போன்' பண்ணினார்.

'பூணூல் போடுவதற்கு முந்தியே காவ்ய-நாடகாதிகள் ஸகலமும் படித்து க்ரஹித்துக் கொண்ட பெருமை ஆசார்யாள் ஒருத்தருக்குத்தான் உண்டு' என்று சொன்னால் தேவலை போல் இருந்தாலும், உள்ளே இன்னொருத்தர் நினைவு நிமிண்டிக்கொண்டே இருக்கிறது! அதனால் அவர் யாரென்று சொல்கிறேன். வேறே யாரோ சொல்லாமல் அந்த ஒருவரே தமக்குப் பூணூல் போடுவதற்கு முன்பே இருந்த புலமையைக் குறிப்பிட்டு எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிறார்.

அவர் பேர் ராஜசூடாமணி தீக்ஷிதர். முந்நூற்றைம்பது, நானூறு வருஷம் முன்னால் இருந்தவர். அப்பைய தீக்ஷிதரின் மைத்துனர் (மனைவியின் உடன்பிறந்தவர்). இவர் உபநயனத்திற்கு முந்தியே காவ்யங்கள் படித்தது மட்டுமில்லாமல் படைத்தும் விட்டாரென்று தெரிகிறது! "கமலிநீ கலஹம்ஸம்" என்று அவர் எழுதியுள்ள நாடகத்தில் "ப்ரஹ்மாவின் ஒரு

Koviloor Digital Library

பத்னியான காயத்ரி என்னை வந்தடைவதற்கு முன்னேயே—அதாவது, உபநயனம் ஆவதற்கு முற்பட்டே—அவருடைய இன்னொரு பத்னியான ஸரஸ்வதி என்னிடம் வந்து சேர்ந்து விட்டாள் (காவியப் புலமை ஏற்பட்டுவிட்டது)" என்று சொல்லியிருக்கிறார்!

அதற்குரிய பாலப்பருவத்திலேயே பூணூல் போட்டுக் கொண்டு காயத்ரி மஹிமையாலேயே கார்யமெல்லாம் செய்ததாகக் காட்டவேண்டுமென்றே ஆசார்யாளும் ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளும், உபநயன ஸம்ஸ்காரமான பிறகுதான் அவதார கார்யங்களை விசேஷமாகப் பண்ணினார்கள். நமக்குப் பாடமாகவே அப்படிப் பண்ணியது. பர மதங்களை நிராகரணம் பண்ணி ஸநாதன தர்மத்தை நிலை நாட்டியதே இருவரும் செய்த அவதாரப்பணி. அதனால் இப்போதும் நாம் 'கன்வர்ஷன்' நடக்கிறதே என்று கண்டனக் கூட்டம் போடுவது, கான்ஃபரன்ஸ் நடத்துவது, முற்றினால் பதிலுக்கு அடி—உதை என்று கிளம்புவது எல்லாவற்றையும்விட முக்யமாக, முதலாவதாக, நம் பசங்களுக்கெல்லாம் எட்டு வயஸில் தப்பாமல் பூணூலை மாட்டி, தாஜா கீஜா பண்ணியாவது தினம் ஸஹஸ்ராவ்ருத்தி ஜபம் பண்ணவைத்து விட்டால் போதும்—மந்த்ர சக்தியில் மதாந்தரங்கள் எல்லாம் ஓடிப்போய்விடும்! குழந்தைகள் கொஞ்ச நாள் பண்ண ஆரம்பித்துவிட்டால் போதும், காயத்ரி, அவளே, அதுகளைப் பிடித்துக் கொண்டுவிடுவாள். நாம் தாஜா பண்ணாமலும், அல்லது மிரட்டி உருட்டிக் கம்பெல் பண்ணாமலும் அதுகளாகவே ப்ரியமாகப் பண்ண ஆரம்பித்துவிடும்.

நம்மிடமுள்ள ஒரு பெரிய நிதியை ப்ரயோஜனம் பண்ணிக்கொள்ளாமல் வீணாகப் போகிறோமே ['வீணா ஆஆப் போறோமே!' என்று எல்லையில்லாத அங்கலாய்ப்புடன் கூறுகிறார்கள்] என்பதால்தான் முட்டிக் கொள்வது. ஆசார்யாள் சரித்ரம் கேட்பதற்கு இதைவிட நாம் செய்யக் கூடியது இல்லை.

Koviloor Digital Library

அனைத்து சாஸ்திர அறிவும், அனைத்தும் அடங்கும் அத்வைதமும்

மூன்று வருஷத்துக்குள் ஸாங்கோபாங்கம் வித்யாப்யாஸம் பூர்த்தி பண்ணிவிட்டார். உபவேதங்கள், இன்னும் பாக்கியுள்ள எல்லா சாஸ்த்ரங்களும் படித்துவிட்டார்![1] ஆசார்யாள் அதி விரைவில் ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுத் தேர்ந்ததைப் பற்றி ஒரு ச்லோகம் இருக்கிறது:

ஆந்வீக்ஷிக்யைக்ஷி தந்த்ரே பரிசிதிரதுலா காபிலே
காஃ(அ)பி லேபே
பீதம் பாதாஞ்ஜலாம்ப: பரமபி விதிதம் பாட்ட
கட்டார்த்த-தத்த்வம் |
யத்-தை: ஸௌக்யம் ததஸ்யாந்தரபவத்-அமலாத்வைத-
வித்யா ஸுகே(அ)ஸ்மிந்
கூபே யோ(அ)ர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸி விததே
ஹந்த நாந்தர்-பவேத்-கிம்[2] ||

ஆன்வீக்ஷிகி என்பது ராஜ்ய நிர்வாஹத்தைச் சொல்லும் சாஸ்த்ரம்[3]. 'ஆன்வீக்ஷிகி-ஐக்ஷி' என்பதற்கு அந்த சாஸ்த்ரத்தைக் கண்ணால் பார்த்த மாத்ரத்தில் தமதாக்கிக் கொண்டுவிட்டாரென்று அர்த்தம். 'ஈக்ஷ்' என்றால் பார்ப்பது. 'ஐக்ஷி': பார்ப்பதினால், பார்த்த மாத்ரத்தில்.

---

1. வேதங்கள் நான்கு. அவற்றின் அங்கங்கள் சிக்ஷை (உச்சரிப்பு சாஸ்திரம்), சந்தஸ் (சந்த முறைமைகள்), வியாகரணம், நிருக்தம் (பதங்களின் அர்த்த நிர்ணயம்), ஜ்யோதிஷம், கல்பம் (சடங்குகளின் விவரணம்) எனும் ஆறு. உபாங்கங்கள் மீமாம்ஸை, ந்யாய சாஸ்திரம், தர்ம சாஸ்திரம், புராணம் எனும் நான்கு. இப்பதிநான்கும் ''ஸாங்கோபாங்க வித்யை'' என்பதில் அடங்கும். உபவேதங்கள் என்பன ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் (இசை-நடன-நாடகம் முதலியன), அர்த்த சாஸ்திரம் (அரசியல்) என்னும் நான்கு. முன்கூறிய பதிநான்கோடு இவற்றைச் சேர்த்து இப் பதினெட்டையும் வித்யா ஸ்தானங்கள் என்பர்.

2 மாதவீய சங்கர விஜயம் IV. 20

3 'ஆன்வீக்ஷிகி' என்பது தர்க்கம் அல்லது ஆத்மவித்யை என்று ஆப்தேயின் அகராதி கூறுகிறது.

Koviloor Digital Library

அப்புறம், கபிலர் செய்த சாஸ்த்ரம். 'காபிலே தந்த்ரே' என்று வருவது. அதுதான் ஸாங்க்ய சாஸ்த்ரம். அதிலும் ஈடிணையில்லாத பரி(ச்)சயம் பெற்ருர்: 'பரிசிதி: அதுலா லேபே'. பாஷ்யத்தில் மீமாம்ஸைக்கு அடுத்தபடியாக ஆசார்யாள் திட்டியது அதைத்தான்! மாற்று ஸித்தாந்தங்களையும் கசடறக் கற்றே கண்டனம் பண்ண வேண்டுமாதலால் அப்படிப்பட்டவற்றையும் ஆசார்யாள் போன்றவர்கள் deep-ஆகப் படித்திருக்கிருர்கள். அதுவுமன்னியில் மாற்று ஸித்தாந்தம் என்பவற்றிலும்கூட எல்லாமே கண்டனத்துக்குரியது என்று வைத்துவிடாமல், நல்லதை நல்லதென்று ஒப்புக்கொண்டு பெரியவர்கள் எடுத்துக்கொள்வார்கள். இப்படி ஸாங்க்யம், மீமாம்ஸை எல்லாவற்றிலும் உண்டு. அதற்காகவும் ஆழப் படிப்பது. வித்யா ஸம்பாதனம் என்று வரும்போது bias (பக்ஷபாதம்) இல்லாமல், "களவும் கற்று மற" என்றபடி எல்லாம் தெரிந்து கொள்வதே நம் பூர்விகர் வழி.

இதனுல்தான் அத்தனை ஒதுக்குப்புறத்தில் வைதிக ஸம்ப்ரதாயத்தையே அநுஸரித்துவந்த மலையாளத்திலும் இந்த சாஸ்த்ரங்கள் தெரிய வந்து குருகுலத்தில் சொல்லிக் கொடுத்திருக்கிருர்கள்! அடியோடு தெரிய வேண்டாத எதிர்க்கட்சி என்று எதையும் வைத்துவிடாமல் திறந்த மனப்பான்மையோடு வித்யையை அணுகியது நம் புராதனப் பண்பாட்டில் மிகவும் பெருமைக்குரிய ஒரு அம்சம்...... ஆசார்யாள் ஸகல சாஸ்த்ரங்களையும் கற்றுக்கொண்டதில் பாக்கி பார்க்கலாம்.

"பீதம் பாதஞ்ஜலாம்ப:" என்ருல் பதஞ்ஜலியின் யோக சாஸ்த்ரத்தை தீர்த்தம் குடிக்கிறதுபோல அத்தனை 'ஈஸி' யாக தமக்குள்ளே அனுப்பிவிட்டார் என்று அர்த்தம்.

"பாட்ட கட்டார்த்த-தத்த்வம்": குமாரில பட்டர் செய்ததான "பாட்ட சாஸ்த்ரம்" என்னும் பூர்வ மீமாம்ஸை. அதையும் ஒரு தீர்த்த கட்டத்தை லேசாகத் தாண்டிப்

Koviloor Digital Library

போகிற மாதிரி—ஆஞ்ஜநேயர் ஸமுத்ரம் தாண்டின மாதிரி —தாண்டிவிட்டார். 'தரோ'வாகத் தெரிந்துகொண்டு விட்டார்: "பரமபி விதிதம்".

ஆசார்ய பாஷ்யங்களைப் பார்த்து அறிஞருலகமெல்லாம், "அதெப்படி இத்தனை சாஸ்த்ரங்களில் பாரங்கதராக இருந்திருக்கிறார்! இத்தனை 'கொடேஷன்' எந்தெந்தப் புஸ்தங்களிலிருந்தோ கொடுத்திருக்கிறாரே!" என்று ஆச்சர்யப்படுகிறது. இங்கே சொல்லியிருப்பது அதிசயோக்தியே இல்லை. எந்த மதஸ்தரானாலும் தத்வத்தை ஆராய்கிறவர்கள், பின்னாலே ஒத்துக்கொள்கிறார்களோ இல்லையோ, ஆசார்யாளின் புஸ்தகங்களைத்தான் எடுத்துப் போட்டுக் கொண்டு பார்க்கிறார்கள். இன்றைக்கும் லோகம் முழுவதும் ஃபிலாஃஸபர்கள் நம்முடைய ஆத்ம சாஸ்த்ரமென்றால் ஆசார்யாளைத்தான் முதலில் பார்ப்பது, ஆழ்ந்து பார்ப்பது என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அஹிம்ஸை, கருணை, ஸமத்வம் எல்லாம் பௌத்தம் முதலிய மதங்களில்தான் இருப்பதாக நினைத்துக்கொண்டு அவற்றைத் தழுவியவர்களில்கூட மஹா மேதாவிகளாக இருப்பவர்கள் தத்வம் என்று வந்தால் ஆசார்யாளின் க்ரந்தங்களைப் பார்த்தே தலைமேல் வைத்துக்கொண்டு ஸந்தோஷப்படுகிறார்கள். ஆகையினால் அவருடைய கூர்ந்த அறிவை, பரந்த அறிவைப் பற்றி எத்தனை சொன்னாலும் யதார்த்தமன்றி வேறில்லை.

இப்படி ஆசார்யாள் ஆன்வீக்ஷிகீ, ஸாங்க்யம், யோகம், மீமாம்ஸை—இந்த நாலு மட்டுமில்லை, 'இவை முதலான ஸகல சாஸ்த்ரங்களையும்' என்று அர்த்தம்—இப்படி எல்லா ஸித்தாந்தங்களையும் கற்றுக்கொண்டு விட்டாரானாலும், இவை அவருடைய ஆத்மார்த்தமான இஷ்ட சாஸ்த்ரங்களாக இல்லை. இவற்றின் கொள்கைகளை அந்தரங்க பூர்வமாக அவர் அங்கீகரித்துவிடவில்லை. 'எல்லாம் தெரிந்த ஸர்வஜ்ஞனாக இருந்து கொண்டு, அத்வைதத்தைச் சொன்னாலே அதை லோகம் ஏற்றுக்கொள்ளும். இல்லா

Koviloor Digital Library

விட்டால் தனக்குத் தெரிந்த ஒரு ஸித்தாந்தத்தை மட்டும் அதுவே ஸத்யம் என்று வீம்பாக ஸ்தாபிக்கப் பார்ப்பதாகத் தோன்றும். அதற்காகவே மற்ற சாஸ்த்ரங்களையும் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும்' என்பதற்காகத்தான் அவர் இதர ஸித்தாந்தங்களையும் படித்தது. அவச்யம் நேர்ந்ததாலேயே படித்தாரேயன்றி, அவற்றில் பற்று வைத்து இல்லை. பின் அவருக்கு எதில் ஆத்மார்த்தமான பற்றுதல் இருந்தது?

யத்தை: ஸௌக்யம் ததஸ்யாந்தர பவதமலாத்வைத
வித்யாஸுகே (அ)ஸ்மின்

"அமல அத்வைத ஸுகே" : கொஞ்சங்கூட மலம்— அழுக்கு, தோஷம், குற்றம் குறை—இல்லாமல் பரம ஸுகமாக, நித்யஸுகமாக இருப்பது எது என்றால் அது அத்வைதம்தான். ஆசைதான் அழுக்கு. மனஸ் உள்ள மட்டும் ஆசை இருக்கத்தான் இருக்கும். உசந்த பக்தியிலுங்கூட, 'ஸ்வாமியோடு சேரணும், கொஞ்சணும்' என்று ஆசை இருக்கத்தான் செய்யும். எத்தனை உசந்த பக்தியானாலும் அதைப் பண்ண மனஸ் இருந்துதான் ஆகணும்; ஆனபடியால் ஆசை இருந்துதான் தீரும். ஸத்ய ஸத்யமாக, 'ஈச்வரன் வேறில்லை, நாம் வேறில்லை' என்று அத்வைதமாக ஆகிறபோதுதான் மனஸ் இல்லை; ஆசை இல்லை வேறாக எதுவுமில்லாதபோது எதனிடம் ஆசை வைப்பது? அதனால் ஆசை என்ற அழுக்கு, அரிப்பு இல்லாமல், ஸுகம் என்றால் அதுதான் ஸுகம் என்னும்படியாக இருப்பது அத்வைதம் ஒன்றில்தான்—"அமல அத்வைத வித்யா ஸுகே." "ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்" என்று அதனால்தான் திருமூலர் பாடினார்.

மீமாம்ஸையில் கர்மாநுஷ்டானம் செய்யவேண்டுமென்ற ஆசை, ஸ்வர்க்கம் போகணும் என்று ஆசை. இப்படி ஒவ்வொரு தத்வத்திலும் ஏதாவது ஆசை அழுக்கு ஈஷிக் கொள்ளத்தான் செய்யும்.

Koviloor Digital Library

அந்தத் தத்வங்களை அநுஸந்தானம் பண்ணி அநுபவிப்பதிலும் ஒவ்வொருவிதமான ஸந்தோஷம் இருக்கவே இருக்கும். அப்படி இல்லாமலா ஒவ்வொரு ஸித்தாந்தத்தையும் பல பேர் ஏற்றுக்கொண்டு பின்பற்றியிருப்பது?

விசேஷமென்னவென்றால் அப்படி மற்ற ஸித்தாந்தங்களால் பெறக்கூடிய ஆனந்தங்களெல்லாமும் அத்வைதானந்தத்திற்குள்ளேயே அடக்கம்தான்! அத்தனையுமாகத் தோன்றுவது ஒரே ப்ரஹ்மம். அதைத் தவிர வேறில்லை. அப்படியானால் அத்வைதமாக ஒருவன் ப்ரஹ்மானந்தம் பெறுகிறானென்றால் அத்தனை வித ஆனந்தங்களும் அவனுக்குள் அடங்கிவிடும்தானே?

மற்ற சாஸ்த்ரங்களினால் கிடைக்கக்கூடிய ஸௌக்யங்களையெல்லாம் உள்ளடக்கியதான அமலமான அத்வைத சாஸ்த்ரத்தின் பரம ஸௌக்யத்தையே ஆசார்யாள் தமக்குள்ளே அடக்கிக் கொண்டிருந்தார். தேவையை முன்னிட்டுப் வேறே எத்தனை பாடம் அவர் படித்தாலும் அவருக்கு ஆத்மார்த்தமான இஷ்ட பாடமாயிருந்தது, மற்ற பாடங்களின் லக்ஷ்யங்களையெல்லாமும் தனக்குள் கொண்டதான அத்வைத வித்யைதான்! "யத்-தை: ஸௌக்யம் தத் அஸ்ய அந்தர் அபவத் அமல அத்வைத வித்யா ஸுகே அஸ்மின்." குருகுலவாஸம் பண்ணி வித்யாப்யாஸம் செய்துகொண்டிருக்கும் குழந்தையாசார்யாளின் ஹ்ருதயத்துக்குள்ளே அந்த அத்வைத ஸுகமே நிறைந்திருந்தது.

இதர வித்யைகளின் ஸுகங்களெல்லாம் அத்வைத ஸுகத்திலேயே கிடைத்துவிடுகிறது என்பதற்கு (ச்லோகத்தின் கடைசி வரியில்) உதாஹரணம் கொடுத்திருக்கிறது:
கூபே யோ (அ)ர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸி விததே ஹந்த ந (அ)ந்தர்-பவேத் கிம்?

Koviloor Digital Library

புரியாத ச்லோகம் புரிந்தது!

கீதையில் ஒரு ச்லோகம் அர்த்தம் புரியாமலிருந்து வந்தது. அர்ஜுனனுக்கு ஸ்வாமி ஞான யோகத்தை உபதேசம் பண்ணிக்கொண்டு போகிறபோது, இருக்கிற ஒரே ஸத்வஸ்து அழிவில்லாத ஒரே ஆத்மாதான் என்று சொல்லி, "இதொன்றிலேயே நிச்சய புத்தியுடன் பிடிப்பு வேண்டும்; இல்லாவிட்டால் மீமாம்ஸகர்கள் சொல்கிற மாதிரி வேதத்தின் கர்மகாண்டத்தில் உள்ள பலவிதமான பலன்களைத் தரும் பலவிதமான க்ரியா விசேஷங்களில் ஒன்று மாற்றி ஒன்றாக ஈடுபட்டு நிச்சய புத்தி ஏற்படாமலே வீணாய்ப் போவதாகத்தானாகும்' என்கிறார். "வேதம் ('வேதம்' என்பதை இங்கே வேதத்தின் ஞான காண்ட மான வேதாந்தத்திலிருந்து பிரித்துக் கர்மகாண்டம் என்ற அர்த்தத்திலேயே சொல்கிறார். கர்ம காண்டமாகிய வேதம்) ஸத்வ-ரஜோ-தமோ குணங்களில் பலவிதமாகக் கிளைவிட்டுச் செல்லும் கார்யங்களையே விஷயமாகக் கொண்டது. நீ இந்த முக்குணங்களும் தொடாத ஆத்மா வில் ஆடாமல் அசையாமல் இருந்துவிடு" என்று சொல்லி ஒரு ச்லோகத்தைச் சொல்கிறார். புரியாத புதிராக இருந்த ச்லோகம் :

> யாவாந் அர்த்த உதபாநே ஸர்வத: ஸம்ப்லுதோதகே |
> தாவாந் ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய
> விஜாநத: ||*

அர்த்தம் இன்னவென்று தாத்பர்யமாகப் புரியா விட்டாலும், வார்த்தைகளைச் சேர்த்துப் பார்க்கும்போது என்னவாகுமென்றால், "எவ்வாறு பரந்து விரிந்து கிடக்கிற தண்ணீர்க் காட்டில் ஒரு சின்ன ஊற்றின் ப்ரயோஜனம் கிடைக்குமோ அவ்வாறே ஞானவானான ப்ராஹ்மணனுக்கு என்ன வேதத்திலேயுமாம்."

'எவ்வாறு'- 'அவ்வாறு' (யாவான்-தாவான்) என்று என்னமோ நமக்கு நன்றாக த்ருஷ்டாந்தம் கொடுத்துப்

* கீதை II. 46

Koviloor Digital Library

புரிய வைக்கிறமாதிரி பகவான் சிரமப்பட்டிருந்தாலும், நாமும் அர்த்தம் புரியாமல்தான் ச்ரமப்படுகிறோம்! 'சின்ன ஊற்றினால் பெறக்கூடிய பயனைப் பெரிய ஜல ப்ரவாஹத்திலிருந்து பெறலாம்' என்பது ச்ரமமில்லாமல் புரிகிறது. ஆனால் "எவ்வாறு இதுவோ அவ்வாறே நல்ல ஞானமுடைய ப்ராஹ்மணனுக்கு எல்லா வேதமும்" என்றால், [சிரித்து] எவ்வாறு இவ்வாறு சொல்கிறார் என்று புரியாமல் இருந்தது. அப்புறம் இந்த சங்கர விஜய ச்லோகத்தைப் பார்த்த பின்தான் அந்த உபமானம் இங்கே சிக்கலில்லாமல் வருவதால் இதைக் கொண்டு அதுவும் தெளிவாயிற்று.

இங்கே ஆசார்யாள் அநேக சாஸ்த்ரங்கள் படித்தாலும் அவற்றின் சின்னச் சின்ன ஆனந்தங்களெல்லாம் அத்வைதப் பேரானந்தத்தில் அமிழ்ந்து கிடப்பவைதான் என்று கண்டுகொண்டு உள்ளூர அதிலேயே அமிழ்ந்திருந்தார் என்று சொல்லிவிட்டு, "கூபே யோ அர்த்த: ஸ தீர்த்தே ஸ்வபயஸி விததே ஹந்த ந அந்தர்-பவேத் கிம்?" என்று அதே உவமையைக் கேள்வி ரூபத்தில் போட்டு முடித்திருக்கிறது.

'கூபம்' என்றால் கிணறு. 'அதிலே என்ன ப்ரயோஜனமுண்டோ அது' என்பதை 'கூபே யோ அர்த்த: ஸ' என்று சொல்லியிருக்கிறது. 'ஒரு கிணற்றைக் கொண்டு என்ன ப்ரயோஜனம் பெறலாமோ அது பரந்து விரிந்து கிடக்கும் ஒரு சுத்தமான தீர்த்த ப்ரவாஹத்துக்குள்ளிருந்து கிடைக்காதா என்ன?' என்று கேட்டு முடித்திருக்கிறது. 'விதத' என்றால் 'பரந்து விரிந்த'. 'ஸ்வ பயஸ்'—நல்ல ஜலம். "கிணற்றினால் கிடைக்கும் பயன் பெரிய நதி ப்ரவாஹத்தில் கிடைக்காதா என்ன?"

"ஹந்த" என்றால், ஸர்வ ஸாமான்யமான ஒரு விஷயம் தெரியாவிட்டால், 'அடக் கஷ்டமே! இதுகூடவா தெரியலை?' என்று கொஞ்சம் குத்தலாகவும், கொஞ்சம் பரிதாபமாகவும் கேட்பதாக ஆகும். "மாதோ!" என்று தமிழ்ச் செய்யுளில் வரும்.

Koviloor Digital Library

கிணற்றிலிருந்து கிடைக்கும் பயன் மஹாநதியிலிருந்து கிடைக்குமென்று சொல்லியா தெரியணும்? 'அடக் கஷ்டமே, இதுகூடவா தெரியாது?' என்று ஆச்சர்யம்—வருத்தம், கேலி எல்லாமுந்தான்—உண்டாகிறாற்போலவே, ச்லோகத்தில் முதல் பாதியில் சொன்ன விஷயம். அத்வைதாநுபவத்தின் மூர்த்தியான ஆசார்யாள் வேறே என்னென்னவோ சாஸ்த்ரங்களெல்லாம் கரைத்துக் குடித்திருந்தாலும் அவருக்கு அவற்றிலிருந்தே ஆத்ம லாபமாக எந்த ஆனந்த நிறைவும் கிடைத்திருக்காது. அவற்றின் ஆனந்தங்கள் அவருக்கு ஒரு பொருட்டாகவே இருந்திருக்காது. இதைச் சொல்லித்தானா தெரியணும்? ஹந்த! ஏனென்றால் இந்த சாஸ்த்ரங்கள் தரக்கூடிய சின்னச் சின்ன ஆனந்தங்களெல்லாம் அமுங்கிப் போய்விடும் பேரானந்த நிறைவான—ஒரே நிறைந்த நிறைவான—அத்வைதத்திலேயல்லவா அவர் உள்ளூர அமிழ்ந்திருப்பவர்? ஆசார்யாள் பெற்ற அத்வைதானந்தத்திற்கு முன்னே ஏனைய சாஸ்த்ர ஆனந்தங்களெல்லாம் மஹாநதிக்கு முன்னே கிணறுகள் மாதிரிதான்.

நதிப் பாசனத்துக்கு வசதியில்லாத ராமநாதபுரத்தில் வேண்டுமானால் பெரிசாக ஆழமாக கிணறு வெட்டி வயலுக்கு இறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும். காவேரி டெல்டாவில் எந்த வ்யவஸாயியாவது ஆழக் கிணறு வெட்டிப் பாசனம் பண்ணுவானா? "கூபே யோ அர்த்த: ஸ தீர்த்தே ஸுபயஸு விததே..." தானே?

'ஸுபயஸி தீர்த்தே' என்று அர்த்த புஷ்டியுடன் போட்டிருக்கிறது. 'ஊற்று இத்தனூண்டு இருந்து, ஸமுத்ரம் எத்தனும் பெரிசோ இருந்தாலும் சுத்த தீர்த்தமுள்ள ஊற்று ஜலம்தானே பான யோக்யமாயிருக்கிறது? உப்பு ஸமுத்ரம் தாஹம் தீர்த்துக்கொள்ள ப்ரயோஜனப்படுமா?' என்று அவ்வைப் பாட்டி பாடி வைத்திருப்பதைக் குழந்தை நாளிலேயே படித்திருக்கிறோம்—மறந்துகூடப் போயிருக்கும்:

பெரிது கடல்
மண்ணீரும் ஆகாது: அதனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகிவிடும்.

Koviloor Digital Library

அதனால்தான் இங்கே கிணற்றின் ப்ரயோஜனம் ஸமுத்ரத்தில் கிடைக்காதா என்று கேட்காமல், "ஸ-பயஸி": "நல்ல ஜலம் நிரம்பிய" (உப்பு ஜலமில்லை; சுத்த ஜலம் நிரம்பிய) ப்ரவாஹத்தில் கிடைக்காதா என்று கேட்டிருக்கிறது! கிணற்று ஜலம்தான் அழுக்குள்ளது —தூர், கீர் வாரவேண்டி இருப்பது. மஹாநதியில் தூர் வார வேண்டி வருவதுண்டா? அப்படி, அழுக்கற்ற அமல ப்ரவாஹமாக அத்வைத வித்யை இருக்கிறது. மற்ற சாஸ்த்ரங்கள் கொஞ்சமாவது தூர் வார வேண்டிய கிணறுகள்தான்.

இதைத்தான் கீதையிலும் பகவான் சொல்லியிருக்கிறார். "ஸகல வேதங்களும்—அதாவது, வேதங்களில் விரிவாக உள்ள கர்ம காண்டம் முழுதும்—சின்னச் சின்ன ஊற்றுக் களைப்போலக் கொஞ்சம் கொஞ்சம் பலனைக் கொடுக்கும் அநேக கர்மாக்களைத்தான் சொல்லியிருக்கிறது. 'உதபானம்' என்றால் குடிக்க ஏதோ கொஞ்சம் ஜலம் தரும் சின்ன ஊற்று, "சிற்றூறல்". அந்தப் பலன்களில் ஆசைக்காகவே அவற்றிலே நீ போனாயானால் (அர்ஜுனனைப் பார்த்துச் சொல்கிறார்...) ஆசை அழுக்கு, முக்குண அழுக்கு எல்லாம் படிந்து வீணாய்ப் போய்விடுவாய். நாநாவிதமான ஆசைப் பூர்த்திகளில் ஓடிக் கொண்டு ஒரு நிச்சய புத்தியும் பெறாமல் கெட்டுப்போவாய். அப்படிப் பண்ணாதே! குணாதீதமாக, ஆசைகள் அற்றுப் போகும் நிலையாக, உள்ள அத்வைத ஆத்மாவையே பிடித்துக்கொள். அது சிற்றூறல் அல்ல; எங்கே பார்த்தாலும் பரவியுள்ள பெரிய ஜல ப்ரவாஹம். அது இருக்கும்போது இவற்றை ஏன் பிடித்துக்கொள்ள வேண்டும்? ஊற்றுக்களின் ப்ரயோஜனத்தை எல்லாம் கூட்டினாலும் அதைவிட ப்ரவாஹத்தின் ப்ரயோஜனம்தானே பெரிசு? அப்படி கர்ம காண்டத்தில் செய்யும் பலவற்றின் ப்ரயோஜனங்களுக்கும் மேலானது ஞான காண்டத்தினால் பெறும் ஆத்ம ஸித்தி. ஞானமடைந்த ப்ராம்மணன்—'ஞானம் வேண்டாம்; கர்மாவே எல்லாம்!' என்று பண்ணிக்கொண்டு போகும்

Koviloor Digital Library

ப்ராம்மணனைச் சொல்லவில்லை; அதனால்தான், 'ப்ராஹ்மணஸ்ய விஜானத:' என்று சொல்கிறேன்; இப்படிப்பட்ட ஞானவானான ப்ராம்மணன்—இதை நன்றாகத் தெரிந்துகொண்டு, அதற்கேற்கவே நடக்கிறான்...''

''எவ்வாறு விரிந்து கிடக்கிற தண்ணீர்க் காட்டிலிருந்து சின்ன ஊற்றின் பயனைப் பெற்றுவிடலாமோ, அவ்வாறு ஞானவானான ப்ராம்மணன் அகண்டமாயுள்ள ஆத்மாநுபவத்திலிருந்தே ஸகல வேத கர்மாக்களின் பயனையும் பெற்று விடுகிறான்'' என்றுதான் பகவான் சொல்லியிருக்கிறாரென்று தெளிவுபட்டது.

கீதை ச்லோகத்திற்கு அர்த்தம் தேடித்தேடி சங்கர விஜய ச்லோகத்திலிருந்து கண்டு பிடிக்கும்படி இருக்கிறது! பகவான் சொன்னதை மனஸில் வைத்துக்கொண்டுதான் சங்கரவிஜயக்காரர் ச்லோகம் பண்ணியிருப்பார் போலிருக்கிறது!

ஸாரமென்னவென்றால்: பெரிய ப்ரவாஹமாக, மஹா நதியாக இருப்பது அத்வைதம். பாக்கி சாஸ்த்ரங்கள், தத்வங்கள் எல்லாம் ஊற்று, கிணறு, குட்டை, வாவி மாதிரி தான். அந்த மஹாநதியினால் உண்டாகிற ப்ரயோஜனத்துக் குள்ளேயே இந்த ஊற்று, கிணறு, குட்டை, வாவி முதலான வற்றால் உண்டாகும் சிறு சிறு ப்ரயோஜனங்களும் அடங்கி விடும். அத்வைத வித்யா மஹாநதியிலேயே திளைத்துக் கொண்டிருந்த ஆசார்யாள் அவதார 'பர்பஸ்' சிலதை உத்தேசித்து ஊற்று முதலானவற்றிலிருந்தும் ப்ரோக்ஷணம் பண்ணிக்கொள்கிறதுபோல மற்ற சாஸ்த்ரங்களைப் பூர்த்தியாக அப்யாஸம் செய்தார். அகஸ்த்யர் ஸமுத்ரத்தையே ஆசமனம் பண்ணின மாதிரி ஸகல சாஸ்த்ரங்களையும் ஸுலபமாக ஜீர்ணித்துக் கொண்டுவிட்டார்.

குருகுலவாஸ காலத்தில் ஆசார்யாள் தாம் பாடம் படித்ததோடு, லோகத்திற்கெல்லாம் பாடமாக ப்ரஹ்மசர்ய தர்மங்களை நன்றாக அநுஷ்டித்தார். குரு சுச்ருஷை பண்ணிக்

Koviloor Digital Library

கொண்டு, க்ரமமாக வீடு வீடாகப் போய் பிக்ஷை எடுத்து வந்தார்.

பொன்மழை பொழிவித்தது; லௌகிகத்திலேயே ஆத்மிகமும்

அந்த மாதிரி ஒரு நாள் காலம்பற—அன்றைக்கு த்வாதசி என்று சொல்வார்கள்—ஒரு வீட்டுக்குப்போய், முறைப்படி, "பவதி! பிக்ஷாம் தேஹி!" என்று கேட்டார்.

அது பரம தாரித்ரிய தசையிலிருந்த ஒரு ப்ராம்மணனின் வீடு. அவனுக்கு அநுக்ரஹம் பண்ணவே பால ப்ரஹ்மசாரி அங்கே போனார் போலிருக்கிறது! பிக்ஷை என்று சாக்காகப் போய், பெரிய அநுக்ரஹ பிக்ஷை போடுவதற்காக!

மலையாளத்தில் எல்லாரும் ஸுபிக்ஷமாயிருந்தார்கள். 'அத்ருதி'க்குள்ளேயே குடித்தனத்துக்கு வேண்டிய ஆஹார ஸாமான்கள் கிடைத்துவிடும் என்றெல்லாம் சொன்னால்கூட, கர்மா என்று ஒன்று இருக்கோல்லியோ? அப்படியிருந்தால் கல்பக வ்ருக்ஷத்திற்குக் கீழேயே இருந்தால்கூட தரித்ரம்தான் பிடுங்கித் தின்னும்! ஜன்மாந்தர கர்மாவினால் இந்த ப்ராம்மணன் ரொம்பவும் ஏழ்மை நிலையிலிருந்தான். வீட்டுக்கு அத்ருதி இருந்ததேயொழிய அதற்குள் மரமா, செடியா எதுவும் பயிராகாமல் பொட்டலாயிருந்தது!

உஞ்ச வ்ருத்திக்கு (வீடு வீடாக அரிசி தானத்துக்கு) அந்த ப்ராம்மணன் போவான். ஸாதாரணமாக உஞ்ச வ்ருத்தி ப்ராம்மணன் வந்தால் போடாமலிருக்க மாட்டார்கள். ஆனாலும் கர்மா ப்ரதிகூலமாக இருந்தால் எங்கேயும் பழி வாங்காமல் விடாது—இவன் போகிற வேளை அஸந்தர்பமாயிருந்து காலிப் பாத்ரமாகவே திரும்ப வேண்டி வரும். எப்படியோ அந்த தம்பதி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்து வந்தார்கள்.

Koviloor Digital Library

ஆசார்யாள் பிக்ஷைக்குப் போயிருந்த அன்றைக்கு வீட்டுக்கார ப்ராம்மணன் வீட்டிலில்லை. அவனுடைய ஸம்ஸாரம் மட்டுமே இருந்தாள்.

பிக்ஷை போடுவதற்கு அந்த வீட்டில் எதுவுமில்லை. ஆசார்யாளைப் பார்த்த மாத்திரத்தில், "அடடா, எப்படிப் பட்ட தேஜஸ்வியான ப்ரஹ்மசாரி! இவருக்கு பிக்ஷை போட்டால் ஸகல புண்யமும் உண்டாகும்!' என்று நினைத் தாள். ஆனால் போடத்தான் மணி அரிசி இல்லை. அவள் நல்ல உள்ளம் படைத்தவள். 'இருக்கிறவர்களை' விட 'இல்லாதவர்'களுக்கே கொடுக்கிற எண்ணம் இருப்பதுண்டு. இவளுக்கு அப்படி இருந்தது. 'அபர ஸூர்யனாக நிற்கிற குழந்தைக்குக் கொடுக்கிறதற்கு இல்லையே! இப்படியொரு தெய்வக் குழந்தை நம் ஆத்து வாசலில் வந்து நிற்கிறபோது 'இல்லை போ!'ன்னு சொல்லுவாளா?' என்று மிகவும் வேதனைப் பட்டாள். என்னவாவது கிடைக்குமா என்று தேடித் தேடிப் பார்த்தாள்.

ஒரு புரையில் அழுகிப்போன நெல்லிக்காய் ஒன்று அகப் பட்டது. அந்த ப்ராம்மணன் பரம ஸாது. தோப்பில், கீப்பில் உதிர்ந்து கிடக்கிறதுகளில்கூட நல்லதாக உள்ளதை எடுத்தால், "ஏண்டா, எடுத்தே?" என்று யார் சண்டைக்கு வருவார்களோ என்று இந்த அழுகலைப் பொறுக்கிக் கொண்டு வந்து வைத்திருந்தான். அதுவும் அவளுக்குத் தெரியாது. இப்போது தேடியதில் அகப்பட்டது. த்வாதசி யன்று போஜனத்தில் நெல்லி அவச்யம் சேர்க்கவேண்டும். அதற்காக அவன் 'சேமித்து' வைத்திருந்த நெல்லி!

"போயும் போயும் இதையா தெய்வக் குழந்தைக்குப் போடுவது?" என்று மனஸு குமுறி வேதனைப்பட்டாள். ஆனாலும் "பவதி! பிக்ஷாம் தேஹி!" கேட்டுவிட்ட ப்ரஹ்ம சாரியை வெறுமே அனுப்பப்படாதே என்பதால் வாசலுக் குப் போனாள். அங்கே மஹா தேஜஸ்வியாக நிற்கிற பால சங்கரரைப் பார்த்துச் சொல்லி முடியாத வெட்கத்தோடும் அழுகையோடும் திரும்ப உள்ளே வந்தாள். வந்த பிறகு,

Koviloor Digital Library

'ஐயோ, தெய்வக் குழந்தைக்கு ஒன்றும் போடாமலிருப்பதா?' என்று நினைத்து வாசலுக்குப் போனாள். இப்படி வாசலுக்கும் உள்ளுக்குமாகத் தவித்துத் தடமாடி விட்டு, கடைசியில், 'அழுகலோ, மட்டமோ? நம்மிடம் இருப்பதைத் தானே நாம் கொடுக்க முடியும்?' என்று ஒரு மாதிரி மனஸைத் தேற்றிக்கொண்டு அழுகல் நெல்லிக்கனியை ஆசார்யாளுக்குப் போட்டாள். தாரை தாரையாகக் கண்ணால் ஜலத்தைக் கொட்டிக் கொண்டு போட்டாள்.

பொருளில் தரித்ரமாயிருந்தாலும், அவருடைய மனஸு எத்தனை பெரியது, அது ஆகாசம் மாதிரி விரிந்து அதிலிருந்து தன்னிடம் எத்தனை அன்பு பொங்குகிறது என்பதை ஆசார்யாள் கண்டுகொண்டார். அவர் மனசு அவளுக்காக உருகிற்று.

உடனே அவளுக்காக மஹாலக்ஷ்மியை ப்ரார்த்தித்து ஸ்தோத்ரம் பாடினார். அதுதான் "கனக தாரா ஸ்தவம்" என்பது. அந்தப் பேர் ஏற்பட்டதற்குக் காரணம் பின்னால் தெரியும்.

ஆசார்யாளின் வாக்கிலிருந்து வந்த முதல் ஸ்துதி இதுதான்.

அந்த ப்ராம்மண குடும்பத்தின் தாரித்ரியத்தைப் போக்கி ஸம்பத்தை அநுக்ரஹிப்பதற்காக லக்ஷ்மியை ஸ்துதித்தார்.

ஆகாசத்திலிருந்து அசரீரி வாக்குக் கேட்டது. "இந்த தம்பதி பூர்வ ஜன்மத்தில் பாவம் செய்தவர்கள். அதற்கு தண்டனைதான் தாரித்ரியம். பாவம் தொலைகிற காலம் வருகிற வரையில் இவர்களுக்கு ஸம்பத்தைத் தருவதற்கில்லை" என்று லக்ஷ்மி அசரீரியாகச் சொன்னாள்.

உடனே ஆசார்யாள், "இவர்கள் இப்போதிருப்பதை விட ஜாஸ்தியாக வேண்டுமானாலும் ஜன்ம ஜன்மாந்தரங்களாகப் பாவம் பண்ணியிருக்கட்டும்! அப்படியிருந்தால்

Koviloor Digital Library

கூட, இத்தனை அன்போடு அகத்திலிருந்த ஒரே பக்ஷ்யமான நெல்லிக்கனியை இவள் எனக்குப் போட்டிருக்கிறாளே, இந்த அன்பும் த்யாகமும் எத்தனை புண்யமானவை? சாப்பாட்டுக்கே இல்லாதவள் எனக்கு பிக்ஷை போட்ட பலன் எத்தனை பாபத்தையும் சாப்பிட்டுவிடுமே! அதோடு, எத்தனை கர்மாவானாலும் நான் ப்ரார்த்தித்ததால் போய்விடாதா?" என்று கேட்டார்.

"அம்மா, மஹாலக்ஷ்மி! இவளுக்கு இருக்கிற மாதிரி உனக்கும் அன்பு நிறைய உண்டாச்சே! அதனால், ரொம்பக் கண்டிப்போடு ந்யாயம் மட்டும் வழங்காமல், அன்பைக் காட்டி அநுக்ரஹம் பண்ணு!" என்று ப்ரார்த்தித்தார். "இவர்களுடைய துஷ்கர்மம் கடும் கோடைக்கால வெய்யிலாக ஸம்பத்து ப்ராப்தியை வற்றடிப்பதாகவே இருக்கட்டும். ஆனால் எந்தக் கோடையையும் தணிவிக்கக்கூடியதாக ஒரு பெரிய காற்று மழைமேகத்தைக் கொண்டு வந்து விடலாமோ இல்லியோ? (மலையாளத்தில் 'எடவப் பாதி' என்பதாக வைகாசி மாஸ மத்தியில் நல்ல வெய்யில் நாளிலேயே தென்மேற்கிலிருந்து காற்றடித்து நல்ல மழை மேகங்களைக் கொண்டு வந்து மான்ஸூன் கொட்ட ஆரம்பித்து விடும்!) இவர்களுடைய துஷ்கர்ம வெய்யிலைப் போக்க உன்னிடமுள்ள தயை என்ற காற்றினால் ஸம்பத்து மேகத்தை அடித்துக்கொண்டு வந்து கொட்டிவிடேன்!... உன்னுடைய கடாக்ஷமாகிய கார்மேகத்தை தயை என்ற காற்றினால் இவர்கள் பக்கம் திருப்பிவிட்டுப் பொருள் என்ற மழையைப் பொழியேன்!" என்று சொன்னார்.

ஏழை ப்ராம்மண ஸ்த்ரீக்காக அவர் லக்ஷ்மியிடம் முறையிட்டதற்கு "கனகதாரா ஸ்தவ"த்திலேயே internal evidence இருக்கிறது:

தத்யாத் தயாநுபவனோ த்ரவிணாம்புதாராம்
அஸ்மிந் அகிஞ்சந விஹங்க சிசௌ விஷண்ணே |

Koviloor Digital Library

துஷ்கர்ம கர்மம் அபநீய சிராய தூரம்
நாராயண-ப்ரணயிநீ நயநாம்புவாஹ: ||*

பெருமாளிடம் நிறைந்த ப்ரேமையை வைத்திருக்கும் தாயாரானதால் "நாராயண ப்ரணயினீ!" என்று கூப்பிட்டுச் சொல்கிறார். கூப்பிடுவது நாலாம் வரியில். எடுத்தவுடன் "தத்யாத்"—"கொடுத்து விடட்டும்!" என்று அவளுடைய அருட்காற்று அடித்து மழையாக ஸம்பத்துத் தர வேண்டியதைப் பளிச்சென்று தெரிவித்து விடுகிறார்.

"தயாநுபவனோ" —தயையாகிய காற்றோடுகூடிய; "நயனாம்புவாஹ:"-நேத்ரமாகிய மேகம். அதாவது கடாக்ஷம். லக்ஷ்மீ கடாக்ஷம் ஏற்பட்டுவிட்டால் அமோகமாக ஸம்பத்துப் பொழிந்து விடும். கர்மா பாதகமாயிருக்கும்போது அந்தக் கடாக்ஷம் எந்தப் பக்கமோ பார்த்துக் கொண்டிருக்கும். கருவிழி, மை இட்டுக் கொண்டிருப்பது இரண்டும் சேர்ந்து கறுப்பிலேயே பளபளவென்று ஜ்வலிப்பது அந்தக் கடாக்ஷம். அதனால் கார்மேகமாகச் சொல்வது வழக்கம். அந்த மேகம் எந்தப் பக்கமோ இருக்கிறது—ரொம்ப தூரத்தில். அதனாலென்ன? எங்கேயோ அந்தமான் தாண்டியிருக்கிற மழைமேகத்தை மான்ஸூன் காற்று நம் ஊருக்கு அடித்துக் கொண்டு வருகிறதா, இல்லையா? அப்படியொரு பெரிய காற்றாகத் தாயாருடைய தயை இருக்கிறதே! தயைக் காற்று கடாக்ஷ மேகத்தை அடித்துக் கொண்டுவந்து இந்த துஷ்கர்மக்காரர்களிடமுந்தான் கொட்டட்டுமே! இம்மாதிரி தகுதி இல்லாதவர்களுக்கும் நல்லது செய்யத்தானே தயை, தயை என்ற ஒன்று அவளிடம் இருக்கிறது? தகுதியுள்ளவர்களுக்குத் தகுதிக்காகவே செய்துவிட வேண்டியதுதான். 'தயை' காட்ட வேண்டியதில்லை. லௌகிகத்திலுங்கூட தகுதிப்படி நமக்குக் கிடைக்கவேண்டியதைக் கேட்கும் போது 'தயவு காட்டுங்கள்!' என்று சொல்வதில்லையே! 'அவன் தயவு இவனுக்கு வேண்டியிருக்கிறது' என்றால்

---

* எட்டாவது (சில பதிப்புகளின்படி ஒன்பதாவது) ச்லோகம்.

Koviloor Digital Library

இவனுடைய தகுதியைப் பார்க்காமலே அவன் உபகாரம் பண்ணுவானென்று அர்த்தம். வெய்யிலில் வறண்டு போன பூமிக்கு "தகுதி" என்ன இருக்கிறதென்று பார்த்தா மான்ஸூன் காற்று அங்கே மேகத்தைக் கொண்டுவந்து சேர்க்கிறது?

"தயைக் காற்றோடுகூடி உன் கடாக்ஷ மேகமானது த்ரவிணாம்பு தாராம் தத்யாத். 'த்ரவிணம்' என்றால் செல்வம். 'அம்புதாரா': 'அம்பு', 'அப்பு' இரண்டும் ஒன்றுதான்—ஜலம் என்று அர்த்தம். "அம்புதாரா"—ஜலம் தாரையாக வர்ஷிப்பது, அதாவது மழை. "உன் கடாக்ஷமேகம் கருணைக் காற்றினால் கொண்டுவரப்பட்டுப் பொருள் தாரையை வர்ஷிக்கட்டும்!"

பொருளைப் பொன் என்றே சொல்வது வழக்கம். 'பொன்னும் பொருளும்' என்றே சேர்த்துச் சொல்கிறோம். ரூபாயே gold standard-படிதானே (பொன்னின் கையிருப்பை வைத்துத்தானே) இருந்திருக்கிறது? 'த்ரவிணம்' என்றால் பொதுவாக 'பொருள்' என்பதோடு 'பொன்' என்றும் அர்த்தம் உண்டு. ஸ்வர்ணம், ஹேமம், ஹிரண்யம், கனகம் என்பவை போல த்ரவிணம் என்றும் தங்கத்துக்கு ஒரு பேர். "த்ரவிண (அம்பு)தாரா" என்று இங்கே ஆசார்யாள் வாக்கில் வந்திருப்பதுதான் ஸ்தோத்ரத்தின் பேரில் "கனகதாரா" என்று இருக்கிறது!

"உன் கடாக்ஷமேகம் அருட்காற்றோடு கூடி வந்து த்ரவிணதாரையைப் பொழியட்டும்!" என்றால் யாருக்கு? ஸ்தோத்ரம் பண்ணும் பால சங்கரருக்கா? அவருக்கு எதற்கு? பெரிய செல்வக் குடும்பத்தில் வந்தவரல்லவா அவர்? அதுவுமன்னியில் ப்ரஹ்மசாரியாக குருகுலவாஸம் பண்ணிக் கொண்டிருப்பவர் பணமே வைத்துக்கொள்ளப்படாதே!

அவருக்கில்லை. வேறே யாருக்கு? அதைச் சொல்கிறார்: "அஸ்மின் அகிஞ்சன விஹங்க சிசௌ விஷண்ணே". அப்படியென்றால், 'மனஸ் சோர்ந்து வாடிப் போயிருக்கிற இந்த ஏழையான பறவைக் குஞ்சுக்கு' என்று அர்த்தம்.

Koviloor Digital Library

மநுஷ்யர்களுக்கு என்றே சொல்லவில்லை! பக்ஷிக்கு, அதிலும் வளராமல் குஞ்சாகவுள்ள பக்ஷிக்கு என்கிறார்! 'விஷண்ணே'—வாடிச் சோர்ந்துபோன; 'அஸ்மின்'—இந்த (கிட்டத்தில் இருக்கும் ப்ராம்மண ஸ்த்ரீயைக் காட்டிச் சொல்வதால் 'இந்த' என்கிறார்); 'அகிஞ்சன'—கொஞ்சங் கூட உடைமை இல்லாத. 'கிஞ்சன', 'கிஞ்சித்' என்றால் 'கொஞ்சம்போற'. 'கிஞ்சன' தான் 'கொஞ்ச'மாச்சோ என்னவோ? 'அகிஞ்சன' என்றால் அந்தக் கொஞ்சங்கூட இல்லாத முழு தரித்ரமாக என்று அர்த்தம். 'விஹங்கம்' என்றால் பக்ஷி, 'விஹங்க சிசு' என்றால் குஞ்சாக உள்ள பக்ஷி. 'விஹங்க சிசௌ': பக்ஷிக் குஞ்சினிடத்தில். "பக்ஷிக் குஞ்சினிடத்தில் உன் கடாக்ஷ மேகத்தால் பொருள் மழையைக் கொட்டுவாயாக."

ப்ராஹ்மண பத்னியை உத்தேசித்துத்தான் சொல்கிறாரென்பது ஸ்பஷ்டம். ஆனால் ஏன் அப்படிச் சொல்லாமல் பக்ஷிக் குஞ்சு என்றார்?

அந்தச் சின்ன வயஸிலேயே அவருக்கு இருந்த கவி உணர்ச்சியால்தான் அப்படிச் சொன்னார்! ஆசார்யாளின் க்ரந்தங்களைப் பார்க்கப் பார்க்க நமக்கு ஆச்சர்யமாயிருக்கும் —எத்தனை விஷயம் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் மஹாபுத்திமானாக அவர் இருந்திருக்கிறாரென்று மட்டுமில்லை; கவி என்ற ரீதியிலேயே எப்படியெல்லாம் வார்த்தைகளைக் கோத்திருக்கிறார், எப்படி அலங்காரங்களை (உபமானம் முதலான அணிகளை)க் கையாண்டிருக்கிறார், வார்த்தை விநோதங்கள் என்னவெல்லாம் பண்ணியிருக்கிறார், கவிகள் தங்களுக்குள் ஒரு 'ட்ரெடிஷ'னாக—மரபாக—பின்பற்றும் கருத்துக்களையெல்லாம் தாமும் எப்படிப் பின்பற்றியிருக்கிறாரென்று ஆச்சர்யமாயிருக்கும். நிர்குண ப்ரஹ்மம் என்று கல்பனா ரஹிதமாக, வெட்ட வெளியாயிருப்பதைப் பிடித்துக் கொண்டிருந்தாலும் நூதன கல்பனைகளைத் தம்முடைய நூல்களில் கொட்டிக் கவி திலகமாக இருந்திருக்கிறார்!

Koviloor Digital Library

குழந்தையாய் அவர் அநுக்ரஹித்த இந்த முதல் ஸ்தோத்ரத்திலேயே இப்படிப் பல இருப்பதில், poetic tradition ஒன்றின்படியே பக்ஷிக் குஞ்சு என்று, "விஹங்க சிசு" என்று, சொல்லியிருக்கிறுர்.

நம்முடைய கவி மரபிலே சகோரம், சாதகம் என்று இரண்டு பக்ஷிகளைச் சொல்வார்கள். இப்போது நாம் லோகத்தில் பார்க்க முடியாத இரண்டு விசித்ரமான பக்ஷிகள்! 'சகோரம்' என்பது சந்த்ரிகையை (நிலவொளியை) மாத்ரமே ஆஹாரம் பண்ணும் பக்ஷி. வேறே எதுவும் சாப்பிடாது.

'ஸௌந்தர்ய லஹரி'யில் அம்பாளின் மந்தஹாஸ காந்தியை வர்ணிக்கும்போது* சகோரத்தைச் சொல்கிறுர். 'மதி வதனம்' என்பது வழக்கமல்லவா? அம்பாளுடைய மதி வதனத்திலிருந்து சந்த்ரிகையாக அவளுடைய சிரிப்பொளி வீசுகிறது. அந்த சந்த்ரிகையை சகோர பக்ஷி பானம் பண்ணிற்று. சொல்லி முடியாத தித்திப்பாக இருந்தது. இப்படியிருந்தால் திகட்டிவிடுமல்லவா? தித்திப்பில் அதன் அலகு மரத்தே போய்விட்டதாம்! திகட்டாமலிருக்க அப்பப்போ ஒரு வாய் புளிக் கஞ்சி குடிக்கலாமே என்று பார்த்ததாம். ஆகாசத்திலே சந்த்ரனிலிருந்து நிலா அடித்துக் கொண்டிருந்தது. அதை அந்தச் சகோரம் ருசி பார்த்ததாம். அம்பாளுடைய முக சந்த்ரனிலிருந்து பெருகும் மந்தஸ்மித நிலாவின் தித்திப்பு ஏறிய அதன் அலகுக்கு ஆகாசத்துச் சந்த்ரனின் நிலா (அதற்குத் தேவைப் பட்ட) புளிக் கஞ்சி மாதிரியே இருந்ததாம்! மரத்துப்போன உணர்ச்சியும் போயிற்றும்! அதற்கப்புறம்தான் சகோர பக்ஷி நிலாவைக் குடிப்பது என்று ஏற்பட்டது என்று விநோதக் கல்பனையாகப் பாடியிருக்கிறுர்.

வாஸ்தவத்தில் சந்த்ரிகையில் அம்ருதமே நிறைந்திருக் கிறது. அந்த அம்ருதத்தையும் புளிக் கஞ்சியாக்கிவிடும்

---

* 63-வது ச்லோகம்

Koviloor Digital Library

அப்பேர்ப்பட்ட மாதுர்யத்தோடு அம்பிகையின் மந்தஹாஸ காந்தி இருக்கிறது என்று அங்கே சொல்லியிருக்கிறார். "காஞ்ஜிக தியா"—'கஞ்சி என்ற எண்ணத்தால்' (நிலாவைச் சகோரம் குடிக்கலாயிற்று) என்கிறார். மலையாளத்தில்தான் கஞ்சி குடிப்பது ஸகல ஜாதியாருக்கும் வழக்கமாயிருக்கிறது. 'மலையாளம் கஞ்சி' என்றே இருக்கிறது.

'ஸௌந்தர்ய லஹரி' ரொம்ப வருஷத்துக்கு அப்புறம் ஜகதாசார்யாளாகக் கீர்த்தி பெற்ற பிறகு பண்ணினது. அதில் சகோரத்தைச் சொன்னவர் பால்யத்தில் மஹாலக்ஷ்மியைப் பாடினபோது சாதகத்தைச் சொல்லியிருக்கிறார். 'விஹங்க சிசு' என்பது சாதக பக்ஷியின் குஞ்சைத்தான்.

சாதகத்தைப் பற்றி, என்ன விசித்ரமென்றால், அதற்குத் தொண்டையிலே த்வாரம் இருக்கும். இப்படியிருந்தால் எப்படிச் சாப்பிடுவது? அலகினால் எதைச் சாப்பிட்டாலும் அது தொண்டை ஓட்டை வழியாக வெளியில் வந்து விடுமல்லவா? நாம் கையை வளைத்து வாயில் ஆஹாரம் போட்டுக் கொள்கிறதுபோல அது அலகை வளைத்து ஓட்டைக்குள் ஆஹாரத்தைப் போட்டுக்கொள்ளவும் முடியாது. அதனால், இந்தப் பக்ஷிக்கு ஆஹாரம் என்னவென்றால் ஆகாசத்திலிருந்தே நேரே அந்தக் கண்ட த்வாரத்துக்குள்ளேயே விழுந்து வயிற்றுக்குள் போய்விடக் கூடிய மழைத் துளிதான். மழை இல்லாவிட்டால் அது பசியில் வாடவேண்டியதுதான். 'மழைக்காக ஏங்கும் சாதகம் போல்' என்று அதனால்தான் சொல்வது.

லக்ஷ்மி த்ரவிண தாரையை வர்ஷிக்கவேண்டும் என்று சொன்னவுடன் பால ஆசார்யாளின் கவியுள்ளத்துக்கு, 'மழை தாரையைத் தவிர வேறே ஆஹாரமே இல்லாத சாதக பக்ஷி இருக்கிறதே! அதைத்தான் இவளுடைய த்ரவிண வர்ஷத்திற்காக ஏங்கி வாடிக்கொண்டிருக்கிற இந்த ப்ராஹ்மண குடும்பத்திற்கு ரூபகமாகச் சொல்ல வேண்டும்' என்று தோன்றி, அப்படியே பாடிவிட்டார். வாயால் சாப்பிடுவது கர்மாவை அநுபவிக்கிறமாதிரி,

Koviloor Digital Library

கர்மா ப்ரதிகூலமாயிருப்பதால், வாயால் முழுங்கினது தொண்டை ஓட்டையால் ஒழுகி விடுகிற மாதிரி, இவர்களுக்கு ஸம்பத்து சேராமல் நழுவிப் போய்விடும். கர்மாவைப் பார்க்காமல் அம்பாள் க்ருபை பண்ணும்போது, நேரே தொண்டை ஓட்டைக்குள்ளேயே ஆஹாரத்தைப் போட்டு உள்ளே சேர்த்து விடுவதுபோல, ஸம்பத்து நழுவாமல் சேர்ந்துவிடும்.

பக்ஷி என்று மட்டும் சொல்லாமல் சிசுவான பக்ஷி என்று, குஞ்சு என்று சொன்னார். குழந்தைக்குத்தான் பசி தாங்கவே தாங்காது. பசித்தால் அது 'வீல்,' 'வீல்' என்று கத்துகிற மாதிரி நாம் கத்துகிறோமோ? அதோடு, ஒரு சின்னக் குழந்தை கஷ்டப்படுகிறது என்றால் எந்தக் கல் மனஸும் இறங்கும். லக்ஷ்மியோ 'தாயார்' என்றே சொல்லப்படுபவள். அதனால் குழந்தை, விஹங்க சிசு என்று சொல்லிவிட்டால் அவள் நிச்சயம் மனஸுருகி அருளுவாளென்று அப்படிச் சொன்னார்.

குழந்தையாயிருந்த ஆசார்யாள் அந்த ப்ராஹ்மண ஸ்த்ரீயைக் குழந்தையாகப் பார்த்து அவள் behalf-ல் வேண்டினார். அவளுக்கு, அவளுடைய பதிக்கு (பதி, பத்னி என்று பேதமே இல்லாமல் பாப-புண்யங்கள் இரண்டு பேருக்கும் சேர்ந்துதான்) கர்மா கெட்டதாயிருப்பதால் அநுக்ரஹிப்பதற்கில்லையென்று லக்ஷ்மி சொன்னாளல்லவா? அதனால் அவள் சார்பில் வாதாடினார் : 'துஷ்கர்ம - கர்மம் சிராயதூரம் அபநீய நயநாம்புவாஹ: த்ரவிணாம்புதாராம் தத்யாத்'. "துஷ்க(ka)ர்ம-க(gha)ர்மம்"-கெட்ட கர்மாவான கோடை காலம். கர்மம் என்றால் நல்ல வேனிற் காலம். "அப்படி இவர்களுடைய துஷ்கர்மம்தான் தரித்ரமாக வறுத்தெடுக்கிறது என்கிறாய்! அதனால் ஒன்றும் நிவர்த்தி கிடையாதா? கெட்ட கர்மாவின் 'நேச்சர்' கொளுத்தி எடுப்பது என்றால் உன்னுடைய கடாக்ஷத்தின் 'நேச்சர்' குளுகுளு என்று மழைமேகம் போல இருப்பதாயிற்றே! அது எங்கேயோ, இது எங்கேயோ இருக்கிற

Koviloor Digital Library

தென்பாயானுல் அதை இங்கே அடித்துக் கொண்டு வரத்தான் தயை என்ற காற்று இருக்கிறதே! அந்த க்ருபா வேகத்தைவிட ஒன்று உண்டா? லோகம் தபிக்கும் போது கொட்டும் கோடை மழை மாதிரி, இந்தச் சாதகக் குஞ்சு தவிக்கிற இப்போது அருளைக் கொட்டு. சாதகக் குஞ்சு ஆஹாரத்துக்கு மட்டுமே தவிப்பது. இந்த தம்பதியோ பொருளில்லாமல் ஆஹாரம், வஸ்த்ரம், வீடு எல்லா வற்றுக்குமே தவிக்கிருர்கள். வீடு என்று பொக்கையும் போறையுமாக இடிந்து விழுகிற மாதிரி ஏதோ இருப்பது தான். இந்தக் குழந்தையை வறுத்தெடுக்கும் வெயிலான ஜன்மாந்தர பாபத்தை உன் குளிர்ந்த கடாக்ஷமானது, "அபநீய"—நிவர்த்தி பண்ணி, "சிராய"—எத்தனையோ காலமாகச் சுமந்து வந்த பாபத்தை எங்கே போச்சு என்று தெரியாமல் நிரந்தரமாக, "தூரம் அபநீய"—ரொம்ப தூரத் துக்கு விரட்டி, 'த்ரவிணும்புதாராம் தத்யாத்'-த்ரவ்ய மழையைக் கொடுக்கட்டும்" என்றுர்.

தாரித்ரிய நிவ்ருத்தி என்று லோக வாழ்க்கைக்கான ஸமாசாரத்தை வேண்டுகிறுற்போல வேண்டும்போதே கர்ம நிவ்ருத்தி, பாப நிவ்ருத்தி என்பதான ஆத்ம ஸம்பந்தமான வேண்டுதலையும் கலந்து கொடுத்துவிட்டார்!

பணம், படிப்பு, எல்லாம் அதற்குத்தான் (ஆத்ம விஷயமாகக் கொண்டு விடுவதற்குத்தான்). காமம் உள்பட எல்லாமே அதற்குத்தான் ஸ்ருஷ்டியில் வைத்திருக் கிறது. ஸ்ருஷ்டியில் யாரும் சிரஞ்ஜீவியாக இருக்கமுடியாது —பகவானே ரொம்ப அபூர்வமாக அப்படி வைத்த ரொம்பக் கொஞ்சம் பேரைத் தவிர, பாக்கிப் பேர் செத்துத்தான் போகணுமென்று ஸ்ருஷ்டி நியதி. ஆனுல் செத்துப் போகும் போது கர்மா பாக்கி தீர்ந்து nil balance-ஆக இருப்ப தில்லையே! அப்படியிருந்தால்தானே ஸ்ருஷ்டியிலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவுடன் சேரலாம்! ஆனுல் அப்படி யில்லையே! இந்த மாதிரி இருக்கும்போது அந்த ஆவிக்கு இன்னெரு சான்ஸ், அதுவும் தப்பினுல் அப்புறமும் பல

Koviloor Digital Library

சான்ஸ்கள் என்று ஜன்மா ஜன்மாவாகக் கொடுத்துத்தானே அவற்றிலாவது கர்மாவைக் கழித்துக்கொள்ள வாய்ப்புக்கள் தரவேண்டியிருக்கிறது? இப்படி ஒரு ஜீவன் ஜன்மாக்கள் எடுக்கணுமென்றால் அதற்காக ஒரு அப்பா, அம்மாவுக்குக் காமம் இருந்தால்தானே முடியும்? அதாவது, காமம் என்று வைத்திருப்பதும் இன்னொரு ஜீவன் கடைத்தேறச் 'சான்ஸ்' கொடுக்கும் நல்ல உத்தேசத்தில்தான் என்று தெரிகிறது. இப்படித்தான் பணத்தால், சாப்பாட்டால், வீட்டால், வைத்தியத்தால் சரீர ரக்ஷணை செய்துகொள்வதும், படிப்பால் அறிவு அபிவ்ருத்தி செய்துகொள்வதுங்கூட ஒவ்வொரு ஸ்டேஜ் வரை ஆத்ம விஷயமாகப் போவதற்கே உதவி செய்யத்தான். என்ன அளவில், எந்த ஸ்டேஜ் வரையில் என்று தெரியாமல் நாம் 'மிஸ்-யூஸ்' பண்ணிக் கொள்வதில்தான் ஒரே அனர்த்தமாகிறது. "அர்த்தம் அனர்த்தம்" என்று ஆசார்யாளே "பஜ கோவிந்த"த்தில் இதைச் சொல்கிறார். அது "மூட மதி"க்கு 'அட்ரஸ்' பண்ணியது ("பஜ கோவிந்தம், மூடமதே!") என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்! புத்திசாலியாயிருந்தால் லௌகிகம் என்று இருக்கிறவைகளைக் கொண்டே, அவற்றைத் தக்க அளவில் தக்க காலம் வரை 'யூஸ்' பண்ணிக்கொண்டே, ஆத்மிகத்துக்குப் போய்ச் சேரலாம்.

நம் சாஸ்த்ரங்கள் எல்லாம் அப்படி வழிகாட்டுபவைதான். ஆசார்ய க்ரந்தங்கள் எல்லாமும் அப்படித்தான். பணம் கேட்டு லக்ஷ்மி ஸ்துதி பாடினாலும், வ்யாதி போகணுமென்று ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு "புஜங்கம்" பாடினாலும் ஆத்ம லக்ஷ்யத்தை அவர் மறக்கவே மாட்டார். அதற்காகவேதான் இவற்றைக் கேட்பது. அன்னம் போடும் அன்னபூர்ணேச்வரியிடம் "பிக்ஷாம் தேஹி!" என்று போய் நிற்கிறபோதும் "ஞான வைராக்ய ஸித்த்யர்த்தம்" என்றுதான் முடிப்பார்.

Koviloor Digital Library

'அகிஞ்சன' என்று பணத்தில் ஏழ்மையைச் சொல்லும் போதும் 'கர்ம-கர்மம்' என்று அதையும் ஆத்ம ஸம்பந்த மான கர்மத்தோடு சேர்த்துக் காட்டி, ஏழ்மை நிவ்ருத்தி மாத்ரமல்ல வேண்டியது, கர்ம நிவ்ருத்தியும்தான் என்று புரியவைத்திருக்கிறார்.

இந்த ஸ்தோத்ரத்தில் ஒரு பாடப்படி 18 ச்லோகம், இன்னொன்றின்படி 20-21 ச்லோகம் என்று இருந்தாலும் இந்த ஒரு ச்லோகத்தில்தான் செல்வத்துக்கு அதிதேவதை யான லக்ஷ்மியிடம் பொருட் செல்வம் வேண்டுவது. அடுத்த ச்லோகத்தில்[1] வேண்டுமானால், "இஷ்டாம் புஷ்டிம் க்ருஷீஷ்ட மம" என்று தாம் விரும்பிக் கேட்கிற (தமக்காக அல்ல, எதை ப்ராம்மண தம்பதியை முன்னிட்டுக் கேட்கிற) செழிப்பைத் தரட்டும் என்று சொல்லும்போதும் தனத்துக் கான ப்ரார்த்தனையை hint செய்திருப்பதாக வைத்துக் கொள்ளலாம். மற்றபடி ஸ்தோத்ரம் முழுக்கப் பெருமாளும் தாயாரும் எப்படிச் சேர்ந்து சேர்ந்து அநுக்ரஹ மூர்த்தி களாக இருக்கிறார்கள், (அவர் கார்மேகம் போல வ்யாபித்து இருக்கும்போது, மேகத்துக்கு நடுவில் மின்னுகிற மின்னலைப்போல் இவள் எப்படி அவருடைய வக்ஷஸ்தலத்தில் ஸ்வர்ண காந்தியுடன் ப்ரகாசிக்கிறாள்[2]-என்பது போன்ற விஷயங்கள்), ஸர்வ சக்தியான பராசக்தியின் ஒரு ரூபமாகவே இருக்கப்பட்ட லக்ஷ்மி இன்னும் என்னென்ன மூர்த்திகளாக இருக்கிறாள், லக்ஷ்மீ ரூபத்தில் அவளுடைய வர்ணனை என்ன, பெருமை என்ன—என்றிப்படியான ஸமாசாரங்கள்தான் இருக்கின்றனவே தவிர திரவியத்திற் கான ப்ரார்த்தனை இல்லை.

இப்படி அநேக விஷயங்களை, கவிதை அழகுகளை, பக்தி பாவங்களைத் தெரிவித்து ச்லோகங்கள் சொல்லிக்கொண்டு

---

1. "இஷ்டா விசிஷ்ட" எனத் தொடங்குவது.
2. காலாம்புதாலி லஸிதோரஸி கைடபாரே :
தாராதரே ஸ்புரதி யா தடிதங்கநேவ (ஆறாவது ச்லோகம்)

Koviloor Digital Library

போகும்போது ஒரு ச்லோகத்தில்தான், எதற்காக ப்ரார்த்திக்க ஆரம்பித்தாரோ அந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறார். 'லோக மாதாவிடம் போய் ரொம்ப ஒன்றும் முறையிட வேண்டியதில்லை. துளிப்போறக் காட்டி விட்டாலே போதும்' என்கிற ரீதியில் பாடியிருக்கிறார். அதிலேயே முறையீட்டை ஸாரமாக வடித்துக் கொடுத்து விட்டார்! 'ரொம்ப தீனமாக, பக்ஷிக் குஞ்சு மாதிரி ஸ்வயமாக ஒன்றும் பண்ணிக்கொள்ளத் தெரியாமலிருக்கும் இந்த அம்மாளுக்கு அருள் மழையைக் கொட்டு' என்று சொல்ல வந்ததையும்கூட, 'அம்மாள்' என்று சொல்லாமலே வ்யங்கியமாகத் தெரிவித்திருப்பது ரஸமானது.

(முதல் துதியிலேயே பிற்கால உபதேசங்களின் வித்து)

(இதில் இரண்டு விஷயம் தெரிவிக்கணும். குழந்தையாக ஆசார்யாள் பாடிய இந்த முதல் ஸ்தோத்ரத்திலேயே பிற்காலத்தில் அவர் பெரிதாக 'டெவலப்' பண்ணிய இரண்டு கொள்கைகளுக்கு வித்து இருக்கிறது. ஒன்று—அவர் கர்மாவை பக்தியில் சேர்த்தது. 'கர்மா தானே பலன் தரவில்லை. ஈச்வரன்தான் பல தாதா. அவனுக்கே ஸகல கர்ம பலனையும் அர்ப்பணம் பண்ணிவிடு. அப்போதுதான் இந்தச் சின்னப் பலன் போய் சித்தி சுத்தி என்ற ஆத்மார்த்தமான பெரிய பலன் கிடைக்கும்' என்றது. இது கர்ம மார்க்கக் காரர்களை பக்தி மார்க்கத்தில் சேர்ப்பதற்கு சொன்னது. இன்னொன்று—பக்தி மார்க்கக்காரர்களிடம், 'என்னுது, உன்னுது' என்று தெய்வ பேதம் பார்க்காமல், ஏதோ ஒன்றிடம்தான் உனக்கு இயல்பாக பக்தி சுரக்கிறதென்பதால் அதையே நீ இஷ்ட மூர்த்தி என்று பக்தி பண்ணினாலும் மற்றவற்றைத் தாழ்த்தியாக நினைக்காமல், எல்லாம் ஏக பரமாத்மாவின் ரூப பேதங்களே என்ற உணர்ச்சியை ஏற்படுத்திக்கொள்' என்று சொன்னது. முதலில் இப்படி ஸ்வாமிகளுக்குள் பேதமில்லை, எல்லா ஸாமியும் ஒரே

Koviloor Digital Library

பரமாத்மாதான் என்று ஆரம்பித்தால்தான் அப்புறம் எல்லா ஆஸாமியுங்கூட அதுதான் என்ற ஞானத்துக்குப் போக முடியும். அதாவது, இது பக்தி மார்க்கக்காரர்களை ஞான மார்க்கத்தில் சேர்ப்பதற்காகச் சொன்னது. இந்த இரண்டு அபிப்ராயங்களையும் கனகதாரா ஸ்தோத்ரத்தில் பார்க்கிறோம்.

சாதகக் குஞ்சைச் சொல்லி ஸம்பத்து தாரை வேண்டியதற்கு அடுத்த ச்லோகத்தில்

இஷ்டா விசிஷ்ட மதயோபி யயா தயார்த்ர
த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டப-பதம் ஸுலபம் லபந்தே

என்று சொல்லுமிடத்தில் இஷ்டிகள் என்பதான யஜ்ஞ கர்மாக்களிலேயே உயர்ந்த அபிப்ராயத்தை வைத்து, அவற்றை ஸ்வர்க்க பலனை விரும்பிச் செய்கிறவர்களும் மஹாலக்ஷ்மியின் கருணைகடாக்ஷத்தால்தான் அந்தப் பலனை ஸுலபமாக அடைகிறார்களென்று சொல்கிறார். அவர்களுக்கு அப்படித் தெரியாமல் தங்கள் கர்மாவே பலன் தருகிறதென்று நினைத்தாலும், லக்ஷ்மி என்று ரூபம் கொடுத்துச் சொல்கிற பகவத் சக்திதான் அதை வாஸ்தவத்தில் பண்ணுவிக்கிறதென்று ஆசார்யாள் சொல்வது இங்கே ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

ஸகல தெய்வமும் ஏக பரமாத்மாவின் ரூப பேதங்களே என்று அவர் தெரிவிப்பது இதற்கு அடுத்த ச்லோகத்தில்:

கீர்தேவதேதி கருட-த்வஜ-ஸுந்தரீதி
சாகம்பரீதி சசி சேகர-வல்லபேதி ।
ஸ்ருஷ்டி-ஸ்திதி-ப்ரலய-கேலிஷு ஸம்ஸ்திதாயை
தஸ்யை நமஸ்-த்ரிபுவந-குரோஸ்-தருண்யை ||

ஒரே பரமாத்மா த்ரிமூர்த்திகளாகி ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹாரம் (ப்ரளயம்) என்று விளையாட்டுப் பண்ணும்போது ("கேலிஷு") அவர்களுக்குள்ளே பத்னி ரூபத்தில் ஒவ்வொரு சக்தியாக இருப்பது மஹாலக்ஷ்மியேதானென்று சொல்

Koviloor Digital Library

கிறார். அப்படியுள்ள சக்திகளின் பெயர்களை கீர்தேவதை, கருட த்வஜ ஸுந்தரி, சாகம்பரி, சசிசேகர வல்லபா என்கிறார். மூன்று மூர்த்திகளுக்கு நாலு சக்திகளைச் சொல்லி யிருக்கிறது! ஏன்?

ப்ரம்மா, விஷ்ணு, சிவன் என்கிறபடி முதலில் ப்ரம்ம பத்னி—'கீர்தேவதை' என்னும் வாக்தேவியான ஸரஸ்வதி; அடுத்தாற்போல் கருடக் கொடியுடைய மஹாவிஷ்ணுவின் ரூப லாவண்யம் மிக்க பத்னியான 'கருட த்வஜ ஸுந்தரி' (ஸ்தோத்ரத்தின் நேர் மூர்த்தியான லக்ஷ்மி); அப்புறம் ருத்ர பத்னிகளாக மட்டும் இரண்டு பேர் 'சாகம்பரி' என்றும் 'சசி சேகர வல்லபா' என்றும் இருக்கிறது!

சாகம்பரி யாரென்று தேவீ புராணங்களில் இருக்கிறது.* ஒரு பஞ்ச காலத்தில் அம்பாள் தன்னுடைய தேஹத்தி லிருந்தே கறிகாய்கள், கீரை வகைகள் எல்லாவற்றையும் முளைக்கப் பண்ணி ஜனங்கள் பறித்துச் சாப்பிடுமாறு க்ருபை பண்ணினாள். அப்போது அவளுக்கு ஏற்பட்ட பேர்தான் சாகம்பரி. இவளும் சிவனுடைய சக்தியே.

"ஸ்ருஷ்டி-ஸ்திதி-ப்ரளய" என்று சொல்லியபடி (ப்ரளய மான) ஸம்ஹாரத்துக்கு உதவி பண்ணாமல் ஸ்திதிக்கு உதவி செய்வதாக அல்லவா இவள் ஜனங்களுக்கு ஆஹாரத்தைக் கொடுத்து ரக்ஷித்திருக்கிறாள்? த்ரிமூர்த்திகளுக்கு த்ரிசக்திகள் என்றில்லாமல் நாலாவதாக ஒன்றை ஏன் இப்படிச் சொல்லணும்?

பொருத்தமாகத்தான் சொல்லியிருக்கிறார். ஜனங்களின் மனப்பான்மை ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். தனலக்ஷ்மி, தான்ய லக்ஷ்மி என்றெல்லாம் அஷ்ட லக்ஷ்மிகளை சொன்னாலும், ஜனங்கள் 'லக்ஷ்மி' என்றால் தனத்தைத்தான் நினைப்பார்களென்று அவருக்குத் தெரியும். ஆனால் ரூபாயைச் சாப்பிட முடியுமா? ஆனபடியால் சாப்பாடு போடுகிற

* சாகம்பரியின் கதை சற்று விரிவாக இனி வரவிருக்கும் நம் நூற்பகுதி களிலொன்றில் வெளியாகலாம்.

Koviloor Digital Library

அம்மாவாகத் லக்ஷ்மியைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் விடக் கூடாது என்று அவருக்கு இருந்தது. அதனால்தான் சாகம் பரியைச் சொன்னார். அப்புறம் ப்ரளயத்திற்கு ஸ்வாமியான ருத்ரனின் சக்தியாக 'சசி சேகர வல்லபா' என்றார். அப்படி யென்றால் சந்திரனைத் தலையில் வைத்துக்கொண்டிருப்பவரின் ப்ரிய பத்னி. ஸம்ஹார மூர்த்தியே மஹேச்வரனாக மாயா நாடகம் பண்ணும் போதும், ஸதா சிவனாக மோக்ஷா நுக்ரஹம் பண்ணும்போதும்கூட சசி சேகரராகத்தான் இருக்கிறார். அதனால் 'சசி சேகர வல்லபா' என்னும்போது ப்ரளய சக்தி, திரோதான* சக்தி, அநுக்ரஹ சக்தி எல்லாமும் அவளேதான் என்று வைத்துக்கொள்ளலாம். இவளேதான் ப்ரம்ம சக்தி, விஷ்ணு சக்தி ஆகியவர்களும் என்று ஆரம்பத்தில் சொல்லிவிட்டதால் பஞ்ச க்ருத்யங்களுக் கும்* மூலமான பரப்ரஹ்ம சக்தி ஒன்றுதான் இத்தனை மூர்த்தியுமாகியிருக்கிறது என்ற அத்வைதம் வந்து விடுகிறது.

லக்ஷ்மிதான் ஸரஸ்வதி, பார்வதி ஆகிய எல்லாரும் என்று இங்கே சொல்லிவிட்ட பிறகு சிவ-விஷ்ணுக்களை மட்டும் வித்யாஸம் மாதிரி விட்டுவிடலாமா? அதனால்தான் முடிக்கிற இடத்தில் 'த்ரிபுவந குரோஸ் தருணி' என்று சொன்னது. 'த்ரிபுவநங்களுக்கும் குருவாக இருக்கப் பட்டவர் மஹாவிஷ்ணு. அவருடைய ப்ரிய பத்னியான சக்தி லக்ஷ்மி' என்று அர்த்தம். தக்ஷிணாமூர்த்தியான மூல குரு ஸ்வரூபத்திலிருந்து அவதாரம் பண்ணினவர் மஹா விஷ்ணுவை குருவாகச் சொல்லும்போது சிவ-விஷ்ணு அபேதமும் வந்துவிடுகிறது. குருவின் சக்தி என்று லக்ஷ்மியை சொல்லும்போது அவள் ஏதோ பணம், கிணம் கொடுப்பவள் மட்டுமில்லை, ஞான சக்தியாகவுமிருக்கிறவள் என்று காட்டியதாகிறது.

---

* திரோதானம், பஞ்ச க்ருத்யம் முதலியவற்றின் விளக்கம் ''குருமூர்த்தி யும் த்ரிமூர்த்திகளும்'' எனும் உரையில் 'ருத்ரன்—சிவன் (சிவம், நடராஜா)—மஹேச்வரன்' என்ற பிரிவில் காணவும்.

Koviloor Digital Library

நம் குரு பரம்பரை நாராயணனிலிருந்துதானே ஆரம்பிக்கிறது? அதனால் 'த்ரி புவந குரு' என்றார். அஷ்டோத்தரங்களைப் பார்க்கும்போது சிவாஷ்டோத்தரம் மாதிரியே க்ருஷ்ணாஷ்டோத்தரம், ராமாஷ்டோத்தரம் ஆகியவற்றிலும் "ஜகத்குரவே நம : என்று வருகிறது.

குரு என்று—த்ரிபுவன குரு என்று—இங்கே ஆசார்யாள் சொல்லும்போது ஞானோபதேசம் பண்ணுபவர் என்றில்லாமல் மூவுலகத்திற்கும் பிதாவாக இருப்பவரென்றும் அர்த்தம் செய்யலாம். தாயார், தாயார் என்று லக்ஷ்மியைச் சொல்வதால் மூவுலகத் தகப்பனாரின் பத்னி என்று சொன்னதாகவும் கொள்ளலாம்.

லக்ஷ்மி அஷ்டோத்தரத்தில் "ப்ரஹ்ம-விஷ்ணு-சிவாத்மிகாயை நம :" என்று கடைசி நாமாவுக்கு இரண்டு நாமா முன்னால் வருவதன் தாத்பர்யத்தையே இந்த ச்லோகத்தில் சொல்லியிருக்கிறார்.

இதற்கு அடுத்த ச்லோகம் :

ச்ருத்யை நமோ(அ)ஸ்து சுப-கர்ம-பல-ப்ரஸூத்யை
ரத்யை நமோ(அ)ஸ்து ரமணீய-குணார்ணவாயை |
சக்த்யை நமோ(அ)ஸ்து சத-பத்ர-நிகேதநாயை
புஷ்ட்யை நமோஸ்து புருஷோத்தம-வல்லபாயை ||

ச்ருதிதான் ஆசார்யாளுக்கு மூச்சு. அவைதிகம், அரைகுறை வைதிகம் ஆகியவற்றை விரட்டி, சுத்தமான ச்ருதி மார்க்கத்தையே ஸ்தாபனம் செய்ய வந்தவரல்லவா? "ச்ருதி-ஸ்ம்ருதி-புராணாநாம் ஆலயம்" என்றே அல்லவா அவரை ஸ்தோத்ரிப்பது? அப்படிப்பட்ட ச்ருதி வடிவமாக, வேத ஸ்வரூபிணியாகத் தாயாரைச் சொல்லாமல் தாம் பண்ணிய முதல் ஸாஹித்யத்தை முடிப்பாரா? "ச்ருத்யை நமோஸ்து" என்று ஆரம்பிக்கிறார். ஞானாவதாரமானாலும் வைதிக கர்மாநுஷ்டானத்திற்கு அதற்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதில் பாடுபட்டவரல்லவா? அதனால் (லக்ஷ்மியை) ச்ருதி ஸ்வரூபமாகச் சொன்னவுடன், அதில்

Koviloor Digital Library

சொல்லியிருக்கும் சுபமான கர்மாநுஷ்டானங்களின் பலனைப் பிறப்பிக்கிறவள் அவள்தான் என்கிறார்: "சுப கர்ம பல ப்ரஸூத்யை". இங்கேயும் மீமாம்ஸகர்களுக்கு பதில் இருக்கிறது!

நல்ல குணங்களெல்லாம் ஸமுத்ரம் மாதிரி நிறைந்து இன்பங்களின் உருவமாகத் தாயார் இருப்பதை "ரத்யை நமோஸ்து, ரமணீய குணார்ணவாயை" என்று சொல்கிறார்.

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக நமக்கு ச்ருதி வேண்டும். நாம் செய்யும் கர்மங்கள் ச்ருதி ப்ரயுக்தமாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவை சுப கர்மாவாக இருக்கும். அப்படிப்பட்ட கர்மாவினாலேயே இன்பங்களை—உலக இன்பங்களோ, ஆத்மார்த்தமான இன்பங்களோ, எதுவானாலும்—பெறவேண்டும்.

குணம்-கர்மம் என்று இரண்டு. ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டவை. "குண-கர்மங்களாலேயே நான்கு வர்ணங்களை (ஜாதிகளை) ஸ்ருஷ்டித்திருக்கிறேன்" என்று கீதையில் (பகவான்) சொல்கிறார்*. குணப்படியே கர்மா போகும். அதை சாஸ்த்ரத்தில் வகுத்துக் கொடுத்துள்ளபடி செய்து ஈச்வரார்ப்பணம் செய்தால் அந்த சுப கர்ம விசேஷத்தால் எப்படிப்பட்ட குணமானாலும் அது பக்வமாக ஆகும். முதலில் 'சுப கர்ம பலனைத் தருபவள்' என்று சொல்லி, அடுத்தாற்போல 'நல்ல குணங்களுக்கு ஸமுத்ரமாயிருப்பவள்' என்று ஒன்றோடொன்று பிணைத்துச் சொல்லியிருக்கிறார்.

அப்புறம், சக்திதானே எல்லாவற்றுக்கும் தேவை? அதுவும் அவள்தானென்று சொல்லி நமஸ்காரம் தெரிவிக்கிறார்: "சக்த்யை நமோஸ்து". 'சத பத்ர நிகேதனா' என்றால் கமலாஸனை, தாமரைப் பூவுக்குள் உட்கார்ந்திருப்பவள். 'சத பத்ரம்' என்றால் நூறு இதழ் (கொண்ட தாமரை) என்று

---

* IV. 13

Koviloor Digital Library

கணக்காக நினைக்க வேண்டாம். சதம் என்பது எந்தப் பெரிய நம்பரையும் குறிப்பது. ஸஹஸ்ர தள பத்மம் என்றும் சொல்வதுண்டு. நம் சிரஸில் பராசக்தி ஸஹஸ்ர தள பத்மத்தில்தான் பரசிவத்தோடு கலந்தவளாக இருக்கிறாள் என்று குண்டலிநீ யோகத்தில் இருக்கிறது. இங்கே ஆசார்யாளும் பத்மவாஸினியாக லக்ஷ்மியைச் சொல்லும்போது "சக்தி"— "சக்த்யை நமோஸ்து:"— என்றே சொல்கிறார்!

"புஷ்ட்யை நமோஸ்து". போஷிப்பினால் ஏற்படும் நிறைவே புஷ்டி. பரிபாலன மூர்த்தியின் பத்னியாக, உலகத்துக் குழந்தைகளுக்கெல்லாம் தாயாராகப் போஷித்து வளர்ப்பவள் அவள்தான்.

ரதி (இன்பம்), சக்தி, புஷ்டி எல்லாவற்றையும் தரும் மந்த்ரங்கள் ச்ருதியில்தான் அடங்கியிருக்கின்றன. அதனால் முதலில் அதைச் சொல்லி அப்புறம் இவற்றைச் சொன்னார். நம்முடைய திறமை (சக்தி), நிறைவு (புஷ்டி), ஆனந்த அநுபோகங்கள் (ரதி) ஆகிய எல்லாம் வேத வழியில் ஏற்பட்டதாக இருக்க வேண்டுமென்று (இப்படிச்) சொன்னார்.

'ஒவ்வொரு ப்ராணிக்குள்ளேயும் ஆனந்த ஸ்வரூபமாக இருப்பது நீதான்! ஒவ்வொரு ப்ராணிக்குள்ளேயும் சக்தி ஸ்வரூபமாக இருக்கிறது நீதான்! நிறைவு என்கிறதாக இருக்கிறதும் நீதான்!' என்று சொல்லி, ஒவ்வொன்றுக்கும் 'நமோஸ்து, நமோஸ்து' என்று நமஸ்காரம் தெரிவிக்கிறார்.

முடிவாக மஹாவிஷ்ணுவுக்கே உரிய அஸாதாரண நாமாவான புருஷோத்தமன்* என்பதைச் சொல்லி அவனுடைய சக்தியாக அவள் இருப்பதை "புருஷோத்தம வல்லபாயை" என்கிறார்.

பிற்காலத்தில் பெரிய ஸித்தாந்தமாக டெவலப் செய்த கருத்துக்களையும் உள்ளே வைத்து குழந்தையாசார்யாள் இப்படிப் பாடி முடித்தார்.)

---

*புருஷோத்தம நாமம் குறித்து பக். 440-1 பார்க்க.

Koviloor Digital Library

பாடி முடித்ததுதான் தாமஸம்! மஹாலக்ஷ்மி அந்தக் குடிசையைச் சுற்றிப் பாழாயிருந்த அத்ருதி முழுக்க ஸ்வர்ணத்தாலான நெல்லிக் கனிகளாகவே ஒரு முஹூர்த்த காலம் வர்ஷித்துவிட்டாள்! பளபளவென்று வர்ஷித்து விட்டாள்!

அவதாரக் குழந்தைக்குப் போட்ட ஒரு அழுகல் நெல்லிப் பழம் அனந்த கோடி மடங்கு தங்கப் பழங்களாகத் திரும்பின!

முதலில் ப்ராம்மண ஸ்த்ரீ கண்ணீர் தாரையைக் கொட்டினாள். அதைப் பார்த்து ஆசார்யாளின் வாக்கிலிருந்து ஸ்தோத்ர தாரை கொட்டிற்று. அதைக் கேட்டு லக்ஷ்மி கனகதாரையைக் கொட்டி விட்டாள்.

அந்த ஸ்தோத்ரத்துக்குக் கனகதாரா ஸ்தோத்ரம் என்றே பேர் ஏற்பட்டது. '(கனகதாரா) ஸ்தவம்' என்றும் சொல்வார்கள். ஸ்தவம் என்றாலும் ஸ்தோத்ரந்தான்.

ஆசார்யாள் மனஸால் நினைத்தாலே போதும், லக்ஷ்மி அதன்படிப் பண்ணியிருப்பாள். ஆனாலும் அவர் வாக்கினால் இப்படி ஒரு ஸ்துதி வந்து, தான் கேட்டு ஸந்தோஷப் படணும்,—தான் ஸந்தோஷப்படுவது மாத்ரமில்லை, ஜனங்களெல்லாம் ஸந்தோஷப் படணும்; அதைப் பாராயணம் பண்ணி அவர்களும் பொருள் கஷ்டம் நீங்கி, கர்மக் கஷ்டமும் நீங்கி ஸுபிக்ஷமாக இருக்கணும்—என்றே திவ்ய லீலையாக நடத்தினாள். "த்ரவிணாம்புதாராம் தத்யாத்" என்று சொன்னவுடனேகூட அவள் கனகதாரையைக் கொட்டிவிடாமல், அப்புறமும் அநேக ச்லோகங்கள் அழகு அழகாக அவர் செய்த பிற்பாடே அநுக்ரஹம் பண்ணினாள்.

நாமும் இந்த ஸ்தோத்ரதைச் சொல்லி தாரித்ரிய நிவ்ருத்தியும், "கர்ம கர்மம்" என்று சொன்ன பாப தாபத்திலிருந்து நிவ்ருத்தியும் பெறுவோம்! ப்ராம்மண தம்பதியை சாக்காகக் காட்டி நம் எல்லாருக்குமென்றே ஆசார்யாள் இந்த ஸ்தோத்ரத்தை அநுக்ரஹம் பண்ணியிருக்கிறார்.

Koviloor Digital Library

ஐஹிகமாக (இக வாழ்க்கையில்) ஒரு பலனைத் தருகிற ஸ்தோத்ரம் என்றால் அது 'பாபுல'ராகத்தானிருக்கும். அப்படி ஆசார்ய க்ரந்தங்களில் 'கனகதாரா ஸ்தவம்' ப்ரஸித்தமாக இருக்கிறது. ஆனாலும் இஹத்தோடு பரத்தையும் அதில் ஆசார்யாள் குழைத்துத்தான் கொடுத்திருக்கிறார். இதே போல, ரோக நிவாரணம் தருகிறதென்பதால் 'ஸுப்ரஹ்மண்ய புஜங்க'மும், ஸகல கார்ய ஸித்திக்குமானது என்பதால் 'ஸௌந்தர்ய லஹரி'யும் famous-ஆக இருக்கின்றன. அவையெல்லாமும் அதோடுகூட, ஆத்மாவைக் கடைத்தேற்றுவதாகவும் இருப்பவை. ஆச்சர்யமென்னவென்றால், ஒரே வைராக்யமாக உபதேசம் பண்ணும் "பஜ கோவிந்தம்"தான் எல்லாவற்றைக் காட்டிலும் ப்ரஸித்தி பெற்றிருப்பதாகும்! மற்றதெல்லாம் ஆசார்யாள் நமக்காகச் கொஞ்சம் விட்டுக் கொடுத்தும் பண்ணியவை. "பஜ கோவிந்தம்"தான் அவர் மனஸை அப்படியே பூர்ணமாக ப்ரதிபலிப்பது. அந்த மனஸின் மஹிமைதான் அந்த ஸ்தோத்ரத்திற்கு ஏற்பட்டிருக்கும் ப்ரஸித்தி!

பவுன் மழையாகக் கொட்டிற்று. ஆசார்யாள் அதில் ஒரு மணிகூடத் தொடாமல் அந்த ப்ராம்மண தம்பதிக்கென்றே அநுக்ரஹித்துவிட்டுப் போய்விட்டார்.

பொன்மழை பெற்ற வீடு காலடிக்குக் கொஞ்ச தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் இருந்திருக்கிறது. அழுகல் பழத்தைப் போட்டுத் தங்கப் பழங்களாகப் பெற்றவர்கள் வாழ்ந்த அந்த இடத்தை இப்போது 'பழம் தோட்டம்' என்றே சொல்கிறார்கள். அங்கே 'ஸ்வர்ணத்து மனை' என்றே ஒரு குடும்பம் இருக்கிறது. அதைச் சேர்ந்தவர்கள் கனகதாரை பெற்ற தம்பதியின் வம்சத்தில் வந்தவர்களென்று நம்பிக்கை இருக்கிறது.

Koviloor Digital Library

மாறி ஓடிய ஆறு!

எட்டாவது வயஸில் வித்யாப்யாஸம் பூர்த்தி பண்ணி அகத்துக்கு ஆசார்யாள் திரும்பினர்.

தகப்பனர் காலமாகி விட்டார்.*

தாயாருக்கு ஆதரவாக ஆசார்யாள் கொஞ்சநாள் இருந்து வந்தார். தாயாருக்கு எவ்வளவு முக்யமான ஸ்தானம் தரவேண்டும், அவளிடம் எவ்வளவு அன்பு காட்ட வேண்டும் என்று அவர் நடத்திக் காட்டியிருக்கிறுர். வயஸுூம் ஆகி—ரொம்ப வருஷம் புத்ர பாக்யமில்லாமலிருந்து அப்புறக் வேண்டிக்கொண்டுதானே ஆசார்யாளைப் பெற்றுள்?—பதியையும் இழந்திருந்த அம்மாவுக்கு வேண்டிய பணிவிடைகள் பண்ணினர்.

ஒரு நாள் அவளுக்கு ரொம்ப அசக்தமாக இருந்தது. அப்போதெல்லாம் ஆல்வாய்ப்புழை இப்போது போல் காலடியிலேயே ஓடிக்கொண்டிருக்கவில்லை. சிறிது தூரம் தள்ளி ஓடிக்கொண்டிருந்தது. புண்ய தீர்த்தம் என்பதால் அந்த அம்மாள் அங்கே போய்த்தான் தினமும் ஸ்நானம் செய்து வருவது வழக்கம். இப்போது தேஹ அஸௌக்யத்தால் போகமுடியவில்லை. வருத்தப்பட்டாள். "இன்னிக்குப் புண்யகாலம். புண்ய தீர்த்த ஸ்நானம் பண்ணமுடியாமலிருக்கே!" என்று குறைப்பட்டுக் கொண்டாள்.

"நான் ப்ரார்த்தனை பண்ணுகிறேன்" என்று ஆசார்யாள் சொல்லி அப்படியே செய்தார்.

ஈச்வராவதாரமானுலும் பக்தராகவே நடித்த அவதாரம் இது. அதனுல்தான் முன்பு லக்ஷ்மியிடம் ப்ரார்த்தனை பண்ணினர்.

'அம்மா உடம்பு ஸரியாகி நதிக்குப் போகணும் என்று ப்ரார்த்தித்தால் அவளொருத்திக்கு நன்மை செய்ததோடு

* சிவகுரு சிவபதம் அடைந்தது சங்கரரின் உபநயனத்திற்கு முன்பு என்றும், பின்பு என்றும் இருவிதமாக நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

முடிந்துவிடும். அதற்குப் பதில் எங்கேயோ ஜன நடமாட்டமில்லாத காட்டு வழியில் போய்க்கொண்டிருக்கும் நதியே இந்த க்ராமம் வழியாகப் போகும்படி ப்ரார்த்தித்துக் கொண்டால் எல்லா ஜனங்களுக்கும் நல்லதாகுமே!' என்று நினைத்தார்.

நதியை க்ருஹத்துக்குக் கிட்டே வரும்படி வேண்டிக் கொண்டார்.

அப்படியே வந்தது!

வரும் வழியில் ஒரு க்ருஷ்ணன் கோவில் இருந்தது. நதி தடம் மாறி வந்ததில் கோவிலுக்கு ஜீர்ணம் ஏற்பட்டு விட்டது.

எந்த நல்லதானாலும் கஷ்டமாகவும் கொஞ்சம் கலந்து தானே வருவதாயிருக்கிறது?

ஒரு ப்ராம்மணக் குழந்தை ரொம்பச் சின்ன வயஸிலேயே ஸகல வித்யைகளையும் ஸ்வீகரித்தது, தாயாருக்காக நதியைத் திருப்பிவிட்டது முதலான விஷயங்கள் சுற்றுப் புறங்களிலெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்து, அந்த பால்யத்திலேயே அவருக்கு நிரம்ப மரியாதை ஏற்பட்டது. ஸமாசாரங்கள் அந்த ப்ரதேசத்து ராஜாவின் காதுக்குப் போயிற்று. தர்சனம் செய்ய வந்தான். ஆசார்யாள் அவனிடம் சொல்லிக் கோவிலுக்கு ஜீர்ணோத்தாரணம் பண்ணுவித்தார். லோகத்திற்கே தர்மோத்தாரணம் செய்ய வந்து, கணக்கில்லாத ஆலயங்களில் ஸாந்நித்யத்தைப் புதுப்பித்துக் கொடுத்து, வைதிக ஆராதனையை ஏற்படுத்தியவர் ஆசார்யாள். அதற்கு பால்யத்திலேயே தம்முடைய பிறந்த ஊரில் இப்படி இனகுரேஷன் நடத்திவிட்டார்!

அந்த க்ருஷ்ணன் கோவில் இப்பவும் காலடியில் இருக்கிறது. ஆற்றுப் படுகையிலிருந்து கொஞ்சம் மேடான பூமியிலிருக்கிறது.

Koviloor Digital Library

ஆசார்யாள் காலடியை விட்டு ஸந்நியாஸியாகப் புறப்படும்போதுதான் கோவில் ஜீர்ணோத்தாரணம் பண்ணி க்ருஷ்ணரை மறுபடி ப்ரதிஷ்டை பண்ணினதாகவும் கதை சொல்வதுண்டு.

இப்போது காலடியில் நதி ஓடுவதற்குக் கொஞ்ச தூரம் தள்ளியே அங்கே ஒரு காலத்தில் அது ஓடியதற்குத் தடயம் தெரிகிறதென்று சொல்கிறார்கள்.

உலகப் பணி அழைத்தது!
மனித தர்மமும், அவதார மர்மமும்!

லோகத்துக்கெல்லாம் பண்ணவேண்டிய கார்யத்தை ஆரம்பித்துவிட வேண்டுமென்று ஆசார்யாள் நினைத்தார். பிறந்தது முதற்கொண்டே அடி மனஸில் அந்த எண்ணம்தான் அவருக்கு ஸதாகாலமும் இருந்து வந்தது. ஆனாலும் 'ப்ரைவேட் லைஃப்' மாதிரி ப்ரம்மசர்ய நியமங்களைப் பண்ணுவதும், மாத்ரு சுச்ரூஷை பண்ணிக்கொண்டிருப்பதும்கூட லோகத்திற்குப் பாடமாகத்தானே என்பதால் செய்துவந்தார். அதற்காக உலகம் பூரா அம்மாக்கள் இருக்கும்போது இந்த ஒரு அம்மாவுக்கே பணி செய்து கொண்டிருந்தால் போதுமா என்று நினைக்க ஆரம்பித்தார். 'நாம் ஒரு தாயாருக்கு மட்டும் குழந்தை இல்லை. லோகத்துக்குக் குழந்தை. லோகம் பூராவுக்கும் செய்யவேண்டியதை ஒரு தாயாரை முன்னிட்டு எத்தனை காலம் ஒத்திப் போட்டுக்கொண்டே போவது? லோகம் ஒரேயடியாகக் கெட்டுப் போயிருக்கிறதென்றுதானே வந்தோம்? ஜ்வரம் முற்றிக்கொண்டே போகிறபோது மருந்து கொடுக்கத் தாமஸம் செய்யலாமா?' என்று நினைத்தார்.

என்ன மருந்து? ஒன்றும் பண்ணாமல் சும்மா இருக்கும் மருந்து! அந்த நிலையை அடைவிக்கும் அத்வைத மருந்து! 'எல்லோருக்கும் சும்மா இருக்கிற தத்வத்தைச் சொல்வதற்காக ஒரு நிமிஷம்கூடச் சும்மாயில்லாமல் சுற்றவேண்டு

Koviloor Digital Library

மென்று வந்தோம்! எத்தனை காலம் இந்த க்ராமத்தையே சுற்றி வந்துகொண்டிருப்பது?' என்று மனஸிலே ஒரு முடிவு பண்ணிவிட்டார்.

தாயாருக்கு ஒரே குழந்தை என்பதால் அவளுக்கு ஆனதைச் செய்யாமலிருந்தால் எவ்வளவு தப்பு, அவள் எவ்வளவு கஷ்டப்படுவாள் என்று கொஞ்ச காலம் மாத்ரு ஸேவை செய்தார். அப்புறம் லோகத்தின் கஷ்டத்தைப் பார்த்து அதைத் தீர்ப்பதற்கானதைச் செய்யாமலிருப்பது எவ்வளவு தப்பு என்று நினைத்து அம்மாவை விட்டு, வீடு வாசலை விட்டு ஸந்நியாஸியாகப்] புறப்பட முடிவு பண்ணினர்.

'வயஸானவள், விதந்து, இந்த ஒரு பிள்ளையை விட்டால் வேறே நாதி இல்லாதவள்—அவளுக்குக் குழந்தையாகச் செய்யவேண்டியதைச் செய்யாமல் விட்டுவிட்டுப் போகிறவர் லோகத்துக்குக் குழந்தை என்று மட்டும் அத்தனை பேருக்கும் என்ன ஸாதித்துவிடமுடியும்?' என்று தோன்றலாம்.

மநுஷ்ய ரீதியில் பார்த்தால் ஸந்தேஹந்தான் வரும்.

ஆனல் ஈச்வர லீலை, அவதாரம் என்று வரும்போது நமக்குப் புரியாமல், பதில் சொல்லத் தெரியாமல் அநேகம் நடக்கிறது. அவனுக்குத்தானே தெரியும், யாருக்கு என்ன கர்மம், எவருக்கு எத்தனை நாள் எப்படி (தன் அவதார காலத்தில்) பண்ணனும், எங்கே கருணை காட்டனும், எங்கே கருணை இல்லாத மாதிரி லோகத்துக்குத் தோன்றினுலுங்கூட அப்படித்தான் நிர்தாக்ஷிண்யம் மாதிரிப் பண்ணனும்—என்பதெல்லாம்? அப்பா, அம்மா, பெண்டாட்டி, பிள்ளை என்று தனி மநுஷர்களுக்காகவா அவதரிப்பது? இல்லையோல்லியோ? லோகத்துக்காகத்தான் அவதாரம். அதிலே ஒரொரு தனி மநுஷ்யாளுக்கும் அவர்களுடைய பூர்வ புண்யத்திற்காக, தபஸுக்காக, ப்ரார்த்தனைக்காகப் புத்ரன் என்றும், பர்த்தா என்றும், ஸகா

Koviloor Digital Library

என்றும் கொஞ்சம் பண்ணுவதுண்டு; அவ்வளவுதான். தசரதருடைய புத்ரகாமேஷ்டிக்காகப் புத்ரனுகப் பிறந்து ராமர் கொஞ்சகாலம் அவருடைய பிள்ளையாக வளர்ந்தார். அப்புறம் அவதார கார்யம் கூப்பிட்டுவிட்டது. தசரதருடைய!புண்யமும் தீர்ந்து போயிருந்தது. அதனுல், நமக்குப் பார்த்தால் ரொம்பக் கடுமையாகத்தான் தோன்றினுலும், அவர் அழுது அழுது ப்ராணனை விட்டாலும் ஸரி என்று ராமர் வனவாஸத்துக்குப் போய்விட்டார். ப்ராணனை விட்டதுதான் நமக்குத் தெரியும். அப்புறம் அவருக்கு பகவான் பரலோகத்தில் எப்படியெல்லாம் அநுக்ரஹம் பண்ணியிருப்பானே? அது தெரியுமா?

சிவகுரு - ஆர்யாம்பாளின் தபஸுக்காக ஆசார்யாள் அவர்களுடைய புத்ரனுக அவதாரம் பண்ணினுர். இந்த லோகத்தில் அவரைப் பிள்ளை என்று கொஞ்சும் புண்யம் தகப்பனுருக்குக் கொஞ்சம் வருஷத்திலேயே தீர்ந்துவிட்டதால் காலகதி அடைந்துவிட்டார். அப்புறம் சிவலோகத்துக்குப் போனுரா, அத்வைதமாகக் கலந்துவிட்டாரா என்பது நமக்குத் தெயாது. ஆகையினுல் அவருடைய ஆயுஸை இப்படிப் பறித்திருக்கக் கூடாது என்று சொல்ல நமக்கு வாயில்லை.

அந்த அம்மாளுக்கு அவளுடைய கர்மாநுஸாரம் இன்னம் பல தினுஸாகப் புடம்போட்டுக் கடைசியில் ஆசார்யாள் கையாலேயே வைகுண்ட ப்ராப்தி உண்டாக்கணுமென்று ஈச்வரன் கணக்கு வைத்திருப்பான் போலிருக்கிறது! அதனுல் இப்போது பிரிந்துதான் போகணுமென்று அவர் மனஸைக் கெட்டிப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

அவதாரமென்றுல் பேருக்கு ஒரு மநுஷ்ய தம்பதிக்குக் குழந்தை மாதிரி வருவதுதானே? அதனுல் ஸ்ட்ரிக்டாக நம் ரூல்களை அவர்களுக்கும் (அவதாரங்களுக்கும்) பொருத்திப் பார்ப்பதற்கில்லை. மஹா பெரிய லோக கல்யாண

Koviloor Digital Library

கார்யம் காத்துக்கொண்டிருக்கும்போது, அம்மா அப்பா என்று ஸொந்த உறவைப் பார்க்காமல், ஒருத்தர் இரண்டு பேருக்குத் தன்னால் கஷ்டம் வந்தாலும் வரட்டும் என்று புறப்பட்டால் அதைக் கருணை, த்யாகம் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும். இவர்களும் (அப்பா, அம்மா முதலானவர்களும்) அவர்களை (அவதாரமாக வந்தவர்களை) லோகத்திற்காகத் த்யாகம் பண்ணிப் பெரிய புண்யத்தை ஸம்பாதிக்கவே இப்படி நடப்பது என்று வைத்துக்கொள்ளலாம்.

இவர் ஸந்நியாஸியாகப் போகவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தாரென்றால், தாயாரும் பந்துக்களுமோ கல்யாணம் பண்ணிவைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார்கள்! குருகுலவாஸம் முடிந்து வந்தவுடன் ப்ரஹ்மசர்யத்திலிருந்து அடுத்த ஆச்ரமத்திற்கு ஏற்றிவிடுவதே வழக்கம். இவர் பன்னிரண்டு வருஷத்தில் படித்து முடிக்கவேண்டியதை மூன்று வருஷத்தில் முடித்துவிட்டுக் குழந்தையாகவே திரும்பியிருந்தாரே என்றால், அந்த நாளில் பால்ய விவாஹமும் உண்டுதானே? குழந்தைகளுக்குக் கல்யாணம் பண்ணிவிடுவது, அப்புறம் அதுகள்பாட்டுக்கு மனஸில் விகாரமில்லாமல் பிள்ளை தன் வீட்டோடு இருப்பது, பெண்ணும் பிறந்தகத்திலேயே இருப்பது, 'பெரியவ'ளான அப்புறம் புக்ககம் வந்து குடித்தனம் ஆரம்பிப்பது என்று நடந்து வந்தது.

இரண்டு பக்கத்திலே இரண்டு தினுஸான உத்தேசங்கள், கல்யாணமென்றும், ஸந்நியாஸமென்றும் இருந்து வந்தன! அவதார உத்தேசப்படிதானே நடக்கும்?

தாய்க்குமேல் தெய்வமில்லை, அவள் உத்தரவுக்குமேல் சாஸ்த்ரமில்லை என்று சாஸ்த்ரமே சொல்கிறது. சாஸ்த்ரங்களை நிலைநாட்டவே ஆசார்யாளவதாரம். அதற்காக அவர் அம்மா இஷ்டப்படி கல்யாணம் பண்ணிக்கொண்டு அகத்தோடு இருந்துவிட்டால் ஆசார்யாளாகவே ஆக முடியாதே! ஸ்வாமி மநுஷ்ராக வந்தால் இப்படியெல்லாம்

Koviloor Digital Library

ஏற்படுகிறது! அப்போது அவர் என்ன பண்ணுகிறாரோ அதுதான் அவதார தர்மம்.

ஒரு பிள்ளை அவனுடைய ஆதீனத்திலேயே தாயார் இருக்கும்போது அவனுடைய அநுமதி இல்லாமல் ஸந்நியாஸியாகக் கூடாது. மாதா பிதாக்களோ, பத்னியோ யார் இருந்தாலும் அவர்களுக்கு ஒரு ஏற்பாடு பண்ணிவைத்து, அவர்களுடைய ஸம்மதத்துடன்தான் வீட்டை விட்டுப் போகலாம். இப்படித்தான் சாஸ்த்ரம். 'இதையாவது நாம் உதாரணமாகப் பண்ணிக்காட்ட வேண்டும்' என்று ஆசார்யாள் நினைத்தார். ஒரே வைராக்ய மாக க்ஷணத்தில் ஏற்பட்டு, திட்டம் கிட்டம் போட முடியாமல் ஆச்ரமம் வாங்கிக்கொள்வது வேறே விஷயம். இப்போது இவர் நன்றாகத் திட்டம் போட்டுத்தானே அவதாரம் பண்ணியிருந்தது? அவதாரத்தில் ஒவ்வொரு கார்யமும் பண்ணியது? அதனால் தாயாரின் அநுமதி பெற்றே ஸந்நியாஸி ஆவதென்று நினைத்தார். 'எப்படிக் கேட்பது? கல்யாணம், கல்யாணம் என்பவளிடம் ஸந்நியாஸம் என்றால் ரொம்ப துக்கப்படுவாளே!' என்று நினைத்தார். 'ஸமயம் வரட்டும், வரும். அப்போ சொல்லிக்கலாம்' என்று உத்தேசத்தை உள்ளுக்குள்ளேயே வைத்துக்கொண்டிருந்தார்.

துறவியானார்!

கிட்டே வந்துவிட்ட நதியில் ஒருநாள் தாயாருக்கு ஸ்நானம் பண்ணி வைத்தார். அப்புறம் தாமும் ஸ்நானம் பண்ண இறங்கினார்.

அப்போது அவர் காலை ஒரு முதலை பிடித்துக் கொண்டு விட்டது. (இப்போதுங்கூட அந்தத் துறைக்கு 'முதலைக் கடவு' என்றே பேர் இருக்கிறது.)

Koviloor Digital Library

கரையேறியிருந்த தாயார் பரிதவித்துப்போய் விட்டாள். பர்த்தா காலமாகி விட்டார், ஏக புத்ரனுக்கு இப்படி ஆபத்து என்றால் ஒரு ஸ்த்ரீக்கு எப்படியிருக்கும்?

ஆசார்யாளானால், 'இதுதான் நாம் எதிர்பார்த்த ஸமயம்' என்று அவளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார். "முதலை வாயிலிருந்து மீளுவது நடக்காத காரியம். இது ஸஹஜமான சாவில்லை. துர்மரணம். அபம்ருத்யுவுக்கு ஆளானவர்களின் ஆவி படுகிற கஷ்டம் எனக்கு உண்டாகும். உனக்கும் புத்ரகர்மாவினால் ஏற்படும் ஸத்கதி கிடைக்காது. இப்போது, எனக்கு ஒன்று தோன்றுகிறது—இதிலிருந்து மீளுவதற்கு வழி ஏற்பட்டாலும் ஏற்படும்படியாக ஒன்றுதோன்றுகிறது. உனக்கும் அது ஸம்மதமானால் அப்படிப் பண்ணுகிறேன். அப்போது எனக்கும் அபம்ருத்யு தோஷம் வராது. உனக்கும் ஸத்கதி கிடைக்கும். என்னவென்றால்.........

"இப்போது நான் ஸந்நியாஸாச்ரமம் வாங்கிக் கொண்டால் வேறே ஜன்மா வந்து விட்டது போலாகும். அப்போது இந்த ஜன்மாவுக்கு ப்ராரப்தமாக ஏற்பட்ட மரணமும் விலகிவிடலாம். காலை இழுக்கும் முதலை விட்டுவிடலாம். ஒருத்தன் ஸந்நியாஸியானால் அவனுடைய இருபத்தோரு முன் தலைமுறைக்காரர்களுக்கு ஸத்கதி கிடைத்து விடும். அதனால் உனக்கும் அப்படிக் கிடைக்கும்.

"முதலை விடாமல் மரணமே ஏற்பட்டாலும் ஸந்நியாஸியாகிவிட்டால் அது துர்மரணம் என்று ஆகி ஆவியாய் திரியப் பண்ணாது.

"ஆகையால் எப்படிப் பார்த்தாலும் அதுதான் வழியென்று தோன்றுகிறது.

"ஜலத்திலிருந்து கொண்டுதான் ப்ரைஷ மந்த்ரம் (துறவற தீக்ஷை மேற்கொள்வதற்கான மந்த்ரம்) சொல்லி, மனஸினால் எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். தற்செயலாக நான் ஜல மத்தியிலேயே இருக்கிறேன்,

Koviloor Digital Library

"இந்த ஸந்தர்பத்தை விட்டுவிட்டால் முதலை முழுங்குவது தவிர வேறே என்னவும் நடப்பதற்கில்லை. எனக்கும் துர்மரணம், உனக்கும் ஸத்கதி இல்லை என்றுதான் முடிந்துவிடும். அதனால் இதுதான் வழியென்று அபிப்ராயப் படுகிறேன். ஆனாலும் உன் அநுமதி இல்லாமல் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்வதற்கு எனக்கு உரிமையில்லை. அதனால் நீ தான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்" என்று சொன்னார்.

'எட்டு வயஸுக் குழந்தையை ஸந்நியாஸியாகப் போ என்று சொல்வதா என்று பார்த்தால், இல்லாவிட்டால் முதலை அல்லவா நிச்சயமாக இழுத்துக்கொண்டு போய் விடும்?' என்று அந்த அம்மாள் குழம்பினாள். 'தன்னோடு கூட வாஸம் பண்ணாவிட்டாலும் உயிரை வைத்துக்கொண்டு ["உசிரை வெச்சுண்டு" என்று ஒரு தாயின் பரிவுடன் கூறுகிறார்கள்] எங்கேயாவது ஸந்நியாஸியாக இருக்கட்டும்; கண்ணாலேயாவது எப்போதாவது பார்க்கலாம்; பார்க்கா விட்டால்கூட ஸரி, எங்கேயாவது குழந்தை இருந்து கொண்டிருந்தால் போதும்' என்று நினைத்தாள்.

ஆனாலும் 'ஸந்நியாஸம் வாங்கிக்கோ!' என்று சொல்ல நா வரவில்லை. "உனக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படியே பண்ணிக்கொள்ளு" என்று சொன்னாள்.

இப்படிச் சொல்வதா, அப்படிச் சொல்வதா என்று குழப்பமாக, dilemma என்கிறார்களே, அப்படி அந்த அம்மாளுக்கு ஏற்பட்டது இது இரண்டாம் தடவை. இதற்கு முந்தி, முதல் 'டைலம்மா' ஆசார்யாளுடைய பிறப்பைப் பற்றி ஏற்பட்டது. "மந்தர்களாக, ஆனால் தீர்க்காயுஸோடு நூறு பிள்ளைகளா? மஹா மேதையாக, ஆனால் அல்பாயுஸாக ஒரே பிள்ளையா? எது வேண்டும்?" என்று ஸ்வாமி கேட்டது முதல் 'டைலம்மா'! அப்போது என்ன சொன்னாள்? "உங்கள் இஷ்டப்படியே பண்ணிக்கோங்கோ!" என்றுதானே சொன்னாள்? இப்போது அவருடைய இறப்பைக் குறித்ததாக

Koviloor Digital Library

இரண்டாவது 'டைலம்மா' ஏற்பட்டபோதும் அதே பதிலைச் சொன்னாள்!

'ஒருவேளை அப்போது ஸ்வாமி சொன்ன அல்பாயுஸ் காலம் இப்போதுதான் முடிவதாயிருக்குமோ என்னவோ? இப்போது நாம் எதையாவது சொல்லிவிடாமல், அவருக்கே விட்டுவிட்டால் மனஸை மாற்றிக்கொண்டு ஆயுஸை நீடித்தாலும் நீடிக்கக்கூடும்' என்று நினைத்துச் சொன்னாள்.

"நீ என்ன செய்தாலும் ஸரி" என்று அவள் சொல்லி விட்டதால் தாயாரின் அநுமதி இல்லாமலில்லை என்று ஆகி விட்டது! இதுதானே அவருக்கு வேண்டியிருந்தது? அதனால் இது அர்த்தாங்கீகாரம்தான் (முழுச் சம்மதமாயில்லாத பாதிச் சம்மதம்தான்) என்று எடுத்துக்கொள்ளாமல், அநுமதி கிடைத்துவிட்டதாகவே வைத்துக்கொண்டு,

ப்ரைஷோச்சாரணம் பண்ணி ஸந்நியாஸாச்ரமம் வாங்கிக்கொண்டு விட்டார்.

'தன்னால் ஒரு ப்ராணிக்கும் ஒருவித பயமும் உண்டாகப் படாது' என்பதாகப் பரம ப்ரேமையைத் தெரிவிப்பது அந்த (ப்ரைஷ) மந்த்ரம். ஸந்நியாஸி என்றால் அவனைப் பார்த்து ஒரு ப்ராணி பயப்படக் கூடாது. ஜீவகுலம் முழுதற்கும் அவனைப் பார்க்கிறபோதே ஆனந்தம் ஏற்பட வேண்டும். க்ருஹஸ்தன் அவனுடைய தர்மத்தை உத்தேசித்துப் பல பேரை வேலை வாங்குவதில் விரட்டியடிக்க வேண்டியும் வரும், தண்டிக்கும்படியும் வரும். 'ஐயோ, வந்துட்டானா?' என்று இரண்டு பேர் அவனிடம் பயப்பட நேரலாம். அவன் தான்யம் கொண்டு வருகிறான், காய்கறிகொண்டு வருகிறானென்றால் அப்போது அந்தப் பயிர், 'என்னைப் பிடுங்க வந்து விட்டானே?' என்று பயப்படும்; செடி, 'என்னைக் கிள்ளி (கறிகாய்) எடுத்துக் கொண்டுபோக வருகிறானே!' என்று நடுங்கும். ஸந்நியாஸிக்கோ இந்த மாதிரி ஹிம்ஸைக் கார்யம் எதுவுமே விதிக்கப்படவில்லை. யாராவது பிக்ஷை பண்ணிப் போட்டால்தான் அவன் ஆஹாரம் பண்ணலாமேதவிர, தானாக ஒரு இலையைகூடப் பறிக்கப்படாது என்று வைத்திருக்

Koviloor Digital Library

கிறது. யாருமில்லாத வனத்திலிருந்தால்கூட, அதுவாகவே உதிர்ந்து விழுந்த பழம், சருகு முதலியவற்றைத்தான் அவன் எடுத்துக் கொள்ளலாம். ஜைன-பௌத்தங்கள் சொல்லும் பூர்ண அஹிம்ஸை நடைமுறை உலகத்தில் இவனுக்குத்தான் ஸாத்யம் என்று நம் தர்ம சாஸ்த்ரத்தில் இப்படி ஸந்நியாஸ தர்மத்தை வைத்திருக்கிறது.

ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதில் இரண்டு மூன்று விதம் இருக்கிறது. ஸந்நியாஸி ஆகவேண்டுமென்று ஒருத்தனுக்கு இருந்தால் சாஸ்த்ர ப்ரகாரம் detailed-ஆக ச்ராத்தாதிகள், ஹோமாதிகள் எல்லாம் பண்ணி குரு முகமாக ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதுதான் முறை. க்ரம ஸந்நியாஸம் என்பது. நோய் வாய்ப்பட்டு மரணத்தை எதிர்பார்த்திருக்கும்போது விரக்தி, வைராக்யம் ஏற்பட்டு ஸந்நியாஸம் வாங்கிக் கொள்வதற்கு 'ஆதுர ஸந்நியாஸம்' என்று பேர். பலஹீன ஸ்திதியிலுள்ள இவன் விஸ்தாரமாக ஹோமம், ச்ராத்தம் என்று பண்ண முடியுமா? அதனால் சுருக்கி ஸுலபமாக்கி தீக்ஷா க்ரமத்தைக் கொடுத்திருக்கிறது. இதையும்விட இன்னொரு விதம், 'அத்யாதுர (அதி ஆதுர) ஸந்நியாஸம்' என்று இருக்கிறது. 'ஆபத் ஸந்நியாஸம்' என்று பொதுவாகச் சொல்வது அதுதான். வ்யாதி முற்றி ப்ராணபாயமான நிலையே ஏற்படும்போதோ, அல்லது ஏதாவது பெரிய விபத்து ஏற்பட்டு சீக்ரமே மரணம் ஸம்பவிக்கலாமென்று இருக்கும்போதோ சட்டென்று ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டு விடுவதுதான் ஆபத் ஸந்நியாஸம். இந்த நிலையில் ப்ரைஷோச்சாரணம் மட்டுமே போதும், (குரு முகமாக இன்றித்) தானே அதை ஸ்வீகரித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது.

ஆசார்யாள் இப்போது ஸந்நியாஸியானது அப்படித் தான். ஆனாலும் கொஞ்சம் யதோக்த ஸந்நியாஸம் மாதிரியே ஜல மத்தியில் இருந்துகொண்டு ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொள்ளும்படியாக அவருக்கு வாய்த்தது!

Koviloor Digital Library

உடனே முதலையும் அவர் காலை விட்டுவிட்டது!

ஆகாசத்தில், ரதத்தில் ஒரு கந்தர்வன் தென்பட்டான்.

முதலைதான் அப்படி ஆனது.

பதினெட்டு தினுஸான தேவ ஜாதிகளில் கந்தர்வர் ஒன்று. ஸித்தர், கிந்நரர், கிம்புருஷர் முதலானவர்களைப் போல இவர்களும் தேவ ஜாதி. மநுஷ்ய ஜாதியைவிட ஜாஸ்தி அறிவுச் சக்தி, ஸூக்ஷ்மமான வ்யாபக சக்தி எல்லாம் உள்ள ஜாதிகள். நமக்குத் தெரியாததெல்லாம் அவர்களுக்குத் தெரியும். நம் கண், காது முதலானவை சில விதமான லைட் வேவ், ஸெளண்ட் வேவ்களையே பிடிக்க முடிவதால் இதற்கு மேலே ஒன்றும் கிடையாது என்று எப்படிச் சொல்லலாம்? நம் காதுக்கு நேராகக் கேட்காததை க்ரஹித்து வந்து கேட்கப் பண்ண இப்போது ரேடியோ வந்திருக்கவில்லையா?* வெளியிலே இப்படி ஒரு கருவியாயில்லாமல் ஈச்வரன் ஒரு சரீரத்திலேயே கரணமாக அந்த சக்தியையும் வைத்துச் சில ஜீவ ஜாதிகளைப் படைக்கிறானென்றால், அதெல்லாம் முடியாது என்று நாம் ஆக்ஷேபிக்கலாமா? ஸ்வாபாவிமாக இப்படி அவர்கள் சக்தி பெற்றிருப்பது மட்டுமில்லை. யோக சாஸ்த்ரங்களில் சிலதில் இருப்பதை ஸாதனை பண்ணி ஸித்தி பெற்றால் மநுஷ்ய ஜாதிக்கும் அந்த சக்தி வரும். நம் கண்ணுக்குத் தெரியாததைக் காட்டும் ரேடியோ லைட் மாதிரி நமக்கே வாய்க்கும்! யோக ஸித்தி பெற்றவர்களுக்கு கந்தர்வாதிகள் ப்ரத்யக்ஷமாகவே தெரிவார்கள். நாம் சாஸ்த்ர விஷயமென்றாலே ஒன்றும் ஆலோசித்துப் பார்க்காமல் குருட்டு நம்பிக்கை, ஸூபர்ஸ்டிஷன் என்று ஒரே வார்த்தையில் தள்ளி விடுகிறோம்!

முதலை கந்தர்வனாயிற்று. அது எப்படி என்பதற்கும் கதை சொல்லியிருக்கிறது.

---

* 1932-ல் கூறியது.

Koviloor Digital Library

கந்தர்வ ஜாதியினர் உத்ஸாஹ ஜீவிகள். குடி, பாட்டு, ஆட்டம் என்று இருப்பார்கள். இந்த கந்தர்வனும் அப்படி இருந்தவன்தான்.

அவனே தன் கதையை ஆசார்யாளிடம் சொல்லிக் கொண்டான்—[சிரித்து] ஆடோ - பயாக்ரஃபி!

''நான் பாட்டுக்கு ஸதா குடித்துக்கொண்டு, எங்கள் ஸ்த்ரீகளோடு ஆடிப் பாடிக்கொண்டு மதோன்மத்தாகக் கிடப்பது வழக்கம். ஒருநாள் துர்வாஸ மஹர்ஷி வருகிற வழியிலே இப்படிக் கிடந்தேன். அவரோ இதற்கெல்லாம் நேர் விரோதம். நெருப்பாக இருப்பவர். சீலத்தில் மாத்ர மில்லை, கோபத்திலும் நெருப்பானவர். அவர் வருவதையும் லக்ஷ்யம் பண்ணுமல் முதலை கிடக்கிற மாதிரி ஜல க்ரீடை பண்ணிக்கொண்டு நான் கிடந்ததைப் பார்த்ததும் அவருக்கு மஹா கோபம் வந்துவிட்டது.

"'முதலையாகப் போகக் கடவாய்!' என்று சபித்து விட்டார்.

"உடனே அவர் காலில் விழுந்து அபசாரத்துக்காகக் கெஞ்சி மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்.

"அவர் பரமசிவாம்சம் அல்லவா? அதனுலே ருத்ர கோபமும் வரும்; அது மாதிரியே, அந்தப் பரமசிவனை எப்படி 'ஆசுதோஷி'* என்று சொல்லியிருக்கிறதோ அப்படியே இவரையும் ரொம்ப எளிதாக ப்ரீதிப்படுத்தி விடவும் முடியும். இப்போது நான் கெஞ்சியவுடன் இரக்கம் கொண்டுவிட்டார்.

''அதனுல், 'ஸரி, சாபத்தை அப்படியே வாபஸ் வாங்கி கொள்ள முடியாதாகையால் இப்போதைக்கு முதலை ஜன்மா வரட்டும். ஆனுல் பரமேச்வரனுடைய காலடியைப் போய்ப் பிடித்துக் கொள்ளு. விமோசனம் கிடைத்துவிடும்' என்ருர்."

---

* 'ஆசு'-சடுதியில்; 'தோஷி'- திருப்தியடைந்து மகிழ்பவர்.

Koviloor Digital Library

புராணங்களில் அநேகக் கதைகள் இப்படி வருவது தான்—ஒரு கதாபாத்ரம் மதோன்மத்தமாயிருந்து அபசாரம் பண்ணுவது, தபஸ்வி ஒருத்தர் சாபம் கொடுப்பது, உடனே இந்தப் பாத்ரம் கெஞ்சுவது, அவர் கருணையோடு விமோசனம் சொல்வது என்று. ஸாதாரணமான ஒரு ஜீவனுடைய லக்ஷணம் தன்னிஷ்டப்படித் திமிராக இருப்பது: அப்படி இருப்பதில் கஷ்டம் வந்தால் பல்லைக் காட்டுவது—'மிஞ்சினால் கெஞ்சுவது' என்பதுதானென்றும்; தபஸின் லக்ஷணமும் தபஸ்வியின் லக்ஷணமும் என்னென்ன என்றும் இந்தக் கதைகள் காட்டுகின்றன. தபஸின் லக்ஷணம் சக்தி. அதனால்தான் ஒரு தபஸ்வி 'கல்லாகப் போ, முதலையாகப் போ' என்றால் தேவர்களுங்கூட அப்படியாகி விடுகிறார்கள். தபஸ்வியின் லக்ஷணம் என்ன? அந்த சக்தியை எப்படி உரியபடி 'ஹார்னெஸ்' செய்யணுமோ அப்படி நல்லதற்கே செய்வது. தப்புப் பண்ணினால் தண்டிக்க வேண்டியது தர்ம மென்பதற்காக சாபம் தருவது. தப்பை உணர்ந்தபோது மன்னிக்க வேண்டியது தர்மமென்பதால் அப்போது கருணையோடு சாப விமோசனம் தருவது. அந்தக் கதைகளில் இப்படி ஒன்றுக்கொன்று ஈடு கொடுத்துக்கொண்டு போவதைப் பார்க்க அழகாக இருக்கும்.

"'பரமசிவனின் காலடியைப் பிடித்துக்கொள் என்றால் அது எப்படி ஸாத்யம்? நான் முதலையானபின் ஏதாவது ஆற்றிலே, மடுவிலே கிடப்பேனாயிருக்கும். அவரானால் கைலாஸ உச்சியில் உட்கார்ந்திருப்பவர். எப்படிப் பிடிப்பது?' என்றேன்.

"அதற்கு அவர், 'அதைப் பற்றி நீ கவலைப்படாதே. அவருடைய காலடியே உன்னைத் தேடிக்கொண்டு வரும், போ!' என்று சொல்லி அனுப்பினார். 'நான் கொடுத்த சாபம் தப்பாது. உன் முதலை ஜன்மமே ஈச்வரன் அவதாரம் செய்யப் போகிற ஸமயத்திலே அவருக்கு ஒரு ப்ரச்னையைத் தீர்த்து வைத்து, அவர் துரீயாச்ரமியாகப் புறப்பட உதவி

Koviloor Digital Library

பண்ணும். அவதார நோக்கம் நிறைவேற ஒரு கருவியாகும் பாக்யம் உனக்குக் கிடைக்கும்' என்றார்.

"அவர் சொன்னபடியேதான் இங்கே வந்து ஸாக்ஷாத் சிவாம்சமான தங்களுடைய காலடியைப் பிடித்தேன். எனக்கும் முதலை ஜன்மா தீர்ந்தது; தங்களுக்கும் ஒரு குடும்பத்து மநுஷ்யர் என்ற ஜன்மா தீர்ந்தது" என்று சொல்லி அந்த கந்தர்வன் ஆசார்யாளை நமஸ்கரித்து விட்டுப் போய்விட்டான்.

முதலையாக ஜன்மா எடுத்த அவன் அவர் காலடியைப் பிடித்து சாப விமோசனம் பெற்ற மாதிரி நாமும் பிடித்தால் ஜன்ம நிவ்ருத்தி பெறலாம் என்று காட்டத்தான் அந்த க்ராமத்துக்கே காலடி என்று பேர் வந்ததோ என்னவோ? பகவத் பாதரின் ஊர் கால்-அடி!

அன்னையைப் பிரிந்து ஆசானைத் தேடி...

முதலை வாயிலிருந்து குழந்தை மீண்டு வந்ததைப் பார்த்துத் தாயார் மிகவும் ஸந்தோஷமடைந்தாள். அந்த ஸந்தோஷத்தில் அவர் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்ட நினைவே போய்விட்டது! "அப்பா, பிழைத்து வந்தாயே! ஆத்துக்குப் போகலாம். நான் கண்ணை மூடுவதற்குள் உனக்கு ஒரு கல்யாணம் பண்ணிப் பார்த்துடணும்" என்றாள்.

அதைக் கேட்ட ஆசார்யாள், "அம்மா, நான் ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ள நீ அநுமதி தரவில்லையா? அதை மறந்து பேசுகிறாயே! இதுவரைக்கும் உன் ஒருத்திக்கு மாத்ரம் குழந்தையாயிருந்தேன். இனிமேல் லோகத்திலுள்ள அத்தனை தாயார்களுக்கும் நான் குழந்தை. ஆமாம் நான் லோகத்துக்கெல்லாம் குழந்தை. பிக்ஷை போடுகிற ஸ்த்ரீகளெல்லாம் எனக்கு தாயார்கள். நீ மாத்ரம் தாயாரென்று நினைக்காதே. பல தாயார்களில் நீயும் ஒரு தாயார். நான் ஞானோபதேசம் வாங்கிக் கொள்ள குரு பரம்பரை இருக்கிறதே, அதிலுள்ளவர்களெல்லாம் எனக்குத்

Koviloor Digital Library

தகப்பனார். ஞானம் வந்து, நான் உபதேசம் பண்ணி, அது யாரார் மனஸுக்கு ஒரு ஸந்தோஷத்தைக் கொடுத்து அவர்களை நல்ல வழிக்குக் கொண்டு வருமோ, அவர்கள் எல்லோரும் என் குழந்தைகள். குழந்தைகள் என்றால் பத்னி வேண்டுமே, நீயும் கல்யாணம் பண்ணிப் பார்க்கணும் என்றாயே, அப்படி ஒரு பத்னியையும் இந்த க்ஷணத்தில் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டேன். சாந்தி என்று அவளுக்குப் பேர். மனஸ் ஏகாந்தமாக ஒன்றி இருக்கும் படியான ஸ்தானத்தில் சாந்தி என்ற வனிதையை விவாஹம் செய்து கொண்டிருக்கிறேன்.

பிக்ஷா-ப்ரதா ஜநந்ய: பிதரோ குரவ: குமாரகா: சிஷ்யா: ।
ஏகாந்த-ரமண-ஹேது: சாந்திர்-தயிதா விரக்தஸ்ய ॥*

(ஆசையைத் துறந்தவனுக்கு (துறவிக்கு) பிக்ஷையிடுபவர் யாவரும் அன்னையர்; குரவர் யாவரும் தந்தையர்; சீடர் யாவரும் மக்கள்; ஏகாந்தத்தில் இன்பம் காண ஏதுவாக வுள்ள சாந்தியே மனையாள்.)

"நீதான் நான் மற்ற தாயார்களிடத்தில் போய் அவர்களெல்லாம் கொஞ்சும்படிச் செய்வதற்கும், அப்பப்போ சாந்தி வனிதையோடு நான் ஏகாந்தத்தில் ஆனந்தமாயிருந்து கொண்டிருப்பதற்கும் அவகாசம் கொடுக்க வேண்டும்" என்றார்.

"என்னை விட்டு விட்டா போகப்போறே? என் அந்த்ய காலத்திலேகூட உன்னைப் பார்க்காமல்தான் ஆவி பிரியணுமா?" என்று தாயார் ரொம்பவும் அழுதாள்.

"இல்லை. இப்போது உன்னை ஏமாற்றிவிட்டுப் போகிறேனல்லவா? இதற்காகவாவது அந்த்ய காலத்திலே உன் மனஸ் ஸமாதானமாவதற்காக உன் பக்கத்திலேயே வந்து

* நீலகண்ட தீக்ஷிதரின் 'வைராக்ய சதக'த்தில் காணும் இச் ஸ்லோகத்தை ஆசார்யாளின் வாக்காக ஸ்ரீசரணர்கள் நயமாகக் கையாண்டிருக்கிறார்கள்.

Koviloor Digital Library

இருக்கிறேன். அப்பொழுது நீ என்னை ஸ்மரித்த மாத்ரத்தில் வந்து விடுகிறேன். (தஹன) க்ருத்யமும் பண்ணுகிறேன்'' என்று ஆசார்யாள் வாக்குக் கொடுத்தார்.

ஒரு மாதிரி மனஸைத் தேற்றிக்கொண்டு அந்த அம்மாளும் ஆசார்யாள் புறப்படுவதற்கு அநுமதி கொடுத்தாள்.

ஸந்நியாஸி க்ருத்யம் பண்ணலாமா என்றால்......

தாயார் என்பவளுடைய ஸ்தானம் எல்லாவற்றையும் விட உயர்வானது. அப்படி ஸகல சாஸ்த்ரத்திலும் இருக்கிறது. மாத்ரு ருணம் (தாயாருக்குப் பட்டுள்ள சாஸ்த்ரீயக் கடன்) யாரையும் விடவே விடாது. பித்ரு ருணத்திலிருந்துகூட ஸௌத்ராமணி என்ற மஹா யாகத்தைப் பண்ணினால் விடுபட்டுவிடலாம்; மாத்ரு ருணத்திலிருந்து மட்டும் ஒரு புத்ரன் ஜீவனுள்ளவரை விடுபட முடியாது—என்று தர்ம சாஸ்த்ரத்திலேயே இருக்கிறது. பெரிய ருணம் அந்திம க்ரியை செய்து பரலோகம் சேர்ப்பதுதான். வேறே புத்ரர்களிருந்தால் அவர்களிடம் இந்தக் கடனைக் கட்டிவிட்டு ஒருவன் ஸந்நியஸிக்கலாம். ஆசார்யாள் ஏக புத்ரர். அப்படிப்பட்டவர் ந்யாயமாகப் பார்த்தால் ஸந்நியாஸமே வாங்கிக் கொள்ளக் கூடாது தான். ஆனாலும் இது அவதாரம்—ஈச்வரன் தன் வாக்கால் 'ஒரே ஒரு புத்ரனா, நூறா?' என்று கேட்டு, ஒன்றாக அமைந்தது. அவனுடைய உத்தேசமோ ஸந்நியாஸ குருவாக தர்மோத்தரணம் பண்ணுவதாக இருந்தது. அதனால் ஸகல சாஸ்த்ரங்களுக்கும் மூலமானவனே தர்ம ஸம்ஸ்தாபனார்த்தம் பண்ணிய உத்தேசமென்பதால் ஏக புத்ரர் ஸந்நியஸித்தார். ஆனால் இவர்தான் அவதார புத்ரரே தவிர அவள் அவதார அம்மா இல்லையே! அதனாலே அவள் ருணத்தை அவள் எப்படி ஆசைப்பட்டாளோ அப்படி அவர் தீர்க்கவேண்டுமென்பதுதானே ந்யாயம்? அவள் த்ருப்திக்காக தஹனம் மாத்ரம்தான் செய்ய நினைத்தார். அப்புறம் கார்யங்கள், தர்ப்பணம், திவஸமென்று எதுவும் செய்ய நினைக்கவில்லை,

Koviloor Digital Library

தர்ம சாஸ்த்ரங்களிலேயே இருக்கிறது, க்ருஹஸ்தனுயிருந்து புத்ரனைப் பெற்ற பிறகு ஸந்நியாஸியான ஒருவன் காலமானால் அப்போது அவனுடைய பூர்வாச்ரம புத்ரன் அவனுக்கு வேறே எந்தக் கர்மாவும் செய்யக் கூடாதானாலும் 11-வது அல்லது 12- வது நாளில் பார்வண ச்ராத்தம் என்பதைமட்டும் செய்யவேண்டுமென்று. ஸந்நியாஸிக்குப் பூர்வாச்ரம புத்ரனால் இப்படி ஒன்று நடக்கலாமென்றிருப்பதால் அந்த ஸந்நியாஸியும் ஏகபுத்ரனாக இருக்கும்போது பூர்வாச்ரமத் தாயாருக்கு தஹன ஸம்ஸ்காரம் மாத்ரம் பண்ணலாம் என்று ஆசார்யாள் நினைத்திருக்கலாம். ''தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே''* என்பதையே எப்போது பார்த்தாலும் வலியுறுத்தி வந்த ஆசார்யாள் சாஸ்த்ரத்தில் இடம் கொடுக்காத ஒன்றை செய்தேயிருக்க மாட்டார். எப்படியிருந்தாலும் ஆசார்யாளுக்கு நாம் சாஸ்த்ரம் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை! அல்லது, 'அவரே சாஸ்த்ரத்தை ரிலாக்ஸ் பண்ணலாமென்றுதான் இப்படியெல்லாம் பண்ணினார். அவரே ரிலாக்ஸ் பண்ணினாரென்றால் நாம் விட்டுங்கூட விடலாம்' என்று அர்த்தம் பண்ணிக் கொள்ளக்கூடாது!

தர்ம சாஸ்த்ரங்களிலேயே இன்னும் என்ன சொல்லியிருக்கிறதென்றால், ஒரு ஸந்நியாஸியின் பூர்வாச்ரமப் புத்ரன் உள்பட மற்ற எந்த பந்துக்கள் செத்துப்போனாலும் அப்போது அவன் ஸ்நானங்கூடச் செய்ய வேண்டியதில்லை; ஆனாலும் பூர்வாச்ரம மாதா-பிதாக்களின் மரணத்தின் போது மட்டும் அவன் கட்டின வஸ்த்ரத்தோடு ஸ்நானம் பண்ண வேண்டும் என்று இருக்கிறது. இங்கே மாதா பிதா இரண்டு பேருக்கும் ஸம ஸ்தானம் கொடுத்திருக்கிறதென்றால், இன்னொரு விதியோ பிதாவுக்கும் மேலே மாதாவை உயர்த்தி வைத்துச் சொல்லியிருக்கிறது:

---

* ''(செய்யத் தக்கது எது; செய்யத் தகாதது எது என்று முறைப்படி நிர்ணயிப்பதில்) சாஸ்த்ரமே உனக்குப் பிரமாணமாகும்'' — கீதை XVI. 24

Koviloor Digital Library

"ஸர்வ - வந்த்யேந யதிநா ப்ரஸூர் - வந்த்யா ஹி ஸாதரம்": எல்லோரும் ஸந்நியாஸியை நமஸ்கரிக்கணும். ஸந்நியாஸிகளிலேயே அவரைவிடக் குறைவாக வ்யாஸ பூஜை செய்துள்ளவர்கள் அவரை நமஸ்கரிக்க வேண்டும். மற்ற ஜனங்களில் ஸகலருமே அவரைவிட வயஸில் எத்தனை பெரியவர்களானாலும் நமஸ்கரிக்கணும். 'ஸர்வ' ஜனங்களும் என்று இப்படிச் சொல்லும்போது அதில் அப்பாவும் அடக்கம் தான். ஆனால் அம்மா மட்டும் அடக்கமில்லை. ஸந்நியாஸி யாகிவிட்ட புத்ரனை அவள் நமஸ்காரம் செய்யவேண்டாம். அது மாத்ரமில்லை. அவளை இவர்—ஸந்நியாஸி—நமஸ்காரம் செய்ய வேண்டும் : "ப்ரஸூர் - வந்த்யா".

'இப்படி விதி இருக்கே!' என்று ஒரு கடமையாக மட்டும், 'கடனே' என்று பண்ணினால் போதாது. 'ஸாதரம்'— ,மரியாதையான அன்போடுகூட' நமஸ்கரிக்கணும்.

இப்படியெல்லாமிருப்பதால்தான் ஆ சா ர் யா ள் தாயாருக்கு அப்படி வாக்குக் கொடுத்தார்.

அப்புறம் அவளை நமஸ்காரம் பண்ணிவிட்டு குருவைத் தேடிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அவருக்கு குரு எதற்கு?

அவரேதான் ப்ரைஷ மந்த்ரம் சொல்லி ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டாயிற்றே, அப்புறம் குரு எதற்கு என்றால் : ஆபத் ஸந்நியாஸம் என்று ப்ராணபத்தில்தான் தானே தீக்ஷை எடுத்துக்கொள்ளலாமே ஒழிய, அப்புறம் ஆபத்து போய்ப் பிழைத்துவிட்டால் யதோக்தமாக ஒரு ஆசார்யனை ஆச்ரயித்துத்தான் ப்ரணவோபதேசமும், மஹா வாக்யோப தேசமும் பெற்றுக்கொண்டு ஸந்நியாஸாச்ரமம் ஸ்வீகரித்துக் கொள்ளவேண்டும்.

'ஆசார்யாள் ஈச்வராம்சமாச்சே, அவருமா குருவிடம் உபதேசம் பெற்றுக்கணும்?' என்றால், மநுஷராக அவதரித்த தால் எல்லோருக்கும் எப்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ

Koviloor Digital Library

அப்படியே தாமும் நடந்து காட்டவேண்டுமென்றுதான் இப்படிச் செய்தார். இப்போது, 'ஈச்வராம்சமானவருக்கு அவச்யந்தானா?' என்று கேட்பவர்களே அவர் குருவிடம் போகாமலிருந்திருந்தால், 'குரு, உபதேசம் என்றெல்லாம் அவரே பின்பற்றிக் காட்டவில்லை. அதனால் நமக்கும் அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். புஸ்தகத்தைப் பார்த்து, அல்லது அதுகூட இல்லாமல், நமக்குத் தோன்றினபடி பண்ணிவிட்டுப் போகலாம்' என்று ஆரம்பித்துவிடுவோம். 'நமக்கு வேண்டியிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஊரைக் கெடுத்ததாக ஆகக்கூடாது. அதற்காக விதி ப்ரகாரம் உபதேசம் பெறத்தான் வேண்டும்' என்றே ஆசார்யாள் ஒரு ஆசார்யாரைத் தேடிக்கொண்டு ஊரை விட்டுப் புறப் பட்டார்.

கீதையில் பகவான் சொல்கிறார் :

"ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந"*—"இந்த மூன்று லோகத்திலும் எனக்கு ஆக வேண்டிய கார்யம் எதுவும் இல்லை" என்கிறார். "ஆனாலும் பார், எப்படி ஸகல கார்யமும் பண்ணிக்கொண்டிருக்கிறே னென்று! இதோ உனக்கு ஸாரத்யம் பண்ணுகிறேன். அன்றைக்கு உங்களுக்காக தூது போனேன். இன்னும் எத்தனை சண்டை, ஸல்லாபம் பண்ணியிருக்கிறேன்? இதனை யெல்லாம் எனக்கு ஏதாவது personal gain (ஸொந்த லாபம்) உண்டா? இதுகளைப் பண்ணாவிட்டால் யாருக்காவது நான் பதில்தான் சொல்லணுமா? இருந்தாலும் ஏன் பண்ணு கிறேனென்றால், நான் பண்ணாமல் போனால் என்னவாகும் தெரியுமா?

"ஸங்கரஸ்ய ச கர்த்தா ஸ்யாம் உபஹந்யாம் இமா: ப்ரஜா*: 'க்ருஷ்ணரே ஒன்றும் செய்யாமலிருக்கிறார்.

---

* III-22

* கீதை III. 24. (பின்பாதி). பதவுரை : 'ஸமூஹக் குழறுபடிக்கு நான் கர்த்தாவாகி விடுவேன். இந்த ஜீவ லோகத்தை அழித்தவனுமாவேன்!'

Koviloor Digital Library

நாமும் ஒன்றும் செய்ய வேண்டாம். கடமை, ஸ்வதர்மம் என்று ஒன்றும் எவரும் பண்ணவேண்டியதில்லை' என்று எல்லோரும் நினைப்பார்கள். இன்னார் இன்னது செய்து தானக வேண்டுமென்று ஜன ஸமூஹத்தில் வகையாகப் பிரித்துப் பிரித்து சாஸ்த்ரத்தில் கொடுத்துள்ளபடி யாரும் பண்ணுமல் போய், பிரிவுகளெல்லாம் கலந்தாங்கட்டியாகச் சேர்ந்து ஒரே குழப்பமாகிவிடும். இந்தப் பாபத்துக்கு நானே காரணமாக, கர்த்தாவாக ஆகிவிடுவேன். இப்படி ஒழுங்கு கெட்டுப் போன பின் ஒரு ஸமூஹம் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன? அதனுல் அது அழிந்தே போன மாதிரிதான். அதாவது, அவதாரம் என்று ஜனங்களை தர்மத்தில் உத்தாரணம் பண்ணுவதற்கு வந்ததாகச் சொல்லிக் கொண்டு, வாஸ்தவத்தில் அவர்களை தர்மப்படிப் பண்ணுமலிருக்கத் தூண்டி, முடிவில் அழித்தே விட்டவனுகிவிடுவேன்! அதனுல்தான் எனக்காக ஒரு கார்யமும் வேண்டாமென்ருலும் லோகம் நம்மால் கெட்டுப் போகப்படாது என்றே அநேக கார்யங்களை இழுத்துப் போட்டுக்கொண்டு பண்ணுகிறேன்'' என்று முடித்திருக்கிருர்.

அந்த முறையில்தான் ஆசார்யாள் குருவைத் தேடிப் புறப்பட்டது.

ஈச்வர ஸங்கல்பப்படி மலையாள தேசத்திலிருந்து பஹு தூரம் போய் நர்மதா நதி தீரத்திலிருந்த கோவிந்த பகவத் பாதரே தம்முடைய குரு என்று சரணத்தில் விழுந்தார்.

ஆசார்யாள் சரித்ரத்தைக் கூறுவதாக அநேகப் புஸ்தகங்களிருப்பதில், அவர் எந்த இடத்தில் குருவைக் கண்டு உபதேசம் பெற்றது என்பதில் வித்யாஸமான அபிப்ராயங்கள் காணப்படுகின்றன. நர்மதா தீரத்தில் என்றும், பதரிகாச்ரமத்தில் என்றும், காசியில் என்றும், சிதம்பரத்தில் என்றும் வெவ்வேறு புஸ்தகங்களில் இருக்கிறது.

அந்தப் புஸ்தகங்களின் பெயர்களைச் சொல்கிறேன்.

Koviloor Digital Library

'சங்கர விஜய'ங்களும் ஆசார்யாள் குறித்த மற்ற நூல்களும்

ஆசார்யாளின் சரித்ரத்தைச் சொல்வதற்கென்றே ஏற்பட்டதாக 'சங்கர விஜய'ங்கள் என்று சொல்கிற பல புஸ்தகங்கள் பல பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள். 'ப்ருஹத் சங்கர விஜயம்', 'ப்ராசீன சங்கர விஜயம்', 'ஆனந்தகிரீய சங்கர விஜயம்' 'வ்யாஸாசாலீய சங்கர விஜயம்', 'மாதவீய சங்கர விஜயம்', 'சித்விலாஸீய சங்கர விஜயம்', கேரளீய சங்கர விஜயம்', 'கோவிந்த நாதீய சங்கர விஜயம்' என்று இப்படி ஏழெட்டு இருக்கின்றன.* ஸதாநந்தர் என்பவர் எழுதிய 'சங்கர திக் விஜயஸாரம்' என்றும் ஒரு ஆசார்ய சரித்ரம் இருக்கிறது.

'ப்ருஹத் சங்கர விஜயம்' என்றால் பெரிசான, விஸ்தார மான சங்கர விஜயம் என்று அர்த்தம். அது முழுசாகக் கிடைக்கவில்லை. மற்ற புஸ்தகங்களில் அதிலிருந்து மேற் கோள்கள் கொடுத்திருப்பதிலிருந்தே அதைப் பற்றித் தெரி கிறது. ஏறக்குறைய ஆசார்யாளின் காலத்திலேயே செய்யப்பட்டதென்று தெரியவருகிறது. 'ப்ராசீன சங்கர விஜயம்' என்றாலும் 'புராதனமான சங்கர சரித்ர புஸ்தகம்' என்றே அர்த்தம். இதுவும் கிடைக்கவில்லை. 'கொடேஷன்' களிலிருந்து தெரிவதோடு ஸரி.

ஆனந்த கிரீயம், கோவிந்த நாதீயம் என்றெல்லாம் சொல்வது அவற்றை எழுதிய ஆனந்தகிரி, கோவிந்தநாதர் ஆகியவர்களின் பெயரிலேயே புஸ்தகத்துக்கு டைட்டில் சொல்வதுதான். ஆனந்தகிரியின் முழுப்பெயர் அனந்தா நந்தகிரி. சித்விலாஸீயம் என்பது சித்விலாஸர் என்பவ

---

* ''ப்ரஹ்மாநந்தீய சங்கர விஜயம்'' என்ற ஒரு நூலும் ப்ரஹ்மஸ்ரீ சி.வே. ராதாகிருஷ்ண சாஸ்திரிகளின் ''ஸ்ரீ சங்கர விஜய மகரந்தம்'' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 'மகரந்தம்'' என்பது ஆசாரிய சரிதத்தைக் கூறும் எல்லா நூல்களிலிருந்தும் தொகுப்புச் செய்து, ஒன்றுக்கொன்று மாறு பட்ட விவரங்களையும் முடிந்தமட்டில் இசைத்துத் தரும் ஸமீப கால (1978) ஸம்ஸ்க்ருத நூலாகும்.

Koviloor Digital Library

ருக்கும் (விஜ்ஞான கந்தர் என்ற) இன்னொருவருக்கும் நடந்த ஸம்வாத (ஸம்பாஷணை) ரூபத்தில் எழுதப்பட்டிருப்பதால் அப்படிப் பெயர் பெற்றிருக்கிறது. 'கேரளீயம்' கேரள தேசத்தில் பண்ணப்பட்டது. கோவிந்த நாதீயத்திற்கும் இதற்கும் ஸ்வல்ப வித்யாஸமே. கோவிந்தநாதர் கேரளதி துக்காரர்.

எல்லாவற்றையும்விட அதிகமாக ப்ரசாரமாகியிருப்பது மாதவீய சங்கர விஜயம் என்பது.

'சங்கர விஜயம்' என்று குறிப்பிடும் இந்த க்ரந்தங்களைத் தவிர இன்னும் சில நூல்களும் ஆசார்ய சரித்ரத்தைக் கூறுபவையாக இருக்கின்றன. தமக்குள் காயத்ரி புகுவதற்கு முன் ஸரஸ்வதி புகுந்து விட்டாளென்று ராஜசூடாமணி தீக்ஷிதர் என்பவர் சொன்னதாகச் சொன்னேனல்லவா? அவர் "சங்கராப்யுதம்" என்று ஆசார்ய சரித்ரத்தை எட்டு ஸர்கங்களில் காவ்யமாக எழுதியிருக்கிறார். பதினாறும்—பதினேழாம் நூற்றாண்டுகளில் இருந்தவர். பதினேழாம் நூற்றாண்டுக் கடைசியிலிருந்த ராமபத்ர தீக்ஷிதரின் 'பதஞ்ஜலி சரி'தத்தில் ஆசார்யாளுடைய பரம குருவையும், குருவையும் பற்றி விரிவாகக் கதை சொன்னபின், கடைசி ஸர்கத்தில் சுருக்கமாக ஆசார்ய சரித்ரம் கொடுக்கப் பட்டிருப்பதை முன்பே சொன்னேன். ராஜசூடாமணி தீக்ஷிதர் அப்பைய தீக்ஷிதரின் மைத்துனரென்றால் இவர் அவருடைய (அப்பையருடைய) தம்பி பேரரான நீலகண்ட தீக்ஷிதரின் சிஷ்யர்.

வல்லீயஸஹாய கவி என்பவர் 'ஸ்ரீ சங்கராசார்ய சம்பூ' என்று செய்திருக்கிறார். கவிதையும் வசன நடையும் கலந்து கலந்து வரும் காவ்ய வகைக்குச் சம்பூ என்று பெயர்.

சட்டம், ஸங்கீதம் இரண்டிலும் முக்யமான புள்ளியா யுள்ள டி. எஸ். வேங்கடராமய்யரின்* தகப்பனார் லக்ஷ்மண

---

* இவர் தற்போது காலமாகிவிட்டார்.

Koviloor Digital Library

ஸூரி என்பவர். ஸூரி என்றால் ஸூர்யன்தான். 'அறிவு ஜ்யோதி' என்கிறார்களே, அப்படிப் பட்டவர்களையே ஸூரி என்பது. வைகுண்டத்தில் பகவானோடு ஸதா காலமும் நித்யவாஸம் செய்பவர்களை வைஷ்ணவர்கள் 'நித்ய ஸூரிகள்' என்பார்கள். இவர் (லக்ஷ்மணஸூரி) ஆசார்ய பாஷ்யங்களை அநுஸரித்து ஈசோபநிஷத், மாண்டூக்யோப நிஷத் ஆகியவற்றுக்குக் காரிகைகள் செய்திருப்பதிலிருந்து, 'ஜார்ஜ் தேவ சதகம்' என்பதாக பிரிட்டிஷ் ராஜாவின் மீது கவி செய்கிறவரையில் பல துறைகளிலும் தம்முடைய வ்யுத்பத்தியை (இலக்கியத் திறமையை)க் காட்டியிருப்ப தால் அக்காலத்தில் மைஸூர் திவானாயிருந்த ஸர் கே. சேஷாத்ரி ஐயர் இவருக்கு ஸூரிப் பட்டம் கொடுத் தார். மஹாமஹோபாத்யாயப் பட்டமும் பெற்ற பண்டிதர். "பகவத் பாதாப்யுதயம்" என்பதாக அவர் நம்முடைய ஆசார்யாளின் சரித்ரத்தைப் பற்றி ஒரு சிறு காவ்யம் தம்முடைய கடைசி காலத்தில் செய்திருக்கிறார்.

"பகவத்பாத ஸப்ததி" என்ற பெயரில் இரண்டு புஸ்தகங்கள் இருப்பதாகத் தெரிகிறது. "ஸப்ததி" என்றால் எழுபது. ராமாநுஜாசார்யாரின் மேல் வேதாந்த தேசிகர் "யதிராஜ ஸப்ததி' என்று எழுபது ச்லோகம் செய்திருக் கிறார். அதேபோல ஆசார்யாளின் பேரில் ஜகந்நாத கவி என்பவர் செய்திருப்பது பகவத்பாத ஸப்ததி. இவர் ஷாஜஹானின் ஸபையிலிருந்த ஜகந்நாத கவி இல்லை. வேறே ஒருவர். இந்த ஸப்ததி முழுசாகக் கிடைத்திருக்கிறது. உமாமஹேச்வர சாஸ்த்ரி என்ற ஒருவர் செய்துள்ள இன்னொரு பகவத்பாத ஸப்ததியில் சில ச்லோகங்கள் அகப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஸுமார் 250 வருஷம் முந்தி இருக்கலாம், அப்போதிருந்த ச்ருங்கேரி ஸ்வாமிகளின்* உத்தரவின் பேரில், அந்த மடத்து

---

* 1963-ல் கூறியது. இங்கு குறிப்பிடப் பெறுபவர்கள் ஸ்ரீ ச்ருங்கேரி பீடத்தில் 1705-41 ஆசார்யர்களாக இருந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த பாரதி ஸ்வாமிகள் (II)

Koviloor Digital Library

ஆஸ்தான வித்வானுயிருந்த காசி லக்ஷ்மண சாஸ்திரிகள் என்பவர் 'குருவம்ச காவ்யம்' என்று ஏழு ஸர்கம் கொண்டதாக அந்த மடத்து குரு பரம்பரா சரித்ரம் எழுதியிருக்கிருர். அதில் முதல் மூன்று ஸர்கங்களில் ஆசார்யாள் சரித்ரம் வருகிறது.

ஆசார்யாளின் பெயரிலுள்ள ஒவ்வொரு மடத்திலும் உள்ள குரு பரம்பரைப் புஸ்தகங்களில் அவருடைய சரித்ர விவரமும் நிறையவோ, கொஞ்சமோ இருக்கும். இந்த (காஞ்சி) மடத்திலும் அப்படி 'புண்ய ச்லோக மஞ்ஜரி,' '(ஜகத்)குரு ரத்நமாலா', அதன் வ்யாக்யானமான 'ஸுஷமா' ஆகியவற்றில் இருக்கிறது.

கதாபேதங்கள் : இப்படிப் பல புஸ்தகங்கள் இருப்பதில் சில கதாபேதங்கள் இருக்கின்றன. (கதைகளிடையே சில வித்யாஸங்கள் காண்கின்றன.) ராமாயணத்தில் பல தினுஸாக, வால்மீகியில் ஒரு விதம், கம்பரில் ஒரு விதம், துளஸீதாஸில் ஒரு விதம் என்று அங்கங்கே கொஞ்சம் வித்யாஸமிருப்பதுபோல இவற்றில் இருக்கிறது.

எல்லாவற்றிலும் ஒரே விதமாகச் சொல்லியிருக்கும் விஷயங்களைக் கேள்வியில்லாமல் எடுத்துக்கொண்டு விடலாம். ஒன்றில் இருப்பதற்கு விரோதமாக இல்லாமல் அதிகப்படியாக இன்னென்றில் ஒரு detail (விவரம்) இருந்தால், அப்படி இருப்பவை ஆசார்யாளின் கௌரவத்துக்கு ஏற்றபடியும், circumstantial evidence (ஸந்தர்ப்ப சூழ்நிலையின் சான்று) உள்ளதாகவும் இருக்கிறபோது எடுத்துக் கொள்ளலாம். பொதுவாகச் சொன்னுல் ஒன்றுக்கொன்று விரோதமில்லாத வரையில் ஒவ்வொன்றிலுமுள்ள எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு புஸ்தகத்தில் (அவர் சென்ற ஊர்களில்) சொல்லாத ஒரு ஊரை இன்னெரு புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறது; (அவர் செய்த கார்யங்களில்) சொல்லாத ஒரு கார்யத்தை இன்னென்றில் சொல்லியிருக்கிறது—என்றுல், அப்படி

Koviloor Digital Library

இருக்கவே முடியாது என்று ஸர்வ நிச்சயமாகத் தெரிந்தாலொழியக் கூடுதலாகச் சொல்லியுள்ள எல்லா ஊர், கார்யம் முதலானவற்றையும் எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். அவர் நாளில் இருந்திருக்கவே முடியாத ஊர், [சிரித்து] நெய்வேலி டவுன்ஷிப்புக்கு வந்தாரென்றால் எடுத்துக் கொள்ளமுடியுமா? அப்படியே, பெர்னார்ட் ஷாவோடு வாதம் பண்ணினாரென்றால்...? ஆனாலும் அப்படியில்லாத இடங்களிலெல்லாம் ஏற்றுக்கொள்வதுதான் யுக்தம். ஏனென்றால், அவர் வாஸ்தவத்தில் அந்த மாதிரிப் பண்ணவில்லை என்றால்கூட பண்ணியதாக நாம் வைத்துக்கொள்வதனால் பெரிய தப்பு எதுவுமில்லை. ஆனால் அவர் பண்ணியிருந்தும், பண்ணவில்லை என்று நாம் தள்ளிவிட்டால் தப்புத்தானே? அவதாரமாக வந்து அவர் பண்ணிய ஒவ்வொன்றுக்கும் 'வால்யூ' உண்டு. அப்படிப்பட்ட ஒன்றை நாம் 'இல்லை' என்று தள்ளப்படாததுதானே?

போலகம் சாஸ்த்ரிகள்* இந்த விஷயமாக, 'ஆசார்யாள் எப்படிப் பண்ணிக் காட்டியிருக்கிறாரோ, அதையே நாமும் பின்பற்றலாம்' என்று எழுதியிருக்கிறார். ஆசார்யாள் என்ன பண்ணியிருக்கிறாரென்றால்: சரீரத்திலிருந்து வெளியேறிவிட்ட யோகியின் ஜீவன் ப்ரஹ்மலோகம் போகும் வழிக்கு அர்ச்சிராதி மார்க்கம் என்று பெயர். அதில் பதின்மூன்று பர்வா, அல்லது ஸ்தானங்கள் இருக்கின்றன. இந்தப் பதின்மூன்றைப் பற்றியும் உபநிஷத்துக்களிலிருந்து தெரிகிறது. ஆனால் எந்த ஒரு உபநிஷத்திலும் பதின்மூன்றையும் வரிசையாகச் சொல்லியிருக்கவில்லை. ஒவ்வொன்றிலும் சிலதை விட்டிருக்கிறது; வரிசைப்படி இல்லாமல் முன் பின்னாகவும் சொல்லியிருக்கிறது. இப்படி இருப்பதை ஆசார்யாள் எடுத்துப் போட்டுக்கொண்டு எதுவும் விட்டுப்போகாமல் சேர்த்து, வரிசை க்ரமமும் தப்பாதபடி ஒழுங்குபடுத்தித் தம்முடைய ஸூத்ர பாஷ்யத்

* காலஞ்சென்ற சாஸ்த்ர ரத்னாகரம் போலகம் ப்ரம்மஸ்ரீ ராம சாஸ்திரிகள்.

Koviloor Digital Library

தில் கொடுத்திருக்கிறார்*. இப்படியே அவருடைய சரித்ரத்திலும் ஒரு புஸ்தகத்தில் சொல்லி இன்னொன்றில் சொல்லாதது, ஸம்பவங்களை காலவாரியாயில்லாமல் முன் பின்னாகச் சொல்லியிருப்பது ஆகியவற்றை நாம் எதுவும் விட்டுப் போகாமலும், கால ரீதியில் ஆர்டர் தப்பாமலும் ஒழுங்குபண்ணிக்கொள்ள வெண்டுமென்று அவர் சொல்லியிருக்கிறார்.

2500 வருஷம் முன்னால் இருந்துவிட்டு ஆசார்யாள் போய் விட்டார். அவரோ ஸ்வசரிதை—ஒரு குறிப்பாகக்கூட— எழுதியும் வைக்கவில்லை! பிற்காலத்தில் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு அப்புறம் வரையில் அவருடைய சரித்ர நூல்கள் எழுதப்படும்போது அங்கங்கே வித்யாஸங்கள் வரக்கூடியதுதானே? அவரோ அந்தச் காலத்திலேயே தேசம் முழுவதும் ஸஞ்சாரமும் பண்ணியிருக்கிறார். ஒரு தடவைக்கு மூன்று தடவையாகப் பண்ணியிருக்கிறார். அதனால் தேசத்தின் எந்த மூலை முடுக்கிலானாலும், 'இங்கே ஆசார்யாள் இன்ன இன்ன பண்ணினார்' என்று சொல்கிறார்கள். இது அத்தனையையும் எந்த க்ரந்த கர்த்தா சேகரித்து எழுதமுடியும்? இந்த நாளில் ரயில், ப்ளேன் எல்லா வசதியும் இருந்தும்கூட இப்படி யாராவது ஸாதிக்க முடியுமா என்று தோன்றுகிறது. அந்த நாளில் கேட்பானேன்?

ஆசார்யாளுக்குப் பிறகு மடங்களில் அவர் பெயரிலேயே மஹா பெரியவர்களாக சில ஸ்வாமிகள் வந்திருக்கிறார்களென்றும், இவர்களை ஆதி ஆசார்யாளாகவே நினைத்துக் கொஞ்சம் குழறிப் போயிருப்பதாகவும் முன்னேயே பார்த்தோம். இதனாலும் சில சரித்ர பேதங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. உதாரணமாக, ஆசார்யாள் ஸர்வஜ்ஞ பீடமேறியது காஞ்சி என்றும், காஷ்மீர் என்றும் இரண்டு விதமாகப் புஸ்தகங்களில் இருக்கிறது. இதற்கு மூன்று விதமாக பதில் சொல்லும்போது, ஒன்று, காஞ்சி

* IV. 3. 1—3.

Koviloor Digital Library

மண்டலத்துக்கே காஷ்மீரம் என்றும் பெயர் இருந்திருக்கிறது என்பது. "கோவிந்தநாதீ"யத்தில் இவ்விஷயம் ஸ்பஷ்டமாகவே சொல்லியிருக்கிறது. இன்னொரு பதில், "காஷ்மீரில் ஸர்வஜ்ஞ பீடம் மாதிரியே இருந்ததற்கு 'சாரதா பீடம்' என்று பேர்; காஞ்சியில்தான் 'ஸர்வஜ்ஞ பீடம்' என்றே பேர்; ஆசார்யாள் இரண்டிலும் ஏறினர்" என்பது. மூன்றாவதாகச் சொல்வது, "ஆதி ஆசார்யாள் காஞ்சியில் ஸர்வஜ்ஞ பீடமேறினர்; அபிநவ சங்கரர் காஷ்மீரத்தில் ஸர்வஜ்ஞ பீடமேறினர். இதிலே மாறுபாடு ஏற்பட்டுவிட்டது" என்பது.

ஆசார்யாள் பெயரில் பலர் இருந்திருப்பது மட்டுமில்லை. அவர் கதையில் வருகிற சில பாத்ரங்களின் பெயரிலும் இரண்டுபேர் இருந்திருப்பதால் கொஞ்சம் குழறுபடி ஏற்படுகிறது. ஸாதாரணமாக 40 பேர் படிக்கிற ஒரு க்ளாஸிலேயே இரண்டு பசங்களுக்கு ஒரே பேர் இருந்து, இனிஷியலுங்கூட ஒன்றாகவே இருந்து விடுவதால், ஒருத்தனுக்கு ஊர் பெயரையும் சேர்த்து இரண்டு இனிஷியலாக்குவதைப் பார்க்கிறோமல்லவா? இம்மாதிரி ஆனந்தகிரி, மண்டன மிச்ரர் என்றெல்லாமும் இரண்டிரண்டு பேர்கள் இருந்திருப்பதாக ஆராய்ந்து பார்த்துச் சொல்கிறார்கள். ஆசார்யாளின் நேர் சிஷ்யரான ஆனந்தகிரி வேறே, கொஞ்சம் பிற்பாடு சிஷ்ய பரம்பரையில் வந்து சங்கர விஜயம் எழுதிய (அனந்த) ஆனந்தகிரி வேறே என்கிறார்கள். 'ப்ரஹ்ம ஸித்தி' என்ற அத்வைத க்ரந்தமும், மூன்று மீமாம்ஸா சாஸ்த்ர புஸ்தகங்களும் எழுதிய மண்டன மிச்ரர் வேறே, மீமாம்ஸகராயிருந்து அப்புறம் ஆசார்யாளின் சிஷ்யராகி ஸுரேச்வராசார்யாள் என்று பெயர் பெற்று, 'நைஷ்கர்ம்ய ஸித்தி', வார்த்திகங்கள் ஆகிய அத்வைத நூல்கள் மட்டும் எழுதியவர் வேறே என்கிறார்கள். ஸுரேச்வர-மண்டனமிச்ரர் அப்படியே ஆசார்ய ஹ்ருதயத்தை ப்ரதிபலித்து எழுதியவர். இன்னொரு மண்டனமிச்ரரோ அத்வைதமே சொன்னாலும் அதில் ஆசார்யாளுக்கு வித்யாஸமான சில கோட்பாடுகளைச் சொல்பவர். அவரும்

Koviloor Digital Library

ஆசார்யாளின் காலத்திற்குச் சிறிது முற்பட்டவர்தானென்று தெரிகிறது.

ஒரே பெயரில் இரண்டு மநுஷ்யர்கள் இருந்திருப்பது போல, ஒருவருக்கே இரண்டு பெயர் இருந்திருப்பதாலும் கொஞ்சம் குழறுபடிக்கு இடம் கொடுத்திருக்கிறது. இந்த நாளில்கூட 'alias' போட்டுக்கொண்டு ரொம்பப் பேர் இருக்கிற மாதிரி! இப்படி ஸுரேச்வர - மண்டனமிச்ரருக்கே விச்வரூபரென்றும் பெயர் இருந்ததாகத் தெரிகிறது.....

இப்படிப் பலவிதமாக இருக்கும்போது, சரித்ரம் எழுதியவர்களில் அவரவரும் தாங்கள் கேள்விப்பட்டது, தங்களால் சேகரிக்க முடியாது, வித்யாஸமாக இருப்பதில் தங்களுக்கு ஸத்யமாகத் தோன்றியது ஆகியவற்றைக் கொண்டு எழுதியிருப்பார்கள். தங்களுக்கும் முன்பு இருந்த ஆசார்ய சரித்திரத்தைப் பார்த்து அதை base பண்ணி, மேலே எழுதியிருப்பார்கள். இதில் அவரவர்கள் அபிமானப் படியும் கதையைக்கொண்டு போயிருக்கூடியது ஸஹஜமே. தேசம் பூரா ஆசார்யாள் ஸஞ்சாரம் பண்ணிப் பல ஸ்தாபனங்களை ஏற்படுத்திவிட்டுப் போயிருப்பதில் ஒவ்வொன்றை ஆச்ரயத்தவர்களுக்கும் அதை விசேஷித்துச் சொல்லணுமென்று தோன்றக் கூடியதுதான். அதனுலும் கதா வித்யாஸங்கள் ஏற்பட்டிருக்கும்.

அநேக புஸ்தகங்களுக்குள் இப்படி வித்யாஸம் ஏற்படுவது மட்டுமில்லை. ஒரே புஸ்தகத்துக்கே உள்ள பல ப்ரதிகளுக்குள்ளேயுங்கூட வித்யாஸங்கள் இருப்பதையும் பார்க்கிறோம். ஏட்டுச் சுவடிகளாகவே எழுதி வைத்துக் கிடைத்திருக்கிறவற்றில் பாட பேதங்கள் சிலவும் இருக்கின்றன.

'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்று பழமொழி கேள்விப்பட்டிருக்கலாம். லேககர்களின்—'காப்பி' எழுதும் scribeகளின்—கவனக் குறைவால் பாட பேதம் ஏற்படுவது ஒன்று. சில ச்லோகங்களைக் காப்பி பண்ணுமல்கூடகர் அவள் விட்டிருக்கலாம். இப்படியெல்லாம் ஏற்படுவது ஒன்று.

Koviloor Digital Library

இன்னென்று, அபிமானத்தைப் பொறுத்து மாற்றி எழுதுவது.

'ஆப்ஜெக்டிவ்' - ஆகத்தான் (ஸ்வயச் சார்பில்லாமல் விஷயச் சார்புடன் மட்டுமே) எழுத வேண்டும், அப்படி எழுதி வைத்ததை 'ஆப்ஜெக்டிவ்' - ஆகத்தான் பார்க்க வேண்டுமென்று பேச்சில், கருத்தளவில், சொன்னாலும் கார்யத்தில் வரும்போது அபிமானங்கள் விட்டுப்போவ தென்பது ச்ரமமாகவே இருக்கும். 'Likes' என்று சொல்கிற போதே 'dislikes'-ம் தொக்கி நிற்பது வேறே! ந்யாயமாகப் பார்த்தால் ஆசார்யாள் - அத்வைதம் என்கிறபோது இதற் கெல்லாம் இடம் இருக்கப்படாதுதான். அவரைப்போல, 'கொள்கையபிமானம் என்று ஒன்று இல்லாமல் ஸத்யத்தை ஸத்யமாகப் பார்த்துச் சொல்லணும்' என்று நிஷ்பக்ஷபாத மாக அலசி அலசித் தத்வத்தை உருவாக்கியவர் எவருமில்லை. அதனால்தான் அவருடைய அத்வைதத்தில் த்வைதம், கர்மம், பக்தி, ஸாங்க்யம், யோகம், பௌத்தம், மீமாம்ஸை அத்தனைக்குமே இடம் கொடுக்க முடிந்திருக்கிறது...ஆனால் ஆசார்யாள் மாதிரி ஆசார்யாள்தான் இருக்க முடியும்! அதுதானே அவர் பெருமை?......

ஏற்கெனவே (ஆசார்ய சரிதங்கள்) எழுதி வைத்து விட்டது தீர்ந்துபோன விஷயம். எழுதியவர்கள் எல்லாருமே ஆசார்யாளிடம் நிரம்ப பக்தி வைத்திருந்த பெரியவர்கள். தங்களுடைய பக்தி தங்களோடு முடிந்து போகாமல் லோகத் திலும் பரவுவதற்காகவே அவருடைய சரித்ரத்தை அழகாக எழுதிக்கொடுத்தவர்கள். அவர்கள் செய்துள்ள உபகாரம் பெரிசு. அவர்களெல்லாரையும் நாம் போற்றத்தான் வேண்டும்.

இன்றைக்கு அந்தச் சரித்ரங்களை நாம் எப்படி ப்ரயோஜனப்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்பதே கவனிக்க வேண்டியதாகிறது. எந்தச் சரித்ரமானாலும் அது மனஸை ஆசார்யாளிடம் இழுத்து வைக்கிறது என்ற முறையில் பக்தி நூல்களாக எல்லாவற்றையுமே நாம் ரஸிக்க

Koviloor Digital Library

வேண்டியதுதான். இங்கே கேள்வி வேண்டாம். பக்திக்குக் கேள்வியுமில்லை, பதிலுமில்லை. பக்திதான் நமக்கு முக்யம். ஆசார்யாளை நம்முடைய கல்லு மனஸ் நினைத்துக் கொஞ்சம் உருகும்படியாக எங்கே அவகாசம் (வாய்ப்பு) கிடைத்தாலும் அப்படிப் பண்ணிவிட்டுப் போக வேண்டியதுதான். அதனால் எல்லாச் சரித்ரங்களையும் பாராயணம் பண்ணுவோம்.

கதையாக இருப்பதில் எது வாஸ்தவம் என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டு அறிவினால் அலசிப் பார்க்கும்போது நிஷ்பக்ஷபாதமாகப் பண்ணவேண்டும். அவர் எப்படி ஸ்வயாபிமானமில்லாமல் ஸத்யத்தைப் பார்த்தாரோ—ஏகமான பரம ஸத்யத்தைப் பார்த்தாரோ—அப்படி அவருடைய சரித்ரங்களில் ஸத்யத்தைப் பார்க்க அவரையே ப்ரார்த்திக்கொண்டு நடுநிலையிலிருந்து கொண்டு பண்ண வேண்டும்.

ஸத்யத்தோடு ப்ரேமையும் முக்யம். ஒன்றுக்காக இன்னொன்றை விட்டுக் கொடுக்கக்கூடாது. ஸத்யம் என்று நமக்கு ஒன்று முடிவாகத் தோன்றுகிறது என்பதற்காக, அந்த முடிவுக்கு வர முடியாதவர்களிடம் பேதம் பாராட்டக் கூடாது. அத்வைதம் என்றாலே அபேதம்தான். ஒன்றாய்ப் போய்விடுவது என்ற 'ஐக்ய'த்தையே சொன்னவர் ஆசார்யாள். அவர் விஷயமாகவே அபிப்ராய பேதம், மனோபேதம் என்று ஏற்படச் செய்தோமானால் அதைவிட அபசாரமில்லை.

'நமக்கு ஸத்யம் தெரியவேண்டும்; உள்ளது உள்ளபடி பார்த்துப் புரிந்து கொள்கிற தீரம் வேண்டும்; தீரம் என்பது சண்டைக்குப் போகும் சூரத்தனமாகாமல் இருக்கவேண்டும்; நம் மனஸில் கொஞ்சங்கூட ப்ரேமை மாறாமல் மற்றவர்களுக்கும் எடுத்துச் செல்லவேண்டும்; அவர்களுக்கும் ஸத்யமான த்ருஷ்டியும் ப்ரேமையுள்ள மனஸும் வாய்க்க வேண்டும்' என்று ஆசார்யாளையே ப்ரார்த்தித்துக் கொண்டு இந்த விஷயத்தில் ப்ரவேசிப்பதுதான் முறையான மனோபாவம்.

Koviloor Digital Library

"மாதவீய சங்கர விஜயம்": 'மாதவீய சங்கர விஜயம்' என்பது நிறைய ப்ரசாரமாகி இருப்பதாகச் சொன்னேன். காவ்ய ரஸங்கள் நிரம்பியதாக அது இருப்பது ஒரு காரணம். அதே ஸமயத்தில் தத்வங்கள், ஸித்தாந்தங்கள் முதலிய வற்றையும், ஆசார்யாளுக்கும் மாற்று ஸித்தாந்திகளுக்கும் நடந்த வாதங்கள் முதலியவற்றில் deep-ஆக அலசி அதில் சொல்லியிருக்கிறது. சங்கர விஜயப் புஸ்தகங்களில் முதல் முதலில் அச்சுப்போட்டு தேசம் முழுவதிலும் விநியோகமான புஸ்தகம் அதுதான் என்பதாலும் ப்ரபலமாயிற்று. அதை நன்றாக ப்ராசாரம் செய்யவேண்டும் என்று ஈடுபாடு கொண்ட அபிமானிகள் இருந்தார்கள். நூறு வருஷம் முந்தியே முப்பது வருஷ இடைவெளிக்குள் பம்பாயிலிருந்து முதல் 'எடிஷ'னும், புனாவிலிருந்து இரண்டாவது 'எடிஷ'னும் போட்டு விநியோகமான புஸ்தகம் அது*. இரண்டு வியாக்யானங்களோடு சேர்த்துப் பெரிசாக அச்சுப்போட்ட புஸ்தகம். அச்யுதராய மோடக் என்பவர் எழுதிய 'அத்வைத ராஜ்ய லக்ஷ்மி' என்பது ஒரு வ்யாக்யானம். இன்னொன்று 'டிண்டிம வ்யாக்யானம்'. தனபதி ஸூரி என்பவர் எழுதியது.

மாதவீய சங்கர விஜயம் எழுதியவர் அதற்கு 'ஸம்க்ஷேப (சுருக்கமான) சங்கர விஜயம்' என்று பேர் கொடுத்திருக்கிறார். புஸ்தக ஆரம்பத்தில், ஏற்கெனவே ஆசார்யாளைப் பற்றி இருப்பதான சரித்ரங்களிலிருந்து திரட்டிச் சுருக்கித் தாம் எழுதுவதாகத் தெரிவித்திருக்கிறார். வ்யாஸாசலரைப் பேர் குறிப்பிட்டுச் சொல்லி, 'அவருடைய சங்கர விஜயத்திலிருந்தும் இன்னும் மற்ற புஸ்தகங்களி லிருந்தும் சேகரித்து எழுதுகிறேன்' என்று சொல்கிறார். "அந்தப் பூர்வ கவிகளுடைய ச்லோகங்கள் ரொம்பவும் மதுரமானவை. ரொம்பவும் தித்திப்பாகச் சாப்பிட்டால் திகட்டிப் போகுமல்லவா? அப்படி ஆகாமலிருப்பதற்கே

* 1863-ல் பம்பாயிலிருந்து முதற் பதிப்பும். 1891-ல் புனாவிலிருந்து ஆனந்தாச்ரம நூல் வரிசையில் இரண்டாம் பதிப்பும் வெளியாயின.

Koviloor Digital Library

உப்பு, உறைப்பு, புளிப்பு மாதிரி மாற்று ருசியாக என் ஸொந்த ச்லோகங்களையும் அவர்களுடைய ச்லோகங்களோடு கலந்து ஒரு விநோதமான 'ஸ்டை'லில் எழுதியிருக்கிறேன்"* என்று விநயமாகச் சொல்கிறார். விநயத்தில் வாஸ்தவமும் கலந்திருக்கிறது. வாஸ்தவம் என்றது பூர்வ கவிகள் மதுரமாகப் பாடியிருப்பதாகவும், இவர் அதற்கு மாறாகப் பாடியிருப்பதாகவும் சொல்வதையல்ல. இவருடைய ஸொந்தக் கவனமும் அவர்களுடையதைப் போலவே, அதை விடவுங்கூட மதுரமாக இருப்பவைதாம். பின்னே என்ன வாஸ்தவமென்றால் மற்றப் புஸ்தகங்களிலிருந்து இவர் நிறைய எடுத்துத் தம் புஸ்தகத்தில் கொடுத்திருக்கிறாரென்பதுதான். வ்யாஸாசலீயத்திலிருந்து பெரிய பெரிய பகுதிகளாகவே எடுத்துத் தம் புஸ்தகத்தில் அங்கங்கே சேர்த்திருக்கிறார். ராஜ சூடாமணி தீக்ஷிதரின் 'சங்கராப்யுதம்', ராமபத்ர தீக்ஷிதரின் 'பதஞ்ஜலி விஜயம்', ஜகந்நாத கவியின் 'பகவத் பாத ஸப்ததி' ஆகியவற்றிலிருந்தும் அநேக ச்லோகங்களை எடுத்து இந்தப் புஸ்தகத்தில் கொடுத்திருக்கிறார். 'ஆனந்த கிரீய'மும் அவர் முக்ய source-ஆக எடுத்துக்கொண்டுள்ள இன்னொரு புஸ்தகம். ஆனால் அது ச்லோகம் கொஞ்சமாகவும் கத்யம் (உரை நடை) அதிகமாகவும் கலந்து எழுதப்பட்ட புஸ்தகமாகையால், முழுக்க ச்லோக ரூபமாகவே அமைந்த இந்தப் புஸ்தகத்தில் அதிலிருந்து அதிகம் சேர்க்க முடியவில்லை. ஆனாலும் அதிலிருந்தும் சில ச்லோகங்களைக் கையாண்டிருக்கிறார்; (அதன்) வசன நடைப் பகுதிகளிலிருந்தும் தாத்பர்யங்களை எடுத்துக்கொண்டு ச்லோகமாகப் பண்ணிக் கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், பல புஸ்தகங்களில் ஸாரமாயுள்ளதையெல்லாம் ஒரே இடத்தில் நாம் சேர்த்துப் படித்து ரஸிக்கும்படியாகத் தம்முடைய நூலில் திரட்டிக்

---

* யதா (அ)தி ருச்யே மதுரே(அ)பி ருச்யுத்பாதாய ருச்யாந்தர-
யோஜநார்ஹா |
ததேஷ்யதாம் ப்ராக்-கவி-ஹ்ருத்ய-பத்யேஷ்வேஷாபி மத்-பத்ய-
நிவேச-பங் கீ ||

Koviloor Digital Library

கொடுத்திருக்கிறுர். மூலத்திலுள்ளதை அப்படியே கொடுப்பது, கொஞ்சம் மாற்றிக் கொடுப்பது, டெவலப் பண்ணிக் கொடுப்பது என்று மூன்று விதமாகவும் பண்ணியிருக்கிறுர். ஆகையாலேயே அந்தப் புஸ்தகம் பண்டித-பாமர ரஞ்ஜகமாக ப்ரஸித்தமாகியிருக்கிறது.

சில பேர் கேட்கிறுர்கள்: 'அவரே பேர் சொல்லிக் குறிப்பிட்டுள்ள வ்யாஸாசலீயத்திலிருந்தும், பூர்வ சரித்ரங்கள் என்று அவர் சொல்வதில் புகழ் பெற்றுள்ள ஒன்ருன ஆனந்த கிரீயத்திலிருந்தும் வேண்டுமானுல் அவர் நிறைய எடுத்துக் கொண்டிருக்கலாம். ஆனுல் 'சங்கராப்யுதயம்', 'பதஞ்ஜலி சரிதம்', 'பகவத்பாத ஸப்ததி' முதலியவற்றிலிருந்து அவர் எடுத்துக் கொண்டிருப்பார் என்பதைவிட அந்தப் புஸ்தக கர்த்தாக்கள்தான் இவருடைய புஸ்தகத்திலிருந்து எடுத்துத் தங்களுடைய புஸ்தகங்களில் சேர்த்துக் கொண்டிருப்பதாக ஏன் இருக்கக்கூடாது?' என்று கேட்கிறுர்கள்.

ஆனுல் அவரேதான் ஸ்பஷ்டமாக அநேக நூல்களிலிருந்து திரட்டியதாகச் சொல்லியிருக்கிறுரே! அது மாத்ரமில்லே. சங்கர விஜயங்கள் என்பவை காவ்ய ரீதியில் எத்தனே ரஸமாக எழுதப்பட்டிருந்தாலும் அவற்றுக்குக் காவ்யம் ('லிட்ரேசர்') என்பதைவிடப் பாராயணத்துக்கான மத க்ரந்தம் என்றுதான் முக்யத்வம். க்ரந்த கர்த்தாவின் நோக்கமே படிப்பவர்கள் ஆசார்ய பக்தியும், ஆஸ்திக்ய புத்தியும் பெறவேண்டுமென்பதே தவிர, 'இலக்கியம்' என்று ரஸித்து மகிழ்வதோடு நின்றுவிட வேண்டும் என்பதல்ல. இப்படி மத சாஸ்த்ரங்களில் சேர்க்கும்படியாக உள்ள புஸ்தகங்களில், 'வேறே கவிகள் சொன்னதை நாம் எடுத்துக் கையாண்டால் கௌரவ ஹானி இல்லேயா?' என்ற கேள்வி எழும்புவதில்லே. "நம் 'பர்பஸ்' ஜனங்கள் பக்தியுடன் படித்துப் பாராயணம் பண்ணக்கூடியதான ஒரு க்ரந்தத்தைக் கொடுப்பதுதான். அதற்கு எது உதவுமானுலும் அதை ப்ரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்" என்றே

Koviloor Digital Library

நினைத்து free-யாக மற்றப் புஸ்தகங்களிலிருந்தும் எடுத்துக் கொள்வார்கள்.

ஆனால் ராஜ சூடாமணி தீக்ஷிதர், ராம பத்ர தீக்ஷிதர், ஜகந்நாத கவி முதலியவர்கள் கவிகள் என்றே பெயரெடுத்தவர்கள்; காவ்யங்கள் என்ற முறையிலேயே தங்களுடைய புஸ்தகங்கள் பெயரெடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டவர்கள். இப்படிப்பட்டவர்கள் எங்கேயாவது இன்னொரு புஸ்தகத்திலிருந்து எடுத்துத் தங்கள் புஸ்தகத்தில் சேர்ப்பார்களா? கவிகள் இதை கௌரவ ஹானியாகவே நினைப்பார்கள். (இப்படிச் செய்வதாகத் தங்கள் நூலில்) சொல்லாமலே செய்தால் குட்டு வெளியாகிறபோது 'சோர கவி', 'இலக்கியத் திருடர்' என்று மானமே போவதாகத்தான் ஆகும். ரஸவத்தாக இப்படியொரு சங்கர விஜயப் புஸ்தகம் இருந்தால் நிச்சயம் பல பேருக்கு—பண்டித ஸமூஹத்தினருக்காவது—தெரிந்ததாகத்தான் இருக்கும். அப்படியிருக்கும்போது கவி என்று பேர் வாங்கியவர்கள் அதிலே கை வைத்துத் தங்கள் புஸ்தகத்தில் நுழைய விட்டுக்கொள்ளத் துணிவார்களா?

இன்னொன்று : மாதவீய சங்கர விஜயம் ஸுமார் 2000 ச்லோகம் கொண்ட பெரிய புஸ்தகம். சங்கராப்யுதம், பதஞ்ஜலி சரிதம் ஆகியன அதைவிட ரொம்பவும் சின்னப் புஸ்தகங்கள். (பகவத் பாத) ஸப்ததியிலோ மொத்தம் எழுபதே ச்லோகம்தான். ஒரு பெரிய புஸ்தகத்தில் அங்கங்கே வேறே புஸ்தகங்களிலிருந்து ச்லோகங்கள் கொடுத்தால் வித்யாஸமாகத் தெரியாது. ஆனால் மூலமே சின்னதாயுள்ளபோது அதில் இரவல் சரக்கு நிறைய இருந்தாளல் அப்படிப்பட்ட புஸ்தகம் பண்டித ஸமூஹத்தில் எடுபடுமா? அந்தக் கவிக்குத்தான் பெயர் உண்டாகுமா? ஒரே ஸ்டைலில், ஒரே சீரான கதைப் போக்கிலும் கருத்துப் போக்கிலும் அந்த மூன்று புஸ்தகங்களும் போகும்போது ('மாதவீய'த்தில் காணப்படும்) இந்த ச்லோகங்களும் 'டெக்ஸ்'டோடு அங்கமாக இயற்கையாகப் பொருந்தியிருப்

Koviloor Digital Library

பதால், வேறே புஸ்தகத்திலிருந்து எடுத்துச் சேர்த்தது என்று சொல்வதற்கு இடமில்லை.

மாதவீய கர்த்தாவே கௌரவ ஹானி என்று நினைக்காமல் திறந்த மனஸோடு அநேக நூல்களிலிருந்து கோத்துக் கொடுத்திருக்கிறேனென்று சொல்லும்போது அப்படி இல்லை என்று நாம் ஏன் ஆக்ஷேபிக்க வேண்டும்?

வ்யாஸாசலீயம் : அந்தப் புஸ்தகத்திலிருந்து தெரிவது வ்யாஸாசலீயத்திற்கு நிறைய ப்ராமாண்யம் (மெய்ம்மை) உண்டென்பது. அசலம் என்றால் மலையல்லவா? அதை வைத்து சிலேடையாக மாதவீயத்தின் ஆரம்பத்தில் அதைப் பண்ணியவர், "வ்யாஸ அசலர் முதலான பூர்வ காலப் பண்டிதர்கள் என்ற மலையில் ஆசார்ய சரித்ரம் ஒரு உன்னதமான வ்ருக்ஷமாக முளைத்திருக்கிறது. அதன் புஷ்பங்களில் நிரம்பியுள்ள தேனை (அர்த்த புஷ்டியை) வித்வத் ஸமூஹம் என்கிற வண்டுகள் பானம் பண்ணுகின்றன. உச்சத்திலுள்ள அந்தப் புஷ்பங்களில் என் சிற்றறிவு என்ற குட்டையான துறடுகோலுக்கு எட்டுகிற கொஞ்சத்தை மட்டும் ஈச்வர ஸ்வரூபமான குரு ஸ்மரணையோடு பறித்து மாலையாகத் தொடுத்து இந்த 'ஸம்க்ஷேப சங்கர விஜய' மாகத் தருகிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.*

இதே உபமானம் சொல்லி இதே வ்யாஸாசலீயத்தை கோவிந்த நாதரும் தம்முடைய சங்கர விஜயத்தில் கொண்டாடியிருக்கிறார் :

---

* வ்யாஸாசல - ப்ரமுக - பூர்விக - பண்டித - க்ஷ்மா-
ப்ருத் - ஸம்ப்ருதோச்ச - தர - காவ்ய - தரோஸ் - ஸுரீதே : ।
வித்வந் - மதுவ்ரத - ஸுகோரு - ரஸாபி - ஸர்வாணி -
(ஆ)நாதும் - அர்த்த - குஸுமாந் அஹம் அக்ஷமோ - (அ)ஸ்மி॥
யத்ராதுதல்ப - திஷண ஸ்ருணிநா க்ருஹீதும்
சக்யம் ததத்ர ஸாரஸம் ஸகலம் க்ருஹீத்வா।
காஞ்சித் - மஹேச்வர - குரு - ஸ்ம்ருதி - பிந்ந - மோஹ:
ஸம்க்ஷேப - சங்கர - ஜய - ஸ்ரஜம் ஆதநோமி॥

Koviloor Digital Library

அத்யுந்நதஸ்ய காவ்யத்ரோர் - வ்யாஸாசல - புவோ - (அ)கிலம் |
அர்த்த ப்ரஸூநாத் - யாதாதும் அஸமர்த்தோ - (அ)ஹம் அத்புதம் ||

"வ்யாஸாசல பூமியில் (வ்யாஸ அசலமாகிய மலை நிலத்தில்) மிகவும் உயர்ந்த காவ்ய மரமாக ஆசார்ய சரித்ரம் முளைத்திருக்கிறது. அதனுடைய அர்த்தமாகிய அத்புத புஷ்பத்தைப் பறித்து வர நான் சக்தியற்றவன்" என்று அர்த்தம்.

புஸ்தக ஆரம்பத்திலேயே வ்யாஸாசலரை ஸ்துதித்த மாதவீய கர்த்தா அப்புறம் பத்துப் பதினைந்து ச்லோகங்களில் அவையடக்கமாகப் பல விஷயம் சொல்லிவிட்டு மறுபடியும், "தந்யோ வ்யாஸாசல கவிவரஸ் - தத் - க்ருதிஜ்ஞாச்ச தன்யா :" என்பதாக, 'கவி ச்ரேஷ்டரான வ்யாஸாசலரும் பாக்யசாலி; 'அவருடைய க்ரந்தத்தை அறிந்தவர்களும் பாக்யசாலிகள்' என்று பாராட்டுகிறார்.

ஆனந்தகிரீயம் : முழுசாகக் கிடைத்திருக்கும் சங்கர விஜயங்களுக்குள் ரொம்பவும் பூர்வ காலத்தியதாகத் தெரிவது ஆனந்தகிரீயம். பல source-களிலிருந்து அதற்கு நிரம்ப ப்ராமாண்யம் உண்டென்பது உறுதியாகிறது. மாதவீயத்திற்கு இரண்டு வ்யாக்யானங்கள் சொன்னேனல்லவா? மாதவீயத்தில் அதற்கு ஆதி பூர்வ ஆதாரமாகச் சொல்லப்படும் ப்ருஹச்-சங்கர விஜயம், ப்ராசீன சங்கர விஜயம் என்பவற்றிலுள்ள விவரங்களெல்லாம் ஆனந்தகிரீயத்திலேயே அடங்கியிருக்கின்றனவென்றும், அதனால் இதையே ப்ருஹச் - சங்கர விஜயமென்றும் ப்ராசீன சங்கர விஜயமென்றும் சொல்வதுண்டு என்றும் அந்த இரண்டு வ்யாக்யானங்களிலிருந்து தெரிகிறது. மாதவீயத்தில் சொல்லாத விஷயங்களையும் சில இடங்களில் இந்த வ்யாக்யானங்களில் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக, அச்யுதராய மோடக் தம்முடைய 'அத்வைத ராஜ்ய லக்ஷ்மி'யில் ஆசார்

Koviloor Digital Library

யாளின் கடைசி நாட்களைச் சொல்லுமிடத்தில் 'சிவ ரஹஸ்ய'த்தின் ஒன்பதாவது அம்சத்தில் பதினாறுவது அத்யாயத்தில் வருகிற ஆசார்ய சரித்ரம் முழுவதையும், கடைசியில் அவர் காஞ்சியில் ஸித்தி பெற்றதுவரை quote பண்ணிவிட்டு, இந்த விஷயங்களெல்லாம் ஆனந்தகிரியின் ப்ருஹச் - சங்கர விஜயத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன என்று மேலும் 'அதாரிடி' காட்டும் விதத்தில் சொல்லியிருக்கிறார்*. அவர் சொல்வதிலிருந்து ஆனந்தகிரிக்கு 'ஆனந்த ஞானர்' என்றும் பெயரிருந்து தெரிகிறது.

தனபதிஸூரி தம்முடைய ('டிண்டிம') புஸ்தகத்தில் ஆசார்யாளின் திக்விஜயத்தை வர்ணிக்கும் மாதவீயத்தின் 15-வது அத்யாயத்திற்கு வ்யாக்யானம் செய்யும் போது, என்னென்ன ஸித்தாந்தக்காரர்களோடெல்லாம் ஆசார்யாள் வாதம் பண்ணினார், எப்படி வாதித்தார் என்று நீளமாக 800 ச்லோகங்களுக்கு மேலே சொல்லிக்கொண்டு போகிறார். "அத்ர ப்ராசீநாநுரோதேன வ்யாக்யேயம்"— அதாவது, "ப்ராசீனமான மூலத்தை அநுஸரித்து இப்படி வ்யாக்யானம் பண்ணப்பட்டிருக்கிறது" என்றும் சொல்கிறார். அவர் ஆனந்தகிரியத்தையே ரொம்பவும் க்ளோஸாக அநுஸரித்துத்தான் இந்த இடத்தில் எழுதியிருக்கிறாரென்பது அந்த சங்கர விஜயத்தைப் பார்த்தால் ஸந்தேஹத்திற்கு இடமில்லாமல் தெரியும். திக்விஜயத்தில் ஆசார்யாள் எந்தெந்த ஊருக்குப் போனார், எந்த ஆர்டரில் போனார், யார் யாரைப் பார்த்தார், எங்கே எத்தனைகாலம் தங்கினார் என்ற விஷயங்களெல்லாம் நூற்றுக்குத் தொண்ணூறு ஆனந்த கிரியத்திலுள்ளபடியே இந்த வ்யாக்யானத்தில் இருப்பது மட்டுமின்றி, ஒவ்வொரு ஸித்தாந்தக்காரரும் அவரோடு ஆசார்யாளும் எப்படி வாத ப்ரதிவாதம் பண்ணினார்களென்பதும் அப்படியே ஆனந்தகிரியத்தில் காணும் பாயிண்ட்களாக, அதே வாக்யங்களாகக்கூட, இருக்கின்றன.

---

* "ஏதத் கதாஜாலம் ப்ருஹச்-சங்கர விஜய ஏவ ஸ்ரீமத் ஆநந்த ஞானாக்யானந்தகிரி விரசிதே த்ரஷ்டவ்யம்."

Koviloor Digital Library

ச்ருங்கேரி ஸ்வாமிகள் ஒருவருடைய உத்தரவிலும் மேற்பார்வையிலும் குருவம்ச காவ்யம் என்ற க்ரந்தம் எழுதப்பட்டதாகச் சொன்னேனல்லவா? அதை எழுதிய காசி லக்ஷ்மண சாஸ்த்ரிகளே அதற்கு வ்யாக்யானமும் எழுதியிருக்கிறார். மூல நூலின் ஆரம்பத்தில் அவர் ஆசார்யாளின் குலத்தைப் பற்றிச் சொல்லும்போது, 'இது ஏற்கெனவே கவீந்திரர்களால் விவரிக்கப்பட்டிருக்கிறது'—'கவீந்த்ரை : உபதர்சிதம்'*—என்று சொல்லியிருப்பதற்கு அவரே வ்யாக்யானம் பண்ணும்போது 'கவீந்திரர்களால்' என்பதற்கு, 'ஆனந்தகிரி முதலான யதீந்திரர்களால்' என்று ஆனந்தகிரி ஒருவரை மாத்திரம் பேர் குறிப்பிட்டு, ஸ்தானம் கொடுத்துச் சொல்கிறார் : "ஆனந்தகிரி யதீந்த்ராதிபி :".

இண்டாலஜிஸ்ட்களுக்குள் ப்ரஸித்தி பெற்ற ஒருவர் (ஹெச். ஹெச்.) வில்ஸன். ஸண்ட்ரகோட்டஸ் ஸமாசாரம் கண்டுபிடித்துச் சொன்னவர். அவரும் ஆனந்தகிரீயத்தின் ப்ராமாண்யத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். பொதுவாக வெள்ளைக்காரர்களின் மனோபாவம் என்ன என்று முன்னே சொன்னேன். ஆகையால் அவர்கள் 'ஸர்டிஃபிகேட்' கொடுத்துத்தான் நாம் நம்முடைய புஸ்தகங்களையே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இதைச் சொல்லவில்லை. அவர்களில் ரொம்பப் பேருக்கு நம்முடைய வழிகளிலும் நம்பிக்கைகளிலும் கௌரவமான பார்வை இருப்பதில்லை. தஞ்சாவூர் அரண்மனையைச் சேர்ந்த ஸம்ஸ்க்ருதச் சுவடிகளுக்கு 'இன்டெக்ஸ்' தயாரித்த பர்னெல் என்பவர் இப்படித்தான் ஆனந்தகிரீயத்தை ஒரே கண்டனமாகப் பண்ணியிருக்கிறார். அதில் சொல்லியே இல்லாத விஷயத்தைச் சொல்லியிருப்பதாக—'கோரமாண்டல் கோஸ்ட்' என்று அவர்கள் சொல்லும் சோழ மண்டலக் கடற்கரையிலேயே ஆசார்யாள் பல மடங்கள் ஸ்தாபித்ததாக ஆனந்தகிரீயத்தில் இல்லவே இல்லை. ஆனால் அப்படியிருப்பதாக—இவர் (பர்னெல்) சொல்லிக்

---

* ஆசார்யாணும் குலம் உபதர்சிதம் கவீந்த்ரை :

Koviloor Digital Library

கண்டனம் பண்ணியிருக்கிறார். வில்ஸனே ஆனந்தகிரீயத்தில் அநேக 'மிராகிள்'கள் சொல்லியிருப்பதை நம்பமுடியாமல், 'இதெல்லாம் ஒரே பொய்யாகப் புளுகியிருப்பது' என்று திட்டியிருக்கிறார். ஆனாலும் மொத்தத்தில் அவர் ஸம்மதமாகச் சொல்வதை ஏன் சொல்கிறேன் என்றால் அதுதான் நமக்கு 'அதாரிடி' என்பதற்காக அல்ல; அநேக விஷயங்களில் ஸம்மதமாகப் போக முடியாதவர்களே அப்படிப் போகிறார்களென்றால் அப்படிப்பட்டது நிச்சயம் ஸரியானதாக, ப்ரமாணமுள்ளதாகத்தானேஇருக்கும்என்பதற்காகத்தான்! அவர்கள் கொள்கைப்படி ஆசார்யாள் கி.பி. 788-820 தானே? வில்ஸன் எழுதியது பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் (1832-ல்). அதாவது அவரது எண்ணப்படி ஆசார்யாள் அவருக்கு ஆயிரம் வருஷம் முந்தி இருந்தவர். ஆனந்தகிரீயத்தை அவர் ஆராய்ந்து பார்த்து, அதுவும் கிட்டத்தட்ட அவ்வளவு காலத்திற்கு முந்தையது, ஆசார்யாள் காலத்தையொட்டியே எழுதப்பட்டது என்பதற்கு மறுக்கமுடியாத உட்சான்று இருக்கிறது என்று அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார். அக்கால ஹிந்து மத நிலையை உள்ளபடி அறிவதற்கு இந்தப் புஸ்தகத்தை very safe guide-ஆக (மிகவும் நம்பகமான வழிகாட்டியாகப்) பின்பற்றலாம் என்கிறார்*.

மோனியர் வில்லியம்ஸின் 'ஸான்ஸ்க்ரிட்-இங்கிலீஷ் டிக்ஷனரி' என்பது ஒரு பெரிய வால்யூம். நிறைய ஆராய்ச்சி பண்ணி எழுதியது. அதிலே அவர் தாம் பார்த்த மூன்று சங்கர விஜயப் புஸ்தகங்களுக்குள் ஆனந்தகிரீயத்தைத்தான் ஸம்பவங்களை, ஆசார்யாளின் திக்விஜயங்களை, உள்ளபடி எழுதிய "recording" என்று அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்.

ஆதாரபூர்வமாக ஆசார்ய சரித்திரம் அறிய இப்படியாக ஆனந்தகிரீயத்திற்கும் வ்யாஸாசலீயத்திற்கும் நிரம்ப

---

* "Sketch of the Religious Sects of the Hindus" தொடக்கப் பகுதி.

Koviloor Digital Library

ப்ராமாண்யம் இருப்பதாகத் தெரிவதால் அந்த இரண்டை முக்யமாக எடுத்துக்கொண்டு, அப்புறம் அவற்றுக்கு விரோதமில்லாமல் மற்றப் புஸ்தங்ககளில் என்ன அதிகப்படி விஷயங்கள் சொல்லியிருக்கிறதோ அவற்றையும் சேர்த்துக் கொண்டுவிட்டால் ஒருவாறு ஆசார்யாளின் சரித்ரத்தை உள்ளபடிப் பூர்ணமாகத் தெரிந்துகொண்டுவிடலாம்.

அந்த இரண்டு புஸ்தகங்களுக்குள்ளேயே வித்யாஸமாக உள்ள இடங்களில் என்ன செய்வது?

இதோடுகூட—இதைவிட முக்யமாக என்றுகூடச் சொல்லலாம்—ஒரே புஸ்தகத்தில் பாடபேதங்கள் இருக்கிறதே, எந்தப் பாடத்தை ஸரியென்று ஏற்பது?......

ஆசார்யாளுடைய பல சிஷ்ய பரம்பரைக் கிளைகள் இருக்கின்றன. ஆசார்ய சரித்ர புஸ்தகங்களில் சில இவற்றில் ஒரொரு கிளையைக் குறிப்பாக அபிமானித்து, ஆச்ரயித்து வந்தவர்களுடைய ஸம்பந்தமுடையதாக இருக்கிறது. பொதுவாக, பொதுநோக்கோடு உள்ளவை சிவரஹஸ்யம், மார்க்கண்டேய ஸம்ஹிதை முதலிய இதிஹாஸ, புராணங்கள். ஆசார்யாளிடமோ அத்வைத ஸித்தாந்தத்திடமோ அவற்றுக்கு விசேஷப் பற்றுதலில்லை. இதிஹாஸ—புராணங்கள் என்ற வகையில் அநேக தெய்வ புருஷர்களின் கதைகளை அவை சொல்வதில் ஆசார்யாளைப் பற்றியும் சொல்கின்றன என்பதோடு ஸரி. எல்லா சங்கர விஜயங்களுக்கும் இந்த இதிஹாஸ-புராணங்கள் முற்பட்டவை என்பதும் ஆஸ்திகர்கள் அபிப்ராயம். கவிகளிலும் குறிப்பாக இன்னாரை ஆச்ரயித்து, அவர்கள் ஸம்பந்தமாக விசேஷம் கொடுத்து எழுதுவது என்றில்லாமல் பொது நோக்கோடு எழுதியவர்கள் உண்டு. சங்கராப்யுதயம், பதஞ்ஜலி விஜயம், சங்கராசார்ய சம்பூ எழுதியவர்களெல்லாம் இப்படிப் பொதுவாகக் கவிகள் என்று பெயர் வாங்கியவர்கள். இவர்கள் ஆசார்யாளைப் பற்றி எழுதும்போது வழிவழியாக வந்துள்ள நம்பிக்கைகள், கர்ணபரம்பரைக்

Koviloor Digital Library

கதைகள், தங்களுக்கு முன்பே இருந்துவந்துள்ள சங்கர விஜயக் கதைகள் ஆகியவற்றைச் சீர் தூக்கிப் பார்த்து முடிவு பண்ணி அதன்படியே எழுதியிருப்பார்கள்.

ஆகையால் நாம் சங்கர விஜயப் புஸ்தகங்களுக்குள்ளே இதுவா, அதுவா, ஒரு புஸ்தகத்திலேயே இந்தப் பாடமா அந்தப் பாடமா என்று பார்க்கும்போது, எந்த விவரங்கள் முந்தி வந்த இதிஹாஸ - புராணுதிகளுக்கு tally ஆகிறதோ (ஒத்துப் போகிறதோ), பொதுக் கவிகள் இந்த (சங்கர விஜய) புஸ்தகத்துக்கு முந்தியவர்களாயிருக்கும் பக்ஷத்தில் அவர்கள் சொல்வதற்கும் tally ஆகிறதோ, அல்லது அந்தக் கவிகள் இதற்குப் பிற்பட்டவர்களானல் அவர்களும் இதிலிருந்தே எந்த விவரங்களை எடுத்துக் கொண்டிருக்கிருர் களோ—அப்படிப்பட்ட ஸமாசாரங்களை ஸத்ய ப்ரமாண மானவை யென்று எடுத்துக்கொண்டுவிடலாம்.

எல்லாவற்ருேடுகூட, (குறிப்பாக, ஒரு முடிவும் காணமுடியாதபோது) தேசம் பூராவிலும், அல்லது பெரிய பகுதியில் 'ஆழமான நம்பிக்கை' என்று சொல்லக்கூடிய, நெடுங்காலமாக இருந்துவரும் கர்ணபரம்பரை விஷயங்களை அத்தை பாட்டிக் கதை என்று தள்ளிவிடாமல் மதிப்புக் கொடுத்து க்ரஹித்துக்கொள்ள வேண்டும்......

ஒரு சார்பான புஸ்தகம் என்று சொல்லும்படியில்லாமல் ஒன்றுக்கு மேற்பட்ட புஸ்தகங்கள் ஒரே விதமாகச் சொல்லி, அதற்கு இசைவாகவே ஜனஸமூஹத்தின் பொதுவான நம்பிக்கையும் உள்ளபோது அந்த விஷயம் ஸரியென்று வைத்துக்கொண்டுவிடலாம்...

ஆசார்யாள் வேடிக்கை பார்க்கிற மாதிரி இருக்கிறது —பல விதமாகப் பல புஸ்தகங்களில் காட்டி! Basic texts (மூலாதார க்ரந்தங்கள்) என்று சொல்லியிருக்கும் சிவ ரஹஸ்ய — மார்க்கண்டேய ஸம்ஹிதைகளுக்குள்ளேயே வித்யாஸமிருக்கிறது! இரண்டிலும் ஆசார்யாள் பரமேச்வர னிடமிருந்து பஞ்சலிங்கங்கள் பெற்றுக்கொண்ட விஷயம்

Koviloor Digital Library

இருக்கிறது. ஆனால் சிவ ரஹஸ்யத்தில், காசி விச்வநாத லிங்கத்திலிருந்து ஸ்வாமி ஆவிர்பவித்து லிங்கங்களைக் கொடுத்தாரென்று இருக்கிறது. மார்க்கண்டேய ஸம்ஹிதையிலோ ஆசார்யாள் கைலாஸத்துக்கே போய் ஸ்வாமியை நேரே தர்சனம் பண்ணி அவரிடமிருந்து லிங்கங்களை வாங்கிக்கொண்டாரென்று இருக்கிறது. ஆசார்யாள் கைலாஸத்துக்குப் போய் ஸ்வாமி தர்சனம் பண்ணி லிங்கங்கள் வாங்கிக்கொண்டதோடு, அப்போதுதான் 'ஸௌந்தர்ய லஹரி'யும் பெற்றுக் கொண்டாரென்று லோகத்தில் பொது வழக்காகக் கதை இருக்கிறது. அவர் கைலாஸத்துக்குப் போய் லிங்கம் வாங்கிக்கொண்டதாகச் சொல்லும் மார்க்கண்டேய ஸம்ஹிதையிலும் அப்போதே அவர் 'ஸௌந்தர்ய லஹரி' பெற்ற விஷயமும் இருக்கிறது. இப்படி tally ஆவதால் அதையே நாம் எடுத்துக்கொள்ளலாம். அதோடு மார்க்கண்டேய ஸம்ஹிதையில்தான் ஐந்து லிங்கங்களையும் எங்கெங்கே வைத்தாரென்றும் சொல்லியிருக்கிறது.

ஆசார்யாள் ஜயந்தி வைசாக சுக்ல பஞ்சமி என்றே தேசம் முழுவதிலும் கொண்டாடப்படுவதால் அதையே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முன்னேயே சொன்னாற் போல, அவருடைய ஜன்ம ஸ்தலம் காலடி என்றே பொது அபிப்ராயமிருப்பதால் அதுவே ஸரியென்று வைத்துக் கொள்ளவேண்டும். பொதுவாக அத்தனை ஆசார்ய சரித்ரங்களிலுமே காலடியைத்தான் சொல்லியிருந்தாலும் ஆனந்த கிரீயத்தின் பாடபேதங்களில் ஒன்றில் (ஆசார்யாளின் ஜன்ம ஸ்தலம்) சிதம்பரம் என்று இருப்பதை எடுத்துக் கொள்வதற்கில்லை.

(சிதம்பரமும் ஆசார்யாளும்)

(சிதம்பர ஸமாசாரம் கொஞ்சம் சொல்லவேண்டும். ஆசார்யாளுக்கும் சிதம்பரத்திற்கும் ஸூக்ஷ்மமாக ஒரு ஸம்பந்தம் இருந்திருப்பதாகத் தெரிகிறது. அவர் பரமேச்வரனிடமிருந்து பெற்ற ஐந்து ஸ்படிக லிங்கங்களில்

Koviloor Digital Library

ஒன்றை ச்ருங்கேரியிலும், இன்னொன்றை இங்கேயும் (காஞ்சி ஸ்ரீமடத்திலும்) ஸ்தாபித்ததுபோக பாக்கி மூன்றை மூன்று ப்ரஸித்த க்ஷேத்ரங்களில் ப்ரதிஷ்டை செய்திருக்கிறார். அந்த மூன்றில் இரண்டு ஹிமாசலத்திலேயே உள்ள கேதாரிநாதமும், நேபாளத்திலுள்ள நீலகண்ட க்ஷேத்ரமுமாகும். மற்றது எதுவென்றால் சிதம்பரம்தான். தாம் ஸித்தி அடைகிற பர்யந்தம் தம்மிடமே ஆசார்யாள் வைத்துக்கொண்டிருந்த லிங்கத்தை அந்த ஸமயம் நெருங்கும்போது ஸுரேச்வராசார்யாளிடம் கொடுத்து சிதம்பரத்தில் ப்ரதிஷ்டை பண்ணச் சொன்னாரென்று ஆனந்தகிரீயத்தில் இருக்கிறது.

சிதம்பரம் பரம வேதாந்த தாத்பர்யங்களைக் குறிக்கும் க்ஷேத்ரம். (சிதம்பரம் என்ற) அந்தப் பேரே வேதாந்தமானது. "ஞான ஆகாசம்" என்று அர்த்தம். ஸாதாரணமாக க்ஷேத்ரப் பெயர்கள் புராணக் கதைகளைக் குறிப்பதாக இருப்பதே வழக்கம். காளஹஸ்தி, அருணாசலம், ஜம்புகேச்வரம்-கஜாரண்யம்-திருவானைக்கா என்ற பெயர்கள் அந்தந்த ஸ்தல புராண ஸம்பந்தமுள்ளவைதான். 'சிதம்பரம்' என்ற பெயர் மாத்திரம் வேதாந்தமாக இருக்கிறது. வ்யாக்ரபுரம்—புலியூர் என்று புராண ஸம்பந்தமுள்ளதாக அதற்கு ஒரு பெயர் இருந்தாலும் சிதம்பரம் என்பதுதானே ப்ரஸித்தமாயிருக்கிறது? "திருச்சிற்றம்பலம்" என்று திருமுறைகளை ஆரம்பிக்கிறார்கள்—அதுவும் வேதாந்தப் பேர்தான். 'தஹராகாசம்' என்று நம் ஹ்ருதய குஹையில் ஆத்ம ஸ்தானமாக இருப்பதைத்தான் 'சிறு அம்பலம்' என்பது. ஸ்வரூப நடராஜா பஞ்ச க்ருத்யம் செய்வதற்குப் பக்கத்திலேயே அரூபமாக, நிஷ்க்ரியமாக உள்ள ஆகாசத்தை 'ரஹஸ்யம்' என்று அங்கே வைத்திருக்கிறது. ஆகாச க்ஷேத்ரமென்றால் ether என்ற ஸூக்ஷ்ம பூதத்தைக் குறிப்பது மட்டுமில்லை; ஆத்ம தத்வத்தையேதான் ஆகாசம் என்பது. யோக-வேதாந்த ப்ரகரணமான 'யோகதாராவளி'யில் ஆசார்யாள் ஸ்ரீசைலத்தைக் குறிப்

Koviloor Digital Library

பிட்டிருப்பதற்கு விசேஷமுண்டு என்பது போலவே, 'விவேக சூடாமணி'யில் அவர் 'சிதம்பரம்' என்ற வார்த்தையைக் குறிப்பிட்டிருக்கிருர். புஸ்தகத்தின் கடைசி பாகத்தில் ஜீவன் முக்தனை வர்ணிக்கும்போது, வாஸ்தவத்தில் அவன் நிலைபெற்றிருப்பது ஞான ஆகாசத்திலேயே ஆனதால், வெளிப்பார்வைக்கு எப்படி வேணுமானாலும் கூத்தடிப்பான், பைத்தியம் மாதிரி இருப்பான், பச்சைக் குழந்தையாட்டம் இருப்பான், பிசாசு மாதிரிகூட இருப்பான், எல்லாவற்றையும் அவிழ்த்துப்போட்டுவிட்டுத் திரிவான், இல்லாவிட்டால் மான்தோல், புலித்தோல் எதை வேண்டுமானாலும் போட்டுக்கொண்டிருப்பான் என்று சொல்கிருர். அப்போது அவனை 'ஞானகாசத்தில் நிலைபெற்றவன்' என்பதற்கு "சிதம்பரஸ்த:" என்றே போட்டிருக்கிருர்*.

ஆசார்யாள் பிறந்த மலையாள தேசத்திற்கு ஒட்டினாற் போல கொங்கு நாட்டில் பேரூர் என்ற நடராஜ க்ஷேத்ரம் இருக்கிறது. ஆசார்யாள் அவதாரத்திற்காக மாதா பிதாக்கள் பஜனம் இருந்த திருச்சூரும் திருச்சிவப்"பேரூர்" தானே? பேரூருக்கு ஆதி சிதம்பரம் என்றும் பெயரிருக்கிறது!

அம்பலம் என்று ஸந்நிதிகளைச் சொல்கிற வழக்கம் மலையாளத்தில்தான் இருக்கிறது. சிற்றம்பலம், பொன்னம்பலம், வெள்ளியம்பலம் என்றெல்லாம் நடராஜ ஸந்நிதியைத்தான் தமிழ் தேசத்தில் சொல்கிறோம். இந்த அம்பலத்தின் விமானமும் தமிழ்நாட்டில் இதர ஸந்நிதிகளிலுள்ள கோபுர பாணியில் இல்லாமல் மலையாளக் கூரைக் கட்டுமான பாணியிலேயே இருக்கிறது. சிதம்பரத்து தீக்ஷிதர்கள் குடுமியைப் பின்பக்கம் முடியாமல் நம்பூதிரிகளைப்போல முன்பக்கம் முடிகிருர்கள். நம்பூதிரிகள் நேர்

---

* திகம்பரோ வாபி ச ஸாம்பரோ வா
த்வகம்பரோ வாபி சிதம்பரஸ்த :।
உந்மத்தவத்வாபி ச பாலவத்-வா
பிசாசவத்-வாபி சரத்யவந்யாம்॥

Koviloor Digital Library

உச்சியில் ஊர்த்வ சிகையாக முடிந்தால், இவர்கள் இன்னம் முன்பக்கம் கொஞ்சம் பக்கவாட்டாகப் பூர்வ சிகையாக முடிகிறார்கள். ஆகக்கூடி, பின்னால் முடித்துக்கொள்ளாத ஒற்றுமை இருக்கிறது.)

ஆசார்யாள் சிதம்பரத்தில் பிறந்ததாகச் சொல்லியுள்ள பாடத்தில் அவருடைய தகப்பனார் பெயர் விச்வஜித், தாயார் பெற்ற விசிஷ்டா என்று எல்லாமே வித்யாஸமாயிருக்கிறது! 'என்ன இப்படியிருக்கே?' என்று ஆராய்ந்து கொண்டு போனால் அபிநவ சங்கரர் என்று சொன்னேனே, கி. பி. 788-ம் காலத்தவர் என்று, அவருக்கு இதெல்லாம் பொருந்தியிருக்கிறது! அவர் சிதம்பரத்தில்தான் அவதரித்திருக்கிறார். அப்பா பேர் விச்வஜித். அம்மா விசிஷ்டா[1]. இரண்டு பேருக்கும் மாறாட்டம் ஏற்பட்டுப் பாடம் மாறியிருக்கிறதென்று புரிகிறது.

ஆனந்தகிரிக்கும் அலாதியாக ஒரு சிதம்பரப் பற்றுதல் இருந்ததாகத் தெரிகிறது. (ஆனந்தகிரீய) புஸ்தகத்தின் எல்லாப் பாடங்களிலுமே குழந்தை சங்கரர் வளர்ந்ததைச் சொல்லும்போது, "ஸாக்ஷாத் சிதம்பரேச இவ விராஜமாந:- ஸாக்ஷாத் நடராஜாவைப்போலவே ப்ரகாசித்தவர்" - என்று சொல்லியிருக்கிறது.[2]

ஆசார்யாள் கோவிந்த பகவத்பாதரை ஸந்தித்து உபதேசம் பெற்றது சிதம்பரமென்றே ஆனந்தகிரீயத்தின் எல்லாப் பாடங்களிலும் இருக்கிறது[3]. ஆசார்யாள் பற்றிய இதர புஸ்தகங்களில் அந்த இடம் நர்மதா தீரம், பதரி, காசி என்றெல்லாம் வித்யாஸமாகச் சொல்லப்பட்டிருந்தாலும்

---

1. "ஜகத்குரு ரத்னமாலா ஸ்தவத்"தின் 61-வது ச்லோகத்திற்கு "ஸுஷமா" வியாக்யானத்தில் காணப்படும் வாக்பதிபட்டரின் "சங்கரேந்த்ர விலாஸ" மேற்கோள் இவ் விஷயத்தைத் தெளிவுற விளக்குகிறது.

2. 'ஆனந்தகிரீய சங்கரவிஜயம்'—மூன்றாவது ப்ரகரணம்.

3. 'ஆனந்தகிரீய சங்கரவிஜயம்'—மூன்றாவது ப்ரகரணம்.

Koviloor Digital Library

ப்ரவலான ஐதிஹ்யம் நர்மதா தீரம் என்றே இருப்பதை கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அந்த உபதேசத்தின்போது வெளிலோகத்திற்குத் தெரியாவிட்டாலும் உள்ளூரச் சிதம்பர ஸம்பந்தம் இருந்த தாக வைத்துக்கொள்ளலாம். எப்படியென்றால்...கோவிந்த பகவத்பாதர் யார்? பதஞ்ஜலி அவதாரம்தான். பதஞ்ஜலி சிதம்பரத்தோடு இணைபிரியாமல் சேர்ந்தவர். (ஆசார்யாளின்) குரு இப்படியென்றால் பரமகுருவான கௌடபாதரும் சிதம்பரத்தில்தான் பதஞ்ஜலியிடம் அவர் பதஞ்ஜலி ரூபத்திலிருந்தபோதே வ்யாகரண உபதேசம் பெற்றவர். ஆசார்யாளோ தத்வரீதியில் எப்போதும் 'சிதம்பரஸ்தர்.' அதனால் அவரை ஞானகாசத்திலேயே வைத்து குரு உபதேசித்ததை "சிதம்பரத்தில் உபதேசித்தார்" என்று எழுதிவிட்டார் என்கலாம்!)

காசியில் திண்டாதானின் ரூபத்தில் விச்வநாதரே வந்து ஆசார்யாளைப் பரீக்ஷித்தது, தாயாரின் மரண ஸமயத்தில் ஆசார்யாள் அவள்கிட்டே போய் விச்ராந்தி பண்ணிப் புண்ய லோகம் அனுப்பியது முதலான வ்ருத்தாந்தங்கள் ஆனந்தகிரீயத்தில் இல்லாவிட்டாலும், மற்ற புஸ்தகங்களில் இருப்பதாலும், லோக வழக்கிலும் ப்ரஸித்தமாயிருப்பதாலும் அவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஆசார்யாள் ஷண்மத ஸ்தாபனம் பண்ணியதை விளக்கமாகச் சொல்கிற புஸ்தகம் ஆனந்தகிரீயம்தான். ஆனாலும் பொது அபிப்ராயத்தில் ஷண்மதம் என்றால் சிவன், அம்பாள் விஷ்ணு, பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர், ஸூர்யன் ஆகிய ஆறு பேரைக் குறித்த உபாஸனை என்று இருந்தாலும் இதில் ஸுப்ரஹ்மண்ய மதமான கௌமாரத்துக்கு பதில் காபாலிகத்தைச் சொல்லியிருக்கிறது*. இதே சரித்ரத்தில் முன்னாடி ஆசார்யாள் நிராகரணம் செய்த 72 மதங்களில் பலவற்றை ஒவ்வொரு ப்ரகரணத்தில் ஒவ்வொன்றாகக்

* 72-வது ப்ரகரணம்.

Koviloor Digital Library

கொடுக்கும்போது காபாலிகத்தை அவர் கண்டனம் செய்த கதையும் இருக்கிறது*. ஆனால் பிற்பாடு அவர் ஐந்து சிஷ்யர் களைக் கொண்டு சைவம்—சாக்தம்—வைஷ்ணவம்—காண பத்யம்—ஸௌரம் ஆகியவற்றை ஸ்தாபித்த அப்புறம் காபாலிகரான வடுகநாதர் என்பவர் அவரிடம் வந்து தம்முடைய மதத்தையும் பரப்ப அவர் அநுக்ரஹிக்கணும் என்று கேட்டுக்கொண்டதாகவும், பூர்வ பக்ஷமாக—அதாவது, எதிர்க் கட்சியும் என்னவென்று கொஞ்சம் தெரிந்தால் நல்லதுதானே என்கிற ரீதியிலும், வைதிகா சாரங்களை அநுஸரிப்பதற்கில்லாமல் ப்ரஷ்டர்களாகப் போனவர்களை உத்தேசித்தும் அவர், "ஸரி, உன் மதத்தையும் கொஞ்சம் ப்ரசாரம் பண்ணி விட்டுப்போ!" என்று உத்தரவு கொடுத்ததாகவும் வருகிறது. அவர் (வடுகநாதர்) அப்படியே பண்ணிவிட்டு மறுபடி காஞ்சீபுரத்துக்கு வந்து, மற்ற ஐந்து மதங்களை ப்ரசாரம் பண்ணிவிட்டு அங்கே திரும்பி வந்திருந்த மற்ற ஐந்து சிஷ்யர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாரென்று வருகிறது.

ஜன ஸமூஹத்தில் உள்ள ஐதிஹ்யமோ கௌமாரம் உட்பட்ட ஷண்மதங்களை ஆசார்யாள் ஸ்தாபித்தாரென்ப தாகத்தான் இருக்கிறது. அந்த ஐதிஹ்யம் இருக்கட்டும். தர்ம சாஸ்த்ர நிபந்தன க்ரந்தம் என்பதாக ப்ராமாண்யம் பெற்றுள்ள 'பராசர மாதவீயம்' என்ற நூலிலும்,

> சைவம் ச, வைஷ்ணவம், சாக்தம், ஸௌரம்,
> வைநாயகம் ததா |
> ஸ்காந்தம் ச பக்தி - மார்கஸ்ய தர்சநாநி ஷடேவ ஹி ||

என்று முருக உபாஸனையான கௌமாரத்தையே 'ஸ்காந்தம்' என்று ஆறுவது மதமாகச் சொல்லியிருக்கிறது.

சாஸ்த்ர ப்ரகாரமே எல்லாம் பண்ணின ஆசார்யாள் கௌமாரத்தை விட்டிருப்பாரா?

---

* 23-வது ப்ரகரணம்,

Koviloor Digital Library

ஆனந்தகிரீயத்திலேயே ஆரம்ப ப்ரகரணமொன்றில்[1] ஆசார்யாள் அனந்தசயன க்ஷேத்ரத்திலிருந்து குமாரஸ்வாமி ஆவிர்பவித்த ஸ்தலமான ஸுப்ரஹ்மண்யம் என்ற க்ஷேத்ரத்திற்குப் போனார் (உடுப்பி கிட்டே கூகே ஸுப்ரஹ்மண்ய ஸ்தல என்று சொல்லப்படும் க்ஷேத்ரமாயிருக்கலாம்); அங்கே குமாரதாரை என்ற நதியில் ஸ்நானம் பண்ணிவிட்டு, ஸர்ப்ப ரூபத்திலிருக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியை பக்தியோடு வழிபட்டாரென்றுவருகிறது[2]. (நான் சொன்ன ஸுப்ரஹ்மண்ய ஸ்தல -வில் ஸ்வாமி ஸர்ப்ப ரூபத்தில் தானிருக்கிறார். கர்நாடக-ஆந்த்ர தேசங்களில் அப்படித் தான் வழக்கம்.) தவிரவும் ஆசார்யாளின் ஸ்தோத்ரங்களில் ஸுப்ரஸித்தமாக இருக்கிற ஒன்று 'ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்'. பரம பக்தியும் கவித்வமும் லளிதமாகச் சேர்ந்து பாராயண க்ரந்தமாக அது இருக்கிறது. திருச்செந்தூர் முருகன்மேல் பாடியது. ஆசார்யாளும் நரலீலையாக அவதார விளையாட்டு விளையாடியதில், க்ரூர ஸ்வபாவம் படைத்த ஒரு எதிர் ஸித்தாந்தி அவருக்கு ஆபிசாரம் (செய்வினை) பண்ணியதை ஏற்றுக்கொண்டு சரீர உபாதைப்பட்டபோது திருச்செந்தூருக்கு வந்து ஸ்வாமியை ஆராதித்து, அந்த க்ஷேத்ரத்திற்கே உரியதான பன்னீரிலை விபூதியினால் ரோக நிவ்ருத்தி பெற்றார் என்று அங்கே ஸ்தல மாஹாத்ம்யம் சொல்கிறார்கள். பன்னீரிலையில் வைத்து அங்கே விபூதி தருவதை ஆசார்யாளே 'பத்ரபூதி' என்று சொல்லி, அதை இட்டுக்கணுமென்றுகூட இல்லாமல் பார்த்த மாத்ரத்திலேயே மஹா ரோகங்களும் ஆவி சேஷ்டைகளும் கூடப் பிசுபிசுவென்று தேய்ந்து போய்விடுமென்று 'புஜங்க'த்தில் சொல்லியிருக்கிறார் :

அபஸ்மார-குஷ்ட-க்ஷயார்ச-ப்ரமேஹ
ஜ்வரோந்மாத குல்மாதி-ரோகா மஹாந்த : |

---

1. 11-வது ப்ரகரணம்
2. ஸ்நாத்வா குமாரதாராயாம் நத்யாம் சிஷ்ய-ஸமந்வித: |
பக்த்யா ஸம்பூஜயாமாஸ ஷண்முகம் சேஷ ரூபிணம் ||

Koviloor Digital Library

பிசாசாச்ச ஸர்வே பவத்-பத்ரபூதிம்
விலோக்ய க்ஷணாத் தாரகாரே த்ரவந்தே ||[1]

ஸம்ஸ்க்ருதத்தில் ஸுப்ரஹ்மண்யரைப் பற்றிய ஸ்தோத்ரம் என்றாலே முதலில் நிற்பது ஆசார்யாளின் புஜங்கம்தான்.

இதையெல்லாம் கவனிக்கும்போது அவர் ஷண்மதங்களில் ஒன்றாக கௌமாரத்தையே ஸ்தாபித்து, 'அடிஷன'லாகக் காபாலிகத்திற்கும் கொஞ்சம் இடம் கொடுத்திருக்கலாமென்று தோன்றுகிறது.

இப்படியெல்லாம் தீர ஆலோசித்து, பூர்வகாலத்திலும் பிற்காலத்திலும் தோன்றிய பொதுப்படையான நூல்களில் சொல்லியிருப்பவை, எல்லா நூல்களிலுமே பொதுவாகச் சொல்லியிருப்பவை, ஜனங்களிடம் பரவலாகவும் ஆழமாகவுமுள்ள ஐதிஹ்யங்கள் ஆகியவற்றை இசைத்துப் பார்த்துச் சேர்க்கவேண்டியதைச் சேர்த்து, எடுக்கவேண்டியதை எடுத்து விட்டு 'ஆனந்த கிரீய'த்திலும் 'வ்யாஸா சலீய'த்திலும் சுத்த பாடங்களை ஒருவாறு நிர்ணயம் பண்ணி, இரண்டுக்குள்ளேயே ஒன்றில் சொல்லி ஒன்றில் விட்டதை ஒன்றுசேர்த்து விட்டோமானால் ப்ராமாண்யமுள்ள ஆசார்ய சரித்ரம் கிடைத்துவிடும் எனலாம்.[2]

---

1. ச்லோகம் 25.

2. அச்சிட்ட நூல்களாக உருப்பெறுமுன் சுவடிகளில் எழுதப்பட்டுப் காலப் போக்கில் ஒரு சுவடிக் கட்டு சிதிலமாகும்போது இன்னொன்றில் ப்ரதி செய்யப் பட்டே ஸ்ரீ சங்கர சரிதங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

'ஆனந்த கிரீய'த்தில் முந்தைய, பிந்தையப் பொது நூல்களுக்கு மிகவும் இசைவுள்ளதாகக் காசியில் ராம தாரக மட்த்திலுள்ள கையெழுத்துப் பிரதிதான் தற்போது கிடைத்துள்ள ப்ரதிகளுள் மிகவும் பழையதாகத் தெரிகிறது. சாலிவாஹன சகம் 1737 (கி.பி 1815)-ல் எழுதப்பட்டதாக அதிலேயே கண்டுள்ளது. அப் பாடத்தையே மிகப் பெரும்பாலும் ஒத்துள்ள வேறிரு கைப் பிரதிகள் காஞ்சி ஸ்ரீமட நூலகத்திலும், சென்னை மானுஸ்க்ரிப்ட் லைப்ரரியிலும் உள்ளன.

(அடுத்த பக்கம் தொடர்ச்சி)

Koviloor Digital Library

ப்ரமாணமுள்ள சரித்ரம் என்று ஒருவாறு நிர்ணயம் செய்ததற்கு விரோதமில்லாத வரையில் அதிகப்படியான எல்லாக் கதைகளையும், ஐதிஹ்யங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

புத்தியால் ஆலோசித்தால் மட்டும் போதாது. பக்தியும், விநயமும்—ஒன்று இருந்தாலே மற்றது வந்துவிடும்—ரொம்ப அவச்யம். 'நம் அபிமானம்', 'நம் அபிப்ராயம்' என்று வீம்பாகப் பிடித்துக்கொள்ளாமல், 'ஸத்யம் தெரியணும்' என்ற ப்ரார்த்தனையோடு ஆராய்ந்து பார்த்தால் நம் புத்தியைப் பொறுத்து, பக்தியைப் பொறுத்துத் தெரிகிற மட்டும் தெரியும்.

பக்தியோடு எல்லா சரித்ரங்களையுமே படித்துக் கதை வழியாக ஆசார்ய ஸ்மரணம் பண்ணி அவருடைய அநுக்ரஹத்தை அடையவேண்டியது. நமக்கு முக்யம் அந்த அநுக்ரஹந்தான்.

இவற்றை இணைத்தும், மைஸூர் ஓரியன்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்டிலுள்ள நான்கு கைப் பிரதிகளுடன் ஒப்பு நோக்கியும் முக்ய பாடமாகக் கொடுத்து ஓர் ஆனந்தகிரீயப் பதிப்பை டாக்டர் என். வீழிநாதன் அளித்திருக்கிறார். இவற்றுக்கு மாறாக உள்ள பல பாடபேதங்களையும் அடிக்குறிப்புக்களில் கொடுத்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் Centre of Advanced Study in Philosophy-ன் பிரசுரமாக நூல் 1971-ல் வெளியாயிற்று.

'வ்யாஸாசலீய சங்கர விஜயம்' சென்னை மானுஸ்க்ரிப்ட் லைப்ரரியின் பதிப்பாக 1954-ல் வெளியாயிற்று டாக்டர் டி. சந்திரசேகரன் பல பாட பேதங்களை ஒப்பு நோக்கி உருவாக்கியது. இந்நூலின் கடைசி ஸர்கத்தில் விடுபட்டுப்போய், ஆனால் '(ஜகத்)குரு ரத்னமாலா (ஸ்தவ)'த்தின் 'ஸுஷமா' வியாக்யானத்தில் காணப்படுவதான ஐந்து மேற்கோள் ச்லோகங்கள் முன்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசார்யாள் காசியில் வஸிக்கையில் அவரை விச்வநாதப் பெருமான் தீண்டாதான் உருவில் வந்து பரீக்ஷித்ததைக் கூறும் 'குரு ரத்ன மாலா'வின் 20-வது ச்லோகத்துக்கு 'ஸுஷமா' அளிக்கும் விரிவுரையில் இதே கட்டத்தைக் கூறும் வ்யாஸாசலீய மேற்கோளாக 27 ச்லோகங்கள் காணப்படுகின்றன. இவை அச்சிட்ட நூலில் விடுபட்டுள்ளன. எனவே அச்சிட்ட நூலோடு 'ஸுஷமா'வில் காணும் கூடுதலான மேற்கோள்களையும் சேர்த்துக் கொண்டால் வ்யாஸாசலீயத்தின் முழு வடிவம் தெரியக்கூடும்.

Koviloor Digital Library

குரு தர்சனம்—துறவறம்—ஸூத்ர பாஷ்யம்

குருவைத் தேடிக்கொண்டு புறப்பட்ட ஆசார்யாள் வடக்காக வெகுதூரம் போய் நர்மதைக் கரையை அடைந்தார்.

அங்கே கோவிந்த பகவத் பாதர் நிஷ்டையிலிருந்தார்.

நதியிலோ ஊரையெல்லாம் அடித்துக்கொண்டு போகிற மாதிரி வெள்ளம் வந்திருந்தது.

சுற்றுப்பக்க க்ராமத்தவர்கள் அந்த மஹான் காப்பாற்றுவாரென்று அவரைத் தேடிக்கொண்டு வந்தார்கள்.

அவரோ தன்னை மறந்து உட்கார்ந்திருந்தார்.

ஆனால் பக்கத்திலே தேஜோ மயமாக ஒரு குழந்தை வந்திருப்பதைப் பார்த்ததும் ஜனங்களுக்குத் தன்னால் ஒரு நம்பிக்கை, பக்தி உண்டாயிற்று. வெள்ளத்தைப் பற்றிக் அந்தக் குழந்தையிடம் முறையிட்டார்கள்.

குழந்தையாசார்யாள் தன்னுடைய கமண்டலத்துக்குள் வரும்படியாக ப்ரவாஹத்துக்குக் கை காட்டினார்.

அப்படியே நதியும் அதற்குள் அடங்கிவிட்டது!

ஜனங்களெல்லாம் ஸந்தோஷப்பட்டார்கள்.

கோவிந்த பகவத்பாதரும் நிஷ்டையிலிருந்து எழுந்தார்.

ஆசார்யாளைப் பார்த்தவுடன் அவர், 'இந்தக் குழந்தைக்காகத்தானே காத்துக் கொண்டிருந்தோம்?' என்று நினைத்துக் கிட்டே வந்தார். கட்டிக்கொண்டார்.

இவர் அவர் சரணத்தில் விழுந்தார்.

தெரிந்தும் தெரியாத மாதிரி இருக்கும் அவதார விளையாட்டுப்படி அவர் இவரை, "யாரு, குழந்தை?" என்று கேட்டார்.

Koviloor Digital Library

சொல்லியும் சொல்லாமல் அவதாரமென்று தெரிவித்து, அவதார ரூபத்தையும் தெரிவித்து, எல்லாவற்றுக்குமே மூலமான அத்வைத சிவத்தையும் தெரிவித்துவிட வேண்டு மென்று ஆசார்யாள் ச்லோகங்களாக பதில் சொன்னார். பத்து ச்லோகம். 'தச ச்லோகீ' என்றே பேர். ஒவ்வொரு ச்லோகத்தின் கடைசிப் பாதத்திலும்.

தத் ஏகோ (அ)வசிஷ்ட : சிவ கேவலோ (அ)ஹம்

என்று முடித்தார். 'அவசிஷ்டம்' : எல்லாவற்றையும் மாயை என்று தள்ளியபின் மிஞ்சுவது 'கேவலம்': கலப்பட மில்லாதது. இன்னொன்று இருந்தால்தானே கலக்க முடியும்? "அப்படிப்பட்ட 'அந்த ஒன்று': 'தத் ஏக':, சிவ ஸ்வரூபமாயிருக்கிறதே, அது தான் நான்" என்று தெரிவித்துக் கொண்டார்.

யாருக்குமே தீக்ஷை என்பது இல்லாததைப் புதிதாகப் பிடித்துக்கொண்டு வந்து விடுவதில்லை! அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதுபோல உள்ளேயிருக்கிறதையே ஸம்ஸ்கார ஓட்டைப் பிளந்துகொண்டு வெளியில் வரப்பண்ணத்தான் தீக்ஷை! 'இவருக்கோ ஸம்ஸ்காரமே இல்லை. இருந்தும் குரு முக உபதேசத்தின் பெருமை தெரியவேண்டுமென்று இவருக்குத்தான் நாம் தீக்ஷை தரணுமென்று வ்யாஸர் அனுப்பிவைத்தது' என்று கோவிந்த பகவத்பாதருக்கு நிச்சயமாயிற்று.

சாஸ்த்ர ப்ரகாரம் ஆசார்யாளுக்கு அவர் ஸந்நியாஸ ஆச்ரமம் கொடுத்து உபதேசம் பண்ணினார்.

ஸந்நியாஸி முடிந்த முடிவாகத் தன் ஜீவன் என்பது ப்ரஹ்மமே என்று தெரிந்துகொள்ள வேண்டியவன். அதற்காக குரு அவனுக்கு ஜீவ - ப்ரஹ்ம ஐக்யத்தைத் தெரிவிப்பதான 'மஹா வாக்யம்' என்ற மஹா மந்த்ர உபதேசம் செய்வார். அவன் அதே த்யானமாயிருந்து அந்த ஐக்யத்

Koviloor Digital Library

தைப் பெற வேண்டும். வேத சாகை[1] ஒவ்வொன்றுக்கும் ஒரு மஹா வாக்யமுண்டு. அந்த சாகையின் முடிவில் வரும் உபநிஷத்தில் அது இருக்கும். இவற்றிலே முக்யமானவை யாக ஒரு வேதத்துக்கு ஒன்று என்று நாலு மஹாவாக்யங் கள் சொல்லப்படுகின்றன. ஆசார்யாளுக்கு கோவிந்த பகவத்பாதர் அந்த நாலையும் உபதேசித்தாரென்று மாதவீய சங்கர விஜயத்திலிருக்கிறது[2]. நம்முடைய (காஞ்சி) மடத் திலும் ஸ்வாமிகளாக வருகிறவருக்கு இப்படியே நாலு மஹாவாக்யங்களும் உபதேசிக்கப்படும் வழக்கம் இருந்து வருகிறது[3]. ப்ரணவமும் 'ஸோஹம்' என்ற ஜீவ - ப்ரம்ம ஐக்ய வாசகத்தில் அந்தர்கதமாக (உள்ளடங்கி) இருப்பதால் அதுவும் மஹா வாக்யமே. அதையும் உபதேசிக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

கோவிந்த பகவத்பாதாள் ஆசார்யாளிடம் வ்யாஸ ஆஜ்ஞைப்படியே தாம் வந்து உபதேசம் பண்ணியதாகச் சொன்னார். வ்யாஸருடைய ப்ரஹ்ம ஸூத்ரத்தின் ஸரியான தாத்பர்யத்தை விளக்கி ஆசார்யாள் பாஷ்யம் பண்ணி சுத்த வைதிகத்தையும், சுத்தாத்வைதத்தையும் ப்ரகாசப் படுத்தவேண்டும் என்ற ஆஜ்ஞையையும் தெரிவித்தார். பரமேச்வரனே அப்படி (ஸூத்ர பாஷ்யம் செய்வதாக) உத்தேசித்து தேவர்களிடம் சொல்லியிருந்ததுதானே? குரு பரம்பரையின் ஆஜ்ஞையாக அது வரவேண்டுமென்றே அவதாரத்தில் காத்துக் கொண்டிருந்தார்.

---

1. ஒரு ஜீவனைக் கடைத்தேற்றுவதற்குப் போதுமானதாக விஸ்தாரமான வேதங்களைப் பல சாகை (கிளை)களாகப் பிரித்துள்ளது. ரிக் வேதத்தில் 21, யஜுர் வேதத்தில் 101 (சுக்ல யஜுஸ் 17, க்ருஷ்ணயஜுஸ் 84), ஸாம வேதத்தில் 1000. அதர்வ வேதத்தில் 9 என்று மொத்தம் 1131 சாகைகள்.

2 V. 103

3. 1968 சங்கர ஜயந்தியன்று ஸ்ரீசரணர்கள் அருளிய ஸம்ஸ்கிருத உரையிலிருந்து. ("சதுர்வித மஹாவாக்யோபதேச ஸம்ப்ரதாய: ஸ்ரீ காமகோடி பீடே (அ)பி அஸ்மாகம் அத்யாபி அநுவர்த்ததே.")

Koviloor Digital Library

அப்படியே ஆசார்யாள் வ்யாஸ ஸூத்ரத்தின் தாத்பர்யமெல்லாம் ப்ரகாசிம்படியாக பாஷ்யம் பண்ணி குருவின் சரணத்தில் வைத்து, அவருக்கு நிரம்பக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டு சில காலம் கூட இருந்தார்.*

வீட்டில் இருப்பதானுல் எட்டு வயஸுதான் ஆயுஸ் என்றும், அப்புறம் ஸந்நியாஸம் வாங்கிக்கொண்டால் இன்னெரு ஜன்மா ஏற்பட்ட மாதிரி இன்னெரு எட்டு வருஷம் ஆயுஸைக் கூட்டிக்கொள்வதென்றும் ஸ்வாமி லீலை பண்ணியிருந்தார்.

அந்த எட்டு வருஷத்துக்குள் லோகமெல்லாம் எந்நாளும் ஸநாதன தர்மத்தில் நிற்பதற்கான பாஷ்யங்களை ஆசார்யாள் பண்ணவேண்டுமே என்பதால் கோவிந்த பகவத்பாதர் அவருக்கு விடை கொடுத்துக் காசிக்கு அனுப்பி வைத்தார்.

காசி வாஸத்தில் வைதிக மதப் பிரசாரம்

நம்முடைய தேசத்திற்கே மஹா க்ஷேத்ரமாக இருப்பது காசி. அது மட்டுமில்லாமல் பண்டித ராஜதானியாகவும் ஆதியிலிருந்து இருந்து வந்திருக்கிறது. தேசத்திலுள்ள அத்தனை மதங்களைச் சேர்ந்த பண்டிதர்களும் அங்கே இருப்பார்கள். அதனுல் அங்கே போனுல்தான் எல்லாரிடமும் எடுத்துச்சொல்லி, அவசியமானுல் வாதம் பண்ணி, வேத மார்க்கத்தையும் அதன் உச்சியான அத்வைதத்தையும் சீக்ரத்தில் ஸ்தாபிக்க முடியுமென்றே ஆசார்யாளை அவருடைய குரு அங்கே அனுப்பினுர்.

அப்படியே காசிக்குப்போய் ஆசார்யாள் கங்கையின் மணிகர்ணிகா கட்டத்திலுள்ள முக்தி மண்டபத்திலிருந்து கொண்டு உபதேசம் பண்ண ஆரம்பித்தார்.

---

* நர்மதா தீரத்திலிருந்து ஆசார்யாள் காசிக்குச் சென்ற பிறகே பாஷ்யம் எழுதியதாகவும் கருத்துண்டு. இதனை ஸ்ரீசரணர்கள் அங்கீகரித்துப் பேசியதாகவும் சில உபந்நியாஸங்களில் காண்கிறது.

Koviloor Digital Library

ஏழு முக்தி க்ஷேத்ரங்களில் காசி ஒன்று. முக்தி க்ஷேத்ரம், மோக்ஷ புரி என்றால் அங்கே மரணமடைந்தால் யாரானாலும் மோக்ஷத்துக்குப் போய்விடுவார்கள் என்று ஐதிஹ்யம். அயோத்தி, வட மதுரை, ஹரித்வார், அவந்தி, த்வாரகை என்று இன்னும் ஐந்து வட தேசத்திலேயே இருக்கின்றன. பாக்கியுள்ளது காஞ்சீபுரம். ஸப்த மோக்ஷ புரிகளில் தக்ஷிணத்தில் இருப்பது இது ஒன்றுதான். "முக்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி" என்று ஸ்ரீவைஷ்ணவ ஆசார்ய புருஷரான வேதாந்த தேசிகர் சொல்லியிருக்கிறார். காசி மாதிரியே காஞ்சீபுரத்திலும் முக்தி மண்டபம் என்று இருக்கிறது. புரியிலும் (புரி ஜகந்நாதத்திலும்) முக்தி மண்டபம் உண்டு. கங்கைக் கரை முக்தி மண்டபத்திலிருந்து உபதேசத்தை ஆரம்பித்த ஆசார்யாள் காஞ்சீபுரத்துக்கு வந்தபோது முதலில் ஸர்வ தீர்த்தக் கரை முக்தி மண்டபத்தில்தான் தங்கினார். அதனால் இப்போதும் வ்யாஸ பூஜையன்று காமாக்ஷி கோவிலிலுள்ள ஆசார்ய பிம்பம் அங்கு எழுந்தருளிவிக்கப் படுகிறது....

"ஸூத்ர பாஷ்யமோ?" என்று ப்ரமிப்பாகக் கேட்கிற வழக்கம் இன்றைக்கும் இருக்கிறது. அன்றைக்கு அதை ஆசார்யாளே உபதேசித்தாரென்றால் எப்படி இருந்திருக்கும்?

அங்கம், வங்கம், கலிங்கம் என்றுள்ள 56 தேசத்துப் பண்டிதர்களும் காசியில் ஆசார்யாள் உபந்நியாஸத்தைக் கேட்டார்கள். பாண்டித்யம், ஆஸ்திக்யம் இரண்டும் உள்ளவர்களாக இருந்த எல்லோரும், "இப்படி ஒரு அபார தேஜஸ்வி இத்தனை சிறு வயஸில் அபாரமான ஞானத்தோடு சொல்கிறாரே!" என்று சரணத்தில் விழுந்து பாஷ்யாம்ருதத்தில் திளைத்து ஆனந்தப்பட்டார்கள். மாற்று அபிப்ராயமுள்ளவர்களிலும் திறந்த மனஸுள்ளவர்கள், "இவர் சொல்வதுதான் தத்வம்" என்று எடுத்துக்கொண்டு சிஷ்யரானார்கள். அவர்கள் தாங்கள் தெரிந்து கொண்டதைத் தங்கள் தங்கள் ஊருக்குப் போய் ப்ரசாரம் பண்ணினார்கள்.

Koviloor Digital Library

அதனால் சட்டென்று ஒரு பெரிய திருப்பம், நம்முடைய மதத்துக்குப் பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. எதற்காக அவதாரம் ஏற்பட்டதோ அந்தப் பணி நடக்க ஆரம்பித்தது. இப்போது[1] ஹிட்லரிடம் ஊர் ஊராக, தேசம் தேசமாக தட தடவென்று விழுந்து கொண்டிருக்கவில்லையா? அப்படி 66 தேசங்களும் ஆசார்யாள் காலில் விழ ஆரம்பித்தன. ஹிட்லர் ஜயிப்பதில் ஆச்சரியமில்லை—ஸாதாரணமாகக் கெட்டதுகள்தான் கிறுகிறுவென்று பரவுகிற வழக்கம். ஆனால் ஆசார்யாளின் ஆத்ம சக்தி, அறிவு சக்தி, அநுக்ரஹ சக்தி எல்லாம் சேர்ந்ததில் நல்லதற்கும் இப்படியொரு அதிசயமான வளர்ச்சி ஏற்பட்டது.

ஆசார்யாளின் நூல்கள்

ஆசார்யாளும் எழுதித் தள்ளிக்கொண்டு போனார். உபநிஷத்துக்களுக்கும் கீதைக்கும் பாஷ்யம் எழுதினார்[2]. மிக நுட்பமான தத்வங்களையும், அபிப்ராயங்களையும் அநாயாஸமான தெளிவோடு விளக்கி எழுதினார். உபநிஷத்துக்களில் ஒன்றுக்கொன்று வித்யாஸமான மாதிரி விஷயங்கள் வரும். ஒரே கீதையிலேயே பகவான் ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொரு மார்க்கத்தை உசத்திப் பேசுகிறாற்போல இருக்கும். இப்படி mutually contradictory-யாக (ஒன்றுக்கொன்று முரணாக)த் தோன்றுவதையெல்லாம் அலசி, அலசி, ஒரே அபிப்ராயத்தில்தான் எல்லாவற்றுக்கும் பரம தாத்பர்யம், அதுதான் அத்வைதம் என்று ஆசார்யாள்

---

1. 1939-ல்

2. ஈச - கேன-கட - ப்ரச்ன - முண்டக - மாண்டுக்ய - தைத்திரீய - ஐதரேய-சாந்தோக்ய - ப்ருஹதாரண்யக உபநிஷதங்கள் என்ற பத்தும் முக்கியமான 'தசோபநிஷத்துக்களாகச் கருதப்படுகின்றன. இப் பத்துக்கும் ஆசார்யாள் பாஷ்யம் செய்துள்ளார், ஆசார்ய பாஷ்யம் பெற்றதாலேயே இப் பத்தும் அதி முக்கியத்வம் பெற்றன என்றும் சொல்லலாம். இன்னும் சில உபநிஷதங்களுக்கும் அவர் பெயரில் பாஷ்யங்கள் இருக்கின்றன.

ப்ரஹ்ம ஸூத்ரம் - தசோபநிஷத்துக்கள் - கீதை இவற்றை ஒன்று சேர்த்து வேதாந்தத்தின் ஆதாரமாகிய 'ப்ரஸ்தான த்ரயம்' என்பர்.

Koviloor Digital Library

உறுதிப்படுத்தியிருக்கும் அழகைப் பார்த்து அறிவாளிகள் எல்லாரும் ஆச்சர்யப்படுகிறார்கள்.

'ஸித்தாந்தம் இருக்கட்டும். அவர் கையாண்டிருக்கிற முறையினால் ஸம்ஸ்க்ருத பாஷைக்கே ஒரு புது மெருகு ஏற்றி விட்டார். எப்படிப்பட்ட சிக்கலான அபிப்ராயங்களையும் அந்த பாஷையால் எவ்வளவு லாகவமாகத் தெரிவித்துவிட முடியும் என்று காட்டிவிட்டிருக்கிறார்' என்றும் பல பேர் கொண்டாடுகிறார்கள்.

'Lingua franca' என்பதாகப் பல பாஷைக்காரர்களுக்கும் தொடர்பு மொழியாயிருக்கும் பொது பாஷையைச் சொல்கிறார்களல்லவா? நம் தேசத்தில் அப்படி இருந்து வந்திருப்பது ஸம்ஸ்க்ருதம்தான். குறிப்பாக, ஆதாரமான மத சாஸ்த்ரங்கள் அந்த பாஷையில்தான் இருக்கின்றன. அதனாலேயே தேசம் முழுவதற்குமாக எழுதிய ஆசார்யாள் அந்த பாஷையில் எழுதியது.

பாஷ்யங்கள், ஸொந்த நூலான ப்ரகரணங்கள் என்று இப்படி எழுதியதெல்லாம் ஞான மார்க்கம்.

பாஷ்யங்களில் ஸித்தாந்த ரீதியான ஆராய்ச்சி, வாதங்கள் எதிர் வாதங்கள் எல்லாம் விஸ்தாரமாக, ஆனால் துளிக்கூட வளவளப்பில்லாமல் இருக்கும். தாம் சொல்ல வரும் அபிப்ராயத்துக்கு நேர் விரோதமாகப் 'பூர்வ பக்ஷம்' என்று எத்தனை சொல்ல முடியுமோ அத்தனையையும் அவரே சொல்லிவிட்டு அப்புறம் அதெல்லாம் எப்படித் தப்பு என்று ஆணித்தரமாகக் காட்டி 'ஸித்தாந்த'த்தை நிலைநாட்டுவார். இப்படித்தான் ஸாங்க்ய-மீமாம்ஸாதிகள், பௌத்த-சார்வாகாதிகள் முதலான மற்ற ஸித்தாந்தங்களையெல்லாம் நிராகரணம் பண்ணியிருப்பது. முன்னேயே நாம் பார்த்திருப்பதுபோல, 'மற்றதெல்லாம் அடியோடு உபயோகமில்லாதவை!' என்று தள்ளிவிடாமல் எதில் என்ன ஸாரமாக இருந்தாலும் எடுத்துக்கொண்டார். அது மட்டுமில்லை, அதெல்லாமே அத்வைதத்தில் அடக்கம்தான்

Koviloor Digital Library

என்கிருர். மாண்டுக்ய உபநிஷத் காரிகை என்று கௌடபாதர் செய்திருக்கிருர், அதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிருர் என்றேனல்லவா? அதிலே கௌடபாதர், 'அத்வைதிகளாக இல்லாத மற்ற ஸித்தாந்திகள் தங்களுக்குள்ளேயேதான் சண்டை போட்டுக்கொள்கிருர்கள்; நமக்கு அவர்களிடம் ஒரு விரோதமுமில்லை' என்று சொல்லியிருப்பதற்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது "அத்வைதத்திற்கு அந்த ஸித்தாந்தமெல்லாமும் கை, கால் மாதிரிதானே?" (யதா ஸ்வஹஸ்த பாதாதிபி :) என்கிருர். தன் கை காலுடனேயே எவனுவது விரோதம் பாராட்டுவானு? கை கண்ணைக் குத்தி வலி உண்டாக்கலாம். ஒரு கால் இன்னொரு காலைத் தடுக்கி, பல்லே நாக்கைக் கடித்து, வலி ஏற்படுத்தலாம். அது மாதிரி அவர்கள் தங்களுக்குள் மோதிக்கொண்டு போகட்டும். மொத்த மநுஷ்யனுக்கு எல்லாம் அங்கமானதால் எதனோடும் மோதலில்லாத மாதிரிதான் அத்வைதிக்கு அவர்கள். அடுத்த ச்லோக பாஷ்யத்திலே இன்னும் ப்ரேமையோடு, "அந்த த்வைதிகளுக்கெல்லாமும் ஆத்மாவாயிருப்பவன் அத்வைதி என்பது தானே பரம தாத்பர்யம்? தத : பரமார்த்ததோ ப்ரஹ்மவித் ஆத்மைவ த்வைதிநாம்!" என்கிருர்[1].

மாற்று ஸித்தாந்தக்காரர்களுக்கும் நிரம்ப மரியாதை கொடுத்தே சொல்லியிருக்கிருர். மீமாம்ஸா பாஷ்யகாரர்களில் ஒருவரான சபரரை "ஆசார்யேண சபர ஸ்வாமிநா" என்றும், இன்னொருவரான உபவர்ஷரை "பகவதோ உபவர்ஷேண" என்றும், கௌதமர் செய்த ந்யாய ஸூத்ரத்தைக் குறிப்பிடும்போது "ஆசார்ய ப்ரணீதம்" என்றும், அவர்களுக்கு 'ஆசார்யர்', 'ஸ்வாமி', 'பகவான்' என்றெல்லாம் அடைமொழி கொடுத்து ஸூத்ர பாஷ்யத்தில் சொல்லியிருக்கிருர்[2].

---

1. மாண்டுக்ய காரிகா III 17-18 பாஷ்யம்
2. III. 3. 53&I. 1-4.

Koviloor Digital Library

தாமே ஸொந்தமாக எழுதிய ஞான நூல்களான 'ப்ரகரண'ங்களில் ஸித்தாந்த வாதமாக அதிகம் இல்லாமல் தத்வங்களை பளிச் பளிச்சென்று மணிமணியாகக் கொடுத்திருக்கும். அதோடுகூட, அநுபூதிமானின் நிலையையும் ஸ்வச்சமாக வர்ணித்திருக்கும். ப்ரகரண க்ரந்தங்களில் மிகவும் பெரிதான 'விவேக சூடாமணி'யிலும், 'உபதேச ஸாஹஸ்ரீ'யிலும் இப்படிப்பட்ட வர்ணனைகள் வருவதோடு 'ஜீவன் முக்தாநந்த லஹரீ', 'தன்யாஷ்டகம்', 'யதி பஞ்சகம்' முதலியவையும் அத்வைதாநுபவியின் ஆனந்த நிலையை வர்ணிப்பவைதான். 'ஒரு கோவணத்தைக் கட்டிக்கொண்டு தான் பாட்டுக்கு ஆத்மாராமனாகத் திரிந்து கொண்டிருக்கிறானே அவனைப் போன்ற பாக்யசாலி யார்?' என்று 'யதி பஞ்சக'த்தில் கேட்கிறார்: "கௌபீநவந்த: கலு பாக்யவந்த:"—"பாக்யசாலி என்றால் அது இந்தக் கோவணாண்டி அல்லவா?" என்கிறார். நம் மனஸில் ஆழப் பதிகிற விதத்தில், அவனே தன்னை மறந்து தன் ஸ்திதியை, "தத் ஏகோ (அ)வசிஷ்ட: சிவ: கேவலோஹம்", "ஸாக்ஷீ நித்ய: ப்ரத்யகாத்மா சிவோஹம்", "அஹமேவ பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்யம் அவ்யயம்", "அஹம் ஆநந்த ஸத்யாதி லக்ஷண: கேவல: சிவ:", "சிதாநந்த ரூப: சிவோஹம் சிவோஹம்" என்றெல்லாம் சொல்வதாக இருக்கும்*. இப்படிப்பட்ட க்ரந்தங்களைப் பாராயணம் பண்ணும்போது, அப்படிப் பண்ணுகிற நாழி வரையிலாவது நாமும் அழுக்கில்லாத ஆகாசம் மாதிரி, ஜ்யோதிர் மயமாக, ஆனந்த மயமாக இருக்கிறாற்போலவே இருக்கும்.

ஏக சைதன்ய ஜ்யோதிஸினால்தான் லோகத்திலுள்ள எல்லா ஒளிகளும், காட்சிகளும், காண்பானும் என்பதை இறுக்கி ஒரே ச்லோகத்தில் அடக்கி 'ஏக ச்லோக ப்ரகரணம்' என்றும் ஒன்று அநுக்ரஹித்திருக்கிறார். அரை ச்லோகத்தி

---

* இவ்வைந்து மேற்கோள்கள் முறையே 'தச ச்லோகீ', 'அத்வைத பஞ்ச ரத்னம்', 'ப்ரஹ்மாநுசிந்தனம்', 'அத்வைதாநுபூதி', 'நிர்வாணஷட்கம்' ஆகியவற்றில் வருபவை.

Koviloor Digital Library

லேயேகூட உபதேச ஸாரத்தை வடித்துக் கொடுத்திருக்கிறார்![1]

குழந்தைகளுக்கு வாத்தியார் உபதேசம் பண்ணுகிறது போல அடியிலிருந்து ஆரம்பித்து "பால போத ஸங்க்ரஹம்" என்று ஒன்று பண்ணியிருக்கிறார். இன்னொன்று, சின்னச் சின்னக் கேள்வியும் பதிலுமாக ஸகல விஷயங்களும் சொன்னதுதான் "ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா."

ஞானப் புஸ்தகங்களைப் போலவே பக்தி ஸ்தோத்ரங்களும் நிறைய எழுதினார். இது ஸகல ஜனங்களுக்குமான உபகாரம். பண்டிதர்களே ரஸிக்கக்கூடிய சிக்கல்களை ஞானப் புஸ்தகங்களில் அவிழ்த்துக் கொடுத்த அதே ஆசார்யாள் ஒரு குழந்தைகூட ப்ரியப்பட்டுச் சொல்லும்படியாக, அதற்கும் புரியும்படியாக, பக்தி ஸ்துதிகள் நிறையப் பண்ணிக் கொடுத்தார். இவற்றிலேயும் ரஸிகர்கள், ரஸஜ்ஞர்கள், விஷயஜ்ஞர்கள் ஆச்சர்யப்படும்படியாக அநேகம் உண்டு.

பாதாதி கேச வர்ணனை, கேசாதிபாத வர்ணனை என்று தெய்வங்களை விஸ்தாரமாக வர்ணிப்பது, பக்தி பாவம் பொங்கும்படியாக எப்படியெல்லாம் உபசாரம் பண்ணிப் பண்ணிப் பார்க்கலாமோ அத்தனையும் ச்லோக ரூபமாகப் பண்ணிவிடுவது[2]—என்று நிறையச் செய்து அவற்றைச் சொல்வதாலேயே பாராயணம் பண்ணும் நம் சித்தம்

---

1 அரை ச்லோகமாவது:
"ப்ரஹ்ம ஸத்யம் ஜகந் மித்யா ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:"—ப்ரம்மமே ஸத்யம்; உலகம் ஒரு நிலையில் ஸத்யம் போலிருந்தாலும் உண்மை நிலையில் பொய்யாகிவிடுவதான 'மித்யை'; ஜீவன் ப்ரம்மமேயன்றி வேறல்ல.

2. சிவபெருமானைக் குறித்துப் பாதாதி கேச:ஸ்தோத்ரம், கேசாதி பாத ஸ்தோத்யம் இரண்டும் செயதிருக்கிறார். விஷ்ணுவைக் குறித்து பாதாதி கேச ஸ்தோத்ரம் உள்ளது, ஸௌந்தர்ய லஹரியில் அம்பிகையின் கேசாதி பாத வர்ணனையும்: ஸுப்ரஹ்மண்ய புஜங்கத்தில் முருகனின் பாதாதி கேச வர்ணனையும் உள்ளன.

(அடுத்த பக்கம் தொடர்ச்சி)

Koviloor Digital Library

பரமாத்மா விஷயமாக ஒட்டிக் கொண்டிருக்கும்படிச் செய்திருக்கிறார்.

பாஷ்யங்கள் முழுக்க 'ப்ரோஸ்'. ப்ரகரண க்ரந்தங்களிலும் 'ப்ரோஸ்' உண்டானாலும் 'பொயட்ரி' தான் ஜாஸ்தி. ஸ்தோத்ரங்களெல்லாம் 'பொயட்ரி' தான். எதுவானாலும் அதே தெளிவு, அர்த்த புஷ்டி, ஹ்ருதயத்துக்குப் பரம சாந்தியைத் தருகிற தன்மை.

மூன்று மார்க்கங்களையும் ஸ்தாபித்தவர்

ஞானப் புஸ்தகங்களிலேயே கர்மாநுஷ்டானத்தில்தான் ஆரம்பித்து சாஸ்த்ரோக்தமாக வர்ணாச்ரம தர்மங்களின்படி எல்லாம் பண்ணிக்கொண்டு போகவேண்டும் என்று நிறையச் சொல்லியிருக்கிறார்.

தற்காலத்தில் ஸமத்வம் என்று சொல்லி வெறும் லௌகிக விஷயங்களை மட்டும் கவனித்து நாம் reform (சீர்திருத்தம்) என்று சொல்லி deform செய்வதுபோல (உருக்குலைப்பதுபோல) ஆசார்யாள் பண்ணவே இல்லை. இப்போது நாம் கார்யத்திலேயே எல்லாம் ஒன்று என்று ஆரம்பித்திருக்கிறோம். ஆனால் நம் மனஸிலே ஒற்றுமை பாவம், எல்லாம் ஒன்று என்று லவலேசமாவது இருக்கிறதா? இருந்தால் இத்தனை போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவு இருக்குமா? சாஸ்த்ரங்கள் என்ன சொல்கின்றன? அவற்றையே அநுஸரித்துப்போன ஆசார்யாள் என்ன சொன்னார்? "ஸம்ஸ்கார வித்யாஸத்தினால் ஸ்ருஷ்டியில் குண கர்மாக்கள் வித்யாஸமாகத்தான் இருக்கும். அந்த வித்யாஸத்தை ஸமம் பண்ண ஆரம்பித்தால் ஜ்வரக்காரனுக்கு விருந்துச் சாப்பாடு போடுகிற மாதிரியும், ஆரோக்ய

பலவித உபசாரங்களைக் கூறும் ஸ்தோத்ரங்கள். சிவ மாநஸ பூஜா, ம்ருத்யுஞ்ஜய மாநஸிக பூஜா, த்ரிபுரஸுந்தரீ மாநஸ பூஜா, தேவீ சதுஃஷஷ்ட்யுபசார பூஜா, மந்த்ர மாத்ருகா புஷ்பமாலா, பகவந் (க்ருஷ்ண) மாநஸ பூஜா— ஸ்தோத்ரங்கள், தத்வங்களையே திரவியங்களாக உருவகித்த 'நிர்குணமாநஸ பூஜா ஸ்தோத்ர'மும் உள்ளது.

Koviloor Digital Library

சாலிக்கு மருந்து கொடுக்கிற மாதிரியுந்தான் ஆகும். அதனால் எப்படி வித்யாஸப்படுத்தி அவரவரையும், மொத்தத்தில் ஸகலரையும் முன்னேற்ற வேண்டுமோ அப்படித்தான் கார்யங்களையும் அநுஷ்டானங்களையும் பிரித்துக் கொடுக்க வேண்டும். மனஸிலே 'எல்லாம் ஒரே சைதன்யம்' என்ற அத்வைத பாவமும், அதனால் ஏற்படும் ஏற்றத் தாழ்வில்லாத ப்ரேமையும் இருக்கவேண்டுமே தவிரக் 'கார்யத்தில் ஒண்ணு' என்று பண்ணக்கூடாது. 'பாவாத்வைதம் ஸதா குர்யாத்; க்ரியாத்வைதம் ந கர்ஹிசித்—எப்போதும் மனோபாவத்தில் அத்வைதத்தை வளர்த்துக்கொள்; ஆனால் கார்யத்தில் ஒருபோதும் அத்வைதத்தைக்கொண்டு வராதே!' கார்ய மில்லாத நிலைக்குத்தான் அத்வைதம் என்றே பேர்'' என்பது தான் சாஸ்த்ரத்தைத் அநுஸரித்து ஆசார்யாள் செய்த உபதேசம். இப்போது நேர்மாறு! 'பாவாத்வைதம்' இல்லை, 'க்ரியாத்வைத'த்துக்கே முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறோம்!...க்ரியா லோகத்தில் வேத வழிப்படி யான அநுஷ்டானந்தான் இருக்க வேண்டுமென்று ஆசார்யாள் வழிபோட்டுக் கொடுத்தார். அதாவது பழைய வழியை மறுபடிச் செப்பனிட்டுக் கொடுத்தார்.

இப்படி (ஞானம், பக்தி, கர்மா என்ற) மூன்று மார்க்கங் களையும் வைதிகமாக நிலைப்படுத்தியிருக்கிறார்.

பக்தி ஸ்தோத்ரமானாலும் ஞானத்தில், அத்வைதத்தில் கொஞ்சமாவது கொண்டு நிறுத்துவதாகவே இருக்கும். தெய்வங்களுக்குள் பேதமே இல்லாமல் சொல்வது, தெய்வம் என்றும் மநுஷ்யன் என்றுங்கூட பேதமில்லை என்று காட்டுவது—இப்படி இரண்டு விதமாக இருக்கும்.

அத்தனை தெய்வத்தையும் ஸ்துதித்துப் பாடினார். ஒவ்வொரு தெய்வத்தைச் சொல்லும் போதும் 'இதுவே பரப்ரஹ்மம், பரதெய்வம், இதற்குமேல் ஒன்று எனக்குத் தெரியவில்லை'—''ந ஜானே ந ஜானே''—என்றே சொல் வார். லக்ஷ்மியை அவளே ஸரஸ்வதி, பார்வதி என்று

Koviloor Digital Library

கொண்டாடிய மாதிரியே மற்ற தெய்வங்களையும் சொல்லி யிருப்பார்.

பக்தி எப்படி த்வைதம் மாதிரி இருந்தாலும் அத்வைத மாக முடிகிறது என்று அநேக இடங்களில் காட்டியிருக் கிறார். 'சிவாநந்தலஹரி'யில் பக்தி லக்ஷணத்தைப் பல வித மாகச் சொல்லி "ஸிந்து : ஸரித் வல்லபம்"—ஸமுத்ரத்தில் நதி கலந்து ஸமுத்ரமே ஆகிவிடுகிறாற்போல—என்று முடித் திருக்கிறார்[1]. 'ஸௌந்தர்ய லஹரி'யில் வேடிக்கையாகச் சொல்வார் : "பவாநி த்வம்"—"பவாநி, நீ (என்னைக் கடாக்ஷிப்பாயாக!)" என்று பக்தன் ஆரம்பிக்கும் போதே, "பவாநி த்வம்" என்ற அந்த வார்த்தைகளுக்கு "நான் நீ ஆவேன்" என்றும் அர்த்தம் பண்ணலாமாதலால் அம்பாள் அப்படி அர்த்தம் பண்ணிக்கொண்டு பக்தனுக்கு அத்வைத ஸாயுஜ்யத்தைக் கொடுத்து விடுகிறாள் என்கிறார்[2].

நிர்குண ப்ரஹ்மமேதான் ஸகுண மூர்த்தியாக வந்திருப்பது என்று தம்முடைய ஸ்தோத்ரங்களில் ஞாபகப் படுத்திக்கொண்டே இருப்பார். "கோவிந்தாஷ்டகம்" என்று க்ருஷ்ணர் அடித்த கூத்தையெல்லாம் சின்ன ஸ்தோத்ரமாகக் கொடுத்திருக்கிறார். அதில் எல்லாக் கூத்தும் அடங்கிப்போன அத்வைத வஸ்துதான் இப்படி வந்தது என்றும் சேர்த்துச் சேர்த்துச் சொல்லிக்கொண்டு போயிருக் கிறார். ஆரம்பமே "ஸத்யம் ஞானம் அநந்தம் நித்யம்" என்று போட்டிருக்கிறார்!

ஆசார்யாள் 'விஷ்ணு ஸஹஸ்ர நாம'த்திற்கு பாஷ்யம் செய்திருப்பதே ஸகுண-நிர்குணங்களையும் பக்தி-ஞானங்களை யும் ஒன்றுபடுத்திக் காட்டுவதற்குத்தான் என்று சொல்ல லாம்.

---

1. 61-வது ச்லோகம்.

2 22-வது ச்லோகம். தேவியின் நாமமான பவாநி என்பதையே வினைச் சொல்லாகக் கொண்டால் "நான் ஆவேன்" என்று பொருளாகும்.

Koviloor Digital Library

அத்வைதத்தையும் பக்தியையும் இணைத்துக் கொடுத்திருப்பதற்கு நீங்கள் அவ்வளவாகக் கேள்விப்பட்டிராத ஒரு ஸ்தோத்ரத்தில் த்ருஷ்டாந்தம் காட்டுகிறேன். "லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஞ்ச ரத்னம்" என்று அதற்குப் பெயர். ஆசார்யாள் நரஸிம்மர் விஷயமாகப் பண்ணியுள்ள "கராவலம்ப ஸ்தோத்ர"த்தின் அளவுக்கு இது ப்ரஸித்தியாக இல்லை. இதை ஆரம்பிக்கும்போதே ஆசார்யாள் சொல்கிறார்: 'கண்ணாடி இருக்கிறது. உள்ளே ப்ரதிபிம்பம் தெரிகிறது. திலகமில்லாமல் அது பாழ்நெற்றியாகத் தெரிகிறது. பார்த்தால் நன்றாகவே இல்லை. திலகம் வைக்கணும் என்று தோன்றுகிறது. என்ன பண்ணணும்? கண்ணாடிக்கா பொட்டு வைப்பார்கள்? அது அழுக்காவதாகத்தான் ஆகுமே தவிர வேறே என்ன நடக்கும்? பின்னே என்ன பண்ணுவார்கள்? ப்ரதி பிம்பத்துக்கு மூலமான பிம்ப ஆஸாமிக்குத்தான் பொட்டு வைப்பார்கள். அப்படி, இந்த ஜீவலோகம் பூராவும் ஏக சைதன்யம் மாயைக் கண்ணாடியில் காட்டுகிற தினுஸு தினுஸான ப்ரதி பிம்பங்கள்தான். நீயும் அப்படித்தான். உனக்கு ஏதாவது நல்லது பண்ணிக்கொள்ள வேண்டுமானால் அது பொட்டு இட்டு அலங்காரம் பண்ணிக் கொள்கிற மாதிரி. நேரே உனக்கே—அதாவது மாயையில் ப்ரதிபலித்து உண்டான உன் தேஹ, இந்த்ரியாதிகளுக்கே—நீ நல்லது என்று ஒன்றைப் பண்ணிக்கொண்டால் அது கண்ணாடியில் கறுப்புப் பூசி அழுக்குப் பண்ணும் கார்யம் தான். 'மூல பிம்பம் சைதன்யம் என்றால் அதற்கு நான் பண்ணக் கூடியது என்ன இருக்கிறது? முதலில் அது என் மனஸுக்கே வரவில்லையே!' என்கிறாயா? ஸரி, அதுவேதான் ரூபங்களோடு, குணங்களோடு இந்த லக்ஷ்மி நரஸிம்ஹ மூர்த்தியாகவந்திருக்கிறது. அவனுக்கு பஜனை பண்ணு, பூஜை பண்ணு, ஸதா ஸ்மரணம் பண்ணு! அதுதான் உனக்குப் பண்ணிக்கொள்ளும் அத்தனை நல்லதும்—திலக தாரணம் முதலான அத்தனை அலங்காரமும்' என்று சொல்லியிருக்கிறார். இத்தனை நீட்டாமல் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

Koviloor Digital Library

இதில் எல்லைக் கோடியாகத்தான் 'தக்ஷிணாமூர்த்தி அஷ்டக'த்தில் கூத்து, லீலை என்பதே இல்லாமல் ஒரே வேதாந்த தத்வங்களாகச் சொல்லி அந்த தத்வ ரூபக மாகவே, "ஸ்ரீ குரு மூர்த்தயே நம இதம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே" என்று ச்லோகம்தோறும் முடித்திருக்கிறார்.

பக்தி, ஞானம் இரண்டையும் சேர்த்த உபதேசமாக 'பஜ கோவிந்தம்' என்று தேசம் பூரா பஜனை பண்ணிக்கொண்டு போயிருக்கிறார்.

ஜனங்கள் நல்லதை நல்லபடி எடுத்துச் சொன்னால் உடனே அந்த வழியை ஏற்றுக்கொண்டு விடுவார்கள். இப்படி அந்தக் காலத்தில் ஆசார்யாள் கர்மா-பக்தி-ஞானம் என்று வேத சாஸ்த்ர வழியை மறுபடி நன்றாக ரிப்பேர் பண்ணி கான்க்ரீட் ரோடாகப் போட்டுக் கொடுத்தவுடன் ஜனங்கள் நடுவிலே புறப்பட்ட மதாந்தரங்களான சந்து பொந்து, முள்ளு வழி எல்லாவற்றையும் விட்டுவிட்டு இதில் போக ஆரம்பித்தார்கள்...

ஆரம்பத்தில் ஆசார்யாள் ஸஞ்சாரம் பண்ணவில்லை. இந்த தேசத்தில் எத்தனை பாஷைக்காரர்கள், மதக்காரர் கள், ஜாதிக்காரர்கள் உண்டோ அத்தனை பேரும் கூடுகிற காசியில் இருந்துகொண்டே நாலுதிசை சிஷ்யர்களின் மூலமும் ஔபநிஷதமான (வேதாந்த) மதஸ்தாபனத்தைச் செய்ய ஆரம்பித்து விட்டார்

பத்மபாதரின் கதை;
வேடனின் பெருமை

ஆசார்யாளின் ப்ரதான சிஷ்யர்களில் ஒருவராக இருக்கப்பட்ட பத்மபாதா சாரியாள் ஆசார்யாள் காசிவாஸம் செய்துகொண்டு இருந்தபோதே அவரிடம் சிஷ்யராக வந்து சேர்ந்தார். ஆசார்யாளுக்குப் பதினாறு வயஸ்கூடப் பூர்த்தியாகாத ஸமயம்.

பத்மபாதருக்கு பூர்வாச்ரமத்தில் ஸநந்தனர் என்று பேர். அவர் சோழ தேசத்தைச் சேர்ந்தவர். அவரைப்பற்றி

Koviloor Digital Library

ஒரு கதை சொல்கிறேன். தம் ஊரில் இருந்த காலத்தில் அவருக்கு ஒரு பெரியவர் நரஸிம்ஹ மந்த்ரோபதேசம் பண்ணினார். நன்றாக ஜபம் பண்ணி ஸித்தி பெற்று நரஸிம்ஹ மூர்த்தியை தரிசிக்கணுமென்று அவருக்கு ஆசை உண்டா யிற்று. அகத்திலிருந்து புறப்பட்டார். ஏகாந்தமாக ஒரு மலையின் உச்சியிலிருந்த காட்டுக்குப் போய்த் தபஸ் பண்ண உட்கார்ந்தார்.

ஒரு வேடன் வந்தான். 'ஐயர் ஏன், பாவம், இங்கே வந்திருக்கிறார்?' என்று நினைத்தான். அவரிடம் வந்து, "எங்கள் மாதிரி பலசாலியான வேடர்கள் இங்கே வேட்டை யாடிப் பிழைப்போம். பூஞ்சை ப்ராமணன், உனக்கு இங்கே எதுவும் கிடைக்காமல் கஷ்டப்படுவாய். எதுக்கு வந்தே?" என்று கேட்டான்.

நரஸிம்ஹர், தபஸ் என்றெல்லாம் சொன்னால் அவனுக்கு புரியாதென்று அவர், "இடுப்புக்குக் கீழே மநுஷ்யன் மாதிரி யும் மேலே சிங்கம் மாதிரியும் ஒரு ப்ராணி உண்டு. எனக்கு அது தேவைப்படுகிறது. இந்தக் காட்டில் அது இருக்கிற தென்று கேள்வி. அதற்காகத்தான் வந்தேன்" என்றார்.

"நிஜமாகச் சொல்லு ஐயரே, அப்படியொரு மிருகம் இங்கே இருக்கா? இந்தக் காட்டிலே நான் பார்க்காத இடமோ, எனக்குத் தெரியாத மிருகமோ ஒண்ணும் கிடையாது. வேடர்களிலேயே என்னைப்போல இன்னொருத்தன் கிடையாது. ஆனால் நீ சொன்ன மாதிரி மிருகம் என் கண்ணில் பட்டதே இல்லை. நீ சொல்வது மட்டும் நிஜமென்பாயானால் அதை நான் பார்க்காமல் விடுவதில்லை. நானே அதைப் பிடித்துக்கொண்டு வந்து கொடுக்கிறேன். நீ கஷ்டப்பட வேண்டாம். ஆனால் நிஜமாகவே அப்படி உண்டா, சொல்லு" என்றான்.

காட்டு ஜனங்கள் முரடு, நாம் ரொம்ப 'நைஸ்' என்று தோன்றினாலும், அவர்களுடைய எளிமை, உழைப்பு, தைர்யம், ஒத்தாசைக் குணம் எதுவும் நமக்கு வராது; நம்முடைய பித்தலாட்டங்கள் அவர்களுக்கு வராது!

Koviloor Digital Library

நரஸிம்ஹ மூர்த்தியை இவன் பிடித்து வந்து கொடுப்பதாகச் சொல்கிறானே என்று அவர் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறாய்? வேடிக்கைக்குச் சொன்னாயா?" என்று அவன் கேட்டான்.

தம்மை ஏகாந்தமாக விட்டு அவன் நகர்ந்தால் போதுமென்று அவர், "நிஜமாக அது இங்கே இருக்கிறது. ஆனால் உன்னால் பார்க்கமுடியாது. உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்றார்.

"அப்படியா சொன்னே? நாளைக்கு ஸாயங்காலத்துக்குள் அதை நான் பிடித்துக்கொண்டு வருகிறேனா, இல்லையா, பாரு! அது மட்டும் முடியா விட்டால் இந்த உயிரை விட்டுவிடுவேன். இந்தக் காட்டுக்கே பெரிய வேடன் என்று இருந்து கொண்டு, உன் மாதிரி ஐயர் கஷ்டம் பார்க்காமல் எங்கள் இடத்துக்கு வந்திருக்கும்போது உதவி பண்ண லாயக்கில்லையென்றால் நான் உசிரை வைத்துக் கொண்டு என்ன ப்ரயோஜனம்?" என்று உசந்த மனஸோடு சொன்னான்.

"ஸரி, உன்னால் முடியாது என்று நான் சொல்லும் போது, முடியும் என்று நீ புறப்பட்டால் நான் என்ன பண்ணுவது? உன் இஷ்டம்!" என்று அவர் சும்மாயிருந்து விட்டார்.

வேடன் நரஸிம்மத்தைத் தேடிக்கொண்டு புறப் பட்டான். அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட அரை மநுஷ - அரை சிங்க ரூபத்தை விடாமல் நினைவில் வைத்துக் கொண்டு காடு பூரா தேடுதேடு என்று தேடினான். ஆஹார நினைவே இல்லாமல், களைப்பு பார்க்காமல் ஒரே குறியாய்த் தேடினான். அன்றைக்கு முழுதும்போய் விட்டது. மிருகம் அகப்படவில்லை. அவனும் விடவில்லை. மறுநாளும் தேடினான். ஸாயங்கால வேளையும் வந்துவிட்டது.

'ஸரி, ஐயரிடம் சொன்னதை நம்மால் செய்யமுடியவில்லை. அவர் பொய் சொல்லியிருக்கமாட்டார். நாம்தான்

Koviloor Digital Library

கையாலாகாதவனுகி விட்டோம். உயிரை விட்டுவிட வேண்டியதுதான்' என்று தீர்மானம் பண்ணினுன்.

அங்கே படர்ந்திருந்த கொடிகளை அறுத்தான்! தூக்குப் போட்டுக்கொள்வதற்காகக் கிளையில் கட்டினுன்.

அந்த ஸமயத்தில் எதிரே ஒரு மிருகம் நின்றது.

நரஸிம்ஹ மூர்த்திதான் வந்துவிட்டார்! எத்தனை ஏகாக்ரமாக (ஒருமுனைப்பாட்டோடு) அவன் தன்னையே இரண்டு நாளாக ஸ்மரித்திருக்கிறுன், ஸத்ய வாக்ய பரிபாலனத்திற்காக எப்படி ப்ராண த்யாகமும் பண்ணத் துணிந்துவிட்டான் என்பதில் ஸந்தோஷித்தே நரஸிம்ஹ ஸ்வாமி தர்சனம் கொடுத்தார்.

ஐயர் சொன்ன வர்ணனைப்படியே மிருகம் இருந்ததைப் பார்த்து அவனுக்கு ஒரே ஸந்தோஷமாயிற்று. 'பாழும் மிருகமே! நீ அகப்படுவதற்கு இத்தனை பாடா படுத்தினுய்?" என்று சொல்லி, தூக்காகப் போட்ட கொடியை அவிழ்த்து அதனுல் நரஸிம்ஹத்தைக் கட்டினுன். ஸ்வாமியும் அவனுக்குக் கட்டுப்பட்டு நின்ருர். "கட்டுப்பட்டு" என்ருல் இரண்டு அர்த்தத்திலேயும்!

கரகரவென்று நரஸிம்மத்தை இழுத்துக்கொண்டு அவன் சோழ தேச ப்ராமணரிடம் வந்தான். "ஒய், பாரும்! இதுதானே நீர் சொன்ன மிருகம்? என்று கேட்டான்.

இவன் காட்டினுனே தவிர, அவரால் பார்க்கமுடியவில்லை! அதாவது நரஸிம்ஹ ஸ்வாமி அவருக்குக் காட்சி கொடுக்கவில்லை!

அவனுனல், "இந்தா, புடிச்சிக்கோ. உனக்காகத்தான் கொண்டுவந்தேன். ஓட்டிக்கொண்டு சுகமாக ஊருக்குப் போ" என்ருன்.

அவருக்கு துக்கம் துக்கமாக வந்தது. "ஹீனனுன வேடனுக்குத் தெரிகிருய், எனக்குத் தெரியமாட்டேன் என்கிருயே!" என்று ஸ்வாமியிடம் நொந்து கொண்டார்.

Koviloor Digital Library

அப்போது அசரீரி வாக்கு உண்டாயிற்று. "கோடி வருஷம் ஸ்வரூப த்யானம் பண்ணினாலே ஏற்படக்கூடிய சித்த ஐகாக்ரியம் (ஒருமுனைப்பாடு) இவனுக்கு ஒரே நாளில் உண்டாயிற்று. பசி, நித்ரை இல்லாமல், எங்கே சுற்றினாலும் ஒரே த்யானமாக, இப்படி ப்ராணனைப் பந்தயம் வைத்து ஸாதனை பண்ணினவராக எந்த ரிஷியும் இல்லை. இந்த மஹா பக்தனின் ஸங்கம் உனக்கு ஏற்பட்டதால்தான், தர்சனம் கிடைக்காவிட்டாலும் கர்ஜனையும் இப்போது இந்த வாக்கும் கேட்கிற பாக்யமாவது கிடைத்தது. இதனாலேயே மந்த்ர ஸித்தியும் பெற்றுவிட்டாய். உனக்கு அவச்யமான காலத்தில் வந்து, ஆகவேண்டியதை அநுக்ரஹிப்பேன்" என்று பகவானின் வாக்கு சொல்லிற்று.

கொலையாளிக்கும் கருணை!

ரொம்பவும் முக்யமான ஒரு ஸமயத்தில் பத்மபாதருக்கு நரஸிம்ஹ மூர்த்தியின் ஆவிர்பாவம் ஏற்பட்ட கதையையும் கையோடு சொல்லி விடுகிறேன்: அவர் ஆசார்யாளின் சிஷ்யராகி ரொம்ப நாளானவிட்டு நடந்த ஸம்பவம்!

காபாலிகர்களின் தலைவன் ஒருவன் இருந்தான். சுடுகாட்டில் வாஸம் பண்ணுவது, நரபலி கொடுத்து மாம்ஸத்தையும் மஜ்ஜையையும் பச்சையாகத் தின்னுவது என்றிப்படி க்ரூரமாக 'வாமாசார'ங்களை பின்பற்றி வந்த காபாலிகர்களின் தப்பையெல்லாம் ஆசார்யாள் எடுத்துச் சொல்லி ஸாத்விக வழிக்கு வரும்படி உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். அநேகம் காபாலிகர்கள் மனஸ் மாறினார்கள். சில பேர் மாறாமல் ஆசார்யாளிடம் ஒரேயடியாக த்வேஷம் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். இவன் அப்படி ஒருவன். இவனால் அவருக்கு எதிர்வாதம் எதுவும் பண்ண முடியவில்லை. அவரை எப்படித் தொலைக்கலாம் என்று பார்த்துக்கொண்டிருந்தான். 'ஒன்று பண்ணலாம். இவரோ மஹா கருணையுள்ளவர். அதனால் அவரிடமே

Koviloor Digital Library

போய் நம் இஷ்டத்தைச் சொல்லுவோம்' என்று நினைத்து, அவர் தனியாய் இருந்த ஸமயத்தில் அவரிடம் போய் நமஸ்காரம் பண்ணினான்.

"இதுவரை நான் விதவிதமாக பலி கொடுத்தும் கபாலி ப்ரத்யக்ஷமாகவில்லை. ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகமான ஒரு ராஜாவின் தலையையோ, அல்லது அஷ்ட மஹாஸித்தி பெற்ற ஒரு ஆத்மஞானியின் தலையையோ பலி கொடுத்தால் நிச்சயம் ப்ரத்யக்ஷமாவார். ராஜாவின் தலைக்கு நான் முயற்சி பண்ணினால் அவன் என் தலையை வாங்கிவிடுவான்! தாங்கள் மஹாஞானி, மஹா யோகஸித்தர். அதனால் என் மனோரதப் பூர்த்திக்காகக் கருணாமூர்த்தியான தங்களிடம் வந்தேன்" என்றான்.

இப்படிக்கூட ஒருத்தரிடம் தலையைக் கேட்பதுண்டா என்றால், ஆசார்யாள் அப்படிப்பட்டவராக இருந்திருக்கிறார்!

காபாலிகன் கேட்டதில் அவருக்கு ரொம்பவும் ஸந்தோஷம் உண்டாயிற்று: 'அட, ஒன்றுக்கும் உதவாதது என்று நினைக்கிற இந்த மநுஷ சரீரங்கூடவா ஒருத்தனுக்கு ஈச்வர தர்சனமே கிடைப்பதற்கு உதவுகிறதாம்! மரம் பட்டுப்போனாலும் விறகாக உபயோகப்படுகிறது. மாட்டுக் கொம்பு ஈச்வர அபிஷேகத்துக்கே உபயோகமாகிறது. யானை தந்தமும் எத்தனையோ ப்ரயோஜனங்களைக் கொடுக்கிறது. மான் தோல், க்ரூரமான புலித் தோல்கூட, த்யானத்துக்கு ஆஸனமாகிறது. மநுஷ்ய சரீரம்தான் எதற்கும் ப்ரயோஜனப்படாதென்று நினைத்தால், இதை ஒருத்தன் கேட்டுப் பெற வருகிறானே!' என்று ஸந்தோஷித்தார்.

"உன் ஆசைப்படியே ஆகட்டுமப்பா! ஆனால் என் சிஷ்யர்களுக்கு விஷயம் தெரியப்படாது. அவர்கள் பொல்லாதவர்கள்! உனக்கு ஏதாவது கஷ்டம் உண்டாக்குவார்கள். ஆகையால் நான் தனியாக த்யானத்தில் இருக்கும் ஸமயத் வந்து சிரஸை எடுத்துக்கொண்டு போ" என்றார்.

Koviloor Digital Library

அப்படியே அப்புறம் அவன் அவர் தனியாய் த்யானத்தி லிருந்தபோது வந்தான். கத்தியை உருவினுன்.

எங்கேயிருந்தோ பத்மபாதர் அங்கே வந்து குதித்தார்!

"ஹா ஹா!" என்று பெரிசாகச் சத்தம் கேட்டது.

ஆசார்யாள் கண்ணைத் திறந்து பார்த்தார்.

காபாலிகன் உடம்பு கிழிபட்டு எதிரே ம்ருத சரீரமாக (உயிர் நீங்கிய உடலாக)க் கிடந்ததைப் பார்த்தார்!

பக்கத்திலிருந்த பத்மபாதரிடம், "என்ன ஆச்சு? இது யார் பண்ணிய கார்யம்?" என்று கேட்டார்.

அவர், "எனக்கு ஒண்ணும் தெரியலை. கங்கையில் இருந்தேன். அப்புறம் எனக்கு என்னவோ மாதிரி ஆச்சு. இப்பத்தான் ஸ்வய ப்ரக்ஞை வந்திருக்கு" என்ருர்.

ஆசார்யாள், "ஓஹோ, உனக்கு நரஸிம்ஹ மந்த்ரம் உபதேசமாயிருந்ததா?" என்று கேட்டார்.

"இருந்தது. ஆனுல் ஒண்ணும் ப்ரயோஜனமில்லை. ஸ்வாமி என்னை ஏமாற்றிவிட்டு ஒரு வேடனுக்கு தர்சனம் தந்தார். என்னவோ சொன்னுர், 'அவச்யத்திலே வருவேன்' என்று"—என்று சொல்லும்போதே பத்மபாதருக்குச் சட்டென்று தெளிவாயிற்று. "ஓ, சொன்னபடிதான் இப்போது பண்ணியிருக்கிருர்! அவர் ஆவேசித்துத்தான் இந்தக் கார்யம் நடந்திருக்கிறது. இதைவிட ஆபத்தில் ரக்ஷணம் காட்ட ஒரு ஸமயமுண்டா?" என்று ஸந்தோஷித்து நரஸிம்ஹர், ஆசார்யாள் இரண்டு பேரையும் நமஸ்காரம் பண்ணினுர்.

தாமரை தாங்கிய தாளர்

இது பிற்காலக் கதை. பத்மபாதர் ஆசார்யாளிடம் வந்து கொஞ்ச நாளில் நடந்த இன்னொரு கதை சொல் இறேன். ஏன் 'பத்மபாதர்' என்று பேர் வந்தது என்னும் கதை. மஹான்கள் பெயருக்குப் பின்னுல் 'பாதர்' சேர்க்கிற மாதிரி, கௌடர்-கௌடபாதர் மாதிரி, பத்மர்-பத்மபாதர்

Koviloor Digital Library

இல்லை! பத்மபாதர் என்பதே முழுப் பெயர். காரணப் பெயர்.

ஒரு நாள் அவர் கங்கையின் அக்கரையிலும் ஆசார்யாள் இக்கரையிலுமாக இருந்தார்கள். ஆசார்யாள் ஈர வஸ்த்ரத் துடனிருந்தார். பத்மபாதரிடம் காய்ந்த சுத்த வஸ்த்ர மிருந்தது.

சிஷ்யருடைய பக்தியை லோகத்திற்கு, மற்ற சிஷ்யர் களுக்கு ப்ரகடனம் பண்ணவேண்டுமென்று ஆசார்யாள் நினைத்தார். "வஸ்த்ரத்தை இங்கே கொண்டு வா!" என்று எதிர்க் கரையிலிருந்தவரிடம் சொன்னார்.

குரு ஆக்ஞை என்றால் தட்டாமல் உடனே பண்ணிவிட வேண்டும் என்ற ஸ்மரணைதான் பத்மபாதருக்கு! அதில், நடுவே கங்கை இருக்கிற ஸ்மரணையே போய்விட்டது! ஆனை முழுங்குகிற மாதிரி ஆழமாக நதி ஓடுவது தெரியாமல் ஸம பூமியில் நடப்பதுபோல அவர் ஆசார்யாள் இருந்த பக்கமாக ப்ரவாஹத்தின் மேலேயே நடக்க ஆரம்பித்தார்!

அப்போது என்ன ஆயிற்றென்றால், அவர் எங்கே யெல்லாம் அடி வைக்க இருந்தாரோ அங்கேயெல்லாம் கங்கா தேவி ஒரு தாமரையைப் புஷ்பித்துப் பாதத்தைத் தாங்கினாள். அதன் மேலாகவே அவர் எதிர்க்கரைக்கு வந்து குருநாதரிடம் வஸ்த்ரத்தைக் கொடுத்தார்.

பத்மங்களால் தாங்கப்பட்ட பாதத்தை உடையவரான தால் 'பத்ம பாதர்' என்று பேர் வந்தது.

மற்ற சிஷ்யர்களெல்லாம், "என்னமாக கங்கையைத் தாண்டி விட்டாய்!" என்று ஆச்சர்யப்பட்டார்களாம். அவரானால், "இது என்ன ஆச்சர்யம்? எந்த குருநாதரை ஸ்மரித்தால் ஸம்ஸார ஸாகரமே முழங்காலளவு ஆகிவிடு கிறதோ, அவரே ஆஜ்ஞை பண்ணும்போது இந்த கங்கை என்ன ப்ரமாதம்?" என்றாராம்.

பத்மபாதர் விஷ்ணு அம்சம். ந்ருஸிம்ஹ ஸாக்ஷாத்காரம் பெற்றவர். அதனால், விஷ்ணுவின் அம்சாவதாரமான

Koviloor Digital Library

வ்யாஸரை ஆசார்யாள் அடையாளம் கண்டு கொள்வதற்கு முந்தியே இவர் கண்டுவிட்டாரென்று ஒரு ஸம்பவம் உண்டு. அதுவும் காசியில் நடந்தது தான்.

வ்யாஸருடன் வாதமும், ஆயுள் நீடிப்பும்

லோகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் ஆசார்யாளுடைய ஸூத்ரபாஷ்யத்தின் பெருமையைத் தெரியப் பண்ண வேண்டுமென்று ஸூத்ரகர்த்தாவான வ்யாஸர் நினைத்தார். ரொம்ப ரொம்பச் சுருக்கமாக வார்த்தைகளை அடக்கி அவர் ஸூத்ரம் பண்ணிவிட்டதால், 'அர்த்தம் பண்ணுகிறேன்' என்று சொல்லி அவரவரும் இஷ்டப்படி இழுத்து, நீட்டி இல்லாத அர்த்தத்தையெல்லாம் சொல்லி வந்தார்கள். அப்போது ஆசார்யாள்தான் வ்யாஸாசார்யாளின் எண்ணம் என்னவோ அதையே பரிபூர்ணமாகப் புரிந்துகொண்டு தம்முடைய பாஷ்யத்தை எழுதியிருந்தார். அதனால் ப்ரீதியடைந்த வ்யாஸாசார்யாள், 'இன்னும்கூட இவரை நன்றாகப் பரிக்ஷித்து முடிவில் இவர் செய்த பாஷ்யம்தான் நமக்கு ப்ரீதியானது என்று லோகம் புரிந்துகொள்ளச் செய்யணும்' என்று நினைத்தார்.

வ்யாஸ ரூபத்திலேயே போனால் ரொம்பவும் விநய குணம் படைத்த ஆசார்யாள் வாயைத் திறக்க மாட்டார், மேதா விலாஸத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு பக்திதான் பண்ணுவார் என்பதால் யாரோ ஒரு வயோதிக ப்ராம்மணர் மாதிரி ரூபமெடுத்துக் கொண்டு வந்தார்.

"ஸூத்ர பாஷ்யம் பண்ணி இருக்கிறீராமே. இதற்கென்ன அர்த்தம், அதற்கென்ன அர்த்தம்?"—என்று ஆசார்யாளைக் கேட்டுக்கொண்டு போனார். ஆசார்யாளும் தயங்காமல் பதில் சொல்லிக்கொண்டு போனார். இவர் என்ன அர்த்தம் சொன்னாலும் அவர் உள்ளூர ஸந்தோஷப்பட்டுக் கொண்டே, "அதெல்லாம் இல்லை, இப்படித்தான் அர்த்தம்"

Koviloor Digital Library

என்று எதையாவது சொல்லி ஆக்ஷேபித்தார். அவர் சொல்வது பொருந்தாது என்று ஆசார்யாள் விஸ்தாரம் பண்ணி வாயை அடைப்பார். ஒரு விஷயமாக வாயை அடைத்தாலும் அவர் இன்னொன்றைப் பிடித்துக்கொள்வார். அப்புறம் விதண்டாவாதமாக எல்லாங்கூட பண்ண ஆரம்பித்தார்.

'விதண்டாவாதம்' என்பது அவ்வளவு ஸரியில்லை. விதண்டை வேறே, வாதம் வேறே!...வாதம், ஜல்பம், விதண்டை என்று மூன்று. வாதம் என்பது நேர்மையாக, திறந்த மனஸோடு ஆர்க்யூ பண்ணுவது. 'ஜல்பம்' என்பது வீம்பாகத் தன் கட்சி என்று ஒன்றையே பிடித்துக்கொண்டிருப்பது. விதண்டை என்றால் எதையும் தர்க்கப்படி ரூபிக்காமல், தன் கட்சி என்று ஒன்றை ரூபிப்பதில்கூட அக்கறை காட்டாமல், எதிராளி என்ன சொன்னாலும் அது தப்பு என்று மட்டும் குதர்க்கமாகச் சண்டை போடுவது. 'கொண்டி' என்று சொல்வார்கள்.

ஆசார்யாளோடு நாள் கணக்கில் வ்யாஸர் வாதம், விதண்டை எல்லாம் பண்ணினார்.

இரண்டு மஹாமேதைகள் இப்படி பலத்த வாதம் பண்ணுவதைப் பார்த்து சிஷ்யர்கள், பண்டிதர்களெல்லாம் ஆச்சர்யப்பட்டார்கள். சிஷ்யாளுக்கு அப்பப்போ அடித்துக் கொள்ளும், "யார்டா, இந்தக் கிழவர்? நம் குருநாதரையே ஜயித்து விடுவார் போலிருக்கே!" என்று. அப்புறம் இவர் (ஆசார்யாள்) டாண் டாணென்று பாயின்ட்களைக் கொடுக்கும்போது, "இந்தக் கிழம் என்னதான் பண்ணிப் பார்த்தாலும் ஆசார்யாளிடம் ஜம்பம் சாயுமா? மண்ணைக் கவ்வாமல் போகமுடியுமா?" என்று உத்ஸாஹம் அடைவார்கள்.

'ஆசார்யாளுக்குச் சளைக்காமல் இப்படியொரு மநுஷ்யர் வாதம் பண்ணுவதா? இவர் யாராயிருக்கும்?' என்று பத்மபாதர் நினைத்துக் கொஞ்சம் ஞானத்ருஷ்டியினாலே

Koviloor Digital Library

பார்த்தார். 'அட, வேத வ்யாஸ பகவானல்லவா வந்திருக்கிறார்!' என்று தெரிந்து கொண்டுவிட்டார். 'ஸரிதான்! நம் குருநாதரோ பரமசிவன் — சங்கர: சங்கர: ஸாக்ஷாத்! வந்திருக்கும் வேத வ்யாஸரோ மஹாவிஷ்ணுவே: வ்யாஸோ நாராயண ஸ்வயம்! இப்படி சிவ-விஷ்ணுக்களே வாத விளையாட்டுப் பண்ணுவதென்றால் அது எப்போது முடியுமோ, எப்படி முடியுமோ? இப்படி ஆகணும், அப்படி ஆகணும் என்றெல்லாம் சிஷ்யரான நாம் ஆசைப்பட்டால் ஆகிவிடுமா? இங்கே நாம் ஒண்ணும் பண்ணிக் கொள்வதற்கில்லை. நாம் ஏதாவது மத்யஸ்தம், கித்யஸ்தம் பண்ணி முடிகிற விஷயமா இது? அவர்கள் தெய்வங்கள். நாமோ அடிமை, கிங்கரர். சங்கர பகவானும் நாராயண பகவானுமே விவாதம் நடத்துவதாக ஏற்பட்டிருக்கும்போது கிங்கரனான நாம் என்ன செய்வது?

"சங்கர: சங்கர: ஸாக்ஷாத் வ்யாஸோ நாராயண: ஸ்வயம் |
தயோர்-விவாதே ஸம்ப்ராப்தே கிங்கர: கிங்கரோம்யஹம் ||*"

'கிங்கர: கிங்கரோம்யஹம்' என்று வார்த்தையைத் திருப்பியிருப்பதில் 'கிங்கரோம்யஹம்' என்பதை 'கிம் கரோமி அஹம்?' என்று பிரித்துக் கொள்ளவேண்டும். 'நான் என்ன செய்வேன்?' என்று அர்த்தம்.

இப்படி ச்லோகமாகச் சொல்லி இரண்டு பேரையும் பத்மபாதர் நமஸ்கரித்தார்.

'அப்படியா? ஸூத்ரகாரரான வ்யாஸாசார்யாளேயா வந்திருப்பது?' என்று ஆசார்யாளுக்கு ஒரே பக்தியும், ஸந்தோஷமும், அடக்கமும் வந்துவிட்டது. "வாஸ்தவமாக இந்த பாஷ்யம் தங்கள் ஹ்ருதயத்தை அநுஸரிப்பதாக இருந்தால் எல்லாருக்கும் தெரிகிற மாதிரி ஸ்வஸ்வரூபம் எடுத்துக்கணும்" என்று ப்ரார்த்தித்துக்கொண்டார்.

கிழப்ராம்மணர் உடனே வ்யாஸ ரூபத்தில் தர்சனம் கொடுத்தார். ஆசார்யாளுக்கு நிரம்ப அநுக்ரஹம் செய்து,

---

* 'ஆனந்தகிரீய சங்கர விஜயம்'-52வது ப்ரகரணம்

Koviloor Digital Library

''லோகத்தில் நேர்மையாகவும் கொண்டி வழியிலும் யாரார் என்னவெல்லாம் ஆக்ஷேபித்துச் சொல்லமுடியுமோ அதற்கு மேலே நாமே சொல்லி, அத்தனைக்கும் உன் பாஷ்யம் பதில் சொல்கிறது என்று காட்டவே இப்படி வந்தேன். இந்த பாஷ்யத்திற்கு என் பூர்ண அங்கீகாரம் உண்டு'' என்றார்.

ஆசார்யாள் தாம் எழுதினதையெல்லாம் அவருடைய பாதத்தில் வைத்தார். ''தங்களுடைய அங்கீகாரம் கிடைத்துவிட்டபின் நான் செய்ய எதுவுமில்லை. தங்கள் அநுக்ரஹத்தில் இவை ப்ரசாரமாகிவிடும். இப்போது எனக்கும் பதினாறு வயஸ் பூர்த்தியாகிது. எட்டைப் பதினாருக்கி அதுவும் முடிகிறது. யதாஸ்தானம் திரும்புவ தற்கு அநுமதி தரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

''இல்லை, இல்லை. அப்படிப் பண்ணப்படாது. புஸ்தகங்கள் எழுதிவிட்டாலும், சிஷ்யர்களால் அவை ப்ரசாரமாகி விடுமென்றாலும் அதுமட்டும் போதாது. புஸ்தகமும் சிஷ்யர்களும் பணண முடியாமல் உன்னால்தான் முடியும் என்பதாகச் சில கார்யங்கள் இருக்கின்றன. நீயே தேசம் பூராவும் போய் நேரில் வாதம் நடத்தினால்தான் வழிக்கு வரக்கூடியவர்களாக அநேக பண்டிதர்கள், ஸித்தாந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அதைவிட முக்யமாக உன் ஸ்வரூப தர்சனம் அவர்களுக்கும், ஸர்வ ஜனங்களுக்கும் கிடைக்க வேண்டாமா? புஸ்தகமும், ஸித்தாந்தமும், ப்ரசாரமும், வாத ப்ரதிவாதமும் இருக்கட்டும். அவை பண்ணுவதையெல்லாம்விடப் பெரிசாக உன் தர்சனமே பண்ணிவிடுமே! ஜனங்களையெல்லாம் ஸந்தோஷப்படுத்தி, சுத்தப்படுத்தி நல்ல வழிக்குக் கொண்டுவந்துவிடுமே! ஆனதினாலே, எட்டைப் பதினாருக்கிக் கொண்ட நீ இன்னும் பதினாறு வருஷம் இருக்கவேண்டும். பரதக் கண்டம் முழுதிலும் திக்விஜயம் பண்ணி, உன்னைப்போல திக்விஜயம் செய்தவர் எவருமில்லை என்னும்படியாகப் பண்ணி தர்மோத்தரணத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்'' என்று வ்யாஸர் சொன்னார்.

Koviloor Digital Library

இவர் 'சங்கர: ஸாக்ஷாத்', அவர் 'நாராயண ஸ்வயம்' என்றாலுங்கூட அவதாரத்திலே மநுஷ்யர் மாதிரி அடங்கி யிருக்கவேண்டும் என்று காட்டுவதற்காக வ்யாஸாசார்யாள் ப்ரம்மாவைக் கொண்டே ஆசார்யாளுக்கு இன்னும் பதினாறு வருஷம் ஆயுளை நீடிக்க நினைத்தார். ப்ரம்மாதானே ஜன்மா தந்து, இத்தனை ஆயுஸ் என்று எழுதுபவர்?

ப்ரம்மாவும் அப்படியே அங்கே தோன்றினார்.

த்ரிமூர்த்திகளும் சேர்ந்து விட்டார்கள்!

முதலில் சிவனின் வரத்தால் ஆசார்யாள் எட்டு என்று ஆயுஸ் பெற்றுப் பதினாறாக்கிக் கொண்டார். இப்போது விஷ்ணு, ப்ரம்மா இருவரும் இன்னொரு பதினாறு கொடுத்தார்கள்.

"ஈச்வராவதாரத்திற்கு நான் என்ன ரூல் பண்ணுவது! இஷ்டப்படி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம்" என்றும் ப்ரம்மா சொன்னார்.

அப்புறம் ப்ரம்மாவும் வ்யாஸரும் அந்தர்தானமானார்கள்.

ஆசார்யாளுடைய காசி வாஸத்தின்போது நாலு முக்யமான விஷயங்கள் நடந்தன. ஒன்று அவர் பாஷ்ய உபதேசம் பண்ணினது. இன்னொன்று, பத்மபாதர் அவரிடம் வந்து சிஷ்யராகி, ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு, அந்தப் பேர் பெற்றது. மூன்றாவது, வ்யாஸர் வந்து பரீக்ஷித்து பாஷ்யத்தைப் பரிபூர்ணமாக அங்கீகரித்து 'ஆசார்யாளுக்கு இன்னொரு பதினாறு வயஸு நீடிக்கவைத்தது. நாலாவது இப்போது சொல்லப் போகிறது:

"ஞானியாயின் தீண்டாதானும் என் குருவே!"

ஒரு நாள் ஆசார்யாள் கங்கா ஸ்நானத்திற்குப் பரிவாரத்தோடு போய்க்கொண்டிருந்தார். வழியிலே ஒரு பஞ்சமன் (தீண்டாதான்) வேண்டுமென்று அவர் பக்கத்தில் வந்தான்.

Koviloor Digital Library

"தள்ளிப் போ, தள்ளிப் போ!" என்றார் ஆசார்யாள்.

உடனே அவன் சில கேள்வி கேட்க ஆரம்பித்தான்:

அந்நமயாத் அந்நமயம் அதவா சைதந்யமேவ சைதந்யாத் |
த்விஜவர தூரீகர்தும் வாஞ்சஸி கிம் ப்ரூஹி கச்ச கச்சேதி ||*

"த்விஜவர" என்று ஆசார்யாளைக் கூப்பிட்டுக் கேட்கிறான். "த்விஜவர" என்றால் ப்ராம்மண ச்ரேஷ்டர். "ஏ பெரிய ஐயரே!" என்று கூப்பிட்டிருப்பான். அதைத்தான் த்விஜவர என்று போட்டிருக்கிறது. "ஹீன ஜன்மா என்று ஒருத்தரை எட்டிப் போகச் சொல்லும் ஏ பெரிய ஐயரே! 'போ, போ' என்று எதையோ போகச் சொல்றயே, எதுகிட்டேயிருந்து எதை எட்டிப் போகச் சொல்றே? சோத்தைத் தின்னு எலும்பும் மாம்ஸமுமா மல மூத்ராதிகளோடு வளர்கிறதே, தேஹம் என்று ஒரு கூடு, அந்தக் கூட்டில் ஒண்ணு இன்னொண்ணின் கிட்டே வரப்படாது என்று உன் அபிப்ராயமா?

அந்நமயாத் அந்நமயம்

"இல்லாவிட்டால்; 'அதவா': என்றால் இல்லாவிட்டால். இந்த இரண்டு தேஹக் கூட்டுக்குள் உயிர், உயிர் என்று ஒன்று இருக்கே! அதிலே ஏதோ இரண்டு இருக்கிற மாதிரி பிராமணனின் உயிர் கிட்டே பஞ்சமனின் உயிர் வரப்படாது என்ற அபிப்ராயத்தில் 'போ, போ' என்கிறாயா?"

அந்த உயிரைத்தான் ஆத்மா என்பது. ஞான மயமான சைதன்யம் என்பதும் அதுதான்.

சைதந்யமேவ சைதந்யாத்

அகண்டமாக ஏக சைதன்யம் ஒன்றுதான் இருக்கிறது. அதையே பல தேஹங்களுக்குள்ளும் பல உயிர்கள் என்று கண்டம் கண்டமாகப் பார்க்கிறோம். இதுதான் ஸர்வ

---

* இச்சம்பவத் தொடர்பாக இனி நாம் காணவிருக்கும் ஆசார்யாளின் "மநீஷா பஞ்சக"த்தில் பூர்வாங்கமாகக் கூறப்படும் ச்லோகம்.

Koviloor Digital Library

வேதாந்தமும், அத்வைதமும். அதைச் சொல்லித்தான் அந்தத் தீண்டாதான் கேட்கிறன். 'இருப்பது ஏக சைதன்யம்தானனதால், இந்த தேஹத்திலுள்ள சைதன்யம் வேறே, அந்த தேஹத்திலிருக்கிற சைதன்யம் வேறே என்று ஆசார்யாள் நினைத்து, பெரிய ஐயரின் தேஹத்துக் கிட்டே ஹீன ஜாதி எனப்படுபவனின் சைதன்யம் வரப் படாது என்று சொன்னல் அவர் அத்வைதியே இல்லை; வடிக்கட்டின த்வைதிதான்'.

"பெரிய ஐயரே, நீ சொல்ற பாடம் என்ன? வேதாந்தந் தானே? அதிலே இப்படித்தான் அநேக உடம்புக்குள்ளே இருப்பது அநேக ஆத்மா, ஒண்ணுக்குக் கிட்டே இன்னொண்ணு வரப்படாது என்று இருக்கா?" என்று கேட்காமல் கேட்கிறன்.

இருப்பதே ஒரே ஆத்மாதான் என்பதால் ஒரு ஆத்மா வுக்குக் கிட்டே இன்னொரு ஆத்மா வரப்படாது என்பது அபத்தம். அவர் அப்படி ஆத்மாவைச் சொல்லவில்லை என்ருல், ஆத்மா குடியிருப்பதற்குக் கூடாக இருக்கிற தேஹங்களில்தான் ஒன்று இன்னொன்றின் கிட்டே வரப்படா தென்று சொன்னர் என்ருகும். ஞான நிலையிலிருந்து பார்த் தால் இதுவும் ஸரியில்லைதான். ஏனென்ருல் ஞானிக்கு எல்லா தேஹமுமே துச்சம்தான். ஒரே மாதிரி, சோற்ருல் அடித்த சுவர்தான். ஒரே மாதிரி, துளி மேல் சதையைக் கீறி விட்டாலும் பார்க்க ஸஹிக்காத ரக்த மாம்ஸாதிகளால் ஆனதுதான். ப்ராம்மண சரீரமானலும், அந்த்யஜ சரீரமா னலும் எல்லாம் மல மூத்ர பாண்டம்தான். ஞானத்திற்கு வழியே சரீர ப்ரக்ஞையை ஒழிப்பதுதான். இப்படி நிக்ருஷ்ட மாக இருக்கப்பட்ட சரீரங்களிலேயே ஒன்று இன்னொன்றின் கிட்டே வரப்படாது என்று 'ஞான மார்க்க ப்ரவர்த்தகர்' எனப்பட்டவர் சொன்னல் ஸரியாகுமா?

இந்த விஷயம் கீதையிலும் பகவான் சொல்லியிருக்கிருர். கல்வியறிவால் மட்டும் பண்டிதர் என்று பேர் வாங்காமல், 'பண்டா' எனப்படும் ப்ரஹ்ம ஞான ஸித்தியால் அப்படிப் பேர் வாங்கினவனைப் பற்றி அங்கே பகவான் சொல்கிருர்.

Koviloor Digital Library

வித்யா விநய ஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி |
சுநி சைவ ச்வபாகே ச பண்டிதா : ஸமதர்சிந : ||*

பண்டிதன் எனப்படும் ஞானியைப் பற்றி இங்கே பேச்சு : அவன் எல்லாவற்றையும் ஸமமாகப் பார்க்கும் ஸமதர்சி. எல்லாம் ஒரே ப்ரஹ்மம் என்று தெரிந்து கொண்டவன் வேறே எப்படிப் பார்க்கமுடியும்? ம்ருக ஜாதிகளை எடுத்துக்கொண்டால் நமக்கு, அதாவது அஞ்ஞானிகளுக்கு, பசு ரொம்ப உயர்ந்தது, கஜமும் ரொம்ப உயர்ந்தது என்று தோன்றுகிறது. நாய் என்றாலோ நிக்ருஷ்டமாக நினைக்கிறோம். அப்படியே மநுஷ்ய ஜாதிகளை எடுத்துக்கொண்டால் நல்ல படிப்பும் விநயமுமுள்ள ஒரு ப்ராம்மணனைப் பார்த்தால் உத்தமப் பிறவி என்று தோன்று கிறது. அதுவே நாய் மாம்ஸத்தைத் தின்று கொண்டிருக்கும் ஒரு பஞ்சமனைப் பார்த்தால் தாழ்ந்தவன் என்று தோன்று கிறது. இப்படி ம்ருகங்களில் எது எது உசத்தி - தாழ்த்தி, மநுஷ்யர்களில் எவனெவன் உசத்தி - தாழ்த்தி என்றிருப்பது மட்டுமில்லாமல், ம்ருக ஜாதி - மநுஷ்ய ஜாதி என்றே வேறே ரொம்ப வித்யாஸமாகத் தெரிகிறது. ஆறறிவு படைத்த மநுஷ்ய ஜாதியைவிட ம்ருக ஜாதி தாழ்ந்தது என்ற எண்ணம் இருக்கிறது. ஆனால் ஸமதர்சியான ஞானிக்கோ இப்படி ம்ருக ஜாதி, மநுஷ்ய ஜாதி என்ற வித்யாஸப் பார்வையே இல்லை, இதுவே இல்லாதபோது ஒவ்வொரு ஜாதிக்குள்ளேயும் இது உசத்தி, இது தாழ்த்தி என்ற பாவனையும் இல்லை. இந்த விஷயத்தை பகவான் சொல் கிறார். வித்யா விநய ஸம்பன்னனான ப்ராம்மணனாகத்தான் இருக்கட்டும், அல்லது நாய் மாம்ஸம் தின்னும் ("ச்வபாகே") தீண்டாதானாகத்தான் இருக்கட்டும், பசுவாக ("கவி"), யானையாக ("ஹஸ்திநி") நாயாக ("சுநி") இருந்தாலும் இருக்கட்டும்—எல்லாவற்றையும் ஞானி ஸமமாகவே பார்க் கிறான் என்கிறார்.

---

* கீதை V. 18

Koviloor Digital Library

அந்த அத்வைதத்தைச் சொன்னவர், அதற்காகவே பாஷ்யங்கள் கட்டுக்கட்டாக எழுதித் தள்ளியவர், ஸதாவும் அதையே உபதேசம் செய்து கொண்டிருந்தவர், 'அத்வைத ப்ரதிஷ்டாபனுசார்யர்' என்றே பெயரெடுத்தவர்—இவரானுல் இப்போது ஸம தர்சனமில்லாமல் பேத த்ருஷ்டியோடு தன்னைத் தீண்டத் தகாதவன் என்று வைத்து தூரப்போகச் சொல்கிறுரே, இது எப்படி என்றுதான் அவன் கேள்வி கேட்டான். அவன் 'படே ஆஸாமி'யாக இருந்தான்! அதனுல் இன்னமும் கேட்க ஆரம்பித்தான்.

ஸொந்தமான ரோஷத்தின் மீது, 'நீ என்ன கொம்பு? நான் என்ன மட்டம்?' என்று அவன் கேட்டிருந்தால்—இந்த நாளில் சீர்திருத்தவாதிகள் கேட்பது இப்படித்தான்; இம்மாதிரி அவன் கேட்டிருந்தால்—ஆசார்யாள் 'இவன் யாரோ வம்புக்கு வந்திருக்கிறுன். அதனுல் சாஸ்த்ர அபிப்ராயங்களைச் சொன்னுல் கேட்டுக்கொள்ள மாட்டான். இவனிடம் வியவஹாரம் பண்ணி ப்ரயோஜனமில்லை. அவன் ஒதுங்கிப் போகாவிட்டால் நாம்தான் ஒதுங்கிப்போக வேண்டும். இப்படி வாதம் செய்பவர்கள் அப்போதும் விடமாட்டார்கள். மேலே விழ வருவார்கள். அப்படிச் செய்தால் கங்கையில் இறங்கிவிடலாம்' என்றே நினைத்திருப்பார். 'ஆனுல் இவனே மான ரோஷாதிகளில், ஸ்வய கௌரவ ப்ரச்னையாகப் பேசாமல் தத்வார்த்தமாகப் பேசுகிறுன். அதனுல், இவன் வம்புக்கு வந்தவனுயில்லாமல் வம்பையெல்லாம் தொலைக்கவந்தவனுக இருக்கலாமென்று தோன்றுகிறது. ஆகையால் பலாத்காரம் பண்ண மாட்டான். இப்படிப்பட்ட ஒருவன் என்ன சொல்கிறுன் என்று கேட்டுக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமை' என்று பேசாமல் நின்று கேட்டுக்கொண்டிருந்தார், அவரே வித்யையோடு விநய ஸம்பன்னராகவும் இருந்ததால்!

அவன் மேலே கேட்டான் :

Koviloor Digital Library

"கிம் கங்காம்புநி பிம்பிதே (அ)ம்பரமணௌ சண்டாட-
வாடீ-பய:
பூரே சாந்தரமஸ்தி காஞ்சந-கடீ-ம்ருத்-கும்பயோர் -
வாம்பரே |
ப்ரத்யக்-வஸ்துநி நிஸ்தரங்க-ஸஹஜாநந்தாவபோதாம்புதௌ
விப்ரோ (அ)யம் ச்வபசோ (அ)யம்-இத்யபி மஹாந்
கோ(அ)யம் விபேத-ப்ரம : ||*

"விப்ரோ (அ)யம், ச்வபசோ (அ)யம் இதி" - இவன் ப்ராம்மணன், இவன் பஞ்சமன் என்று—"ப்ராஹ்மணே, ...ச்வபாகே" என்று கீதையில் சொன்ன அதே ஸமாசாரம்தான். "இவன் ப்ராம்மணன், இவன் பஞ்சமன் என்கிற இந்தப் பெரிசான பேத ப்ரமை உமக்கு எப்படி ஐயா வந்தது?" இது கடைசி வரி. த்வைத மாயை, த்வைத மாயை என்று ஆசார்யாள் கண்டித்ததுதான் பேத ப்ரமை. "விபேத ப்ரம :" என்று ச்லோகத்தில் இருப்பது. "அது உமக்கே எப்படி ஐயா வந்தது?"

இதற்கு முந்திய வரிகளில் என்ன சொல்கிறுன்? ஆசார்யாளுக்குப் பிற்காலத்தில் அத்வைதத்தில் 'விவரண ப்ரஸ்தானம்' என்றும் 'பாமதி ப்ரஸ்தானம்' என்றும் இரண்டு ஸ்கூல் (கொள்கைப் பிரிவு) ஏற்பட்டது. அத்வைத லக்ஷ்யத்தில் இரண்டிற்கும் வித்யாஸம் கிடையாது. ஸாதன க்ரமத்திலும் ஒரே மாதிரிதான். ஆனாலும் சில கொள்கைகளில் வித்யாஸம். அவற்றிலே ஒன்று பரமாத்மா எப்படி ஜீவாத்மா மாதிரித் தோன்றுகிறது என்பதாகும். அவித்யை (மாயை)தான் இதற்குக் காரணம் என்று இரண்டு இரு ஸ்கூல்களும் ஒப்புக்கொண்டாலும் அதிலேயே ஒன்றுக்கொன்று வித்யாஸமாகச் சொல்கின்றன.

ஆசார்யாளுடைய ஸூத்ர பாஷ்யத்தின் முதல் ஐந்து பாதங்களுக்குப் பத்மபாதர் எழுதியுள்ள வ்யாக்யானத்திற்குப் 'பஞ்சபாதிகா' என்று பெயர். அந்தப் பஞ்சபாதிகா

---

* 'மநீஷா பஞ்சக'ப் பூர்வாங்கம்.

Koviloor Digital Library

வுக்கு ப்ரகாசாத்மன் என்பவர் 'பஞ்சபாதிகா விவரணம்' என்பதாகப் பத்மபாதர் கருத்தை அநுஸரித்தே வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அதன் கொள்கைகள்தான் 'விவரண ப்ரஸ்தானம்' என்பது. ஸூத்ர பாஷ்யத்திற்கே வாசஸ்பதி மிச்ரா என்ற பெரியவர் 'பாமதீ' என்று ஒரு வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அதன் கொள்கைகளைத் தான் 'பாமதீ ப்ரஸ்தானம்' என்பது.

ஸ்வாமி எப்படி நாமாகத் தோன்றுகிறார் (பரமாத்மா எப்படி ஜீவாத்மாவாகத் தோன்றுகிறது) என்பதைப் பற்றி அந்த இரண்டு ப்ரஸ்தானங்களில் சொல்லியிருப்பதையுமே அந்தப் பஞ்சமன் ச்லோகத்தின் முதல் இரண்டு வரிகளில், வரிக்கு ஒன்றாகச் சொல்லியிருக்கிறான். (இவ்விஷயத்தில்) விவரண-ஸ்கூலின் அபிப்ராயத்திற்கு 'ப்ரதிபிம்ப வாதம்' என்றும், பாமதீ-ஸ்கூலின் அபிப்ராயத்திற்கு 'அவச்சின்ன வாதம்' அல்லது, 'அவச்சேத வாதம்' என்றும் பெயர்.

ப்ரதிபிம்ப வாதம் என்னவென்றால்: ஸூர்யன் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்போது நாம் தண்ணீரில் கையைத் தோய்த்துத் தரையில் தெளித்தால் எத்தனையோ துளிகளாக விழுகிறது. அத்தனை துளிகளுக்குள்ளும் ஒரே ஸூர்யனின் ஒவ்வொரு ப்ரதிபிம்பம் தெரிகிறது. ஸூர்யன் மாதிரி பரமாத்மா. தண்ணீர் மாதிரி அவித்யா (மாயை). அந்த அவித்யையில் உண்டான வித வித ஜீவ அந்தஃகரணங்கள்தான் தண்ணீர்த் துளிகள். இந்த அந்தஃகரணத்துக்குள்ளும் பரமாத்ம ஸூர்யனே ப்ரதிபிம்பித்து ஒளி (உயிர்) கொடுக்கிறது.

'அவச்சின்ன வாதம்' என்ன? 'அவச்சின்ன' என்றால் 'ஒன்றுக்கொன்று எல்லை கட்டிப் பிரித்தது' என்று அர்த்தம். ஆகாசம் வெளியிலே எங்கும் பரவியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் அது இடம் கொடுப்பதால் 'அவகாசஸ்து ஆகாசம்' என்பார்கள். திறந்த வெளியான அந்த ஆகாசத்தில் அநேக காலிக் குடங்களை வைத்திருந்தால் குடங்களுக்குள்ளேயும் அதே ஆகாசம்தான் இருக்கிறது.

Koviloor Digital Library

ஆனால் வெளியில் தனியாகப் பெரிசாக 'மஹாகாசம்' என்று ஒன்றும், ஒவ்வொரு குடத்துக்குள்ளும் தனித்தனியாகச் சின்னச் சின்ன 'கடாகாசங்கள்' பலவும் இருக்கிறாற்போலத் தோன்றுகிறது. இப்படித்தான் ப்ரஹ்மம் என்ற ஒரே அகண்ட சைதன்யம் மஹாகாசமாயிருக்கிறது. அதில் அவித்யா என்ற குடம் பலவித ஜீவ அந்தஃகரணங்கள் என்ற பல 'ஸைஸ்'களில் மஹாகாசத்தை எல்லை கட்டி ஒன்றுக்கொன்று பிரித்ததுபோல் அவச்சின்னமாகக் காட்டுகிறது என்று இந்த வாதம் சொல்கிறது. "ஸூர்யன் ப்ரதிபலித்து ஒவ்வொரு துளியிலும் ஒரு முழு ஸூர்யன் தெரிகிற மாதிரி என்று சொல்வது தப்பு. ப்ரம்மம் ப்ரதிபலிப்பது என்ற கார்யத்தைப் பண்ணாது. ஒவ்வொரு துளியிலும் முழு ஸூர்ய ப்ரதிபிம்பத்தைப்போல ஒவ்வொரு ஜீவனிலும் பூர்ண சைதன்யம் தெரிவதாகச் சொல்வதும் ஸரியில்லை. ப்ரதிபலிப்பு முதலிய எந்தக் காரியமும் பண்ணாமல் ஆகாசம் அது பாட்டுக்கு இருக்கிறபடி இருக்கும்போதே பல குடங்களுக்குள்ளேயும் சின்னச் சின்னதாகத் தெரிவதுபோல அகண்ட சைதன்ய ப்ரஹ்மமே ஜீவ அந்தஃகரணத்தில் கண்டம் கண்டம் மாதிரித் தெரிகிறது என்பதுதான் ஸரி" என்று அவச்சின்னவாதிகள் சொல்வார்கள்.

ஆகாசம் வெளியிலும், குடத்துக்குள்ளும் வ்யாபித்திருப்பதைச் சொல்வதுபோலவே இன்னொரு உபமானம் ஜலம் வ்யாபித்திருப்பதை வைத்தும் அவர்கள் சொல்வதுண்டு. கிணற்றில் குடத்தை முழுக வைத்து ஜலத்துக்குள்ளாகவே இழுத்துக்கொண்டு வருகிறோம். அப்போது கிணற்று ஜலமும் குடத்து ஜலமும் ஒன்றேதான். ஆனால் குடம் எல்லை கட்டிக் கிணற்று ஜலத்தை அவச்சின்னமாகப் பண்ணுவதால், இது வேறே ஜலம், தனியாக வருகிறது என்று தோன்றுகிறது. பெரிய குடமாயிருந்தால் உள்ளே ஜலம் அதிகமாகவும், சின்ன குடமாயிருந்தால் அதில் பிடிக்கும் ஜலம் குறைவாகவும் தெரிகிறது. அப்படியே ஒரே பரமாத்மா அந்தஃகரண வித்யாஸத்தைப் பொருத்து ஒவ்வொரு ஜீவனில் ஒவ்வொரு விதமாகத் தெரிகிறார்.

Koviloor Digital Library

இந்தக் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் ஆதரவாக, மற்றதை ஆக்ஷேபித்துச் சொல்லும் வாதங்கள் நமக்கு அவச்யமில்லை. வாதம் என்னவானாலும் ப்ரதிபிம்பக் கட்சி, 'துளித் துளி ஜலத்தை எல்லாம் அழித்துவிட்டால், ஒரே ஸூர்யனே நிற்பதுபோல மாயையால் உண்டான ஜீவாத்ம பாவத்தை (அந்தஃகரணம்தான் இந்த பாவத்தை உண்டாக்குவது; அதை)ப் போக்கிக்கொண்டால் பரமாத்மாவாகிவிடலாம்; அப்படி ஆகணுமென்கிறது. அவச்சின்னக் கட்சியும் குடத்தை உடைத்துவிட்டு மஹாகாசமாக, ஒரே நீர்ப்பரப்பாக ஆகிவிடவேண்டுமென்று இதே லக்ஷ்யத்தைத்தான் சொல்கிறது.

பஞ்சமன் இந்த இரண்டு வாதத்தையும் குறிப்பிட்டிருக்கிறான். முதலில் ப்ரதிபிம்ப வாதம்: "கிம் கங்காம்புநி பிம்பிதே அம்பரமணௌ சண்டாள வாடீ பய:......" "அம்பரமணி" என்பது ஆகாசத்தில் ஒரு வைரக்கல்லு மாதிரி ப்ரகாசிக்கும் ஸூர்யன். அது கங்கா ஜலத்திலும் ("கங்காம்புனி") பிரதிபிம்பமிடுகிறது ("பிம்பிதே"); எங்கள் சேரிக் குட்டை ஜலத்திலும்தான் ("சண்டாள வாடீ பயம்") ப்ரதிபிம்பிக்கிறது. இந்த இரண்டு ப்ரதிபிம்பங்களுக்குள்ளும் ஏதேனும் வித்யாஸமுண்டா? அப்புறம் அவச்சின்ன வாதம் பேசுகிறான்: ராஜா அரண்மனையில் தங்கக் குடத்தின் உள்ளேயும் ("காஞ்சன கட...அந்தரம்...") ஆகாசம் ("அம்பரம்") இருக்கிறது ('அஸ்தி"). எங்கள் சேரி வீடுகளிலும் மண் பானை ("ம்ருத் கும்பம்") வைத்திருக்கிறோம். அதற்குள்ளேயும் ஆகாசம் இருக்கிறது. தங்கக் குடத்திலே இருக்கிற ஆகாசத்திற்கும், பானையில் இருக்கிற ஆகாசத்திற்கும் வித்யாஸமுண்டா? ப்ராம்மண தேஹமோ, பஞ்சமன் தேஹமோ எதுவானாலும் அது ஒரு கடம். உள்ளே இருக்கிற ஆத்மாகாசத்தில் என்ன வித்யாஸம்? இரண்டு உடம்புகளும் இரண்டு அளவான ஜலத்துளிகள்; ஆனால் உள்ளே தெரியும் ப்ரதிபிம்பத்தின் மூலமான ஆத்ம ஸூர்யன் ஒன்றுதானே!

Koviloor Digital Library

"பெரிய ஐயரே! த்விஜவரரே! ஏன் வெளியிலே தெரிகிற ஜலத்துளியையும், குடத்தையும் பார்த்து வித்யாஸங்கள் நினைக்கிறாய்? உள்ளுக்குள்ளே பார்த்தால் என்ன வஸ்து இருக்கிறது? ('ப்ரயக் வஸ்து' என்று ச்லோகத்தில் இருப்பது 'உள்ளே உள்ள வஸ்து'தான்.) தன்னில் தானே ஆனந்தித்துக் கொண்டிருக்கும் ஞான ஸமுத்ரம் ஒன்றுதானே உள்ளே இருக்கிறது? 'ஸஹஜ ஆனந்த அவபோத அம்புதி'தானே இருக்கிறது? அலையே இல்லாத ஸமுத்ரம் ('நிஸ்தரங்கம்')! ஏன் அலை இல்லை? லோகத்திலே உள்ள ஸமுத்ரத்தைத் தவிர அதற்கு மேலே இடமிருக்கிறது. அதனால் அலை அடிக்க முடிகிறது. இந்த ஆனந்த ஸமுத்ரத்தைத் தவிர இடம் இல்லையே! இது இல்லாத இடமே இல்லையே! எப்படி அலை அடிக்க முடியும்? ஒரு பாத்ரத்தில் வழிய வழிய ஜலம் விட்டு இறுக்க மூடிவிட்டால் எப்படி அலை உண்டாக முடியும்? ஆத்மாவுக்கு உபமானமே இல்லை. ஸமுத்ரம் என்பதுகூட முழுக்கப் பொருத்தமான உபமானமில்லை. அதில் உப்பும் ஜலமும்தான் இருக்கின்றன. இதிலோ (ப்ரத்யக் வஸ்துவான ஆத்மாவிலோ) ஆனந்தமும் ஞானமும் அல்லவா இருக்கின்றன? ஆனந்தம், ஞானம் என்ற இரண்டு இல்லை. ஆனந்தமாகிய ஞானம், அல்லது ஞானமாகிய ஆனந்தமே நிறைந்தது இது. அதோடு, இது இல்லாத இடமே இல்லை. இல்லாத இடமேயில்லை என்னும்படியாக உப்பு ஸமுத்ரம் எங்கேயும் நிறைந்திருக்கவில்லை. இப்போது இங்கே ஸமுத்ரம் இருக்கிறதோ? அது இருக்குமிடத்திலுங்கூட ஒரு லெவலுக்கு மேலே இல்லை. பூமி மட்டத்தோடு ஸமுத்ர மட்டமும் முடிந்து அதற்கு மேலே திறந்த வெளியாகத் தானே இருக்கிறது? இருந்தாலும், இருப்பதற்குள் பெரிசு என்பதால் ஆனந்த ஞான ஸமுத்ரம் என்றேன். உள்ளே ஏகமான அது ஒன்றே இருக்க வெளியிலே பார்த்து பேதமாகப் பேசுகிறாயே, ஐயரே! நீ சொல்லிக் கொடுக்கும் வேதாந்த பாடத்தில் இப்படித்தான் இருக்கிறதா?" என்று கேட்டான்.

Koviloor Digital Library

உடனே ஆசார்யாள், "தாங்கள் இப்பேர்ப்பட்டவரா? ப்ரஹ்மவித்தா? இப்படிப்பட்ட ஞானியாக இருக்கும் எவரும் எனக்கு குரு ஸ்தானம். தங்களுடைய ஞான நிலையைத் தெரிந்து கொள்ளாததால் லோக ஆசாரங்களின் படிச் சொன்னேன். இப்போது தெரிந்து கொண்டேன். தங்களை ஆசார்ய ஸ்தானத்தில் வைத்து நமஸ்காரம் பண்ணுகிறேன்" என்று சொல்லி அப்படியே நமஸ்காரம் செய்தார். ஐந்து ச்லோகம் சொல்லி நமஸ்காரம் செய்தார். அதற்கு 'மநீஷா பஞ்சகம்' என்று பேர். 'மநீஷா' என்றால் தீர்மானமான அபிப்ராயம், நிச்சயமான கொள்கை. "ஆத்ம ஞானியாயுள்ளவர் எந்த ஜாதி குலமானாலும் ஸரி, பஞ்சமனோ ப்ராம்மணனோ எவரானாலும் ஸரி, அவர் எனக்கு குரு. இதுவே என் மநீஷா. எனக்கு குரு என்பது மட்டுமில்லை. தேவேந்த்ரன்கூட அவருடைய பாதத்தில் விழவேண்டுமென்பது என் மநீஷா" என்றெல்லாம் அதில் சொல்வதால் 'மநீஷா பஞ்சகம்' என்று பெயர். அதன் முதல் ச்லோகம் :

ஜாக்ரத்-ஸ்வப்ந-ஸுஷுப்திஸு ஸ்புடதரா
யா ஸம்வித் உஜ்ஜ்ரும்பதே
யா ப்ரஹ்மாதி-பிபீலிகாந்த- தநுஷு
ப்ரோதா ஜகத்-ஸாக்ஷிணீ |
ஸைவாஹம் ந ச த்ருச்யவஸ்த்விதி த்ருட
ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்தி சேத்
சாண்டாளோஸ்து ஸ து த்விஜோஸ்து குருரித் -
யேஷா மநீஷா மம ||

ப்ரஹ்மா முதற்கொண்டு எறும்பு வரை பேதமே யில்லாமல் எல்லா தேஹத்துக்குள்ளிருந்தும் குறுக்கிழை யாகக் கோத்து வாக்கிக்கொண்டு ஜகத்தையெல்லாம் ஸாக்ஷிமாத்ரமாகப் பார்ப்பது ஒரே சைதன்யம்தான். 'பிபீலிகா' என்றால் எறும்பு. எல்லா ஜீவன்களுக்கும் இந்த்ரியங்கள், மனஸ் எல்லாம் இருக்கின்றன. இவையெல்லாம் ஸ்வதாவாக ஜடமே. ஜீவனில் நெடுக்கிழையாக இவையெல்லாம் இருக்கின்றனவென்றால் இவற்றைச் சேர்த்துப்

Koviloor Digital Library

பிடித்துக் கோத்து வாங்கி இவற்றுக்கு உயிரைக் கொடுக்கும் குறுக்கிழையாயிருப்பது ஆத்ம சைதன்யமே 'ப்ரோதா ஜகத்ஸாக்ஷிணீ' என்பதில் 'ப்ரோதா' என்றால் குறுக்கிழை. 'ஓத: ப்ரோதம்' என்பார்கள் ஓதம்-நெடுக்கிழை; ப்ரோதம்-குறுக்கிழை. (பாவும் ஊடும் என்பவை.) இந்த்ரியங்கள், மனஸ் எல்லாம் கார்யத்தில் அகப்பட்டுக்கொண்டு தடமாடிக் கொண்டிருப்பவை. சைதன்யமோ, அதனால்தான் உயிர் ஏற்பட்டுக் கார்ய சக்தியும் உண்டாகிறது என்றாலுங்கூட, தான் என்னவோ கார்யத்தில் மாட்டிக்கொள்ளாமல், ஒன்றிலும் பட்டுக் கொள்ளாமல் ஸாக்ஷி மாத்ரமாகப் பார்த்துக் கொண்டு மட்டும் இருக்கிறது: "ஜகத்ஸாக்ஷிணீ." அடி, உதைபட்டுக் கொள்கிறவன் வாதியும் ப்ரதிவாதியும்; பட்டுக்கொள்ளாமல் பார்த்துக் கொண்டிருப்பவன்தானே ஸாக்ஷி? ஸகல ஜீவ ஜந்துக்களிலும் ஒரே சைதன்யம் இருப்பது மட்டுமில்லை. ஒவ்வொரு ஜீவனுக்குமே எண்ணி முடியாத நிலைகள் இருக்கின்றன அல்லவா? இவை முக்யமாக மூன்றில் அடங்கிவிடும். ஜாக்ரத் என்னும் விழிப்பு நிலை, ஸ்வப்னம் என்னும் கனவு நிலை, ஸுஷுப்தி என்ற தூக்க நிலை. இந்த மூன்று நிலைகளிலும்கூட பேதமேயில்லாமல் அந்த ஒரே ஞானவஸ்துதான் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதைச் சொல்லித்தான் ஆரம்பிக்கிறார்: 'ஜாக்ரத்-ஸ்வப்ந-ஸுஷுப்திஸு ஸ்புடதரா யா ஸம்வித் உஜ்ஜ்ரும்பதே.'

இப்படியுள்ள ஆத்மாதான் நிஜமான நாமான 'ஸப்ஜெக்ட்'. பாக்கியெல்லாம்—வெளி லோகம் மாத்ர மில்லை; நம் தேஹம், இந்த்ரியம், அந்தக்கரணம் ஆகிய எல்லாமுங்கூட—'ஆப்ஜெக்ட்'தான்; நாமில்லை. பார்க்கிற உள் வஸ்து ஆத்மாதான். பாக்கி யாவும் பார்க்கப்படுபவை யான ஆத்மாவல்லாத வெளி வஸ்துக்கள்தான். "அவை 'தான்' இல்லை, ஆத்மாவே 'தான்' என்ற உறுதியான 'ப்ரஜ்ஞை,' அநுபவ அறிவு, எவனுக்கு இருக்கிறதோ அப்படிப்பட்டவன் பஞ்சமனானாலும் ஸரி, ப்ராம்மணனானா

Koviloor Digital Library

லும் ஸரி, அவன் என் குருவே என்று நிச்சயமாக அபிப்ராயப் படுகிறேன்—'ஸைவாஹம்': ஸாக்ஷி மாத்ரமாயுள்ள அந்த சைதன்யமே நான்; 'ந ச த்ருச்ய வஸ்து இதி' : பார்க்கப்படும் கண், காது, மூக்கு, மனஸ், உலகம் முதலிய எதுவுமில்லை என்ற...., அதாவது, ஏகப்பட்டதாக விஷயங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் அறிவது ஒரே அறிவு தானே? 'தான் இந்த அறிகிற அறிவுதானேயொழிய, அறியப்படுகிற எதுவுமில்லை' என்ற; 'த்ருட ப்ரஜ்ஞாபி யஸ்யாஸ்தி சேத்' : அசைக்க முடியாத ஞானநுபவம் எவனுக்கு இருந்தாலும்,...யஸ்யாஸ்தி சேத் : அவன் எவனுக வேண்டுமானாலும் இருக்கட்டும்; 'சாண்டாளோஸ்து': நீண்டாதானுகத்தானிருக்கட்டும், 'த்விஜோஸ்து' : அல்லது ப்ராம்மணனுகத்தானிருக்கட்டும்,...இந்த ஜாதி வித்யாஸம், மற்ற வித்யாஸம் எதுவும் அப்படிப்பட்ட ஞானியின் விஷயத்தில் இல்லை; ஆகையால் அவன் எவனுயிருந்தாலும்; 'குருரிதி ஏஷா மநீஷா மம' : நமக்கெல்லாம் குருவாக இருப்பவன் என்பது என் உறுதியான கொள்கை."

"இது முதல் ச்லோகம். [சிரித்து] முழுக்கச் சொல்லப் போகிறேனுக்கும் என்று பயப்பட வேண்டாம்! கடைசி ச்லோகத்துக்கு வந்துவிடுகிறேன்:

யத்-ஸௌக்யாம்புதி-லேச-லேசத இமே சக்ராதயோ
நிர்வ்ருதா
யச்சித்தே நிதராம் ப்ரசாந்த கலநே லப்த்வா முநிர்-
நிர்வ்ருத : |
யஸ்மிந்-நித்ய-ஸுகாம்புதௌ கலித-தீர்-ப்ரஹ்மைவ ந
ப்ரஹ்மவித் -
ய : கச்சித்-ஸ ஸுரேந்த்ர-வந்தித-பதோ நூநம் மநீஷா
மம ||

"ஆனந்த(ாவபோத)ாம்புதி" என்று பஞ்சமன் பெரிய ஸமுத்ரம் மாதிரியான ஆத்மானந்தத்தைச் சொன்னனே. அதையேதான் ஆசார்யாளும் இந்த ச்லோகத்தில் இரண்டு இடத்தில் 'ஸௌக்யாம்புதி' என்றும், 'ஸுகாம்புதி' என்றும்

Koviloor Digital Library

சொல்கிறார். சிஷ்யன் என்றால் குரு வசனத்தைத் திருப்பிச் சொல்லணும். ஜகதாசார்யாள் என்று நாம் சொல்கிறவர் எவனோ ஒரு பஞ்சமன் ஞானியாயிருக்கிறானென்று தெரிந்து கொண்டவுடன் அவனை குரு என்று சொல்லிவிட்டார்— மநீஷா, மநீஷா என்று திரும்பத் திரும்ப அடித்துச் சொல்லி விட்டார். அவன் சொன்ன ஆனந்த ஸமுத்ரத்தையும் இங்கே இரண்டு தடவை சொல்லி விடுகிறார்!

நம்மைவிட ராஜாவுக்கு ஸந்தோஷாநுபவம் ஜாஸ்தி இருக்கும். 'ராஜபோகம்' என்று அதனால்தான் சொல்வது. நம்முடைய லோகத்து ராஜாக்களுடைய ஸந்தோஷத்தையெல்லாம்விட, இன்ப லோகமாகவே இருக்கப்பட்ட தேவ லோக ராஜாவான இந்த்ரனுக்கு அதிக ஸந்தோஷம் இருக்கும். ('சக்ராதயோ' என்பதில்) 'சக்ரன்' என்பது இந்த்ரனைத்தான். அவனுடைய அந்த மஹத்தான ஸந்தோஷாநுபவமுங்கூட ஞானி அநுபவிக்கும் ஆத்மானந்த ஸமுத்ரத்தின் ஒரு வெகு சிறிய துளிதானும். 'லேசம்' என்றால் துளி. 'லேசு' என்கிறோமே, அப்படி கனமேயில்லாத திவலை. 'லேச லேச' என்று திருப்பியிருப்பதற்குத் திவலையிலும் திவலையாக என்று அர்த்தம். ஞானியின் ஆனந்தம் ஸமுத்ரமென்றால் அதன் திவலையிலும் திவலையாயிருப்பது தான் இந்த்ரனின் ஆனந்தமுங்கூட...

(லலிதா)ஸஹஸ்ர நாமத்தில் அம்பாளைப் பரம வேதாந்தமாக 'தத்-பத-லக்ஷ்யார்த்தா', 'சிதேக ரஸ ரூபிணி'* என்று சொன்னவுடன், ப்ரம்மாதி தேவர்களின் ஆனந்தத்தையும் தன்னுடைய ஆத்மானந்தத்தில் லவலேசமாக்கி விடுபவள் என்று ஒரு பெயர் சொல்லியிருக்கிறது: "ஸ்வாத்மாநந்த - லவீபூத - ப்ரஹ்மாத்யாநந்த ஸந்ததி:" | உபநிஷத்திலும், "இந்த ஆனந்தத்தின் ஒரு மாத்திரையைக்

---

* தத்-த்வமஸி முதலான வாக்யங்களில் 'தத்' எனும் 'அது'வாகிய பதத்திற்கு அர்த்தமான ப்ரஹ்மமாக இருப்பவள் 'தத் பத லக்ஷ்யார்த்தா'. ஒன்றேயான சைதன்ய ரஸத்தின் வடிவினள் 'சிதேக ரஸ ரூபிணி',

Koviloor Digital Library

கொண்டுதான் அத்தனை ஜீவ குலமும் ஜீவிக்கிறது'' என்று இருக்கிறது.*

இந்த்ரனுக்கு அந்த ஆனந்தம் என்னவென்று தெரியாது. ஆனால் ஞானிக்குத் தெரியும். ஞானியை 'முனி' என்று (ச்லோகத்தின் இரண்டாம் வரியில்) சொல்லியிருக்கிறது. சித்தம் அப்படியே அடங்கி ப்ரசாந்தமாக உள்ள ஸ்திதியில் அவன் அந்தப் பேரானந்தத்தை ஸம்பாதித்துவிடுகிறான்: 'யச் சித்தே நிதராம் ப்ரசாந்த கலனே லப்த்வா முனிர்-நிர்வ்ருத:'. 'நிர்வ்ருத' என்றால் ஆனந்த த்ருப்தி. முதலில் 'சக்ராதயோ நிர்வ்ருதா:' என்று இந்த்ராதியரின் ஆனந்த த்ருப்தியைச் சொல்லிவிட்டு இங்கே ஞானியின் ஆனந்த த்ருப்தியைச் சொல்கிறார். இந்த்ராதியர் ஆனந்தப்படுவது, புத்தியை வைத்துக்கொண்டு. புத்தியால் வெளி ஆனந்தங்களைத் தனதாக நினைத்துக்கொண்டு, ஸப்ஜெக்டைவிட்டு ஆப்ஜெக்டைப் பிடித்துக்கொண்டு என்னவோ திவலை ஆனந்தம்தான் அவர்கள் அடைகிறார்கள். இவன் (ஞானி) ஸமுத்ரமான ஆனந்தத்தை அடைவதோ புத்தியினால் அல்ல. இவனுடைய புத்தியும் இவனுக்கு வேறான ஆப்ஜெக்டாக அந்த ஸமுத்ரத்தில் நழுவி விழுந்து கரைந்தே போய்விட்டது—'கலித தீ' என்றால் அதுதான் அர்த்தம். நித்யாநந்த ஸமுத்ரத்தில் ஞானியின் புத்தி கரைந்து போயாச்சு: 'யஸ்மிந் நித்ய ஸுகாம்புதௌ கலித தீ'... புத்தியால் அறியும்போது, அது அறிகிற எல்லாம் அதற்கு வேறானவை. ''புத்தி அழிந்து போனபின்தான் ப்ரஹ்மத்தை 'அறிய' முடியும், இப்படி 'அறிந்தவனே' ப்ரம்மவித்'' என்று நாம் என்னவோ நமக்குப் புரிகிற பாஷையில் சொல்லிக் கொண்டிருந்தாலும், இங்கே அறியப்படும் வஸ்து, அறிகிற வஸ்து என்று இரண்டே இல்லையே! புத்தியால் அறியும்வரை ஸரி, புத்தி அறிகிறது, அது எவற்றை அறிகிறதோ அவை அறியப்படுகின்றன. இப்படி வித்யாஸமாய் இரண்டு இருக்கின்றன. அதுதான் த்வைதம். புத்தியே கரைந்து

* ப்ருஹதாரண்யகம் IV - 3 - 32

Koviloor Digital Library

மறைந்து போய்விட்ட பிறகு? ப்ரஹ்மத்தை 'அறிவது' என்றால் எதைக்கொண்டு? புத்தியும் போனவிட்டு எஞ்சி நிற்கும் ஆத்மாவால் என்றால், ஆத்மாவும் ப்ரஹ்மமும் ஒன்று தானே? அதற்கு 'அறியப்பட வேண்டிய' வேறாக ஒன்று கிடையவே கிடையாதே! ஆப்ஜெக்டே இல்லாத ஸப்ஜெக்ட் அல்லவா அது? ஆகையால், ஞானி அப்படியே ப்ரஹ்மானந்த ஸமுத்ரத்தில் முழுகி அதை 'அறிகிறான்'—ப்ரஹ்ம-வித் ஆகிறான் (ப்ரஹ்மத்தை அறிந்தவனாகிறான்)—என்று ஔபசாரிகமாகச் சொன்னாலும், வாஸ்தவத்தில் அறிகிற இவன் வேறு, அறியப்படும் ப்ரஹ்மம் வேறு என்று இல்லாமல் இவன் ப்ரஹ்மமாகவே ஆகி விடுகிறான். ப்ரஹ்மவித் இல்லை; ப்ரஹ்மமே! "யஸ்மிந் நித்ய ஸுகாம்புதௌ கலித தீர்-ப்ரஹ்மைவ ந ப்ரஹ்மவித்".

ஆசார்யாள் சொல்கிறார்: "இப்படிப்பட்ட ப்ரஹ்ம ஸ்வரூபன் எனக்கு குரு, உங்களுக்கு குரு என்பது மட்டுமில்லை. இவனுடைய ஆனந்தத்தின் லேச லேசத்தையே தெரிந்து கொண்ட இந்திரனும் இவன் காலில் வந்து சிஷ்யனாக விழத்தான் வேண்டும். இது என் தீர்மானமான அபிப்ராயம்—மநீஷா: "ய கச்சித் ஸுரேந்த்ர வந்தித பதோ நூநம் மநீஷா மம." 'மநீஷா' என்றாலே நிச்சயமான அபிப்ராயமென்று அர்த்தம். 'நூநம்' என்றாலும் நிச்சயம்தான், 'நூநம் மநீஷா' என்று போட்டுத் தம்முடைய முடிவைப் பாறுங்கல் மாதிரி உறுதிப்படுத்திச் சொல்கிறார்!

அந்த முடிவு என்ன? ஞானிகளின் விஷயத்தில் ஜாதி, குலம், வயஸு அந்தஸ்து எதுவும் பார்க்காமல் குரு ஸ்தானத்தில் வைத்து மரியாதை பண்ணணும் என்பதே.

ஞானியின் ஸமத்வம் வேறு; ஸமூஹ ஸமத்வம் வேறு

இதை வைத்துக்கொண்டு தற்காலத்து ஸமத்வச் சீர்திருத்தவாதிகள் விபரீதமாக அர்த்தம் பண்ணுகிறார்கள்.

Koviloor Digital Library

அதாவது ஆசார்யாள் வர்ணாச்ரம பேதங்களை ஒழிக்கச் சொல்லிவிட்டார், ஜாதி வித்யாஸமெல்லாம் பார்க்கவே கூடாது என்று காட்டிவிட்டார் என்று சொல்கிறார்கள். அப்படி ஆசார்யாள் சொல்லவேயில்லை என்பது அவருடைய பாஷ்யங்களைப் பார்க்கிற எவருக்கும் தெரியும். ஆனாலும் பாஷ்யங்களைப் பார்த்து, 'ட்ரான்ஸ்லேட்' பண்ணி, லெக்சர் பண்ணி, டாக்டர் பட்டம் வாங்கினவர்களும்கூட வேண்டுமென்றே தங்கள் நவீனக் கொள்கைக்கு ஸாதகமாக இருக்கிறது என்பதால் இப்படி வளைத்துத் திரித்துப் பேசுகிறார்கள். இவர்களுக்கு வர்ணாச்ரம தர்மம் பிடிக்கவில்லையென்றால் அதற்குத் தாங்களும் தங்களைச் சேர்ந்தவர்களும் என்னென்ன காரணம் சொல்லமுடியுமோ (அவற்றைச்) சொல்வதுதான் முறையே தவிர ஆசார்யாளைப் பிடித்து வளைத்து அவர் சொல்லாததை அவர் வாயில் திணிப்பது கொஞ்சங்கூட ந்யாயமில்லை. ஆனாலும் நாம் நம் பெரியவர்களையெல்லாம் மறந்துபோய்விடவில்லையாக்கும், நம்முடைய 'ஸ்பிரிசுவல் ஹெரிடே'ஜை (ஆத்மிக பாரம்பர்யத்தை) ரொம்ப மதிக்கிறோமாக்கும் என்று காட்டுவதாக அப்பப்போ விழாக்கள், ஸெமினார்கள் நடத்துவதில் தலைவர்கள் என்கப்பட்டவர்கள் இந்த ஸம்பவத்தைச் சொல்லி, ஆசார்யாள் இக்காலத்தில் 'ஈக்வாலிடி' என்று சொல்வதைத்தான் ஸ்தாபித்திருக்கிறாரென்று 'ட்ரிப்யூட்' கொடுக்க (புகழஞ்சலி செலுத்த)த் தவறுவதில்லை. நம்முடைய கொள்கையை அவர் சொல்வதாக ஆக்கி ட்ரிப்யூட் கொடுப்பதென்றால் அது நமக்கே ட்ரிப்யூட் கொடுத்துக்கொள்வதுதான்!

வாஸ்தவத்தில் ஆசார்யாளும், மற்ற பூர்விக சாஸ்த்ரகாரர்களும், ரிஷிகளும் சொன்ன ஸமத்வம் என்ன? ஸகல ஜீவர்களிடமும் கொஞ்சங்கூட ஏற்றத்தாழ்வேயில்லாத அன்பாகிய மனோபாவ ஸமத்வத்தைத்தான் அவர்கள் சொன்னார்கள். கார்யங்களை வைத்து, இவரிவருக்கு இன்னின்ன என்று ஸமூஹ வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்

Koviloor Digital Library

கொடுக்கும் வர்ணாச்ரமங்களையெல்லாம் அழித்து ஒன்றுக்கு வதுதான் ஸமத்வம் என்று நினைத்துக்கொண்டிருப்பதை அல்ல. பல ஜாதிக்காரர்கள் அவரவருக்குமென்று பல தொழில்களைப் பண்ணுவதில் ஸமத்வம் இல்லை என்று நினைப்பதே தப்பு. அந்தந்தத் தொழிலுக்கு ஏற்றபடி ஆஹாரம் முதலானவை இருக்கும். வித்யாஸமாயிருக்கிறதே என்று எல்லாவற்றையும் கலந்தால் எந்தத் தொழிலும் ஸரியாக நடக்காது. ஜ்வரக்காரனுக்கு வெந்நீர் வேண்டும். குடல் புண்காரனுக்கு ஜில்லென்று ஜலம் வேண்டும். பூஜைக்கு மடி ஜலம் தனியாயிருக்கும். 'பருப்பு வேகணும்' என்று சமையலுக்கு மாத்ரம் எங்கேயாவது போய் ஜலம் கொண்டுவந்து கொஞ்சம் வைத்திருப்பார்கள். குளிப்பதற்கு துணிகள் துவைப்பதற்கெல்லாம் வேறே ஜலம் இருக்கும். அந்த துவைத்த ஜலத்தைக்கூடச் சுருணையை அலசலாம் என்று சேர்த்து வைத்திருப்பார்கள். இதெல்லாமே அவச்யமான கார்யந்தான். ஸமத்வம், உசத்தி, தாழ்த்தி என்ற வார்த்தைகளுக்கே இங்கே இடமில்லை. ஆனால் அப்படிச் சொல்லி எல்லா ஜலத்தையும் கலந்து ஒன்றுக்கிவிட்டால் அத்தனை கார்யங்களும்தானே கெட்டுப்போகும்?

ஸமூஹ வாழ்க்கையில் ஸமத்வத்திற்கு வேறே என்ன நியாயம் சொன்னாலும் சொல்லட்டும். ஆனால் இதனால் தான் ஒற்றுமை ஏற்படும் என்று முதலிடம் கொடுத்துச் சொல்கிறார்களே, அது புரளிதான். மற்ற தேசங்களிலெல்லாம் வர்ண வியவஸ்தை இல்லைதானே? ஆனால் அங்கேயெல்லாம் ஒற்றுமைதான் நிலவுகிறதா? எத்தனை சண்டையும் கலகமும் உண்டோ அத்தனையுந்தான் நடக்கின்றன. நம் தேசத்திலேயே இந்தக் கொள்கை கொண்ட எல்லாரும் ஒற்றுமையாகத்தான் இருக்கிறார்களா என்று அவர்களுக்கே தெரியும். தேசத்திலும் இந்த கோஷம் வந்த பிற்பாடு ஏற்பட்டிருக்கும் சண்டையும் போட்டியும் முன்னே ஒரு போதும் இருந்ததில்லை.

Koviloor Digital Library

"அதெல்லாம் ஸரி, ஆனால் இப்போது கார்யத்தை வைத்துத்தான் ஜாதிகளைப் பிரிந்திருக்கிறதா?" என்று கேட்டால் இப்போது அப்படியில்லைதான். எல்லாரும் ஒரே லௌகிக லக்ஷ்யங்கள், லௌகிக ஸௌக்யங்கள், லௌகிகப் போட்டிகள் என்று இறங்கி விட்டதால், முன்னே ஆத்ம லக்ஷ்யத்தையும் ஆத்ம ச்ரேயஸையும் முக்யமாக வைத்து அதற்கு அநுகுணமாகவே Individual life (தனியார் வாழ்க்கை), social order (ஸமூஹ ஒழுங்குமுறை) இரண்டையும் போட்டியில்லாத பாரம்பர்ய க்ரமத்தில் வைத்துச் செய்திருந்த வர்ணாச்ரம விபாகங்களை உடைத்துக் கார்யங்களை ஒன்று கலந்திருக்கிறோம். இதற்காக ஆதியில் அவர்கள் அப்படிப் பண்ணியதே தப்பு என்றால் எப்படி? அல்லது அவர்கள் பண்ணவேயில்லை, பண்ணியிருந்தால் ரொம்பப் பக்ஷபாதிகள் என்றால் எப்படி?

ஆக, சாஸ்த்ராபிப்ராயத்தையேதான் சொன்ன ஆசார்யாள் நம்முடைய கார்யலோகத்தில் 'ஈக்வாலிடி' என்று நினைத்து இப்போது சொல்கிற எதையோ சொல்ல வில்லை. நடுவில் சிதிலமாயிருந்த வர்ணாச்ரம தர்மத்தை அவர்தான் மறுபடி ஜீர்ணோத்தாரணம் பண்ணினார். இப்படி நான் சொல்வது இங்கேயே யாருக்காவது பிடிக்காமல் ஏமாற்றமாக, வருத்தமாக, கோபமாக இருக்குமானாலுங் கூட—'ஐயோ! அப்படியானால் அவரை புத்தர், ஜினர், காந்தியோடெல்லாம் சேர்த்துச் சொல்ல முடியாதா?' என்று துக்கமாக இருக்குமானாலுங்கூட—நிஜத்தை எப்படிச் சொல்லாமலிருப்பது? நடுவில் பௌத்தத்தால் வர்ண வ்யவஸ்தைகள் தப்பியிருந்தாலும் பிற்பாடு மறுபடி உறுதியாக ஏற்பட்டே ஹிந்து நாகரிகம் பலம் பெற்றது என்பதிலிருந்து சரித்ரம் அறிந்தவர்களுக்கும் இதுதான் நிஜம் என்பது தெரியும். ஆசார்ய பாஷ்யங்களைப் படித்தவர்களோ திரும்பத் திரும்ப அவர் வர்ணாச்ரம ரக்ஷணையை முக்யமாகச் சொல்லியிருப்பதிலிருந்து—வெளியில் அவர்கள்

Koviloor Digital Library

என்ன லெக்சர் பண்ணினாலும், புஸ்தகம் எழுதினாலும்— இதுதான் ஆசார்யாளின் நிஜமான அபிப்ராயம் என்று உள்ளூரத் தெரிந்துகொண்டேயிருப்பார்கள்.

ஆசார்யாள் வாஸ்தவத்தில் என்ன சொல்கிறார், அதற்கு என்ன காரணம் காட்டுகிறார் என்று கேட்டு அதைப் பிட்பற்றுவதுதான் ஆசார்ய பக்தி. அவர் சொல்வது நம்மளவில் புரியாவிட்டால், பிடிக்காவிட்டால் அவரைத் திட்டுவதுகூடப் பரவாயில்லை. அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. அவர் சொல்வதில் 'கன்விக்ஷன்' ஏற்படாவிட்டால் நம் மனஸுக்குப் பொய்யில்லாமல் திட்டினால் கூடப் பரவாயில்லை என்பேன். ஆனால் அவர் நம்முடைய அபிப்ராயங்களைத்தான் பின்பற்றுகிறாரென்று எப்படியாவது திரித்துக் காட்டி அவருக்கு பக்தி பண்ணுவது போலக் காட்டுவதுதான் எல்லாவற்றையும்விடப் பெரிய அபசாரமாக எனக்குத் தோன்றுகிறது. அவர் சொன்னது பிடிக்கவில்லை என்றால் அது உன் அபிப்ராய ஸ்வதந்த்ரம். ஆனால் அவரையே சொல்லாததைச் சொன்னவராகக் காட்டினால், நாம் வேஷம் போடுவது போதாதென்று அவருக்கும் வேஷம் போடுகிற பெரிய தோஷமல்லவா வரும்? அவருடைய அபிப்ராய ஸ்வதந்திரத்தைப் பறித்ததாக அல்லவா ஆகும்? நம்முடைய நாகரிகக் கொள்கையை அவர் சொல்கிறாரென்று அவருக்கு வேஷம் போட்டுக் காட்டினால்தான் நாம் மரியாதை செய்யமுடியுமென்றால் அது அவருக்கும் அவமரியாதை, நமக்கும் அவமரியாதைதான்! நாம் சொல்கிற புரட்சிக் கொள்கையை அவர் சொன்னாலே அவரிடம் பக்தி என்றால், உண்மையில் அது நம்மிடமே பக்திதான், நம் கொள்கையிடமே பக்திதான். அவரைத் தப்பாகக் காட்டினால்தான் புத்தர், காந்தி மாதிரி மாஸ் அப்பீல்-பாபுலாரிடி இருக்குமென்றால் அது அவருக்கு வேண்டவே வேண்டாம். எங்கள் மாதிரி நாலு obscurantist-கள் (சீர்திருத்தத்தை எதிர்க்கும் முரட்டுப் பழமைவாதிகள்) பூஜை பண்ணிக் கொண்டிருந்தாலே போதும்!

Koviloor Digital Library

கார்ய லோகத்தில் இப்போது நாம் சொல்லும் அபேத வாதத்தை ஆசார்யாளும் சொல்லவில்லை, க்ருஷ்ணரும் சொல்லவில்லை, எந்த சாஸ்திரமும் சொல்லவில்லை. மனஸில் அபேத அன்புதான் அவர்கள் சொன்னது. இங்கேயோ ஆசார்யாள் மனஸையும் கழற்றி எறிந்துவிட்ட ஞானியைப் பற்றிச் சொல்லி அந்த ஞானிகள் விஷயமாகத்தான் 'அவனுக்கு ஸர்வமும் ஸமம். ஆகையால் அங்கே லோக சாஸ்திர வழக்குகள் இல்லை' என்கிறார். இது வேதமே சொல்வதுதான்: 'ஞானம் வந்துவிட்டால் அப்புறம் ஜாதி, படிப்பு, பெரியவர்-சின்னவர் என்ற எந்த பேதமுமில்லை. அங்கே வேதமே வேதமில்லை, பஞ்சமன் பஞ்சமனில்லை; தபஸ்வி, தபஸ்வியில்லை' என்றெல்லாம் சொல்கிறது*. ஒன்றையும் தின்ன வேண்டுமென்ற அபேக்ஷையில்லாத நிலையில் எதை வேண்டுமானாலும் தின்னலாம், ஒன்றையும் தொடவேண்டுமென்ற அபேக்ஷையில்லாதபோது எதை வேண்டுமானாலும் தொடலாம் என்று சாஸ்த்ரம் சொல்கிறது. அந்த நிலை எங்கே? நாமுள்ள யதார்த்த லோகம் எங்கே? அதிலே ஆசார்யாள் சொன்னதை இதற்குப் பொருத்திக் காட்டுவது அபசாரம்.

கீதையில் வித்யா விநய ஸம்பன்னனான ப்ராம்மணனிடமும் நாயைத் தின்னும் புலையனிடமும் ஞானிக்கு ஸமமான பார்வை இருக்கிறது, அவன் ஸமதர்சியாக ஸாக்ஷி மாத்திரத்தில் இருக்கிறான் என்றுதான் சொல்லியிருக்கிறதே தவிர, கார்யத்தில் ஒன்றாகப் பண்ணுவதைச் சொல்லவே யில்லை. "நீ க்ஷத்ரியன், உன் கார்யம் சண்டை போடுவது தான்" என்றுதானே எவருக்கு மேலே ஞானி இல்லையோ அந்த க்ருஷ்ணர் அர்ஜுனனை ஏவினார்?

ஆசார்யாள் அத்வைத ஸ்வரூபம். அத்வைத சாஸ்த்ரத்தை பூர்ண ரூபம் பண்ணி ஸ்தாபித்தவர் அவர்

---

* ப்ருஹதாரண்யகோபநிஷத் IV. 3.22

Koviloor Digital Library

தான். ஆனால் த்வைத லோகத்தில் மாட்டிக்கொண்டு இதிலிருந்து அதற்குப் போகவேண்டியிருப்பவர்களான நாம் எவ்வளவு தூரம், தொலை தூரம், த்வைத வித்யாஸங்களை அநுஸரித்து அநுஸரித்தே கார்யலோகத்தில் போய்த்தான் பக்குவப்பட வேண்டியிருக்கிறது என்பதை நன்றாகத் தெரிந்து வைத்துக்கொண்டு, ஜாக்ரதையாகப் பார்த்து வழி போட்டுக் கொடுத்திருக்கிறார். இக்காலத்திலோ அத்வைதாநுபவம் என்னவென்றே தெரியாதவர்கள் கார்ய லோகத்தில் அதைக் கொண்டுவிட்டு ஆத்மார்த்தமான சாஸ்த்ர விஷயங்களில் இஷ்டப்படிப் பண்ணி, போதாக் குறைக்குத் தாங்கள் செய்வதற்கு ஆசார்யாள் தலையிலேயே பழியைப் போட்டு 'ட்ரிப்யூட்' கொடுக்கிறார்கள்!

முன்பின் ஸம்பந்தமில்லாமலும், ஒருத்தருடைய அல்லது ஒரு சாஸ்த்ரத்தினுடைய முழு அபிப்ராயமும் தெரியாமலும் நடுவிலே எங்கேயாவது இக்காலப் புரட்சி ஸித்தாந்தங்களுக்கு அநுகூலமாகத் துளி தெரிந்துவிட்டால், "ஹா ஹா! இன்னாரே சொல்லிவிட்டார், இன்ன சாஸ்த்ரமே சொல்லிவிட்டது, எங்கள் அபிப்ராயந்தான் ஸரி" என்று ப்ரசாரம் பண்ணுவது தற்காலத்தில் ஜாஸ்தியாகி வருகிறது. ரொம்பவும் வருத்தப்படவேண்டிய விஷயம். ஒன்றை ஆக்ஷேபிப்பதுகூடத் தப்பில்லை, இந்த மாதிரித் திரித்துச் சொல்வதுதான் பெரிய தப்பு...

அந்தப் பஞ்சமன் ஆக்ஷேபம் பண்ணும் ஸாதாரண ஆளாகத் தெரிந்திருந்தால் ஆசார்யாள் தர்க்க ரீதியிலும் தர்மசாஸ்த்ர ப்ரகாரமும் பதில் சொல்லி ஸுலபமாக அவனை ஸரிப்பண்ணியிருப்பார். அவன், "இரண்டு தேஹமும் ஒரே மாதிரி உண்டானதுதானே? தேஹத்துக்குள்ளே இருக்கும் வஸ்துவைப் பார்த்தாலோ இரண்டும் அஸலே ஒன்றுதானே?" என்று கேட்டதற்கு அவர், "வாஸ்தவம் தானப்பா! ஆனால் அந்த உள் வஸ்து உனக்குத் தெரிகிறதா? தெரியவில்லையோல்லியோ? ஏன் தெரியவில்லை? ஸம்ஸ்கார தோஷத்தால். இப்படி ஒவ்வொருவருக்கும் ஸம்ஸ்கார

Koviloor Digital Library

தோஷங்கள் இருப்பதால்தான்—எல்லாருக்கும் ஒரே மாதிரி, ஒரே அளவு தோஷமாக இல்லாமல் வித்யாஸம் வித்யாஸமாக இருப்பதால்தான்—அதை அநுஸரித்தே அவரவருக்கும் ஜன்மா ஏற்படுகிறது. அந்த ஜன்மாவிலேயாவது அவர்கள் தோஷங்களைப் போக்கிக் கொள்வதற்கான கார்யங்களைப் பண்ணட்டும்; அப்படிப் பண்ணும்போதே ஸமூஹத்திற்கு தேவைப்படும் வித்யாஸமான எல்லாக் கார்யங்களும் அவர்களால் நிறைவேற்றப்பட்டதாகவும் ஆகட்டும், என்றுதான் சாஸ்த்ரங்கள் வர்ணாச்ரம தர்மங்களைக் கொடுத்திருக்கிறது. அதன் அநுஷ்டானத்தில் பல பிரிவினர் பல வேறு ஆசாரங்களைப் பின்பற்றினால்தான் அவரவருக்கும் க்ஷேமம் விளைகிறது. ஆகையினால் அவர்கள் கலந்துவிடக்கூடாது. மனஸின் அன்பில்தான் கலக்கணுமே தவிர வாழ்க்கையில் கலந்துவிடக்கூடாது. எல்லாம் ஒரே மாதிரி சரீரமென்றாலுங்கூட ஒவ்வொரு சரீரத்திற்கும் அதன் ஸம்ஸ்காரத்தைப் பொருத்து ஒருவிதமான ஸூக்ஷ்மமான சக்தியோட்டம் இருப்பதால், ஸமூஹ நலனுக்காக மந்த்ர ரக்ஷை பண்ணவேண்டிய தேஹத்திலிருந்து மற்ற தேஹம் விலகியிருக்க வேண்டியிருக்கிறது. தேஹம், ஸமூஹம், ஸம்ஸ்காரம் என்பதெல்லாமே அடிபட்டுப் போய்விட்ட நிலையில்தான் நீ சொல்வது ஸரிவரும்" என்று பதில் கொடுத்திருப்பார்.

இவன் ஸாதாரண ஆளாக இல்லாமல், எல்லாம் அடிபட்டுப்போன நிலைக்காரனாகத் தெரிந்ததால் கொஞ்சங்கூட வாதம் பண்ணாமல் அடக்கத்துடன் அவனை குருவாகச் சொல்லி நமஸ்கரித்தார். நாமும் அப்படிப்பட்டவர்களை அவர் மாதிரியே நமஸ்கரிக்கத் தயாராயிருக்க வேண்டும். அப்போதுதான் ஆசார்ய பக்தர்களாக, ஆசார்ய சிஷ்யர்களாக இருக்கிறோமென்று அர்த்தம்.

விச்வநாதர் விளையாடல்!

உடனே நீண்டாதான் மறைந்து விச்வநாதராக தர்சனம் தந்தான்! ஆசார்யாளைப் பரிசோதித்து, அவர்

Koviloor Digital Library

தம்மளவில் ஞானியானாலும் உலக ஆசாரங்களைப் பின்பற்ற வேண்டியவர்களுக்காகத் தாமும் அப்படியே செய்வார், உலகத்திற்கு மேலே போனவர்களின் விஷயத்திலோ தம்முடைய குருத்வத்தை மறந்து சிஷ்ய பாவத்தில் அடங்கி நிற்பார் என்று காட்டவே ஸ்வாமி பஞ்சமனாக வேஷம் போட்டுக்கொண்டு வந்து விளையாடினது! ஒருவர் தாமே தம் மஹிமையைச் சொல்லிக்கொண்டால், மஹிமைக்குப் பதில் அஹங்காரி என்ற குறைவுதான் உண்டாகும். ஆசார்யாள் அப்படிச் சொல்லிக்கொள்ளமாட்டார். அதனால், லோகம் தானாக அவர் மஹிமையைத் தெரிந்து கொள்ளும்படியாக இப்படி ஸ்வாமி நாடகமாடினார்.

ஆசார்யாள் தமக்கு மூலமான பரமேச்வரன் ப்ரஸன்னமானதும் நமஸ்காரம், ஸ்தோத்ரம் எல்லாம் செய்தார். ஸ்வாமி நிரம்ப அநுக்ரஹம் பண்ணிவிட்டு மறைந்து போனார்.

குமாரிலபட்டர் கதை;
கர்மமும் ஞானமும்

தேசம் முழுதும் ஆசார்யாள் திக்விஜயம் செய்ய வேண்டுமென்று வ்யாஸர் சொல்லியிருந்தாரல்லவா? அதன்படி ஆசார்யாள் காசியிலிருந்து புறப்பட்டார்.

முதலில் அவர் போனது குமாரிலபட்டர் இருந்த ஊருக்கு. நிவ்ருத்தி மார்க்க ப்ரவர்த்தகர் நேரெதிரான ப்ரவர்த்தி மார்க்க ப்ரவர்த்தகரைப் பார்க்கப் போனார்! அந்த ஊர் ப்ரயாகை. ருத்ரபுரம் என்று 'ஆனந்தகிரீயம்' சொல்கிறது*. ஊர் எதுவானாலும் ஆசார்யாளுக்கும்

---

* ஆசார்யாளின் ஸமகாலத்தியதாகக் கருதப்படும் 'ப்ருஹத் சங்கர விஜய'த்தின் சிதிலமான ஒரு பகுதியை அடிப்படையாகக்கொண்டு டி. எஸ். நாராயண சாஸ்திரி எழுதியுள்ள 'The Age of Sankara' நூலில் இவ்வூர் 'ருத்தபுரம்' எனக் கூறப்பட்டுள்ளது. அது ப்ரயாகையைச் சேர்ந்த புறநகராக இருக்கலாம் என சாஸ்திரியார் கூறுகிறார்.

Koviloor Digital Library

குமாரிலபட்டருக்கும் நடந்த ஸந்திப்பு விவரம், பட்டரின் பூர்வகதை ஆகியவற்றை எல்லாப் புஸ்தகங்களிலும் ஒரே விதமாகத்தான் சொல்லியிருக்கிறது.

மீமாம்ஸகர்களில் முதலிடம் வஹித்த பட்டர் அத்வைத வேதாந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படிப் பண்ணிவிட்டால் தம்முடைய அவதார கார்யத்திற்குப் பெரிய பலமாகும் என்றே ஆசார்யாள் அவரிடம்போனார். அவஸர அவஸரமாகப் போனார். ஏனென்றால் அப்போது பட்டர் ஒரு ப்ராயச்சித்த கர்மாவைப் பண்ணித் தம்முடைய உயிரைக் கொஞ்சங் கொஞ்சமாகப் போக்கிக் கொண்டிருந்தார். ப்ராணன் அடங்கியே விடுவதற்குள் அவரை ஸந்தித்துவிட வேண்டுமென்றுதான் ஆசார்யாள் ஓடினார்.

எதற்குப் ப்ராயச்சித்தம், என்ன ப்ராயச்சித்தம் என்ற கதை பார்க்கலாம்.*

குமாரஸ்வாமியின் அவதாரந்தான் குமாரிலபட்டரென்று ஞாபகமிருக்கலாம். அவருடைய அவதாரம் ஏற்பட்டபோது பௌத்தர்களின் ஆதிக்யம் அதிகமாயிருந்தது. அவர்கள் வேதாத்யயனம், யாக யஜ்ஞங்கள், வர்ணாச்ரம விபாகங்கள் எதுவும் இல்லாமலிருந்துகொண்டு ஜனங்களையும் அப்படியே நாஸ்திகமாகப் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இந்த நிலைமையை மாற்றுவதற்கே குமாரிலபட்டரின் அவதாரம் உண்டானது. இப்போது நான் சொன்ன விஷயமெல்லாம் கர்ம மார்க்கத்தில் பௌத்தம் ஏற்படுத்திய ஹானியாகும். இப்படியே ஈச்வரன், ஈச்வர பக்தி என்பவை இல்லாமல் பக்தி மார்க்கத்துக்கும் அது ஹானி செய்து வந்தது.

---

* குமாரிலபட்டரின் வரலாறு, அவரது பூர்வ மீமாம்ஸைக் கொள்கை, அதற்கு ஆசார்யாளுடைய அத்வைத ஸித்தாந்தத்தின் ஆக்ஷேபணை ஆகியன குறித்து ''தெய்வத்தின் குரல்'' —முதற் பகுதியில் ''முருகனின் வடநாட்டு அவதாரம்'' என்ற உரையும், இரண்டாம் பகுதியில், 'மீமாம்ஸை : கர்ம மார்க்கம்'' என்ற உரையும் பார்த்துப் பல விவரங்கள் இட்டு நிரப்பிக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

எல்லாம் ஒரு பாழ்வெளியாகப் போய் முடிவதுதான் மோக்ஷமென்று சொல்லி, ப்ரஹ்ம ஸ்வரூபமாக ஆகிவிடுவதற்கு வழி சொல்லும் ஞான மார்க்கத்துக்கும் ஹானி இழைத்து வந்தது. இவற்றில் பக்தி, ஞான ஸமாசாரங்களை விட்டுவிட்டு வைதிகமான கர்ம மார்க்கத்தை மட்டும் நிலைப்படுத்தத்தான் குமாரஸ்வாமி குமாரிலராக வந்தது. அவதாரம் மநுஷ்ய ரீதியிலேயே நிறையப் பண்ணுவதுதானே வழக்கம்? அதனால் பௌத்தத்தைக் கண்டிக்க அவர் நினைத்தபோது, முதலில் அந்த மதக் கொள்கைகள் எல்லாம் என்னவென்று மநுஷ்ய ரீதியிலேயே நன்றாகப் படித்தறிய வேண்டுமென்று எண்ணினார்.

ஒன்றைக் கண்டனம் பண்ணுவதற்குமுன் அந்த விஷயம் என்ன, எதனால் அதைச் சேர்ந்தவர்கள் அப்படிச் சொல்கிறார்கள் என்பதையெல்லாம் தீர்க்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டியதே முறை. இப்பொழுதுள்ள புதுக் கொள்கைக்கு மாறுதலாக ஒன்றை தர்ம சாஸ்த்ரம் சொல்கிறதென்றால் உடனே அது தப்பு என்று கண்டனம் செய்யப் புறப்படுகிறார்களே, இது ஸரியில்லை. சாஸ்த்ரம் ஏன் ஏற்பட்டது, அது ஏன் அப்படிச் சொல்கிறது, அதற்கு என்ன ப்ரயோஜனம் சொல்கிறது, அந்த ப்ரயோஜனத்தைப் பூர்விகர்கள் அடைந்தார்களா, இல்லையா, அப்படி அடைந்திருந்தால் இப்போது நமக்கு அது வேண்டாமா, வேண்டாமென்றால் ஏன் வேண்டாம், வேண்டுமென்றால் அப்போதும் நாம் 'புதுக் கொள்கைதான்' என்று பிடித்துக்கொண்டிருக்கலாமா என்பதையெல்லாம் ஆலோசித்துப் பார்த்தே முடிவெடுக்க வேண்டும். ஆனால் இந்தக் காலத்தில், "உங்கள் சாஸ்த்ரம் சுத்த நான்ஸென்ஸ். அதில் ஆராய்ந்து பார்க்க ஒன்றுமில்லை. எங்கள் கொள்கைதான் கொள்கை" என்று ஒரேயடியாகத் தள்ளிவிடுகிறார்கள்.

குமாரிலபட்டர் மாற்றுக் கட்சியையும் பூர்ணமாகத் தெரிந்துகொண்ட பிறகே கண்டிக்கப் போகணுமென்ற கருத்தை உடையவர். ஆனால் பௌத்தர்களோ

Koviloor Digital Library

வைதிகாசாரங்களோடு உள்ள ப்ராம்மணனுக்குத் தங்கள் சாஸ்த்ரங்களைச் சொல்ல மாட்டார்கள். இந்த ஏறுமாறான ஸந்தர்பத்தில் என்ன பண்ணலாமென்று அவர் யோசித்து, 'ஸரி, வைதிகாசாரத்தை விட்டுவிட்டு, பௌத்தத்தில் உண்மையான பற்றுதல்கொண்டே அந்த சாஸ்த்ரத்தைக் கற்றுக்கொள்கிற மாதிரி வேஷம் போட வேண்டியதுதான். வேறே வழியில்லை' என்று நினைத்தார். பௌத்தர் வேஷம் போட்டுக்கொண்டு ஒரு பெரிய விஹாரத்திலிருந்த அவர்களுடைய வித்யாசாலையில் சேர்ந்தார். அது ஏழு மாடிகள் கொண்ட பெரிய விஹாரம்.

குமாரிலபட்டர் அத்யாவச்யமான கர்மாநுஷ்டானங்களை மட்டும் ரஹஸ்யமாகப் பண்ணிக்கொண்டு பௌத்த குருமார்களிடம் படித்து எல்லாம் தெரிந்துகொண்டார்.

அவர்கள் ஒரேயடியாக வேதத்தை தூஷித்து ஆர்க்யூ பண்ணும்போது—"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்" என்று ஞானஸம்பந்தர் சொன்னதுபோலச் செய்யும்போது—இவருக்கு துக்கம் துக்கமாக வரும். 'வலிய வந்து, பொய் வேஷம் போட்டுக்கொண்டு, இப்படி நமக்கு உயிராயுள்ள வேதத்தின் தூஷணையைக் கேட்டுக் கொள்கிறோமே?' என்று அழுகை வரும். அடக்கிப் பார்ப்பார். சில ஸமயம் அடங்காமல் கண்ணில் ஜலம் வந்துவிடும். பிக்ஷுக்கள் இதை கவனித்தார்கள். 'இவன் வைதிகப் பார்ப்பானாயிருப்பானோ?' என்று ஸந்தேஹித்தார்கள். "ஏன் அழுகிறீர்?" என்று கேட்பார்கள். இவர், "ஆஹா! எத்தனை புத்திசாலித்தனமாகக் கண்டனம் பண்ணியிருக்கிறது! அதுதான் ஆனந்த பாஷ்பம் வருகிறது!" என்று ஸமாளிப்பார்.

எத்தனை நாள் ஒளிக்க முடியும்? அவர்கள் இவருடைய நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கண்காணித்து உண்மையைத் தெரிந்துகொண்டு விட்டார்கள். 'கெடுத்தானே பார்ப்பான்! இவனை விரட்டிவிட வேண்டியதுதான். எங்கே விரட்டுவது? இவன் கொஞ்சமாகத் தெரிந்துகொண்டிருந்

Koviloor Digital Library

தால் இந்த விஹாரத்திலிருந்து வெளியுலகத்துக்கு விரட்டி விட்டால் போதும். இவனே பூர்ணமாகத் தெரிந்துகொண்டு விட்டான். அதனால் வெளியுலகத்துக்குப் போய்ப் பூர்ணமாகக் கண்டன ப்ரசாரம் பண்ண ஆரம்பிப்பான். ஆகையால் இவனை உலகத்தைவிட்டே விரட்ட வேண்டும்' என்று தீர்மானித்தார்கள்—"அஹிம்ஸா பரமோ தர்ம:" என்று உபதேசித்தவர்கள்!

ஹித வஞ்சனையாக அவரை ஏழாவது மாடிக்குக் கூட்டிக் கொண்டுபோய் அங்கேயிருந்து கீழே தள்ளிவிட்டார்கள்.

அவர் கீழே விழுந்தார்.

அந்த ஆபத்திலும் வேதம் கை கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு, "வேதம் ப்ரமாணமாக இருந்தால் எனக்கு எந்த ஹானியும் ஏற்படாமல் உயிருடன் இருப்பேனாக!" என்று சபதம் பண்ணிக்கொண்டே விழுந்தார்!

"பதந் பதந் ஸௌத-தலாந்யரோருஹம்
யதி ப்ரமாணம் ச்ருதயோ பவந்தி |
ஜீவேயம் அஸ்மிந் பதிதஸ்-ஸமஸ்தலே
மஜ்ஜீவநேந ச்ருதிமாநதா கதி: ||"*

அத்தனை நம்பிக்கையோடு அவர் விழுந்ததற்கேற்க அவருக்கு ப்ராணஹானி ஏற்படவில்லை! எலும்பு கிலும்பு முறியக்கூட இல்லை! கண்ணில் மட்டும் ஒரு கல் குத்தி விட்டது.

'இதுகூட எப்படி நேரலாம்? வேதத்தின் சக்திக்கு இந்த அளவுகூட ஒரு ஊனம் ஏற்படலாமா?' என்றே அவர் கோபித்துக் கொண்டாராம்!

அப்போது ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. "வேதம் ப்ரமாணமாக இருந்தால் -'யதி ப்ரமாணம்'—என்றீரே! 'இருந்தால்' என்பதில் உமக்கு அதன் ப்ராமாண்யத்தில்

* 'வ்யாஸாசலீய சங்கர விஜயம்' V. 29

Koviloor Digital Library

கொஞ்சம் ஸந்தேஹம் இருந்ததாகத்தானே தொக்கி நிற்கிறது? அதனால்தான் இந்தச் சின்ன ஊனம்!" என்று அது சொல்லிற்று.

அப்புறம் குமாரிலபட்டர் க்ருஹத்துக்குத் திரும்பினார். பௌத்தத்தை அலசி அலசிக் கண்டனம் பண்ணிப் (பூர்வ) மீமாம்ஸை என்கிற கர்ம மார்க்கத்தை மறுபடி நன்றாக அநுஷ்டானத்துக்குக் கொண்டு வந்தார். தேசத்தில் மறுபடி வைதிக ஆசார, அநுஷ்டானங்கள் வ்ருத்தியாயின. அநேக வருஷங்கள் ஆகி அவர் நல்ல வ்ருத்தராகி விட்டார்.

'ஸநாதன தர்ம ஸம்ஸ்தாபனத்தில் நாம் ஆரம்ப கட்டமாகச் செய்யவேண்டியதெல்லாம் செய்தாயிற்று. அப்பாக்காரர் அவதாரம் பண்ணி பாக்கி செய்ய வேண்டியதை ஆரம்பித்து விட்டார். நாம் திவ்ய லோகத்துக்குத் திரும்பிவிட வேண்டியதுதான்' என்று எண்ணினார்.

'தம்முடைய தேஹ பரித்யாகத்திலும் லோகத்திற்கு சாஸ்த்ராபிமானம் ஏற்படும்படியாக ஒன்று பண்ணிக்காட்ட வேண்டும். ஜீவிப்பதற்கு மட்டுமில்லாமல் சாவதற்கும்கூட சாஸ்த்ரப்படிதான் செய்யணுமென்று காட்டவேண்டும்' என்று நினைத்தார்...

சாஸ்த்ரப்படித் தாம் கடுமையான ஒரு ப்ராயச்சித்தம் பண்ணிக்கொள்ள வேண்டியவர் என்று அவர் அபிப்ராயப் பட்டார். என்ன அப்படி பெரிய தப்புப் பண்ணினார், அதற்காக ப்ராயச்சித்தம் என்றால்...'ஒரே ஒரு எழுத்து நமக்கு ஒருவர் சொல்லிக் கொடுத்தாலும் அவர் நமக்கு குரு. குருவுக்கு த்ரோஹம் பண்ணுவதை சாஸ்த்ரம் மஹா பாபம் என்கிறது. புத்த பிக்ஷுக்களோ நமக்கு அவர்களுடைய மத விஷயம் முழுவதும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். நாமானால் பொய் வேஷம் போட்டுக் கற்றுக் கொண்டோம்! அப்புறம் அவர்கள் சொல்லிக்கொடுத்ததையெல்லாம் கண்டனம் பண்ணி அவர்களுக்கு மனவேதனை

Koviloor Digital Library

கொடுத்திருக்கிறோம். இப்படி குரு த்ரோஹியாகி விட்டோம். கர்மாநுஷ்டானத்தை ஸ்தாபிக்க வந்த நாமே இதற்கான ப்ராயச்சித்த கர்மாவைப் பண்ணுமலிருக்க லாமா?' என்று நினைத்து, இதற்கு என்ன ப்ராயச்சித்தம் சொல்லியிருக்கிறதென்று தர்ம சாஸ்த்ரங்களைப் பார்த்தார்.

'இவர் ஸொந்த ஆதாயத்துக்காக வேஷம் போட வில்லை. லோகத்துக்கு ஸத்யம் தெரியவேண்டுமென்றே அப்படிப் பண்ணினுர். சிஷ்யனுக்கு குருபக்தி மாதிரியே, குருவுக்கு சிஷ்ய ரக்ஷணம் பெரிய தர்மம். அவர்களானுல் இவரை ஏமாற்றி ப்ராணஹானி பண்ணவே யத்தனித் தார்கள். இப்படிப்பட்டவர்களின் விஷயத்திலே குரு த்ரோஹம் என்பது ஸரியாகுமா?' என்று நமக்குத் தோன்ற லாம்! ஆனுல் பெரியவர்களோ பிறத்தியார் செய்த பெரிய தப்புக்களையும் மறந்துவிட்டுத் தாங்கள் செய்த சின்னத் தப்புக்களைத்தான் பெரிசாக நினைப்பார்கள். அதனுல் நிஜமாக இல்லாத போலி குரு த்ரோஹத்திற்கும் தம்மைத் தாமே சாஸ்த்ர ப்ரகாரம் தண்டித்துக்கொள்ளத்தான் வேண்டுமென்று அவர் நினைத்தார்.

ப்ராயச்சித்தத்துக்காகப் புஸ்தகம் பார்த்தார். அதில் ரொம்பவும் கஷ்டமான முறையில் மரணத்தை ஏற்பதே குரு த்ரோஹத்திற்கு ப்ராயச்சித்தம் என்பது போட்டிருந் தது. 'அப்படியா? ஸரி, சரீரத்தை அணு அணுவாகப் பொசுக்கிக்கொண்டு உயிரை விடுவோம்;' என்று உடனே முடிவு பண்ணிவிட்டார். நாமானுல் அந்தப் புஸ்தகத்தை நெருப்பில் போட்டிருப்போம்! அவரோ, 'நல்ல வேளை! குரு த்ரோஹத்திற்கு ப்ராயச்சித்தமே இல்லை என்று சொல்லாமல் இப்படியொன்று சொல்லியிருக்கே!' என்று ஸந்தோஷமே பட்டார்.

உமியை நிறையக் கொட்டிக்கொண்டு அது சிறுகச் சிறுகக் கருகும்படி எரித்துக்கொண்டு அதற்குள்ளே அவர் இறங்கிவிட்டார். அணு அணுவாக எரிந்து சாவதற்கு இதுவே வழி என்று இப்படிப் பண்ணினுர். 'துஷாக்னி

Koviloor Digital Library

ப்ரவேசம் செய்தார்' என்று சொல்லியிருக்கிறது. துஷம் என்றால் உமி.

உமிக் காந்தல் அக்னியில் அவர் இறங்கிவிட்டாரென்று ஆசார்யாள் கேள்விப்பட்டதால்தான், 'எந்த நிமிஷம் என்ன ஆகுமோ? நாம் சுருக்க (விரைவில்) போய் அவரை வேதாந்தம் சொல்லும் ஞானமார்க்கத்தை ஏற்கும்படிச் செய்ய வேண்டுமே!' என்று பதறிக்கொண்டு வந்து சேர்ந்தார். ப்ராயச்சித்தம் முடிந்தபின் ஆஸாமியையே பார்ப்பதற்கில்லையே என்பதால் நாலு நாளில் ஓடோடி வந்து சேர்ந்தார்.

அக்னியில் வெந்து ;கொண்டிருந்த குமாரிலபட்டருக்கு ஆசார்யாளின் தர்சனமே குளிர்ச்சியாக இருந்தது. அதுவும் போதாதென்று ஆசார்யாள் உபதேசமாக அவர் மேலே ஞானம்ருதத்தையும் வர்ஷித்தார்.

உபதேச ஸாரம் என்னவென்றால்: வேதத்தில் சொன்ன படியே கர்மாநுஷ்டானம் அவச்யம் செய்யத்தான் வேண்டும். ஆனால் அது சித்தப் பரிசுத்தி ஏற்பட்டு ஞானவிசாரத்திற்குப் பக்வமாவதற்குத்தானே தவிர, குமாரிலபட்டர் முதலான மீமாம்ஸகர்கள் சொல்கிறபடி அதுவே முடிவான ஸாதனம் என்று அல்ல. கர்மாநுஷ்டானத்தால் அடையும் ஸ்வர்கம் முதலான இன்பப் பலன் எதுவும் சாச்வதமில்லை. ஆத்மாவை அறிந்து ஆத்மாவாகவே, ப்ரஹ்மமாகவே நிற்பதுதான் சாச்வதமான மோக்ஷம். அதுதான் ஸத்ய ஸத்யமான ஸ்திதி.

''ஜீவனை 'இன்ன இன்ன செய்' என்று கார்யத்தில் ஏவும் கர்ம காண்டமே வேதத்தின் பரம தாத்பர்யம். வெறுமே ஒரு கார்யமுமில்லாததாக சும்மா இருக்கும் ஆத்மாவைப் பற்றிச் சொல்லியிருக்கும் ஞான காண்டத்தில் நாம் எடுத்துக்கொள்வதற்கு எதுவுமில்லை. ஏன் பின்னே இப்படி ஒரு காண்டம் இருக்கவேண்டுமென்றால், கர்த்தாவை அவனேதான் ஸ்வாமி என்று தூக்கிவைத்து

Koviloor Digital Library

ஸ்துதித்தால்தான் அவனுக்கு உத்ஸாஹம் ஏற்படும் என்றுதான் இருக்கிறது. இதற்கு 'அர்த்தவாதம்' என்று பெயர். ஆனால் இதுவே பரமதாத்பர்யமாகாது'' என்று மீமாம்ஸா மதம் சொல்லும். இதற்கு ஆசார்யாள் என்ன சொன்னாரென்றால்: காரியத்தைச் சொல்வதாலேயே, சொல்கிறபோதே, வேதத்தை அங்கீகரிக்கிறோம் என்று மீமாம்ஸகர்கள் சொன்னாலும் உண்மையில் அந்தக் காரியத்தால் ஏற்படும் ப்ரயோஜனமான ஆனந்த ப்ராப்திக்காகத்தான் அங்கீகரிக்கிறார்களே தவிர காரியத்திற்காகவே அல்ல. 'இன்ன இன்ன செய்' என்று காரியங்களில் ஏவும் "விதிகள்" கர்ம காண்டத்தில் இருப்பது போலவே, 'இன்ன இன்ன செய்யாதே' என்று காரியத்திலிருந்து விலக்குவதாகவுள்ள "நிஷேத"ங்களும்தான் இருக்கின்றன. காரியமில்லாததைச் சொல்லும் இவற்றையும் மீமாம்ஸகர்கள் ஏற்றுக்கொள்ளத்தான் செய்கிறார்கள். ஏனென்றால் ஆனந்த ப்ராப்தி என்ற ப்ரயோஜனத்தை அடையவேண்டுமென்றால் இந்த நிஷித்த கர்மாக்களை (நிஷேதமாக உள்ள கர்மாக்களை) நாம் செய்யாமல் இருந்தால்தான் முடியும் என்பதால் இப்படி. கர்ம காண்டத்திலேயே சில காரியங்களை விடச் சொல்லியிருப்பது அதன் ப்ரயோஜனத்தை உத்தேசித்து ஏற்கத்தக்கதாகிறது என்றால், ஞான காண்டத்தில் ஸகல காரியங்களையுமே விட்டுவிட்டுச் சும்மா இருப்பதுதான் பரம ப்ரயோஜனம் என்று இருப்பதை எப்படி வெறும் அர்த்தவாதம் என்று தள்ளலாம்? கர்மாவின் ப்ரயோஜனம் என்ன, ஞானத்தின் ப்ரயோஜனம் என்ன என்று சீர்தூக்கிப் பார்த்துத்தானே முடிவு செய்யவேண்டும்? கர்மாவினால் அடையும் ஆனந்த ப்ராப்தி சாச்வதமே அல்ல. ஞானத்தினால் அடையும் ஆனந்த ப்ராப்தியோ—ஆத்மானந்தம், ப்ரஹ்மானந்தம் என்பதோ—சாச்வதமாக இருப்பது. அப்போது அதைத் தானே எடுத்துக்கொள்ள வேண்டும்? ஆகையால் கர்மாக்களையும் பண்ணவேண்டியவரை பண்ணத்தான் வேண்டுமென்றாலும், அவை தரும் சிறிய சிறிய ஆனந்தங்களுக்காக

Koviloor Digital Library

இல்லாமல், இந்த ஆனந்த பலனை த்யாகம் பண்ணிவிட வேண்டும். அப்படிப் பண்ணினாலே பேரானந்தமான ஆத்ம லக்ஷ்யத்திலே சேர்க்கிற ஞானமார்க்கத்தில் ப்ரவேசிப்பதற்கான சித்த சுத்தி ஏற்படும்.

மீமாம்ஸையில் கர்மா என்பது அதுவே பலனைத் தருகிறது என்று சொல்லி, ஸ்வாமி வேண்டாமென்று தள்ளுவதும் அடியோடு ஸரியில்லை. பெரிய ப்ரபஞ்ச நிர்வாஹத்தைப் பார்த்தாலும், ஒரு புழுவிலிருந்து ஆரம்பித்து ஸகல ஜீவர்களுக்கும் இருக்கும் குணாதிசயங்களைப் பார்த்தாலும், அந்த ஜட ப்ரபஞ்சத்தை இந்த ஜீவ லோகத்தோடு கோடி தினுஸில் முடிச்சுப் போட்டு ஜீவ யாத்ரை நடப்பதைப் பார்த்தாலும் இதையெல்லாம் நடத்துவிக்கிற ஒரு பேரறிவு இருந்தே தீர வேண்டும், அதுதான் இன்ன கார்யத்திற்கு இன்ன பலன் என்று திட்டம் பண்ணி நடத்துகிறது என்று ஒப்புக்கொள்ள வேண்டியே ஏற்படும். அந்தப் பேரறிவைத்தான் ஸ்வாமி என்பது. சித்தி சுத்திக்காகவே கார்யமே தவிர இந்தக் கார்யத்தினாலேயே கிடைக்கும் பலனுக்காக இல்லை என்னும்போது, 'அப்பா, இந்தப் பலனை உன் பாதத்தில் அர்ப்பணம் பண்ணிவிட்டேன். எனக்கு சித்த சுத்தியைத் தா' என்று அவனிடம்தான் பலத்யாகம் பண்ண வேண்டும்.

'அவன் அத்வைதமான ஞானத்தை அநுக்ரஹிக்கும் வரையில் அவனிடம் அன்போடு பக்தி பண்ணிக்கொண்டு இப்படிக் கர்மபல த்யாகம் செய்து வரவேண்டும். அப்புறம் அவனாகவே ஆகிவிடலாம். பக்தி என்கிற இந்த அன்புக்கும் மீமாம்ஸையில் இடமே இல்லாமலிருப்பது ஒரு பெரிய குறை. இந்த அன்பின் அம்சமாக லோகத்திலுள்ள பல தினுஸான நல்ல அன்புகள் எதற்கும் அதில் இடமில்லை. ஒரு ஜீவன் என்றால் அவன் உடம்பால் செய்யும் கார்யம், மனஸால் செய்யும் அன்பு, மனஸும் கழண்டு (கழன்று)போய் அப்படியே ஆத்மாவாக உள்ள சாந்தி நிலை என்று எல்லாமும் சேரும்படி, ஒன்றுக்கொன்று கைக்கொடுத்துப் போகும்படி வழி சொன்னால்தானே integrated personality (ஒருங்கு

Koviloor Digital Library

சேர்ந்த ஜீவ பூர்ணம்) உருவாக முடியும்? மனஸின் அன்பும் இல்லை, ஆத்மாவின் சாந்தியும் இல்லை, வறட்டு வறட்டு என்று உடம்பால் கார்யம் பண்ணிக்கொண்டிருந்தால் போதும் என்றால் எப்படி ஒரு ஜீவனுக்கு நிறைவு கிடைக்கும்?

'கர்மம், பக்தி இரண்டையும் கலந்து ஈச்வரனுக்காகப் பண்ணவேண்டியதையெல்லாம் பண்ணவேண்டும். அவனுடைய ஸ்வரூபமாகவே லோகத்தையெல்லாம் பார்த்து அதற்கானதையெல்லாமும் பண்ணவேண்டும். கடைசியில் இதெல்லாமும், 'அவனுக்கானது, அவர்களுக்கானது' என்பதைவிட 'நமக்கேயானதுதான்' என்கிற மாதிரி நமக்கே ஞான நிஷ்டைக்குக்கு ஏறுவதற்கான யோக்யதை ஸித்திக்கும். அப்போது எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு, கார்யமெல்லாம் போச்சு, மனசும் போச்சு என்று அப்படியே ஆத்மாவாக இருந்துகொண்டிருப்பதற்கான ஸாதனைகளை ஆரம்பிக்க வேண்டும். ஸாதனை பண்ணி முடிவில் அப்படி ஆகிவிடவேண்டும். அப்போதுதான் ஜன்மா இல்லை, ஸம்ஸார பந்தமில்லை என்று சாச்வதமாக விடுதலை பெற முடியும். ஏனென்றால் ஜன்மம், பந்தம் எல்லாம் சரீரமும், மனஸும் உள்ளவரைதானே ஸாத்தியம்? ரூபமுமில்லை, எண்ணமுமில்லை என்றால் எதற்குக் கர்மா, கர்ம பலன் ஆகியவற்றைக் கொடுத்து ஜன்மா உண்டாக்கி, ஸம்ஸாரத்தில் பந்தப்படுத்த முடியும்? அந்த சாச்வத சாந்தம் வேண்டாம், ஸதா கார்யங்களில்தான் சிக்கிக்கொண்டு ஏதாவது சஞ்சலப் பட்டுக் கொண்டிருப்பது என்றால் ஸரியா?

"மா தே ஸங்கோஸ்த்வகர்மணி - கார்யம் செய்யாம விருப்பதில் உனக்குப் பற்று வேண்டாம்; அதாவது கார்யம் பண்ணிக் கொண்டேயிரு" என்று பகவான் சொல்லவில்லையா என்றால், இது ஆரம்ப கட்டத்தில் இருக்கும் ஸாதகனுக்கே சொன்னது. இத்தனை காலமாக, ஜன்ம ஜன்மாவாக இந்த்ரிய போகங்களுக்காக இவன் ஓயாமல் கார்யம் பண்ணிக்கொண்டே இருந்தவன். திடீரென்று நிறுத்து என்றால் எப்படி முடியும்? "கார்யத்தை விட்டுவிட்டு

Koviloor Digital Library

ஞானியாக, ஸந்நியாஸியாக இப்பவே நான் ஆகி விடுவேன் என்று நீ நினைத்தாலும் உன்னால் அப்படி முடியாது அதற்கான சக்தி உனக்கு இல்லை; ந ஹி (தேஹப்ருதா) சக்யம் —தேஹாபிமானமுள்ள மட்டும் கார்யத்தை விடச் சக்தி இருக்காது: 'ந ஹி தேஹப்ருதா சக்யம் த்யக்தும் கர்மாண்ய சேஷத:' இந்த ஸ்டேஜிலேயே விடுவேனென்றால், உடம்பு கார்யம் பண்ணாவிட்டாலும் மனஸ் பழக்கப்பட்ட அந்த இந்த்ரிய போகக் கார்யங்களைப் பண்ணிப் பார்த்துக் கொண்டேதானிருக்குமேயொழிய, அடங்கி ப்ரசாந்த மாயிருக்காது. வெளியில் கார்யத்தை நிறுத்தின ஞானி மாதிரி இருந்து கொண்டு மனஸுக்குள்ளே இந்த்ரிய விஷய மானவற்றையே நினைத்துக்கொண்டிருப்பவன் மூடாத்மா தானே? மித்யாசாரன் என்கிற 'ஹிபாக்ரிட்'தானே? 'கர்மேந்த்ரியாணி ஸம்யம்ய ய ஆஸ்தே மனஸா ஸ்மரந்| இந்த்ரியார்த்தாந் விமூடாத்மா மித்யாசார : ஸ உச்யதே||' அதனாலே, அப்பா அர்ஜுனா, இப்போது உன் நிலைமையிலே நீ ஏதோ ஒரு மோஹத்தில் (மதி மயக்கத்தில்) கார்யத்தை விடுவேன் என்றாலும் உன் இயற்கை குணம் உன்னைக் கட்டி யிழுத்து, உன் வசமில்லாமலே உன்னைக் கார்யத்தில்தான் தள்ளும்: 'ஸ்வபாவஜேந கௌந்தேய நிபத்த: ஸ்வேந கர்மணா | கர்த்தும் நேச்சஸி யந்-மோஹாத் கரிஷ்யஸ்-யவ சோ(அ)பி தத் ||' அதனால்தான் உன்னை இப்போது கார்யத்தை விட வேண்டாமென்றது. ஆனால் இப்படியே இஷ்டப்படிப் பண்ணாமல் சாஸ்த்ரப்படிப் பண்ணு என்கிறேன். பற்றோடு பண்ணுவதை விட்டு, பற்றை விட்டு பகவதர்ப்பணம் பண்ணு என்கிறேன்: 'தத் குருஷ்வ மதர்ப்பணம்'. இப்படிப் பண்ணிக்கொண்டே போனாயானால் தாமரை இலைத்தண்ணீர் மாதிரிப் பாவம் உன்னைத் தொடாமலிருக்கும் நிலை வரும்: 'லிப்யதே ந ஸ பாபேந பத்ம-பத்ரமிவாம்பஸா.' இப்படி அவனவனுக்கும் சாஸ்த்ரோக்தமாக வாய்த்த கர்மாவை நிஷ்காம்யமாகப் பண்ணிப் பலனை ஈச்வரனுக்கு அர்ப்பித் தானானால் அப்புறம்தான் அவனுக்கு ஞான யோகத்தில்

Koviloor Digital Library

பிரவேசிக்கின்ற யோக்யதா ஸித்தி ஏற்படும்: ஸ்வகர்மணு தம் அப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:| இது சின்ன ஸித்தி. இதற்கும் அப்புறம், கார்யத்தை விட்டுவிட்டு ஞான விசாரமே பண்ணிக்கொண்டு போகும்போதே சாச்வத மோக்ஷமான மஹா ஸித்தி—"ஸித்திம் பரமாம்" என்பது—கிடைக்கும். 'நைஷ்கர்ம்ய ஸித்திம் பரமாம் ஸந்ந்யாஸே நாதிகச்சதி'| ஒரு கார்யமுமில்லாத நிலேயே அந்தப் பரம ஸித்தி. அதை ஒருவன் ஸந்நியாஸியாக ஆகி அடைகிருன்," என்கிருர். ஆக, கார்யம் பண்ணுமல் மனஸை அடக்கி சாந்தமாக இருக்க மநுஷ்யர்களுக்குப் பக்வம் போதாததால் தான் சாஸ்த்ரோக்தமான ஸகல கார்யமும் பண்ணி அந்தப் பக்வத்தைப் பெறும்படி பகவான் சொன்னுரே தவிர அதுவே தான் முடிவு என்று சொல்லவேயில்லே. ஸாதனு மார்க்கத்தில் ஏற விரும்புகிறவனுக்கே கார்யம் உபாயமாகிறது; அவனே ஏறிவிட்ட பிறகு 'சமம்' என்பதாகக் கார்யங்களே ஒழித்துவிட்ட நிலேதான் மோக்ஷோபாயமாகிறது என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிருர்: 'ஆருருக்ஷோர்-முநேர்-யோகம் கர்ம காரணம் உச்யதே | யோகாரூடஸ்ய தஸ்யைவ சம: காரணம் உச்யதே||'. "ஸகல கர்மமும் ஞானத்தில் போய் அடங்கித்தான் பூர்த்தியடைகிறது: ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஞாநே பரிஸமாப்யதே. ஞானிக்குக் கார்யம் கிடையவே கிடையாது: தஸ்ய கார்யம் ந வித்யதே" என்று தீர்மானமாக முத்தாய்ப்பு வைத்துச் சொல்லி விட்டார்.*

கீதை கர்மயோகத்தை நிறையச் சொல்லியிருக்கிறதென்பதால் அதையே முடிவாகச் சொல்லியிருக்கிறதென்று அர்த்தமில்லே என்று ஆசார்யாள் தம்முடைய பாஷ்யத்தில் நன்ருகத் தெளிவுபடுத்தியிருக்கிருர்.

இதேபோல, ஆசார்யாளின் மதத்திற்கு ஆதாரமான உபநிஷத்துக்களிலும்கூட எங்கேயாவது கர்ம மார்க்கத்தை

---

* இப் பாராவில் குறிப்பிடப் பெறும் கீதை ச்லோகங்கள் முறையே வருமாறு: II. 47; XVIII. 11; III. 6; XVIII. 60; IX. 27, V. 10; XVIII 46; XVIII. 49; VI. 3; IV. 33; III. 17.

Koviloor Digital Library

வலியுறுத்திச் சொல்லியிருந்தால் அதுவேதான் பரம தாத்பர்யம் என்று நினைத்துவிடக்கூடாது என்றும் ஆசார்யாள் விளக்கி வைத்திருக்கிறார். 'ஈசாவாஸ்ய (உபநிஷ)'த்தில் மநுஷன் நூறு வயஸும் வைதிக கர்மா பண்ணிக்கொண்டிருக்கட்டும் என்று ஆரம்பத்தில் மந்த்ரம் இருக்கிறது. ஆனால் இங்கே 'ஜிஜீவிஷேத்' என்று போட்டு, 'லோக வாழ்க்கை வாழ ஆசைப்படுபவன் இப்படிப் பண்ணட்டும்' என்றே இருக்கிறது. அதாவது நிவ்ருத்தி மார்க்கத்தில் போகாமல் ப்ரவ்ருத்தியில் போகிறவனுக்கே இந்த உபதேசம். 'இஷ்டப்படிப் பண்ணாதே! சாஸ்த்ரப்படி ஸகலமும் பண்ணு' என்று அவனுக்குச் சொல்கிறது. இது ஆசார்யாளுக்கும் பூர்ண ஸம்மதம்தான். அடுத்த மந்த்ரத் திலேயே ஆத்மாவைத் தெரிந்துகொள்ளாதவன், அதாவது ஞான மார்க்கத்தில் போகாதவன் ஆத்மஹத்தி (தற்கொலை)யே செய்து கொண்டவன்தான் என்றும் வருகிறது. அப்புறம் ஒரே அத்வைதமாக ஆத்ம லக்ஷணத் தைச் சொல்லியிருக்கிறது. ஆகையால் வேதத்தில் கர்மாவைச் சொல்லியிருப்பது ஞானத்துக்குப் போவதற்குப் பூர்வாங்கமாகத்தான்.

இப்படியெல்லாம் ஆசார்யாள் குமாரிலபட்டருக்குத் தத்வங்களை எடுத்துச்சொல்லி உபதேசித்தார். ஒரே யடியாகக் கர்மா என்றே இருந்தவரின் மரண ஸமயத்தில் வந்து அவர் கர்மா தொடவே முடியாத சாந்தத்தில் சேரும் படியாக இப்படி உபதேசித்தார். அந்த சாந்தத்தின் அவதாரம்தான் ஆசார்யாள். அவதாரத்திலே அவர் கார்யமயமாகத்தான் ஸதாவும் தெரிந்து கொண்டிருந் தாலும் அப்போதும் அந்தரங்கத்தில் ஒன்றும் செய்யாத சாந்த தத்வமாகத்தான் இருந்து கொண்டிருந்தார். நிறையச் சொன்னேன்,—எவ்வளவுதான் சொன்னாலும், செய்தாலும் ஒன்றும் செய்யாமல் சும்மாயிருப்பதுதான் முடிவு. அதைத் தெரிவிப்பதுதான் பெரிய உபகாரம் என்பதற்காகத்தான் அவர் அவதாரம் எடுத்திருந்தது.

Koviloor Digital Library

ஆசார்யாள் அன்போடுகூட உபதேசிக்க உபதேசிக்க, கர்ம மார்க்கத்தையே முடிந்த முடிவாகப் பிடித்துக்கொண்டிருப்பது உபயோகமில்லை என்று குமாரிலபட்டருக்குப் புரிந்தது. ஈச்வர பக்தியில் போய் ஞானம் பெற்று ஆத்மாவைத் தெரிந்து கொண்டாலன்றி சாச்வதமான சாந்தி ஸௌக்யங்கள் இல்லை என்று புரிந்து கொண்டார்.

ஆசார்ய தர்சனமும், உபதேசமும் உமிக்காந்தல் அக்னியின் தஹிப்பை அடியோடு போக்கிவிட்டன. அப்பர் ஸ்வாமிகளைச் சுண்ணும்புக் காளவாயில் போட்ட போதும் அவர் சிவ ஸ்மரணையிலேயே ஈடுபட்டிருந்ததால் "ஈசன் எந்தை இணையடி நிழலில்" தாம் ஜில்லென்று இன்பமாக இருந்ததாகப் பாடிய மாதிரிதான் குமாரிலபட்டருக்கும் இருந்தது. காளவாயில் வேகிறதைவிடவும் நீடித்த சித்ரவதையாகத் துஷாக்னியில் அணு அணுவாகப் பொசுங்குவதும் துன்பமாக இல்லை. "எந்தை இணையடி" என்று அப்பர் சொன்ன பகவத் பாதம்தானே சங்கர பகவத்பாதாள்?

குமாரிலபட்டர் ஆசார்யாளிடம் மனஸ் உருகி, "தங்கள் தர்சனத்தாலும் தத்வோபதேசத்தாலும் க்ருதார்த்தனானேன். தங்கள் ஸித்தாந்தத்தை ஏற்றுக்கொள்கிறேன். தங்களுக்கே தெரியும், ஞானத்தை ஏன் அப்படிக் கண்டனம் பண்ணினேன் என்று. பௌத்தத்துக்கு நேர்மாறுகச் சொன்னலே எடுபடுமென்றுதான் நிவ்ருத்தியை இப்படி அக்ஷேபித்து, அவர்கள் சீர்குலைத்திருந்த ப்ருவ்ருத்தி கர்மாக்களை நிலை நிறுத்த முழு மூச்சோடு பாடுபட்டேன். கடைசியாக ப்ராயச்சித்த கர்மா பண்ணிக்கொள்ளும்போது பலனுகப் பலதாதாவான ஈச்வரனே எதிரிலே ஸத்கதி தர வந்துவிட்டீர்கள்! தங்கள் வழியைக் கண்டித்தவனுக்கும் அதன் லக்ஷ்யத்தை அநுக்ரஹிக்க ஓடோடி வந்திருக்கிறீர்கள்! அந்த்ய காலத்தில் ஸ்மரிக்காதவனையும் கடைத்தேற்ற வந்திருக்கிறீர்கள்!

"தங்களுடைய அத்வைத வேதாந்தத்தை லோகம் பூரா தெரிந்து கொண்டு கடைத்தேறணும். எனக்கு அப்படி

Koviloor Digital Library

ப்ரசாரம் பண்ணும் பாக்யமில்லை; இன்னம் சிறிது நேரத்தில் உயிர் பிரிகிற ஸ்திதியிலிருக்கிறேன். தாங்கள் ஒன்று பண்ணணும்: என்னைக் காட்டிலும் தீவ்ர மீமாம்ஸகர் ஒருவர் இருக்கிறார். மண்டனமிச்ரர் என்று பேர். மாஹிஷ்மதி நகரத்தில் இருக்கிறார்......(மண்டன மிச்ரர் இருந்தது ஹஸ்தினாபுரத்தை அடுத்துள்ள வித்யாலயம் என்ற ஊர் என்றும் அபிப்ராயம் இருக்கிறது. மாஹிஷ்மதி எது என்பது பற்றியே மூன்று நாலு அபிப்ராயங்கள் இருக்கின்றன. மண்டனமிச்ரர் குமாரிலபட்டரின் சிஷ்யர், சிஷ்யராயிருந்த தோடு மச்சினரும் என்றெல்லாமும் அபிப்ராயங்கள் இருக்கின்றன. இதெல்லாம் எப்படியிருந்தாலும், குமாரில பட்டர் விஷயமாகச் சொன்னதுபோல, மண்டனமிச்ர ருடைய பூர்வகதை, ஆசார்யாளை அவர் ஸந்தித்தபோது நடந்த விஷயங்கள், அப்புறம் நடந்த கதை ஆகியவற்றை எல்லாப் புஸ்தகங்களும் அநேகமாக ஒரே மாதிரிதான் சொல்லியிருக்கின்றன...அவரைப் பற்றி ஆசார்யாளிடம் குமாரிலபட்டர் தொடர்ந்து சொன்னார்:)

"அவர் (மண்டன மிச்ரர்) நிரம்பச் செல்வமும் செல்வாக்கும் படைத்தவராயிருப்பதால் அந்தச் சீமை முழுக்க மீமாம்ஸா சாஸ்த்ரத்தை நன்றாகப் பரப்பியிருக் கிறார். பெரிய அநுஷ்டாதா. ஸோமயாகங்கள் உள்பட ஸதாகாலமும் பெரிசாக ஏதாவது கர்மாநுஷ்டானம் பண்ணிக் கொண்டிருப்பவர். அவரைத் தாங்கள் நிவ்ருத்தி மார்க்கத்திற்குத் திருப்பி விட்டீர்களானால், ரொம்பப் பேர் திரும்பிவிடுவார்கள். இது தாங்கள் அவச்யம் பண்ண வேண்டியது" என்று கேட்டுக்கொண்டார்.

அப்படியே செய்வதாக ஆசார்யாள் சொன்னார்.

குமாரிலபட்டர் உமிக் காந்தல் அக்னியில் தேஹ வியோகம் ஆகும்வரையில் ஆசார்யாள் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

ஆஞ்ஜநேயரின் வாலில் வைத்த நெருப்பு ஸீதையின் அநுக்ரஹத்தால் அவருக்குக் கொஞ்சங்கூடச் சுடாத மாதிரி,

Koviloor Digital Library

ஆசார்யாளின் ஸாந்நித்யத்தில் துஷாக்னி குமாரிலபட்டருக்குக் குளிர்ச்சியாகவே இருந்தது. சரீரம் மாத்ரம் ஜீர்ணமாயிற்று. அக்னி ஸ்வரூபமும், பரமேச்வரனின் நேத்ராக்னியிருந்து உண்டானவருமான ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் அவதாரம் அக்னி முகமாகவே பூர்த்தியாயிற்று!

தர்ம சாஸ்த்ரப்படி நடக்கவேண்டுமென்றே குமாரில பட்டர் சரீர பரித்யாகம் பண்ணினார். இப்படிப்பட்டவர்கள் போட்டு வைத்த அஸ்திவாரம் நம் மதத்துக்கு இருக்கிறது. ஆகையால், தற்போது எத்தனை கோளாறு இருந்தாலும் சாஸ்த்ராநுஷ்டானம் மறைந்தே போய்விடாது என்ற நம்பிக்கையோடு இருக்கலாம். மஹான்களுடைய ப்ராண த்யாகம் வீண்போகாது.

மண்டனரின் பண்டித நகரம்

மண்டனமிச்ரரைப் பார்ப்பதற்காக ஆசார்யாள் மாஹிஷ்மதீ நகரத்திற்கு வந்தார். 'ஐயோ, இந்தக் கர்ம மார்க்கக்காரர்கள் நித்யமான ஆனந்தம் என்ன என்பதில் புத்தியைச் செலுத்தாமல் அநித்யமான ஆனந்தத்தையே தரும் கர்மாவைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களே! மோக்ஷ மார்க்கத்தில் சேராமல் திருப்பித் திருப்பி ஜன்மா எடுக்கிறார்களே! (வாதச்) சண்டை போட்டாவது இவர்களை நல்ல வழிக்குத் திருப்பணும்' என்ற கருணையிலேயே ஆசார்யாள் அலையாய் அலைந்தது. கருணையினாலேயே சண்டை!

ஊருக்கு வெளியிலே ஆற்றங்கரையில் ஸ்த்ரீகள் தீர்த்தம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். "மண்டன மிச்ரரின் க்ருஹம் எங்கே இருக்கிறது?" என்று ஆசார்யாள் அவர்களைக் கேட்டார்.

அந்த ஊர் முழுதையும் எப்படி மண்டன மிச்ரர் பண்டித லோகமாக்கியிருந்தார், மீமாம்ஸை, ந்யாயம் முதலான சாஸ்த்ர விஷயங்கள் பாமரப் பெண்டுகளுக்கும், இன்னும்

Koviloor Digital Library

கிளி மாதிரியான பக்ஷிகளுக்குங்கூட அற்றுபடி ஆகிற விதத்தில் எப்படி ப்ரசாரம் பண்ணியிருந்தார் என்பதை 'சங்கர விஜய'ங்கள் இந்த இடத்தில் நயமாகச் சொல் கின்றன.

வழி கேட்ட ஆசார்யாளிடம் அந்தப் பெண்கள் ச்லோக ரூபமாகவே பதில் சொன்னார்களாம். சாஸ்த்ரக் கொள்கை களில் பலவற்றை ஒவ்வொன்றாக அந்த ச்லோகங்களில் முதல் பாதத்தில் சொல்லி, மற்ற மூன்று பாதங்களில் ஒரே போல, "எந்த வீட்டு வாசலில் உள்ள கூண்டுகளிலிருந்து பெண் கிளிகள் இந்தக் கொள்கையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கின்றனவோ, அதுதான் மண்டன மிச்ரரின் வீடு" என்று முடித்தார்கள். முதல் பாதத்தில் ஏதாவது ஒரு ஸித்தாந்தத்தின் பெயர் வரும். அப்புறம் மூன்று பாதங் களில் பொதுவாக,

> சுகாங்கநா யத்ர கிரம் வதந்தி
> த்வாரே து நீடாந்தர ஸங்நிருத்தா:
> அவேஹி தம் மண்டநமிச்ர தாம*

என்று வரும்.

'சுகாங்கனா' என்றால் பெண் கிளி. (ஆசார்யாளிடம் இச் சுலோகங்களைச்) சொல்பவர்களும் பெண்கள்; அவர்கள் மண்டன மிச்ரனின் வாசல் குறட்டில் சாஸ்த்ர விசாரம் செய் வதாகச் சொல்கிறவையும் பெண் கிளிகள். புருஷர்கள் அளவுக்கு ஸ்த்ரீகள் வித்யாப்யாஸம் பண்ணாத காலமான தால் அந்த ஊரின் பாண்டித்ய விசேஷம் தெரிவதற்காக இப்படிச் சொல்லியிருக்கிறது!

ப்ரமாணங்களைப் பற்றிய ரொம்பவும் சிக்கலான விஷயங் களைக்கூட அந்தக் கிளிகள் வாதம் பண்ணிக்கொண்டிருக்கும் என்று அந்த ஸ்த்ரீகள் சொன்னதாக 'மாதவீய சங்கர விஜய'த்தில் வருகிறது:

---

* 'ஆனந்தகிரீயம்' 56 வது ப்ரகரணம்

Koviloor Digital Library

ஸ்வத: ப்ரமாணம் பரத: ப்ரமாணம்
கீராங்கநா யத்ர ச ஸங்கிரந்தே |
த்வாரஸ்த நீடாந்தர ஸந்நிருத்தா
ஜாநீஹி தந்- மண்டந பண்டிதௌக : ||

(பின் மூன்று பாதங்களைப் பார்த்தால் 'ஆனந்த கிரீய'த்தை 'மாதவீயம்' எவ்வளவு நெருக்கமாக அநுஸரிக்கிறதென்பது தெரியும்.)

இது ப்ரமாணம், இது ப்ரமாணமில்லை என்று நிர்ணயிப்பது ப்ராமாண்ய வாதம் என்பது. ஸ்வத: ப்ரமாணம், பரத: ப்ரமாணம் என்று இரண்டு. ஒரு வஸ்துவை அது இன்னது என்று தெரிந்துகொள்கிறபோதே 'ஸரியாகத் தெரிந்துகொண்டு விட்டோம்' என்றும் தெரிந்துகொள்கிறோம்; சில ஸமயங்களில், 'இல்லை, தப்பாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம்' என்றும் தெரிந்துகொள்கிறோம்— உதாரணமாக, தகர டப்பா மேல் பளீரென்று வெய்யில் விழுந்து பார்க்கும்போது அது பளபளப்பதில் வெள்ளிப் பாத்ரமாகத் தெரிந்தாலும், 'இல்லை, நம்மாத்துத் தகர டப்பாவை அலம்பி வெயிலில் வைத்திருப்பதுதானே?' என்றும் தெரிந்துகொள்கிறோம். வெள்ளியாக அது மினுக்குவதாக அறிவுக்குத் தெரிந்தாலும், தெரிகிறபோதே இந்த அறிவு ப்ரமாணமில்லை, அப்ராமணந்தான் என்றும் தெரிகிறது! இப்படியே ஒரு வெள்ளிப் பாத்ரத்தையே வெள்ளியாக உள்ளபடித் தெரிந்து கொள்ளும்போது, அல்லது தகர டப்பாவைத் தகரம் என்றே ஸரியாகத் தெரிந்துகொள்ளும்போது நமக்குத் தெரிவது ப்ரமாணம் தான் என்றும் தெரிகிறது. இப்படி ஒன்று தெரியும்போதே அது நிஜமான (ப்ரமாணமான) அல்லது பொய்யான (அப்ரமாணமான) ஞானம் என்றும் தெரிகிறதே, இது நம் அறிவிலிருந்தே—'ஸப்ஜெக்டி'வாக, 'ஸ்வதா'வாக— ஏற்படுவதா, அதாவது ஸ்வத:ப்ரமாணமா, அல்லது வெளி வஸ்துவிலிருந்து—'ஆப்ஜெக்டி'வாக, 'பரத'ஸாக—ஏற்படுகிறதா, அதாவது பரத: ப்ரமாணமா என்பது பற்றி

Koviloor Digital Library

ந்யாயம், மீமாம்ஸை முதலான தர்சனங்களில் வித்யாஸமாக அபிப்ராயங்கள் உள்ளன. ந்யாய சாஸ்த்ரத்தின்படி ப்ரமாண ஞானம், அப்ரமாண ஞானம் இரண்டுமே பரத: ப்ரமாணம்தான். மீமாம்ஸகர்களோ 'நாம் தெரிந்து கொள்வது ஸரியானது என்கிற ப்ரமாண ஞானமும் நம் அறிவிலிருந்தே உண்டாவதுதான்; அதாவது ஸ்வத: ப்ரமாணம்தான். ஆனால் நாம் தப்பாகத் தெரிந்துகொள்கிறோம் என்கிற அப்ரமாண ஞானம் வெளி வஸ்துவைப் பொறுத்தே ஏற்படுவது; அதாவது பரத: ப்ரமாணம்' என்பார்கள்.*

இம்மாதிரி ஸமாசாரங்களை மண்டன மிச்ரருடைய அகத்துக் கிளிகள்கூட டிஸ்கஸ் பண்ணிக்கொண்டிருக்குமாம்.

இந்த அடையாளத்தை வைத்துக்கொண்டு ஆசார்யாள் அந்த வீட்டைத் தேடிக்கொண்டு போய்க் கண்டுபிடித்தார்.

மண்டனர் - ஸரஸவாணி தம்பதியை வென்றது

ஒரே கார்யக்காரர் வீட்டுக்கு ஒரே சும்மா-நிலைக்காரர் போய்ச் சேர்ந்தார்! மண்டன மிச்ரர் குமாரில பட்டரைப்போல மாற்றுக் கக்ஷிக்காரரை மதித்து வரவேற்கும் குணமுள்ளவராக இல்லை. வேத கர்மாக்களை விட்டுவிட்டு 'ஞானம்' என்று சொல்லிக்கொண்டிருக்கும் ஸந்நியாஸிகள் என்றால் அவருக்குக் கட்டோடு பிடிக்காது. அவர்களைப் பார்த்தாலே பாபம் என்று நினைத்தார்! அந்த வீட்டுக்கு அழையா விருந்தாளியாக ஆசார்யாள் போய்ச் சேர்ந்தார், 'எத்தனை விரோத பாவம் கொண்டவரானாலும் நாம் ஸத்ய தத்வத்தை அவர்களுக்கு எடுத்துச் சொல்லாமலிருக்கப் படாது' என்ற கருணையிலே!

---

* இவ்விஷயம் மேலும் விளக்கமாக "தெய்வத்தின் குரல்"—இரண்டாம் பகுதியில் "நியாயம்: யுக்தி சாஸ்திரம்" என்ற உரையில் 'சில கதைகளும் வாதங்களும்' என்ற பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

அன்றைக்குப் பார்த்து மண்டன மிச்ரர் வீட்டில் ச்ராத்தம்! இப்படியொரு பித்ரு கர்மாவில் ஸந்நியாஸியைப் பார்த்தால் இரட்டிப்புப் பாபம் என்று அவர் நினைத்திருப்பார்!

'ச்ராத்தம்' என்றால் 'ச்ரத்தையோடு செய்யப்படுவது' என்று அர்த்தம். நிஜமாகவே அப்படி உள்ளே மண்டன மிச்ரர் பண்ணிக்கொண்டிருந்தார். அநாசார வாடை எதுவும் உள்ளே வரக்கூடாதென்று வாசற் கதவைச் சாத்தியிருந்தது.

ஆசார்யாள் எப்படியும் அவருக்கு அநுக்ரஹித்தே தீருவது என்று வந்திருந்தார். அதனால் ஒரு வேடிக்கையான விதத்தில் உள்ளே போய்விட்டாரென்று கர்ண பரம்பரையாகக் கதை இருக்கிறது:

அக்காலத்தில் சாணார்களுக்கு ஒரு வித்தை தெரியுமாம். தென்ன மரத்தின் அடி பாகத்தில் ஒரு மந்த்ரம் சொல்லி அடிப்பார்களாம். உடனே அது துவண்டு, வளைந்து, உச்சி பூமியைத் தொடுமாம். அந்த உச்சியிலே சாணான் ஏறிக் கொள்வான். அங்கே காய் பறிப்பதோ, கள் இறக்குவதோ தன் கார்யத்தைப் பண்ணிக்கொள்வான். அப்புறம் எந்தப் பக்கம் இறங்க நினைக்கிறானோ அப்படி அந்த மரம் திரும்பி, வளைந்து, உச்சியால் பூமியைத் தொடும்படி மந்த்ரம் போடுவானாம். மரம் அப்படியே பண்ணியவுடன் ஸுலபமாக இறங்கிவிடுவான்.

மண்டன மிச்ரரின் அகத்துக்கு வெளியில் ஒரு தென்ன மரம் இருப்பதை ஆசார்யாள் பார்த்தார். அந்தப் பக்கமாக ஒரு சாணான் போவதையும் பார்த்தாள். அவனிடம் போய், "உன் வித்தையை எனக்குச் சொல்லிக்கொடு" என்று கேட்டுக்கொண்டார். வித்யா ஸ்வீகரணத்தில் பெரியவன்-சின்னவன் என்ற பேதம் கூடாது என்ற சாஸ்த்ரக் கருத்தை ஏற்றுக்கொள்ளும் எளிமை ஆசார்யாளுக்கு இருந்தது. அப்படித்தான் ஸர்வஜ்ஞ

Koviloor Digital Library

ராஞர். அவனும் சொல்லிக்கொடுத்தான். அப்புறம் ஆசார்யாள் அந்த வித்தையால் தென்ன மரத்தை வளைத்து ஏறிக்கொண்டு, அது வீட்டு உள்பக்கம் திரும்பி, முற்றத்தில் தம்மை இறக்கி விடும்படிப் பண்ணிஞர்.

இது கர்ணபரம்பரைக் கதை. சங்கர விஜயங்களில் யோக சக்தியால் உள்ளே போஞர் என்று இருக்கும்.

இவர் உள்ளே போனபோது ப்ராம்மணர்களை போஜனத்துக்கு அமர்த்துகிற கட்டம். அந்த ப்ராம்மணர்கள் யாரென்ருல் மஹா பெரியவர்களான இரண்டு பேர். ஒருவர் மீமாம்ஸா சாஸ்த்ரத்தின் ஆதாரமான ஸூத்ரத்தைச் செய்த ஜைமினி மஹர்ஷி. மற்றவர் ஸாக்ஷாத் வ்யாஸாசார்யாள். மண்டன மிச்ரரின் அநுஷ்டான ச்ரத்தையை மதித்து அவர்களே கண்ணுக்குத் தெரியும்படி ப்ராம்மணார்த்தத்துக்கு வந்திருந்தார்கள்.

ஸர்ப்பம் எதுவும் அண்ட முடியாமல் பரீக்ஷித்து எத்தனையோ பந்தோபஸ்துப் பண்ணிக் கொண்டிருந்தும் தக்ஷகன் என்கிற நாகராஜன் எலுமிச்சம் பழத்தில் ஒளிந்துகொண்டு அவனிடம் போஞனல்லவா? அப்படி மண்டன மிச்ரர் மஹர்ஷிகளை வைத்துக்கொண்டு பந்தோபஸ்தாக பித்ரு கார்யம் பண்ணியும், அவர் கண்டாலே கரித்த இந்த ஸந்நியாஸி மூடின கதவை மீறி அவரிடம் போய்ச் சேர்ந்தார்! தக்ஷகன் விஷத்தைச் செலுத்தப் போஞன். இவர் ஞானம்ருதத்தைச் செலுத்துவதற்காகப் போஞர்!

"இந்த ஸமயத்தில் திடீரென்று ஸந்நியாஸிப் பயல் வந்து குதித்திருக்கிருனே!' என்று மண்டனமிச்ரருக்கு மஹா கோபம் வந்தது. "எங்கேயிருந்து, முண்டி?" என்று சத்தம் போட்டார். முண்டி என்ருல் மொட்டைத் தலைக்காரன். சௌள ஸம்ஸ்காரம் பண்ணி வைக்கிற குடுமியை ஸந்நியாஸி அறுத்துப்போடுவதால் மீமாம்ஸகர்கள் அவனை 'முண்டி' என்று கரித்துக் கொட்டுவார்கள்.

Koviloor Digital Library

'எங்கேயிருந்து வந்து தொலைஞ்சே?' என்கிற அர்த்தத்தில் இவர், 'எங்கேயிருந்து, முண்டி?' என்று கேட்டார்.

ஆசார்யாள் வேண்டுமென்றே அதற்கு வேடிக்கையாக அர்த்தம் பண்ணிக்கொண்டு பதில் சொன்னார். சரீரத்தில் எங்கேயிருந்து ஆரம்பித்துக் கேச விஸர்ஜனம் என்று அவர் கேட்டதாக வைத்துக்கொண்டு, "கழுத்திலிருந்து முண்டி!" என்றார். ஸந்நியாஸிகள் கழுத்துக்குக் கீழ் முண்டனம் செய்துகொள்ளக் கூடாது.

இதே போல மண்டனமிச்ரர் மேலே மேலே கேட்ட கேள்விகளுக்கும் ஆசார்யாள் வேறுவிதமாக அர்த்தம் பண்ணிக்கொண்ட மாதிரியே வேடிக்கையாக 'டக் டக்' கென்று பதில் சொல்லிக்கொண்டு போனதாகப் புஸ்தகங்களிலிருக்கிறது. ச்ருதி வாக்யங்களைத் தாங்கள்தான் ஸரியாகப் புரிந்துகொண்டு எப்படி அர்த்தம் செய்ய வேண்டுமோ அப்படிப் பிரித்து, சேர்த்துப் பண்ணுவதாக மீமாம்ஸகர்களுக்குத் தற்பெருமை உண்டு. அப்படிப்பட்ட மீமாம்ஸகருடைய வார்த்தையிலேயே இரண்டு அர்த்தம் கண்டு பிடித்து ஆசார்யாள் பதில் சொல்லிக்கொண்டு போனார்!

மண்டனமிச்ரருக்கு அவமானமாகி, ஆத்திரம் தலைக்கேறியது. ஆனால் ச்ராத்த காலத்தில் ஏதும் அஸம்பாவிதம் நேராமல் ஜைமினியும் வ்யாஸரும் அவரை ஸமாதானப் படுத்தினார்கள். ஆசார்யாளின் பெருமை தெரிந்தவர்களானதால், "ஸந்நியாஸியை விஷ்ணு இலையில் அமர்த்துவது சாஸ்த்ர ஸம்மதமேயானது. ஆகையால் இவரை அப்படி உட்காரவைத்து பிக்ஷை பண்ணு. அதுதான் யுக்தம்" என்று சொன்னார்கள்.

ப்ராம்மணார்த்தக்காரர்கள் யாரானாலுமே அவர்கள் சொல்வதை மீறகூடாதென்று சாஸ்த்ரம். இவர்களோ மஹா பெரியவர்கள். என்ன பண்ணுவது? வேறே வழியில்லாமல் மண்டன மிச்ரர் வேண்டா வெறுப்பாக ஆசார்

Koviloor Digital Library

யாளுக்கு நமஸ்காரம் பண்ணி, "பிக்ஷைக்கு உட்காரணும்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆசார்யாள், "நான் அன்ன பிக்ஷைக்கு வரவில்லை. வாத பிக்ஷைக்கு வந்திருக்கிறேன். குமாரிலபட்டர் சொல்லி வந்திருக்கிறேன்" என்றார்.

பட்டர் பேரைச் சொன்னதும் மண்டனமிச்ரரின் த்வேஷ பாவம் மாறிற்று. "முதலில் இந்த பிக்ஷையை ஏற்றுக்கொள்ளணும். அப்புறம் வாதம் செய்வோம்!" என்றார்.

நல்லபடியாக திவஸம் முடிந்தது. வ்யாஸரும் ஜைமினியும் வந்தபடியே போனார்கள்.

அப்புறம் ஆசார்யாளும் மண்டனமிச்ரரும் வாதம் செய்ய ஆரம்பித்தார்கள்.

தீர்ப்புச் சொல்ல, மத்யஸ்தமாக யாரை வைத்துக் கொண்டார்களென்றால், மண்டனமிச்ரரின் பத்னியான ஸரஸவாணியைத்தான்.

'யாரோ ஊர்ப் பெண்டுகளையும் கிளிகளையுங்கூட தேர்ந்த சாஸ்த்ர ஞானமுள்ளவர்களாக இவர் ஆக்கியிருக்கிறாரென்றால் இவருடைய ஸொந்தப் பத்னி மஹா பண்டிதையாகத்தானே இருக்கவேண்டும்?' என்பதால் ஆசார்யாள் அவளுடைய மத்யஸ்தத்துக்கு ஒப்புக்கொண்டிருப்பார் என்று சொல்லலாம். இது மாநுஷமாகச் சொல்வது. அவதாரம் என்று பார்த்தால் ஆசார்யாளுக்கு மண்டன மிச்ரர் ப்ரம்மாவே என்றும், ஸரஸவாணி வித்யாதி தேவதையான சாரதையே என்றும் தெரிந்திருக்கவேண்டும். ஸரஸ்வதியின் தீர்ப்புக்கு யார்தான் கட்டுப்பட மாட்டார்கள்?

ஸரஸவாணிக்கு ஒரு தர்ம ஸங்கடம். இரண்டு பேரில் ஒருத்தர் தோற்றுப் போனதாக அவள் தீர்ப்புக் கொடுக்க வேண்டிவரும். 'பர்த்தாவை அப்படிச் சொல்வது

Koviloor Digital Library

முறையாயில்லை; ஒரு ஸந்நியாஸ ச்ரேஷ்டரைச் சொல்வதும் நன்றாயில்லையே!' என்று பார்த்தாள். 'நம் வாயால் ஒன்றும் சொல்லவேண்டாம்' என்று நினைத்து ஒரு யுக்தி செய்தாள். இரண்டு பேருக்கும் புஷ்ப ஹாரங்களை அர்ப்பணம் பண்ணிப் போட்டுக்கொள்ளச் சொல்லி, "யாருடைய ஹாரம் வாடாமலே இருக்கிறதோ அவருக்கே ஜயம்" என்று சொன்னாள்.

வாதம் ஆரம்பிக்குமுன் இரண்டு பேரும் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்கள். ஆசார்யாள் ஜயித்தால் மண்டன மிச்ரர் க்ருஹஸ்தாச்ரமத்தையும், அக்னி ஹோத்ராதி அநுஷ்டானங்களையும் விட்டுவிட்டு ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளவேண்டும்; மண்டனமிச்ரர் ஜயித்தால் ஆசார்யாள் ஸந்நியாஸத்தை விட்டுவிட்டு, க்ருஹஸ்தராகிக் கர்மா நுஷ்டானமெல்லாம் பண்ணவேண்டும், என்று. சுத்த ப்ரஹ்மசர்ய மூர்த்தியான ஆசார்யாள் ஒரு நாளும் ஒப்புக்காகக்கூட 'நான் க்ருஹஸ்தனாகிறேன்' என்று சொல்லியிருக்கமாட்டார் என்பதால் இன்னொரு தினுஸாக வும் சொல்வதுண்டு. அதாவது, தாம் தோற்றுப்போனால் 'மரணாந்த ப்ராயச்சித்தம்' பண்ணிக்கொள்வதாகச் சொன்னார் என்பார்கள். ப்ராணன் போகும்வரை ஆஹாரத்தைத் தொடுவதில்லை, ஜல பானம் பண்ணுவதில்லை என்று உபவாஸமிருப்பதுதான் 'மரணாந்த ப்ராயச் சித்தம்'. தம்முடைய ஸந்நியாஸ சரீரத்தைக் கொண்டு குடும்ப வாழ்க்கை வாழ்வதைவிட அதை த்யாகமே பண்ணத்தான் ஆசார்யாள் நினைப்பார் என்பதால் இப்படிச் சொல்வது.

வாதம் ஆரம்பித்தது. முன்னே வ்யாஸருக்கும் ஆசார்யாளுக்கும் நடந்த மாதிரிதான் இதுவும் இரண்டு பண்டித பர்வதங்கள் ஒருவருக்கொருவர் சளைக்காமல் மோதிக் கொள்வதாயிருந்தது. இருபத்தியோரு நாள் இப்படி வாதம் நடந்தது.

Koviloor Digital Library

கர்மா, பக்திகளால் முடிவாக ஞானத்தையே அடைய வேண்டுமென்று ஆசார்யாள் ச்ருதி, யுக்தி, அநுபவங்களால் நன்றாக எடுத்துக் காட்டினார். பக்தியின் அன்பு, அப்புறம் அன்பும் நிறைந்து அடங்கிப் போகிற அத்வைத ஞானத்தின் சாந்தம் இவற்றால்தான் ஜீவனுக்குப் பூர்ணத்வம், இதுவே வேதங்களின் பரம தாத்பர்யம் என்று காட்டினார். அந்த அன்புக்கும், சாந்திக்கும் இருப்பிடமாக உள்ளவனே ஸந்நியாஸி; அவன் கர்மத்தை விட்டவனென்பதால் நிந்திக்கத் தக்கவனல்ல என்று காட்டினார்.

'அக்னிஹோத்ர அக்னியை அணைத்தவன் வீரஹத்தி தோஷத்திற்கு ஆளாகிறான்' என்ற தைத்திரீய ப்ராஹ்மண வசனம் போலுள்ள வேத வாக்யங்களைக்கொண்டு கர்மாவை விட்ட ஸந்நியாஸியை தூஷிப்பது ஸரியேயில்லை. அந்த வாக்யங்களெல்லாம் ப்ரவிருத்திக்கே பக்குவமாயிருப்பவனை உத்தேசித்தவைதான். அப்படிப்பட்டவன் கர்மாவைவிட்டு இஷ்டப்படிக் கீழே போய் வீணாவதைத்தான் தடுத்திருக்கிறது. கர்மாவைவிட்டு மேலே நிவ்ருத்திக்குப் போகிறவனோ வெளி அக்னியைத் தன்னுடைய ஞானாக்னியில்தான் ஆரோபித்துக்கொண்டு (ப்ரதிஷ்டை செய்து கொண்டு) அதை மேலும் ஜ்வலிக்கச் செய்கிறானேயொழிய அணைத்து விடவில்லை. ஸம்ஸார வ்ருக்ஷத்தில் பழுத்த பழமாகிக் காம்பறுந்து விழும் கனியாக இருப்பவன் அவன். அரும்பும், பூவும், காயுமாக உள்ளமட்டும் ஸதா கார்யம் பண்ணிக் கொண்டு, ஜலத்தை உறிஞ்சிக்கொண்டு, ஸூர்ய ரச்மியை க்ரஹித்துக்கொண்டு, இதழ் இதழாக, கலர் கலராக ஆகிக் கொண்டு, ஸைஸிலும் தினந்தினம் பெரிசாகிக்கொண்டு, ருசியிலும் கசப்பு-துவர்ப்பு-புளிப்பு என்று ருசி மாறிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். அப்போது ஸம்ஸார வ்ருக்ஷத்திலிருந்து அறுக்கப் பார்த்தால் ஒரே அழுகையாய்த் தான் இருக்கும். காம்பிலிருந்து ஒரேயடியாக ஜலம் கொட்டும். ஆனால் அப்புறம் இப்படிக் கார்யம் பண்ணிப் பண்ணியே கசப்பு-துவர்ப்பு-புளிப்பெல்லாம் போய் ஒரே

Koviloor Digital Library

மதுரமாகிக் கனிந்துவிட்ட பிறகு பழத்தை யாராலும் வ்ருக்ஷத்தில் இருத்தி வைக்க முடியாது. துளிக்கூட ஜலம் சொட்டாமல் காம்பு இற்று அது அப்படியே விழுந்துவிடும். நிவ்ருத்திதான்! அப்புறம் அதற்கு ஒரு கார்யமுமில்லை. அது மாதிரி, ஞான பக்குவம் பெறும் வரையில் சாஸ்த்ர ப்ரகாரம் ஸதா கார்யம் பண்ணிக் கசப்பான, துவர்ப்பான, புளிப்பான அநுபவங்களையெல்லாம் நன்றாக அநுபவித்து, நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போகவேண்டியதுதான். ஆனாலும் ப்ரேமையின் மாதுர்யத்தில் நிறைந்து எல்லாம் ஒன்றாகப் பார்க்கிற ஞானப் பழமானபின் ஸகல கார்யத்தையும் விட வேண்டியதேயாகும். உள்ளேயிருக்கிற அத்வைத ஞானமே வெளியில் ஸகல ப்ராணிகளையும் ஒன்றாகப் பார்த்து ஸமமாகப் பெருகும் ப்ரேமையாக ஆகிவிட, அப்படியே சும்மாயிருந்து கொண்டிருக்க வேண்டியதுதான். 'எல்லா ப்ராணிக்கும் நான் அபய ஸ்தானமாக இருப்பேன்' என்று ப்ரைஷோச்சாரணம் பண்ணி ஸந்நியாஸியாகிறவன் இந்த அன்புக்கும் சாந்திக்குமே இருப்பிடம். அதற்கு ஏறுவதற்குத் தான் இத்தனை ஸ்வதர்ம கர்மாக்களும். இவ்விஷயங்களை ஆசார்யாள் எடுத்துச் சொன்னார்.

'தம்முடைய ஸித்தாந்தம் ஸரியில்லை. ஆசார்யாள் சொல்வதுதான் ஸரி. ஜயம் அவருக்குத்தான்' என்று மண்டனமிச்ரர் புரிந்து கொண்டார். தோற்றுப் போனதற்காக இல்லாமல் மனஸாரவே ஞான மார்க்கத்தை ஏற்றுக் கொண்டார்.

ஆனாலும் ஸரஸவாணியை மத்யஸ்தமாக வைத்துவிட்டதால் அவள் முடிவு சொல்ல விடுவதுதானே மரியாதை? அதனால் சும்மாயிருந்தார்.

அவளும் ஹாரத்தைப் போட்டு அது முடிவு சொல்லட்டும் என்றுதானே விட்டிருந்தாள்? இப்போது என்ன ஆயிற்றென்றால் மண்டனமிச்ரரின் ஹாரம் வாடிப் போயிற்று!

Koviloor Digital Library

பதி ஸந்நியாஸியாகிருரென்ருல் ஒரு பத்னிக்கு எப்படி யிருக்கும்?

அதனுல், பத்னி என்பவள் பதியின் அங்கமே ஆகையால் தன்னையும் ஆசார்யாள் ஜயித்தாலே ஜயம் பெற்றதாகும் என்று சொன்னுள். இது நம் மநுஷ மட்டத்தில் தெரிகிற விஷயம். உள்ளே தாத்பர்யம் என்னவென்ருல் ஆசார்யாள் ஸர்வஜ்ஞர்தான் என்பதை ஸாக்ஷாத் ஸரஸ்வதியுடனேயே அவர் வாதம் செய்து ஜயிப்பதன் மூலம் காட்டவேண்டும் என்பதே! வஸிஷ்டர் வாயால் ப்ரம்மரிஷி என்பதுபோல் ஸரஸ்வதி வாயால் ஆசார்யாள் ஸர்வஜ்ஞர் என்று தீர்ப்புப் பெறுவதற்குத்தான் ஸரஸவாணியின் அவதாரமே ஏற்பட்டது.

மஹா பண்டிதையாக விளங்கிய ஸரஸவாணியுடனும் ஆசார்யாள் வாதம் செய்து ஜயித்தார்.

ஸரஸ்வதி தன்னுடைய ஸ்வய ரூபத்திலேயே வந்து பிற்பாடு ஆசார்யாள் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்த போதுதான் வாதம் செய்து முடிவில் அவர் ஜயித்ததாக ப்ரகடனம் செய்தாள் என்றும் கதை இருக்கிறது.

பதி தோற்றுப் போய்விட்டார் என்று எப்படி ஒரு பத்னி சொல்ல முடியும்? இந்த இடத்தில் அறிவு தேவதையின் அவதாரமான ஸரஸவாணி எப்படி ஸமாளித்தாள் என்பது மனஸைத் தொடுகிற மாதிரி இருக்கிறது. நேரே சொல்லாமல் குறிப்பால் உணர்த்திச் சொன்னுள். என்ன செய்தாளென்ருல் இரண்டு பேரையும் நமஸ்காரம் பண்ணி, "இரண்டு பேரும் பிக்ஷைக்கு வாருங்கள்" என்று சொன்னுள்.

க்ருஹஸ்தனை "போஜனத்திற்கு வாருங்கள்" என்ருே, அல்லது சாஸ்த்ரோக்தமாகச் சொல்வதானுல் "வைச்வ தேவத்திற்கு வாருங்கள்" என்ருேதான் சொல்லவேண்டும். ஸந்நியாஸிக்குத்தான் "பிக்ஷை" பண்ணுவது. இரண்டு பேரையுமே "பிக்ஷைக்கு வாருங்கள்" என்று சொல்லி

Koviloor Digital Library

நமஸ்காரம் பண்ணியதிலேயே மண்டன மிச்ரர் தோற்றுப் போயாச்சு, அதனால் நிபந்தனைப்படி ஆசார்யாளிடம் ஸந்நியாஸம் வாங்கிக்கொள்ள வேண்டியதுதான் என்பதை ஸரஸவாணி நாஸூக்காகத் தெரிவித்து விட்டாள்.

பர்த்தா ஸந்நியாஸியாகி வீட்டை விட்டுப் போகிறார் என்பது எந்தப் பத்னிக்கும் இருக்கக்கூடியதைவிட அவளுடைய மனஸுக்கு ரொம்ப க்லேசமான விஷயமாகத் தானிருந்தது. இவளுடைய புத்திக்கு ஈடு கொடுத்து ஸம்பாஷித்துக் கொண்டிருந்த மஹா பண்டிதர், அவர் ஸதாவும் பண்ணும் யாகாதிகளில் இவள்தான் யஜ்ஞ பத்னியாகச் சேர்ந்து சேர்ந்து எல்லாம் பண்ணியிருக்கிறாள்—அப்படிப் பட்டவர் பிரிந்து போகிறாரென்றால் எப்படியிருக்கும்? ஆனாலும் ஸத்யம்தான் பெரிசு என்று self-interestஐ sacrifice பண்ணி (தன்னலனை த்யாகம் பண்ணி)த் தீர்ப்புக் கொடுத்தாள். "ஹாரந்தானே வாடித் தீர்ப்புப் பண்ணிற்று?" என்றால், அந்த ஹாரத்தில்தான் இவள் தன்னுடைய சித்தத்தை ஆரோபணம் பண்ணியிருந்தாள் (உறைவித்திருந்தாள்). இல்லாவிட்டால் எங்கேயாவது பூமாலை 21 நாள் வாடாமலிருக்குமா?

ஆசார்ய மஹிமை லோகத்தில் நன்றாகத் தெரியவே தான் அவள் தானும் வாதம் செய்து தோற்றுப்போனது. பல தேவர்கள் அப்போது அவதாரம் செய்திருந்தாலும் இவள் விஷயமாகத்தான் லோகத்திற்கே ஓரளவு நன்றாகத் தெரியும்—ஸரஸ்வதியவதாரம் என்று. 'உபய பாரதி' என்றே அவளை லோகம் கொண்டாடிக்கொண்டிருந்தது. அதனால் அப்பேர்ப்பட்டவள் ஆசார்யாளின் வாதத்திற்கே ஜயம் என்று சொன்னால் அதற்கு மதிப்பு ஜாஸ்தி தானே?

பர்த்தாவுக்கு ஸந்நியாஸம் கொடுக்க வருகிறவரை பத்னி அடித்து விரட்டத்தான் செய்வாள்! இவளானால்

Koviloor Digital Library

நமஸ்காரம் பண்ணி, பக்தியோடு பிக்ஷைக்குக் கூப்பிட்டாள்!

நம் தேசத்தின் உத்தம ஸ்த்ரீகளில் ஸரஸவாணிக்கு ஒரு முக்யமான இடமுண்டு...

மண்டனமிச்ரர் ஆசார்யாளிடம் ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு சிஷ்யரானார். அதிலிருந்து அவருக்கு ஸுரேச்வரர் என்று பெயர் ஏற்பட்டது.

"பதி இல்லாமல் இங்கே என்ன வேலை?" என்று ஸரஸ வாணி ஸரஸ்வதி ரூபத்தை எடுத்துக்கொண்டு ப்ரம்ம லோகத்துக்குப் புறப்பட்டாள்.

அப்பொழுது ஆசார்யாள், "நீ இப்படிப் போகப்படாது. உன் ஸாந்நித்யம் லோகத்துக்கு எக்காலமும் இருந்து நல்லறிவைக் கொடுத்துக் கொண்டிருக்கணும்" என்று சொல்லி வனதுர்கா மந்த்ரத்தால் அவளைக் கட்டினார்.

அவளே அன்புக்கும், ந்யாயத்துக்கும் கட்டுப்பட்டவள் தான். ஆனாலும் மந்த்ர மஹிமை தெரிவதற்காக இப்படி யொரு நாடகம்! பல தினுஸில் லோகத்துக்குப் பல உண்மை களைத் தெரிவிப்பதாகவே ஸீன், ஸீனாக நிறைய நடிப்பது தான் அவதார நாடகம்!

*அதற்கு ஸரஸ்வதி, "ஸரி, ஆனால் இந்த ஊரிலேயே நான் இருக்கணுமென்று ப்ரதிஷ்டை பண்ணிவிடாதீர்கள். நீங்கள் பாட்டுக்கு தேச ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டே போங்கள். நான் பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறேன். திரும்பிப் பார்க்கப்படாது. எங்கே பார்க்கும்படியாக ஏற்பட்டுவிடுமோ அங்கே நான் நித்யவாஸமாக இருந்து விடுகிறேன். அங்கே என்னைக் கோவில் கட்டி வைத்து, லோக க்ஷேமார்த்தமாக சாரதா பீடம் என்று ப்ரதிஷ்டை

---

* மேலே வரும் கதாபாகத்தைச் சிறிது மாறுதலாக ஸ்ரீசரணர்கள் பிறிதொரு சமயம் உபந்யஸித்தபடி "தெய்வத்தின் குரல்" - இரண்டாம் பகுதியின் இறுதி உரையான "முதலுக்கு முதல்; முடிவுக்கு முடிவு" என்பதில் காணலாம்.

Koviloor Digital Library

பண்ணிவிடுங்கள்" என்ருள். நாடகத்தில் இப்படி இன்னொரு ஸீன்!

ஆசார்யாள், ஸுரேச்வராசார்யாளோடு புறப் பட்டார். ஸரஸ்வதி பின்னலேயே போய்க் கொண்டிருந் தாள். அவருடைய சிலம்பின் 'ஜல் ஜல்'லிலிருந்தே அவள் பின்னல் வருவதை ஆசார்யாள் தெரிந்துகொண்டு திரும்பிப் பார்க்காமலே போனர்.

ச்ருங்கேரிச் சிறப்பு

ரொம்ப தூரம் இப்படித் தெற்காக ஸஞ்சாரம் பண்ணி துங்கபத்ரா தீரத்தில் ச்ருங்கேரிக்கு வந்தார்கள். அங்கே நிறை கர்ப்பிணியாயிருந்த ஒரு தவளைக்கு வெயில் படாமல் ஒரு பாம்பு குடை பிடித்துக் கொண்டிருப்பதை ஆசார்யாள் பார்த்தார். 'தவளையைக் கண்டால் நப்புக் கொட்டிக் கொண்டு பிடித்துத் தின்னுகிற பாம்பு இப்படி ப்ரியமாக ரக்ஷிக்கிறதே? த்வேஷம் தெரியாத இந்த ப்ரதேசத்தில் சாரதாம்பாள் கோவில் கொண்டால் எத்தனை நன்ருயிருக் கும்?' என்று நினைத்தபடி ஆசார்யாள் நதிக்கரையில் போய்க் கொண்டிருந்தார்.

சட்டென்று 'ஜல் ஜல்'லும் நின்றது. 'என்ன ஆச்சு?' என்று திரும்பிப் பார்த்தார்.

என்ன ஆயிருந்ததென்ருல் ஆற்றங்கரை மணலில் பாதம் புதைந்து, புதைந்து அவள் நடந்து வந்ததில்தான் சிலம்பு ஓசை பண்ணவில்லை!

இவர் திரும்பிப் பார்த்ததால் அவள் நின்றுவிட்டாள்.

'எல்லாம் நல்லதற்கே! நாம் நினைத்ததற்கே அவளுடைய நிபந்தனையும் ஸாதகமாயிடுத்து!' என்று ஆசார்யாள் ஸந்தோஷித்து அங்கேயே சாரதாம்பாளை பீடம் ப்ரதிஷ்டை பண்ணி அமர்த்திவிட்டார்.

அந்த இடம் அவருக்கு ரொம்பப் பிடித்துவிட்டதால் அங்கேயே மடம் ஸ்தாபித்து பஹுகாலம் வாஸம் பண்ணி அவளை உபாஸித்துக்கொண்டிருந்தார். புஸ்தகங்கள்

Koviloor Digital Library

எல்லாம் முதல் பதினறு வயஸில் எழுதி முடித்த ஆசார்யாள், அப்புறம் இரண்டாம் பதினறு வயஸில் தான்—பதினறே வருஷத்தில்தான்—ஆஸேது ஹிமாசலம் மூன்று தரம் தேசம் முழுக்க ஸஞ்சாரம் செய்து, அநேக கார்யங்கள் பண்ணினது. இந்தக் குறைந்த காலத்துக் குள்ளேயே அவர் 'மாக்ஸிமம்' காலம் தங்கியிருந்தது ச்ருங்கேரியில்தான் என்று 'சங்கர விஜய'ங்களிலிருந்து தெரி கிறது.

ச்ருங்கேரி மடத்துக்குத் தனி விசேஷம் என்னவென்ருல்: மற்ற மடங்கள் ஆசார்யாள் உத்தேசித்து ஸ்தாபனம் பண்ணியவை. 'சார்தாம்' என்று பாரத தேசத்தின் நாலு கோடிகளில் நாலு புராதன க்ஷேத்ரங்கள் உண்டு—வடக்கே பதரிநாதம், மேற்கே த்வாரகாநாதம் (அல்லது ஸோம நாதம்), கிழக்கே ஜகந்நாதம் (புரி), தெற்கே ராம நாதம் (ராமேச்வரம்) என்று. இவற்றில் பதரி, த்வாரகா, புரி முதலியவற்றில் மூன்று ப்ரதான மடங்களை ஸ்தாபித்தார். தெற்கே மட்டும் ராமேச்வரத்தில் மடமில்லை. இவர் 'ப்ளான்' போட விடாமல், வித்யாதிதேவதையே ச்ருங்கேரியில் மடம் ஏற்படும்படியாகப் பண்ணிவிட்டாள்! அந்த மடத்துக்கெனக் குறிப்பாக ஏற்பட்ட க்ஷேத்ரம் 'ராம க்ஷேத்ரம்' என்று வைத்திருக்கிருர். அது ராமேச்வரம் என்றே நடைமுறையில் இருக்கிறது.

அப்புறம், காஞ்சிபுரம் லோகத்துக்கே நாபி என்ற மத்ய ஸ்தானமாக இருந்ததால் அங்கே மட ஸ்தாபனம் பண்ணி ஞர். இவை முக்யமான மடங்கள். இன்னும் பலவும் ஸ்தாபித் தார். எல்லாம் அவர் உத்தேசப்படி. ச்ருங்கேரியில்தான் சாரதாம்பாள் தன் உத்தேசப்படி மடம் ஏற்படுத்திக் கொண்டது!

ஸுரேச்வரரின் தனித்தன்மையும் சிறப்பும்

மீமாம்ஸகர்களின் ப்ரதான புருஷராயிருந்த மண்டன மிச்ரர் ஆசார்யாளின் சிஷ்யரானது, வேதாந்த மதத்தின் புனருத்தாரணத்துக்குப் பெரிய பலம் கொடுத்தது.

Koviloor Digital Library

ஆனாலும், மநுஷ ஸ்வபாவம் எத்தனை பெரியவர்களை யும் எப்படிக் கொஞ்சமாவது ஆட்டிவைத்து விடுகிறது என்று தெரிவிப்பதுபோல, ஆசார்யாளின் மற்ற சிஷ்யர்களே அவரை (ஸுரேச்வராசார்யாளை)க் கொஞ்சம் ஸந்தேஹக் கண்ணோடு பார்த்ததாக 'சங்கர விஜய'ங்களில் இருக்கிறது. அவர் ஆசார்யாளின் சாரீரக பாஷ்யத்துக்கு* வார்த்திகம் எழுத ஆரம்பித்ததாகவும், அப்போது மற்ற சிஷ்யாள், 'என்ன இருந்தாலும் இவர் ரொம்பவும் தீவ்ரமான பூர்வ மீமாம்ஸகராக இருந்தவர்தானே? வாதத்தில் தோற்றுப் போனதால் வழியில்லாமல் ஆசார்யாளிடம் சிஷ்யராகி விட்டாலும், அந்தரங்க பூர்வமாக அத்வைத வேதாந் தத்தில் இவருக்கு ஈடுபாடு இருக்குமோ, இருக்காதோ? நம்மெல்லாம் மாதிரி ப்ரஹ்மசர்யத்திலிருந்தே ஸந்நியாஸத் திற்கு வராமல் பஹுகாலம் குடும்ப வாழ்க்கையிலிருந்த இவருக்குள் ஞான தத்வம் ஏறியிருக்குமா? அதனாலே honest-ஆக எழுதாமல், தன்னுடைய பழைய ஸித்தாந்தத் துக்கே இடம் கொடுக்கும்படி ஏதாவது 'ட்விஸ்ட்', 'கிஸ்ட்' பண்ணி எழுதிவிடப்போகிறாரே!' என்று ஆசார்யாளிடம் சொன்னார்களாம், ஆசார்யாள் மனஸில் ஒன்றை நினைத்துக் கொண்டு, ஆனால், சும்மாயிருந்துவிட்டார். ஸுரேச்வரா சார்யாள் காதுக்கே விஷயம் எட்டி அவர் 'நாம் எழுத வேண்டாம்' என்று இருந்துவிட்டார்.

அப்புறம் ஒரு நாள் அவர் ஆசார்யாளிடம் வந்து, "தங்களுக்கு குருதக்ஷிணை தரணும், தரணும் என்று இருந்தது. தாங்களோ பணத்தைத் தொடாதவர். நானும் ஸொத்து ஸ்வதந்த்ரம் எல்லாம் விட்டவன். என்ன தருவது, தருவது என்று இருந்தது. அப்புறம் என்னவோ யோசித்து, ஏதோ ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். இதுதான்!" என்று

* ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு 'சாரீரக மீமாம்ஸா' என்றும் பெயராதலால் ஆசார்யாளின் ஸூத்ர பாஷ்யம் 'சாரீரக பாஷ்யம்' என்றும் கூறப்படும். சரீரத் திலிருந்து பிரித்து அதற்கு உட்பொருளான ஆத்மாவைச் சொல்வதால் 'சாரீரகம்'.

Koviloor Digital Library

சொல்லி ஒரு சுவடிக் கட்டை ஆசார்யாள் பாதத்தில் வைத்து நமஸ்காரம் பண்ணினார்.

அது "நைஷ்கர்ம்ய ஸித்தி" என்ற புஸ்தகம். பரம கர்மாநுஷ்டாதாவாக இருந்தவர், ''எல்லாக் கார்யமும் போய் சும்மாயிருப்பதுதான் மஹாஸித்தி. அதுதான் மோக்ஷம். அதுதான் வேத வேதாந்த முடிவு'' என்று விவரித்து எழுதியிருந்த புஸ்தகம்!

ஆசார்யாளின் மனஸில் நினைத்ததுதான் ஸுரேச்வரருக்குள் புகுந்து, மற்ற சிஷ்யர்கள் அவருடைய honesty-ஐத் தெரிந்துகொள்ளும்படியாக இப்படி எழுதப் பண்ணினது!

ஆனாலும் அவர் எடுத்தவுடனேயே தடை ஏற்பட்டதால் அப்புறமும் சாரீரக வார்த்திகம் எழுதவேயில்லை. ஆசார்யாளும், மற்ற சிஷ்யாளும் ஆசைப்பட்டதன் பேரில் (ஆசார்யாளின்) உபநிஷத் பாஷ்யங்களில் இரண்டிற்கு மாத்ரம் வார்த்திகம் எழுதினார். ஒன்று தக்ஷிணத்தில் பெருவாரியாக வழக்கிலுள்ள க்ருஷ்ண யஜுர்வேதத்தைச் சேர்ந்த தைத்திரீயம்; இன்னொன்று வடக்கே ரொம்ப அநுஷ்டானத்திலுள்ள சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்த ப்ருஹதாரண்யகம். (ஆசார்யாளின்) தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரத்திற்கும் அவர் உரை எழுதியிருக்கிறார்—''மான ஸோல்லாஸம்'' என்று பேர்.

ஸுரேச்வராசார்யாளை இந்த (காஞ்சி) மடம், ச்ருங்கேரி மடம், த்வாரகா மடம் ஆகிய மூன்றும் தங்கள் தங்கள் ஆசார்ய பரம்பரையில் சொல்லிக்கொள்கின்றன. நம் மடத்துச் சரித்ரத்தை ஆழ்ந்து பார்த்தால் ஸுரேச்வராசார்யாளுக்குப் பீடாதிபத்ய அந்தஸ்து இருந்தாலும், அவரோடு கூடவே ஸர்வஜ்ஞாத்மர் என்ற இளம் ப்ரம்மசாரி இளவரசுப் பட்டம் மாதிரி இருந்துகொண்டு சாஸ்த்ரீய கார்யங்கள் எல்லாம் பண்ணி வந்ததாகத் தெரியும். அதாவது ஸுரேச்வரரின் மேல் பார்வையில் ஸர்வஜ்ஞாத்மர் இருந்தாரென்று தெரியும். அவர் ஸித்தியடைந்தபிறகு

Koviloor Digital Library

ஸர்வஜ்ஞாத்மரே பீடாதிபதியாக முழுப் பொறுப்பும் எடுத்துக் கொண்டிருக்கிறுர். இதை வைத்து ஆலோசித்துப் பார்த்தால், மூன்று மடங்களிலுமே இப்படி ஸுரேச்வரரை அத்யக்ஷகராக ஆசார்யாள் நியமித்து, அவருக்கு உட்பட்டு வயஸில் சின்ன இன்ெருவர் வைதிகாசாரங்கள் முக்யமா யுள்ள எல்லாக் காரியமும் பண்ணும்படி வைத்திருக்கலா மென்று தோன்றுகிறது. 'ஸெக்யூலர் (உலகியல் விஷயமான) நிர்வாஹப் பொறுப்பு முழுக்க ஸுரேச்வரரிடம்; சாஸ்த்ரத் திற்கு மேலேபோன கட்டத்தில் ஞானேபதேசமும் அவர் பண்ணுவது; சாஸ்த்ராசாரங்களின்படியான அநேக கார்யங்கள் இன்ெருவர் செய்வது—என்று வைத்திருக் லாம். ஏனென்ருல்......

வயஸில் பெரியவர், மஹா பண்டிதர், பூர்வ மீமாம் ஸகராகப் பெயரெடுத்தவர், செல்வத்தையும் செல்வாக்கை யும் விட்டு ஸந்நியாஸியானவர் என்று ஒரு பக்கம் ஸுரேச்வர ருக்குத் தனி கௌரவமிருந்தது. இன்ெருபக்கம் க்ருஹஸ் தாச்ரமத்தில் இருந்துவிட்டல்லவா துரீயாச்ரமத்திற்கு வந்தவர் என்ற எண்ணமும் சிலபேருக்கு இருந்திருக்க இடமிருக்கிறது. ஆசார்யாள் தம்முடைய மடங்களின் கௌரவத்துக்கு பங்கமாகக் கொஞ்சம் ஸம்சயாஸ்பதமாகக் கூட எதுவும் எவரும் நினேக்க இடம் கொடுக்கப்படாது என்று நினேத்திருக்கலாம். ஸுரேச்வராசார்யாளின் விசேஷ கௌரவத்துக்குத் தக்கதாக அவருக்கு ஒரு நியமனம் தர வேண்டுமென்றும் நினேத்திருக்கலாம். அதனுல் இப்படி மூன்று பீடங்களில் அவரை அத்யக்ஷகராக வைத்து, அவருடைய மேற்பார்வையில், ப்ரம்மசர்யத்திலிருந்து துரீயாச்ரமம் போன இன்ெருவர் பீடாதிபத்தியம் வஹித்து சாஸ்த்ராசாரங்கள் ப்ரதானமாகவுள்ள கார்யங் களே யெல்லாம் பண்ணும்படி ஏற்பாடு பண்ணியிருப்பா ரென்று தோன்றுகிறது.

மடாதிபதி, குரு என்றெல்லாம் ஒரு ஸந்நியாஸிக்கும் பொறுப்பு ஏற்பட்டால் அதற்கேற்ற ஸெக்யூலர் கார்யம்,

Koviloor Digital Library

சாஸ்த்ரோக்த கார்யம் ஆகியவையுந்தான் சேர்கின்றன. சாஸ்த்ரோக்தமாகச் சிலது பண்ணும் சரீரத்துக்கு க்ருஹஸ்தாச்ரம அநுபவங்கள் கொஞ்சமும் கிடையாது என்றுல் அப்போது பொதுப்பார்வையில் அதற்குத் தனியான பரிசுத்தியும் கௌரவமும் தெரியத்தான் செய்யும்.

இந்த ஸந்நியாஸியை விடவும் ரொம்ப ஜாஸ்தி சாஸ்த்ர கர்மா—அக்னி கார்யங்கள் முழுக்க—க்ருஹஸ்தனுக்கே உண்டு. அவ்வளவையும் பூர்வாச்ரமத்தில் புஷ்களமாகப் பண்ணினவர் ஸுரேச்வராசார்யாள், அப்போது அவருக் கிருந்த பேரிலேயே காஞ்சீபுரத்தில் 'மண்டனமிச்ர அக்ரஹாரம்' என்று ஒரு வீதி இருக்கிறது. க்ருஹஸ்தர் வஸிக்கும் இடத்துக்கு ஸந்நியாஸியின் பேரை வைப்பதை விட, அந்த ஸந்நியாஸியே உசந்த கர்மாநுஷ்டாதாவாக இருந்தபோது அவருக்கிருந்த பேரை வைப்பதுதான் பொருத்தம் என்று இப்படி வைத்தாற்போலிருக்கிறது. ஆதியில் அவரிருந்த மாஹிஷ்மதீயிலிருந்தேதான் ஆசார்யாளோடு இருநூறு ப்ராம்மண குடும்பங்கள் காஞ்சீபுரம் வந்து அங்கே குடியேறியதாகச் சொல்வார்கள்.

பத்மபாதரின் 'பஞ்சபாதிகை'

மற்ற ப்ரதான சிஷ்யர்களில் பத்மபாதர் கதை முன்னேயே கேட்டீர்கள். அவர் சாரீரக பாஷ்யத்துக்கு வ்யாக்யானம் எழுதினர். அதில் கொஞ்சம் பாகம் ஆசார்யாளுக்கு வாசித்தும் காட்டினர். அப்புறம் அவருக்கு தீர்த்தாடனத்தில் ரொம்ப ஆர்வம் ஏற்பட்டதால் ராமேச்வரத்துக்குப் புறப்பட்டார். 'ரிவைஸ்' பண்ணலாமென்று தம்முடைய புஸ்தகச் சுவடியையும் எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

போகிற வழியில் ஜம்புகேச்வரத்தில் அவருடைய மாமா அகம் இருந்தது. அங்கே புஸ்தகத்தை வைத்துவிட்டு திரும்ப வரும்போது எடுத்துக் கொள்ளலாமென்று ராமேச்வரம் போனர்.

Koviloor Digital Library

இவர் இல்லாதபோது மாமாக்காரர் படித்துப் பார்த்தார். அவர் கர்ம மார்க்க அபிமானி. 'இந்தப் புஸ்தகம் நம் ஸித்தாந்தத்தை அழித்துவிடும் போலிருக்கே!' என்று நினைத்தார். 'ஸரி, புஸ்தகத்தை நாம் அழித்துவிட்டால் போச்சு! மறுபடி எழுதுவானானால் பார்த்துக் கொள்வோம்!' என்றும் நினைத்தார்.*

அவருக்கு இரண்டு வீடு இருந்தது. ஒன்று கிலமாயிருந்தது. அதிலிருந்த ஸாமான்களையெல்லாம் இன்னொரு வீட்டில் சேர்த்தார். இந்தப் புஸ்தகத்தை மட்டும் அங்கே வைத்து வீட்டுக்கே நெருப்பு வைத்துவிட்டார்!

பத்மபாதர் ராமேச்வரத்திலிருந்து வந்தார்.

"விபரீதமாக நடந்துவிட்டது!" என்று மாமாக்காரர் வேஷம் போட்டார்.

'ஸுரேச்வராசார்யாளை ஸந்தேஹித்ததற்காக இது ஆசார்யாளே தந்த தண்டனை! நாம் மறுபடி எழுத வேண்டாம்!' என்ற எண்ணத்தோடு பத்மபாதர் ஆசார்யாளிடம் திரும்பி வந்தார். விஷயம் சொன்னார்.

ஆசார்யாள், "முந்தி நீ முதல் அத்யாயம் நாலு பாதமும், இரண்டாம் அத்யாயம் முதல் பாதமும் வாசித்துக் காட்டினாயல்லவா? அதைத் திரும்பச் சொல்கிறேன். எழுதிக் கொண்டு ப்ரகாசப்படுத்து. அதுவாவது லோகத்துக்குக் கிடைக்கட்டும்" என்று அநுக்ரஹம் பண்ணினார்.

ஒரே தடவை எப்பவோ கேட்டதை அப்படியே கடகடவென்று ஒப்பித்தார்!

ஸூத்ர பாஷ்யத்தின் முதல் ஐந்து பாதங்களுக்கு வ்யாக்யானமாதலால் அந்தப் புஸ்தகத்துக்குப் "பஞ்ச பாதிகா" என்று பெயர்.

* மறுபடி பத்மபதர் அந்நூல் எழுத முடியாதபடி அவரது ஞாபகசக்தியைக் குலைக்க அவருடைய மாமா விஷமிட்டதாக 'சங்கர விஜய'ங்களில் காண்கிறோம்

Koviloor Digital Library

தம்முடைய ப்ரதான மடங்களில் ஒன்றில் பத்மபாதரை ஆசார்யாள் முதல் பீடாதிபதியாக நியமித்தாரென்று நிச்சயமாகத் தெரிகிறது. எந்த மடம் என்பதில் மூன்று விதமான நம்பிக்கைகள் இருக்கின்றன. த்வாரகையிலுள்ள மடம் என்று பலர் சொல்கிறார்கள். புரி ஜகந்நாத மடம் என்ற அபிப்ராயமுள்ளவர்களும் இருக்கிறார்கள். 'மார்க்கண்டேய ஸம்ஹிதை'யிலும் 'ஆனந்தகிரீய'த்திலும் அவரை ச்ருங்கேரியின் முதல் ஆசார்யாளாகச் சொல்லியிருக்கிறது.

மௌனஞானி ஹஸ்தாமலகர்

முக்ய சிஷ்யர்களில் இன்னொருவர் ஹஸ்தாமலகர்...

ஆசார்யாளை ஸ்மரிக்கும்போது அவருடைய சிஷ்யர்களையும் ஸ்மரித்து நமஸ்காரம் பண்ணுவது விசேஷம்—பகவத் பக்தியோடு, 'அடியார்க்கடியேன்' என்று அவனுடைய பக்தர்களையும் பக்தி பண்ணும் ரீதியில்.

இன்னொரு விதத்தில் பார்த்தால் ஆசார்யாள்—சிஷ்யாள் என்று இவர்களைப் பிரித்துச் சொல்லலாமா? அவரேதானே இவர்களும்? "மஹாவிஷ்ணுவுடைய நாலு புஜம் மாதிரி எனக்கு நாலு சிஷ்யர்களை வைத்துக்கொண்டு அவதாரம் பண்ணுவேன்" என்று ஈச்வரனே இவர்களைத் தன் அங்கங்களாகச் சொன்னானல்லவா? பிரித்துச் சொன்னால் அபசாரமோ என்று தோன்றுகிறது. ஆனாலும் குரு-சிஷ்ய பாவம் என்பதன் அழகு, உயர்வு எல்லாம் தெரியும்படி த்வைத விளையாட்டு நடந்ததால் தனித்தனியாக ஒவ்வொரு சிஷ்யர் பற்றியும் தெரிந்துகொள்ளலாம். நாம் மனஸில் த்யானிப்பதற்கு த்வைதக் கல்பனைகள் வேண்டித்தானே இருக்கிறது?...

தேச ஸஞ்சாரத்தில் ஆசார்யாள் மேற்கு ஸமுத்ரத்துக்குப் பக்கத்தில் ஸ்ரீபலி என்னும் ஊருக்குப் போயிருந்தார்.

அங்கே ஒரு ப்ராம்மணன் பிள்ளையை அழைத்துக் கொண்டுவந்தான். பிள்ளை நன்றாக வளர்ந்திருந்தான்.

Koviloor Digital Library

ஆனால் ஒன்றும் தெரியவில்லை. பார்க்கத் தெரியவில்லை. கேட்கத் தெரியவில்லை. பேசத் தெரியவில்லை. "ப்ரம்மமா இருக்கு, நீங்கதான் ஸரி பண்ணணும்" என்று ஆசார்யாளிடம் தகப்பனார்க்காரன் வேண்டிக்கொண்டான்.

எதுவும் தெரிந்து கொள்ளாமல் ஜடமாயிருப்பதை, லோக வசனப்படி, "ப்ரம்மமாக" என்றான்! பையனைப் பார்த்த ஆசார்யாளுக்கோ வாஸ்தவமாகவே அவன் ப்ரம்மமாகத்தானிருந்த ஞானி என்று தெரிந்துவிட்டது!

பெரிய வேடிக்கை என்னவென்றால் பெரிய ஞானி, பெரிய அஞ்ஞானி இரண்டு பேருக்கும் வித்யாஸமே தெரியாது. அஞ்ஞானியில் இரண்டு தினுஸு. ஒன்று, மூளை வேலை செய்யாத முழு அசடு, பைத்தியம். அதிலேயும் இரண்டு தினுஸு! போட்டது போட்டபடி ப்ரமித்துக் கொண்டு ஒரே ஸாதுவாயிருப்பது ஒன்று. ஒரே கூச்சல், அடி உதை என்று வெறிக் கூத்தாயிருப்பது ஒன்று. இரண்டும் மூளை ஸரியாக வேலை செய்யாத அஞ்ஞானி. இன்னொன்று, மூளை ஸரியாக வேலை செய்கிற மாதிரி மற்ற கார்யமெல்லாமிருந்தாலும் பரம நாஸ்திகமாக இருக்கும் அஞ்ஞானி! இந்த மூன்றுவித அஞ்ஞானிகள் மாதிரியும் ஞானி இருப்பான்! திருவண்ணாமலையில் சேஷாத்ரி ஸ்வாமிகள் என்று இருந்தார். பக்தியோடு கிட்ட வருகிறவர்களின் மேலே கல்லைத் தூக்கிப் போடுவார்! அதுவே அநுக்ரஹமாகி விடும்! 'நல்லது நல்லதாயில்லை; பொல்லாதது பொல்லாததாயில்லை; சாஸ்த்ரமில்லை, ஸம்ப்ரதாயமில்லை' என்று நாஸ்திகன் எப்படியிருக்கிறானோ அப்படியே ஞானியும் இருப்பான்!

வித்யாஸம் என்னவென்றால் அசடு, பைத்தியம் உள்ளே ஒன்று, ஜடமாக உணர்ச்சியில்லாமலிருக்கும்; அல்லது காரணமேயில்லாமல் கொதித்துக் கொந்தளித்துக் கொண்டிருக்கும். ஞானியோ உள்ளே ஒரே சாந்தி, ஸௌக்ய மென்று ஆனந்தமாயிருப்பான்! நாஸ்திகன் நாம் தப்பிப் போய் அவனுக்கு ஒரு சின்ன ஹிம்ஸை பண்ணிவிட்டாலும்

Koviloor Digital Library

பதிலுக்கு நூறு பண்ணுவான். எதுவுமே பண்ணுவிட்டால் கூட ஸத்துக்களை ஹிம்ஸிப்பான். ஞானி சூடு போட்டாலும் சிரித்துக்கொண்டு, உள்ளூர ஆசீர்வாதம் பண்ணிக்கொண்டு இருப்பான்! ஹிம்ஸையிலும் ஆனந்தம்! எல்லாவற்றையும் அறிந்துகொண்டு அசடு மாதிரி, நாஸ்திகன் மாதிரி இருப்பவன் அவன்.

இப்படிக் கட்டையாட்டம் இருந்த பிள்ளையை உன்மாதம் என்று வைத்து ஆசார்யாளிடம் அந்த ப்ராம்மணன் அழைத்துக்கொண்டு வந்தான். அவனைப் பார்த்ததும் அவருக்கு, 'நம்ம பின்னாடை இழுத்துண்டு போறதுக்காக வந்து சேர்த்திருக்கிற வஸ்து' என்று தெரிந்தது!

"யாருப்பா? எந்த ஊருப்பா?" என்று பேச்சுக் கொடுத்துப் பார்த்தார்.

வருஷக் கணக்காக வாய் திறக்காமலிருந்த பையன் 'டாண்' என்று, "எல்லாம் ஒண்ணு இருக்கச்சே 'யாரு, எவா?'ன்னு என்ன அர்த்தம்? எல்லாம் ஸொப்பனமா யிருக்கச்சே, ஸொப்பனத்துக்குள்ளே அந்த ஊர், இந்த ஊர்-னு பேர் வெச்சா, முழிச்சுண்ட அப்புறம் எந்த ஊரைச் சொல்லிக்கறது?" என்று கேட்டான்.

ச்லோக ரூபமாக, "நான் மநுஷ்யனில்லை, தேவனில்லை, யக்ஷனில்லை, நாலு ஜாதியில் எதுவுமில்லை, நாலு ஆச்ரமி களில் யாருமில்லை; நான் 'நிஜபோதரூபம்'-அதாவது ஆத்ம ஞான ஸ்வரூபம்" என்றிப்படி பதில் சொன்னதாக இருக் கிறது. 'ஹஸ்தாமலக ஸ்தோத்ரம்' என்று பேர்.

பிள்ளை பேசுகிற ஸந்தோஷத்தில் தகப்பனார் அகத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். அங்கே போனால் அந்தப் பிள்ளை பழையபடியே ஆகிவிட்டது.

ஆசார்யாளிடம் மறுபடிக் கூட்டிக்கொண்டு வந்தான். அவர்கிட்டேயானால் அவரைவிட ஞானமாகப் பேசுகிறது!

Koviloor Digital Library

பிள்ளை நேராக இருந்தால் போதும் என்கிற எண்ணத்தில் தகப்பனுர், "இது எங்க பிள்ளை இல்லே, உங்க பிள்ளைதான்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அப்படியே ஆசார்யாள் தன்னுடைய சிஷ்ய பரிவாரத்தில் அந்தப் பிள்ளையைச் சேர்த்துக்கொண்டு 'ஹஸ்தாமலகர்' என்று பேர் வைத்தார்.

ஹஸ்தாமலகம் என்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்பதுதான்! அப்படியென்றல் என்ன? கத்திரிக்காய், மாங்காய் இப்படி எதை எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு பார்த்தாலும் அதன் அடிப் பக்கத்தில் நிறையப் பங்கு கையில் ஒட்டிக் கொண்டிருக்கும். அதனுலே அந்தக் காய்களில் கால், அரைக்கால் பாகம் கண்ணுக்குத் தெரியாது. நெல்லிக்காய்தான் கையில் ஒட்டிக்கொள்கிற பாகம் ரொம்ப ரொம்பக் குறைச்சல். அதனுலே நன்ருக முழு ரூபமும் தெரியும். பூமியில் விழுந்து கிடக்கும்போதுகூட அப்படித்தான். சுத்தமாக ரவுண்டாக அதுதான் இருப்பதால் இப்படி!

எலுமிச்சங்காய், விளாங்காய் முதலானதுகூட ரவுண்டாயிருந்தாலும் 'வெய்ட்' இருப்பதால் கையிலே அழுந்தி ஒரு பாகம் மறைந்துதான் போகும். எடுப்பாக முழு ரூபமும் தெரியும்படி இருப்பது நெல்லிதான். ஆகவே தெளிவாக முழுக்கத் தெரியும் ஸமாசாரத்தை 'ஹஸ்தாமலகம்' என்பது. அப்படி பெர்ஃபெக்டாக இவர் ஆத்ம ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு, ஆசார்யாள் கேட்டவுடன் பளிச்சென்று சொல்லிவிட்டதால் ஹஸ்தாமலகர் என்று பேர்.

அவர் சொன்ன ச்லோகங்களுக்கு ஆசார்யாளே பாஷ்யம் எழுதினுர். 'ஹஸ்தாமலகீயம்' என்று பேர்.

புரி ஜகந்நாத மடத்தில் ஹஸ்தாமலகரை முதல் ஸ்வாமிகளாக ஆசார்யாள் வைத்ததாக நம்பப்படுகிறது. த்வாரகை என்றும் இன்னெரு நம்பிக்கை.

Koviloor Digital Library

தோடகர் : தாஸ்ய பக்தியின் திருவுருவம்

ஹஸ்தாமலகர் ஒரே அத்வைத அநுபவத்திலிருந்தவர் என்றால்நாலு முக்ய சிஷ்யர்களில் பாக்கியிருக்கிறவர் இதற்கு முழு வித்யாஸமாயிருந்தவர்.

ஆசார்யாள் சொன்னதென்ன? "பாவாத்வைதம் ஸதா குர்யாத்; க்ரியாத்வைதம் ந கர்ஹிசித் : பாவனையில் அத்வைத மாக, எல்லாம் ஒன்று என்று அநுபவிக்க ஸதாகாலமும் பழக்கிக் கொள்ளு; ஆனால் ஒருபோதும் கார்யத்தில் பார்க்க வேண்டிய வித்யாஸங்களைப் பார்க்காமலிருக்காதே!" என்றார். ஆனால், இப்படி பாவனையில் அத்வைதம் பழகிக் கொண்டே போனால் ஒரு நிலையில் கார்யத்தில்கூட வித்யாஸம் தெரியாமல் போகும். பட்டு வஸ்த்ரத்தால் காலைத் துடைத்துக்கொண்டு வீசி எறிந்துவிட்டு அழுக்குக் கந்தலைக் கட்டிக்கொள்ளத் தோன்றும்! இப்படி அநேகம் தோன்றும். அந்த நிலையில் கட்டுப்படுத்தாமல் அப்படி யெல்லாமும் கார்யத்திலேயே பண்ணிவிட்டுப் போகலாம். அன்னத்தை உடம்பில் தேய்த்துக் கொள்ளலாம், அமேத்யத்தைத் தின்னலாம்; கழுதையை நமஸ்காரம் பண்ணலாம், ராஜாவை உதைக்கலாம். மனஸில்தான் அத்வைதம், லோகத்தில் இல்லை என்பது போய்விட்ட அப்போது "அத்வைதம் த்ரிஷு லோகேஷு"—மூன்று லோகத்திலுள்ள ஸகல ஸமாசாரங்களைக் குறித்தும் கார்யத் திலேயே வேண்டுமானாலும் அத்வைதம் பார்க்கலாம். ஆனால் இதற்கும் ஒரே ஒரு விதி விலக்கு, "அத்தனை விஷயத் திலும் அத்வைதமாயிருந்தாயானாலும், குரு என்று இருக்கிறாரே, அவரிடம் மட்டும் அத்வைதம் கூடாது— கார்யத்தில் மட்டுமில்லை, பாவத்தில்கூடக் கூடாது! நாத்வைதம் (ந அத்வைதம்) குருணா ஸஹ".

அத்வைதம் த்ரிஷு லோகேஷு நாத்வைதம் குருணா ஸஹ.

குருவும் தானும் ஒன்று என்று நினைக்கப்படாது. ஈச்வரனும் தானும்கூட ஒன்று என்று நினைக்கலாம்!

Koviloor Digital Library

நினைக்கலாம் என்ன? முடிவிலே அப்படித்தான் நினைக்க வேண்டும். ஞானம் வந்தவிட்டு ஈச்வரன்கிட்டேயும் அத்வைதம்தான். ஆனாலும் 'நாம் நினைப்பது, நாம் செய்வது' என்று துளி ஒட்டிக்கொண்டிருக்கிறவரைகூட 'நானும் குருவும் ஒண்ணு' என்று நினைக்கக்கூடாது. [அடுத்து வரும் வாக்யங்களை விடாமல் சிரித்தவாறே மொழிகிறார்கள்*:] வேணும்ம்ம்னு அத்தனை பேதத்தையும் குருவிடம் வெச்சுக்கணும்! 'பேதம் த்வைமாச்சே, த்வைதம் பொய்யாச்சே'-ன்னு, அத்தனை பொய்யையும்தான் குரு கிட்டே வெச்சுக்கணும்! அப்படித்தான் அம்பாள் ஆசை! அப்படித்தான் அவள் 'ஆர்டர்' போட்டிருக்கா! அவ யாரு? ப்ரம்ம வித்யா ஸ்வரூபிணி, ஞானம்பாள்-ன்னும் சொல்றோம்; மாயை, மஹா மாயை-ன்னும் சொல்ற மோல்லியோ? அதனாலே பேதம், பொய் எல்லாமும் அவள் பண்ணினதுதானே? அதிலேயும் அழகா, மதுரமா ப்ரேமை, தாஸ்யம் (தாஸ பாவம்), கைங்கர்யம், சரணாகதி-ன்னெல்லாம் வெச்சிருக்காளோல்லியோ? 'என்னை அபேதமா ப்ரம்ம வித்யைன்னு தெரிஞ்சுக்கப் பண்றாரே, குரு-ன்னுட்டு—அவர் கிட்டேயே இந்த பேதத்தையெல்லாம் காட்டு! ஸத்யத்தைச் சொல்றவர்கிட்டே அத்தனை பொய்யும் பண்ணு! அவர் 'டீச்' பன்ற அத்வைதத்தையெல்லாம், அவரொருத்தர் விஷயமா மட்டும் மூட்டை கட்டி வெச்சுட்டு, 'ஸ்வாமிகளே! நீங்க வேறே, நான் வேறேதான்! நீங்க மஹா ஸமுத்ரம், நான் அணுவிலேயும் அணு! நீங்க ஆண்டான், நான் அடிமை'ன்னு இரு. தாஸ்யம் பண்ணு, ஸேவை பண்ணு, சரணாகதி பண்ணு' ன்னு ஆஜ்ஞை பண்ணியிருக்கா! இந்த ஒரு இடத்தில த்வைதம்தான்னு வெச்சுண்டு, ப்ரேமையினாலே, பணிவிடையினாலே அநுக்ரஹத்தை அப்படியே பொங்கிண்டு வரும்படிப் பண்ணிட்டா பாக்கி ஸமஸ்த ப்ரபஞ்சத்திலேயும் அத்வைத பாவம் கெட்டியா ஸ்திரமாயிடும்....

---

* அவர்கள் சுவைத்துக் கூறியதன் சாயல் ஓரளவுக்கேனும் தெரியவேண்டு மென்று அவர்களது பேச்சு மொழியிலேயே கொடுத்துள்ளது.

Koviloor Digital Library

அப்படியிருந்தவர்தான் அந்த நாலாவது சிஷ்யர். தோடகர் என்று பேர். பேர் என்றால் அப்பா - அம்மா வைத்ததில்லை; ஒரு காரணத்தினால் ஏற்பட்டது. ஆனந்தகிரி என்று அவருக்கு முதல் பேர்.

ஆசார்யாளுக்கு ஸதாகாலமும் பார்த்துப் பார்த்துப் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருப்பார். ரொம்ப ஸாது. பார்த்தால் அசடு என்று தோன்றும். ஆசார்யாள் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார் ஆறுயிரம் சிஷ்யர்கள் அவரை எப்பவும் சூழ்ந்து கொண்டிருப்பார்களென்று சொல்லியிருக்கிறது. எல்லாரும் புத்திசாலிகள். பாடத்தை ரஸித்துக் கேட்டுக்கொண்டு, நடுவே நடுவே ஸந்தேஹமெல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு, 'ஆஹா, ஆஹா!' என்று கொண்டாடிக் கொண்டிருப்பார்கள். இவர் மட்டும் வாயை மூடிக் கொண்டிருப்பார். 'ஒண்ணும் புரிஞ்சுக்கத் தெரியாத அசடு' என்ற மற்றவர்கள் நினைத்தார்கள்.

ஒருநாள் அவர் பாடத்துக்கு வர நாழியாயிற்று. ஆசார்யாள் அவருக்காகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். மற்ற சிஷ்யாள், 'இவருக்காக ஏன் wait பண்ணனும். அவர் வந்தாலும் ஒண்ணு, வராட்டாலும் ஒண்ணுதானே?' என்று சொல்லிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

'அப்படியா ஸமாசாரம்?' என்று ஆசார்யாள் நினைத்தார். 'நம்மை ஆசார்யன் என்று வந்தடைந்த குழந்தைகளுக்கு வித்யா கர்வம், 'நாம ஒசத்தி, இன்னொருத்தன் மக்கு' என்ற எண்ணங்கள் வரப்படாதே' என்று கருணையோடு நினைத்தார். இதைவிட விசேஷமான ஒரு கருணை மக்கு என்று மற்றவர்கள் நினைத்த சிஷ்யரின் மேலே அவருக்கு உண்டாயிற்று.

அதே ஸமயம் சிஷ்யர் குதித்துக்கொண்டு, ஆனந்த நர்த்தனம் பண்ணிக்கொண்டு, ஆசார்யாளின் மேலே ஒரு அத்புதமான ஸ்தோத்ரத்தை கானம் பண்ணிக்கொண்டு

Koviloor Digital Library

அங்கே வந்தார்! புதுசாக அவரே, அப்பத்தான், மெய் மறந்த நிலையில் பண்ணின ஸ்துதி. தன்னாலே தாளம் போட வைக்கும் 'தோடகம்' என்ற வ்ருத்தத்தில் அமைந்த ஸ்துதி. அந்த வ்ருத்தத்தில் கவனம் பண்ணுவது கஷ்டம். ஸ்தோத்ரத்தில் வார்த்தைகள், கருத்துக்கள் எல்லாமே வித்வான்களும் ஆச்சர்யப்படும்படியாக வந்து விழுந்திருந்தன. மக்கு என்று நினைத்தவர்களெல்லாம் 'இப்படியும் உண்டா?' என்று கொண்டாடும்படியாக ச்லோகம் ச்லோகமாக எட்டு, ஸரியாகத் தாளம் போட்டுக்கொண்டு, குதித்துக்கொண்டு அவர் சொன்னார்.

அதற்குத் "தோடகாஷ்டகம்" என்று பெயர்.

பண்ணியவருக்குத் "தோடகாசார்யாள்" என்றே பெயர் ஏற்பட்டுவிட்டது!

அதில் ஒரு ச்லோகம் சொல்கிறேன். பெரியவா வாக்கைச் சொல்வதைவிட நான் என்ன சொல்லக் கிடக்கிறது? ஏதோ எனக்குத் தெரிகிற பக்தி ஸமாசாரம் எல்லாருக்கும்தான் தரணும். ஞானந்தான் தனியாய் அநுபவிப்பது. அது வருகிறபோது பார்த்துக்கொள்ளலாம்! பக்தி எல்லாருக்கும் கொடுத்து, சேர்ந்து அநுபவிப்பது— பக்ஷணத்தைப் பிறத்தியாரோடு சேர்ந்து சாப்பிடுகிற மாதிரி! மற்றவர்களோடு கலந்து அநுபவிப்பதில் எந்த 'ரிக்ரியேஷ'னும் (பொழுது போக்குக் கலையும்) உள்ளே தேனாக இருக்கிற ஊற்றைத் தராது. பக்தி ஸ்துதிதான் தரும். 'தோடகாஷ்டகம்' அப்படி ஒன்று. அதில் ஒரு ச்லோகம்,

ஜகதீம் அவிதும் கலிதாக்ருதயோ
விசரந்தி மஹா மஹஸச் சலத:|
அஹிமாம்சு-ரிவாத்ர விபாஸி புரோ
பவ சங்கர தேசிக மே சரணம்||

'மஹா மஹஸ்' என்றால் பெரிய ஜ்யோதி. இப்படி ஒரு 'அருட் பெரும் ஜோதி' இருக்கிறது. ஜனங்களையெல்லாம்

Koviloor Digital Library

ரக்ஷிப்பதற்காக ('ஜகதீம் அவிதும்'), ஜனங்கள் தப்பு வழியில் போகாமல் நேரே போகப் பண்ணுவதற்காக, இப்படியான அருள் ஜோதிகள் மநுஷ்ய உருவம் எடுத்துக் கொண்டு ('கலித ஆக்ருதய:') பல மஹான்களாக ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். 'சலத:' என்பதில் முதல் 'ச' (cha) இல்லை. இப்படிச் சொன்னால் 'விசரந்தி' என்று சொன்ன ஸஞ்சாரத்தையே 'ரிபீட்' பண்ணுவதாகிவிடும். அதைவிட ஆழமான அர்த்தம் கொடுக்கும்படியாக, இரண்டாவது 'ச' (chha) போட்டுச் சொல்லியிருக்கிறார். 'ஏமாற்றுவது', 'வேஷம் போடுவது' என்று அர்த்தம்! 'ஜனங்களை ரக்ஷிப்பதற்காக மஹான்கள் ஏமாற்று வித்தை பண்ணுகிறார்கள்' என்று சொல்லியிருக்கிறது! 'ஆழமாவது அர்த்தமாவது? விபரீதமாயல்லவா இருக்கு?' என்றால்...இதுதான் கருணையுடைய மாயம், ஏமாற்று ஜாலம் என்று ஸ்வாதீனமாகச் சொல்வது. உண்மையில் அவர்கள் நம் மாதிரி மநுஷ்யர்களா? இல்லையே! அருள் ஜோதிதானே? மநுஷர் வேஷம் போடுவது ஏமாற்றுதானே? லோகத்தில் அவர்களுக்கு வாஸ்தவத்தில் ஏதாவது ஸம்பந்தமுண்டா? இப்படி க்ஷேத்ர யாத்ரை தீர்த்த யாத்ரை பண்ணி அவர்கள் அடையவேண்டிய பலன் ஏதாவது உண்டா? இருந்தாலும் இதெல்லாம் பண்ணுகிறார்களென்றால் [சிரித்து] fraud-தானே? அதனால்தான் 'chha' போட்டு "சலத:"!

இப்படி அநேக நக்ஷத்ரங்கள், க்ரஹங்கள் மாதிரியான ஜ்யோதிஸ்கள் மஹான்கள் என்று ஸஞ்சாரம் பண்ணி வருகிறார்கள். நக்ஷத்ரங்கள், க்ரஹங்கள் இருந்தால் அவற்றின் ப்ரகாசத்தையெல்லாம் சேர்த்து வைத்து ஸூர்யன் என்றும் ஒன்று இருக்கிறது. அந்த ஸூர்யன் உதித்தாச்சு என்றால் மற்ற க்ரஹ, நக்ஷத்ர ப்ரகாசமெல்லாம் மறைந்து போய்விடுகிறது! "இப்படி அருள் ஜ்யோதிகளுக்குள்ளே, அறிவு ஜ்யோதிகளுக்குள்ளே நீங்கள்தான் ஸூர்யனாக இதோ, எதிரே ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறீர்கள்!" என்று ஆசார்யாளைப் பார்த்துச் சொல்கிறார்.

Koviloor Digital Library

"அஹிமாம்சு: இவ அத்ர விபாஸி புரோ!"

'ஹிமாம்சு' என்றால் குளிர்ந்த கிரணமுடைய சந்திரன். 'அஹிமாம்சு' என்றால் அதற்கு மாறுதலான ஸூர்யன்.

க்ரஹங்கள், நக்ஷத்ரங்கள், ஸூர்யன் எல்லாமே ஸஞ்சாரம் பண்ணியபடிதான் இருக்கின்றன. 'ஸ்டேஷனரி' (நிலையானவை) என்று சொல்கிறவை உள்பட அத்தனை galaxy-களும் நகர்ந்தபடியேதான் இருக்கின்றன என்று கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இந்த மஹான்களாகிய மஹஸ்ஸுகளும் (ஜ்யோதிகளும்) லோகத்துக்கு ஞான ப்ரகாசத்தைக் கொடுத்தபடி ஸஞ்சாரம் பண்ணியபடியிருக்கிறார்கள் என்கிறார்.

இன்னொன்று தோன்றுகிறது. அகஸ்த்ய நக்ஷத்ரம் உதித்தால் கலங்கிய ஜலாசயங்கள் (நீர் நிலைகள்) எல்லாம் தெளிந்துவிடும். ஆசார்ய ஸூர்யன் உதித்ததில் கலங்கின அறிவுகளெல்லாம் தெளிந்து விட்டன!

கடைசி ச்லோகத்தில் என்ன சொல்கிறாரென்றால், "அசடாட்டம் இருந்த நானா இப்படிப் பாடுகிறேன் என்றால், நிஜமாக நானா பாடுகிறேன்? எனக்கு என்ன தெரியும்? நீங்கள் ஆய கலைகள் அறுபத்து நாலும் தெரிந்த ஸர்வஜ்ஞர் என்றால், எனக்கோ ஒரு கலையும் தெரியாது; 'விதிதா ந மயா விசதைக கலா'. "விசதைக கலா": 'விசத'மாக என்றால் 'தெள்ளத் தெளிய'. எத்தனை வித்வானானாலும் அறிவினால் மாத்ரம் ஒரு தத்வத்தையோ, வேறே விஷயத்தையோ பிரிந்து நின்று தெரிந்து கொள்ளும் வரையில் 'தெள்ளத் தெளியத் தெரிந்து கொண்டேன்' என்று சொல்லமுடியாது.

"சிவாநந்தலஹரி"யில்* ஸர்வஜ்ஞரான ஆசார்யாளே ஈச்வரனை "ஸர்வஜ்ஞ!" என்று கூப்பிட்டு, "எனக்கென்ன தெரியும்? ஸ்ம்ருதி தெரியுமா? ஷட்-சாஸ்த்ரம் தெரியுமா?

---

* "ஸ்ம்ருதௌ சாஸ்த்ரே" என்று தொடங்கும் ஐந்தாவது ச்லோகம்.

Koviloor Digital Library

வைத்யம், ஜ்யோதிஷம், சகுன சாஸ்த்ரம் எதுவாவது தெரியுமா? பொயட்ரி தெரியுமா? பாட்டு, கூட்டு தெரியுமா? புராணம், மந்த்ர சாஸ்த்ரம் முதலான உசந்த ஸமாசாரம், டான்ஸ், விகடம் முதலான பொழுதுபோக்கு ஸமாசாரம்—எதுவுமே தெரியாமல் மாடு மாதிரி ('பசு' என்று சொல்லிக் கொள்கிறார்) இருக்கிறேன். நான் பசுவானாலும், நீதான் 'பசுபதி' என்று பேர் வைத்துக் கொண்டிருப்பதால் கருணை காட்டியாகணும்" என்று சொல்லியிருக்கிறார். [சிரித்து] இது "சலத:" என்று சொன்ன ஏமாற்றுதானே?

தோடகர், "எனக்கு எதுவும் தெரியாது. அறிவினால் தங்களுக்கு ப்ரீதி செய்ய லாயக்கில்லாதவன். த்ரவ்யத்தால் தங்களுக்கும் சிஷ்யர்களுக்கும் செய்யவும் சக்தியே இல்லாதவன். செல்லாக் காசு இல்லாதவன்: 'ந ச கிஞ்சந காஞ்சநம் அஸ்தி குரோ!' ஆனாலும் தங்களிடம் தன்னியல்பாகப் பெருகும் க்ருபையே என்னை ரக்ஷித்து வருகிறது. அதை எக்காலமும் உடனுக்குடன் ('த்ருதமேவ') அளித்து வரணும் : "த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்" என்று முடித்தார்.

ஒவ்வொரு ச்லோகத்தையும், "பவ சங்கர தேசிக மே சரணம்" என்று முடித்து அப்படியே ஆசார்ய சரணங்களில் சரணாகதி பண்ணிக்கொண்டு விழுந்துவிட்டார்.

ஆசார்ய சரணாகதி பண்ணிவிட்டோமானால் போதும், அப்புறம், எங்கே போய் முடியணுமோ, நிறையணுமோ அங்கே கொண்டு போய்ச் சேர்ப்பதற்கு அவர் பொறுப்பு.

[மிகுந்த நெகிழ்ச்சியுடன்] அந்த ஒருத்தர் என்றைக்கோ நர்த்தனம் பண்ணிக்கொண்டு, சரணாகதி செய்து தாரையாக அழுதது இன்றைக்கும் நம் எல்லாரையும் தொட்டு, உயர்வு தருகிறது. இது ஆனந்த தாரை!

அன்றைக்குக் கூட இருந்த ஆறாயிரம் பேர் கண்ணிலும் தாரை தாரையாய் வராமலிருக்குமா? ஆனால் அது ஆனந்த தாரை மட்டுமல்ல. பச்சாத்தாபமும் சேர்ந்து கண்ணீரை

Koviloor Digital Library

வருவிக்கிறது. 'இவரைப் போய் மக்கு ப்ளாஸ்திரி என்று அபசாரமாக நினைத்தோமோ!' என்று நமஸ்காரம் பண்ணு கிறார்கள். ஆசார்யாளையும் பண்ணுகிறார்கள், தோடகரை யும் பண்ணுகிறார்கள். சில பேர் குரு எதிரில் சிஷ்யர் சரணத்தில் விழக்கூடாதென்று ஆசார்யாள் சரணத்தி லேயே விழுந்து தாரை தாரையாக ஜலம் விடுகிறார்கள். கண்ணீர்த் துளிகளாலேயே அர்ச்சனை!

தோடகாசார்யாள் பெருமை லோகத்துக்கெல்லாம் இப்படித் தெரிந்தது.

"ச்ருதி ஸார ஸமுத்தரணம்" என்று தோடகாசார்யாள் செய்ததாக ஒரு அத்வைத புஸ்தகம் இருக்கிறது. அவருக்கு ஏற்பட்ட பேருக்கு ஏற்றாற்போல் அதுவும் தோடக வ்ருத்தத் திலேயே இருக்கிறது.

தேசத்தின் வடக்கெல்லையில் பதரிநாதத்தில் ஆசார்யாள் ஸ்தாபித்த ஜ்யோதிர் மடத்தில் தோடகா சார்யாளையே முதல் பீடாதிபதிகளாக நியமித்தார்.

இன்னும் இரு சிஷ்ய ரத்தினங்கள்: ஸர்வஜ்ஞாத்மரும் ப்ருத்வீதவரும்

நாலு முக்யமான சிஷ்யர்கள் என்று ப்ரஸித்தமாகச் சொன்னாலும் இன்னம் சில மஹான்களும் ஆசார்ய சிஷ்யர் களில் 'சிஷ்ய ரத்னம்' என்னும்படி இருக்கிறார்கள். அவர் களில் இரண்டு பேரைப் பற்றிச் சொல்கிறேன். இரண்டு பேரும்— ஸுரேச்வராசார்யாள் மாதிரியே— முதலில் ஆசார்யாளிடம் (வாதச்) சண்டை போட்டுத் தோற்றுப் போய், அப்புறம் பரம சிஷ்யர்களாக ஆனவர்கள். ஒருத்தர் ஆசார்யாளைவிட வயஸில் ரொம்பப் பெரியவர். ப்ருத்வீதவர் என்று பெயர். ப்ருத்வீதரர் என்றும் சொல்லி யிருக்கிறது. மற்றவர் ஆசார்யாளைவிட ரொம்பச் சின்னவர்; குழந்தை. அவர் பெயர் ஸர்வஜ்ஞாத்மர்.

Koviloor Digital Library

ஆசார்யாள் கடைசி காலத்தில் காஞ்சீபுரத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறப்போனபோது அவரோடு பல பேர் வாதம் பண்ணப் போனார்கள். அவர்களில் தாம்ரபர்ணி தீரத்திலிருந்து போனவர்களும் இருந்தார்கள். அவர்களில் இந்த ஏழு வயஸுக் குழந்தை, அதன் தகப்பனார் ஆகியவர்களும் இருந்தார்கள். அப்போது குழந்தைக்குப் பேர் மஹாதேவன். இதற்கு முந்தியே தகப்பனார் தீவ்ர மீமாம்ஸகராக இருந்து கொண்டு ஜைன—பௌத்த மதங்களைக் கண்டனம் பண்ணியபோது இந்தக் குழந்தையும் அவர்களிடம் வாதம் பண்ணி அசர அடித்திருந்தது! இப்போதும் ஆசார்யாளின் உத்தர மீமாம்ஸைக்கு (வேதாந்தத்திற்கு) முன்னே தகப்பனார் உள்பட மற்ற எல்லாரும் தங்களுடைய பூர்வ மீமாம்ஸையால் பதில் சொல்ல முடியாமல் வாயடைத்துப் போன அப்புறமும் இந்தக் குழந்தை மட்டும் விடாமல் நாலு நாள் வாதம் பண்ணிற்று! கடைசியில் தோற்றுத்தான் போயிற்று. ஆசார்யாள் ஸர்வஜ்ஞ பீடம் ஏறினார்.

ஆதியிலே குழந்தையாசார்யாளைப் பார்த்தவுடன் கோவிந்த பகவத் பாதருக்கு ப்ரேமை பொங்கிக்கொண்டு வந்தது போல இப்போது அந்தத்தில் ஆசார்யாளுக்கே இந்தக் குழந்தையிடம் வந்தது.

குழந்தைக்கும் 'தோற்றுப் போனோமே!' என்று இல்லாமல், 'ஸத்யம் தெரிந்ததே!' என்று ஸந்தோஷமாக இருந்தது. 'தெரிவித்தாரே!' என்று ஆசார்யாளிடம் பக்தி, ப்ரேமையோடு கூடிய பக்தி, உண்டாயிற்று. சின்ன வயஸில், "ஸந்நியாஸம் தாருங்கள்!" என்று ஆசார்யாளைப் ப்ரார்த்தித்துக் கொண்டது. ஆசார்யாள் பூர்ண அனுக்ரஹத்தோடு அப்படியே கொடுத்தார்.

அப்புறம் குழந்தைக்கு ஸர்வஜ்ஞாத்மர் என்று பேர் ஏற்பட்டது. ஆசார்யாள் ஸர்வஜ்ஞர், அவருக்கு ரொம்ப ஆத்மார்த்தமான சிஷ்யர் என்று தெரிவிக்கும் பெயர்!

Koviloor Digital Library

ஆசார்யாள் சரீர யாத்ரை முடித்து ப்ரஹ்மீபாவம் அடைவதற்கு முன் ஸுரேச்வராசார்யாளின் மேல் பார்வையின் கீழ் குழந்தை ஸர்வஜ்ஞாத்மரைத்தான் இந்த (காஞ்சி) மடத்தின் ஸ்வாமிகளாக நியமனம் பண்ணினார். அதனால் ஸுரேச்வரரைத் தம்முடைய குருவாக அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். குருவின் பெயரைச் சொல்வது மரியாதையல்ல என்பதால் 'ஸுரேச்வரர்' என்பதை அதே அர்த்தம் கொடுக்கும் 'தேவேச்வரர்' என்று சொல்லியிருப்பார்.

ஆசார்யாளுடைய சாரீரக பாஷ்யத்தை ஆதாரமாகக் கொண்டு ஸர்வஜ்ஞாத்மர் "ஸம்க்ஷேப சாரீரகம்" என்று புஸ்தகம் எழுதினார். 'ஸம்க்ஷேபம்' என்றால் சுருக்கம். 'சுருக்கம்' என்றாலும் இதில் ஆயிரம் ச்லோகத்துக்கு மேலே இருக்கிறது......ஆமாம், ச்லோகங்கள்—ச்லோக ரூபத்தில் அத்வைதப் புஸ்தகம் எழுதினவர்கள் ரொம்பக் குறைச்சல். ஆசார்யாளுக்குப் பிற்காலத்தில் அப்படி எழுதியவர்களில் முக்யமான இரண்டு பேர் ஸர்வஜ்ஞாத்மரும், வித்யாரண்ய ஸ்வாமிகளும்தான்.

"பஞ்ச ப்ரக்ரியா" என்று அவர் இன்னொரு அத்வைத நூலும் செய்திருக்கிறார். எந்த ஸித்தாந்தத்திலும் ஏற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் உண்டு என்று ஏற்றுக் கொள்வதுதானே ஆசார்யாள் வழி? அந்த வழியில் இவர் மீமாம்ஸைப் புஸ்தகமும் ஒன்று சின்னதாக எழுதியிருக்கிறார்*.

வ்யாஸ பூஜையில் விசேஷ ஸ்தானம் கொடுத்துப் பூஜிக்கப்படுபவர்களில் ஸர்வஜ்ஞாத்மர் ஒருவர். ஐந்து ஐந்து ஆசார்யர்களாக ஆறு 'பஞ்சக'ங்களுக்கு அந்தப் பூஜையில் வழிபாடு நடத்தப்படுகிறது. அவற்றில் 'த்ரவிடாசார்ய பஞ்சகம்' என்பதில் 'ஸம்க்ஷேப சாரீரகாசார்யர்' என்று பெயர் கொடுத்து அவரைச் சேர்த்திருக்கிறது.

---

* "ப்ரமாண லக்ஷணம்" எனும் நூல்.

Koviloor Digital Library

'ஸர்வஜ்ஞாத்ம முனி' என்று அவரை மரியாதைகொடுத்துச் சொல்வது வழக்கம்.

ப்ருத்வீதவாசார்யாள் என்பவர் ஆசார்யாளுக்கு மூத்தவர். ஆசார்யாளுக்கு முந்தியும் பலர் ஸூத்ர'பாஷ்யம் எழுதி அவை வ்யாஸருடைய வேதாந்தமான அபிப்ராயத்துக்கு மாறாக இருந்ததாலேயே அப்புறம் ஸரியான பாஷ்யம் நம் ஆசார்யாள் செய்ததாகப் பார்த்தோமல்லவா? இந்த பாஷ்யங்களில் ஒன்று, அதாவது வேதாந்தத்தை அநுஸரிக்காதது, ப்ருத்வீதவர் பண்ணியதாகும். 'ப்ருத்வீதரர், அபிநவ குப்தர் முதலான 99 பேர்களின் பாஷ்யங்களை ஆசார்யாள் சின்னபின்னம் பண்ணி லோகத்தில் இல்லாதபடி ஆக்கிவிட்டார்' என்று 'தத்வ சந்த்ரிகா' என்ற புஸ்தகத்தில் இருக்கிறது*. அபிநவகுப்தர் தந்த்ர சாஸ்த்ரம், அலங்கார சாஸ்த்ரம் இரண்டிலும் மிகுந்த க்யாதி பெற்றவர். அவர் பேருக்கும் முந்தி, இவரைச் சொல்லி, 'ப்ருத்விதரர், அபிநவ குப்தர் முதலான' என்பதால் ப்ருத்வீதவாசார்யாளுடைய உசந்த ஸ்தானம் தெரிகிறது.

தம் பாஷ்யம் தோற்றுப் போனபின் அவர் ஆசார்யாளிடம் சரணாகதி பண்ணி சிஷ்யராயிருக்கிறாரென்று தெரிகிறது.

நூறு வருஷம் முந்தி ஒளஃப்ரெஷ்ட் (Aufrecht) என்று ஒரு வெள்ளைக்காரர் நம்முடைய பழைய ஏட்டுச் சுவடிகளுக்குக் 'காடலாக்'குகள் தயாரித்திருக்கிறார். அவற்றில் ஒன்று ஜெர்மனியில் லேப்ஸிக் யூனிவர்ஸிடியின் லைப்ரரியில் இருக்கிறது. இன்னொன்று இங்க்லாண்டில் ஆக்ஸ்ஃபோர்ட் யூனிவர்ஸிடிலுள்ள ப்ரஸித்தமான போட்லியன் லைப்ரரியில் இருக்கிறது. லேப்ஸிக் காடலாகில் "குரு பாதாதி நமஸ்காரம்" என்ற சுவடியைப் பற்றிச் சொல்லும்போது ஆசார்யாளின் சிஷ்யர்களான தோடகர், அநுபூதி

---

* உமாமஹேச்வர சாஸ்த்ரி என்பவர் எழுதியது.

Koviloor Digital Library

ஸ்வரூபாசார்யார் ஆகியவர்களுடன், ப்ருத்வீதராசார்யார் பெயரையும் குறிப்பிட்டிருக்கிறது.

ஆக்ஸ்ஃபோர்ட் 'காடலாகி'லிருந்து நாம் அவர் செய்த முக்யமான கார்யமென்ன என்று தெரிந்து கொள்கிறோம். ப்ருத்வீதவர் (அல்லது, தரர்) எழுதியதாகப் புஸ்தகம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அவர் எழுதிய சாரீரக பாஷ்யத்தை ஆசார்யாள் நிராகரணம் பண்ணின பிறகு அவர் ஒன்றும் எழுதவில்லை போலிருக்கிறது. ஆனாலும் அவரால் ஆசார்யாளின் மஹத்தான கார்யம் ஒன்று நடந்திருக்கிறது. அதை இந்தக் 'காடலாகி'லிருந்து தெரிந்து கொள்கிறோம். அதில் 'த்வாதச மஹா வாக்ய விவரணம்' என்ற ஏட்டுச் சுவடியைப் பற்றி விவரம் தரும்போது இந்த விஷயம் தெரிகிறது. அந்தப் புஸ்தகம் வைகுண்டபுரி என்பவர் எழுதியது. என்ன சொல்லியிருக்கிறாரென்றால்......

நம்முடைய வேதாந்த ஸம்ப்ரதாய ஸந்நியாஸிகள் தேசம் முழுதும் பரவியிருந்ததால் வகை தொகை பண்ணிப் பத்துப் பிரிவாக்கி வைத்து ஒரு ஒழுங்கில் நிர்வாஹம் செய்ய வேண்டுமென்று ஆசார்யாள் நினைத்தார். இதுவே 'தசநாமி' ஸந்நியாஸிகள் என்று சொல்வது. 'தஸ்நாமி', 'தஸ்நாமி' என்று வடக்கே சொல்கிறார்கள். ஒவ்வொரு பிரிவின் பெயரையும் அந்தப் பிரிவைச் சேர்ந்த ஸாது தன் பெயரோடு சேர்த்துப் போட்டுக் கொள்வார். 'தீர்த்த', 'ஆச்ரம', 'வன', 'அரண்ய', 'கிரி', 'பர்வத', 'ஸாகர', 'ஸரஸ்வதி', 'பாரதி', 'புரி' என்று பத்து. இந்தப் பத்துப் பிரிவு ஸந்நியாஸிகளும் ப்ருத்வீதரரின் சிஷ்யர்கள் : "ப்ருத்வீதராசார்ய : தஸ்யாபி சிஷ்யா தச" என்று வைகுண்டபுரி சொல்கிறார்.

இதற்கு என்ன அர்த்தம்? ஆசார்யாள் ஒழுங்குமுறை பண்ணிய தசநாமி ஸந்நியாஸிகள் அவ்வளவு பிரிவினரும் ப்ருத்வீதவருக்கு சிஷ்யர்களென்றால் என்ன அர்த்தம்? ஸந்நியாஸிகளைப் பல பிரிவுகளாக ஒழுங்கு பண்ணி

Koviloor Digital Library

வைத்தால் நல்லது என்று ஆசார்யாள் நினைத்த உத்தேசத்தைச் செய்து காட்டியவர் இவர் என்று அர்த்தம்! தேசம் முழுதிலும் இப்படி அந்த ஸந்நியாஸிகளைப் பிரித்து, ஸித்தாந்தம், ஸாதனை எல்லாம் ஒன்றேதான் ஆனாலும் வெளி அடையாளங்களில் வித்யாஸங்கள் வைத்துப் பிரித்து —தண்டத்தில் துணியை எப்படி முடிந்திருக்கிறது என்பதைப் பார்த்தேகூட இவர் இன்ன பிரிவு என்று கண்டுபிடிக்கும்படி வைத்து—ஆர்கனைஸ் செய்தவர் ப்ருத்வீதராசார்யாள்தான் என்று அர்த்தம். இதில் வெள்ளை வேஷ்டிக்காரர்கள்கூட உண்டு. ஒரே ஆண்டிக் கூட்டம் என்றால் சேர்த்து வைத்து நிர்வஹிக்க முடியாமல் போய்விடும். ஆகையினால் ஒரு ஒழுங்கு முறையில் பிரித்து அதை சுத்தமாக இருக்கும்படி ரக்ஷித்து இப்படிச் செய்தது.

பெரிய கார்யம். இன்றளவும் தழைத்து வந்திருக்கும் படியாக அதை ஸாதித்தவரென்றால் ரொம்பவும் நிர்வாஹத் திறமையுள்ளவரென்று அர்த்தம். மற்றவர்கள் எழுத்துத் திறமையால் அத்வைதத்துக்குத் தொண்டு செய்தார் களென்றால் இவர் 'ஆர்கனைஸேஷன் ஸைடி'ல் இப்படி மஹத்தான தொண்டு செய்து நம்முடைய நமஸ்காரத் துக்குப் பாத்ரராயிருக்கிறார்.

ஆசார்யாள் எந்த மடத்தில் எந்த சிஷ்யரை வைத்தா ரென்பதுபற்றி இரண்டு மூன்று நம்பிக்கைகள் இருப்பதில் ஒன்றின்படி ப்ருத்வீதவர் ச்ருங்கேரியில் பீடாதிபதிகளாக இருந்திருக்கிறார். ஜெர்மனி யூனிவர்ஸிடியிலுள்ள 'காடலாக்' சொன்னேனே, அதில் "ச்ருங்கேரி ப்ருத்வீதரா சார்ய" என்றே இருக்கிறது.

'ப்ருத்வீதர பாரதி' என்று அவர் பெயர் குறிப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். தசநாமிகளில் 'பாரதி' என்பது ச்ருங்கேரியில் ஸ்வாமிகளாக வருபவர்களுக்கு உரியது. 'தீர்த்த' ஸம்ப்ரதாயஸ்தர்களும் அங்கே ஸ்வாமிகளாக

Koviloor Digital Library

வருவதுண்டு. இப்போது இருப்பவர் தீர்த்தர்*. தசநாமங்களும் அந்த மடத்துக்கு உண்டு என்கிறுர்கள். ப்ருத்வீதவரின் சிஷ்யர்களாக தசநாமிகள் எல்லாரையும் சொல்லியிருப்பதாகப் பார்த்தோம்.

அதிசயம் சாதித்த அமோக திக்விஜயம் : ஆன்மிய ஐக்கியமும் தேசிய ஐக்கியமும்

இப்படிப்பட்ட சிஷ்யர்கள் ஆறுயிரம் பேரோடு ஆசார்யாள் தேசம் முழுதும் திக்விஜயம் செய்தார். திக்விஜயம் என்றுல் அதுதான் திக்விஜயம்! ஞானராஜா பரதகண்டத்தின் 56 தேசங்களிலேயும் பரமதங்கள் அத்தனையையும் ஜயித்து ஸநாதன வேத தர்மத்துக்கும், அதில் குறிப்பாக அத்வைதத்துக்கும் வெற்றிக் கொடி நாட்டிய திக்விஜயம்! எவரையும் சாக அடிக்காமல், அமரமாக ஆக்குகிற வாதச் சண்டையினுலேயே தேசத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலுமுள்ள பர ஸமயவாதிகளை ஜயித்த ஆசார்யாளைப் போல ஜயசாலி லோக சரித்ரத்திலேயே இல்லை! அதனுல்தான் "ஜய ஜய சங்கர" என்றே கோஷிப்பதாக, அதுவே அவருக்கு மந்த்ரம் மாதிரியாக இருப்பது.

வாதச் சண்டை என்றுகூடப் போடாமல் தர்சன மாத்திரத்தாலேயே பெரும்பாலானவரை ஆகர்ஷித்து வேத வழியில் செலுத்தினுர்.

லக்ஷ்யம் ஜீவாத்மாவைப் பரமாத்வுடன் ஐக்யப்படுத்துவது. அது உடனே நடக்கிற கார்யமில்லை. ஸம்ஸ்கார நிவ்ருத்தி, வாஸனுக்ஷயம் ஏற்பட எவ்வளவோ காலம் பிடிக்கும். உடனே நடக்காவிட்டாலும் அதற்

---

* தற்போது 'மஹாஸந்நிதானம்' எனப்படும் மூத்த ஸ்வாமிகளாக விளங்கும் ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகள் இளைய பட்டம் நியமிக்குமுன். 1963-ல், கூறியது

Koviloor Digital Library

கானதை உடனே ஆரம்பித்து விடவேண்டும். தள்ளிப் போடப் போட அழுக்கு தடித்துக்கொண்டே போகும். அப்படி நல்லதை ஆரம்பிக்கும்படி அத்தனை கோடிப் பேரை யும் ஆசார்யாள் திருப்பிவிட்டார்!

இது அவதார லக்ஷ்யத்தைப் பற்றிய விஷயம். லக்ஷ்யம் ஜீவ-ப்ரஹ்ம ஐக்யம். அப்படிப் பண்ணும்போதே என்ன ஆயிற்று என்ருல், தேசத்தின் ஜனஸமூஹம் அத்தனையும் 'ஆடோமாடிக்'காக ஐக்யமாகிவிட்டது! வேறே வேறே மதம், ஸித்தாந்தம், உபாஸனை என்று 72 இருந்ததென்ருல் ஜனங் களும் 72 பிரிவாகப் பிளந்து போயிருந்தார்கள் என்றுதான் அர்த்தம். அத்தனை பேருக்கும் ஒரே வழி என்று ஸநாதன தர்மத்திற்கு ஆசார்யாள் திருப்பிவிட்டவுடன் பிளவெல் லாம் ஒட்டிக்கொண்டு ஜனஸமூஹம் முழுக்க ஒன்று சேர்ந்துவிட்டது! 'ஒருமைப்பாடு', 'ஒருமைப்பாடு' என்று இப்போது ஸதா கேட்கிருேமே, (கேட்பதுதான் மிச்சமா யிருக்கிறது!) அதை நிஜமாக ஸாதித்துக் கொடுத்தவர் ஆசார்யாள்தான். தனி மநுஷ்யர், ஆண்டி இப்படிப் பண்ணிஞர்—ராஜ ஸஹாயம் எதுவுமில்லாமல் பண்ணிஞர் —என்று தற்கால சரித்ராசிரியர்கள், மற்ற ஸ்காலர்கள்கூட ஆச்சர்யப்பட்டுப் புகழ்கிருர்கள். புத்தரிடமே அதிக அபிமானமுள்ள நேரு மாதிரியானவர்கள்கூட புத்தி பலத்தினுலேயே ஒரு பூஞ்சை ப்ராம்மண ஸந்நியாஸி என்ன ஸாதனை ஸாதித்துவிட்டாரென்று சொல்லி, National Integrator (தேச ஒருமைப்பாட்டுச் சிற்பி) என்று வாயார ஸ்தோத்ரம் செய்கிருர்கள். நேரு சொல்கிறபோது,* "ராஜாக்கள், ராஜவம்சங்கள் கதையெல்லாம் சொன்னேன். ஆனுல் அத்தனை ராஜாக்கள், சக்ரவர்த்திகளும் செய்ததைவிட இந்த தக்ஷிண தேசத்துப் பிள்ளையாண்டான் ஒருவரே இந்த தேச வாழ்க்கைக்கு நிறையப் பண்ணிவிட்டார்! இதில் என்ன பெரிய ஆச்சர்யமாயிருக்கிற

---

* "நேருவின் Glimpses of World History"

Koviloor Digital Library

தென்றால் அவர் உணர்ச்சிக்கு இடம் கொடுக்காமல் புத்தி ரீதியாகவே போயுங்கூட ஏதோ ப்ராம்மணர்களை, பண்டிதர்களைத்தான் கவர்ந்தாரென்றில்லாமல் ஸாமான்யப் பொதுஜனங்களையும் ஆகர்ஷித்திருப்பதுதான்'' என்கிறார்.

இப்படி அவர் சொல்கிறதில் முழு உண்மையும் இல்லை. புத்தர் மாதிரி ப்ரேமை இல்லாமல் புத்தி வழியிலேயே போயும் ஸர்வஜனங்களையும் ஆசார்யாள் எப்படி வசீகரித்தாரென்று ஆச்சர்யப்படுகிற மாதிரி இருக்கிறது. ஃபிலாஸஃபி என்கிறபோது உணர்ச்சிக்கு இடமே கொடுக்காமல் ச்ருதி-யுக்தி-அநுபவம் என்றேதான் அவர் போனது வாஸ்தவம். ஆனால் பொது ஜனங்களுக்கு அப்படிப்பட்ட அத்வைதத்தை அவர் விதிக்கவில்லை. கோவிலைக் காட்டி, ஸ்வாமியைக் காட்டி, வழிபாட்டு முறைகளை ப்ரேமை நிறைந்ததாக ஆக்கிக்கொடுத்து—அதாவது பக்தியினால்தான்—ஒன்று பண்ணினார். இங்கே உணர்ச்சிக்கு 'நிறைய இடம் கொடுத்தே பண்ணினார். அவருடைய பக்தி ஸ்தோத்ரங்களைப் பார்த்தால் தெரியும்.

அதோடு அவரே பரம ப்ரேம மூர்த்தியாக இருந்ததாலேயே அத்தனை ஜனங்களும் சரணத்தில் வந்து விழுந்தார்கள். "கருணாலயம்" என்றே அவரைச் சொல்வது. 'வறட்டு வேதாந்தி' என்று அவரை நினைத்தால் அடியோடு தப்பு. ப்ரேமையில் நனைந்து ஊறியவராகவே இருந்தார். அவருடைய சரித்ர புஸ்தகங்கள், நேர் சிஷ்யர்களின் வாக்கு ஆகியவற்றைப் பார்த்தால் தெரியும்.

நேருவே இதைப் புரிந்துகொண்ட மாதிரியும் இன்னொரு புஸ்தகத்தில்* சொல்கிறார். புத்தி வாதம் மட்டும் பண்ணிய ஃபிலாஸஃபராக அவரை முடித்து விடாமல், "தத்வ வாதி, அநுபவி (mystic என்பது), கவி எல்லாமாயிருந்தவர். இதெல்லாவற்றோடும் உலகத்தோடு ஒட்டாமல் எங்கேயோ

---

* "Discovery of India"

Koviloor Digital Library

நிற்காமல் நடைமுறையில் எப்படிச் சீர் பண்ணுவது என்று காச்ய ரூபத்திலேயே ஸ்தாபன ரீதியில் ஆர்கனைஸ் பண்ணிக் ஸ்டியதிகாட் சதுரராக இருந்தவர்'' என்று அங்கே சொல்கிறார்.

மடங்கள் என்று வைத்து மதத்தை சாச்வதமாகக் காப்பாற்ற அவர் ஏற்பாடு செய்ததைத்தான் ஆர்கனைஸிங் ஸாமர்த்தியம் என்கிறார். ஆசார்யாளுக்கு முன்பு ஹிந்து மதத்தில் அப்படியில்லை. தனி மநுஷ்யர்களின் தபோசக்தியிலேயே மதம் வ்ருத்தியானதுதான்.*

நேருவைச் சொல்வதற்குக் காரணம் அவரை நிச்சயம் எங்கள் மாதிரி வைதிகக் குடுக்கை என்றோ, ஆசார்யாள் தான் ஸகலமும் என்று முடிவாக வைத்துவிட்டவர் என்றோ சொல்ல முடியாது என்பதுதான்.

வாய்ப் பந்தல் போடுவதாலோ, அரசியல், பொருளாதாரம், ஸமூஹ சீர்திருத்தம் என்பவற்றாலோ தேசிய ஒருமைப்பாடு ஏற்படவே ஏற்படாது. எல்லாரும் ஈசன் குழந்தைகள் என்ற பக்தியினால்தான் ஒன்று சேர்க்க முடியும். அதற்கும் மேலே, எல்லாரும் ஈசனே என்னும் ஞானம். இவற்றினால்தான் ஆசார்யாள் ஐக்யப்படுத்தியது. அந்த ஞானத்துக்கும் பக்திக்கும் அவரே ரூபமாயிருந்ததால்தான் அத்தனை சக்தியோடு பண்ணமுடிந்தது.

பக்தி, ஞானம் என்றால் ஜன ஸமூஹத்துக்குப் போதுமா? கார்யங்களைப் பண்ணி ஜீவ யாத்ரை நடத்துவதுதானே அவர்களுக்கு முக்யம்? இங்கே வர்ணாச்ரம வழு இல்லாமலே நடக்கும்படியாக ஆசார்யாள் செய்தார்...

அவர் பண்ணியது, இப்போது ஒன்றுமே பண்ண முடியாமல் அவர் பெயரை வைத்துக்கொண்டு புகழ்மாலை

---

* இவ்விஷயமாக ஸ்ரீ சரணர்களின் ஸாரமிக்க கருத்துகளை ''தெய்வத்தின் குரல்''—நான்காம் பகுதியில், ''குருகுலம்; கடிகா ஸ்தானம்'' என்ற உரையில், ''ஸ்தாபனம்: 'அவச்யத் தீமை'க்கு ஆசார்யாள் பணி'' என்ற பிரிவில் பார்க்கவும்.

Koviloor Digital Library

யும் பாராட்டு விழாவும் பெறுவது இரண்டையும் நினைத்துப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமாக இருக்கிறது.

இப்போது, கூட 6000 சிஷ்யர்கள் இல்லை. மடத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். ஆனாலும் எந்த ஊரில் நன்றாக பிக்ஷை நடக்கும் என்று பார்த்தே போவதாயிருக்கிறது! 'ஏதோ ஒரு சக்தி நடத்துகிறது; தர்மத்தைச் சொல்லிக்கொண்டு போ என்று எது இப்படி உட்கார்த்தி வைத்திருக்கிறதோ அதுவே எங்கே நம் கார்யத்துக்குத் தேவையிருக்கிறதோ அங்கே போனாலும் நடத்திக் கொடுக்கும்; அதனால் நம் தேவைக்கு யார் கொண்டு வந்து கொட்டுவார்கள் என்று பார்த்துக்கொண்டு போக வேண்டாம்' என்ற ஞானம் எப்போதாவது கொஞ்சம் வருவதோடு ஸரி! இப்படி லாப—நஷ்டக் கணக்குப் போட்டுக் கொண்டா ஆசார்யாள் ஒரு இடம் பாக்கியில்லாமல் தேசம் பூரா போனார்? ஒரு தரத்துக்கு மூன்று தரம் போனார்?

பாராட்டு விழா ப்ரஸங்கிகளும், பத்ரிகையாளர்களும், "க்ருத யுகத்தையே கொண்டு வந்துவிட்டாராக்கும், அதுவாக்கும், இதுவாக்கும்" என்று சொன்னாலும், வாஸ்தவத்தில் நாளுக்கு நாள் தர்மங்களைப் பறிகொடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறது. ஐம்பது, நாற்பது, முப்பது வருஷம் முன்னாலிருந்த ஆசாரங்கள்கூட இப்போது பூதக் கண்ணாடி வைத்துத் தேடும்படி இருக்கிறது! நம் பிழைப்பு நடந்தால் போதுமென்று, "சிகை இல்லையா, ஸரி", "மடிசார் இல்லையா அதுவும் ஸரி!", "ஸூட் போட்டுண்டு வந்தாலும் பரவாயில்லை—இன்னம் நாமே போட்டுக்கலையோன்னோ?" என்று எல்லாரிடமும் நல்ல பெயர் வாங்கிக்கொண்டு, broad-minded, catholic என்றெல்லாம் நிறையப் புகழ் மாலைகள் போட்டுக்கொண்டு—இப்படியா அவர் இருந்தார்? தாமும் சாஸ்த்ர விதி எதையும் விடாமல், அதோடு மாத்ரமில்லாமல், அசாஸ்த்ரீயமாகப் போயிருந்த அத்தனை ஜன ஸமூஹத்தையும் விதி ப்ரகாரமே பண்ணும்படி செய்திருக்

Koviloor Digital Library

கிருர். எங்கே பிக்ஷை நடக்கும், எங்கே ஏமாந்துபோய் நம்மைப் பூஜைபண்ணுவார்கள் என்று பார்த்துப் போகாமல், எங்கெங்கே சாஸ்த்ரத்துக்கு விரோதமானவர்கள் பலமாக இருந்தார்களோ, தம்மைப் பரம சத்ருவாக நினைத்து பலி கொடுக்கவும் ஆபிசாரம் பண்ணவுங்கூடத் தயாரானவர்கள் இருந்தார்களோ, அங்கேயெல்லாமே தேடித் தேடி ஒரு மலை, காடு விடாமல் காலால் நடந்துபோய், சத்ருக்களை யெல்லாம் மித்ரர்களாக்கி, பக்தர்களாக்கி, சிஷ்யர்களாக்கி நம்முடைய மதத்தைப் பூர்ணமாக சாஸ்த்ரப்படி இந்த பரதகண்டம் முழுதிலும் நிலை நாட்டியிருக்கிருர். தத்-த்வாரா (அதன் வழியாகவே) ஜன ஸமூஹம் முழுதையும் ஒரு குடும்பமாக்கி தேசிய ஐக்யத்தை ஏற்படுத்தியிருக்கிருர்.

வாதமும், ஞான ப்ரசாரமும் அறிவாளிகள் என்கப்பட்ட வர்களுக்கு. ஆனுல் வித்வத் ஸமூஹம் ஒன்றை ஒப்புக் கொண்டால் எல்லாருமே அதை ஏற்றுக்கொண்டு விடுவார் கள் என்கிற ரீதியில், தேசத்தின் ஒவ்வொரு சீமையிலும் வித்வான்களையெல்லாம் ஆசார்யாள் தம்முடைய வழி என்ற ஸதாதன வழிக்குக் கொண்டு வந்ததால் மற்ற ஜனங்களும் அவரையே குருவாகக் கொண்டார்கள். ஆனுல் இப்படி 'இன்டைரக்டாக' மட்டும் அவருடைய பொது ஜனப் பணி முடிந்துவிடவில்லை. பொதுமக்களை அவரே நேராக எப்படி நல்லதில் திருப்பினுர் என்ருல் கோவில்கள், பூஜை, ஸ்தோத்ரம் முதலியவற்ருல்தான். க்ரூரமான உபாஸனைகள் —க்ரூரமாக இன்னெரு உயிரை பலி தருவது மட்டுமில்லை; தன்னையே சுட்டு வருத்திக்கொண்டு முத்ரை போட்டுக் கொள்வது போன்றவையுந்தான்—இம்மாதிரி வழிகளை ஜனங்கள் கைவிடப் பண்ணி அன்போடு வழிபாடுகள் நடக்கச் செய்தார்.

உக்ர தெய்வங்களை சாந்தமாக்கியது

க்ரூரத்தை விட்டு சாந்தமாகும்படி ஜனங்களைப் பண்ணினுர் என்பது மாத்ரமில்லை; தெய்வங்களையுமே உக்ர

Koviloor Digital Library

பாவத்தை விட்டு ஸௌம்யமாக இருக்கப் பண்ணினார். அந்தக் காலத்தில் என்ன ஆயிருந்ததென்றால்: அங்கங்கே ஸாந்நித்யமாகியிருந்த தெய்வ சக்திகளில் சிலதே, 'இப்படி ஜனங்கள் அநாதிகாலமாக இருந்து வந்திருக்கும் தர்ம வழிகளை விட்டுவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு தப்பில் போக ஆரம்பித்துவிட்டார்களே!' என்று கோபம் கொண்டிருந்தன. தப்புக்குத் தண்டிக்கவும் வேண்டியதுதானே? அதனால் சில மஹா க்ஷேத்ரங்களில்கூட, அன்புக்கே உருவமான தாய்த் தெய்வமான அம்பாள் மூர்த்தங்களே கூட, உக்ர கலைகளோடு இருக்க ஆரம்பித்தன. அப்போது க்ரூரமான உபாஸனைக்காரர்கள் அந்த ஆலயங்களைக் கைப்பற்றி தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்தார்கள்.

இங்கேயெல்லாம் அந்தப் பூஞ்சை ப்ராம்மண ஆண்டி போனார். அவருடைய மஹிமை தெரியவேண்டும் என்றே தான் ஒரு வேளை அந்தத் தெய்வங்கள் உக்ரம் மாதிரி இருந்துகொண்டிருந்தனவோ என்னவோ? அவரானால், 'தன் மஹிமை என்று எதுவும் தெரியவேண்டாம்! மந்த்ர சாஸ்த்ர மஹிமை லோகத்துக்குத் தெரியட்டும்' என்று நினைத்து, அந்த இடங்களிலெல்லாம் மந்த்ர பூர்வமாக யந்த்ர ப்ரதிஷ்டை செய்து உக்ர கலைகளை சமனம் பண்ணி, அந்த மூர்த்திகளை ஸௌம்யமாக்கி விடுவார்! இப்படி அநேக இடங்களில் பண்ணியிருக்கிறார்.

காஞ்சிபுரத்தில் காமாக்ஷியே உக்ரம் மாதிரி இருந்த போது அவளுக்கு எதிரே ஸ்ரீசக்ரம் ஸ்தாபித்து அவளை ஸௌம்ய மூர்த்தியாக்கி இருக்கிறார். அவளுக்குப் பக்கத் துணையாக எட்டு காளிகள் எட்டு திசையிலும் போய் பலி வாங்குவார்கள். அந்த எட்டுப் பேரையும் அந்த ஸ்ரீயந்திரத் தின் எல்லைச் சுற்றிலேயே அடக்கிப் போட்டார்! அதனால் இன்றைக்கும் பரப்ரஹ்ம சக்தி என்று சொல்லப்படும் ஸாக்ஷாத் காமாக்ஷியின் உத்ஸவ மூர்த்தி புறப்பாடு செய்யும் போது ஆசார்யாள் ஸந்நிதிக்கு முன்னால் ஒரு நிமிஷம் நின்று

Koviloor Digital Library

அவரிடம் 'பெர்மிஷன்' வாங்கிக் கொண்டுதான் வெளியே போவது!

ஜம்புகேச்வரத்தில் (திருவானைக்காவில்) அகிலாண்டேச்வரியின் உக்ர கலைகளை சக்ர ரூபமான தாடங்கங்களில் அடக்கி அவளுக்கே கர்ண பூஷணமாகச் சார்த்தி அலங்காரம் செய்துவிட்டார்.

கொல்லூரில் மூகாம்பிகை, அஸ்ஸாமில் காமாக்யா என்றிப்படிப் பல கதைகள் இருக்கின்றன. காமாக்யா விஷயமாக ஜனங்களின் மனஸு நுட்பம் தெரிந்து என்ன செய்தாரென்றால்: 'காட்டு வாஸிகளாக, மலை வாஸிகளாக இருக்கிற இவர்களுக்கு ஒரே ஸௌம்யமாக ஆராதனையைச் சொன்னால் ஏற்காது. இவளை அடியோடு விட்டுவிட்டு வேறே பிம்பம் வைத்துக்கொண்டு பழைய க்ரூர உபாஸனையையே தொடருவார்கள்' என்று நினைத்தார். அதோடுகூட லோக மென்றால் நல்லதோடு கெட்டதும் சேர்ந்து இருக்கும்தானே? அப்படி உக்ர சக்திகளும் உண்டுதான். அவற்றையும் கொஞ்சம் ப்ரீதிப் படுத்த வேண்டியதுதான் என்று நினைத்தார். அதனால் ரொம்பவும் க்ரூரமாகவும், அப்பட்ட வாமாசாரமாகவும் இருந்த உபாஸனையை அங்கே ஓரளவு அப்படி இருந்துவிட்டுப் போகட்டும் என்று தணித்துக் கொடுத்தார்.

மெட்ராஸ் திருவொற்றியூரில்கூட த்ரிபுரஸுந்தரியாக (வடிவுடையம்மனாக) அம்பாளை ஸௌம்யமாக்கியது ஆசார்யாள்தான். இங்கே உக்ர சக்தியைக் கிணற்றில் அடக்கினார். வருஷத்தில் ஒரு நாள் அதற்கும் பூஜை பண்ணும்படி ஏற்பாடு செய்தார். (வட்டப்பாறையம்மன் ஸந்நிதி அதுதான்.)

ஆசார்யாள் எல்லா ஆலயங்களுக்கும் க்ஷேத்ராடனம் செய்தவர்தான் என்றாலும் இம்மாதிரி அவருடைய விசேஷ ஸம்பந்தமுள்ள ஸந்நிதிகளில் 'வைதிக' பூஜையே நடக்கும். அதாவது, வேதத்திற்கு விரோதமில்லாவிட்டாலும் வேதத்

Koviloor Digital Library

தில் சொல்லாததாக அநேகம் உள்ள 'ஆகம' பூஜையா யில்லாமல், வேத அடிப்படை பூர்ணமாக உள்ளதான பூஜை முறை நடக்கும். பூஜகர்களும் ஆதி சைவர்கள் (குருக்கள்) முதலான ஆகம தீக்ஷைக்காரர்களாக இல்லாமல் வைதிக தீக்ஷை பெற்ற ஸ்மார்த்த ப்ராம்மணர்களாக இருப்பார்கள்.

ஆசாரங்களைக் காப்பதில் ரொம்பவும் தீவ்ரமானவர்கள் நம்பூதிரிமார்களே ஆதலால் சில இடங்களில் அவர்களையே பரம்பரைப் பூஜகர்களாக ஆசார்யாள் நியமித்து இன்றைக்கும் அப்படியே நடந்து வருகிறது. திருவொற்றி யூரிலேயே நம்பூதிரி உண்டு. ஹிமய மலையில் பதரி நாராயணர் ஆலயத்தில் 'ராவல்' என்று ராஜ மரியாதையுடன் நடத்தப்படும் பூஜகரும் நம்பூதிரிதான்.

உக்ர சமனத்துக்காகத்தான் என்றில்லாமல், பொது வாகவே மங்கிக் கிடந்த ஸாந்நித்யம் புது சக்தியுடன் ப்ரகாசிப்பதற்காக அநேக க்ஷேத்ரங்களில்.யந்த்ர ஸ்தாபனம் செய்திருக்கிறுர்.

குருவாயூரப்பன் ஆலயம் உள்பட பல க்ஷேத்ரங்களில் பூஜா க்ரமம் முழுக்கவே ஆசார்யாள் வகுத்துக் கொடுத்த முறையில்தான் நடக்கிறது.

தெய்வ பேதம் நீக்கியது; 'பஞ்சாயதன' மூர்த்திகள்

இன்னொன்று விசேஷமாக அவர் பண்ணியது:- எத்தனையோ மஹான்கள், மஹாபக்தர்கள் இஷ்ட தெய்வம் என்று ஏதாவது ஒன்றைத்தான் ஸ்தோத்ரித்திருப்பார்கள்; அதன் உபாஸனையைத்தான் பரப்பியிருப்பார்கள். நம் முடைய ஆசார்யாள்தான் அத்தனை தெய்வங்களையும் ஸ்தோத்ரித்து, அத்தனை தெய்வங்களின் வழிபாட்டுக்கும் 'ப்ரபஞ்ச ஸார தந்த்ரம்' என்ற நூலில் வழிமுறைகளை விளக்கினுர். அந்த ஞானிதான் இப்படியெல்லாம் பக்திக்கும் புது எழுச்சியைத் தந்தவர். குறிப்பாக ஈச்வரன், அம்பாள்

Koviloor Digital Library

விஷ்ணு, ஸூர்யன், விக்நேச்வரர், ஸுப்ரஹ்மண்யர் என்ற ஆறு தெய்வங்களின் வழிபாட்டை ப்ரகாசப்படுத்தி நிலை நிறுத்தி ஷண்மத ஸ்தாபனாசார்யாள் என்று பெயர் பெற்றார்.

தம்முடைய வழியையே முழுக்க அநுஸரிப்பவர்களான ஸ்மார்த்தர்கள் என்பவர்கள் தெய்வ பேதம் பாராட்டாத ஸமரஸ பாவனை பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்று நினைத்தார். நினைத்து, ஈச்வரன், அம்பாள், விஷ்ணு, விக்நேச்வரர், ஸூர்யன் ஆகிய ஐந்து ஸ்வாமிகளையுமே 'பஞ்சாயதனம்' என்பதாக வைத்து அவர்கள் பூஜிக்க வேண்டுமென்று விதித்தார். 'மார்க்கண்டேய ஸம்ஹிதை' யிலேயே இவ்விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது.*

இந்த ஐந்தில் எந்த ஒரு ஸ்வாமி இஷ்ட தெய்வமோ அதை நடுவில் வைத்து மற்ற நாலை நாலு மூலைகளில் வைக்க வேண்டும். எது மத்தியிலிருந்தால் எதெது எந்த மூலையில் என்பதற்கு விதி உண்டு. இப்படி எந்த ஸ்வாமியையும் வைக்க லாமாயினும் தம்முடைய மடங்களில் சந்த்ரமௌளீச்வரன் என்ற ஈச்வரனை நடுவில் வைத்துப் பூஜை நடக்கச் செய்திருக் கிறார். அம்பாள் த்ரிபுரஸுந்தரியை மூலையாக இல்லாமல், பக்கமாக 'ஸம ப்ராதான்யம்' கொடுத்து வைத்து இங்கே பூஜை.

தெய்வ பேதம் பார்க்காதவர் குறிப்பாக ஈச்வரனை ஏன் நடுவில் வைத்தார்? எனக்கு ஒன்று தோன்றுகிறது....இந்த ஐந்து ஸ்வாமிக்கும் கண், காது, மூக்கு வைத்து நாம் பிம்பம் அடிக்கணும் என்றில்லாமல் இயற்கையில் கிடைக்கும் ஐந்து வகைக் கல்லுகளையே விசேஷ மூர்த்திகளாகச் சொல்லி யிருக்கிறது. இவற்றில் விஷ்ணு மூர்த்தமான ஸாளக்ராமம் நேபாளத்தில் கண்டகி நதியில் கிடைப்பது. அம்பாள்

---

* 72-வது கண்டம், 7-வது பரிஸ்பந்தம், 27-வது ச்லோகம். ("........, பஞ்சாயதனார்ச்சனம் ப்ரகர்த்தவ்யம்")

Koviloor Digital Library

மூர்த்தமான ஸ்வர்ண ரேகா சிலா, அதாவது தங்க 'ரேக்' ஓடும் கல்லு, தெலுங்கு தேசத்தில் மைக்கா சுரங்கங்கள் இருக்கும் கூடூர் பகுதிகளில் ஸ்வர்ணமுகி (பொன் முகலி) ஆற்றங்கரையில் கிடைப்பது. பிள்ளையார் மூர்த்தமான சோண பத்ரம் என்ற சிவப்புக் கல் ஸோன் நதியில் கிடைப்பது. 'துங்கபத்ரா' மாதிரி ஸோனுக்குப் பேரே 'சோணபத்ரா' தான். அது பாட்னுவுக்கு இருபது மைல் மேற்கே கங்கையில் கலக்கிறது. அதன் கரையிலுள்ள கோயில்கார் என்ற க்ஷேத்ரத்திற்குப் போயிருந்தபோது* நானே ஆற்றில் முழுகி நிறைய சோணபத்ரம் எடுத்திருக் கிறேன். ஸூர்ய மூர்த்தம்தான் ஸ்படிகம். தஞ்சாவூர் கலெக்டர் ஆபிஸ் உள்ள வல்லத்தில் யாரும் வெட்டாமல் இயற்கையாக அமைந்துள்ள ஏரியில் இந்த ஸ்படிகம் கிடைக்கிறது.

ஐந்தில் பாக்கி எது என்றால் ஈச்வர மூர்த்தியான பாணம் என்னும் இயற்கையான லிங்கம். அது எங்கே கிடைக்கிறதென்றால் நர்மதையில். அந்த நர்மதைதான் தேச மத்தியில் ஓடுகிறது. அதாவது, லோகத்துக்கே ஹ்ருதயமாகவுள்ள பாரத தேசத்தின் நடு மையத்தில் ஈச்வரன்தான் தாமே இயற்கையாக எழுந்தருளியிருக்கிறார்! அதனால், லோகம் முழுவதன் க்ஷேமத்துக்காகவும் மடத்தில் பூஜை நடக்கும்போது மத்ய மூர்த்தியாக ஈச்வரன்தான் இருக்க வேண்டுமென்று ஆசார்யாள் வைத்திருப்பார் போலிருக்கிறது!

ஆனால் நம்முடைய சந்த்ரமௌளீச்வரர் பாண லிங்கமில்லை; ஸ்படிகலிங்கம். ஏன் அப்படி என்று அப்புறம் கதை சொல்கிறேன்.

நாம் இந்தப் பஞ்சாயதன சிலாக்களை (கற்களை)ப் பூஜை யில் வைத்துவிட்டோமானால் நேபாளத்திலிருந்து தஞ்சாவூர்

* 1935 ஏப்ரல் மாதத்தில்,

Koviloor Digital Library

வரை, தேசம் முழுதையும் நம்மகத்துக்குள் ஒன்று சேர்த்து வைத்துவிட்ட மாதிரி!

தேச மத்தியில் குடிகொண்ட பரமேச்வரன் இந்த தேசம் முழுவதிலுமே நாலு திசைகளிலுமாக ஸோமநாத், ஸ்ரீசைலம், உஜ்ஜயினி, ஓம்கார் மந்தாதா (இது நர்மதா தீரத்திலேயே இருப்பது), பரலி, நாகேசம், காசி, பீமசங்கரம், ராமேச்வரம் (தமிழ் நாட்டுத் தெற்கோரத்தில் இருப்பது), த்ரயம்பக் (நாஸிக் கிட்டே), கேதார்நாத், குஸ்ருணேச்வர் (எல்லோரா) என்ற பன்னிரண்டு மஹாக்ஷேத்ரங்களில் ஜ்யோதிர் லிங்கமாக வ்யாபித்திருக்கிறான். ஆசார்யாள் அத்தனை இடத்துக்கும்போய், ஒவ்வொரு லிங்கத்திற்கும் ஒரு ச்லோகமாக "த்வாதச லிங்க ஸ்தோத்ரம்" என்று அநுக்ரஹித்திருக்கிறார்.

மொத்தத்தில் ஸகல ஜனங்களையும் பக்தியினால் 'அரன் குடி மக்களாக்கி' ஆசார்யாள் ஒன்று சேர்த்தார்.

ஆனந்தகிரீயத்தில் அவர் ஒவ்வொரு எதிர் ஸித்தாந்தியாக ஜயித்து வைதிக மதத்திற்குத் திருப்பினதைச் சொல்லும்போது பல இடங்களில் அவர்களை 'சுத்தாத்வைதி' (சுத்த அத்வைதி)களாக்கினாரென்று மட்டும் சொல்லாமல் (பஞ்சாயதன வழிபாடு செய்யும்) "பஞ்ச பூஜா பராயணர்" களாக்கினாரென்றும் இருக்கிறது.

அதோடு, 'நித்யகர்ம ஸக்தர்'களாக்கினார், 'ஸ்மார்த்த-ச்ரௌத-ஸகல கர்ம சீலர்'களாக ஆக்கினார்—அதாவது ச்ருதி-ஸ்ம்ருதிகளிலுள்ள ஸகல கர்மாநுஷ்டானமும் செய்ய வைத்தாரென்றும் இருக்கிறது. இப்படி கர்மா-பக்திகளின் மூலம் எல்லாரையும் ஞானத்துக்கு மெள்ள ஏற்றினார்.

ஸ்வதர்மப்படிக் கர்மா செய்வது, ப்ளஸ் பூஜை செய்வது என்று இரண்டு வைத்தது மட்டுமில்லை. ஸ்வதர்ம கர்மாவையே பூஜையாக ஈச்வரார்ப்பணம் பண்ணு என்றும் சொல்லியிருக்கிறார். 'ஸோபான பஞ்சக'த்தில், "கர்ம

Koviloor Digital Library

ஸ்வநுஷ்டியதாம்" என்று சொல்லி உடனேயே, "தேந"-"அந்தக் கர்மாநுஷ்டானத்தாலேயே", "ஈசஸ்ய விதீயதாம் அபசிதி:"-"ஈச்வரனுக்குப் பூஜை பண்ணப்பட்டதாகட்டும்" என்கிறார். இதுதான் அவனே பல தாதா என்று பல த்யாகம் பண்ணும் நிஷ்காம்ய கர்ம யோகம். இப்படிக் கர்ம மார்க்கிகளையும் ஆசார்யாள் பண்ண வைத்தார். அதிலிருந்துதான் எந்தக் கர்மா ஆரம்பத்திலும் "பரமேச்வர ப்ரீத்யர்த்தம்" என்றும், முடிவில் "ஜனார்தன: ப்ரீயதாம்" என்றும் சொல்வதாக ஏற்பட்டது. ஈச்வர ப்ரீதிக்கு ஆரம்பித்து, ஜனார்தன ப்ரீதிக்கு முடிப்பதில் சிவ-விஷ்ணு அத்வைதமும்!

அனைத்து மட்டத்தினருக்கும் ஆசார்யரான ஜகத்குரு

இப்படிக் கர்மா, பக்திகளையும் சொல்லி அவற்றின் மூலமே ஞானத்துக்குப் போகச் சொன்னவர் ஆசார்யாள். ஞானத்திற்காகவே கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகியவற்றையும் ஸ்தாபித்தவரவர்.

அத்வைத ஞானமார்க்க ஆசார்யர் என்று மட்டுமே அவரை முடித்துவிடும் பரவலான அபிப்ராயம் ஸரியில்லாத ஒன்றாகும். அத்வைதந்தான் முடிவான லக்ஷ்யம் என்று அவர் நிலைநாட்டி ஏராளமாக அதற்காகவே எழுதியிருப்பது வாஸ்தவந்தான். ஆனாலும் நிவ்ருத்தியில் போகக்கூடிய ஸ்வல்ப ஜனங்களுக்கே அது அநுஷ்டான ஸாத்யமானது. யாராயிருந்தாலும் அத்வைதந்தான் ஸத்யம் என்று அடிப்படையாக ஒரு உறுதி இருக்கணும், அவர்கள் ஸாதனையில் முன்னேறி முன்னேறி முடிவாக அடைய வேண்டியது அதுதான் என்பதால் பரம ஸத்யமான அத்வைத ஸ்தாபனத்தை ஆசார்யாள் முக்யமாகப் பண்ணினார். ஆனால் ஸகல ஜனங்களையும் உய்விக்க வந்த அவர் இப்படி ஸ்வல்பம் பேருக்கு வழிபோட்டுக் கொடுத்ததோடு முடிந்து போய் விடவில்லை,

Koviloor Digital Library

மற்ற ஃபிலாஸஃபர்களுக்கும் ஆசார்யாளுக்கும் முக்ய மான வித்யாஸமே என்னவென்றால் அவர்கள் உசந்த லெவலில் இருப்பவர்கள் அநுபவித்துத் தெரிந்து கொள்ளவே ஃபிலாஸஃபி சொன்னார்கள்; மற்றவர்களில் அறிவாளிகளாக இருக்கப்பட்டவர்கள் புத்தி விஷயமாக அந்த ஃபிலாஸ ஃபிகளை ஆராய்ந்து ஸந்தோஷப்படும்படிச் சொன்னார்கள்; மற்ற ஜனங்களுக்கு ப்ரயோஜனமாக அவர்கள் ஒன்றும் பண்ணவில்லை. தம்முடைய ஃபிலாஸஃபியைப் புரிந்து கொள்ளவே முடியாமல் அடி நிலையில் உள்ளவர்களிலிருந்து ஆரம்பித்து, அநுஷ்டானமாகச் செய்து பார்த்து முன்னேறு வதற்கு விஸ்தாரமாக ஸாதனா க்ரமம் போட்டுக்கொடுத்துக் கார்யம், feeling, புத்தி எல்லாவற்றைக் கொண்டும் அநுபவத்துக்கு இஞ்ச் இஞ்சாக ஏற்றிவிட்டவர் நம் ஆசார்யாள்தான். கர்மா, பக்திகளால் மனஸின் அழுக்கும் ஆட்டமும் போனபின் ஸாதன சதுஷ்டயங்களை அப்யஸித்து, அப்புறம் ச்ரவண — மனன — நிதித்யாஸனங்களால் ஸாக்ஷாத்காரம் பெறும்படியாக விரிவாக ஸாதனா க்ரமம் வகுத்துக் கொடுத்திருக்கிறார்.*

சில பேருக்கு மட்டும் ஃபிலாஸஃபி சொன்ன ஒருவராக நம் ஆசார்யாள் முடிந்து விடவில்லை. அவர் அத்தனை பேருக்குமானவர். அதனால்தான் 'ஜகத்குரு' என்று பெயர். அத்தனை லெவல்களிலுமுள்ள எல்லா ஜனங்களுக்கும், அவரவர் லெவலிலேயே ஆரம்பித்து, அவரவர் மனப் போக்குக்கு அநுகூலமான வழியிலேயே கொண்டு போய், படிப்படியாக அத்வைதத்தில் சேர்க்கும்படியாக ஸகல மார்க்கங்களையுமே ஸ்தாபித்தவர் அவர் என்பதுதான் அவரைப் பூர்ணமாகப் புரிந்துகொள்ளும் ஸரியான அறிவு. வேத சாஸ்திர அடிப்படையில் எல்லாவற்றையும் ஸ்தாபித்தார் என்பது அவருடைய விசேஷப் பெருமை.

---

* அத்வைத ஸாதனைக் கிரமத்தை விளக்கும் ஸ்ரீசரணர்களின் உரை அடுத்த வரவிருக்கும் நம் நூற்பகுதியில் வெளியாகும்.

Koviloor Digital Library

அத்வைதம் உள்ளிட்ட மதங்களின் ஸாராம்சம்

அத்வைதம் என்ன, மற்ற ஸித்தாந்தங்கள் என்ன என்று அப்பப்போ சொல்லிக்கொண்டு வந்தேன். "ஸம்-அப்" மாதிரி, சுருக்கமாகச் சொன்னால்:

'கண்ணாலே பார்த்து அநுபவிக்கிற ஜகத்துக்கு மேலாக எதுவும் கிடையாது; எதுவும் தெரிந்துகொள்ள முடியாது. உயிரோடு இருந்துகொண்டிருக்கும்வரை நீ பாட்டுக்கு ஒரு

கட்டுப்பாடும் இல்லாமல் இந்த்ரிய ஸௌக்யங்களை அநுபவித்துக் கொண்டிரு. சாவோடு உயிரும் 'க்ளோஸ்'. ஆத்மா, புனர் ஜன்மா, ஸ்வர்க்கம், மோக்ஷம் என்பதெல்லாம் புரளி' என்கிற சார்வாகம்தான் Agnosticism என்றும் Materialism என்றும் சொல்வது.

''மெடீரியல்', 'ஸ்பிரிசுவல்' என்கிற எல்லாமே ஆதாரமில்லாத கல்பனை ஓட்டந்தான். வாஸ்தவத்தில் எல்லாம் சூன்யந்தான்' என்கிறது பௌத்தம்—அதில் நாலு பிரிவு இருந்தாலும் முடிவில் எல்லாம் இந்த சூன்யத்தில் சேர்ப்பதுதான். அதைச் சொல்கிற பௌத்தம்—Nihilism.

ஜைனர்களும் அரை பௌத்தர்கள்தான்—'அர்த்த வைநாசிகர்' என்றே ஆசார்யாள் அவர்களைச் சொல்லியிருக்கிறார். எப்படியென்றால், பௌத்தர்கள், 'எதுவும் இல்லை, இல்லை' என்றால், இவர்கள் 'இருக்கவும் இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்' என்பதால். எதையும் தீர்மானிக்க முடியாது என்று அவர்கள் சொல்வது Scepticism. சரீரத்தை ஒரேயடியாகத் துன்புறுத்திக் கொண்டுதான் ஆத்மாவிலிருந்து கர்மாவை ஒட்டப் பிழிந்தெடுத்துத் தள்ள முடியுமென்று அவர்கள் சொல்வது Stoicism.

ஆத்ம விஷயமாகப் போகாமல், ஈச்வர பக்தியும் இல்லாமல், வேத கர்மாவைப் பண்ணியே ஸ்வர்கலோக ஸந்தோஷத்தை அடையச் சொல்லும் மீமாம்ஸையை

Koviloor Digital Library

[சிரித்து] "வைதிகமான Materialism" என்று சொல்ல லாமோ என்னவோ?

உயிரை எந்த குண- கர்மக் கலப்புமில்லாமல் தனியாகப் பிரித்துக் காட்டும் ஸாங்க்ய - யோக சாஸ்த்ரங்கள் Non-dualism என்று சொல்லப்படும் அத்வைதம் மாதிரி இருந்தாலும் இப்படி அநேக உயிர்கள் தனித்தனியாய் இருப்பதாகச் சொல்வதில் Dualism (த்வைதம்)-ஆகவும் வேடிக்கையாக இருக்கிறது!

தர்க்க சாஸ்த்ர அறிவாராய்ச்சியாகவே உள்ள ந்யாய-வைசேஷிகங்களை Intellectualism என்று சொல்லலாமோ என்னவோ?

இந்த எல்லா ஸித்தாந்தங்களுமே அறிவு வழியிலானவை தான். சார்வாகர்களும் புத்தியால் விசாரித்துத்தான் ஆத்மா இல்லை, ஸ்வாமி இல்லை, சாஸ்த்ரம் இல்லை என்கிறார் கள். இப்போதும் 'பகுத்தறிவுவாதிகள்' என்றே சொல்லிக் கொள்கிறார்களல்லவா?

பக்தி மதங்களைப் பார்த்தால், ஸித்தாந்தம் என்று வரும்போது அறிவு ரீதியில்தான் கோட்பாடுகளைச் சொல்ல வேண்டும் என்று இருப்பதால் அவையும் சில 'ism'-களாக—Dualism என்னும் த்வைதம், Qualified Non-dualism எனப்படும் விசிஷ்டாத்வைதம் என்றெல்லாம் இருந் தாலும்—அவற்றுக்கெல்லாம் தாய்ச் சரக்கு என்ன, அவற்றின் ஸாதனா க்ரமத்தில் உயிர் நிலையாயிருப்பது எது என்று பார்த்தால் பக்திதான். அதாவது அன்பு. மற்றதெல்லாம் அறிவு, இதுகள் அன்பு. மற்றவற்றில் emotion-கு (உணர்ச்சிக்கு) இடமில்லை. இது Emotion. பகவானை feel பண்ணப் போவது. Love.

ஆசார்யாளின் அத்வைதத்தை என்னவென்று சொல்வது? அது ஒரு 'ism'-த்திலும் வராதது! வர முடியாதது! Non-dualism என்பதுகூட முழு உண்மையைச் சொல்லவில்லைதான்! "அத்வைதம்" என்ற வார்த்தையுங்

Koviloor Digital Library

கூடத்தான்! அதைத்தானே அப்படியே 'Non-dualism' என்று மொழி பெயர்த்திருக்கிறது? நாம ரஹிதமான ப்ரஹ்மத்தைச் சொல்லும் தத்வமும் நாம ரஹிதமானது தான்! பரமாத்மா வேறே, ஜீவாத்மா வேறே என்று "த்வைத"மாக நினைப்பது ஸரியில்லை என்பதற்காக 'அ-த்வைதம்' என்பதே தவிர, அது என்னவாக இருக்கிறதோ அதை வைத்துப் பெயர் கொடுக்க முடியவில்லை! பரிபூர்ண தத்வம் அதுதான். பரிபூர்ணத்தை, ஜீவனே ஸச்-சித்-ஆனந்த பரிபூர்ணமாவதைச் சொல்வது அது.

"Absolutism" என்று (அத்வைதத்தைச்) சொல்லலாம் என்று ஒருத்தர் சொன்னார். எதையும் சார்ந்து இல்லாமல் தனக்குத்தானே பூர்ணமாக இருக்கும் ஸத்யத்தை அது சொல்வதால் இப்படிப் பேர் கொடுக்கலாம் என்றார். ஆனால் அதுகூட எனக்கு ஸரியாய்ப் படவில்லை. இது எதையும் சார்ந்து நிற்காத ஸத்ய பூர்ணமாயிருப்பது மட்டுமில்லை. பாக்கி நமக்குத் தெரிகிற அத்தனை அஸத்ய, அபூர்ணங்களும் இதைச் சார்ந்து இருப்பதாலேயே அவை இருக்கிற மாதிரி நமக்குத் தெரிகின்றன! இம்மாதிரி, ஸகலமும் தன்னைச் சார்ந்திருக்கும்படியாக அது உள்ளே அடக்கிக் கொண்டிருப்பதை—'Relative' என்பதற்கெல்லாமும் இந்தத் தத்வமே ஆதாரம் என்பதை—Absolutism என்பது காட்டாதல்லவா?

அப்புறம், இது Intellectual - ஆ, Emotional-ஆ? அல்லது மீமாம்ஸை மாதிரி Action-ஆ? ஞான மார்க்கம் என்பது புத்தி வாதம் என்று வைத்துத்தான் 'Way of Knowledge' என்கிறார்கள். ஆனால் இந்த ஞானம் மூளையால் ஆராய்கிற Intellect - ஸமாசாரம் இல்லவே யில்லை. சாஸ்த்ரமாகப் படிக்கிற கட்டத்தில்தான் அப்படியிருப்பதே தவிர, படித்ததை உள்ளே உருட்டிக்கொள்ளும் போது கிடைக்கிற ஸௌக்யம், சாந்தி, ஆனந்தம் மூளை விஷயமே இல்லை. அப்படியானால் அது உணர்ச்சியா?

Koviloor Digital Library

ப்ரஹ்மத்தை feel பண்ணுவதா? ஆனந்தாநுபவம் ஒரு emotion-ஆ? அப்படியும் இல்லவே இல்லை! இதெல்லாம் மனஸின் அநுபவம். அத்வைதத்தில் மனஸே-போயாகிவிடும்! மூளையும் போயாகிவிடும்! அப்படியும் ஸத்யத்தை அறிவது, ஆனந்திப்பது என்றால் அதற்கு என்ன வார்த்தைகளைப் போடுவது? இது Action இல்லை என்று தீர்மானமாகச் சொல்லத் தோன்றுகிறது. ஆனால் யோசித்துப் பார்த்தால், 'ஆசார்யாள் மாதிரியான பரமாத்வைதிகள் ஒரே கார்யமயமாக இருந்திருக்கிறார்களே! அதனால் இது Action-கும் இடம் கொடுக்கிறதே!' என்று, ஒன்றும் சொல்லத் தெரியாமலிருக்கிறது! நல்லதுமில்லை, கெட்டதுமில்லை என்று சும்மாவாகி விடுவதுதான் லக்ஷ்யமென்றாலும், லக்ஷ்ய ஸித்தியை அடைந்தவர்கள் சும்மாயிருப்பதாக நமக்குத் தெரியாமல் அபாரமாக அநுக்ரஹ கார்யத்தைப் பண்ணுகிறார்களே! இந்தத் தூங்காத தூக்கத்துக்கு என்ன பேர் வைக்க! வார்த்தையால் சொல்ல முடியாத, பேர் கொடுக்க முடியாத தத்வத்தை அத்வைதம்! என்கிறோம்.

ஒரு ஸித்தாந்தம் 'அறிவு' (Knowledge); ஒரு ஸித்தாந்தம் 'அன்பு' (Love, Devotion); இன்னொன்று கர்மா (Action) என்றிப்படிச் சொல்லும்போது அத்வைதம் என்னவென்று பார்த்தால் 'சாந்தி' (Peace) என்று சொல்லலாம் போலிருக்கிறது. ஆனால் நாம் நினைக்கிற சாந்தியாகவும் அது இல்லை! நமக்குத் தெரிந்த சாந்தி, எல்லாம் அடங்கிப்போன அமைதி. இதுவும் மஹா பெரிய அமைதிதானென்றாலும் அத்தனை அறிவும், அத்தனை அன்பும், கார்யங்களும் இதற்குள்ளேயே சக்தியோடிருக்கின்றன. ஆசார்யாள் அப்படித்தானே ஸர்வஜ்ஞராக, ஸர்வ பூத தயாகரராக, ஓயாமல் பணிசெய்துகொண்டு இருந்தார்? அதை என்ன பெயர் கொடுத்துச் சொல்வது?

ஜகத் ஒன்றே ஸத்யம், ப்ரம்மம் அஸத்யம் என்பது சார்வாகம். ஜகத்தும் அஸத்யம், ப்ரம்மமும் அஸத்யம்

Koviloor Digital Library

என்பது பௌத்தம். ஜகத்தும் ஸத்யம், ப்ரம்மமும் ஸத்யம் என்பது ந்யாயம். ஸாங்க்யம், 'ஜகத் அஸத்யம். ஏனென்றால் அது பொய்யான ப்ரக்ருதியின் சேஷ்டிதம்தான். ப்ரம்மம் ('புருஷன்' என்ற பெயரில் சொல்வது)தான் ஸத்யம்' என்னும்.

ஆசார்யாள் என்ன சொன்னார்? ப்ரம்மம்தான் ஸத்யம். ஜகத் மித்யை. அதாவது ஸத்யமில்லை. அப்படியென்றால், அடியோடு அஸத்யமா என்றால் அதுவுமில்லை. ஸத்யமான ப்ரம்மம் தெரியும் ஞானம் வருகிறவரை ஸத்யம் மாதிரி இருக்கிற பொய்யே ஜகத். ஞானம் வந்துவிட்டால் பொய்யாய்ப் போய் விடுவது. 'போய்விடுவது' என்று முடித்தும் விடுகிறதற்கில்லை. ஞானியும் பொய் ஜகத்தைப் பார்க்கிற மாதிரிப் பார்ப்பான். எப்படிப் பார்ப்பானென்றால் ஜகத்தே ஸத்யமான ப்ரம்மம்தான் என்று ஸமமாகப் பார்ப்பான். 'ப்ரம்மமே ஸத்யம்-ஜகத் மித்யா' என்பது மாத்ரமில்லை; 'ப்ரம்மமே ஸத்யம் - ஜகத்தும் அந்த ப்ரம்ம ஸத்யமே' என்று அப்போது ஆகிவிடும்!

பௌத்தம், மீமாம்ஸை ஆகியவற்றில் ஸகுண ப்ரம்மம் என்ற ஈச்வரன், நிர்குண ப்ரம்ம தத்வம் இரண்டுமில்லை. ஸாங்கியத்தில் ஸகுண ப்ரம்மமில்லை. யோகம், ந்யாய-வைசேஷிகம் முதலியவற்றில் இரண்டும் இருந்தாலும் ஒன்றோடொன்றும், ஜகத்தோடும், ஜீவனோடும் ஸம்பந்தம் தெளிவாகச் சொல்லவில்லை. பக்தி மதங்களிலோ ஸகுண ப்ரம்மம்தான் உண்டு; நிர்குணம் கிடையாது.

அத்வைதத்தில் இரண்டும் இருக்கிறது. ஜட ப்ரக்ருதியான மாயை ஜகத்தை உண்டாக்குகிறது என்றால் அது ப்ரம்மத்தை ஆதாரமாகக் கொண்டுதான் என்று சொல்கிறது. அதாவது, 'நிர்குண ப்ரம்மமே மாயையைக் கைக்கொண்டு ஸகுண ப்ரம்மமாகித் தன்னையே ஜகத்தாகக் காட்டிக்கொள்கிறது. ஜட ப்ரபஞ்சமாக மட்டுமின்றி ஜீவ ப்ரபஞ்சமாகவும் காட்டிக்கொள்கிறது' என்பதாக நாலையும்

Koviloor Digital Library

—நிர்குண ப்ரம்மம், ஸகுண ப்ரம்மம், ஜீவாத்மா, ஜகத் என்ற நாலையும்—ஒன்று சேர்த்துக் கொடுக்கிறது!

ஜகத் ஸ்ருஷ்டியைப்பற்றி மீமாம்ஸகர்கள், 'ஸ்ருஷ்டி என்று எவனே ஈச்வரன் எப்பவோ பண்ணினதாக ஏன் சொல்லணும்? இப்போது மாதிரி எப்போதுமே ஜகத் தானகவே எப்போதும் இருந்துகொண்டிருக்கிறது. அதில் கர்மாப்படி தானே பலன் விளைகிறது' என்பார்கள். 'உயிரில்லாத இயற்கை என்ற சக்தியால் ஜகத் தோன்றி நடந்துகொண்டிருக்கிறது; ஸ்வாமியுமில்லை, பூதமுமில்லை, கர்மாவுமில்லை, பலனுமில்லை' என்பது சார்வாகம். 'ஸத்ய மான ஜகத் அணுமயமானது. அணுக்களை இப்படிப் பல தினுஸில் சேர்த்து முன்னே இல்லாத புது வஸ்துக்களை உண்டுபண்ணி வைப்பவனே ஈச்வரன்' என்று ந்யாய-வைசேஷிகங்கள் சொல்லும். இதற்கு 'ஆரம்ப வாதம்' என்று பேர். ஸாங்க்ய-யோகங்களிலோ ஸ்ருஷ்டிக்கு ஈச்வர ஸம்பந்தம் கிடையாது. முன்னேயில்லாமலிருந்தது புதுசாக ஸ்ருஷ்டியானதாகவும் அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். (மாயை, இயற்கை என்று சொல்லப்படும்) ப்ரக்ருதியேதான் ஜகத்தாக மாறியிருக்கிறது என்று அவர்கள் சொல்வார்கள். இதற்குப் 'பரிணமவாதம்' என்று பேர்.

அத்வைதம் என்ன சொல்கிறதென்றல்: நிஜமாக ஸ்ருஷ்டி என்று ஒன்று பண்ணப்படவில்லைதான். அணுவும் ஸத்யமில்லை. அணுக்களைச் சேர்த்து ஸத்யமான ஜகத் என்பதும் இல்லை. ப்ரக்ருதியின் பரிணமம் என்பதும் ஸரியில்லை. அப்படியானல் பரிணமித்தபின் மூல வஸ்து இல்லாமல் போய்விடுவதுபோல் ஸ்ருஷ்டிக்கப்புறம் ப்ரக்ருதியே போய் விட்டதாகிவிடும்! ஆக உண்டாவதுமில்லை, மாறுவதுமில்லை. பின்னே என்னவென்றல், ஒன்றே இன்னென்று மாதிரித் தோன்றுவதுதான்! பழுதை பாம்பு மாதிரி இருட்டில் தோன்றுகிறது. அப்படி ப்ரம்மமே ஜகத் மாதிரி மாயையில் தோன்றுகிறது. (இன்னெரு விதத்தில் சொன்னல் நிர்குண ப்ரம்மமே மாயையோடுகூடி ஸகுண ப்ரம்மமாகித்

Koviloor Digital Library

தன்னையே ஜகத் மாதிரித் தோன்றும்படிச் செய்து கொள்கிறது.) பழுதையிலிருந்து பாம்பு ஸ்ருஷ்டிக்கப்பட வில்லையல்லவா? பழுதை நிஜமாகவே பாம்பாகப் பரிணமம் அடைந்தும் விடவில்லையல்லவா? அப்படித்தான் ஜகத், ஸ்ருஷ்டியாகவோ பரிணமமாகவோ இல்லாமல் தோற்ற மாத்ரமாக இருப்பது. விளக்கைக் கொண்டு வந்தால் இருட்டு போய், பழுதையைப் பாம்பாகப் பார்த்த ப்ராந்தி மறைந்து பழுதையே தெரிவதுபோல், ஞான ப்ரகாசத்தில் மாயை யிருட்டு போய், முன்னே ஜகத்தாகத் தெரிந்ததே ப்ரம்ம மாகத் தெரிய ஆரம்பித்து விடும்.

ஸ்ருஷ்டி, பரிணமம் முதலான எதுவுமாக இல்லாமல் ஒன்றே இன்னொன்று மாதிரி தோன்றுவதுதான் ஜகத் என்பதற்கு "விவர்த்த வாதம்" என்று பெயர்.

ஆசார்யாள் கொடுத்துள்ள விசேஷமான கொள்கை களாக மூன்றைச் சொல்வார்கள். ஒன்று விவர்த்த வாதம். இன்னொன்று 'அத்யாஸம்' என்பது. அஸலாக ஸ்ருஷ்டி என்று ஒன்றில்லை, பரிணமமும் இல்லை, பௌத்தர் கள் சொல்வதுபோல ஸத்ய ஆதாரமேயில்லாத பொய்த் தொடர் ஓட்டமுமில்லை. ஸத்யமான ப்ரம்மத்தின் மேலேயே, பழுதையில் பாம்புபோல, மாயை ஏற்றி வைத்திருக்கும் தோற்றமே இந்த ஜகத் என்பதுதான் 'அத்யாஸம்'. கலரே யில்லாத ஸ்படிக லிங்கத்தின்மேலே பின்னுலிருக்கும் செம்பருத்திப் பூவின் சிவப்பை ஏற்றிவைத்து அது சிவப்பாகத் தெரிவது அத்யாஸம்—Super-Gmposition என்கிறார்கள். ஆசார்யாள் அநுக்ரஹித்த மூன்றாவது விசேஷ தத்வம், "ஸத்யம்-அஸத்யம் என்று இரண்டு இருப்பது மட்டுமில்லை. அஞ்ஞான தசையில் ஸத்யம் மாதிரியிருந்து ஞான நிலையில் அஸத்யமாகிவிடும் ஒன்றும் உண்டு. அதற்கு ப்ராதிபாஸிகம் என்று பேர்" என்பதாகும்.

மற்ற மதங்களுக்கும் அத்வைதத்திற்குமுள்ள வித்யாஸங்களைச் சொன்னேன். வித்யாஸம் பார்க்காமல

Koviloor Digital Library

அவற்றிலிருந்தும் ஆசார்யாள் அநேகம் எடுத்துக் கொண்டிருக்கிறார். மீமாம்ஸகர்களின் கர்மாவிலிருந்து ஆரம்பித்து பௌத்தத்தில் ஜகத்தை அப்படியே அடித்துப் போடுவதுவரை எல்லாவற்றுக்கும் ஆசார்யாள் இடம் கொடுத்திருக்கிறார். பக்திக்கு நன்றாகவே, நிறையவே இடம் வைத்திருக்கிறார். தத்வ ஆராய்ச்சி யில் ந்யாய-வைசேஷிக-ஸாங்க்ய-யோகங்களில் என்ன வெல்லாம் ப்ரயோஜனப்படுமோ அவற்றை எடுத்துக் கொண்டிருக்கிறார். பாட்ட மீமாம்ஸகர்களின் ஆறு ப்ரமாணங்களையேதான்[1]. தாமும் கைக்கொண்டிருக்கிறார். ஸாங்க்யத்தைப் பற்றி கீதா பாஷ்யத்தில் ஒரு இடத்தில், "அந்த சாஸ்த்ரம் பரமார்த்தத்தில் நமக்கு வித்யாஸமாகப் போனாலும், த்ரிகுணங்களையும் அவற்றைக் கொண்டு போக்தாவாயிருக்கும் ஜீவனைப் பற்றியும் அது சொல்வது ப்ரமாணமேயாகும்" என்கிறார்[2].

அவருடைய 'யோகதாராவளி' ப்ரகரணத்தைப் பார்த் தால் அத்வைத லக்ஷ்யந்தானாலும் அதற்கே பலவிதமான யோக ஸாதனைகளை எவ்வளவு deep-ஆக ப்ரயோஜனப் படுத்திக் கொள்கிறாரென்று தெரியும். தமிழிலேயேகூட யோக சாஸ்த்ரமாக ஒரு சின்ன உலா அவர் பெயரில் இருக் கிறது. "சங்கராசாரியார் உலா" என்ற அந்தப் புஸ்தகம் மெட்ராஸ் மானுஸ்க்ரிப்ட் லைப்ரரிக்காரர்கள் அச்சுப் போட்டிருக்கிறார்கள்.

எம்மதமும் ஸம்மதம் என்பது ஆசார்ய ஸித்தாந்தத் திற்கே பொருந்தும். ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு நிலைவரை ஏற்றிவிடுவதற்கு ஸத்யங்கள் இருக்கின்றன. அப்படி ஏறிப்போனால் கடைசியில் அத்வைத சாஸ்த்ரம் சிகரத்துக்கே ஏற்றி வைத்துவிடும்!

---

1. 'தெய்வத்தின் குரல்'—இரண்டாம் பகுதி, 'நியாயம் : யுக்தி சாஸ்திரம்' என்ற உரையில் 'பிரமாணங்கள்' எனும் பிரிவு பார்க்க.

2. XVIII. 19

Koviloor Digital Library

அவரைப்போலத் தாம் கண்டனம் பண்ணிய ஸித்தாந்தங்களையே உபாயமாகவும் எடுத்துக்கொண்ட எவருமில்லை!

அநுஷ்டானத்தில் தப்பு மதங்கள் இருக்கப் படாதென்று அவர் அயராமல் பாடுபட்டாலும் அறிவாராய்ச்சிக்கு எல்லா மதப் புஸ்தகங்களும் இருக்கத்தான் வேண்டுமென்று நினைத்தார் என்பதற்குக் கதை சொல்வார்கள். ஜைனனான அமரஸிம்ஹன் அவரிடம் தோற்றுப்போனபின் தான் எழுதிய புஸ்தகங்களையெல்லாம் நெருப்பில் போட்டுக் கொண்டிருந் தானும். இதை ஆசார்யாள் கேள்விப்பட்டதும், 'அடாடா! சித்தனு சக்தியில் தோன்றுகிற எதுவுமே அறிவாளிகளுக்காக எக்காலமும் ரக்ஷிக்கப்பட வேண்டியதாயிற்றே! இவன் ஏன் ஜைனப் புஸ்தகங்களைக் கொளுத்தணும்?' என்று நினைத் தாராம். அவனைத் தடுப்பதற்காக ஓடினாராம். அதற்குள் அவன் ஒரு புஸ்தகம் தவிர பாக்கியெல்லாம் "ஸ்வாஹா" வாக்கிவிட்டானும். கடைசியாகப் போட அவன் கையில் ஒரு புஸ்தகம் இருந்ததாம். ஆசார்யாள்தான் அவன் கையைப் பிடித்து, அதுவும் 'ஸ்வாஹா'வாகாமல் ரக்ஷித்துக் கொடுத் தாராம். அதுதான் நிகண்டுவான 'அமரகோச'மாம்!*

அவர் நிராகரணம் பண்ணின 72 மதங்களில் பல வற்றுக்கு ஒரு புஸ்தகமும் இப்போது இல்லை, அவர் கண்டனம் பண்ணின பூர்வகால ஸூத்ர பாஷ்யங்கள்— ப்ருத்வீதவர் போன்றவர்கள் பண்ணினவை—நமக்குக் கிடைக்கவில்லை என்றால் அவர்தான் அழித்து விட்டாரென்று அர்த்தமில்லை. அந்தப் புஸ்தகங்களை எழுதினவர்கள், அல்லது அநுஸரித்தவர்களே ஆசார்யாளின் ஸத்ய ஸித்தாந்தம் வந்த பிற்பாடு அவை இருக்கவேண்டாமென்று அழித்து விட்டார்களென்றுதான் அர்த்தம்.

---

* இக்கதை மேலும் விவரமாக "தெய்வத்தின் குரல்"—முதற் பகுதியில் "ஸ்வாமி என்றால் குமாரஸ்வாமியே" என்ற உரையில் காணலாம்.

Koviloor Digital Library

அத்வைதம் மற்ற ஸித்தாந்தங்களுக்கும் இடம் கொடுப்பதால்தான் பரமாத்வைதிகளான வித்யாரண்ய ஸ்வாமிகள், அப்பைய தீக்ஷிதர், வாசஸ்பதி மிச்ரர் போன்றவர்கள் மற்ற ஸித்தாந்தங்களைக் குறித்தும் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்.

இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் மாற்று ஸித்தாந்தக்காரர்களிலும், ஒரு ஸித்தாந்த முத்திரையும் குத்திக் கொள்ளாத பொதுக் கவிகளிலும்கூட மஹா அநுபவிகளாக இருந்தவர்கள் ஒரு உயர்ந்த நிலையில் அத்வைத ஸத்யங்களையே கொட்டியிருக்கிறார்கள்! புத்தி பூர்வமாக மற்ற ஸித்தாந்திகள் அவ்வளவு பேரும் ப்ரதான சத்ருவாகத் தாக்குவதும் அத்வைதம்தான்! அவர்களே அநுபவ பூர்வமாக உச்சாணிக்குப் போகும்போது தங்களை அறியாமலே ப்ரகடனம் பண்ணுவதும் அத்வைதந்தான்!

மத ஸித்தாந்திகள், கவிகள்தான் என்றில்லை. நவீன பௌதிக விஞ்ஞானிகளில்கூட ரொம்பப் பெரியவர்களாகவுள்ள ஐன்ஸ்டீன், ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் போன்றவர்கள் அத்வைத பாஷையில்தான் பேசுகிறார்கள்! பௌதிக தாதுக்களெல்லாம் ஒன்றுக்கொன்று பேதமான வேறு வேறு வஸ்துக்கள் என்ற விஞ்ஞானம் இப்போது பழசாகி விட்டது. புது ஸயன்ஸின்படி ஏகமான சக்தியொன்றின் விதவிதமான தோற்றம்தான் எல்லாமும்! இந்த பௌதிக ப்ரபஞ்சத்தில் எதுவும் தன்னில் தானாகவே ஸத்யமாக இல்லாமல்—absolute-ஆக இல்லாமல்—ஒன்றோடு ஒன்று சார்புப் படுத்திப் பார்க்கும்போது ஸத்யம் மாதிரி இருக்கும் relative reality உள்ளதுதான் என்று புது ஸயன்ஸ் சொல்வது ஆசார்யாளுடைய ப்ராதிபாஸிக ஸத்யக் கொள்கையின் ஒரு ரூபம் தான்!

இப்படி ஸகல மத ஸாரமாகவும், மதத்திற்கு விரோதமானது என்றே நினைக்கும் ஸயன்ஸுக்குங்கூட ஸாரமாகவும்

Koviloor Digital Library

உள்ள பூர்ண ஸித்தாந்தத்தை ஆசார்யாள் அநுக்ரஹித்திருக்கிறார்.

எல்லா இடத்திற்கும் திக்விஜயம் பண்ணி அந்த ஸித்தாந்தத்தை வர்ஷித்து சாந்தமும் ப்ரேமையும் ஆனந்தமும் எங்கேயும் எல்லாரிடமும் நிறைந்திருக்கும்படிப் பண்ணினார்.

ஆசார்யாள் என்றால் சாந்தம், ப்ரேமை, ஆனந்தம் என்றுதான் அர்த்தம். அந்த மூன்றையும் சேர்த்துத்தான் 'சம்' என்பது. சம்-கரர் செய்த 'சம்'! "ஒற்றுமை" என்பது அதுதான். ஒன்றாகப் போய்விடுவது ஒற்றுமை என்றால் ஸ்வாமியோடு ஒன்றாய் விடுவது மட்டுமில்லை; அதே ஸ்வாமிதானே இத்தனையும் என்பதால் ஜீவ ஸமூஹம் முழுதோடும் ஒன்றாய் விடுவதும்தான். ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று சொல்வதை இப்படி அத்வைத அடிப்படையால் நிஜமாக ஏற்படுத்தினார்.

எல்லோரும் ப்ரேமையில், சாந்தியில் ஒன்றாகப் போகவே ஆசார்யாள். அப்பப்போ அவர் விஷயமாக ஆராய்ச்சி என்று இறங்கி, எந்தக் காலத்தில் பிறந்தார், எங்கெங்கே போனார், என்னென்ன பண்ணினார், பண்ணினாரா, இல்லையா என்றெல்லாம் பார்ப்பதில் அபிப்ராய பேதங்கள் புறப்படுவதைப் பார்க்கும்போது, "ஆசார்யாள் ஸமாதானத்துக்கே வந்தார். ஆராய்ச்சி என்று எதையாவது கிளப்பி அவர் விஷயமாகவே சர்ச்சை, சண்டை என்று கிளப்பிவிட்டால் இதைவிட அபசாரம் இல்லை போலிருக்கே" என்றுகூடத் தோன்றுகிறது! தோன்றியதைச் சொல்லணுமாதலால் சொன்னேன்.

நாம் ஆராய்ச்சியால் கண்டு பிடிப்பதையெல்லாம்விட முக்யம் அவர் பெயரில் நாம் அத்தனை பேரும் ப்ரேமையில் ஒற்றுமையாயிருப்பதுதான்! அப்போதுதான் நாம் நிஜமான ஆசார்ய சிஷ்யர்கள்.

Koviloor Digital Library

ஸ்ரீ சங்கர மடங்கள்

தாம் வேதாந்தத்தால் நிலைநிறுத்திய ஆத்மிய - ஸமூஹ ஒற்றுமையும் அந்த வேதாந்த மதமும் என்றென்றும் லோகத்தில் நிலையாக இருக்கவேண்டுமென்று ஆசார்யாள் நினைத்தார். அதற்காக அநேக மடங்களை ஸ்தாபித்துத் தம்முடைய சிஷ்யர்களை அவற்றில் ஆசார்யர்களாக வைத்தார். இவை அத்வைத வேதாந்தத்தைச் சொல்ல மட்டும் ஏற்பட்டவையல்ல. அதற்கு அதிகாரிகளாகக் கொஞ்சம் பேரே இருப்பார்கள். ஜன ஸமூஹம் முழுவதை யும் அந்த goal பக்கம் திருப்பி விடுவதற்குக் கர்மா நுஷ்டானத்தையும், பக்தியையும், வேத சாஸ்த்ர நம்பிக்கை யையும் வளர்த்துக் கொடுக்கவேண்டும்; சாஸ்த்ர விஷயமாக ஜனங்களுக்கு ஏற்படும் ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்ய வேண்டும்; சர்ச்சைகளுக்குத் தீர்ப்புப் பண்ணவேண்டும். இவை எல்லாவற்றையும் செய்வதற்கே தர்ம பீடங்களாக ஆசார்யாள் மட ஸ்தாபனம் பண்ணியது.

ச்ருங்கேரி, த்வாரகை, புரி, பதரி, காஞ்சி என்ற ஐந்தும் ப்ரதான மடங்கள். இன்னம் பலவும் அவர் ஸ்தாபித்த தாகத் தெரிகிறது. இப்படி அநேகம் அவர் ஸ்தாபித்துத் தான் இருக்கவேண்டும். இத்தனும் பெரிய உபகண்டத்தில் மத வளர்ச்சி குன்றாமல் ரக்ஷித்துக் கொடுப்பதற்கு, ரயிலா, தபாலா இல்லாத காலத்தில் ஆயிரம் மைலுக்கு ஒரு மடம் என்று ஐந்து ஸ்தாபித்திருந்தால் போதுமானதாயிருந் திருக்குமா? ஆர்யாவர்த்தம் என்று heart-land-ஆக விந்த்ய மலைக்கு வடக்கே உள்ள விஸ்தாரமான ப்ரதேசத்தில் ஹிமயக் கோடியில் (பதரி நாதத்தில்), இப்பவும்கூட ச்ரமப் பட்டே அடையக் கூடியதாக உள்ள இடத்தில் ஒரு மடம், கிழக்கு—மேற்கு ஸமுத்ரக் கரையோரங்களில் ஒவ்வொரு மடம் மட்டும் ஸ்தாபித்தால் போதுமென்று அவர் நினைத் திருக்க முடியுமா? அதனால் இன்னும் பல ஸ்தாபித்தே இருக்கவேண்டும். பிற்காலத்தில் துருஷ்கர்கள் பண்ணிய ஹதாஹதத்தில் எத்தனை ஆலயங்கள் தூள் தூளாயின? காசி

Koviloor Digital Library

விச்வநாதர் மந்திரமே எத்தனை தடவை இடிபட்டு இடிபட்டுக் கட்ட வேண்டியிருந்திருக்கிறது? ராமனும், க்ருஷ்ணனும் பிறந்து வளர்ந்த அயோத்தியில், மதுராவில் ஒரு ப்ராசீன மான ஆலயமாவது இன்றைக்கு இருக்கிறதா? ஹிந்து மதம் என்று காட்டிக்கொள்ளவே பயப்படும்படியாக, வேத சப்தம் எழுப்பவே பயப்படும்படியாக எத்தனை கொடுமை, அக்ரமம் நடந்திருக்கிறது? முக்யமாக ஹிந்து தர்ம பீடங்களைத்தானே எதிரிகள் தாக்கியிருப்பார்கள்? இந்தப் பேயாட்டத்தில் அநேக மடங்கள் மங்கிப் போயிருக்க வேண்டும். சில எடுபட்டே போயிருக்க வேண்டும்.

தேசம் முழுதிலும் ஐந்து ப்ரதான மடங்கள் என்பது போலக் காசியிலேயே ஐந்து மடங்களும், திருச்சூரில் ஐந்து மடங்களும் ஆசார்யாள் ஸ்தாபித்ததாகத் தெரிகிறது. காசி இந்த தேசத்திற்கே பண்டித ராஜதானியாகவும், ஆசார்யாளே பல காலம் வஸித்து உபதேசம் பண்ணிய க்ஷேத்ரமாகவும் இருந்திருப்பது. திருச்சூர்தான் ஆசார்யாள் அவதரிப்பதற்கே ஈச்வரன் வரம் கொடுத்த மஹா க்ஷேத்ரம். ச்ருங்கேரி ஸ்வாமிகள் ஒருவரின் ஆஜ்ஞைப்படியும், மேல் பார்வையிலும் எழுதப்பட்ட "குரு வம்ச காவ்ய" புஸ்தகத்தில்—"மஹாவிஷ்ணுவுக்கு நாலு புஜங்கள் மாதிரித் தமக்கு இருந்த நாலு சிஷ்யர்களுக்கென்றும், தமக்கே ஒன்று என்றும், மொத்தம் ஐந்து மடங்கள் வாராணஸியில் (காசியில்) ஆசார்யாள் ஏற்படுத்திவிட்டுச் சில காலம் தங்கியிருந்தார்" என்று இருக்கிறது*.

போன நூற்றுண்டில்கூட "இந்த்ர" என்ற பட்டம் பெற்ற ஆசார்ய பரம்பரையைச் சேர்ந்த ஸ்வாமிகள் காசி

---

* வாராணஸீம் யோகி வரோதிகம்ய
புஜைரிவ ஸ்ரீ ஹரிரேஷ சிஷ்யை:।
ஸஹாத்மநா பஞ்ச மடாநமீஷாம்
ப்ரகல்ப்ய தஸ்தௌ கதிசித்-திநாநி ॥
(மூன்றும் ஸர்கம், 23-ம் ச்லோகம்)

Koviloor Digital Library

யில் இருந்திருக்கிறார்கள் என்று அங்கே சிவாலய காட்டில் (கட்டத்தில்) உள்ள ப்ரஹ்மேந்த்ர மடம் என்பதில் உள்ள சாஸனத்திலிருந்து தெரிகிறது. சந்த்ரசேகர ஸ்வாமிகள் என்பவரின் சிஷ்யரான விச்வநாத ஸ்வாமிகளை அது குறிப்பிடுகிறது[1].

ஸுமேரு மடம் என்றும் பாதுகா மடம் என்றும் சொல்கிற ஒன்று, காசியிலிருக்கிறது. அதன் ஜீர்ணோத்தாரண கைங்கர்யத்திற்காக ஒரு 'அப்பீல்' விடப்பட்டது. அநேக ஸ்வாமிஜிகள், மஹா மஹோபாத்யாயாக்கள், ப்ரமுகர்களின் பேரில் வெளியான அந்த அப்பீலில் அந்த மடம் ஆசார்யாளே தம்முடைய காசி வாஸத்தின்போது ஸ்தாபித்தது என்று சொல்லியிருக்கிறது.

ஹிமாலயத்திலேயே ஜ்யோதிர்மடம் தவிர, கங்கோத்ரியில் ஆசார்யாள் ஒரு மடம் ஸ்தாபித்ததாக போன நூற்றாண்டில் வெளியான "Light of the East"—வால்யூம் ஒன்றில் இருக்கிறது[2]. விளம்பரமே போடாமலும், ரொம்ப குறைச்சல் விலை வைத்தும் கோரக்பூர் கீதா ப்ரெஸ்ஸில் பத்ரிகைகளும் புஸ்தகங்களும் போட்டு வருகிறார்களல்லவா? அவர்களுடைய "கல்யாண்" பத்ரிகையின் 'தீர்த்தாங்க' மலரின் பூமிகை (முகவுரை)யிலும் ஸுமேரு மடத்தையும், கங்கோத்ரி மடத்தையும் சொல்லியிருக்கிறது.

"கொச்சின் ஸ்டேட் மானுவல்" என்ற புஸ்தகம் திருச்சூரிலுள்ள ஐந்து சங்கர மடங்களைப் பற்றிச் சொல்கிறது. 'தெக்கே (தெற்கு) மடம்,' 'வடக்கே மடம்' என்று

---

1. சாஸனம் விக்ரம ஸம்வத் 1941, அதாவது கி.பி. 1884 தேதியிட்டது. வாசகம்,

ஜகத்குரோ : சங்கரஸ்ய பாரம்பர்ய - க்ரமாகத:
சிஷ்ய : ஸன்மார்க்க-நிஷ்ணாத : சந்த்ரசேகர நாமக:
தஸ்ய சிஷ்யோ விச்வநாத யதீந்த்ரோ யோகிநாம் வர:

என்று போகிறது.

2. Vol. 11. No, 11, July 1894

Koviloor Digital Library

ஒவ்வொரு திசையின் பெயரிலும் ஒன்று, மத்தியில் 'நடுவிலே மடம்',—என்பதாக ஐந்து மடங்கள் அங்கே இருந்திருக்கின்றன. தற்போது தெக்கே மடம், நடுவிலே மடம் இரண்டுதான் இருக்கின்றன. தெக்கே மடத்தில் இதுவரை எண்பது பேர் பட்டத்திலிருந்திருப்பதாகச் சொல்கிறார்கள். வடக்கே மடம் தற்போது 'ப்ரஹ்மஸ்வ மடம்' ஆகியிருக்கிறது—அதாவது வேத பாடசாலை.

புரீஜகந்நாதத்திலேயே ப்ரதானமாகவுள்ள கோவர்த்தன மடத்தைத் தவிர சங்கரானந்த மடம், சிவதீர்த்த மடம், கோபால தீர்த்த மடம் என்றும் மூன்று அத்வைத மடங்கள் இருக்கின்றன.

வித்யாரண்ய ஸ்வாமிகள் புது மடங்கள் ஸ்தாபித்தும் பழசுக்குப் புது சோபை கொடுத்தும் கன்னட தேசத்திலும் அதை ஒட்டிய தெலுங்குச் சீமைகளிலும் ஒன்பது மடங்களில் விசேஷ மரியாதை பெற்று 'நவமட நாதர்' என்று பெயர் பெற்றிருப்பதாக விஷயம் தெரிந்தவர்களுக்குத் தெரியும். ஆனால் ஒன்பது மட்டுமில்லை, பதினைந்து சங்கர மடங்கள் கன்னட, ஆந்த்ர, மலையாள, மஹாராஷ்ட்ர தேசங்களில், புனாவரையிலுங்கூட, இருப்பதாக "கல்யாண்" பத்ரிகையின் "தீர்த்தாங்க" மலரில் பேர் கொடுத்திருக்கிறது*. இவை தவிரவும் பூமிகையில் ராமேச்வரம், ஸ்ரீசைலம் உள்பட இருபது இடங்களிலுள்ள மடங்கள் "ஸ்ரீ சங்கராசார்யாதி வித்யா—தர்ம—பீடாதிப—பரம்பராகத மட"ங்கள் என்று சொல்லியிருப்பதில்தான் ஸுமேரு மடம், கங்கோத்ரி மடம் ஆகியவை பற்றியும் இருக்கிறது.

ஆசார்யாளின் நேர் சிஷ்யர்களின் பெயரிலும் இவற்றில் சிலதைச் சொல்கிறார்கள். திருச்சூர் மடங்களைப்

* கூடலி, சிவகங்கை, ஆவணி, விருபாக்ஷ, புஷ்பகிரி, சங்கேச்வர-கரவீர, ராமசந்த்ரபுர, ஹரிஹரபுர, பண்டிகாடி, எடநீரு, கோதண்டராம, ஸ்வர்ணவல்லி, நெலமாவு, யோக நரஸிம்ஹ ஸ்வாமி, பாலகுண்டுரு மடங்கள்.

Koviloor Digital Library

பற்றியும் இப்படிப் பத்மபாத, ஸுரேச்வராசார்யார்கள் ஸ்தாபித்ததாக ஐதிஹ்யம் இருக்கிறது. (பதரியிலுள்ள) ஜ்யோதிர் மடத்தின் 'சாகா (கிளை) மட'மாகத் தோடகா சார்யாள் சகடபுரம் மடத்தை ஸ்தாபித்ததாகச் சொல்லப் படுகிறது.

எது, யார் ஸ்தாபித்தது என்று விசாரித்துக்கொண்டே போனால் முடிவேயிருக்காது. ஆத்ம லாபமாக, ஞான மாகவோ பக்தியாகவோ, இல்லாமல் அது பாட்டுக்கு ஆராய்ச்சி போய்க்கொண்டிருக்கும்! ஆசார்யாள் ஸ்தாபித் திருக்கவே முடியாது என்று சொல்வதற்குக் காரணமில்லாத தாலும், இந்தப் பெரிய தேசத்தில் மதத்தைக் கட்டிக் காப்பதற்கு எத்தனை மடம் வேண்டுமானாலும் ஸ்தாபிக்க அவச்யம் இருந்ததாலும் அவர் அநேக மடங்களை ஸ்தாபித்த தாகவே ஒப்புக்கொண்டு எல்லாவற்றையும் குருபீடங் களென்று நமஸ்காரம் பண்ணலாம்.

அன்னை மறைவு

இப்படி லோகத்திற்காக ஆசார்யாள் எல்லாம் பண்ணிக்கொண்டிருக்கும் போது—உலகத்துக்கே குழந்தை யாக, குழந்தை குருவாக அநுக்ரஹம் பண்ணிக்கொண்டிருக் கும்போது—பெற்ற தாயாருக்குக் குழந்தையாக, 'அந்திமத் தில் கடமையைப் பண்ணுகிறேன்' என்று முன்னே வாக்குக் கொடுத்திருந்தார் அல்லவா? அதைப் பண்ணும்படி ஆயிற்று.

அந்த அம்மாளுக்கு நிர்யாண ஸமயம் வந்தது. அது உடனே ஆசார்யாளுக்குத் தெரிந்தது. காலடியில் ப்ரஸன்ன மானார். தாயாரை ஆச்வாஸப்படுத்தி அத்வைத உபதேச மாக ஸ்தோத்ரங்கள் சொன்னார். அந்த்ய ஸ்மரணை எப்படியோ அப்படியே மரணத்துக்கு அப்புறம் ஆகுமென்ப தால் அவளுக்கு அத்வைத முக்தி கிடைக்கச் செய்யணு மென்று அப்படிச் சொன்னார்.

Koviloor Digital Library

ஆனால் அது அவளுக்குப் பிடிபடவில்லை.

'பிடிபடுகிற மாதிரி பக்தியாய் சொல்லுவோம்' என்று சிவ ஸ்தோத்ரங்கள் சொன்னார்.

அவளைக் கைலாஸத்துக்கு அழைத்துப்போக ப்ரமத (பூத)கணங்கள் வந்தன.

அவள் பயப்பட்டாள்.

இதுவும் ஸரியாய் வரவில்லையே என்று விஷ்ணு ஸ்தோத்ரங்கள் சொன்னார். "ச்ரியா ச்லிஷ்டோ விஷ்ணு:" என்று ஆரம்பித்து "க்ருஷ்ணாஷ்டகம்" சொன்னார் என்று சொல்வார்கள்.

ஸுகுமாரர்களான விஷ்ணு ஸேவகர்கள் வந்தார்கள்.

தாயாருக்கு சாந்தமாகவும் ஸந்தோஷமாகவும் ஆயிற்று.

அவர்கள் அவளுடைய உயிரை விஷ்ணு லோகத்துக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.

கொடுத்த வாக்குப்படி ஆசார்யாள் தஹனம் பண்ண நினைத்தார்.

பந்துக்களும், புரோஹிதர்களும் ஸந்நியாஸியான ஏக புத்ரரின் தர்மம் என்ன என்று புரிந்துகொள்ளாமல் ஆக்ஷேபித்தார்கள். இப்போது* தேசாபிமானிகள் பண்ணுவதெல்லாம் பண்ணினார்கள்—ஒத்துழையாமை, பஹிஷ்காரம் எல்லாம் (பண்ணினார்கள்)!

ஆசார்யாள் ஒருவர் மாத்திரமாக இருந்துகொண்டு தாயார் சரீரத்தைச் சேதித்துத் தூக்கிக்கொண்டு போய் அகத்துக் கொல்லையிலேயே தஹனம் செய்யும்படி ஆயிற்று.

அதற்கு ப்ராயச்சித்தமாக இன்றைக்கும் அந்த சீமையில் நம்பூதிரிகளில் செத்துப்போனவரின் சரீரத்தை ஜாடையாகச் சேதித்துக் கொல்லையிலேயே தஹனம் செய்கிறார்கள்.

---

* 1939-ல் கூறியது.

Koviloor Digital Library

இன்னொரு விஷயம் அங்கே சொல்கிறார்கள். ஒத்துழையாமையும் பஹிஷ்காரமும் செய்யாமல் இரண்டு குடும்பத்தினர் மட்டும் துக்கம் கேட்க வந்து ம்ருத சரீரத்தின் தலை மாட்டிலும் கால் மாட்டிலுமாக நின்றார்களாம். இவர்களுடைய வம்ச பரம்பரையினர் என்று இன்றைக்கும் 'தலையாற்றுப் பள்ளி', 'காப்பள்ளி' என்ற இரண்டு இல்லத்துக்காரர்களைச் சொல்கிறார்கள்.

அகில பாரத க்ஷேத்ராடனம்

கொஞ்ச நாழி இப்படி ஒரு அகத்துக் குழந்தையாக இருந்துவிட்டு ஆசார்யாள் மறுபடியும் உலகத்தின் குழந்தையாகப் புறப்பட்டு விட்டார். ராமேச்வரத்திலிருந்து கைலாஸம்வரை ஒரு க்ஷேத்ரம் விடாமல் போனார். இப்படி அங்கங்கே அனந்தமாக விவரங்கள் இருக்கின்றன. மறைந்து போன விவரங்களும் அனந்தம் இருக்கும். சிலது சொல்கிறேன். த்வாதச லிங்க க்ஷேத்ரங்களுக்குப் போனதை முன்னேயே சொல்லிற்று.*

அனந்த சயனம் என்ற திருவனந்தபுரத்தில் வீரவைஷ்ணவர்களை ஸமரஸப்படுத்தி அத்வைதிகளாக்கினார்.

(பழைய) மைஸூர் ராஜ்யத்தில் ஒரு விஷ்ணு க்ஷேத்ரம். சிவ ஸ்வரூபமாக இருந்த ஆசார்யாளைக் கோவிலுக்குள்ளேயே விட முடியாதென்று பட்டர்கள் ஆக்ஷேபித்தார்கள். "ஒரு தரம் உள்ளேபோய் ஸ்வாமி தர்சனம் பண்ணிவிட்டு வந்து அப்புறம் சண்டை போடுங்கள்" என்று ஆசார்யாள் கேட்டுக் கொண்டார். அவர்கள் அப்படியே போய்ப் பார்த்தபோது மூர்த்தியின் வலது பக்கம் சிவனாக மாறியிருந்தது! அவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு

---

* காசி, ஸ்ரீசைலம், திருச்செந்தூர், கொல்லூர் (மூகாம்பி), குருவாயூர்' திருவொற்றியூர், காமாக்யா ஆகிய க்ஷேத்ரங்களுக்கு ஆசார்யாள் சென்றதும் முன்பே குறிப்பிடப் பட்டுள்ளது. கும்பகோண, சிதம்பர க்ஷேத்ரங்களுக்குள்ள ஆசார்யத் தொடர்பும் முன்பே கூறப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

ஆசார்யாளை மரியாதை பண்ணி உள்ளே அழைத்துக் கொண்டு போனார்கள். 'ஹரிஹர்' என்றே அன்றிலிருந்து அந்த ஊருக்குப் பேர் இருக்கிறது.

மதுரையில் மீனாக்ஷி-ஸுந்தரேச்வராளை தர்சனம் பண்ணிக்கொண்டு, அம்பாளுக்குப் பஞ்ச ரத்ன ஸ்தோத்ரம் அர்ப்பணித்தார். வித்வத் ஸமூஹம் நிறைய இருந்த அந்த ஊரில் எல்லாரையும் அத்வைதத்தை ஏற்கும்படிப் பண்ணினார்.

திருச்சிராப்பள்ளி தாயுமானவர் கோவிலுக்கு ஆசார்ய ஸம்பந்தம் இருப்பதற்கு சாஸன ப்ரமாணமே இருக்கிறது! அங்கே ஸுகந்த குந்தளாம்பாள் ஸந்நிதிச் சுவரில் 'ஸௌந்தர்ய லஹரி'யின் பூர்வ பாகமான 'ஆனந்த லஹரி' ச்லோகங்கள் நாற்பத்தியொன்றும் கல்வெட்டாகப் பொறித்திருக்கிறது. 'ஆசார்யாளேதான் பொறிக்கச் செய்தார். அப்புறம் ஜம்புகேச்வரம்போய் அகிலாண்டேச்வரிக்குத் தாடங்க ப்ரதிஷ்டை பண்ணி சாந்தமூர்த்தியாக்கிய பிறகு அங்கே பாக்கி 59 ச்லோகமும் பண்ணி நூறாக்கி முடித்தார்' என்று ஐதிஹ்யம் இருக்கிறது...ஸௌந்தர்ய லஹரிக் கதை அப்புறம் சொல்கிறேன். அது ஆசார்யாளின் கைலாஸ யாத்ரையில் வருவது. காலவாரியாகச் சொல்லாமல் முன் பின்னாகச் சொல்லிக்கொண்டு போகிறேன்...

ஸ்ரீரங்கத்தில் கண்டனம் பண்ணிக்கொண்டு வந்த வைஷ்ணவர்களுக்கு உபதேசம் பண்ணி சாந்தப்படுத்தி ஸ்வாமி தர்சனம் செய்து கொண்டார். அங்கே நிறைய பக்தர்கள் கூடி பூலோக வைகுண்டமென்று ஸந்தோஷப் படும்படியாக 'ஜனாகர்ஷண யந்த்ரம்' ஸ்தாபித்தார்.

திருவிடை மருதூருக்கு ஆசார்யாள் வந்ததை 'ஆனந்த கிரீய'த்தில் ரொம்பவும் முன்னாடியே சொல்லியிருக்கிறது. சோழ தேசத்தின் அத்தனை சிவாலயங்களுக்கும் மத்யலிங்க மாக இருப்பவர் அந்த க்ஷேத்ரத்தின் "மஹாலிங்கம்" தான்.

Koviloor Digital Library

வைஷ்ணவர்கள்தான் ஆசார்யாளை விரோதித்தார்கள் என்று நினைத்துவிடக் கூடாது. அவர் எந்த தெய்வத்தையுமே 'அது ஒன்றுதான் பரதெய்வம்' என்று சொல்லாமல் அத்வைதமாக ஸமரஸ பாவத்துடன் சொல்லி வந்ததால் தீவிர சைவர், தீவிர சாக்தர் முதலிய எல்லோருமே அவரிடம் சண்டைக்குத்தான் வந்தார்கள்! அதனால் மத்யார்ஜுனத்திலும் அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது.

'அவதாரமான நம்மையே கத்த விட்டுவிட்டு மூலப் பரம சிவன் நல்ல பெயர் வாங்கிக்கொண்டு போகிறாரே!' என்று ஆசார்யாள் நினைத்தார். அவர் நினைத்தாரோ இல்லையோ நான் நினைக்கிறேன்! ஆகையால் மஹாலிங்க மூர்த்தியிடம், 'நீதான் இவர்களுக்கு ஸத்யம் தெரியும்படியாக பதில் சொல்லணும்!' என்றார்.

உடனே என்ன ஆச்சு என்றால், லிங்கத்திலிருந்தே "ஸத்யம் அத்வைதம்!" என்று வாக்கு உண்டாயிற்று! அதோடு கூடவே, கையைத் தூக்கி சபதம் பண்ணுவதாக லிங்கத்துக்குள்ளிருந்து வலது கையும் வெளியே வந்து தூக்கி நின்றது!

அத்தனை பேரும் ஆனந்தப்பட்டுக்கொண்டு வேதாந்த மதத்தில் சேர்ந்தார்கள்.

மாயவரத்துக்கும் ஆசார்யாள் போயிருக்கணும் என்பதற்கு 'சிவானந்த லஹரி'யில் குறிப்பு இருப்பதாகச் சொல்லலாம். அதில் 'நீலகண்ட'ப் பேர் ஈச்வரன், மயில் இருவருக்கும் இருக்கிறதை வைத்து ஈச்வரனே ஒரு மயிலாக நர்த்தனம் பண்ணியதாக ஒரு ச்லோகம் இருக்கிறது*. அதிலே பெண் மயிலான 'மயூரி'யாக அம்பாளைச் சொல்லியிருக்கிறது. அம்பாள் மயிலாக வந்த இடம்தான் மாயூரம் அல்லது கௌரீ மாயூரம் என்னும் மாயவரம். திரு மயிலாடுதுறை என்று தமிழ்ப் பேர்.

---

*. 'ஸந்த்யா கர்மதிநாத்யயோ' எனத் தொடங்கும் 54-வது ச்லோகம்.

Koviloor Digital Library

மெட்ருஸ் மயிலாப்பூரிலும் அம்பாள் மயிலாகப் பூஜை பண்ணியிருக்கிருள். திருவொற்றியூர் போன ஆசார்யாள் அங்கேயும்தான் போயிருப்பார்.

'சிவாநந்த லஹரி' ஸ்ரீ சைலத்தில் செய்திருப்பாரா யிருக்கும். அங்கே கோபுர வாசல் கதவிலேயே ஆசார்யாள் பிம்பம் பொறித்திருக்கிறது. 'யோக தாராவளி'யில் ஆசைப் பட்டாற்போ'லவே ஸ்ரீசைலத்தை ஒட்டியிருக்கும் ஹாடகேச்வரம் என்ற இடத்தில் அருவியும் ஆலமரமுமாக உள்ள ஒரு ஏகாந்தமான இடத்தில் ஆசார்யாள் அடித்த சிலையாக நிஷ்டையில் சில காலம் இருந்திருக்கிருர்.

கண்ணப்பரை பக்தர்களுக்கெல்லாம் சிரோபூஷணமா யிருப்பவர்— "பக்தாவதம்ஸாயதே!"— என்று சொன்ன ஆசார்யாள்* காளஹஸ்தியும்தான் போயிருப்பார். அதோடு அது அம்பாள் ஞானும்பாளாக உள்ள க்ஷேத்ர மல்லவா? போகாமலிருப்பாரா?

திருப்பதியில் பெருமாளே தர்சனம் பண்ணி, அந்தக் கோவிலில் பக்தாள் காணிக்கைகளைக் கொண்டுவந்து கொட்டும்படியாக 'தனுகர்ஷண யந்த்ரம்' ஸ்தாபித்தார்.

'பாண்டுரங்காஷ்டகம்', 'ஜகந்நாதாஷ்டகம்' இரண்டும் அவர் மஹாராஷ்ட்ராவிலுள்ள பண்டரீபுரத்துக்கும் ஒரிஸ்ஸாவிலுள்ள புரிக்கும் போனதற்குச் சான்று. புரியில் ஒரு முக்ய மடமே ஸ்தாபித்திருக்கிருர்.

இன்னென்று த்வாரகையில் ஸ்தாபித்ததும் தெரிந்து கொண்டோம். "அச்யுதாஷ்டகம்", "கோவிந்தாஷ்டகம்" என்று க்ருஷ்ண ஸ்துதிகள் அநேகம் ஆசார்யாள் பண்ணியது த்வாரகை, மதுரா, ப்ருந்தாவனம் ஆகிய இடங்களில் அவர் க்ஷேத்ராடனம் பண்ணின போது இருக்கலாம். இப்படியே அயோத்தியில் "ராம புஜங்கம்" பாடியிருக்கலாம்......

---

* "சிவாநந்த லஹரி"—63

Koviloor Digital Library

சிவ ஸ்தோத்ரங்களில் பல காசியில் பண்ணியதா யிருக்கும். 'அன்னபூர்ணு ஸ்தோத்ரம்' அங்கேதான் பண்ணியது என்று சொல்லாமலே தெரியும். க்ஷேத்ர, தீர்த்தங்களைப் பற்றியும் 'காசீ பஞ்சகம்', 'கங்காஷ்டகம்', 'மணிகர்ணிகாஷ்டகம்' என்றெல்லாம் ஸ்தோத்ரித்திருக் கிறுர். யமுனை பற்றியும் அஷ்டகம் பாடியிருக்கிறுர். நர்மதா தீரத்தில்தானே ஆச்ரமம் வாங்கிக்கொண்டார்? அதைப் பற்றியும் அஷ்டகம் பாடியிருக்கிறுர்.

ஸகல க்ஷேத்ரங்களுக்கும் போய் காஷ்மீரத்தில் மஹா பண்டிதர்களுடன் வாதம் பண்ணி ஜயித்தார். அங்கே சாரதா பீடத்தில் ஏறினுர் என்று நம்பிக்கை இருக்கிறது. அங்கே மஹா பண்டிதையாக இருந்த ஒரு யுவதியை மெச்சித் தலையில் சூட்டிக்கொள்ள 'டர்பன்' மாதிரியான 'தரங்கம்' என்ற ஒரு சிரோபூஷணம் கொடுத்தாராம். இப்போதும் அங்கே அதை விசேஷ ஆபரணமாகச் சொல்லிச் சூட்டிக் கொள்கிறுர்களாம்.

ஸ்ரீநகரில் 'சங்கராசார்ய கிரி' என்றே ஒரு குன்று இருக்கிறது. தேசத்தின் வடக்கு உச்சியில் ஆசார்யாளுக்கு உச்ச ஸ்தானம் கொடுத்திருப்பதற்கு அடையாளம்!

பத்ரிநாத் என்னும் பதரிகாச்ரமத்துக்கு ஆசார்யாள் போனது ஒரு முக்யமான ஸம்பவம். ஜ்யோதிர் மடம் அங்கேதான் ஸ்தாபித்தார். பதரி நாராயண மூர்த்தியே அப்போது அலகநந்தா நதியில் புதைந்திருந்தாகவும், ஸ்வாமி ஸ்வப்னத்தில் ஆசார்யாளுக்கு தெரிவித்தபடி அவர் தான் அதை எடுத்து வந்து ப்ரதிஷ்டை பண்ணிஞரென்றும் ஐதிஹ்யம் இருக்கிறது. அங்கே சூடாக வெந்நீர் பொங்கும் ஒரு ஊற்று 'தப்த குண்டம்' என்று இருக்கிறது. அது ஸ்வாமியே ஆசார்ய பரிவாரத்தின் ஸ்நானத்திற்காக அநுக்ரஹித்தது என்று தெரிகிறது.

இதையெல்லாம்விட முக்யமானதாக ஆசார்யாள் நினைத்திருக்கக்கூடிய ஒன்றும் அங்கே நடந்தது. ஸர்வ

Koviloor Digital Library

ஜனங்களும் ஆசார்யாளின் சரணத்தில் விழுந்து ஜகத்குரு, ஜகத்குரு என்று கொண்டாடினாலும் அவருக்குத் தானும் சிஷ்யராக விழுந்து நமஸ்காரம் பண்ணணும், பண்ணணும் என்றுதான் இருந்தது. அந்த ஆசை பூர்த்தியாகும்படியாக பதரியில் ஆசார்யாளின் குருவும் பரம குருவுமான கோவிந்த பகவத்பாதரும், கௌடபாதரும் தர்சனம் கொடுத்தார்கள். அவரைத் தங்கள் சிஷ்யர், ப்ரசிஷ்யர் என்று சொல்லிக் கொள்ளும்படியான பாக்யத்தைத் தங்களுக்குக் கொடுத்து, அவதார கார்யத்தை அமோகமாக நிறைவேற்றிக் கொண்டிருந்த ஆசார்யாளைப் பார்த்து அந்த இரண்டு பேரும் ரொம்ப ஸந்தோஷப்பட்டார்கள். ஆசார்யாள் "தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்" சொல்லி, அடிக்கு அடி அவர்களுடைய சரணங்களில்—திரு அடிகளில்!—நமஸ்கரித்தார். தக்ஷிணாமூர்த்தியிலிருந்தே வந்தவர் இப்படி பக்தி நாடகம்—நாடக பக்தியில்லை!—பண்ணினார்.

சிவ —சக்தி தர்சனம்;
சிவலிங்கங்களும் சக்தி ஸ்துதியும்

மாதா-பிதா-குரு என்பதில் குரு தர்சனம் ஆனதும் மாதா-பிதாக்களைப் பார்க்க ஆசைப்பட்டார். சிஷ்யராக அடங்கியிருந்த மாதிரி, குழந்தையாக அடங்கியிருக்க ஆசைப்பட்டார். யார் மாதா? யார் பிதா? "மாதா ச பார்வதீ தேவீ; பிதா தேவோ மஹேச்வர:" என்று அவரே சொல்லியிருக்கிறார்*. அவர்கள் சேர்ந்து பண்ணின அவதாரந்தான் அவரே என்றாலும் குழந்தையாக பக்தி பண்ண ஆசைப்பட்டார். இதுவரை நம்மெல்லாரையும் போலக் கோவில்களுக்குப் போய் அர்ச்சா மூர்த்திகளை (விக்ரஹ வடிவங்களை) தர்சித்தவர்—நாம் அர்ச்சையைத் தான் பார்க்கிறோமென்றால், அவர் அதிலேயே அந்தந்த ஸ்வாமியை நேராகப் பார்த்திருப்பார். அப்படிப்

* 'அன்னபூர்ணா ஸ்தோத்ரம்' கடைசி ச்லோகம்.

Koviloor Digital Library

பார்த்தவர்—இப்போது பார்வதீ பரமேச்வராள் ஸாக்ஷாத்தாக எழுந்தருளியிருக்கும் கைலாஸத்துக்குப் போனார். யோக பலத்தால் போனார் என்று இருக்கிறது.

கைலாஸத்தில் ஈச்வரனையும் அம்பாளையும் தர்சனம் பண்ணி, பக்தி பண்ணி ஆனந்தப்பட்டார். ஒன்றே இப்படி ஈச்வரன்-அம்பாள் என்று இரண்டாகி, அப்புறம் நம்முடைய பகவத்பாதாள் என்று மூன்றாகி ஒன்றையொன்று பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டது!

அவர் தர்சனம் பண்ணினது அவர் ஆனந்தமடைந்ததோடு முடிந்துபோகக் கூடாது, இதிலிருந்து லோகத்திற்கெல்லாம் எந்நாளும் ஆனந்தமாக ஒன்று நடக்கவேண்டுமென்று பார்வதீ-பரமேச்வரர்கள் நினைத்தார்கள். வந்த குழந்தைக்கு ஒரு 'ப்ரஸண்ட்' கொடுக்கிற மாதிரி கொடுத்து அதிலேயே லோகத்துக்குப் பரமாநுக்ரஹத்தைச் சேர்த்து அனுப்பி விட்டார்கள்.

ஸ்வாமி ஆசார்யாளுக்கு ஐந்து ஸ்படிக லிங்கங்களைக் கொடுத்தார். இந்த விஷயம் இதிஹாஸ-புராணங்களை (முறையே) சேர்ந்த 'சிவ ரஹஸ்யம்', 'மார்க்கண்டேய ஸம்ஹிதை' ஆகிய இரண்டிலும் இருக்கிறது.* சிவ ரஹஸ்யத்தில் இது காசியில் நடந்ததாகச் சொல்லியிருந்தாலும், அவை கைலாஸ லிங்கங்கள் என்றே இருக்கிறது. இரண்டிலுமே பஞ்சலிங்கங்கள் என்று ஒற்றுமையாகச் சொல்லியிருப்பதை கவனிக்கவேண்டும். ஒன்றில் ஐந்து என்று சொல்லி இன்னொன்றில் நாலு என்றோ ஆறு என்றோ இல்லை! இதைவிட கவனிக்கவேண்டியது, இரண்டிலுமே அந்த ஐந்து லிங்கங்களுக்கும் ஒரே பெயர்களைச் சொல்லியிருப்பது! யோகலிங்கம், போகலிங்கம், வரலிங்கம், முக்திலிங்கம், மோக்ஷலிங்கம் என்று அதே ஐந்து பேர் சொல்லியிருக்கிறது.

---

* 'சிவரஹஸ்யம்': 9வது அம்சம், 16வது அத்யாயம். மார்க்கண்டேய ஸம்ஹிதை': 72வது கண்டம், 7வது பரிஸ்பந்தம்.

Koviloor Digital Library

கூடுதலாக, அவற்றைப் பிற்பாடு ஆசார்யாள் எங்கெங்கே ப்ரதிஷ்டை பண்ணினாரென்ற விவரம் 'மார்க்கண்டேய ஸம்ஹிதை'யில் கொடுத்திருக்கிறது: யோகலிங்கம் இந்த (காஞ்சி) மடத்தில்; போகலிங்கம் ச்ருங்கேரி மடத்தில்; வரலிங்கம் நேபாளத்தில் நீலகண்ட க்ஷேத்ரத்தில்; முக்தி லிங்கம் கேதாரிநாத்தில்; மோக்ஷ லிங்கம் சிதம்பரத்தில்.

அது ஸ்படிக லிங்கமாக இருந்ததில் ரொம்ப அர்த்த முண்டு.

ஸ்ரீ ருத்ர ப்ரச்னம்தான் வைதிகமான சிவ ஸூக்தங்களில் முக்யமாக இருப்பது. அதில் த்யான ச்லோகத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்றால்:

ஆபாதாள-நப: ஸ்தலாந்த-புவந-ப்ரஹ்மாண்ட-
மாவிஸ்புரஜ்-
ஜ்யோதி: ஸ்பாடிக-லிங்க-மௌளி விலஸத்-
பூர்ணேந்து வாந்தாம்ருதை:।
அஸ்தோகாப்லுத-மேக-மீச-மநிசம்
ருத்ராநுவாகாஞ்-ஜபந்
த்யாயேதீப்ஸித ஸித்தயே (அ)த்ருத-பதம் விப்ரோ
(அ)பிஷிஞ்சேச்-சிவம்॥

வேத மந்த்ர பூர்வமான பூஜை பண்ணுவதற்குரியவனான ஒரு விப்ரன் பூஜையினால் இஷ்ட ஸித்தி அடைய வேண்டுமானால் இந்த ருத்ர ப்ரசனம் என்ற அநுவாகத்தை (வேதத்தின் 'ஸெக்ஷ'னை) ஒரே ஓட்டமாக ஓடாமல் ('அத்ருத பதம்' என்பதற்கு அதுதான் அர்த்தம்) சொல்ல வேண்டிய முறையில் ஜபம் செய்தபடி சிவனுக்கு அபிஷேகம் பண்ண வேண்டும் என்பது ச்லோகத்தின் கடைசியில் சொன்ன விஷயம். சிவனுக்கான பிம்பம் அநேகமாக லிங்கமாகத்தான் இருக்கும். அது ஸ்படிக லிங்கமோ, பாணலிங்கமோ, ஸுவர்ண லிங்கமோ, ரஸலிங்கமோ, மரகத லிங்கமோ

Koviloor Digital Library

எதுவாயிருந்தாலும் 'ருத்ரம்' ஜபித்தபடி அபிஷேகிக்கணும். வேறே நடராஜா மாதிரி மூர்த்தியாக இருந்தாலும் இதே விதிதான். இது (ச்லோகக்) கடைசியில் சொன்ன விஷயம். "ஏகம் ஈசம் அநிசம்" என்று ஏக வஸ்துவான ஈச்வரனை ருத்ர ஜப த்யானத்தோடு ஸதா அபிஷேகிக்கணும் என்று சொல்லியிருக்கிறது.

இதற்கு முன் சிவ ஸ்வரூபத்தை எப்படி த்யானிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. பாதாளத்திலிருந்து ஆகாசம் வரை வ்யாபித்துக் கொண்டு, ப்ரம்மாண்டங்களையெல்லாம் ப்ரகாசப்படுத்திக் கொண்டிருக்கும் ஜ்யோதிஸ்ஸாக ஸ்வாமி இருக்கிறார். ஜ்யோதிர் லிங்கமாக இருக்கிறார். அது ஸ்படிக லிங்கமாக இருக்கிறது: "ஸ்பாடிக லிங்க"! ஸ்படிகத்தாலானது 'ஸ்பாடிகம்'. இப்படியொரு மஹா பெரிய ஸ்படிக லிங்கமாக ஸ்வாமியை பாவித்துக்கொள். அதன் சிரஸில் பூர்ண சந்திரன் ப்ரகாசிக்கிறது—"மௌளி விலஸத் பூர்ணேந்து." மான், மழு, ஜடை எல்லாமுள்ள ஸகள (உருவ) பிம்பத்தின் சிரஸில் மூன்றும் பிறைதான் இருக்கிறதென்றால் ஸ்படிக மயமான இந்த ஸகள-நிஷ்கள (அருவுருவ) லிங்கத்தின் உச்சியில் பூர்ணசந்திரனே இருக்கிறது! அதனால்தான் குறிப்பாக ஆசார்யாள் ப்ரதிஷ்டை பண்ணியுள்ள இந்த லிங்கங்களுக்கு சந்த்ர மௌளீச்வரன் என்று பேர் இருக்கிறது. அந்தப் பூர்ண சந்த்ரனுக்குள்ளேயிருந்து அம்ருதம் பெருகுகிறது: "வாந்தாம்ருதை:". அம்ருதம் "அஸ்தோக"மாகப் பெருகுகிறது—அதாவது நிறைய, தாரை தாரையாய்ப் பெருகுகிறது. மூன்றும் பிறையானால் ஏதோ கொஞ்சம் அம்ருதம் தான் பெருகும். இது பூர்ண சந்த்ரனானதால் ஒரே தாரையாகப் பிரவஹிக்கிறது. தன் சிரஸிலுள்ள சந்த்ரனிலிருந்தே பெருகும் அம்ருத தாரையில் ஸ்வாமி அப்படியே முழுகியிருக்கிறார்—"ஆப்லுதம்" என்றால் முழுக்கப்பட்டு, அபிஷேகம் பண்ணப்பட்டு என்று அர்த்தம். அவர் நீயும் துளி ஜலம் விட்டு அபிஷேகம் பண்ணினால் ஆனந்தமடைகிறார்!

Koviloor Digital Library

ஸ்படிகமாக இல்லாத லிங்கமாக, அல்லது வேறே ஸகள மூர்த்தியாயிருந்தால்கூட ருத்ர ஜபத்தோடு அபிஷேகம் பண்ணும்போது ஸ்வாமியை ஸ்படிக லிங்கமாகத்தான் த்யானிக்க வேண்டும் என்று இருப்பதால்தான் பரமேச்வரன் ஐந்து ஸ்படிக லிங்கங்களை ஆசார்யாளிடம் கொடுத்தார்.

ஸகளத்தைவிட ஸகள நிஷ்களம் அத்வைதத்திற்குக் கிட்டே. அதிலும் ஆதி அந்தமில்லாத லிங்கம் இன்னம் கிட்டே. அந்த லிங்கம் ஸ்படிகமாகவும் இருந்துவிட்டால் ரொம்ப ரொம்பக் கிட்டே. அத்வைதம் பரமதத்வமாகச் சொல்வது நிர்குண ப்ரஹ்மம். ஸ்படிகம் ஒரு கலரிலும் வராமல் transparent-ஆக (ஒளி ஊடுருவும்படி) இருந்து கொண்டு நிர்குண தத்வத்துக்கே ரூபகமாயிருக்கிறது. ஸ்படிகம் பரப்ரஹ்மம் மாதிரி நிஷ்களங்கமானது, நிர்மல மானது, சுப்ரமானது. எந்தக் கலர் புஷ்பத்தால் அர்ச்சித் தாலும் உள்ளே அந்த 'டால்' அடித்து, அந்தக் கலர் மாதிரியே ஸ்படிக லிங்கம் தோன்றும். மாயை ஆரோ பிக்கும் அத்தனை ரூபங்களுக்கும், குணங்களுக்கும் நிர்குண ப்ரஹ்மம் இடம் கொடுத்து, அது அதுவாகவும் தோன்றுவது போலத்தானே இது?

இப்படி ஞான மயமாயிருப்பது குளு குளு என்று சந்த்ரிகையின் அம்ருதத்தில் குளிர்ந்திருப்பது காருண்யத் தைக் காட்டுவதாக இருக்கிறது.

பஞ்ச பூதம், பஞ்ச ப்ராணன் என்று இருப்பதுபோல் பஞ்ச லிங்கம் ஸ்வாமி ஆசார்யாளுக்குக் கொடுத்தார். பஞ்ச க்ருத்யம் செய்பவர்! பஞ்ச முகம் உள்ளவர்!

அறிகிறவன்-அறியப்படும் வஸ்து-அறிவு என்ற மூன்றும் ஒன்று என்பது அத்வைதம். 'த்ரிபுடி' என்று இந்த மூன்றைச் சொல்வது. அப்படியொரு த்ரிபுடியாக இங்கே கொடுத்தவர் — சிவன்; வாங்கிக்கொண்டவர் — சிவன்! கொடுக்கப்பட்ட வஸ்துவும் சிவன்!

இங்கே ஆசார்யாளையே ஸ்படிக சந்த்ரமௌளீச்வரராக சொல்லியிருக்கும் ஒரு ச்லோகம் ஞாபகம் வருகிறது.

Koviloor Digital Library

'மாதவீய சங்கர விஜய'த்தில் ஆசார்யாளின் அவதார ஸர்கத்தில் வரும் ச்லோகம் :

மூர்தநி ஹிமகர சிஹ்நம் நிடிலே நயநாங்க-மம்ஸயோ: சூலம்|
வபுஷி ஸ்படிக - ஸவர்ணம் ப்ராஜ்ஞாஸ்தம் மேநிரே சம்பும்||*

குழந்தை சங்கரரைப் பார்க்க வந்த ஞானிகளுக்கு சிவச் சின்னங்கள் அதனிடம் தெரிந்ததாம்! வடு மாதிரி, மச்சம் மாதிரித் தெரிந்தது என்பார்கள். "மூர்தநி ஹிமகர சிந்ஹம்" —சிரஸில் சந்த்ரனின் சின்னம்! அதுதான் சந்த்ரமௌளி! நெற்றியில் மூன்றுவது கண் மாதிரி அடையாளம்—"நிடிலே நயநாங்கம்". தோளில் சூலக் குறி—"அம்ஸயோ: சூலம்." தேஹமெல்லாம் ஸ்படிகமாக மின்னுகிறது: "வபுஷி ஸ்படிக-ஸவர்ணம்". இப்படித் தோன்றிய குழந்தையை சம்பு என்றே அந்த ஞானிகள் தெரிந்து கொண்டார்கள்— "ப்ராஜ்ஞாஸ் தம் மேநிரே சம்பும்"......

பிதாவான மஹேச்வரன் பஞ்சலிங்க அநுக்ரஹம் பண்ணினபோது மாதா பார்வதி சும்மாயிருப்பாளா? அவள் ஒரு ஸ்தோத்ரச் சுவடியை ஆசார்யாளுக்குக் கொடுத்தாள். அதுதான் தேவீ ஸ்துதிகளில் முதல் ஸ்தானம் வஹிப்பதான "ஸௌந்தர்ய லஹரி". மார்க்கண்டேய ஸம்ஹிதையில் அதை "ஸௌந்தர்ய ஸாரம்" என்று சொல்லியிருக்கிறது. "பூத்யை"—அதாவது லோகத்திற்கு க்ஷேமம் உண்டாக்குவதற்காக—அதை ஆசார்யாளுக்கு அநுக்ரஹம் பண்ணினுளென்று இருக்கிறது.

பஞ்சலிங்கம் கொடுத்தது, அவற்றின் பெயர்கள், அவற்றை ஆசார்யாள் எங்கெங்கே வைத்தார் என்பதையெல்லாம் 'மார்க்கண்டேய ஸம்ஹிதை'க்கு முழுக்க இசைவாகச் சொல்லும் 'ஆனந்தகிரீய சங்கர விஜய'த்தில்

* "மாதவீயம்" 2-வது ஸர்கம்: ச்லோகம்-90

Koviloor Digital Library

அம்பாள் கொடுத்த புஸ்தகத்தை 'அம்பிகா ஸ்தவ ஸாரம்' என்று குறிப்பிட்டிருக்கிறது*. தேவீ பரமான ஸ்துதிகளுக் கெல்லாம் இதுவே ஸாரமாயிருப்பது என்று அர்த்தம். "ஜகதநுக்ரஹாய" கொடுத்தாளென்று இருக்கிறது. ஜகத்குருவுக்குப் பண்ணும் அநுக்ரஹம் ஜகத்துக்கே அநுக்ரஹம்தானே?

'ஸௌந்தர்ய லஹரி' என்றால் அழகின் அலைகள். அம்பாள் அழகு ஸமுத்ரமாயிருக்கிறாள். அதை ஸ்தோத்ரம் வாக்கு ரூபத்தில் காட்டிவிடுகிறது. அப்போது ஒவ்வொரு ச்லோகமும் ஒரு அலைமாதிரி.

அம்பாளுக்குப் பல ரூப பேதங்கள் இருப்பதில் இது 'ஸுந்தரி' என்பவளைப் பற்றியது. அவள் தசமஹா வித்யா என்று பத்தில் ஸுந்தரி வித்யாவுக்கு தேவதையாக இருப்பவள். 'ஸ்ரீவித்யா' என்பது அதைத்தான். த்ரிபுர ஸுந்தரி என்பது அந்த ஸுந்தரிதான். மூன்று லோகத்திலே யும் சிறந்த அழகி த்ரிபுரஸுந்தரி. ஸ்தூல-ஸூக்ஷ்ம-காரணம் என்ற முப்புரங்களுக்குள்ளே ஞானமாகவும் காருண்ய மாகவும் இருக்கும் ப்ரஹ்ம தத்வம்தான் இப்படி அழகு ஸ்வரூபமான தாயாக ஆகி த்ரிபுர ஸுந்தரி என்ற பெயரில் விளங்குவது. 'லலிதாம்பாள்' என்று சொல்வது அவளைத் தான்.

சந்த்ரமௌலீச்வர லிங்கத்தின் சக்தியாக ஸ்ரீசக்ர ரூபத்தில் பூஜை பண்ணுவது த்ரிபுரஸுந்தரிக்குத்தான். ஏனென்றால் அவர் மாதிரியே அவளுக்கும் பூர்ண சந்த்ர ஸம்பந்தம் நிறைய உண்டு. அவருடைய சிரஸில் பூர்ண சந்த்ரன் இருக்கிறதென்றால் இவள் வாஸம் பண்ணுவதே பூர்ண சந்த்ர மத்தியில்தான்! "சந்த்ர மண்டல மத்யகா" என்று ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. அவளுக்கு விசேஷமான திதியும் பூர்ணிமை! ஸாதனாந்தத்தில் (ஸாதனை

---

* "ஆனந்தகிரீயம்" 55-வது ப்ரகரணம்.

Koviloor Digital Library

முடிவில்) அவளே நம்முடைய சிரஸ் உச்சியில் பூர்ண சந்த்ரனாக அம்ருதத்தைக் கொட்டுவாள்.

திவ்ய தம்பதி ஜிலுஜிலுவென்று அழகாக அம்ருத கிரணங்களைக் கொட்டிக் கொண்டிருக்கும் சந்த்ர ஸம்பந்தத்துடன் லோகத்தின் தாபத்தையெல்லாம் போக்கி ஆனந்தம் கொடுப்பதற்காகச் சந்த்ரமௌளியாகவும் த்ரிபுரஸுந்தரியாகவும் இருக்கிறார்கள். அவள் சிரஸிலும் சந்த்ர கலை உண்டு. "சாரு சந்த்ர கலாதரா" என்று ஸஹஸ்ரநாமத்தில் வருகிறது. 'மஹாத்ரிபுரஸுந்தரி', 'சந்த்ர மண்டல மத்யகா', 'சாரு சந்த்ர கலாதரா' என்ற நாமாக்கள் கிட்டக் கிட்டவே வந்துவிடுகின்றன.

"'ஸௌந்தர்ய லஹரி' ஆசார்யாளே பண்ணியது என்று தான் ப்ரஸித்தமாயிருக்கிறது. ஏற்கெனவே அது கைலாஸத்திலிருந்தது, அம்பாள் கொடுத்தாள் என்றால் ஆசார்யாள் அதைப் பண்ணவில்லையா? ப்ரசாரம் மட்டும் தான் பண்ணினாரா?" என்று கேட்டால் இதற்கு ஒரு கதை பதில் சொல்கிறது. இந்தக் கதை சங்கர விஜயம் எதிலும் இல்லாவிட்டாலும் கர்ணபரம்பரையாக வந்திருக்கிறது. சிஷ்டர்களும் மதிப்புக் கொடுத்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். என்ன கதை என்றால்...

"மூன்று காலமும் பில்வார்ச்சனை பண்ணி லோக க்ஷேமத்தை உண்டாக்கு" என்று சொல்லி ஸ்வாமி பஞ்ச லிங்கங்களைக் கொடுத்தார். அம்பாளும் லோகக்ஷேமத்திற்காக ப்ரசாரம் பண்ணச் சொல்லி ஸ்தோத்ரச் சுவடியைக் கொடுத்தாள். ஆசார்யாள் அவர்களை நமஸ்காரம் பண்ணி விட்டுத் திரும்பினார்.

கைலாஸத்தின் வாசலிலிருந்த நந்திகேச்வரருக்கு மஹா மந்த்ர சாஸ்த்ரமாக இருந்த அந்த ஸ்தோத்ரம் கைலாஸத்தை விட்டுப் போவதா என்று இருந்தது. அவர் அப்பப்போ ரொம்பவும் ரோஷமாகக் கார்யம் பண்ணிவிடுவார். அதனால், யார், என்ன என்று பார்க்காமல் ஆசார்யாளின்

Koviloor Digital Library

கையிலிருந்த சுவடியைப் பறித்தார். எல்லா ஓலையும் அவர் கைக்குப் போகவில்லை. ஒரு பாகம் ஆசார்யாள் கையிலேயே இருந்தது. மொத்தம் இருந்த நூறு ச்லோகத்தில் பின் 59 நந்திகேச்வரர் கைக்குப் போயிற்று. ஆரம்ப பாகமான 41 ச்லோகத்தை ஆசார்யாள் இறுக்கப் பிடித்துக்கொண்டு சட்டென்று வெளியேறி விட்டார்!

பெரிய பாகம் நஷ்டமாகிவிட்டதே என்று அவர் துக்கப் பட்டார். அப்போது அம்பாள் அசரீரி வாக்கில், "எல்லாம் என் லீலைதான். அந்த 59-ம் நீயே பூர்த்தி பண்ணிவிடு. உன் வாக்காலேயே ஸ்தோத்ரம் கேட்கணும்; அது கைலாஸ ஸொத்தான ஸ்தோத்ரத்தோடேயே, அதற்கு ஸமதை யாகச் சேர்ந்து ப்ரகாசிக்கணும் என்றுதான் இப்படி நடக்கப் பண்ணினேன்" என்றாள்.

ஆசார்யாள் ரொம்பவும் ஸந்தோஷத்துடன் அப்படியே 41-ஐ நூறாக்கிப் பூர்த்தி பண்ணிவிட்டு, "என் வாக்கா? உன்னுடையதேயான வாக்கால்தான் உனக்கென்றே இந்த ஸ்தோத்ரம் ஏற்பட்டது—த்வதீயாபிர் - வாக்பிஸ் - தவ ஜநநி வாசாம் ஸ்துதிரியம்" என்று பரம விநயத்தோடு முடித்து அவளுக்கு அர்ப்பணம் பண்ணினார்.

இப்படிக் கதை இருக்கிறது.

ஆசார்யாள் பண்ணிய 59 ச்லோகங்களில்தான் அம்பாளின் ஸ்வரூப வர்ணனை, கேசாதி பாதம், அவளுடைய ஸௌந்தர்ய அலைகளாக வருகிறது. இதில் மூன்றாவது ச்லோகத்தில் (அதாவது முழு நூலின் 44-வது ச்லோகத்தில்) "ஸௌந்தர்ய லஹரீ" என்ற பதப்ரயோகமே பண்ணியுமிருக் கிறார். அதனால், மொத்த நூலையும் அந்தப் பெயரில் சொன்னாலும் முதல் 41 'ஆனந்த லஹரி' என்றும், பின் 59- மட்டுமே 'ஸௌந்தர்ய லஹரி' என்றும் குறிப்பிடப்படு கின்றன. முதல் பாகத்தில் எட்டாவது ச்லோகத்தில் 'ஆனந்த லஹரி' என்று—"சிதாநந்த லஹரீம்" என்று— வருகிறது.

Koviloor Digital Library

கைலாஸத்தில் ஆசார்யாளுக்குக் கிடைத்த ஸ்தோத்ரத்திற்கு 'மார்க்கண்டேய ஸம்ஹிதை', 'ஆனந்த கிரீயம்' இரண்டிலுமே 'ஸௌந்தர்ய லஹரி' என்று பேர் சொல்லாமல் 'ஸௌந்தர்ய ஸாரம்' என்றும், 'அம்பிகா ஸ்தவ ஸாரம்' என்றும் பேர் சொல்லியிருப்பது கர்ண பரம்பரைக் கதையின் ப்ராமாண்யத்துக்கு பலம் சேர்ப்பதாகத் தோன்றுகிறது.

முதல் பாகம் ஸுந்தரியைப் பற்றிய மந்த்ர சாஸ்த்ர ஸாரம்.

பாக்கியை நந்திகேச்வரர் வழிப்பறி செய்தாரே என்று எனக்கு ரொம்ப ஸந்தோஷமாக இருக்கிறது! அவருக்கு ரொம்ப நன்றி தெரிவிக்கணும் போலிருக்கிறது! அதனால் தானே, அம்பாளின் ரூப லாவண்ய மஹிமையையும், 'இதற்கு மேலே கவிதை இல்லை, பக்தி இல்லை' என்னும்படியாக ஆசார்யாளின் மஹிமையையும் தெரிவிக்கிற பின் பாகம் உண்டாயிற்று?*

ஸ்வாமியின் ஆஜ்ஞைப்படியே ஆசார்யாள் நாலு லிங்கங்களை ச்ருங்கேரி, கேதாரம், நீலகண்டம், காஞ்சி ஆகிய க்ஷேத்ரங்களில் ப்ரதிஷ்டை செய்தார். நிர்யாணம் ஸமீபித்தபோது மோக்ஷலிங்கத்தைச் சிதம்பரத்தில் ப்ரதிஷ்டை செய்து வரும்படி ஸுரேச்வராசார்யாளிடம் கொடுத்தனுப்பினாரென்று 'ஆநந்த கிரீய'த்தில் இருக்கிறது.

காஞ்சி மகிமை

திக்விஜயமெல்லாம் முடித்து முடிவாகக் காஞ்சீபுரத்துக்கு வந்தார். 'கச்சி மூதூர்' என்று சங்க இலக்கியமான 'பெரும்பாணாற்றுப்படை' முதலியவற்றிலேயே சொல்லப்

---

* ''ஸௌந்தர்ய லஹரி''யின் பல ச்லோகங்களுக்கு ஸ்ரீசரணர்களின் விளக்கம் வரவிருக்கும் நம் நூற்பகுதிகளில் ஒன்றில் வெளியாகும். (முதற் பகுதியில் அம்பிகை குறித்த உரைகளிலும் ஆங்காங்கே இவ்விளக்கம் கொடுத்திருக்கிறோம்.)

Koviloor Digital Library

படும் அந்தப் புராதனமான நகரம் மஹாக்ஷேத்ரம் என்பதாக மட்டுமின்றி பெரிய வித்யா ராஜதானியாகவும் இருந்திருக்கிறது. வடக்கே காசி மாதிரி தெற்கே காஞ்சி. "சான்றோர் உடைத்து" என்று சிறப்பிக்கப்படும் 'தொண்டை நன்னாட்டின்' தலைநகரம் அதுதான். "கடிகா ஸ்தானம்" எனப்படும் ஸம்ஸ்க்ருத யூனிவர்ஸிடி இருந்த நகரம் அது. அப்பர் ஸ்வாமிகள் "கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்" என்கிறார்[1]. பல மத ஸித்தாந்திகளும் கூடியிருந்த இடம் அது என்று 'மணிமேகலை'யிலிருந்து தெரிகிறது. பௌத்தம், ஜைனம், காபாலிகம் முதலான எல்லா மதங்களும் அங்கே பிற்காலத்தில் இருந்ததென்று மஹேந்த்ர பல்லவனின் 'மத்த விலாஸ ப்ரஹஸன' நாடகத்திலிருந்து தெரிகிறது. சரித்ரத்தில் சக்கரம் ஒரு முழு சுற்றுச் சுற்றிப் பழையபடியே மறுபடி நடக்கும்போது எந்த வட்டாரத்தில் எப்படியிருந்ததோ அப்படித்தான் திரும்பவும் நடக்கும். அதனால் ஆசார்யாள் காலத்திலும் அங்கே பல மதங்கள் இருந்திருக்க வேண்டும். இப்போதும் பௌத்த சிற்பங்கள் பல அங்கே அகப்படுகின்றன. காஞ்சி மண்டலத்துக்குள்ளேயே இருக்கும் திருப்பருத்திக்குன்றம் 'ஜினகாஞ்சி' என்கிற சமண ஸ்தலமாகப் பேர் பெற்றிருக்கிறது.

க்ஷேத்ரம் என்று பார்க்கும்போது, 'ரத்ன த்ரயம்' என்கிற ஈச்வரன், அம்பாள், பெருமாள் ஆகிய மூன்று பேருக்கும் முக்யமான ஸ்தலமாயிருப்பது அது. எண்ணி முடியாத கோவில்கள் ஸகல தெய்வங்களுக்கும் அங்கே இருப்பதில் ஏகம்பம் பரமேச்வரனின் பஞ்சபூத ஸ்தலங்களில் ப்ருத்வீ க்ஷேத்ரமாயிருக்கிறது. அம்பாள் காமாக்ஷியின் காமகோஷ்டம்-'காமகோட்டம்' என்பது-அத்தனை அம்மன் ஸந்நிதிகளுக்கும் மூல சக்தி பீடமாயிருக்கிறது[2]. பெருமாள்

1. "மறையது பாடி" எனத் தொடங்கும் பதிகம், எட்டாம் பாடல்.
2. 'தெய்வத்தின் குரல்'-முதற் பகுதியில் 'காமாக்ஷியின் சரிதை' என்ற உரை பார்க்கவும்.

Koviloor Digital Library

வரதராஜாவாக உள்ள விஷ்ணு காஞ்சியை—'அத்தியூர்' என்று வைஷ்ணவர்களின் திவ்ய தேசங்களில் சொல்வது: அதை—மூன்று முக்யமான க்ஷேத்ரங்களில் ஒன்ருகச் சொல் கிருர்கள். ஸ்ரீரங்கமும், திருப்பதியும் மற்ற இரண்டு.

விஷ்ணு காஞ்சியைத் தற்போது சின்ன காஞ்சீபுரம் என்கிருேம். பெரிய காஞ்சீபுரம் என்பது சிவகாஞ்சி. கச்சி ஏகம்பமும் காமகோட்டமும் உள்ள இடம்.

ரத்ன த்ரயம் மட்டுமில்லாமல் ஷண்மத தெய்வங் களுக்குமே முக்யமான க்ஷேத்ரம் காஞ்சி.

பிள்ளையார் கோவில்கள் இல்லாத ஊரே தமிழ் நாட்டில் கிடையாது. அப்படிக் காஞ்சீபுரத்திலும் அநேகம் உண்டு. அங்கே ஒரு பேட்டைக்கே பிள்ளையார் பாளையம் என்று பேர். காமாக்ஷி ஆலயத்திலேயே ஆறு, "ஏழு விக்நேச்வர மூர்த்திகள் உண்டு.

ஸுப்ரஹ்மண்யருக்கு குமரக் கோட்டம் என்று தனிக் கோயில் இருக்கிறது. கச்சியப்ப சிவாசாரியார் கந்த புராணம் எழுதி அரங்கேற்றியதே அங்கேதான்!

கச்சபேச்வரர் கோவிலில் ஸூர்யன் ஸந்நிதியில் 'மயூர சதகம்' என்ற நூறு ச்லோகம் கொண்ட ஸூர்ய ஸ்துதி கல்வெட்டில் பொறித்திருப்பதிலிருந்து அது ஒரு முக்யமான ஸூர்ய க்ஷேத்ரமாகத் தெரிகிறது.

இப்படி ஷண்மதங்களுக்கும் முக்யம் வாய்ந்ததாகக் காஞ்சீபுரம் இருக்கிறது. ஆசார்யாளுக்கு முந்தியே அப்படி யிருந்து அவர் அதனுலேயே அங்கே வந்து தங்கியிருக்கலாம். அல்லது ஷண்மத ஸ்தாபனுசார்யாளாகிய அவர் வந்து தங்கியதாலேயே அது இப்படிப் பெருமை பெற்றிருக்கலாம்.

ஸப்த மோக்ஷபுரிகளில் தக்ஷிணத்தில் உள்ள ஒன்றே ஒன்று காஞ்சீபுரம்தான் என்பது அதன் தலையான சிறப்பாகும்.

Koviloor Digital Library

ஸமய முக்யத்வம், வித்யா ஸ்தான முக்யத்வம், ராஜரீக முக்யத்வம், வ்யாபார முக்யத்வம் எல்லாமே அந்த ஊருக்கு இருந்ததால்தான் "நகரேஷு காஞ்சி" என்று புகழப் பட்டிருக்கிறது.

காஞ்சியில் ஆசார்யாள்

ஆசார்யாள் காஞ்சீபுரம் வந்ததை அநேகமாக அவரது அத்தனை சரித்ர புஸ்தகங்களுமே சொல்கின்றன. காஞ்சியிலிருந்து கொண்டுதான் அவர் ஆறு சிஷ்யர்களை தேசமெல்லாம் அனுப்பிவைத்து ஷண்மதங்களை நிலைப்படுத்தினாரென்று 'ஆனந்தகிரீயம்', '(ச்ருங்கேரி) குருவம்ச காவ்யம்' இரண்டிலும் இருக்கிறது[1].

ஆசார்யாள் காஞ்சிபுரத்தில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தாரென்று 'சங்கராப்யுதம்', 'கோவிந்த நாதீயம்', 'சித்விலாஸீயம்', 'குரு ரத்னமாலா' ஆகிய புஸ்தகங்கள் தெரிவிக்கின்றன[2]. 'ஸுஷமா' மேற்கோளிலிருந்து 'ப்ருஹச் - சங்கர', 'ப்ராசீன சங்கர' விஜயங்களிலும் இந்த விஷயம் இருப்பதாகத் தெரிகிறது[3]. 'வ்யாஸாசலீய'த்தின்படி காஷ்மீரத்தில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் என்று த்வனித்தாலும், கதைத் தொடர்ச்சியோ அவருடைய

---

1. 'ஆநந்த கிரீயம்'-ப்ரகரணங்கள் 67-72; 'குருவம்ச காவ்யம்'-ஸர்கம் 3, ச்லோகம் 36-ம், அதற்கு நூலாசிரியரே எழுதியுள்ள விரிவுரையும். அனைத்து சங்கர விஜயங்களுக்கும் முந்தைய 'ப்ருஹச்-சங்கர விஜய'த்திலும் ஆசார்யாள் காஞ்சி வாஸத்தின்போது ஷண்மத ஸ்தாபனம் செய்த விவரம் உள்ளதாக 'குரு ரத்ன மாலா'வின் 33-வது ச்லோகத்திற்கான 'ஸுஷமா' விரிவுரையின் மேற்கோளிலிருந்து தெரிகிறது.

2. ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதி ஸ்வாமிகள் என்ற ச்ருங்கேரி ஆசார்யாளின் சீடரான ஸ்ரீ லக்ஷ்மண ஸூரியின் "பகவத் பாதாப்யுதயத்"த்திலும் காஞ்சியில் ஆசார்யாளின் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் கூறப்பட்டுள்ளது (ஆறும் ஸர்க்க முடிவு)

3. 'குரு ரத்னமாலா'வின் 'ஸுஷமா' வ்யாக்யானத்தில் முறையே 33-வது, 31-வது ச்லோகங்களின் விரிவுரையில் காணும் மேற்கோள்கள்.

Koviloor Digital Library

காஞ்சி வாஸத்தைச் சொல்வதாக இருக்கிறது[1]. இந்தக் குழப்பத்தைப் போக்குவதாகக் 'காச்மீரம் என்று காஞ்சி மண்டலத்துக்கே ஒரு பெயர் உண்டு' என்று கோவிந்த நாதீயத்தில் தெளிவுபடுத்திச் சொல்லியிருக்கிறது[2]. 'சிவரஹஸ்ய' இதிஹாஸத்தில் ஆசார்ய சரித்ரத்தை முடிக்குமிடத்தில் அவர் காஞ்சீபுரத்தில் தம்முடைய மடத்தில் வஸித்துவந்த காலத்தில் 'மிச்ரர்கள்' என்கிற மஹா பண்டிதர்களை ஸகல சாஸ்த்ர வாதத்திலும் ஸுலபமாக ஜயித்தார்—''விஜித்ய தரஸா(அ)க்ஷத சாஸ்த்ரவாதை: மிச்ராந்''—என்று சொல்வது ஸர்வஜ்ஞ பீடம் ஏறியதைக் குறிப்பதாகவே தெரிகிறது[3].

அவதாரத்தைப் பூர்த்தி பண்ணி ஆசார்யாள் காஞ்சியிலேயே ஸித்தியடைந்ததாக 'சிவரஹஸ்யம்',

---

1. சென்னை மானுஸ்க்ரிப்ட் லைப்ரரி பதிப்பில் முற்சேர்க்கையாகக் கொடுத்துள்ள ஐந்து ச்லோகம் பார்க்கவும்.

2. 'கோவிந்த நாதீயம்'-அத்யாயம் 9, முதல் இரு ச்லோகங்கள்.

3. மூலத்தில் ''ஸ்வகாச்ரமே'' என்பதாகக் காஞ்சி ஸ்ரீ மடம் ஆசார்யாளே பீடாதிபத்யம் வஹித்த மடமாகக் கூறப்பட்டுள்ளது. 'குரு ரத்ன மாலா' 33-ம் ச்லோகத்துக்கான 'ஸுஷமா' வ்யாக்யானத்தில் மேற்கோளாக வரும் 'வ்யாஸாசலீய' ச்லோகங்களில் ஒன்றும் மேற்படி 'சிவரஹஸ்ய' வசனத்தை அடியொற்றி ஆசார்யாள் காஞ்சி வாஸத்தில் தாம் நிர்மாணித்திருந்த மடத்தில் (''மடே ஸ்வக்லுப்தே') இருந்தபோது மிச்ரர்களை வென்றாரென்று கூறி, ஸர்வஜ்ஞபீடம் ஏறியதையும் தெரிவிக்கிறது (''ஸர்வஜ்ஞ பீடம் அதிருஹ்ய'').

'ப்ருஹச்-சங்கர விஜயம்', அதற்கடுத்தபடியாகத் தொன்மை பொருந்திய 'ப்ராசீன சங்கர விஜயம்' ஆகியவற்றில் ஆசார்யாள் காஞ்சியில் ஸ்ரீ சாரதா மடம் என்று பெயர் கொண்ட ஸ்ரீ காமகோடி பீட மடத்தை ஸ்தாபித்துத் தமக்குப் பிறகு ஸுரேச்வரரையும், அவரது காப்பில் ஸர்வஜ்ஞாத்மரையும் நியமித்த விவரம் இருப்பதை 'ஸுஷமா' 31-34 ச்லோக விரிவுரை மேற்கோள்களிலிருந்து விளங்கிக்கொள்ளலாம். 'கேரளீய சங்கர விஜய'மும் இதனை அப்படியே அடியொற்றிச் செல்கிறது.

பொது நூலான புராணங்களைச் சேர்ந்த 'மார்கண்டேய ஸம்ஹிதை'யில் காஞ்சி மட ஸ்தாபனமும் அதற்குரிய ஸ்ரீ காமகோடி பீடத்தில் ஸுரேச்வரரின் நியமனமும் கூறப்பட்டுள்ளன. (72-7)

—தொடர்ச்சி அடுத்த பக்கம்

Koviloor Digital Library

'மார்க்கண்டேய ஸம்ஹிதை', ஆகிய இதிஹாஸ-புராணங்களும், சில சங்கரவிஜயங்களும், ஆசார்யாள் பற்றிய இதர புஸ்தகங்கள் சிலவும் சொல்லியிருக்கின்றன. ஸித்தி ஸ்தலம் கேதாரிநாத், பதரிநாத் என்று வித்யாஸமாக அபிப்ராயப்படும் சங்கரவிஜயங்கள் முதலிய புஸ்தகங்களும் இருக்கின்றன.*

— முன் பக்கத் தொடர்ச்சி

'ஆநந்த கிரீய சங்கர விஜயம்' இவற்றை அநுஸரித்துக் கூறுகையில் ஆசார்யாள் தம்முடைய வாஸத்துக்கு உரியதாகக் காஞ்சி ஸ்ரீமட்த்தை ஏற்படுத்திக்கொண்டதையும் (''நிஜவாஸயோக்யம் மடமபி பரிகல்ப்ய'') ஸுரேச்வரரை நியமித்ததையும் தெரிவிக்கிறது (ப்ரகரணம் 65).

ஸ்ரீ லக்ஷ்மண ஸூரியின் 'பகவத்பாதாப்யுதயத்'திலும் காஞ்சி ஸ்ரீமட ஸ்தாபனம் கூறப்பட்டிருக்கிறது.

* ஆசார்யாள் அவதாரத்தை முடித்து ஸித்தியடைந்தது எங்கு என்பது பற்றி நூல்கள் கூறுவது :

'மாதவீய'த்தின்படி அவ்விடம் கேதாரம். 'சித்விலாஸீய'த்தின்படி பதரியிலுள்ள தத்த குகை. (ஸதாநந்தரின்) 'சாங்கர திக்விஜய ஸார'த்தின்படியும் பதரி. 'கோவிந்த நாதீய'த்தின்படி திருச்சூர். (லக்ஷ்மண சாஸ்திரிகளின்) 'குருவம்ச காவ்ய'த்தின்படி மஹாராஷ்டிரத்திலுள்ள தத்த க்ஷேத்ரமாகிய மாஹூரி. ஆனந்தகிரீயம், 'வ்யாஸாசலீயம்,' 'கேரளீயம்,' '(மேற்கோள்களிலிருந்து பெறப்படும்) 'ப்ருஹத்'-'ப்ராசீன' சங்கர விஜயங்கள், 'சிவ ரஹஸ்யம், 'மார்க்கண்டேய ஸம்ஹிதை', காஞ்சி ஸ்ரீமட குரு பரம்பரா நூல்கள், டாக்டர் ஹுல்ட்ஷ் பதிப்பித்த ('ஸ்ரீ ச்ருங்கேரி) குரு பரம்பரா ஸ்தோத்ரம்,' கூடலி ஸ்ரீமட்த்தின் 'ஜகத்குரு பாரம்பர்ய ஸ்துதி' ஆகியவற்றின்படி காஞ்சிபுரம்.

'சங்கராப்யுதய'த்திலும், 'பதஞ்ஜலி சரித'த்திலும் ஸித்தி ஸ்தலம் இன்னதென்று ஸ்பஷ்டமாகச் சொல்லாவிடினும் ஆசார்யாள் திருவாழ்வின் இறுதிக் காலத்தில் காஞ்சியில் வஸித்ததாகக் கூறியுள்ளது. ''கம்பைக் கரையில் காமேச்வரியை வழிபட்டுக்கொண்டு மூவுலகின் க்ஷேமங்கரரான சங்கரர் ப்ரஹ்மாநந்தம் அடைந்தார்'' (ப்ரஹ்மாநந்தம் அவிந்தத) என்று 'சங்கராப்யுதயம்' கூறுவது அவரது ப்ரம்ம நிர்வாணத்தைச் சுட்டும் எனலாம்.

இந்திய பாஷைகளில் முதலில் வெளியான 'என்ஸைக்ளோபீடியா' பெங்காலியிலுள்ள ''விச்வகோஷ்'' என்பது. 1892-ல் வெளியான புத்தகம். அதில் 'காஞ்சீபுரம்' என்ற தலைப்பில் அந்த க்ஷேத்ரத்தைப் பற்றிச் சொல்லும்போது ''பகவான் சங்கராசார்யரின் ஸமாதி ஸ்தலம்'' என்று குறிப்பிட்டிருக்கிறது.

Koviloor Digital Library

ஒன்றுபடுத்தவே வந்த ஆசார்யாளின் சரித்ர விஷயமாகவே வித்யாஸமான அபிப்ராயங்களைச் சொல்வது மனஸுக்கு ஏற்கவேயில்லை. அவரொன்றும் ஸ்வசரிதையோ, உயிலோ எழுதி வைத்துவிட்டுப் போகவில்லை! பின்னால் வந்தவர்கள் ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றை ஆதாரம், ப்ரமாணம் என்று வைத்துக்கொண்டு முடிவு பண்ணுகிறோம்! அடிப்படை உண்மை நாமெல்லாரும் அவருடைய பக்தர்கள், சிஷ்யர்கள், குழந்தைகள் என்பதுதான். எல்லா ஆராய்ச்சியையும்விட அவரிடம் நம் எல்லோருக்கும் பக்தியும், நமக்குள்ளே கொஞ்சங்கூட த்வேஷலேசமில்லாத அன்பும் இருப்பதுதான் முக்யம்; உயிர்நிலை. இதற்கு ஹானி என்றால் எல்லா ஆராய்ச்சியையும் வாபஸ் வாங்கிக்கொண்டு விடலாம்...[சிரித்து] "எது ஆசார்யாளின் ஸித்தி ஸ்தலம்?" என்று கேட்டால், சில ஸித்த புருஷர்களைப்பற்றி ஒருத்தரே மூன்று, நாலு இடங்களிலே ஸமாதியானரென்கிறார்களே, அப்படி ஆசார்யாளும் ஆனரென்று சொல்லிவிடலாம் போலிருக்கிறது!......

முக்தி க்ஷேத்ரமான காஞ்சீபுரத்தில் ஆசார்யாள் முக்தி அடைந்தாரென்று ஒரு நம்பிக்கை......முக்தி "அடைவது" என்ன? அவரே முக்தி ஸ்வரூபம்! எப்பவும் ஜீவன் முக்தராக இருந்தவர். ஆனாலும் ஒரு நாள் அவர் அவதார சரீரத்தை த்யாகம் பண்ணி நம் கண்ணுக்குத் தெரியாமல் போய் விட்டாரல்லவா? அந்த விதேஹ முக்தியைத்தான் சொல்கிறேன்......அப்படி அவர் முக்தி அடைந்தது காஞ்சீபுரத்தில் காமாக்ஷியின் முன்னாலேயே என்று சில புஸ்தகங்களில் இருக்கிறது. 'ப்ருஹச்-சங்கர விஜய'த்தில் "தேவ்யா: புர: பரதரே புருஷே விலில்யே"—'அம்பாளின் எதிரக்கே (எதிரில்) பராத்பரமான ப்ரஹ்ம தத்வத்தில் லயித்து விட்டார்'—என்று இருக்கிறது. 'ப்ராசீன சங்கர விஜய'த்திலும் அப்படியே சொல்லியிருக்கிறது:

Koviloor Digital Library

காமாக்ஷ்யா: ஸவிதே ஸ ஜாது நிவிசந்-உந்முக்த-லோக-
ஸ்ப்ருஹோ ।
தேஹம் ஸ்வம் வ்யபஹாய தேஹ்யஸுகமம் தாம
ப்ரபேதே பரம் ||

"ஸ ஜாது காமாக்ஷ்யா: ஸவிதே நிவிசந்"—ஒரு ஸமயம் காமாக்ஷி ஆலயத்துக்குப்போய் அம்பாள் கிட்டே நின்று கொண்டிருந்தார். "உந்முக்த லோக ஸ்ப்ருஹ:"—அப்போது உலகப்பற்று அப்படியே அவருக்கு விட்டுப் போயிருந்தது. எப்போதுமே ஸ்வார்த்தமாக அவருக்கு உலகப்பற்று கிடையாதுதான். ஆனால் அந்த உலகத்தைக் கடைத்தேற்றணும் என்று பரார்த்தமாகப் பற்று இருந்தது! "பற்றற்றான்" என்கிற ஈச்வரனுக்கே இப்படியொரு பற்று, ஆசை இருந்துதான் அவதாரம் பண்ணியது! ஆசையெல்லாம் அறுத்துப் போட்ட ஸந்நியாஸியாயிருந்தும் இந்த ஆசைக்காகத்தான் நாடெல்லாம் நின்ற இடத்தில் நிற்காமல் அலை அலை என்று அலைந்தார்! இப்போது ஒருவாறு "லோகம் பிழைச்சுக்கும்" என்று நிம்மதிப்படும்படி அதை தர்மவழியில் நிறுத்தியாகிவிட்டது. அதனால் ஆசையும் போய்விட்டது; "உந்முக்த லோக ஸ்ப்ருஹ:". அப்படியே அம்பாளுக்குக் கிட்டே நின்றபடி தேஹத்தை விட்டுவிட்டார் : "தேஹம் ஸ்வம் வ்யபஹாய". உசந்த ஸ்தானமான தம் இருப்பிடத்துக்குப் போய்விட்டார்—"தாம ப்ரபேதே பரம்". அதென்ன உசந்த ஸ்தானமென்றால் ப்ரஹ்ம ஸ்வரூபமாயிருப்பதுதான். "கேரளீய சங்கர விஜய"த்திலும் இப்படியே சொல்லிக் கூடுதலாக, "இப்படி அகண்ட ஜ்யோதிஸ்ஸாக, ஆனந்த மயமாக, அக்ஷர ஸ்வரூபமாயுள்ள பரம பதத்தை அடைந்த பின்னும், ஸாது ஜனங்களுக்கு மோக்ஷதாதாவாகவுள்ள ஸ்ரீ சங்கராசார்யாள் அங்கேயே—காஞ்சீபுரத்தில் அம்பாள் ஆலயத்திலேயே என்று அர்த்தம்; அங்கேயே—சைதன்யமே மூர்த்திகரித்தாற்போல இன்றைக்கும் இருந்து வருகிறார்"

Koviloor Digital Library

என்று முடித்திருக்கிறது[1]. காமாக்ஷி ஆலயத்திலுள்ள ஆசார்ய மூர்த்தத்தையே சொல்லியிருப்பதாகத் தெரிகிறது......

ஆசார்யாள் காஞ்சீபுரத்துக்கு வந்தபோது அங்கே ஸாங்க்யம், மீமாம்ஸை முதலிய அரைகுறை வைதிக மதஸ்தர்களும், பௌத்த ஜைனாதி அவைதிக மதஸ்தர்களும் நிறைய இருந்தார்கள். ப்ராசீனமான ஆலயங்கள் இருந்தாலும் பூஜா க்ரமங்கள் வேத விருத்தமாக (முரணாக)ப் போயிருந்தன. ஸாக்ஷாத் ராஜராஜேச்வரியான அம்பாள் காமாக்ஷியே உக்ர கலைகளோடு இருந்தாள் என்று சொல்லியிருக்கிறது.

ஆசார்யாள் ஸர்வதீர்த்தக் கரை வழியாக ஊருக்குள் ப்ரவேசித்தார். அங்கே காசி மாதிரியே விச்வேச்வரர் ஆலயமும் முக்தி மண்டபமும் உள்ளன. ஸர்வ தீர்த்த ஸ்நானம் பண்ணி ஆலய தர்சனம் முடித்து முக்தி மண்டபத்தில் தங்கிவிட்டு விஷ்ணு காஞ்சிக்குப் போனார். வரதராஜ ஸ்வாமி ஆலய பூஜையை முறை பண்ணிக் கொடுத்துச் சில காலம் அங்கேயே தங்கியிருந்தார். அங்கே பெருமாள் கோவிலுக்கு மேற்கே இப்போதும் நம் மடம் ஒன்று இருக்கிறது[2].

அவர் இப்படி இருந்து கொண்டிருந்தபோது, லோக க்ஷேமத்தை உத்தேசித்து ராஜாவிடம் சொல்லி காஞ்சி நகரத்தையே காமாக்ஷி ஆலயம் மத்திய பிந்துவாக (புள்ளியாக) இருக்கும்படியான ஸ்ரீசக்ர ரூபத்தில் ஒழுங்கு படுத்தி நிர்மாணம் பண்ணச் சொன்னார். ராஜாவும்

---

1. காமாக்ஷ்யா நிகடே ஜாது ஸந்நிவிச்ய ஜகத்குரு: ||
தேஹிபிர்துர்பஜம் பேஜே தேஹம் தத்ரைவ ஸந்த்யஜந் |
அகண்ட ஜ்யோதி-ராநந்த-மக்ஷரம் பரமம் பதம் ||
ஸ ஏவ சங்கராசார்யோ குருர்-முக்தி - ப்ரதஸ்-ஸதாம் |
அத்யாபி மூர்த்தம் சைதந்யமிவ தத்ரைவ திஷ்டதி ||

2. காஞ்சியில் ப்ரதானமான ஸ்ரீமடம் பெரிய காஞ்சிபுரத்தில் உள்ளது.

Koviloor Digital Library

அப்படியே செய்தான். அவன் ராஜஸேனன் என்ற சோழ ராஜா என்று சொல்லியிருக்கிறது.

ஸ்ரீசக்ரம் வெளி இரண்டு சுற்றுக்கள் பத்ம தளங்கள் (தாமரை இதழ்கள்) விரிந்திருப்பதுபோல இருக்கும். உள்ளே அடுக்கடுக்காக வரும் கோணங்களும் அசப்பில் பார்த்தால் தாமரைப் பூவில் வரிசையாக இதழ்கள்மாதிரி இருக்கும். "பெரும்பாணாற்றுப் படை"யில் காஞ்சியை இப்படித்தான் வர்ணித்திருக்கிறது[2].

அம்பாள் ஆலயத்துக்கும் அம்பாள் யந்த்ரத்துக்கும் ஏனிப்படி முக்யம் தந்தாரென்றால்...

பல மூர்த்திகளுக்கும் காஞ்சி முக்ய க்ஷேத்ரமாயிருந்தாலும் தேவீ க்ஷேத்ரம் என்றுதான் அதற்கு அதிமுக்யத்வம். சக்தி பீடங்களை மூன்று, பதினெட்டு, முப்பத்தாறு, ஐம்பத்தொன்று, ஐம்பத்தாறு, அறுபத்துநாலு, தொண்ணூற்றாறு, நூற்றியெட்டு, ஆறாயிரத்து நானூறு என்று பலவிதமாகச்சொல்வதுண்டு. இந்த எல்லாவற்றிலுமே முக்யமான ஒன்றாக வருவது காஞ்சியிலுள்ள காமபீடம் என்ற காமகோடி பீடம். அம்பாளின் நாபி பீடம் அது. சரீரத்தில் மத்ய ஸ்தானமாயிருப்பது நாபி. அப்படி லோகத்திற்கே இருப்பது காஞ்சி. காஞ்சி என்றால் ஒட்டியாணம். நாபிக்குக் கவசம்தான் ஒட்டியாணம். "மேரு தந்த்ரம்", "காமாக்ஷீ விலாஸம்", "காஞ்சீ மாஹாத்ம்யம்" ஆகிய நூல்களில் இப்படிச் சொல்லியிருக்கிறது.

ஸகல க்ஷேத்ரங்களிலுள்ள அம்பாளுடைய சக்தி கலைகளுக்கெல்லாம் கேந்த்ர ஸ்தானமாயிருப்பது காஞ்சி காமாக்ஷிதான்! [சிரித்து] அந்த எல்லா பல்புக்கும் இவள்தான் ஜெனரேட்டர்! இதைத் தெரிவிப்பதாகத்தான்

---

2. "பல்லிதழ்த் தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றிச்
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்....
பழவிறல் மூதூர்....கச்சி."

Koviloor Digital Library

காஞ்சிபுர வட்டாரத்தில் ஐம்பதுக்குமேலே சிவன் கோவில் கள் இருந்தாலும் எதிலேயும் அம்மன் ஸந்நிதியே இல்லை! காம கோஷ்டத்திலோ அம்பாள் மட்டுமாக இருக்கிறாள்! ஸுந்தரேச்வரர் கோவிலில் மீநாக்ஷி, ஜம்பு கேச்வரர் கோவிலில் அகிலாண்டேச்வரி, கபாலீச்வரர் கோவிலில் கல்பகாம்பா என்கிற மாதிரியெல்லாம் இல்லாமல், கூட ஈச்வர ஸந்நிதியில்லாமல், அம்பாள் மட்டும் இருக்கிறாள். காஞ்சியில் ஏகாம்ரர், வரதர் உள்பட எவருக்கும் இல்லாத பெருமையாகத் தான் மட்டுமே நாலு பக்கமும் கோபுரமும், கோபுரவாசலும், ராஜ வீதிச் சுற்றுக்களும் கொண்ட ராஜ ராஜேச்வரியாக இருக்கிறாள்!

இவள்தான் அம்பாளின் அநேக விதமான ரூப பேதங் களில் த்ரிபுரஸுந்தரியாக இருப்பவள். ஸுந்தரீ வித்யா என்ற ஸ்ரீவித்யா சாஸ்த்ரத்தில் சொல்லியுள்ளபடி சதுர் புஜையாக தநுர்-பாண-பாச-அங்குசங்களை வைத்துக் கொண்டிருப்பவள் இவள்தான். அந்த சாஸ்த்ரம்தான் ஆசார்யாளுக்கு அம்பாளே கைலாஸத்தில் கொடுத்து, அவர் 'ஸௌந்தர்ய லஹரி'யாகப் பூர்த்தி பண்ணியது. அந்த த்ரிபுரஸுந்தரிதான் அவருடைய மடத்து ஸ்வாமியான சந்த்ரமௌளீச்வரரின் சக்தியும்!

இந்தக் காரணங்களால் ஆசார்யாளுக்கு காமாக்ஷி யம்பாள் ரொம்ப முக்யம்.

[சிரித்து] "இதென்ன ந்யாயம்? இவர் சொன்னது 'சும்மாக் கிடக்கிற' அத்வைதம்! அம்பாளோ ஒரே சக்தி' ஒரே கார்யம், ஒரே மாயை! இவருக்கென்ன அவளைப் பற்றி?"—என்றால்,

சும்மாக் கிடந்ததை அவன்தானே இத்தனை வித விதமான சக்திகளோடு விதவிதக் கார்யங்கள் பண்ணும்படி, செய்திருக்கிறாள்? சிவனே என்று, சிவமாகவே சும்மாயிருந்த இந்த சம்-புவையே சம்-கரர் என்று ஆக்கி, அவர் மித்யை என்று ஒதுக்கச் சொன்ன உலகத்திற்காகவே ஓயாமல்

Koviloor Digital Library

காரியம் பண்ணச் செய்திருக்கிறாள்? ஆகையால், ஒன்றிலிருந்து இத்தனையையும் கிளப்பிவிட்ட அவள்தான் அவற்றையெல்லாம் மறுபடி அந்த ஒன்றிலேயே, ஒன்றாகவே அடக்கவும் ஆஸாமியை அனுப்புகிறாளென்று தெரிகிறது. அந்த ஆஸாமி ஏதோ செய்கிறார், பெரிய அவதார காரியமே செய்கிறார்—என்றால் செய்கிறதற்கு சக்தி அந்த மூல பராசக்தியிடமிருந்துதானே வருகிறது? அதனால், ஒன்றிலிருந்து பலவற்றைச் செய்த அவளேதான் பலவற்றை ஒன்றாக்கவும் கருணையோடு மனஸ் வைத்து எல்லாம் செய்கிறாள் என்றாகிறது. அது மாத்ரமில்லை—ஸாதனை, இதனை, நிதித்யாஸனம் எது பண்ணினாலும் ஸரி, அவள் பிரித்து வைத்த இந்த ஜீவன் மறுபடி மூலத்தோடு சேரணும் என்றால் பிரித்தவள்தான் சேர்த்தும் வைக்கணும் இவனாகவா பிரிந்து வந்தான்? அவள்தானே பிரித்துக் காட்டினாள்? அப்போது அந்த மஹாசக்தியை மீறி இவனாக மறுபடி ஒன்று சேரமுடியுமா என்ன? அவள்தான் சேர்க்கணும், ஒன்றாக்கணும். அப்படிப் பலபேரை, மஹாஞானிகளை, ப்ரஹ்மவித்துக்களை அவள் சேர்த்து ஒன்றாக்கி வைத்திருப்பதும் தெரிகிறது. ஆக, அவள் க்ருபைதான் அத்வைத மோக்ஷத்திற்கு வழி திறந்து விட்டாகணும், அப்படியும் அவள் பரமானுக்ரஹம் பண்ணுபவள்தான் என்று ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும்—"அந்தஃசாக்த"ரான (உள்ளூரத் தாமே சக்தி ஸ்வரூபமான) ஆசார்யாளுக்கு நன்றாகத் தெரியும். மஹாமாயையேதான் ஞானப்பால் ஊட்டுகிற ஞானாம்பாள், ப்ரஹ்ம வித்யா ஸ்வரூபிணி என்பது அவருக்கு அநுபவமாகத் தெரியும்.

சிவ-சக்தி ஐக்யம் என்ற அத்வைதத்திலேயே கொண்டு விட்டுப் பூர்ணத்வத்தை அநுக்ரஹிக்கும் ஸ்ரீவித்யையும் ப்ரஹ்ம வித்யையும் ஒன்றுதான் என்பதாலேயே ஒரு பக்கத்தில் ஞான மார்க்கமாக நிறையச் செய்த ஆசார்யாள் இன்னொரு பக்கம் உபாஸனா மார்க்கமாக ஸ்ரீவித்யைக்கும் ஏற்றம் கொடுத்தார்......

Koviloor Digital Library

தேவீ-வித்யைகளில் எதுவானாலும் ஸரி, பொதுவாக மஹாசக்தியாயும் அதே ஸமயம் பரம கருணையுள்ள தாயாயும் இருக்கும் மோக்ஷதாயினி அவளே என்பதால் தான் தம்முடைய முக்ய மடங்களிலெல்லாம் ஒரு சக்தி பீடத்தைச் சேர்த்துச் சேர்த்து வைத்தார். இந்த (காஞ்சி) மடத்துக்குக் காமகோடி பீடம். ச்ருங்கேரிக்கு சாரதா பீடம். புரி மடத்துக்கு விமலா பீடம். த்வாரகைக்கு காளிகா (பத்ரகாளி) பீடம். பதரிமடத்துக்குப் பூர்ணகிரி பீடம்......

ஆசார்யாள் சொன்னபடி காஞ்சி நகர அமைப்பு ஸ்ரீ சக்ராகாரமாக ஒழுங்குபடுத்தப்பட்டவுடன் அவர் காமாக்ஷி ஆலயத்திற்கு வந்தார். அம்பாளை சாந்தப்படுத்தி, ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டை செய்தார்.

பிலாகாசம் என்பதாக கர்ப்ப க்ருஹத்திலே குஹையில் ஆகாச மாத்ரமாகவும் அம்பாள் அங்கே இருக்கிறாள். பக்கத்திலேயே தேவி உக்ர கலைகளோடு மூர்த்தியாக இருந்தாள். ஆசார்யாள் தாமே ஸ்ரீயந்த்ரம் போட்டு அதில் அந்தக் கலைகளை ஆவாஹனம் செய்து அவளை ஸௌம்ய மூர்த்தியாக்கினார். "அப்படிப் பண்ணிய ஆசார்யாள் நம் புண்யங்களை வளர்க்கட்டும்!" என்று 'குருரத்ன மாலா' சொல்கிறது:

ப்ரக்ருதிம் ச குஹாச்ரயாம் மஹோக்ராம்
ஸ்வக்ருதே சக்ரவரே ப்ரவேச்ய யோ(அ)க்ரே |
அக்ருதாச்ரித-ஸௌம்ய மூர்த்திம்-ஆர்யாம்
ஸுக்ருதம் நஸ்ஸ சிநோது சங்கரார்ய :||

அம்பாளுக்கு நேர் முன்னால் சக்ர ராஜம் எனப்படும் ஸ்ரீயந்த்ரம் ஆசார்யாளே போட்டதை சித்விலாஸீயத்தில் "காமாக்ஷ்யா: புரதோ தேசே ஸ்ரீசக்ரம் ஸ்வயம் ஆலிகத்" என்று சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

"ஆநந்தகிரீய"த்திலும் காமாக்ஷி வைபவம், ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டை முதலியவற்றை விரிவாகச் சொல்லியிருக்கிறது.*

காமகோடு பீடத்தைப் பழையபடி ப்ரகாசிக்கும்படி ஆசார்யாள் ஜீவசக்தியோடு ஸ்தாபித்தார்.

அப்புறம் கச்சி ஏகம்பம் முதலானவற்றுக்கும் போய் ஆராதனு க்ரமத்தை வைதிக தாந்த்ரிகமாக சுத்தப்படுத்திக் கொடுத்தார்.

ஆறு சிஷ்யர்கள் தேசம் முழுதும் போய் யாராருக்கு எது இஷ்ட தேவதையோ, அதை வைதிகமாக, இதர தேவதா நிந்தையில்லாமல் அவற்ருேடு சேர்த்தே பூஜிக்கும் படியாகச் செய்தார்கள். இப்படி ஷண்மத உபாஸனையை நிலை நிறுத்திவிட்டுக் காஞ்சீபுரம் திரும்பி வந்து ஆசார்யாளுக்கு ஸேவை செய்து கொண்டிருந்தார்கள்.

உபாஸனையில் செய்யவேண்டியதையெல்லாம் இவ்வாறு செய்த பிறகு, வாதத்தினுல் முடிவாக அத்வைதத்தை ஸ்தாபிக்க நினைத்து ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தார். முடிந்த முடிவாக, எதிர்வாதம் பண்ணவந்த எல்லாரும் அத்வைதம்தான் ஸத்ய தத்வம் என்று ஏற்கும்படிச் செய்தார்.

ஸர்வமுமாக ஆனது ஒன்றுதான். அதனுல் அந்த ஒன்றைத் தெரிந்துகொண்ட ஞானி ஸர்வஜ்ஞனுகி விடுகிருன். ஆசார்யாள் இந்த அர்த்தத்தில் ஸர்வஜ்ஞராக இருந்தது மட்டுமில்லை. ஒன்று பலவாக, அனந்தமாக ஆகியிருப்பதில் அவற்றைப் பற்றிய அறிவைத் தரும் அநேக சாஸ்த்ரங்கள் உண்டாயிருக்கின்றன. வாழ்க்கை நடத்துவதற்கும், அறிவு பல விதங்களில் ஸந்தோஷப்படுவதற்கும் உபாயங்களைத் தரும் ஏராளமான சாஸ்த்ரங்களும் கலைகளும் உண்டாயிருக் கின்றன. இவை அத்தனையும் தெரிந்தவனையே லோக ரீதியில்

---

* 64-65 ப்ரகரணங்கள்.

Koviloor Digital Library

ஸர்வஜ்ஞன் என்பது. ஒவ்வொரு சாஸ்த்ரம், கலை, வித்யை தெரிந்த நிபுணனும் கேள்வி கேட்டு எல்லாருக்கும் பதில் சொல்கிறவர்தான் ஸர்வஜ்ஞ பீடம் ஏற முடியும். 'ப்ரஹ்ம வித்தையோ?' என்று பேச்சு வழக்கிலேகூட எல்லா வித்யைக்கும் மேலே சொல்வதையே கரைத்துக் குடித்தவர் ஆசார்யாள்! ஸர்வஜ்ஞ பீட ஸிம்ஹாஸனத்தில் பல படிகள் இருக்கும். ஒவ்வொன்றும் ஒரு வித்யைக்கு ப்ரதிநிதி; அந்த வித்யை பற்றிக் கேட்பதற்கெல்லாம் பதில் சொல்லி, 'மாஸ்டர்' பண்ணியதாக நிரூபித்தால்தான் அடுத்த படிக்கு ஏற முடியும்; முடிவாக ஸரஸ்வதியே வந்து கேள்வி கேட்பாள்; அவளுக்கும் பதில் சொன்னால்தான் 'ஸர்வஜ்ஞ பீடாரோஹணம்' என்பதாக அந்த ஆஸனத்தில் உட்கார முடியும்—என்று சொல்வார்கள். ஸர்வமுமான ஒன்றை அறிந்ததால் ஸர்வஜ்ஞரான ஆசார்யாள், அந்த ஸர்வ விஷயங்களைப் பற்றிய வித்யைகளில் ஒன்று விடாமல் அவ்வளவையும் அறிந்த ஸர்வஜ்ஞராகவும் இருந்தவர். ஆகையால் அநாயாஸமாக ஸகல சாஸ்த்ரக்காரர்களுக்கும் பதில் சொல்லி ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் பண்ணி விட்டார்.

ஆசார்யாள் க்ரந்தங்களைப் பார்த்தால் தெரியும், எத்தனை சாஸ்த்ரங்கள், வித்யைகள் அவருக்குக் கரதலப் பாடம் என்று. அவர் செய்ததாக "சங்கராசார்யம்" என்று ஒரு ஜ்யோதிஷ சாஸ்த்ரப் புஸ்தகம் இருப்பதாகத் தெரிகிறது....ஸங்கீத வித்வான் ஒருத்தர், "எங்களிலேயே ரொம்பக் கொஞ்சம் பேருக்குத்தான் ஸங்கீத 'க்ராம'ங்களைப் பற்றியும், இன்னும் கதி-கமகம்-கீதம் முதலான 'டெக்னிகல்' விஷயங்களும் தெரியும். 'ஸௌந்தர்ய லஹரி'யில் 'கலே ரேகாஸ் - திஸ்ரோ' ச்லோகத்தில் இதெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டு ஆசார்யாள் சொல்லியிருக்கிறாரே!" என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டு சொன்னார்.

'காந்தர்வ வேதம்' என்று ஸ்தானம் பெற்றது ஸங்கீத வித்யை. அம்மாதிரி உசந்த வித்யைகள்தான் என்றில்லாமல்

Koviloor Digital Library

நடைமுறை வாழ்க்கையில் தொழிலாளிகள் கையாளும் சின்னச் சின்ன 'டெக்னிக்கு'கள்கூட அவருக்குத் தெரியும். சாணர்களிடமிருந்து 'தென்ன மர வித்தை' கற்றுக் கொண்டதைச் சொன்னேன். இன்னொரு கதை உண்டு. "எல்லாம் தெரிஞ்சவர்-ஞ உமக்குச் செருப்புத் தைக்க வருமா?" என்று சக்கிலி கேட்டானும். ஆசார்யாள் சாந்த மாக ஊசியை எடுத்து மூக்குத் தண்டில் தேய்த்துக்கொண்டு தைக்க ஆரம்பித்து விட்டாராம்! "எங்க ரஹஸ்யத்தை நல்லா தெரிஞ்சுண்டிருக்கியே!" என்று அவன் நெடுஞ்சாண் கிடையாக நமஸ்காரம் பண்ணினனும்! மூக்கு மேலே ஊறுகிற ஒரு மாதிரியான எண்ணெய்ப் பசை ஊசியில் பட்டால் அது ஸுலபமாகத் துளைத்துக்கொண்டு போகும் என்ற knack தெரிந்து சக்கிலியர்கள் அப்படித்தான் தேய்த்துக் கொள்வார்களாம்.

ராஜா கேட்டுக்கொண்டதன் பேரில் ஸர்வஜ்ஞ பீடாரோஹணம் செய்தார். உலகத்து ராஜா மோக்ஷ ராஜாவுக்குப் பண்ணிய பட்டாபிஷேகம்!

ஷண்மத ஸ்தாபனமும், அதற்கு சிகரமாக அத்வைத ஸ்தாபனமும் செய்ததற்குப் பட்டாபிஷேகம் மாதிரி ஸர்வஜ்ஞ பீடாரோஹணம். வாதச் சண்டையில் இனிமேல் எதிரியில்லை என்று ஜயித்தாகிப் பட்டம் சூட்டப்பட்டதாக அர்த்தம்! ராமாயணத்தில் ராம பட்டாபிஷேகம் மாதிரி இது ஆசார்யாள் சரித்ரத்தில். ஆனல் ராமர் ஆட்சி பட்டாபிஷேகத்திற்கு அப்புறம்தான் ஆரம்பித்தது. ஆசார்யாள் ஞான ராஜாவாக ஆட்சி பண்ணியதற்குப் பூர்த்தியாக இந்த வைபவம் இருந்தது!

அவதரித்ததிலிருந்து ஓயாமல் ஒழியாமல் ஓடிக்கொண் டிருந்தவர் கொஞ்ச காலம் நிம்மதியாகக் காமாக்ஷியை ஆராதித்துக் கொண்டிருந்தார். ஓடாமல் அவர் பண்ணிய ஆராதனையும் மூன்று லோகங்களுக்கும் க்ஷேமம் உண்டாக் கிற்று.

Koviloor Digital Library

கம்பாதீர-நிவாஸினீம் அநுதினம் காமேச்வரீம் அர்ச்சயந்|
ப்ரஹ்மாநந்தம் அவிந்தத த்ரிஜகதாம் க்ஷேமங்கர: சங்கர:||

(கம்பைக் கரையில் குடிகொண்டுள்ள காமேச்வரியை தினந்தோறும் வழிபட்டு மூவுலகுக்கும் க்ஷேமம் புரியும் சங்கரர் ப்ரஹ்மானந்தம் அடைந்தார்) என்று 'சங்கராப்யுதயம்' சொல்கிறது. நகை நகைகளாக த்ரிபுரஸுந்தரீ ஸ்தோத்ரங்கள் பல செய்து அந்தத் தாயாருக்குப் போட்டு அழகு பார்த்தார்[1].

கைலாஸத்தில் பரமேச்வரனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்ததில் யோக லிங்கமாகிய சந்த்ரமௌளீச்வரனை காஞ்சி மடத்தில் ப்ரதிஷ்டை பண்ணி அவர் பூஜித்துக் கொண்டிருந்ததைச் சரித்ரங்கள் சொல்கின்றன. இந்த யோக லிங்கத்தைப் பற்றி ஸ்ரீஹர்ஷரின் "நைஷத"த்தில் கூடச் சொல்லியிருக்கிறது[2].

முப்பத்திரண்டு வயஸு பூர்த்தியாயிற்று. நந்தன வருஷம் வைசாக சுக்ல பஞ்சமியில் அவதாரம் பண்ணி ரக்தாக்ஷி வருஷம் வைசாக சுக்ல பஞ்சமியோடு 32 முடிந்தது. வ்யாஸருடைய இஷ்டத்துக்காகக் கூட்டிக் கொண்ட பதினாறு வருஷமும் தீர்ந்து விட்டது. தொடர்ந்தாற்போல் வந்த ஏகாதசியோடு சரீர யாத்ரையை முடித்து அகண்ட சைதன்யமாகிவிட வேண்டுமென்று நினைத்தார்.

ஆசார்யாள் விதேஹ கைவல்யம் அடையப் போகிறாரென்றதும் சிஷ்யர்களெல்லாம் வந்து முடிவாக ஒரு உபதேசம் அநுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்துக் கொண்டார்கள்.

---

1. த்ரிபுரஸுந்தரி குறித்து அஷ்டகம், மாநஸ பூஜா ஸ்தோத்ரம், சதுஷ்ஷஷ்ட்யுபசார பூஜா ஸ்தோத்ரம், வேத பாதஸ்தவம் முதலியன ஆசார்யாள் அருளியுள்ளார்.

2. நம் நூலின் அடுத்த பகுதியில் 'இலக்கியமும் ஆன்மியமும்' என்ற உரையில் மேற்படி 'நைஷத'க் குறிப்பு விளக்கப்படும்.

Koviloor Digital Library

ஆசார்யாள், "வேதோ நித்யம் அதீயதாம்" என்று ஆரம்பித்து, அடியிலிருந்து நுனிவரை செய்யவேண்டிய அத்தனை ஸாதனு க்ரமத்தையும் படிப்படியாக ஐந்தே ச்லோகத்தில் உபதேசித்தார். "ஸோபாந பஞ்சகம்" என்று பேர். 'ஸோபானம்' என்றால் படி வரிசை. ('உபதேச பஞ்சகம்' என்றும் சொல்லப்படுகிறது.)

"வேத வழிப்படியான கர்மாக்களைப் பண்ணு. காம்ய மாகப் பண்ணுமல் ஸ்வாமிக்குப் பூஜையாகப் பலனை த்யாகம் செய்து பண்ணு. இப்படிப் பண்ணிப் பண்ணிப் பாபத்தைப் போக்கிக் கொள்ளு. பாபம் போகப் போகச் சித்தத்தின் தோஷங்களும் போகும். அப்போது ஸம்ஸார வாழ்க்கை யிலுள்ள தோஷங்களை அலசித் தெரிந்து கொள்ளு. நன்றாக சித்த சுத்தி உண்டாகும். அப்புறம் ஞானமார்க்கத்தில் போய் ஆத்மாவைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற தாபத்தை வளர்த்துக்கொள்ளு. அது கனிந்ததோ இல்லையோ சட்டென்று வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிடு.

"பந்து ஸங்கத்தை விட்டு விட்டு ஸத்ஸங்கத்தில் சேர்ந்து பகவத் பக்தியை த்ருடமாக ஆக்கிக்கொள்ளு. அப்புறம் ஒரு நல்ல ஞானியிடம் போய், சுச்ருஷைகள் பண்ணி ப்ரணவோப தேசம், மற்ற மஹா வாக்யோபதேசம் எல்லாம் பெற்றுக் கொள். 'ச்ரவணம்' பண்ணிய உபதேசத்தை 'மனன'மாக மனஸில் நன்றாக அலசிப் பார். குதர்க்க புத்தியோடு பார்க்காமல், வேதத்தில் நம்பிக்கையோடு தர்க்கம் பண்ணிப் பார். இப்படி நன்றாக அர்த்தமான பின் அதை உள்ளே ஊறப்போடுவதற்கு 'நிதித்யாஸனம்' (ஆழ்ந்த த்யானம்) ஆரம்பி. 'நாம் ஞான மார்க்கத்தில் போகிறோமாக்கும்!' என்ற கர்வத்தை அப்பப்பவும் அடித்துப் போடு. 'தேஹமே நான்' என்ற நினைப்பை விட்டு 'நான் ப்ரஹ்மம்' என்ற பாவனையை ஆரம்பி. தேஹமும் ப்ராரப்தம் உள்ள மட்டும் இருந்தாக வேண்டுமென்பதால், ஒரு வ்யாதி வந்தால் அதற்கு எப்படி ரொம்பவும் அளவாக மருந்து கொடுப்பார் களோ அப்படிப் பசி வ்யாதிக்கு மருந்தாகவே ஆஹாரம்

Koviloor Digital Library

போடு. ருசியான ஆஹாரத்தைத் தேடாமல் பிக்ஷை எடுத்து என்ன கிடைத்தாலும் த்ருப்தியாகத் தின்னு. எதையும் பொருட்படுத்தாமல் உதாஸீனமாயிரு. ஜனங்களிடம் பாசமும் வைத்துக் கொள்ளாதே, த்வேஷமும் வைத்துக் கொள்ளாதே! பட்டுக்கொள்ளாமல் இரு. சீதம், உஷ்ணம் முதலானதுகளையும் இப்படியே பொருட்படுத்தாதே. பேச்சைக் குறைத்து மௌனமாக ஏகாந்தத்துக்குப் போ. பராத்பரமான ப்ரஹ்மத்திலே சித்தம் ஸமாதியாவதற்கு முயன்று ஆத்ம பூர்ணத்தை ப்ரத்யக்ஷமாகத் தெரிந்து கொண்டுவிடு. இந்த அநுபவத்தில் ஜகத் முழுக்க அடிபட்டுப் போய், ஸஞ்சிதம் என்ற முன்வினை அழிந்து போகப் பண்ணிக் கொள். ஆகாமி என்ற பின்வினை ஒட்டாமல் பண்ணிக்கொள். பலன் கொடுக்க ஆரம்பித்து விட்ட ப்ராரப்த வினை மட்டும் தீர்கிறவரை சரீரத்தில் ஜீவித்து, அதுவும் தீர்ந்தவுடன் பரப்ரஹ்மமாகவே நிலைத்து விடு—பரப்ரஹ்மாத்மநா ஸ்தீயதாம்!" என்று செய்யவேண்டிய எல்லாவற்றையும் ரத்னச் சுருக்கமாக 'ஸோபாந பஞ்சகத்'தில், உபதேசித்து, எல்லாருக்கும் சாந்தியை உண்டு பண்ணினார்.

ஆசார்யாளின் சரீர தாரணத்திற்கு ப்ராரப்தம் காரணமில்லை. அது லோக கார்யத்துக்காக வந்த அவதார சரீரம். அந்தக் கார்யம் ஆகிவிட்டது. "பரப்ரஹ்மாத்மநாஸ்தீயதாம்" என்று உபதேசத்தை முடித்த மாதிரி அவரே ஆகி விட்டார்!

'ஆனந்தகிரீய'த்தில் ஆசார்யாள் ஸ்தூல சரீரத்தை ஸூக்ஷ்ம சரீரத்தில் கரைத்து, ஸூக்ஷ்ம சரீரத்தைக் காரண சரீரத்தில் கரைத்து அகண்ட சைதன்யமாகி விட்டார் என்று சொல்லியிருக்கிறது.

சரிதம் கேட்ட பலன்

ஒரு புண்ய சரித்ரம் கேட்டால் இன்னின்ன பலன் என்று முடிவில் 'பல ச்ருதி' சொல்வார்கள். ஆசார்ய சரித்ரம் கேட்டதன் பலன் நமக்கே நன்றாகத் தெரியும். எப்பவும்

Koviloor Digital Library

ஏதாவது அழுக்குப் பட்டுக்கொள்கிற மனஸ் அவர் சரித்ர ச்ரவணத்தில் நிர்மலமாக இருந்தது. அவருடைய சாந்தம், ப்ரேமை எல்லாம் நம் மனஸிலேயும் கொஞ்சம் 'டால்' அடித்துக் கொண்டேயிருந்தது.

'சரித்ர பலன்' என்பது சரித்ரம் நமக்கு அளித்த பலன் மட்டுமில்லை; அதைக் கேட்டதற்குப் பலனாக நாம் என்ன பண்ணப்போகிறோம் என்பதும்தான்! ஆசார்யாளுக்கு நாம் பண்ணக்கூடிய ப்ரதிபலன் எதுவுமேயில்லை. அவருக்கு எதுவும் வேண்டவும் வேண்டாம். அவர் எதைப் பெரிய ப்ரதிபலனாக நினைப்பாரென்றால், சரித்ரம் கேட்கிற வரையில் நாம் நிர்மலமாக, சாந்தமாக, ப்ரேமையாக இருந்ததை எக்காலமும் அப்படியே இருக்கும் விதமாக ஸ்திரப்படுத்திக் கொள்வதைத்தான். அப்படி ஆவதற்கு, சாஸ்த்ரோக்தமான கார்யம் எல்லாம் பண்ணவேண்டும். ஈச்வர பக்தி பண்ணவேண்டும். இதனால் மனஸ் நன்றாக சுத்தியாகி, ஒன்றிலேயே நிற்க ஆரம்பித்தபின் ஞான விசாரத்திற்குப் போகலாம். இப்போது கர்மா, பக்திகளை விடக்கூடாது. ஆனாலும் அத்வைதத்திற்குத்தானே அவர் முக்யமாக வந்தார்? அதைப் பற்றி பாவனையாகவாவது ஒரு நினைப்பு தினமும் ஐந்து நிமிஷமாவது, இல்லை—இரண்டு நிமிஷமாவது—இருக்கவேண்டும். "நான் அழுக்கே இல்லை; அழுகையும், பயமும், கோபமும், ஆசையும் போட்டு அழுக்குப் பண்ணுகிற வஸ்து இல்லை. பரம நிர்மலமாக, ப்ரசாந்தமாக இருக்கிற—எதுவும் படாத, அழுக்குக் கறையே இல்லாத—ஆகாசம் மாதிரி நான். என்னவோ இப்படி ஓயாமல் உழப்பறிந்து கொண்டிருந்தாலும் சும்மாயிருக்கிற பரம ஸுகமே நான்" என்று இரண்டு நிமிஷம் நினைத்துக் கொண்டால் ஆசார்யாள் ரொம்ப ப்ரீதியாகி விடுவார். இந்த பாவனை முற்றி அநுபவமாவதற்கு அநுக்ரஹிப்பார்.

ஆசார்யாள் இன்று இல்லாவிட்டாலும், தமக்குப் பதிலாக என்றைக்கும் இருக்கும்படியாக பக்தியாகவும் ஞான

Koviloor Digital Library

மாகவும் ஏராளமாக எழுதிவைத்துவிட்டுப் போயிருக்கிறுர். அவற்றில் கொஞ்சமாவது தினமும் அவச்யம் பாராயணம் பண்ணணும். பண்ணிஞல் அவரையே நேரில் பார்க்கிற மாதிரி! பக்தியும் வரும், ஞானமும் வரும்...

எத்தனையோ ஆசார்யர்கள் உண்டு. ஒருத்தர், 'ஸ்வாமிக்கு ஸேவகனுக ஸதா கைங்கர்யம் பண்ணிக் கொண்டிரு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர் 'சூன்யமாகப் போய்விடு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர், 'ஸ்வர்கம் என்ற இன்ப லோகத்திற்குப் போய் எல்லா இந்த்ரிய ஸுகங்களும் யதேஷ்டமாக அநுபவித்துக் கொண்டிரு. அதுதான் மோக்ஷம்' என்பார். இன்னொருத்தர், 'உனக்கு ரொம்பப் பாப கர்மா இருக்கிறது. அதனுல் உனக்கு மோக்ஷமே கிடையாது; நித்ய நரகம்தான்' என்றுகூடச் சொல்வார்!

ஆசார்யாள்தான், 'அப்பா, நீ இப்பவும் எப்பவும் மோக்ஷத்திலேயே இருந்து கொண்டிருப்பவன்தான்! மாயையின் ப்ராந்தியில்தான் அது உனக்குத் தெரியவில்லை. இந்த ப்ராந்திக்கு ஆளாவது மனஸ்தான். ஞானத்திஞல் அதை அழித்துப்போட்டு விட்டாயாஞல் அப்போதே மோக்ஷாநுபவம்தான். மோக்ஷத்திலே வேறே ஒரு ஸ்வாமி யிடம் நீ போகவில்லை! நீயேதான் ஸ்வாமி, நீயே தான் பரமாத்மா!'' என்றவர்.

பாபிகளுக்கு நித்ய நரகம் என்று அவர் சொல்லாதது மட்டுமில்லை. அவர்களுக்கும் உய்வு உண்டு என்று சொல்வதோடும் நிறுத்திக் கொள்ளவில்லை. இதற்கெல்லாம் மேலே, பாபி, பாபி என்கிறவனும் பரமாத்மாவேதான் என்பதாக, பதிதோத்தாரணத்தின் உச்சிக்குப் போனவர் நம் ஆசார்யாள். தம்முடைய அத்வைதத்தால் பதிதனையும் பரப்ரம்மமாக்கிய ஆசார்யாளைப் போலப் பதித பாவனர் யாருமில்லை.

Koviloor Digital Library

கன்னட பாஷையில் "மங்களம், குரு சங்கரா!' என்று பாட்டு இருக்கிறது. அதில் "பாதகனெனு பரமாத்மனு மாடிதே!" (பாதகனையும் பரமாத்மாவாக ஆக்கியவர்) என்று வருகிறது!

அப்படிப்பட்ட ஆசார்யாளுக்கு, லோக மங்கள காரகரான சம்-கரருக்கு நாமெல்லாரும் மங்களம், ஜய மங்களம் சொல்லுவோம். "ஜய ஜய சங்கர" என்று மங்கள கோஷம் போடுவோம். அவருடைய சுப நாமத் திற்கே ஜய சப்தம் விசேஷமாக உரித்தானது. ஏன் அப்படிச் சொல்கிறேனென்றால் நம்முடைய தமிழ் தேசத்தின் மஹா பெரியவர் ஒருவர்—'நாவுக்கு அரசர்' என்று ஈச்வரனே பட்டம் கொடுத்த அப்பர் ஸ்வாமிகள்—சொல்லியிருப்பதன் ப்ரமாணத்தில்தான்! அவர் திருவாரூர்-திருத்தாண்டகம் ஒன்றில் என்ன சொல்கிறாரென்றால்: "ஏ நெஞ்சமே! இப்படி வா, எங்கிட்டே! நீ கொஞ்சங்கூட நிலை கொள்ளாமல் அலைந்தபடி இருக்கியே! நீ நிலையான ஸ்தானத்தைப் பெற ஆசைப்பட்டால் என்ன பண்ணணுமென்று சொல்கிறேன். கேட்டுக்கொள்ளு! தினமும் விடிவதற்கு முந்தி ஸ்வாமி கோவிலுக்குப் போ. ஸந்நிதியைப் பெருக்கி மெழுகு. ஸ்வாமிக்குப் புஷ்பஹாரம் ஸமர்ப்பணம் பண்ணு. வாக்புஷ்பத்தாலும் ஸ்தோத்ர அலங்காரம் பண்ணு. வாயாரப் பாடு! தலையாரக் கும்பிடு! கூத்தாடு! 'சங்கரா! ஜய! போற்றி! போற்றி!' என்றும், 'கங்காஜடாதரா!' என்றும், 'ஆதிப் பொருளே, ஆரூரனே!' என்றும் அலறி கோஷம் போடு" என்கிறார். சங்கர நாமாவோடுதான் ஜய சப்தத்தைச் சேர்த்துச் சொல்லி, அது போதாதென்று தமிழிலும் ஒன்றுக்கு இரண்டாகப் "போற்றி" போட்டிருக் கிறார்...

மாணிக்கவாசகர்......அவர் ரொம்ப அத்வைதமாகவே சொன்னவர், மஹா பெரியவர்......அவரும் அந்தாதிக்

Koviloor Digital Library

க்ரமத்தில் பாடியிருக்கிற 'திருச்சதக'த்தில்* ஒரு அடியை 'சங்கரா, போற்றி போற்றி!' என்று முடித்துவிட்டு, அடுத்த அடியும் 'சங்கரா போற்றி!'என்றே ஆரம்பித்திருக்கிறார்...

அப்பர் ஸ்வாமிகள் 'ஜய, போற்றி' போட்ட பாட்டு சொல்கிறேன்:

நிலை பெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே, நீ வா!
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
'சங்கரா! சயபோற்றி போற்றி!' யென்றும்,
'அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ!' யென்றும்,
'ஆரூரா!' என்றென்றே அலறு நில்லே!

ஆசார்யாளுக்கு எப்போதும் "ஜய ஜய, ஹர ஹர!" போட்டுக்கொண்டேயிருப்போம்! ஜய சப்தம் நமக்கு ஆத்ம ஜயத்தைக் கொண்டுவந்து கொடுக்கும். ஹர சப்தம் தப்பை, தீமையை எல்லாம் போக்கிவிடும். 'சம்கர' சப்தமே 'சம்'மாகிய நித்ய மங்களத்தைச் செய்துவிடும்! ஸ்ரீ சங்கர மூர்த்தி ஸ்மரணமும்தான்!

நாம் எல்லோரும் நன்றாக, ஒற்றுமையாக இருக்க அவருடைய ஸ்மரணையே போதும்!

நம : பார்வதீ பதயே!
ஹர ஹர மஹாதேவ!

---

* 64-65 பாட்டுகள்

Koviloor Digital Library

மங்களாரத்தி

Koviloor Digital Library

Koviloor Digital Library

அஞ்ஜனைச் செல்வன் 'அஜாட்யம்' அருளட்டும்!

ராமாயண பாராயணம் முதலானவற்றில் சொல்கிற ப்ரஸித்தமான ஆஞ்ஜநேய ஸ்தோத்ரங்களில் ஒன்று :

புத்திர்-பலம் யசோ தைர்யம் நிர்பயத்வம் அரோகதா |
அஜாட்யம் வாக்-படுத்வம் ச ஹநூமத் ஸ்மரணாத்
பவேத் ||

ஹநுமத் ஸ்மரணையால் என்னவெல்லாம் கிடைக்கின்றன என்று சொல்கிறது : முதலில் 'புத்தி'—எல்லாவற்றுக்கும் முந்தி வேண்டியது அறிவுதான், அது; 'பலம்'—அப்புறம் தேஹ பலம்; 'யசஸ்-நல்ல கீர்த்தி; 'தைர்யம்'—தைர்யந் தான்! 'நிர்பயத்வம்'—அஞ்சாமை என்பது...'தைர்யம்' என்றாலே அஞ்சாமையும்தானே அடக்கம்? ஏன், தனியாக வேறே சொல்லணும்? (பதில் :) 'தைர்யம்' என்பதற்கு இன்னும் பல அர்த்தம் உண்டு. மனோத்ருடம், சாந்தகுணம் முதலியவற்றைக்கூட 'தைர்யம்' குறிக்கும். இங்கே அப்படி யொன்றாக இருக்கலாம். அல்லது 'தைர்யம்' என்பது அவரை (ஆஞ்ஜநேயரை) ஸ்மரிப்பவனுக்கு ஏற்படும் அஞ்சாமை என்றும், 'நிர்பயத்வம்' என்றால் இவனைக் கண்டால் மற்ற எவரும் பயப்படாத அபய ஸ்தானமாக இவன் இருப்பது என்றும் வைத்துக்கொள்ளலாம். ஸந்நியாஸி எந்த ப்ராணிக்கும் தன்னால் பயம் உண்டாகப் படாது என்று தீக்ஷை எடுத்துக்கொள்வது மாதிரி!... 'அரோகதா' என்றால் ஆரோக்யம். அதுவும் ஆஞ்ஜநேய

Koviloor Digital Library

ஸ்வாமியை ஸ்மரிப்பவனுக்கு உண்டாகிறது. அப்புறம், 'அஜாட்யம்' என்று ஒன்று போட்டிருக்கிறது. அதற்கு 'ஜடமாக இல்லாத தன்மை' என்று அர்த்தம். முடிவாக 'வாக்-படுத்வம்', அதாவது வாக்குவன்மை. 'நவ வ்யாகரண பண்டிதன்' என்றும் 'சொல்லின் செல்வன்' என்றும் வால்மீகியும் கம்பரும் சொல்கிறவர் பக்தர்களுக்கும் சொல் வன்மை அருளுகிறார்.

புத்தி, பலம், யசஸ், தைர்யம், அபயத்வம், ஆரோக்யம், வாக்-படுத்வம் என்ற இந்த ஏழும் அவச்யம் வேண்டிய விஷயங்கள்தான் என்று தெரிகிறது. யாரும் சொல்லிக் கொடுக்கணுமென்றில்லாமல் நாமே இதற்கெல் லாம் வேண்டிக்கொண்டுவிடுவோம். ஆனால் எட்டாவதாக இன்னொன்று, 'அஜாட்யம்' என்று சொல்லியிருக்கிறதே... ச்லோகத்தின் வரிசையில் அது எட்டாவது இல்லை; ஏழாவ தாக வருகிறது. அப்புறம் 'வாக்படுத்வ'த்தைச் சொல்லி முடித்திருக்கிறது...அந்த அஜாட்யம் என்ன, அதை எதற்கு விசேஷமாக ப்ரார்த்தித்துப் பெறவேண்டுமென்று புரியாம லிருக்கலாம்.

ஆனால் எனக்கென்னவோ லோகம் போகிற போக்கில் இதுதான் அத்யாவச்யத் தேவை, இதற்குத்தான் ரொம்ப ப்ரார்த்தித்துக்கொள்ளவேண்டும், இதைத்தான் ஆஞ்ஜநேய ஸ்வாமி யதேஷ்டமாக வர்ஷிக்கவேண்டும்— என்று தோன்றுகிறது.

'அஜாட்யம்'—ஜடமாயில்லாமலிருப்பது என்றால் என்ன அர்த்தம்?

புத்தி மந்தித்து, சுருசுருப்பில்லாமல், உத்ஸாஹ மில்லாமல் சோம்பேறியாக மசமசவென்று இருப்பது. ஜடம் என்றால் உயிரில்லாத matter. Matter, spirit என்று இரண்டு சொல்வதில் உயிரில்லாத பூதங்கள், தாதுக்கள் எல்லாம் ஜடம். Spirit என்பது உயிர் என்னும்

Koviloor Digital Library

சைதன்யம். உயிராக, அறிவாக உள்ள 'சித்'திலிருந்து வருவது 'சைதன்யம்'. 'ஜட'த்திலிருந்து வருவது 'ஜாட்யம்'. மநுஷ்ய ஜீவனே 'சித்-ஜட க்ரந்தி'யால் உண்டானதாகச் சொல்வார்கள். உயிரில்லாவிட்டால் உடம்பு வெறும் பௌதிக தாதுக்களாலான ஜடம்தானே? இதை உயிரோடு முடிச்சுப்போட்டு ஜீவாத்மா என்று வைத்திருப்பதுதான் சித்-ஜட க்ரந்தி. ஞானிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஜட சரீர ப்ரஜ்ஞையை ஒழித்துக் கட்டிவிட்டு 'சின்மய'மாகவே போய்விடு என்கிறார்கள்.

அது நடக்கிறபோது நடக்கட்டும்! இப்போது இந்த ஜட சரீரத்திலேயே சித் விலாஸத்தினால் உத்ஸாஹத்தோடு ஸத் கார்யங்களைப் பண்ணிக்கொண்டிருப்பதற்கு வழியைப் பார்ப்போம்! ஜடம் மாதிரி dullஆக, மசமசவென்று உட்கார்ந்துகொண்டிருக்காமல், சுருசுருப்போடு, விழிப்போடு இருக்கக் கற்றுக்கொள்வோம். இப்போது 'ஜாட்யம்' (ஜடத்தன்மை)தான் வந்து நம்மை நன்றாகக் கவ்விப் பிடித்துக் கொண்டிருக்கிறது. வேண்டாத விஷயங்களில் மஹா உத்ஸாஹத்தோடு ஈடுபட்டு ஈடுபட்டு, வெறும் அரட்டை, கார்யத்தில் லவலேசம் ப்ரயோஜனமில்லாத பாலிடிக்ஸ் டிஸ்கஷன், காப்பி, ஸினிமா, நாவல், கீழ்த்தரமான ரிக்ரியேஷன் என்று எனெர்ஜியையெல்லாம் வேஸ்ட் செய்துவிடுவதால், எது அவச்யமோ அதைச் செய்வதற்குச் சூடு பிறக்காமல் depressed - ஆக ஆகியிருக்கிறோம்! வீண் வ்யாபாரங்களில் சக்தியைச் செலவழித்துவிட்டு நல்லது செய்யணும் என்னும்போது தூங்கிவழிந்து கொண்டிருக்கிறோம்! ஜடமாக இருக்கிறோம்!

ஸயன்ஸ் என்றும், நவீன வசதி வாழ்க்கை என்றும் சொல்லிக்கொண்டு பாதி; சீர்திருத்தம், பகுத்தறிவு, புரட்சி என்று சொல்லிக்கொண்டு பாதி—இப்படிப் புறப்பட்டிருப்பவர்கள் மட்டும் கொஞ்சங்கூட ஜாட்யம் இல்லாமல் இஷ்டப்படிப் பண்ணிக்கொண்டிருப்பதைப் பார்த்தும்—தர்மம் என்ன கொள்ளை போகட்டும்;

Koviloor Digital Library

சாஸ்த்ரம் எப்படிப் பாழாகப் போகட்டும்; மதத்துக்கு, ஹிந்து கலாசாரத்துக்கு என்ன ஹானி வரட்டும், அத்தனையையும் பார்த்துக்கொண்டு பேடிகள் மாதிரி உட்கார்ந்திருக்கிறோம்! மஹாவீரனான அர்ஜுனன் யுத்த பூமியில் மனஸு தளர்ந்து உட்கார்ந்திருந்தபோது, பகவான் அவனிடம், "அடேய்! பேடி மாதிரி இருக்காதேடா— க்லைப்யம் மா ஸ்ம கம: பார்த்த!" என்று கோஷம் பண்ணிக் கிளப்பிவிட்டார். இன்றைக்கு நமக்கெல்லாம் இந்த அநுக்ரஹத்தை ஆஞ்ஜநேய ஸ்வாமி நிரம்பப் பண்ண வேண்டும்.

'சதுஷ்ஷஷ்டி கலா' என்று அறுபத்து நாலு கலைக்கான சாஸ்த்ரங்கள் நம் தேசத்தில் இருந்ததே! இஞ்ஜினீயரிங், டெக்னாலஜி எல்லாவற்றிலும் வல்லுநர்களாக நம்முடைய பூர்விகர்கள் எத்தனையோ ஸாதித்துவிட்டுப் போயிருப்பதற்கு ஆதார சாஸ்த்ரங்கள் இருந்ததே! அவற்றை ப்ராக்டிஸ் செய்பவர்கள்தான் இப்போதில்லை என்றால், அந்த சாஸ்த்ர புஸ்தகங்களைக்கூட அல்லவா காணோம்? இந்த மஹத்தான நஷ்டத்துக்கு நம்முடைய ஜாட்யம் தானே காரணமாயிருந்திருக்கிறது? இன்னும் பாக்கியிருப்பதையெல்லாமும் இப்படியே தூங்கி வழிந்துகொண்டு வாரிக் கொடுக்காமலிருக்க அவர் நமக்கு அஜாட்ய அநுக்ரஹத்தைத்தான் விசேஷமாகச் செய்ய வேண்டும்.

'வாக்படுத்வ'த்துக்கு முந்தி 'அஜாட்ய'த்தைச் சொல்லியிருக்கிறது. இன்றைக்கு நாமெல்லாம் 'வாக்'கிலே மஹா 'படு'க்கள்! வாய்ச் சொல் வீரர்கள்! கார்யத்தில் ஜாட்ய மூர்த்திகள்! ஆஞ்ஜநேய ஸ்வாமி நம்முடைய வாக்படுத்வத்தைக் கொஞ்சம் குறைத்து அதையும் சேர்த்துப் போட்டுக்கொண்டு அஜாட்ய அநுக்ரஹம் பண்ணி நம்மைக் கார்யசூரர்களாக்கினால் தேவலை என்று தோன்றுகிறது!

அவர் அப்படியிருந்தவர்தான். ச்லோகத்தில் சொல்லியுள்ள புத்தி, பலம் ஆகிய எல்லாவற்றுக்குமே அவர் ஒரு

Koviloor Digital Library

ருபம். எப்போதும் உத்ஸாஹமாக, சுரு சுரு விரு விரு என்று அஜாட்ய ஸ்வரூபமாக இருந்தவர் அவர். சில்ப - சித்ரங்களில் அப்படித்தான் இருக்கிறார்—மலையையே அநாயாஸமாகக் கையில் தூக்கிக்கொண்டு ஆகாசத்திலே பறந்து கொண்டு இருப்பார்! கொஞ்சம்கூடக் களைப்பு, சோம்பலே இல்லாமல் தர்மத்துக்காக ஸதா உழைத்தவர். முக்யமாக எத்தனை எதிர்ப்பு, விக்னம் வந்தாலும் அவர் கொஞ்சங்கூடத் தளராமலிருந்து எடுத்த கார்யத்தை வெற்றிகரமாக ஸாதித்ததைச் சொல்லவேண்டும்.

நாமா, நல்லதற்காகப் புறப்படுவதே அபூர்வம்! அப்படி புறப்பட்டாலும் ஏதாவது கொஞ்சம் தடை, ஆப்போஸிஷன் வந்துவிட்டால் தளர்ந்து போய்விடுகிறோம். ஆனாலும் வாக்படுக்களாக இருப்பதால் அப்படிச் சொல்லிக் கொள்ளாமல், "இது கலி காலம். கெட்டதற்குத்தான் ஆதிக்யம் என்ற சாஸ்த்ரத்திலேயே இருக்கிறது. அதனால் நாம் பாட்டுக்கு ஒதுங்கியிருப்போம்!" என்று கதைப்போம்! இன்னும் மேலே போய், 'அத்வைதா', 'மாயா டாக்ட்ரின்' என்று முடித்துவிடுவோம்! ஆனால் அதற்காகவே அவதாரம் பண்ணி, புஸ்தகம் புஸ்தகமாக எழுதி அதை ஸ்தாபனம் பண்ணிய ஆசார்யாள் எல்லாருக்கும் அதைச் சொல்லவில்லை; அவரும் சும்மா இருக்கவில்லை! கார்ய சூரர்கள் என்று உச்சியில் வைத்துச் சொல்லக்கூடியவர்கள் இரண்டு பேர் என்றால் அதில் ஒன்று ஆஞ்ஜநேயர், மற்றது ஆசார்யாள்தான்! சும்மாயிருப்பதுதான் goal என்றாலும் அதில் நாமே போய் உட்காரமுடியாது. நாம் ஸரியாக அடிப்படியிலிருந்து ஆரம்பித்து மேலேறிப் போனால் அதுவே ஒரு கட்டத்தில் நம்மைச் சும்மா உட்கார வைப்பதுதான் நிஜ சும்மா! இப்போது நாம் சொல்லும் சும்மாவெல்லாம் [சிரித்து] 'சும்மாக்கோஸரம்' சொல்லும் சும்மாதான்! அது மனஸ் சும்மாயிருப்பது; இது உடம்பு மட்டும் சும்மாயிருப்பது. அதனால் மனஸ் இன்னும் ஜாஸ்தியாய் க்ருத்ரிம கல்பனைகள் பண்ணுவது; இல்லாவிட்டால் ஜடம் மாதிரி மரத்துப்

Koviloor Digital Library

போய்க் களைத்துத் தூங்கி வழிவது. மநுஷ்ய ஜன்மா எடுத்தவனுக்கு இரண்டுமே ரொம்பக் குறைவு, ரொம்ப கௌரவ ஹானி.

பாராயணம், ஜபம், உபவாஸம், ஆலய தர்சனம், பஜனை என்று எத்தனை பேர் ப்ரமாதமாக ஆரம்பித்து நாள் போகப் போகப் போகக் குறைத்துக்கொண்டே வந்திருக்கிறோம்? முத்ராதிகாரிகள் திட்டம் என்று ஜகத்தையே புரட்டிவிடுகிற மாதிரி நான் ஒன்று ஆரம்பித்ததில் நடந்து வந்த எத்தனை ஸத்கார்யங்கள், வாரவழிபாடு முதலியவை இன்றைக்குப் போன இடம் தெரியாமல் போயிருக்கிறது? சீட்டு, கூத்து என்று ஆரம்பித்த எந்தக்ளப்பாவது க்ஷீணித்ததாகக் கேட்கிறோமா? அதிலே அஜாட்யம் இருக்கிறது!

ஆஞ்ஜநேய ஸ்வாமியின் அஜாட்யம், அவருக்கு வந்த விக்னம்—இந்த இரண்டு மாதிரியுமே எங்கேயும் பார்க்க முடியாது! அத்தனை விக்னத்தையும் தவிடு பொடியாக்கிய அஜாட்யம் அவருடையது! அவதாரம் பண்ணியவுடனேயே, [பரிவோடு] பச்சைக் குழந்தை...விர்ர்ர்ரென்று ஒரே வேகமாக, உதய ஸூர்யனை சிவப்புப் பழமென்று நினைத்துக் கொண்டு ஸூர்ய மண்டலத்திற்கே தாவிவிட்டது! அப்பவே எதிர்ப்பும் வந்துவிட்டது. இந்த்ரன் வஜ்ராயுதத்தால் அடித்துத் தள்ளினான். தாடையே பிளந்து போயிற்று. 'ஹநு' என்றால் தாடை. தாடை போன விசேஷத்தால் 'ஹநுமான்' ஆனார். அதற்காகச் சளைத்துவிடவில்லை. ஸூர்யனிடமே போய் நவ வ்யாகரணங்களையும் கற்றுக் கொண்டார். உதயகிரியிலிருந்து அஸ்தகிரி வரை சளைக்காமல், களைக்காமல் ஸூர்யனுக்கு எதிர்முகமாக ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டே கற்றுக்கொண்டார். குழந்தையாகவும் ஒரே உத்ஸாஹ விளையாட்டுப் பண்ணினார். துருதுருவென்று ரிஷிகளின் ஆச்ரமங்களுக்குள்ளே யெல்லாம் புகுந்து ஒரே விஷமமாகப் பண்ணினார். அவர்கள் கோபித்துக்கொண்டு, "உன் திவ்ய சக்தி உனக்கே மறந்து போய் ராமாவதார

Koviloor Digital Library

காலத்தில் அவருக்குக் கார்யம் பண்ணும்படி ஏற்படும் போதுதான் ஞாபகம் வரும்" என்று சபித்துவிட்டார்கள். அதற்காகவும் அவர் ஒன்றும் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டுவிடவில்லை. ஒரு வானரம் எத்தனை தொண்டு பண்ணமுடியுமோ அத்தனையும் ஸுக்ரீவனுக்குப் பண்ணிக் கொண்டிருந்தார். அங்கேயும் எதிர்ப்பு வந்தது. மஹாவீரனான வாலி ஸுக்ரீவனிடம் சண்டைக்கு வந்தான். அப்போதும் அவர் தளரவில்லை. ஒரு சாபம் காரணமாக வாலி வரமுடியாத ஒரு இடத்துக்கு ஸுக்ரீவனை அழைத்துக் கொண்டுபோய் ரக்ஷித்து வைத்துக்கொண்டு தொண்டு செய்து வந்தார். அப்புறம் ஸாக்ஷாத் ராமசந்த்ர மூர்த்தி வந்த பிறகு அவருக்கு திவ்ய சக்தியும் திரும்ப வந்தது. அஸாத்யமான கார்யமெல்லாம் பண்ணினார்—ஸமுத்ரத்தையே தாண்டுவது, மலையையே பறிந்து எடுத்துக்கொண்டு வருவது, மஹா பலிஷ்டரான ராக்ஷஸர்களை ஹதாஹதம் பண்ணுவது என்றிப்படி.

ஸமுத்ரம் தாண்டிப் போகும்போதுதான் எத்தனை விக்னம்? ஸுரஸை, ஸிம்ஹிகை, லங்கிணி என்று குறுக்கே எத்தனை ராக்ஷஸிகள்? ஸுரஸை இவரை முழுங்கப் பெரிசாக வாயைத் திறந்தால், இவர் கொசு மாத்ரமாகி வாய்க்குள் புகுந்து காதால் வெளியே வந்துவிடுகிறார்! அவளை அவர் சண்டை போட்டு வதைக்கமுடியும். "ஆனாலும் அத்தனை நாழி ஸ்வாமி கார்யம் 'டிலே' ஆகலாமா?" என்று கார்யத்தில் அத்தனை கண்ணுக—அதுவும் அஜாட்யந்தான்—இப்படி தந்த்ரமாகப் பண்ணிவிட்டார். அதற்கு எவ்வளவோ presence of mind வேண்டும்—அறிவு பளிச்சென்று விழிப்பு நிலையில் இருக்கும் அஜாட்யம்!

கார்யத்திலேயே கண் என்பதால் களைப்பு, சலிப்பு, ஜாட்யம் கொஞ்சங்கூடத் தெரியாதவர். ஸமுத்ர மத்தியிலிருந்து மைநாகமலை எழுந்து, ஆகாச மார்க்கமாக வந்து கொண்டிருக்கும் அவரிடம், "கொஞ்சம் எங்கிட்டே தங்கி ரெஸ்ட் எடுத்துக் கொண்டுவிட்டு அப்புறம் போங்கோ!"

Koviloor Digital Library

என்றது. அவரோ, "முதலில் கார்யம் முடியட்டும். திரும்பி வரும்போது வேணுமானால் பார்த்துக்கலாம்'' என்று அதற்கு ஒரு ஷொட்டு கொடுத்துவிட்டு மேலே போய்விட்டார்—ராமஸரம் மாதிரியே வைத்த குறி தப்பாமல்!

அப்புறம் எத்தனை ராக்ஷஸர்கள் அவரை என்னப் பாடுபடுத்தினார்கள்? வாலிலேயே நெருப்பை வைத்து ஹிம்ஸித்தும்கூடக் கொஞ்சமாவது மனஸ் தளர்ந்தாரா? எடுத்த கார்யத்தை விட்டாரா?

இப்படியே கதை முழுக்க எதிர்ப்புக்கு மேலே எதிர்ப்பு, அப்படியும் சோர்வில்லாத கார்யம் என்றே போகிறது.

ரொம்ப உசத்தி என்னவென்றால், இத்தனை கார்யம், இத்தனை புத்தி, பலம், தைர்யம், அஜாட்யம் ஆகியவற்றில் ஒரு சின்னத் துளியாவது ஸ்வார்த்தமாக (அவருடைய ஸொந்த நலனுக்காக) ப்ரயோஜனம் பண்ணிக் கொண்டாரா? ஸொந்த வாழ்க்கை என்றே ஒன்று இல்லாதவர்! Selfless service, selfless service என்று அடிக்கடி கேள்விப் படுகிறோமே, வாஸ்தவத்தில் அதற்கு உருவமாயிருந்தவர் ஆஞ்ஜநேய ஸ்வாமி! பெண்டாட்டியா, பிள்ளையா, குட்டியா என்ன இருந்தது அவருக்கு? முதலில் கொஞ்ச நாள் ஸுக்ரீவனுக்கு, அப்புறம் ஸ்ரீராமசந்த்ர மூர்த்திக்கு என்றே தன் வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணினார். அந்த ஸ்வயநலமின்மை, பக்தி, பணிவு ஆகியவற்றோடு சேர்ந்ததாலேயே அவருடைய புத்தி, பலம் இத்யாதி எல்லாம் அப்படிப் பூர்ணமாக சோபித்தது.

"புத்திர்—பலம்—யசஸ்'' என்று மூன்றாவதாக வருகிறது. அந்த யசஸ் (புகழ்) ஸ்வயநலமில்லாத பக்திப்பணி என்பதாலேயே ஏற்பட்டது.

யசஸ் போக பாக்கி எல்லாம்—புத்தி, பலம், தைர்யம், நிர்பயத்வம், ஆரோக்யம், அஜாட்யம் கூடத்தான், அப்புறம்

Koviloor Digital Library

வரும் வாக்படுத்வம் ஆகிய எல்லாமும்—ராவணன், ஹிட்லர் போன்றவர்களுக்குக்கூடத்தான் இருந்தது. ஆனால் அவர்களுக்கு யசஸ் உண்டா? பேரைக் கேட்டாலே திட்டத்தானே செய்கிறோம்? ஆகையால் என்ன தெரிகிறதென்றால் புத்தி, பலம் ஆகியவற்றால் ஒருத்தருக்கு யசஸும் வரவேண்டுமானால் அவர் அவை எல்லாவற்றையும் பரநலனாக ப்ரயோஜனப்படுத்தினால்தான் முடியும்.

அவரையும் நினைத்து நம்மையும் நினைத்தால்......

[சட்டென்று மிகுந்த கருணையுடன்] ஒருத்தரும் வருத்தமே படவேண்டாம்! 'தூங்குமுஞ்சி, அது இதுன்னு பெரியவா கோவமா திட்டறாளே!' என்று யாரும் துக்கப்பட வேண்டாம்! கோபமே இல்லை! ஆஞ்ஜநேயரைப் பற்றிச் சொல்லும்போது கோபமே வரப்படாது. அவர் கோபமே இல்லாதவர்.....ராமர் அவருக்கு ஞானோபதேசம் பண்ணினாரென்று இருக்கிறது. ஸீதையும் அவருக்கு உபதேசம் பண்ணியிருக்கிறாள். ராமர் ஞானம் உபதேசித்தார். ஸீதை என்ன உபதேசித்தாள்? ஸீதையென்றால் யார்? ஸாக்ஷாத் தாயார். அதனால் ப்ரேமையை உபதேசித்தாள்! ராவண வதமானதும், ஸீதையிடம் ஸந்தோஷ ஸமாசாரம் தெரிவிப்பதற்காக ஆஞ்ஜநேயர் அசோக வனத்துக்குக் குதித்துக்கொண்டு வந்தார். ராக்ஷஸிகளைப் பார்த்ததும், 'இத்தனை நாளாகத் தாயாரை என்ன பாடுபடுத்திக் கொண்டிருந்தார்கள்? இன்றைக்குத் தொலைத்து விடலாம் அத்தனை பேரையும்' என்று புறப்பட்டார். அப்போது ஸீதை அந்த ராக்ஷஸிகளுக்கும் தாயாராக உபதேசம் பண்ணினாள். "அப்பா, உசந்தவர்களின் லக்ஷணம் கருணைதான். லோகத்திலே தப்புப் பண்ணாதவர்கள் யார்? இவர்களைத் தொடாதே! இவர்கள் என்ன பண்ணுவார்கள்? ராஜ ஸேவகிகள் ராஜாக்ஞைப்படிதானே பண்ணணும்? அதனால் ராவணன் சொற்படி ஹிம்ஸித்தார்கள். இப்போது விபீஷணன் ராஜாவானால் அவன் சொற்படி நமஸ்காரம் பண்ணுவார்கள்" என்றாள்.

Koviloor Digital Library

அன்றிலிருந்து ஆஞ்ஜநேய ஸ்வாமி ஒரே கருணையாக, அன்பாக ஆகிவிட்டார். அதற்காக, தப்பு நடந்தால் சும்மா யிருப்பாரென்று அர்த்தமில்லை. அத்யாவச்யத்திலே தண்டிக்கவும் தண்டிப்பார், 'கோவிச்சுக்கவும் கோவிச்சுப்பார்'. இப்படி வெளியிலே இருந்தாலும் உள்ளே யாரானாலும் அவர்களிடம் பூர்ணமான அன்பு, 'இவா நல்லவாளாகணுமே!' என்ற கவலைதான் இருக்கும்.

ஆகையினால் நான் நிஜமாகவே உங்களைக் கோபித்துக் கொள்கிறேனென்றால் எனக்கு அவரைப் பற்றி லெக்சர் அடிக்கவே அர்ஹதை (அருகதை) இல்லை என்று அர்த்தம். இப்படிச் சொன்னால்தான் தூண்டிவிடும் என்பதற்காகவே... 'ஷாக் ட்ரீட்மென்ட்' என்கிற மாதிரி......கொஞ்சம் 'புஸ்', 'புஸ்' என்கிறது!

கோபமே இல்லை! எங்கேயும் யாருக்கும் யாரிடமும் கோபம் வேண்டாம். சாந்தி, அன்புதான் ஸமஸ்த ப்ராணிகளிடமும் இருக்கணும். அதுதான் அவருக்குப் பிடிக்கும். ஆனால் அப்படிச் சொல்லிக் கொண்டு நல்லதெல்லாம் அழிந்து போவதைப் பார்த்துக்கொண்டு சும்மா உட்கார்ந்திருந்தால் அவர் ஸரியென்று சொல்ல மாட்டார். மனஸில் எவரிடமும் அன்பு குறையாமலே, கார்யத்தில் பண்ண வேண்டியதை முழு விழிப்போடு சுருசுரு என்று பண்ணிக் கொண்டிருந்தால்தான் ஸந்தோஷப்பட்டு எல்லா அநுக்ரஹமும் பண்ணுவார்.

முதலில் அவர்தான் இந்த அநுக்ரஹமே...நம்மைச் சுறுசுறுப்பாக்குகிற அநுக்ரஹமே...அஜாட்ய அநுக்ரஹமே பண்ணவேண்டும். அதற்கு எல்லாரும் ப்ரார்த்தனை செய்து கொள்வோம்!

மங்களம் வி